NYPL RESEARCH LIBRARIES
3 3433 08185441 0

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Bible O.T. Tamil

THE

OLD TESTAMENT,

IN TAMIL.

மனிதர்கள் இரட்சிக்கப்படுவதற்காகச்

சருவலோக தயாபரரான கர்த்தர் அருளிச்செய்த

சத்தியவேதமென்கிற

பழைய ஏற்பாடு.

இஃது

மூலவாக்கியம் பெபுரிசியஸையரால்

எபிரேயுபாஷையிலிருந்து

தமிழிலே திருப்பப்பட்டது.

கி. பி. நூறுக்கு—ஞூலே

PUBLIC LIBRARY

சென்னபட்டணத்தில் அமெரிக்கன் மிஸியோன் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

THE MADRAS AUXILIARY BIBLE SOCIETY,

Printed at the American Mission Press.

1860.

Digitized by Google

THE NEW YORK
PUBLIC LIBRARY
592404 A
ASTOR, LENOX AND
TILDEN FOUNDATIONS
R 1932 L

Digitized by Google

மோசே எழுதின

முதலாம் ஆகமம்.

க. அதிகாரம்.

ஆதியிலே பராபரன் *வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். *சங். உஉ. ஃ: ஊஉ. உசூ. கொலோ. க. ஐசூ. எபிரே. ஐக. ஈ.

உ பூமியோவெனில் ரூபமற்றதும் வெறுமையுமாயிருந்தது; ஆழத்தின்மேல் இருளுமாயிருந்தது. *ஆனால் பராபரனுடைய ஆவி தண்ணீர்களின்மேலே அசைவாடிக் கொண்டிருந்தது. *சங். உஈ. சூ.

ஈ ¶ *பராபரன் வெளிச்சம் உண்டாகக்கடவதென்றார், அப்போது வெளிச்சம் உண்டாயிற்று. *2 கொரி. ச. சூ.

ச பராபரன் வெளிச்சத்தை நல்லதென்று கண்டார்; வெளிச்சத்தையும், இருளையும், பராபரன் வெவ்வேறுகப் பிரித்தார்.

டு பராபரன் வெளிச்சத்துக்குப் பகலென்று பேரிட்டார்; இருளுக்கோ இராவென்று பேரிட்டார்; இப்படியே சாயங்காலமானதினமும் விடியுங்காலமானதினமும் முதலாம்நாளுண்டாயிற்று.

எ ¶ பிற்பாடு பராபரன் தண்ணீர்களுக்கு நடுவாக *ஆகாசவிரிவுண்டாகக்கடவதென்றும், அது தண்ணீர்களுக்குந் தண்ணீர்களுக்கும் பிரிவுண்டாக்கக்கடவதென்றுஞ்சொன்னார். *சங். ஈஉசூ. டு.

ஏ அப்படியே பராபரன் ஆகாசவிரிவையுண்டுபண்ணி, ஆகாசவிரிவுக்குக்கீழாயிருக்கிற தண்ணீர்களுக்கும்; *ஆகாசவிரிவுக்கு மேலாயிருக்கிற தண்ணீர்களுக்கும், பிரிவுண்டாக்கினார்; அது அப்படியே ஆயிற்று. *சங். ஈசஎ. ச.

ஐ ஆகாசவிரிவுக்குப் பராபரன் வான மென்று பேரிட்டார்; இப்படியே சாயங்காலமானதினமும் விடியுங்காலமானதினமும் இரண்டாம்நாள் உண்டாயிற்று.

ஒ ¶ பிற்பாடு பராபரன் வானத்தின்கீழிருக்கிற தண்ணீர்கள் *ஒரு இடத்திலே சேரவும் வெட்டாந்தரை காணப்படவுங்கடவதென்றார்; அது அப்படியே ஆயிற்று. *யோபு. ஈஅ. அ, ஐ. ஐக. சங். ஈஉ. ஏ: ஊச. ஏ–கூ.

ஓ பராபரன் வெட்டாந்தரைக்குப் பூமியென்றும், சேர்ந்த தண்ணீர்களுக்குச் சமுத்திரங்களென்றும் பேரிட்டார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

ஓக அப்போது பராபரன், பூமியானது புல்லையும், விளையைப் பிறப்பிக்கிற பூண்டுகளையும், பூமியின்மேலே தங்களில் தங்கள் விளையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் சாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும், முளைப்பிக்கக்கடவதென்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஓஉ பூமி தங்கள் தங்கள் சாதியின்படியே புல்லையும், விளையைப் பிறப்பிக்கிற பூண்டுகளையும், தங்கள் தங்கள் சாதியின்படியே தங்களில் தங்கள் விளையையுடைய கனிகளைக்கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

ஓஈ அப்போது சாயங்காலமும் விடியுங்காலமுமானதினம் மூன்றாம்நாள் உண்டாயிற்று.

ஓச ¶ பிற்பாடு பராபரன், பகலுக்கும் இராவுக்கும் விசியாசம் பண்ணத்தக்க

Digitized by Google

*வெளிச்சங்கள் வானமென்ற ஆகாசவிரிவிலே உண்டாகக்கடவதென்றும், அவைகள் அடையாளங்களாகவும் குறித்தகாலங்கள் நாள்கள் வருஷங்களை அறிகிறதற்காகவுமிருந்து, *சங். ஈஉசு. எ—கூ.

ஙடு பூமியின்மேலே பிரகாசிக்கும்படிக்கு, வானமென்ற ஆகாசவிரிவிலே வெளிச்சங்களாயிருக்கக்கடவதென்றும் சொன்னார்; அது அப்படியே ஆயிற்று.

ஙசு பராபரன் பகலை ஆளப் பெரிதாயிருக்கிற வெளிச்சமும், இரவை ஆளச் சிறிதாயிருக்கிற வெளிச்சமுமாகிய இரண்டு பெரிய வெளிச்சங்களையும், நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.

ஙஎ அவைகளைப் பராபரன் பூமியின்மேற் பிரகாசிக்கவும்,

ஙஅ பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் விதிமோசமுண்டாக்கவும், வானமென்ற ஆகாசவிரிவிலே வைத்தார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

ஙக அப்போது சாயங்காலமும் விடியுங்காலமுமானதினால் நாலாம்நாளுண்டாயிற்று.

உஏ ¶ பிற்பாடு பராபரன் தண்ணீர்கள், நீக்கமும் உயிர்ப்பிராணிகளையும், பூமியின்மேல் ஆகாசவிரிவிலே பறக்கும் பறவைகளையும் நிரளாய்ச் சனிப்பிக்கக்கடவதென்றார்.

உக அப்படியே பராபரன் பெரிய நிமிங்கலங்களையும், தண்ணீர்கள் சாதி சாதியாகத் நிரளாய்ச் சனிப்பித்த சகலவித நீச்சுப்பிராணிகளையும், சாதி சாதியாயிருக்கிற செட்டைகளுள்ள சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

உஉ பராபரன் அவைகளை ஆசீர்வதித்து, *நீங்கள் பலுகிப் பெருகிக் கடல்களிலுள்ள தண்ணீர்களை நிரப்புங்களென்றும், பறவைகள் பூமியிற் பெருகக்கடவதென்றும் சொன்னார். *ஆ. ஐஎ.

உக அப்போது சாயங்காலமும் விடியுங்காலமுமானதினால் ஐந்தாம்நாள் உடாயிற்று.

உச ¶ பிற்பாடு பராபரன் பூமியானது சாதி சாதியான சீவசெந்துக்களாயிருக்கிற மிருகங்களையும், ஊர்வனவற்றையும், பூமியின் காட்டுமிருகங்களையும், சாதி சாதியாக எழும்பப்பண்ணக் கடவதென்றார்; அது அப்படியே ஆயிற்று.

உடு பராபரன் சாதி சாதியான பூமியின் காட்டுமிருகங்களையும், சாதி சாதியான மிருகங்களையும், சாதி சாதியான சகல பூமியின் ஊர்வனவற்றையும் உண்டாக்கினார்; பராபரன் அது நல்லதென்று கண்டார்.

உசு ¶ பிற்பாடு பராபரன் *நம்முடைய சாயலாக, நம்முடைய ரூபத்தின்படியே மனுஷரை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரங்களின் மச்சங்களையும், ஆகாசத்துப் பறவைகளையும், மிருகசீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊருகிற சகல ஊர்வனவற்றையும், ஆளக் கடவர்களென்றார். *டு. க: கூ. சு. க கொரி. ஙக. எ. எபே. ச. உக, உச. கொலோ. க. ஐ.

உள *அப்படியே பராபரன் மனுஷனைத் தம்முடைய சாயலாகச் சிருஷ்டித்தார்; அவனைப் பராபரனுடைய சாயலாகச் சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். *மத்தே. ஙகூ. ச.

உஅ அப்போது பராபரன் அவர்களை ஆசீர்வதித்து, *நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரம்பப்பண்ணி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாசத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல மிருகசீவன்களையும் ஆண்டுகொள்ளுங்களென்று பராபரன் அவர்களுக்குச் சொன்னார். *ஆ. ஐஎ: கூ. க.

உக ¶ பின்னையும் பராபரன் சொன்னதாவது: *இதோ பூமியின்மீதெங்குமிருக்கிற விளைதருஞ் சகலவித பூண்டுகளை

யும், விளைதரும் கனிமரங்களாகிய சகல விருட்சங்களையும், உங்களுக்குக் கொடுத்தோம்; அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது. *கூ. ஈ.

ஊ சீவபிராணனுள்ள பூமியினுடைய சகல மிருகங்களுக்கும், ஆகாசத்தினுடைய சகல பறவைகளுக்கும், பூமியின்மேல் ஊர்வன எல்லாவற்றுக்கும், சகல பச்சைப்பூண்டு பயிர்களையும், ஆகாரமாகக் கொடுத்தோமென்றார்; அது அப்படியே ஆயிற்று.

ஈக அப்போது பராபரன் தாமுண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார்; இதோ *மெத்தவும் நன்றாயிருந்தது; அப்படியே சாயங்காலமும் விடியுங்காலமுமான நிறைந்தது. *டு மோ. ஈஉ. ச.

உ. அதிகாரம்.

இந்தப்பிரகாரமாக வானமும் பூமியும் அவைகளுடைய எல்லாச்சேனையும் உண்டாக்கப்பட்டுத்தீர்ந்தன.

உ *பராபரன் உண்டாக்கின தம்முடைய கிரியையை ஏழாம்நாளிலே நிறைவேற்றினபிற்பாடு, அவர் தாமுண்டாக்கின தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின், ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார். *உ மோ. உஐ. ஐக: ஈக. ஐஎ. டு மோசே டு. ஐச. எபிரே. ச. ச.

ஊ பராபரன் ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்; அதேதெனில், பராபரன் உண்டுபண்ணிச் சிருஷ்டித்த தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின் அதிலே ஓய்ந்திருந்தார்.

ச ¶ பராபரனுடைய கர்த்தர் பூமியையும், வானத்தையும், உண்டாக்குகிற நாளிலே வானமும், பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட பூர்வோத்தரங்கள் இவைகள்தான்.

டு நிலத்தினுடைய சகலவித செடிகள் பூமியின்மேல் இன்னமிருந்ததில்லை; நிலத்தினுடைய சகலவித பூண்டுகள் இன்னம் முளைத்ததுமில்லை; ஏனென்றால், பராபரனுடைய கர்த்தர் பூமியின்மேல் இன்னம் வருஷிக்கப்பண்ணினதில்லை; நிலத்தைக் கையாள மனுஷனுமில்லை.

ஈ அப்போது மூடுபனி பூமியிலிருந்தெழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது.

எ பராபரனுடைய கர்த்தர் மனுஷனை *பூமியின் மண்ணிலுலே உருவாக்கிச் சீவனின் சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; அப்போது மனுஷன் †சீவாத்துமாவானான். *க கொரி. ஐடு. சஎ. †க கொரி. ஐடு. சடு.

அ ¶ பராபரனுடைய கர்த்தர் ஏதேனிலே கிழக்கே ஒரு தோட்டத்தை நாட்டி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.

ஆ பார்வைக்கு விருப்பமும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே *சீவனின் விருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும், பராபரனுடைய கர்த்தர் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். *அறி. உ. எ.

இ *ஏதேனிலேயிருந்து ஒரு நதி தோட்டத்துக்குப் பாயப் புறப்பட்டு, அங்கேயிருந்து பிரிந்து நாலுதலையான ஆறுகளாயிற்று.

ஈ முதலாவதற்குப்பேர் பீசோன்: இது பொன்னுண்டாயிருக்கும் ஆவிலா தேசத்தையெல்லாம் சுற்றி ஓடுகிறது.

உ அந்தத் தேசத்தின் பொன் நல்லது; அவ்விடத்திலே பெதோலாகும் கோமேதகக்கல்லும் உண்டு.

ஊ இரண்டாம் ஆற்றுக்குப் பேர் கீகோன்: இது எத்தியோப்பிய தேசத்தையெல்லாம் சுற்றி ஓடுகிறது.

எ மூன்றும் ஆற்றினுடைய பேர் *இதேக்கேல்: இது அசூரியாவுக்குக் கிழக்காய் ஓடுகிறது. நாலாம் ஆறே வென்றால் ஐபிராத்து. *தானி. ஐ. ச.

ஏ ¶ பராபரனுடைய கர்த்தர் மனுஷனை அழைத்துக்கொண்டு, அவனை ஏதேன்

தோட்டத்திலே அதைக் கையானவும் காக்கவும் வைத்தார்.

ரூ பராபரனுகிய கர்த்தர் மனுஷனுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: நீ தோட்டத்தினுடைய சகல விருட்சத்தின் கனியிலும் புசிக்கவே புசிக்கலாம்.

ரா ஆனால் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியிலே புசியாயாக; ஏனெனில், அதிலே நீ புசிக்கிறநாளிலே *சாவே சாவாயென்றார். *உரோ. டு. ரூ.

ரூ ¶ பின்னையும் பராபரனுகிய கர்த்தர் மனுஷன் ஒண்டியாயிருக்கிறது நல்லதல்ல; அவனுக்குமுன்பாக இருக்க ஒரு துணையை அவனுக்கு உண்டாக்குவோமென்றார்.

ரஉ ஏனெனில், பராபரனுகிய கர்த்தர் மண்ணிலுலே வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாசத்தினுடைய சகல பறவைகளையும் உருவாக்கியிருந்து, மனுஷனண்டைக்கு அவைகளுக்கெப்படிப் பேரிடுவானென்று பார்ப்பதற்கும், அந்தந்தச் சீவபிராணிக்கு மனுஷன் எந்தெந்தப் பேரிடுவானோ அதுவே அதற்குப் பேராயிருப்பதற்கும் கூட்டிவந்தார்.

ரூ அப்படியே மனுஷன் சகலவித மிருகத்துக்கும், ஆகாசத்துப் பறவைக்கும், வெளியின் சகல சீவனுக்கும் பேரிட்டான்; ஆனால் தனக்குமுன்பாக இருக்கும் துணையை மனுஷன் கண்டதில்லை.

ரா ¶ அப்போது பராபரனுகிய கர்த்தர் மனுஷன்மேல் அயர்ந்த நித்திரையை விழப்பண்ணினார்; அவன் நித்திரைபோனான்; அப்போது அவர் அவன் விலாவெலும்புகளிலொன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.

ரூ *தாம் மனுஷனில் எடுத்த விலாவெலும்பைப் பராபரனுகிய கர்த்தர் ஸ்திரியாக உண்டாக்கி, அவளை மனுஷனண்டைக்குக் கொண்டுவந்தார்: *க கொரி. ரக. ரு, கூ. க திமோ. ரு. ரஅ.

ரூ அப்போது மனுஷன்: இவள் இப்போது *என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமானாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினாலே, இவள் மனுஷியென்று பேரிடப்படுவாளென்றான். *எபே. டு. கூ, கக.

ரூ *இதினிமித்தமாகப் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டுத் தன் பெண்சாதியுடனே இசைந்திருப்பான்; †இருவரும் ஒரே மாமிசமாக இருப்பார்களென்றார். *மத்தே. ரகூ. டு. மாற். ரு. எ. †எபே. டு. ரஎ, ரூ.

ரஉ ஆதாம் அவன் பெண்சாதி இருவரும் *நிருவாணமாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள். *கூ. எ.

கூ. அதிகாரம்.

சர்ப்பமோவெனில், பராபரனுகிய கர்த்தர் உண்டாக்கின வெளியினுடைய சகல சீவன்களைப்பார்க்கிலும் தந்திரமுள்ளதாயிருந்து, ஸ்திரியுடனே: நீங்கள் தோட்டத்தினுடைய எல்லா விருட்சங்களின் கனியிலும் புசிக்கவேண்டாமென்று பராபரன் சொன்னதோவென்றது.

ரூ அப்போது ஸ்திரி சர்ப்பத்துடனே சொன்னதாவது: தோட்டத்தினுடைய விருட்சங்களின் கனியிற் புசிக்கிறோம்.

கூ ஆனால் தோட்டத்தின் நடுவிலேயிருக்கிற விருட்சத்தின் கனியைக்குறித்துப் பராபரன், நீங்கள் சாவாதபடிக்கு அதிலே புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாமென்றாரென்று சொன்னாள்.

க *அப்போது சர்ப்பம் ஸ்திரியுடனே: நீங்கள் சாவவே சாவதில்லை. *யோவா. ரு. சச. ரூ கொரி. ரக. கூ.

டு ஏனெனில், நீங்கள் அதிலே புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படுமென்றும், நீங்கள் நன்மையும் தீமையும் அறிந்து, பராபரனைப்போல இருப்பீர்களென்றும், பராபரன் அறிவாரென்றது.

கூ ¶ *அப்போது ஸ்திரியானவள், அந்த விருட்சம் போசனத்துக்கு நல்லதென்றும், அது கண்களுக்கு விருப்பமும் புத்தியைத்

Digitized by Google

தருகிறதற்கான இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாயிருக்கிறதென்றும் பார்த்து, அதின் கனியிலே அறுத்துப் புசித்து, தன் புருஷனுக்குங்கூடக் கொடுத்தான்; அவனும் புசித்தான்.* ஆ தீமோ. உ. ஙச.

எ அப்போது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டன; அவர்கள் தாங்கள் நிருவாணிகளென்று கண்டறிந்து, அத்தியிலைகளைத்தைத்துத் தங்களுக்குக் கச்சைகளை உண்டுபண்ணினார்கள். *உ. உடு.

அ பகல் குளிர்ச்சியான வேளையிலோவென்றால், தோட்டத்தில் உலாவிக்கொண்டிருக்கிற பராபரனுடைய கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டார்கள்; அப்போது ஆதாமும், அவன் பெண்சாதியும், பராபரனுடைய கர்த்தரின் சந்நிதியை விலக, தோட்டத்து விருட்சங்களின் நடுவில் ஒளித்துக் கொண்டார்கள்.

ஊ ¶ ஆனால் பராபரனுடைய கர்த்தர் ஆதாமைக் கூப்பிட்டு, அவனை நீ எங்கேயென்றார்.

ஙி அதற்கவன்: நான் தேவரீருடைய சத்தத்தைத் தோட்டத்திலே கேட்டு, நான் நிருவாணியானபடியினாலே பயந்து, ஒளித்துக்கொண்டேனென்றான்.

ஙக அப்போது அவர் நீ நிருவாணியென்று உனக்கறிவித்தவனார்? *புசிக்கவேண்டாமென்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தாயோவென்றார்.* உ. ஙஊ, ஙஎ.

ஙஉ அதற்கு ஆதாம்: என்னுடனேயிருக்கத் தேவரீர் கட்டளையிட்ட ஸ்திரியானவள் விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் புசித்தேனென்றான்.

ஙஏ அப்போது பராபரனுடைய கர்த்தர் ஸ்திரியைநோக்கி, நீ இதைச்செய்ததென்னவென்றார்; ஸ்திரியானவள்: சர்ப்பம் என்னை மோசம்போக்கினதினாலே புசித்தேனென்றாள்.

ஙஐ ¶ அப்போது பராபரனுடைய கர்த்தர் சர்ப்பத்தினுடனே சொன்னதாவது: நீ இதைச் செய்தபடியினாலே எல்லா மிருகங்களிலும், வெளியிலுடைய எல்லாச் சீவன்களிலும், நீ சபிக்கப்பட்டது; நீ உன் வயிற்றினாலே நகர்ந்து, உயிரோடிருக்கிறநாளெல்லாம் மண்ணைத் தின்பாய்.

ஙடு ¶ உனக்கும் ஸ்திரிக்கும், உன்னுடைய வித்துக்கும், அவளுடைய வித்துக்கும், பகையை உண்டாக்குவோம்; *இவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிகாலை நசுக்குவாயென்றார். *ஆ யோவா. ங. அ.

ஙஊ ¶ *ஸ்திரியோடே அவர் சொன்னதாவது: நீ கர்ப்பவதியாயிருக்கும் வருத்தத்தை மிகவும் பெருகப்பண்ணுவோம்; வேதனையோடே பிள்ளைகளைப் பெறுவாயென்றும், உன்னுடைய இச்சை உன் புருஷனுக்குக் கீழாயிருப்பதாக, அவன் உன்னை ஆளக்கடவானென்றும் சொன்னார். *ஆ கொரி. ஙஆ: ங: ஙச. ஙசு. எபே. டு. உஉ, உங.

ஙஎ பிற்பாடு ஆதாமோடே அவர் சொன்னதாவது: நீ உன் பெண்சாதியின் சத்தத்துக்குச் செவிகொடுத்து, புசியாயாகவென்று நாம் உனக்குக் கற்பித்த விருட்சத்தின் கனியைப் புசித்தபடியினாலே, பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கிற நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்.

ஙஐ அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும், வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.

ஙஙு நீ பூமிக்குள் நிரும்புமட்டும் *உன் முகத்தின் வேர்வையால் அப்பம் புசிக்கக் கடவாய்; அதேனெனில், அதில் எடுக்கப்பட்டாய்; ஏனென்றால், †நீ மண்ணையிருக்கிறாய்; மண்ணுக்குத் நிரும்புவாயென்றார். *உ தெச. ங. ஐ. †ஐஅ. உஅ.

உஐ ஆதாம் தன் பெண்சாதிக்கு, ஏவாளென்று பேரிட்டான்; ஏனெனில், அவள் சீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்.

உக ¶ பராபரனுடைய கர்த்தர் ஆதாமுக்

கும் அவன் பெண்சாதிக்கும் தோல் அங்கி களையுண்டாக்கி, அவர்களுக்குத்தரிப்பித்தார்.

உஉ ¶ பிற்பாடு பராபரனுகிய கர்த்தர் இதோ மனுஷன், நன்மை தீமை அறியத் தக்கவனுய் நம்மிலொருத்தனைப்போலி ருந்தான்; இப்போதும், அவன் தன் கை யை நீட்டி, சீவவிருட்சத்தின் கனியையும் அறுத்துப் புசித்து, என்றைக்கும் உயிரோ டிராதபடிக்குக் கட்டளைபண்ணவேணுமென் று சொல்லி,

உக பராபரனுகிய கர்த்தர் அவனை, அவன் எடுக்கப்பட்ட பூமியைப் பயிரிடும்படிக் கு, ஏதேன்தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார்.

உச அவர் மனுஷனைத் துரத்திவிட்டு, ஏதேனென்ற தோட்டத்துக்குக் கிழக்கே கேருபீன்களையும், அசைவாடுகிற சுடர் ஒளி யுள்ள பட்டயத்தையும், சீவவிருட்சத்துக் குப் போகிறவழியைக் காப்பதற்காக வைத் தார்.

ச. அதிகாரம்.

பிற்பாடு ஆதாம் தன் பெண்சாதியாகிய ஏவாளை அறிந்தான்; அவள் கர்ப்பந்தரித் து, காயீனைப்பெற்றுக் கர்த்தராகிய புரு ஷன் எனக்கிருக்கிறரென்றுள்.

உ அப்புறம் அவன் சகோதரனுகிய ஆ பேலைப் பெற்றுள்; ஆபேல் ஆட்டுமேய்ப் பனுனுன்; காயீனேவெனில், நிலத்திற் பயிரிடுகிறவனுனுன்.

ங சிலநாள் சென்றபிற்பாடு சம்பவித்த தேதென்றுல், காயீன் நிலத்தின் கனியிலே கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டு வந்தான்.

ச ஆபேலோவென்றுல், அவனும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும், அவைக ளின் கொழுப்பிலும் சிலவற்றைக் கொண் டுவந்தான்; ஆனுல் *கர்த்தர் ஆபேலையும், அவன் காணிக்கையையும் நோக்கிப்பார்த் தார். *எபிரே. ஐக. ச.

ஞ காயீனையும் அவன் காணிக்கையையும் நோக்கிப் பாராதேபோனுர்; அப்போது காயீனுக்கு மிகவும் எரிச்சலுண்டாய், அவ னுடைய முகநாடி வேறுபட்டது.

ஃ அப்போது கர்த்தர் காயீனேடே சொ ன்னதாவது: உனக்கேன் எரிச்சலுண்டா யிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?

எ நீ நன்மைசெய்தால், மேன்மையில்லை யோ? நீ நன்மைசெய்யாயேயாகில், பாவம் வாசற்படியிலே படுத்துக்கொண்டிருக்கி ன்றது; அதின் இச்சை உன்பேரில் வைக்கப் பட்டது; *நீயோவெனில், அதை ஆண்டு கொள்ளுவாயாகவென்றுர். *உரோ. கூ. ஐஉ.

ஏ ¶ அப்போது காயீன் தன் சகோதர னுகிய ஆபேலோடே பேசினுன்; அவர்கள் வெளியிலேயிருக்கிறபோதோவெனில் ச ம்பவித்ததேதென்றுல், காயீன் தன் சகோ தரனுகிய ஆபேலுக்கு விரோதமாயெழும் பி, *அவனைக் கொன்றுபோட்டான். *மத். உசு. ஈடு. க யோவா. ஈ. ஐஉ. யூதா. ஐக.

ஐ கர்த்தர் காயீனுடனே: உன் சகோதர னுகிய ஆபேல் எங்கேயென்றுர்; அதற் கவன், நான் அறியேன்; நான் என் சகோ தரனுக்குக் காவலாளியோவென்றுன்.

ஒ அப்போது அவர் சொன்னதாவது: என்னசெய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் *பூமியிலிருந்து நம் மைநோக்கிக் கூப்பிட்டுக்கொண்டிருக் கின்றது. *எபி. ஐஉ. உச.

ஓக இப்போது உன் சகோதரனுடைய இரத்தத்தை உன் கையிலே வாங்கிக்கொ ள்ளத் தன் வாயைத்திறந்த இந்தப் பூமியி லே, நீ இராதபடிக்குச் சபிக்கப்பட்டிருப் பாய்.

ஓஉ நீ நிலத்தைப் பயிரிடும்போது அது இனித் தன் சாரத்தை உனக்குக் கொ டாது; நீ பூமியில் நிலையற்றவனும் அலை றவனுமாயிருப்பாயென்றுர்.

ஓங அப்போது காயீன் கர்த்தரோடே சொன்னதாவது: என் அக்கிரமம் மன்னிக் கப்படக்கூடாதபடிக்குப் பெரிதாயிருக் கின்றது.

Digitized by Google

ம உ இதோ இன்று என்னை இந்தத் தேசத்திலிருந்து தள்ளிவிடுகிறீர்; நான் தேவரீருடைய சமுகத்தை விலகி மறைந்து, *பூமியில் நிலையற்றவனும், அலைகிறவனுமாயிருப்பேன்; இப்படி என்னைக் கண்டுபிடிக்கிறவனெல்லாம் என்னைக் கொன்றுபோடுவானென்றான். *யோபு. ஐடு. உய, உக.

ம டு அப்போது கர்த்தர் அவனுடனே: ஆகையால், காயீனைக் கொல்லுகிற எவன்மேலும் ஏழுபழி சுமருமென்றுசொல்லி, காயீனைக் கண்டுபிடிக்கிறவனெல்லாம் அவனைக் கொன்றுபோடாதபடிக்குக் கர்த்தர் அவனுக்கொரு அடையாளம்போட்டார்.

ம கூ அப்படியே காயீன் கர்த்தருடைய சமுகத்தைவிட்டுப் புறப்பட்டு, ஏதேனுக்குக் கிழக்கான நோதென்ற தேசத்தில் குடியிருந்தான்.

ம எ காயீன் தன் பெண்சாதியை அறிந்தான்; அவள் கர்ப்பந்தரித்து, ஏனோக்கைப் பெற்றாள்; காயீன் ஒரு பட்டணத்தைக்கட்டி, அந்தப் பட்டணத்துக்குத் தன் குமாரன் ஏனோக்குடைய பேரைத் தரித்தான்.

ம ஐ ஏனோக்குக்கு ஈராத் பிறந்தான்; ஈராத், மெகூயவேலைப் பெற்றான்; மெகூயவேல், மெத்தூசவேலைப் பெற்றான்; மெத்தூசவேல், லாமேகைப் பெற்றான்.

ம கூ ¶ லாமேக் இரண்டு பெண்சாதிகளை விவாகம் பண்ணினான்; முதலாம் பெண்சாதியின்பேர் ஆதா; இரண்டாம் பெண்சாதியின்பேர் சில்லா.

ம ஙி ஆதா யாபாலைப் பெற்றாள்; அவன் கூடாரங்களில் வாசம்பண்ணி, மந்தைவளர்க்கிறவர்களுக்குத் தகப்பனானான்.

ம ச அவன் சகோதரனுடையபேர் யூபால்; அவன் சகல சுரமண்டலக்காரருக்கும் வீணாக்காரருக்கும் தகப்பனானான்.

ம ரு சில்லாளும் கர்ப்பந்தரித்துத் தூபால் காயீனைப் பெற்றாள்; அவன் சகல கன்னருக்கும் கொல்லருக்கும் முதலாளி; தூபால் காயீனுடைய சகோதரி நாமாள்.

ம ஞ லாமேக் தன் பெண்சாதிகளாகிய ஆதாளோடும் சில்லாளோடும் சொன்னதாவது: லாமேகின் பெண்சாதிகளே, என் சத்தத்தைக் கேட்டு என் சொல்லுக்குக் கவனமாயிருங்கள்; ஒரு மனுஷனை எனக்குக் காயமுண்டாகவும், ஒரு வாலிபனை எனக்குத் தழும்புண்டாகவும் கொன்றுபோட்டேன்.

ம ட காயீனுக்காக ஏழு பழியும், லாமேகுக்காக எழுபத்தேழு பழியும் சுமருமென்றான்.

ம டு ¶ ஆதாம் பின்னையும் தன் பெண்சாதியை அறிந்தான், அவள் ஒரு குமாரனைப் பெற்று, காயீன் கொன்றுபோட்ட ஆபேலுக்குப் பதிலாகப் பராபரன் எனக்கு வேறொரு வித்தைக் கொடுத்தாரென்று சொல்லி, அவனுக்குச் *சேத் என்று பேரிட்டாள். *இ. ஈ.

ம டூ சேத்துக்கும் *ஒரு குமாரன் பிறந்தான்; அவனுக்கு ஏனோஸ் என்று பேரிட்டான்; அப்போது கர்த்தருடைப் நாமத்தைத் தொழுதுகொள்ளத்தலைக்கமாயிற்று. *இ. ஊ.

ரு. அதிகாரம்.

ஆதாமுடைய *சந்ததிகளின் அட்டவணையாவது: பராபரன் மனுஷனைச் சிருஷ்டிக்கிறநாளிலே †அவனைப் பராபரனுடைய சாயலாக உண்டாக்கினார். *க நானா. க. க. †க. உஎ.

ரு அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்கள் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலே அவர்களுக்கு மனுஷரென்று பேரிட்டார்.

ரு ஆதாம் நூற்றுமுப்பதுவருஷம் உயிரோடிருந்தபோது, தன் சாயலாகத் தன்னுடைய ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, *அவனுக்குச் சேத்தென்று பேரிட்டான். *ச. உடி.

ரு ஆதாம் சேத்தைப் பெற்றபிற்பாடு,

என்னூறு வருஷம் உயிரோடிருந்து குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

இ ஆகையால், ஆதாம் உயிரோடிருந்த காலெல்லாம் தொளாயிரத்து முப்பதுவருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

கூ ¶ சேத் நூற்றைந்து வயதாயிருந்து, ஏனோசைப் பெற்றான்.

எ சேத் ஏனோசைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றேழு வருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐ ஆகையால், சேத்துடைய காலெல்லாம் தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

கூ ¶ ஏனோஸ் தொண்ணூறு வயதாயிருந்து, கேனானைப் பெற்றான்.

ஐ ஏனோஸ் கேனானைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றுப் பதினைந்து வருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐக ஆகையால், ஏனோசுடைய காலெல்லாம் தொளாயிரத்தைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ஐஉ கேனான் எழுபது வயதாயிருந்து, மக்லாலேயேலைப் பெற்றான்.

ஐஊ கேனான் மக்லாலேயேலைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்று நாற்பதுவருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐச ஆகையால், கேனானுடைய காலெல்லாம் தொளாயிரத்துப் பத்துவருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ஐடு ¶ மக்லாலேயேல் அறுபத்தைந்து வயதாயிருந்து, யாரேத்தைப் பெற்றான்.

ஐஎ மக்லாலேயேல் யாரேத்தைப் பெற்றபிற்பாடு, எண்ணூற்றுமுப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐஏ ஆகையால், மக்லாலேயேலுடைய காலெல்லாம் எண்ணூற்றுத் தொண்ணூற்றைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ஐஐ யாரேத் நூற்றறுபத்திரண்டு வயதாயிருந்து, ஏனோக்கைப் பெற்றான்.

ஐஒ யாரேத் ஏனோக்கைப் பெற்றபிற்பாடு, எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐஓ ஆகையால், யாரேத்துடைய காலெல்லாம் தொளாயிரத்தறுபத்திரண்டு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ஐக ¶ ஏனோக் அறுபத்தைந்து வயதாயிருந்து, மெத்தூசலாகைப் பெற்றான்.

ஐங ஏனோக் மெத்தூசலாகைப் பெற்றபிற்பாடு, முந்நூறு வருஷம் பராபரனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐச ஏனோக்குடைய காலெல்லாம் முந்நூற்றறுபத்தைந்து வருஷமாயிருந்தது.

ஐசு *ஏனோக் பராபரனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், இராதேபோனான்; ஏனெனில், பராபரன் அவனை †எடுத்துக்கொண்டார். * எபி. ஙக. டு. யூதா. ஙச. வச. † உ இரா. உ. ஙக.

ஐடு ¶ மெத்தூசலாக் நூற்றெண்பத்தேழு வயதாயிருந்து, லாமேகைப்பெற்றான்.

ஐஎ மெத்தூசலாக் லாமேகைப் பெற்றபிற்பாடு, எழுநூற்றெண்பத்திரண்டுவருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

ஐஏ ஆகையால், மெத்தூசலாக்குடைய காலெல்லாம் தொளாயிரத்தறுபத்தொன்பதவருஷமாயிருந்தது; பிற்பாடுமரித்தான்.

ஐஐ ¶ லாமேக் நூற்றெண்பத்திரண்டுவயதாயிருந்து, ஒரு குமாரனைப்பெற்று,

ஐஒ கர்த்தர் சபித்த பூமியிலே உண்டான நம்முடைய வேலையிலும் நம்முடைய கைகளின் வருத்தத்திலும் இவன் நம்மைத் தேற்றுவானென்று சொல்லி, அவனுக்கு நோவாவென்று பேரிட்டான்.

ஐஓ லாமேக் நோவாவைப் பெற்றபிற்பாடு, ஐந்நூற்றுத் தொண்ணூற்றைந்துவருஷம் உயிரோடிருந்து, குமாரனையும் குமாரத்திகளையும் பெற்றான்.

Digitized by Google

ஊக ஆகையால் லாமேகுடைய ஈாளெல்லாம் எழுனூற்றெழுபத்தேழு வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ஊஉ நோவா ஐந்நூறு வயதானபோது, நோவா *சேமையும், காமையும், யாப்பேத்தையும் பெற்ருன். *கூ. ய.

கூ. அதிகாரம்.

மனுஷர் பூமியின்மேல் பெருகத்துவக்கி அவர்களுக்குக் குமாரத்திகள் பிறந்தபோது, சம்பவித்ததேதென்ருல்,

உ பராபரனுடைய குமாரர் மனுஷருடைய குமாரத்திகளை அவர்கள் சவுந்தரியமுள்ளவர்களென்று பார்த்துத் தாங்கள் தெரிந்துகொண்ட அனைவரிலும் பெண்களைக் கொண்டார்கள்.

ஊ அப்போது கர்த்தர் *நம்முடைய ஆவினன்றைக்கும் மனுஷரோடே போராடுவதில்லை; ஏனெனில், அவர்கள் தானும் மாமிசம்; அவர்கள் இருக்கப்போகிற ஈாள்கள் நூற்றிருபதவருஷமென்ருர். *ஏசா. கூஈ. ய. அப். எ. டுக.

ச அக்காள்களில் இராட்சதர் பூமியிலேயிருந்தார்கள்; பிற்பாடு பராபரனுடைய குமாரர் மனுஷருடைய குமாரத்திகளோடே கூடுகிறதினுல் இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது இவர்களும் பூருவத்தில் பேர்போன மனுஷராகிய பலவான்களானார்கள்.

டு ஆனுல், மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெரியதென்றும், *அவன் இருதயத்தினுடைய நினைவுகளின் தோற்றுதலெல்லாம் நித்தம் பொல்லாததே என்றும், †கர்த்தர் கண்டபோது, *ஆ. உஈ. மத். டுய. டுஊ † சங். டுச. உ.

ஈ தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்குக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு நோவாயிருந்தது.

எ அப்போது கர்த்தர் சொன்னதாவது: ஈாம் சிருஷ்டித்த மனுஷனைப் பூமியின் மேல்வைக்காமல், மனுஷன்முதற்கொண்டு மிருகங்கள்பரியந்தமும், ஊர்வனபரியந்தமும், ஆகாசத்துப்பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவோம்; ஏனெனில், ஈாம் அவர்களை உண்டாக்கினது நமக்கு மனஸ்தாபமாயிருக்கிறதென்ருர்.

அ ¶ ஆனுல், *நோவாவுக்குக் கர்த்தருடைய கண்களில் கிருபைகிடைத்தது. *எபி. டுஈ. எ.

கூ நோவாவின் சந்ததியாவது: நோவா தன் காலத்தில் இருக்கிறவர்களுக்குள்ளே நீதியும் உத்தமமுமான மனுஷனுயிருந்தான்; *நோவா பராபரனுடே சஞ்சரித்துவந்தான். *டு. உஉ.

ஐ *நோவா சேம், காம், யாப்பேத்தென்ற மூன்று குமாரரைப்பெற்ருன். *டு. ஈஉ.

ஐஈ பூமியோவெனில், பராபரனுக்கு முன்பாகக் கெடுக்கப்பட்டிருந்தது; கொடுமையினுலே பூமி நிறைந்தது.

ஐஉ பராபரன் பூமியைப் பார்த்தார்; இதோ கெடுக்கப்பட்டதாயிருந்தது; ஏனெனில், மாமிசமெல்லாம் பூமியின்மேல் தன் வழியைக் கெடுத்தது.

ஐஊ அப்போது பராபரன் நோவாவுக்குச் சொன்னதாவது: எல்லா மாமிசத்தின் முடிவும் நமக்கு முன்பாகவந்தது; ஏனெனில், அவர்களால் பூமி கொடுமையினுலே நிறைந்தது; இதோ ஈாம் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவோம்.

ஐச ¶ ஈ கொப்பேர் மரங்களால் உனக்கொரு பேழையை உண்டாக்கு; அந்தப் பேழையிலே அறைகளையுண்டாக்கி, அதன் உள்ளும்புறம்புமாகக் கீலில் பூசுவாயாக.

ஐடு ஈ அதைப் பண்ணவேண்டிய பிரகாரமாவது: பேழையின் நீளம் முந்நூறு முழமும் அதின் அகலம் ஈம்பது முழமும் அதின் உயரம் முப்பதுமுழமுமாயிருப்பதாக.

ஐஎ ஈ பேழைக்கு வெளிச்சம்வரும் திறப்பைப்பண்ணி, மேல்தட்டுக்கு ஒரு முழத்தாழ்த்தியிலே அதைச் செய்து முடித்

Digitized by Google

வது, பேழையின் கதவை அதின் பக்கத்தில் வைத்துக் கீழ் அறைகளையும், இரண்டாந் தட்டின் அறைகளையும், மூன்றாந்தட்டின் அறைகளையும் பண்ணுவாயாக.

ஐ ஏனென்றால் இதோ, வானத்தின்கீழே ஜீவசுவாசமுள்ள எல்லா மாமிசத்தையும் அழிக்க, நாம் பூமியின்மேல் சலப்பிரளயத்தை வரப்பண்ணுவோம்; பூமியிலுள்ளவையெல்லாம் மாண்டுபோம்.

ஒ ஆனால் உன்னோடே நம்முடைய உடம்படிக்கையை நிலைநிறுத்துவோம்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் பெண்சாதியும் உன் குமாரரின் பெண்சாதிகளும் பேழைக்குள் பிரவேசிக்கக்கடவீர்கள்.

ஓஊ உன்னோடேகூட உயிரோடே காப்பதற்கு நீ எல்லாவித மாமிசமான சகலஜீவன்களிலும் *வகை ஒன்றுக்கு ஆணும் பெண்ணுமாயிருக்கிற ஒவ்வொரு சோடு பேழைக்குள் சேர்த்துக்கொள்வாயாக. *எ. கூ.

ஓஏ சாதிசாதியான பறவைகளிலும் சாதிசாதியான மிருகங்களிலும் சாதிசாதியான பூமியின் எல்லா ஊர்வனவற்றிலும், வகை ஒன்றுக்கு ஒவ்வொருசோடு உயிரோடே காக்கப்படுவதற்கு உன்னண்டைக்கு வரக்கடவது.

ஓக ஆகையால், நீ தின்கிற சகலவித பண்டங்களையும் எடுத்துக்கொண்டு, உனக்கும் அவைகளுக்கும் ஆகாரமாயிருப்பதற்காக உன்னண்டையிலே சேர்த்துக்கொள்ளக்கடவாயென்றார்.

ஓஉ *நோவா அப்படிச்செய்தான்; பராபரன் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் அவன்செய்தான். *எ. டு. எபி. ஙக. எ.

எ. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் நோவாவோடே சொன்னதாவது: *நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; ஏனெனில், இந்தச் சந்ததியில் உன்னை நமக்கு முன்பாகநீதிமானாகக்கண்டோம். *உபே. உ. டு.

உ பூமியின்மீதெங்கும் வித்தை உயிரோடேகாக்கும்படிக்கு நீ சுத்தமான சகல மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாயிருக்கிற எவ்வேழு சோடும், சுத்தமல்லாத மிருகங்களிலோவென்றால், ஆணும் பெண்ணுமாயிருக்கிற ஒவ்வொருசோடும்,

ஈ ஆகாசத்துப் பறவைகளிலும் சேவலும் பேடுமாயிருக்கிற எவ்வேழுசோடும் உன்னண்டையிற் சேர்த்துக்கொள்ளக்கடவாய்.

ச ஏனெனில், இன்னம் எழுநாள் சென்றபிற்பாடு நாம் பூமியின்மேல் இரவுபகல் நாற்பதுநாளாக மழையை வருஷிக்கப்பண்ணி, நாம் உண்டாக்கின சீவசெந்த அனைத்தையும் பூமியின்மேலிராதபடிக்கு நிக்கிரகம் பண்ணுவோமென்றார்.

ஙி கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியெல்லாம் நோவா செய்தான்.

ஙு பூமியின்மேல் சலப்பிரளயத்தின் தண்ணீர்கள் உண்டாகிறபோது நோவா அறுநூறுவயதாயிருந்தான்.

ஙூ நோவாவும் அவனோடேகூட அவன் குமாரரும் அவன் பெண்சாதியும் அவன் குமாரரின் பெண்சாதிகளும் சலப்பிரளயத்தின் தண்ணீர்களுக்குத் தப்பப் *பேழைக்குள் பிரவேசித்தார்கள். *மத். உச. ஈஎ, ஈகூ. லூக். ஙஎ. உசு, உஎ.

ஙஅ பராபரன் நோவாவுக்குக் கற்பித்தபடியே சுத்தமான மிருகங்களிலும் சுத்தமில்லாத மிருகங்களிலும் பூமியின்மேல் ஊர்வனவெல்லாவற்றிலும்,

ஙூ *ஆணும் பெண்ணும் சோடுசோடாய் நோவாவண்டையிலே பேழைக்குட்பட்டன. *கூ. ஙகூ.

ஙஐ ஏழுநாள் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பூமியின்மேல் சலப்பிரளயத்தின் தண்ணீர்களுண்டாயின.

ஙக நோவா அறுநூறுவயதாகிறவருஷத்தில் இரண்டாம்மாதம் பதினேழாந்தேதியா

கிய அந்நாளிலே, மகா ஆழத்தின் ஊற்றுக ளெல்லாம் பிளந்தன; வானத்தின் மதகுக ளும் திறவுண்டன.

ஙஉ இரவும் பகலும் நாற்பதுநாளாகப் பூமியின்மேல் பெருமழை உண்டாயிருந் தது.

ஙங அந்த நாளில்தானே நோவாவும், நோவாவின் குமாரராகிய சேமும், காமும், யாப்பேத்தும், அவர்களோடேகூட நோவா வின் பெண்சாதியும், அவன் குமாரரின் மூன்று பெண்சாதிகளும் பேழைக்குட் பிர வேசித்தார்கள்.

ஙச இவர்கள்தவிரச் சாதி சாதியான சக லவித சீவன்களும், சாதி சாதியான சகல வித மிருகங்களும், பூமியின்மேல்ஊருகிற சாதி சாதியான சகலவித ஊர்வனவும், சாதி சாதியான சகலவித பறவைகளும், எப்ப டிப்பட்ட சிறகுமுள்ள சகலவித பட்சி களும் உட்பட்டன.

ஙஎ இப்படியே சீவசுவாசமுள்ள எல் லாமாமிசத்திலேயும் சோடி சோடானவை கள் நோவாவண்டையிலே பேழைக்குள் போயின.

ஙஅ உட்போனவைகள், பராபரன் அவ னுக்குக் கற்பித்தபடியே சகலவித மாமிசத் தில் ஆணும்பெண்ணுமாய் உட்போயின; அப்போது, கர்த்தர் அவனுக்குப்பின்னுகக் கதவடைத்தார்.

ஙக சலப்பிரளயம் நாற்பதுநாள் பூமி யின்மேலுண்டாயிறபோது தண்ணீர்கள் பெருகி, பேழையைக் ளெம்பப்பண்ணி, அது பூமியைவிட்டு உயரவந்தது.

ஙஉ தண்ணீர்கள் மகா வெள்ளமாகிப் பூ மியின்மேல் மிகவும் பெருகிற்று; ஆனால், பேழை தண்ணீர்களின்மேல் மிதந்துகொ ண்டிருந்தது.

ஙங தண்ணீர்கள் பூமியின்மேல் மிக வும் மிகுந்த வெள்ளமானதினாலே, வானத் தின்கீழ் எங்குமுள்ள உயர்ந்த பருவதங்க ளெல்லாம் மூடப்பட்டன.

ஙச மூடப்பட்ட பருவதங்களுக்கு மே லாய்ப் பதினைந்துமுழ உயரத்திற்குத் தண் ணீர்கள் பெருகிப்போயிற்று.

ஙஎ அப்போது பூமியின்மேல் அசை வாடுகிற எல்லா மாமிசமுமாகிய பறவைக ளும், சாதுமிருகங்களும், தஷ்டமிருகங்க ளும், பூமியின்மேல் ஊருகிற சகல ஊர் வனவும், *எல்லா மனுஷரீவனும் மாண் டது. *ஞாக். ஙஎ. உஎ.

ஙஅ வெட்டாந்தரையில் உண்டானவை யெல்லாவற்றிலும், நாசியில் சீவசுவாச மான ஆவியையுடையவையெல்லாம் செ த்துப்போயின.

ஙக பூமியின்மேல் மனுஷனைத்துவக்கி மிருகங்கள்பரியந்தமும், ஊர்வனபரியந் தமும், ஆகாசத்துப் பறவைகள்பரியந்த மும், இருந்த உயிருள்ள வஸ்து யாவும் நிக்கிரகமாயின; அவைகள் பூமியில் இரா தபடிக்கு நிக்கிரகமாயின; நோவாவும், அவனுடனே பேழையிலிருந்தவைகளுமா த்திரமே உயிரோடே வைக்கப்பட்ட மீதி யாயின.

ஙஉ தண்ணீர்கள் பூமியின்மேல் நூற் றைம்பதுநாள் மிகவும் பெருத்திருந்தது.

ஆ. அதிகாரம்.

பராபரனேவென்றால், நோவாவையும், அவனோடேகூடப் பேழையிலிருந்த எல் லாச் சீவன்களையும், எல்லா மிருகங்களையு ம் நினைத்தார்; ஆகையால், பராபரன் பூமி யின்மேல் காற்றை அடிக்கப் பண்ணினார்; அப்போது தண்ணீர்கள் அமர்ந்தது.

உ ஆழத்தின் ஊற்றுகளும், வானத்தின் மதகுகளும் அடைபட்டு, வானத்திலிருந்த மழை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

ங அப்போது தண்ணீர்கள் போகப்போ கப் பூமியைவிட்டுத் திரும்பிற்று; *நூற் றைம்பதுநாளுக்குப்பிற்பாடு, தண்ணீர்கள் குறைந்தது. *எ. உச.

ச ¶ ஏழாமாதம் பதினேழாந்தேதியிலே, பேழை *ஆராத்தென்ற மலைகளின்மேல் தங்கிற்று. *எசா. ங எ. ங ஆ.

Digitized by Google

டு பத்தாமாதமட்டும் தண்ணீர்கள் குறைந்துவருகையில், பத்தாமாதமுதல்தேதியிலே, பருவதங்களின் சிகரங்கள் காணப்பட்டது.

சு நாற்பதுநாள் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், நோவா தான்பேழையிலுண்டாக்கியிருந்த பலகணியைத் திறந்து,

எ ஒருகாகத்தை வெளியே விட்டான்; அது புறப்பட்டுப் பூமியின்மேலிருந்த தண்ணீர்கள் சுவறிப்போகுமட்டும் போகிறதும் வருகிறதுமாயிருந்தது.

அ பிற்பாடு பூமியின்மேல் தண்ணீர்கள் கொஞ்சமாயிற்றோவென்று பார்க்கிறதற்கு, ஒரு புறாவைத் தன்னிடத்திலிருந்து வெளியிலே விட்டான்.

கூ அந்தப் புறாவோவெனில், பூமியின்மீதெங்கும் தண்ணீர்கள் இன்னமிருந்தபடியினாலே, தன்னுள்ளங்காலுக்கு இளைப்பாறும் இடத்தைக்காணுமல், நிரும்ப அவனண்டையில் பேழைக்கு வந்தது; அப்போது அவன் தன்கையை நீட்டி, அதைப் பிடித்து, அதைத் தன்னிடமாகப் பேழைக்குட் சேர்த்துக்கொண்டான்.

ஐ இன்னம் வேறே ஏழுநாட்பொறுத்து மறுபடியும் புறாவைப் பேழையிலிருந்து வெளியிலே விட்டான்.

ஙக அந்தப் புறாச் சாயங்காலத்திலே அவனண்டைக்கு வந்துசேர்ந்தது; இதோ அது கொத்திக்கொண்டுவந்த ஒரு ஒலிவமரத்தின் இலை அதின் வாயிலேயிருந்தது; அதினாலே, நோவா பூமியின்மேல் தண்ணீர்கள் கொஞ்சமாயிற்றென்றறிந்தான்.

ஙஉ அவன் இன்னம் வேறே ஏழுநாட்பொறுத்துப் புறாவை வெளியிலே விட்டான்; அது மறுபடியும் அவனண்டைக்குத் திரும்பிவந்ததில்லை.

ஙஈ ¶ அவன் அறுநூற்றொருவயதாயிருந்தவருஷம் முதல்மாதம் முதல்தேதியிலே சம்பவித்ததேதென்றால், பூமியின்மேலேயிருந்த தண்ணீர்கள் வற்றிப்போனபடியினாலே நோவா பேழையின்மேல் தட்டைவாங்கிப் போட்டுப்பார்த்தான்; இதோ பூமியின்மேல் தண்ணீரில்லாதிருந்தது.

ஙச பிறகு இரண்டாமாதம் இருபத்தேழாந்தேதியிலே பூமி காய்ந்திருந்தது.

ஙடு ¶ அப்போது பராபரன் நோவாவோடே சொன்னதாவது:

ஙசு நீயும், உன்னோடேகூட உன் பெண்சாதியும், உன் குமாரரும், உன் குமாரரின் பெண்சாதிகளும், பேழையிலிருந்து புறப்பட்டுவாருங்கள்.

ஙஎ பறவைகளும், மிருகங்களும், பூமியின்மேல் ஊருகிற சகல ஜீவனவுமாகிய எல்லாவித மாமிசத்திலும், உன்னண்டையிலேயிருக்கிற சீவனையெல்லாம் உன்னோடேகூட வெளியிலே வரவிடு, *அவைகள் பூமியிலே திரளாய் வர்த்தித்து, பூமியின்மேல் பலுகிப் பெருகக்கடவதென்றார்.

*க. உஉ.

ஙஅ அப்போது நோவாவும், அவனோடேகூட அவனுடைய குமாரரும், அவன் பெண்சாதியும், அவன் குமாரருடைய பெண்சாதிகளும் புறப்பட்டுவந்தார்கள்.

ஙகூ சகல மிருகங்களும், சகல ஜீவனவும், சகல பறவைகளுமாகிய பூமியின்மேல் நடமாடுகிறயாவும், சாதி சாதியாகப் பேழையிலிருந்து புறப்பட்டுவந்தன.

உஙு ¶ அப்போது நோவா கர்த்தருக்குப் பலிபீடங்கட்டி, சுத்தமான சகல மிருகங்களிலும், சுத்தமான சகல பறவைகளிலும், சிலவற்றை எடுத்துப் பீடத்தின்மேலே தகனபலிகளாகப் பலியிட்டான்.

உக ஆற்றுகிற வாசனையைக் கர்த்தர் மோந்தார்; அப்போது கர்த்தர் தம்முடைய இருதயத்திலே சொன்னதாவது: நாம் இனிப் பூமியை மனுஷன் நிமித்தமாகத் திரும்பச் சபியோம்; ஏனெனில், *மனுஷனுடைய இருதயத்தின் தோற்றுதல் அவன் சிறுவயது தவக்கிப் பொல்லாததாயிருக்கின்றது; இனித் திரும்ப நாம்செய்ததுபோல, எல்லாச் சீவாத்துமாவையும் சங்காரியோம். *கூ. டு. மத். ஙடு. ஙகூ.

22 பூமியிலிருக்கும் சகல நாள்மட்டும் விளைப்பும் அறுப்பும், குளிரும் அனலும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இராவும் ஒய்ந்துபோகாதிருக்குமென்றார்.

கூ. அதிகாரம்.

பிற்பாடு பராபரன் நோவாவையும் அவன் குமாரரையும் ஆசீர்வதித்து, அவர்களோடே சொன்னதாவது: *நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்புங்கள். *க. உஅ: அ. ஐ.

உ பூமியிலுடைய சகல மிருகங்களின்மேலும், ஆகாசத்திலுடைய சகல பறவைகளின்மேலும், உங்கள் பயமும், உங்கள் அதிர்வும் உண்டாயிருப்பதாக; பூமியில் நடமாடுகிற யாவும், சமுத்திரத்தின் மச்சங்கள் யாவும், உங்கள் கையிலே கொடுக்கப்பட்டது.

ங நடமாடுகிற சீவசெந்து யாவும், உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக; *பச்சைப் பூண்டுகளைப்போல, அதையெல்லாம் உங்களுக்குக் கொடுத்தோம். *க. உசூ.

ச ஆனால் மாமிசத்தை அதின் உயிராகிற *அதின் இரத்தத்தோடே புசியாதிருப்பீர்களாக. *ஈ மோ. ஐஎ. ஐஉ-ஐச: ஐகூ. உசூ. ஞ மோ. ஐஉ. உஈ, உச.

ஞ உங்கள் உயிராயிருக்கிற உங்கள் இரத்தத்துக்கும் பழியைவாங்குவோம்; சகல மிருகத்தின்கையிலும்அதை வாங்குவோம்; மனுஷன்கையிலும், அவனவன் சகோதரன்கையிலும், மனுஷனுடைய உயிருக்குப் பழியைவாங்குவோம்.

கூ *எவன் மனுஷனுடைய இரத்தத்தைச் சிந்தினாரோ, அவனிரத்தம் மனுஷரால் சிந்தப்படக்கடவது; ஏனெனில், பராபரனுடைய சாயலாக அவர் மனுஷனை உண்டாக்கினார். *உ மோ. உக. ஐஉ. மத். உசூ. ஹஉ.

எ *நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியிலே நிரனாய்வர்த்திந்து, அதிலே பெருகிப் போங்களென்றார். *உ, வசனம்.

அ ¶ பின்னையும் பராபரன் நோவாவோடும், அவன் குமாரரோடுங்கூடச் சொன்னதாவது:

கூ இதோ நாம் உங்களோடும், உங்களுக்குப் பின்னுகவரும் உங்களுடைய வித்தோடும்,

ஐ உங்களண்டையிலிருக்கிற சகல சீவசெந்துக்களாகிய பறவைகளோடும், மிருகங்களோடும், உங்களண்டையிலிருக்கிற பூமியிலுடைய எல்லாச் சீவன்களோடும், நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்துகிறோம்; பேழையிலிருந்து புறப்பட்டதெல்லாம் முதற்கொண்டு பூமியிலிருக்கப்போகிற எல்லாச் சீவன்களோடுங்கூடத்தானே.

ஓக *இனி மாமிசமெல்லாம் சலப்பிரளயத்தின் தண்ணீர்களால் சங்கரிக்கப்படாதென்றும், பூமியை அழிக்க இனிச் சலப்பிரளயம் வராதென்றும், உங்களோடே நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்துகிறேமென்றார். *அ. உக, ஐஉ. ஏசா. நச. கூ.

ஓஉ பின்னையும் பராபரன் சொன்னதாவது: நாம் நமக்கும், உங்களுக்கும், உங்களண்டையிலிருக்கிற எல்லாச் சீவசெந்துக்களுக்கும், என்றுமுள்ள தலைமுறைகளுக்கென்று பண்ணுகிற உடம்படிக்கையின் அடையாளமாவது:

ஓக நம்முடைய வில்லை மேகத்திலே வைத்தோம்; அது நமக்கும் பூமிக்குமுண்டான உடம்படிக்கைக்கு, அடையாளமாயிருக்கும்.

ஓச ஆகையால் சம்பவிப்பதெதெனில், நாம் பூமியின்மேல் மேகமந்தாரத்தை வரப்பண்ணும்போது மேகத்திலே அந்த வில் காணப்படும்.

ஓஞ அப்பொழுது, சலப்பிரளயத்தின் தண்ணீர்கள் இனி எல்லா மாமிசத்தையும் அழிக்க வராதபடிக்கு, நமக்கும் உங்களுக்கும் எல்லாவித மாமிசமாகிய சகல சீவசெந்துக்களுக்குமுண்டான நம்முடைய உடம்படிக்கையை நினைப்போம்.

Digitized by Google

ஐசு அந்த வில் மேகத்திலிருக்கும்போது பராபரனுக்கும், பூமியின்மேலுள்ள எல்லா வித மாமிசமாகிய சகல சீவனுக்கும் உண்டான நித்திய உடம்படிக்கையை நாம் நினைக்கும்படிக்கு, அதை நோக்கிப்பார்ப்போம்.

ஐஎ இது நமக்கும், பூமியின்மேலுள்ள சகல மாமிசத்துக்கும், நாம் ஏற்படுத்தின உடம்படிக்கையின் அடையாளமென்று பராபரன் நோவாவோடே சொன்னார்.

ஐஅ ¶ பேழையிலிருந்து புறப்பட்ட நோவாவின் குமாரர் சேம், காம், யாப்பேத் தென்றவர்களே; காமோவென்றால், கானானுடைய தகப்பன்.

ஐகூ இந்த மூன்றுபேர் நோவாவினுடைய குமாரர்; இவர்களாலே பூமியெங்கும் சனம் பரம்பிற்று.

உஐ¶ நோவா பயிரிடும் குடியாயிருக்கத்துவக்கி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான்.

உக அவன் திராட்சப்பழ இரசத்திலே குடித்து, வெறித்திருந்து, தன் கூடாரத்துக்குள்ளே வஸ்திரம்விலகிப் படுத்திருந்தான்.

உஉ அப்போது கானானின் தகப்பனாகிய காம், தன் தகப்பனுடைய நிருவாணத்தைக் கண்டு, வெளியிலேயிருந்த தன் இரண்டு சகோதரருக்கு அறிவித்தான்.

உஊ அப்போது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தையெடுத்து, தங்கள் இருவரின் தோள்மேலும் போட்டுக்கொண்டு, பின்னிட்டுவந்து, தங்கள் தகப்பனுடைய நிருவாணத்தை மூடினார்கள்; அவர்கள் முகங்கள் பின்புறமாயிருந்தபடியினாலே, அவர்கள் தங்கள் தகப்பனுடைய நிருவாணத்தைக் கண்டதில்லை.

உச நோவா தன் திராட்சப்பழ இரசத்தின் வெறிதெளிந்து விழித்தபோது தன் இளையகுமாரன்தனக்குச்செய்ததையறிந்து,

உடு கானான் சபிக்கப்பட்டவனாகி, தன் சகோதரருக்கு அடியாரின்அடியானாயிருக்கக்கடவானென்றான்.

உசு பின்னையும் அவன் சொன்னதாவது: சேமுடைய பராபரனாகிய கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; கானானே வெனில், அவனுக்கு உழியக்காரனாயிருக்கக்கடவன்.

உஎ யாப்பேத்தைப் பராபரன் பரிபாலனம்பண்ணக்கடவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பானாக; கானானே வெனில், அவனுக்கு உழியக்காரனாயிருக்கக்கடவானென்றான்.

உஏ¶ சலப்பிரளயத்துக்குப் பிற்பாடு நோவா முந்நூற்றைம்பதுவருஷம் உயிரோடிருந்தான்.

உகூ ஆகையால், நோவாவின் நாள்களெல்லாம் தொளாயிரத்தைம்பது வருஷமாயிருந்தது; பிற்பாடு மரித்தான்.

ய. அதிகாரம்.

நோவாவுடைய குமாரராகிய *சேம், காம், யாப்பேத்தென்றவர்களின் சந்ததிகளாவது: அவர்களுக்குச் சலப்பிரளயத்துக்குப்பிற்பாடு பிறந்த குமாரர் ஆரென்றால், *டி. ஈஉ.

உ ¶ *யாப்பேத்துடைய குமாரர், கோமேர், மாகோக், மாதாய், யாவான், தூபால், மேசேக், தீராஸ். * க நானா. க. டு. ழி.

ஈ கோமேருடைய குமாரர், அஸ்கேனஸ், ரிப்பாத், தொகர்மா.

ச யாவானுடைய குமாரர், எலீசா, தர்சீஸ், கித்தீம், தோதானீம்.

டு இவர்களால் சாதிகளுடைய தேசத்தீவுகள் அவனவன் பாஷையின்படியேயும், அவர்களுடைய சாதிகளிலுள்ள அவர்களுடைய வமிசங்களின்படியேயும், அவரவர் தேசங்களாய்ப் பிரிந்தது.

சூ¶ காமுடைய குமாரர், கூஷ், மிஸ்ரயிம், பூத், கானான்.

எ கூஷுடைய குமாரர், சேபா, காவிலா, சப்தா, ராமா, சப்தேகா; ராமாவினுடைய குமாரர், சேபா, தேதான்.

அ கூஷ் நிம்ரோத்தைப்பெற்றான்; இவன் பூமியிலே பலவானாயிருக்கத்துவக்கினான்.

Digitized by Google

கூ இவன் கர்த்தருக்குமுன்பாகப் பலத்த வேட்டைக்காரனுயிருந்தான்; ஆகையால், நிம்ரோத்தைப்போலக் கர்த்தருக்குமுன்பாகப் பலத்த வேட்டைக்காரனுயிருக்கிறுனென்று சொல்லப்படும்.

ய சிநேயார் தேசத்திலுள்ள பாபேலும், ஏரேகும், அக்காதும், கல்நேயும், அவனுடைய இராச்சியத்தின்துவக்கமாயிருந்தது.

யக இந்தத் தேசத்திலிருந்து அசூர் புறப்பட்டுப்போய், நினிவேயையும், ரெகோபோத் பட்டணத்தையும், காலாகையும்,

யஉ நினிவேக்கும் காலாகுக்கும் நடுவாக ரேசேனையும் கட்டினுன்; இது பெரிய பட்டணம்.

யங மிஸ்ரூயீம், லூதிமையும், அனுமீமையும், லேகாபீமையும், நபத்தூகீமையும்,

யச பத்துருசீமையும், பெலிஸ்தரின் சந்ததி உண்டான கஸ்லூகீமையும், கப்தோரீமையும் பெற்றுன்.

யடு *காஞன் சீதோனென்ற தன் தலைச்சனையும், கேத்தையும்,

யசு எபூசியையும், எமோரியையும், கிர்காசியையும்,

யள இவியையும், அர்கியையும், சினியையும்,

யஅ அர்வாதியையும், செமாரியையும், காமாத்தியையும் பெற்றுன்; பிற்பாடு காஞனரின் வமிசங்கள் சிதறிப்போயின.

யசு காஞனரின் எல்லை சீதோனிலிருந்து கேரார்வழியாய்க் காசாமட்டுக்கும் போய், சோதோம், கொமரு, ஆதாமா, செபோயும் வழியாய் லாசாமட்டுக்கும் போயிற்று.

உய இவர்களே தங்கள் தேசங்களிலும், தங்கள் சாதிகளினுமுள்ள தங்கள் வமிசங்களின்படியேயும், தங்கள் பாஷைகளின்படியேயும், காமுடைய பிள்ளைகளானவர்கள்.

உக ¶ சேமுக்கும் பிள்ளைகள் பிறந்தார்கள்; அவன் ஏபேருடைய புத்திரருக்கெல்லாம் தகப்பனும், யாபேத்தென்கிற மூத்தவனுக்குத் தம்பியுமாயிருந்தான்.

உஉ சேமுடைய குமாரர், ஏலாம், அசூர், அற்பக்சாத், லூத், ஆராம்.

உங ஆராமுடைய குமாரர், ஊத்ஸ், கூல், கேத்தேர், மாஸ்.

உச *அற்பக்சாத் சாலாகைப்பெற்றுன்; சாலாக் ஏபேரைப்பெற்றுன். * ய க. யஉ.

உடு *ஏபேருக்கு இரண்டுகுமாரர் பிறந்தார்கள்; ஒருவன்பேர் பேலேக், ஏனெனில், அவன் நாள்களில் பூமி பிரிவுண்டது; அவனுடைய சகோதரன்பேர் யொக்கெத்தான். *யக. யசு.

உசு யொக்கெத்தான் அல்மோதாதையும், சாலோப்பையும், ஆசர்மாவெத்தையும், யாராகையும்,

உள ஆதோராமையும், ஊசாலையும், திக்லாவையும்,

உஎ ஓபாலையும், அபிமாவேலையும், சேபாவையும்,

உஅ ஓப்பீரையும், காவிலாவையும், யோபாபையும்பெற்றுன்; இவர்கள் அனைவரும் யொக்கெத்தானுடைய குமாரர்.

உஙு அவர்களுடைய குடியிருப்பு மேசாதலவச்சி, கிழக்குமலையாகிய சேப்பாருக்குப்போகிற வழிமட்டுமிருந்தது.

உக இவர்களே தங்கள் தேசங்களிலும் தங்கள் சாதிகளினுமுள்ள தங்கள் வமிசங்களின்படியேயும் தங்கள் பாஷைகளின்படியேயும் சேமுடைய குமாரரானவர்கள்.

உஉ இவைகளே தங்கள் சாதிகளிலுள்ள தங்களுடைய சந்ததிகளின்படியே நோவாவுடைய குமாரரின் வமிசங்கள்; சலப்பிரளயத்துக்குப்பிற்பாடு இவர்களால் பூமியிலே சாதிகள் பிரிந்தன.

யக. அதிகாரம்.

அக்காலத்திலே பூமியெங்கும் ஒரே பாஷையும், ஒரேவித வார்த்தைகளுமிருந்தன.

உ அப்போது சம்பவித்ததேதென்றுல், அவர்கள் கிழக்கேயிருந்து பயணம்பண்ணுகையில், சிநேயார் தேசத்திலே பள்ளத்

தாக்கைக்கண்டு, அங்கேகுடியிருந்து, *ய.ய.

ந ¶ ஒருவரோடொருவர், நாம் செங்கல் அறுத்து, அவைகளை நற்கோடாய்ச் சுடுவோம் வாருங்களென்றார்கள்; பிற்பாடு செங்கல் அவர்களுக்குக் கல்லாகவும், பிசின் அவர்களுக்குச் சாந்தாகவுமிருந்தது.

ச அவர்கள் நாம் பூமியின்மீதெங்கும் சிதறுண்டுபோகாதபடிக்கு, நமக்கு நாம் ஒரு பட்டணத்தையும், *வானத்தை எட்டுகிற சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, நமக்குப் பேர் உண்டாக்குவோம் வாருங்களென்று சொல்லிக்கொண்டார்கள்.

*டு மோ. க. உஅ.

டு ஆனால் மநுப்புத்திரர் கட்டுகிற பட்டணத்தையும் கோபுரத்தையும் பார்க்கிறதற்காகக் *கர்த்தர் இறங்கினார். *யஅ. உக.

ண அப்போது கர்த்தர் சொன்னதாவது: இதோ சனம் ஒரே கூட்டமானது; அவர்கள் அனைவருக்கும் ஒரே பாஷையுமிருக்கிறது; இதை அவர்கள் செய்யத்தொடங்கினார்கள்; இப்போதும் தாங்கள் செய்ய நினைத்ததெல்லாம் தங்களுக்குத் தடுக்கப்படுவதில்லை என்றிருக்கிறார்கள்.

த நாம் இறங்கி, ஒருவர் பாஷையை மற்றொருவர் அறியாதபடிக்கு, அவ்விடத்தில் அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோமாகவென்றார்.

ந அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்போது பட்டணத்தைக் கட்டி ஓய்ந்தார்கள்.

ப ஆனதுகொண்டு பூமி அனைத்தின் பாஷையைக் கர்த்தர் அங்கே தாறுமாறாக்கின படியினாலும், கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினபடியினாலும், அதின்பேர் பாபேலென்னப்பட்டது.

ம ¶ *சேமுடைய சந்ததியாவது: சேம் நூறுவயதாயிருந்து, அற்பக்சாத்தைச் சலப் பிரளயம்போன இரண்டு வருஷத்துக்குப் பிற்பாடு பெற்றான். *ய. உஉ.

ய சேம் அற்பக்சாத்தைப் பெற்றபிற்பாடு, ஐந்நூறுவருஷம் உயிரோடிருந்து குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

யஉ அற்பக்சாத் முப்பத்தைந்து வயதாயிருந்து, சாலாகைப்பெற்றான்.

யங சாலாகைப் பெற்றபிற்பாடு, அற்பக்சாத் நானூற்றுமூன்றுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையு பெற்றான்.

யச சாலாக் முப்பது வயதாயிருந்து ஏபேரைப்பெற்றான்.

யடு ஏபேரைப் பெற்றபிற்பாடு, சாலா நானூற்றுமூன்று வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

யசு ஏபேர் முப்பத்துநாலு வயதாயிருந்து, பேலேகைப்பெற்றான்.

யள பேலேகைப் பெற்றபிற்பாடு, ஏபேர் நானூற்றுமுப்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையு பெற்றான்.

யஅ பேலேக் முப்பதுவயதாயிருந்து, ரேகூவைப்பெற்றான்.

யங ரேகூவைப்பெற்றபிற்பாடு பேலேக் இருநூற்றொன்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உய ரேகூ முப்பத்திரண்டுவயதாயிருந்து, சேரூகைப்பெற்றான்.

உக சேரூகைப் பெற்றபிற்பாடு, ரேகூ இருநூற்றேழுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உஉ சேரூக் முப்பதுவயதாயிருந்து, நாகோரைப் பெற்றான்.

உங நாகோரைப் பெற்றபிற்பாடு, சேரூக் இருநூறுவருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.

உச நாகோர் இருபத்தொன்பது வயதாயிருந்து, தேராகைப்பெற்றான்.

உடு தேராகைப் பெற்றபிற்பாடு நாகோர் நூற்றுப்பத்தொன்பதுவருஷம் உயிரோடி

Digitized by Google

ருந்து, குமாரனையும், குமாரத்திகனையும் பெற்றான்.

உசு தேராக் எழுபது வயதாயிருந்து, ஆபிராமையும், நாகோனையும், ஆரானையும் பெற்றான்.

உஎ ¶ தேராகுடைய சந்ததியாவது: தேராக் ஆபிராமையும், நாகோனையும், ஆரானையும் பெற்றான்; ஆரான் லோத்தைப்பெற்றான்.

உஅ ஆராலேவெனில், தன் சென்ம பூமியாகிய ஊர் என்ற கல்தேயர் தேசத்துப்பட்டணத்திலே தன் தகப்பனுகிய தேராகுக்கு முன்னே மரித்தான்.

உசு ஆபிராமும் நாகோரும் தங்களுக்குப் பெண்கொண்டார்கள்; ஆபிராமுடைய பெண்சாதியின்பேர் சாறாய்; நாகோருடைய பெண்சாதியின்பேர் மில்காள்; இவன் ஆரானின் குமாரத்தி; இவளுடைய தகப்பன் மில்காளுக்கும், இஸ்காளுக்கும் தகப்பனனவன்.

உஎ ஆனால், சாறாய் புத்திரசந்தானமில்லாமல் மலடியாயிருந்தாள்.

உக ¶ தேராக் தன் குமாரனுகிய ஆபிராமையும், ஆரானின் குமாரன் தன் பேரனுகிய லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய பெண்சாதியாகிய தன் மருமகள் சாறுயையும் அழைத்துக்கொண்டு, அவர்களோடேகூட *ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து கானன்தேசத்துக்குப்போகப் புறப்பட்டான்; ஆனல், அவர்கள் காரான்மட்டுக்கும் வந்தபோது, அங்கே இருந்துவிட்டார்கள். *ஐடு. எ.

உஉ தேராகுடைய நான்கள் இருநூற்றைந்து வருஷமாயிருந்தது; பிற்பாடு தேராக் காரானிலே மரித்தான்.

ஐஉ. அதிகாரம்.

கர்த்தர் ஆபிராமோடே சொன்னதாவது: *நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நாம் உனக்குக் காண்பிக்கப்போகிற தேசத்துக்குப்போ. *அப். எ. ஈ. எபி. ஐக. ஆ.

உ நாம் உன்னைத் திரட்சியான சாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன்பேரை மேன்மையாக்குவோம்; நீ ஆசீர்வாதமாகஇருப்பாய்.

ஈ உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்போம்; உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்போம்; *உன்னில் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்றார்.

*ஐஆ. ஐஆ: உஉ. ஐஆ: உசூ. ச: உஆ. ஐச. அப். ஈ. உடு. கலா. ஈ. ஆ—ஐசூ.

ச ¶ அப்போது ஆபிராம் கர்த்தர் தனக்குச் சொன்னபடியே போனன்; லோத்தும் அவனேடேகூடப் போனன்; ஆபிராம் ஆரானிலேயிருந்து புறப்படுகிறபோது எழுபத்தைந்து வயதுள்ளவனுயிருந்தான்.

ஏ ஆபிராம் தன் பெண்சாதி சாறுயையும், தன் சகோதரன்குமாரனுகிய லோத்தையும், தாங்கள் சம்பாதித்திருந்த தங்கள் சம்பத்தெல்லாவற்றையும், ஆரானிலே சேதரித்துக்கொண்ட ஆத்துமாக்களையும் கூட்டிக்கொண்டபிற்பாடு கானன்தேசத்துக்குப் போகப் புறப்பட்டுக் கானன்தேசத்துக்கு வந்தார்கள்.

ஐ ¶ ஆபிராம் சீகேமென்ற இடம்மட்டுக்கும், மோரேயென்ற சமனன பூமிமட்டுக்கும் தேசத்தைக் கடந்துவந்தான்; கானனியன் அப்போது தேசத்திலேயிருந்தான்.

எ கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனையாகி, *உன் வித்துக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்போமென்றார்; அப்போது அவன் தனக்குத் தரிசனையான கர்த்தருக்கு அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டினன். *ஐஈ. ஐடு: ஐடு. ஐஆ: ஐஎ. ஆ: உசூ. ஈ.

அ பிற்பாடு அவன் அவ்விடம்விட்டுப் பேர்ந்து, பேத்தேலுக்குக் கிழக்கே இருக்கும் மலைக்குவந்து, பேத்தேல் தனக்கு மேற்காகவும் ஆயி கிழக்காகவும் இருக்கக் கூடாரம்போட்டு, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

Digitized by Google

கூ அதின்பிறகு ஆபிராம் புறப்பட்டு, தெற்கே பயணம்பண்ணிக்கொண்டேபோனான்.

ஐ ஆனால் தேசத்திலே பஞ்சமுண்டாயிற்று; ஆகையால், ஆபிராம் எகிப்துதேசத்துக்கு அங்கே தங்கும்படிக்கு இறங்கிப்போனான்; ஏனெனில், தேசத்திலே பஞ்சம் கடினமாயிருந்தது.

ஈ அப்போது சம்பவித்ததேதென்றால், அவன் எகிப்துக்குச் சமீபமாக வந்தபோது தன் பெண்சாதி சாறாயோடே சொன்னதாவது: இதோ, நீ பார்வைக்கு அழகுள்ளவளென்றறிவேன்.

உ ஆனதுகொண்டு சம்பவிப்பதேதென்றால், எகிப்தியர் உன்னைக் காணும்பொழுது, இவள் அவன் பெண்சாதியென்று சொல்லி, என்னைக் கொன்று, உன்னை உயிரோடேவைப்பார்கள்.

ஊ ஆகையால் உன் நிமித்தம் எனக்கு நலமாகும்படிக்கும், உன்னைத் தொட்டு என் ஆத்துமா உயிரோடிருக்கும்படிக்கும், *உன்னை என் சகோதரியென்று நீ சொல்லென்றான். *உ. உ, ஐஉ: உசு. எ.

ஏ ஆபிராம் எகிப்திலே வந்தபோது, சம்பவித்ததேதென்றால், எகிப்தியர் அந்தஸ்திரியை மகா அழகுள்ளவளென்று பார்த்தார்கள்.

ஐ பார்வோனுடைய பிரபுக்களும் அவளைக்கண்டு, அவளைப் பார்வோனுக்குமுன்பாகப் புகழ்ந்தார்கள்; அப்போது அந்தஸ்திரி பார்வோன் வீட்டிலே வைத்துக்கொள்ளப்பட்டாள்.

ஓ அவன் அவள் நிமித்தமாய் ஆபிராமுக்கு நன்மைசெய்தான்; இவனுக்கு ஆடுமாடுகளும், கழுதைகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும், கோளிகைக் கழுதைகளும், ஒட்டகங்களும் உண்டாயிற்று.

ஒ ஆனால் *ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாறாயின் நிமித்தம் கர்த்தர் பார்வோனையும் அவன் வீட்டாளையும் மகா வாதைகளாலே வாதித்தார். *சங். ஈடு. ஐசு.

ஐஅ அப்போது பார்வோன் ஆபிராமை அழைத்துச் சொன்னதாவது: இதை எனக்கு என் செய்தாய்? இவள் உன் பெண்சாதியென்று நீ எனக்கு அறிவிக்காதே போனதென்ன?

ஐகூ இவள் உன் சகோதரியென்று நீ சொல்லுவானேன்? அவளை நான் எனக்குப்பெண்சாதியாகப் படைக்கவேணுமென்றிருப்பேனே; இப்போதோவெனில், இதோ உன் பெண்சாதியிருக்கிறாள்; அவளை அழைத்துக்கொண்டு போவென்றுசொல்லி,

ஐஐ பார்வோன் அவனுக்காகச் சில மனிதரைக் கட்டளைபண்ணினான்; அவர்கள் அவனையும், அவன் பெண்சாதியையும், அவனுக்குண்டானதெல்லாவற்றையும் வழிவிட்டனுப்பிவிட்டார்கள்.

ஐஈ. அதிகாரம்.

அப்படியே ஆபிராமும், அவன் பெண்சாதியும், அவனுக்குண்டான யாவும், அவனோடேகூட லோத்தும், எகிப்திலிருந்து தெற்குப்புறத்திலே ஏறிவந்தார்கள்.

உ ஆபிராமோவெனில், மிருகசீவன்களும் வெள்ளியும் பொன்னுமான ஆஸ்தியிலே மகா கனவானாயிருந்தான்.

ஊ அவன் தன் பயணங்களில் தெற்கேயிருந்து பேத்தேல்மட்டாகவும், *பேத்தேலுக்கும் ஆயீக்கும் நடுவாகத் தனக்கு முதல் கூடாரமிருந்ததும் தான் முதல் ஒரு பீடத்தை உண்டாக்கினதுமான ஸ்தலமட்டாகவும் போனான். *ஐஉ. அ.

ச அங்கே ஆபிராம் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான்.

ஞ ஆபிராமோடேகூடவந்த லோத்துக்கும், ஆடுமாடுகளும் கூடாரங்களுமிருந்தன.

ட அவர்கள் ஒருமிக்கக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கமாட்டாதேபோயிற்று. ஏனெனில், (ஒருமிக்க) அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தது; ஆகையால், அவர்கள் கூடக் குடியிருக்கக் கூடாதிருந்தது.

Digitized by Google

எ ¶ ஆபிராமுடைய மந்தையின் மேய்ப் பருச்சும், லோத்துடைய மந்தையின் மேய்ப்பருக்கும் வாக்குவாதமுண்டாயிருந்தது; கானனியரும், பெரிசியரும் அப்போது தேசத்திலே குடியிருந்தார்கள்.

ஈ ஆகையால், ஆபிராம் லோத்தோடே சொன்னதாவது: எனக்கும் உனக்கும், என்னுடைய மேய்ப்பருக்கும், உன்னுடைய மேய்ப்பருக்கும், வாக்குவாதம் இருக்கவேண்டாம்; ஏனெனில், நாம் சகோதரரானவர்கள்.

உ இந்தச் சீமையெல்லாம் உனக்குமுன்பாக இருக்கின்றதல்லவோ? என்னைவிட்டுப் பிரிந்துபோகலாம்; நீ இடதுபுறத்திலே சாய்ந்துபோனால், நான் வலதுபுறத்திலே சாய்ந்துபோவேன்; நீ வலதுபுறத்திலே சாய்ந்துபோனால், நான் இடதுபுறத்திலே சாய்ந்துபோவேனென்றான்.

ஊ ¶ அப்போது லோத் தன் கண்களை ஏறெடுத்து, யோர்தான் நதிக்கருகான சமனான பூமியையெல்லாம் அது எங்கும் நீர்ப்பாய்ச்சலானதென்று பார்த்தான்; ஏனெனில், கர்த்தர் சோதோமையும், கொமோரவையும் அழிக்காததற்குமுன்னே, அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும், சோவார்மட்டுக்கும் எகிப்துதேசத்தைப் போலவுமிருந்தது.

எ அப்போது லோத் யோர்தானுக்கருகான சமனான பூமியையெல்லாம் தெரிந்தகொண்டு, கிழக்கே பயணம்போனான்; இப்படிச் சகோதரர் ஒருத்தரையொருத்தர் விட்டுப் பிரிந்தார்கள்.

ஐ ஆபிராம் கானன்தேசத்தில் குடியிருந்தான்; லோத்தோவெனில், அந்தச் சமனான பூமியின் பட்டணங்களிலே குடியிருந்து, சோதோம்மட்டுக்கும் போய்க் கூடாரம்போட்டான்.

ஒ ஆனால் *சோதோமின் மனிதர் கர்த்தருக்குமுன்பாக மிகவும் பொல்லாதவர்களும் பாவிகளுமாயிருந்தார்கள். * ஐ. உவ. எசே. ஐசா. சங.

ஐசு ¶ லோத் ஆபிராமைவிட்டுப் பிரிந்த பிற்பாடு கர்த்தர் ஆபிராமுடனே சொன்னதாவது: நீ உன் கண்களை ஏறெடுத்து, நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கும், தெற்கும், கிழக்கும், மேற்கும் நோக்கிப்பார்.

ஐடு ஏனெனில், நீ பார்க்கிற பூமியையெல்லாம் *நாம் உனக்கும், உன் வித்துக்கும், என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, *ஐஉ. எ: ஐச. எ: ஐடு. எ.

ஐசு உன் வித்தைப் * பூமியின் தூளைப் போலாக்குவோம்; ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் வித்தும் எண்ணப்படும். *ஐடு. டு.

ஐள நீ எழுந்து தேசத்தின் நீளத்திலும் அகலத்திலும் நடந்து திரி; ஏனெனில், உனக்கு அதைக் கொடுப்போமென்றார்.

ஐஅ ¶ அப்போது ஆபிராம் கூடாரத்தைப் பேர்த்துப்போய், எபிரோனிலிருக்கும் *மம்ரேயினுடைய சமனான பூமியில் வந்து குடியிருந்து, அங்கே கர்த்தருக்குப் பலிபீடத்தைக் கட்டினான்.

*ஐச. ஐக: ஐஅ. க.

ஐசு. அதிகாரம்.

சீனேயாரின் இராசாவாகிய அம்ருப்பேலும், ஏலாசாரின் இராசாவாகிய ஆரியோகும், ஏலாமின் இராசாவாகிய கேதொர்லகோமேரும், சாதிகளின் இராசாவாகிய திதேயாலும் இருந்த நாள்களில் சம்பவித்ததெதென்றால்,

உ அவர்கள் சோதோமின் இராசாவாகிய பேராவோடும், கொமோரவின் இராசாவாகிய பிர்சாவோடும், ஆத்மாவின் இராசாவாகிய சீனேயாவோடும், சேபோயீமின் இராசாவாகிய செமேபரோடும், சோவார் என்னப்படுகிற பேலாவின் இராசாவோடும் யுத்தம்பண்ணினார்கள்.

ங இவர்களெல்லாரும் இப்பொழுது உப்புக்கடல் இருக்கிற சித்தீமின் பள்ளத்தாக்கிலே கூடினார்கள்.

Digitized by Google

ச பன்னிரண்டுவருஷம் கேதொர்லகோ

மனைச் சேவித்து, பதின்மூன்றும் வருஷத்திலே கலகம்பண்ணினார்கள்.

ந ஆனபடியால் பதினாலாம்வருஷத்திலே கெதொர்லகோமேரும் அவனோடேகூட இருந்த இராசாக்களும் வந்து, அஸ்தெரோத்கர்னயீமிலே இருந்த ரெப்பாவனையும், காமிலே இருந்த சூசியனையும், சாவே கீரியத்தாயீமிலே இருந்த ஏமியனையும்,

ஈ சேயீர்மலைகளில் இருந்த ஓரியனையும், வனாந்தரத்துக்கருகான பாரானின் சமனான பூமிமட்டும் முறியடித்து,

எ திரும்பிக் காதேஸ் என்னப்பட்ட ஏன்மிஸ்பாத்துக்குவந்து, ஆமலேக்கியருடைய நாடனைத்தையும், ஆத்சாத்சோன்தாமாரில் குடியிருந்த ஏமோரியனையுங்கூடப் பாழ்க்கடித்தார்கள்.

அ அப்போது சோதோமின் இராசாவும், கொமோரூவின் இராசாவும், ஆத்மாவின் இராசாவும், செபோயீமின் இராசாவும், சோவாரென்னப்படுகிற பேலாவின் இராசாவும் புறப்பட்டுச் சித்தீமின் பள்ளத்தாக்கிலே,

கூ ஏலாமின் இராசாவாகிய கெதொர்லகோமேரோடும், சாஷியாரின் இராசாவாகிய தீதேயாலோடும், சீனேயாரின் இராசாவாகிய அம்ரூப்பேலோடும், ஏலாசாரின் இராசாவாகிய ஆரியோகோடும் யுத்தம் பண்ணுகிறதற்கு ஆயத்தப்பட்டார்கள்; அந்த ஐந்து இராசாக்களோடே இந்த நாலு இராசாக்கள் யுத்தம்பண்ணினார்கள்.

ஐ ஆனால் சித்தீமின் பள்ளத்தாக்குப் பிசின் எடுக்கிற கேணி கேணிகளாயிருந்தது; சோதோமின் இராசாவும், கொமோரூவின் இராசாவும் முறிந்தோடி, அங்கே விழுந்தார்கள்; மீந்தவர்கள் பர்வதங்களுக்கு ஓடிப்போனார்கள்.

ஒ ¶ அப்பொழுது சோதோமிலும் கொமோரூவிலுமுள்ள எல்லா ஆஸ்தியையும், அவர்களுடைய எல்லா வஸ்துக்களையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

ஙஉ ¶ ஆபிராமுடைய சகோதரன் குமாரனுகிய லோத்தையும், அவன் ஆஸ்தியையும் கொண்டுபோனார்கள்; எனென்றால், அவன் சோதோமிலே குடியிருந்தான்.

ஙக ஆனால் தப்பிப்போன ஒருவன் வந்து, எபிரேயனுகிய ஆபிராமுக்கு அதை அறிவித்தான்; ஆபிராமோடே உடம்படிக்கையான மனிதராகிய எஸ்கோலுக்கும் ஆனேருக்கும் சகோதரனுகிய *மம்ரே யென்ற எமோரியனுடைய சமனான பூமியிலே அவன் அப்பொழுது குடியிருந்தான். *ஙக. ஙஅ.

ஙச ¶ தன் சகோதரன் சிறையாகக் கொண்டுபோகப்பட்டதை ஆபிராம் கேட்டபோது, அவன் தன் வீட்டிலே பிறந்த முந்நூற்றுப் பதினெட்டுக் கைபடிந்த ஆண்களுக்கு ஆயுதந்தரிப்பித்து, தாண் என்ற ஊர்மட்டாக அவர்களைத் தொடர்ந்து,

ஙடு இராத்திரியிலே அவனும் அவன் வேலைக்காரரும் பிரிந்து, பவிஞ்சுகளாய் அவர்கள்மேல் விழுந்து, அவர்களை முறியடித்துத் தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டுக்கும் அவர்களைத் துரத்தி,

ஙசு எல்லா ஆஸ்தியையும் திருப்பிக்கொண்டுவந்தான்; தன் சகோதரனுகிய லோத்தையும் அவனுடைய ஆஸ்தியையும், இதுவுமல்லாமல் ஸ்திரிகளையும் சனத்தையுங்கூடத் திருப்பிக்கொண்டுவந்தான்.

ஙள ¶ அவன் கெதொர்லகோமேரையும் அவனோடேகூட இருந்த இராசாக்களையும் முறியடித்துத் திரும்பி வந்தபிற்பாடு, சோதோமின் இராசா புறப்பட்டு, இராசாவின் பள்ளத்தாக்கென்னப்படுகிற சாவே பள்ளத்தாக்குமட்டும் அவனுக்கெதிர்கொண்டுவந்தான்.

ஙஅ ஆனால் சாலேமின் இராசாவாகிய *மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சப்பழ இரசமும் வெளியே கொண்டுவந்தான்; இவன் உன்னதமான பராபரனுடைய ஆசாரியனுயிருந்து, *சங். ஈங. ச. எபி. எ. க. ழ.

Digitized by Google

ஙசு அவனை ஆசீர்வதித்து, வானத்துக்

கும் பூமிக்கும் எசமானுகிய உன்னதமான பராபரனுலே ஆபிராம் ஆசீர்வதிக்கப்பட்டவனென்றும்,

உ உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான பராபரன் ஸ்தோத்திரிக்கப்பட்டவரென்றும் சொன்னுன்; இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் பத்திலொன்றைக் கொடுத்தான்.

உக ¶ சோதோமின் இராசா ஆபிராமுடனே: ஆத்துமாக்களை எனக்குத் தா; ஆஸ்தியை நீ எடுத்துக்கொள்ளென்றுன்.

உஉ ஆனுல் ஆபிராம் சோதோமின் இராசாவோடே சொன்னதாவது: நான் ஆபிராகம ஈசுவரியவானுக்கினேனென்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாயாயினும் உமக்குண்டானதிலே எல்லாம் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேனென்று,

உக வானத்துக்கும் பூமிக்கும் எசமானுகிய உன்னத பராபரனை கர்த்தருக்கு நேராக என் கையை ஏறெடுக்கிறேன்.

உச வாலிபர் சாப்பிட்டதும் என்னுடேகூடவந்த ஆனேர், எஸ்கோல், மம்ரே என்ற புருஷருடைய பங்குமாத்திரம் வரவேண்டும்; இவர்கள் தங்கள் பங்கை எடுக்கட்டுமென்றுன்.

யரு. அதிகாரம்.

இக்தக் காரியங்கள் நடந்த பிற்பாடு ஆபிராமுக்குத் தரிசனத்திலே கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, அவர் சொன்னதாவது: ஆபிராமே! *பயப்படாதே, நாம் உனக்குக் †கேடயமும், உன்னுடைய மகா பெரிய பலனுமாயிருக்கிறேமென்றுர். *ஏசா. சக. ய. †சங். ந. ச.

உ அப்பொழுது ஆபிராம், கர்த்தராகிய ஆண்டவரே! அடியேனுக்கு என்ன தருவீர்? நான் பிள்ளையில்லாதே போகிறேனே, தமஸ்கு ஊராகிய இந்த எலியேசேர் என் வீட்டு விசாரிப்புக்குக் கர்த்தனுயிருப்பானேவென்றுன்.

ங பின்னையும் ஆபிராம், இதோ தேவரீர் எனக்கு வித்தைத் தந்ததில்லை, இதோ என் வீட்டிலே பிறந்தபின்னை எனக்குச் சுதந்தரவாளியாய் இருப்பானென்றுன்.

ச அப்பொழுது இதோ கர்த்தருடைய வார்த்தை அவனுக்குண்டாகி, இவன் உனக்குச் சுதந்தரவாளியாகாமல், உன் கர்ப்பப்பிறப்பாயிருப்பவனே உனக்குச் சுதந்தரவாளியாவானென்றுசொல்லி,

டு அவனை வெளியே புறப்படப்பண்ணி, நீ வானத்தை அண்ணுந்துபார்; *நட்சத்திரங்களை எண்ண உனக்குக் கூடுமானுல் அவைகளை எண்ணென்றுசொல்லி, பிற்பாடு அவனேடே, உன் வித்து இவ்வண்ணமாய் இருக்குமென்றுர். *யஉ.யசு. உரோ.ச. யவ. எபி. யக. யஉ.

சு *அவன் கர்த்தர்பேரிலே விசுவாசித்தான்; இதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினுர். *உரோ. ச. ந: சு. உஉ. கலா. ந. சு. யாக். உ. உந.

எ பின்னையும் அவனுடனே, இந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு உனக்குக் கொடுக்க, உன்னை ஊர் என்ற கல்தேயருடைய பட்டணத்திலிருந்து அழைத்துவந்த கர்த்தர் நாமே என்றுர்.

அ அப்பொழுது அவன், கர்த்தராகிய ஆண்டவரே! நான் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவேனென்கிறதை எதினுலே அறிவேனென்றுன்.

கூ அவர் அவனுடனே, மூன்றுவயதுக் கிடாரியையும், மூன்றுவயது வெள்ளாட்டையும், மூன்றுவயது ஆட்டுக்கடாவையும், ஒரு காட்டுப்புருவையும், ஒரு புருக்குஞ்சையும் நமக்குக் கொண்டுவாவென்றுர்.

ய அவன் அவருக்கு இவைகளையெல்லாம் கொண்டுவந்து, அவைகளை நடுவாகத் துண்டித்து, துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பட்சிகளையோவெனில், அவன் துண்டித்ததில்லை.

யக அந்த உடல்களின்மேல், உருஞ்சு

கிற பட்சிகள் இறங்கிற்று; ஆனால், ஆபிராம் அவைகளைத் துரத்தினான்.

ஙஉ சூரியன் அஸ்தமிக்கும்போதோவெனில், ஆபிராமின்மேல் கனநித்திரை இறங்கிற்று; இதோ, திகிலும் மகா இருளும் அவனைப் பிடித்தது.

ஙஈ அப்பொழுது அவர் ஆபிராமோடே சொன்னதாவது: உன் வித்தார் தங்களுடையதல்லாத தேசத்திலே, *நானூறு வருஷம் பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தானைச் சேவிப்பார்களென்றும், அவர்கள் இவர்களை உபத்திரவப்படுத்துவார்களென்றும், நீ அறியவே அறியவேண்டும். *உ மோ. ஙஉ. சஙி. அப். எ. சூ.

ஙச ஆனால் இவர்கள் சேவிக்கும் சாதியையும் நாம் நியாயம்தீர்ப்போம்; பிற்பாடு *வெகு ஆஸ்தியுடனே புறப்பட்டு வருவார்கள். *உ மோ. ஈ. உக, உஉ: ஙக. உ, ஈ: ஙஉ. ஈடி, ஈசூ.

ஙடி நீயோவென்றால், சமாதானத்தோடே *உன் பிதாக்களண்டையிலே சேருவாய், நல்ல நரைவயதிலே அடக்கம்பண்ணப்படுவாய். *உடி. எ, அ.

ஙசூ நாலாந்தலைமுறையாரோ இவ்விடத்துக்குத் திரும்ப வருவார்கள்; ஏனெனில், ஏமோரியருடைய அக்கிரமம் இதுவரைக்கும் நிறைவேறினதில்லையென்றார்.

ஙஎ சூரியன் அஸ்தமித்துக் கன இருளான பிற்பாடு, இதோ புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்துபோகிற அக்கினிச்சுவாலையும் உண்டாயின.

ஙஅ அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடம்படிக்கைபண்ணிச் சொன்னதாவது: எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்தே நதியென்ற பெரிய நதிமட்டுக்கும் இருக்கிறதும்,

ஙகூ கேனியனும், கெனீசியனும், கத்மோனியனும்,

உஙி ஏத்தியனும், பெரிசியனும், ரெப்பாயியனும்,

உக ஏமோரியனும், கானனியனும், கிர்காசியனும், எபூசியனுமென்றவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை *உன் வித்துக்குக் கொடுத்தோமென்றார். *ஙஉ. எ: ஙஎ. எ, அ.

ஙசூ. அதிகாரம்.

ஆபிராமுடைய பெண்சாதியாகிய சாராய் அவனுக்குப் பிள்ளை பெறாதிருந்தாள்; ஆனால், ஆகாரென்று பேர்கொண்ட எகிப்துதேசத்தாளாகிய ஒரு அடிமைப்பெண் அவளுக்கிருந்தாள்.

உ சாராய் ஆபிராமுடனே, இதோ கர்த்தர் பிள்ளைபெறுதபடிக்குக் என்னை அடைத்தார்; என் அடிமைப்பெண்ணோடே சேரும், ஒருவேளை அவளால் என் வீடு கட்டப்படுமென்றாள்; ஆபிராம் சாராயின் சொல்கேட்டான்.

ஈ ஆபிராம் கானான்தேசத்தில் பத்துவருஷம் குடியிருந்தபின்பு, ஆபிராமின் பெண்சாதியாகிய சாராய் எகிப்துதேசத்தாளாயிருக்கிற தன் அடிமைப்பெண்ணாகிய ஆகாரை அழைத்து, அவளைத் தன் புருஷனாகிய ஆபிராமுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தாள்.

சஙி அவன் ஆகாரோடே சேர்ந்தபோது, அவள் கர்ப்பந்தரித்தாள்; தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபோதோவெனில், அவள் நாச்சியார் அவள் பார்வைக்கு அற்பமாய் எண்ணப்பட்டாள்.

ஙடி அப்போது சாராய் ஆபிராமுடனே, நான் அநுபவிக்கிற அநியாயம் உம்முடையமேல் சுமரும்; நான் என் அடிமைப்பெண்ணை உம்முடைய மடியிலே கொடுத்தேன்; தான் கர்ப்பந்தரித்ததை அவள் கண்டபோதோவெனில், நான் அவள் பார்வைக்குக் கொஞ்ச எண்ணிக்கையானேன்; கர்த்தர் எனக்கும் உமக்கும் நடுவாக நியாயந்தீர்ப்பாராகவென்றாள்.

சூ அப்போது ஆபிராம் சாராயுடனே, இதோ, உன் அடிமைப்பெண் உன்கையில் அகப்பட்டிருக்கிறாள்; உன் பார்வைக்கு நலமானபடி அவளுக்குச் செய்யென்றான்;

Digitized by Google

அப்பொழுது சாருய் அவனைத் தண்டிக்கையில், இவள் அவனைவிட்டோடிப்போனாள்.

எ ¶ ஆனால் கர்த்தருடைய தூதர் அவனை வனாந்தரத்திலே சூருக்குப்போகிற வழியருகேயிருக்கிற நீரூற்றருகிய கிணற்றண்டையிலே கண்டுபிடித்து,

அ சாருயின் அடிமைப்பெண்ணாகிய ஆகாரே! எங்கேயிருந்துவருகிறாய், எங்கே போகிறாயென்றார்; அவள், நான் என்னாச்சியாராகிய சாருயைவிட்டு ஓடிப்போகிறேனென்றாள்.

கூ அப்பொழுது கர்த்தருடைய தூதர் அவளோடே, நீ உன் நாச்சியாரண்டைக்குத் திரும்பிப்போய், அவள் கையின்கீழ் அடங்கியிருவென்றார்.

ஙி பின்னையும் கர்த்தருடைய தூதர் அவளோடே, உன் வித்தை மிகவும் பெருகப்பண்ணுவோம்; திரட்சியினாலே அது எண்ணத் தொலையாததாயிருக்குமென்றார்.

ஙீ அப்புறம் கர்த்தருடைய தூதர் அவளோடே சொன்னதாவது: இதோ கர்ப்பவதியாயிருக்கிறாய்; நீ ஒரு குமாரனைப் பெறுவாய்; கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்டபடியினாலே, அவனுக்கு இஸ்மவேலென்று பேரிடுவாயாக.

ஙூ இவன் தஷ்ட மனிதனாயிருப்பான்; இவன் கை எல்லாருக்கும் விரோதமாகவும், எல்லாருடைய கை இவனுக்கு விரோதமாகவுமிருக்கும்; தன் சகோதரர் எல்லாருக்கும் எதிரே குடியிருப்பானென்றார்.

ஙெ அப்பொழுது அவள், தன்னோடே பேசின கர்த்தனைத் தேவரீர் பார்க்கிற பராபரனென்ற நாமமாக அழைத்தாள்; ஏனெனில், என்னைப் பார்த்தவனைப் பிற்பாடு நான் அவனை இவ்விடத்திலே கண்டுமிருக்கவில்லையோ என்றாள்.

ஙே ஆகையால், அந்தக் கிணறு என்னைப் பார்க்கிற சீவனுள்ளவரின் கிணறென்னப்பட்டது; இதோ, காதேசுக்கும் பேரேதுக்கும் நடுவே அது இருக்கின்றது.

ஙை ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அப்பொழுது ஆபிராம் ஆகார் பெற்ற தன் குமாரனுக்கு இஸ்மவேலென்று பேரிட்டான்.

ஙஅ ஆகார் ஆபிராமுக்கு இஸ்மவேலைப் பெறுகிறபொழுது, ஆபிராம் எண்பத்தாறு வயதாயிருந்தான்.

ஙஎ. அதிகாரம்.

ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனையாகி, அவனோடே சொன்னதாவது: நாம் சர்வத்துக்கும் வல்ல பராபரன்; *நீ நம்முடைய முகத்துக்குமுன்பாக நடந்துகொண்டு உத்தமனாயிரு. *உச. சஐ.

உ நாம் நமக்கும் உனக்கும் நடுவாக *நம்முடைய உடம்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகுதியும் மிகுதியாய்ப் பெருகப்பண்ணுவோமென்றார். *ஙஞ. ஙஅ.

ஊ அப்போது ஆபிராம் முகங்குப்புற விழுந்தான்; பராபரன் அவனோடே பேசிச் சொன்னதாவது:

ச இதோ நாம் உன்னோடேபண்ணுகிற நம்முடைய உடம்படிக்கையாவது: *நீ நிரன் சாதிகளுக்குத் தகப்பனுவாய். *உரோ. ச. ஙஎ.

ஏ இனி உன்பேர் ஆபிராமென்னப்படாதாக; நாம் உன்னைத் நிரன் சாதிகளுக்குத் தகப்பனாக வைத்தபடியினாலே, உன்பேர் ஆபிரகாமென்றிருக்கக்கடவது.

ஐ உன்னை மிகுதியும் மிகுதியாய்ப் பலுகப்பண்ணி, உன்னைச் சாதிகளாக்குவோம்; உன் சந்ததியில் இராசாக்கள் பிறப்பார்கள்.

எ நாம் உனக்கும், உனக்குப்பிற்பாடு உன்வித்துக்கும், பராபரனாயிருக்கத்தக்கதாக நாம் நமக்கும் உனக்கும், உனக்குப்பிற்பாடு தலைமுறை தலைமுறையாக இருக்கப்போகிற உன் வித்துக்கும் நடுவே நம்முடைய உடம்படிக்கையை நித்திய உடம்படிக்கையாகத் நிடப்படுத்துவோம்.

அ உனக்கும் உனக்குப்பிற்பாடு உன்வித்

துக்கும், நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான்தேசத்தையெல்லாம் நித்திய உம்பினிக்கையாகக் கொடுத்து, அவர்களுக்குப் பராபரனுயிருப்போமென்றார்.

கூ ¶ பின்னையும் பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: இப்பொழுது நீயும், உனக்குப் பிற்பாடு தலைமுறை தலைமுறையாக இருக்கப்போகிற உன் வித்தாரும், நம்முடைய உடம்படிக்கையைக் கைக்கொள்வீர்களாக.

ய நமக்கும் உங்களுக்கும், உனக்குப் பிற்பாடு உன் வித்துக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான நம்முடைய உடம்படிக்கையாவது: உங்களில் ஆணுய்ப்பிறந்ததெல்லாம் சுன்னத்துப் பண்ணப்படவேண்டியது.

யக உங்கள் நுனித்தோலின் மாம்சத்தைச் சுன்னத்துப்பண்ணக் கடவீர்கள்; அது நமக்கும் உங்களுக்குமிருக்கிற *உடம்படிக்கையின் அடையாளமாயிருக்கும்.

*அப். எ. ய. உரோ. சு. ய.

யஉ உங்களில் தலைமுறை தலைமுறையாக ஆணுய்ப் பிறக்கிறவைகளெல்லாம் எட்டு நாள் பின்னையாய்ச் சுன்னத்துப்பண்ணப்படவேண்டியது; வீட்டுப்பின்னையும், உன்னுடைய வித்தல்லாத எந்த அந்நியனிடத்திலும் பணத்திலுலே கொள்ளப்பட்ட பின்னையும் அப்படித்தானே.

யக உன் வீட்டுப்பின்னையும், உன் பணத்திலுலே கொள்ளப்பட்டவனும், அவசியமாய்ச் சுன்னத்துப் பண்ணப்படவேண்டும்; இப்படி நம்முடைய உடம்படிக்கை உங்கள் மாம்சத்திலே நித்திய உடம்படிக்கையாக இருக்கக்கடவது.

யச நுனித்தோலின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப்படாதிருக்கிறநுனித்தோலுள்ள ஆண்பின்னையிருந்தால், அந்த ஆத்துமா நம்முடைய உடம்படிக்கையை முறித்தபடியினுலே, தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டுபோவானென்றார்.

யஎ ¶ பின்னையும் பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: உன் பெண்சாதி சாருயினுடைய பேரைச் சாருயென்றமையாயாக; சாருளென்பது அவளுடைய பேராயிருக்கும்.

யசு நாம் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தந்து, அவள் சாதிகளாய்ப் பலுகவும், அவளாலே சாதிகளின் இராசாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்போமென்றார்.

யஅ அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து, நூறுவயதானவனுக்குப் பின்னைபிறக்குமோ, தொண்ணூறுவயதான சாருள் பெறுவாளோவென்று, தன் னிருதயத்திலே சொல்லிக்கொண்டு,

யஅ இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானுகவென்று, ஆபிரகாம் பராபரனை விண்ணப்பம்பண்ணினுன்.

யசு அப்போது பராபரன் சொன்னதாவது: *உன் பெண்சாதியாகிய சாருள் உனக்கு ஒரு குமாரனைப்பெறுவாள்; அவனுக்கு ஈசாக்கென்று பேரிடுவாயாக; அவனுடே நாம் நம்முடைய உடம்படிக்கையை அவனுக்குப்பிற்பாடு அவன் வித்துக்கு என்றென்றைக்கும் நிற்கிற உடம்படிக்கையாக ஏற்படுத்துவோம். *யஅ. ய: உக. ஈ.

உய இஸ்மவேலுக்காகவும் உன் விண்ணப்பத்தைக்கேட்டோம்; இதோ, நாம் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகுதியும் மிகுதியுமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவோம்; *பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய சாதியாக்குவோம். *உடு. யசு.

உக ஆனுல் நம்முடைய உடம்படிக்கையை நாம் மறுவருஷத்தில் இக்காலத்திலே சாருள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்குடனே ஏற்படுத்துவோமென்றார்.

உஉ பராபரன் அவனுடே பேசி முடித்தபிற்பாடு, அவர் ஆபிரகாமைவிட்டேறினார்.

உஈ ¶ அப்பொழுது, ஆபிரகாம் தன் குமாரனுகிய இஸ்மவேலையும், தன் வீட்டிலே

பிறந்த யாவரையும், தான் பணத்தினாலே கொண்ட யாவரையும், ஆபிரகாமாகிய தன் வீட்டுமனிதரிலுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் சேர்த்து, பராபரன் தன்னோடே சொன்னபடி, அவர்கள் தனித்தோலின் மாம்சத்தை அந்நாளிலேதானே சுன்னத்துப் பண்ணினான்.

உச ஆபிரகாமுடைய தனித்தோலின் மாம்சம் சுன்னத்தடைகிறபொழுது, அவன் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான்.

உடு அவனுடைய குமாரன் இஸ்மவேலோவெனில், அவனுடைய தனித்தோலின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப்படுகிறபொழுது, பதின்மூன்றுவயதாயிருந்தான்.

உசு அந்நாளிலேதானே ஆபிரகாமும், அவன் குமாரன் இஸ்மவேலும் சுன்னத்தடைந்தார்கள்.

உஎ வீட்டில் பிறந்தவர்களும் அந்நியரிடத்தில் பணத்துக்குக் கொள்ளப்பட்டவர்களுமாகிய அவன் வீட்டு மனிதரெல்லாரும் அவனோடேகூடச் சுன்னத்தடைந்தார்கள்.

ய௩. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் அவனுக்கு மம்ரேயின் சமனான பூமியிலே தரிசனமானார்; அவன் பகலின் உஷ்ணவேளையில் கூடாரவாசலிலே உறுக்காந்திருந்து,

உ தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்பொழுது, இதோ மூன்று புருஷர் அவனுக்கு எதிராக நின்றார்கள்; அவர்களைக் காண்கையில், அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டோடித் தரைமட்டும்குனிந்து,

ஊ ஆண்டவரே! உம்முடைய கண்களில் எனக்குக் கிருபைகிடைத்ததானால், *சீர் உமதடியானைவிட்டு விலகிப் போகாதிருப்பீராக. * எபி. ய௩. உ.

ச கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி மரத்தின் கீழே சாய்ந்துகொண்டிருங்கள்.

ஞ நீங்கள் உங்கள் இருதயத்தைத் திடப்படுத்த ஒரு தருணக்கை அப்பங்கொண்டுவருவேன், பிற்பாடு அப்புறம் நடப்பீர்கள்; ஏனெனில், இதற்காக உங்கள் அடியானண்டைக்குக் கடந்து வந்தீர்களென்றான்; அதற்கு நீ சொன்னபடியே செய்யென்றார்கள்.

ஃ அப்பொழுது ஆபிரகாம் தீவரமாய்க் கூடாரத்தில் சாரானண்டைக்குப்போய், நீ சீக்கிரமாய் மூன்றுபடி மெல்லிய மாவெடுத்துப் பிசைந்து, அப்பங்களைச் சுடுவென்றான்.

எ மாட்டுமந்தைக்கும் ஆபிரகாம் ஓடி, இளசாயிருக்கிற நல்ல கன்றுக்குட்டியைப் பிடித்துப் பணிவிடைக்காரன் கையிலே கொடுத்து, அதைச் சமைக்கத் தீவரித்து,

ஏ வெண்ணெயையும் பாலையும் தான் சமைப்பித்த கன்றுக்குட்டியையும் எடுத்து வந்து, அவர்கள் முன்பாக வைத்தான்; அவனோவென்றால், அவர்களண்டை மரத்தின்கீழே நின்றுகொண்டிருந்தான்; அவர்கள் புசித்து,

ஐ ¶ அவனுடனே, உன் பெண்சாதி சாரள் எங்கே என்றார்கள்; அதோ, கூடாரத்திலிருக்கிறாளென்றான்.

ஒ அப்பொழுது அவர் ஒரு பிராண உற்பத்திகாலத் திட்டத்திலே உன்னண்டைக்குத் திரும்ப வருவோம்; அப்பொழுது இதோ, *உன் பெண்சாதியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்றார்; சாரள் அவருக்குப் பின்புறமான கூடாரவாசலிலிருந்து இதைக்கேட்டாள். *ய௭. ய஫—உக.

ஓ ஆபிரகாமும் சாராளுமோவெனில், முதிர்ந்தவர்களும் வயது சென்றவர்களுமாயிருந்தார்கள்; ஸ்திரிகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று.

ஓஉ ஆகையால், சாரள் *தன் உள்ளத்திலே நகைத்து, நான் கிழவியும் †என் எசமானன் முதிர்ந்தவயதுள்ளவருமானபின்பு, எனக்கின்பம் உண்டாயிருக்குமோ என்றாள். *ஓ௭. ஓ௭.—†க பேது. ஃ. ஈ.

Digitized by Google

18 அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமோடே சொன்னதாவது: சாருள் நகைத்து, நான் பிழையாயிருந்தும் பிள்ளைபெறுவது மெய்யோவென்பானேன்?

19 * கர்த்தரால் ஆகாத அதிசயமுண்டோ? ஒருபிராண உற்பத்திக்காலத்திட்டத்திலே உன்னண்டைக்குத் திரும்ப வருவோம்; அப்பொழுது சாருளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்றார். * மத். 19. 26.

20 அதி சாருளோவெனில், நான் நகைத்தில்லையென்று மறுதலித்தாள்; ஏனெனில், பயந்தாள்; ஆனால் அவர் இல்லை, நீ நகைத்தாயென்றார்.

21 பிற்பாடு அந்தப் புருஷர் எழுந்திருந்து, அவ்விடம்விட்டுச் சோதோமைநோக்கிப் போனார்கள்; ஆனால், ஆபிரகாம் அவர்களை வழிவிட்டனுப்ப அவர்களோடே கூடப்போனான்.

22 அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது: ஆபிரகாம் பெரியவைகளான பலத்த சாதியாய்ப்போகவும், அவனில் * பூமியின் சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படுபவைகளாயிருக்கவும், *18. 5.

23 நாம் செய்யப்போகிறதை நாம் ஆபிரகாமுக்கு மறைப்போமோ?

24 ஏனெனில், கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை அவன்மேல் வரப்பண்ணத்தக்கதாக, அவன் தன்பிள்ளைகளுக்கும் தனக்குப்பிற்பாடு இருக்கும் தன் வீட்டாருக்கும், நீங்கள் நீதியும், நியாயமும் செய்யும்படிக்கு, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்களென்று கற்பிப்பவனென்று அவனை அறிவோமென்று சொல்லி,

25 கர்த்தர் அப்புறம் சொன்னதாவது: *சோதோம் கொமோரு ஊர்களின் கூக்குரல் பெரிதானபடியினாலும், அவைகளின் பாவம் மகாகனமானபடியினாலும், *18. 18.

26 நாம் இப்பொழுது இறங்கிப்போய், நம்மண்டைக்கு வந்தெட்டின அதினுடைய கூப்பிடுதலின்படியே அவர்கள் செய்து நிறைவேறிற்றோ இல்லையோவென்று பார்த்து அறிவோமென்றார்.

27 அப்பொழுது அந்தப் புருஷர் அவ்விடம்விட்டுச் சோதோமைநோக்கிப் போனார்கள்; ஆனால் ஆபிரகாம் இன்னம் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டிருந்தான்.

28 ¶ ஆபிரகாம் சேர்ந்து வந்து சொன்னதாவது: ஆகாதவனோடே நீதிமானையும் அழிப்பீரோ?

29 பட்டணத்துக்குள்ளே ஐம்பது நீதிமான்கள் இருப்பார்களாகும், அதற்குள்ளிருக்கும் ஐம்பது நீதிமான்களின்நிமித்தம் ஸ்தலத்திற்கு மன்னியாமல் அதை அழிப்பீரோ?

30 இப்படிக்கொத்த செயல் உமக்குத் தூரமாயிருப்பதாக; நீதிமானும் பொல்லாதவனும் சரியாக, பொல்லாதவனோடே நீதிமானையும் கொல்வது உமக்குத் தூரமாயிருப்பதாக; * பூமிக்கெல்லாம் நியாயாதிபதியானவர் நீதி செய்யாதிருப்பாரோ என்றான். * அப். 17. 31.

31 அதற்குக் கர்த்தர் சோதோம் பட்டணத்திற்குள் ஐம்பது நீதிமான்களைக் கண்டோமாகில், அவர்களின் நிமித்தம் ஸ்தலத்திற்கெல்லாம் மன்னிப்போமென்றார்.

32 அப்பொழுது ஆபிரகாம் பிரதியுத்தரமாக, இதோ, அடியேன் தூளும் சாம்பலுமாயிருந்தும் ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்.

33 ஐம்பது நீதிமான்களுக்கு ஒருவேளை ஐந்துபேர் குறைந்தால், அந்த ஐந்துபேர்நிமித்தம் பட்டணத்தையெல்லாம் அழிப்பீரோ என்றான்; அதற்கவர்: நாம் நாற்பத்தைந்து நீதிமான்களை அங்கே கண்டால், அதை அழிப்பதில்லையென்றார்.

34 அவன் இன்னம் அவரோடே பேசத்தொடர்ந்து, ஒருவேளை நாற்பது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர் நாற்பது நீதிமான்களின் நிமித்தம் அப்படிச் செய்யாதிருப்போமென்றார்.

ஈ அப்பொழுது அவன், நான் அப்புறம் பேச ஆண்டவருக்குக் கோபம்வராமல் வேண்டுகிறேன்; ஒருவேளை முப்பது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர், நாம் முப்பது நீதிமான்களை அங்கே கண்டால், அப்படிச் செய்யாதிருப்போமென்றார்.

ஈக அப்பொழுது அவன்: இதோ, ஆண்டவரோடே பேசத்துணிந்தேன்; ஒருவேளை இருபது நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர், நாம் இருபது நீதிமான்களின்நிமித்தம் அதை அழிக்காதிருப்போமென்றார்.

ஈஉ அப்பொழுது அவன், நான் இன்னம் இந்த ஒருவிசைமாத்திரம் பேச ஆண்டவருக்குக் கோபம்வராமல் வேண்டுகிறேன்; ஒருவேளை பத்து நீதிமான்கள் அங்கே காணப்படுவார்களென்றான்; அதற்கவர்: பத்து நீதிமான்களின்நிமித்தம் அதை அழிக்காதிருப்போமென்றார்.

ஈஈ கர்த்தர் ஆபிரகாமோடே பேசி முடித்தபிற்பாடு புறப்பட்டுப்போனார்; ஆபிரகாம் தன்னிடத்திற்குத் திரும்பினான்.

ஙசூ. அதிகாரம்.

அந்த இரண்டு தூதர் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத் சோதோமின் வாசலிலே உளுக்காந்திருந்தான்; அப்பொழுது லோத் அவர்களைக் கண்டு, எதிர்கொண்டெழுந்திருந்து, தரைமட்டும் முகங்குனிந்து,

உ என்ஞண்டவர்களே! *இதோ, உங்கள் ஊழியக்காரரின் வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி, இராத்தங்கி, உங்கள் கால்களைக் கழுவி, காலமே எழுந்திருந்து உங்கள் வழிப்பயணம் போங்களென்றான்; அதற்கவர்கள், அல்ல, வீதியிலே இராத்தங்குவோமென்றார்கள். * எபிரே. ஙஈ. உ.

ஊ அவனேவெனில், அவர்களை மிகவும் வருந்திக்கொண்டான்; அப்பொழுது அவனண்டைக்குத் திரும்பி, அவன் வீட்டுக்குவந்தார்கள்; அவன் அவர்களுக்கு விருந்துபண்ணிப் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டான்; அவர்கள் புசித்தார்கள்.

எ ஆனால் அவர்கள் சயனித்துக்கொள்ளுகிறதற்கு முன் சோதோமிலே வாலிபர் முதல் கிழவர்மட்டுமுள்ள ஊர் மனிதராகிய சனங்கள் அனைவரும் கடைக்கோடிகளிலுமிருந்துவந்து, *வீட்டைச் சூழ்ந்துகொண்டு, *நியா. ஙசூ. ஒ.

ஏ லோத்தைக்கூப்பிட்டு, இந்த இராத்திரியிலே உன்னண்டைக்குவந்த மனிதரெங்கே? நாங்கள் அவர்களை அறியும்படிக்கு அவர்களை எங்களண்டைக்கு வெளியே கொண்டுவாவென்று அவனோடேசொன்னார்கள்.

ஐ லோத்தோவெனில், அவர்களண்டைக்கு வாசற்படியிலே புறப்பட்டுப்போய், தனக்குப்பின்னாலே கதவைப்பூட்டி,

ஒ என் சகோதரரே! *பொல்லாப்புச் செய்யாதிருங்கள். வாக். ஙசூ. உஈ.

ஓ இதோ புருஷனை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்குண்டே, அவர்களையாகிலும் உங்களண்டைக்கு வெளியேகொண்டுவருவேன்; உங்கள் பார்வைக்குச் சம்மதியானபடி அவர்களுக்குச் செய்யுங்கள்; இந்தப் புருஷருக்குமாத்திரம் ஒன்றும் செய்யாதிருங்கள்; ஏனெனில், இதற்காக என் இறப்பின் நிழலிலே வந்தார்களென்றான்.

ஔ ஆனால் அவர்கள் அப்பாலே ஒதுங்கிப்போவென்றும், பரதேசியாய்வந்த இவனொருவன் நியாயம்பேசுவானென்றும், இப்பொழுது அவர்களைப்பார்க்கிலும் உனக்குப் பொல்லாப்புச் செய்வோமென்றும் சொல்லி, லோத்தென்ற புருஷனை மிகவும் நெருக்கிக் கதவையுடைக்கக் கிட்டினார்கள்.

க அப்பொழுது அந்தப் புருஷர் தங்கள் கைகளை வெளியே நீட்டி, லோத்தைத் தங்களண்டைக்கு வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு, கதவைப்பூட்டி,

யஉ வாசலுக்கு முன்னிருந்த சிறியோரும், பெரியோருமாகிய மனிதருக்குக் குருட்டாட்டம் பிடிக்கப்பண்ணினார்கள்; அப்பொழுது அவர்கள் வாசலைத்தேடி, இளைத்துப்போனார்கள்.

யஎ ¶ அப்பொழுது அந்தப் புருஷர் லோத்தோடே சொன்னதாவது: இன்னம் இவ்விடத்தில் உனக்கு யாரிருக்கிறார்கள்? மருமகனாவது, உன் குமாரராவது, உன் குமாரத்திகளாவது, பட்டணத்தில் உனக்கிருக்கிற எவர்களானாலும்சரி; அவர்களை இந்த ஸ்தலத்திலிருந்து வெளியே அழைத்துப்போ.

யஈ ஏனெனில், நாங்கள் இந்த ஸ்தலத்தை அழிக்கப்போகிறோம்; *அதேனென்றால், அவர்கள் கூக்குரல் கர்த்தருடைய முகத்திற்குமுன்பாகப் பெரிதாயிருக்கின்றது; அதை அழிக்கக் கர்த்தர் எங்களை அனுப்பினார் என்றார்கள். *யஅ. உய.

யஉ அப்பொழுது லோத் புறப்பட்டு, தன் குமாரத்திகளை விவாகம் பண்ணப்போகிற தன் மருமக்களோடே பேசி, நீங்கள் எழுந்து இந்தஸ்தலத்தைவிட்டுப் புறப்படுங்கள்; ஏனெனில், கர்த்தர் இந்தப் பட்டணத்தை அழிப்பாரென்றான்; ஆனால் அவனுடைய மருமக்களின் பார்வைக்கு அவன் பரியாசம்பண்ணுகிறதாகக் கண்டது.

யஙு ¶ விடிக்கு வெளுக்கும்பொழுது அந்தத் தூதர் லோத்தைத் தீவரித்து, நீ பட்டணத்தின் அக்கிரமத்திலே அழியாதபடிக்கு எழுந்து, உன் பெண்சாதியையும், இங்கேயிருக்கிற உன் இரண்டு குமாரத்திகளையும் அழைத்துப்போவென்றார்கள்.

யஙு அவன் தாமதித்துக்கொண்டிருக்கிறபொழுது, அந்தப் புருஷர் கர்த்தர் அவன்மேல் வைத்த இரக்கத்தினாலே அவன் கையையும், அவன் பெண்சாதியின் கையையும், அவன் இரண்டு குமாரத்திகளின் கையையும் பிடித்து, அவனைப்பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டார்கள்.

யஎ ¶ அப்பொழுது சம்பவித்ததென்னவெனில், இவர்கள் அவர்களை வெளியே கொண்டுவந்தபிற்பாடு அவர் சொன்னதாவது: உன் சீவன் தப்ப ஓடிப்போ: பின்னிட்டுப்பாராதே; இந்தச் சமனான பூமியெங்கும் நில்லாதே; நீ அழியாதபடிக்குப் பர்வதத்திற்கு ஓடிப்போவென்றார்.

யஅ ஆனால், லோத் அவர்களோடே சொன்னதாவது: அப்படியல்ல ஆண்டவரே!

யஙூ இதோ உம்முடைய கண்களில் உமதடியானுக்குக் கிருபைகிடைத்ததே, என் பிராணனைக் காக்கத் தேவரீர் எனக்குச் செய்த கிருபையைப் பெரிதாயிருக்கப் பண்ணினீர்; ஆனால் நான் பர்வதத்திற்கு ஓடிப்போகமாட்டேன்; தீங்கு என்னைத் தொடர்ந்து பிடித்தால் மரிப்பேனே.

உய அதோ அந்த ஊர், நான் அதற்கோடிப்போகக் கிட்டியிருக்கின்றதே, அது சின்னதுமாயிருக்கின்றது; என் பிராணன் பிழைக்க நான் அங்கே ஓடிப்போகட்டுமே, அது சின்னதல்லவோ என்றான்.

உக அப்பொழுது அவர் அவனுடனே சொன்னதாவது: இதோ, நீ சொன்ன ஊரை நாம் கவிழ்த்துப்போடாதபடிக்கு, இந்தக் காரியத்திலும் உன் முகத்தைப் பார்த்தோம்.

உஉ தீவரமாய் அங்கே ஓடித் தப்பித்துக்கொள்; ஏனெனில், நீ அங்கே வந்து சேருமட்டும் நாம் ஒன்றும்செய்யக்கூடாதென்றார்; ஆகையால், அந்த ஊர் சோவார் என்னப்பட்டது.

உங லோத் சோவாருக்குள் வந்தபொழுது, பூமியின்மேல் சூரியன் உதித்தது.

உச அப்பொழுது கர்த்தர் *சோதோமின்மேலும், கொமோரவின்மேலும், கர்த்தராலே வானத்திலிருந்து கெந்தகத்தையும், அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, *ஞ மோ. உசு. உங. ஏசா. யங. யசு. எரே. நுயி. சயி. ஓசே. யக. ஆ. ஆமோ. சா. யக. ஜாக். யஎ. உசு. உ பே. உ. சூ. யூதா. எ. வச.

உடு அந்தப் பட்டணங்களையும், அந்தச் சமனான பூமி அனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் கவிழ்த்துப்போட்டார்.

உசு ஆனால், *அவன் பெண்சாதி பின்னிட்டுப்பார்த்து, உப்புத்தூணானாள்.

*ஞாக். யஎ. ஈஉ.

உஎ ஆபிரகாமோவெனில், காலமே எழுந்திருந்து, தான் கர்த்தருக்கு முன்பாக நின்ற இடத்திற்குப் போய்,

உஅ சோதோம் கொமோறுபட்டணங்களின் திக்கையும், சமனான பூமியினுடைய எல்லாத் திக்கையும் நோக்கிப்பார்த்தான்; அப்பொழுது இதோ, நிலத்துப்புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று.

உக ¶ அப்படியே பராபரன் அந்தச் சமனான பூமியின் பட்டணங்களை அழிக்கிறபொழுது, பராபரன் ஆபிரகாமை நினைத்து, லோத் குடியிருந்த பட்டணங்களைத் தாம் கவிழ்த்துப்போடுகையில், லோத்தை அந்தக் கவிழ்த்தலின் நடுவிலிருந்து தப்பவிட்டனுப்பினார்.

ஈஎ ¶ பிற்பாடு லோத் சோவாவைவிட்டுப் போய், அவனும், அவளோடேகூட அவன் இரண்டு குமாரத்திகளும், பர்வதத்திலே குடியேறினார்கள்; ஏனெனில், சோவாரிலே குடியிருக்கப் பயந்தான்; அங்கே அவனும், அவன் இரண்டு குமாரத்திகளும், ஒரு கெபியிலே குடியிருந்தார்கள்.

ஈக அப்பொழுது, மூத்தவள் இளையவளோடே சொன்னதாவது: நம்முடைய தகப்பன் முதிர்வயதானார்; பூமியெங்கும் நடக்கிற முறைமையின்படியே நம்மோடே சேரப் பூமியிலே ஒரு புருஷனுமில்லையே.

ஈஉ வா, நம்முடைய தகப்பனுக்கு வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு மதுவைப் பானம்பண்ணக் கொடுத்து, அவரோடே சயனிப்போமென்றாள்.

ஈஈ அப்படியே அன்று இராத்திரியிலே, தங்கள் தகப்பனுக்கு மதுவைப் பானம் பண்ணக்கொடுத்தார்கள்; மூத்தவள் போய், தன் தகப்பனோடே சயனித்தாள்; ஆனால், அவள் சயனித்துக்கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

ஈச மறுநாளிலே சம்பவித்ததேதென்றால், மூத்தவள் இளையவளோடே, இதோ, நேற்று என் தகப்பனோடே சயனித்தேன், நம்முடைய தகப்பனுக்கு வித்தைப் பிறப்பிக்கும்படிக்கு அவருக்கு இன்று இராத்திரிக்கும் மதுவைப் பானம்பண்ணக் கொடுப்போம்; அப்பொழுது நீ போய் அவரோடே சயனியென்றாள்.

ஈடு அப்படியே அன்று இராத்திரியிலும் தங்கள் தகப்பனுக்கு மதுவைப் பானம் பண்ணக்கொடுத்தார்கள்; அப்பொழுது இளையவள் எழுந்துபோய், அவனோடே சயனித்தாள்; ஆனால், அவன் சயனித்துக் கொண்டதையும் எழுந்திருந்ததையும் உணராதிருந்தான்.

ஈஎ இந்த அடைவாய், லோத்தின் குமாரத்திகள் இருவரும் தங்கள் தகப்பனாலே, கர்ப்பந்தரித்தார்கள்.

ஈஏ மூத்தவள் ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்கு மோவாப் என்று பேரிட்டாள்; அவனே இந்நாள்வரைக்கும் இருக்கிற மோவாபியருக்குத் தகப்பன்.

ஈஅ இளையவளும் ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்குப் பென்அம்மியென்று பேரிட்டாள்; அவன் இந்நாள்வரைக்கும் இருக்கிற அம்மோன்புத்திரருக்குத் தகப்பன்.

உயி. அதிகாரம்.

ஆபிரகாம் அவ்விடத்தை விட்டுத் தென்தேசத்திற்குப் பயணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி, கேரூரிலே தங்கி,

உ *தன் பெண்சாதியாகிய சாராளைத் தன் சகோதரியென்றான்; அப்பொழுது கேரூரின் இராசாவாகிய அபிமேலேக் ஆளனுப்பிச் சாராளை எடுத்துக்கொண்டான்.

*ஐஉ. யஈ: உசு. எ.

ஈ ஆனால், இராத்திரியில் சொப்பனத்

Digitized by Google

நிலே டராபரன் அபிமேலேக் அண்டைக் குவந்து அவனுடனே, இதோ நீ எடுத்துக் கொண்ட ஸ்திரியின்நிமித்தம் நீ சாவுக்குள் னானவன்; ஏனெனில், அவள் புருஷன்நீ ழ்ப் பெண்சாதியாயிருக்கிறுனென்றூர்.

ச அபிமேலேக்கோவெனில், அவனைச் சே ராதிருந்தான்; ஆகையால், அவன் சொன் னதாவது: ஆண்டவரே! நீதியுள்ள சாதி யையும் கொல்லுவீரோ?

ஒ இவன் தன் சகோதரியென்று அவன் என்னுடே சொன்னதில்லேயோ? இவன் தன் சகோதரனென்று அவன்தானும் சொ ன்னுனே; என் இருதயத்தின் உத்தமத்தோ டும் என் கைகளின் குற்றமில்லாமையோ டும் இதைச் செய்தேனே என்றுன்.

ஞ அப்பொழுது பராபரன் சொப்பனத் நிலே அவனுடே சொன்னதாவது: உன் இருதயத்தின் உத்தமத்தோடே நீ இதைச் செய்தாயென்று நாம் அறிந்துமிருக்கிறே ம்; நீ நமக்கு விரோதமாகப் பாவஞ்செய் யாதபடிக்கு நாம் உன்னைத் தடுத்தும் இருந் தோம்; ஆகையால், உன்னை அவனைத் தொட ஒட்டாதிருந்தோம்.

எ இப்பொழுதும் ஸ்திரியைப் புருஷ னுக்குத் திரும்பக் கொடு; ஏனெனில், *அவன் தீர்க்கதரிசி, நீ பிழைக்கும்படிக் கு அவன் உனக்காக வேண்டுதல்செய்வா ன்; திரும்பக் கொடாயேயாகில், நீயும் உ னக்கிருக்கிற அனைவரும் சாவவே சாவீர்க ளென்றறியென்றூர். *சங். ஈடு. ஐச, ஐடு.

அ அபிமேலேக் அதிகாலமே எழுந்திருந் து, தன் ஊழியக்காரரை எல்லாம் அழை ப்பித்து, இந்த எல்லா வார்த்தைகளையும் அவர்கள் கேட்கச்சொன்னுன்; அந்த மனி தர் மிகவும் பயந்தார்கள்.

கூ அப்பொழுது அபிமேலேக் ஆபிரகா மை அழைப்பித்து, அவனுடனே: நீ எங் களுக்கு என்னசெய்தாய்? நீ என்மேலும் என் இராச்சியத்தின்மேலும் கன பாவத்தை ச்சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கென்ன கு ற்றஞ்செய்தேன்? செய்யத்தகாத காரியங் கனே என்னிடத்திலே செய்தாயென்றுன்.

ஐ பின்னையும் அபிமேலேக் ஆபிரகாமை டே, நீ இந்தக் காரியத்தைச் செய்வதற் காக என்ன கண்டாயென்றுன்.

ஒக ஆபிரகாம் சொன்னதாவது: இவ்வி டத்தில் தெய்வபயமே இல்லேயென்றும், என் பெண்சாதியின்நிமித்தம் என்னைக் கொல்லுவார்களென்றும் நினைத்தேன்.

ஐஉ அவள் என் சகோதரி என்கிறதும் நிசந்தான்; அவள் என் தகப்பனுக்குக் கு மாரத்தி; ஆனுல் என் தாயாருக்குக் குமா ரத்தியல்ல, அவள் எனக்குப் பெண்சாதி யானுன்.

ஐக பராபரன் என்னைத் தகப்பன் வீட்டி லிருந்து சிதறப்பண்ணினபொழுது, சம்ப வித்ததேதென்றுல், நாம் எந்த ஸ்தலத்தி லேவந்தாலும், இவன் என் சகோதரனென் று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டி ய தயையென்று அவளோடே சொல்லியி ருக்கிறேனென்றுன்.

ஐச அப்பொழுது அபிமேலேக் ஆடுமா டுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரி களையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவ ன் பெண்சாதியாகிய சாரையை அவனுக்குத் திரும்பக் கொடுத்து,

ஐடி இதோ, என் தேசம் உனக்குமுன்பா க இருக்கின்றது; உன் பார்வைக்குச் சம்மதி யான இடத்திலே குடியிருவென்று அபிமே லேக் சொல்லி,

ஐசு ¶ சாரையுடனே, உன் சகோதரனு க்கு ஆயிரம் வெள்ளிக்காசைக் கொடுத் தேன்; இதோ, உன்னேடிருக்கிற எல்லார் முன்பாகவும் மற்ற அனைவர்முன்பாகவும் இது உனக்குக் கண்களின் முக்காட்டுக்கா வதாகவென்றுன்; இப்படிப் புத்திசொல் லப்பட்டான்.

ஐள ஆபிரகாம் பராபரனை வேண்டிக் கொண்டான்; அப்பொழுது பராபரன் அ பிமேலேக்கையும், அவன் பெண்சாதியை யும், அவன் வேலைக்காரிகளையும், பின்னை பெறும்படியாகக் குணமாக்கினுர்.

Digitized by Google

யஅ ஏனெனில், ஆபிரகாமுடைய பெண்சாதியாகிய சாரூனின்நிமித்தம் கர்த்தர் அபிமேலேக்குடைய வீட்டுக் கர்ப்பங்களெயெல்லாம் அடைக்கவேஅடைத்திருந்தார்.

உக. அதிகாரம்.

கர்த்தரோவென்றால், *தாம் சொல்லியிருந்தபடியே சாரூனை நோக்கிப்பார்த்தார்; கர்த்தர் தாம் உரைத்தபடியே சாரூனுக்குச் செய்தார். *ஏ. யக: அஅ. ய.

உ * சாரூன் கர்ப்பந்தரித்து, ஆபிரகாமுக்கு அவன் முதிர்வயதிலே, பரபரன் அவனுக்குச் சொல்லியிருந்த காலத்திட்டத்திலே, ஒரு குமாரனைப்பெற்றான். *எபி. யக. யக, யஉ.

ஊ அப்பொழுது ஆபிரகாம் தனக்குப் பிறந்தவனும் சாரூன் தனக்குப் பெற்றவனுமான தன் குமாரனுக்கு *ஈசாக்கென்று பேரிட்டான். *ஏ. யகூ.

ச எட்டுநாள் குழந்தையான தன் குமாரன் ஈசாக்கை ஆபிரகாம் பராபரன் தனக்குக் கற்பித்திருந்தபடியே, சுன்னத்துப்பண்ணினான்.

ஓ ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய ஈசாக்குப் பிறந்தபொழுது, அவன் நூறு வயதாயிருந்தான்.

ஃ சாரூன் சொன்னதாவது: பராபரன் எனக்கொரு நகைப்பை உண்டாக்கினார்; இதைக்கேட்கிற யாவரும் என்னோடேகூட நகைப்பார்கள்.

எ சாரூன் பிள்ளைகளுக்கு முலைகொடுப்பாளென்று ஆபிரகாமுக்கு எவன்சொல்லுவான்; ஏனென்றால், அவர் முதிர்வயதிலே அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றேனே என்றாள்.

அ¶ பிள்ளைவளர்ந்து முலைமறந்தது; ஈசாக் முலைமறந்தநாளிலே, ஆபிரகாம் பெரிய விருந்துபண்ணினான்.

கூ பிற்பாடு சாரூன்: எகிப்துதேசத்தானாகிய ஆகார் ஆபிரகாமுக்குப்பெற்ற குமாரன் ஆகாடியம் பண்ணுகிறவனென்று கண்டு,

ய ஆபிரகாமுடனே, *இந்த அடிமைப்பெண்ணையும், அவள் மகனையும் புறம்பேதள்ளும்; ஏனெனில் இந்த அடிமைப்பெண்ணின் மகன் என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளனாயிருப்பதில்லை என்றாள். *கலா. ச. கூய.

யக தன் குமாரனைக்குறித்துச் சொல்லப்பட்ட இந்த வார்த்தை ஆபிரகாமின் பார்வைக்கு மிகவும் ஆகாததாயிருந்தது.

யஉ ஆனால், பராபரன் ஆபிரகாமோடே சொன்னதாவது: அந்தப் பிள்ளையையும் உன் அடிமைப் பெண்ணையுங்குறித்துச் சொல்லப்பட்டது உன் பார்வைக்கு ஆகாததாயிருக்கவேண்டாம்; சாரூள் உன்னோடே சொன்னதெல்லாவற்றிலும், அவள் சொல்லைக்கேள்; ஏனெனில், *ஈசாக்கினிடத்தில் உன் வித்து விளங்கும். *ஏ. உக. உரோ. கூ. எ.

யங அடிமைப்பெண்ணின் குமாரனையும், அவன் உன் வித்தானபடியினாலே, ஒரு சாதியாக்குவோமென்றார்.

யச ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, அப்பத்தையும் ஒரு தருத்தி தண்ணீரையுமெடுத்து, ஆகாருக்குத் தோளின்மேல் தூக்கிவிட்டு, பிள்ளையையும் கொடுத்து, அவளை அனுப்பிவிட்டான்; அவள் புறப்பட்டுப்போய், பேயர்சேபாவின் வனாந்தரத்திலே வழிதப்பித்திரிந்தாள்.

யடு தருத்தியிலிருந்த தண்ணீர் போனபிற்பாடு, அவள் பிள்ளையை ஒரு செடியின் கீழே விட்டுப்போய்,

யசு எதிராக வில்லெய்யும் தூரத்திலே உளுக்காந்தாள்; ஏனெனில், பிள்ளை சாகிறதை நான் பார்க்கமாட்டேனென்றாள்; அவள் எதிரே உளுக்காந்து, தன் சத்தமெடுத்தழுதாள்.

யஎ ஆனால், பராபரன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டார்; பராபரனுடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆகாரைக் கூப்பிட்டு, அவளுடனே: ஆகாரே! உனக்கென்னவேண்டும்? பயப்படாதே, பராபரன்

பிள்ளையிருக்கிற இடத்திலே, அவனுடைய சத்தத்தைக் கேட்டார்.

18 நீ எழுந்திருந்து பிள்ளையை எடுத்து, அவனை உன் கையிலுல் பிடித்துக்கொண்டுபோ; ஏனெனில், அவனைப் பெரியசாதியாக்குவோமென்றார்.

19 பராபரன் அவள் கண்களைத் திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த்தாரவைக் கண்டுபோய், தருத்தினையைத் தண்ணீரினுல் நிரப்பிப் பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

20 பராபரன் பிள்ளையோடேகூட இருந்தார்; அவன் வளர்ந்து, வனாந்தரத்தில் குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனுயிருந்தான்.

21 அவன் பாரானென்ற வனாந்தரத்திலே குடியிருந்தான்; அவனுடைய தாய் எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள்.

22 ¶ அக்காலத்தில் சம்பவித்ததேதென்றால், அபிமேலேக்கும் அவன் சேனபதியாகிய பீகோலும் ஆபிரகாமோடே சொன்னதாவது: நீ செய்கிறதெல்லாவற்றிலும் பராபரன் உன்னோடேகூட இருக்கிறார்.

23 இப்பொழுதும் நீ என்னையாகிலும், என் குமாரனையாகிலும், என் பேரனையென்கிலும் கபடுசெய்யாமல், நான் உனக்குச் செய்த தயவின்படியே நீ எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும் செய்வதென்று பராபரன்பேரிலே எனக்கு இங்கே ஆணையிடுவென்றான்.

24 அப்பொழுது ஆபிரகாம்: நான் ஆணையிடுகிறேனென்றான்.

25 ஆனால் அபிமேலேக்குடைய வேலைக்காரர் பறித்துக்கொண்டதண்ணீர்த்துரவின் நிமித்தம் ஆபிரகாம் அபிமேலேக்கைக் கடிந்துகொண்டான்.

26 அதற்கு அபிமேலேக், யார் இந்தக் காரியத்தைச் செய்தாரென்று அறியேன்; நீ எனக்கு அறிவித்ததுமில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயொழிய இதற்கு முன் அதை நான் கேட்டதுமில்லை என்றான்.

27 அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்டுவந்து, அபிமேலேக்குக்குக் கொடுத்தான்; அவர்களிருவரும் உடம்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

28 ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்தினான்.

29 அப்பொழுது அபிமேலேக் ஆபிரகாமோடே, நீ தனியே நிறுத்தின இந்த ஏழு பெண் ஆட்டுக்குட்டிகள் எதற்கென்றான்.

30 அதற்கவன், நான் இந்தத் துரவை எடுத்ததற்கு எனக்குச் சாட்சியாக நீர் இந்த ஏழு பெண்குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றான்.

31 அவர்களிருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக்கொண்டபடியினுலே, அந்த இடம் பேயர்சேபாவென்னப்பட்டது.

32 அவர்கள் பேயர்சேபாவிலே உடம்படிக்கை பண்ணிக்கொண்ட பிற்பாடு, அபிமேலேக்கும், அவன் சேனபதியாகிய பீகோலும் எழுந்திருந்து, பெலிஸ்தருடைய தேசத்திற்குத் திரும்பினார்கள்.

33 ¶ ஆபிரகாம் பேயர்சேபாவிலே ஒரு தோப்பை நாட்டி, என்றுமுள்ள பராபரனுகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்திலே தொழுதுகொண்டான்.

34 ஆபிரகாம் அநேகநாள் பெலிஸ்தருடைய தேசத்தில் தங்கினான்.

22. அதிகாரம்.

இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், பராபரன் ஆபிரகாமைச் சோதித்து அவனுடனே, ஆபிரகாமே! என்றார்; அதற்கவன் இதோ அடியேனென்றான்.

2 அப்பொழுது அவர் சொன்னதாவது: நீ சிநேகிக்கிறவனும், உனக்கு ஒரே பேருனவனுமாகிய உன்னுடைய குமாரன் ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியதேசத்திற்குப்போய், அங்கே அவனை நாம் உனக்குச் சொல்லப்போகிற

மலைகளில் ஒன்றின்மேல் தகனபலியாகப் பலியிடுவென்றார். *எபி. ஐக. ஐஎ.

ஈ அப்பொழுது, ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, தன் கழுதையின்மேல் விரி கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபே ரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டை களைப் பிளந்து புறப்பட்டுப் பராபரன் தனக்குச் சொன்ன ஸ்தலத்திற்கு நடந்து போனான்.

உ மூன்றும் நாளிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே அந்த ஸ்தலத்தைக் கண்டான்.

ஊ அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரோடே, நீங்கள் இங்கே கழுதையை நிறுத்தி, உனக்காந்திருங்கள்; நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம்மட்டும் போய், பணிந்துகொண்டு, உங்களண்டைக்குத் திரும்பி வருவோமென்றான்.

எ ஆபிரகாம் தகனபலிக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனுடைய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு, இருவரும் ஏகமாய்ப் போனார்கள்.

ஏ அப்பொழுது ஈசாக் தன் தகப்பனுடைய ஆபிரகாமோடே, என் தகப்பனே என்று சொன்னான்; அதற்கவன், என் மகனே, இதோ நானென்றான். அப்பொழுது அவன், இதோ நெருப்பும் கட்டையுமிருக்கின்றது; ஆனால் தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

ஐ அப்பொழுது ஆபிரகாம், என் மகனே, பராபரன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப்பார்த்துக்கொள்ளுவாரென்றான்; அப்புறம் இருவரும் ஏகமாய்ப் போய்,

ஒ ¶ பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த ஸ்தலத்திற்கு வந்தார்கள்; அப்பொழுது ஆபிரகாம் அங்கே ஒரு பீடத்தைக் கட்டி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனுடைய ஈசாக்கைக் கட்டி, அவனை அந்தப் பீடத்திலே கட்டைகளின்மீதில் கிடத்தினான்.

ஓ பிற்பாடு ஆபிரகாம் தன் கையை நீட்டி, தன் குமாரனைக் குரல்வளை அறுக்கும் படிக்கு, கத்தியை எடுத்துக்கொண்டான்.

ஔ அப்பொழுது கர்த்தருடைய தூதர் வானத்திலிருந்து அவனைக் கூப்பிட்டு, ஆபிரகாமே, ஆபிரகாமே, என்றார்; அவன், இதோ அடியேன் என்றான்.

க அப்பொழுது அவர் பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே; அவனுக்கு ஒன்றும் செய்யாதே; ஏனெனில், நீ பராபரனுக்குப் பயந்திருந்து, நமக்காக உனக்கொரேபேருன உன்னுடைய குமாரனைப் பாராதேபோனாயென்று இப்பொழுது அறிந்திருக்கிறோமென்றார்.

஖ ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறபொழுது, இதோ பின்னுகப் புதரிலே தன் கொம்புகளால் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

஗ ஆபிரகாம் அந்த ஸ்தலத்திற்குக் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவாரென்று பேரிட்டான்; அதினாலே இந்நாள்வரைக்கும் கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படும்.

஘ கர்த்தருடைய தூதர் இரண்டாம் விசை வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டுச் சொன்னதாவது:

ங நீ நம்முடைய சொல்லைக் கேட்டு இந்தக் காரியத்தைச் செய்து, நமக்காக உனக்கொரேபேருன உன்னுடைய குமாரனைப் பாராதே போனபடியினாலே,

ச நாம் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, *உன் வித்தை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலிருக்கிற மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவோமென்றும், உன் வித்தார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்த

சித்துக்கொள்ளுவார்களென்றும், *ஐஉ. ஐசு: ஐஇ. இ.

ஐஅ *உன் வித்தினாலே பூமியினுடைய எல்லாச் சாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்றும், †நம்முடைய பேரிலே ஆணையிட்டோமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். *ஐஉ. ஈ: ஐஅ. ஐஅ. †எபி. சூ. ஐஉ, ஐச.

ஐசு ஆபிரகாம் தன் வேலைக்காரரண்டைக்குத் திரும்பிவந்தான்; அப்பொழுது எழுந்து புறப்பட்டு, ஏகமாய்ப் பேயேர்சேபாவுக்குப் போனார்கள்; ஏனென்றால், ஆபிரகாம் பேயேர்சேபாவிலே குடியிருந்தான்.

உஐ ¶ இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு, ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டதாவது: இதோ, மில்க்காளும் உன் சகோதரனுடைய நாகோருக்குப் பிள்ளைகளைப்பெற்றாள்.

உக யாரையென்றால், அவனுடைய மூத்தபேரன மூத்சையும், இவன் தம்பியாகிய பூசையும், ஆராமுக்குத் தகப்பனுகிய கேமுவேலையும்,

உஉ கேசேதையும், ஆசோவையும், பில்தாசையும், இத்லாப்பையும், பேத்துவேலையும் பெற்றாள்; பேத்துவேலோவெனில் ரெபேக்காளைப் பெற்றானென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

உங அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனுடைய நாகோருக்குப் பெற்றாள்.

உச ரேயுமாவென்ற பேர்கொண்ட அவனுடைய வைப்பாட்டியும், தேபாகையும், காகாமையும், தாகாசையும், மாகாவையும் பெற்றாள்.

உரூ. அதிகாரம்.

சாராள் உயிரோடிருந்தகாலம் நூற்றிருபத்தேழுவருஷம், இதுவே சாராளுடைய வயது.

உ பிற்பாடு சாராள் கானான்தேசத்திலேயிருக்கிற எபிரோன் ஊராகிய கீரியாத் அர்பாவிலே மரித்தாள்; அப்பொழுது ஆபிரகாம் சாராளுக்காகப் புலம்பவும், அழவும் வந்தான்.

ஈ ¶ பிற்பாடு ஆபிரகாம் தன் சவத்தைவிட்டெழுந்து, ஏத்தின் புத்திரரோடேபேசி,

ச நான் உங்களிடத்தில் பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறேன்; எனக்குமுன்பாகக் கிடக்கிற என் சவத்தை நான் அடக்கம் பண்ணுவதற்கு, எனக்கு உங்களிடத்தில் பிரேதம் அடக்கம்பண்ணும் நிலத்தைச் சொந்தமாகத் தாருங்களென்றான்.

ஏ ¶ அப்பொழுது ஏத்தின்புத்திரர் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது:

ஈ எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்லுகிறதைக் கேளும்; எங்கள் நடுவிலே நீர் தெய்வப் பிரபுவாயிருக்கிறீர்; எங்கள் கல்லறைகளில் தெரிந்துகொள்ளப்பட்டதிலே உம்முடைய சவத்தை அடக்கம்பண்ணும்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம் பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வதில்லையென்றார்கள்.

எ ¶ அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து ஏத்தின் புத்திரராகிய தேசத்தாரைவணங்கி,

அ அவர்களோடே சம்பாஷித்துச் சொன்னதாவது: எனக்கு முன்பாகக்கிடக்கிற என் சவத்தை நான் அடக்கம்பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என் வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனுகிய எப்பெரோனுடனே,

கூ அவர் தமது நிலத்தின் கடைசியிலே தமக்கிருக்கிற மக்பேலா என்னப்பட்ட கெபியை எனக்குத்தர எனக்காக மனுக்கேளுங்கள்; உங்களிடத்தில் எனக்குப் பிரேதம் அடக்கம்பண்ணும் சொந்த நிலம் இருக்கும்படிக்கு, அவர் அதை அது பெறும் விலைக்குத் தருவாராகவென்றான்.

ஐ ¶ ஆனால் எப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உளுக்காந்திருந்தான்; அப்பொழுது ஏத்தியனுகிய எப்பெரோன் தன் ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் அனைவருங்கேட்க ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாக,

Digitized by Google

ஙக அல்ல என்னுண்டவனே, என் வார்த்தையைக்கேளும்; நிலத்தை உமக்குத் தருகிறேன்; அதிலிருக்கும் கெபியையும் உமக்குத் தருகிறேன்; என் சனப் புத்திரருடைய கண்களுக்குமுன்பாக அதை உமக்குத் தருகிறேன்; உம்முடைய சவத்தை அடக்கம் பண்ணுமென்றான்.

ஙஉ ¶ அப்பொழுது ஆபிரகாம் தேசத்தான வணங்கி,

ஙஊ தேசத்துச் சனம்கேட்க ஏப்பெரோனுடனே சொன்னதாவது: கொடுக்க நீர் மனதானால் என் வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலைக்கிரயத்தைத் தருகிறேன்: என் கையில் அதை வாங்கிக்கொள்ளும், அப்பொழுது அவ்விடத்தில் என் சவத்தை அடக்கம்பண்ணுவேனென்றான்.

ஙச ¶ அப்பொழுது ஏப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாக:

ஙடி என்னுண்டவனே, நான் சொல்லுகிறதைக்கேளும்; இந்த நிலம் நானூறு வெள்ளிக்காசுபெறும்; எனக்கும் உமக்கும் அது என்னவுகாரியம்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம்பண்ணுமென்றான்.

ஙசு ¶ அப்பொழுது ஆபிரகாம் ஏப்பெரோனின் சொல்லைக் கேட்டு, ஏப்பெரோன் எத்தையுடைய புத்திரரின் காதுகளில் கேட்கச் சொன்னதாகிய வர்த்தகரிடத்தில் செல்லும்படியான நானூறு வெள்ளிக்காசை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தான்.

ஙள இந்தப் பிரகாரமாக *மம்ரேக்கெதிரே மக்பேலாவிலிருந்த ஏப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள கெபியும் நிலத்திலுடைய எல்லைகளெல்லாம் சுற்றியிருந்த எல்லா மரங்களும், *சசு. உசு, ஈய: நிஐ. ஙஈ.

ஙஎ அவனுடைய ஊர்வாசலுக்குள்பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் எல்லாரும் அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக ஏற்பட்டது.

ஙஏ ¶ அதற்குப்பிற்பாடு ஆபிரகாம் தன் பெண்சாதியாகிய சாறாளைக் கானான்தேசத்தில் ஏப்பெரோனுடைய நிலமாகிய மம்ரேக் கெதிரேகிடக்கிற மக்பேலா என்ற நிலத்தின் கெபியிலே அடக்கம்பண்ணினான்.

உய இப்படியே ஏத்தின் புத்திரர்களைக் கொள்ளப்பட்ட அந்த நிலமும், அதிலுள்ள கெபியும், ஆபிரகாமுக்குப் பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்தநிலமாக ஏற்பட்டது.

உச. அதிகாரம்.

ஆபிரகாம் வயதுசென்ற கிழவனானான்; கர்த்தர் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

உ அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலே வயதில் மூத்தவனும், தனக்குண்டானதையெல்லாம் ஆளுகிறவனுமாகிய தன் ஊழியக்காரனோடே சொன்னதாவது:

ஈ *நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணெடுக்கொள்ளாமல், *உஅ. க.

ச நீ என் சீமைக்கும், என் இனத்தண்டைக்கும்போய், என்குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்ணைக் கொள்வதற்கு நான் உன்னை வானத்திற்குப் பராபரனும், பூமிக்குப் பராபரனுமாகிய கர்த்தர்பேரிலே ஆணையிடும்படிக்கு, *உன் கையை என்னிடுப்பின்கீழே போடென்றான். *சஎ. உசு.

ஙக ¶ அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவனுடனே, ஒருவேளை அந்தப் பெண் என்பிறகே இந்தத் தேசத்திற்கு வரமனதில்லாதிருப்பான்; அப்பொழுது உம்முடைய குமாரனை நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே மறுபடியும் அழைத்துப் போவேனோ என்றான்.

சு ஆனால், ஆபிரகாம் அவனோடே சொன்னதாவது: நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துப்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

எ *என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தாரிருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், †உன் வித்

தக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்போ மென்று எனக்குச் சொன்னவரும், எனக்கு ஆணையிட்டவருமான வானத்தினுடைய பராபரனுகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண் டுவரும்படிக்குத் தம்முடைய தூதனை உனக்குமுன்பாக அனுப்புவார். *ஆஉ. க. † ஆஉ. எ: ஆக. ஆடு—ஆஅ.

அ பெண் உன்னைப் பின்செல்ல மன தில்லாதிருந்தானேயாகில், அப்பொழுது நீ இந்த என்னுடைய ஆணைக்கு நீங்கலான வன்; அங்கேமாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துப்போகாயாகவென் றான்.

கூ அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எசமானுகிய ஆபிரகா முடைய இடுப்பின்கீழே போட்டு, இந் தக் காரியத்திற்காக அவனுக்கு ஆணையிட் டான்.

ஈ ¶ பிற்பாடு ஊழியக்காரன் தன் எசமான னுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங் களைக் கூட்டிக்கொண்டு போனான்; அவன் எசமானுடைய சகலவித உச்சிதங்களு ம் அவன்கையிலிருந்தன; அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மேசோப்பொத்தா மியாவிலே நாகோருடைய ஊருக்குவந்து,

ஊ ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் தரவண்டையில் தண்ணீர் மொள்ளுகிற ன்றிகள் புறப்படுகிற சாயங்கால வேளையி லே ஒட்டகங்களை மடக்கிச் சொன்னதா வது:

ஈஎ ¶ என் எசமானுகிய ஆபிரகாமுடை ய பராபரனுயிருக்கிற கர்த்தாவே, தேவரீர் இன்றைக்கு எனக்குக் காரியம் நேரிடப் பண்ணி, என் எசமானுகிய ஆபிரகாமுக் குக் கிருபைசெய்யும்.

ஈக இதோ நான் தண்ணீர்த் தரவண் டையில் நிற்கிறேன்; ஊராரின் குமாரத்தி கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டுவரு வார்களே.

ஈச நான் குடிக்க உன் பாணையைச் சா யென்று நான் சொல்லும்பொழுது, குடி உன் ஒட்டகங்களுக்கும் குடிக்க வார்ப்பே னென்று சொல்லும் பெண்பின்னையே நீர் உம்முடைய ஊழியக்காரனுகிய ஈசாக் குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எச மானுக்குக் கிருபை செய்தீரென்று நான் இதினாலே அறியவும் கடவதென்றான்.

ஈஉ ¶ அவன் இன்னம் பேசி முடியவில் லை; அப்பொழுது சம்பவித்ததேதென்றால், இதோ, ஆபிரகாமுடைய சகோதரனுகிய நாகோரின் பெண்சாதி மில்க்காளுடைய குமாரனுயிருக்கிற பேத்துவேலுக்குப் பிற ந்த *ரெபேக்காள் தன் பாணையைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டு புறப் பட்டுவந்தாள். *ஆஉ. உக.

ஈஊ அந்தப் பெண்பின்னை மகா ரூபவதி யும், புருஷனை அறியாத கன்னியாஸ்திரியு மாயிருந்தாள்; அவன் தரவுக்கிறங்கிப்போ ய், தன் பாணையை நிரப்பிக்கொண்டேறி வந்தாள்.

ஈஎ அப்பொழுது ஊழியக்காரன் அவ ளுக்கு எதிர்கொண்டோடி, உன் பாணையி லே நான் கொஞ்சம் தண்ணீர் குடிக்கட்டு மென்றான்.

ஈஅ அதற்கவள், குடியும் என்னுண்டவ னே! என்று தீவிரமாய்த் தன் பாணையைத் தன் கையிலிறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

ஈகூ கொடுத்துத் தீர்ந்தபின்பு, உம்முடை ய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத் தீருமட்டும் மொண்டுவார்ப்பேனென்று சொல்லி,

உஐ தீவிரமாய்த் தன் பாணையைத் தண் ணீரைத் தொட்டியிலே ஊற்றி, இன்னம் மொண்டுவரத் தரவண்டையில் ஓடி, அவ னுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொ ண்டுவார்த்தான்.

உக அந்தப் புருஷன் அவன்மேல் ஆச் சரியப்பட்டு, கர்த்தர் தன் பயணத்தை வாய்க்கப்பண்ணினாரோ, இல்லையோவெ ன்றறிய மவுனமாயிருந்தான்.

Digitized by Google

ஊ¶ ஒட்டகங்கள் குடித்துத்தீர்ந்தபிற்பாடோவென்றால், அந்தப் புருஷன் அரைச்சேக்கல் எடைப்பொன்னான கெற்றிப் பட்டத்தையும், அவள் கைகளுக்குப் பத்துச்சேக்கல் எடைப்பொன்னான இரண்டு சரிகளையும் எடுத்துக்கொடுத்து,

உ நீ யாருடைய குமாரத்தியென்று எனக்கு அறிவி; உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க எங்களுக்கிடமுண்டோ என்றான்.

உ அவள் அவனுடனே, நான் நாகோருக்கு மில்க்காள் பெற்ற குமாரனாகிய பேத்துவேலின் மகளென்றுசொல்லி,

உஇ அவனுடனே: எங்களிடத்தில் வைக்கோலும், தீனியும் நிரம்ப இருக்கிறது; இராத்தங்க இடமுமிருக்கின்றதென்றாள்.

உஈ அப்பொழுது அந்தப் புருஷன் தலைகுனிந்து, கர்த்தரைப் பணிந்துகொண்டு,

உள என் எசமானாகிய ஆபிரகாமின் பராபரனாயிருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவர் தம்முடைய கிருபையையும் தம்முடைய உண்மையையும், என் எசமானைவிட்டு விலகப்பண்ணினதில்லை; நான் வழிப்பயணம் வருகையில், கர்த்தர் என்னை என் எசமானுடைய சகோதரர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தாரென்றான்.

உஉ¶ பெண்பிள்ளை ஓடி, தன் தாயின்வீட்டிலே இந்த நடபடியை அறிவித்தாள்.

உஊ ரெபேக்காளுக்கு ஒரு சகோதரனிருந்தான், அவன் பெயர் லாபான்; இந்த லாபான் வெளியே தரவருகே இருக்கிற அந்தப் புருஷனண்டைக்கு ஓடினான்.

உஎ அதேனெனில், இவன் அந்த கெற்றிப்பட்டத்தையும், தன் சகோதரியின் கைகளிலிருக்கிற சரிகளையும் கண்டபடியினாலும், இன்ன இன்னபடி அந்தப் புருஷன் என்னோடே சொன்னானென்று தன் சகோதரி ரெபேக்காள் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டபடியினாலும், அந்தப் புருஷனண்டைக்குவந்தான்; இதோ, அவன் தரவருகே ஒட்டகங்களண்டையிலே நின்றிருந்தான்.

உஏ அப்பொழுது இவன், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, உள்ளேவா; நீ வெளியே நிற்பானேன்? நான் வீட்டையும் ஒட்டகங்களுக்கு இடத்தையும் ஆயத்தம்பண்ணினேனென்றான்.

உஐ அப்பொழுது அந்தப் புருஷன் வீட்டுக்கு வந்தான்; இவனோவென்றால், ஒட்டகங்களைக் கட்டவிழ்த்து, ஒட்டகங்களுக்கு வைக்கோலும் தீனியும்போட்டு, அவன் கால்களையும், அவனோடேகூட இருந்த மனிதர் கால்களையும் கழுவுகிறதற்குத் தண்ணீர்கொடுத்தான்.

உஒ பிற்பாடு அவனுக்குமுன்பாகச் சாப்பாடு வைக்கப்பட்டது; ஆனால், அவன் நான் என் வார்த்தைகளைச் சொல்லாததற்குமுன்னே சாப்பிடேனென்றான்; அதற்கு இவன் சொல்லென்றான்.

உஓ¶ அப்பொழுது அவன் சொன்னதாவது: நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்.

உஔ கர்த்தர் என் எசமானை மிகவும் ஆசீர்வதித்தார்; இவர் பெரியவரானார்; அவர் இவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரனையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கட்டளையிட்டார்.

உக என் எசமான் பெண்சாதியாகிய சாரான் முதிர்வயதானபிற்பாடு என் எசமானுக்கு ஒரு குமாரனைப்பெற்றான்; இவனுக்கவர் தமக்குண்டானதையெல்லாம் கொடுத்து,

உஉ நான் குடியிருக்கிற கானான்தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்ளாமல்,

உஅ நீ என் தகப்பன் வீட்டுக்கும் என் இனத்தண்டைக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்வாயாகவென்று என் எசமான் என்னை ஆணையிட்டார்.

உக அப்பொழுது நான் என் எசமானை நோக்கி, ஒருவேளை அந்தப் பெண் என்பிறகே வராதேபோவாளென்றேன்.

சவ ஆனால், அவர் எனக்குச் சொன்னதாவது: நான் பயந்து நடக்கிற கர்த்தரானவர் உன்னுடனே தம்முடைய தூதனை அனுப்பி, நீ என் இனத்திலும், என் தகப்பன் வீட்டிலும், என் குமாரனுக்குப் பெண்ணைக்கொள்வதற்காக உன் பயணத்தை வாய்க்கப்பண்ணுவார்.

சக நீ என் இனத்தண்டைக்குப் போனால், அப்பொழுது என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குக் கொடாதே போனார்களாகில், என்னாணைக்கு நீங்கலாயிருப்பாயென்றார்.

சஉ அப்படியே இன்று நான் அந்தத் தரவண்டையிலேவந்து சொன்னதாவது: என் எசமானனுடைய ஆபிரகாமின் பராபரனுடைய கர்த்தரே, இப்பொழுதும் நான் பயணம் பண்ணுகிற என் வழியைத் தேவரீர் வாய்க்கப்பண்ணினீரானால்;

சஈ இதோ நான் தண்ணீர்த் தரவண்டையிலே நிற்கிறேன்; தண்ணீர்மொள்ளப் புறப்பட்டு வரப்போகிறவளும், நான் அவளுடனே, உன் பாத்திரத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தாவென்று சொல்ல,

சச அவள் என்னுடனே, நீயும்குடி, உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேனென்று சொல்பவளுமான கன்னியாஸ்திரியே கர்த்தர் என் எசமானனுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரியாகவேண்டுமென்றேன்.

சடு இன்னம் இதை நான் என் இருதயத்திலே சொல்லி முடிக்கவில்லை; அப்பொழுது இதோ, ரெபேக்காள் தன் பாத்திரத்தைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டவளாய்ப் புறப்பட்டு வந்து, தரவுக்கிறங்கிப் போய் மொண்டாள்; அப்பொழுது அவளோடே, எனக்குக் குடிக்கத் தாவென்றேன்.

சஊ அவள் தீவிரமாய்த் தன்மேலிருந்த பாத்திரத்தை இறக்கி, குடியும் உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேனென்றாள்; அப்படியே நான் குடித்தேன்; அவள் ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்.

சஎ அப்பொழுது நீ யாருடைய குமாரத்தியென்று அவளைக் கேட்டேன்; அதற்கவள், நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனை பேத்துவேலின் மகனென்றாள்; அப்பொழுது நான் அவள் நெற்றியிலே நெற்றிப்பட்டத்தையும் அவள் கைகளில் சரிகளையும் அணிந்து,

சஅ தலை குனிந்து, கர்த்தனைப் பணிந்து கொண்டு, நான் என் எசமானனுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை உண்மையான வழியிலே அழைத்துவந்த என் எசமானனுடைய ஆபிரகாமின் பராபரனுயிருக்கிற கர்த்தனை ஸ்தோத்திரித்தேன்.

சஙு இப்பொழுதும் நீங்கள் என் எசமானனுக்குத் தயையும் உண்மையும் செய்கிறவர்களானால், எனக்கு அறிவியுங்கள்; அல்லவென்றால், நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையென்கிலும் நோக்கிப் போகும்படிக்கு, அதையும் எனக்கு அறிவியுங்களென்றான்.

டுஏ ¶ அப்பொழுது லாபானும் பேத்துவேலும் பிரதியுத்தாரமாக, இந்தக் காரியம் கர்த்தராலே வந்தது; உனக்கு நாங்கள் இளப்பமானாலும் நலமானாலும் சொல்லக் கூடாது.

டுக இதோ, ரெபேக்காள் உன் முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உன் எசமானனுடைய குமாரனுக்குப் பெண்சாதியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டு போவென்றார்கள்.

டுஉ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபொழுது, தரைமட்டும் குனிந்து கர்த்தனைப் பணிந்துகொண்டான்.

டுஊ பிற்பாடு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்

காளுக்குக் கொடுத்து, அவள் சகோதரனுக்கும் தாய்க்கும் உச்சிதங்களைக் கொடுத்தான்.

ஒ பிற்பாடு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்துக்குடித்து இராத்தங்கினார்கள்; காலமே எழுந்திருந்த பின்பு அவன் என் எசமானண்டைக்கு என்னை அனுப்புங்களென்றான்.

ஙு அப்பொழுது அவன் சகோதரனும் அவளுடைய தாயும், பெண் பத்துநாளாகினும் எங்களோடே இருந்து, பிற்பாடு போகட்டுமென்றார்கள்.

ஙூ அவனோவெனில் அவர்களோடே, கர்த்தர் என் பயணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க என்னைத் தடுக்காதிருங்கள்; நான் என் எசமானண்டைக்குப் போக என்னை அனுப்புங்களென்றான்.

ஙெ அப்பொழுது அவர்கள் பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போமென்றுசொல்லி,

ஙே ரெபேக்காளை அழைத்து, அவளுடனே, நீ இந்தப் புருஷனோடேகூடப் போவாயோவென்றார்கள்; அவள் போவேனென்றாள்.

ஙை அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபேக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதனையும் அனுப்புவித்து,

ஙொ ரெபேக்காளை ஆசீர்வதித்து அவளுடனே, எங்கள் சகோதரியே, நீ ஆயிரம் பதினாயிரங்களானதவும் உன் வித்தது தன் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளவும்கடவது என்றார்கள்.

ஙோ ¶ அப்பொழுது ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மீதிலேறி, அந்த மனிதனைப் பின்சென்றார்கள்; ஊழியக்காரன் ரெபேக்காளை அழைத்துக்கொண்டு போனான்.

ஙௌ ஈசாக்கோவெனில், *என்னைப் பார்க்கிற ஏலாஹ்ரோயீ கிணற்றின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான்; ஏனெனில் தென்தேசத்தில் குடியிருந்தான். * ஙசு. ஙஈ, ஙச.

சூ ஈசாக்குச் சாயங்கால வேளையிலே செபத்தியானம்பண்ண வெளியே போயிருந்து, தன் கண்களை ஏறெடுக்கையில், இதோ ஒட்டகங்கள் நடந்துவரக்கண்டான்.

சூ ரெபேக்காள் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் காண்கிறபொழுது, ஒட்டகத்தை விட்டிறங்கி,

சூ ஊழியக்காரனுடே, இங்கே வெளியிலே நமக்கெதிரே நடந்துவருகிற அந்தப் புருஷன் யாரென்றாள்; அவர் என் எசமானென்று ஊழியக்காரன் சொன்னான்; அப்பொழுது அவள் முக்காடிட்டுக்கொண்டாள்.

சூசு ஊழியக்காரன் தான் செய்த சகல காரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்தான்.

சூஎ அப்பொழுது ஈசாக்கு இவளைத் தன் தாய் சாருளுடைய கூடாரத்திலே அழைத்துப்போய், பிற்பாடு ரெபேக்காளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்குப் பெண்சாதியானாள்; அவன் அவளைச் சிநேகித்தான்; இப்படி ஈசாக்குத் தன் தாய்க்குப் பிற்பாடு ஆறுதல் அடைந்தான்.

உகு. அதிகாரம்.

ஆபிரகாம் மறுபடியும் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணினான்; அவள் பேர் கேத்தூருள்.

உ இவள் அவனுக்குச் சிம்ராளையும், யக்கெஷாளையும், மெதாளையும், மீதேயாளையும், இஸ்பாக்கையும், சுவாகையும் பெற்றாள்.

ஈ யக்கெஷானோவெனில், சேபாவையும், தேதாளையும் பெற்றான்; தேதானுடைய குமாரர், அசூரிம், லெத்தூரிம், லெயூமிம் என்பவர்கள்.

ச மீதேயானுடைய குமாரர், ஏப்பா, ஏப்பேர், ஆனோக், ஆபிதா, எல்தா என்பவர்கள்; இவர்களெல்லாரும் கேத்தூருளின் பிள்ளைகள்.

Digitized by Google

பிள்ளையிருக்கிற இடத்திலே, அவனுடைய சத்தத்தைக் கேட்டார்.

௱ அ நீ எழுந்திருந்து பிள்ளையை எடுத்து, அவனை உன் கையிலால் பிடித்துக்கொண்டுபோ; ஏனெனில், அவனைப் பெரியசாதியாக்குவோமென்றார்.

௨௧ பராபரன் அவள் கண்களைத் திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு தண்ணீர்த்துரவைக் கண்டுபோய், துருத்தியைத் தண்ணீரினால் நிரப்பிப் பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.

௨௰ பராபரன் பிள்ளையோடேகூட இருந்தார்; அவன் வளர்ந்து, வனாந்தரத்தில் குடியிருந்து, வில்வித்தையிலே வல்லவனாயிருந்தான்.

௨௧ அவன் பாரானென்ற வனாந்தரத்திலே குடியிருந்தான்; அவனுடைய தாய் எகிப்துதேசத்தாளாகிய ஒரு பெண்ணை அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள்.

௨௨ ¶ அக்காலத்தில் சம்பவித்ததெதென்றால், அபிமேலேக்கும் அவன் சேனாபதியாகிய பீகோலும் ஆபிரகாமோடே சொன்னதாவது: நீ செய்கிறதெல்லாவற்றிலும் பராபரன் உன்னோடேகூட இருக்கிறார்.

௨௩ இப்பொழுதும் நீ என்னையாகிலும், என் குமாரனையாகிலும், என் பேரனையென்கிலும் கபடுசெய்யாமல், நான் உனக்குச் செய்த தயவின்படியே நீ எனக்கும், நீ தங்கியிருக்கிற இந்தத் தேசத்திற்கும் செய்வதென்று பராபரன்பேரிலே எனக்கு இங்கே ஆணையிடுவென்றான்.

௨௪ அப்பொழுது ஆபிரகாம்: நான் ஆணையிடுகிறேனென்றான்.

௨௫ ஆனால் அபிமேலேக்குடைய வேலைக்காரர் பறித்துக்கொண்டதண்ணீர்த்துரவின் நிமித்தம் ஆபிரகாம் அபிமேலேக்கைக் கடிந்துகொண்டான்.

௨௬ அதற்கு அபிமேலேக், யார் இந்தக் காரியத்தைச் செய்தாரென்று அறியேன்; நீ எனக்கு அறிவித்ததுமில்லை; இன்று நான் அதைக் கேட்டதேயொழிய இதற்கு முன் அதை நான் கேட்டதுமில்லை என்றான்.

௨௭ அப்பொழுது ஆபிரகாம் ஆடுமாடுகளைக் கொண்டுவந்து, அபிமேலேக்குக்குக் கொடுத்தான்; அவர்களிருவரும் உடம்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்.

௨௮ ஆபிரகாம் ஏழு பெண் ஆட்டுக்குட்டிகளைத் தனியே நிறுத்தினான்.

௨௯ அப்பொழுது அபிமேலேக் ஆபிரகாமோடே, நீ தனியே நிறுத்தின இந்த ஏழு பெண் ஆட்டுக்குட்டிகள் எதற்கென்றான்.

௩0 அதற்கவன், நான் இந்தத் துரவை எடுத்ததற்கு எனக்குச் சாட்சியாக நீர் இந்த ஏழு பெண்குட்டிகளை என் கையில் வாங்கிக்கொள்ளவேண்டுமென்றான்.

௩௧ அவர்களிருவரும் அவ்விடத்தில் ஆணையிட்டுக்கொண்டபடியினாலே, அந்த இடம் பேயர்சேபாவென்னப்பட்டது.

௩௨ அவர்கள் பேயர்சேபாவிலே உடம்படிக்கை பண்ணிக்கொண்ட பிற்பாடு, அபிமேலேக்கும், அவன் சேனாபதியாகிய பீகோலும் எழுந்திருந்து, பெலிஸ்தருடைய தேசத்திற்குத் திரும்பினார்கள்.

௩௩ ¶ ஆபிரகாம் பேயர்சேபாவிலே ஒரு தோப்பை நாட்டி, என்றுமுள்ள பராபரனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்திலே தொழுதுகொண்டான்.

௩௪ ஆபிரகாம் அநேகநாள் பெலிஸ்தருடைய தேசத்தில் தங்கினான்.

௨௨. அதிகாரம்.

இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், பராபரன் ஆபிரகாமைச் சோதித்து அவனுடனே, ஆபிரகாமே! என்றார்; அதற்கவன் இதோ அடியேனென்றான்.

௨ அப்பொழுது அவர் சொன்னதாவது: நீ நேசிக்கிறவனும், உனக்கு ஒரே பேரனவனுமாகிய உன்னுடைய குமாரன் ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியதேசத்திற்குப்போய், அங்கே அவனை நாம் உனக்குச் சொல்லப்போகிற

மிகளில் ஒன்றின்மேல் தகனபலியாகப் பலியிடுவென்றார். *எபி. ஐக. ஐஎ.

ஏ அப்பொழுது, ஆபிரகாம் அதிகாலமே எழுந்திருந்து, தன் கழுதையின்மேல் விரி கட்டி, தன் வேலைக்காரரில் இரண்டுபே ரையும் தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டை களைப் பிளந்து புறப்பட்டுப் பராபரன் தனக்குச் சொன்ன ஸ்தலத்திற்கு நடந்து போனான்.

ஸ மூன்றாம் நாளிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே அந்த ஸ்தலத்தைக் கண்டான்.

இ அப்பொழுது ஆபிரகாம் தன் வேலைக்காரரோடே, நீங்கள் இங்கே கழுதையை நிறுத்தி, உனுக்காந்திருங்கள்; நானும் பின் னையாண்டானும் அவ்விடம்மட்டும் போய், பணிந்துகொண்டு, உங்களண்டைக்குத் திரும்பி வருவோமென்றான்.

ஈ ஆபிரகாம் தகனபலிக் கட்டைகளை எடுத்து, தன் குமாரனாகிய ஈசாக்கின் மேல் வைத்து, தன் கையிலே நெருப்பையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு, இரு வரும் ஏகமாய்ப் போனார்கள்.

உ அப்பொழுது ஈசாக் தன் தகப்பனாகிய ஆபிரகாமோடே, என் தகப்பனே என்று சொன்னான்; அதற்கவன், என் மகனே, இதோ நானென்றான். அப்பொழுது அவன், இதோ நெருப்பும் கட்டையுமிருக்கின்றது; ஆனால் தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

ஊ அப்பொழுது ஆபிரகாம், என் மகனே, பராபரன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப்பார்த்துக்கொள்ளுவாரென்றான்; அப்புறம் இருவரும் ஏகமாய்ப் போய்,

எ பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த ஸ்தலத்திற்கு வந்தார்கள்; அப்பொழுது ஆபிரகாம் அங்கே ஒரு பீடத்தைக் கட்டி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அவனை அந்தப் பீடத்திலே கட்டைகளின்மீதில் கிடத்தினான்.

ஐ பிற்பாடு ஆபிரகாம் தன் கையை நீட்டி, தன் குமாரனைக் குரல்வளை அறுக்கும் படிக்கு, கத்தியை எடுத்துக்கொண்டான்.

ஒக அப்பொழுது கர்த்தருடைய தூதர் வானத்திலிருந்து அவனைக் கூப்பிட்டு, ஆபிரகாமே, ஆபிரகாமே, என்றார்; அவன், இதோ அடியேன் என்றான்.

ஒஉ அப்பொழுது அவர் பின்னையாண்டான்மேல் உன் கையைப்போடாதே; அவனுக்கு ஒன்றும் செய்யாதே; ஏனெனில், நீ பராபரனுக்குப் பயந்திருந்து, நமக்காக உனக்கொரேபேருன உன்னுடைய குமாரனைப் பாராதேபோனையென்று இப்பொழுது அறிந்திருக்கிறேமென்றார்.

ஒஊ ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கிறபொழுது, இதோ பின்னைப் புதரிலே தன் கொம்புகளால் சிக்கிக்கொண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான்; அப்பொழுது ஆபிரகாம் போய், கடாவைப் பிடித்து, அதைத் தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியிட்டான்.

ஒச ஆபிரகாம் அந்த ஸ்தலத்திற்குக் கர்த்தர் பார்த்துக்கொள்ளுவாரென்று பேரிட்டான்; அதினாலே இந்நான்வனைக்கும் கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படுமென்று சொல்லப்படும்.

ஒடு கர்த்தருடைய தூதர் இரண்டாம் விசை வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டுச் சொன்னதாவது:

ஒசூ நீ நம்முடைய சொல்லைக் கேட்டு இந்தக் காரியத்தைச் செய்து, நமக்காக உனக்கொரேபேருன உன்னுடைய குமாரனைப் பாராதே போனபடியினாலே,

ஒஎ நாம் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, *உன் வித்தை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரையிலிருக்கிற மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவோமென்றும், உன் வித்தார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்த

ரித்துக்கொள்ளுவார்களென்றும், *மஉ. மசு: மடு. டு.

மஅ *உன் வித்தினுலே பூமியினுடைய எல்லாச் சாதிகளும் ஆசீர்வதிக்கப்படுமென்றும், †நம்முடைய பேரிலே ஆணையிட்டோமென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். *மஉ. ஈ: மஅ. மஅ. †எபி. சூ. மஈ, மசு.

மசூ ஆபிரகாம் தன் வேலைக்காரரண்டைக்குத் திரும்பிவந்தான்; அப்பொழுது எழுந்து புறப்பட்டு, எகமாய்ப் பேயேர்சேபாவுக்குப் போனார்கள்; எனென்றால், ஆபிரகாம் பேயேர்சேபாவிலே குடியிருந்தான்.

உய ¶ இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு, ஆபிரகாமுக்கு அறிவிக்கப்பட்டதாவது: இதோ, மில்க்காளும் உன் சகோதரனுடைய நாகோருக்குப் பிள்ளைகளைப்பெற்றாள்.

உக யாரையென்றால், அவனுடைய மூத்தபேரான ஊத்சையும், இவன் தம்பியாகிய பூசையும், ஆராமுக்குத் தகப்பனுகிய கேமுவேலையும்,

உஉ கேசேதையும், ஆசோவையும், பில்தாசையும், இத்லாப்பையும், பேத்துவேலையும் பெற்றான்; பேத்துவேலோவெனில் ரெபேக்காளைப் பெற்றானென்று அவனுக்கு அறிவிக்கப்பட்டது.

உஊ அந்த எட்டுப்பேரை மில்க்காள் ஆபிரகாமுடைய சகோதரனுகிய நாகோருக்குப் பெற்றாள்.

உச ரேயுமாவென்று பேர்கொண்ட அவளுடைய வைப்பாட்டியும், தேபாகையும், காகாமையும், தாகாசையும், மாகாவையும் பெற்றாள்.

உஈ. அதிகாரம்.

சாரான் உயிரோடிருந்தகாலம் நூற்றிருபத்தேழுவருஷம், இதுவே சாராளுடைய வயது.

உ பிற்பாடு சாரான் கானான்தேசத்திலேயிருக்கிற எபிரோன் ஊராகிய கீரியாத் அர்பாவிலே மரித்தாள்; அப்பொழுது ஆபிரகாம் சாராளுக்காகப் புலம்பவும், அழவும் வந்தான்.

ஈ ¶ பிற்பாடு ஆபிரகாம் தன் சவத்தைவிட்டெழுந்து, ஏத்தின் புத்திரரோடேபேசி,

ச நான் உங்களிடத்தில் பரதேசியும் அந்நியனுமாயிருக்கிறேன்; எனக்குமுன்பாகக்கிடக்கிற என் சவத்தை நான் அடக்கம்பண்ணுவதற்கு, எனக்கு உங்களிடத்தில் பிரேதம் அடக்கம்பண்ணும் நிலத்தைச் சொந்தமாகத் தாருங்களென்றான்.

டு ¶ அப்பொழுது ஏத்தின்புத்திரர் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது:

சு எங்கள் ஆண்டவனே, நாங்கள் சொல்லுகிறதைக் கேளும்; எங்கள் நடுவிலே நீர் தெய்வப் பிரபுவாயிருக்கிறீர்; எங்கள் கல்லறைகளில் தெரிந்துகொள்ளப்பட்டதிலே உம்முடைய சவத்தை அடக்கம்பண்ணும்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம்பண்ண எங்களில் ஒருவனும் தன் கல்லறையை உமக்குத் தடைசெய்வதில்லையென்றார்கள்.

எ ¶ அப்பொழுது ஆபிரகாம் எழுந்திருந்து ஏத்தின் புத்திரராகிய தேசத்தாரை வணங்கி,

அ அவர்களோடே சம்பாஷித்துச் சொன்னதாவது: எனக்கு முன்பாகக்கிடக்கிற என் சவத்தை நான் அடக்கம்பண்ண உங்களுக்குச் சம்மதியானால், நீங்கள் என் வார்த்தையைக் கேட்டு, சோகாருடைய குமாரனுகிய ஏப்பெரோனுடனே,

கூ அவர் தமது நிலத்தின் கடைசியிலே தமக்கிருக்கிற மக்பேலா என்னப்பட்ட கெபியை எனக்குத்தர எனக்காக மனுக்கேளுங்கள்; உங்களிடத்தில் எனக்குப் பிரேதம் அடக்கம்பண்ணும் சொந்த நிலம் இருக்கும்படிக்கு, அவர் அதை அது பெறும் விலைக்குத் தருவாராகவென்றான்.

ஐ ¶ ஆனால் ஏப்பெரோன் ஏத்தின் புத்திரர் நடுவிலே உளுக்காக்கிருந்தான்; அப்பொழுது ஏத்தியனுகிய ஏப்பெரோன் தன் ஊர்வாசலுக்குள் பிரவேசிக்கிற ஏத்தின் புத்திரர் அனைவருங்கேட்க ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாக,

ஙக அல்ல என்ஞண்டவனே, என் வார்த்தையைக்கேளும்; நிலத்தை உமக்குத் தருகிறேன்; அதிலிருக்கும் கெபியையும் உமக்குத் தருகிறேன்; என் சனப் புத்திரருடைய கண்களுக்குமுன்பாக அதை உமக்குத் தருகிறேன்; உம்முடைய சவத்தை அடக்கம் பண்ணுமென்ருன்.

ஙஉ ¶ அப்பொழுது ஆபிரகாம் தேசத்தானை வணங்கி,

ஙஈ தேசத்துச் சனம்கேட்க ஏப்பெரோனுடனே சொன்னதாவது: கொடுக்க நீர் மனதானுல் என் வார்த்தையைக் கேளும்; நிலத்தின் விலைக்கிரயத்தைத் தருகிறேன்: என் கையில் அதை வாங்கிக்கொள்ளும், அப்பொழுது அவ்விடத்தில் என் சவத்தை அடக்கம்பண்ணுவேனென்ருன்.

ஙஊ ¶ அப்பொழுது ஏப்பெரோன் ஆபிரகாமுக்குப் பிரதியுத்தாரமாக:

ஙடி என்ஞண்டவனே, நான் சொல்லுகிறதைக்கேளும்; இந்த நிலம் நானூறு வெள்ளிக்காசுபெறும்; எனக்கும் உமக்கும் அது என்னவுகாரியம்; நீர் உம்முடைய சவத்தை அடக்கம்பண்ணுமென்ருன்.

ஙஎ ¶ அப்பொழுது ஆபிரகாம் ஏப்பெரோனின் சொல்லைக் கேட்டு, ஏப்பெரோன் ஏத்துடைய புத்திரரின் காதுகளில் கேட்கச் சொன்னதாகிய வர்த்தகரிடத்தில் செல்லும்படியான நானூறு வெள்ளிக்காசை அவனுக்கு நிறுத்துக்கொடுத்தான்.

ஙஏ இந்தப் பிரகாரமாக *மம்ரேக்கெதிரே மக்பேலாவிலிருந்த ஏப்பெரோனுடைய நிலமாகிய அந்தப் பூமியும், அதிலுள்ள கெபியும் நிலத்தினுடைய எல்லைகளெல்லாம் சுற்றியிருந்த எல்லா மரங்களும், *சகூ. உகூ, நயஃ ஙஐ. ஙந.

ஙஐ அவனுடைய ஊர்வாசலுக்குள்பிரவேகிக்கிற ஏத்தின் புத்திரர் எல்லாரும் அறிய ஆபிரகாமுக்குச் சொந்தமாக ஏற்பட்டது.

ஙஒ ¶ அதற்குப்பிற்பாடு ஆபிரகாம் தன் பெண்சாதியாகிய சாறுவைக் கானன்தேசத்தில் ஏப்பெரோன் ஊர்ப்பூமியான மம்ரேக் கெதிரேயிடக்கிற மக்பேலா என்ற நிலத்தின் கெபியிலே அடக்கம்பண்ணினுன்.

ஙஓ இப்படியே ஏத்தின் புத்திரர்களைக் கொள்ளப்பட்ட அந்த நிலமும், அதிலுள்ள கெபியும், ஆபிரகாமுக்குப் பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்தநிலமாக ஏற்பட்டது.

உச. அதிகாரம்.

ஆபிரகாம் வயதுசென்ற கிழவனுனுன்; கர்த்தர் ஆபிரகாமை எல்லாவற்றிலும் ஆசீர்வதித்துக்கொண்டிருந்தார்.

உ அப்பொழுது ஆபிரகாம் தன் வீட்டிலே வயதில் மூத்தவனும், தனக்குண்டானதையெல்லாம் ஆளுகிறவனுமாகிய தன் ஊழியக்காரனுடே சொன்னதாவது:

ஈ *நான் குடியிருக்கிற கானனியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக்கொள்ளாமல், *உஅ. க.

ச நீ என் சீமைக்கும், என் இனத்தண்டைக்கும்போய், என் குமாரனுகிய ஈசாக்குக்குப் பெண்ணைக் கொள்வதற்கு நான் உன்னை வானத்திற்குப் பராபரனும், பூமிக்குப் பராபரனுமாகிய கர்த்தர்பேரிலே ஆணையிடும்படிக்கு, *உன் கையை என்னிடுப்பின்கீழே போடென்ருன். *சஎ. உகூ.

ஙக ¶ அப்பொழுது அந்த ஊழியக்காரன் அவனுடனே, ஒருவேளை அந்தப் பெண் என்பிறகே இந்தத் தேசத்திற்கு வரமனதில்லாதிருப்பான்; அப்பொழுது உம்முடைய குமாரனை நீர் விட்டுவந்த தேசத்திற்குத்தானே மறுபடியும் அழைத்துப் போவேனே என்ருன்.

சு ஆனுல், ஆபிரகாம் அவனுடே சொன்னதாவது: நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துப்போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

எ *என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தாரிருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்துவந்தவரும், †உன் வித்

தக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்போ மென்று எனக்குச் சொன்னவரும், எனக்கு ஆணையிட்டவருமான வானத்தினுடைய பராபரனுகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண் டுவரும்படிக்குத் தம்முடைய தூதனை உனக்குமுன்பாக அனுப்புவார். *ஆஉ. க. † ஆஉ. எ: ஆக. ஆடு—ஆஅ.

அ பெண் உன்னைப் பின்செல்ல மன தில்லாதிருந்தாளேயாகில், அப்பொழுது நீ இந்த என்னுடைய ஆணைக்கு நீங்கலான வன்; அங்கேமாத்திரம் என் குமாரனை மறுபடியும் அழைத்துப்போகாயாகவென் ருன்.

கூ அப்பொழுது அந்த ஊழியக்காரன் தன் கையைத் தன் எசமானுகிய ஆபிரகா முடைய இடுப்பின்கீழே போட்டு, இந் தக் காரியத்திற்காக அவனுக்கு ஆணையிட் டான்.

ஐ ¶ பிற்பாடு ஊழியக்காரன் தன் எசமா நுடைய ஒட்டகங்களில் பத்து ஒட்டகங் களைக் கூட்டிக்கொண்டு போனன்; அவன் எசமானுடைய சகலவித உச்சிதங்களு ம் அவன்கையிலிருந்தன; அவன் எழுந்து புறப்பட்டுப்போய், மேசோப்பொத்தா மியாவிலே நாகோருடைய ஊருக்குவந்து,

ஈக ஊருக்குப் புறம்பே ஒரு தண்ணீர்த் துரவண்டையில் தண்ணீர் மொள்ளுகிற ன்றிகள் புறப்படுகிற சாயங்கால வேளையி லே ஒட்டகங்களை மடக்கிச் சொன்னதா வது:

ஐஉ ¶ என் எசமானுகிய ஆபிரகாமுடை ய பராபரனுயிருக்கிற கர்த்தாவே, தேவரீர் இன்றைக்கு எனக்குக் காரியம் நேரிடப் பண்ணி, என் எசமானுகிய ஆபிரகாமுக் குக் கிருபைசெய்யும்.

ஐக இதோ நான் தண்ணீர்த் துரவண் டையில் நிற்கிறேன்; ஊராரின் குமாரத்தி கள் தண்ணீர் மொள்ளப் புறப்பட்டுவரு வார்களே.

ஐச நான் குடிக்க உன் பாத்திரத்தைச் சா யென்று நான் சொல்லும்பொழுது, குடி உன் ஒட்டகங்களுக்கும் குடிக்க வார்ப்பே னென்று சொல்லும் பெண்பிள்ளையே நீர் உம்முடைய ஊழியக்காரனுகிய ஈசாக் குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எச மானனுக்குக் கிருபை செய்தீரென்று நான் இதினுலே அறியவும் கடவதென்ருன்.

ஐஉ ¶ அவன் இன்னம் பேசி முடியவில் லை; அப்பொழுது சம்பவித்ததேதென்ருல், இதோ, ஆபிரகாமுடைய சகோதரனுகிய நாகோரின் பெண்சாதி மில்க்காளுடைய குமாரனுயிருக்கிற பேத்துவேலுக்குப் பிற ந்த *ரெபேக்காள் தன் பாத்திரத்தைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டு புறப் பட்டுவந்தாள். *ஆஉ. உக.

ஐசு அந்தப் பெண்பிள்ளை மகா ரூபவதி யும், புருஷனை அறியாத கன்னியாஸ்திரியு மாயிருந்தாள்; அவள் துரவுக்கிறங்கிப்போ ய், தன் பாத்திரத்தை நிரப்பிக்கொண்டேறி வந்தாள்.

ஐஎ அப்பொழுது ஊழியக்காரன் அவ ளுக்கு எதிர்கொண்டோடி, உன் பாத்தி யிலே நான் கொஞ்சம் தண்ணீர் குடிக்கட்டு மென்ருன்.

ஐஅ அதற்கவள், குடியும் என்னண்டவ னே! என்று தீவிரமாய்த் தன் பாத்திரத்தை தன் கையிலிறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தான்.

ஐகூ கொடுத்துத் தீர்ந்தபின்பு, உம்முடை ய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத் தீருமட்டும் மொண்டுவார்ப்பேனென்று சொல்லி,

உஐ தீவிரமாய்த் தன் பாத்திரத்தைத் தண் ணீரைத் தொட்டியிலே ஊற்றி, இன்னம் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவ னுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொ ண்டுவார்த்தான்.

உக அந்தப் புருஷன் அவள்மேல் ஆச் சரியப்பட்டு, கர்த்தர் தன் பயணத்தை வாய்க்கப்பண்ணினுரோ, இல்லையோவென் றறிய மவுனமாயிருந்தான்.

உஉ ஒட்டகங்கள் குடித்துத்தீர்ந்தபிற்பாடோவென்றால், அந்தப் புருஷன் அரைச்சேக்கல் எடைப்பொன்னான மெற்றிப் பட்டத்தையும், அவன் கைகளுக்குப் பத்துச்சேக்கல் எடைப்பொன்னான இரண்டு சரிகளையும் எடுத்துக்கொடுத்து,

உந நீ யாருடைய குமாரத்தியென்று எனக்கு அறிவி; உன் தகப்பன் வீட்டில் இராத்தங்க எங்களுக்கிடமுண்டோ என்றான்.

உச அவன் அவனுடனே, நான் நாகோருக்கு மில்க்கான் பெற்ற குமாரனாகிய பேத்துவேலின் மகனென்றுசொல்லி,

உடு அவனுடனே: எங்களிடத்தில் வைக்கோலும், தீனியும் மிரம்ப இருக்கிறது; இராத்தங்க இடமுமிருக்கின்றதென்றான்.

உசு அப்பொழுது அந்தப் புருஷன் தலை குனிந்து, கர்த்தனைப் பணிந்துகொண்டு,

உஎ என் எசமானனாகிய ஆபிரகாமின் பராபரனாயிருக்கிற கர்த்தர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்; அவர் தம்முடைய இரக்கத்தையும் தம்முடைய உண்மையையும், என் எசமானைவிட்டு விலகப்பண்ணினதில்லை; நான் வழிப்பயணம் வருகையில், கர்த்தர் என்னை என் எசமானனுடைய சகோதரர் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தாரென்றான்.

உஅ ¶ பெண்பிள்ளை ஓடி, தன் தாயின்வீட்டிலே இந்த நடபடியை அறிவித்தாள்.

உக ரெபேக்காளுக்கு ஒரு சகோதரனிருந்தான், அவன் பெயர் லாபான்; இந்த லாபான் வெளியே தரவருகே இருக்கிற அந்தப் புருஷனண்டைக்கு ஓடினான்.

ஈய அதேனெனில், இவன் அந்த மெற்றிப்பட்டத்தையும், தன் சகோதரியின் கைகளிலிருக்கிற சரிகளையும் கண்டபடியினாலும், இன்ன இன்னபடி அந்தப் புருஷன் என்னோடே சொன்னானென்று தன் சகோதரி ரெபேக்கான் சொல்லுகிற வார்த்தைகளைக் கேட்டபடியினாலும், அந்தப் புருஷனண்டைக்குவந்தான்; இதோ, அவன் தரவருகே ஒட்டகங்களண்டையிலே நின்றிருந்தான்.

ஈக அப்பொழுது இவன், கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவனே, உள்ளேவா; நீ வெளியே நிற்பானேன்? நான் வீட்டையும் ஒட்டகங்களுக்கு இடத்தையும் ஆயத்தம்பண்ணினேனென்றான்.

ஈஉ அப்பொழுது அந்தப் புருஷன் வீட்டுக்கு வந்தான்; இவனென்றால், ஒட்டகங்களைக் கட்டவிழ்த்து, ஒட்டகங்களுக்கு வைக்கோலும் தீனியும்போட்டு, அவன் கால்களையும், அவனோடேகூட இருந்த மனிதர் கால்களையும் கழுவுகிறதற்குத் தண்ணீர்கொடுத்தான்.

ஈஈ பிற்பாடு அவனுக்குமுன்பாகச் சாப்பாடு வைக்கப்பட்டது; ஆனால், அவன் நான் என் வார்த்தைகளைச் சொல்லாததற்குமுன்னே சாப்பிடேனென்றான்; அதற்கு இவன் சொல்லென்றான்.

ஈச ¶ அப்பொழுது அவன் சொன்னதாவது: நான் ஆபிரகாமுடைய ஊழியக்காரன்.

ஈடு கர்த்தர் என் எசமானை மிகவும் ஆசீர்வதித்தார்; இவர் பெரியவராஞர்; அவர் இவருக்கு ஆடுமாடுகளையும், வெள்ளியையும், பொன்னையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கட்டளையிட்டார்.

ஈசு என் எசமானன் பெண்சாதியாகிய சாரான் முதிர்வயதானபிற்பாடு என் எசமானனுக்கு ஒரு குமாரனைப்பெற்றாள்; இவனுக்கவர் தமக்குண்டானதையெல்லாம் கொடுத்து,

ஈஎ நான் குடியிருக்கிற கானான்தேசத்தாருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்ளாமல்,

ஈஅ நீ என் தகப்பன் வீட்டுக்கும் என் இனத்தண்டைக்கும் போய், என் குமாரனுக்குப் பெண்ணைக் கொள்வாயாகவென்று என் எசமான் என்னை ஆணையிட்டார்.

ஈக அப்பொழுது நான் என் எசமானனுடனே, ஒருவேளை அந்தப் பெண் என் பிறகே வராதேபோவாளென்றேன்.

Digitized by Google

சவ ஆனால், அவர் எனக்குச் சொன்ன தாவது: நான் பயந்து நடக்கிற கர்த்தரான வர் உன்னுடே தம்முடைய தூதனை அனுப்பி, நீ என் இனத்திலும், என் தகப்பன் வீட்டிலும், என் குமாரனுக்குப் பெண்ணெக்கொன்வதற்காக உன் பயணத்தை வாய்க்கப்பண்ணுவார்.

சக நீ என் இனத்தண்டைக்குப் போனால், அப்பொழுது என் ஆணைக்கு நீங்கலாயிருப்பாய்; அவர்கள் உனக்குக் கொடாதே போனர்களாகில், என்னாணைக்கு நீங்கலாயிருப்பாயென்றார்.

சஉ அப்படியே இன்று நான் அந்தத் தரவண்டையிலேவந்து சொன்னதாவது: என் எசமானனுகிய ஆபிரகாமின் பராபரனுகிய கர்த்தரே, இப்பொழுதும் நான் பயணம் பண்ணுகிற என் வழியைத் தேவரீர் வாய்க்கப்பண்ணினீரானால்;

சங இதோ நான் தண்ணீர்த் தரவண்டையிலே நிற்கிறேன்; தண்ணீர்மொள்ளப் புறப்பட்டு வரப்போகிறவளும், நான் அவளுடனே, உன் பாணையிலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் எனக்குக் குடிக்கத் தாவென்று சொல்ல,

சச அவள் என்னுடனே, நீயும்குடி, உன் ஒட்டகங்களுக்கும் மொண்டு வார்ப்பேனென்று சொல்பவளுமான கன்னியாஸ்திரியே கர்த்தர் என் எசமானனுடைய குமாரனுக்கு நியமித்த ஸ்திரியாகவேண்டுமென்றேன்.

சடு இன்னம் இதை நான் என் இருதயத்திலே சொல்லி முடிக்கவில்லை; அப்பொழுது இதோ, ரெபேக்காள் தன் பாணையைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டவளாய்ப் புறப்பட்டு வந்து, தரவுக்கிறங்கிப் போய் மொண்டாள்; அப்பொழுது அவனோடே, எனக்குக் குடிக்கத் தாவென்றேன்.

சஙு அவள் தீவிரமாய்த் தன்மேலிருந்த பாணையை இறக்கி, குடியும் உம்முடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பேனென்றாள்; அப்படியே நான் குடித்தேன்; அவள் ஒட்டகங்களுக்கும் வார்த்தாள்.

சஎ அப்பொழுது நீ யாருடைய குமாரத்தியென்று அவளைக் கேட்டேன்; அதற்கவள், நான் மில்க்காள் நாகோருக்குப் பெற்ற குமாரனை பேத்துவேலின் மகனென்றாள்; அப்பொழுது நான் அவள் நெற்றியிலே நெற்றிப்பட்டத்தையும் அவள் கைகளில் சரிகளையும் அணிந்து,

சஅ தலை குனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டு, நான் என் எசமானனுடைய சகோதரன் குமாரத்தியை அவர் குமாரனுக்குக் கொள்ள என்னை உண்மையான வழியிலே அழைத்துவந்த என் எசமானனுகிய ஆபிரகாமின் பராபரனுயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்.

சஙு இப்பொழுதும் நீங்கள் என் எசமானனுக்குத் தயையும் உண்மையும் செய்கிறவர்களானால், எனக்கு அறிவியுங்கள்; அல்லவென்றால், நான் வலதுபுறத்தையாகிலும் இடதுபுறத்தையென்கிலும் நோக்கிப் போகும்படிக்கு, அதையும் எனக்கு அறிவியுங்களென்றான்.

டுஏ ¶ அப்பொழுது லாபானும் பேத்துவேலும் பிரதியுத்தாரமாக, இந்தக் காரியம் கர்த்தராலே வந்தது; உனக்கு நாங்கள் இனப்பமானாலும் நலமானாலும் சொல்லக் கூடாது.

டுக இதோ, ரெபேக்காள் உன் முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உன் எசமானனுடைய குமாரனுக்குப் பெண்சாதியாகும்படிக்கு, அவளை அழைத்துக்கொண்டு போவென்றார்கள்.

டுஉ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபொழுது, தரைமட்டும் குனிந்து கர்த்தரைப் பணிந்துகொண்டான்.

டுங பிற்பாடு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும் பொன்னுடைமைகளையும் வஸ்திரங்களையும் எடுத்து, ரெபேக்

காளுக்குக் கொடுத்து, அவள் சகோதரனுக்கும் தாய்க்கும் உச்சிதங்களைக் கொடுத்தான்.

ஙச பிற்பாடு அவனும் அவனோடிருந்த மனிதரும் புசித்துக்குடித்து இராத்தங்கினார்கள்; காலமே எழுந்திருந்த பின்பு அவன் என் எசமானனண்டைக்கு என்னை அனுப்புங்களென்றான்.

ஙஎ அப்பொழுது அவன் சகோதரனும் அவனுடைய தாயும், பெண் பத்துநாளாகிலும் எங்களோடே இருந்து, பிற்பாடு போகட்டுமென்றார்கள்.

ஙசு அவனோவெனில் அவர்களோடே, கர்த்தர் என் பயணத்தை வாய்க்கப்பண்ணியிருக்க என்னைத் தடுக்காதிருங்கள்; நான் என் எசமானனண்டைக்குப் போக என்னை அனுப்புங்களென்றான்.

ஙஅ அப்பொழுது அவர்கள் பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போமென்றுசொல்லி,

ஙஆ ரெபேக்காளை அழைத்து, அவளுடனே, நீ இந்தப் புருஷனோடேகூடப் போவாயோவென்றார்கள்; அவள் போவேனென்றாள்.

ஙக அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபேக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்து,

ஙஉ ரெபேக்காளை ஆசீர்வதித்து அவளுடனே, எங்கள் சகோதரியே, நீ ஆயிரம் பதினாயிரங்களாகவும் உன் வித்துத் தன் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளவும்கடவது என்றார்கள்.

ஙக ¶ அப்பொழுது ரெபேக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள் மீதிலேறி, அந்த மனிதனைப் பின்சென்றார்கள்; ஊழியக்காரன் ரெபேக்காளை அழைத்துக்கொண்டு போனான்.

ஙஒ ஈசாக்கோவெனில், *என்னைப் பார்க்கிற ஏலாஈள்ளவருடைய கிணறென்னப்பட்ட கிணற்றின் வழியாய்ப் புறப்பட்டு வந்தான்; ஏனெனில் தென்தேசத்தில் குடியிருந்தான். * ஙசு. ஙக, ஙச.

சுக ஈசாக்குச் சாயங்கால வேளையிலே செபதியானம்பண்ண வெளியே போயிருந்து, தன் கண்களை ஏறெடுக்கையில், இதோ ஒட்டகங்கள் நடந்துவரக்கண்டான்.

சுச ரெபேக்காள் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் காண்கிறபொழுது, ஒட்டகத்தை விட்டிறங்கி,

சுடு ஊழியக்காரனே, இங்கே வெளியிலே நமக்கெதிரே நடந்துவருகிற அந்தப் புருஷன் யாரென்றாள்; அவர் என் எசமானென்று ஊழியக்காரன் சொன்னான்; அப்பொழுது அவள் முக்காடிட்டுக்கொண்டாள்.

சுசு ஊழியக்காரன் தான் செய்த சகலகாரியங்களையும் ஈசாக்குக்கு விவரித்தான்.

சுஎ அப்பொழுது ஈசாக்கு இவளைத் தன் தாய் சாரருடைய கூடாரத்திலே அழைத்துப்போய், பிற்பாடு ரெபேக்காளை விவாகம்பண்ணினான்; அவள் அவனுக்குப் பெண்சாதியானாள்; அவன் அவளைச் சிநேகித்தான்; இப்படி ஈசாக்குத் தன் தாய்க்குப் பிற்பாடு ஆறுதல் அடைந்தான்.

உரு. அதிகாரம்.

ஆபிரகாம் மறுபடியும் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணினான்; அவள் பேர் கேத்தூராள்.

உ இவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்கெஷானையும், மெதானையும், மீதேயானையும், இஸ்பாக்கையும், சுவானகையும் பெற்றாள்.

ஈ யக்கெஷானோவெனில், சேபாவையும், தேதானையும் பெற்றான்; தேதானுடைய குமாரர், அசூரிம், லெத்தூரிம், லெயூமிம் என்பவர்கள்.

ச மீதேயானுடைய குமாரர், ஏப்பா, ஏப்பேர், ஆனோக், ஆபிதா, எல்தா என்பவர்கள்; இவர்களெல்லாரும் கேத்தூராளின் பிள்ளைகள்.

ஏ ¶ ஆபிரகாம் *தனக்குண்டானவை எல்லாவற்றையும் ஈசாக்குக்குக் கொடுத்தான். *உச. ஈசு.

சு ஆனால் ஆபிரகாமுக்கிருந்த வைப்பாட்டிகளின் பிள்ளைகளுக்கு ஆபிரகாம் ஐவகைக் கொடுத்து, தான் இன்னம் உயிரோடிருக்கையில் அவர்களைத் தன் குமாரனாகிய ஈசாக்கைவிட்டு, கிழக்கே போகக் கீழ்த்தேசத்திற்கு அனுப்பிவிட்டான்.

எ ¶ ஆபிரகாம் உயிரோடிருந்த ஆயுசுகாள் நூற்றெழுபத்தைந்து வருஷம்.

அ பிற்பாடு ஆபிரகாம் நல்ல நரைவயதிலும் முதிர்ந்த பூரண ஆயுசிலும் சீவித்து மரித்து, தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

கூ அப்பொழுது அவனை அவன் குமாரராகிய ஈசாக்கும், இஸ்மவேலும் *மம்ரேக்கெதிரே எத்தியனான சோகாரின் குமாரனாகிய ஏப்பெரோனின் நிலத்திலுள்ள மக்பேலா என்னப்பட்ட கெபியிலே அடக்கம் பண்ணினார்கள். *உக. உஐ.

ஐ அது ஆபிரகாம் ஏத்தின் புத்திரர்கையிலே கொண்ட நிலம்தான்; அங்கே ஆபிரகாமும் அவன் பெண்சாதியாகிய சாரையும் அடக்கம்பண்ணப்பட்டார்கள்.

ஙக ¶ ஆபிரகாம் மரித்தபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பராபரன் அவன் குமாரனாகிய ஈசாக்கை ஆசீர்வதித்தார்; என்னைப் பார்க்கிற சீவனுள்ளவருடைய ஜணறென்னப்பட்ட ஜணற்றண்டையிலே ஈசாக்குக் குடியிருந்தான்.

ஙஉ ¶ சாரையுடைய அடிமைப்பெண்ணாகிய எகிப்துதேசத்தாளான ஆகார், ஆபிரகாமுக்குப் பெற்ற குமாரனாகிய இஸ்மவேலின் சந்ததியும் பலபல சந்ததிகளாய்ப்போன இஸ்மவேல் புத்திரர் அழைக்கப்பட்ட நாமங்களுமாவது:

ஙஈ இஸ்மவேலுடைய முதல்பேரான குமாரன் நேபயோத், மற்றவர்கள் கேதார், அத்பேயேல், மிப்சாம்,

ஙச மிஷ்மா, தூமா, மாசா.

ஙடு ஆதாத், தேமா, ஏத்தூர், நாப்பிஸ், கெத்மா.

ஙசு தங்கள் கிராமங்களிலும் அரண்மனைகளிலும் குடியிருந்து, தங்கள் சனத்தாருக்குப் *பன்னிரண்டு பிரபுக்களான இஸ்மவேலின் குமாரர் இவர்கள்தான்; அவர்களுடைய நாமங்களும் இவைகள்தானே. *ஙஎ. உஐ.

ஙஎ இஸ்மவேலின் வயது நூற்றுமுப்பத்தேழுவருஷமாயிருந்து, பிற்பாடு சீவித்து மரித்து தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

ஙஅ ஆபிலா தவக்கி எகிப்துக்கெதிராக அசூருக்குப் போகிற வழியிலிருக்கும் சூர்மட்டும் குடியிருந்தார்கள்; இது அவன் சகோதரரெல்லாருக்கும் எதிராய் அவன் பங்கிலே விழுந்த பூமி.

ஙக ¶ ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்குடைய சந்ததியாவது: ஆபிரகாம் ஈசாக்கைப்பெற்றான்.

உஐ ஈசாக்கு, பதான்அராம் என்ற சூரியாவின் தேசத்தானாகிய பேத்துவேலுக்குக் குமாரத்தியும் சூரிய தேசத்தானாகிய லாபானுக்குச் சகோதரியுமான ரெபேக்காளை விவாகம்பண்ணுகிறபொழுது நாற்பதவயதாயிருந்தான்.

உக ஈசாக்கு மலடியாயிருந்த தன் பெண்சாதிக்காகக் கர்த்தரை வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் பெண்சாதி ரெபேக்கா கர்ப்பமாகி கர்ப்பம்தரித்தாள்.

உஉ ஆனால் அவள் கர்ப்பத்திலே பிள்ளைகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டிருந்தன; அப்பொழுது அவள் இப்படியானால் இந்தக் கர்ப்பத்தோடே நான் இருப்பானேனென்று சொல்லி, கர்த்தரைக் கேட்கப்போனாள்.

உங அப்பொழுது கர்த்தர் அவளுடனே: இரண்டுசாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாய், இரண்டுசனசதளங்கள் உன் குடல்களிலிருந்து பிரியும்; *அவைகளில் ஒரு சனச

Digitized by Google

தனம் மற்றச் சனசதனத்தைப்பார்க்கிலும் பலத்தப்போம், பெரியவன் சிறியவனைச் சேவிப்பானென்றார். *உரோ. கூ. ஐ, ஐக.

உச பெற அவளுக்கு நான்கள் நிறை வேறினபொழுது, இதோ இரட்டைப்பிள் ளைகள் அவள் கர்ப்பத்திலிருந்தன.

உடி முன்னினவன் சிவந்தவனும் முழுதும் ரோமமான உடையின் சாயலுமாயிருந்து வெளிப்பட்டான்; அவனுக்கு ஏசாவென் று பெயரிட்டார்கள்.

உக அதற்குப்பிறகு அவன் சகோதரன் ஏசாவின் குதிகாலைத் தன் கையிலுலே பி டித்துக்கொண்டு வெளிப்பட்டான்; அவ னுக்கு யாக்கோபென்று பேரிட்டார்கள்; அவன் இவர்களைப் பெறுகிறபொழுது ஈசாக்கு அறுபது வயதாயிருந்தான்.

உஎ ¶ இந்தப் பிள்ளைகள் பெரியவர்களா னபொழுது, ஏசா வேட்டையை அறிந்த வெளிச்சஞ்சார மனிதனும், யாக்கோபோ வெளில் கூடாரங்களில் தங்கித்திரிகிற கற்குண மனிதனுமாயிருந்தான்.

உஅ ஈசாக்கு ஏசாவின்மேல் பட்சமாயி ருந்தான்; ஏனெனில் வேட்டையாடினது அவன் வாய்க்கு ருசிகரமாயிருந்தது; ஆனா ல் ரெபேக்கான் யாக்கோபின்மேல் பட்ச மாயிருந்தான்.

உகூ ஏசா வெளியிலிருந்து வருகிற ஒரு காலிலே இளைப்பாய் வருகிறபொழுது யா க்கோபு கூழைச் சமைத்திருந்தான்.

உஐ அப்பொழுது ஏசா யாக்கோபோடே: சிவப்பாயிருக்கிறதே, அந்தச் சிவப்பான திலே நான் ருசிபார்க்கட்டும்; ஏனெனில் இளைப்பாயிருக்கிறேனென்றான்; இதைத் தொட்டு அவன்பேர் ஏதோமென்னப்பட் டது.

உக அப்பொழுது யாக்கோபு, உன்னுடை ய முதற்பிறப்புச் சுதந்தரத்தை இன்று எனக்கு விற்கவேண்டுமென்றான்.

உஎ அதற்கு ஏசா, இதோ நான் சாகப் போகிறேனே, இந்த முதற்பிறப்புச் சுதந் தம் எனக்கேதுக்கென்றான்.

ஊ அப்பொழுது யாக்கோபு இன்று எனக்காணையிடுவென்றான்; *அவன் இவ னுக்காணையிட்டு, தன் முதற்பிறப்புச் சுத ந்தரத்தை யாக்கோபுக்கு விற்றான். *எபி. ஐஉ. ஐசூ.

ஊக அப்பொழுது யாக்கோபு ஏசாவுக்கு அப்பமும் பயற்றங்கூழும் கொடுத்தான்; அவன் புசித்துக் குடித்து எழுந்திருந்து போனான்; இப்படி ஏசா முதற்பிறப்புச் சுதந்தரத்தை அசட்டைபண்ணினான்.

உசூ. அதிகாரம்.

ஆபிரகாமின் நாள்களில் வந்த முன்ன பஞ்சம்தவிரப் பின்னொரு பஞ்சம் தேசத் திலுண்டாயிற்று; அப்பொழுது ஈசாக் குக் கேரூருக்குப் பெலிஸ்தருடைய ஈரா சாவாகிய அபிமேலேக் அண்டைக்குப் போனான்.

உ ¶ கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகிச் சொன்னதாவது: நீ எகிப்துக்கிறங்கிப் போகாமல் நாம் உனக்குச் சொல்லுகிற தே மையிலே குடியிரு.

ஊ இந்தச் சீமையிலே தங்கியிரு; நான் உ ன்னோடேகூட இருந்து உன்னை ஆசீர்வதி ப்போம்; ஏனெனில், நாம் உனக்கும் உன் வித்துக்கும் இந்தத் தேசங்களை எல்லாம் கொடுத்து, *உன் தகப்பனாகிய ஆபிரகா முக்கு நாம் இட்ட ஆணையைத் நிட்டப் படுத்துவோம். *உஉ. ஐசூ, ஐஅ.

ச ஆபிரகாம் நம்முடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, நம்முடைய நிட்டத்தையும், நம்முடைய கற்பனைகளையும், நம்முடை ய கட்டளைகளையும், நம்முடைய நியாயப் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியி னாலே,

ஙி நாம் உன் வித்தை வானத்தின் நட்சத் நிரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் வித்துக்கு இந்தத் தேசங்களையெல்லாம் கொடுப்போம்; உன் வித்தினாலே பூமியினு டைய சாதிகளெல்லாம் ஆசீர்வதிக்கப்படு மென்றார்.

சூ ¶ அப்படியே இசாக்குக் கேராரிலே குடியிருந்தான்.

எ அவ்விடத்து மனிதர் அவன் பெண்சாதியின் செய்தியை விசாரிக்கும்பொழுது, அவன் *இவள் என் சகோதரியென்பான்; ஏனெனில் ரெபேக்காள் பார்வைக்கழகியானபடியால், அவ்விடத்து மனிதர் அவன் நிமித்தமாய்த் தன்னைக் கொல்லுவார்களென்று, அவளைத் தன் பெண்சாதியென்று சொல்லப் பயந்தான். *ஙஉ. ஙசூ.

அ ஆனால் அவன் அங்கே நெடுநாளிருக்கும்பொழுது சம்பவித்ததேதெனில், பெலிஸ்தரின் இராசாவாகிய அபிமேலேக் பலகணிவழியாய்ப் பார்த்து, இதோ இசாக்குத்தன் பெண்சாதியாகிய ரெபேக்காளோடே சரசம்பண்ணுகிறதைக் கண்டான்.

சூ அப்பொழுது அபிமேலேக் இசாக்கை அழைத்து, இதோ அவள் உன் பெண்சாதியாமே, பின்னை ஏன் அவளை உன் சகோதரியென்று சொன்னாய் என்றான்; அப்பொழுது இசாக்கு அவனுடனே, அவள் நிமித்தம் நான் சாவாதபடிக்கு, இப்படிச் சொன்னேனென்றான்.

ஙூ ஆனால் அபிமேலேக் இப்படி எங்களுக்கேன் செய்தாய்? சனத்திலொருவன் உன் பெண்சாதியோடே சயனிக்கவும், இப்படியே நீ எங்கள்மேல் குற்றம் வரப்பண்ணவும், அது மோசமாயிருந்ததே என்றான்.

ஙகு பிற்பாடு அபிமேலேக் எல்லாச் சனத்திற்கும், இந்தப் புருஷனையாகிலும் அவன் பெண்சாதியையென்கிலும் தொடுகிறவன் கொலையுண்ணவே கொலையுண்பானென்று கட்டளையிட்டான்.

ஙஉ ¶ இசாக்கு அந்தத் தேசத்திலே விதைவிதைத்து, அந்த வருஷத்திலே நூறத்தனை பலனடைந்தான்; ஏனெனில் கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

ஙஈ அப்படியே அந்தப் புருஷன் பெருகினான்; அவன் மிகுதியும் பலத்தவனாகு மட்டும் வரவரப் பெருகினான்.

ஙஊ அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டுமந்தையும், வெகு பணிவிடைச்சனமுமிருந்தன; ஆகையால் பெலிஸ்தர் அவன் பேரில் பொறுமையாகி,

ஙடு அவன் தகப்பனுடைய வேலைக்காரர் அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாள்களில் வெட்டின *தரவுகளையெல்லாம் தூற்று மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்.
*உக. ஈ.

ஙசூ அபிமேலேக் இசாக்குடனே, எங்களைவிட்டுப்போ, ஏனெனில் எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனானாயென்றான்.

ஙஎ ¶ அப்பொழுது இசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம்போட்டு, அங்கே குடியிருந்து,

ஙஅ தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாள்களில் வெட்டினவைகளும் ஆபிரகாம் மரித்தபிற்பாடு பெலிஸ்தர் தூற்றுப்போட்டவைகளுமான தரவுகளை மறுபடியும் எடுத்து, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பெயர்களின்படியே அவைகளுக்குப் பெயரிட்டான்.

ஙகூ இசாக்குடைய வேலைக்காரர் பள்ளத்தாக்கிலே வெட்டி, அங்கே சுரக்கிற நீரூற்றைக் கண்டுபிடித்தார்கள்.

உஙி ஆனால் கேராரூர் மேய்ப்பர் இந்தத் தண்ணீர் தங்களுடையதென்று இசாக்குடைய மேய்ப்பருடனே சண்டைபண்ணினார்கள்; அவர்கள் தன்னோடே சண்டைபண்ணினபடியினாலே, அந்தத் தரவுக்கு ஏசேக்கென்று பேரிட்டான்.

உக வேறொரு தரவை வெட்டினார்கள்; அதைக்குறித்தும் சண்டைபண்ணினார்கள்; ஆகையால் அதற்குச் சித்னாவென்று பெயரிட்டான்.

உஉ ¶ அவ்விடத்தைவிட்டுப்பேர்ந்தபோய், வேறொரு தரவைவெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் சண்டைபண்ணாதிருந்தார்கள்; அப்பொழுது அவன் நாம் தேசத்

நில் பறுகும்படிக்கு, இப்பொழுது கர்த்தர் சமக்கிடமுண்டாக்கினரென்று சொல்லி, அதற்கு ரேகோபோத்தென்று பேரிட்டான்.

உஉ ¶ அங்கேயிருந்து பேர்சேபாவுக்குப் போய் ஏறினான்.

உச அன்று இராத்திரியிலே கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகி, நாம் உன் தகப்பனாகிய ஆபிரகாமுடைய பராபரன், பயப்படாதே, ஏனெனில் நாம் உன்னோடே கூட இருந்து, நம்முடைய ஊழியக்காரனாகிய ஆபிரகாமின்நிமித்தம் உன்னை ஆசீர்வதித்து, உன் வித்தைப் பெருகப்பண்ணுவோமென்றார்.

உடி அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப் போட்டான்; அங்கே இசாக்கின் வேலைக்காரர் ஒரு தரவை வெட்டினார்கள்.

உக ¶ ஆனால் *அபிமேலேக்கும், அவன் சிநேகிதனாகிய அகூசாத்தும் அவன் சேனாபதி பீகோலும், கேராரிலிருந்து அவனண்டைக்கு வந்தார்கள். *உக. உஉ.

உஎ அப்பொழுது இசாக்கு அவர்களுடனே, என் என்னண்டைக்கு வருகிறீர்கள்? நீங்கள் என்னைப் பகைத்து, என்னை உங்களிடத்தில் இராதபடிக்கு, அனுப்பிவிட்டீர்களே என்றான்.

உஅ அதற்கவர்கள் சொன்னதாவது: கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறதைக் காணவே கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடி உண்டாகக்கடவதென்று சொல்லிக்கொண்டோம்.

உக இப்பொழுதும் நாங்கள் உம்மைத் தொடாமல் நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்புவித்ததுபோல நீர் எங்களுக்கும் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடம்படிக்கை பண்ணிக்கொள்ளுவோம்; நீர் இப்பொழுது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள்.

உஈ அவர்களுக்கு விருந்துபண்ணினான்; அவர்கள் புசித்துக் குடித்தார்கள்.

உஉ அதிகாலமே எழுந்திருந்து ஒருவருக்கொருவர் ஆணையிட்டார்கள்; பிற்பாடு இசாக்கு அவர்களை அனுப்புவித்தான்; அவர்கள் சமாதானத்தோடே அவனைவிட்டுப் போனார்கள்.

உஊ அந்நாளில்தானே இசாக்கின் வேலைக்காரர் வந்து, தாங்கள் வெட்டின தரவின் செய்தியை அவனுக்கு அறிவித்து, தண்ணீரைக் கண்டுபிடித்தோமென்றார்கள்.

ஊ அப்பொழுது அதற்குச் சேபாவென்று பேரிட்டான்; ஆகையால் அந்த ஊரின் பெயர் இந்நாள்வரைக்கும் பேர்சேபாவென்னப்படும்.

ஊச ¶ ஏசா நாற்பது வயதானபொழுது, ஏத்தியனான பெயெரியின் குமாரத்தியாகிய ஏகூதித்தையும், ஏத்தியனான ஏலொனின் குமாரத்தியாகிய பஸ்மாத்தையும் விவாகம் பண்ணினான்.

ஊடி இவர்கள் இசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் மனநோவாயிருந்தார்கள்.

உஎ. அதிகாரம்.

ஈசாக்கு முதிர்வயதாகிறதினால் அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்றுப் போனபொழுது சம்பவித்ததேதென்றால், அவன் தன் மூத்தகுமாரனாகிய ஏசாவை அழைத்து, அவனிடமே என் மகனே என்றான்; இவன் அவனுடனே, இதோ இருக்கிறேனென்றான்.

உ அப்பொழுது அவன் சொன்னதாவது: இதோ முதிர்வயதானேன், என் மரணநாளை அறியேன்.

ஈ இப்பொழுது நீ உன் ஆயுதங்களாகிய உன் அப்பறுத்தூணியையும் உன்வில்லையும் எடுத்துக்கொண்டு வெளியேபோய் எனக்காக வேட்டையாடிக்கொண்டுவந்து,

ச எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள ஒரு பதார்த்தத்தைப்பண்ணி, நான் புசிக்கவும் மரிக்காததற்குமுன்னே என் ஆத்ம

மா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னண்டை க்குக் கொண்டுவாவென்றான்.

ந ஆனால் ஈசாக்குத் தன் குமாரனுகிய ஏசாவோடே பேசுகையில், ரெபேக்காள் கேட்டுக்கொண்டிருந்தாள்; ஏசா வேட் டையாடிக் கொண்டுவர வெளியே போ னான்.

கூ ¶ அப்பொழுது ரெபேக்காள் தன் குமாரனுகிய யாக்கோபோடே சொன்ன தாவது: இதோ உன் தகப்பன் உன் சகோ தரனுகிய ஏசாவோடே,

எ நான் புசித்து என் மரணத்திற்கு முன் னே, உன்னைக் கர்த்தருக்குமுன்பாய் ஆசீர் வதிப்பதற்கு நீ எனக்காக வேட்டையாடிக் கொண்டுவந்து, ருசியுள்ள ஒரு பதார்த்தத் தை எனக்குப் பண்ணென்று சொல்லக் கேட்டேன்.

அ இப்பொழுதும் என் மகனே, நான் உன க்குக் கற்பிக்கிற பிரகாரமாக என் சொல் கேட்டுச்செய்.

கூ நீ ஆட்டுமந்தைக்குப்போய், இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளை எனக்கு அங்கேயிருந்து கொண்டுவா; நான் அவை களை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள பதார்த்தமாக்குவேன்.

ம உன் தகப்பன் தம்முடைய மரணத் திற்கு முன்னே உன்னை ஆசீர்வதிக்கும்ப டிக்கு, நீ அதை அவரண்டைக்கு அவர் புசிக்கத்தக்கதாகக் கொண்டுபோவாயாக வென்றான்.

மக ¶ ஆனால் யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளோடே சொன்னதாவது: இ தோ என் சகோதரனுகிய ஏசா *ரோம முள்ள மனுஷன்; நானோவெனில் ரோம மில்லாதவன். *உற். உற்.

மஉ ஒருவேளை என் தகப்பன் என்னைத் தடவிப்பார்ப்பார்; அப்பொழுது நான் அ வருக்கு எத்தனுய்க் காணப்பட்டு, என் மேல் ஆசீர்வாதத்தை அல்ல, சாபத்தை வரப்பண்ணிக்கொள்ளுவேனே என்றான்.

மஊ ஆனால் அவன் தாய் அவனுடனே, என் மகனே உனக்கு வரும் சாபம் என் மேல் இருக்கக்கடவது; என் சொல்லைமா த்திரம் நீ கேட்டுப்போய் எனக்குக் கொண் டுவாவென்றாள்.

மச அவன் போய்ப்பிடித்து, தன் தா யண்டைக்குக் கொண்டுவந்தான்; அப் பொழுது அவனுடைய தாய் அவன் தகப் பனுக்குப் பிரியமானபடி ருசியுள்ள ஒரு பதார்த்தத்தைப் பண்ணினுள்.

மடு ¶ பிற்பாடு ரெபேக்காள் வீட்டிலே தன்னிடமாயிருந்த தன் மூத்தகுமாரனுகி ய ஏசாவின் நல்ல வஸ்திரங்களை எடுத்து, தன் இளையகுமாரனுகிய யாக்கோபுக்கு உடுத்து,

மஎ வெள்ளாட்டுக் குட்டிகளின் தோல் களை அவன் கைகளின்மேலும், ரோமமில் லாத அவன் கழுத்திலும் தரித்து,

மஏ தான் பண்ணின ருசியுள்ள பதார்த் தத்தையும் அப்பத்தையும் தன் குமாரனு கிய யாக்கோபின் கையிலே கொடுத்தான்.

மஐ ¶ அவன் தன் தகப்பனண்டையிலே வந்து, என் தகப்பனே என்றான்; அதற்க வன், இதோ இருக்கிறேன் என் மகனே, நீ யாரென்றான்.

மகூ அப்பொழுது யாக்கோபு தன் தகப் பனுடனே, நான் உமக்கு முதல் பிறந்த வனுகிய ஏசா; நீர் என்னிடே சொன்னப டியே செய்தேன்; இப்பொழுதும் உம்மு டைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்ப டிக்கு, நீர் எழுந்து, உளுக்காந்து, நான் வேட்டையாடினதிலே புசியுமென்றான்.

உஇ அப்பொழுது ஈசாக்குத் தன் குமார னுடனே, என் மகனே, இது உனக்கு இத் தனைச் சீக்கிரமாய் அகப்பட்டதெப்படி என்றான்; இவன் உம்முடைய பராபரனுகி ய கர்த்தர் எனக்கு நேரிடப்பண்ணினாரென் றான்.

உக அப்பொழுது ஈசாக்கு யாக்கோபு டனே, என் மகனே, நீ என் குமாரனுகிய ஏசாதானே, அல்லவோ என்று நான் உன் னைத் தடவிப்பார்க்கக் கிட்டிவாவென்றான்.

Digitized by Google

உஉ யாக்கோபு தன் தகப்பனுகிய இசாக் கண்ணடையிலே கிட்டிப்போனன்; அவன் இவனைத் தடவிச் சத்தம் யாக்கோபின் சத்தம், கைகளோ ஏசாவின் கைகளென்று சொல்லி,

உக இவன் கைகள் இவன் சகோதரனுகிய ஏசாவின் கைகளைப்போல ரோமமானபடியினுலே, இவனை அறியாதேபோய், இவனை ஆசீர்வதித்து,

உச நீ என் குமாரனுகிய ஏசாதானே என்றன்; இவன் நான்தானென்றன்.

உடு அப்பொழுது அவன் என் குமாரனுகிய நீ வேட்டையாடினதிலே நான் புசித்து என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, என் கிட்டக் கொண்டுவாவென்றன்; அவன் கிட்டக் கொண்டுவந்தான்; அப்பொழுது அவன் புசித்தான்; பிற்பாடு நிராட்சப்பழ இரசம் அவனுக்குக் கொண்டுவந்தான், அவன் குடித்தான்.

உசு அப்பொழுது இவன் தகப்பனுகிய இசாக்கு இவனேடே, என் மகனே, நீ கிட்டிவந்து என்னை முத்தம்செய்யென்றன்.

உஎ இவன் கிட்டிவந்து அவனை முத்தம் செய்தான்; அப்பொழுது அவன் இவன் வஸ்திரங்களின் வாசனையை முகந்து, இவனை ஆசீர்வதித்துச் சொன்னதாவது: இதோ என் குமாரனுடைய வாசனை கர்த்தர் ஆசீர்வதித்த வயல்வெளியின் வாசனையைப்போலிருக்கின்றது.

உஅ *பராபரன் உனக்கு வானத்துப் பனியினும் பூமியின் புஷ்டியினும் கொடுத்து தானிய இரசத்தையும் நிராட்சப்பழ இரசத்தையும் கட்டனையிடுவாராக. *எபி. ஙக. உஙி.

உஆ சனசதளங்கள் உன்னைச் சேவிக்கவும் சாதிகள் உன்னை வணங்கவும்கடவது; *உன் சகோதரருக்கு எசமானுயிரு; உன் தாயின்பின்னைகள் உன்னை வணங்கக்கடவர்கள்; உன்னைச் †சபிக்கிறவர்கள் சபிக்கப்பட்டவர்களும், உன்னை ஆசீர்வதிக்கிறவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களுமாய்இருப்பார்களாக என்றன். *உடு. உசு. †ஙஉ. சு. ச மோ. உச. கூ.

சுஙு ¶ இசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்துத் தீர்ந்தபொழுது சம்பவித்ததேதென்றல், யாக்கோபு தன் தகப்பனுகிய இசாக்கின் முகத்தைவிட்டுப் புறப்பட்டவுடனே, அவன் சகோதரனுகிய ஏசா வேட்டையாடிக்கொண்டுவந்தான்.

சுக இவனும் ருசியுள்ள பதார்த்தத்தைப் பண்ணி, தன் தகப்பனண்டைக்குக் கொண்டுவந்து, தன் தகப்பனுடனே, உம் முடைய ஆத்துமா என்னை ஆசீர்வதிக்கும்படிக்கு, என் தகப்பனர் எழுந்திருந்து, தம் முடைய குமாரன் வேட்டையாடினதிலே புசிப்பாராகவென்றன்.

சுஉ அப்பொழுது அவன் தகப்பனுகிய இசாக்கு அவனுடனே, நீ யார் என்றன்; அதற்கவன், நான் உமக்கு முதல்பிறந்த குமாரனுகிய ஏசாவென்றன்.

சுஙு அப்பொழுது இசாக்கு மகா அதிர்வாய் அதிர்ந்து சொன்னதாவது: வேட்டையாடி எனக்குக் கொண்டுவந்தானே, அவன் யார்? நீ வாராததற்கு முன்னே நான் அவை எல்லாவற்றிலும் புசித்து அவனை ஆசீர்வதித்தேனே, அவன் ஆசீர்வதிக்கப்பட்டவனுமாய் இருப்பானென்றன்.

சுச ஏசா தன் தகப்பனுடைய வார்த்தைகளைக் கேட்டபொழுது, *மகா உரத்த கசப்பான சத்தமாய் அலறி, தன் தகப்பனேடே, என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியுமென்றன். *எபி. ஙஉ. ஙஎ.

சுடு அதற்கவன், உன் சகோதரன் தந்திரமாய் வந்து உன்னுடைய ஆசீர்வாதத்தை எடுத்துக்கொண்டானென்றன்.

சுசு அப்பொழுது இவன், அவன் பெயர் யாக்கோபு என்னப்படுகிறது சரி அல்லவோ? அதேனென்றல் இத்தோடே இரண்டுமுறை என்னைக் கீழ்ப்படுத்தினன்; என் *முதற்பிறப்புச் சுதந்தரத்தை எடுத்தக்கொண்டான்; இதோ என் ஆசீர்வாதத்தையும் இப்பொழுது எடுத்தக்கொண்

டானென்று சொல்லி, நீர் எனக்கு ஆசீர்வாதத்தை வைத்துவைத்தநில்லையோ என்றான். *உபா. ஈஈ.

ஈஎ இசாக்கு ஏசாவுக்குப் பிரதியுத்தாரமாக, இதோ நான் அவனை உனக்கு எசமானாக வைத்தேன்; அவன் சகோதரரையெல்லாம் அவனுக்கு ஊழியக்காரராகக் கொடுத்து, அவனைத் தானியத்தினாலும் நிராட்சப்பழ இரசத்தினாலும் ஆதரித்தேனே, இப்பொழுதும் உனக்கு நான் என்ன செய்யலாம் என் மகனே என்றான்.

ஈஅ ஏசா தன் தகப்பனைநோக்கி, என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம்தான் உமக்கிருக்கிறதோ? என்னையும் ஆசீர்வதியும் என் தகப்பனே என்று ஏசா சொல்லி, தன் சத்தத்தை உயர்த்தி அழுதான்.

ஈஆ அப்பொழுது அவன் தகப்பனாகிய இசாக்கு அவனுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: இதோ உன் குடியிருப்புப் பூமியின் புஷ்டியோடும் உயர வானத்தினிருந்திறங்கும் பனியோடுமிருக்கும்.

சஅ உன் பட்டயத்தினாலே நீ பிழைத்து உன் சகோதரனைச் சேவிப்பாய்; *நீ மேற்கொள்ளும்காலம் வரும்பொழுதோவெனில், நீ உன் கழுத்தினிலிருக்கிற அவனுடைய நுகத்தடியை உதறிப்போடுவதுண்டென்றான். *உ இரா. அ. உஐ.

சக ¶ ஏசாவோவெனில் யாக்கோபைத் தன் தகப்பன் அவனை ஆசீர்வதித்த ஆசீர்வாதத்தின் நிமித்தம் பகைத்து, என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாள்கள் சமீபிக்கும்; அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்றுபோடுவேனென்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான்.

சஉ ஆனால் ரெபேக்காளுக்கு அவளுடைய மூத்தகுமாரனாகிய ஏசாவின் வார்த்தைகள் அறிவிக்கப்பட்டன; அப்பொழுது அவள் தன் இளையகுமாரனாகிய யாக்கோபை அழைத்தனுப்பி, அவனோடே சொன்னதாவது: இதோ உன் சகோதரனாகிய ஏசா உன்னைக் கொன்றுபோட நினைக்கிறதினாலே தன்னைத் தேற்றிக்கொள்ளுகிறான்.

சஈ இப்பொழுதும் என் மகனே, நீ என் சொற்படிகேட்டு, எழுந்து புறப்பட்டு, ஆரானிலிருக்கிற என் சகோதரனாகிய லாபானண்டைக்கோடிப்போய்,

சச உன் சகோதரனுடைய உக்கிரம் ஆறுமட்டும் சிலநாள் அவனண்டையிலே,

சடு உன் சகோதரனுடைய கோபம் உன்னைவிட்டு நீங்கும்மட்டாகவும், நீ தனக்குச் செய்ததை அவன் மறக்கும்மட்டாகவும் இரு; பிற்பாடு அவ்விடத்திலிருந்து உன்னை அழைத்தனுப்புவேன்; நான் ஒரேநாளிலே உங்கள் இருவனையும் என் இழந்துபோக வேண்டும் என்றான்.

சக பிற்பாடு ரெபேக்காள் இசாக்குடனே, *ஏத்தின் குமாரத்திகளைத்தொட்டு, என் சீவன் எனக்கு அரோசிக்கிறது; இத்தத் தேசத்துக் குமாரத்திகளாகிய ஏத்தின் குமாரத்திகளில் யாக்கோபு இவர்களுக்கொத்த பெண்ணைக்கொண்டால், எனக்குச் சீவன் ஏதுக்கென்றாள். *உசு. ஈச, ஈடு.

உஅ. அதிகாரம்.

அப்பொழுது இசாக்கு யாக்கோபை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: *நீ கானான் குமாரத்திகளில் பெண்ணைக்கொள்ளாமல், *உச. ஈ.

உ எழுந்து புறப்பட்டு, பதான்ஆராமிலிருக்கிற உன் தாயின் தகப்பனாகிய பேத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளிலே பெண்ணைக்கொள்.

ஈ ஆனால் சர்வத்திற்கும் வல்ல பராபரன் உன்னை ஆசீர்வதித்து, நீ சனசதனங்களான கூட்டமாகும்படிக்கு உன்னைப் பலுகவும், பெருகவும் பண்ணி,

ச பராபரன் ஆபிரகாமுக்குக் கொடுத்த தம் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ள *ஆபிர

காமுடைய ஆசீர்வாதத்தை உனக்கும், உன்னோடேகூட உன் வித்துக்கும் கொடுக்கக்கடவரென்றுசொல்லி, *ஆதி. ஈ.

ஒ ஈசாக்கு யாக்கோபை அனுப்புவித்தான்; அப்பொழுது இவன் பதான்அராமிலிருக்கும் சூரியனுடைய பேத்துவேலுடைய குமாரனும் தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய ரெபேக்காளின் சகோதரனுமான லாபானண்டைக்குப் போகப் புறப்பட்டான்.

ஃ ¶ ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்து, அவனைப் பதான்அராமுக்கு அங்கே ஒரு பெண்ணைக்கொள்ள அனுப்பினதையும், அவனை ஆசீர்வதிக்கையில் நீ கானானின் குமாரத்திகளில் பெண்ணைக்கொள்ளாயாகவென்று அவனுக்குக் கற்பித்ததையும்,

எ யாக்கோபு தன் தகப்பனுக்கும் தன் தாய்க்கும் கீழ்ப்படிந்து பதான்அராமுக்குப் புறப்பட்டுப்போனதையும், ஏசா கண்டான்.

அ கானான் குமாரத்திகள் தன் தகப்பனுடைய ஈசாக்கின் பார்வைக்குப் பொல்லாதவர்களென்றதை ஏசா கண்டபடியினாலே,

கூ ஏசா இம்மவேலண்டைக்குப்போய், தனக்கிருக்கிற பெண்சாதிகள்தவிர, ஆபிரகாமுடைய குமாரனுடைய இம்மவேலின் குமாரத்தியும் நேப்யோத்தின் சகோதரியுமாயிய மக்லாத்தை விவாகம்பண்ணினான்.

ஐ ¶ யாக்கோபு பேர்சேபாவைவிட்டுப் புறப்பட்டு, ஆரானுக்குப்போகப் பயணம்பண்ணி,

ஒக ஓரிடத்திலே வந்து சூரியன் அஸ்தமித்தபடியினாலே, அங்கே இராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலைமாட்டிலே போட்டு, அவ்விடத்திலே படுத்துக்கொண்டு,

ஒஉ கண்ட சொப்பனமாவது: இதோ ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது; அதின் தலைப்புறம் வானத்தை எட்டியிருந்தது; இதோ அதிலே *பராபரனுடைய தூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். *யோவா. க. நிக.

ஒங இதோ அதின்மீதில் கர்த்தர் நின்றுகொண்டிருந்து சொன்னதாவது: நாம் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் பராபரனும் ஈசாக்கின் பராபரனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும், உன் வித்துக்கும் தருவோம்.

ஒச உன் வித்துப் *பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும், பரம்பிப் போவாய்; †உன்னிலும், உன் வித்திலும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். *ஏசா. ஏசு. †ஆதி. ஈ.

ஒடு இதோ நாம் உன்னோடேகூட இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்தத் தேசத்திற்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவோம்; ஏனெனில் நாம் உனக்குச் சொன்னதை நாம் செய்யும்வரைக்கும் உன்னைக் கைவிடோமென்றார்.

ஏஅ ¶ யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபொழுது, மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார், இதை நான் அறியாதிருந்தேனென்றான்.

ஏஎ அவன் பயந்து, இந்த ஸ்தலம் எத்தனை பயப்படத்தக்கதாயிருக்கின்றது; இது பராபரனுடைய வீடொழிய வேறொன்றல்ல, இது வானத்தின் வாசலென்று சொல்லி,

ஏஅ யாக்கோபு அதிகாலமே எழுந்திருந்து, தன் தலைமாட்டிலே போட்டுக்கொண்டிருந்த கல்லை எடுத்துக்கொண்டு அதைத் தூணாக நிறுத்தி, அதின்மீதில் எண்ணெயை வார்த்து,

ஏகூ அந்த ஸ்தலத்திற்குப் பேத்தேலென்று பெயரிட்டான்; அவ்வூருக்கு முன்னின பெயரோவென்றால், லூஸ் என்பது.

உஏ யாக்கோபு ஒரு பொருத்தனையைப் பண்ணிச் சொன்னதாவது: பராபரன் என்னோடேகூட இருந்து, நான் நடக்கிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றிப் புசிக்க அப்பமும், உடுக்க வஸ்திரமும் எனக்குக் கொடுத்து,

Digitized by Google

உக என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பிவரப்பண்ணி, இப்படியே கர்த்தர் எனக்குப் பராபரனுயிருந்தாராகில்,

உஉ நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் பராபரனுடைய வீடாகும்; தேவரீர் எனக்குக் கொடுப்பதெல்லாவற்றிலும் பத்திலொன்றை உமக்குச் செலுத்துவேனென்றான்.

உகூ. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு கால் எட்டிநடந்து, கிழக்குத் திசையாரின் தேசத்தில் வந்தான்.

உ அப்பொழுது இதோ வயல்வெளியிலே ஒரு கிணற்றையும் அங்கே அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று ஆட்டுமந்தைகளையும் கண்டான்; ஏனெனில் அந்தக் கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் மொண்டு காட்டுவார்கள்; கிணற்றினுடைய வாயின்மேலோவென்றால், ஒரு பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது.

ஈ அவ்விடத்தில் மந்தைகளெல்லாம் சேர்ந்ததற்குப் பிற்பாடு அவர்கள் கிணற்று வாயின்மேலிருக்கும் கல்லைப்புரட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை அந்தத் தானத்தில் கிணற்றுவாயின் மேலே வைப்பார்கள்.

ஊ யாக்கோபு அவர்களுடனே, என் சகோதரரே, நீங்கள் எவ்விடத்தாரென்றான்; அவர்கள் நாங்கள் ஆரானூர் மனிதர்களென்றார்கள்.

ஓ அப்பொழுது அவர்களோடே, நாகோரின் குமாரனுகிய லாபானை அறிவீர்களோ என்றான்; அறிவோமென்றார்கள்.

ஔ அப்பொழுது அவர்களை, அவன் சுகமாயிருக்கிறானே என்று கேட்டான்; அவர்கள், சுகமாயிருக்கிறானென்றும், அதோ அவன் குமாரத்தியாகிய ராகேல் ஆடுகளை ஓட்டிவருகிறாளென்றும் சொன்னார்கள்.

எ அப்பொழுது அவன், இதோ, இன்னம் வெகு பொழுதிருக்கின்றது; இது மந்தை சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டிப்போய் மேயுங்களென்றான்.

அ அதற்கவர்கள் எல்லா மந்தைகளும் சேருமட்டும் எங்களுக்குக் கூடாது; கிணற்று வாயின்மேலிருக்கும் கல்லைப் புரட்டுவார்கள்; அதற்குப்பிறகு மந்தைக்குத் தண்ணீர்காட்டுகிறோமென்றார்கள்.

கூ அவன் இவர்களோடே இன்னம் பேசிக்கொண்டிருக்கையில், ராகேல் தன் தகப்பனுடைய ஆடுகளோடே வந்தாள்; ஏனெனில் அவைகளை மேய்க்கிறவளாயிருந்தாள்.

ஐ *சம்பவித்ததேதென்றால், யாக்கோபு தன் தாயின் சகோதரனுன லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும் தன் தாயின் சகோதரனுகிய லாபானின் ஆடுகளையும் கண்டபொழுது, யாக்கோபு சேர்ந்துபோய், கிணற்றுவாயின்மேலிருந்த கல்லைப் புரட்டி, தன் தாயின் சகோதரனுகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.

*உ மோ. உ. ஐ.

ஒ பிற்பாடு யாக்கோபு ராகேலை முத்தம் செய்து, சத்தமிட்டழுது,

ஓஉ தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், தான் ரெபேக்காளின் குமாரனென்றும், யாக்கோபு ராகேலுக்கு அறிவித்தான்; அப்பொழுது அவள் ஓடி, தன் தகப்பனுக்கு அறிவித்தான்.

ஓஊ அப்பொழுது சம்பவித்ததேதென்றால், லாபான் தன் சகோதரியின் குமாரனுகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்டபொழுது, அவன் இவனுக்கெதிர்கொண்டோடி, இவனைக் கட்டிக்கொண்டு முத்தம் செய்து, தன் வீட்டுக்கு அழைத்துப்போனான்; அப்பொழுது இவன் லாபானுக்கு இந்தக் காரியங்களை எல்லாம் விவரித்தான்.

ஓச அப்பொழுது லாபான் இவனுடனே, நீ என்னெலும்பும் என் மாம்சமுமாமே என்றான்; அவனண்டையிலே இவன் ஒரு மாதக்காலம் இருந்தபிற்பாடு,

Digitized by Google

மடி 17 லாபான் யாக்கோபுடனே, நீ என் மருமகனானதினாலே, இலவசமாய் எனக்கு வேலைசெய்யவேண்டுமோ? உனக்குக் கூலி என்னவென்று எனக்குச் சொல்லென்றான்.

18 லாபானுக்கோவெனில், இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள்பேர் லேயாள், இளையவள்பேர் ராகேல்.

19 லேயாளுடைய கண்கள் கூச்சப் பார்வையாயிருந்தன; ராகேலோவெனில், அந்தமுன்னழகும் அழகான பார்வையுமாயிருந்தாள்.

20 யாக்கோபு ராகேல்பேரில் பிரியப்பட்டு, உம்முடைய இளையகுமாரத்தியாகிய ராகேலுக்காக உமக்கு ஏழுவருஷம் வேலை செய்வேனென்றான்.

21 அதற்கு லாபான், நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப் பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது தாவீலை, என்னோடே தரித்திருவென்றான்.

22 அப்படியே யாக்கோபு ராகேலுக்காக ஏழுவருஷம் வேலைசெய்தான்; அவைகள் அவனுக்கு இவள்பேரிலிருந்த பிரியத்தினாலே கொஞ்சநாளாகக் கண்டது.

23 ¶ பிற்பாடு யாக்கோபு லாபானை நோக்கி, என் பெண்சாதியை எனக்குத்தாரும்; ஏனெனில், நான் அவளிடத்தில் பிரவேசிக்க என் நாள்கள் நிறைவேறினவென்றான்.

24 அப்பொழுது லாபான் அந்தத்தூலத்து மனிதரை எல்லாம்கூட்டி விருந்துபண்ணினான்.

25 ஆனால் இராத்திரியிலே சம்பவித்ததேதெனில், இவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அவனண்டைக்கு அழைத்துப் போய்விட்டான்; இவனிடத்தில் அவன் உட்பிரவேசித்தான்.

26 தன் குமாரத்தியாகிய லேயாளுக்கு லாபான் தன் வேலைக்காரியாகிய சில்பாளை வேலைக்காரியாகக் கொடுத்தான்.

27 சம்பவித்ததேதென்றால், காலமே இதோ அவன் லேயாள்தானே; அப்பொழுது அவன் லாபானை நோக்கி, என் இதை எனக்குச்செய்தீர்? ராகேலுக்காக அல்லவோ உம்மிடத்திலே வேலைபசய்தேன்; பின்னையேன் என்னை வஞ்சகம்பண்ணினீர் என்றான்.

28 லாபான் சொன்னதாவது: இளையவளை மூத்தவளுக்கு முன்னே கொடுக்கிறது எங்கள் தலத்தில் நடபடியல்ல.

29 இவளுடைய வாரத்தை நிறைவேற்று; அப்பொழுது நீ இன்னம் வேறு ஏழுவருஷம் என்னிடத்தில் செய்யும் வேலைக்காக அவளையும் உனக்குக் கொடுப்பேனென்றான்.

30 ¶ யாக்கோபு இப்படிச்செய்து, இவளுடைய வாரத்தை நிறைவேற்றினான்; அப்பொழுது தன் குமாரத்தியாகிய ராகேலையும் அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தான்.

31 தன் குமாரத்தியாகிய ராகேலுக்கு லாபான் தன் வேலைக்காரியாகிய பில்காளை வேலைக்காரியாகக் கொடுத்தான்.

32 அவன் ராகேலிடத்திலும் பிரவேசித்து லேயாளைப்பார்க்கிலும் ராகேலைச் சிநேகித்து, இன்னம் வேறே ஏழுவருஷம் அவனிடத்திலே வேலைசெய்தான்.

33 ¶ லேயாள் பகைக்கப்பட்டவளென்று கர்த்தர் கண்டபொழுது, அவளுடைய கர்ப்பத்தைத் திறந்தார்; ராகேலோவெனில் மலடியாயிருந்தாள்.

34 லேயாள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று அவனுக்கு ரூபனென்று பெயரிட்டாள்; ஏனெனில் கர்த்தர் என் சிறுமையைப்பார்த்தார்; ஆகையால் இப்பொழுது என் புருஷன் என்னைச் சிநேகிப்பானென்றாள்.

35 அப்புறம் அவள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப் பெற்று, நான் பகைக்கப்பட்டவளென்று கர்த்தர் கேட்டருளி, இவனையும் எனக்குக் கொடுத்தாரென்று சொல்லி, அவனுக்குச் சிமையோனென்று பெயரிட்டாள்.

Digitized by Google

ஈச அப்புறம் அவன் கர்ப்பம்தரித்து, ஒரு குமாரனைப்பெற்று, இப்பொழுது இந்தமுறை என் புருஷன் என்னோடே சேர்வார்; ஏனெனில் அவருக்கு மூன்று குமாரரைப் பெற்றேனென்று சொல்லி, அவனுக்கு லெவியென்று பெயரிட்டான்.

ஈடு அப்புறம் அவன் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேனென்று சொல்லி, அவனுக்கு யூதாவென்று பெயரிட்டாள்; பிற்பாடு அவன் பெறுகிறது நின்றது.

ஈஙு. அதிகாரம்.

ராகேல் தான் யாக்கோபுக்குப் பிள்ளைகளைப் பெறுததைக் கண்டாள்; ஆனதுகொண்டு ராகேல் தன் சகோதரியின்பேரிலே பொறுமையாகி, யாக்கோபுடனே, எனக்குப் பிள்ளைகளைக் கொடும்; இல்லாவிட்டால் நான் மரித்தவளாவேனே என்றாள்.

உ அப்பொழுது யாக்கோபுக்கு ராகேலின்மேல் கோபம்மூண்டு, உனக்குக் கர்ப்பக்கனியைக் கட்டளையிடாத பராபரனுக்கு நான் நிகரோ என்றான்.

ஊ அப்பொழுது அவள், இதோ என் வேலைக்காரியாகிய பில்காளிருக்கிறாள்; அவள் என் மடிக்குப் பிள்ளைகளைப் பெறவும், *அவளாலாகினும் என் வீடு கட்டப்படவும், அவளிடத்தில் பிரவேசியுமென்று சொல்லி, *க மோ. ஙசு. உ.

ச அவனுக்குத் தன் வேலைக்காரியாகிய பில்காளைப் பெண்சாதியாகக் கொடுத்தான்; அப்படியே யாக்கோபு அவளிடத்தில் பிரவேசித்தான்.

ஞ ¶ பில்க்காள் கர்ப்பம்தரித்து யாக்கோபுக்கு ஒரு குமாரனைப்பெற்றாள்.

ட அப்பொழுது ராகேல், பராபரன் என் வழக்கைத்தீர்த்து என் சத்தத்தையும்கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக்கொடுத்தாரென்று சொல்லி, அவனுக்குத் தானென்று பெயரிட்டாள்.

ண மறுபடியும் ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் கர்ப்பம்தரித்து யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

அ அப்பொழுது ராகேல், நான் தேவபோராட்டமாய் என் சகோதரியோடே போராடிமேற்கொண்டேனென்றுசொல்லி, அவனுக்கு நப்தலியென்று பெயரிட்டாள்.

கூ ¶ லேயாள் தான் பெறுகிறது நின்றதென்று கண்டு, தன் வேலைக்காரியாகிய சில்பானை அழைத்து, அவனை யாக்கோபுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தான்.

ஐ லேயாளின் வேலைக்காரியாகிய சில்பான் யாக்கோபுக்கு ஒரு குமாரனைப்பெற்றாள்.

ஒ அப்பொழுது லேயாள், ஏராளமாகிறதென்றுசொல்லி, அவனுக்குக் காத்தென்று பெயரிட்டாள்.

ஒஉ பிற்பாடு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பான் யாக்கோபுக்கு இரண்டாம் குமாரனைப் பெற்றாள்.

ஒஊ அப்பொழுது லேயாள், என் பாக்கியத்தினிற்காயிற்று; ஏனெனில் குமாரத்திகள் என்னைப் பாக்கியவதி என்பார்களென்று சொல்லி, அவனுக்கு ஆசேர் என்று பெயரிட்டாள்.

ஒச ¶ கோதுமை அறுப்பு நாள்களிலே ரூபன் புறப்பட்டு வெளியிலே தூதாயிகளைக் கண்டுபிடித்து, அவைகளைத் தன் தாயாகிய லேயாளண்டைக்குக் கொண்டுவந்தான்; அப்பொழுது ராகேல் லேயாளுடனே, உன் குமாரனுடைய தூதாயிகளில் எனக்குக் கொஞ்சம் தாவென்றாள்.

ஒடு அப்பொழுது அவள் இவளுடனே, நீ என் புருஷனை எடுத்துக்கொண்டது கொஞ்சக்காரியமோ, என் குமாரனுடைய தூதாயிகளையும் எடுத்துக்கொள்வாயோ என்றாள்; அப்பொழுது ராகேல், உன் குமாரனுடைய தூதாயிகளுக்கீடாக இன்று இரவிற்கு அவர் உன்னோடே சயனம்பண்ணட்டுமென்றாள்.

ஒசு யாக்கோபு சாயங்காலத்திலே வெ

மியிலிருந்து வருகையில் லேயாள் புறப்பட்டு அவனுக்கு எதிர்கொண்டுபோய், என்னிடத்தில் வருவீராக; ஏனெனில் என் குமாரனுடைய தூதாயிகளாலே உம்மைச் சம்பாதித்தேனென்றாள்; ஆகையால் அன்று ராத்திரியில் அவளோடே சயனித்தான்.

ஐ ¶ பராபரன் லேயாளைக் கேட்டருளினார்; அவள் கர்ப்பம்தரித்து யாக்கோபுக்கு ஐந்தாம் குமாரனைப் பெற்றாள்.

ஐஅ அப்பொழுது லேயாள், நான் என் வேலைக்காரியை என் புருஷனுக்குக் கொடுத்த பலனைப் பராபரன் எனக்குத் தந்தாரென்றுசொல்லி, அவனுக்கு இசஷாரென்ற பெயரிட்டாள்.

ஐக அப்புறம் லேயாள் கர்ப்பம்தரித்து யாக்கோபுக்கு ஆறும் குமாரனைப்பெற்றாள்.

ஐஉ அப்பொழுது லேயாள், பராபரன் எனக்கு கல்ல இனாமைத்தந்தார்; இந்தமுறை என் புருஷன் என்னுடனே வாசமாவார்; ஏனெனில் அவருக்கு ஆறு குமாரரைப் பெற்றேனென்று சொல்லி, அவனுக்குச் சேபுலோனென்று பெயரிட்டாள்.

ஐங பிற்பாடு அவள் ஒரு குமாரத்தியைப்பெற்று, அவளுக்குத் தீனாளென்று பெயரிட்டாள்.

ஐஐ ¶ ஆனால் பராபரன் ராகேலை நினைத்தார்; அவளைப் பராபரன் கேட்டருளி, அவள் கர்ப்பத்தைத் திறந்தார்.

ஐக அவள் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, *பராபரன் என் நிந்தையை நீக்கிவிட்டாரென்றும், *லூக். க. உடு.

ஐச கர்த்தர் எனக்கு இன்னம் ஒரு குமாரனைக் கொடுப்பாராகவென்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பென்று பெயரிட்டாள்.

ஐடி ¶ அப்பால் சம்பவித்ததேதெனில், ராகேல் யோசேப்பைப் பெற்றபிற்பாடு, யாக்கோபு லாபானைநோக்கி சொன்னதாவது: நான் என் தானத்திற்கும் என் தேசத்திற்கும் போக என்னை அனுப்புவியும்.

ஐசு நான் உமக்கு ஊழியம்செய்து சம்பாதித்த என் பெண்சாதிகளையும் என் பிள்ளைகளையும் எனக்குத் தாரும்; நான் போவேன்; ஏனெனில் நான் உம்மிடத்தில் செவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீரென்றான்.

ஐஎ ¶ அப்பொழுது லாபான் அவனைநோக்கி சொன்னதாவது: உன் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததேயானால் இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தாரென்கிறது எனக்குத் தெரியவந்தது.

ஐஏ உன் சம்பளம் இன்னதென்று எனக்குக் குறித்துச் சொல், நான் தருவேனென்றான்.

ஐஐ ¶ அப்பொழுது அவன் இவனைநோக்கி சொன்னதாவது: நான் உம்மை எப்படிச் சேவித்தேனென்றும், உம்முடைய மந்தை என்னிட்ட எப்படி இருந்ததென்றும் அறிந்திருக்கிறீர்.

ஐஓ ஏனெனில் எனக்குமுன் உமக்கிருந்தது கொஞ்சம், அது நிரளாயிற்று; கர்த்தர் உம்மை என் கால்வருத்தத்திலே ஆசீர்வதித்தார்; இப்பொழுதும் நான் என் வீட்டுக்குச் சம்பாதித்துக்கொள்வது எப்பொழுதென்றான்.

ஐக அப்பொழுது இவன், நான் உனக்கென்ன கொடுக்கவேண்டும் என்றான். யாக்கோபு சொன்னதாவது: நீர் எனக்கு ஒன்றும் கொடுக்கவேண்டாம்; நான் சொல்வதை நீர் எனக்குச் செய்தால், உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன்.

ஐஉ நான் இன்றைக்கு உம்முடைய மந்தையையெல்லாம் கடந்துவந்து, அதிலே இருக்கிற ஆடுகளில் புள்ளியுள்ளதும், மறுப்பற்றினதுமானயாவையும், கறுப்பான யாவையும், வெள்ளாடுகளில் மறுப்பற்றினதும், புள்ளியுள்ளதுமான யாவையும் பிரித்துப்போடுவேன்; அப்படிக்கொத்தனை இனி என்னுடைய சம்பளமாயிருப்பது.

Digitized by Google

ஙஙு அப்படியே இனிமேல் என் சம்பளக்காரியம் உமக்கு முன்பாகத் தீரத்தக்கதாக நீர் வரும்பொழுது, என்னுடைய நீதி எனக்குப் பேசும்; வெள்ளாடுகளில் புள்ளியில்லாததும், மறுப்பற்றியிராததும், ஆடுகளில் கறுப்பில்லாததுமானவை எவையாகிலும் என்னிடத்திலே இருந்தால், அவை திருடினவைகளாயிருக்குமென்றான்.

ஙசூ அப்பொழுது லாபான், இதோ உன் வார்த்தையின்படியாகுல் வாசியென்று சொல்லி,

ஙடு அந்நாளிலே கலப்பு நிறமுள்ளதும் மறுப்பற்றினதுமான கடாக்களையும், புள்ளியுள்ளதும் மறுப்பற்றினதுமான எல்லா வெள்ளாடுகளையும், ஆடுகளில் வெண்மை பற்றினவைகளெல்லாவற்றையும், கறுப்பானவைகளெல்லாவற்றையும், பிரித்துக்கொண்டு, தன் குமாரர்கையில் ஒப்புவித்து,

ஙசு தனக்கும் யாக்கோபுக்கும் மூன்று நாள் பயணதூரம் வைத்தான்; லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான்.

ஙஎ ¶ அப்பொழுது யாக்கோபு பச்சையாயிருக்கிற புன்னைமரமும், அவேலான் கொட்டைச்செடியும், கஸ்தானியக் கொட்டை மரமுமான கொப்புகளை வாங்கிக்கொண்டு, கரணை கரணையாய் வெண்மைகாணப்பட்டையை உரித்து,

ஙஅ தான் உரித்த கொப்புகளை ஆடுகள் குடிக்கவருகிற கால்வாய்களிலும் தண்ணீர்த்தொட்டிகளிலும், ஆடுகளுக்கு எதிராகப் போட்டுவைத்தான்; ஏனென்றால் அவைகள் குடிக்கவருகையில் பொலியும்.

ஙசூ ஆடுகள் கொப்புகளுக்கு முன்பாகப் பொலிந்தபடியினாலே, ஆடுகள் கலப்பு நிறமுள்ளதும் புள்ளியுள்ளதும் மறுப்பற்றினதுமான குட்டிகளைப்போட்டன.

சயி அந்த ஆட்டுக்குட்டிகளை யாக்கோபு பிரித்து, ஆடுகளை லாபானுடைய மந்தையிலிருக்கும் கலப்பு நிறமானவைகளுக்கும் நம் கறுப்பானவைகள் எல்லாவற்றிற்கும் எதிராக நிறுத்தி, தனக்குத் தனிப்புற மந்தைகளை வைத்துக்கொண்டு, இவைகளை லாபானின் மந்தையோடே வைக்காதிருந்தான்.

சக சம்பவித்ததேதென்றால், காலத்திலே பொலிகிற ஆடுகள் பொலியும்பொழுதெல்லாம் யாக்கோபு அந்தக் கொப்புகளைக் கால்வாய்களில் ஆடுகளின் கண்களுக்கு முன்பாக அவைகள் கொப்புகளுக்கெதிரே பொலியும்படிக்குப் போட்டுவைப்பான்.

சஉ ஆடுகள் காலம் பிந்திப் பொலியும் பொழுதோவெனில், அவைகளைப் போடாதேபோனான்; ஆகையால் காலம் பிந்திப் பிறந்தவைகள் லாபானையும், காலத்திலே பிறந்தவைகளோவெனில், யாக்கோபையும் சேர்ந்தது.

சங இந்தப்பிரகாரமாக இந்தப் புருஷன் மிகுதியும் பெருகினான்; அவனுக்குத் திரளாடுகளும், வேலைக்காரிகளும், வேலைக்காரரும், ஒட்டகங்களும், கழுதைகளும் உண்டாயின.

ரூக. அதிகாரம்.

எங்கள் தகப்பனுக்குண்டானவைகளை எல்லாம் யாக்கோபு எடுத்துக்கொண்டானென்றும், எங்கள் தகப்பனுக்குண்டானதினாலே இந்த ஐசுவரியத்தை எல்லாம் சம்பாதித்தானென்றும், லாபானின் குமாரர் சொன்ன வார்த்தைகளை அவன் கேட்டான்.

உ லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபொழுது, இதோ அது நேற்றும் முன்தினம் இருந்ததுபோலத் தனக்கிருந்த நிலைமை என்று கண்டான்.

ஙக ¶ கர்த்தரோவென்றால் யாக்கோபுடனே, உன் பிதாக்களின் தேசத்திற்கும் உன் இனத்தண்டைக்கும் திரும்பிப்போ; *உன்னோடேகூட இருப்போம் என்றார்.

*க மோ. உஅ. உடு.

ச அப்பொழுது யாக்கோபு ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தைகண்டைக்கழைத்தனுப்பி,

இவர்களோடே சொன்னதாவது: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்றும் முந்தாநேற்றும் இருந்ததுபோல எனக்கிருக்கவில்லை என்று நான் காண்கிறேன்; ஆனால் என் தகப்பனுடைய பராபரன் என்னோடே கூட இருந்தார்.

உங்கள் தகப்பனுக்கு என் முழுப்பலத்தினாலும் ஊழியம்செய்தேனென்று நீங்கள் அறிவீர்கள்.

எ உங்கள் தகப்பனோவெனில், என்னை ஏத்தி என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனால் எனக்குத் தீங்குசெய்யப் பராபரன் அவனுக்கு இடம்கொடுத்தில்லை.

அ புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுது, மந்தையெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்புநிறமானவைகள் உன் சம்பளமாயிருக்குமென்று அவன் சொன்னபொழுதோவெனில், மந்தையெல்லாம் கலப்புநிறக் குட்டிகளைப் போட்டது.

கூ இந்தப்பிரகாரமாகப் பராபரன் உங்கள் தகப்பனுடைய மந்தையைப் பறித்து எனக்குக் கொடுத்தார்.

ஐ ஆடுகள் பொலியும்காலத்திலே சம்பவித்ததேதென்றால், நான் சொப்பனத்தில் என் கண்களை ஏறெடுக்கும்பொழுது, இதோ ஆடுகளின்மேல் ஏறுகிற கடாக்கள் கலப்புநிறமானவைகளும் புள்ளியுள்ளவைகளும் பொட்டுள்ளவைகளுமாயிருந்ததென்று கண்டேன்.

ஙக பராபரனுடைய தூதனானவர் சொப்பனத்தில் என்னுடனே. யாக்கோபே என்றார்; இதோ இருக்கிறேனென்றேன்.

ஙஉ அப்பொழுது அவர் சொன்னதாவது: உன் கண்களை ஏறெடுத்துப்பார்; ஆடுகளின்மேல் ஏறுகிற கடாக்களெல்லாம் கலப்புநிறமானவைகளும், புள்ளியுள்ளவைகளும், பொட்டுள்ளவைகளுமாயிருக்கின்றன; ஏனெனில் லாபான் உனக்குச் செய்கின்றவைகளையெல்லாம் கண்டோம்.

ஙக *நீ தூண அபிஷேகம்பண்ணி, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பேத்தேலிலே உனக்குத் தரிசனையான பராபரன் நாம்தானே; இப்பொழுதும் நீ எழுந்து இந்தத் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, உன் இனத்தின் தேசத்திற்குத் திரும்பிப் போ என்று சொன்னரென்றான்.

*க மோ. உஅ. ஙக. ழ.

ஙச ¶ அப்பொழுது ராகேலும் லேயாளும் அவனுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: எங்கள் தகப்பன் வீட்டிலே எங்களுக்கு இனிப் பங்கும் சுதந்தரமும் உண்டோ?

ஙடு அவரால் நாங்கள் அந்நியராய் எண்ணப்பட்டதில்லையோ? ஏனெனில் அவர் எங்களை விற்று, எங்கள் பணத்தைத் தின்னவே தின்றார்.

ஙஎ ஆகையால் பராபரன் எங்கள் தகப்பனிடத்தில் பறித்த சகலசுவரியமெல்லாம் எங்களுடையதும் எங்கள் பிள்ளைகளுடையதும்தானே; இப்பொழுதும் பராபரன் உம்மோடே சொன்னவை எல்லாவற்றையும் செய்யும் என்றார்கள்.

ஙஏ ¶ அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் பெண்சாதிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றிக்கொண்டு,

ஙஐ தன் மிருகசீவன்கள் அனைத்தையும் தான் பதான்அராமிலே தேடிச் சம்பாதித்த தன்னுடைய மந்தை ஆஸ்தி எல்லாவற்றையும் கூட்டிக்கொண்டு, கானான்தேசத்திலே தன் தகப்பனாகிய ஈசாக்கண்டைக்குப் போகப் புறப்பட்டான்.

ஙகூ லாபானோவெனில், தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போயிருந்தான்; அந்தச் சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய விக்கிரகங்களைத் திருடிக்கொண்டாள்.

உஙக அப்படியே யாக்கோபு, தான் ஓடிப் போகிறதைச் சூரியனாகிய லாபானுக்கு அறிவியாததினால், அவன் மனதைக் களவு செய்து,

Digitized by Google

உஙஉ தனக்குண்டானவைகளை எல்லாம்

கூட்டிக்கொண்டு ஓடிப்போனான்; அவன் எழுந்து ஆற்றைக்கடந்து, கீலேயாத் பர்வதத்திற்கு நேராய்த் தன் முகத்தைத் திருப்பிப்போனான்.

22 ¶ ஆனால் யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம் நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்பட்டது.

23 அப்பொழுது அவன் தன் சகோதரரைக் கூட்டிக்கொண்டு, ஏழுநாள் பயணம் அவனைப் பின்தொடர்ந்து, கீலேயாத் பர்வதத்திலே அவனைக் கிட்டிச்சேர்ந்தான்.

24 ஆனால் பராபரன் இராத்திரியிலே சூரியனுகிய லாபானண்டைக்குச் சொப்பனத்திலே வந்து, அவனோடே, நீ யாக்கோபோடே கலம்தப்பித் தீங்காய்ப் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிருவென்றார்.

25 லாபான் யாக்கோபைக் கிட்டிச்சேர்ந்தான்; யாக்கோபு பர்வதத்திலே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்; லாபானும் தன் சகோதரரோடேகூடக் கீலேயாத் பர்வதத்திலே கூடாரம்போட்டான்.

26 ¶ அப்பொழுது லாபான் யாக்கோபோடே சொன்னதாவது: நீ என் மனதைக் களவுசெய்து, என் குமாரத்திகளைப் பட்டயத்தினால் சிறைபிடித்தவர்களைப்போலக் கொண்டுபோனது என்ன செய்கை?

27 நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கு அதை அறிவியாமல் திருட்டனவாய் என்னைவிட்டுப் போனதென்ன? நான் உன்னைச் சந்தோஷத்தோடும், சங்கீதங்களோடும், மேளத்தோடும், சுரமண்டலத்தோடும், அனுப்புவேனே.

28 என் பிள்ளைகளையும், என் குமாரத்திகளையும் நான் முத்தம்செய்ய நீ இடங்கொடாதேபோனதென்ன? இப்பொழுதும் நீ இப்படிச் செய்ததை மதியில்லாமல் செய்தாய்.

29 உங்களுக்குப் பொல்லாப்புச்செய்ய என் கையிலே வல்லமை இருக்கும்; ஆனால், நீ யாக்கோபோடே கலம்தப்பித் தீங்காய்ப் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு வென்று உங்கள் தகப்பனுடைய பராபரன் இராத்திரி என்னோடே சொன்னார்.

30 இப்பொழுதும் உன் தகப்பனுடைய வீட்டின்மேலுள்ள வாஞ்சையினாலே நீ புறப்பட்டுப் போகிறபொழுது, என் தேவர்களை ஏன் திருடிக்கொண்டாய் என்றான்.

31 ¶ யாக்கோபு லாபானுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: உம்முடைய குமாரத்திகளை என்னிடத்திலிருந்து பறித்துக்கொள்வீரோ என்று நான் பயப்பட்டதினாலே இப்படி வந்துவிட்டேன்.

32 ஆனால் யாரிடத்தில் உம்முடைய தேவர்களைக் கண்டுபிடிப்பீரோ, அவன் உயிரோடிருக்கவேண்டாம்; என் வசத்திலே உம்முடையதாயிருக்கிறதெதென்று நீர் நம்முடைய சகோதரருக்கு முன்பாகப் பார்த்தறிந்து, அதை எடுத்துக்கொண்டுமென்றான்; ஏனெனில் ராகேல் அவைகளைத் திருடினதை யாக்கோபு அறியாதிருந்தான்.

33 அப்பொழுது லாபான் யாக்கோபின் கூடாரத்திலும் லேயாளின் கூடாரத்திலும் இரண்டு வேலைக்காரிகளின் கூடாரத்திலும் பிரவேசித்து, அவைகளைக் கண்டுபிடியாமல், லேயாளின் கூடாரத்திலிருந்து புறப்பட்டு ராகேலின் கூடாரத்திலே வந்தான்.

34 ராகேலோவெனில் சுரூபங்களை எடுத்து, ஒட்டகக்கல்லணையில்போட்டு, அவைகள்மேல் உருக்காந்திருந்தாள்; லாபான் கூடாரமெங்கும் தடவிப்பார்த்து, அவைகளைக் கண்டுபிடியாதே போனான்.

35 அவள் தன் தகப்பனோடே, நான் உமக்கு முன்பாக எழுந்திருக்கக்கூடாதது, என் ஆண்டவனுடைய கண்களுக்குத் தாங்கலாயிருக்கவேண்டாம்; ஏனெனில் ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு எனக்கு வந்திருக்கின்றது என்றான்; அப்படியே அவன் சோதித்தும் அந்தச் சுரூபங்களைக் கண்டுபிடியாதே போனான்.

36 ¶ அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம்மூண்டு லாபானோடே வாக்குவா

தம்பண்ணி, லாபானுக்குப் பிரதியுத்தாரமாகச்சொன்னதாவது: நீர் என்னை எரிபந்தமாய்ப் பின்தொடருகிறதற்கு என்னுடைய மீறுதலென்ன? என் பாவமென்ன?

ஈஎ என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளிலெல்லாம் எதைக் கண்டுபிடித்தீர்; என் சகோதரருக்கும் உம்முடைய சகோதரருக்கும்முன்பாக இங்கே வையும்; அவர்கள் எங்கள் இருவருக்கும் நடுவே தீர்க்கக்கடவர்கள்.

ஈஅ இந்த இருபதுவருஷம் உம்மிடத்திலே நான் இருந்தேன்; உம்முடைய ஆடுகளும் வெள்ளாடுகளும் சினை அழிந்ததில்லை; உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்றதில்லை.

ஈக பீறுண்டதை நான் உம்மண்டைக்குக் கொண்டுவராமல், அதற்கு நான் உத்தரவாதம் பண்ணினேன்; பகலில் களவுபோனதையும், இரவில் களவுபோனதையும், என் கையில் கேட்டீர்.

ஈஉ பகலிலே வெயிலும், இரவிலே குளிரும், என்னைப் பட்சித்தன; என் நித்திரை என் கண்களைவிட்டு விலகிற்று; இப்படியிருந்தேன்.

ஈச இந்த இருபதுவருஷம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலுவருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும் ஆறுவருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மைச் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர்.

ஈஊ என் பிதாவின் பராபரனாகிய ஆபிரகாமின் பராபரனும், ஈசாக்கின் பயமும் எனக்கிராதேபோனால், நீர் இப்பொழுது வெறுமையே என்னை அனுப்பிவிடுவீர்; பராபரனோவென்றால், என் சிறுமையையும், என் கைகளின் வருத்தத்தையும் பார்த்து, இராத்திரி உம்மைக் கடிந்துகொண்டாரென்றான்.

ஈஎ ¶ அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: குமாரத்திகள் என் குமாரத்திகளும், பிள்ளைகள் என் பிள்ளைகளும், மந்தை என் மந்தையும்தானே; நீ காண்கிறவை எல்லாம் என்னுடையவைகள்; இந்த என்னுடைய குமாரத்திகளுக்கும் அல்லது அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கும் இன்றுஎன்னசெய்குவேன்?

ஈஏ இப்பொழுதும் வா; நானும் நீயும் ஒரு உடம்படிக்கையைப் பண்ணிக்கொள்ளுவோம்; அது எனக்கும் உனக்கும் நடுவான சாட்சியாயிருப்பதாக என்றான்.

ஈஐ அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான்.

ஈஒ பிற்பாடு யாக்கோபு தன் சகோதரரோடே கற்களைச் சேருங்களென்றான்; அப்பொழுது, கற்களை எடுத்துக்கொண்டுவந்து, ஒரு குவியலுண்டாக்கி, அந்தக் குவியலின்மேல் அசனம்பண்ணினார்கள்.

உ அதற்கு லாபான் எகார்சகதூத்தா என்று பெயரிட்டான்; யாக்கோபோவெனில் அதற்குக் காலெயேத் என்று பெயரிட்டான்.

ஊ ¶ இந்தக் குவியல் இன்று எனக்கும் உனக்கும் நடுவான சாட்சி என்று லாபான் சொன்னபடியினாலே, அதின்பெயர், காலெயேத் என்னப்பட்டது.

஋ மிஸ்பாவென்றும் சொல்லப்பட்டது; ஏனெனில் அவன் சொன்னதாவது: நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபிற்பாடு நீ என் குமாரத்திகளை உபத்திரவப்படுத்தி, என் குமாரத்திகளைத்தவிர வேறு ஸ்திரீகளை விவாகம்பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுவராய்க் கண்காணிக்கக்கடவர்.

஌ நம்முடனே ஒருவருமில்லை; பார், பராபரனே எனக்கும் உனக்கும் நடுவான சாட்சி என்றான்.

ஐ பின்னையும் லாபான் யாக்கோபோடே சொன்னதாவது: இதோ இந்தக் குவியல், இதோ எனக்கும் உனக்கும் நடுவாக நான் போட்ட தூண்.

ஒ தீங்குசெய்ய நான் இந்தக் குவியலை

Digitized by Google

கடந்து உன்னண்டைக்கு வராமலும், நீ இந்தக் குவியலையும் இந்தத் தூணையும்கடந்து என்னண்டைக்கு வராமலும் இருக்கிறதற்கு, இந்தக் குவியலும் சாட்சி, இந்தத் தூணும் சாட்சி.

ஒஈ ஆபிரகாமின் பராபரனும் நாகோரின் பராபரனும் அவர்கள் பிதாக்களின் பராபரனுமானவர் நமக்குள்ளே நடுவராயிருக்கக்கடவரென்றான்; அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பயத்தின்மேல் ஆணையிட்டான்.

ஙச ¶ பிற்பாடு யாக்கோபு பர்வதத்தின்மேல் பலியிட்டு, தன் சகோதரரை அப்பம் புசிக்க அழைத்தான்; அப்படியே அப்பம் புசித்து, பர்வதத்திலே இராத்தங்கினார்கள்.

ஙடு லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் பின்னைகளையும் தன் குமாரத்திகளையும் முத்தம்செய்து, அவர்களை ஆசீர்வதித்தான்; பிற்பாடு லாபான் புறப்பட்டுத் தன்னிடத்திற்குத் திரும்பிப்போனான்.

ஈஉ. அதிகாரம்.

யாக்கோபு தன் வழியே போகப்புறப்பட்டான்; அப்பொழுது *பராபரனுடைய தூதர் அவனைச் சந்தித்தார்கள். *சங். ஈச. அ.

உ *யாக்கோபு அவர்களைக் காண்கிறபொழுது, இது பராபரனுடைய இராணுவமென்று சொல்லி, அந்தத் தலத்திற்கு மக்னயீமென்று பெயரிட்டான். *உ இரா. கூ. ஐகூ, ஐஎ.

ஊ ¶ பிற்பாடு யாக்கோபு தனக்குமுன்னாகஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்திலிருக்கிறதன் சகோதரனாகிய ஏசாவண்டைக்குத் தூதரை அனுப்பி,

ச அவர்களுக்குக் கற்பித்ததாவது: நீங்கள் என் ஆண்டவனாகிய ஏசாவோடே சொல்லவேண்டியதேதெனில், நான் லாபானிடத்திலே இற்றைவரைக்கும் தங்கித்தரித்திருந்தேன்.

ஙஎ எனக்கு எருதுகளும், கழுதைகளும், ஆடுகளும், வேலைக்காரரும், வேலைக்காரிகளும் உண்டு; உம்முடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கத்தக்கதாக என் ஆண்டவனுக்கு இதை அறிவிக்க மனிதரை அனுப்பினேனென்று உம்முடைய வேழியக்காரனாகிய யாக்கோபு சொல்லச் சொன்னானென்பதுதான் என்றான்.

ஙஅ ¶ அந்தத் தூதர்கள் யாக்கோபண்டைக்குத் திரும்ப வந்து, நாங்கள் உம்முடைய சகோதரனாகிய ஏசாவண்டைக்குப் போய் வந்தோம்; அவனும் நானூறுபேரோடே உமக்கெதிராக வருகிறான் என்றார்கள்.

ஙஉ ¶ அப்பொழுது யாக்கோபு மிகவும் பயந்து, மன இடுக்கம் அடைந்து, தன்னண்டையிலிருந்த சனத்தையும், ஆடுமாடுகளையும், ஒட்டகங்களையும் இரண்டு பாளயமாகப் பிரித்து,

ஙச ஏசா ஒரு பாளயத்தின்மேல் வந்து அதை முறிய அடித்தால், மறுபாளயம்தப்பஇடம் உண்டு என்றான்.

ஙஈ ¶ பிற்பாடு யாக்கோபு சொன்னதாவது: *என் தகப்பனாகிய ஆபிரகாமின் பராபரனும், என் தகப்பனாகிய ஈசாக்கின் பராபரனுமானவரே, உன் தேசத்திற்கும், உன் இனத்தண்டைக்கும் திரும்பிப்போ; உனக்கு நன்மை செய்வோம் என்று என்னோடே சொல்லியிருக்கிற கர்த்தாவே, *ஆ மோ. ஈக. ஈ.

ஙடு *தேவரீர் உம்முடைய அடியானுக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைகளுக்கும், எல்லா உண்மைக்கும் நான் எம்மாத்திரம்? ஏனெனில் நான் என் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுதோவெனில், இரண்டு பாளயங்களுக்கு உடையவனானேன்.

*உ சாமு. எ. ஐஅ.

ஙக என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும்; அதேனெனில் அவன் வந்து என்னைத் தாயும் பின்னைகளுமாய் மடங்கடிப்பானோவென்று அவனுக்கு நான் பயந்திருக்கிறேன்.

ஙஉ நீரோவெனில் *நாம் உனக்கு நன்மை

Digitized by Google

செய்யாவே செய்து, உன் வித்தை எராளத் திருலே எண்ணத்தொலியாத கடற்கணாம ணலைப்போலாக்குவோமென்று சொன்னீ ரே என்றான். *க மோ. உஅ. ஐஊ, ஐடு.

ஐஉ ¶ அவன் அன்று இராத்திரி அங்கே தங்கி, தன் கைக்கு உதவினவைகளிலே தன் சகோதரனுடைய ஏசாவுக்கு வெகுமான மாக,

ஐச இருநூறு வெள்ளாடுகளையும், இரு பது வெள்ளாட்டுக் கடாக்களையும், இரு நூறு ஆடுகளையும், இருபது ஆட்டுக்கடாக்களை யும்,

ஐடு பால்கொடுக்கிற முப்பது ஒட்டகங்க ளையும், அவைகளின் குட்டிகளையும், நாற்ப து பிடாரிகளையும், பத்துக் காளை எருதுகளை யும், இருபது கோளிகைக் கழுதைகளையும், பத்துக் கழுதைக்குட்டிகளையும் பிரித்தெ டுத்து,

ஐக வேலைக்காரர்கையில் ஒவ்வொரு மந் தைகளைத் தனித் தனியாக ஒப்புவித்து, தன் வேலைக்காரரோடே நீங்கள் எனக்கு முன்னுப்போய்த் தாண்டிப்போய், மந்தை மந் தைக்கும் இடம்விடுங்களென்று சொல்லி,

ஐஎ முன்னவனுக்குக் கற்பித்ததாவது: என் சகோதரனுடைய ஏசா உனக்கு எதிர்ப் பட்டு நீ யாருடைய மனிதன்? நீ எங்கே போகிறாய்? உனக்கு முன்னுகப் போகிற இவைகள் யாருடையவைகளென்று உன் னைக் கேட்டால்,

ஐஅ அப்பொழுது நீ இது உம்முடைய ஊழியக்காரனுடைய யாக்கோபுடையது; இ து என் ஆண்டவனுடைய ஏசாவுக்கு அனுப் பப்படும் வெகுமானம்; இதோ அவனும் எங்கள் பிறகாலே வருகிறானென்று சொல் என்றான்.

ஐக இரண்டாம் மூன்றும் வேலைக்காரனுக் கும் மந்தைகளின் பிறகாலே போகிற அனை வருக்கும் அவன் கற்பித்ததாவது: நீங்கள் ஏசாவைக் காணும்பொழுது, இந்தப்பிரகா ரமாக அவனுடே சொல்லி,

ஐவ இதோ உன் ஊழியக்காரனுகிய யாக் கோபு எங்கள் பிறகாலே வருகிறானென்கி றதையும் சொல்லுங்களென்று கற்பித்தான்; ஏனெனில் எனக்குமுன்னுகப்போகிற வெ குமானத்தினுலே அவன் முகத்தைக் குளி ரப்பண்ணுவேன்; பிற்பாடு அவன் முகத் தைப் பார்ப்பேன்; அப்பொழுது என்பே ரில் தயவு வைப்பானுக்கும் என்றான்.

ஐக ¶ அப்படியே வெகுமானம் அவனுக் குமுன்னுகப் போயிற்று; அவனேவெனில் அன்று இராத்திரிப் பாளயத்திலே தங்கி,

ஐஉ இராத்திரியிலே எழுந்திருந்து, தன் இரண்டு பெண்சாதிகளையும் தன் இர ண்டு வேலைக்காரிகளையும் தன்னுடைய பதி னெரு குமாரரையும் அழைத்துக்கொண் டு, யாப்போக்கென்ற ஆற்றின் துறையைக் கடந்தான்.

ஐச அவர்களை அழைத்துக்கொண்டு, ஆற் றைக் கடக்கப்பண்ணி, தனக்குண்டான வைகளையும் அக்கரைப்படுத்தினுன்.

ஐடு ¶ ஆனுல் யாக்கோபு பிந்தித் தனித் திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுதுவிடியும்மட்டும் அவனேடே போ ராடி,

ஐக அவனை மேற்கொள்ளக் கூடாதென் று கண்டு, அவனுடைய கீல் இடுப்புச் சந்து தொட்டார்; அதினுல் யாக்கோபின் தொடை அவரோடே போராடுகையில் சு ருக்கிற்று.

ஐஎ அவர் நாம் போகட்டும்; ஏனெனில் பொழுது விடிகிறது என்றார்; ஆனுல் இவ ன், *நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம் மைப் போகவொட்டேனென்றான். *ஓசே. ஐஉ. ச.

ஐஅ அவர் இவனுடனே, உன் பேரென்ன வென்றார்; யாக்கோபென்றான்.

ஐஆ அப்பொழுது அவர், *உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ் ரவேலென்னப்படும்; ஏனெனில் பராபர னேடும் மனிதரோடும் போராடி மேற் கொண்டாயென்றார். *க மோ. உடு. ஐ.

ஐக அப்பொழுது யாக்கோபு, உம்மு

டைய நாமத்தை எனக்கறிவியுமென்று கேட்டான்; அதற்கவர், நீ நம்முடைய நாமத்தைக் கேட்கிறதென்னவென்று சொல்லி, அக்கே அவனை ஆசீர்வதித்தார்.

ரூ அப்பொழுது யாக்கோபு, பராபரனை முகமுகமாய்க் கண்டேன்; என்னுத்துமாவும் தப்புவிக்கப்பட்டதென்று சொல்லி, அந்த ஸ்தலத்திற்குப் பெனீயேலென்று பேரிட்டான்.

ரூ அவன் பெனீயேலைக் கடந்துபோகையில், சூரியன் அவனுக்கு உதயமாயிற்று; அவனோவெனில் இடுப்புச் சுளுக்கினாலே நொண்டி நடந்தான்.

ரூ அவர் யாக்கோபுடைய தொடைக்கீலின் ஒட்டுநரம்பைத் தொட்டபடியினாலே, இஸ்ரவேல் புத்திரர் இந்நாள்வரைக்கும் தடையின் கிலிலிருக்கிற ஒட்டுநரம்பைப் புசியாதே போகிறார்கள்.

ரூரூ. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு தன் கண்களை ஏறெடுத்து, இதோ, *ஏசாவையும், அவனோடேகூட நானூறு மனிதரையும் வரக்கண்டு, பிள்ளைகளை லேயாளண்டையிலும், ராகேலண்டையிலும், இரண்டு வேலைக்காரிகளண்டையிலும் வெவ்வேறே பிரித்து வைத்து, *க மோ. ரூ. சூ.

ரூ வேலைக்காரிகளையும், அவர்கள் பிள்ளைகளையும் முன்னுகவும், லேயாளையும் அவள் பிள்ளைகளையும் பிறகாலேயும், ராகேலையும் யோசேப்பையும் பின்னுகவும் நிறுத்தி,

ரூ தான் அவர்களுக்கு முன்னுக நடந்தபோய், தன் சகோதரன் கிட்டச் சேரும்வரைக்கும் ஏழுவிசை தரைமட்டும் குனிந்து வணங்கினன்.

ரூ அப்பொழுது ஏசா அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக்கொண்டு, அவன் கழுத்திறுகப்பூண்டு, அவனை முத்தம்செய்தான்; இருவரும் அழுதார்கள்.

ரூ அவன் தன் கண்களை ஏறெடுத்து, பெண்சாதிகளையும் பிள்ளைகளையும்கண்டு, உன்னோடிருக்கிற இவர்கள் யார் என்றான்? அதற்கிவன், பராபரன் உம்முடைய ஊழியக்காரனுக்கு அருளினபிள்ளைகளென்றான்.

ரூ அப்பொழுது வேலைக்காரிகளும், அவர்கள் பிள்ளைகளும் சேரவந்து வணங்கினார்கள்.

ரூ லேயாளும் அவள் பிள்ளைகளும் சேரவந்து வணங்கினார்கள்; பிற்பாடு யோசேப்பும் ராகேலும் சேர்ந்துவந்து வணங்கினார்கள்.

ரூ அப்பொழுது அவன், நான் சந்தித்த அந்த உன்னுடைய தண்டெல்லாம் ஏதுக்கென்றான்; அதற்கிவன், என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுகிடைக்கிறதற்கு என்றான்.

ரூ ஆனால் ஏசா, எனக்கு நிரம்ப இருக்கின்றது என் சகோதரனே, உன்னுடையது உனக்கிருக்கட்டும் என்றான்.

ரூ யாக்கோபோவெனில் சொன்னதாவது: அப்படி அல்ல, உம்முடைய கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததேயாகில், என் காணிக்கையை என் கையிலே வாங்கிக்கொள்ளும்; ஏனென்றால் நீர் என்னைப் பிரியமாய்ப் பார்க்கையில், நான் உம்முடைய முகத்தைப் பராபரனுடைய முகத்தைக் காண்கிறதுபோலக் கண்டேன்.

ரூ உமக்குக் கொண்டுபோகப்பட்ட *என்னுடைய ஆசீர்வாதத்தை வாங்கிக்கொள்ளும்; ஏனெனில் பராபரன் எனக்குத் தந்தருளினார்; வேண்டியவைகளெல்லாம் எனக்கிருக்கின்றன என்று சொல்லி, அவனை வருந்திக்கொண்டான்; அப்பொழுது அவன் அதை வாங்கிக்கொண்டு, *க சாமு. உடு. உ: ரூ. உசு.

ரூ நாம் பயணம் புறப்பட்டுப்போவோம் வா, உனக்குமுன்னுக நடப்பேனென்றான்.

ரூ அப்பொழுது இவன் அவனோடே சொன்னதாவது: பிள்ளைகள் இளம்பிள்ளைகளென்றும், பால்கொடுக்கிற ஆடுமாடுகள் என்னோடிருக்கின்றதென்றும், என் ஆண்

டவன் அறிவார்; அவைகளை ஒரோவில் தனிதமாய் ஒட்டிலுல் மந்தை எல்லாம் செத்துப்போம்.

உ என் ஆண்டவன் தன் வழியக்காரனுக்கு முன்னுகப்போவாராக; நானேவெனில், சேயீரிலே என் ஆண்டவனண்டைக்கு வரும்மட்டும் எனக்குமுன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும் பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்க மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருவேனென்றுன்.

ரு அப்பொழுது ஏசா என்னோடிருக்கிற சனத்தில் சிலரை நான் உன்னிடத்தில் விடுத்தட்டுமே என்றுன்; அதற்கிவன், அதேதுக்கு, என் ஆண்டவனுடைய கண்களில் எனக்குத் தயவுமாத்திரம் கிடைக்கட்டுமென்றுன்.

ஙு ¶ அப்படியே ஏசா அந்நாளிலே திரும்ப தன் வழியே சேயீருக்குப்போனுன்.

ரூ யாக்கோபோவென்றுல், சுக்கோத்திற்குப் பயணம்பண்ணி, தனக்கு வீடுகட்டி, தன் மிருகசீவன்களுக்குக் கொட்டாரங்களைப் போட்டான்; அதினுலே அந்த ஸ்தலத்திற்குச் சுக்கோத்தென்று பேர்தரித்தான்.

ரூ ¶ யாக்கோபு பதான்அராமிலிருந்து வந்தபிற்பாடு கானான் தேசத்திலிருக்கிற சீகேமின் ஊருக்குச் சுகமாய்வந்து, ஊருக்கெதிரே பாளயம் இறங்கி,

ரூ தன் கூடாரத்தை நாட்டும் வயல் வெளியின் நிலத்தைச் சீகேமின் தகப்பனுகிய ஏமோர் புத்திரர்கையிலேநூறுவெள்ளிக்காசுக்குக் கொண்டு,

ரூ அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, பராபரன் இஸ்ரவேலின் பராபரனென்று அதற்குப் பேரிட்டான்.

ரூசு. அதிகாரம்.

லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற அவளுடைய குமாரத்தியாகிய தீனுள் தேசத்தாக் குமாரத்திகளைப் பார்க்கப் புறப்பட்டாள்.

உ அவளை ஏவியனுன ஏமோரின் குமாரனும் தேசத்தின் பிரபுவுமாகிய சீகேமென்றவன் கண்டு, அவளை அழைத்துப்போய், அவளோடே சயனித்து, அவளைக் கற்பழித்தான்.

ங அவன் ஆத்துமா யாக்கோபின் குமாரத்தியாகிய தீனுள்மேலே பிடிப்பாயிருக்கிறது; அவன் அந்தப் பெண்ணைச் சிநேகித்து, அந்தப் பெண்ணின் மனதுக்கு கட்டாயப் பேசினுன்.

ச சீகேம் தன் தகப்பனுகிய ஏமோருடனே, இந்தப் பெண்ணை எனக்குக் கொள்ளுமென்று சொன்னுன்.

ஞ தன் குமாரத்தியாகிய தீனுளை அவன் தீட்டுப்படுத்தினதை யாக்கோபு கேட்டபொழுது, அவன் குமாரர் அவனுடைய மந்தை அண்டையில் வெளியிலே இருந்தார்கள்; அவர்கள் வரும்மட்டும் யாக்கோபு மவுனமாயிருந்தான்.

ரு ¶ ஆனுல் சீகேமின் தகப்பனுகிய ஏமோர் யாக்கோபோடே பேச அவனண்டைக்குப் புறப்பட்டுவந்தான்.

எ யாக்கோபின் குமாரர் செய்தியைக் கேட்டபொழுது, வெளியிலிருந்து வந்தார்கள்; அவன் யாக்கோபின் குமாரத்தியோடே சயனித்ததென்கிற செய்யப்படாதமதிகெட்டகாரியத்தை இஸ்ரவேலிலே செய்தபடியினுலே, அந்த மனிதருக்கு மனம்கொந்தளவர்களுக்கு மிகவும் கோபம்மூண்டது.

அ ஏமோர் அவர்களோடே பேசிச்சொன்னதாவது: என் குமாரனுகிய சீகேமின் ஆத்துமா உங்கள் குமாரத்தியின்மேல் வாஞ்சையாயிருக்கின்றது; அவனை அவனுக்குப் பெண்சாதியாகக் கொடுங்கள்.

கூ நீங்கள் எங்களோடே சம்பந்தம்கலந்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் குமாரத்திகளை உங்களுக்குக் கொண்டு,

ஐ எங்களோடே குடியிருங்கள்; தேசம் உங்கள் முன்பாகக் கிடக்கிறது; அதிலே குடியிருந்து, வியாபாரம்பண்ணி, ஆஸ்தி

Digitized by Google

சம்பாஷித்து, அதைக் கையாண்டுகொண்டிருங்களென்றான்.

ய சிகேம் அவன் தகப்பனோடும் அவள் சகோதரரோடும் சொன்னதாவது: உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைக்கட்டும்; நீங்கள் எனக்குச் சொல்வதைத் தருவேன்.

யஉ என்மேல் பரியத்தையும் காணிக்கையையும் திரளாய்ச் சுமத்துங்கள்; நீங்கள் எனக்குச் சொல்லும்படி தருவேன்; அந்தப் பெண்ணைமாத்திரம் எனக்குப் பெண் சாதியாகக் கொடுங்களென்றான்.

யக ¶ அப்பொழுது யாக்கோபின் குமாரர் இவன் தங்கள் சகோதரியாகிய தீனாளைத் தீட்டுப்படுத்தினபடியால், சிகேமுக்கும் அவன் தகப்பனாகிய ஏமோருக்கும் சாப்பனையாய் மறுமொழி கொடுத்து, அவர்களோடே சொன்னதாவது:

யச எங்கள் சகோதரியைச் சுன்னத்தில்லாத புருஷனுக்குக் கொடுக்கும்காரியத்தை நாங்கள் செய்யக்கூடாது; ஏனென்றால் அது எங்களுக்கு நிந்தையாயிருக்கும்.

யடி நீங்கள் உங்களிலிருக்கும் ஆண் அனைத்தையும் சுன்னத்துப்பண்ணுகிறதிலாலே எங்களைப்போலானீர்களேயாகில், நாங்கள் உங்களுக்குச் சம்மதித்து,

யசு உங்களுக்கு எங்கள் குமாரத்திகளைக் கொடுத்து, உங்கள் குமாரத்திகளை எங்களுக்குக் கொண்டு, உங்களோடே குடியிருந்து ஏகசனமாவோம்.

யஎ சுன்னத்துப்பண்ணிக்கொள்ள எங்கள் சொல்கேளாதே போனீர்களேயானால், நாங்கள் எங்கள் குமாரத்தியை அழைத்துக்கொண்டு போவோமென்றார்கள்.

யஅ ¶ அவர்கள் வார்த்தைகள் ஏமோருக்கும், ஏமோரின் குமாரனாகிய சிகேமுக்கும், நன்றாய்க் கண்டன.

யக அப்படிச்செய்ய அந்த வாலிபன் தாமதம்பண்ணினதில்லை; ஏனெனில் யாக்கோபுடைய குமாரத்தியின்மேல் பிரியம் வைத்தான்; அவன் தன் தகப்பன்வீட்டார் அனைவரிலும் கனமாய் எண்ணப்பட்டவனுமாயிருந்தான்.

உய ஏமோரும் அவன் குமாரன் சிகேமும் தங்கள் பட்டணத்தின் ஒலிமுகவாசலில் வந்து, தங்கள் பட்டண மனிதரோடே பேசிச் சொன்னதாவது:

உக இந்த மனிதர் நம்மோடே சமாதானமாயிருக்கிறார்கள்; ஆகையால் அவர்கள் தேசத்திலே குடியிருந்து அதிலே வியாபாரம்பண்ணட்டும்; இதோ அவர்களுக்கு முன்பாகத் தேசம் இருபுறமும் விஸ்தாரமாய்க் கிடக்கிறது; அவர்கள் குமாரத்திகளை நாம் நமக்குப் பெண்சாதிகளாகக்கொண்டு, நம்முடைய குமாரத்திகளை அவர்களுக்குக் கொடுப்போமே.

உஉ இந்த மனிதர் சுன்னத்தப்பண்ணப்பட்டவர்களாயிருக்கிறதுபோல, நாம் நம்மிலுள்ள ஆண் அனைத்தையும் சுன்னத்தமாத்திரம்பண்ணினோமானில், அவர்கள் நம்மோடே ஏகசனமாகக் குடியிருப்பதற்குச் சம்மதிப்பார்கள்.

உங அவர்கள் மந்தைகளும் அவர்கள் ஆஸ்தியும் அவர்கள் மிருகசீவன்களுமெல்லாம் நம்மைச் சேர்வதில்லையோ? அவர்களுக்குச் சம்மதியாகமாத்திரம் செய்தோமானால், நம்மூடனே குடியிருப்பார்களென்றார்கள்.

உச அப்பொழுது ஏமோரின் பட்டணத்துவாசலால் புறப்படுகிறவர்களனைவரும் அவன் சொல்லியும் அவன் குமாரனாகிய சிகேமின் சொல்லியும் கேட்டு, அவன் பட்டணத்து வாசலால் புறப்படுகிறவர்களனைய ஆண்சாதியாரெல்லாரும் சுன்னத்தடைந்தார்கள்.

உடு ¶ மூன்றாம்நாளில் அவர்களுக்கு சோர்வெடுத்துக்கொண்டபொழுது சம்பவித்ததேதென்றால், யாக்கோபின் குமாரரும் தீனாளின் சகோதரருமாகிய *சிமெயோனும் லேவியுமென்ற இரண்டுபேர் அவனவன் தன் தன் பட்டயத்தை எடுத்துக்கொண்டு பயமில்லாமல் பட்டணத்தின்மேல் வந்து, ஆண் அனைத்தையும் கொன்று,

*க மோ. சகூ. டு,கூ.

உசு ஏமோராயும் அவன் குமாரன் சீகேமையும் பட்டயக்கருக்காலே கொன்று போட்டு, தினாளைச் சீகேமின் வீட்டிலிருந்து அழைத்துப் புறப்பட்டுப்போனார்கள்.

உஎ யாக்கோபின் குமாரர் வெட்டுண்டவர்கள்மேல் வந்து, அவர்கள் தங்கள் சகோதரியைத் தீட்டுப்படுத்தினதற்காகப் பட்டணத்தைக் கொள்ளையிட்டு,

உஅ அவர்களுடைய ஆடுமாடுகளையும் கழுதைகளையும் ஊரிலும் ஊர் வெளியிலும் இருந்தவைகள் எல்லாவற்றையும் எடுத்து,

உக அவர்களுடைய எல்லாத் தட்டுமுட்டுகளையும் அவர்களுடைய எல்லாக் குழந்தைகளையும் பெண்சாதிகளையும் வீட்டிலிருந்த எல்லாவற்றையும் பிடித்துக்கொண்டு கொள்ளையாடினார்கள்.

உஉ அப்பொழுது யாக்கோபு சிமெயோனோடும் லேவியோடும் சொன்னதாவது: நீங்கள் தேசத்திற்குடியிருக்கிற கானானியரிடத்திலும் பேரிசியரிடத்திலும் என் வாசனையைக் கெடுத்தபடியாலே என்னைக் கலங்கப்பண்ணினீர்கள்; நான் கொஞ்சச் சனமாயிருக்கிறேன்; அவர்கள் எனக்கு விரோதமாகக் கூட்டங்கூடி, நானும் என் வீடும் அழிய என்னை வெட்டுவார்களே என்றான்.

உக அதற்கவர்கள், எங்கள் சகோதரியை அவர்கள் ஒரு வேசியைப்போல நடத்தலாமோ என்றார்கள்.

ஈரடி. அதிகாரம்.

பராபரனானவர் யாக்கோபுடனே, நீ எழுந்து பேத்தேலுக்குப் போயேறி, அங்கே குடியிருந்து, நீ உன் சகோதரனாகிய ஏசாவின் முகத்திற்கு விலகி ஓடிப்போகிற பொழுது, *உனக்குத் தரிசனையான பராபரனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்கு என்றார். *க மோ. உஅ. ஙஉ—ஙசூ.

உ அப்பொழுது யாக்கோபு தன் வீட்டாரோடும் தன்னோடுகூட இருந்த அனைவரோடும் சொன்னதாவது: உங்கள் நடுவிலிருக்கிற அந்நிய தேவர்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள்.

ஊ நாம் எழுந்து பேத்தேலுக்குப் போயேறுவோம்; என் அவதிநாளிலே எனக்கு உத்தரவு அருளிச்செய்து, நான் நடந்தவழியிலே என்னோடேகூட இருந்த பராபரனுக்கு அங்கே ஒரு பலிபீடத்தை உண்டாக்குவேனென்றான்.

ஃ அப்பொழுது அவர்கள தங்கள் கையிலிருந்த எல்லா அந்நியதேவர்களையும், தங்கள் காதுகளிலிருந்த கடுக்கன்களையும், யாக்கோபுக்குக் கொடுத்தார்கள்; யாக்கோபு அவைகளைச் சீகேம் ஊர் அருகே இருந்த ஒரு கர்வாலியுமரத்தின்கீழே புதைத்தான்.

எ பிற்பாடு பயணம் புறப்பட்டார்கள்; அவர்களைச் சுற்றிலும் இருந்த பட்டணங்களின்மேலே பராபரனாலே பயங்கரம் உண்டாகையால், யாக்கோபின் குமாரரைப் பின்தொடராதிருந்தார்கள்.

ஈ ¶ யாக்கோபும் அவனோடேகூட இருந்த எல்லாச்சனமும், கானான் தேசத்திலிருக்கும் லூசுக்குவந்தார்கள்; அதுவே பேத்தேல்.

ஏ அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தான் தன் சகோதரனுடைய முகத்திற்கு விலகி ஓடிப்போகிறபொழுது, அங்கே பராபரன் தனக்கு வெளிப்பட்டபடியினாலே அந்த ஸ்தலத்திற்கு எல்பேத்தேலென்று பேரிட்டான்.

ஐ ¶ ரெபேக்காளின் தாதியாகிய தெப்போரூன் மரித்து, பேத்தேலின் பள்ளத்தாக்கில் வெளியிலே ஒரு கர்வாலியுமரத்தின்கீழே அடக்கம்பண்ணப்பட்டான்; அதுபுலமபலின் கர்வாலியுமரமென்றழைக்கப்பட்டது.

ஒ ¶ யாக்கோபு பதான்அராமிலிருந்து வந்தபிற்பாடு பராபரன் அவனுக்குப் பின்னையும் தரிசனையாகி, அவனை ஆசீர்வதித்து,

ஓ அவனோடனே உன்பேர் யாக்கோபென்

பது, இனி உன்பேர் யாக்கோபு என்னப்படாமல், இஸ்ரவேலென்ற பேர் உனக்கிருக்குமென்றுசொல்லி, அவனுக்கு இஸ்ரவேலென்று பேரிட்டார்.

ஙக பின்னையும் பராபரன் அவனோடே சொன்னதாவது: நாம் சர்வத்திற்கும்வல்ல பராபரனுயிருக்கிறோம்; நீ பலுகிப்பெருகு; சாதியும் சாதிகளின் கூட்டமும் உன்னுண்டாகும்; இராசாக்களும் உன் இடுப்பின் பிறப்பாயிருப்பார்கள்.

ஙஉ நாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் கொடுத்த தேசத்தை உனக்குத் தருவோம்; உனக்குப்பிற்பாடு உன் வித்துக்கும் இந்தத் தேசத்தைத் தருவோமென்று சொல்லி,

ஙஊ பராபரன் அவனோடே பேசின ஸ்தலத்திலிருந்து அவனை விட்டேறிப்போனார்.

ஙச அப்பொழுது யாக்கோபு அவர் தனோடே பேசின ஸ்தலத்திலே கல்தூணுகிய ஒரு தூணை நிறுத்தி, அதின்மேல் ஊற்றுதலூற்றி, அதின்மேல் எண்ணெயை வார்த்தான்.

ஙடு பராபரன் தனோடே பேசின அந்த ஸ்தலத்திற்கு யாக்கோபு பேத்தேலென்ற பெயரைத் தான் தரித்தான்.

ஙசு ¶ பேத்தேலிலிருந்து பயணம்புறப்பட்டார்கள்; எப்பருத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சம்தூரமிருக்கிறபொழுது, ராகேல் பிள்ளைபெற்றாள்; பெறுகையில் அவளுக்குக் கடிவருத்தமாயிற்று.

ஙள அப்பொழுது சம்பவித்ததாவது: பெறுகிறதிலே அவளுக்குக் கடிவருத்தமாயிருக்கையில், மருத்துவச்சி அவளோடனே, பயப்படாதே, ஏனென்றால் இந்தப் புத்திரனும் உனக்கிருப்பானென்றான்.

ஙஎ சம்பவித்ததேதென்றால், மரணம் அடைய அவள் ஆத்துமா புறப்படுகையில், அவள் அவனுக்குப் பெனோனி என்று பேரிட்டாள்; அவன் தகப்பனோவெனில், அவனைப் பென்யமீனென்றழைத்தான்.

ஙஅ ராகேல் மரித்து, பெத்லகேமென்னப்படுகிற எப்பருத்தா வழியிலே அடக்கம்பண்ணப்பட்டாள்.

உ0 அவள் கல்லறையின்மேல் யாக்கோபு ஒரு தூணை நிறுத்தினான்; அதுவே இந்நான்வரைக்கும் இருக்கிற ராகேலுடைய கல்லறையின் தூண்.

உக ¶ இஸ்ரவேல் பயணம்பண்ணி, ஏதேரென்ற கோபுரத்திற்கு அப்புறத்தே தன் கூடாரத்தைப் போட்டான்.

உஉ இஸ்ரவேல் அந்தச் சீமையில் குடியிருக்கிறபொழுது சம்பவித்ததேதென்றால், *ரூபன் போய், தன் தகப்பனுடைய வைப்பாட்டியாகிய பில்காளோடே சயனித்தான்; அது இஸ்ரவேலுக்குக் கேள்வியாயிற்று; யாக்கோபின் குமாரரோவென்றால் பன்னிரண்டுபேராயிருந்தார்கள். *க மோ. சகூ. ச.

உங ¶ யாக்கோபுக்கு முதல் புத்திரனாகிய ரூபனும், சிமெயோனும், லேவியும், யூதாவும், இசஷ்காரும், சேபுலோனும், லேயாளின் குமாரரானவர்கள்.

உச ராகேலின் குமாரர் யோசேப்பும், பென்யமீனுமென்றவர்கள்.

உடு ராகேலுடைய வேலைக்காரியாகிய பில்காளின் குமாரர் தானும், நப்தலியும் என்றவர்கள்.

உசு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளின் குமாரர் காதும், ஆசேரும் என்றவர்கள்; இவர்கள் யாக்கோபுக்குப் பதான் அராமிலே பிறந்த குமாரர்.

உள ¶ யாக்கோபு அர்பாவின் ஊராகிய மம்ரேக்குத் தன் தகப்பனாகிய ஈசாக்கண்டையிலேவந்தான்; அது ஆபிரகாமும் ஈசாக்கும் தங்கியிருந்த எபிரோனென்கிற ஊர்தானே.

உஅ ஈசாக்கின் நாள்கள் நூற்றெண்பது வருஷமாயிருந்தன.

உக பிற்பாடு ஈசாக்கு முநிர்ந்த பூரண ஆயுசிலே சிவித்து மரித்து, தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்; அவனை அவன் குமாராகிய ஏசாவும் யாக்கோபும் அடக்கம்பண்ணினார்கள்.

Digitized by Google

ஊசு அதிகாரம்.

இது ஏதோமியரின் தகப்பனுகிய ஏசாவின் சந்ததி.

உ ஏசா கானான் குமாரத்திகளில் ஏத்தியனான ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளையும், ஏவியனுகிய சிபெயோனின் பேத்தியும் ஆனாவின் குமாரத்தியுமாகிய அகோலிபாமாளையும்,

ஈ இஸ்மவேலின் குமாரத்தியும் நேப்யோத்தின் சகோதரியுமாகிய பஸ்மாத்தையும், விவாகம்பண்ணினான்.

ச ஆதாள் ஏசாவுக்கு ஏலிப்பாசைப் பெற்றாள்; பஸ்மாத் ரேகுவேலைப் பெற்றாள்.

இ அகோலிபாமாள் ஏயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்; இவர்கள் ஏசாவுக்குக் கானான்தேசத்திலே பிறந்த குமாரர்.

ஊ ¶ ஏசா தன் பெண்சாதிகளையும் தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் வீட்டிலுள்ள எல்லா ஆத்துமாக்களையும் தன் ஆடுமாடுகளையும் தன்னுடைய எல்லா மிருகஜீவன்களையும் தான் கானான் தேசத்திலே சம்பாதித்த தன்னுடைய எல்லா ஆஸ்திகளையும் சேர்த்துக்கொண்டு, தன் சகோதரனுகிய யாக்கோபைவிட்டு வேறே தேசத்திற்குப் போனான்.

எ ஏனெனில் அவர்கள் ஒருமிக்கக் குடியிருக்கக் கூடாதபடிக்கு, அவர்களுடைய சம்பத்து மிச்சமாயிருந்தது; அவர்கள் தங்கியிருந்த பூமி அவர்களுடைய மந்தைகளின் முகாந்தரத்தினாலே அவர்களைத் தாங்கமாட்டாதே போயிற்று.

ஆ ஆகையால் ஏசா சேயீர் பர்வதத்திலே குடியேறினான்; ஏசாவே ஏதோமென்றவன்.

கூ ¶ சேயீர் பர்வதத்திலிருக்கிற ஏதோமியருடைய தகப்பனுகிய ஏசாவின் சந்ததிகளும்,

ஐ ஏசாவின் குமாரருடைய நாமங்களுமானவை: ஏசாவின் பெண்சாதியாகிய ஆதாளுடைய குமாரன்பேர் ஏலிப்பாஸ்; ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்துடைய குமாரன்பேர் ரேகுவேல்.

ஒ ஏலிப்பாசுடைய குமாரர்; தேமான், ஓமார், சேப்போ, காத்தாம், கேனஸ்.

ஒஉ திம்னா ஏசாவின் குமாரனுகிய ஏலிப்பாசுக்கு வைப்பாட்டியாயிருந்து, ஏலிப்பாசுக்கு ஆம்லேக்கைப் பெற்றாள்; இவர்களே ஏசாவின் பெண்சாதியாகிய ஆதாளுடைய குமாரர்.

ஒஊ ரேகுவேலுடைய குமாரர்; நாகாத், சேராக், சம்மா, மீசா, இவர்களே ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்துடைய குமாரர்.

ஒச சிபெயோனின் பேத்தியும் ஆனாவின் குமாரத்தியுமான அகோலிபாம்மாளென்ற ஏசாவுடைய பெண்சாதியின் குமாரர் யாரென்றால், அவள் ஏசாவுக்கு ஏயூஷையும், யாலாமையும், கோராகையும் பெற்றாள்.

ஒஎ ¶ ஏசாவின் குமாரரிலிருந்த பிரபுக்கள்; ஏசாவுக்கு முதல்குமாரனுகிய ஏலிப்பாசுடைய குமாரரில் தேமான்பிரபுவும், ஓமார்பிரபுவும், சேப்போபிரபுவும், கேனஸ் பிரபுவும்,

ஒக கோராக்பிரபுவும், காத்தான்பிரபுவும், ஆம்லேக்பிரபுவும் இருந்தார்கள்; இவர்கள் ஏதோம்தேசத்தில் ஏலிப்பாசின் சந்ததியும் ஆதாளின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

ஒஏ ¶ ஏசாவின் குமாரனுகிய ரேகுவேலின் குமாரரோவெனில், நாகாத்பிரபு, சேராக்பிரபு, சம்மாபிரபு, மீசாபிரபு, இவர்கள் ஏதோம்தேசத்தில் ரேகுவேலின் சந்ததியும் ஏசாவின் பெண்சாதியாகிய பஸ்மாத்தின் குமாரருமாயிருந்த பிரபுக்கள்.

ஒஅ ¶ ஏசாவின் பெண்சாதியாகிய அகோலிபாமாளின் குமாரரோவென்றால், ஏயூஷ் பிரபு, யாலாம்பிரபு, கோராக்பிரபு; இவர்கள் ஆனாவின் குமாரத்தியும் ஏசாவுடைய பெண்சாதியுமாகிய அகோலிபாமாளின் சந்ததியாயிருந்த பிரபுக்கள்.

ஒக இவர்களே ஏதோமென்ற ஏசாவின்

Digitized by Google

குமாரர்; இவர்களே அவர்களிலிருந்த பிரபுக்கள்.

உ0 ¶ அந்தத் தேசத்தில் குடிகளாகிய ஓரியனாகிய சேயீரின் குமாரர், லோத்தான், சோபால், சிபெயோன், ஆனாக்,

உக திஷோன், எத்சேர், திஷான்; இவர்கள் ஏதோம்தேசத்தில் சேயீரின் புத்திரராகிய ஓரிபருடைய சந்ததியாயிருந்த பிரபுக்கள்.

உஉ லோத்தானுடைய குமாரர், ஓரி, ஏமாம்; லோத்தானின் சகோதரி திம்னா.

உஊ சோபாலுடைய குமாரர், அல்வான், மனாகாத், ஏபால், சேப்போ, ஓனமென்றவர்கள்.

உச சிபெயோனுடைய குமாரர், ஆயா, ஆனா என்றவர்கள்; வனாந்தரத்திலே தன் தகப்பனாகிய சிபெயோனின் கழுதைகளை மேய்க்கையில், கோவேறு கழுதைகள் பிறக்கும் விதத்தைக் கண்டுபிடித்த ஆனா இவன் தான்.

உடி ஆனாவின் பிள்ளைகள் திஷோனும், அகோலிபாமாவுமென்றவர்கள்; இவள் ஆனாவின் குமாரத்தி.

உசு திஷோனுடைய குமாரர், எம்தான், எஸ்பான், இத்தரான், கோரான் என்றவர்கள்.

உஎ எத்சேருடைய குமாரர், பில்காள், சாவான், ஆக்கான் என்றவர்கள்.

உஅ திஷானுடைய குமாரர், ஊத்ஸ், ஆரான் என்றவர்கள்.

உக ஓரிபரின் சந்ததிப் பிரபுக்கள், லோத்தான்பிரபு, சோபால்பிரபு, சிபெயோன்பிரபு, ஆனாபிரபு,

ஊ0 திஷோன்பிரபு, எத்சோபிரபு, திஷான்பிரபு, இவர்களே சேயீர் தேசத்திலே தங்கள் தங்கள் இடங்களிலிருந்த ஓரியர் சந்ததியான பிரபுக்கள்.

ஊக ¶ இஸ்ரவேல் புத்திரரை ஒரு இராசா ஆளாததற்குமுன்னே ஏதோம்தேசத்திலே ஆண்ட இராசாக்கள்.

ஊஉ ஏதோமிலே பேயோருடைய குமாரனாகிய பேலா இராசாவாயிருந்தான்; அவனுடைய பட்டணத்தின்பேர் தின்காபா.

ஊஊ பேலா மரித்தபொழுது, போத்சரு பட்டணத்தானாகிய சேராகுடைய குமாரனான யோவாப் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஊச யோவாப் மரித்தபொழுது, தேமானிய தேசத்தானாகிய ஊசாம் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஊடி ஊசாம் மரித்தபொழுது, அவன் பட்டத்திற்கு மோவாபின் காட்டிலே மீதியானியரை முறியடித்த பேதாதின் குமாரனாகிய ஆதாத் வந்தான்; அவனுடைய பட்டணத்தின் பேர் ஆவீத்.

ஊசு ஆதாத் மரித்தபொழுது, மஸ்ரேக்காவைச்சேர்ந்தானாகிய சம்லா அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஊஎ சம்லா மரித்தபொழுது, நதிக்கருகான ரேகோபோத்தூரானாகிய சவுல் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஊஅ சவுல் மரித்தபொழுது, அக்போருடைய குமாரனாகிய பாகால் ஆனான் அவன் பட்டத்திற்கு வந்தான்.

ஊக அக்போருடைய குமாரனாகிய பாகால் ஆனான் மரித்தபொழுது, அவன் பட்டத்திற்கு ஆதார் வந்தான்; அவனுடைய பட்டணத்தின் பேர் பாகு; அவன் பெண்சாதியின்பெயர் மெகேதாபெயேல், அவள் மத்ரேத்துடைய குமாரத்தியும் மேசகாவின் பேத்தியுமாயிருந்தாள்.

சஏ பலபல வம்சத்தாரும் தலத்தாரும் நாமத்தாருமாகிய ஏசாவின் சந்ததி பிரபுக்களுடைய நாமங்களாவன: திம்னாபிரபு, அல்வாபிரபு, எத்தேத்பிரபு,

சக அகோலிபாமாபிரபு, ஏலாபிரபு, பினோன்பிரபு.

சஉ கேனாஸ்பிரபு, தேமான்பிரபு, மிப்சார்பிரபு,

சஊ மக்தியேல்பிரபு, ஈராம்பிரபு, இவர்களே தங்கள் கைவசமான தேசத்திலே பல பல இடங்களிலே குடியிருந்த ஏதோம் சந்ததி பிரபுக்கள்; இந்த ஏதோமியருடைய தகப்பன் ஏசாதானே.

Digitized by Google

ஈஎ. அதிகாரம்.

யாக்கோபு தன் தகப்பன் தங்கின காணான்தேசமான சீமையிலே குடியிருந்தான்.

உ யாக்கோபுடைய சந்ததியின் நடபடியாவது: யோசேப்பு பதினேழு வயதிலே தன் சகோதரரோடே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்; அந்த இளைஞன் பில்காள் சில்பாளென்ற தன் தகப்பனுடைய பெண்சாதிகளின் குமாரரோடே இருந்து, இவர்கள் தர்க்கீர்த்தியை அவர்கள் தகப்பனண்டைக்கு வந்து சொல்லுவான்.

ஊ யோசேப்பு தனக்கு முதிர்வயதிலே பிறந்தபடியினாலே இஸ்ரவேல் தன்னுடைய எல்லாக் குமாரரைப் பார்க்கிலும் அவனைச் சிநேகித்து, பலவருணமான அங்கியை அவனுக்குச் செய்வித்தான்.

எ தங்கள் தகப்பன் அவனை அவனுடைய எல்லாச் சகோதரரைப்பார்க்கிலும் சிநேகிக்கிறதை அவன் சகோதரர் கண்ட பொழுதோவெனில், அவர்கள் அவனோடே பட்சமாய்ப் பேசமாட்டாதபடியாய், அவனைப் பகைத்தார்கள்.

ஏ¶ இதுவும்அல்லாமல் யோசேப்பு ஒரு சொப்பனத்தைக் கண்டு, தன்சகோதரருக்கு அறிவித்தான்; அதினிமித்தம் அவனை இன்னம் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஐ அவன் இவர்களோடே சொன்னதேதெனில், நான் கண்ட சொப்பனத்தைக் கேளுங்கள்.

ஒ இதோ நாம் கடு வயல்வெளியிலே அறுத்த அரிகளைக் கட்டிக்கொண்டிருந்தோம்; அப்பொழுது இதோ என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்தும் நின்றும் இருந்தது; ஆனால் இதோ உங்கள் அரிக்கட்டுகள் அதைச் சுற்றி என்னுடைய அரிக்கட்டை வணங்கிக்கொண்டனவென்றான்.

ஓ அப்பொழுது அவன் சகோதரர் அவனுடே, நீ எங்கள்மேல் ராஜாத்தனம்பண்ணவே பண்ணுவாயோ, நீ எங்களை ஆளவே ஆளுவாயோ என்று சொல்லி, அவனை அவன் சொப்பனங்களினிமித்தமும், அவன் வார்த்தைகளினிமித்தமும், இன்னம் அதிகமாய்ப் பகைத்தார்கள்.

ஔ¶ அவன் வேறொரு சொப்பனத்தைக் கண்டு, அதைத் தன் சகோதரருக்கு விவரித்துச் சொன்னதாவது: இதோ இன்னம் ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; இதோ சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் என்னை வணங்கிக்கொண்டனவென்றான்.

ஙி இதை அவன் தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் விவரித்தபொழுது, அவன் தகப்பன் அவனை அதட்டி அவனோடே, நீ கண்ட இந்தச் சொப்பனமேது, நானாமட்டும் குனிந்து உன்னை வணங்குவோமா நீயும் உன் தாயாரும் உன் சகோதரரும் வந்தே வருவோமோ என்றான்.

ஙக அவன் சகோதரர் அவன்மேல் பொறாமை ஆனார்கள்; அவன் தகப்பனோவெனில், இந்த வர்த்தமானத்தை மனதிலே வைத்துக்கொண்டான்.

ஙஉ¶ அவன் சகோதரர் சீகேமிலே தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்க்கப் போனார்கள்.

ஙஊ இஸ்ரவேல் யோசேப்போடே, உன் சகோதரர் சீகேமிலே ஆடுகளை மேய்க்கிறார்கள்அல்லவோ? அங்கேபோ, உன்னை அவர்களண்டைக்கு அனுப்புவேன், வா என்றான்; இவன் இதோ நான் போகிறேனென்றான்.

ஙசி அப்பொழுது அவன், நீ போய், உன் சகோதரர் எப்படி இருக்கிறார்களென்றும் ஆடுகள் எப்படி இருக்கின்றனவென்றும் பார்த்து, எனக்கு மறுசெய்தி கொண்டுவா என்று அவனுக்குச் சொல்லி, எப்ரோன் பள்ளத்தாக்கிலே இருந்து அவனை அனுப்பினான்; அப்படியே சீகேமுக்குப்போனான்.

ஙஎ¶ அப்பொழுது இதோ, ஒரு மனிதன் அவனை வெளியிலே வழிதப்பி நடக்கக்கண்டு, என்ன தேடுகிறாயென்று அவனைக் கேட்டான்.

Digitized by Google

20 அதற்கு அவன், என் சகோதரரைத் தேடுகிறேன், அவர்கள் எங்கே ஆடுமேய்க்கிறார்களென்று எனக்கு அறிவியுமென்றான்.

21 அந்த மனிதன் அவர்கள் இங்கேயிருந்து புறப்பட்டுப்போனார்கள்; ஏனெனில் தோத்தானுக்குப் போவோமென்று அவர்கள் சொல்லக் கேட்டேனென்றான்; அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரைப் பின்தொடர்ந்துபோய், அவர்களைத் தோத்தானிலே கண்டுபிடித்தான்.

22 அவர்கள் அவனைத் தூரத்திலே கண்ட பொழுது, அவன் தங்கள் அருகில் சேராததற்கு முன்னே அவனுக்கு விரோதமாய் அவனைக் கொலைசெய்யச் சதியோசனை பண்ணி,

23 ஒருவரோடொருவர், இதோ சொப்பனக்காரன் அங்கே வருகிறான்.

24 இப்பொழுதும் நாம் அவனைக் கொன்று, குழிகளில் ஒன்றிலே அவனைப் போட்டு, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்ததென்றுசொல்லி, அவன் சொப்பனங்கள் என்னவாமென்று பார்ப்போம் வாருங்களென்றார்கள்.

25 ரூபன் இதைக்கேட்டு, அவன் கையினின்று அவனை விடுவித்து, அவனைக் கொல்லாதிருப்போமாகவென்று சொல்லி, அவனை அவர்கள் கைக்குத் தப்புவித்து,

26 நீங்கள் இரத்தம் சிந்தவேண்டாம்; நீங்கள் அவன்மேல் கைபோடாமல், அவனை வனாந்தரத்தில் இருக்கிற அந்தக் குழியிலே போடுங்களென்று, ரூபன் அவனை அவர்கள் கைக்குத் தப்புவிக்கும்படிக்கும் அவனை அவன் தகப்பனண்டைக்குத் திரும்பக் கொண்டுபோகும்படிக்கும் அவர்களோடே சொன்னான்.

27 ¶ சம்பவித்ததேதென்றால் யோசேப்பு தன் சகோதரரண்டைக்கு வந்தபொழுது, அவர்கள் போசேப்பு உடுத்துக்கொண்டிருந்த பலவருண அங்கியாகிய அவன் அங்கியைக் கழற்றி,

28 அவனை எடுத்து, அந்தக் குழியிலே போட்டார்கள்; அது தண்ணீரில்லாத வெறுங்குழியாய் இருந்தது.

29 பிற்பாடு அவர்கள் அப்பம்சாப்பிட உளுக்காந்தார்கள்; அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கும் பொழுதோவெனில், இதோ கீலேயாத்திலிருந்து வருகிற இஸ்மவேலருடைய கூட்டத்தை வரக்கண்டார்கள்; அவர்களுடைய ஒட்டகங்கள் சம்பாரங்களையும் பிசின்தயிலத்தையும் வெள்ளைப்போளத்தையும் எகிப்திற்குக்கொண்டுபோகச் சுமந்துகடந்தன.

28 அப்பொழுது யூதா தன் சகோதரரோடே சொன்னதாவது: நாம் நம்முடைய சகோதரனைக் கொன்று, அவன் இரத்தத்தை மறைப்பதினாலே ஆதாயம் என்ன?

27 அவனை இஸ்மவேலருக்கு விற்போம் வாருங்கள்; நமது கை அவன்மேல் இராதிருப்பதாக; ஏனெனில் அவன் நம்முடைய சகோதரனும், நம்முடைய மாம்சமுமாய் இருக்கிறானென்றான்; அவன் சகோதரர் அவன் சொல்லைக் கேட்டார்கள்.

28 மீதியானியர் வர்த்தகரான மீதியானியர் கடந்துபோகிறபொழுது, அவர்கள் யோசேப்பை அந்தக் குழியிலிருந்து தூக்கி எடுத்து, யோசேப்பை இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றார்கள்; இவர்கள் யோசேப்பை எகிப்திற்குக் கொண்டுபோனார்கள்.

29 ரூபன் திரும்ப அந்தக் குழி அண்டைக்கு வந்து, இதோ யோசேப்பு குழியில் இல்லையென்று கண்டு, தன் வஸ்திரங்களைக் கிழித்து,

30 தன் சகோதரரண்டைக்குத் திரும்பி வந்து, இளைஞன் இல்லையே, நான் எங்கே போகப்போகிறேன் என்றான்.

31 ¶ அவர்கள் யோசேப்பின் அங்கியை எடுத்துக்கொண்டு, ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து, அந்த அங்கியை இரத்தத்திலே தோய்த்து,

32 பலவருணமான அந்த அங்கியைத் தங்கள் தகப்பன் அண்டைக்குக் கொண்டு

Digitized by Google

போகச்சொல்லி, இதை நாங்கள் கண்டுபிடித்தோம், இது உம்முடைய குமாரன் அங்கியோ அல்லவோ என்று பாரும் என்றுசொல்லி அனுப்பினார்கள்.

ஙங அவன் அதை அறிந்து, இது என் குமாரனுடைய அங்கி, ஒரு துஷ்டமிருகம் அவனைப் பட்சித்தது; யோசேப்பு பீறுண்ணவே பீறுண்டானென்றான்.

ஙச யாக்கோபு தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, தன் அரையில் இரட்டுக்கட்டிக்கொண்டு, அநேகநாள் தன் குமாரனுக்காகத் துக்கித்துக்கொண்டிருந்தான்.

ஙடு அவனுடைய எல்லாக்குமாரரும் அவனுடைய எல்லாக்குமாரத்திகளும் அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்துநின்றார்கள்; ஆனால் அவன் ஆறுதலுக்கு இடம் கொடாமல், நான் துக்கத்தோடே என் குமாரனண்டையில் குழியில் இறங்குவேனென்று சொல்லி, அவனுடைய தகப்பன் அவனுக்காக அழுதுகொண்டிருந்தான்.

ஙக மீதியானியரோவென்றால், அவனை எகிப்திலே பார்வோனின் பிரதானியாகிய போத்திபாரென்ற தலையாரிகளின் அதிபதிக்கு விற்றார்கள்.

ரூவ. அதிகாரம்.

அக்காலத்திலே சம்பவித்ததேதென்றால், யூதா தன் சகோதரரைவிட்டு இறங்கிப்போய், அதொல்லாம் ஊரானுகிய ஒரு மனிதனைச் சேர்ந்தான்; அவன்பேர் ஈரா.

உ அங்கே யூதா, சூவாவென்று பேருள்ள ஒரு கானானிய மனிதன் குமாரத்தியைக் கண்டு, அவளை விவாகம்பண்ணி, அவளிடத்தில் பிரவேசித்தான்.

ஊ அவன் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப் பெற்றான்; அவனுக்கு ஏரென்று பேரிட்டான்.

ச அவன் மறுபடியும் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்கு ஓனானென்று பேரிட்டான்.

ஞ அவன் திரும்பக் கர்ப்பம்தரித்து ஒரு குமாரனைப்பெற்று, அவனுக்குச் சேலா வென்று பேரிட்டாள்; அவன் இவனைப் பெறுகிறபொழுது அவன் கேசிபிலே இருந்தான்.

ரூ¶ யூதா தனக்கு முதல்பிறந்தவனுகிய ஏருக்கு, தாமாரென்று பேருள்ள ஒரு பெண்ணைக்கொண்டான்.

எ ஆனால் யூதாவுக்கு முதல்பிறந்த ஏரென்றவன் கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாதவனானதினாலே, கர்த்தர் அவனைக் கொன்றுபோட்டார்.

அ அப்பொழுது யூதா ஓனானுடனே, நீ உன் தமையன் பெண்சாதியினிடத்தில் பிரவேசித்து, அவனை மைத்துனச்சுதந்தரமாய்ப் படைத்து, உன் தமையனுக்கு வித்தை உண்டாக்கென்றான்.

கூ ஆனால் அந்த வித்துத் தன்னுடையதாயிராதென்று ஓனான் அறிந்தபடியினாலே, அவன் தன் தமையன் பெண்சாதியினிடத்தில் பிரவேசிக்கும்பொழுது, தன் தமையனுக்கு வித்தைக் கொடாதபடிக்கு அதைத் தரையிலே விழவிட்டுக் கெடுத்தான்.

ம அவன் செய்தது கர்த்தரின் கண்களுக்குமுன்பாகப் பொல்லாததானதினாலே, அவனையும் அவர் கொன்றுபோட்டார்.

மக அப்பொழுது யூதா தன் மருமகளாகிய தாமாருடனே, என் குமாரனுகிய சேலா பெரியவனுகும்மட்டும் உன் தகப்பன் வீட்டிலே கைம்பெண்சாதியாய்த் தங்கியிரு என்றான்; ஏனெனில் இவனும் தன் சகோதரனைப்போலச் சாவானே என்று அஞ்சிக்கையாயிருந்தான்; அப்படியே தாமார் போய்த் தன் தகப்பன்வீட்டிலே தங்கியிருந்தாள்.

மஉ¶ அநேகநாள் சென்றபிற்பாடு சூவாவின் குமாரத்தியாகிய யூதாவின்பெண்சாதி மரித்தாள்; யூதா துக்கம் ஆறினபிற்பாடு, தின்னுவுக்குத் தன் ஆடுகளை மயிர்கத்தரிக்கிறவர்களண்டையில் போயேறினான்; அவனும் அதொல்லாம் ஊராகிய ஈரா என்ற அவன் சிநேகிதனும் கூடத்தானே.

Digitized by Google

ம உ அப்பொழுது தாமாருக்கு, இதோ உன் மாமனார் தம்முடைய ஆடுகளை மயிர் கத்தரிக்கத் திம்னாவுக்குப் போயேறுகிறா ரென்று அறிவிக்கப்பட்டது.

ம ச அப்பொழுது அவள், சேலா பெரிய வனாயிருந்தும் தான் அவனுக்குப் பெண் சாதியாகக் கொடுக்கப்பட்டதில்லையென்று கண்டபடியினாலே, தன் கைம்பெண் இருப் பின் வஸ்திரங்களைத் தன்னைவிட்டு விலக்கி, முக்காடுபோட்டு மூடிக்கொண்டு, திம்னாவுக்குப் போகிற வழியிலிருக்கிற ஏநாற்றுக ளுக்குமுன்பாக உளுக்காந்தாள்.

ம டு யூதா அவளைக் கண்டு அவள் ஒரு வேசியென்று நினைத்தான்; ஏனெனில் தன் முகத்தை மூடியிருந்தான்.

ம ரு அவன் வழியிலே அவளிடமாய்த் திரும்பி, அவள் தன் மருமகளென்றறியாமல், நான் உன்னிடத்தில் பிரவேசிக்கட்டும் என்றான்; அப்பொழுது அவள், நீர் என் னிடத்தில் பிரவேசிக்கும்படிக்கு எனக் கென்ன தருவீரென்றாள்.

ம ள அதற்கவன், நான் மந்தையிலிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியை அனுப்பு வேன் என்றான்; இதற்கவள், நீர் அதை அனுப்பும்மட்டும் ஒரு அடைமானம் கொ டுத்தால் ஆமென்றாள்.

ம ஷ அப்பொழுது அவன், நான் உனக் குக் கொடுக்கவேண்டிய அடைமானம் என்னவென்று கேட்டான்; அப்பொழுது அவள், உம்முடைய மோதிரமும் உம்மு டைய கைச்சீலையும் உம்முடைய கையில் இருக்கிற உம்முடைய கோலுமே என்றாள்; அவன் இவைகளை அவளுக்குக் கொடுத்து, அவளிடத்தில் பிரவேசித்தான்; அவள் அவ னால் கர்ப்பம்தரித்து,

ம ஸ பிற்பாடு எழுந்திருந்துபோய், தன் முக்காட்டைத் தன்னைவிட்டு விலக்கி, தன் கைம்பெண் இருப்பின் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டாள்.

ம ழ அந்த அடைமானத்தை ஸ்நேரியின் கையிலே வாங்கிவர யூதா அதொல்லாம் ஊராளுகிய தன் சிநேகிதன் கையிலே வெ ள்ளாட்டுக்குட்டியையனுப்பினான்; இவன் அவளைக் காணுமல்,

ம க அவ்விடத்து மனிதனை வழியண்டை ஏநாற்றுகளருகே இருந்த சோரஸ்நேரி எங்கே என்று கேட்டான்; அதற்கவர்கள், இங்கே சோரஸ்நேரி இருந்ததில்லை என்றார்கள்.

ம ட அவன் யூதாவண்டைக்குத் திரும்பி வந்து, அவனைக் காணேன், அங்கே சோரஸ் நேரி இருந்ததில்லை என்று அவ்விடத்து மனி தரும் சொல்லுகிறார்கள் என்றான்.

ம ந அப்பொழுது யூதா, நாங்கள் அவமேர்த் திப்படாதபடிக்கு அவன் அதைக் கொண்டு போகட்டும், இதோ இந்த ஆட்டுக்குட்டி யை அனுப்பினேனே, நீயோவென்றால் அவ னைக் காணுதேபோனையென்றான்.

ம ப ஏறக்குறைய மூன்றுமாதம் சென்ற பின்பு சம்பவித்ததேதெனில், உன் மருமக ளாகிய தாமார் வேசித்தனம்பண்ணினாள்; இதோ வேசித்தனத்தில் கர்ப்பிணியுமானாள் என்று யூதாவுக்கு அறிவிக்கப்பட்டது; அப் பொழுது யூதா அவள் சுட்டெரிக்கப்பட அவளை வெளியே கொண்டுவாருங்கள் என் றான்.

ம ம அவள் வெளியே கொண்டுவரப்பட் டபொழுது, அவள் தன் மாமனாரண்டை க்கு ஆள் அனுப்பி, இவைகள் எவருடைய வைகளோ அவராலே நான் கர்ப்பிணியா யிருக்கிறேன்; இந்த மோதிரமும் இந்தக் கைச்சீலையும் இந்தக் கோலும் யாருடைய வைகளென்று பாருமென்று சொல்லி அ னுப்பினாள்.

ம ய அப்பொழுது யூதா அவைகளை அறிந் து, என்னிலும் நீதியுள்ளவளாய் இருக்கிறா ள்; ஏனென்றால் அவளை என் குமாரனாகிய சேலாவுக்குக் கொடாதேபோனேன் என்றா ன்; அப்புறம் அவன் அவளை அறிந்ததில்லை.

ந ர அவளுக்குப் பேறுகாலம் வந்தபொ ழுது, இதோ இரட்டைப்பிள்ளைகள் அவள் கர்ப்பத்திலிருந்தன.

ந ற அவள் பெறுகிறபொழுது ஒன்று கை

யை கீட்டிற்று; அப்பொழுது மருத்துவச்சி அதின் கையைப்பிடித்து, அதில் சிவப்புநூல் கட்டி, இது முந்த வெளிப்படுகிறதென்றாள்.

உஉ ஆனால் அது தன் கையைத் திரும்ப வாங்கிக்கொண்டபொழுது, இதோ அதின் சகோதரன் வெளிப்பட்டான்; அப்பொழுது அவள் நீ பீறிப்புறப்பட்டதென்ன? உன்மேல் இந்தப் பீறுதல் இருக்கிறதென்றாள், அதினாலே அவனுக்குப் *பேரேஸ் என்று பேரிடப்பட்டது. *மத். க. ஈ.

உஎ பிற்பாடு கையில் சிவப்புநூல் கட்டியிருந்த, அவன் தம்பி வெளிப்பட்டான்; அவனுக்குச் சேராவென்று பேரிடப்பட்டது.

ஈஈக. அதிகாரம்.

யோசேப்பு *எகிப்திலே கொண்டுபோகப்பட்டான்; ப்ார்வோனின் பிரதானியும் தலையாரிகளின் அதிபதியுமாகிய போத்திபாரென்ற எகிப்திய மனிதன் அவனை அவ்விடத்திற்குக் கொண்டுவந்த இஸ்மவேலரின் கையிலே கொண்டான். *க மோ. உஎ. உசு.

உ ஆனால் கர்த்தர் யோசேப்போடேகூட இருந்தார்; அவன் காரிய சமர்த்தனான மனிதனும், எகிப்தியனாகிய தன் எசமானனுடைய வீட்டிலே இருந்தான்.

ங கர்த்தர் அவனோடே இருக்கிறாரென்றும், அவன் செய்கிறவைகளை எல்லாம் கர்த்தர் வாய்க்கப்பண்ணுகிறாரென்றும், அவன் எசமான் கண்டான்.

ச ஆகையால் யோசேப்புக்கு அவன் கண்களில் தயவுகிடைத்தது; அவனுக்கு இவன் ஊழியக்காரனானன்; அவன் இவனைத் தன் வீட்டுக்கு விசாரிப்புக்காரனாக்கி, தனக்கு உண்டானவை எல்லாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

ஞ சம்பவித்ததெதெனில், அவன் இவனைத் தன் வீட்டுக்கும் தனக்குண்டானவைகள் எல்லாவற்றிற்கும் விசாரிப்புக்காரனாக்கினதுமுதல்கொண்டு, கர்த்தர் யோசேப்பின்நிமித்தம் எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார்; வீட்டிலும் வெளியிலும் அவனுக்குண்டானவைகளிலெல்லாம் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது.

ட ஆகையால் அவன் தனக்குண்டானவைகளை எல்லாம் யோசேப்பின் கையிலே ஒப்புவித்துவிட்டு, தான் புசிக்கிற போசனம் தவிர இவனிடத்திலிருந்த மற்றொன்றுக்கும் கவலைப்படாதிருந்தான்; யோசேப்போ வெனில், அழகான ரூபமும் பார்வைக்குச் சவுந்தரியமுமாய் இருந்தான்.

எ ¶ இந்த வர்த்தமானங்களுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், அவனுடைய எசமானனின் பெண்சாதி யோசேப்பின் மேலே கண்ணேட்டமாகி, என்னோடே சயனி என்றாள்.

அ ஆனால் அவன் அவள் சொல்லைக்கேளாமல், தன் எசமானனின் பெண்சாதியோடே சொன்னதாவது: இதோ வீட்டிலே என்னோடிருக்கிறவைகளில் ஒன்றுக்காகிலும் என் ஆண்டவன் கவலைப்படாமல், தமக்குண்டானவைகளை எல்லாம் என் கையில் ஒப்புவித்தார்.

கூ இந்தவீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; உன்னைத்தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கிவைத்ததில்லை; ஏனெனில் நீ அவருடைய பெண்சாதி; இப்பொழுதும் நான் இத்தனைபெரிய இந்தப் பொல்லாப்பைப்பண்ணி, பராபரனுக்கு விரோதமாய்ப் பாவம்செய்வது எப்படி என்றான்.

ஐ அவள் நித்தம் நித்தம் யோசேப்போடே அப்படிக்கொத்த பேச்சைச் சொல்லுவாள்; ஆனால் அவன் அவளுக்குச் சமீபமாய்ப் படுத்துக்கொள்ளவும் அவளோடிருக்கவும் அவளுக்குச் செவிகொடாதேபோகிறபொழுது,

ஙக ஒருநாள் சம்பவித்ததேதெனில், அவன் தன் வேலையைச் செய்கிறதற்கு வீட்டுக்குள்வந்தான்; வீட்டுமனிதரில் ஒருவரும் அப்பொழுது அங்கே வீட்டிலே இல்லை.

Digitized by Google

20 அப்பொழுது அவள் அவனை அவன் வஸ்திரத்தைப் பற்றிப்பிடித்து, என்னோடே சயனி என்றாள்; அவனோவென்றால் தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டோடி வெளியே புறப்பட்டுப்போனான்.

21 அவன் தன் வஸ்திரத்தைத் தன் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனதை அவள் கண்டபொழுது,

22 அவள் தன் வீட்டு மனிதரைக் கூப்பிட்டு அவர்களுக்குச் சொன்னதாவது: பாருங்கள், எபிரேய மனிதனை நம்மைச் சரசம்பண்ணும்படிக்கு நமக்குக் கொண்டு வந்தார், அவன் என்னோடே சயனிக்கிறதற்காக என்னண்டை வந்தான்; ஆனால் மகா சத்தமாய்க் கூப்பிட்டேன்.

23 நான் என் சத்தத்தை உயர்த்திக் கூப்பிடுகிறதை அவன் கேட்டபொழுது, அவன் தன் வஸ்திரத்தை என்னண்டையில் விட்டோடி வெளியே புறப்பட்டுப்போனான் என்று சொல்லி,

24 அவனுடைய எசமானன் வீட்டிற்கு வரும்மட்டும் அவன் வஸ்திரத்தைத் தன் கிட்டவைத்து,

25 அவனோடே அந்த வார்த்தைகளுக்குச் சரியாகப்பேசி, நீர் எங்களுக்குக் கொண்டுவந்த அந்த எபிரேய வேலைக்காரன் என்னைச் சரசம்பண்ண என்னண்டை வந்தான்.

26 அப்பொழுது சம்பவித்ததேதெனில், நான் என்சத்தத்தை உயர்த்திக் கூப்பிடுகிறபொழுது, அவன் தன் வஸ்திரத்தை என்னண்டையில்விட்டு வெளியே ஓடிப்போனான் என்றாள்.

27 உம்முடைய வேலைக்காரன் எனக்கு இப்படிச் செய்தானென்று தன் பெண்சாதி தன்னோடே சொன்ன வார்த்தைகளை அவனுடைய எசமானன் கேட்டபொழுதோவெனில், அவனுக்குக் கோபம் மூண்டது.

28 அப்பொழுது யோசேப்பின் எசமானன் அவனைப் பிடித்து, இராசாவின் கட்டளையால் கட்டுண்டவர்கள் இடக்கிற காவல் வீட்டிலே அவனை ஒப்புவித்தான்; அங்கே அந்தக் காவல்வீட்டில் அவன் இருந்தான்.

29 ஆனால் கர்த்தர் யோசேப்போடே கூட இருந்து, அவன்மேலே கிருபைவைத்து, அவனுக்குக் காவல்வீட்டுத் தலைவன் கண்களில் தயவுகிடைக்கப்பண்ணினார்.

30 காவல்வீட்டுத் தலைவன் காவல்வீட்டிலே கட்டுண்டிருந்த யாவரையும் யோசேப்பின் கையிலே ஒப்புவித்தான்; அங்கே செய்யவேண்டியவைகளை எல்லாம் அவன் செய்தான்.

31 அவன் கையிலிருந்த ஒன்றையும் காவல்வீட்டுத்தலைவன் கண்ணோக்கினதில்லை; ஏனெனில் கர்த்தர் அவனோடேகூட இருந்தார்; அவன் எதைச்செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப்பண்ணினார்.

40. அதிகாரம்.

1 இந்த நடபடிகளுக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், எகிப்தின் இராசாவுக்குப் பானம்கொடுக்கிறவனும் அப்பம் சுடுகிறவனும் எகிப்தின் இராசாவாகிய தங்கள் ஆண்டவனுக்குக் குற்றம்செய்தார்கள்.

2 அப்பொழுது பார்வோன் தன்னுடைய இரண்டு பிரதானிகளாகிற பானம்கொடுக்கிறவர்களின் தலைவன்மேலும் அப்பம் சுடுகிறவர்களின் தலைவன்மேலும் கடுங்கோபமாகி,

3 அவர்களை யோசேப்புக்கட்டுண்டிருந்த காவல் வீடாகிய தலையாரிகளின் தலைவன் வீட்டிலே காவல்பண்ணுவித்தான்.

4 அப்பொழுது தலையாரிகளின்தலைவன் அவர்களை விசாரிக்கும் வேலைக்கு யோசேப்பை வைத்தான்; இவன் அவர்களுக்கு ஊழியம்செய்தான்; அவர்கள் அநேகம் நாள் காவலில் இருந்தார்கள்.

5 ஆனால் எகிப்தின் இராசாவுக்குப் பானம்கொடுத்தவனும் அப்பம் சுட்டவனுமாகியகாவல்வீட்டில்கட்டுண்டிருந்த அவ்விரண்டுபேரும் ஒரே இராத்திரியில் அவனும் இவனும் தங்களுக்கு வெவ்வேறே அர்த்

தமுன்ன சொப்பனங்களைக் கண்டார்கள்.

கூ காலமே யோசேப்பு அவர்களண்டை வந்து அவர்களைப் பார்க்கும்பொழுது, இதோ, கலங்கி இருந்தார்கள்.

எ அப்பொழுது தன் எசமானனின் வீட்டில் தன்னோடே காவல்பண்ணப்பட்டிருந்த பார்வோனின் பிரதானிகளை அவன், உங்கள் முகங்கள் இன்று துக்கமாயிருக்கிறது ஏதென்று கேட்டான்.

ஆ அவர்கள் அவனுடனே, சொப்பனம் கண்டோம், அதை வியாக்கியானம்பண்ணுகிறவன் இல்லை என்றார்கள்; அப்பொழுது யோசேப்பு அவர்களுடனே, வியாக்கியானம்பண்ணுதல் தேவனுடையதல்லவோ? எனக்கதை விவரியுங்கள் என்றான்.

கூ அப்பொழுது பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்புக்குத் தன் சொப்பனத்தை விவரித்து அவனுக்குச் சொன்னதாவது: என் சொப்பனத்தில் இதோ, ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருந்தது.

ஐ அந்தத் திராட்சச்செடியிலே மூன்று கொடிகள் இருந்தது; அது தளிர்க்கிறதாயிருந்தது; அதின் பூக்கள் புறப்பட்டன; அதின் குலைகள் பழங்களாகப் பழுத்தது.

ஒ பார்வோனின் பாத்திரம் என் கையில் இருந்தது; நான் அந்தப் பழங்களை வாங்கி, அவைகளைப் பார்வோனின் பாத்திரத்தில் பிழிந்து, அந்தப் பாத்திரத்தைப் பார்வோனின் கையிலே கொடுத்தேன் என்றான்.

ஐஉ அப்பொழுது யோசேப்பு அவனுக்குச் சொன்னதாவது: அதின் அர்த்தமென்னவெனில், அந்த மூன்று கொடிகள் மூன்று நாளாய் இருக்கின்றன.

ஐக இன்னம் மூன்று நாளுக்குள்ளே பார்வோன் உம்முடைய தலையை உயர்த்தி, உம்மைத் திரும்ப உமது நிலையிலே நிறுத்துவார்; அப்பொழுது நீர் அவருக்குப் பானம்கொடுத்த முந்தின வழக்கத்தின்படியே, பார்வோனின் பாத்திரத்தை அவர் கையிலே கொடுப்பீர்.

ஐச ஆனால் நீர் சுகவாழ்வாய் இருக்கிற பொழுது, என்னை நினைத்து, என்மேலே தயவுவைத்து, பார்வோனுக்கு என் சம்பந்தியை நினைப்பூட்டி, என்னை இந்த வீட்டிலிருந்து வெளிப்படப்பண்ணும்.

ஐடு ஏனெனில் எபிரெயதேசத்திலிருந்து திருட்டாளவாய் விலைப்பட்டுவந்தேன்; என்னை இந்தக் கிடங்கிலே வைக்கிறதற்கு இவ்விடத்திலே நான் ஒன்றும் செய்ததுமில்லை என்றான்.

ஐஎ ¶ நன்றாய் அர்த்தம் சொன்னானென்று அப்பம் சுடுகிறவர்களின் தலைவன் கண்டு, யோசேப்போடேசொன்னதாவது: நானும் என் சொப்பனத்தில் கண்டதேதென்றால், இதோ வெண்மையான மூன்று கூடை என் தலையின்மேல் இருந்தன.

ஐஏ மேல்கூடையிலே அப்பம்சுடுகிறவனுடைய வேலையான பார்வோனுடைய சகலவித போசனத்திலும் சில இருந்தன; அவைகளைப் பறவைகள் வந்து என் தலையின்மேல் இருந்த கூடையிலெடுத்துப்பட்சித்தன என்றான்.

ஐஐ அப்பொழுது யோசேப்புப் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: அதின் அர்த்தம் ஏதெனில், அந்த மூன்று கூடைகள் மூன்றுநாளாய் இருக்கின்றன.

ஐகூ இன்னம் மூன்று நாளுக்குள்ளே பார்வோன் உம்முடைய மேலிருக்கிற உம்முடைய தலையை உயர்த்தி, உம்மை மரத்திலே தூக்கிப்போடுவிப்பார்; அப்பொழுது பறவைகள் உம்முடைய மாம்சத்தைத் தின்னுமென்றான்.

ஐஉ ¶ பார்வோன் சென்மநாளாகிய மூன்றாம் நாளில் சம்பவித்ததேதெனில், அவன் தன் ஊழியக்காரருக்கு எல்லாம் ஒரு விருந்துபண்ணி, பானம்கொடுக்கிறவர்களுடைய தலைவன் தலையையும் அப்பம்சுடுகிறவர்களுடைய தலைவன் தலையையும் தம்முடைய ஊழியக்காரரின் நடுவே உயர்த்தி.

ஐக பானம் கொடுக்கிறவர்களின் தலைவனைப் பானம்கொடுக்கிற தன் உத்தியோ

கத்திற்குத் திரும்பிவரப்பண்ணினான்; அப்படியே அவன் பார்வோன்கையிலே பாத்திரத்தைக் கொடுத்தான்.

22 அப்பம் சுடுகிறவர்களின் தலைவனே யோவென்றால், தூக்கிப்போடுவித்தான்; யோசேப்பு அவர்களுக்கு அர்த்தம் சொன்னதற்குச் சரியாகத்தானே.

23 ஆனால் பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் யோசேப்பை நினையாமல் அவனை மறந்தான்.

42. அதிகாரம்.

இரண்டுவருஷம் சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றால், பார்வோன் ஒரு சொப்பனத்தைக் கண்டான்; அதேதெனில் இதோ, நதியண்டையிலே நின்றான்.

2 அப்பொழுது இதோ நேர்த்தியான ரூபமும் மாம்சக் கொழுப்புமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறிப் புல்மேய்ந்தன.

3 ஆனால் இதோ, அவைகளின்பிறகே அவலட்சணரூபமும் மாம்சச்சீவனுமான வேறே ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி, நதி ஓரத்திலே அந்தப் பசுக்களண்டையிலேநின்றன.

4 அவலட்சண ரூபமும் மாம்சச்சீவனுமான இந்தப் பசுக்கள், நேர்த்தியான ரூபமும் கொழுப்புமான அந்த ஏழுபசுக்களைப் பட்சித்தன; அப்பொழுது பார்வோனுக்கு நித்திரை தெளிந்தது.

5 பிறகு அவன் நித்திரைபோய் இரண்டாம்விசை கண்ட சொப்பனமாவது: இதோ, கனமான ஏழு நல்ல கதிர்கள் ஒரே முதலிலிருந்து ஒங்கிவளர்ந்தன.

6 ஆனால் இதோ, அவைகளுக்குப்பிற்பாடு சாவியானவைகளும்கொண்டல்காற்றினால் தீய்ந்தவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தன.

7 சாவியான இந்தக் கதிர்கள் கனமும் நிறைபலனுமான அந்த ஏழுகதிர்களை விழுங்கின; அப்பொழுது பார்வோன் விழித்துக்கொண்டான்; இதோ அது சொப்பனமாயிருந்தது.

8 ¶ சம்பவித்ததேதெனில், காலமே அவனுடைய ஆவி கலங்கியிருந்தது; அப்பொழுது அவன் எகிப்தினுடைய சகல சான்நிரிகளையும் சகல ஞானிகளையும் அழைத்தனுப்பி, அவர்களுக்குத் தன் சொப்பனங்களைப் பார்வோன் விவரித்தான்; ஆனால் பார்வோனுக்கு அவைகளின் அர்த்தத்தைச் சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை.

9 அப்பொழுது பானம்கொடுக்கிறவர்களின் தலைவன் பார்வோனுடனே பேசிச் சொன்னதாவது: இன்று நான் என் பாவங்களை நினைக்கிறேன்.

10 பார்வோன் தம்முடைய ஊழியக்காரர்மேல் கடுங்கோபம் அடைந்து, என்னையும் அப்பம்சுடுகிறவர்களின் தலைவனையும் தன் யாரிகளின் தலைவன் வீட்டிலே காவலிலே வைத்தாரே.

11 அப்பொழுது நானும் அவனும் ஒரே இராத்திரியிலே எங்களுக்கு வெவ்வேறே அர்த்தமாகிய சொப்பனங்களைக் கண்டோம்.

12 அப்பொழுது தலையாரிகளின் தலைவனுக்கு வேலைக்காரனாகிய எபிரெய பிள்ளையாண்டான் ஒருவன் அங்கே எங்களோடே இருந்தான்; அவனுக்கு அவைகளை விவரித்தோம்; அப்பொழுது எங்கள் சொப்பனங்களுக்கிருந்த வெவ்வேறே அர்த்தங்களின்படியே, எங்களுக்கு அவன் எங்கள் சொப்பனங்களின் வியாக்கியானஞ்சொன்னான்.

13 அவன் எங்களுக்கு எப்படி வியாக்கியானஞ்சொன்னானோ, அப்படியே வந்து சம்பவித்தது; என்னைத் திரும்ப என் நிலையிலே நிறுத்தி, அவனைத் தூக்கிப்போடுவித்தானென்றான்.

14 ¶ அப்பொழுது பார்வோன் யோசேப்பை அழைத்தனுப்பினான்; அவனைத் தீவிரமாய்க் கிடங்கிலிருந்து புறப்படப்பண்ணினார்கள்; அவன் சவரம்பண்ணிக்கொண்டு, தன் வஸ்திரங்களை மாற்றிப் பார்வோனண்டைக்கு வந்தான்.

15 அப்பொழுது பார்வோன் யோசேப்

Digitized by Google

போடே சொன்னதாவது: ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; அதின் அர்த்தத்தைச் சொல்லுகிற ஒருவரும் இல்லை; நீயோவென்றால் ஒரு சொப்பனத்தைக் கேட்டால், அதின் அர்த்தத்தைச் சொல்லலாமென்று நான் உன்னைக்குறித்துக் கேள்விப்பட்டேன் என்றான்.

ய க அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தாரமாக: *நான் அல்ல, பராபரன்தானே பார்வோனுக்குச் சமாதானமுள்ள உத்தரவு அருளிச்செய்வாரென்றான். *க மோ. சபை. அ. தானி. உ. நபி.

ய ஏ பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: என் சொப்பனத்திலே இதோ நான் நதியோரத்திலே நின்றேன்.

ய ஐ அப்பொழுது இதோ, மாம்சக்கொழுப்பும் நேத்தியான ரூபமுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்தேறிப் புல்மேய்ந்தன.

ய ஒ ஆனால் இதோ அவைகளின் பிறகாலே நரம்பனும் மகா அவலட்சண ரூபமும் மாம்சச் சிவலுமான வேறே ஏழுபசுக்கள் ஏறிவந்தன; இவைகளைப்போல அவலட்சணமான பசுக்களை எகிப்துதேசமெங்கும் நான் கண்டதில்லை.

ய ஓ சிவலும் அவலட்சணமுமான இந்தப் பசுக்கள் கொழுப்பான அந்த முன்னின ஏழு பசுக்களைப் பட்சித்துப்போட்டன.

ய ஔ அவைகள் இவைகளின் வயிற்றிற்குள் போனியும் இவைகளின் வயிற்றிற்குள் போயிற்றென்று தெரியப்படவில்லை; முன்னிருந்ததுபோல இவைகளின் ரூபம் அவலட்சணமாயிருந்தது; அப்பொழுது எனக்கு நித்திரை தெளிந்தது.

ய ஃ பின்னையும் என் சொப்பனத்திலே நான் கண்டதாவது: இதோ, நிறைந்திருக்கிற ஏழு நல்ல கதிர்கள் ஒரே மூதலிலிருந்து ஓங்கிவளர்ந்தன.

உக ஆனால் அவைகளுக்குப்பிற்பாடு, இதோ, சாவியானவைகளும் கொண்டல் காற்றினால் தீய்ந்து பதரானவைகளுமான ஏழு கதிர்கள் முளைத்தன.

உச சாவியான இந்தக் கதிர்கள் நல்லவைகளான அந்த ஏழு கதிர்களை விழுங்கின என்பதுதானே; இதைச் சாஸ்திரிகளுக்குச் சொன்னேன்; ஆனால் இதின் அர்த்தத்தை எனக்கு விடுவிக்கிறவன் இல்லை என்றான்.

உடு ¶ அப்பொழுது யோசேப்பு பார்வோனுடே சொன்னதாவது: பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்; தாம் செய்யப்போகிறதைப் பராபரன் பார்வோனுக்கு அறிவித்தார்.

உசு அந்த ஏழு நல்ல பசுக்கள் ஏழு வருஷமாய் இருக்கின்றன; அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷம்தான்; இவை ஒரே சொப்பனமாய் இருக்கின்றன.

உஎ அவைகளின் பிறகாலே ஏறிவந்த சிவலும் அவலட்சணமுமான ஏழு பசுக்கள் ஏழு வருஷமாய் இருக்கின்றன; கொண்டல் காற்றினால் தீய்ந்த சாவியான ஏழு கதிர்களும் அப்படித்தான்; இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களாயிருக்கும்.

உஏ பராபரன் செய்யப்போகிறதைப் பார்வோனுக்குக் காண்பித்தாரென்று பார்வோனுக்குச் சொன்னேனே, அது இந்த வர்த்தமானம்தான்.

உஐ இதோ எகிப்து தேசமெங்கும் மகா பரிபூரணம் உண்டாயிருக்கிற ஏழு வருஷங்கள் வருகின்றன.

உஒ ஆனால் அவைகளுக்குப்பிற்பாடு பஞ்சமுள்ள ஏழு வருஷங்கள் எழும்பும்; அப்பொழுது எகிப்துதேசத்தில் அந்தப் பரிபூரணமெல்லாம் மறக்கப்பட்டிருக்கும்; அந்தப் பஞ்சம் தேசத்தை மாளப்பண்ணும்.

உக தேசத்திலிருந்த பரிபூரணம் பிற்பாடு வருகிற அந்தப் பஞ்சத்தினாலே தெரியப்படாதிருக்கும்; ஏனெனில் மகா கனமானதாயிருக்கும்.

உஉ பார்வோனுக்கு இந்தச் சொப்பனம் இரட்டித்து வந்ததற்கு அர்த்தம் என்னவென்றால், இந்தக் காரியம் பராபரனால் நிச்சயமாய் நிருணிக்கப்பட்டது; அதைச்

செய்யப் பராபரன் தீவிரிக்கிருரென்பது தானே.

ஈக இப்பொழுதும் பார்வோன் உணர்வும் ஞானமுமுள்ள ஒரு மனிதனைப்பார்த்து, அவனை எகிப்துதேசத்தின்மேல் அதிகாரியாக வைக்கக்கடவர்.

ஈச இப்படிப் பார்வோன் செய்து, தேசத்தின்மேல் மணியக்காரனை வைத்து, பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் எகிப்துதேசத்தின் பலனிலே ஐந்தில் ஒருபங்கை வாங்குவாராக.

ஈடு அவர்கள் வருகிற இந்த நல்ல வருஷங்களின் ஆகாரத்தை எல்லாம் சேர்த்து, பட்டணங்களில் ஆகாரம் உண்டாயிருக்கும்படிக்கு, பார்வோனுடைய கையின் கீழ்த் தானிய அம்பாரங்களை வைத்துவைப்பார்களாக.

ஈசு தேசம் பஞ்சத்தினால் சங்காரமாகாதபடிக்கு, அந்த ஆகாரம் எகிப்துதேசத்தில் வரும் பஞ்சமுள்ள ஏழு வருஷங்களுக்காகத் தேசத்திற்கு ஒரு வைப்பாயிருக்கக்கடவதென்றான்.

ஈஎ ¶ இந்த வார்த்தை பார்வோன் கண்களுக்கும் அவனுடைய எல்லா ஊழியக்காரரின் கண்களுக்கும் நன்றாயிருந்தது.

ஈஅ அப்பொழுது பார்வோன் தன் ஊழியக்காரரோடே, பராபரனுடைய ஆவியுள்ள இந்த மனிதனைப்போல ஒருவன் அகப்படுவானே என்றான்.

ஈகூ பிற்பாடு பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: பராபரன் இவை எல்லாம் 'உனக்கு அறிவித்திருக்கிறபடியால், உன்னைப்போல உணர்வும் ஞானமுமுள்ளவன் இல்லை.

சலி நீ என் வீட்டு விசாரிப்புக்காரனாய் இருப்பாய்; உன் வாக்கின்படியே என் சனமெல்லாம் வணங்கிச் செய்யக்கடவது; இராசா சனத்திற்குமாத்திரம் உன்னிலும் பெரியவனாய் இருப்பேனென்றான்.

சக பின்னையும் பார்வோன் யோசேப்புடனே, பார், உன்னை எகிப்துதேசத்தின்மேலெல்லாம் 'அதிகாரியாக்கினேன் என்று சொல்லி,

சஉ பார்வோன் தன் கையில் போட்டிருந்த தன்னுடைய மோதிரத்தைக் கழற்றி, அதை யோசேப்பின் கையிலே போட்டு, மெல்லிய புடவையான வஸ்திரங்களை அவனுக்குத் தரிப்பித்து, பொன்சரப்பணியை அவன் கழுத்திலே போட்டு,

சஈ தனக்கிருந்த இரண்டாம் இரதத்தின்மேல் அவனை ஏறப்பண்ணி, முழங்கால்படியிடுக்களென்று அவனுக்குமுன்பாகக் கூறுவித்து, அவனை எகிப்துதேசத்தின்மேலெல்லாம் அதிகாரியாக்கினான்.

சச பார்வோன் யோசேப்புடனே, நான் பார்வோன்; ஆனால் உன்னை அல்லாமல் எகிப்துதேசமெங்கும் ஒருவரும் தன் கையையும் தன் காலையும் எடுப்பதில்லை என்றான்.

சடு பார்வோன் யோசேப்புக்கு, இரகசியத்தை வெளிப்படுத்துகிறவனென்ற பெயரைத்தரித்து, அவனுக்கு ஓன்பட்டணத்து ஆசாரியனாகிய போத்திபேராவின் குமாரத்தியாகிய அஸ்காத்தைப் பெண்சாதியாகக் கொடுத்தான்; யோசேப்பு எகிப்துதேசத்தைச் சுற்றிவரப் புறப்பட்டான்.

சஈ ¶ யோசேப்பு எகிப்தின் இராசாவாகிய பார்வோனுக்குமுன்பாக நிற்கிறபொழுது, முப்பது வயதாயிருந்தான்; யோசேப்பு பார்வோனைவிட்டுப் புறப்பட்டு, எகிப்துதேசத்தை எல்லாம் கடந்தான்.

சஎ பரிபூரணமுள்ள ஏழு வருஷங்களில் தேசம் மிகுதியாய்ப் பலன்தந்தது.

சஅ எகிப்துதேசத்தில் வந்த அந்த ஏழு வருஷங்களின் ஆகாரத்தை எல்லாம் அவன் சேர்த்து, அந்த ஆகாரத்தைப் பட்டணங்களில் கட்டிவைத்தான்; ஒவ்வொரு பட்டணத்திற்குள்ளே அதினதின் சுற்றுப்புறத்து ஆகாரத்தையே கட்டிவைத்தான்.

சகூ அப்படியே யோசேப்பு தானியத்தைக் கடற்கரை மணலைப்போல மிகவும் நிரட்சியாக எண்ணி ஓயும்மட்டும் குவித்து

லவத்தான்; ஏனெனில் எண்ணிக்கைக்கு அடங்காததாயிருந்தது.

ஐ ¶ பஞ்சமுன்னவருஷங்கள்வராததற்கு முன்னே யோசேப்புக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள்; அவர்களை ஓன் பட்டணத்து ஆசாரியனுகிய போத்திபேராவின் குமாரத்தியாகிய அஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

ஒக யோசேப்பு மூத்தப் பிறந்தவனுக்கு மனாசே என்று பேரிட்டான்; ஏனெனில் என்னுடைய எல்லா வருத்தத்தையும் என் தகப்பனுடைய வீடனைத்தையும் பராபரன் என்னை மறக்கப்பண்ணினாரென்றான்.

ஙஉ இரண்டாம் குமாரனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான்; ஏனெனில் நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்திலே பராபரன் என்னைப் பலுகப்பண்ணினாரென்றான்.

ஙஎ ¶ எகிப்துதேசத்தில் வந்த பரிபூரண மான ஏழு வருஷங்களும் முடிந்தபொழுது,

ஙசு பஞ்சமுன்ன ஏழுவருஷங்கள் யோசேப்பு சொன்னபடியே வரத்துவக்கின; அப்பொழுது எல்லாத் தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிற்று; ஆனால் எகிப்துதேசமெங்கும் ஆகாரமிருந்தது.

ஙஅ எகிப்துதேசமெங்கும் பஞ்சம் உண்டாகும்போது, சனம் அப்பத்திற்காகப் பார்வோனைநோக்கிக் கூப்பிட்டது; அப்பொழுது பார்வோன் எல்லா எகிப்தியருக்கும்நீங்கள் யோசேப்பண்டைக்குப்போய், அவன் உங்களுக்குச் சொல்லும்படியே செய்யுங்களென்றான்.

ஙக பஞ்சம் தேசமெங்கும் உண்டாகும்போது, யோசேப்பு களஞ்சியங்களை எல்லாம் திறந்து, எகிப்தியருக்கு விற்றான்; ஏனெனில் பஞ்சம் எகிப்துதேசத்தில் கனமானதாயிற்று.

ஙஉ சகல தேசங்களின் மனிதரும் யோசேப்பினிடத்திலே கொள்ள எகிப்திற்கு வந்தார்கள்; ஏனெனில் பூமியெங்கும் பஞ்சம் மிகுதியாயிருந்தது.

சஉ. அதிகாரம்.

எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு அறிந்தபொழுது, யாக்கோபு தன் குமாரருக்கு, நீங்கள் ஒருவனை ஒருவர் பார்க்கிறதென்ன?

உ இதோ எகிப்திலே தானியம் உண்டென்று கேட்டேன்; நாம் சாகாமல் உயிரோடிருக்கும்படிக்கு அங்கே இறங்கிப்போய், நமக்காகத் தானியம் கொள்ளுங்களென்றான்.

ஊ அப்பொழுது யோசேப்பின் சகோதரரில் பத்துப்பேர் எகிப்திலே தானியம் கொள்ள இறங்கிப்போனார்கள்.

ச ஆனால் யோசேப்பின் தம்பியாகிய பென்யமீனை யாக்கோபு அவன் சகோதரரோடேகூட அனுப்பாதே இருந்தான்; ஏனென்றால் அவனுக்கு ஒருவேளை ஒரு சேதம் வருமோவென்று சொன்னான்.

ஙு அப்படியே கொள்ளுகிறதற்காக வருகிறவர்களோடேகூட இஸ்ரவேலின் குமாரரும் வந்தார்கள்; ஏனெனில் கானான்தேசத்திலே பஞ்சம் உண்டாயிருந்தது.

ஙூ யோசேப்போவென்றால், தேசத்தின்மேல் அதிகாரியாயிருந்து, அவனே தேசத்தின் சனத்திற்கெல்லாம் விற்றான்; யோசேப்பின் சகோதரர் வந்து, முகம்குப்புறத் தரையிலே விழுந்து அவனை வணங்கினார்கள்.

ஙஎ யோசேப்பு தன் சகோதரரைப் பார்க்கிறபொழுது அவர்களை அறிந்தான்; ஆனால் அறியாதவன்போல அவர்களுக்குக் காண்பித்து, அவர்களோடே கடினமாய்ப் பேசி, அவர்களுடனே, எங்கேயிருந்து வந்தீர்களென்றான்; அப்பொழுது அவர்கள் ஆகாரம்கொள்ள கானான்தேசத்திலிருந்து வந்தோமென்றார்கள்.

ஙஅ யோசேப்பு தன் சகோதரரை அறிந்தான்; அவர்களோவெனில் அவனை அறியாதிருந்தார்கள்.

ஙக யோசேப்பு அவர்களைக்குறித்துத் தான் கண்டிருந்த *சொப்பனங்களை நினைத்து, அவர்களோடே, நீங்கள் வேவுகாரர், தேசம்

எங்கே நிறந்துகிடக்கிறதென்று பார்க்கவந் தீர்களென்றான். *க மோ. ஈ.எ. டு—ய.

ய அவர்களோவென்றால் அவனோடேசொன்னதாவது: அல்ல எங்களாண்டவனே, ஆகாரம்கொள்ள உம்முடைய அடியார் வந்தார்கள்.

யக நாங்கள் எல்லாரும் ஒருவருடைய பிள்ளைகள்; நாங்கள் உண்மையுள்ளவர்கள்; உம்முடைய அடியார் வேவுகாரரல்ல என்றார்கள்.

யஉ அவனோவெனில் அவர்களோடே, இப்படியல்ல, தேசம் எங்கே நிறந்துகிடக்கிறதென்று பார்க்கவே வந்தீர்களென்றான்.

யங அப்பொழுது அவர்கள் சொன்னதாவது: உம்முடைய அடியார் கானான்தேசத்திலிருக்கிற ஒருவருக்குக் குமாரராகிய பன்னிரண்டு சகோதரர்; ஆனால் இதோ, இளையவன் இந்நாளில் எங்கள் தகப்பனண்டையிலிருக்கிறான்; ஒருவனோவென்றால் காணாமல்போனான் என்றார்கள்.

யச யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் வேவுகாரரென்று நான் உங்களோடே சொன்னபடியே இருக்கும்.

யடு உங்கள் இளைய சகோதரன் இங்கே வந்தாலொழிய நீங்கள் இங்கேயிருந்து புறப்படுவதில்லை என்று பார்வோனின் சீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதினால் சோதிக்கப்படுவீர்கள்.

யசு உங்கள் சகோதரனை அழைத்துவர உங்களில் ஒருவனை அனுப்புங்கள்; நீங்களோவென்றால் கட்டுண்டிருப்பீர்கள்; உங்களில் நிசமுண்டோவென்று உங்கள் வார்த்தைகள் சோதிக்கப்படும்; இல்லாவிட்டால் நீங்கள் வேவுகாரரென்று பார்வோனின் சீவனைக்கொண்டு சொல்லுகிறேனென்றுசொல்லி,

யஎ அவர்களை ஏகமாய் மூன்றுநாள் காவலிலே போடுவித்தான்.

யஅ மூன்றாம்நாளிலே யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் உயிரோடே இருக்கும்படிக்கு ஒன்று செய்யுங்கள்; நான்பராபரனுக்குப்பயப்படுகிறவன்.

யகூ நீங்கள் நிசமுள்ள மனிதராகில், உங்கள் சகோதரனாகிய ஒருவன்நீங்கள் காவல் பண்ணப்பட்டவீட்டில் கட்டுண்டிருக்கட்டும்; நீங்களோவென்றால் புறப்பட்டு, உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியம்கொண்டுபோய்,

யஙு உங்கள் இளைய சகோதரனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; அப்பொழுது நீங்கள் சாவாதபடிக்கு, உங்கள் வார்த்தைகள் மெய்ப்பட்டிருக்குமென்றான்; அவர்கள் அப்படிச் செய்யப்போய்,

யச ஒருவரோடொருவர் சொன்னதாவது: நாம் நம்முடைய சகோதரனுக்குச் செய்த குற்றமே நம்முடையமேல் சுமருகிறது; அவன் நம்மை இரக்கம் கேட்கும்போது, அவன் ஆத்துமத்திற்கு இருந்த இடுக்கத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாதேபோனமே; ஆகையால் இந்த இடுக்கம் நம்முடையமேல் வருகிறதென்றார்கள்.

யஙு அப்பொழுது ரூபன் அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக, *இளைஞனுக்கு விரோதமாகப் பாவம்செய்யாதிருங்களென்று நான் உங்களோடே சொன்னதில்லையோ? நீங்களோ கேளாதேபோனீர்கள்; இப்பொழுது இதோ அவன் இரத்தப்பழி கேட்கப்படுகிறதென்றான். *க மோ. ஈ.எ. உக, ஙஙு.

உஈ ஆனால் யோசேப்பு இதைக் கேட்டானென்று அவர்கள் அறியாதேபோனார்கள்; ஏனெனில் தபாசித்தனம் பண்ணுகிறவன் அவர்களுக்குள்ளே இருந்தான்.

உச அவன் அவர்களைவிட்டு அப்பாலேபோய் அழுது, திரும்ப அவர்களண்டைவந்து, அவர்களோடே பேசி, அவர்களுக்குள்ளே சிமெயோனைப் பிடித்து, அவனை அவர்கள் கண்களுக்குமுன்பாகக் கட்டுவித்தான்.

உடு ¶ பிறகு அவர்களுடைய சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும், அவர்களுடைய பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும், அவர்களுக்கு வழிக்கு ஆகாரம்

கொடுக்கவும் யோசேப்பு கற்பித்தான்; அப்படியே அவர்களுக்குச் செய்யப்பட்டது.

உசு அவர்கள் தங்கள் தானியத்தைத் தங்கள் கழுதைகள்மேல் ஏற்றிக்கொண்டு, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்போனார்கள்.

உஎ தங்குகிற இடத்திலே அவர்களில் ஒருவன் தன் கழுதைக்குக் கவளம்கொடுக்கத் தன் சாக்கைத் திறக்கிறபொழுது, இதோ தன் சாக்கின் வாயிலே தன் பணம் இருக்கிறதை அவன் கண்டு,

உஅ தன் சகோதரரோடே, என் பணம் எனக்குத் திரும்பவந்தது; இதோ என் சாக்கிலே இருக்கிறதென்றான்; அப்பொழுது அவர்கள் திடனற்றுப்போய், ஒருவரை ஒருவர் கலக்கமாய்ப் பார்த்து, பராபரன் நமக்கு இதைச் செய்தது எதென்றார்கள்.

உகூ ¶ அவர்கள் கானான்தேசத்திலே தங்கள் தகப்பனுகிய யாக்கோபண்டையிலே வந்து சேர்ந்தபொழுது, தங்களுக்குச் சம்பவித்தவைகளை எல்லாம் அவனுக்கு அறிவித்துச் சொன்னதாவது:

உஎ தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே கடினமாய்ப்பேசி, எங்களைத் தேசத்தை வேவுபார்க்கிறவர்களாக எண்ணினான்.

உக நாங்களோவெனில், அவனுடனே சொன்னதாவது: நாங்கள் வேவுகாரராயிராமல் நிசமுள்ள மனிதராயிருக்கிறோம்.

உஉ எங்கள் தகப்பனுக்குப் பிறந்த நாங்கள், பன்னிரண்டு சகோதரர்; ஒருவன் காணாமல்போனான்; இளையவனையெவன்றால், இந்நாளில் கானான்தேசத்தில் எங்கள் தகப்பனண்டையிலே இருக்கிறான் என்றோம்.

உஊ அப்பொழுது தேசத்தின் அதிகாரியாயிருக்கிறவன் எங்களோடே சொன்னதாவது: நீங்கள் நிசமுள்ளவர்களாயிருக்கிறதை எதினாலே அறிவேனென்றால், உங்கள் சகோதரனுகிய ஒருவனை நீங்கள் என்னிடத்திலே வைத்து, உங்கள் வீட்டாரின் பசிக்காகத் தானியம் வாங்கிக்கொண்டு போய்,

உசு உங்கள் இளையசகோதரனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; அதினாலே நான், நீங்கள் வேவுகாரராயிராமல், நிசமுள்ளவர்கள்தான் என்று அறிந்துகொண்டு, உங்கள் சகோதரனை உங்களுக்குக் கொடுத்துவிடுவேன், நீங்கள் தேசத்திலே தொழிலும் பண்ணலாமென்றான் என்று சொன்னார்கள்.

உடு சம்பவித்ததேதென்றால், அவர்கள் தங்கள் சாக்குகளில் இருக்கிறதைக் கொட்டுகையில், இதோ, அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருந்தது; தங்கள் பணங்களின் முடிப்புகளை அவர்களும் அவர்கள் தகப்பனும் கண்டு பயந்தார்கள்.

உகூ அவர்கள் தகப்பனுகிய யாக்கோபு அவர்களுடனே, என்னைப் பிள்ளைகள்அற்றவனுக்குகிறீர்கள்; யோசேப்பு இல்லாதேபோனான்; சிமெயோனும் இல்லாதேபோனான்; பென்யமீனையும் அழைத்துக்கொண்டுபோகிறீர்கள்; என்மேலே இவை எல்லாம் வருகிறதென்றான்.

உஎ அப்பொழுது ரூபன் தன் தகப்பனேடே, அவனை நான் உம்மண்டைக்கு அழைத்து வராதேபோனால், என் இரண்டு குமாரரைக் கொன்றுபோடுவீராக; என் கையிலே அவனை ஒப்புவியும், நான் அவனை உம்மண்டைக்குத் திரும்ப அழைத்து வருவேன் என்றான்.

உஅ அவனேவென்றால் என் மகன் உங்களோடேகூட இறங்கிப் போவதில்லை; ஏனெனில் அவன் தமையன் மரணமடைந்தான்; இவன் ஒருவன் மீதியானவன்; நீங்கள் போகும் வழியிலே இவனுக்கு ஒரு சேதம் வந்தால், நீங்கள் என் நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றான்.

சாம. அதிகாரம்.

பஞ்சமோவென்றால் தேசத்திலே மிகுதியாயிருந்தது.

Digitized by Google

உ ஆகையால் அவர்கள் எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் சாப்பிட்டுத் தீர்ந்

தபொழுது, அவர்கள் தகப்பன் அவர்களுடனே, நீங்கள் திரும்பப்போய்க் கொஞ்சம் ஆகாரம் நமக்குக் கொள்ளுங்கள் என்றான்.

ச அப்பொழுது யூதா அவனோடே சொன்னதாவது: உங்கள் சகோதரன் உங்களோடேகூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லை என்கிறதை அந்த மனிதன் எங்களுக்குத் திடச்சாட்சியாய்ச் சொல்லிக் கற்பித்தான்.

. ச நீர் எங்கள் சகோதரனை எங்களோடேகூட அனுப்புகிறதுண்டானால், நாங்கள் இறங்கிப்போய், உமக்கு ஆகாரம்கொள்ளுவோம்.

ஞ அனுப்பாமல் போனீரேயானால், நாங்கள் இறங்கிப்போவதில்லை; ஏனெனில் உங்கள் சகோதரன் உங்களோடேகூட வராவிட்டால், நீங்கள் என் முகத்தைப் பார்ப்பதில்லையென்று அந்த மனிதன் எங்களோடே சொன்னானே என்றான்.

ட அப்பொழுது இஸ்ரவேல், உங்களுக்கு இன்னம் ஒரு சகோதரன் இருக்கிறதை நீங்கள் அந்த மனிதனுக்கு அறிவித்ததினாலே எனக்கேன் பொல்லாப்பு உண்டுபண்ணினீர்கள் என்றான்.

ண அதற்கவர்கள் சொன்னதாவது: உங்கள் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறானே என்றும், உங்களுக்கு இன்னம் ஒரு சகோதரன் உண்டோ என்றும், அந்த மனிதன் எங்கள் செய்தியையும் எங்கள் வம்சத்தின் செய்தியையும் கேட்கவே கேட்டான்; அந்தக் கேள்விகளுக்குத்தக்கதாக அவனுக்கு அறிவித்தோம்; உங்கள் சகோதரனை உங்களோடேகூட இங்கே அழைத்துவாருங்கள் என்று அவன் சொல்லுவான் என்கிறதை அறிந்தோமோ என்றார்கள்.

த பின்னையும் யூதா தன் தகப்பனாகிய இஸ்ரவேலோடே சொன்னதாவது: நாங்களும் நீரும் எங்கள் குழந்தைகளும் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கு, நாங்கள் எழுந்திருந்து போகத்தக்க விதமாகப் பின்னையாண்டானை என்னோடேகூட அனுப்பும்.

ந அவனுக்காக நான்பிணையாயிருப்பேன்; என் கையில் அவனைக் கேட்பீராக; நான் அவனை உம்மண்டைக்குக் கொண்டுவந்து அவனை உமக்குமுன்பாக நிறுத்தாதேபோனால், சகல நாளும் உமக்கு நேரஸ்தனாயிருப்பேன்.

ப ஏனெனில் நாங்கள் தாமதிக்காதிருந்தோமானால், இப்பொழுது இரண்டுவிசை திரும்பிவந்திருப்போமே என்றான்.

ம அப்பொழுது அவர்கள் தகப்பனாகிய இஸ்ரவேல் அவர்களோடே சொன்னதாவது: இப்படி வேண்டியதேயானால், ஒன்று செய்யுங்கள்; இந்தத் தேசத்தின் உச்சிதங்களாகிய கொஞ்சம் பிசின் தயிலத்தையும், கொஞ்சம் தேனையும், சம்பாரங்களையும், வெள்ளைப் போளத்தையும், தேரைபிந்து கொட்டைகளையும், வாதுமைக்கொட்டைகளையும் உங்கள் சாக்குகளில்போட்டு, அந்த மனிதனுக்குக் காணிக்கையாகக் கொண்டுபோங்கள்.

யஉ இரட்டிப்பாய்ப் பணத்தை உங்கள் கைகளிலும் வைத்து, உங்கள் சாக்குகளின் வாயிலே திரும்பிவந்த பணத்தை மறுபடியும் உங்கள் கைகளிலே கொண்டுபோங்கள்; அது பிசகாயிருந்ததாக்கும்.

யஊ உங்கள் சகோதரனையும் கூட்டிக்கொண்டு, எழுந்து, அந்த மனிதனண்டைக்குத் திரும்பிப்போங்கள்.

யச ஆனால் அந்த மனிதன் உங்களுடைய மற்றச் சகோதரனையும் பென்யமீனையும், உங்களோடே கூட அனுப்பிவிடும்படிக்கு, சர்வத்திற்கும் வல்ல பராபரன் அவன் முன்பாக உங்களுக்கு இரக்கம்கிடைக்கப்பண்ணுவாராக; நானோவெனில் பிள்ளை அற்றுப்போனவனைப்போல இருப்பேன் என்றான்.

யடு ¶ அப்பொழுது அவர்கள் அந்தக் காணிக்கையையும், தங்கள் கைகளில் இரட்டிப்பான பணத்தையும் எடுத்து, பென்யமீனைக் கூட்டிக்கொண்டு, பயணம் புறப்

Digitized by Google

பட்டு எகிப்திற்கு இறங்கிப்போய், யோசேப்புக்கு முன்பாக வந்து நின்றார்கள்.

ஙஉ அப்பொழுது பென்யமீன் அவர்களோடேகூட இருக்கிறதை யோசேப்பு கண்டு, தன் வீட்டு விசாரிப்புக்காரனே, நீ இந்த மனிதனை வீட்டிற்கு அழைத்துப்போய், சாப்பாட்டுக்கு வேண்டியவைகளை அடித்து ஆயத்தம்பண்ணு; ஏனெனில் மத்தியானத்திலே இந்த மனிதர் என்னோடே சாப்பிடுவார்கள் என்றான்.

ஙஎ அவன் யோசேப்பு தனக்குச் சொன்னபடியே செய்து, அந்த மனிதனை யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துப்போனான்.

ஙஅ அப்பொழுது அவர்கள், தாங்கள் யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துப்போகப்படுகிறதைக் கண்டு பயந்து, முன்னமுறை நம்முடைய சாக்குகளில் திரும்பிவந்த பணத்தினிமித்தம் நம்முடைய பேரில் குற்றம்சாற்றி நம்முடைய மேல்விழுந்து, நம்மைச்சிறைகளாக்கி, நம்முடைய கழுதைகளை எடுத்துக்கொள்வதற்காக நாம்கொண்டு போகப்படுகிறோம் என்றுசொல்லி,

ஙக யேசேப்பின் வீட்டு விசாரிப்புக்காரனண்டையிலே சேர்ந்து, வீட்டு வாசற்படியிலே அவனோடே பேசிச் சொன்னதாவது:

ஙஇ எங்களாண்டவனே, ஆகாரம்கொள்ள முந்த இறங்கிவந்திருந்து போனோமே.

ஙஉ அப்பொழுது சம்பவித்ததேதெனில், நாங்கள் தங்கும் இடத்தில் வந்து எங்கள் சாக்குகளைத் திறந்தபொழுது, இதோ, நாங்கள் எங்கள் பணத்தை நிறுத்துக்கொடுத்த நிறையாய் அவனவன் பணம் அவனவன் சாக்கின் வாயில் இருந்தது; அதை எங்கள் கையிலே திரும்பக் கொண்டுவந்தோம்.

ஙஊ ஆகாரம்கொள்ள வேறே பணத்தையும் எங்கள் கையிலே எடுத்துக்கொண்டு வந்தோம்; எங்கள் பணத்தை யார் எங்கள் சாக்குகளில் வைத்தான் என்கிறதை அறியோம் எனறார்கள்.

ஙஎ அவனோவென்றால் உங்களுக்குச் சமாதானம், நீங்கள் பயப்படவேண்டாம், உங்கள் பராபரனும் உங்கள் தகப்பனுடைய பராபரனுமானவர் உங்கள் சாக்குகளில் உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கட்டளையிட்டார்; உங்கள் பணம் எனக்கு வந்து சேர்ந்ததென்று சொல்லி, சிமெயோனை வெளியே அவர்களண்டையில் அழைத்துவந்துவிட்டு,

ஙசு அவர்களை யோசேப்பின் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய், தங்கள் கால்களைக் கழுவ அவர்களுக்குத் தண்ணீர்கொடுத்து, அவர்கள் கழுதைகளுக்கு இரை போட்டான்.

ஙடு மத்தியானத்திலே யோசேப்பு வருமளவும் அவர்கள் காணிக்கையை ஆயத்தமாய் வைத்தார்கள்; ஏனெனில் தாங்கள் அங்கே அப்பம் சாப்பிடப்போகிறதைக் கேட்டிருந்தார்கள்.

ஙஎ யோசேப்பு வீட்டிற்கு வந்தபொழுது, அவர்கள் தங்கள் கையிலிருந்த காணிக்கையை அவனுக்கு வீட்டிற்குள் கொண்டுபோய், *தரைமட்டும்குனிந்து, அவனை வணங்கினார்கள். *க மோ. ஈ. எ.

ஙஅ அப்பொழுது அவன், சுகமாயிருக்கிறீர்களோ என்று கேட்டு, நீங்கள் சொன்ன முதிர்வயதான உங்கள் தகப்பன் சுகமாயிருக்கிறாரோ? அவன் இன்னம் உயிரோடிருக்கிறாரே என்று விசாரித்தான்.

ஙஆ அவர்கள், எங்கள் தகப்பனாகிய உம்முடைய ஊழியக்காரன் சுகமாயிருக்கிறான், இன்னம் உயிரோடிருக்கிறானென்று சொல்லி, குனிந்து வணங்கினார்கள்.

ஙஊ அவன் தன் கண்களை ஏறெடுத்து, தன் தாயின் குமாரனாகிய தன்னோடேகூடப் பிறந்த பென்யமீனைக் கண்டு, இவன் நீங்கள் என்னோடே சொன்ன உங்கள் இளைய சகோதரனே என்று கேட்டு, என் மகனே, பராபரன் உன்மேலே கிருபைவைக்கக்கடவரென்றான்.

ஙஏ ஆனால் தன் சகோதரனுக்காக யோசேப்பின் உள்ளம் பொங்கினபடியினாலே, அவன் அழுகிறதற்கு இடம்தேடித் தீவிரித்

Digitized by Google

து, அறையிலே ஓடோய், அங்கே அழுதான்.

ஈக பிறகு அவன் தன் முகத்தைக் கழுவிப் புறப்பட்டு, தன்னை அடக்கிக்கொண்டு போசனம் வையுங்கள் என்றான்.

ஈஉ அப்பொழுது அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் தனிப்படவும் வைத்தார்கள்; ஏனெனில் எகிப்தியர் எபிரேயரோடே அப்பம் சாப்பிடமாட்டார்கள்; அதேனென்றால் அது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்.

ஈஈ அவர்கள் அவனுக்குமுன்பாக மூத்தவன் தன் மூத்தவயதின்படியேயும் இளையவன் தன் இளையவயதின்படியேயும் உளுக்காரவைக்கப்பட்டார்கள்; அதற்காக அவர்கள், ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டார்கள்.

ஈச அவன் தன் முன்னே இருக்கிறதில் அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்பினான்; ஆனால் அவர்கள் எல்லாருடைய பங்குகளைப்பார்க்கிலும், பென்யமீனுடைய பங்கு ஐந்தத்தனை அதிகமாயிற்று; அவர்கள் குடித்து, அவனோடே சந்தோஷமாயிருந்தார்கள்.

ஆஅ. அதிகாரம்.

பிற்பாடு அவன் தன் வீட்டு விசாரிப்புக்காரனுக்குக் கற்பித்ததாவது: நீ இந்த மனிதருடைய சாக்குகளை, அவர்கள் ஏற்றிக்கொண்டு போகத்தக்க பாரமாய் ஆகாரத்தினாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவனுடைய சாக்கின் வாயிலே போட்டு,

உ இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என்னுடைய பாத்திரத்தையும், அவனுடைய தானியத்தின் பணத்தையும் போடு என்று கற்பித்தான்; அவன் யோசேப்புச் சொன்ன வார்த்தையின்படியே செய்தான்.

ஈ¶ காலமே வெளிச்சமாகிறபொழுது, அந்த மனிதர் தங்கள் கழுதைகளோடும் கூட அனுப்பிவிடப்பட்டார்கள்.

ச அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுத் தூரமாய்ப் போகாததற்குமுன்னே, யோசேப்பு தன் வீட்டுவிசாரிப்புக்காரனோடே சொன்னதாவது: நீ எழுந்து அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைக் கிட்டிப்பிடிக்கும்பொழுது அவர்களோடே சொல்லவேண்டியது ஏதெனில் நீங்கள் நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டினதென்ன?

ஈ அது என் எசமான் குடிக்கிறபாத்திரம் அல்லவோ? அது போன வகை அவருக்கு ஞானநிருஷ்டியால் தெரியாதோ? நீங்கள் செய்தது பொல்லாத காரியமாயிருக்கிறதென்று சொல்லென்றான்.

ஈஅ அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, இந்த வார்த்தைகளை அவர்களோடே சொன்னான்.

எ அப்பொழுது அவர்கள் அவனோடே சொன்னதாவது: எங்கள் ஆண்டவன் இப்படிக்கொத்த வார்த்தைகளைச் சொல்லுவானேன்? இப்படிக்கொத்த காரியத்தை உம்முடைய அடியார் ஒருக்காலும் செய்வதில்லை.

அ இதோ, எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான்தேசத்திலிருந்து திரும்ப உம்மண்டைக்குக் கொண்டுவந்தோமே? நாங்கள் உம்முடைய எசமானனின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டு போவது எப்படி?

ஈக உம்முடைய அடியாரில் எவனிடத்திலே அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் சாவக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம்என்றார்கள்.

ஈஉ அதற்கு அவன், இப்பொழுதும் நீங்கள் சொன்ன வார்த்தைகளின்படியே ஆகக்கடவது; எவனிடத்தில் அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் எனக்கு அடிமையாவான்; நீங்களோவென்றால் குற்றமற்றிருப்பீர்கள் என்றான்.

ஈஈ அவர்கள் தீவிரித்து அவனவன் தன்தன் சாக்கைத் தலையிலே இறக்கிப்போட்டு,

ஒவ்வொருவராய்த் தங்கள் சாக்குகளைத் திறந்துவைத்தார்கள்.

22 அவன் மூத்தவனைத் தவறவிட இளைய வன்மட்டும் சோதிக்கிறபொழுது, பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது.

23 அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் தன் தன் கழுதையின்மேலே சுமையை ஏற்றி, பட்டணத்திற்குத் திரும்பினார்கள்.

24 யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டிலே வந்தார்கள்; ஏனெனில் அவன் அதுவரையில் அங்கே இருந்தான்; அவனுக்குமுன்பாகத் தரையிலே விழுந்தார்கள்.

25 யோசேப்பு அவர்களுடனே, நீங்கள் செய்த இந்தக் கிரியை என்ன? என்னைப் போலொத்த மனிதனுக்குக் காரியம் சோதிக்கிறதிலே தெரியுமென்று, அறியாதே போனீர்களோ என்றான்.

26 அப்பொழுது யூதா, என் ஆண்டவனுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகிறோம்? என்ன பேசுவோம்? எதினால் எங்களை நிரபராதிகளாக்குவோம்? பராபரன் உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைக் கண்டுபிடித்தார்; இதோ நாங்கள் என் ஆண்டவனுக்கு அடிமைகள்; நாங்களும் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்ட அவனும் தானே என்றான்.

27 அவனோவென்றால் இப்படிக்கொத்த செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாய் இருப்பான்; நீங்களோவெனில் சமாதானத்தோடே உங்கள் தகப்பனண்டைக்குப் போயேறுங்கள் என்றான்.

28 அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து சொன்னதாவது: ஆ, என் ஆண்டவனே, உம்முடைய அடியான் என் ஆண்டவனுடைய செவிகளுக்குமுன்பாக ஒரு வார்த்தை பேசட்டும்; உம்முடைய கோபம் எரியாதிருப்பதாக; ஏனெனில் நீர் பார்வோனைப்போல இருக்கிறீர்.

29 உங்களுக்குத் தகப்பனுமுண்டோ சகோதரனுமுண்டோ என்று என் ஆண்டவன் உம்முடைய அடியானைக் கேட்டார்.

30 அப்பொழுது என் ஆண்டவனுடனே, எங்களுக்கு முதிர்வயதான தகப்பனும் அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைய சகோதரனும் உண்டு; இவனுடைய தமையன் செத்துப்போனான்; இவன் ஒருவன் தன் தாயாருக்கு மீதியானவன்; இவனுடைய தகப்பன் இவன்மேலே பட்சமாயிருக்கிறானென்றோம்.

31 அப்பொழுது நீர் உம்முடைய அடியாரோடே, அவனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; என் கண்ணை அவன்மேலே வைப்பேன் என்றீர்.

32 நாங்களோவென்றால் என் ஆண்டவனுடனே, அந்த இளைஞன் தன் தகப்பனை விடக்கூடாது; தன் தகப்பனை விட்டால் அவர் செத்துப்போவாரென்றோம்.

33 நீரோவெனில் உம்முடைய அடியாருடனே, உங்கள் இளைய சகோதரன் உங்களோடேகூட இறங்கிவராதேபோனால், நீங்கள் என் முகத்தை இனிப் பார்ப்பதில்லை என்று சொன்னீர்.

34 நாங்கள் உம்முடைய அடியாளுடைய என் தகப்பனண்டைக்கு வந்தேறினபொழுது சம்பவித்ததேதென்றால், என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம்.

35 நீங்கள் திரும்பப் போய், கொஞ்சம் ஆகாரம் நமக்குக் கொள்ளுங்களென்று எங்கள் தகப்பனார் சொன்னார்.

36 அதற்கு நாங்கள் சொன்னதேதெனில், நாங்கள் இறங்கிப்போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடு இருந்தானேயானால் இறங்கிப்போவோம்; ஏனென்றால் எங்கள் இளைய சகோதரன் எங்களோடே இராவிட்டால், நாங்கள் ஆ

தப் புருஷனுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்றேம்.

உஎ அப்பொழுது உம்முடைய அடியாளுகிய என் தகப்பன் எங்களோடே சொன்னதாவது: என் பெண்சாதி எனக்கு இரண்டு பின்னைகளைப் பெற்றாள் என்கிறதையும்,

உஅ அவர்களில் ஒருவன் என்னிடத்தில் இருந்து புறப்பட்டுப் போனான், அவன் நிச்சயமாய்ப் பீறுண்டானென்று முன் சொல்லி, இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன் என்கிறதையும் நீங்கள் அறிவீர்கள்.

உக நீங்கள் இவனையும் என் முன்பாக இராதபடிக்கு அழைத்துப்போகும்போது, ஒரு சேதம் அவனுக்கு வந்தால், என் நரையை நிர்ப்பந்தத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவீர்கள் என்றான்.

உஎ இப்பொழுதும் இவனான் எங்களோடிராமல், நான் என் தகப்பனுகிய உம்முடைய அடியானண்டையிலே போனால், அப்பொழுது அவருடைய ஆத்துமா இவனுத்துமாவோடே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியினாலே சம்பவிப்பது எதெனில்,

உக அவர் இவனான் இல்லை என்று காணும்பொழுது, செத்துப்போவார்; அப்படியே உம்முடைய அடியாரும் உம்முடைய ஊழியக்காரனுகிய எங்கள் தகப்பனுடைய நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவோமே.

உஉ ஏனெனில் நான் அவனை உம்மண்டைக்கு அழைத்துவராதேபோனால், நான் சகலநாளும் என் தகப்பனுக்கு நேரன்தரும் இருப்பேனென்று உம்முடைய அடியானுகிய நான் என் தகப்பனிடத்திலே இந்த இளைஞனுக்காகப் பிணைப்பட்டேன்.

ஊக இப்பொழுதும் இளைஞன் தன் சகோதரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு, உம்முடைய அடியானுகிய நான் இளைஞனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாய் இருக்கட்டும்.

ஊஎ ஏனெனில் இளைஞன் என்னோடே இல்லாமிட்டால் எப்படி என் தகப்பனண்டைக்குப் போயேறுவேன்? என் தகப்பனைப் பிடிக்கும் துங்கை அப்பொழுது காண்பேனே என்றான்.

சுரு. அதிகாரம்.

அப்பொழுது யோசேப்பு தன்னண்டையில் நிற்கிற எல்லார்முன்பாகவும் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென்று கூப்பிட்டான்; யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்துகையில் ஒருவரும் அவனண்டையிலே நின்றதில்லை.

உ அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள்; பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

ஊ யோசேப்பு தன் சகோதரரோடே நான் யோசேப்பு; என் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறாரோ என்றான்; ஆனால் அவன் சகோதரர் அவனுக்குமுன்பாகக் கலங்கினதினாலே, அவனுக்குப் பிரதியுத்தாரம் சொல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

ச அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரோடே, என்னண்டையிலே கிட்டிவாருங்கள் என்றான்; அவர்கள் கிட்டிப்போனார்கள்; அப்பொழுது அவன் சொன்னதாவது: நீங்கள் எகிப்திற்குப் போகிறவர்களுக்கு விற்ற உங்கள் சகோதரனுகிய யோசேப்பு நானே.

ஊ இப்பொழுதும் நீங்கள் என்னை இவ்விடத்திற்கு விற்றுப்போட்டதினாலே, நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்கள் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம்; ஏனெனில் உங்கள் சீவனுக்காகப் பரன் என்னை உங்களுக்குமுன்னுக அனுப்பினார்.

ஊ ஏனென்றால் இந்த இரண்டுவருஷம் தேசத்திற்குள்ளே பஞ்சம் உண்டாயிருந்தது; உழவும் அறுப்பும் இல்லாத ஐந்து வருஷங்களும் இன்னம் வரும்.

Digitized by Google

எ ஆனால், உங்களைத் தேசத்தில் மீதியாக வைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சிப்பிலே உயிரோடே காப்பதற்குமாக, பராபரன் என்னை உங்களுக்குமுன்னே அனுப்பினார்.

ஈ இப்பொழுதும் நீங்களல்ல, பராபரன் என்னை இங்கே அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் வீட்டிற்கெல்லாம் தலையாகவும், எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறவனாகவும் வைத்தார்.

உ நீங்கள் தீவிரத்தோடே என் தகப்பனண்டைக்குப் போயேறி, அவரோடே சொல்லவேண்டியதேதெனில், உம்முடைய குமாரனாகிய யோசேப்புச் சொல்லி அனுப்புகிறதாவது: பராபரன் என்னை எகிப்திற்கெல்லாம் தலையாக வைத்தார்; என் னண்டைக்கு இறங்கிவாரும், தாமதிக்க வேண்டாம்.

ஊ நீர் கோசேன் தேசத்திலே வாசம்பண்ணி, எனக்குச் சமீபத்திலே இருப்பீர்; நீரும் உம்முடைய பிள்ளைகளும் உம்முடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் உம்முடைய ஆடுகளும் உம்முடைய மாடுகளும் உமக்குண்டான யாவும் கூடத்தானே.

எ நீரும் உம்முடைய வீட்டாரும் உமக்கிருக்கிற யாவும் தாழ்வுபடாதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன்; ஏனெனில் பஞ்சம் இன்னம் ஐந்து வருஷம்மட்டும் இருக்குமென்கிறான் என்று சொல்லுங்கள்.

ஐ இதோ என்னுடைய வாய் உங்களோடே பேசுகிறது என்கிறதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே.

ஏ எகிப்திலே எனக்கு இருக்கிற என்னுடைய எல்லா மகிமையையும் நீங்கள் கண்டவை எல்லாவற்றையும் என் தகப்பனுக்கு அறிவித்து, தீவிரமாய் என் தகப்பனை இவ்விடத்திற்கு இறக்கிவரப்பண்ணுங்கள் என்றுசொல்லி,

ஒ தன் தம்பியாகிய பென்யமீனுடைய கழுத்திற்குக் கட்டிக்கொண்டு அழுதான்; பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதான்.

ஓ தன்னுடைய எல்லாச் சகோதரரையும் முத்தம்செய்து அவர்கள் முன்பாக அழுதான்; அதற்குப் பிற்பாடு அவன் சகோதரர் அவனோடே பேசினார்கள்.

ஓக ¶ யோசேப்பின் சகோதரர் வந்தார்களென்று பார்வோன் வீட்டிலே செய்தி கேட்கப்பட்டபொழுது, அது பார்வோன் பார்வைக்கும் அவன் ஊழியக்காரரின் பார்வைக்கும் நன்றாய் இருந்தது.

ஓஎ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னது: நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியதாவது: நீங்கள் செய்யவேண்டியதேதெனில், உங்கள் மிருகசீவன்களின்மேல் பொதியேற்றிப் புறப்பட்டு, கானான்தேசத்திற்குப்போய்,

ஓஅ உங்கள் தகப்பனையும் உங்கள் வீட்டாரையும் கூட்டிக்கொண்டு என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்துதேசத்தின் நன்மையைக் கொடுப்பேன்; தேசத்தின் கொழுப்பைச் சாப்பிடுவீர்கள்.

ஓக நீங்கள் செய்யவேண்டியது ஏதெனில், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும் வண்டில்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய், உங்கள் தகப்பனையும் ஏற்றி வாருங்கள்.

உஓ உங்கள் கண் உங்களுடைய தட்டுமுட்டுகளைப் பார்க்கவேண்டாம்; ஏனெனில் எகிப்துதேசமெங்கும் நன்மையாயிருக்கிறது உங்களுடையதாய் இருக்குமென்று அவர்களோடே சொல்ல நீ கட்டளைபெற்றாய் என்றான்.

உக இப்படியே இஸ்ரவேலின் குமாரர் செய்தார்கள்; யோசேப்பு அவர்களுக்குப் பார்வோனுடையகட்டளையின்படியே வண்டில்களைக்கொடுத்து, வழிக்கு ஆகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான்.

Digitized by Google

உஉ அவர்களில் ஒவ்வொருவனுக்கு அவன் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து, பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து,

உக அப்படியே தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதங்களைச் சுமந்துபோகிற பத்துக் கழுதைகளையும், தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் நின்பண்டங்களும் சுமந்துபோகிற பத்துக் கோவிகைக் கழுதைகளையும் அனுப்பினான்.

உச அப்படியே அவன் தன் சகோதரரை அனுப்பிவிட்டு, இவர்கள்போகிறபொழுது, வழியிலே சண்டைபண்ணீர்களாக என்று அவர்களோடே சொன்னான்.

உடு ¶ அவர்கள் எகிப்திலிருந்து போயேறி, கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டைக்கு வந்து,

உசு யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறான் என்றும், அவன் எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறான் என்றும் அவனுக்கு அறிவித்தார்கள்; ஆனால் அவன் இருதயம் தளம்பிற்று; ஏனெனில் அவர்களை நம்பாதிருந்தான்.

உஎ அவர்களோவென்றால் யோசேப்புத் தங்களுடனே பேசின எல்லா வார்த்தைகளையும் அவனுக்குச் சொல்லுகிறபொழுதும், தன்னை ஏற்றிக்கொண்டுபோக யோசேப்பு அனுப்பின வண்டில்களை அவன் காண்கிறபொழுதும், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி நிடப்பட்டது.

உஅ அப்பொழுது இஸ்ரவேல், என் குமாரனாகிய யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறபொழுதும், நான் மரணம் அடையாததற்கு முன்னேபோய் அவனைப் பார்ப்பேன் என்றான்.

சகூ. அதிகாரம்.

இஸ்ரவேல் தனக்குண்டானவைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு பயணம் புறப்பட்டுப் பேர்சேபாவுக்குவந்து, தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பராபரனுக்குப் பலிகளை இட்டான்.

உ இராத்தரிசனைகளில் பராபரன் இஸ்ரவேலோடே பேசி, யாக்கோபே யாக்கோபே, என்றார்; அவன் இதோ அடியேனென்றான்.

ங அப்பொழுது அவர் சொன்னதாவது: நாம் உன் தகப்பனுடைய தேவனாகிய பராபரன்; எகிப்திற்கு இறங்கிப்போகப் பயப்படாயாக; ஏனெனில் அங்கே உன்னைப் பெரியசாதி யாக்குவோம்.

ச நாம் உன்னோடேகூட எகிப்திற்கு இறங்கிப்போவோம்; நாம் உன்னைத் திரும்பி வந்து ஏறவும் பண்ணுவோமென்றும், யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவானென்றும் சொன்னார்.

டு அதற்குப் பிற்பாடு யாக்கோபு பேர்சேபாவிலிருந்து பயணம்புறப்பட்டுப் போனான்; இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் பெண்சாதிகளையும், பார்வோன் அவனை ஏற்றிவர அனுப்பின வண்டில்களின்மேல் ஏற்றிக்கொண்டுபோனார்கள்.

டஅ அவர்கள், தங்கள் ஆடுமாடுகளையும் தாங்கள் கானான்தேசத்தில் சம்பாதித்த தங்கள் ஆஸ்தியையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு வந்தார்கள், யாக்கோபும் அவன் வித்தார் அனைவரும் அவனோடு கூடத்தானே.

டக தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் வித்தார் அனைவரையும் அவன் தன்னோடேகூட எகிப்திற்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

டங எகிப்திலே வந்த இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள்; யாக்கோபும் அவன் குமாரரும்; யாக்கோபுடைய முதல் பேறான ரூபன்.

டச ரூபனுடைய குமாரர்; ஆனோக், பல்

Digitized by Google

னும், ஏத்ரோன், கற்மீ என்றவர்கள்.

ஏ சீமெயோனுடைய குமாரர்; ஏமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானனன் தேசத்தானின் குமாரனுகிய சவுல் என்றவன்.

ஐ லேவியின் குமாரர்; கேர்சோன், கேகாத், மெராரி என்றவர்கள்.

ஐஉ யூதாவின் குமாரர்; ஏர், ஓனான், சேலா, பேரேஸ், சேரா என்றவர்கள்; ஏரும் ஓனானு மோவென்றால் கானனன்தேசத்திலே செத்தப்போனார்கள்; பேரேசுடைய குமாரர்; எத்ரோன், அமூல் என்றவர்கள்.

ஐஊ இசஷாருடைய குமாரர்; தேலா, பூவா, யோப், சிம்ரோன் என்றவர்கள்.

ஐச சேபுலோனுடைய குமாரர்; சேரேத், ஏலோன், யாலேயேல் என்றவர்கள்.

ஐடி இவர்கள் லேயாவின் குமாரர்; இவர்களையும் யாக்கோபுடைய குமாரத்தியாகிய தீனாளையும் அவன் அவனுக்குப் பதான்அராமிலே பெற்றான்; அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லா ஆத்துமாக்களும் முப்பத்துமூன்று.

ஐஎ காத்துடைய குமாரர்; சிப்பியோன், அகி, சூனி, எத்சோன், ஏரி, அரோதி, அரேலி என்றவர்கள்.

ஐஏ ஆசேருடைய குமாரர்; இம்னா, இஸ்வா, இஸ்வி, பேரியா என்றவர்கள்; இவர்களுடைய சகோதரி சேராக்கு என்றவள். பேரியாவின் குமாரர்; ஏபேர், மல்கியேல் என்றவர்கள்.

ஐஐ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பிள்ளைகள்; அவள் யாக்கோபுக்கு இந்தப் பதினாறு ஆத்துமாக்களைப் பெற்றாள்.

ஐஙு யாக்கோபின் பெண்சாதியாகிய ராகேலுடைய குமாரர்; யோசேப்பும் பென்யமீனுமானே.

ஐசு யோசேப்புக்கு எகிப்துதேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்களை ஓன்பட்டணத்து ஆசாரியனுகிய போத்திப்பேராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

ஐஞ பென்யமீனுடைய குமாரர்; பேலா, பேகர், அஸ்பெல், கேரா, நாமான், ஏகி, ரோஸ், மூப்பிம், உப்பிம், ஆர்து என்பவர்கள்.

ஐட ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும் பதினாலு ஆத்துமாவே.

ஐண தானுடைய குமாரன்; ஊசிம் என்றவன்.

ஐத நப்தலியின் குமாரர்; யாத்சேயேல்; கூனி, ஏத்சேர், சில்லேம் என்றவர்கள்.

ஐந இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழு ஆத்துமாக்கள்.

ஐப ¶ யாக்கோபுடைய குமாரரின் பெண் சாதிகளைத் தவிர, அவனுடைய கர்ப்பப் பிறப்பாய் இருந்து அவனோடேகூட எகிப்திலே வந்த ஆத்துமாக்கள் எல்லாம் அறுபத்தாறு ஆத்துமாக்கள்.

ஐம யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டு ஆத்துமாக்கள்; எகிப்திலே வந்த யாக்கோபின் வீட்டாராகிய ஆத்துமாக்கள் எல்லாம் எழுபது.

ஐய ¶ கோசேனுக்குப்போகிற வழியைத் தனக்குக் காட்டுவிக்க, அவன் தனக்குமுன்னே யோசேப்பண்டைக்கு யூதாவை அனுப்பினான்; அப்படியே கோசேன்தேசத்திலே வந்தார்கள்.

ஐர யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தம்பண்ணி ஏறி, கோசேனுக்குத் தன் தகப்பனுகிய இஸ்ரவேலுக்குஎதிர்கொண்டு போய், அவனுக்குத் தன்னைக் காண்பித்து, அவனுடைய கழுத்திறுகக் கட்டிக்கொண்டு, அதிக நேரமாய் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்.

ஐல அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்புடனே, நீ இன்னம் உயிரோடிருக்கிறாய் என்று நான் உன் முகத்தைக் கண்டபடியி

Digitized by Google

னூலே இனி மரணம் எனக்கு எப்போதாகிலும் வரட்டும் என்றான்.

ஈக பிற்பாடு யோசேப்பு தன் சகோதரரோடும் தன் தகப்பனுடைய வீட்டாரோடும் சொன்னதாவது: நான் போயேறிக் கானான்தேசத்திலிருந்த என்னுடைய சகோதரரும், என் தகப்பன்வீட்டாரும் என்னண்டைக்கு வந்தார்களென்று பார்வோனுக்கு அறிவித்து,

ஈஉ இந்த மனிதர் ஆடுகளைமேய்க்கிறவர்கள்; எனெனில் மிருகசீவன்களையுடையவர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஆடுகளையும் தங்கள் மாடுகளையும் தங்களுக்குண்டானவை எல்லாவற்றையும் கொண்டுவந்தார்களென்று அவரோடே சொல்லுவேன்.

ஈஈ ஆகையால் பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்னவென்று கேட்கிறதுண்டானால்,

ஈச அப்பொழுது நீங்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கும்படிக்குச் சொல்லவேண்டியதாவது: எங்கள் பிதாக்களைப்போல உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயது தொடங்கி இதுவரைக்கும் மிருகசீவன்களை உடையவர்களாய் இருந்தோமென்று சொல்லுங்கள்; ஏனெனில் *மந்தைமேய்க்கிறவர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாய்இருக்கிறார்கள் என்றான். *க மோ. சஈ. ஈஉ.

சுள. அதிகாரம்.

• யோசேப்பு வந்து பார்வோனுக்கு அறிவித்து, என் தகப்பனும் என் சகோதரரும், தங்கள் ஆடுகளோடும், தங்கள் மாடுகளோடும், தங்களுக்குண்டானவை எல்லாவற்றோடும்கூடக் கானான்தேசத்திலிருந்து வந்தார்கள்; இதோ கோசேன்தேசத்திலே இருக்கிறார்கள் என்றுசொல்லி,

உதன் சகோதரரில் ஒருபங்காகிய ஐந்து பேரை அழைத்துக்கொண்டு, அவர்களைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்.

ஊ அப்பொழுது பார்வோன் அவன் சகோதரரோடே உங்கள் தொழில் என்னவென்றான்; அவர்கள் பார்வோனுடே, உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்கள் என்றுசொல்லி,

ச பின்னையும் பார்வோனுடே, தேசத்திலே தங்கவந்தோம்; ஏனெனில் உம்முடைய அடியாருக்கு இருக்கிற மந்தைக்கு மேய்ச்சலில்லை, அதேனென்றால் பஞ்சம் கானான்தேசத்திலே கடினமாய் இருக்கிறது; இப்பொழுதும் உம்முடைய அடியார் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும் என்றார்கள்.

ஓ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னண்டைக்கு வந்தார்கள்.

ஃ எகிப்துதேசம் உனக்குமுன்பாகக் கிடக்கிறது; தேசத்தில் நலமான இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேற்று; அவர்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும்; அவர்களுக்குள்ளே நிறமையான மனிதருண்டென்று அறிந்திருந்தாயானால் அவர்களை எனக்கிருக்கிற ஆடுமாடுகளை விசாரிக்கிற தலைவராக வையென்றான்.

எ யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபையும் அழைத்துக்கொண்டு வந்து, அவனைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்; யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

அ பார்வோன் யாக்கோபோடே, உன்னுடைய ஆயுசின் நாள்கள் எத்தனை என்றான்.

கூ யாக்கோபு பார்வோனுடே, நான் பரதேசம்பண்ணின நாள்கள் நூற்றுமுப்பது வருஷங்கள்; என் ஆயுசின் நாள்கள் பரதேசிகளான என் பிதாக்களுடைய ஆயுசின் நாள்களுக்கு வராமல் கொஞ்சமும் பொல்லாப்புமாய் இருந்தன என்றான்.

ஐ பிற்பாடு யாக்கோபு பார்வோனை ஆசீ

Digitized by Google

வரித்து, பார்வோனிடத்திலிருந்து புறப்பட்டான்.

ஐக யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரனையும் குடியேற்றி, பார்வோன் கட்டளை இட்டபடி, அவர்களுக்கு எகிப்துதேசத்தின் நாட்டிலே நல்ல காடான ராமேசேஸ் சீமையிலே காணி கொடுத்தான்.

ஐஉ ¶ யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரரையும் தன் தகப்பனுடைய வீட்டார் அனைவரையும் பிள்ளைகளின் இலக்கத்திற்குத்தக்கதாய் ஆகாரம்கொடுத்துப் பராமரித்துவந்தான்.

ஐஈ தேசமெங்கும் அப்பம் இல்லாதேபோயிற்று; எனெனில் பஞ்சம் மிகவும் கடினமாய் இருந்தது; பஞ்சத்தினாலே, எகிப்துதேசமும் கானான்தேசமும் இளைத்துப்போயின.

ஐச அப்பொழுது அவர்கள் கொள்ளும் தானியத்திற்கு இடாக யோசேப்பு எகிப்துதேசத்திலும் கானான்தேசத்திலும் உண்டான நிரவியத்தை எல்லாம் சேர்த்தான்; அந்தத் நிரவியத்தை யோசேப்பு பார்வோன் வீட்டிலே கொண்டுவந்தவைத்தான்.

ஐடு எகிப்துதேசத்திலும் கானான்தேசத்திலும் நிரவியம் செலவழிந்து போனபொழுதோவெனில், எகிப்தியர் எல்லாரும் யோசேப்பண்டைக்கு வந்து, எங்களுக்கு அப்பம்தாரும்; நிரவியம் இல்லாதேபோனதினாலே, நாங்கள் உமக்கு முன்பாகச் சாவானேன் என்றார்கள்.

ஐஎ அப்பொழுது யோசேப்பு நிரவியம் இல்லாதேபோயிற்றானால், உங்கள் மிருகசீவன்களைக் கொடுங்கள்; உங்கள் மிருகசீவன்களுக்கு இடாக உங்களுக்குத் தருகிறேன் என்றான்.

ஐஏ அப்பொழுது தங்கள் மிருகசீவன்களை யோசேப்பண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடுகளையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு அப்பம்கொடுத்து, அந்த வருஷத்திலே அவர்களுடைய எல்லா மிருகசீவன்களுக்கும் இடாக அவர்கள் பிழைப்பை நடப்பித்துக்கொண்டுவந்தான்.

ஐஐ ¶ அந்த வருஷம் முடிந்தபொழுது, அவர்கள் மறுவருஷத்திலே அவனண்டைக்கு வந்து அவனோடே சொன்னதாவது: நிரவியமும் செலவழிந்துபோயிற்று; மிருகசீவன்களின் ஆன்றியும் எங்கள் ஆண்டவனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்கள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக்குமுன்பாக ஒன்றும் மீதியானதில்லை என்கிறதை எங்கள் ஆண்டவனுக்கு மறைக்கமாட்டோம்.

ஐஊ நாங்களும் எங்கள் நிலமும் உம்முடையகண்களுக்குமுன்பாக மடிவானேன்? நீர் எங்களையும் எங்கள் நிலத்தையும் கொண்டு, அப்பம்தாரும்; நாங்கள் எங்கள் நிலத்தோடும்கூடப் பார்வோனுக்கு அடிமைப்பட்டிருப்போம்; நாங்கள் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கும் நிலம் பாழாய்ப் போகாதபடிக்கும் விதையைத் தாரும் என்றார்கள்.

ஐ஋ அப்படியே யோசேப்பு எகிப்தின் நிலத்தை எல்லாம் பார்வோனுக்குக் கொண்டான்; எனெனில் எகிப்தியர் அவரவர், பஞ்சம் தங்கள்மேல் பலத்துக்கொண்டபடியினாலே, தங்கள் வயல்களை விற்றார்கள்; ஆனதுகொண்டு நிலம் பார்வோனைச் சேர்ந்தது.

ஐக ஆனால் சனத்தை அவன் எகிப்திலுடைய எல்லையின் இந்த முனைதுவக்கி அந்த முனைமட்டும் இருந்த பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணினான்.

ஐஙு ஆசாரியன் நிலத்தைமாத்திரம் கொள்ளாதே போனான்; எனெனில் அது பார்வோனாலே ஆசாரியருக்குப் படித்திட்டமாகக் கட்டளைபண்ணப்பட்டது; பார்வோன் தங்களுக்குக் கட்டளைபண்ணின தங்கள் படியைச் சாப்பிட்டார்கள்; ஆகையால்

Digitized by Google

அவர்கள் தங்கள் நிலத்தை விற்றநில்லை.

உஈ யோசேப்பு சனத்தோடே சொன்ன தாவது: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலத்தையும் பார்வோனுக்குக் கொண்டேன்; இதோ உங்களுக்குத் தரப்படுகிற விதை, அதிலுல் நிலத்தை விதையுங்கள்.

உச பலனனபொழுது நடப்பதேதென்றால், பார்வோனுக்கு ஜந்தில் ஒரு பங்கைக் கொடுப்பீர்கள்; நாலுபங்கோவென்றால், வயலுக்கு விதையும் உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரம் உண்டாக உங்களுடையவைகளாய் இருக்கும் என்றான்.

உடு அப்பொழுது அவர்கள் எங்களை உயிரோடேகாத்தீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவே கிடைக்கட்டும், நாங்கள் பார்வோனுக்கு அடிமையாயிருப்போம் என்றார்கள்.

உசு அப்படியே ஜந்தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும்வாரம் என்பதை, யோசேப்பு எகிப்து நிலத்தின்மேலே இந்நாள்மட்டும் செல்லும் கட்டளையாக்கினான்; ஆசாரியரின் நிலம்மாத்திரம் பார்வோனைச் சேராமல் நீங்கலாயிற்று.

உஎ ¶ இஸ்ரவேல் எகிப்துதேசத்திலிருக்கும் கோசென்சீமையிலே குடியிருந்தான்; அதில் காணியாட்சிக்காரராகி, மிகவும் பலுகிப் பெருகினார்கள்.

உஅ யாக்கோபு எகிப்துதேசத்திலே பதினேழுவருஷம் உயிரோடிருந்தான்; ஆகையால் யாக்கோபுடைய ஆயுசின் நாள்கள் நூற்றுநாற்பத்தேழு வருஷங்களாயின.

உஆ மரணமடைய இஸ்ரவேலின் காலம் சமீபித்தபொழுது, அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவனுக்குச் சொன்னதாவது: உன் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், என்னை எகிப்திலே அடக்கம்பண்ணுயாக என்ற தயவையும் உண்மையையும் நீ எனக்குச் செய்வதற்காக உன் கையை என் இடுப்பின்கீழேபோடு.

உக நான் என் பிதாக்களோடே படுத்துக் கொள்ளுவேன்; ஆகையால் நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்கள் அடக்கம்பண்ணப்பட்ட நிலத்திலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்றான்; அதற்கு அவன், உம்முடைய சொற்படி நான் செய்வேன் என்றான்.

உக அப்பொழுது அவன், எனக்கு ஆணையிடு என்றான்; அவனுக்கு ஆணையிட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து பணிந்துகொண்டான்.

சஅ. அதிகாரம்.

இதற்குப்பிற்பாடு சம்பவித்ததேதென்றால், இதோ, உம்முடைய தகப்பனார் வியாதியாயிருக்கிறார் என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது; அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னுடேகூட அழைத்துக்கொண்டு போனான்.

உ இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மண்டைக்கு வருகிறானென்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடனாக்கி, கட்டிலின்மேல் உளாக்காந்தான்.

ஈ யாக்கோபு யோசேப்போடே சொன்னதாவது: சர்வத்திற்கும்வல்ல பராபரன் கானான்தேசத்திலிருக்கிற லூசிலே எனக்குத் தரிசனையாகி, என்னை ஆசீர்வதித்து,

ச *இதோ நாம் உன்னைப் பலுகவும் உன்னைப் பெருகவும்பண்ணி, உன்னைச் சனசமூகங்களான கூட்டமாக்கி, உனக்குப் பிற்பாடு இருக்கும் உன் வித்திற்கு இந்தத் தேசத்தை நித்தியகாணியாட்சியாகக் கொடுப்போமென்று என்னோடே சொன்னார்.

*க மோ. ஈடு. ஐக, ஐஉ.

ஏ ¶ இப்பொழுதும் நான் உன்னண்டைக்கு எகிப்திலே வராததற்குமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரர் என்னுடையவர்கள்; ரூபன் சீமெயோன்என்றவர்களைப்போலஎப்பிராயீமும்

Digitized by Google

மனாசேயும் என்னுடையவர்களாய் இருப்பார்கள்.

6 இவர்களுக்குப் பிறகு நீ பெறுகிற சந்தானமோவெனில், உன்னுடையதாயிருக்கும்; இவர்கள் தங்கள் சகோதரருடைய தாயத்தில் அவர்களுக்கொத்த பேராய் அழைக்கப்படுவார்கள்.

7 நான் பதானிலிருந்து வருகையில், ராகேல் கானான்தேசத்தின் வழியிலே எப்பிராத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சம்தூரமிருக்கிறபொழுது, எனக்குமுன்பாக மரணம் அடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னப்படுகிற எப்பிராத்தா ஊரின் வழியிலே அடக்கம்பண்ணினேன் என்றான்.

8 பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைக்கண்டு இவர்கள் யாரென்றான்.

9 யோசேப்புத் தன் தகப்பனோடே, இவர்களை பராபரன் இவ்விடத்தில் எனக்குக் கொடுத்த என்னுடைய குமாரர் என்றான்; அப்பொழுது இவன், நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படிக்கு அவர்களை என்னிடத்தில் கொண்டுவா என்றான்.

10 இஸ்ரவேலின் கண்களோவென்றால் பெரியவயதினால் இருண்டுபோயிற்று; பார்க்கக்கூடாதிருந்தான்; அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தம்செய்து அணைத்துக்கொண்டான்.

11 பிறகு இஸ்ரவேல் யோசேப்போடே உன் முகத்தைப் பார்ப்பேன் என்று நினையாதே போனேன்; ஆனால் இதோ, பராபரன் என்னை உன் வித்தையும் காணப்பண்ணினார் என்றான்.

12 அப்பொழுது யோசேப்பு அவன் முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப் பின்னிடப்பண்ணி, அவன் முகத்திற்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான்.

13 பிற்பாடு யோசேப்பு இருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையிலுலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும் மனாசேயைத் தன் இடதுகையிலுலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் அவனண்டையிலே சேரப்பண்ணினான்.

14 அப்பொழுது இஸ்ரவேல் தன் வலதுகையை நீட்டி, இளையவனாகிய எப்பிராயீமுடைய தலையின்மேலும் மனாசே மூத்தவனாயிருந்தானும், தன் இடதுகையை மனாசேயினுடைய தலையின்மேலும் வைத்தான்; அவன் அறிந்து அப்படித் தன் கைகளை வைத்து,

15 யோசேப்பை ஆசீர்வதித்துச் சொன்னதாவது: பராபரனுக்குமுன்பாக என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் நடந்துகொண்டார்களே, நான் உண்டான நாள்துவக்கி இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த அந்தப் பராபரனும்,

16 என்னை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதனுமானவர் இந்த இளைஞரை ஆசீர்வதிக்கக்கடவர்; என் பேரும் ஆபிரகாம் ஈசாக்கென்ற என் பிதாக்களின் பேரும் அவர்களுக்குத் தரிக்கப்படக்கடவது; தேசத்தின் நடுவிலே ஏராளமான நிரட்சியாய்ப் பலுகக்கடவர்களென்றான்.

17 தன் தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு காண்கிறபொழுதோவெனில், அவனுக்கு ஆகாததாய்க் கண்டது; ஆகையால் எப்பிராயீமுடைய தலையின்மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை யோசேப்பு மனாசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து,

18 தன் தகப்பனோடே அப்படியல்ல, என் தகப்பனே, ஏனெனில் இவன் மூத்தவன்; இவன் தலையின்மேல் உம்முடைய வலதுகையை வையுமென்றான்.

19 அவன் தகப்பனோவெனில், தட்டுதல் பண்ணி, அறிவேன், என் மகனே, அறிவேன்; இவனும் சனசதனமாவான்; இவனும் பெருகிப்போவான்; ஆகிலும் இவனுடைய தம்பி இவனைப்பார்க்கிலும் பெரு

கிப்போவான்; அவன் வித்துச் சனசதளங்களால் நிறைந்த நிரட்சியாமென்றான்.

உ அப்படியே அவன் அந்நாளிலே அவர்களை ஆசீர்வதித்து, பராபரன் உன்னை எப்பிரயீமைப்போலவும் மனாசேயைப் போலவும் இருக்கப்பண்ணுவாராக என்று இஸ்ரவேலர் உன்னைத்தொட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிரயீமை மனாசேக்குமுன்னே வைத்தான்.

உக ¶ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்போடே சொன்னதாவது: இதோ நான் மரணம் அடைகிறேன்; ஆனால் பராபரன் உங்களோடிருந்து, உங்கள் பிதாக்களின் தேசத்திற்கு உங்களைத் திரும்பிவரப்பண்ணுவார் என்றும்,

உஉ நான் என் பட்டயத்தாலும் என் வில்லினாலும், எமோரியர் கையிலே வாங்கின *ஒரு நிலத்தை உன் சகோதரனைப்பார்க்க உனக்கு அதிகமான பங்காகக் †கொடுத்தேன் என்றும் சொன்னான். *யோவா. ச. டு.

✠✠. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு தன் குமாரனை அழைப்பித்துச் சொன்னதாவது: கூடி வாருங்கள்; முடிவுநாள்களில் உங்களுக்கு வந்து சம்பவிப்பதை உங்களுக்கு அறிவிப்பேன்.

உ ¶ யாக்கோபின் குமாரரே, கூடிவந்து கேளுங்கள்; உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலைக் கேளுங்கள்.

ஈ ¶ ரூபனே, நீ என்னுடைய தலைச்சனும் என் சத்துவமும் என் முந்தின பலமுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் பிரதானமுமானவன்.

ச தண்ணீரைப்போலப் பாய்ந்தவனே, நீ பிரதானமாய் இருப்பதில்லை; ஏனெனில் *உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேலே ஏறினாய்; அதை அப்பொழுது தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் அவன் ஏறினான். *ஆ மோ. ஈடு. உஉ.

ஞ சிமெயோனும் லேவியும் ஏக சகோதரராயிருக்கிறார்கள்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் ஆயுதங்கள்.

ஃ என் ஆத்துமா அவர்கள் இரகசிய ஆலோசனையில் வராதிருப்பதாக; என் மனமை அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப்போகாதிருப்பதாக; ஏனெனில் அவர்கள் தங்கள் கோபத்திலே *ஒரு புருஷனைக் கொன்றுபோட்டு, தங்கள் ஆங்காரத்திலே பலவான்களை அதம்பண்ணினார்கள்.

*ஆ மோ. ஈச. உடு.

எ வலிதான அவர்களுடைய கோபமும் கடினமான அவர்களுடைய மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; அவர்களை யாக்கோபிலே *பிரியவும் இஸ்ரவேலிலே சிதறவும் பண்ணுவேன். *யோச. யஈ. ஆ.

அ ¶ யூதாவே, நீயே பிரதானமானவன்; உன்னை உன் சகோதரர் புகழுவார்கள்; உன்னுடைய கை உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உனக்கு முன்பாக உன் தகப்பனுடைய புத்திரர் வணங்குவார்கள்.

ஆ யூதா சிங்கக்குட்டியானவன்; என் மகனே, நீ இரை எடுத்து உயர்ந்தாய்; சிங்கத்தைப்போலவும் சிழச்சிங்கத்தைப்போலவும் மடங்கிப் படுத்துக்கொள்ளுகிறான்; அவனை எழுப்பப்போகிறவன் யார்?

ஐ *சமாதான கர்த்தர் வரும்மட்டும்செங்கோல் யூதாவிலிருந்தும், நியாயம்கற்பிக்கிறவன் அவன் பாதங்களிலிருந்தும், அற்றுப்போவதில்லை; அவனைச் சனசதளங்கள் சேரும். *சங். எஉ. எ. எசா. கூ. சு, எ. எபே. உ. ஐஎ.

ஐக தம்முடைய கழுதை மறியைத் திராட்சச்செடியோடும் தம்முடைய கோளிகைக் கழுதையின் குட்டியை கற்குல திராட்சச்செடியோடும் கட்டிப்போடுவார்; தம்முடைய உடுப்பை திராட்சப்பழ இரசத்திலும் தமது சால்வையைத் திராட்சப்பழங்களின் இரசத்திலும் வெளுப்பார்.

ஐஉ அவருடைய கண்கள் திராட்சப்பழ இரசத்திலும் சிவப்பும், அவருடைய பல்லுகள் பாலிலும் வெண்மையுமாய் இருக்கும்.

ஙஎ ¶ செபுலோன் *கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல்துறை அருகே இருப்பான்; அவன் எல்லை சீதோனுக்கு எதிராக இருக்கும். *யோசு. ஙகூ. ங, ஙக.

ஙச ¶ இசஷார் பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த எலும்புள்ள கழுதை.

ஙடி அவன் இளைப்பாறுதல் நல்லதென்றும் தேசமானது வசதியானதென்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதி கட்டுகிறவனானான்.

ஙஎ ¶ தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றைப்போல தன் சனத்தை நியாயம் விசாரிப்பான்.

ஙத தாண் குதிரையின் குதிகால்களை, அதில் ஏறி இருக்கிறவன் மல்லாக்க விழக்கடிக்கிற வழி அருகான சர்ப்பமும், பாதை அருகான விரியனுமாய் இருப்பான்.

ஙஅ ¶ கர்த்தாவே, *உம்முடைய இரட்சிப்புக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். *சங். ஈயகூ. ஈசுகூ.

ஙகூ ¶ காத்தென்றவன்மேல் இராணுவக் கூட்டம் பாய்ந்துவிழும்; அவனோவென்றால் கடைசியிலே அதின்மேல் பாய்ந்து விழுவான்.

ஙஙி ¶ ஆசேருடைய அப்பம் புஷ்டியாய் இருக்கும்; இராசாக்களுக்கான ருசிவர்க்கங்களை இடுவான்.

ஙக ¶ நப்தலி தீங்கலாய் விடப்பட்ட பெண்மான்; வடிப்பமான வசனங்களைத் தருகிறான்.

ஙஉ ¶ யோசேப்பு கனிதருகிற செடி; அவன் சீர்ஊற்றண்டையிலே கனிதருகிற செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்.

ஙஈ அம்பை எய்கிறவர்கள் அவனை மனமடிவாக்கி எய்து, அவனை விரோதித்தார்கள்.

ஙச ஆனால் அவனுடைய வில் கெட்டியாய் நின்றது; அவன் கைகளின் புயங்கள் யாக்கோபுடையவல்லவரின் கரங்களாலே பலத்தன; இதைத்தொட்டு மேய்ப்பனும் இஸ்ரவேலின் அஸ்திபாரக்கல்லும் ஆனான்.

ஙடி உன் தகப்பனுடைய பராபரனாலே அப்படி ஆயிற்று; அவர் உனக்குத் துணையாய் இருப்பார்; சர்வத்திற்கும் வல்லவராலே அப்படி ஆயிற்று; அவர் உயரவானத்திலிருந்த உண்டாகிய ஆசீர்வாதங்களாலும், கீழே கிடக்கிற பாதாளத்தின் ஆசீர்வாதங்களாலும், முலைகளுக்கும் கர்ப்பங்களுக்கும் உண்டாகிற ஆசீர்வாதங்களாலும், உன்னை ஆசீர்வதிப்பார்.

ஙஎ உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேல்வட்டமாய் இருந்து, நித்திய மேடுகளின் முடிவுமட்டும் போகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக.

ஙத ¶ பென்யமீன் பீறிப்போடுகிற ஓநாய், காலமே எடுத்து அதைப் பட்சிப்பான்; சாயங்காலத்திலே கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்.

ஙஅ ¶ இஸ்ரவேலின் கோத்திரங்களாகிய இவைகள் எல்லாம் பன்னிரண்டு; அவர்கள் தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இதுதான்; அவர்களில் அவனவனை அவனவனுக்கு அடுத்த ஆசீர்வாதத்தினாலே ஆசீர்வதித்தான்.

ஙகூ பிற்பாடு அவன் அவர்களுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: நான் என் சனத்தோடே சேர்க்கப்படுகிறேன்; ஏத்தியனான எப்பேரோனின் நிலத்திலுள்ள கெபியிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள்.

ஙஙி கானான்தேசத்திலே மம்ரேக்கெதிராக இருக்கிறதும், மாபிரகாம் நிலத்தோடேகூட ஏத்தியனான எப்பேரோனின் கையிலே பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்த நிலமாகக் கொண்டதுமான மக்பேலா என்னப்பட்ட நிலத்தின் கெபியிலேதானே.

ஙக அங்கே ஆபிரகாமையும் அவர் பெண்சாதியாகிய சாராளையும் அடக்கம்பண்ணி

தப் புருஷனுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்றேும்.

உஎ அப்பொழுது உம்முடைய அடியாளுடைய என் தகப்பன் எங்களோடே சொன்னதாவது: என் பெண்சாதி எனக்கு இரண்டு பின்னைகளைப் பெற்றாள் என்கிறதையும்,

உஅ அவர்களில் ஒருவன் என்னிடத்தில் இருந்து புறப்பட்டுப் போனான், அவன் பீறுண்ணவே பீறுண்டானென்று முன் சொல்லி, இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன் என்கிறதையும் நீங்கள் அறிவீர்கள்.

உக நீங்கள் இவனையும் என் முன்பாக இராதபடிக்கு அழைத்துப்போகும்போது, ஒரு சேதம் அவனுக்கு வந்தால், என் நரையை நிர்ப்பந்தத்தோடே குழியில் இறக்கப்பண்ணுவீர்கள் என்றாள்.

உஉ இப்பொழுதும் இவனாள் எங்களோடாமல், நான் என் தகப்பனுடைய உம்முடைய அடியானண்டையிலே போனால், அப்பொழுது அவருடைய ஆத்துமா இவனுத்துமாவோடே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியினாலே சம்பவிப்பது ஏதெனில்,

உக அவர் இவனாள் இல்லை என்றுகாணும்பொழுது, செத்துப்போவார்; அப்படியே உம்முடைய அடியாரும் உம்முடைய வயோதிபக்காரனுடைய எங்கள் தகப்பனுடைய நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவோமே.

உஉ ஏனெனில் நான் அவனை உம்மண்டைக்கு அழைத்துவராதேபோனால், நான் சகலகாலும் என் தகப்பனுக்கு நேரன்தராய் இருப்பேனென்று உம்முடைய அடியானாகிய நான் என் தகப்பனிடத்திலே இந்த இளைஞனுக்காகப் பிணைப்பட்டேன்.

ஊக இப்பொழுதும் இவனாள் தன் சகோதரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு, உம்முடைய அடியானாகிய நான் இவனுக்குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாய் இருக்கட்டும்.

ஊஉ ஏனெனில் இவனாள் என்னோடே இல்லாவிட்டால் எப்படி என் தகப்பனண்டைக்குப் போயேறுவேன்? என் தகப்பனைப் பிடிக்கும் தீங்கை அப்பொழுது காண்பேனே என்றாள்.

சரு. அதிகாரம்.

அப்பொழுது யோசேப்பு தன்னண்டையில் நிற்கிற எல்லார்முன்பாகவும் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென்று கூப்பிட்டான்; யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்துகையில் ஒருவரும் அவனண்டையிலே நின்றதில்லை.

உ அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள்; பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

ஊ யோசேப்பு தன் சகோதரரோடே நான் யோசேப்பு; என் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறாரோ என்றான்; ஆனால் அவன் சகோதரர் அவனுக்குமுன்பாகக் கலங்கினபடியினாலே, அவனுக்குப் பிரதியுத்தாரம் சொல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

ச அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரோடே, என்னண்டையிலே கிட்டிவாருங்கள் என்றான்; அவர்கள் கிட்டிப்போனார்கள்; அப்பொழுது அவன் சொன்னதாவது: நீங்கள் எகிப்திற்குப் போகிறவர்களுக்கு விற்ற உங்கள் சகோதரனுடைய யோசேப்பு நானே.

ஞ இப்பொழுதும் நீங்கள் என்னை இவ்விடத்திற்கு விற்றுப்போட்டதினாலே, நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்கள் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம்; ஏனெனில் உங்கள் சீவனுக்காகப் பராபரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

ஞஅ ஏனென்றால் இந்த இரண்டுவருஷம் தேசத்திற்குள்ளே பஞ்சம் உண்டாயிருக்கிறது; உழவும் அறுப்பும் இல்லாத இன்னம் ஐந்து வருஷங்களும் இன்னம் வரும்.

Digitized by Google

எ ஆனால், உங்களைத் தேசத்தில் மீதியாக வைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சிப்பிலே உயிரோடே காப்பதற்குமாக, பராபரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

அ இப்பொழுதும் நீங்களல்ல, பராபரன் என்னை இங்கே அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் வீட்டிற்கெல்லாம் தலையாகவும், எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறவனாகவும் வைத்தார்.

கூ நீங்கள் தீவிரத்தோடே என் தகப்பனண்டைக்குப் போயேறி, அவரோடே சொல்லவேண்டியதேதெனில், உம்முடைய குமாரனாகிய யோசேப்புச் சொல்லி அனுப்புகிறதாவது: பராபரன் என்னை எகிப்திற்கெல்லாம் தலையாக வைத்தார்; என் னண்டைக்கு இறங்கிவாரும், தாமதிக்க வேண்டாம்.

ஏ நீர் கோசேன் தேசத்திலே வாசம்பண்ணி, எனக்குச் சமீபத்திலே இருப்பீர்; நீரும் உம்முடைய பிள்ளைகளும் உம்முடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் உம்முடைய ஆடுகளும் உம்முடைய மாடுகளும் உமக்குண்டான யாவும் கூடத்தானே.

ஐ நீரும் உம்முடைய வீட்டாரும் உமக்கிருக்கிற யாவும் தாழ்வுபடாதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன்; ஏனெனில் பஞ்சம் இன்னம் ஐந்து வருஷம்மட்டும் இருக்குமென்கிறான் என்று சொல்லுங்கள்.

ஐஉ இதோ என்னுடைய வாய் உங்களோடே பேசுகிறது என்கிறதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே.

ஐங் எகிப்திலே எனக்கு இருக்கிற என்னுடைய எல்லா மகிமையையும் நீங்கள் கண்டவை எல்லாவற்றையும் என் தகப்பனுக்கு அறிவித்து, தீவிரமாய் என் தகப்பனை இவ்விடத்திற்கு இறங்கிவரப்பண்ணுங்கள் என்றசொல்லி,

ஐச தன் தம்பியாகிய பென்யமீனுடைய கழுத்திறுக்கக் கட்டிக்கொண்டு அழுதான்; பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழுதான்.

ஐடு தன்னுடைய எல்லாச் சகோதரரையும் முத்தம்செய்து அவர்கள் முன்பாக அழுதான்; அதற்குப் பிற்பாடு அவன் சகோதரர் அவனோடே பேசினார்கள்.

ஐசு ¶ யோசேப்பின் சகோதரர் வந்தார்களென்று பார்வோன் வீட்டிலே செய்தி கேட்கப்பட்டபொழுது, அது பார்வோன் பார்வைக்கும் அவன் ஊழியக்காரரின் பார்வைக்கும் நன்றாய் இருந்தது.

ஐள அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னது: நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியதாவது: நீங்கள் செய்யவேண்டியதேதெனில், உங்கள் மிருகசீவன்களின்மேல் பொறியேற்றிப் புறப்பட்டு, கானான்தேசத்திற்குப்போய்,

ஐஅ உங்கள் தகப்பனையும் உங்கள் வீட்டாரையும் கூட்டிக்கொண்டு என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்துதேசத்தின் நன்மையைக் கொடுப்பேன்; தேசத்தின் கொழுப்பைச் சாப்பிடுவீர்கள்.

ஐகூ நீங்கள் செய்யவேண்டியது ஏதெனில், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும் வண்டில்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய், உங்கள் தகப்பனையும் ஏற்றி வாருங்கள்.

உஐ உங்கள் கண் உங்களுடைய தட்டுமுட்டுகளைப் பார்க்கவேண்டாம்; ஏனெனில் எகிப்துதேசமெங்கும் நன்மையாயிருக்கிறது உங்களுடையதாய் இருக்குமென்று அவர்களோடே சொல்ல நீ கட்டளைபெற்றாய் என்றான்.

உக இப்படியே இஸ்ரவேலின் குமாரர் செய்தார்கள்; யோசேப்பு அவர்களுக்குப் பார்வோனுடையகட்டளையின்படியே வண்டில்களைக்கொடுத்து, வழிக்கு ஆகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான்.

Digitized by Google

உ அவர்களில் ஒவ்வொருவனுக்கு அவன் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து, பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து,

ஈ அப்படியே தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதங்களைச் சுமந்துபோகிற பத்துக் கழுதைகளையும், தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் தின்பண்டங்களும் சுமந்துபோகிற பத்துக் கோளிகைக் கழுதைகளையும் அனுப்பினான்.

ஊ அப்படியே அவன் தன் சகோதரரை அனுப்பிவிட்டு, இவர்கள்போகிறபொழுது, வழியிலே சண்டைபண்ணீர்களாக என்று அவர்களோடே சொன்னான்.

ஏ அவர்கள் எகிப்திலிருந்து போயேறி, கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டைக்கு வந்து,

ஐ யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறான் என்றும், அவன் எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறான் என்றும் அவனுக்கு அறிவித்தார்கள்; ஆனால் அவன் இருதயம் தளம்பிற்று; ஏனெனில் அவர்களை நம்பாதிருந்தான்.

ஒ அவர்களோவென்றால் யோசேப்புத் தங்களுடனே பேசின எல்லா வார்த்தைகளையும் அவனுக்குச் சொல்லுகிறபொழுதும், தன்னை ஏற்றிக்கொண்டுபோக யோசேப்பு அனுப்பின வண்டில்களை அவன் காண்கிறபொழுதும், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி நிடப்பட்டது.

ஓ அப்பொழுது இஸ்ரவேல், என் குமாரனாகிய யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறபொழுதும், நான் மரணம் அடையாததற்கு முன்னேபோய் அவனைப் பார்ப்பேன் என்றான்.

சசு. அதிகாரம்.

இஸ்ரவேல் தனக்குண்டானவைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு பயணம் புறப்பட்டுப் பேர்சேபாவுக்குவந்து, தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பராபரனுக்குப் பலிகளை இட்டான்.

உ இராத்தரிசனைகளில் பராபரன் இஸ்ரவேலோடே பேசி, யாக்கோபே யாக்கோபே, என்றார்; அவன் இதோ அடியேனென்றான்.

ஈ அப்பொழுது அவர் சொன்னதாவது: நாம் உன் தகப்பனுடைய தேவனாகிய பராபரன்; எகிப்திற்கு இறங்கிப்போகப் பயப்படாயாக; ஏனெனில் அங்கே உன்னைப் பெரியசாதி ஆக்குவோம்.

ஊ நாம் உன்னோடேகூட எகிப்திற்கு இறங்கிப்போவோம்; நாம் உன்னைத் திரும்பி வந்து ஏறவும் பண்ணுவோமென்றும், யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவானென்றும் சொன்னார்.

ஏ அதற்குப் பிற்பாடு யாக்கோபு பேர்சேபாவிலிருந்து பயணம்புறப்பட்டுப் போனான்; இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் பெண்சாதிகளையும், பார்வோன் அவனை ஏற்றிவர அனுப்பின வண்டில்களின்மேல் ஏற்றிக்கொண்டுபோனார்கள்.

ஐ அவர்கள், தங்கள் ஆடுமாடுகளையும் தாங்கள் கானான்தேசத்தில் சம்பாதித்த தங்கள் ஆஸ்தியையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு வந்தார்கள், யாக்கோபும் அவன் சந்தார் அனைவரும் அவனோடு கூடத்தானே.

ஒ தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் சந்தார் அனைவரையும் அவன் தன்னோடேகூட எகிப்திற்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

ஓ எகிப்திலே வந்த இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள்; யாக்கோபும் அவன் குமாரரும்; யாக்கோபுடைய முதல் பேறான ரூபன்.

ரூ ரூபனுடைய குமாரர்; ஆனோக், பல்

Digitized by Google

னு, ஏத்ரோன், கற்மீ என்றவர்கள்.

எ சிமெயோனுடைய குமாரர்; ஏமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், கானான் தேசத்தானின் குமாரனுகிய சவுல் என்றவன்.

ஈ லேவியின் குமாரர்; கேர்சோன், கேகாத், மெராரி என்றவர்கள்.

உ யூதாவின் குமாரர்; ஏர், ஓனான், சேலா, பேரேஸ், சேரா என்றவர்கள்; ஏரும் ஓனானும் கானான்தேசத்திலே செத்தப்போனார்கள்; பேரேசுடைய குமாரர்; எத்ரோன், ஆமூல் என்றவர்கள்.

ஊ இசஷாருடைய குமாரர்; தோலா, பூவா, யோப், சிம்ரோன் என்றவர்கள்.

எ சேபுலோனுடைய குமாரர்; சேரேத், ஏலோன், யாலேயேல் என்றவர்கள்.

ஏ இவர்கள் லேயாளின் குமாரர்; இவர்களையும் யாக்கோபுடைய குமாரத்தியாகிய தீனாளையும் அவன் அவனுக்குப் பதான்அராமிலே பெற்றான்; அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லா ஆத்துமாக்களும் மூப்பத்துமூன்று.

ஐ காத்துடைய குமாரர்; சிப்பியோன், அகி, சூனி, எத்சோன், ஏரி, அரோதி, அரேலி என்றவர்கள்.

ஒ ஆசேருடைய குமாரர்; இம்னா, இஸ்வா, இஸ்வி, பேரியா என்றவர்கள்; இவர்களுடைய சகோதரி சேராக்கு என்றவள். பேரியாவின் குமாரர்; ஏபேர், மல்கியேல் என்றவர்கள்.

ஓ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பின்னைகள்; அவன் யாக்கோபுக்கு இந்தப் பதினாறு ஆத்துமாக்களைப் பெற்றான்.

ஔ யாக்கோபின் பெண்சாதியாகிய ராகேலுடைய குமாரர்; யோசேப்பும் பென்யமீனும்தானே.

க யோசேப்புக்கு எகிப்துதேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்களை ஓன்பட்டணத்து ஆசாரியனுகிய போத்திப்பேராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத் அவனுக்குப் பெற்றாள்.

உக பென்யமீனுடைய குமாரர்; பேலா, பேகர், அஸ்பெல், கேரா, நாமான், ஏகி, ரோஸ், மூப்பிம், உப்பிம், ஆர்து என்பவர்கள்.

உஉ ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும் பதினாலு ஆத்துமாவே.

உங தாணுடைய குமாரன்; ஊசிம் என்றவன்.

உச நப்தலியின் குமாரர்; யாத்சேயேல்; கூனி, ஏத்சேர், சில்லேம் என்றவர்கள்.

உடு இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழு ஆத்துமாக்கள்.

உசு ¶ யாக்கோபுடைய குமாரரின் பெண்சாதிகளைத் தவிர, அவனுடைய கர்ப்பப் பிறப்பாய் இருந்து அவனோடேகூட எகிப்திலே வந்த ஆத்துமாக்கள் எல்லாம் அறுபத்தாறு ஆத்துமாக்கள்.

உள யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டு ஆத்துமாக்கள்; எகிப்திலே வந்த யாக்கோபின் வீட்டாராகிய ஆத்துமாக்கள் எல்லாம் எழுபது.

உஎ ¶ கோசேனுக்குப்போகிற வழியைத் தனக்குக் காட்டுவிக்க, அவன் தனக்குமுன்னே யோசேப்பண்டைக்கு யூதாவை அனுப்பினான்; அப்படியே கோசேன்தேசத்திலே வந்தார்கள்.

உஅ யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தம்பண்ணி ஏறி, கோசேனுக்குத் தன் தகப்பனுகிய இஸ்ரவேலுக்குஎதிர்கொண்டுபோய், அவனுக்குத் தன்னைக் காண்பித்து, அவனுடைய கழுத்திறுகக் கட்டிக்கொண்டு, அதிக நேரமாய் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்.

உக அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்புடனே, நீ இன்னம் உயிரோடிருக்கிறாய் என்று நான் உன் முகத்தைக் கண்டபடியி

லே இனி மரணம் எனக்கு எப்போதாகிலும் வரட்டும் என்றான்.

ஈக பிற்பாடு யோசேப்பு தன் சகோதரரோடும் தன் தகப்பனுடைய வீட்டாரோடும் சொன்னதாவது: நான் போயேறிக் கானான்தேசத்திலிருந்த என்னுடைய சகோதரரும், என் தகப்பன்வீட்டாரும் என் னண்டைக்கு வந்தார்களென்று பார்வோனுக்கு அறிவித்து,

ஈஉ இந்த மனிதர் ஆடுகளமேய்க்கிறவர்கள்; ஏனெனில் மிருகசீவன்களையுடையவர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஆடுகளையும் தங்கள் மாடுகளையும் தங்களுக்குண்டானவை எல்லாவற்றையும் கொண்டுவந்தார்களென்று அவரோடே சொல்லுவேன்.

ஈஈ ஆகையால் பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்னவென்று கேட்கிறதுண்டானால்,

ஈச அப்பொழுது நீங்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கும்படிக்குச் சொல்லவேண்டியதாவது: எங்கள் பிதாக்களைப்போல உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயது தொடங்கி இதுவரைக்கும் மிருகசீவன்களை உடையவர்களாய் இருந்தோமென்று சொல்லுங்கள்; ஏனெனில் *மந்தைமேய்க்கிறவர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாய்இருக்கிறார்கள் என்றான். *க மோ. சஈ. ஈஉ.

சுள. அதிகாரம்.

• யோசேப்பு வந்து பார்வோனுக்கு அறிவித்து, என் தகப்பனும் என் சகோதரரும், தங்கள் ஆடுகளோடும், தங்கள் மாடுகளோடும், தங்களுக்குண்டானவை எல்லாவற்றோடும்கூடக் கானான்தேசத்திலிருந்து வந்தார்கள்; இதோ கோசேன்தேசத்திலே இருக்கிறார்கள் என்றுசொல்லி,

உ தன் சகோதரரில் ஒருபங்காகிய ஐந்து பேரை அழைத்துக்கொண்டு, அவர்களைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்.

ஊ அப்பொழுது பார்வோன் அவன் சகோதரரோடே உங்கள் தொழில் என்னவென்றான்; அவர்கள் பார்வோனுடே, உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்கள் என்றுசொல்லி,

எ பின்னையும் பார்வோனுடே, தேசத்திலே தங்கவந்தோம்; ஏனெனில் உம்முடைய அடியாருக்கு இருக்கிற மந்தைக்கு மேய்ச்சலில்லை, அதேனென்றால் பஞ்சம் கானான்தேசத்திலே கடினமாய் இருக்கிறது; இப்பொழுதும் உம்முடைய அடியார் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும் என்றார்கள்.

ஏ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னண்டைக்கு வந்தார்கள்.

ஐ எகிப்துதேசம் உனக்குமுன்பாகத் திடக்கிறது; தேசத்தில் நலமான இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேற்று; அவர்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும்; அவர்களுக்குள்ளே நிறமையான மனிதருண்டென்று அறிந்திருந்தாயானால் அவர்களை எனக்கிருக்கிற ஆடுமாடுகளை விசாரிக்கிறதலைவராக வையென்றான்.

எ யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபையும் அழைத்துக்கொண்டு வந்து, அவனைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்; யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

அ பார்வோன் யாக்கோபோடே, உன்னுடைய ஆயுசின் நாள்கள் எத்தனை என்றான்.

கூ யாக்கோபு பார்வோனுடே, நான் பரதேசம்பண்ணின நாள்கள் நூற்றுமுப்பது வருஷங்கள்; என் ஆயுசின் நாள்கள் பரதேசிகளான என் பிதாக்களுடைய ஆயுசின் நாள்களுக்கு வராமல் கொஞ்சமும் பொல்லாப்புமாய் இருந்தன என்றான.

ஐ பிற்பாடு யாக்கோபு பார்வோனை ஆசீர்

வரித்து, பார்வோனிடத்திலிருந்து புறப் பட்டான்.

ஙக யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரனையும் குடியேற்றி, பார்வோன் கட்டளை இட்டபடி, அவர்களுக்கு எகிப் துதேசத்தின் காட்டிலே நல்ல காடாகிய ராமேசேஸ் சீமையிலே காணி கொடுத் தான்.

ஙஉ ¶ யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரனையும் தன் தகப்பனுடைய வீட் டார் அனைவரையும் பிள்ளைகளின் இலக்கத் திற்குத்தக்கதாய் ஆகாரம்கொடுத்துப் பரா மரித்துவந்தான்.

ஙங தேசமெங்கும் அப்பம் இல்லாதே போயிற்று; ஏனெனில் பஞ்சம் மிகவும் கடினமாய் இருந்தது; பஞ்சத்தினாலே, எகிப்துதேசமும் கானான்தேசமும் இளைத் தப்போயின.

ஙச அப்பொழுது அவர்கள் கொள்ளும் தானியத்திற்கு இடாக யோசேப்பு எகிப் துதேசத்திலும் கானான்தேசத்திலும் உண் டான திரவியத்தை எல்லாம் சேர்த்தான்; அந்தத் திரவியத்தை யோசேப்பு பார் வோன் வீட்டிலே கொண்டுவந்துவைத் தான்.

ஙஞ எகிப்துதேசத்திலும் கானான்தேசத் திலும் திரவியம் செலவழிந்து போனபொ ழுதோவெனில், எகிப்தியர் எல்லாரும் யோசேப்பண்டைக்கு வந்து, எங்களுக்கு அப்பம்தாரும்; திரவியம் இல்லாதேபோ னதினாலே, நாங்கள் உமக்கு முன்பாகச் சாவானேன் என்றார்கள்.

ஙசு அப்பொழுது யோசேப்பு திரவியம் இல்லாதேபோயிற்றாகில், உங்கள் மிருக ஜீவன்களைக் கொடுங்கள்; உங்கள் மிருகஜீ வன்களுக்கு இடாக உங்களுக்குத் தருகி றேன் என்றான்.

ஙட அப்பொழுது தங்கள் மிருகஜீவன்க ளை யோசேப்பண்டைக்குக் கொண்டுவந் தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடு களையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங் கிக்கொண்டு, அவர்களுக்கு அப்பம்கொ டுத்து, அந்த வருஷத்திலே அவர்களுடை ய எல்லா மிருகஜீவன்களுக்கும் இடாக அவர்கள் பிழைப்பை நடப்பித்துக்கொ ண்டுவந்தான்.

ஙஅ ¶ அந்த வருஷம் முடிந்தபொழுது, அவர்கள் மறுவருஷத்திலே அவனண்டை க்கு வந்து அவனோடே சொன்னதாவது: திரவியமும் செலவழிந்துபோயிற்று; மிரு கஜீவன்களின் ஆஸ்தியும் எங்கள் ஆண்ட வனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்க ள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக் குமுன்பாக ஒன்றும் மீதியாளநில்லா என்கி றதை எங்கள் ஆண்டவனுக்கு மறைக்க மாட்டோம்.

ஙக நாங்களும் எங்கள் நிலமும் உம்மு டையகண்களுக்குமுன்பாக மடிவானேன்? நீர் எங்களையும் எங்கள் நிலத்தையும் கொண்டு, அப்பம்தாரும்; நாங்கள் எங்கள் நிலத்தோடும்கூடப் பார்வோனுக்கு அடி மைப்பட்டிருப்போம்; நாங்கள் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கும் நிலம் பாழா ய்ப் போகாதபடிக்கும் விதையைத் தாரும் என்றார்கள்.

ஙஉ அப்படியே யோசேப்பு எகிப்தின் நில த்தை எல்லாம் பார்வோனுக்குக் கொண் டான்; ஏனெனில் எகிப்தியர் அவரவர், பஞ்சம் தங்கள்மேல் பலத்துக்கொண்ட படியினாலே, தங்கள் வயல்களை விற்றார் கள்; ஆனதுகொண்டு நிலம் பார்வோனைச் சேர்ந்தது.

ஙக ஆனால் சனத்தை அவன் எகிப்தினு டைய எல்லையின் இந்த முனைதுவக்கி அந்த முனைமட்டும் இருந்த பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணினான்.

ஙஉ ஆசாரியன் நிலத்தைமாத்திரம் கொள் ளாதே போனான்; ஏனெனில் அது பா வோனாலே ஆசாரியருக்குப் படித்திட்டமா கக் கட்டளைபண்ணப்பட்டது; பார்வோன் தங்களுக்குக் கட்டளைபண்ணின தங்கள் படியைச் சாப்பிட்டார்கள்; ஆகையால்

அவர்கள் தங்கள் நிலத்தை விற்றநில்லை.

உஈ யோசேப்பு சனத்தோடே சொன்னதாவது: இதோ, இன்று உங்களையும் உங்கள் நிலத்தையும் பார்வோனுக்குக் கொண்டேன்; இதோ உங்களுக்குத் தரப்படுகிறவிதை, அதினால் நிலத்தை விதையுங்கள்.

உச பலனைபொழுது நடப்பதேதென்றால், பார்வோனுக்கு ஜந்தில் ஒரு பங்கைக் கொடுப்பீர்கள்; நாலுபங்கோவென்றால், வயலுக்கு விதையும் உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரம் உண்டாக உங்களுடையவைகளாய் இருக்கும் என்றான்.

உடு அப்பொழுது அவர்கள் எங்களை உயிரோடேகாத்தீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவே கிடைக்கட்டும், நாங்கள் பார்வோனுக்கு அடிமையாயிருப்போம் என்றார்கள்.

உசு அப்படியே ஜந்தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும்வாரம் என்பதை, யோசேப்பு எகிப்து நிலத்தின்மேலே இந்நாள்மட்டும் செல்லும் கட்டளையாக்கினான்; ஆசாரியரின் நிலம்மாத்திரம் பார்வோனைச் சேராமல் நீங்கலாயிற்று.

உஎ ¶ இஸ்ரவேல் எகிப்துதேசத்திலிருக்கும் கோசேன்சீமையிலே குடியிருந்தான்; அதில் காணியாட்சிக்காரராகி, மிகவும் பலுகிப் பெருகினார்கள்.

உஅ யாக்கோபு எகிப்துதேசத்திலே பதினேழுவருஷம் உயிரோடிருந்தான்; ஆகையால் யாக்கோபுடைய ஆயுசின் நாள்கள் நூற்றுநாற்பத்தேழு வருஷங்களாயின.

உஆ மரணமடைய இஸ்ரவேலின் காலம் சமீபித்தபொழுது, அவன் தன் குமாரனாகிய யோசேப்பை வரவழைத்து, அவனுக்குச் சொன்னதாவது: உன் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், என்னை எகிப்திலே அடக்கம்பண்ணுயாக என்ற தயவையும் உண்மையையும் நீ எனக்குச் செய்வதற்காக உன் கையை என் இடுப்பின்கீழேபோடு.

ஈ நான் என் பிதாக்களோடே படுத்துக்கொள்ளுவேன்; ஆகையால் நீ என்னை எகிப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அவர்கள் அடக்கம்பண்ணப்பட்ட நிலத்திலே என்னை அடக்கம்பண்ணுவாயாக என்றான்; அதற்கு அவன், உம்மூடைய சொற்படி நான் செய்வேன் என்றான்.

ஊ அப்பொழுது அவன், எனக்கு ஆணையிடு என்றான்; அவனுக்கு ஆணையிட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலைமாட்டிலே சாய்ந்து பணிந்துகொண்டான்.

சஅ. அதிகாரம்.

இதற்குப்பிற்பாடு சம்பவித்ததேதென்றால், இதோ, உம்மூடைய தகப்பனார் வியாதியாயிருக்கிறார் என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது; அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூட அழைத்துக்கொண்டு போனான்.

உ இதோ, உம்மூடைய குமாரனாகிய யோசேப்பு உம்மண்டைக்கு வருகிறானென்று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திடனாக்கி, கட்டிலின்மேல் உளைக்காந்தான்.

ஊ யாக்கோபு யோசேப்போடே சொன்னதாவது: சர்வத்திற்கும்வல்ல பராபரன் கானான்தேசத்திலிருக்கிற லூசிலே எனக்குத் தரிசனையாகி, என்னை ஆசீர்வதித்து,

ச *இதோ நாம் உன்னைப் பலுகவும் உன்னைப் பெருகவும்பண்ணி, உன்னைச் சனசமூகங்களான கூட்டமாக்கி, உனக்குப்பிற்பாடு இருக்கும் உன் வித்திற்கு இந்தத் தேசத்தை நித்தியகாணியாட்சியாகக் கொடுப்போமென்று என்னோடே சொன்னார்.

*க மோ. ஈடு. ஐக, ஐஉ.

டு ¶ இப்பொழுதும்நான் உன்னண்டைக்கு எகிப்திலே வாராததற்குமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு குமாரர் என்னுடையவர்கள்; ரூபன் சிமையோன்என்றவர்களைப்போலஎப்பிராயீமும்

Digitized by Google

மனுசேயும் என்னுடையவர்களாய் இருப்பார்கள்.

ரு இவர்களுக்குப் பிறகு நீ பெறுகிற சந்தானமோவெனில், உன்னுடையதாயிருக்கும்; இவர்கள் தங்கள் சகோதரருடைய தேசத்தில் அவர்களுக்கொத்த பேராய் அழைக்கப்படுவார்கள்.

எ நான் பதானிலிருந்து வருகையில், ராகேல் கானான்தேசத்தின் வழியிலே எப்பிராத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சம்தூரமிருக்கிறபொழுது, எனக்குமுன்பாக மரணம் அடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னப்படுகிற எப்பிராத்தா ஊரின் வழியிலே அடக்கம்பண்ணினேன் என்றான்.

ஏ ¶ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைக்கண்டு இவர்கள் யாரென்றான்.

கூ யோசேப்புத் தன் தகப்பனுக்கு, இவர்களே பராபரன் இவ்விடத்தில் எனக்குக் கொடுத்த என்னுடைய குமாரர் என்றான்; அப்பொழுது இவன், நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படிக்கு அவர்களை என்னிடத்தில் கொண்டுவா என்றான்.

ஙு இஸ்ரவேலின் கண்களோவென்றால் பெரியவயதினால் இருண்டுபோயிற்று; பார்க்கக்கூடாதிருந்தான்; அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தம்செய்து அணைத்துக்கொண்டான்.

ஙக பிறகு இஸ்ரவேல் யோசேப்புபோடே உன் முகத்தைப் பார்ப்பேன் என்று நினையாதே போனேன்; ஆனால் இதோ, பராபரன் என்னை உன் வித்தையும் காணப்பண்ணினார் என்றான்.

ஙஉ அப்பொழுது யோசேப்பு அவன் முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப் பின்னிடப்பண்ணி, அவன் முகத்திற்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான்.

ஙஎ பிற்பாடு யோசேப்பு இருவரையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையிலுலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும் மனுசேயைத் தன் இடதுகையிலுலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் அவனண்டையிலே சேரப்பண்ணினான்.

ஙஏ ஆனால் இஸ்ரவேல் தன் வலதுகையை நீட்டி, இளையவனுடைய எப்பிராயீமுடைய தலையின்மேலும் மனுசே மூத்தவனாயிருந்தானும், தன் இடதுகையை மனுசேயினுடைய தலையின்மேலும் வைத்தான்; அவன் அறிந்து அப்படித் தன் கைகளை வைத்து,

ஙஐ ¶ யோசேப்பை ஆசீர்வதித்துச் சொன்னதாவது: பராபரனுக்குமுன்பாக என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் நடந்துகொண்டார்களே, நான் உண்டான நாள்தவக்கி இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த அந்தப் பராபரனும்,

ஙக என்னை எல்லாத் தீமைக்கும் நீக்கலாக்கி மீட்டுத் தூதனுமானவர் இந்த இளைஞரை ஆசீர்வதிக்கக்கடவர்; என் பேரும் ஆபிரகாம் ஈசாக்கென்ற என் பிதாக்களின் பேரும் அவர்களுக்குத் தரிக்கப்படக்கடவது; தேசத்தின் நடுவிலே ஏராளமான நிரட்சியாய்ப் பலுகக்கடவர்களென்றான்.

ஙஎ தன் தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு காண்கிறபொழுதோவெனில், அவனுக்கு ஆகாததாய்க் கண்டது; ஆகையால் எப்பிராயீமுடைய தலையின்மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை யோசேப்பு மனுசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து,

ஙஅ தன் தகப்பனே அப்படியல்ல, என் தகப்பனே, ஏனெனில் இவன் மூத்தவன்; இவன் தலையின்மேல் உம்முடைய வலதுகையை வையுமென்றான்.

ஙஙு அவன் தகப்பனோவெனில், தட்டுதல் பண்ணி, அறிவேன், என் மகனே, அறிவேன்; இவனும் சனசதளமாவான்; இவனும் பெருகிப்போவான்; ஆகிலும் இவனுடைய தம்பி இவனைப்பார்க்கிலும் பெரு

து, அறையிலே ஓய், அங்கே அழுதான்.

ஈக பிறகு அவன் தன் முகத்தைக் கழுவிப் புறப்பட்டு, தன்னை அடக்கிக்கொண்டு போசனம் வையுங்கள் என்றான்.

ஈஉ அப்பொழுது அவனுக்குத் தனிப்படவும், அவர்களுக்குத் தனிப்படவும், அவனோடே சாப்பிடுகிற எகிப்தியருக்குத் தனிப்படவும் வைத்தார்கள்; ஏனெனில் எகிப்தியர் எபிரேயரோடே அப்பம் சாப்பிடமாட்டார்கள்; அதேனென்றால் அது எகிப்தியருக்கு அருவருப்பாயிருக்கும்.

ஈஈ அவர்கள் அவனுக்குமுன்பாக மூத்தவன் தன் மூத்தவயதின்படியேயும் இளையவன் தன் இளையவயதின்படியேயும் உளுக்காரவைக்கப்பட்டார்கள்; அதற்காக அவர்கள், ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டார்கள்.

ஈச அவன் தன் முன்னே இருக்கிறதில் அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்பினான்; ஆனால் அவர்கள் எல்லாருடைய பங்குகளைப்பார்க்கிலும், பென்யமீனுடைய பங்கு ஐந்தத்தனை அதிகமாயிற்று; அவர்கள் குடித்து, அவனோடே சந்தோஷமாயிருந்தார்கள்.

சச. அதிகாரம்.

பிற்பாடு அவன் தன் வீட்டு விசாரிப்புக்காரனுக்குக் கற்பித்ததாவது: நீ இந்த மனிதருடைய சாக்குகளை, அவர்கள் ஏற்றிக்கொண்டு போகத்தக்க பாரமாய் ஆகாரத்தினாலே நிரப்பி, அவனவன் பணத்தை அவனவனுடைய சாக்கின் வாயிலே போட்டு,

உ இளையவனுடைய சாக்கின் வாயிலே வெள்ளிப்பாத்திரமாகிய என்னுடைய பாத்திரத்தையும், அவனுடைய தானியத்தின் பணத்தையும் போடு என்று கற்பித்தான்; அவன் யோசேப்புச் சொன்ன வார்த்தையின்படியே செய்தான்.

ஈ¶ காலமே வெளிச்சமாகிறபொழுது, அந்த மனிதர் தங்கள் கழுதைகளோடும் கூட அனுப்பிவிடப்பட்டார்கள்.

ச அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுத் தூரமாய்ப் போகாததற்குமுன்னே, யோசேப்பு தன் வீட்டுவிசாரிப்புக்காரனைநோக்கி சொன்னதாவது: நீ எழுந்து அந்த மனிதரைப் பின்தொடர்ந்து, அவர்களைக் கிட்டிப்பிடிக்கும்பொழுது அவர்களோடே சொல்லவேண்டியது ஏதெனில் நீங்கள் நன்மைக்குத் தீமையைச் சரிக்கட்டினதென்ன?

ஈ அது என் எசமான் குடிக்கிறபாத்திரம் அல்லவோ? அது போன வகை அவருக்கு ஞானநிருஷ்டியால் தெரியாதோ? நீங்கள் செய்தது பொல்லாத காரியமாயிருக்கிறதென்று சொல்லென்றான்.

ஈஅ அவன் அவர்களைத் தொடர்ந்து பிடித்து, இந்த வார்த்தைகளை அவர்களோடே சொன்னான்.

ஈஆ அப்பொழுது அவர்கள் அவனோடே சொன்னதாவது: எங்கள் ஆண்டவன் இப்படிக்கொத்த வார்த்தைகளைச் சொல்லுவானேன்? இப்படிக்கொத்த காரியத்தை உம்முடைய அடியார் ஒருக்காலும் செய்வதில்லை.

ஈஇ இதோ, எங்கள் சாக்குகளின் வாயிலே நாங்கள் கண்ட பணத்தைக் கானான்தேசத்திலிருந்து திரும்ப உம்மண்டைக்குக் கொண்டுவந்தோமே? நாங்கள் உம்முடைய எசமானனின் வீட்டிலிருந்து வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் திருடிக்கொண்டு போவது எப்படி?

ஈஈ உம்முடைய அடியாரில் எவனிடத்திலே அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் சாவக்கடவன்; நாங்களும் எங்கள் ஆண்டவனுக்கு அடிமைகளாவோம்என்றார்கள்.

ஈஉ அதற்கு அவன், இப்பொழுதும் நீங்கள் சொன்ன வார்த்தைகளின்படியே ஆகக்கடவது; எவனிடத்தில் அது கண்டுபிடிக்கப்படுமோ, அவன் எனக்கு அடிமையாவான்; நீங்களோவென்றால் குற்றமற்றிருப்பீர்கள் என்றான்.

ஈஊ அவர்கள் தீவிரித்து அவனவன் தன்தன் சாக்கைத் தலையிலே இறக்கிப்போட்டு,

ஒவ்வொருவராய்த் தங்கள் சாக்குகளைத் திறக்கலானார்கள்.

22 அவன் மூத்தவனைத் துவக்கி இளைய வன்மட்டும் சோதிக்கிறபொழுது, பாத்திரம் பென்யமீனுடைய சாக்கிலே கண்டுபிடிக்கப்பட்டது.

23 அப்பொழுது அவர்கள் தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, அவனவன் தன் தன் கழுதையின்மேலே சுமையை ஏற்றி, பட்டணத்திற்குத் திரும்பிவந்தார்கள்.

24 யூதாவும் அவன் சகோதரரும் யோசேப்பின் வீட்டிலே வந்தார்கள்; ஏனெனில் அவன் அதுவரையில் அங்கே இருந்தான்; அவனுக்குமுன்பாகத் தரையிலே விழுந்தார்கள்.

25 யோசேப்பு அவர்களுடனே, நீங்கள் செய்த இந்தக் கிரியை என்ன? என்னைப் போலொத்த மனிதனுக்குக் காரியம் ஞானதிருஷ்டியினால் தெரியுமென்று, அறியாதே போனீர்களோ என்றான்.

26 அப்பொழுது யூதா, என் ஆண்டவனுக்கு நாங்கள் என்ன சொல்லப்போகிறோம்? என்ன பேசுவோம்? எதினால் எங்களை நீதிமான்களாக்குவோம்? பராபரன் உம்முடைய அடியாரின் அக்கிரமத்தைக் கண்டுபிடித்தார்; இதோ நாங்கள் என் ஆண்டவனுக்கு அடிமைகள்; நாங்களும் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்ட அவனும் தானே என்றான்.

27 அவனோவென்றால் இப்படிக்கொத்த செய்கை எனக்குத் தூரமாயிருப்பதாக; எவன் வசத்தில் பாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டதோ, அவனே எனக்கு அடிமையாய் இருப்பான்; நீங்களோவெனில் சமாதானத்தோடே உங்கள் தகப்பனண்டைக்குப் போயேறுங்கள் என்றான்.

28 அப்பொழுது யூதா அவனண்டையிலே சேர்ந்து சொன்னதாவது: ஆ, என் ஆண்டவனே, உம்முடைய அடியான் என் ஆண்டவனுடைய செவிகளுக்குமுன்பாக ஒரு வார்த்தை பேசட்டும்; உம்முடைய கோபம் எரியாதிருப்பதாக; ஏனெனில் நீர் பார்வோனைப்போல இருக்கிறீர்.

29 உமக்குத் தகப்பனாகிலும் சகோதரனாகிலும் உண்டோ என்று என் ஆண்டவன் உம்முடைய அடியாரைக் கேட்டார்.

30 அப்பொழுது என் ஆண்டவனுடனே, எங்களுக்கு முதிர்வயதுள்ள தகப்பனும் அவருக்கு முதிர்வயதிலே பிறந்த இளைய சகோதரனும் உண்டு; இவனுடைய தமையன் செத்துப்போனான்; இவன் ஒருவன் தன் தாயாருக்கு மீதியானவன்; இவனுடைய தகப்பன் இவன்மேலே பட்சமாயிருக்கிறானென்றோம்.

31 அப்பொழுது நீர் உம்முடைய அடியாரோடே, அவனை என்னண்டைக்கு அழைத்துவாருங்கள்; என் கண்ணை அவன்மேலே வைப்பேன் என்றீர்.

32 நாங்களோவென்றால் என் ஆண்டவனுடனே, அந்த இளைஞன் தன் தகப்பனை விடக்கூடாது; தன் தகப்பனை விட்டால் அவர் செத்துப்போவாரென்றோம்.

33 நீரோவெனில் உம்முடைய அடியாருடனே, உங்கள் இளைய சகோதரன் உங்களோடேகூட இறங்கிவராதேபோனால், நீங்கள் என் முகத்தை இனிப் பார்ப்பதில்லை என்று சொன்னீர்.

34 நாங்கள் உம்முடைய அடியாராகிய என் தகப்பனண்டைக்கு வந்தேறினபொழுது சம்பவித்ததேதென்றால், என் ஆண்டவனுடைய வார்த்தைகளை அவருக்கு அறிவித்தோம்.

35 நீங்கள் திரும்பப் போய், கொஞ்சம் ஆகாரம் நமக்குக் கொள்ளுங்களென்று எங்கள் தகப்பனார் சொன்னார்.

36 அதற்கு நாங்கள் சொன்னதேதெனில், நாங்கள் இறங்கிப்போகக்கூடாது; எங்கள் இளைய சகோதரன் எங்களோடு இருந்தானேயானால் இறங்கிப்போவோம்; ஏனென்றால் எங்கள் இளைய சகோதரன் எங்களோடே இராவிட்டால், நாங்கள்

தப் புருஷனுடைய முகத்தைப் பார்க்கக் கூடாதென்றேும்.

உஎ அப்பொழுது உம்முடைய அடியானுடைய என் தகப்பன் எங்களோடே சொன்னதாவது: என் பெண்சாதி எனக்கு இரண்டு பிள்ளைகளைப் பெற்றாள் என்கிறதையும்,

உஅ அவர்களில் ஒருவன் என்னிடத்தில் இருந்து புறப்பட்டுப் போனான், அவன் பீறுண்ணவே பீறுண்டானென்று முன் சொல்லி, இதுவரைக்கும் அவனைக் காணாதிருக்கிறேன் என்கிறதையும் நீங்கள் அறிவீர்கள்.

உக நீங்கள் இவனையும் என் முன்பாக இராதபடிக்கு அழைத்துப்போகும்போது, ஒரு சேதம் அவனுக்கு வந்தால், என் நரையை நிர்ப்பந்தத்தோடே குழியில் இறக்கப்பண்ணுவீர்கள் என்றான்.

உஉ இப்பொழுதும் இவனாகிய எங்களோடிராமல், நான் என் தகப்பனுடைய உம்முடைய அடியானண்டையிலே போனால், அப்பொழுது அவருடைய ஆத்துமா இவனுத்துமாவோடே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியினாலே சம்பவிப்பது எதெனில்,

உக அவர் இவனாகிய இல்லை என்று காணும்பொழுது, செத்துப்போவார்; அப்படியே உம்முடைய அடியாராகிய உம்முடைய வயோதிபனாகிய எங்கள் தகப்பனுடைய நரையைச் சஞ்சலத்தோடே குழியில் இறங்கப்பண்ணுவோமே.

உஉ ஏனெனில் நான் அவனை உம்மண்டைக்கு அழைத்துவராதேபோனால், நான் சகலநாளும் என் தகப்பனுக்கு நேரத்தாய் இருப்பேனென்று உம்முடைய அடியானாகிய நான் என் தகப்பனிடத்திலே இந்த இளைஞனுக்காகப் பிணைப்பட்டேன்.

ஊக இப்பொழுதும் இவனாகிய தன் சகோதரரோடே கூடப்போய் ஏறும்படிக்கு, உம்முடைய அடியானாகிய நான் இவனாகிய குப் பதிலாக இங்கே என் ஆண்டவனுக்கு அடிமையாய் இருக்கட்டும்.

ஊஉ ஏனெனில் இவனாகிய என்னோடே இல்லாவிட்டால் எப்படி என் தகப்பனண்டைக்குப் போயேறுவேன்? என் தகப்பனைப் பிடிக்கும் தீங்கை அப்பொழுது கண்பேனே என்றான்.

சரு. அதிகாரம்.

அப்பொழுது யோசேப்பு தன்னண்டையில் நிற்கிற எல்லார்முன்பாகவும் தன்னை அடக்கிக்கொண்டிருக்கக்கூடாமல், யாவரையும் என்னவிட்டு வெளியே போகப்பண்ணுங்களென்று கூப்பிட்டான்; யோசேப்பு தன் சகோதரருக்குத் தன்னை அறியப்படுத்துகையில் ஒருவரும் அவனண்டையிலே நின்றதில்லை.

உ அவன் சத்தமிட்டு அழுதான்; அதை எகிப்தியர் கேட்டார்கள்; பார்வோனின் வீட்டாரும் கேட்டார்கள்.

ஊ யோசேப்பு தன் சகோதரரோடே நான் யோசேப்பு; என் தகப்பன் இன்னம் உயிரோடிருக்கிறாரோ என்றான்; ஆனால் அவன் சகோதரர் அவனுக்குமுன்பாகக் கலங்கினபடியினாலே, அவனுக்குப் பிரதியுத்தாரம் சொல்ல அவர்களுக்குக் கூடாதேபோயிற்று.

ச அப்பொழுது யோசேப்பு தன் சகோதரரோடே, என்னண்டையிலே கிட்டிவாருங்கள் என்றான்; அவர்கள் கிட்டிப்போனார்கள்; அப்பொழுது அவன் சொன்னதாவது: நீங்கள் எகிப்திற்குப் போகிறவர்களுக்கு விற்ற உங்கள் சகோதரனாகிய யோசேப்பு நானே.

ஙி இப்பொழுதும் நீங்கள் என்னை இவ்விடத்திற்கு விற்றுப்போட்டதினாலே, நீங்கள் சஞ்சலப்படவும் அது உங்கள் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கவும் வேண்டாம்; ஏனெனில் உங்கள் சீவனுக்காகப் பரன் என்னை உங்களுக்குமுன்னாக அனுப்பினார்.

ஙு ஏனென்றால் இந்த இரண்டுவருஷம் தேசத்திற்குள்ளே பஞ்சம் உண்டாயிருக்கிறது; உழவும் அறுப்பும் இல்லாத இன்னம் ஐந்து வருஷங்களும் இன்னம் வரும்.

Digitized by Google

எ தூரல், உங்களைத் தேசத்தில் மீதியாக வைப்பதற்கும் உங்களைப் பெரிய இரட்சிப்பிலே உயிரோடே காப்பதற்குமாக, பராபரன் என்னை உங்களுக்குமுன்னே அனுப்பினார்.

அ இப்பொழுதும் நீங்களல்ல, பராபரன் என்னை இங்கே அனுப்பி, என்னைப் பார்வோனுக்குத் தகப்பனாகவும், அவர் வீட்டிற்கெல்லாம் தலையாகவும், எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறவனாகவும் வைத்தார்.

கூ நீங்கள் தீவிரத்தோடே என் தகப்பனண்டைக்குப் போயேறி, அவரோடே சொல்லவேண்டியதெதெனில், உம்முடைய குமாரனாகிய யோசேப்புச் சொல்லி அனுப்புகிறதாவது: பராபரன் என்னை எகிப்திற்கெல்லாம் தலையாக வைத்தார்; என்னண்டைக்கு இறங்கிவாரும், தாமதிக்கவேண்டாம்.

ஏ நீர் கோசேன் தேசத்திலே வாசம்பண்ணி, எனக்குச் சமீபத்திலே இருப்பீர்; நீரும் உம்முடைய பிள்ளைகளும் உம்முடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் உம்முடைய ஆடுகளும் உம்முடைய மாடுகளும் உமக்குண்டான யாவும் கூடத்தானே.

ஐ நீரும் உம்முடைய வீட்டாரும் உமக்கிருக்கிற யாவும் தாழ்வுபடாதபடிக்கு, அங்கே உம்மைப் பராமரிப்பேன்; ஏனெனில் பஞ்சம் இன்னம் ஐந்து வருஷம்மட்டும் இருக்குமென்கிறான் என்று சொல்லுங்கள்.

ஒ இதோ என்னுடைய வாய் உங்களோடே பேசுகிறது என்கிறதை உங்கள் கண்களும் என் தம்பியாகிய பென்யமீனின் கண்களும் காண்கிறதே.

ஓ எகிப்திலே எனக்கு இருக்கிற என்னுடைய எல்லா மகிமையையும் நீங்கள் கண்டவை எல்லாவற்றையும் என் தகப்பனுக்கு அறிவித்து, தீவிரமாய் என் தகப்பனை இவ்விடத்திற்கு இறங்கிவரப்பண்ணுங்கள் என்றுசொல்லி,

ஔ தன் தம்பியாகிய பென்யமீனுடைய கழுத்திறுக்கக் கட்டிக்கொண்டு அழுதான்; பென்யமீனும் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதான்.

க தன்னுடைய எல்லாச் சகோதரையும் முத்தம்செய்து அவர்கள் முன்பாக அழுதான்; அதற்குப் பிற்பாடு அவன் சகோதரர் அவனோடே பேசினார்கள்.

஖ ¶ யோசேப்பின் சகோதரர் வந்தார்களென்று பார்வோன் வீட்டிலே செய்தி கேட்கப்பட்டபொழுது, அது பார்வோன் பார்வைக்கும் அவன் ஊழியக்காரரின் பார்வைக்கும் நன்றாய் இருந்தது.

஗ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னது: நீ உன் சகோதரரோடே சொல்லவேண்டியதாவது: நீங்கள் செய்யவேண்டியதெதெனில், உங்கள் மிருகசீவன்களின்மேல் பொதியேற்றிப் புறப்பட்டு, கானான்தேசத்திற்குப்போய்,

஘ உங்கள் தகப்பனையும் உங்கள் வீட்டாரையும் கூட்டிக்கொண்டு என்னண்டைக்கு வாருங்கள், நான் உங்களுக்கு எகிப்துதேசத்தின் நன்மையைக் கொடுப்பேன்; தேசத்தின் கொழுப்பைச் சாப்பிடுவீர்கள்.

ங நீங்கள் செய்யவேண்டியது ஏதெனில், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் பெண்சாதிகளுக்காகவும் வண்டில்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டுபோய், உங்கள் தகப்பனையும் ஏற்றி வாருங்கள்.

ச உங்கள் கண் உங்களுடைய தட்டுமுட்டுகளைப் பார்க்கவேண்டாம்; ஏனெனில் எகிப்துதேசமெங்கும் நன்மையாயிருக்கிறது உங்களுடையதாய் இருக்குமென்று அவர்களோடே சொல்ல நீ கட்டளைபெற்றாய் என்றான்.

ஙக இப்படியே இஸ்ரவேலின் குமாரர் செய்தார்கள்; யோசேப்பு அவர்களுக்குப் பார்வோனுடையகட்டளையின்படியே வண்டில்களைக்கொடுத்து, வழிக்கு ஆகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான்.

Digitized by Google

22 அவர்களில் ஒவ்வொருவனுக்கு அவன் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து, பென்யமீனுக்கோ முந்நூறு வெள்ளிக்காசையும் ஐந்து மாற்று வஸ்திரங்களையும் கொடுத்து,

23 அப்படியே தன் தகப்பனுக்கு எகிப்தின் உச்சிதங்களைச் சுமந்துபோகிற பத்துக் கழுதைகளையும், தன் தகப்பனுக்காக வழிக்குத் தானியமும் அப்பமும் தின்பண்டங்களும் சுமந்துபோகிற பத்துக் கோளிகைக் கழுதைகளையும் அனுப்பினான்.

24 அப்படியே அவன் தன் சகோதரரை அனுப்பிவிட்டு, இவர்கள்போகிறபொழுது, வழியிலே சண்டைபண்ணீர்களாக என்று அவர்களோடே சொன்னான்.

25 ¶ அவர்கள் எகிப்திலிருந்து போயேறி, கானான்தேசத்திலே தங்கள் தகப்பனாகிய யாக்கோபண்டைக்கு வந்து,

26 யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறான் என்றும், அவன் எகிப்துதேசத்தை எல்லாம் ஆளுகிறான் என்றும் அவனுக்கு அறிவித்தார்கள்; ஆனால் அவன் இருதயம் தளம்பிற்று; ஏனெனில் அவர்களை நம்பாதிருந்தான்.

27 அவர்களோவென்றால் யோசேப்புத் தங்களுடனே பேசின எல்லா வார்த்தைகளையும் அவனுக்குச் சொல்லுகிறபொழுதும், தன்னை ஏற்றிக்கொண்டுபோக யோசேப்பு அனுப்பின வண்டில்களை அவன் காண்கிறபொழுதும், அவர்களுடைய தகப்பனாகிய யாக்கோபின் ஆவி திடப்பட்டது.

28 அப்பொழுது இஸ்ரவேல், என் குமாரனாகிய யோசேப்பு இன்னம் உயிரோடிருக்கிறபொழுதும், நான் மரணம் அடையாததற்கு முன்னேபோய் அவனைப் பார்ப்பேன் என்றான்.

சசு. அதிகாரம்.

இஸ்ரவேல் தனக்குண்டானவைகளை எல்லாம் கூட்டிக்கொண்டு பயணம் புறப்பட்டுப் பேர்சேபாவுக்குவந்து, தன் தகப்பனாகிய ஈசாக்குடைய பராபரனுக்குப் பலிகளை இட்டான்.

2 இராத்தரிசனைகளில் பராபரன் இஸ்ரவேலோடே பேசி, யாக்கோபே யாக்கோபே, என்றார்; அவன் இதோ அடியேனென்றான்.

3 அப்பொழுது அவர் சொன்னதாவது: நாம் உன் தகப்பனுடைய தேவனாகிய பராபரன்; எகிப்திற்கு இறங்கிப்போகப் பயப்படாயாக; ஏனெனில் அங்கே உன்னைப் பெரியசாதி ஆக்குவோம்.

4 நாம் உன்னோடேகூட எகிப்திற்கு இறங்கிப்போவோம்; நாம் உன்னைத் திரும்பி வந்து ஏறவும் பண்ணுவோமென்றும், யோசேப்பு தன் கையால் உன் கண்களை மூடுவானென்றும் சொன்னார்.

5 அதற்குப் பிற்பாடு யாக்கோபு பேர்சேபாவிலிருந்து பயணம்புறப்பட்டுப் போனான்; இஸ்ரவேலின் குமாரர் தங்கள் தகப்பனாகிய யாக்கோபையும் தங்கள் குழந்தைகளையும் தங்கள் பெண்சாதிகளையும், பார்வோன் அவனை ஏற்றிவர அனுப்பின வண்டில்களின்மேல் ஏற்றிக்கொண்டுபோனார்கள்.

6 அவர்கள், தங்கள் ஆடுமாடுகளையும் தாங்கள் கானான்தேசத்தில் சம்பாதித்த தங்கள் ஆஸ்தியையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு வந்தார்கள், யாக்கோபும் அவன் வித்தார் அனைவரும் அவனோடு கூடத்தானே.

7 தன் குமாரரையும் தன் குமாரரின் குமாரரையும் தன் குமாரத்திகளையும் தன் குமாரரின் குமாரத்திகளையும் தன் வித்தார் அனைவரையும் அவன் தன்னோடேகூட எகிப்திற்கு அழைத்துக்கொண்டு வந்தான்.

8 ¶ எகிப்திலே வந்த இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள்; யாக்கோபும் அவன் குமாரரும்; யாக்கோபுடைய முதல் பேறான ரூபன்.

9 ரூபனுடைய குமாரர்; ஆனோக், பல்

Digitized by Google

னும், ஏத்ரோன், கற்மீ என்றவர்கள்.

எ சிமெயோனுடைய குமாரர்; ஏமுவேல், யாமின், ஓகாத், யாகீன், சோகார், காளன் நேசத்தானின் குமாரனுகிய சவுல் என்றவன்.

ஙக லேவியின் குமாரர்; கேர்சோன், கேகாத், மெராரி என்றவர்கள்.

ஙஉ யூதாவின் குமாரர்; ஏர், ஓனான், சேலா, பேரேஸ், சேரா என்றவர்கள்; ஏரும் ஓனானும் மோவென்றும் காளன்தேசத்திலே செத்தப்போனர்கள்; பேரேசுடைய குமாரர்; ஏத்ரோன், அமூல் என்றவர்கள்.

ஙங இசஷாருடைய குமாரர்; தேலா, பூவா, யோப், சிம்ரோன் என்றவர்கள்.

ஙச சேபுலோனுடைய குமாரர்; சேரேத், ஏலோன், யாலேயேல் என்றவர்கள்.

ஙடு இவர்கள் லேயாளின் குமாரர்; இவர்களையும் யாக்கோபுடைய குமாரத்தியாகிய தீனாளையும் அவன் அவனுக்குப் பதான்அராமிலே பெற்றான்; அவன் குமாரரும் அவன் குமாரத்திகளுமாகிய எல்லா ஆத்துமாக்களும் மூப்பத்துமூன்று.

ஙக காத்துடைய குமாரர்; சிப்பியோன், அகி, சூனி, ஏத்ஸ்போன், ஏரி, அரோதி, அரேலி என்றவர்கள்.

ஙஎ ஆசேருடைய குமாரர்; இம்னா, இஸ்வா, இஸ்வி, பேரியா என்றவர்கள்; இவர்களுடைய சகோதரி சேராக்கு என்றவள். பேரியாவின் குமாரர்; ஏபேர், மல்க்கியேல் என்றவர்கள்.

ஙஅ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய லேயாளுக்குக் கொடுத்த சில்பாளுடைய பின்னைகள்; அவன் யாக்கோபுக்கு இந்தப் பதினறு ஆத்துமாக்களைப் பெற்றான்.

ஙக யாக்கோபின் பெண்சாதியாகிய ராகேலுடைய குமாரர்; யோசேப்பும் பென்யமீனுமானே.

ஙச யோசேப்புக்கு எகிப்துதேசத்திலே மனாசேயும் எப்பிராயீமும் பிறந்தார்கள்; அவர்களை ஓன்பட்டணத்து ஆசாரியனுகிய போத்திப்பேராவின் குமாரத்தியாகிய ஆஸ்னாத் அவனுக்குப் பெற்றாள்.

ஙத பென்யமீனுடைய குமாரர்; பேலா, பேகேர், அஸ்பெல், கேரா, நாமான், ஏகி, ரோஸ், மூப்பிம், உப்பிம், ஆர்து என்பவர்கள்.

ஙஉ ராகேல் யாக்கோபுக்குப் பெற்ற குமாரராகிய இவர்கள் எல்லாரும் பதினுறு ஆத்துமாவே.

ஙஊ தானுடைய குமாரன்; ஊசிம் என்றவன்.

ஙஎ நப்தலியின் குமாரர்; யாத்சேயேல்; கூனி, ஏத்சேர், சில்லேம் என்றவர்கள்.

ஙஏ இவர்கள் லாபான் தன் குமாரத்தியாகிய ராகேலுக்குக் கொடுத்த பில்காள் யாக்கோபுக்குப் பெற்றவர்கள்; இவர்கள் எல்லாரும் ஏழு ஆத்துமாக்கள்.

ஙஐ ¶ யாக்கோபுடைய குமாரரின் பெண்சாதிகளைத் தவிர, அவனுடைய கர்ப்பப்பிறப்பாய் இருந்து அவனோடேகூட எகிப்திலே வந்த ஆத்துமாக்கள் எல்லாம் அறுபத்தாறு ஆத்துமாக்கள்.

ஙக யோசேப்புக்கு எகிப்திலே பிறந்த குமாரர் இரண்டு ஆத்துமாக்கள்; எகிப்திலே வந்த யாக்கோபின் வீட்டாராகிய ஆத்துமாக்கள் எல்லாம் எழுபது.

ஙங ¶ கோசேனுக்குப்போகிற வழியைத் தனக்குக் காட்டுவிக்க, அவன் தனக்குமுன்னே யோசேப்பண்டைக்கு யூதாவை அனுப்பினான்; அப்படியே கோசேன்தேசத்திலே வந்தார்கள்.

ஙச யோசேப்பு தன் இரதத்தை ஆயத்தம்பண்ணி ஏறி, கோசேனுக்குத் தன் தகப்பனுகிய இஸ்ரவேலுக்குஎதிர்கொண்டுபோய், அவனுக்குத் தன்னைக் காண்பித்து, அவனுடைய கழுத்திறுகக் கட்டிக்கொண்டு, அதிக நேரமாய் அவன் கழுத்தைவிடாமல் அழுதான்.

ஙஞ அப்பொழுது இஸ்ரவேல் யோசேப்புடனே, நீ இன்னம் உயிரோடிருக்கிறாய் என்று நான் உன் முகத்தைக் கண்டபடியி

Digitized by Google

னுலே இனி மரணம் எனக்கு எப்போதாகி லும் வரட்டும் என்றான்.

ஈக பிற்பாடு யோசேப்பு தன் சகோதரரோடும் தன் தகப்பனுடைய வீட்டாரோடும் சொன்னதாவது: நான் போயேறிக் கானான்தேசத்திலிருந்த என்னுடைய சகோதரரும், என் தகப்பன்வீட்டாரும் என்னண்டைக்கு வந்தார்களென்று பார்வோனுக்கு அறிவித்து,

ஈஉ இந்த மனிதர் ஆடுகளை மேய்க்கிறவர்கள்; ஏனெனில் மிருகசீவன்களையுடையவர்களாய் இருக்கிறார்கள்; அவர்கள் தங்கள் ஆடுகளையும் தங்கள் மாடுகளையும் தங்களுக்குண்டானவை எல்லாவற்றையும் கொண்டுவந்தார்களென்று அவரோடே சொல்லுவேன்.

ஈஈ ஆகையால் பார்வோன் உங்களை அழைத்து, உங்கள் தொழில் என்னவென்று கேட்கிறதுண்டானால்,

ஈச அப்பொழுது நீங்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கும்படிக்குச் சொல்லவேண்டியதாவது: எங்கள் பிதாக்களைப்போல உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் சிறுவயது தொடங்கி இதுவரைக்கும் மிருகசீவன்களை உடையவர்களாய் இருந்தோமென்று சொல்லுங்கள்; ஏனெனில் *மந்தைமேய்க்கிறவர்கள் எல்லாரும் எகிப்தியருக்கு அருவருப்பாய்இருக்கிறார்கள் என்றான். *ஆ மோ. சஈ. ஈஉ.

சுள. அதிகாரம்.

யோசேப்பு வந்து பார்வோனுக்கு அறிவித்து, என் தகப்பனும் என் சகோதரரும் தங்கள் ஆடுகளோடும், தங்கள் மாடுகளோடும், தங்களுக்குண்டானவை எல்லாவற்றோடும்கூடக் கானான்தேசத்திலிருந்து வந்தார்கள்; இதோ கோசேன்தேசத்திலே இருக்கிறார்கள் என்றுசொல்லி,

உதன் சகோதரரில் ஒருபங்காகிய ஐந்து பேரை அழைத்துக்கொண்டு, அவர்களைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்.

ஊ அப்பொழுது பார்வோன் அவன் சகோதரரோடே உங்கள் தொழில் என்னவென்றான்; அவர்கள் பார்வோனுடே, உம்முடைய அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தைமேய்க்கிறவர்கள் என்றுசொல்லி,

சு பின்னையும் பார்வோனுடே, தேசத்திலே தங்கவந்தோம்; ஏனெனில் உம்முடைய அடியாருக்கு இருக்கிற மந்தைக்கு மேய்ச்சலில்லை, அதேனென்றால் பஞ்சம் கானான்தேசத்திலே கடினமாய் இருக்கிறது; இப்பொழுதும் உம்முடைய அடியார் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும் என்றார்கள்.

ஏ அப்பொழுது பார்வோன் யோசேப்போடே சொன்னதாவது: உன் தகப்பனும் உன் சகோதரரும் உன்னண்டைக்கு வந்தார்கள்.

சு எகிப்துதேசம் உனக்குமுன்பாகக் கிடக்கிறது; தேசத்தில் நலமான இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேற்று; அவர்கள் கோசேன்தேசத்திலே குடியிருக்கட்டும்; அவர்களுக்குள்ளே நிறமையான மனிதருண்டென்று அறிந்திருந்தாயானால் அவர்களை எனக்கிருக்கிற ஆடுமாடுகளை விசாரிக்கிறதலைவராக வையென்றான்.

எ யோசேப்பு தன் தகப்பனாகிய யாக்கோபையும் அழைத்துக்கொண்டு வந்து, அவனைப் பார்வோனுக்குமுன்பாக நிறுத்தினான்; யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான்.

அ பார்வோன் யாக்கோபோடே, உன்னுடைய ஆயுசின் நாள்கள் எத்தனை என்றான்.

கூ யாக்கோபு பார்வோனுடே, நான் பரதேசம்பண்ணின நாள்கள் நூற்றுமுப்பது வருஷங்கள்; என் ஆயுசின் நாள்கள் பரதேசிகளான என் பிதாக்களுடைய ஆயுசின் நாள்களுக்கு வராமல் கொஞ்சமும் பொல்லாப்புமாய் இருந்தன என்றான்.

ஐ பிற்பாடு யாக்கோபு பார்வோனை ஆசீர்

வரித்து, பார்வோனிடத்திலிருந்து புறப் பட்டான்.

ஐக யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரனாயும் குடியேற்றி, பார்வோன் கட்டளை இட்டபடி, அவர்களுக்கு எகிப் துதேசத்தின் நாட்டிலே நல்ல நாடாகிய ராமேசேஸ் நிலையிலே காணி கொடுத் தான்.

ஐஉ ¶ யோசேப்பு தன் தகப்பனையும் தன் சகோதரனாயும் தன் தகப்பனுடைய வீட் டார் அனைவரையும் பிள்ளைகளின் இலக்கத் திற்குத்தக்கதாய் ஆகாரம்கொடுத்துப் பரா மரித்துவந்தான்.

ஐஎ தேசமெங்கும் அப்பம் இல்லாதே போயிற்று; ஏனெனில் பஞ்சம் மிகவும் கடினமாய் இருந்தது; பஞ்சத்தினாலே, எகிப்துதேசமும் கானான்தேசமும் இளைத் தப்போயின.

ஐச அப்பொழுது அவர்கள் கொள்ளும் தானியத்திற்கு இடாக யோசேப்பு எகிப் துதேசத்திலும் கானான்தேசத்திலும் உண் டான திரவியத்தை எல்லாம் சேர்த்தான்; அந்தத் திரவியத்தை யோசேப்பு பார் வோன் வீட்டிலே கொண்டுவந்துவைத் தான்.

ஐடு எகிப்துதேசத்திலும் கானான்தேசத்தி லும் திரவியம் செலவழிந்து போனபொ ழுதோவெனில், எகிப்தியர் எல்லாரும் யோசேப்பண்டைக்கு வந்து, எங்களுக்கு அப்பம்தாரும்; திரவியம் இல்லாதேபோ னதினாலே, நாங்கள் உமக்கு முன்பாகச் சாவானேன் என்றார்கள்.

ஐசு அப்பொழுது யோசேப்பு திரவியம் இல்லாதேபோயிற்றுதல், உங்கள் மிருக ஜீவன்களைக் கொடுங்கள்; உங்கள் மிருகஜீ வன்களுக்கு இடாக உங்களுக்குத் தருகி றேன் என்றான்.

ஐள அப்பொழுது தங்கள் மிருகஜீவன்க ளை யோசேப்பண்டைக்குக் கொண்டுவந் தார்கள்; யோசேப்பு குதிரைகளையும் ஆடு களையும் மாடுகளையும் கழுதைகளையும் வாங் கிக்கொண்டு, அவர்களுக்கு அப்பம்கொ டுத்து, அந்த வருஷத்திலே அவர்களுடை ய எல்லா மிருகஜீவன்களுக்கும் இடாக அவர்கள் பிழைப்பை நடப்பித்துக்கொ ண்டுவந்தான்.

ஐஅ ¶ அந்த வருஷம் முடிந்தபொழுது, அவர்கள் மறுவருஷத்திலே அவனண்டை க்கு வந்து அவனுடனே சொன்னதாவது: திரவியமும் செலவழிந்துபோயிற்று; மிரு கஜீவன்களின் ஆஸ்தியும் எங்கள் ஆண்ட வனைச் சேர்ந்தது; எங்கள் சரீரமும் எங்க ள் நிலமுமே ஒழிய, எங்கள் ஆண்டவனுக் குமுன்பாக ஒன்றும் மீதியானதில்லை என்கி றதை எங்கள் ஆண்டவனுக்கு மறைக்க மாட்டோம்.

ஐக நாங்களும் எங்கள் நிலமும் உம்மு டையகண்களுக்குமுன்பாக மடிவானேன்? நீர் எங்களையும் எங்கள் நிலத்தையும் கொண்டு, அப்பம்தாரும்; நாங்கள் எங்கள் நிலத்தோடும்கூடப் பார்வோனுக்கு அடி மைப்பட்டிருப்போம்; நாங்கள் சாவாமல் உயிரோடிருக்கும்படிக்கும் நிலம் பாழா ய்ப் போகாதபடிக்கும் விதையைத் தாரும் என்றார்கள்.

ஒஐ அப்படியே யோசேப்பு எகிப்தின் நில த்தை எல்லாம் பார்வோனுக்குக் கொண் டான்; ஏனெனில் எகிப்தியர் அவரவர், பஞ்சம் தங்கள்மேல் பலத்துக்கொண்ட படியினாலே, தங்கள் வயல்களை விற்றார் கள்; ஆனதுகொண்டு நிலம் பார்வோனைச் சேர்ந்தது.

ஒக ஆனால் சனத்தை அவன் எகிப்தினு டைய எல்லையின் இந்த முனைதுவக்கி அந்த முனைமட்டும் இருந்த பட்டணங்களில் குடிமாறிப்போகப் பண்ணினான்.

ஒஉ ஆசாரியன் நிலத்தைமாத்திரம் கொள் ளாதே போனான்; ஏனெனில் அது பா வோனாலே ஆசாரியருக்குப் படித்திட்டமா கக் கட்டளைபண்ணப்பட்டது; பார்வோன் தங்களுக்குக் கட்டளைபண்ணின தங்கள் படியைச் சாப்பிட்டார்கள்; ஆகையால்

அவர்கள் தங்கள் நிலத்தை விற்றநில்லை.

உஈ யோசேப்பு சனத்தோடே சொன்ன தாவது: இதோ, இன்று உங்களையும் உங் கள் நிலத்தையும் பார்வோனுக்குக் கொண் டேன்; இதோ உங்களுக்குத் தரப்படுகிற விதை, அதினால் நிலத்தை விதையுங்கள்.

உச பலனனபொழுது நடப்பதேதென் றால், பார்வோனுக்கு ஜந்தில் ஒரு பங்கைக் கொடுப்பீர்கள்; நாலுபங்கோவென்றால், வ யலுக்கு விதையும் உங்களுக்கும் உங்கள் வீட்டாருக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் ஆகாரம் உண்டாக உங்களுடையவைக ளாய் இருக்கும் என்றான்.

உடு அப்பொழுது அவர்கள் எங்களை உயி ராடேகாத்தீர்; எங்கள் ஆண்டவனுடைய கண்களில் எங்களுக்குத் தயவே கிடைக் கட்டும், நாங்கள் பார்வோனுக்கு அடிமை யாயிருப்போம் என்றார்கள்.

உசு அப்படியே ஜந்தில் ஒன்று பார்வோ னுக்குச் சேரும்வாரம் என்பதை, யோசேப் பு எகிப்து நிலத்தின்மேலே இந்நான்மட் டும் செல்லும் கட்டளையாக்கினான்; ஆசாரி யரின் நிலம்மாத்திரம் பார்வோனைச் சேரா மல் நீங்கலாயிற்று.

உஎ ¶ இஸ்ரவேல் எகிப்துதேசத்திலிருக் கும் கோசேன்சீமையிலே குடியிருந்தான்; அதில் காணியாட்சிக்காரராகி, மிகவும் பலு கிப் பெருகினார்கள்.

உஅ யாக்கோபு எகிப்துதேசத்திலே பதி னேழுவருஷம் உயிரோடிருந்தான்; ஆகை பால் யாக்கோபுடைய ஆயுசின் நாள்கள் நூற்றுநாற்பத்தேழு வருஷங்களாயின.

உஆ மரணமடைய இஸ்ரவேலின் காலம் சமீபித்தபொழுது, அவன் தன் குமாரனு கிய யோசேப்பை வரவழைத்து, அவனுக் குச் சொன்னதாவது: உன் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், என்னை எகிப்திலே அடக்கம்பண்ணுயாக என்ற தயவையும் உண்மையையும் நீ எனக் குச் செய்வதற்காக உன் கையை என் இடுப்பின்கீழேபோடு.

ஈஇ நான் என் பிதாக்களோடே படுத்துக் கொள்ளுவேன்; ஆகையால் நீ என்னை எகி ப்திலிருந்து எடுத்துக்கொண்டுபோய், அ வர்கள் அடக்கம்பண்ணப்பட்ட நிலத்தி லே என்னை அடக்கம்பண்ணுவாயாக என் றான்; அதற்கு அவன், உம்முடைய சொற் படி நான் செய்வேன் என்றான்.

ஈக அப்பொழுது அவன், எனக்கு ஆணை யிடு என்றான்; அவனுக்கு ஆணையிட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் கட்டிலின் தலை மாட்டிலே சாய்ந்து பணிந்துகொண்டான்.

சாபு. அதிகாரம்.

இதற்குப்பிற்பாடு சம்பவித்ததேதென் றால், இதோ, உம்முடைய தகப்பனார் வி யாதியாயிருக்கிறார் என்று யோசேப்புக்குச் சொல்லப்பட்டது; அப்பொழுது அவன் தன் இரண்டு குமாரராகிய மனாசேயையும் எப்பிராயீமையும் தன்னோடேகூட அழைத் துக்கொண்டு போனான்.

உ இதோ, உம்முடைய குமாரனாகிய யோசேப்பு உம்மண்டைக்கு வருகிறானென் று யாக்கோபுக்கு அறிவிக்கப்பட்டது; அப்பொழுது இஸ்ரவேல் தன்னைத் திட னாக்கி, கட்டிலின்மேல் உளாக்காந்தான்.

ஊ யாக்கோபு யோசேப்போடே சொன்ன தாவது: சர்வத்திற்கும்வல்ல பராபரன் கா னான்தேசத்திலிருக்கிற லூசிலே எனக்குத் தரிசனையாகி, என்னை ஆசீர்வதித்து,

ச *இதோ நாம் உன்னைப் பலுகவும் உன் னைப் பெருகவும்பண்ணி, உன்னைச் சனச தளங்களான கூட்டமாக்கி, உனக்குப் பிற் பாடு இருக்கும் உன் வித்திற்கு இந்தத் தே சத்தை நித்தியகாணியாட்சியாகக் கொடு ப்போமென்று என்னோடே சொன்னார்.

*க மோ. நடு. ஐக, ஐஉ.

டு ¶ இப்பொழுதும்நான் உன்னண்டைக்கு எகிப்திலே வராததற்குமுன்னே உனக்கு எகிப்துதேசத்தில் பிறந்த உன் இரண்டு கு மாரர் என்னுடையவர்கள்; ரூபன் சீமை யோன்என்றவர்களைப்போலஎப்பிராயீமும்

மனுசேயும் என்னுடையவர்களாய் இருப்பார்கள்.

ஃ இவர்களுக்குப் பிறகு நீ பெறுகிற சந்தானமோவெனில், உன்னுடையதாயிருக்கும்; இவர்கள் தங்கள் சகோதரருடைய தேசத்தில் அவர்களுக்கொத்த பேராய் அழைக்கப்படுவார்கள்.

எ நான் பதானிலிருந்து வருகையில், ராகேல் கானான்தேசத்தின் வழியிலே எப்பிராத்தாவுக்கு வர இன்னம் கொஞ்சம்தூரமிருக்கிறபொழுது, எனக்குமுன்பாக மரணம் அடைந்தாள்; அவளை அங்கே பெத்லகேம் என்னப்படுகிற எப்பிராத்தா ஊரின் வழியிலே அடக்கம்பண்ணினேன் என்றான்.

அ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்பின் குமாரரைக்கண்டு இவர்கள் யாரென்றான்.

ஆ யோசேப்புத் தன் தகப்பனுக்கு, இவர்களை பராபரன் இவ்விடத்தில் எனக்குக் கொடுத்த என்னுடைய குமாரர் என்றான்; அப்பொழுது இவன், நான் அவர்களை ஆசீர்வதிக்கும்படிக்கு அவர்களை என்னிட்டக் கொண்டுவா என்றான்.

இ இஸ்ரவேலின் கண்களோவென்றால் பெரியவயதினால் இருண்டுபோயிற்று; பார்க்கக்கூடாதிருந்தான்; அவர்களை அவனண்டையிலே சேரப்பண்ணினான்; அப்பொழுது அவன் அவர்களை முத்தம்செய்து அணைத்துக்கொண்டான்.

ஈ பிறகு இஸ்ரவேல் யோசேப்போடே உன் முகத்தைப் பார்ப்பேன் என்று நினையாதே போனேன்; ஆனால் இதோ, பராபரன் என்னை உன் வித்தையும் காணப்பண்ணினார் என்றான்.

உ அப்பொழுது யோசேப்பு அவன் முழங்கால்களுக்குள்ளிருக்கிற அவர்களைப் பின்னிடப்பண்ணி, அவன் முகத்திற்கு முன்பாகத் தரைமட்டும் குனிந்து வணங்கினான்.

ஊ பிற்பாடு யோசேப்பு இருவனையும் கொண்டுவந்து, எப்பிராயீமைத் தன் வலதுகையிலுலே இஸ்ரவேலின் இடதுகைக்கு நேராகவும் மனுசேயைத் தன் இடதுகையிலுலே இஸ்ரவேலின் வலதுகைக்கு நேராகவும் அவனண்டையிலே சேரப்பண்ணினான்.

ஐ ஆனால் இஸ்ரவேல் தன் வலதுகையை நீட்டி, இளையவனுடைய எப்பிராயீமுடைய தலையின்மேலும் மனுசேமூத்தவனுயிருந்தாலும், தன் இடதுகையை மனுசேயினுடைய தலையின்மேலும் வைத்தான்; அவன் அறிந்து அப்படித் தன்னுடைய கைகளை வைத்து,

ஒ யோசேப்பை ஆசீர்வதித்துச் சொன்னதாவது: பராபரனுக்குமுன்பாக என் பிதாக்களாகிய ஆபிரகாமும் ஈசாக்கும் நடந்துகொண்டார்களே, நான் உண்டான நாள்துவக்கி இந்நாள்வரைக்கும் என்னை ஆதரித்துவந்த அந்தப் பராபரனும்,

ஓ என்னை எல்லாத் தீமைக்கும் நீங்கலாக்கி மீட்ட தூதனுமானவர் இந்த இளைஞரை ஆசீர்வதிக்கக்கடவர்; என் பேரும் ஆபிரகாம் ஈசாக்கென்ற என் பிதாக்களின் பேரும் அவர்களுக்குத் தரிக்கப்படக்கடவது; தேசத்தின் நடுவிலே ஏராளமான நிரட்சியாய்ப் பலுகக்கடவர்களென்றான்.

ஔ தன் தகப்பன் தன் வலதுகையை எப்பிராயீமுடைய தலையின்மேல் வைத்ததை யோசேப்பு காண்கிறபொழுதோவெனில், அவனுக்கு ஆகாததாய்க் கண்டது; ஆகையால் எப்பிராயீமுடைய தலையின்மேல் இருந்த தன் தகப்பனுடைய கையை யோசேப்பு மனுசேயினுடைய தலையின்மேல் வைக்கும்படிக்கு எடுத்து,

ஔ தன் தகப்பனே அப்படியல்ல, என் தகப்பனே, ஏனெனில் இவன் மூத்தவன்; இவன் தலையின்மேல் உம்முடைய வலதுகையை வையுமென்றான்.

க அவன் தகப்பனோவெனில், தட்டுதல் பண்ணி, அறிவேன், என் மகனே, அறிவேன்; இவனும் சனசதனமாவான்; இவனும் பெருகிப்போவான்; ஆனாலும் இவனுடைய தம்பி இவனைப்பார்க்கிலும் பெரு

பிப்போவான்; அவன் வித்துச் சனசதனங்களால் நிறைந்த நிரட்சியாமென்றான்.

உ அப்படியே அவன் அந்நாளிலே அவர்களை ஆசீர்வதித்து, பராபரன் உன்னை எப்பிராயீமைப்போலவும் மனாசேயைப் போலவும் இருக்கப்பண்ணுவாராக என்று இஸ்ரவேலர் உன்னைத்தொட்டு வாழ்த்துவார்கள் என்று சொல்லி, எப்பிராயீமை மனாசேக்குமுன்னே வைத்தான்.

உக ¶ பிற்பாடு இஸ்ரவேல் யோசேப்போடே சொன்னதாவது: இதோ நான் மரணம் அடைகிறேன்; ஆனால் பராபரன் உங்களோடிருந்து, உங்கள் பிதாக்களின் தேசத்திற்கு உங்களைத் திரும்பிவரப்பண்ணுவார் என்றும்,

உஉ நான் என் பட்டயத்தாலும் என் வில்லினாலும், எமோரியர் கையிலே வாங்கின *ஒரு நிலத்தை உன் சகோதரனைப்பார்க்க உனக்கு அதிகமான பங்காகக் கொடுத்தேன் என்றும் சொன்னான். *யோவா. ச. டு.

ஙஎ. அதிகாரம்.

பிற்பாடு யாக்கோபு தன் குமாரனை அழைப்பித்துச் சொன்னதாவது: கூடி வாருங்கள்; முடிவுநாள்களில் உங்களுக்கு வந்து சம்பவிப்பதை உங்களுக்கு அறிவிப்பேன்.

உ ¶ யாக்கோபின் குமாரரே, கூடிவந்து கேளுங்கள்; உங்கள் தகப்பனாகிய இஸ்ரவேலைக் கேளுங்கள்.

ஈ ¶ ரூபனே, நீ என்னுடைய தலைச்சனும் என் சத்துவமும் என் முன்னின பலமுமானவன்; நீ மேன்மையில் பிரதானமும் வல்லமையில் பிரதானமுமானவன்.

ச தண்ணீரைப்போலப் பாய்ந்தவனே, நீ பிரதானமாய் இருப்பதில்லை; ஏனெனில் *உன் தகப்பனுடைய மஞ்சத்தின்மேலே ஏறினாய்; அதை அப்பொழுது தீட்டுப்படுத்தினாய்; என் படுக்கையின்மேல் அவன் ஏறினான். *க மோ. ஈடு. உஉ.

ஏ சிமெயோனும் லேவியும் எக சகோதரராயிருக்கிறார்கள்; அவர்களுடைய பட்டயங்கள் கொடுமையின் ஆயுதங்கள்.

ஈ என் ஆத்துமா அவர்கள் இரகசிய ஆலோசனையில் வராதிருப்பதாக; என் மகிமை அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப் போகாதிருப்பதாக; ஏனெனில் அவர்கள் தங்கள் கோபத்திலே *ஒரு புருஷனைக் கொன்றுபோட்டு, தங்கள் ஆங்காரத்திலே பலவான்களை அதம்பண்ணினார்கள். *க மோ. ஈச. உடு.

எ வலிதான அவர்களுடைய கோபமும் கடினமான அவர்களுடைய மூர்க்கமும் சபிக்கப்படக்கடவது; அவர்களை யாக்கோபிலே *பிரியவும் இஸ்ரவேலிலே சிதறவும் பண்ணுவேன். *யோச. ஙஈ. க.

அ ¶ யூதாவே, நீயே பிரதானமானவன்; உன்னை உன் சகோதரர் புகழுவார்கள்; உன்னுடைய கை உன் சத்துருக்களுடைய பிடரியின்மேல் இருக்கும்; உனக்கு முன்பாக உன் தகப்பனுடைய புத்திரர் வணங்குவார்கள்.

ஆ யூதா சிங்கக்குட்டியானவன்; என் மகனே, நீ இரை எடுத்து உயர்ந்தாய்; சிங்கத்தைப்போலவும் சிழச்சிங்கத்தைப்போலவும் மடங்கிப் படுத்துக்கொள்ளுகிறான்; அவனை எழுப்பப்போகிறவன் யார்?

ஐ *சமாதான கர்த்தர் வரும்மட்டும்செங்கோல் யூதாவிலிருந்தும், நியாயம்கற்பிக்கிறவன் அவன் பாதங்களினிருந்தும், அற்றுப்போவதில்லை; அவனைச் சனசதனங்கள் சேரும். *சங். எஉ. எ. எசா. ஈ. ஈ, எ. எபே. உ. ஐஎ.

ஐக தம்முடைய கழுதை மறியைத் திராட்சச்செடியோடும் தம்முடைய கோவேறைக் கழுதையின் குட்டியை நற்குல திராட்சச்செடியோடும் கட்டிப்போடுவார்; தம்முடைய உடுப்பைத் திராட்சப்பழ இரசத்திலும் தமது சால்வையைத் திராட்சப்பழங்களின் இரசத்திலும் வெளுப்பார்.

ஐஉ அவருடைய கண்கள் திராட்சப்பழ இரசத்திலும் சிவப்பும், அவருடைய பல்லுகள் பாலிலும் வெண்மையுமாய் இருக்கும்.

Digitized by Google

ஙக ¶ சேபுலோன் *கடல்துறை அருகே குடியிருப்பான்; அவன் கப்பல்துறை அருகே இருப்பான்; அவன் எல்லை சீதோனுக்கு எதிராக இருக்கும். *யோசு. ஙகூ. ங, ஙக.

ஙச ¶ இசஷார் பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த எலும்புள்ள கழுதை.

ஙஞ அவன் இளைப்பாறுதல் நல்லதென்றும் சமையை வசதியானதென்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதி கட்டுகிறவனானான்.

ஙசு ¶ தான் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒன்றைப்போல தன் சனத்தை நியாயம் விசாரிப்பான்.

ஙஎ தான் குதிரையின் குதிகால்களை, அதில் ஏறி இருக்கிறவன் மல்லாக்க விழக்கடிக்கிற வழி அருகான சர்ப்பமும், பாதை அருகான விரியனுமாய் இருப்பான்.

ஙஅ ¶ கர்த்தாவே, *உம்முடைய இரட்சிப்புக்குக் காத்துக்கொண்டிருக்கிறேன். *சங். ஈஙகூ. ஈசுகூ.

ஙகூ ¶ காத்தென்றவன்மேல் இராணுவக் கூட்டம் பாய்ந்துவிழும்; அவனோவென்றால் கடைசியிலே அதின்மேல் பாய்ந்து விழுவான்.

ஙஙி ¶ ஆசேருடைய அப்பம் புஷ்டியாய் இருக்கும்; இராசாக்களுக்கான ருசிவர்க்கங்களை இடுவான்.

ஙக ¶ நப்தலி நீங்கலாய் விடப்பட்ட பெண்மான்; வடிப்பமான வசனங்களைத் தருபவன்.

ஙஉ ¶ யோசேப்பு கனிதருகிற செடி; அவன் சீர்ஷற்றண்டையிலே கனிதருகிற செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்.

ஙஊ அம்பை எய்கிறவர்கள் அவனை மனமடிவாக்கி எய்து, அவனை விரோதித்தார்கள்.

ஙச ஆனால் அவனுடைய வில் கெட்டியாய் நின்றது; அவன் கைகளின் புயங்கள் யாக்கோபுடையவல்லவரின் கரங்களாலே பலத்தன; இதைத்தொட்டு மேய்ப்பனும் இஸ்ரவேலின் அஸ்திபாரக்கல்லுமானான்.

ஙடி உன் தகப்பனுடைய பராபரனாலே அப்படி ஆயிற்று; அவர் உனக்குத் துணையாய் இருப்பார்; சர்வத்திற்கும் வல்லவராலே அப்படி ஆயிற்று; அவர் உயரவானத்திலிருந்து உண்டாகிய ஆசீர்வாதங்களாலும், கீழே கிடக்கிற பாதாளத்தின் ஆசீர்வாதங்களாலும், முலைகளுக்கும் கர்ப்பங்களுக்கும் உண்டாகிற ஆசீர்வாதங்களாலும், உன்னை ஆசீர்வதிப்பார்.

ஙஎ உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேல்வட்டமாய் இருந்து, நித்திய மேடுகளின் முடிவுமட்டும் போகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின்மேலும் வருவதாக.

ஙஅ ¶ பென்யமீன் பீறிப்போடுகிற ஓநாய், காலமே எடுத்து அதைப் பட்சிப்பான்; சாயங்காலத்திலே கொள்ளையிட்டதைப் பங்கிடுவான்.

ஙஆ ¶ இஸ்ரவேலின் கோத்திரங்களாகிய இவைகள் எல்லாம் பன்னிரண்டு; அவர்கள் தகப்பன் அவர்களை ஆசீர்வதிக்கையில், அவர்களுக்குச் சொன்னது இதுதான்; அவர்களில் அவனவனை அவனவனுக்கு அடுத்த ஆசீர்வாதத்தினாலே ஆசீர்வதித்தான்.

ஙகூ பிற்பாடு அவன் அவர்களுக்குக் கற்பித்துச் சொன்னதாவது: நான் என் சனத்தோடே சேர்க்கப்படுகிறேன்; எத்தியனான எப்பேரோனின் நிலத்திலுள்ள கெபியிலே என்னை என் பிதாக்களண்டையிலே அடக்கம்பண்ணுங்கள்.

ஙஙி கானான்தேசத்திலே மம்ரேக்கெதிராக இருக்கிறதும், மாபிராகாம் நிலத்தோடேகூட ஏத்தியனுமான எப்பேரோனின் கையிலே பிரேதங்களை அடக்கம்பண்ணும் சொந்த நிலமாகக் கொண்டதுமான மக்பேலா என்னப்பட்ட நிலத்தின் கெபியிலேதானே.

ஙக அங்கே மாபிராகாமையும் அவர் பெண்சாதியான சாராளையும் அடக்கம்பண்ணி

ளர்கள்; அங்கே ஈசாக்கையும் அவர் பெண்சாதியாகிய ரெபேக்காளையும் அடக்கம் பண்ணினார்கள்; அங்கே லேயாளையும் அடக்கம்பண்ணினேன்.

ஈஉ அந்த நிலமும் அதில் இருக்கிற கெபியும் ஏத் புத்திரரின் கையிலே கொள்ளப்பட்டது என்றான்.

ஈஈ யாக்கோபு தன் குமாரருக்குக் கற்பனை கொடுத்து முடித்தபிற்பாடு, அவன் தன் கால்களைக் கட்டிலின்மேல் சேர்த்துக்கொண்டு, சீவித்துப்போய்த் தன் சனத்தாரோடே சேர்க்கப்பட்டான்.

ருய. அதிகாரம்.

அப்பொழுது *யோசேப்பு தன் தகப்பனுடைய முகத்தின்மேல் விழுந்து, அவன்மேல் அழுது, அவனை முத்தம்செய்தான். *ஆ மோ. சசு. ச.

உ பிற்பாடு தன் தகப்பனுக்குக் கற்பனைகொடுக்க இட யோசேப்பு வயித்தியராகிய தன்னுடைய ஊழியக்காரருக்குக் கற்பித்தான்; அப்படியே வயித்தியர் இஸ்ரவேலுக்குக் கற்பனைகளை இட்டார்கள்.

ஊ அது ஆகிற நாற்பதுநாளும் நிறைவேறிற்று; ஏனெனில் கற்பனைகளை இடும்வேளை இத்தனைநாளில் நிறைவேறும்; எகிப்தியர் அவனுக்கு எழுபதுநாள் துக்கம்கொண்டாடினார்கள்.

ச அவனுக்குத் துக்கம் கொண்டாடின நாள் முடிந்தபொழுது, யோசேப்பு பார்வோனின் வீட்டாரோடே பேசிச் சொன்னதாவது: உங்கள் கண்களில் எனக்குத் தயவுகிடைத்ததானால், நீங்கள் பார்வோனுடைய காதுகளுக்குமுன்பாகப் பேசி,

ஙி இதோ நான் சாகிறேன்; நான் காணுந தேசத்திலே எனக்கு வெட்டியிருக்கிற என் பிரேதக்குழியிலேதானே என்னை அடக்கம் பண்ணுவாயாக என்று *என் தகப்பன் என்னை ஆணை இடுவித்தக்கொண்டார்; இப்பொழுதும் நான் போயேறி என் தகப்பனை அடக்கம்பண்ணி வரவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன் என்று சொல்லுங்கள் என்றான். *ஆ மோ. சஎ. உசூ.

ஞ அதற்குப் பார்வோன் உன் தகப்பன் உன்னை ஆணை இடுவித்தபடியே, நீ போயேறி அவனை அடக்கம்பண்ணென்றான்.

ட அப்படியே யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணப் போயேறினான்; பார்வோனுடைய வீட்டின் மூப்பராகிய அவனுடைய சகல ஊழியக்காரரும் எகிப்து தேசத்தினுடைய சகல மூப்பரும்,

ண யோசேப்புடைய எல்லா வீட்டாரும் அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டாரும் அவனோடேகூடப் போயேறினார்கள்; தங்கள் குழந்தைகளையும் தங்கள் ஆடுமாடுகளையும் மாத்திரம் கோசேன்தேசத்திலே விட்டுப்போனார்கள்.

ஙு அவனோடே இரதங்களும் குதிரைக்காரரும் போயேறினார்கள்; மிகவும் பலத்த தண்டாய் இருந்தது.

ஙூ அவர்கள் யோர்தானுக்கு அக்கரையில் இருக்கிற முள்காட்டின் சமனான வெளியிலே வந்தபொழுது, அவ்விடத்திலே மகா பலத்த பெரிய புலம்பலாய் புலம்பினார்கள்; அங்கே தன் தகப்பனுக்கு ஏழுநாள் துக்கம் கொண்டாடினான்.

ஙெ தேசத்தின் குடிகளாகிய கானானியர் முள்காட்டின் சமனான வெளியிலே கொண்டாடப்படுகிற துக்கத்தைக் காண்கையில், இது எகிப்தியரின் கன துக்கிப்பென்னார்கள்; ஆனதுகொண்டு யோர்தானுக்கு அப்பால் இருக்கிற அந்த ஸ்தலத்திற்கு எகிப்தியரின் துக்கிப்பென்று பேர் உண்டாயிற்று.

ஙஅ அவன் குமாரர் அவன் தங்களுக்குக் கற்பித்திருந்தபடியே அவனுக்குச் செய்து,

ஙஈ அவனைக்கானான்தேசத்திலேகொண்டுபோய், மம்ரேக்கெதிராயிருக்கிறதும், *ஆபிரகாம் நிலத்தோடேகூட எத்தியனாகிய எப்பேரோன் கையிலே பிரேதங்களை அடக்கம் பண்ணும் சொந்த நிலமாகக்கொண்டதுமான மக்பேலா என்னப்பட்ட நிலத்தின்

கெபியிலே அவனை அடக்கம்பண்ணினார்கள். *க மோ. உக. யசு.

யச ¶ யோசேப்பு தன் தகப்பனை அடக்கம்பண்ணினபிற்பாடு; அவனும் அவன் சகோதரரும், அவனுடைய தகப்பனை அடக்கம்பண்ணுவதற்கு அவனோடேகூட ஏறிவந்தவர்கள் எல்லாரும் எகிப்திற்குத் திரும்பினார்கள்.

யடு ஆனால் தங்கள் தகப்பன் மரணமடைந்ததை யோசேப்பின் சகோதரர் கண்டு, ஒருவேளை யோசேப்பு நம்மைப் பகைத்து, நாம் தனக்குச் செய்த எல்லாப் பொல்லாப்பையும் நமக்குச் சரிக்குச்சரிக்கட்டுவானென்று சொல்லி,

யக உம்முடைய தகப்பனார் மரணம் அடையாததற்குமுன்னே, ஆ, உன் சகோதரரின் துரோகத்தையும் அவர்கள் உனக்குப் பொல்லாப்புச் செய்த அவர்கள் பாவத்தையும் மன்னி என்றதாய் யோசேப்புக்குச் சொல்லுங்களென்று கற்பித்தார் என்றும்,

யஎ இப்பொழுதும் உம்முடைய தகப்பனாருடைய பராபரனின் ஊழியக்காரர் செய்த துரோகத்தை மன்னியுமென்றும் யோசேப்புக்குச் சொல்லி அனுப்பினார்கள்; அப்படி அவர்கள் யோசேப்புக்குச் சொல்லி அனுப்புகிறபொழுது, அவன் அழுதான்.

யஅ பிற்பாடு அவன் சகோதரரும் போய், அவனுக்குமுன்பாகத் தாழவிழுந்து, இதோ உமக்கு நாங்கள் அடிமைகள் என்றார்கள்.

யசு அப்பொழுது யோசேப்பு அவர்களோடே சொன்னதாவது: பயப்படாதிருங்கள்; ஏனெனில் நான் பராபரனுடைய ஸ்தலத்தில் இருக்கிறவனோ?

உஏ *நீங்களோ எனக்கு விரோதமாகப் பொல்லாத நினைவாய் இருந்தீர்கள்; பராபரனோவென்றால், நிரளான சனத்தை உயிரோடே காக்க இந்நாள்வரைக்கும் இருக்கிறபடிச் செய்யும்படிக்கு, அதை நன்மையாக நினைத்தார். *க மோ. சடு. டு.

உக இப்பொழுதும் பயப்படாதிருங்கள்; நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமரிப்பேன் என்று சொல்லி, அவர்களைச் ஸமாதானப்படுத்தி, அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.

உஉ ¶ அப்படியே யோசேப்பும் அவன் தகப்பன் வீட்டாரும் எகிப்திலே குடியிருந்தார்கள்; யோசேப்பு நூற்றுப்பத்துவருஷம் உயிரோடிருந்தான்.

உஉ யோசேப்பு எப்பிராயீமுக்குப் பிறந்த மூன்றாந் தலைமுறைப் பிள்ளைகளைக் கண்டான், மனாசேயின் குமாரனாகிய மாகீரின் பிள்ளைகளும் யோசேப்புடைய மடியின்மேல் இருக்கப் பிறந்தது.

உச ¶ யோசேப்பு தன் சகோதரரோடே நான் சாகிறேன்; ஆனால் *பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரித்து, உங்களை இந்தத் தேசத்திலிருந்து தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசத்திலே போய் ஏறப்பண்ணுவார் என்றான். *எபி. யக. உஉ.

உடு பராபரன் உங்களை விசாரிக்கவே விசாரிக்கும்பொழுது, *என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டுபோவீர்களாக என்று யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரை ஆணை இடுவித்துக்கொண்டான். *உ மோ. யஉ. யஉ. யோசு. உச. ஈஉ.

உஉ பிற்பாடு யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான்; அப்பொழுது அவனுக்குக் கற்பூரவர்க்கங்களை இட்டு, அவனை எகிப்துதேசத்தில் ஒரு பெட்டியிலே வைத்துவைத்தார்கள்.

Digitized by Google

மோசே எழுதின

இரண்டாம் ஆகமம்.

க. அதிகாரம்.

எகிப்திலே வந்த இஸ்ரவேலுடைய குமாரரின் நாமங்கள்; யாக்கோபுடனே அவரவர் தங்கள் வீட்டாரோடும்கூட வந்தார்கள்.

உ ரூபன், சிமெயோன், லேவி, யூதா,

ஈ இசஷார், செபுலோன், பென்யமீன்,

ச தாண், நப்தலி, காத், ஆசேர் என்பவர்கள்.

இ *யாக்கோபின் கர்ப்பப்பிறப்பாயெல்லா ஆத்துமாக்களும், எழுபது ஆத்துமாக்கள்; யோசேப்போவென்றால், எகிப்தில் இருந்தான். *க மோ. சஉ. உஎ.

ஊ யோசேப்பும் அவனுடைய எல்லாச் சகோதரரும் அந்த எல்லாத் தலைமுறை யாரும் மரித்தபிற்பாடோவெனில்,

எ இஸ்ரவேல் புத்திரர் மிகுதியும் பலுகி ஏராளமாகிப் பெருகிப் பலத்தப்போனார்கள், தேசம் அவர்களால் நிறைந்தது.

ஏ ¶ யோசேப்பை அறியாத புதிய இராசாவும் எகிப்திலே எழும்பினான்.

ஐ அவன் தன் சனத்தோடே சொன்னதாவது: இதோ, இஸ்ரவேல் புத்திரராகிய சனம் நம்மிலும் பெரியதும் பலத்ததுமாய் இருக்கின்றது.

ஒ அது பெருகாதபடிக்கும், ஒரு யுத்தம் உண்டானால் அதுவும் நம்முடைய பகைஞரோடேகூட நமக்கு விரோதமாய் யுத்தம் பண்ணித் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போகாதபடிக்கும், நாம் அவர்களிடத்தில் புத்தியுள்ளவர்களாய் இருப்போமாக என்றான்.

ஓக அப்படியே அவர்களைத் தங்கள் சமைகளால் ஒடுக்கும்படிக்கு, அவர்கள் மேல் பகுதிக்காரரான தலைவரை வைத்தார்கள்; ஏனெனில் படைமுஸ்திப்புகளைவைக்கும் பட்டணங்களாகிய பீத்தோமும், ராமசேசும், பார்வோனுக்குக் கட்டப்பட்டது.

ஓஉ ஆனால் எத்தனைக்குச் சனத்தை ஒடுக்கினார்களோ, அத்தனைக்கும் அது பெருகிப் பரம்பிற்று; ஆகையினாலே இஸ்ரவேல் புத்திரரைப் பார்த்து விசனப்பட்டார்கள்.

ஓஊ எகிப்தியர் இஸ்ரவேல் புத்திரரைக் கொடூரமாய் வேலைகொண்டு,

ஓச களிமண்ணினும் செங்கல்லினும் செய்யும் கடினமான வேலையினாலும், வயலில் செய்யும் எல்லாவித வேலையினாலும், அவர்களைக் கொடூரமாய்ப் பணிசெய்விக்கப் பண்ணும் தங்களுடைய மற்ற எல்லா வேலையினாலும், அவர்களுக்குச் சீவனைக் கசப்பாக்கினார்கள்.

ஓஎ ¶ இதுவுமல்லாமல், எகிப்தின் இராசா எபிரேய மருத்துவச்சிகளோடே பேசினான்; அவர்களில் ஒருத்தியின் பேர் சிப்பிரு; மற்றவள் பேர் பூகா.

ஓஅ அவர்களோடே அவன் சொன்னதாவது: பெற ஆசனங்களில் உருக்காக்க எபிரேய பெண்சாதிகளுக்கு சீக்கள மருத்துவம் பார்க்கையில், அது ஆண்பிள்ளையாகில் அதைக் கொல்லுங்கள்; அது பெண்பிள்ளையாகில் உயிரோடு இருக்கட்டும் என்றான்.

ஓஏ ஆனால் மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்து, எகிப்தின் இராசா தங்களுக்

குச் சொன்னபடி செய்யாமல், பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றினார்கள்.

18 ஆகையால் எகிப்தின் இராசா மருத்துவச்சிகளை அழைப்பித்து, அவர்களோடே சீக்கள் பிள்ளைகளை உயிரோடே காப்பாற்றுகிற இக்காரியத்தை ஏன் செய்கிறீர்கள் என்றான்.

19 அப்பொழுது மருத்துவச்சிகள் பார்வோனுக்கே, எபிரேய பெண்சாதிகள் எகிப்திய பெண்சாதிகளைப்போல இருக்கிறதில்லை; அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சி அவர்களண்டைக்கு வராததற்குமுன்னே அவர்கள் பெற்றுத் தீர்ந்தது என்றார்கள்.

20 இதின்நிமித்தம் பராபரன் மருத்துவச்சிகளுக்கு நன்மைசெய்தார்; சனம் பெருகி மிகுதியும் பலத்துப்போயிற்று.

21 சம்பவித்தது எதென்றால், மருத்துவச்சிகள் பராபரனுக்குப் பயந்தபடியினாலே, அவர் இவர்களுக்கு வீடுகளை உண்டாக்கினார்.

22 அப்பொழுது பார்வோன் பிறக்கிற ஆண்பிள்ளையை எல்லாம் ஆற்றிலே போட்டுவிட்டு, பெண்பிள்ளையை எல்லாம் உயிரோடே வையுங்கள் என்று தன்னுடைய எல்லாச் சனத்திற்கும் கற்பித்தான்.

2. அதிகாரம்.

1 ஆனால் *லெவி வீட்டாரில் ஒரு மனிதன் போய் லெவியின் குமாரத்தி ஒருத்தியை விவாகம்பண்ணினான். *2 மோ. 6. 20.

2 அந்தப் பெண்சாதி கர்ப்பம்தரித்து, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளதென்று கண்டு, *அதை மூன்றுமாதம் ஒளித்தாள். *எபி. 11. 23.

3 அதை அவள் அப்புறம் ஒளிக்கக்கூடாத பொழுதோவெனில், அவள் நாணல் பெட்டியை வாங்கிக்கொண்டு, அதைப் பிசினும் சோனும்பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, ஆற்றோரமாய் நாணலிலே வைத்தாள்.

4 அதற்கு என்ன சம்பவிக்குமென்று அறிய அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்.

5 அப்பொழுது பார்வோனின் குமாரத்தி ஆற்றிலே குளிக்க இறங்கி வந்தாள்; அவளுடைய பணிவிடைக்காரிகள் ஆற்றங்கரையிலே நடந்தார்கள்; அவள் நாணல் நடுவிலே இருக்கிற பெட்டியைக் கண்டு, அதைக் கொண்டுவரத் தன் வேலைக்காரியை அனுப்பினாள்.

6 அதைத் திறந்து அந்தப் பிள்ளையைக் கண்டாள்; இதோ, பிள்ளை அழுதது; அப்பொழுது அவள் அதின்மேல் இரக்கமாகி, இது எபிரேயரின் பிள்ளைகளில் ஒன்று என்றாள்.

7 அப்பொழுது அதின் தமக்கை பார்வோனின் குமாரத்தியோடே, உமக்கு இந்தப் பிள்ளையை வளர்க்கும்படிக்கு எபிரேய பெண்சாதிகளில் முலைகொடுக்கிற ஒருத்தியை உமக்கு அழைத்துவர நான் போகட்டுமோ என்றாள்.

8 அப்பொழுது பார்வோனின் குமாரத்தி அவளோடே போவென்றாள்; அந்தப் பெண்பிள்ளை போய்ப் பிள்ளையின் தாயை அழைத்துவந்தாள்.

9 அவளோடே பார்வோனின் குமாரத்தி, நீ இந்தப் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய், அதை எனக்கு வளர்த்திடு, நான் உனக்குக் கூலியைக் கொடுப்பேன் என்றாள்; அப்படியே அந்தப் பெண்சாதி பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் அதை வளர்த்தாள்.

10 பிள்ளை பெரியதானபொழுது, அவள் அதைப் பார்வோனின் குமாரத்தியண்டையில் கொண்டுபோனாள்; அவளுக்கு அது குமாரனாயிற்று; அவள் அதற்கு மோசே என்று பேரிட்டாள்; ஏனென்றால் அதைத் தண்ணீரினின்று தூக்கினேன் என்றாள்.

11 ¶ *மோசே பெரியவனாய்ப்போன அந்நாள்களில் சம்பவித்ததேதென்றால், அவன் தன் சகோதரரண்டையிலே புறப்

பட்டுப் போய், அவர்கள் பாரமான வேலை கணப்பார்த்து, தன் சகோதரரில் எபிரேய மனிதனுடைய ஒருவனை அடித்துக்கொண்டிருக்கிற எகிப்திய மனிதனைக் கண்டு, *எபி. ய௧. உச, உடு.

ய உ இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் திரும்பிப்பார்த்து ஒருவரும் இல்லை என்று கண்டபொழுது, எகிப்தியனை வெட்டி, அவனை மணலிலே அடக்கிப்போட்டான்.

ய ரு மறுநாளிலும் வெளியே போனான்; இதோ எபிரேய மனிதர் இரண்டுபேர் சண்டைபண்ணினார்கள்; அப்பொழுது அநியாயம்செய்கிறவனுடே, நீ உனக்கடுத்தவனை அடிக்கிறது என்னவென்றான்.

யசு அதற்கவன் உன்னை எங்கள்மேல் தலைத்தனக்காரனும் நியாயாதிபதியுமாகவைத்தவர் யார்? நீ எகிப்தியனைக் கொன்றுபோட்டதுபோல, என்னையும் கொன்றுபோட இதைச் சொல்லுகிறாயோ என்றான்; அப்பொழுது மோசே பயந்து, அந்தக்காரியம் வெளியானது நிச்சயம் என்றான்.

யஙி பார்வோன் அந்தக் காரியத்தைக் கேட்டு, மோசேயைக் கொலைசெய்யத் தேடினான்; ஆனால் மோசே பார்வோனுக்கு விலகி ஓடிப்போய், மீதியான் தேசத்திலே தங்கி, ஒரு கிணற்றண்டையிலே உட்கார்ந்தான்.

யசு ¶ மீதியானில் இருக்கிற ஆசாரியனுக்கு ஏழு குமாரத்திகள் இருந்தார்கள்; அவர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளுக்குத் தண்ணீர்காட்டும்படிக்கு அங்கே வந்து மொண்டு, தொட்டிகளை நிரப்பினார்கள்.

யள ஆனால் மேய்ப்பர் வந்து அவர்களைத் துரத்தினார்கள்; அப்பொழுது மோசே எழுந்திருந்து அவர்களைக் காப்பாற்றி, *அவர்களுடைய ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். *க மோ. உசு. ய.

யஅ அவர்கள் தங்கள் தகப்பனாகிய ரெகுவேலண்டையிலே வந்தபொழுது, அவன் நீங்கள் இன்று இத்தனை சீக்கிரமாய் வந்ததென்ன என்றான்.

யசு அதற்கு அவர்கள், எகிப்திய மனிதன் ஒருவன் மேய்ப்பரின் கைகளுக்கு எங்களைத் தப்புவித்து, எங்களுக்கு மொண்டும்கொடுத்து, ஆடுகளுக்குத் தண்ணீரும் காட்டினான் என்றார்கள்.

உய அப்பொழுது அவன் தன் குமாரத்திகளோடே, அவன் எங்கே இருக்கிறான்? அந்த மனிதனை நீங்கள் விட்டுவந்ததென்ன? அவன் அப்பம் சாப்பிடுகிறதற்கு அவனை அழைத்துவாருங்களென்றான்.

உக மோசே அந்த மனிதனிடத்திலே தங்கியிருக்கச் சம்மதப்பட்டான்; அவன் மோசேக்குத் தன் குமாரத்தியாகிய சிப்போராளைக் கொடுத்தான்.

உஉ இவள் ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்குக் கேர்சோமென்று பேரிட்டான்; ஏனெனில் அந்நியதேசத்திலே பரதேசியாய் இருக்கிறேன் என்றான்.

உக ¶ சம்பவித்ததேதெனில், அநேகநாள்வட்டத்திலே எகிப்தின் இராசா செத்துப்போனான்; இஸ்ரவேல் புத்திரரோவென்றால் அடிமைத்தனத்திலிருந்து தவித்துக் கூப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து கூப்பிடுகிற சத்தம் பராபரனண்டைக்கு ஏறிற்று.

உச பராபரன் அவர்கள் தவிப்பைக் கேட்டு தாம் ஆபிரகாமோடும் ஈசாக்கோடும் யாக்கோபோடும்பண்ணின் உடம்படிக்கையைப் பராபரன் நினைவுகூர்ந்தார்.

உடி பராபரன் இஸ்ரவேல் புத்திரனாகோக்கிப்பார்த்தார், பராபரன் அவர்களை அறிந்தார்.

ரு. அதிகாரம்.

மோசேயோவென்றால், மீதியானில் ஆசாரியனுயிருக்கிற தன் மாமனுடைய ஏத்திரோவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தான்; அவன் ஆடுகளை வனாந்தரத்தின் பின்புறத்திலே ஓட்டி, பராபரனுடைய பர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான்.

Digitized by Google

2 அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முள்செடியின் நடுவிலிருந்து உண்டாகிற அக்கினிச்சுவாலையிலே அவனுக்குத் தரிசனையானார்; இதோ முள்செடி அக்கினியாய் எரிந்தாலும் முள்செடி வெந்தபோகாதிருக்கிறதென்று கண்டான்.

3 அப்பொழுது மோசே, நான் சேரப்போய், அந்த முள்செடி வெந்துபோகாதிருக்கிறதேதென்கிற அந்தப் பெரிய தரிசனையைப் பார்ப்பேனாகவென்றான்.

4 தூரல் பார்க்கிறதற்காக அவன் சேரவருகிறதைக் கர்த்தர் கண்டு, பராபரன் முள்செடியின் நடுவிலிருந்து அவனுக்கு நேராகக் கூப்பிட்டு, மோசேயே, மோசேயே, என்றார்; அவன் இதோ, அடியேன் என்றான்.

5 அப்பொழுது அவர், இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களிலிருக்கிற உன் பாதரட்சைகளைக் கழற்று; ஏனெனில் நீ நிற்கிற ஸ்தலம் பரிசுத்த பூமியாயிருக்கிறதென்று சொல்லி,

6 பின்னையும் *நாம் ஆபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாகிய உன் பிதாக்களுடைய பராபரனென்றார்; அப்பொழுது மோசே தன் முகத்தை மூடிக்கொண்டான்; ஏனென்றால் பராபரனை நோக்கிப்பார்க்கப் பயந்தான். *மாற். 12. 26, உள.

7 ¶ கர்த்தர் சொன்னதாவது: நாம் எகிப்திலிருக்கிற நமது சனத்தின் உபத்திரவத்தைப் பார்க்கவே பார்த்து, தங்கள் ஆளோட்டிகளின்நிமித்தம் அவர்கள் கூப்பிடுகிறகூப்பிடுதலைக் கேட்டோம்; ஏனென்றால் அவர்கள் வேதனைகளை அறிந்தோம்.

8 ஆகையால் அவர்களை எகிப்தியரின் கைக்கு நீக்கலாக்கிவிடவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து கானானியரும், ஏத்தியரும், எமோரியரும், பெரிசியரும், ஏவியரும், எபூசியரும் இருக்கிறஇடமாகிய பாலும் தேனும் ஓடுகிற கலமும் விசாலமுமான தேசத்திற்கு ஏறிவரப்பண்ணவும் இறங்கினோம்.

9 இப்பொழுதும் இதோ இஸ்ரவேல் புத்திரரின் கூப்பிடுதல் நம்மண்டைக்கு வந்தது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிறஒடுக்குதலையும் பார்த்தோம்.

10 இப்பொழுதும் நீ இஸ்ரவேல் புத்திரராகிய நமது சனத்தை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரும்படிக்கு உன்னைப் பார்வோனண்டைக்கு அனுப்புவோம் வாவென்றார்.

11 ¶ அப்பொழுது மோசே பராபரனே டே, பார்வோனண்டைக்குப் போகிறதற்கும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவருகிறதற்கும், நான் எம்மாத்திரமென்றான்.

12 அதற்கவர், நாம் உன்னுடனே இருப்போம்; நீ சனத்தை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவந்தபொழுது, இந்தப் பர்வதத்திலே பராபரனுக்கு ஆராதனைசெய்வீர்களென்பது, நாம் உன்னை அனுப்பினதற்கு அடையாளமாய் இருக்குமென்றார்.

13 ¶ அப்பொழுது மோசே பராபரனே டே சொன்னதாவது: இதோ நான் இஸ்ரவேல் புத்திரரண்டைக்கு வந்து, உங்கள் பிதாக்களுடைய பராபரன் என்னை உங்களண்டைக்கு அனுப்பினாரென்று அவர்களுக்குச் சொல்லும்பொழுது, அவர்கள், அவருடைய நாமம் என்னவென்று என்னைக் கேட்டால், அவர்களோடே என்ன சொல்லுவேன் என்றான்.

14 ¶ அப்பொழுது பராபரன், இருக்கிறவராக இருப்போமென்று மோசேயுடனே சொல்லி, இருப்போம் என்பவர் என்னை உங்களண்டைக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லுவாயாக என்றார்.

15 அப்புறம் பராபரன் மோசேயோடே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரரோடனே, ஆபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய பராபரனாகிய கர்த்தர் என்னை உங்களண்

டைக்கு அனுப்பினார் என்பாயாக, இது என்றைக்கும் நம்முடைய நாமமும், இது தலைமுறை தலைமுறையாக நம்முடைய பேர்ப் பிரஸ்தாபமுமாயிருக்கும்.

16 நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக் கூட்டி, அவர்களோடே சொல்லவேண்டிய தாவது: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்றவர்களுடைய பராபரனுயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய பராபரனுகிய கர்த்தர் எனக்குத் தரிசனையாகி, உங்களையும் எகிப்திலே உங்களுக்குச் செய்யப்பட்டதையும் விசாரிக்கவே விசாரித்தோமென்றும்,

17 நாம் உங்களை எகிப்தின் சிறுமையிலிருந்து ஏறிவரப்பண்ணி, பாலும் தேனும் ஓடுகிற தேசமாகிய, கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியருடைய தேசத்திற்குக் கொண்டுபோவோமென்றும் சொன்னேமென்றார் என்று சொல்லு.

18 அவர்கள் உன் சத்தத்திற்குக் கேள்வி கொடுப்பார்கள்; அப்பொழுது நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் ராசாவண்டைக்குப் போய், அவனேடே, எபிரேயருடைய பராபரனுகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் மூன்று நாள்பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனுகிய கர்த்தருக்குப் பலியிடட்டும் என்பீர்களாக.

19 ஆனுல் எகிப்தின் ராசா வல்லமையான கையைக் கண்டாலும், உங்களைப் போகவிடானென்று நாம் அறிவோம்.

20 ஆகையால் நாம் நம்முடைய கையை நீட்டி, எகிப்தின் நடுவிலே நாம் செய்யும் நம்முடைய சகலவித அதிசயங்களாலும் அதை அடிப்போம்; அதற்குப்பிறகு உங்களை அனுப்பிவிடுவான்.

21 அப்பொழுது நாம் இந்தச் சனத்திற்கு எகிப்தியரின் கண்களுக்குமுன்பாகத் தயவுகிடைக்கப்பண்ணுவதினால் சம்பவிப்பதேதெனில், நீங்கள் போகிறபொழுது வெறுமையாய்ப் போகப்போகிறதில்லை.

22 ஒவ்வொரு ஸ்திரி, தன்தன் அயலகத்தாள் கையிலும் தன்தன் வீட்டுக்காரிகள் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் வஸ்திரங்களையும் கேட்டு வாங்குவாள்; அவைகளை உங்கள் குமாரர்மேலும் உங்கள் குமாரத்திகள்மேலும் வைத்து, * எகிப்தியரைக் கொள்ளையிட்டுப் போவீர்களென்றார். * உ மோ. ங. உ: ஙஉ. நடு, நசு.

4. அதிகாரம்.

1 அப்பொழுது மோசே பிரதியுத்தரமாக, ஆனுல் இதோ அவர்கள் என்னை நம்பாமலும் என் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போவார்கள்; ஏனெனில் கர்த்தர் உனக்குத் தரிசனையானதில்லையென்று சொல்லுவார்கள் என்றான்.

2 அப்பொழுது கர்த்தர் அவனுடனே, உன் கையிலிருக்கிறது என்னவென்றார்; ஒரு கோலென்றான்.

3 அதைத் தரையிலே போடென்றார்; அவன் அதைத் தரையிலே போட்டபொழுது, அது சர்ப்பமாயிற்று; அதற்கு மோசே விலகி ஓடினான்.

4 அப்பொழுது கர்த்தர் மோசேயோடே உன் கையை நீட்டி அதின் வாலைப்பிடி என்றார்; அவன் தன் கையை நீட்டி அதைப் பிடிக்கிறபொழுது, அது அவன் கையிலே கோலாயிற்று.

5 இது ஆபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிற தங்கள் பிதாக்களுடைய பராபரனுகிய கர்த்தர், உனக்குத் தரிசனையானதை அவர்கள் நம்புகிறதற்கான அடையாளமென்றார்.

6 ¶ பின்னையும் கர்த்தர் அவனுக்கு உன் கையை உன் மடியிலே போடென்றார்; அவன் தன் கையைத் தன் மடியிலே போட்டு, அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அவன் கை உறைந்த மழையைப் போல வெண்குஷ்டம் பிடித்திருந்தது.

எ பிறகு அவர் உன் கையைத் திரும்ப உன் மடியிலே போடென்றார், அவன் தன் கையைத் திரும்பத் தன் மடியிலே போட்டு, தன் மடியிலிருந்து அதை வெளியே வாங்குகிறபொழுது, இதோ அது திரும்ப அவனுடைய மற்றச் சதையைப்போல ஆயிற்று.

ஈ அப்பொழுது அவர் சொன்னதாவது: அவர்கள் முந்தின அடையாளத்தைக் கண்டு, உன்னை விசுவாசியாமலும் உனக்குக் கேள்விகொடாமலும்போனால், பிந்தின அடையாளத்தைக் கண்டு விசுவாசிப்பார்கள்.

கூ அவர்கள் இவ்விரண்டு அடையாளங்களையும் விசுவாசியாமலும் உன் சத்தத்திற்குக் கேள்விகொடாமலும் போனார்களேயானால், அப்பொழுது நீ நதியின் தண்ணீரை மொண்டு, பூமியில் ஊற்றுவாயாக; அப்பொழுது நீ நதியிலே மொண்ட தண்ணீர் பூமியிலே இரத்தமாமென்றார்.

ஐ ¶ மோசேயோவென்றால் கர்த்தரோடே சொன்னதாவது: ஆ, ஆண்டவரே, முன்னும் எப்பொழுதும், தேவரீர் உம்முடைய அடியாரோடே பேசினது முதற்கொண்டும் நான் பேச்சுக்காரன் அல்ல, ஏனெனில் நான் திக்குவாயனும் திக்குநாவுக்காரனுமானவன் என்றான்.

ஒ ¶ அப்பொழுது கர்த்தர் அவரோடே சொன்னதாவது: மனிதனுக்கு வாயைக் கொடுத்தவர் யார்? அல்லவென்றால் ஊமையையும் அல்லது செவிடனையும் அல்லது பார்வையுள்ளவனையும் அல்லது குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நானல்லவோ?

ஙஉ இப்பொழுதும் நீ போ; நான் உன் வாயோடே இருந்து, *நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்போமென்றார். *மத். ஐ. ஙூ, உஐ.

ஙஎ ¶ அதற்கு மோசேயென்றால், ஆ, ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிறவனாகிலும் அனுப்புமென்றான்.

ஙஏ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபம்மூண்டவராகிச் சொன்னதாவது: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவோ? அவன் நன்றாய்ப் பேசுகிறவனென்று அறிவோம்; இதோ அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வந்து உன்னைக் கண்டு, தன் இருதயத்திலே மகிழ்ச்சியாயிருப்பான்.

ஙஐ *நீ அவனோடே பேசி, வார்த்தைகளை அவன் வாயில்போடுவாயாக; நானோவென்றால் உன் வாயோடும் அவன் வாயோடுமிருந்து, நீங்கள் செய்யவேண்டியதை உங்களுக்குப் போதிப்போம். *உ மோ. எ. உ.

ஙஒ அவன் உனக்குப் பதிலாகச் சனத்தோடே பேசுவான்; இப்படியே அவன் உனக்கு வாயாக இருப்பான்; நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்.

ஙஓ நீ அடையாளங்களைச்செய்யும் இந்தக் கோலை உன்கையில்பிடித்துக்கொண்டு போ என்றார்.

ஙஔ ¶ மோசே போய்த் திரும்ப, தன் மாமனாகிய எத்திரோ அண்டைக்கு வந்து, நான் புறப்பட்டு எகிப்திலிருக்கிற என் சகோதரரண்டைக்குத் திரும்பிப்போய், அவர்கள் இன்னம் உயிரோடே இருக்கிறார்களோ என்று பார்க்கட்டுமே என்று அவனோடே சொன்னான்; அப்பொழுது எத்திரோ மோசேக்குச் சமாதானமாய்ப் போ என்றான்.

யக பின்னையும் கர்த்தர் மீதியானிலே மோசேயோடே, எகிப்திற்குத் திரும்பிப்போ; ஏனெனில் உன் பிராணனை வாங்கத் தேடின மனிதர் எல்லாரும் செத்துப்போனார்கள் என்றார்.

யஉ அப்பொழுது மோசே தன் பெண்சாதியையும் தன் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களைக் கழுதையின்மேல் ஏற்றி, எகிப்துதேசத்திற்குத் திரும்பினான்; மோசே பராபரனுடைய கோலைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு போனான்.

Digitized by Google

உக கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ எகிப்திலே திரும்பி வந்து சேர்ந்த

பொழுது, நாம் உன் கையிலே கொடுத்த எல்லா அற்புதங்களையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யப் பார்; நாமோவெனில் அவன் இருதயத்தைச் சனத்தைவிடாத படிக்குக் கெட்டிப்படுத்துவோம்.

உஉ அப்பொழுது நீ பார்வோனுடே சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில் இஸ்ரவேல் நம்முடைய முதல் பேறான குமாரன்.

உக நம்முடைய குமாரன் நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடுவென்று நாம் உன்னுடே சொல்லியும், நீ அவனை விடமாட்டோம் என்றாய்; இதோ நாம் உன் முதல் பேறான உன் குமாரனைக் கொன்றுபோடுகிறேமென்று உரைத்தாரென்று சொல்லுவாயாக என்றார்.

உச ¶ வழியில் தங்குமிடத்திலே சம்பவித்ததேதென்றால் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனைக் கொல்லவேண்டுமென்று இருந்தார்.

உடு அப்பொழுது சிப்போராள், *கருக்கான கல்லை எடுத்து, தன் பின்னையின்தனித் தோலை அறுத்து, அதை அவன் கால்களுக்குமுன்பாகப் போட்டு, நீர் எனக்கு இரத்தப்பழிக்கான மாப்பின்னையாமே என்றாள். *யோசு. டு. உ.

உசு அப்பொழுது அவனைவிட்டு விலகினார்; அவள் சுன்னத்தகளின்நிமித்தம் அப்பொழுது அவனை இரத்தப்பழிக்கான மாப்பின்னை என்றாள்.

உஎ ¶ கர்த்தர் ஆரோனுடனே, நீ வனாந்தரத்திலே மோசேக்கு எதிர்கொண்டு போவென்றார்; அவன் போய்ப் பராபரனுடைய பர்வதத்திலே அவனைச் சந்தித்து, அவனை முத்தம்செய்தான்.

உஅ அப்பொழுது மோசே தன்னை அனுப்பின கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் அவர் தனக்குக் கற்பித்த எல்லா அடையாளங்களையும் ஆரோனுக்கு அறிவித்தான்.

உக ¶ மோசேயும் ஆரோனும் போய் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரை எல்லாம் கூட்டினார்கள்.

உங ஆரோனென்றால் கர்த்தர் மோசேயோடே பேசின எல்லா வார்த்தைகளையும் சொல்லி, சனத்தின் கண்களுக்குமுன்பாக அந்த அடையாளங்களைச் செய்தான்.

ஊக சனம் விசுவாசித்தது; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை விசாரித்தாரென்றும் தங்கள் சிறுமையைப் பார்த்தார் என்றும் அவர்கள் கேட்டபொழுது, குனிந்து பணிந்தகொண்டார்கள்.

ரு. அதிகாரம்.

பிற்பாடு மோசேயும் ஆரோனும் உள்பிரவேசித்துப் பார்வோனுடே, நமக்குவருந்தரத்திலே பண்டிகை ஆசரிக்கும்படிக்கு, நம்முடைய சனத்தைப் போகவிடுமென்று இஸ்ரவேலின் பராபரனுகிய கர்த்தர் சொல்லுகிறாரென்றார்கள்.

உ பார்வோனுவென்றால் நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் சத்தத்தைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலை விடுவதுமில்லை என்றான்.

ங அப்பொழுது அவர்கள் எபிரேயருடைய பராபரன் எங்களைச் சந்தித்தார்; அவர் பெருவாரிக் காய்ச்சலோடும் அல்லவென்று பட்டயத்தோடும் எங்களுக்கு நேரிடாதபடிக்கு நாங்கள் மூன்று நாள் பயணம் வனாந்தரத்திலே போய், எங்கள் பராபரனுகிய கர்த்தருக்குப் பலியிடட்டுமே என்றார்கள்.

ச ஆனால் எகிப்தின் இராசா அவர்களுடனே, மோசே ஆரோனென்றவர்களே, நீங்கள் சனத்தைத் தங்கள் வேலைகளைவிட்டுக் கலையப்பண்ணுகிறதென்ன? உங்கள் சுமைகளைச் சுமக்கப் போங்களென்றான்.

ஙி பின்னையும் பார்வோன் இதோ, தேசத்தின் சனம் அப்போதே திரட்சியாயிருக்க, அவர்களை நீங்கள் தங்கள் சுமைகளைவிட்டு ஓயப்பண்ணுவீர்களோ என்று சொல்லி,

கூ ¶ அக்காளிலே பார்வோன் சனத்தின் விசாரிப்புக்காரருக்கும் அதின் தலைவருக்கும் கற்பித்துச் சொன்னதாவது:

எ நீங்கள் இனிச் சனத்திற்கு நேற்றைப் போலவும், முந்துநேற்றைப்போலவும், செங்கல் வேலைக்கு வைக்கோல் கொடுக்க வேண்டாம்; அவர்கள்தாமே போய்த் தங்களுக்கு வைக்கோல் சேர்க்கக்கடவர்கள்.

அ ஆனால் அவர்கள் நேற்றும் முந்துநேற்றும் செய்த செங்கல்களுடைய இலக்கத்தின் நிட்டத்தைத் தானே அவர்கள்மேலே சுமத்துவீர்களாக; அதிலே நீங்கள் ஒன்றும் குறைக்கவேண்டாம்; ஏனெனில் அவர்கள் சும்மா இருக்கிறார்கள்; ஆகையால் போவோம் எங்கள் பராபரனுக்குப் பலியிடுவோம் என்று கூப்பிடுகிறார்கள்.

கூ அந்த மனிதர்கள் பொய் வார்த்தைகளைக் கவனிக்காமல் தங்கள் பணிவிடை வேலைகளில் முயற்சியாயிருக்கும்படிக்கு, அது அவர்கள்மேல் அதிகரிக்கப்படக்கடவதென்றான்.

ஏ ¶ அப்பொழுது சனத்தின் ஆளோட்டிகளும் அதின் தலைவரும் புறப்பட்டுச் சனத்தோடே சொன்னதாவது: நாம் உங்களுக்கு வைக்கோல் கொடுப்பதில்லை என்றும்,

ஐ நீங்களே போய் உங்களுக்கு அகப்படுகிற இடங்களில் வைக்கோலைச் சம்பாதியுங்கள்; உங்கள் பணிவிடை வேலையிலொவென்றாலும், ஒன்றும் குறைக்கப்படுவதில்லை என்றும் பார்வோன் சொன்னார் என்றார்கள்.

ஒ அப்பொழுது வைக்கோலுக்குப் பதிலாகத் தானடிகளைச் சேர்க்கும்படிக்குச் சனம் எகிப்துதேசமெங்கும் சிதறிப்போயிற்று.

ஓ ஆளோட்டிகளோவென்றால் துரிதம் பண்ணி, வைக்கோலிருந்த நாளில் செய்ததற்குச் சரியாக உங்கள் பங்கிடுவேலைகளை ஒவ்வொருநாளிலே முடித்துத் தீருங்கள் என்றார்கள்.

ஙூ பிற்பாடு நீங்கள் முந்தியதுபோல, செங்கல்லில் உங்கள் நிட்டத்தை நேற்றும் இன்றும் முடிக்காதே போனதென்ன என்று பார்வோனுடைய ஆளோட்டிகள் இஸ்ரவேல் புத்திரர்மேலே வைத்த இவர்களுடைய தலைவர்களைக் கேட்டு அடித்தார்கள்.

ஙஎ ¶ ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் உள்பிரவேசித்துப் பார்வோனை நோக்கிக் கூப்பிட்டு, உமதடியாருக்கு நீர் இப்படிச் செய்வானேன்?

ஙஅ உமதடியாருக்கு வைக்கோல் கொடுக்கப்படாவிட்டாலும், செங்கல்லை அறுத்துத் தாருங்களென்று எங்களுக்குச் சொல்லுகிறார்கள்; இதோ உம்முடைய சனத்தின்மேலே குற்றம் இருக்கும்போது, உமதடியார் அடிக்கப்படுகிறார்கள் என்றார்கள்.

ஙஆ அதற்கவன் சொன்னதாவது: நீங்கள் சும்மா இருக்கிறீர்கள்; சும்மாதான் இருக்கிறீர்கள்; ஆகையினாலே போவோம் கர்த்தருக்குப் பலியிடுவோம் என்கிறீர்கள்.

ஙஇ இப்பொழுதும் போங்கள், பணிவிடைசெய்யுங்கள்; உங்களுக்கு வைக்கோல் கொடுக்கப்படுவதில்லை; செங்கல்லுகளுடைய இலக்கத்தின் நிட்டத்தையோவெனில் நீங்கள் ஒப்புவிக்கவேண்டுமென்றான்.

ஙஈ நீங்கள் ஒவ்வொருநாளிலே அறுத்துத் தீரவேண்டிய செங்கல்லுகளிலே ஒன்றும் குறைக்காதிருங்கள்என்னப்பட்டதினாலே, தங்களுக்கு வந்த இக்கட்டை இஸ்ரவேல் புத்திரரின் தலைவர் கண்டு,

உஏ ¶ பார்வோனைவிட்டுப் புறப்படுகையில், தங்களுக்கு எதிரே நிற்கிற மோசேக்கும் ஆரோனுக்கும் எதிர்ப்பட்டு,

உக அவர்களுடனே, நீங்கள் பார்வோனின் கண்களுக்குமுன்பாகவும் அவருடைய ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் எங்கள் வாசனையை நாறப்பண்ணி, எங்களைக் கொல்ல அவர்கள் கையிலே பட்டயத்தைக் கொடுத்தினிமித்தம் கர்த்

Digitized by Google

தர் உங்களை நோக்கிப்பார்த்து, நியாயம் தீர்க்கக்கடவர் என்றார்கள்.

உஉ ¶ அப்பொழுது மோசே கர்த்தரண்டைக்குத் திரும்பி, ஆண்டவரே, இந்தச் சனத்திற்கு என் தீங்குவரப்பண்ணினீர்? நீர் என்னை அனுப்பினதேது?

உக நான் உம்முடைய நாமத்திலே பேசப் பார்வோனண்டையில் உட்பிரவேசித்தது முதல்கொண்டுதானே இந்தச் சனத்தை உபத்திரவப்படுத்தினான்; நீரோவெனில் உம்முடைய சனத்தை விடுவித்ததே இல்லை என்றான்.

சூ. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, நாம் பார்வோனுக்குச் செய்வதை இப் பொழுது காண்பாய், அதேதென்றால் பலத்த கையைக் கண்டு அவர்களைப் போ கவிட்டு, பலத்த கையைக் கண்டு அவர் களைத் தன் தேசத்திலிருந்து துரத்திவிடுவா னென்றார்.

உ ¶ பின்னையும் பராபரன் மோசேயுடனே பேசி அவனோடே சொன்னதாவது: நாம் கர்த்தர்.

ங நாம் சர்வத்திற்கும் வல்ல பராபரனாய், ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோ புக்கும் தரிசனையானோம்; ஆனால் கர்த்த ரென்ற நம்முடைய நாமத்தினாலே நாம் அவர்களுக்கு அறியப்பட்டதில்லை.

ச அவர்கள் பரதேசிகளாய்த் தங்கின தேசமாகிற கானான்தேசத்தை அவர்களுக் குக் கொடுக்க, நாம் அவர்களோடே நம்மு டைய உடம்படிக்கையையும் ஏற்படுத்தி,

இ எகிப்தியர் அடிமைகொள்ளுகிற இஸ்ர வேல் புத்திரரின் தவிப்பையும் நாம் கேட் டு, நமது உடம்படிக்கையை நினைத்தோம்.

ஈ ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு நீ சொல்லவேண்டியதேதெனில் நாம் கர்த் தர், நாம் உங்களை எகிப்தியருடைய சுமை களின் கீழிருந்து புறப்படப்பண்ணி, உங் களை அவர்கள் அடிமைத்தனத்திற்கு நீங்க லாக்கி விடுவித்து, உங்களை நீட்டப்பட்ட புயத்தினாலும் மகா நியாயத்தீர்ப்புகளி னாலும் மீட்டு,

எ உங்களை நமக்குச் சனமாகச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்குப் பராபரனாயிருப் போம்; நாம் உங்களை எகிப்தியருடைய சுமைகளின் கீழிருந்து புறப்படப்பண்ணு கிற உங்கள் பராபரனாகிய கர்த்தரென்று அறிவீர்கள்.

அ நாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் கொடுப்போமென்று கம் முடைய கரத்தை ஏறெடுத்த தேசத்திலே உங்களைக் கொண்டுபோய், அதை உங்க ளுக்குச் சுதந்தரமாகக் கொடுப்போம்; நாம் கர்த்தரென்று அவர்களுக்குச் சொல் லென்றார்.

கூ இந்தப்பிரகாரமாக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே பேசினான்; ஆனால் அவர்கள் ஆவியின் இடுக்கணினாலும் கடினவேலை யினாலும் மோசேயைக் கேளாதேபோனார்கள்.

ஙூ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே பேசி,

ஙக நீ உள்பிரவேசித்து, எகிப்தின் இராசா வாகிய பார்வோன் இஸ்ரவேல் புத்திரனைத் தன் தேசத்திலிருந்து போகவிட அவனோ டே பேசு என்றார்.

ஙஉ ஆனால் மோசே கர்த்தருக்கு முன்பா கப் பேசி, இதோ இஸ்ரவேல் புத்திரர் என் னைக் கேட்கவில்லை; பார்வோன் என்னை எப்படிக் கேட்பான்? நான் சுன்னத்தில் லாத உதடுகளுமுள்ளவன் என்றார்.

ஙஊ கர்த்தரோவென்றால் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, இஸ்ரவேல் புத்திர ரை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுபோகும்படிக்கு, அவர்களை இஸ்ர வேல் புத்திரரண்டைக்கும் எகிப்தின் இ ராசாவாகிய பார்வோனண்டைக்கும் அ னுப்பிக் கட்டளைகளைக் கொடுத்துவந்தார்.

ஙச ¶ அவர்களுடைய பிதாக்களின் கீட் டாரில் தலைவராவது, இஸ்ரவேலுக்கு முதல் பிறந்தவனான ரூபனின் குமாரர், அனோக்,

Digitized by Google

பல்லு, எத்ஸரோன, கற்மீ; இவர்கள் ரூப னுடைய வம்சங்களின் தலைவர்.

ஏடு சிமெயோனின் குமாரர்; ஏமுவேல், யாமீன், ஓகாத், யாகின், சோகார், காஸ் னித்தியின் குமாரனுகிய சவுல்; இவர்கள் சிமெயோனுடைய வம்சங்களின் தலைவர்.

ஏஉ தங்கள் சந்ததிகளாய்ப் பிரிந்த இ லேவியினுடைய குமாரரின் நாமங்கள், கெர்சோன், கோகாத், மேராரி, என்றவை கள்; இலேவி உயிரோடிருந்த வருஷங் களோவென்றால், நூற்று முப்பத்தேழு வரு ஷங்கள்.

ஏஊ தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த கெர் சோனின் குமாரர்; லிப்னீயும், சிமேயீயும் தானே.

ஏஎ கோகாத்தின் குமாரர்; அம்ராம், இத் சேயார், எப்ரோன், ஊசியேல் என்றவர் கள்; கோகாத் உயிரோடே இருந்த வரு ஷங்களோவென்றால், நூற்று முப்பத்து மூன்று வருஷங்கள்.

ஏஏ மேராரின் குமாரர்; மகேலியும், மூசி யும்தானே; இவர்கள் தங்கள் சந்ததிகளாய் ப்பிரிந்த இலேவியனுடைய வம்சங்களின் தலைவர்.

ஏஐ அம்ராம் தன்னுடைய அத்தையாகிய யோகெபேத்தை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்கு ஆரோனையும் மோசே யையும் பெற்றாள்; அம்ராம் உயிரோடி ருந்த வருஷங்களோவென்றால், நூற்று முப்பத்தேழு வருஷங்கள்.

ஏக இத்சேயாரின் குமாரர்; கோராக், நெப்பேக், சிக்ரி, என்றவர்கள்.

ஏஉ ஊசியேலின் குமாரர்; மீசவேல், எல் சாபான், சித்ரி, என்றவர்கள்.

ஏஎ ஆரோன் அம்மினதாபின் குமாரத்தி யும் நகசோனின் சகோதரியுமாகிய எலி சபாவை விவாகம்பண்ணினான்; இவள் அ வனுக்கு நாதாபையும், அபியூவையும், எ லெயாசாரையும், இத்தாமாரையும் பெற் றாள்.

ஏஒ கோராவின் குமாரர்; ஆசீர், எல்க் காநா, அபியாசாப், என்றவர்கள்; இவர் கள் கோராகியரின் வம்சங்களின் தலைவர்.

ஏடு ஆரோனின் குமாரனுகிய எலெயா சார் பூத்தியேலுடைய குமாரத்திகளில் ஒ ருத்தியை விவாகம்பண்ணினான்; இவள் அவனுக்குப் பினேகாசைப் பெற்றாள், இவர் கள் தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த இலே வியருடைய பிதாக்களாகிய தலைவர்.

ஏசு ஈங்கள் இஸ்ரவேல் புத்திரரை அவர் கள் சேனைகளின்படியே எகிப்துதேசத்தி லிருந்து அழைத்துக்கொண்டு போக்க வென்று கர்த்தர் சொன்ன ஆரோனும் மோசேயும் இவர்கள்தான்.

ஏஎ இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டு போகும்படிக்கு எ கிப்தின் இராசாவாகிய பார்வோனோடே பேசின மோசேயும் ஆரோனும் இவர்கள் தானே.

ஏஐ ¶ கர்த்தர் எகிப்துதேசத்திலே மோ சேயோடே பேசின நாளிலே சம்பவித்த தேதென்றால்,

ஏக கர்த்தர் மோசேயுடனே, நாம் கர்த் தர்; நாம் உன்னோடே சொல்லுகிறவைகளி யெல்லாம் நீ எகிப்தின் இராசாவாகிய பார் வோனோடே சொல்லென்று சொன்னபொ ழுது,

ஏஉ மோசே கர்த்தருக்கு முன்பாக, இ தோ, நான் சுன்னத்தில்லாத உதடுகளுள் ளவன்; பார்வோன் என்னை எப்படிக் கேட்பானென்றான்.

எ. அதிகாரம்.

பராபரன் மோசேயோடே சொன்னதா வது: பார், உன்னை நாம் பார்வோனுக்குத் தேவனுக்கினோம்; உன் சகோதரனுகிய ஆ ரோனேவென்றால், உன் தீர்க்கதரிசியாயி ருப்பான்.

உ நாம் உனக்குக் கற்பிப்பதை எல்லாம் நீ சொல்லும்போது *உன் சகோதரனுகிய ஆரோன் பார்வோனோடே, இஸ்ரவேல் புத் திரரைத் தன் தேசத்திலிருந்து போகவிடும்

Digitized by Google

படிக்குப் பேசக்கடவன். உ மோ. சு. ஐடி. ங ஆனாலோவெனில் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்துதேசத்தில் நம்முடைய அடையாளங்களையும் நம்முடைய அற்புதங்களையும் மிகுதியாய் உண்டாக்கப்பண்ணுவோம்.

ச பார்வோன் உங்களைக் கேளாதே போவான், ஆகையால் நாம் நம்முடைய கையை எகிப்திற்கு விரோதமாக நீட்டி, இஸ்ரவேல் புத்திரரென்ற நமது சனமாகிய நம்முடைய சேனைகளைப் பெரிய நியாயத்தீர்ப்புகளால் எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டு போவோம்.

டு அப்படியே நாம் நம்முடைய கையை எகிப்தின்மேல் நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து அழைத்துக்கொண்டு போகையில், நாம் கர்த்தரென்றதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்.

ள மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கற்பித்தபடியே செய்தார்கள்.

எ அவர்கள்பார்வோனுடனேபேசுகிறபொழுது, மோசேக்கு எண்பதுவயதும் ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதும் இருந்தது.

ஏ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

கூ உங்களுக்காக ஒரு அற்புதம் காட்டுங்களென்று பார்வோன் உங்களோடே சொன்னால், அப்பொழுது நீ ஆரோனுடனே, உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடென்பாயாக, அப்பொழுது அது சர்ப்பமாகுமென்றார்.

ஐ மோசேயும் ஆரோனும் பார்வோனண்டையில் பிரவேசித்து, கர்த்தர் தங்களுக்குக் கற்பித்தபடியே செய்தார்கள்; ஆரோன் தன் கோலைப் பார்வோனுக்கும், அவன் ஊழியக்காரருக்கும் முன்பாகப்போட்டான்; அப்பொழுது அது சர்ப்பமாயிற்று.

ஒ அப்பொழுது பார்வோனும் ஞானிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான், எகிப்தின் சான்றோர்களாகிய இவர்களும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, உ மோ. அ. எ, ஐ, ஐஅ. உ நீமோ. ங. அ, கூ.

ஐஉ அவனவன் தன்தன் கோலைப் போட்டார்கள், அப்பொழுது அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோ வென்றால், இவர்களுடைய கோல்களை விழுங்கிவிட்டது.

ஐங ஆனால் கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது, அவர்களைக் கேளாதே போனான்.

ஐச ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: பார்வோனின் இருதயம் அழுத்தமாயிருக்கிறது; சனத்தை விடமாட்டோமென்கிறான்.

ஐடு காலமே பார்வோனண்டைக்குப் போ; இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; நீ அவனுக்கு எதிரே நதியின் கரையிலே நின்று, சர்ப்பமாய் மாறி இருந்த கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு,

ஐசு அவனோடே சொல்லவேண்டியது: எபிரேயருடைய பராபரனுடைய கர்த்தர் என்னை உம்மண்டைக்கு அனுப்பி, நமது சனத்தை வனாந்தரத்திலே நமக்கு ஆராதனைசெய்யும்படிக்குப் போகவிடு என்று சொல்லச்சொல்லியும், இதோ இதுவரைக்கும் கேளாதே போனீர்.

ஐள இதோ என் கையிலிருக்கிற கோலினாலே நான் நதியிலிருக்கிற தண்ணீரின்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி,

ஐஅ நதியிலிருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியிலிருக்கிற தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குமட்டல் எடுக்கும்; நாம் கர்த்தர் என்பதை அதினால் அறிவாயென்று கர்த்தர் சொல்லுகிறாரென்று சொல்லென்றார்.

ஐகூ ¶ பிறகு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனுக்கே சொல்லவேண்டியதேதெனில், உன் கோலை நீட்டி

Digitized by Google

தக்கொண்டு, உன்-கையை எகிப்தியரின் தண்ணீர்களாகிய அவர்கள் நதிகளின்மேலும் அவர்கள் ஆறுகளின்மேலும் அவர்கள் குளங்களின்மேலும் தண்ணீர் சேர்ந்திருக்கிற அவர்களுடைய எல்லா இடங்களின்மேலும் அவைகள் இரத்தமாகும்படிக்கு நீட்டு; அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மரப்பாத்திரங்களிலும் கல்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்குமென்று சொல்லென்றார்.

உ மோசேயும் ஆரோனும் கர்த்தர் கற்பித்தபடி செய்தார்கள்; இவன் பார்வோனுடைய கண்களுக்கும் அவன் ஊழியக்காரரின் கண்களுக்கும் முன்பாகக் கோலை ஓங்கி, நதியில் இருக்கிற தண்ணீரை அடித்தான்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று.

உ நதியில் இருந்த மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியிலிருக்கிற தண்ணீரைக்குடிக்க எகிப்தியருக்குக் கூடாதேபோயிற்று; எகிப்துதேசமெங்கும் இரத்தம் இருந்தது.

உ எகிப்தின் சான்றிரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்தார்கள்; ஆனதுகொண்டு கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவர்களைக் கேளாதேபோனான்.

உ பார்வோன் திரும்பிக்கொண்டு தன் வீட்டிற்குள் பிரவேசித்து, தன் மனதை அதின்மேலும் வைக்காதேபோனான்.

உ தண்ணீர் குடிக்க எகிப்தியரெல்லாரும் நதியைச்சுற்றி ஊற்றுவெட்டினார்கள்; ஏனெனில் நதியின் தண்ணீரைக் குடிக்க அவர்களுக்குக் கூடாதிருந்தது.

உ கர்த்தர் நதியை அடித்து ஏழுநாள் நிறைவேறிற்று.

௮. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையிலே உள்பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், நமது சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

உ நீ அதை விடமாட்டேன் என்றாயானால், இதோ நாம் உன் எல்லையை எல்லாம் தவளைகளாலே வாதிப்போம்.

உ நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் ஏறி, உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும் உன் மஞ்சத்தின்மேலும் உன் ஊழியக்காரர் வீடுகளிலும் உன் சனத்திற்குள்ளும் அப்பம்சுடுகிற உன் அடுப்புகளிலும் மாப்பிசைகிற உன் தொட்டிகளிலும் வரும்.

உ அந்தத் தவளைகள் உன்மேலும், உன் சனத்தின்மேலும், உன்னுடைய எல்லா ஊழியக்காரர்மேலும் ஏறுமென்றிருந்தார் என்று சொல்லென்றார்.

உ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ ஆரோனே டே சொல்லவேண்டியதேதெனில், நீ உன் கோலோடே உன்னுடைய கையை நதிகளின்மேலும் ஆறுகளின்மேலும் குளங்களின்மேலும் நீட்டி, எகிப்து தேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணென்று சொல்லென்றார்.

உ அப்படியே ஆரோன் தன் கையை எகிப்தினுடைய தண்ணீர்களின்மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் ஏறிவந்து, எகிப்துதேசத்தை மூடின.

உ சான்றிரிகளும் தங்கள் சூனியங்களினால் அப்படிச் செய்து, எகிப்துதேசத்தின்மேலே தவளைகளை ஏறிவரப்பண்ணினார்கள்.

உ ¶ ஆனால் பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, கர்த்தர் அந்தத் தவளைகளை என்னையும் என் சனத்தையும் விட்டகற்ற அவரை வேண்டிக்கொள்ளுங்கள், கர்த்தருக்குப் பலியிடும்படிக்கு சனத்தை விடுவேனென்றான்.

உ அப்பொழுது மோசே பார்வோனுக்குத் தவளைகள் நதியிலேமாத்திரம் இருப்

Digitized by Google

பதற்கு, அவைகளை உம்மிடத்திலும் உம் முடைய வீட்டிலும் இராதபடிக்கு அழிக்க, நான் உமக்காகவும் உம்முடைய ஊழியக் காரருக்காகவும் உம்முடைய சனத்திற்கா கவும் எப்பொழுது விண்ணப்பம்பண்ண வேண்டும் என்பதை எனக்குக் குறிக்கும் மேன்மை உமக்கே இருக்கட்டும் என்றான்.

ம அவன் நாளை என்றான்; அப்பொழுது இவன் சொன்னதாவது: எங்கள் பராபர னுடைய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது.

ய தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரனை யும் உம்முடைய சனத்தையும்விட்டகன்று நதியிலேமாத்திரம் இருக்குமென்றான்.

ரஉ மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்பட்டார்கள்; பிற்பாடு மோ சே பார்வோனுக்கு வரப்பண்ணின தவளை கள் நிமித்தம் கர்த்தரை நோக்கிக் கூப்பிட் டான்.

ரக கர்த்தர் மோசேயின் சொல்படி செய் தார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல் களிலும் இருந்த தவளைகள் செத்துப்போ யிற்று.

ரச அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்த்துப்போட்டார்கள்; அதினால் பூமி நாற்றம் எடுத்தது.

ரஙி இலகுவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் கர்த்தர் சொல்லியிருந்தபடி தன் இருதயத்தைக் கடினப்படுத்தி அவர்களைக் கேளாதே போனான்.

ரசூ அப்பொழுது கர்த்தர் மோசேயோ டே சொன்னதாவது: நீ ஆரோனுடனே உன் கோலை நீட்டி, பூமியின் தூளை அடி; அப்பொழுது அது எகிப்துதேசமெங்கும் பேன்களாய்ப் போமென்று சொல்லென் றார்.

ரள இப்படிச் செய்தார்கள்; ஆரோன் தன் கோலோடே தன் கையை நீட்டி, பூமியின் தூளை அடித்தான், அப்பொழுது எராள மான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன் களிலும் உண்டாயின; எகிப்துதேசமெங் கும் பூமியின் தூளெல்லாம் பேன்களாய்ப் போயின.

ரஎ சாஸ்திரிகளும் தங்கள் சூனியங்க ளாலே பேன்களைப் பிறப்பிக்கும்படிக்கு அப்படிச் செய்தார்கள்; *ஆனால் அவர்க ளுக்குக் கூடாதேபோயிற்று; எராளமான பேன்கள் மனிதரிலும் மிருகசீவன்களிலும் இருந்தன. *உ மோ.எ.ரக, ரஉ: ஆ.எ. கூ, ரக.

ரஞ அப்பொழுது சாஸ்திரிகள் பார்வோ னுடே, இது பராபரனுடைய விரல் என் றார்கள்; ஆனால் கர்த்தர் சொல்லியிருந்த படி பார்வோனுடைய இருதயம் உரம் கொண்டது; அவர்களைக் கேளாதே போ னான்.

ரட அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நாளை அதிகாலமே எ ழுந்திருந்துபோய், பார்வோனுக்கு முன் பாக நில், இதோ தண்ணீரண்டையிலே புறப்பட்டு வருவான்; அவனோடே நீ சொல்லவேண்டியதாவது: கர்த்தர் உரை கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

ரக நீ நம்முடைய சனத்தை விடாயே யானில் இதோ நாம் உன்மேலும் உன் ஊழி யக்காரர்மேலும் உன் சனத்தின்மேலும் உன் வீடுகளின்மேலும் பலவித வண்டுகளை அனுப்புவோம்; எகிப்தியர் வீடுகளும் அ வர்கள் இருக்கிற தேசமும் அந்த வண்டு களாலே நிரம்பிப்போம்.

ரஉ பூமியின் நடுவில் நாமே கர்த்தர் என் பதை நீ அறியத்தக்கதாக, நாம் நம்முடை ய சனமிருக்கிற கோசேன் சீமையை அந் நாளிலே அங்கே வண்டுச்சாதிகள் வராத படிக்கு விசேஷித்ததாக்கி,

ரங நம்முடைய சனத்திற்கும் உன் சனத் திற்கும் வித்தியாசம்பண்ணும் இரட்சிப் பைக் காண்பிப்போம்; நாளை இந்த அடை

பானம் சம்பவிக்கும் என்றுரென்று சொல்லென்றார்.

உச அப்படியே கர்த்தர் செய்தார்; மகாதிரளான வண்டுச் சாதிகள் பார்வோன் வீட்டிலும் அவன் ஊழியக்காரர் வீடுகளிலும் எகிப்துதேசம் அனைத்திலும் வந்தன; வண்டுகளாலே தேசம் கெட்டுப்போயிற்று.

உடு ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து, நீங்கள்போய் உங்கள் பராபரனுக்குத் தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான்.

உக அதற்கு மோசே சொன்னதாவது: இப்படிச் செய்யத்தகாது; ஏனெனில் எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாய் எங்கள் பராபரனுகிய கர்த்தருக்குப் பலியிடுகிறோமே; இதோ எகிப்தியர் அருவருக்கிற பிரகாரமாக, நாங்கள் அவர்கள் கண்களுக்கு முன்பர்கப் பலியிட்டால் எங்களைக் கல் எறியார்களோ?

உஎ *எங்கள் பராபரனுகிய கர்த்தர் எங்களுக்குச்சொன்னபடி, நாங்கள் மூன்றுநான் பயணம் வனாந்தரத்திலே போய் அவருக்குப் பலியிடுவோம் என்றான். *உ மோ. உ. 1 அ.

உஅ அப்பொழுது பார்வோன், நீங்கள் உங்கள் பராபரனுகிய கர்த்தருக்கு வனாந்தரத்திலே பலியிடும்படிக்கு, நான் உங்களை விடுவேன்; நீங்கள் அதிதூரமாய்மாத்திரம் போகாமல், எனக்காக வேண்டுதல்செய்யுங்கள் என்றான்.

உக மோசே சொன்னதாவது: இதோ நான் உம்மைவிட்டுப் புறப்பட்டபின், கர்த்தர் நானே வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவர் ஊழியக்காரரையும் அவர் சனத்தையும் விட்டகற்ற, நான் அவனை வேண்டிக்கொள்ளுவேன்; ஆனால் சனத்தைக் கர்த்தருக்குப் பலியிட விடாதபினாலே, பார்வோன் இனி வஞ்சனைமாத்திரம் பண்ணிக்கொண்டிராராக என்றான்.

உஎ ¶ மோசே பார்வோனைவிட்டுப் புறப்பட்டுக் கர்த்தரை வேண்டிக்கொண்டான்.

உக அப்பொழுது கர்த்தர் மோசேயின் சொல்படி செய்து, வண்டுச்சாதிகளைப் பார்வோனையும் அவன் ஊழியக்காரரையும் அவன் சனத்தையும் விட்டகற்றினார்; ஒன்றுகிலும் மீந்திருந்ததில்லை.

உஉ பார்வோனோவென்றால் அந்த முறையும் தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, சனத்தை விடாதேபோனான்.

கூ. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசித்து அவனோடே சொல்லவேண்டியது, எபிரேயருடைய பராபரனுகிய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனைசெய்யும்படிக்கு விடு.

உ ஏனெனில் நீ அவர்களை விடமாட்டேனென்று இன்னம் அவர்களை நிறுத்திவைத்தால்,

ங இதோ கர்த்தருடைய கை வெளியிலிருக்கிற உன் மந்தையாகிய குதிரைகளின்மேலும் கழுதைகளின்மேலும் ஒட்டகங்களின்மேலும் ஆடுமாடுகளின்மேலும் மகாகனமான பெருவாரிக்காய்ச்சல் உண்டாகவந்திருக்கும்.

ச கர்த்தர் இஸ்ரவேலரின் மந்தைக்கும் எகிப்தியரின் மந்தைக்கும் விசேஷித்த வித்தியாசமும்பண்ணுவார்; இஸ்ரவேல் புத்திரரின் சகல மந்தையிலும் ஒன்றும் சாவதில்லை என்றார்.

ஞ நாளைக்குக் கர்த்தர் இந்தக் காரியத்தைத் தேசத்திலே செய்வாரென்றும் கர்த்தர் காலத்தைக்குறித்தாரென்றும் சொல்லென்றார்.

ஃ மறுநாளிலே கர்த்தர் இக்காரியத்தைச் செய்தார்; எகிப்தியருடைய எல்லாவிதமுமான மந்தை செத்துப்போயிற்று; ஆனால் இஸ்ரவேல் புத்திரரின் மந்தையில் ஒன்றுகிலும் செத்ததில்லை.

எ பார்வோன் விசாரித்தனுப்பினான்; இதோ இஸ்ரவேலரின் மந்தையில் ஒன்று

Digitized by Google

கிலும் சாவ இல்லே; பார்வோனுடைய இருதயமோவென்றால் கடினப்பட்டது; அவன் சனத்தை விட்டநில்லே.

அ அப்பொழுது கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது: உங்கள் கைப்பிடிகள் நிறைய அடுப்பின் சீறு அள்ளிக்கொள்ளுங்கள்; அதை மோசே பார்வோனுடைய கண்களுக்கு முன்பாக வானத்திற்கு நேராக இறைக்கக்கடவன்.

கூ அப்பொழுது அது எகிப்துதேசம் மீதெங்கும் தூசியாகி, எகிப்து தேசமெங்கும் மனிதரிலும் மிருகசீவன்களிலும் கொப்புளங்களை எழும்பப்பண்ணுகிற எரிபந்தமாய்ப் போம் என்றார்.

ம அப்படியே அவர்கள் அடுப்பின் சீறு அள்ளிக்கொண்டு, பார்வோனுக்கு முன்பாக வந்து நின்றார்கள்; மோசே அதை வானத்திற்கு நேராக இறைத்தான்; அப்பொழுது மனிதரிலும் மிருகசீவன்களிலும் கொப்புளங்களை எழும்பப்பண்ணுகிற எரிபந்தம் உண்டாயிற்று.

மக அந்த எரிபந்தத்தினிமித்தம் சான்றிரிகளும் மோசேக்குமுன்பாக நிற்கக்கூடாதிருந்தது; ஏனெனில் அந்த எரிபந்தம் சான்றிரிகளிலும் எல்லா எகிப்தியரிலும் உண்டாயிருந்தது.

மஉ ஆனால் கர்த்தர் மோசேயோடே சொல்லியிருந்தபடியே, கர்த்தர் பார்வோனின் இருதயத்தை உரம்கொள்ளப்பண்ணினார்; அவர்களைக் கேளாதேபோனான்.

மந ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ அதிகாலமே எழுந்திருந்து போய், பார்வோனுக்குமுன்பாக நின்று, அவனோடே சொல்லவேண்டியது, எபிரேயருடைய பராபரனாகிய கர்த்தர் உனக்கிறதேதெனில், நம்முடைய சனத்தை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு விடு.

மச ஏனென்றால் பூமி எங்கும் நம்மைப்போல வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இந்தமுறை நாம் நம்முடைய வாதைகளை எல்லாம் உன் இருதயத்திலும் உன் ஊழியக்காரரிலும் உன் சனத்திலும் போகவிடுவோம்.

மடு ஏனெனில் அப்பொழுதே நாம் நம்முடைய கையை நீட்டி, நீ பூமியில் இராமல் அற்றுப்போகும்படிக்கு, உன்னையும் உன் சனத்தையும் பெருவாரிக்காய்ச்சலால் வாதிப்போம்.

மசு ¶ ஆனால் *நம்முடைய வல்லமையை உனக்குக் காண்பிக்கிறதற்கும் நம்முடைய நாமம் பூமி எங்கும் பிரஸ்தாபமாகிறதற்குமே உன்னை நிறுத்தினோம். *உரோ. கூ. மா.

மஎ இன்னம் நீ நமது சனத்தை விடாதபடிக்கு அதற்கு விரோதமாய் உன்னை உயர்த்துகிறாயோ?

மஅ இதோ எகிப்து அஸ்திவாரப்பட்ட நாள் முதல்கொண்டு இற்றைவரைக்கும் அதிலே வராதிருக்கிற மகா கனமான கல்மழையை நாம் நாளை இந்நேரத்திலே வருவிக்கப்பண்ணுவோம்.

மகூ இப்பொழுதும் நீ அனுப்பி, உன் மந்தையையும் வெளியில் உனக்கிருக்கிறயாவையும் சேர்த்துக்கொள்; வீட்டிலே சேர்த்துக்கொள்ளப்படாமல் வெளியிலே அகப்படப்போகிற எல்லா மனிதசீவனும் மிருகசீவனும் அந்தக் கல்மழை அவைகள் மேல் இறங்குவதினாலே செத்துப்போம் என்றாரென்று சொல்லென்றார்.

உம பார்வோனுடைய ஊழியக்காரரில் எவன் கர்த்தருடைய வார்த்தைக்கு பயப்பட்டானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மந்தையையும் வீடுகளுக்கு ஓடிவரப்பண்ணினான்.

உக ஆனால் எவன் கர்த்தருடைய வார்த்தையைத் தன் மனதிலே வைக்காதேபோனானோ, அவன் தன் வேலைக்காரரையும் தன் மந்தையையும் வெளியிலே வைத்துவிட்டான்.

உஉ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, எகிப்துதேசமெங்கும் மனிதர்மேலும் மிருகசீவன்கள்மேலும் எகிப்துதே

சத்திலிருக்கிற சகலமான பயிர்வகைகள் மேலும் கல்மழை வர, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டு என்றார்.

உக அப்படியே மோசே தன் கோலை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது கெருப்பு தனையில் இறங்கி ஓடத்தக்கதாகக் கர்த்தர் இடிமுழக்கங்களையும் கல்மழையையும் கட்டளையிட்டு; எகிப்துதேசத்தின்மேல் கல்மழையை வருஷிக்கப் பண்ணினார்.

உச கல்மழையும் கல்மழையின் நடுவிலே கலந்த கெருப்பும் மிகக்கொடியதாயிருந்தது; எகிப்துதேசம் குடி எறினதுமுதல் கொண்டு அதிலெங்கும் அப்படிக்கொத்தது உண்டானதில்லை.

உஎ எகிப்துதேசமெங்கும் மனிதனைத் தவக்கி மிருகசீவன்கள்மட்டும், எவை எவை வெளியிலே இருந்தவைகளோ அவைகளை எல்லாம் அந்தக் கல்மழை அடித்துவிட்டது; அது வெளியின் பயிர்வகைகளை எல்லாம் அடித்து, வெளியின் செடிகளை எல்லாம் முறித்துவிட்டது.

உஅ இஸ்ரவேல் புத்திரர் இருந்த கோசேன் பூமியிலேமாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது.

உஆ ¶ அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்தனுப்பி, அவர்களோடே சொன்னதாவது: "இந்தமுறை பாவம்செய்தேன்; கர்த்தர் நீதியுள்ளவர், நானும் என் சனமுமோவென்றால் தன்மார்க்காயிருக்கிறோம். "உ மோ. ய. யஉ, யஎ.

உஇ பரமபரனுடைய இடிமுழக்கங்களும் கல்மழையும் இராதபடிக்கு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; இனிப் போதும், நீங்கள் இனி இங்கே தரித்திராதபடிக்கு உங்களை விடுவேனென்றான்.

உஈ மோசே அவனோடே சொன்னதாவது: நான் பட்டணத்திலிருந்து புறப்பட்டபிற்பாடு, நான் என் உள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரிப்பேன்; அப்பொழுது பூமி கர்த்தருடையதென்பதை நீர் அறியும்படிக்கு, இடிமுழக்கங்கள் ஓய்ந்து கல்மழை இனி இராது.

உஉ ஆனால் நீரும் உம்முடைய ஊழியக்காரரும் இன்னம் பராபரனுடைய கர்த்தருக்குமுன்பாகப் பயப்படுவதில்லை என்கிறதை அறிவேனென்றான்.

உஊ ¶ அப்படியே சணலும் வால்கோதுமைப் பயிரும் அழிக்கப்பட்டுப்போயின; ஏனெனில் வால்கோதுமை கதிர்ப்பயிரும் சணல் தாள்பயிருமாயிருந்தன.

உஎ ஆனால் கோதுமையும் கம்பும் அழிக்கப்படவில்லை; ஏனென்றால் அவைகள் இன்னம் வளராதிருந்தன.

உஏ ¶ மோசே பார்வோனைவிட்டுப் பட்டணத்திலிருந்து புறப்பட்டு, தன்னுள்ளங்கைகளைக் கர்த்தருக்கு நேராக விரித்தான்; அப்பொழுது இடிமுழக்கங்களும் கல்மழையும் ஓய்ந்து, மழை தனையில் இறங்காதேபோயிற்று.

உஐ மழையும் கல்மழையும் இடிமுழக்கங்களும் ஓய்ந்துபோயினவென்று பார்வோன் கண்டபொழுதோவெனில், அவன் பாவம்செய்யத் தொடர்ந்து, தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான்; அவனும் அவன் ஊழியக்காரரும்தானே.

உடு கர்த்தர் மோசேயைக்கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் உரம்கொண்டது; அவன் இஸ்ரவேல் புத்திரரை விடாதே போனான்.

ய. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ பார்வோனண்டையில் பிரவேசி; ஏனெனில் அவர்கள் நடுவே நாம் இந்த நம்முடைய அடையாளங்களைச் செய்யும்படிக்கும்,

உ நாம் எகிப்திலே நடப்பித்ததையும் நாம் அவர்களுக்குள் செய்த நம்முடைய அடையாளங்களையும் நீ உன் பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும் உன் பிள்ளைகளுடைய பிள்ளைகளின் செவிகளுக்குமுன்பாகவும்

Digitized by Google

விவரிக்கும்படிக்கும், நாமே கர்த்தரென்ப தை நீங்கள் அறியும்படிக்கும், நாம் அவன் இருதயத்தையும் அவன் ஊழியக்காரரின் இருதயத்தையும் கடினப்படுத்தினேமென் றார்.

ஈ ¶ அப்படியே மோசேயும் ஆரோனும் பார்வோனண்டையில் பிரவேசித்து, அவ னோடே சொன்னதாவது: எபிரேயருடைய பராபரனுடைய கர்த்தர் உரைக்கிறதேதெனில், நமக்குமுன்பாக நீ உன்னைத் தாழ்த்த எத்தமட்டும் மனதில்லாதேபோகிறாய்? நம துசனத்தை நமக்கு ஆராதனை செய்யும்ப டிக்கு விடு.

உ நீ நமது சனத்தை விடமாட்டேன் என் றாயேயானில், இதோ நாம் நாளை உன் எல் லையிலே வெட்டுக்கினிகளை வரப்பண்ணு வோம்.

ஊ அவைகள் பூமியின் முகத்தைத் தனை யைக் காணக்கூடாதபடிக்கு மூடி, கல்ம ழைக்குத் தப்பி உங்களுக்கு மீதியாக வைக் கப்பட்டதைப் பட்சித்து, வெளியிலே உங் களுக்குத் துளிர்க்கிற செடிகளை எல்லாம் தின்றுவிடும்.

எ அவைகளால் உன் வீடுகளும் உன்னு டைய எல்லா ஊழியக்காரரின் வீடுகளும் எல்லா எகிப்தியரின் வீடுகளும் நிரம்பும்; உன் பிதாக்களும் உன் பிதாக்களின் பிதாக் களும் தாங்கள் தேசத்திலிருந்த நாள்துவக் கி இந்நாள்வரைக்கும் அப்படிக் கண்டதில் லை என்றாரென்று சொல்லி, திரும்பிக்கொ ண்டு பார்வோனைவிட்டுப் புறப்பட்டான்.

ஏ ¶ அப்பொழுது பார்வோனுடைய ஊழி யக்காரர் அவனோடே சொன்னது: எத்தம ட்டும் இவன் நமக்குக் கண்ணியாயிருக்க வேண்டும்? அந்த மனிதரைத் தங்கள் பரா பரனுடைய கர்த்தருக்கு ஆராதனைசெய்யும்ப டிக்கு விடும்; எகிப்து அழிந்துபோயிற் றென்று இன்னம் அறியீரோ என்றார்கள்.

ஐ அப்பொழுது மோசேயும் ஆரோனும் பார்வோனண்டைக்குத் திரும்ப அழைக் கப்பட்டார்கள்; அவன் அவர்களுடனே, நீங்கள் போய் உங்கள் பராபரனுடைய கர்த்த ருக்கு ஆராதனை செய்யுங்களென்று சொல் லி, போகிறவர்கள் யார், எவர்கள், என்று கேட்டான்.

ஒ மோசே சொன்னதாவது: எங்கள் இளை ஞரோடும் எங்கள் முதிர்வயதுள்ளவர்க ளோடும் எங்கள் குமாரரோடும் எங்கள் குமாரத்திகளோடும் எங்கள் ஆடுகளோடும் எங்கள் மாடுகளோடும்கூடப் போவோம்; ஏனெனில் எங்களுக்குக் கர்த்தரின் பண் டிகை உண்டாயிருக்குமென்றான்.

ஓ அப்பொழுது அவன் அவர்களோடே சொன்னதாவது: நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் எப்படி விடுவேனே, அப் படிக் கர்த்தர் உங்களோடிருப்பாராக; உங் கள் முகத்திற்குமுன்பாகப் பொல்லாப்பு இருக்கிறதென்று பாருங்கள்.

ஔ அப்படி அல்ல, புருஷராகிய நீங்கள் போய், கர்த்தருக்கு ஆராதனைசெய்யுங்கள்; ஏனெனில் நீங்கள் தேடினது இதுதானென் று அவன் சொன்னபிற்பாடு அவர்கள் பார் வோன் முகத்தைவிட்டுத் துரத்தப்பட்டார் கள்.

ஔ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுட னே, வெட்டுக்கினிகள் எகிப்துதேசத்தின் மேல் ஏறி, கல்மழை பின்வைத்த பூமியின் சகல பயிர்வகைகளை எல்லாம் தின்னும்ப டிக்கு அவைகளுக்காக, உன் கையை எகிப் து தேசத்தின்மேல் நீட்டென்றார்.

ஃ அப்படியே மோசே தன் கோலை எகிப் ததேசத்தின்மேல் நீட்டினான்; அப்பொழு து கர்த்தர் அன்று பகல் முழுவதும் அன்று இராமுழுவதும் கீழ்க்காற்றைத் தேசத்தின் மேல் வரப்பண்ணினார்; விடியற்காலமான தபொழுது, கீழ்க்காற்று வெட்டுக்கினிக ளைக் கொண்டுவந்தது.

ஓச வெட்டுக்கினிகள் எகிப்துதேசமெங் கும் ஏறி, எகிப்தின் எல்லையிலெல்லாம் மகா ஏராளமாய் இறங்கின; அதற்குமுன் அப்படிக்கொத்த வெட்டுக்கினிகள் இருந்த தமில்லை; அதற்குப்பிறகு இருப்பதமில்லை.

Digitized by Google

யடி அலைகள் பூமியின் முகத்தையெல்லாம் மூடின; தேசம் அலைகளால் அந்தகாரப்பட்டது; அலைகள் கல்மழை பின்வைத்த நிலத்தின் எல்லாப் பயிர்வகைகளையும் மரங்களின் எல்லாப் பலனையும் நின்றுவிட்டன; எகிப்துதேசமெங்கும் மரங்களிலாயினும் நிலத்தின் பயிர்வகைகளிலெங்கிலும் ஒரு பச்சிலையும் மீதியானதில்லை.

யக ¶ *அப்பொழுது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பிக்கத் தினித்து, உங்கள் பராபரனுகிய கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவம்செய்தேன். *உ மோ. அ. அ, உடு: கூ. உஎ.

யஎ இப்பொழுதும் இந்த முறைமாத்திரம் நீ என் பாவத்தை மன்னி; உங்கள் பராபரனுகிய கர்த்தர் இந்தச் சாவைமாத்திரம் என்னைவிட்டகற்ற அவரை விண்ணப்பம்பண்ணுங்களென்றான்.

யஅ அவன் பார்வோனைவிட்டுப் புறப்பட்டு, கர்த்தரை விண்ணப்பம்பண்ணினான்.

யக அப்பொழுது கர்த்தர் மகா பலத்த மேல்காற்றை நிரும்ப வரவிட்டார்; அது வெட்டுக்கிளிகளை எடுத்து ாணல்சமுத்திரத்திலே போட்டது; எகிப்தின் எல்லையிலெல்லாம் அலைகளில் ஒரு வெட்டுக்கிளியாகிலும் மீதியாயிருந்ததில்லை.

உயி கர்த்தரோவென்றால் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரை விட்டதில்லை.

உக ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, தடவிக்கொண்டிருக்கத்தக்கதான இருள் எகிப்துதேசத்தின்மேல் உண்டாகும்படிக்கு, உன் கையை வானத்திற்கு நேராக நீட்டென்றார்.

உஉ மோசே தன் கையை வானத்திற்கு நேராக நீட்டினான்; அப்பொழுது எகிப்துதேசமெங்கும் மூன்றுநாள்மட்டும் காரிருள் உண்டாயிருந்தது.

உக மூன்றுநாள்மட்டும் ஒருவனை ஒருவர் கண்டதுமில்லை; ஒருவரும் தம்மிடத்தைவிட்டு எழுந்ததுமில்லை; எல்லா இஸ்ரவேல் புத்திரருக்குமோவெனில், அவர்கள் வாசஸ்தலங்களிலே வெளிச்சம் இருந்தது.

உச ¶ அப்பொழுது பார்வோன் மோசேயை அழைப்பித்து, நீங்கள் போய்க்கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்; உங்கள் ஆடுகளும் உங்கள் மாடுகளும்மாத்திரம் நிறுத்தப்படவேண்டும்; உங்கள் குழந்தைகளும் உங்களோடேகூடப் போகலாம் என்றான்.

உடி மோசே சொன்னதாவது: நாங்கள் எங்கள் பராபரனுகிய கர்த்தருக்குப் படைக்கும் பலிகளையும் தகனபலிகளையும் நீர் எங்கள் கையிலே கொடுக்கவேண்டும்.

உசு எங்கள் மந்தையும் எங்களோடேகூடப் போகவேண்டும்; ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை; ஏனெனில் எங்கள் பராபரனுகிய கர்த்தருக்கு ஆராதனை செய்கிறதற்கு அதிலே எடுப்போம்; இன்னதினாலே கர்த்தருக்கு ஆராதனைசெய்வோம் என்கிறதை நாங்கள் அங்கே வரும்மட்டும் அறியோம் என்றான்.

உஎ ¶ ஆனால் கர்த்தர் பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவர் களைவிட மனதில்லாதேபோனான்.

உஅ பார்வோன் அவனுக்கு, என்னைவிட்டு அப்பாலே போ; நீ இனி என்முகத்தைக் காணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு; ஏனென்றால் நீ என் முகத்தைக் காணும் நாளிலே சாவாயென்றான்.

உக அப்பொழுது மோசே, நீர் சொன்னபடி இனி உம்முடைய முகத்தை நான் காண்பதில்லை என்றான்.

யக. அதிகாரம்.

அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இன்னம் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணுவோம்; அதற்குப்பிறகு உங்களை இவ்விடத்திலிருந்து போகவிடுவான், சமூலமாய்ப் போகவிடுவதுமல்லாமல், உங்களை இவ்விடத்திலிருந்து துரத்தவே துரத்துவான்.

Digitized by Google

உ *இப்பொழுதும் ஒவ்வொருவன் தன் அயலான் கையிலும் ஒவ்வொருத்தி தன் அயலான் கையிலும் வெள்ளி உடைமைகளையும் பொன் உடைமைகளையும் கேட்கவேண்டுமென்று சனத்தின் செவிகளுக்குமுன்பாகச் சொல்லென்றார். *உ மோ. கூ. உக, உஉ.

கூ அதற்காகக் கர்த்தர் சனத்திற்கு எகிப்தியருடைய கண்களுக்குமுன்பாகத் தயவு கிடைக்கப்பண்ணினார்; மோசே என்ற புருஷனும் எகிப்துதேசத்திலே பார்வோனுடைய ஊழியக்காரரின் பார்வைக்கும் சனத்தின் பார்வைக்கும் மிகப் பெரியவனாயிருந்தான்.

ச அப்படியே மோசே சொன்னதாவது: கர்த்தர் உரைக்கிறதேதெனில், பாதி இராத்திரியிலே நாம் எகிப்தின் நடுவாகப் புறப்பட்டுப்போவோம்.

2 அங்கே வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக முறுமுறுத்து, 3 அவர்களோடே சொன்னதாவது: "நாங்கள் இறைச்சிப் பானைகளண்டையிலே உட்கார்ந்து அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்ட எகிப்துதேசத்திலே, கர்த்தரின் கையிலுலே செத்துப்போனோமானால் தாவீனே; ஏனெனில் இந்தக் கூட்டத்தை எல்லாம் பட்டினியிலுலே கொன்றுபோட எங்களைப் புறப்படப்பண்ணி, இந்த வனாந்தரத்திலே அழைத்துவந்தீர்களென்றார்கள். *ச மோ. ய க. ச.

4 ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இதோ, நாம் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவோம், சனம் நமது நியாயப்பிரமாணத்திலே நடக்குமோ இல்லியோ என்று நாம் சோதிக்கும்படிக்கு, அது புறப்பட்டு அன்றன்றுள்ள படியை ஒவ்வொருநாளிலே சேர்க்கக்கடவது.

5 ஆறும் நாளிலோவென்றால், அவர்கள் கொண்டுவருகிறதைச் சேகரம்பண்ணக்கடவார்கள்; அவர்கள் தினம்தினம் சேர்க்கிறதைப்பார்க்கிலும் அப்பொழுது இரண்டத்தனை உண்டாயிருக்குமென்றார்.

6 ¶ அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரெல்லாரோடும் சொன்னதாவது: கர்த்தர் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவரென்பதைச் சாயங்காலத்திலே அறிவீர்கள்.

7 விடியற்காலத்திலே கர்த்தருடைய மகிமையையும் காண்பீர்கள்; ஏனெனில் கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம் என்றார்கள்.

8 பின்னையும் மோசே சொன்னதாவது: கர்த்தர் உங்களுக்குச் சாயங்காலத்திலே நீங்கள் புசிக்கிறதற்கு இறைச்சியையும், விடியற்காலத்திலே நீங்கள் திர்ப்தியடையும்படிக்கு அப்பத்தையும் கொடுக்கையில் அதைக் காண்பீர்கள்; ஏனெனில் கர்த்தருக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுத்த உங்கள் முறுமுறுப்புகளை அவர் கேட்டார்; நாங்கள் எம்மாத்திரம்? உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கல்ல, கர்த்தருக்கே விரோதமாயிருக்கிறதென்றான்.

9 பிற்பாடு மோசே ஆரோனுடனே, கர்த்தருக்கு முன்பாகச் சேருங்கள்; ஏனெனில்

Digitised by Google

உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டாரென்று இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாம் சொல்லென்றான்.

ய ¶ ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் சபைக்கெல்லாம் இதைச் சொல்லுகிறபொழுது, அவர்கள் வனாந்தர நிசையாகத் திரும்பிப் பார்த்தார்கள்; அப்பொழுது இதோ, கர்த்தருடைய மகிமை மேகத்திலே காணப்பட்டது.

யக கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

யஉ இஸ்ரவேல் புத்திரரின் முறுமுறுப்புகளைக் கேட்டோம்; நீ அவர்களோடனே பேசி, நீங்கள் சாயங்காலத்திலே இறைச்சியைப் புசித்து, விடியற்காலத்திலே அப்பத்தால் நிர்ப்தியாகி, நாம் உங்கள் பராபரனுமாகிய கர்த்தரென்பதை அறிவீர்களென்று சொல்லென்றார்.

யங ¶ சாயங்காலத்தில் சம்பவித்ததேதென்றால், *காடைகள் வந்தேறிப் பாளயத்தை மூடின; விடியற்காலத்திலோவென்றால், பாளயத்தைச் சுற்றிப் பனிவிழுந்திருந்தது. *சமோ. ய. ங.

யச விழுந்திருந்த பனி எடுபட்டபிற்பாடு, இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான பொடித்தணிக்கைகள் இருந்தன; அவைகள் தரையின்மேல் உறைந்த பனியத்தனை பொடியாய்க் கிடந்தன.

யஞ இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, ஒருவருக்கொருவர் அது மன்னாவென்றார்கள்; ஏனெனில் அது இன்னதென்று அறியாதிருந்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களோடே சொன்னதாவது: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்.

யசு கர்த்தர் கற்பித்த காரியம் ஏதென்றால், அவனவன் புசிக்கத்தகும்மட்டும் அதிலெடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்கள் ஆத்துமாக்களுடைய இலக்கத்தின்படியே, அவனவன் தன்தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக ஒவ்வொரு தலைக்கு ஒவ்வொரு நாழிவீழுக்காடு எடுத்துக் கொள்ளக்கடவீர்களென்றான்.

யஎ இஸ்ரவேல் புத்திரர் அப்படிச் செய்து, சிலர் அநேகமும் சிலர் கொஞ்சமுமாய்ச் சேர்த்தார்கள்.

யஅ பிறகு நாழியிலல் அளந்தார்கள்; *அநேகமாய்ச்சேர்த்தவனுக்கு அதிகமானதில்லை; கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்கு குறைச்சலானதுமில்லை; அவரவர் தாங்கள் புசிக்கத்தகும்மட்டும் எடுத்துக்கொண்டார்கள். *2 கொரி. அ. ய.

யக மோசே அவர்களோடனே, ஒருவனும் அதில் விடியற்காலம்மட்டும் ஒன்றும்வைக்கவேண்டாமென்றான்.

உய ஆனால் மோசேயின் சொல்கேளாமல் சிலர் அதில் விடியற்காலம்மட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள்; அது பூச்சி பிடித்து நாற்றம் எடுத்தது; அவர்கள்மேலே மோசே கடுங்கோபம் அடைந்தான்.

உக அதைக் காலமே அவனவன் புசிக்கத்தகும்மட்டும் சேர்த்தார்கள்; ஏனெனில் வெயில் எறுகிறபொழுது உருகிப்போம்.

உஉ ¶ ஆறும் நாளிலே சம்பவித்ததேதென்றால், அவர்கள் இரண்டத்தனை அப்பம் ஒவ்வொருவனுக்கு இரண்டு இரண்டு நாழியாகச் சேர்த்தார்கள்; அப்பொழுது சபையின் தலைவரெல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள்.

உக அவன் இவர்களோடே சொன்னதாவது: கர்த்தர் சொன்னது இதுதானே: நாளைக் கர்த்தருடைய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்ந்திருக்குதல்; நீங்கள் சுடப்போகிறதைச் சுட்டு, சமைக்கப்போகிறதைச் சமைத்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்து வையுங்களென்றான்.

உச மோசே கற்பித்தபடியே அதை மறுநாள்மட்டும் வைத்தார்கள்; அப்பொழுது அது நாறினதுமில்லை; அதிலே பூச்சி பிடித்திருந்ததுமில்லை.

உடி அப்பொழுது மோசே சொன்னதாவது

Digitized by Google

ஏ: அதை இன்றைக்குப் புசியுங்கள்; ஏனெனில் இன்று கர்த்தரின் ஓய்வுநாள்; இன்று நீங்கள் அதை வெளியிலே கண்டுபிடிப்பதில்லை.

உஈ ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம் நாள் ஓய்வுநாளாயிருக்கின்றது; அதிலே அது உண்டாயிராதென்றான்.

உஉ ஏழாம் நாளிலே சம்பவித்ததேதெனில்; சனத்திலே சிலர் அதைச் சேர்க்கப் புறப்பட்டார்கள்; ஆனால் கண்டுபிடியாதே போனார்கள்.

உஊ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நம்முடைய கற்பனைகளையும் நம்முடைய நியாயப்பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதே போகிறீர்கள்.

உஎ பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வுநாளைக் கொடுத்தபடியினாலே அவர் உங்களுக்கு ஆறும் நாளிலே இரண்டுநாளுடைய அப்பத்தைக் கொடுக்கிறாரே; ஏழாம் நாளில் ஒருவனும் தன் தானத்திலிருந்து புறப்படாமல், நீங்கள் அவனவன் தன் தன் தானத்தில் இருங்களென்றார்.

உஏ அப்படியே சனம் ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தது.

உக இஸ்ரவேல் வீட்டார் அதற்கு மன்னாவென்று பெயரிட்டார்கள்; *அது கொத்தமல்லி அம்மாத்திரமும் வெண்மையுமாயிருந்தது; அதின் ருசி தேனிட்ட கச்சாயத்தின்கொப்பாயிருந்தது. *சங். மோ. ஙக. எ.

உஉ ¶ மோசே சொன்னதாவது: கர்த்தர் கற்பித்த காரியமேதெனில், நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது, உங்களுக்கு வனாந்தரத்திலே புசிக்கக்கொடுத்த அப்பத்தை உங்கள் தலைமுறைகள் பார்க்கும்படிக்கு, அவர்களுக்காகக் காத்துவைப்பதற்கு அதிலே ஒருஓமி நிரம்ப எடுத்துவை என்பதுதான் என்றான்.

உங பின்னையும் மோசே ஆரோனுடனே, *நீ ஒரு பாத்திரத்தை வாங்கி, அதிலே ஒரு ஓமி மன்னாவைப் போட்டு, அதை உங்கள் தலைமுறைகளுக்காகக் காப்பதற்குக் கர்த்தருக்குமுன்பாக வை என்றான். *எபி. கூ. ச.

ஊச கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அது காக்கப்படும்படிக்கு, ஆரோன் அதைச் சாட்சிக்குமுன்பாக வைத்தான்.

ஊடு *இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்திற்குவரும்மட்டும் நாற்பது வருஷம் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான்தேசத்தின் எல்லையில் வரும்மட்டாகத்தானே மன்னாவைப் புசித்தார்கள். *யோசு. இ. ஙஉ.

ஊசு ஒருஓமியோவென்றால், மரக்காலிலே பத்தில் ஒரு பங்காயிருக்கின்றது.

ஙஎ. அதிகாரம்.

பிற்பாடு இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் சீன்வனாந்தரத்திலிருந்து பயணம் புறப்பட்டு, கர்த்தருடைய கட்டளையின்படியே பண்ணும் தங்கள் பயணங்களில் இரவீதிமிலே வந்து பாளயமிறங்கினார்கள்; அங்கே சனம் குடிக்கத் தண்ணீர் இல்லாதிருந்தது.

உ அப்பொழுது சனம் மோசேயோடே வாதுபண்ணி, நாங்கள் குடிக்கிறதற்கு எங்களுக்குத் தண்ணீர் தாருங்களென்றார்கள்; மோசேயோவென்றால் அவர்களுடனே, என்னோடே ஏன் வாதுபண்ணுகிறீர்கள்? கர்த்தரை ஏன் பரிட்சைபார்க்கிறீர்களென்றான்.

ஊ ஆனால் சனம் அவ்விடத்திலே தண்ணீர்த் தவனமாயிருந்தபடியினாலே, சனம் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்து, நீர் எங்களையும் எங்கள் பிள்ளைகளையும் எங்கள் ஆடுமாடுகளையும் தண்ணீர்த் தவனத்தினாலே கொன்றுபோட எங்களை எகிப்திலிருந்து வந்து ஏறப்பண்ணினதேதென்றார்கள்.

ச ¶ மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, இந்தச் சனத்திற்கென்னசெய்வேன்? *அவர்கள் என்னைக் கல்லெறியச் சற்றுத்தப்புமென்றான். *ச மோ. ஙச. ங.

6 அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சனத்திற்குமுன்பாக டெந்து, இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டி, நீ ஆற்றை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டுபோ.

7 இதோ, நாம் அங்கே ஓரேபிலே உனக்குமுன்பாகக் கல்மலையின்மேல் நிற்போம்; அங்கே கல்மலையை அடிப்பாயாக; அப்பொழுது சனம் குடிக்க, அதிலிருந்து தண்ணீர் புறப்படுமென்றார்; இப்படியே மோசே இஸ்ரவேலருடைய மூப்பரின் கண்களுக்குமுன்பாகச் செய்தான்.

8 இஸ்ரவேல் புத்திரருடையவாதின்நிமித்தமும், கர்த்தர் எங்கள் நடுவில் இருக்கிறாரோ இல்லையோ என்று, அவர்கள் கர்த்தனாப் பரிட்சைபார்த்ததின்நிமித்தமும், அவன் அந்த ஸ்தலத்திற்கு *மாசா என்றும் மெரிபாவென்றும் பெயரிட்டான். *சங். 95. 8, 9.

9 ¶ ஆமலேக்கியர் வந்து இரவீதிமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்.

10 அப்பொழுது மோசே யோசுவாவுடனே, நீ எமக்கு மனிதரைத் தெரிந்துகொண்டு புறப்பட்டு, ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணு; நாளைக்கு நான் மேட்டினுடைய சிகரத்தின்மேலே பராபரனுடைய கோலை என் கையில் பிடித்துக்கொண்டு நிற்பேன் என்றான்.

11 மோசே தனக்குச் சொன்னபடியே யோசுவா ஆமலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படிக்குச் செய்தான்; ஆனால் மோசேயும், ஆரோனும், ஊரும் மேட்டினுடைய சிகரத்தின்மேல் ஏறினார்கள்.

12 அப்பொழுது சம்பவித்ததேதென்றால், மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில் இஸ்ரவேல் மேல்கொண்டது; ஆனால் அவன் தன் கையைத் தாழவிடுகையில், ஆமலேக் மேல்கொண்டது.

13 மோசேயின் கைகளோவென்றால் பாரமாயின; ஆகையால் ஒரு கல்லைக் கொண்டு வந்து அவன் கீழே வைத்தார்கள்; அதின் மேல் உட்கார்ந்தான்; ஆரோனும் ஊரு மோவென்னில் ஒருவன் இந்தப்பக்கமும் ஒருவன் அந்தப்பக்கமுமாயிருந்து, அவன் கைகளைத் தாங்கினார்கள்; இந்த அடைவாய் அவன் கைகள் சூரியன் அஸ்தமிக்கும்மட்டும் ஒரு நேராயிருந்தன.

14 அப்படியே யோசுவா ஆமலேக்கையும் அவன் சனத்தையும் பட்டயத்தின்கருக்கினாலே முறிய அடித்தான்.

15 *பிற்பாடு கர்த்தர் மோசேயுடனே, நீ இதை நினைவுகூருதலுக்காக ஒரு புத்தகத்தில் எழுதி, யோசுவாவின் செவிகளுக்கு ஒப்புவி; ஏனெனில் ஆமலேக்கை வானத்தின்கீழிராதபடிக்கு நாசம்பண்ணவே பண்ணுவோமென்றார். *உ மோ. உடு. 14, 15 ✠ சாமு. 15. 2.

16 மோசே ஒரு பீடத்தைக்கட்டி, அதற்குக் கர்த்தர் என்னுடைய கொடியென்று பேரிட்டு,

17 ஆமலேக்கின் கை கர்த்தருடைய ஆசனத்திற்கு விரோதமானபடியினாலே, கர்த்தரின் யுத்தம் தலைமுறை தலைமுறையாக அமலேக்குக்கு விரோதமாக இருக்குமென்றான்.

18வது அதிகாரம்.

பராபரன் மோசேக்கும் தமது சனமாகிய இஸ்ரவேலுக்கும் செய்தெல்லாவற்றையும் கர்த்தர் இஸ்ரவேலை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதையும் *மீதியானின் ஆசாரியனாயிருக்கிற மோசேயின் மாமனாகிய எத்திரோ கேட்டபொழுது, *உ. மோ. 3. 1.

2 அவன் *மோசே நிரும்பத் தன்னிடத்தைக்கனுப்பி இருந்த அவன் பெண்சாதியாகிய சிப்போராளையும், *உ மோ. ச. 2ஏ.

3 அவனுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டுபயணப்பட்டான்; *ஒருவன் பேர் கேர்சோன்; ஏனென்றால் அந்நியதேசத்திலே பரதேசியானேனென்றான். *உ மோ. உ. 22.

'ச மற்றவன் பேர் எலியேசர்; ஏனென்
றால் என் பிதாவின் பராபரன் துணையாயி
ருந்து, என்னைப் பார்வோனின் பட்டயத்
திற்குத் தப்புவித்தாரென்றான்.

இ மோசேயின் மாமனாகிய எத்திரோ அவன் குமாரரோடும் அவன் பெண்சாதி யோடும்கூட மோசே பாளயம் போட்டி ருந்த பராபரனுடைய பர்வதம் இருக்கும் வனாந்தரத்திலே அவனண்டையில் வந்து,

ஈ எத்திரோ என்ற உன் மாமனாகிய நா னும் உன் பெண்சாதியும் அவளோடேகூட அவளுடைய இரண்டு குமாரரும் உன் னண்டைக்கு வந்தோமென்று மோசேக் குச் சொல்லி அனுப்பினான்.

உ அப்பொழுது மோசே தன் மாமனுக்கு எதிர்கொண்டு போய், அவனை வணங்கி முத்தம்செய்தான்; ஒருவனா ஒருவர் சுக முண்டோவென்று கேட்டு, கூடாரத்திலே கூட்டிக்கொண்டார்கள்.

ஊ பிற்பாடு மோசே தன் மாமனுக்குக் கர்த்தர் இஸ்ரவேலுக்காகப் பார்வோனுக் கும் எகிப்தியருக்கும் செய்தவை எல்லா வற்றையும் வழியிலே தங்களுக்கு நேரிட்ட எல்லா வருத்தத்தையும் கர்த்தர் தங் களை நீங்கலாக்கி விடுவித்ததையும் விவரித் தான்.

எ கர்த்தர் இஸ்ரவேலை எகிப்தியரின் கைக் குத் தப்புவித்து, அதற்குச் செய்த எல்லா நன்மையின்நிமித்தமும் எத்திரோ சந்தோ ஷப்பட்டுச் சொன்னதாவது:

ஏ உங்களை எகிப்தியரின் கைக்கும் பார் வோனின் கைக்கும் தப்புவித்து, எகிப்தி யருடைய கையின் கீழிருந்த சனத்தை வி டுவித்த கர்த்தர்ஸ்தோத்திரிக்கப்படடவர்.

ஐ கர்த்தர் எல்லாத் தேவர்களையும்பார்க் கப் பெரியவரென்பதை இப்பொழுது அறிவேன்; ஏனெனில் அவர்கள் இடும் புசெய்த காரியத்திலே அவர்களை மேல் கொண்டாரென்று சொல்லி,

ஒ மோசேயின் மாமனாகிய எத்திரோ சர் வாங்கதகனத்தையும் பலிகளையும் பராபர னுக்குக் கொண்டுபோய்ச் செலுத்தினான்; பிற்பாடு ஆரோனும் இஸ்ரவேல் மூப்பர் அனைவரும் மோசேயின் மாமனோடேகூ டப் பராபரனுக்கு முன்பாக அப்பம் புசிக்கவந்தார்கள்.

ஓ ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில், மோசே சனத்தை நியாயம்விசாரிக்க உனக்காந்தான்; சனம் காலமே தவக்கிச் சாயங்காலம்மட்டும் மோசேக்கு முன்பாக நின்றது.

ஔ அவன் சனத்திற்காகச் செய்ததை யெல்லாம் மோசேயின் மாமன் கண்டு, நீ சனத்திற்காகச் செய்கிற இந்தக் காரிய மென்ன? நீ ஒருவனே உனக்காந்திருக்கச் சனமெல்லாம் காலமேதவக்கிச் சாயங் காலம்மட்டும் உனக்குமுன்பாகநிற்பானே னென்றான்.

க அப்பொழுது மோசே தன் மாமனுக் குச் சொன்னது: பராபரனைக் கேட்கச் சனம் என்னண்டைக்கு வரும்.

஖ ஏனெனில் அவர்களுக்கு ஒருகாரியம் இருந்தால் என்னண்டைக்கு வருகிறார் கள்; அப்பொழுது நான் அவனவனுக்கும் அவனவனுக்கடுத்தவனுக்கும் நியாயம்தீர் த்து, பராபரனுடைய சட்டனைகளையும் அவ ருடைய நியாயப்பிரமாணங்களையும் அறி விக்கிறேனென்றான்.

஗ அப்பொழுது மோசேயின் மாமன் அவனைநோக்கி சொன்னதாவது: நீ செய்கிற காரியம் நல்லதல்ல.

஘ நீயும் தொய்யவே தொய்ந்துபோகி றாய்; உன்னோடிருக்கிற இந்தச் சனமும் அப்படித்தான்; ஏனென்றால் அது உனக்கு மிஞ்சின பாரமானகாரியம்; நீ ஒருவனாய் அதைச் செய்யக்கூடாது.

ங இப்பொழுதும் என் சொல்லைக்கேள்; உனக்கு ஒரு ஆலோசனை சொல்லுவேன்; அப்பொழுது பராபரன் உன்னோடுகூட இ ருப்பார்; சனத்திற்காக நீ பராபரனுக்கு முன்பாக இரு; நீ விசேஷங்களைப் பரா பரனண்டைக்குக் கொண்டுபோய்,

Digitized by Google

உய கட்டளைகளையும் நியாயப்பிரமாணங்களையும் அவர்களுக்கு வெளிப்படுத்தி, அவர்கள் நடக்கவேண்டிய வழியையும் அவர்கள் செய்யவேண்டிய கிரியையையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவாயாக.

உக ஆனால் நீ எல்லாச்சனத்திலும் பராபரனுக்குப் பயந்தவர்களும் உண்மையுள்ளவர்களும் பொருளாசையைப் பகைக்கிறவர்களுமான நிறமையுள்ள மனிதரைப் பார்த்து, அவர்களை அவர்கள்மேல் ஆயிரம் பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் வை.

உஉ அவர்கள் சகல காலத்திலும் சனத்தை நியாயம் விசாரித்து, சகல பெரியகாரியத்தையும் உன்னண்டைக்குக் கொண்டுவந்து, சகல சிறிய காரியத்தையும் தாங்கள் தானே தீர்க்கக்கடவர்கள்; இப்படி உன்மேல் இருக்கிற பாரத்தை லகுவாக்கு, அவர்கள் உன்னோடேகூடச் சுமப்பார்களாக.

உக இந்தப்பிரகாரமாக நீ செய்வதும் இப்படிப் பராபரன் உனக்குக் கட்டளையிடுவதும் உண்டானால், நீ தரித்திருக்கக்கூடும்; இந்த எல்லாச் சனமும் சுகமாய்த் தங்களிடத்திற்கு வந்து சேரலாமென்றான்.

உசு ¶ மோசே தன் மாமன் சொல்கேட்டு, அவன் சொன்னபடி எல்லாம் செய்தான்.

உடு மோசே இஸ்ரவேலரிலெல்லாம் நிறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறுபேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப்பேருக்கு அதிபதிகளாகவும் சனத்தின்மேலே தலைவராக்கினான்.

உஊ அவர்கள் சகல காலத்திலும் சனத்தை நியாயம் விசாரிப்பார்கள்; பலத்த காரியத்தை மோசே அண்டைக்குக் கொண்டுவந்து, சிறிய காரியத்தை எல்லாம் தாங்கள்தானே தீர்ப்பார்கள்.

உஎ பிற்பாடு மோசே தன் மாமனை அனுப்பிவிட்டான்; இவன் திரும்பத் தன் தேசத்திற்குப் போய்விட்டான்.

ய்கூ. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்துதேசத்தில் இருந்து புறப்பட்ட மூன்றாம்மாதமானதன்றுதானே சீனாய்வனாந்தரத்திலே வந்தார்கள்.

உ அவர்கள் ரெவீதிமிலிருந்து பயணம் புறப்பட்டு, சீனாய்வனாந்தரத்திலே வந்து. வனாந்தரத்திலே பாளயமிறங்கினார்கள்; அங்கே பர்வதத்திற்கெதிராக இஸ்ரவேல் பாளயம் இறங்கினபொழுது,

ஈ மோசே பராபரனண்டைக்கேறினான்; கர்த்தர் பர்வதத்திலிருந்து அவனைக் கூப்பிட்டுச் சொன்னதாவது: நீ யாக்கோபு வீட்டாருக்குச் சொல்லவும் இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியதேதெனில்,

ச நாம் எகிப்தியருக்குச் செய்ததையும் *நாம் உங்களைக் கழுகுகளுடைய செட்டைகளின்மேலே சுமந்து, உங்களை நம்மண்டையில் சேர்த்ததையும் நீங்கள் கண்டீர்கள். *டீ மோ. ஈஉ. ய்க.

டு இப்பொழுதும் நீங்கள் நமது சத்தத்தைக் கேட்கவே கேட்டு, நமது உடம்படிக்கையைக் கைக்கொண்டால், சகல சனங்களிலும் *நீங்கள் நமக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; ஏனெனில் பூமியெல்லாம் நம்முடையது. *டீ மோ. எ. சு.

சு நீங்கள் நமக்கு *ஆசாரிய இராசாங்கமும் பரிசுத்த சாதியுமாய் இருப்பீர்களென்பது, நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டிய வார்த்தைகளென்றார். *க பே. உ. கூ.

எ ¶ மோசே வந்து சனத்தின் மூப்பரை அழைப்பித்து, கர்த்தர் தனக்குக் கற்பித்த இந்த வார்த்தைகளை எல்லாம் அவர்களுக்கு முன்பாகச் சொன்னான்.

அ அப்பொழுது சனமெல்லாம் ஏகமாய்ப் பிரதியுத்தாரம் கொடுத்து, *கர்த்தர் சொன்னவைகளை எல்லாம் செய்வோமென்றார்

Digitized by Google

கன்; மோசே சனத்தின் வார்த்தைகளை கர்த்தரண்டைக்குத் திரும்பக் கொண்டு போனான். *2 மோ. 24. 3.

9 அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, இதோ, நாம் உன்னோடே சொல்லும் வார்த்தைகளைச் சனம் கேட்டு, உன்னையும் என்றைக்கும் விசுவாசிக்குமபடிக்கு, நாம் மேகத்தின் இருட்டிலே உன்னண்டைக்கு வருவோமென்றார்; ஏனெனில் சனத்தின் வார்த்தைகளை மோசே கர்த்தருக்கு அறிவித்திருந்தான்.

10 பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ சனத்தண்டைக்குப் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தமாக்கு; அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வெளுத்து,

11 மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள்; ஏனென்றால் மூன்றாம் நாளிலே கர்த்தர் எல்லாச் சனத்தின் கண்களுக்குமுன்பாகச் சீனாய்பர்வதத்தின்மேல் இறங்குவார்.

12 நீ சனத்திற்குச் சுற்றிலும் எல்லை குறித்து, *பர்வதத்தில் ஏறாதபடிக்கும், அதின் அடிவாரத்தைத் தொடாதபடிக்கும், எச்சரிக்கையாய் இருங்களென்று சொல்லுவாயாக; ஏனெனில் பர்வதத்தைத் தொடுகிறவனெல்லாம் கொலையுண்ணவே கொலையுண்பான். *எபி. 12. 20.

13 ஒரு கையாளும் அதைத் தொடவேண்டாம்; மிருகமானாலும் மனிதனானும் சரி, அதைத் தொட்டால் உயிரோடே வைக்கப்படாமல் கல்லெறியுண்ணவே எறியுண்டு, அல்லது எய்யவே எய்யுண்டு சாகவேண்டும்; எக்காளம் நெடுந்தொனியாகத் தொனிக்கையிலே அவர்கள் பர்வதத்திலே ஏறக்கடவர்களென்றார்.

14 அப்படியே மோசே பர்வதத்திலிருந்து சனத்தண்டைக்கு இறங்கி, சனத்தைப் பரிசுத்தமாக்கினான்; அவர்கள் தங்கள் வஸ்திரங்களை வெளுத்தார்கள்.

15 அவன் சனத்துடனே, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கள், பெண்சாதியைச் சேராதிருங்களென்றான்.

16 மூன்றாம் நாளிலே விடியற்காலமாகிறபொழுது சம்பவித்ததேதெனில், இடிமுழக்கங்களும் மின்னல்களும் பர்வதத்தின்மேலே கனமேகமும் மகா பலத்த எக்காளசத்தமும் உண்டாயின; பாளயத்திலிருந்த சனமெல்லாம் நடுங்கின.

17 அப்பொழுது மோசே சனத்தைப் பராபரனுக்கு எதிர்கொண்டு போக, பாளயத்திலிருந்து புறப்படப்பண்ணினான்; *அவர்கள் பர்வதத்தின் அடியிலே தாழத்தரித்து நின்றார்கள். *5 மோ. 4. 11.

18 கர்த்தர் சீனாய்பர்வதத்தின்மேல் அக்கினியில் இறங்கினபடியினாலே, அவை எல்லாம் புகைக்காடாய் இருந்தன; அதின் புகை சூளையின் புகையைப்போல எழும்பிற்று; பர்வதமெல்லாம் மிகவும் அதிர்ந்தது.

19 எக்காளசத்தம் வரவர மிகவும் பலமாயிற்று; மோசே பேசினான், பராபரன் அவனுக்குச் சத்தமாய் மறுமொழி கொடுத்தார்.

20 கர்த்தர் சீனாய்பர்வதத்தின்மீதில் இருக்கிற கொடுமுடியிலே இறங்கினபொழுது, கர்த்தர் மோசேயைப் பர்வதத்தின் கொடுமுடியிலே வரலழைத்தார்; மோசே ஏறினான்.

21 அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: சனம் கர்த்தரண்டைக்கு ஏறிப்பார்க்கிறதற்கு எல்லையைக் கடவாதபடிக்கும், அவர்களில் அநேகர் விழுந்துபோகாதபடிக்கும், நீ இறங்கி அவர்களைத் திடச்சாட்சியாக எச்சரி.

22 கர்த்தரண்டையிலே சேருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்குதல் செய்யாதபடிக்கு, தங்களைப் பரிசுத்தமாக்கக்கடவர்களென்றார்.

23 அப்பொழுது மோசே கர்த்தருடனே, சனம் சீனாய்பர்வதத்தில் ஏறமாட்டாது; ஏனெனில் பர்வதத்தை எல்லை பிரித்து,

Digitized by Google

அதைப் பரிசுத்தமாக்கென்று தேவரீர் எங்களைத் திடச்சாட்சியாய் எச்சரித்தீர் என்றான்.

உச ஆனால் கர்த்தர் மோசேயுடனே, இறங்கிப் போ; நீயும் உன்னுடனேகூட ஆரோனுமாய் ஏறிவரக்கடவீர்கள்; ஆசாரியர்களும் சனமுமோவென்றால், கர்த்தர் தங்களுக்குள்ளே அழிக்குதல் செய்யாதபடிக்கு, அவரண்டைக்கு ஏற எல்லையைக் கடவாதிருப்பார்களாக என்றார்.

உடு அப்படியே மோசே சனத்தண்டைக்கு இறங்கி, அதை அவர்களுக்குச் சொன்னான்.

உடு. அதிகாரம்.

அப்பொழுது பராபரன் பேசிச் சொன்ன எல்லா வார்த்தைகளுமாவது:

உ ¶ *உன்னை அடிமைவீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பராபரனுகிய கர்த்தர் நானே. *டு மோ. டு. கூ. சங். புக. டக.

ஈ நமக்குமுன்பாக உனக்கு வேறு தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

ஊ ¶ உயர வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டான வைகளுக்கு ஒத்திருக்கிற *ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை என்றும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்.

*ந மோ. உகூ. க. சங். கூஎ. எ.

ஏ நீ அவைகளை நமஸ்கரிக்கவும் அவைகளைச் சேவிக்கவும் வேண்டாம்; ஏனென்றால் உன் பராபரனுகிய கர்த்தராயிருக்கிற நாம் எரிச்சலுள்ள தேவனுயிருந்து, நம்மைப் பகைக்கிறவர்களுக்கோவென்றால் பிதாக்களுடைய அநியாயத்தைப் பின்னானவர்களிடத்திலே மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறோம்.

ஐ ஆனால் நம்மைச் சிநேகித்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, ஆயிரம் தலைமுறைமட்டும் தயவு செய்கிறவராயிருக்கிறோம்.

ஒ ¶ உன் பராபரனுகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக; ஏனென்றால் கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

ஓ ¶ ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்க நினைப்பாயாக.

ஃ ஆறுநாள் நீ வேலைசெய்து உன் வினையை எல்லாம் நடப்பிப்பாயாக.

ஙு ஆனால் ஏழாம்நாள் உன் பராபரனுகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானும், உன் குமாரனுனும், உன் குமாரத்தியானும், உன் வேலைக்காரனுனும், உன் வேலைக்காரியானும், உன் மிருகசீவனும், உன் வாசல்களிலிருக்கிற உன் பரதேசியானும் யாதொரு வேலையைச் செய்யவேண்டாம்.

ஙக ஏனென்றால் கர்த்தர் ஆறுநாளுக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, *ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினார்.

*க மோ. உ. உஈ.

ஙஉ ¶ உன் பராபரனுகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாள்கள் நீடித்திருக்கிறதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

ஙஈ ¶ கொலைசெய்யாயாக.

ஙச ¶ விபசாரம்பண்ணுயாக.

ஙடு ¶ களவுசெய்யாயாக.

ஙஎ ¶ உனக்கடுத்தவனுக்குவிரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லாயாக.

ஙஏ ¶ உனக்கடுத்தவன் வீட்டை இச்சியாயாக; உனக்கடுத்தவனுடைய பெண்சாதியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னையும் உனக்கடுத்தவனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காயாக என்றார்.

10 ¶ சனமெல்லாம் இடிமுழக்கங்களை யும் மின்னல்களையும் எக்காளச் சத்தத் தையும் பர்வதம் புகைகிறதையும் கண் டார்கள்; அதைக் காண்கையில், சனம் பின்வாங்கி, தூரத்திலே நின்று,

11 மோசேயுடனே, நீர் எங்களோடே பேசும், நாங்கள் கேட்போம்; நாங்கள் சாவாதபடிக்குப் பராபரன் எங்களோடே பேசாதிருப்பாராக என்றார்கள்.

12 மோசே சனத்தோடனே, பயப்படா திருங்கள்; ஏனெனில் உங்களைச் சோதிப் பதற்காகவும், நீங்கள் பாவம்செய்யாதப டிக்கு அவர் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், பராபரன் வந்தாரென்றான்.

13 ¶ சனம் தூரத்திலே நின்றது; மோசே யோவென்றால் பராபரன் இருந்த இருளுக் குள்ளே சேர்ந்தபோனான்.

14 ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ டே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திர ரோடே சொல்லவேண்டியதேதெனில், நாம் வானத்திலிருந்து உங்களோடே பேசி னதை நீங்கள் கண்டீர்கள்.

15 நீங்கள் நமக்குமுன்பாக வெள்ளித் தேவர்களையாகிலும் பொன்தேவர்களையாகி லும் உங்களுக்கு உண்டாக்கவே உண்டாக் கவேண்டாம்.

16 நீ மண்ணை பலிபீடத்தை நமக்குண் டாக்கி, அதின்மேல் உன் தகனபலிகளையும் உன் சமாதான பலிகளையும் உன் ஆடுகளை யும் உன் மாடுகளையும் பலி இடுவாயாக; நாம் எவ்விடத்திலாகிலும் நம்முடைய நாமத்தைப் பிரஸ்தாபம் பண்ணினால், அவ் விடத்தில் உன்னண்டைக்கு வந்து, உன்னை ஆசீர்வதிப்போம்.

17 கல்லான பலிபீடத்தை நமக்கு உண் டாக்கப்போனாயேயாகில், அதை வெட் டின கல்லுகளாலே கட்டாயாக; ஏனென் றால் நீ உன் உளியை அதின்மேல் நடமா டப்பண்ணுகிறதினால், அதைப் பரிசுத்தக் குலைச்சல் ஆக்குவாய்.

18 நமது பலிபீடத்திற்குமுன்பாக உன் நிருவாணம் காணப்படாதபடிக்கு, நீ அத ற்குப் படிகளால் ஏறவும் வேண்டாம்.

21 அதிகாரம்.

1 பின்னையும் நீ அவர்களுக்கு அறியப் பண்ணவேண்டிய நியாயங்களாவது:

2 எபிரேய சாதியான அடிமையைக் கொ ண்டாயானால், அவன் ஆறுவருஷம் சேவி த்து, ஏழாம் வருஷத்திலே இலவசமாகத் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்பட்டுப் போ வானாக.

3 ஒண்டிக்காரனாய் வந்திருந்தானானால், ஒண்டிக்காரனாய்ப் புறப்படுவானாக; பெ ண்சாதிக்குப் புருஷனாயிருந்தானானால், அ வன் பெண்சாதி அவனோடேகூடப் புறப் படுவாளாக.

4 அவன் எசமானன் அவனுக்குப் பெண் சாதியைக் கொடுத்ததும், இவன் அவ னுக்கு ஆண்பிள்ளைகளையாகிலும் பெண்பி ள்ளைகளையாகிலும் பெற்றதும் உண்டானால், பெண்சாதியும் அவள் பிள்ளைகளும் அவள் எசமானனைச் சேர்வார்களாக; அவனோ ஒரு வனாய்ப் புறப்படுவானாக.

5 அந்த வேலைக்காரனோவென்றால், என் எசமானனையும் என் பெண்சாதியையும், என் பிள்ளைகளையும் நேசிக்கிறேன்; நான் தன்னிச்சைக்காரனாய்ப் புறப்படுவதில்லை என்று சொல்லவே சொன்னால்,

6 அவன் எசமானன் அவனைத் தேவர்க ளண்டைக்கு அழைத்துப்போய், அவனைக் கதவின்கிட்ட, அல்லது கதவின் நிலையின்கி ட்டச் சேரப்பண்ணக்கடவன்; அங்கே அ வன் எசமானன் அவன் காதைக் கம்பியி லே குத்துவானாக; அதற்குப்பின் என்றைக் கும் அவனுக்கு வேலைசெய்யக்கடவன்.

7 ஒருவன் தன் மகளை வேலைக்காரியாக விற்றுப்போட்டானானால், அவள் வேலைக் காரர் புறப்படுகிறதுபோலப் புறப்பட ஒண்ணாது.

8 அவனைத் தனக்கு நியமித்த எசமான

னின் பார்வைக்கு ஆகாதேபோனால், அவன் மீட்கப்படட்டும்; அவன் அவனைத் துரோகம்பண்ணி, அவனை அந்நியசாதியார் கையிலே விற்றுப்போட அவனுக்கு அதிகாரமில்லை.

கூ அவன் தன் குமாரனுக்கு அவனியமித்தானால், குமாரத்திகளின் நியாயத்திற்குத் தக்கதாய் அவளுக்குச் செய்யக் கடவன்.

ஙு அவனுக்கு வேறொருத்தியைக் கொண்டானேயாகில், அவளுடைய பிழைப்பையும் உடுப்பையும் குடிஇருப்பையும் குறைக்காமலிருப்பானாக.

ஙூ அவன் இந்த மூன்றும் அவளுக்குச் செய்யாதேபோனால், அவள் கிரயமில்லாமல் இலவசமாய்ப் புறப்படவேண்டும்.

ஙஉ ¶ *ஒருவனைச் சாக அடித்தவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

*க மோ. கூ. கூ.

ஙஎ *இவன் அவனுக்குச் சதிபண்ணாமல் பராபரன் அவனை இவன் கைக்கு நேரிடப்பண்ணினாரேயாகில், இவன் ஓடிப்போயிருக்கும் அடைக்கலத்தை உனக்குக் கட்டளையிடுவோம். *ச மோ. உடு. கூ.

ஙஅ ஒருவன் தனக்கடுத்தவனுக்கு விரோதமாக அவனைச் சர்ப்பனையாய்க் கொன்றுபோடும் அகங்காரத்தைப்பண்ணினானேயானால், அவன் சாவும்படிக்கு அவனை பலிபீடத்தண்டையிலும் இருந்து பிடித்துக்கொண்டு போவாயாக.

ஙடு தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் அடிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

ஙசு ¶ எவனாகிலும் ஒருவன் ஒரு மனிதனைத் திருடி அவனை விற்றுப்போட்டால். அல்லது இவன் அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டானானால், அவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

ஙஎ ¶ *தன் தகப்பனையாகிலும் தன் தாயையாகிலும் சபிக்கிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *ஈ மோ. உஙு. கூ.

ஙஏ மனிதர் சண்டைபண்ணி, ஒருவன் தனக்கடுத்தவனைக் கல்லினால் எறிந்து அல்லது கையினாலே அடித்தபோதிலே, இவன் சாவாமல் கட்டில் கிடையாய் விழுந்து,

ஙஐ திரும்ப எழுந்திருந்து, வெளியிலே தன் ஊன்றுகோலைப் பிடித்துநடமாடினால், அடித்தவன் ஆக்கினைக்கு நீங்கலாயிருப்பான்; ஆனால் அவனுக்கு வேலை மினக்கெட்ட நஷ்டத்தைக் கொடுத்து, அவனை நன்றாகக் குணமாக்குவிக்கக்கடவன்.

ஙஒ ¶ ஒருவன் தன் அடிமையை, அல்லது தன் அடிமைப்பெண்ணைக் கோலினால் அடிக்கிறபோதிலே, இவன் அவன் கையின்கீழ்ச் செத்துப்போனால், பழிக்குப்பழிவாங்கப்படவேண்டும்.

ஙக ஒருநாள் அல்லது இரண்டுநாள் இருந்தானேயாகில், பழிவாங்கப்படவேண்டாம்; ஏனெனில் இவன் அவனுடைய உடைமையாய் இருந்தவன்.

ஙஒ ¶ மனிதர் சண்டைபண்ணி, கர்ப்பவதியான ஒரு ஸ்திரியை அடிக்கிறபோதிலே. அவளுக்கு வேறே சேதமில்லாமல் கர்ப்பம் விழுந்துபோனால், அப்பொழுது அடித்தவன் ஸ்திரியின் புருஷன் தன்மேலே சுமத்துகிறதற்குத்தக்கதாய், தருமத்தாருடைய தீர்ப்பின்படியே தண்டம் கொடுக்கவே கொடுக்கவேண்டும்.

ஙக வேறே சேதமுண்டாயிற்றேயானால், நீ சீவனுக்குச் சீவன்,

ஙச கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், கைக்குக் கை, காலுக்குக் கால்,

ஙடு சூட்டுக்குச் சூடு, காயத்துக்குக் காயம், கழும்புக்குக் கழும்பு, பழிகொடுக்கக்கடவாய்.

ஙஎ ¶ ஒருவன் தன் அடிமையின் கண்ணிலே, அல்லது தன் அடிமைப்பெண்ணின் கண்ணிலே அடிக்கிறபோதிலே அதைக் கெடுத்தால், அவன் இவன் கண்ணுக்குப்பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

உ அவன் தன் அடிமையின் பல்லை, அல்லது தன் அடிமைப்பெண்ணின் பல்லை விழப்பண்ணினால், அவன் இவன் பல்லுக்குப்பதிலாக இவனைத் தன்னிச்சைக்காரனாக அனுப்பிவிடவேண்டும்.

உஅ ஒரு மாடு ஒரு ஆண்சாதியை, அல்லது ஒரு பெண்சாதியை முட்டிப்போட்டதினாலே சாவுண்டானால், அந்த மாடு கல்லெறியவே கல்லெறியப்படவும் அதின் மாம்சம் புசிக்கப்படாதே போகவும்கடவது, அப்பொழுது மாட்டின் எசமானன் ஆக்கினைக்கு நீக்கலானவன்.

உக ஆனால் மாடு முதலே முட்டுகிறதாயிருந்து, அது அதின் எசமானனுக்கு அறிவிக்கப்பட்டும், அவன் அதைப் பத்திரம்பண்ணுதிருந்தானானால், அது ஒரு ஆண்சாதியை அல்லது ஒரு பெண்சாதியைக் கொன்றுபோட்டால், மாடும் கல்லெறியப்படவேண்டும், அதின் எசமானனும் கொலைசெய்யப்படவேண்டும்.

உஎ மீட்புக்கு அபராதம் அவன்மேலே சுமத்தப்பட்டதேயானால், அவன் தன் சீவனை மீட்கும்பொருளாக, தன்மேலே சுமத்தப்பட்டபடி எல்லாம் செலுத்தக்கடவன்.

உக அது ஒருவன் மகனை முட்டிப்போட்டானாலும் சரி, ஒருவன் மகளை முட்டிப்போட்டானாலும் சரி, இந்த நியாயத்தின்படியே அவனுக்குச் செய்யப்படக்கடவது.

உஉ மாடு ஒரு அடிமையை, அல்லது அடிமைப்பெண்ணை முட்டிப்போட்டிருந்தால், அவன் இவர்களுடைய எசமானனுக்கு முப்பது சேக்கலிடை வெள்ளியைக் கொடுக்கவும் மாடு கல்லெறியப்படவும் வேண்டும்.

உக ¶ ஒருவன் ஒரு குழியைத் திறந்துவைத்தானாலே, அல்லது ஒரு குழியை வெட்டி அதை மூடாதே போனானாலே, அதிலே ஒரு மாடாவது ஒரு கழுதையாவது விழுந்தால்,

உச குழிக்குடையவன் அதின் விலையைக் கொடுத்து பணமாய் அதின் எசமானனுக்குச் செலுத்தவும் கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

உஎ ¶ ஒருவனுடைய மாடு அவனுக்கு அடுத்தவனுடைய மாட்டை முட்டிப்போட்டதினாலே இது செத்தால், அவர்கள் உயிரோடிருக்கிற மாட்டை விற்று, அதின் கிரயத்தைப் பங்கிட்டு, செத்ததையும் பங்கிட்டுக்கொள்ளக்கடவர்கள்.

உக அல்லவென்று, அந்த மாடு முதலே முட்டுகிறமாடென்று அறியப்பட்டிருந்தும், அதின் எசமானன் அதைப் பத்திரம்பண்ணுதிருந்தானானால், அவன் மாட்டுக்கு மாட்டைக் கொடுக்கவே கடவன்; செத்ததோ அவனுடையதாகவேண்டியது.

உஉ. அதிகாரம்.

எவனெருவன் மாட்டை அல்லது ஒரு ஆட்டைத் திருடி அதை அடித்தால், அல்லவென்று அதை விற்றுப்போட்டால், அவன் மாட்டுக்கு ஐந்துமாடுகளையும் ஆட்டுக்கு நான்கு ஆடுகளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்.

உ ¶ திருடன் கன்னமிடுகையில் கண்டுபிடிக்கப்பட்டு அடிக்கப்பட்டுச் செத்தால், அவனுக்காக இரத்தப்பழி சுமராது.

ஈ சூரியன் அவன்மீதில் உதித்திருந்ததேயானால், அவனுக்காக இரத்தப்பழி சுமரும்; திருடனேவென்றால், திரும்பச் செலுத்தவே செலுத்தக்கடவன்; அவனுக்கு இல்லாதிருந்தால், தன் களவுக்காக விலைப்படக்கடவன்.

ச அவன் திருடின மாடாகிலும், கழுதையாகிலும், ஆடாகிலும் உயிருடனே அவன் கையிலே கண்டுபிடிக்கப்பட்டால், இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

ஙு ¶ வயலையாகிலும் திராட்சத்தோட்டத்தையாகிலும் பட்டிமேய, ஒருவன் தன் மிருகசீவன்களை வேறொருவன் நிலத்திலே விட்டால், அவன் தன் வயலிலே நலமானதிலும் தன் திராட்சத்தோட்டத்திலே நல

Digitized by Google

மானதிலும் எடுத்து, உத்தரவாதம்பண்ணக்கடவன்.

5 அக்கினி எழும்பி, முள்ளுக்களிலே பற்றிக்கொண்டு, கதிர்ப்போரையாகிலும் முதிர்ப்பயிரையாகிலும் நிலத்திலுள்ளதையாகிலும் சுட்டுப்போட்டால், அக்கினியைக் கொளுத்தினவன் அக்கினிச் சேதத்திற்கு உத்தரவாதம் பண்ணவேண்டும்.

6 ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்திலே திரவியத்தையாகிலும் உடைமைகளையாகிலும் அடைக்கலமாக வைத்திருக்கும்போது அது அவன் வீட்டிலிருந்து திருடப்பட்டுப்போனால், அப்பொழுது திருடன் அகப்பட்டானேயாகில், அவன் இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தவேண்டும்.

7 திருடன் அகப்படாதேபோனால், அப்பொழுது அந்த வீட்டுக்காரன் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே தன் கையைப் போட்டதில்லையோ என்பதற்காக, *தேவர்களண்டைக்குக் கொண்டுபோகக்கடவன். *2 மோ. 22. 8.

8 ஒரு மாட்டுக்காகிலும் கழுதைக்காகிலும் ஆட்டுக்காகிலும் வஸ்திரத்திற்காகிலும் ஒருவன் தன்னுடையதென்று சொல்லுகிற காணுமல்போன யாதொரு பொருளுக்காகிலும் அடுத்த அநியாயத்தினுடைய யாதொரு விசேஷமிருந்தால், இருநிறத்தாருடைய நியாயம் தேவர்களண்டைக்கு வரக்கடவது; தேவர்கள் எவனைக் குற்றவாளிகளென்று தீர்க்கிறார்களோ, அவன் தனக்கடுத்தவனுக்கு இரட்டிப்பாகத் திரும்பச் செலுத்தக்கடவன்.

9 ¶ ஒருவன் தனக்கடுத்தவன் வசத்தில் ஒரு கழுதை, மாடு, ஆடு முதலான மிருகஜீவனை அடைக்கலமாக விட்டிருக்கும்போது அது செத்தால், அல்லது சேதப்பட்டால், அல்லது ஒருவரும் காணுமல் ஓட்டிக்கொண்டு போகப்பட்டால்,

10 அப்பொழுது அவன் தன் கையைத் தனக்கடுத்தவனுடைய பொருளின்மேலே போட்டதில்லையோ என்பதற்காக, கர்த்தருடைய ஆணை இருவருக்குள்ளும் நடுவுறுக்கக்கடவது; ஆகில் அதின் எசமான் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும்; மற்றவன் கொடுக்கத் தேவையில்லை.

11 அது அவன் வசத்திலிருந்து திருடப்பட்டுப் போயிற்றேயானால், அவன் அதின் எசமானுக்கு அதற்காக உத்தரவாதம் பண்ணக்கடவன்.

12 அது பீறப்பட்டதேயானால், அதற்குச் சாட்சியை ஒப்புவிப்பானாக, பீறுண்டதற்காக அவன் உத்தரவாதம் பண்ணத்தேவையில்லை.

13 ¶ ஒருவன் தனக்கடுத்தவன் கையில் இரவலாக வாங்கினது அதின் எசமான் இல்லாதிருக்கும்போது சேதப்பட்டால், அல்லது செத்துப்போனால், அவன் உத்தரவாதம் பண்ணக்கடவன்.

14 அதின் எசமான் அண்டையில் இருந்தானேயாகில், இவன் உத்தரவாதம் பண்ணுவதில்லை; அது கொடைக்கூலிக்கு வாங்கப்பட்டிருந்ததானால், அது அவன் கொடைக்கூலிக்கு வந்த சேதம்.

15 ¶ நியமிக்கப்படாத ஒரு கன்னியாஸ்திரியை ஒருவன் மோசம்போக்கி அவளோடே சயனித்தால், அவன் அவளுக்காகப் பரியம்கொடுக்கவே கொடுத்து, அவளை விவாகம்பண்ணவேண்டும்.

16 அவன் தகப்பன் அவளை இவனுக்குக் கொடுக்கமாட்டோம் என்றாலேயாகில், இவன் கன்னியாஸ்திரிகளுக்காகக் கொடுக்கப்படுகிற பரியமுறைமையின்படியே திரவியம் நிறுத்துக்கொடுக்கவேண்டும்.

17 ¶ சூனியக்காரியை நீ உயிரோடே வைக்கவேண்டாம்.

18 ¶ *மிருகத்தோடே புணர்ச்சிபண்ணுகிறவனெல்லாம் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன். *3 மோ. 20. 15.

19 ¶ கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்காரிக்கப்படக்கடவன்.

20 ¶ *பரதேசியைச் சிறுமைப்படுத்தாமல்

நும் ஒடுக்காமலும் இருப்பாயாக; ஏனெனில் நீங்கள் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள். *ஈ மோ. யசூ ஈஈ, ஈச.

உஉ ஒரு கைம்பெண்சாதியையும் தாய் தகப்பனில்லாத பிள்ளையையும் ஒடுக்காமலிருப்பீர்களாக.

உஈ அவர்களை நீ ஒடுக்கவே ஒடுக்கும்போது, அவர்கள் நம்மை நோக்கிக் கூப்பிடவே கூப்பிட்டால், அவர்கள் கூப்பிடுதலை நாம் கேட்கவே கேட்டு,

உச நாம் கோபமூண்டவராகி, உங்கள் பெண்சாதிகள் பகம்பெண்சாதிகளும் உங்கள் பிள்ளைகள் தாய்தகப்பனில்லாத பிள்ளைகளுமாய்ப் போக, உங்களைப் பட்டயத்தாலே கொன்றுபோடுவோம்.

உடு ¶ *உன்னிடத்திலே சிறுமைப்பட்டிருக்கிற நம்முடைய சனத்தில் ஒருவனுக்கு நீ திரவியம் கடனுகக்கொடுத்தால், அவனுக்கு வட்டி சமத்துகிறவன்போல இராபாக. *ஈ மோ. உடு. ஈடு, ஈசு.

உசு *உனக்கு அடுத்தவனுடைய வஸ்திரத்தை நீ அடகாக வாங்கினால், பொழுது புகாததற்குமுன்னே அதை அவனுக்குத் திரும்பக் கொடுப்பாயாக. *டு மோ. உச. ஐஉ, ஐஈ.

உள ஏனெனில் அவன் மூடிக்கொள்ளுகிறது அதுமாத்திரம்தானே; அதுவே அவன் தன் தோலை மூடிக்கொள்ளுகிற அவனுடைய வஸ்திரம்; வேறு எதினாலே மூடிக்கொண்டு படுத்துக்கொள்ளுவான்; ஆகையால் சம்பவிப்பதேதெனில், அவன் நம்மை நோக்கிக் கூப்பிடும்பொழுது, நாம் கேட்போம்; ஏனெனில் நாம் இரக்கமுள்ளவர்.

உஎ ¶ தேவர்களைத் தூஷணியாமலும் உன் சனத்தில் அதிபதியானவனைச் சபிக்காமலும் இருப்பாயாக.

ஈஊ ¶ உன் போர்க்களத்தின் காணிக்கையையும் உன் ஆலியின் காணிக்கையையும் செலுத்தத் தாமதிக்கவேண்டாம்; உன் குமாரரில் முதல்பேருனவனை நமக்குக் கொடுப்பாயாக.

ஈஐ உன் மாடுகளிலும் உன் ஆடுகளிலும் அப்படித்தான் செய்வாயாக; குட்டி ஏழு நாள் தன் தாயோடே இருக்கட்டும், எட்டாம் நாளிலே அதை நமக்குச் செலுத்துவாயாக.

ஈஈ ¶ நீங்கள் நமக்குப் பரிசுத்த மனிதராயிருக்கக்கடவீர்கள்; ஆகையால் வெளியிலே பீறுண்டுபோன மாம்சத்தைப் புசியாமல், அதை நாய்களுக்குப் போடுவீர்களாக.

உஈ. அதிகாரம்.

அபாண்டமான விசேஷத்தை ஏற்றுக்கொள்ளாயாக; கொடுமையுள்ள சாட்சியாயிருக்க ஆகாதவனுடே கலவாயாக.

உ பொல்லாப்புச் செய்யப்போகிற திரளினைப் பின்செல்லாமலும், நியாயத்தைப் புரட்டப்போகிற திரளினர்களின் பிறகாலே சாய்கிறதற்கான உத்தரவை வழக்கிலே சொல்லாமலும் இருப்பாயாக.

ஈ தரித்திரனுடைய முகத்தையும் அவன் வியாச்சியத்திலே பாராயாக.

ச ¶ சிதறிப்போனதாகிய *உன் சத்துருவின் மாட்டையாகிலும் அவனுடைய கழுதையையாகிலும் சந்தித்தாயானால், அதை அவனண்டையிலே திருப்பவே திருப்பிக்கொண்டு போவாயாக. *லூக். ஈ. உஎ.

டு உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதையைத் தன் சுமையின்கீழ்க் கிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவாதிருப்பாயோ? அவனுடேகூட அதற்கு உதவவே உதவுவாயாக.

ஈ ¶ உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்திலே அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

எ கள்ளக்காரியத்துக்குத் தூரமாயிருப்பாயாக; குற்றமில்லாதவனையும் நீதிமானையும் கொலைப்படுத்தாயாக; ஏனெனில் ஆகாதவனை நீதிமானுகத் தீர்ரோம்.

அ ¶ *பரிதானம் வாங்காயாக; ஏனெனில் பரிதானம் பார்வையுள்ளவர்களைக் குரு

டாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்குகின்றது. *டு மோ. யசு. யசூ.

கூ ¶ *பரதேசியை ஒடுக்காயாக; ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்த நீங்கள் பரதேசியின் இருதயத்தை அறிவீர்கள். *உ மோ. உஉ. உக.

ய ¶ நீ ஆறுவருஷம் உன் தேசத்தை விதைத்துப் பயிரிட்டு அதின் பலனைச் சேர்த்து,

யக ஏழாம் வருஷத்திலோவென்றால் அதை உன் சனத்தில் எளியவர்கள் புசிக்கும்படிக்கும், மீதியானதை வெளியின் சிவன்கள் தின்னும்படிக்கும், சும்மா வைத்துவிடுவாயாக; உன் திராட்சத்தோட்டத்திற்கும் உன் ஒலிவத்தோப்புக்கும் அப்படியே செய்வாயாக.

யஉ ¶ நீ ஆறுநாள் உன் வேலையைச் செய்து, ஏழாம் நாளிலோவெனில் உன் மாடும் உன் கழுதையும் இளைப்பாறவும், உன் அடிமைப்பெண்ணின் பிள்ளையும் பரதேசியும் மூசிப்பாறவும், ஓய்ந்திருப்பாயாக.

யஊ நாம் உங்களுக்குச் சொன்னதிலெல்லாம் சாவதானமாய் இருங்கள்; வேறே தேவர்களின் பேரை நினையிர்களாக; அது உன் வாயிலுலேகேட்கப்படாதிருப்பதாக.

யச ¶ வருஷத்தில் மூன்றுதரம் நமக்குப் பண்டிகை ஆசரிப்பாயாக.

யடு நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உனக்குக் கற்பித்தபடி ஆபிப் மாதத்தினுடைய நிட்டமான காலத்திலே ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெனில் அதிலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்; ஆனால் வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படாதிருக்கவாக.

யசு நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதல்பலனைச் செலுத்துகிற அறுப்புநாளின் பண்டிகையையும், வருஷமுடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்ந்தபொழுது, சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

யஎ *வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண் சாதியெல்லாம் கர்த்தராகிய ஆண்டவருடைய சந்நிதிக்கு முன்பாகக் காணப்படக் கடவது. *உ மோ. ஈச. உஈ.

யஅ ¶ புளித்தமா இருக்கும்போது நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; நம்முடைய பண்டிகையின் கொழுப்பு விடியற்காலம்மட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

யகூ உன் சிமையின் முதல்விளைச்சல்களில் முந்தின கனியை உன் பராபரனுடைய கர்த்தருடைய வீட்டிற்குக் கொண்டுவருவாயாக; *வெள்ளாட்டுக்குட்டியை அதினுடைய தாயின் பாலோடேகூடச் சமைக்காயாக. *ஈ மோ. உஉ. உஅ.

உய ¶ இதோ, உன்னை வழியிலே காக்கிறதற்கும், நாம் ஆயத்தம்பண்ணின தானத்திற்கு உன்னைக் கொண்டுபோகிறதற்கும். நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அனுப்புகிறோம்..

உக நீ அவர் முகத்திற்கு முன்பாகச் சாவதானமாயிருந்து, அவர் சத்தத்தைக் கேள்; அவனைக் கோபப்படுத்தாதே; ஏனெனில் உங்கள் துரோகங்களை அவர் பொறுப்பதில்லை, அதேனென்றால் நமது நாமம் அவனுள்ளத்தில் இருக்கின்றது.

உஉ நீ அவர் சத்தத்தைக் கேட்கவே கேட்டு, நாம் சொல்லுவதை எல்லாம் செய்தாயேயாகில், நாம் உன்னைப் பகைக்கிறவர்களைப் பகைத்து, உன்னை இறுகப்பிடிக்கிறவர்களை இறுகப்பிடிப்போம்.

உக ஏனெனில் நம்முடைய தூதர் உனக்குமுன்பாக நடந்து, உன்னை ஏமோரியரும். ஏத்தியரும், பேரிசியரும், காணானியரும். ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடத்திலே கொண்டுபோவார்; அவர்களை நாம் அதம்பண்ணுவோம்.

உச நீ அவர்கள் தேவர்களைப் பணிந்து கொள்ளாமலும் அவர்களைச் சேவிக்காமலும் அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும் அவர்களை நிர்மூலம்பண்ணவே

பண்ணி, அவர்கள் நிலைகளை உடைக்கவே உடைத்துப்போடுவாயாக.

உடி உங்கள் பராபரனுகிய கர்த்தரையே சேவிப்பீர்களாக; அப்பொழுது அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்; அப்பொழுது வியாதியை உன் மேலிலிருந்து விலக்குவோம்.

உக கர்ப்பம் விழுகிறவளும் மலடியும் உன் தேசத்திலே உண்டாயிருப்பதில்லை; உன் நாள்களின் இலக்கத்தை நிறைவேற்றுவோம்.

உஎ நாம் நம்முடைய பயங்கரத்தை உனக்குமுன்பாக அனுப்பி, நீ வந்துசேரும் எல்லாச் சனத்தையும் கலங்கடித்து, உன் சத்துருக்களை எல்லாம் உனக்கு முதுகைக் காட்டப்பண்ணி,

உஅ உன் முகத்திற்கு முன்பாக எவியனையும், காருனியனையும், எத்தியனையும் தரத்திலிட, வண்டுகளை உனக்குமுன்பாக அனுப்புவோம்.

உகூ தேசம் பாழாகாமலும் வெளியின் மிருகங்கள் உனக்கு விரோதமாய் வர்த்திக்காமலும் இருக்கும்படிக்கு, நாம் அவர்களை ஒரே வருஷத்திற்குள்ளே உனக்கு முன்பாகத் தரத்திலிடாமல்,

உஙி நீ பலுகி, தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்மட்டும், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் உனக்கு முன்பாகத் தரத்திலிட்டு,

உச நீ உன் எல்லையை காணல்சமுத்திரம் துவக்கி, பெலிஸ்தரின் சமுத்திரம்மட்டாகவும்; வனாந்தரம்துவக்கி நதிமட்டாகவும் வைப்போம்; ஏனெனில் நாம் தேசத்தின் குடிகளை, நீ அவர்களை உனக்குமுன்பாகத் தரத்திலிடும்படிக்கு, உங்கள் கைகளில் ஒப்புக்கொடுப்போம்.

உஉ அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடம்படிக்கை பண்ணுயாக.

உஎ அவர்கள் உன்னை நமக்கு விரோதமாகப் பாவம்செய்யப் பண்ணுதபடிக்கு உன் தேசத்திலே குடியிராதிருக்கவும்; ஏனெனில் நீ அவர்கள் தேவர்களைச் சேவித்தால், உனக்குக் கண்ணியாகவே இருக்குமென்றார்.

உச. அதிகாரம்.

பிற்பாடு அவர் மோசேயோடே சொல்லுனதாவது: நீயும், ஆரோனும், நாதாகும், அபீகூவும், இஸ்ரவேலின் மூப்பரில் எழுபதுபேருமாய்க் கர்த்தரண்டைக்கு ஏறிவந்து, தூரத்திலிருந்து பணியுங்கள்.

உ இவர்கள் கர்த்தரண்டைக்குச் சேராமல், மோசே ஒருவனுய்ச் சேரக்கடவன்; சனம் இவனோடேகூட ஏறிவரவேண்டாமென்றார்.

ஈ மோசே வந்து, கர்த்தருடைய எல்லா வார்த்தைகளையும் எல்லா நியாயங்களையும் சனத்திற்கு விவரித்தான்; அப்பொழுது சனம் எல்லாம் ஒரு சத்தமாய், கர்த்தர் பேசின எல்லா வார்த்தைகளின்படியேயும் செய்வோமென்று பிரதியுத்தாரம் சொன்னார்கள்.

ச அப்பொழுது மோசே கர்த்தருடைய வார்த்தைகளை எல்லாம் எழுதிவைத்து, அதிகாலமே எழுந்திருந்து, பர்வதத்திற்கு அடியிலே ஒரு பலிபீடத்தையும் இஸ்ரவேலுடைய பன்னிரண்டு கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு தூண்களையும் கட்டி,

ஞ இஸ்ரவேல் புத்திரரில் வாலிபரை அனுப்பினன்; அவர்கள் தகனபலிகளைச் செலுத்தி, கர்த்தருக்குச் சமாதான பலிகளாகக் காளை எருதுகளைப் பலியிட்டார்கள்.

ட அப்பொழுது மோசே பாதி இரத்தத்தை வாங்கி, பாத்திரங்களில் வார்த்து, பாதி இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே தெளித்து,

எ உடம்படிக்கையின் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு, சனத்தின் காதுகளுக்கேட்க வாசித்தான்; அப்பொழுது அவர்கள் கர்த்தர் சொன்னதை எல்லாம் செய்து, கீழ்ப்படிவோமென்றார்கள்.

அ அப்பொழுது மோசே இரத்தத்தை வாங்

Digitized by Google

னி, *சனத்தின்மேலே தெளித்து, இதோ இந்த எல்லா வார்த்தைகளின்மேலும் கர்த்தர் உங்களோடே பண்ணின உடம்படிக்கையின் இரத்தமென்றான். *எபி.கூ.உ.

கூ ¶ பிற்பாடு மோசேயும், ஆரோனும், நாதாபும், அபீகூவும், இஸ்ரவேலருடைய மூப்பரில் எழுபதுபேரும் ஏறிப்போய்,

ப *இஸ்ரவேலின் பராபரனைக் கண்டார்கள்; அவருடைய பாதத்தின்கீழே நீலக்கல்லின் வேலைக்கொப்பாகவும், வானத்தின் காந்தியான பிரபைக்கு ஒப்பாகவும் இருந்தது. *எசே. க. உசு.

பக அவர் இஸ்ரவேல் புத்திரருடைய தலைவர்பேரிலே தம்முடைய கையைப் போகவிடாதிருந்தார்; அவர்கள் பராபரனைத் தரிசித்தபிற்பாடு புசித்துக் குடித்தார்கள்.

பஉ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ நம்மண்டைக்குப் பர்வதத்தின்மேல் ஏறிவந்து, அங்கே இரு; நாம் உனக்குக் கற்பலகைகளையும், அவர்களே உபதேசிப்பதற்கு நாம் எழுதின நியாயப்பிரமாணத்தையும், கற்பனைகளையும் கொடுப்போம் என்றார்.

பக அப்பொழுது மோசே தன் வேலைக்காரனாகிய யோசுவாவோடும்கூட எழுந்து போனான்; மோசே பராபரனுடைய பர்வதத்தில் ஏறினான்.

பச அவன் மூப்பரோடே சொன்னதாவது: நாங்கள் உங்களண்டைக்குத் திரும்பி வரும்மட்டும், இங்கே எங்களுக்காகக் காத்திருங்கள்; இதோ, ஆரோனும் ஊரும் உங்களிடத்தில் இருக்கிறார்கள்; எவனுக்குக் கலைகாரியங்கள் உண்டோ, அவன் அவர்களண்டையிலே சேரக்கடவனென்றான்.

பஎ ¶ மோசே பர்வதத்தில் ஏறினபொழுது, ஒரு மேகம் பர்வதத்தை மூடிற்று.

பஅ கர்த்தருடைய மகிமை சீநாய்பர்வதத்தின்மேலே தங்கியிருந்தது; மேகம் ஆறுநாள் அதை மூடியிருந்தபிற்பாடு, அவர் ஏழாம் நாளிலே மேகத்தின் நடுவிலிருந்து மோசேயைக் கூப்பிட்டார்.

பஆ பர்வதத்தின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் உருவு, இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப்போலிருந்தது.

பஇ மோசே மேகத்தின் நடுவிலே பிரவேசித்து, பர்வதத்தில் ஏறி, இரவும் பகலும் நாற்பதுநாள் பர்வதத்திலிருந்தான்.

உரு. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நமக்குக் காணிக்கையை எடுத்துச் செலுத்தும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரரோடே பேசு; நமக்குச் செலுத்தும் காணிக்கையை *மனப்பூர்வமான எல்லாருடைய கையிலும் வாங்குவீர்களாக. *உ மோ. நடு. இ. உ கொரி. கூ ப.

ந நீங்கள் அவர்கள் கையில் வாங்கவேண்டிய காணிக்கையாவது: பொன்னும் வெள்ளியும் வெண்கலமும்,

சு இளநீலனூலும், இரத்தாம்பரனூலும், சிவப்புனூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும்,

டு சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களும், தகசுகளின் தோல்களும், சீத்திம் மரங்களும்,

சு விளக்குக்கு எண்ணெயும், அபிஷேக எண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும், தூபம்காட்டுதலுக்குச் சுகந்தவர்க்கங்களும்,

எ ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக்கல்லுகளும், பதித்தலைக்கும் இரத்தினக்கல்லுகளும்தானே.

அ நாம் தங்கள் நடுவிலே வாசம்பண்ண, நமக்கொரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக.

கூ வாசஸ்தலத்தின் மாதிரியையும், அதினுடைய எல்லாப் பண்டம்பாடிகளின் மாதிரியையும், நாம் உனக்குக் காண்பிக்கும்படி எல்லாம் அதைச் செய்வீர்களாக.

ஐ ¶ சீத்திம் மரங்களால் ஒரு பெட்டி

Digitized by Google

யைய் பண்ணக்கடவார்கள்; அதின் நீளம் இரண்டாை முழமும், அதின் அகலம் ஒன்றாை முழமும், அதின் உயரம் ஒன்றாை முழமுமாயிருப்பதாக.

ச அதை எங்கும் சுத்தமான பொன்தகட்டால் மூடுவாயாக; பீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதனால் மூடி, அதின்மேல் சுற்றிலும் பொன்னாை நிரணையை உண்டாக்கி,

ரு அதற்கு நான்கு பொன் வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, இத்தப்பக்கம் இரண்டு வளையங்களும், அத்தப்பக்கம் இரண்டு வளையங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,

ரூ சித்திம் மரங்களான வாராகளைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

ரசு அந்த வாராகளால் பெட்டியைச்சுமக்கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலிருக்கும் வளையங்களிலே பாய்ச்சக்கடவாய்.

ரஎ அந்த வாராகள் பெட்டியிலிருந்து கழற்றப்படாமல், அதின் வளையங்களிலே இருக்கக்கடவது.

ரஅ பீ அந்தப் பெட்டியிலே நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைத்து,

ரஆ ¶ சுத்தமான பொன்னிலாலே கிருபாசனமான மூடியைப் பண்ணுவாயாக; அது இரண்டாமுழ நீளமும் ஒன்றரை முழ அகலமுமாய் இருக்கக்கடவது.

ரஇ பொன்னாை இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னிலாலே உண்டாக்கி, கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களில் இருக்கப்பண்ணக்கடவாய்.

ரஈ ஒரு கேருபீன் இத்தப்புறத்து ஓரத்திலும் மற்றக் கேருபீன் அத்தப்புறத்து ஓரத்திலும் இருக்கத்தானே; அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டு ஓரங்களிலே அதனோடே ஏக வேலையாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பண்ணக்கடவீர்கள்.

உய அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடுகிறவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருக்கக்கடவது; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்குகிறவைகளாயிருப்பதாக.

உக பீ கிருபாசனமான மூடியைப் பெட்டியின்மீதில் வைத்து, பெட்டியிலோவென்னால், நாம் உனக்குக் கொடுக்கப்போகிற சாட்சியை வைப்பாயாக.

உஉ *அங்கே உன்னைச் சந்திப்போம்; கிருபாசனமான மூடியின்மீதிலும் சாட்சியினுடைய பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலுமிருந்து நாம் இஸ்ரவேல் புத்திரருக்காக உனக்குக் கற்பிக்கப்போகிறவைகளை எல்லாம் உன்னோடே சொல்லுவோம். *ச மோ. எ. ஆகூ.

உங ¶ சித்திம் மரங்களால் ஒரு மேசையையும் பண்ணுவாயாக; அது இரண்டு முழ நீளமும் ஒருமுழ அகலமும் ஒன்றரைமுழ உயரமுமாயிருக்கக்கடவது.

உச அதை பீ சுத்தமான பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்னாை நிரணையை உண்டாக்கி,

உடு சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கலடையான சட்டத்தையும் அதின் சட்டத்திற்குச் சுற்றிலும் பொன்னாை நிரணையையும் உண்டாக்கி,

உசு அதற்கு நான்கு பொன் வளையங்களைப் பண்ணி, அவைகளை அதின் நான்கு காலுக்கு இருக்கும் நான்கு கோடிகளில் தைக்கக்கடவாய்.

உஎ அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாராகளுக்கு இடங்களாயிருக்கும்படிக்கு, சட்டத்திற்கு எதிரே இருக்கவேண்டும்.

உஅ அந்த வாராகளைச் சித்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்; அவைகளால் மேசை சுமக்கப்படுவது.

Digitized by Google

உசு அதின் கலங்களையும் தூபக்கிண்ணிக களையும், தட்டுகளையும், அதற்கு அடுத்தவை களாகிய வார்க்கிற கரகங்களையும் பண்ணக் கடவாய்; சுத்தமான பொன்னிலுலே உண் டாக்கக்கடவாய்.

ஈ மேசையின்மேலே எப்பொழுதும் ஈ மக்குமுன்பாகச் சமுகத்து அப்பங்களை வைக்கக்கடவாய்.

ஈக ¶ சுத்தமான பொன்னிலுலே ஒரு குத்துவிளக்கையும் உண்டாக்குவாயாக; அது அடிக்கப்பட்ட பொன்னிலுலே பண் ணப்படவேண்டும்; அதின் தண்டும், அதி ன்கினைகளும், அதின் மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் அத லுடொன்றாயிருப்பதாக.

ஈஉ ஆறு கினைகள் அதின் பக்கங்களிலிருந் து புறப்படுவது; குத்துவிளக்கின் மூன்று கினைகள் அதின் ஒரு பக்கத்திலும், குத்துவி ளக்கின் மூன்று கினைகள் அதின் மறுபக்கத் திலுமிருந்து புறப்படுவது.

ஈஊ ஒவ்வொரு கினையிலே வாதுமைக்கொ ட்டைகளின் சாயலான மூன்று மொக்குக ளும், ஒரு மாதளம்பழமும், ஒரு பூவும் இ ருப்பதாக; குத்துவிளக்கிலிருந்து புறப்படு கிற ஆறு கினைகளிலும் அப்படி இருக்கவே ண்டும்.

ஈசு விளக்குத்தண்டிலோவென்றால், வாது மைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும், அதின் மாதளம்பழங்களும், அதின் பூக்களும் இருப்பதாக.

ஈடு அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கி னைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும், வேறு இரண்டு கினைகளின்கீழ் ஒரு மாதளம்பழ மும், மற்ற இரண்டு கினைகளின்கீழ் ஒரு மா தளம்பழமும் இருப்பதாக; விளக்குத்தண் டிலிருந்து புறப்படுகிற ஆறு கினைகளுக்கும் அப்படி இருக்கவேண்டும்.

ஈசு அவைகளின் மாதளம்பழமும் அவை களின் கினைகளும் அதிலிருந்து உண்டான வைகளாயிருப்பதாக; இவையெல்லாம் அ டிக்கப்பட்ட சுத்தமான பொன்னுகிய ஒரே தண்டாயிருக்கவேண்டும்.

ஈஎ அதின்மேல் ஏழு விளக்குகளையும் உண் டாக்குவாயாக; அதற்கு நேரெதிராய் எரி யும்படிக்கு ஏற்றப்படக்கடவது.

ஈஅ அதின் கத்திரிகளும் விளக்கணைக்கிற கருவிகளும் சுத்தப் பொன்னுயிருப்பதாக.

ஈசு அதை இந்த எல்லா முல்தீதுகளோ டும்கூட ஒரு தாலந்து சுத்தமான பொன் னிலுலே உண்டுபண்ணுவார்களாக.

சஈ *பர்வதத்திலே உனக்குக் காண்பிக் கப்பட்ட அவைகளுடைய மாதிரியின்படி யே அவைகளைச் செய்யப் பார்ப்பாயாக.

*உ மோ. உசு. ஈஈ. எபி. அ. டு.

உசு. அதிகாரம்.

* வாசஸ்தலத்தையோவென்றால், நிரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இ ரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான பத்தச் சமுக்காளங்களால் உண்டுபண்ணுவாயா க; அவைகளில் விநோத வேலையான கெரு பீன்கள் இருக்கும்படியாக அவைகளைப் பண்ணக்கடவாய். *உ மோ. ஈசு. அ.

உ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட் டுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமா யிருப்பதாக; சமுக்காளங்களுக்கெல்லாம் ஒரே அளவு இருக்கக்கடவது.

ஈ ஐந்து சமுக்காளங்கள் ஒன்றோடொன் று இணைக்கப்பட்டிருக்கவும், மற்ற ஐந்து சமுக்காளங்களும் ஒன்றோடொன்று இ ணைக்கப்பட்டிருக்கவும் வேண்டும்.

ச இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் இளநீலநூல்காதுகளை உண் டுபண்ணி, இணைக்கப்பட்ட மற்றச் சமுக் காளத்தின் கடைஓரத்திலும் அப்படியே உண்டுபண்ணுவாயாக.

டு ஒரு சமுக்காளத்தில் ஐம்பது காதுகளை யும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத் தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும் காதுகள் ஒன்றுக்கொன்று எதிராய்ச் சேர்ந்திருக்கும் படிக்கு உண்டுபண்ணுவாயாக.

சு ஏக வாசஸ்தலமாய்ப் போரும்படிக்கு

ரம்பது பொன் தூறடுகளையும்பண்ணி, சமுக்காளங்களை ஒன்றுக்கொன்று தூறடுகளாலே இணைத்துப்போடுவாயாக.

எ¶ வாசல்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும் ஆட்டுமயிர்ச் சமுக்காளங்களாகிய பதினொரு சமுக்காளங்களையும் பண்ணக்கடவாய்.

அ ஒவ்வொரு சமுக்காளம் முப்பதுமுழ நீளமும் நான்குமுழ அகலமுமாயிருப்பதாக; பதினொரு சமுக்காளங்களுக்கும் ஒரே அளவு இருக்கக்கடவது.

கூ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து, ஆறும் சமுக்காளத்தைக் கூடாரத்தின் முகப்பிற்குமுன்னே, இரட்டையாய்ப் போடுவாயாக.

ஐ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் ரம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ரம்பது காதுகளையும் உண்டுபண்ணி,

ஙூ ரம்பது வெண்கலத் தூறடுகளைப்பண்ணி, தூறடுகளைக் காதுகளில் பூட்டி, கூடாரத்தை அது ஒன்றாகும்படிக்கு இணைத்துவிடுவாயாக.

ஙஎ கூடாரத்தின் சமுக்காளங்களில் மிச்சமான அரைச்சமுக்காளத்தின் மீதியோவென்றால், வாசல்தலத்தின் பின்புறத்திலே மிஞ்சித் தொங்குவதாக.

ஙஏ கூடாரத்தினுடையசமுக்காளங்களின் நீளத்திலும் மீதியானதிலே இந்தப்புறத்தில் ஒரு முழமும் அந்தப்புறத்தில் ஒரு முழமும் வாசல்தலத்தை மூடும்படிக்கு அதின் பக்கங்களிலே மிஞ்சித் தொங்குவதாக.

ஙஐ¶ சிவப்புத்தோய்த்த ஆட்டுக்கடாக்களின் தோல்களாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுகளின் தோல்களால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக.

ஙடு¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசல்தலத்திற்குச் சீத்திம் மரங்களால் செப்பனிடுவாயாக.

ஙசு ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருக்கக்கடவது.

ஙஎ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான ஒழுங்காயிருக்கிற இரண்டு முனைகள் ஒவ்வொரு பலகைக்கு இருக்கவேண்டும்; இப்படியே வாசல்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்வாயாக.

ஙஅ¶ நீ வாசல்தலத்திற்காகச் செப்பனிடுகிற பலகைகளில் இருபது பலகை தெற்கே தென்திசைக்கு எதிராக நிற்கக்கடவது.

ஙகூ அந்த இருபது பலகைகளின்கீழே வைக்கும் நாற்பது வெள்ளிக்கால்களை ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் அதின் இரண்டிரண்டு முனைகளுக்கான கால்களாகத்தானே பண்ணக்கடவாய்.

உ¶ வாசல்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகையும்,

உக அவைகளின்கீழ் நாற்பது வெள்ளிக்கால்களும், ஒவ்வொரு பலகையின்கீழே இரண்டிரண்டு கால்களாக நிற்கக்கடவது.

உஉ¶ வாசல்தலத்தின் மேல்புறத்திற்கு ஆறு பலகைகளையும்,

உங வாசல்தலத்தின் இரண்டு பக்கக் கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பனிடுவாயாக.

உச இவைகள் தாழத்தவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயரத்தை ஒரு அள்ளிலே இசைத்திருக்கவேண்டும்; இரண்டு கோடிகளுக்கு அப்படியிருக்க இரண்டும் அப்படிச் செய்யப்படுவதாக.

உடு அப்படியே எட்டுப் பலகைகள் இருக்கவேண்டியது; அவைகளினுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு கால்களாகப் பதினாறு கால்கள் இருக்கவேண்டும்.

உசு¶ சீத்திம் மரங்களால் வாசல்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும்,

உஎ வாசல்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களையும் வா

சன்தலத்தின் மேல்புறமான பின்பக்கத் துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பாள்களை யும் பண்ணுவாயாக.

உஅ நடுத்தாழ்ப்பாள் ஒரு முனைதுவக்கி ம றுமுனைமட்டும் பலகைகளின் மையத்தை உருவிப் பாய்ச்சப்படுவதாக.

உக பலகைகளைப் பொன்தகட்டால் மூடி, தாழ்ப்பாள்களின் இடங்களாகிய அலைக ளின் வளையங்களைப் பொன்னிலுலே பண் ணி, தாழ்ப்பாள்களைப் பொன்தகட்டால் மூடக்கடவாய்.

உடு ¶ அப்படியே வாசல்தலத்தைப் பர் வதத்தில் உனக்குக் காண்பிக்கப்பட்ட அதி னுடைய நியாயத்தின்படியே எடுப்பிப்பா யாக.

உக ¶ *இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் நிரித்த மெல்லிய பஞ்சுநூல் மான ஒரு நிரையையும் உண்டுபண்ணக் கடவாய்; அதிலே விநோத வேலையான கே ருபீன்கள் இருக்கும்படியாக அது பண் ணப்படுவதாக. *உ மோ. உசு. உடு.

உஉ பொன்தகடு மூடியதும் பொன்னை வளைவாணிகளுள்ளதும் நான்கு வெள்ளிக் கால்கள்மேல் நிற்கிறதுமான நான்கு சீத் நிம் மரத்தூண்களிலே அதைத் தூக்கிவை ப்பாயாக.

உங தூறடுகளின்கீழே அந்தத் நிரையைத் தூக்கிலைவத்து, சாட்சியின் பெட்டியை அங்கே நிரைக்குள்ளாகலைவப்பாயாக; அந் தத் நிரை உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலத் நிற்கும் பரிசுத்தத்நிற்குப் பரிசுத்தமான ஸ்தலத்நிற்கும் நடுவே இருப்பதாக.

உச பரிசுத்தத்நிற்குப் பரிசுத்தமான ஸ்த லத்நிலே சாட்சியினுடைய பெட்டியின்மீ நில் நிருபாசனமான மூடியை லவத்து,

உடு நிரைக்குப் புறம்பாக மேசையையும் மேசைக்கெநிரே வாசல்தலத்நின் தென்பு றமாகக் குத்துவிளக்கையும் லவத்து, மே சையையோ வடபுறமாக லைப்பாயாக.

உசு ¶ இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் நிரித்த மெல்லிய பஞ்சுநூ லும் நெத்நிரத் தையல்வேலையுமான ஒரு மறைலையும் கூடாரத்நின் வாசலுக்கு உண்டாக்கி,

ஊஎ அந்த மறைலுக்குச் சித்நிம் மரம்மான ஐந்து தூண்களைச் செப்பனிட்டு, அலைக ளைப் பொன்தகட்டால் மூடி, அலைகளுக் குப் பொன் வளைவாணிகளை உண்டாக்கி, அலைகளுக்கு ஐந்து வெண்கலக் கால்களை வார்ப்பிக்கக்கடவாய்.

உஎ. அதிகாரம்.

ஐந்தமுழ நீளமும் ஐந்தமுழ அகலமு மான பலிபீடத்தையும் சித்நிம் மரங்களால் உண்டுபண்ணக்கடவாய்; அது நாற்சதுர மும் மூன்றமுழ உயரமுமாயிருப்பதாக.

உ அதின் நான்கு கோடிகளின்மேல், அது ளுடே ஏகமாயிருக்கும் அதின் கொம்பு களை உண்டாக்கி அதை வெண்கலத்தகட் டால் மூடி,

ஊ அதின் சாம்பலை எடுக்கும் அதின் செப் புச் சட்டிகளையும், அதின் கரண்டிகளையும், அதின் கலக்களையும், அதின் முள்தறடுகளை யும், அதின் கலசங்களையும் உண்டாக்கி, அதின் முட்டுகளையெல்லாம் வெண்கலத் தால் பண்ணி,

ச வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச் சல்லடையை அதற்குண்டாக்கி, அந்த வலையின் நான்கு முனைகளின்மேல் நான்கு வெண்கல வளையங்களை உண்டாக்கி,

டு அந்த வலை பலிபீடத்நின் பாதிமட்டும் வரும்படிக்கு, அதைத் தாழப் பலிபீடத் நின் சுற்றிற்குக் கீழ்ப்புறமாக லைக்கக்கட வாய்.

ரு பலிபீடத்நிற்குச் சித்நிம் மரவாளைக ளையும் பண்ணி, அலைகளை வெண்கலத்தகட் டால் மூடி,

எ பலிபீடம் எடுத்துப் போகப்படுகை யில், அந்த வாளைகள் அதின் இரண்டு பக் கங்களில் இருக்கும்படிக்கு, அலைகள் வளையங்களிலே பாய்ச்சப்படுவதாக.

அ அது குழாயாயிருக்கும்படிக்கு அதைப்

Digitized by Google

பலகைகளிலுலே பண்ணுவாயாக; உனக்குப் பர்வதத்தில் காண்பிக்கப்பட்டபடியே அதைப் பண்ணக்கடவார்கள்.

கூ ¶ *வாசஸ்தலத்தின் பிரகாரத்தையும் உண்டுபண்ணுவாயாக; தெற்கே தென்திசைக்கு எதிரான பக்கத்திற்குத் நிரித்த மெல்லிய பஞ்சுநூலும் நூறுமுழ நீளமான வெளி ஆடைகளும், *உ மோ. ஈஅ. கூ.

ம அவைகளின் இருபதுதூண்களும் இருப்பதாக; இவைகளின் இருபது கால்கள் வெண்கலமும், தூண்களின் வளிவாணிகளும் அவைகளின் வளியங்களும் வெள்ளியுமாயிருப்பதாக.

மக அப்படியே வடபக்கத்தின் நீளத்திற்கு நூறுமுழ நீளமான வெளி ஆடைகளும், அவைகளின் இருபது தூண்களுமிருப்பதாக; இவைகளின் இருபது கால்கள் வெண்கலமும் தூண்களின் வளிவாணிகள் வெள்ளியுமாயிருப்பதாக.

மஉ பிரகாரத்தினுடைய மேல்ப்பக்கமான அகலத்திற்கு ஐம்பதுமுழ நீளமான வெளி ஆடைகளும், அவைகளுக்குப் பத்துத் தூண்களும் இவைகளுக்குப் பத்துக் கால்களுமிருப்பதாக.

மங சூரியன் உதிக்கிற திசையாகிய பிரகாரத்தின் கிழ்ப்பக்கமான அகலமும் ஐம்பது முழமாயிருப்பதாக.

மச அங்கே ஒரு புறத்திற்குப் பதினைந்து முழ நீளமான வெளிஆடைகளும், அவைகளுக்கு மூன்று தூண்களும், இவைகளுக்கு மூன்று கால்களுமிருப்பதாக.

மஙி மறுபுறத்திற்குப் பதினைந்துமுழ நீளமான வெளிஆடைகளும் அவைகளுக்கு மூன்று தூண்களும் இவைகளுக்கு மூன்று கால்களுமிருப்பதாக.

மசு பிரகாரத்தின் வாசலுக்கோவென்றால் இளநீலநூலும் இரத்தாம்பரநூலும் சிவப்புநூலும் நிரித்த மெல்லிய பஞ்சுநூலும் தெத்திரித் தையல்வேலையும் இருபதுமுழ நீளமுமான ஒரு மறைவும் அதற்கு நான்கு தூண்களும் இவைகளுக்கு நான்கு கால்களும் இருப்பதாக.

மஎ சுற்றிலும் இருக்கும் பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளி வளையங்கள் போடப்பட்டிருப்பதாக; அவைகளின் வளிவாணிகள் வெள்ளியும் அவைகளின் கால்கள் வெண்கலமுமாயிருப்பதாக.

மஅ பிரகாரத்தின் நீளம் நூறுமுழமும் இருபுறத்தகலம் ஐம்பது, முழமும் உயரம் ஐந்துமுழமுமாயிருப்பதாக; அது நிரித்த மெல்லிய பஞ்சுநூலும் அவைகளின் கால்கள் வெண்கலமுமாய் இருப்பதாக.

மகூ வாசஸ்தலத்தின் சகல வேலையிலும் அதற்குத் தேவையான எல்லாப் பணிமுட்டுகளும் அதினுடைய எல்லா முளைக்கூச்சுகளும் பிரகாரத்தினுடைய எல்லா முளைக்கூச்சுகளும் வெண்கலமாயிருப்பதாக.

உம ¶ குத்துவிளக்கை எப்பொழுதும் எரியப்பண்ணும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் இடித்து வடிக்கப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னண்டைக்குக்கொண்டுவர நீ அவர்களுக்குக் கற்பிப்பாயாக.

உக ஊசரிப்பின் கூடாரத்தில் சாட்சிக்கு முன்னிருக்கும் திரைக்கு வெளிப்புறமாக ஆரோனும் அவன் குமாரரும் அதைச் சாயங்காலம்தவக்கி, விடியற்காலம்மட்டும் கர்த்தருக்குமுன்பாக எரியவைக்கக்கடவர்கள்; இது அவர்களுக்குத் தலைமுறை தலைமுறையாக இஸ்ரவேல் புத்திரராலே நடக்கும் நித்திய கட்டளையாயிருக்கக்கடவது.

உஅ. அதிகாரம்.

நீ உன் சகோதரனாகிய ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்கு இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலிருந்து பிரித்து உன்னண்டையில் சேர்த்துக்கொள், ஆரோனையும், நாதாப், அபீகூ, எலெயாசார், இத்தமார் என்ற ஆரோனின் குமாரரையும் தானே.

Digitized by Google

உ உன் சகோதரனுகிய ஆரோனுக்கு, மகிமைக்கும் அலங்காரத்திற்குமான பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணுவாயாக.

ஈ ஆரோனைப் பரிசுத்தம்பண்ணுகிறதற்கும் அவன் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கும் அவனுடைய வஸ்திரங்களை உண்டாக்கும்படிக்கு, நாம் ஞானத்தின் ஆவியால் நிரப்பின ஞானமான இருதயமுள்ளயாவரோடும் நீ பேசுவாயாக.

ச அவர்கள் உண்டாக்கவேண்டிய வஸ்திரங்களாவது: மார்ப்பதக்கமும், ஆசாரியசால்லையும், அங்கியும், ஊத்துவருணமான உள்சட்டையும், பாகையும், நடுக்கட்டும்தானே; அந்த அடைவாய் உன் சகோதரனுகிய ஆரோன் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, அவனுக்கும் அவன் குமாரருக்கும் பரிசுத்த வஸ்திரங்களை உண்டுபண்ணக்கடவர்கள்.

டு அவர்கள் பொன்னும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும் எடுத்து,

கூ¶ ஆசாரிய சால்லையைப் பொன்னிழையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், விநோத வேலையாய்ப் பண்ணக்கடவர்கள்.

எ இரண்டு தோளின்மேலும் அதின் இரண்டு முனைகள் சேர்க்கப்பட்டு, அப்படி அது இணைக்கப்படவேண்டும்.

அ அந்த ஆசாரிய சால்லையின்மேலிருக்கவேண்டிய விநோதமான நச்சை அந்த வேலையாகத்தானே, பொன்னிழையும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணப்பட்டு, அதனோடே ஏகத்தண்டாயிருப்பதாக.

கூ பின்னையும் நீ இரண்டு கோமேதகக்கல்லை வாங்கி, அவைகளில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டுவாயாக.

ய அவர்கள் பிறந்த வரிசையின்படியே, அவர்கள் நாமங்களில் ஆறுநாமங்கள் ஒரு கல்லிலும், மற்ற ஆறுநாமங்கள் மறுகல்லிலும் இருக்கத்தானே.

யக இரத்தினங்களில்முத்திரைவெட்டுகிறவர்கள் செய்கிறதுபோல, அந்த இரண்டு கற்களில் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை வெட்டி, அவைகளுக்குச் சுற்றிலும் தங்கம் இழைத்து,

யஉ ஆரோன் கர்த்தருக்குமுன்பாகத் தன் இரண்டு தோள்களின்மேலும் இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை நினைப்புக்காகச் சுமக்குவர, அந்த இரண்டு கற்களை ஆசாரிய சால்லையினுடைய தோள்களின்மேலே, அவர்கள் நினைப்புக்கான கற்களாகவைத்தக்கடவாய்.

யங ஆகையால் பொன் வளையங்களையும் பண்ணி,

யச சரியான அளவுகளும் முடிச்சுக்குத் நிவேலையுமான இரண்டு சரப்பளிகளையும் சுத்தப்பொன்னிழையாலே உண்டாக்கி, முடிச்சுக்குத்திகளான சரப்பளிகளை அந்த வளையங்களில் சேர்க்கக்கடவாய்.

யடு¶ விநோத வேலையாய் நியாயத்தின் மார்ப்பதக்கத்தையும் பண்ணுவாயாக; அதை ஆசாரிய சால்லையின் வேலைக்கொத்ததாய்ப் பண்ணக்கடவாய்; பொன்னிழையும் இளநீலநூலாலும் இரத்தாம்பரநூலாலும் சிவப்புநூலாலும் நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் அதைச் செய்வாயாக.

யசு அது நாற்சதுரமும் இரட்டையும் ஒரு சாண் நீளமும் ஒரு சாண் அகலமுமாய் இருக்கக்கடவது.

யள அதிலே நான்கு பத்தி இரத்தினக் கற்களை நிறையப்பதிப்பாயாக; முதலாம் பத்தி கெம்பும், புஷ்பராகமும், மரகதமும்,

யஅ இரண்டாம் பத்தி வைப்புக்கல்லும், நீலக்கல்லும், வச்சிரமும்,

யகூ மூன்றும் பத்தி பத்மராகமும், வயிடூரியமும், அமேத்திஸ்தும்,

உய நான்காம் பத்தி தர்ஷீஸ் இரத்தினமும், கோமேதகமும், யஸ்பியுமாய் இருப்பதாக; அவைகள் தங்கஇடங்களில் பொன்னிழை

Digitized by Google

லே பதித்திருக்கக்கடவது.

உக இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரருடைய நாமங்களின்படியே பன்னிரண்டும், அவர்களுடைய நாமங்கள் உள்ளவைகளுமாய் இருக்கவேண்டும்; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றினுடைய நாமம் ஒவ்வொன்றிலே முத்திரை வெட்டாய் வெட்டியிருக்கக்கடவது.

உஉ அந்த மார்ப்பதக்கத்திற்கென்று சரி அளவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சுத்தப் பொன் சரப்பளிகளையும் பண்ணி,

உஊ இரண்டு பொன்மோதிரங்களையும் மார்ப்பதக்கத்திற்குப் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு முனைகளிலே வைத்து,

உச பொன்னை அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் முனைகளில் இருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,

உடு இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு நுனிகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற இரண்டு வலையங்களில் மாட்டிப்போடுவாயாக.

உசு மீ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரானமார்ப்பதக்கத்தினுடைய மற்ற இரண்டு முனைகளில் அதினுடைய ஓரத்திற்குள்ளாக வைத்து,

உஎ வேறே இரண்டு பொன்மோதிரங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

உஅ மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்குமேலாக இருக்கும்படிக்கும், அது ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே கட்டுவார்களாக.

உஉ அப்படியே ஆரோன் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கையில், தன் இருதயத்தின்மேல் நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களை எப்பொழுதும் கர்த்தருக்கு முன்பாக நினைப்புண்டாகும்படிக்குச் சுமந்துவரக்கடவன்.

உக ¶ நியாயத்தின் மார்ப்பதக்கத்திலே வெளிச்சங்களையும் உத்தமங்களையும் ஆரோன் கர்த்தரின் சந்நிதிக்குள் பிரவேசிக்கையில், அவைகள் அவன் இருதயத்தின்மேல் இருக்கும்படிக்கு வைப்பாயாக; அப்படியே ஆரோன் தன் இருதயத்தின்மேலே இஸ்ரவேல் புத்திரருடைய நியாயத்தை எப்பொழுதும் கர்த்தருக்குமுன்பாகச் சுமந்துவரக்கடவன்.

உஎ ¶ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியைமுழுவதும் இளநீலநூலால் உண்டாக்கக்கடவாய்.

உஉ தலைதுழைகிற அதின் வாய் அதின் நடுவில் இருக்கவும் அதின் வாய்க்கு நெய்த வேலையான ஒரு காடா சுற்றிலும் இருக்கவும்வேண்டும்; அது கிழியாதபடிக்கு மார்க்கவசத்தின் வாய்க்கொத்தது அதற்கு இருப்பதாக.

உஊ அதின் கீழோரங்களிலோவென்றால், இளநீலநூல் இரத்தாம்பரநூல் சிவப்புநூல் வேலையான மாதளம்பழங்களையும், அவைகளின் நடுவே சுற்றிலும் பொன்மணிகளையும், அதின் ஓரங்களிலே சுற்றிலும் தொங்கப்பண்ணி வைப்பாயாக.

ஊச அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமும், ஒரு பொன்மணியும், ஒரு மாதளம்பழமுமாய்த் தொங்குவதாக.

ஊடு ஆரோன் ஆராதனைசெய்யக் கர்த்தருக்குமுன்பாகப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், வெளியே வரும்பொழுதும் அவன் சாவாதபடிக்கு அது

Digitized by Google

அவனில் அவன் சத்தம் கேட்கப்படத் தரிக்கப்பட்டிருக்கவேண்டும்.

28 ¶ நீ சுத்தப் பொன்பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி,

29 அது பாகையிலிருக்கும்படியாக, அதை இளநீலமான கயிற்றிலே பாகையின் முகப்பிலே கோத்துக் கட்டிவைப்பாயாக.

30 இஸ்ரவேல் புத்திரர் தங்கள் காணிக்கைகளில் எல்லாம் பரிசுத்தம்பண்ணிச் செலுத்தும் பரிசுத்த வஸ்துக்களுடைய அக்கிரமத்தை ஆரோன் சுமந்துவரும்படிக்கு, அது ஆரோனுடைய நெற்றியின்மேல் இருப்பதாக; கர்த்தருக்குமுன்பாக அவர்கள்மேல் பிரியம் உண்டாகும்படிக்கு, அது எப்பொழுதும் அவன் நெற்றியின்மேல் இருப்பதாக.

31 ¶ மெல்லிய பஞ்சுநூலால் முத்துவருணமான உள்சட்டையையும் மெல்லிய பஞ்சுநூலால் பாகையையும் உண்டாக்கி, நடுக்கட்டையோவென்றால் சித்திரத் தையல்வேலையாகப் பண்ணுவாயாக.

32 நீ ஆரோனுடைய குமாரருக்கும் சட்டைகளையும், நடுக்கட்டுகளையும், மகிமைக்கும் அலங்காரத்திற்குமான குல்லாக்களையும் உண்டுபண்ணுவாயாக.

33 உன் சகோதரனாகிய ஆரோனும் அவனோடேகூட அவன் குமாரரும் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகம்பண்ணி, அவர்கள் கைகளை நிரப்பி, அவர்களைப் பரிசுத்தம் பண்ணுவாயாக.

34 அவர்களுக்கு இடுப்புத்துவக்கி முழங்கால்கள்மட்டும் வருகிற சணல்நூல் சல்லடங்களையும், நிருவாணத்தின் சதையை மூடும்படிக்கு உண்டுபண்ணக்கடவாய்.

35 ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லது பலிபீடத்தண்டைக்குச் சேரும் பொழுதும், அவர்கள் அக்கிரமம் சுமந்து சாவாதபடிக்கு, அவைகள் அவர்களில் தரித்திருக்கவேண்டும்; அவனுக்கும் அவனுக்குப்பிற்பாடு அவன் வித்தாருக்கும் அது நித்தியகட்டளை.

28. அதிகாரம்.

1 நமக்கு ஆசாரிய ஊழியம்செய்ய அவர்களைப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதாவது: நீ ஒரு காளை எருதையும் பழுதற்ற இரண்டு ஆட்டுக்கடாக்களையும்,

2 கோதுமையின் மெல்லிய மாவிலுமை சுட்ட புளிப்பில்லாத அப்பத்தையும், எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும் வாங்கு.

3 நீ இவைகளை ஒரே கூடையிலே வைத்து, கூடையோடே இவைகளையும் காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து,

4 ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசல்முன்பாகச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரிலே கழுவி,

5 வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, ஆரோனுக்கு உள்சட்டையையும் ஆசாரிய சால்வையின் அங்கியையும் ஆசாரிய சால்வையையும் மார்ப்பதக்கத்தையும் தரித்து, அவனுக்கு ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சையைக் கட்டி,

6 அவன் தலையிலே பாகையைப் போட்டு, பரிசுத்த கிரீடத்தைப் பாகையிலே தரித்து,

7 ¶ அபிஷேகத்தைலத்தை வாங்கி, அவன் தலையின்மேலே வார்த்து, அவனை அபிஷேகம்பண்ணி,

8 ¶ பிற்பாடு அவன் குமாரரைச் சேரப்பண்ணி, ஆசாரிய ஊழியம் அவர்களுக்கு நித்தியகட்டளையாக இருக்கும்படிக்கு அவர்களுக்குச் சட்டைகளை உடுத்தி,

Digitized by Google

ஆரோனையும் அவன் குமாரரையும் நடுக்கட்டினால் அணைக்கட்டி, இவர்களுக்குக் குல்லாக்களைப் போட்டுக் கட்டி, ஆரோனுடைய கையையும் அவன் குமாரரின் கையையும் நிரப்பி,

28 ¶ காளை எருதை ஆசரிப்பின் கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளைக் காளை எருதினுடைய தலையின்மேலே வைக்கக்கடவர்கள்.

29 பிற்பாடு நீ அந்தக் காளை எருதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலண்டையிலே கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுத்து,

30 அதின் இரத்தத்திலே கொஞ்சம் வாங்கி, உன் விரலினால் பலிபீடத்தின் கொம்புகள்மேல் இட்டு, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தின் அடியிலே ஊற்றி,

31 குடல்களை மூடிய எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும் எடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திப்போட்டு,

32 காளை எருதின் மாம்சத்தையும் அதின் தோலையும் அதின் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியால் சுட்டெரிக்கக்கடவாய்; அது பாவம்போக்கும்பலி.

33 ¶ அதற்குப்பிறகு அந்த ஆட்டுக்கடாக்களில் ஒன்றைக் கொண்டுவந்து நிறுத்தவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

34 பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தைப் பிடித்து, பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

35 ஆட்டுக்கடாவை அதின் சந்து சந்தாய்த் துண்டித்து, அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் கழுவி, அவைகளை அந்தத் துண்டங்களின்மேலும் அதின் தலையின்மேலும் வைத்து,

36 ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேல் கொளுத்திப்போடுவாயாக; அது கர்த்தருக்கான சர்வாங்க தகனபலி; அது ஆற்றுகிற வாசனையும் கர்த்தருக்கான தகனமுமாயிருக்கும்.

37 ¶ அதற்குப்பிறகு நீ மற்ற ஆட்டுக்கடாவைக் கொண்டுவந்து நிறுத்தவாயாக; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைக்கக்கடவர்கள்.

38 பிற்பாடு நீ அதைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தில் கொஞ்சம் வாங்கி, ஆரோனின் வலதுகாது மடலிலும் அவன் குமாரரின் வலதுகாது மடலிலும் அவர்கள் வலதுகையினுடைய பெருவிரலின்மேலும் அவர்கள் வலதுகாலினுடைய பெருவிரலின்மேலும் இட்டு, மற்ற இரத்தத்தைப் பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளித்து,

39 பலிபீடத்தின்மேலிருக்கும் இரத்தத்திலும் அபிஷேக எண்ணெயிலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனும் அவன் வஸ்திரங்களும் அவனோடேகூட அவன் குமாரரும் அவர்கள் வஸ்திரங்களும் பரிசுத்தமாக்கப்படும்படிக்கு, அவன்மேலும் அவன் வஸ்திரங்கள்மேலும் அவன் குமாரர்மேலும் அவர்கள் வஸ்திரங்கள்மேலும் தெளித்து,

40 ஆட்டுக்கடாக்கள் நிரப்புதலின் ஆட்டுக்கடாவானபடியினாலே, அதிலிருக்கும் கொழுப்பையும், வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும், கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலிருக்கிற கொழுப்பையும், வலது முன்னம்தொடையையும்,

41 கர்த்தருக்குமுன்பாக வைத்திருக்கிற புளிப்பில்லாத அப்பங்களின் கூடையில் ஒரு அப்பத்தையும், எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும், ஒரு அடையையும் எடுத்து,

42 அவைகளை எல்லாம் ஆரோனின் உள்ளங்கைகள்மேலும் அவன் குமாரரின் உள்ளங்கைகள்மேலும் வைத்து, அவைகளைக்

கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டப்படுகிற காணிக்கையாக அசைவாட்டி,

25 பிற்பாடு அவைகளை அவர்கள் கைகளிலெடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் வைத்து, கர்த்தருக்குமுன்பாக ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்திப்போடக்கடவாய்; அது கர்த்தருக்கான தகனம்.

26 ஆரோனின் கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே நீ மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவாய்; அது உன் பங்காயிருக்கும்.

27 ஆரோனின் கைகளையும் அவன் குமாரரின் கைகளையும் நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே அசைவாட்டப்படுகிற மார்க்கண்டத்தையும் ஏறெடுத்து, படைக்கப்படுகிற முன்னம்தொடையையும் பரிசுத்தமாக்குவாயாக.

28 இஸ்ரவேல் புத்திரர் பலியிடுகிறதிலே அப்படிக்கொத்தவைகள் நித்தியகட்டளையாக ஆரோனையும் அவன் குமாரனையும் சேர்வதாக; ஏனெனில் அது ஏறெடுக்கிற படைப்பு; இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளிலே ஏறெடுக்கப்படும் அவர்களுடைய படைப்புக் கர்த்தருடையது.

29 ¶ ஆரோனுக்கிருக்கிற பரிசுத்த வஸ்திரங்களை அவனுக்குப் பிற்பாடு அவன் குமாரர் உடுத்த, அபிஷேகம்பண்ணப்படவும், அவர்கள் கைகள் நிரப்பப்படவும், அவைகள் இவர்களைச் சேர்வதாக.

30 பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனைசெய்ய ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்கத்தக்கதாக, அவன் குமாரரில் அவன் பட்டத்திற்கு வருகிற ஆசாரியன் அவைகளை ஏழுநாள்மட்டும் உடுத்துக்கொள்ளக்கடவன்.

31 கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவை நீ எடுத்து, அதின் மாம்சத்தைப் பரிசுத்த இடத்தில் வேவிப்பாயாக.

32 அந்த ஆட்டுக்கடாவின் மாம்சத்தையும், கூடையிலிருக்கிற அப்பத்தையும், ஆரோனும் அவன் குமாரரும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே புசிக்கக்கடவர்கள்.

33 ஏனெனில் அவர்களுடைய கைகளை நிரப்பவும், அவர்களைப் பரிசுத்தம்பண்ணவும், அதினாலே பாவநிவிர்த்தி செய்யப்பட்டது; அந்நியனோவெனில் அவைகளிலே புசிக்கவேண்டாம்; ஏனெனில் அவைகள் பரிசுத்தம்.

34 கைகளை நிரப்புதலின் மாம்சத்திலும் அப்பத்திலும் ஏதாகிலும் விடியற்காலம் மட்டும் மீந்திருந்ததேயானால், அதை அக்கினியாலே சுட்டெரிப்பாயாக; அது புசிக்கப்படவேண்டாம்; ஏனெனில் அது பரிசுத்தம்.

35 ¶ இந்தப்பிரகாரமாக நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் நான் உனக்குக் கற்பித்தபடி எல்லாம் செய்வாயாக; ஏழுநாள்மட்டும் அவர்கள் கைகளை நிரப்பி,

36 பாவநிவிர்த்திக்காக ஒவ்வொருநாளில் ஒவ்வொரு காளை எருதைப் பாவம் போக்கும் பலியாக்கி, பலிபீடத்தையும் பாவநிவிர்த்தியை அதற்காகச் செய்கிறதினாலே பாவமற்றதாக்கி, அதைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அதை அபிஷேகம் பண்ணுவாயாக.

37 ஏழுநாள்மட்டும் பலிபீடத்திற்காகப் பாவநிவிர்த்தியைப் பண்ணி, அதைப் பரிசுத்தமாக்கக்கடவாய்; பலிபீடம் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாய் இருப்பது; பலிபீடத்தைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

38 ¶ பலிபீடத்தின்மேல் நீ பலியிடவேண்டியதேதெனில், எப்பொழுதும் ஒவ்வொரு நாளிலே ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகள்தானே.

39 ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும் மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமானவேளையிலும் பலியிடுவாயாக.

Digitized by Google

சய ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்து வடிக்கப்பட்ட கால் படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லியமாவையும், நிராட்சப்பழ இரசத்திலே கால்படியாகிய ஒரு ஊற்றுதலியும், ஒரு ஆட்டுக்குட்டிக்காகப் படைத்து,

சக மற்ற ஆட்டுக்குட்டியை அந்திநேரமாகிற வேளையிலே பலியிடுகிறபொழுது, காலையில் படைத்த காணிக்கைக்கும் அதின் ஊற்றுதலுக்கும் ஒத்த பிரகாரமாக அதை ஆற்றுகிற வாசனைக்காகச் செய்யக்கடவாய்; அது கர்த்தருக்கான தகனம்.

சஉ நாம் உன்னுடனே பேச உங்களைச் சந்திக்கப்போகிற தானமாகிய ஆசரிப்புக்கூடாரத்தினுடைய வாசலென்ற கர்த்தரின் சந்நிதியிலே, இவைகள் உங்கள் தலைமுறை தலைமுறையாக எப்பொழுதும் செலுத்தப்படவேண்டிய சர்வாங்க தகனபலிகள்.

சஈ *அங்கே இஸ்ரவேல் புத்திரரைச் சந்திப்போம்; அந்த ஸ்தலம் நம்முடைய மகிமையினாலே பரிசுத்தமாக்கப்படும்.

*உ மோ. உய. உச.

சச நாம் ஆசரிப்பின் கூடாரத்தையும் பலிபீடத்தையும் பரிசுத்தமாக்கி, ஆரோனையும் அவன் குமாரரையும் நமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்குப் பரிசுத்தமாக்கி,

சஙி இஸ்ரவேல் புத்திரரின் நடுவே வாசம்பண்ணி, அவர்களுக்குப் பராபரனாய் இருப்போம்.

சஞ தங்கள் நடுவே நாம் வாசம்பண்ணும்படிக்கு, தங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாம் தங்கள் பராபரனாயிருக்கிறோமென்று அறிவார்களாக; நாம் அவர்கள் பராபரனாயிருக்கிறோம்.

ஈஙய. அதிகாரம்.

தூபம்காட்டுகிறதற்கு *ஒரு தூபபீடத்தையும் சித்திம் மரங்களினாலே உண்டாக்குவாயாக. *உ மோ. ஈஎ. உடு.

உ அது ஒருமுழ நீளமும் ஒருமுழ அகலமுமான சதுரமும், இரண்டுமுழ உயர்ச்சியும், அதின் கொம்புகள் அதனோடே ஏகமுமாயிருப்பதாக.

ஊ நீ அதையெல்லாம் அதின்மேலே பலகையையும் சுற்றிலுமிருக்கும் அதின் பக்கங்களையும் அதின் கொம்புகளையும் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்நிரணையை உண்டுபண்ணி,

ச அதினுடைய நிரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலும் அதைச் சுமக்கும் வாகனின் இடங்களாகிற இவ்விரண்டு பொன்வளையங்களை அதற்குப் பக்கத்தின் இரண்டு கோடிகள் அருகே உண்டாக்கி,

டு அதின் வாகனங்களையும் சித்திம் மரங்களாலே பண்ணி, பொன்தகட்டால் மூடக்கடவாய்.

டூ சாட்சியினுடைய பெட்டியின் முன்னேயும் சாட்சியின்மேல் இருக்கிறதும் நாம் உன்னைச் சந்திப்பதுமான கிருபாசன மூடியின்முன்னேயும் இருக்கும் நிலைக்குமுன்பாக அதை வைக்கக்கடவாய்.

டஎ ஆரோன் காலைமாறு விளக்குகளைச் சீர்ப்படுத்துகிறபொழுதும், அதின்மீதில் சுகந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டுவானாக; அந்திநேரமாகிற வேளையிலே விளக்குகளை ஏற்றுகிறபொழுதும், அதின்மீதில் கந்தவர்க்கங்களினாலே தூபம் காட்டக்கடவன்.

டஅ அது எப்பொழுதும் உங்கள் தலைமுறை தலைமுறையாகக் கர்த்தருக்கு முன்பாகக் காட்டப்படும் தூபம்.

டூ அதின்மீதில் அந்நிய தூபவர்க்கத்தையாகிலும், ஒரு தகனபலியையாகிலும், காணிக்கையையாகிலும், ஏறப்பண்ணீர்களாக; அதின்மேல் ஒரு ஊற்றுதலியும் ஊற்றீர்களாக.

டய வருஷத்தில் ஒருமுறை ஆரோன் அதின் கொம்புகளின்மேலே பாவங்களை நிவிர்த்தி பண்ணும் பலியின் இரத்தத்தாலே பாவ நிவிர்த்தி பண்ணுவானாக; அப்படி அவன் உங்கள் தலைமுறை தலைமுறையாக வருஷத்தில் ஒருமுறை பாவநிவிர்த்திபண்ணுவானாக; அது கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப்

Digitized by Google

பரிசுத்தமாயிருக்குமென்றார்.

34 ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

35 நீ இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் இலக்கத்தின்படியே கணக்குப் பார்க்கிற பொழுது, அவர்களை எண்ணுகையில் அவர்களுக்குள்ளே ஒரு வாலத உண்டாகாதபடிக்கு, அவர்களில் ஒவ்வொருவர் தம்தம் ஆத்துமாவிற்காகக் கர்த்தருக்கு மீட்கும்பொருளைக் கொடுக்கக்கடவர்கள்.

36 எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிறவன் எல்லாம் பரிசுத்த ஸ்தலத்துச் சேக்கல் கணக்கின்படி அரைச் சேக்கலைக் கொடுக்கவேண்டும்; சேக்கலானது இருபது கேரா; அரைச் சேக்கலே கர்த்தருக்குச் செலுத்தப்படுவது.

37 எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வருகிற இருபது வயதுமுதல்கொண்டு மேல்பட்டவனெல்லாம் அதைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும்.

38 உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்திபண்ணும் கட்டளையை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்துகையில், அரைச் சேக்கலுக்கு ஐசுவரியவான் ஏறக்கொடுக்கவும் வேண்டாம், தரித்திரன் குறையக் கொடுக்கவும் வேண்டாம்.

39 பாவநிவிர்த்தியின் அந்தத் திரவியத்தை நீ இஸ்ரவேல் புத்திரர்கையில் வாங்கி, அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வேலைக்குக் கொடுப்பாயாக; அப்படியே உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தியாகும்படிக்கு, அது கர்த்தருக்கு முன்பாக இஸ்ரவேல் புத்திரரின் நினைப்புக்காக இருக்குமென்றார்.

40 ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

41 *கழுவுகிறதற்கு நீ வெண்கலத்தால் ஒரு தொட்டியையும் வெண்கலத்தால் அதின் புரிமனையையும் உண்டாக்கி, அதை ஆசரிப்பின் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்ப்பாயாக. *2 மோ. 38. 8: சபை. 5. 1.

42 அதினிடத்தில் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவக்கடவர்கள்.

43 அவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுதும், அல்லது கர்த்தருக்குத் தகனத்தைக் கொளுத்தவும் பலிபீடத்தண்டைக்கு ஆராதனைசெய்யவும் சேரும்பொழுதும், அவர்கள் சாவாதபடிக்குத் தண்ணீரிலுலே தங்களைக் கழுவக்கடவர்கள்.

44 அவர்கள் சாவாதபடிக்குத் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் தாமே கழுவக்கடவர்கள்; அது அவனுக்கும், தன் முறை தலைமுறையாக இருக்கும் அவன் வித்தாருக்கும் நித்தியகட்டளை என்றார்.

45 ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

46 நீ மேன்மைத்தரமான சுகந்தவர்க்கங்களாகிற தானும் வடிந்த வெள்ளைப்போளத்திலே, பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலாலே ஐந்நூறு சேக்கலிடையையும், சுகந்த கறுவாப்பட்டையிலே பாதி அம்மாத்திரமான இருநூற்றைம்பது சேக்கலிடையையும், சுகந்த வசம்பில் இருநூற்றைம்பது சேக்கலிடையையும்,

47 காசியாவில் ஐந்நூறு சேக்கலிடையையும், ஒலிவ எண்ணெயில் ஒரு படியையும், வாங்கிக்கொண்டு,

48 அதைல் தயிலக்காரன் வேலையாகக் கூட்டப்பட்ட பரிமளத்தயிலமான *பரிசுத்த அபிஷேக எண்ணெயை உண்டுபண்ணுவாயாக; அது பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருக்கக்கடவது. *2 மோ. 30. 23.

49 அதிலுலே நீ ஆசரிப்பின் கூடாரத்தையும், சாட்சியின் பெட்டியையும்,

50 மேசையையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், குத்துவிளக்கையும், அதின் முட்டுகளையும் தூபம்காட்டும் பீடத்தையும்,

51 தகனபலிபீடத்தையும், அதினுடைய

Digitized by Google

எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமனையையும், அபிஷேகம்பண்ணி,

உக அவைகள் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, அவைகளைப் பரிசுத்தமாக்குவாயாக; அவைகளைத் தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாயிருப்பது.

உஎ நீ ஆரோனையும் அவன் குமாரரையும் எமக்கு ஆசாரிய ஊழியம்செய்யும்படிக்கு அபிஷேகம்பண்ணி, அவர்களைப் பரிசுத்தமாக்குவாயாக.

உக இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: இது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்குப் பரிசுத்த அபிஷேக எண்ணெயாயிருப்பது.

உஉ அது மனிதனுடைய மாம்சத்தின்மேல் வார்க்கப்படவேண்டாம்; அவர்கள் அது செய்யப்பட்ட விட்டதற்கொத்தவிதமாகச் செய்யவும்வேண்டாம்; அது பரிசுத்தமானது; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக.

உக அதைப்போலொத்த தயிலத்தைக் கூட்டுகிறவனும், அதிலெடுத்து அந்நியனுடலின்மேல் வார்க்கிறவனும், தன் சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவனென்று சொல்லென்றார்.

உச ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ கந்தவர்க்கங்களாகிய வடிந்த வெள்ளைப்போளமும் குங்கிலியமும் அல்பான் பிஞ்ஞுமென்ற கந்தவர்க்கங்களையும் சுத்தமான குங்கிலியத்தையும் ஒன்றுக்கொன்று சரிஇடையாக வாங்கிக்கொண்டு,

உடி அதைத் தயிலக்காரன் வேலையாகப் பரிமளமேற்றி, தூப்புரவும் பரிசுத்தமுமான *தூபவர்க்கமாக்கி, *உ மோ.உஎ.உசு.

உசு அதிலே சிலவற்றை இடித்துப் பொடியாக்கி, நாம் உன்னைச் சந்திக்கப்போகிற ஆசரிப்பின் கூடாரத்திலிருக்கும் சாட்சிக்கு முன்பாக வைப்பாயாக; உங்களுக்கு அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

உஅ இந்தத் தூபவர்க்கத்தை நீ செய்கிற விட்டதற்கு ஒத்தவிதமாக நீங்கள் உங்களுக்குச் செய்யவேண்டாம், அது உனக்குக் கர்த்தருக்கென்று பரிசுத்தமாயிருப்பதாக.

உஆ அதைப்போலொத்ததை மோப்பதற்காகச் செய்கிறவன் தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகக்கடவன் என்றார்.

ஊக அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ இதோ நாம் யூதாவின் கோத்திரத்திலே ஊருடைய மகனை ஊரியின் குமாரன் பெத்சாலேயேலைப் பேர்சொல்லி அழைத்து,

ஈ விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுகிறதற்கும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்கிறதற்கும்,

ஊ இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கிறதற்கும், மரத்தில் கேர்த்தியான வேலைசெய்கிறதற்கும், சகலவித வேலையைப் பண்ணுகிறதற்கும்,

஋ ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலைக்கான வித்தையும் அவனுக்குண்டாக, அவனைப் பராபரனுடைய ஆவியினாலே நிரப்பினேம்.

஌ இதோ நாம் தாண் கோத்திரத்திலே அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப்பை அவனோடே கூட்டி, ஞானமான இருதயமுள்ள யாவருடைய இருதயத்திலும் ஞானத்தைக் கொடுத்தோம்; நாம் உனக்குக் கற்பித்ததை எல்லாம் அவர்கள் செய்வார்கள்.

ஐ ஆசரிப்பின் கூடாரத்தையும் சாட்சியின் பெட்டியையும் அதின்மேல் இருக்கும் கிருபாசனமூடியையும் கூடாரத்தினுடைய எல்லா முட்டுகளையும்,

ஒ மேசையையும் அதின் முட்டுகளையும்

Digitized by Google

சுத்தமான குத்துவிளக்கையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தூபபீடத்தையும்,

சூ தகனபலிபீடத்தையும் அதினுடைய எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும்,

ய ஆராதனையின் சீலைகளையும் ஆசாரிய ஊழியம் செய்கிறதற்கான ஆசாரியனாகிய ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும் அவன் குமாரரின் வஸ்திரங்களையும்,

யக அபிஷேகத்தைலத்தையும் பரிசுத்த ஸ்தலத்திற்கான சுகந்தவர்க்கங்களாகிய தூபவர்க்கத்தையும் அவர்கள் நாம் உனக்குக் கற்பித்தபடி எல்லாம் செய்வார்களென்றார்.

யஉ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

யஊ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நம்முடைய ஓய்வுநாள்களையே கைக்கொள்ளக்கடவீர்கள்; ஏனெனில் நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று நீங்கள் அறிவதற்கு அது உங்கள் தலைமுறை தலைமுறையாக நமக்கும் உங்களுக்கும் நடுவான அடையாளம்.

யச ஆகையால் ஓய்வுநாளைக் கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் அது உங்களுக்குப் பரிசுத்தமானது; அதைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அதிலே வேலை செய்கிற எந்த ஆத்துமாவும் தன் சனத்தின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்பதாக.

யடு ஆறுநாள் வேலை செய்யப்படுவதாக; ஏழாம் நாளோவெனில் வேலை ஒழிந்திருக்கும் ஓய்வுநாள்; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்; ஓய்வுநாளிலே வேலைசெய்கிறவன் எவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

யசு ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தலைமுறைகளில் ஓய்வுநாளை நித்திய உடம்படிக்கையாக ஆசரிக்கும்படிக்கு, அதைக் கைக்கொள்ளக்கடவர்கள்.

யஎ அது என்றைக்கும் நமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவான அடையாளம்; ஏனெனில் ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.

யஅ ¶ அவர் சீனாய்பர்வதத்திலே மோசேயோடே பேசித் தீர்ந்தபிற்பாடு, அவர் அவனுக்குப் பராபரனுடைய விரலினாலே எழுதப்பட்ட கற்பலகைகளாகிய சாட்சியின் இரண்டு பலகைகளைக் கொடுத்தார்.

ஊஉ. அதிகாரம்.

மோசே பர்வதத்திலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதைச் சனம் கண்டபொழுதோவெனில், சனம் ஆரோனண்டையிலே கூட்டமாகக் கூடி, அவனுடனே, நீர் எழுந்து, எங்கள்முன் நடந்துபோகிற தேவர்களை *எங்களுக்கு உண்டுபண்ணும்; ஏனென்றால் எங்களை எகிப்துதேசத்திலிருந்து எறிவரப்பண்ணின அந்த மோசே என்கிறவருக்கு என்ன சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள். *டு மோ. கூ. எ.

உ அப்பொழுது ஆரோன் அவர்களுடனே, உங்கள் பெண்சாதிகள் குமாரர் குமாரத்திகளுடைய காதுகளிலிருக்கிற பொன்கடுக்கன்களைக் கழற்றி, என்னண்டைக்குக் கொண்டுவாருங்கள் என்றான்.

ஈ அப்பொழுது சனமெல்லாம் தங்கள் காதுகளிலிருந்த பொன்கடுக்கன்களைக் கழற்றி, ஆரோனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

ச அவன் அவர்கள் கையிலே அதை வாங்கி, ஒரு எழுத்தாணியினாலே குறிபோட்டு, வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியை அதினால் உண்டுபண்ணினான்; அப்பொழுது அவர்கள், இஸ்ரவேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்திலிருந்து எறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்கள் என்றார்கள்.

Digitized by Google

டு ஆரோன் அதைக் கண்டு, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நாளைக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான்.

கூ மறுநாள் அவர்கள் அதிகாலமே எழுந்திருந்து, சர்வாங்க தகனபலிகளைப் பலியிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பிற்பாடு சனம் புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உளுக்காந்து, விளையாடுகிறதற்கும் எழுந்திருந்தார்கள்.

எ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: இறங்கிப் போ; ஏனெனில் நீ எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய சனம் தன்னைக் கெடுத்துவிட்டது.

அ நாம் தங்களுக்குக் கற்பித்த வழியைச் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட ஒரு கன்றுக்குட்டியைத் தங்களுக்குண்டாக்கி, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு, இஸ்ரவேலே இவைகள் உன்னை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின உன்னுடைய தேவர்கள் என்றார்களென்று சொல்லி,

கூ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதேதெனில், இந்தச் சனத்தைப் பார்த்தோம்; இதோ, அது கடினக்கழுத்துள்ள சனம்.

ல இப்பொழுதும் நாம் அவர்களை அழிக்கும்படிக்கு, நமது கோபம் அவர்களுக்கு விரோதமாக எரிய, நம்மை விட்டுவிடு; அப்பொழுது *உன்னைப் பெரிய சாதியாக்குவோம் என்றார். *ச மோ. ஐச. ஐஉ.

ஐக ¶ *ஆனால் மோசே தன் பராபரனாகிய கர்த்தருடைய முகத்தை நோக்கிக் கெஞ்சிச் சொன்னதாவது: கர்த்தாவே, தேவரீர் மகா பலத்தினாலும் வல்லமையான கையினாலும் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உம்முடைய சனத்திற்கு விரோதமாக உம்முடைய கோபம் எரிவானேன். *ச மோ. ஐச. ஐக.

ஐஉ அவர்களை மலைகளிலே கொன்றுபோடவும், அவர்களைப் பூமியின்மேல் இராதபடிக்கு நிர்மூலம்பண்ணவும், அவர்களைத் தீமைக்கென்றே புறப்படப்பண்ணினாரென்று எகிப்தியர் சொல்லுவானேன்? உம்முடைய கோபத்தின் உக்கிரத்தை விட்டுத் திரும்பி, உமது சனத்திற்குத் தீங்குசெய்யாதபடிக்குப் பரிதாபமாய் இரும்.

ஐக உம்முடைய ஊழியக்காரராகிய ஆபிரகாமையும் ஈசாக்கையும் இஸ்ரவேலையும் நினைத்தருளும்; உங்கள் வித்தை வானத்தின் நட்சத்திரங்கள் அத்தனையாகப் பெருகப்பண்ணி, நாம் சொன்ன இந்தத் தேசத்தை எல்லாம் உங்கள் வித்திற்கு, அதை என்றைக்கும் சுதந்தரிக்கும்படிக்குக் கொடுப்போமென்று உம்மைக்கொண்டு அவர்களுக்கு ஆணையிட்டு, அவர்களோடே சொன்னீரே என்றான்.

ஐச அப்பொழுது கர்த்தர் தமது சனத்திற்குச் செய்வோமென்று சொன்ன தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபப்பட்டார்.

ஐஎ ¶ அப்பொழுது மோசே திரும்பிக்கொண்டு பர்வதத்திலிருந்து இறங்கிப்போனான்; சாட்சியின் இரண்டு பலகைகள் அவன் கையிலிருந்தன; அவைகள் இருபுறங்களிலும் இந்தப்பக்கமும் அந்தப்பக்கமும் எழுதப்பட்ட பலகைகளாயிருந்தன.

ஐக *அந்தப் பலகைகள் பராபரனுடைய செய்கையும், அவைகளிலே பதிந்த எழுத்து பராபரனுடைய எழுத்துமாயிருந்தன. *உ மோ. கக. ஐஅ.

ஐஏ சனம் கெம்பீரத்திலே கூப்பிடுகிற சத்தத்தை *யோசுவா கேட்டு மோசேயோடே, யுத்தத்தின் இரைச்சல் பாளயத்தில் உண்டாயிருக்கின்றதென்றான். *உ மோ. உக. ஐக, ஐச.

ஐஅ அவனோவென்றால் அது செயித்தைக் கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்ல, முறிந்து கூப்பிடுகிறவர்களின் சத்தமும் அல்ல, பாடுகிறவர்களின் சத்தத்தை நான் கேட்கிறேனென்றான்.

ஐக அவன் பாளயத்திற்குச் சமீபித்து, கன்றுக்குட்டியையும் கூத்தையும் கண்

றபொழுது சம்பவித்ததேதெனில், மோசே கோபம் மூண்டவனாகி, தன் கையில் இருக்கிற பலகைகளைப் பர்வதத்தடியிலே எறிந்து உடைத்துப்போட்டு,

உல அவர்கள் உண்டுபண்ணின கன்றுக்குட்டியை எடுத்து, அக்கினியில் எரித்தப்போட்டு, அதைப் பொடியாகும்மட்டும் அரைத்து, * தண்ணீரின்மேல் தூவி, இஸ்ரவேல் புத்திரருக்குக் குடிக்கக்கொடுத்தான். *உ மோ. கூ. உக.

உக ¶ மோசே ஆரோனேடே, ஈ இந்தச் சனத்தின்மேலே பெரும் பாவத்தைச் சுமக்கப்பண்ண, அது உனக்கு என்ன செய்ததென்றான்.

உஉ அப்பொழுது ஆரோன் சொன்னதாவது: என் ஆண்டவனுக்குக் கோபம் மூளாதிருப்பதாக; இந்தச் சனத்தை நீர் அது பொல்லாததென்று அறிவீர்.

உஎ அவர்கள் என்னோடே, எங்கள் முன் நடந்தபோகிற தேவர்களை எங்களுக்கு உண்டுபண்ணும்; ஏனெனில் எங்களை எகிப்துதேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணின அந்த மோசே என்கிறவருக்கு என்ன சம்பவித்ததென்று அறியோம் என்றார்கள்.

உச அப்பொழுது நான் அவர்களோடே, எவர்களுக்குப் பொன் உடைமை உண்டோ, அவர்கள் அதைக் கழற்றி, எனக்குத் தரக்கடவர்கள் என்றேன்; அதை அக்கினியிலே போட்டேன்; அதனால் இந்தக் கன்றுக்குட்டி உண்டாயிற்றென்றான்.

உடு ¶ சனம் நிருவாணமானதென்றும், அதற்கு விரோதமாய் எழும்புகிறவர்களுக்கு முன்பாக அதற்கு இங்கிஷை வர ஆரோன் அதை நிருவாணப்படுத்தினான் என்றும் மோசே பார்த்து,

உஎ அவன் பானயத்தின் வாசலிலே நின்றுகொண்டு, எவர்கள் கர்த்தருடையவர்களோ அவர்கள் என்னைச் சேரக்கடவர்கள் என்றான்; அப்பொழுது இலேவியின் புத்திரரெல்லாரும் அவனண்டையிலே வந்து கூடினார்கள்.

உஏ அவர்களோடே அவன் சொன்னதாவது: நீங்கள் அவனவன் தன் பட்டயத்தைத் தன் அரையிலே கட்டிக்கொண்டு, பானயத்தில் வாசலுக்குவாசல் கடந்து திரிந்து, அவனவன் தன் சகோதரனையும் அவனவன் தன் சிநேகிதனையும் தனக்கடுத்த வனையும் கொன்றுபோடுங்களென்று இஸ்ரவேலின் பராபரனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

உஐ இலேவியின் புத்திரர் மோசே சொன்னபடி செய்தார்கள்; சனத்தில் அந்நாளிலே ஏறக்குறைய மூவாயிரம்பேர் விழுந்தார்கள்.

உக ஏனென்றால், கர்த்தர் இன்று உங்கள்மேல் ஆசீர்வாதத்தைக் கட்டளை இடும்படிக்கு, நீங்கள் இந்நாளிலே அவனவன் தன் மகனுக்கும் தன் சகோதரனுக்கும் விரோதமாயிருந்தபடியால், கர்த்தருக்கு உங்கள் கைகளை நிரப்புங்களென்று மோசே சொல்லியிருந்தான்.

உஙி ¶ மறுநாளிலே சம்பவித்ததேதெனில், மோசே சனத்துடனே, நீங்கள் கன பாதகமான பாவம் செய்தீர்கள்; இப்பொழுதும் நாம் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி அடையலாமோவென்று கர்த்தரண்டைக்குப் போய் ஏறுவேன் என்றான்.

ஙக அப்படியே மோசே கர்த்தரண்டைக்குத் திரும்பிச் சொன்னதாவது: ஐயோ, இந்தச் சனம் கன பாதகமான பாவம்செய்து, தங்களுக்குப் பொன்தேவர்களை உண்டாக்கினார்கள்.

ஙஉ இப்பொழுதும் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும்; இல்லாவிட்டால் என்னை நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலே இறுக்கிப்போடுமென்றான்.

ஙங அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: யார் எனக்கு விரோதமாய்ப் பாவம்செய்கிறானே அவனை எனது புஸ்தகத்திலே இறுக்கிப்போடுவோம்.

ஙச இப்பொழுதும் நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்திற்குச் சனத்தை

நமைத்துப்போ; இதோ நம்முடைய தூ தன் உனக்குமுன்பாக நடப்பான்; ஆனல் நாம் விசாரிக்கும் நாளிலே அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்திலே விசாரிப் போம் என்றார்.

நடு அப்படியே சனம் உண்டுபண்ணின தாகிய ஆரோனுடைய செய்கையான கன் றுக்குட்டியின் நிமித்தம் கர்த்தர் அவர்களை வாதித்தார்.

ரூரூ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீயும் எகிப்துதேசத்திலிருந்து நீ ஏறிவரப் பண்ணின சனமுமாய் இவ்விடத்தைவிட் டு, உன் வித்திற்குக் கொடுப்போமென்று நாம் ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக் கோபுக்கும் ஆணையிட்ட பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குப் போயேறுங்கள்.

உ நாம் ஒரு தூதனை உனக்குமுன்பாக அ னுப்பி, கானனியனையும், எமோரியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனை யும், எபூசியனையும் துரத்திவிடுவோம்.

ங ஆனல் வழியிலே நாம் உன்னை நிர்மூ லம்பண்ணுதபடிக்கு, நாம் உன் நடுவே டகக்தேரும்; ஏனெனில் நீங்கள் கடினக் கழுத்துள்ள சனமென்றார்.

ச ¶ தீங்கான இந்த வார்த்தையைச் சனம் கேட்டபொழுது, ஒருவரும் தங்கள் ஆப ரணங்களைப் போட்டுக்கொள்ளாமல் துக் கித்துக்கொண்டிருந்தார்கள்.

ஞ ஏனென்றால், நீங்கள் கடினக்கழுத் துள்ள சனம்; நாம் ஒரு நிமிஷத்திலே உன் நடுவிலே எழும்பினல் உன்னை நிர்மூலம் பண்ணுவோம்; இப்பொழுதும் நாம் உ னக்கு என்னசெய்யவேண்டுமென்று அறி யும்படிக்கு, நீ போட்டிருக்கிற உன் ஆப ரணங்களைக் கழற்றிப்போடென்று இஸ்ர வேல் புத்திரருக்குச் சொல்லென்பதை, கர்த்தர் மோசேயோடே சொல்லி இருந் தார்.

ட ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் ஓரேப் பர்வதத்திற்கு முன்பாகத் தங்கள் ஆப ரணங்களைக் கழற்றிப்போட்டார்கள்.

எ ¶ மோசே கூடாரத்தைப் பேர்த்து, அ தைப் புறம்பே பாளயத்திற்குத் தூரமாகப் போட்டுக்கொண்டு, அதை ஆசரிப்பின் கூடாரமென்றான்; ஆனதுகொண்டு கர்த்த ரைக் கேட்பவனெல்லாம் பாளயத்திற்குப் புறம்பான ஆசரிப்பின் கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போவான்.

அ மோசே கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போகும்பொழுது, சனமெல்லாம் எழுந்தி ருந்து, அவரவர் தம்தம் கூடாரத்தின் வா சல்படியில் நின்று, அவன் கூடாரத்திற்கு உட்படும்மட்டும், அவன் பிறகே பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

கூ ¶ மோசே கூடாரத்திற்குள் பிரவேசிக் கையில் மேகத்தூண் இறங்கி, கூடாரத் தின் வாசல்படியிலே நின்றது; அங்கே மோசேயோடே பேசினர்.

ய சனமெல்லாம் மேகத்தூணைக் கூடாரத் தின் வாசல்படியிலே நிற்கக் காணும்பொ ழுது, எழுந்திருந்து அவரவர் தங்கள் கூடா ரத்தின் வாசல்படியிலே பணிந்துகொள்ளு வார்கள்.

யக *கர்த்தர் மோசேயோடே முகமுக மாய் ஒருவன் தன் சிநேகிதனோடே பேசு கிறதுபோலப் பேசுவார்; பிற்பாடு இவன் பாளயத்திற்குத் திரும்பிவருவான்; ஆனல் நூனின் குமாரனாகிய யோசுவாவென்ற அ வன் வேலைக்காரனாகிய வாலிபன் ஆசரிப் பின் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருப் பான். *உ மோ. ரூ. ஆ.

யஉ ¶ மோசே கர்த்தரோடே சொன்னதா வது: இதோ தேவரீர் என்னோடே இந்தச் சனத்தைப்போய் ஏறப்பண்ணென்று சொ ன்னீர்; ஆனல் உன்னைப் பேர்சொல்லி அ றிந்திருக்கிறேமென்றும், நம்முடைய கண் களில் உனக்குக் கிருபை கிடைத்ததென் றும், தேவரீர் சொல்லியிருந்தும், யாரை என்னோடேகூட அனுப்புவீரென்பதை எ னக்கு அறிவிக்காதிருக்கிறீர்.

Digitized by Google

ஐஈ இப்பொழுதும் உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததேயானால், உம்முடைய வழிலய எனக்கு அறிவியும்; உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைக்கும்படியாக உம்மை நான் அறியட்டும்; இந்தச் சாதி உம்முடைய சனமென்று பாருமென்றான்.

ஐச அதற்கவர் நாம் உன்னை இளைப்பாறப் பண்ணும்படிக்கு, *நம்முடைய முகம் உனக்குமுன்பாக நடந்துபோம் என்றார். *யோவா. ஐச. கூ. கொலோ. க. ஐடி. எபி. கூ. ஈ.

ஐடி அப்பொழுது அவன் அவரோடே சொன்னதாவது: உம்முடைய முகம் நடந்துபோகாதிருந்தால் எங்களை இங்கேயிருந்து புறப்படப்பண்ணீராக.

ஐசு எனெனில் எனக்கும் உமது சனத்திற்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படலாம்; நீர் எங்களோடே நடந்துபோகிறதினாலே அல்லவோ, அப்படியே பூமியின்மீதுள்ள எல்லாச் சனத்திலும் நானும் உம்முடைய சனமும் விசேஷித்தவர்களென்று விளங்குமென்றான்.

ஐள ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே, நீ சொன்ன இந்த வார்த்தையின்படியேயும் செய்வோம்; எனெனில் நம்முடைய கண்களில் உனக்குக் கிருபை கிடைத்தது; உன்னைப் பேர்சொல்லி அறிந்திருக்கிறோம் என்றார்.

ஐஅ அப்பொழுது அவன் உம்முடைய மகிமையை எனக்குக் காண்பியுமென்றான்.

ஐக அதற்கு அவர், நாம் நம்முடைய தயை எல்லாம் உனக்கு முன்பாகக் கடக்கப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்குமுன்பாகக் கூறி, நாம் கிருபைவைத்தவன்மேல் கிருபையாயிருந்து, நாம் இரக்கம்வைத்தவன்மேல் இரக்கமாயிருப்போமென்று சொல்லி,

ஐஇ பின்னையும் நம்முடைய முகத்தைப் பார்க்கமாட்டாய்; எனெனில் ஒரு மனிதனும் நம்மைப் பார்த்து, உயிரோடிருக்கக் கூடாதென்றார்.

ஐஉ பின்னையும் கர்த்தர் சொன்னதாவது: இதோ, நம்மண்டையில் ஒரு இடம் இருக்கின்றது, அங்கே நீ கல்மலையில் நிற்பாயாக.

ஐஊ அப்பொழுது சம்பவிப்பதெதெனில். நம்முடைய மகிமை கடக்கும்போது, நாம் உன்னை அந்தக் கல்மலையின் வெடிப்பிலே வைத்து, நாம் கடந்துபோகும்மட்டும் நம்முடைய கரத்தினால் உன்னை மூடுவோம்.

ஐஎ பிற்பாடு நம்முடைய கரத்தை வாங்குவோம்; அப்பொழுது நமக்குப் பின்னாகப் பார்ப்பாய்; நம்முடைய முகமோ வென்றால், பார்க்கப்படக்கூடாதென்றார்.

ஈசா. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: முன்னினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள், நீ உடைத்துப்போட்ட முன்ன பலகைகளினிருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவோம்.

உ நீ விடியற்காலத்திற்கு ஆயத்தமாயிருந்து, காலமே சீனாய்பர்வதத்தில் ஏறி, அங்கே பர்வதத்தின் கொடுமுடியிலே நமக்குக் காத்திரில்.

ஈ உன்னோடேகூட ஒருவரும் ஏறவும், பர்வதமெங்கும் ஒருவரும் காணப்படவும் வேண்டாம்; இந்தப் பர்வதத்திற்கு எதிராக ஆடுமாடு மேயவும் வேண்டாமென்றார்.

ச ¶ அப்பொழுது மோசே முன்னினவைகளுக்கொத்த இரண்டு கற்பலகைகளை இழைத்து, அதிகாலமே எழுந்திருந்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே இரண்டு கற்பலகைகளைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு, சீனாய்பர்வதத்தில் ஏறினான்.

ஒ அப்பொழுது கர்த்தர் ஒரு மேகத்திலே இறங்கி, அங்கே அவனண்டையிலே நின்றுகொண்டு, கர்த்தருடைய நாமத்தைக் கூறினார்.

Digitized by Google

ஓ கர்த்தர் அவனுக்கு முன்பாகக் கடந்து

போகிறபொழுது, அவர் கூறினதாவது: அவர் கர்த்தர், அவர் கர்த்தர், *அவர் மனஉருக்கமும் இரக்கமும் நீடியசாந்தமும் மகாகிருபையும் உண்மையுமுள்ள பராபரன். *உ மோ. ஐச. ஐஎ, ஐஅ. சங். அசு. ஐடு: ஈசு. எ, அ: ஈசடு. அ. யோவா. உ. ஐக.

எ *அவர் ஆயிரம் தலைமுறைகளுக்குக் கிருபையைக் காக்கிறவர்; அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; அவர் குற்றமுள்ளவனைக் குற்றமற்றவனாக்கவொட்டாமல், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும் பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவரென்று கூறினார். * சங். ஈசு. கூ. மீகா. எ. ஐஅ, ஐசு.

அ மோசே தீவிரமாகத் தாழ்மட்டும் குனிந்து பணிந்துகொண்டு,

கூ ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததேயானால், ஆண்டவர் எங்கள் நடுவிலே நடந்துபோவாராக; ஏனெனில் அது கடினக்கழுத்தான சனம்; நீரோவெனில் எங்கள் அக்கிரமத்தையும் எங்கள் பாவத்தையும் மன்னித்து, எங்களைச் சுதந்தரித்துக்கொள்வீராக என்றான்.

ஐ ¶ அப்பொழுது அவர் சொன்னதாவது: இதோ, நாம் உடம்படிக்கைபண்ணுகிறோம்; பூமி எங்கும் எந்தச் சாதிகளிடத்திலும் சிருஷ்டிக்கப்படாதிருக்கிற அதிசயங்களை உன்னுடைய எல்லாச் சனத்திற்கும் முன்பாகச் செய்வோம்; நீ தங்கியிருக்கிற சனமெல்லாம் கர்த்தருடைய செய்கையைப் பார்க்கப் போம்; ஏனெனில் நாம் உன்னோடே இருந்து செய்யப்போகிறது பயங்கரமாயிருக்கும்.

ஈ இன்று நாம் உனக்குக் கற்பிக்கிறதையே கைக்கொள்; இதோ, எமோரியனையும், கானானியனையும், ஏத்தியனையும், பெரிசியனையும், ஏவியனையும், எபூசியனையும் உனக்குமுன்பாகத் துரத்திவிடுகிறோம்.

உ நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடி. உன் நடுவே கண்ணி ஆகாதபடிக்கு நீ அவர்களோடே உடம்படிக்கை பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாய் இரு.

ஊ அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடக்கடவீர்கள்.

ஏ ஏனெனில் அந்திய தேவனை நீ பணிந்துகொள்ளலாகாது; அதேனென்றால் கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவரென்பது; அவர் எரிச்சலுள்ள பராபரன்.

ஐ அந்தத் தேசத்தின் குடிகளோடே உடம்படிக்கைபண்ணுவாக; மற்றப்படி அவர்களுடைய தேவர்களின் பிறகாலே சோரம்போய், அவர்கள் தேவர்களுக்குப் பலியிடுவார்கள்; அவர்கள் உன்னை அழைக்கையில், நீ போய் அவர்கள் பலியிட்டதிலே புசித்து,

ஐஅ அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய்; அப்படியே அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களின் பிறகாலே சோரம்போகையில் உன் குமாரரையும் தங்கள் தேவர்களின் பிறகாலே சோரம்போகப்பண்ணுவார்கள்.

ஐஆ வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உனக்குண்டாக்காயாக.

ஐஅ ¶ நீ புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையைக் கைக்கொண்டு, நாம் உனக்குக் கற்பித்தபடி ஆபீப் மாதத்தின் நிட்டமான காலத்திலே, ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பாயாக; ஏனெனில் ஆபீப் மாதத்திலே எகிப்திலிருந்து புறப்பட்டாய்.

ஐகூ கர்ப்பம் திறந்து பிறக்கிற யாவும் உன் ஆடுமாடுகளின் மந்தையிலே தலையீற்றான ஆண் யாவும் நம்முடையவைகள்.

உஐ ஆனால் கழுதையின் தலையீற்றை ஒரு ஆட்டுக்குட்டியால் மீட்டுக்கொள்வாயாக; மீட்காயேயானால் அதின் தலையை வெட்டிப்போடக்கடவாய்; உன் பிள்ளைகளில்

Digitized by Google

முதல்பேறுனவைகளை எல்லாம் மீட்டுக் கொள்வாயாக; வெறுங்கையாய் நமக்கு முன்பாகக் காணப்படார்களாக.

உக ¶ ஆறுநாள் வேலைசெய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பாயாக; உழுகிற காலமானலும் அறுக்கிற காலமானலும் ஓய்ந்திருப்பாயாக.

உஉ ¶ கோதுமை அறுப்பின் முதல்பலனைச் செலுத்தும் ஏழு வாரங்களின் பண்டிகையையும் வருஷமுடிவிலே சேர்ப்பின் பண்டிகையையும் ஆசரிப்பாயாக.

உஙு ¶ வருஷத்தில் மூன்றுதரம் உன் ஆண் சாதி எல்லாம் இஸ்ரவேலின் பராபரனுயிருக்கிற கர்த்தராகிய ஆண்டவரின் சந்நிதிக்குமுன்பாகக் காணப்படக்கடவது.

உச ஏனெனில் நாம் புறச்சாதிகளை உனக்குமுன்பாகத் துரத்திவிட்டு, உன் எல்லைகளை விஸ்தாரமாக்குவோம்; நீ வருஷத்தில் மூன்றுதரம் உன் பராபரனுகிய கர்த்தரின் சந்நிதிக்குமுன்பாகக் காணப்படப் போயேறுகையில், ஒருவரும் உன் தேசத்தை இச்சிப்பதில்லை.

உடு ¶ புளித்தமா இருக்கும்போது, நமது பலியின் இரத்தத்தைப் பலியிடாயாக; பஸ்காப்பண்டிகையின் பலி விடியற்காலம்மட்டும் இராத்தங்கவும் வேண்டாம்.

உசு உன் சீர்மையின் முதல் விளைச்சலில் முந்தின கனியை உன் பராபரனுகிய கர்த்தரின் வீட்டிற்குக் கொண்டுவருவாயாக; வெள்ளாட்டுக்குட்டியை அதின் தாயின் பாலோடேகூடச் சமைக்காயாக என்றார்.

உஎ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயுடனே, இந்த வார்த்தைகளை எழுதிக்கொள்; ஏனெனில் இந்த வார்த்தைகளின்படியே உன்னோடும் இஸ்ரவேலோடும் உடம்படிக்கை பண்ணினேனென்றார்.

உஅ அவன் அங்கே கர்த்தரோடே இரவும் பகலும் நாற்பதுநான் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இருந்தான்; அவர் பத்து வசனங்களாகிய உடம்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினார்.

உக ¶ மோசே சாட்சியின் இரண்டு பலகைகளைத் தன் கையிலே பிடித்து, சீநாய் பர்வதத்திலிருந்து இறங்குகிறபொழுது, அவர் தன்னோடே பேசினதினாலே தன் முகத்தின் தோல் பிரகாசிக்கின்றதென்கிறதை அவன் அறியாதிருந்தான்.

உஙு ஆரோனும் இஸ்ரவேலின் எல்லாப் புத்திரரும் மோசேயைப் பார்க்கும்பொழுது, இதோ, அவன் முகத்தின் தோல் பிரகாசித்தது; ஆகையால் அவனண்டைக்குச் சேரப் பயந்தார்கள்.

உச ஆனால் மோசே அவர்களைக் கூப்பிட்டான்; அப்பொழுது ஆரோனும் சபையிலுள்ள எல்லாப் பிரபுக்களும் அவனண்டைக்குத் திரும்பினார்கள்; மோசே அவர்களோடே பேசினான்.

உஎ அதற்குப் பிறகு இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் அவனண்டையில் சேர்ந்தார்கள்; அப்பொழுது அவன் சீநாய்பர்வதத்திலே கர்த்தர் தன்னோடே பேசினவைகளை எல்லாம் அவர்களுக்குக் கற்பித்தான்.

உஅ மோசே அவர்களோடே பேசி * முடியும்மட்டும், தன் முகத்தின்மேல் முக்காடு போட்டிருந்தான். *2 கொரி. உ. எ.

உக ஆனால் மோசே கர்த்தரின் சந்நிதியிலே அவரோடே பேசும்படிக்கு உள்பிரவேசிக்கையில், முக்காட்டை வாங்கிப் புறப்படும்மட்டும் போடாதிருந்தான்; அவன் புறப்பட்டுவந்து, தனக்குக் கற்பிக்கப்பட்டதை இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லும்பொழுதோவெனில்,

உகு இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை அதின் தோல் பிரகாசிக்கிறதென்று பார்த்தார்கள், ஆகையால் மோசே அவரோடே பேசும்படிக்கு உள்பிரவேசிக்கும்மட்டும், முக்காட்டைத் திரும்பத் தன் முகத்தின்மேலே போடுவான்.

உஙு. அதிகாரம்.

மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபையை எல்லாம் கூட்டி, அவர்களோடே

சொன்னதாவது: கர்த்தர் செய்யக் கற்பித்ததேதெனில்,

உ ஆறுநாளுக்குள்ளே உன் வேலையைச் செய்வாயாக; ஏழாம் நாளோவென்றால் உங்களுக்குப் பரிசுத்தமாயிருப்பதாக; அது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வுநாள்; அதிலே வேலைசெய்கிறவனெல்லாம் கொலையுண்ணக்கடவன்.

உ ஓய்வுநாளில் உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் நெருப்பு மூட்டாதிருப்பீர்களாகவென்று கற்பித்தாரென்றான்.

ச ¶ பின்னையும் மோசே இஸ்ரவேல் புத்திரரின் சபையோடெல்லாம் சொன்னதாவது: கர்த்தர் கற்பித்ததேதெனில்,

இ *உங்களுக்குண்டானதிலே கர்த்தருக்கு ஒரு காணிக்கையை எடுத்துச் செலுத்துங்கள்; மனப்பூர்வமுள்ளவனெல்லாம் அதைக் கொண்டுவரக்கடவன்; கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கை என்னவெனில், பொன்னும், வெள்ளியும், வெண்கலமும், *உ மோ. உடு. உ.

ஈ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், மெல்லிய பஞ்சுநூலும், வெள்ளாட்டுமயிரும்,

எ வெப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களும், தகசுகளின்தோல்களும், சித்திம் மரவகளும்,

அ விளக்குக்கு எண்ணெயும், அபிஷேகத்தெண்ணெய்க்குப் பரிமளவர்க்கங்களும், தூபம் காட்டுதலுக்குச் சுகந்த வர்க்கங்களும்,

கூ ஆசாரிய சால்லைவக்கும் மார்ப்பதக்கத்திற்கும் கோமேதகக் கற்களும் பதித்துலைவக்கும் இரத்தினங்களும்தானே.

ம உங்களில் ஞானமான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கற்பித்தவைகளை எல்லாம் செய்வார்களாக.

மக வாசஸ்தலத்தையும், அதின் கூடாரத்தையும், அதின் மூடியையும், அதின் தறிகளையும், அதின் பலகைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும்,

மஉ பெட்டியையும், அதின் வாகைகளையும், கிருபாசனமான மூடியையும், மறைவின் திரையையும்,

மஈ மேசையையும், அதின் வாகைகளையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், சமுகத்து அப்பங்களையும்,

மச வெளிச்சம்காட்டும் குத்துவிளக்கையும், அதின் முட்டுகளையும், அதின் விளக்குகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,

மடு தூபபீடத்தையும், அதின் வாகைகளையும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசலுக்கு மறைவையும்,

மஊ தகனபலிபீடத்தையும், அதின் வெண்கலச் சல்லடையையும், அதின் வாகைகளையும், அதினுடைய எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும்,

மஎ பிரகாரத்தின் வெளியாடைகளையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும், பிரகாரத்து வாசலின் மறைவையும்,

மஅ வாசஸ்தலத்தின் முளைக் கூச்சுகளையும், பிரகாரத்தின் முளைக் கூச்சுகளையும், அவைகளின் கயிறுகளையும்.

மகூ பரிசுத்தஸ்தலத்திலே செய்கிற ஆராதனையின் சிலைகளையும், ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும், அவர்கள் செய்வார்களாக என்றருளென்று சொன்னான்.

உம ¶ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரின் சபை எல்லாம் மோசேயைவிட்டுப் புறப்பட்டது.

உக எவர்களை அவர்கள் இருதயம் எழுப்பி, அவர்கள் ஆவி பூர்வமாகிற்றோ, அவர்களெல்லாரும் வந்து, ஆசரிப்புக் கூடாரத்தின் வேலைக்கும் அதின் சகல ஊழியத்திற்கும் பரிசுத்த வஸ்திரங்களுக்கும் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

உஉ கர்த்தருக்குப் பொன்னை அசைவாட்

Digitized by Google

டும் காணிக்கையாகச் செலுத்துகிற புருஷரும் பெண்சாதிகளுமான மனப்பூர்வமுள்ள அனைவரும் வந்து, சரடுகள், கடுக்கன்கள், மோதிரங்கள், காப்புகள்முதலான சகலவித பொன்பணிகளையும் கொண்டுவந்தார்கள்.

22 தங்களிடத்தில் இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும், வெள்ளாட்டுமயிரையும், சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களையும், தகசுகளின் தோல்களையும் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

23 வெள்ளியையும் வெண்கலத்தையும் கொடுக்கத்தக்க யாவரும் அவைகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள்; வேலையிலே சகலவித இனியைக்குமான சித்திம் மரங்களைத் தங்களிடத்தில் கண்டுபிடித்த யாவரும் கொண்டுவந்தார்கள்.

24 ஞானமான இருதயமுள்ள ஸ்திரிகளெல்லாரும் தங்கள் கைகளினாலே நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும், இரத்தாம்பரநூலையும், சிவப்புநூலையும், மெல்லிய பஞ்சுநூலையும் கொண்டுவந்தார்கள்.

25 எந்த ஸ்திரிகளை அவர்கள் இருதயம் ஞானமாகச்செய்ய எழுப்பிற்றோ, அவர்கள் வெள்ளாட்டுமயிரை நூற்றார்கள்.

26 பிரபுக்கள் ஆசாரிய சால்வைக்கும் மார்ப்பதக்கத்திற்கும் என்ற கோமேதகக் கல்லுகளையும், பதித்துவைக்கும் இரத்தினங்களையும்,

27 பரிமள வர்க்கங்களையும், விளக்கெண்ணெயையும், அபிஷேகத்தெண்ணெய்க்கும் சுகந்தவர்க்கங்களின் தூபங்காட்டுதலுக்கும் வேண்டியவைகளையும் கொண்டுவந்தார்கள்.

28 செய்கிறதற்குக் கர்த்தர் மோசேயைக் கொண்டு கற்பித்த எல்லா வேலைக்கும் கொண்டுவர, இஸ்ரவேல் புத்திரரில் தங்கள் இருதயத்தால் மனப்பூர்வமாக்கப்பட்ட எல்லாப் புருஷரும் ஸ்திரிகளும் கர்த்தருக்குக் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

29 மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னதாவது: பாருங்கள், கர்த்தர் *யூதாவின் கோத்திரத்தில் ஊருடைய மகனாகிய ஊரியின் குமாரன் பெத்சாலெயேலைப் பேர்சொல்லி அழைத்து, *2 மோ. 31. 2.

30 அவன் விநோதமான வேலைகளைச் செய்யவும், பொன்னிலும் வெள்ளியிலும் வெண்கலத்திலும் வேலைசெய்யவும்.

31 இரத்தினங்களை முத்திரை வெட்டாக வெட்டிப் பதித்துவைக்கவும், மரத்திலே தச்சுவேலைசெய்து சகல விநோதமான வேலையைப் பண்ணவும்,

32 அவனுக்கு ஞானமும் உணர்வும் அறிவும் சகலவித வேலையின் வித்தையும் உண்டாக அவனைப் பராபரன் தம்முடைய ஆவியினாலே நிரப்பினார்.

33 அவன் இருதயத்திலும், தாண் கோத்திர அகிசமாகின் குமாரனாகிய அகோலியாபின் இருதயத்திலும், போதிக்கிறதற்கான வரத்தையும் கொடுத்தார்.

34 சகலவித தொழிலின் சூட்சமவேலையையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணுகிற சித்திரத்தையல் வேலையையும், நெய்கிற எல்லா வேலையையும் செய்ய, அவர்களை இருதயத்தின் ஞானத்தினாலே நிரப்பினார்; அவர்கள் சகலவித வேலையைச் செய்த விநோதமான வேலைகளை யோசித்துப் பண்ணுவார்கள் என்றார்.

36 அதிகாரம்.

1 அப்பொழுது பெத்சாலெயேலும், அகோலியாவும், பரிசுத்தவேலையின் எல்லாக் கிரியையும் கர்த்தர் கற்பித்தபடி எல்லாம்செய்ய அறியும்படிக்கு, கர்த்தர் ஞானமும் உணர்வும்கொடுத்த ஞானமான இருதயமுள்ள அனைவரும், வேலைக்குட்பட்டார்கள்.

2 எனெனில் மோசே பெத்சாலெயேலையும், அகோலியாவையும், கர்த்தர் ஞானம்

கொடுத்தநினுலே அந்த வேலையைச் செய்யச் சேருகிறதற்கு, தங்கள் இருதயத்தால் எழுப்பப்பட்ட ஞானமுள்ள இருதயத்தாராகிய எல்லாரையும் வரவழைத்தான்.

உ அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்த வேலையின் கிரியைக்குக் கொண்டுவந்ததாகிய மோசேக்குமுன்பாக இருந்த காணிக்கையை எல்லாம் அதைச் செய்யும்படிக்கு ஒப்புவித்துக்கொண்டார்கள்; இவர்களோ வென்றால் இன்னம் காலையில் மனப்பூர்வமான காணிக்கைகளை அவனண்டைக்குக் கொண்டுவந்தார்கள்.

சஅ அப்பொழுது பரிசுத்தவேலையையெல்லாம் செய்கிற சகல ஞானிகளும் அவரவர் தாங்கள் செய்கிற வேலையின் காரியமாய் வந்து,

ஐ மோசேயுடனே, கர்த்தர் செய்யக் கற்பித்த கிரியையின் வேலைக்கு வேண்டிய தைப்பார்க்கிலும் சனம் மிச்சமாய்க் கொண்டுவருகின்றதென்றார்கள்.

ஊ அப்பொழுது மோசே இனிப் புருஷரும் ஸ்திரீகளும் பரிசுத்த காணிக்கைக்கென்று வேலைசெய்யார்களாகவென்று பாளயத்திலே கூறக் கட்டளையிட்டான்; அப்படியே சனம் கொண்டுவருகிறது நிறுத்தப்பட்டது.

எ ஏனெனில் செய்யப்போகிற எல்லா வேலைக்கும் போந்த தளவாடம் அதிகமாயிருந்தது.

ஆ அ வேலையைச் செய்கிறவர்களில் ஞானமான இருதயமுள்ள அனைவரும் *வாசல்தலத்தை உண்டாக்கினார்கள்; அதற்குத் திரித்த மெல்லிய பஞ்சுநூலும், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், நெய்தலான விநோத வேலையாகிய கேரூபீன்களுமுள்ள பத்துச் சமுக்காளங்களைப் பண்ணுவித்தான். *உ மோ. உஊ. க.

ஈ ஒவ்வொரு சமுக்காளம் இருபத்தெட்டு முழ நீளமும், நான்குமுழ அகலமும், சமுக்காளங்களெல்லாம் ஒரே அளவுமாயிருந்தன.

உ ஐந்து சமுக்காளங்களை ஒன்றோடொன்று இணைத்து, மற்ற ஐந்து சமுக்காளங்களையும் ஒன்றோடொன்று இணைத்தான்.

ஊ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்திலே இளநீலநூலால் ஐம்பது காதுகளை உண்டுபண்ணி, அப்படியே இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் கடைஓரத்திலும் உண்டுபண்ணினான்.

ஐஉ காதுகள் ஒன்றுக்கொன்று எதிராகச் சேர்ந்தவைகளாயிருந்தன.

ஐஊ ஐம்பது பொன்தூறுகளையும் பண்ணி, அவைகளால் சமுக்காளங்களை ஏக வாசல்தலமாகப் போகும்படிக்கு, ஒன்றுக்கொன்று இணைத்துப்போட்டான்.

ஐச ¶ வாசல்தலத்தின்மேல் கூடாரமாக ஆட்டுமயிரினால் நெய்த பதினொரு சமுக்காளங்களையும் பண்ணினான்.

ஐடி ஒவ்வொரு சமுக்கானம் முப்பது முழ நீளமும், நான்குமுழ அகலமும், பதினொரு சமுக்கானங்களும் ஒரே அளவுமாயிருந்தன.

ஐஊ ஐந்து சமுக்காளங்களை ஒன்றாகவும் ஆறு சமுக்காளங்களை ஒன்றாகவும் இணைத்து,

ஐஎ இணைக்கப்பட்ட ஒரு சமுக்காளத்தின் கடைஓரத்தில் ஐம்பது காதுகளையும், இணைக்கப்பட்ட மற்றச் சமுக்காளத்தின் ஓரத்தில் ஐம்பது காதுகளையும்,உண்டாக்கி,

ஐஅ கூடாரத்தை ஒன்றாய் இணைத்துவிடும்படி வெண்கலத் தூறடுகளை உண்டாக்கினான்.

ஐகூ ¶ சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களினாலே கூடாரத்திற்கு ஒரு மூடியையும் அதின்மேலே தகசுத்தோல்களினாலே ஒரு மூடியையும் உண்டுபண்ணினான்.

உஐ ¶ நிமிர்ந்துநிற்கிற பலகைகளையும் வாசல்தலத்திற்குச் சீத்திம் மரங்களாலே செப்பனிட்டான்.

உக ஒவ்வொரு பலகை பத்துமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமாயிருந்தது.

உஉ ஒன்றுக்கொன்று எதிரே இசைவான

ஒழுங்காயிருக்கிற இரண்டு முனைகள் ஒவ்வொரு பலகைக்கிருந்தன; இப்படி வாசஸ்தலத்தின் பலகைகளுக்கெல்லாம் செய்தான்.

உஈ வாசஸ்தலத்திற்காகச் செப்பனிட்ட பலகைகளில் இருபதைத் தெற்கே தென்திசைக்கு எதிராக நிறுத்தி,

உச அந்த இருபது பலகைகளின்கீழே நாற்பது வெள்ளிக்கால்களை, ஒவ்வொரு பலகையின்கீழ் அதின் இரண்டு முனைகளுக்கான இரண்டு கால்களாக, உண்டுபண்ணிவைத்து,

உடு வாசஸ்தலத்தின் வடக்கான மறுபக்கத்திலும் இருபது பலகைகளை நிறுத்தி,

உசு அவைகளின் நாற்பது வெள்ளிக்கால்களையும் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டுகால்களாகப் பண்ணுவித்தான்.

உஎ வாசஸ்தலத்தின் மேல்ப்புறமாக ஆறு பலகைகளை நிறுத்தி,

உஅ வாசஸ்தலத்தின் இரண்டு பக்கக்கோடிகளுக்கு இரண்டு பலகைகளையும் செப்பனிட்டான்.

உக இவைகள் தாழுத்துவக்கி இரண்டு பக்கங்களை ஏகமாய்ப் பிடித்து, உயர ஒரே சட்டமாய் இசைத்திருந்தன; இரண்டு கோடிகளிலுமிருக்கும் இரண்டையும் அப்படிச்செய்தான்.

ஊ அப்படியே பலகைகள் எட்டும் அவைகளுடைய வெள்ளிக்கால்கள் ஒவ்வொரு பலகையின்கீழ் இரண்டிரண்டு காலாகப் பதினறுமாயிருந்தன.

ஊக ¶ சித்திம் மரங்களால் வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பான்களையும்,

ஊஉ வாசஸ்தலத்தின் மறுபக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பான்களையும், வாசஸ்தலத்தின் மேல்ப்புறமான பின்பக்கத்துப் பலகைகளுக்கு ஐந்து தாழ்ப்பான்களையும் பண்ணி,

ஊங நடுத் தாழ்ப்பாளைப். பலகைகளின் மையத்திலே ஒருமுனைதுவக்கி மறுமுனைமட்டும் பாய்ச்சப்படுகிறதாக்கினான்.

ஊச பலகைகளைப் பொன் தகட்டால் மூடி, தாழ்ப்பான்களின் இடங்களாகிய அவைகளின் வளையங்களைப் பொன்னிலுலே பண்ணி, தாழ்ப்பான்களைப் பொன்தகட்டால் மூடினான்.

ஊடு ¶ இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலும், நெய்தலின் விநோத வேலையாகிய கேரூபீன்களுமுள்ள நிலையை உண்டுபண்ணி,

ஊசு அதற்குச் சித்திம் மரமான நான்கு தூண்களைச் செப்பனிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி, அவைகளின் வளைவாணிகளைப் பொன்னிலுலே பண்ணி, அவைகளுக்கு நான்கு வெள்ளிக்கால்களை வார்ப்பித்தான்.

ஊஎ ¶ கூடாரத்தின் வாசலுக்கு இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலும், சித்திரத்தையல்வேலையுமான ஒரு மறைவையும்,

ஊஅ அதின் ஐந்து தூண்களையும், அவைகளின் வளைவாணிகளையும் உண்டாக்கி, அவைகளின் குமிழ்களையும், அதின் வளையங்களையும், பொன்தகட்டால் மூடினான்; அவைகளுக்கு வார்ப்பித்த ஐந்து கால்களோவெனில் வெண்கலம்.

ஊஎ. அதிகாரம்.

பெத்சாலெயேல் சித்திம் மரங்களால் *பெட்டியை உண்டுபண்ணினான்; அதின் நீளம் இரண்டரை முழமும், அதின் அகலம் ஒன்றரை முழமும், அதின் உயரம் ஒன்றரை முழமுமானது. *உ மோ. உடு. ஏ.

உ அதை உள்ளும் புறம்பும் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்நிரணையை உண்டாக்கி,

ஈ அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கோடிகளிலே, ஒரு பக்கத்தில் இரண்டு வளையங்களும் மறுபக்கத்தில் இரண்டு வளை

Digitized by Google

பங்களும் இருக்கும்படிக்குத் தைத்து,

உ சித்திம் மரங்களான வாளைகளைச் செப்பணிட்டு, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

ஒ அந்த வாளைகளால் பெட்டியைச் சுமக்கும்படிக்கு, அவைகளைப் பெட்டியின் பக்கங்களிலுள்ள வளையங்களில் பாய்ச்சினான்.

ஓ ¶ சுத்தப் பொன்னிலுலே *கிருபாசன மான மூடியையும் பண்ணினான்; அது இரண்டலாமுழ நீளமும் ஒன்றரைமுழ அகலமுமானது. *உ மோ. உடு. ஐ.

எ பொன்ன இரண்டு கேருபீன்களையும் அடிக்கப்பட்ட பொன்னிலுலே உண்டாக்கி, கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களிலே,

அ ஒரே கேருபீன் இந்தப்புறத்திலோரத்திலும், மற்றக் கேருபீன் அந்தப்புறத்திலோரத்திலும் இருக்கும்படி பண்ணினான்; அந்தக் கேருபீன்களைக் கிருபாசனமான மூடியின் இரண்டோரங்களில் அதிலிருந்து உண்டானவைகளாக இருக்கப்பண்ணினான்.

கூ அந்தக் கேருபீன்கள் தங்கள் செட்டைகளை உயர விரித்து, தங்கள் செட்டைகளாலே கிருபாசனமான மூடியை மூடினவைகளும் ஒன்றுக்கொன்று எதிர்முகங்களுமாயிருந்தன; கேருபீன்களின் முகங்கள் கிருபாசனமான மூடியை நோக்கிக் கொண்டிருந்தன.

ஐ ¶ சித்திம் மரங்களாலே *மேசையையும் பண்ணினான்; அது இரண்டுமுழ நீளமும் ஒரு முழ அகலமும் ஒன்றரை முழ உயரமுமானது. *உ மோ. உடு. உக.

ஐக அதைச் சுத்தப் பொன்தகட்டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்சரிகையை உண்டாக்கி,

ஐஉ சுற்றிலும் அதற்கு நான்கு விரல்கடை புன சட்டத்தையும் சுற்றிலும் அதின் சட்டத்திற்கும் பொன்சரிகையை உண்டுபண்ணி,

ஐந அதற்கு நான்கு பொன்வளையங்களை வார்ப்பித்து, அவைகளை அதின் நான்கு கால்களுக்கிருக்கும் நான்கு கோடிகளிலே தைத்தான்.

ஐச அந்த வளையங்கள் மேசையைச் சுமக்கும் வாளைகளின் இடங்களாயிருக்கும்படிக்குச் சட்டத்துக்கெதிரே இருக்கப்பண்ணினான்.

ஐடி மேசையைச் சுமக்கும் அந்த வாளைகளைச் சித்திம் மரங்களாலே பண்ணி, அவைகளைப் பொன்தகட்டால் மூடி,

ஐசு மேசையின்மேலிருக்கும் மூட்டுகளாகிய அதின் கலங்களையும், அதின் தூபக்கிண்ணிகளையும், அதின் கரகங்களையும், மூடுகிறதற்கான அதின் தட்டுகளையும், சுத்தப் பொன்னிலுலே உண்டாக்கினான்.

ஐள ¶ *அடிக்கப்பட்ட சுத்தப் பொன்னிலுலே குத்துவிளக்கையும் உண்டாக்கினான்; அதின் தண்டும் அதின் கினைகளும் அதின் மொக்குகளும் அதின் மாதளம்பழங்களும் அதின் பூக்களும் அதிலிருந்து புறப்படுகிறவைகளாயிருந்தன. *உமோ.உடு.ஙக.

ஐஅ குத்துவிளக்கின் பக்கங்களிலிருந்து ஆறு கினைகள், மூன்று அதின் ஒரு பக்கத்திலும் மூன்று அதின் மறு பக்கத்திலுமிருந்து புறப்பட்டன.

ஐகூ ஒவ்வொரு கினையிலே வாதுமைக் கொட்டைகளின் சாயலான மூன்று மொக்குகளும் ஒரு மாதளம்பழமும் ஒரு பூவும் இருந்தன; குத்துவிளக்கிலிருந்து புறப்படுகிற ஆறு கினைகளிலும் அப்படியிருந்தன.

உஐ விளக்குத்தண்டிலோவென்றால், வாதுமைக்கொட்டைகளின் சாயலான நான்கு மொக்குகளும் அதின் மாதளம்பழங்களும் அதின் பூக்களுமிருந்தன.

உக அதிலிருந்து புறப்படுகிற இரண்டு கினைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் வேறே இரண்டு கினைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் குறை இரண்டு கினைகளின்கீழ் ஒரு மாதளம்பழமும் இருந்தன; விளக்குத்தண்டிலிருந்து புறப்படுகிற ஆறு கினைகளுக்கும் அப்படி இருந்தன.

Digitized by Google

உஉ அவைகளின் மாதளம்பழங்களும் அ

வைகளின் கிளைகளும் அதிலிருந்து உண்டா னவைகளாக இருந்தன; எல்லாம் அடிக் கப்பட்ட சுத்தப் பொன்னுகிய ஒரு தண் டாயிருந்தது.

உஈ அதின் ஏழு விளக்குகளையும் அதின் கத்தரிகளையும் விளக்கணைக்கிற எத்தனங்க ளையும் சுத்தப் பொன்னிலுலே உண்டாக்கி னுன்.

உச அதை அதினுடைய எல்லா முன்திரு களோடுங்கூட ஒரு தாலந்து சுத்தப் பொ ன்னிலுலே உண்டுபண்ணினுன்.

உடு ¶ சித்திம் மரங்களினுலே *தூபபீடத் தையும் உண்டாக்கினுன்; அது ஒரு முழ னீளமும் ஒரு முழ அகலமுமாகிய சதுர மும், இரண்டு முழ உயரமும், அதின் கொம்புகள் அதனுடே, ஒரு தண்டுமாய் இருந்தன. *உ மோ. ஈஅ. க.

உஎ அதை எல்லாம் அதின் மேல்பலகை யையும், அதின் சுற்றுப்பக்கங்களையும், அ தின் கொம்புகளையும், சுத்தப் பொன்தகட் டால் மூடி, சுற்றிலும் அதற்குப் பொன்தி ரணையை உண்டுபண்ணி,

உஏ அதின் திரணையின்கீழ் அதின் இரண்டு பக்கங்களிலிருக்கும் இரண்டு கோடிகளில் இவ்விரண்டு பொன்வளையங்களை அதைச்சு மக்கும் வாசைகளினிடங்களாகத் தைத்து,

உஐ சித்திம் மரங்களால் அந்த வாசைகளைச் செய்து, அவைகளைப் பொன்தகட்டால் மூடினுன்.

உஙு பரிசுத்த அபிஷேகத்தெண்ணெயை யும் சுத்தமான சுகந்தங்களின் தூபவர்க் கத்தையும் தயிலக்காரன் வேலையாக உண் டுபண்ணினுன்.

ஈஅ. அதிகாரம்.

சித்திம் மரங்களால் *தகனபலிபீடத்தை யும் உண்டாக்கினுன்; அது ஐந்தமுழ நீள மும் ஐந்தமுழ அகலமுமான சதுரமும் மூ ன்றுமுழ உயரமுமானது. *உ மோ.உஎ.க.

உ அதின் நான்கு கோடிகள்மேல் அதனே டு ஏகமாயிருக்கிற அதின் நான்கு கொம்பு களையும் உண்டாக்கி, அதை வெண்கலத் தகட்டால் மூடி,

ஈ அந்தப் பீடத்தின் சகலமுட்டுகளாகிய செப்புச்சட்டிகளையும் சாம்பலெடுக்கும் கரண்டிகளையும் கலங்களையும் முள்ளுதடு களையும் கலசங்களையும் உண்டாக்கினுன்; அதின் முட்டுகளெல்லாம் வெண்கலத்தி னுலே பண்ணினுன்.

ச வலைபோலிருக்கிற ஒரு வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்திற்கு உண்டா க்கி, அதைத் தாழ அதின் சுற்றிற்குக் கீழ்ப் புறமாக அதின் பாதிமட்டும் வரவைத்து,

டு வாசைகளின் இடங்களாகிய நான்கு வ ளையங்களை வார்ப்பித்து, வெண்கலச் சல் லடையின் நான்கு முனைகளில் வைத்து,

சு சித்திம் மரங்களால் வாசைகளைப் பண் ணி, அவைகளை வெண்கலத் தகட்டால் மூடி,

எ அவைகளைப் பலிபீடத்தின் பக்கங்களி லிருக்கிற வளையங்களிலே, அதை அவை களாலே சுமக்கும்படிக்குப் பாய்ச்சினுன்; அதைப் பலகைகளினுலே குழாயாக்கி னுன்.

அ ¶ *ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலில் கும்பு கும்பாய் வந்து காணிக்கை செலுத் துகிற ஸ்திரிகளின் கண்ணாடிகளாலே, வெண்கலத்தொட்டியையும் அதின் வெண் கலப் புரிமணையையும் உண்டாக்கினுன்; †பிரகாரத்தையும் உண்டுபண்ணினுன்.

*உ மோ. ஈஐ. ஐஅ. †உ மோ. உஎ. கூ.

கூ ¶ தெற்கே தென்பக்கத்திற்கு எதிராயி ருக்கிற நிறித்த மெல்லிய பஞ்சுநூலால் நெய்த பிரகாரத்தின் வெளியாடைகள் நூ று முழமும்,

ஐ அவைகளின் தூண்கள் இருபது; அ வைகளின் இருபது கால்கள் வெண்கல மும், தூண்களின் வளைவாணிகளும் அவை களின் வளையங்களும் வெள்ளியுமானது.

ஒக வடபக்கத்திற்கு நூறானவைகளும் நூ று முழமும், அவைகளின் தூண்கள் இருபது; இவைகளின் இருபது கால்கள்

வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளியுமானது.

உஉ மேல்ப்பக்கத்திற்கு எதிரான வெளியாடைகள் ஐம்பது முழமானது; அவைகளின் தூண்கள் பத்து; இவைகளின் கால்களும் பத்து; தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளி.

உக சூரியன் உதிக்கிற கீழ்ப்பக்கத்திற்கு எதிரானவைகளும் ஐம்பது முழம்.

உச அவ்கே ஒருபுறத்து வெளியாடைகள் பதினைந்து முழமானது; அவைகளின் தூண்கள் மூன்றும் இவைகளின் கால்கள் மூன்றும்தானே.

உடு பிரகாரவாசலின் இந்தப்பக்கத்துக்குச்சரியாக அந்தப்பக்கத்திலும் மறுபுறத்து வெளியாடைகள் பதினைந்து முழமானது; அவைகளின் தூண்கள் மூன்றும் இவைகளின் கால்கள் மூன்றும்தானே.

உசு சுற்றிலும் பிரகாரத்தின் வெளியாடைகளெல்லாம் மெல்லிய பஞ்சுநூலால் நெய்தது.

உஎ தூண்களின் கால்கள் வெண்கலமும், தூண்களின் வளைவாணிகளும் வளையங்களும் வெள்ளியுமானது; அவைகளின் குமிழ்கள் வெள்ளித்தகட்டால் மூடப்பட்டதும், பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளி வளையங்கள் போடப்பட்டவைகளுமாயிருந்தன.

உஅ *பிரகாரவாசலின் மறைவோவென்றால், இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலும், திரித்த மெல்லிய பஞ்சுநூலுமாகிய சித்திரத்தையல்வேலையாயிருந்தது; அதின் நீளம் இருபது முழமும், அகலமாகிய அதின் உயர்வு பிரகாரத்தின் வெளியாடைகளுக்குச் சரிசமானமாய் ஐந்து முழமுமானது. *உ மோ. உஎ. உசு.

உக அவைகளின் தூண்கள் நான்கு; அவைகளின் நான்கு கால்கள் வெண்கலமும், அவைகளின் வளைவாணிகள் வெள்ளியும், அவைகளின் குமிழ்கள் மூடப்பட்ட தகடும், அவைகளின் வளையங்களும் வெள்ளியுமாயிருந்தன.

உச பிரகாரத்திற்கும் பிரகாரத்திற்கும் சுற்றிலுமிருந்த எல்லா முளைக்கூச்சுகளும் வெண்கலம்.

உஎ ¶ சாட்சியின் வாசல்தலத்திற்குச் சென்றவைகளின்கணக்கோவென்றால், அவைகள் மோசேயின் சொல்படி ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான இத்தமாரின் கையிலே லேவியரின் ஊழியத்திற்கென்று எண்ணப்பட்டது.

உஅ யூதா கோத்திரத்து ஊரின் மகனாகிய ஊரியின் குமாரன் பெத்சாலேயேல் கர்த்தர் மோசேக்குக் கற்பித்ததை எல்லாம் பண்ணினான்.

உக அவனோடேகூடத் தாண்கோத்திரத்து அகிசாமாகின் குமாரனாகிய அகோலியாப் கூட்சவேலைசெய்கிற தொழிலாளியும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், மெல்லிய பஞ்சுநூலாலும், சித்திரத்தையல் வேலைசெய்கிறவனுமாயிருந்தான்.

உச ¶ பரிசுத்தஸ்தலத்தின் வேலைக்கெல்லாம் அசைவாட்டும் காணிக்கையாகக் கொடுக்கப்பட்டு, செலவான பொன்னெல்லாம் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாலே இருபத்தொன்பது தாலந்தும் எழுநூற்று முப்பது சேக்கல் நிறையுமாயிருந்தன.

உடு ¶ சபையில் எண்ணப்பட்டவர்களின் வெள்ளி பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலால் நூறுதாலந்தும், ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலுமாயிருந்தது.

உசு அதேதெனில் எண்ணப்படுகிறவர்களின் கணக்கிலே வந்த இருபது வயது முதல்கொண்டு மேல்தரமான அறுநூற்று மூவாயிரத்தைந்நூற்றைம்பதுபேர்களில் ஒவ்வொரு தலைக்காகப் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாலே அரைச் சேக்கல் விழுக்காடு சேர்ந்தது.

உஎ வெள்ளியில் நூறுதாலந்து பரிசுத்தஸ்தலத்தின் கால்களையும் திரையின் கால்களையும் வார்ப்பிக்கிறதற்குச் செலவாயிற்று;

Digitized by Google

காலுக்கு ஒரு தாலந்து விழுக்காடு நூறு கால்களுக்கு நூறு தாலந்துதானே.

உஅ ஆலும் அந்த ஆயிரத்தெழுநூற்றெழுபத்தைந்து சேக்கலாலே தூண்களுக்கு வணவாணிகளைப் பண்ணி, அவைகளின் குமிழ்களைத் தகடுகளால் மூடி, அவைகளுக்கு வளையங்களை உண்டாக்கினான்.

உஈ அசைவாட்டும் காணிக்கையாகச் செலுத்தப்பட்ட வெண்கலமோவெனில், எழுபது தாலந்தும் இரண்டாயிரத்தநாநூறு சேக்கல் நிறையுமாயிருந்தது.

உஉ அதினாலே ஆசரிப்புக்கூடாரவாசல் மறைவின் கால்களையும் வெண்கலப் பலிபீடத்தையும் அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும் பலிபீடத்தின் சகல முட்டுகளையும்,

ஊக சுற்றிலும் இருக்கிற பிரகாரத்தின் கால்களையும் பிரகாரவாசல் மறைவின் கால்களையும் வாசஸ்தலத்தின் சகல முளைக்கூச்சுகளையும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் சகல முளைக்கூச்சுகளையும் உண்டுபண்ணினான்.

ஈகூ. அதிகாரம்.

*இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், அவர்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஊழியஞ்செய்கிறதற்கு வேண்டிய சீலைகளையும், ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள். *உ மோ. உஅ. க.

உ ஆசரிய சால்வையையும் பொன்னிழையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

ஈ பொன்னை இளநீலநூலுக்கும், இரத்தாம்பரநூலுக்கும், சிவப்புநூலுக்கும், மெல்லிய பஞ்சுநூலுக்கும் நடுவே விநோதமாய் நெய்யும்படிக்கு, அதின் தகடுகளை வளர்த்தினார்கள், அவைகளை நூல்களாக அறுத்தான்.

ஊ இரண்டு தோளின்மேலும் அதை அதின் இரண்டு முனைகளாலே சேர்த்தார்கள்; அப்படியே இணைக்கப்பட்டிருந்தது.

ஏ அதின்மேல் அதிலேடே எகத்தண்டாயிருக்கிற விநோதமான கச்சை, அந்த வேலையாகப் பொன்னிழையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி பண்ணப்பட்டது.

ஐ முத்திரைகள் வெட்டப்படுகிற வேலையாக இஸ்ரவேல் புத்திரரின் நாமங்களைக் கோமேதகக் கல்லுகளில் வெட்டி, சுற்றிலுமிருக்கிற பொன்னில் இலைகளைப் பதிக்கவைகள் ஆக்கினார்கள்.

எ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகளை இஸ்ரவேல் புத்திரருக்காக நினைப்புக் கற்களாக ஆசாரிய சால்வையிலுடைய தோள்களின்மேலே வைத்தான்..

அ ஆசாரிய சால்வையின்வேலைக்கொத்த விநோதவேலையாக மார்ப்பதக்கத்தையும். பொன்னிழையும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும் பண்ணினான்.

கூ அந்த மார்ப்பதக்கத்தைச் சதுரமும் இரட்டையும் ஒருசாண் நீளமும் ஒருசாண் அகலமுமாக்கி,

ஐ அதிலே இரத்தினக் கற்களை நான்கு பத்தி நிறையப் பதித்தார்கள்; முதலாம் பத்தி கெம்பும், புஷ்பராகமும், மரகதமும்.

ஐக இரண்டாம் பத்தி செவப்புக்கல்லும். நீலக்கல்லும், வயிரமும்,

ஐஉ மூன்றும் பத்தி பதமராகமும், வயிடூரியமும், அமெதீஸ்தும்,

ஐஊ நான்காம் பத்தி தர்சீஸ் இரத்தினமும். கோமேதகமும், யஸ்பியுமானது; அவைகள் தங்களிடங்களிலே சுற்றும் பொன்னில் பதிக்கப்பட்டிருந்தன.

ஐச இந்தக் கற்கள் இஸ்ரவேல் புத்திரர் நாமங்களின்படியே பன்னிரண்டும் அவர்களுடைய நாமங்களுள்ளவைகளுமாயிருந்தன; பன்னிரண்டு கோத்திரங்களில் ஒவ்வொன்றின் நாமம் ஒவ்வொன்றில் முத்திரை வெட்டாய் வெட்டி இருந்தது.

மடுமார்ப்பதக்கத்திற்சென்றுசரிபாதியளவுகளும் முடிச்சுக்குத்திகள் வேலையுமான சரப்பளிகளையும் சுத்தப் பொன்னிழையே பண்ணி,

அசு இரண்டு பொன் வளையங்களையும் இரண்டு பொன் மோதிரங்களையும் பண்ணி, இந்த இரண்டு மோதிரங்களை மார்ப்பதக்கத்தின் இரண்டு முனைகளில் வைத்து,

அஎ பொன்னான அந்த இரண்டு முடிச்சுக்குத்திகளை மார்ப்பதக்கத்தின் முனைகளிலிருக்கிற இரண்டு மோதிரங்களில் மாட்டி,

அஅ இரண்டு முடிச்சுக்குத்திகளின் இரண்டு தனிகளை ஆசாரிய சால்வையினுடைய தோள்களின்மேல் அதின் முன்புறத்திலிருக்கிற அந்த இரண்டு வளையங்களில் மாட்டிவிட்டார்கள்.

அகூ பின்னையும் இரண்டு பொன்மோதிரங்களைப்பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையின் கீழ்ப்புறத்திற்கு எதிரான மார்ப்பதக்கத்தின் மற்ற இரண்டு முனைகளில் அதின் ஓரத்திற்குள்ளாக வைத்து,

அடி வேறே இரண்டு பொன்வளையங்களையும் பண்ணி, அவைகளை ஆசாரிய சால்வையினுடைய முன்புறத்தின் இரண்டு கீழ்ப்பக்கங்களில் அதின் இணைப்புக்கு எதிராகவும், ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாகவும் வைத்து,

அக மார்ப்பதக்கம் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சைக்கு மேலாக இருக்கும்படிக்கும், ஆசாரிய சால்வையிலிருந்து விட்டுப்போகாதபடிக்கும், அதை அதின் மோதிரங்களால் ஆசாரிய சால்வையின் மோதிரங்களோடே இளநீலமான கயிற்றினாலே பராபரன் மோசேக்குக் கற்பித்தபடியே கட்டினார்கள்.

அஉ ஆசாரிய சால்வையின் கீழிருக்கும் அங்கியையோவென்றால், முழுவதும் இளநீலநூலால் நெய்தான்.

அஊ அங்கியின் நடுவில் மார்க்கவசத்தின் வாய்க்கொப்பான அதின் வாயும் அது கிழியாதபடிக்குச் சுற்றிலும் அதற்கான ஓரமுமிருந்தன.

உச அங்கியின்கீழ் ஓரங்களிலே தொங்கத் திரித்த இளநீலநூலும், இரத்தாம்பரநூலும், சிவப்புநூலுமான வேலையாக மாதளம் பழங்களைப் பண்ணி,

உடி சுத்தப் பொன்னிழையே மணிகளையும் பண்ணி, அந்த மணிகளை அங்கியின் ஓரங்களில் சுற்றிலும் மாதளம்பழங்களின் நடுவே தொங்கவைத்தார்கள்.

உசு ஆராதனைசெய்ய அங்கியின் ஓரங்களிலே சுற்றிலும் ஒரு மணியும் ஒரு மாதளம் பழமுமாகக் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே தொங்கி இருக்கத்தானே.

உள ¶ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சுநூல் நெய்தலாக உள் சட்டைகளையும்,

உஅ பாகையையும், அலங்காரமான குல்லாக்களையும், நிரித்த மெல்லியநூல் நெய்தலாகச் சணல்நூல் சல்லடங்களையும்,

உசு நிரித்த மெல்லிய பஞ்சுநூலாலும், இளநீலநூலாலும், இரத்தாம்பரநூலாலும், சிவப்புநூலாலும், சித்திரத்தையல் வேலையாக நடுக்கட்டையும், கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே பண்ணினார்கள்.

உவ ¶ *சுத்தப் பொன்னிழையே பரிசுத்த இரீடமென்ற பட்டத்தையும் பண்ணி, அதிலே கர்த்தருக்கும் பரிசுத்தம் என்பதை முத்திரை வெட்டாக வெட்டி, *உ மோ. உசு. உசு, உஅ.

உக அதைப் பாகையில் உயரக்கட்டும்படிக்கு, இளநீலமான கயிற்றினாலே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கோத்தார்கள்.

உஉ இப்படியே ஆசரிப்பின் கூடாரமென்ற வாசஸ்தலத்தின் வேலையெல்லாம் முடிந்தது; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியெல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்திருந்தார்கள்.

உஊ ¶ பிற்பாடு வாசஸ்தலத்தை மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; கூடாரத்தையும், அதினுடைய எல்லாமுட்டுகளையும், அதின் தறடுகளையும், அதின் பல

Digitized by Google

கைகளையும், அதின் தாழ்ப்பாள்களையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும்,

ஈச சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோல்களின் மூடியையும், தகசுத்தோல்களின் மூடியையும், மறைவின் திரையையும்,

ஈடு சாட்சியின் பெட்டியையும், அதின் வாரைகளையும், கிருபாசனமான மூடியையும்,

ஈசு மேசையையும், அதின் எல்லா முட்டுகளையும், சமுகத்தப்பங்களையும்,

ஈஎ சுத்தமான குத்துவிளக்கையும், வரிசையாய் ஆயத்தப்பட்ட அதின் விளக்குகளையும், அதின் எல்லா முட்டுகளையும், வெளிச்சத்திற்கு எண்ணெயையும்,

ஈஅ பொன்பீடத்தையும், அபிஷேகத்தெண்ணெயையும், சுகந்தங்களின் தூபவர்க்கத்தையும், வாசஸ்தலத்தின் வாசல் மறைவையும்,

ஈகூ வெண்கலப் பலிபீடத்தையும், அதற்கிருக்கிற வெண்கலச் சல்லடையையும், அதின் வாரைகளையும், அதின் எல்லா முட்டுகளையும், தொட்டியையும், அதின் புரிமணையையும்,

சுய பிரகாரத்தின் வெளியாடைகளையும், அதின் தூண்களையும், அதின் கால்களையும், பிரகாரத்து வாசல் மறைவையும், அதின் கயிறுகளையும், அதின் முளைக்கூச்சுகளையும், ஆசரிப்புக் கூடாரமான வாசஸ்தலத்தின் வேலைக்கடுத்த எல்லா முட்டுகளையும்,

சக பரிசுத்த ஸ்தலத்திலே செய்யும் ஆராதனைக்கடுத்த சீலைகளையும், ஆசாரிய ஊழியம் செய்கிற ஆரோனின் பரிசுத்த வஸ்திரங்களையும், அவன் குமாரரின் வஸ்திரங்களையும் தானே.

சஉ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் சகல வேலையையும் செய்திருந்தார்கள்.

சஈ மோசே எல்லாக் கிரியையையும் பார்த்தான்; இதோ கர்த்தர் கற்பித்தபடியே அதைச் செய்திருந்தார்கள். ஆகையால் மோசே அவர்களை ஆசீர்வதித்தான்.

சுய. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ஈ முதலாம் மாதம் முதல் தேதியிலே ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை எடுப்பித்து,

ஈ அதிலே சாட்சியின் பெட்டியை வைத்து, பெட்டியைத் திரையினால் மறைத்து.

ச மேசையைக் கொண்டுவந்து, அதின் முஸ்திதை அடுக்கிவைத்து, குத்துவிளக்கைக் கொண்டுவந்து, அதின் விளக்குகளை ஏற்றி,

டு பொன்தூபபீடத்தைச் சாட்சியின் பெட்டிக்கு முன்பாக வைத்து, வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைக்கக் கடவாய்.

சு பிற்பாடு ஈ தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமானவாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாக வைத்து,

எ தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, அதிலே தண்ணீர் வார்த்து,

அ சுற்றிலும் பிரகாரத்தை நிறுத்தி, பிரகார வாசல் மறைவைத் தூக்கிவைத்து,

கூ அபிஷேகத்தெண்ணெயை எடுத்து, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, அதை அதின் முட்டுகளோடெல்லாம் பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தமாய் இருக்கும்.

ஐ தகனபலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, அதைப்பரிசுத்தமாக்கக்கடவாய்; அப்பொழுது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான பலிபீடமாய் இருக்கும்.

ஐக தொட்டியையும் அதின் புரிமணையையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கக் கடவாய்.

ஐஉ பிற்பாடு ஈ ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குச் சேரப்பண்ணி, அவர்களைத் தண்ணீரிலே கழுவி,

ம உ ஆரோனுக்குப் பரிசுத்த வஸ்திரங்களை உடுத்தி, நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவனை அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கி,

ம ச அவன் குமாரரையும் சேரப்பண்ணி, அவர்களுக்குச் சட்டைகளை உடுத்தி,

ம டு அவர்கள் நமக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு அவர்களை, அவர்கள் தகப்பனை அபிஷேகம்பண்ணினபடி, அபிஷேகம் பண்ணக்கடவாய்; அவர்களுடைய அபிஷேகம் அவர்களுக்கு அவர்களுடைய தலைமுறைகளில் நித்திய ஆசாரியபட்டத்திற்கென்று உண்டாயிருப்பதாக என்றார்.

ம ஈ ¶ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி எல்லாம் மோசே செய்தான்.

ம எ சம்பவித்ததேதென்றால், இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல்தேதியிலே வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டது.

ம ஏ அதேதென்றால் மோசே கூடாரத்தை எடுப்பித்தான்; அவன் அதின் கால்களை வைத்து, அதின் பலகைகளை நிறுத்தி, அதின் தாழ்ப்பாள்களைப் பாய்ச்சி, அதின் தூண்களை நிறுத்தி,

ம ஐ கூடாரத்தை வாசஸ்தலத்தின்மேல் விரித்து, கூடாரத்தின் மூடியை உயர அதின் மீதில் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி போட்டான்.

ம ஒ ¶ அவன் சாட்சியை எடுத்து, அதைப் பெட்டியிலே வைத்து, வாகைகளைப் பெட்டியிலே பாய்ச்சி, கிருபாசனமான மூடியை உயரப் பெட்டியின்மீதில் வைத்து,

ம ஓ பெட்டியை வாசஸ்தலத்திலே கொண்டுவந்து, மறைவின் திரையைத் தூக்கிவைத்து, சாட்சியின் பெட்டியைக் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடி மறைத்தான்.

ம ஔ ¶ பிற்பாடு அவன் மேசையை ஆசரிப்பின் கூடாரத்திலே வாசஸ்தலத்தின் வடபுறமாய்த் திரைக்குப் புறம்பாக வைத்து,

ம ஃ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் கர்த்தருக்கு முன்பாக அப்பத்தை வரிசையாக அடுக்கிவைத்தான்.

ம க ¶ பிற்பாடு அவன் குத்துவிளக்கை ஆசரிப்பின் கூடாரத்தில் மேசைக்கு எதிராக வாசஸ்தலத்தின் தென்புறத்திலே வைத்து,

ம உ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே விளக்குகளைக் கர்த்தருக்கு முன்பாக ஏற்றினான்.

ம ங ¶ பிற்பாடு அவன் பொன்பீடத்தை ஆசரிப்பின் கூடாரத்தில் திரைக்கு முன்பாக வைத்து,

ம ச கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அதின்மேல் சுகந்தவர்க்கத்தினாலே தூபம் காட்டினான்.

ம ஞ ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைத்து,

ம ட தகனபலிபீடத்தை ஆசரிப்புக்கூடாரமான வாசஸ்தலத்தின் வாசலுக்கு முன்பாகவைத்து, அதின்மேலே சர்வாங்கதகனபலியையும், காணிக்கையையும் கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே செலுத்தினான்.

ம ண ¶ அவன் தொட்டியை ஆசரிப்புக் கூடாரத்திற்கும் பலிபீடத்திற்கும் நடுவே வைத்து, கழுவுகிறதற்கு அதிலே தண்ணீர் வார்த்தான்.

ம த அவ்விடத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளையும் தங்கள் கால்களையும் கழுவினார்கள்.

ம ந அவர்கள் ஆசரிப்பின் கூடாரத்திற்கு உட்பிரவேசிக்கிறபொழுதும், பலிபீடத்தண்டையில் சேருகிறபொழுதும், அவர்கள் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே கழுவிக்கொள்ளவேண்டியது.

ம ப ¶ பிற்பாடு அவன் வாசஸ்தலத்தையும் பலிபீடத்தையும் சுற்றிலும் பிராகாரத்தை நிறுத்தி, பிராகாரத்தின் வாசல் மறைவைத் தூக்கிவைத்தான்; இப்படியே மோசே கிரியையை முடித்தான்.

ம ம ¶ அப்பொழுது *ஒரு மேகம் ஆசரிப்பின் கூடாரத்தை மூடி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

*ச மோ. கூ. ஐடு. க இரா. ஆ. ஐ.

ஙஇ ஆசரிப்பின் கூடாரத்திற்குள் பிரவேசிக்க மோசேக்குக் கூடாதிருந்தது; ஏனெனில் மேகம் அதின்மேலே தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று.

ஙஈ மேகம் வாசஸ்தலத்திலிருந்து எழும்புறபொழுதுதானே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பயணங்களுக்கெல்லாம் புறப்படுவார்கள்.

ஙஉ மேகம் எழும்பாதிருந்தபோதில், அவர்கள் அது எழும்பும் நாள்மட்டும் பயணம்பண்ணாதிருப்பார்கள்.

ஙஊ அதேதெனில் இஸ்ரவேல் வீட்டாருடைய எல்லாப் பயணங்களிலும் அவர்கள் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகப் பகலில் வாசஸ்தலத்தின்மேலே கர்த்தருடைய மேகம் இருந்தது, இரவிலோவென்றால், அக்கினி அதில் இருந்தது.

மோசே எழுதின

மூன்றாம் ஆகமம்.

க. அதிகாரம்.

கர்த்தர் ஆசரிப்பின் கூடாரத்திலிருந்து மோசேயைக் கூப்பிட்டு அவனோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதென்றால், உங்களில் ஒரு மனிதன் கர்த்தருக்குப் பலியைச் செலுத்தப்போனால், மாட்டுமந்தையிலும் ஆட்டுமந்தையிலுமுள்ள மிருகங்களில் எடுத்து, உங்கள் காணிக்கைகளைச் செலுத்துவீர்களாக.

ஙக அவன் செலுத்துவது மாட்டுமந்தையில் எடுக்கிற சர்வாங்கதகனபலியானால், அவன் பழுதற்ற காளையைச் செலுத்துவானாக; கர்த்தரின் சந்நிதியிலே தன்மேலே பிரியம்வர, அவன் அதை *ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலுக்குக் கொண்டுவந்து, *இ மோ. ஐஉ. ஐஈ, ஐச.

ச அது தன் பாவநிவிர்த்திக்கென்று அங்கிகரிக்கப்படும்படிக்குத் தன் கையை அதினுடைய தலையின்மேல் வைத்து,

ஞ கர்த்தருக்கு முன்பாகக் காளையின் குரல்வளையை அறுக்கக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைக் கொண்டுவந்து, அதை ஆசரிப்புக் கூடாரத்தின் வாசலிலிருக்கிற பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

ஞ பிற்பாடு அவன் தகனபலியைத் தோலுரித்து, அதை அதின் சந்துசந்தாகத் துண்டித்துப்போடுவானாக.

ஞ அப்பொழுது ஆசாரியனாகிய ஆரோனின் குமாரர் பலிபீடத்தின்மேலே அக்கினியைப் போட்டு, அக்கினியின்மேலே கட்டைகளை அடுக்கி,

ஞ பிற்பாடு அவன் குமாரராகிய அந்த ஆசாரியர்கள் துண்டங்களையும் தலையையும் கொழுப்பையும் பலிபீடத்தின்மேல் அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவர்கள்.

ஞ அதின் குடல்களையும் அதின் தொடைகளையும் அவன் தண்ணீரிலே கழுவுவானாக; அவைகளை எல்லாம் ஆசாரியன் பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியாகக் கொளுத்திவிடக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

ஙக அவன் ஆட்டுமந்தையிலுள்ள ஆடுக

விலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் எடுத்து, சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போகிறவனேயாகில், அவன் பழுதற்ற கடாவைக் கொண்டுவந்து,

4 கர்த்தருக்கு முன்பாகப் பலிபீடத்தின் வடபுறத்திலே அதின் சிரசைவைத்து அறுக்கக்கடவன்; அப்பொழுது ஆரோனின் குமாராகிய ஆசாரியர்கள் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

5 பிற்பாடு அவன் அதை அதின் சந்து சந்தாகத் துண்டித்து, அதின் தலையையும் அதின் கொழுப்பையும் கூடவைப்பாகுக; அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேல் இருக்கிற கட்டைகளின்மீதில் அடுக்கிவைக்கக்கடவன்.

6 குடல்களையும் தொடைகளையும் அவன் தண்ணீரிலுலே கழுவுவானாக; அவைகளை எல்லாம் ஆசாரியன் கொண்டுவந்து, பலிபீடத்தின்மேலே கொளுத்திவிடக்கடவன், அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

7 அவன் பறவைகளில் எடுத்து, கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியைச் செலுத்தப் போகிறவனேயாகில், காட்டுப்புறாக்களிலாகிலும் புறாக்குஞ்சுகளிலாகிலும் எடுத்தச் செலுத்தக்கடவன்.

8 அதை ஆசாரியன் பலிபீடத்தண்டையில் கொண்டுவந்து, அதின் தலையைக் கிள்ளிப் பிடுங்கி, பலிபீடத்திலே கொளுத்திவிட்டு, அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின் சுவரிலே விழுவிட்டு,

9 அதின் இளைப்பையை அதின் இறகுகளோடும்கூட வாங்கி, அதைப் பலிபீடத்தண்டையிலே கிழக்கே சாம்பலிருக்கிற இடத்திலே போட்டு,

10 பிற்பாடு அதை அதின் செட்டைகளுக்குள்ளே இரண்டாக்காமல் பிளப்பாகுக; பிற்பாடு ஆசாரியன் அதைப் பலிபீடத்தின்மேலே அக்கினியின்மேலிருக்கிற கட்டைகளின்மீதில் கொளுத்திப்போடக்கடவன்; அது சர்வாங்கதகனபலி; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

உ. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கர்த்தருக்குக் காணிக்கையான படைப்பைச் செலுத்துவதுண்டானால், அவன் படைப்பு மெல்லியமாவாயிருப்பதாக; அவன் அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம்போட்டு,

2 அதை ஆரோனின் குமாரரான ஆசாரியர்களண்டைக்குக் கொண்டுவருவானாக; அப்பொழுது ஆசாரியன் அந்த மாவிலும் எண்ணெயிலும் ஒரு கைப்பிடி நிறைய எல்லாக் குங்குலிகத்தோடுங்கூட எடுத்து, நினைப்புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

3 காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரனாயும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

4 அடுப்பிலே சுட்ட காணிக்கையான படைப்பைச் செலுத்தப் போகிறவனேயாகில், அது எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவின் புளிப்பில்லாத அதிரசங்களும் எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளுமாய் இருப்பதாக.

5 தட்டின்மேல் சுட்ட காணிக்கையேயானால், அது எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத மெல்லிய மாவினுடையதாய் இருப்பதாக.

6 அதைத் துண்டுகளாகப் பிட்டு, அதின்மேல் எண்ணெய் வார்ப்பாயாக; அது ஒரு காணிக்கை.

7 படைப்பது சட்டியிலே செய்யப்படுகிற காணிக்கையேயானால், அது எண்ணெயிலே மெல்லிய மாவினுலே செய்யப்படுவதாக.

8 இப்படிச் செய்யப்பட்ட காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக;

Digitized by Google

அது ஆசாரியனண்டையில் சேர்ந்தபொழுது, அவன் அதைப் பலிபீடத்திற்குக் கொண்டுபோய்,

கூ நிவேதிப்புக்கான பங்கைக் காணிக்கையிலிருந்து எறெடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

ம காணிக்கையில் மீதியானதோவென்றால், ஆரோனையும் அவன் குமாரரையும் சேரக்கடவது; கர்த்தருடைய தகனங்களில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

மக ¶ கர்த்தருக்குச் செலுத்தும் ஒரு காணிக்கையும் உப்பினதாகச் செய்யப்படாதிருப்பதாக; ஏனெனில் புளித்த மாவுள்ளதொன்றையும் தேனுள்ளதொன்றையும் கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தீர்களாக.

மஉ முதல் கனிகளின் படைப்பாக, அவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தலாம்; ஆனால் பலிபீடத்தின்மேல் அவைகள் ஆற்றுகிற வாசனையாக ஏற்றப்படவேண்டாம்.

மஊ ¶ உன் காணிக்கையாகிற எந்தப் படைப்பும், *உப்பிலால் சாரம் ஏற்றப்படுவதாக; உன் காணிக்கையிலே உன் பராபரனுடைய உடம்படிக்கையின் உப்பைக் குறைய ஒட்டாமல், நீ படைப்பதிலே எல்லாம் உப்பைச் செலுத்தக்கடவாய்.
*மாற். கூ. சகூ. கொலோ. ச. சு.

மச நீ முதல் பலன்களின் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறதுண்டானால், பச்சையான நிறைந்த கதிர்களை நெருப்பிலே சுட்டு உரிர்த்து, இப்படியே உன் முன்னபலன்களின் காணிக்கையைக் கொண்டுவந்து,

மடி அதின்மேல் எண்ணெய் வார்த்து, அதின்மீதில் குங்குலிகம் போடுவாயாக; அது ஒரு காணிக்கை.

மசு பிற்பாடு ஆசாரியன் உரிர்க்கப்பட்டதிலும் எண்ணெயிலும் நிவேதிப்புக்கான பங்கை, அதினுடைய எல்லாக் குங்குலிகத்தோடும்கூட எடுத்துக் கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகனம்.

கூ. அதிகாரம்.

அவன் செலுத்துவது சமாதானபலியானால், அப்பொழுது அதை மாட்டுமந்தையில் எடுத்துச் செலுத்தப் போனாலேயாகில், அவன் அது ஆண் ஆனாலும் சரி, பெண் ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

உ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக அதின் குரல்வளையை அறுப்பாராக; அப்பொழுது ஆரோனின் குமாராகிய ஆசாரியர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

ஊ பிற்பாடு சமாதானபலியிலே குடல்களை மூடிய கொழுப்பையும், குடல்களின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

ச இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கும் கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்தவாரூக.

ஙி அதை ஆரோனின் குமாரர் பலிபீடத்திலே, அக்கினியின்மேலுள்ள கட்டைகளின்மேலே போட்டிருக்கும் சர்வாங்கதகன பலியின்மீதில் போட்டு, கொளுத்தக்கடவர்கள்; அது கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகும் தகனம்.

சு ¶ அவன் ஆட்டுமந்தையில் எடுத்து, கர்த்தருக்குச் சமாதானபலியைச் செலுத்தப் போனாலேயாகில், அப்பொழுது அது ஆண்ஆனாலும் பெண்ஆனாலும் சரி, பழுதற்றிருக்கிறதைச் செலுத்தவாரூக.

எ ஆட்டைச் செலுத்தவேண்டுமென்றால், அவன் அதைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து,

ஏ அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பா

Digitized by Google

ளுக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

ரு பிற்பாடு அவன் சமாதான பலியிலே அதின் கொழுப்பையும், நடு எலும்பிலே பிடுக்கின முழு வாலையும், குடல்களைமூடிய கொழுப்பையும், அவைகளின்மேல் இருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

ச இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

டக அதை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது கர்த்தருக்கான தகன ஆகாரம்.

டஉ ¶ அவன் செலுத்துவது வெள்ளாடாயிருந்ததேயானால், அவன் அதைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து,

டங அதினுடைய தலையின்மேல் தன் கையை வைத்து, ஆசரிப்பின் கூடாரத்திற்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பாளுக; அப்பொழுது ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளிக்கக்கடவர்கள்.

டச அதிலே அவன் குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

டஙு இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேல் இருக்கிற சவ்வையும் பிடுங்கி, கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்துவானாக.

டசு அவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; அது ஆற்றுகிற வாசனையாகும் தகன ஆகாரம்; எல்லாக் கொழுப்பும் கர்த்தருடையது.

டஎ *கொழுப்பும் இரத்தமும் என்னப்பட்டதொன்றையும் நீங்கள் புசிக்கவேண்டாமென்பது, உங்கள் வாசல்தலங்கள் எங்குமுள்ள உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாயிருப்பதென்று சொல்லென்றார். *ரு மோ.எ.உரு,உஎ: டீஎ.டீ,டீக.

சு. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ஈ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் தாமாகக் கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றைத் தப்பிதத்திலாலே மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணினால், அறியவேண்டியதாவது:

ரு அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் சனத்தைக் குற்றத்திற்குள்ளாக்கிப் பாவம் செய்தால், அவன் செய்த பாவத்தின்நிமித்தம், கர்த்தருக்குப் பாவம்போக்கும் பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு காளையைச் செலுத்தி,

ச அதை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலிலே கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவந்து, அதினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, கர்த்தருக்கு முன்பாக அதின் குரல்வளையை அறுப்பானாக.

டு அப்பொழுது அபிஷேகம் பண்ணப்பட்ட ஆசாரியன் காளையருதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, அதை ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

சு தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகப் பரிசுத்தஸ்தலத்தின் திரைக்கு எதிரே தெளிக்கக்கடவன்.

எ பிற்பாடு ஆசாரியன் அந்த இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக இருக்கிற சுகந்தவர்க்கங்களினுடைய தூபபீடத்தைக் கொம்புகளின்மேலே பூசி, காளை எருதினுடைய இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலுக்கு முன்பாக இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

Digitized by Google

அ பாவம்போக்கும் பலியான காளை எருதின் சகல கொழுப்பாகிய குடல்களை மூடிய கொழுப்பையும், அவைகள்மேலிருக்கிற எல்லாக் கொழுப்பையும்,

கூ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே சிறு குடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சவ்வையும் பிடுங்கி,

ஙி சமாதானபலியான மாட்டிலிருந்து எடுக்கிறதுபோல, அதிலிருந்து எடுத்தவைகளைத் தகனபலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

ஙக ஆனால் காளை எருதின் தோலையும், அதின் எல்லா மாம்சத்தையும், அதலேடேகூட அதின் தலையையும், தொடைகளையும் அதின் குடல்களையும், அதின் சாணியையும்,

ஙஉ காளை எருது முழுவதையும், அவன் பாளயத்திற்குப் புறம்பே சாம்பலைக் கொட்டுகிற சுத்தமான இடத்திலே கொண்டுபோய், கட்டைகளின்மேலே போட்டு, அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவன்; கொட்டி இருக்கிற சாம்பலின்மேலேதானே அதைச் சுட்டெரிக்கக்கடவன்.

ஙஈ ¶ ஆனால் இஸ்ரவேலின் சபை எல்லாம் தப்பிநடந்து, காரியம் தங்கள் கண்களுக்கு மறைவாயிருக்கிறதினாலே, கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து குற்றவாளிகளாகப் போனால்,

ஙச அப்பொழுது அவர்கள் செய்த பாவம் அறியப்பட்டதாகில், சபை மாடுகளில் ஒரு காளை எருதைப் பாவம்போக்கும் பலியாகச் செலுத்தி, அதை ஆசரிப்புக்கூடாரத்திற்கு முன்பாகக் கொண்டுவந்து,

ஙடு சபையின் மூப்பர் கர்த்தருக்கு முன்பாகத் தங்கள் கைகளை அதினுடைய தலையின்மேலே வைப்பார்களாக; பிற்பாடு கர்த்தருக்கு முன்பாகக் காளை எருதின் குரல்வளை அறுக்கப்படுவதாக.

ஙசு அப்பொழுது அபிஷேகம்பண்ணப்பட்ட ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஆசரிப்பின் கூடாரத்திலே கொண்டுவந்து,

ரூ தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, ஏழுதரம் கர்த்தருக்கு முன்பாகத் திரைக்கு எதிரே தெளித்து,

ரூஅ ஆசரிப்பின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக இருக்கிற பீடத்தினுடைய கொம்புகளின்மேலே அதிலே கொஞ்சம் பூசி, இரத்தத்தை எல்லாம் ஆசரிப்புக்கூடார வாசலின்முன் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

ரூக அதின் கொழுப்பை எல்லாம் அதிலிருந்து எடுத்து, பலிபீடத்தின்மேலே கொளுத்தி,

ரூஉ பாவம்போக்கும் அந்தக் காளை எருதை எப்படிச்செய்தாளே, அப்படி இதையும் செய்து, இந்த அடைவாய் அவர்கள் பாவத்தை நிவிர்த்தி ஆக்கக்கடவன்; அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்.

ரூக பிற்பாடு காளை எருதைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், முன்னே காளை எருதைச் சுட்டெரித்ததுபோலச் சுட்டெரிக்கக்கடவன், இது சபையின் பாவம்போக்கும் பலி.

ரூரு ¶ ஒரு பிரபு தன் பராபரனுடைய கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, தப்பிதத்தினாலே செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளியாகப்போனால்,

ரூங அல்லவென்று அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அவன் வெள்ளாடுகளிலே பழுதற்ற ஒரு கடாவைத் தன்னுடையபலியாகக் கொண்டுவந்து,

ரூச தன் கையை அதினுடைய தலையின்மேலே வைத்து, சர்வாங்கதகனபலி கூறல்வனை அறுக்கப்படுகிற இடத்திலே கர்த்தருக்குமுன்பாக அதின் கூறல்வனையை அறுப்பாளாக; அது பாவம்போக்கும் பலி.

ரூடு அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்

தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, அதின் இரத்தத்தைத் தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட்டு,

உசு அதின் கொழுப்பை எல்லாம் சமாதானபலியின் கொழுப்பைப்போலப் பலிபீடத்தின்மேலே கொளுத்தி, இந்த அடையாய் அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக் கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

உஅ ¶ தேசத்துச் சனத்தில் ஒரு ஆத்துமா தப்பிதத்தினாலே கர்த்தரின் கற்பனைகளில் யாதொன்றை மீறி, செய்யத்தகாததைச் செய்து, பாவம்பண்ணி, குற்றவாளியானால்,

உஆ அல்லவென்று அவன் செய்த பாவம் அவனுக்குத் தெரிவிக்கப்பட்டதானால், அவன் செய்த பாவத்தின்நிமித்தம் வெள்ளாடுகளிலே பழுதற்ற பெண்ணாட்டைத் தன்னுடைய பலியாகக் கொண்டுவந்து,

உக பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனம் செய்யப்படுகிற ஸ்தலத்திலே அதின் குரல்வளையை அறுப்பானாக.

உச அப்பொழுது ஆசாரியன் அதின் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, மற்ற இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

உக கொழுப்புச் சமாதான பலியிலிருந்து பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தி, இந்த அடையாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

உஉ ¶ பாவம்போக்கும் பலியாக ஒரு ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர மனதாயிருந்தானேயானால், அவன் பழுதற்ற பெண்ணாட்டியைக் கொண்டுவந்து,

உஎ பாவம்போக்கும் பலியினுடைய தலையின்மேலே தன் கையை வைத்து, சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்படும் தலத்திலே அதின் குரல்வளையைப் பாவம்போக்கும் பலியாகும்படிக்கு அறுப்பானாக.

உசு அப்பொழுது ஆசாரியன் இரத்தத்திலே கொஞ்சம் தன் விரலினால் எடுத்து, தகனபலிபீடத்துக் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தை எல்லாம் பலிபீடத்தடியில் ஊற்றிவிட்டு,

உடு சமாதானபலியான ஆட்டுக்குட்டியின் கொழுப்புப் பிடுங்கப்படுவதுபோல, அதின் கொழுப்பை எல்லாம் பிடுங்கி, பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போட்டுக் கொளுத்தி, இந்த அடையாக அவன் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

ரு. அதிகாரம்.

ஒரு ஆத்துமா கண்ட, அல்லது அறிந்த சாட்சியாய் இருந்து, ஆணையிடப்பட்ட சத்தத்தைக் கேட்டும் காரியத்தை அறிவிக்காதே போகிற பாவத்தைச் செய்தால், அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

உ அல்லது தீட்டான காட்டுச் சீவனின் உடலானாலும் சரி, தீட்டான மிருகத்தின் உடலானாலும் சரி, தீட்டான ஊர்வனவகையின் உடலானாலும் சரி, அப்படிக்கொத்த தீட்டான யாதொரு வஸ்துவை ஒரு ஆத்துமா அறியாமையினாலாகிலும் தொட்டால் அவன் தீட்டும் குற்றமுமுள்ளவன்.

ஈ அல்லது எந்தத் தீட்டினாலாகிலும் தீட்டுப்பட்ட ஒரு மனிதனை அவன் அறியாமல் தொட்டுப் பிற்பாடு அறிந்தால், அவன் குற்றமுள்ளவன்.

ச மனிதர் பதறி ஆணையிடும் எந்தக்காரியத்தினாலும் சரி, ஒரு ஆத்துமாத் தீமைசெய்கிறதற்காகிலும் நன்மை செய்கிறதற்காகிலும் தன் உதடுகளினாலே பதறி ஆணையிட்டு, அதை அறியாமல் செய்து, பிற்பாடு அறிவடைந்தால், அதிலே குற்றமுள்ளவனாயிருப்பான்.

Digitized by Google

டு இப்படிக்கொத்தவைகளில் ஒன்றிலே ஒருவன் குற்றமுள்ளவனானபொழுது, அவன் தான் செய்த பாவத்தை அறிக்கையிட்டு,

சு அதின்நிமித்தம் கர்த்தருக்குத் தன் பாவக்குற்றத்தைப் போக்கும் பலியாக, ஆடுகளிலாகிலும்வெள்ளாடுகளிலென்கிலும் ஒரு பெண் குட்டியைப் பிடித்துக்கொண்டு வருவானாக; அதினாலே ஆசாரியன் அவனுக்காக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்.

எ ¶ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவன் கைக்கு இல்லாதிருந்ததேயானால், அவன் தான் செய்த பாவத்தின் குற்றத்தைப் போக்கும் பலியாக, இரண்டு காட்டுப்புறுக்களையாகிலும் இரண்டு புறுக்குஞ்சுகளையாகிலும் ஒன்றைப் பாவம்போக்கும் பலியாகவும் மற்றதைச் சர்வாங்க தகனபலியாகவும் கர்த்தருக்குச் செலுத்தி,

அ அவைகளை ஆசாரியனண்டையிலே கொண்டுவருவானாக; இவன் பாவம்போக்கும் பலியாகிறதை முதல் சேரப்பண்ணி, அதின் தலையை அதின் பிடரியின் கிட்டக் கிள்ளி, இரண்டாக்காமல் வைத்து,

கூ அதின் இரத்தத்திலே கொஞ்சம் பலிபீடத்தின் சுவரிலே தெளித்து, மீதியான இரத்தத்தைப் பலிபீடத்தடியிலே விழவிடுவானாக; அது பாவம்போக்கும்பலி.

ம மற்றதை அவன் நியாய முறைமையின்படியே சர்வாங்கதகனபலியாக்கி, இப்படி ஆசாரியன் அவனுக்காக அவன் செய்த பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன், அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

மக ¶ இரண்டு காட்டுப்புறுக்களையாகிலும் இரண்டு புறுக்குஞ்சுகளையென்கிலும் கொண்டுவர, அவன் கைக்கு இல்லாதிருந்ததேயாகில் பாவம் செய்தவன் பாவம்போக்குதலுக்காக ஒரு மரக்கால் மெல்லியமாவிலே பத்தில் ஒரு பங்கைத் தன் காணிக்கையாகக் கொண்டுவந்து, அது பாவம் போக்குதலானபடியினாலே, அதின்மேல் எண்ணெய் வாராமலும் குங்குலிகம் போடாமலுமிருந்து,

மஉ அதை ஆசாரியனண்டையில் கொண்டுவருவானாக; அதிலே ஆசாரியன் நினைப்புக்கான பங்காகத் தன் கைப்பிடி நிறையப் பிடித்தெடுத்து, பலிபீடத்தின்மேலே கர்த்தருடைய தகனபலிகளின்மீதில் போட்டுக் கொளுத்தக்கடவன்; அது பாவம் போக்குதல்.

மங ¶ இப்படி ஆசாரியன் அந்தப் பாவங்களில் ஒன்றைச் செய்தவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்; மீதியானது காணிக்கையைப்போல ஆசாரியனைச் சேருமென்றார்.

மச ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

மடு ஒருஆத்துமா கர்த்தருடைய பரிசுத்தமானவைகளிலே தப்பிதத்தினாலே அறியாயம்பண்ணிப் பாவம்செய்தால், அவன் தன் குற்றத்தைப் போக்க, ஈ பரிசுத்தஸ்தலத்துச் சேக்கல் கணக்காய் அவன்மேலே சுமத்தும் அபராதப்படி, அத்தனை வெள்ளிச் சேக்கல் பெறும் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவைக் குற்றம்போக்கும் பலியாகக் கர்த்தருக்குக் கொண்டுவந்து,

மசு பரிசுத்தமானதிலே தான் பாவம்செய்தெடுத்ததைச் செலுத்தி, அதிலே கால்பங்கு ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, ஆசாரியனுக்குக் கொடுப்பானாக; அப்பொழுது ஆசாரியன் குற்றம்போக்கும் ஆட்டுக்கடாவினாலே அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

மஎ ¶ ஒரு ஆத்துமா கர்த்தருடைய சகல கற்பனைகளிலும் யாதொன்றை மீறி, செய்யத்தகாதவைகளில் அறியாமையினாலாகிலும் செய்து பாவம்பண்ணினால், அவன் குற்றமுள்ளவனாயிருந்து, தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

மஅ ஆகையால் அவன் குற்றம்போக்கும்

Digitized by Google

பலியாக, உன் மதிப்புக்குச் சரியான, பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவை ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருவாயாக; அப்பொழுது ஆசாரியன் அவன் அறியாமல் செய்த தப்பிதத்தை அவனுக்காக நிவிர்த்தியாக்கக் கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

யஊ அது குற்றம் போக்கும்பலி; ஏனெனில் கர்த்தருக்கு நேரல்தன் ஆனான் என்றார்.

சூ. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ஒரு ஆத்துமா கர்த்தருக்கு விரோதமாக அநியாயம்செய்து, தன் அடைக்கலத்திலே கொடுக்கப்பட்டதிலும் அல்லது தன் கையிலே வைக்கப்பட்டதிலும் தனக்கடுத்தவனுக்கு மாறுட்டம்பண்ணி, அல்லவென்று எதையாகிலும் பறித்துக்கொண்டு, அல்லது தனக்கடுத்தவனுக்கு இடுக்கண்செய்து,

ஈ அல்லது காணுமல்போனதைக் கண்டுபிடித்தும், அதை மறுதலித்துப் பொய்யாணையிட்டும், மனிதன் பாவத்தைக் கட்டிக்கொண்டு செய்யும் இவை முதலான சகல காரியங்களிலும் ஒன்றிலே பாவம்செய்திருந்தால்,

ச அவன் செய்த பாவத்திலுலே குற்றவாளியானபடியிலுலே, தான் பறித்துக்கொண்டதையும், அல்லது இடுக்கண்செய்து வாங்கினதையும், அல்லது தன் அடைக்கலத்திலே வைக்கப்பட்டதையும், அல்லது தான் கண்டுபிடித்த காணுமல்போயிருந்த வஸ்துவையும்,

ஙு அல்லது தான் பொய்யாணையிட்ட சகலத்தையும், *திரும்பக் கொடுத்து, அந்த முதலிச் செலுத்துகிறதும் அல்லாமல், அதில் ஐந்தில் ஒரு பங்கை அதிகமாகக் கூட்டி, அதைத் தன் குற்றம்போக்குதலின் நாளிலே அதின் எசமானனுக்குக் கொடுத்துவிட்டு, *ஏசே. ஈஈ. ஙடு.

ரு தன் குற்றத்தைப் போக்கும்பலியாக, உன் மதிப்புக்குச் சரியான, பழுதற்ற ஆட்டுக்கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தி, அதை ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருவாயாக.

எ அப்பொழுது ஆசாரியன் கர்த்தருக்கு முன்பாக அவன் பாவத்தை நிவிர்த்தியாக்கக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகிச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்.

அ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

கூ நீ ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கற்பிக்கவேண்டியதாவது: சர்வாங்கதகன பலியின் நியாயப்பிரமாணம் ஏதெனில், அது இராமுழுவதும் விடியற்காலம்மட்டும் பலிபீடத்தின்மேலே வேகவும் பலிபீடத்தின் அக்கினியே அதில் எரியவும்கடவது.

ம ஆசாரியன் சணல்நூலான தன் அங்கியை உடுத்து, சணல்நூலான தன் சல்லடத்தைச் சதையின்மேலே தரித்துக்கொண்டு, அக்கினியானது பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியை எரித்துவிட்டபிற்பாடு, சாம்பலை எடுத்து, அதைப் பலிபீடத்தருகே கொட்டி,

மக பிற்பாடு தன் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, வேறே வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு, அந்தச் சாம்பலைப் பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொண்டுபோயக் கொட்டக்கடவன்.

மஉ பலிபீடத்தின்மேலிருக்கிற அக்கினியோவெனில், அதில் அவியாமல் எரிவதாக; ஆசாரியன் காலையிலெல்லாம் அதின்மேலே கட்டைகளை எரியப்போட்டு, அதின்மேல் சர்வாங்கதகனபலியை வரிசையாக வைத்து, அதின்மீதில் சமாதானபலிகளின் கொழுப்புகளைப் போட்டு, கொளுத்தக்கடவன்.

மஊ பலிபீடத்தின்மேலே அக்கினி அவியாமல் எப்பொழுதும் எரிவதாக.

Digitized by Google

ரூசு ¶ காணிக்கையின் நியாயப்பிரமாண மாவது: ஆரோனின் குமாரரில் ஒருவன் அதைக் கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத் தின்முன் கொண்டுவந்து.

ரூடு தானிக்கையின் மெல்லிய மாவிலும் அதின் எண்ணெயிலும் தன் கைப்பிடிநிறை ய, காணிக்கையின்மேலுள்ள எல்லாக் குங் குலிகத்தோடும்கூட அள்ளி எடுத்து, நினைப் புக்கான அதைப் பலிபீடத்தின்மேலே கர்த் தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத் தக்கடவன்.

ரூசு அதில் மீதியானதை ஆரோனும் அவன் குமாரரும் புசிப்பார்களாக; அது புளிப் பில்லாததாகப் பரிசுத்தஸ்தலத்திலே புசிக் கப்படக்கடவது; ஆசரிப்புக்கூடாரத்தின் பிரகாரத்திலே அதைப் புசிப்பார்களாக.

ரூள அது புளித்தமாவுள்ளதாகச் சுடப்ப டவேண்டாம்; அது நம்முடைய தகனங் களில் நாம் அவர்களுக்குக் கொடுத்த அவர் களுடைய பங்கு; பாவம்போக்கும் பலி யைப்போலவும் குற்றம்போக்கும் பலி யைப்போலவும் அது பரிசுத்தத்திற்குப் பரி சுத்தம்.

ரூஅ ஆரோனின் பிள்ளைகளில் ஆண்சாதி யான யாவரும் அதைப் புசிக்கக்கடவர் கள்; கர்த்தருடைய தகனங்களில் அது உங் கள் தலைமுறைகளுக்கு நித்திய கட்டளை யாய் இருக்கவும், அவைகளைத் தொடுகிறவ னெல்லாம் பரிசுத்தமாய் இருப்பாளாக வென்று சொல்லென்றார்.

ரூகூ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ரூடு ஆரோன் அபிஷேகம்பண்ணப்படுகிற நாளிலே, அவனும் அவன் குமாரரும் கர்த் தருக்குச் செலுத்தவேண்டிய படைப்பு என்னவெனில், ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் ஒரு பங்கை, காலையிலே பாதியும் அந்திநேரத்திலே பாதியும், நித்திய காணிக்கையாகச் செலுத்துவார்களாக.

ரூக தட்டின்மேல் எண்ணெயிலே அது ாய்யப்படக்கடவது; அதை நீ சுடப்பட் டதாகக் கொண்டுவந்து, காணிக்கையின் சுட்டதுண்டுகளைக் கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகச் செலுத்தக்கடவாய்.

ரூஉ அவன் குமாரரில் அவன் ஸ்தலத்திலே அபிஷேகம்பண்ணப்படுகிற ஆசாரியனும் அப்படிச் செய்யக்கடவன்; அது நித்திய கட்டளை; கர்த்தருக்கென்று அது முழுதும் கொளுத்தப்படக்கடவது.

ரூக ஆசாரியனுடைய எந்தக் காணிக்கை யும் புசிக்கப்படாமல், முழுவதும் சுட்டெ ரிக்கப்படவேண்டுமென்றார்.

ரூச ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ரூடு நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொல்லவேண்டியது, பாவம்போக்கும் ப லியின் நியாயப்பிரமாணம் என்னவெனில். சர்வாங்கதகனபலி குரல்வளை அறுக்கப்ப டும் இடத்திலே, பாவம்போக்கும் பலியும் கர்த்தருக்குமுன்பாகக் குரல்வளை அறுக்கப் படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரி சுத்தம்.

ரூசு பாவம்போக்க அதைப் பலியிடுகிற ஆசாரியன் அதைப் புசிக்கக்கடவன்; ஆச ரிப்புக்கூடாரத்தின் பிரகாரமென்ற பரிசுத் தஸ்தலத்திலே அது புசிக்கப்படுவதாக.

ரூள அதின் மாம்சத்தைத் தொடுகிறவன் எல்லாம் பரிசுத்தமாயிருப்பானாக; அதின் இரத்தத்திலே கொஞ்சம் ஒரு வஸ்திரத்தி லே தெறித்ததானால், அதைப் பரிசுத்தஸ் லத்திலே வேகப்பாயாக.

ரூஅ அது வேவிக்கப்பட்ட மண்பாண்டம் உடைக்கப்படக்கடவது; செப்புப்பாத்தி யில் வேவிக்கப்பட்டதேயானால், அது வி ளக்கப்பட்டுத் தண்ணீரில் அலசப்போ டக்கடவது.

ரூக ஆசாரியரில் ஆண்சாதியானவன் எல் லாம் அதைப் புசிப்பானாக; அது பரிசுத் தத்திற்குப் பரிசுத்தம்.

ரூடு ஆனால் பாவம்போக்கும் எந்தப் பலி யின் இரத்தத்திலே கொஞ்சம் பரிசுத்த ஸ்தலத்திலே பாவத்தை நிவிர்த்தியாக்கும்

Digitized by Google

படிக்கு, ஆசரிப்பின் கூடாரத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டதோ, அந்தப் பலி புசிக்கப்படாமல் அக்கினியிலுலே சுட்டெரிக்கப்படக்கடவது.

எ. அதிகாரம்.

குற்றம்போக்கும் பலியின் பிரமாணம் என்னவெனில், அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

உ சர்வாங்கதகனபலியைக் குரல்வளை அறுக்கும் இடத்திலே, குற்றம்போக்கும்பலியையும் குரல்வளை அறுப்பார்களாக; அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

ஊ அதினுடைய எல்லாக் கொழுப்பையும், அதின் வாலையும், குடல்களை மூடிய கொழுப்பையும்,

ஏ இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின்மேலே நெருடல்களினிடத்தில் இருக்கிற கொழுப்பையும், குண்டிக்காய்களோடேகூடக் கல்லீரலின்மேலிருக்கிற சன்னவையும் பிடுங்கி, செலுத்துவாராக.

ஐ இவைகளை ஆசாரியன் பலிபீடத்தின்மேலே, கர்த்தருக்குத் தகனமாகக் கொளுத்தக்கடவன்; அது குற்றம் போக்கும் பலி.

ஒ ஆசாரியரில் ஆண்சாரியானவர்களெல்லாம் அதைப் புசிப்பார்களாக; பரிசுத்தஸ்தலத்தில் அது புசிக்கப்படக்கடவது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

எஓ பாவம்போக்கும் பலிக்குக் குற்றம்போக்கும்பலி சரிசமானம்; இரண்டிற்கும் ஒரே நியாயப்பிரமாணம் இருக்கும்; அதினாலே பாவத்தை நிவிர்த்தியாக்கின ஆசாரியனே அது சேர்வதாக.

அ ஒருவனுடைய சர்வாங்கதகனபலியை ஆசாரியன் செலுத்தினால், அதின் தோல் அதைச் செலுத்தின ஆசாரியனுடையதாய் இருக்கும்.

ஆ அடுப்பிலே சுடப்பட்டதும் சட்டியிலும் தட்டின்மேலும் செய்யப்பட்டதுமான தகணிக்கையாவும் அதைச் செலுத்துகிற ஆசாரியனுடையவைகளாயிருக்கும்.

இ எண்ணெயிலே பிசைந்ததும் எண்ணெய் இல்லாததுமான சகல காணிக்கைகளும் ஆரோனுடைய எல்லாக் குமாரர்களும் அவனவனுக்குச் சரியானபடி சேரும்.

ஈ கர்த்தருக்குச் செலுத்துகிற சமாதானபலியின் நியாயப்பிரமாணம் என்னவெனில்,

உ அதை ஸ்தோத்திரத்திற்காகச் செலுத்தினால், அவன் ஸ்தோத்திரபலியோடும் கூட எண்ணெயிலே பிசைந்த புளிப்பில்லாத அதிரசங்களையும், எண்ணெய் பூசப்பட்ட புளிப்பில்லாத அடைகளையும், எண்ணெயிலே பிசைந்து வறுக்கப்பட்ட மெல்லிய மா அதிரசங்களையும்,

ஊ அவைகளும் தவிரப் புளித்தமா அப்பத்தையும், தன்னுடைய சமாதானபலியாகிய ஸ்தோத்திரபலியோடும்கூடத் தன் படைப்பாகக் கொண்டுவந்து,

ஏ அந்த எல்லாப் படைப்பிலும் ஒன்றைக் கர்த்தருக்கு ஏறெடுத்துச் செலுத்துவாராக; அது சமாதானபலியின் இரத்தத்தைத் தெளித்த ஆசாரியனுடையதாயிருக்கும்.

ஐ அவனுடைய சமாதான பலியாகிய ஸ்தோத்திரபலியின் மாம்சமோவென்றால், அவன் அதைச் செலுத்தின அன்றே புசிக்கப்படக்கடவது, அதிலொன்றும் விடியற்காலம்மட்டும் வைக்கப்படவேண்டாம்.

ஒ அவன் செலுத்துகிற பலி ஒரு பொருத்தனையும், அல்லது உற்சாகப் பலியுமாயிருந்தாலும், அது செலுத்தப்பட்ட அந்நாளிலும் அதில் மீதியானது மறுநாளிலும் புசிக்கப்படுவதாக.

ஓ ஆனால் பலியின் மாம்சத்தில் மூன்றாம் நாளில் மீதியாய் இருக்கிறது அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது.

ஔ அவனுடைய சமாதானபலியின் மாம்சத்தில் மூன்றாம்நாளிலே புசிக்கவே புசிக்கப்பட்டால், அதைச் செலுத்தினவன் பிரி

யமாயிருப்பதில்லை, அது அவனுக்குப் பலியாமல் அருவருப்பாயிருக்கும்; அதிலே புசித்த ஆத்துமாதன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

ரூ திட்டான எந்த வஸ்துவும் தொட்ட அந்த மாம்சம் புசிக்கப்படாமல், அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவது; புசிக்கப்படும் மாம்சத்திலோவென்றால், சுத்தமாயிருக்கிறவனெல்லாம் புசிக்கலாம்.

உல ஒரு ஆத்துமா தன் தீட்டுத் தன்மேலிருந்தும் கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்தைப் புசித்தானேயாகில், அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

உக ¶ மனிதனுடைய தீட்டாவது, தீட்டான மிருகமாவது, தீட்டான எந்த அருவருப்புமாவது, ஒரு ஆத்துமா தீட்டான அப்படிக்கொத்த யாதொன்றைத் தொட்டிருந்தும், கர்த்தருடைய சமாதானபலியின் மாம்சத்திலே புசித்தால், அந்த ஆத்துமா தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பானென்றார்.

உஉ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உஊ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், மாடு ஆடு வெள்ளாடு என்றவைகளின் கொழுப்பில் ஒன்றையும் புசியீர்களாக.

உச தானாய்ச் செத்ததின் கொழுப்பும் பீறுண்டதின் கொழுப்பும் பலவித வேலைக்கு வழங்கப்படலாம்; ஆனால் நீங்கள் அவைகளைப் புசிக்கவே புசிக்கவேண்டாம்.

உடு ஏனெனில் கர்த்தருக்குத் தகனமாகச் செலுத்தப்படும் மிருகத்தின் கொழுப்பைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

உசு *உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் ஒரு பறவையின் இரத்தத்தையாகிலும் ஒரு மிருகத்தின் இரத்தத்தையாகிலும் புசியீர்களாக. *ரு மோ. ரு. யா.

உள யாதொரு இரத்தத்தைப் புசிக்கிற எந்த ஆத்துமாவும் தன் சனசதளங்களில் இராதபடிக்கு அறுப்புண்பான் என்று சொல்லென்றார்.

உஎ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உஏ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், கர்த்தருக்குத் தன்னுடைய சமாதான பலியைச் செலுத்துகிறவன் அதிலே செலுத்துகிறதைக் கர்த்தருக்குக் கொண்டுவருவானாக.

ஊஐ அவனுடைய கைகள் கர்த்தருடைய தகனங்களாகிய மார்க்கண்டத்தையும் அதை நேடும்கூட அதின்மேலே வைத்த கொழுப்பையும் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அசைவாட்டும்படிக்குக் கொண்டுவரக்கடவது.

ஊக அப்பொழுது ஆசாரியன் அந்தக் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்; மார்க்கண்டமோவெனில் ஆரோனையும் அவன் குமாரனையும்சேரும்.

ஊஉ உங்கள் சமாதானபலிகளில் வலது முன்னந்தொடையையும் ஏறெடுக்கும்படிக்கு ஆசாரியனுக்குக் கொடுப்பீர்களாக.

ஊஊ ஆரோனுடைய குமாரரில் சமாதான பலியின் இரத்தத்தையும் கொழுப்பையும் செலுத்துகிறவனுக்கு வலது முன்னந்தொடை பங்காகச் சேரும்.

ஊச ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரின் சமாதானபலிகளில் அசைவாட்டின மார்க்கண்டத்தையும் ஏறெடுத்த முன்னந்தொடையையும் நாம் அவர்கள் கையில் வாங்கி, அவைகளை ஆசாரியனாகிய ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் இஸ்ரவேல் புத்திரரால் நடக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தோமென்று சொல்லென்றார்.

ஊடு கர்த்தருக்கு ஆசாரிய ஊழியம்செய்ய அவர் ஆரோனையும் அவன் குமாரனையும் சேர்த்தநாளிலே, இது அபிஷேகம் பண்ணப்பட்ட அவர்களுக்குக் கர்த்தருடைய தகனங்களிலே செல்லும் கட்டளையாயிற்று.

Digitized by Google

ரூ இப்படி அவர்களுக்கு இஸ்ரவேல் புத்திரராலே அவர்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாகக் கொடுக்கப்பட, கர்த்தர் அவர்களை அபிஷேகம்பண்ணின நாளிலே கற்பித்தார்.

ரஎ ¶ சர்வாங்கதகனத்திற்கும், காணிக்கைக்கும், பாவம்போக்கும் பலிக்கும், குற்றம்போக்கும் பலிக்கும், கைகளை நிரப்பும் பலிகளுக்கும், சமாதானபலிகளுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம் இதுதானே.

ரஅ கர்த்தருக்குத் தங்கள் செலுத்துதல்களைச் செலுத்த அவர் இஸ்ரவேல் புத்திரருக்குச் சீனாயின் வனாந்தரத்திலே கற்பிக்கும் நாளிலே இவைகளை மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கட்டளைஇட்டார்.

உ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ஆரோனையும் அவனோடேகூட அவன் குமாரரையும் அழைத்து, வஸ்திரங்களையும் அபிஷேகத்தெண்ணெயையும் பாவம்போக்குதலுக்கு ஒரு காளை எருதையும் இரண்டு ஆட்டுக்கடாக்களையும் புளிப்பில்லாத அப்பங்களுள்ள ஒரு கூடையையும் கொண்டுவந்து,

ந சபையை எல்லாம் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாகக் கூட்டென்றார்.

ச கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே மோசே செய்தான்; சபை ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்கு முன்பாகக் கூடின பொழுது,

டு ¶ மோசே சபையுடனே, இது கர்த்தர் செய்யக் கற்பித்த காரியம் என்றான்.

ஈ பிற்பாடு மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, அவர்களைத் தண்ணீரினாலே கழுவி,

எ *அவனுக்கு உள்சட்டையைப் போட்டு, நடுக்கட்டுக் கட்டி, அங்கியை உடுத்தி, ஆசாரிய சால்வையைப் போர்த்தி, அதின்மேல் ஆசாரிய சால்வையின் விநோதமான கச்சையை அவனுக்குக் கட்டி,

*உ மோ. உஅ. ச.

அ அவனுக்கு மார்ப்பதக்கத்தைத் தரித்து, மார்ப்பதக்கத்திலே *வெளிச்சங்களையும் உத்தமங்களையும் வைத்து, *உமோ. உஅ.நஅ.

ஆ அவன் தலையிலே பாகையைப் போட்டு, பாகையின்மேல் அவன் முகத்திற்கு நேராகப் பரிசுத்த கிரீடமென்ற பொன்பட்டத்தைக் கட்டினான்.

இ பிற்பாடு மோசே அபிஷேகத்தெண்ணெயை எடுத்துக்கொண்டு, வாசஸ்தலத்தையும் அதிலுள்ள யாவையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கி,

ஈ அதில் எடுத்து, பலிபீடத்தின்மேல் ஏழுதரம் தெளித்து, பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் தொட்டியையும் அதின் புரிமணையையும் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணி,

உ அபிஷேகத்தெண்ணெயிலே கொஞ்சம் *ஆரோனுடைய சிரசின்மேல் வார்த்து, அவனைப் பரிசுத்தமாக்கும்படிக்கு அபிஷேகம்பண்ணினான். *சங். ாஈஈ. உ.

ஊ பிற்பாடு மோசே ஆரோனின் குமாரரைச் சேர அழைத்து, கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் சட்டைகளை உடுத்தி, நடுக்கட்டுகளைக் கட்டி, குல்லாக்களைப் போட்டுக்கட்டி,

ஊ ¶ பாவம்போக்குதலின் காளை எருதைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

ஐ அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் மற்ற இரத்தத்தைப் பிடித்து, தன் விரலினாலே பலிபீடத்தின் கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி, பலிபீடத்திற்காகப் பாவம்போக்குதலைச் செய்து, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றிப்போட்டு, அதின்மேலே பாவநிவிர்த்தி உண்டாகும்படிக்கு அதைப் பரிசுத்தமாக்கினான்.

Digitized by Google

ரூ பிற்பாடு மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும் கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும் இரண்டு குண்டிக்காய்களையும் அவைகளின் கொழுப்பையும் எடுத்துக்கொண்டு, பலிபீடத்தின்மேலே கொளுத்தி,

ரக காளை எருதையும் அதின் தோலையும் மாம்சத்தையும் சாணியையும் பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே சுட்டெரித்தான்.

ரஅ ¶ பிற்பாடு சர்வாங்கதகனமாகும் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

ரக அப்பொழுது அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலேசுற்றிலும்தெளித்தான்.

ரஉ ஆட்டுக்கடா சந்துசந்தாகத் தண்டித்துப் போடப்பட்டபின் மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, தலையையும் தண்டங்களையும் கொழுப்பையும் கொளுத்தி,

ரக குடல்களையும் தொடைகளையும் தண்ணீரிலுலே கழுவி, ஆட்டுக்கடாவை முழுவதும் பலிபீடத்தின்மேலே கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனைக்கான சர்வாங்கதகனமாகக் கொளுத்தினான்.

ரஎ ¶ பிற்பாடு கைகளை நிரப்புதலின் இரண்டாம் ஆட்டுக்கடாவைக் கிட்டக் கொண்டுவந்தான்; அதினுடைய தலையின்மேல் ஆரோனும் அவன் குமாரரும் தங்கள் கைகளை வைத்தார்கள்.

ரஏ பிற்பாடு அதின் குரல்வளை அறுக்கப்பட்டது; மோசே அதின் இரத்தத்திலே கொஞ்சம் பிடித்து, ஆரோனுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசினான்.

ரரு பிற்பாடு ஆரோனுடைய குமாரரையும் அழைத்து, அந்த இரத்தத்திலே கொஞ்சம் அவர்களுடைய வலதுகாதின் மடலிலும் வலதுகையின் பெருவிரல்மேலும் வலதுகாலின் பெருவிரல்மேலும் பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தின்மேலே சுற்றிலும் தெளித்து,

ரூ கொழுப்பையும், வாலையும், குடல்கள்மேலிருந்த எல்லாக் கொழுப்பையும், கல்லீரலின்மேல் இருந்த சவ்வையும், இரண்டு குண்டிக்காய்களையும், அவைகளின் கொழுப்பையும், வலது முன்னந்தொடையையும் எடுத்து,

ரூஅ கர்த்தருக்குமுன்பாக வைத்திருந்த புளிப்பில்லாத அப்பங்களின் கூடையிலே புளிப்பில்லாத ஒரு அதிரசத்தையும் எண்ணெய் அப்பமாகிய ஒரு அதிரசத்தையும் ஒரு அடையையும் எடுத்து, அந்தக் கொழுப்பின்மேலும் முன்னந்தொடையின்மேலும் வைத்து,

ரூஉ அவைகளை எல்லாம் ஆரோனுடைய உள்ளங்கைகளிலும் அவன் குமாரருடைய உள்ளங்கைகளிலும் வைத்து, அசைவாட்டும் காணிக்கையாகக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டி,

ரூக பிற்பாடு அவைகளை அவர்கள் உள்ளங்கைகளில் எடுத்து, பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனபலியின்மீதில் கொளுத்தினான்; அது ஆற்றுகிற வாசனைக்கான கை நிரப்புதலின் பலியும் கர்த்தருக்குத் தகனமும் ஆயிற்று.

ரூக பிற்பாடு மோசே மார்க்கண்டத்தை எடுத்து, அதைக் கர்த்தருக்குமுன்பாகக் காணிக்கையாக அசைவாட்டினான்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே அவைகள் கைகளை நிரப்புதலின் ஆட்டுக்கடாவிலே மோசேயின் பங்காயின.

ரூஎ ¶ மோசே அபிஷேகத்தெண்ணெயிலும் பலிபீடத்தின்மேலிருந்த இரத்தத்திலும் கொஞ்சம் எடுத்து, ஆரோனின்மேலும் அவன் வஸ்திரங்களின்மேலும் அவன் குமாரரின்மேலும் அவர்கள் வஸ்திரங்களின்மேலும் தெளித்தான்; ஆரோனையும் அவன் வஸ்

Digitized by Google

நிரங்களையும் அவன் குமாரனையும் அவன் குமாரனின் வஸ்திரங்களையும் பரிசுத்தம் பண்ணினான்.

௩௧ ¶ கடையிலே மோசே ஆரோனோடும் அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் அந்த மாம்சத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலே வேவித்து, ஆரோனும் அவன் குமாரரும் அதைப் புசிப்பார்களாக என்ற கற்பித்திருக்கிறபடியே, அங்கே அதையும் உங்கள் கைகளை நிரப்புதலின் கூடையிலிருக்கிற அப்பத்தையும் புசித்து,

௩௨ மாம்சத்திலும் அப்பத்திலும் மீதியானதை அக்கினியாலே சுட்டெரித்து,

௩௩ கைகளை நிரப்புகிற நாள்கள் நிறைவேறும்மட்டும், ஏழுநாள் ஆசரிப்புக்கூடாரவாசலைவிட்டுப் புறப்படாதிருப்பீர்களாக; ஏனெனில் ஏழுநாள்மட்டும் உங்கள் கைகள் நிரப்பப்படும்.

௩௪ இந்நாளிலே செய்யப்பட்டதுபோல, உங்கள் பாவநிவிர்த்திக்காக, இனிமேலும் செய்யப்படவேண்டுமென்று கர்த்தர் கற்பித்தார்.

௩௫ நீங்கள் சாவாதபடிக்கு ஏழுநாள் இரவும்பகலும் ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து, கர்த்தருடைய காவலிலிருக்கக்கடவீர்கள்; ஏனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேனென்றான்.

௩௬ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பித்த எல்லாக் காரியங்களையும் ஆரோனும் அவன் குமாரரும் செய்தார்கள்.

௯. அதிகாரம்.

சம்பவித்ததேதென்றால் எட்டாம்நாளிலே, மோசே ஆரோனையும் அவன் குமாரனையும் இஸ்ரவேலின் மூப்பரையும் அழைத்து,

௨ ஆரோனோடே சொன்னதாவது: நீ பாவம்போக்கும்பலியாக மாடுகளிலே பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும் சர்வாங்கதகனபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக்கடாவையும் பிடித்து, கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவா.

௩ ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதேதெனில், கர்த்தருக்குமுன்பாகப் பலியிடும்படிக்கு, நீங்கள் பாவம்போக்கும்பலியாகப் பழுதற்ற ஒரு வெள்ளாட்டுக்கடாவையும், சர்வாங்கதகனபலியாக ஒரு வயதான பழுதற்ற ஒரு கன்றுக்குட்டியையும், ஒரு ஆட்டுக்குட்டியையும்,

௪ சமாதானபலியாக ஒரு எருதையும், ஒரு ஆட்டுக்கடாவையும், எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், கொண்டுவாருங்கள்; ஏனெனில் இன்று கர்த்தர் உங்களுக்குத் தரிசனையாவார் என்று சொல்லென்றான்.

௫ மோசே கற்பித்தவைகளை ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாகக் கொண்டுவந்தார்கள்; சபை எல்லாம் சேர்ந்து, கர்த்தருக்குமுன்பாக நின்றது.

௬ அப்பொழுது மோசே, கர்த்தர் கற்பித்த இந்தக் காரியத்தைச் செய்யுங்கள்; அப்பொழுது கர்த்தருடைய மகிமை உங்களுக்குக் காணப்படும் என்றான்.

௭ ¶ பிற்பாடு மோசே ஆரோனுடனே, நீ பலிபீடத்தண்டையில் சேர்ந்து, கர்த்தர் கற்பித்தபடியே பாவம்போக்கும் உன் பலியையும் சர்வாங்கதகனமான உன் பலியையும் செலுத்தி, உனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தி உண்டாக்கி, சனத்தின் பலியையும் செலுத்தி, அவர்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கென்றான்.

௮ ¶ அப்பொழுது ஆரோன் பலிபீடத்தண்டையில் சேர்ந்து, தன் பாவம்போக்குதலின் கன்றுக்குட்டியைக் குரல்வளை அறுத்தான்.

௯ ஆரோனின் குமாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக் கொண்டுவந்தார்கள்; அவன் தன் விரலை இரத்தத்திலே தோய்த்து, பலிபீடத்தின் கொம்புகளின்மேலே பூசி, இரத்தத்தைப் பலிபீடத்தடியில் ஊற்றி,

௧0 பாவம்போக்கும்பலியின் கொழுப்பையும், குண்டிக்காய்களையும், கல்லீரலிலிவிட்டு

Digitized by Google

வாங்கின சவ்வையும், பலிபீடத்தின்மே
லே கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே
கொளுத்தப்படவைத்தான்.

ய௪ ஆலும் மாம்சத்தையும் தோலையும்
பாளயத்திற்குப் புறம்பே அக்கினியாலே
சுட்டெரித்தான்.

ய௯ ¶ பிற்பாடு சர்வாங்கதகனபலியின்
குரல்வளையை அறுத்தான்; ஆரோனின் கு
மாரர் அதின் இரத்தத்தை அவன் கிட்டக்
கொண்டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்
தின்மேலே சுற்றிலும் தெளித்தான்.

ய௯ துண்டங்கள் ஆக்கப்பட்ட சர்வாங்க
தகனபலியையும் தலையையும் அவன் கிட்
டக் கொண்டுவந்தார்கள்; அவன் அவை
களைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்
படவைத்து,

ய௰ குடல்களையும் தொடைகளையும் கழுவி,
பலிபீடத்தின்மேலே சர்வாங்கதகனத்தின்
மீதில் கொளுத்தப்படவைத்தான்.

ய௱ ¶ பிற்பாடு அவன் சனத்தின் பலி
யைக் கிட்டக் கொண்டுவந்து, சனத்திற்
காகிய பாவம்போக்குதலின் வெள்ளாட்
டுக்கடாவைப் பிடித்து, அதின் குரல்வளை
யை அறுத்து, முன்னிலைவைக்குச் சரியாக
அதைப் பாவம்போக்கும்பலியாக்கி,

ய௲ சர்வாங்கதகனபலியைக் கிட்டக்
கொண்டுவந்து, நியாயமுறைமையின்படி
யே செலுத்தி,

ய௳ காணிக்கையையும் கிட்டக் கொண்டு
வந்து, தன் உள்ளங்கையை அதினால் நிரப்
பி, அதைக் காலையில் செலுத்தும் சர்வாங்க
தகனமும் அல்லாமல், பலிபீடத்தின்மேல்
கொளுத்தப்படவைத்தான்.

ய௴ பிற்பாடு சனத்தின் சமாதானபலியா
கிய எருதையும் ஆட்டுக்கடாவையும் குரல்
வளை அறுத்தான்; அதின் இரத்தத்தை ஆரோ
னின் குமாரர் அவன் கிட்டக் கொண்
டுவந்தார்கள்; அதைப் பலிபீடத்தின்மே
லே சுற்றிலும் தெளித்தான்.

ய௵ எருதிலும் ஆட்டுக்கடாவிலும் எடுத்த
கொழுப்புகளையும் வாலையும், குடல்களை
மூடியதையும், குண்டிக்காய்களையும், கல்
லீரலின்மேலிருந்த சவ்வையும் கொண்டு
வந்து,

ய௶ கொழுப்புகளை மார்க்கண்டங்களின்
மேலே வைத்தார்கள்; அந்தக் கொழுப்பு
களைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தப்ப
டவைத்தான்.

ய௷ ¶ ஆலும் மார்க்கண்டங்களையும் வல
தமுன்னந் தொடையையும், ஆரோன் மோ
சேக்குக் கற்பித்தபடியே, கர்த்தருக்கு முன்
பாக அசைவாட்டும் காணிக்கையாக அ
சைவாட்டினான்.

ய௸ பிற்பாடு ஆரோன் தன் கைகளைச் சன
த்திற்குநேராக ஏறெடுத்து, அவர்களை ஆசீ
வதித்து, தான் பாவம்போக்கும்பலியை
யும், சர்வாங்கதகனபலியையும், சமாதா
னபலியையும், செலுத்தின் இடத்திலிரு
ந்து இறங்கினான்.

ய௹ மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக்
கூடாரத்திற்குள் பிரவேசித்து, வெளியே
வந்து, சனத்தை ஆசீர்வதித்தார்கள்; அப்
பொழுது கர்த்தருடைய மகிமை எல்லாச்
சனத்திற்கும் காணப்பட்டது.

ல ¶ *அக்கினி கர்த்தருடைய சந்நிதி
லிருந்து புறப்பட்டு, பலிபீடத்தின்மேலி
ருந்த சர்வாங்கதகனபலியையும் கொழுப்
புகளையும் எரித்துவிட்டது; சனமெல்லாம்
அதைக் கண்டபொழுது கெம்பீரமாய்
முகம்குப்புறவிழுந்தார்கள். *க இரா. ய௨.
ங௪. உ நாளா. எ. க.

ய. அதிகாரம்.

நாதாப், அபியூ என்ற ஆரோனின் குமா
ரரெவனில், ஒவ்வொருவன் தன் தன்
தூபகலசத்தை எடுத்து, அவைகளில் கொ
ருப்பையும் அதின்மேலே தூபவர்க்கத்
தையும் போட்டு, கர்த்தர் தங்களுக்குக்
கற்பிக்காதிருந்த அந்நிய அக்கினியை அவ
ருக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

உ அப்பொழுது அக்கினி கர்த்தரின்
சந்நிதியிலிருந்து புறப்பட்டு, அவர்களைப்

Digitized by Google

பட்சித்தது; அங்கே கர்த்தருக்குமுன்பாகச் செத்தார்கள்.

ஈ அப்பொழுது மோசே ஆரோனோடே, கம்மண்டையில் சேருகிறவர்களால் நாம் பரிசுத்தம் விளங்கி, எல்லாச் சனத்திற்கும் முன்பாக மகிமைப்படுவோமென்று கர்த்தர் பேசிச் சொன்னது இதுதான் என்றான்; ஆரோன் பேசாதிருந்தான்.

உ பிற்பாடு மோசே ஆரோனின் தெரியதகப்பனான ஊசியேலின் குமாரராகிய மீசவேலையும் எலிசாப்பானையும் அழைத்து, அவர்களோடே, நீங்கள் சேர்ந்து, உங்கள் சகோதரனைப் பரிசுத்தஸ்தலத்திற்குமுன்பாக இருந்தெடுத்து, பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோங்கள் என்றான்.

ஊ இவர்கள் மோசே சொன்னபடி சேர்ந்து, அவர்களை அவர்கள் சட்டைகளோடெடுத்து, பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோனார்கள்.

஋ ¶ மோசே ஆரோனேடும் எலேயாசார், இத்தாமாரென்ற அவன் குமாரரோடும் சொன்னதாவது: நீங்கள் சாவாதபடிக்கும், சபையின்மேலெல்லாம் கடுங்கோபம் வாராதபடிக்கும் நீங்கள் உங்கள் தலைகளைத்திறவாமலும் உங்கள் வஸ்திரங்களைக் கிழிக்காமலும் இருப்பீர்களாக; உங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் வீட்டார் எல்லாரும் கர்த்தர் சுட்ட இந்தச் சூட்டிற்காக அழுவார்கள்.

ஏ நீங்கள் சாவாதபடிக்கு ஆசரிப்புக்கூடாரவாசலிலிருந்து புறப்படாதிருக்களாக; ஏனெனில் கர்த்தருடைய அபிஷேகத்தெண்ணெய் உங்கள்மேல் இருக்கிறதென்றான்; மோசேயினுடைய வார்த்தையின்படியே செய்தார்கள்.

ஐ ¶ கர்த்தர் ஆரோனோடே பேசிச் சொன்னதாவது:

ஈ நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் சாவாதபடிக்கு, ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது, திராட்சப்பழரசத்தையும் மதுபானத்தையும் குடியீர்களாக.

உ பரிசுத்தமானதற்கும் பரிசுத்தம் அல்லாததற்கும், தீட்டானதற்கும் சுத்தமானதற்கும், வித்தியாசம்பண்ணுவதற்கும்,

ஊ கர்த்தர் மோசேயைக்கொண்டு இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்ன சகல பிரமாணங்களையும் அவர்களுக்குப் போதிப்பதற்கும், இது உங்கள் தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாய் இருக்குமென்றார்.

஋ ¶ மோசே ஆரோனோடும் மீதியான அவன் குமாரராகிய எலேயாசாரோடும் இத்தாமாரோடும் சொன்னதாவது: நீங்கள் கர்த்தருடைய தகனங்களில் மீதியான காணிக்கையை எடுத்துக்கொண்டு, பலிபீடத்தண்டையிலே புளிப்பில்லாததாகப் புசியுங்கள்; ஏனெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

ஏ அதைப் பரிசுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் அது கர்த்தருடைய தகனங்களில் உன் கட்டளையும் உன் குமாரரின் கட்டளையுமானது; அதேனென்றால் இப்படிக் கற்பிக்கப்பட்டேன்.

ஐ அசைவாட்டின மார்க்கண்டத்தையும், ஏறெடுத்த முன்னந்தொடையையும், நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் குமாரத்திகளும் சுத்தஸ்தலத்திலே புசிப்பீர்களாக; ஏனெனில் இஸ்ரவேல் புத்திரருடைய சமாதானபலிகளில் அவைகள் உன்னுடைய கட்டளையாகவும், உன் பிள்ளைகளுடைய கட்டளையாகவும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒ கொழுப்புகளின் தகனபலிகளோடேகூட அவர்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டும் காணிக்கையாக ஏறெடுக்கும் முன்னந்தொடையையும், அசைவாட்டும் மார்க்கண்டத்தையும் கொண்டுவருவார்கள்; அது கர்த்தர் கற்பித்தபடியே உன்னையும் உன்னோடேகூட உன் பிள்ளைகளையும் நித்திய கட்டளையாகச் சேருமென்றான்.

ஒ ¶ பாவம்போக்கும்பலியான வெள்ளாட்டுக்கடாவை மோசே தேடவே தேடினான்; ஆனால் இதோ, சுட்டெரிக்கப்பட்

டிருந்தது; ஆகையால் எலேயாசார், இத் தாமார் என்ற ஆரோனின் மீதியான குமாரர் மேலே அவன் கடும்கோபமாகி,

ஐ பாவம்போக்கும்பலியை நீங்கள் பரி சுத்தஸ்தலத்திலே புசியாதேபோனதென் ன? அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயி ருக்கின்றதே; சபையின் அக்கிரமத்தைச் சுமக்கவும், அவர்களுக்காகப் பாவநிவிர்த் தியைக் கர்த்தருக்குமுன்பாக உண்டாக்க வும், அதை உங்களுக்குக் கொடுத்தாரே.

ஐஅ இதோ, அதின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்டதில் லையே; ஆகையால் நீங்கள் அதை நான் கற்பித்தபடி பரிசுத்தஸ்தலத்திலே புசிக்க வே புசிக்கவேண்டியதாய் இருந்தது என் றான்.

ஐக அப்பொழுது ஆரோன் மோசேயோ டே சொன்னதாவது: இதோ, அவர்கள் பாவம்போக்கும் தங்கள் பலியையும், தங் கள் சர்வாங்கதகனபலியையும், கர்த்தரு க்கு முன்பாகச் செலுத்தின இன்றுதானே எனக்கு இப்படி நடந்ததே; பாவம்போக் கும்பலியை இன்று புசிப்பேனே, அது கர்த்தரின் பார்வைக்கு நன்றாய் இருக்கு மோ என்றான்.

உஐ மோசே இதைக் கேட்கிறபொழுது அது அவன் பார்வைக்கு நன்றாயிருந்தது.

ஐக. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி, அவர்களோடே சொன்னதாவது:

உ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே சொ ல்லவேண்டியது, * பூமியிலிருக்கிற சகல மிருகங்களிலும் நீங்கள் புசிக்கத்தக்க சிவ ன்கள் எதெனில், * டு மோ. ஐச. ச. அப். ஒ. ஐச, ஐடு.

ஊ மிருகங்களில் விரிதல்குளம்புள்ள தாய் இருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமான வைகளை எல்லாம் நீங்கள் புசிக்கலாம்.

ச ஆனால் அசைபோடுகிறவைகளிலும், அல்லவென்று விரிதல் குளம்புள்ளவை களிலும், நீங்கள் புசிக்கத்தகாதது எதென் றால் ஒட்டகம்; ஏனெனில் அது அசை போட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

டு குழிமுசலும், ஏனெனில் அது அசை போட்டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

ஊ முசலும், ஏனெனில் அது அசைபோட் டும் அதற்கு விரிதல் குளம்பில்லை; அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

எ பன்றியும், ஏனெனில் அதின் குளம்பு விரிதல்குளம்பும் இரண்டாகப் பிரிந்தது மாய் இருந்தும் அசைபோடாதிருக்கும், அது உங்களுக்குத் தீட்டாயிருக்கும்.

ஏ இவைகளின் மாம்சத்திலே புசியாம லும் இவைகளின் உடல்களைத் தொடாம லும் இருப்பீர்களாக; இவைகள் உங்க ளுக்குத் தீட்டாயிருக்கக்கடவது.

ஙூ ¶ தண்ணீர்களிலிருக்கிற யாவிலும் நீங் கள் புசிக்கத்தக்கது எதென்றால், கடல்க ளும் ஆறுகளுமாகிய தண்ணீர்களிலே சிற கும் சிதளும் உள்ளவைகளை எல்லாம் நீங் கள் புசிக்கலாம்.

ஙஅ ஆனால் கடல்களும் ஆறுகளுமாகிய தண்ணீர்களில் நீந்துகிறதும் இருக்கிறத மான உயிர்ப்பிராணிகளில் எல்லாம் சிற கும் சிதளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

ஙக அவைகள் உங்களுக்கு அருவருப் பாய் இருக்கக்கடவது; அவைகளினுடைய மாம்சத்திலே புசியாதிருந்து, அவைகளின் உடல்களை அருவருப்பீர்களாக.

ஙஉ தண்ணீர்களிலே சிறகும் சிதளும் இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப் பாய் இருக்கக்கடவது.

ஙஊ ¶ பறவைகளில் நீங்கள் புசியாமல் அருவருக்கவேண்டியவைகள் எவையென் றால், கழுகும், கருடனும், கடல் உராஞ்சி யும்,

ய்உ பருந்தும், சாதி சாதியான வல்லூறும்,
ய்ஙி சகலவித சாதியான காகங்களும்,
ய்ஊ தீவுக்குருவியும், கருவாட்டுவாலியும், செம்புகழும், சாதி சாதியான ஆள்காட்டியும்,
ய்எ ஆந்தையும், சகோரப்பட்சியும், கோட்டானும்,
ய்ஏ வெளவாலும், நாரையும், கோட்டுவானும்,
ய்ஐ கொக்கும், சாதி சாதியான இராசாளியும், கொண்டலாத்தியும், தூரிஞ்சிலும் என்றவைகள்.

உய ¶ பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற ஊர்வன யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருப்பதாக.

உக ஆகிலும் பறக்கிறவைகளில் நான்கு காலால் நடமாடுகிற யாவிலும், நீங்கள் எதைப் புசிக்கலாமென்றால், தரையிலே குதிக்கிறதற்குக் கால்களின்மேலே தொடைகள் உண்டாயிருக்கிறவைகளிலே,

உஉ வெட்டுக்கிளிச் சாதியாயிருக்கிறதையும், சோலியாம் என்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், அரகொலென்ற கிளிச் சாதியாய் இருக்கிறதையும், ஆகாப்பென்ற கிளிச்சாதியாய் இருக்கிறதையும், நீங்கள் புசிக்கலாம்.

உங பறக்கிறவைகளில் நான்கு காலுண்டாய் நடமாடுகிற மற்ற யாவும் உங்களுக்கு அருவருப்பாயிருப்பதாக.

உச அவைகளாலே தீட்டலடைவீர்கள்; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

உஙி அவைகளின் உடலைச் சுமந்தவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

உஊ ¶ விரிதல் நகங்களுள்ளவைகளாய் இருந்தும், அவைகளை இரண்டாகப் பிரியப்பண்ணுமலும், அசைபோடாமலும் இருக்கிற சகல மிருகங்களும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளைத் தொடுகிறவனெல்லாம் தீட்டடைவான்.

உஎ நான்கு காலால் நடக்கிற சகல சீவன்களிலும் தங்கள் உள்ளங்கால்களை வைத்து நடக்கிற யாவும் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; அவைகளின் உடலைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

உஏ அவைகளின் உடலைச் சுமந்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவைகள் உங்களுக்குத் தீட்டுள்ளவைகள்.

உஐ ¶ தரையோடே ஊருகிற ஊர்வனவைகளில் உங்களுக்குத் தீட்டாயிருப்பவைகள், பெருச்சாளியும், எலியும், சாதி சாதியான ஓணமும்,
உஒ உடும்பும், அலுங்கும், ஓணானும், பல்லியும், பச்சோந்தியும் என்றவைகள்.
உக சகல ஊர்வனவற்றிலும் இவைகள் உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக; செத்த அவைகளைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.
உஉ செத்த அவைகளில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அதுவெல்லாம் தீட்டுப்பட்டிருக்கும், அது எந்த மரமூட்டானாலும், வஸ்திரமானாலும், தோலானாலும், பையானாலும் வேலைசெய்கிற எந்த ஆயுதமானாலும் சரி, தண்ணீரிலே போடப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக; அப்பொழுது சுத்தமாம்.
உங அவைகளில் யாதொன்று எந்த கவபாண்டத்திற்குள்ளும் விழுந்தால், அதற்குள் இருக்கின்றவை எல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்; அதையோவென்றால் உடைப்பீர்களாக.
உச புசிக்கிற சகல போசனத்திலும் எதிலே தண்ணீர் வந்திருக்கின்றதோ, அது தீட்டாகும்; குடிக்கிற சகலமும் எந்தப்பாத்திரத்தில் இருந்தாலும் சரி, தீட்டாம்.

Digitized by Google

ஈடு அவைகளின் உடலில் யாதொன்று எதின்மேல் விழுகிறதோ, அது எல்லாம் தீட்டாம்; அடுப்பும் மண்தொட்டியுமானாலும் சரி, தகர்க்கப்படுவதாக, அவைகள் தீட்டுப்பட்டிருக்கும்; ஆகையால் உங்களுக்கு அவைகள் தீட்டாயிருக்கும்.

ஈசு நீர் ஊற்றும் தண்ணீர் உண்டாகிய இணறுமோவென்றால், சுத்தமாயிருக்கும்; ஆனால் அவைகளின் உடலைத் தொடுகிறவன் தீட்டுப்படுகிறான்.

ஈள அவைகளின் உடலில் யாதொன்று விதைக்கிற எந்தத் தானியத்தின்மேல் விழுந்தாலும், அது சுத்தமாயிருக்கும்.

ஈஅ தண்ணீர் வார்க்கப்பட்டிருக்கிற விதையின்மேல் விழுந்ததேயாகில், உங்களுக்குத் தீட்டாயிருப்பதாக.

ஈகூ ¶ உங்களுக்கு ஆகாரத்திற்கான ஒரு மிருகம் செத்தாலும் அதின் உடலைத் தொடுகிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

சஅ அதின் உடலிலே புசித்தவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதின் உடலை எடுத்துப்போனவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; அவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

சக ¶ தானாயோடே நகருகிற ஜீவனெல்லாம் அருவருப்பாயிருக்கக்கடவது; அவை புசிக்கப்படலாகாது.

சஉ தானாயோடே ஊருகிற சகல ஜீவனவற்றிலும் வயிற்றாலே நகருகிற யாதொன்றையும், நான்குகாலால் நடக்கிற யாதொன்றையும், அல்லது அநேகம் கால்களுள்ள யாதொன்றையும் புசியீர்களாக; ஏனெனில் அவைகள் அருவருப்பாய் இருக்கின்றவைகள்.

சஈ ஊருகிற எந்த ஜீவனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காமலும், அவைகளால் தீட்டுப்படாமலும் இருப்பீர்களாக; ஏனெனில் அவைகளாலே தீட்டுப்படுவீர்கள்.

சஉ அதேனென்றால் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்; ஆகையால் உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராய் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்; ஆனபடியினாலே தரையோடே ஊருகிற எந்த ஜீவனவற்றாலும் உங்கள் ஆத்துமாக்களைத் தீட்டுப்படுத்தாதிருங்கள்.

சடு உங்கள் பராபரனாயிருக்கும்படிக்கு நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணின கர்த்தர்; ஆகையால் பரிசுத்தராயிருப்பீர்களாக; ஏனெனில் நாம் பரிசுத்தர்.

சஎ ¶ தீட்டானதற்கும், சுத்தமானதற்கும், புசிக்கப்படும் ஜீவனுக்கும் புசிக்கப்படாத ஜீவனுக்கும், விசாரம்பண்ணுவதற்காக,

சஅ இந்த மிருகத்திற்கும் பறவைக்கும் தண்ணீர்களில் நீந்துகிற சகல ஜீவஜந்துக்கும் பூமியின்மேலே ஊருகிற சகல ஜீவனுக்கும் அடுத்த நியாயப்பிரமாணம் என்று சொல்லுங்களென்றார்.

൩൨. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஸ்திரீ கர்ப்பம்தரித்து, ஆண்பிள்ளையைப் பெற்றால், அவள் தூரஸ்திரியாய் விலக்கமாயிருக்கிற நாள்களுக்குச் சரியாக ஏழுநாள் தீட்டாயிருப்பாள்.

ஈ எட்டாம்நாளிலே அதினுடைய தனித்தோலின் மாம்சம் சுன்னத்துப் பண்ணப்படக்கடவது.

ச பிற்பாடு அவள் மூப்பத்துமூன்றுநாள் தன் உதிரச் சுத்திகரிப்பிலிருந்து, தன் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறும்மட்டும், பரிசுத்தமான யாதொரு வஸ்துவைத் தொடவும் பரிசுத்தஸ்தலத்திற்கு வரவும் வேண்டாம்.

Digitized by Google

ஙு பெண்பிள்ளையைப் பெற்றாளேயாகில்,

அவன் இரண்டு வாரம் தூரஸ்திரியாயிருக்கிறதுபோல, தீட்டாயிருந்து, பிற்பாடு அறுபத்தாறு நான்தன் உதிரச் சுத்திகரிப்பிலிருக்கக்கடவன்.

௬ ஆண்பிள்ளையை, அல்லது பெண்பிள்ளையைப் பெற்றதற்காக அவள் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறினபின்பு, அவள் ஒரு வயதான ஆட்டுக்குட்டியைச் சர்வாங்கதகனபலியாகவும், ஒரு புருக்குஞ்சை பாதிலும் காட்டுப்புருவை என்கிறும் பாவம்போக்கும் பலியாகவும், ஆசரிப்புக் கூடாரவாசலுக்கு ஆசாரியனண்டையிலே கொண்டுவரக்கடவள்.

௭ அதை அவன் கர்த்தருக்குமுன்பாகச் செலுத்தி, அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குவானாக; அப்பொழுது தன் உதிரவூறலில் தீட்டிற்குச் சுத்தமாவாள்; இது ஆண்பிள்ளையை அல்லது பெண்பிள்ளையைப் பெற்றவனின் நியாயப்பிரமாணம்.

௮ ஆட்டுக்குட்டியைக் கொண்டுவர அவன் கைக்கில்லாதிருந்ததேயாகில், அவள் இரண்டு காட்டுப்புருக்களை, அல்லது இரண்டு புருக்குஞ்சுகளை ஒன்றைச் சர்வாங்கதகனபலியாகவும், மற்றதைப் பாவம்போக்கும் பலியாகவும், கொண்டுவருவாளாக; அதினால் ஆசாரியன் அவளுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பாளென்று சொல்லென்றார்.

௰௩. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ ஒரு மனிதனுடைய மாம்சத்தின் தோலிலே குஷ்டவாதையைப்போலிருக்கிற ஒரு வீக்கமாகிலும் சிரங்காகிலும் வெள்ளை மறு என்கிறும் உண்டானால், அவன் ஆசாரியராகிய ஆரோனண்டைக்கு, அல்லது ஆசாரியராகிய அவன் குமாரரில் ஒருவனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

௩ அப்பொழுது ஆசாரியன் மாம்சத்தின் தோலிலிருக்கிற வாதையின் இடத்தைப் பார்க்கக்கடவன்; அதிலே மயிர் வெண்மையாக மாறினதும் வாதையினிடம் அவன் மாம்சத்தின் தோலைப்பார்க்கிலும் பள்ளமுமாயிருந்தால், அது குஷ்டத்தின் வாதை; ஆசாரியன் அவனைப் பார்த்தபொழுது, அவனைத் தீட்டுள்ளவனாகத் தீர்க்கக்கடவன்.

௪ அவன் மாம்சத்தோலிலே வெள்ளை மறு இருந்தாலும், அவ்விடம் அவன் மாம்சத் தோலைப்பார்க்கிலும் பள்ளமாயிராமலும் அதின் மயிர் வெண்மையாக மாறுமலும் இருந்ததாகில், ஆசாரியன் அவனை ஏழு நாள் அடைத்துவைத்து,

௫ ஏழாம்நாளிலே அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையினிடம் தோலிலே அதிகப்படாமல், வாதை அவன் பார்வைக்கு நின்றிருந்தால், ஆசாரியன் இரண்டாம்தரம் அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௬ இரண்டாம்தரம் அவனை ஏழாம்நாளிலே பார்க்கக்கடவன்; இதோ வாதை தோலிலே அதிகப்படாமல் சுருங்கி இருந்தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது சிரங்குதான்; அவன் தன் வஸ்திரங்களை வெளுத்துச் சுத்தமாயிருப்பானாக.

௭ தன்னைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கிறதற்கு அவன் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பித்தபின்பு, சிரங்கு தோலிலே இடம் கொள்ளவே கொண்டதேயானால், அவன் மறுபடியும் ஆசாரியனுக்குத் தன்னைக் காண்பிக்கக்கடவன்.

௮ இதோ சிரங்கு தோலிலே இடம் கொண்டதென்று ஆசாரியன் கண்டால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டம்தானே.

௯ ¶ குஷ்டவாதை ஒரு மனிதனிலிருந்தால், ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்படக்கடவன்.

Digitized by Google

௰ இதோ, தோலிலே வெண்மையான வீக்கமிருந்து அது மயிரை வெண்மையாக

மாறப்பண்ணிற்றென்றும், வீக்கத்திலே பச்சைச் சதையின் குணம் உண்டென்றும், ஆசாரியன் கண்டால்,

௰ அப்பொழுது அது அவன் மாம்சத்தின் தோலிலே நான்பட்ட குஷ்டம்; ஆசாரியன் அவனை அடைத்துவைக்காமல், தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அவன் தீட்டுள்ளவன்தானே.

௰௧ குஷ்டம் தோலிலே தளிர்க்கவே தளிர்த்து, வாதையுள்ளவனுடைய தலைதுவக்கி அவன் கால்கள்மட்டும் ஆசாரியனுடைய கண்களுக்குத் தெரிகிற எவ்விடமும் தோலை எல்லாம் மூடிக்கொண்டிருந்ததேயானால்,

௰௨ அப்பொழுது ஆசாரியன் பார்த்து, இதோ, குஷ்டம் அவன் மாம்சத்தை எல்லாம் மூடியிருந்தால், அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; எல்லாம் வெண்மையாக மாறிற்று; அவன் சுத்தமானவன்.

௰௩ ஆனால் பச்சைச்சதை அவனில் காணப்படும்நாளிலே அவன் தீட்டுள்ளவன்.

௰௪ ஆகையால் ஆசாரியன் பச்சைச்சதையைக் காணும்பொழுது, அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; பச்சைச்சதை தீட்டுள்ளது, அது குஷ்டம்.

௰௫ அல்லவென்று பச்சைச்சதை மாறி வெண்மையாகப்போனால், அவன் ஆசாரியனண்டையில் வருவானாக.

௰௬ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கடவன்; இதோ, வாதையின் இடம் வெண்மையாகமாறிற்றானால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவன் என்று தீர்க்கக்கடவன்; அவன் சுத்தமுள்ளவன்.

௰௭ ¶ மாம்சத்தின் தோலிலே எரிச்சல் உண்டாயிருந்து ஆறிப்போய்,

௰௮ பிற்பாடு அவ்விடத்தில் ஒரு வெள்ளை வீக்கம், அல்லது சிவப்புக்கலந்த ஒரு வெள்ளை மறு உண்டானால், ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படவேண்டும்.

௰௯ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் தாழ்ந்ததும் அதின் மயிர் வெண்மையாக மாறினதுமாயிருந்தால், ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்ப்பானாக; அது எரிச்சலிலே எழும்பின குஷ்டம்.

௰௰ ஆசாரியன் அதைப் பார்க்கும்பொழுது, இதோ அதில் வெள்ளைமயிர் இல்லை என்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல், சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயானால், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

௰௱ அது தோலில் இடம் கொள்ளவே கொண்டால், அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது அந்த வாதைதான்.

௰௲ அந்த வெள்ளை மறு அதிகப்படாமல், தன்னிடத்திலே நின்றதேயானால், அது எரிபந்தத்தினுடைய வடுவாயிருக்கும்; ஆகையால் ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

௰௳ ¶ அல்லது ஒருவனுடைய மாம்சத்தின் தோலிலே நெருப்புப்பட்டதினாலே சூடுண்டாய், சூடாறிப்போன இடத்திலே சிவப்பாகிய அல்லது வெண்மையாகிய மறு உண்டானால்,

௰௴ ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த மறுவிலே மயிர் வெண்மையாக மாறி, அவ்விடம் மற்றத்தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிருந்தால், அது சூட்டினால் எழும்பின குஷ்டம்; ஆகையால் ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதைதான்.

௰௵ ஆசாரியன் அதைப் பார்க்கிறபொழுது, இதோ மறுவிலே வெள்ளைமயிர் இல்லையென்றும், அது மற்றத் தோலைப்பார்க்கிலும் தாழ்ந்திராமல் சுருங்கி இருக்கிறதென்றும், கண்டானேயானால், அவனை ஏழுநாள் அடைத்துவைத்து,

Digitized by Google

௰௶ ஏழாம்நாளில் அவனைப் பார்க்கக்

கடவன்; அது தோலில் இடம்கொள்ள வே கொண்டிருந்தால், ஆசாரியன் அவ னைத் திட்டுன்னவனென்று தீர்க்கக்கடவன்; அது குஷ்டத்தின் வாதை.

உஅ மறுவானது தோலில் இடம்கொள் ளாமல், தன்னிடத்திலே நின்று சுருங்கி யிருந்ததேயாகில், அது சூட்டினால் உண் டான வடு; ஆசாரியன் அவனைச் சுத்தமு ள்ளவனென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் அது சூட்டினுடைய சிரங்கு.

உக ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரிக் காகிலும் தலையிலே அல்லது தாடியிலே ஒரு வாதை உண்டானால்,

உடு ஆசாரியன் அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அவ்விடம் மற்றத் தோலைப்பார்க் கிலும் பள்ளமும் அதிலே மயிர் பொன் நிறமும் கொஞ்சமுமாயிருந்தால், ஆசாரி யன் அவனைத் திட்டுன்னவனாகத் தீர்க்கக் கடவன்; அது தலையிலே அல்லது தாடியி லே குஷ்டமான சொறியாயிருக்கும்.

உக ஆசாரியன் அதைப் பார்க்கிறபொ ழுது, இதோ அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமாயிராவிட்டாலும் அதி லே கறுப்பான மயிர் இல்லையென்று கண் டால், ஆசாரியன் அவனை ஏழுநாள் அ டைத்துவைத்து,

உஉ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக் கடவன்; இதோ அந்தச் சொறி இடம் கொள்ளாமலும், அதிலே பொன்நிற மயிர் இல்லாமலும், அவ்விடம் மற்றத் தோலைப் பார்க்கிலும் பள்ளமல்லாமலும் இருந்தால்,

உஊ அவன் சிரைத்துக்கொண்டு, சொறி யையோ சிரைத்துக்கொள்ளாதிருக்கக்கட வன்; பிற்பாடு ஆசாரியன் இரண்டாம் முறை அவனை ஏழுநாள் அடைத்துவை த்து,

உஎ ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக் கடவன்; இதோ, சொறி தோலில் இடம் கொள்ளாமலும் அவ்விடம் மற்றத் தோ லைப்பார்க்கிலும் பள்ளமல்லாமலுமிருந் தால், ஆசாரியன் அவனைச் சுத்தமுள்ளவ னென்று தீர்க்கக்கடவன்; அவன் தன் வஸ் திரங்களை வெளுத்தபின் சுத்தமாயிருப் பான்.

உடு அவன் சுத்தமுள்ளவனென்று தீர்க் கப்பட்ட பிறகு அந்தச் சொறி தோலில் இடம்கொள்ளவே கொண்டதானால்,

உசு ஆசாரியன் அவனைப் பார்க்கக்கட வன்; இதோ, சொறி தோலில் இடம்கொ ண்டிருந்தால், அப்பொழுது மயிருக்காக அது பொன்நிறமோ என்று ஆசாரியன் விசாரிக்கக் கடவனல்ல; அவன் தீட்டுள் ளவன்தானே.

உஎ தன் பார்வைக்கு அந்தச்சொறி நின்று, அதிலே கறுப்புமயிர் முளைத்ததேயாகில், சொறி தாவினையாயிற்று; அவன் சுத்தமா யிருக்கிறான்; ஆசாரியன் அவனைச் சுத்த முள்ளவனென்று தீர்க்கக்கடவன்.

உஅ ¶ ஒரு புருஷனுக்காகிலும் ஸ்திரிக்கா கிலும் அவர்கள் மாம்சத்தின் தோலிலே வெள்ளை மாசுகளாகிய மாசுகளுண்டானால்,

உஆ ஆசாரியன் பார்க்கக்கடவன்; இதோ, அவர்கள் மாம்சத்தோலிலே சுருங்கின தான வெள்ளை மாசுகளிருந்தால் அது தோ லில் எழும்புகிற வெள்ளைத் தேமல்; அவன் சுத்தமுள்ளவன்.

சஅ ¶ ஒருவனுடைய தலைமயிர் உதிர்ந்து, அவன் மொட்டையனானால், அவன் சுத்த மாயிருக்கிறான்.

சக அவனுடைய முன்னந்தலை மயிர் உ திர்ந்தால், அவன் அரை மொட்டையன்; அவன் சுத்தமாயிருக்கிறான்.

சஉ மொட்டைத்தலையில் அல்லது அரை மொட்டைத்தலையில் சிவப்புக்கலந்த வெ ண்மையான நிறம் உண்டாயிற்றேயானால், அது அதிலே எழும்புகிற குஷ்டம்.

சஎ ஆசாரியன் அவனைப் பார்க்கக்கட வன்; இதோ, அவனுடைய மொட்டைத் தலையிலே அல்லது அரைமொட்டைத்தலை யிலே மாம்சத்தினுடைய தோலின் குஷ் டத்தைப்போலக் காணப்படுகிற சிவப்புக் கலந்த வெண்மையான வீக்கமிருந்தால்,

Digitized by Google

சச அவன் குஷ்டரோகி, அவன் தீட்டுள்ளவன்; ஆசாரியன் அவனைத் தீட்டுள்ளவனென்று தீர்க்கவே தீர்க்கக்கடவன்; அவன் வாதை அவன் தலையிலே இருக்கின்றது.

சடு ¶ வாதை உண்டாயிருக்கிற குஷ்டரோகியின் வஸ்திரங்கள் கிழிந்தவைகளும் அவன் தலை நிறந்தரிவுமாய் இருக்கவும், அவன் தன் தாடியை மூடிக்கொண்டிருக்கவும், தீட்டுள்ளவன், தீட்டுள்ளவனென்று கூப்பிடவும் வேண்டியது.

சசு அந்த வாதை அவனில் இருக்கும் நாளெல்லாம் தீட்டாக எண்ணப்படுவானாக; அவன் தீட்டானவன், தனியே குடியிருப்பானாக; அவன் குடியிருப்புப் பாளயத்திற்குப்புறம்பே இருக்கக்கடவது.

சஎ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான ஒரு வஸ்திரத்திலாகிலும்,

சஅ பஞ்சுநூலும் அல்லது ஆட்டுமயிருமான பாவிலாகிலும், உண்டை நூலிலாகிலும், ஒரு தோலிலாகிலும், தோலான எந்தவித வேலையிலென்கிலும், குஷ்டத்தின் உருவுண்டாகி,

சசு வஸ்திரத்திலாகிலும், தோலிலாகிலும், பாவிலாகிலும், உண்டைநூலிலாகிலும், தோலான எந்தவித வேலையில் என்கிலும், அது கொஞ்சம் பச்சை அல்லது சிவப்பாயிருந்தால், குஷ்டமாயிருக்கும்; அது ஆசாரியனுக்குக் காண்பிக்கப்படக்கடவது.

நடு ஆசாரியன் அதைப்பார்த்து ஏழுநாள் அடைத்துவைத்து,

நக ஏழாம்நாளிலே அதைப் பார்க்கக்கடவன்; வஸ்திரத்திலேயாவது, பாவிலேயாவது, உண்டைநூலிலேயாவது, தோலிலேயாவது, தோலால் எந்தவிதமுமாகச் செய்யப்பட்ட வேலையிலேயாவது, அது அதிகப்பட்டிருந்தால், அது அரிக்கிற குஷ்டமாயிருக்கும் தீட்டாயிருக்கின்றது.

நஉ அந்த உருவிருக்கிற ஆட்டுமயிரும் அல்லது பஞ்சுநூலுமான வஸ்திரத்தையும், அல்லது பாவையும், அல்லது உண்டைநூலையும், அல்லது தோலான எந்தவிதமுமான பணிமுட்டையும், சுட்டெரிக்கக்கடவன்.

நக ¶ ஏனெனில் அது அரிக்கிற குஷ்டம்; அக்கினியாலே சுட்டெரிக்கப்படுவதாக. ஆகில் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தோலான எந்தவித முமான பணிமுட்டிலென்கிலும் இதோ அந்த உருவத்திலே அதிகப்பட்டதில்லை என்று ஆசாரியன் கண்டால்,

நச அப்பொழுது ஆசாரியன் அதைக் கழுவச்சொல்லி, இரண்டாம்முறை ஏழுநாள் அடைத்துவைத்து,

நஎ அது கழுவப்பட்டபின்பு, அதைப் பார்க்கக்கடவன்; இதோ, அந்த உரு அதிகப்படாதிருந்தாலும் மாறுதலாயிருந்தால் தீட்டாயிருக்கும்; அக்கினியால் அதைச் சுட்டெரிக்கவேண்டும்; அது அதின் உள்புறத்திலாகிலும் வெளிப்புறத்திலாகிலும் உருவ அரிக்கிறதாயிருக்கின்றது.

நக கழுவப்பட்டபின்பு, இதோ, அது குறுகிற்றென்று ஆசாரியன் கண்டானேயாகில், அதை வஸ்திரத்திலே, அல்லது தோலிலே, அல்லது பாவிலே, அல்லது உண்டைநூலிலே, இராதபடிக்குக் கிழித்துப் போடவேண்டும்.

நஎ அது இன்னம் வஸ்திரத்திலாகிலும் பாவிலாகிலும் உண்டைநூலிலாகிலும் தோலையான எந்தவிதமுமான பணிமுட்டிலென்கிலும் காணப்பட்டதேயானால், அது தளிர்க்கிறதாயிருக்கும்; ஆகையினால் அதை அக்கினியாலே சுட்டெரிக்கவேண்டும்.

நஅ வஸ்திரமும் அல்லது பாவும் அல்லது உண்டைநூலும் அல்லது எந்தவிததோல் பணிமுட்டும் கழுவப்பட்டபின்பு, அந்த உருவு அதைவிட்டுப்போயிற்றேயானால், அது இரண்டாம்முறை கழுவப்படட்டும், அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

நகூ ¶ ஆட்டுமயிர் அல்லது பஞ்சுநூல் நெசவான வஸ்திரத்தையாகிலும், பாவையாகிலும், உண்டைநூலையாகிலும், எந்தவிததோல் பணிமுட்டை என்கிலும் சுத்த

மாக அல்லது நீட்டாகத் தீர்க்கிறதற்கு, இது அதினுடைய குஷ்டவாதைக்கடுத்த நியாயப்பிரமாணமென்றார்.

௰. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ குஷ்டரோகியினுடைய சுத்திகரிப்பின் காலிலே அவனுக்கடுத்த நியாயப்பிரமாணம் என்னவெனில், *அவன் ஆசாரியனண்டைக்குக் கொண்டுவரப்பட, ஆசாரியன் பானயத்திற்குப்புறம்பே போகவேண்டும். *மத். ௮. ச.

ஊ இதோ, குஷ்டரோகியின் குஷ்டவாதை குணமாயிற்றென்று ஆசாரியன் கண்டால்,

ச அவன் சுத்திகரிக்கப்படப்போகிறவனுக்காக, சுத்தமாயிருக்கிற உயிருள்ள இரண்டு குருவிகளையும், ஒருகேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும் வாங்கிவரக் கற்பிப்பானாக.

எ பிற்பாடு ஆசாரியன் அந்தக் குருவிகளில் ஒன்றை ஒரு மண்பாண்டத்திலுள்ள சுரப்புத் தண்ணீர்மேல் கழுத்தை அறுக்கச் சொல்லி,

ஈ உயிருள்ள குருவியையும், கேதுருக்கட்டையையும், சிவப்புநூலையும், ஈசோப்பையும், எடுத்துக்கொண்டு இவைகளையும் உயிருள்ள குருவியையும் சுரப்புத் தண்ணீரின்மேல் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலே தோய்த்து,

ஏ குஷ்டமறச் சுத்திகரிக்கப்படப்போகிறவன்மேல் ஏழுதரம் தெளித்து, அவனைச் சுத்தம்பண்ணி, உயிருள்ள குருவியை வெளியின் விசாலத்திலே விட்டுவிடக்கடவன்.

ஐ ¶ சுத்திகரிக்கப்படுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மயிரையெல்லாம் சிரைத்து, தான் சுத்தமாகும்படிக்கு, தண்ணீரிலே முழுகி, பிற்பாடு பானயத்திற்குள் பிரவேசித்து, தன் கூடாரத்திற்குப் புறம்பே ஏழுநாள் தங்கி,

ஒ ஏழாம்நாளிலே தன் தலையையும், தாடியையும், புருவங்களையும், தன்னுடைய எல்லா மயிர்களையும் சிரைத்து, தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவிச் சுத்தமாயிருப்பானாக.

ஓ எட்டாம்நாளிலே அவன் பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு வயதான பழுதற்ற ஒரு பெண்குட்டியையும், ஒரு மரக்கால் மெல்லிய மாவிலே பத்தில் மூன்று பங்கான எண்ணெயிலே பிசைந்த காணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெயையும் கொண்டுவரக்கடவன்.

ஔ சுத்திகரிக்கிற ஆசாரியன் சுத்திகரிக்கப்படுகிற மனிதனையும் அவைகளையும் கர்த்தருக்குமுன்பாக ஆசரிப்புக்கூடாரவாசலிலே நிறுத்தக்கடவன்.

க பிற்பாடு ஆசாரியன் ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதையும் அந்த ஆழாக்கெண்ணெயையும் குற்றம்போக்குகிறதற்காகக் கொண்டுவந்து, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்டி,

஖ பாவம்போக்கும்பலியும் சர்வாங்கதகனபலியும் குரல்வளை அறுக்கப்படுகிற பரிசுத்தஸ்தலத்திலே அந்த ஆட்டுக்குட்டியைக் குரல்வளை அறுப்பானாக; ஏனெனில் குற்றம்போக்கும்பலி, பாவம்போக்கும்பலியைப்போல ஆசாரியனுடையது; அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

஗ குற்றம்போக்கும் அந்தப் பலியின் இரத்தத்திலே ஆசாரியன் கொஞ்சம் பிடித்து, சுத்திகரிக்கப்படுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன் வலதுகையின் பெருவிரல்மேலும், வலதுகாதின் பெருவிரல்மேலும் பூசக்கடவன்.

஘ பிற்பாடு ஆசாரியன் அந்த ஆழாக்கெண்ணெயிலே கொஞ்சம் தன் இடதுகையில் வார்த்து,

ங அதிலே தன் வலதுவிரலைத் தோய்த்து, தன் விரலினால் ஏழுதரம் அந்த எண்ணெயில் எடுத்து, கர்த்தருக்குமுன்பாகத் தெளித்து,

Digitized by Google

ய௦ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை
எண்ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்ப
டுகிறவன் வலதுகாதின் மடலிலும், அவன்
வலதுகையின் பெருவிரல்மேலும், வலது
காலின் பெருவிரல்மேலும் முந்தப் பூசியி
ருக்கிற குற்றம்போக்கும்பலியினுடைய இ
ரத்தத்தின்மீதில் பூசி,

ய௧ தன் உள்ளங்கையில் இருக்கிற குறை
எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன்
தலையிலே தடவி, கர்த்தருக்கு முன்பாக
அவனுக்காகப் பாவநிவிர்த்தியை உண்
டாக்கி,

ய௨ பாவம்போக்கும்பலியையும் செலுத்
தி, சுத்திகரிக்கப்படுகிறவனுக்காக அவன்
தீட்டறப் பாவநிவிர்த்தியை உண்டாக்கிப்
பிற்பாடு சர்வாங்கதகனபலியைக் குரல்வ
ளை அறுத்து,

ய௩ அதையும் காணிக்கையையும் பலிபீ
டத்தின்மேல் ஏற்றி, அவனுக்காகப் பாவ
நிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்
பொழுது சுத்தமாயிருப்பான்.

ய௪ ¶ அவன் தரித்திரனும் அம்மாத்திரம்
அவகாசம் அற்றவனுமேயானால் அவன்
தன் பாவநிவிர்த்திக்கென்று குற்றம்போக்
கும்பலியாகவும் அசைவாட்டும் காணிக்
கையாகவும் ஒரு ஆட்டுக்குட்டியையும்,
ஒருமரக்கால் மெல்லிய மாவிலே பத்தில்
ஒரு பங்கான எண்ணெயிலே பிசைந்த
காணிக்கையையும், ஒரு ஆழாக்கெண்ணெ
யையும்,

ய௫ தன் அவகாசத்திற்குத்தக்கவைகளாக
இரண்டு காட்டுப்புருக்களையாகிலும் இர
ண்டு புருக்குருசுகளை என்கிலும், ஒன்று பா
வம்போக்கும்பலியும் மற்றது சர்வாங்க
தகனபலியுமாகும்படிக்கு வாங்கி,

ய௬ தன் சுத்திகரிப்பின் எட்டாம்நாளி
லே ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்த
ருக்குமுன்பாக ஆசாரியனண்டையிலே
கொண்டுவருவானாக.

ய௭ அப்பொழுது ஆசாரியன் குற்றம்
போக்கும் ஆட்டுக்குட்டியையும் அந்த ஆ
ழாக்கெண்ணெயையும் வாங்கி, கர்த்தரு
முன்பாக அசைவாட்டும் காணிக்கை
யாக அசைவாட்டி,

ய௮ குற்றம்போக்கும் ஆட்டுக்குட்டியின்
குரல்வளையை அறுத்து, அதின் இரத்தத்தி
லே கொஞ்சம் பிடித்து, சுத்திகரிக்கப்படு
கிறவன் வலதுகாதின் மடலிலும் அவன்
வலதுகையின் பெருவிரல்மேலும் வல
தின் பெருவிரல்மேலும் பூசி,

ய௯ அந்த எண்ணெயிலே கொஞ்சம் தன்
இடதுகையில் வார்த்து,

ய௰ இதிலிருக்கும் எண்ணெயிலே தன்
வலது விரலால் எடுத்து, கர்த்தருக்குமுன்
பாக ஏழுதரம் தெளித்து,

ய௰ ௧ தன் உள்ளங்கையிலிருக்கிற எண்
ணெயிலே கொஞ்சம் சுத்திகரிக்கப்படுகி
றவன் வலதுகாதின் மடலிலும், அவன் வல
தகையின் பெருவிரல்மேலும், வலதுகா
லின் பெருவிரல்மேலும் குற்றம்போக்கும்
பலியின் இரத்தம் பூசி இருக்கிற இடத்
தின்மீதில் பூசி,

ய௰ ௨ தன் உள்ளங்கையிலிருக்கிற குறை
எண்ணெயைச் சுத்திகரிக்கப்படுகிறவன்
தலையின்மேல் அவன்நிமித்தம் கர்த்தருக்
குமுன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்
கும்படிக்குத் தடவி,

ய௰ ௩ பிற்பாடு அவன் தன் அவகாசத்திற்
குத்தக்கவைகளாகக் கொண்டுவந்தவை
கள், காட்டுப்புருக்களானாலும் சரி, புரு
க்குருசுகளானாலும் சரி,

ய௰ ௪ அவைகளில் ஒன்றைப் பாவம்போக்
கும்பலியும், மற்றதைச் சர்வாங்கதகனப
லியுமாக்கி, காணிக்கையோடேகூடச் செ
லுத்தி, இப்படியே ஆசாரியன் சுத்திகரி
க்கப்படுகிறவன்நிமித்தம் கர்த்தருக்குமுன்
பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கட
வன்.

ய௰ ௬ ¶ இது தன் சுத்திகரிப்புக்கு அவகா
சம் போதாதிருக்கிற குஷ்டவாதையுள்ள
வனுடைய நியாயப்பிரமாணம் என்றார்.

ய௰ ௭ ¶ பின்னும் கர்த்தர் மோசேயோடும்

ஆரேரோடும் பேசிச் சொன்னதாவது:

ரச காம் உங்களுக்குக் காணியாட்சியாகக் கொடுக்கும் காநான்தேசத்திலே நீங்கள் வந்தபின்பு, நாம் உங்கள் காணியாட்சியான தேசத்தில் ஒரு வீட்டிலே குஷ்ட வாதையை வரப்பண்ணினால்,

ரடு அப்பொழுது அந்த வீட்டிற்கு உடையவன் வந்து, வீட்டிலே வாதையைப்போலிருக்கிறதாக எனக்குக் காண்கிறதென்று ஆசாரியனுக்கு அறிவிக்கக்கடவன்.

ரசு அப்பொழுது வீட்டிலிருக்கிற யாவும் தீட்டாகாதபடிக்கு, ஆசாரியன் அந்த வாதையைப்பார்க்க வரும்முன்னே, வீட்டை ஒழித்துவைக்கச்சொல்லி, பிற்பாடு வீட்டைப் பார்க்கவந்து,

ரள அந்த வாதையிருக்கிற இடத்தைப் பார்க்கக்கடவன்; இதோ, வீட்டுச்சுவர்களிலே கொஞ்சம் பச்சையும் கொஞ்சம் வெப்புமான குழிகளிருந்து, அவைகளின் உருவு சுவரைப்பார்க்கிலும் பள்ளமாயிருந்தால்,

ரரு ஆசாரியன் வீட்டிலிருந்து வாசல்படியிலே புறப்பட்டு, வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து,

ரசு ஏழாம்நாளிலே திரும்பவந்து, இதோ வாதை வீட்டுச் சுவர்களில் இடம்கொண்டதென்று கண்டால்,

சஅ அவன் அவ்விடத்திலிருக்கிற கல்லுகளைப் பேர்க்கவும், பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே போடவும் கற்பித்து,

சக வீட்டை உள்ளே சுற்றிலும் சிவச்சொல்லி, சிவிப்போட்ட மண்ணைப் பட்டணத்திற்குப் புறம்பே தீட்டான ஒரு ஸ்தலத்திலே கொட்டவும்,

சஉ வேறே கல்லுகளை எடுத்துவந்து, அந்தக் கல்லுகளுக்குப் பதிலாகக்கட்டி, வேறே மண்ணை எடுத்து வீட்டைப்பூசவும் சொல்லுவானாக.

சக கல்லுகளைப் பேர்த்து, வீட்டைச் சிவி, கமாய்ப் பூசினபிற்பாடு, அந்த வாதை திரும்ப வீட்டில் எழும்பிற்றேயானால்,

சச ஆசாரியன் வந்து பார்க்கக்கடவன்; இதோ, வாதை வீட்டில் இடம்கொண்டதாகில், அது வீட்டிலே அரிக்கிற குஷ்டமானது; தீட்டாயிருக்கின்றது.

சடு ஆகையால் வீட்டை எல்லாம் அதின் கல்லுகளையும், மரங்களையும், அதின் மண்ணையும் இடித்து, பட்டணத்திற்குப்புறம்பே தீட்டான ஸ்தலத்திலே கொண்டுபோகவேண்டும்.

சள வீடு அடைக்கப்பட்ட நாளெல்லாம் அதற்குள் பிரவேசிக்கிறவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

சள வீட்டிலே படுத்துக்கொண்டவன் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; வீட்டிலே சாப்பிட்டவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்.

சஅ ¶ ஆசாரியன் திரும்பவந்து, இதோ, வீடு பூசப்பட்டபிறகு வீட்டிலே அந்த வாதை இடம்கொண்டதில்லை என்று கண்டானேயானால், அவன் அந்த வீட்டைச் சுத்தமென்று தீர்க்கக்கடவன்; ஏனெனில் வாதை நிவிர்த்தி ஆயிற்று.

சக அப்பொழுது வீட்டின் பாவத்தைப் போக்க, இரண்டு குருவிகளையும் கேதுருக்கட்டையையும் சிவப்புநூலையும் ஈசோப்பையும் வாங்கி,

டுஅ ஒரு குருவியை ஒரு மண்பாண்டத்திலுள்ள சுரப்புத் தண்ணீரின்மேலே கழுத்தறுத்து,

டுக கேதுருக்கட்டையையும், ஈசோப்பையும், சிவப்புநூலையும், உயிருள்ள குருவியையும் எடுத்துக்கொண்டு, இவைகளைக் கழுத்தறுக்கப்பட்ட குருவியின் இரத்தத்திலும் சுரப்புத்தண்ணீரிலும் தோய்த்து, வீட்டின்மேல் ஏழுதரம் தெளித்து,

டுஉ குருவியின் இரத்தத்திலும், சுரப்புத்தண்ணீரிலும், உயிருள்ள குருவியிலும், கேதுருக்கட்டையிலும், ஈசோப்பிலும், சிவப்புநூலிலும், வீட்டின் பாவத்தைப்போக்கி,

௫ உயிருள்ள குருவியைப் பட்டணத்திற்புறம்பே வெளியின் விசாலத்திலே விட்டுவிட்டு, இப்படியே வீட்டிற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருக்கும்.

௫௰ இது சகலவித குஷ்டவாதைக்கும், சொறிக்கும்,

௫௱ வஸ்திரத்தின் குஷ்டத்திற்கும், வீட்டின் குஷ்டத்திற்கும்,

௫௲ வீக்கத்திற்கும், சிரங்குக்கும், வெள்ளை மறுவுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம்.

௫௳ எப்பொழுது தீட்டானதென்றும், எப்பொழுது சுத்தமானதென்றும், போதிக்கிறதற்கு இது குஷ்டத்திற்கு அடுத்த நியாயப்பிரமாணமென்றார்.

௰ரு. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

௨ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், எவனாருவன் மாம்சத்திலே பிரமியமுண்டானால், அவன் தன் பிரமியத்தினாலே தீட்டானவன்.

௩ அவனுடைய மாம்சத்திலே பிரமியம் ஊற்றினாலும், அவன் மாம்சப்பிரமியம் அடைபட்டிருந்தாலும், அது அவனிலே தீட்டாயிருக்கும்.

௪ பிரமியக்காரன் படுக்கிற படுக்கையெல்லாம் தீட்டாம்; அவன் எதின்மேல் உளுக்காருகிறானோ, அதுவெல்லாம் தீட்டாம்.

௫ அவன் படுக்கையைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுக்கக்கடவன்; சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௬ பிரமியக்காரன் உளுக்காந்ததின்மேல் உளுக்காருகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௭ அவன் மாம்சத்தைத் தொடுகிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௮ அவன் சுத்தமாயிருக்கிற ஒருவன்மேல் துப்பினால், இவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரிலே முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௯ அவன் எதின்மேல் ஏறிப்போகிறானோ, அது எல்லாம் தீட்டாம்.

௰ அவன்கீழிருந்த எதையாகிலும் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அதை எடுத்துச் சுமக்கிறவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰க அவன் தன் கைகளைத் தண்ணீரிலாலே கழுவாதிருக்கும்போது, எவனையாகிலும் தொட்டால், அவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

௰௨ அவன் தொட்டிருக்கிற மண்பாண்டம் உடைக்கப்படவும் மரப்பாண்டமெல்லாம் தண்ணீரில் அலசப்படவும் கடவது.

௰௩ அவன் தன் பிரமியம் அறச் சுத்தமாலும், அவன் தன் சுத்திகரிப்புக்கென்று ஏழுநாள் எண்ணிக்கொண்டு, தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைச் சுரப்புத்தண்ணீரிலே கழுவக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருக்கிறான்.

௰௪ எட்டாம்நாளிலோவெனில், அவன் இரண்டு காட்டுப்புறுக்களையாகிலும், இரண்டு புறுக்குஞ்சுகளையாகிலும், ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்து, ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்.

௰௫ ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, அவனுக்காகக் கர்த்தரின் சந்நிதியிலே, அவன் பிரமியத்தினிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

Digitized by Google

௰௬ இந்திரியம் ஒருவனிலிருந்து கழிந்த

ண்டானால், அவன் தன் மாம்சத்தை எல்லாம் தண்ணீரிலே கழுவி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பானாக.

ஙஎ கழிந்த இந்திரியம் பட்ட சகல வஸ்திரமும் சகல தோலும் தண்ணீரினாலே கழுவப்பட்டு, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பதாக.

ஙஅ இந்திரியம் கழிந்தவளோடே பெண் சாதி படுத்துக்கொண்டிருந்தால், இருவரும் தண்ணீரிலே முழுகி, சாயங்காலம் மட்டும் தீட்டாயிருப்பார்களாக.

ஙக ¶ தன் மாம்சத்திலே உதிரம் ஓடுகிறவன்திரி எழுகால் தன் விலக்கத்தில் இருக்கக்கடவள்; அவனைத் தொடுகிறவனெல்லாம் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

ஙஉ அவள் விலகி இருக்கையில், எதின் மேல் படுத்துக்கொள்ளுகிறாளோ, எதின் மேல் உளுக்காருகிறாளோ, அதெல்லாம் தீட்டாம்.

ஙஉ அவள் படுக்கையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

ஙஊ அவள் உளுக்காந்த யாதொரு மணையைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

ஙஎ அவள் படுக்கையின்மேலும், அல்லது அவள் உளுக்காந்த மணையின்மேலும் இருந்த எதையாகிலும் தொட்டவன், சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

ஙஏ ஒருவன் அவளோடே படுக்கவே படுத்துக்கொண்டதும் அவள் தீட்டு அவன் மேலே பட்டதும் உண்டானால், அவன் ஏழுநாள் தீட்டாயிருப்பான்; அவன் படுக்கிற படுக்கையுமெல்லாம் தீட்டுப்படும்.

ஙஐ ¶ ஒரு ன்திரி விலகியிருக்கும்காலம் அல்லாமல் அவளுடைய உதிரம் அநேகம்நாள் ஓடவே ஓடி, அல்லது அந்தக் காலத்திற்கு மிஞ்சி ஓடினால், அவள் அது ஓடுகிற நாளெல்லாம் தன் விலக்கத்தின் நாள்களைப்போலத் தீட்டாயிருப்பாள்.

ஙஒ அந்தச் சகல நாளும் அவள் படுக்கிற படுக்கை எல்லாம், அவளுக்கு அவள் விலக்கத்தின் படுக்கைக்குச் சரியாய் இருப்பதாக; அவள் எதின்மேல் உளுக்காருகிறாளோ, அது அவளுடைய விலக்கத்தின் தீட்டைப்போலத் தீட்டாயிருக்கும்.

ஙஓ அப்படிக்கொத்தவைகளைத் தொடுகிறவனெல்லாம் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பானாக.

ஙஔ அவள் தன் உதிரம் அறச் சுத்தமானால், அவள் ஏழுநாள் எண்ணிக்கொள்வாளாக; பிற்பாடு சுத்தமாயிருப்பாள்.

ஙக எட்டாம்நாளிலோவெனில், இரண்டு காட்டுப்புறுக்களையாகிலும், இரண்டு புறுக்குஞ்சுகளை என்கிலும் ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டைக்குக் கொண்டு வரக்கடவள்.

ஙங ஆசாரியன் அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி, அவளுக்காகக் கர்த்தரின் சந்நிதியில் அவளுடைய உதிர ஓட லின்நிமித்தம் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

ஙச ¶ இஸ்ரவேல் புத்திரர்தங்கள் நடுவே இருக்கிற நம்முடைய வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, தங்கள் தீட்டுகளால் சாவதபடிக்கு, இப்படி நீங்கள் அவர்கள் தீட்டுகளுக்கு அவர்களை விலக்கிவைக்கவேண்டும்.

ஙஎ ¶ இது பிரமியக்காரனுக்கும், இந்திரியஸ்கலிதமானதினாலே தீட்டானவனுக்கும்,

ஙஞ தன் விலக்கத்திலே பலவீனப்பட்டவளுக்கும், மாம்சம் உருகியிருக்கிற ஆண்சாதிக்கும் பெண்சாதிக்கும், தீட்டாயிருக்கிறவனோடே படுத்துக்கொண்டவனுக்கும், செல்லும் நியாயப்பிரமாணமென்று சொல்லுங்களென்றார்.

Digitized by Google

யசூ. அதிகாரம்.

1 ஆரோனின் இரண்டு குமாரர் *கர்த்தரின் சந்நிதியிலே சேருகையில் செத்துப்போன பிற்பாடு, கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது: *ஊ மோ. யி. க, உ.

2 உன் சகோதரனுடைய ஆரோன் சாவாதபடிக்கு, பரிசுத்தஸ்தலத்திலே நிலைக்குட்புறத்திலிருக்கிறபெட்டியின்மீதிலுள்ள கிருபாசனமான மூடிக்குமுன்பாக சகல வேளையிலும் வரவேண்டாமென்று அவனுக்குச் சொல்; ஏனெனில் கிருபாசனமான மூடியின்மீதில் மேகத்திலே காணப்படுவோம்.

3 ஆரோன் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கப்போனால், ஒரு காளை எருதைப் பாவம்போக்கும்பலியாகவும், ஒரு ஆட்டுக்கடாவைச் சர்வாங்கதகனபலியாகவும், செலுத்திப் பிரவேசிக்கவேண்டும்.

4 அவன் பரிசுத்தமான பஞ்சுநூல் சட்டையை உடுத்து, தன் மாம்சத்தின்மேலே பஞ்சுநூல் சல்லடத்தைப் போட்டு, பஞ்சுநூல் நடுக்கட்டைக் கட்டி, பஞ்சுநூல் பாகையைப் போட்டுக்கொண்டிருக்கவேண்டும்; இவைகள் பரிசுத்தமான வஸ்திரங்கள்; அவன்தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, அவைகளை உடுத்துக்கொண்டு,

5 இஸ்ரவேல் புத்திரருடைய சபையின் கையிலே, பாவம்போக்கும்பலியாக இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும், சர்வாங்கதகனபலியாக ஒரு ஆட்டுக்கடாவையும் வாங்கி,

6 ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்கு, தன்னுடைய பாவம்போக்குதலின் காளை எருதைச் சேரப்பண்ணி,

7 அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களையும் கொண்டுவந்து, ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குமுன்பாக நிறுத்தி,

8 அந்த இரண்டு வெள்ளாட்டுக்கடாக்களின்மேலே ஒரு சீட்டைக் கர்த்தருக்கென்றும், பின்னொரு சீட்டைப் போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாவுக்கென்றும் போட்டு,

9 கர்த்தருக்கென்று சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவைப் பாவம்போக்கும் பலியாக்குகிறதற்குச் சேரப்பண்ணி,

10 போகவிடப்படச் சீட்டு விழுந்த வெள்ளாட்டுக்கடாவையோவென்றால், அதின்மேலே பாவநிவிர்த்தியை உண்டாக்கி, அதை வனாந்தரத்திலே போகவிடுகிறதற்குக் கர்த்தருக்குமுன்பாக உயிரோடே நிறுத்தி,

11 ¶ பிற்பாடு தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்குகிறதற்கு, தன்னுடைய பாவம்போக்குதலின் காளை எருதைச் சேரப்பண்ணி, அதின் குரல்வளையை அறுத்து,

12 கர்த்தருக்குமுன்பாகப் பலிபீடத்தின்மேலிருக்கிற தணலிலால் கலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்ததூபவர்க்கங்களிலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்குள்ப்புறமாகக் கொண்டுவந்து,

13 தூபத்தின் மேகம் சாட்சியின்மேலிருக்கிற கிருபாசனமான மூடியைத் தான் சாவாதபடிக்கு மூடத்தக்கதாக, தூபவர்க்கத்தைக் கர்த்தருக்குமுன்பாக அக்கினியின்மேலே போட்டு,

14 பிற்பாடு காளை எருதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினாலே கிருபாசனமான மூடியின்மேலே தெளித்து, ஏழுமுறை தன் விரலினால், அந்த இரத்தத்தில் எடுத்து கிருபாசனமான மூடிக்குமுன்பாகவும் தெளிப்பானாக.

15 ¶ பிற்பாடு அவன் ஜனத்தினுடைய பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவைக் குரல்வளை அறுத்து, அதின் இரத்தத்தைத் திரைக்குள்ப்புறமாகக் கொண்டுவந்து, தான் காளை எருதின் இரத்தத்தாலே செய்ததுபோல, அதின் இரத்தத்தாலும்

Digitized by Google

செய்து, அதைக் கிருபாசனமான மூடியின் மேலும், அதற்குமுன்பாகவும் தெளித்து,

ரூ இஸ்ரவேல் புத்திரருடைய தீட்டுகள் நிமித்தமும், அவர்களுடைய எல்லாப் பாவங்களினும் உண்டான மீறுதல்களின் நிமித்தமும் பரிசுத்தஸ்தலத்திற்காக, பாவ நிவிர்த்தியை உண்டாக்கி, இந்தவிதமாக அவர்களிடத்தில் அவர்கள் தீட்டுகளின் நடுவே தங்கியிருக்கிற ஆசரிப்பின் கூடாரத்திற்காகச் செய்யக்கடவன்.

ரூ அவன் பாவநிவிர்த்தியை உண்டாக்கப் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறது முதல்கொண்டு, அவன் புறப்படும்மட்டும், ஒரு மனிதனும் ஆசரிப்பின் கூடாரத்தில் இருக்கவேண்டாம்; அவன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் இஸ்ரவேலின் முழுச்சபைக்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

ரூ புறப்பட்டு, கர்த்தருக்குமுன்பாக இருக்கிற பீடத்தண்டை வந்து, அதற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி, காளை எருதின் இரத்தத்திலும் வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்திலும் கொஞ்சம் பிடித்து, கொம்புகளின்மேலே சுற்றிலும் பூசி,

ரூ தன் விரலினால் அந்த இரத்தத்தில் எடுத்து, ஏழுதரம் அதின்மேலே தெளித்து, அதை இஸ்ரவேல் புத்திரரின் தீட்டுகள் அறச் சுத்திகரிக்கவும் பரிசுத்தமாக்கவும் கடவன்.

ரூ அவன் பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை இப்படி உண்டாக்கித் தீர்ந்தபிற்பாடு, உயிரோடே இருக்கிற வெள்ளாட்டுக்கடாவைச் சேரப்பண்ணி.

ரூ அதினுடைய தலையின்மேல் ஆரோன் தன் இரண்டு கைகளையும் வைத்து, அதின்மேல் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா அக்கிரமங்களையும் அவர்களுடைய எல்லாப் பாவங்களால் உண்டாகிய அவர்களுடைய சகல மீறுதல்களையும் அறிக்கையிட்டு, அவைகளை வெள்ளாட்டுக்கடாவினுடைய தலையின்மேலே சுமத்தி, அதை அதற்கான ஆள்கையிலே வனாந்தரத்திற்கு அனுப்பிவிடக்கடவன்.

ரூ அந்த வெள்ளாட்டுக்கடாதன்மேலே அவர்களுடைய அக்கிரமங்களை எல்லாம் வெட்டிப்போடப்படுதலின் தலத்திற்குச் சுமந்துகொண்டு போவதாக; பிறகு அந்த வெள்ளாட்டுக்கடாவை வனாந்தரத்திலே போகவிடக்கடவன்.

ரூ ஆரோனென்னில் ஆசரிப்புக்கூடாரத்திற்குள் வந்து, தான் பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறபொழுது உடுத்திருந்த பஞ்சுநூல் வஸ்திரங்களைக் களைந்து, அங்கே வைத்துவிட்டு,

ரூ தன் மாம்சத்தைப் பரிசுத்த இடத்திலே தண்ணீரிலுலே கழுவி, தன்னுடைய வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு புறப்பட்டு, தன்னுடைய சர்வாங்கதகனத்தையும் சனத்தின் சர்வாங்கதகனத்தையும் படைத்து, தனக்காகவும் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

ரூ பாவம்போக்கும்பலியின் கொழுப்பைப் பலிபீடத்தின்மேலே கொளுத்தக்கடவன்.

ரூ போகவிடப்படும் வெள்ளாட்டுக்கடாவைக் கொண்டுபோய் விட்டவன், தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினுலே கழுவிப் பிற்பாடு பாளயத்தில் வருவானாக.

ரூ குரல்வளை அறுக்கப்பட்டு, இரத்தம் பாவநிவிர்த்திக்கென்று பரிசுத்தஸ்தலத்திற்குள் கொண்டுபோகப்பட்ட பாவம்போக்குதலின் காளை எருதையும், பாவம்போக்குதலின் வெள்ளாட்டுக்கடாவையும், பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவைகளின் தோல்களையும் மாம்சத்தையும் சாணியையும் அக்கினியாலே சுட்டெரிக்கக்கடவர்கள்.

ரூ அவைகளைச் சுட்டெரித்தவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரினுலே கழுவி, பிற்பாடு

Digitized by Google

பாளயத்தில் வருவானாக.

உசு ¶ ஏழாம்மாதம் பத்தாம் தேதியிலே நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்துவதும், தேசத்திலே பிறந்தவனானும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியானாலும் சரி, ஒரு வேலையையும் செய்யாதிருப்பதும், உங்களுக்கு நித்திய கட்டளையாய் இருக்கக்கடவது.

உஅ ஏனெனில் உங்களைச் சுத்திகரிக்கும் படிக்கு, அந்நாளில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கப்படும்; கர்த்தருக்கு முன்பாக உங்களுடைய எல்லாப் பாவங்களும் அறச் சுத்திகரிக்கப்படுவீர்கள்.

உக உங்களுக்கு அது ஓய்வுநாள் ஓய்வுநாள்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; இது நித்தியகட்டளை.

உஉ அபிஷேகம்பண்ணப்பட்டவனும், தன் தகப்பன் பட்டத்திற்கு வந்து ஆசாரிய ஊழியம்செய்யக் கைநிரப்பப்பட்டவனுமாகிய ஆசாரியனே, பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அவன் பரிசுத்த வஸ்திரங்களாகிய பஞ்சுநூல் வஸ்திரங்களை உடுத்துக்கொண்டு,

உங பரிசுத்தமாகிய பரிசுத்தஸ்தலத்திற்கும் ஆசரிப்புக்கூடாரத்திற்கும் பீடத்திற்குமாக, பாவநிவிர்த்தியை உண்டாக்கி, ஆசாரியருக்காகவும் சபையின் எல்லாச் சனத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்.

உச இப்படி வருஷத்தில் ஒருமுறை இஸ்ரவேல் புத்திரருக்காக, அவர்களுடைய எல்லாப் பாவங்களுக்கும் நிவிர்த்தியை உண்டாக்குவது உங்களுக்கு நித்தியகட்டளையாய் இருக்கக்கடவதென்று சொல்லென்றார்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே ஆரோன் செய்தான்.

ஙஎ. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ¶ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியது, கர்த்தர் கற்பித்த வார்த்தை என்னவெனில்,

ஈ இஸ்ரவேல் வீட்டாரில் எவனாகிலும் மாட்டையாகிலும் ஆட்டையாகிலும் வெள்ளாட்டை என்னிலும் ஆசரிப்புக்கூடாரவாசலென்ற கர்த்தரின் வாசஸ்தலத்திற்கு முன்பாக, கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவராமல்,

ச அதைப் பாளயத்திலாகிலும் பாளயத்திற்குப் புறம்பேயாகிலும் குரல்வளை அறுத்தால், அது அந்த மனிதனுக்குப் பழியாக எண்ணப்படும்; அவன் இரத்தம் சிந்திப் போட்டான், அந்த மனிதன் தன் சனத்திற்குள் இராமல், அறுப்புண்பான்.

ஙு ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் வெளியின் விசாலத்திலே பலியிடுகிற தங்கள் பலிகளை, ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரியனண்டையிலே கர்த்தருக்குக் கொண்டுவந்து, அங்கே அவருக்குச் சமாதானபலிகளாகச் செலுத்தக்கடவர்கள்.

ஙூ அங்கே ஆசாரியன் இரத்தத்தை ஆசரிப்புக்கூடாரவாசலிலிருக்கிற கர்த்தருடைய பலிபீடத்தின்மேலே தெளித்து, கொழுப்பைக் கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையாகக் கொளுத்தக்கடவன்.

ஙஎ தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்கு, தங்கள் பலிகளை இனிச் செலுத்தார்களாக; இது அவர்களுக்குத் தலைமுறைதோறும் அவர்களுக்கு நித்தியகட்டளையாயிருக்கக்கடவது.

ஙஅ ¶ ஆகையால் நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில் இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் ஒருவனாகிலும் சர்வாங்கதகனமுதலான பலியைப் பலியிட்டு,

ஙூ அதை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கர்த்தருக்குச் செலுத்தும்படிக்குக் கொண்டுவராவிட்டால், அவன் தன் சனத்தாருக்குள் இராமல் அறுப்புண்பான்.

Digitized by Google

൧൭ இஸ்ரவேல் வீட்டாரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் *இரத்தமென்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அந்த ஆத்துமாவுக்கு விரோதமாக நாம் நமது முகத்தைத் திருப்பி, அவனை அவன் சனத்திற்குள் இராதபடிக்கு அறுப்போம். *ஆ மோ. ஈ. ൧൭.

൧൮ ஏனெனில் *மாம்சத்தின் உயிர் இரத்தத்திலுள்ளது; நாம் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காக, பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்குக் கட்டளையிட்டோம்; ஏனெனில் அது ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குகிற இரத்தம். *உ மோ. கூ. ச.

൧൯ அதின்நிமித்தம் உங்களில் ஒருவனும் இரத்தம் புசிக்கவேண்டாம்; உங்கள் நடுவே தங்குகிற பரதேசியும் இரத்தம் புசிக்கவேண்டாமென்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லுவோம்.

൨൦ ¶ இஸ்ரவேல் புத்திரரிலும் உங்கள் நடுவே தங்குகிற பரதேசிகளிலும் எவனாகிலும் புசிக்கத்தக்க ஒரு மிருகத்தை அல்லது ஒரு பட்சியை வேட்டையாடிப் பிடித்தால், அவன் அதின் இரத்தத்தைச் சிந்தப்பண்ணி, மண்ணினால் மூடக்கடவன்.

൨൧ ஏனெனில் சகல மாம்சத்திற்கும் அது சீவனாயிருக்கிறது; அதின் இரத்தம் சீவனுக்குச் சரி; ஆகையால் இஸ்ரவேல் புத்திரருக்கு எந்தமாம்சத்தின் இரத்தத்தையும் புசியீர்களாக; ஏனெனில் சகல மாம்சத்தின் உயிரும் அதின் இரத்தம்தானே; அதைப் புசிக்கிற எவனும் அறுப்புண்பானென்றேும்.

൨൨ ¶ தேசத்திலே பிறந்தவர்களிலும் பரதேசிகளிலும் செத்த உடலை, அல்லது பீறுண்டதைப் புசித்திருக்கிறவன் எல்லாம், தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் மூழுகி, சாயங்காலம்மட்டும் தீட்டாயிருப்பானாக; பிற்பாடு சுத்தமாயிருப்பான்.

൨൩ அவன் தன் வஸ்திரங்களை வெளுக்காமலும் தன் மாம்சத்தைக் கழுவாமலும் போனால், தன் அக்கிரமத்தைச் சுமப்பானென்று சொல்லென்றார்.

൪൩. அதிகாரம்.

൧ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

൨ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

൩ நீங்கள் குடியிருந்த எகிப்துதேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், நாம் உங்களை அழைத்துப்போகிற கானான் தேசத்தினுடைய செய்கையின்படி செய்யாமலும், அவர்களுடைய முறைமைகளில் நடவாமலும்,

൪ நம்முடைய நியாயங்களின்படியே செய்து, நம்முடைய கட்டளைகளையே அவைகளில் நடக்கும்படிக்குக் கைக்கொள்ளக்கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

൫ ஆகையால் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிற மனிதன் *அவைகளாலே பிழைப்பான்; நாம் கர்த்தர். *எசே. ൨൰. ൧൧.

൬ ¶ ஒருவனும் தனக்குக் கிட்டின சதையாகிய ஒருத்தியோடும் அவளுடைய நிருவாணத்தைத் திறக்கிறதற்குச் சேரவேண்டாம்; நாம் கர்த்தர்.

൭ உன் தகப்பனுடைய நிருவாணத்தையும் உன் தாயின் நிருவாணத்தையும் திறவாயாக; அவள் உன் தாயானவள்; அவள் நிருவாணத்தைத் திறவாயாக.

൮ உன் தகப்பனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் திறவாயாக; அது உன் தகப்பனுடைய நிருவாணம்.

൯ உன் தகப்பனுக்கு, அல்லது உன் தாய்க்குக் குமாரத்தியாகிய உன் சகோதரி, வீட்டிலே பிறந்திருந்தாலும் புறத்திலே பிறந்திருந்தாலும் சரி, அவளுடைய நிருவாணத்தைத் திறவாயாக.

Digitized by Google

ய உன் குமாரனுடைய மகனின் நிருவாணத்தையாகிலும் உன் குமாரத்தியினுடைய மகனின் நிருவாணத்தையென்கிலும் நிறவாயாக; ஏனெனில் அது உன்னுடைய நிருவாணம்.

யக உன் தகப்பனுக்கு அவன் பெண்சாதியினிடத்திலே பிறந்த குமாரத்தியின் நிருவாணத்தைத் நிறவாயாக; அவள் உனக்குச் சகோதரி.

யஉ உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தைத் நிறவாயாக; அவள் உன் தகப்பனுடைய சதையானவள்.

யஙு உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தைத் நிறவாயாக; ஏனெனில் அவள் உன் தாயின் சதையானவள்.

யச உன் தகப்பனுடைய சகோதரன் நிருவாணத்தைத் நிறவாயாக; அவன் பெண்சாதியோடே சேராயாக; அவள் உனக்குச் சிறியதாய்.

யஞ உன் மருமகனின் நிருவாணத்தைத் நிறவாயாக; அவன் உன் குமாரனுக்குப் பெண்சாதி, அவளுடைய நிருவாணத்தைத் நிறவாயாக.

யசு உன் சகோதரனுடைய பெண்சாதியின் நிருவாணத்தைத் நிறவாயாக; அது உன் சகோதரனுடைய நிருவாணம்.

யஎ ஒரு பெண்சாதியோடேகூட அவன் மகனின் நிருவாணத்தையும் நிறவாயாக; அவளுடைய குமாரரின் மகளையும் அல்லது அவன் குமாரத்தியின் மகளையும் இவளுடைய நிருவாணத்தைத் நிறக்கும்படிக்கு விவாகம்பண்ணுயாக; இப்படிக்கொத்தவர்கள் அவளுடைய சதையானவர்கள்; அது தோஷம்.

யஅ பெண்சாதியண்டையிலே உயிரோடே இருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக, அவள் சகோதரியின் நிருவாணத்தையும் நிறக்கிறதற்கு இவளைக்கூட விவாகம்பண்ணுயாக.

யகூ ¶ பெண்சாதி தன் விலக்கத்தில் இருக்கையில், அவளுடைய நிருவாணத்தைத் நிறக்கும்படிக்கு அவளோடே சேராயாக.

உய நீ உனக்கடுத்தவனுடைய பெண்சாதிக்கு உன் அநுபோகத்தைக் கொடுக்கவும் அவனால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்.

உக நீ உன் வித்தில் எதையாகிலும் தீயைக் கடக்கிறதற்கு மோளேகுக்குக் கொடுக்கினதினால், உன் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காயாக; நாம் கர்த்தர்.

உஉ ஸ்திரியின் அநுபோகமாய் ஆணேடே சயனிக்காயாக; அது அருவருப்பானது.

உஙு யாதொரு மிருகத்தினிடத்தில் நீ உன் அநுபோகத்தைக் கொடுக்கவும் அதினால் உன்னைத் தீட்டாக்கவும் வேண்டாம்; ஸ்திரி மிருகத்தின் முன்னின்று, அதைத் தன்மேல் ஏறப்பண்ணவும் வேண்டாம்; அது அருவருப்பான தாறுமாறு.

உச ¶ இவைகளில் ஒன்றினாலும் உங்களைத் தீட்டாக்காதிருப்பீர்களாக; ஏனெனில் நாம் உங்களுக்கு முன்பாகத் துரத்துகிற சாதிகள் இவைகளால் எல்லாம் தங்களைத் தீட்டாக்கினதினாலே தேசம் தீட்டாயிற்று.

உடி ஆனதுகொண்டு தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடாதிருக்கிறதாக, அதினுள்ள அக்கிரமத்தை விசாரிக்கிறோம்.

உசு ஏனெனில் இந்த அருவருப்புகளை எல்லாம் உங்களுக்கு முன்னிருந்த அந்தத் தேசத்தின் மனிதர் செய்ததினாலே தேசம் தீட்டாயிற்று.

உஎ இப்பொழுதும் உங்களுக்கு முன்னிருந்த சாதிகளைத் தேசம் கக்கிப்போட்டதுபோல, அது உங்களையும் நீங்கள் அதைத் தீட்டாக்கும்பொழுது கக்கிப்போடாதபடிக்கு,

உஅ நீங்கள் நம்முடைய கட்டளைகளையும் நம்முடைய நியாயங்களையும் கைக்கொண்டு, தேசத்திலே பிறந்தவனாகிலும் சரி, உங்கள் நடுவே தங்குகிற பரதேசியாகிலும் சரி, இந்த அருவருப்புகளில் ஒன்றை

Digitized by Google

யும் செய்யாதிருப்பீர்களாக.

உக ஏனென்றால் எவர்களாகிலும் இந்த எல்லா அருவருப்புகளிலும் யாதொன்றைச் செய்தால், செய்த அந்த ஆத்துமாக்கள் தங்கள் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்பார்கள்.

உஎ ஆகையால் உங்களுக்கு முன்நடந்த அருவருப்பான முறைமைகளில் யாதொன்றின்படியே நீங்கள் செய்து, அவைகளால் தீட்டாகாதபடிக்கு, நம்முடைய கட்டளையைக் கைக்கொள்வீர்களாக; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தரென்று சொல்லென்றார்.

ய்கூ. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தோடும் பேசிச் சொல்லவேண்டியதேதெனில், *பரிசுத்தவான்களாய் இருக்கக்கடவீர்கள்; ஏனெனில் உங்கள் பராபரனுன கர்த்தராகிய நாம் பரிசுத்தர். *க பே. க. ய்கூ.

ஈ ¶ நீங்கள் அவனவன் தன் தன் தாய்க்கும் தன் தன் தகப்பனுக்கும் பயந்திருக்கவும் நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொள்ளவும் கடவீர்கள்; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

ஊ ¶ விக்கிரகங்களை நோக்காமலும் வார்ப்பிக்கப்பட்ட தேவர்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

ஏ ¶ நீங்கள் சமாதானபலியைக் கர்த்தருக்குச் செலுத்தினுல், அதை உங்கள் மனப்பூர்வத்தினுலே செலுத்துவீர்களாக.

ஐ நீங்கள் அதைச் செலுத்துகிற அந்நாளிலும் மறுநாளிலும் அது புசிக்கப்படவும் மூன்றும் நாள்மட்டும் மீதியானது அக்கினியாலே சுட்டெரிக்கப்படவும்கடவது.

எ மூன்றும்நாளில் அதில் ஏதாகிலும் புசிக்கப்பட்டால், ஒக்காளிப்பாயிருக்கும்; பிரியமாயிராது.

ஒ அப்படிப் புசிக்கிறவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்; ஏனெனில் கர்த்தருக்குப் பரிசுத்தமானதைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினுன்; அந்த ஆத்துமா தன் சனத்தாரில் இராதபடிக்கு அறுப்புண்பான்.

கூ ¶ உங்கள் தேசத்தில் வெள்ளாண்மையை நீங்கள் அறுக்கையில், உன் வயலின் ஓரத்திலிருக்கிறதைத் தீர அறுக்காமலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக்காமலும்,

ஙு உன் திராட்சத்தோட்டத்திலே பின் அறுப்பை அறுக்காமலும், அதிலே சிந்திக்கிடக்கிற பழங்களைப் பொறுக்காமலும், அவைகளை எளியவனுக்கும் பரதேசிக்கும் விட்டுவிடுவாயாக, நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

ங ¶ களவுசெய்யாமலும் பொய்சொல்லாமலும் ஒருவர்க்கொருவர் கபடுபண்ணுமலும்,

ஙூ நமது நாமத்தைக்கொண்டு பொய்யாணை இடுகிறதினுல், உங்கள் பராபரனுடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

ஙஎ உனக்கடுத்தவனை ஒடுக்காமலும் கொள்ளையிடாமலுமிருப்பாயாக; கூலிக்காரனுடைய கூலி உன்னிடத்தில் விடியற்காலம் மட்டும் இராத்தங்கவேண்டாம்.

ஙஅ ¶ செவிடனைச் சபிக்காமலும், குருடன்முன்பாகத் தடுக்கலி வைக்காமலும், உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; நாம் கர்த்தர்.

ஙஉ ¶ நியாயத்திலே நியாயக்கேடு செய்யீர்களாக; சிறியவனுடைய முகத்தைப் பாராமலும், பெரியவனுடைய முகத்தை எண்ணுமலும், உனக்கடுத்தவனுக்கு நீதியாக நியாயம் தீர்ப்பாயாக.

ஙஊ ¶ உன் சனத்தாருக்குள்ளே பின்புறணிக்காரனுய்த் திரியாயாக; உனக்கடுத்தவனுடைய இரத்தத்திற்கு விரோதமாய் நிற்காயாக; நாம் கர்த்தர்.

ஙஏ ¶ உன் சகோதரனை உன் இருதயத்தி

Digitized by Google

லே பகையாயாக; உனக்கடுத்தவன்மேலே பாவத்தை இருக்க ஒட்டாமல், அவனைக் கடிந்துகொள்ளவே கொள்வாயாக.

ஙஅ சரிக்குச்சரிக்கட்டாமலும், உன் சனப் புத்திரர்மேலே கோபம்வைக்காமலும், உனக்கடுத்தவனை உன்னைப்போலச் சிநேகிப் பாயாக; நாம் கர்த்தர்.

ஙசூ ¶ நம்முடைய கட்டளைகளைக் கைக் கொள்வீர்களாக; உன் மிருகசீவன்களை வேற்றுச்சாதியோடே கூட்டிவிடாயாக; உன் வயலில் வெவ்வேறுவகை விதையை விதையாயாக; இருவகை நூலுள்ள வஸ்திரம் உன்மேல் ஏறுதிருப்பதாக.

ஙஎ ¶ ஒருவனுக்கு அடிமையாயிருந்து, அவனால் இகழ்ச்சியாக்கப்பட்டும், மீட்கப் படாமலும் தன் இச்சையாய் விடப்படாமலும் போன பெண்ணோடே ஒருவன் அந போகமாய்ச் சயனித்தால், அவர்கள் சாவாமல் அடிக்கப்படவேண்டும்; ஏனெனில் அவள் தன்னிச்சையானவளல்ல.

ஙஏ அவன் தன் குற்றத்தைப்போக்கும் பலியாக, கர்த்தருக்கு ஒரு ஆட்டுக்கடாவை ஆசரிப்புக்கூடாரவாசலிலே கொண்டுவரக்கடவன்.

ஙஐ அதினாலே ஆசாரியன் அவன் செய்த பாவத்தின்நிமித்தம் அவனுக்குக் கர்த்தருக்கு முன்பாகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவன் செய்த பாவம் அவனுக்கு மன்னிக்கப்படும்.

ஙடு ¶ நீங்கள் தேசத்திலே வந்து, புசிக்கும் கனிகளைத் தருகிற பலவித மரங்களை வைத்தால், அவைகளின் கனியைச் சுன்னத்தப்பண்ணிப்போடக்கடவீர்கள்; மூன்று வருஷம் அது புசிக்கப்படாமல், உங்களுக்குச் சுன்னத்தில்லாததாய் எண்ணப்படுவதாக.

ஙஉ பிறகு நான்காம் வருஷத்திலே அவைகளின் கனி எல்லாம் கர்த்தருக்குத் தூய சொறுத்தப் பரிசுத்தமாயிருப்பதாக.

ஙஒ ஐந்தாம் வருஷத்திலோவென்றால், அவைகளின் கனியைப் புசிக்க, அவைகள் உங்களுக்குத் தங்கள் பலனைக் கொடுத்து வரக்கடவது; நாம் உங்கள் பராபரனுமாகிய கர்த்தர்.

ஙஓ ¶ இரத்தத்தோடிருக்கிறதைப் புசியீர்களாக; நிமித்தம்பாராமலும் நாள்களைப் பாராமலும் இருப்பீர்களாக.

ஙக உங்கள் தலைமயிரைச் சுற்றிலும் ஒதுக்காமலும் தாடியின் ஓரங்களைக் கெடிக்கலாமலும்,

ஙங செத்தவனுக்காக உங்கள் மாம்சத்தைக் கீறிக்கொள்ளாமலும் அடையாளமான எழுத்தை உங்களிலே போடாமலும் இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

ஙச ¶ தேசம் வேசித்தனம்பண்ணித் தோஷத்தால் நிறையப்படாதபடிக்கு, உன் குமாரத்தியை வேசித்தனம்பண்ணவிடுதிறதினாலே பரிசுத்தக்குலைச்சலாக்காயாக.

ஙஞ ¶ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்குப் பயப்படுவீர்களாக; நாம் கர்த்தர்.

ஙட அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் நோக்காதிருப்பீர்களாக; அவர்களைத் தேடி, அவர்களாலே தீட்டுப்படுவீர்களாக; நாம் உங்கள் பராபரனுமாகிய கர்த்தர்.

ஙண ¶ நரைத்தவனுக்குமுன்பாக எழுந்து, முதிர்வயதுள்ளவன் முகத்தைக் கனம்பண்ணி, உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; நாம் கர்த்தர்.

ஙத ¶ பரதேசி உங்கள் தேசத்தில் உன்னோடே தங்கினால், அவனைச் சிறுமைப்படுத்தீர்களாக.

ஙந உங்களிடத்திலே தங்குகிற பரதேசி உங்களுக்குத் தேசத்திலே பிறந்தவனைப்போல இருப்பானாக; அவனை உன்னைப்போல சிநேகிப்பாயாக; ஏனெனில் எகிப்துதேசத்திலே பரதேசிகளாயிருந்தீர்கள்; நாம் உங்கள் பராபரனுமாகிய கர்த்தர்.

ஙப ¶ நியாய விசாரணையிலும் அளவிலும் நிறுக்கிற நிறையிலும் படியிலும் நியாயக்கேடு செய்யீர்களாக.

Digitized by Google

கசு சுமுத்தினையான தராசும், சுமுத்தினையான படிக்கட்டும் சுமுத்தினையான மரக்காலும், சுமுத்தினையான படியும் உங்களுக்கு இருக்கக்கடவது; நாம் உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

கஎ ஆகையால் நம்முடைய எல்லாக் கட்டளைகளையும் நம்முடைய எல்லா நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நாம் கர்த்தரென்று சொல்லென்றார்.

உடி. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ பின்னையும் நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது ஏதெனில், இஸ்ரவேல் புத்திரரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவனுகிலும் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுத்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தேசத்தின் சனம் அவனைக் கல்லெறிவதாக.

ங நாம் அப்படிக்கொத்தவனுக்கு விரோதமாக நமது முகத்தைத் திருப்பி, அவன் நமது பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தி, நமது பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கும்படிக்கு, தன் வித்தை மோளேகுக்குக் கொடுத்தபடியினுலே, அவனைத் தன் சனத்தாரில் இராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

ச அப்படிக்கொத்தவன் தன் வித்திலே யாதொன்றை மோளேகுக்குக் கொடுக்கும்போது, தேசத்தின் சனம் அவனைக் கொலை செய்யாதபடிக்கு, தங்கள் கண்களை அவனை விட்டு மறைக்கவே மறைத்தால்,

டு நாம் அந்த மனிதனுக்கும் அவன் வம்சத்திற்கும் விரோதமாக நம்முடைய முகத்தைத் திருப்பி, அவனையும், அவன் பிறகாலே மோளேகோடே விபசாரம்பண்ண அவனைப் பின்தொடர்ந்து சோரம்போன யாவனையும், தங்கள் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம்.

கூ *அஞ்சனம்பார்க்கிறவர்களையும் குறிகாரரையும் பின்தொடர்ந்து சோரம்போக, எந்த ஆத்துமா அவர்களைநோக்கி இருக்கிறதே, அந்த ஆத்துமாவுக்கு விரோதமாகவும் நமது முகத்தைத் திருப்பி, அவனைத் தன் சனத்திலிராதபடிக்குச் சங்காரம்பண்ணுவோம். *ஏ மோ. யகூ ஙக.

எ ஆனபடியினுலே உங்களைப் பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தவான்களாயிருங்கள்; ஏனெனில் நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

அ நம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்; நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

கூ¶ எவனுகிலும் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தால், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

ஐ¶ ஒருவனுடைய பெண்சாதியோடே எவனெருவனுகிலும் விபசாரம்பண்ணினால், அப்பொழுது தனக்கடுத்தவன் பெண்சாதியோடே விபசாரம்பண்ணின அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்.

கக¶ தன் தகப்பன் பெண்சாதியோடே சயனிக்கிறவன் தன் தகப்பன் நிருவாணத்தைத் திறந்தான், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கன்மேல் இருப்பதாக.

கஉ¶ ஒருவன் தன் மருமகளோடே சயனித்தால், இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; தாறுமாறுபண்ணினுர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

கங¶ ஒருவன் ஸ்திரியின் அநுபோகமாக ஆணோடே சயனித்தால், அருவருப்பான காரியம்செய்த இருவரும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்கள்

Digitized by Google

இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக.

ஐச ¶ ஒருவன் ஒரு பெண்சாதியையும் அவள் தாயையும் படைத்தால், அது தோஷம்; உங்கள் நடுவே தோஷமிராதபடிக்கு, அவனையும் இவர்களையும் அக்கினியாலே சுட்டெரிப்பார்களாக.

ஐடு ஒருவன் மிருகத்தினிடத்திலே தன் அபோகத்தை விட்டால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; அந்த மிருகத்தையும் கொல்லக்கடவீர்கள்.

ஐசு ஒரு ஸ்திரி யாதொரு மிருகத்தோடே அதைத் தன்மேல் ஏறப்பண்ணிச் சேர்ந்தால், அந்த ஸ்திரியையும் அந்த மிருகத்தையும் கொல்லக்கடவாய்; இருசீவனும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது; அவைகளின் இரத்தப்பழி அவைகளின்மேல் இருப்பதாக.

ஐள ¶ ஒருவன் தன் தகப்பனுக்கு அல்லது தன் தாய்க்குக் குமாரத்தியாகிய தன் சகோதரியைச் சேர்த்துக்கொண்டு, அவன் இவள் நிருவாணத்தையும் இவள் அவன் நிருவாணத்தையும் பார்த்தால், அது பாதகம்; அவர்கள் தங்கள் சனப்புத்திரரின் கண்களுக்குமுன்பாக அறுப்புண்ணக்கடவர்கள்; தன் சகோதரியின் நிருவாணத்தைத்திறந்த அவன் தன் அக்கிரமத்தைச் சுமப்பான்.

ஐஅ ஒருவன் தூரஸ்திரியோடே சயனித்து, அவளுடைய நிருவாணத்தையும் ஊற்றையும் திறந்து, அவளும் தன் உதிரத்தின் ஊற்றைத் திறந்துவைத்தால், இருவரும் தங்கள் சனத்தாரின் நடுவிலிராதபடிக்கு அறுப்புண்ணக்கடவர்கள்.

ஐசு ¶ உன் தாயினுடைய சகோதரியின் நிருவாணத்தையும் உன் தகப்பனுடைய சகோதரியின் நிருவாணத்தையும் திறவாயாக, அப்படிக்கொத்தவன் தன் சதையை அவமானமாக்கினான்; தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள்.

உய ஒருவன் தன் சிற்றப்பன் பெண்சாதியோடே சயனித்தால், அவன் தன் சிற்றப்பன் நிருவாணத்தைத் திறந்தான்; தங்கள் பாவத்தைச் சுமப்பார்கள், சந்தானமில்லாமல் சாவார்களாக.

உக ஒருவன் தன் சகோதரன் பெண்சாதியைப் படைத்தால், அது அசுத்தம்; தன் சகோதரன் நிருவாணத்தைத் திறந்தான், சந்தானம் அற்றிருப்பார்கள்.

உஉ ¶ ஆகையால் நீங்கள் குடி இருப்பதற்காக நாம் உங்களைக் கொண்டுபோகிற தேசம் உங்களைக் கக்கிப்போடாதபடிக்கு, நீங்கள் நம்முடைய சகல கட்டளைகளையும் சகல நியாயங்களையும் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யுங்கள்.

உக நாம் உங்களுக்கு முன்பாகத் தரத்திவிடுகிற சாதியினுடைய வழிபாடுகளில் நடவாதிருங்கள்; ஏனெனில் அப்படிக் கொத்த காரியங்களையெல்லாம் செய்தார்கள்; ஆகையால் நாம் அவர்களை அரோசித்து,

உச நீங்கள் அவர்கள் தேசத்தைச் சுதந்தரிப்பீர்களென்று உங்களோடே சொன்னோம்; பாலும் தேனும் ஓடிய அந்தத் தேசத்தை உங்களுக்குச் சுதந்தரமாகவும் கொடுப்போம்; நாம் உங்களைச் சனசதனங்களை விட்டுப் பிரித்தெடுத்த உங்கள் பராபரனுமாகிய கர்த்தர்.

உடு ¶ ஆகையால் சுத்தமான மிருகங்களுக்கும் தீட்டான மிருகங்களுக்கும், தீட்டான பறவைகளுக்கும் சுத்தமான பறவைகளுக்கும், நீங்கள் வித்தியாசம்பண்ணி, நாம் உங்களுக்குத் தீட்டாக எண்ணச் சொல்லி விலக்கின மிருகங்களானும் பறவைகளானும் தரையோடே ஊருகிற யாதொன்றாலும் உங்கள் ஆத்துமாக்களை அருவருப்பாக்காதிருப்பீர்களாக.

உசு நமக்குப் பரிசுத்தவான்களாய் இருப்பீர்களாக, ஏனெனில் கர்த்தராகிய நாம் பரிசுத்தராயிருந்து, நீங்கள் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களைச் சனசதனங்களைவிட்டுப் பிரித்தெடுத்தோமே.

உஎ *அஞ்சனம்பார்க்கிற ஆவியுள்ள, அல்

லது குறிசொல்லுகிற மனிதரானாலும் ஸ்திரீயானாலும் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவர்கள்; அவர்களைக் கல்லெறிவார்களாக; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருக்கக்கடவதென்று சொல்லென்றார். *உ மோ. உஉ. ஐஅ.

உக அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: ஆரோனின் குமாரராகிய ஆசாரியர்களில் ஒருவனும் தன் சனத்தாரில் செத்தப்போன ஒருவராலே தன்னைத் தீட்டுப்படுத்தவேண்டாமென்று அவர்களோடே சொல்.

உ தன்னுடைய கிட்டின சதையாகிய தன் தாயினாலும், தன் தகப்பனாலும், தன் குமாரனாலும், தன் குமாரத்தியாலும், தன் சகோதரனாலும்,

ஈ புருஷனுக்கு வாழ்க்கைப்படாமல் தன் கிட்ட இருந்த கன்னியாஸ்திரியான தன் சகோதரியாலுமே ஒழிய,

ச வேறொருவராலும் தன் சனத்தாரிலே பெரியவனாகிய அவன் தன்னைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி, தீட்டுப்படுத்தவேண்டாம்.

ஓ அவர்கள் தங்கள் தலையை மொட்டையிடாமலும் தங்கள் தாடியின் ஓரங்களைச் சிரைத்துப்போடாமலும் தங்கள் மாம்சத்தைக் கீறிக்கொள்ளாமலும் இருப்பார்களாக.

ஊ தங்கள் பராபரனுடைய தாமத்தைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்காமல், அவருக்குப் பரிசுத்தராயிருப்பார்களாக; ஏனெனில் கர்த்தரின் தகனங்களென்ற தங்கள் பராபரனுடைய அப்பத்தை அவர்கள் செலுத்தி, பரிசுத்தமாயிருக்கிறார்கள்.

எ சோரஸ்திரியையும் பரிசுத்தம் குலைந்தவளையும் விவாகம்பண்ணார்களாக; தன் புருஷனாலே தள்ளப்பட்ட பெண்சாதியையும், விவாகம்பண்ணார்களாக; ஏனெனில் அவன் தன் பராபரனுக்குப் பரிசுத்தமானவன்.

அ அவனைப் பரிசுத்தனென்று எண்ணுவாயாக; ஏனெனில், உன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்துகிறான்; உனக்குப் பரிசுத்தனாயிருப்பானாக; ஏனெனில் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நாம் பரிசுத்தர்.

ஆ ஆசாரியனுடைய குமாரத்தி வேசித்தனம்பண்ணத்தவக்கினால், அவள் தன் தகப்பனைப் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறாள்; அக்கினியாலே சுட்டெரிக்கப்படக்கடவள்.

இ தலையில் அபிஷேகத்தெண்ணெய் வார்க்கப்பட்டவனும் வஸ்திரங்களைத் தரிக்கக் கைநிரப்பப்பட்டவனுமாகிய தன் சகோதரரிலிருக்கிற பிரதான ஆசாரியனானவன், தன் தலையைத் திறவாமலும், தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளாமலும்,

ஈ செத்த எந்தச் சவத்தண்டையிலும் வராமலும், தன் தகப்பனாலும் தன் தாயாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாமலும்,

உ பரிசுத்தஸ்தலத்திலிருந்து புறப்படாமலும், தன் பராபரனுடைய பரிசுத்தஸ்தலத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும் இருப்பானாக; ஏனெனில் அவனுடைய பராபரனின் அபிஷேகத்தெண்ணெய் என்ற கிரீடம் அவன்மேல் இருக்கிறது; நாம் கர்த்தர்.

ஊ கன்னியாஸ்திரியாகிய பெண்ணை அவன் விவாகம்பண்ணுவானாக.

எ அவன் கைம்பெண்சாதியையாகிலும், தள்ளப்பட்டவளையாகிலும், பரிசுத்தம் குலைந்தவளையாகிலும், வேசியையாகிலும் விவாகம்பண்ணாமல், தன் சனத்தாரிலுள்ள ஒரு கன்னியாஸ்திரியை விவாகம்பண்ணி,

ஐ தன்னுடைய வித்தைத் தன் சனத்தாருக்குள்ளே பரிசுத்தகுலைச்சலாக்காதிருப்பானாக; ஏனெனில் நாம் அவனைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

ஒ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

Digitized by Google

ஒஎ ஆரோனோடே பேசவேண்டியதே

தனில் உன் வித்தாராகிய உன் தலைமுறையாரில் அங்கவீனமுள்ளவன் தன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரலாகாது.

உ அங்கவீனமுள்ள ஒருவனும் சேரவேண்டாம்; குருடனாகிலும், சப்பாணியாகிலும், குறைந்த அல்லது நீண்ட அவயவமுள்ளவனாகிலும்,

ஈ காலொடிந்தவனாகிலும், கை ஒடிந்தவனாகிலும்,

ஊ கூனனாகிலும், நோந்த உடம்பினனாகிலும், பூப்பட்ட கண்ணனாகிலும், சொறியனாகிலும், படுவனுள்ளவனாகிலும், விதை நசுங்கினவனாகிலும் சரி,

எ ஆசாரியனாகிய ஆரோனின் வித்தாரில் அங்கவீனமுள்ள ஒருவனும் கர்த்தரின் தகனங்களைச் செலுத்தச் சேரவேண்டாம்; அங்கவீனம் அவனிலிருக்கையால், அவன் தன் பராபரனுடைய அப்பத்தைச் செலுத்தச் சேரலாகாது.

ஏ தன் பராபரனுடைய அப்பமாகிய பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவைகளிலும் பரிசுத்தமானவைகளிலும் அவன் புசிக்கலாம்.

ஐ ஆனால் திரையண்டை வராமலும் பீடத்தண்டையில் சேராமலும் இருப்பானாக; ஏனெனில் அங்கவீனம் அவனிலிருக்கின்றது; நம்முடைய பரிசுத்தஸ்தலத்தை அவன் பரிசுத்தக்குலைச்சலாக்கவேண்டாம்; ஏனெனில் நாம் அவர்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

ஒ ¶ மோசே இவைகளை ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னான்.

உஉ. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ இஸ்ரவேல் புத்திரர் நமக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களால் ஆரோனும் அவன் குமாரரும் நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதபடிக்கு, எச்சரிக்கையோடே இருக்கவேண்டும் என்று அவர்களோடே சொல்; நாம் கர்த்தர்.

ஊ ஈ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், உங்கள் தலைமுறைகளிலுள்ள உங்கள் எல்லா வித்தாரிலும் எவனாகிலும் தன்மேலே தீட்டிருக்கும்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு நியமித்துச் செலுத்துகிற பரிசுத்தவஸ்துக்களண்டையில் சேர்ந்தால், அந்த ஆத்துமா நமக்கு முன்பாக இராதபடிக்கு அறுப்புண்பான்; நாம் கர்த்தர்.

எ ஆரோனின் வித்தாரில் எவன் குஷ்டரோகியோ, எவன் பிரமியக்காரனோ, அவன் சுத்தமாகும்மட்டும், பரிசுத்தவஸ்துக்களிலே புசிக்கவேண்டாம்; செத்த உடலாலே தீட்டானதெதையாகிலும் தொட்டவனும், அல்லது இந்திரியம் கழிந்தவனும்,

ஏ அல்லது தீட்டுப்படுத்துகிற யாதொரு ஊர்வதையாகிலும் எந்தத் தீட்டுமுள்ள மனிதனையாகிலும் தொட்டவனும், அப்படித்தானே.

ஐ அப்படித் தொட்டவன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் பரிசுத்தவஸ்துக்களிலே புசியாமல், தன் மாம்சத்தைத் தண்ணீரிலல் கழுவக்கடவன்.

ஒ சூரியன் அஸ்தமித்தபிற்பாடு சுத்தமாயிருப்பான்; பிறகு அவன் பரிசுத்தவஸ்துக்களிலே புசிக்கலாம்; ஏனெனில் அது அவனுடைய அப்பம்.

உ தானாய்ச் செத்ததையும் பீறுண்டதையும் அவன் புசிக்கிறதினாலே தீட்டுப்படவேண்டாம்; நாம் கர்த்தர்.

ஊ ஆகையால் பரிசுத்தமானதை அவர்கள் பரிசுத்தக்குலைச்சலாக்குகிறதினாலே, தங்கள்மேலே பாவம் சுமத்திச்சாவாதபடிக்கு, நம்முடைய காவலைக் காக்கக்கடவர்கள்; நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிறகர்த்தர்.

ஐ ¶ அந்நியன் ஒருவனும் பரிசுத்தவஸ்

தருக்கினிலே புசிக்கவேண்டாம்; ஆசாரியன் வீட்டில் விடுதியாயிருக்கிறவனும் கூலி வேலைசெய்கிறவனும் பரிசுத்தவஸ்துவிலே புசிக்கவேண்டாம்.

10 ஆசாரியன் தன் பணத்தினாலே கொண்டவனும் அவன் வீட்டிலே பிறந்தவனுமோவெனில், அவனுடைய அப்பமாகிய அதிலே புசிப்பார்களாக.

12 ஆசாரியனுடைய குமாரத்தி பிறனுக்கு வாழ்க்கைப்பட்டால், பரிசுத்தவஸ்துக்களின் படைப்பிலே புசிக்கவேண்டாம்.

13 கைம்பெண்சாதியாய்ப்போன, அல்லது தள்ளப்பட்டவளான ஆசாரியனுடைய குமாரத்தி வித்தில்லாதிருந்து, தன் தகப்பன் வீட்டிலே தன்னுடைய இளவயதினிருந்ததுபோல, திரும்பிவந்து இருந்தானேயாகில், தன் தகப்பன் அப்பத்திலே புசிப்பானாக; ஆனால் அந்நியனாகிய ஒருவனும் அதிலே புசிக்கவேண்டாம்.

14 ஒருவன் அறியாமல் பரிசுத்தவஸ்துவிலே புசித்ததுண்டானால், அவன் அதிலே ஐந்தில் ஒருபங்கை அதிகமாகக்கூட்டி, பரிசுத்தவஸ்துவோடும்கூட ஆசாரியனுக்குக் கொடுக்கக்கடவன்.

15 அவர்கள் கர்த்தருக்கு ஏறெடுக்கிற இஸ்ரவேல் புத்திரரின் பரிசுத்தவஸ்துக்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்காமலும்,

16 அவைகளைப் புசிக்கிறதினாலே அவர்கள்மேலே குற்றமான அக்கிரமத்தைச் சுமரப்பண்ணாமலும் இருப்பார்களாக; ஏனெனில் நாம் அவர்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தரென்று சொல்லென்றார்.

17 ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

18 நீ ஆரோனோடும் அவன் குமாரரோடும் இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் பேசிச் சொல்லவேண்டியதேதெனில், இஸ்ரவேல் வீட்டாரிலும் இஸ்ரவேலிலே தங்குகிற பரதேசிகளிலும் எவர்கள் தங்களுடைய சகல பொருத்தனைகளின்படியாகிலும் உற்சாகத்தின்படியாகிலும் சர்வாங்கதகனமாகக் கர்த்தருக்குத் தங்கள் காணிக்கையைச் செலுத்தப்போகிறார்களோ,

19 அவர்கள் தங்கள் மனதின்படியே மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் வெள்ளாடுகளிலாகிலும் பழுதற்ற ஒரு ஆண்சீவனைப் பிடித்துவந்து செலுத்துவார்களாக.

20 பழுதுள்ள ஒன்றையும் செலுத்தீர்களாக; ஏனெனில் அது உங்களுக்காகக் கர்த்தருக்குப் பிரியமாய் இருப்பதில்லை.

21 ஒருவன் விசேஷித்த பொருத்தனைக்காக, அல்லது உற்சாகமனதாக, கர்த்தருக்கு மாடுகளிலாகிலும் ஆடுகளிலாகிலும் சமாதானபலியைச் செலுத்தப்போனால், அது பிரியமாய் இருக்கும்படிக்கு ஒரு பழுதுமில்லாத உத்தமமாயிருக்கவேண்டும்.

22 குருடு, நொறிசல், ஊனம், கழிச்சல், சொறி, புண்ணுள்ளது முதலானவைகளை நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும், அவைகளாலே கர்த்தருக்குப் பலிபீடத்தின்மேலே தகனபலியை ஏற்றுமலும் இருப்பீர்களாக.

23 நீண்ட, அல்லது குறைந்த அவயவமுள்ள மாட்டையும் ஆட்டையும் நீ உற்சாகபலியாக்கலாம்; ஆனால் பொருத்தனைக்காக அது பிரியமாயிருப்பதில்லை.

24 நசுங்கினதையும் நொறுங்கினதையும் காயம்பட்டதையும் விதை அறுக்கப்பட்டதையும் நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தாமலும் உங்கள் தேசத்திலே பலிஇடாமலும் இருப்பீர்களாக.

25 அந்நிய புத்திரன்கையிலும் இப்படிக் கொத்ததை வாங்கி, உங்கள் பராபரனுடைய அப்பமாகச் செலுத்தீர்களாக; ஏனெனில் அவைகளின் கேடும் பழுதும் அவைகளில் இருக்கின்றன; அவைகள் உங்களுக்காகப் பிரியமாயிருப்பதில்லை என்று சொல்லென்றார்.

26 பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

27 ஒரு கன்று, அல்லது ஆட்டுக்குட்டி, அல்லது வெள்ளாட்டுக்குட்டி பிறந்தால்

அது எழுநாள் தன் தாயின்கீழ் இருக்கக் கடவது; எட்டாம்நாள் முதல்கொண்டு, அது கர்த்தருக்குத் தகனகாணிக்கையாகச் செலுத்தப்படப் பிரியமாயிருக்கும்.

๒๗ மாட்டையும் அதின் கன்றையும், அல்லது ஆட்டையும் அதின் குட்டியையும், ஒருநாளிலே குரல்வளை அறுக்கிறகளாக.

๒๘ ஸ்தோத்திரப்பலியைக் கர்த்தருக்குச் செலுத்தினீர்களானால், உங்கள் மனப்பூர்வத்தால் அதைச் செலுத்துவீர்களாக.

๒๙ அந்நாளிலேதானே அது புசிக்கப்படுவதாக; விடியற்காலம்மட்டும் நீங்கள் அதில் ஒன்றும் மீதியாக வைக்கவேண்டாம்; நாம் கர்த்தர்.

๓๐ ¶ நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; நாம் கர்த்தர்.

๓๑ நாம் இஸ்ரவேல் புத்திரர் நடுவே பரிசுத்தமாக்கப்பட, நம்முடைய பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்காதிருப்பீர்களாக; நாம் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

๓๒ நாம் உங்களுக்குப் பராபரனாயிருப்பதற்காக, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர்; நாம் கர்த்தரென்று சொல்லென்றார்.

๒๓. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

๒ ஈ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிக்கும்படிக்கு, நீங்கள் நிட்டமான காலத்திலே கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகள் எவைகளெனில்,

๓ ஆறுநாள் வேலைசெய்யப்படுவதாக; ஏழாம்நாளோவெனில், சபைகூடும் பரிசுத்த ஓய்வுநாள், அதில் ஒரு வேலையையும் செய்யீர்களாக; அது உங்கள் வாசல்தலங்களில் எல்லாம் கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் நாளாயிருப்பதாக.

๔ ¶ சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிக்கும்படிக்கு, நீங்கள் நிட்டமான காலத்திலே கூறவேண்டிய கர்த்தரின் பண்டிகைகள் எவைகளெனில்,

๕ *முதலாம்மாதம் பதினான்காம்தேதி அந்திநேரமாகிறவேளையிலே கர்த்தருக்குப் பஸ்காவும், *உ மோ. ๓๒. ๓๗.

๖ அந்த மாதம் பதினைந்தாம்தேதியிலே, கர்த்தருக்குப் புளிப்பில்லாத அப்பங்களின் பண்டிகையுமாயிருக்கும்; ஏழுநாள் புளிப்பில்லாத அப்பங்களைப் புசிப்பீர்களாக.

๗ முதலாம்நாள் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யீர்களாக.

๘ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செலுத்தக்கடவீர்கள்; ஏழாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள்; அதில் யாதொரு பணிவிடை வேலையையும் செய்யீர்களாக என்று சொல்லென்றார்.

๙ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

๑๐ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் வந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்பொழுது, உங்கள் அறுப்பின் முதல் பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியன் அண்டையில் கொண்டுவரக்கடவீர்கள்.

๑๑ உங்கள்மேலே பிரியம் உண்டாக, ஆசாரியன் அந்தக் கதிர்க்கட்டை ஓய்வுநாளுக்குப் பின்னான மறுநாளிலே கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டுவானாக.

๑๒ நீங்கள் அதை அசைவாட்டுகிற அந்நாளிலே, கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக, ஒருவயதான பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும்,

๑๓ கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான தகனமாக, ஒரு மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கானதும், எண்ணெயிலே பிசைக்கதுமான மெல்லிய மாவாகிய அதின் கா

Digitized by Google

ணிக்கையையும், நிராட்சப்பழ இரசத்தி லே கால்படியாகிய அதின் ஊற்றுதலையும், செலுத்தக்கடவீர்கள்

ரச உங்கள் பராபரனுடைய காணிக்கை யை நீங்கள் கொண்டுவரும் அந்நாள்மட் டும், அப்பமும் சுட்ட கதிரும் பச்சைக்கதி ரும் புசியீர்களாக, இது உங்கள் வாசஸ்த லங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைக ளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

மடு ¶ நீங்கள் அசைவாட்டும் கதிர்க்கட் டைக் கொண்டுவந்த ஒய்வுநாளுக்குப் பின் னான அந்த மறுநாள்முதல்கொண்டு எண் ணத்துவக்கி, ஏழுவாரங்களைச் சரியாகப் போகவிட்டு,

ரகூ ஏழாம் ஒய்வுநாளுக்குப் பின்னான மறு நானாகிய ரம்பதாம் நாள்மட்டும் எண்ணி, கர்த்தருக்குப் புதுக்காணிக்கையைச் செ லுத்தக்கடவீர்கள்.

ரஎ நீங்கள் ஒரு மரக்காலிலே பத்தில் இ ரண்டுபங்காகிய மெல்லியமாவிலே புளிப் பாகச் சுட்ட அசைவாட்டும் காணிக்கை யாயிருக்கிற இரண்டு அப்பங்களை உங்கள் வாசஸ்தலங்களிலிருந்து கர்த்தருக்கு மு தல்பலனாகக் கொண்டுவந்து,

ரஅ அப்பத்தோடேகூடக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனபலியாக, ஒரு வயதான பழு தற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், ஒரு காளை யருதையும், இரண்டு ஆட்டுக்கடாக்களை யும், கர்த்தருக்கு ஆற்றுகிற வாசனையான தகனமாக அவைகளுக்கு அடுத்த காணிக் கையையும் ஊற்றுதல்களையும் செலுத்தி,

ரகூ வெள்ளாடுகளில் ஒரு கடாவைப் பா வம்போக்கும் பலியும், ஒருவயதான இரண் டு ஆட்டுக்குட்டிகளைச் சமாதானபலியுமாக் கக்கடவீர்கள்.

உய அவைகளை ஆசாரியன் முதல்பல னாகிய அப்பத்தோடும் இரண்டு ஆட்டுக் குட்டிகளோடும்கூட, கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவன்; கர்த்தருக்குப் பரி சுத்தமாகிய அவைகள் ஆசாரியனுடைய வைகளாம்.

உக அந்தநாளானே உங்களுக்குச் சபை கூடும் பரிசுத்தநாளென்று கூறக்கடவீர் கள்; யாதொரு பணிவிடை வேலையை அதி லே செய்யீர்களாக; இது உங்கள் வாசஸ் தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைக ளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

உஉ ¶ *உங்கள் தேசத்தின் வெள்ளாண் மையை நீங்கள் அறுக்கையில், உன் வய லின் ஓரத்தில் இருக்கிறதைத் தீர அறுக்கா மலும், சிந்திக்கிடக்கிற கதிர்களைப் பொறுக் காமலும், எளியவனுக்கும் பரதேசிக்கும் அவைகளை விட்டுவிடுவாயாக; நாம் உங் கள் பராபரனுகிய கர்த்தரென்று சொல் லென்றார். * ௩ மோ. ரசு. கூ

உக ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோ டே பேசிச் சொன்னதாவது:

உச நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், உங்களுக் கு ஏழாம்மாதம் முதலாம்தேதி கெம்பீரப் பிரன்தாபத்தின் பண்டிகை என்ற சபைகூ டும் பரிசுத்த ஒய்வுநாளாய் இருப்பதாக.

உடு அதிலே யாதொரு பணிவிடை வேலை யைச் செய்யாமல், கர்த்தருக்குத் தகனம் செலுத்துவீர்களாக என்றுசொல்லென்றார்.

உசு ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உள அந்த ஏழாம்மாதம் பத்தாம்தேதியோ வென்றால், உங்களுக்குப் பாவநிவிர்த்தி ஆ குதலின் நாளும் சபைகூடும் பரிசுத்தநா ளுமாயிருக்கும்; அப்பொழுது நீங்கள் உங்கள் ஆத்துமாக்களைத்தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குத்தகனம்செலுத்தக்கடவீர்கள்.

உஅ ஆகையால் அந்நாளிலே யாதொரு வேலையையும் செய்யீர்களாக; ஏனெனில் அது உங்கள் பராபரனுகிய கர்த்தரின் சந் நிதியில் உங்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யப்படும் நாளாயிருக்கின்றது.

உக அந்நாளிலே தன்னைத் தாழ்மைப்படுத் தாத எந்த ஆத்துமாவும் தன் சனத்தாரில் ராதபடிக்கு அறுப்புண்பான்.

ஈய அந்நாளிலே யாதொரு ஆத்துமா யா

Digitized by Google

தொரு வேலையைச் செய்தால், அந்த ஆத்துமாவை அவன் சனத்தின் நடுவிலே வைக்காமல் அழிப்போம்.

கூ நீங்கள் எந்த வேலையும் செய்யாதிருப்பது, உங்கள் வாசஸ்தலங்களிலெல்லாம் உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

கூ அது உங்களுக்கு ஓய்வுக்கு ஓய்வுகான்; அதிலே உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தக்கடவீர்கள்; அந்த மாதத்தின் ஒன்பதாம்தேதி சாயங்காலம்துவக்கி, மறுசாயங்காலம்மட்டும், உங்கள் ஓய்வை ஆசரிக்கக்கடவீர்கள் என்றார்.

கூ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

கூ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், அந்த ஏழாம்மாதம் பதினைந்தாம்தேதி கர்த்தருக்கு ஏழுநாளாக ஆசரிக்கும் கூடாரப்பண்டிகை.

கூ முதலாம்நாள் சபைகூடும் பரிசுத்தநாள்; யாதொரு பணிவிடை வேலையும் செய்யீர்களாக.

கூ ஏழுநாளும் கர்த்தருக்குத் தகனம்செலுத்தக்கடவீர்கள்; எட்டாம்நாளும் உங்களுக்குச் சபைகூடும் பரிசுத்தநாள்; அதிலே கர்த்தருக்குத் தகனம் செலுத்தக்கடவீர்கள்; அது ஆசரிக்கப்படும்நாள்; அதிலே யாதொரு பணிவிடை வேலையைச் செய்யாதிருப்பீர்களாக.

கூ நீங்கள் கர்த்தருடைய ஓய்வுநாள்களிலே செலுத்துவதல்லாமலும், நீங்கள் கர்த்தருக்குப் படைக்கிற உங்கள் எல்லாக் காணிக்கைகளும் பொருத்தனைகளும் உற்சாகப்பலிகளும் அல்லாமலும்,

கூ நீங்கள் அந்தந்த நாளுக்குத்தக்கபடி, கர்த்தருக்குச் சர்வாங்கதகனம், காணிக்கை, பலி, ஊற்றுதல் முதலான தகனங்களைச் செலுத்தும்படிக்குச் சபைகூடிவந்து, பரிசுத்தமாய் ஆசரிப்பதற்காக, நீங்கள் கூறவேண்டிய கர்த்தருடைய பண்டிகைகள் இவைகள்தானே.

கூ நிலத்தின் பலனை நீங்கள் சேர்த்திருக்கும் ஏழாம்மாதம் பதினைந்தாம்தேதியிலோ வென்றால், கர்த்தருடைய பண்டிகையை ஏழுநாளாக ஆசரிக்கக்கடவீர்கள்; முதலாம்நாளிலும் ஓய்வு; எட்டாம்நாளிலும் ஓய்வு.

கூ முதலாம்நாளிலே, அலங்கார விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சமட்டை ஓலைகளையும் தழைந்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் பராபரனுடைய கர்த்தருக்குமுன்பாக ஏழுநாள் மகிழ்ச்சியாயிருந்து,

கூ வருஷம்தோறும் ஏழுநாள் கர்த்தருக்கு இந்தப் பண்டிகையை ஆசரிக்கக்கடவீர்கள்; இது உங்கள் தலைமுறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை; ஏழாம்மாதத்தில் அதை ஆசரிக்கக்கடவீர்கள்.

கூ நாம் இஸ்ரவேல் புத்திரரை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணினபொழுது, அவர்களைக் கூடாரங்களிலே குடியிருக்கப்பண்ணினதை உங்கள் தலைமுறை தலைமுறையாக அறியும்படிக்கு,

கூ ஏழுநாள் கூடாரங்களிலே குடியிருக்கக்கடவீர்கள்; இஸ்ரவேலிலே பிறந்தவர்கள் எல்லாரும் கூடாரங்களிலே குடியிருப்பார்களாக; நாம் உங்கள் பராபரனுடைய கர்த்தரென்று சொல்லென்றார்.

கூ ¶ அப்படியே மோசே கர்த்தருடைய பண்டிகைகளின் வர்த்தமானத்தை இஸ்ரவேல் புத்திரருக்குச் சொன்னான்.

உச. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ *குத்துவிளக்கில் எப்பொழுதும் வெளிச்சம் ஏற்றும்படிக்கு, இஸ்ரவேல் புத்திரர் இடித்துப் பிழியப்பட்ட தெளிவான ஒலிவ எண்ணெயை உன்னண்டைக்குக் கொண்டுவர அவர்களுக்குக் கற்பி.

*உ மோ. உஎ. உஅ.

உ ஆசரிப்புக்கூடாரத்திலே சாட்சியின்

நிகாக்கு வெளிப்புறமாக ஆரோன் அதை எப்பொழுதும், சாயங்காலம்துவக்கி, விடியற்காலம்மட்டும், கர்த்தருக்குமுன்பாக எரியவைக்கக்கடவன்; இது உங்கள் தலை முறைகளுக்குச் செல்லும் நித்தியகட்டளை.

ச அவன் எப்பொழுதும் கர்த்தருக்குமுன்பாகச் சுத்தமான குத்துவிளக்கின்மேலிருக்கிற விளக்குகளை எரியவைக்கக்கடவன்.

ஞ ¶மெல்லிய மாவைவாங்கி, அதைப் பன்னிரண்டு அப்பங்களாகச் சுடுவாயாக; ஒவ்வொரு அப்பம் மரக்காலிலே பத்தில் இரண்டுபங்கு மாவினாலே செய்யப்படுவதாக.

கூ அவைகளை ரீ கர்த்தருக்குமுன்பாக, சுத்தமான மேசையின்மேல் இரண்டு அடுக்காக, ஒவ்வொரு அடுக்கில் அவ்வாறு இருக்கும்படிக்கு வைத்து,

எ ஒவ்வொரு அடுக்கினிடத்திலே சுத்தமான குங்குலிகம் போடக்கடவாய்; அது அப்பத்தோடிருந்து நினைப்புக்கென்று கர்த்தருக்குத் தகனமாயிருக்கும்.

அ அதை நித்திய உடம்படிக்கையாக இஸ்ரவேல் புத்திரர்கையிலே வாங்கி, ஓய்வுநாள்தோறும் கர்த்தருக்குமுன்பாக அடுக்கிவைக்கக்கடவன்.

கூ அது ஆரோனையும் அவன் குமாரரையும் சேரும்; அதைப் பரிசுத்தவிடத்திலே புசிக்கக்கடவர்கள்; ஏனெனில் அது பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம், கர்த்தருடைய தகனங்களில் அது அவனுக்கு நித்தியகட்டளை என்றார்.

ஏ ¶ இஸ்ரவேல் சாதியான ஸ்திரிக்கும் எகிப்தியபுருஷனுக்கும் பிறந்த ஒருவன், இஸ்ரவேல் புத்திரரோடேகூடப் புறப்பட்டுவந்திருந்தான்; இவனும் இஸ்ரவேலனுடைய ஒரு மனிதனும் பாளயத்திலே சண்டைபண்ணினார்கள்.

ஐ அப்பொழுது இஸ்ரவேல் சாதியான அந்த ஸ்திரியின் மகன் நாமநிந்தை சொல்லித் தூஷணித்தான்; ஆகையால் அவனை மோசேயண்டைக்குக் கொண்டுவந்தார்கள்; அவன் தாயின்பேர் சேலோமித், அவன் தான் கோத்திரத்தாருடைய திப்ரியின் குமாரத்தி.

ஙஉ கர்த்தரின் வாக்கினாலே தங்களுக்கு உத்தரவு வரும்மட்டும், அவனைக் காவல்படுத்தினார்கள்.

ஙஊ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஙஎ தூஷணித்தவனைப் பாளயத்திற்குப் புறம்பே கொண்டுபோ; கேட்டவர்கள் எல்லாரும் தங்கள் கைகளை அவன் தலையின்மேல் வைப்பார்களாக; பிற்பாடு சபையெல்லாம் அவனைக் கல் எறியக்கடவது.

ஙடு ஆனால் இஸ்ரவேல் புத்திரரோடே ரீ சொல்லவேண்டியதேதெனில், எவனுடனும் தன் பராபரனைத் தூஷணித்தால், அவன் தன் பாவத்தைச் சுமப்பான்.

ஙஅ கர்த்தரின் நாமத்தை நிந்தையாகச் சொல்லுகிறவன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; சபையெல்லாம் அவனைக் கல் எறியவே எறியக்கடவது; பரதேசியாகிலும் சரி, தேசத்திலே பிறந்தவனாகிலும் சரி, நாமத்தைத் தூஷணித்தானாலும் கொலையுண்ணக்கடவன்.

ஙஎ யாதொரு மனித சீவனை ஒருவன் கொன்றால், கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்.

ஙஇ மிருகசீவனைக் கொன்றவன் சீவனுக்குச் சீவனைச் செலுத்தக்கடவன்.

ஙஊ ஒருவன் தனக்கு அடுத்தவனில் ஊனம் உண்டாக்கினால், அவன் செய்தபடி அவனுக்குச் செய்யப்படக்கடவது.

உஐ நொறுக்குதலுக்கு நொறுக்குதலும், கண்ணுக்குக் கண்ணும், பல்லுக்குப் பல்லும்தானே; அவன் மனிதனில் ஊனம் உண்டாக்கினபடியே அவனிலும் உண்டாக்கப்படக்கடவது.

உக மிருகத்தைக் கொன்றவன் பதில் கொடுக்கக்கடவன்; மனிதனைக் கொன்றவனோ, கொலையுண்ணக்கடவன்.

உஉ உங்களிலே பரதேசிக்கும் தேசத்திலே பிறந்தவனுக்கும் ஏகமான நியாயம் இருக்

Digitized by Google

கக்கடவது; ஏனெனில் நாம் உங்கள் பரா பரனுடைய கர்த்தரென்று சொல்லென்றார்.

உஊ அப்படியே தூஷணித்தவனைப் பாள யத்திற்குப் புறம்பே கொண்டுபோய், அவ னைக் கல் எறிவதற்காக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; கர்த்தர் மோ சேக்குக் கற்பித்தபடியே இவர்கள் செய் தார்கள்.

உரு. அதிகாரம்.

கர்த்தர் சீனாய்பர்வதத்தில் மோசேயோ டே பேசிச் சொன்னதாவது:

உ ஈ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங் களுக்குக் கொடுக்கும் தேசத்திலே நீங்கள் வந்திருக்கும்பொழுது, தேசம் கர்த்தருக் கென்றுஓய்வுகனைக்கொண்டாடவேண்டும்.

ஊ *ஆறுவருஷம் உன் வயலை விதைத்து, உன் திராட்சத்தோட்டத்தைக் கினை றுக்கி, அதின் பலனைச் சேர்ப்பாயாக. *உ மோ. உஊ. ஐ, ஐக.

ச ஏழாம்வருஷத்திலோவென்றால், கர்த் தருக்கென்று ஓய்ந்திருக்கும் ஓய்வு தேசத் திற்கு இருக்கவேண்டும்; உன் வயலை வி தைக்காமலும், உன் திராட்சத்தோட்டத் தைக் கினை றுக்காமலும்,

டு சயமாய் உனக்கு வினைந்த பயிரானதை அறுத்துக்கொள்ளாமலும், ஈ கினை றுக்கா தே விட்ட திராட்சச்செடியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப்பாயாக; தேசத்திற்கு அது ஓய்ந்திருக்கும் வருஷமாய் இருக்கக் கடவது.

சு தேசத்தின் ஓய்விலே பயிராகிறது உங் களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; உனக் கும், உன் வேலைக்காரனுக்கும், உன் வேலைக் காரிக்கும், உன் கூலியாளுக்கும், உன்னி டத்திலே தங்குகிற உன்னுடைய பரதே சிக்கும்,

எ உன் மிருகசீவனுக்கும், உன் தேசத்தி லிருக்கிற காட்டுச்சீவனுக்கும், அதின் பல னெல்லாம் ஆகாரமாய் இருப்பதாக.

அ ¶ பின்னையும் ஏழு ஓய்வு வருஷங் களுள்ள ஏழேழு வருஷங்களை எண்ணுவா யாக; அந்த ஏழு ஓய்வு வருஷங்களுள்ள நாள்கள் உனக்கு நாற்பத்தொன்பது வரு ஷம் ஆகும்.

கூ அப்பொழுது ஏழாம்மாதம் பத்தாம் தேதியிலே தொனிக்கிற எக்காளத்தைச் சுற்றித் தொனியப்பண்ணுவாயாக; பாவநிவர் த்தியாகுதலின் நாளிலே அதை உங்கள் தே சமெங்கும் தொனியப்பண்ணி,

ஐ ஐம்பதாம் வருஷத்தைப் பரிசுத்தமாக் கி, தேசமெங்கும் அதின் குடிகளுக்கெல் லாம் விடுதலையைக் கூறக்கடவீர்கள்; அது உங்களுக்குச் சேர்ந்திருக்கும் வருஷம்; அதி லே நீங்கள் அவரவர் தங்கள் காணியாட் சிக்கும் அவரவர் தங்கள் வம்சத்திற்கும் திரும்புவீர்கள்.

ஐக அந்த ஐம்பதாம் வருஷம் உங்களுக் குச் சேர்ந்திருக்கும் வருஷமாயிருப்பதாக; அதிலே விதைக்காமலும், சுயமாய் வினைந் த பயிரானதை அறுத்துக்கொள்ளாமலும் கினை றுக்காதே விடப்பட்ட திராட்சச்செ டியின் பழங்களைச் சேர்க்காமலும் இருப் பீர்களாக.

ஐஉ ஏனெனில், அது சேர்ந்திருக்கும் வரு ஷம்; அது உங்களுக்குப் பரிசுத்தமாயிருக் கவேண்டும்; அதின் பலனை வயலில் எடுத் து, புசித்துக்கொண்டு இருப்பீர்களாக.

ஐஊ சேர்ந்திருக்கும் அந்த வருஷத்தில் நீங்கள் அவரவர் தங்கள் காணியாட்சிக்குத் திரும் புவீர்கள்.

ஐச ஆகையால் ஏதாகிலும் உங்களுக்கடுத் தவனுக்கு விற்று, அல்லவென்று அவன் கையிலே கொண்டீர்களானால், ஒருவரை ஒருவர் இடுக்கண் செய்யீர்களாக.

ஐடு சேர்ந்திருக்கும் வருஷத்திற்குப்பிறகு சென்ற வருஷங்களின் இலக்கத்திற்குத் தக்கதாக உனக்கடுத்தவன் கையிலே கொ ள்ளுவாயாக; பலனுள்ள வருஷங்களின் இலக்கத்திற்குத்தக்கதாக அவன் உனக்கு விற்பானாக.

Digitized by Google

மகூ வருஷங்கள் அநேகமானால் அதின் விலையை உயர்த்தி, கொஞ்சமானால் அதைத் தாழ்த்துவாயாக; ஏனெனில் பலனுள்ள வருஷங்களின் இலக்கத்தைப் பார்த்து, அவன் உனக்கு விற்கிறான்.

மஎ உங்களில் ஒருவனும் தனக்கடுத்தவனை இடுக்கண் செய்யவேண்டாம்; உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக; ஏனெனில் நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

மஅ ¶ நம்முடைய கட்டளைகளின்படி செய்து, நம்முடைய நியாயங்களைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்யக்கடவீர்கள்; அப்பொழுது தேசத்திலே சுகமாய்க் குடியிருந்து,

மக பூமி தன் கனியைத் தருகிறதினாலே திர்ப்தியாகச் சாப்பிட்டு, அதிலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

மஉ ஏழாம் வருஷத்தில் எதைப் புசிப்போம்? இதோ நாங்கள் விதைக்காமலும், எங்கள் பலனைச் சேர்க்காமலும் இருக்கவேண்டுமே என்றீர்களேயானால்,

உக ஆறும் வருஷம் மூன்று வருஷங்களின் பலனைத்தர, நமது ஆசீர்வாதத்தை உங்களுக்காகக் கட்டளையிடுவோம்.

உஉ ஆனதினாலே நீங்கள் எட்டாம் வருஷத்திலே விதைத்து, பழைய பலனிலே ஒன்பதாம் வருஷம்மட்டும் சாப்பிடுவீர்கள்; இதின் பலன் வரும்மட்டுக்கும் பழைய பலனைச் சாப்பிடுவீர்கள்.

உக ¶ நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; அதேனென்றால் தேசம் நமதாயது; நீங்கள் நமக்குமுன்பாகப் பரதேசிகளும் தங்கியிருக்கிறவர்களுமானே.

உச ஆகையால் உங்கள் காணியாட்சியான தேசமெங்கும், நிலங்களின் மீட்புக்கு இடங்கொடுக்கக்கடவீர்கள்.

உடு உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவனைச் சேர்ந்த மீட்பன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்.

உசு மீட்பன் இல்லாதவனுக்கோவெனில், தன் மீட்புக்குத் தேவையான அவகாசம் அகப்பட்டால்,

உஎ அவன் தன்னுடைய காணியாட்சிக்குத் திரும்பிவரும்படிக்கு, அதை விற்றபிறகு சென்ற வருஷங்களின் கணக்கைத் தள்ளி, மீதியானதை அதைக் கொண்டவனுக்குத் திரும்பக் கொடுப்பானாக.

உஅ இவனுக்குத் திரும்பக் கொடுப்பதற்கான அவகாசம் அவனுக்கு அகப்படாமல் போயிற்றேயாகில், அவன் விற்றது கொண்டவன் கையிலே சேர்திருந்தும் வருஷம் மட்டும் இருந்து, சேர்திருந்தும் வருஷத்திலோவென்றால், அவன் தன் காணியாட்சிக்குத் திரும்பி வரும்படிக்கு அது நீங்கலாக்கடவது.

உக ¶ ஒருவன் மதிலுள்ள பட்டணத்தில் வாசல்தலமாகிய வீட்டை விற்றால், அதை விற்றபிறகு ஒரு வருஷம்மட்டும் அதின் மீட்புச் செல்லும்; அதின் மீட்புக்கு ஒரு முழுவருஷம் தவணையாய் இருப்பதாக.

உஎ ஒரு முழுவருஷகாலம் நிறைவேறும் மட்டும் அது மீட்கப்படாதிருந்ததேயானால், அப்பொழுது மதிலுள்ள பட்டணத்திலிருக்கும் அந்த வீட்டைக் கொண்டவனுக்கு அது தலைமுறைதலைமுறையாக நிலைத்திருக்கக்கடவது; சேர்திருந்தும் வருஷத்தில் அது நீங்கலாவதும் இல்லை.

உக சுற்றிலும் மதிலில்லாத கிராமங்களின் வீடுகளோவெனில், தேசத்தின் வயல்வெளிக்குச் சரியாக எண்ணப்படுவதாக; அவைகளுக்கு மீட்பிருக்கும்; சேர்திருந்தும் வருஷத்தில் நீங்கலுமாகும்.

உஉ இலேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களின் வீடுகளுக்கோவென்றால், இலேவியருக்கு என்றைக்கும் மீட்புக்கு இடமுண்டு.

உஉ விற்றவனுடைய காணியாட்சிப் பட்டணமான ஊரின் வீடு இலேவியரில் பின்னொருவரால் மீட்கப்பட்டிருந்தாலும், சேர்திருந்தும் வருஷத்தில் நீங்கலாகவேண்டும்; ஏனெனில் இலேவியருடைய பட்ட

ணங்களின் வீடுகள் இஸ்ரவேல் புத்திரரின் நடுவிலே அவர்களுக்கு இருக்கிற காணியாட்சி.

ஈச ஆனால் அவர்கள் பட்டணங்களுடைய பேட்டைகளின் வயல்வெளி விற்கப்படாதிருப்பதாக; ஏனெனில் அது அவர்களுக்கு நித்தியகாணியாட்சியாய் இருக்கின்றது.

ஈடு ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரப்பட்டு, கை இளைத்தவனானால், அவனைத் தாங்கப்பண்ணுவாயாக; பரதேசியையும் தங்கவந்தவனையும்போல, அவன் உன்னோடே பிழைப்பானாக.

ஈகூ நீ அவன் கையில் வட்டியையும் சொச்சத்தையும் வாங்காமல், உன் சகோதரன் உன்னோடே பிழைக்கும்படிக்கு, உன் பராபரனுக்குப் பயப்படக்கடவாய்.

ஈஎ அவனுக்கு உன் பணத்தை வட்டிக்கும் உன் போசனத்தைச் சொச்சத்திற்கும் கொடாயாக.

ஈஅ நாம் உங்களுக்குக் கானான்தேசத்தைக் கொடுத்து, உங்களுக்குப் பராபரனாயிருக்கும்படிக்கு, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாகிய கர்த்தர்.

ஈகூ ¶ உன் சகோதரன் உன்னிடத்திலே தரித்திரனாகி உனக்கு விலைப்பட்டுப்போனால், அவனை அடிமைவேலைகொள்ளாயாக.

சஏ அவன் கூலிக்காரனைப்போலவும் தங்கவந்தவனைப்போலவும் உன்னோடே இருந்து, சீர்திருந்தும் வருஷம்மட்டும் உன்னிடத்திலே சேவித்து,

சக அப்பொழுது தன் பிள்ளைகளோடும் கூட உன்னைவிட்டு நீங்கலாகி, தன் வம்சத்தண்டைக்கும் தன் பிதாக்களின் காணியாட்சிக்கும் திரும்பிவருவானாக.

சஉ ஏனெனில் அவர்கள் நாம் எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரர்; அடிமை விற்கப்படுவதுபோல, அவர்கள் விற்கப்படவேண்டாம்.

சஈ நீ அவனைக் கொடூரமாய் ஆளாமல், உன் பராபரனுக்குப் பயப்படுவாயாக.

சஉ உனக்கிருக்கும் அடிமையும் அடிமைப்பெண்ணும் உங்களைச் சுற்றியுமிருக்கிற புறச்சாதிகளின் மனிதராயிருக்கவேண்டும்; அவைகளில் நீ அடிமையையும், அடிமைப்பெண்ணையும் கொள்ளலாம்.

சஙு உங்களிடத்தில் பரதேசிகளாய்த் தங்குகிற அந்நியரின் புத்திரரிலும், உங்கள் தேசத்தில் உங்களிடத்திலே பிறந்திருக்கிற அவர்களுடைய வம்சத்தாரிலும்கூட, நீங்கள் உங்களுக்கு அடிமைகளைக் கொண்டு,

சஞ அவர்களை உங்களுக்கும் உங்களுக்குப்பிற்பாடு உங்கள் பிள்ளைகளுக்கும் சொந்தச் சுதந்தரமாக்கி, என்றைக்கும் ஆண்டு கொண்டிருக்கலாம்; ஆனால் இஸ்ரவேல் புத்திரராகிய உங்கள் சகோதரரில் ஒருவனை ஒருவர் கொடூரமாக ஆளவேண்டாம்.

சட ¶ உன்னிடத்திலிருக்கிற பரதேசியும் அந்நியனும் அவகாசம்பெற்றிருக்கும்போது, அவனிடத்திலிருக்கிற உன் சகோதரன் தரித்திரப்பட்டு, அவனுக்கும் அல்லது அவன் வம்ச சந்ததிக்கும் விலைப்பட்டுப்போனால்,

சஎ விலைப்பட்டுப்போனபிற்பாடு அவனுக்கு மீட்புண்டாவதாக; அவன் சகோதரரில் ஒருவன் அவனை மீட்கக்கடவன்.

சஙு அவனுடைய பெரிய சிறியதகப்பனாலும், பெரிய சிறியதகப்பன் குமாரனாலும் அவன் வம்சத்தில் அவனைச் சேர்ந்த சபையாரில் ஒருவனாலும், அவனை மீட்பாளாக; அல்லவென்று அவனுக்கு அவகாசம்கிடைத்தால், தன்னைத்தான் மீட்கலாம்.

டுஏ அவன் தன்னைக் கொண்டவன் கையிலே விலைப்பட்டுப்போன வருஷத்திற்கும் சீர்திருந்தும் வருஷத்திற்கும் இருக்கும் காலத்தை அவனோடே கணக்குப்பார்ப்பானாக; அவனோடே ஒரு கூலிக்காரனும் இத்தனைநாள் இருந்ததுபோல, அவனுடைய விலைக்கிரயம் வருஷங்களின் இலக்கத்

நிற்கொத்துப் பார்க்கப்படக்கடவது.

ரெ இன்னம் அநேகம் வருஷங்கள் இருந்தால், அவன் தன் விலைக்கிரயத்திலே அவைகளுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

ரெஉ சீர்திருந்தும் வருஷம்மட்டும் மீதியாயிருக்கிற வருஷங்கள் கொஞ்சமேயானால், அவனுடே கணக்குப்பார்த்து, தன் வருஷங்களுக்குத்தக்கதை, தன்னை மீட்கும் பொருளாக, திரும்பக் கொடுக்கக்கடவன்.

ரெஊ ஒரு கூலிக்காரனைப்போல, அவனுடே வருஷத்திற்கு வருஷம் இருப்பானாக; அவன் இவனை உன் பார்வைக்குக் கொடூரமாக ஆளவேண்டாம்.

ரெசு இவ்விதங்களாய் அவன் மீட்டுக்கொள்ளப்படாதேபோனால், அவனும் அவன் பிள்ளைகளும்கூடச் சீர்திருந்தும் வருஷத்திலே நீங்கலாவார்கள்.

ரெடு ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் நமக்கு வேலைக்காரர், அவர்கள் நாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நம்முடைய வேலைக்காரராயிருக்கிறார்கள்; நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

உசூ. அதிகாரம்.

நீங்கள் உங்களுக்கு *விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நாட்டாமலும், சித்திரம் தீர்த்த கல்லை அதற்குமுன்பாகப் பணிய உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக; ஏனெனில் நாம் உங்கள் பராபரனுகிய கர்த்தர். *உ மோ. உவ. சு.

உ நம்முடைய ஓய்வுநாள்களைக் கைக்கொண்டு, நம்முடைய பரிசுத்தஸ்தலத்திற்கு அஞ்சி இருப்பீர்களாக; நாம் கர்த்தர்.

ரு ¶ *நீங்கள் நம்முடைய கட்டளைகளில் நடந்து, நம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்தால், *டு மோ. உஎ. க.

சு நாம் ஏற்றகாலத்தில் உங்கள் மழைகளைத் தருவோம்; பூமி தன் பலனையும் நிலத்தின் மரங்கள் தங்கள் கனியையும் கொடுக்கும்.

டு போரடிப்பு உங்களுக்குத் திராட்சப்பழ அறுப்புமட்டும் வரும்; திராட்சப்பழ அறுப்பு விதைப்புக்காலம்மட்டும் வரும்; நீங்கள் உங்கள் அப்பத்தைத் திர்ப்தியாகச் சாப்பிட்டு, உங்கள் தேசத்திலே சுகமாய்க் குடியிருப்பீர்கள்.

ரூ தேசத்திலே சமாதானம் கட்டளை இடுவோம்; தத்தளிக்கப்பண்ணுவார் இல்லாமல் படுத்துக்கொண்டிருப்பீர்கள்; துஷ்ட மிருகங்களைத் தேசத்தில் இராதபடிக்கு ஒழியப்பண்ணுவோம்; பட்டயம் உங்கள் தேசத்தில் உலாவுவதில்லை.

ரூஉ உங்கள் சத்துருக்களைத் துரத்துவீர்கள்; அவர்கள் உங்கள் முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

ரூஅ உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்குமுன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்.

ரூக நாம் உங்கள்மேலே நோக்கமாயிருந்து, உங்களைப் பலுகவும் பெருகவும்பண்ணி, உங்களோடிருக்கும் நம்முடைய உடம்படிக்கையைத் திடப்படுத்துவோம்.

ரூடு போன வருஷத்தின்பழைய தானியத்தைச் சாப்பிட்டு, புதியது வந்தபின்பே பழையதை விலக்குவீர்கள்.

ரூக நம்முடைய வாசஸ்தலத்தை உங்கள் நடுவிலே வைப்போம்; நம்முடைய ஆத்துமா உங்களை அரோசிப்பதில்லை.

ரூஉ நாம் உங்கள் நடுவிலே உலாவி, உங்களுக்குப் பராபரனுயிருப்போம்; நீங்கள் நமக்குச் சனமாயிருப்பீர்கள்.

ரூஎ நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நாம் உங்களை அவர்கள் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை உடைத்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் பராபரனுகிய கர்த்தர்.

ஙச ¶ நீங்கள் நம்முடைய சொல்கேளாமலும், இந்தக் கற்பனைகளின்படி எல்லாம் செய்யாமலும்,

ஙடு நம்முடைய கட்டளைகளை வெறுக்கிறதும், உங்கள் ஆத்துமா நம்முடைய நியாயங்களை அரோசிக்கிறதும், நீங்கள் நம்முடைய கற்பனைகளின்படி எல்லாம் செய்யாதபடிக்கு, நம்முடைய உடம்படிக்கையை முறித்துப்போடுகிறதும் உண்டேயாகில்,

ஙஈ நாம் உங்களுக்குச் செய்வதேதென்றால், கண்களைப் பூத்துப்போகப்பண்ணுகிறதும் ஆத்துமாவைக் கன்றிப்படுத்துகிறதுமான நிகிலியும் ஜனையையும் காய்ச்சலையும் உங்கள்மேலே வரப்பண்ணுவோம்; உங்கள் விதையை விருதாவாக விதைப்பீர்கள்; உங்கள் சத்துருக்கள் அதைத் தின்னுவார்கள்.

ஙஎ நமது முகத்தை உங்களுக்கு விரோதமாகத் திருப்புவோம்; உங்கள் சத்துருக்களுக்குமுன்பாக முறியடிக்கப்படுவீர்கள்; உங்கள் பகைஞர் உங்களை ஆண்டுகொள்வார்கள்; உங்களைத் துரத்துவார் இல்லாமல் ஓடுவீர்கள்.

ஙஅ நீங்கள் இதனோடே இன்னம் நம்முடைய சொல்கேளாதேபோனால், நாம் உங்கள் பாவங்களின்நிமித்தம் பின்னையும் ஏழுத்தனையாக உங்களைத் தண்டித்து,

ஙஉ உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் இருக்கப்பண்ணுவோம்.

ஙஐ உங்கள் பலம் விருதாவிலே செலவழியும்; உங்கள் தேசம் தன் பலனையும், தேசத்தின் மரங்கள் தங்கள் கனியையும் கொடாதேபோம்.

ஙஒ நீங்கள் நமது சொல்கேட்க மனதில்லாமல் நமக்கெதிர்த்து நடந்தீர்களேயானால், நாம் உங்கள் பாவங்களுக்குத்தக்கதாக இன்னம் ஏழுத்தனை வாதையை உங்கள்மேலே வரப்பண்ணி,

ஙக உங்களுக்குள்ளே வெளியின் தஷ்டமிருகங்களை வரவிடுவோம்; அவைகள் உங்களைப் பிள்ளைகள் அற்றவர்களாக்கி, உங்கள் மிருகசீவன்களை அழித்து, உங்களைக் குறைத்துபோகப்பண்ணும்; உங்கள் வழிகள் பாழ்த்துக்கிடக்கும்.

ச நீங்கள் இந்தமட்டில் நமது தண்டனையாலே குணப்படாமல், நமக்கெதிர்த்து நடந்தால்,

சக நாம் உங்களுக்கெதிர்த்து நடந்து, நாம் உங்களை உங்கள் பாவங்களின்நிமித்தம் ஏழுத்தனையாக வாதித்து,

சஉ உடம்படிக்கையின் நிந்தனையை விசாரிக்கிறதாகிய சரிக்குச்சரிக்கட்டும் பட்டயத்தை உங்கள்மேலே வரப்பண்ணி, நீங்கள் உங்கள் பட்டணங்களில் வந்தடைந்தபிறகு, பெருவாரிக்காய்ச்சலை உங்கள் நடுவில் அனுப்புவோம்; சத்துருவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர்கள்.

சங நாம் அப்பமென்ற ஆதரவுகோலை உங்களுக்கு ஒடித்திருக்கும்பொழுது, பத்து ஸ்திரிகள் ஒரே அடுப்பில் உங்கள் அப்பத்தைச் சுட்டு, அதைத் நிறுத்துக்கொடுப்பார்கள்; நிர்ப்நி அடையாமல் சாப்பிடுவீர்கள்.

சச ¶ இதனுடனே நீங்கள் நம்முடைய சொல்கேளாமல், நமக்கு எதிர்த்து நடந்தால்,

சஅ நாமும் உக்கிரத்தோடே உங்களுக்கு எதிர்த்து நடந்து, நாம் நாமே உங்களை உங்கள் பாவங்களின்நிமித்தம் ஏழுத்தனையாகத் தண்டிப்போம்.

சஉ உங்கள் குமாரரின் மாம்சத்தையும் உங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் புசிப்பீர்கள்.

சஐ நாம் உங்கள் மேடைகளை அழித்து, உங்கள் விக்கிரகச்சிலைகளை நிர்த்தூளியாக்கி, உங்கள் உடல்களை உங்கள் நரகலான தேவர்களுடைய உடல்களின்மேலே போடுவிப்போம்; நம்முடைய ஆத்துமா உங்களை அரோசிக்கும்.

சஒ நாம் உங்கள் பட்டணங்களை வறுக்

தரமும் உங்கள் பரிசுத்தஸ்தலங்களைப் பாழுமாக்கி, உங்களுடைய ஆற்றுகிற வாசனையை முகராதிருப்போம்.

ஈஉ நாம் தேசத்தை அதிலே குடியிருக்கப்போகிற உங்கள் சத்துருக்கள் பிரமிக்கத்தக்கதாகப் பாழாக்கி,

ஈஈ உங்களைச் சாதிகளுக்குள்ளே சிதறடித்து, உங்கள் பிறகாலே பட்டயத்தை உருவுவோம்; உங்கள் தேசம் பாழும், உங்கள் பட்டணங்கள் வனாந்தரமுமாம்.

ஈச நீங்கள் உங்கள் சத்துருக்களின் தேசத்திலிருக்கும் அப்பொழுது, தேசமானது பாழாய்க்கிடக்கிற நாளெல்லாம் தன்னுடைய ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்; அப்பொழுது ஓய்வடைந்து, தன் ஓய்வுகளை இரம்மியமாய் அநுபவிக்கும்.

ஈடு நீங்கள் அதிலே குடியிருக்கும்பொழுது அது உங்கள் ஓய்வு வருஷங்களில் ஓய்வடையாதபடியினாலே, அது பாழாய்க்கிடக்கும் நாளெல்லாம் ஓய்வடைந்திருக்கும்.

ஈசு உங்களில் மீதியாயிருப்பவர்களின் இருதயங்களில் நாம் அவர்கள் சத்துருக்களின் தேசங்களிலே மனத்தளர்ச்சியை வரப்பண்ணுவோம்; காற்றடிக்கும் இலையின் இரைச்சல் அவர்களை ஓட்டும்; அவர்கள் பட்டயத்திற்குத்தப்பி ஓடுகிறதுபோல ஓடி, துரத்துவாரில்லாமல் விழுவார்கள்.

ஈஎ துரத்துவாரில்லாமல் ஒருவர்மேல் ஒருவர், பட்டயம் பிறகாலே வருகிறதுபோல, இடறிவிழுவார்கள்; உங்கள் சத்துருக்களுக்குமுன்பாக உங்களுக்குத் தரிக்கக்கூடாததாயிருக்கும்.

ஈஅ புறச்சாதிகளுக்குள் அழிவீர்கள்; உங்கள் சத்துருக்களின் தேசம் உங்களைப் பட்சிக்கும்.

ஈகூ ¶ உங்களில் மீதியாய் இருப்பவர்கள் உங்கள் சத்துருக்களின் தேசங்களிலே தங்கள் அக்கிரமங்களினாலும் தங்கள் பிதாக்களின் அக்கிரமங்களினாலும்கூட வாடிப்போய்,

சஐ தாங்கள் நமக்கு விரோதமாகத் துரோகம்பண்ணி நடப்பித்த தங்கள் அக்கிரமத்தையும், தங்கள் பிதாக்களின் அக்கிரமத்தையும்,

சக தாங்கள் நமக்கு எதிர்த்து நடந்தபடியினாலே, நாமும் தங்களுக்கெதிர்த்து நடந்து, தங்களைத் தங்கள் சத்துருக்களின் தேசத்திலே கொண்டுபோய் விட்டதையும், அறிக்கை இடுவார்களாம்; அப்பொழுது சுன்னத்தில்லாத அவர்கள் இருதயம் தாழ்ந்துபோய், அவர்கள் தங்கள் அக்கிரமத்தின் ஆக்கினையை நல்லதென்று ஒத்துக்கொண்டால்,

சஉ நாம் யாக்கோபோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், ஈசாக்கோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும், ஆபிரகாமோடே பண்ணின நம்முடைய உடம்படிக்கையையும் நினைப்போம்; தேசத்தையும் நினைப்போம்.

சஈ ¶ அவர்கள்நிமித்தம் வெறுமையேவிடப்பட்டதும், பாழாய்க் கிடக்கிறதினாலே தன் ஓய்வுகளை இரம்மியமாக அநுபவிக்கிறதுமான தேசத்தைத்தானே; அவர்களும் நம்முடைய நியாயங்களை வெறுத்தபடியினாலும், அவர்களுடைய ஆத்துமா நம்முடைய கட்டளைகளை அரோசித்தபடியினாலும், அடைந்த தங்களுடைய அக்கிரமத்தின் தண்டனையை நல்லதென்று ஒத்துக்கொள்ளுவார்கள்.

சஅ ஆனதுகொண்டு அவர்கள் தங்கள் சத்துருக்களின் தேசத்திலிருந்தாலும், நாம் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கவிதமாகவும், அவர்களோடிருக்கிற நம்முடைய உடம்படிக்கையை அவத்தமாக்கத்தக்கவிதமாகவும் அவர்களைப் புறக்கணிப்பதும் இல்லை, அரோசிப்பதும் இல்லை; ஏனெனில் நாம் அவர்கள் பராபரனுமாகிய கர்த்தர்.

சடு அவர்களுடைய பராபரனுயிருக்கும்படிக்கு, நாம் புறச்சாதிகளின் கண்களுக்குமுன்பாக எகிப்துதேசத்திலிருந்து புறப்

படப்பண்ணின அவர்களுடைய முன்னோர்களோடே நாம் பண்ணின உடம்படிக்கையை அவர்களுக்காக நினைவுகூருவோம்; நாம் கர்த்தர் என்று சொல்லென்றார்.

சசு ¶ தமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் நடுவே இருக்கும்படிக்கு, கர்த்தர் சீனாய் பர்வதத்திலே மோசேயைக்கொண்டு கொடுத்த கட்டளைகளும் நியாயங்களும் நியாயப்பிரமாணங்களும் இவைகள்தானே.

உஎ. அதிகாரம்.

பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ ரீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணியிருந்தால், ஆத்துமாக்கள் உன் மதிப்பின்படிக்குக் கர்த்தருடையவர்கள்.

ஈ இருபதுவயதுமுதல்கொண்டு, அறுபது வயதுக்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை ரீ பரிசுத்தஸ்தலத்தின் சேக்கலாகிய ஐம்பது வெள்ளிச்சேக்கலாகவும்,

ஊ பெண்சாதியை மூப்பது சேக்கலாகவும், மதிப்பாயாக.

ஓ ஐந்துவயது முதல்கொண்டு இருபது வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை இருபது சேக்கலாகவும், பெண்பிள்ளையைப் பத்துச் சேக்கலாகவும்,

ஔ ஒருமாதம் முதல்கொண்டு ஐந்து வயதிற்குள்ளிருக்கிற ஆண்பிள்ளையை ஐந்து வெள்ளிச் சேக்கலாகவும், பெண்பிள்ளையை மூன்று வெள்ளிச் சேக்கலாகவும்,

எ அறுபது வயதும் அதிகமுமான ஆண்பிள்ளையைப் பதினைந்து சேக்கலாகவும், பெண்சாதியைப் பத்துச் சேக்கலாகவும், மதிக்கக்கடவாய்.

அ உன் மதிப்பைச் செலுத்தக்கூடாத தரித்திரனாயிருந்தானேயாகில், அவன் ஆசாரியனுக்குமுன்பாகத் தன்னை மதிக்கும்படிக்கு வந்து நிற்கக்கடவன்; பொருத்தனைபண்ணினவனுடைய கைக்கு உதவுகிறதற்குத்தக்கவிதமாக ஆசாரியன் அவனை மதிப்பானாக.

கூ ¶ கர்த்தருக்குப் பலியிடப்படத்தக்க மிருகசீவனேயானால், அவன் கர்த்தருக்குக் கொடுக்கிற அப்படிக்கொத்ததெல்லாம் பரிசுத்தமாயிருப்பதாக.

ஐ அதை மாற்றுமலிருப்பானாக; இளப்பமானதற்குப்பதிலாக நல்லதையும், நல்லதற்குப்பதிலாக இளப்பமானதையும், கொடாமலிருப்பானாக; அவன் மிருகத்திற்குப் பதிலாக மிருகத்தைக் கொடுத்தானேயாகில், அப்பொழுது அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாய் இருப்பதாக.

ஙக அது கர்த்தருக்குப் பலியிடப்படத்தகாத நீட்டான யாதொரு மிருகமேயானால், அதை ஆசாரியனுக்குமுன்பாக நிறுத்தக்கடவன்.

ஙஉ ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக; அவன் அதை மதிக்கிறபடியே இருக்கக்கடவது.

ஙஊ அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்போடே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

ஙச ¶ ஒருவன் தன் வீட்டைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், ஆசாரியன் அதை அதின் நன்மைக்கும் இளப்பத்திற்கும்தக்கதாக மதிப்பானாக, அவன் அதை மதிக்கிறபடி இருக்கக்கடவது.

ஙடு பரிசுத்தம்பண்ணினவன் தன் வீட்டை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான நிரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

ஙசு ¶ ஒருவன் தன் காணியாட்சி வயல் வெளியிலே ஏதாகிலும் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பு அதின் விதைப்புக்குத்தக்கதாய் இருக்கவேண்டும்; ஒரு கலம் வால்கோதுமை விதைக்கிற வயல் ஐம்பது வெள்ளிச் சேக்கலாக மதிக்கப்படக்கடவது.

ஙஎ சீர்திருத்தம் வருஷம் முதல்கொண்

Digitized by Google

டே அவன் தன் வயலைப் பரிசுத்தம்பண்ணினால், உன் மதிப்பின்படி இருக்கக்கடவது.

ரூ சீர்திருந்தும் வருஷத்திற்குப்பிற்பாடு அதைப் பரிசுத்தம்பண்ணினானேயாகில், அப்பொழுது சீர்திருந்தும் வருஷம்மட்டும் இருக்கும்; குறை வருஷங்களின்படியே நிரவியம் ஆசாரியனாலே கணக்குப்பார்க்கப்பட்டு, அதற்குத் தக்கது உன் மதிப்பிலே தள்ளப்படக்கடவது.

ரூ வயலைப் பரிசுத்தம்பண்ணினவன் அதை மீட்க மனதாயிருந்தானேயாகில், உன் மதிப்பான நிரவியத்தோடே ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டக்கடவன்; அப்பொழுது அவனுடையதாயிருக்கும்.

ரூ அவன் வயலை மீட்காதேபோய், அதை வேறொருவனுக்கு விற்றானேயானால், இனி மீட்கப்படக்கூடாமல்,

ரூ அது சீர்திருந்தும் வருஷத்தில் ரீங்கலாகும்பொழுது, சாபத்தீடான வயலாகக் கர்த்தருக்குப்பரிசுத்தமாயிருக்கக்கடவது; அதின் காணியாட்சி ஆசாரியனைச் சேரும்.

ரூ ஒருவன் தன் காணியாட்சி வயல் அல்லாததாகிய தான் கொண்ட ஒரு வயலைக் கர்த்தருக்கென்று பரிசுத்தம்பண்ணினானேயாகில்,

ரூ அது சீர்திருந்தும் வருஷம்மட்டும், உன் மதிப்பின்படி பெறும் விலையை ஆசாரியன் அவனோடே கணக்குப்பார்ப்பானாக; அந்த உன் மதிப்பை அவன் அந்நாளிலே கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும்படிக்கு, கொடுக்கக்கடவன்.

ரூ யார்கையிலே அந்த வயலைக் கொண்டானோ, அந்தக் காணியாட்சிக்காரன் வசமாய், அது சீர்திருந்தும் வருஷத்திலே திரும்பும்.

ரூ உன் மதிப்பெல்லாம் பரிசுத்தஸ்தலச் சேக்கல் கணக்காயிருக்கக்கடவது; சேக்கலானது இருபது கேரா.

ரூ ¶ தலையீற்றுகளோவென்றால், கர்த்தருடையதானபடியினாலே தலையீற்றாகிய மிருகசீவனை ஒருவரும் பரிசுத்தம்பண்ணலாகாது; அது மாடானாலும், ஆடானாலும், கர்த்தருடையதாயிருக்கிறதே.

ரூ தீட்டான மிருகத்தினுடையதேயானால், அவன் உன் மதிப்பின்படி அதை மீட்டு, அதனுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்; மீட்கப்படாமல் போயிற்றேயானில், உன் மதிப்பின்படி விற்கப்படக்கடவது.

ரூ ¶ ஒருவன் தனக்குண்டான கரசீவன், மிருகசீவன், காணியாட்சி, நிலம் முதலானவைகளில் எதையாகிலும் சாபத்தீடானதாகக் கர்த்தருக்குக் கொடுத்தானேயாகில், அது விற்கப்படவும் மீட்கப்படவும் வேண்டாம்; சாபத்தீடானவைகளாகக் கொடுக்கப்பட்டவைகளெல்லாம், கர்த்தருக்குப் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தம்.

ரூ கரசீவனில் சாபத்தீடாக நியமிக்கப்பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவது.

ரூ ¶ தேசத்திலே நிலத்தின் விதைகளிலும், மரங்களின் கனியிலும், பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருடையது; அது கர்த்தருக்குப் பரிசுத்தம்.

ரூ ஒருவன் பத்தில் ஒருபங்காகிய அதிலே சிலவற்றை மீட்க மனதாயிருந்தானேயானால், அதினுடனே ஐந்தில் ஒருபங்கைக் கூட்டக்கடவன்.

ரூ கோலின்கீழ்ப்போகிற ஆடுமாடுகளிலே பத்தில் ஒரு பங்காகிறதெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தம்.

ரூ அது நல்லதோ இளப்பமானதோ, என்று அவன் பார்க்கவேண்டாம்; அதற்குப் பதில்கொடுக்கவும் வேண்டாம்; பதில் கொடுத்தானேயாகில், அதுவும் அதற்குப் பதிலானதும் பரிசுத்தமாயிருக்கும்; அது மீட்கப்படக்கூடாதென்று அவர்களோடே சொல்லென்றார்.

ரூ ¶ இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லும்படிக்குக் கர்த்தர் மோசேக்குச் சீனாய் பர்வதத்திலே கற்பித்த கற்பனைகள் இவைகள்தானே.

Digitized by G-00916

மோசே எழுதின

நான்காம் ஆகமம்.

க. அதிகாரம்.

அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம்வருஷம் இரண்டாம் மாதம் முதல்தேதியிலே, கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலிருக்கிற ஆசரிப்புக்கூடாரத்திலே மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீங்கள் இஸ்ரவேல் புத்திரரின் முழுச் சபையாயிருக்கிற அவர்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களினுள்ள ஆண்பிள்ளைகளாகிய சகல தலைகளையும் பேர்பேராக எண்ணித் தொகை ஏற்றுங்கள்.

ஈ இஸ்ரவேலிலே இருபதுவயதுமுதல் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களை எல்லாம் நீயும் ஆரோனுமாய் அவர்கள் சேனைகளின்படியே இலக்கம் பார்ப்பீர்களாக.

ச ஒவ்வொரு கோத்திரத்திற்கு அவர்களுடைய பிதாக்களின் வீட்டுத்தலைவனுகிய ஒவ்வொரு மனிதன் உங்களோடிருப்பானுக.

ஙு ¶ உங்களோடே நிற்கும் மனிதரின் நாமங்களாவன: ரூபன் கோத்திரத்திலே சேதேயூரின் குமாரன் எலித்சூர்.

ஙூ சிமெயோன் கோத்திரத்திலே சூரிஷதாயின் குமாரன் செலூமியேல்.

எ யூதா கோத்திரத்தில் அம்மீனதாபின் குமாரன் நாகசோன்.

அ இசஷார் கோத்திரத்திலே சூகாரின் குமாரன் நெத்தானெயேல்.

கூ செபுலோன் கோத்திரத்தில் ஏலோனின் குமாரன் எலியாப்.

ஙு யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் கோத்திரத்தில் அம்மியூதின் குமாரன் எலிஷாம்மா, மனாசே கோத்திரத்திலே பெதாத்சூரின் குமாரன் கமாலியேல்.

ஙக பென்யமீன் கோத்திரத்திலே கிதெயோனின் குமாரன் அபீதான்.

ஙஉ தாண் கோத்திரத்தில் அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்.

ஙங ஆசேர் கோத்திரத்தில் ஒக்ரானின் குமாரன் பாகியேல்.

ஙச காத் கோத்திரத்திலே தெகுவேலின் குமாரன் எலியாசாப்.

ஙடு நப்தலி கோத்திரத்தில் ஏனானின் குமாரன் அகீரா.

ஙஞ சபையில் அழைக்கப்பட்டு, தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களின் பிரபுக்களும் இஸ்ரவேலில் ஆயிரங்களுக்குத் தலைவருமாயிருப்பவர்களில் இவர்கள்தான் எண்ணப்பட்டோர்.

ஙண ¶ அப்படியே மோசேயும் ஆரோனும் பேர்பேராகக் குறிக்கப்பட்ட இந்த மனிதரைக் கூட்டிக்கொண்டு,

ஙத இரண்டாம்மாதம் முதல்தேதியிலே சபையையெல்லாம் கூட்டம்கூட்டினார்கள்; அவர்கள் தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சப்பிறப்புகளின்படியே பார்க்கப்பட்டு, இருபதுவயதுமுதல்கொண்டிருந்த பேர்கள் தலைதலையாக எண்ணப்பட்டார்கள்.

ஙந கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, இவன் அவர்களைச் சீனாயின் வனாந்தரத்தில் இலக்கம்பார்த்தான்.

உஙு ¶ இஸ்ரவேலின் மூத்தவனுகிய ரூப

Digitized by Google

னின் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில், இருபதுவயதுமுதல் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் தலைதலையாக எண்ணப்பட்டபொழுது,

உக ரூபன் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தாறுயிரத்து ஐந்நூறுபேர்.

உஉ ¶ சிமெயோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் தலைதலையாக எண்ணி இலக்கம் பார்க்கப்பட்டபொழுது,

உஉ சிமெயோன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்தொன்பதினாயிரத்து முந்நூறுபேர்.

உச ¶ காத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

உடு காத் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தையாயிரத்து அநூற்று ஐம்பதுபேர்.

உசு ¶ யூதா புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

உஎ யூதா கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், எழுபத்து நாலாயிரத்து அறுநூறுபேர்.

உஅ ¶ இசஷார் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

உக இசஷார் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

ஈ ¶ சேபுலோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

ஈக சேபுலோன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

ஈஉ ¶ யோசேப்பின் குமாரரில் எப்பிரயீம் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல் கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

ஈஈ எப்பிரயீம் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

ஈச ¶ மனாசே புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

ஈடு மனாசே கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், மூப்பத்திராயிரத்து இருநூறுபேர்.

ஈசு ¶ பென்யமீன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

ஈஎ பென்யமீன் கோத்திரத்தில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள், மூப்பத்தையாயிரத்து நானூறுபேர்.

ஈஅ ¶ தாண் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

ஈக தாண் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், அறுபத்திராயிரத்து எழுநூறுபேர்.

Digitized by Google

சஎ ¶ ஆசேர் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயது முதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

சக ஆசேர் கோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

சஉ ¶ நப்தலி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சப்பிறப்புகளில் இருபதுவயதுமுதல்கொண்டு யுத்தத்திற்குப் புறப்படத்தக்க ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது,

சஈ நப்தலிகோத்திரத்தில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேராயிருந்தார்கள்.

சச ¶ மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலுடைய பிதாக்களின் வீடுகளில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பிரபுக்களான பன்னிரண்டுபேரும் இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்தான்.

சடு இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வீட்டாரில் இருபதுவயதுமுதல்கொண்டு, இஸ்ரவேலில் யுத்தத்திற்குப் புறப்படத்தக்கவர்களாகிய இலக்கம்பார்க்கப்பட்டபேர்களெல்லாம்,

சகூ அறுநூற்று மூவாயிரத்து ஐந்நூற்று ஐம்பதுபேராயிருந்தார்கள்.

சஅ ¶ ஆனால் இலேவியர் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின்படியே, அவர்களுக்குள்ளே இலக்கம் பார்க்கப்பட்டதில்லை.

சஆ ஏனெனில் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

சகூ இலேவி கோத்திரத்தாரைமாத்திரம் நீ இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இலக்கம் பாராமலும், அவர்கள் தொகையை ஏற்றாமலும்,

டுஏ இலேவியரை நீ சாட்சியின் வாசஸ்தலத்திற்கும், அதினுடைய எல்லாப் பணிமுட்டுகளுக்கும், அதிலுள்ள எல்லாவற்றிற்கும், விசாரிப்புக்காரராக வை; அவர்கள் வாசஸ்தலத்தையும் அதின் எல்லாப் பணிமுட்டுகளையும் சுமந்து, அதினிடத்தில் ஊழியம்செய்து, வாசஸ்தலத்தைச் சுற்றிலும் பாளயம் இறங்கக்கடவர்கள்.

டுக வாசஸ்தலம் பயணப்படுகையில், இலேவியர் அதை இறக்கிவைத்து, அது பாளயம் இறங்குகையில், இலேவியர் அதை எடுத்து நிறுத்தக்கடவர்கள்; சேருமிற அந்நியன் கொலையுண்பானாக.

டுஉ இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் பாளயத்தோடும் அவரவர் தங்கள் சேனையின் கொடியோடும் கூடாரம்போடக்கடவர்கள்.

டுங இஸ்ரவேல் புத்திரருடைய சபையின்மேலே கடுங்கோபம் வராதபடிக்கு, இலேவியர் வாசஸ்தலத்தின் சுற்றிலும் பாளயம் இறங்கி, இலேவியர் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின் காவலைக் காப்பார்களாக என்றார்.

டுச கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

உ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

உ இஸ்ரவேல் புத்திரர் அவரவர் தங்கள் பிதாக்களுடைய வீட்டின் அடையாளமாகிய தங்களுடைய கொடியண்டையிலே தங்கள் கூடாரங்களைப் போட்டு, ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராகச் சுற்றிலும் பாளயம் இறங்கக்கடவர்கள்.

ஈ ¶ யூதாவுடைய பாளயத்துக் கொடியின் கீழிருக்கிற சேனைகள் சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே பாளயம் இறங்குவன; யூதாபுத்திரரின் பிரபு, அம்மினதாபின் குமாரன் நாகசோன்.

ச இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை எழுபத்து நாலாயிரத்து அறுநூறு பேர்.

Digitized by Google

ய அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர் கள் இசஷார் கோத்திரத்தார்; இசஷார் புத் திரரின் பிரபு, சுவாரின் குமாரன் நெத் தானேயேல்.

ரு இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர்.

எ பிற்பாடு சேபுலோன் கோத்திரத்தாரும் தானே; சேபுலோன் புத்திரரின் பிரபு ஏலோனின் குமாரன் எலியாப்.

அ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்தேழாயிரத்து நானூறுபேர்.

கூ இலக்கம்பார்க்கப்பட்ட யூதாவின் பா ளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைகளின் படியே நூற்றெண்பத்து ஆறுயிரத்து நானூ றுபேர்; இவர்கள் பயணத்திலே முதல் பாளயமாய்ப் போகக்கடவர்கள்.

ஏ ¶ ரூபனுடைய பாளயத்துக் கொடி யின்கீழிருக்கிற சேனைகள் தென்புறத்தில் இறங்குவது; ரூபன் புத்திரரின் பிரபு, சே தேயூரின் குமாரன் எலீத்சூர்.

ஙக இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை காற்பத்தாறுயிரத்து ஐந்நூறுபேர்.

ஙஉ அவன் கிட்டப் பாளயம் இறங்குப வர்கள் சிமெயோன் கோத்திரத்தார்; சிமெ யோன் புத்திரரின் பிரபு, சூரிஷதாயின் கு மாரன் செலுமியேல்.

ஙங இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடை ய சேனை ஐம்பத்தொன்பதினாயிரத்து முந் நூறுபேர்.

ஙச பிற்பாடு காத் கோத்திரத்தாரும்தா னே; காத் புத்திரரின் பிரபு, ரேகுவேலின் குமாரன் எலியாசாப்.

ஙடு இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடை ய சேனை நாற்பத்தையாயிரத்து அறுநூற் றைம்பதுபேர்.

ஙசு இலக்கம்பார்க்கப்பட்ட ரூபனின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சேனைக ளின்படியே நூற்றைம்பத்து ஓராயிரத்து நானூற்றைம்பதுபேர்; இவர்கள் பயணத் தில் இரண்டாம் பாளயமாய்ப் போகுபவர் கள்.

ஙத ¶ பிற்பாடு ஆசரிப்புக்கூடாரம் இலே வியரின் சேனையோடே பாளயங்களின் நடு வே பயணப்பட்டுப்போம்; எப்படிப் பா ளயம் இறங்குகிறார்களோ, அப்படி அவ ரவர் தங்கள் வரிசையிலே தங்கள் கொடி களின்படியே பயணப்படுவார்களாக.

ஙஅ ¶ எப்பிராயீமுடைய பாளயத்துக் கொடியின் சேனைகள் மேல்புறத்தில் இறங் குவது; எப்பிராயீமின் புத்திரரின் பிரபு, அம்மியூதின் குமாரன் எலிஷாம்மா.

ஙக இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடை ய சேனை நாற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

ஙங அவன் கிட்டப் பாளயம் இறங்குபவர் கள் மனாசே கோத்திரத்தார்; மனாசே கோத் திரத்தாரின் பிரபு, பெதாத்சூரின் குமாரன் கமாலியேல்.

ஙச இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடை ய சேனை முப்பத்திராயிரத்து இருநூறுபேர்.

ஙஉ பிற்பாடு பென்யமீன் கோத்திரத்தா ரும்தானே; பென்யமீன் புத்திரரின் பிரபு, கிதேயோனியின் குமாரன் அபீதான்.

ஙஎ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடை ய சேனை முப்பத்தையாயிரத்து நானூறு பேர்.

ஙஏ இலக்கம்பார்க்கப்பட்ட எப்பிராயீ மின் பாளயத்தார் எல்லாரும் தங்கள் சே னைகளின்படியே நூற்றெண்ணூயிரத்து ஒரு நூறுபேர்; இவர்கள் பயணத்தில் மூன்றும் பாளயமாய்ப் போகுபவர்கள்.

ஙஐ ¶ தாணுடைய பாளயத்துக் கொடி யின் சேனைகள் வடக்கே இறங்குவது; தாண் புத்திரரின் பிரபு, அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர்.

ஙசு இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை அறுபத்திராயிரத்து எழுநூறுபேர்.

ஙஎ அவன் கிட்டப் பாளயம் இறங்குப வர்கள் ஆசேர்கோத்திரத்தார்; ஆசேர்கோத் திரத்தாரின் பிரபு, ஒக்ரானின் குமாரன் பாகியேல்.

Digitized by Google

ஙஅ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை நாற்பத்தோராயிரத்து ஐந்நூறுபேர்.

உரூ பிற்பாடு ஈவுதலி கோத்திரத்தாரும் தானே; ஈவுதலி புத்திரரின் பிரபு, எனூனின் குமாரன் அகீரா.

ஈவ இலக்கம்பார்க்கப்பட்ட அவனுடைய சேனை ஐம்பத்து மூவாயிரத்து நானூறுபேர்.

ஈக இலக்கம்பார்க்கப்பட்ட தானின் பானயத்தார் எல்லாரும் நூற்றைம்பத்தேழாயிரத்து அறுனூறுபேர்; இவர்கள் தங்கள் கொடிகளின்படியே பின்பானயமாய்ப் போகுபவர்களென்றார்.

ஈஉ ¶ இவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய பிதாக்களின் வீட்டாரில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள்; பாளயங்களிலே தங்கள் தங்கள் சேனைகளின்படியே இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் எல்லாரும் அறுனூற்று மூவாயிரத்து ஐந்நூற்றைம்பதுபேராயிருந்தார்கள்.

ஈஈ இலேவியரோவெனில் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இலக்கம் பார்க்கப்பட்டதில்லை.

ஈச கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்து, அப்படியே தங்கள் கொடிகளின்கீழ்ப் பானயம் இறங்கி, அப்படி அவரவர் தங்கள் பிதாக்களுடைய வீட்டு வம்சங்களின்படியே பயணப்பட்டுப் போனார்கள்.

ரூ. அதிகாரம்.

சீனாய்பர்வதத்திலே கர்த்தர் மோசேயோடே பேசின நாளிலே, ஆரோன் மோசே என்றவர்களுடைய சந்ததிகளின் கடபடியாவது:

உ ஆரோனுடைய குமாரர் யாரென்றால், முதல்பிறந்தவனுடைய நாதாபும், அபியூவும், எலெயாசாரும், இத்தாமாரும் என்னப்பட்டவர்கள்.

ஊ ஆசாரிய ஊழியம்செய்கிறதற்கு, கைகள் நிரப்பப்பட்டு அபிஷேகம்பெற்ற ஆசாரியரான ஆரோனுடைய குமாரரின் நாமங்கள் இவைகள்தான்.

ஏ ஆனால் நாதாப்பும், அபியூவும், சீனாயின் வனாந்தரத்தில் அந்நிய அக்கினியைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவருகையில், கர்த்தருக்குமுன்பாகச் செத்தார்கள்; அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை; எலெயாசாரும் இத்தாமாருமோவெனில், தங்கள் தகப்பனுடைய ஆரோனுக்குமுன்பாக ஆசாரிய ஊழியம்செய்தார்கள்.

ஐ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

கூ நீ லேவி கோத்திரத்தாரைச் சேர்த்து, ஆசாரியனுடைய ஆரோனுக்குமுன்பாக அவனுக்குப் பணிவிடை செய்யும்படிக்கு நிறுத்து.

எ அவர்கள் வாசஸ்தலத்தின் பணிவிடைவேலைசெய்யும்படிக்கு, ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாக அவனுடைய காவலையும் எல்லாச்சபையின் காவலையும் காத்து,

அவாசஸ்தலத்தின் பணிவிடைவேலையைச் செய்யும்படிக்கு, ஆசரிப்புக்கூடாரத்தின் எல்லாத் தட்டிமுட்டுகளையும், இஸ்ரவேல் புத்திரரின் காவலையும் காக்கக்கடவர்கள்.

கூ ஆகையால் இலேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் அவனுக்குக் கொடுக்கவே கொடுக்கப்பட்டவர்கள்.

ஐ ஆரோனையும் அவன் குமாரரையுமோவெனில், தங்கள் ஆசாரிய ஊழியத்தை விசாரிப்பதற்காக வைக்கக்கடவாய்; சேருகிற அந்நியன் கொலையுண்ணக்கடவனென்றார்.

ஐக ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஐஉ இதோ, இஸ்ரவேல் புத்திரரில் கர்ப்பம்நிறந்து பிறக்கிற முதல்பேறான யாவுக்கும் பதிலாக, நாம் இலேவியரை இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் அவர்கள் நம்முடையவர்களாயிருக்க எடுத்தக்கொண்டோம்.

ஐங ஏனெனில் முதல்பேறனைவரென்

Digitized by Google

லாம் நம்முடையவை; நாம் எகிப்துதேசத்தில் முதல்பேறான யாவையும் சங்கரித்த நாளிலே, இஸ்ரவேலிலே மனிதன்முதல் கொண்டு மிருகம்மட்டுமுள்ள முதல்பேறுகளை எல்லாம் நமக்குப் பரிசுத்தமாக்கினதினாலே, அவைகள் நம்முடையவைகளாயிருக்கும்; நாம் கர்த்தரென்றார்.

ஙச ¶ பின்னையும் கர்த்தர் சீனாயின் வனாந்தரத்தில் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஙடு இலேவி புத்திரரை அவர்கள் பிதாக்களின் வீட்டு வம்சங்களின்படியே இலக்கம்பார்; அவர்களில் ஒருமாதம் முதல் கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளையெல்லாம் இலக்கம் பார்ப்பாயாக என்றார்.

ஙக அப்பொழுது கர்த்தருடைய வாக்கின்படி, மோசே அவர்களைத் தனக்குக் கற்பிக்கப்பட்டபிரகாரமாக இலக்கம் பார்த்தான்.

ஙஎ இலேவியின் குமாரர் தங்கள் நாமங்களின்படியே, கெர்சோன், கோகாத், மேரூரி என்னப்பட்டவர்கள்.

ஙஅ தங்கள் வம்சத்தார்களாய்ப் பிரிந்த கெர்சோனுடைய குமாரரின் நாமங்கள், லிப்னீயும் சிமேயியும்தானே.

ஙக தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த கோகாத்துடைய குமாரர், அம்ராம், இத்சேயார், எபிரோன், ஊசியேல்.

ஙஙு தங்கள் வம்சங்களாய்ப் பிரிந்த மேரூரியினுடைய குமாரர், மகெலியும், மூசியும்தானே; இவர்களே இலேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சத்தார்கள்.

உக ¶ கெர்சோனில் லிப்னீயர் வம்சமும் சிமேயியர் வம்சமும் இருந்தன; இவைகளே கெர்சோனியரின் வம்சங்கள்.

உஉ அவர்களில் ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் ஏழாயிரத்து ஐந்நூறுபேராயிருந்தார்கள்.

உக கெர்சோனியரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் பிறகாலே மேற்கே பாளயம் இறங்குவது.

உச கெர்சோனியருடைய தகப்பன் வீட்டுப்பிரபு, லாயேலின் குமாரனாகிய எலியாசாப்.

உடு ஆசரிப்புக்கூடாரத்திலே கெர்சோன் புத்திரரின் காவலாவது: வாசஸ்தலமும், கூடாரமும், அதின் மூடியும், ஆசரிப்புக்கூடாரவாசல் மறைவும்,

உசு வாசஸ்தலத்தண்டையிலும் பலிபீடத்தண்டையிலும் சுற்றிலுமிருக்கிற பிராகாரத்தின் வெளியாடைகளும், பிராகாரவாசல் மறைவும், அவைகளின் வேலைக்கெல்லாம் அடுத்த அவைகளின் கயிறுகளும்தானே.

உஎ ¶ கோகாத்திலால் அம்ராமியரின் வம்சமும், இத்சேயாரின் வம்சமும், எபிரோனியரின் வம்சமும், ஊசியேலரின் வம்சமும் இருந்தன; இவைகளே கோகாத்தியரின் வம்சங்கள்.

உஅ ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, பரிசுத்தஸ்தலத்தின் காவலைக்காப்பவர்கள், எண்ணூயிரத்து அறுநூறுபேராயிருந்தார்கள்.

உக கோகாத் புத்திரரின் வம்சங்கள் வாசஸ்தலத்தின் தென்புறமான பக்கத்திலே பாளயம் இறங்குவது.

உங அவர்களின் பிரபு, ஊசியேலின் குமாரனாகிய எலித்சாப்பான்.

உக ¶ அவர்களுடைய காவலாவது: பெட்டியும், மேசையும், குத்துவிளக்கும், பீடங்களும், ஆராதனைசெய்யும் பரிசுத்தஸ்தலத்தின் மூட்டுகளும், மறைவும், அதினுடைய எல்லா வேலையும்தானே.

உஉ இலேவியருடைய பிரபுக்களின் பிரபு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலெயாசார்தானே; அவன் பரிசுத்தஸ்தலத்தின் காவலைக் காக்கிறவர்களின் விசாரிப்புக்காரனாயிருப்பவன்.

Digitized by Google

ஙக ¶ மேரூரியினால் மகெலியரின் வம்ச

மும் மூசியரின் வம்சமும் இருந்தன; இவைகளே மேருரியின் வம்சங்கள்.

ரச அவர்களில் ஒருமாதம் முதல்கொண்டு மேற்பட்ட வயதுள்ள ஆண்பிள்ளைகளெல்லாம் எண்ணப்பட்டபொழுது, இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் ஆருயிரத்து இருநூறுபேராயிருந்தார்கள்.

ரடு அவர்கள் பிரபு, அபியாயெலின் குமாரனுகிய சூரியெல்; இவர்கள் வாசஸ்தலத்தின் வடபுறமான பக்கத்திலே பாளயம் இறங்குவது.

ரசு அவர்களுடைய காவல்விசாரிப்பாவது: வாசஸ்தலத்தின் பலகைகளும், தாழ்ப்பாள்களும், தூண்களும், கால்களும், அதினுடைய எல்லா முட்டுகளும், அதினுடைய எல்லா வேலியும்,

ரஎ சுற்றுப்பிரகாரத்தின் தூண்களும், அவைகளின் கால்களும், கூச்சுகளும், கயிறுகளும்தானே.

ரஅ ¶ ஆசரிப்புக்கூடாரமாகிய வாசஸ்தலத்திற்குமுன்பாக, சூரியன் உதிக்கும் கீழ்ப்புறத்திலே மோசேயும் ஆரோனும் அவன் குமாரரும் கூடாரங்களைப் போட்டிறங்கி, இஸ்ரவேல் புத்திரரின் காவலுக்குப் பதிலாகப் பரிசுத்தஸ்தலத்தின் காவலைக் காப்பவர்கள்; சேருகிற அந்நியன் கொலையுண்பானுக.

ரசு மோசேயும் ஆரோனும் கர்த்தருடைய வாக்கின்படியே, இலேவியரில் அவர்களுடைய வம்சங்களின்படியே இலக்கம் பார்த்த ஒருமாதம் முதல்கொண்டிருந்த ஆண்பிள்ளைகளெல்லாம் இருபத்தீராயிரம் பேராயிருந்தார்கள்.

சய ¶ அதின்பிறகு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: நீ இஸ்ரவேல் புத்திரரில் ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதுள்ள முதல்பேருன ஆண்பிள்ளைகளையெல்லாம் இலக்கம்பார்த்து, அவர்கள் காமங்களின் தொகையை ஏற்றி,

சக இலேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல்பேருன யாவுக்கும் பதிலாகவும், இலேவியரின் மிருகசீவன்களை இஸ்ரவேல் புத்திரரின் மிருகசீவன்களிலுள்ள தலையீற்றுன யாவுக்கும் பதிலாகவும், நமக்கு எடுத்துக்கொள்; நாம் கர்த்தரென்றார்.

சஉ அப்பொழுது மோசே கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே, இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல்பேருன யாவனையும் இலக்கம்பார்த்தான்.

சஊ ஒருமாதம் முதல்கொண்டு மேல்பட்ட வயதாயிருந்து, பேர்பேராக எண்ணப்பட்ட முதல்பேருன ஆண்பிள்ளைகளெல்லாம் இருபத்தீராயிரத்து இருநூற்றெழுபத்து மூன்றுபேராயிருந்தார்கள்.

சச ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

சடு நீ இலேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள எல்லா முதல்பேற்றுக்குப் பதிலாகவும், இலேவியரின் மிருகசீவன்களை அவர்களுடைய மிருகசீவன்களுக்குப் பதிலாகவும் எடுத்துக்கொள்; இலேவியர் நம்முடையவர்களாயிருப்பார்கள்; நாம் கர்த்தர்.

சசு இஸ்ரவேல் புத்திரருடைய முதல்பேறுகளில் இலேவியரின் இலக்கத்திற்கு அதிகமாயிருந்து, மீட்கப்படவேண்டிய இருநூற்றெழுபத்து மூன்றுபேருக்கோவெனில்,

சஎ நீ ஒவ்வொரு தலைக்கீடாக அவ்வைந்து சேக்கலைப் பரிசுத்தசேக்கல் கணக்காக வாங்குவாயாக; அந்தச் சேக்கல் இருபது கேரா.

சஅ அவர்களுடைய இலக்கத்திற்கு அதிகமாயிருந்து, மீட்கப்பட்டவர்களுடைய அந்தத் திரவியத்தை ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுப்பாயாகவென்றார்.

சஊ அப்படியே இலேவியராலே மீட்கப்பட்டவர்களின் இலக்கத்திற்கு அதிகமாயிருந்து, இன்னம் மீட்கப்படவேண்டியவர்களுக்கு இடாக மோசே இஸ்ரவேல் புத்திரருடையமுதல்பேருனவர்களின்கையிலே,

ஙய ஆயிரத்து முந்நூற்று அறுபத்தைந்து சேக்கலாகிய திரவியத்தை, பரிசுத்தஸ்தலத்துச்சேக்கல் கணக்காக வாங்கி,

ங்க அதைக் கர்த்தருடைய வாக்கின்படியே ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கர்த்தர் தனக்குக் கற்பித்தபிரகாரமாகக் கொடுத்தான்.

சு. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

உ லேவியின் புத்திரருக்குள் இருக்கிற கோகாத் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில்,

ஊ முப்பதாம் வயதுமுதல்கொண்டு ஐம்பதாம் வயதுமட்டும் இருந்து, ஆசரிப்புக்கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்குட்படத்தக்க எல்லாரையும் எண்ணி, தொகை ஏற்று.

எ ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரரின் பணிவிடை பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதற்கு அடுத்தது.

ஏ பானயம் பயணப்படுகையில், ஆரோனும் அவன் குமாரரும் வந்து, மறைவான தினையை இறக்கி, சாட்சியின் பெட்டியை அதினால் மூடி,

ஐ அதின்மேலே தகசுத்தோல் மூடியைப் போட்டு, அதின்மீதில் சுத்த நீலமான துப்பட்டியை விரித்து, அதின் வாகைகளைப் பாய்ச்சி,

ஒ சமுகத்தப்பங்களுடைய மேசையின்மேலே இளநீலத்துப்பட்டியை விரித்து, கலங்களையும் தூபக்கிண்ணிகளையும் கரண்டியையும் மூடுகிற தட்டுகளையும் அதின்மேலே வைப்பார்களாக; எப்பொழுதும் வைக்கும் அப்பமும் அதின்மேல் இருக்கக்கடவது.

ஓ அவர்கள் அவைகளின்மேலே சிவப்புத் துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியினால் மூடி, அதின் வாகைகளைப் பாய்ச்சி,

ஔ இளநீலத்துப்பட்டியை வாங்கி, வெளிச்சத்தின் விளக்குத்தண்டையும் அதின் விளக்குகளையும் அதின் கத்தரிகளையும் விளக்கணைக்கிற எத்தனங்களையும் அதற்கு எண்ணெய்வார்க்கிற சகல பாத்திரங்களையும் மூடி,

ஐ அதையும் அதினுடைய எல்லா மூட்டுகளையும் தகசுத்தோல் மூடியிலே போட்டு, அதை வாகைகளின்மேலே வைத்து,

ஐக பொன்பீடத்தின்மேலே இளநீலத்துப்பட்டியை விரித்து, அதைத் தகசுத்தோல் மூடியினால் மூடி, அதின் வாகைகளைப் பாய்ச்சி,

ஐஉ தாங்கள் பரிசுத்தஸ்தலத்தில் ஆராதனைசெய்யும் எல்லாப் பணிமுட்டுகளையும் எடுத்து, இளநீலத்துப்பட்டியிலே போட்டு, தகசுத்தோல் மூடியினால் மூடி, வாகைகளின்மேலே வைத்து,

ஐஊ பலிபீடத்தைச் சாம்பல் அறவிளக்கி, அதின்மேல் இரத்தாம்பரத் துப்பட்டியை விரித்து,

ஐசு தாங்கள் அதின்மேலே ஆராதனைசெய்யும் அதினுடைய சகல பணிமுட்டுகளாகிய கலசங்களையும், முள்துறடுகளையும், சாம்பல் எடுக்கும் கரண்டிகளையும், கலங்களையும், பலிபீடத்தின் எல்லா முட்டுகளையும், அதின்மேலே வைத்து, அதின்மேலே தகசுத்தோல் மூடியை விரித்து, அதின் வாகைகளைப் பாய்ச்சக்கடவர்கள்..

ஐடு பாளயம் பயணப்படுகையில், ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்தஸ்தலத்தையும் அதினுடைய எல்லா மூட்டுகளையும் மூடித் தீர்ந்ததற்குப்பிற்பாடு, கோகாத் புத்திரர் எடுத்துப்போகிறதற்கு வரக்கடவர்கள்; அவர்கள் சாவாதபடிக்குப் பரிசுத்தமானதைத் தொடவேண்டாம்; ஆசரிப்புக்கூடாரத்திலே கோகாத் புத்திரரின் சுமை இதுதான்.

ஐசூ ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் எலேயாசார் விசாரிப்பதேதென்றால், விளக்கின் எண்ணெயும், சுகந்தங்களின் தூபவர்க்கமும், அன்றுடகக் காணிக்கையும், அபிஷேகத்தெண்ணெயும், வாசஸ்தலம் அனைத்தும், அதிலே பரிசுத்தஸ்தலத்திலும்

Digitized by Google

அதின் பண்டம்பாடிகளிலும் இருக்கிற அ னைத்தும், அவன் விசாரிப்பாய் இருப்பதாக என்றார்.

ஐஎ ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோ டும் பேசிச் சொன்னதாவது:

ஐஅ கோகாத் வம்சத்தாரின் கோத்திரத்தை இலேவியருக்குள்ளே சங்காரமாகப் பண் ணீர்களாக.

ஐசு அவர்கள் பரிசுத்தத்திற்குப் பரிசுத்த மானதைக் கிட்டுகையில், சாவாமல் உயி ரோடிருக்கும்படிக்கு, நீங்கள் அவர்களுக் காகச் செய்யவேண்டியதேதெனில்,

ஐக பரிசுத்தமானதை மூடும்போது, அ வர்கள் பார்க்கிறதற்கு உள்பிரவேசித்துச் சாவாதபடிக்கு, ஆரோனும் அவன் குமார ரும் வந்து, அவர்களில் அவனவனை அவன் வேலைக்கும் அவன் சுமைக்கும் வைக்கக் கடவர்களென்றார்.

ஐக ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஐஉ கெர்சோன் புத்திரருடைய பிதாக்க ளின் வீட்டு வம்சங்களிலும் மூப்பதாம் வயதுமுதல்கொண்டு ஐம்பதாம்வயதுமட் டும் இருந்து,

ஐஊ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் இராணுவச் சேனைகளுக்கு உள்படத்தக்க எல்லாரையும் இலக்கம் பார்த்து, தொகை ஏற்றுவாயாக.

ஐச பணிவிடை செய்கிறதிலும் சுமக்கிற திலும் கெர்சோன் வம்சத்தாரின் வேலை ஏதெனில்,

ஐடி அவர்கள் வாசல்தலத்திற்கும் ஆச ரிப்புக்கூடாரத்திற்கும் இருக்கிற சமுக்கா னங்களையும், அவைகளின் மூடியையும், உயர அவைகளின்மீதில் இருக்கிற தகசுத் தோல் மூடியையும், ஆசரிப்புக்கூடாரவா சல் மறைவையும்,

ஐஎ பிரகாரத்தின் வெளி ஆடைகளையும், வாசல்தலத்தண்டையிலும் பலிபீடத்தண் டையிலும் சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தி னுடைய வாசல்மறைவையும், அவைகளின் கயிறுகளையும், அவைகளின் வேலைக்கடுத்த எல்லாப் பணிமுட்டுகளையும் சுமந்து, அ வைகளுக்காகச் செய்யப்படும் எல்லா வே லையையும் செய்யக்கடவர்கள்.

ஐஏ கெர்சோன் புத்திரருடைய எல்லாச் சுமைக்கும் அவர்களுடைய எல்லாப் பணி விடைக்கும் அடுத்த அவர்கள் வேலையெல் லாம் ஆரோனும் அவன் குமாரரும் சொல் லுகிறபடியே நடக்கவேண்டும்; அவர்களு டைய சுமையின் காவலையெல்லாம் அவர் களுக்கு ஒப்புவிக்கக்கடவீர்கள்.

ஐஐ கெர்சோன் புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணி விடை இதுதான்; அவர்களுடைய காவல் ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத் தாமாருடைய கையின் கீழாயிருப்பதாக.

ஐஒ ¶ மேரரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டுவம்சங்களிலும் மூப்பதாம்வயதுமு தல்கொண்டு ஐம்பதாம்வயதுமட்டும் இ ருந்து,

ஐஓ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை வேலைசெய்யும் சேனைக்குள்ப்படத்தக்கவர் களை எல்லாம் இலக்கம்பார்க்கக்கடவாய்.

ஐக ஆசரிப்புக்கூடாரத்தில் அவர்களு டைய எல்லாப் பணிவிடைக்கும் அடுத்த சுமையின் காவலேதெனில், வாசல்தலத் தின் பலகைகளும், அவைகளின் தாழ்ப் பான்களும், தூண்களும், கால்களும்,

ஐஉ சுற்றிலுமிருக்கிற பிரகாரத்தின் தூண் களும், அவைகளின் கால்களும், முளைக் கூச்சுகளும், கயிறுகளும், அவைகளின் எல்லா முட்டுகளும், எல்லா வேலையும்கூ டத்தானே; அவர்கள் சுமந்து காவல்காக் கும் முட்டுகளைப் பேர்பேராக எண்ணைக்க டவீர்கள்.

ஐஊ ஆசாரியனாகிய ஆரோனுடைய குமா ரனாகிய இத்தாமாருடைய கையின்கீழ் மேரரி புத்திரரின் வம்சத்தார் ஆசரிப்புக் கூடாரத்திலே செய்யும் பணிவிடைக்கு அ டுத்த எல்லாவேலையும் இதுதான் என்றார்.

ஐச ¶ அப்படியே மோசேயும் ஆரோனும்

சபையின் பிரபுக்களும் கோகாத் புத்திர ருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் முப்பதாம்வயதுதுவக்கி ஐம்பதாம்வயது மட்டும் இருந்த,

டஏ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேவைக்கு உன்படத்தக்க யாவரையும் இலக்கம்பார்த்தார்கள்.

டஃ அவர்கள் வம்சங்களில் இலக்கம் பார்க்கப்பட்டவர்கள் இரண்டாயிரத்து எழுனூற்று ஐம்பதுபேர்.

டஎ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, மோசேயும் ஆரோனும் கோகாத் வம்சத்தாரில் எல்லாரும் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைசெய்கிறதற்காக இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்தான்.

டஅ ¶ கெர்சோன் புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் முப்பதாம்வயதுதுவக்கி ஐம்பதாம்வயதுமட்டும் இருந்த,

டஉ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேவைக்கு உன்படத்தக்க யாவரும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.

சடு அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் அவரவர் குலத்தின்படிக்கும், பிதாக்களுடைய வம்சத்தின்படிக்கும் இரண்டாயிரத்து அறுனூற்றுமுப்பதுபேர்.

சக மோசேயும் ஆரோனும் கர்த்தர் கற்பித்தபடியே கெர்சோன் புத்திரரின் வம்சத்தாரில் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலை செய்ய இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்தான்.

சஏ ¶ மேரூரி புத்திரருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களிலும் முப்பதாம்வயதுதுவக்கி ஐம்பதாம்வயதுமட்டும் இருந்த,

சஅ ஆசரிப்புக்கூடாரத்திலே பணிவிடை செய்யும் சேவைக்கு உன்படத்தக்க யாவரும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.

சஉ அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் தங்கள் வம்சங்களின்படியே மூவாயிரத்து இருனூறுபேர்.

சடு கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, மோசேயும் ஆரோனும் மேரூரி புத்திரரின் வம்சத்தாரில் இலக்கம்பார்த்தவர்கள் இவர்கள்தான்.

சசு ¶ இலேவியருடைய பிதாக்களின் வீட்டு வம்சங்களில் மூப்பதாம்வயதுமுதல்கொண்டு ஐம்பதாம்வயதுமட்டும் இருந்த ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும் பணிவிடை வேலைக்கும் சுமையின் வேலைக்கும் உள்படத்தக்கவர்களும்,

சஎ மோசேயும் ஆரோனும் இஸ்ரவேலின் பிரபுக்களும் இலக்கம்பார்த்தவர்களுமெல்லாம்,

சஅ எண்ணூயிரத்து ஐந்நூற்றெண்பதுபேராயிருந்தார்கள்.

சஉ கர்த்தர் மோசேக்குக் கற்பித்த வாக்கின்படியே, அவர்கள் தங்கள் தங்கள் பணிவிடைக்கென்றும் தங்கள் தங்கள் சுமைக்கென்றும் இலக்கம்பார்க்கப்பட்டார்கள்.

டு. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ எல்லாக் குஷ்டரோகிகளையும் எல்லாப் பிரமியக்காரரையும் சவத்தினாலே தீட்டுப்பட்ட யாவரையும் பாளயத்திலிருந்து விலக்கிவிட, இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பி.

ஈ ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளுமான அப்படிக்கொத்தவர்களை நீங்கள் விலக்கி, நாம் தங்கள் நடுவே வாசம்பண்ணுகிற தங்கள் பாளயங்களை அவர்கள் தீட்டாக்காதபடிக்கு, அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிடக்கடவர்கள் என்றார்.

ச கர்த்தர் மோசேயோடே சொன்னபடியே, இஸ்ரவேல் புத்திரர் இந்தப்படியே செய்து, அவர்களைப் பாளயத்திற்குப் புறம்பாக்கிவிட்டார்கள்.

டு ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

கூ நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஆண்பிள்ளையாலுனும் பெண்பிள்ளையாலுனும் மனிதன் செய்யும் சகலவித பாவங்களில் ஒன்றைச்

Digitized by Google

செய்து, கர்த்தருக்கு ஏற்காத அநியாயம் பண்ணினால், அந்த ஆத்துமாவின்மேலே குற்றம்சுமந்தது.

எ அவர்கள் செய்த தங்கள் பாவத்தை அறிக்கையிடக்கடவர்கள்; அப்படிக்கொத்தவன் குற்றம்செய்த முதலிலத் திரும்பக் கொடுத்து, அதனோடே ஐந்தில் ஒருபங்கை அதிகமாய்க் கூட்டி, தான் நேரன்தனுகப் போனவனுக்குச் செலுத்தக்கடவன்.

அ அதைக் கேட்டு வாங்குகிறதற்கு ஒருவரும் இல்லாதிருந்ததேயானால், அப்பொழுது அவனுக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கப்படும்; ஆட்டுக்கடாச் செலுத்தப்படுவதுமல்லாமல், கர்த்தருக்கு அந்த முதல் செலுத்தப்பட்டு, ஆசாரியனைச் சேரவேண்டும்.

கூ இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தம்பண்ணுகிற சகலத்திலும் ஏறெடுத்து, ஆசாரியனண்டைக்குக் கொண்டுவருகிற எல்லாப் படைப்பும் அவனுடையவைகளாயிருக்கும்.

ஙி அவனவன் பரிசுத்தம்பண்ணுகின்றவைகள் அவனுடையவைகளாயிருக்கும்; அவனவன் ஆசாரியனுக்குக் கொடுக்கிறவைகளும் அவனுடையவைகளாய் இருக்குமென்று சொல்லென்றார்.

ஙக ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஙஉ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களுக்குச் சொல்லவேண்டியதேதெனில், எவன் ஒருவன் பெண்சாதி புறமுகம் பார்த்து, அவனுக்குத் துரோகம்பண்ணி,

ஙஈ ஒருவன் அவனோடே அநுபோகமாகச் சயனித்திருந்தாலும், அவனுடைய புருஷன் கண்களுக்கு அது ஒளிப்பிடமானதினால் அவன் அதை மறைக்கின்றபொழுதும் அவன் தீட்டாக்கப்பட்டிருந்தும், சாட்சி இல்லாமலும் அவன் கையும் களவுமாகப் பிடிபடாமலும் இருக்கிறபொழுதும்,

ஙச எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து அவன் தீட்டாக்கப்பட்ட தன் பெண்சாதியின்மேல் வயிராக்கியமானால், அல்லதவென்று எரிச்சலின் ஆவி அவன்மேல் வந்து தீட்டாக்கப்படாத தன் பெண்சாதியின்மேல் வயிராக்கியமானால்,

ஙடு அப்பொழுது அந்தப் புருஷன் தன் பெண்சாதியை ஆசாரியனண்டைக்கு அழைத்துவந்து, அவள்நிமித்தம் படைப்பாக ஒரு மரக்கால் வால்கோதுமைமாவிலே பத்தில் ஒரு பங்கைக் கொண்டுவந்து, அது எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தை நினைக்கப்பண்ணுகிற காணிக்கையுமானபடியினாலே, அதின்மேல் எண்ணெய் வாராமலும் குங்குலிகம் போடாமலும் இருப்பாளாக.

ஙசு ¶ ஆசாரியன் அவளைச் சேரப்பண்ணி. கர்த்தருக்குமுன்பாக நிறுத்தி,

ஙஎ ஒரு மண்பாண்டத்திலே பரிசுத்த தண்ணீரை வார்த்து, வாசஸ்தலத்தின் தரையிலிருக்கும் தூளிலே கொஞ்சம் எடுத்து. அந்தத் தண்ணீரிலே போட்டு,

ஙஅ பெண்சாதியைக் கர்த்தருக்குமுன்பாகநிறுத்தி, அவள் தலையைத் திறக்கவைத்து. எரிச்சலின் காணிக்கையாகிய நினைப்பூட்டுதலின் காணிக்கையை அவள் உள்ளங்கையிலே வைப்பாளாக; ஆசாரியன் கையிலேவென்றால், சாபம் கொடுக்கிற அந்தக் கசப்பான தண்ணீர் இருக்கக்கடவது.

ஙகூ அப்பொழுது ஆசாரியன் அவளை ஆணையிடுவித்துக்கொண்டு, ஒருவனும் உன்னோடே சயனிக்காமலும், உன் புருஷனிருந்து விலகி நீ தீட்டுப்படப் புறமுகம்பாராமலும் இருந்தால், சாபம்கொடுக்கிற இந்தக் கசப்பான தண்ணீரின் தோஷத்திற்கு நீங்கலாயிரு.

உஙி உன் புருஷன்கீழிருக்கிற நீ புறமுகம் பார்த்து, தீட்டாக உன் புருஷனல்லாத ஒருவன் உன்னோடே அநுபோகமாய்ச் சயனித்ததண்டையாலும்,

உக கர்த்தர் உன் இடுப்பைச் சூம்பவும். உன் வயிற்றை வீங்கவும்பண்ணுவதினால். உன்னை உன் சனத்தின் நடுவே சாபமா

கவும் ஆணையிடுதலாகவும் லவப்பாராக.

உஉ உன் வயிற்றை வீங்கவும் இடுப்பைச் சும்பவும்பண்ண, இந்தக் கசப்பான தண்ணீர் உன் குடல்களுக்கு போகவும்கடவ தென்கிற சாபவார்த்தையாலே பெண்சாதி யை ஆணை இடுவித்துக்கொள்வானாக; அ தற்குப் பெண்சாதி, ஆமன், ஆமன் என்று சொல்லக்கடவள்.

உச பிற்பாடு ஆசாரியன் இந்தச் சாப வார்த்தைகளை ஒரு சீட்டிலே எழுதி, கசப் பான தண்ணீரிலுலே கழுவிப்போட்டு,

உசு கசப்பாகும் அந்தச் சாபத்தண்ணீர் அவளுக்குள் போகும்படிக்கு, அதை அவ ளுக்குக் குடிக்கக்கொடுக்கக்கடவன்.

உஎ ¶ எப்படியெனில் மூந்தி ஆசாரியன் எரிச்சலின் காணிக்கையைப் பெண்சாதி யின் கையில் வாங்கி, அதைக் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டி, பீடத்தின்மேலே சொலுத்தி,

உக நினைப்புக்கென்று அதிலே ஒரு கைப் பிடி நிறைய எடுத்து, பீடத்தின்மேலே கொளுத்தி, பிற்பாடு பெண்சாதிக்கு அந்தத் தண்ணீரைக் குடிக்கக்கொடுக்கக்கடவன்.

உஏ குடிக்கக் கொடுத்தபிற்பாடு சம்பவிப் பதேதெனில், அவள் தீட்டாகி, தன் புரு ஷனுக்குத் துரோகம்பண்ணியிருந்தால், அந்தச் சாபத்தண்ணீர் கசப்புண்டாக அ வளுக்குள் போனதினுலே, அவள் வயிறு வீங்கி, அவள் இடுப்புச் சும்பும்; அப்படி யே அந்தப் பெண்சாதி தன் சனத்திற்குள் ளே சாபமாக இருப்பாள்.

உஐ பெண்சாதி தீட்டாக்கப்படாமல் சுத் தமாயிருந்தாளேயாகில், அவள் கர்ப்பம் தரிக்கத்தக்கவளாய் அதற்கு நீங்கலாயி ருப்பாள்.

உக ¶ புருஷன்கீழிருக்கிற பெண்சாதி புற முகம் பார்த்துத் தீட்டானதினுல் உண்டா ன எரிச்சலுக்கும்,

உஒ அல்லது புருஷன்மேல் எரிச்சலின் ஆவிவருகிறதினுலே, அவன் தன் பெண் சாதியின்மேலே அடைந்த எரிச்சலுக்கும், அடுத்த நியாயப்பிரமாணம் இதுதானே; அவன் கர்த்தருக்குமுன்பாகப் பெண்சாதி யை நிறுத்துவானுக; அப்பொழுது ஆசாரி யன் இந்த நியாயப்பிரமாணத்தின்படியெ ல்லாம் அவளுக்குச் செய்யக்கடவன்.

உக புருஷன் அக்கிரமத்திற்கு நீங்கலாயி ருப்பான்; அப்படிக்கொத்த பெண்சாதி யோவென்றுல், தன் அக்கிரமத்தைச் சுமப் பாளென்று சொல்லென்றார்.

கூ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன் னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், ஒரு ஆண் சாதியாகிலும் பெண்சாதியாகிலும் கர்த்த ருக்கென்று வர்ச்சித்தவர்களாயிருக்கும்ப டிக்கு நசரேயர் பொருத்தனையாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணி னுல்,

ங அப்படிக்கொத்தவன் *திராட்சப்பழ இரசத்தையும், லாகிரியுள்ள பானத்தை யும், வர்ச்சித்திருக்கக்கடவன்; அவன் தி ராட்சப்பழ இரசத்தின் காடியையும், லாகி ரியுள்ள பானத்தின் காடியையும், திராட்சப் பழங்களுடைய எந்தவிதமான சாற்றையும் குடிக்காமலும் திராட்சப் பச்சைப் பழங்க ளாயாகிலும் வற்றலான பழங்களாயாகிலும் புசிக்காமலும், *ஈ மோ. ம. கூ.

ச தான் நசரேயனுகிய நாளெல்லாம் தி ராட்சக்கனியின் விதையிலுலாகிலும் தோ லிலுலாகிலும் செய்யப்பட்ட யாதொன் றைப் புசிக்காமலும் இருக்கக்கடவன்.

டு நசரேய பொருத்தன அவன்மேலிருக் கும் நாளெல்லாம் *சவரகன் கத்தி அவன் தலையின்மேல் வரவேண்டாம்; அவன் கர்த் தருக்கென்று வர்ச்சித்திருக்கும் நாள் நிறை வேறும்மட்டும் பரிசுத்தமாயிருந்து, தன் தலையின் மயிர்கள வளர்க்கக்கடவன்.

*நியா. ஙஈ. டு.

Digitized by Google

கூ அவன் கர்த்தருக்கென்று வர்ச்சித்திருக்

கும் நாளெல்லாம் செத்த சவத்தண்டை யிலே வரவேண்டாம்.

எ *மரணமடைந்த தன் தகப்பனுலாகிலும், தாயினுலாகிலும், சகோதரனுலாகிலும், சகோதரியினுலாகிலும், அவன் தீட்டுப்பட லாகாது; ஏனெனில் அவனுடைய பராபரனின் நசரேய பொருத்தனை அவன் தலையின் மேல் இருக்கின்றது. *ஈ மோ. உக. யக.

அ அவன் நசரேயனுகிய நாளெல்லாம் கர்த்தருக்குப் பரிசுத்தன்.

கூ அவனண்டையிலே எவன் ஒருவன் அ சுப்பான சடுதியிலே செத்தானுலே, நசரே ய பொருத்தனையுள்ள அவனுடைய தலை தீட்டுப்பட்டதேயாகில், அவன் தன் சுத்தி கரிப்பின் நாளாகிய ஏழாம்நாளிலே தன் தலையைச் சிரைத்துக்கொண்டு,

ஐ எட்டாம்நாளிலே இரண்டு காட்டுப் புருக்களை, அல்லது இரண்டு புருக்குஞ்சு களை ஆசரிப்புக்கூடாரவாசலில் ஆசாரிய னண்டைக்குக் கொண்டுவரக்கடவன்.

ஒ அப்பொழுது ஆசாரியன் ஒன்றைப் பாவம்போக்கும் பலியும், மற்றதைச் சர் வாங்கதகனபலியுமாக்கி, சவத்தினுலேபட் டதீட்டின் நிவிர்த்தியை அவனுக்காக உண் டாக்கி, அவன் தலையை அந்நாளிலே பரி சுத்தமாக்குவானுக.

ஓ அதின்பிறகு இவன் தன் பொருத்தனை யின் நாள்களிலே, கர்த்தருக்கென்று வர்ச் சித்தவனுயிருந்து, ஒருவயது ஆட்டுக்குட் டியைக்குற்றம்போக்கும்பலியாகக்கொண் டுவரக்கடவன்; முன்ன நாள்களோவெ னில், அவனுடைய நசரேய பொருத்தனை, தீட்டுப்பட்டதினுல் வீணுயிற்று.

ஙூ ¶நசரேயனுடைய நியாயப்பிரமாண மாவது: அவனுடைய பொருத்தனையின் நாள்கள் நிறைவேறின அன்றே அவன் ஆ சரிப்புக்கூடாரவாசலிலே வந்து,

ஙூ சர்வாங்கதகனபலியாக ஒருவயதுள் ள பழுதற்ற ஒரு ஆட்டுக்குட்டியையும், பா வம்போக்கும்பலியாக ஒருவயதுள்ள பழு தற்ற ஒரு பெண் ஆட்டுக்குட்டியையும், சமாதானபலியாகப் பழுதற்ற ஒரு ஆட்டுக் கடாவையும்,

ஙஎ ஒரு கூடையில் எண்ணெயிலே பி சைந்த புளிப்பில்லாத மெல்லியமாவின் அரிசங்கனியும், எண்ணெய் தடவப்பட் ட புளிப்பில்லாத அடைகளையும், அவை களுக்கு அடுத்த காணிக்கையையும், பா தல்களையும், கர்த்தருக்குத் தன் காணிக்கை யாகச் செலுத்தக்கடவன்.

ஙஅ அதை ஆசாரியன் கர்த்தருக்குமுன் பாகக் கொண்டுவந்து, பாவம்போக்கும் அ வனுடைய பலியையும் அவனுடைய சர் வாங்கதகனபலியையும் செலுத்தி,

ஙஆ ஆட்டுக்கடாவைக் கூடையிலிருக்கும் புளிப்பில்லாத அப்பங்களோடும் கூடக் கர்த்தருக்குச் சமாதானபலியாகச் செலுத் தி, அவனுடைய காணிக்கையையும் பா தலையும் படைப்பானுக.

ஙஇ அப்பொழுது நசரேயன் ஆசரிப்புக் கூடாரவாசலிலே, தன் பொருத்தனையுள்ள தலையைச் சிரைத்து, தன் பொருத்தனையுள் ள தலைமயிரை எடுத்துக்கொண்டு, சமாதா னபலியின்கீழெரிகிற அக்கினியின்மேலே போடக்கடவன்.

ஙஈ நசரேயன் தன் பொருத்தனையுள்ள த லையைச் சிரைத்துக்கொண்டபிற்பாடு, ஆ சாரியன் ஆட்டுக்கடாவினுடைய வேவி க்கப்பட்ட ஒரு முன்னங்கால் தொடையை யும் கூடையில் இருக்கிறவைகளிலே பு ளிப்பில்லாத ஒரு அரிசத்தையும் புளிப் பில்லாத ஒரு அடையையும் எடுத்துக் கொண்டு, அவனுடைய உள்ளங்கைகளில் வைத்து,

உஏ அவைகளைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டக்கடவன்; அது அசைவாட் டப்பட்ட மார்க்கண்டத்தோடும், ஏறெடித் தப் படைக்கப்பட்ட முன்னந்தொடை யோடும், ஆசாரியனைச்சேரும் பரிசுத்தமா னது; பிற்பாடு நசரேயன் திராட்சப்பழ இரசம் குடிக்கலாம்.

உக இது பொருத்தனை பண்ணின நசரே

பனுக்கும், அவன் தன் கைக்கு உதவுகிறதை அல்லாமல், தன் நசரேய பொருத்தனையின் நிமித்தம் கர்த்தருக்குச் செலுத்தும் காணிக்கைக்கும் அடுத்த நியாயப்பிரமாணம்; அவன் பொருத்தனைபண்ணினதற்குச் சரியாக, தன் பொருத்தனையினுடைய நியாயப்பிரமாணத்தின்படியே செய்து தீரவேண்டுமென்று சொல்லென்றார்.

உ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உக ஈ ஆரோனோடும் அவன் குமாரரோடும் பேசிச்சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதிக்க, அவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது:

உச கர்த்தர் உன்னை ஆசீர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர்.

உடு கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேலே பிரகாசிக்கப்பண்ணி, உன்மேலே கிருபையாய் இருக்கக்கடவர்.

உசு கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் ஏறெடுத்து, உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவரென்பதுதானே.

உஎ இப்படி நம்முடைய நாமத்தை இஸ்ரவேல் புத்திரர்மேல் வைப்பார்களாக; நாம் அவர்களை ஆசீர்வதிப்போமென்று சொல்லென்றார்.

எ. அதிகாரம்.

மோசே வாசஸ்தலத்தை எடுப்பித்து, அதையும் அதின் எல்லா முட்டுகளையும் பலிபீடத்தையும் அதின் எல்லா முட்டுகளையும் அபிஷேகம்பண்ணி, பரிசுத்தமாக்கித் தீர்ந்தநாளிலே சம்பவித்ததேதெனில்,

உ தங்கள் பிதாக்களுடைய வீட்டாரின் தலைவரும், இலக்கம் பார்க்கப்பட்டவர்களின் விசாரிப்புக்கு வைக்கப்பட்ட கோத்திரப் பிரபுக்களுமாகிய இஸ்ரவேலின் பிரபுக்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள்.

ஈ தங்கள் காணிக்கையாக, ஆறு சூலால் வண்டில்களையும், பன்னிரண்டு மாடுகளையும், இரண்டிரண்டு பிரபுக்களுக்கு ஒவ்வொரு வண்டிலும், ஒவ்வொரு பிரபுக்கு ஒவ்வொரு மாடுமாக, கர்த்தருக்குச் செலுத்த வாசஸ்தலத்திற்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள்.

ச அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

ஞ ஈ அவர்கள் கையில் அலவகனை ஆசரிப்புக்கூடாரத்தின் ஊழியத்திற்காக வாங்கி, இலேவியருக்கு அவரவர் வேலைக்குத்தக்கவைகளாக, பங்கிட்டுக் கொடுவென்றார்.

ரு அப்பொழுது மோசே அந்த வண்டில்களையும் மாடுகளையும் வாங்கி, இலேவியருக்குக் கொடுத்தான்.

எ இரண்டு வண்டில்களையும் நான்கு மாடுகளையும் கெர்சோன் புத்திரருக்கு, அவர்கள் வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்து,

அ நான்கு வண்டில்களையும் எட்டு மாடுகளையும் மேராரியின் புத்திரருக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரன் இத்தாமாருடைய கையின்கீழிருக்கிற அவர்களுடைய வேலைக்குத்தக்க பங்காகக் கொடுத்தான்.

கூ கோகாத்தின் புத்திரருக்கோவெனில், ஒன்றும் கொடுத்தானில்லை; ஏனெனில் தோளின்மேலே சுமக்கும் பரிசுத்தஸ்தலத்தின் வேலை அவர்கள்மேலே சுமந்திருந்தது.

ம ¶ பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்ட நாளிலே, பிரபுக்கள் அதின் பிரதிஷ்டைக்காகவும் காணிக்கைகளைச் செலுத்தி, பலிபீடத்திற்கு முன்பாகத் தங்கள் காணிக்கையைக் கொண்டுவந்தார்கள்.

மக அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, ஒவ்வொருநாளிலே ஒவ்வொரு பிரபு பலிபீடத்தின் பிரதிஷ்டைக்காகத் தங்கள் காணிக்கையைச் செலுத்துவார்களாக என்றார்.

மஉ ¶ அப்படியே முதலாம்நாளிலே தன் காணிக்கையைச் செலுத்தினவன் யூதாகோத்திரத்தாராகிய அம்மினதாபின் குமாரன் நாகசோன்.

மஈ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்

வித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

ய சு தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

யடு சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

யசு பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

யள சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அமினதாபின் குமாரனாகிய நாகேசோனின் காணிக்கை.

யஅ ¶ இரண்டாம்நாளிலே இசஷாரின் பிரபுவாகிய சுவாரின் குமாரன் நெத்தானியேல் செலுத்துதல்செய்தான்.

யகூ அவன் தன் காணிக்கையாகச் செலுத்தினதாவது: பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒருவெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

உய தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

உக சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும்; ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

உஉ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

உங சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சுவாரின் குமாரனாகிய நெத்தானியேலின் காணிக்கை.

உச ¶ மூன்றாம்நாளிலே ஏலோனின் குமாரனாகிய எலியாப்பென்ற சேபுலோனின் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

உடு அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

உசு தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

உள சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

உஎ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

உஅ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது ஏலோனின் குமாரனாகிய எலியாப்பின் காணிக்கை.

ஈஐ ¶ நான்காம்நாளிலே சேதேயூரின் குமாரனாகிய எலித்சூரென்ற சூபன் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

ஈக அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந்திருந்தன.

ஈஉ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

Digitized by Google

ஈஈ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்காடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

ஈச பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

ஈடு சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சேதேயூரின் குமாரனுகிய எலித்சூரின் காணிக்கை.

ஈசு ¶ ஐந்தாம்நாளிலே சூரிஷதாயின் குமாரனுகிய செலுமியேலென்ற சிமெயோன் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

ஈஎ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினுல் நிறைந்திருந்தன.

ஈஅ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னன ஒரு தூபக்கிண்ணியும்,

ஈகூ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

சலி பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

சக சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது சூரிஷதாயின் குமாரனுகிய செலுமியேலின் காணிக்கை.

சஉ ¶ ஆறும்நாளிலே தேகுவேலின் குமாரனுகிய எலியாசாபென்ற காத் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

சஎ அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினுல் நிறைந்திருந்தன.

சஅ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னன ஒரு தூபக்கிண்ணியும்,

சகூ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

சலி பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

சக சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது தேகுவேலின் குமாரனுகிய எலியாசாபின் காணிக்கை.

சஉ ¶ ஏழாம்நாளிலே அம்மியூதின் குமாரனுகிய எலிஷாம்மா என்ற எப்பிராயீம் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

சஊ அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினுல் நிறைந்திருந்தன.

ஊஅ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னன ஒரு தூபக்கிண்ணியும்,

ஊக சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

ஊஉ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

ஊஎ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து

வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அம்மியூதின் குமாரனுகிய எலிஷாம்மாவின் காணிக்கை.

ருசு ¶ எட்டாம்நாளிலே பெதாத்சூரின் குமாரனுகிய காமாலியேல் என்ற மனுசே புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

ருடு அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினல் நிறைந்திருந்தன.

ருசு தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

ருஎ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை ருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

ருஅ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

ருகூ சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது பெதாத்சூரின் குமாரனுகிய காமாலியேலின் காணிக்கை.

சுடு ¶ ஒன்பதாம்நாளிலே கிதேயோனின் குமாரனுகிய அபிதான் என்ற பென்யமீன் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

சுக அவன் காணிக்கை ஏதெனில் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினல் நிறைந்திருந்தன.

சுஉ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

சுஎ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை ருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

சுஅ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

சுடு சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது கிதேயோனின் குமாரனுகிய அபிதானின் காணிக்கை.

சுசு ¶ பத்தாம்நாளிலே அம்மிஷதாயின் குமாரனுகிய அகியேசேர் என்ற தான் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

சுஎ அவன் காணிக்கை ஏதெனில், பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற்று முப்பது சேக்கல் நிறையான ஒரு வெள்ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையான ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவினல் நிறைந்திருந்தன.

சுஅ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூபக்கிண்ணியும்,

சுகூ சர்வாங்கதகனபலியாக ஒரு காளை ருதும், ஒரு ஆட்டுக்கடாவும் ஒரு வயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எ0 பாவம்போக்கும்பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவும்,

எக சமாதானபலியாக இரண்டு மாடுகளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒரு வயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது அம்மிஷதாயின் குமாரனுகிய அகியேசேரின் காணிக்கை.

எஉ ¶ பதினேராம்நாளிலே ஒகிரானின் குமாரனுகிய பாகியேல் என்ற ஆசேர் புத்திரரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

Digitized by Google

எந அவன் காணிக்கை ஏதெனில், பரி சுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற் றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள் ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையா ன ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயி லே பிசைந்த மெல்லிய மாவினால் நிறைந் திருந்தன.

எச தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூ பக்கிண்ணியும்,

எடி சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒரு வய தான ஒரு ஆட்டுக்குட்டியும்,

எக பாவம்போக்கும்பலியாக ஒரு வெள் ளாட்டுக்கடாவும்,

எள சமாதானபலியாக இரண்டு மாடுக ளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது ஓகிரானின் குமாரனாகிய பாகியேலின் கா ணிக்கை

எஅ ¶ பன்னிரண்டாம்நாளிலே எனானின் குமாரனாகிய அகிரா என்ற நவுதலி புத்திர ரின் பிரபு செலுத்துதல்செய்தான்.

எக அவன் காணிக்கை ஏதெனில், பரி சுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காக நூற் றுமுப்பது சேக்கல் நிறையான ஒரு வெள் ளித்தாலமும், எழுபது சேக்கல் நிறையா ன ஒரு வெள்ளிக்கலமும், இவ்விரண்டும் படைக்கும் காணிக்கையாக எண்ணெயி லே பிசைந்த மெல்லியமாவினால் நிறைந் திருந்தன.

கூ தூபவர்க்கத்தால் நிறைந்த பத்துச் சேக்கல் நிறையுள்ள பொன்னை ஒரு தூ பக்கிண்ணியும்,

கக சர்வாங்கதகனபலியாக ஒரு காளை எ ருதும், ஒரு ஆட்டுக்கடாவும், ஒருவயதான ஒரு ஆட்டுக்குட்டியும்,

கஉ பாவம்போக்கும்பலியாக ஒரு வெள் ளாட்டுக்கடாவும்,

கங சமாதானபலியாக இரண்டு மாடுக ளும், ஐந்து ஆட்டுக்கடாக்களும், ஐந்து வெள்ளாட்டுக்கடாக்களும், ஒருவயதான ஐந்து ஆட்டுக்குட்டிகளும்தானே; இது எ னானின் குமாரனாகிய அகிராவின் கா ணிக்கை.

கச ¶ அப்படியே பலிபீடம் அபிஷேகம் பண்ணப்பட்டபொழுது, இஸ்ரவேலின் பிரபுக்களாலே செய்யப்பட்ட அதினுடை ய பிரதிஷ்டையாவது: வெள்ளித்தாலங் கள் பன்னிரண்டு, வெள்ளிக்கலங்கள் டன் னிரண்டு, பொன்னை தூபக்கிண்ணிகள் பன்னிரண்டு.

கஎ ஒவ்வொரு வெள்ளித்தாலம் நூற்று மூப்பது சேக்கல் நிறையும், ஒவ்வொரு கலம் எழுபது சேக்கல் நிறையுமாக, இந் தப் பாத்திரங்களின் வெள்ளியெல்லாம் பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காய் இரண்டாயிரத்து நானூறு சேக்கல் நிறை யாயிருந்தது.

கஅ தூபவர்க்கத்தால் நிறைந்த பொன் னை பன்னிரண்டு தூபக்கிண்ணிகளில் ஒவ்வொன்று பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காய்ப் பத்துச்சேக்கல் நிறையாக, தூபக்கிண்ணிகளின் பொன்னெல்லாம் நூற்றிருபது சேக்கல் நிறையாயிருந்தன.

கஆ சர்வாங்கதகனபலியாகச் செலுத்தப் பட்ட காளை எருதுகளெல்லாம் பன்னிரண் டு, ஆட்டுக்கடாக்கள் பன்னிரண்டு, ஒரு வயதான ஆட்டுக்குட்டிகள் பன்னிரண்டு, அவைகளுக்கடுத்த படைப்புக்காணிக்கை களும்கூட இருந்தன; பாவம்போக்கும் பலியாகச் செலுத்தப்பட்ட வெள்ளாட்டுக் கடாக்கள் பன்னிரண்டு.

கஇ சமாதானபலியாகச் செலுத்தப்பட்ட காளை எருதுகளெல்லாம் இருபத்துநான் கு; ஆட்டுக்கடாக்கள் அறுபது, வெள்ளா ட்டுக்கடாக்கள் அறுபது, ஒருவயது ஆட் டுக்குட்டிகள் அறுபது; பலிபீடம் அபி ஷேகம் பண்ணப்பட்டபிற்பாடு செய்யப் பட்ட அதின் பிரதிஷ்டை இதுதானே.

Digitized by Google

அசூ ¶ மோசே அவரோடே பேசுகிறதற்காக ஆசரிப்புக்கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, தன்னோடே பேசுகிற சத்தத்தைச் *சாட்சியினுடைய பெட்டியின்மேலுள்ள கிருபாசனமான மூடியின்மீதில் இரண்டு கேருபீன்களின் நடுவே இருந்துண்டாகக் கேட்பான்; அங்கே இருந்து அவனோடே பேசுவார். *உ மோ. உடு. உஉ. சங். அடு. உ.

ஆ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ ஆரோனோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், *நீ விளக்குகளை ஏற்றுகையில் ஏழு விளக்குகளும் விளக்குத்தண்டிற்கு நேர் ஒழுங்காய் எரியவேண்டுமென்று சொல்லென்றார். *உ மோ. உடு. ஈஎ.

ஈ கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபிரகாரமாக ஆரோன் செய்து, விளக்குத்தண்டிற்கு நேர் ஒழுங்காக அதின் விளக்குகளை ஏற்றுவான்.

உ இந்தக் குத்துவிளக்கின் வேலை, அதின் பாதம்துவக்கி அதின் பூக்கள்மட்டும், அடிக்கப்பட்ட பொன்னாயிருந்தது; கர்த்தர் மோசேக்குக் காண்பித்த மாதிரியின்படியே அவன் குத்துவிளக்கைப் பண்ணினான்.

ஏ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஊ நீ இலேவியரை இஸ்ரவேல் புத்திரருடைய நடுவில் எடுத்து, அவர்களைச் சுத்திகரிப்பாயாக.

எ அவர்களைச் சுத்திகரிக்க நீ அவர்களுக்குச் செய்யவேண்டியதேதெனில், அவர்கள்மேலே பாவம்போக்கும் தண்ணீரைத் தெளி; பிற்பாடு அவர்கள் தங்களைச் சுத்திகரிக்க, தங்கள் மாம்சத்தின்மேலெல்லாம் சவரகன் கத்தியைப் போகப்பண்ணி, தங்கள் வஸ்திரங்களை வெளுத்து,

ஐ ஒரு காளை எருதையும் எண்ணெயிலே பிசைந்த மெல்லியமாவாகிய அதற்கு அடுத்த காணிக்கையையும் கொண்டுவரக் கடவர்கள்; பாவம்போக்கும்பலியாக வேறொரு காளை எருதையும் நீ வாங்கி,

ஒ இலேவியரை ஆசரிப்புக்கூடாரத்திற்குமுன்பாகச் சேரப்பண்ணி, இஸ்ரவேல் புத்திரரின் சபையையெல்லாம் கூட்டுவாயாக.

ஓ நீ இலேவியரைக் கர்த்தருக்குமுன்பாகச் சேரப்பண்ணினபொழுது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கைகளை இலேவியர்மேல் வைக்கக்கடவர்கள்.

ஙக பிறகு இலேவியர் கர்த்தரின் பணிவிடைவேலை செய்கிறவர்களாகும்படிக்கு, ஆரோன் இஸ்ரவேல் புத்திரரில் எடுக்கப்பட்டவர்களைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டப்படும் காணிக்கையாக நிறுத்தக்கடவன்.

ஙஉ பிற்பாடு இலேவியர் தங்கள் கைகளைக் காளை எருதுகள் தலையின்மேல் வைப்பார்களாக; அதின்பிறகு நீ இலேவியருக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்குவதற்கு, கர்த்தருக்கு அவைகளில் ஒன்றைப் பாவம்போக்கும்பலியும் மற்றதைச் சர்வாங்கதகனபலியுமாக்கி,

ஙஈ ¶ இலேவியரை ஆரோனுக்கும் அவன் குமாரனுக்கும்முன்பாக நிறுத்தி, அவர்களைக் கர்த்தருக்கு அசைவாட்டப்படும் காணிக்கையாக்கி,

ஙச இப்படி இலேவியர் நம்முடையவர்களாயிருக்கும்படிக்கு, அவர்களை இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருந்து பிரித்தெடுக்கக்கடவாய்.

ஙடு அதற்குப் பிறகு இலேவியர் ஆசரிப்புக்கூடாரத்தில் வேலைசெய்யப் பிரவேசிக்கக்கடவர்கள்; இப்படி அவர்களைச் சுத்திகரித்து, அவர்களை அசைவாட்டும் காணிக்கையாக்கக்கடவாய்.

ஙசு ஏனெனில் அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் நடுவிலிருந்து நமக்குக் கொடுக்கவே கொடுக்கப்பட்டார்கள்; இஸ்ரவேல் புத்திரரில் எல்லாம் கர்ப்பம்திறந்து பிறக்கிற

சகல முதல்பேற்றுக்கும் பதிலாக அவர்களை நமக்கு எடுத்துக்கொண்டோம்.

ஙஎ ஏனெனில் இஸ்ரவேல் புத்திரரிலே, மனிதரிலும் மிருகசீவன்களிலும் *முதல் பேறுனதெல்லாம் நம்முடையது; நாம் எகிப்துதேசத்திலே முதல்பேறு சகலத்தையும் சங்கரித்தநாளிலே அவைகளை நமக்குப் பரிசுத்தமாக்கி, *உ மோ. ஙக. உ.

ஙஅ பிற்பாடு *இலேவியரை இஸ்ரவேல் புத்திரரிலுள்ள முதல்பேறு சகலத்திற்கும் பதிலாக எடுத்துக்கொண்டு, *ச மோ. க. ஙஉ.

ஙகூ இலேவியர் இஸ்ரவேல் புத்திரருடைய பணிவிடைவேலையை ஆசரிப்புக்கூடாரத்திலே செய்யும்படிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கும்படிக்கும் இஸ்ரவேல் புத்திரர்தானே பரிசுத்தஸ்தலத்திற்குச் சேருகிறதினால் இஸ்ரவேல் புத்திரரில் வாதை உண்டாகாதபடிக்கும், இலேவியரை அவர்கள் நடுவில் எடுத்து, ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுக்கவே கொடுத்தோமென்றார்.

உஙி அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்தும் கர்த்தர் இலேவியரைக்குறித்து மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இலேவியருக்குச் செய்தார்கள்.

உக இலேவியர் பாவம்போக்குதலைப் பண்ணிக்கொண்டு, தங்கள் வஸ்திரங்களை வெளுத்தார்கள்; பிற்பாடு ஆரோன் அவர்களைக் கர்த்தருக்குமுன்பாக அசைவாட்டும் காணிக்கையாக நிறுத்தி, அவர்களைச் சுத்திகரிக்க அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கினான்.

உஉ அதற்குப்பிறகு இலேவியர் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் முன்பாக ஆசரிப்புக்கூடாரத்திலே தங்கள் பணிவிடைவேலையைச் செய்யப் பிரவேசித்தார்கள்; கர்த்தர் இலேவியரைக்குறித்து மோசேக்குக் கற்பித்தபடியே அவர்களுக்குச் செய்தார்கள்.

உக ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உச இலேவியருக்கான கட்டளை ஏதெனில், இருபத்தைந்துவயது முதல்கொண்டு அதற்கு மேல்த்தரமுமான அனைவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையைச் செய்யும் இராணுவத்திலே சேவிக்க வரவேண்டும்.

உடு ஆனால் ஐம்பதாம்வயதுமுதல்கொண்டு அவர்கள் இனி வேலைசெய்யாதபடிக்கு வேலைசெய்யும் இராணுவத்தை விட்டு,

உசு பணிவிடைவேலையைச் செய்யாமல், ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கிறதற்கே தங்கள் சகோதரரோடேகூடச் சேவிக்கக்கடவர்கள்; இப்படி இலேவியருக்கு அவர்களுடைய காவல்களின் வேலைக்காகத் திட்டம்பண்ணக்கடவாயென்றார்.

கூ. அதிகாரம்.

அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இரண்டாம் வருஷம் முதல்மாதத்திலே கர்த்தர் சீனாய் வனாந்தரத்திலே மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ இஸ்ரவேல் புத்திரர் *பஸ்காவை அதின் நிட்டமான காலத்திலே ஆசரிக்கக்கடவர்கள். *உ மோ. ஙஉ. ஈ.

ஈ இந்த மாதம் பதினான்காம்தேதி அந்திநேரமானவேளை என்றதின் நிட்டமான காலத்திலே அதை ஆசரிக்கக்கடவீர்கள்; அதினுடைய எல்லாக் கட்டளையின்படியேயும் நியாயத்தின்படியேயும் அதை ஆசரிக்கக்கடவீர்களென்றார்.

ச ஆகையால் பஸ்காவை ஆசரிக்கிறதற்காக மோசே இஸ்ரவேல் புத்திரரோடே பேசினான்.

டு அப்படியே முதலாம்மாதம் பதினான்காம்தேதி அந்திநேரமானவேளையிலே, சீனாய் வனாந்தரத்திலே பஸ்காவை ஆசரித்தார்கள்; கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடி எல்லாம் இஸ்ரவேல் புத்திரர் செய்தார்கள்.

Digitized by Google

சு ¶ ஆனால் சவத்தினாலே தீட்டுப்பட்ட

படியினுலே, அந்நாளில் பல்காவை ஆசரிக்கக்கூடாத மனிதர் இருந்தார்கள்; அவர்கள் அந்நாளிலே மோசேக்கும் ஆரோனுக்கும்முன்பாகச் சேர்ந்துவந்து,

எ அவர்களோடே, நாங்கள் சவத்தினுலே தீட்டுப்பட்டவர்கள்; இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே நிட்டமானகாலத்திலே கர்த்தருக்குக் காணிக்கையைச் செலுத்தாதபடிக்கு, நாங்கள் விலக்கப்பட்டிருப்பானேனென்றார்கள்.

ஏ மோசே அவர்களுடனே, பொறுங்கள்; கர்த்தர் உங்களுக்காகக் கற்பிப்பது ஏதென்று கேட்பேனென்றான்.

கூ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ஐ ஈ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், உங்களிலாகிலும் உங்கள் சந்ததியாரிலாகிலும் எவர் ஒருவர் சவத்தினுலே தீட்டுப்பட்டு, அல்லவென்று தூரப்பயணத்தில் இருந்தாலும், கர்த்தருக்குப் பல்காவை ஆசரிக்கவேண்டும்.

ஙக அவர்கள் அதை இரண்டாம்மாதம் பதினுன்காம்தேதி அந்திநேரமானவேளையில் ஆசரித்து, அதைப் புளிப்பில்லாத அப்பங்களோடும் கசப்பான கீரைகளோடும் புசித்து,

ஙஉ விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாகவைக்காமலும், அதில் ஒரு எலும்பை முறிக்காமலும், பல்காவினுடைய கட்டளையின்படி எல்லாம் அதை ஆசரிக்கக்கடவர்கள்.

ஙஎ ஆனுல் ஒருவன் சுத்தமும் பயணத்தில் இராதவனுமாயிருந்தும், பல்காவை ஆசரிக்காதேபோனுல், அந்த ஆத்துமாத்தை நிட்டமான காலத்திலே கர்த்தரின் காணிக்கையைச் செலுத்தாதபடியினுலே தன் சனத்தாரில் இராமல், *அறுப்புண்டுபோவான்; அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான். *எ மோ. ஙஎ. ஙச.

ஙசு ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி, கர்த்தருக்குப் பல்காவை ஆசரிக்கப்போனுல், அவன் அதைப் பல்காவின் கட்டளையின்படியும் அதின் நியாயத்தின்படியும் ஆசரிக்கக்கடவன்; பரதேசிக்காகவும் தேசத்திலே பிறந்தவனுக்காகவும் ஏகக்கட்டளை உங்களுக்கு இருப்பதாகவென்று சொல்லென்றார்.

ஙஅ ¶ வாசஸ்தலம் எடுப்பிக்கப்பட்டநாளிலே, *மேகம் சாட்சியின்கூடாரம் இருக்கிற வாசஸ்தலத்தை மூடிற்று; சாயங்காலமானபொழுதோவெனில், வாசஸ்தலத்தின்மேல் விடியற்காலம்மட்டும் அக்கினியின் உருவிருந்தது. *உ மோ. சஙு. ஈச.

ஙஈ இப்படி எப்பொழுதும் இருந்தது: மேகமும் இராவில் அக்கினி உருவும் அதை மூடியிருந்தன.

ஙஏ மேகம் கூடாரத்திலிருந்து எழும்புகிறதைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரர் அதின் பிறகு பயணப்படுவார்கள்; மேகம் எந்த ஸ்தலத்திலே தங்கித்தரிக்குமோ, அங்கே இஸ்ரவேல் புத்திரர் பாளயம் இறங்குவார்கள்.

ஙஐ கர்த்தருடைய கட்டளையின்படியே இஸ்ரவேல் புத்திரர் பயணப்படுவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியேயும் பாளயம் இறங்குவார்கள்; மேகம் வாசஸ்தலத்தின்மேலே தங்கியிருக்கும் காலமெல்லாம் பாளயத்தில் இறங்கி இருப்பார்கள்,

ஙகூ மேகம் வெகுநாள் வாசஸ்தலத்தின்மேலே தரித்திருக்கையில், இஸ்ரவேல் புத்திரர் பயணப்படாமல், கர்த்தரின் காவலைக் காத்திருப்பார்கள்.

உஙு மேகம் கொஞ்சநாள் வாசஸ்தலத்தின்மேலிருக்கும்பொழுது, கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயம் இறங்கியிருந்து, கர்த்தருடைய கற்பனையின்படியே பயணப்படுவார்கள்.

உக மேகம் சாயங்காலம்தவறி விடியற்காலம்மட்டும் இருந்து, விடியற்காலத்தில் எழுப்பும்பொழுது, அங்கேரம் பயணப்படுவார்கள்; பகலிலாகிலும் இரவிலாகிலும்

Digitized by Google

மேகம் எழும்பும்பொழுது, பயணப்படுவார்கள்.

உஉ அல்லவென்று மேகம் இரண்டொரு நாள், அல்லது ஒருமாதம், அல்லது அதிகநாள், வாசஸ்தலத்தின்மேலே தங்கியிருக்கும்பொழுது, இஸ்ரவேல் புத்திரர் பயணப்படாமல், பாளயம் இறங்கி இருப்பார்கள்; அது எழும்பும்பொழுதோவெனில், பயணப்படுவார்கள்.

உக கர்த்தருடைய கட்டளையின்படியே பாளயம் இறங்குவார்கள்; கர்த்தருடைய கட்டளையின்படியே பயணப்படுவார்கள்; கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடியே கர்த்தருடைய காவலைக் காப்பார்கள்.

ய. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ உனக்கு இரண்டு வெள்ளிப் பூரிகைகளை அடிக்கப்பட்ட வெள்ளியினாலே உண்டுபண்ணு; அவைகள் உனக்குச் சபையை வரவழைப்பிக்கிறதற்கும் பாளயங்களைப் பயணப்படுத்துகிறதற்கும் உதவுவதாக.

ஈ அவைகளை ஊதும்பொழுது சபை எல்லாம் ஆசரிப்பின் கூடாரத்தின் வாசலில் உன்னண்டைக்குக் கூடக்கடவது.

ச ஒன்றை ஊதும்பொழுதோவெனில், இஸ்ரவேலில் ஆயிரங்களுக்குத் தலைவராகிய பிரபுக்கள் உன்னண்டைக்குக் கூடக்கடவர்கள்.

ஓ நீங்கள் அவைகளைக் கெம்பீரமாக ஊதும்பொழுதோவெனில், கிழக்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பயணப்படக்கடவது.

ஃ அவைகளை நீங்கள் இரண்டாம்முறை கெம்பீரமாக ஊதும்பொழுது, தெற்கே இறங்கியிருக்கிற பாளயங்கள் பயணப்படக்கடவது; அவர்களைப் பயணப்படுத்துகிறதற்குக் கெம்பீரமாய் ஊதக்கடவர்கள்.

எ ஆனால் சபையைக் கூட்டுகிறதற்குக் கெம்பீரமில்லாத ஊதுதலாக ஊதக்கடவீர்கள்.

அ ஆரோனின் குமாரராகிய ஆசாரியர் பூரிகைகளை ஊதக்கடவர்கள்; அவைகள் உங்கள் தலைமுறைகளில் உங்களுக்கு நித்திய கட்டளையாக இருக்கக்கடவது.

கூ நீங்கள் உங்கள் தேசத்தில் உங்களை ஒடுக்கப்படுத்துகிற சத்துருவுக்கு எதிராக யுத்தத்திற்குள் பிரவேசிக்கும்பொழுது, *பூரிகைகளைக் கெம்பீரமாக ஊதக்கடவீர்கள்; அப்பொழுது நீங்கள் உங்கள் பராபரனாகிய கர்த்தரின் சமுகத்திலே நினைக்கப்பட்டு, உங்கள் பகைஞருக்கு நீங்கலாய் இரட்சிக்கப்படுவீர்கள். *ச மோ. உக. கூ.

ய உங்கள் மகிழ்ச்சியின்காலங்களிலும், உங்கள் பண்டிகைகளிலும், மாதப்பிறப்புகளிலும், உங்கள் சர்வாங்கதகனங்களும் சமாதான பலிகளும் செலுத்தப்படுகையில், பூரிகைகளை ஊதுவீர்களாக; அப்பொழுது அவைகள் உங்கள் பராபரன் சமுகத்திலே உங்களை நினைக்கப்பண்ணும்; நாம் உங்கள் பராபரனாகிய கர்த்தரென்றார்.

யக ¶ இரண்டாம்வருஷம் இரண்டாம்மாதம் இருபதாம்தேதியிலே மேகம் சாட்சியினுடைய வாசஸ்தலத்தின்மீதிலிருந்து எழும்பிற்று.

யஉ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சீநாய்வனாந்தரத்திலிருந்து தங்கள் பயணவரிசைகளாய்ப் புறப்பட்டார்கள்; மேகம் பாரான் வனாந்தரத்திலே தங்கித்தரித்தது.

யங இப்படியே கர்த்தர் மோசேயைக்கொண்டு கட்டளையிட்டபடியே முதல்பயணம் பண்ணினார்கள்.

யச ¶ முதல் யூதாபுத்திரருடைய பாளயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்; அவனுடைய சேனைக்கு அம்மினதாபின் குமாரன் நாகேசோன் தலைவனாய் இருந்தான்.

யடு இசஷார் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சுவாரின் குமாரன் நெதானியேல் தலைவனாய் இருந்தான்.

ஐசு சேபுலோன் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்கு எலோனின் குமாரன் எலியாப் தலைவனுயிருந்தான்.

ஐள அப்பொழுது வாசஸ்தலம் இறக்கிவைக்கப்பட்டது; அதைக் கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்.

ஐஅ ¶ பிற்பாடு ரூபன் புத்திரருடைய பானயக் கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்; அவன் சேனைக்குச் சேதேயூரின் குமாரன் எலீத்சூர் தலைவனுய் இருந்தான்.

ஐக சிமெயோன் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்குச் சூரிஷதாயின் குமாரன் செலூமியேல் தலைவனுயிருந்தான்.

ஐஉ காத் புத்திரருடையு கோத்திரத்தின் சேனைக்குத் தேகுவேலின் குமாரன் எலியாசாப் தலைவனுயிருந்தான்.

ஐஎ அப்பொழுது கோகாத்தியர் பரிசுத்த மானதைச் சுமந்துகொண்டு புறப்பட்டார்கள்; இவர்கள் வருமட்டும் அவர்கள் வாசஸ்தலத்தை எடுத்து நிறுத்தினார்கள்.

ஐஐ பிற்பாடு எப்பிராயீம் புத்திரருடைய பானயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்; அவனுடைய சேனைக்கு அம்மியூதின் குமாரன் எலிஷாம்மா தலைவனுயிருந்தான்.

ஐஉ மனுசே புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்குப் பெதாத்சூரின் குமாரன் காமாலியேல் தலைவனுயிருந்தான்.

ஐச பென்யமீன் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்கு கீதேயோனியின் குமாரன் அபிதான் தலைவனுயிருந்தான்.

ஐடு ¶ பிற்பாடு தாண் புத்திரருடைய பானயக்கொடியின்கீழிருக்கிறவர்கள் சகல பானயங்களுக்கும் கடைப்பானயமாகத் தங்கள் சேனைகளின்படியே புறப்பட்டார்கள்; அவனுடைய சேனைக்கு அம்மிஷதாயின் குமாரன் அகியேசேர் தலைவனுயிருந்தான்.

ஐசு ஆசேர் புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஒக்ரானின் குமாரன் பாகியேல் தலைவனுயிருந்தான்.

ஐள நப்தலி புத்திரருடைய கோத்திரத்தின் சேனைக்கு ஏனானின் குமாரன் அகிரா தலைவனுயிருந்தான்.

ஐஅ இந்த வரிசையாய் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சேனைகளின்படியே பயணம் போனர்கள்.

ஐக ¶ மோசே தன் மாமனுகிய ரேகுவேலென்ற மீதியானனுடைய குமாரனை நோக்கி: நாங்கள் கர்த்தர் சொன்ன ஸ்தலத்திற்கு நாங்கள் பயணம்போகிறோம்; எங்களோடேகூட வா, உனக்கு நன்மைசெய்வோம்; ஏனெனில் கர்த்தர் இஸ்ரவேலுக்கு நல்ல வாக்குத்தத்தம்பண்ணினாரென்றான்.

ஐஉ ஆனுல் இவன் அவனுடே கான் வராமல், என் தேசத்திற்கும் என் இனத்தண்டைக்கும் போவேனென்றான்.

ஐச அப்பொழுது அவன் சொன்னதாவது: நீ எங்களை விடாயாக; ஏனெனில் வனாந்தரத்திலே நாங்கள் பானயம் இறங்கும் தானங்களை நீ அறிந்திருக்கிறபடியினுலே, எங்களுக்குக் கண்களைப்போல இருப்பாய்.

ஐடு நீ எங்களோடே கூடவந்தால் அப்பொழுது கர்த்தர் எங்களுக்குச் செய்தருளும் அந்த நன்மையின்படியே உனக்கும் நன்மைசெய்வோமென்றான்.

ஐஎ ¶ அவர்கள் கர்த்தருடைய பர்வதத்தைவிட்டு, மூன்றுநாள் பயணம்போனர்கள்; மூன்றுநாள் பயணத்திலும் கர்த்தருடைய உடம்படிக்கையின்பெட்டி அவர்களுக்கு இளைப்பாறும் தலத்தை விசாரித்துக் காட்டும்படிக்கு அவர்கள்முன்பாகப் போயிற்று.

ஐசு அவர்கள் பானயத்திலிருந்து பயணம் போகிறபொழுது, கர்த்தருடைய மேகம் பகலில் அவர்கள்மேல் இருந்தது.

ஐடு ¶ பெட்டி புறப்படும்பொழுது மோசே என்றவன், கர்த்தாவே, உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படவும், உம்

மைப் பகைக்கிறவர்கள் உமக்குமுன்பாக ஓடிப்போகவும் எழுந்தருளும் என்பான். *சங். கூஅ. உ.

கூ அது தங்குகிறபொழுது அவன், கர்த்தாவே, அநேகம் ஆயிரங்களாகிய இஸ்ரவேலரண்டைக்குத் திரும்புமென்பான்.

ஙக. அதிகாரம்.

ஆனால் சனம் முறையிட்டுக்கொண்டிருந்தது; அது கர்த்தருடைய செவிகளிலே பொல்லாப்பாயிருந்தது; ஏனெனில் கர்த்தர் அதைக் கேட்டபொழுது, அவருடைய கோபம் மூண்டது; அப்பொழுது கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிந்து, கடைசிப் பாளயத்தில் இருந்த சிலரைப் பட்சித்தது.

உ சனம் மோசேயைநோக்கிக் கூப்பிட்டது; மோசே கர்த்தரைநோக்கி விண்ணப்பம்பண்ணினான்; அப்பொழுது அக்கினி அவிந்துபோயிற்று.

ஊ கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றி எரிந்ததினாலே அவ்விடத்திற்குத் தபேராவென்று பேரிட்டான்.

எ ¶ அவர்களுக்குள் இருந்த *பலசாதியான சனம் மகா இச்சையுள்ளதாயிற்று; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரும் திரும்ப அழுது, நமக்கு இறைச்சியைப் புசிக்கக்கொடுப்பவர் யார் என்றும், *உ மோ. ஙஉ. கூஅ. உ மோ. ஙசு. கூ. க கொரி. ஙி. சு.

ஐ நாம் எகிப்திலே கிரயமில்லாமல் சாப்பிட்ட மச்சங்களையும், வெள்ளரிக்காய்களையும், கொம்மட்டிக்காய்களையும், சிறுவெண்காயங்களையும், வெண்காயங்களையும், வெள்ளை வெண்காயங்களையும் நினைக்கிறோம்.

ஒ இப்பொழுதோவெனில் நம்முடைய ஆத்துமா வாடிப்போயிற்று; இந்த மன்னாவைத்தவிர நம்முடைய கண்களுக்குமுன்பாகப் பின் ஒன்றுமில்லை என்றும் சொன்னார்கள்.

ஏ மன்னாவோவென்றால் கொத்தமல்லிவிதை அம்மாத்திரமும், அதின் நிறம்பெதோளாகின் நிறம்போலவும் இருந்தது.

ஐ சனம் திரிந்து அதைப் பொறுக்கிக் கொண்டுவந்து, எந்திரங்களில் அரைத்து, அல்லது உரல்களில் இடித்து, பாகனைகளிலே சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாக்குவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசியாயிருந்தது.

கூ இராவில் பனி பாளயத்தின்மேல் இறங்குகையில், மன்னா அதின்மேல் இறங்கிற்று.

ஙி ¶ சனம் வம்சம் வம்சமாகத் தங்கள் தங்கள் கூடாரவாசலில் அழுகிறதை மோசே கேட்டான்; கர்த்தருக்குக் கோபம் மிகவும் மூண்டது; மோசேயின் பார்வைக்கும் பொல்லாப்பாயிருந்தது.

ஙக அப்பொழுது மோசே கர்த்தரோடே சொன்னதாவது: நீர் இந்த எல்லாச் சனத்தின் பாரத்தையும் என்மேலே சுமத்தினதினாலே, உம்முடைய அடியானுக்கு உபத்திரவம் வரப்பண்ணினதென்ன? உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடையாதே போனதென்ன?

ஙஉ நாம் அவர்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்திற்கு, நீ அவர்களை ஒருதகப்பன் முலையுண்கிற பாலகனைச் சுமக்கிறதுபோல, உன் மடியிலே சுமந்துகொண்டுபோவென்று நீர் என்னோடே சொல்லும்படிக்கு, நான் இந்தச் சனத்தையெல்லாம் கர்ப்பம்தரித்தேனோ? நான் இதைப்பெற்றேனோ?

ஙஊ இந்தச் சனத்திற்கெல்லாம் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? ஏனெனில் எங்களுக்கு இறைச்சியைச் சாப்பிடக் கொடுவென்று என்னைப் பார்த்து அழுகிறார்கள்.

ஙச நான் ஒருவன் இந்தச் சனத்தையெல்லாம் சுமக்கக்கூடாது; ஏனென்றால் எனக்கு மிஞ்சின பாரமாயிருக்கின்றது.

ஙடி எனக்கு உம்முடைய கண்களிலே கிருபைகிடைத்ததானால், தேவரீர் இப்படி எனக்குச் செய்கிறதைப்பார்க்கிலும், என்

Digitized by Google

உபத்திரவத்தை நான் காணுதபடிக்கு என் னைக் கொல்லவே கொல்லும் என்றான்.

ய சு ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோ டே சொன்னதாவது: நீ இஸ்ரவேலின் மூப் பரில் சனத்திற்கு மூப்பரும் தலைவருமாயி ருக்கத்தக்கவர்கள் என்று அறிந்திருக்கிற எழுபதுபேரை நமக்குக் கூட்டி, அவர்களை ஆசரிப்புக்கூடாரத்தண்டையிலே அங்கே உன்னோடேகூட நிற்கும்படிக்குச் சேர்த் துக்கொள்.

ய எ அப்பொழுது நாம் இறங்கி, அங்கே உன்னோடேபேசி, நீ ஒருவன் சனத்தின் பா ரத்தைச் சுமக்காமல், அவர்கள் உன்னோ டேகூட அதைச் சுமப்பதற்காக உன்மே லிருக்கிற ஆவியில் எடுத்து, அவர்கள்மே லே வைப்போம்.

ய அ ஆனால் சனத்தோடே நீ சொல்லவே ண்டியதேதெனில், இறைச்சி சாப்பிட நா னைக்கு உங்களைப் பரிசுத்தம்பண்ணுங்கள்; ஏனெனில், எங்களுக்கு இறைச்சி சாப்பி டக் கொடுப்பவர் யார்? எகிப்திலே எங்க ளுக்கு நன்றாயிருந்ததென்று கர்த்தருடைய செவிகளின்முன்பாக அழுதீர்கள்; ஆகை யால் கர்த்தர் உங்களுக்கு இறைச்சி சாப் பிடக்கொடுப்பார்.

ய கூ நீங்கள் ஒருநாள் அல்ல, இரண்டு நாளும் அல்ல, ஐந்துநாளும் அல்ல, பத் துநாளும் அல்ல, இருபதுநாளும் அல்ல,

உய ஒரு மாதம் முழுவதும் அது உங்கள் நாசிகளிலிருந்து புறப்பட்டு, உங்களுக்குத் தெவுட்டிப்போகும்மட்டும் சாப்பிடுவீர் கள்; ஏனென்றால் உங்கள்நடுவே இருக் கிற கர்த்தரை அசட்டைபண்ணி, நாங்கள் ஏன் எகிப்திலிருந்து புறப்பட்டோமென்று அவருக்குமுன்பாக அழுதீர்களென்று சொ ல்லென்றார்.

உக ¶ அப்பொழுது மோசே சொன்னதா வது: நான் இருக்கிற சனம் அறுநூறாயிரம் காலாள்கள்; தேவரீரோவெனில் ஒரு முழு மாதம்மட்டும் சாப்பிட அவர்களுக்கு இ றைச்சி கொடுப்போம் என்றீர்.

உஉ *அவர்களுக்குப் போதுமான மிடைக்க ஆடுமாடுகள் அவர்களுக்காக அடிக்கப்ப டுமோ? அவர்களுக்குப் போதுமான மிடைக் கச் சமுத்திரத்து மச்சங்களெல்லாம் அவர் களுக்காகச் சேர்க்கப்படுமோவென்றான். *யோவா. சு. எ.

உக ஆனால் கர்த்தர் மோசேயுடனே, *கர்த் தருடைய கை குறுகி இருக்கிறதோ? நம்மு டைய வார்த்தையின்படி உனக்கு சம்ப வக்குமோ, சம்பவியாதோவென்று இப்பொ ழுது பார்ப்பாய் என்றார். *ஏசா. ஞவ. உ: ஞசு. க.

உச ¶ மோசே புறப்பட்டு, கர்த்தருடைய வார்த்தைகளைச் சனத்திற்குச் சொல்லி, ச னத்தின் மூப்பரில் எழுபதுபேரைக் கூட்டி, அவர்களைக் கூடாரத்தைச் சுற்றிலும் நிறுத் தினான்.

உடு அப்பொழுது கர்த்தர் மேகத்தில் இ றங்கி, அவனோடே பேசி, அவன்மேலிருந்த ஆவியில் எடுத்து, மூப்பராகிய அந்த எழு பதுபேர்மேலே வைத்தார்; சம்பவித்தே தெனில் ஆவி அவர்கள்மேலே வந்தத ருணத்தில், தீர்க்கதரிசனம் சொன்னார்கள்; சொல்லிப் பிறகு ஒய்ந்தார்கள்.

உக ஆனால் இரண்டுபேர் பாளயத்தில் இ ருந்துவிட்டார்கள்; ஒருவன்பேர் எல்தாத் மற்றவன்பேர் மேதாத்; அவர்கள் கூடப் பேர்எழுதப்பட்டிருந்தும், கூடாரத்திற்குப் போகப் புறப்படாதிருந்தார்கள்; அவர்கள் மேல் ஆவிவந்து தங்கினதினாலே, பாளயத் திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

உஎ ஒரு பிள்ளையாண்டான் ஓடிவந்து, எல்தாதும் மேதாதும் பாளயத்திலே தீர்க் கதரிசனம் சொல்லுகிறார்களென்று மோசே க்கு அறிவித்தான்.

உஅ அப்பொழுது மோசேயால் தெரிந்த கொள்ளப்பட்டவர்களில் அவன் வேலைக் காரனாகிய நூனின் குமாரன் யோசுவா பி ரதியுத்தாரமாக, என் ஆண்டவனாகிய மோ சேயே, *அவர்களுக்குத் தடைபண்ணுமெ ன்றான். *நூக். சு. சஉ.

உசு மோசேயோவென்றால், அவனுக்கு நீ எனக்காகப் பத்தினைவராக்கியம் காண்பிக்கிறாயோ? ஆ, கர்த்தருடைய சனமெல்லாம் தீர்க்கதரிசனம் சொல்லத்தக்கதாய், கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மேல் இறங்கப்பண்ணினால் தாவினேயென்றான்.

உஙி பிற்பாடு மோசேயும் இஸ்ரவேல் மூப்பரும் பானயத்திலே வந்து சேர்ந்தார்கள்.

உக ¶ அப்பொழுது கர்த்தரிடத்திலிருந்து *காற்றுப் புறப்பட்டு, சமுத்திரத்திலிருந்து காடைகளை அடித்துக்கொண்டுவந்து, பானயத்தின்மேலே, பானயத்தைச் சுற்றிலும் இந்தப்பக்கம் ஒருநாள் பயணமும் அந்தப்பக்கம் ஒருநாள் பயணமும், தரையின்மேல் இரண்டுமுழ உயர்த்தியுமாய் விழுந்தகிடக்கத் தெளித்தது. *சங். ாஉடு. எ.

உஎ அப்பொழுது சனம் எழும்பி, அன்று பகல்முழுவதும், இராமுழுவதும், மறுநாள் முழுவதும், காடைகளைச் சேர்த்தார்கள்; கொஞ்சமாய்ச் சேர்த்தவன் பதினகலம் அம்மாத்திரம் சேர்த்தான்; அவைகளைப் பானயத்தைச் சுற்றிலும் தங்களுக்காகப் பரப்பிப்போட்டார்கள்.

உக *ஆனால் இறைச்சி இன்னம் அவர்கள் பல்லுகள் நடுவே இருக்கையில், கர்த்தருடைய கோபம் அவர்கள் அதைச் சாப்பிட்டுத் தீராததற்குமுன்னே, சனத்திற்குள்ளே மூண்டுகொள்ளுகையால், கர்த்தர் சனத்தை மகா பெரிய வாதையால் அடித்தார். *சங். எஅ. உய, உக.

உச இச்சையுள்ள சனத்தை அங்கே அடக்கம்பண்ணினதினாலே, அந்த ஸ்தலத்திற்கு இச்சையின் பிரேதக்குழிகளென்று பேரிட்டான்.

உடு ¶ சனம் இச்சையின் பிரேதக்குழிகளை விட்டு, ஆத்சரோத்திற்குப் பயணம் வந்து ஆத்சரோத்திலே தரித்திருந்தது.

ஙஉ. அதிகாரம்.

மோசே கூஷ்சாதியான *பெண்சாதியை விவாகம்பண்ணினபடியினாலே, மிரியாமும் ஆரோனும் அவன் விவாகம்பண்ணின கூஷ்சாதியான பெண்சாதியின் நிமித்தம் அவனுக்கு விரோதமாகப் பேசி,

*உ மோ. உ. உக.

உ கர்த்தர் மோசேயைக்கொண்டுமாத்திரம் பேசினாரோ, எங்களைக்கொண்டும் அவர் பேசினதில்லையோ என்றார்கள்; அதைக் கர்த்தர் கேட்டார்.

ங ஆனால் மோசேயென்கிறவன் பூமியிலிருக்கிற சகல மனிதரைப்பார்க்கிலும் மகா சாதுத்தவமுள்ளவனாயிருந்தான்.

ச அப்பிலே கர்த்தர் மோசேயோடும், ஆரோனோடும், மிரியாம் என்றவளோடும், நீங்கள் மூன்றுபேரும் ஆசரிப்புக்கூடாரத்திற்குப் புறப்பட்டுப் போங்களென்றார்; மூன்றுபேரும் போனார்கள்.

டு கர்த்தர் மேகத்தூணில் இறங்கி, கூடாரத்தின் வாசலில் நின்று, ஆரோனையும் மிரியாமையும் கூப்பிட்டார்; அவர்கள் இருவரும் போனார்கள்.

சு அப்பொழுது அவர் சொன்னதாவது: நம்முடைய வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே தீர்க்கதரிசி இருந்தால், கர்த்தராகிய நாம் அவனுக்குத் தரிசனையில் நம்மை வெளிப்படுத்துவோம்; சொப்பனத்தில் அவனோடே பேசுவோம்.

எ நம்முடைய தாசனாகிய மோசே அப்படி அல்ல, *நம்முடைய வீடனைத்திலும் அவன் உண்மையுள்ளவன். *எபி. ங. உ.

அ மறைபொருளாக அல்ல, *முகமுகமாகவும் நிருட்டாந்தமாகவும் அவனோடே பேசுகிறோம்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்; இப்பொழுதும் நீங்கள் நம்முடைய தாசனாகிய மோசேக்கு விரோதமாகப் பேசப் பயப்படாதே போனதென்ன என்றார். *உ மோ. ஙங. யக. டு மோ. ஙச. ய.

கூ கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் மூண்டது; அவர் போய்விட்டார்.

ய மேகம் கூடாரத்தைவிட்டு அகன்றுபோயிற்று; இதோ மிரியாம் உறைந்த மழை

Digitized by Google

யின் வெண்மையாய்க் குஷ்டம் பிடித்திருந்தான்; ஆரோன் மிரியாமைப் பார்த்தான்; இதோ அவள் குஷ்டம்பிடித்தவள்.

ய க அப்பொழுது ஆரோன் மோசேயோடே சொன்னதாவது: ஆ, என் ஆண்டவனே, நாங்கள் பயித்தியம் கொண்டு செய்த இந்தப் பாவத்தை எங்கள்மேலே சுமத்தாதிரும்.

ய உ தன் தாயின் கர்ப்பத்திலிருந்து புறப்படுகையில், பாதி மாம்சம் அழுகி இருக்கிற சாவு பின்னையைப்போல, அவள் இராதிருப்பானாக என்றான்.

ய ங அப்பொழுது மோசே, ஆ, பராபரனே, அவளைக் குணமாக்குமென்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான்.

ய ச அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, அவள் தகப்பன் அவள் முகத்திலே காறித் துப்பினதுண்டானால், அவள் ஏழுநாள் வெட்கப்படவேண்டாமோ? அவள் *ஏழு நாள் பாளயத்திற்குப் புறம்பே அடைக்கப்பட்டிருந்து, பிற்பாடு சேர்க்கப்படக்கடவளென்றார். *ங மோ. ய. ங.

ய டு அப்படியே மிரியாம் ஏழுநாள் பாளயத்திற்குப் புறம்பே அடைக்கப்பட்டிருந்தாள்; மிரியாம் சேர்க்கப்படும்மட்டும் சனம் பயணம்போகாதிருந்தது.

ய சு பிற்பாடு சனம் ஆத்சரோத்திலிருந்து புறப்பட்டு, பாரான்வனாந்தரத்திலே பாளயம் இறங்கிற்று.

ய ங. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கும் கானான்தேசத்தைச் சோதித்துப் பார்க்கிறதற்கு மனிதரை அனுப்பு; அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு கோத்திரத்திலே ஒவ்வொரு பிரபுக்களாகிய மனிதரையே அனுப்பக்கடவீர்களென்றார்.

ங அப்படியே மோசே கர்த்தருடைய வாக்கின்படியே அவர்களைப் பாரான்வனாந்தரத்திலிருந்து அனுப்பினான்; அந்த மனிதர் எல்லாரும் இஸ்ரவேல் புத்திரரில் தலைவரானவர்கள்.

ச அவர்கள் நாமங்களாவன: ரூபன் கோத்திரத்திலே சக்கூரின் குமாரன் சம்முவா.

ரு சிமெயோன் கோத்திரத்திலே ஓரியின் குமாரன் சாப்பாத்.

ரூ யூதா கோத்திரத்திலே எப்புன்னேயின் குமாரன் காலேப்.

ரா இசஷார் கோத்திரத்திலே யோசேப்பின் குமாரன் இகேயால்.

ரி எப்பிராயீம் கோத்திரத்திலே நூனின் குமாரன் ஓசேயா.

ரீ பென்யமீன் கோத்திரத்திலே ரப்பூவின் குமாரன் பல்தி.

ரு சேபுலோன் கோத்திரத்திலே சோதியின் குமாரன் காதியேல்.

ரெ யோசேப்பின் கோத்திரத்திற்கடுத்த மனாசே கோத்திரத்திலே சூசின் குமாரன் காதி.

ரே தான் கோத்திரத்திலே கெமல்லியின் குமாரன் அம்மியேல்.

ரஈ ஆசேர் கோத்திரத்திலே மிகவேலின் குமாரன் சேத்தூர்.

ரச நவுதலி கோத்திரத்திலே ஒப்பேகியின் குமாரன் நாகெபி.

ரடு காத் கோத்திரத்திலே மாகியின் குமாரன் கூவேல்.

ரசு இவைகள் தேசத்தைச் சோதித்துப் பார்க்க, மோசே அனுப்பின மனிதரின் நாமங்கள்; நூனின் குமாரனாகிய ஓசேயாவுக்கோவென்றால், மோசே யோசுவாவென்று பேரிட்டான்.

ரஎ ¶ அவர்களை மோசே கானான்தேசத்தைச் சோதித்தறிய அனுப்பி, அவர்களோடே சொன்னதாவது: நீங்கள் இப்படித்தெற்காகப்போய், மலைத்தேசத்தில் ஏறி,

ரஅ தேசம் எப்படிக்கொத்தது? அதிலே குடியிருக்கிற சனம் பலத்ததோ? பலமற்றதோ? கொஞ்சமோ? அநேகமோ?

Digitized by Google

வசு அது குடியிருக்கிற தேசம் எப்படி இருக்கும்? அது கல்லதோ? ஆகாததோ? அது குடியிருக்கிற ஜனங்கள் எப்படியிருக்கும்? அவைகள் பாளயங்களோ? கோட்டைகளோ?

உடு நிலம் என்னவாயிருக்கும்? அது புஷ்டியோ, இளப்பமோ? அதில் விருட்சங்கள் உண்டோ, இல்லையோ? என்று பார்த்து, மனத்திடலுயிருந்து, தேசத்தின் கனிகளிலே சிலவற்றை அறுத்துக்கொண்டு வாருங்களென்றான்; அந்நாள்களோவென்றால், திராட்சங்களுடைய முதல் கனிகளின் நாள்களாயிருந்தன.

உக அவர்கள் போயேறி, சீனாய்வனாந்தரம் துவக்கி, ஆமாத்திற்குப்போகிற வழியாகிய ரேகொப்மட்டும், தேசத்தைச் சோதித்துப் பார்த்து,

உஉ தெற்கேயும் போய், எபிரோன்மட்டும் வந்தார்கள், அங்கே ஏனாக்கின் குமாரருகிய அகீமானும் சேசாயும் தல்மாயும் இருந்தார்கள்; எபிரோனேவெனில், எகிப்தின் பட்டணமாகிய சோவான் கட்டப்பட்டு ஏழு வருஷத்திற்கு முன்னே கட்டப்பட்டது.

உஊ ¶ பிற்பாடு எஸ்கோல் பள்ளத்தாக்குமட்டும் வந்து, அங்கே ஒரே திராட்சக்குலையுள்ள ஒரு கொடியை அறுத்தார்கள்; அதை இரண்டுபேர் ஒரு தடியிலே தூக்கிக்கொண்டு போனார்கள்; மாதளம்பழங்களிலும் அத்திப்பழங்களிலும் சிலவற்றை அறுத்துக்கொண்டு போனார்கள்.

உச இஸ்ரவேல் புத்திரர் அங்கே அறுத்த திராட்சக்குலையைத்தொட்டு, அவ்விடம் எஸ்கோல்பள்ளத்தாக்கு என்னப்பட்டது.

உடு அவர்கள் தேசத்தைச் சோதித்துப் பார்த்து, நாற்பதாம்நாள் முடிவிலே திரும்பி,

உஎ ¶ பாரான்வனாந்தரத்தில் இருக்கிற காதேசுக்குவந்து, மோசே ஆரோன் இஸ்ரவேல் புத்திரரின் எல்லாச் சபையினண்டையிலும் சேர்ந்து, அவர்களுக்கும் சபை அனைத்திற்கும் மறு செய்தியை அறிவித்து, அவர்களுக்குத் தேசத்தின் கனிகளைக் காண்பித்து,

உஏ அவனுக்கு விவரித்துச் சொன்னதாவது: நீர் எங்களை அனுப்பின தேசத்திற்கு நாங்கள் போய்வந்தோம்; *அது பாலும் தேனும் ஓடுகிற தேசம்தான்; இது அதினுடைய கனி. *உ மோ. ஈ. ஆ.

உஆ ஆனால் தேசத்திலே குடியிருக்கிறவனம் பலத்ததும், பட்டணங்கள் அரணிப்பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாயிருக்கின்றன; அங்கே ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்.

உஇ ஆமலேக்கியர் தென்புறமான தேசத்திலே குடியிருக்கிறார்கள்; ஏத்தியரும் எபூசியரும் ஏமோரியரும் மலைச்சீமையிலே குடியிருக்கிறார்கள்; காணானியரோவென்றால் கடலண்டையிலும் யோர்தானண்டையிலும் குடியிருக்கிறார்கள் என்றார்கள்.

உஈ அப்பொழுது காலேப் மோசேக்கு முன்பாகச் சனத்தை அமர்த்தி, ஏறவே ஏறிப்போய், அதைச் சுதந்தரிக்கக்கடவோம்; ஏனெனில் அதை நாம் கட்டிக்கொண்டு செயிக்கவே செயிப்போமென்றான்.

உக அவனோடேகூட ஏறிப்போய் வந்த மனிதரோவென்றால், நாம் அந்தச் சனத்திற்கு எதிராக ஏறிப்போகக்கூடாது; ஏனெனில் அது நம்மைப்பார்க்கிலும் பலத்திருக்கின்றதென்று சொல்லி,

உஉ தாங்கள் சோதித்துப்பார்த்த தேசத்திற்கு இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அபகீர்த்தியைப் பிறக்கப்பண்ணி, நாங்கள் சோதித்தறியும்படிக்கு, கடந்துவந்த அந்தத் தேசம் தன் குடிகளைப் பட்சிக்கிற தேசமானது; நாங்கள் அதிலே கண்ட சனமெல்லாம் உயர்ந்த மனிதர்.

உஊ அங்கே இராட்சதர் சந்ததியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம்; நாங்கள் எங்கள் பார்வைக்குக் கிரிகளைப்போல இருந்தோம்; அப்படியே அவர்கள் பார்வைக்கும் இருந்தோம் என்றார்கள்.

Digitized by Google

சக. அதிகாரம்.

அப்பொழுது சபையெல்லாம் எழும்பிக் கூப்பிட்டு, சனம் அன்று இராத்திரி அழுது கொண்டிருந்தது.

உ இஸ்ரவேல் புத்திரர் எல்லாரும் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்தார்கள்; சபையெல்லாம் அவர்களோடே சொன்னதாவது: எகிப்துதேசத்திலே செத்துப்போனேமாகில் தாவினே; அல்லது இந்த வனாந்தரத்திலே காங்கள் செத்தால் தாவினே.

ஈ நாங்கள் பட்டயத்தால் மடியும்படிக்கும், எங்கள் பெண்சாதிகளும் குழந்தைகளும் கொள்ளையாகும்படிக்கும், கர்த்தர் எங்களே அந்தத் தேசத்திற்குக் கொண்டுபோகிறதென்ன? எகிப்திற்குத் திரும்புகிறது எங்களுக்கு வாசி அல்லவோ என்று,

ச ஒருவரோடொருவர், ஒரு தலைவனே வைத்து, எகிப்திற்குத் திரும்புவோம் வாருங்களென்று சொல்லிக்கொண்டார்கள்.

ஒ அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரருடைய சபைக்கூட்டம் எல்லாவற்றிற்குமுன்பாகவும் முகம்குப்புறவிழுந்தார்கள்.

ஓ தேசத்தைச் சோதித்துப்பார்த்தவர்களில் நூனின் குமாரனாகிய யோசுவாவும், எப்புன்னேயின் குமாரனாகிய காலேபும், தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

எ இஸ்ரவேல் புத்திரரின் சபையோடெல்லாம் சொன்னதாவது: நாங்கள் சோதித்துப்பார்க்கக் கடந்துவந்ததேசம் மகா நல்லதேசம்.

அ கர்த்தர் நம்மேலே பிரியமாயிருந்தால், அவர் நம்மைப் பாலும் தேனும் ஓடும் தேசமாயிய அந்தத் தேசத்திலே கொண்டுபோய் அதை நமக்குக் கொடுப்பார்.

கூ கர்த்தருக்கு விரோதமாகமாத்திரம் கலகம்பண்ணீர்களாக; *நீங்கள் அந்தத் தேசத்தின் சனத்திற்கும் பயப்படாதிர்களாக; ஏனெனில் நமக்கு அவர்கள் அப்பத்திற்குச் சரி; அவர்களுடைய நிழல் அவர்கள்மேலிருந்து விலகிற்று; நம்மோடோவென்றால் கர்த்தர் இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படாதிர்களாக என்றார்கள். *இ மோ. உவ. ந.

ஙி அப்பொழுது சபையெல்லாம் அவர்களைக் கல்லெறியவேண்டுமென்றது; ஆனால் *கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லாருக்கும் முன்பாகக் காணப்பட்டது. *உ மோ.வக.வ.

ஙக ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: எந்தமட்டும் இந்தச்சனம் நமக்குக் கோபம் உண்டாக்கும்? எந்தமட்டும் அதகாம் அதன் நடுவிலே செய்த சகல அடையாளங்களைக் கண்டும், நம்மை விசுவாசியாதேபோம்?

ஙஉ நாம் அதைப் பெருவாரிக்காய்ச்சலால் அடித்து, சுதந்தரத்திற்குப் புறம்பாகிப்போட்டு, *உன்னே அதைப்பார்க்கிலும் பருத்ததும் பலத்ததுமான சாதி ஆக்குவோமென்றார். *உ மோ. நஉ. ஐ.

ஙந மோசே கர்த்தரோடே சொன்னதாவது: *அப்பொழுது எகிப்தர் அதைக் கேட்பார்கள்; ஏனெனில் உம்முடைய வல்லமையிலுலே இந்தச் சனத்தை அவர்கள் நடுவிலிருந்து எதிவரப்பண்ணினீர்.
*உ மோ. நஉ. ஐ.

ஙச ஆகையால் கர்த்தராகிய தேவரீர் இந்தச் சனத்தின் நடுவே இருக்கிறதையும், கர்த்தராகிய தேவரீர் முகமுகமாய்த் தரிசனை ஆகிறதையும், உம்முடைய மேகம் இவர்கள்மேல் நிற்கிறதையும், தேவரீர் பகலில் மேகத்தூணிலும் இரவில் அக்கினித்தூணிலும் இவர்கள்முன் நடக்கிறதையும், கேட்டிருக்கிற இந்தத் தேசத்தின் குடிகளோடே அவர்கள் என்ன சொல்லுவார்கள்.

ஙடு ¶ இந்தச் சனத்தை ஒரே மனிதனைப்போலக் கொன்றீராகில், அப்பொழுது உம்முடைய கீர்த்தியைக் கேட்டிருக்கிற புறச்சாதியார்,

ஙசு கர்த்தர் அந்தச்சனத்திற்கு ஆணையிட்டிருந்த தேசத்திலே அதைக் கொண்டி

போய் விடக்கூடாதே போனபடியினாலே, அவர்களை வனாந்தரத்திலே கொலைசெய்தார் என்பார்கள்.

ஙஎ இப்பொழுதும் *கர்த்தர் நீடியசாந்தமும் மகா கிருபையுமுள்ளவரென்றும், அவர் அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர், அவர் குற்றமுள்ளவனைக் குற்றம்அற்று நீக்கவிட்டாமல், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலே மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவரென்றும், நீர் சொன்னபடியே, *உ மோ. ந.ச. சு, எ.

ஙஅ தண்டவருடைய பலம் பெரிதாய் இருக்கட்டுமே.

ஙசு உம்முடைய கிருபையினுடைய மகத்துவத்தின்படியேயும், நீர் எகிப்துதுவக்கி இவ்விடம்மட்டு இந்தச் சனத்திற்கு மன்னித்துவந்ததின்படியேயும், இந்தச் சனத்தின் அக்கிரமத்தை மன்னியுமே என்றான்.

ஙஏ ¶ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது: உன் வார்த்தையின்படியே மன்னித்தோம்.

ஙந ஆனால் பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையினாலே நிறையப்படுமென்று நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோம்.

ஙஞ அதேதெனில் நமது மகிமையையும் நாம் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த நம்முடைய அடையாளங்களையும் கண்டிருந்தும், நம்முடைய சத்தத்திற்குக் கீழ்ப்படியாமல், இதனோடே பத்துமுறை நம்மைப் பரிட்சைபார்த்த மனிதரில் ஒருவரும்,

ஙட *நாம் தங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தைக் காண்பதில்லை; நமக்குக் கோபம் உண்டாக்கினவர்களில் ஒருவரும் அதைக் காண்பதில்லை. *ச மோ. உசு. சுடு. சங். சுடி. ஙக.

ஙச நம்முடைய தாசனுடைய காலேபிடத்திலோவென்றால், வேறே ஆவி இருக்கிறபடியினாலும், அவன் நம்மை உத்தமமாய்ப் பின்பற்றிவந்தபடியினாலும், நாம் அவனை அவன் போய்வந்த தேசத்திலே வந்து சேரப்பண்ணுவோம்; அவன் வித்தார் அதைச் சுதந்தரித்துக்கொண்டிருப்பார்கள்.

ஙடி ஆமலேக்கியரும் கானானியரும் பள்ளத்தாக்கிலே குடியிருக்கிறபடியினாலே, நீங்கள் நாளைத் திரும்பிக்கொண்டு, நாணல் கடலுக்குப் போகிறவழியாகிய வனாந்தரத்திற்குப் பயணம்பண்ணுங்களென்றார்.

ஙசு ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

ஙத நமக்கு விரோதமாய் முறுமுறுக்கிற இந்தப் பொல்லாத சபையோடே எந்தமட்டும் இருப்போம்? இஸ்ரவேல் புத்திரர் நமக்கு விரோதமாய் முறுமுறுக்கிற முறுமுறுப்புகளைக் கேட்டோம்.

ஙஅ நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் நம்முடைய செவிகள் கேட்கச் சொன்னபிரகாரமாக உங்களுக்குச் செய்வோம் என்கிறதை நம்முடைய சீவனைக்கொண்டு சொல்லுகிறோமென்று கர்த்தர் உரைக்கிறார்.

ஙசு இந்த வனாந்தரத்தில் உங்கள் பிரேதங்கள் விழும்; உங்களில் இருபதுவயதுமுதல்கொண்டு மேல்த்தரமாயிருந்து, உங்களுடைய எல்லாத் தொகைக்குள்ளும் எண்ணப்பட்டு, நமக்கு விரோதமாய் முறுமுறுத்திருக்கிற அனைவரின் பிரேதங்களும் தானே.

ஙஐ எப்புன்னேயின் குமாரன் காலேபையும் நூனின் குமாரன் யோசுவாவையும் தவிர, மற்றவர்களாகிய நீங்கள் நாம் உங்களைக் குடிஏற்றுவோமென்று நம்முடைய காரத்தை ஏறெடுத்த தேசத்திலே வராதிருப்பீர்கள்.

ஙக கொள்ளையாவார்களென்று நீங்கள் சொன்ன உங்கள் குழந்தைகளையோவென்றால், நாம் அதிலே வரப்பண்ணுவோம்; அவர்கள் நீங்கள் அசட்டைபண்ணின தேசத்தை அறிந்துகொள்ளுவார்கள்.

Digitized by Google

ஈஉ உங்கள் பிரேதங்களோவெனில், இந்த வனாந்தரத்திலே விழும்.

ஈஈ அவைகள் வனாந்தரத்திலே விழுந்து தீரும்மட்டும், உங்கள் பின்னிகன் நாற்பது வருஷம் வனாந்தரத்திலே மேய்ப்பராயிருந்து, நீங்கள் சோரம்போனதைச் சுமப்பார்கள்.

ஈசு நீங்கள் தேசத்தைச் சோதித்துப்பார்த்த நாற்பதுநாளுடைய இலக்கத்தின்படியே நீங்கள் நாற்பதுவருஷம் உங்கள் அக்கிரமங்களைச் சுமந்து, நம்முடைய உடம்படிக்கைக்கு வந்த மாறுதலை உணருவீர்கள்; ஒவ்வொருநாள் ஒவ்வொரு வருஷமாகத்தானே.

ஈடு கர்த்தராகிய நாம் இதைச் சொன்னோம்; நமக்கு விரோதமாய்க் கூட்டம்கூடின இந்தப் பொல்லாத சபைக்கெல்லாம் இப்படியே செய்வோம்; இந்த வனாந்தரத்திலே சரியாவார்கள்; இங்கே சாவார்களென்று சொல்லென்றார்.

ஈசு தேசத்தைச் சோதித்துப்பார்க்க மோசேயால் அனுப்பப்பட்டு, திரும்பி வந்து, தேசத்திற்குத் துர்க்கீர்த்தியை உண்டாக்கி,

ஈள சபையையெல்லாம் அவனுக்கு விரோதமாய் முறுமுறுக்கப்பண்ணின அந்த மனிதர் கர்த்தருக்குமுன்பாக வாதையினாலே செத்தார்கள்.

ஈஅ தேசத்தைச் சோதித்துப்பார்க்கப்போன அந்த மனிதரில் நூனின் குமாரன் யோசுவாவும் எப்புன்னேயின் குமாரன் காலேபுமோவெனில், உயிரோடிருந்தார்கள்.

ஈசூ ¶ மோசே இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் அனைவரோடும் சொன்னபிற்பாடு சனம் மிகவும் துக்கித்து,

சஅ அதிகாலமே எழுந்திருந்து, இதோ நாங்கள் கர்த்தர் சொன்ன இடத்திற்கு ஏறிப்போவோம்; ஏனென்றால் பாவம் செய்தோமென்று சொல்லி, பர்வதத்தின் கொடுமுடியில் ஏறினார்கள்.

சச மோசேயோவெனில் சொன்னதாவது: நீங்கள் இப்படிக் கர்த்தருடைய வார்த்தையை மீறுவானேன்? அது உங்களுக்கு வாய்க்காது.

சஉ நீங்கள் உங்கள் சத்துருக்களுக்கு முன்பாக முறிய அடிக்கப்படாதபடிக்கு ஏறாதிருப்பீர்களாக; ஏனெனில் கர்த்தர் உங்கள் நடுவில் இரார்.

சஈ ஏனென்றால் ஆமலேக்கியரும் கானானியரும் அங்கே உங்களுக்கு முன்னே இருக்கிறார்கள்; பட்டயத்தினால் விழுவீர்கள், ஏனெனில் நீங்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கினபடியினாலே, கர்த்தர் உங்களோடிருப்பதில்லை என்றான்.

சள அவர்களோவென்றால் பர்வதத்தின் கொடுமுடியில் ஏறத் துணிவாய் எதிர்த்தார்கள்; ஆனால் கர்த்தருடைய உடம்படிக்கையின் பெட்டியும் மோசேயும் பாளயத்தைவிட்டு அசைந்ததில்லை.

சடு ¶ அப்பொழுது அந்த மலைத்தேசத்திலே குடியிருக்கிற ஆமலேக்கியரும் கானானியரும் இறங்கிவந்து, அவர்களை முறியடித்து, அவர்களை ஓர்மாமட்டும் துரத்தி நறுக்கினார்கள்.

யரு. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களுக்குக் கொடுக்கும் உங்கள் குடியிருப்பாகிற தேசத்திலே நீங்கள் வந்து,

ஈ விசேஷித்த பொருத்தனைக்காகிலும், உச்சாய மனதினாலாகிலும், உங்கள் பண்டிகைகளிலே செலுத்தவதற்காகிலும், கர்த்தருக்கு மாடுகளிலாவது ஆடுகளிலாவது சர்வாங்கதகனபலியை, அல்லவென்று வேறொரு பலியைக் கர்த்தருக்கு ஆற்றிய வாசனையாகும் தகனமாகப் பலியிடும்பொழுது,

ச தன் காணிக்கையைக் கர்த்தருக்குச் செலுத்துகிறவன், சர்வதகனமும் அல்லது

வேறே பலியுமாகிய ஒரு ஆட்டுக்குட்டிக் காக, மரக்காலிலே பத்தில் ஒருபங்கான தம் கால்படி எண்ணெயில் பிசைந்த தான மெல்லியமாவின் காணிக்கையைச் செலுத்தக்கடவன்.

ரு ஊற்றுதலாகக் கால்படி திராட்சப்பழ இரசத்தையும் படைப்பாயாக.

சு ஆட்டுக்கடாவாயிருந்ததேயானில், ரீ பத்தில் இரண்டுபங்கானதும் படியில் மூன்றுபங்காகிய எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லியமாவின் காணிக்கையையும்,

எ ஊற்றுதலாகப் படியில் மூன்றுபங்காகிய திராட்சப்பழ இரசத்தையும் கர்த்தருக்கு ஆற்றிய வாசனையாகச் செலுத்துவாயாக.

அ ரீ விசேஷித்த பொருத்தனைக்காகிலும், சமாதானபலிக்காகிலும், ஒரு காளை எருதைக் கர்த்தருக்குச் சர்வாங்கதகனமாக, அல்லது வேறே பலியாகச் செலுத்திலுமே யாலும்,

கூ ரீ அதனோடே பத்தில் மூன்றுபங்கானதும் அரைப்படி எண்ணெயிலே பிசைந்ததுமான மெல்லியமாவின் காணிக்கையையும்,

ஐ ஊற்றுதலாக அரைப்படி திராட்சப்பழ இரசத்தையும், கர்த்தருக்காற்றிய வாசனையாகும் தகனமாகப் படைக்கக்கடவாய்.

ஙை இந்தத் திட்டமாக ஒவ்வொரு மாட்டிற்காகவும், அல்லது ஆட்டுக்கடாவுக்காகவும், அல்லது ஆட்டுக்குட்டி வெள்ளாட்டுக்குட்டிக்காகவும் படைப்பாயாக.

ரூ இப்படி நீங்கள் பலி இடுகிறவைகளின் இலக்கத்திற்குத் தக்கதாய் ஒவ்வொன்றிற்காகச் செய்யக்கடவீர்கள்.

ரூ தேசத்திலே பிறந்தவனெல்லாம் கர்த்தருக்காற்றிய வாசனையாகும் தகனத்தைச் செலுத்துகையில் இப்படிச் செய்யவேண்டும்.

ரூ ஒரு பரதேசி உங்களிடத்திலே தங்கி அல்லது உங்கள் நடுவே உங்கள் தலைமுறைகளுக்குள்ளே குடியிருந்து, கர்த்தருக்காற்றிய வாசனையாகும் தகனத்தைச் செலுத்தப்போனால், நீங்கள் செய்கிறபடியே அவனும் செய்யவேண்டும்.

ரூ சபையாகிய உங்களுக்கும் உங்களில் தங்குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணம் இருக்கவேண்டுமென்பது உங்கள் தலைமுறைகளில் நித்தியகட்டளையாயிருக்கக்கடவது; கர்த்தருக்குமுன்பாகப் பரதேசி உங்களைப்போல இருக்கவேண்டும். *உ மோ. ரூ உ. சரூ.

ரூ உங்களுக்கும் உங்களிடத்தில் தங்குகிற பரதேசிக்கும் ஒரே பிரமாணமும் ஒரே நியாயமும் இருக்கக்கடவதென்று சொல்லென்றார்,

ரூ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ரூ ரீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசிச் சொல்லவேண்டியதேதெனில், நாம் உங்களை அழைத்துப்போகிற தேசத்திலே நீங்கள் வந்து.

ரூ தேசத்தின் அப்பத்திலே புசிக்கையில், கர்த்தருக்கு ஏறெடுக்கும் காணிக்கையைப் படைக்கக்கடவீர்கள்.

உரூ உங்கள் பிசைந்தமாவிலே முதல் பலனுகிய ஒரு அரிசத்தை ஏறெடுத்துப் படைப்பீர்களாக; போரடிக்கிற களத்திலே படைப்பை ஏறெடுக்கிறதுபோல அதை ஏறெடுப்பீர்களாக.

உரூ இப்படி உங்கள் தலைமுறைகளிலே கர்த்தருக்கு உங்கள் பிசைந்தமாவின் முதல்பலனிலே படைப்பை ஏறெடுத்துக் கொடுக்கக்கடவீர்கள்.

உஉ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்ன இந்த எல்லாக் கற்பனைகளின்படியேயும்,

உரூ கர்த்தர் மோசேயைக்கொண்டு கற்பனைதந்த நாள்முதல்கொண்டு அவர் உங்களுக்கும் உங்கள் தலைமுறைகளுக்கும் கற்பித்த எல்லாவற்றின்படியேயும் நீங்கள் செய்யாமல், ஒரு தப்பிதம் பண்ணினீர்களானால்,

Digitized by Google

உச அப்பொழுது சபையின் கண்களுக்கு மறைவாக யாதொன்றைத் தப்பிதமாகச் செய்யப்பட்டதுண்டாகில், சபையெல்லாம் கர்த்தருக்கு ஆற்றிய வாசனைக்கென்று சர்வாங்கதகனமாக மாடுகளில் ஒரு காளை எருதையும், முறைமை நியாயத்தின்படி இருக்கிற அதின் காணிக்கையையும், அதின் ஊற்றுதலியும், பாவம்போக்கும் பலியாக ஒரு வெள்ளாட்டுக்கடாவையும் செலுத்தவதாக.

உடு அதினால் ஆசாரியன் இஸ்ரவேல் புத்திரரின் சபை அனைத்திற்காகவும் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவர்களுக்கு மன்னிக்கப்படும்; ஏனெனில் அது ஒரு தப்பிதமாயிருந்தது; அவர்கள் அதின்நிமித்தம் கர்த்தருக்குத் தகனமான தங்கள் படைப்பையும் பாவம்போக்கும் தங்கள் பலியையும் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவந்தார்களே.

உசு ஆகையால் அது இஸ்ரவேலின் புத்திரரின் சபையனைத்திற்கும் அவர்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் மன்னிக்கப்படும்; ஏனெனில் சனத்திற்கெல்லாம் அது தப்பிதத்தினாலே வந்தது.

உள ¶ ஒரே ஆத்துமா தப்பிதத்தினாலே பாவம் செய்தானேயாகில், ஒருவயதான வெள்ளாட்டைப் பாவம்போக்கும்பலியாகச் செலுத்தவானாக.

உஎ அப்பொழுது கர்த்தருக்குமுன்பாக அவன் பாவத்தை நீக்கும்படிக்கு, ஆசாரியன் தப்பிதத்தினாலே பாவம்செய்த அந்த ஆத்துமாவுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கக்கடவன்; அப்பொழுது அவனுக்கு மன்னிக்கப்படும்.

உஙு தப்பிதம் செய்தவனுக்காக இஸ்ரவேல் புத்திரராகிய உங்களில் பிறந்தவனுக்கும் உங்களுக்குள்ளே தங்குகிற பரதேசிக்கும் ஏக நியாயப்பிரமாணம் இருப்பதாக.

ஊ ¶ ஆனால் தேசத்திலே பிறந்தவர்களிலாகிலும் பரதேசிகளிலாகிலும் சரி, எந்த ஆத்துமா ஒன்றை கையால் யாதொன்று செய்தாலோ, அவன் கர்த்தரைத் தூஷணித்தான்; அந்த ஆத்துமா தன் சனத்தில் இராதபடிக்கு அறுப்புண்டு போகவேண்டும்.

ஊஉ ஏனெனில் கர்த்தரின் வார்த்தையை அசட்டைபண்ணி, அவர் கற்பனையை முறித்தவிட்டான்; அப்படிப்பட்ட ஆத்துமா அறுப்புண்ணவே அறுப்புண்டு போகவேண்டும்; அவன் அக்கிரமம் அவன்மேல் இருக்குமென்று சொல்லென்றார்.

ஊஇ ¶ இஸ்ரவேலின் புத்திரர் வனாந்தரத்தில் இருக்கையில், ஓய்வுநாளில் விறகுகளைப் பொறுக்குகிற ஒரு மனிதனைக் கண்டு பிடித்தார்கள்.

ஊஈ அவனை விறகுகளைப் பொறுக்குகிறவனாகக் கண்டுபிடித்தவர்கள், அவனை மோசே ஆரோன் என்றவர்களண்டைக்கும் சபையனைத்தண்டைக்கும் கொண்டுவந்தார்கள்.

ஊஉ *அவனுக்குச் செய்யவேண்டியது இன்னதென்று தீர்க்கமான உத்தரவு இல்லாதபடியினாலே, அவனைக் காவலிலே வைத்தார்கள். *ஊ மோ. உச. ஙஉ.

ஊஙு கர்த்தர் மோசேயுடனே, அந்த மனிதன் கொலையுண்ணவே கொலையுண்ணக்கடவன்; சபையெல்லாம் அவனைப் பாளயத்திற்குப் புறம்பே கல்லெறிவதாக என்றார்.

ஊஊ அப்பொழுது சபையெல்லாம் கர்த்தர் மோசேக்குக் கற்பித்தபடியே, அவனைப் பாளயத்திற்குப்புறம்பே கொண்டுபோய், கல்லெறிந்தார்கள்; அவன் செத்தான்.

ஊஎ ¶ பின்னையும் கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

ஊஅ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்கள் தங்கள் தலைமுறைகளிலே தங்களுக்குத் *தங்கள் வஸ்திரங்களின் ஓரங்களிலே தொங்கலை உண்டாக்கி, ஓரத்தின் தொங்கலிலே இளநீலமான கயிற்றைப் போடவேண்டும் என்று அவர்களோடே சொல். *இ மோ. சூ. ஆ: ஊஉ. ஙஉ. மத். உஈ. இ.

ஊசூ நீங்கள் பின்பற்றிச் சோரம்போகிற உங்கள் இருதயமும் உங்கள் கண்களும்

போகும்போக்கை நோக்கிப்போகாமல், அந்தக் கயிற்றைப்பார்த்து, கர்த்தரின் கற்பனைகளை எல்லாம் நினைத்து, அவைகளின் படியே செய்யும்படிக்கு, அது அந்தத் தொங்கலில் உங்களுக்கு இருக்கவேண்டும்.

சுஎ நீங்கள் நம்முடைய கற்பனைகளையெல்லாம் நினைத்து, அவைகளின்படியே செய்து, உங்கள் பராபரனுக்குப் பரிசுத்தராயிருக்கிறதற்காகத்தானே.

சுக நாம் உங்களுக்குப் பராபரனாயிருக்கும்படிக்கு, உங்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உங்கள் பராபரனாயிருக்கிற கர்த்தர்; நாம் உங்கள் பராபரனாயிருக்கிற கர்த்தரென்று சொல்லென்றார்.

ஙசூ. அதிகாரம்.

இலேவிக்குப் பிறந்த கோகாத்திற்குக் குமாரனான இத்செயாரின் மகன் *கோராகோவென்றால், எலியாபின் குமாரராகிய தாத்தானையும், அபீராமையும், ரூபன் புத்திரரில் பேலேத்தின், குமாரனாகிய, ஓனையும் கூட்டிக்கொண்டு, *ச மோ. உசூ. சூ. யூதா. ஙக.

உ இஸ்ரவேல் புத்திரரில் சபைக்குத் தலைவரும் சபையிலே அழைக்கப்பட்டவர்களும் பேர்பெற்ற மனிதருமாகிய இருநூற்றைம்பதுபேரோடும்கூட மோசேக்கு முன்பாக எழும்பி,

ஊ மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம்கூடி, அவர்களுடனே, நீங்கள் மிஞ்சிச் செய்கிறீர்கள்; ஏனென்றால் சபையார் எல்லாரும் ஏகமாய்ப் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே, பின்னை ஏன் உங்களைக் கர்த்தருடைய சபையின்மேல் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்.

சு ¶ மோசே இதைக் கேட்டபொழுது, *முகம்குப்புறவிழுந்தான். *ச மோ. ஙச. டு.

டு பிற்பாடு அவன் கோராகோடும் அவனுடைய எல்லாக் கூட்டத்தோடும் பேசிச் சொன்னதாவது: நாளைக்குக் கர்த்தர் தமமுடையவன் யாரென்றும், தம்மண்டையிலே சேரத் தாம் கட்டளையிட்ட பரிசுத்தவான் யாரென்றும், அறியப்பண்ணுவார்; அப்பொழுது எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ, அவனைத் தம்மண்டையில் சேரக் கட்டளையிடுவார்.

சூ ஒன்று செய்யுங்கள்; கோராகே, அவனுடைய எல்லாக் கூட்டமுமானவர்களே, நீங்கள்தூபகலசங்களை எடுத்துக்கொண்டு,

எ நாளைக்கு அவைகளில் அக்கினிபோட்டு, அவைகளில் கர்த்தருக்குமுன்பாகத்தூபவர்க்கம் போடுங்கள்; அப்பொழுது கர்த்தர் எவனைத் தெரிந்துகொள்ளுவாரோ, அவன் பரிசுத்தவானாயிருப்பான்; இலேவியின் புத்திரராகிய நீங்களே மிஞ்சிப்போகிறீர்கள் என்றான்.

அ பின்னையும் மோசே கோராகோடே சொன்னதாவது: இலேவியின் புத்திரரே, கேளுங்கள்.

கூ கர்த்தருடைய வாசஸ்தலத்தின் பணிவிடைவேலையைச் செய்யவும், சபையாரின் முன்னே அவர்களுக்காகச் சேவிக்கவும், உங்களைத் தம்மண்டையிலே சேரப்பண்ணும்படிக்கு, இஸ்ரவேலின் பராபரன் இஸ்ரவேல் சபையில் உங்களைப் பிரித்து எடுத்ததும்,

ஐ இப்படியே அவர் உன்னையும் உன்னோடேகூட இலேவியின் புத்திரராகிய உன்னுடைய எல்லாச் சகோதரரையும் சேரப்பண்ணினதும், உங்களுக்குக் கொஞ்சமான காரியமோ? இப்பொழுது ஆசாரியபட்டத்தையும் தேடுகிறீர்களோ?

ஙக *ஆகையால் நீயும் உன் கூட்டத்தார் அனைவரும் கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டம்கூடினீர்கள்; ஆரோனுக்கு விரோதமாக நீங்கள் முறுமுறுக்கிறதற்கு அவன் எம்மாத்திரமென்றான். *உ மோ. ஙசூ. எ.

ஙஉ ¶ பிற்பாடு மோசே எலியாபின் குமாராகிய தாத்தானையும் அபீராமையும் அழைத்தனுப்பினான்; ஆனால் அவர்கள் சொன்னதாவது: நாங்கள் வருகிறதில்லை.

ய௫ நீ எங்களை இந்த வனாந்தரத்திலே கொன்றுபோட, எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணினது கொஞ்சமானகாரியமென்று சொல்லி, எங்கள்மேலே துரைத்தனமும்பண்ணவே பண்ணுவாயோ?

யச நீ எப்படி எங்களைப் பாலும் தேனும் ஓடுகிற ஒரு தேசத்திற்குக் கொண்டுவந்து, எங்களுக்கு நிலங்களையும் திராட்சத்தோட்டங்களையும் சுதந்தரமாகக் கொடுத்தாய்? இந்த மனிதருடைய கண்களைப் பிடுங்குவாயோ? நாங்கள் வருகிறதில்லை என்றார்கள்.

யஞ அப்பொழுது மோசே மிகுதியும் கோபம் மூண்டவனாய், கர்த்தருடனே, அவர்கள் காணிக்கையைப் பாராதிருப்பீராக; நான் அவர்களுடையதில் ஒரு கழுதையையாகிலும் எடுத்துக்கொண்டதும் இல்லை; அவர்களில் ஒருவனுக்குப் பொல்லாப்புச் செய்ததும் இல்லை என்றான்.

யசு பிற்பாடு மோசே கோராகோடே சொன்னதாவது: நீயும் உன்னுடைய எல்லாக் கூட்டத்தாருமாய் நாளைக்குக் கர்த்தருக்கு முன்பாக வந்திருங்கள்; நீயும் அவர்களும் ஆரோனுமாய்த்தானே.

யள நீங்கள் அவரவர் தங்கள் தூபகலசத்தை எடுத்து, அவைகள்மேலே தூபவர்க்கத்தைப்போட்டு, அவரவர் தங்கள் தூபகலசங்களை இருநூற்று ஐம்பது தூபகலசங்களாகக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவாருங்கள்; நீயும் ஆரோனும் ஒவ்வொருவன் தன்தன் தூபகலசத்தைக் கொண்டுவாருங்கள் என்றான்.

யஅ ¶ அப்படியே அவரவர் தங்கள் தூபகலசங்களை எடுத்து, அவைகளில் அக்கினியையும் தூபவர்க்கத்தையும்போட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக வந்துநின்றார்கள்; மோசேயும் ஆரோனும் அங்கே நின்றார்கள்.

யக கோராகோவெனில் இவர்களுக்கு விரோதமாகச் சபையையெல்லாம் ஆசரிப்புக்கூடாரவாசலுக்குமுன்பாகக் கூடிவரப்பண்ணினான்; *ஆலால் கர்த்தருடைய மகிமை சபைக்கெல்லாம் காணப்பட்டது. *சமோ. யச. ய.

உய ¶ கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசி,

உக இந்தச் சபையின் நடுவிலிருந்து பிரிந்துபோங்கள்; அசுப்பிலே அவர்களை அதமாக்குவோமென்றார்.

உஉ அப்பொழுது அவர்கள் முகம்குப்புறவிழுந்து, சகல மாம்சத்தினுடைய ஆவிகளுக்கும் தேவனுடைய பராபரனே, ஒரு மனிதன் பாவம்செய்யும் அளவில் சபையின்மேல் எல்லாம் கடுங்கோபம் அடைவீரோ என்றார்கள்.

உங அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே,

உச கோராகு, தாத்தான், அபீராம் குடியிருக்கிற ஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப் போங்களென்று சபையோடே சொல்லென்றார்.

உஇ ¶ அப்பொழுது மோசே எழுந்திருந்து, தாத்தான் அபீராம் என்றவர்களிடத்திலே போனான்; இஸ்ரவேலின் மூப்பர் அவர்களுக்குப் பின்சென்றார்கள்.

உசு அவன் சபையுடனே, இந்த ஆகாத மனிதருடைய எல்லாப் பாவங்களினும் நீங்கள் வாரிக்கொள்ளப்படாதபடிக்கு, அவர்கள் கூடாரங்களைவிட்டு விலகி, அவர்களுக்குண்டானது ஒன்றையும் தொடாதேபோங்கள் என்றான்.

உஎ அப்படியே அவர்கள் கோராகு, தாத்தான், அபீராம் குடியிருந்த ஸ்தலத்தைச் சுற்றிலுமிருந்து விலகிப்போனார்கள்; தாத்தானும் அபீராமுமோவென்றால், வெளியே வந்து, தங்கள் பெண்சாதி பிள்ளைகள் குமாரர்களோடும் தங்கள் கூடாரங்களின் வாசல்படியிலே நின்றுகொண்டார்கள்.

உஅ அப்பொழுது மோசே சொன்னதாவது: இக்தக் கிரியைகளையெல்லாம் செய்ய, கர்த்தர் என்னை அனுப்பினாரென்றும், அவைகளை நான் என் மனதின்படியே செய்யவில்

லையென்றும், நீங்கள் எதினாலே அறிவீர்க ளென்றால்,

உசு இவர்கள் சகலமனிதரும் சாதிறபடி செத்து, சகலமனிதரும் விசாரிக்கப்படு திறபடி விசாரிக்கப்பட்டால், கர்த்தர் என் னை அனுப்பினதில்லை.

உஎ கர்த்தர் புதியகாரியத்தைச் சிருஷ்டிப் பதினாலே, பூமி தன் வாயைத்திறந்து, அவர் கள் உயிரோடே பாதாளத்தில் இறங்க, அ வர்களையும் அவர்களுக்குண்டான பாவை யும் விழுங்கிப்போட்டதேயாதலால், இந்த மனிதர் கர்த்தரைத் தூஷணித்தார்கள் என் திறதை அறிவீர்கள் என்றான்.

உக ¶ அவன் இந்த வார்த்தைகளையெல் லாம் சொல்லித் தீர்ந்தபொழுது சம்பவித் ததேதெனில், *அவர்கள் கீழிருந்த பூமி பினத்து, *டு மோ. ய்க. சூ.

உஉ பூமி தன் வாயைத்திறந்து, அவர்களை யும் அவர்கள் வீடுகளையும் கோருகுக்கிருந்த எல்லா மனிதனையும் எல்லா ஆஸ்திையயும் விழுங்கிவிட்டது.

உந அவர்கள் தங்களுக்குண்டானவை எல் லாவற்றோடும்கூட உயிரோடே பாதாளத் தில் இறங்கினார்கள்; பூமி அவர்கள்மேலே மூடிக்கொண்டது; இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்தார்கள்.

உச அவர்களைச் சுற்றிலும் இருந்த இஸ்ர வேலர் எல்லாரும், அவர்கள் கூக்குரலிக் கேட்டு, பூமி நம்மையும் விழுங்குமோ என் று ஓடிப்போனார்கள்.

உடு அக்கினியும் கர்த்தரிடத்திலிருந்து பு றப்பட்டு, தூபம் காட்டின இருநூற்று ஐம் பதுபேரையும் பட்சித்தது.

உகூ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உஎ அக்கினிக்குள் அகப்பட்ட தூபகல சங்களை எடுத்து, அவைகளிலிருக்கிற அக் கினியை அப்பாலே கொட்டிப்போட, ஆ சாரியனான ஆரோனின் குமாரனாகிய எலே யாசாருக்குச் சொல்; ஏனெனில் அவை கள் பரிசுத்தமாயின.

உஅ தங்கள் ஆத்துமாக்களுக்கு விரோதம் பண்ணின அந்தப் பாவிகளின் தூபகலசங் களைப் பலிபீடத்தை மூடத்தக்க தட்டை யான தகடுகளாக அடிக்கக்கடவர்கள்; ஏ னெனில் அவர்கள் கர்த்தருக்குமுன்பாக, அவைகளைக் கொண்டுவந்ததினாலே அவை கள் பரிசுத்தமாயின; அவைகள் இஸ்ர வேல் புத்திரருக்கு அடையாளமாவதாக என்றார்.

உக அப்படியே ஆசாரியனாகிய எலேயா சார் வெந்துபோனவர்கள் கொண்டுவந்தி ருந்த வெண்கலத் தூபகலசங்களை எடுத்து,

உஙு *ஆரோனின் வித்தல்லாத ஒரு அந்நி யன் கர்த்தருக்குமுன்பாகத் தூபம்காட்டு திறதற்குச் சேராதபடிக்கும், கோருகைப் போலும் அவன் கூட்டத்தாரைப்போலும் இராதபடிக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கு ஞாபகக்குறியாக, அவைகளைக் கர்த்தர் மோ சேயைக்கொண்டு தனக்குச் சொன்னபடி யே பலிபீடத்தை மூடும் தகடுகளாக அடிப் பித்தான். *ச மோ. ந. ய.

உச ¶ மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் மோசேக்கும் ஆரோனுக் கும் விரோதமாக முறுமுறுத்து, கர்த்தரின் சனத்தைக் கொன்றுபோட்டீர்கள் என்றார் கள்.

உஉ சபை மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூடுகையில் சம்பவித்ததே தென்றால், அவர்கள் ஆசரிப்புக்கூடாரத் திற்குநேராக முகத்தைத் திருப்புகிறபொழு து, இதோ மேகம் அதை மூடி, கர்த்தரின் மகிமை காணப்பட்டது.

உந மோசேயும் ஆரோனும் ஆசரிப்புக் கூடாரத்திற்குமுன்பாக வந்தார்கள்.

உச அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே பேசி,

உடு *இந்தச் சபையின் நடுவிலிருந்து வில குங்கள்; அசுப்பிலே அவர்களை அதமாக்கு வோம் என்றார்; அப்பொழுது முகம்குப் புற விழுந்தார்கள். *ச மோ. உக. உஉ: ய்ச. ய்உ.

Digitized by Google

சஈ ¶ மோசே ஆரோனுடனே, நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் வைத்து, அதின்மேலே தூபவர்க்கம்போட்டு, சீக்கிரமாய்ச் சபையண்டையிலே போய், அவர்களுக்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கு; ஏனெனில் கர்த்தரின் சந்நிதியிலிருந்து கடும்கோபம் புறப்பட்டது; வாதை தவக்கிற்றென்றான்.

சஉ மோசே சொன்னபடி ஆரோன் அதை எடுத்துக்கொண்டு சபையின் நடுவில் ஓடினான்; இதோ சனத்தில் வாதை தவக்கியும் இருந்தது; அவன் தூபவர்க்கம்போட்டு, சனத்திற்காகப் பாவநிவிர்த்தியை உண்டாக்கி,

சஅ செத்தவர்களுக்கும் உயிரோடிருக்கிறவர்களுக்கும் நடுவே நின்றான்; அப்பொழுது வாதை நிறுத்தப்பட்டது.

சக கோராகுடையவர்த்தமானத்தினிமித்தம் செத்தவர்களேதவிர, அந்த வாதையினாலே செத்தவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர்.

சஎ ஆரோன் ஆசரிப்புக்கூடாரவாசலுக்கு மோசேயண்டையில் திரும்பிவந்தான்; ஏனெனில் வாதை நிறுத்தப்பட்டுப்போயிற்று.

யஎ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நீ இஸ்ரவேல் புத்திரரோடே பேசி, அவர்களில் அவர்கள் பிதாக்களின் வீடுகளாயெ ஒவ்வொரு வீட்டினுடைய பிரபுவின் கையில், ஒவ்வொரு கோலாகப் பன்னிரண்டு கோல் வாங்கி, அவனவன் கோலின் மேலே அவனவன் பெயரை எழுதி,

ஈ இலேவியினுடைய கோலின்மேலோ வென்றால், ஆரோனின் பெயரை எழுதக்கடவாய்; ஏனெனில் அவர்களுடைய பிதாக்களின் ஒவ்வொரு வீட்டுத்தலைவனுக்காக ஒவ்வொரு கோல் இருக்கவேண்டும்.

ச அவைகளை ஆசரிப்புக்கூடாரத்திலே நாம் உங்களைச் சந்திக்கும் தலமாயெ சாட்சிக்குமுன்பாக வைக்கக்கடவாய்.

ஏ அப்பொழுது சம்பவிப்பதேதெனில், நாம் தெரிந்துகொள்பவனுடைய கோல் தளிர்க்கும்; அப்படியே இஸ்ரவேல் புத்திரர் உங்களுக்கு விரோதமாக முறுமுறுக்கிற அவர்கள் முறுமுறுப்புகளை நம்மைவிட்டோயப்பண்ணுவோமென்றார்.

கூ ¶ இதை மோசே இஸ்ரவேல் புத்திரரோடே சொன்னான்; அப்பொழுது அவர்களுடைய பிரபுக்களெல்லாரும் அவர்கள் பிதாக்களின் ஒவ்வொரு வீட்டிற்கு ஒவ்வொரு பிரபு அவனுக்கு ஒவ்வொரு கோலுப் பன்னிரண்டு கோலாகக் கொடுத்தார்கள்; ஆரோனின் கோல் அவர்கள் கோல்களுக்குள்ளே இருந்தது.

எ அந்தக் கோல்களை மோசே சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருக்குமுன்பாக வைத்தான்.

அ சம்பவித்ததேதெனில் மறுநாளிலே மோசே சாட்சியின் கூடாரத்திற்குள் பிரவேசித்தபொழுது, இதோ இலேவியின் வீட்டிற்காக இருக்கிற ஆரோனின் கோல் தளிர்த்திருந்தது; அது தளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப்பழங்களைக் கொடுத்தது.

கூ அப்பொழுது மோசே கர்த்தருக்குமுன்பாக இருந்த எல்லாக் கோல்களையும் வெளியே எல்லா இஸ்ரவேல் புத்திரரண்டைக்கும் கொண்டுவந்தான்; அவர்கள் கண்டு அவரவர் தங்கள் கோலை வாங்கிக்கொண்டார்கள்.

ஐ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, *ஆரோனின் கோல் கலகக்காரரான புத்திரருக்கு அடையாளமாகக் காக்கப்பட, நீ அதைத் திரும்பச் சாட்சிக்குமுன்பாகக் கொண்டுபோய் வைத்து, இப்படியே அவர்கள் சாவாதபடிக்கு, அவர்கள் முறுமுறுப்புகளை நம்மைவிட்டு முடியப்பண்ணென்றார். *எபி. கூ ச.

ஙக கர்த்தர் தனக்குக் கற்பித்த அப்படியே மோசே செய்தான்.

ஙஉ ¶ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் மோசேயுடனே, இதோ மாண்டு அழிந்து போனோம், நாங்கள் எல்லாரும் அழிந்து போனோம்.

ஙஊ கர்த்தரின் வாசஸ்தலத்திற்குச் சேரவே சேருகிறவனெல்லாம் சாவிருன்; நாங்கள் மாண்டுபோகிறதிலுலே சரியாகவே மண்டுமோவென்றார்கள்.

ஙஅ. அதிகாரம்.

பிற்பாடு கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது: நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உன் தகப்பன் வீட்டாரும் பரிசுத்தஸ்தலத்தில் நடக்கும் அக்கிரமத்தைச் சுமப்பீர்கள்; நீயும் உன்னோடேகூட உன் குமாரரும் உங்கள் ஆசாரிய ஊழியத்தில், நடக்கும் அக்கிரமத்தைச் சுமப்பீர்கள்.

உ உன் தகப்பனுடைய இலேவியின் கோத்திரத்தாரான உன் சகோதரனாயும் உன்னோடே கூடியிருக்கவும் உன்னிடத்திலே சேவிக்கவும் உன்னுடனே சேர்த்துக்கொள்; ஆனால் நீயும் உன் குமாரனும்கூடச் சாட்சியின் கூடாரத்திற்குமுன்பாக இருக்கக்கடவீர்கள்.

ஊ அவர்கள் உன் காவலையும் கூடாரம் அனைத்தின் காவலையும் காப்பார்களாக; ஆனால் அவர்களும் நீங்களும்கூடச் சாவாதபடிக்கு, அவர்கள் பரிசுத்தஸ்தலத்தின் தளவாடங்கள்மண்டைக்கும் பீடத்தண்டைக்கும் சேராமல்,

எ உன்னோடே கூடிக்கொண்டு, கூடாரத்திற்கு அடுத்த எல்லாப் பணிவிடையையும் செய்ய, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக் காக்கக்கடவர்கள்; அந்நியன் உங்களண்டையில் சேரவேண்டாம்.

ஏ இஸ்ரவேல் புத்திரர்மேல் இனிக் கடுங்கோபம் வராதபடிக்கு, நீங்கள் பரிசுத்தஸ்தலத்தின் காவலையும் பலிபீடத்தின் காவலையும் காக்கக்கடவீர்கள்.

ஐ ஏனெனில் இதோ ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை வேலையைச்செய்ய, *கர்த்தருக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் சகோதரராகிய இலேவியரை நாம் இஸ்ரவேல் புத்திரரின் நடுவில் எடுத்து, உங்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தோம். *எ மோ. ஈ. சடு.

ஒ ஆனால் நீயும் உன்னோடேகூட உன குமாரரும்கூடப் பலிபீடத்திற்கும் திரைக்குள்புறத்திற்கும் அடுத்த எல்லாவற்றையும் செய்ய, உங்கள் ஆசாரியவேலையைக் காத்துச் சேவிக்கக்கடவீர்கள்; உங்கள் ஆசாரியவேலையை உங்களுக்குக் காணிக்கையாகக் கொடுத்தோம்; சேருகிற அந்நியன் கொலைஉண்ணக்கடவனென்றார்.

ஙப ¶ பின்னையும் கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது: இதோ இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தம்பண்ணுகிறவைகளிலெல்லாம் ஏறெடுக்கப்படுகிற நம்முடைய படைப்புகளைக் காவல்காக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தோம்; அபிஷேகத்தின் நிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்தியகட்டளையாகக் கொடுத்தோம்.

ஙஉ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானதிலே, அக்கினிக்குள்படாமல் உன்னுடையதாய் இருப்பதேதெனில், அவர்கள் தங்களுடைய எல்லாப் படைப்பிலும், தங்களுடைய எல்லாக் காணிக்கையிலும் பாவம்போக்கும் தங்களுடைய எல்லாப் பலியிலும், குற்றம்போக்கநமக்குச் செலுத்துகிற தங்களுடைய எல்லாப்பலியிலும், படைக்கிறதெல்லாம்தானே; இது உனக்கும் உன் குமாரருக்கும் பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமாயிருப்பது.

ஙஊ பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானஸ்தலத்திலே அதைப் புசிப்பாயாக; ஆண்சாதியானவனெல்லாம் அதைப் புசிப்பார்களாக; அது உனக்குப் பரிசுத்தமாயிருக்கக்கடவது.

ஙஎ இஸ்ரவேல் புத்திரர் ஏறெடுக்கிறதும் அசைவாட்டுகிறதுமான அவர்களுடைய எல்லாக் காணிக்கைகளின் படைப்பும் உன்னுடையவைகளாயிருக்கும்; அவைக

Digitized by Google

னே உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும்கூட நித்தியகட்டளையாகக் கொடுத்தோம்; உன் வீட்டிலே சுத்தமானவர்களெல்லாரும் அவைகளைப் புசிப்பார்களாக.

ஐ உ அவர்கள் கர்த்தருக்குக் கொடுக்கும் அவர்களுடைய முதல்பலன்களாகிய மேல்தரமான எல்லா எண்ணெயையும் மேல்தரமான நிராட்சப்பழ இரசத்தையும் தானியத்தையும் உனக்குக் கொடுத்தோம்.

ஐக தங்கள் தேசத்திலிருக்கிறயாவிலும் அவர்கள் கர்த்தருக்குக் கொண்டுவரும் முதல்பலன்கள் உன்னுடையதாயிருக்கும்; உன் வீட்டிலே சுத்தமானவர்களெல்லாரும் அவைகளைப் புசிப்பார்களாக.

ஐச இஸ்ரவேலிலே *சாபத்தீடானவைகளெல்லாம் உன்னுடையவைகளாயிருக்கும். *உ மோ. உஎ. உஅ.

ஐடு மனிதரும் மிருகசீவன்களுமான சகல மாம்சத்திலும் கர்ப்பம்நிறந்து, கர்த்தருக்குச் செலுத்தப்படுகிற யாவும் உன்னுடையவைகளாயிருக்கும்; ஆனால் மனிதனில் பிறந்த முதல்பேற்றை நீ மீட்கவே மீட்கச் சொல்லவேண்டும்; தீட்டான மிருகசீவனின் முதலீற்றையும் மீட்கச்சொல்லக்கடவாய்.

ஐசு மீட்கப்படுபவைகள் ஒரு மாதத்திற்கு அதிகமாயிருந்தால், உன் மதிப்பான ஐந்து சேக்கலாலே அவைகளை மீட்கச் சொல்லுவாயாக; பரிசுத்தஸ்தலத்தின் சேக்கல் கணக்காகத்தானே, அது இருபது கேரா.

ஐஎ ஆனால் மாட்டின் தலையீற்றும், ஆட்டின் தலையீற்றும், வெள்ளாட்டின் தலையீற்றும், மீட்கப்படவேண்டாம்; அவைகள் பரிசுத்தம்; நீ அவைகளின் இரத்தத்தைப் பீடத்தின்மேலே தெளித்து, அவைகளின் கொழுப்பைக் கர்த்தருக்காற்றிய வாசனையான தகனமாகக் கொளுத்தக்கடவாய்.

ஐஅ அவைகளின் மாம்சம் அசைவாட்டும் மார்க்கண்டத்தைப்போலும் வலது முன் னந்தொடையைப்போலும் உன்னுடையதாயிருக்கும்.

ஐக இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு ஏறெடித்துப் படைக்கிற பரிசுத்தப் படைப்புகளையெல்லாம் உனக்கும் உன் குமாரருக்கும் உன் குமாரத்திகளுக்கும்கூட நித்தியகட்டளையாகக் கொடுத்தோம்; கர்த்தருக்கு முன்பாக இது உனக்கும் உன் வித்திற்கும் கூடஎன்றைக்கும் செல்லும் மாறுதலுடம்படிக்கை என்றார்.

உஐ ¶ பின்னையும் கர்த்தர் ஆரோனோடே சொன்னதாவது: *அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம், அவர்கள் நடுவே உனக்குப் பங்குண்டாயிருக்கவும்வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரரின் நடுவே நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமானவர். *உ மோ. ஐஅ. க, உ. யோசு. ஐக. கக.

உக பின்னையும் இதோ இலேவியின் புத்திரர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை வேலையைச் செய்கிற அவர்களுடைய வேலைக்காக, நாம் அவர்களுக்கு இஸ்ரவேலே பத்தில் ஒரு பங்கானவைகளையெல்லாம் சுதந்தரமாகக் கொடுத்தோம்.

உஉ இஸ்ரவேல் புத்திரர் குற்றம்சுமந்து சாவாதபடிக்கு, இனி ஆசரிப்புக்கூடாரத்திற்குச் சேராதிருக்கக்கடவர்கள்.

உக இலேவியர் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை வேலையைச் செய்து, தங்கள் அக்கிரமத்தைச் சுமக்கக்கடவர்கள்; அது அவர்களுடைய தலைமுறைகளுக்கு நித்தியகட்டளையாயிருக்கும்; அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் நடுவே சுதந்தரத்தைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டாம்.

உச ஏனெனில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்குப் படைப்பாகப் பத்தில் ஏறெடுக்கும் ஒன்றை இலேவியருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தோம், ஆகையால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே சுதந்தரம் சுதந்தரிக்கவேண்டாமென்று அவர்களுக்குச் சொன்னேமென்றார்.

Digitized by Google

உடு ரு பின்னையும் கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உசு ஈ இலேவியரோடே பேசி அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்குகிறதற்குரிய உங்களுக்கு உங்கள் சுதந்தரமாகக் கொடுத்த பத்தில் ஒன்றை நீங்கள் அவர்கள் கையில் வாங்கினபொழுது, பத்தில் ஒன்றாயிய அதிலே பத்தாம்பங்கை ஏறெடுத்து, கர்த்தருக்குப் படைப்பாகச் செலுத்துவீர்களாக.

உஎ அது நீங்கள் களத்திலே தானியத்தையும் ஆலையில் இரசத்தையும் படைப்பாக ஏறெடுக்குமாப்போல, உங்களுக்கு எண்ணப்படும்.

உஅ இப்படியே நீங்கள் இஸ்ரவேல் புத்திரர் கையில் வாங்கும் பத்தில் ஒன்றாயிய உங்கள் பங்குகளிலெல்லாம் நீங்களும் கர்த்தருக்கென்று ஒரு படைப்பை ஏறெடுத்து, ஏறெடுத்த அந்தப் படைப்பை ஆசாரியனாகிய ஆரோனுக்குச் செலுத்தக்கடவீர்கள்.

உக உங்களுக்குக் கொடுக்கப்படுகிற ஒவ்வொரு காணிக்கைகளிலும் கர்த்தருக்கு ஒவ்வொரு படைப்பை ஏறெடுத்து, அவைகளில் மேல்தரமானதிலெல்லாம் அதினுடைய பரிசுத்தபங்கைச் செலுத்துவீர்களாக என்று சொல்லி,

உஙு பின்னையும் நீ அவர்களோடே சொல்லவேண்டியதேதெனில், நீங்கள் அதில் மேல்தரமானதை ஏறெடுத்துச் செலுத்துகிறபொழுது, அது இலேவியர் போர்க்களத்தின் வரத்திலும் ஆலையின் வரத்திலும் எடுத்துச் செலுத்துமாப்போல எண்ணப்படும்.

உச அதை நீங்களும் உங்கள் வீட்டாரும் சகல இடத்திலும் புசிக்கலாம்; ஏனெனில் அது நீங்கள் ஆசரிப்புக்கூடாரத்திலே செய்கிற பணிவிடைக்கீடான உங்கள் சம்பளம்.

உஎ இப்படி அதில் மேல்தரமானதை ஏறெடுத்துச் செலுத்தினீர்களானால், நீங்கள் அதற்காகப் பாவம்சுமக்காமலும் இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தமாக்கினவைகளைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமலும் சாவாமலும் இருப்பீர்கள் என்று சொல்லென்றார்.

ஙசூ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் பேசிச் சொன்னதாவது:

உ கர்த்தர் கற்பித்த நியாயப்பிரமாணமான கட்டளை ஏதெனில், இஸ்ரவேல் புத்திரர் பழுதற்றதும் ஊனமில்லாததும் நுகத்தடி ஏறுததுமான சிவப்பான கிடாரியை உன்னண்டையில் கொண்டுவர அவர்களோடே சொல்.

ஈ அதை எலெயாசாரென்ற ஆசாரியனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக; அவன் அதைப் பாளயத்திற்கு வெளியே கொண்டுபோகக் கடவன்; அங்கே அது அவனுக்குமுன்பாகக் குரல்வளை அறுக்கப்படுவதாக.

ச அப்பொழுது ஆசாரியனாகிய எலெயாசார்தன் விரலிலுலே அதின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, ஆசரிப்புக்கூடாரத்திற்கு எதிராக *ஏழுமுறை தெளிக்கக்கடவன். *ஈ மோ. ச. சு, ஙஎ.

டு பிற்பாடு கிடாரியை ஒருவன் அவன் கண்களுக்குமுன்பாகச் சுட்டெரிப்பாராக; *அதின் தோலும் அதின் மாம்சமும் அதின் இரத்தமும் அதின் சாணமும்கூடச் சுட்டெரிக்கப்படக்கடவது. *உ மோ. உசு. ஙச.

சு *அப்பொழுது ஆசாரியன் கேதுருக்கட்டையையும் ஈசோப்பையும் சிவப்புநூலையும் எடுத்து, கிடாரி எரிக்கப்படுகிற நெருப்பின் நடுவிலே போடக்கடவன். *ஈ மோ. ஙச. சு.

எ பிற்பாடு ஆசாரியன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தன்மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, அதின்பிறகு பாளயத்தில் வருவானாக; ஆசாரியன் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

அ அதைச் சுட்டெரித்தவனும் தன் வஸ்

Digitized by Google

நிரங்களைத் தண்ணீரில் வெளுத்து, தன் மாம்சத்தைத் தண்ணீரிலே கழுவி, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

கூ ஆனால் சுத்தமான ஒருவன் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு, பாளயத்திற்குப் புறம்பே சுத்தமான ஒரு தலத்திலே கொட்டிவைக்கக்கடவன்; *அது தீட்டை நீக்கும் தண்ணீருக்கென்று இஸ்ரவேல் புத்திரரின் சபைக்காகக் காத்துவைக்கப்படக்கடவது; அது பாவம்போக்குகின்றது.

*எபி. கூ. ஙஉ.

ங கிடாரியின் சாம்பலை வாரினவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்; இது இஸ்ரவேல் புத்திரருக்கும் அவர்கள் நடுவிலே தங்குகிற பரதேசிக்கும் நித்திய கட்டளையாயிருப்பதாக.

ஙக ¶ செத்தப்போன யாதொரு மனித பிரேதத்தைத் தொட்டவன் ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

ஙஉ அவன் மூன்றும்நாளிலும் ஏழாம்நாளிலும் அதினாலே பாவம்போக்கக்கடவன்; அப்பொழுது சுத்தமாயிருப்பான்; மூன்றும்நாளிலும் ஏழாம்நாளிலும் பாவம்போக்கானேயானில் சுத்தமாகான்.

ஙஊ செத்த மனிதபிரேதத்தைத் தொட்டும், பாவம்போக்காதவனெல்லாம், கர்த்தரின் வாசஸ்தலத்தைத் தீட்டுப்படுத்துகிறான்; அந்த ஆத்துமா இஸ்ரவேலிலிராமல் அறுப்புண்பான்; ஏனெனில் தீட்டைநீக்கும் தண்ணீர் அவன்மேலே தெளிக்கப்பட்டதில்லை; அவன் தீட்டுப்பட்டிருப்பான்; அவன் தீட்டு இன்னம் அவன்மேலிருக்கும்.

ஙச கூடாரத்தில் ஒரு மனிதன் செத்தால், அதற்கான நியாயப்பிரமாணமாவது: கூடாரத்திற்குள் பிரவேசிக்கிறவனுக்கும் கூடாரத்திலிருக்கிறவனுக்கும் எல்லாம் ஏழுநாள் தீட்டுண்டாயிருக்கும்.

ஙஙி மூடிக் கட்டப்பட்டிராமல், திறந்திருக்கிற பண்டமெல்லாம் தீட்டுப்பட்டிருக்கும்.

ஙசு வெளியிலே பட்டயத்தால் வெட்டுண்டவனையாவது, செத்தவனையாவது, மனிதஎலும்பையாவது, பிரேதக்குழியையாவது, தொட்டவனெல்லாம், ஏழுநாள் தீட்டுப்பட்டிருப்பான்.

ஙஎ ¶ ஆகையால் தீட்டுப்பட்டவனுக்காக, பாவம்போக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து, ஒரு பாத்திரத்திலேபோட்டு, அதின்மேலே சுரப்புத்தண்ணீர்வார்க்கவேண்டும்.

ஙஅ பிற்பாடு சுத்தமான ஒருவன் ஒரு துசோப்பை எடுத்துக்கொண்டு, அந்தத்தண்ணீரிலே தோய்த்து, கூடாரத்தின்மேலும் சகல பண்டம் பாடிகள்மேலும் அங்கே இருக்கிற ஆத்துமாக்கள்மேலும், அல்லவென்று எலும்பையாகிலும் வெட்டுண்டவனையாகிலும் செத்தவனையாகிலும் பிரேதக்குழியையாகிலும் தொட்டவன்மேலும் தெளிக்கக்கடவன்.

ஙகூ சுத்தமாயிருக்கிற ஒருவன் தீட்டுப்பட்டவன்மேலே மூன்றும்நாளிலும் ஏழாம்நாளிலும் தெளித்து, இப்படி ஏழாம்நாளிலே அவனுடைய பாவத்தைப் போக்கக்கடவன்; இவன் தன் வஸ்திரங்களை வெளுத்து, தண்ணீரில் முழுகி, சாயங்காலத்திலே சுத்தமாயிருப்பான்.

உஙி தீட்டுப்பட்டிருந்தும் பாவம்போக்காதபோகிற ஆத்துமாவோவெனில், சபையில் இராதபடிக்கு அறுப்புண்பான்; ஏனெனில், கர்த்தரின் பரிசுத்தஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான்; தீட்டைநீக்கும் தண்ணீர் அவன்மேலே தெளிக்கப்பட்டதில்லை; அவன் தீட்டுப்பட்டிருக்கிறான்.

உக இது அவர்களுக்கு நித்தியகட்டளையாயிருக்கக்கடவது; தீட்டைநீக்கும் தண்ணீரைத் தெளித்தவனும் தன் வஸ்திரங்களை வெளுக்கக்கடவன்; தீட்டைநீக்கும் தண்ணீரைத் தொட்டவனும் சாயங்காலம்மட்டும் தீட்டுப்பட்டிருப்பான்.

உஉ தீட்டுப்பட்டிருக்கிறவன் தொடுகிறவைகளெல்லாம் தீட்டுப்படும், அவைக

Digitized by Google

கூத் தொடுகிற ஆத்துமாவும் சாயங்காலம் மட்டும் தீட்டுப்பட்டிருப்பான் என்றார்.

உயி. அதிகாரம்.

இஸ்ரவேல் புத்திரரின் சபை எல்லாம் முதலாம்மாதத்திலே சின்வனுந்தரத்திலே வந்தது; அங்கே சனம் காதேசிலே தங்கித் தரித்தது; அங்கே மிரியாம் மரணம் அடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்பட்டாள்.

உ ¶ சனத்திற்குத் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது *மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டம்கூடினார்கள். *உ மோ. யா. உ.

ஈ சனம் மோசேயோடே வாக்குவாதம் பண்ணிச் சொன்னதாவது: எங்கள் சகோதரர் கர்த்தருக்குமுன்பாக மாண்டபொழுது. நாங்கள் மாண்டோமானால் தாவினே.

ச நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாக, நீங்கள் கர்த்தரின் சபையை இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்ததென்ன?

ஙி விதைப்பும் அத்திமரமும் திராட்சச்செடியும் மாதளம்செடியும் குடிக்கத் தண்ணீரும் இல்லாத இந்த ஆகாத இடத்திற்கு எங்களைக் கொண்டுவரும்படிக்கு, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து ஏறிவரப்பண்ணினதென்ன என்றார்கள்.

கூ ¶ ஆனால் மோசேயும் ஆரோனும் சபைக்குமுன்பாக இருந்து, ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குப் போய், முகம்குப்புறவிழுந்தார்கள்; *அப்பொழுது கர்த்தருடைய மகிமை அவர்களுக்குக் காணப்பட்டது. *ச மோ. யச. ய.

எ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

அஅ நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனுமாகிய ஆரோனும் சபையைக்கூட்டி, அவர்கள் கண்களுக்குமுன்பாகக் கல்லையோடே பேசுங்கள்; அப்பொழுது அது தன் தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கல்லையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபைக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக்கொடுப்பாயாக என்றார்.

கூ ¶ அப்பொழுது மோசே கர்த்தருடைய சமுகத்திலிருக்கிற கோலை, அவர் தனக்குக் கற்பித்தபடியே எடுத்துக்கொண்டான்.

ஐ மோசேயும் ஆரோனும் சபையைக் கல்லைக்குமுன்பாகக் கூட்டினார்கள்; அப்பொழுது மோசே அவர்களுடனே, கலகக்காரரே, கேளுங்கள்; உங்களுக்கு இந்தக்கல்லையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி,

ஐக தன் கையை ஓங்கி, கல்லையைத் தன் கோலினால் இரண்டுமுறை அடித்தான்; அப்பொழுது பரிபூரணமான தண்ணீர்கள் புறப்பட்டதினாலே, சபையும் அவர்கள் மிருகங்களும் குடித்தன.

ஐஉ ¶ கர்த்தரோவெனில் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது: *நம்மை இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்குமுன்பாகப் பரிசுத்தம்பண்ணும்படிக்கு, நீங்கள் நம்மை விசுவாசியாதே போனபடியினாலே, நீங்கள் இந்தச் சபையை நாம் அவர்களுக்குக் கொடுக்கிற தேசத்திற்குள் கொண்டுபோவதில்லை என்றார். *டி மோ. க. கூஎ.

ஐஊ இவைகள் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடே வாக்குவாதம் பண்ணினதும் அவர் இவர்களுக்குள் பரிசுத்தம் விளங்கினதுமான மேரிபாவின் தண்ணீர்கள்.

ஐச ¶ பிற்பாடு மோசே காதேசிலிருந்து ஏதோமின் இராசாவண்டைக்குத் தானுபதினை அனுப்பிச்சொல்லச்சொன்னதாவது:

ஐடி எங்கள் பிதாக்கள் எகிப்திலே போய் இறங்கினதும், நாங்கள் எகிப்திலே நீடிய நாள் குடியிருந்ததும், எகிப்தர் எங்களையும் எங்கள் பிதாக்களையும் உபத்திரவப்படுத்தினதுமான எங்களுக்கு வந்த பிரயாசத்தையெல்லாம் நீ அறிந்திருக்கிறாய்.

ஐசு கர்த்தனோக்கி நாங்கள் கூப்பிட்டோம்; அப்பொழுது அவர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, ஒரு தூதனை அனுப்பி,

Digitized by Google

எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினீர்; இப்பொழுதும் இதோ நாங்கள் உன் கடைசி எல்லைக்குச் சமீபமான காதேல் ஊரில் இருக்கிறோம்.

ம எ நாங்கள் உன் தேசத்து வழியாகக் கடந்துபோகட்டுமே; நாங்கள் வயல்வெளிகள் வழியாக, அல்லது திராட்சத்தோட்டங்கள் வழியாகப் போகாமலும், கிணறுகளின் தண்ணீரைக் குடியாமலும், இராசபாதையாகப் போய், உன் எல்லையைக் கடந்துதீரும்மட்டும், வலது இடதுபுறமாகச் சாயாதிருப்போமென்று உன் சகோதரனாகிய இஸ்ரவேல் சொல்லி அனுப்புகிறானென்று சொல்லச்சொன்னான்.

ம அ ஏதோமோவெனில், நீ என் வழியாகக் கடந்துபோகவேண்டாம்; மற்றப்படி பட்டயத்தோடே உனக்கு எதிராகப் புறப்படுவேனென்று அவனுக்குச் சொல்லச்சொன்னான்.

ம கூ அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனோடே, நடப்பான வழியிலே ஏறிப்போவோம்; நாங்களும் எங்கள் மிருகசீவன்களும் உன் தண்ணீரிலே குடித்தால், அதின் விலைக்கிரயத்தைக் கொடுப்போம், கால்நடையாகமாத்திரம் கடந்துபோவோம், பின் ஒன்றும் வேண்டாமென்றார்கள்.

ம உ ஏதோமோவென்றால், நீ கடந்துபோகவேண்டாமென்று சொல்லி, வெகுசனத்தோடும் பலத்த கையோடும் அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டு,

ம க தன் எல்லைவழியாகக் கடந்துபோக, இஸ்ரவேலுக்கு உத்தாரம் கொடாதேபோனான்; ஆகையால் இஸ்ரவேல் அவனைவிட்டு விலகிற்று.

ம உ ¶ இஸ்ரவேல் புத்திரரான சபையெல்லாம் காதேசைவிட்டுப் பயணம்பண்ணி, ஓரென்ற பர்வதத்திற்கு வந்தது.

ம ந ¶ ஏதோம்தேசத்தின் எல்லைக்கு அருகான ஓரென்ற பர்வதத்திலே கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்னதாவது:

ம உ ஆரோன் தன் சனத்தாரோடே சேர்த்துக்கொள்ளப்படுவான்; ஏனெனில் மேரிபாவின் தண்ணீர்கள் காரியத்திலே நீங்கள் நம்முடைய வாக்குக்குக் கீழ்ப்படியாமல் போனபடியினாலே, அவன் நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கிற தேசத்தில் வருவதில்லை.

ம ந நீ ஆரோனையும் அவன் குமாரனாகிய எலெயாசாரையும் கூட்டிக்கொண்டு அவர்களை ஓரென்ற பர்வதத்தில் ஏறப்பண்ணி,

ம ந கூ ஆரோன் உடுத்திருக்கிற அவன் வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்துவாயாக; ஏனெனில் ஆரோன் சேர்த்துக்கொள்ளப்பட்டு, அங்கே மரிப்பானென்றார்.

ம ந க கர்த்தர் கற்பித்தபடியே மோசே செய்தான்; சபையெல்லாம் பார்க்க, அவர்கள் ஓரென்ற பர்வதத்தில் ஏறினார்கள்.

ம ந உ அங்கே மோசே, ஆரோன் உடுத்திருந்த வஸ்திரங்களைக் கழற்றி, அவைகளை அவன் குமாரனாகிய எலெயாசாருக்கு உடுத்தினான்; அப்பொழுது ஆரோன் அங்கே பர்வதத்தின் கொடுமுடியிலே மரித்தான்; பின்பாடு மோசேயும் எலெயாசாரும் பர்வதத்திலிருந்து இறங்கிவந்தார்கள்.

ம ந கூ ஆரோன் சீவித்துப்போனானென்றதைச் சபையெல்லாம் கண்டபொழுது, இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் ஆரோனுக்காக முப்பதுநாள் அழுதுகொண்டிருந்தார்கள்.

உக. அதிகாரம்.

ம வேவுகாரர் காண்பித்த வழியாக இஸ்ரவேல் வருகிறதை தெற்கே வாசம்பண்ணுகிற ஆராதின் இராசாவாகிய கானானியன் கேட்டபொழுது, அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களில் சிலரைச் சிறைபிடித்துக்கொண்டுபோனான்.

ம அ அப்பொழுது இஸ்ரவேல், தேவரீர் அந்தச் சனத்தை என்கையில் ஒப்புக்கொடுத்

வேலைப்புக்கொடுத்தால், அவர்களுடைய பட்டணங்களைச் சங்காரம்பண்ணுவேனென்று இஸ்ரவேல் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணினான்.

உ கர்த்தர் இஸ்ரவேலின் சத்தத்தைக் கேட்டு, காணானியனை ஒப்புக்கொடுத்தார்; அப்பொழுது அவர்களையும் அவர்கள் பட்டணங்களையும் சங்காரம்பண்ணி, அவ்விடத்திற்கு ஓர்மாவென்று பேரிட்டார்கள்.

ஊ அவர்கள் ஏதோம்தேசத்தைச் சுற்றிப் போகும்படிக்கு, ஓரென்ற பர்வதத்தைவிட்டு, ஈணல் சமுத்திரத்தின்வழியாகப் பயணம்பண்ணினார்கள்; ஆலும் வழியிலே சனத்தின் ஆத்துமா விசனமடைந்தது.

எ சனம் பராபரனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி, நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படிக்கு, நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து ஏறிவரப்பண்ணினதென்ன? ஏனென்றால் இங்கே அப்பமுமில்லை, தண்ணீருமில்லை; *அற்பமான இந்த அப்பம் எங்கள் ஆத்துமாவிற்கு வெறுப்பாய் இருக்கின்றதென்றார்கள். *ச மோ. ஙக. சு.

ஏ அப்பொழுது கர்த்தர் *கொள்ளிவாய்ச் சர்ப்பங்களைச் சனத்திற்குள் அனுப்பினார்; அவைகள் சனத்தைக் கடித்ததினாலே இஸ்ரவேலில் வெகுசனம் செத்தது. *உ கொரி. ய: சு.

ஐ அப்பொழுது சனம் மோசேயண்டைக்கு வந்து, நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாகப் பேசினதினாலே பாவம் செய்தோம்; சர்ப்பங்களை எங்களைவிட்டு அகற்ற, கர்த்தரை விண்ணப்பம்பண்ணும் என்றார்கள்; மோசே சனத்திற்காக விண்ணப்பம்பண்ணினான்.

ஒ அப்பொழுது கர்த்தர் மோசேயுடனே, *நீ ஒரு கொள்ளிவாய்ச்சர்ப்பத்தின் உருவத்தை உனக்குண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேலே தூக்கிவை; அப்பொழுது சம்பவிப்பதேதெனில், கடிக்கப்பட்டு, அதை நோக்கிப்பார்க்கிறவனெல்லாம் பிழைப்பான் என்றார். *யோவா: உ. ஙச.

ஓ அப்பொழுது மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேலே தூக்கிவைத்தான்; சம்பவித்ததேதெனில், ஒருவனை ஒரு சர்ப்பம் கடித்தபொழுது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப்பார்த்துப் பிழைப்பான்.

ஔ ¶ இஸ்ரவேல் புத்திரர் பயணப்பட்டுப் போய், ஒபோத்தில்பாளயம்இறங்கினார்கள்.

ஙக அவர்கள் ஒபோத்திலிருந்து பயணப்பட்டுப் போய், சூரியோதயத்திற்கு நேராக மோவாபுக்கு எதிரான வனாந்தரத்தில் இருக்கிற ஆபரீமின் மேடுகளிலே பாளயம் இறங்கினார்கள்.

ஙஉ ¶ அங்கேயிருந்து பயணப்பட்டுப் போய், சாரேத் பள்ளத்தாக்கிலே பாளயம் இறங்கினார்கள்.

ஙஊ அங்கேயிருந்து பயணப்பட்டுப் போய், ஏமோரியரின் எல்லையிலிருந்து வருகிற தம் வனாந்தரத்தில் ஓடுகிறதுமான அர்னோன் ஆற்றுக்கு இப்புறம் பாளயம் இறங்கினார்கள்; ஏனெனில் அர்னோன் மோவாபுக்கும் ஏமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை.

ஙச ஆகையால் சூப்பாவில் இருக்கிற வாகேபும், அர்னோனின் ஆற்றுக்கால்களும்,

ஙஓ ஆரென்ற வாசஸ்தலத்திற்குத் திரும்பி ஓடுகிற ஆற்றுக்கால்களின் ஓடையும், மோவாபின் எல்லையோடே இருக்கிறதென்று கர்த்தருடைய யுத்தங்களின் புஸ்தகத்தில் எழுதியிருக்கின்றது.

ஙஎ ¶ அங்கேயிருந்து பேயேருக்கு வந்தார்கள்; சனத்தைக் கூட்டு, அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்போமென்று கர்த்தர் மோசேக்குச் சொன்ன ஊற்றிருக்கிற ஸ்தலம் அதுதான்.

ஙஐ அப்பொழுது இஸ்ரவேல் பாடின பாட்டாவது: ஊற்றுத்தண்ணீரே, பொங்கிவா; அதின்நிமித்தம் பாடுவோம் வாருங்கள்.

ஙஒ நியாயம் சுற்பிக்கிறவர்களும் கூடப்

Digitized by Google

பிரபுக்கள் தங்கள் வன்றுகோல்களைப்பிடித்துக்கொண்டிருந்து, இந்தத் தரவை வெட்டிவித்தார்கள்; சனத்தில் மேன்மையானவர்கள் அதைத் தோண்டினார்களென்று பாடினார்கள்; அந்த வனாந்தரத்திலிருந்து மாத்தனாவுக்கும்,

ஙூ ¶ மாத்தனாவிலிருந்து நகாலியேலுக்கும், நகாலியேலிலிருந்து பாமோத்திற்கும்,

ஙூ பாமோத்திலிருந்து மோவாபின் வெளியில் இருக்கிறதும் வனாந்தரத்திற்கு எதிராக இருக்கிற பிஸ்காவின் கொடுமுடிக்கு அடித்தளமான பள்ளத்தாக்குக்கும் வந்தார்கள்.

ஙூ ¶ அப்பொழுது இஸ்ரவேல் எமோரியரின் இராசாவாகிய சீகோனண்டைக்குத் தானாபதிகளை அனுப்பி,

ஙூ உன் தேசத்துவழியாக நான் கடந்து போகட்டும்; நாங்கள் வயல்களிலும், திராட்சத்தோட்டங்களிலும் சாயாமலும், தரவுகளின் தண்ணீரைக் குடியாமலும், உன் எல்லையைக் கடந்துதிரும்மட்டும் இராசபாதையாய் கடந்துபோவோமென்று சொல்லச்சொன்னார்கள்.

ஙூ சீகோனேவென்றால் தன் எல்லைவழியாகக் கடந்துபோக இஸ்ரவேலுக்கு உத்தாரம் கொடாமல், தன் சனத்தையெல்லாம் கூட்டி, இஸ்ரவேலுக்கு எதிராக வனாந்தரத்திலே புறப்பட்டு, யாகத்சாவுக்கு வந்து, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினான்.

ஙூ *ஆனால் இஸ்ரவேல் அவனைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அர்னோனைத்தவித்து, யாபோக்மட்டும் அம்மோன் புத்திரரின் தேசம்மட்டும் இருக்கிற அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்; ஏனெனில் அம்மோன் புத்திரரின் எல்லை அரணிப்பாயிருந்தது. *சங். ாஙடு. ஙக, ஙஉ.

ஙடு இஸ்ரவேல் அந்தப் பட்டணங்களையெல்லாம் பிடித்து, எமோரியருடைய எல்லாப் பட்டணங்களுமாகிய எஸ்போனிலும் அதினுடைய எல்லா ஊர்க்கிராமங்களிலும் குடியிருந்தார்கள்.

ஙூ ஏனெனில் எஸ்போன் எமோரியரின் இராசாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது; அதேனென்றால் இவன் மோவாபியரின் முன்னை இராசாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அர்னோன்மட்டுக்குமிருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலே பறித்துக்கொண்டிருந்தான்.

ஙஎ ஆகையால் பழமொழிக்காரர் சொன்னது: எஸ்போனுக்கு வாருங்கள்; சீகோனின்பட்டணம் கெட்டியாகக் கட்டப்படுவதாக.

ஙஏ ¶ ஏனெனில் எஸ்போனிலிருந்து அக்கினியும் சீகோனின் பட்டணத்திலிருந்து சுவாலையும் புறப்பட்டு, மோவாபியரின் ஆரென்றவனையும், அர்னோனுடைய மேடுகளின் எசமான்களையும் பட்சித்தது.

ஙஐ மோவாபே, உனக்கு ஐயோ, காமோசின் தேவனின் சனமே, நீ கெட்டாய்; அதப்பி ஓடின தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் எமோரியரின் இராசாவாகிய சீகோனுக்குச் சிறைகளாக ஒப்புக்கொடுத்தது.

ஙஒ அவர்களை எய்துவிட்டோம்; எஸ்போன் பட்டணம் திபோன் வரைமட்டும் கெட்டுப்போயிற்று; மேதேபாமட்டும் தண்டிருந்த கோப்பாப்பட்டணபரியந்தம் அவர்களைப் பாழாக அடித்தோம் என்பார்கள்.

ஙகூ ¶ அப்படியே இஸ்ரவேல் எமோரியரின் தேசத்திலே குடியிருந்தது.

ஙகஉ பிற்பாடு மோசே யாகேசேர் பட்டணத்தை வேவுபார்க்கிறவர்களை அனுப்பினான்; அதின் ஊர்களைக் கட்டிக்கொண்டு, அங்கே இருந்த எமோரியரைத் தரத்திவிட்டார்கள்.

ஙகஙூ ¶ பிறகு பாசானுக்குப் போகிறவழியாய்த் திரும்பிக்கொண்டு ஏறிப்போனார்கள்; அப்பொழுது பாசான் இராசாவாகிய ஓகும் அவனுடைய எல்லாச் சனமும்கூட அவர்களுக்கு எதிராக யுத்தம்பண்ணும்படிக்கு, எதிரேயுக்குப் புறப்பட்டு வந்தார்கள்.

Digitized by Google

. நச கர்த்தர் மோசேயுடனே, அவனுக்குப் பயப்படாயாக; ஏனெனில் அவனையும் அவனுடைய எல்லாச் சனத்தையும், அவன் தேசத்தையும் உன் கையில் ஒப்புக் கொடுத்தோம்; எப்போனிலே குடியிருந்த எமோரியனின் ராசாவாகிய சிகோனுக்கு நீ செய்தபடியே அவனுக்குச் செய்யக்கட வாயென்றார்.

நடு அப்படியே அவனையும், அவன் குமாரனையும், அவனுடைய எல்லாச் சனத்தையும், ஒருவரும் அவனுக்கு மீந்திராத வகையாக வெட்டிப்போட்டு, அவன் தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள்.

உஉ. அதிகாரம்.

பிற்பாடு இஸ்ரவேல் புத்திரர் பயணம்பண்ணி, எரிகோவின் கிட்ட இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனான வெளியிலே பாளயம் இறங்கினார்கள்.

உ ¶ ஆனால் இஸ்ரவேல் எமோரியருக்குச் செய்ததையெல்லாம் சிப்போரின் குமாரனான பாலாக் கண்டான்.

ங அப்பொழுது மோவாபியர் அந்தச் சனம் எராளமென்று அதற்குமுன்பாக வெகு பயம் அடைந்து, இஸ்ரவேல் புத்திரரின்மேல் மனமடிவாகி,

ச மீதியானியரின் மூப்பரோடே, மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக்கூட்டம் நம்மைச் சுற்றிலும் இருக்கிறதையெல்லாம் மேயுமென்றார்கள்; சிப்போரின் குமாரனான பாலாக்கோவெனில், அக்காலத்திலே மோவாபின் ராசாவாயிருந்தான்.

ஞ அவன் பேயோரின் குமாரனான பீலெயாமை அழைப்பிக்க, அவனுடைய சனபுத்திரரின் தேசத்தில் நதியண்டையிலிருக்கிற பெத்தோருக்குத் தானுபதிகளை அனுப்பி, இதோ ஒரு சனசதளம் எகிப்திலிருந்து புறப்பட்டு வந்தது; இதோ பூமியின் விசாலத்தை அது மூடி, எனக்கு எதிரே இறங்கியிருக்கின்றது.

ட இப்பொழுதும் நீ வந்து, எனக்காக அந்தச் சனத்தைச் சபி; ஏனெனில் அது என்னிலும் பலத்தது; அப்பொழுது ஒருவேளை நான் அதை முறியஅடித்து, அதைத் தேசத்திலிருந்து துரத்தலாம்; ஏனென்றால் நீ ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்; நீ சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்றறிவேனென்று சொல்லி அனுப்பினான்.

ண அப்படியே மோவாபின் மூப்பரும் மீதியானின் மூப்பரும் *குறிசொல்லுதலின் கூலியைத் தங்கள்கையில் எடுத்துக்கொண்டு போய், பீலெயாமண்டைக்கு வந்து, பாலாகின் வார்த்தைகளை அவனுக்குச் சொன்னார்கள். *2 பே. 2. 15.

த அவன் அவர்களோடே இராத்தினிக்கு இங்கே தங்கி இருங்கள்; கர்த்தர் என்னோடே சொல்லும்படியே உங்களுக்கு மறுமொழி கொண்டுவருவேன் என்றான்; அப்படியே மோவாபின் பிரபுக்கள் பீலெயாமிடத்திலே தங்கியிருந்தார்கள்.

ந பராபரன் பீலெயாமண்டைக்கு வந்து, உன்னிடத்திலிருக்கிற இந்த மனிதர் யாரென்றார்.

ப ¶ பீலெயாம் பராபரனோடே சொன்னதாவது: சிப்போரின் குமாரனான பாலாக் என்ற மோவாபின் ராசா அவர்களை என்னண்டைக்கு அனுப்பி,

ம இதோ எகிப்திலிருந்து வந்திருக்கிற ஒரு சனசதளம் பூமியின் விசாலத்தை மூடுகிறது; இப்பொழுது நீ வந்து எனக்காக அதைச் சபி; அப்பொழுது ஒருவேளை நான் அதனோடே யுத்தம்பண்ணி, அதைத் தேசத்திலிடலாமென்று சொல்லச்சொன்னானென்றார்.

யஉ அப்பொழுது பராபரன் பீலெயாமோடே, நீ அவர்களோடே போகவேண்டாம்; அந்தச் சனத்தைச் சபிக்கவும்வேண்டாம்; ஏனெனில் அது ஆசீர்வதிக்கப்பட்டதென்றார்.

Digitized by Google

யங ¶ ஆகையால் பீலெயாம் காலமே எ

ழுந்திருந்து பாலாக்கின் பிரபுக்களுடனே, உங்கள் தேசத்திற்குப் போய்விடுங்கள், ஏனெனில் உங்களோடேகூடப் போகிறதற்கு, கர்த்தர் எனக்கு உத்தரவுகொடுக்கமாட்டோம் என்றுரைன்று சொன்னான்.

௩ அப்படியே மோவாபியருடைய பிரபுக்கள் எழுந்துபோய், பாலாக்கண்டைக்குவந்து, பீலெயாம் எங்களோடேவரமாட்டேன் என்றுனென்று சொன்னார்கள்.

௪ ¶ மறுபடியும் பாலாக் அவர்களிலும் கனமுள்ள அதிகமான பிரபுக்களை அனுப்பினான்.

௫ அவர்கள் பீலெயாமண்டைக்கு வந்து, அவனேடே சொன்னதாவது: ஈ என்னண்டைக்கு வரமாட்டேனென்று சொல்லாயாகவென்றும்,

௬ உன்னை மிகவும் கனம்பண்ணவே பண்ணுவேன்; ஈ என்னேடே சொல்வதையெல்லாம் செய்வேன்; ஈ வந்து, எனக்காக அந்தச் சனத்தைச் சபியேன் என்றும், சிப்போரின் குமாரனுகிய பாலாக் சொல்லச்சொன்னுர் என்றார்கள்.

௭ பீலெயாம் பாலாக்கின் மூழியக்காரருக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் நெறியகாரியமானாலும் பெரியகாரியமானாலும் செய்கிறதினாலே, என் பராபரனுகிய கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது.

௮ இப்பொழுதும் கர்த்தர் அப்புறம் என்னேடே என்ன சொல்லுவார் என்கிறதை நான் அறியும்படிக்கு, நீங்களும் இந்த இராத்திரியிலே இங்கே இருங்களென்றுன்.

௯ ¶ இரவிலே பராபரன் பீலெயாமண்டைக்கு வந்து, அவனுடனே, அந்த மனிதர் உன்னை அழைக்கவந்தார்களானுல், ஈ எழுந்து அவர்களோடே கூடப்போ; ஆனுல் நாம் உன்னேடே சொல்லும் வார்த்தையின்படிமாத்திரம் ஈ செய்யக்கடவாயென்றுர்.

௧௦ ¶ பீலெயாம் காலமே எழுந்திருந்து, தன் கழுதையின்மேலே சேணம்போட்டு, மோவாபின் பிரபுக்களோடேகூடப் போனுன்.

௨௨ ஆனுல் அவன் போகிறதினாலே பராபரனுக்குக் கோபம்மூண்டது; கர்த்தரின் தூதனுனவர் வழியிலே அவனுக்கு எதிராளியாக நின்றுகொண்டார்; அவனேமேனில் தன் கழுதையின்மேல் ஏறிப்போனுன்; அவன் வேலைக்காரர் இரண்டுபேரும் அவனேடிருந்தார்கள்.

௨௩ உருவின தமது பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்து, வழியிலேநிற்கிற கர்த்தருடைய தூதனைக் கழுதை கண்டு, வழியைவிட்டு, வயலிலே விலகிப்போயிற்று; அதை வழிக்குத் திருப்பப் பீலெயாம் அதை அடித்தான்.

௨௪ ஆனுல் கர்த்தருடைய தூதனுனவர் இருபுறத்திலும் சுவர் இருந்த திராட்சத்தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார்.

௨௫ கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, மதில் ஓரமே ஒதுங்கி, பீலெயாமின் காலை மதிலோடே நெருக்கிற்று; அப்பொழுது திரும்ப அதை அடித்தான்.

௨௬ கர்த்தருடைய தூதன் அப்புறம்போய் வலதுபுறத்திற்கும், இடதுபுறத்திற்கும், விலக வழியில்லாத இடுக்கமான ஸ்தலத்திலே நின்றுகொண்டார்.

௨௭ அப்பொழுது கழுதை கர்த்தருடைய தூதனைக்கண்டு, பீலெயாமின்கீழ்ப் படுத்துக்கொண்டது; பீலெயாமோ எனின் கோபம்மூண்டவனுகி, கழுதையைத் தடியினால் அடித்தான்.

௨௮ அப்பொழுது கர்த்தர் *கழுதையின் வாயைத்திறந்தார்; அது பீலெயாமுடனே: நீர் என்னை இதனேடே மூன்றுதரம் அடித்ததற்கு நான் உமக்குஎன்ன செய்தேனென்றது. *உ பே. உ. ஐசு. யூதா. ஐக.

௨௯ அப்பொழுது பீலெயாம் கழுதையைப்பார்த்து, ஈ என்னைப் பரியாசம்பண்ணிவருகிருய்; என்கையில் ஒரு பட்டயம்

Digitized by Google

இருந்தால் தாவினை; இப்பொழுதுதானே உன்னைக் கொன்றுபோடுவேனென்றான்.

ஊய கழுதையோவென்றால் பிலெயாமுடனே, நீர் என்னைக் கையாண்ட காலமெல்லாம் இந்நாள்வரைக்கும் நீர் ஏறின கழுதை நான் அல்லவோ, உமக்கு அப்படிச் செய்ய எப்போதாகிலும், எனக்குப் பழக்கமாயிருந்ததோ என்றது; அதற்கு அவன் இல்லையென்றான்.

ஊக அப்பொழுது கர்த்தர் பிலெயாமின் கண்களைத் திறந்தார்; வழியிலே நின்று உருவின தமது பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருக்கிற கர்த்தருடைய தூதனை அவன் கண்டு, குனிந்து, முகம் குப்புறப் பணிந்தான்.

ஊஉ கர்த்தருடைய தூதனுனவர் அவனை நோக்கி: நீ உன் கழுதையை இதனைநேரம் மூன்றுதரம் அடித்ததென்ன? இதோ நாம் எதிரியாகப் புறப்பட்டு வந்தோம்; ஏனெனில் இந்த வழி நமக்கு முன்பாக மாறுபாடாயிருக்கின்றது.

ஊங கழுதையோவெனில் நம்மைக்கண்டு, இந்த மூன்றுதரம் நமது முகத்தைவிட்டு விலகிற்று; நமது முகத்தைவிட்டு விலகாதிருந்ததானால், இப்பொழுது நாம் உன்னைத்தானும் கொன்றுபோட்டு, கழுதையை உயிரோடே வைப்போமே என்றார்.

ஊச அப்பொழுது பிலெயாம் கர்த்தருடைய தூதனுடனே, நான் பாவம்செய்தேன்; ஏனெனில் தேவரீர் வழியிலே எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன்; இப்பொழுதும் உமது பார்வைக்கு இது பொல்லாப்பாயிருந்தால் திரும்பிக் கொள்ளுவேன் என்றான்.

ஊடு கர்த்தருடைய தூதனுனவர் பிலெயாமுடனே, அந்த மனிதரோடே கூடப்போ; ஆனால் நாம் உன்னோடே சொல்லும் வசனத்தைமாத்திரமே நீ சொல்லக்கடவாயென்றார்; அப்படியே பிலெயாம் பாலாக்கின் பிரபுக்களோடே கூடப்போனான்.

ஊஎ ¶ பிலெயாம் வருகிறதைப் பாலாக் கேட்டபொழுது, கடைசி எல்லையான அர்னோன் நதியின் ஓரத்திலிருக்கிற மோவாபின் பட்டணம்மட்டும் அவனுக்கு எதிர் கொண்டுபோய்,

ஊஏ பிலெயாமுடனே, உன்னை அழைப்பிக்க நான் உன்னண்டைக்கு ஆள் அனுப்பவே அனுப்பவில்லையோ? என்னண்டைக்கு ஏன் வராதேபோனாய்? உன்னை ஏற்றபிரகாரமாக நான் கனம்பண்ணமாட்டேனோ என்றான்.

ஊஐ அப்பொழுது பிலெயாம் பாலாக்குடனே, இதோ உம்மண்டைக்கு வந்தேன்; இப்பொழுதும் ஏதாகிலும் சொல்ல என்னாலே ஆகவே ஆகுமோ? பராபரன் என் வாயிலே கொடுக்கும் வசனத்தையே சொல்லுவேனென்று சொல்லி,

ஊஒ ¶ பாலாக்குடனேகூடப் போனான்; அவர்கள் கிரியாத் ஊத்சோத்திற்கு வந்தார்கள்.

சுய அங்கே பாலாக் ஆடுமாடுகளை அடித்து, பிலெயாமுக்கும் அவனோடிருந்த பிரபுக்களுக்கும் அனுப்பினான்.

சக ¶ மறுநாள் காலமேயோவென்றால் பாலாக் பிலெயாமைக் கூட்டிக்கொண்டு, அவனைப் பாகாலுடைய மேடுகளில் ஏறப்பண்ணினான்; அவ்விடத்திலிருந்து சனத்தின் கடைசிப் பாளயத்தைப் பார்த்தான்.

உஊ. அதிகாரம்.

பிலெயாம் பாலாக்குடனே, நீர் எனக்கு இங்கே ஏழு பலிபீடங்களைக் கட்டி, ஏழு காளை எருதுகளையும் ஏழு ஆட்டுக்கடாவையும் இங்கே எனக்கு ஆயத்தமாக நிறுத்தவென்றான்.

உ பிலெயாம் சொன்னபடியே பாலாக் செய்தான்; பாலாக்கும் பிலெயாமும் ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டார்கள்.

Digitized by Google

ங அப்பொழுது பிலெயாம் பாலாக்குடனே, உம்முடைய சர்வாங்கதகனத்தண்டை

யிலே நின்றிரும்; நான் போகிறேன்; ஒரு வேளை கர்த்தர் வந்து என்னைச் சந்திப்பார்; அவர் எனக்குக் காண்பிக்கிறதை உமக்கு அறிவிப்பேனென்று சொல்லி, ஒரு மேட்டின்மேலே போனான்.

சு பராபரன் பீலெயாமைச் சந்தித்தார்; அப்பொழுது அவருடனே, நான் ஏழு பலி பீடங்களை ஆயத்தம்பண்ணி, ஒவ்வொரு பலிபீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டேன் என்றான்.

ஙு அப்பொழுது கர்த்தர் பீலெயாமின் வாயிலே வசனத்தைக் கொடுத்து, நீ பாலாக்கண்டையிலே திரும்பிப்போய், இன்னபடி சொல்லக்கடவாயென்றார்.

சூ அவனண்டைக்குத் திரும்பிப்போனான்; இதோ பாலாக் மோவாபுடைய சகல பிரபுக்களோடும்கூடத் தன் சர்வாங்கதகனத்தண்டையில் நின்றிருந்தான்.

எ ¶ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னதாவது: நீ வந்து எனக்காக யாக்கோபைச் சபி; நீ வந்து இஸ்ரவேலே வெறுத்துவிடு என்று மோவாபின் இராசாவாகிய பாலாக் என்னைக் கிழக்குப்பர்வதங்களிலிருக்கிற சூரியாவிலிருந்து அழைத்துவரப்பண்ணினான்.

ஞ பராபரன் சபிக்காதவனை நான் சபிப்பதெப்படி? கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பதெப்படி?

சூ ஏனெனில் நான் கல்மலைகளின் கொடுமுடியில் இருந்து அவனைக் கண்டு, மேடுகளிலிருந்து அவனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; இதோ அந்தச் சனம் சாதிகளோடே கலவாமல் தனியே வாசமாயிருக்கும்.

ம யாக்கோபின் *தூளையும் இஸ்ரவேலுடைய கால்பங்கின் இலக்கத்தையும் எண்ணுபவன் யார்? என் ஆத்துமா நீதிமான்களின் மரணமாய் மரித்து, என் முடிவு அவர்கள் முடிவைப்போல இருக்கக்கடவதென்றான். *உ மோ. உஅ. மச.

¶ அப்பொழுது பாலாக் பீலெயாமை

டனே, நீ எனக்கு என்னசெய்தாயிருப்பி? என் சத்துருக்களைச் சபிக்கஉன்னை அழைப்பித்தேன்; ஆனால் இதோ அவர்களை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்தாயென்றான்.

ஙஉ அவன் பிரதியுத்தாரமாக, கர்த்தர் என் வாயிலே கொடுத்ததையே சொல்ல, நான் கவனமாயிருக்கவேண்டாமோ என்றான்.

ஙஈ ¶ அப்பொழுது பாலாக் அவனுடனே, நீ அவர்களைக் காணத்தக்க வேறொரு இடத்திற்கு என்னோடேகூட வாடாவா; அங்கே அவர்களையெல்லாம் காணுமல் அவர்கள் கடைசிப் பாளயத்தைமாத்திரம் காண்பாய்; அங்கேயிருந்து எனக்காக அவர்களைச் சபி என்று சொல்லி,

ஙச அவனைப் பில்காவின் கொடுமுடியில் இருக்கிற சோப்பீம் வெளியிலே அழைத்துக்கொண்டுபோய், ஏழு பலிபீடங்களைக் கட்டினான்; ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

ஙடு அவன் பாலாக்குடனே, இங்கே உம்முடைய சர்வாங்கதகனத்தண்டையிலே நின்றிரும்; நான் அங்கே அவனைச் சந்தித்துக்கொள்ளப் போவேனென்றான்.

ஙசு கர்த்தர் பீலெயாமைச் சந்தித்து, வசனத்தை அவன் வாயிலே கொடுத்து, நீ பாலாக்கண்டையிலே திரும்பிப்போய், இன்னபடி சொல்லக்கடவாயென்றார்.

ஙஎ அவனண்டை அவன் வருகிறபொழுது, இதோ அவன் மோவாபின் பிரபுக்களோடும்கூடத் தன்னுடைய சர்வாங்கதகனத்தண்டையிலே நின்றிருந்தான்; பாலாக் அவனுடனே, கர்த்தர் சொன்னதென்னவென்றான்.

ஙஅ ¶ அப்பொழுது அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னதாவது: பாலாக்கே, எழுந்து கேளும்; சிப்போரின் குமரனே, எனக்குச் செவிகொடும்.

ஙசு *பராபரன் பொய்சொல்ல, ஒரு மனிதன் அல்ல; சொன்னது தமக்கு மனஸ்தாபமாயிருக்க, அவர் ஒரு மனுப்புத்திரன்

அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரோ? அவர் வசனித்தும் அதை நிறைவேற்றாதிருப்பாரோ? *க சாமு. ஙடு. உகூ.

உவ இதோ ஆசீர்வதிக்கக் கட்டளை பெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார்; அதை நான் திருப்பக்கூடாது.

உச யாக்கோபிலே வருத்தம் தெரிகிறதுமில்லை; இஸ்ரவேலிலே பிரயாசம் காணப்படுகிறதும் இல்லை; அவர்களுடைய பராபரனாகிய கர்த்தர் அவர்களோடிருக்கிறார்; இராசாவின் கெம்பீரம் அவர்களிடத்தில் இருக்கின்றது.

உஉ பராபரன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்துக்கொத்த சத்துவம் அவர்களுக்கு இருக்கின்றது.

உக ஏனெனில் யாக்கோபுக்கு விரோதமாகத்தக்க நிமித்தம்பார்க்குதலுமில்லை; இஸ்ரவேலுக்கு விரோதமாகத்தக்க குறிசொல்லுதலுமில்லை; பராபரன் செய்தது எதென்று கொஞ்சக்காலத்திலே யாக்கோபையும்இஸ்ரவேலையும்குறித்துச் சொல்லப்படும்.

உச இதோ சனம் தஷ்டசிங்கத்தைப்போல எழும்பி, இளஞ்சிங்கத்தைப்போல உயரும்; அது எடுத்த இரையைப் பட்சித்து, வெட்டுண்டவர்களின் இரத்தத்தைக் குடியாதிருக்கும்மட்டும் படுத்துக்கொள்ளாதென்றான்.

உஙி ॥ அப்பொழுது பாலாக் பீலெயாமுடனே, நீ அதைச் சபிக்கவே சபிக்கவும் வேண்டாம்; ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்கவும்வேண்டாமென்றான்.

உசு பீலெயாம் பாலாக்குக்குப் பிரதியுத்தாரமாக கர்த்தர் சொல்லும்படியெல்லாம் செய்வேனென்று உம்மோடே நான் சொல்லவில்லையோ என்றான்.

உஎ ॥ அப்பொழுது பாலாக் பீலெயாமுடனே, வா, வேறொரு இடத்திற்கு உன்னை அழைத்துக்கொண்டுபோவேன்; நீ அங்கேயிருந்து எனக்காக அதைச் சபிக்க, ஒருவேளை பராபரனுடைய பார்வைக்குச் செவ்வையாயிருக்கும் என்று சொல்லி,

உஅ அவனை வனாந்தரத்திற்கு எதிராயிருக்கிற பேயோரின் கொடுமுடிக்கு அழைத்துக்கொண்டு போனான்.

உக அப்பொழுது பீலெயாம் பாலாக்குடனே, இங்கே எனக்கு ஏழு பலிபீடங்களைக் கட்டி, இங்கே எனக்கு ஏழு காளை ஏழு தையும் ஏழு ஆட்டுக்கடாவையும் ஆயத்தமாக நிறுத்தும் என்றான்.

ஙவ பீலெயாம் சொன்னபடி பாலாக் செய்தான்; அப்பொழுது ஒவ்வொரு பீடத்தில் ஒவ்வொரு காளை எருதையும் ஒவ்வொரு ஆட்டுக்கடாவையும் பலியிட்டான்.

உசு. அதிகாரம்.

இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறது கர்த்தரின் பார்வைக்கு ஏற்றிருக்கும் என்றதை பீலெயாம் கண்டபொழுதோவெனில், அவன் மூன்றிச் செய்துவந்ததுபோல, நிமித்தங்களைச் சந்தித்துக்கொள்ளப் போகாமல், தன் முகத்தை வனாந்தரத்திற்கு நேராகத் திருப்பி,

உ தன் கண்களை ஏறெடுத்து, இஸ்ரவேல் தன் கோத்திரங்களின்படியே தங்கியிருக்கிறதைப் பார்த்தான்; அப்பொழுது பராபரனுடைய ஆவி அவன்மேல் வந்திறங்கி,

ங அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னது: பேயோரின் குமாரனாகிய பீலெயாம் சொல்லுகிறதென்ன? கண்தெளிவிக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதென்ன?

ச பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்டு, சர்வத்திற்கும் வல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழவிழும்பொழுது, கண்கள் நிறக்கப்படுகிறவனே சொல்லுகிறதென்னவெனில்,

ஞ யாக்கோபே, உன் கூடாரங்களும், இஸ்ரவேலே, உன் வாசஸ்தலங்களும், எத்தனை வடிப்பமாயிருக்கின்றன?

ட பரவிப்போகிற ஆறுகளைப்போலவும், நதி அருகான தோட்டங்களைப்போலவும்,

Digitized by Google

கர்த்தர் நாட்டின சந்தனமரங்களைப்போலவும், தண்ணீர்கள் ஓரத்தில் இருக்கிற கேதுருக்களைப்போலவும் இருப்பார்கள்.

எ அவர்களுடைய தொட்டிகளிலிருந்து தண்ணீர் பாயும்; அவர்கள் வித்துத் நிரள் சீர்ப்பாய்ச்சலாயிருக்கும்; அவர்களுடைய இராசா ஆகாகைப்பார்க்கிலும் உயருவான்; அவர்கள் இராச்சியம் மேன்மையாயிருக்கும்.

ஆ பராபரன் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார்; காண்டாமிருகத்தைக்கொத்த சத்துவங்கள் அவர்களுக்கு இருக்கின்றது; அவர்கள் தங்கள் சத்துருக்களாகிய சாதிகளைப் பட்சித்து, அவர்கள் எலும்புகளை நொறுக்கி, அவர்களைத் தங்கள் அம்புகளாலே எய்வார்கள்.

ஈ சிங்கத்திற்கும் தஷ்டசிங்கத்திற்குமே ஒப்பாய் மடங்கிப் படுத்துக்கொண்டார்கள், அவர்களை எழுப்புபவன் யார்? உன்னை ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன்; உன்னைச் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவனென்றான்.

உ ¶ அப்பொழுது பாலாக் பிலெயாமின் மேல் கோபம்மூண்டவனாகிக் கையோடே கை தட்டி, பிலெயாமோடே சொன்னதாவது: என் சத்துருக்களைச் சபிக்க உன்னை அழைத்தனுப்பினேன்; நீயோவெனில் இதோ இந்த மூன்றுமுறையும் அவர்களை ஆசீர்வதித்தாய்.

ஊ இப்பொழுதும் உன்னிடத்திற்கு ஓடிப்போ; உன்னைக் கனம்பண்ணவே பண்ணுவேனென்றேன்; ஆனால் இதோ கர்த்தர் உனக்குக் கனம்வராதபடிக்குப் பண்ணினாரென்றான்.

ஐ அப்பொழுது பிலெயாம் பாலாக்கோடே சொன்னதாவது: பாலாக் எனக்குத் தன் வீடுநிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும் நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்லுவேனென்று, ஒ நீர் என்னண்டைக்கு அனுப்பின உம்முடைய தாசருபதிகளோடும் நான் சொல்லவில்லையோ?

ஓ இப்பொழுதும் இதோ நான் என் சனத்தண்டைக்குப் போய்விடுகிறேன்; பிற்காலத்தில் இந்தச் சனம் உம்முடைய சனத்திற்குச் செய்வது இன்னதென்று உமக்கு யோசனையாய்ச் சொல்லுவேன் வாருமென்றான்.

ஔ ¶ அவன் தன் வாக்கியத்தை எடுத்துச் சொன்னது: பேயோரின் குமாரன் பிலெயாம் சொல்லுகிறதென்ன? கண்தெளிவிக்கப்பட்ட புருஷன் சொல்லுகிறதென்ன?

�க பராபரனுடைய வார்த்தைகளைக் கேட்டு, உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து, சர்வத்திற்கும் வல்லவரின் தரிசனத்தைக் கண்டு, தாழவிழுகையில், கண்கள் திறக்கப்படுகிறவனே சொல்லுகிறதென்னவெனில்,

ஒ அவனைக் காண்பேன்; ஆனால் இப்பொழுது அல்ல, அவனைப் பார்ப்பேன்; ஆனால் சமீபத்திலல்ல, ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதித்து, ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பி, மோவாபியரின் எல்லைகளை நொறுக்கி, சேத்புத்திரரையெல்லாம் நிர்மூலமாக்கும்.

ஙு ஏதோம் அவனுக்குச் சுதந்தரமாகி, சேயீர் தன் சத்துருக்களுக்குச் சுதந்தரமாய்ப் போம்; இஸ்ரவேல் பலம்செய்யும்.

ஙூ *ஆளுகிறவர் யாக்கோபிலிருந்து வந்து, பட்டணங்களில் மீதியானதை அழிப்பாரென்றான். *மிகா. இ. க.

உ ¶ அவன் ஆமலேக்கைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்து, ஆமலேக், சாதிகளில் முந்தி எழும்பினவன், ஆனால் அவன் பின்சந்ததி முழுவதும் அழியுமென்றான்.

உக ¶ அவன் கேனியனைப் பார்த்து, தன் வாக்கியத்தை எடுத்து, உன் வாசஸ்தலம் அரணிப்பானது; கல்மலையில் உன் கூட்டைக் கட்டிப்போட்டாய்.

Digitized by Google

உஉ ஆகிலும் கேனியன் அழிந்துபோவான்; அசூர் உன்னைச் சிறைபிடித்துக்கொண்டு போக, எத்தனாகான் செல்லுமென்றான்.

உந பின்னையும் அவன் தன் வாக்கியத்தை எடுத்து, ஆ, இதைப் பராபரன் செய்யும் பொழுது, உயிரோடிருப்பவன் யார்?

உச கித்திமின் கரைதுறையிலிருந்து கப்பல்கள் வந்து, அசூலாச் சிறுமைப்படுத்தி, ஏபெரையும் சிறுமைப்படுத்தும்; ஆனால் அவனும் அழிந்துபோவான் என்றான்.

உடு ¶ பிற்பாடு பீலெயாம் எழுந்து புறப்பட்டு, தன்னிடத்திற்குத் திரும்பினான்; பாலாக்கும் தன் வழியே போனான்.

உரு. அதிகாரம்.

இஸ்ரவேல் சித்திமிலே தங்கியிருந்தது; அங்கே சனம் மோவாப் குமாரத்திகளோடே வேசித்தனம்பண்ணத் தொடக்கிற்று.

உ *இவர்கள் சனத்தைத் தங்கள் தேவர்களுடைய பலிகளின் விருந்துகளுக்கு அழைத்தார்கள்; சனம் போய்ப் புசித்து, அவர்கள் தேவர்களைப் பணிந்துகொண்டது.

*சமோ. உக. யஉ.

ஈ இஸ்ரவேல் பேயோர் மலை பாகாலுக்கு உடன்தையாயிற்று; ஆகையால் இஸ்ரவேலின்மேலே கர்த்தருடையகோபம்மூண்டது.

ச கர்த்தர் மோசேயுடனே, நீ சனத்தின் தலைவரையெல்லாம் கூட்டிக்கொண்டு, கர்த்தருடைய கோபத்தின் உக்கிரம் இஸ்ரவேலைவிட்டு நீங்கும்படிக்கு, அப்படிக்கொத்தவர்களைக் கர்த்தருக்காகச் சூரியனுக்கு எதிரே தூக்கிவிடு என்றார்.

ஏ அப்படியே மோசே இஸ்ரவேலின் நியாபதிபதிகளோடே நீங்கள், அவரவர் பேயோர்மலை பாகாலுக்கு உடன்தையான உங்கள் மனிதரைக் கொன்றுவிடுங்கள் என்றான்.

கூ அப்பொழுது இதோ மோசேயின் கண்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லாச் சபையின் கண்களுக்கும்முன்பாகவும், இவர்கள் ஆசரிப்புக்கூடாரத்தின் வாசலுக்குமுன்பாக அழும்போதும், இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் ஒரு மீதியானிச்சியைத் தன் சகோதரரிடத்திலே அழைத்துக்கொண்டு வந்தான்.

எ அதை ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டபொழுது, அவன் கூடிச்சபையிலிருந்து எழுந்து, ஒரு ஈட்டியைத் தன் கையிலே பிடித்து,

ஆ இஸ்ரவேல் மனிதன் வேசித்தனம்பண்ணும் மூலியிலே அவன் பின்னாலே போய், இஸ்ரவேல் மனிதனும் அந்த ஸ்திரியுமாகிய இருவரையும் இட்டி அவள் வயிற்றில் உருவிப்போக அவனாலே குத்திப்போட்டான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரரிலுண்டான வாதை நின்றுபோயிற்று.

கூ அந்த வாதையால் செத்தவர்கள் இருபத்து நாலாயிரம்பேராயிருந்தார்கள்.

ஐ ¶ கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

ஙக நாம் நம்முடைய எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலம் ஆக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், அவர்கள் நடுவில் நமக்காகப் பத்தினியம் காண்பித்தபடியால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான நம்முடைய உக்கிரத்தைத் திருப்பினான்.

ஙஉ ஆகையால் இதோ நாம் அவனுக்கு நம்முடைய சமாதானத்தின் உடம்படிக்கையைக் கட்டளையிடுகிறோம்.

ஙந அவன் தன் பராபரனுக்காகப் பத்தினியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி உண்டாக்கினபடியினாலே, அவனுக்கும் அவனுக்குப்பிற்பாடு அவன் வித்திற்கும் நித்திய ஆசாரியப்பட்டத்தின் உடம்படிக்கை உண்டாயிருக்குமென்று சொல்லென்றார்.

ஙச மீதியானிச்சியோடேகூடக் குத்துண்டுசெத்த இஸ்ரவேல் மனிதனுடைய பேர் சலூவின் குமாரன் சிம்ரி, அவன் சிமெயோ

னியரின் தகப்பன் வீட்டில் ஒரு பிரபுவாயிருந்தவன்.

ரூ குத்தண்ட மீதியான் சாதியான ஸ்திரியின் பேரோவெனில், சூரின் குமாரத்தி கல்பி; இவன் மீதியானியரின் தகப்பன் வீட்டாரான சனசதனங்களின் தலைவனுயிருந்தான்.

ரூ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

ரூ மீதியானியரை இறுகப்பிடித்து, அவர்களை வெட்டிப்போடுங்கள்.

ரூ ஏனென்றுல் பேயோரின் சம்மதியிலும் பேயோர் காரியத்தின் நிமித்தம் உண்டான வாதையின் நாளிலே, குத்தண்ட அவர்கள் சகோதரியாகிய கல்பி என்ற மீதியான் பிரபுவினுடைய குமாரத்தியின் சம்மதியிலும், அவர்கள் உங்களுக்குச் செய்த தந்திரச் சர்ப்பனைகளிலுலே, உங்களை மோசம்போக்கி இறுகப்பிடித்தார்களென்றுர்.

உசூ. அதிகாரம்.

அந்த வாதைக்குப் பிற்பாடு சம்பவித்ததென்றுல், கர்த்தர் மோசேயோடும் ஆசாரியருகிய ஆரோனின் குமாரன் எலெயாசாரோடும் சொன்னதாவது:

உ இஸ்ரவேல் புத்திரரின் சகல சபையான அவர்கள் பிதாக்களுடைய வீட்டிலே, இருபதுவயதுமுதல்கொண்டிருந்த இஸ்ரவேலிலே யுத்தத்திற்குப் புறப்படத் தக்கவர்களையெல்லாம் தொகை ஏற்றுங்களென்றுர்.

ஈ அப்பொழுது மோசேயும் ஆசாரியருடெ எலெயாசாரும் எரிகோவின் இட்ட இருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனுன வெளிகளிலே அவர்களோடே பேசி,

ஏ கர்த்தர் மோசேக்கும் எகிப்துதேசத்திலிருந்து புறப்பட்ட இஸ்ரவேல் புத்திரருக்கும் கற்பித்திருக்கிறபடியே, இருபதுவயதுமுதல்கொண்டிருக்கிறவர்களை என்கள் என்றுர்கள்.

ஐ ¶ ரூபன் இஸ்ரவேலின் முதல்பேறனவன்; அவனுடைய குமாரர், ஆனோக்கியரின் வம்சத்தகப்பன் ஆனோக்கும், பாலுவியரின் வம்சத்தகப்பன் பாலுவும்,

ஊ ஏத்சிரோனியரின் வம்சத்தகப்பன் ஏத்சிரோனும், கர்மியரின் வம்சத்தகப்பன் கர்மியும்தானே.

எ இவைகளே ரூபனியரின் வம்சங்கள்; அவர்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்துமூவாயிரத்து எழுநூற்று மூப்பதுபேர்.

ஏ பாலுவின் பிள்ளைகளில் ஒருவன் எலியாப் என்றவன்.

ஐ எலியாபின் குமாரர் நேமுவேல், தாத்தான், அபீராம், என்றவர்கள்; கர்த்தருக்கு விரோதமாகச் சண்டைபண்ணுகிற கோரகின் கூட்டாளிகளாகி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகச் சண்டைபண்ணினவர்களாகிய தாத்தானும் அபீராமும் என்ற சபையில் அழைக்கப்பட்டவர்கள் இவர்கள்தான்.

ஒ பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும் கோரகையும் விழுங்கினநிருமும், அக்கினி இருநூற்று ஐம்பதுபேரைப் பட்சித்தநிருமும், அந்தக் கூட்டம் சேந்த ஒரு அடையாளமாயிற்று.

ஓ கோரகின் குமாரரோவெனில் சாகாதிருந்தார்கள்.

ஓஉ ¶ சிமெயோனுடைய குமாரரின் வம்சங்களாவது: நேமுவேலின் சந்ததியான நேமுவேலரின் வம்சமும், யாமீனின் சந்ததியான யாமீனியரின் வம்சமும், யாகினின் சந்ததியான யாகினியரின் வம்சமும்,

ஓஊ சேராகின் சந்ததியான சேராகியரின் வம்சமும், சவுலின் சந்ததியான சவுலியரின் வம்சமும்தானே.

ஓச இவைகளே சிமெயோனியரின் வம்சங்கள், அவர்கள் இருபத்திரண்டாயிரத்து இருநூறுபேர்.

ஓடு ¶ காத்தினுடைய குமாரரின் வம்சங்களாவது: செப்போனின் சந்ததியான செப்போனியரின் வம்சமும், ஆகியின் சந்ததி

யான ஆனியரின் வம்சமும், சூனியின் சந்தியான சூனியரின் வம்சமும்,

உக ஒன்னியின் சந்தியான ஒன்னியரின் வம்சமும், எரியின் சந்தியான எரியின் வம்சமும்,

உஎ ஆரேமின் சந்தியான ஆரேமியரின் வம்சமும், அரெலியின் சந்தியான அரெலிகளின் வம்சமும்தானே.

உஅ இவைகளே காத் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், காற்பதினாயிரத்து ஐந்நூறுபேர்.

உக ¶ யூதாவின் குமாரரான ஏரும், ஓனானும் கானான்தேசத்திலே செத்தார்கள்.

உஉ யூதாவுடைய மற்றக் குமாரரின் வம்சங்களாவது: சேலாவின் சந்தியான சேலாவியரின் வம்சமும், பேரேசின் சந்தியான பேரேசியரின் வம்சமும், சேராகின் சந்தியான சேராகியரின் வம்சமும்தானே.

உக பேரேசுடைய குமாரரின் வம்சங்களாவெனில், எஸ்ரோனின் சந்தியான எஸ்ரோனியரின் வம்சமும், ஆமூலின் சந்தியான ஆமூலியரின் வம்சமும்தானே.

உஉ இவைகளே யூதாவின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், எழுபத்தாறுயிரத்து ஐந்நூறுபேர்.

உசு ¶ இசஷாரின் குமாரரான தோலா, பூவா, யாசூப், சிம்ரோன் என்பவர்கள்.

உஎ இவைகளே இசஷாரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், அறுபத்து நாலாயிரத்து முந்நூறுபேர்.

உஅ ¶ சேபுலோனுடைய குமாரரின் வம்சங்களாவது: சேரேதின் சந்தியான சேரேதியரின் வம்சமும், ஏலோனின் சந்தியான ஏலோனியரின் வம்சமும், யாலெயேலின் சந்தியான யாலெயேலியரின் வம்சமும்தானே.

உக இவைகளே சேபுலோனியரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் அறுபதினாயிரத்து ஐந்நூறு பேர்.

உஉ ¶ யோசேப்புடைய குமாரரான மனாசே, எப்பிராயீம் என்றவர்களின் வம்சங்களாவது:

ஈக மனாசேயினுடைய குமாரின் வம்சங்கள் எதெனில், மாகீரின் சந்தியான மாகீரியரின் வம்சமும், மாகீர் பெற்ற கிலெயாதின் சந்தியான கிலெயாதியரின் வம்சமும்,

ஈஅ கிலெயாத் பெற்ற இயேசேரின் சந்தியான் இயேசேரியரின் வம்சமும், ஏலேக்கின் சந்தியான ஏலேக்கியரின் வம்சமும்,

ஈக அஸ்ரியேலின் சந்தியான அஸ்ரியேலரின் வம்சமும், சேகேமின் சந்தியான சேகேமியரின் வம்சமும்,

ஈஉ செமீதாவின் சந்தியான செமீதாவியரின் வம்சமும், ஏப்பேரின் சந்தியான ஏப்பேரியரின் வம்சமும்தானே.

ஈசு ஏப்பேரின் குமாரனான சேலாப்பெயாத்திற்கோவெனில், குமாரர் இல்லாமல், குமாரத்திகள்மாத்திரம் இருந்தார்கள்; இவர்கள் நாமங்கள், மக்லாள், நோகாள், ஒக்லாள், மில்க்காள், திற்சாள் என்பன.

ஈஎ இவைகளே மனாசேயின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் ஐம்பத்திராயிரத்து எழுநூறுபேர்.

ஈஅ ¶ எப்பிராயீமுடைய குமாரரின் வம்சங்களாவது: சூத்தெலாகின் சந்தியான சூத்தெலாகியரின் வம்சமும், பெகேரின் சந்தியான பெகேரியரின் வம்சமும், தாகானின் சந்தியான தாகானியரின் வம்சமும்,

ஈக சூத்தெலாக் பெற்ற ஏரானின் சந்தியான ஏரானியரின் வம்சமும்தானே.

ஈஎ இவைகளே எப்பிராயீம் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் முப்பத்திராயிரத்து ஐந்நூறுபேர்; இவைகளே யோசேப் புத்திரரின் வம்சங்கள்.

Digitized by Google

உசு ¶ பென்யமீனுடைய குமாரரின் வம்சங்களாவது: பேலாவின் சந்ததியான பேலாவியரின் வம்சமும், அஸ்பேலின் சந்ததியான அஸ்பேலியரின் வம்சமும், அகிராமின் சந்ததியான அகிராமியரின் வம்சமும்,

உக சூப்பாமின் சந்ததியான சூப்பாமியரின் வம்சமும், ஊப்பாமின் சந்ததியான ஊப்பாமியரின் வம்சமும்,

உஎ பேலாப் பெற்ற ஆரேதின் சந்ததியான ஆரேதியரின் வம்சமும், காமானின் சந்ததியான கமானியரின் வம்சமும்தானே.

உக இவைகளே பென்யமீன் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் காற்பத்தையாயிரத்து அறுநூறுபேர்.

உஉ ¶ தாணுடைய குமாரரின் வம்சங்கள்; சூகாமின் சந்ததியான சூகாமியரின் வம்சம்தானே; இவைகள் தாணின் வம்சங்கள்.

உங சூகாமியரின் வம்சங்களில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள் எல்லாரும் அறுபத்துநாலாயிரத்து நாநூறுபேர்.

உச ¶ ஆசேருடைய குமாரரின் வம்சங்களாவது: இம்னாவின் சந்ததியான இம்னாவியரின் வம்சமும், இஸ்வியின் சந்ததியான இஸ்வியரின் வம்சமும், பெரீயாவின் சந்ததியான பெரீயாவியரின் வம்சமும்,

உஙி பெரீயா பெற்ற ஏபேரின் சந்ததியான ஏபேரியரின் வம்சமும், மல்கியேலின் சந்ததியான மல்கியேலியரின் வம்சமும்தானே.

உசு ஆசேருடைய குமாரத்தியின்பேர் சாரா.

உசா இவைகளே ஆசேர் புத்திரரின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், ஐம்பத்து மூவாயிரத்து நாநூறுபேர்.

உசூ ¶ நப்தலியினுடைய குமாரரின் வம்சங்களாவது: யாத்சியேலின் சந்ததியான யாத்சியேலியரின் வம்சமும், கூனியின் சந்ததியான கூனியரின் வம்சமும்,

உசஉ எத்சேரின் சந்ததியான எத்சேரியரின் வம்சமும், சில்லேமின் சந்ததியான சில்லேமியரின் வம்சமும்தானே.

உசஙி இவைகளே நப்தலியின் வம்சங்கள்; அவைகளில் இலக்கம்பார்க்கப்பட்டவர்கள், நாற்பத்தஞ்சாயிரத்து நாநூறுபேர்.

உசச ¶ இஸ்ரவேல் புத்திரரில் இலக்கம்பார்க்கப்பட்ட இவர்கள் அனைவரும் ஆறுலட்சத்து எழுநூற்று மூப்பதுபோயிருந்தார்கள்.

உசஎ ¶ கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உசக இவர்களுக்குத் தேசம் பேர்களின் இலக்கத்திற்குத்தக்கதாய்ச் சுதந்தரமாகப் பங்கிடப்படக்கடவது.

உசங அநேகருக்கு அநேகமும் கொஞ்சமானவர்களுக்குக் கொஞ்சமுமாய், சுதந்தரமாகக் கொடுப்பாயாக; அவர்களில் எண்ணப்பட்டவர்களின் இலக்கத்திற்குத்தக்கதாக அவரவர்களுக்கு அவரவர்கள் சுதந்தரம் கொடுக்கப்படக்கடவது.

உசஙி ஆகிலும் சீட்டுகளைப் போட்டு, தேசம் பங்கிடப்படக்கடவது; தங்கள் பிதாக்களுடைய கோத்திரங்களுக்கு இருக்கும் நாமங்களின்படியே சுதந்தரிக்கக்கடவர்கள்.

உசஙஙி அநேகமானவர்களுக்கும், கொஞ்சமானவர்களுக்கும் அவர்களுடைய சுதந்தரங்கள் சீட்டுகள் விழுகிறபடியே பங்கிடப்படுவதாகவென்றார்.

உசஞ ¶ இலக்கம்பார்க்கப்பட்ட இலேவியரின் வம்சங்களாவது: கெர்சோனின் சந்ததியான கெர்சோனியரின் வம்சமும், கோகாத்தின் சந்ததியான கோகாத்தியரின் வம்சமும், மெராரியின் சந்ததியான மெராரியரின் வம்சமும்,

உசட இலேவியின் மற்ற வம்சங்களாகிய லிப்னீயரின் வம்சமும், எபிரோனியரின் வம்சமும், மகேலியரின் வம்சமும், மூசியரின் வம்சமும், கொராகியரின் வம்சமும்தானே; கோகாத் அம்ராமைப் பெற்றான்.

உசக அம்ராமுடைய பெண்சாதியின் பேர் யோகெபேத்; அவள் இலேவிக்கு எகிப்

நிலே பிறந்த குமாரத்தி; அவள் அம்ராமுக்கு ஆரோனையும், மோசேயையும் அவர்கள் சகோதரியான மிரியாமையும் பெற்றாள்.

கூ ஆரோனுக்கு நாதாபும், அபீயூவும், எலெயாசரும், இத்தாமாரும் பிறந்தார்கள்.

கூக ஆனல் நாதாபும், அபீயூவும் அந்திய அக்கினியைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுவருகிறபொழுது, செத்துப்போனர்கள்.

கூஉ அவர்களில் ஒருமாதம்முதல்கொண்டிருந்து இலக்கம்பார்க்கப்பட்ட ஆண்சாதியானவர்கள் எல்லாரும் இருபத்தாமூவாயிரம்பேர்; ஏனென்றால் இஸ்ரவேல் புத்திரரின் நடுவே அவர்களுக்குச் சுதந்தரம்கொடுக்கப்படாதபடியினாலே, அவர்கள் இஸ்ரவேல் புத்திரரின் இலக்கத்திற்குள்பட்டதில்லே.

கூட ¶ மோசேயும் ஆசாரியனுகிய எலெயாசாரும் எரிகோவின் கிட்டஇருக்கும் யோர்தானுக்கு இப்பாலே மோவாபின் சமனவெளிகளில் இஸ்ரவேல் புத்திரரை இலக்கம்பார்க்கிறபொழுது இருந்தவர்கள் இவர்கள்தான்.

கூச முதல் மோசேயும் ஆசாரியனுகிய ஆரோனும் சீனாயின் வனாந்தரத்திலே இஸ்ரவேல் புத்திரரை இலக்கம்பார்க்கும்பொழுது இருந்தவர்களிலே, இவர்கள் ஒருவருமில்லே.

கூடு ஏனென்றால் வனாந்தரத்திலே சாவவே சாவார்களென்று கர்த்தர் அவர்களுக்குச் சொல்லியிருந்தார்; எப்பூனெயின் குமாரனுகிய காலேபையும், நூனின் குமாரனுகிய யோசுவாவையும் ஒழிய, வேறொருவரும் அவர்களில் மீதியாயிருந்ததில்லே.

உஎ. அதிகாரம்.

யோசேப்பின் குமாரனுகிய மனுசேயின் வம்சங்களிலே. மனுசேயின் குமாரனுகிய மாகீரின் மகனை கிலெயாத்திற்குப் பிறந்த ஏபேருக்குச் குமாரனுயிருந்த *செலாப்பெயாத்தின் குமாரத்திகளாகிய மக்லான், நோகாள், ஒக்லான், மில்க்காள், நிற்சாள் என்னப்பட்டவர்கள் சேர்ந்துவந்து, *ச மோ. உசு. ஈஈ.

உ ஆசரிப்புக்கூடாரவாசலிலே மோசேக்கும், ஆசாரியனுகிய எலெயாசாருக்கும், பிரபுக்களுக்கும், சபை அனைத்திற்கும்முன்பாக நின்றுகொண்டு சொன்னதாவது:

ஈ எங்கள் தகப்பன் வனாந்தரத்தில் மரணமடைந்தார்; ஆனல் அவர் கர்த்தருக்கு விரோதமாகக் கூடின கோரகின் கூட்டத்தாரில் ஒருவராயிராமல், தம்முடைய பாவத்தினுலே மரித்தார்; அவருக்குக் குமாரரில்லே.

ச எங்கள் தகப்பனுக்குக் குமாரன் இல்லாதபடியினுலே, அவர்பேர் அவருடைய வம்சத்தில் அற்றுப்போவானேன்? எங்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே எங்களுக்குக் காணியாட்சியைத் தாருமென்றார்கள்.

ஏ ¶ மோசே அவர்கள் நியாயத்தைக் கர்த்தருக்குமுன்பாகக் கொண்டுபோனன்.

கூ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது:

எ செலாப்பெயாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது நிதானம்; அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள்ளே அவர்களுக்குச் சுதந்தரம் கொடுக்கவே கொடுக்கப்படக்கடவது; அவர்கள் தகப்பன் பின்வைத்த சுதந்தரத்தை அவர்களுக்கு வரப்பண்ணுவாயாக.

அ இஸ்ரவேல் புத்திரருக்கும் நீ சொல்லவேண்டியதேதெனில், ஒருவன் குமாரனில்லாமல் மரித்தால், அவன் பின்வைத்த சுதந்தரத்தை அவன் குமாரத்திக்கு வரப்பண்ணக்கடவீர்கள்.

கூ அவனுக்குக் குமாரத்தி இல்லாதிருந்தால், அதை அவன் சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

ஐ அவனுக்குச் சகோதரர் இல்லாதிருந்தால், அதை அவன் தகப்பனுடைய சகோதரருக்குக் கொடுக்கக்கடவீர்கள்.

ஒக அவன் தகப்பனுக்குச் சகோதரர் இல்

Digitized by Google

லாதிருந்தால், அதை அவன் வம்சத்திலே அவனுக்குக் கிட்டின உறவின்முறையானுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கக்கடவீர்கள்; இது, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த படியே, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயப்பிரமாணமாயிருக்கக்கடவதென்று சொல்லென்றார்.

ஐஉ ¶ பிற்பாடு கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: *நீ இந்த ஆபரிம்பர்வதத்தில் ஏறி, நாம் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப்பார். *உ மோ. ஈஉ. சஅ, சகூ.

ஐஈ நீ அதைப் பார்த்தபிறகு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டதுபோல, உன் சனத்தாரிடத்திலே சேர்க்கப்படுவாய்.

ஐச ஏனெனில் சபை வாக்குவாதம்பண்ணின சீரெய்வனூந்தரத்தில் நம்மைத் தண்ணீரின் சங்கதியிலே அவர்கள் கண்களுக்குமுன்பாகப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் *நம்முடைய கட்டளைக்கு இரண்டகம்பண்ணினீர்களென்றார்; அது சீரெய்வனூந்தரத்திலே காதேல் ஊர்க்கிட்ட உண்டான மேரிபாவின் தண்ணீர்தானே. *ச மோ. உஐ. ஐஉ.

ஐஉ ¶ அப்பொழுது மோசே கர்த்தரோடே சொன்னதாவது:

ஐஊ கர்த்தருடைய சபை மேய்ப்பனில்லாத மந்தையைப்போல இராதபடிக்கு,

ஐஎ அவர்களுக்குமுன்பாகப் போக்கும் வரத்தமாயிருக்கிறதற்கும் அவர்களைப் போகவும் வரவும்பண்ணுகிறதற்குமான ஒரு புருஷனை, சகல மாம்சத்தினுடைய ஆவிகளின் பராபரனாகிய கர்த்தர் அவர்கள்மேல் அதிகாரியாக வைப்பாராக என்றான்.

ஐஏ ¶ அப்பொழுது கர்த்தர் மோசேயோடே சொன்னதாவது: ஆவி வாசமாயிருக்கிற புருஷனாகிய யோசுவாவென்ற நூனின் குமாரனை நீ சேர்த்துக்கொண்டு, அவன்மேலே உன் கையைவைத்து,

ஐஊ அவனை ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபை அனைத்திற்கும்முன்பாக நிறுத்தி, அவர்கள் கண்களுக்குமுன்பாக அவனுக்குக் கற்பனைகொடுத்து,

உஐ இஸ்ரவேல் புத்திரரின் சபையெல்லாம் அவனுக்குக் கீழ்ப்படியும்படிக்கு உன் மகிமையில் சிலவற்றை அவன்மேலே வை.

உக அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்குமுன்பாக நிற்பானாக; இவன் அவனுக்காகக் கர்த்தருக்குமுன்பாக யுரீம், வெளிச்சங்களின் நியாயத்தினாலே ஆலோசனை கேட்கக்கடவன்; அவருடைய கட்டளையின்படியே, அவனும் அவனோடேகூட இஸ்ரவேலின் எல்லாப் புத்திரரும் சபை அனைத்தும் போகவும் அவருடைய கட்டளையின்படியே வரவும்வேண்டியதென்றார்.

உஉ ¶ கர்த்தர் தனக்குக் கற்பித்தபடியே. மோசே செய்து, யோசுவாவைச் சேர்த்துக்கொண்டு, அவன் ஆசாரியனாகிய எலெயாசாருக்கும் சபை அனைத்திற்கும் முன்பாக நிறுத்தி,

உங அவன்மேலே தன் கைகளை வைத்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே அவனுக்குக் கற்பனைகொடுத்தான்.

உஎ. அதிகாரம்.

கர்த்தர் மோசேயோடே பேசிச் சொன்னதாவது:

உ நமக்கு ஆற்றிய வாசனைக்கான நம்முடைய தகனபலிகளுக்கு அடுத்த நம்முடைய காணிக்கையையும் நம்முடைய அப்பத்தையும், அவைகளின் நிட்டமான காலத்திலே நமக்குச் செலுத்தும்படிக்கு, கவனமாயிருக்கக்கடவீர்களென்று நீ இஸ்ரவேல் புத்திரருக்குக் கற்பித்து,

ஈ ¶ அவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது: நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால், நாள் ஒன்றிற்கு நித்தம் சர்வாங்கதகனபலியாக ஒருவயதுள்ள பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகள்தானே.

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Digitized by Google

Bible. N. T. Tamil

THE

NEW TESTAMENT

OF OUR

LORD AND SAVIOUR JESUS CHRIST,

IN TAMIL:

WITH REFERENCES, CONTENTS OF THE CHAPTERS AND CHRONOLOGY,

FROM THE ENGLISH.

உலக இரட்சகராகிய

இயேசுக்கிறிஸ்துநாதர் அருளிச்செய்த

புதிய ஏற்பாடு.

இந்து

மூலவாக்கியம் இரேனியுசையராஸ்

கிரேக்க பாஷையிலிருந்து

தமிழிலே திருப்பப்பட்டும்,

சென்னபட்டணத்திலுள்ள

சத்தியவேத சங்கத்தாராஸ் பரிசோதித்து

இங்கிலிஷ் ஒத்துவாக்கிய பைபிளின்படி

ஏற்படுத்தப்பட்டுமிருக்கிறது.

கி. பி. தஅருக—வுமேலே

மதராபட்டணத்தில் அமெரிக்கன் பிரேபர் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

MADRAS:

PRINTED FOR THE AMERICAN BIBLE SOCIETY,

AT THE AMERICAN MISSION PRESS.

1859.

Digitized by Google

Digitized by Google

மத்தேயு என்பவர் எழுதின சுவிசேஷம்.

க. அதிகாரம்.

க ஞானம் முதல் போசேப்புவரைக்குமுள்ள இஸ்ரவேலுடைய வம்சாரிசையின் அட்டவணை. ம. தூ. கன்னிகையாள் போசேப்புக்கு நேமிக்கப்பட்டபோது, இஸ்ரயேல் பரிசுத்த ஆவியினால் உற்பவித்த அவளிடத்தில் பிறந்தது. மக. தேவதூதன் போசேப்புடைய தூக்க போசனையில் நிகழ்ந்தவின் திருஷ்டாந்தத்துக்கு அர்த்தம் உரைத்தது.

1 ஆபிரகாமின் சந்ததியாகிய 2 தாவீதின் சந்ததியாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினுடைய 3 வம்சவரிசையின் அட்டவணையாவது:

உ 4 ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான்; 5 ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான்; 6 யாக்கோப் யூதாவையும், அவன் சகோதரரையும் பெற்றான்.

ஊ 7 யூதா தாமார் என்பவளைச் சேர்த்து, பாரேசையும் சாராவையும் பெற்றான்; 8 பாரேசு எசுரோமைப் பெற்றான்.

ச எசுரோம் ஆராமைப் பெற்றான்; ஆராம் அமின்தாபைப் பெற்றான்; அமின்தாபு நவசோனைப் பெற்றான்.

ஏ நவசோன் சலுமோனைப் பெற்றான்; சலுமோன் ராகாப் பென்பவளைச் சேர்ந்து, போவோசைப் பெற்றான்; போவோசு ரூத் தென்பவளைச் சேர்ந்து, ஓபேத்தைப் பெற்றான்; ஓபேத்து எசேயைப் பெற்றான்.

கி. மு. ச.

1 தூக். க. உச.
2 சங். கஉ, ம்உ. ஏசா. மக. க. எரே. உக. இ. மத். உஉ. சஉ. போள. எ.சஉ. அப். உ.கம்: மக. உக. உரோ. க. க.
3 க மோ. ம்உ. க: உஉ. ம்அ. லூ. க. மக.
4 க மோ. உக. உக.
5 க மோ. உஇ. உக.
6 க மோ. உக. கஇ.
7 க மோ. கஅ. உஎ-கம்.
8 ரூத். ச.ம்அ. ழ க ஈரா. உ.இ, கழ.
9 க சாமு மகூ. க: ம்எ. ம்உ
10 உ சாமு. ம்உ. உச.
11 க ஈரா. க. ம். ழ.
12 உ இரா. உம். உக. க ஈரா. க.ம்க.
13 உ இரா. உச. ம்ச-ம்க: உஇ. மக. உ ஈரா. கக. ம, உம். எரே. உஎ. உக: கக. கூ: இஉ. மக, மஇ, உஅ, உக, கம். தானி. க. க, உ.

ஞ 9 ஏசே இராசனுக்கிய தாவீதைப் பெற்றான்; 10 இராசனுக்கிய தாவீது ஊரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்து, சொலொமோனைப் பெற்றான்.

ஏ 11 சொலொமோன் உரோபோவாமைப் பெற்றான்; உரோபோவாம் அபியாவைப் பெற்றான்; அபியா அசாவைப் பெற்றான்.

அ அசா யோசபாத்தைப் பெற்றான்; யோசபாத்து யோராமைப் பெற்றான்; யோராம் ஓசியாவைப் பெற்றான்.

கூ ஓசியா யோத்தாமைப் பெற்றான்; யோத்தாம் ஆகாசைப் பெற்றான்; ஆகாசு எசேக்கியாவைப் பெற்றான்.

ஐ 12 எசேக்கியா மனாசேயைப் பெற்றான்; மனாசே அமோனைப் பெற்றான்; அமோன் யோசியாவைப் பெற்றான்.

ஐக (யூதர்கள்) 13 பாபிலோன்தேசத்துக்குச் சிறைப்பட்டுப் போகும் காலத்திலே, 14 * யோசியா எகோனியா முதலான குமாரர்களைப் பெற்றான்.

ஐஉ அவர்கள் பாபிலோன் தேசத்துக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்ட பின்பு, 15 எகோனியா சாலாத்தியேலைப் பெற்றான்;

14 க ஈரா. க. ம்இ. ம்க. * யோசியா யோயாக்கீமைப் பெற்றான் யோயாக்கீம் எகோனியாவைப்பெற்றானென்று சில பிரதிகளிலுண்டு — 15 க ஈரா. க. ம்க.

Digitized by Google

[1] சாலாத்தியேல் சொரோபாபேலைப் பெற்றான்.

யஙூ சொரோபாபேல் அபியூதைப் பெற்றான்; அபியூது எலியாக்கீமைப் பெற்றான்; எலியாக்கீம் அசோனைப் பெற்றான்.

யச அசோர் சாதோக்கைப் பெற்றான்; சாதோக்கு ஆகீமைப் பெற்றான்; ஆகீம் எலியூதைப் பெற்றான்.

யடு எலியூது எலேயாசாரைப் பெற்றான்; எலேயாசார் மத்தானைப் பெற்றான்; மத்தான் யாக்கோபைப் பெற்றான்.

யசு யாக்கோபு மரியாளுடைய புருஷனுகிய யோசேப்பைப் பெற்றான்; அந்த மரியாளிடத்திலே கிறிஸ்து என்னப்பட்டிருக்கிற இயேசு பிறந்தார்.

யஎ இவ்வண்ணமாய் உண்டான தலைமுறைகள் எல்லாம் ஆபிரகாம் முதல் தாவீதுவனைக்கும் பதினுலு தலைமுறைகளும், தாவீது முதல் பாபிலோன் தேசத்துக்கு (யூதர்கள்) சிறைபட்டுப்போன காலம்வனைக்கும் பதினுலு தலைமுறைகளும், பாபிலோன் தேசத்துக்குக் கொண்டுபோன காலமுதல் கிறிஸ்துவனைக்கும் பதினுலு தலைமுறைகளுமேயாம்.

யஅ ¶ [2]இந்த இயேசுக்கிறிஸ்துவினுடைய உற்பத்தியின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு (மனைவியாக) நியமிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கூடி வாழ்கிறதற்கு முன்னமே அவள் [3]பரிசுத்த ஆவியினுலே கருப்பவதியானுள்.

யக அவளுடைய புருஷனுகிய யோசேப்பு நீதிமானுகையால், [4]அவளை அவதூறுபண்ண மனதில்லாமல் இரகசியமாய் அவளை ஒழித்துவிடும்படியாய்ச் சிந்தித்தான்.

உய அவன் அப்படி நினைத்திருக்கையில், பராபரனுடைய தூதன் சொப்பனத்திலே அவனுக்குக் காணப்பட்டு, தாவீதின் சந்ததியாகிய யோசேப்பே, நீ உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படவேண்டாம்; என்னத்தினுலென்றால், அவளிடத்தில் *உண்டாயிருக்கிறது [5]பரிசுத்த ஆவியினுல் உண்டானது.

உக அவள் [6]ஒரு குமாரனைப் பெறுவாள்; அவர் தம்முடைய சனங்களின் [7]பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்; ஆகையால் அவருக்கு †இயேசு என்று பேரிடுவாயாக என்றான்.

உஉ நீர்க்கதரிசியைக்கொண்டு கர்த்தர் சொன்னது நிறைவேறும்படிக்கு அவையெல்லாம் நடந்தன.

உசு அவர் சொல்லுவித்ததென்னவென்றால், [8]இதோ ஒரு கன்னிகருப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; ‡அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்பதே; இம்மானுவேல் என்பதற்குப் பராபரன் நம்முடனே இருக்கிறார் என்று அர்த்தமாம்.

உச யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்தபொழுது, தனக்குக் கர்த்தருடைய தூதன் கட்டளையிட்டபடி தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு,

உடு [9]அவள் முதற்பேறான குமாரனைப் பெறும்வனைக்கும் அவளை அறியாதிருந்து, (அந்தக் குமாரன் பிறந்தபின்பு) அவருக்கு [10]இயேசு என்று பேரிட்டான்.

உ. அதிகாரம்.

க. மெல்லிருந்து சால்நிரின் சட்சத்நிரத்நிலுல் நிறுத்துவிடத்நிற்கு வழி சுடத்தப்பட்டது. உக. அவரைப் பணிந்து காணிக்கைகளைச் செலுத்தினது. உச. இயேசையும், அவருடைய தாயையும் கூட்டிக்கொண்டு யோசேப்பு எகிப்துக்கு ஓடிப்போனது. உக. ஏரோதே குழந்தைகளைக் கொலைசெய்து, உக. பின்பு தான் மாணம் அடைந்தது. உக. கலிலேயாவிலுள்ள நாசரேத்துக்குத் திரும்ப மறுபடியும் கொண்டு வரப்பட்டது.

ஏரோது என்னும் இராசனுடைய காலத்திலே யூதேயா தேசத்திலுள்ள பெத்லேகேம் ஊரில் [11]இயேசுவானவர் பிறந்தபின்பு, [12]கி

கி. மு. சு.

1 எஸ்ரா உ. உ: இ. உ. நெகே. ஙஉ. உ. ஆகா. உ. உ.

2 லூக். உ. உஎ.

3 லூக் உ.உஇ.

4 இ மோ. உச. உ.

* சினிப்பிக்கப்பட்டது, இரண்டு.

5 லூக். உ. உஇ.

6 லூக். உ. உஉ.

7 அப். சஙு. உ: இ.உச: ஙஉ.உஅ, உசு.

† இட்சஸ் என்ற எபிரேய மொழி.

8 ஏசா. எ. ஙச.

‡ அல்லது அவருடைய நாமம் இம்மானுவேலென்று சொல்லப்படும.

9 உ மோ. ஙஉ.உ. லூக். உ.எ, உக.

10 லூக். உ. உக

11 லூக். உ.இ.எ

12 உ மோ ஙு.உஙு: உஇ. உ. உஇர. ச. உஙு.

Digitized by Google

ழக்குத்திசையிலிருந்து சாஸ்திரிகள் எருசலேம் நகரத்துக்குவந்து,
2 (இக்காலத்திலே) [1]பிறந்திருக்கிற யூதருடைய இராசாவைக் குறித்துத் தோன்றிய [2]நட்சத்திரத்தைக் கிழக்கிலே நாங்கள் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம்; அவர் எங்கே என்றார்கள்.
3 ஏரோது இராசா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனுடனேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்.
4 அல்லாமலும், அவன் சனங்களில் [3]பிரதானமான ஆசாரியர் [4]வேதபாரகர் எல்லாரும் கூடிவரச் செய்து, கிறிஸ்து [5]எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்.
5 அவர்கள் அவனை நோக்கி, [5]யூதாவின் ஊராகிய பெத்லேகேமிலே அவர் பிறப்பார்; என்னத்தினாலென்றால், யூதேயா தேசத்திலுள்ள பெத்லேகேம் ஊரே, என்னுடைய சனங்களாகிய [7]இஸ்ரவேலனை *ஆளும் பிரபு உன்னிடத்திலே தோன்றுவாராகையால் யூதாவிலுள்ள பிரபுக்களில் நீ சிறியதல்ல என்று,
6 தீர்க்கதரிசியினாலே எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்.
7 அப்பொழுது ஏரோது அந்தச் சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து, அந்த நட்சத்திரம் காணப்பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்திலே திட்டமாய் விசாரித்துக்கொண்டு,
8 நீங்கள் போய் அந்தப் பிள்ளையைக்குறித்து நன்றாய் ஆராய்ந்து பாருங்கள்; மேலும் நீங்கள் அதைக் கண்டபின்பு, நானும்போய் அதைப் பணிந்துகொள்ளும்படிக்கு எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லேகேம் ஊருக்கு அனுப்பிவிட்டான்.
9 இராசா சொன்னதை அவர்கள் கேட்டுப்போனார்கள்; போகையில், கிழக்கிலே அவர்கள் கண்ட நட்சத்திரம் அந்தப் பிள்ளை இருக்கிற ஸ்தலத்துக்கு மேலே வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்கு முன்பாக நடந்தது;
10 அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்டு, மிகுந்த ஆனந்த சந்தோஷத்தை அடைந்து,
11 பின்பு அந்த வீட்டில் பிரவேசித்து, பிள்ளையையும் அதினுடைய தாயாகிய மரியாளையும் கண்டு, வணக்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷப்பெட்டிகளைத் திறந்து, [8]பொன்னையும் தூபவருக்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக †வைத்தார்கள்.
12 பின்பு ஏரோதினிடத்துக்குத் திரும்பிப்போகாதிருங்களென்று அவர்கள் [9]சொப்பனத்திலே தேவ உத்தரவு பெற்று, வேறுவழியாய்த் தங்கள் தேசத்திற்குப் புறப்பட்டுப்போனார்கள்.
13 அவர்கள்புறப்பட்டுப்போனபின்பு கர்த்தருடைய தூதன் சொப்பனத்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு, ஏரோது இந்தப் பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்து தேசத்திற்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அவ்விடத்தில் இரு என்றான்.
14 உடனே அவன் எழுந்து இராத்திரியிலே பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய்,
15 ஏரோது மரணம் அடைந்த காலம்வரைக்கும் அவ்விடத்தில் இருந்தான்; [10]எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் திருவுளம்பற்றி

கி. மு. சு.

1 லூக். உ. ம.
2 உ மோ. உ. எ. எ. கல்.க.
3 உ எஸ்ரா கக. ம.
4 உ எஸ்ரா. கச. ம.
5 மல்லி. உ. எ.
6 மீகா. இ. உ. யோவா.எ.சஉ.
7 யெரே. உ. உஎ.
* அல்லது மேய்க்கப்போகிற.
8 சங் ஏஉ. ம. எஸ். கம. க.
† அல்லது செலுத்தினார்கள்.
9 மத் க. உம.
10 ஓசே. மஉ. க.

Digitized by Google

னது நிறைவேறும்படிக்கு அது நடந்தது.

யசு ¶ அப்பொழுது ஏரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப் பட்டதைக் கண்டு, மிகுந்த கோபம் அடைந்து, அந்தச் சாஸ்திரிகளிடத்திலே தான் கேட்டாராய்ந்த காலத்தின்படி பெத்லேகேம் ஊரிலும் அதினுடைய எல்லைகள் யாவிலும் இரண்டு வயதுமுதற் கொண்டு அதற்குத் தாழ்ந்திருந்த வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் கொலைசெய்ய ஆள்களை அனுப்பினான்.

யஎ அப்பொழுது எரேமியா [1]தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று; அவன் சொன்னதென்னவென்றால்,

யஅ ராமா ஊரிலே புலம்பலும் அழுகையும் மிகுந்த துக்கிப்பு முள்ள கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளைக் குறித்து அழுதுகொண்டு, அந்தப் பிள்ளைகள் இல்லாதபடியால் ஆறுதல் அடையாதிருக்கிறான் என்பதே.

யக ¶ ஏரோது இறந்த பின்பு, சொப்பனத்திலே கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு,

உய பிள்ளையினுடைய பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்துபோனார்கள்; ஆகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ என்றான்.

உக அந்தப்படியே அவன் எழுந்திருந்து, பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்குப் புறப்பட்டபொழுது,

உஉ அருகேலாவு என்பவன் தன் தகப்பனாகிய ஏரோதினுடையபட்டத்துக்கு வந்து, யூதேயாவை ஆளுகிறானென்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான்; அப்பொழுது சொப்பனத்திலே அவன் தேவ உத்தரவுபெற்று, [2]கலிலேயா நாட்டினுடைய திசைகளை நோக்கிப் புறப்பட்டுப் போய்,

உசு [3]நாசரேயன் என்று அழைக்கப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு [4]நாசரேத்தூரில் வந்து வாசம்பண்ணினான்.

ஈ. அதிகாரம்.

க. யோவான் பிரசங்கித்தது, அவனுடைய ஊழியம், ஞானஸ்நானம், எ. அவர் பரிசேயர்களைக் கடிந்துகொண்டது. ஙக. பிதாவுக்கு யோர்தானில் ஞானஸ்நானம் செய்தது.

அக்காலத்திலே [5]யோவான்ஸ்நானன் வந்து,

உ [6]பரலோக இராசரீகம் சமீபமாயிருக்கின்றது; ஆகையால் மனந்திருப்புங்கள் என்று யூதேயாவின் [7]வனாந்தரத்திலே பிரசங்கம் பண்ணினான்.

ஈ அவன் யாவனெனில், [8]கர்த்தருக்காக மார்க்கத்தை நன்றாகச் செய்யுங்களென்றும், அவருடைய பாதைகளைச் செவ்வைபண்ணுங்களென்றும், வனாந்தரத்திலே ஒருவன் [9]சத்தமிடுவானென்று ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவனே.

ச அல்லாமலும் [10]அந்த யோவான் [11]ஒட்டகமயிர் உடைகளைத் தரித்து, தன்னுடைய அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; [12]வெட்டுக்கிளிகளும் [13]காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தன.

ஞ [14]அக்காலத்திலே எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தான் நதிக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் புறப்பட்டுப் போய்,

சு [15]தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

1 எரே. உக. ஙஇ.
2 மத். ச ஙக.லூக். உ. உக.
3 யோவா. க.உஇ.
4 கியா. ஙக. இ. க சாமு. க. ஙக.
5 மாற் க. உ, ஙஉ. லூக். க. உ, க. யோவா.க.உஅ.
6 தானி. உ. உஉ. மத். உ.ஙஎ:ஙஏ.
7 யோசு. ஙஉ. ஙஏ.
8 ஏசா. உஙஏ. க. மாற். க.க. லூக் க. உ. யோவா. க.உக.
9 லூக் க. எக.
10 மாற். க. க
11 உ இரா க அ. சகரி. ஙக உ.
12 க மோ. ஙக. உஉ.
13 க சாமு. ஙஉ. உஇ, உக.
14 மாற். க. இ. லூக.க.எ.
15 அப் ஙக. உ, ஙஎ.

Digitized by Google

ஏ ¶ அப்படியிருக்கையில், பரிசேயர் சதுசேயர் என்பவர்களிலும் அநேகர் தன்னுலே ஞானஸ்நானம்பெறும்படிக்கு வருகிறதை அவன் கண்டு, அவர்களை நோக்கி, [1]விரியன் பாம்புகளின் குட்டிகளே, [2]இனிவரும் கோபத்துக்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படி யாய் உங்களுக்கு வகைகாட்டினவன் *எவன்?

அ மனந்திருப்புதலுக்குத்தக்க கனிகளைக் கொடுங்கள்.

க [3]ஆபிரகாம் எங்களுடைய பிதா என்று சொல்ல, உங்களுடைய உள்ளத்திலே நினைத்துக் கொள்ளாதிருங்கள்; ஆபிரகாமுக்குப் பராபரன் இந்தக் கல்லுகளில் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ச இப்பொழுதே கோடாரி மரங்களுடைய வேரருகே வைத்திருக்கின்றது; ஆகையால் [4]நல்ல கனிகளைக் கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

ஙக நீங்கள் மனந்திருப்பும்படிக்கு, [5]நான் சலத்திலுலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப் பின்வருகிறவர் என்னிலும் அதிக வல்லமையுடையவர்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரவான் அல்ல; [6]அவரே பரிசுத்த ஆவியிலுலும் அக்கினியிலுலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

ஙஉ [7]அவருடைய கையில் தூற்றுக்கூடை இருக்கின்றது; அவர் தமது களம் முழுவதையும் விளக்கி, தம்முடைய கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்: [8]பதராவியாத அக்கினியிலுல் சுட்டெரிப்போடுவார் என்றான்.

ஙஊ ¶ அப்பொழுது [9]இயேசுவானவர் யோவானுலே ஞானஸ்நானம் பெறுவதற்கு, கலிலேயா நாட்டைவிட்டு யோர்தான் அருகே அவனிடத்திற்குப் போனார்.

ஙச யோவான் அவருக்குத் தடைபண்ணி, உம்மாலே நான் ஞானஸ்நானம் பெறவேண்டுவதாயிருக்க, நீர் என்னிடத்திற்கு வரலாமா என்றான்?

ஙஎ அதற்கு இயேசுவானவர் அவனை நோக்கி, இவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாயிருக்கின்றது; ஆகையால் இப்பொழுது சம்மதிப்பாயாக என்றார்; அப்பொழுது அவன் சம்மதித்தான்.

ஙஅ [10]இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று, சலத்தைவிட்டு ஏறிவந்தவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; அல்லாமலும் பராபரனுடைய [11]ஆவி புறாவைப்போல் இறங்கி, அவர்மேல் வருகிறதைக் கண்டான்.

ஙக [12]மேலும், இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று [13]வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

ச. அதிகாரம்.

க. பிசாசினால் உபவாசித்துச் சோதிக்கப்பட்டது. ங. தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தது. ஙக. அவர் கப்பர்நாகூமிலே வாசம்பண்ணி, ஙச. பிரசங்கிக்கத் தொடங்கி, ஙஅ. பேதுருவையும், அந்திரேயாவையும், ஙக. யாக்கோபையும், யோவானையும் அழைத்து, ஙக. எல்லா வியாதிஸ்தர்களையும் குணமாக்கினது.

அப்பொழுது [14]இயேசுவானவர் பசாசானவனுலே சோதிக்கப்படுவதற்கு, [15]ஆவியிலுலே வனாந்தரத்தில் கொண்டுபோகப்பட்டார்.

உ (அங்கே) அவர் நாற்பதுநாள் இரவும் பகலும் உபவாசம்பண்ணினபின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று.

ஊ அப்பொழுது அந்தச் சோதிக்கிறவன் அவரிடத்திற்கு வந்து, நீ பராபரனுடையகுமாரனுலல் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி கட்டளையிடு என்றான்.

கி. பி. உ எ.

1 மத். ம உ. ச: உ உ. க க. லூக் க. எ, அ, க.

2 உரோ. ஙஅ. க செ. க. க.

*அல்லது கடக்கையைச் சீப்படுத்துவதற்குத் தகுந்த.

3 யோவா. அ. க க, க க. அப். ங க. உ க. உரோ. ச. க: ங க. ங க.

4 மத். எ. ங க. லூக். ங க. எ, க. யோவா. ங இ. க. மாற். க. அ. லூக். க. ங க.

5 யோவா. க. உ க, க க. அப். க. ச: ங க ங க: ங க. ச.

6 எசா. ச. க: சச. க. மல்கி. க. உ. அப். உ. க, ச. க கொரி. ஙஉ. ங க.

7 மல்கி. க. க.

8 மல்கி. ச. க. மத். ங க. க ங.

9 மாற். க. ஙக. லூக். க. உ க. மத். உ. உஉ.

10 மாற். க. ஙச:

11 எசா. ங க. உ: சஉ. க. லூக். க. உஉ. யோவா. க. க உ, க க.

12 சங். உ. எ. எசா. சஉ. க. மத். ஙஉ. ங எ: ங எ. இ. மாற். க. ங க. லூக். க. க இ. எபே. க. இ. கொலோ. க. ங க. உபே. க. ங எ.

13 யோவா. ஙஉ. உஅ.

14 மாற் க. ஙஉ. ழ. லூக். ச. க. ழ.

15 கஇரா. ஙஅ. ஙஉ. எசே. க. ங ச: அ. க: ங க. க, உ ச. சங். உ: சக. இ. அப். அ. க க.

Digitized by Google

5 அதற்கு அவர் மாறுத்தரம் சொன்னது: [1]மனிதனானவன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடையவாய்மலர்ந்தருளிச்செய்கிற எந்த வாக்கினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கின்றதென்றார்.

6 அப்பொழுது பசாசானவன் அவனைப் [2]பரிசுத்த நகரத்துக்குக் கொண்டுபோய், அவனைத் தேவாலயத்து மேல் உப்பரிகையில் நிறுத்தி,

7 உன்னைக்குறித்துத் தம்முடைய [3]தூதர்களுக்குக் கட்டளையிடுவார் என்றும், உன்னுடைய பாதம் கல்லில் இடறுதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும், எழுதியிருக்கின்றது; ஆகையால் நீ பராபரனுடைய குமாரனாகில் தாழக்குதி என்றான்.

8 அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதுவுமல்லாமல், உன்னுடைய தேவனாகிய பராபரனைப் [4]பரிட்சைபாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கின்றது என்றார்.

9 மறுபடியும் பசாசானவன் அவனை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்திலுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து,

10 நீ விழுந்து என்னைத் தொழுதுகொண்டால், இவைகள் எல்லாவற்றையும் உனக்குத் தருவேன் என்று சொன்னான்.

11 அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, உன்னுடைய தேவனாகிய [5]பராபரனைத் தொழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஊழனைசெய்வாயாக என்று எழுதியிருக்கின்றது; ஆகையால் சாத்தானே, அப்புறம் போ என்றார்.

12 அப்பொழுது பசாசானவன் அவனைவிட்டுப்போனான்; [6]உட

கி. பி. உ எ.

1 இ மோ. அ. 8

2 மெகே. மை. 6, மீ.அ. எசா. சா.அ. உ: இஉ. 6. மத். உ எ. இசை. வெளி. மக. உ.

3 சங். கூ. மக.

4 இ மோ. 6. மக.

5 இ மோ. 6. மை. மீ. உ. போச. உச.மச. 6 சாமு. எ. 6.

6 எபி. 6. மச.

* அல்லது ஒப்புக் கொடுக்கப்பட்டான்.

7 மாற். 6. மச. லூக். 6.உ:ச. மச,நூ.போஎ. ச. சூ.

8 எசா. கூ. 6.

9 எசா. சஉ. எ. லூக். உ. கூ.

10 மாற். 6. மஇ.

11 மத்.நூ. உ:மி.எ. மாற். 6. மஇ.

12 மாற். 6. மசு. லூக். இ. உ.

13 மாற். 6. மஎ. போஎ.6. சஉ.

14 மாற். 6. மஎ. லூக்.இ. மி.

னே தேவதூதர்கள் சேர்ந்துவந்து, அவருக்கு ஊழியம்செய்தார்கள்.

13 ¶ பின்பு யோவான் காவலில் வைக்கப்பட்டான் *என்று இயேசுவானவர் கேள்விப்பட்டு, [7]கலிலேயா நாட்டுக்குப் புறப்பட்டுப் போய்,

14 நாசரேத்தூரை விட்டு, சேபுலோன் நவுதலி என்னும் நாடுகளின் எல்லைகளில், கடற்கரையருகே இருக்கின்ற கப்பர்நாகூம் பட்டணத்தில் வந்து வாசம்பண்ணினார்.

15 அதினாலே [8]கடற்கரையருகிலும், யோர்தான் நதி ஓரத்திலுமுள்ள அஞ்ஞானிகள் அடங்கியிருக்கிற கலிலேயா தேசமாகிய சேபுலோன் தேசத்தாரும், நவுதலி தேசத்தாருமாகிய இருளில் இருக்கின்ற சனங்கள் மிகுந்த ஒளியைக் கண்டார்கள்.

16 [9]மரண நிழலுள்ள நிசையில் இருக்கிறவர்களுக்கு ஒளிதோன்றிற்று என்று,

17 ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டதுநிறைவேறிற்று.

18 ¶ [10]அக்காலத்திலே இயேசுவானவர், பரலோக இராச்சியம் சமீபித்ததாகையால் [11]மனந்திரும்புங்கள் என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

19 ¶ ஒரு காலத்திலே [12]இயேசுவானவர் கலிலேயா காட்டின் கடலருகே நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாகிய [13]பேதரு என்னப்பட்ட சீமோனும் அவனுடைய சகோதரன் அந்திரேயாவுமாகிய இருவரும் கடலிலே வலை போட்டுக்கொண்டிருக்கிற பொழுது அவர்களைக் கண்டு,

20 என் பின்னே வாருங்கள், [14]உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன் என்று அவர்களுடனே சொன்னார்.

Digitized by Google

உவ [1]உடனே அவர்கள் வலைக
ளை விட்டு, அவனைப் பின்பற்றி
னார்கள்.

உக [2]அவர் அவ்விடம் விட்டு
அப்புறம் போகையில், செபேதே
யுவினுடைய மகன் யாக்கோபும்
அவனுடைய சகோதரன் யோவா
னுமாகிய இருவரும், தங்கள் தகப்
பன் செபேதேயுவுடனே படவி
லிருந்து தங்கள் வலைகளைத் தைத்
துக்கொண்டிருக்கிறபொழுது, அ
வர்களைக் கண்டு அவர்களையும்
அழைத்தார்.

உஉ உடனே அவர்கள் பட
வையும் தங்கள் தகப்பனையும்
விட்டு, அவனைப் பின்பற்றினர்
கள்.

உங ¶ பின்பு இயேசுவானவர்
[3]கலிலேயா காடெங்கும் சுற்றி
டந்து, அவர்களுடைய செப
ஆலயங்களில் சனங்களுக்கு உப
தேசம் செய்து, பரலோக [4]இராச்
சியத்தைக்குறித்துச் சுவிசேஷத்
தைப் பிரசங்கித்து, சனங்களுக்
குண்டாயிருந்த சகலவிதமான
[5]வியாதிகளையும் சகலவிதமான
நோய்களையும் (நீக்கி, அவர்களைக்)
குணமாக்கினர்.

உச அவருடைய கீர்த்தி சீரியா
தேசத்தில் எங்கும் பிரபலமாயிற்
று; பின்பு பலபல வியாதிகளையும்
வேதனைகளையும் அடைந்த பிணி
யாளிகள் யாவரையும் பசாசு பி
டித்தவர்களையும் சந்திரரோகிகளை
யும் திமிர்வாதக்காரரையும் அவரி
டத்திற்குக் கொண்டுவந்தார்கள்;
அவர்களைக் குணமாக்கினர்.

உடி [6]கலிலேயாவிலும் தெக்கப்
போலியிலும் எருசலேமிலும் யூதே
யாவிலும் யோர்தான் நதிக்கு அப்
புறத்திலுமிருந்து மிகுந்த சனங்
கள் வந்து, அவனைப் பின்சென்
றார்கள்.

நு. அதிகாரம்.

அ. தேர்ந்த பிரதேசத்தின்மேல் தம்முடைய பிரசங்
கத்தைத் தொடங்கினது. க. பாக்கியவான்கள்
இன்னென்பது. கூ. பூமியின் உப்பு. ஙூ.
லோகத்தின் வெளிச்சம், மலையின்மேல் பட்ட
ணம். ஙஅ. விளக்கு என்பவைகளைக்குறித்தது. ஙக.
தாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவந்தா
ரென்றும், உக. கொலை, உஎ. விபசாரம், ஙக.
பொய்யாணை இன்னவையென்றும் அறிவித்து,
ஙஅ. அபராபத்தைச் சகிக்கவும், ஙச. சத்துரு
வையும் சிநேகிக்கவும், ஙஅ. பூரண சற்குணரா
யிருக்கப் பிரயாசப்படவும் உபதேசித்தது.

அவர் அந்தச் சனங்களைக் கண்டு,
[7]மலையின்மேல் ஏறி உளுக்காந்த
பொழுது, அவருடைய சீஷர்கள்
அவரிடத்தில் வந்தார்கள்.

உ அப்பொழுது அவர் தமது நி
ருவாயைத் திறந்து, அவர்களுக்கு
உபதேசித்துச் சொன்னதாவது:

ஊ [8]ஆவியில் எளிமையுள்ளவர்கள்
பரலோக இராச்சியத்தை அடை
வார்கள், ஆகையால் அவர்கள்
பாக்கியவான்கள்.

ச [9]துயரப்படுகிறவர்கள் ஆறுதல்
அடைவார்கள், ஆகையால் அவர்
கள் பாக்கியவான்கள்.

ரு [10]சாந்தகுணமுள்ளவர்கள் [11]பூ
மியைச் சுதந்தரித்துக்கொள்ளு
வார்கள், ஆகையால் அவர்கள் பாக்
கியவான்கள்.

சு நீதியின்மேல் [12]பசிதாகமுள்ள
வர்கள் திருப்தி அடைவார்கள்,
ஆகையால் அவர்கள் பாக்கிய
வான்கள்.

எ இரக்கமுள்ளவர்கள் [13]இரக்கத்
தை அடைவார்கள், ஆகையால்
அவர்கள் பாக்கியவான்கள்.

அ [14]சுத்தமான இருதயமுள்ளவர்
கள் [15]பராபரனைத் தரிசிப்பார்கள்,
ஆகையால் அவர்கள் பாக்கியவான்
கள்.

க சமாதானத்தை நடப்பிக்கிற
வர்கள் பராபரனுடைய புத்திரர்
என்னப்படுவார்கள், ஆகையால்
அவர்கள் பாக்கியவான்கள்.

ஙூ [16]நீதியின் நிமித்தம் துன்பப்
படுகிறவர்கள் பரலோக இராச்சி
யத்தை அடைவார்கள், ஆகையால்
அவர்கள் பாக்கியவான்கள்.

ஙக என்நிமித்தம் உங்களை [17]நிந்
தித்துத் துன்பப்படுத்திப் பலவித
[18]தீமையான மொழிகளை உங்கள்

Digitized by Google

கி. பி. கூக.

1 மாற். ம. உஅ. லூக். இ. ஙக: ஞஅ.உஅ.
2 மாற். க. ஙக, உம: லூக். இ ம.
3 மத். கூ. உஇ. மற். க.உக,கூ. லூக் ச. ஙஇ, சச.
4 மத். உச. ஙச. மாற். க. உஇ.
5 மாற். க. கச.
6 மாற். க. அ.
7 மாற். க. ஙக, உம.
8 லூக். க. உம. சங். இக. ஙஅ. வாக். ஙக. டக: உசு. உக. எச. இள. ஙஇ: கக. உ.
9 எசா. கக. உ,க. லூக். க. உக. பேரா. ஙக உம. உ கொரி. க. எ. வெளி. உக. ச.
10 சங். கள. ஙக.
11 உரோ. ச. ஙக.
12 எசா. இஇ க: கஇ. ஙக.
13 சங். சக. உ. மத். கூ. ஙச. மாற். ஙக. உஇ. உ தீமோ. க. ஙக. எபி. க. ம. யாக். உ. ஙஅ.
14 சங். ஙஇ. உ: உச. ச. எபி. ஙஉ ஙச.
15 க கொரி. டக. ஙஉ. க பேர.க. உ,க.
16 உ கொரி. ச. ஙள. உ தீமோ. உ. ஙஉ. க பே. க. ஙச.
17 லூக். க.உஉ.
18 க பே. ச. ஙச.

மேல் பொய்யாய்ச் சொன்னார்களானால், நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

யஉ [1]பரலோகத்திலே உங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு மிகவும் களிகூருங்கள், [2]உங்களுக்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள்.

யஊ நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்; [3]உப்பானது சாரமற்றதேயானால், எதினால் சாரமாக்கப்படும்? அது வெளியே கொட்டப்படுவதற்கும் மனிதராலே மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்கும் ஆகாது.

யச [4]நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

யரு மேலும் [5]விளக்கைக் கொளுத்தி *மரக்காலால் மூடிவையாமல், ஒரு தண்டின்மேலே வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டில் இருக்கிற யாவருக்கும் பிரகாசம் கொடுக்கும்.

யசு அப்படியே மனிதரானவர்கள் [6]உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, [7]பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கப்பண்ணத்தக்கதாக உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

யஎ [8]வேதப்பிரமாணத்தையாவும் தீர்க்கதரிசனங்களையாவையும் தள்ளிவிடுகிறதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள்; அவைகளைத் தள்ளிவிடுகிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கு வந்தேன்.

யஅ [9]வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், வேதமுழுவதும் நிறைவேறுவதன்றி, அதில் ஒரு சிறிய எழுத்தாகிலும் ஓர் எழுத்தினுடைய உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இ.-பி. கக.

1 லூக். க. உக. அப். இ. சக. உரோ. இ. ச. பாக்.க.க.கபே. ச. உக.

2 நெசே. க. உக. உ ரான. கக. மக. மத். உக. கச, கள. அப். எ. இஉ. க தெச. உ. டஇ.

3 மாற். க. இ. லூக். மச. கச, கஇ.

4 லூக். ச. மஅ. பிலி. உ. மச.

5 மாற். ச. உக லூக். அ. மக: டக.கக.

* மூலத்திலுள்ள வார்த்தை ஏக்குறைய ஒரு உழக்குக் குறைய பெக் (Peck) என்கிற ஒரு இங்கிலீஷ் அளவைக்குறிக்கும்

6 க பே. உ. மஉ.

7 பாரா. மஇ. அ க கொரி. மச. உஇ.

8 உரோ ச. கக: ம. ச. கலா. க. உச.

9 லூக் மக. டஎ.

10 பாக். உ. ம.

11 உரோ கக கக: ம.க

12 உ மோ உம. மக இ மோ இ. மஎ.

† அல்லது பூர்வத்தாருக்கே.

13 க போ. க மஇ.

14 பாக். உ. உம.

‡ ராக்கா என்ற பிரேயேமொழி.

15 மத் அ.ர: உக. மக

16 [illegible]பு. சஉ. அ மத். மஅ. மக க இ மோ. உ. அ. க பே. க.ஏ.

யகூ [10]ஆகையால் இந்தக் கற்பனைகளில் மிகவும் சிறிய கற்பனையையாகிலும் தள்ளி, அவ்வண்ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவன் எவனோ, அவன் பரலோக இராச்சியத்திலே மிகவும் சிறியவனென்று எண்ணப்படுவான்; அவைகளின்படி செய்து உபதேசிக்கிறவனே, பரலோக இராச்சியத்திலே பெரியவனென்று எண்ணப்படுவான்.

உய ஆதலால் வேதபாரகர்களும் [11]பரிசேயர்களுமானவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட்டிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உக [12]கொலைசெய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் †பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

உஉ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [13]சகோதரனை வீணாய்க் கோபித்துக் கொள்பவன் எவனோ, அவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; சகோதரனை வீணன் என்கிறவன் எவனோ, அவன் பெரிய சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; [14]அவனை ‡மதிகேடன் என்கிறவன் எவனோ, அவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்.

உக ஆகையால் நீ [15]பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்மேல் சகோதரனுக்கு விசனம் உண்டென்று அங்கே நினைவுகொள்வாயாகில்,

உச [16]அந்தப் பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு சகோதரனுடனே ஒப்புரவாகிப் பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக.

Digitized by Google

உரு [1]உனக்கு எதிராளியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புவியாமலும், அந்த நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புவியாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படிக்கு, [2]சீக்கிரமாய் உன் எதிராளியுடனே வழியில் இருக்கும்பொழுதே அவனுடனே நல்மனம் பொருந்துவாயாக.

உசு (பொருந்தாவிட்டால்) நீ ஒரு காசும் குறைவின்றி முழுமையும் செலுத்துகிறவனாக்கும், அவ்விடத்தைவிட்டுத் திரும்பி வரமாட்டாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன்.

உஎ ¶ [3]விபசாரம் பண்ணுதிருப்பாயாக என்பது, பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

உஅ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [4]ஒரு ஸ்திரியை இச்சிப்போடே பார்க்கிறவன் எவனோ, அவன் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று.

உக [5]ஆகையால் உன் வலதுகண் உன்னைக் *கெடுக்கிறதற்கு ஏதுவானால் [6]அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

உக அன்றியும் உன் வலது கை உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

உக [7]அல்லாமலும் யாவனுமானும் தன்மனைவியைத் தள்ளிவிட்டால், தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவனென்று சொல்லப்பட்டது.

கூஉ அப்படியிருந்தும் [8]எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் இல்லாமலிருக்கையில் அவளைத் தள்ளிவிட்டால், அவன் அவளை விபசாரம் செய்யப்பண்ணுகிறவனாய் இருப்பான் என்றும், எவனானும் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினால், விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் என்றும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கூக ¶ [9]அன்றியும் பொய்யாணை இடாதிருப்பாயாக என்பதும், [10]உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்பதும் [11]பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

கூச அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [12]எவ்விதத்திலும் சத்தியம்பண்ணக்கூடாது; வானம் [13]தேவாசனமாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது; பூமி பராபரனுடைய பாதபடியாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூடு எருசலேம் [14]பெரிய இராசனுடையநகரமாயிருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூசு உன் சிரசின் ஒரே மயிரையும் நீ வெண்மையும் கறுப்பும் ஆக்கத்தக்க திராணியில்லாதபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூள [15]உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்; இவைகளுக்கு மேற்பட்டது தீமையினால் உண்டாயிருக்கின்றது.

கூஅ ¶ [16]கண்ணுக்குப் பதிலாகக் கண்ணையும், பல்லுக்குப் பதிலாகப் பல்லையும் (வாங்கவேண்டுமென்று) சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

கூக நான் உங்களுக்குச் சொல்

கி. பி. ஊக.

1 சங். உஉ. எ. ஏசா. ஙஇ. இ.

2 லூக். உஇ. அ. லூக். ம்உ. ஙஎ, ஙஅ.

3 இ மோ.இ. ம்அ. உமோ.உம்.ம.

4 யோபு. கக. க. லூக். க. உஇ. க மோ. கச.உ. உ சாமு.கே.உ.

5 மத். ம்அ. அ, கூ மத். கூ. சக-ச எ.

* அல்லது இடறல் செய்தால்.

6 மத். மகூ. ம்உ. உமோ. அ. ம்கூ. க கொரி. கூ உ.எ. கொலோ. க.இ.

7 இ மோ. உச. க எரே. க. க. மத். மகூ. க. ழி. மாற் ம். உ. ழ.

8 மத். மகூ. கூ. லூக். மகூ. ம்அ. உமோ. எ. க. க கொரி. எ. ஏ, மக.

9 உ மோ. உம். எ. க மோ. மகூ. ம்உ. ச மோ. உம். உ. இ மோ. இ. மக.

10 இ மோ. உக. உக.

11 மத். உக. மகூ.

12 மத். உகூ. மகூ, ம்அ, உஉ. யாக். இ ம்உ.

13 சங். ககூ. க.

14 சங் சஅ. உ: அஎ. க.

15 மொலோ. ச. கூ. யாக். இ.ம்உ.

16 உ மோ. உக. உச. க மோ. உச. உம். இ மோ. மகூ. உக.

Digitized by Google

லுகிறதாவது: [1]பொல்லாதவனே டே எதிர்த்து நிற்கக்கூடாது; [2]ஒருவன் உன்னுடைய வலது கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக் காட்டு.

சஎ உன்னுடனே வழக்காடி, உன்னுடைய மேலங்கியை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் விட்டுவிடு.

சஏ [3]ஒருவன் உன்னை ஒரு காதவழி வரும்படியாகப் பலவந்தம் பண்ணினால், அவனோடே இருகாதவழிமட்டும் நடந்துபோ.

சஐ உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக் கொடு; [4]உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதிருப்பாயாக.

சஒ [5]நீ பிறனில் அன்புவைத்து, [6]உன் சத்துருவைப் பகைக்கக்கடவாய் என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

சக நான் உங்களுக்குச் சொல்லுகிறது: பரமண்டலங்களில் இருக்கிற [7]உங்கள் பிதா பொல்லாதவர்கள்மேலும் நல்லவர்கள்மேலும் தமது சூரியனை உதிக்கவும், நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யவும் பண்ணுகிறார்.

சகக அப்படியே நீங்கள் அவருக்குப் புத்திரராயிருக்கும்படிக்கு [8]உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, [9]உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம் பண்ணுங்கள்.

சகஉ அல்லாமலும், [10]உங்களில் அன்பு கூருகிறவர்கள்மேலேமாத்திரம் அன்பாயிருப்பீர்களானால், உங்களுக்கு என்ன பலன்வரும்? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவோ?

சஙக உங்கள் சகோதரனாமாத்திரம் வாழ்த்திக்கொள்வீர்களானால், அது பெரிய செய்கை ஆகுமா? அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவோ?

சஙஅ ஆகையால் [11]பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, [12]நீங்களும் பூரணசற்குணராய் இருக்கக்கடவீர்கள்.

ஊ. அதிகாரம்.

க. அப்பாலும் நிஸ்து பர்வதத்தில் பிரசங்கம்பண்ணி, தருமத்தையும், ஙி. செபத்தையும், சஅ. தம்முடைய சகோதரர்கள் மன்னிப்பதையும், சக. உபவாசத்தையும், சஙக. தம்முடைய பொக்கிஷத்தைக் கட்டிவைக்கவேண்டிய இடத்தையும், உச. பரபோகத்துக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியம் செய்வதையும் குறித்துச் சொல்லி, உஙி. உலகாரியங்களுக்காகக் கவலைப்படாமல், ஊக. பரபோகத்தைத் தேடும்படிக்கு உபதேசித்தது.

நீங்கள் மனிதர்களாலே காணப்படும்பொருட்டாய் *உங்கள் தருமத்தை அவர்களுக்கு முன்பாகச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்; செய்தால் பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் †பிதாவினிடத்திலே பலன்பெறுதிருப்பீர்கள்.

க ஆகையால் நீ [13]தருமம் செய்கிறபொழுது, மனிதர்களால் புகழப்படுவதற்கு, செப ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்கிற வஞ்சகனைப்போல, நீ உனக்குமுன்பாகத் ‡தாரை யூதப்பண்ணக்கூடாது; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஙி நீ தருமம் செய்கிறபொழுது, உன் தருமம் அந்தரங்கமாய் இருக்கும்படிக்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

சஅ அப்பொழுது [14]அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன்

கி. பி. ஊக.

1 வாக். உ.ம். உஉ: உச.உக. லூக். க. உக. உரோ. ஙஉ.ம, ஙக. க கொரி. க. எ. க தெச. இ. ஙஇ க பே. க. கூ.

2 எசா. இம. க. புலம். க. கல.

3 மத். உச. கஉ. மாற். ஙஇ. உக.

4 இ Chr. ஙஇ. அ, ம லூக். கூ. கம, கஇ.

5 க மோ. ஙக. ஙஅ.

6 இ Chr. உக. க. சங். சக. ம.

7 லூக். க. உச, கஇ. உரோ. ஙஉ, உம.

8 லூக். உக. கச. அப். எ. கல. க கொரி.ச.ஙஉ, ஙக. க பே. உ. உக: க.க.

9 யோபு உஇ. உ.

10 லூக். க. கஉ.

11 எபே இ. க.

12 க மோ. ஙச. க. க மோ. ஙக.கச: ஙக. உ. லூக் க. கக. ரொலோ. க. உஅ: ச. ஙஉ. யாக்.க ச. க பே. க. ஙஇ, ஙக.

* அல்லது சிநேகமாய்; இ மோ. ஙச. உக. சங். கலஉ.க தானி. ச.உஎ.உகொரி .க. கூ, ம.

† அல்லது பிதாவால்.

13 உரோ.ஙஉ.அ.

‡ அல்லது தாரை வாதாதே.

14 லூக். ஙச. ஙச.

பிதா தாமே வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௬ ¶ அன்றியும் நீ செபம்பண்ணுகிறபொழுது, வஞ்சகனைப் போல் இருக்கக்கூடாது; அவர்கள் மனிதர்களால் காணப்படும்படிக்கு, செபஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலேயும் நின்றுகொண்டு செபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்ற மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬ [1]நீ செபம்பண்ணுகிறபொழுது, உன் வீட்டின் அறைக்குள்ப் பிரவேசித்து, அதின் கதவைப் பூட்டினபின்பு, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கிச் செபம்பண்ணு; அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௭ [2]அல்லாமலும் செபம்பண்ணுகிறபொழுது, நீங்கள் அஞ்ஞானிகளைப்போல வீணாய் வசனிக்கக்கூடாது; [3]அவர்கள் தாங்கள் அதிகமாய் வசனித்தால் கேட்கப்படுவோம் என்று நினைக்கிறார்கள்.

௮ அவர்களுக்கு ஒப்பாய்ச் செய்யாதிருங்கள்; நீங்கள் உங்கள் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளும்முன்னமே, அவர் உங்களுக்கு வேண்டுவது இன்னதென்று அறிந்திருக்கிறாரே.

௯ ஆகையால் நீங்கள் செபம்பண்ணவேண்டுவது எப்படியெனில், [4]பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக.

௰ உம்முடைய இராச்சியம் வருவதாக. [5]உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, [6]பூமியிலேயும் செய்யப்படுவதாக.

௰௧ [7]இன்றைக்கு எங்களுக்கு

கி. பி. ௩௬.

1 உ இ.ர. ச.உ.
2 பிர. இ. உ.
3 உ இ.ர அ உ, உ
4 லூக். ம. உ. ழ.
5 சங். ஈ. உ, உ.
6 மத். உ. உ, ச உ. அப். உ ம ச.
7 யோபு. உ. ம உ. வாக். க ம. அ.
8 மத். ம அ. உ. ழ.
9 மத். உ. ச. லூக். உ உ. ச ம, ச உ. உ கொரி. ம உ. உ பே. உ. ஈ வெளி. உ. ம.
10 யோவா. உ. ம ஞ.
11 உ ரா.ர.உ. ம உ.
12 மாற். ம உ ஞ, உ. எபே. ச. உ. கொலோ. உ. ம உ.
13 மத். ம அ. உ ஞ. லூக். உ. ம உ.
14 மார். ஞ அ. ஞ.
15 ரூத். உ. உ. தானி. ட. உ.
16 வாக். உ. ச. உதேச. உ ம எ. எபி. ஏ. இ. பாக். ஞ. உ.

வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்.

௧௨ [8]எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல, தேவரீர் எங்கள் கடன்களை மன்னித்தருளும்.

௧௩ [9]நாங்கள் சோதனையில் பிரவேசியாதபடி செய்து, [10]தீமையில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். [11]இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்கின்றன; ஆமன், என்பதேயாம்.

௧௪ [12]மனிதர்கள் (உங்களுக்கு) செய்த தப்பிதங்களை மன்னிப்பீர்களானால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

௧௫ [13]மனிதர்கள் (உங்களுக்கு) செய்த தப்பிதங்களை மன்னியாதிருப்பீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

௧௬ ¶ [14]மேலும் நீங்கள் உபவாசம் பண்ணும்பொழுது, வஞ்சகனைப்போல முகவாடலாய் இருக்கக்கூடாது, அவர்கள் உபவாசம் பண்ணுகிறது மனிதர்களால் காணப்படும் பொருட்டாய், தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௧௭ நீ [15]உபவாசிக்கும்பொழுது, அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படிக்கு உன் சிரசைத் தயிலத்தால் பூசி உன் முகத்தைக் கழுவக்கடவாய்.

௧௮ அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௧௯ ¶ [16]பூமியிலே நீங்கள் உங்களுக்காகப் பொக்கிஷங்களைக்

Digitized by Google

னது நிறைவேறும்படிக்கு அது நடந்தது.

சுசு ¶ அப்பொழுது எரோது தான் சாஸ்திரிகளால் வஞ்சிக்கப் பட்டதைக் கண்டு, மிகுந்த கோபம் அடைந்து, அந்தச் சாஸ்திரிகளிடத்திலே தான் கேட்டாராய்ந்த காலத்தின்படி பெத்லேகேம் ஊரிலும் அதினுடைய எல்லைகள் யாவிலும் இரண்டு வயதுமுதற் கொண்டு அதற்குத் தாழ்ந்திருந்த வயதுள்ள ஆண்பிள்ளைகள் எல்லாரையும் கொலைசெய்ய ஆள்களை அனுப்பினான்.

சுஎ அப்பொழுது எரேமியா [1]தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டது நிறைவேறிற்று; அவன் சொன்னதென்னவென்றால்,

சுஅ ராமா ஊரிலே புலம்பலும் அழுகையும் மிகுந்த தக்கிப்புமுள்ள கூக்குரல் கேட்கப்பட்டது; ராகேல் தன் பிள்ளைகளைக் குறித்து அழுதுகொண்டு, அந்தப் பிள்ளைகள் இல்லாதபடியால் ஆறுதல் அடையாதிருக்கிறாள் என்பதே.

சுக ¶ எரோது இறந்த பின்பு, சொப்பனத்திலே கர்த்தருடைய தூதன் எகிப்திலே யோசேப்புக்குக் காணப்பட்டு,

உய பிள்ளையினுடைய பிராணனை வாங்கத்தேடினவர்கள் இறந்துபோனார்கள்; ஆகையால் நீ எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்துக்குப் போ என்றான்.

உக அந்தப்படியே அவன் எழுந்திருந்து, பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொண்டு, இஸ்ரவேல் தேசத்திற்குப் புறப்பட்டபொழுது,

உஉ அருகேலாவு என்பவன் தன் தகப்பனாகிய எரோதினுடையபட்டத்துக்கு வந்து, யூதேயாவை ஆளுகிறானென்று கேள்விப்பட்டு, அங்கே போகப் பயந்தான்; அப்பொழுது சொப்பனத்திலே அவன் தேவ உத்தரவுபெற்று, [2]கலிலேயா நாட்டினுடைய திசைகளை நோக்கிப் புறப்பட்டுப் போய்,

உரு [3]நாசரேயன் என்று அழைக்கப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு [4]நாசரேத்தூரில் வந்து வாசம்பண்ணினான்.

ரு. அதிகாரம்.

க. போவான் பிரசங்கித்தது, அவனுடைய ஊழியம், நடக்கை, ஞானஸ்நானம், எ. அவி பரிசேயர்களைக் கடிந்துகொண்டது. ரூ. சிறிஸ்துவுக்கு போர்தானில் ஞானஸ்நானம் கொடுத்தது.

அக்காலத்திலே [5]யோவான்ஸ்நானன் வந்து,

உ [6]பரலோக இராசரீகம் சமீபமாயிருக்கின்றது; ஆகையால் மனந்திருப்புங்கள் என்று யூதேயாவின் [7]வனாந்தரத்திலே பிரசங்கம்பண்ணினான்.

ரூ அவன் யாவனெனில், [8]கர்த்தருக்காக மார்க்கத்தை நன்றாகச் செய்யுங்களென்றும், அவருடைய பாதைகளைச் செவ்வைபண்ணுங்களென்றும், வனாந்தரத்திலே ஒருவன் [9]சத்தமிடுவானென்று ஏசாயா என்னும் தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவனே.

சு அல்லாமலும் [10]அந்த யோவான் [11]ஒட்டக மயிர் உடைகளைத் தரித்து, தன்னுடைய அரையில் வார்க்கச்சையைக் கட்டிக்கொண்டிருந்தான்; [12]வெட்டுக்கிளிகளும் [13]காட்டுத்தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தன.

ருஅ [14]அக்காலத்திலே எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தான் நதிக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் புறப்பட்டுப் போய்,

சுரு [15]தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

1 எரே. உக. எஇ.
2 மத். உ எக. லூக். உ. உசு.
3 போவா. க. ச எ.
4 நியா. எக. இ. உ சாமு. உ. எக.
5 மாற் க. ச, எச. லூக். க. உ, க. போவா. க. உ அ.
6 தானி. உ. ச ச. மத். ச. எ எ : எ. எ.
7 போச. எச. எ.
8 எசா. சஎ. க. மற். க. உ. லூக் க. ச. போவா. க. உக.
9 லூக் க. எக.
10 மாற். க. க
11 உ இரா க அ. சகரி. எக. ச.
12 க மோ. எக. உஉ.
13 உ சாமு. எச. உஇ, உசு.
14 மாற். க. இ. லூக். க. எ.
15 அப் எக. ச, உ. அ.

Digitized by Google

ஏ ¶ அப்படியிருக்கையில், பரிசேயர் சதுசேயர் என்பவர்களிலும் அநேகர் தன்னிலே ஞானஸ்நானம்பெறும்படிக்கு வருகிறதை அவன் கண்டு, அவர்களை நோக்கி, [1]விரியன் பாம்புகளின் குட்டிகளே, [2]இனிவரும் கோபத்துக்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன் *எவன்?

அ மனந்திருப்புதலுக்குத்தக்க கனிகளைக் கொடுங்கள்.

க [3]ஆபிரகாம் எங்களுடைய பிதா என்று சொல்ல, உங்களுடைய உள்ளத்திலே நினைத்துக் கொள்ளாதிருங்கள்; ஆபிரகாமுக்குப் பராபரன் இந்தக் கல்லுகளில் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ங இப்பொழுதே கோடரி மரங்களுடைய வேருக்கே வைத்திருக்கின்றது; ஆகையால் [4]நல்ல கனிகளைக் கொடாத மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும்.

ச நீங்கள் மனந்திருப்பும்படிக்கு, [5]நான் சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; எனக்குப் பின்வருகிறவர் என்னிலும் அதிக வல்லமையுடையவர்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரவான் அல்ல; [6]அவரே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

ஙஉ [7]அவருடைய கையில் தூற்றுக்கூடை இருக்கின்றது; அவர் தமது களம் முழுவதையும் விளக்கி, தம்முடைய கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்: [8]பதராவியாத அக்கினியினால் சுட்டெரிப்போடுவார் என்றான்.

ஙக ¶ அப்பொழுது [9]இயேசுவானவர் யோவானாலே ஞானஸ்நானம் பெறுவதற்கு, கலிலேயா நாட்டைவிட்டு யோர்தான் அருகே அவனிடத்திற்குப் போனார்.

ஙச யோவான் அவருக்குத் தடைபண்ணி, உம்மாலே நான் ஞானஸ்நானம் பெறவேண்டுவதாயிருக்க, நீர் என்னிடத்திற்கு வரலாமா என்றான்?

ஙஞ அதற்கு இயேசுவானவர் அவனை நோக்கி, இவ்விதமாய்ச் சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கு ஏற்றதாயிருக்கின்றது; ஆகையால் இப்பொழுது சம்மதிப்பாயாக என்றார்; அப்பொழுது அவன் சம்மதித்தான்.

ஙட [10]இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று, சலத்தைவிட்டு ஏறிவந்தவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; அல்லாமலும் பராபரனுடைய [11]ஆவி புறாவைப்போல் இறங்கி, அவர்மேல் வருகிறதைக் கண்டான்.

ஙண [12]மேலும், இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று [13]வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

ச. அதிகாரம்.

க. விலக்கி உபவாசித்தல் சோதிக்கப்பட்டது. ங. தேவதூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தது. ஙக. அவர் கப்பர்நகூமிலே வாசம்பண்ணி, ஙச. பிரசங்கிக்கத் தொடங்கி, ஙஅ. பேதுருவையும், அந்திரேயாவையும், ஙக. யாக்கோபையும், யோவானையும் அழைத்து, ஙக. எல்லா வியாதிஸ்தர்களையும் குணமாக்கினது.

அப்பொழுது [14]இயேசுவானவர் பசாசானவனாலே சோதிக்கப்படுவதற்கு, [15]ஆவியினாலே வனாந்தரத்தில் கொண்டுபோகப்பட்டார்.

உ (அங்கே) அவர் நாற்பதுநாள் இரவும் பகலும் உபவாசம்பண்ணினபின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று.

ஊ அப்பொழுது அந்தச் சோதிக்கிறவன் அவரிடத்திற்கு வந்து, நீ பராபரனுடையகுமாரனானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி கட்டளையிடு என்றான்.

கி. பி. உஏ.

1 மத். ரூ. ச: உக. கக. லூக். க.ஈ.அ.

2 உரோ. இ. கூ. ச தெச. க. கூ.

*அல்லது கடக்கையைச் சிப்படுத்துவதற்குத் தகுந்த.

3 யோவா. அ. கக, கூ. அப். ரூ.உ.உரோ. ச. க: ரூ. ரூ.

4 மத். எ. ரூ. லூக். ரூ. எ, கூ. யோவா. ரூஇ. க. மாற். க. அ. லூக். க. ரூ.

5 யோவா. க. உக, கக. அப். க. ச: ரூ ரூ: ரூ. ச.

6 சங. ச. க: சச. க. மல்கி. க. உ. அப். உ. க, ச. க கொரி. ரூஉ. ரூ.

7 மல்கி. க. க்.

8 மல்கி. ச. க. மத்.ரூ.கூ.

9 மாற். க. கூ. லூக். க. உ. மத். உ. உஉ.

10 மாற். க. ரு:

11 சங. ரூ. உ: சஉ.க. லூக்.க. உஉ. யோவா. க.கஉ,கக.

12 சங். உ. எ. ஏசா. சஉ. க. மத். ரூஉ. ரூ: ரூ.இ. மாற். க. ரூ. லூக். கூ. கஇ.எபே.க.இ. கொலோ. க. ரூ.உபே.க.ரூ.

13 யோவா. ரூஉ. உஅ.

14 மாற் க.ரூஉ.ழ. லூக். ச. க. ழ.

15 எஇரா.ரூஅ.ரூஉ. எசே.க.ரூ: அ. க: ரூ. க, உச. சரு. உ: சக. இ. அப்.அ.கூ.

Digitized by Google

5 அதற்கு அவர் மாறுத்தரம் சொன்னது: [1]மனிதனானவன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடையவாய்மலர்ந்தருளிச்செய்கிற எந்த வாக்கினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கின்றதென்றார்.

6 அப்பொழுது பசாசானவன் அவனைப் [2]பரிசுத்த நகரத்துக்குக் கொண்டுபோய், அவனைத் தேவாலயத்து மேல் உப்பரிகையில் நிறுத்தி,

7 உன்னைக்குறித்துத் தம்முடைய [3]தூதர்களுக்குக் கட்டளையிடுவார் என்றும், உன்னுடைய பாதம் கல்லில் இடறுதபடிக்கு அவர்கள் உன்னைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும், எழுதியிருக்கின்றது; ஆகையால் நீ பராபரனுடைய குமாரனாகில் தாழக்குதி என்றான்.

8 அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதுவுமல்லாமல், உன்னுடைய தேவனாகிய பராபரனைப் [4]பரிட்சைபாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கின்றது என்றார்.

9 மறுபடியும் பசாசானவன் அவனை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுபோய், உலகத்திலுள்ள இராச்சியங்கள் எல்லாவற்றையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து,

10 நீ விழுந்து என்னைத் தொழுது கொண்டால், இவைகள் எல்லாவற்றையும் உனக்குத் தருவேன் என்று சொன்னான்.

11 அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, உன்னுடைய தேவனாகிய [5]பராபரனைத் தொழுது கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கின்றது; ஆகையால் சாத்தானே, அப்புறம் போ என்றார்.

12 அப்பொழுது பசாசானவன் அவனைவிட்டுப்போனான்; [6]உடனே தேவதூதர்கள் சேர்ந்துவந்து, அவருக்கு ஊழியம்செய்தார்கள்.

13 ¶ பின்பு யோவான் காவலில் வைக்கப்பட்டான் *என்று இயேசுவானவர் கேள்விப்பட்டு, [7]கலிலேயா நாட்டுக்குப் புறப்பட்டுப் போய்,

14 நாசரேத்தூரை விட்டு, செபுலோன் நப்தலி என்னும் நாடுகளின் எல்லைகளில், கடற்கரையருகே இருக்கின்ற கப்பர்நாகூம் பட்டணத்தில் வந்து வாசம்பண்ணினார்.

15 அதினாலே [8]கடற்கரையருகிலும், யோர்தான் நதி ஓரத்திலுமுள்ள அஞ்ஞானிகள் அடங்கியிருக்கிற கலிலேயா தேசமாகிய செபுலோன் தேசத்தாரும், நப்தலி தேசத்தாருமாகிய இருளில் இருக்கின்ற சனங்கள் மிகுந்த ஒளியைக் கண்டார்கள்.

16 [9]மரண நிழலுள்ள நிசையில் இருக்கிறவர்களுக்கு ஒளிதோன்றிற்று என்று,

17 ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டதுநிறைவேறிற்று.

18 ¶ [10]அக்காலத்திலே இயேசுவானவர், பரலோக இராச்சியம் சமீபித்ததாகையால் [11]மனந்திரும்புங்கள் என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்.

19 ¶ ஒரு காலத்திலே [12]இயேசுவானவர் கலிலேயா நாட்டின் கடலருகே நடந்துபோகையில், மீன் பிடிக்கிறவர்களாகிய [13]பேதுரு என்னப்பட்ட சீமோனும் அவனுடைய சகோதரன் அந்திரேயாவுமாகிய இருவரும் கடலிலே வலை போட்டுக்கொண்டிருக்கிறபொழுது அவர்களைக் கண்டு,

20 என் பின்னே வாருங்கள், [14]உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்கள் ஆக்குவேன் என்று அவர்களுடனே சொன்னார்.

1 இ. பி. உ எ.
1 இ மோ. அ. 8
2 கெகே. மக. க, மஅ. எசா. சஅ. உ: இஎ. க. மத். உஎ. இக. வெளி. மக. உ.
3 சங். கூக. மக.
4 இ மோ. க. மக.
5 இ மோ. க. மக. ம. உம. போச. உச.மச. க சாமு. எ. க.
6 எபி. க. மச.
* அல்லது ஒப்புக் கொடுக்கப்பட்டான்.
7 மாற். க. மச. லூக். க.உம:ச. மச,கக.போஎ. ச. சக.
8 எசா. கூ. க.
9 எசா. சஎ. எ. லூக். உ. கஎ.
10 மாற். க. மஇ.
11 மத்.க. உ:இ.எ. மாற். க. மஇ.
12 மாற். க. மக. லூக். இ. உ.
13 மாற். க. மஎ. யோஎ.க. சஎ.
14 மாற். க. மஎ. லூக்.இ. இ.

Digitized by Google

உய [1]உடனே அவர்கள் வலைக ளை விட்டு, அவனைப் பின்பற்றி னார்கள்.

உக [2]அவர் அவ்விடம் விட்டு அப்புறம் போகையில், செபேதே யுவினுடைய மகன் யாக்கோபும் அவனுடைய சகோதரன் யோவா னுமாகிய இருவரும், தங்கள் தகப் பன் செபேதேயுவுடனே படவி லிருந்து தங்கள் வலைகளைத் தைத் துக்கொண்டிருக்கிறபொழுது, அ வர்களைக் கண்டு அவர்களையும் அழைத்தார்.

உஉ உடனே அவர்கள் பட வையும் தங்கள் தகப்பனையும் விட்டு, அவனைப் பின்பற்றினர் கள்.

உக ¶ பின்பு இயேசுவானவர் [3]கலிலேயா காடெங்கும் சுற்றி டந்து, அவர்களுடைய செப ஆலயங்களில் சனங்களுக்கு உப தேசம் செய்து, பரலோக [4]இராச் சியத்தைக்குறித்துச் சுவிசேஷத் தைப் பிரசங்கித்து, சனங்களுக் குண்டாயிருந்த சகலவிதமான [5]வியாதிகளையும் சகலவிதமான நோய்களையும் (நீக்கி, அவர்களைக்) குணமாக்கினார்.

உச அவருடைய கீர்த்தி சீரியா தேசத்தில் எங்கும் பிரபலமாயிற் று; பின்பு பலபல வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்த பிணி யாளிகள் யாவரையும் பசாசு பி டித்தவர்களையும் சந்திரரோகிகளை யும் திமிர்வாதக்காரரையும் அவரி டத்திற்குக் கொண்டுவந்தார்கள்; அவர்களைக் குணமாக்கினார்.

உஙி [6]கலிலேயாவிலும் தெக்கப் போலியிலும் எருசலேமிலும் யூதே யாவிலும் யோர்தான் நதிக்கு அப் புறத்திலுமிருந்து மிகுந்த சனங் கள் வந்து, அவனைப் பின்சென் றார்கள்.

ரு. அதிகாரம்.

க. மேற்ற பர்வதத்தின்மேல் தம்முடைய பிரசங் கத்தைத் தொடங்கினது. க. பாக்கியவான்கள் இன்னாரென்பது. கூ. பூமியின் உப்பு. ஙி. லோகத்தின் வெளிச்சம், மலையின்மேல் பட்ட ணம். ரு. விளக்கு என்பவைகளைக்குறித்தது. ரூ. தாம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவந்த ரென்றும், உக. கொலை, உஎ. விபசாரம், உகூ. பொய்யாணை இன்னவையென்றும் அறிவித்து, உஅ. அநியாயத்தைச் சகிக்கவும், உசு. சத்துரு க்களையும் சிநேகிக்கவும், உஅ. பூரண சற்குண ராயிருக்கப் பிரயாசப்படவும் உபதேசித்தது.

அவர் அந்தச் சனங்களைக் கண்டு, [7]மலையின்மேல் ஏறி உளுக்காந்த பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள்.

உ அப்பொழுது அவர் தமது தி ருவாயைத் திறந்து, அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னதாவது:

ரூ [8]ஆவியில் எளிமையுள்ளவர்கள் பரலோக இராச்சியத்தை அடை வார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

ச [9]துயரப்படுகிறவர்கள் ஆறுதல் அடைவார்கள், ஆகையால் அவர் கள் பாக்கியவான்கள்.

ரு [10]சாந்தகுணமுள்ளவர்கள் [11]பூ மியைச் சுதந்தரித்துக்கொள்ளு வார்கள், ஆகையால் அவர்கள் பாக் கியவான்கள்.

சு நீதியின்மேல் [12]பசிதாகமுள்ள வர்கள் திருப்தி அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கிய வான்கள்.

எ இரக்கமுள்ளவர்கள் [13]இரக்கத் தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

அ [14]சுத்தமான இருதயமுள்ளவர் கள் [15]பராபரனைத் தரிசிப்பார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான் கள்.

கூ சமாதானத்தை நடப்பிக்கிற வர்கள் பராபரனுடைய புத்திரர் என்னப்படுவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

ஙி [16]நீதியின் நிமித்தம் துன்பப் படுகிறவர்கள் பரலோக இராச்சி யத்தை அடைவார்கள், ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்.

ஙக என்நிமித்தம் உங்களை [17]நிந் தித்துத் துன்பப்படுத்திப் பலவித [18]தீமையான மொழிகளை உங்கள்

கி. பி. கூக.

1 மாற். ஙி. உஅ. லூக். இ. ஙக: உஅ.உஅ.
2 மாற். க. ஙகூ, உஙி: லூக். இ. ஙி.
3 மத். கூ. கஙி. மற். க.உக,கூ. லூக் ச. ஙஇ, சச.
4 மத். உச. ஙச. மாற். க. ஙஇ.
5 மாற். க. கச.
6 மாற். க. அ.
7 மாற். கூ. ஙக, உஙி.
8 லூக். கூ. உஙி. சங். இக. ஙஅ. லூக். ஙக. டக: உசு. உக. எச. இள. ஙஇ: கக. உ.
9 எசா. கக. உ,க. லூக். கூ. உக. போவா. ஙக உஙி. உ கொரி. க. எ. வெளி. உக. ச.
10 சங். கள. ஙக.
11 உரோ. ச. ஙக.
12 எசா. இஇ க: கஇ. ஙக.
13 சங். சக. உ. மத். கூ. ஙச. மாற். ஙக. உஇ. உ தீமோ. க. ஙகூ. எபி. கூ. ஙி. யாக். உ. ஙக.
14 சங். ஙஇ. உ: உச. ச. எபி. ஙஉ ஙச.
15 க கொரி. ஙகூ. ஙஉ. க யோ.க. உ,க.
16 உ கொரி. ச. ஙள. உ தீமோ. உ. ஙஉ. க பே. க. ஙச.
17 லூக். க.உஉ.
18 க பே. ச. ஙச.

மேல் பொய்யாய்ச் சொன்னார்களானால், நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

யஉ [1]பரலோகத்திலே உங்களுக்கு மிகுந்த பலன் கிடைப்பதினாலே நீங்கள் சந்தோஷப்பட்டு மிகவும் களிகூருங்கள், [2]உங்களுக்கு முன் இருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்கள்.

யஊ நீங்கள் பூமிக்கு உப்பாய் இருக்கிறீர்கள்; [3]உப்பானது சாரமற்றதேயானால், எதினால் சாரமாக்கப்படும்? அது வெளியே கொட்டப்படுவதற்கும் மனிதராலே மிதிக்கப்படுவதற்குமேயன்றி, வேறொன்றுக்கும் ஆகாது.

யஎ [4]நீங்கள் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.

யஏ மேலும் [5]விளக்கைக் கொளுத்தி *மரக்காலால் மூடிவையாமல், ஒரு தண்டின்மேலே வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டில் இருக்கிற யாவருக்கும் பிரகாசம் கொடுக்கும்.

யஐ அப்படியே மனிதரானவர்கள் [6]உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, [7]பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதாவின் மகிமை விளங்கப்பண்ணத்தக்கதாக உங்கள் ஒளி அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

யஒ [8]வேதப்பிரமாணத்தையாவது தீர்க்கதரிசனங்களையாவதும் தள்ளிவிடுகிறதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள்; அவைகளைத் தள்ளிவிடுகிறதற்கல்ல, நிறைவேற்றுகிறதற்கு வந்தேன்.

யஓ [9]வானமும் பூமியும் ஒழிந்துபோவதும் நிறைவேறுவதன்றி, அதில் ஒரு சிறிய எழுத்தாகிலும் ஓர் எழுத்தினுடைய உறுப்பாகிலும் ஒழிந்துபோவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கி. பி. கூக.

1 லூக். கூ. உக. அப். இ. சக. உரோ. இ. ச. யாக்.க.க.கபே. ச. யூ.

2 நெகே. கூ. உக. உ எஸ்ரா. கக. மக. மத். உக. கச, கஎ. அப். எ. இஉ. கதெச. உ. டஇ.

3 மாற். கூ. இ. லூக். மச. கச, கஇ.

4 லூக். ச. டஅ. பிலி. உ. மச.

5 மாற். ச. உக லூக். அ. மக: ஏக.கக.

* மூலத்திலுள்ள வார்த்தை ஏறக்குறைய ஒரு உழக்குக் குறைய பெக் (Peck) என்கிற ஒரு இங்கிலீஷ் அளவைக்குறிக்கும்.

6 க பே. உ. டஉ.

7 பாஸ். டஇ. அ க கொரி. மச. உஇ.

8 உரோ ச. கக: இ. ச. கலா. க. உச.

9 லூக் டக. டஎ.

10 யாக். உ. இ.

11 உரோ கூகக: இ.க

12 உ மோ உஇ. மக இ மோ இ. மஎ.

† அல்லது பூர்வத்தாரால்.

13 க மோ. கடஇ.

14 பாக். உ. உஇ.

‡ ராக்கா என்ற எபிரேயசொல்.

15 மத் அ.ச: உக. மக

16 பாடு. சஉ. அ மத். டஅ. மக க நே. உ. அ. க பே. கஎ.

யக [10]ஆகையால் இந்தக் கற்பனைகளில் மிகவும் சிறிய கற்பனையையாகிலும் தள்ளி, அவ்வண்ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவன் எவனோ, அவன் பரலோக இராச்சியத்திலே மிகவும் சிறியவனென்று எண்ணப்படுவான்; அவைகளின்படி செய்து உபதேசிக்கிறவனே, பரலோக இராச்சியத்திலே பெரியவனென்று எண்ணப்படுவான்.

உய ஆதலால் வேதபாரகர்களும் [11]பரிசேயர்களுமானவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட்டிராவிட்டால், பரலோக இராச்சியத்திற்குள் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உக [12]கொலைசெய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும் †பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

உஉ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [13]சகோதரனை வீணாய்க் கோபித்துக்கொள்பவன் எவனோ, அவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; சகோதரனை வீணன் என்கிறவன் எவனோ, அவன் பெரிய சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; [14]அவனை ‡மதிகேடன் என்கிறவன் எவனோ, அவன் எரிநரகத்திற்கு ஏதுவாயிருப்பான்.

உஊ ஆகையால் நீ [15]பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்தவந்து, உன்மேல் சகோதரனுக்கு விசனம் உண்டென்று அங்கே நினைவுகொள்வாயாகில்,

உச [16]அந்தப் பலிபீடத்தின்முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு சகோதரனுடனே ஒப்புரவாகிப் பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்துவாயாக.

Digitized by Google

உடி [1]உனக்கு எதிராளியானவன் உன்னை நியாயாதிபதிக்கு ஒப்புவியாமலும், அந்த நியாயாதிபதி உன்னை ஊழியக்காரனுக்கு ஒப்புவியாமலும் நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படிக்கு, [2]சீக்கிரமாய் உன் எதிராளியுடனே வழியில் இருக்கும்பொழுதே அவனுடனே கல்மனம் பொருந்துவாயாக.

உக (பொருந்தாவிட்டால்) நீ ஒரு காசும் குறைவின்றி முழுமையும் செலுத்துகிறவரைக்கும், அவ்விடத்தைவிட்டுத் திரும்பி வரமாட்டாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன்.

உஎ ¶ [3]விபசாரம் பண்ணாதிருப்பாயாக என்பது, பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

உஅ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [4]ஒரு ஸ்திரியை இச்சிப்போடே பார்க்கிறவன் எவனோ, அவன் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று.

உக [5]ஆகையால் உன் வலதுகண் உன்னைக் *கெடுக்கிறதற்கு ஏதுவானால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

உகு அன்றியும் உன் வலது கை உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுமையும் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு, உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நன்மையாயிருக்குமே.

உக [7]அல்லாமலும் யாவனானும் தன்மனைவியைத் தள்ளிவிட்டால், தள்ளுதற் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவனென்று சொல்லப்பட்டது.

கூஉ அப்படியிருந்தும் [8]எவனாகிலும் தன் மனைவி வேசித்தனம் இல்லாமலிருக்கையில் அவளைத் தள்ளிவிட்டால், அவன் அவளை விபசாரம் செய்யப்பண்ணுகிறவனாய் இருப்பான் என்றும், எவனானும் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினால், விபசாரம் செய்கிறவனாய் இருப்பான் என்றும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கூக ¶ [9]அன்றியும் பொய்யாணை இடாதிருப்பாயாக என்பதும், [10]உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்பதும் [11]பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

கூஎ அல்லாமலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [12]எவ்விதத்திலும் சத்தியம்பண்ணக்கூடாது; வானம் [13]தேவாசனமாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது; பூமி பராபரனுடைய பாதபடியாய் இருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூஏ எருசலேம் [14]பெரிய இராசனுடையநகரமாயிருக்கிறபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூக உன் சிரசின் ஒரே மயிரையும் நீ வெண்மையும் கறுப்பும் ஆக்கத்தக்க திராணியில்லாதபடியால் அதின்மேல் சத்தியம்பண்ணலாகாது.

கூகூ [15]உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள்; இவைகளுக்கு மேற்பட்டது தீமையினால் உண்டாயிருக்கின்றது.

கூஅ ¶ [16]கண்ணுக்குப் பதிலாகக் கண்ணையும், பல்லுக்குப் பதிலாகப் பல்லையும் (வாங்கவேண்டுமென்று) சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

கூக நான் உங்களுக்குச் சொல்

கி. பி. ஈக.

1 சங். உஉ. எ. எசா. ஙஇ. இ.

2 லூக். உஇ. அ. லூக். ஙஉ. ஙஎ, ஙஅ.

3 இ மோ.இ. ஙஅ. உமோ.உஙஎ.

4 யோபு. கக. க. வாக். க. உஇ. க மோ. உசஎ. உ சாமு.கே.உ.

5 மத். ஙஅ. அ, க மாற். க. சகசஎ.

* அல்லது இடறல் செய்தால்.

6 மத். ஙக. ஙஉ. உரோ. அ. ஙக. க கொரி. க உஎ. கொலோ. உ.இ.

7 இ மோ. உசஎ. க எரே. க. க. மத் ஙக. க. ழ. மாற் ஙஎ. உ. ழ.

8 மத். ஙக. க. லூக். ஙக. ஙஅ. உரோ. எ. க. க கொரி. எ. ஏ, ஙக.

9 உ மோ. உஙஎ. க மோ. ஙக. ஙஉ. ச மோ. கல. உ. இ மோ. இ. ஙக.

10 இ மோ. உக. உக.

11 மத். உக. ஙக.

12 மத். உக. ஙக, ஙஅ, உஉ. யாக். இ ஙஉ.

13 சங். கக. க.

14 சங் சஅ. உ: அஎ. க.

15 கொலோ. ச. க. யாக். இ.ஙஉ.

16 உ மோ. உக. உச. க மோ. உச. உஙஎ. இ மோ. ஙக. உக.

Digitized by Google

லுகிறதாவது: [1]பொல்லாதவனே டே எதிர்த்து நிற்கக்கூடாது; [2]ஒருவன் உன்னுடைய வலது கன்னத்தில் அடித்தால், மறு கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக் காட்டு.

சய உன்னுடனே வழக்காடி, உன்னுடைய மேலங்கியை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இருக்கிறவனுக்கு உன் வஸ்திரத்தையும் விட்டுவிடு.

சக [3]ஒருவன் உன்னை ஒரு காதவழி வரும்படியாகப் பலவந்தம் பண்ணினால், அவனோடே இருகாதவழிமட்டும் நடந்துபோ.

சஉ உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக் கொடு; [4]உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணதிருப்பாயாக.

சஙு [5]நீ பிறனில் அன்புவைத்து, [6]உன் சத்துருவைப் பகைக்கக்கடவாய் என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

சச நான் உங்களுக்குச் சொல்லுகிறது: பரமண்டலங்களில் இருக்கிற [7]உங்கள் பிதா பொல்லாதவர்கள்மேலும் நல்லவர்கள்மேலும் தமது சூரியனை உதிக்கவும், நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யவும் பண்ணுகிறார்.

சஙி அப்படியே நீங்கள் அவருக்குப் புத்திரராயிருக்கும்படிக்கு [8]உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, [9]உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்து, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் செபம் பண்ணுங்கள்.

சகூ அல்லாமலும், [10]உங்களில் அன்பு கூருகிறவர்கள்மேலேமாத்திரம் அன்பாயிருப்பீர்களானால், உங்களுக்கு என்ன பலன்வரும்? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவோ?

சஎ உங்கள் சகோதரனைமாத்திரம் வாழ்த்திக்கொள்வீர்களானால், அது பெரிய செய்கை ஆகுமா? அஞ்ஞானிகளும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவோ?

சஅ ஆகையால் [11]பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, [12]நீங்களும் பூரணசற்குணராய் இருக்கக்கடவீர்கள்.

கூ. அதிகாரம்.

க. அப்பாலும் நிலை பர்வதத்தில் பிரசங்கம்பண்ணி, தருமத்தையும், இ. செபத்தையும், உச. தம்முடைய சகோதரரை மன்னிப்பதையும், உக. உபவாசத்தையும், உஉ. தம்முடைய பொக்கிஷத்தைக் கட்டிவைக்கவேண்டிய இடத்தையும், உச. பரபரனுக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியம் செய்வதையும் குறித்துச் சொல்லி, உஇ. உலகாரியங்களுக்காகக் கவலைபுள்ளவராயிராமல், உக. பரபரனுடைய இராச்சியத்தைத் தேடும்படிக்கு உபதேசித்தது.

நீங்கள் மனிதர்களாலே காணப்படும்பொருட்டாய் *உங்கள் தருமத்தை அவர்களுக்கு முன்பாகச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்; செய்தால் பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் †பிதாவினிடத்திலே பலன்பெறுகிறதில்லை.

உ ஆகையால் நீ [13]தருமம் செய்கிறபொழுது, மனிதர்களால் புகழப்படுவதற்கு, செப ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்கிற வஞ்சகனைப்போல, நீ உனக்குமுன்பாகத் ‡தாரை யூதப்பண்ணக்கூடாது; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கூ நீ தருமம் செய்கிறபொழுது, உன் தருமம் அந்தரங்கமாய் இருக்கும்படிக்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது.

ச அப்பொழுது [14]அந்தரங்கமாயிருக்கிறதை நோக்குகிற உன்

கி. பி. கூக.

1 வாக். உ.இ. உஉ: உச.உக. லூக். கூ. உக. உரோ. இஉ.இஎ, இக. க கொரி. கூ. எ. க தெச. இ. இஇ க பே. கூ. கூ.

2 எசா. இஅ. கூ. புலம். க. கஅ.

3 மத். உஈ. கஉ. மாற். இஇ. உக.

4 இ Cor. இஇ. அ, இ லூக். கூ. கஅ, கஇ.

5 க மோ. இக. இஅ.

6 இ Cor. உக. கூ. சங். சக. இ.

7 லூக் கூ. உச, கஇ. உரோ. இஉ. இச, உஇ.

8 லூக். உக. கச. அப். எ. கஅ. க கொரி.ச.இஉ, இக. க பே. உ. உக: கூ.

9 யோபு உஇ. உ.

10 லூக். க. கஉ.

11 எபே இ. க.

12 க மோ. இஈ. க. க மோ. இக.சச: இக. உ. லூக் கூ. கக. ரொலோ. க. உஅ: ச. இஉ. யாக்.க.ச. க பே. க. இஇ, இக.

* அல்லது நீதியை; இ மோ. உச. இக. சங். சஉ.க தானி. ச.உஎ.உகொரி. கூ. கூ, இ.

† அல்லது பிதாவால்.

13 உரோ.இஉ.அ.

‡ அல்லது தாரை கூதாதே.

14 லூக். இச. இச.

Digitized by Google

பிதா தாமே வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

௬ ¶ அன்றியும் நீ செபம்பண்ணுகிறபொழுது, வஞ்சகனைப் போல் இருக்கக்கூடாது; அவர்கள் மனிதர்களால் காணப்படும்படிக்கு, செபஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலேயும் நின்றுகொண்டு செபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬ [1]நீ செபம்பண்ணுகிறபொழுது, உன் வீட்டின் அறைக்குள்ப் பிரவேசித்து, அதின் கதவைப் பூட்டினபின்பு, அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவை நோக்கிச் செபம்பண்ணு; அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

எ [2]அல்லாமலும் செபம்பண்ணுகிறபொழுது, நீங்கள் அஞ்ஞானிகளைப்போல வீணாய் வசனிக்கக்கூடாது; [3]அவர்கள் தாங்கள் அதிகமாய் வசனித்தால் கேட்கப்படுவோம் என்று நினைக்கிறார்கள்.

அ அவர்களுக்கு ஒப்பாய்ச் செய்யாதிருங்கள்; நீங்கள் உங்கள் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளும்முன்னமே, அவர் உங்களுக்கு வேண்டுவது இன்னதென்று அறிந்திருக்கிறாரே.

க ஆகையால் நீங்கள் செபம்பண்ணவேண்டுவது எப்படியெனில், [4]பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக.

ஏ உம்முடைய இராச்சியம் வருவதாக. [5]உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, [6]பூமியிலேயும் செய்யப்படுவதாக.

ஙக [7]இன்றைக்கு எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை எங்களுக்குத் தாரும்.

ஙஉ [8]எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிப்பதுபோல, தேவரீர் எங்கள் கடன்களை மன்னித்தருளும்.

ஙஊ [9]நாங்கள் சோதனையில் பிரவேசியாதபடி செய்து, [10]தீமையில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். [11]இராச்சியமும் வல்லமையும் மகிமையும் உமக்கே என்றென்றைக்கும் உண்டாயிருக்கின்றன; ஆமன், என்பதேயாம்.

ஙஎ [12]மனிதர்கள் (உங்களுக்கு) செய்த தப்பிதங்களை மன்னிப்பீர்களானால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

ஙஏ [13]மனிதர்கள் (உங்களுக்கு) செய்த தப்பிதங்களை மன்னியாதிருப்பீர்களாகில், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.

ஙஐ ¶ [14]மேலும் நீங்கள் உபவாசம் பண்ணும்பொழுது, வஞ்சகனைப்போல முகவாடலாய் இருக்கக்கூடாது, அவர்கள் உபவாசம் பண்ணுகிறது மனிதர்களால் காணப்படும் பொருட்டாய், தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஙஒ நீ [15]உபவாசிக்கும்பொழுது, அந்த உபவாசம் மனிதர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படிக்கு உன் சிரசைத் தயிலத்தால் பூசி உன் முகத்தைக் கழுவக்கடவாய்.

ஙஓ அப்பொழுது அந்தரங்கமாய் இருக்கிறதை நோக்குகிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலன் அளிப்பார்.

ஙக ¶ [16]பூமியிலே நீங்கள் உங்களுக்காகப் பொக்கிஷங்களைக்

கி. பி. ௫௬.

1 உ இரா. ச.௫௨.
2 பிர. ௬. உ.
3 க இரா. அ.உ௭, உக.
4 லூக். ௰௧. உ. ழ.
5 சங். ௫௯. உ௰, உ௭.
6 மத். உக. உக, சஉ. அப். உ௭ ம.ச.
7 யோபு. உ௭. ம௨. லூக். ௧௰. அ.
8 மத். ம௮. உ௭. ழ.
9 மத். உ௭. ச௭. லூக். உ௨. சம, ச௭. ௧கொரி.௰ ம௭. உ பே. உ. ௫ வெளி. ௭.ம.
10 யோவா. ம௭. ம௰.
11 ௧ நாளா.உ௯. ம௭.
12 மாற். ம௭ உ௰; உக. ௧பே. ச. ௧உ. கொலோ. ௫. ம௭.
13 மத். ம௮. ௧௰. லூக். உ. ம௭.
14 எசா. ௬அ. ஐ.
15 ரூத். ௫. ௫. தானி. ம். ௫.
16 லூக். உ௭. ச. ௧தீமோ. ௫.ம௭. எபி. ௧௩. ஐ. யாக். ஐ. ௫.

Digitized by Google

கூட்டிவையாதிருங்கள்; அவ்விடத்திலே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

உய [1]பரலோகத்திலே உங்களுக்காகப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கள்; அவ்விடத்திலே பூச்சியாவது துருவாவது அவைகளைக் கெடுக்கிறதுமில்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை.

உக உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அங்கே உங்கள் இருதயமும் இருக்குமே.

உஉ [2]கண்ணானது சரீரத்தின் விளக்காய் இருக்கின்றது; ஆகையால் உன் கண் சொஸ்தமாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும்.

உஊ உன் கண் வியாதியாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளடைந்திருக்கும்; அப்படியிருக்க, உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், இருளே மிகவும் மிகுதியாய் இருக்குமல்லவோ?

உச ¶ [3]ஒருவன் இரண்டு எசமான்களுக்கு ஊழியம்செய்யமாட்டான்; என்னத்தினாலெனில், ஒருவனை அவன் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; நீங்கள் [4]பராபரனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியம் செய்யமாட்டீர்கள்.

உரு [5]ஆகையால் உங்கள் சீவனுக்காக என்னத்தைப் போசனம் செய்வோம், என்னத்தைப் பானம் பண்ணுவோம் என்றும் உங்கள் சரீரத்துக்காக என்னத்தை உடுப்போம் என்றும் கவலைப்படாதிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்திற்குச் சீவனும், உடைக்குச் சரீரமும் அதிகம்மாய் இருக்கிறதல்லவோ?

உசு [6]ஆகாயத்துப் பறவைகளை நோக்கிப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதும் இல்லை; அவைகளுக்கும் உங்கள் பரமபிதா உணவைக் கொடுக்கிறார்; அவைகளிலும் நீங்கள் மேன்மையுள்ளவர்கள் அல்லவா?

உஎ அல்லாமலும் உங்களில் ஒருவன் கவலைப்படுகிறதினாலே தன் சரீர அளவுக்கு ஒரே முழத்தையும் கூட்டுவானோ? (மாட்டானே.)

உஅ பின்னும் உடைகளுக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? வெளியிலே லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையை உற்றுப்பாருங்கள்; அவைகள் வருந்துகிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.

உக அப்படியிருந்தும், மிகுந்த மகிமையுடைய சாலோமோனும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் (அழகாய்) உடுக்கவில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உகூ அப்படியிருக்க அற்ப விசுவாசிகளே, ஒருநாள் வளருகிறதாய் மறுநாள் அடுப்பில் போடப்படுகிறதுமாயிருக்கிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாய் உடுத்துவிக்கிறதால், மிகவும் அதிகமாய் உங்களுக்கு உடுத்துவிப்பார் அல்லவோ?

உக ஆகையால் என்னத்தைப் போசனம் செய்வோம் என்றும், என்னத்தைப் பானம் பண்ணுவோம் என்றும், என்னத்தை உடுப்போம் என்றும், நீங்கள் கவலைப்படாதிருங்கள்; அப்படிப்பட்டவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் தேடுவார்கள்.

உஉ உங்கள் பரமபிதா இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று அறிந்திருக்கிறாரே.

உஊ [7]முதல்வாவது பராபரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொ

---

1 மத். ஙஉ. உக. லூக். ஙஎ. ஙக, கச: ஙஅ உஉ. உநீமோ.க.ஙக. க.பே.க.இ.

2 லூக். ஙக. ஙச, கக.

3 லூக் ஙக. ஙக.

4 லூா. க ஙு. உநீமோ.க ஙஎ. பாக். ச. ச.

5 சங். ஙஇ. உஉ. லூக். ஙஎ. உஉ, உக. பிலி. ச. க க பே. இ.எ.

6 யோபு. கஉ. க. சங். ாசா. க. லூக். ஙஉ. உச. ழ.

7 க இரா. க டீ சங். கா. உஇ. மாற். ஙு. கஙு. லூக் ஙஉ. கக. உநீமோ. ா. அ.

Digitized by Google

முது இலைகள் எல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

ஊ ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளைக்காக நாளைக்குத்தானே கவலைகள் உண்டாகும்; ஒவ்வொரு நாளைக்கு அதினதினுடைய வருத்தம் போதுமே.

எ. அதிகாரம்.

க. தீர்த்து, மற்றவர்மேல் குற்றமாக திருஷ்டிப்பதைக் கண்டித்து, கூ. பரிசுத்தமானதைக் நாய்களுக்குப் போடக்கூடாதென்று சொல்லி, ஙு. செபம்பண்ணவும், சு. இடுக்கமான வாசல்வழியாய் பிரவேசிக்கவும், ரு. கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருக்கவும், ரூ. வார்த்தையைக் கேட்கிறவர்களாகமாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயிருக்கவும், ரூ. (அப்படிச்செய்வது) கல்மலையின்மேல் வீடு கட்டுவதுபோல் என்றும், ரூ. (அப்படிச்செய்யாமலிருப்பது) மணலின்மேல் வீடு கட்டுவதுபோல் என்றும் உபதேசித்த, மலைத்தின்மேலே பண்ணின பிரசங்கத்தை முடித்தது.

1 நீங்கள் (மற்றவர்களை) எண்ணுவது எப்படியோ, அப்படி நீங்களும் எண்ணப்படுவீர்கள்.

உ 2 அல்லாமலும் நீங்கள் அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளப்பார்கள்.

ஊ ஆகையால் நீங்கள் (நியாயமின்றி ஒருவனையும்) குற்றவாளிகள் என்று எண்ணுதிருங்கள்; எண்ணினால் உங்களையும் அப்படியே எண்ணுவார்கள். 3 மேலும் நீ உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தைப் பாராமல், சகோதரனுடைய கண்ணில் இருக்கிற சிராயைப் பார்க்கிறதென்ன?

ரு உத்திரமே உன் கண்ணில் இருக்கையில், நீ சகோதரனை நோக்கி, உன் கண்ணில் இருக்கிற சிராயை நான் எடுத்துப்போடுகிறேன் இடங்கொடு என்று நீ சொல்லுவதென்ன?

ரூ வஞ்சகனே, முதலாவது உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு சகோதரனுடைய கண்ணில் இருக்கிற சிராயை எடுத்துப்போட நன்றாய்ப் பார்ப்பாய்.

சு ¶ 4 பரிசுத்தமானதை நீங்கள் நாய்களுக்குக் கொடுக்கக்கூடாது; அல்லாமலும் உங்கள் முத்துக்களைப் பன்றிகளுக்குப் போடக்கூடாது; அப்படிச் செய்தால், அவைகள் அந்த முத்துக்களைத் தங்கள் கால்களால் மிதித்து, பின்பு திரும்பிக்கொண்டு உங்களைப் பீறும்.

எ ¶ 5 வேண்டிக்கொள்ளுகிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான்; 6 தேடுகிறவன் கண்டடைகிறான்; அதட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்; ஆகையால் வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

கூ 7 உங்களில் எந்த மனிதனாவது தன்னிடத்தில் அப்பம் கேட்டுக்கொள்ளுகிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?

ஙு மீனை அவன் கேட்டுக்கொண்டால், அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?

ரு 8 ஆதலால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச் செய்யும்படி அறிந்திருக்க, பரமண்டலங்களில் இருக்கிற உங்கள் பிதா தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும் அதிகமாய் நன்மைகளைக் கொடாமல் இருப்பாரா?

ரூ 9 அன்றியும் மனிதர்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறவைகள் எவைகளோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; 10 இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.

சூ ¶ கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவாயும் வழி விசாலமாயும் இருக்கின்றன; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

---

1 லூக். க. கூ. உரோ. உ. க: மா.க, ச, மி.கூ. க கொரி ச. க, இ.யாக் ச. டூ. டூ.

2 மாற். ச. உச. லூக். க. கூஅ.

3 லூக். க. சக. சஉ.

4 மாக் க ஏ,அ: உக. க அப். மக. சஇ, சக.

5 மத் உக. உஉ. மாற். மக. உச. லூக். மக. க, மி: மிஅ. க. மோவா. மச. மக.ழி: மஇ. ஏ. ழி: மக. உக, உச.யாக் க.இ, க. க மோ. க. உஉ: இ. மச, மஇ.

6 மாக். அ. மஏ. ஏரோ. உக மஉ, மக.

7 லூக். மக. டக, மஉ,மக.

8 க மோ. க. க: அ.உக.

9 லூக். க உக.

10 க மோ. மக. மஅ மத். உஉ. சல உரோ. மஏ. அ க,மி. கொர். இ மச.க நீமோ. க.இ.

Digitized by Google

யச சீவனுக்குக் கொண்டுபோ
கிற வாசல் *மிகவும் இடுக்கமாயும்
வழி நெருக்கமாயும் இருக்கின்
றது; சிலர்மாத்திரம் அதைக் கண்
டடைகிறார்கள். [1]ஆதலால் நீங்
கள் இடுக்கமான வாசல்வழி
யாய்ப் பிரவேசியுங்கள்.

யஞ ¶ [2]மேலும் ஆட்டைப்போ
ல உருவும், பீறுகிற [3]ஓனாய்களைப்
போல மனதும் உடையவர்களாய்
உங்களிடத்திற்கு வருகிற [4]கள்
ளத்தீர்க்கதரிசிகளுக்கு நீங்கள் இ
டங்கொடாமல் எச்சரிக்கையாய்
இருங்கள்.

யசு அவர்களுடைய கனிக
ளினாலே அவர்களை அறிவீர்கள்;
[5]முட்செடிகளில் திராட்சப்பழங்
களையும், [6]முட்பூண்டுகளில் அத்
திப்பழங்களையும் பறிக்கிறார்க
ளா?

யள அப்படியே [7]நல்லமரங்கள்
எல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்
கும், கெட்டமரம் பொல்லாத
கனிகளைக் கொடுக்கும்.

யஅ நல்லமரம் பொல்லாதகனி
களையும், கெட்டமரம் நல்ல கனி
களையும் கொடுக்கமாட்டாது.

யக [8]நல்ல கனிகளைக் கொ
டாத மரங்களெல்லாம் வெட்டப்
பட்டு அக்கினியிலே போடப்
படும்.

உய ஆதலால் அவர்களுடைய
கனிகளினாலே அவர்களை அறிவீர்
கள்.

உக ¶ [9]என்னைக் கர்த்தாவே
கர்த்தாவே, என்று சொல்லுகிற
எவனும் பரலோக இராச்சியத்தில்
பிரவேசிப்பதில்லை; பரமண்ட
லங்களிலே இருக்கிற என் பிதா
வினுடைய சித்தத்தின்படி செய்
கிறவனே அதில் பிரவேசிப்
பான்.

உஉ அந்நாளிலே அநேகர் என்
னை நோக்கி, ஆ கர்த்தாவே கர்த்தா
வே, உமது நாமத்தினாலே [10]நாங்
கள் தீர்க்கதரிசனம் உரைத்தோம்
அல்லவோ? உமது நாமத்தினாலே
பசாசுகளைத் துரத்தினோம் அல்ல
வோ? உமது நாமத்தினாலே அ
நேக அற்புதங்களைச் செய்தோம்
அல்லவோ என்பார்கள்.

உங [11]அப்பொழுது நான் அவர்
களை நோக்கி, நான் ஒருக்காலும்
உங்களை அறியவில்லை, [12]அக்கிர
மக்காரரே, நீங்கள் என்னை விட்
டுப் போங்கள் என்று அவர்களுக்
கு அறிவிப்பேன்.

உச ¶ [13]ஆகையால் நான் சொல்
லிய வசனங்களைக் கேட்டு அவை
களின்படி செய்கிறவன் எவனோ,
அவனைத் தன் வீட்டைக் கல்மலை
யின்மேல் கட்டின புத்தியுள்ள
மனிதனுக்கு ஒப்பிடுவேன்.

உஙு அந்த வீடு கல்மலையின்மேல்
அஸ்திபாரம் போட்டிருந்தபடி
யால், பெருமழை சொரிந்தும்,
பெருவெள்ளம் வந்தும், காற்றுக்
கள் அடித்து அந்த வீட்டின்மே
லே மோதியும், அது விழவில்லை.

உசு நான் சொல்லிய வசனங்க
ளைக் கேட்டும் அவைகளின்படி
செய்யாதிருக்கிறவன் எவனோ,
அவன் தன் வீட்டை மணலின்
மேல் கட்டின புத்தியீனனுக்கு
ஒப்பாயிருப்பான்.

உஎ பெருமழை சொரிந்து,
பெருவெள்ளம் வந்து, காற்றுக்க
ளும் அடித்து, அந்த வீட்டின்மேல்
மோதியபொழுது, அது விழுந்து
முழுவதும் இடிந்துபோயிற்று எ
ன்றார்.

உஅ பின்பு நடந்ததென்னவெ
னில், இயேசுவானவர் இந்த வச
னங்களைச் சொல்லி முடித்தபொ
ழுது, அவர் வேதபாரகரைப்போல்
அல்ல,

உக [14]அதிகாரமுடையவனைப்
போலப் போதித்தபடியினாலே,
சனங்கள் அவருடைய [15]உபதே
சத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.

அ. அதிகாரம்.

உ. இரிஸ்து குஷ்டரோகியைச் சுத்தமாக்கி, ஓ. சே
வைனாளுடைய வேலைக்காரனையும், ஙூ. பேது
ருவினுடைய மாமியையும், யக. மற்ற அநேகம்

கி. பி. ஈக.

* அல்லது எல்லை எலாய்.

1 லூக். கூ. உச.

2 மீகா. க. ஹ உபதே. க. ஹ.

3 அப். உஅ. உக, கூ.

4 ஹ மோ. யக. க. எரே. உக. யூ மத். உச. ச, ஞ, ட்க, உச. மாற். யக. உஉ. உரோ. யக. எஅ. எபே. ஹ. க. கொலோ. உ. அ. ஓ பே. உ. க: உ. க. க யோ. ச. க.

5 உஅ. லச: அஉ. கூ.

6 லூக். கூ. ஈக, சச.

7 எரே. யக. யூ. மத். அஉ கூ.

8 க. அ. லூக். க. க. யோவா. அஞ. உ, சு.

9 ஓசே. அ. உ. மத். உஞ. ட்க, டஉ. லூக். சு. ஈக: அக. உஞ. அப். யசு. யக. உரோ. உ அச. யாக். க. உஉ.

10 ச மோ. உச. ச லூக். ட்க, உஎ. யோவா. ட்க. ஞ க கொரி. ட்க உ.

11 மத். உஞ. ட்உ. லூக். ட்க. உஞ, உஎ. உ தீமோ. உ. ட்சு.

12 சங். தி. ஞ: க. அமத் உஞ. ச க.

13 லூக். க. சஎ.

14 யோவா. எ. சக.

15 மத். கூ. ஓச மாற். க. உஉ: க. உ. லூக். ச. கூ

Digitized by Google

பிணியாளியையும் குணமாக்கி, ஆ. தம்மைப் பின்செல்லவேண்டிய விதத்தைக் காண்பித்து, உக. கடலிலே கொந்தளிப்பை அமர்த்தி, உஅ. பசாசுபிடித்த இரண்டுபேர்மே லிட்டுப் பசாசுகளைத் தாத்தி, உக. அவைகள் பன்றிகளுக்குட் போக உத்தரம் கொடுத்தது.

அவர் மலையிலிருந்து இறங்கி வந்தபொழுது, திரளான சனங்கள் அவனைப் பின்தொடர்ந்தார்கள்.

உ [1]அப்பொழுது ஒரு குஷ்ட ரோகி வந்து அவருக்கு முன்பாக விழுந்து வணங்கி, ஆண்டவரே உமக்குச் சித்தமானால், என்னைச் சுத்தமாக்க உம்மால் ஆகும் என்றான்.

ஈ இயேசுவானவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு, எனக்குச் சித்தம் உண்டு சுத்தமாகு என்றார்; உடனே குஷ்டரோகம் நீங்க அவன் சுத்தமானான்.

ச அல்லாமலும் இயேசுவானவர் அவனை நோக்கி, [2]நீ இதை ஒருவனுக்கும் சொல்லாமலிருக்க கவனி; அவர்களுக்குச் சாட்சியாகும்படிக்கு நீ போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பித்து, மோசே [3]கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார்.

ஙி ¶ [4]இயேசுவானவர் கப்பர்நகூம் பட்டணத்தில் பிரவேசித்தபின்பு, நூறுபேருக்குச் சேர்வைகாரன் ஒருவன் அவரிடத்தில் வந்து அவனை நோக்கி,

ஙு ஆண்டவரே, என் வேலைக்காரன் திமிர்வாதமுள்ளவனாய் வீட்டிலே கிடந்து, மிகவும் உபாதிப்படுகிறான் என்று வேண்டிக்கொண்டான்.

ஙூ அவனுடனே இயேசுவானவர், நான் வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார்.

ஙெ அதற்கு அந்தச் சேர்வைகாரன் சொன்னது: ஆண்டவரே, [5]நீர் என் வீட்டுக்குள் பிரவேசிப்பதற்கு நான் பாத்திரன் அல்ல.

ஙே அல்லாமலும் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குட்பட்டிருக்கிற சேவகரில் ஒருவனை, போவென்னப் போகிறான்; மற்றொருவனை, வாவென்ன வருகிறான்; எனக்கு அடிமையானவனை, இதைச் செய்யென்னச்செய்கிறான்; ஆகையால் [6]நீர் ஒரு வார்த்தைமாத்திரம் சொன்னால், என் வேலைக்காரன் சொஸ்தம் அடைவான் என்றான்.

ஙை இயேசுவானவர் அதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின்செல்லுகிறவர்களை நோக்கி, இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஙொ பின்னும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [7]அநேகம்பேர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோக இராச்சியத்திலே ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடனேகூடப் பந்தியில் இருப்பார்கள்.

ஙோ [8]இராச்சியத்தின் பிள்ளைகள் காரிருளிலே புறம்பாகத் தள்ளப்படுவார்கள்; [9]அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்று சொன்னபின்பு,

ஙௌ அவர் அந்தத் தலைவனை நோக்கி, நீ போகலாம், உன் விசுவாசத்தின்படி உனக்கு ஆகக்கடவதென்றார்; அந்நாழிகையிலே அவனுடைய வேலைக்காரன் சொஸ்தம் அடைந்தான்.

ஙக ¶ [10]இயேசுவானவர் பேதுருவின் வீட்டிலே வந்து, அவனுடைய மாமி சுரமாய்க் கிடக்கிறதைக் கண்டு,

ஙஉ [11]அவள் கையைத் தொட்டார்; உடனே சுரம் அவளை விட்டு நீங்கிற்று; அவள் எழுந்திருந்து, அவர்களுக்கு ஊழியம்செய்தாள்.

ஙஊ ¶ [12]அஸ்தமனமானபொழுது, பசாசுபிடித்திருந்த அநேகரை அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; [13]அவர் நமது பெலனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று தீர்க்

1 மாற். க. சல. லூக். இ.எஉ.ழ.
2 மத். க. கல. மாற். இ. சக
3 க மோ. லச. உ, ச, ல. லூக் இ. லச.
4 லூக். எ. க.
5 லூக். லஇ. லக, உக.
6 சங். கக. உஏ.
7 க மோ. டஉ. உ. எசா. உ. உ, ஈ: லக. ல. மல்கி க.லக. லூக். லக. உக அப். ல. எஇ: லக. லஅ: லச.உக உரோ. லஇ. க. ழ. எபே.க.சு.
8 மத். உக. சக.
9 மக. .சஉ, இல: உஉ. லக: உச. இக: உஇ. கல. லூக். டக. உஅ. உ பே. உ. லக. யூதா.லக.
10 மாற். க. உசு: கல. கக. லூக் ச.கஅ.கக.
11 மாற். க. கல, கக. லூக். ச. கக. க கொரி. க.இ.
12 மாற்.க.கஉ.ழ. லூக்.ச சல,சக.
13 எசா. இக. ச. க பே. உ. உச.

Digitized by Google

கதரிசியாகிய எசாயா சொன்னது நிறைவேறும்படிக்கு,

யஎ அவர் அந்த ஜனங்களை ஒரு வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகள் எல்லாரையும் குணமாக்கினார்.

யஅ ¶ பின்பு இயேசுவானவர் அநேக சனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கக்கண்டு, அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார்.

யக [1]அப்பொழுது வேதபாரகன் ஒருவன் வந்து அவனை நோக்கி, போதகரே, நீர் எங்கேபோனாலும் உம்மைப் பின்பற்றுவேன் என்றான்.

உய அவனுடனே இயேசுவானவர் சொன்னது: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனிதனுடைய குமாரனோ, தலைசாய்க்கிறதற்கு இடம் இல்லாதவனாய் இருக்கிறான் என்றார்.

உக ¶ [2]பின்னும் அவருடைய சீஷர்களில் ஒருவன் அவனைநோக்கி, ஆண்டவரே, முன்பு நான் போய் என் தகப்பனை அடக்கம் பண்ணுவதற்கு உத்தரவு தாரும் என்றான்.

உஉ [3]அவனுடனே இயேசுவானவர் சொன்னது: மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம்பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா என்றார்.

உங ¶ பின்பு அவர் படவில் ஏறுகிறபொழுது, சீஷர்கள் அவர் பின் சென்று ஏறினார்கள்.

உச அப்பொழுது படவு [4]அலைகளினாலே மூடப்படத்தக்கதாய்க் கடலிலே பெருங்காற்று உண்டாயிற்று; அவரோ நித்திரைபண்ணினார்.

உஙி அப்பொழுது அவருடைய சீஷர்கள் வந்து அவனை எழுப்பி, ஆண்டவரே, எங்களை இரட்சிக்கவேண்டும், கெட்டுப்போகிறோமே என்றார்கள்.

உசு அவர்களை அவர் நோக்கி,

கி. பி. ஈக.

1 லூக். க. இஎ, இஅ.

2 லூக். க. இக.

3 லூக் க. கஅ. ச இரா.அக உஅ.

4 மாற்.சு.க.ழ. லூக் அ.உக.ழி

5 சங். கஇ. எ: அரூ. க: ஈஎ. உக.

6 மாற். இ. க. ழ. லூக்.அ.உக.ழ.

ஆ அற்ப விசுவாசிகளே, என் பயப்படுகிறீர்கள் என்று சொல்லி [5]எழுந்து காற்றுக்களையும் கடலையும் அதட்டினார்; உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

உஎ அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, காற்றுக்களும் கடலும் இவருக்குக் கீழ்ப்படியத்தக்கதாக இவர் எப்படிப்பட்டவரோ என்று சொன்னார்கள்.

உஅ [6]பின்பு அவர் அக்கரையிலே கெர்கேசேனர் தேசத்திலே சேர்ந்தார்; அவ்வழியாய் மற்றொருவரும் நடவாமல் இருக்கத்தக்கதாக மிகுந்த துஷ்டராய், பசாசு பிடித்த மனிதர்கள் இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளிலிருந்து புறப்பட்டு அவருக்கு எதிராக வந்து,

உக ஆ இயேசுவே, பராபரனுடைய குமாரனே, எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வருமுன்னமே எங்களை வேதனைப்படுத்தும்படிக்கு இங்கே வந்தீரோ என்று கூப்பிட்டார்கள்.

கூ அல்லாமலும் அவர்களுக்குச் சற்றேதூரமாய் அநேகம் பன்றிகள் கூட்டமாய் மேய்ந்துகொண்டிருந்தன.

கூக அப்பொழுது பசாசுகள், நீர் எங்களைத் துரத்துவீராகில், காங்கள் அந்தப் பன்றிக்கூட்டத்தில் பிரவேசிக்கும்படிக்கு உத்தரவு கொடும் என்று அவனை வேண்டிக்கொண்டார்கள்.

கூஉ போங்கள் என்று அவர்களுக்குச் சொன்னார்; உடனே அவர்கள் புறப்பட்டுப் பன்றிக்கூட்டத்தில் பிரவேசித்தார்கள்; அப்பொழுது பன்றிகள் எல்லாம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலில் பாய்ந்து, சலத்திலே மாண்டுபோயின.

கூங அவைகளை மேய்த்தவர்களோ ஓடிப் பட்டணத்தில் சென்று எல்லாவற்றையும், பசாசு பிடித்

Digitized by Google

நிருந்தவர்களுடைய சங்கதியையும் அறிவித்தார்கள்.

கூ அப்பொழுது பட்டணத்தார் எல்லாரும் இயேசுவுக்கு எதிராகப் புறப்பட்டு அவரைக் கண்டு, [1]தங்கள் எல்லைகளை விட்டுப் போகும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

கூ. அதிகாரம்.

உ பிரிந்த நிமிர்வாதக்காரன் ஒருவனைச் சொஸ்தமாக்கி. கூ ஆயத்துறையில் இருந்த மத்தேயுவை அழைத்த, ம. ஆயக்காரரோடும் பாவிகளோடும் புசித்து, மச. தம்முடைய சிஷ்யர் உபவாசம் பண்ணுதலைக்குறித்து விபரம் சொல்லி, உம. பெரும்பாடுள்ள ஒருஸ்திரியை ஆரோக்கியமாக்கி, உக. பதினருவினுடைய மரண மானத்தினின்று எழுப்பி, உஎ. இரண்டு குருடருக்குப் பார்வை கொடுத்து. உஅ. பாசபிடித்த ஒரு ஊமையனைக் குணமாக்கி, கக. கும்புகள்மேல் மனதருளினது.

[2]அப்பொழுது அவர் படகில் ஏறி, இக்கரைப்பட்டு, தமது பட்டணத்தில் வந்தார்.

உ [3]அங்கே படுக்கையின்மேல் கிடந்த நிமிர்வாதக்காரனை அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; [4]இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, நிமிர்வாதக்காரனை நோக்கி, மகனே திடமாயிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார்.

கூ அங்கே இருந்த வேதபாரகரில் சிலர், இவன் தேவதூஷணம் சொல்லுகிறான் என்று எண்ணிக்கொண்டார்கள்.

ச [5]இயேசுவானவர் அவர்களுடைய நினைவுகளை அறிந்து, நீங்கள் உங்கள் இருதயங்களில் பொல்லாங்கானவைகளை நினைக்கிறதென்ன?

கூ உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்லுகிறதோ, எழுந்திருந்து நடவென்று சொல்லுகிறதோ, எது எளிது?

கூ மனிதனுடைய குமாரன் பூமியில் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடையவன் என்பதை நீங்கள் அறியும்படிக்கு, அவர் நிமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்திருந்து உன் படுக்கையை

கி. பி. கூக.

1 மத். ச. ம. உஇ. உ இரா. உஎ மஅ. லூக். இ அ அப்.மக. கூக.
2 மத். உ.மக.
3 மாற். உ. உ. லூக் இ. மஅ.
4 மத். அ.ம.
5 சங். கூக. உ. மத். மஉ. உஇ மாற். ட்உ. மஇ. லூக் இ. உஉ: உ அ: க. எ: மக.மஎ.
6 மாற். உ. மச. லூக். இ. உஎ.
7 மாற். உ. மஇ. லூக். இ. உக.
8 மத். மக. மக. லூக் இ. கம.
9 லூக். மஇ. உ. கலா. உ மஇ.
10 ஓசே. ச உ. மீகா. ச. கூ,எ. அ. மத். மஉ. எ.
11 உ தீமோ. க. மஇ.
12 மாற உ மஅ. லூக் இ. கக: மஅ.மக.

எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ என்றார்.

எ உடனே அவன் எழுந்து தன் வீட்டுக்குப்போனான்.

அ அதைக் கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த பராபரனைப் புகழ்ந்தார்கள்.

கூ ¶ [6]இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உளுக்காந்திருந்த ஒரு மனிதனைக் கண்டார்; அவனுக்கு மத்தேயு என்றும் பேர்; அவனை அவர் நோக்கி, என்னைப் பின்பற்றிவா என்றார்; அவன் எழுந்திருந்து அவர் பின் சென்றான்.

ம ¶ [7]பின்பு அவர் வீட்டிலே போசனபந்தி இருக்கையில், அநேகம் ஆயக்காரரும் பாவிகளும் வந்து, இயேசுவுடனேயும் அவருடைய சீஷர்களுடனேயும் கூடப் பந்தியிருந்தார்கள்.

மக பரிசேயர் அதைக் கண்டு அவருடைய சீஷர்களை நோக்கி, என்னத்திற்காலே உங்கள் போதகர் [8]ஆயக்காரரோடும் [9]பாவிகளோடும் போசனம்பண்ணுகிறார் என்றார்கள்.

மஉ இயேசுவானவர் அதைக் கேட்டு அவர்களை நோக்கி, சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்.

மஊ [10]மேலும், பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் போய்ப் படித்துக்கொள்ளுங்கள்; [11]அந்தப்படி நான் நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திரும்புதற்கு அழைக்கவந்தேன் என்றார்.

மச ¶ [12]அந்நேரத்திலே யோவானுடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து, நாங்களும் பரிசேயரும் அநேகந்தரம் உபவாசம்பண்ணி வருகிறோம்; உம்முடைய சீஷர்

Digitized by Google

களோ உபவாசம்பண்ணுமல் இருக்கிறார்கள், அதேன் என்றார்கள்.

யந இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: [1]கலியாணத்துக்கு வந்த மனிதர்கள் மணவாளன் தங்களோடு இருக்கையில் துயரப்படுவார்களா? மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்படும் காலம் வரும்; [2]அப்பொழுது அவர்கள் உபவாசம் பண்ணுவார்கள்.

யசு ஒருவனும் கோடித் துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான்; இணைத்தால் அதில் இணைத்த துண்டு அவ்வஸ்திரத்தில் எடுபட்டுப்போக அதிக பொத்தல் உண்டாகும்.

யஎ மேலும் திராட்சப்பழங்களின் புதிய இரசத்தைப் பழைய துருத்திகளில் வார்க்கமாட்டார்கள்; வார்த்தால், துருத்திகள் கிழிந்துபோகும், இரசமும் சிந்திப்போகும், துருத்திகளும் கெட்டுப்போகும்; புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார்.

யஅ ¶ [3]அவர் இவைகளை அவர்களோடே பேசுகையில், தலைவன் ஒருவன் வந்து வணக்கமாய் விழுந்து அவனை நோக்கி, இந்நேரத்திலே என் மகள் இறந்துபோனாள்; அவள் உயிரடையும்படிக்கு நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்.

யக இயேசுவானவர் எழுந்திருந்து, தம்முடைய சீஷர்களோடுகூட அவன் பின்னே போனார்.

உய ¶ [4]அவர் போகையில், பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி வந்து,

உக இவருடைய வஸ்திரத்தைத் தொட்டமாத்திரமே சொஸ்தம் அடையலாம் என்று தன் உள்ளத்திலே எண்ணி, அவருக்குப் பின்னாலே போய், அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.

உஉ அப்பொழுது இயேசுவானவர் திரும்பி அவளை நோக்கி, மகளே திடமாயிரு; [5]உன் விசுவாசத்தினாலே உனக்குச் சுகம் உண்டாயிற்று என்றார்; அந்நேரமே அந்த ஸ்திரி சொஸ்தம் அடைந்தாள்.

உக பின்பு [6]இயேசுவானவர் அத்தலைவனுடைய வீட்டில் சேர்ந்து, [7]தாளை ஊதுகிறவர்களையும் இரைகிற சனங்களையும் கண்டு,

உச அவர்களை நோக்கி, வெளியே போங்கள், [8]இந்தப் பெண் இறந்துபோகவில்லை, நித்திரை பண்ணுகிறாள் என்றார்; அவர்கள் அவரை நோக்கி நகைத்தார்கள்.

உஙி சனங்கள் வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.

உசு அந்தச் செய்கையினாலே *அவருடைய கீர்த்தி அத்தேசத்தில் எங்கும் பிரபலமாயிற்று.

உள ¶ இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் போகையில், [9]குருடர் இருவர் அவர் பின்னே சென்று, ஆதாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

உஅ அவர் வீட்டிலே வந்தபின்பு அந்தக் குருடர் அவரிடத்திற்கு வந்தார்கள்; இயேசுவானவர் அவர்களை நோக்கி, இப்படிச்செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களோ என்றார்; ஆண்டவரே, விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

உக அப்பொழுது அவர் அவர்களுடைய கண்களைத் தொட்டு, உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.

ஊய உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டன; [10]பின்

நி. பி. ஊக.

1 யோவா. உ. உக.

2 அப். கூ. உ, ஃ: மா. உக. ஃ கொரி. எ. இ.

3 மாற். இ உஉ. லூ. லூக். அ. சஉ. ழி.

4 மாற் இ. உஇ. லூக் அ.சஉ

5 லூக். எ. இல: அ. சஅ: மா. மூ: உற. சஉ.

6 மாற். இ. உ.அ. லூக். அ. இக.

7 உ சாலா. உஇ. உஇ.

8 அப். உல். ல.

* அல்லது இதை குறித்த சேதி.

9 மத். ஙஇ. உஉ: உட. கல், கக. மாற்.ல்.சஎ,சஅ. லூக். லஅ. கஅ, கூ.

10 மத் அ.சு: மஉ. மக: மள. கூ. லூக். இ. மச.

Digitized by Google

ய. அதிகாரம்.

க. இரிஸ்து தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலர்களுக்கும் அற்புதஞ்செய்யத்தக்க வல்லமையை அளித்து, ஙி. அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து அவர்களைப் படிப்பித்து, ஙக. அவர்களுக்கு வரப்போகிற துன்பங்களுக்கடுத்த ஆறுதலைச்சொல்லி, சஎ. அவர்களை நேராகவெல்லுகிறவர்களுக்கு ஜீவனாதத்தை வாக்குத்தத்தம்பண்ணி அவர்களை அனுப்பினது.

அப்பொழுது [10]அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து, அசுத்தமான ஆவிகளைத் †துரத்தவும், சகல விதமான வியாதிகளையும் நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

உ அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் நாமங்கள் என்னவெனில், [11]முந்தினவனாகிய பேதுரு என்னப்பட்ட சீமோன், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயா, செபேதேயுவின் குமாரன் யாக்கோபு, அவனுடைய சகோதரன் யோவான்,

ஊ பிலிப்பு, பருத்தோலோமேயு, தோமா, ஆயக்காரனான மத்தேயு, அல்வேயின் குமாரன் யாக்கோபு, தடேயு என்னும் மறுநாமமுள்ள இலேபேயு,

ச [12]கானானாகிய சீமோன், இயேசுவைக் காட்டிக்கொடுத்தவனான [13]யூதாஸ்காரியோத்து என்னப்பட்டவர்களே.

ஙு ¶ இயேசுவானவர் அந்தப் பன்னிருவனையும் அனுப்பி அவர்களுக்குக் கட்டளையிட்டுச்சொன்னதாவது: [14]நீங்கள் புறத்தேசத்தாரிடத்திற்குப் போகாமலும்,

ஙூ [15]சாமாரியருடைய பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமல்போன [16]ஆடுகளாயிருக்கிற [17]இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்திற்குப் [18]புறப்பட்டுப் போய்,

எ [19]பரலோக இராச்சியம் சமீபமாய் வந்ததென்று கூறி,

அ வியாதிப்பட்டவர்களைக் குணமாக்கி, குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணி, மரித்தோரை எழு

ஙி. பி. கூக.

1 மாற். எ. கூ.

2 மத். ஙஉ. உஉ. லூக். ஙக. ஙச.
3 மத். ஙஉ. உச. மாற். க. உஉ. லூக். ஙக. ஙஇ.
4 மாற். க. எ. லூக். ஙக. உஉ.
5 மத் ச. உக.
6 ச மோ. உஎ. ஙன. க இரா. உஉ. ஙஎ. எசே. கச. ஙி. சஙி. ஙஉ.
* அல்லது நோய்த்தடைக்கிறவர்களாக.
7 மாற். க. கச.
8 லூக். ஙி. க. யோவா. க.கஇ.
9 உ தெச. க. க,
10 மாற். க. ஙக. ஙஇ:க. எ லூக். க. ஙக—ஙக. க. க.
† மேலாகவும்.
11 யோவா. க. சஉ.
12 லூக். க. ஙஇ. அப். க. ஙக.
13 யோவா. ஙக. உக.
14 மத். ச. ஙஇ.
15 உ இரா. ஙஎ. உச. யோவா. ச. க, உஙி.
16 சோ. இக. க. எசே. இஙி. க, ஙன. எசே. கச. இ,க,ஙக.க பே. உ. உஇ.
17 மத். ஙஇ. உச. அப். ஙக. சக.
18 லூக். கூ. உ.
19 மத். க. உ: ச. ஙன. லூக். ஙி. கூ.

Digitized by Google

ப்பி, பசாசுகளைத் துரத்துங்கள். [1]நீங்கள் இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள்; இலவசமாய்க் கொடுங்கள்.

9 [2]நீங்கள் கச்சைகளில் பொன்னையாவது, வெள்ளியையாவது, செம்பையாவது, வழிக்காகப் பையையாவது, இரண்டு அங்கிகளையாவது, பாதரட்சைகளையாவது, தடியையாவது [3]உங்களுக்காகத் *தேடிவைக்கவேண்டாம்.

10 [4]வேலைசெய்கிறவன் தனக்கு வேண்டிய ஆகாரத்தைப் பெறும் படிக்குப் பாத்திரவானுமாய் இருக்கிறானே.

11 [5]அல்லாமலும் எந்தப் பட்டணத்திலும் கிராமத்திலும் நீங்கள் பிரவேசிக்கும்பொழுது, அதிலே இருக்கிற பாத்திரவான் இன்னான் என்று விசாரித்துக்கொண்டு, நீங்கள் புறப்படுமளவும் அவனிடத்தில் இருங்கள்.

12 அந்த வீட்டுக்குள் பிரவேசிக்கிறபொழுது, நீங்கள் அதில் இருக்கிறவர்களை வாழ்த்திக்கொள்ளுங்கள்.

13 [6]அந்தக் குடும்பத்தார் [7]பாத்திரவான்களாய் இருந்தால், நீங்கள் அவர்களுக்குச் சொன்ன சமாதானம் அவர்களைச் சேரக்கடவது; பாத்திரவான்கள் அல்லாதிருந்தால், அந்த வாழ்த்துதல் உங்களிடமாய்த் திரும்பக்கடவது.

14 [8]எங்கேயாகிலும் அவர்கள் உங்களை அங்கீகரித்துக்கொள்ளாமலும் உங்கள் வசனங்களுக்குச் செவிகொடாமலும் இருந்தால், நீங்கள் அந்த வீட்டையாவது பட்டணத்தையாவது விட்டுப் புறப்படுகையில், உங்கள் [9]கால்களிலுள்ள தூளை உதறிப்போடுங்கள்.

15 நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமொராதேசத்தைப் பார்க்கிலும் [10]அந்தப் பட்டணத்திற்கு அதிக தண்டனை கிடைக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

16 [11]பாருங்கள், ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே (அனுப்புகிறதுபோல) உங்களை அனுப்புகிறேன்; [12]ஆகையால் நீங்கள் பாம்புகளைப்போல் விவேகமுள்ளவர்களாயும், [13]புறாக்களைப்போல் †கபடமில்லாதவர்களாயும் இருக்கவேண்டும்.

17 அப்படியே நீங்கள் மனிதர்களிடத்தில் சாவதானமாயிருங்கள்; [14]என்னத்தினாலெனில், உங்களைப் பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுத்து, தங்கள் [15]ஆலயங்களிலே உங்களை வாரினால் அடிப்பார்கள்.

18 [16]என் நிமித்தம் நீங்கள் துரைகளிடத்திற்கும் இராசாக்களிடத்திற்கும் கொண்டுபோகப்பட்டு, அவர்களுக்கும் புறஜாதியாருக்கும் முன்பாகச் சாட்சிகளாயிருப்பீர்கள்.

19 [17]அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்பொழுது, நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்திலே உங்களுக்கு அருளிச்செய்யப்படும்; [18]ஆகையால் எப்படி, எதைப்பேசுவோம் என்று கவலைப்படாதிருங்கள்.

20 [19]பேசுகிறவர்கள் நீங்களல்ல, உங்கள் பிதாவின் ஆவியானவர் உங்களில் இருந்து பேசுகிறவர்.

21 [20]அல்லாமலும் சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்திற்கு ஒப்புக்கொடுப்பார்கள்; தாய் தகப்பன்மாரைப் பிள்ளைகள் விரோதித்து, அவர்கள் மரணம் அடையும்படிக்குச் செய்விப்பார்கள்.

22 [21]என்னுடைய நாமத்தின் நிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்; [22]ஆகிலும் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கிறவனே இரட்சிக்கப்படுவான்.

23 [23]அல்லாமலும் மனிதனு

---

1 அப். அ. 8அ. உல

2 சாமு. கூ. எ. மாற். க. அ. லூக். க. 6: 9. 9: உஉ. கஇ.

3 மாற். க. அ * எடுத்துக்கொள் எவேண்டாம்.

4 லூக். 10. எ. க கொரி. கூ. எ. க நியே. இ. 8அ.

5 லூக். 10. அ.

6 லூக். 10. இ.

7 சங். கஇ. 66.

8 மாற். க. 6க. லூக் கூ.இ:10.10.

9 லூக். 10. 6க. செகே. இ. 6க. அப் 6க. இக: 8அ. க.

10 மத். கூ. உஉ, உச.

11 லூக். 10. க.

12 உரோ. 6க. 6கூ. எபே. இ. 8இ.

13 க கொரி. 6ச. உ8. பிலி உ. 8இ.

† அல்லது நீக்கற்றவர்களாய்.

14 மத். உச. கூ. மாற். 6க. கூ. லூக். 6உ. 6க: உச 6உ.

15 அப். இ. ச8.

16 அப். 6உ. க: உச.8:உஇ. எ, உக. உநியே. ச. 6கூ.

17 உ மோ. ச. 6உ எசே.க. எ.

18 மாற். 6க. 6க. லூக். 6உ. 6க. உக. ட்ச.

19 உ சாமு. உக. உ. லூக். உக. 8இ.அப்.ச. அ: க உ. உநியே. ச.8எ.

20 கஇ,கூ 6ச. மீகா. எ. கூ. லூக். உக. 6க.

21 லூக் உக.8எ.

22 தானி. 6உ 8உ, 6க. மத். உச. 6க. மாற் 6க. 6க.

23 மத். 6கூ. உஅ.

Digitized by Google

டைய குமாரன் வரும்வரைக்கும், நீங்கள் இஸ்ரவேலருடையபட்டணங்களை எல்லாம் *கடந்துபோய் முடமாட்டீர்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; [1]ஆதலால் ஒரு பட்டணத்திலே உங்களைத் துன்பப்படுத்தினால், மறுபட்டணத்திற்கு ஓடிப்போங்கள்.

உ [2]சீஷனானவன் போதகனிலும், அடிமைப்பட்டவன் தன் எசமானிலும் மேற்பட்டவர்கள் அல்ல.

உஙி சீஷன் தன் போதகனைப் போலவும், அடிமைப்பட்டவன் தன் எசமானைப்போலவும் இருக்கிறது அவர்களுக்குப் போதுமே; [3]வீட்டெசமானைப் பெயேல்செபூல் என்று அவர்கள் சொல்லுவார்களானால், அவருடைய வீட்டாரை அதிகமாய் அப்படிச் சொல்லுவார்கள் அல்லவா? ஆதலால் அவர்களுக்குப் பயப்படாதிருப்பீர்களாக.

உச [4]வெளியாக்கப்படாத மறைபொருள் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை.

உஎ நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்தில்சொல்லுங்கள்; நீங்கள் இரகசியமாய்க் கேட்கிறதை மேடைகளிலிருந்து பிரசித்தம் செய்யுங்கள்.

உஅ [5]அல்லாமலும் ஆத்துமாவைக்கொலைசெய்யத்திராணியில்லாமல், சரீரத்தைமாத்திரம் கொலைசெய்கிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே கெடுக்க வல்லவருக்குப் புயப்படுங்கள்.

உக †ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவோ? ஆகிலும் உங்கள் பிதாவின் உத்தரவில்லாமல் அவைகளில் ஒன்றும் தரையிலே விழாது.

ஊ [6]அல்லாமலும் உங்கள் தலையின மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றன.

ஊக ஆதலால் பயப்படாதிருங்கள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் மேன்மையாயிருக்கிறீர்கள்.

ஊஉ [7]அப்படியிருக்க, மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை [8]நானும் பரமண்டலங்களில் இருக்கிற என்பிதா முன்பாக அறிக்கைபண்ணுவேன்.

ஊஙி [9]மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவுக்கு முன்பாக மறுதலிப்பேன்.

ஊச [10]பூமியின்மேல் சமாதானத்தை வரப்பண்ண வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள்; சமாதானத்தை அல்ல, சண்டையை வரப்பண்ண வந்தேன்.

ஊஙி எப்படியெனில், குமாரன் தன் தகப்பனையும், மகள் தன் தாயையும், மருமகள் [11]தன் மாமியையும் விட்டுப் பிரிந்து போகப்பண்ணவந்தேன்.

ஊசு [12]அப்படி ஒரு மனிதனுடைய குடும்பத்தாரே அவனுக்குச் சத்துருக்களாயிருப்பார்கள்.

ஊஎ [13]என்னிலும் தகப்பனையாவது தாயையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; என்னிலும் மகனையாவது மகளையாவது அதிகமாய்ச் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

ஊஅ [14]அல்லாமலும் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என் பின்னே செல்லாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.

ஊக [15]தன் சீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் சீவனை இழக்கிறவன் அதைக் காப்பான்.

வி. பி. ஊக.

* அத்தனைக்குப்போய்.

1 மத். உ. ம: ச.மஉ: மஉ.மஇ. அப். அ. க: கூ. உஇ: ம. ச.

2 லூக். கூ. சஅ. போல. ஙக. ம: மஇ. உஅ.

3 மத். மஉ. உச மாற். க. உஉ. லூக். ஙக. மசி. போல. அ. சஅ, இஉ.

4 மாற். ச. உஉ. லூக். அ. ம: மஉ. உ, க.

5 சர. அ. மஉ, ஙக. லூக். மஉ. ச. க பே. க. ம.

† மூல பாஷையிலே இது உரோமர்களுடைய பணத்தில் பத்தில் ஒரு பங்காகிய முன்ற தட்டெம் ஒன்றைக் காசமாம்; மத். உஅ. உஅ.

6 க சாமு. ம. சஇ. உ சாமு. ம. ஙக. லூக். உக. அஅ. அப். உஎ.ச.

7 லூக். மஉ. அ. உரோ. ம. க, ம.

8 லூக். மஉ. அ. வெளி. க. இ.

9 மாற். அ. கஅ. லூக். க. உக. உ தீமோ. உ. மஉ.

10 லூக். மஉ.சக, இக, இக.

11 மீகா. எ. க.

12 சங். சக க: இஇ. மஉ, ஙக மீகா. எ. க. போல.ஙக.அ.

13 லூக். ம.ச.உக.

14 மத். மசு. உச. மாற். அ. கச. லூக். க. உக: ம.ச. உஎ.

15 மத். ஙக. உஇ. லூக். ம.எ. கக. போல. மஉ. உஇ.

Digitized by Google

சய ¶ [1]உங்களைச் சேர்த்துக் கொள்ளுகிறவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறான்; என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

சக [2]தீர்க்கதரிசி என்கிற நாமத்தின் நிமித்தம் ஒரு தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்குரிய பலனை அடைவான்; நீதிமான் என்கிற நாமத்தின் நிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுக்குரிய பலனை அடைவான்.

சஉ [3]இந்தச் சிறியவர்களில் ஒருவன் சீஷனையிருக்கிறதின் நிமித்தம் அவனுக்கு ஒரு கலயம் தண்ணீர் மாத்திரம் தாகத்துக்குக் கொடுக்கிறவன் தன் பலனை இழந்துபோகான் என்ற மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யக. அதிகாரம்.

உ. யோவான் தன்னுடைய சீஷர்களை யேசுவண்டைக்கு அனுப்பினது. எ. யோவானைக் குறித்துக் யேசு பகர்ந்த சாட்சி. உஅ. யோவானையும் யேசுவையுங்குறித்த சனங்களுடைய தாறுமாறு. உஉ. கோராசின், பெதசாயிதா, கப்பர்நகூம் என்ற பட்டணங்களுடைய கன்றியறியாமையையும் குணப்படாமையையும் குறித்துக் யேசு கண்டித்து, உஇ. சகிலேசுத்தைப் பேதமையுள்ளவர்களுக்கு அறிவிக்கிறதினாலே தேவன் தமக்கு பிதாவின் ஞானத்தைப் புகழ்ந்தது, உஅ. பாவச்சுமையை உணர்ந்தவர்கள் யாவரையும் தம்மிடத்தில் வரும்படி அழைத்தது.

இயேசுவானவர் தம்முடைய பன்னிரண்டு சீஷருக்கும் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களில் உபதேசம்பண்ணிப் பிரசங்கிக்கும்படிக்கு அவ்விடம்விட்டுப் புறப்பட்டார்.

உ ¶ [4]அத்தருணத்திலே காவலில் இருந்த யோவான் கிறிஸ்துவின் [5]கிரியைகளைக் கேள்விப்பட்டு, தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து,

ஈ [6]நீங்கள் போய் அவரை நோக்கி, வருகிறவர் நீர்தாமோ, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேளுங்களென்று சொன்னான்.

ச அவர்கள் அப்படியே வந்து கேட்டபொழுது இயேசுவானவர் அவர்களுக்கு மாறுத்தரமாகச் சொன்னதாவது: நீங்கள் கேட்டும் கண்டும்இருக்கிறவைகளை யோவானுக்குப்போய் அறிவியுங்கள்.

ஞ என்னவெனில், [7]என்னுலே குருடர் பார்வை அடைகிறார்கள்; சப்பாணிகள் நடக்கிறார்கள்; குஷ்டரோகிகள் சுத்தம் அடைகிறார்கள்; செவிடர் கேட்கிறார்கள்; மரித்தோர் எழுந்திருக்கிறார்கள்; [8]எளியவர்களுக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது.

சு அல்லாமலும் என்னைக்குறித்து [9]இலச்சை அடையாதிருக்கிறவன் பாக்கியவான் என்ற சொல்லி அவர்களை அனுப்பினார்.

எ அவர்கள் போனபின்பு இயேசுவானவர் சனங்களை நோக்கி, [10]யோவானைக்குறித்துச் சொன்னதாவது: நீங்கள் வனாந்தரத்திலே எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்; [11]காற்றினால் அடித்து அசைக்கப்படுகிற நாணலையோ?

அ அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்? மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையோ? மெல்லிய வஸ்திரங்களை உடுத்திருக்கிறவர்கள் அரசர்மாளிகைகளில் இருக்கிறார்கள்.

க அல்லது எதைப்பார்க்கப் புறப்பட்டீர்கள்? [12]தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியிலும் அதிக மேன்மையுள்ளவனையே என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ய [13]அதெப்படியெனில், இதோ நான் என்னுடையதூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்கு முன்னே உம்முடைய மார்க்கத்தைச் செம்மைபண்ணுவான் என்று ஒருவனைக்குறித்து எழுதியிருக்கின்றதே, அவன் இவன்தான்.

---

1 மத். உஅ. இ. லூக். க. சஅ: ம. மக. போவா. மஉ. சச: மக. உம். கலா. ச. ம.

2 க இரா. மள. ம: மஅ. ச.

உ இரா. ச.அ.

3 மத். மஅ. இ, க. மத். உஇ. சம. மாற். க. சக. எபி க. ம.

4 மத். ம.ச. க.

5 லூக். எ. மஅ. ழ.

6 க மோ. சக. ம. ச மோ. உச. மள. தானி. க. உ. போவா. க. மச.

7 சோ. உக. மஅ: கஇ இ, சு: சஉ. க. போவா. உ. உஉ: க. உ: இ. கக: ம. உஇ, கஅ: மச. மக.

8 சங். உஉ. உக. சோ. கக. க. லூக். ச. மஅ. யாக். உ. இ.

9 சோ. அ. மச, மஇ. மத். மக. இச: உச. ம: உக. கக. உசோ. க. கக. க கொரி. க உக; உ. மச. கலா. இ. மக. க பே. உ. அ.

10 லூக். எ. உச.

11 எபே. ச. மச.

12 மத். மச. இ: உக. உக. லூக். க. எக: எ. உக.

13 மல்கி. க. க. மாற். க. உ. லூக். க. எக: எ. உஎ.

Digitized by Google

எக அல்லாமலும் ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரியவன் ஒருவனும் எழும்பவில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகிலும் பரலோக இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

எஉ [1]அல்லாமலும் யோவான்ஸ்நான் தோன்றின காலம் முதற்கொண்டு இதுவரைக்கும் பரலோக இராச்சியம் *பலவந்தப்படுகின்றது; பலவந்தம்பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

எக [2]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகள் யாவரும் அதை யோவான்வரைக்கும்தீர்க்கதரிசனமாய் அறிவித்தார்கள்.

எச [3]நீங்கள் ஒத்துக்கொள்ள மனதிருந்தால், வருபவனாகிய எலியா இவன்தான்.

எடி [4]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

எசு ¶ [5]இந்தச் சந்ததியை ஆருக்கு நிகர்சொல்லுவேன்? சந்தைகளில் உளுக்காந்து தங்கள் தோழரை நோக்கி,

எஎ உங்களுக்காக ஊதினேனும், நீங்கள் கூத்தாடவே இல்லை; உங்களுக்காகப் புலம்பினேனும், நீங்கள் மார்பில் அடிக்கவே இல்லை என்று சொல்லிக் கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

எஅ எப்படியென்றால்,யோவான் வந்து போசனபானம்பண்ணாமல் இருந்தான்; பசாசைக்கொண்டிருக்கிறான் என்றார்கள்.

எக [6]மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம்பண்ணுகிறான்; இதோ பெருந்தீனிக்காரன் என்றும், குடிக்கிறவன் என்றும், ஆயக்காரருக்கும், பாவிகளுக்கும் சிநேகிதன் என்றும் சொல்லுகிறார்கள்; [7]ஆனாலும் ஞானமானது தன் பிள்ளைகளாலே நீதியாய் எண்ணப்படும் என்றார்.

கி. பி. கூக.

1 லூக். மக. மகூ. * அல்லது பலவந்தத்தினாலே பெற்றுக்கொள்ளப்படுகிறது.
2 மல்கி. ச. க.
3 மல்கி. ச. ஙி லூக். க. மஎ. மத். மஎ. மஉ.
4 மத். மக. கூ. லூக். அ. அ. வெளி. உ. எ, மக, மஎ, உக: க கூ, மக, உஉ.
5 லூக். எ. கக.
6 மத். கூ. ம.
7 லூக். எ கஙி.
8 லூக். ம.மஉ. ழ.
9 யோவே. க. எ, அ.
10 மத். ம. மஙி: உச. மச.
11 எசா. மச. மக, மச, மஙி. புல. உ. க.
12 மத். ம. மஙி.
13 லூக். ம. உக.
14 சங். அ. உ. க கொரி. க.மக, உஎ: உ. அ. உ கொரி. க.மச.
15 மத். மக. மஎ.

உய ¶ [8]அப்பொழுது அவர் தமது பலத்த செய்கைகளில் அநேகங்களைக் கண்ட பட்டணத்தார் மனந்திரும்பாமல் இருந்தபடியினாலே அவர்களைக் கடிந்துகொள்ளத் தொடங்கிச் சொன்னதாவது:

உக ஐயோ! கோராசின் பட்டணத்தாரே, உங்களுக்கு வேதனைவரும்; ஐயோ! பெதுசாயிதா பட்டணத்தாரே, உங்களுக்கும் வேதனைவரும்; உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீருசீதோன் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்கள் சீக்கிரமாய் [9]இரட்டை உடுத்திச் சாம்பலில் உளுக்காந்து மனந்திரும்பியிருப்பார்கள்.

உஉ [10]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அவர்களைப்பார்க்கிலும் நீங்களே அதிக தண்டிப்பை அடைவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உஊ [11]வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நாகூம் பட்டணத்தாரே, ஐயோ! பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவீர்கள்; உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் சோதோம் பட்டணத்தாருக்குள்ளே நடந்திருந்தால், அவர்களுடைய பட்டணம் இந்நாள்வரைக்கும் இருக்குமே.

உச [12]ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே அவர்களுக்கு வரும் தண்டிப்பு எளிதாயிருக்கும்; நீங்களே அதிக தண்டிப்பை அடைவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உஙி ¶ அக்காலத்திலே [13]இயேசு வானவர் சொன்னதாவது: பிதாவே, வானத்தையும் பூமியையும் ஆளுகிறவரே, [14]நீர் இவைகளை (லோக) ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துக் [15]குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினபடியினாலே உம்மைத் துதிக்கிறேன்.

உசு ஆ பிதாவே, இப்படியே

Digitized by Google

உமக்குப் பிரியமாயிருந்தது என் றார்.

உஎ [1]அல்லாமலும் சகலமும் என் பிதாவினாலே எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றன; பி தா தவிர மற்றொருவனும் குமா ரனை அறியான்; [2]குமாரன் தவிர மற்றொருவனும் பிதாவை அறி யான்; மேலும் எவனுக்குக் குமா ரன் அவனை வெளிப்படுத்தச் சித்த மாயிருக்கிறாரோ, அவனும் பிதா வை அறிவான்.

உஅ வருத்தப்பட்டுப் பாரம் சு மந்துகொள்ளுகிறவர்களாகிய நீங் கள் எல்லாரும் என்னிடத்தில் வா ருங்கள், நான் உங்களுக்கு ஆறு தல் செய்வேன்.

உக [3]நான் சாந்தமாயும் மனத் தாழ்மையாயும் இருக்கிறபடியி னாலும், [4]நான் வைக்கிற நுகத்தடி மெதுவாயும், நான் ஏற்றுகிற சுமை இலேசாயும் இருக்கிறபடியி னாலும்,

உஙி நீங்கள் [5]என்னுடைய நுகத் தடியை ஏற்றுக்கொண்டு என்னி டத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் [6]ஆத்து மாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும் என்றார்.

ஙஉ. அதிகாரம்.

க. ஓய்வுநாளின் மீறுதலுக்குறித்துப் பரிசேயர்களு டைய குருட்டாட்டத்தை, உ. வேதத்தினாலும், ங. நியாயத்தினாலும், ஙஉ. ஒரு அற்புதத்தினாலும் நிறுத்து கடிந்துகொண்டது. ஙஎ. அவர் பசை பிடித்த குருடும் ஊமையுமான ஒரு மனுஷனைக் குணமாக்கினது. ஙக. பரிசுத்த ஆவிக்கு விரோத மாய்ச் செய்யப்படும் தூஷணம் மன்னிக்கப்படாத நிலை என்பது. ஙங. வீண் வார்த்தைகளுக்கும் நியாயதீர்ப்பு கேட்கப்படும் என்பது. ஙஅ. ஒரு அடையாளத்தைக் கேட்ட அவிசுவாசிகளை அவர் கடிந்துகொண்டு, ஙசு. அவர் தம்முடைய சகோ தரரும் சகோதரியும் தாயும் இன்னாரென்று கண் பித்தது.

[7]அக்காலத்தில் ஓய்வுநாளிலே இ யேசுவானவர் பயிர்வழியே போ னார்; அப்பொழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தபடியினாலே கதிர்களைக் கொய்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

கி. பி. ஈக.

1 உஅ.ஙஅ. லூக். ம. உஉ. யோவா. க. கஇ: மக. க: மா.உ.க சொரி. ஙஇ. உஎ.

2 யோவா. க. ஙஅ: சு. எக: ம. ஙஇ.

3 சகரி. சு. சு. பிலி. உ. எ, அ.

4 க யோ. இ. உ.

5 யோவா. ஙக. ஙஇ. பிலி. உ. இ. க பே. உ. உஅ. க யோ. உ. சு.

6 எரே. சு. ஙக.

7 இ மோ. உக. உஇ. மாற். உ. உக. லூக். சு. க.

8 க சாமு.உக.க.

9 உ மோ. உக. கஉ,கக. க மோ. அ. கக:உச. சு.

10 உ மோ. உஇ. கஅ. க மோ.உச. இ.

11 ச மோ. உஅ. சு. யோவா. எ. உஉ.

12 உ எஸ்றா. சு. ஙஅ. மல்கி. க. சு.

13 மத். சு. ஙக. ஓசே. சு. சு. மீகா.சு.கு,எ,அ.

14 மாற்.க.க லூக். சு. சு.

15 லூக். ஙக. மச: மச. க. யோவா. சு. ஙக.

16 உ மோ. உக. ச, இ. இ மோ. உஉ. ச.

கி. பி. ஈக.

உ அதைக் கண்ட பரிசேயர் அ வனை நோக்கி, இதோ, ஓய்வுநா ளில் செய்யத்தகாததை உம்மு டைய சீஷர்கள் செய்கிறார்கள் என்றார்கள்.

ங அவர்களுக்கு அவர் சொன் னதாவது: [8]தாவீதும் அவனோடி ருந்தவர்களும் பசியாயிருந்தபொ ழுது,

ச அவன் தேவாலயத்தில் பிர வேசித்து, [9]ஆசாரியரேயன்றித் தா னும் தன்னோடிருந்தவர்களும் சா ப்பிடத்தகாத [10]தேவ சமுகத்தப் பங்களைச் சாப்பிட்டான் என்று நீங்கள் வாசிக்கவில்லையா?

ஞ [11]அல்லது ஆசாரியரானவர் கள் தேவாலயத்திலே ஓய்வுநாள் களில் ஓய்ந்திராமல் வேலைசெய் தும் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்திலே வாசிக் கவில்லையா?

சு [12]தேவாலயத்திலும் பெரிய வர் இங்கே இருக்கிறார் என்று உங் களுக்குச் சொல்லுகிறேன்.

எ [13]மேலும் பலியிலும் இரக் கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் அறிந்தீர்களானால் குற்றமில்லாத இவர்களை நீங்கள் குற்றப்படுத்த மாட்டீர்கள்.

அ அல்லாமலும் மனிதனுடை ய குமாரனானவர் ஓய்வுநாளைக்கு நித்தும் கர்த்தராயிருக்கிறார் என் றார்.

க ¶ [14]பின்பு அவர் அவ்விடம் விட்டுப் போய் அவர்களுடைய செபஆலயத்தில் பிரவேசித்தார்.

ய [15]அங்கே சூம்பின கையை யுடைய மனிதன் ஒருவன் இருந் தான்; அப்பொழுது அவர்கள் அ வர்மேல் குற்றஞ்சாற்றும்படிக்கு அவனை நோக்கி, ஓய்வுநாளில் சுக மாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்.

யக [16]அவர் சொன்னது: உங்க ளில் எவனுக்காவது தன் ஆடு ஓய்வு நாளில் ஒரு குழியிலே விழுந்தால்

Digitized by Google

அதைப் பிடித்துத் தூக்கிவிடுவான் அல்லவா?

௰உ ஆட்டிலும் மனிதனானவன் மிகவும் மேன்மையாயிருக்கிறான்; ஆதலால் ஓய்வுகாளிலே நன்மை செய்கிறது நியாயந்தான் என்று சொல்லிப் பின்பு அந்த மனிதனை நோக்கி,

௰ஊ உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; உடனே அது மறுகையைப்போலவே சுகமாயிற்று.

௰எ [1]அப்பொழுது பரிசேயர் புறப்பட்டுப் போய், அவனைச் சங்காரிக்கும்படிக்கு யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

௰ஏ ¶ [2]அதை இயேசுவானவர் அறிந்து, அவ்விடம்விட்டுப் போனார்; [3]அப்பொழுது அநேக சனங்கள் அவர் பின்னே சென்றார்கள்.

௰ஐ எல்லாரையும் அவர் குணமாக்கிப் [4]பின்பு தம்மைப் பிரசித்தம்பண்ணுதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௰ஒ அதினாலே இதோ, [5]நான் தெரிந்துகொண்ட ஊழியக்காரன், எனக்கு அன்பானவர், [6]என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்; இவரிடத்திலே என்னுடைய ஆவி இருக்கச் செய்வேன்; இவர் நியாயமானதை உலகத்தாருக்கு அறிவிப்பார்;

௰ஓ சண்டைபண்ணுமலும் கூக்குரல்பண்ணுமலும் இருப்பார்; இவருடைய சத்தம் வீதிகளில் ஒருவராலும் கேட்கப்படுவதில்லை.

௰ஔ நியாயமானது செயமாய் இருக்கும்படி செய்கிறவனைக்கும் இவர் தெரிந்திருக்கிற நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும் இருப்பார்.

உ0 இவருடைய நாமத்தின்மேலே புறத்தேசத்தார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்று,

உ உ சாயாதிர்க்கதரிசி உரைத்த வசனம் நிறைவேறிற்று.

கி. பி. ஈக.

1 மத். உள. க. மாற். உ. க.லூக். சு. உக. யோவா. இ.அ: ம.ஈக: ஈக. இக.

2 மத். ம. உக. மாற். க. எ.

3 மத். மஈ. உ.

4 மத். சு. ஈம.

5 ஏசா. சஉ. க.

6 மத். உ. ம஑:ம஑. இ.

7 மத். சு. ஈஉ. மாற். க. மஈ. லூக். மஈ. ம஑.

8 மத். சு. ஈச. மாற். க. உஉ. லூக். மஈ. ம஋.

* அல்லது பெயேல் செபுப். அப்படியே உள-வசனத்திலும்.

9 மத். சு. ச. யோவா. உ. உஇ. வெளி. உ. உக.

10 நாளா. உ.சச: எ. ம஑. லூக். க.ஈஈ: மஈ. உம: ம஑. உம, உக.

11 ஏசா.சஈ.உச. லூக். மஈ. உக, உஉ, உக.

உஉ ¶ [7]அப்போது பசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவும்தக்கதாக அவனைக் குணமாக்கினார்.

உஊ சனங்கள் எல்லாரும் பிரமித்து, இவர் தாவீதின் குமாரன் அல்லவா என்றார்கள்.

உச [8]பரிசேயர் அதைக் கேட்டு, இவன் பசாசுகளுடையதலைவனாகிய *பெயேல்செபூவினாலே பசாசுகளைத் துரத்துகிறானே அன்றி, மற்றப்படியல்ல என்றார்கள்.

உஎ [9]இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி, ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளேதானே பிரிவினைபண்ணினால் அழிந்துபோவார்கள்; அல்லாமலும் ஒரு பட்டணத்தாராலும் குடும்பத்தாராலும் தங்களுக்குள்ளே பிரிவினைபண்ணினால், நிலைநிற்கமாட்டார்கள்.

உஏ அப்படிப்போலச் சாத்தான் மற்றொரு சாத்தானைத் துரத்தினால் அவர்களுக்குள்ளேதானே பிரிவினை உண்டாகுமே; அப்படியானால் அவனுடைய இராச்சியம் எப்படி நிலைநிற்கும்?

உஐ அல்லாமலும் நான் பெயேல்செபூவினாலே பசாசுகளைத் துரத்துகிறவன் என்றால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்; ஆகையால் அவர்களே உங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பார்கள்.

உஒ [10]நான் பராபரனுடைய ஆவியினாலே பசாசுகளைத் துரத்துகிறபடியால், பராபரனுடைய ஆளுகையே உங்களிடத்தில் வந்திருக்கின்றது.

உஓ [11]அல்லது மூன்பு பலவானைக் கட்டாவிட்டால் அவனுடைய வாசஸ்தலத்திலே ஒருவன் எப்படிப் பிரவேசித்து, அவனுடைய உடைமைகளைக் கொள்ளை

Digitized by Google

யிடுவான்; (பலவானைக் கட்டின பி. ஈக.
பின்பல்லவா) அவனுடைய வா
சஸ்தலத்தைக் கொள்ளையிடுவான்?

ஈய என் பங்கில் இராதவன் எனக்கு விரோதமாய் இருக்கிறான்; என்னுடனே கூடச் சேர்த்துக் கொள்ளாதவன் சிதற அடிக்கிறான்.

ஈக ¶ ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [1]எந்தப் பாவமும் தூஷணமும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும்; [2]தேவ ஆவியை (நிந்திக்கும்) தூஷணம் மாத்திரம் மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை.

ஈஉ [3]எவனுஞ்சும் மனிதனுடைய குமாரனுக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; [4]எவனுகிலும் பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை.

ஈஊ [5]மேலும் ஒரு மரத்தின் தன்மையை அதின் கனிகளாலே அறியலாம்; ஆகையால் நீங்கள் ஒரு மரத்தை நல்லமரமென்று எண்ணினால், அதின் கனியையும் நல்லதென்று எண்ணுங்கள்; அல்லது நீங்கள் ஒரு மரத்தைக் கெட்டமரமென்று எண்ணினால், அதின் கனியையும் கெட்டதென்று எண்ணுங்கள்.

ஈஎ [6]இருதயத்தின் நிறைவினாலே வாய்பேசும்; [7]ஆதலால் விரியன் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நன்மையானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?

ஈஏ நல்ல மனிதனானவன் தன் இருதயத்திலுள்ள நல்ல பொக்கிஷத்தில் நல்லவைகளை எடுத்துக் காண்பிக்கிறான்; பொல்லாத மனிதன் தன் பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாதவைகளை எடுத்துக் காண்பிக்கிறான்.

ஈஐ மனிதர்கள் பேசும் வீணான

1 மாற். ஃ. உஅ. லூக்.௰உ.௱.எபி. ஃ. ஃ: ம். உக, உக. ஃ போ. இ. ௰ஃ.
2 மாற். க். உக. லூக். ௰உ. ம. எபி. ஈ. ஈ: ம. உக, உக. அப். எ. இக.
3 மத் ௰ஃ. ௰ஈ: ௰ஈ.இஇ.போவா. எ. ௰உ, இஉ. ஃஇமோ. ஃ. க்ஷ.
4 ஃ போ இ. ஃக.
5 மத் எ. க்ஷ. லூக்.ஃ.ஃக,ஃச.
6 லூக். ஃ. ஃஇ.
7 மத். ஃ. எ, உக, ஃக.
8 மத்.௰ஈ.ஃ.மாற். அ. ௰ஈ. லூக். க்ஷ. ௰ஈ. உக. போவா உ.௰அ. ஃ கொரி.ஃ.உஉ.
9 எச. இஎ. ஃ. மத்.௰ஈ.ஃ. மாற். அ.ஃஅ.போவா. ஃ. ஃஅ.
10 யோனா உ. ஃ.
11 யோனா ஃ. இ.
12 எரே. ஃ. ௰ஈ. எசே. ௰ஈ. இஈ, இஉ. உரோ. உ. உஎ.
13 லூக்.௰ஈ.ஃஉ.
14 ஃ இரா ம. ஃ. உ நாளா. ஃ.ஃ. லூக். ௰ஈ. ஃஃ.

வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே உத்தரவு கொடுப்பார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ஈஎ எப்படியும் உன் வார்த்தைகளினாலே நீதிமானென்றும், உன் வார்த்தைகளினாலே குற்றவாளியென்றும் தீர்க்கப்படுவாய்.

ஈஅ ¶ [8]அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவனை நோக்கி, போதகரே, உம்மாலே ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்.

ஈக அதற்கு அவர் சொன்னது: [9]சோரமார்க்கமாய்ப் போகிற பொல்லாத சந்ததியாகிய இவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறு அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

சய என்னவென்றால், [10]யோனா என்பவன் இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனினுடைய வயிற்றில் இருந்ததுபோல, மனிதனுடைய குமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்திலே இருப்பார் என்பதே.

சக [11]யோனா என்பவன் பிரசங்கம் பண்ணினபொழுது நினிவே பட்டணத்தார் மனம் திருப்பினார்கள்; [12]யோனாவிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார்; [13]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் எழும்பி இவர்களைக் குற்றவாளிகளென்று தீர்ப்பார்கள்.

சஉ [14]அல்லாமலும் தெற்கு இராசஸ்திரி மிகுந்த தூரமான தேசத்திலிருந்து சாலோமோனுடைய ஞானத்தைக் கேட்கவந்தாள்; சாலோமோனிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த இராசஸ்திரி எழும்பி

Digitized by Google

இவர்களைக் குற்றவாளிகளென்று [1]தீர்ப்பான்.

சஈ ¶ அல்லாமலும், அசுத்தமான ஆவி ஒரு மனிதனைவிட்டுப் புறப்பட்டபின்பு [2]தண்ணீர் இல்லாத இடங்களில் அலைந்து இளைப்பாறுதற்கான இடத்தைத் தேடியும் அடையாமல் இருக்கும்பொழுது,

சஉ அது தான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்றுசொல்லி,(அங்கே)சென்று, அவ்விடத்தை வெறுமையாயும், பெருக்கிச் சோடிக்கப்பட்டதாயும் இருக்கக்கண்டு திரும்பிப் போய்,

சஙி தன்னிலும் அதிக பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னுடனே கூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து, அங்கே வாசம்பண்ணும்; [3]இவ்விதமாய் அந்த மனிதனுடைய முன் நிலைமையிலும் பின்நிலைமை அதிக கேடுள்ளதாய் இருக்கின்றது, அப்படியே இந்தப் பொல்லாத சந்ததிக்கும் சம்பவிக்கும் என்றார்.

சஊ ¶ [4]அவர் இப்படிச் சனங்களுடனே பேசுகையில், [5]அவருடைய தாயும் சகோதரரும் வந்து வெளியே நின்று, அவரோடே பேசத்தேடினார்கள்.

சஎ அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி, இதோ, உம்முடைய தாயாரும் சகோதரரும் வெளியே நின்று, உம்மோடே பேசத் தேடுகிறார்கள் என்றான்.

சஅ அப்படித் தமக்குச் சொன்னவனுக்கு அவர் மாறுத்தரமாக, என்னுடைய தாய் யாவள்? என் சகோதரர் யார்? என்றுசொல்லி,

சக தம்முடைய கையைத் தம்முடைய சீஷர்மேலே நீட்டி, இதோ, இவர்கள் என் தாயும் என் சகோதரருமாய் இருக்கிறார்கள்.

கூ [6]எவனெவனும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்தால், அவனே என் சகோதரனுமாய்ச் சகோதரியுமாய்த் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

கி. பி. ஈக.

1 லூக். ஈக. உச.
2 யோபு. க. எ. க பே. இ. அ.
3 எபி. க. ச: ம. உக. உ பே. உ. உம், உக, உஉ.
4 மற். க. கக. லூக். அ. டக, உம், உக.
5 மத். டக. இஇ. மற். கூ. க. யோவா உ.ம்உ. எ. க, இ. அப். க.டச. க கொரி. கூ. இ. கலா. க. ஈக.
6 யோவா. ஙஇ. ஙச. கலா.இ.க: கூ. டஇ. கொலோ. க. ஈக எபி. உ.ஈக.
7 மற். ச. க.
8 லூக். அ. ச.
9 லூக். இ. க.
10 லூக். அ. இ.
11 க மோ. உக. ஙஉ.
12 மத். ஈக. ஙஇ. மற். ச. கூ.

யிகூ. அதிகாரம்.

க. விதைக்கிறவனையும் விதையையும் உவமையாகக் காட்டியது. ஙஅ. அதின் விபாக்கியானம். உச. கோணியும், கக. கடுகுவிதையையும், கஉ. புளித்த மாவையும், சச. மலையில் ஒளிக்கப்பட்ட பொக்கிஷத்தையும், சஇ. முத்தையும், சஎ. கடலில் போடப்பட்ட வலையையும் உவமையாகக் காட்டியது. இக. தேசத்து தம்முடைய சொந்த ஊராரால் அசட்டைபண்ணப்பட்டது.

[7]அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கடலின் அருகே உளுக்காந்தார்.

உ [8]அப்பொழுது அநேக சனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், [9]அவர் படகில் ஏறி உளுக்காந்து, சனங்கள் எல்லாரும் கரையிலே நிற்க,

ரு அநேக விசேஷங்களை உவமைகளால் அவர்களுக்குச் சொன்னதாவது:

ச ¶ [10]விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில (விதை) வழி அருகே விழுந்தன; அவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தன.

ஙு வேறுசில (விதை) மிகுந்த மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்து, ஆழமான மண்ணில்லாததினால் உடனே முளைத்தன.

சு வெயில் தோன்றினபொழுது அவை தீய்ந்துபோய், வேரில்லாததினாலே உலர்ந்துபோயின.

எ வேறுசில (விதை) முள்ளுக்களுள்ள இடத்திலே விழுந்தன, முள்ளுக்கள் வளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன.

அ [11]வேறுசில (விதை) நல்ல நிலத்தில்விழுந்து, சில நூறாகவும், சில அறுபதாகவும், சில முப்பதாகவும் பலன்கொடுத்தன.

கூ [12]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

ம ¶ அப்பொழுது சீஷர்கள் அவ

Digitized by Google

கி. பி. கூக.

ரிடத்தில் வந்து, என்னத்தினாலே உவமைகளால் அவர்களோடே பேசுகிறீர் என்றார்கள்.

யக [1]அதற்கு அவர் சொன்னது: பரலோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது; அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவில்லை.

யஉ [2]எப்படியெனில், எவன் உள்ளவனாயிருக்கிறானே அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; எவன் உள்ளவன் அல்லாதவனாய் இருக்கிறானே அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

யங [3]அவர்கள் கண்டும் காணாமலும், கேட்டும் கேளாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருக்கிறபடியினாலே, நான் உவமைகளால் அவர்களுடனே பேசுகிறேன்.

யச [4]இந்தச் சனங்கள் கண்களினாலே காணுமலும், காதுகளினாலே கேளாமலும், இருதயத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலும், திரும்பாமலும், என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு அவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயம் உடையவர்களுமாய், வருத்தத்தோடே கேட்கிற காதுள்ளவர்களுமாய், மூடிக்கொண்டிருக்கிற கண்களை உடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே,

யடு நீங்கள் உற்றுக் கேட்டாலும் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள்; உற்றுப்பார்த்தாலும் அறியாமல் இருப்பீர்களென்று, ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறி வருகின்றது.

யஙூ [5]உங்கள் கண்களோ காணுகிறபடியினாலும், உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும் பாக்கியமுள்ளவைகள்.

யஎ [6]அநேகம் தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும், நீங்கள் காணுகிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணுமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யஅ ¶ [7]ஆகையால் விதைக்கிறவனுடைய உவமையைக் கேளுங்கள்.

யஙூ [8]ஒருவன் பரலோக இராச்சியத்தைக்குறித்து வசனத்தைக் கேட்டும் அதைச் சிந்தித்துக் கொள்ளாமல் இருக்கிறபொழுது பொல்லாங்கன் வந்து, அவனுடைய இருதயத்தின்மேல் விதைக்கப்பட்டதை எடுக்கிறான்; அவனே விதைவிழுந்த வழிக்கு ஒப்பானவன்.

உய [9]விதை விழுந்த கற்பாறைக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு,

உக பின்பு அது தனக்குள்ளே வேர்பற்றி இராமல் கொஞ்சக்காலம் மாத்திரம் அதைப் பற்றிக்கொள்ளுவான்; [10]அந்த வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பப்படுதலும் உண்டாகிறபொழுது உடனே அவன் தவறுவான் என்பதே.

உஉ [11]விதை விழுந்த முள்ளுள்ள இடத்துக்கு ஒப்பானவன் [12]அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது லவுகீக கவலைகளும், ஐசுவரியத்தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெருக்கிப்போடுவதால், கனியற்றவனாவான் என்பதே.

உங விதை விழுந்த நல்ல நிலத்துக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டும், சிந்தித்தும், அதின்படி செய்தும், தானும் அறுபதும் முப்பதுமாகப் பலனைக் கொடுத்தும் வருவானென்பதே என்றார்.

உச ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்; அதாவது: பர

1 மத். உக. உஓ: மக. மஎ. மாற். உ.மக. உ சொரி. உ. ம. உ பே. உஎ.

2 மத். உஓ. உக. மாற். உ. உஓ. லூக். அ. மஅ: மக. உக.

3 எசா. க. க. எசே. மஉ. உ. மாற். உ. மஉ. லூக். அ. ம. பேரா. மஉ. உம. அப். உஅ. உக,உஎ.உரோ மக.அ. உகொரி. உ. உசை, மஓ.

4 எபி. ஓ. மக.

5 மத். மக. மஎ. லூக். ம. உக, உச. பேரா. உம. உக.

6 எபி. மக. மஉ. உ பே. உ,ம,மக.

7 மாற். உ. மச. லூக். அ. மக.

8 மத். உ. உக.

9 எசா. இஅ. உ. எசே. கக. கக, கஉ. பேரா. ஓ. உஓ.

10 மத். மக. க. உதிமோ.உ.மஓ.

11 எசே. உ. க.

12 மத். மக. உக. மாற். ம. உக. லூக் மஅ. உச. உதிமோ. க. க. உதிமோ. உ. ம.

Digitized by Google

லோக இராச்சியம் ஒரு வயல் நிலத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அந்த நிலத்திலே எசமானனவன் நல்ல விதையை விதைத்தான்.

உஇ பின்பு மனிதர் நித்திரை பண்ணுகையில், அவனுடைய பகைஞன் வந்து கோதுமைக்குள்ளே களைகளை விதைத்துப் போனான்.

உஉ பயிரானது வளர்ந்து கதிர் விட்டபொழுது அந்தக் களைகளும் காணப்பட்டன.

உஎ வேலைக்காரர் எசமானிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது வயல் நிலத்திலே நல்ல விதையை விதைக்கவில்லையா? களைகள் அதிலே எப்படி உண்டாயின என்றார்கள்.

உஅ அதற்கு அவன், பகைஞன் அப்படிச் செய்தான் என்றான்; அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய், அவைகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோ என்று கேட்டார்கள்.

உக அதற்கு அவன் சொன்னது: வேண்டாம்; களைகளைப் பிடுங்குகிறபொழுது நீங்கள் கோதுமையையும் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு,

கூ [1]அவ்விரண்டையும் அறுப்புக்காலம்வரைக்கும் வளரவிடுங்கள்; அறுப்புக்காலத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டவும் கோதுமையை என் களஞ்சியத்தில் சேர்க்கவும் கட்டுகளாயிடுங்கள் என்று சொன்னான் என்றார்.

கூ ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்; அதாவது: [2]பரலோக இராச்சியம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கின்றது; அதை ஒரு மனிதன் எடுத்துத் தன் நிலத்திலே விதைத்தான்.

கூ அது எல்லா விதைகளிலும் சிறியதாயிருந்தும் வளரும்பொழுது கோசுகளிலும் பெரிதாகி, ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்தடையத்தக்கதான செடியாம் என்றார்.

கூ ¶ [3]பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; அதாவது: மூன்று *மரக்கால் மாமுழுவதும் புளிப்பாகும்வரைக்கும் ஒரு ஸ்திரி புளிப்புமாவை எடுத்து அதிலே அடக்கிவைத்தாள்; பரலோக இராச்சியம் அந்தப் புளிப்புமாவுக்கு ஒப்பாய் இக்கின்றது என்றார்.

கூ ¶ [4]என் வாயைத் திறந்து உவமைகளாலே பேசுவேன்; [5]உலகத்தோற்றம் முதற்கொண்டு மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக,

கூஙி [6]இயேசுவானவர் இவைகளையெல்லாம் உவமைகளாகச் சனங்களுடனே பேசினார், உவமைகளிலலேயன்றி வேறுவிதமாக அவர் அவர்களுடனே பேசவில்லை.

கூசு ¶ அப்பொழுது இயேசுவானவர் சனங்களை அனுப்பிப் பின்பு வீட்டுக்குப்போனார்; அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, நீர் வயல்நிலத்தின் களைகளைக்குறித்துக் காட்டின உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டார்கள்.

கூஎ அவர்களுடனே அவர் மறுமொழியாகச் சொன்னதாவது: நல்ல விதையை விதைக்கிறவன் மனிதனுடைய குமாரனே; வயல் நிலம் உலகமே.

கூஅ [7]நல்ல விதை இராச்சியத்தின் புத்திரரே; [8]களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரே.

கூக அவைகளை விதைக்கிற பகைஞன் பசாசே; [9]அறுப்பு உலகத்தின் முடிவே; அறுக்கிறவர்கள் தேவதூதர்களே.

சய ஆதலால் களைகள் சேர்க்கப்

கி. பி. கூக.

1 மத் க. ஙஎ.
2 எசா. உ. உ, க மீகா. சு. க. மாற். சு. கூக. லூக் ஙக. ஙசு.
3 லூக். ஙக. உக
* ஒரேக்குப் பாஷையிலுள்ள வார்த்தை அரைப்படி குறைய ஒன்றை மரக்கால் அளவைக் குறிக்கும்.
4 சங். எஅ. உ.
5 உரோ. ஙக. உஇ. க கொரி. உ.எ. எபே க. க. ஙக. கொலோ. க. உக.
6 மாற். சு.கூ,கூ.
7 மத். உ.ச. ஙச: உஅ. ஙகூ. மாற். ஙக. ஙஇ, உஙி. லூக். உச. சஎ. உரோ. ஙி. ஙஅ. கொலோ.க. க.
8 க மோ. க. ஙஇ. பேரா.அ சச. அப். ஙக. ஙி. க பேரா.க.அ.
9 பேரே.க.ஙட. வெளி. ஙச..ஙஇ.

Digitized by Google

பட்டு, அக்கினியினால் சுட்டெரிக்கப்படுகிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

சக மனிதனுடையகுமாரன் தனனுடைய தூதனை அனுப்புவான்; [1]அவர்கள் அவனுடைய இராச்சியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமம்செய்கிறவர்களையும் சேர்த்து,

சஉ [2]அழுகலும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற [3]அக்கினிச்சூளையிலே போடுவார்கள்.

சரு [4]அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்; கேட்கிறதற்குக் காதுள்ளவன் [5]கேட்கக்கடவன்.

சக ¶ [6]அல்லாமலும் பரலோக இராச்சியம் வயல்நிலத்தில் ஒளிக்கப்பட்டிருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அதை ஒரு மனிதன் கண்டு, அதை மறைத்து, அதைக்குறித்து அடைந்த சந்தோஷத்தினாலே போய்த் தனக்குள்ள யாவையும் விற்று, அந்த [7]வயல் நிலத்தையே கொள்ளுகிறான்.

சஎ ¶ அல்லாமலும் பரலோக இராச்சியம் நல்ல முத்துகளைத் தேடி,

சஅ [8]ஒரு ஆணிமுத்தைக் கண்டு, போய், தனக்குள்ள யாவையும் விற்று, அதைக் கொள்ளுகிற வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கின்றது.

சஅ ¶ [9]அல்லாமலும் பரலோக இராச்சியம் ஒரு வலைக்கு ஒப்பாயிருக்கின்றது; வலையானது கடலிலே போடப்பட்டு எல்லாச் சாதியான மீன்களையும் வாரி நிறைந்தபொழுது,

சஅ சனங்கள் அதைக் கரையில் இழுத்து உளுக்காந்து, நல்லவைகளைப் பாத்திரங்களில் சேர்த்துக் கொண்டு, தகாதவைகளைத் தள்ளிப்போடுகிறார்கள்.

சக இவ்விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கும்; [10]தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களிலிருந்து துன்மார்க்கரைப்பிரித்து,

ரூய [11]அழுகலும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்கள் என்று சொல்லி,

ரூக பின்பு நீங்கள் இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று இயேசுவானவர் சீஷர்களிடத்தில் கேட்டதற்கு, ஆண்டவரே, அறிந்துகொண்டோம் என்றார்கள்.

ரூஉ [12]அவர் பின்னும் அவர்களை நோக்கி, அப்படியிருக்கையால், பரலோக இராச்சியத்தைக்குறித்துப் போதனையடைந்த வேதபாரகன் எவனோ, அவன் தன் பொக்கிஷத்தில் புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்காண்பிக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

ரூசு ¶ இப்படி இயேசுவானவர் இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு,

ரூச [13]அவர் அவ்விடம்விட்டுத் தாம் வளர்ந்த ஊரிலே வந்து, செபஆலயத்திலே சனங்களுக்கு உபதேசம்பண்ணினார்; அவர்கள் அதைக் கேட்டுப் பிரமித்து, இப்படிப்பட்ட ஞானமும் வல்லமைகளும் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன?

ரூடு [14]இவன் தச்சனுடையகுமாரன் அல்லவா? [15]இவனுடைய தாய் மரியாள் என்னப்பட்டிருக்கிறாள் அல்லவா? [16]யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுடைய சகோதரர் அல்லவா?

ரூசு இவனுடைய சகோதரிகள் எல்லாரும் நமக்குள்ளே இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இவையெல்லாம் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன என்று சொல்லி,

கி. பி. ரூக.

1 மத். உஅ. எ. உபே. உ. க.
2 மத். அ. மஉ. இல். வச.
3 மத். க. மஉ. வெளி.மக.உம: உல. ம.
4 தானி. மஉ. க. க கொரி. மஇ. சஉ, சக, இஅ.
5 கூ. வச.
6 பிலி. க. எ, அ.
7 எசா. இஇ. க. வெளி. க. மஅ.
8 லூக். உ. ச: க. மச. மஇ: அ. ம, மகூ.
9 மத். உஉ. ம.
10 உஇ. கஉ.
11 சஉ. வச.
12 உன்னத. எ. மக.
13 மத். உ. உக. மாற். கக. லூக். ச. மக, உக.
14 எசா. சகூ. எ. மாற். கக. லூக். க. உக.போவ. க. சஉ.
15 மத். மஉ. சக. மாற். மஇ. சம.
16 மாற். க. க.

Digitized by Google

ஏ [1]அவனைக்குறித்து இடறல் பட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, [2]தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலேயும் தன் குடும்பத்திலேயுமே அன்றி மற்ற இடங்களிலே கனாதனப் படான் என்றார்.

ஐ [3]மேலும் அந்தச் சனங்களுடைய அவிசுவாசத்திலேலே அவர் அவ்விடத்திலே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

யசு. அதிகாரம்.

க. நிந்தனைக்குறித்து ஏரோது கினைத்த கினைவு. ங. யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்ட காரணம். ஙஈ. இயேசுவானவர் ஓர் வனாந்தரமான இடத்திற்குப் போய், மஇ. அவ்விடத்தில் ஐந்து அப்பங்களிலுமும், இரண்டு மீன்களிலுமும், ஐயாயிரம்பேருக்குப் போசனம் கொடுத்தது. உஉ. அவர் உடனே சீஷரிடத்தில் வந்து, கூ, கேனேசரேத்தினிடத்தில் இறங்கித் தம்முடைய வன்மைத்தின் ஓரத்தைத் தொட்ட பிணியாளிகள் சுகமாக்கினது.

அக்காலத்திலே [4]காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே இராசா இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு,

உ தன் ஊழியக்காரரை நோக்கி, அவன் யோவான்ஸ்நானன், அவன் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தவன், அதினாலே அவன் அற்புதங்களைச் *செய்து வருகிறான் என்றான்.

ஊ ¶ அது எப்படியென்றால், ஏரோதே இராசா தன் தம்பியாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளைக்குறித்து, நீர் [5]அவளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று,

ச யோவான் அவனுடனே சொன்னபடியினாலே, [6]ஏரோதே இராசா அவனைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்தான்.

எ அவனைக் கொலைசெய்யவும் மனதாயிருந்தான்; [7]அப்படியிருந்தும் சனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினாலே அவன் அவர்களுக்குப் பயந்து (அப்படிச்செய்யவில்லை).

ஏ [8]ஏரோதின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிற காலத்திலே, ஏரோதியாளின் குமாரத்தி ஏரோதே இராசாவுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகத்தக்கதாக நடனம் பண்ணினபொழுது,

ஐ அவன் அவளை நோக்கி, நீ எதைக் கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வார்த்தைகொடுத்தான்.

ஒ உடனே அவள், தன் தாய் தனக்குப் போதித்திருந்தபடியே, நீர் யோவான்ஸ்நானனுடைய சிரசை ஒரு தாலத்தில் இங்கே எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள்.

ஓ இராசா துக்கம் அடைந்தான்; அப்படியிருந்தும் தான் கொடுத்த ஆணையின் நிமித்தமும், பந்தியில் கூட இருந்தவர்களின் நிமித்தமும் அவன் அதைக் கொடுக்கக் கட்டளையிட்டான்.

ஔ அந்தப்படி இராசாவினாலே அனுப்பப்பட்டவர்கள் காவல் கூடத்துக்குப் போய், யோவானைச் சிரச்சேதம்பண்ணி,

க வந்து, அவனுடைய சிரசை ஒரு தாலத்திலே வைத்து, அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாய்க்குக் கொண்டுபோய்க் கொடுத்தாள்.

ஙஉ பின்பு அவனுடைய சீஷர்கள் வந்து அவனுடைய உடலை எடுத்து அடக்கம் பண்ணி வந்து, இயேசுவுக்கு அந்தச் சங்கதியை அறிவித்தார்கள்.

ஙஊ ¶ [9]இயேசுவானவர் அதைக்கேட்டு, அவ்விடம்விட்டு, வனாந்தரமான இடத்திலே தனியே இருக்க ஒரு படவில் ஏறிப்போனார்; சனங்கள் அதைக் கேள்விப்பட்டுப் பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவர் பின்சென்றார்கள்.

ஙச ¶ [9]இயேசுவானவர் புறப்பட்டுத் திரளான சனங்களைக்

1 மத். ங்க.க.மாற். க. க, ச.
2 லூக். ச. உச. போவா. ச.சச.
3 மாற். க. ஙி, க.
4 மாற். க, ஙச. லூக். க. ச.
* அல்லது அவனால் செய்யப்படுகிறது.
5 மாற். க. ஙஅ. லூக். க. உஙி.
6 க மோ. ஙஅ. ஙக: உஙி. உக.
7 மத். உக. உக. லூக். உஙி. க,
8 மத். ஙி.உக:ஙஉ. ஙஇ.மாற்.க.கஉ. லூக். க. ஙி. போவா. க. க.
9 மத்.கூ.கக.மாற். க. கச.

Digitized by Google

உமக்குப் பிரியமாயிருந்தது என்றார்.

உஎ [1]அல்லாமலும் சகலமும் என் பிதாவினாலே எனக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றன; பிதா தவிர மற்றொருவனும் குமாரனை அறியான்; [2]குமாரன் தவிர மற்றொருவனும் பிதாவை அறியான்; மேலும் எவனுக்குக் குமாரன் அவனை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் பிதாவை அறிவான்.

உஅ வருத்தப்பட்டுப் பாரம் சுமந்துகொள்ளுகிறவர்களாகிய நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு ஆறுதல் செய்வேன்.

உக [3]நான் சாந்தமாயும் மனத்தாழ்மையாயும் இருக்கிறபடியினாலும், [4]நான் வைக்கிற நுகத்தடி மெதுவாயும், நான் ஏற்றுகிற சுமை இலேசாயும் இருக்கிறபடியினாலும்,

உஉ நீங்கள் [5]என்னுடைய நுகத்தடியை ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் [6]ஆத்துமாக்களுக்கு ஆறுதல் கிடைக்கும் என்றார்.

ய்உ. அதிகாரம்.

க. ஓய்வுநாளின் மீறுதலுக்குறித்துப் பரிசேயர்களுடைய குருட்டாட்டத்தை, உ. வேதத்தினாலும், ங. நியாயத்தினாலும், ரூ. ஒரு அற்புதத்தினாலும் நிறுத்தி கடிந்துகொண்டது. ரூஉ. அவர் பரசை பிடித்த குருடும் ஊமையுமான ஒரு மனுஷனைக் குணமாக்கினது. ரூங. பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்ச் செய்யப்படும் தூஷணம் மன்னிக்கப்படாமை நின்ற என்பது. ரூக. வீண் வார்த்தைகளுக்கும் நியாயத்தீர்ப்பு கேட்கப்படும் என்பது. ரூஅ. ஒரு அடையாளத்தைக் கேட்ட அவிசுவாசிகளை அவர் கடிந்துகொண்டு, ரூக. அவர் தம்முடைய சகோதரனும் சகோதரியும் தாயும் இன்னாரென்று காண்பித்தது.

[7]அக்காலத்தில் ஓய்வுநாளிலே இயேசுவானவர் பயிர்வழியே போனார்; அப்பொழுது அவருடைய சீஷர் பசியாயிருந்தபடியினாலே கதிர்களைக் கொய்து சாப்பிடத் தொடங்கினார்கள்.

வி. பி. ஊக.

1 உஅ.ம்அ. லூக். ம. உஉ. போவா. க. கஇ: ம்க. க: ம்எ.உ.க சொரி. ம்இ. உஎ.

2 போவா. க. ம்அ: க. சக: ம. ம்இ.

3 சகரி. கூ. கூ. பிலி. உ. எ, அ.

4 க போ. இ. க.

5 போவா. ம்க. ம்இ. பிலி. உ. இ. க பே. உ. உக. க போ. உ. க.

6 எரே. க. மக.

7 இ மோ. உக. உஇ. மாற். உ. உக. லூக். க. ச.

8 க சாமு.உக.க.

9 உ மோ. உக. கஉ,கக. க மோ. அ. கக:உச. க.

10 உ மோ. உஇ. கம். க மோ.உச. இ.

11 ச மோ. உஅ. க. போவா. எ. உஉ.

12 உ எஸ்ரா. க. ம்அ. மல்கி. க. க.

13 மத். கூ. மக. ஓசே. க. ச. மீகா.க.க,எ,அ.

14 மாற்.க.க லூக். க. க.

15 லூக். மக. மச: மச. க. போவா. க. மக.

16 உ மோ. உக. ச, இ. இ மோ. உஉ. ச.

வி. பி. ஊக.

உ அதைக் கண்ட பரிசேயர் அவனை நோக்கி, இதோ, ஓய்வுநாளில் செய்யத்தகாததை உம்முடைய சீஷர்கள் செய்கிறார்கள் என்றார்கள்.

ங அவர்களுக்கு அவர் சொன்னதாவது: [8]தாவீதும் அவனோடிருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது,

ச அவன் தேவாலயத்தில் பிரவேசித்து, [9]ஆசாரியரேயன்றித் தானும் தன்னோடிருந்தவர்களும் சாப்பிடத்தகாத [10]தேவ சமுகத்தப்பங்களைச் சாப்பிட்டான் என்று நீங்கள் வாசிக்கவில்லையா?

ரூ [11]அல்லது ஆசாரியரானவர்கள் தேவாலயத்திலே ஓய்வுநாள்களில் ஓய்ந்திராமல் வேலைசெய்தும் குற்றமில்லாதிருக்கிறார்கள் என்று நீங்கள் வேதத்திலே வாசிக்கவில்லையா?

ரூஉ [12]தேவாலயத்திலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

எ [13]மேலும் பலியிலும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்தின் கருத்தை) நீங்கள் அறிந்தீர்களானால் குற்றமில்லாத இவர்களை நீங்கள் குற்றப்படுத்த மாட்டீர்கள்.

அ அல்லாமலும் மனிதனுடைய குமாரனானவர் ஓய்வுநாளுக்கும் நித்தும் கர்த்தராயிருக்கிறார் என்றார்.

கூ ¶ [14]பின்பு அவர் அவ்விடம் விட்டுப் போய் அவர்களுடைய செபஆலயத்தில் பிரவேசித்தார்.

ய [15]அங்கே சூம்பின கையையுடைய மனிதன் ஒருவன் இருந்தான்; அப்பொழுது அவர்கள் அவர்மேல் குற்றஞ்சாற்றும்படிக்கு அவனை நோக்கி, ஓய்வுநாளில் சுகமாக்குகிறது நியாயமா என்று கேட்டார்கள்.

யக [16]அவர் சொன்னது: உங்களில் எவனுக்காவது தன் ஆடு ஓய்வுநாளில் ஒரு குழியிலே விழுந்தால்

Digitized by Google

அதைப் பிடித்துத் தள்ளிவிடுவான் அல்லவா?

ஐஉ ஆட்டிலும் மனிதனுனவன் மிகவும் மேன்மையாயிருக்கிறான்; ஆதலால் ஓய்வுகாளிலே நன்மை செய்கிறது நியாயந்தான் என்று சொல்லிப் பின்பு அந்த மனிதனை நோக்கி,

ஐக உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; உடனே அது மறுகையைப்போலவே சுகமாயிற்று.

ஐச [1]அப்பொழுது பரிசேயர் புறப்பட்டுப் போய், அவனைச் சங்காரிக்கும்படிக்கு யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

ஐஞ ¶ [2]அதை இயேசுவானவர் அறிந்து, அவ்விடம்விட்டுப் போனார்; [3]அப்பொழுது அநேக சனங்கள் அவர் பின்னே சென்றார்கள்.

ஐட எல்லாரையும் அவர் குணமாக்கிப் [4]பின்பு தம்மைப் பிரசித்தம்பண்ணுதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

ஐஎ அதினாலே இதோ, [5]நான் தெரிந்துகொண்ட ஊழியக்காரன், எனக்கு அன்பானவர், [6]என் ஆத்துமாவுக்குப் பிரியமானவர்; இவரிடத்திலே என்னுடைய ஆவி இருக்கச் செய்வேன்; இவர் நியாயமானதை உலகத்தாருக்கு அறிவிப்பார்;

ஐஅ சண்டைபண்ணுமலும் கூக்குரல்பண்ணுமலும் இருப்பார்; இவருடைய சத்தம் வீதிகளில் ஒருவராலும் கேட்கப்படுவதில்லை.

ஐக நியாயமானது செயமாய் இருக்கும்படி செய்கிறவனைக்கும் இவர் தெரிந்திருக்கிற நாணலை முறியாமலும், மங்கி எரிகிற திரியை அணையாமலும் இருப்பார்.

உல இவருடைய நாமத்தின்மேலே புறத்தேசத்தார் நம்பிக்கையாயிருப்பார்கள் என்று,

உக ஏசாயா தீர்க்கதரிசி உரைத்த வசனம் நிறைவேறிற்று.

கி. பி. ஈக.

1 மத். உள. க. மாற். க. சு.லூக். சு. நெ. போவா. இ. ஏஅ: ம.ஈக: ஈக. இக.

2 மத். ம. உக. மாற். க. எ.

3 மத். ம்க. உ.

4 மத். க. கம.

5 ஏச. சஉ. க.

6 மத். க. ம்எ:ம்ஏ. இ.

7 மத். க. கஉ. மாற். க. நக. லூக். நக. ம்ச.

8 மத். க. கச. மாற். க. உஉ. லூக். நக. ம்இ.

* அல்லத பெபேல் செபுப். அப்படி பே உஎ-வசனத்திலும்.

9 மத். க. ச. போவா. உ. உஇ. வெவி.உ. உக.

10 தானி. உ.ஏச: எ. ம்ச. லூக். க.நக: நக. உம்: ம்க. உம், உக.

11 ஏசா.சக.உச. லூக். நக. உக, உஉ, உக.

உஉ ¶ [7]அப்போது பசாசுபிடித்த குருடும் ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டுவரப்பட்டான்; குருடும் ஊமையுமானவன் பேசவும் காணவும்தக்கதாக அவனைக் குணமாக்கினார்.

உஊ சனங்கள் எல்லாரும் பிரமித்து, இவர் தாவீதின் குமாரன் அல்லவா என்றார்கள்.

உச [8]பரிசேயர் அதைக் கேட்டு, இவன் பசாசுகளுடையதலைவனுகிய *பெயல்செபூலினாலே பசாசுகளைத் துரத்துகிறானே அன்றி, மற்றப்படியல்ல என்றார்கள்.

உந [9]இயேசுவானவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களை நோக்கி, ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளேதானே பிரிவினைபண்ணினால் அழிந்துபோவார்கள்; அல்லாமலும் ஒரு பட்டணத்தாராலும் குடும்பத்தாராலும் தங்களுக்குள்ளே பிரிவினைபண்ணினால், நிலைநிற்கமாட்டார்கள்.

உஎ அப்படிப்போலச் சாத்தான் மற்றொரு சாத்தானைத் துரத்தினால் அவர்களுக்குள்ளேதானே பிரிவினை உண்டாகுமே; அப்படியானால் அவனுடைய இராச்சியம் எப்படி நிலைநிற்கும்?

உஅ அல்லாமலும் நான் பெயல்செபூலினாலே பசாசுகளைத் துரத்துகிறவன் என்றால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்; ஆகையால் அவர்களே உங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பார்கள்.

உக [10]நான் பராபரனுடைய ஆவியினாலே பசாசுகளைத் துரத்துகிறபடியால், பராபரனுடைய ராஜ்யமே உங்களிடத்தில் வந்திருக்கின்றது.

உஉ [11]அல்லது முன்பு பலவானைக் கட்டாவிட்டால் அவனுடைய வாசஸ்தலத்திலே ஒருவன் எப்படிப் பிரவேசித்து, அவனுடைய உடைமைகளைக் கொள்ளை

Digitized by Google

யிடுவான்; (பலவானைக் கட்டின பின்பல்லவா) அவனுடைய வாசஸ்தலத்தைக் கொள்ளையிடுவான்?

ரூய என் பங்கில் இராதவன் எனக்கு விரோதமாய் இருக்கிறான்; என்னுடனே கூடச் சேர்த்துக் கொள்ளாதவன் சிதற அடிக்கிறான்.

ரூக ¶ ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [1]எந்தப் பாவமும் தூஷணமும் மனிதர்களுக்கு மன்னிக்கப்படும்; [2]தேவ ஆவியை (நிந்திக்கும்) தூஷணம் மாத்திரம் மனிதருக்கு மன்னிக்கப்படுவதில்லை.

ரூஉ [3]எவனாவது மனிதனுடைய குமாரனுக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்; [4]எவனாகிலும் பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம் பேசினால் அது அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படுவதில்லை.

ரூங [5]மேலும் ஒரு மரத்தின் தன்மையை அதின் கனிகளாலே அறியலாம்; ஆகையால் நீங்கள் ஒரு மரத்தை நல்லமரமென்று எண்ணினால், அதின் கனியையும் நல்லதென்று எண்ணுங்கள்; அல்லது நீங்கள் ஒரு மரத்தைக் கெட்டமரமென்று எண்ணினால், அதின் கனியையும் கெட்டதென்று எண்ணுங்கள்.

ரூச [6]இருதயத்தின் நிறைவினாலே வாய்பேசும்; [7]ஆதலால் விரியன் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நன்மையானவைகளை எப்படிப் பேசுவீர்கள்?

ரூஙி நல்ல மனிதனானவன் தன் இருதயத்திலுள்ள நல்ல பொக்கிஷத்தில் நல்லவைகளை எடுத்துக் காண்பிக்கிறான்; பொல்லாத மனிதன் தன் பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாதவைகளை எடுத்துக் காண்பிக்கிறான்.

ரூசு மனிதர்கள் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே உத்தரவு கொடுப்பார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ரூஎ எப்படியும் உன் வார்த்தைகளினாலே நீதிமானென்றும், உன் வார்த்தைகளினாலே குற்றவாளியென்றும் தீர்க்கப்படுவாய்.

ரூஅ ¶ [8]அப்பொழுது வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் அவனை நோக்கி, போதகரே, உம்மாலே ஒரு அடையாளத்தைக் காண விரும்புகிறோம் என்றார்கள்.

ரூக அதற்கு அவர் சொன்னது: [9]சோரமார்க்கமாய்ப் போகிற பொல்லாத சந்ததியாகிய இவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி வேறு அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

சய என்னவென்றால், [10]யோனா என்பவன் இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனினுடைய வயிற்றில் இருந்ததுபோல, மனிதனுடைய குமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்திலே இருப்பார் என்பதே.

சக [11]யோனா என்பவன் பிரசங்கம் பண்ணினபொழுது நினிவே பட்டணத்தார் மனம் திருப்பினார்கள்; [12]யோனாவிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார்; [13]ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் எழும்பி இவர்களைக் குற்றவாளிகளென்று தீர்ப்பார்கள்.

சஉ [14]அல்லாமலும் தெற்கு இராசஸ்திரி மிகுந்த தூரமான தேசத்திலிருந்து சாலோமோனுடைய ஞானத்தைக் கேட்கவந்தாள்; சாலோமோனிலும் அதிக மேன்மையானவர் இதோ இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த இராசஸ்திரி எழும்பி

ஙி பி. ரூக.

1 மாற். க. உஅ. லூக்.உஉ.ம.எபி. க. உ: ம. உக, உக. க போ. இ. மக.

2 மாற். க். உக. லூக். மஉ. ம. எபி. க. க: ம. உக, உக. அப். எ. இக.

3 மத் மக. மக: மக.இஇ.போஎ. எ. மஉ, இஉ. கதிமோ. க. மக.

4 க போ இ. ரக.

5 மத் எ. மச. லூக்.சு.சக,சச.

6 லூக். க. சஇ.

7 மத். க. எ, உக, கக.

8 மத்.மக.க.மாற். அ. மக. லூக். மக. மக, உக. போஎ உ.மஅ. க கொரி.க.உஉ.

9 எச. இச. க. மத்.மசு.ச. மாற். அ.கஅ.போஎ. ச. சஅ.

10 யோனா உ. க.

11 யோனா க. இ.

12 எசே. க. மக. எசே. மக. இக, இஉ. உசோ. உ. உச.

13 லூக். மக. கஉ.

14 க இரா ம. க. உ எஸ்தி. கூ.க. லூக். மக. கக.

Digitized by Google

இவர்களைக் குற்றவாளிகளென்று [1]நிர்ப்பான்.

சஈ ¶ அல்லாமலும், அசுத்தமான ஆவி ஒரு மனிதனைவிட்டுப் புறப்பட்டபின்பு [2]தண்ணீர் இல்லாத இடங்களில் அலைந்து இளைப்பாறுதற்கான இடத்தைத் தேடியும் அடையாமல் இருக்கும்பொழுது,

சஉ அது கான் விட்டுவந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்றுசொல்லி,(அங்கே)சென்று, அவ்விடத்தை வெறுமையாயும், பெருக்கிச் சோடிக்கப்பட்டதாயும் இருக்கக்கண்டு திரும்பிப் போய்,

சஙி தன்னிலும் அதிக பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னுடனே கூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து, அங்கே வாசம்பண்ணும்; [3]இவ்விதமாய் அந்த மனிதனுடைய முன் நிலைமையிலும் பின் நிலைமை அதிக கேடுள்ளதாய் இருக்கின்றது, அப்படியே இந்தப் பொல்லாத சந்ததிக்கும் சம்பவிக்கும் என்றார்.

சஊ ¶ [4]அவர் இப்படிச் சனங்களுடனே பேசுகையில், [5]அவருடைய தாயும் சகோதரரும் வந்து வெளியே நின்று, அவரோடே பேசத்தேடினார்கள்.

சஎ அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி, இதோ, உம்முடைய தாயாரும் சகோதரரும் வெளியே நின்று, உம்மோடே பேசத் தேடுகிறார்கள் என்றான்.

சஅ அப்படித் தமக்குச் சொன்னவனுக்கு அவர் மாறுத்தரமாக, என்னுடைய தாய் யாவள்? என் சகோதரர் யார்? என்றுசொல்லி,

சஐ தம்முடைய கையைத் தம் முடைய சீஷர்மேலே நீட்டி, இதோ, இவர்கள் என் தாயும் என் சகோதரருமாய் இருக்கிறார்கள்.

சஒ [6]எவனெவனும் பரமண்டலங்களில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்தால், அவனே என் சகோதரனுமாய்ச் சகோதரியுமாய்த் தாயுமாய் இருக்கிறான் என்றார்.

இ. பி. ஈக.

1 லூக். ம. உ.
2 மாபு. க. எ. க பே. இ. அ.
3 எபி. க. ச : ம. உக. உ பே. உ. உம், உக, உஉ.
4 மாற். உ. கக. லூக். அ. ம்க, உம், உக.
5 மத். ம்க. ஐஇ. மாற். கூ. உ. யோவா உ.ம்உ. எ. க, இ. அப். க. ட்ச. க கொரி. கூ. இ. கலா. க. ம்க.
6 யோவா. ம்இ. ம்ச. கலா. இ. க: க. ட்இ. கொலோ. க. ம்க எபி. உ. ம்க.
7 மாற். ச. க.
8 லூக். அ. ச.
9 லூக். இ. க.
10 லூக். அ. இ.
11 க மோ. உக. ம்உ.
12 மத். ம்க. ம்இ. மாற். ச. கூ.

௰௩. அதிகாரம்.

க. விதைக்கிறவனையும் விதையையும் உவமையாகச் சாட்டியது. ம்அ. அதின் விபாக்கியானம். உச. களைகளையும், கக. கடுகுவிதையையும், கஉ. புளித்த மாவையும், சச. வயலில் ஒளிக்கப்பட்ட பொக்கிஷத்தையும், சஇ. முத்தையும், சஎ. கடலில் போடப்பட்ட வலையையும் உவமையாகச் சாட்டியது. இக. மறித்து தம்மூடைய சொந்த ஊரால் அட்டைபண்ணப்பட்டது.

[7]அந்நாளிலே இயேசுவானவர் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கடலின் அருகே உளுக்காந்தார்.

உ [8]அப்பொழுது அநேக சனங்கள் அவரிடத்தில் கூடிவந்தபடியால், [9]அவர் படவில் ஏறி உளுக்காந்து, சனங்கள் எல்லாரும் கரையிலே நிற்க,

ங அநேக விசேஷங்களை உவமைகளால் அவர்களுக்குச் சொன்னதாவது:

ச ¶ [10]விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில் சில (விதை) வழி அருகே விழுந்தன; அவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தன.

ஙு வேறுசில (விதை) மிகுந்த மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்து, ஆழமான மண்ணில்லாததினால் உடனே முளைத்தன.

சு வெயில் தோன்றினபொழுது அவை தீய்ந்துபோய், வேரில்லாததினாலே உலர்ந்துபோயின.

எ வேறுசில (விதை) முள்ளுக்களுள்ள இடத்திலே விழுந்தன, முள்ளுக்கள் வளர்ந்து அவைகளை நெருக்கிப்போட்டன.

அ [11]வேறுசில (விதை) நல்ல நிலத்தில்விழுந்து, சில நூறுகவும், சில அறுபதாகவும், சில முப்பதாகவும் பலன்கொடுத்தன.

கூ [12]கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

ம ¶ அப்பொழுது சீஷர்கள் அவ

Digitized by Google

நிடத்தில் வந்து, என்னத்தினாலே உவமைகளால் அவர்களோடே பேசுகிறீர் என்றார்கள்.

யக [1]அதற்கு அவர் சொன்னது: பரலோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது; அவர்களுக்கு அப்படி அளிக்கப்படவில்லை.

யஉ [2]எப்படியெனில், எவன் உள்ளவனாயிருக்கிறானே அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; எவன் உள்ளவன் அல்லாதவனாய் இருக்கிறானே அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.

யஊ [3]அவர்கள் கண்டும் காணாமலும், கேட்டும் கேளாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருக்கிறபடியினாலே, நான் உவமைகளால் அவர்களுடனே பேசுகிறேன்.

யசு [4]இந்தச் சனங்கள் கண்களினாலே காணுமலும், காதுகளினாலே கேளாமலும், இருதயத்தினாலே சிந்தித்துக்கொள்ளாமலும், திரும்பாமலும், என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு அவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயம் உடையவர்களுமாய், வருத்தத்தோடே கேட்கிற காதுள்ளவர்களுமாய், மூடிக்கொண்டிருக்கிற கண்களை உடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே,

யடு நீங்கள் உற்றுக் கேட்டாலும் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள்; உற்றுப்பார்த்தாலும் அறியாமல் இருப்பீர்களென்று, ஏசாயா சொன்ன தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறி வருகின்றது.

யசு [5]உங்கள் கண்களோ காணுகிறபடியினாலும், உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும் பாக்கியமுள்ளவைகள்.

யஎ [6]அநேகம் தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும், நீங்கள் காணுகிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணுமலும் கேளாமலும் போனார்களென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யஅ ¶ [7]ஆகையால் விதைக்கிறவனுடைய உவமையைக் கேளுங்கள்.

யக [8]ஒருவன் பரலோக இராச்சியத்தைக்குறித்து வசனத்தைக் கேட்டும் அதைச் சிந்தித்துக் கொள்ளாமல் இருக்கிறபொழுது பொல்லாங்கன் வந்து, அவனுடைய இருதயத்தின்மேல் விதைக்கப்பட்டதை எடுக்கிறான்; அவனே விதைவிழுந்த வழிக்கு ஒப்பானவன்.

உய [9]விதை விழுந்த கற்பாறைக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு,

உக பின்பு அது தனக்குள்ளே வேர்பற்றி இராமல் கொஞ்சக்காலம் மாத்திரம் அதைப் பற்றிக்கொள்ளுவான்; [10]அந்த வசனத்தின்நிமித்தம் உபத்திரவமும் துன்பப்படுதலும் உண்டாகிறபொழுது உடனே அவன் தவறுவான் என்பதே.

உஉ [11]விதை விழுந்த முள்ளுள்ள இடத்துக்கு ஒப்பானவன் [12]அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது லவுகீக கவலைகளும், ஐசுவரியத்தின் வஞ்சனையும் அவ்வசனத்தை நெருக்கிப்போடுவதால், கனியற்றவனாவான் என்பதே.

உஊ விதை விழுந்த நல்ல நிலத்துக்கு ஒப்பானவன் அந்த வசனத்தைக் கேட்டும், சிந்தித்தும், அதின்படி செய்தும், நூறும் அறுபதும் முப்பதுமாகப் பலனைக் கொடுத்தும் வருவானென்பதே என்றார்.

உச ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்; அதாவது: பர

கி. பி. ஊக.

1 மத். மக. உடு: மசு. மெ. மாற். ச.மக. க லொ. உ. ம. க போ. உ. உ.

2 மத். உடி. உசு. மாற். ச. உடி. லூக். அ. மஅ: மசு. உக.

3 ஏசா. க. சு. ஏசே. மஉ. உ. மாற். ச. மஉ. லூக். அ. ம. போவா. மஉ. சம. அப். உஅ. உசு, உஎ. உரோ மக.அ. உகொரி. க. மச, மஇ.

4 எபி. இ. மக.

5 மத். மசு. மஎ. லூக். ம. உக, உச. போவா. உம. உசு.

6 எபி. மக. மக. க பே. க. ம, மக.

7 மாற். ச. மச. லூக். அ. மக.

8 மத். ச. உஅ.

9 ஏசா. இஅ. உ. எசே. கக. கசு, கஉ. போவா. இ. கஇ.

10 மத். மக. க. உதிமோ.க.மஇ.

11 எரே. ச. க.

12 மத். மசு. உக. மாற். ம. உக. லூக் மஅ. உச. உதிமோ. க. சு. உதிமோ. ச. ம.

Digitized by Google

லோக இராச்சியம் ஒரு வயல் நிலத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அந்த நிலத்திலே சமாளனவன் நல்ல விதையை விதைத்தான்.

உடு பின்பு மனிதர் நித்திரை பண்ணுகையில், அவனுடைய பகைஞன் வந்து கோதுமைக்குள்ளே களைகளை விதைத்துப் போனான்.

உசு பயிரானது வளர்ந்து கதிர் விட்டபொழுது அந்தக் களைகளும் காணப்பட்டன.

உஎ வேலைக்காரர் சமானிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது வயல் நிலத்திலே நல்ல விதையை விதைக்கவில்லையா? களைகள் அதிலே எப்படி உண்டாயின என்றார்கள்.

உஅ அதற்கு அவன், பகைஞன் அப்படிச் செய்தான் என்றான்; அப்பொழுது வேலைக்காரர், நாங்கள் போய், அவைகளைப் பிடுங்கிப்போட சித்தமாயிருக்கிறீரோ என்று கேட்டார்கள்.

உக அதற்கு அவன் சொன்னது: வேண்டாம்; களைகளைப் பிடுங்குகிறபொழுது நீங்கள் கோதுமையையும் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு,

கூ [1]அவ்விரண்டையும் அறுப்புக்காலம்வரைக்கும் வளரவிடுங்கள்; அறுப்புக்காலத்திலே அறுக்கிறவர்கள் முதலாவது களைகளைப் பிடுங்கி அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டவும் கோதுமையை என் களஞ்சியத்தில் சேர்க்கவும் கட்டளையிடுவேன் என்று சொன்னான் என்றார்.

கக ¶ பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார்; அதாவது: [2]பரலோக இராச்சியம் கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கின்றது; அதை ஒரு மனிதன் எடுத்துத் தன் நிலத்திலே விதைத்தான்.

கஉ அது எல்லா விதைகளிலும் சிறியதாயிருந்தும் வளரும்பொழுது கீரைகளிலும் பெரிதாகி, ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்தடையத்தக்கதான செடியாம் என்றார்.

கஙூ ¶ [3]பின்பு அவர் வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; அதாவது: மூன்று *மரக்கால் மாமுழுவதும் புளிப்பாகும்வரைக்கும் ஒரு ஸ்திரீ புளிப்புமாவை எடுத்து அதிலே அடக்கிவைத்தாள்; பரலோக இராச்சியம் அந்தப் புளிப்புமாவுக்கு ஒப்பாயிருக்கின்றது என்றார்.

கஙூ ¶ [4]என் வாயைத் திறந்து உவமைகளாலே பேசுவேன்; [5]உலகத்தோற்றம் முதற்கொண்டு மறைபொருளானவைகளை வெளிப்படுத்துவேன் என்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக,

கஙஙூ [6]இயேசுவானவர் இவைகளையெல்லாம் உவமைகளாகச் சனங்களுடனே பேசினார், உவமைகளினாலேயன்றி வேறுவிதமாக அவர் அவர்களுடனே பேசவில்லை.

கஙூ ¶ அப்பொழுது இயேசுவானவர் சனங்களை அனுப்பிப் பின்பு வீட்டுக்குப்போனார்; அங்கே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, நீர் வயல்நிலத்தின் களைகளைக்குறித்துக் காட்டின உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்று கேட்டார்கள்.

கஙஎ அவர்களுடனே அவர் மறுமொழியாகச் சொன்னதாவது: நல்ல விதையை விதைக்கிறவன் மனிதனுடைய குமாரனே; வயல் நிலம் உலகமே.

கஙஅ [7]நல்ல விதை இராச்சியத்தின் புத்திரரே; [8]களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரே.

கஙக அவைகளை விதைக்கிற பகைஞன் பசாசே; [9]அறுப்பு உலகத்தின் முடிவே; அறுக்கிறவர்கள் தேவதூதர்களே.

சுடு ஆதலால் களைகள் சேர்க்கப்

கி. பி. கூக.

1 மத் 3. 30.
2 மா. உ. உ, உ
மீகா. ச. க.
மாற். ச. உக.
லூக் 13. 18.
3 லூக். 13. 20
*ஒரேகுப் பாஷையிலுள்ள வார்த்தை அளப்படி குறைய ஒன்றரை மரக்கால் அளவைக் குறிக்கும்.
4 சங். 78. 2.
5 உரோ. 16. 25. எபே. 3 கொரி. உ.எ. எபே. 3. கூ. 1 கொ. 2. 7. கொலோ. 1. 26.
6 மத். 8. 16, 17.
7 மத். உ. 38: உஅ. 10. மாற். 12. 36, உம. லூக். உ. 28. உரோ. 10. 18. கொலோ. 1. 6.
8 1 மோ. 3. 15. போவா. அ. 13. அப். 13. 10. 1 போலோ. 3. 12.
9 போலே. 1. 13. வெளி. 14. 15.

Digitized by Google

பட்டு, அக்கினியினால் சுட்டெரிக்கப்படுகிறதுபோல, இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்.

சக மனிதனுடையகுமாரன் தன்னுடைய தூதரை அனுப்புவான்; [1]அவர்கள் அவனுடைய இராச்சியத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமம்செய்கிறவர்களையும் சேர்த்து,

சஉ [2]அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற [3]அக்கினிச்சூளையிலே போடுவார்கள்.

சஊ [4]அப்பொழுது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராச்சியத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள்; கேட்கிறதற்குக் காதுள்ளவன் [5]கேட்கக்கடவன்.

சஎ ¶ [6]அல்லாமலும் பரலோக இராச்சியம் வயல்நிலத்தில் ஒளிக்கப்பட்டிருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கின்றது; அதை ஒரு மனிதன் கண்டு, அதை மறைத்து, அதைக்குறித்து அடைந்த சந்தோஷத்தினாலே போய்த் தனக்குள்ள யாவையும் விற்று, அந்த [7]வயல் நிலத்தையே கொள்ளுகிறான்.

சஏ ¶ அல்லாமலும் பரலோக இராச்சியம் நல்ல முத்துகளைத் தேடி,

சஐ [8]ஒரு ஆணிமுத்தைக் கண்டு, போய், தனக்குள்ள யாவையும் விற்று, அதைக் கொள்ளுகிற வியாபாரி ஒருவனுக்கு ஒப்பாயிருக்கின்றது.

சஒ ¶ [9]அல்லாமலும் பரலோக இராச்சியம் ஒரு வலைக்கு ஒப்பாயிருக்கின்றது; வலையானது கடலிலே போடப்பட்டு எல்லாச் சாதியான மீன்களையும் வாரி நிறைந்தபொழுது,

சஅ சனங்கள் அதைக் கரையில் இழுத்து உளுக்காந்து, நல்லவைகளைப் பாத்திரங்களில் சேர்த்துக் கொண்டு, தகாதவைகளைத் தள்ளிப்போடுகிறார்கள்.

சக இவ்விதமாக உலகத்தின் முடிவிலே நடக்கும்; [10]தேவதூதர் புறப்பட்டு நீதிமான்களிலிருந்து தன்மார்க்கனைப்பிரித்து,

சுய [11]அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற அக்கினிச்சூளையிலே போடுவார்கள் என்று சொல்லி,

சுக பின்பு நீங்கள் இவைகளையெல்லாம் அறிந்துகொண்டீர்களா என்று இயேசுவானவர் சீஷர்களிடத்தில் கேட்டதற்கு, ஆண்டவரே, அறிந்துகொண்டோம் என்றார்கள்.

சுஉ [21]அவர் பின்னும் அவர்களை நோக்கி, அப்படியிருக்கையால், பரலோக இராச்சியத்தைக்குறித்துப் போதனையடைந்த வேதபாரகன் எவனோ, அவன் தன் பொக்கிஷத்தில் புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக்காண்பிக்கிற வீட்டெசமானுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார்.

சுரு ¶ இப்படி இயேசுவானவர் இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபின்பு,

சுசு [13]அவர் அவ்விடம்விட்டுத் தாம் வளர்ந்த ஊரிலே வந்து, செபஆலயத்திலே சனங்களுக்கு உபதேசம்பண்ணினார்; அவர்கள் அதைக் கேட்டுப் பிரமித்து, இப்படிப்பட்ட ஞானமும் வல்லமைகளும் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன?

சுஙு [14]இவன் தச்சனுடையகுமாரன் அல்லவா? [15]இவனுடைய தாய் மரியாள் என்னப்பட்டிருக்கிறாள் அல்லவா? [16]யாக்கோபு, யோசே, சீமோன், யூதா என்பவர்கள் இவனுடைய சகோதரர் அல்லவா?

சுஙு இவனுடைய சகோதரிகள் எல்லாரும் நமக்குள்ளே இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இவையெல்லாம் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன என்று சொல்லி,

கி. பி. ரூக.

1 மத். ரூஅ. எ. உபே. உ. க.
2 மத். அ. ரூஉ. ஞெ. வச.
3 மத். க. ரூஉ. வெளி.ரூக.உஅ: உஅ. ஏ.
4 தானி. ரூஉ. க. க கொரி. ரூஇ. சஉ, சக, ஞெ.
5 கூ. வச.
6 பிலி. க. எ, அ.
7 வச. ஞெ. க. லெளி. க. ரூஅ.
8 வாக். உ. ச: க. ரூச. ரூஇ: அ. ஏ, ரூகூ.
9 மத். உஉ. ஏ.
10 உஇ. உஉ.
11 சஉ. வச.
12 உன்னத. எ. ரூக.

13 மத். வ. உக. மாற். க.க. லூக். ச. ரூக, உக.

14 வச. சகூ. எ. மாற். க.க. லூக். க. உக.போவ. க. சஉ.
15 மத். ரூஉ. சக. மாற. ரூஇ. சஏ.
16 மாற. க. க.

Digitized by Google

கெ [1]அவனைக்குறித்து இடறல் பட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, [2]தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலேயும் தன் குடும்பத்திலேயுமே அன்றி மற்ற இடங்களிலே கனானப்படான் என்றார்.

[1] மத். ங்க.க.மாற்.க. க, ச.
[2] லூக். ச. உச. யோவா. ச.சச.

கஅ [3]மேலும் அந்தச் சனங்களுடைய அவிசுவாசத்திலேலே அவர் அவ்விடத்திலே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை.

[3] மாற். க. ஙஅ, க.

யசு. அதிகாரம்.

உ நிந்தனைக்குறித்த எரோது கினைத்த கினைவு. ங. யோவான் சிரச்சேதம் பண்ணப்பட்ட காரணம். ஙங. இயேசுவானவர் ஓர் வனாந்தரமான இடத்திற்குப் போய், ஙஇ. அவ்விடத்தில் ஐந்து அப்பங்களிலுமுள், இரண்டு மீன்களிலும், ஐயாயிரம்பேருக்குப் போசனம் கொடுத்தது. உஉ. அவர் உடனே சீஷரிடத்தில் வந்து, உச. கெனேசரேத்தினிடத்தில் இறங்கித் தம்முடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட பிணியாளிகள் குணமாக்கினது.

அக்காலத்திலே [4]காற்பங்கு தேசாதிபதியாகிய எரோதே இராசா இயேசுவின் கீர்த்தியைக் கேள்விப்பட்டு,

[4] மாற். க, லச. லூக். கூ. ச.

உ தன் ஊழியக்காரரை நோக்கி, அவன் யோவான்ஸ்நானன், அவன் மரித்தோரிலிருந்து எழுந்திருந்தவன், அதினாலே அவன் அற்புதங்களைச் *செய்து வருகிறான் என்றான்.

* அல்லது அவனால் செய்யப்படுகிறது.

ஊ ¶ அது எப்படியென்றால், எரோதே இராசா தன் தம்பியாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளைக்குறித்து, நீர் [5]அவளைச் சேர்த்துக்கொள்ளக்கூடாதென்று,

[5] மாற். க. ம்அ. லூக். க. உம்.

ச யோவான் அவனுடனே சொன்னபடியினாலே, [6]எரோதே இராசா அவனைப் பிடித்துக் கட்டிக் காவலில் வைத்தான்.

[6] க மே. ம்அ. மசு: உம். உச.

ஙி அவனைக் கொலைசெய்யவும் மனதாயிருந்தான்; [7]அப்படியிருந்தும் சனங்கள் யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணினபடியினாலே அவன் அவர்களுக்குப் பயந்து (அப்படிச்செய்யவில்லை).

[7] மத். உக. உசு. லூக். உம். க,
[8] மத். ம.உக:மஉ. மஇ.மாற்.க.கஉ. லூக். சு. ம. யோவா. சு. க.
[9] மத்.சு.கக.மாற். க. கச.

ஙங ¶ [8]ஏரோதின் ஜென்மதினத்திலே ஏரோதியாளின் குமாரத்தி எரோதே இராசாவுக்கு முன்பாக நாட்டியமாடி, அவனுக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாகத்தக்கதாக நடனம் பண்ணினபொழுது,

ஙஅ அவன் அவளை நோக்கி, நீ எதைக் கேட்டாலும் தருவேன் என்று அவளுக்கு ஆணையிட்டு வார்த்தைகொடுத்தான்.

ஙஆ அவள் உடனே அவன், தன் தாய் தனக்குப் போதித்திருந்தபடியே, நீர் யோவான்ஸ்நானனுடைய சிரசை ஒரு தாலத்தில் இங்கே எனக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டாள்.

ஙக இராசா துக்கம் அடைந்தான்; அப்படியிருந்தும் தான் கொடுத்த ஆணையின் நிமித்தமும், பந்தியில் கூட இருந்தவர்களின் நிமித்தமும் அவன் அதைக் கொடுக்கக் கட்டளையிட்டான்.

ஙச அந்தப்படி இராசாவினாலே அனுப்பப்பட்டவர்கள் காவல் கூடத்துக்குப் போய், யோவானைச் சிரச்சேதம்பண்ணி,

ஙசு அவன் சிரசை ஒரு தாலத்திலே வைத்து, அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தார்கள்; அவள் அதைத் தன் தாய்க்குக் கொண்டுபோய்க் கொடுத்தான்.

ஙஎ பின்பு அவனுடைய சீஷர்கள் வந்து அவனுடைய உடலை எடுத்து அடக்கம் பண்ணி வந்து, இயேசுவுக்கு அந்தச் சங்கதியை அறிவித்தார்கள்.

ஙஞ ¶ [9]இயேசுவானவர் அதைக்கேட்டு, அவ்விடம்விட்டு, வனாந்தரமான இடத்திலே தனியே இருக்க ஒரு படவில் ஏறிப்போனார்; சனங்கள் அதைக் கேள்விப்பட்டுப் பட்டணங்களிலிருந்து கால்நடையாய் அவர் பின்சென்றார்கள்.

ஙஅ ¶ [9]இயேசுவானவர் புறப்பட்டுத் திரளான சனங்களைக்

Digitized by Google

கண்டு, அவர்களுக்கு இரக்கமாய் மனதுருகி, அவர்களில் வியாதிப் பட்டவர்களைக் குணமாக்கினார்.

ஙரு ¶ [1]சாயங்காலத்திலே அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, இது வனாந்தரமான இடம், அல்லாமலும் பகல் போயிற்று; ஆதலால், இந்தச் சனங்கள் கிராமங்களுக்குப் போய்த் தங்களுக்காகப் போசனபதார்த்தங்களைக் கொள்ளும்படிக்கு இவர்களை அனுப்பிவிடும் என்றார்கள்.

ஙசு அதற்கு இயேசுவானவர், இவர்கள் போகவேண்டுவதில்லை; நீங்களே இவர்களுக்குச் சாப்பாடு கொடுங்கள் என்றார்.

ஙஎ அவர்கள் சொன்னது: ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமே அல்லாமல் வேறொன்றும் எங்களிடத்தில் இல்லை என்றார்கள்.

ஙஅ அவைகளை எனக்கு இங்கே கொண்டுவாருங்கள் என்றார்.

ஙக பின்பு சனங்கள் புல்லின்மேல் பந்தியிருக்கும்படிக்கு அவர் கட்டளையிட்டு, அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, [2]வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்து அப்பங்களைப்பிட்டுச் சீஷர்களுக்குக் கொடுத்தார்; சீஷர்கள் அவைகளைச் சனங்களுக்குக் கொடுத்தார்கள்.

உய அவர்கள் எல்லாரும் சாப்பிட்டுத் திருத்தி அடைந்தார்கள்; அதுவுமல்லாமல் சேஷமானவைகளைப் பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள்.

உக அப்படிச் சாப்பிட்டவர்கள் பெண்களும் பிள்ளைகளும் தவிர ஏறக்குறைய ஐயாயிரம்பேர் இருந்தார்கள்.

உஉ ¶ உடனே இயேசுவானவர் சனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறித் தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படிக்கு அவர்களைத் துரிதப்படுத்தினார்.

கி. பி. கூஉ.

1 மாற். க. ஙஇ. லூக். க. ஙஉ. யோவா. க. இ.
2 மத். ஙஇ. ஙக.
3 மாற். க. சக.
4 யோவா. க. கூ. ஙக.

உகூ [3]சனங்களை அனுப்பிவிட்ட பின்பு அவர் தனியே செபத்தியானம் பண்ணும்படிக்கு ஒரு மலையின்மேல் ஏறினார்; [4]சாயங்காலமானபொழுது அவர்மாத்திரம் அங்கே இருந்தார்.

உச அவ்வேளையிலே படவு கடலின் நடுவே சேர்ந்து, எதிர் காற்றிருந்ததினாலே அலைகளால் அலைவுபட்டது.

உசு அப்படி இருக்கிறபொழுது, இரவின் நாலாம் சாமத்திலே இயேசுவானவர் கடலின்மேலே நடந்து, அவர்களிடத்திற்குப் போனார்.

உசு [5]அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர் கண்டு, சத்தளித்து, ஆவேஷம் உண்டாயிருக்கிறது என்று புலம்பிப் பயத்தினாலே கூப்பிட்டார்கள்.

உஎ உடனே இயேசுவானவர், திடன்கொள்ளுங்கள், நான்தான், பயப்படாதிருங்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

உஅ பேதுரு அவருக்கு, ஆண்டவரே, நீரேயானால் சலத்தின்மேல் உம்மிடத்தில் வரும்படி எனக்குக் கட்டளையிடும் என்றான்.

உக அதற்கு அவர், வா என்றார்; அப்பொழுது பேதுரு படவைவிட்டு இறங்கி, இயேசுவினிடத்திற்கு வரும்படிக்குச் சலத்தின்மேலே நடந்து,

ஊஎ காற்றுப் *பலத்திருக்கிறதைக் கண்டு பயம் அடைந்து அமிழத் தொடங்கி, ஆண்டவரே, என்னை இரட்சிக்கவேண்டுமென்று கூப்பிட்டான்.

ஊக உடனே இயேசுவானவர் கையை நீட்டி, அவனைப் பிடித்துக்கொண்டு, அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்.

ஊஉ அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமைதலாயிற்று.

ஊஊ [6]அப்பொழுது படவிலுள்ளவர்கள் வந்து, மெய்யாகவே நீர் பராபரனுடைய குமாரனாயிருக்கி

* மோதுகிறதை.

5 யோபு. கூ. அ.

6 சங். உ.எ.மாற். க. க. மத். ஙக. ஙக: உக. கூக. லூக். ச. சக. யோவா. க.சக: கூ. கூஅ: ஙக. உஎ. அப். அ. கக.உரோ.க.ச.

Digitized by Google

நீர் என்று சொல்லி, அவனை வணங்கினார்கள்.

ஈ ¶ [1]பின்பு அவர்கள் அக்கரைக்கு ஓடி கெனேசரேத்து காட்டில் வந்தார்கள்.

ஊ அவ்விடத்து மனிதர் அவனை அறிந்து, அந்தத் திசைகளில் எங்கும் ஆள்களை அனுப்பிப் பிணியாளிகள் எல்லாரையும் அவரிடத்தில் அழைத்துக்கொண்டுவந்து,

ஊ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைமாத்திரம் தொடும்படிக்கு உத்தரவுகேட்க, அதைத் [2]தொட்ட யாவரும் சொஸ்தம் அடைந்தார்கள்.

௰ரு. அதிகாரம்.

எ பேதாரகரும் பரிசேயரும் தேவதற்பனைகளைத் தங்களுடைய பாரம்பரைகளிலுலே மீறினதற்காக நிந்தை ஆள்களைக் கடிந்துகொண்டு, வாய்க்குள்ளே போகிற பதார்த்தம் மனுஷனைத் தீட்டுப்படுத்தாதென்ற போதித்தது. உக. அவர் ஊழியக்காரருடைய மனைவியும், கஅ. மற்ற அநேகம் ஸ்திரீகளும் குணமாக்கி, கஉ. ஏழு அப்பங்களிலுலும், சில சிறுமீன்களிலுலும், ஐயாயிரம் புருஷர்களுக்கும் போசனம் கொடுத்தது.

அக்காலத்திலே [3]எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து,

உ [4]உம்முடைய சீஷர் தங்கள் கைகளைக் கழுவாமல் போசனம் பண்ணுகிறார்கள்; [5]அப்படி அவர்கள் பெரியோர்களுடைய பாரம்பரை நியாயத்தை என் மீறி நடக்கிறார்கள் என்றார்கள்.

ஊ அதற்கு அவர் சொன்னது: உங்கள் பாரம்பரை நியாயத்திலுலே நீங்களும் பராபரனுடைய கற்பனையை என் மீறி நடக்கிறீர்கள்?

ச [6]எப்படியெனில், உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டுமென்றும், [7]தகப்பனையாலுலும் தாயையாலுலும் நிந்திப்பவனை மரண ஆக்கினைக்குட்படுத்த வேண்டுமென்றும் பராபரன் கட்டளைவிட்டார்.

டு [8]அப்படியிருந்தும் நீங்கள், எவனுலும் தன் தகப்பனுடனே அல்லது தாயுடனே, உமக்கு என்னுலே உதவுகிறது எதுண்டோ அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொன்னால்,

ஈ அவன் தன் தகப்பனை அல்லது தாயைக் கனம்பண்ணவேண்டுவதில்லை என்று போதித்து, இவ்விதமாய்ப் பராபரனுடைய கற்பனையை உங்கள் பாரம்பரை நியாயத்திலுலே அவமாக்கிவருகிறீர்கள்.

எ [9]ஆ வஞ்சகரே, [10]இந்தச் சனங்கள் தங்கள் வாயிலுலே என்னைச் சேர்ந்து, தங்கள் உதடுகளிலுலே என்னைக் கனம்பண்ணியும் தங்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கின்றது.

அ [11]அப்படி இவர்கள் மனிதர்களுடைய கற்பனைகளாகிய போதகங்களைப் போதிக்கிறவர்களாயிருந்து எனக்கு வீணாக ஆராதனை செய்கிறார்கள் என்று,

கூ ஏசாயா என்பவன் உங்களைக் குறித்து நன்றாய்த் தீர்க்கதரிசனம் உரைத்தானென்று சொன்னார்.

ஏ ¶ [12]பின்பு சனங்களைத் தம்மிடத்தில் வரவழைத்து நீங்கள்கேட்டுச் சிந்தித்துக்கொள்ளுங்கள்.

ஙக [13]வாய்க்குள்ளே போகிற பொருள் ஒருவனையும் அசுசிப்படுத்தமாட்டாது; வாயிலிருந்து புறப்படுகிற பொருளே ஒருவனை அசுசிப்படுத்துகின்றதென்று அவர்களுடனே சொன்னார்.

ஙஉ ¶ அப்பொழுது அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு விதனப்பட்டார்கள் என்று அறிந்திருக்கிறீரா என்றார்கள்.

ஙஊ அதற்கு அவர், [14]என் பரமபிதா நடாத காற்றுகள் யாவும் பிடுங்கப்படும்.

ஙச அவர்களை விட்டுவிடுங்கள், [15]குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; ஒருகுருடன் மற்றொருகுருடனுக்கு வழிகாட்

இ. பி. ஈஉ.

1 மாற். க. இக.
2 மத். க. உக. மாற். க. உ. லூக். க. இகஅப்.இக. ஐஉ.
3 மாற். எ. க.
4 மாற். எ. இ.
5 கொலோ. உ. அ.
6 உ மோ. உஅ. ஐஉ. க மோ. உக. க. இ மோ. இ. உக. லாக். உக.உஉ.எபே. க. க.
7 உ மோ. உக. உ. க மோ.உஅ. க. இ மோ.உ. உக. லாக். உஅ. உஅ; கஅ. உ.
8 மாற். எ. உக, ஐஉ.
9 மாற். எ. க.
10 ஏசா. உக.உக. எசே. கக. கக.
11 ஏசா. உக. உக. கொலோ. உ. உஅ-உஉ. நீத். க. உக.
12 மாற். எ. உ.
13 அப். உ. ஙஇ உமோ. உ. உ. உஎ, உஅ. கஇமோ. உ. உ. நீத். க. ஙஇ.
14 மோள. ஙஇ. உ. க கொரி. க. ஐஉ. ழ.
15 ஏசா. க. உக. மல்கி. உ. க. மத். உக. உ. ஙக. லூக் க. கக.

Digitized by Google

டிஞல் இருவரும் குழியிலே விழு வார்கள் என்ரூர்.

௰ரு [1]அப்பொழுது பேதுரு அவ னை நோக்கி, இந்த உவமையை எங்களுக்கு வெளிப்படுத்தவேண் டுமென்று கேட்டான்.

௰சு அதற்கு இயேசுவானவர், [2]நீங்களும் இன்னம் புத்தியில்லா தவர்களா?

௰எ [3]வாய்க்குள்ளே போகிறவை கள் யாவும் வயிற்றில் பிரவே சித்துப் பின்பு ஆசனவழியாய்க் கழிந்துபோகின்றன என்பதை நீ ங்கள் இன்னம் சிந்தித்துக்கொள் ளவில்லையா?

௰அ [4]வாயிலிருந்து புறப்படுகி றவைகள் இருதயத்திலிருந்து பு றப்பட்டு வருகின்றன; அவைக ளே மனிதனை அசுசிப்படுத்துகின் றன.

௰க [5]எவையெனில், பொல்லா த சிந்தனைகள், கொலைகள், விப சாரங்கள், வேசித்தனங்கள், கள வுகள், பொய்ச்சாட்சிகள், தூஷ ணங்களாகிய இவைகள் இரு தயத்திலிருந்து புறப்பட்டு வரு கின்றன.

௰௩ இவைகள் மனிதனை அசு சிப்படுத்துகிறவைகள்; கைகழு வாமல் சாப்பிடுகிறது மனிதனை அசுசிப்படுத்தாது என்ரூர்.

௰க ¶ பின்பு இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுத் தீருசீதோன் பட்டணங்களின் தி சைகளுக்குப் போனர்.

௰உ [6]அப்பொழுது அவ்விடங் களின் எல்லைகளிலிருந்து வந்த கானான் தேசத்தாளாகிய ஒரு ஸ்தி ரி அவனைநோக்கி, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, என் மகள் பசாசினுலே கடினமாய் வாதிக் கப்படுகிருள்; எனக்கு இரங்க வேண்டுமென்று சொல்லிக் கூப் பிட்டாள்.

௰ங அவரோ அவளுக்கு மாறுத் தரமாக ஒரு வார்த்தையும் சொல் லவில்லை; அப்பொழுது அவரு

கி. பி. ங௩

1 மாற். எ. ஊ.
2 டித்.௩.க.கூ.மாற். எ. ஆ.
3 க.மொ.க. ஊ.
4 மாக் க. சு.
5 க.மோ. க. ஐ: அ. உ. வாக்.
க ஐ:மே. ஐ.
எரே. ஊ. சு.
மாற். எ. உ, ஊ.
6 மாற். எ. உ.
7 மத். ஐ. ஐ, க. அப். க. உஐ.
உக: ஊ. சக.
உரோ. ஐஐ. அ.
8 மத். எ. க.பிலி. க.உ.

டைய சீஷர் வந்து அவனைநோக் கி, இவள் நம்மைப் பின்தொடர்ந் து கூப்பிடுகிருளே; ஆதலால் இ வளை அனுப்பிவிடும் என்று வேண் டிக்கொண்டார்கள்.

௰ச [7]அதற்கு அவர், காணுமல் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் குடும்பத்தாரிடத்துக்கே அன்றி, (மற்றவர்களிடத்தில்) நான் அனுப் பப்படவில்லையே என்ரூர்.

௰ரு அவளோ வந்து, ஆண்ட வரே, எனக்குச் சகாயஞ்செய்ய வேண்டுமென்று அவனை நமஸ்கா ரம்பண்ணினுள்.

௰சு அவர் சொன்னது: [8]பிள் ளைகளுடைய அப்பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுகிறது நல்ல தல்லவே என்ரூர்.

௰உ அதற்கு அவள், ஆண்டவ ரே, மெய்தான், ஆகிலும் நாய்கள் தங்கள் எசமான்கள் போசனம் செய்கிற பலகைகளிலிருந்து விழு கிற உச்சிட்டங்களைத் தின்னுமே என்ருள்.

௰அ அப்பொழுது இயேசுவா னவர் அவளை நோக்கி, ஸ்திரி யே, உன் விசுவாசம் பெரிதாயி ருக்கின்றது; நீ விரும்பினபடி உ னக்கு ஆகக்கடவது என்ரூர்; அந் நேரமே அவளுடைய மகள் சுகம் அடைந்தான்.

மாற். எ. ஊ.

௰க ¶ [9]பின்பு இயேசுவானவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, [10]கலிலேயாக்கடலின் அருகேவந் து, ஒரு மலையில் ஏறி, அங்கே உளுக்காந்தார்.

மத். ஈ. ஐஅ.

௰ங [11]அப்பொழுது சப்பாணி கள், குருடர், ஊமையர், முடவர் கள் முதலான அநேகம்பேரைக் கூட்டிக்கொண்டு வந்த மிருந்த னங்கள் இயேசுவினிடத்தில் வ ந்து, அவர்களை அவருடைய பா தத்தினிடத்தில் வைத்தார்கள்; அ வர்களை அவர் குணமாக்கினர்.

11 சை. ஊ. ஐ, க. மத். ஊ. ஐ. லூக். எ. உஉ.

ங௩ ஊமையர் பேசுகிறதையும், முடவர்கள் சொஸ்தம் அடைகிற தையும், சப்பாணிகள் நடக்கிற

Digitized by Google

தையும், குருடர் காணுகிறதையும் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் தேவனைத் துதித்தார்கள்.

கூ ¶ [1]பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷரைத் தம்மிடத்தில் அழைத்து, சனங்களைக்குறித்து மனவுருக்கமாய் இருக்கிறேன்; என்னத்தினாலென்றால், இவர்கள் மூன்றுநாள் என்னிடத்திலே தங்கிப் போசனம் இல்லாமல் இருக்கிறார்கள்; இவர்கள் வழியிலே சோர்ந்துபோகும்படிக்குப் பட்டினியாய் இவர்களை அனுப்பிவிடமாட்டேன் என்றார்.

கஉ [2]அதற்கு அவருடைய சீஷர்கள், இவ்வளவு சனங்களுக்குத் திருத்தி உண்டாகும்படிக்கு வேண்டிய அப்பங்கள் இந்த வனாந்தரத்திலே நமக்கு எப்படி அகப்படும் என்றார்கள்.

கூ இயேசுவானவர், உங்களிடத்தில் எவ்வளவு அப்பங்கள் உண்டு என்றார்; ஏழு அப்பங்களும் சில சிறுமீன்களும் உண்டு என்று சீஷர் சொல்ல,

கூஅ அவர் சனங்களைத் தரையிலே பந்தியிருக்கச்சொல்லி,

கூக பின்பு அந்த [3]ஏழு அப்பங்களையும் மீன்களையும் எடுத்து, [4]தோத்திரம்செய்து, அவைகளைப் பிட்டுத் தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார்; சீஷர் அவைகளைச் சனங்களுக்குக் கொடுக்க,

கூஎ எல்லாரும் சாப்பிட்டுத் திருத்தி அடைந்தார்கள்; பின்பு சேஷமானவைகள் ஏழு கூடை நிறையச் சேகரித்துக்கொள்ளப்பட்டன.

கூஅ பெண்களும் பிள்ளைகளும் தவிர, போசனம்பண்ணின புருஷர் காலாயிரம்பேர்.

கூக [5]அவர் சனங்களை அனுப்பிவிட்டு, படவில் ஏறி மகதலவூரின் நிசைகளில் சேர்ந்தார்.

வி. பி. கூஉ.

1 மற்.அ. க.

2 உஇரா. ச.சக.

3 மத். ம⅌. ம⅌.
4 ⅌ சாமு. க. ம⅌.
ஓசே. உ⅌. ம⅌.
5 மாற். அ. ம.
6 மத். ம⅌. உஅ.
மாற். அ. ம⅌.
ஓசே. ம⅌. ம⅌:
ம⅌. இ⅌-இ⅌.
⅌கொரி.க.உ⅌.
7 மத். ம⅌. க⅌.

8 மாற். அ. ம⅌.

9 ஓசே. ம⅌.. க.

⅌சு. அதிகாரம்.

க. பரிசேயர் ஒரு அடையாளத்தைக் கேட்டது. கு. இயேசு பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளித்த மாவுக்குச் சீஷர்கள் எச்சரிக்கையாயிருக்கப் போதித்தது. உக. யோனாவைக்குறித்துச் சனங்கள் கிண்டின கிணறு. ⅌க. பேதுரு அவரை அறிக்கைபண்ணினது. உக. இயேசு தம்முடைய மரணத்தை முன்னறிவித்து, உக. அப்படிச் சம்பவிக்காதபடிக்குப் பேதுரு வினாதற்காக அவனைக் கடிந்துகொண்டு, உச. தம்மைப் பின்பற்றுகிறவர்கள் சிலுவையைச் சுமக்கவேண்டுமென்று புத்திசொன்னது.

[6]அப்பொழுது பரிசேயரும் சதுசேயரும் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைத் தங்களுக்குக் காண்பிக்கவேண்டுமென்று கேட்டார்கள்.

உ அவர்களுக்கு அவர் சொன்னது: அஸ்தமனமாகிறபொழுது செவ்வானம் தோன்றியபடியால் வெளிவாங்கும் என்கிறீர்கள்.

கூ அல்லாமலும் உதயமாகிறபொழுது வானம் சிவப்பாயும் மந்தாரமாயும் இருக்கிறபடியால், இன்றைக்குப் பெருங்காற்றும் மழையும் உண்டாகும் என்கிறீர்கள். வஞ்சகரே, வானத்தின் தோற்றத்தை வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள்; காலங்களின் அடையாளங்களைக்குறித்து வகையறுக்கமாட்டீர்களா?

ச [7]சோரமார்க்கமுள்ள பொல்லாத சந்ததியாரானவர்கள் அடையாளம் கேட்கிறார்கள்; யோனா தீர்க்கதரிசியின் அடையாளமே அன்றி, வேறொரு அடையாளமும் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லி, அவர்களை விட்டுப்போனார்.

கூ ¶ [8]அவருடைய சீஷர்கள் அக்கரைக்குப் போனபொழுது அவர்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுபோக மறந்திருந்தார்கள்.

கூ [9]அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளிப்புள்ள மாவுக்கு

Digitized by Google

விலகி மிகவும் எச்சரிக்கையாய் இருங்கள் என்றார்.

எ அவர்கள் நாம் அப்பங்களைக் கூடக் கொண்டுவராததைக் குறித்து (இப்படிச் சொல்லுகிறரென்று) தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டார்கள்.

அ இயேசுவானவர் அதை அறிந்து அவர்களை நோக்கி, அற்பவிசுவாசிகளே, நீங்கள் அப்பங்களைக்கூடக் கொண்டுவராததைக் குறித்து (நான் இப்படிச்சொன்னதாக) உங்களுக்குள்ளே யோசனைபண்ணுகிறது என்ன?

கூ [1]இன்னம் உங்களுக்குப் புத்தி இல்லையோ? ஐயாயிரம் பேருக்குள்ளே (கொடுத்த) ஐந்து அப்பங்களையும், நீங்கள் அவ்வளவு கூடைநிறையச் சேகரித்த துண்டுகளையும்,

ய [2]நாலாயிரம் பேருக்குள்ளே (கொடுத்த) எழு அப்பங்களையும், நீங்கள் அவ்வளவு கூடைநிறைய எடுத்த துண்டுகளையும் நினைத்துக்கொள்ளுகிறதில்லையா?

யக பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய புளிப்புள்ள மாவுக்கு விலகி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்று நான் அப்பத்தைக்குறித்துச் சொல்லவில்லை என்று நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமல் இருக்கிறது எப்படியென்றார்.

யஉ அப்பொழுது அவர்கள் பரிசேயர் சதுசேயர் என்பவர்களுடைய அப்பங்களின் புளிப்புள்ள மாவுக்கு அல்ல, அவர்களுடைய உபதேசத்துக்கே விலகி எச்சரிக்கையாய் இருக்கச்சொன்னரென்று அறிந்தார்கள்.

யஊ ¶ பின்பு இயேசுவானவர் பிலிப்பு கேசாரியாவின் திசைகளில் வந்தபொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, [3]மனிதனுடைய குமாரனாகிய என்னைச் சனங்கள் ஆரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

கி பி. ஊஉ.

1 மத். மசு. மஎ-உஅ. யோவா. க. கூ-அஉ.
2 மத். மஇ. மசு-கஎ.
3 மாற். அ. உஎ. லூக். க. அஅ.
4 மத். மசு. உ. லூக். க. எ-கூ.
5 மத். மசு. கக. மாற். அ. உகூ. லூக். கூ. உஅ. யோவா. க கூஅ: அக. உஎ. அப். அ. கஎ: கூ. உஅ. க யோ. சு அஇ: இ. இ. எபி. க. உ, இ.
6 எபே. உ. அ.
7 க கொரி. உ. அ. கலா. க அக.
8 யோவா. க. சஉ.
9 எபே. உ. உஅ. வெளி. உக. அச.
10 யோபு. கஅ. அஎ. சங். கூ. அக: எ. அஅ. எசா. கஅ. அ.
11 மத். அஅ. அஅ. யோவா. உஅ. உக.
12 மத். மஎ. க. மாற். அ. கட். லூக். கூ. உக.
13 மத். உஅ. மஎ-உஅ. மாற். அ. கக: கூ. கக: அ. கக. லூக். கூ. உஉ: அஅ. கஉ, கக: உச. சு, எ.

யச [4]அதற்கு அவர்கள் சொன்னது: சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

யடு அதற்கு அவர், நீங்கள் என்னை ஆரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டபொழுது,

யசு அதற்குச் சீமோன்பேதுரு சொன்னது: [5]நீர் சீவனுள்ள பராபரனுடையகுமாரனாகிய கிறிஸ்து என்றான்.

யள அவனுடனே இயேசுவானவர் சொன்னது: யோனாவின் குமாரனாகிய சீமோனே, [6]மாம்சஇரத்தம் அல்ல, பரமண்டலங்களில் இருக்கிற என் பிதா [7]இதை உனக்கு வெளிப்படுத்தினார்; ஆதலால் நீ பாக்கியமுள்ளவன்.

யஅ மேலும் [8]நீ பேதுருவாய் இருக்கிறாய், [9]இந்தக் கல்மலையின்மேல் நான் என்னுடைய சபையைக் கட்டுவேன், [10]பாதாளத்தின் வாசல்களும் அதைச் செயிப்பதில்லை என்று உனக்குச் சொல்லுகிறேன்.

யக அல்லாமலும் பரலோகஇராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன், பூமியிலே நீ கட்டுவது எதோ, அது பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும்; [11]பூமியிலே நீ கட்டவிழ்ப்பது எதோ, அது பரலோகத்திலே கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று சொல்லி,

உய [12]பின்பு தாம் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

உக ¶ [13]அதுமுதல் இயேசுவானவர், தாம் எருசலேமுக்குப் போய், பெரியோர்களாலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் மிகுந்த பாடுபடவும், கொலைசெய்யப்படவும், மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் வேண்டு

Digitized by Google

மென்று தம்முடைய சீஷருக்குக் காண்பிக்கத் தொடங்கினார்.

உஉ அப்பொழுது பேதுரு அவனைத் தனியே அழைத்து, ஆண்டவரே, உம்மிடத்தில் இரக்கம் உண்டாவதாக, அப்படி உமக்கு வராதிருப்பதாக என்று அவருடனே கண்டிப்பாய்ச் சொன்னான்.

உக இயேசுவானவர் திரும்பிப் பேதுருவினிடத்தில், [1]ஆ சாத்தானே, நீ என் முன் இராமல்போ, நீ பராபரனுக்குப் பிரியமானவைகளைச் சிந்தியாமல், மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே [2]எனக்குத் தடங்கலாயிருக்கிறாய் என்றுசொல்லி,

உச ¶ [3]பின்பு தம்முடைய சீஷர்களைநோக்கி, என்னைப் பின்பற்றி நடக்க ஒருவன் விரும்பினால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

உடு என்னத்தினாலென்றால், [4]தன் சீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்நிமித்தம் தன் சீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்.

உசு அல்லாமலும் மனிதனானவன் உலக முழுமையும் சம்பாதித்துக்கொண்டாலும், தன் சீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு என்ன லாபம் உண்டாயிருக்கும்? [5]அன்றியும், ஒரு மனிதன் தன் சீவனை மீட்கிறதற்கு என்னத்தைக் கொடுப்பான்?

உஎ [6]அல்லாமலும், மனிதனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையைப் பொருந்தி, [7]தம்முடைய தூதரோடும் கூட வருவார்; அப்பொழுது [8]அவனவனுடைய செய்கையின்படியே அவனவனுக்குப் பலன் அளிப்பார்.

உஅ [9]இங்கே நிற்கிறவர்களில் சிலர் மனிதனுடைய குமாரன் தம்முடைய இராச்சியத்தில் வருவதைக் காண்கிறதற்கு முன்னே மரணத்தை அடைவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

௰எ. அதிகாரம்.

க. பிரிஸ்து மறுரூபப்பட்டது. ம. அவர் சந்நிதானத்தைக் குணமாக்கி, உஉ. தம்முடைய பாடுகளை முன்னறிவித்து, உச. நிந்தனையைச் செலுத்தினது.

[10]ஆறுநாளுக்குப் பின்பு இயேசுவானவர் தனித்திருக்கும்படி, பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய தம்பியாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு, உயர்ந்த மலையின்மேல் போய்,

உ அங்கே அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசித்தது; அவருடைய வஸ்திரங்கள் ஒளியைப்போல் வெண்மையாயின.

ஈ அப்பொழுது மோசே எலியா என்பவர்கள் அவரோடே பேசிக்கொள்ளுகிறவர்களாய் அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.

ச அப்பொழுது பேதுரு இயேசுவைநோக்கி, ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால் இங்கே உமக்கும், மோசேயுக்கும், எலியாவுக்கும் ஒரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டாக்குவோம் என்றான்.

ஙு [11]அப்படி அவன் பேசுகையில் நடந்தது என்னவெனில், ஒளியுள்ள மேகம் அவர்கள்மேல் நிழலிட்டதுமல்லாமல், [12]இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், [13]இவரில் பிரியமாய் இருக்கிறேன், [14]இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்தில் இருந்து சத்தம் உண்டாயிற்று.

சு [15]சீஷர் அதைக்கேட்டு, முகங்குப்புறவிழுந்து, மிகவும் பயந்தார்கள்.

எ [16]அப்பொழுது இயேசுவானவர் வந்து, அவர்களைத் தொட்டு, எழுந்திருங்கள், பயப்படாதிருங்கள் என்று சொன்னார்.

---

1 உ சாமு. ங. உஉ.
2 உசா. அ. எ.
3 மத். ம. கஅ. மாற். அ. கச. லூக். க. உக: ம. உள. அப். ம.உஉ.கதெச. க.ச. உ தீமோ. க.மஉ.
4 லூக். ம எ. கக. யோவா. மஉ. உஓ.
5 சங். சங. எ,அ.
6 மத். உக. கச. மாற். அ. கஅ. லூக். க. உக.
7 தானி. எ. ம. சகரி.ம.இ. மத். உஓ.கக. யூத. ம.
8 யோபு. கச.மக. சங். கஉ. மஉ. வாக். உச. மஉ. எசே.ம.ம:கஉ. மங. உசா.உ. க. க கொரி. க. அ. உ கொரி. இ. ம. க பே.க. ம எ. வெளி. உ. உஉ: உஉ.மஉ.
9 மாற்.க.க.லூக். க. உள.
10 மாற். க. உ. லூக். க. உஅ.
11 உ பே. க.ம எ.
12 மத்.க.ம எ.மாற். க. மக. லூக். க. உஉ.
13 சா. சஉ. க.
14 இ மோ. மஅ. மஓ, மங. அப். க. உஉ, உக.
15 உ பே.க. மஅ.
16 தானி அ.மஅ: க. உஉ: ம. ம: மஅ. மங.

Digitized by Google

அ அவர்கள் தங்கள் கண்களை உயர்த்துகிறபொழுது இயேசுவை யே அன்றி மற்றொருவரையும் காணவில்லை.

உசு தேவாலயத்திற்கு உட்பிரவேசித்து, [6]ஆசாரியரேயன்றி மற்றொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களைப் புசித்ததையும், தன்னோடிருந்தவர்களுக்குக் கொடுத்ததையும், நீங்கள் ஒருக்காலும் அறியவில்லையோ என்று சொல்லி,

உள பின்பு மனிதர் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது.

உஅ ஆகையால் [7]மனிதனுடைய குமாரன் ஓய்வுநாளின் கர்த்தனாயிருக்கிறான் என்றார்.

7 மத். கூ. அ.

ரு. அதிகாரம்.

க. தெரிந்துகொள்ளப் பன்னிரண்டுபேரையும், ஐ. மற்றப் பிள்ளைகளையும் நியமித்து, மக. அசுத்த ஆவிகளை அதட்டி, மக. பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் தெரிந்துகொண்டு, உஉ. பெயேல் செபூலினால் பாசாக்களைத் தூத்தக்கூடுமென்ற தூஷணத்தை எடுத்துக்காட்டி, கக. தம்முடைய சகோதரர்களும், சகோதரிகளும், தாயாரும் இவர்களே என்று காட்டினது.

[8]மறுபடியும் அவர் செபஆலயத்தில் பிரவேசித்தார்; அங்கே சூம்பின கையையுடைய ஒரு மனிதன் இருந்தான்.

8 மத். ஐஉ. க. லூக். க. க.

உ அவர் ஓய்வுநாளில் அவனைச் சொஸ்தமாக்கினால் அவர்மேல் குற்றம்சாற்றலாமென்று அவர்கள் எண்ணி, அவரை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

Digitized by Google

ரு ஆதலால் அவர் சும்பினகை யுள்ளவனை நோக்கி, நீ எழுந்து ந டுவிலே வந்திரு* என்று சொல்லி,

ச பின்பு அவர்களை நோக்கி, ஓய்வுநாள்களில் நன்மைசெய்கி றதோ தீமைசெய்கிறதோ, சீவனை இரட்சிக்கிறதோ சீவனை வாங்கு கிறதோ, எது நியாயமாய் இருக் கின்றதென்று கேட்டார்; அவர் கள் பேசாமல் இருந்தார்கள்.

ஞ அப்பொழுது அவர் அவர்க ளுடைய இருதயத்தின் கடினத் தினாலே †விசனப்பட்டுக்கோபத் தோடே அவர்களைச் சுற்றிப்பார்த் து, பின்பு அந்த மனிதனை நோக் கி, உன் கையை நீட்டு என்றார்; அவன் நீட்டினான்; உடனே அது மற்றக் கையைப்போல சொஸ்த மாயிற்று.

ட [1]பின்பு பரிசேயர் புறப்ப ட்டுப் போய், அவனை அழிக்கும் படிக்கு [2]ஏரோதேயின் மனிதரோ டுங்கூட அவருக்கு விரோதமாய் உடனே ஆலோசனைபண்ணினார் கள்.

ஏ ¶ இயேசுவானவர் தம்மு டைய சீஷருடனே கூட அவ் விடம்விட்டுக் கடலோரத்திற்குப் போனார்.

அ [3]கலிலேயா நாட்டினும், யூதே யா நாட்டினும்,எருசலேம் நகரத்தி லும்,இதுமேயா நாட்டினும்,யோர் தான் நதியின் ஓரங்களிலுமிருந்து மிகவும் திரளாக வந்த சனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்; அ ல்லாமலும் தீருசீதோன் என்னும் பட்டணங்களின் திசைகளிலிரு ந்து மிகவும் திரளாக வந்த சனங் கள் அவர் செய்த அற்புதங்களைக் கேள்விப்பட்டு,அவரிடத்தில் வந் தார்கள்.

க அப்பொழுது அவர் சொஸ்தமாக்கினபடியினாலே, உபத்திரவப்பட்டவர்கள் எவர்க ளோ, அவர்கள் அவனைத் தொடும் படிக்கு அவர்மேலே விழுந்தார் கள். ‡

கி. பி. ஈக.

* அல்லது ஏ வே தில்.

† அல்லது அந்த காரத்துக்காக.

1 மத். ம. ச.

2 மத். ம. ம.

3 லூக். க. ள.

‡ அல்லது தொ ருங்கினார்கள்.

4 மாற். க. உக, உச. லூக். ச. சக.

5 மத். ம. கக. மாற். க. க.

6 மாற். க. உஇ, கச. மத். ம. ம.

7 மத். இ. க. லூக். க. ம: க. க.

8 யோவா. க. சட.

ய ஆதலால் தாம் சனங்களால் நெருக்கப்படாதபடிக்கு அவர் தம் முடைய சீஷனை நோக்கி, தமக் காக ஒரு படவை எத்தனம்பண் ணச் சொன்னார்.

யக [4]அசுத்தமான ஆவிகளும் அ வனைக் கண்டஉடனே அவருக்கு முன்பாக விழுந்து, [5]நீர் பராபரனு டைய குமாரனென்று கூப்பிட் டார்கள்.

யஉ [6]தம்மை அவர்கள் பிரசித் தம்பண்ணுதபடிக்கு, அவர்களுக் குக் கண்டிப்பாய்க் கட்டளையிட் டார்.

யஊ ¶ பின்பு [7]அவர் ஒரு மலை யின்மேல் ஏறித் தமக்குச் சித்தமா னவர்களை வரவழைத்தார், அவர் கள் அவரிடத்தில் வந்தார்கள்.

யச அப்பொழுது அவர் தம்மு டனேகூட இருக்கவும், (சுவிசே ஷத்தை)பிரசங்கம்பண்ணும்படி ருட்டாய் அனுப்பவும்,

யஙி வியாதிகளை நீக்கிப் பசாசு களைத் துரத்தத்தக்கதாக அதிகார முள்ளவர்களாகவும், பன்னிரண் டுபேரை ஏற்படுத்தினார்.

யசு அவர்கள் யாரெனில், [8]சி மோன், செபேதேயுவின் குமார னாகிய யாக்கோபு,

யஎ யாக்கோபின் சகோதரனாகிய யோவான், அந்திரேயா, பிலிப்பு, பருத்தொலோமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரன் ஆகிய யாக்கோபு, தடேயு, கானனே னாகிய சீமோன்,

யஅ அவனைக் காட்டிக்கொடுத்த யூதாஸ்காரியோத்து என்பவர்க ளே.

யக இவர்களில் முந்தின சீமோ னுக்குப் பேதுரு என்றும், செபே தேயுவின் குமாரராகிய யாக்கோ புக்கும் யோவானுக்கும் போவ நெர்கேஸ் என்றும் நாமங்களைக் கொடுத்தார்;போவநெர்கேஸ் என் பதற்கு இடிமுழக்கம் இடுகிறவர் களென்று அருத்தமாம்.

Digitized by Google

உல ¶ பின்பு வீட்டிற்குப் போனார்கள்.

உச [1]அங்கே அவர்கள் போசனம் பண்ணுகிறதற்குக் காலமில்லாதபடிக்கு அநேக சனங்கள் மறுபடியும் கூடிவந்தார்கள்; அவருடைய இனத்தார்* அதைக் கேட்டு, [2]அவருக்கு மயக்கமுண்டாயிற்று என்று சொல்லி, அவனைப் பிடித்துக்கொள்ளும்படிக்கு வந்தார்கள்.

உஉ எருசலேம் நகரத்திலிருந்து வந்த வேதபாரகர் [3]அவன் பெயல்செபூலைக்கொண்டிருக்கிறான்; பசாசுகளுடையதலைவனுலே பசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

உசு [4]அவர்களை அவர் அழைத்து, உவமைகளால் அவர்களுடனே சொன்னதாவது: சாத்தான் சாத்தானைத் துரத்துவதெப்படி?

உச ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால் அந்த இராச்சியம் நிலைநிற்கமாட்டாதே.

உஙி ஒரு குடும்பத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால் அந்தக் குடும்பம் நிலைநிற்கமாட்டாதே.

உசு (அப்படிப்போல) சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்தால் அவன் நிலைநிற்கமாட்டாமல் முடிவு அடைவான்.

உஎ [5]ஒருவன் முன்பு பெலவானைக் கட்டாவிட்டால் அவனுடைய வீட்டிலே பிரவேசிக்கவும் அவனுடைய ஆஸ்திகளைக் கொள்ளையிடவும் மாட்டான்; (கட்டினால்) அவனுடைய வீட்டைக் கொள்ளையிடுவான்.

உஅ [6]மனிதர் செய்கிற பாவங்களாவும் அவர்கள் செய்கிற எந்தத் தூஷணங்களும் மன்னிக்கப்படும்.

உக பரிசுத்த ஆவியைத் தூஷணிக்கிறவன்மாத்திரம் என்றென்

கி. பி. கூக.

1 மற். க. கக.

* அல்லது சிலர்.

2 யோவா. எ. இ: ம. உம.

3 மத். கூ. கச: ம. உஇ. லூக். கக.உஇ.யோவா. எ.உம: அ.சஅ, இக: ம. உச.

4 மத். மக. உஇ.

5 எசா. சக.உச. மத். மக. உக.

6 மத். மக. கக. லூக். மக. ம. க யோ. இ. மக.

7 மத். மக. சக. லூக். அ. மக.

றைக்கும் மன்னிப்படையாமல், நித்திய ஆக்கினைக்குப் பாத்திரனாய் இருக்கிறான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கூ அசுத்தமான ஆவியைக்கொண்டிருக்கிறான் என்று அவர்கள் சொன்னபடியினாலே (அவர் இப்படிச் சொன்னார்.)

கூக ¶ [7]அத்தருணத்திலே அவருடைய தாயாரும் சகோதரரும் வந்து வெளியே நின்று, அவனை அழைக்கும்படி ஆளனுப்பினார்கள்.

கூஉ அப்பொழுது அவனைச் சுற்றி உளுக்காந்த சனங்கள் அவனை நோக்கி, அதோ, உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள் என்றார்கள்.

கூங அதற்கு அவர், என்னுடைய தாயும் என்னுடைய சகோதரரும் யார் என்று சொல்லி,

கூச தம்மைச் சூழ உளுக்காந்தவர்களைச் சுற்றிப் பார்த்து, என்னுடைய தாயும் என் சகோதரரும் இவர்களே.

கூஙி எப்படியெனில், பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனே, அவனே என் சகோதரன், என் சகோதரி, என் தாயாயிருக்கிறான் என்றார்.

ச. அதிகாரம்.

க. விதைக்கிறவனைக்குறித்த உவமை. ம. அதின் விளக்கியானம். உக. நமது மெய்ஞ்ஞானத்தைக் காட்டவேண்டியது. உக. மறைவாய் வளர்ந்த விதையையும், கம. கடுகு விதையையும், உவமையாகக்காட்டியது. கஇ. நிலத்து கடதொல்தவிப்பை அமர்த்தினது.

பின்பு அவர் மறுபடியும் [8]கடலோரத்திலே போதகம்பண்ணத் தொடங்கினார்; மிகுந்த சனங்கள் கூடி அவரிடத்தில் வந்தபடியினாலே, அவர் படவில் ஏறிக் கடலில் உளுக்காந்தார்; சனங்களெல்லாரும் கடற்கரையில் இருந்தார்கள்.

8 மத். மக. க. லூக். அ. ச.

உ அப்பொழுது அவர் உவமைகளாய் அநேக காரியங்களை அவர்

Digitized by Google

களுக்குப் போதித்தார்; [1]போதிக்கிறபொழுது அவர்களுடனே சொன்னதாவது: கேளுங்கள்,

ரு விதைக்கிறவன் விதைக்கப் புறப்பட்டான்.

ச அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்தன; அப்பொழுது ஆகாயத்தின் பறவைகள் வந்து, அதைப் பட்சித்தன.

ரு சில விதை மிகுந்த மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தன; அதற்கு மிகுந்த மண் இல்லாதபடியால் உடனே முளைத்து,

சு சூரியகாந்தி தோன்றினபொழுது தீய்ந்து, அவைகளுக்கு வேர் இல்லாமையினால் உலர்ந்துபோயின.

எ சில விதை முள்ளுக்களுள்ள நிலத்திலே விழுந்தன; முள்ளுக்கள் எழும்பி அவை பலன் கொடாதபடிக்கு அவைகளை நெருக்கிப்போட்டன.

அ சில விதை நல்ல நிலத்தில் விழுந்து ஓங்கி வளர்ந்து, [2]ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுத்தன.

கூ கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றுதிருவுளம் பற்றினார்.

ய ¶ பின்பு [3]அவர் தனித்திருக்கையில், பன்னிருவரோடுங்கூட அவனைச் சூழ இருந்தவர்கள் அந்த உவமையைக்குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள்.

யக அவர்களுடனே அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது.

யஉ [4]புறம்பே இருக்கிறவர்கள் மனந்திருப்பாமலும், தங்கள் பாவமன்னிப்பை அடையாமலும் இருக்கத்தக்கதாக, [5]உற்றுப்பார்த்தும் அறியாமலும்,உற்றுக்கேட்டும் சிந்தியாமலும் இருக்கும்படிக்கு,

இ. பி. கூச.

1 மத். மஉ. கஅ.
2 போஎ.மஇ.இ. கொலோ.உ.க.
3 மத்.மக.ம. லூக். அ. கூ. ழ.
4 உ கொரி. இ. மஉ. கொலோ. ச. இ. க தெச. ச.மஉ.உதிமோ. க. எ.
5 எசா.க.கூ. மத். மக. ம்ச. லூக். அ. ம. யோவா. மஉ. சம. அப். உஅ. உகூ. உரோ. மக. அ.
6 மத். மக. மக.

அவையெல்லாம் உவமைகளாகவே அவர்களுக்குச் சொல்லப்பட்டு வருகின்றன என்று சொல்லி,

யசு பின்பு அவர்களை நோக்கி, நீங்கள் அந்த உவமையை அறியவில்லையா? அப்படியானால், மற்ற எல்லா உவமைகளையும் எப்படி அறிவீர்கள்?

யச [6]விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறவனே.

யரு விதை விழுந்த வழிக்கு ஒப்பானவர்கள் விதைக்கப்படுகிற வசனத்தைக் கேட்டவுடனே, சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களின்மேல் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்.

யசு விதை விழுந்த கற்பாறை நிலத்திற்கு ஒப்பானவர்கள் அந்த வசனத்தைக் கேட்கிறபொழுது, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டும்,

யஎ தங்களிலே வேர் ஊன்றியிராமல், கொஞ்சக்காலம் மாத்திரம் அதைப்பற்றிக்கொள்ளுகிறார்கள்; அவ்வசனத்தின் நிமித்தம் உபத்திரவமும் துன்பப்படுதலும் உண்டானவுடனே வழுவுகிறார்கள்.

யஅ விதை விழுந்த முள்ளுக்களுள்ள நிலத்திற்கு ஒப்பானவர்கள் அவ்வசனத்தைக் கேட்டும்,

யக அது பலனற்றதாய் இருக்கும்படிக்கு, இவ்வுலக கவலையும் [7]ஐசுவரியத்தின் வஞ்சனையும் மற்றக் காரியங்களின்மேல் உண்டாகிற இச்சைகளும் தோன்றி, அந்த வசனத்தை நெருக்கிப்போடுகிறதற்கு (இடங்கொடுக்கிறார்கள்.)

உய விதை விழுந்த நல்ல நிலத்திற்கு ஒப்பானவர்கள் அவ்வசனத்தைக் கேட்டுப் பற்றிக்கொண்டு, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள் என்றார்.

உக ¶ [8]அன்றியும் அவர்களுடனே அவர் சொன்னது: விளக்

7 உ தீமோ.க.கூ, ய.

8 மத். இ. மஇ. லூக். அ. மக: மச. கக.

Digitized by Google

கை ஒரு தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி, மரக்காலின்* கீழாகிலும் கட்டிலின் கீழாகிலும் வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா?

உஉ [1]ஆதலால் வெளியரங்கமாகாத அந்தரங்கமான பொருளுமில்லை, வெளிக்குவாராத மறைபொருளுமில்லை.

உக [2]கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவன் என்றார்.

உச அன்றியும் அவர்களுடனே அவர் சொன்னது: நீங்கள் கேள்விப்படுகிறது இன்னதென்று சிந்தித்துக்கொள்ளுங்கள்; [3]எந்த அளவினால் நீங்கள் அளப்பீர்களோ, அதினாலே உங்களுக்கும் அளக்கப்படும்.

உடி அல்லாமலும் [4]எவன் உள்ளவனாயிருக்கிறானே, அவனுக்குக் கொடுக்கப்படும்; எவன் இல்லாதவனாயிருக்கிறானே, அவனிடத்திலே உள்ளதும் எடுத்துப்போடப்படும்; ஆகையால் கேள்விப்படுகிற உங்களுக்கு அதிகமும் கொடுக்கப்படும் என்றார்.

உசு ¶ [5]அன்றியும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய இராச்சியம் ஒரு மனிதன் தன் நிலத்திலே விதை விதைக்கிறதற்கு ஒப்பாயிருக்கின்றது.

உஎ பின்பு இராத்திரிதோறும் நித்திரைபண்ணி, பகல்தோறும் எழுந்திருப்பான்.

உஅ அவனுக்குத் தெரியாமல் பூமியானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், பின்பு கதிரிலே நிறைந்த தானியத்தையும் பலனுகத் தானுய்க் கொடுக்கின்ற தன்மையுள்ளதாய் இருக்கிறபடியால், அந்த விதை முளைத்துப் பயிராம்.

உக அப்படிப் பயிர் பருவமான பொழுது,† அறுப்புக்காலமானபடியினாலே, அவன் அதை அறுக்கிறதற்கு [6]ஆள்களை அனுப்புவான் என்றார்.

கி. பி. கூக.

* இந்த மொழி மூல பாஷையில் ஒரு சின்ன அளவைக்குறிக்கும். மத். கி. ம கி.

1 மத். ம. உக. லூக். மஉ. உ.

2 மத். மக. ம கி. கூ. மச.

3 மத். எ. உ. லூக். கூ. உஅ.

4 மத். மக. மஉ: உகி. உக. லூக். அ. மஅ: மக. உக.

5 மத் மக. உச. † அல்லது கிடைத்தபொழுது.

6 வெளி. மச. ம கி.

7 மத். மக. கஉ. லூக். மக. மக. அப். உ. சக: ச. ச: கி. மச: மக. உம.

8 மத். மக. கச. யோவா. ம க. மஉ.

9 மத். அ. மஅ, உக. லூக். அ. உஉ.

கூம ¶ அன்றியும் அவர் சொன்னது: [7]நாம் பராபரனுடைய இராச்சியத்தை எதற்கு ஒப்பாக்கலாம்; அதை எந்த உவமையினாலே காண்பிக்கலாம்.

கூக அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கின்றது; அது நிலத்தில் விதைக்கப்படுகிறபொழுது, பூமியிலுள்ள சகல விதைகளிலும் அது சிறிதாயிருந்தும்,

கூஉ விதைக்கப்பட்டபின்பு வளர்ந்து சகல கீரைகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் நிழலில் வந்தடையத்தக்கதாக விஸ்தாரமான கிளைகளை விடுகின்றது என்றார்.

கூஊ ¶ கேட்டறியும்படிக்கு, சனங்களுக்குண்டான திராணிக்குத்தக்கதாக, அவர் [8]இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார்.

கூச உவமைகளினாலேயன்றி அவர் அவர்களுக்கு ஒன்றும் சொல்லவில்லை; தம்முடைய சீஷருடனே அவர் தனித்திருக்கிறபொழுதுமாத்திரம் அவர்களுக்கு எல்லாவற்றையும் விவரித்துச் சொன்னார்.

கூடி ¶ [9]அந்த நாளிலே, சாயங்காலமானபொழுது, அவர் அவர்களை நோக்கி, அக்கரைக்குப் போவோம் வாருங்கள் என்றார்.

கூசு ஆதலால் அவர்கள் சனங்களை விட்டு அவர் படவில் இருந்தபடியே அவனைக் கொண்டுபோனார்கள்; வேறுபடவுகளும் அவரோடேகூடப் போயின.

கூஎ அப்பொழுது அவர் பின்பக்கத்திலே ஒரு தலையணையைவைத்து நித்திரை பண்ணிக்கொண்டிருக்கையில், பலத்த சுழல்காற்று உண்டானதினாலே, படவை மூடிக்கொள்ளத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதின.

கூஅ உடனே அவர்கள் அவரை எழுப்பி, போதகரே, நாங்கள்

Digitized by Google

மடிந்துபோனால் உமக்குக் கவலை யில்லையா என்றார்கள்.

ரூக அவர் எழுந்து காற்றுக்குக் கட்டளையிட்டு, கடலையும் நோக்கிக் கோஷமாயிராதே அமைதலாயிரு என்றார்; உடனே காற்று நின்றுபோக மிகுந்த அமைதல் உண்டாயிற்று.

சய பின்பு அவர் அவர்களை நோக்கி, இப்படி ஏன் பயப்பட்டீர்கள்? என்னத்திலேலே உங்களுக்கு விசுவாசம் இல்லை என்றார்.

சக அவர்கள் மிகவும் பயந்து, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே, இவர் யாரோ என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

ரு. அதிகாரம்.

க. இலேகியோன் என்னும் பேய்கள் பிடித்தவனைக் குறித்து விருத்தாந்தமாகிறபோது, ரூ. அவைகள் பன்றிகளுக்குள் பிரவேசித்தன. உஇ. அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணமாக்கி, கஇ. யாவீரு என்பவனுடைய மகன் மரணத்தினின்று எழுப்பினது.

1பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையில் உள்ள கதரேனருடைய தேசத்திற்கு வந்தார்கள்.

1 மத். அ. உஅ. மாக். அ. உக.

உ அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனிதன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.

ரூ அவனுடைய குடியிருப்பு பிரேதக்கல்லறைகளிலே இருந்தது; ஒருவனும் அவனைச் சங்கிலிகளினாலும் கட்டக்கூடாததாய் இருந்தது.

ச அநேகந்தரம் அவன் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், அவன் அந்தச் சங்கிலிகளை முறித்து விலங்குகளைத் தறித்துப்போட்டான்; ஒருவனும் அவனைக் கீழ்ப்படுத்தக்கூடாததாய் இருந்தது.

ஞ அல்லாமலும் அவன் எப்பொழுதும் இரவும்பகலும் மலைகளி

இ. பி. ரூக.

லும் கல்லறைகளிலும் தங்கி, கூக்குரலிட்டு, தன்னைத்தானே கல்லுக்களால் கீறிக்கொண்டிருந்தான்.

ட அவன் தூரத்திலே இயேசுவானவரைக் கண்டு ஓடிவந்தபொழுது, அவனை நோக்கி,

ஏ அசுத்த ஆவியே, நீ இந்த மனிதனைவிட்டுப் போ என்று அவர் கட்டளையிட்டபடியினாலே,

அ அவன் அவருக்குத் தாழ்ந்து வணங்கி, இயேசுவே, உன்னதமான பராபரனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு, உமக்குப் பராபரன்மேல் ஆணையிடுகிறேன் என்று மிகுந்த சத்தமாய்க் கூப்பிட்டான்.

க அவர் அவனை நோக்கி, உன் பேரென்ன என்று கேட்டார்; அதற்கு அவன் அநேகராய் இருக்கிறோம், ஆகையால் என் பேர் இலேகியோன் என்று சொல்லி,

ய பின்பு அத்தேசையிலிருந்து தங்களை ஓட்டிவிடாதபடிக்கு அவனை மிகவும் வேண்டிக்கொண்டான்.

யக அவ்விடத்திலே மலையின் அருகே மிகுந்த கூட்டமான பன்றிகள் மேய்ந்துகொண்டிருந்தன.

யஉ அப்பொழுது பசாசுகள் எல்லாம் அவருடனே சொன்னது: நாங்கள் பன்றிகளில் பிரவேசிக்கும்படிக்கு எங்களை அனுப்புமென்று அவனை வேண்டிக்கொண்டார்கள்.

யரு உடனே இயேசுவானவர் அவர்களுக்கு உத்தரவு கொடுத்தார்; அப்பொழுது அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள்ளே பிரவேசித்தன; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளாகிய அந்தக் கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அதில் அமிழ்ந்து மாண்டது.

Digitized by Google

கி. பி. கக.

ஏச அப்பொழுது பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, அதைப் பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள்; பின்பு சம்பவித்ததைப் பார்க்கும்படிக்குச் சனங்கள் புறப்பட்டு,

ஐ இயேசுவினிடத்தில் வந்து, இலேகியோனென்கிய பசாசுகள் பிடித்திருந்தவன் வஸ்திரம் உடுத்திக்கொண்டு, உணக்காந்து புத்தி அடைந்திருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்.

ஒ பசாசுகள் பிடித்தவனுக்கும் பன்றிகளுக்கும் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்.

ஓ [1]அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டு அப்புறம் போகும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டார்கள்.

ஔ அந்தப்படி அவர் படவில் பிரவேசிக்கிறபொழுது [2]பசாசு பிடித்திருந்தவன் அவருடனேகூடப் போகும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டான்.

க இயேசுவானவர் அவனுக்கு உத்தரவுகொடாமல், நீ உன் வீட்டிலே உன் இனத்தாரிடத்திற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்த மிகுந்த விசேஷங்களை அவர்களுக்கு அறிவிப்பாயாக என்றார்.

கக அந்தப்படி அவன் போய்த் தனக்கு இயேசுவானவர் செய்த விசேஷங்களைத் தெக்கப்போலி என்னும் தேசத்திலே பிரசித்தம் பண்ணினான், யாவரும் ஆச்சரியப்பட்டார்கள்.

கஉ ¶ [3]பின்பு இயேசுவானவர் மறுபடியும் படவிலேறி இக்கரைக்கு வந்து கடலோரத்திலே இருந்தபொழுது, மிகுந்த சனங்கள் கூடி அவரிடத்தில் வந்தார்கள்.

கஉ [4]அப்பொழுது செபஸ்தலவாசல் ஒருவனுகிய யாவீரு என்பவனும் வந்து, அவனைக் கண்டவுடனே அவருடைய பாதத்தின் அருகே விழுந்து,

கஊ என் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியம் அடையும்படிக்கு நீர் வந்து, அவள்மேல் கைகளை வைத்தருளும், அப்பொழுது பிழைப்பாளென்று அவனை மிகவும் வேண்டிக்கொண்டான்.

கஎ அவர் அவனோடேகூடப் போனார்; அவனை நெருக்கத்தக்கதாக அநேக சனங்கள் அவருக்குப் பின்சென்றார்கள்.

கஏ ¶ [5]அப்பொழுது பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரியானவள்,

கஐ அநேக பரிகாரிகளால் மிகுந்த வருத்தப்பட்டு, தனக்குண்டான யாவையும் செலவழித்தும் சற்றாகிலும் சுகம் அடையாமல், அதிக வருத்தப்படுகிறபொழுது,

கஒ இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு, அவருடைய வஸ்திரங்களை மாத்திரம் தொட்டால் சுகம் அடையலாமென்று எண்ணி,

கஓ சனங்களுக்குள்ளே (சென்று,) அவருக்குப் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.

கக உடனே அவளுடைய இரத்த ஊறல் நின்றுபோயிற்று; அந்தவேதனை நீங்கத் தான் ஆரோக்கியம் அடைந்ததை அவள் சரீரத்தில் உணர்ந்தாள்.

கங உடனே இயேசுவானவர் தம்மிலிருந்து [6]வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து திரும்பி, சனங்களைப் பார்த்து, என் வஸ்திரங்களைத் தொட்டவர் யார் என்றார்.

கஙக அதற்கு அவருடைய சீஷர்கள் சொன்னது: சனங்கள் உம்மை நெருக்குகிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டவர் யாரென்று எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.

1 மத். அ. கச. அப். கூ. கக.

2 லூக். அ. கஅ.

3 மத். க. க. லூக். அ. சஅ.

4 மத். க. கஅ. லூக். அ. சக.

5 க மோ. மஇ. உஇ. மத். க. உஅ.

6 லூக். க. கூ: அ. சக.

Digitized by Google

கூஉ அவர் அப்படிச் செய்தவ
ளைக் காணும்படிக்குச் சுற்றிலும்
பார்த்தார்.

கூக அப்பொழுது தன்னிடத்
திலே நடந்ததை அறிந்த ஸ்திரி
பயந்து நடுங்கி வந்து, அவனைச்
சாஷ்டாங்கமாய் வணங்கி, எல்
லாவற்றையும் அவருக்கு உண்
மையாய்ச் சொன்னாள்.

கூச அவளுடனே அவர் சொன்
னது: மகளே, [1]உன் விசுவாசம்
உன்னைக் குணமாக்கிற்று; நீ சமா
தானத்தோடே போய், உன் வே
தனை இன்றிச் சுகமாயிரு என்
றார்.

கூடு ¶ [2]அவர் பேசிக்கொண்டி
ருக்கையில் செபஆலயத்தலைவ
னுடைய வீட்டிலிருந்து சிலர் வந்
து, உம்முடைய குமாரத்தி இறந்
துபோனாள், இனி என் போத
னை வருத்தப்படுத்துகிறீர் என்
றார்கள்.

கூசு அவர்கள் சொன்ன வார்த்
தையை இயேசுவானவர் கேட்டு,
உடனே ஆலயத்தலைவனை நோக்
கி, நீர் பயப்படவேண்டாம், விசு
வாசமாகவே இரும் என்று சொ
ல்லி,

கூஎ பின்பு பேதுருவும் யாக்
கோபின் சகோதரனாகிய யோவா
னுந்தவிர, வேறொருவரும் தமக்
குப் பின்செல்லுகிறதற்கு இடங்
கொடாமல்,

கூஅ ஆலயத்தலைவனுடைய வீ
ட்டிலே சேர்ந்து, சந்தடியையும்
அழுதுகொண்டு மிகவும் புலம்பு
கிறவர்களையும் கண்டு,

கூக உட்பிரவேசித்து, நீங்கள்
சந்தடிபண்ணி அழுதுகொள்ளுகி
றதென்ன? பிள்ளை இறந்துபோ
காமல் [3]நித்திரைபண்ணுகிறாள்
என்றார்.

கூடு அவர்கள் அவனை நோக்கி
நகைத்தார்கள்; [4]பின்பு அவர் எல்
லாரையும் வெளியே போகப்பண்
ணி, பிள்ளையின் தகப்பனையும் தா
யையும் தம்மோடே வந்தவர்களை
யும் அழைத்துக்கொண்டு, பிள்ளை
கிடக்கிற இடத்தில் பிரவேசித்து,

கூச அதின் கையைப் பிடித்து,
தலீத்தாகூமி என்றார்; அதற்கு
சிறுபெண்ணே எழுந்திரு, உனக்
குக் கட்டளையிடுகிறேன் என்
அருத்தமாம்.

கூஉ உடனே பன்னிரண்டுவய
துள்ள அந்தப் பெண் எழுந்து நட
தாள்; (அதைக் கண்டவர்கள்
மிகுந்த ஆச்சரியத்தோடே பி
மித்தார்கள்.

கூசு [5]அப்பொழுது அவர்கள் அ
தை ஒருவருக்கும் அறிவியாத
படிக்கு உறுதியாகக் கட்டளை
யிட்டு, பின்பு அவளுக்குச் சாப்
பாடு கொடுக்கும்படி சொன்னார்.

சூ. அதிகாரம்.

க. கிறிஸ்து தம்முடைய ஊராரால் அசட்டை
பண்ணப்பட்டது. எ. அவர் பன்னிரண்டு சீட
களுக்கும் அசுத்த ஆவிகளின்மேல் அதிகாரமை
கொடுத்தது. ம. கிறிஸ்துவைக்குறித்த பலவி
மான தாற்பரியங்கள். உஎ. யோவான்ஸ்நான
தலைவெட்டுண்டு, உக. அடக்கம்பண்ணப்ப
டது. கூஎ. அப்போஸ்தலர்கள் பிரசங்கம்பண்ணி
திரும்பி வந்தது. கூச. ஐந்து அப்பங்களினாலும்
இரண்டு மீன்களினாலும் செய்யப்பட்ட அற்பு
தம். சஅ. கிறிஸ்து கடலின்மேல் நடந்தது. கூ
அனைந்த தொட்ட பாவரும் சுகம் அடைந்தது.

[6]அவர் அவ்விடம்விட்டுப் புறப்
பட்டு, தாம் வளர்ந்த ஊருக்குப்
போனார்; அவருடைய சீஷர் அ
வருக்குப் பின்சென்றார்கள்.

உ ஓய்வுநாள் வந்தபொழுது அ
வர் செபஆலயத்திலே உபதே
சம்பண்ணத் தொடங்கினார்; அ
தைக்கேட்ட அநேகர் பிரமிப்ப
டைந்து, [7]எங்கேயிருந்து இவை
கள் இவனுக்குத் தெரியவந்தன?
இவனுடைய கைகளினால் இப்ப
டிப்பட்ட பலத்த அற்புதங்கள்
நடக்கத்தக்கதாக, இவனுக்குக்
கொடுக்கப்பட்ட ஞானம் எப்ப
டிப்பட்டது?

ஊ இவன் மரியாளுக்குக் குமார
னும், [8]யாக்கோபு, யோசே, யூதா,
சீமோன் என்பவர்களுக்குச் ச
கோதரனுமாகிய தச்சனல்லவா?
இவனுடைய சகோதரிகளும் இ

1 மத். கூ. உஉ. மாற். ல. ஙூ. அப் ஏச. கூ.
2 லூக். அ. சகூ.
3 யோவா. ஙக. ஙக.
4 அப். கூ. சல.
5 மத். அ. ச: கூ. கல: லஉ. லங: லஎ. கூ. மாற். க. லஉ. லூக். ஙி. ஙச.
6 மத். லக. ஙச. லூக். ச. லகூ.
7 Cor. கூ. சூ.
8 மத். லஙூ. சகூ. லார். க. லகூ.

Digitized by Google

கே கம்மிடத்தில் இருக்கிறார்கள்ளவர்? என்று சொல்லி, [1]அவனைக் குறித்து வெறுப்படைந்தார்கள்.

ச அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது: [2]ஒரு தீர்க்கதரிசி தன் ஊரிலும் தன் இனத்தாரிடத்திலும் தன் குடும்பத்திலுமேயன்றி (மற்ற இடங்களிலே) கனமடையான் என்றார்.

ஞ [3]அங்கே அவர் சில நோயாளிகள்மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதே அன்றி வேறொரு அற்புதத்தைச் செய்யமாட்டாமல்,

ட அவர்களுடைய [4]அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்.

ஏ ¶ [5]பின்பு அந்தத் திசையிலுள்ள கிராமங்களிலே திரிந்து உபதேசம்பண்ணினார்; [6]அல்லாமலும் அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்தமான ஆவிகளின்மேல் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து,

அ அவர்கள் பையையானாலும் ஆகாரத்தையானாலும் கச்சையில் *பணத்தையானாலும் வழிக்காகக் கூடக் கொண்டுபோகாமல், ஒரு தடியைமாத்திரம் எடுத்துப்போகவும்,

க [7]பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டு போகவும், இரண்டு அங்கிகளைத் தரியாதிருக்கவும், அவர்களுக்குக் கட்டளையிட்டு,

ஐ [8]பின்பு அவர்களுக்குச் சொன்னதாவது: எங்கேயாகிலும் நீங்கள் ஒரு வீட்டில் பிரவேசித்தது முதல், அவ்விடத்தைவிட்டுப் புறப்படுகிறவனாக்கும் அங்கேதானே தங்கியிருங்கள்.

ஙக [9]எவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் உங்களுக்குச் செவிகொடாமலும் இருக்கிறார்களோ, [10]அவர்களுடைய இடத்தைநீங்கள் விட்டுப் புறப்பட்டு, அவர்களுக்கு விரோதமான சாட்சியாக, உங்கள் உள்ளங்காலில் படிந்திருக்கிற தூசியை உதறிப்போடுங்கள்; நியாயத்தீர்ப்பு நாளிலே சோதோம் கொமோரா பட்டணத்தாரிலும் அந்தப் பட்டணத்தார் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, இரண்டிரண்டு பேராக அவர்களை அனுப்பினார்.

ஙஉ அவர்கள் புறப்பட்டு, மனந்திரும்புங்கள் என்று பிரசங்கித்து,

ஙஊ அநேகம் பசாசுகளைத் துரத்தி, அநேகம் நோயாளிகளை [11]எண்ணெயால் பூசிக் குணமாக்கினார்கள்.

ஙச ¶ [12]அவருடைய பேர் பிரசித்தமானபடியினாலே, ஏரோது அரசன் (அவனைக்குறித்து) கேள்விப்பட்டு, யோவான்ஸ்நானன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறான்.

ஙடு [13]ஆதலால் பலத்த அற்புதங்கள் அவனாலே செய்யப்படுகின்றன என்றான்; சிலர் அவனை எலியாவென்றும், சிலர் அவனை ஒரு தீர்க்கதரிசி, அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவனைப்போல இருக்கிறானென்றும் சொன்னார்கள்.

ஙசு [14]ஏரோது அதைக் கேட்டபொழுது, அவன் நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான், அவன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறான் என்றான்.

ஙஎ அதெப்படியென்றால், ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்பினுடைய மனைவி ஏரோதியாளை விவாகம்பண்ணினபொழுது,

ஙஅ யோவான் ஏரோதை நோக்கி, [15]நீர் உமது சகோதரனுடைய மனைவியைக் கொள்ளுகிறது நியாயமல்ல என்று சொன்னபடியினாலே,ஏரோது (ஆள்களை அனுப்பி) அவனைப் பிடித்துக் காவலில் கட்டிவைத்தான்.

கி. பி. ஈஉ.

1 மத். ஙக. ஈ.

2 மத். ஊ. ஙெ. போவா. ச.சச.

3 உ மோ. ஙஊ. உஉ:ஈஉ.உஙி. மத். ஙஊ. ஙஅ. மாற். ஈ. உஈ.

4 சோ. ஙஊ. ஙஊ.

5 மத். ஈ. ஈஙி. லூக். ஙக. உஉ.

6 மத். ஙி.ஈ. மாற். ஈ. ஙஊ, ஙச. லூக். ஈ. ஈ.

* இந்த மொழி ஒரு சின்னத்தட்டையாவது பொதுவாய்ப் பணத்தையாவது குறிக்கும். மத். ஙி. ஈ. லூக். ஈ. ஈ.

7 அப். ஙஉ. அ.

8 மத்.ஙி.ஙஈ. லூக். ஈ.ச: ஙி. எ. அ.

9 மத். ஙி. மச. லூக். ஙி. ஙி.

10 அப். ஙஈ. ஙஈ: ஙஅ. ஈ.

11 யாக். ஙெ. ஙச.

12 மத். ஙச. ஈ. லூக். ஊ. எ.

13 மத். ஙஈ. ஙச. மாற். அ. உஅ.

14 மத். ஙச. உ. லூக். ஈ. ஙஊ.

15 உ மோ. ஙஅ. ஙஈ: உஙி. உஈ.

Digitized by Google

யக அல்லாமலும் ஏரோதியாள் அவனுக்குக் கெடுதிநினைத்து, அவனைக்கொலைசெய்ய விரும்பினாள்.

உல [1]ஏரோது யோவானை நீதியும் பரிசுத்தமும் உள்ளவனென்று அறிந்து, அவனுக்குப் பயந்து, அவனை நன்றாய்க் காத்து, அவனுடைய ஆலோசனையின்படி அநேகம் காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவனுடைய சொற் கேட்டு வந்தான்; ஆகையால் அவள் அப்படிச் செய்யக் கூடாமல் இருந்தது.

உக பின்பு அதற்கேற்ற நாள் வந்தது; எப்படியென்றால், [2]ஏரோது தன் சென்மநாளிலே [3]தன்னுடைய மந்திரிகளுக்கும் சேனபதிகளுக்கும் கலிலேயாநாட்டின் பிரபுக்களுக்கும் விருந்துபண்ணின காலத்திலே,

உஉ ஏரோதியாளுடைய குமாரத்தி உள்ளே சென்று, ஏரோதுக்கும், பந்தியிருந்த மற்றவர்களுக்கும் பிரியம் உண்டாகத்தக்கதாக நடனம்பண்ணினபொழுது, இராசா அந்தச் சிறுபெண்ணை நோக்கி, உனக்கு வேண்டியதை என்னிடத்தில் கேள், நான் உனக்குத் தருவேன் என்று சொன்னதுமல்லாமல்,

உங [4]நீ என் இராச்சியத்தில் பாதிவரைக்கும் எதைக் கேட்டாலும், அதை உனக்குத் தருவேனென்று அவளுக்கு ஆணையும் இட்டான்.

உச அப்பொழுது அவள் வெளியே போய்த் தன் தாயை நோக்கி, நான் என்ன கேட்கவேண்டும் என்று சொன்னதற்கு, யோவான்ஸ்நானனுடைய தலையைக் கேள் என்றாள்.

உஙி உடனே அவள் சீக்கிரமாக இராசாவினிடத்திற்குத் திரும்பிப் போய், நீர் இப்பொழுதுதானே ஒரு தாலத்திலே யோவான்ஸ்நானனுடைய தலையை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டாள்.

கி. பி. ௬௨.

1 மத். ம. ஞ. ஓ: உக. உங.
2 மத். ம. ஞ. ங.
3 ங லூ. ச. உஓ.
4 எஸ். ஓ. ங, ஞ: ஏ. உ.
5 மத். ம. ஞ. ஙி.

* அல்லது கொலைஞனுக்கு.

உங [5]அப்பொழுது இராசா மிகுந்த துக்கம் அடைந்தான்; அப்படியிருந்தும், ஆணைகளின் நிமித்தமும் தம் பந்தியிருந்தவர்களின் நிமித்தமும் அவளுக்கு அதை மறுக்க மனதில்லாமல்,

உச உடனே அவனுடைய சே லையைக் கொண்டுவரும்படிக்கு போர்ச்சேவகனுக்கு * கட்டளையிட்டு அனுப் பினான்; அந்தப்படியே அவன் போய்க் காவற்கூடத்திலே யோவானைச் சிரச்சேதம்பண்ணி,

உஅ ஒரு தாலத்திலே அவனுடைய தலையைக் கொண்டுவந்து, அதைச் சிறுபெண்ணுக்குக் கொடுத்தான்; சிறுபெண் அதைத் தன் தாய்க்குக் கொடுத்தாள்.

உக அவனுடைய சீஷர் அதைக் கேட்டு வந்து, அவன் உடலை எடுத்து, ஒரு கல்லறையிலே வைத்தார்கள்.

6 லூக். ஙு. ம.

ஙும ¶ [6]அத்தருணத்திலே அப்போஸ்தலர்கள் இயேசுவினிடத்தில் கூடிவந்து, தாங்கள் செய்தது யாவையும் போதகம்பண்ணினது யாவையும் அவருக்கு அறிவித்தார்கள்.

7 மாற். ங. உக.

ஙக பின்பு அவர்கள் போசனம் பண்ணும்படிக்கும் சமயம் இல்லாதிருக்கத்தக்கதாக [7]வருகிறவர்களும் போகிறவர்களும் மிகுதியானபடியினாலே, [8]அவர் அவர்களை நோக்கி, நீங்கள் வனாந்தரமான இடத்திலே தனித்திருந்து சற்றே இளைப்பாற வாருங்கள் என்று சொன்னார்.

8 மத். ம. ஞ. ஙூ.

ஙஉ [9]அந்தப்படி அவர்கள் தனித்திருக்கும்படிக்குப் படவில் பிரவேசித்து வனாந்தரமான இடத்திற்குப் போனார்கள்.

9 மத். ம. ஞ. ஙூ.

ஙஙூ ¶ அவர்கள் புறப்பட்டுப் போகிறதைச் சனங்கள் கண்டு, (அவர்கள் போகிற) இடத்தை அறிந்து, சகல பட்டணங்களிலுமிருந்து கால் நடையாய் அவ்விடத்திற்கு ஓடி, அவர்களுக்கு முன்

Digitized by Google

னே அங்கே சேர்ந்து அவரிடத்தில் கூடிவந்தார்கள்.

௨ [1]இயேசுவானவர் கணவில் வந்து மிருந்த சனங்களைக் கண்ட பொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல இருந்தபடியினாலே, அவர்கள்மேல் உருக்கமாய் இரங்கி, [2]அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசித்தார்.

௩ [3]பின்பு பொழுது மிகவும் கழிந்துபோனபடியால், அவருடைய சீஷர் அவரிடத்தில் வந்து, இது வனாந்தரமான இடம், அல்லாமலும் மிகவும் பொழுதுபோயிற்று.

௪ போசனம்பண்ணுகிறதற்கு இவர்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற ஊர்களுக்கும் கிராமங்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக்கொள்ளும்படிக்கு, இவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.

௫ அதற்கு அவர், நீங்களே இவர்களுக்குப் போசனம் கொடுங்கள் என்றார்; அவர்கள் சொன்னது: இவர்களுக்குப் போசனம் கொடுக்கும்படிக்கு, [4]நாங்கள் போய் *இருநூறு தேனாரிய பணத்திற்கு அப்பங்களை வாங்கிக்கொண்டுவரலாமா என்றார்கள்.

௬ அதற்கு அவர், எவ்வளவு அப்பங்கள் உங்களிடத்தில் உண்டு, போய்ப் பாருங்கள் என்றார்; [5]அவர்கள் விசாரித்து (வந்து,) ஐந்து அப்பமும் இரண்டு மீனும் இருக்கின்றனவென்று சொன்னார்கள்.

௭ அப்பொழுது அவர்கள் கூட்டங்கூட்டமாக எல்லாச் சனங்களையும் பசுமையான புல்வின்மேல் உட்காரப்பண்ணும்படிக்குக் கட்டளையிட்டார்.

௮ அப்படி நூறுபேர் ஒரு கூட்டமும், ஐம்பதுபேர் ஒரு கூட்டமுமாகச் சதுக்கம் சதுக்கமாய் உட்கார்ந்தார்கள்.

வி. பி. கூஉ.

1 மத்.க.௧௪:௰ச. ம.ச.

2 லூக். க. ம௬.

3 மத். ம.ச. ம௱. லூக். க. ஙஉ.

4 சமே. ஙக. ஙக, ஙஉ. உ இரா. ச. சக.

* உரோமருடைய தோனிய பணவெள்ளி முதற் பேனிக்குசரி. மத். ௨அ. உஅ.

5 மத். ம.ச. ஙச. லூக். க. ம.ச. போல க. க. மத். ம௱. ஙச. மாற். அ. ஐ.

6 கொரி. க. ஙக. மத். உக. உக.

7 ஞா. ம.ச. உஉ. போல.க.ஙக.

† ஊருக்கு சேராக.

8 மத். ம.ச. உக. போல.க. ஙக, ௨அ.

9 லூக்.உச.உஅ.

சக பின்பு அவர் அவ்வைந்து அப்பங்களையும் அவ்விரண்டு மீனையும் எடுத்து, [6]வானத்தை அண்ணாந்து பார்த்து அவைகளை ஆசீர்வதித்து, பின்பு அப்பங்களைப் பிட்டுச் சனங்களுக்குக் கொடுக்கும்படிக்கு அவைகளைச் சீஷர்களுக்குக் கொடுத்து, பின்பு அவ்விரண்டு மீனையும் அவர்கள் எல்லாருக்கும் பங்கிட்டார்.

சஉ எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

சஊ அல்லாமலும் (அப்பங்களிலும்) மீன்களிலும் சேஷமானவைகளைப் பன்னிரண்டுகூடை நிறைய எடுத்தார்கள்.

சச ஏறக்குறைய ஐயாயிரம்புருஷர் போசனம்பண்ணினார்கள்.

சஙு ¶ [7]பின்பு தாம் சனங்களை அனுப்புகையில், தமக்கு முன்னாகச் சீஷர்கள் படவில் ஏறி அக்கரையில் பெதுசாயிதா என்னும் †ஊருக்குப் போகும்படிக்கு அவர்களைத் துரிதப்படுத்தினார்.

சசு பின்பு அவர் சனங்களை அனுப்பி, செபத்தியானம்பண்ணும்படிக்கு மலையில் ஏறினார்.

சஎ ¶ [8]சாயங்காலமானபொழுது, படவு கடலின் நடுவிலே சேர்ந்தது; அவர்மாத்திரம் கரையிலே இருந்தார்.

சஅ அப்பொழுது காற்று அவர்களுக்கு எதிரானபடியினாலே, அவர்கள் வருத்தத்தோடே (படவை) தள்ளினதை அவர் கண்டு, பின்பு இராத்திரியில் நாலாம் சாமத்திலே புறப்பட்டுக் கடலின்மேல் நடந்து அவர்களிடத்திற்குச் சமீபித்து, [9]அவர்களைக் கடந்து போக மனதாயிருந்தார்.

சக கடலிலே நடந்துபோகிறவனை அவர்கள் கண்டபொழுது, அது ஆவேசம் என்று எண்ணிச் சத்தமிட்டார்கள்.

சல அல்லாமலும் எல்லாரும் அவனைக்கண்டு, கலக்கம் அடைந்தார்கள்; உடனே அவர் அவர்களை

Digitized by Google

நோக்கி, திடமாயிருங்கள், நான் தான், பயப்படாதிருங்கள் என்று அவர்களுடனே சொன்னார்.

நக பின்பு அவர் அவர்கள் இருக்கிற படவில் பிரவேசித்தவுடனே காற்று நின்றுபோயிற்று.

நஉ [1]அவர்கள் கடினமான இருதயம் உடையவர்களாகையால், அந்த அப்பங்களைக்குறித்துச் சிந்தனைபண்ணுமல் இருந்தபடியினாலே [2]மிகவும் மிகுதியாய்த் தங்களுக்குள்ளே பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.

நஙு ¶ [3]பின்பு அவர்கள் புறப்பட்டுக் கெநேசரேத்து நாட்டிலே வந்து கரைபிடித்தார்கள்.

நசு அவர்கள் படவைவிட்டிறங்கினவுடனே சனங்கள் அவனை அறிந்து,

நஞ அந்தத் திசையில் எங்கும் ஓடித்திரிந்து, படுக்கைகளில் கிடக்கிற பிணியாளிகளை எடுத்து, அவர் வந்திருக்கிறாரென்று கேள்விப்பட்ட இடங்களில் கொண்டுவரத் தொடங்கினார்கள்.

நசு அல்லாமலும் அவர் பிரவேசித்த கிராமம் பட்டணம் ஊர் எவைகளோ, அவைகளின் சந்தைகளில் பிணியாளிகளை வைத்து, அவர்கள் அவருடைய [4]வஸ்திரத்தின் ஓரத்தைமாத்திரம் தொடும்படிக்கு அவனை வேண்டிக் கொண்டார்கள்; எவர்கள் அதைத் *தொட்டார்களோ அவர்கள் சொஸ்தம் அடைந்தார்கள்.

எ. அதிகாரம்.

க. ஷேர்கள் கைகழுவாமல் போசனம்பண்ணினதைக்குறித்துப் பரிசேயர் குற்றம்பிடித்தது. அ. அந்தப் பரிசேயர் முதலியவர்கள் மனுஷர்களுடைய பாரம்பரை நியாயங்களினால் தாபாலுடைய கட்டளைகளை மீறினது. உசு. போசனம் மனுஷனை அசுசிப்படுத்தாதென்பது. உச. கிரேக்கு தேசத்துப் பிறப்பான ஒரு ஸ்திரியின் மகளிடத்திலிருந்த அசுத்த ஆவியை நீக்கி, கக. செவிடனும் தெத்துவாயனுமான ஒருவனைச் சுகப்படுத்தினது.

[5]பரிசேயரும் மற்ற யூதர்களெல்லாரும் பெரியோர்களுடைய பாரம்பரை நியாயங்களைக் கைக் கொள்ளும்படிக்கு மணிக்கட்டு வரைக்கும் கைகழுவாமல் †போசனம்பண்ணமாட்டார்கள்.

உ அல்லாமலும் சந்தைகளிலிருந்து (வந்தால்) ஸ்நானம்பண்ணுமல் போசனம்பண்ணமாட்டார்கள்; மேலும் சலபாத்திரங்களையும், குடங்களையும், செப்புப்பாத்திரங்களையும், ‡கட்டில்களையும் ஸ்நானம்பண்ணுவித்து, மற்றும் அப்படிப்பட்ட அநேகம் சடங்குகளைப் பற்றிக்கொள்ளுவார்கள்.

ஊ ஆதலால் பரிசேயரும் வேதபாரகரில் சிலரும்கூடி, எருசலேம் பட்டணத்திலிருந்து அவரிடத்தில் வந்து,

ஈ அவருடைய சீஷரில் சிலர் கைகழுவாமல் அசுத்தமான கைகளோடே §போசனம்பண்ணுகிறதைக் கண்டபொழுது, அவர்களை அவனை நோக்கி,

ஒ [6]உம்முடைய சீஷர் பெரியோருடைய பாரம்பரை நியாயத்தை மீறி நடந்து, கைகழுவாமல் போசனம்பண்ணுகிறதென்ன என்று கேட்டார்கள்.

ஓ அதற்கு மாறுத்தரமாக அவன் சொன்னது: நீங்கள் பராபரனுடைய கட்டளையைவிட்டு, குடங்களையும் சலபாத்திரங்களையும் ஸ்நானம்பண்ணுவித்து, மற்றும் அப்படிப்பட்ட அநேக சடங்குகளைச் செய்து, மனிதர்களுடைய பாரம்பரை நியாயங்களைக் கைக்கொள்ளுகிறீர்கள்.

ஔ ஆகையால் [7]இந்தச் சனங்கள் உதடுகளினாலே என்னைக் கனம்பண்ணியும், இவர்களுடைய இருதயம் எனக்குத் தூரமாய் விலகி இருக்கிறதென்றும்,

அ மனிதர்களுடைய கற்பனைகளாகிய உபதேசங்களை இவர்கள் கற்றுக்கொண்டு, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், ஏசாயா என்பவன் மாயக்காரராகிய உங்களைக்குறித்து நன்றாய்த்

---

1 மாற். அ. ஙஎ, ஙஅ.

2 மாற்.க.இ: ஙக. ஙச.

3 மத். ஙச. ச.

4 மத். க. உக. மாற். இ. உஎ, உஅ. அப். ஙக. ஙக.

* அல்லது அவனை.

5 மத். ஙஇ. க.

† அல்லது எவியவர்களோடே.

‡ அல்லது பீடங்களையும்.

§ அல்லது அடிக்கடி.

6 மத். ஙஇ. உ.

7 ஏசா. உக. ஙக. மத். ஙஇ. அ.

Digitized by Google

நீக்கதரிசனம் சொல்லியிருக்கி
ருன் என்று சொல்லி,

கூ பின்பு உங்கள் பாரம்பரை
யாயங்களைக் காத்துக்கொள்ளும்
படிக்கு, நீங்கள் பராபரனுடைய
கட்டளையைத் தள்ளிக்கொண்டு*
வருகிறது நன்றுயிருக்கிறது.

ல என்னவென்றால், [1]உன் தகப்
பனையும் உன் தாயையும் கனம்
பண்ணுவாயாக [2]என்றும், தகப்
பனையாவது தாயையாவது நிந்திக்
கிறவனுக்கு மரண ஆக்கினையைக்
கொடுக்கவேண்டும் என்றும் மோ
சே சொன்னாரே.

ஙக [3]நீங்கள், ஒருவன் தன் தகப்ப
னையாவது தாயையாவது நோக்கி,
உங்களுக்கு என்னாலே உதவுகிற
தேதோ, அது (தேவாலயத்திற்குக்
காணிக்கையாகிய) கொர்பானுவ
தாக என்று சொன்னால்,

ஙஉ பின்பு அவன் தன் தகப்ப
னுக்கும் தன் தாய்க்கும் உதவி
செய்ய வேண்டுவதில்லை என்று
உத்தரவு கொடுத்து,

ஙக இவ்விதமாய் உங்களால் உண்
டாக்கப்பட்ட பாரம்பரை நியா
யத்தினாலே பராபரனுடைய வச
னத்தை அவமாக்குகிறீர்கள்; அது
போல நீங்கள் மற்றும் அநேகம்
காரியங்களையும் செய்கிறீர்கள்
என்று சொல்லி,

ஙச [4]பின்பு எல்லாச் சனங்களை
யும் அழைத்து, அவர்களுடனே
சொன்னது: நீங்கள் எல்லாரும்
எனக்குச் செவிகொடுத்துச் சிந்
தித்துக்கொள்ளுங்கள்.

ஙஇ ஒரு மனிதனுக்குப் புறம்
பேயிருக்கிற எந்தப்பொருளும் அ
வனுக்கு உட்பிரவேசிக்கிறபொ
ழுது அவனை அசுசிப்படுத்தமாட்
டாது; அவன் உள்ளத்திலிருந்து
புறப்படுகிற பொருள்களே அவ
னை அசுசிப்படுத்துகின்றன.

ஙஈ [5]கேட்கிறதற்கு ஒருவன் கா
துள்ளவனானால் கேட்கக்கடவன்
என்றார்.

* அல்லது புரட்டி.

1 உ மோ. உம். உஉ. ஓமோ. ஓ. உக. மத். உஓ.ச.

2 உ மோ. உச. உள. உ.மோ.உம். கூ. வாக். உம். உம்.

3 மத். உஓ. ஓ: உச. உஅ.

4 மத். உஓ. ம.

5 மத். உக. உஓ.

6 மத். உஓ. உஓ.

7 க மோ. கூ. ஓ: அ. உக. மத். உஓ. உகூ.

† அல்லது பொருளாசைகள், மூர்க்கங்கள்.

8 மத். உஓ. உக.

‡ அல்லது ஓரக்க.

ஙசு [6]பின்பு அவர் சனங்களை
விட்டு வீட்டில் பிரவேசித்தபொ
ழுது, அவருடைய சீஷர்கள் அந்த
உவமையைக் குறித்து அவரிடத்
தில் விளவினார்கள்.

ஙஅ அவர்களுடனே அவர் சொ
ன்னது: நீங்களும் புத்தியில்லாத
வர்களா? புறம்பே இருக்கிற எந்
தப்பொருளும் மனிதனுக்கு உட்
பிரவேசிக்கிறபொழுது அவனை
அசுசிப்படுத்தமாட்டாதென்று
நீங்களும் அறிந்திருக்கவில்லையா?

ஙக அது அவனுடைய இருத
யத்திலே பிரவேசியாமல் வயிற்
றில் பிரவேசிக்கிறதே; அதிலிருந்
து எல்லாப் போசனங்களையும் கழி
க்கிற ஆசனவழியாய்ப் புறப்படு
கின்றன.

ஙய மனிதனுடைய உள்ளத்தி
லிருந்து புறப்படுகிறதே அவனை
அசுசிப்படுத்துகின்றது.

ஙக அதெப்படியெனில், மனித
ருடைய இருதயத்திலிருந்து,

ஙஉ [7]விபசாரம், வேசித்தனம்,
கொலை, திருட்டு, † தகாதபொரு
ளாசை, மூர்க்கம், கபடம், காம
விகாரம், பொறுமை, தூஷணம்,
அகந்தை, மதிகேடு என்பவைக
ளுக்கு எதுவான பொல்லாதயோ
சனைகள் புறப்படுகின்றன.

ஙஊ நீமையான இவைகளெல்
லாம் உள்ளத்திலிருந்துபுறப்பட்டு,
மனிதனை அசுசிப்படுத்துகின்றன
என்று திருவுளம்பற்றினார்.

ஙஎ ¶ [8]பின்பு அவர் எழுந்து அவ்
விடம்விட்டுத் தீருசீதோன் பட்ட
ணங்களின் எல்லைகளுக்குப் போ
னார்; அங்கே அவர் ஒரு வீட்டிலே
பிரவேசித்த பின்பு, தம்மை ஒருவ
ரும் அறியாமல் இருக்கும்படிக்கு
மனதாயிருந்தும், அவர் மறைந்தி
ருக்கிறதற்கு எதுவில்லை.

ஙஏ எப்படியென்றால், சூர்பே
னீக்கியா தேசத்தில் பிறந்த அஞ்
ஞானியாகிய ‡ஒரு ஸ்திரியானவ
ளுக்கு அசுத்த ஆவியையுடைய
மகள் இருந்தாள்.

Digitized by Google

உசு அந்த ஸ்திரி அவனைக்குறித்துக் கேள்விப்பட்டபொழுது, அவள் வந்து வணக்கமாய் அவருடைய பாதங்களின் அருகே விழுந்து, தன்னுடைய மகளிலிருந்து பசாசைத் துரத்தவேண்டுமென்று அவனை வேண்டிக்கொண்டாள்.

உஎ இயேசுவானவர் அவளைநோக்கி, பிள்ளைகளுடைய ஆகாரத்தை எடுத்து, நாய்களுக்குக் கொடுக்கிறது நியாயமல்ல; ஆகையால் முதலாவது பிள்ளைகளே திருத்தியடையட்டும் என்றார்.

உஅ அதற்கு அவள் சொன்னது: ஆண்டவரே, அது சரிதான்; ஆனாலும் போசனப்பலகைகளின்கீழிருக்கிற நாய்கள் பிள்ளைகளுடைய உச்சிட்டங்களைத் தின்னுமே என்றாள்.

உக அப்பொழுது அவர் சொன்னது: நீ இந்த வசனத்தைச் சொன்னபடியினாலே (சந்தோஷமாய்ப்) போ; பசாசு உன் மகளிலிருந்து புறப்பட்டுப்போயிற்று என்றார்.

கூய அவள் தன் வீட்டிலே போய்ச் சேர்ந்தபொழுது பசாசு புறப்பட்டுப்போனதையும், தன் மகள் கட்டிலின்மேல் படுத்திருக்கிறதையும் கண்டாள்.

கூக ¶ [1]பின்பு அவர் தீருசீதோன் பட்டணங்களின் திசைகளைவிட்டுப் புறப்பட்டு, தெக்கப்போலி என்னும் தேசத்தின் திசைகளின் வழியாய் மறுபடியும் கலிலேயா கடலுக்கே வந்தார்.

கூஉ [2]அங்கே கொன்னைவாயையுடைய செவிடனை அவரிடத்தில் கொண்டுவந்து, அவர் தமது கையை அவன்மேல் வைக்கும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டார்கள்.

கூங அப்பொழுது அவர் கூட்டத்திலிருந்து அவனை ஒரு பக்கத்திலே கொண்டுபோய், தமது விரல்களை அவனுடைய காதுகளில் வைத்து [3]உமிழ்ந்து, அவனுடைய நாவைத்தொட்டு,

இ. பி. கூஉ.

1 மத். மஇ. உக.
2 மத். க. கஉ. லூக். மக. மச.
3 மாற். அ. உக. போள. க. க.
4 மாற். க. சக. போள. மக. சக: மஎ. க.
5 போள. உக. கக, கஅ.
6 சொ. உஇ. இ, க. மத். மக. இ.
7 மாற். இ. சக.

கூச [4]பின்பு வானத்தை அண்ணாந்து பார்த்து [5]மூச்சைவிட்டு: எப்பத்தா என்றார்; எப்பத்தா என்பதற்குத் திறக்கப்படுவாயாக என்று அருத்தமாம்.

கூரு [6]உடனே அவனுடைய காதுகள் திறக்கப்பட்டன; அவன் நன்றாய்ப் பேசத்தக்கதாக அவனுடைய நாவின் கட்டும் நீக்கப்பட்டது.

கூசு [7]பின்பு அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்; அப்படியிருந்தும், தங்களுக்கு அவர் அப்படிக் கட்டளையிட்டது எவ்வளவோ, அவ்வளவாய் அதைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

கூள அல்லாமலும் அவர் சகலத்தையும் நன்றாய்ச் செய்தருளினார்; செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும்பண்ணுகிறாரென்று மிகவும் மிகுதியான ஆச்சரியத்தோடே சொல்லிக்கொண்டார்கள்.

அ. அதிகாரம்.

க. மிகுந்த காலமிருப்பேருக்கு அற்புதமாய்ச் சாப்பாடு கொடுத்தது. ம. பரிசேயருக்கு ஒரு அடையாளமும் கொடுக்கப்படுவதில்லை என்பது. ங பரிசேயருடைய புளித்தமாவுக்கும், ஏரோதுடைய புளித்தமாவுக்கும் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமென்று போதித்தது. உஉ. ஒரு குருடனுக்குப் பார்வை கொடுத்தது. உஎ. பாடுபட்டு உயிரோடெழுந்திருக்கவேண்டுமென்று போதித்தவராகிய கிறிஸ்து நாமே என்று அறிக்கையிட்டது. உச. சுவிசேஷத்தின் நிமித்தமாய் வரும் தள்ளுதலுக்கு ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று போதித்தது.

[8]அந்த நாள்களிலே சனங்கள் மிகுந்த கூட்டமாய்ப் போசனம்பண்ணுகிறதற்கு ஒன்றும் இல்லாதிருந்தபொழுது, இயேசுவானவர் தம்முடைய சீஷர்களை அழைத்து,

உ இந்தச் சனங்கள் என்னிடத்தில் வந்து மூன்றுநாளாயிற்று; இப்பொழுது போசனம்பண்ணுகிறதற்கு இவர்களுக்கு ஒன்றுமில்லையே; ஆகையால் இவர்கள்மேல் உருக்கமாய் இரங்குகிறேன்.

8 மத். மஇ. கஉ.

Digitized by Google

கி. பி. கூஉ.

கஅல்லாமலும் இவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்தவர்களாகையால், நான் அவர்களைப் பட்டினியாய் வீட்டிற்கு அனுப்பினால் வழியிலே சோர்ந்துபோவார்கள் என்று சொன்னபொழுது,

சசீஷர்கள் அவருக்கு மாறுத்தரமாக, இந்த வனாந்தரத்திலே ஒருவன் இவர்களுக்கு அப்பங்களினாலே திருத்தியாக்குவது எப்படி என்றார்கள்.

டஅதற்கு அவர், [1]எத்தனை அப்பங்கள் உங்களிடத்தில் உண்டென்று கேட்டார்; ஏழு அப்பங்கள் உண்டென்றார்கள்.

ணஅப்பொழுது சனங்கள் தரையிலே இருக்கும்படி கட்டளைபிட்டு, பின்பு அந்த ஏழு அப்பங்களையும் எடுத்துத் தோத்திரம்பண்ணி, அவைகளைப் பிட்டு, அவர்களுக்குமுன்னே பரிமாறும்படிக்கு அவைகளைச் சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அந்தப்படி அவர்கள் சனங்களுக்குப் பரிமாறினார்கள்.

தஅல்லாமலும் சில சிறிய மீன்கள் அவர்களிடத்தில் இருந்தன; [2]அவர் தோத்திரம் சொன்னபின்பு அவைகளையும்பரிமாறும்படிக்குக் கட்டளையிட்டார்.

நஅப்படிச் சனங்கள் சாப்பிட்டுத் திருத்தியடைந்தார்கள்; ஏழு கூடைநிறையச் சேஷமானவைகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

பஞ்சாயிரம்பேர் ஏறக்குறைய காலாயிரம்பேர் உண்டு.

ப ¶ [3]பின்பு அவர்களை அனுப்பிவிட்டு, உடனே தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறித் தல்மனுத்தாவூரின் நிசைகளில் வந்தார்.

பக [4]அங்கேயிருந்து பரிசேயர் அவனைப் பரிட்சைபார்க்கும்படிக்குப் புறப்பட்டு வந்து, அவருடனே தருக்கம்பண்ண ஆரம்பித்து, அவர் வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டும்படி கேட்டார்கள்.

1 மத். மஇ. உச. மாற். க. உஅ.
2 மத். மச. உக. மாற். க. சக.
3 மத். மஇ. உக.
4 மத். மஉ. உஅ: மக. உ. போவா. க. கல.

5 மத். மக.

6 மத். மக. க. லூக். மஉ. க.

7 மத். மக. எ.

8 மற். க. மஉ.

9 மத். மச. மம. மாற். க. சக. லூக். க. மஎ. போவா. உ.மக.

பஎஅப்பொழுது அவர் தமது உள்ளத்திலிருந்து பெருமூச்சைவிட்டு, இந்தத் தலைமுறையார் என்னத்திற்காலே ஓர் அடையாளத்தைக் கேட்கிறார்கள்; இந்தச் சந்ததியாருக்கு ஓர் அடையாளம் கொடுக்கப்படுவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

பஏஅவர்களைவிட்டு மறுபடியும் படவில் ஏறி, அக்கரைக்குப் போனார்.

பஎ ¶ [5]சீஷர்கள் அப்பங்களைக் கூடக் கொண்டுபோக மறந்தார்கள்; படவில்(பிரவேசிக்கையில்) ஒரே அப்பம்மாத்திரம் அவர்களிடத்தில் இருந்தது.

பஐ [6]அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நீங்கள் பரிசேயருடைய புளிப்புள்ள மாவுக்கும், ஏரோதினுடைய புளிப்புள்ள மாவுக்கும் விலகி, மிகவும் எச்சரிக்கையாயிருக்கக்கடவீர்கள் என்று அவர்களுக்குக்கட்டளையிட்டார்.

பஙஅவர்கள் (அதைக் கேட்டு,) தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு, நம்மிடத்தில் [7]அப்பங்கள் இல்லாதபடியால் இப்படிச் சொன்னார் என்றார்கள்.

பஙஆ இயேசுவானவர் அதை அறிந்து, அவர்களை நோக்கி, உங்களிடத்தில் அப்பங்கள் இல்லாததைக்குறித்து என் யோசனைபண்ணுகிறீர்கள்? [8]இதுவரைக்கும் நீங்கள் அறிந்துகொள்ளாமலும் சிந்தித்துக்கொள்ளாமலுமா இருக்கிறீர்கள்; இதுவரைக்கும் உங்கள் இருதயம் கடினமாயிருக்கிறதா?

பஙஇ கண்கள் இருந்தும் நீங்கள் காணுமலா இருக்கிறீர்கள்? காதிருந்தும் நீங்கள் கேளாமலா இருக்கிறீர்கள்? நீங்கள் நினைவுகூரவில்லையா?

பஙஈ [9]அந்த ஐயாயிரம்பேருக்குள்ளே நான் அவ்வைந்து அப்பங்களையும் பிட்டுக் கொடுத்தபொழுது, எவ்வளவு கூடைநிறையச்

Digitized by Google

சேஷமானவைகளை எடுத்தீர்கள் என்று கேட்டதற்கு, பன்னிரண்டுகூடை நிறைய எடுத்தோம் என்றார்கள்.

கி. பி. கூஉ.

உய [1]அல்லாமலும் அந்த நாலாயிரம்பேருக்குள்ளே (நான்) அந்த ஏழு அப்பங்களையும் (கொடுத்த) பொழுது, எவ்வளவு கூடைநிறைய சேஷமானவைகளை எடுத்துக் கொண்டீர்கள் என்று கேட்டதற்கு, ஏழு கூடைநிறைய என்றார்கள்.

1 மத். மெ. ஈ. அ. ஆ.

உக அவர் சொன்னது: அப்படியிருக்க, [2]நீங்கள் சிந்தித்துக்கொள்ளாமல் இருப்பதெப்படி என்று திருவுளம்பற்றினார்.

2 மாற். க. ஊ. மெ. ஆ.

உஉ ¶ பின்பு அவர் பெதுசாயிதா ஊருக்கு வந்தார்; அங்கே ஒரு குருடனை அவரிடத்திற்குக் கொண்டுவந்து, அவனைத் தொடும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்.

உக அப்பொழுது அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்திற்குப் புறம்பே கொண்டுபோய், [3]அவனுடைய கண்களில் உமிழ்நீரைத் தடவித் தமது கைகளை அவன்மேல் வைத்து, உனக்கு ஏதாகிலும் தோன்றுகிறதா என்று கேட்டார்.

3 மாற். எ. கக. 4 மத். அ. ச. மாற். இ. சக. 5 மத். மக. மூ. லூக். கூ. மஅ. 6 மத் மச. உ. 7 மத். மக. மூ. போஎ. க. கஅ: மூ. உ. 8 மத். மக. உஅ. 9 மத். மக. உக: மா. உஉ. லூக். கூ. உஉ.

உங பின்பு அவர் மறுபடியும் தம்முடைய கைகளை அவனுடைய கண்களின்மேல் வைத்து அவன் நிரும்பஅண்ணாந்து பார்க்கும்படி செய்தார்; அப்பொழுது அவன் நன்றாய்க் குணமாக்கப்பட்டுச் சகலத்தையும் தெளிவாய்ப் பார்த்தான்.

உச பின்பு அவர் அவனை நோக்கி, [4]நீ கிராமத்தில் பிரவேசியாமலும், அதில் ஒருவனுக்கும் இதைச் சொல்லாமலும் இருவென்று சொல்லி, அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்.

உஎ ¶ [5]பின்பு இயேசுவானவர் தம்முடைய சீஷர்களோடுங்கூட அவ்விடம்விட்டுப் பிலிப்பின் கேசரியாபட்டணத்தருகே இருக்கிற கிராமங்களுக்குப் போனார்; வழியிலே அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி, என்னைக்குறித்து மனிதர் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்டார்.

உஅ அவர்கள் சொன்னது: [6]சிலர் உம்மை ஸ்நானனாகிய யோவானென்றும், சிலர் எலியாவென்றும், சிலர் உம்மைத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

உஆ அப்பொழுது அவர், நீங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார்; அதற்குப் பேதுரு, [7]நீர் கிறிஸ்துவே என்றான்.

கூ [8]அப்பொழுது தம்மைக்குறித்து அப்படி ஒருவருக்கும் சொல்லாதபடிக்குக் கட்டியாய் அவர்களுக்குக்கட்டளையிட்டார்.

கூக ¶ [9]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும் பெரியோர்கள் பிரதான ஆசாரியர் வேதபாரகர் என்பவர்களாலே தள்ளப்படவும், மரணமடையவும், பின்பு மூன்றுநாளுக்குள்ளே உயிரோடெழுந்திருக்கவும் வேண்டுமென்று அவர்களுக்கு அறிவிக்கத் தொடங்கினார்.

கூஉ அப்படி அவர் வெளியரங்கமாய்ப் பேசிக்கொண்டபொழுது, பேதுரு அவனைப் பக்கத்திலே அழைத்து, அவனைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

கூஊ உடனே அவர் திரும்பி, தம்முடைய சீஷர்களை நோக்கிப் பார்த்து, பின்பு பேதுருவைநோக்கி, நீ பராபரனுக்குப் பிரியமானவைகளைச் சிந்தியாமல் மனிதருக்குப் பிரியமானவைகளைச் சிந்திக்கிறபடியினாலே, சாத்தானே நீ என்முன் இராமல் போவென்று அவனைக் கடிந்துகொண்டு,

Digitized by Google

மி. பி. கூகூ.

ச ¶ பின்பு தம்முடைய சீஷருடனே சனங்களை அழைத்து, எனக்குப் பின்செல்ல விரும்புகிறவன் எவனோ, [1]அவன் தன்னைத் தான் வெறுத்துத் தன் சிலுவையை ஏற்றிக்கொண்டு, எனக்குப் பின் செல்லக்கடவன்.

ஞ என்னத்தினால் என்றால், எவனானும் [2]தன் சீவனை இரட்சிக்க விரும்பினால் அதை இழந்துபோவான்; என் நிமித்தமும் சுவிசேஷத்தின் நிமித்தமும் தன் சீவனை இழந்துபோகிறவன் எவனோ, அவனே அதை இரட்சிப்பான்.

ட அல்லாமலும் ஒருவன் உலகம் பாவையும் சம்பாதித்துக்கொண்டாலும், தன் சீவனை இழந்து போனால் அவனுக்கு என்ன லாபம் உண்டாகும்?

ண அல்லது ஒரு மனிதன் தன் சீவனை மீட்கும்படிக்கு என்னத்தைக் கொடுப்பான்?

த அன்றியும் [3]விபசாரமும் பாவமுள்ள இந்தச் சந்ததியாருக்குள்ளே எவன் என்னையும் என் வசனங்களையுங் குறித்து இலச்சை அடைவானோ, [4]அவனைக்குறித்தும் மனிதனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையோடு பரிசுத்த தூதர்களுடனேயும்கூட வரும்பொழுது இலச்சை அடைவான்.

1 மத். ம. உஅ: மக. உச. லூக். க. உக: மச. உஎ.

2 யோவா. மஉ. உஇ.

3 மத்.ம.கக.லூக். க.உக: மஉ.க.

4 உரோ. உ. மக. உ தீமோ. க.அ: உ. மஉ.

கூ. அதிகாரம்.

5 மத். டுக. உஅ. லூக். க. உஎ.

6 மத். உச. கம: உஇ. கக. லூக். உஉ. மஅ.

7 மத்.மஎ.க.லூக். க. உஅ.

8 தானி. எ. க. மத். உஅ. க.

அ இயேசு மறுரூபம் அடைந்தது. மக. அவர் எலியாவின் வாலைக்குறித்துத் தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னது. மச. வாலையும், செவிமான ஒரு ஆவியைத் தாற்றினது. கம. தம்முடைய மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்தது. கக. சீஷர்களுக்குத் தாழ்மையைப் படிப்பித்தது. உஅ. அவர்கள் விரோதியாதவர்களைத் தடைபண்ணாமலும், விசுவாசிகளுக்கு இடறல் உண்டாக்காமலும் இருக்கப் போதித்தது.

அல்லாமலும் [5]இங்கே நிற்கிறவர்களில் சிலர் பராபரனுடைய ஆளுகை பலத்தோடே வருகிறதைக் காணுமளவும் [6]மரணம் அடைவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

9 மத். டெ. க.

உ ¶ [7]ஆறுநாளுக்குப் பின்பு, இயேசுவானவர் பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் கூட்டித் தனித்திருக்கும்படிக்கு அவர்களை உயரமான மலையில் கொண்டுபோய், அவர்களுக்கு முன்பாக மறுரூபப்பட்டார்.

க [8]அவருடைய வஸ்திரங்கள் பூமியிலே வண்ணான் செய்யக்கூடாத வண்ணமாயும் உறைந்த மழையைப்போலவும் மிகவும் வெண்மையாய்ப் பிரகாசித்தன.

ச அல்லாமலும் மோசேயும் எலியாவும் அவர்களுக்குக் காணப்பட்டு, இயேசுவுடனே பேசிக்கொண்டார்கள்.

ஞ அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி, இரபீ, நாம் இங்கே இருக்கிறது நல்லது; ஆகையால் உமக்காகவும் மோசேக்காகவும் எலியாவுக்காவும் ஒரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டுபண்ணுவோம் என்றான்.

ட மிகுந்த பயம் அவர்களைப் பிடித்தபடியால், அவன் தான் பேசுகிற வசனங்களைத் தானே அறியாமல் அப்படிச் சொன்னான்.

ண அப்பொழுது ஒரு மேகம் அவர்களை மூடிக்கொண்டது; அல்லாமலும், இவர் எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

த உடனே அவர்கள் சுற்றிப் பார்த்தபொழுது, தங்கள் சேகரத்தில் இயேசுவையேயன்றி மற்றொருவனையும் காணவில்லை.

க ¶ பின்பு [9]அவர்கள் மலையிலிருந்து இறங்கினபொழுது, அவர் அவர்களை நோக்கி, நீங்கள் (மலையிலே) கண்டவைகளை மனிதனுடைய குமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருப்பதற்கு முன்னே ஒருவருக்கும் அறிவியாமல் இருங்கள் என்று கட்டளையிட்டார்.

Digitized by Google

மி. பி. கூகூ.

ய அவர்கள் அந்த வசனத்தை ஞாபகப்படுத்தி, மரித்தோரிலிருந்து எப்படி உயிரோடெழுந்திருக்கலாம் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு,

யக ¶ பின்பு அவனை நோக்கி, [1]முன்பு எலியா வரவேண்டுமென்று வேதபாரகர் சொல்லுகிறார்களே என்று விளுவினர்கள்.

யஉ அதற்கு அவர் சொன்னது: முன்பு எலியா வந்து சகலத்தையும் சீர்ப்படுத்தவேண்டுவதுதான்; [2]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் மிகவும் பாடுபடவும் அசட்டைபண்ணப்படவும் வேண்டுமென்று [3]எழுதியிருக்கிறதுபோல, அவனும் பாடுபடவேண்டும்.

யங [4]எலியா வந்தாயிற்றென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனைக்குறித்து எழுதியிருக்கிறபடி அவனை அவர்கள் தங்கள் இஷ்டப்படிக்குச் செய்தார்கள் என்றார்.

யச ¶ [5]பின்பு அவர் (மற்றச்) சீஷர்களிடத்தில் வந்தபொழுது, அவர்களைச் சூழ மிகுந்த சனங்களையும் அவர்களுடனே தருக்கம் பண்ணினவேதபாரகனையும் கண்டார்.

யஙு சனங்கள் எல்லாரும் அவனைக் கண்டவுடனே, அவர்கள் மிகவும் பிரமித்து ஓடிவந்து, அவனை வந்தனம்செய்தார்கள்.

யசு அப்பொழுது அவர் வேதபாரகனை நோக்கி, நீங்கள் எதைக்குறித்து இவர்களுடனே * தருக்கம்பண்ணுகிறீர்கள் என்று கேட்டார்.

யஎ [6]அதற்குச் சனங்களில் ஒருவன் சொன்னது: போதகரே, ஊமையுள்ள ஆவியை அடைந்திருக்கிற என் மகனை உம்மிடத்தில் கொண்டுவந்தேன்.

யஅ அந்த ஆவி எவ்விடத்திலாலும் அவனைப் பிடித்துக்கொள்ளுகிறபொழுது அவனைத் (தரையிலே) †மோதுகின்றது; பின்பு அவன் (வாயிலுலே) நுரைதள்ள தன் பற்களைக் கடித்துக்கொண்டு சோர்ந்துபோகிறான்; அதைத் துரத்தும்படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன்; அப்படிச் செய்யும்படிக்கு அவர்களால் கூடாமல் போயிற்று என்றான்.

யக அப்பொழுது அவர் திருவுளம்பற்றினது: ஆ விசுவாசமில்லாத சந்ததியாரே, எதுவரைக்கும் நான் உங்களோடிருப்பேன்; எதுவரைக்கும் உங்களில் பொறுமையாயிருப்பேன்; அவனை என்னிடத்தில் கொண்டுவாருங்கள் என்றார்; அவனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.

உய [7]அவனைக் கண்டவுடனே அந்த ஆவி அவனை அலைக்கழித்தது; மேலும் அவன் தரையிலே விழுந்து, (வாயிலுல்) நுரைதள்ளப் புரண்டான்.

உக அப்பொழுது அவர் தகப்பனை நோக்கி, இப்படி இவனுக்குண்டாகி எத்தனை நாளாயிற்று என்று கேட்டதற்கு அவன் சொன்னது: சிறுவயதுமுதற்கொண்டு இருக்கிறது.

உஉ அல்லாமலும் இவனை அழிக்கும்படிக்கு அது அநேகந்தரம் நெருப்பிலேயும் சலத்திலேயும் தள்ளிற்று; அப்படியிருந்தும், நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால் எங்களுக்கு உருக்கமாயிரங்கி உதவிசெய்தருளும் என்றான்.

உங இயேசுவானவர் சொன்னது: [8]நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்; விசுவாசிக்கிறவனுக்கு எதுவும்கடக்கும் என்று சொன்னவுடனே,

உச அந்தப் பிள்ளையின் தகப்பன் அழுதுகொண்டு, ஆண்டவரே, விசுவாசிக்கிறேன், என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கூப்பிட்டான்.

1 மல்கி. ச. ஓ. மத். ஙச. ஐ.

2 லூக்: உக. மக. பிலி. உ. எ.

3 சங். உஉ. க. எசா. இக.கழ. தானி. க. உக.

4 மத். ஙச. மச: ஙஎ. ஙஉ. லூக். க. ஙஎ.

5 மத். ஙஎ. ஙச. லூக். க. கஎ.

* அல்லது உங்களுக்குள்ளே.

6 மத். ஙஎ. ஙச. லூக் க. கஅ.

† அல்லது இழுக்கின்றது.

7 மாற். க. உக. லூக். க. சஉ.

8 மத். ஙஎ. உஅ. மாற். ஙக. உக. லூக். ஙஎ. க. போஎ. ஙக. சஅ.

Digitized by Google

உடி அத்தருணத்திலே சனங்கள் ஓடிவந்து கூட்டமாகிறதை இயேசுவானவர் கண்டபொழுது, அவர் அந்த அசுத்த ஆவியுடனே சொன்னது: ஊமையும் செவிடுமான ஆவியே, நீ இவனைவிட்டுப் புறப்பட்டு, இனி இவனிடத்தில் பிரவேசியாமல் போ என்று உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று சொல்லி, அதை அதட்டினார்.

உக அப்பொழுது அது சத்தமிட்டு, அவனை மிகவும் அலைக்கழித்துப் புறப்பட்டுப் போயிற்று; அவன் இறந்துபோனான் என்று அநேகர் சொல்லத்தக்கதாகச் செத்தவனைப் போலக் கிடந்தான்.

உ இயேசுவானவர் அவனுடைய கையைப் பிடித்து, அவனை எடுத்தார், உடனே அவன் எழுந்திருந்தான்.

உஅ ¶ [1]பின்பு அவர் வீட்டிற்கு வந்தபொழுது அவருடைய சீஷர் இரகசியமாய் அவரை நோக்கி, நாங்கள் அதைத் துரத்தும்படிக்கு எங்களுக்கு என் திராணியில்லை என்று கேட்டார்கள்.

உக அவர் சொன்னது: செபத்தினாலும் உபவாசத்தினாலுமே அன்றி, மற்றொருவிதமாய் அந்தச் சாதியைத் துரத்தக்கூடாது என்றார்.

கூ ¶ பின்பு அவர்கள் அவ்விடம்விட்டுப் பிரயாணப்பட்டுக் கலிலேயா நாட்டின் வழியாய்ப் போகிறபொழுது, அவர் தம்முடைய சீஷர்களுக்கு உபதேசம் பண்ணவேண்டுமென்று இருந்தபடியினாலே, (தாம் போகிறதை) ஒருவரும் அறியாமல் இருக்கவேண்டும் என்று விரும்பினார்.

கூ பின்பு அவர் அவர்களை நோக்கி, [2]மனிதனுடைய குமாரன் மனிதர்களுடைய கையில் ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவர்கள் அவனைக் கொலைசெய்வார்கள்; மரித்தபின்பு அவன் மூன்றாம் நாளிலே உயிரோடெழுந்திருப்பான் என்றார்.

கூஉ அவர்கள் அந்தச் சங்கதியை அறிந்துகொள்ளவில்லை; மேலும் அவரிடத்தில் விசாரிக்கிறதற்கும் பயந்தார்கள்.

கூ ¶ [3]பின்பு அவர் கப்பர்நகூம் பட்டணத்தில் சேர்ந்து, ஒரு வீட்டிலே இருந்தபொழுது, அவர் அவர்களை நோக்கி, வழியிலே நீங்கள் எதைக்குறித்து உங்களுக்குள்ளே தருக்கம்பண்ணிக்கொண்டீர்கள் என்று கேட்டார்.

கூச [4]அவர்கள் தங்களில் எவன் பெரியவன் என்று ஒருவரோடொருவர் வழியிலே தருக்கம் பண்ணிக்கொண்டபடியினாலே பேசாமல் இருந்தார்கள்.

கூடி அப்பொழுது அவர் உளுக்காந்து பன்னிருவரையும் அழைத்துச் சொன்னது: ஒருவன் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் பிந்தினவனுமாய் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாய் இருக்கக்கடவன் என்று சொல்லி,

கூசு [5]ஒரு பிள்ளையை எடுத்து அதை அவர்களுக்குள்ளே நிறுத்தி, பின்பு அதை அணைத்துக்கொண்டு,

கூஎ இப்படிப்பட்ட பிள்ளைகளில் ஒன்றை என்னுடைய நாமத்தினாலே சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ, அவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறானல்ல; [6]அல்லாமலும் என்னைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் எவனோ, அவன் என்னை (மாத்திரம்) அல்ல, என்னை அனுப்பினவரையும் சேர்த்துக்கொள்ளுகிறான் என்றார்.

கூஅ ¶ [7]அப்பொழுது யோவான் அவரை நோக்கி, போதகரே, நமக்குப் பின்செல்லாமல் இருக்கிற ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பசாசுகளைத் துரத்தக்கண்டோம்; அவன் நமக்குப் பின்செல்லாதபடியால் அவன் அப்படிச்

மத். மா. மக.
மத். மா. உஉ.
லூக். க. சச.

மத். மஅ. க. லூக். க. சக: உஉ. உச.

மத். உஅ. உக, உஎ. மற். ஏ. சக.

மத். மஅ. உ. மற். ஏ. ஏக.

மத். ஏ. சஏ. லூக். கூ. சஅ.

ம. மோ. மக. உஅ. லூக். க. சகூ.

Digitized by Google

செய்யாதபடிக்குச் சொன்னேம் என்றான்.

கூக அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீங்கள் அவனுக்குத் தடைபண்ணவேண்டாம்; [1]என்னத்தினால் என்றால், என்னுடைய நாமத்தினாலே அற்புதம் செய்கிறவன் என்னைக்குறித்துச் சீக்கிரமாய்த் தீமைசொல்லமாட்டான்.

சுய [2]அல்லாமலும் உங்களுக்கு விரோதியல்லாதவன் உங்கள் பக்கில் இருக்கிறான்.

சுக [3]அன்றியும் நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாய் இருக்கிறபடியினாலே, ஒருவன் என் நாமத்தின்நிமித்தம் ஒரு கலயம் தண்ணீர் உங்களுக்குக் கொடுத்தால், அவன் தன் பலனை இழந்துபோவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சுஉ ¶ [4]அன்றியும் என்னை விசுவாசிக்கிறவர்களாகிய இந்தச் சிறியவர்களில் ஒருவன் குற்றம் செய்வதற்குக் காரணமாயிருக்கிறவன் எவனோ, அவன் தன் கழுத்திலே எந்திரக்கல் கட்டப்பட்டுச் சமுத்திரத்திலே தள்ளப்பட்டால் அவனுக்கு நன்மையாயிருக்கும்.

சுங [5]உன் கை உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால்* அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு கையை உடையவனாய், சுச நித்திய நரக அக்கினியிலே போகாதிருந்தும், ஊனமாய்ச் சீவனில் பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; [6]அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

சுஞ அல்லாமலும் உன் கால் உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால் அதைத் தறித்துப்போடு; நீ இரண்டு காலையுடையவனாய், சுசு நித்திய நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும், சப்பாணியாய்ச் சீவனில் பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

சுஎ அல்லாமலும் உன் கண் உன்னைக் †கெடுக்கிறதற்கு ஏதுவானால், அதைப் பிடுங்கிப்போடு;

சுஅ நீ இரண்டு கண்ணை உடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுகிறதிலும், ஒற்றைக் கண்ணனாய்ப் பராபரனுடைய இராசியத்திலே பிரவேசிக்கிறதே உனக்கு நலமாயிருக்கும்; அந்நரகத்திற்குரியவர்களுடைய புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கின்றன.

சுக [7]எல்லாப் பலிகளும் உப்பினாலே சாரமாக்கப்படுகிறதுபோல, யாவனும் அக்கினியினாலே சாரமாக்கப்படுவான்.

நய [8]உப்பானது நல்லது; உப்பானது சாரமற்றதேயானால், எதினாலே அதற்குச் சாரம் உண்டாக்குவீர்கள்; [9]உங்களுக்குள்ளே உப்பு உண்டாயிருக்கும்படி செய்யுங்கள்; [10]அல்லாமலும் ஒருவரோடொருவர் சமாதானமாய் இருக்கக்கடவீர்கள் என்றார்.

ய. அதிகாரம்.

உ. பிரிந்து விவாகப்பிரிவைக்குறித்துப் பிரசங்கிப்பதற்கு உத்தரவுசொல்லி, கூ. தம்மிடத்தில் கொண்டுவரப்பட்ட பிள்ளைகளை ஆசீர்வதித்து, எ. நித்திய சீவனடையும் வழியைக்குறித்த நியாயசாஸ்திரியனுக்கு நிதானம்சொல்லி, உக. தமது சுவிசேஷத்தின் நிமித்தம் சகலரிடத்தில் நிந்தைகளுக்குறித்துச் சீஷர்களுக்கு அறிவித்து, உஅ. சுவிசேஷத்தின் நிமித்தம் பிரிந்து தொல்லை பெறுத்துவிடுகிறவர்கள் நஷ்டமடைவார்களென்று கூறி, கூஉ. தம்முடைய ஐசுவரியத்தையும், உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்து, கூஎ. பெருமையுள்ள இருவருடைய விண்ணப்பத்தை மறுத்து அவர்களுக்கு மனத்தாழ்மையைப் படிப்பித்து, சகூ. குருடனுக்கிருந்த பார்வையைக் கொடுத்தது.

[11]பின்பு அவர் எழுந்து, யோர்தான் அருகேயுள்ள யூதேயா நாட்டின் நிசைகளுக்குப் போனார்; அங்கே மறுபடியும் சனங்கள் அவரிடத்தில் கூடிவந்தார்கள், அவரும் வழக்கத்தின்படி அவர்களுக்கு மறுபடியும் உபதேசம்பண்ணினார்.

கி. பி. நூங.

1 க கொரி. ஙஉ. க.

2 மத். ஙஉ. கஅ.

3 மத்.ஏ.சஉ.

4 மத். ஙஅ. கூ. லூக். ஙஎ. உ.

5 ஓசே. ஙக. க-அ.மத்.ஓ.உக: ஙஅ. அ.

* அல்லது கெடுத்தால்.

6 சோ.கக. உ.

† அல்லது கெடுத்தால்.

7 உ யோ.உ. ஙக. எசே.சக. உ.

8 மத். ஓ. ஙக. லூக். ஙச. கச.

9 எபே.ச.உக. கொலோ.ச.க.

10 உரோ. ஙஉ. ஙஅ: ஙச. ஙக. உ கொரி. ஙக. ஙக. எபி. ஙஉ. ஙச.

11 மத். ஙக. க. யோவா.ஏ.சஅ: ஙக. எ.

Digitized by Google

உ ¶ [1]அல்லாமலும் பரிசேயர் அவரைச் சோதிக்கும்படிக்கு அவரிடத்தில் வந்து, புருஷனானவன் தன் மனைவியைத் தள்ளிவிடலாமா என்று கேட்டார்கள்.

கி. பி. கூகூ.

1 மத். ய. ச.

ஊ அவர்களை அவர்நோக்கி, மோசே என்பவர் உங்களுக்கு எப்படிக் கட்டளையிட்டார் என்றார்.

ரு அவர்கள் சொன்னது: தள்ளுதற்சீட்டை எழுதி அவளைத் தள்ளிவிடும்படிக்கு [2]மோசே உத்தரவு கொடுத்தார் என்றார்கள்.

2 இ மோ.உ.ச. மத்.இ. கக:யக. எ.

எ அப்பொழுது இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: உங்களுடைய இருதயம் கடினமானபடியினாலே, மோசே உங்களுக்கு இந்தக் கட்டளையை எழுதினார்.

ஏ உலகம் உண்டானது முதற்கொண்டு பராபரன் அவர்களை [3]ஆணும் பெண்ணுமாகச் செய்தார்.

3 க மோ.க.உஎ: இ. உ.

ஐ [4]அதின் நிமித்தம் ஒருவன் தன் தகப்பனையும் தாயையும்விட்டுத் தன் மனைவியுடனே இசைந்திருப்பான் என்றும்,

4 க மோ. உ. உச. க கொரி. க. யக. எபே. இ. கக.

ஒ அவர்கள் இருவரும் ஒரே சரீரமாய் இருப்பார்களென்றும் சொல்லியிருக்கிறபடியினாலே, அவர்கள் இருவராயிராமல் ஒரே சரீரமாயிருக்கிறார்கள்.

5 மத். இ. கஉ: யக. க. லூக். யக. மஅ.உரோ. எ. க. க கொரி. எ. ம, யக.

ஓ ஆகையால் பராபரன் இணைத்ததை மனிதன் பிரியாமலிருக்கக்கடவன் என்றார்.

ஔ ¶ பின்பு வீட்டிலே அவருடைய சீஷர்கள் அதைக்குறித்து மறுபடியும் அவரிடத்தில் விசாரித்தபொழுது,

க அவர் சொன்னது: [5]தன் மனைவியைத் தள்ளி வேறொருத்தியைவிவாகம்பண்ணுகிறவன் எவனோ, அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரம்செய்கிறவன்.

6 மத். யக. யக. லூக். மஅ. மஇ.

7 க கொரி. மச. உம.கபே.உ.க.

8 மத். மஅ. க.

9 மத். யக. யக. லூக. மஅ. மஅ.

10 உ மோ. உம. மச. உரோ. யக. க.

கஉ அல்லாமலும் மனைவியானவள் தன் புருஷனைத் தள்ளி வேறொருவனை விவாகம்பண்ணினால், அவள் விபசாரம்செய்கிறவள் என்றார்.

கக ¶ [6]அப்பொழுது அவராலே தொடப்படும்படிக்குப் பிள்ளைகளை அவரிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; சீஷர்கள் அவைகளைக் கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்.

கஙு இயேசுவானவர் அதைக்கண்டு, விசனம் அடைந்து, பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல், இடங்கொடுங்கள்; [7]பராபரனுடைய இராச்சியம் அப்படிப்பட்டவைகளுக்கு உடைமையானதே.

கச [8]எவனாவது ஒரு பிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்தால், அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

கசு பின்பு அவைகளை அணைத்துக்கொண்டு, தம்முடைய கைகளை அவைகள்மேல் வைத்து, அவைகளை ஆசீர்வதித்தார்.

கஎ ¶ [9]பின்பு அவர் புறப்பட்டு வழியிலே நடக்கையில், ஒருவன் அவரிடத்திற்கு ஓடிவந்து, முழங்காற்படியிட்டு, நல்ல போதகரே, நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு, நான் செய்யவேண்டியது என்னவென்று கேட்டான்.

கஅ அவனுடனே அவர் சொன்னது: நீ என்னை நல்லவனென்று என் சொல்லுகிறாய்? பராபரனாகிய ஒருவரேயன்றி, மற்றொருவனும் நல்லவன் அல்லவே.

கக [10]விபசாரம்பண்ணாமல் இருப்பாயாக; கொலைசெய்யாதிருப்பாயாக; களவுசெய்யாதிருப்பாயாக; பொய்ச்சாட்சிசொல்லாதிருப்பாயாக; வஞ்சனைசெய்யாதிருப்பாயாக; உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக

Digitized by Google

கி. பி. ஈகூ.

என்றிருக்கிற கற்பனைகளை அறிந் திருக்கிறாயே என்றார்.

உல அதற்கு அவன் சொன்னது: போதகரே, அவைகளெல்லாம் நான் என் சிறுவயதுமுதல் கைக்கொண்டுவருகிறேன் என்றான்.

உக அப்பொழுது இயேசுவானவர் அவனைப் பார்த்து, அவனிடத்தில் அன்புகூர்ந்து சொன்னது: உன்னிடத்தில் பின்னும் ஒன்று குறைவாய் இருக்கிறது; [1]நீ போய் உனக்கு உண்டானவைகளை விற்று, பரமண்டலத்திலே பொக்கிஷத்தை அடைந்துகொள்ளத்தக்கதாக, அவைகளை ஏழைகளுக்குக் கொடுத்து, பின்பு வந்து சிலுவையை எடுத்துக்கொண்டு, எனக்குப் பின்செல்லுவாயாக என்றார்.

உஉ அவன் மிகுந்த ஆஸ்திகளை உடையவனானபடியினாலே, அந்த வசனத்தைக் கேட்டு, மனம் நொந்து, துக்கத்தோடே அவனை விட்டுப்போனான்.

உஊ ¶ [2]அப்பொழுது இயேசுவானவர் சுற்றிப்பார்த்து, தம்முடைய சீஷர்களுடனே சொன்னது: பொருள்களைப்பெற்றவர்கள் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது மிகவும் அரிது என்றார்.

உச அல்லாமலும் சீஷர்கள் அந்த வசனங்களைக் குறித்துத் திகைத்த பொழுது, இயேசுவானவர் அவர்களுக்குப் பின்னும் சொன்னது: பிள்ளைகளே, [3]பொருள்களின் மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறது மிகவும் அரிதாகவே இருக்கிறது.

உடு ஐசுவரியமுள்ளவன் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கிறதிலும், ஒட்டகமானது ஒரு ஊசியின் காதில் நுழைகிறது எளிதாய் இருக்கிறதென்றார்.

உசு அவர்கள் அதிகமாய்ப் பிரமித்து, அப்படியானால் இரட்சிக்

1 மத்.க.மக,உள: மக. உக. லூக். மஉ.கக:மக.க.
2 மத். மக. உக. லூக். மஅ. உச.
3 போபு. கக. உச. சம். இஉ. எ: கஉ. ம. கதியே. க.மெ
4 எரே.கஉ.மெ. மத். மக. உக. லூக். க. கஎ.
5 மத். மக. உஎ. லூக். மஅ. உஅ.
6 உளள. உஇ. க. லூக். மஅ. கம.
7 மத். மக. கம: உம். மக. லூக். மக. கம.
8 மத். உம. மஎ. லூக். மஅ. கக.
9 மற. அ. கக: க.கக. லூக் க. உஉ: மஅ. கக.

கப்படுபவர்கள் யாரென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

உஎ அப்பொழுது இயேசுவானவர் அவர்களைப் பார்த்து, மனிதர்களுக்கு அது கூடாத காரியந்தான்; [4]பராபரனே, எதையும் செய்யத் திராணியுள்ளவர், ஆகையால் பராபரனுக்கு அது கூடாத காரியமல்ல என்றார்.

உஅ ¶ [5]பின்பு பேதுரு அவரை நோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும்விட்டு உமக்குப் பின் சென்றோமே என்றான்.

உக அதற்கு இயேசுவானவர் சொன்னது: என் நிமித்தமும் சுவிசேஷத்தின் நிமித்தமும் வீட்டையாவது, சகோதரர்களையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவதுவிட்டு,

கூ [6]பின்பு இம்மையிலே துன்பங்களுடனேகூட நூறுமடங்காய் வீடுகளையும், சகோதரர்களையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியசீவனையும், பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறவன் ஒருவனும் இல்லையென்றும்,

கூக [7]மூன்றிலொருபங்கு அதிகரிப்பிலிருந்தோராயும், பிற்பிலோர் மூன்றிலொருபங்கு இருப்பார்களென்றும், மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கூஉ ¶ [8]அன்றியும் அவர்கள் எருசலேம் நகரத்திற்குப் பிரயாணமாய்ப் போனபொழுது, இயேசுவானவர் அவர்களுக்கு முன்னே நடந்தார்; அவர்கள் பிரமித்துப் பயத்தோடே அவருக்குப் பின்சென்றார்கள்; [9]அப்பொழுது அவர் பன்னிருவனையும் மறுபடியும் அழைத்துத் தமக்குச் சம்பவிக்கும் காரியங்களை அவர்களுக்கு அறிவித்துச் சொன்னது:

Digitized by Google

கூ இதோ, எருசலேமுக்குப் போகிறோம், அங்கே மனிதனுடைய குமாரன் பிரதான ஆசாரியருக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவான்; அவர்கள் அவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்தும்படிக்குத் தீர்ப்புச்செய்து, அவனைப் புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்.

கூ அவர்கள் அவனை இழிவுசெய்து, அவனை வாரினால் அடித்து, அவன்மேலே துப்பி, அவனைக் கொலைசெய்வார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவன் உயிரோடெழுந்திருப்பான் என்றார்.

கூ ¶ [1]பின்பு செபேதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து, போதகரே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறபடி நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம் என்றார்கள்.

கூ அதற்கு அவர், நான் உங்களுக்குச் செய்ய நீங்கள் விரும்புகிறது என்னவென்றார்.

கூ அவர்கள் சொன்னது: நீர் மகிமையை அடைந்திருக்கும் பொழுது, எங்களில் ஒருவன் உம்முடைய வலதுபக்கத்திலேயும், ஒருவன் உம்முடைய இடதுபக்கத்திலேயும் இருக்க அனுக்கிரகம் பண்ணவேண்டும் என்று சொன்னார்கள்.

கூ இயேசுவானவர் சொன்னது: நீங்கள் கேட்டது உங்களுக்கே தெரியவில்லை; நான் பானம் பண்ணும் பாத்திரத்தில் பானம் பண்ணவும், நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளவும் உங்களால் கூடுமா என்று சொன்னதற்கு,

கூ அவர்கள் கூடும் என்றார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் பானம்பண்ணும் பாத்திரத்தில் நீங்களும் பானம்பண்ணுவீர்கள், அல்

கி. பி. கூக.

1 மத். கூ. கூ.

2 மத். கூ. கச.

* அல்லது கூக் லவர்கள்.

3 லூக். கூ. கூ.

4 மத். கூ. கூ, கூஅ. மாற். க. கூ. லூக். க. கூஅ.

5 பேரா. கூக. மா. பிலி. கூ. எ.

6 மத். கூ. கூஅ. கூதீமோ. கூ. க. தீத். கூ. மா.

7 மத். கூ. கூக. லூக். கூஅ. கூ.

லாமலும் நான் பெற்றுக்கொள்ளும் ஸ்நானத்தை நீங்களும் பெற்றுக்கொள்வீர்கள், அதுமெய்தான்.

கூ ஆனாலும் குறிக்கப்பட்டவர்களுக்கேயன்றி, (மற்றொருவருக்கும்) என் வலதுபக்கத்திலும் என் இடதுபக்கத்திலும் இருப்பதற்கான (கனத்தை) நான் கொடுக்கக்கூடாதென்றார்.

கூ ¶ [3]மற்றப் பத்துப்பேரும் அதைக் கேள்விப்பட்டு, யாக்கோபின்மேலும் யோவான்மேலும் கோபமாயிருக்கத் தொடங்கினார்கள்.

கூ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை அழைத்துச் சொன்னது: நீங்கள் அறிந்திருக்கிறபடி, உலகத்தாருக்குள்ளே பிரபுக்கள்* என்னப்பட்டிருக்கிறவர்கள் இறுமாப்பாய் ஆளுகிறார்கள்; [3]அல்லாமலும் அவர்களுடைய பெரியோர்கள் இஷ்டப்படிக்கு அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறார்கள்.

கூ [4]அப்படி உங்களுக்குள்ளே இருக்கக்கூடாது; உங்களுக்குள்ளே பெரியவனாய் இருக்கவிரும்புகிறவன், உங்கள் ஊழியக்காரனாய் இருக்கக்கடவன்.

கூ உங்களில் முதலாளியாயிருக்க விரும்புகிறவன், எல்லாருக்கும் அடிமையாய் இருக்கக்கடவன்.

கூ [5]மனிதனுடைய குமாரனும், ஊழியம் அடையும்படிக்கு வராமல், ஊழியம் செய்யும்படிக்கும் [6]அநேகரை மீட்கும்பொருளாகத் தன்னுடைய சீவனைக்கொடுக்கும்படிக்கும் வந்தானே என்றார்.

கூ ¶ [7]பின்பு அவர்கள் எரிகோ பட்டணத்திற்கு வந்தார்கள், அவரும் அவருடைய சீஷர்களும் மிகுந்த சனங்களும் அதைவிட்டுப் போனபொழுது, தீமேயு என்பவனுடைய மகனாகிய குருடனான பருத்திமேயு என்பவன் வழியிலே பிச்சைகேட்டுக்கொண்டிருக்கையில்,

Digitized by Google

சள நாசரேத்தூராராகிய இயே
சுவானவர் வருகிறாரென்று கேள்
விப்பட்டு, இயேசுவே, தாவீதின்
குமாரனே, என்மேல் இரக்கமாயி
ரும் என்று கூப்பிடத்தொடங்கி
னான்.

சஅ அவன் பேசாமலிருக்கும்
படிக்கு அநேகர் அவனைக் கடிந்து
கொண்டார்கள்; அப்படியிருந்
தும் அவன், தாவீதின் குமாரனே,
என்மேல் இரக்கமாயிரும் என்று
அதிகமாய்க் கூப்பிட்டான்.

சக அப்பொழுது இயேசுவான
வர் நின்று, அவனை அழைத்து
வரச் சொன்னார்; அந்தப்படி சிலர்
அவனை அழைத்து, திடமாயிரு
எழுந்திரு, அவர் உன்னை அழைக்
கிறார் என்றார்கள்.

சய உடனே அவன் தன் வஸ்
திரத்தைத் தள்ளி எழுந்து, இயேசு
வானவரிடத்தில் வந்தான்.

சக அவர் அவனை நோக்கி, நான்
உனக்கு என்ன செய்யவேண்டும்
என்றிருக்கிறாய் என்றார்; குருட
னானவன் சொன்னது: இரபூனீ
நீர் எனக்குப் பார்வை கொடுக்க
வேண்டும் என்றான்.

சஉ இயேசுவானவர் சொன்ன
து: [1]உன் விசுவாசம், உன்னைக்
குணமாக்கிற்று,* நீ போகலாம்
என்றார்; உடனே அவன் பார்வை
அடைந்து, வழியிலே இயேசுவுக்
குப் பின்சென்றான்.

ய‌க. அதிகாரம்.

க. இஸ்ரவேல ஜனங்களுக்கு பிரவேசித்
தது. உஉ. தனியற்ற அத்திமரத்தைச் சபித்தது.
மஅ. தேவாலயத்தைச் சுத்திகரித்தது. உம. விசு
வாசத்தில் உறுதிகொள்ளவும், பகைஞரை மன்
னிக்கவும் கர்த்தருக்குப் போதித்து, உக. பாபா
லுல் அனுப்பப்பட்ட மனுஷருடைய போவாது
டைய சட்சியினால் அவருடைபசெய்கைகளுக்கு
உதாரணம் சொன்னது.

[2]பின்பு அவர்கள் எருசலேமுக்
குச் சமீபமாய்ப் போய், ஒலிவம
லை அருகே இருக்கிற பெதுபாகே
பெத்தானியா ஊர்களுக்குச் சேர்
ந்தபொழுது, அவர் தம்முடைய
சீஷரில் இரண்டுபேரை நோக்கி,

மி. பி. கூ.

உ உங்களுக்கு முன்பாக இரு
கிற அந்தக் கிராமத்திற்குப் போங்
கள்; நீங்கள் அதில் பிரவேசித்த
வுடனே, ஒருவரும் ஏறுமல் கட்
டப்பட்டிருக்கிற (கழுதையின்
குட்டியைக் காண்பீர்கள்; அதை
கட்டவிழ்த்து அதைக் கொண்டு
வாருங்கள்.

ரு ஒருவன், என் இப்படிச் செ
கிறீர்கள் என்று உங்களுடனே
சொன்னால், ஆண்டவருக்கு இது
வேண்டும் என்று சொல்லுங்கள்
உடனே அவன் அதை இவ்விடத்
திற்கு அனுப்பிவிடுவான் என்று
அனுப்பினார்.

ச அந்தப்படி அவர்கள் போய்
வெளியே தெருவில் கதவின் அரு
கே கட்டப்பட்டிருக்கிற (கழு
தையின்) குட்டியைக்கண்டு, அ
தின் கட்டவிழ்க்கிறபொழுது,

டு அங்கே நின்ற சிலர் அவ
களை நோக்கி, நீங்கள் என் இதை
கட்டவிழ்க்கிறீர்கள் என்றார்கள்

சு இயேசுவானவர் தங்களுக்குக்
கட்டளையிட்டபடி சீஷர் அவ
களுக்கு உத்தரவு சொன்னார்கள்
அப்பொழுது அவர்களை விட்
விட்டார்கள்.

எ ஆகையால் சீஷர் அந்தக் கு
ட்டியை இயேசுவினிடத்திற்கு
கொண்டுவந்து, தங்கள் வஸ்தி
ரங்களை அதின்மேல் போட்டா
கள்; அவர் அதின்மேல் ஏறி
போனார்.

அ [3]அப்பொழுது அநேகர் தங்
கள் வஸ்திரங்களை வழியிலே வி
த்தார்கள்; சிலர் மரங்களின் கிளை
களை முறித்து வழியிலே பரப்பி
னார்கள்.

கூ அல்லாமலும் முன்நடப்பா
ரும் பின்நடப்பாரும், [4]ஓசன்ன
பராபரனுடைய நாமத்தினாலே
வருகிறவர் தோத்திரம்செய்யப்ப
டக்கடவர்.

ல பராபரனுடைய நாமத்தினா
லே வருகிற நம்முடைய பிதாவா
கிய தாவீதின் ஆளுகை வாழ்த்தப்

1 மத். க. உஉ. மாற். இ. உச.
* அல்லது உன்னை இரட்சித்தது.
2 மத். உக. க. லூக். மக. உஎ. போவா. மஉ. மச.
3 மத். உக. அ.
4 சங்.சஅ.உக.

Digitized by Google

கொள்ளப்படக்கடவது; [1]உன் னதமான இடங்களிலே ஓசன்னா என்று கூப்பிட்டார்கள்.

௰க ¶ [2]அப்பொழுது இயேசு வானவர் எருசலேமிலேயும் தே வாலயத்திலேயும் பிரவேசித்தார்; அங்கே அவர் எல்லாவற்றையும் சுற்றிப்பார்த்து, பின்பு சாயந்தர மானபொழுது பன்னிருவருட னே புறப்பட்டுப் பெத்தானியா ஊருக்குப் போனார்.

௰உ ¶ [3]மறுநாளிலே அவர்கள் பெத்தானியா ஊரைவிட்டுப் பு றப்பட்டபொழுது அவருக்குப் பசி உண்டாயிற்று.

௰க [4]உடனே அவர் தூரத்திலே யுள்ள இலையையுடைய அத்திம ரத்தைக் கண்டு, அதிலே ஒரு கனி யேயாகிலும் கண்டு பறித்துக் கொள்ளலாம் என்று அவ்விடத் திற்குப் புறப்பட்டு, அதின் அரு கே சேர்ந்தபொழுது, அத்திமரங் கள் கனிகொடுக்கிற காலம் அல் லாதபடியால் இலைகளையே அல் லாமல் மற்றொன்றையும் அவர் காணவில்லை.

௰ச அப்பொழுது இயேசுவான வர் அதை நோக்கி, இனி ஒருக்கா லும் ஒருவனும் உன்னிடத்திலே கனியைப் புசியாதிருப்பானாக என்று சொன்னார்; அதை அவரு டைய சீஷர்கள் கேட்டார்கள்.

௰ right ¶ [5]பின்பு அவர்கள் எருச லேமுக்கு வந்தார்கள்; அங்கே இ யேசுவானவர் தேவாலயத்தில் பி ரவேசித்து, அதிலே விற்பானை யும் கொள்வானையும் தூரத்தி, கா சுக்காரருடைய பலகைகளையும் புறாக்களை விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து,

ஙக ஒருவரும் ஒரு பாத்திரத்தைத் தேவாலயத்தின் வழியாய்க் கொ ண்டுபோகிறதற்கு இடங்கொடா மல் இருந்தார்.

ஙஅ [6]அல்லாமலும், என்னுடை ய ஆலயம் எல்லாத் தேசத்தாரும் செபம்பண்ணும்படிக்கான ஆல யம் என்னப்படும் என்று* எழுதி யிருக்கிறதல்லவா? [7]நீங்கள் இ தைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று அவர்களுக்குப் போதித் தார்.

ஙஅ [8]வேதபாரகரும் பிரதான ஆசாரியரும் அதைக் கேட்டபொ ழுது, [9]சனங்கள் எல்லாரும் அவ ருடைய உபதேசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டபடியினாலே, அ வருக்குப் பயந்து, அவனை மாய்க் கும்படிக்கு வகைதேடினார்கள்.

ஙக சாயந்தரமானபொழுது அ வர் நகரத்திற்குப் புறம்பே போ னார்.

ஙய ¶ [10]மறுநாளிலே அவர்கள் திரும்பிப் புறப்பட்டபொழுது, அந்த அத்திமரம் வேரோடேட்டுப்போனதைக் கண்டார்கள்.

ஙக உடனே பேதுரு நினைவு கொண்டு அவனை நோக்கி, ரபீ, இதோ, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்றான்.

ஙஉ அதற்கு மாறுத்தரமாக அ வர் அவர்களுடனே சொன்னது: பராபரனில் † விசுவாசமாயிருங் கள்.

ஙஊ எனென்றால், [11]எவனை லும் இந்த மலையைநோக்கி, நீ எ ழுந்து சமுத்திரத்திலே விழுவா யாக என்று சொல்லி, தன் இருத யத்திலே ஒன்றும் சந்தேகப்படா மல், தான் சொன்னபடியே நட க்கும் என்று விசுவாசித்தால், அந் தச் சொற்படியே அவனுக்கு ந டக்கும் என்று மெய்யாய் உங்க ளுக்குச் சொல்லுகிறேன்.

ஙச ஆதலால் நான் (பின்னும்) உங்களுக்குச் சொல்லுகிறதாவது: செபம்பண்ணும்பொழுது [12]நீங் கள் வேண்டிக்கொள்ளும் யாவை யும் பெற்றுக்கொள்ளலாம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டா கும்.

உரு அல்லாமலும் பரமண்டலத் திலிருக்கிற உங்கள் பிதா உங்கள்

கி. பி. ஈஊ.

1 சங். ஈசஅ. க.

2 மத். உக. ஙஉ

3 மத். உக. ஙஅ.

4 மத். உக. ஙக.

5 மத். உக. ஙஉ. லூக். ஙக. ஙக. சஇ. யோவா. உ.ஙச.

6 சர. இக. எ.

* அல்லது செபம்பண்ணும்படிக்கு எல்லாத் தேசத்தாருடையதென்ற.

7 எரே. எ. ஙக.

8 மத். உக. சஇ, சக. லூக். ஙக. சஎ.

9 மத். எ. உஅ, உக. மாற். க. உஉ. லூக். ச. கஉ.

10 மத். உக. ஙக.

† அல்லது பராபரனுடைய.

11 மத். ஙஎ. உஏ உக. உக. லூக: ஙஎ. க.

12 மத்.எ எ.லூக். ஙக. க. யோவா. ஙச. ஙக: ஙஇ.எ: கூ. உ. ப. க. இ, க.

Digitized by Google

தப்பிதங்களை மன்னிக்கும்படிக்கு நீங்கள் செபம்பண்ண எழுந்து நிற்கும்பொழுது, ஒருவன்மேல் உங்களுக்கு விசனம் உண்டானால் [1]மன்னித்துக்கொள்ளுங்கள்.

உசு [2]நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்.

உஎ ¶ [3]அவர்கள் மறுபடியும் எருசலேமுக்கு வந்த பின்பு அவர் தேவாலயத்திலே உலாவுகையில், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவரிடத்தில் வந்து,

உஅ எந்த அதிகாரத்தினாலே நீர் இவைகளைச் செய்கிறீர்? இவைகளைச் செய்கிறதற்கு உமக்கு அதிகாரத்தைக் கொடுத்தவர் யார் என்றார்கள்.

உக அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது: நானும் உங்களிடத்தில் ஒரு காரியத்தைக்* கேட்கிறேன்; அதற்கு நீங்கள் மாறுத்தரம் சொல்லுங்கள், அப்பொழுது நான் இவைகளைச் செய்கிற அதிகாரத்தையும் உங்களுக்கு அறிவிப்பேன்.

கூய யோவான் கொடுத்த ஸ்நானம் பராபரனாலே உண்டானதோ, மனிதர்களாலே உண்டானதோ, அதைச் சொல்லுங்கள் என்றார்.

கூக அப்பொழுது அவர்கள், அது பராபரனால் உண்டானதென்றால், இவர், என் நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை என்பார்.

கூஉ அது மனிதரால் உண்டானதென்றால், எல்லாரும் [4]யோவானைத் தீர்க்கதரிசியென்று எண்ணுகிறபடியால், அவர்களாலே நமக்கு மோசம் வரும் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு,

கூங பின்பு இயேசுவானவரை நோக்கி, எங்களுக்குத் தெரியாது என்றார்கள்; அப்பொழுது இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது: (அப்படியானால்) நானும் இவைகளைச் செய்கிற அதிகாரத்தின் தன்மை இன்னதென்று உங்களுக்குச் சொல்லமாட்டேன் என்றார்.

கி. பி. ஈஈ.

1 மத். க. மா. கொலோ. க. ய.

2 மத். ஏஅ. கஅ.

3 மத். உக. உக. லூக். உஅ. க.

* அல்லது கேள்வி.

4 மத். க. இ: மா. இ.மாற். க. உஅ.

ய2. அதிகாரம்.

க. பொல்லாத தோட்டக்காரர்களுக்கு வீட்ட நிராட்சத்தோட்டத்தின் உரிமையிலும், பிரதானாசாரியர்களுக்கும், அந்தியர்களுக்கும் அதிக தீங்கை எதிர்த்துக் கண்டிக்கிறது. ஙக. இராயனுக்கு வரிகொடுப்பதைக்குறித்துப் பரிசேயருக்கும் ஏரோதியின் மனுஷருக்கும் உத்தரவுசொன்னது. ஙஅ. உயிர்த்தெழுதல் இல்லையென்ற சதுசேயருடைய தப்பறையைக் கண்டித்து, அதை உபதேசத்தை நிச்சயித்தது. ஙஉ. பிரதான கற்பனை எதென்ற கேட்ட வேதபாரனுக்கு உத்தரவு அருளிச்செய்தது. ஙஊ. மேசியாவைக்குறித்து வேதபாரர் கொண்டிருந்த தாற்பரியத்தைக் கண்டித்தது. ஙஎ. அவர்களுடைய பெருமையையும், மாயத்தையும்குறித்துச் சஞ்சல சித்தமானது. சக. இரண்டு காசைத் தருமப்பெட்டியில் போட்ட ஏழை விதவையைப் புகழ்ந்தது.

[5]அல்லாமலும் அவர் உவமைகளாய் அவர்களுடனே சொன்னது: ஒரு மனிதன் ஒரு திராட்சத்தோட்டத்தை உண்டுபண்ணி, அதைச் சுற்றி வேலி அடைத்து, அதில் ஆலையை நாட்டி, ஒரு கோபுரத்தையும் கட்டி, பின்பு அதைத் தோட்டக்காரர் வசமாய்விட்டுப் புறத்தேசத்திற்குப் போனான்.

உ தகுதியான காலத்திலே அந்தத் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒரு பாகத்தைத் தோட்டக்காரரிடத்தில் வாங்கிக்கொள்ளும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்திற்கு அனுப்பினான்.

ஙக அவர்கள் அவனைப் பிடித்து அடித்து, வெறுமையாய் அனுப்பினார்கள்.

ஙஅ மறுபடியும் அவன் வேறொரு ஊழியக்காரனை அவர்களிடத்தில் அனுப்பினான்; அவன்மேல் அவர்கள் கல்லெறிந்து, தலையில் காயப்படுத்திக் கனவீனத்தோடே அவனை அனுப்பினார்கள்.

ஙஉ பின்பு அவன் வேறொருவனை அனுப்பினான், அவனை அவர்கள்

4 மத். க. இ: மா. இ.மாற். க. உஅ.

5 மத். உக. கக. லூக். உஅ. க.

Digitized by Google

கொலைசெய்தார்கள்; (அப்படி அவனால் அனுப்பப்பட்ட) அநேகரில் சிலரை அடித்து, சிலரைக் கொலைசெய்தார்கள்.

ச அவனுக்குப் பிரியமான ஒரே குமாரன் இருந்தான், ஆதலால் அவன், தன் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று எண்ணி, கடைசியிலே அவனையும் அவர்களிடத்தில் அனுப்பினான்.

எ அந்தத் தோட்டக்காரர் (அவனைக் கண்டு,) இவன் சுதந்தரவாளி, இவனுடைய சுதந்தரம் நமதாகும்படிக்கு, நாம் இவனைக் கொலைசெய்யக்கடவோம் வாருங்கள் என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டு,

அ பின்பு அவனைப் பிடித்துக் கொலைசெய்து, திராட்சத் தோட்டத்திற்குப் புறம்பே தள்ளினார்கள்.

கூ ஆனபடியினாலே அந்தத் தோட்டத்தின் எசமான் என்னசெய்வான்? அவன் வந்து அந்தத் தோட்டக்காரரை அழித்து, தோட்டத்தை மற்றவர்களுக்கு ஒப்புக்கொடுப்பானல்லவா?

ஙு [1]வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று.

ங அது பராபரனாலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கின்றதென்ற வேதவாக்கியத்தை நீங்கள் வாசிக்கவில்லையா என்றார்.

ஙூ ¶ அப்பொழுது அவர்கள் தங்களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னார் என்று அறிந்தபடியால், [2]அவனைப் பிடிக்க மனதாயிருந்தார்கள்; ஆனாலும் சனங்களுக்குப் பயந்து, அவனைவிட்டுப் போனார்கள்.

ஙூ ¶ [3]பின்பு அவர்கள் வசனங்களினாலே அவனை அகப்படுத்தும்படிக்கு, சில பரிசேயரையும் ஏரோதியின் மனிதரையும் அவரிடத்தில் அனுப்பினார்கள்.

கி. பி. ஈஈ.

1 சங். ரஅ.உஉ.
2 மத். உக. உஅ, உக. மாற். ங. லூக். உஅ.யோ.உ. உஅ, கம், உட.
3 மத். உஉ. மஅ. லூக். உம். உம்.

* முன்றேமுக்கால் பணத்தவரம். மத். ங்அ. உஅ.

ஙஅ அவர்கள் வந்து அவனை நோக்கி, போதகரே, நீர் மனிதருடைய முகத்தைப் பாராமல், பராபரனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய் உபதேசிக்கிறவராய் இருக்கிறீர்; ஆகையால் நீர் சத்தியமுடையவருமாய், ஒருவனாயுங்குறித்துக் கவையில்லாதவருமாய்இருக்கிறீர் என்று அறிந்திருக்கிறோம்; இராயனுக்கு வரிப்பணத்தைக்கொடுக்கிறது நியாயமோ இல்லையோ?

ஙஉ நாம் கொடுக்கவேண்டுமோ, கொடாமல் இருக்கவேண்டுமோ என்றார்கள்; அவர் அவர்களுடைய மாயத்தை அறிந்து, நீங்கள் என்னை என் சோதிக்கிறீர்கள்? நான் பார்க்கும்படிக்கு, *ஒரு தெனாரியு எனக்குக் கொண்டுவாருங்கள் என்றார்.

ஙங அவர்கள் கொண்டுவந்தார்கள்; அப்பொழுது அவர் சொன்னது: இந்தச் சொரூபமும் மேலெழுத்தும் யாருடையவைகள் என்றார்; அதற்கு அவர்கள், இராயனுடையவைகள் என்றார்கள்.

ஙச இயேசுவானவர் சொன்னது: இராயனுடையவைகளை இராயனுக்கும், பராபரனுடையவைகளைப் பராபரனுக்கும், செலுத்துங்கள் என்று சொன்னார்; அப்பொழுது அவனைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

ஙஅ ¶ [4]பின்பு உயிரோடெழுந்திருக்கும் மறுமை இல்லையென்று சொல்லுகிற [5]சதுசேயர் என்பவர்கள் அவரிடத்தில் வந்து,

ஙக [6]போதகரே, ஒருவன் பிள்ளைகள் இல்லாமல் தன் மனைவியை விட்டு இறந்தால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி, அவனுக்குச் சந்ததி உண்டாக்கவேண்டும் என்று நமக்கு மோசே கட்டளையிட்டிருக்கிறாரே.

உய ஓரிடத்தில் எழுபேர் சகோதரர் இருந்தார்கள்; அவர்களில் மூத்தவன் ஒரு பொண்ணை விவா

4 அப். உக. ச.
5 மத். உஉ. உக. லூக். உம். உஎ.
6 ஏ மோ. உஅ. ஙு.

Digitized by Google

கம்பண்ணி, பின்பு சந்ததியில்லாமல் இறந்துபோனான்.

உக அப்பொழுது இரண்டாம் சகோதரன் அவளை விவாகம்பண்ணி, சந்ததியில்லாமல் இறந்துபோனான்; மூன்றும் சகோதரனும் அப்படிப் போனான்.

உஉ ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணிச் சந்ததியில்லாமல் போனார்கள்; எல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனாள்.

உஊ ஆகையால் அவர்கள் உயிரோடெழுந்திருக்கும் காலத்திலே ஏழுபேருக்கும் மனைவியாயிருந்த அவள் அவர்களில் எவனுக்கு மனைவியாயிருப்பாள் எனறு கேட்டார்கள்.

உச அவர்களுடனே இயேசுவானவர் சொன்னதாவது: நீங்கள் வேதவாக்கியங்களையும் பராபரனுடைய வல்லமையையும் அறியாமல் இருக்கிறபடியால் அல்லவாவஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்?

உடு மரித்தவர்கள் உயிரோடெழுந்திருக்கும்பொழுது, பெண்கொள்வதும் கொடுப்பதும் இராது; [1]அவர்கள் பரலோகத்திலுள்ள தூதரைப்போல இருப்பார்களே.

உசு மரித்தோர் எழுப்பப்படுவதைக்குறித்து, [2]நான் ஆபிரகாமினுடைய தேவனுமாய், ஈசாக்கினுடைய தேவனுமாய், யாக்கோபினுடைய தேவனுமாயிருக்கிறவர் என்று செடியிலிருந்து பராபரன் மோசேயுடனே சொல்லிய வாக்கியம் மோசேயின் ஆகமத்திலே எழுதியிருக்கின்றதே; அதை நீங்கள் வாசிக்கவில்லையா?

உஎ அவர் மரித்தவர்களுடைய தேவனுயிராமல் சீவனுள்ளோருடைய தேவனுயிருக்கிறார்; ஆகையால் நீங்கள் மிகவும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறீர்கள் என்றார்.

உஅ ¶ [3]அவர்கள் அப்படிப் பேசிக்கொண்டதை வேதபாரகரில் ஒருவன் கேட்டு, அவர் அவர்களுக்கு நன்றாய் மாறுத்தரம் சொன்னரென்று அறிந்து, அவனை நோக்கி, கற்பனைகளில் எது பிரதானமானதென்று கேட்டான்.

உக அதற்கு அவர் சொன்னது: கற்பனைகளில் பிரதானமான கற்பனை என்னவென்றால், [4]இஸ்ரவேலே கேள், உன் தேவனுமாகிய பராபரன் ஒருவரே பராபரன்.

உங உன் தேவனுமாகிய பராபரனிடத்தில், நீ உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் பெலன்கள் எல்லாவற்றோடும், அன்புகூர்வாயாக என்பதே பிரதானமான கற்பனை.

உச இரண்டாம் கற்பனை அதற்கு ஒப்பாயிருக்கின்றது; என்னவெனில், [5]உன்னிடத்தில் அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வாயாக என்பதே; இவைகளிலும் வேறொரு பெரிதான கற்பனையில்லை என்றார்.

உஉ வேதபாரகன் சொன்னது: நல்லது போதகரே, நீர் சத்தியத்தின்படி சொன்னீர்; ஒரே தேவன் உண்டு, [6]அவனைத்தவிர வேறொரு தேவனில்லை.

உஊ [7]அல்லாமலும் தகனபலி முதலான பலிகளிலும், முழு இருதயத்தோடும், முழு மனதோடும் முழு ஆத்துமாவோடும், முழுப்பலத்தோடும் அவரிடத்தில் அன்புகூர்வதும், தன்மேல் அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூர்வதுமே மேன்மையாயிருக்கின்றன என்றான்.

உஎ அவன் புத்தியோடே பேசினதை இயேசுவானவர் கண்டு, நீ பராபரனுடைய இராச்சியத்திற்குத் தூரமானவன் அல்ல என்று அவனுடனே சொன்னார்; [8]பின்பு ஒருவனும் அவரிடத்தில் வினவத் துணியவில்லை.

உஏ ¶ [9]இயேசுவானவர் தேவாலயத்திலே உபதேசம்பண்ணுகையில் அவர் அவர்களை நோக்கி, தா

கி. பி. ஈஈ.

1 க கொரி. ய5. சஉ, சக, இஉ.
2 உ மோ. க. கூ.
3 மத். உஉ. கஇ.
4 இ மோ. கூ. ச. லூக். ம. உஎ.
5 உ மோ. கூ. ஐஅ. மத். உஉ. கூ. உரோ. ய3. க கலா. இ.ச. பாக். உ. அ.
6 இ மோ. ச. கூ. எசா. சஇ. கூ, ஏச: சக. கூ.
7 க சாமு. ய5. உஉ. ஒசே. கூ. கூ. மீகா. க. க, எ, அ.
8 மத். உஉ. சக.
9 மத். உஉ. சக. லூக். உம். சக.

Digitized by Google

மீது தானே பரிசுத்த ஆவியிலுலே சொன்னது: [1]பராபரன் என் கர்த்தாவை நோக்கி, உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதப்படியாக்குமளவும், நீர் என்னுடைய வலதுபாரிசத்திலே உளுக்காரும் என்றார் என்பதே.

ஙூ [2]ஆகையால் இறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்?

ஙஎ தாவீது தானே அவனைக் கர்த்தாவென்று சொல்லியிருக்க, அவர் எப்படி அவனுடைய குமாருலுயிருக்கிறார்என்று சொன்னார்; அநேக சனங்கள் அவருடைய உபதேசத்தை இன்பமாய்க் கேட்டார்கள்.

ஙஅ ¶ [3]அன்றியும் அவர் உபதேசம்பண்ணுகையில் அவர்களுடனே சொன்னது: நீளமான அங்கிகளைத் தரித்திருந்து சுடக்கவும், [4]சந்தைகளிலே வாழ்த்துதல் அடையவும்,

ஙக செபஆலயங்களில் முதல் ஆசனங்களில் இருக்கவும், போசன பந்திகளில் முதலிடங்களில் இருக்கவும் விரும்பி, [5]விஸ்தாரமாய்ச் செபமந்திரங்களைச் சொல்லுகிறும் என்று சொல்லி, [6]கைம்பெண்களுடைய ஆஸ்திகளைப் பட்சித்துவருகிற வேதபாரகருக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருங்கள்.

ஙல அவர்கள் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்றார்.

ஙக ¶ [7]அல்லாமலும் இயேசுவானவர் பொக்கிஷப்பெட்டிக்கு எதிரே உளுக்காந்தபொழுது, [8]அநேகசனங்கள்* பணத்தைப் போடுறதைப் பார்த்தார்; அநேக ஐசுவரியவான்கள் மிகவும் போட்டார்கள்.

ஙஉ எளியவளான ஒரு கைம்பெண்ணும் வந்து, கோதிராந்தே சென்னும் இரண்டுகாசைப் †போட்டாள்.

ஙஙூ அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை அழைத்து, இந்தப் பொக்கிஷப் பெட்டியிலே [9]போட்டவர்கள் எல்லாரிலும் இவ்வேழைக் கைம்பெண் அதிகமாய்ப் போட்டாள் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஙஙஎ என்னத்திலுலென்றால், அவர்கள் எல்லாரும் தங்களுக்குண்டான சம்பூரணத்தில் சில போட்டார்கள், [10]இவள் தன் எளிமையில் தன் சீவனத்திற்குண்டானயாவையும் போட்டாள் என்றார்.

ஙஙூ. அதிகாரம்.

க. இறிஸ்து தேவாலயத்தின் அழிவையும், உ. அவிசேஷத்தின் நிமித்தமாய் உண்டாகும் துன்பத்தையும், ஙூ. அவிசேஷம் சகலசாதிகளுக்கும் பிரசங்கிக்கப்படுவதையும், ஙச. பூதங்களுக்கு உண்டாகும் உபத்திரவங்களையும், ஙஉ. அவர் நியாயத்தீர்ப்புக்கு வரும் விதத்தையும், ஙஙஎ. அந்த நேரம் ஒருவருக்கும் தெரியாதிருக்கிறபடியால் மரணத்தின் வழியாய் எவனிடத்திலும் அவர் வரும்பொழுது, அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு எவரும் விழித்துச் செபம்பண்ணவேண்டுமென்பதையும், முன்னறிவித்தது.

[11]பின்பு அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படுகிறபொழுது, அவருடைய சீஷரில் ஒருவன் அவனை நோக்கி, போதகரே, இதோ, இவைகள் எப்படிப்பட்ட கல்லுகள்? இது எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றது என்றான்.

ஙூ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: இந்தப் பெரியமாளிகையைப் பார்க்கிறாயா? [12]இதில் ஒரு கல்லின்மேலே மற்றொருகல் வைக்கப்படுவதில்லை, எல்லாம் இடிக்கப்படும் என்றார்.

ஙூ ¶ பின்பு அவர் தேவாலயத்திற்கு எதிராக ஒலிவமலையின் மேல் உளுக்காந்திருக்கையில், பேதுருவும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும் தனித்திருந்து அவனை நோக்கி,

ஙச [13]இவைகள் எப்பொழுது நடக்கும்? இவைகளெல்லாம் நிறைவேறும் காலத்திலே என்ன அடையாளம் தோன்றும்? அதை

1 சங்.110.1.

2 உ சாமு. உக. உ.
3 மாற். ச. உ.
4 லூக். உக. சக.
5 மத். உக. க. லூக். உஅ. சக.
6 மத். உக. அச.
7 லூக். உக. க.
8 உஇரா.உஉ.க.
* செம்புப் பணம். மத். அ. க.
† செம்புப் பணத்தில் எழில் ஒரு பங்குள்ளது ச.
9 உ கொரி. அ. உஉ.
10 இ மோ. உச. க.கபோ.க.மா.

11 மத். உச. க. லூக். உக. இ.

12 லூக்.உக.சஇ.

13 மத். உச. க. லூக். உக. எ.

எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று கேட்டார்கள்.

ஓ அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: அநேகர் தோன்றி, என்னுடைய நாமத்தை எடுத்து, நானே அவரென்று சொல்லி, அநேகரை வஞ்சனை செய்வார்கள்.

சு ஆகையால் [1]ஒருவனும் உங்களை வஞ்சனைசெய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

எ அல்லாமலும் நீங்கள் யுத்தங்களையும் யுத்தங்களுக்கேற்ற பேச்சுகளையும் கேள்விப்படும்பொழுது கலக்கம் அடையாதிருங்கள்.

அ அப்படி நடக்கவேண்டுமே, அப்பொழுது முடிவு உடனே வாராது; ஆகையால் ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்திற்கும், ஒரு இராச்சியத்தார் மற்றொரு இராச்சியத்தாருக்கும் விரோதமாய் எழும்புவார்கள்; பல இடங்களிலே பூமி அதிர்தல்களும் பஞ்சங்களும் கலகங்களும் சம்பவிக்கும்; [2]இவைகள் வேதனைகளின் *ஆரம்பமாய் இருக்கும்.

கூ ¶ [3]அப்பொழுது நீங்கள் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள்; என்னத்தினாலெனில் என் நிமித்தம் உங்களைப் பெரிய சங்கத்தாருக்கு ஒப்புக்கொடுப்பார்கள்; செபஆலயங்களிலே நீங்கள் அடிக்கப்பட்டுத் தலைகளுக்கும் இராசாக்களுக்கும் சாட்சியாக அவர்களுக்குமுன்பாக நிறுத்தப்படுவீர்கள்.

ய அல்லாமலும் முன்பு சுவிசேஷமானது [4]உலகத்தார் எல்லாருக்கும் பிரசங்கம் பண்ணப்பட வேண்டும்.

யக [5]அப்படி ஒப்புக்கொடுக்கும்படிக்கு உங்களைக் கொண்டுபோகும்பொழுது, நீங்கள் என்ன பேசுவோம் என்று முன் கவலைப்படாமலும், சிந்தித்துக்கொள்ளாமலும் இருங்கள்; நீங்கள் அல்ல, [6]பரிசுத்த ஆவியே பேசுகிறவராகையால், அந்நேரத்திலே உங்களுக்கு அளிக்கப்படுவதையே பேசக்கடவீர்கள்.

யஉ [7]அன்றியும் ஒருவன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும் மரணத்திற்கு, ஒப்புக்கொடுப்பார்கள்; பிள்ளைகளும் தங்களைப் பெற்றவர்களுக்கு விரோதமாய் எழும்பி அவர்கள் மரணம் அடையும்படி செய்விப்பார்கள்.

யஊ [8]நீங்களும் என் நாமத்தின் நிமித்தம் யாவராலும் பகைக்கப்படுவீர்கள்; [9]எப்படியும் முடிவுவரைக்கும் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.

யச ¶ மேலும் பாழாக்குகிற அருவருப்பைக்குறித்து [10]தானியேல் தீர்க்கதரிசி சொன்னதை, (அதை) வாசிக்கிறவன் சிந்தித்துக் கொள்ளக்கடவன்; [11]அது கிடக்கப்படாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக்காணும்பொழுது [12]யூதேயாவிலுள்ளவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

யஙி வீட்டின்மேல் இருப்பவன் தன் வீட்டிற்குள்ளே இறங்காமலும், அதிலிருந்து எதையாகிலும் எடுத்துக்கொண்டு போகும்படி பிரவேசியாமலும் போகக்கடவன்.

யசு அல்லாமலும் வயலில் இருப்பவன் தன் வஸ்திரத்தை எடுத்துப் போகும்படிக்குப் பின்னிட்டுத் திரும்பாமல் போகக்கடவன்.

யஎ [13]ஐயோ! அந்நாள்களில் கர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் உபத்திரவம் இருக்கும்.

யஅ மேலும் பராபரன் உலகத்தை உண்டாக்கினதுமுதற்கொண்டு, இதுவரைக்கும் சம்பவியாததுமாய், இனிமேலும் சம்பவியாததுமாய் இருக்கிற [14]உபத்திரவமே அந்நாள்களில் இருக்கும்.

யக ஆதலால்நீங்கள் ஒடுகிறது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டுதல் பண்ணக்கடவீர்கள்.

கி. பி. கூஙூ.

1 எரே. உசு. அ. எபே. இ. சு. 2 தெச. உ. க.
2 மத். உச. அ.
* இந்த மொழி மூலபாஷையில் செப்பவாதனையைக் குறிக்கும்.
3 மத்.ம. ஙஎ.மஅ: உச. சு. வெளி. உ. ம.
4 மத். உச. ஙச.
5 மத்.ம.ஙசூ.லூக். ஙஉ ஙச: உக. ஙச.
6 அப். உ. ச: ச. அ, சு.
7 மீகா. எ. சு. மத். ம. உக: உச. ம. லூக். உக. ஙக.
8 மத். உச. சு. லூக். உக. ஙக.
9 தானி. ஙஉ.ஙஉ. மத்.ம.உஉ:உச. ஙக.வெளி.உ.ம.
10 தானி.சு.உஎ.
11 மத். உச. ஙஇ.
12 லூக்.உசு.உசு.
13 லூக்.உசு.உசு: உக. உசு.
14 தானி சூ.உக: ஙஉ.சு.யோவே. உ. உ. மத்.உச. உக.

Digitized by Google

உல அல்லாமலும் பராபரன் அந்நாள்களைக் குறையப்பண்ணுமல் இருந்தால் ஒருவரும் தப்பிப் போவதில்லை, அவர் தெரிந்துகொண்டவர்களின் நிமித்தமே அந்நாள்களைக் குறைத்தார்.

உக அன்றியும் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, தெரிந்துகொள்ளப்பட்டவர்களை (வஞ்சிக்க) கூடுமானால் அவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.

உஉ [1]ஆகையால் அக்காலத்திலே ஒருவன், இதோ இங்கே கிறிஸ்து என்றும், அதோ அங்கே கிறிஸ்து என்றும் உங்களுடனே சொன்னால், அவனை நீங்கள் நம்ப வேண்டாம்.

உக [2]எச்சரிக்கையாகவே இருங்கள்; இதோ, இவைகள் எல்லாவற்றையும் உங்களுக்கு முன்னறிவித்தேன்.

உச ¶ [3]அன்றியும் அக்காலத்திலே அந்த உபத்திரவத்திற்குப் பின்பு சூரியன் இருள் அடையும், சந்திரன் பிரகாசம்கொடாமல் இருக்கும்.

உரு நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும்; அல்லாமலும் வானத்தில் பலமுள்ளவைகளெல்லாம் அசைக்கப்படும்.

உசு [4]அப்பொழுது மனிதனுடைய குமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின்மேல் வருவார்; அவனை அவர்கள் காண்பார்கள்.

உஎ அல்லாமலும் அவர் அப்பொழுது தம்முடைய தூதரை அனுப்பி வானத்தின் எல்லைகளாகிய நாலுதிசைகளிலுமிருந்து தாம் தெரிந்துகொண்டவர்களைச் சேர்த்துக்கொள்வார்.

உஅ ¶ [5]அத்திமரத்தினிடமாய் உவமையாக ஒரு விசேஷத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்; அதின் கிளை தளிராகி இலைகளைக் கொடுக்கிற பொழுது, வசந்தகாலம் சமீபமாய் இருக்கிறதென்று அறிகிறீர்கள்.

உக அப்படிப்போல, இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது மிகவும் சமீபமாய் இருக்கிறார் என்று அறியக்கடவீர்கள்.

உய இவைகள் யாவும் சம்பவிக்குமளவும், இந்தச் சந்ததி ஒழிந்து போவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஊக [6]வானமும் பூமியும் ஒழிந்து போம், என் வசனங்களோ ஒழியாமல் இருக்கும்.

ஊஉ (அவை சம்பவிக்கும்) நாளையும் நாழிகையையும் பிதாவானவரேயன்றி, மற்றொருவனும் அறியமாட்டான்; பரமண்டலங்களிலுள்ள தூதரும் குமாரனும் அதை அறியார்கள்.

ஊங ¶ அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால், [7]எச்சரிக்கையாய் விழித்துக்கொண்டு செபம்பண்ணக்கடவீர்கள்.

ஊச [8]ஒரு மனிதன் தன் வீட்டை விட்டுப் புறத்தேசத்திற்குப் போகமனதாய், தன் ஊழியக்காரருக்கு அதிகாரம் கொடுத்து, ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வேலையை நியமித்து, காவற்காரன் விழித்துக்கொண்டிருக்கும்படிக்குக் கட்டளையிடுகிறதுபோலஇருக்கின்றது.

ஊரு [9]ஆகையால் வீட்டெசமான், சாயங்தரம், பாதிராத்திரி, சேவல் கூவும் நேரம், காலை, இவைகளில் இன்னவேளையில் வருவார் என்று நீங்கள் அறியாதிருக்கிறபடியால்,

ஊசு அவர் சடுதியாய் வந்து, உங்களைத் தூங்குகிறவர்கள் என்று கண்டுபிடியாதபடிக்கு விழித்துக்கொண்டிருங்கள்.

ஊஎ விழித்துக்கொண்டிருங்கள் என்று நான் உங்களுக்குச் சொன்னதுபோல, மற்ற யாவருக்கும் அப்படியே சொல்லுகிறேன் என்றார்.

கி. பி. கூக.

1 மத். உச. உக. மாக். மஉ. உக: உக. அ.
2 உ பே. க. மஉ.
3 தானி. எ. ம. செப். க. மஇ. மத். உச. உக. மாக். உக. உஇ.
4 தானி. எ. மக, எச. மத். மக. உஎ: உச. கம. மற். மச. கஉ. அப். க. மக. 6 தெச. ச. மக. உ தெச. க. எ, ம. வெளி. க. எ.
5 மத். உச. கஉ. மாக். உக. உக.
6 எச. சம. அ.
7 மத். உச. சஉ: உஇ. மக. மாக். மஉ. சம: உக. கஇ. உரோ. மக. மக. 6 தெச. இ. க.
8 மத். உச. சஇ: உஇ. மச.
9 மத். உச. சஉ, சச.

Digitized by Google

ய அ. அதிகாரம்.

க. இரிஸ்துவுக்கு விரோதமாகப் பண்ணப்பட்ட ஆலோசனை. உ. ஒரு ஸ்திரீ தயிலத்தை அவர் சிரசின் மேல் வார்த்தது. ம. யூதா தன் ஆண்டவனைப் பணத்துக்கு விற்றது. மஉ. இரிஸ்து தம்முடைய சீஷர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்படுவதை முன்னறிவித்தது. உஉ. பஸ்கா ஆயத்தம்பண்ணப்பட்டுப் புசிக்கப்பட்டபின்பு இராப்போசனத்தை ஏற்படுத்தி, உக. சீஷர்கள் எல்லாரும் தம்மைவிட்டு ஓடிப்போவதையும், பேதுரு தம்மை மறுதலிப்பதையுங்குறித்து முன்னறிவித்தது. சஉ. யூதா அவரை முத்தத்தினால் காட்டிக்கொடுத்தது. சக. அவர் நோட்டத்தில் பிடிக்கவும், ஙஅ. அநியாயமாய்க் குற்றஞ்சாற்றவும் யூதர்களுடைய ஆலோசனை சங்கத்தாரால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவும், கஇ. அவர்களால் நிந்திக்கவும், கக. பேதுருவினால் மும்முறை மறுதலிக்கவும் உட்பட்டது.

வி. பி. ஈந.

1 இரண்டு நாளுக்குப் பின்பு, புளியாத அப்பம் சாப்பிடுகிற பஸ்காப் பண்டிகை வந்தது; பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தந்திரமாய் அவனைப் பிடித்துக் கொலைசெய்யும்படிக்கு வகைதேடிக்கொண்டு இருக்கையில்,

உ அவர்கள் சொன்னது: பண்டிகையிலே அப்படிச் செய்யக்கூடாது; செய்தால் சனங்களுக்குள்ளே கலகம் உண்டாகும் என்றார்கள்.

ஊ ¶ 2அவர் பெத்தானியா ஊரிலே குஷ்டரோகியாயிருந்த சீமோனுடைய வீட்டில் போசனபந்தி இருக்கையில், ஒரு ஸ்திரியானவள் மிகவும் விலையேறப்பெற்ற களங்கமில்லாத சுகந்த வருக்கத்தால் செய்த நருது* என்னும் பரிமள தயிலமுள்ள வெண்கல்பரணியை எடுத்துவந்து அதைத் திறந்து, அதிலுள்ள தயிலத்தை அவருடைய தலையின்மேல் வார்த்தாள்.

ச அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனம் அடைந்து, இந்தப் பரிமளதயிலத்தை என் கெடுத்துப்போடுகிறாள்?

ஙு இதை மூந்நூறு † தேனாரியு வெள்ளிக்குமேலான கிரயத்திற்கு விற்று, ஏழைகளுக்குக் கொடுக்கலாமே என்றுசொல்லி அவளுக்கு விரோதமாய் மொறுமொறுத்தார்கள்.

1 மத். உக. உ. மாக். உஉ. க. லூக. உஉ: கூ. க.

2 மத். உக. க. லூக. ம்உ.க, க. மாக்.எ.கஎ.

* அல்லது சந்த நரு.

† மத். ம்அ. உஅ. காண்க.

3 இ மோ. ஙஇ. ம்க.

ஙங அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: இவளை விட்டுவிடுங்கள், என் இவளை வருத்தப்படுத்துகிறீர்கள்; இப்படி இவள் ஒரு நற்கிரியை என்னிடத்தில் செய்தாள்.

ஙச 3ஏழைகள் எப்பொழுதும் உங்களுடனே இருப்பார்கள்; மனதிருந்தால் நீங்கள் அவர்களுக்கு நன்மைசெய்யலாம்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்.

ஙஅ இவள் தன்னாலானமட்டும்செய்தாள்; என் சரீரத்தை அடக்கம்பண்ண எத்தனமாக்கும்படிக்கு இவள் முந்தி இதில் சுகந்தவருக்கம் இட்டாள்.

ஙக உலகம் முழுவதிலும் இந்தச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடம் எங்கேயோ, அங்கே இவளை நினைத்துக்கொள்வதற்கு, இவள் இப்பொழுது செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ஙஉ ¶ 4பின்பு பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்தென்பவன், பிரதான ஆசாரியருக்கு அவனைக் காட்டிக்கொடுக்கும்படிக்கு அவர்களிடத்தில் போனான்.

ஙம அவனுடைய வார்த்தைகளை அவர்கள் கேட்டுச் சந்தோஷப்பட்டு, அவனுக்குப் பணம்கொடுக்கும்படிக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்கள்; பின்பு அவன் அவனைக் காட்டிக்கொடுப்பதற்குத் தகுதியான காலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

4 மத். உக. ம மாக். உஉ. க, ச.

ஙன ¶ 5புளியாத அப்பங்களைச் சாப்பிடும் நாள்களில், பஸ்காவாட்டுக்குட்டி பலியிடப்படும் ‡ முதல் நாளிலே அவருடைய சீஷர்கள் அவனை நோக்கி, நீர் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நாங்கள் எங்கே போய் எத்தனம்பண்ணச் சித்தமாய் இருக்கிறீர் என்று கேட்டார்கள்.

5 மத். உக. ம. மாக். உஉ. எ.

‡ அல்லது கொல்லப்படும்.

Digitized by Google

எக அப்பொழுது அவர் தம்முடைய சீஷரில் இரண்டுபேரை அழைத்து, நீங்கள் பட்டணத்திற்குப் போங்கள்; அங்கே ஒரு மனிதன் தண்ணீர்க் குடத்தைச் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிராக வருவான்; அவனுக்குப் பின்செல்லுங்கள்.

எஙி அல்லாமலும் அவன் பிரவேசிக்கும் வீட்டிலே நீங்களும் (பிரவேசித்து,) அதின் எசமானை நோக்கி, நான் என் சீஷர்களுடனே பஸ்காவைப் போசனம்பண்ணத்தக்கதான இடம் எங்கே என்று போதகர் கேட்கிறாரென்று சொல்லுங்கள்.

எசி அப்பொழுது அவன் கம்பளம் முதலானவைகள் விரித்து ஏத்தனமாக்கப்பட்டிருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டில் பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே நமக்காக ஏத்தனம்பண்ணுங்கள் என்றுசொல்லி அனுப்பினார்.

எகூ அந்தப்படி அவருடைய சீஷர்கள் புறப்பட்டுப் பட்டணத்தில் வந்து, தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காப் போசனத்தை ஏத்தனம்பண்ணினார்கள்.

எஎ ¶ [1]சாயந்தரமானபொழுது, அவர் பன்னிருவருடனேகூட அவ்விடத்திற்குப் போனார்.

எஅ அவர்கள் பந்தியிலிருந்து சாப்பிடுகையில், இயேசுவானவர் அவர்களை நோக்கி, என்னோடேகூடச் சாப்பிடுகிற உங்களில் ஒருவனே என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாய் உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்.

எக அவர்கள் அதைக் கேட்டு, மிகுந்ததுக்கம் அடைந்து, நானே, நானே என்று ஒவ்வொருவராய் அவரிடத்தில் கேட்கத் தொடங்கினார்கள்.

உ௰ அவர்களுக்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: பன்னிருவரில்

வி. பி. ஈகூ.

1 மத். உக. உ௰.
2 மத். உக. உச. லூக். உ௨. உ௨.

3 மத். உசு. உக. லூக். உ௨. ம௬. 1 கொரி. ம௬. உக.

4 மத். உக. ஈ௰.
* அல்லது சம்மதம்.

5 மத். உக. உக.

6 சகரி. ம௬. எ.

ஒருவனே என்னோடேகூடத் தாலத்திலே தோய்க்கிறவனே (அப்படிச்செய்வான்.)

உக [2]மனிதனுடைய குமாரன் தன்னைக்குறித்து எழுதியிருக்கிறபடி போகிறார்; ஆனாலும் ஐயோ! மனிதனுடைய குமாரனைக் காட்டிக்கொடுப்பவன் எவனோ, அவனுக்கு வேதனை வரும்; அம்மனிதன் பிறவாமல் இருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்.

உ௨ [3]அல்லாமலும் அவர்கள் சாப்பிடுகிறபொழுது, இயேசுவானவர் அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்செய்து, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இதை எடுத்துப் புசியுங்கள்; இது என்னுடைய சரீரமாயிருக்கின்றது என்று சொல்லி,

உசு பின்பு பாத்திரத்தையும் எடுத்துத் தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் எல்லாரும் அதில் பானம்பண்ணின பின்பு சொன்னதாவது:

உச இது புதிய ஏற்பாட்டுக்கு ஏற்றதாய் அநேகருக்காகச் சிந்தப்படும் என்னுடைய இரத்தமாய் இருக்கின்றது.

உடி பராபரனுடைய இராச்சியத்திலே நான் திராட்ச இரசத்தை நவமாய் உங்களுடனே பானம்பண்ணும் நாள்வரைக்கும், அதை நான் மறுபடியும் பானம்பண்ணுவதில்லை என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உசு ¶ [4]அவர்கள் தோத்திரம்* பாடின பின்பு, ஒலிவமலைக்குப் போனார்கள்.

உஎ [5]அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, [6]மேய்ப்பனைவனை [*]அடிப்பேன், அப்பொழுது ஆடுகள் சிதற அடிக்கப்படுமென்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் எல்லாரும் இந்த இராத்திரியிலே என்னைக்குறித்து விழுவுவீர்கள்.

Digitized by Google

உஅ [1]ஆனாலும் நான் உயிரோடி
ருக்கும்படி எழுப்பப்பட்ட பின்
பு, உங்களுக்குமுன்னே கலிலே
யா நாட்டுக்குப் போவேன் என்
றார்.

உக [2]அதற்குப் பேதுரு, எல்
லாரும் உம்மைக்குறித்து வழுவி
னாலும், நான் அப்படிச் செய்ய
மாட்டேன் என்றான்.

உக அவனுடனே இயேசுவான
வர், இந்த இராத்திரியிலே சேவல்
இரண்டாந்தரம் கூவுமுன்னமே,
நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்
பாயென்று மெய்யாய் உனக்குச்
சொல்லுகிறேன் என்றார்.

உக அதற்கு அவன், நான் உம்
மோடே சாகவேண்டுவதாயிருந்
தாலும் உம்மை மறுதலிக்கமாட்
டேன் என்று அதிக உறுதியாய்ச்
சொன்னான்; மற்றவர்கள் எல்லா
ரும் அப்படியே சொன்னார்கள்.

உஉ ¶ [3]பின்பு அவர்கள் கெது
சேமனே என்னுமிடத்தில் சேர்ந்
தார்கள்; அங்கே அவர் தம்மு
டைய சீஷர்களை நோக்கி, நான்
போய்ச் செபம்பண்ணுகையில்
நீங்கள் இங்கே இருங்கள் என்று
சொல்லி,

உஊ பேதுருவையும் யாக்கோ
பையும் யோவானையும் கூட்டிக்
கொண்டு போய், மிகுந்த திகிலை
யும் வியாகுலத்தையும் அடையத்
தொடங்கி,

உஎ [4]என் ஆத்துமா மரணவேத
னைப்படுகின்றது; நீங்கள் இங்கே
தங்கி விழித்திருங்கள் என்று சொ
ல்லி,

உஏ சற்றேனூரம் போய்த் தனி
யிலே விழுந்து, அந்த நேரம் தம்
மைவிட்டு நீங்கக் கூடுமானால்
அது நீங்கும்படிக்கு,

உஐ [5]அப்பா பிதாவே, [6]உம்மா
லே எல்லாம் ஆகும்; இந்தப்
பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்
படி செய்யும்; இல்லாவிட்டால்
[7]என்னுடைய சித்தத்தின்படியல்
ல, உம்முடைய சித்தத்தின்படியே

ஐ. பி. ஊஊ.

1 மாற். உக. எ.

2 மத். உக. கக, கச. லூக். உஉ. கக, கச. யோவா. உக. கஎ, கஅ.

3 மத். உக. கக. லூக். உஉ. கக. யோவா. உஅ. க.

4 யோவா. உஉ. உஅ.

5 உரோ. அ. ஐஇ. கலா. ச. க.

6 எபி. இ. எ.

7 யோவா. இ. கஇ: க. கஅ.

8 உரோ. எ. உக. கலா. இ. கஎ.

9 யோவா. உக. க.

10 மத். உக. சக. யோவா. உஅ. க, உ.

11 மத். உக. சஎ. லூக். உஉ. சஎ. யோவா. கஅ. க.

ஆகக்கடவதென்று செபம்பண்
ணினார்.

உஎ பின்பு அவர் வந்து, அவர்
கள் தூங்குகிறதைக் கண்டு, பேது
ருவுடனே சொன்னது: சீமோ
னே, தூங்குகிறாயா? ஒரு மணி
நேரம் நீ விழித்துக்கொள்ளக்கூ
டாதா?

உஅ குற்றம்செய்வதற்கான கார
ணத்தில் நீங்கள் பிரவேசியாதப
டிக்கு விழித்துக்கொண்டு செபம்
பண்ணுங்கள்; [8]ஆவியானது மன
துள்ளதுதான், மாம்சதேகம் பல
வீனமுள்ளதென்று சொல்லி,

உக மறுபடியும் அப்புறம் போய்,
மேற்சொல்லிய விதமாய்ச் செபம்
பண்ணினார்.

உச பின்பு அவர் திரும்பி, அவர்
களுடைய கண்கள் கனமான
தூக்கத்தை அடைந்தபடியினாலே,
மறுபடியும் அவர்கள் தூங்குகி
றதைக் கண்டார்; அல்லாமலும்,
அவர்கள் அவருக்குச் சொன்ன
மாறுத்தரத்தையும் அவர்கள் தாமே
அறியவில்லை.

உஉ பின்பு அவர் மூன்றாந்தரம்
அவர்களிடத்தில் வந்து, நீங்கள்
இன்னும் தூங்கி இளைப்பாறுகிறீர்
களா? இது போதும், [9]நேரம் வந்
தது; இதோ, மனிதனுடைய குமா
ரன் பாவிகளுடைய கைகளில்
ஒப்புக்கொடுக்கப்படுகிறான்.

உஊ [10]அதோ, என்னைக் காட்டிக்
கொடுக்கிறவன் சமீபிக்கிறான்;
எழுந்திருங்கள் நாம் போவோம்
வாருங்கள் என்றார்.

உஎ ¶ [11]உடனே அவர் பேசுகை
யில், பன்னிருவரில் ஒருவனாகிய
யூதாவும், அவனோடேகூடப் பெ
ரிய ஆசாரியராலும் வேதபாரகரா
லும் மூப்பராலும் அனுப்பப்பட்
டுக் கத்திகளையும் தடிகளையும் பி
டித்துக்கொண்டு வருகிற மிகுந்த
ஜனங்களும் தோன்றினார்கள்.

உஏ அவனைக் காட்டிக்கொடுக்க
வந்தவன், எவனை முத்தம் செய்
வேனோ, அவனே அவன், அவ

Digitized by Google

வே நீங்கள் பிடித்துப் பத்திரமாய்க்கொண்டுவரவேண்டுமென்று அடையாளமாக மற்றவர்களுக்குச் சொல்லியிருந்தான்.

சரு ஆகையால், அவன் வந்தவுடனே, அவரிடத்தில் சேர்ந்து, இரபீ, இரபீ, என்று சொல்லி, அவரை முத்தம்செய்தான்.

சஉ அப்பொழுது அவர்கள் அவரைக் கைப்பிடியாகப் பிடித்தார்கள்.

சஎ ¶ உடனே சமீபமாய் நின்றவர்களில் ஒருவன், கத்தியை எடுத்துப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதறவெட்டினான்.

சஅ [1]அப்பொழுது இயேசுவானவர் அவர்களைநோக்கி, ஒரு கள்ளனைப் (பிடிக்கிறதற்குப் புறப்படுகிறது) போல நீங்கள் என்னைப் பிடிக்கும்படிக்குக் கத்திகளோடும் தடிகளோடும் புறப்பட்டுவந்தீர்கள்.

சக நான்தோறும் நான் உங்களுக்குள்ளே தேவாலயத்திலே உபதேசம்பண்ணினேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லை? [2]ஆனாலும் வேதவாக்கியங்கள் நிறைவேறவேண்டுமென்று சொன்னார்.

சரு [3]உடனே (சீஷர்) எல்லாரும் அவனைவிட்டு, ஓடிப்போனார்கள்.

சக ஒரு வாலிபன் ஒரு வஸ்திரத்தைமாத்திரம் தன்மேல்போர்த்துக்கொண்டு, அவருக்குப் பின் சென்றான்; அவனைச் சேவகர் பிடித்தார்கள்.

சஉ அப்பொழுது அவன் தன் வஸ்திரத்தைவிட்டுநிருவாணமாய் அவர்களைவிட்டு ஓடிப்போனான்.

சஙு ¶ [4]இயேசுவானவரை அவர்கள் பிரதான ஆசாரியனிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அங்கே ஆசாரியரெல்லாரும் மூப்பரும் வேதபாரகரும் கூடிவந்தார்கள்.

ரூ. பி. ஙூ.

1 மத். உக. ரூரி. மாற்.உஉ.இஉ.
2 சங். உஉ. க. ஏசா. இக.எழு. மாற்.உஉ.கஙு: உச. சச.
3 சங். அஅ. அ. உஎ. வச.
4 மத். உக. ஏ. மாற்.உஉ.சே. யோவா. ரூஅ. ரூக.
5 மத். உக. ஙூ.
6 மாற். ரூரி. உக. யோவா.உ.ரூக.
7 மத். உக. கக.
8 ஏசா. ஙூ. எ.
9 மத். உக. கக.
10 மத்.உச. கரு: உக. கச. மாற். உஉ. கக.

ரூச பேதுரு தூரமாக அவருக்குப் பின்சென்று, பிரதான ஆசாரியனுடைய மாளிகையின் பிராகாரத்தில் வந்து, அங்கே ஊழியக்காரருடனே நெருப்பின் அருகே உளுக்காந்து, அனல் காய்ந்துகொண்டிருந்தான்.

ரூரு [5]அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் மற்றப் பெரிய சங்கத்தார் எல்லாரும் இயேசுவானவரைக் கொலைசெய்யும்பொருட்டாய் அவருக்கு விரோதமாய்ச் சாட்சிகளைத் தேடினார்கள்.

ரூசு அகப்படவில்லை; அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியும் அந்தச் சாட்சிகள் ஒவ்வவில்லை.

ரூள [6]அப்பொழுது சிலர் எழுந்து இவன், கையினால் செய்யப்பட்ட இந்தத் தேவாலயத்தை நான் இடித்து, பின்பு மூன்று நாளுக்குள்ளே கையில்லாமல் வேறொன்றைக் கட்டுவேன் என்று சொல்லக் கேட்டோமென்று,

ரூஅ அவருக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொன்னார்கள்.

ரூக அப்படியும் அவர்களுடைய சாட்சி ஒவ்வாமலிருந்தது.

ரூகு [7]பின்பு பிரதான ஆசாரியன் நடுவிலே எழுந்து, இயேசுவானவனை நோக்கி, நீ மாறுத்தரம் சொல்லுகிறதில்லையா? இவர்கள் உனக்கு விரோதமாய் என்னசாட்சிசொல்லுகிறார்கள் என்று கேட்டான்.

ரூக [8]அவர் மாறுத்தரமாக ஒன்றும் பேசாமல் இருந்தார்; [9]பிரதான ஆசாரியன் மறுபடியும் அவனை நோக்கி, தோத்திரம்செய்யப்படத்தக்கவருடைய குமாரனாகிய கிறிஸ்து நீதானே என்று கேட்டான்.

ரூஉ இயேசுவானவர் சொன்னது: அவர் நான்தான், [10]அல்லாமலும் மனிதனுடைய குமாரன் சர்வவல்லமையுள்ளவருடைய வலதுபாரிசத்திலே உளுக்காரவும், வானத்தின் மேகங்களின்மேல் வரவும், காண்பீர்கள் என்றார்.

Digitized by Google

சுரு அப்பொழுது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழித்து,

சுச வேறு சாட்சி நமக்கு வேண்டுமோ? இத்தூஷணத்தைக் கேட்டீர்களே; உங்களுக்கு எப்படித் தோன்றுகின்றது என்றான். அவர்கள் எல்லாரும் அவன் மரண ஆக்கினைக்குப் பாத்திரன் என்று தீர்மானம்பண்ணினார்கள்.

சுரு அப்பொழுது சிலர் அவர் மேலே துப்பி, அவருடைய முகத்தை மூடிக்கையினாலே அடித்து, நீ தீர்க்கதரிசனம் சொல்லென்று அவருடனே சொல்லத் தொடங்கினார்கள். அல்லாமலும் ஊழியக்காரர் அவனைக் கன்னத்தில் அடித்தார்கள்.

சுசு ¶ [1]அத்தருணத்திலே பேதுரு மாளிகையின் பிரகாரத்தில் கீழே இருக்கிறபொழுது, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து,

சுஎ அனல் காய்ந்துகொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து, நீயும் நாசரேத்தூரானாகிய இயேசுவுடனே இருந்தாயே என்றாள்.

சுஅ அதற்கு அவன் சொன்னது: (அவனை) அறியமாட்டேன்; நீ சொல்லுகிறதையும் நான் அறியேன் என்று மறுதலித்து, பின்பு வெளியிலேயுள்ள மண்டபத்திற்குப் போனான்; அப்பொழுது சேவல் கூவிற்று.

சுக [2]பின்பு வேலைக்காரி அவனை மறுபடியும் பார்த்து, சமீபமாய் நின்றவர்களை நோக்கி, இவன் அவர்களில் ஒருவன் என்றாள்; அவன் மறுபடியும் மறுதலித்தான்.

எல சற்று நேரத்திற்குப் பின்பு [3]அங்கே நின்றவர்கள் மறுபடியும் பேதுருவை நோக்கி, நீ மெய்யாய் அவர்களில் ஒருவனாயிருக்கிறாய்; [4]நீ கலிலேயா நாட்டான்தான்; உன் பேச்சு அதைக் காண்பிக்கின்றது என்றார்கள்.

இ. பி. சுசு.

1 மத். உக. ஐ, கக. லூக். உஉ. ஏஇ. போன. மஅ. உக.

2 மத். உக. எக. லூக். உஉ. ஐஅ. போன. மஅ. உஇ.

3 மத். உசு. எக. லூக். உஉ. ஐசு. போன. மஅ. உசு.

4 அப். உ. ஈ.

5 மத். உக. எஇ.

* அல்லது மிகவும் அழுதான்.

எக அதற்கு அவன், நீங்கள் சொல்லுகிற மனிதனை நான் அறியமாட்டேன் என்று சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினான்.

எஉ [5]உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று; அப்பொழுது சேவல் இரண்டாந்தரம் கூவுமுன்னமே, நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று தன்னுடனே இயேசுவானவர் சொன்ன வசனத்தைப் பேதுரு நினைத்து, விலகிப்போய், அழுதுகொண்டான்.*

யரு. அதிகாரம்.

க. இயேசு கட்டென்ற பிலாத்துக்குமுன்பாகக் கொண்டுபோகப்பட்டுக் குற்றம் சாற்றப்பட்டது. ஙஇ. பிரசைகளுடைய கூக்குரலின் நிமித்தம் கொலைபாதகனாகிய பரபாசை விடுதலைபெற இயேசுவை சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புவிக்கப்பட்டது. ஙஎ. அவர் முள்முடி தரிப்பிக்கவும் கூப்பவும் பரியாசம்பண்ணவும் உட்பட்டது. உக. சிலுவை சுமப்பதில் அவர் சோர்வடைந்தது. உஎ. இரண்டு கள்ளர்களின் நடுவே தொங்கப்பட்டது. உக. யூதர்களுடைய பெருமையுள்ள நிந்தனைச் சித்தது. கக. அவர் தேவகுமாரனென்று சேனைக்காரனால் அறிக்கையிடப்பட்டு, சக. மேன்மையாய் அடக்கம்பண்ணப்பட்டது.

6 சங். உ. உ.மத். உஎ. க. லூக். உஉ. கக; உக. க. போன. உஅ. அப். க. ஙக: ச. உக.

[6]அதிகாலையிலே பிரதான ஆசாரியரும், மூப்பரும், வேதபாரகரும், மற்றப் பெரிய சங்கத்தார்யாவரும் ஆலோசனை பண்ணிக்கொண்ட பின்பு, அவர்கள் அவனைக் கட்டிக்கொண்டுபோய்ப் பிலாத்துவுக்கு ஒப்புக்கொடுத்தார்கள்.

7 மத். உஎ. ஙக.

உ [7]பிலாத்து அவனை நோக்கி, நீ யூதர்களுடைய இராசாவா என்று கேட்டான்; அதற்கு அவர், நீர் (சரியாய்ச்) சொன்னீர் என்றார்.

ரு அல்லாமலும் பிரதான ஆசாரியர் அவர்மேல் அநேகம் குற்றங்களைச் சாற்றிவருகிறபொழுது,

8 மத். உஎ. ஙக.

ச [8]பிலாத்து மறுபடியும் அவனை நோக்கி, இதோ, இவர்கள் உனக்கு விரோதமாக மிகுந்த சாட்சிகளைச் சொல்லுகிறார்களே, அதற்கு நீ ஒன்றையும் சொல்லுகிறதில்லையா என்று கேட்டான்.

Digitized by Google

ஒ [1]இயேசுவானவர், பிலாத்து தானே ஆச்சரியப்படத்தக்கதாக, ஒன்றையும் சொல்லவில்லை.

ச ¶ [2]பண்டிகைதோறும் அவர்கள் கேட்டுக்கொள்ளும் பாதகன் எவனே, அவனை அவர்களுக்காக விடுதலையாக்குகிறது வழக்கமாயிருந்தது.

எ கலகம்பண்ணிக் கலகத்திலே கொலைசெய்து, பின்பு கட்டப்பட்டவர்களில் ஒருவனாகிய பரபாசென்பவன் இருந்தான்.

அ ஆதலால்வழக்கத்தின்படி தங்களுக்குப் பிலாத்துச் செய்யவேண்டுமென்று சனங்கள் கூப்பிட்டுக் கேட்டுக்கொள்ளத் தொடங்கினார்கள்.

க அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, நான் யூதர்களுடைய இராசனை உங்களுக்காக விடுதலையாக்க விருப்பமுண்டா என்றான்.

ங பிரதான ஆசாரியர் பொறாமையினாலே அவனை ஒப்புக்கொடுத்ததை அவன் அறிந்தபடியால் அப்படிக் கேட்டான்.

ச [3]அப்பொழுது பிரதான ஆசாரியர் பரபாசைத் தங்களுக்காக விடுதலையாக்கும்படிக்குக் கேட்டுக்கொள்ளவேண்டும் என்று சனங்களை ஏவினார்கள்.

ஜ மறுபடியும் பிலாத்து அவர்களை நோக்கி, யூதர்களுடைய இராசாவென்று நீங்கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்றான்.

ஞ அவனைச் சிலுவைமரத்திலே அறையவேண்டும் என்று மறுபடியும் கூப்பிட்டார்கள்.

ட அதற்குப் பிலாத்து சொன்னது: என், இவன் என்ன தீமை செய்தான் என்றான்; அதற்கு அவர்கள், இவனைச் சிலுவைமரத்திலே அறையவேண்டும் என்று அதிகமாய்க் கூப்பிட்டார்கள்.

ண [4]அப்பொழுது பிலாத்துச் சனங்களைச் சமாதானப்படுத்த மனதாய், பரபாசை விடுதலையாக்கி, இயேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவைமரத்திலே அறையும்படிக்கு அவனை ஒப்புக்கொடுத்தான்.

ண [5]உடனே போர்ச்சேவகர் அவனை நியாயஸ்தலமாகிய மண்டபத்திற்குள்ளே கொண்டுபோய், போர்ச்சேவகராகிய கூட்டமெல்லாம் கூடிவர அழைத்து,

த பின்பு சிவப்பான அங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப் பின்னி அவர்மேல் வைத்து,

ந அ யூதருடைய இராசாவே, நீர் வாழ்க என்று அவனை வாழ்த்துதல் செய்து,

ப பின்பு ஒரு கோலினாலே அவருடைய தலையில் அடித்து, அவர்மேலே துப்பி, முழங்காற்படியிட்டு அவனை வணங்கினார்கள்.

ம அப்படி அவர்கள் அவனை இழிவுசெய்த பின்பு, அந்தச் சிவப்பான அங்கியை அவரிலிருந்து களைந்து, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவனைச் சிலுவைமரத்தில் அறையும் படிக்குக் கொண்டுபோனார்கள்.

ய ¶ [6]வழியிலே அலேக்குசந்தர், உருப்பு என்பவர்களுடைய தகப்பனாகிய சிரேனே ஊரானான சீமோன் வயல்நிலத்திலிருந்து வருகிறபொழுது, அவனைப் பலவந்தத்தினாலே (இழுத்து,) அவருடைய சிலுவைமரத்தை எடுத்துக் கொண்டு போகும்படி செய்து,

ர [7]பின்பு அவனைத் தலையோட்டிடமென்று அருத்தம்கொள்ளும் கொல்கதா என்னும் இடத்திற்குக் கொண்டுபோய்,

ல [8]கசப்புக்கலந்த திராட்ச இரசத்தைக் குடிக்க அவருக்குக் கொடுத்தார்கள்; அவர் அதை அனுபவிக்கவில்லை.

வ அல்லாமலும் அவனைச் சிலுவைமரத்திலே அறைந்தபின்பு, அவர்கள் அவருடைய [9]வஸ்திரங்

கி. பி. ஈஈ.

1 மா. கூ. எ. போல. மக. க.
2 மத். உ. எ. மி. லூக். உக. மா. போல. ஆ. உக.

3 மத். உ. ஊ. அப். க. ஈ.
4 மத். உ. எ. உக. போல. மக. க, ஈக.
5 மத். உ. எ. உ.
6 மத். உ. கூ. லூக். உக. உக.

7 மத். உ. கக. லூக். உக. க. போல. ஈக. மா.

8 மத். உ. க. ச.

9 சங். உ. ஆ. அ. லூக். உக. க. ச. போல. ஈக. உக.

கனைப் பங்காகவைத்து, ஒவ்வொருவன் ஒவ்வொரு பங்கை எடுத்துக்கொள்ளும்படிக்கு அவைகளைக்குறித்துச் சீட்டுப்போட்டார்கள்.

உடு [1]அவனைச் சிலுவைமரத்திலே அறைந்தபொழுது மூன்றுமணி நேரமாயிற்று.

உசு [2]அவருடைய மரணத்தின் காரணத்தை அறிவிக்கும்படிக்கு, இவன் யூதர்களுடைய இராசா என்று எழுதி, அதைச் (சிலுவையின்மேல்) கட்டினார்கள்.

உஎ [3]அல்லாமலும் அவருடைய வலதுபக்கத்தில் ஒரு கள்ளனும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு கள்ளனுமாக இரண்டு கள்ளரை அவருடனேகூடச் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

உஅ அதினாலே அவர் [4]அக்கிரமக்காரரோடே எண்ணப்படுவார் என்று சொல்லிய வேதவாக்கியம் நிறைவேறிற்று.

உக [5]அல்லாமலும் அவ்வழியாய் நடந்துவருகிறபேர்கள் தங்கள் தலைகளை அசைத்து, ஆ [6]தேவாலயத்தை இடித்து மூன்றுநாளுக்குள்ளே அதைக் கட்டுகிறவனே,

கூடி உன்னை இரட்சித்துக்கொண்டு சிலுவையிலிருந்து இறங்கிவா என்று சொல்லி, அவனைத் தூஷணித்தார்கள்.

கூக அப்படிப்போல பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் ஒருவனாயொருவர் நோக்கி, மற்றவர்களை இவன் இரட்சித்தான்; தன்னைத்தானே இரட்சிக்கத் திராணியில்லை.

கூஉ நாம் கண்டு விசுவாசிக்கும்படிக்கு, இஸ்ரவேலருடைய இராசாவுமாயிருக்கிறவன் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரக்கடவன் என்று பரியாசமாகச் சொன்னார்கள்; [7]அவருடனேகூடச் சிலுவைமரங்களில் அறையப்பட்ட பேர்களும் அவனை நிந்தித்தார்கள்.

கூக ¶ [8]ஆறுமணி நேரம்முதல் ஒன்பதாம்மணி நேரமட்டுமாகும், தேசம் எங்கும் அந்தகாரம் உண்டாயிற்று.

கூசு ஒன்பதாம்மணி நேரத்திலே இயேசுவானவர், [9]எலோயி, எலோயி, லம்மா சபகுத்தானி என்று மிகுந்த சத்தத்தோடு கூப்பிட்டார்? அதற்கு என் தேவனே, என் தேவனே, என் நீர் என்னைக் கைவிட்டீர் என்று அருத்தமாம்.

கூடு சமீபமாய் நின்றவர்களில் சிலர் அதைக்கேட்டு, இதோ, இவன் எலியாவை அழைக்கிறான் என்றார்கள்.

கூசு [10]ஒருவன், பொறுத்துக்கொள்ளுங்கள், இவனை இறக்கும்படிக்கு எலியா வருவதைப் பார்ப்போம் என்று சொல்லி, [11]ஒரு கடற்காளானைக் காடியிலே தோய்த்து, அதை ஒரு கம்பின்மேல் பூட்டி, சுவைக்கும்படி அவருக்குக் கொடுத்தான்.

கூள ¶ [12]பின்பு இயேசுவானவர் மிகுந்த சத்தமிட்டுச் சீவனைவிட்டார்.

கூஅ [13]உடனே தேவாலயத்திலுள்ள திரைச்சீலை மேலே தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது.

கூக [14]அல்லாமலும் அவருக்கு எதிரே நின்ற சேனைத்தலைவன் அவர் அப்படிப்பட்ட சத்தத்தோடே சீவனை விட்டதைக் கண்டு மெய்யாய் இந்த மனிதன் தேவகுமாரனாயிருந்தான் என்றான்.

கூல [15]ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்தார்கள்; [16]அவர்களில் கலிலேயா நாட்டிலே அவருக்குப் பின்சென்று ஊழியம்செய்துவந்த [17]மகுதலை ஊராளாகிய மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேயுக்கும் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும்,

சக அவருடனேகூட எருசலேமுக்கு வந்த மற்ற அநேகஸ்திரீகளும் இருந்தார்கள்.

கி. பி. கூகூ.

1 மத். உஎ. எடி. மாக். உக. எச. லூக். உக. எச. யோவா. உகூ. டீ.

2 மத். உஎ. கூஎ. மாக். உகூ. டீகூ.

3 மத். உஎ. கூஅ.

4 ஏசா. டுகூ. டீஉ. லூக். உஉ. கூஎ.

5 சங். உஉ. எ.

6 மாற். டீச. டுஅ. மாக். உடு. டீகூ.

7 மத். உஎ. எச. லூக். உக. கூக.

8 மத். உஎ. எடி. லூக். உக. எச.

9 சங் உஉ. க. மத். உஎ. எக.

10 மத். உஎ. எஅ. மாக். உகூ. டீக.

11 சங். கூக. உக.

12 மத். உஎ. டுஏ. லூக் உக. எக. மாக். உடு. கூஏ.

13 மத். உஎ. டுகூ. லூக். உக. எடி.

14 மத் உஎ. டுசெ. லூக். உக. எஎ.

15 சங். உஅ. உக.

16 மத். உஎ. டுடு. லூக். உக. எக.

17 லூக். அ. கூக.

Digitized by Google

சஉ ¶ [1]ஓய்வுநாளுக்கு முந்தின நாள் எத்தனகானானபடியினலே, சாயக்தரமானபொழுது,

சஊ [2]அறிமத்தியா ஊராரானுமாய், கணம்பொருந்திய ஆலோசனைக் காரனுமாய், பராபரனுடைய இராச்சியத்தின் ஆகுகை வரக் காத்துக்கொள்ளுகிறவனுமாயிருந்த யோசேப்பு என்பவன், தயிரியங்கொண்டு பிலாத்துவினிடத்திற்குப் போய் இயேசுவினுடைய சரீரத்தைக் கேட்டுக்கொண்டான்.

சக அவர் அப்படிச் சீக்கிரமாய் மரணம் அடைந்ததைக்குறித்துப் பிலாத்து ஆச்சரியப்பட்டுச் சேனைத்தலைவனை அழைப்பித்து, அவர் இறந்துபோய் எவ்வளவு காலமாயிற்று என்று விசாரித்து,

சஎ சேனைத்தலைவனாலே அறிந்துகொண்டபின்பு, அந்தச் சரீரத்தை யோசேப்புக்கு ஒப்புக்கொடுத்தான்.

சஅ அவன் போய் [3]புடவைவாங்கிக்கொண்டுவந்து, சரீரத்தை இறக்கிப் புடவையிலே சுற்றி, கல்மலையிலே வெட்டப்பட்ட கல்லறையிலே அதை வைத்து, அந்தக் கல்லறையின் திறப்பிலே ஒரு கல்லைப் புரட்டிவைத்தான்.

சக அவனை வைக்கப்பட்ட இடத்தை மகுதல ஊராளாகிய மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்.

௰சு. அதிகாரம்.

ஈ. ஒரு தெய்வதூதன் திரித்துவமுடைய உயிர்த்தெழுதலே முன்ற சீஷர்களுக்கு அறிவித்தது. ஊ திரித்து தானே மகுதலேனாளாகிய மரியாளுக்கும், ஊ. மோசத்துக்கு உடந்தபோன இரண்டுபேருக்கும், ஏ. பின்பு அப்போஸ்தலர்களுக்கும் தரிசனையானது. ஐ. அப்போஸ்தலர்கள் உலகமெல்லும் பிரசங்கிக்கும்படி அனுப்பினது. ஙூ. அவர் பரமண்டலத்துக்கு ஏறினது.

[4]ஓய்வுநாளானபின்பு மகுதல ஊராளாகிய மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சாலோமே என்பவளும் அவருக்கு அபிஷேகம்பண்ணும்படிக்குச் [5]சுகந்த வருக்கங்களை வாங்கிக்கொண்டு,

உ [6]ஓய்வுநாளுக்குப்பின் முதல்நாளின் அதிகாலையிலே சூரியன் உதயமாகிறபொழுது, கல்லறைக்குப் போனார்கள்.

ஊ (போகையில்) அவர்கள் அந்தக் கல்லறையின் திறப்பிலே இருக்கிற கல்லை நமக்காக யாவன் தள்ளிப்போடுவான் என்று சொல்லி,

ச பின்பு அண்ணாந்து பார்க்கிறபொழுது, அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தும், அது தள்ளப்பட்டதென்று கண்டார்கள்.

ஙு [7]கல்லறையிலே அவர்கள் பிரவேசித்தபொழுது, வலதுபக்கத்திலே வெண்மையான அங்கியைத் தரித்து உளுக்காந்திருக்கிற ஒரு வாலிபனைக் கண்டு மிகவும் பயந்தார்கள்.

ஞ [8]அவன் அவர்களுடனே சொன்னது: பயப்படாதிருங்கள், சிலுவையிலே அறையப்பட்ட நாசரேனனாகிய இயேசுவை நீங்கள் தேடுகிறீர்கள், அவர் எழுந்தார், அவர் இங்கே இல்லை. இதோ, அவர் வைக்கப்பட்ட இடம்.

ட ஆகையால் நீங்கள் அவருடைய சீஷர்களிடத்திற்கும் பேதுருவினிடத்திற்கும் போய், [9]உங்களுடனே அவர் சொன்னபடி உங்களுக்குமுன்பாகக் கலிலேயா நாட்டுக்குப் போவார் அங்கே அவனைக் காண்பீர்கள் என்று அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான்.

அ உடனே அவர்கள் புறப்பட்டு, திகிலோடும் பிரமிப்போடும் கல்லறையைவிட்டு ஓடிப்போனார்கள்; [10]அவர்கள் பயப்பட்டபடியினலே ஒருவருக்கும் ஒன்றையும் சொல்லவில்லை.

க ¶ ஓய்வுநாளுக்குப் பின்பு, முதல்நாளின் அதிகாலையில் அவர் எழுந்திருந்தபின்பு, [11]முதலாவது மகுதல ஊராளாகிய மரியாளுக்குக் காணப்பட்டார்.

Digitized by Google

வி. பி. ஙூ.

1 மத். உ௳. ஞ. லூக். உ௬. ஐ. போஸ். ஙூ. உ௮.
2 லூக். உ. உஇ, உ௮.
3 மத். உ௳. ஙூ, சவ். லூக். உ௬. ஙூ. போஸ். ஙூ. சஐ.
4 மத். உ௮. ச. லூக். உ௯. ச. போஸ். உஐ.ச.
5 லூக்.உ௬.ஙூ.
6 லூக். உ௯. ச. போஸ். உஐ.௬.
7 லூக். உ௯. ச. போஸ். உஐ. ஙூ, ஙூ.
8 மத். உ௮. ஐ, ஏ.
9 மத். உஙூ.ஙூ. மாற். ஞ. உ௮.
10 மத்.உ௮. அ. லூக். உ௯. ஙூ.
11 லூக். அ. உ.

யஅ [1]அவராலே ஏழுபேய்களி
னின்று நீக்கப்பட்டவள்அவளே;
[2]அவள் புறப்பட்டுப்போய் அவரு
டனேஇருந்தவர்களுமாய் புலம்பி
அழுதுகொள்ளுகிறவர்களுமாயி
ருந்த (சீஷர்களுக்கு) அறிவித்
தாள்.

யக [3]அவர் உயிரடைந்து அவ
ளாலே காணப்பட்டார் என்று
அவர்கள் கேள்விப்பட்டும் அதை
நம்பவில்லை.

யஉ ¶ [4]அதின்பின்பு அவர்களில்
இரண்டுபேர் ஒரு ஊருக்குப்புறப்
பட்டுப் போகையில், அவர்களுக்
கும் அவர் மறுரூபத்தோடே கா
ணப்பட்டார்.

யசூ அவர்களும் திரும்பி அதை
மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்;
அவர்களையும் இவர்கள் நம்ப
வில்லை.

யஎ ¶ [5]பின்பு அவர் போசனபந்
தியில் இருந்த பதினொருவருக்கும்
*காணப்பட்டு, தாம் உயிரோடு
எழுந்து வந்ததைக் கண்டபேர்க
ளுடைய(வார்த்தையை)அவர்கள்
நம்பாமல் இருந்தபடியால், அவர்
களுடைய அவிசுவாசத்துக்காக
வும், இருதயத்திலுள்ள கடினத்திற்
காகவும் அவர்களைக் கடிந்துகொ
ண்டார்.

யஙு ¶ [6]அல்லாமலும், அவர் அ
வர்களை நோக்கி, நீங்கள் உலகத்
தில் எங்கும்போய், சிருட்டிக்கப்
பட்டிருக்கிற யாவருக்கும் சுவி
சேஷத்தைப் பிரசங்கம்பண்ணுங்
கள்.

யசு [7]விசுவாசமுள்ளவனுகி ஞா
னஸ்நானம்பெற்றவன் இரட்சிக்
கப்படுவான்; [8]விசுவாசியாதவன்
ஆக்கினைக்குள்ளாக்கப்படுவான்.

யஎ [9]அன்றியும், விசுவாசமுள்
ளவர்களால் எப்படிப்பட்ட அதி
சயங்கள் நடக்குமென்றால், என்
நாமத்தினாலே அவர்கள் பேய்க
ளைத் துரத்தி, [10]புதியபாஷை
களைப் பேசிக்கொண்டு,

யஅ [11]பாம்புகளையும் பிடித்துக்
கொள்வார்கள்; அல்லாமலும் ம
ணத்திற்கு ஏதுவானதை அவர்கள்
குடித்தால், அது அவர்களைச் சே
தப்படுத்தாமல் இருக்கும்; [12]அல்
லாமலும், பிணியாளிகளின்மேல்
அவர்கள் கைகளை வைக்கும்பொ
ழுது, அவர்கள் சொஸ்தம் அடை
வார்கள் என்றார்.

யக ¶ [13]கர்த்தர் அவர்களுடனே
பேசிக்கொண்ட பின்பு, [14]அவ
பரமண்டலத்துக்கு ஏற்றப்பட்
டுப் [15]பராபரனுடைய வலதுபாரி
சத்திலே வீற்றிருக்கிறார்.

உய அவர்கள் புறப்பட்டு எ
கும் பிரசங்கம்பண்ணிக்கொண்
வந்தார்கள்; அப்பொழுது கர்த்த
அவர்களுடனேகூடக் கிரியை
செய்து [16]அதிசயங்களை நடக்கப்
பண்ணினதினாலே, [17](அவர்களு
டைய) உபதேசத்தை உறுதியாக்
கினார்.—ஆமன்.

கி. பி. கூகு.

1 லோவா. உம. ஙு.
2 லூக். உசு. ம யோவா. உம. மஅ.
3 லூக். உசு. மக
4 லூக். உசு. மக.
5 லூக். உசு.கக. போவா. உம மகூ. க கொரி. மஅ.இ.
* அல்லது எல்லாருக்கும்.
6 மத். உஅ மகூ. போவா. மஇ. மகூ.
7 கோலோ. க. உக.
8 போவா. க. மஅ, கக. அப். உ. கஅ: மக. கம,கஉ. உரோ. ம. கூ. க பே. க. உக.
9 போவா. கூ. சஅ.
10 லூக். ம மஎ. அப்.இ.மக: அ. எ: மகூ. மஅ: மகூ. மஉ
11 அப். உ. ச: ம. சக: மகூ. க. க கொரி.மஉ.ம, உஅ.
12 லூக் ம. மகூ. அப். உஅ. இ.
13 அப். இ. மஇ. மக: கூ. மஎ: உஅ. அ பாக். இ.மச, மஇ.
14 அப். க. உ. க
15 லூக்.உச.இக.
16 சம்.சம்.க.அப். எ.இஇ.

17 அப்.இ.மஉ: மச.க. க கொரி.உ.ச,இ. எபி.உ.ச.

Digitized by Google

LUKE.

ஓக்கா என்பவர்

எழுதின சுவிசேஷம்.

க. அதிகாரம்.

க. தூதனின் முகவுரை. ஓ. யோவான்பிறனும், உக. நிறைவும் உற்பத்தியானது. ககூ. எலிசபேத்தும் மரியாளும் நிறைவைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தது. ஙச. யோவானுடைய செனனமும், சன்மத்தும் சொல்லப்பட்டது. சஎ. சகரியா நிறைவைக்குறித்தும். எக. யோவானைக் குறித்தும் தீர்க்கதரிசனம் சொன்னது.

1 ஸ்ரீருந்த கணம்பொருந்திய தேயோப்பிலுவே, 2 எங்களுக்குள் னேநிறைவேறின சங்கதிகளை ஆதிமுதல் கண்ணினுலே கண்டு, (சுவிசேஷ)வசனத்தைப் போதித்திருக்கிறவர்கள் 3 எங்களுக்கு ஒப்புக்கொடுத்தபின்படியே,

உ அவைகளைக்குறித்துச் சரித்திரத்தை எழுதும்படிக்கு அனேகர் தணிந்தார்கள்.

ஃ ஆகையால் 4 ஆதிமுதல் எல்லாவற்றையும் நன்றாய் ஆராய்ந்து பார்த்த நானும், 5 உமக்கு உபதேசிக்கப்பட்ட பொருள்களின் நிச்சயத்தை நீர் அறியும்படிக்கு,

ச 6 அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதவேண்டும் என்று எனக்கு நன்றாய்த் தோன்றிற்று:. (அவையாவன.)

டு ¶ 7 யூதேயா தேசத்தின் இராசாவாகிய ஏரோதேயின் நாள்களிலே 8 அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியா என்னப்பட்ட ஆசாரியன் இருந்தான்; ஆரோனின் குடும்பத்தில் பிறந்த எலிசபேத்து என்னப்பட்டவள் அவனுக்கு மனைவியாயிருந்தாள்.

கி. பி. சு.

1 அப். க. க.
2 மாற். க. க. போவா. ஙஇ. உஎ.
3 எபி. உ. க. க பே. இ. க. உ பே. க. ஙக. க யோ. க. க.
4 அப். ஙஇ. ஙக, உஇ, உஅ. க கொரி.எ.சஅ.
5 யோவா. உஅ. கக.
6 அப். ஙக. ச.
7 மத். உ. க.
8 க ராஜா. உச. ஐ, ஙக. கெகே. ஙஉ. ச, ஙஎ
9 க மோ. எ. க: மஎ.க. க இரா. கூ. ச. உ இரா. உஅ. க. போபு. க.க. அப். உக. க: உச. ஙக. பிலி க. க.
10 க ராஜா. உச. ஙக. உ ராஜா. அ.ஙச: கக. உ.
11 உ மோ. கஐ. எ, அ. க சாமு. உ.உஅ.ராஜா. உக.கெ.உராஜா. உகூ. ஙக.
12 க மோ.ஙக.ஙஎ. வெளி.அ.க,ச.
13 உ மோ.கஐ.க.
14 லீவி. க.உஉ: ஙக.உஉ. தானி. ஐ.அ.உகூ.மச. லூக். உ. கூ. அப். ஐ. ச. வெளி. க. ஙஎ.

சு 9 அவ்விருவரும் பராபரனுக்குமுன்பாக நீதியுள்ளவர்களாய்க் கர்த்தர் இட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியாயங்களின் படியேயும் குற்றமில்லாமல் நடந்து வந்தார்கள்.

எ எலிசபேத்து மலடியாயிருந்ததுமல்லாமல், அவ்விருவரும் வயதுசென்றவர்களானபடியினுலே அவர்களுக்குப் பிள்ளை இல்லை.

அ ¶ 10 அப்படியிருக்கும் காலத்தில், அவன் தன் ஆசாரியவகுப்பின் முறைப்படி பராபரனுக்குமுன்பாக ஆசாரிய ஊழியம் செய்துவருகிறபொழுது,

க ஆசாரியருடைய வழக்கத்தின்படி 11 அவன் தூபம் கொடுக்கிறதற்குச் சீட்டைப் பெற்றுத் தேவாலயத்தில் பிரவேசித்தான்.

ஙி 12 தூபம்கொடுக்கிற வேளையிலே கூட்டமான சனங்கள் எல்லாரும் புறம்பே செபம்பண்ணிக் கொண்டிருந்தார்கள்.

ஙக 13 அப்பொழுது பராபரனுடைய தூதன் ஒருவன் தூபபீடத்தின் வலதுபக்கத்திலே நின்று அவனுக்குக் காணப்பட்டான்.

ஙஉ 14 சகரியா அவனைக்கண்டு கலங்கிப் பயமடைந்தான்.

ஙஊ தூதன் அவனை நோக்கி, சகரியாவே, நீ பயப்படவேண்டாம்; உன் விண்ணப்பம் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய

Digitized by Google

எலிசபேத்து ஒரு குமாரனைப் பெறுவாள்; [1]அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக.

யச அவனால் உனக்குச் சந்தோஷமும் களிப்பும் உண்டாகும்; அவனுடைய பிறப்பைக்குறித்து [2]அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

யடு என்னத்திலெனில், [3]அவன் பராபரனுக்கு முன்பாகப் பெரியவனாய்த்திராட்சஇரசத்தையும் மதுபானத்தையும் குடியாமல் [4]தன் தாயின் வயிற்றிலே பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டிருப்பான்.

யசு அல்லாமலும் [5]அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்களுடைய தேவனாகிய பராபரனிடத்திற்குத் திருப்புவான்.

யஎ [6]பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய புத்திக்கும்* திருப்பி, செம்மையான சனங்களைப் பராபரனுக்காக எத்தனம்பண்ணும்படிக்கு, அவன் எலியாவின் ஆவியையும் பலத்தையும் உடையவனாய் அவருக்குமுன்னே நடப்பான் என்றான்.

யஅ அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி, [7]நான் அதை எதினாலே அறிவேன்? நான் கிழவனாயிருக்கிறேன்; என் மனைவியும் வயதுசென்றவளாயிருக்கிறாளே என்றான்.

யக அவனுக்குத் தூதன் மாறுத்தரமாகச் சொன்னது: நான் தேவனுடைய சன்னிதானத்திலே நிற்கின்ற [8]காபிரியேல் என்பவன்; உன்னுடனே பேசி, இவைகளை உனக்குச் சுவிசேஷமாக அறிவிக்கும்படிக்கு அனுப்பப்பட்டு வந்தேன்.

உய என் வார்த்தைகள் தகுதியான காலத்திலே நிறைவேறும்; அவைகளை நீ விசுவாசியாதபடியினாலே இந்தக் காரியங்கள் சம்பவிக்கும் நாள்வரைக்கும் நீ பேசத் திராணியில்லாமல் [9]ஊமையனாயிருப்பான் என்றான்.

உக சகரியாவை (காணக்) காத்திருந்த சனங்கள் அவன் தேவாலயத்திலே தாமதித்ததினாலே ஆச்சரியப்பட்டார்கள்.

உஉ அவன் வெளியே வந்தபொழுது அவர்களோடே பேசத் திராணியில்லாமல் இருந்தான்; அதினாலே தேவாலயத்தில் ஒரு தரிசனையைக் கண்டிருப்பான் என்று அறிந்தார்கள்; அவனும் அவர்களுக்குச் சமிக்கை காட்டி ஊமையனாக இருந்தான்.

உஊ ¶ பின்பு அவன் தன் ஊழியத்தின் [10]நாள்கள் நிறைவேறின பொழுது தன் வீட்டுக்குப் போனான்.

உச அந்த நாள்களுக்குப் பின்பு அவனுடைய மனைவியாகிய எலிசபேத்து கருப்பந்தரித்து,

உடு [11]சனங்களுக்குள்ளே எனக்கு உண்டாய் இருந்த நிந்தையை நீக்கும்படிக்குப் பராபரன் இந்த நாள்களில் என்னை நோக்கி இப்படி எனக்குச் செய்தார் என்று சொல்லி, ஐந்துமாதம்வரையும் ஒளித்துக்கொண்டாள்.

உசு ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தென்னும் பட்டணத்திலே,

உஎ தாவீதின் குடும்பத்தானாகிய யோசேப்பென்னும் நாமமுள்ள புருஷனுக்கு [12]நியமிக்கப்பட்டிருந்த கன்னியாகிய மரியாள் என்பவள் இடத்திற்குப் பராபரனால் அனுப்பப்பட்டு,

உஅ அவள் இருக்கிற வீட்டுக்குள் பிரவேசித்து, [13]கிருபைபெற்றவளே,† [14]நீ வாழ்க, பராபரன் உன்னுடனே இருக்கிறார்; பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்.

உக அவள் அவனைக் கண்டு, [15]அவனுடைய வார்த்தையைக் கேட்டுக் கலங்கி, இந்த வாழ்த்து

கி. பி. சு.

1 க.மு. கக. வச.

2 லூ. வச.

3 ச மோ. க. க. கிபா.மக.ச.லூக். எ. கக.

4 எரே. க. ஓ. கலா. க. மஓ.

5 மல்கி. ச.ஓ,க.

6 மல்கி. ச. ஓ. மத். மக. மச. மாற். க. மஉ.

* அல்லது புத்தியிற்கும்.

7 க மோ.மஎ.மக.

8 தானி. அ மக: க. உக, உஉ, உக. மத்.மஆ. எபி. க. மச.

9 எரே. க. உக: உச. உஎ.

10 உற்ப.மக.ஓ. கலா.க.உஓ.

11 எரே.கம.உக. எசா.ச.க: இச. க, ச.

12 மத். க. மஅ. லூக். உ. ச, ஓ.

13 தானி.க.உக: ம. மக.

† அல்லது தயவு பெற்றவளே. கம. வசனம்.

14 கிபா. க, மஉ.

15 மஉ. வச.

Digitized by Google

தல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்தாள்.

ஙல தூதன் அவளுடனே சொன்னது: மரியாளே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றபடியினாலே, நீ பயப்படவேண்டாம்.

ஙக [1]நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்; அவருக்கு [2]இயேசு என்று பேரிடுவாயாக.

ஙஉ அவர் பெரியவராய் [3]உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; [4]அல்லாமலும் தேவனாகிய பராபரன் அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின் இராசாசனத்தைக் கொடுப்பார்.

ஙஊ [5]அவர் யாக்கோபினுடைய குடும்பத்திற்கு என்றென்றைக்கும் இராசனாயிருப்பார்; அவருடைய ஆளுகைக்கு முடிவுவாராது என்றான்.

ஙஎ அதற்கு மரியாள் தூதனை நோக்கி, இது எப்படியாகும்? ஒரு புருஷனையும் அறியேனே என்றாள்.

ஙஏ தூதன் அவளுக்கு மாறுத்தரமாகச் சொன்னது: [6]பரிசுத்த ஆவி உன்மேல் வரும்? உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆகையால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமானது [7]தேவனுடைய குமாரன் என்னப்படும்.

ஙஐ அல்லாமலும் பராபரனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லாதபடியினாலே,

ஙக [8]உனக்கு இனமாயிருக்கிற எலிசபேத்தும் தனது முதுமையான வயதிலே ஒரு புத்திரனைக் கருப்பந்தரித்தாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதமே என்றான்.

ஙஒ அதற்கு மரியாள், இதோ, நான் ஆண்டவருக்கு அடிமையாயிருக்கிறேன், உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்; அப்பொழுது தேவதூதன் அவளைவிட்டுப் போனான்.

கி. பி. ஈ.

1 ஏசா. எ. லூ. மத். உ. உக.

2 லூக். உ. உக.

3 மாற். இ. அ.

4 உ சாமு. எ பக, பஉ. எசா. கூ. க, எ: பக. இ. சங். எகூ. பக. எரே. உக. இ. யெரே. க. எ.

5 தானி: உ. சஉ: எ. பஉ, உஎ. ஓபதி. உக. மீகா. ச. எ. சோப. பஉ. கச. எபி க. அ.

6 மத். க. உஏ.

7 மத். பஉ. கக: உக. கக, கச. மாற் க. க. சோப. க. கச: உஏ. கக. அப். அ. கா. உரோ. க. ச.

8 க மே. பஅ. கச. எரே. கஉ. மை. சனி. அ. க. மத். கக. உகூ. மாற். ஏ. உஎ. லூக். பஅ. உஎ. உரோ. ச. உக.

9 சோச. உக. கூ, ஏ, பக.

10 உஅ. கச. மீசா. இ. உச.

* அல்லது அதை வீசலாசித்த.

11 க சாமு. உக. சங். கச. உ, க: கஇ. க. ஆப. க. பஅ.

12 க சாமு. க பக. சங். ககஅ. க.

13 சங். எக. கூ: எஉக. உ, க.

14 மல்கி. க. பூ. லூக். பக. உச.

15 சங். எபக. க.

16 க மே பூ. எ. உ மே. உஏ. க. சங். க க. பூ, பஅ.

ஙஓ [9]அல்லாமலும் தேவனுக்கு ஆகாத காரியம் ஒன்றும் இல்லாதபடியினாலே,

ஙஔ [10]உனக்கு இனமாயிருக்கிற எலிசபேத்தும் தனது முதுமையான வயதிலே ஒரு புத்திரனைக் கருப்பந்தரித்தாள்; மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறும் மாதமே என்றான்.

ஙக ¶ அந்த நாள்களில் மரியாள் எழுந்து மலைத்தேசத்திலே [1]யூதாவிலுள்ள பட்டணத்திற்குத் தீவரமாய்ப் போய்,

சல சகரியாவின் வீட்டில் பிரவேசித்து எலிசபேத்தை வாழ்த்துதல் செய்தாள்.

சக எலிசபேத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது அவளுடைய வயிற்றில் இருந்த பிள்ளை துள்ளிற்று; அல்லாமலும் எலிசபேத்து பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,

சஉ மிகுந்த சத்தத்துடனே சொன்னதாவது: [10]பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்; உன் கருப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது.

சஊ என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்திற்கு வருகிறது எனக்கு எதினாலே கிடைத்தது?

சஎ நீ வாழ்த்துதல் சொல்லிய சத்தம் என் காதுகளில் விழுந்தவுடனே என் வயிற்றில் பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று.

சஏ விசுவாசித்தவளுக்குப் *பராபரனாலே சொல்லப்பட்டவைகள் நிறைவேறுவதால் அவள் பாக்கியமுள்ளவளே என்றாள்.

சஐ ¶ அப்பொழுது மரியாள் சொன்னதாவது:

சக [11]என் ஆத்துமா பராபரனைப் புகழுகின்றது; என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகின்றது.

சஅ [12]என்னத்தினாலெனில், அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்; [13]வல்லமையுடையவர் எனக்குப் பெரியகாரியங்களைச் செய்தபடியினாலே,

சக இதுமுதல் [14]வம்சத்தார் எல்லாரும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்; [15]அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

சங [16]அவருடைய இரக்கம் தலைமுறை தலைமுறையாக அவருக்

Digitized by Google

குப் பயப்படுகிறவர்களிடத்தில் உண்டாயிருக்கும்.

நக [1]அவர் தம்முடைய கையினாலே பலத்த காரியங்களைச் செய்தார்; தங்கள் இருதயத்தின் சிந்தனையில் [2]இறுமாப்பாயிருக்கிறவர்களை அவர் சிதறப்பண்ணி,

நஉ [3]பலவான்களைப் பதவிராசனங்களிலிருந்து தள்ளித் தாழ்மையுள்ளவர்களை உயர்த்தி,

நஊ [4]பசியுள்ளவர்களை நன்மைகளினாலே நிரப்பிச் சம்பூரணமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பினார்.

நச அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னபடியே, [5]ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம்செய்ய நினைத்து,

நந [6]தம்முடைய தாசராகிய இஸ்ரவேலனை ஆதரித்தார் என்றாள்.

நசு ¶ பின்பு மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்குத் திரும்பினாள்.

நள எலிசபேத்துக்குப் பேறுகாலம் உண்டானபொழுது, அவள் ஒரு குமாரனைப் பெற்றாள்.

நஅ பராபரன் தமது இரக்கத்தை அவளிடத்தில் பெரிதாக்கினார் என்று அவளுடைய அயலகத்தாரும் பந்துசனங்களும் கேள்விப்பட்டு, [7]அவளுடனே கூடச் சந்தோஷப்பட்டார்கள்.

நக பின்பு எட்டாம்நாளிலே [8]அவர்கள் பிள்ளைக்கு விருத்தசேதனம்பண்ணும்படிக்கு வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிட்டார்கள்.

நஎ அப்பொழுது அதின் தாய் சொன்னது: அப்படியல்ல, [9]அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள்.

நஅ அவர்கள் அவளை நோக்கி, உன் உறவிலே இந்தப்பேராக அழைக்கப்பட்டவர்களொருவரும் இல்லையே என்று சொல்லி,

நஉ அதினுடைய தகப்பனை நோக்கி, இதற்கு என்ன பேரிடமனதாய் இருக்கிறீர் என்று சமிகையினாலே கேட்டார்கள்.

நஙு அவன் எழுதுகிறதற்குப் பலகையைக் கேட்டு வாங்கி, [10]இவனுடைய பேர் யோவான் என்று எழுதினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

நச [11]அல்லாமலும் அந்நிமிஷத்திலே அவனுடைய வாயும் நாவும் திறக்கப்பட, அவன் பராபரனைத் தோத்திரம்செய்து பேசினான்.

நசு (அதினாலே) அவர்களைச் சுற்றி வாசமாயிருந்த எல்லாருக்கும் பயம் வந்தது; [12]அன்றியும் யூதேயாவின் மலைத்தேசம் எங்கும் அந்தச் சங்கதிகளெல்லாம் *சொல்லிக்கொள்ளப்பட்டன.

நசு (அவைகளைக்) [13]கேள்விப்பட்டவர்கள் எல்லாரும் (அவைகளைத்) தங்கள் மனதிலே வைத்துக்கொண்டு, அந்தப் பிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ என்றார்கள்; [14]கர்த்தருடைய கை அந்தப் பிள்ளையினிடத்தில்இருந்தது.

நஙஎ ¶ அன்றியும் அவனுடைய தகப்பனாகிய சகரியா [15]பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, தீர்க்கதரிசனமாய்ப் பகர்ந்ததாவது:

நஙஅ [16]நாம் நம்முடைய சத்துருக்களின் கைகளுக்குத் தப்புவிக்கப்பட்டவர்களாக,

நஙஉ [17]நம்முடைய வாழ்நாள் எல்லாம் பயமில்லாமல் தேவபத்தியாயும் நீதியாயும் தமக்கு முன்பாக ஊழியம்செய்வதற்கு அனுக்கிரகம் செய்யும்பொருட்டாய்,

நஙஙு தாம் [18]நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையாகிய தம்முடைய பரிசுத்த உடம்படிக்கையை நினைத்து,

நஙச [19]நம்முடைய பிதாக்கள் மேல் இரக்கமாகி,

கி. பி. சு.

1 சங். கஅ க: எசா ஙஅ. எரே. சாஞ. 6: இக. சு: இஉ. உ.

2 சங். ஊக. ம. க பே. ஆ. ஆ.

3 க சாமு உ. க ழி. யோபு. ஆ. ஙஉ. சங். எஉ. சு.

4 க சாமு. உ. ஆ. சங். கச. ம.

5 க மோ. ஙக. ஙக. சங். சகஉ. ஙக. உரோ. ஙக. உள. கலா. க. ஙசு.

6 சங். கஅ. க. எரே கக.க,உம.

7 ஙச. ஙச.

8 க மோ.ஙக.ஙஉ. க மோ. ஙஉ. க.

9 ஙக. ஙச.

10 ஙக. ஙச.

11 உம. ஙச.

12 ஙக. ஙச.

* அல்லது பேச செல்லாம்.

13 லூக். உ. ஙசு, ஆக.

14 க மோ. சக. உ சங். அம. ஙச: அக. உக. அப். ஙக. உக.

15 யோவே. உ. உஅ.

16 உரோ.க.ஙஅ, உஉ. எபி. சு. ஙச.

17 எரே.கஉ.கக, சஙி. எபே. ச. உச. உ தெச. உ.ஙக.உதீமோ க. க. தீத்து. உ. ஙஉ. க பே. க. ஙஆ.உபே க.ச.

18 க மோ.ஙஉ.க: ஙஎ. ச: உஉ. ஙக.ஙஎ. எபி.க. ஙக.ஙஎ.

19 க மோ. உக ஙஉ. சங். கஅ. க: சஆ. அ, க: சக. சஆ. எசே. ஙக. கக. ஆச. ஙச.

Digitized by Google

ஏஉ [1]நாம் உலகத்தின் தோற்றம் முதற்கொண்டிருந்த தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளால் அருளிச் செய்தபடியே,

ஏக நம்முடைய சத்துருக்களில் நின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளில் நின்றும்,

ஏச [2]நம்மை இரட்சிக்கிற பலத்த இரட்சகனைத் தம்முடைய தாசனுமாகிய தாவீதின் குடும்பத்திலே தோன்றப்பண்ணி,

ஏஞ (இவ்விதமாய்) [3]தம்முடைய சனங்களைச் சந்தித்து மீட்டுக் கொண்ட இஸ்ரவேலருடையதேவனுமாகிய [4]பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக.

ஏசு பாலகனே, நீ மரணநிழலாகிய இருளிலே அகப்பட்டிருக்கிறவர்களுக்கு [5]ஒளியுண்டுபண்ணுகிறதற்கும், நம்முடைய கால்களைச் சமாதானமுள்ள மார்க்கத்திலே நடத்துகிறதற்கும்படியாயும்,

ஐ உன்னதத்திலிருந்து சூரிய உதயம்* நமக்குத் தோன்றப்பண்ணினான நம்முடைய தேவனுடைய மிகுந்த இரக்கங்களினாலே,†

ஐஅ [6]அவருடைய சனங்களுக்குப் பாவமன்னிப்பாகிய‡ இரட்சண்ணியத்தைத் தெரியப்படுத்தி,

ஐக [7]இவ்விதமாய் அவருக்காக மார்க்கத்தைச் செம்மையாக்கும் பொருட்டாக அவருக்கு முன்னே நடப்பாய், ஆகையால் நீ எல்லாரிலும் மேலானவருடைய தீர்க்கதரிசியென்னப்படுவாய்என்றான்.

அ ¶ [8]பின்பு அந்தப் பிள்ளை வளர்ந்து ஆவியிலே பலம்கொண்டு, இஸ்ரவேலருக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் [9]வனாந்தரங்களில் இருந்தான்.

உ. அதிகாரம்.

க. அரசன் ஆணை உரோம இராச்சியத்தைக் குடிமதிப்புச் செய்தது. க. இரட்சகர் பிறந்தது. அ. அதை ஒரு தூதன் மேய்ப்பர்களுக்கு அறிவித்து, ஆக. அதற்காக அசேம் தூதர் ஸ்தோத்திரம் பாடினது. உக. இரட்சகர் சுன்னத்துப் பண்ணப்பட்டது. உஉ. மரியாள் சுத்திகரிக்கப்பட்டது. உஅ. சிமேயோனும், அன்னாளும் இரட்சகரைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தது. சம். இயேசு வாலத்தில் வளர்ந்து, சக. தேவாலயத்தில் சாஸ்திரிகளோடே சம்பாஷித்தது. இக. தாய் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்திருந்தது.

அந்நாள்களில் குடிகள் எல்லாருக்கும் உண்டாகிய பேர் § முதலானவைகளையும் எழுதவேண்டும் என்று அகுஸ்து இராயனுடைய கட்டளை வந்தது.

உ [10]சீரியா நாட்டிலே கிரேனி என்பவன் துரையானபொழுது, முதலாவது இந்தக் குடிமதிப்பு உண்டாயிற்று.

ஊ அந்தப்படி எல்லாரும் எழுதப்படும்படிக்கு, தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள்.

ச அப்பொழுது யோசேப்பும் [11]தாவீதின்குடும்பத்தானுமாய் வம்சத்தானுமாய் இருந்தபடியினாலே, [12]தனக்கு நியமிக்கப்பட்ட கருப்பவதியாகிய மனைவி மரியாளுடனே கூட எழுதப்படும்படிக்குக் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத் தூராவிட்டு,

ஞ [13]யூதேயா நாட்டிலுள்ள பெத்லெகேம் என்னப்பட்ட தாவீதின் ஊருக்குப் போனான்.

ஈ ¶ அவ்விடத்திலே அவர்கள் இருக்கும் காலத்தில், அவள் பிள்ளைபெறுகிறதற்குக் காலம் சம்பவித்தது.

எ அப்பொழுது அவள் [14]தன் முதற்பேறானகுமாரனைப்பெற்று; அவனைப் புடவைகளில் சுற்றிச் சத்திரத்திலே (வேறு) இடம் இல்லாதபடியினாலே அவனைப் பசுத் தொட்டியிலே வைத்தாள்.

அ ¶ அன்றியும் அந்தத் தேசத்திலே மேய்ப்பர் வெளியிலே தங்கி, ‖இராத்திரியிலே தங்கள் ஆட்டுக் கூட்டத்தைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

க அப்பொழுது பராபரனுடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நிற்க, பராபரனுடைய மகிமை அவர்களைச் சுற்றிப் பிரகாசித்தது; [15]அவர்கள் மிகவும் பயந்தார்கள்.

[1] எரே. உக. ஓ, க: கம். ம. தானி. க. உச. அப். க. உக. உரோ. க. உ.

[2] சங் ஈகூ. மை.

[3] உ மோ. க. மக: ச. கக. சங். எமக. கூ. லூக். எ. மக.

[4] க இரா. க. சஅ. சங். சக. மக: எஉ. மஅ: சக. சஅ.

[5] எசா. கூ. உ: சஉ. எ: சக. க. மத். ச. மஇ. அப். உக. மஅ.

* அல்லது பகற்றுவக்கம்.

† இரக்கக் குடல்களினாலே.

[6] மாற். க. ச. லூக். க. க.

‡ அல்லது மன்னிப்பினால்.

ச மோ உச. மா. எசா. மக. க. சகி. க. அ: க. மஉ மல்கி. ச. உ.

[7] எசா. சஇ. க. மல்கி. க. க: ச. இ. மத். மக. ம. மா. மச.

[8] லூக். உ. சஇ.

[9] மத். க. உ: மக. எ.

§ அல்லது நிறை.

[10] அப். இ. கா.

[11] க சாமு. மக. க, ச. யோவா. எ. சஉ.

[12] மத். க. மஅ. லூக். க. க.

[13] மத். க. மா. லூக். க. உ.

[14] மத். க. உஇ.

‖ அல்லது இராக்காவல்.

[15] லூக். க. மஉ.

ய உடனே தேவதூதன் அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள், [1]எல்லாச சனங்களுக்கும் உண்டாகும் மிகுந்த சந்தோஷத்தை உங்களுக்குச் சுவிசேஷமாக அறிவிக்கிறேன்.

யக என்னவென்றால் [2]இன்று [3]கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் [4]தாவீதின் ஊரிலே உங்களுக்காகப் பிறந்தார்.

யஉ பிள்ளையைப் புடவைகளில் சுற்றிப் பசுத்தொட்டியிலே வைத்திருக்கக் காண்பீர்கள்; அதுவே உங்களுக்கு அடையாளம்என்றான்.

யங அப்பொழுது சடுதியாய்ப் [5]பரமண்டலத்திலுள்ள மிகுந்த சேனைகள் அந்தத் தூதனுடனே கூட இருந்தன.

யச [6]உன்னதங்களில் இருக்கிற பராபரனுக்குப் புகழ்ச்சியும், [7]பூமியிலே சமாதானமும், [8]மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று பராபரனைத் துதித்தார்கள்.

யஙி பின்பு தேவதூதர்கள் அவர்களைவிட்டுப் பரமண்டலத்திற்குப் போனபொழுது, மேய்ப்பர்* ஒருவனை ஒருவர் நோக்கி, நாம் பெத்லெகேம் ஊருக்குப் போய், கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்டுகடந்த இந்தச் சங்கதியைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லிக்கொண்டு,

யசு தீவிரமாய்ப்போய்,மரியாளையும் யோசேப்பையும் பசுத்தொட்டியிலே கிடக்கிற பிள்ளையையும் கண்டார்கள்.

யஎ பின்பு அவர்கள் அந்தப் பிள்ளையைக்குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட வார்த்தையைப் பிரசித்தம்பண்ணினார்கள்.

யஅ மேய்ப்பரால் சொல்லப்பட்டவைகளைக் கேட்ட யாவரும் அவைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.

யக [9]மரியாள் அவ்வார்த்தைகளை எல்லாம் தன் இருதயத்திலே காத்துச் சிந்தித்துக்கொண்டாள்.

கி. பி. ரு.

1 க லே. உஉ. க. மத். உஅ. மக. மாற். க.உஇ: கக. கஉ. லச. லூக். உச. செ. கொலோ. க. உக.

2 மத். க. மசு: மக. மக. லூக். க.சக. அப். உ. கக:உ. கக. பிலி. உ. மக.

3 மத். க. உக.

4 சாமு. கூ. க.

5 க மே. உஅ. மஉ: கஉ. க, உ. சங். கக. உல, உக: எசா. உ. தானி. எ.உ.எபி க. மச. வெளி. இ. மக.

6 லூக். மசு. கஅ. எபே. க. இ:க உ, உக. வெளி. இ. மக.

7 எசா.இ.மசு. லூக். க. எசு. உரோ. இ. க. எபே. உ. மஎ. கொலோ. க. உஉ.

8 பாவா. க. மக. எபே. உ இ, அ. உ நேச. உ. மகு. க பே. ச. கூ, உ.

*அல்லது மேய்ப்பாகியமனுஷர்.

9 க மே. கஎ. மக. லூக். க. கக. இக. மச.

10 க மே. மஎ. மஉ. க மே. மஉ. க. லூக். க. இக.

11 மத். க. உக, உஇ.லூக்.க.கக.

12 க மே. மஉ. உ, க, ச, கூ.

13 உ மே. மசு. உ: உஉ. உசு: கச.மகூ.ச மே. க. மக: அ. மஎ: மஅ. மஇ

14 கமே.மஉ,உ, கூ, அ.

15 எசா. சஅ. க. மாற். மஇ. சக. கஅ. மச.

16 சங். அசு.சஅ. எபி. மக. இ.

17 மத். ச. க.

உய மேய்ப்பரும் தங்களுடனே சொல்லப்பட்டதின்படியேகேட்டுக்கண்ட யாவுக்காகவும் பராபரனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டு திரும்பினார்கள்.

உக ¶ [10]பிள்ளைக்கு விருத்தசேதனம் செய்கிறதற்குரிய எட்டாம் நாளிலே அது கருப்பமாகிறதற்கு முன்னே தேவதூதனாலே சொல்லப்பட்ட [11]இயேசு என்னும் நாமம் அதற்குக் கொடுக்கப்பட்டது.

உஉ அல்லாமலும் [12]மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்களைச் சுத்திகரிப்பதற்கான நாள்கள் நிறைவேறினபொழுது,

உங [13]முதற்பேறான எந்த ஆண் பிள்ளையும் பராபரனுக்குப் பிரதிஷ்டையாக்கப்பட வேண்டும் என்று [14]பராபரன் அருளிச்செய்த நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி,

உச அவர்கள் அதைப் பராபரனுக்கு ஒப்புக்கொடுக்கும்படிக்கும் பராபரனுடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒருசோடு காட்டுப்புறாவை அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியிடும்படிக்கும் பிள்ளையை எருசலேம் பட்டணத்திற்குக் கொண்டுபோனார்கள்.

உஙி அப்பொழுது சிமேயோன் என்று பேர்கொண்ட மனிதன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனுமாய் [15]இஸ்ரவேலருக்கு ஆறுதல் செய்கிறவர் வரக் காத்திருக்கிறவனுமாய் இருந்தான்; அவனில் பரிசுத்தஆவியானவர் இருந்தார்.

உசு அல்லாமலும் பராபரனுடையகிறிஸ்துவைக்காணும்முன்னே, [16]நீ மரணம் அடைவதில்லை என்று பரிசுத்தஆவியினாலே அவனுக்கு உத்தரவு உண்டாயிருந்தது.

உஎ [17]அவன் அந்த ஆவியினாலே ஏவப்பட்டுத் தேவாலயத்திலேவந்திருந்தான்; அப்பொழுது இயேசு என்னும் பிள்ளையை நியாயப்பிர

Digitized by Google

மாண முறைமையின்படிசெய்யத் தாய்தகப்பன்மார் அவனை உள்ளே கொண்டுவருகையில்,

28 அவன் அவனைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, பராபரனைத் தோத்திரித்துச் சொன்னது:

29 [1]ஆண்டவரே, புறத்தேசத்தார்களுக்கு அறிவைக் கொடுப்பதற்கும் உம்முடைய சனங்களாகிய இஸ்ரவேலருக்கு மகிமை உண்டாக்குவதற்குமான ஒளியாய்,

30 உம்மாலே எல்லாச் சனங்களுக்குமுன்பாகவும்,

31 எத்தனமாக்கப்பட்ட இரட்சணை கான் [2]என் கண்களாலே கண்டபடியினாலே,

32 [3]தேவரீர் உம்முடைய வார்த்தையின்படி இப்பொழுது அடியேனைச் சமாதானத்தோடே அனுப்பிவிடுகிறீர் என்றான்.

33 ¶ அப்படி அவனைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளை அவருடைய தாயும் யோசேப்பும் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

34 பின்னும் சிமேயோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளுடனே சொன்னது: இதோ, அநேகருடைய இருதயசிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு,

35 இஸ்ரவேலரில் [4]அநேகர் விழுதற்கும் எழுந்திருக்குதற்கும் [5]விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாயிருப்பதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்; [6]உன் ஆத்துமாவையே ஒரு கத்தி ஊடுருவிப்போம் என்றான்.

36 ¶ அல்லாமலும் ஆசேருடைய கோத்திரத்திலே பானுவேலின் குமாரத்தியும் தீர்க்கதரிசியுமாகிய அன்னாள் என்பவள் இருந்தாள், அவள் கன்னியாய்ப் பின்பு ஏழு வருஷம் புருஷனோடே வாழ்ந்து மிகுந்த வயது சென்றவளாயிருந்தாள்.

37 எண்பத்துநாலு வயதுள்ள அந்தக் கைம்பெண் தேவாலயத்தைவிட்டு நீங்காமல் [7]இரவும் பகலும் செபம்பண்ணி உபவாசித்து ஆராதனைசெய்து கொண்டுவந்தாள்.

38 அவளும் அவ்வேளையிலே போய் நின்று, பராபரனைத் துதித்து, [8]எருசலேமிலே* மீட்புண்டாகக் காத்திருந்த யாவருடனேயும் அவனைக்குறித்துப் பேசினாள்.

39 பராபரனுடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்த பின்பு கலிலேயாதேசத்திலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்தூருக்குத் திரும்பினார்கள்.

40 ¶ [9]பிள்ளையானது வளர்ந்து ஆவியிலே பலன்கொண்டு ஞானத்தால் நிறையப்பட்டுத் தேவதயவுள்ளவரானார்.

41 [10]அவருடைய தாய்தகப்பன்மார் பஸ்காவின் பண்டிகைக்கு வருஷந்தோறும் எருசலேம் பட்டணத்திற்குப் போவார்கள்.

42 அந்தப்படிக்கு அவர் பன்னிரண்டு வயதுள்ளவரானபொழுது அவர்கள் பண்டிகைமுறைமையின்படி எருசலேமுக்குப் போய்,

43 வேண்டிய நாள் அங்கே இருந்து பின்பு திரும்பிவருகிறபொழுது, பிள்ளையாகிய இயேசு தம்முடைய தாய்க்கும் யோசேப்புக்கும் தெரியாமல் எருசலேமிலே தானே இருந்தார்.

44 அவர்கள் அவர் பிரயாணக்காரருடைய கூட்டத்தில் இருப்பாரென்று எண்ணி, ஒருநாள் பிரயாணமாய் நடந்துபோய், இனத்தாருக்குள்ளும் அறிமுகமானவர்களுக்குள்ளும் அவனைத் தேடி,

45 அவனைக் காணுமலிருக்கிறபொழுது எருசலேமுக்குத் திரும்பி, அவனைத் தேடி,

46 மூன்று நாளைக்குப் பின்பு தேவாலயத்திலே அவர் போதகருக்குள்ளே உளைக்காந்திருக்கவும், அவர்களுக்குச் செவிகொடுக்க

கி. பி. கு.

1 ஏசா. 42. 6: 49. 6: சகே. 4: 2. மல். 1. 11. மத். 8. 11-12. அப். 13. 47: 26. 23. ரோ. 15. 9-12. 2 ஏசா. 40. 5. மத். 13. 16. 3 2 கோ. 5. 17. 4 ஏசா. 8. 14. மத். 21. 44. ரோ. 9. 32-33. 1 பே. 2. 7-8. 5 அப். 28. 22. 6 சங். 22. 20. யோவா. 19. 25. 7 அப். 26. 7. 1 தீமோ. 5. 5. 8 மாற். 15. 43. லூக். 2. 25. 38. அப். 24. 15. தீத். 2. 13. * அல்லது இஸ்ரவேலிலே. 9 லூக். 2. 52. 1 சாமு. 2. 26. 10 உ மோ. உசா. 16. 16: உச. 23. 19. மத். 26. 17. மாற். 14. 12. லூக். 22. 7. யோவா. 2. 13: 11. 55. அப். 12. 4. 1 கொரி. 5. 7. உ மோ. 12. 1-14. 43. 21. எண். 9. 2-5. 28. 16. உபா. 16. 1-8. 2 நா. 30. 1-27. 35. 1-19. எஸ்றா. 6. 19-22.

Digitized by Google

வும், அவர்களை விளுவவும் கண்டார்கள்.

சஎ [1]அவருடைய வசனங்களைக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் மாறுத்தரங்களையுங் குறித்துப் பிரமித்தார்கள்.

சஅ (தாய்தகப்பன்மார்) அவனைக் கண்டு அதிசயப்பட்டார்கள்; அல்லாமலும் அவருடைய தாய் அவனைநோக்கி, மகனே, என்னத்தினாலே நீ எங்களுக்கு இப்படிச்செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள்; அதற்கு அவர்,

சக நீங்கள் என்னை என் தேடினீர்கள்? [2]நான் என் தகப்பனுக்கு ஏற்றவைகளிலே இருக்கவேண்டியதென்று அறியீர்களா என்றார்.

சரு [3]அவர்கள் தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையின் (கருத்தை) உணர்ந்துகொள்ளவில்லை.

சஉ பின்பு அவர் அவர்களுடனேகூடப் போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழடங்கினார்; நடந்த சங்கதிகளையெல்லாம் [4]அவருடைய தாய் தன் இருதயத்தில் காத்துக்கொண்டாள்.

சஉ இயேசுவானவர் [5]ஞானத்தையும், * வயதையும், பராபரனிடத்திலும் மனிதரிடத்திலும் தயையையும் அதிகம் அதிகமாய் அடைந்துகொண்டார்.

ரூ. அதிகாரம்.

க. போவாலுடைய பிரசங்கத்தையும், ஞானஸ்நானத்தையுங்குறித்தது. ரூ. அவன் யோசுவைக்குறித்துக் கொடுத்த சாட்சி. உஅ. எரோதே போவாலைக் காவலில் வைத்தது. உக. யோசு ஞானஸ்நானம்பெற்றபோது பரமண்டலத்திலிருந்து சாட்சி வெளிப்பட்டது. உக. யோசுவின் ஆயுசின் பிரமாணமும், போசேப்பைத்தொடங்கி மேற்போகின்ற அவருடைய வம்சவரிசையின் அட்டவணையும்.

தீபேரியு இராயன் இராச்சியபரிபாலனம்பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே, பொந்தியுபிலாத்து என்பவன் யூதேயாநாட்டுக்குத் தனாயாயும், எரோது என்பவன்

கி. பி. உக.

1 மத். எ. உக. மாற். க. உஉ. லூக். ச. உஉ, கஉ போவா.எ. மஇ, சக.
2 போவா. உ. உக.
3 லூக். கூ. சஇ: மஅ. உச.
4 மக. வச. தானி. எ. உஅ.
5 க சாமு. உ. உக. சஅ. வச.
* அல்லது வளர்த்தியையும்.
6 போவா. மக. சக, இக: மஅ. மக. அப். ச. க.
7 மத். க. க. மாற். க. ச.
8 லூக். க. எஎ.
9 எசா. சஅ.க.மத். க. க. மாற். க க. போவா. க. உக.
10 சங். கூஅ. உ. எசா. இஉ. அ. லூக். உ. அ.
11 மத். க. எ.
† அல்லது தருபான.

காற்பங்காகியகலிலேயா நாட்டுக்கு அதிபதியாயும், அவனுடைய சகோதரனாகிய பிலிப்பு என்பவன் காற்பங்காகிய இத்துரேயா காட்டுக்கும் திராகோனித்தி காட்டுக்கும் அதிபதியாயும், இவிசானியா என்பவன் காற்பங்காகிய அபிலேனே காட்டுக்கு அதிபதியாயும்,

உ [6]அன்னா, காயிபா என்பவர்கள் பிரதான ஆசாரியராயும் இருந்த காலத்திலே, வனாந்தரத்தில் சகரியாவின் குமாரனாகிய யோவானுக்குத் தேவவசனம் உண்டாயிற்று.

ரூ ¶ ஆனபடியால் [7]அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசம் எங்கும் நடந்து, [8]பாவமன்னிப்புக்காக மனம்திருப்பும்படிக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான்.

ச [9]பராபரனுக்காக மார்க்கத்தை நன்றாகச்செய்து, அவருக்காகப் பாதைகளைச் செம்மைபண்ணுங்கள் என்றும்,

ரு பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானபாதைகள் செம்மையாகும், முரட்டுவழிகள் சமனாகும் என்றும், [10]மனிதர் எல்லாரும் பராபரனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும்,

சு வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினுடைய புத்தகத்தில் எழுதியிருக்கிறபிரகாரமாகப் பிரசங்கித்தான்.

ஏ ஆதலால் அவன், தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிக்குப் புறப்பட்டுவந்த சனங்களை நோக்கி, [11]விரியன்பாம்புகளின் குட்டிகளே இனிவரும் கோபத்திற்கு நீங்கள் தப்பித்துக்கொள்ளும்படியாய் உங்களுக்கு வகைகாட்டினவன் எவன்?

அ (தப்ப விரும்பினால்) மனந்திருப்புகிறதற்கு ஏற்ற†கனிகளைக் கொடுங்கள், ஆபிரகாம் எங்களுக்

Digitized by Google

குத்தகப்பன் என்று உங்கள் உள்ளத்தில் சொல்லத் தொடங்காதிருங்கள்; ஆபிரகாமுக்குப் பராபரன் இந்தக் கற்களால் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராய் இருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஈ அல்லாமலும் இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகில் வைத்திருக்கின்றது; [1]ஆ கையால் கல்ல கனிகொடாதமரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படும் என்றான்.

உ ¶ அப்பொழுது சனங்கள் அவனோநோக்கி, [2]அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்டார்கள்.

ஊ அவர்களுக்கு மாறுத்தரமாக அவன் சொன்னது: [3]இரண்டு சட்டைகளை உடையவன் சட்டையில்லாதவனுக்குக் கொடுக்கக்கடவன்; ஆகாரமுடையவனும் அப்படியே செய்யக்கடவன் என்றான்.

எ பின்பு [4]ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறும்படிக்கு அவனிடத்தில் சேர்ந்து, போதகரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

ஏ அவர்களுடனே அவன் சொன்னது: [5]உங்களுக்குக் கட்டளையிடப்பட்டதற்கு மேலாக ஒன்றையும் பலவந்தமாய்க் கேட்டுக்கொள்ளாதிருங்கள் என்றான்.

ஐ போர்ச்சேவகரும் அவனை நோக்கி, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டார்கள்; அவர்களுடனே அவன் சொன்னது: நீங்கள் ஒருவனுக்கும் இடுக்கண் [6]செய்யாமலும்,* ஒருவனைக் குறித்தும் பொய்ச்சாட்சி சொல்லாமலும், உங்கள் சம்பளமே† போதுமென்று எண்ணிக்கொண்டிருக்கக்கடவீர்கள் என்றான்.

ஒ ¶ அப்பொழுது சனங்கள் காத்திருந்து,‡ யோவான் இறிஸ்து

கி. பி. உசு.

1 மத். ஈ உக.
2 அப். உ.கை.
3 லூக். உக. ஈக உ கொரி. அ. உசு. பாக். உ. உஇ,உக. ஈ பே. க. உள: ச. உஎ.
4 மத். உக. கஉ. லூக். எ. உக.
5 லூக். உக. அ.
6 உ தே. உக.க. க தே. உக.உக.
* அல்லது பயங் செய்யாமலும்.
† அல்லது வாவு.
‡ அல்லது சத் தேகம்கொண்டு.
§ அல்லது கியா பழுத்தரித்து.
7 மத். க. உக.
8 மீகா. ச. உஉ மத். உக. கஎ.

வாய் இருக்கிறானோ என்று எல்லாரும் தங்கள் இருதயங்களில் அவனைக்குறித்துச் சிந்தனைகொண்டிருக்கிறபொழுது,

ஐசு யோவான் எல்லாருடனேயும் சொன்னது: [7]நான் சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; என்னிலும்அதிக பலத்தவர்வருகிறார், அவருடைய பாத இரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும்உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்.

ஐஎ தூற்றும் சுளகு அவருடைய கையில் இருக்கின்றது; அவர் தம்முடைய களத்தை நன்றாய் விளக்கி, [8]கோதுமையைத் தம்முடைய களஞ்சியத்திலே சேர்த்து, பதராவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்று சொன்னதுமன்றி,

ஐஅ மற்றும் அநேகம் புத்திகளைச் சொல்லிச் சனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

ஐக ¶ [9]அப்படியிருக்கும் காலத்திலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது என்பவன் தன் சகோதரனை பிலிப்பினுடைய மனைவியாகிய ஏரோதியாளின் நிமித்தமாகவும், மற்றப் பொல்லாங்குகளைச் செய்ததின் நிமித்தமாகவும் யோவானால் கடிந்துகொள்ளப்பட்டபொழுது,

ஐஉ தான் செய்துவந்த பொல்லாங்குகள்யாவையுமன்றியோவானையும் காவலில் அடைத்தான்.

ஐஊ ¶ சனங்கள் எல்லாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டகாலத்தில் [10]இயேசுவானவரும் ஞானஸ்நானம் பெற்றார்; அப்பொழுது அவர் செபம்பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டதுமல்லாமல்,

ஐஎ கண்ணுக்குத் தோன்றிய உருவாய் ஒரு புறாவைப்போலப் பரிசுத்த ஆவியானவர் அவர்மேல்

9 மத். ஙச. க. மாற். க. ஙஎ.

10 மத். க. ஙக. லூகா. க.கஎ.

இறங்கினார்; அன்றியும், நீர் எனக்கு அன்பான குமாரனையிருக்கிறீர், உம்மில் பிரியமாய் இருக்கிறேன் என்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

உரு ¶ இப்படி [1]இயேசுவானவர் ஏறக்குறைய முப்பது வயதுள்ள வராய் வெளிப்படத் தொடங்கினார். [2]சனங்கள் அவனை யோசேப்பின் குமாரனென்று எண்ணினார்கள்.

உரு அந்த யோசேப்பு எலியின் குமாரன்; எலி, மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத்து, இலேவியின் குமாரன்; இலேவி, மெல்கியின் குமாரன்; மெல்கி, இயன்னுவின் குமாரன்; இயன்னு, யோசேப்பின் குமாரன்; யோசேப்பு, மத்தத்தீயாவின் குமாரன்; மத்தத்தீயா, ஆமோசின் குமாரன்; ஆமோசு, நாவூமின் குமாரன்; நாவூம், எஸ்லீயின் குமாரன்; எஸ்லீ, நங்காயின் குமாரன்.

உசு நங்காய், மாகாத்தின் குமாரன்; மகாத்து, மத்தத்தீயாவின் குமாரன்; மத்தத்தீயா, சேமேயின் குமாரன்; சேமேய், யோசேப்பின் குமாரன்; யோசேப்பு, யூதாவின் குமாரன்; யூதா, யோவன்னுவின் குமாரன்.

உஎ யோவன்னு, இரேசாவின் குமாரன்; இரேசா, சோரோபாபேலின் குமாரன்; சோரோபாபேல், சலாத்தியேலின் குமாரன்; சலாத்தியேல், நேரியின் குமாரன்.

உஅ நேரி, மேலுகியின் குமாரன்; மேலுகி, அத்தியின் குமாரன்; அத்தி, கோசாமின் குமாரன்; கோசாம், எல்மோதாமின் குமாரன்; எல்மோதாம், ஏரின் குமாரன்; ஏர், யோசேயின் குமாரன்.

உக யோசே, எலியேசரின் குமாரன்; எலியேசர், யோரீமின் குமாரன்; யோரீம், மாத்தாத்தின் குமாரன்; மாத்தாத்து, இலேவியின் குமாரன்.

கி. பி. உசு.

1 ச மோ. ச. உ, உஇ, உக, ச உ, ச எ.

2 மத். உஉ. ஐஇ. போவா. க. ச உ.

3 சாரி. உஉ. உஉ.

4 உ சாமு. இ. உச. க ஏஸ்ரா. உ. இ.

5 ருத். ச. உஅ. க ஏஸ்ரா. உ. உ.

6 க மோ. உக. உ, உக.

7 க மோ. உக. உஉ.

8 க மோ. இ. க. ழ: உக. உ. ழ.

கூய இலேவி, சிமையோனின் குமாரன்; சிமையோன், யூதாவின் குமாரன்; யூதா, யோசேப்பின் குமாரன்; யோசேப்பு, யோனுடைய குமாரன்; யோனான், எலியாக்கீமின் குமாரன்.

கூக எலியாக்கீம், மேலேயாவின் குமாரன்; மேலேயா, மயினுடைய குமாரன்; மயினன், மாத்தாத்தாவின் குமாரன்; மாத்தாத்தா, [3]நாத்தானுடைய குமாரன்; நாத்தான், [4]தாவீதின் குமாரன்.

கூஉ தாவீது, [5]இயேசாயின் குமாரன்; இயேசாய், ஓபேதின் குமாரன்; ஓபேது, போவோசின் குமாரன்; போவோசு, சல்மோனுடைய குமாரன்; சல்மோன், நகாசோனின் குமாரன்.

கூங நகாசோன், அமின்தாபின் குமாரன்; அமின்தாப், ஆராமின் குமாரன், ஆராம், எஸ்ரோமின் குமாரன்; எஸ்ரோம், பாரேசின் குமாரன்; பாரேசு, யூதாவின் குமாரன்; யூதா, யாக்கோபின் குமாரன்.

கூச யாக்கோபு, ஈசாக்கின் குமாரன்; ஈசாக்கு, ஆபிரகாமின் குமாரன்; ஆபிரகாம், [6]தேராவின் குமாரன்; தேரா, நாகோரின் குமாரன்.

கூரு நாகோர், சேரூக்கின் குமாரன்; சேரூக்கு, இராகுவின் குமாரன்; இராகு, பலேக்கின் குமாரன்; பலேக்கு, ஏபேரின் குமாரன்; ஏபேர், சாலாமின் குமாரன்.

கூசு சாலாம், [7]கேனானின் குமாரன்; கேனன், அருப்பகுசாத்தின் குமாரன்; அருப்பகுசாத்து, [8]சேமின் குமாரன்; சேம், நோவாவின் குமாரன்; நோவா, இலாமேகின் குமாரன்.

கூஎ இலாமேகு, மெத்தூசலாவின் குமாரன்; மெத்தூசலாகு, ஏனோகின் குமாரன்; ஏனோகு, யாரேத்தின் குமாரன்; யாரேத்து, மலெலேயேலின் குமாரன்; மலெலே

Digitized by Google

யேல், காயினனின் குமாரன்; காயினன், ஏனோசின் குமாரன்.

கூ ஏனோசு, சேத்தின் குமாரன்; சேத்து, ஆதாமின் குமாரன்; [1]ஆதாம், பராபரனால் உண்டானவன்.

ச. அதிகாரம்.

ச. இந்த சோதிக்கப்பட்டு உபவாசம்பண்ணின த. கூ. அவர் பசாசை செயித்தது. மச. அவர் பிரசங்கிக்கத் தொடங்கினது. கூக. ஸாரேத்தூர் அருமடய விதவைபுள்ளவர்த்தைகளைக்குறித்து தூசிக்கப்பட்டது. கூக. பசாசு பிடித்தவர்களும், கூஅ. பேதுருவின் மாமியையும், சஎ. பின்னும் பலரித வியாதிக்காரரையும் சொஸ்தப்படுத்தின த. சக. பாசகன் அவரை இன்னொன்று சொல்லாதபடிக்கு தடித்துகொள்ளப்பட்டது. சக. அவர் பட்டணங்களெங்கும் பிரசங்கித்தது.

[1]இயேசுவானவர் பரிசுத்தஆவியினாலே நிறைந்தவராய், யோர்தானைவிட்டுத் திரும்பி, [3]ஆவியினாலே வனாந்தரத்தில் கொண்டுபோகப்பட்டார்.

உ அங்கே நாற்பதுநாள் பசாசினாலே சோதிக்கப்பட்டு [4]அந்நாள்களிலே ஒன்றும் புசியாமல் இருந்தார்.

க அவைகள் முடிந்த பின்பு, அவருக்குப் பசி உண்டாயிற்று; அப்பொழுது பசாசானவன் அவரைநோக்கி, நீ தேவனுடைய குமாரனானால், இந்தக் கல்லை அப்பமாகும்படி சொல் என்றான்.

ச அதற்கு இயேசுவானவர், [5]மனிதன் அப்பத்தினாலே மாத்திரம் அல்ல, பராபரனுடைய வார்த்தை எதனாலோ, அதினாலே பிழைப்பான் என்று எழுதி இருக்கின்றது என்றார்.

ஙி பின்பு பசாசானவன் அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், ஒரு நிமிஷத்திலே உலகத்தின் இராச்சியங்களையெல்லாம் அவருக்குக் காண்பித்து,

ங இவை எல்லாவற்றின்மேலும் அதிகாரமும் இவைகளின் மகிமையும் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறபடியால், நான் இவைகளை உனக்குத் தருவேன்; [6]என் இஷ்டப்படிக்கே நான் இ

கி. பி. உசு.

1 கொ. ஆ. ச, உ

2 மத். ச. க. மாற். க. உஉ.

3 உச. லூக். உ. உஎ.

4 உ மோ. கச. உஅ. கஇரா. உக. அ.

5 ஏ மோ. அ. க.

6 யோவா. உஉ. கக: உச. கஎ. வெளி. உக. உ, எ.

* அல்லது எனக்குமுன் விழுந்தால்.

7 ஏ மோ. க. உக: உ. உஎ.

8 மத். ச. ஆ.

9 சங். கக. உக.

10 ஏமோ. க. உக.

வைகளை எவனுக்கும் கொடுக்கிறேன்;

எ ஆகையால் நீ என்னைத் தொழுதுகொண்டால்,* எல்லாம் உன்னுடையதாயிருக்கும் என்று அவரிடனே சொன்னான்.

அ இயேசுவானவர் அவனுக்குச் சொன்னது: சாத்தானே, [7]நீ எனக்குப் பின்னுகப் போ, உன் தேவனாகிய பராபரனைத் தொழுதுகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கின்றதே என்றார்.

கூ [8]அன்றியும் அவன் அவரை எருசலேம் பட்டணத்திற்குக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்தின் உப்பரிகையின்மேல் நிறுத்தி, உன்னைக் காப்பாற்றும்படிக்கு உன்னைக்குறித்துத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார் என்றும்,

ஐ [9]உன் கால் கல்லில் இடறுதபடிக்கு அவர்கள் தங்கள் கைகளில் உன்னை ஏந்திக்கொண்டு போவார்கள் என்றும் எழுதியிருக்கின்றது.

ஙக ஆகையால் நீ தேவனுடைய குமாரனானால், இங்கேயிருந்து தாழக்குதி என்று அவரிடனே சொன்னான்.

ஙஉ அதற்குமாறுத்தரமாக [10]இயேசுவானவர் சொன்னது: உன்னுடைய தேவனாகிய பராபரனைப் பரிட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கின்றது என்றார்.

ஙஊ பசாசானவன் (அவனைச்) சோதித்தவைகளையெல்லாம் முடித்தபொழுது, [11]சிலகாலம் அவனைவிட்டுப் போனான்.

ஙச ¶ [12]பின்பு இயேசுவானவர் [13]ஆவியினுடைய பலத்தினாலே [14]கலிலேயா நாட்டுக்குத் திரும்பினார்; அதைச் சூழ்ந்திருக்கிற தேசமெங்கும் அவருடைய கீர்த்தி பரவிற்று.

11 யோவா. உச. கக. எபி. ச. உஅ.

12 மத். ச. உஉ. யோவா. ச. சக.

13 க. லூச.

14 அப். உ. கஎ.

Digitized by Google

கி. பி. உசு.

யஙி அல்லாமலும் அவர்களு டைய செபஆலயங்களில் அவர் உபதேசம்பண்ணி, எல்லாராலும் புகழ்ச்சி அடைந்தார்.

யசு ¶ அவர் தாம் வளர்ந்த [1]நாச ரேத்தூருக்குப் போய், தமக்கு வழ க்கமானபடி ஓய்வுநாளிலே [2]செப ஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நிற்கிறபொழுது,

யஎ ஏசாயா தீர்க்கதரிசியின் புத் தகத்தை அவருக்குக் கொடுத்தார் கள்; அந்தப் புத்தகத்தை அவர் விரித்தபொழுது,

யஅ [3]பராபரனுடைய ஆவி என் னில் இருக்கின்றது; தரித்திரருக் கு நான் சுவிசேஷத்தை அறிவிக் கும்படி எனக்கு அபிஷேகம்பண் ணினார்; நருக்குண்டவர்களைக் கு ணமாக்கும்படிக்கும், சிறைப்பட் டவர்களுக்கு விடுதலையையும், கு ருடருக்குப் பார்க்குதலையும் பிரச ங்கிக்கும்படிக்கும், நொறுங்குண் டவர்களை விடுதலையாக்கி,

யக பராபரனுலே அங்கிகரிக் கப்படுவதற்கான வருஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும் என்னை அனுப்பினார் என்று எழுதியிருந்த இடத்தைக் கண்டு,

உய புத்தகத்தைச் சுருட்டி ஊ ழியக்காரனிடத்தில் கொடுத்து உ ளுக்காந்தார்; செபஆலயத்திலுள் ள எல்லாருடைய கண்களும் அ வர்மேலே நோக்கமாயிருந்தன.

உக அப்பொழுது அவர் அவர்க ளுடனே பேசத்தொடங்கி, நீங் கள் கேட்ட வேதவாக்கியம் இன் றைத்தினமே நிறைவேறிற்று என் ரூர்.

உஉ எல்லாரும் அவருக்கு நல் லசாட்சி கொடுத்து, அவர் திரு வாய்மலர்ந்து அருளிச்செய்த கிரு பையுள்ள வசனங்களைக்குறித்து [4]ஆச்சரியப்பட்டு, பின்பு [5]இவன் யோசேப்பினுடைய குமாரனல் லவோ என்ரூர்கள்.

உசு அவர்களுடனே அவர் சொ ன்னது: வயித்தியனே, உன்னைத் தானே குணமாக்கு என்கிற வழக் கச்சொல்லையும், நாங்கள் கேள் விப்பட்டபடி [6]கப்பர்நாகூம் ஊ ரில் (உன்னூலே) செய்யப்பட்டது எதுவோ [7]அதை உன் ஊராகிய இவ்விடத்திலேயும் செய் என்ப தையும் நீங்கள் என்னுடனே சொல்லுவீர்கள் என்பதற்குச் ச தேகமில்லை.

உச அப்படியிருக்க, [8]தீர்க்கதரி சியானவன் தன் ஊரிலே அங்கி கரிக்கப்பட்டவன் அல்லவென்ற மெய்யாகவே உங்களுக்குச் சொ ல்லுகிறேன்.

உஞ அன்றியும் எலியாவின் கா லத்திலே மூன்று வருஷமும் ஆற மாதமும் வானம் அடைக்கப்பட் டுத் தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபொழுது, இஸ்ர வேலருக்குள்ளே [9]அநேகம் கை ம்பெண்கள் இருந்தும்,

உசு சீதோன் நாட்டிலுள்ள சரே ப்பத்தா ஊரில் இருந்த ஒரு கை ம்பெண்ணிடத்திற்கே அன்றி, மற் றொருத்தியினிடத்துக்கும் எலியா என்பவர் அனுப்பப்படவில்லை.

உஎ அல்லாமலும் [10]எலிசா என் னும் தீர்க்கதரிசியின் காலத்திலே, இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தும், சிரிய தேசத்தானாகிய நாகமானேயன்றி, அவர்களில் வேறொருவனும் சு த்தமாக்கப்படவில்லையென்று சத் தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ரூர்.

உஅ ¶ செபஆலயத்தில் இருந் த எல்லாரும் இவைகளைக் கேட்ட பொழுது,

உக கோபத்தால் நிரப்பப்பட் டெழுந்து, அவனை ஊருக்குப்புறம் பே தள்ளி, தங்கள் ஊருக்கு அ டுத்த செங்குத்தான மலையின் சி கரத்திலிருந்து * அவனைத் தாழத்தள் ளும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

உஉ [11]அவர் அவர்கள் மத்தியில் நின்று கடந்துபோனர்.

1 மத். உ. உக: மக. செ. மாற். க. க.
2 அப். மக. மச: மஎ. உ.
3 ஏசா.கக.க.
4 சங். சஇ. உ. மத். மக. செ. மாற். க. உ. லூக்.உசஎ.
5 யோவா. க. சஉ.
6 மத். ச. மக: மக. உக.
7 மத். மக. செ. மாற். க. க.
8 மத். மக. இச மாற். க. ச. யோவா. ச.சச.
9 ஆ இரா. மஎ. க: மஅ. க. பாக. இ. மஎ.
10 உ இரா.இ.மச.
* அல்லது தனி பிலிருந்த.
11 யோவா. அ. இக: ம. கக.

Digitized by Google

கூ ¶ [1]பின்பு அவர் கலிலேயா தேசத்திலுள்ள கப்பர்நாகூம் பட்டணத்திற்குப் போய், ஓய்வுநாள்களில் சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்.

கூ [2]அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாய் இருந்தபடியினாலே, அவர்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப் பிரமித்தார்கள்.

கூ ¶ [3]அல்லாமலும் செபஆலயத்திலே அசுத்தமான ஆவியுள்ள ஒரு மனிதன் இருந்தான்.

கூ அவன் (அவனாக் கண்டு) ஐயோ! நாசரேத்தூராகிய இயேசுவே, எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்; [4]உம்மைஅறிந்திருக்கிறேன்;* [5]நீர் பராபரனுடைய பரிசுத்தரே என்று மிகுந்த சத்தத்துடனே கூப்பிட்டான்.

கூ அதற்கு இயேசுவானவர் நீ பேசாமல் இவனை விட்டுப் போ என்று அதை அதட்டினார்; அப்பொழுது பசாசு அவனைச் சனங்களுக்குள்ளே தள்ளி, அவனுக்கு ஒரு சேதமும் செய்யாமல் அவனை விட்டுப்போயிற்று.

கூ எல்லாரும் பிரமிப்படைந்து, இவர் அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்குக் கட்டளையிட அவைகளும் புறப்படுகின்றனவே; இது என்ன வசனம் என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

கூ அவருடைய கீர்த்தி அத்தேசத்திலுள்ள இடங்கள் யாவிலும் பிரசித்தமாயிற்று.

கூ ¶ [6]பின்பு அவர் செபஆலயத்தைவிட்டுச் சீமோன் என்பவனுடைய வீட்டுக்குப்போனார்; சீமோனுடைய மாமி மிகுந்த சுரமாய்க் கிடந்தாள்; அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள்.

கூ அப்பொழுது அவர் அவளிடத்தில் குனிந்து நின்று சுரத்தை அதட்டினார்; அது அவளைவிட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடைசெய்தாள்.

சய ¶ பின்பு [7]சூரியன் அஸ்தமித்தபொழுது, அநேக சனங்கள் தங்களிடத்தில் இருந்த பலவியாதிகள் உள்ளவர்களை அவரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்; அவர்கள் எல்லார்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினார்.

சக அநேகரிடத்திலிருந்து [8]பசாசுகளும் புறப்பட்டன; [9]அவைகள், நீர் பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று கூப்பிட்டன; அவர் தம்மைக் கிறிஸ்து என்று அவைகள் அறிந்தபடியினாலே, அவைகள் பேசுகிறதற்கு †இடம்கொடாமல் அதட்டினார்.

சஉ ¶ [10]உதயமானபொழுது அவர் புறப்பட்டு வனாந்தரமான இடத்திற்குப் போனார்; சனங்கள் அவனைத் தேடி அவரிடத்தில் போய்த் தங்களைவிட்டுப் போகாதபடிக்கு அவனை நிறுத்திக்கொண்டார்கள்.

சஊ அதற்கு அவர் அவர்களை நோக்கி, நான் மற்ற ஊர்களுக்கும் பராபரனுடைய இராச்சியத்தைச் சுவிசேஷமாய் அறிவிக்கவேண்டும், அதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார்.

சச [11]அந்தப்படி அவர் கலிலேயா தேசத்திலுள்ள செபஆலயங்களில் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்தார்.

கி. பி. உசு.

1 மத். ச. ஙூ. மாற். க. உக.

2 மத். க. உஅ. உசு. நீத். உ ஙஅ.

3 மாற். க. உக.

4 சக. வச.

* அல்லது அண்றபோம்.

5 சங். ஙக. ஏ. தானி. கூ. உச. லூக். க. கஇ.

6 மத். அ. ஙச. மாற்.க.உசு.

7 மத். அ. ஙக. மாற். க. கஉ.

8 மாற். க. கச: க. ஙக.

9 மாற். க. உஇ கச: கச. கஇ. வச.

† அல்லது தம்மை அவைகள் கிறிஸ்து என்று அறிந்ததைச் சொல்ல.

10 மாற். க. கஇ.

11 மாற். க. கக.

நு. அதிகாரம்.

க. நிறைந்து பேதுருவின் படகிலிருந்து சனங்களைப் போதித்தது. ச. மீன்கள் அதிசயமாய்ப் பிடிக்கப்பட்டதால் அவனும் அவன் தோழரும் மனிதரைப் பிடிக்கிறவர்களாகுவதைக் காண்பித்தது. ஙஉ. குஷ்டரோகியைச் சுத்தஞ்செய்தது. ஙக. வனாந்தரத்தில் செபம்பண்ணினது. ஙஅ. திமிர்வாதக்காரனைக் குணமாக்கினது. உஎ. ஆயக்காரனாகிய மத்தேயுவை அழைத்தது. உக. ஆத்தும வைத்தியனுடைய நிறைந்த பாவிகளோடே புசித்தது. கச. நாம் பாண்டவத்துக்கு ஏதுவைப்பதைப்போல் தலைச் உபவாசிக்கவேண்டியதையும் தன்பல்களையும் முன்னறிவித்தது. கக. பலவீன விசுவா

Digitized by Google

சென்ப் பழைய தருத்திகளுக்கும் பழைய வஸ்தி சங்களுக்கும் ஒப்பாக்கினது.

கி. பி. கூக.

1 ஒருகாலத்திலே சனங்கள் பரா பரனுடைய வசனத்தைக் கேட்கு ம்படிக்கு அவனை நெருக்கி இருக் கிறபொழுது, அவர் கெநேசரேத் து என்னப்பட்ட சிறிய கடலின் அருகே நின்று,

2 கடற்கரையில் இரண்டு பட வுகளிலிருந்து மீன்பிடிக்கிறவர் கள் இறங்கி வலைகளை அலசிக் கொண்டிருக்க, அவ்விரண்டு பட வுகளையும் கண்டு,

3 அவைகளில் ஒன்றாகிய சி மோனுடைய படவில் ஏறி, அதை க்கரையிலிருந்து சற்றே தள்ளும்ப டிக்கு அவனை வேண்டிக்கொண் டு அதிலே உளுக்காந்து, அங்கே யிருந்து சனங்களுக்கு உபதேசம் பண்ணினார்.

4 ¶ அவர் உபதேசித்து முடித்த பின்பு சீமோனை நோக்கி, ²நீ ஆழத் திலே தள்ளிக்கொண்டுபோய், மீ ன்பிடிக்கும்படிக்கு உங்கள் வலை களைத் தாழவிடுங்கள் என்றார்.

5 சீமோன் அவருக்கு மாறுத்தர மாகச் சொன்னது: ஐயரே, இரா முழுவதும் நாங்கள் பிரயாசப்பட் டும் ஒன்றும் அகப்படவில்லை; அப்படியிருந்தும், உம்முடைய சொல்லின்படி வலையைத் தாழவி டுகிறேன் என்றான்.

6 அந்தப்படி அவர்கள் செய்த பொழுது, அவர்களுடைய வலை கிழிந்துபோகத்தக்கதாக, மிகுந்த மீன்களைச் சேர்த்துக்கொண்டார் கள்.

7 அப்பொழுது மற்றப் பட வில் இருந்த பங்காளிகள் வந்து தங்களுக்கு உதவிசெய்யும்படிக்கு அவர்களுக்குச் சமிக்கை காட்டி னார்கள்; அவர்கள்போய் இரண்டு படவுகளையும் அமிழ்த்தத்தக்க பா ரமாக நிரப்பினார்கள்.

8 சீமோன்பேதுரு அதைக்கண் டு, இயேசுவினுடைய முழங்கால் களின் அருகே விழுந்து, ³ஆண்

1 மத். ச. மக. மாற். க. மக.
2 யோவா. உக. க.
3 உசாமு. க. க. க இரா.மா.மஅ.
4 மத். ச. மக. மாற். க. மக.
5 மத். ச. உஅ: மக. உஎ. மாற். க. மஅ. லூக். மஅ. உஅ.
6 மத். அ. உ. மாற். க. சஅ.
7 மத். அ. ச.
8 க லே. மச. ச, ம, உக, உஉ.
9 மத். ச. உஇ. மாற். க. அ. போவா. க. உ.

டவரே, நான் பாவியாய் இருக்கி றபடியினாலே நீர் என்னைவிட்டுப் போகவேண்டும் என்றான்.

9 அவர்கள் அவ்வளவு மீன்க ளைப் பிடித்ததின் நிமித்தம், அவ னுக்கும் அவனோடிருந்த யாவருக் கும்திகில் உண்டானபடியினாலே அப்படிச் சொன்னான்.

10 சீமோனுடைய தோழராகிய செபேதேயுவின் குமாரராகிய யா க்கோபுக்கும்யோவானுக்கும் அ தப்படியே உண்டாயிற்று; அப் பொழுது இயேசுவானவர் சீமோ னை நோக்கி, நீ பயப்படவேண் டாம்; ⁴இதுமுதல் நீ மனிதரைப் பிடிக்கிறவனாய் இருப்பாய் என் றார்.

11 பின்பு அவர்கள் படவுகளை க் கரையோரத்திலேகொண்டுபோய் ⁵நிறுத்தி, எல்லாவற்றையும்விட்டு அவருக்குப் பின்சென்றார்கள்.

12 ¶ ⁶மேலும் அவர் ஒரு ஊரில் இருக்கையில், குஷ்டரோகம் நி றைந்த ஒரு மனிதன் இயேசுவ னைக் கண்டு வணக்கமாய் வி ழுந்து, ஆண்டவரே, உமக்குச் சித்தமுண்டானால் என்னைச் சுத்த மாக்க உம்மால் ஆகுமென்று அவ னை வேண்டிக்கொண்டான்.

13 அவர் தமது கையை நீட்டி அவனைத்தொட்டு, எனக்குச் சித்த முண்டு, சுத்தமாகு என்றார்; உட னே குஷ்டரோகம் அவனைவிட் டு நீங்கிற்று.

14 ⁷பின்பு அவர் அவனை நோ கி, நீ இதை ஒருவருக்கும் சொ லாமல் போய், உன்னை ஆசாரி யனுக்குக் காண்பித்து, சனங் களுக்குச் சாட்சியாக ⁸மோசே நியமித்தபடியே நீ சுத்தமானதைக் குறித்துப் பலிசெலுத்து என்று கட்டளையிட்டார்.

15 அப்படியிருந்தும் அவரு டைய கீர்த்தி அதிகமாகப் பரவி று; ⁹அநேகசனங்கள் அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக் கும், அவராலே தங்கள் வியாதிக

Digitized by Google

வில் நின்று சுகம்அடைந்துகொள் ளும்படிக்கும் கூடிவந்தார்கள்.

ரசு [1]அவர் வனாந்தரத்திலே தனித்துப்போய்ச் செபம்பண்ணிக் கொண்டிருந்தார்.

ரஎ ¶ அன்றியும் ஒரு நாளிலே அவர் உபதேசித்துக்கொண்டிருக் கிறபொழுது, கலிலேயாநாட்டி லும் யூதேயாநாட்டிலும் உள்ள சகல கிராமங்களிலிருந்தும், எருச லேம்பட்டணத்திலிருந்தும் வந்த பரிசேயரும்நியாயசாஸ்திரிகளும் உளுக்காந்திருந்தார்கள்; பிணி யாளிகளைக் குணமாக்கத்தக்கதா கக் கர்த்தருடைய பலம் உண் டாயிற்று.

ரஅ ¶ [2]அப்பொழுது சில மனி தர் திமிர்வாதக்காரன் ஒருவனைப் படுக்கையோடே எடுத்துக்கொ ண்டு, உள்ளே போகவும் அவர் முன்பாக வைக்கவும் வகைதேடி, கூடியிருந்த கூட்டம் இருந்தபடி யினாலே அவனை உள்ளே கொண் டுபோகிறதற்கு இடம் காணுமல், வீட்டின்மேல் ஏறித் தட்டோடுக ளின்வழியாய்ப் படுக்கையுடனே கூடநடுவிலே இயேசுவுக்குமுன் பாக அவனை இறக்கினார்கள்.

ரய அவர்களுடைய விசுவாசத் தை அவர் கண்டு, மனிதனே, உன்பாவங்கள் உனக்கு மன்னிக் கப்பட்டன என்று அவனுடனே சொன்னர்.

ரக [3]அப்பொழுது வேதபாரக ரும் பரிசேயரும் யோசனைபண் ணிச்சொன்னது: தேவதூஷணங் களைச் சொல்லுகிற இவன் யாவ ன்? [4]பராபரன் ஒருவரே தவிரப் பாவங்களை மன்னிக்கத் திராணி யுள்ளவர் யார் என்றார்கள்.

ரஉ இயேசுவானவர் அவர்களு டைய யோசனைகளை அறிந்து அ வர்களைநோக்கி, நீங்கள் உங்கள் இருதயங்களில் சிந்திக்கிறது என்ன?

ரங உன் பாவங்கள் மன்னிக் கப்பட்டன என்று சொல்லுகிற தோ, எழுந்து நட என்று சொல்லு கிறதோ, எது எளிது?

உச பூமியிலே பாவங்களை மன் னிக்கிறதற்கு மனிதனுடைய குமாரன் அதிகாரம் உடையவன் என்று நீங்கள் அறியும்படிக்குப் (பாருங்களென்று) சொல்லி, தி மிர்வாதக்காரனைநோக்கி, நீ எழுந் து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உஙி உடனே அவன் அவர்களுக் குமுன்பாக எழுந்திருந்து, தன் படு க்கையை எடுத்துக்கொண்டு, பரா பரனைப் புகழ்ந்து, தன் வீட்டுக் குப் போனான்.

உசு ஆதலால் எல்லாரும் பிரமிப் படைந்து பராபரனைப் புகழ்ந் தார்கள்; அல்லாமலும் அவர்கள் பயத்தால் நிறையப்பட்டு, அதிசய மானவைகளை இன்று கண்டோம் என்றார்கள்.

உஎ ¶ [5]அதின்பின்பு அவர் புறப் பட்டு, ஆயத்துறையில் உளுக்காந் திருந்த இலேவி என்னும் ஆயக்கா ரனைக் கண்டு, நீ எனக்குப் பின் சென்றுவா என்றார்.

உஅ அந்தப்படி அவன் எல்லா வற்றையும்விட்டு, எழுந்திருந்து, அவருக்குப் பின்சென்றான்.

உக அல்லாமலும் [6]அந்த இலே வி என்பவன் தன் வீட்டிலே அவ ருக்குப் பெரிய விருந்து பண்ணி னான்; [7]அநேக ஆயக்காரரும் மற் றப்பேர்களும் அவர்களுடனேபந் தியிருந்தார்கள்.

ஈல உடனே அவ்விடத்து வேத பாரகரும் பரிசேயரும் அவருடை ய சீஷருக்கு விரோதமாக மொறு மொறுத்து, என்னத்தினாலே நீங் கள் ஆயக்காரரோடும் பாவிகளோ டும் போசனபானம் பண்ணுகிறீர் கள் என்றார்கள்.

ஈக இயேசுவானவர் அவர்களுக் கு மாறுத்தரமாகச் சொன்னது: சொஸ்தமுள்ளவர்களுக்கு வயித்

1 மத். மா. உக. மாற். க. சக.

2 மத். கூ.உ.மாற். உ. கூ.

3 மத். கூ. ஈ. மாற். உ. கூ, எ.

4 சங். கூ. இ. ஏசா. சக. உஇ.

5 மத்.கூ.கூ.மாற். உ.மக, மச.

6 மத். கூ. ம.மாற். உ.மஇ.

7 லூக். மஇ. க.

Digitized by Google

தியன் வேண்டுவதில்லை, வியாதியுள்ளவர்களுக்கே அவன் வேண்டும்.

கூஉ மேலும் [1]நீதிமான்களை அல்ல, பாவிகளையே மனந்திருப்பும்படிக்கு அழைக்கவந்தேன் என்றார்.

கூக ¶ பின்பு அவர்கள் அவனை நோக்கி, [2]யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் அநேகந்தரம் உபவாசம்பண்ணிச் செபங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்களே, உம்முடைய சீஷர் போசனபானம்பண்ணலாமா என்றார்கள்.

கூசு அதற்கு அவர் சொன்னது: மணவாளன் கலியாணத்திற்கு வந்த மனிதரோடு இருக்கும் காலத்திலே, நீங்கள் அவர்களை உபவாசம் பண்ணும்படி செய்யக்கூடுமா?

கூடு மணவாளன் அவர்களைவிட்டு நீக்கப்படும்நாள்கள்வரும், அப்பொழுது அவர்கள் உபவாசிப்பார்கள் என்று சொல்லி,

கூசு ¶ [3]பின்னும் உவமையாய்ச் சொன்னது: ஒருவனும் புதியவஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான்; இணைத்தால் புதியதானது (பழையதைக்) கிழிக்கும்; அல்லாமலும் புதிய வஸ்திரத்துண்டு பழையதற்கு ஒவ்வமாட்டாது.

கூஎ அன்றியும் ஒருவனும் புதிய திராட்ச இரசத்தைப் பழைய துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான்; வைத்தால் புதிய இரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும்; அப்பொழுது அது சிந்திப்போம், துருத்திகளும் கெட்டுப்போம்.

கூஅ புதிய இரசத்தைப் புதிய துருத்திகளில் வார்த்துவைத்தால் இரண்டும் காத்துக்கொள்ளப்படும்.

கூக அல்லாமலும் பழைய இரசத்தைப் பானம்பண்ணுகிறவன் உடனே புதிய இரசத்தை விரும்பமாட்டான்; பழைய இரசம் அதிக நல்லதென்று சொல்வானே என்றார்.

சூ. அதிகாரம்.

க. ஓய்வுநாளே ஆசரிப்பதைக்குறித்துப் பரிசேயருடைய குருட்டாட்டத்தைத் திரித்து வேதத்திலும், புத்திபிறவும், அற்புதத்திலும் எண்ணத்தது. உ. பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தெரிந்து ஏற்படுத்தினது. ரு. பிணியாளிகளை குணமாக்கினது. உஅ. ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் காட்டி, உக. பகைவரைச் சிநேகிக்க வேண்டிய விதத்தையும், சக. அந்நியாரை இவ்வாறு வீடு விழுந்துபோவதுபோலச் சோதனை காலத்தில் நாம் விழாமலிருக்க வசனத்தைக் கேட்பதோடே சதசிஷ்யைகளான மேற்படிதலும் கலந்திருக்கவேண்டும் என்பதையும் அவர்களுக்குமுன்பாகச் சீஷர்களுக்கும் போதித்தது.

(புளியாத அப்பங்களைச் சாப்பிடுகிற நாள்களில்) [4]இரண்டாம் நாளுக்குப் பின்வந்த முதலாம் ஓய்வுநாளிலே அவர் பயிர்வழியே நடந்து போகிறபொழுது, அவருடைய சீஷர் கதிர்களைக் கொய்து, கைகளினாலே கசக்கித் தின்றார்கள்.

உ அவர்களுடனே பரிசேயரில் சிலர், [5]ஓய்வுநாள்களில் செய்யத் தகாததை நீங்கள் செய்யவேண்டுவதென்ன என்றார்கள்.

ஊ அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: [6]தாவீதும் அவனோடு இருந்தவர்களும் பசியாயிருந்தபொழுது, அவன் தேவாலயத்தில் பிரவேசித்து,

ரு [7]ஆசாரியர்மாத்திரமேயன்றி மற்றொருவரும் புசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களை எடுத்துப் புசித்து, பின்பு தன்னோடு இருக்கிறவர்களுக்கும் கொடுத்தான் என்று நீங்கள் வாசிக்கவில்லையா என்று சொல்லி,

எ பின்பு மனிதனுடைய குமாரன் ஓய்வுநாளைக்குறித்தும் ஆண்டவராய் இருக்கிறார் என்று அவர்களுடனே சொன்னார்.

கூ ¶ [8]மற்றொரு ஓய்வுநாளிலே அவர் செபஆலயத்தில் பிரவேசித்து உபதேசித்தார்; அங்கே சும்பின வலதுகையையுடைய ஒரு மனிதன் இருந்தான்.

---

1 மத். க. உக. லூ.தீமோ. க.உசு.

2 மத். கூ. உச. மாற். உ. உஅ.

3 மத். கூ. உக,உள. மாற். உ. உக, உஉ.

4 மத். உஉ. க. மாற். உ. உக.

5 உ யோ. உஅ. உ.

6 உ சாமு. உக.க.

7 உ யோ.உச.அ.

8 மத். உஉ. கூ. மாற். க.க. லூக். உக.உச: உச.க. போன. க. கூ.

இ. பி. 6க.

1 மத். 12. உக.
2 மத். 0. க.
3 யோவா. க. 2உ.
4 யூதா. க.

எ அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம் காணும்படிக்கு ஓய்வுநாளிலும் குணமாக்குவாரா என்று எண்ணி, அவரை நோக்கிக் காத்திருந்தார்கள்.

அ அவர்களுடைய யோசனை அவர் அறிந்து, சூம்பினகையையுடையவனை நோக்கி, நீ எழுந்து நடுவே நில் என்றார்; அந்தப்படி அவன் எழுந்து நின்றான்.

5 மத். 7. உ0. மாற். உ. அ.

க அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் உங்களிடத்தில் ஒன்று கேட்கிறேன்; ஓய்வுநாள்களில் நன்மைசெய்கிறதோ தீமைசெய்கிறதோ, சீவனைக் காக்கிறதோ அழிக்கிறதோ, எது நியாயம் என்று சொல்லி,

ஏ அவர்கள் எல்லாரையும் சுற்றிப்பார்த்து அந்த மனிதனை நோக்கி, உன் கையை நீட்டு என்றார்; அவன் அப்படிச் செய்தான்; உடனே அவனுடைய கை மறுகையைப்போலச் சொஸ்தமாயிற்று.

6 மாற். இ. 20. லூக். அ. 5க.

ஐ பின்பு அவர்கள் மதியில்லாமையால் நிறையப்பட்டு, இந்த இயேசுவை என்ன செய்யலாம் என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

7 மத். 12. 15.

ஒ ¶ அன்றியும் [1]அந்நாள்களில் அவர் செபம்பண்ணும்படிக்கு மலைக்குப் போய், இராத்திரி முழுதும் பராபரனை நோக்கிச் செபம்பண்ணிக்கொண்டு,

8 மத். இ. 4: 16. க. மாற். உ. இ.

ஓ பின்பு உதயமாகிறபொழுது தம்முடைய சீஷரை வரவழைத்து, ஒ [2]அவர்களில் பேதுரு என்று தாம் பேரிட்ட [3]சீமோனையும், அவனுடைய சகோதரனாகிய அந்திரேயாவையும் யாக்கோபையும், யோவானையும், பிலிப்பையும், பர்த்தொலொமேயுவையும்,

ஙி மத்தேயுவையும், தோமாவையும், அல்பேயுவினுடைய குமாரனாகிய யாக்கோபையும், வைராக்கியன் என்னப்பட்ட சீமோனையும்,

9 சங். 0இ. 4: 0இ. 16. மத். இ. 4.

10 சங். 4க. 4. மத். இ. ச.

11 மத். இ. 16. க பே. உ. 16க: க. 15: ச. 15.

12 யோவா. 16. உ.

யக [4]யாக்கோபின் சகோதரனாகிய யூதாவையும், பின்பு தம்மைக் காட்டிக்கொடுத்த ஸ்காரியோத்தூராகிய யூதாவையும், இப்படிப் பன்னிரண்டுபேரையும் தெரிந்துகொண்டு அவர்களை அப்போஸ்தலர் என்று பேர்சொல்லி,

யஎ பின்பு அவர்களுடனேகூட இறங்கி, சமனான ஒரு இடத்திலே நின்றார்; அங்கே அவருடைய சீஷரில் அநேகம்பேரும் [5]அவருடைய உபதேசத்தைக் கேட்டு, தங்கள் வியாதிகளில் நின்று குணமாக்கப்படும்படிக்கு யூதேயா நாட்டின் திசைகள் யாவற்றிலும், எருசலேம் நகரத்திலும், தீருசீதோன் பட்டணங்களுள்ள கடலோரத்திலுமிருந்து அநேகசனங்களும் வந்திருந்தார்கள்.

யஅ அசுத்தமான ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் கூடிவந்திருந்து ஆரோக்கியம் அடைந்தார்கள்.

யக [6]வல்லமை அவரிலிருந்து புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே சனங்கள் எல்லாரும் [7]அவரைத் தொடப் பார்த்தார்கள்.

உய ¶ அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்துச் சொன்னதாவது: [8]தரித்திரராகிய நீங்கள் பராபரனுடைய இராச்சியத்தை உடையவர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்.

உக [9]இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் (இனி) திருப்தி அடைவீர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்; இப்பொழுது [10]அழுகிற நீங்கள் (இனி) நகைப்பீர்கள், ஆகையால் நீங்கள் பாக்கியவான்கள்.

உஉ [11]மனிதனுடைய குமாரன் நிமித்தமாகச் சனங்கள் உங்களைப் பகைத்து, உங்களை விலக்கி [12]நிந்தைப்படுத்தி, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிப்போ

Digitized by Google

மும்பொழுது, நீங்கள் பாக்கியராய் இருப்பீர்கள்.

உஊ பரமண்டலத்திலே உங்கள் பலன் மிகுதியாய் இருப்பதால், [1]அக்காலத்திலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் [2]அப்படியே செய்தார்கள்.

உச [3]ஐசுவரியவான்களாகிய நீங்கள் [4]உங்கள் நன்மைகளை அடைந்து தீர்ந்தபடியால், ஐயோ! [5]உங்களுக்கு வேதனை வரும்.

உடி [6]திருத்தியுள்ளவர்களாகிய நீங்கள் பசியை அடைவீர்கள், ஆகையால் ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்; [7]இப்பொழுது நகைக்கிற நீங்கள் (இனி) துக்கப்படுவீர்கள், ஆகையால் ஐயோ! உங்களுக்கு வேதனை வரும்.

உசு [8]எல்லா மனிதர்களும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்பொழுது, ஐயோ! உங்களுக்கு வேதனை வரும், அவர்களுடைய பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள்.

உஎ ¶ [9]அன்றியும் (எனக்குச்) செவிகொடுக்கிற உங்களுக்கு நான் கட்டளையிடுகிறதாவது: உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து, உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்து,

உஅ [10]உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து, உங்களை வருத்தப்படுத்துகிறவர்களுக்காகச் செபம்பண்ணுங்கள்.

உக [11]உன் கன்னத்தில் அறைகிறவனுக்கு மறு கன்னத்தையும் கொடு; [12]உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளுகிறவனுக்கு உன் அங்கியையும் எடுத்துக்கொள்ளத் தடைபண்ணாதிருப்பாயாக.

கூல [13]உன்னை வேண்டிக்கொள்ளுகிற யாவனுக்கும் கொடுப்பாயாக; உன்னுடையதை ஒருவன் எடுத்துக்கொண்டால், அவனிடத்தில் அதைத் திரும்பக் கேளாதிருப்பாயாக.

கூக [14]மனங்கள் உங்களுக்குச் செய்யும்படி நீங்கள் விரும்புகிறது எப்படியோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யக்கடவீர்கள்.

கூஉ [15]உங்களைச் சிநேகிக்கிறவர்களை (மாத்திரம்) நீங்கள் சிநேகித்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே.

கூஊ உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கு (மாத்திரம்) நீங்கள் நன்மை செய்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்?

கூச [16]பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே, திரும்பக் கொடுப்பார்கள் என்று நீங்கள் நம்பி அப்படிச் செய்பவர்களுக்கு (மாத்திரம்) கடன் கொடுத்தால், உங்களுக்கு என்ன பலன் வரும்? பாவிகளும் சரியாய்த் திரும்ப அடைத்துகொள்ளும்படியாய், (மற்றப்) பாவிகளுக்குக் கடன்கொடுக்கிறார்களே.

கூடு [17]ஆகையால் உங்கள் சத்துருக்களைச் சிநேகித்து நன்மை செய்து, கைம்மாறு எண்ணாமல் [18]கடன்கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாய் இருக்கும்; அல்லாமலும் கன்றி அறியாதவர்கள்மேலும் பொல்லாதவர்கள்மேலும் தயவாயிருக்கிற [19]உன்னதமானவருக்குப் பிள்ளைகளாய் இருப்பீர்கள்.

கூசு [20]ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராய் இருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாய் இருங்கள்.

கூஎ [21]மற்றவர்களைக்குற்றவாளிகளென்று எண்ணிக்கொள்ளாதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று எண்ணிக்கொள்ளப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாக்கும்

இ. பி. ஊக.

1 மத். இ. உஉ. அப். இ. சக. கொலோ. க. உச. பாக்.க. உ.
2 அப். எ. இக.
3 லூக். உஉ. உக.
4 ஆமோ. க. க. பாக். இ. க.
5 மத். க. உ, இ, உசு. லூக். உக. உஇ.
6 எசா. கஇ. உக.
7 யாக். உச. உக.
8 பேரா. உஇ. உக. க பேர. ச. இ.
9 உ மோ. உக. ச. யாக். உஇ. உக.மத்.இ.சஇ. கஇ.வச.உரோ. உஉ. உஅ.
10 லூக்.உக.கச. அப். எ. கஅ.
11 மத். இ. கக.
12 க கொரி.க.எ.
13 இ மோ.உஇ.எ, அ,உ. யாக்.உக. உக. மத். இ. சஉ.
14 மத். எ. உஉ.
15 மத். இ. சக.
16 மத்.இ.சஉ.
17 உச. வச.
18 சங். கச. உக. கஅ. வச.
19 மத். இ.சஇ.
20 மத். இ. சஅ.
21 மத். எ. க.

Digitized by Google

படி நீராதிருங்கள்; அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலையாக்கப்படுவீர்கள்.

௩௮ [1]கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்துவழும்படி நன்றாய் அளந்து, உங்கள் [2]மடியிலே போடுவார்கள்; [3]நீங்கள் அளக்கிற அளவு எதுவோ, அதினாலே உங்களுக்குத் திரும்ப அளக்கப்படுமே என்றார்.

௩௯ ¶ பின்னும் அவர் உவமைபாய் அவர்களுடனே சொன்னதாவது: [4]குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமா? இருவரும் பள்ளத்தில் விழுவார்கள் அல்லவா?

௪௰ [5]ஷேஷன் தன் போதகருக்கு மேற்பட்டவன் அல்ல; நிறைவாய்ச் சற்றுக்கொண்டவனே தன் போதகனைப்போல இருப்பான்.*

௪௧ ¶ [6]நீ உன்னுடைய கண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரனுடைய கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன?

௪௨ அல்லது நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணுமல் இருக்க நீ உன் சகோதரனை நோக்கி, சகோதரனே நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடுவேன் இடம்கொடு என்று எப்படிச்சொல்லலாம்? வஞ்சகனே, [7]முன்பு நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பின்பு உன் சகோதரனுடைய கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடும் வகையைத் தெளிவாக அறிவாய்.

௪௩ [8]கெட்டகனி கொடுக்கிற மரம் நல்லமரம் அல்ல, நல்லகனி கொடுக்கிற மரம் கெட்ட மரம் அல்ல.

௪௪ [9]முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை; நெரிஞ்சிச்செடியிலே திராட்சத்தைப் † பறிக்கிறதுமில்லை, ஆகையால் எந்த மரமும் அதினதினுடைய கனியால் அறியப்படும்.

௪௫ [10]நல்லமனிதன் தன் இருதயத்திலுள்ள நற்பொக்கிஷத்தில் நலமானதையே எடுத்துக் காண்பிப்பான்; பொல்லாத மனிதனும் தன் இருதயத்திலுள்ள பொல்லாத பொக்கிஷத்தில் பொல்லாததையே எடுத்துக் காண்பிப்பான், [11]இருதயத்தின் பரிபூரணத்திலல்லவோ அவனுடைய வாய் பேசுமே.

௪௬ ¶ [12]அன்றியும் நான் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்யாமலிருக்க, என்னை ஆண்டவரே, ஆண்டவரே என்று என்னத்துக்கு அழைக்கிறீர்கள்?

௪௭ [13]என்னிடத்தில் வந்து என் வசனங்களைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவனை உங்களுக்குக் காண்பிப்பேன்.

௪௮ அவன் எவனுக்கு ஒப்பாய் இருக்கிறான் என்றால், ஆழமாய்த் தோண்டிப் பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு வீடுகட்டின மனிதனுக்கே ஒப்பாய் இருக்கிறான்; பெருவெள்ளம் உண்டான பொழுது நீரோட்டம் அந்த வீட்டில் மோதியும், அது கல்மலையின் மேல் அஸ்திபாரம் போட்டிருந்தபடியால் அதை அசைக்கக்கூடாமல் போயிற்று.

௪௯ (என் வசனத்தைக்) கேட்டும் அதின்படி செய்யாதவன், அஸ்திபாரமில்லாமல் பூமியின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாய் இருக்கிறான்? வெள்ளம் அதில் மோதினவுடனே அது விழுந்து மிகவும் இடிந்துபோயிற்று என்றார்.

௭. அதிகாரம்.

௧. மிக்க ஒரு அஞ்ஞானியாயிருந்த சேனைத்தானிடத்தில் பூதரின் விசுவாசத்திலும், அதிக விசுவாசத்தைக் கண்டது. ௬. அவனுடைய வேலைக்காரனைக் குணமாக்கினது. ௧௧ விதவையின் மகனை உயிரோடு எழுப்பினது. ௨௨. யோவான் அனுப்பின தூதர்களுக்குத் தம்முடைய அற்புதங்களை ஒரு குறிப்பாகச் சாட்டி, உத்தரவு

Digitized by Google

கி. பி. ௬௬.

1 மாற். ௬. ௩௮.
2 சங். ௭௯. ௧௨.
3 மத். ௭. ௨.
மாற். ௪. ௨௪.
பார். உ. ௩௮.
4 மத். ௧௫. ௧௪.
5 மத். ௰. ௨௪.
Chap. ௬.
௪௦: ௧௩. ௨௰.
* அல்லது தன் போதகரைப் போல நிறை வாயிருப்பான்.
6 மத். ௭. ௩.
7 மாற். ௧௨. ௧௫.
8 மத். ௭.௧௭,௧௮.
9 மத். ௧௨. ௩௩.
† கிரேக்கில் ஒரு திராட்சக்குலை.
10 மத். ௧௨. ௩௫.
11 மத். ௧௨. ௩௪.
12 மல்கி. ௧. ௬.
மத். ௭. ௨௧: ௨௫. ௧௬. லூக். ௬. ௪௬.
13 மத். ௭. ௨௪.

அருளிச்செய்தது. உச. யோவானைக்குறித்துத் தம்முடைய தாற்பரியத்தைச் சனங்களுக்கு அறிவித்தது. கஅ. யோவானுடைய செய்கைனிலுலாவது, தம்முடைய செய்கைனிலுலாவது குணப்படாத பூதங்களைக் கடிந்துகொண்டு, கக. மகுதலேனாளிய மரியாளுக்குச்செய்த கிருபையினால் விசுவாசித்துக் குணப்படுகிற பாவிகளுக்குப் பாவங்களை மன்னிக்கிற பாவிகளுடைய சிநேகிதன் என்று தம்மைத் திருஷ்டாந்தப்படுத்தினது.

சனங்கள் கேட்கத்தக்கதாக அவர் தம்முடைய வாக்கியங்கள் யாவையும் சொல்லி முடித்தபின்பு [1]கப்பர்நாகூம் ஊருக்குப் போனார்.

உ அங்கே நூறு போர்ச்சேவகருக்குத் தலைவனுகிய ஒருவனுக்குப் பிரியமான வேலைக்காரன் வியாதியினுலே மரணத்திற்கு ஏதுவாய் இருந்தான்.

ரு அந்தத் தலைவன் இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டபொழுது, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்கவேண்டும் என்று அவனை வேண்டிக்கொள்ளும்படிக்கு, யூதருடைய மூப்பரை அவரிடத்தில் அனுப்பினுன்.

ச அவர்கள் இயேசுவினிடத்தில் போய், அவனை மிகவும் வேண்டிக்கொண்டு பின்பு சொன்னது: அவன் நம்முடைய தேசத்தாரில் அன்பாயிருந்து, எங்களுக்காக ஒரு செபஆலயத்தையும் கட்டினுன்.

டு ஆகையால் உம்முடைய தயவுக்கு அவன் பாத்திரனுயிருக்கிறுன் என்றார்கள்.

க ¶ இயேசுவானவர் அவர்களுடனே கூடச் சென்றார்; வீட்டுக்குச் சமீபமாய்ப் போனபொழுது அந்தத் தலைவன் சிநேகிதரை நோக்கி, (நீங்கள் அவரிடத்தில் போய்) ஆண்டவரே, நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல.

எ அதினுலே நான்தானே உம்மிடத்தில் வருகிறதற்கும் என்னை அபாத்திரன் என்று எண்ணினேன்; ஆகையால் நீர் வருத்தப்படாதிரும்.

1 மத். அ. ஙெ.

அ அல்லாமலும் நான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவனுயிருந்தும், எனக்குக் கீழிருக்கிற சேவகரில் ஒருவனை* போவென்னப் போகிறுன்; மற்றொருவனை வா வென்ன வருகிறுன்; என் வேலைக்காரனை நோக்கி, இதைச் செய்யென்னச் செய்கிறுன்; ஆகையால் நீர் ஒருவார்த்தைமாத்திரம் சொன்னுல், என் வேலைக்காரன் சொஸ்தம் அடைவான் என்று சொல்லுங்கள் என்று அனுப்பினுன்.

க இயேசுவானவர் அதைக் கேட்டு அவனைக்குறித்து ஆச்சரியப்பட்டு திரும்பிக்கொண்டு, தமக்குப் பின்செல்லுகிற சனங்களை நோக்கி, இப்படிப்பட்ட விசுவாசத்தை நான் இஸ்ரவேலருக்குள்ளும் காணவில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ய அனுப்பப்பட்டவர்கள் திரும்ப வீட்டிற்கு வருகிறபொழுது, வியாதியாயிருந்த வேலைக்காரன் ஆரோக்கியம் அடைந்திருக்கிறதைக் கண்டார்கள்.

யக மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார்; அவருடைய சீஷர் அநேகரும் மற்ற அநேக சனங்களும் அவருடனே கூடப்போனார்கள்.

யஉ அவர் ஊரின் வாசலுக்குச் சமீபமானபொழுது, ஒரு கைப் பெண்ணினுடைய ஒரேகுமாரன் இறந்துபோய் வெளியே கொண்டுவரப்பட்டான்; ஊராரில் அநேக சனங்களும் அவளுடனேகூட வந்தார்கள்.

யக கர்த்தர் அவளைப்பார்த்து அவள்மேல் உருக்கமாய் இரங்கி, நீ அழவேண்டாம் என்று சொல்லிக்கிட்டப்போகையில் பாடையைச் சுமக்கிறவர்கள் நின்றார்கள்.

யச உடனே அவர் அதைத் தொட்டு, வாலிபனே, [2]எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

* அல்லது இச்சை மனிதனை.

† அல்லது சவப் பெட்டியை.

2 லூக். அ. இச. பேரா. ரு. கூ. சக. அப். கூ. சஅ. உரோ. ச. மெ.

Digitized by Google

வி. பி. ஈக.

ரூ அப்பொழுது மரித்தவன் எழுந்து உனக்காக்து பேசத்தொடங்கினான்; அவனை அவர் தாய்க்கு ஒப்புக்கொடுத்தார்.

ரூ [1]எல்லாரும் பயம் அடைந்து, [2]மகாதீர்க்கதரிசி நமக்குள்ளேதோன்றியிருக்கிறார் என்றும், [3]பராபரன் தம்முடைய சனங்களைச் சந்தித்துப் பார்த்தார் என்றும் சொல்லிப் பராபரனைப் புகழ்ந்தார்கள்.

ரூ அல்லாமலும் இந்தச் சங்கதி யூதேயாதேசமுழுவதிலும் சுற்றிலுமிருக்கிற தேசங்கள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

ரூ ¶ இவை எல்லாவற்றையும் யோவானுடைய சீஷர் அவனுக்கு அறிவித்தார்கள்.

ரூ அப்பொழுது யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, நீங்கள் இயேசுவினிடத்தில் போய், வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேளுங்கள் என்று சொல்லி அனுப்பினான்.

ரூ அந்தப்படி அவர்கள் அவரிடத்தில் போய், வருவார் என்று சொல்லப்பட்டவர் நீரா, அல்லது வேறொருவர் வரக்காத்திருக்கவேண்டுமோ என்று கேட்கும்படிக்கு யோவான்ஸ்நானன் எங்களை உம்மிடத்திற்கு அனுப்பினான் என்றார்கள்.

ரூ அவ்வேளையிலே அவர் வியாதிகளையும் வேதனைகளையும் பொல்லாத ஆவிகளையுமுடைய அநேகம்பேரைக் குணமாக்கி, குருடர் அநேகருக்குப் பார்வையை அருளினார்.

ரூ அப்பொழுது [5]இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்னது: [6]குருடர் பார்வையை அடைகிறார்கள்; சப்பாணிகள் நடக்கிறார்கள்; குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள்;செவிடர் கேட்கிறார்கள்; மரித்தோர் எழுப்பப்படுகிறார்கள்; [7]தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு வருகின்றது; இப்படி நீங்கள் பார்க்கிறவைகளையும் கேட்கிறவைகளையும்யோவானுக்குப் போய் அறிவியுங்கள்.

ரூ அல்லாமலும் என்னாலே இலச்சையடையாமல் இருக்கிறவன் பாக்கியவான் என்றார்.

ரூ ¶ [8]யோவானுடைய தூதர்கள் போனபின்பு, அவர் யோவானைக்குறித்துச் சனங்களுடனே சொன்னது: காற்றினால் அசைக்கப்படுகிற நாணலையா நோக்கிப் பார்க்கும்படிக்கு வனாந்தரத்திற்குப் போனீர்கள்?

ரூ அல்லது மெல்லிய வஸ்திரங்களைத் தரித்திருக்கிற மனிதனையா பார்க்கும்படிக்குப் புறப்பட்டீர்கள்? மகிமையான உடுப்போடும் செல்வத்தோடும் இருக்கிறவர்கள் அரசருடைய அரமனைகளில் இருக்கிறார்களே.

ரூ அல்லது ஒரு தீர்க்கதரிசியையா பார்க்கும்படிக்குப் புறப்பட்டீர்கள்? ஒரு தீர்க்கதரிசியிலும் அதிகமானவனையே (பார்த்தீர்கனென்று) உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ரூ [9]இதோ நான் என்னுடைய தூதனை உமக்குமுன்பாக அனுப்புகிறேன்; அவன் உமக்குமுன் நடந்து, உமக்காக மார்க்கத்தைதிருத்துவான் என்று ஒருவனைக் குறித்து எழுதியிருக்கின்றதே, அவன் இவன்தான்.

ரூ ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஸ்திரிகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனும் இல்லை; ஆனாலும் பராபரனுடைய இராச்சியத்திலே சிறியவனானவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறான்.

ரூ ¶ அன்றியும் (யோவானுடைய உபதேசத்தைக்) கேட்ட சகல சனங்களும் ஆயக்காரரும் அவனாலே [10]ஞானஸ்நானத்தைப்

1 லூக். க. கஇ.
2 லூக். உச. மக. போல். ச. மக: க. மே: க. மை.
3 லூக். க. கஅ.
4 மத். மக. உ.
5 மத். மக. இ.
6 சங். கஇ. இ.
7 லூக். ச. ஏஅ.
8 மத். மக. எ.
9 மல்கி. க. க.
10 மத். க. க. லூக். க. ஏஉ.

பெற்று, பராபரன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள்.

கூய பரிசேயரும் நியாயசாஸ்திரிகளுமானவர்கள்மாத்திரம் அவரூலே ஞானஸ்நானத்தைப் பெறாமல், தங்களைக்குறித்துப்* பராபரனுடைய [1]ஆலோசனையைத் தள்ளினார்கள்.†

கூக ¶ அப்படியிருக்க, [2]இந்தத் தலைமுறையின் மனிதரை நான் யாருக்கு நிகர் சொல்லுவேன்? இவர்கள் யாருக்கு ஒப்பாயிருக்கிறார்கள்?

கூஉ சந்தையில் உளுக்காந்து ஒருவரை ஒருவர் நோக்கி, உங்களுக்காக ஊதினேம் நீங்கள் கூத்தாடவில்லை; உங்களுக்காகப் புலம்பினேம்நீங்கள் அழவில்லை என்று எதிர் கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

கூஙூ [3]எப்படியெனில், யோவான் ஸ்நானன் வந்து, அப்பம் புசியாமலும் திராட்சஇரசம் குடியாமலும் இருந்தான்; அதினாலே அவன் பேய்கொண்டவன் என்கிறீர்கள்.

கூச மனிதனுடைய குமாரன் வந்து போசனபானம்பண்ணுகிறவராய்; அதினாலே இதோ, போசனப்பிரியன் மதுபானப்பிரியன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்கிறீர்கள்.

கூஞ [4]ஆனாலும் ஞானமானது தன் பிள்ளைகள் எல்லாராலும் நீதியாக்கப்படுகின்றது என்றார்.

கூட ¶ [5]பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போசனம்பண்ணும்படிக்கு, அவனை வேண்டிக்கொண்டான்; அந்தப்படி அவர் பரிசேயனுடைய வீட்டுக்குப் போய்ப் பந்தியிருந்தார்.

கூன ¶ அப்பொழுது பட்டணத்திலுள்ள பாவியாகிய ஒரு ஸ்திரி அவர் பரிசேயனுடைய வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதயிலம் கொண்டுவந்து,

இ. பி: கூக.

* அல்லது தங்களுக்குள்ளே.

1 அப். உபா. உள.

† அல்லது அழித்தார்கள்.

2 மத். கூச.ஙக.

3 மத். க. சா. மற். க. க. லூக். க. ஙஞ.

4 மத். ஙக. ஙக.

5 மத். உக. க. மற். ங. க. போவா. ங. உ.

6 லூக். ஙஞ. உ.

‡ மத். ஙஅ. உஅ.

கூஅ அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களை கண்ணீரினாலே கழுவத்தொடங்கி, தன் தலையின் மயிராலே துடைத்து, அவருடைய பாதங்களை முழுதும் செய்து, பரிமளதயிலத்தைப் பூசினாள்.

கூக அவரை அழைத்த பரிசேயன் அதைக்கண்டபொழுது, [6]இவர் தீர்க்கதரிசியானால் தம்மைத் தொடுகிற ஸ்திரி இன்னாள் என்றும், இப்படிப்பட்டவள் என்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டான்.

கூசு ¶ இயேசுவானவர் அவனை நோக்கி, சீமோனே, உனக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன் என்றார்; போதகரே, சொல்லும் என்றான்.

கூச (இயேசுவானவர் சொன்னது:)கடன்காரன் ஒருவனுக்கு கடனாளிகள் இரண்டுபேர் இருந்தார்கள்; அவர்களில் ஒருவன் ஐந்நூறு ‡ வெள்ளிக்காசும், மற்றொருவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியிருந்தது.

கூடு அவர்கள் கொடுக்கிறதற்குத் திராணி இல்லாதவர்களானபொழுது, இருவருக்கும் கடனை மன்னித்தான்; ஆகையால் அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான் அதைச் சொல் என்றார்.

கூகூ சீமோன் மாறுத்தரமாகச்சொன்னது: அதிகமான மன்னிப்பைப் பெற்றவன் எவனோ, அவனே என்று நினைக்கிறேன் என்றான்; அப்பொழுது அவர் நிதானமாய்த் தீர்த்தாய் என்று சொல்லி,

கூசு பின்பு ஸ்திரியினிடத்திலே திரும்பிச் சீமோனுடனே சொன்னது: இந்த ஸ்திரியைப் பார்க்கிறாயா? நான் உனது வீட்டில் வந்தபொழுது, நீ என் கால்களுக்காகத் தண்ணீர்தரவில்லை; இவள்

Digitized by Google

என்னிரிலுலே என் கால்களை நனைத்து, தன் தலையின் மயிராலே துடைத்தாள்.

சஜ நீ என்னை முத்தம்செய்யவில்லை; இவள் இங்கே பிரவேசித்த நாழுதல் என் பாதங்களை ஓயாமல் முத்தம்செய்தாள்.

சக [1]நீ என் தலையில் என்னெணையப் பூசவில்லை; இவள் பரிமளதயிலத்தை என் பாதங்களில் பூசினாள்.

சவ [2]ஆனதால் இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டபடியினாலே, மிகவும் அன்பாயிருக்கிறாள் என்று உனக்குச் சொல்லுகிறேன்; அல்லாமலும் கொஞ்சம் மன்னிக்கப்பெற்றவன் எவனோ, அவன் கொஞ்சம் அன்பாயிருக்கிறான் என்று சொல்லி,

சஅ [3]பின்பு அவளை நோக்கி, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்றார்.

சக அப்பொழுது பந்தியில்இருந்தவர்கள், [4]பாவங்களை மன்னிக்கிற இவன் யாவன் என்று சொல்லிக்கொண்டார்கள்.

இ [5]அவர் (பின்னும்) ஸ்திரீயை நோக்கி, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

அ. அதிகாரம்.

அ. சிரியன் நிர்வாகத்துக்குத் தக்கன ஆஸ்திகளாலே உதவிசெய்தது. ச. நிறைந்த அப்போஸ்தலர்களோடே பலவிடங்களிலும் பிரசங்கம்பண்ணின பிசு விதைக்கிறவன் உவமையையும், ஙக. விளக்க உவமையையும் எடுத்துக்காட்டி, உக. தம்முடைய தாயும், சகோதரரும் இன்னுரென்ற அறிந்து, உஉ. சற்றை அதட்டி, உசு. ஒருவனைப் பிடித்திருந்த பசாசுகளைப் பன்றிகளின் கூட்டத்திலே தாற்றினது. உச. அவர் சுரரோல் விலக்கப்பட்டது. சஙூ. பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீயை குணமாக்கினது. சசு. யாவீரு என்பவனுடைய மகளை உயிரோடே எழுப்பினது.

பின்பு அவர் பிரயாணமாய்ப் பட்டணங்கள்தோறும் ஊர்கள்தோறும் திரிந்து, பராபரனுடைய இராச்யெத்தைச் சுவிசேஷமாய்ப் பிரசங்கம்பண்ணினார்.

உ [6]பன்னிருவரும், பொல்லாத ஆவிகளில் நின்றும் வியாதிகளில் நின்றும் குணமாக்கப்பட்ட சில ஸ்திரீகளும் அவருடனே கூடப்போனார்கள்.

கூ [7]ஏழு பசாசுகளில் நின்றும் நீக்கப்பட்ட மகதலேனென்னப்பட்ட மரியாளும், ஏரோதேயின் காரியக்காரனாகிய கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம்செய்துகொண்டுவருகிற மற்ற அநேக ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.

ச ¶ [8]பட்டணங்களிலிருந்து மிகுந்த சனங்கள் வந்து அவரிடத்தில் கூடியிருக்கிறபொழுது, அவர் உவமையாய்ச் சொன்னது:

இ விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட்டான்; அவன் விதைக்கையில், சில விதை வழியருகே விழுந்து பின்பு மிதிக்கப்பட்டது; ஆகாசத்தின் பறவைகளும் வந்து அதைப் பட்சித்தன.

சு சில விதை கற்பாறையின் மேல் விழுந்தது; அது முளைத்த பின் ஈரமில்லாததினாலே உலர்ந்துபோயிற்று.

எ சில விதை முட்செடிகளுள்ள இடத்திலே விழுந்தது, முட்செடிகள் கூட வளர்ந்து, அதை நெருக்கிப்போட்டன.

அ சில விதை நல்ல நிலத்தில் விழுந்து முளைத்து நூறுமடங்காய்ப் பலன் தந்ததென்று சொல்லி, பின்பு கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று கூப்பிட்டார்.

கூ ¶ [9]அப்பொழுது அவருடைய சீஷர் அவனை நோக்கி, இந்த உவமையின் கருத்து என்னவென்று கேட்டார்கள்.

ல அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு, நீங்கள் அருள் பெற்றவர்கள்; மற்றவர்கள் [10]கண்டும் காணுமலும், கேட்டும்

இ. பி. கூ

1 சம். உக. இ.

2 உ நேமே. க. மத்.

3 மத். கூ. உ. மற். உ. இ.

4 மத். கூ. க. மற். உ. எ.

5 மத். க. உஉ. மற். இ. லூ: ச. லூ. லூக். அ. சஅ: ம்அ. சூ.

6 மத். உள. ஙஇ, ஙக.

7 மாற். ம்க. ம.

8 மத். ஙக. டூ. மாற். ச. க.

9 மத். ஙக. ம். மாற். ச. ம.

10 ஏசா. க. கூ. மத். ச. மூ.

Digitized by Google

உணராமலும் இருக்கத்தக்கதாக (அவைகள்) உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லப்படுகின்றன.

யக [1]அந்த உவமையின் கருத்தாவது: விதையானது பராபரனுடைய வசனமே.

யஉ (விதை விழுந்த) வழியானது, (அந்த வசனத்தைக்) கேட்கிறபொழுது விசுவாசியாமலும் இரட்சிக்கப்படாமலும் இருக்கும்படிக்குத் தங்கள் இருதயத்திலிருந்து அவ்வசனம் பசாசினாலே எடுக்கப்படுகிறவர்களேயாம்.

யங (விதை விழுந்த) கற்பாறையானது, (அவ்வசனத்தைக்) கேட்கிறபொழுது, சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு பின்பு அது தங்களுக்குள்ளே வேர்கொள்ளும்படிசெய்யாமல் சிலகாலம் (மாத்திரம்) விசுவாசித்துச் சோதனைகாலத்திலே வழுவிப்போகிறவர்களேயாம்.

யச (விதை விழுந்த) முட்செடிகளுள்ள நிலமானது தேவவசனத்தைக் கேட்கிறவர்களாயிருந்தும், நிறைந்த பலனைக் கொடாதபடிக்குக் கவலைகளும் ஐசுவரியமும் சீவனத்தின் செல்வமும் உள்ளவர்களாய் நடந்து, அவைகளினாலே அதை நெருக்கிப்போடுகிறவர்களேயாம்.

யடு (விதை விழுந்த) நல்லநிலமானது, அவ்வசனத்தைக் கேட்டு, நன்றும் உண்மையுமான இருதயத்திலே அதைக் காத்துக்கொண்டு, இடைவிடாமல் பலன்கொடுக்கிறவர்களேயாம்.

யசு ¶ [2]ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, அதை ஒரு பாத்திரத்தினாலே மூடவும்கட்டிலின்கீழே வைக்கவும் மாட்டான்; உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம்காணும்படிக்கு அதைத் தண்டின்மேலே வைப்பான்.

யள [3]அந்தப்படி வெளியரங்கமாகாத அந்தரங்கமும் இல்லை; அறியப்பட்டு வெளிக்கு வராத மறைபொருளும் இல்லை.

யஅ ஆதலால் நீங்கள் கேட்கிற விதத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; என்னத்தினாலெனில், [4]உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவன் தனக்கு உண்டென்று நினைக்கிற* பொருளும் அவனிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்படும் என்றார்.

யக ¶ [5]அப்பொழுது அவருடைய தாயும் சகோதரரும் அவரிடத்திற்குப்போகையில், சனக்கூட்டத்தினிமித்தம் அவர்கள் அவரைச் சேருகிறதற்கு இடமில்லை.

யஉ அப்பொழுது சிலர் அவரை நோக்கி, உம்முடைய தாயும் சகோதரரும் உம்மைப்பார்க்கவேண்டும் என்று வெளியே நிற்கிறார்கள் என்று அறிவித்தார்கள்.

யஎ அவர்களுக்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: பராபரனுடைய வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களே, என் தாயுமாய் என் சகோதரருமாய் இருக்கிறார்கள் என்றார்.

யஏ ¶ [6]ஒருநாளிலே அவர் தம்முடைய சீஷரோடுங்கூட ஒரு படவில் ஏறி அவர்களை நோக்கி, கடலின் அக்கரைக்குப் போகக்கடவோம் என்றார்; அந்தப்படி கரையைவிட்டுப் போனார்கள்.

யஐ அவர்கள் படவை நடத்திக்கையில், அவர் நித்திரைபண்ணினார்; அப்பொழுது படவு சலத்தினாலே நிரப்பப்படவும், அவர்களுக்கு மோசம் வரவும்தக்கதாகக் கடலில் சுழல்காற்று உண்டாயிற்று.

யசு உடனே அவர்கள் சேர்ந்து, ஆண்டவரே, ஆண்டவரே, நாம் கெட்டுப்போகிறோமே என்று (கூப்பிட்டு) அவரை எழுப்பினார்கள்; அப்பொழுது அவர் எழுந்து, காற்றையும் சலத்தின் உக்கிரத்தையும் அதட்டினார்; உடனே

கி. பி. கூஉ.

1 மத். உக. உஅ. மாற். ச. மச.
2 மத். இ. மஇ. மாற். ச. உச. லூக். உக. கக.
3 மத். ம. உசு. லூக். மஉ. உ.
4 மத். உக. மஉ: உஇ. உசு. லூக். மசு. உக.
* அல்லது காணப்படுகிற.
5 மத். மஉ. சக. மாற். க. கக.
6 மத். அ. கூ. மாற். ச. கஇ.

Digitized by Google

அவனைன் றின்றுபோக அமைதல் உண்டாயிற்று.

உடு பின்பு அவர் அவர்களை நோக்கி, உங்கள் விசுவாசம் எங்கே என்றார்; அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு, இவர் எப்படிப்பட்டவரோ, காற்றுகளுக்கும் சலத்திற்கும் கட்டளை இடுகிறாரே, அவைகளும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே என்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

உசு ¶ [1]பின்பு கலிலேயா நாட்டுக்கு எதிரான கதரேனர் தேசத்திலே சேர்ந்தார்கள்.

உஎ அவர் அக்கரையில் இறங்கினபொழுது, அநேக நாளாய்ப் பசாசுகள் பிடித்தவனுமாய், வஸ்திரம்தரியாதவனுமாய், வீட்டிலே தங்காமல் பிரேதக் கல்லறைகளிலே தங்கினவனுமாயிருந்த அப்பட்டணத்து மனிதன் ஒருவன் அவருக்கு எதிராக வந்தான்; அநேகந்தரம் அந்த அசுத்த ஆவி அவனை அலக்கழித்துவந்தது.

உஅ அல்லாமலும் அவன் சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டப்பட்டுக் காவல்பண்ணப்பட்டிருந்தும், அவன் விலங்குகளைத் தறித்துப்போட்டு, பசாசினால் வனாந்தரங்களுக்குத் துரத்தப்பட்டான்; ஆதலால் இயேசுவானவர் அந்த ஆவி அவனைவிட்டுப் போகும்படிக்குக் கட்டளையிட்டார்.

உக ஆனபடியினாலே அவன் இயேசுவானவரைக் கண்டபொழுது, கூக்குரலிட்டு அவருக்கு முன்பாக விழுந்து, இயேசுவே, உன்னதமான பராபரனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

உ அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, உன் பேர் என்னவென்று கேட்டார், அதற்கு அவன் இலேகியோன்* என்று சொன்னான்; அநேகம் பசாசுகள் அவனுக்குள் புகுந்தபடியால் அந்தப்பேர் அவனுக்கு உண்டாயிற்று.

ஈ. பி. கூஉ.

1 மத். அ. உஅ. மற். இ. க.

* இலேகியோன் என்பதற்கு ஏறக்குறைய ஆலாபிரம்பேரென்ற அருத்தமாம்.

2 வெளி. உஅ.க.

ஊ அல்லாமலும் [2]தங்களைப் பாதாளத்திற்குப் போகும்படி கட்டளையிடாதபடிக்கு, அவைகள் அவனை வேண்டிக்கொண்டன.

ஊஉ ¶ அப்பொழுது அவ்விடத்திலே அநேகம் பன்றிகள் கூட்டமாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தன; அவைகள் அந்தப் பன்றிகளுக்குள் பிரவேசிக்கும்படி, உத்தரவு கொடுக்கவேண்டும் என்று அவனை வேண்டிக்கொண்டன; அப்படியே அவைகளுக்கு உத்தரவு கொடுத்தார்.

ஊஊ உடனே பசாசுகள் அந்த மனிதனைவிட்டு நீங்கிப் பன்றிகளுக்குள் புகுந்தன; அப்பொழுது அந்தப் பன்றிக்கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமிழ்ந்துபோயிற்று.

ஊஅ அவைகளை மேய்த்தவர்கள் அதைக் கண்டு ஓடிப்போய், பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள்.

ஊசு அப்படி நடந்ததைச் சனங்கள் பார்க்கும்படிக்குப் புறப்பட்டு இயேசுவினிடத்தில் போய், பசாசுகள் விட்டுப்போன மனிதன் இயேசுவினுடைய பாதங்கள் அருகே வஸ்திரம் தரித்தவனாய் உட்காந்து, புத்தி அடைந்திருக்கிறதைக் கண்டு, பயப்பட்டார்கள்.

ஊஎ பசாசுகள் பிடித்திருந்தவன் இரட்சிக்கப்பட்ட வகையைக் கண்டவர்களும் அதை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

3 மத். அ. உச.

ஊஏ ¶ [3]அப்பொழுது கதரேனருடைய சுற்றுத் தேசத்தின் திரளானசனங்கள் எல்லாரும் மிகுந்த பயம் அடைந்தவர்களானபடியினாலே, [4]தங்களை விட்டுப்போகும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி அவர்படவில் ஏறித் திரும்பினார்.

4 அப். உக. கூ.

Digitized by Google

ரூஅ [1]பசாசுகள் விட்டுப்போன மனிதன் அவருடனே கூடப்போ யிருக்கும்படிக்கு, அவரிடத்தில் உத்தரவு கேட்டுக்கொண்டான்.

ரூக இயேசுவானவர் அவனைநோ க்கி, நீ உன் வீட்டிற்குத் திரும் பிப்போய், பராபரன் உனக்குச் செய்த விசேஷங்களை அறிவிப் பாயாக என்று சொல்லி அனுப் பிவிட்டார்; அந்தப்படி அவன் போய், தனக்கு இயேசுவானவர் செய்த விசேஷங்களைப் பட்ட ணத்தில் எங்கும் பிரசித்தம்பண் ணினான்.

சஎ ¶ பின்பு இயேசுவானவர் திரும்பி வந்தபொழுது, அவர் வ ரக் காத்துக்கொண்டிருந்த சனங் கள் எல்லாரும் அவரை உபசாரம் செய்தார்கள்.

சக [2]அப்பொழுது செபஆலயத் தலைவனான யாவீரு என்பவன் வந்து, இயேசுவின் பாதங்களிடத் தில் விழுந்து, தனக்குண்டான பன்னிரண்டு வயதுள்ள ஒரே கு மாரத்தி மரணத்துக்கு ஏதுவாயி ருந்தபடியினாலே,

சஉ தன் வீட்டிலே வரும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அவனுடனே கூடப் போ கையில், சனங்கள் அவரை நெ ருக்கினார்கள்.

சக ¶ [3]அப்பொழுது பன்னிர ண்டு வருஷம் பெரும்பாடுபட்டு, தன் பொருள்கள் யாவையும் பரி காரிகளுக்குச் செலவழித்து, ஒரு வராலும் சுகம் அடையாத ஒரு ஸ் திரீ, (அவருக்கு) பின்னாலே சேர் ந்து,

சச அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்; உடனே அவளுடைய இரத்தஊறல் நின்று போயிற்று.

சஙு அப்பொழுது இயேசுவான வர், என்னைத் தொட்டவர் யார் என்றார்; நாங்கள் அறியோம் என் று எல்லாரும் சொன்னபொழுது, பேதுருவும் அவனோடிருந்தவர்க

ஐ. பி. ரூஉ.

1 மத். 8. 28.

2 மத். 9. 18. மாற். 5. 22. 3 மத். 9. 20. 4 மாற். 5. 30. லூக். 6. 19.

5 மாற். 5. 35.

ளும் அவனை நோக்கி, ஐயரே, ந ணங்கள் உம்மை நெருக்கி உரசி கொண்டிருக்கிறார்களே; அப்படி யிருக்க, என்னைத் தொட்டவர் யா ரென்று எப்படிக் கேட்கிறீர் என் றார்கள்.

சரு [4]இயேசுவானவர் சொ னது: என்னிலிருந்து பலம் புறப் பட்டதை அறிந்திருக்கிறேன்; த கையால் ஒருவர் என்னைத் தொட் டது உண்டென்றார்.

சள அப்பொழுது ஸ்திரியான வள் மறைந்திருக்கக்கூடாதென் று கண்டு, நடுங்கி வந்து, அவ முன்பாக வணக்கமாய் விழுந்து, தான் அவளைத் தொட்ட காரண தையும், உடனே குணம் அடை ந்ததையும் எல்லாச் சனங்களுக்கும் முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

சஅ அவர் அவளுடனே சொன் னது: மகளே சந்தோஷமாயிரு, உன் விசுவாசம் உன்னை இரட் சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.

சக ¶ [5]அவர் அப்படிப் பேசிக் கொள்ளுகையில், செபஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒரு வன் வந்து அவனை நோக்கி, உம்முடைய குமாரத்தி இறந்து போனாள்; போதகரை (இனி) வ ருத்தப்படுத்தாதிரும் என்றான்.

சுஏ இயேசுவானவர் அதைக் கேட்டு, யாவீரு என்பவனை நோக் கி, நீர் பயப்படாமல் விசுவாசமா யிரும், அப்பொழுது இரட்சிக்கப் படுவாள் என்றார்.

சுக பின்பு அவர் வீட்டிலே சேர்ந்தபொழுது, பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணினுடைய தகப்பனையும் தாயையும் தவிர, மற்றொருவரும் உள்ளே பிரவேசிக்கிறதற்கு இடம் கொடாமல்,

சுஉ எல்லாரும் அவனைக்குறித்து அழுது துக்கங்கொண்டாடுகி றதை (கண்டு) நீங்கள் அழவேண் டாம்; அவள் இறந்துபோகவில்

Digitized by Google

லை, [1]தித்நிலைபண்ணுகிறுள் என்
றார்.

ஙூ அவன் இறந்துபோனுன் என்ற அவர்கள் அறிந்து, அவனுக்குறித்து கைகைத்தார்கள்.

ஙோ பின்பு அவர் எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, அவருடைய கையைப் பிடித்து, [2]பின்னையே, எழுந்திரு என்று கூப்பிட்டார்.

ஙஙி உடனே அவளுடைய ஆவி திரும்பி வந்தபடியால் அவள் எழுந்திருந்தாள்; அவளுக்குச் சாப்பாடு கொடுக்கும்படிக்குக் கட்டளையிட்டார்.

ஙச அவளுடைய தாய்தகப்பன்மார் பிரமித்தார்கள்; [3]அப்பொழுது நடந்ததை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

கூ. அதிகாரம்.

க. இந்து தம்முடைய அப்போஸ்தலர்களை அற்புதங்கள் செய்யவும், பிரசங்கிக்கவும் அனுப்பினது. எ. அவை ஏரோதே காண விரும்பினது. கூ. அவர் துயரம்பேரைப் போஷித்தது. டு. உலகத்தார் தம்மைக்குறித்தெவ்விதமாய் நினைக்கிறார்களென்று கேட்டு, உஉ தம்முடைய பாடுகளை முன்னறிவித்து, உக. தம்முடைய பொறுமையை மறியர்க்கு எளம்பித்தது. உஅ. அவர் மறுரூபப்பட்டது. ஈ. சந்திரோதயைக் குணமாக்கினது. சக. தம்முடைய பாடுகளையும் சீஷர்களுக்கு முன்னறிவித்தது. சஉ. நாற்பைபாய் நடந்து, கூ. ஏரோதம்பெர்னாமே பாவரோடு சந்தோஷிருக்க அனுமதிப்பித்தது. ஙூ. தங்கள் சமுதாயப்படி ஒப்புவாரால்; அரோ பிறிஸ்து வைப் பின்செல்லுவார்கள் என்பது.

[4]பின்பு அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரைக் கூடி வரவழைத்து, எந்தப் பசாசுக்களையும் வியாதிகளையும் நீக்குவதற்கு வல்லமையையும் அதிகாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்து,

உ [5]பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துப் பிரசங்கிக்கும்படிக்கும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கும்படிக்கும், அவர்களை அனுப்ப,

ஊ [6]அவர்களுடனே சொன்னது: வழிக்குத் தடிகளையாவது, பையையாவது, அப்பத்தையாவது, காசையாவது, எடுத்துக்கொள்ளாதிருங்கள்; இரண்டு அங்கிகளையும் கொண்டுபோகவேண்டாம்.

எ [7]நீங்கள் பிரவேசிக்கும் வீடு எதுவோ, அதிலே நீங்கள் புறப்படுகிறவரைக்கும் தங்குங்கள்.

ஏ [8]உங்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எவர்களோ, அவர்களுடைய பட்டணத்தைவிட்டுப் புறப்படுகிறபொழுது, அவர்களுக்கு விரோதமான சாட்சிக்காக [9]உங்கள் கால்களின் தூளை உதறிப்போடுங்கள் என்று சொல்லி அனுப்பினர்.

ஐ [10]அந்தப்படி அவர்கள் புறப்பட்டுக் கிராமங்கள்தோறும் போய்த்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, (பிணியாளிகளை) குணமாக்கினர்கள்.

ஒ ¶ [11]அக்காலத்திலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே அவராலே செய்யப்பட்ட யாவையும் கேள்விப்பட்டு, சிலர் யோவான் மரித்தோரிலிருந்து எழுந்தான் என்றும்,

அ சிலர் எலியா தோன்றினுன் என்றும், சிலர் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிர் அடைந்து எழுந்தான் என்றும் சொன்னபடியினுலே கலக்கம் அடைந்து,

கூ யோவானை நான் சிரச்சேதம் பண்ணினேன்; இப்படிப்பட்டவைகளைச் செய்ய நான் கேள்விப்படுகிற இவன் யாவன் என்று ஏரோதே சொல்லி, அவரைப்[12]பார்க்க விரும்பினன்.

கூ ¶ [13]அப்போஸ்தலர்கள் திரும்பிவந்து, தாங்கள் செய்த யாவையும் அவருக்கு விவரித்துச் சொன்னர்கள்; [14]அப்பொழுது அவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படிக்குப் பெத்சாயிதா என்னும் பட்டணத்தைச் சேர்ந்த வனாந்தரத்திற்குப் போனர்.

கக சனங்கள் அதை அறிந்து, அவருக்குப்பின் போனர்கள்; அவர்களை அவர் அங்கிகரித்துக்கொ

---

1 Cor. கூ. கூ, கூ.
2 லூக். ச. கூ. Cor. கூ. ச.
3 மத். அ. ச: க. கூ. மற். ஓ: ச.
4 மத். கூ. க. மற். க. கூ: க. எ.
5 மத். கூ. எ, அ. மற். க. கூ. லூக். கூ. க, கூ.
6 மத். கூ. கூ. மற். க. அ. லூக். கூ. ச: கூ. கூ.
7 மத். கூ. கூ. மற். க. கூ.
8 மத். கூ. ச.
9 அப். கூ. கூ.
10 மற். க. கூ.
11 மத். ச. க. மற். க. ச.
12 லூக். கூ. அ.
13 மற். க. கூ.
14 மத். ச. கூ.

ண்டு, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தம் அடையவேண்டும் என்றிருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார்.

யஉ ¶ [1]சாயந்தரத்திலே பன்னிருவரும் சேர்ந்து அவனைநோக்கி, இங்கேவனாந்தரமான இடத்திலே இருக்கிறோம்; ஆகையால் சனங்கள் சுற்றியிருக்கிற பட்டணங்களுக்கும் ஊர்களுக்கும் போய் விடாய்தீர்ந்து போசனம் சம்பாதித்துக்கொள்ளும்படிக்கு அவர்களை அனுப்பிவிடவேண்டும் என்றார்கள்.

யஊ அதற்கு அவர், நீங்களே அவர்களுக்குச் சாப்பாடு கொடுங்கள் என்றார்; ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர் இருந்தபடியினாலே,

யச அவர்கள் சொன்னது: ஐந்து அப்பமும் இரண்டு மீனும்மாத்திரம் எங்களிடத்தில் உண்டு; ஆகையால் நாங்கள் போய், இந்தச் சனங்கள் எல்லாருக்காகவும் போசனத்திற்கு ஏற்றவைகளை வாங்கிக் கொள்ளாவிட்டால், (திருத்தி) உண்டாகமாட்டாதே) என்றார்கள்.

யஙி அவர் தம்முடைய சீஷருடனே சொன்னது: இவர்கள் ஐம்பது ஐம்பதாகப் பந்தியில் உளுக்காரும்படி செய்யுங்கள் என்றார்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; எல்லாரும் உளுக்காந்தார்கள்.

யசு அப்பொழுது அவர் அவ்வைந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, அவைகளை ஆசீர்வதித்துப்பிட்டு, சனங்களின் முன் வைக்கும்படிக்குச் சீஷருக்குக் கொடுத்தார்.

யஎ எல்லாரும் புசித்துத் திருத்தி அடைந்தார்கள்; அல்லாமலும் பன்னிரண்டு கூடைநிறையச் சேஷமானவைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன.

யஅ ¶ [2]பின்பு ஒருநாள் அவர் தம்முடைய சீஷர்கூட இருக்கத் தனித்துச் செபம்பண்ணினபொழுது, அவர் அவர்களை நோக்கி, என்னைக்குறித்துச் சனங்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றுகேட்டார்.

யக அவர்கள் மாறுத்தரமாகச் சொன்னது: [3]சிலர் உம்மை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும், சிலர் பழைய தீர்க்கதரிசிகளில் ஒருவன் உயிரடைந்து எழுந்தான் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்.

யக அவர் சொன்னது: நீங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார்; அதற்குப் பேதுரு, [4]நீர் பராபரனுடைய கிறிஸ்து என்றான்.

யஎ [5]அப்பொழுது அவர்கள் அதை ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு, அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

யஏ அன்றியும் அவர் சொன்னது: [6]மனிதனுடைய குமாரன் அநேகம் பாடுபடவும், மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் தள்ளப்படவும், கொல்லப்படவும், பின்பு மூன்றாம்நாளிலே உயிரோடெழுந்திருக்கவும் வேண்டும் என்றார்.

யஙி ¶ [7]அல்லாமலும் அவர் எல்லாருடனேயும் சொன்னது: ஒருவன் எனக்குப் பின்செல்ல மனதாயிருந்தால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவைமரத்தைத் தினந்தோறும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

யச என்னத்திலெனில், தன் சீவனை இரட்சித்துக்கொள்ள விரும்புகிறவன், அதை இழந்துபோவான்; என்நிமித்தம் தன் சீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்வான்.

யஙி [8]அன்றியும் மனிதனானவன் உலகம் யாவையும் சம்பாதித்துக்கொண்டு தன்னைத்தான் அழித்தால், அல்லது சேதப்படுத்தினால்,

1 மத். ம. ஙஇ. மாற். க. உஇ. போ.க.க,இ.
2 மத். ம. ஙக. மாற். அ. உஎ.
3 மத். ம. உ: எ. அ.ஙச.
4 மத். ங. ஙக. போ.க.உஅ.
5 மத். ங. உம.
6 மத். ஙக. உச: ம.உஉ.
7 மத். ம.உஅ: ங. உ. மாற். அ. உ. லூக். ம. உஎ.
8 மத். ஙக. உச. மாற். அ. உங.

Digitized by Google

அவனுக்கு என்ன லாபம் உண்டாயிருக்கும்?

உ [1]அன்றியும் என்னைக்குறித்தும் என் வசனங்களைக்குறித்தும் வெட்கப்படுகிறவன் எவனை அவனைக்குறித்து மனிதனுடைய குமாரன், தம்முடைய மகிமையோடும் பிதாவானவருடைய மகிமை யோடும் பரிசுத்த தூதருடைய மகிமையோடும் வரும்பொழுது, வெட்கம் அடைவான்.

உஎ [2]இங்கே நிற்கிறவர்களில் சிலர் பராபரனுடைய ஆளுகையைக் காணும்அளவும், மரணத்தை அடைவதில்லையென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உஅ ¶ [3]இந்த வசனங்களை * அவர் சொல்லி ஏறக்குறைய எட்டு நாளானபொழுது, அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும்கூட்டிக்கொண்டு, செபம் பண்ணும்படிக்கு ஒரு மலையில் ஏறினார்.

உக அவர் செபம்பண்ணுகையில், அவருடைய முகரூபம் மாறிற்று; அல்லாமலும் அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசம்கொடுத்தது.

உங அன்றியும் மோசே எலியா இவ்விரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு, அவருடனே பேசி,

உச அவர் எருசலேமிலே நிறைவேற்றும் மரணத்தைக்குறித்துச் சம்பாஷணை பண்ணிக்கொண்டார்கள்.

உஉ பேதுருவும் அவனோடிருந்தவர்களும் கனமான நித்திரை அடைந்து [4]விழித்துக்கொண்டபொழுது, அவருடைய மகிமையையும் அவரிடத்தில் நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்.

உஊ அன்றியும் அவ்விருவரும் அவனைவிட்டுப் பிரிந்துபோகையில், பேதுரு இயேசுவை நோக்கி, ஐயரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது, நாங்கள் உமக்கும் மோசேயுக்கும் எலியாவுக்கும் ஒரொரு குடிலாக மூன்று குடில்களை உண்டாக்குவோம் என்று தகுதியான யோசனை பண்ணாமல் சொன்னான்.

உள அப்படி அவன் சொல்லுகிறபொழுது, ஒரு மேகம் வந்து அவர்கள்மேலே நிழலிட்டது; அவ்விருவரும் மேகத்திற்குள் பிரவேசிக்கையில் சீஷர் பயந்தார்கள்.

ஊடு அப்பொழுது, இவர் (எனக்கு) [5]அன்பாயிருக்கிற என்னுடையகுமாரன், [6]இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

ஊஅ அந்தச் சத்தம் உண்டாகுகையில் இயேசுவானவர்மாத்திரம் இருந்தார்; [7]பின்பு அவர்கள் கண்டவைகளில் ஒன்றையும் அக்காலத்திலே ஒருவருக்கும் அறிவியாமல் மவுனமாய் இருந்தார்கள்.

ஊஎ ¶ [8]மறுநாளிலே அவர்கள் மலையிலிருந்து இறங்கினபொழுது, அநேக சனங்கள் அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

ஊஅ அல்லாமலும் அவர்களில் ஒருவன் கூப்பிட்டுச்சொன்னது: போதகரே, நீர் என் மகனை நோக்கிப் பார்க்கும்படிக்கு உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்; அவன் எனக்கு ஒரே பிள்ளையானவன்.

ஊக ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது, உடனே அலறுகிறான்; அவனை நுரைதள்ள அலக்கழித்து அவனைக் கசக்கினபின்பும், அவனைவிட்டு நீங்குகிறது அரிதாய் இருக்கின்றது.

சல அதைத் துரத்தும்படிக்கு உம்முடைய சீஷரை வேண்டிக்கொண்டேன்; அவர்களுக்கு அப்படிச் செய்யத் திராணியில்லை என்றான்.

சக இயேசுவானவர் மாறுத்தரமாகச் சொன்னது: விசுவாசமில்லாதமாறுபாடான சந்ததியே, எதுவரைக்கும் உங்களிடத்திலிருந்து

கி. பி. கூஉ.

1 மத்.10.33. மாற். அ.8அ உதிமோ. உ.12.

2 மத். கூ. உஅ. மாற். கூ. க.

3 மத். 17. க. மாற். கூ. உ
* அல்லது ஏறி பக்கல.

4 தானி. அ. 8அ: 10. கூ.

5 மத். க. 17.

6 அப். க. உஉ.

7 மத். 17. கூ.

8 மத். 17. மசி. மாற். கூ.மசி,மஎ.

உங்களில் பொறுமையாயிருப்பேன் என்று சொல்லிப் பின்பு உன் மகனை இங்கே கொண்டுவா என்றார்.

42 அவன் வருகிறபொழுது, பசாசு அவனை நொறுக்கி அலக்கழித்தது; இயேசுவானவர் அந்த அசுத்த ஆவியை அதட்டிப் பிள்ளையைக் குணமாக்கி, அவனைத் தகப்பனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

43 (அதைக் கண்ட) எல்லாரும் பராபரனுடைய மகத்துவத்தைக் குறித்துப் பிரமித்தார்கள்; இயேசுவானவர்செய்த எல்லாவற்றையுங் குறித்து யாவரும் ஆச்சரியப்படுகிறபொழுது, அவர் தம்முடைய சீஷரை நோக்கிச் சொன்னது:

44 [1]மனிதனுடைய குமாரன் மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவான்; இந்த வசனங்களை நீங்கள் கன்னருய்க் கேட்டுக் காத்துக்கொள்ளக்கடவீர்கள் என்றார்.

45 [2]அவர்கள் அந்த வசனங்களின் கருத்தை அறியாமல் இருந்தார்கள்; அது அவர்களுக்குத் தோன்றுதபடிக்கு மறைபொருளாயிருந்தது; அல்லாமலும் அவர்கள் அந்த வசனங்களைக்குறித்து அவரிடத்தில் விசாரித்துக்கொள்ளுகிறதற்குப் பயப்பட்டார்கள்.

46 ¶ [3]ஒருகால் அவர்கள் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று யோசனை பண்ணிக்கொண்டார்கள்.

47 அவர்களுடைய இருதயத்தின் யோசனையை இயேசுவானவர் அறிந்து ஒரு பிள்ளையை எடுத்து, அதைத் தமக்கு அருகே நிறுத்தி,

48 [4]இந்தச் சிறுபிள்ளையை என் நாமத்தினிமித்தம் ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவனை ஏற்றுக்கொள்ளுகிறான்; [5]ஆதலால் உங்கள் எல்லாரிலும் சிறியவனாயிருக்கிறவனே பெரியவனாய் இருப்பான் என்றார்.

கி. பி. கூ.

1 மத். மா. உஉ.
2 மாற். கூ. கஉ. லூக். உ. ஙஅ: உஅ.கச.
3 மத். உஅ. க. மாற். கூ.கச.
4 மத். உ.சஅ: உஅ. இ. மாற்.கூ.கஎ. போவா. உஉ. சச: உக. உஅ.
5 மத். உக. உக, உஉ.
6 மாற். கூ. கஅ. சமோ.கக.உஅ.
7 மத். உஉ. கஅ. லூக்.உக.உக.
8 மாற். உக. உக. அப்.க.உ.
9 போவா. ச. ச,கூ.
10 உ இரா. க. உ, ஙஉ.
11 போவா. க. உஎ: உஉ. சஎ.
12 மத்.அ.உஉ.

49 ¶ அப்பொழுது யோவான் (அவனை நோக்கி,) ஐயரே, உம்முடைய நாமத்தினாலே பசாசுகளைத் துரத்துகிற ஒருவனை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட (உமக்குப்) பின்செல்லாதபடியினாலே அவனுக்குத் தடைபண்ணினோம் என்றான்.

50 அதற்கு இயேசுவானவர் சொன்னது: நமக்கு [7]விரோதமாயிராதவன் நம்முடைய பக்கல் இருக்கிறான்; ஆகையால் நீங்கள் அவனுக்குத் தடைபண்ணவேண்டாம் என்றார்.

51 ¶ [8]அவர் எடுக்கப்படும்படிக்குக் காலம் சமீபமானபொழுது, அவர் எருசலேமுக்குப் போகக் கண்ணோட்டமாகித் தமக்குமுன்பாகத் தூதர்களை அனுப்பினார்.

52 அவர்கள்போய் அவருக்காக இடம்பயத்தனம்பண்ணும்படிக்கு, சமாரியருடைய ஒரு கிராமத்திலே பிரவேசித்தார்கள்.

53 [9]அவர் எருசலேம் நகரத்திற்குப் போகிறவரானபடியினாலே, அவ்வூரார் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை.

54 அவருடைய சீஷராகிய யாக்கோபும் யோவானும் அதைக் கண்டு, ஆண்டவரே, [10]எலியாவானவர் செய்ததுபோல, நாங்கள் இவர்களை அழிக்கும்படிக்கு வானத்திலிருந்து அக்கினி வரும்படி சொல்லச் சித்தமாயிருக்கிறீரா என்றார்கள்.

55 அப்பொழுது அவர் திரும்பி அவர்களை அதட்டி, நீங்கள் இன்ன ஆவியை உடையவர்கள் என்று அறியீர்கள்.

56 [11]மனிதனுடைய குமாரன் மனிதருடைய சீவனை அழிக்கும்படிக்கல்ல, இரட்சிக்கும்படிக்கு வந்தானே என்றார்.

57 ¶ [12]பின்பு வேறொரு கிராமத்திற்குப் போனார்கள்; அவர்கள் வழியிலே போகையில், ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே,

Digitized by Google

சீர் போகும் இடம் எங்கேயோ அங்கே உமக்குப் பின்செல்லு வேன் என்றான்.

அ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: நரிகளுக்குக் குழிகளும், ஆகாயத்தின் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனிதனுடைய குமாரனே, தன் தலையைச் சாய்க்கிறதற்கு இடம் இல்லாதவனாயிருக்கிறான் என்றார்.

ஆ [1]வேறொருவனை அவர் நோக்கி, எனக்குப் பின்சென்றுவா என்றார்; (அதற்கு) அவன் சொன்னது: ஆண்டவரே, முன்புநான் போய், என் தகப்பனை அடக்கம் பண்ணும்படிக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்றான்.

இ அதற்கு இயேசுவானவர் சொன்னது: மரித்தோர் தங்களிடத்தில் மரித்தவர்களை அடக்கம் பண்ணட்டும், நீ புறப்பட்டுப்பராபரனுடைய ஊழுகையைப் பிரசித்தம்பண் என்றார்.

ஈ பின்பு வேறொருவன் வந்து, [2]உமக்குப் பின்செல்லுவேன், அதற்கு முன்பு நான் போய் என் வீட்டில் இருக்கிறவர்களிடத்தில் அனுப்பிக்கொண்டு வரும்படி உத்தரவு கொடும் என்றான்.

உ அவனுடனே இயேசுவானவர் சொன்னது; கலப்பையைப் பிடித்துக்கொண்டு பின்னுகப் பார்க்கிற எவனும், பராபரனுடைய இராச்சியத்திற்குத் தகுதியானவன் அல்ல என்றார்.

ய. அதிகாரம்.

அ. நியமித்து, தாம் போகச் சித்தமான பட்டணம் ஊர்கள் யாவுக்கும் அவர்களை [3]இருவர் இருவராகத் தமக்கு முன்னே அனுப்புகையில் அவர்களுடனே சொன்னதாவது: [4]அறுப்பு மிகுதியாகவே இருக்கின்றது.

ஆ வேலையாள்கள் சிலர்மாத்திரம் இருக்கிறார்கள்; ஆகையால் அறுப்புக்கு எசமான் அறுக்கிறதற்கு (அதிக) வேலையாள்களை அனுப்பும்படிக்கு [5]அவனை வேண்டிக்கொள்ளுங்கள்.

இ நீங்கள் புறப்படுங்கள், [6]ஆடுகளைக் கோணாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனுப்புகிறேன்.

ஈ [7]பணப்பையையாவது, சாமான்பையையாவது, பாதரட்சைகளையாவது கூட எடுத்துக்கொண்டு போகாமலும் [8]வழியில் ஒருவனையும் மினவுதல் செய்யாமலும் இருங்கள்.

உ [9]ஒரு வீட்டில் பிரவேசிக்கிற பொழுது, இந்த வீட்டாருக்குச் சமாதான சவுக்கியம் உண்டாவதாக என்று முதலாவது சொல்லுங்கள்.

ஊ அவ்விடத்திலே சமாதானசவுக்கியத்திற்குப் பாத்திரன் ஒருவன் இருந்தால், நீங்கள் வாழ்த்திய சமாதானசவுக்கியம் அவனிடத்திலே தங்கும்; அப்படிப்பட்டவன் இல்லாதிருந்தால், அது உங்களிடமாய்த் திரும்பும்.

எ [10]அந்த வீட்டிலே நீங்கள் இருந்து, [11]வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனானபடியினாலே, [12]அவர்களுக்கு உண்டாயிருக்கிறவைகளைப் போசனபானம்பண்ணுங்கள்; வீடுகள்தோறும் போகாதிருங்கள்.

அ ஒரு பட்டணத்தில் நீங்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச் சேர்த்துக்கொண்டால், உங்கள் முன் வைக்கிறவைகளைப் புசித்து,

ஐ. பி. கூஉ.

1 மத். அ. உஉ.
2 உஇரா. ஙூ. உம.
3 மத். ம. க. மாற். க. எ.
4 மத். கூ. கஉ, கூ. போலா. ச. கஇ.
5 உ தெச. க. க.
6 மத். ம. ஙக.
7 மத். ம. கூ, ம. மாற். ஈ. அ. லூக். கூ. க.
8 உ இரா. ச. உஉ.
9 மத். ம. ஙஉ.
10 மத. ம. ஙக.
11 மத். ம. ம. க கொரி. கூ. ச. ழு. க தீமோ. இ. உஅ.
12 உ கொரி. ம. உஎ.

Digitized by Google

க [1]அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைக் குணமாக்கி, [2]பராபரனுடைய இராச்சியம் உங்களுக்குச் சமீபமாய் வந்ததென்று அவர்களுக்கு அறிவியுங்கள்.

ய ஒரு பட்டணத்திலே நீங்கள் பிரவேசித்தபொழுது, அங்கே அவர்கள் உங்களைச் சேர்த்துக்கொள்ளாதிருந்தால், அதின் வீதிகளில் நீங்கள் புறப்பட்டு,

யக [3]எங்களில் ஒட்டின உங்கள் பட்டணத்தின் புழுதியையும் உங்களுக்கு எதிராகத் துடைத்துப் போடுகிறோம்; ஆகிலும் பராபரனுடைய ஆளுகை உங்களுக்குச் சமீபமாய் வந்ததென்கிறதை அறியக்கடவீர்கள் என்று சொல்லுங்கள்.

யஉ [4]அந்நாளிலே சோதோம் பட்டணத்தாரிலும் அப்படிப்பட்ட பட்டணத்தார் அதிக தண்டிப்பை அடைவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யஊ [5]ஐயோ! கோராசின் பட்டணத்தாரே, ஐயோ! பெத்சாயிதா பட்டணத்தாரே, உங்களுக்கு வேதனை வரும்; [6]உங்களுக்குள்ளே நடந்த பலத்த செய்கைகள் தீருசீதோன் என்னும் பட்டணங்களில் நடந்தனவானால், அவர்கள் சீக்கிரமாய்த் (துக்கத்திலுலே) இரட்டை உடுத்திச் சாம்பலிலும்உளுக்காந்து மனம்திருப்பி இருப்பார்கள்.

யச ஆகையால் நியாயத்தீர்ப்பு நாளிலே தீருசீதோன் பட்டணத்தாருக்கு வரும் தண்டிப்பு எளிதாய் இருக்கும்; நீங்கள் அதிக தண்டிப்பை அடைவீர்கள்.

யடு [7]வானபரியந்தம் உயர்ந்த [8]கப்பர்நாகூம் பட்டணத்தாரே, [9]நீங்களும் பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவீர்கள் என்று சொல்லி,

யகூ பின்பு மறுபடியும் சீஷரை நோக்கி, [10]உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எனக்குச் செவி கொடுக்கிறான், உங்களைத் தள்ளுகிறவன் [11]என்னைத் தள்ளுகிறான்; [12]என்னைத் தள்ளுகிறவன் என்னை அனுப்பினவனைத் தள்ளுகிறான் என்று சொல்லி அனுப்பினார்.

யஎ ¶ பின்பு [13]அந்த எழுபதுபேரும் சந்தோஷத்துடனே திரும்பி வந்து, ஆண்டவரே, பசாசுகளும் உம்முடைய நாமத்திலுலே எங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்றன என்றார்கள்.

யஅ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, [14]சாத்தான் வானத்திலிருந்து மின்னலைப்போல விழுகிறதைக் கண்டேன்.

யக இதோ, [15]பாம்புகள்மேலும், தேள்கள்மேலும், சத்துருவின் வல்லமை எல்லாவற்றின்மேலும் மிதிக்கத்தக்கதாக அதிகாரத்தை உங்களுக்குக் கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.

யக ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதினாலே நீங்கள் சந்தோஷப்படாமல் [16]உங்கள் நாமங்கள் பரமண்டலங்களில் எழுதியிருக்கிறதினாலே சந்தோஷப்படுங்கள் என்றார்.

யக ¶ [17]அந்நேரத்திலே இயேசு வானவர் ஆவியிலே களிகூர்ந்து சொன்னதாவது: பிதாவே, வானத்தையும் பூமியையும் ஆளுகிறவரே, நீர் இவைகளை (உலக) ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்தினபடியினாலே உம்மைத் துதி செய்கிறேன்; ஆம் பிதாவே, அப்படியே உமக்குப் பிரியமாயிருந்ததென்று சொல்லி,*

யஉ [18]பின்பு சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றன; [19]பிதா தவிர ஒருவனும் குமாரனை அறியான்; குமாரன் தவிர ஒருவனும் பிதாவை அறியான்; குமாரன் எவனுக்கு அவனை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ, அவனும் அவனை அறிவான் என்று சொல்லி,

கி. பி. கூஉ.

1 லூக்.க.உ.
2 மத். க. உ: ச. மெ: மி. எ. மக. மச.
3 மத். மி. மச. லூக். கூ. இ. அப். மக. மெ: மிஅ. க.
4 மத். ம மஇ. மாற். க. மக.
5 மத். மக. உக.
6 எசே. க. க.
7 ஏமோ. மக. ச. இ மோ.க.உஅ. எச. மச. மக. எரே. இக. இக.
8 மத். மக. உக.
9 எசே. உக. உம: கூஉ. மஅ.
10 மத். மி. சம. மாற். கூ. கஎ. பேரா. மக. உம.
11 ஏநெச. ச. அ.
12 பேரா. இ. உக.
13 க. எச.
14 பேரா. மஉ. கக: மகூ. மக. வெளி. கூ. க: மஉ.அ.கூ.
15 மாற். மகூ.மஅ. அப். உஅ. இ.
16 உ மோ. கஉ. கஉ. சம். கக. உஅ. எச.ச.க. தானி. மஉ. க. பிலி. ச. க.எபி. மஉ.உக வெளி. மக.அ:உம.மஉ: உக. உஎ.
17 மத். கூ. உஇ.
* தம்முடைய சமூகமே சேர்ந்து சொன்னதாவது: என்ற வார்த்தைகள் மத்வத்திலிருந்த சில பிரதிகளில் இந்த வசனத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன.
18 மத்.உஅ.மஅ. பேரா. க.கஇ: இ.உஎ: மஎ. உ.
19 பேரா. க. மஅ: க.சச,சக.

Digitized by Google

உ ¶ பின்பு சேஷனாமாத்திரம் நோக்கி, [1]நீங்கள் இவைகளைப் பார்க்கிறவர்களானபடியினாலே, நீங்கள் பாக்கியமுள்ளவர்கள்.

உ [2]அநேக தீர்க்கதரிசிகளும் ராசாக்களும் நீங்கள் பார்க்கிறவைகளைக் காணவும் நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணுமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உ ¶ அப்பொழுது நியாயசாஸ்திரி ஒருவன் எழுந்திருந்து அவனைச் சோதிக்கும்படிக்குப் போதகரே, [3]நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்னசெய்யவேண்டும் என்று கேட்டான்.

உ அதற்கு அவர், வேதப்பிரமாணத்திலே என்ன எழுதியிருக்கின்றது? என்னத்தை அறிகிறீர் என்றார்.

உ அவன் பிரதியுத்தரமாகச் சொன்னது: [4]உன் முழு இருதயத்தினாலும், உன் முழு ஆத்துமாவினாலும், உன் முழுப் பலத்தினாலும், [5]உன் முழுச் சிந்தையினாலும் உன் தேவனாகிய பராபரனிடத்தில் அன்புகூரவும் [6]நீ உன்னிடத்தில் அன்புகூருகிறதுபோல, பிறனிடத்தில் அன்புகூரவும் வேண்டுமென்று எழுதியிருக்கின்றது என்றான்.

உ அவர் சொன்னது: நீர் சரியாய்ச் சொன்னீர்; நீர் அப்படிச் செய்தால் சீவனை அடைவீர் என்றார்.

உ அப்பொழுது [7]அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாய் இயேசுவை நோக்கி, எனக்கு அடுத்த பிறன் யாவன் என்றான்.

ல ¶ அதற்கு இயேசுவானவர் சொன்னது: ஒரு மனிதன் எருசலேம்நகரத்திலிருந்து எரிகோபட்டணத்துக்குப் போகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அ

கி. பி. கூஉ.

1 மத். கூ, மூ.
2 உபே. உ. ம.
3 மத். மசு. மஎ: லூ.உஅ.
4 ஓ மோ. உ. இ.
5 உ மோ.மசு.மஅ.
6 உ மோ. மஅ. இ. லெகே.சு. உஅ, எசே. மம். மஎ. மசு, உஉ. உரோ. ம.இ.
7 லூக். மசு. மஇ.
8 சங். உஅ. மஎ.
9 யோவா. சு. சு.
* மத்.மம உ.
10 யோவா. மஎ. உ: மஉ. ஊ, உ.

வர்கள் அவனுடைய வஸ்திரங்களைக் கழற்றி, அவனைக் காயப்படுத்தி, அரை உயிராக விட்டுப் போனார்கள்.

கூக [8]அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே சென்று, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

கூஉ அப்படிப்போல ஒரு லேவியனும் அவ்விடத்தில் சேர்ந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

கூஊ [9]பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய்ப் போய், அவனிடத்தில் சேர்ந்து, அவனைக் கண்டு,

கூசு உருக்கமாயிரங்கி, அணுகி, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சஇரசமும் வார்த்துக் காயங்களைக் கட்டி, அவனைத் தன் மிருகத்தின்மேல் ஏற்றி ஒரு மண்டபத்திற்குக் கொண்டுபோய்ப் பராமரித்துக்கொண்டு,

கூடு மறுநாளிலே புறப்படுகிறபொழுது இரண்டு *வெள்ளிக்காசை எடுத்து மண்டபத்தான் கையிலே கொடுத்து, நீ இவனை விசாரித்துக்கொள்; அதிகமாய் இவனுக்காக எதையாகிலும் செலவழித்தால் அதை நான் திரும்பவரும்பொழுது உனக்குக் கொடுப்பேன் என்றான்.

கூசு அப்படியிருக்க, கள்ளர்கையில் அகப்பட்டவனுக்கு அந்த மூன்றுபேரில் எவன் அடுத்த பிறனாயிருந்தான்? உமக்கு எப்படித் தோன்றுகின்றது என்றார்.

கூஎ அவனிடத்தில் இரக்கம் செய்தவனே என்றான்; அப்பொழுது இயேசுவானவர் நீரும் போய் அந்தப்படியே செய்யும் என்றார்.

கூஅ ¶ பின்பு அவர்கள் பிரயாணமாய்ப் போகையில் அவர் ஒரு கிராமத்தில் பிரவேசித்தார்; அங்கே [10]மார்த்தாள் என்று பேர்கொண்ட ஒரு ஸ்திரி அவரைத் தன் வீட்டிலே உபசாரம்செய்தாள்.

Digitized by Google

கக [1]அவளுக்குச் [2]சகோதரியான மரியாள் இயேசுவின் பாதங்கள் அருகே உளுக்காந்துகொண்டிருந்து, அவருடைய வசனத்திற்குச் செவிகொடுத்தாள்.

சய மார்த்தாள் மிகவும் ஊழியம் செய்யக் கவலையுள்ளவளாய் அவரிடத்தில் சேர்ந்து நின்று, ஆண்டவரே, நான்மாத்திரம் ஊழியம் செய்யும்படிக்கு என் சகோதரி என்னை விட்டிருக்கிறது உமக்குக் கவையில்லையா? அவள் எனக்கு உதவிசெய்யும்படி சொல்லும்என்றாள்.

சக இயேசுவானவர் அவளுக்கு மாறுத்தரமாகச் சொன்னது: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலக்கமாயிருக்கிறாய்.

சஉ [3]ஒன்றுமாத்திரம் வேண்டும்; மரியாளே நல்லபங்கைத் தெரிந்துகொண்டிருக்கிறாள்; அது அவளிடத்திலிருந்து எடுக்கப்படுவதில்லை என்றார்.

ஐக. அதிகாரம்.

க. பாபான் நல்ல சவுலைக் கொடுப்பானென்று ஊக்கமாய்ச் செபம்பண்ணப் படிப்பித்து, ஊமையான ஒரு பசாசைத் தூரத்தித் துஷ்டனாள்ள பரிசேயனைக் கண்டித்து, உஅ. ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் இன்னாரென்று காண்பித்து, உக. சனங்களுக்குப் பிரசங்கித்து, பரிசேயர், வேதபாரகர், நியாயசாஸ்திரிகள் என்பவர்களுடைய மாயமான வேஷத்தைக் கண்டித்தது.

ஒருநாள் அவர் ஒரு இடத்திலிருந்து செபம்பண்ணி முடித்தபின்பு அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி, ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்குச் செபம்பண்ணவகையைப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்.

உ அதற்கு அவர் சொன்னது: நீங்கள் செபம்பண்ணும்பொழுது [4]பரமண்டலங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாய் வணங்கப்படுவதாக; உம்முடைய இராசரீகம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.

ஈ தினம்தோறும் * எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தைத் தாரும்.

ச எங்களுக்குக் குற்றஞ்செய்த யாவருக்கும் நாங்கள் மன்னிக்கிறபடியினாலே, தேவரீரும் எங்கள் பாவங்களை மன்னித்தருளும்; நாங்கள் சோதனைக்குள் பிரவேசியாதபடி செய்து, பொல்லாங்கில் நின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும் என்று சொல்லுங்கள் என்றார்.

ஙு ¶ அன்றியும் அவர் அவர்களுடனே சொன்னதாவது: உங்களில் ஒருவன் பாதி இராத்திரியிலே தனக்குச் சிநேகிதனானவனிடத்திற்குப் போய், சிநேகிதனே, என் சிநேகிதன் பிரயாணமாய் என்னிடத்திலே வந்திருக்கிறான், அவனுக்குப் போசனம் பண்ணச் செய்யும்படிக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் நீ எனக்கு மூன்று அப்பங்களைக் கடன் கொடுக்கவேண்டும் என்று கேட்கும்பொழுது,

ஏ வீட்டினுள் இருக்கிறவன், எனக்குத் தொந்தரவுசெய்யாதிரு; இப்பொழுது கதவு பூட்டியாயிற்று, என் பிள்ளைகள் என்னுடனே கூடப் படுத்துக்கொண்டிருக்கிறார்கள்; நான் எழுந்து உனக்குக் கொடுக்கக்கூடாதென்று மாறுத்தரமாகச் சொல்வி,

அ [5]தனக்கு அவன் சிநேகிதனாயிருக்கிறதினாலே அவனுக்குக் கொடாதிருந்தும், பின்பு தன்னை அவன் அதிக வருத்தம்செய்கிறபடியினாலே எழுந்திருந்து அவனுக்கு வேண்டியபடிக்குக் கொடுப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கக [6]அந்தப்படி நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: வேண்டிக்கொள்ளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்;

இ. பி. ஈஙு.

1 க லொ. எ. ஊ. ழி.
2 லூக். அ. ஊ. அப். ஊ. க.

3 சங். ஊ. ச.
4 மத். க. ஈ.
* அல்லது அன்றன்று.
† அல்லது தன் வழியை விட்டு.

5 லூக். ஐஅ.க.ழ.

6 மத். எ.ஏ: உச. ஊ. மற். ஊ. உ. போள. ஐஇ.ஏ. பாக். க. ஈ. க பே. க. ஊ.

தேடிக்கொள்ளுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

௱ என்னத்தினாலெனில், வேண்டிக்கொள்ளுகிற எவனும் வாங்கிக்கொள்ளுகிறான்; தேடிக்கொள்ளுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

௱க ¶ [1]அன்றியும் உங்களில் தகப்பனானவனிடத்தில் குமாரன் அப்பம் கேட்கிறபொழுது, அவனுக்குக் கல்லைக்கொடுப்பானா? மீனைக் கேட்டால், மீன அல்ல பாம்பைக் கொடுப்பானா?

௱உ முட்டையைக் கேட்டால், அவனுக்குத் தேளைக் கொடுப்பானா?*

௱ஊ தலால் பொல்லாதவர்களாயிருக்கிறீர்கள், உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைச் செய்யும்படி அறிந்திருக்க, பரம பிதாவானவர் தம்மை வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு மிகவும் அதிகமாய்ப் பரிசுத்த ஆவியைக் கொடாமல் இருப்பாரா என்றார்.

௱எ [2]ஒருகால் ஊமையாகச்செய்கிற பசாசைத் துரத்தினார், பசாசு போனபின்பு ஊமையன் பேசினான்; அதைக்குறித்துச் சனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

௱ஏ அவர்களில் சிலர் சொன்னது: [3]இவன் பசாசுகளின் தலைவனாகிய பெயேல்செபூலினாலே† பசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.

௱ஐ வேறுசிலர் அவனைச் சோதிக்கும்படிக்கு [4]வானத்திலிருந்து ஓர் அடையாளம் உண்டாகும்படி அவரிடத்திலே கேட்டுக்கொண்டார்கள்.

௱ஒ [5]அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து அவர்களுடனே சொன்னதாவது: [6]ஒரு இராச்சியத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால், அவர்கள் அழிந்துபோவார்கள்; ஒரு குடும்பத்தார் தங்களுக்குள்ளே பிரிவினை உண்டுபண்ணினால், மடிந்துபோவார்கள்.

௱ஓ அப்படிக்குச் சாத்தானும் தனக்குத்தானே விரோதமாகப் பிரிவு உண்டுபண்ணினால், அவனுடைய இராச்சியம் எப்படி நிற்கும்? இப்படியிருக்க நீங்கள் என்னைப் பெயேல்செபூலினாலே பசாசுகளைத் துரத்துகிறவன் என்கிறீர்கள்.

௱ஔ நான் பெயேல்செபூலைக் கொண்டு பசாசுகளைத் துரத்துகிறவனானால், உங்கள் பிள்ளைகள் யாரைக்கொண்டு அவைகளைத் துரத்துகிறார்கள்? ஆகையால் அவர்கள் உங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர்களாய் இருப்பார்கள்.

௱க [7]நான் பராபரனுடைய வல்லமையினாலே பசாசுகளைத் துரத்துகிறபடியால், பராபரனுடைய இராச்சியம் உங்களுக்குள்ளே சடுதியாய் வந்திருக்கின்றதே.

௱உ [8]ஆயுதம்தரித்த பலவான் தன் அரண்மனையின் வாசலைக் காக்கிறபொழுது, அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும்.

௱ஊ [9]அவனிலும் அதிக பலவான் வந்து அவனைச் செயித்தால், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய உடைமைகளைப் பங்கிட்டுக்கொள்வான்.

௱எ என்னுடனே [10]இராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான்; என்னைப்போலச் சேர்த்துக்கொள்ளாதிருக்கிறவன் சிதற அடிக்கிறான்.

௱ஏ ¶ [11]அசுத்த ஆவி ஒரு மனிதனைவிட்டுப் புறப்படுகிறபொழுது, அது தண்ணீரில்லாத இடங்களில் இளைப்பாறும் இடத்தைத் தேடித் திரிந்து அடையாமல் இருக்கும் காலத்தில், அது தான் விட்டுவந்த வீட்டிற்குத் திரும்பவேண்டும் என்று சொல்லி,

வி. பி. ஈஈ.

1 மத். எ. ஈ.
* அல்லது செ

2 மத். ஈ. ஊ: ஐஉ. உஉ.

3 மத். ஈ. ஈச: ஐஉ. உச.

† அல்லது பெயேல் செபூலினாலே; அப்படியே ஐஅ. ஐக. வசனங்களிலும்.

4 மத். ஐஉ. உஅ: ஐக. உ.

5 யோவா. உ. உஇ.

6 மத். ஐஉ. உஇ. மற். உ. உச.

7 உ மோ. அ. ஐக.

8 மத். ஐஉ. உக. மற். உ. உஎ.

9 சங். ஐ. ஐஉ. லூக். உ. ஐஇ.

10 மத். ஐஉ. ஈ.

11 மத். ஐஉ. ஈஎ.

உடு அந்தப்படி வருகிறபொழுது, அது பெருக்கிச் சிங்காரிக்கப் பட்டிருக்கக்கண்டு,

உசு பின்பு போய், தன்னிலும் அதிக பொல்லாத வேறே ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்து உட்பிரவேசித்து, அங்கே குடியிருக்கும்; [1]அப்பொழுது அம்மனிதனுடைய முன்னிலைமையிலும் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும் என்றார்.

உஎ ¶ இவைகளை அவர் சொல்லுகையில், கூட்டத்திலிருந்த ஒரு ஸ்திரியானவள் அவனை நோக்கி, [2]உம்மைச் சுமந்த வயிறும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சத்தமாய்க் கூப்பிட்டாள்.

உஅ அவர் சொன்னது: அதனிலும் அதிகமாய்ப் [3]பராபரனுடைய வாக்கைக்கேட்டு, அதைக் காத்துக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள் என்றார்.

உக ¶ அன்றியும் சனங்கள் திரளாய்க் கூடிவந்திருக்கிறபொழுது அவர் சொன்னதாவது: [4]இந்தச் சந்ததியார்கள் பொல்லாதவர்களாயிருக்கிறார்கள், ஓர் அடையாளத்தைத் தேடுகிறார்கள், ஆனாலும் யோனா தீர்க்கதரிசியின் அடையாளமேயன்றி, வேறடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

கூய [5]ஆதலால் யோனாவானவன் நினிவே பட்டணத்தாருக்கு அடையாளமாயிருந்ததுபோல, மனிதனுடைய குமாரனும் இந்தச் சந்ததிக்கு இருப்பார்.

கூக [6]தெற்கு இராசஸ்திரி சாலோமோனுடைய ஞானத்தைக் கேட்கும்படிக்குப் பூமியின் எல்லைகளிலிருந்து வந்தாள்; சாலோமோனிலும் இந்தச் சந்ததியிலே தோன்றினவன் அதிகமாயிருக்கிறான்; (ஆனாலும் இவர்கள் கேட்கமாட்டார்கள்;) ஆதலால் அந்த இராசஸ்திரி நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களுடனே கூட எழும்பி, இவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பாள்.

கூஉ [7]நினிவே பட்டணத்தார் யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு மனம்திருப்பினார்கள்; யோனாவிலும் இந்தச் சந்ததியிலே தோன்றினவன் அதிகமாய் இருக்கிறான்; ஆகையால் நினிவே பட்டணத்தார் நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களுடனேகூட எழும்பி, இவர்களை ஆக்கினைக்குள்ளாகத்தீர்ப்பார்கள்.

கூஊ [8]அன்றியும் ஒருவனும் விளக்கைக்கொளுத்தி, அதை அந்தரங்கத்திலாவது *மரக்காலின் கீழாவது வைக்கமாட்டான்; உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படிக்கு அதை ஒரு தண்டின்மேலே வைப்பான்.

கூஎ [9]கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கின்றது; அப்படியிருக்க, உன் கண் சொஸ்தமுள்ளதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும்; அது கெட்டதானால் உன் சரீரம் இருள் அடைந்திருக்கும்.

கூடு ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சமானது இருளாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

கூசு அப்படி உன் சரீரம் ஒரு புறத்திலும் இருள் அடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், அப்பொழுது ஒரு விளக்குத் தன் பிரகாசத்தினாலே† உனக்கு வெளிச்சமாக்குகிறதுபோல, அது முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும் என்றார்.

கூஎ ¶ அவர் அப்படிப் பேசிக்கொள்ளுகையில், ஒரு பரிசேயன் தன்னுடனே கூடப் பகல்போசனம் பண்ணும்படிக்கு அவனை வேண்டிக்கொண்டான்; அவர் போய்ப் பந்தியிருந்தார்.

கூஅ [10]போசனம்பண்ணுகிறதற்குமுன்னே அவர் ஸ்நானம்பண்

கி. பி. கூஉ.

1 Peshitto. இ. ம. எபி. க. ச: ம.உக. உபே. உ உம.

2 லூக். க. உஅ, சக.

3 மத். எ. உக. லூக். அ. உக. பாக். க. உஇ.

4 மத். மஎ. கஅ, கூ.

5 யோசு. க. மஎ: உ.ம.

6 ௧ இரா. ம. க.

7 யோசு. க. இ.

8 மத். இ. மஇ. மாற். ச. உக. லூக்.அ.கூக.

* மத். இ. மஇ.

9 மத். க. உஉ.

† அல்லது ஒரு விளக்குத் தன்மின்னலினாலே.

10 மாற். எ. ச.

Digitized by Google

ணமல் இருந்ததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

39 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி, பரிசேயராகிய நீங்கள் போசனபான பாத்திரங்களின் [1]வெளிப்புறத்தைச் சுத்தம்பண்ணுகிறீர்கள்; [2]உங்கள் உள்ளம் கொள்ளையிலுலும் துராசையிலும் நிறைந்திருக்கின்றது.

40 அறிவீனரே, வெளிப்புறத்தை உண்டாக்கினவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா?

41 அப்படியிருக்க [3]உங்களுக்கு உண்டானவைகளைப் *பிச்சையாகக் கொடுங்கள், அப்பொழுது சகலமும் உங்களுக்குச் சுத்தமாய் இருக்கும்.

42 [4]ஐயோ! பரிசேயராகிய உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், நீங்கள் துளசியிலும் அருயிபூண்டிலும் சகலவித கீரைகளிலும் பத்தில் ஒன்றுகொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டு விலகுகிறீர்கள்; இவைகளை நீங்கள் நடப்பித்து, அவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டும்.

43 [5]ஐயோ! பரிசேயரே, உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், செபஆலயங்களில் முதல்ஆசனத்தையும் சந்தைகளில் வாழ்த்துதல்களையும் விரும்புகிறீர்கள்.

44 [6]ஐயோ! வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு வேதனைவரும்; [7]என்னத்தினாலெனில், காணப்படாத பிரேதக்குழிகளைப்போல இருக்கிறீர்கள்; மனிதர் அவைகளை அறியாமல் அவைகள்மேலே நடக்கிறார்கள் என்று சொல்லுகிறபொழுது,

45 ¶ நியாயசாஸ்திரிகளில் ஒருவன் அவனை நோக்கி, போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினாலே எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்.

46 அதற்கு அவர் சொன்னது: ஐயோ! நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கும் வேதனைவரும்; என்னத்தினாலெனில், [8]மிகவும் பாரமான சுமைகளை மனிதர்கள் மேலே ஏற்றுகிறீர்கள்; நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடமாட்டீர்கள்.

47 [9]ஐயோ! உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், உங்கள் பிதாக்களால் கொலை செய்யப்பட்ட தீர்க்கதரிசிகளுடைய பிரேதக்குழிகளின்மேலே நிண்ணயைக் கட்டுகிறீர்கள்.

48 உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலைசெய்தபின்பு நீங்கள், அவர்களுடைய கல்லறைகளின்மேல் வீடுகட்டுகிறபடியால், நீங்கள் உங்கள் பிதாக்களுடைய கிரியைகளுக்குச் சம்மதிக்கிறவர்கள் என்று சாட்சிகொடுக்கிறீர்கள்.

49 ஆகையால் பராபரனுடைய ஞானம் சொல்லுகிறதாவது: [10]நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலரையும் அவர்களிடத்தில் அனுப்புவேன்; அவர்களில் சிலரைக் கொலைசெய்து சிலரைத் துன்பப்படுத்துவார்கள்.

50 ஆதிஉலகத்தோற்றம் முதற்கொண்டு [11]ஆபேலின் இரத்தம் தொடங்கி, பலிபீடத்துக்கும் தேவாலயத்துக்கும்நடுவே அழிக்கப்பட்ட [12]சகரியாவின் இரத்தம்வரைக்கும் சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் இந்தச் சந்ததியினிடத்திலே கேட்கப்படும்படிக்கு அப்படிச் செய்வார்கள்.

51 ஆம், இந்தச் சந்ததியினிடத்திலே அது கேட்கப்படும் என்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

52 [13]ஐயோ! நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கு வேதனைவரும்; என்னத்தினாலெனில், அறிவின் திறவுகோலை எடுத்துக்கொண்டு போனீர்கள்; நீங்களே உட்

மி. பி. 1177.

1 மத். உக. உடை.
2 நீத். க. 2இ.
3 எசா. இஅ. எ. நாவி. ச. உ. லூக். 12. கக.
* அல்லது உள்ளால் கூடிய அளவு.
4 மத். உக. உக.
5 மத். உக. க. மற். 12. 38, 39, கக.
6 மத். உக. உஎ.
7 சங். இ. க.
8 மத். உக. ச.
9 மத். உக. உக.
10 மத். உக. ச.
11 ஆ மோ. ச. அ.
12 உ எஸ். உச. உம், உக.
13 மத். உக. மக.

பிரவேசிக்கவில்லை; உட்பிரவேசிக்கிறவர்களுக்குத் தடைபண்ணினீர்கள்* என்றார்.

ஙஈ ¶ இவைகளை அவர் அவர்களுடனே பேசிக்கொண்டபொழுது, வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் குற்றம்காணும்படிக்கு,

ஙஉ [1]அநேககாரியங்களைக்குறித்து அவர் பேசும்படி மிகவும் அவரை நெருக்கமாய் விரோதித்தந்திரமாய்க் காத்திருந்து, அவருடைய வாய்மொழியிலே தப்பிதம் காணப் பார்த்தார்கள்.

யஉ. அதிகாரம்.

க. மிகுந்த தம்முடைய சேஷ்டை மாயத்துக்கு இடம் கொடாதபடி இருக்கவும் பயமில்லாமல் தம்முடைய உபதேசத்தைப் பிரசங்கிக்கவும் யோசித்தது. ங. அவர் பெரிய கனஞ்பெற்றதொரு ஐசுவரியவானை உவமையாகக்கொண்டு பொருளாசையைக்குறித்துச் சனங்களை எச்சரித்தது. உஉ. அநியாயம் உலக காரியங்களில் கவலைப்படாமலிருக்கவும், ஙக பாபாவுடைய இராச்சியத்தைத் தேடவும், ஙங பிச்சைகொடுக்கவும், ஙச. கர்த்தர் வந்து தட்டும்போது அவருடைய வரவை எதிர்பார்த்திருக்க நிறையும் வேண்டுமென்பது. சக. நிலத்துவிச் ஊழியக்காரர் நன்மைக்கு ஒப்புவிக்கப்பட்டவைகளைக்கொண்டு சகஉ. நன்மை வருமென்று எதிர் 'நோக்கவேண்டுமென்பது. சச. ஒப்புரவாக்குதல் இல்லாமல் மரணமடைவது பயங்கரமானதால், இதை எனக்கு இந்தக் காலத்தையே நிறையின் காலமென்று நினைக்கவேண்டுமென்பது

அத்தருணத்திலே [2]அநேக ஆயிரம் சனங்கள் ஒருவரை ஒருவர் மிதித்துக்கொள்ளத்தக்கதாகக் கூடிவந்திருக்கிறபொழுது, [3]அவர் தம்முடைய சீஷரை நோக்கி முதலாவது: பிரதானமாய் நீங்கள் வஞ்சகமாகிய பரிசேயருடைய புளிப்புள்ள மாவுக்கு இடம்கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்.

உ [4]வெளியாகாத மறைபொருளும் அறியப்படாத அந்தரங்கமும் ஒன்றுமில்லை.

ஙூ அப்படியிருக்க நீங்கள் இருளில் பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும்; நீங்கள் அறைகளில் காதுக்குள் சொன்னது எதுவோ, அது வீடுகள்மேலே பிரசங்கிக்கப்படும்.

ஙி. பி. ஙங.

* அல்லது மறித்தீர்.
1 மற். ஙஉ. ஙக.
2 மத். ஙக. க. மற். அ. ஙஇ.
3 மத். ஙக. ஙஉ.
4 மத். ங. உக. மற். ச. உஉ. லூக். அ. ஙஎ.
: போஸ. ஙஇ. ஙச, ஙஇ.
6 மத். ங. உஅ எச. இக. எ,அ, ஙஉ; ஙக. எரே. க. அ.

† மத். ங. உக.

7 மத். ங. கஉ. மற். அ. கஅ. உ நீமே. உ. ஙஉ. கயே. உ. உக.

8 மத். ஙஉ. கச, கஉ மற். க. உஅ. க போ. இ. ஙக.

9 மத். ங. ஙக. மற் ஙக. ஙக. லூக். உக. ஙச.

ச ¶ [5]அல்லாமலும் என் சிநேகிதரான உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: [6]சரீரத்தைக் கொலைசெய்தாலும் அதன் பின்பு அதிகம் ஒன்றும் உங்களுக்குச் செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படாதிருங்கள்

ரு நீங்கள் பயப்படத்தக்கவர் இன்னார் என்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்; கொலைசெய்த பின்பு நரகத்திலே தள்ளுகிறதற்கு அதிகாரமுடையவராகிய(பராபரனுக்குப்) பயப்படுங்கள்; அவருக்கே பயப்படக்கடவீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சு இரண்டு காசுக்கு ஐந்து† அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவோ? ஆனாலும் அவைகளில் ஒன்றும் பராபரனாலே மறக்கப்படுகிறதில்லை.

எ உங்கள் தலையிலுள்ள எல்லா மயிர்களும் எண்ணப்பட்டிருக்கின்றன; ஆகையால் பயப்படாதிருங்கள்; அநேகம் அடைக்கலான் குருவிகளிலும் நீங்கள் மேன்மையாய் இருக்கிறீர்கள்.

அ ¶ அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [7]எவனிலும் மனிதர்முன்பாக என்னை அறிக்கைபண்ணினால், மனிதனுடைய குமாரனும் பராபரனுடைய தூதர்கள் முன்பாக அவனை அறிக்கைபண்ணுவான்.

கூ மனிதர்முன்பாக என்னை மறுதலிக்கிறவன் பராபரனுடைய தூதர்கள் முன்பாக மறுதலிக்கப்படுவான்.

ய [8]எவனாகிலும் மனிதனுடைய குமாரனுக்கு விரோதமாய்ப் பேசினால், அது அவனுக்கு மன்னிக்கப்படும்; பரிசுத்த ஆவியைத் தூஷணிக்கிறவனுக்கு அது மன்னிக்கப்படாது.

யக [9]அன்றியும் செபஆலயங்களுக்கும் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் முன்பாக உங்களைக் கொண்டுபோய் விடும்பொ

Digitized by Google

முது எப்படி, என்னத்தை, எதிர் உத்தரவாகச் சொல்லுவோம் என்றும், எதைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்.

ஙஉ நீங்கள் பேசவேண்டியதை எனப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பாரே என்றார்.

ஙக ¶ அப்பொழுது கூட்டத்தில் ஒருவன் அவரை நோக்கிப் போதகரே, என் சகோதரன் எனக்கும் தனக்கும் உண்டான சுதந்தர ஆஸ்தியைப்பங்கிட்டுக்கொள்ளும்படிக்குக் கட்டளையிடும் என்றான்.

ஙச அதற்கு அவர் சொன்னது: மனிதனே, [1]என்னை உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாகவும் ஏற்படுத்தினவன் யார் என்று சொல்லி,

ஙஞ [2]பின்பு எல்லாரையும் நோக்கி ஒருவனுக்கு எவ்வளவு ஆஸ்தி உண்டாயிருந்தாலும் அவைகளினாலே அவனுடைய சீவன் உண்டாயிராது; ஆகையால் நீங்கள் பொருளாசைக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள் என்றார்.

ஙட ¶ அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்; அதாவது, ஐசுவரியமுள்ள ஒரு மனிதனுடைய காணி பூமி நன்றாய் விளைந்தது.

ஙண அப்பொழுது அவன் தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டு சொன்னது: என் தானியத்தைச் சேர்த்துவைக்கிறதற்கு வேண்டிய இடம இல்லையே.

ஙத நான் என்ன செய்யலாம்? என் களஞ்சியங்களை நான் இடித்து அதிக பெரிதானவைகளைக் கட்டி, எனக்குண்டான தானியம் பயிரையும் என் பொருளையும் அங்கே சேர்த்துவைக்கவேண்டும்.

ஙந பின்பு நான், [3]என் ஆத்துமாவே, அநேக வருஷங்களுக்கு உனக்காக மிகுந்த பொருள்கள் வைக்கப்பட்டிருக்கின்றன; ஆ

ஙி. பி. ஊஊ.

1 யோவா. ஙஅ. ஊஅ.
2 உதியே. ஊ. ஏ ழி.
3 பிர. ஙஎ. ஊ. உ செனி. ஙஇ. ஊஉ. பக. ஙி.
4 யோபு. ஙஅ. ஙஉ: ஙஎ. அ.
* அல்லது உன் ஆத்துமா உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும். சங். ஙஉ. ஏ. பாக். ச. சே.
5 சங். ஊஉ ஊ. எரே. ஙஎ. ஙஎ.
6 மத்.க.உஅ ஊஉ. ஊச. உதியோ ஊ. ஙஅ, ஙஊ. பாக். உ ஙி.
7 மத். ஊ. உஙி.

8 யோபு. ஙஅ. ஊஅ. சங். சென. ஊ.

கையால் இளைப்பாறிப் புசித்துக் குடித்து மகிழ்ச்சியாயிரு என்று என் ஆத்துமாவுடனே சொல்ல வேண்டும் என்றான்.

உய அப்பொழுது பராபரன் அவனுடனே சொன்னது: புத்தியீனனே, இந்த இராத்திரியிலே [4]உன் ஆத்துமாவை உன்னிடத்தில் கேட்டு எடுத்துக்கொள்வார்கள்;* [5]அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருக்காக இருக்கும் என்றார்.

உக [6]பராபரனில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகப் பொக்கிஷங்களைச் சேர்க்கிறவனுக்கு அப்படியே சம்பவிக்கும் என்று சொல்லி,

உஉ ¶ பின்பு தம்முடைய சீஷரை நோக்கி, [7]அதினாலே நீங்கள் உங்கள் சீவனைக்குறித்து என்ன உண்போம் என்றும், உங்கள் சரீரத்தைக்குறித்து என்ன உடுப்போம் என்றும், கவலைப்படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உங ஆகாரத்திற்குச் சீவனும், உடைக்குச் சரீரமும், அதிகமாயிருக்கின்றதே.

உச காகங்களை நோக்கிப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டகசாலையும் களஞ்சியமும் இல்லை; [8]அவைகளுக்கும் பராபரன் உணவு கொடுக்கிறார்; பறவைகளிலும் நீங்கள் மிகவும் அதிக மேன்மையாய் இருக்கிறீர்கள் அல்லவா?

உஙி அன்றியும் உங்களில் ஒருவன் கவலைப்படுகிறதினாலே, தன் சரீர அளவுக்கு ஒரே முழத்தையும் கூட்டுவானே?

உசு மிகவும் சிறியதானதை உங்களால் ஆகாதிருக்க, மற்றவைகளுக்காக நீங்கள் என்னத்திற்குக் கவலைப்படுகிறீர்கள்?

உஎ லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையைச் சிந்தித்துக் கொள்ளுங்கள்; அவைகள் வருந்

Digitized by Google

தூறதுமில்லை, நாற்றதுமில்லை; சாலோமோன் தானே மிகுந்த மகிமையுடையவனுயிருந்தும், அவைகளில் ஒன்றைப்போல(அழகாய்) உடுத்தியிருக்கவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உ அப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே, இன்றைக்கு வெளியிலிருந்து நானைக்கு அடுப்பில் போடப்படுகிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாக உடுத்தினால், மிகவும் அதிகமாய் உங்களுக்கு அப்படிச் செய்வார் அல்லவா?

உஎ ¶ ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைப் பானம் பண்ணுவோம் என்று நீங்கள் கேளாமலும், கலக்கம் அடையாமலும் இருங்கள்.*

ஈய உலகத்தார் இப்படிப்பட்டவைகள் யாவையும் தேடுகிறார்கள்; இவைகள் உங்களுக்கு வேண்டுமென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.

ஈக [1]விசேஷமாய்ப் பராபரனுடைய இராச்சியத்தைத் தேடுங்கள்; அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

ஈஉ சிறிய [2]ஆட்டுக்கூட்டமே, உங்கள் பிதா இராச்சியத்தை உங்களுக்குக் கொடுக்கப் பிரியமாய் இருக்கிறார்; ஆகையால் பயப்படாதிருங்கள்.

ஈஈ [3]உங்களுக்கு உண்டானவைகளை விற்றுப் பிச்சைகொடுங்கள்; உங்கள் பொக்கிஷம் எங்கேயோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

ஈஊ ஆகையால் [4]பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறைந்துபோகாத பொக்கிஷத்தையும் பரமண்டலங்களில் உங்களுக்காக உண்டுபண்ணுங்கள்; அங்கே திருடன் சேருகிறதுமில்லை, பூச்சி செடுக்கிறதுமில்லை.

ஈஎ ¶ [5]உங்கள் அரைகள் கட்டப்பட்டவைகளாகவும் [6]உங்கள் விளக்குகள் எரிகிறவைகளாகவும் தங்கள் எசமான் கலியாணத்திலிருந்து திரும்பி வந்து தட்டும்பொழுது, உடனே அவருக்குத் திறக்கும்படிக்கு அவன் வரக் காத்திருக்கிற மனிதருக்கு ஒப்பாகவும் இருங்கள்.

ஈஏ எசமான் வந்து விழித்திருக்கக் காணும் ஊழியக்காரரே பாக்கியர்.

ஈஐ [7]அவன் அரையில் கச்சை கட்டிக்கொண்டு அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, பின்பு வந்து அவர்களுக்கு ஊழியம்செய்வான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஈஒ அவன் இரண்டாம் சாமத்திலாவது மூன்றும் சாமத்திலாவது வந்து அப்படியே கண்டால், அவ் ஊழியக்காரர் பாக்கியவான்களாய் இருப்பார்கள்.

ஈக [8]திருடன் இன்னவின்னேரத்தில் வருவான் என்று வீட்டெசமான் அறிந்தால், அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடும்படிக்கு இடங்கொடுக்கமாட்டான்; அது உங்களுக்குத் தெரியும்.

சய [9]அந்தப்படியே நீங்களும் நினையாத நேரத்திலே மனிதனுடைய குமாரன் வருவதால் எத்தனமாயிருக்கக்கடவீர்கள் என்றார்.

சக ¶ அப்பொழுது பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே, இந்த உவமையை நீர் எங்களுக்கு (மாத்திரம்) சொல்லுகிறீரோ, எல்லாருக்கும்சொல்லுகிறீரோஎன்றான்.

சஉ அதற்குக் கர்த்தர் சொன்னது: [10]தகுதியான காலத்திலே படி கொடுக்கும்படிக்கு எசமான் தன்னுடைய பணிவிடைச்சனங்கள் மேல் வைக்கத்தக்க உண்மையும் புத்தியுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?

சஊ எசமான் வரும்பொழுது, அப்படிச் செய்யக் காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்.

Digitized by Google

வி. பி. ஈஊ.

* அல்லது கவலையுள்ள சித்தனாயிருக்கவேண்டாம்.

1 மத். க. ஊ.
2 மத். ய௧. உஅ, உக.
3 மத். ய௩. உக. அப். உ. ஏ: ச. உ.
4 மத். க. உ. லூக். ய௩. க. ச. தீமே. க.ய௩.
5 எபே. க. ய. ச பே. க. ய௩.
6 மத்.உஇ.க. ழி.
7 மத். உ. ச.
8 மத். உ. ச. ச தெச. இ. உ. உ பே. க. ய. வெளி. க. க: ஊ. யஇ.
9 மத். உ. ச: உஇ. ய௩. மற். ய௩. க. லூக். உக. ச, க: ச தெச. இ. க. உ பே. க. ய௨.
10 மத்.உ. ச: உஇ. உக. ச வெளி. ச. உ.

சஉ [1]எசமான் தனக்கு உண்டான எல்லாவற்றின்மேலும் அவனை வைப்பான் என்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சஎ [2]அந்த ஊழியக்காரன், என் எசமான் வரத் தாமதிக்கிறான் என்று தன் இருதயத்தில் எண்ணி, வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும் புசித்துக் குடித்து வெறிகொள்ளவும் தொடங்கினால்,

சஏ அந்த ஊழியக்காரன் நினையாத காலிலும் அறியாத நேரத்திலும் அவனுடைய எசமான் வந்து, அவனைத் துண்டித்துப்போட்டு,* உண்மையில்லாதவர்களுடனே அவனுக்குள்ள பங்கை ஏற்படுத்துவான்.

சஐ மிகுதியைப் பெற்றவன் எவனே, அவனிடத்தில் மிகவும் விசாரிக்கப்படும்; மிகுதியைப் பற்றிக்கொண்டவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்.

சஒ [3]ஆதலால் தன் எசமானுடைய சித்தத்தை அறிந்தும், எத்தனமாயிராமலும் அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும் இருக்கிற ஊழியக்காரன் அநேக அடிகளைப் பெற்றுக்கொள்வான்; ([4]சித்தத்தை)அறியாதவனாயிருந்து அடிகளுக்கு ஏற்றவைகளைச் செய்கிறவன் கொஞ்ச அடிகளைப் பெற்றுக்கொள்வான்.

சக ¶ [5]அக்கினியைப் பூமியின்மேல் போடவந்தேன்; அது இப்பொழுதே பற்றி எரியும்படிக்கு விரும்புகிறேன்.

சல [6]அதற்கு முன்னே நான் அடையவேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் நான் மிகவும் நெருக்கப்படுகிறேன். †

சன [7]நான் பூமிக்குச் சமாதானத்தைத் தரும்படிக்கே வந்தேன் என்றுநினைக்கிறீர்கள்? அதை அல்ல, [8]பிரிவினையைத் தரும்படிக்கு வந்தேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சப [9]எப்படியெனில், இதுமுதல் ஒரே குடும்பத்திலே ஐந்து பேர் பிரிந்திருப்பார்கள்; மூன்று பேர் இரண்டுபேருக்கும், இரண்டுபேர் மூன்றுபேருக்கும், விரோதமாய் இருப்பார்கள்.

சபக தகப்பன் மகனுக்கும், மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும், மகள் தாய்க்கும், மாமி தன் மருமகளுக்கும், மருமகள் தன் மாமிக்கும் விரோதமாகப் பிரிந்துபோவார்கள் என்றார்.

சபஉ ¶ [10]பின்பு அவர் சனங்களுடனே சொன்னது: நீங்கள் ஒரு மேகம் மேற்கிலே எழும்புகிறதைக் காண்கிற உடனே பெருமழை வரும் என்று சொல்லுகிறீர்கள்; அந்தப்படியேயும் ஆகும்.

சபஊ அல்லாமலும் தென்றல் அடிக்கிறதை நீங்கள் காண்கிறபொழுது, காங்கை உண்டாகும் என்கிறீர்கள்; அந்தப்படியேயும் ஆகும்.

சபஎ ஆவஞ்சகரே, பூமியின் உருவத்தையும் வானத்தின் உருவத்தையும் வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள்; இக்காலத்தைமாத்திரம் நீங்கள் வகையறுமல் இருக்கிறது எப்படி?

சபஏ ¶ அல்லாமலும் நியாயம் இன்னதென்று நீங்கள் உங்களாலே எண்ணிக்கொள்ளாமல் இருக்கிறதென்ன?

சபஐ [11]நீ உன் எதிராளியுடனே கூடத்துணையினிடத்துக்குப் போகிறபொழுது [12]அவனைவிட்டு நீங்கும்படிக்கு வழியிலே பிரயாசப்படுவாயாக; இல்லாவிட்டால் அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பாகக் கொண்டுபோவதும், நியாயாதிபதி உன்னைச் சேவகனுக்கு ஒப்புக்கொடுப்பான், சேவகன் உன்னைக் காவலில் போடுவான்.

சபஒ ‡நீ ஒரு காசாகிலும் குறையாமல் செலுத்துகிறவரைக்கும் அவ்விடத்திலிருந்து விடுதலையாக்

கி. பி. சுரு.

1 மத். உச. சள.
2 மத். உச. சஅ.
* அல்லது வெட்டிப்போட்டு. மத். உச. கெ.
3 ச மோ.உஇ.கூ. ஓமோ. உஇ.உ. போஎ.க.சக: உஇ. உஉ. அப். கூ. கூ. யாக் ச. மள.
4 க மோ. இ. மள. கஇமோ. க. மக.
5 இக. லச.
6 மத். உஅ. உஉ. மாற். உ. கஅ.
† அல்லது வருத்தப்படுகிறேன்.
7 மத்.உ.கச.சகூ. லச.
8 மீள. எ. க. போஎ. எ. சக: க. மக: உ. மகூ.
9 மத். உ. கஇ.
10 மத்.உகூ.உ.
11 லூக்.உஇ. அ. மத். இ. உஇ.
12 சங். கஉ க. சொ.இஇ.க.
‡ மாற்.கூ. சஉ.

Digitized by Google

கப்படமாட்டாயென்று உனக்கு பி. சூசூ.
குச் சொல்லுகிறேன் என்றார்.

யசூ. அதிகாரம்.

க. நிஸ்து கலிலேயர்முதலானவர்களுக்கு வந்த கேட்டை அறிவித்து, மற்றவர்கள் குணப்பட வேண்டுமென்று பிரசங்கித்தது. க. வெட்டப்பட்டனி கொடாத அத்திமரத்தை உவமை யாகக் காட்டினது. ஙக. கூனியாயிவ ஒரு ஸ்திரி யைக் குணமாக்கினது. ஙஎ. விருந்தைபின் உவமையிலும். புறாதாரின உவமையிலும், தம்மாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களின்இரு தயத்திலே சுடன்தேறும் நிரு வசனத்தின் வல்ல மையுள்ள கிரியைகளைக் காண்பித்து. ஙச கொடுக் கான வாசல்வழியாய்ப் பிரவேசிக்கப் போதித் து, ஙக. ஏரோதையும் எருசலேமையும் கடி த்துகொண்டது.

பிலாத்தென்பவன் சில கலிலேய ருடைய இரத்தத்தை அவர்களு டைய பலிகளுடனே கலந்திருந் தான்; அந்த கலிலேயனைக்குறித் து அவ்வேளையில்ல அங்கேயிருக் கிற சிலர் அவருடனே பேசிக் கொண்டார்கள்.

உ அவர்களுக்குப் பிரதியுத்தர மாக இயேசுவானவர் சொன்ன தாவது: அந்தக் கலிலேயர் அப்ப டிப்பட்டவைகளை அனுபவித்ததி னால், மற்றெல்லாக் கலிலேயரி லும் (அதிக) பாவிகளாயிருந்தார் கள் என்று நினைக்கிறீர்கள்?

ஊ அப்படி இல்லையென்று உங் களுக்குச் சொல்லுகிறேன்; நீங் கள் மனம்திருப்பாவிட்டால் எல் லாரும் அப்படிக் கெட்டுப்போ வீர்கள்.

ச அல்லாமலும் சீலோவாவிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப் பேரைக் கொன்றதே; எருசலே மில் குடியிருக்கிற மனிதர் எல்லா ரிலும் அந்தப் பதினெட்டுப்பே ரும் அதிக குற்றவாளிகளாய் *இ ருந்தார்கள்என்று நினைக்கிறீர்கள்?

ஙு அப்படி இல்லையென்று உங் களுக்குச் சொல்லுகிறேன்; நீங் கள் மனம்திருப்பாவிட்டால் எல் லாரும் அப்படிப்போலக் கெடு வீர்கள் என்றார்.

ஙூ ¶ அல்லாமலும் அவர் சொ ன்ன உவமையாவது: [1]ஒருவன்

* அல்லது உன் கார். மத். மஅ. உச.லூக் மக.ச. 1 எசா. ஙி. உ. மத். உக. மசு.

நிராட்சத்தோட்டத்தில் ஒரு அத் திமரத்தை நாட்டியிருந்தான்.

ஙவ பின்பு அவன் வந்து அதிலே கனியைத் தேடினபொழுது ஒன் றும் காணவில்லை, உடனே அ வன் தோட்டக்காரனை நோக்கி இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத்தேடி ருகிறேன் ஒன்றும் காணவில்லை; இதை வெட்டிப்போடு, நிலத்தை யும் இது என்னத்திற்குக் கெடுக்கி றது என்றான்

ஙஅ அதற்கு அவன் சொன்னது: ஐயா, நான் இதைச் சுற்றிக் கொத் து எருப்போடுகேன்; ஒருவேளை இது கனி கொடுக்கும்; இ யால் இது இந்தவருஷம்வரைக் கும் இருக்கட்டும்.

ஙக கனி கொடாதிருந்தால் நீ இனிமேல் இதை வெட்டிப்போ டலாம் என்று சொன்னான் என் றார்.

ஙஆ ¶ ஓர் ஓய்வுநாளில் அவர் ஒரு செபஆலயத்தில் போதகம்பண் ணிக்கொண்டு இருந்தபொழுது,

ஙக பதினெட்டு வருஷமாய்ப் பலவீனமாகச்செய்கிற ஆவியை யுடைய ஒரு ஸ்திரி அங்கே இ ருந்தாள், அவள் எவ்வளவும் நிமி ரக்கூடாத கூனியாயிருந்தாள்.

ஙஉ இயேசுவானவர் அவளைக் ண்டு தம்மிடத்தில் அழைத்து, ஸ்தி ரியே உன் பலவீனத்திலிருந் து விடுதலையாக்கப்பட்டாயென்று சொல்லி, [2]அவள்மேலே தமது கை களைவைத்தார்.

ஙஊ உடனே அவள் நிமிர்ந்து, பராபரனைத் துதிசெய்தாள்.

ஙச இயேசுவானவர் ஓய்வுநாளி லே குணமாக்கினதைச் செபஆ லயத்தலைவன் கண்டு விசனம டைந்து சனங்களை நோக்கி, [3]வேலைசெய்யும்படிக்கான ஆறு நாள் உண்டு; [4]அவைகளிலே நீங்கள் வந்து குணமாக்கிக்கொள் ளுங்கள்; ஓய்வுநாளிலே அப்ப டிச் செய்யக்கூடாதென்றான்.

2 மாற். மக. மஅ. அப். கூ. மக.

3 உலே. உஅ கூ.

4 மத்.மஉ.ம மாற். க. உ. லூக். க. எ: மச. க.

Digitized by Google

கி. பி. ஈஈ.

ஙடு அவனுக்கு மாறுத்தரமாகக் கர்த்தர் சொன்னது: வஞ்சகனே, [1]உங்களில் எவனுனுலும் தன் எருதை அல்லது தன் கழுதையை ஓய்வுநாளிலே தொழுவிலிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய் அதற் குத்தண்ணீர்காட்டுகிறதில்லையா?

ஙசு அதுபோல ஆபிரகாமின் சந்ததியில் பதினெட்டு வருஷம் சாத்தானுலே கட்டப்பட்டிருக் கிற [2]இவளை ஓய்வுநாளிலே அந்தச் சங்கிலியிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா என்றார்.

ஙஎ அப்படி அவர் சொன்ன பொழுது, அவனை விரோதித் திருந்த அனைவரும் வெட்கப்பட் டார்கள்; அல்லாமலும் சனங்கள் யாவரும் அவர் செய்த மகிமையா ன செய்கைகளைக்குறித்துச் சந் தோஷப்பட்டார்கள்.

ஙஅ ¶ [3]பின்பு அவர் சொன்னது: பராபரனுடைய இராச்சியம் எ தற்கு ஒப்பாயிருக்கின்றது? அதை தற்கு நிகர்சொல்வேன்?

ஙக அது ஒரு கடுகுவிதைக்கு ஒப்பாயிருக்கின்றது; (எப்படி யெனில்) ஒரு கடுகை ஒரு மனி தன் எடுத்துத் தன் தோட்டத்தில் போட்டான்; அது வளர்ந்து பெ ரியசெடியாயிற்று; அப்பொழுது ஆகாசத்துப் பறவைகள் அதின் கினைகளில் கூடுகட்டின என்றார்.

ஙஉ ¶ அன்றியும் அவர் சொன் னது: பராபரனுடைய இராச்சி யத்தை எதற்கு நிகர்சொல்வேன்?

ஙக அது புளிப்புள்ள மாவுக்கு ஒப்பாயிருக்கின்றது; எப்படியெ னில் அதை ஒரு ஸ்திரி எடுத்து* மூன்று மரக்கால் மா முழுவதும் புளிப்படையத்தக்கதாக அதிலே அடைத்துவைத்தாள் என்றார்.

ஙஈ ¶ [4]அன்றியும் அவர் எருச லேமுக்குப் பிரயாணமாய்ப் போ கிறபொழுது, பட்டணங்கள்தோ றும் கிராமங்கள்தோறும் போய் உபதேசம்பண்ணினார்.

1 லூக். மை. ஐ.
2 லூக். ஙக. க.
3 மத். ஙக. கக. மாற். ச. கம்.
* மத். ஙக. கக.
4 மத். க. ஙஐ. மாற். க. க.
5 மத் எ. ஙக.
6 பேரை. எ. கச: அ. உக: ஙக கக. உரோ. க. கக.
7 சங். கஉ. க. ஏசா. ஙஐ. க.
8 மத். உஐ. ஙு.
9 லூக். க. ச க.
10 மத். எ. உக: உஐ. ஙஉ.
11 மத். எ. உக: உஙு: ச க. உஐ. ஙச.
12 சங். க அ. மத். உஐ. ச க.
13 மத். அ. ஙக.
14 மத் அ ஙஉ: ஙக. ச உ: உச. ஙக.

ஙஉ ¶ அப்பொழுது ஒருவன் அவனை நோக்கி ஆண்டவரே. சி லபேர்மாத்திரந்தான் இரட்சிக்கப் படுவார்களோ என்றான்.

உச ¶ அதற்கு அவர் சொன்ன து: [5]இடுக்கமான வாசலின் வழி யாய்ச் (சீவனில்) பிரவேசிக்க மிகவும் பிரயாசப்படுங்கள்; [6]என் னத்தினாலெனில், அநேகர் உட் பிரவேசிக்கத் தேடினாலும் பிர வேசிக்கமாட்டார்கள் என்று உங் களுக்குச் சொல்லுகிறேன்.

உடு [7]வீட்டெசமான் எழுந்தி ருந்து கதவைப் பூட்டின பின்பு, [8]நீங்கள் வெளியே நின்று [9]கதவி லே தட்டி ஆண்டவரே, ஆண் டவரே, எங்களுக்குத் திறக்கவே ண்டும் என்று கூப்பிடத்தொடங் கும் காலத்திலே [10]அவர், நான் உங்களை அறியேன் என்றும் நீங் கள் விட்டுவந்த இடத்தை அறிய மாட்டேன் என்றும் உங்களுட னே சொல்லும்பொழுது

உசு நீங்கள் உமக்கு முன்பாகப் போசன பானம்பண்ணினோமே நீர் எங்கள் வீதிகளிலே போதகம் பண்ணினீரே என்று சொல்லுவீர் கள்.

உஎ [11]ஆனாலும் அவர் சொல்வ து: உங்களை அறியேன்; நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியேன்; [12]அக்கிரமக்காரராகிய நீங்கள் எல் லாரும் என்னைவிட்டுப்போங்கள் என்று சொல்லுவார் என்று உங் களுக்குச் சொல்லுகிறேன்.

உஅ [13]நீங்கள் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களையும் சக ல தீர்க்கதரிசிகளையும் பராபரனு டைய இராச்சியத்தில் உள்ளவர் கள் என்றும் உங்களைப் புறம்பே தள்ளப்பட்டவர்கள் என்றும் கா ணும்பொழுது, [14]உங்களுக்கு அ ழுகையும் பற்கடிப்பும் உண்டா யிருக்கும்.

உக அன்றியும் கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலுட, தெற்கி லுமிருந்து சனங்கள்வந்து பராபர

Digitized by Google

ஜடைய இராச்சியத்தில் பந்தியிருப்பார்கள்.

ரூய [1]அப்பொழுது பிந்தினோர் முந்தினோராய் இருப்பார்கள்; முந்தினோர் பிந்தினோராவார்கள் என்றார்.

ரூக ¶ அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்தில் போய், ஏரோதே உம்மைக் கொலைசெய்ய மனதாயிருக்கிறான்; ஆகையால் நீர் இவ்விடத்தை விட்டுப் போக வேண்டும் என்றார்கள்.

ரூஉ அவர்களுடனே அவர் சொன்னது: நீங்கள் போய் இன்றைக்கும் நாளைக்கும் நான் பசாசுகளைத் துரத்தி ஆரோக்கியங்களைச் செய்து முடித்து, [2]மூன்றாம் நாளில் நிறைவடைவேன்.

ரூங முக்கியமாக எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்க்கதரிசி மடிந்து போகிறது வழக்கமல்லாத படியால், நான் இன்றைக்கும் நாளைக்கும் பின் வருகிற நாளிலேயும் இவ்விடங்களில் நடக்க வேண்டியதாய் இருக்கின்றதென்று அந்த நரிக்குச் சொல்லுங்கள்.

ரூச [3]எருசலேம் பட்டணமே, எருசலேம் பட்டணமே, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்கள் மேல் கல்லெறிந்து தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறாயே; ஒரு கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே சேர்த்துக்கொள்ளுகிற விதமாய் நான் அநேகம்தரம் உன் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றிருந்தேன், நீங்கள் வரமாட்டோம் என்கிறீர்கள்.

ரூரு (ஆதலால்) [4]உங்கள் வாசஸ்தலம் உங்களுக்குப் பாழாக விடப்படும்; அல்லாமலும் [5]நீங்கள் பராபரனுடைய நாமத்தினால் வருகிறவர் தோத்திரம் செய்யப்படத்தக்கவர் என்று சொல்லும் காலபரியந்தம் என்னைக் காணமல் இருப்பீர்கள் என்றார்.

வி. பி. ரூரு.

1 மத். ரசு. கல: உற. மெ. மாற். ர. கச.
2 எபி. உ. ச.
3 மத். உக. க.
4 க மோ. உக. கக, கஉ. சங். கக. உஇ. ஸா. க. எ. தானி. க. உஎ. மீகா க. மஉ.
5 சங். சஅ.உக. மத்.உக.க.மாற். மக. ர. லூக்.க. கஅ. போவா. மஉ. மக.

6 மத். மஉ. ர.

7 உ மோ. உக.இ. இ.மோ.உஉ.ச. லூக். மக. ரஇ.

யச. அதிகாரம்.

ச. நிறைந்த நீர்க்கோவையுள்ள ஒருவனை முப்பாலிலே குணமாக்கினது. எ. தாழ்மையாய் நடக்கவேண்டுமென்றும், உ. எளியவர்களுக்கு தர்மஞ்செய்யவேண்டுமென்றும் தெரித்தது. ஙக. பாபாலுடைய மனைவியை அப்போஸ்தலன்மூலமாய் மறு லோகத்திலிருந்த மனிதன் பாவண்டலத்தில் பிரவேசிக்கக் கூடாதவைப் பெரியவர்த்தின் உவமையிலே சொல்லியிருக்கிறது. உஇ. சிலுவையைச் சுமந்து நம்முடைய சேஷ்டனாய் இருக்கவேண்டியவர்கள் வெட்கத்துடன் பின் வாங்கிப் போய், ஙச. சாமற்ற உப்பைப்போல அபிரோசனமுள்ளவர்களாய் இராதபடிக்கு முன்னடியாய் சற்குணத்தையும் பயத்தையும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது.

ஒரு ஓய்வுநாளில் அவர் பரிசேயருக்குள்ளே தலைவரானவர்களில் ஒருவனுடைய வீட்டிலே போசனம்பண்ணும்படிக்குப் போகிற பொழுது,

உ பாண்டுவியாதியுள்ள ஒரு மனிதன் அவருக்கு முன்பாக நிற்கையில், அவர்கள் அவனை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ரூ அப்பொழுது இயேசுவானவர் நியாயசாஸ்திரிகளையும் பரிசேயரையும் நோக்கி, [6]ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமா என்றார்.

ச அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; அப்பொழுது அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கி,

ஞ அனுப்பிப் பின்பு அவர்களுடனே சொன்னது: [7]உங்களில் எவனுக்காவது தன் கழுதையாவது எருதாவது ஓய்வுநாளில் ஒரு கிணற்றிலே விழுந்தால், உடனே அதைத் தூக்கிவிடானோ என்றார்.

சு அதற்கு மாறுத்தரம் சொல்ல அவர்கள் திராணியில்லாதிருந்தார்கள்.

எ ¶ விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில் முதல் இடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்த்து, அவர்களுக்கு உவமையாய்ச் சொன்னது:

அ நீ ஒருவனால் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டபொழுது, பந்தியில் முதல் இடத்தில் உனக்கா

Digitized by Google

ரதிரு? என்னத்திலுலென்றால் உன்னிலும் அதிகனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்க, க உன்னையும் அவனையும் அழைத்தவன் உன்னிடத்தில்வந்து, இவருக்கு இடங்கொடும் என்று சொல்ல, நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்தில் போயிருக்கவேண்டியதாய் இருக்கும்.

ய ஆகையால் [1]நீ அழைக்கப்பட்டபொழுது, நீ போய்த் தாழ்ந்த இடத்தில் உனக்காருவாயாக; அப்பொழுது உன்னை அழைத்தவன் உன்னிடத்தில் வந்து, சிநேகிதனே, மேலான இடத்தில் போபிரும் என்று சொல்ல, பந்தியில் இருக்கிறவர்களுக்குமுன்பாக உனக்குக் கனமுண்டாகும்.

ரக [2]அப்படிக்கு எவன் தன்னை உயர்த்துகிறானே அவன் தாழ்த்தப்படுவான்; எவன் தன்னைத் தாழ்த்துகிறானே அவன் உயர்த்தப்படுவான் என்றார்.

ரஉ ¶ அல்லாமலும் அவர் தம்மை விருந்துக்கு அழைத்தவனுடனே சொன்னது: நீர் பகல்விருந்தை அல்லது இராவிருந்தைப்பண்ணுகிறபொழுது, உமது சிநேகிதனையும் சகோதரனையும் மற்ற இனத்தானையும் ஐசுவரியமுள்ளபிறனையும் அழைக்கக் கூடாது; அழைத்தால் அவர்களும் உம்மை அழைப்பார்கள்; அதினாலே உமக்குப் பதில் பலன் உண்டாகும்.

ரக நீர் விருந்து பண்ணும்பொழுது, [3]ஏழைகள், ஊனர், சப்பாணிகள், குருடர், இப்படிப்பட்டவர்களை அழைப்பீராக.

ரச அப்பொழுது அவர்கள் உமக்குப் பதில்கொடுக்கத் திராணியில்லாதபடியால் நீர் பாக்கியராயிருப்பீர்; நீதிமான்கள் உயிரோடு எழுந்திருக்கும் காலத்திலே உமக்குப் பதில் அளிக்கப்படும் என்றார்.

ரஞ ¶ அவரோடேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன் இந்த வசனங்களைக் கேட்டபொழுது, அவன் அவனை நோக்கி, [4]பராபரனுடைய இராச்சியத்தில் போசனம்பண்ணுகிறவன் பாக்கியவான் என்றான்.

ரசு அதற்கு அவர் சொன்னது: [5]ஒரு மனிதன் பெரிய விருந்து பண்ணி,

ரஎ அநேகரை அழைத்து, விருந்துவேளையிலே தன் ஊழியக்காரனை நோக்கி, [6]நீ அழைக்கப்பட்டவர்களிடத்திற்குப் போய், சகலமும் எத்தனமாயிற்று, ஆகையால் வாருங்களென்று சொல் என்று அனுப்பினான்.

ரஅ அப்பொழுது அவர்கள் எல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள்; ஒருவன் சொன்னது: ஒரு வயல்நிலத்தைக் கொண்டேன், நான் போய் அதைப்பார்க்க அவசியமாயிருக்கின்றது; ஆகையால் எனக்கு மன்னிக்கவேண்டும் என்று உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

ரக வேறொருவன் சொன்னது: ஐந்து ஏர்மாடு கொண்டேன், அவைகளை நான் போய்ச் சோதிக்கவேண்டும், ஆகையால் எனக்கு மன்னிக்கும்படிக்கு உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

ரஉ வேறொருவன் சொன்னது: பெண்ணை விவாகம்பண்ணினேன், அதினாலே நான் வரக்கூடாது என்றான்.

ரஉ பின்பு அந்த ஊழியக்காரன் வந்து, அவைகளைத் தன் எசமானுக்கு அறிவித்தான்; அப்பொழுது வீட்டெசமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனைநோக்கி, நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின்தெருக்களிலும் வீதிகளிலும் போய், தரித்திரரையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே அழைத்துக்கொண்டுவா என்றான்.

ரஉ அந்தப்படி ஊழியக்காரன் அழைத்து வந்து, ஆண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று,

ஐ. பி. ஈஊ.

1 லூக். உடு. க, எ.

2 போபு. உஉ. உக. சங். ூஅ. உஎ.லூக். உக. உக. மத். உக. ஊ. லூக். ூஅ. ஆ. மாக். ச. க. க பே. ஐ. ஐ.

3 ெலே. அ. ஏ, ஊ.

4 வெளி. ஈஈ. க.

5 மத். உஉ. உ.

6 லூக். க.உ,ஐ.

உசு பின்னும் இடம் உண்டு என்றான்; அப்பொழுது எசமான் ஊழியக்காரனுடனே சொன்னது: நீ வழிகளிலேயும் வேலிகள் அருகேயும் புறப்பட்டுப்போய், என் வீடுநிறைய வரும்படிக்குச் சனங்களை வருந்திக் கூட்டிக்கொண்டுவா.

உச அழைக்கப்பட்டிருந்த [1]அந்த மனிதரில் ஒருவராகிலும் என்னுடைய விருந்தை ருசி பார்ப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றான் சொன்னான் என்றார்.

உடு ¶ பின்பு அநேக சனங்கள் அவரோடேகூடப் பிரயாணமாய்ப் போகையில், அவர் திரும்பிப் பார்த்து அவர்களுடனே சொன்னதாவது:

உசு [2]ஒருவன் என்னிடத்தில் வந்தும் [3]தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரனையும், சகோதரிகளையும், [4]தன் சுயசீவனையும் பகையாவிட்டால் என் சீஷனாய் இருக்கமாட்டான்.

உஎ [5]அல்லாமலும் தன் சிலுவை மரத்தைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் என் சீஷனாய் இருக்கமாட்டான்.

உஅ [6]உங்களில் எவனாவது ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்தால் தான் அஸ்திபாரம் போட்டபின்பு, அதை முடியக் கட்டுகிறதற்குத் திராணியில்லாமல் இருக்கும்பொழுது,

உக அதைப் பார்க்கிறவர்கள் எல்லாரும், இந்த மனிதன் கட்டத் தொடங்கி முடிக்கிறதற்குத் திராணி இல்லை என்று தன்னைப் பரியாசம்பண்ணுதபடிக்கு,

ஊய அவன் முன்பு உளுக்காந்து அதைக் கட்டித் தீர்க்கிறதற்குத் திராணியுண்டா இல்லையா என்று அறியும்படி, செல்லும்செலவைக் கணக்குப் பார்க்காமல் இருப்பானே?

ஊக அல்லது, எந்த இராசாவானாலும் மற்றொரு இராசனுடனே யுத்தம்செய்யப் போகிறதற்கு முன்பு, உனக்காந்து தனக்கு விரோதமாய் இருபதினாயிரம் சேவகரைக் கொண்டுவருகிறவனோடே பதினாயிரம் சேவகரைக்கொண்டு எதிர்க்கக்கூடுமா கூடாதா என்று ஆலோசனைபண்ணாமல் இருப்பானே?

ஊஉ கூடாதென்று அறிந்தால், அவன் தூரத்தில் இருக்கையில், தானாதிபதிகளை அனுப்பிச் சமாதானத்துக்காகக் கேட்டுக்கொள்ளும்படிக்கு (அப்படிச் செய்வான் அல்லவா?)

ஊஊ அதுபோல உங்களில் எவனாவது தனக்கு உண்டான எல்லாவற்றையும் வெறுத்துவிடாவிட்டால் என் சீஷனாய் இருக்கமாட்டான்.

ஊச ¶ [7]உப்பானது நல்லதுதான்; உப்பானது சாரம் அற்றுப்போனால், எதினாலே அது சாரமாக்கப்படும்?

ஊடு அது நல்ல நிலத்திலாகிலும் எருவிலாகிலும் போடப்படத்தக்கதல்ல; அதை வெளியே கொட்டிப்போடுவார்கள்; கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார்.

ழடு. அதிகாரம்.

க. காணாமற்போன ஆட்டையும், அ. காணாற்போன பணத்தையும், ங. கெட்டுப்போன குமாரனையும் உவமையாகச் சொன்னது.

[8]அன்றியும் சகல ஆயக்காரரும் பாவிகளும் அவருடைய வசனங்களைக் கேட்கும்படிக்கு அவரிடத்தில் சேர்ந்தார்கள்.

உ அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் மொறுமொறுத்து, இவர் [9]பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே சாப்பிடுகிறார் என்றார்கள்.

ஊ அவர்களுடனே அவர் சொன்ன உவமையாவது:

சு ¶ [10]உங்களில் யாவனாவது தனக்கு உடைமையான தூறாடு

1 மத். உக. சக: உஉ. அ. அப். ங. சக.
2 ஞ மோ. ஙக.க: ஊக. க. மத். உ. ஞ.
3 உசர. க. ஙக.
4 லெவி. ஙஉ.ங.
5 மத். ங. உச. மாற். அ. கச. லூக். க. உக. உதிமோ.க.ஙஉ.
6 லூக்.உச.உஎ.
7 மத். இ. ங. மாற். க. இஙி.
8 மத். க. உ.
9 அப். ஙக. க. கலா. உ. ஙஉ.
10 மத். ஙஅ. ஙஉ.

Digitized by Google

களில் ஒன்றை இழந்தால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுப்போய், இழந்ததைக் கண்டுபிடிக்கும் பரியந்தம் தேடாமல் இருப்பானே?

ஙி கண்டுபிடித்தபின்பு, அவன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்களின்மேல் ஏற்றிக்கொண்டு வீட்டுக்கு வந்தபொழுது,

ச சிநேகிதரையும் அயலாரையும் கூட வரவழைத்து, காணுமல் போன [1]என் ஆட்டைக் கண்டுபிடித்தேன்; ஆகையால் என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பான் அல்லவா?

ஏ அதுபோல [2]மனம்திருப்ப அவசியப்படாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களிலும், மனம்திருப்புற ஒரே பாவியைக்குறித்துப் பரமண்டலத்தில் உள்ளவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

அ ¶ அல்லது பத்துத் திராகுமா *பணத்தை உடைய பெண் எவனாலும் ஒரு திராகுமாவை இழந்தால், விளக்கைக் கொளுத்தி வீட்டைப் பெருக்கி அதைக் கண்டுபிடிக்கும்பரியந்தம் நன்றாய்த் தேடாமல் இருப்பாளா?

கூ கண்டுபிடித்த பின்பு அவள் சிநேகிதரையும் அயல்வீட்டுக்காரிகளையும் கூட வரவழைத்து, நான் இழந்த திராகுமாவைக் கண்டுபிடித்தேன்; ஆகையால் என்னோடேகூடச் சந்தோஷப்படுங்கள் என்பாள் அல்லவா?

கி அதுபோல மனம்திருப்புகிற ஒரே பாவியைக்குறித்துப் பராபரனுடைய தூதருக்குமுன்பாகச் சந்தோஷம் உண்டாயிருக்கின்றதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கக ¶ பின்னும் அவர் சொன்னதாவது: ஒருமனிதனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

கஉ அவர்களில் [3]இளையவன் தகப்பனை நோக்கி, தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கைத் தரவேண்டும் என்றான்; அந்தப்படி அவன் அவர்களுக்குப் பொருளைப் பங்கிட்டான்.

கங சிலநாளுக்குப் பின்பு இளையமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு தூரதேசத்திற்குப் பிரயாணமாய்ப் போய், அங்கே கெட்ட மார்க்கமாய்ச் சீவனம் பண்ணித் தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான்.

கச எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு, அத்தேசத்திலே மிகுந்த பஞ்சகாலம் உண்டாயிற்று; அப்பொழுது அவனுக்குக் குறைவுவரத் தொடங்கினபடியினாலே,

கடு அவன் போய், அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனைச் சேர்ந்துகொண்டான்; அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களிலே பன்றிகளை மேய்க்கும்படிக்கு அனுப்பினான்.

கஎ அப்பொழுது பன்றிகள் தின்னுகிற தவிடுகளினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான்; அவற்றையும் ஒருவனும் அவனுக்குக் கொடுக்கவில்லை.

கஏ அப்படியிருக்கும் காலத்தில் அவன் புத்தியடைந்து சொன்னதாவது: ஆ என் தகப்பனிடத்திலே எத்தனை கூலிக்காரர் மிகுந்த உணவை உடையவர்களாய் இருக்கிறார்கள்; நான் இங்கே பசியினாலே கெட்டுப்போகிறேன்.

கஐ அ நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவம்செய்தேன்.

கக இதுமுதல் நான் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுவதற்கு அபாத்திரனாய் இருக்கிறேன்; உம்முடைய கூலிக்காரரில் ஒருவனைப்போலஎன்னை வைத்துக்கொள்ளும் என்றுசொல்லவேண்டும் என்றெண்ணி,

லூ. பி. ஈகூ.

1 ✠ பே. உ ஆ, உஇ.

2 லூக். இ. உஉ.

* அல்லது ஏழைப் பேனிக்கு, அல்லது உரோமருடையஒரு பேனிக்குச் சரியான அரைக்தால் அளந்த வெள்ளி. மத். உஅ. உஅ.

3 மத். உஉ. உஎ.

உய எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்திற்குப் போனான்; [1]அப்பொழுது அவன் தூரமாய் இருக்கையில் தகப்பன் அவனைக் கண்டு, உருக்கமாய் இரங்கி ஓடி வந்து, அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தம் செய்தான்.

உக குமாரன் அவனை நோக்கி, [2]தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் விரோதமாய்ப் பாவம் செய்தேன்; இதுமுதல் உம்முடைய குமாரன் என்று அழைக்கப்படுவதற்கு நான் பாத்திரன் அல்லவென்று சொன்னபொழுது,

உஉ தகப்பன் தன் வேலைக்காரரைநோக்கி, நீங்கள் (போய்) முக்கியமான வஸ்திரத்தைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்தி, இவனுடைய கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் கொடுத்து,

உஊ பின்பு கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடித்துச் சமையுங்கள்.

உச [3]என் குமாரனாகிய இவன் மரித்தான், மறுபடியும் உயிரோடிருக்கிறான்; இவன் காணாமல் போனான், இப்பொழுது காணப்பட்டான்; ஆகையால் நாம் புசித்து மகிழ்ச்சியாய் இருக்கக்கடவோம் என்றான்; அந்தப்படி அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

உடு அவனுடைய மூத்த குமாரன் வயலில் இருந்தான்; அவன் திரும்பி வீட்டுக்குச் சமீபமாய்வந்தபொழுது, கீதவாத்தியத்தையும் நடனக்களிப்பையும் கேட்டு,

உசு வேலைக்காரரில் ஒருவனை அழைத்து, இதென்ன என்று விசாரித்தான்.

உஎ வேலைக்காரன் அவனை நோக்கி, உன் சகோதரன் வந்தான்; உன் தகப்பன் அவனைச் சுகத்தோடே திரும்பப் பெற்றுக்கொண்டபடியினாலே கொழுத்த கன்றை அடிப்பித்தான் என்றான்.

உஅ அப்பொழுது அவன் கோபம் அடைந்து, உள்ளேபோக மனதில்லாதிருந்தான்; ஆதலால் தகப்பன் வெளியே வந்து, அவனை மிகவும் வேண்டிக்கொண்டு அழைத்தான்.

உக அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னது: இவ்வளவு வருஷம் நான் உமக்கு ஊழியம்செய்து, உமது கற்பனையை ஒருக்காலும் மீறி நடக்கவில்லை; அப்படியிருந்தும் நான் என் சிநேகிதரோடே மகிழ்ச்சியாய் இருக்கும்படிக்கு ஒருக்காலும் நீர் ஒரு ஆட்டுக்குட்டியை எனக்குக் கொடுக்கவில்லையே.

ஊய உம்முடைய பொருள்களை வேசிகளோடே பட்சித்த உமது குமாரனாகிய இவன் வந்தபொழுது, கொழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீர் என்றான்.

ஊக அதற்குத் தகப்பன் சொன்னது: மகனே, நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய்; அல்லாமலும் எனக்கு உண்டான யாவும் உன்னுடையவைகளாய் இருக்கின்றன.

ஊஉ [4]உன் சகோதரனாகிய இவன் மரித்தான், மறுபடியும் உயிரோடிருக்கிறான்; காணாமல்போனான், (இப்பொழுது)காணப்பட்டான்; ஆனபடியினாலே நாம் மகிழ்ச்சியாகிக் களிப்படையவேண்டுமே என்று சொன்னான் என்றார்.

1 அப். உ. உக. எபே. உ. ஙஉ, ஙஎ.

2 சங். ஙெ. ச.

3 உஉ.ஙச. எபே. உ. க: இ. ம்ச. கொலோ. க. க.

4 உச. ஙச.

யசூ. அதிகாரம்.

க. அநீதியுள்ள உத்தியோகஸ்தனுக்குரித்தான உவமை. உச. பிறிதொரு பொருளாசையும் வஞ்சனையும் உள்ள பரிசேயனைக் குறித்தது. ஙக. ஐசுவரியவானும் ஏழையான இலாசருவையுங்குறித்த உவமை.

அன்றியும் அவர் தம்முடைய சீஷரோடு சொன்னதாவது: ஐசுவரியமுள்ள மனிதனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான்; அவன் எசமானுடைய ஆஸ்திகளை

அழிக்கிறதாக அவனுக்கு அறிவித்தார்கள்.

உ அப்பொழுது எசமான் அவனை அழைத்து, உன்னைக்குறித்து நான் இப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன்; நீ இனிமேல் உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது; ஆகையால் உன் உக்கிராணக்கணக்கைக் கொடு என்றான்.

ஊ அப்பொழுது உக்கிராணக்காரன் தனக்குள்ளே எண்ணிக்கொண்டதாவது: என் எசமான் உக்கிராண விசாரிப்பை என்னிலிருந்து எடுத்துக்கொண்டிருக்கிறபடியினாலே என்ன செய்யலாம்? (நிலம்) கொத்துகிறதற்குப் பெலன் இல்லை; இரக்க வெட்கமாயிருக்கின்றது.

ச உக்கிராண விசாரிப்பை விட்டுத் தள்ளப்படும்பொழுது, என்னைத் தங்கள் வீடுகளில் சேர்த்துக்கொள்ளுகிறதற்கான (சிநேகிதர்கள்) உண்டாகும்படிக்குச் செய்யவேண்டிய வகை தெரியவந்தது என்று எண்ணி,

ஙி தன் எசமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒருவன் ஒருவனாக அழைத்து, முதலாவது வந்தவனை நோக்கி, நீ என் எசமானிடத்தில் பட்டகடன் எவ்வளவு என்றான்; அதற்கு அவன், நூறுகுடம்* எண்ணெய் என்றான்.

ச அப்பொழுது உக்கிராணக்காரன் அவனைநோக்கி, நீ உன் சீட்டை எடுத்துச் சீக்கிரமாய் உளுக்காந்து, ஐம்பது என்று எழுது என்றான்.

எ பின்பு அவன் வேறொருவனை நோக்கி, நீ பட்டகடன் எவ்வளவு என்றான்; அதற்கு அவன், நூறு கலன்†கோதுமை என்றான்; அப்பொழுது உக்கிராணக்காரன் அவனைநோக்கி, நீ உன் சீட்டை எடுத்து எண்பது என்று எழுது என்றான்.

அ அநீதியுள்ள உக்கிராணக்காரன் விவேகமாய்ச் செய்தபடியினாலே எசமான் அவனைப் புகழ்ந்தான்; [1]இவ்விதமாய் ஒளியின்பிள்ளைகளிலும் இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக விவேகமாய் இருக்கிறார்கள்.

கூ ¶ நானும் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [2]நீங்கள் மாளும்பொழுது, உங்களை நித்தியமான வீடுகளில் சேர்த்துக்கொள்ளும்படிக்குக் கபடமுள்ள லவுகீகப் பொருளால்‡ உங்களுக்காகச் சிநேகிதனைச் சம்பாதியுங்கள்.

ய [3]கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலேயும் உண்மையுள்ளவனாய் இருப்பான்; கொஞ்சமாய் அநீதி செய்கிறவன் அநேகமாயும் அநீதி செய்வான்.

யக அப்படியிருக்க நீங்கள் கபடமுள்ள லவுகீகப் பொருளிலே§ உண்மை இல்லாமல் இருந்தால், மெய்யான பொருள்களை உங்களுக்கு யார் நம்பிக்கையோடே ஒப்புவிப்பார்கள்?

யஉ அல்லாமலும் நீங்கள் மற்றொருவனுடையதை உண்மையில்லாமையாய் நடத்தினால், உங்களுக்குச் சொந்தமாக எதையாகிலும் யார் உங்களுக்குக் கொடுப்பார்கள்?

யஊ [4]எந்த வேலைக்காரனாலும் இரண்டு எசமான்களுக்கு அடிமைசெய்யமாட்டான்; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப்பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்; நீங்கள் பராபரனுக்கும் லவுகீகப் பொருளுக்கும் அடிமையாய் இருக்கமாட்டீர்கள் என்றார்.

யச ¶ [5]பணத்தின்மேல் ஆசையுள்ளவர்களாகிய பரிசேயரும் இந்த வசனங்கள் யாவையும் கேட்டு அவனைக்குறித்துப் பரியாசம்பண்ணினார்கள்.

யடு அப்பொழுது அவர் அவர்களைநோக்கி, [6]நீங்கள் மனிதர்முன்பாக உங்களை நீதிமான்கள் என்று

---

* ஐந்நூறு மாக்கால் கொள்ளத்தக்க ஓர் அளவு. எசே. சஅ. ப, கூ, டூ.

† இந்தக்கலம்பன்னிரண்டு மாக்கால் கொண்டதாயிருந்தது அந்தேசத்தில் வழங்கின ஏக்குறைய கூ – மாக்கால் கொள்ளத்தக்கதலமென்றறிக.

‡ அல்லது மம்மோன்.

§ அல்லது மம்மோன்.

1 போவா. டூ. கூ. எபே. இ. அ. சதெச. இ. இ.

2 தானி. ச. உஎ. மத். கூ.டூகூ: டூகூ. உஎ. லூக். டூகூ. சக. சநீமோ. கூ.டூஎ, டூஅ, டூகூ.

3 மத். உஇ. உக. லூக். டூகூ. டூஎ.

4 மத். க. உச.

5 மத். உக. டூச.

6 லூக். ப. உக.

Digitized by Google

கி. பி. ஈஊ.

காண்பிக்கிறீர்கள்; [1]ஆனாலும் பராபரன் உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; [2]மனிதருக்குள்ளே மேன்மையாய் எண்ணப்பட்டிருக்கிறது பராபரனுக்கு முன்பாக அருவருப்பாய் இருக்கின்றது.

ஙசு [3]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளுடைய பிரமாணங்களும் யோவான்வரைக்கும் சென்றன; அதுமுதல் பராபரனுடைய இராச்சியம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகின்றது; யாவரும் வலுமையாய் அதற்கு உட்படுகிறார்கள்.

ஙஎ [4]வானமும் பூமியும் ஒழிந்துபோகிறது எளிதாயிருந்தாலும், வேதப்பிரமாணத்தில் ஒரு எழுத்தின் உறுப்பும்கெட்டுப்போகாது.

ஙஅ [5]தன் மனைவியைத் தள்ளி வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரம்செய்கிறான்; புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரம்செய்கிறான்.

ஙக ¶ அன்றியும் ஐசுவரியமுள்ள ஒரு மனிதன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் மெல்லிதான உடையும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

உய அல்லாமலும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரன் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்த தேகமுள்ளவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலின் அருகே கிடந்து, அவனுடைய பந்தியிலிருந்து விழும் உச்சிட்டங்களாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்.

உக அதுவுமல்லாமல் நாய்கள் வந்து அவனுடைய பருக்களை நக்கும்.

உஉ பின்பு அந்தத் தரித்திரனவன் மரித்துத் தேவதூதரால் ஆபிரகாமினுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான்.

1 சங். எ. க.
2 கசாமு. ஙக. எ.

3 மத். சு. ஙஎ: ஙக. ஙஉ, ஙஎ. லூக். எ. உக.

4 சங். சஉ. உக, உஎ. எசா. சஅ. அ: ஙக. க. டீத். இ. ஙஅ. க பே. க. உஇ.

5 மத். இ. கஉ: ஙசு. க. மாற். ட. ஙக. க கொரி. எ. ஙஅ, ஙக.

6 எசா. கசு. உச. மாற். சு. சச. டீ.
7 சகரி. ஙச. ஙஉ.
8 யோபு. உக. ஙக. லூக். சு. உச.

உக பின்பு அவன் நரகத்திலே வேதனைப்படுகிறபொழுது தன் கண்களை உயர்த்தித் தூரத்திலே ஆபிரகாமையும் அவனுடைய மடியிலே இலாசருவையும் கண்டு,

உச தகப்பனாகிய ஆபிரகாமே, இந்தச் [6]சுவாலையிலே மிகுந்த வேதனைப்படுகிறேன்; [7]ஆகையால் நீர் என்மேல் இரங்கி இலாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரிலே தோய்த்து, என்னுடைய நாவைக் குளிரப்பண்ணும்படிக்கு அவனை அனுப்பவேண்டும்என்று கூப்பிட்டான்.

உஇ அதற்கு ஆபிரகாம் சொன்னது: [8]மகனே, நீ பூமியிலே உயிரோடிருந்த காலத்திலே, உன் நன்மைகளைப் பெற்றுக்கொண்டாயே; இலாசருவும் அப்படியே தன் நன்மைகளைப் பெற்றுக்கொண்டான்; அதை நினைத்துக்கொள்; இப்பொழுது இவன் தேற்றப்படுகிறான், நீ வேதனைப்படுகிறாய்.

உசு அதுவுமல்லாமல் இவ்விடத்தைக் கடந்து உங்களிடத்துக்கு வரவும், அல்லது அவ்விடத்தைக் கடந்து எங்களிடத்துக்கு வரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்றதே என்றான்.

உஎ அதற்கு அவன் சொன்னது: தகப்பனே, அப்படியானால் (பூமியிலே) எனக்கு ஐந்துபேர் சகோதரர் உண்டு; அவர்களும் வேதனையுள்ள இவ்விடத்துக்கு வராதபடிக்கு இவன் போய், அவர்களுக்கு (இதைக்குறித்துச்) சாட்சி கொடுக்கும்பொருட்டாய்,

உஅ இவனை என் தகப்பனுடைய வீட்டுக்கு அனுப்பும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

Digitized by Google

உக அதற்கு ஆபிரகாம் சொன்னது: [1]அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டே; அவர்களுக்குச் செவிகொடுக்கலாமே என்றான்.

உய அவன் சொன்னது: அப்படியல்ல, தகப்பனாகிய ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களிடத்துக்குப்போனால் மனந்திரும்புவார்கள் என்றான்.

உக அதற்கு அவன் சொன்னது: அவர்கள் மோசேயுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாமல் இருந்தால் [2]மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும் சம்மதிக்கமாட்டார்கள் என்றான் என்றார்.

யஎ. அதிகாரம்.

அ. பிறருக்கு இடறல்செய்யாமலிருக்கவும், ஆ. ஒருவருக்கொருவர் மன்னிக்கவும் விசுவாசத்தை, உ. சீஷனுக்கு பலனாச் சொன்னது. எ. நாம் பாவஞ்செய்ய அடக்கவேண்டியதேயொழிய அவ்வாறு அடங்கவேண்டியதில்லையென்பது. ஈ. இயேசு பத்துக் குஷ்டரோகிகளைக் குணமாக்கி, உஉ. பாபாவுடைய இராச்சியத்தையும் மனுஷகுமாரனுடைய வருகையையும்குறித்துச் சொன்னது.

அன்றியும் அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது: [3]குற்றம்செய்வதற்கான காரணங்கள் நடவாமல் இருக்கிறது கூடாதகாரியந்தான்; ஆனாலும் ஐயோ! அவைகளைச் செய்கிறவனுக்கு வேதனைவரும்.

உ அவன் இந்தச் சிறியரில் ஒருவன் குற்றம்செய்கிறதற்குக் காரணமாய் இராதபடிக்கு அவனுடைய கழுத்திலே எந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்திலே அமிழ்த்தினால் அவனுக்கு நலமாய் இருக்கும்.

ஊ நீங்கள் சாவதானமாயிருக்கக்கடவீர்கள்; [4]பிறனொருவன் உனக்கு விரோதமாய்ப் பாவம்செய்தானானால் அவனைக் கடிந்துகொள்; [5]அவன் மனஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக.

ஃ அவன் ஒரு நாளிலே ஏழுதரம் உனக்கு விரோதமாய்ப் பாவம்செய்து, ஒரு நாளிலே ஏழுதரம் உன்னிடத்தில் வந்து, மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார்.

எ ¶ அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக்கி, விசுவாசம் எங்களுக்குள்ளே பெருகும்படி செய்யும் என்றார்கள்.

ஐ அதற்குக் கர்த்தர் சொன்னது: [6]கடுகுவிதை அவ்வளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்தி மரத்தை நோக்கி, நீ வேருடனே பிடுங்கப்பட்டுக் கடலில் நாட்டப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.

ஏ ¶ அன்றியும் உங்களில் எவனுகிலும் உழுதலையாவது மேய்த்தலையாவது செய்கிற (தன்) வேலைக்காரனை வயலிலிருந்து வரக் (காணும்) பொழுது, நீ போய்ச் சாப்பிடு என்று உடனே அவனுக்குச் சொல்லுவான்?

அ நீ எனக்காக இராப்போசனத்தை எத்தனம்பண்ணிக் கச்சைக் கட்டிக்கொண்டு, நான் போசனபானம் பண்ணுமளவும் [7]எனக்கு ஊழியம்செய்; பின்பு நீ போசனபானம் பண்ணலாம் என்றல்லவா அவனுடனே சொல்லுவான்?

கூ அந்த வேலைக்காரன் தனக்குக் கட்டளையிட்டவைகளைச் செய்கிறபடியினாலே எசமான் அவனை உபசாரம்செய்வானோ? அப்படிச் செய்யமாட்டான் என்று நினைக்கிறேன்.

கூ அப்படிப்போல நீங்களும், உங்களுக்குக் கட்டளையிடப்பட்டவையெல்லாவற்றையும் செய்தபொழுதும், [8]நாங்கள் உபசாரம்பெற்றுக்கொள்ளுதற்கான ஊழியக்காரர் அல்ல, எங்களுக்குக் கட்டளையிடப்பட்டதைமாத்திரம் செய்தோமே என்று சொல்லுவீர்களாக என்றார்.

இ. பி. ஈகூ.

1 எசா. அ. உஅ: உச.அக.போஅ. இ. உக, ஃஎ. அப். அஇ. உஃ: மா. மக.

2 போஅ. மஉ.அ, மக.

3 மத். அஅ.க, எ. மற். க. சஉ. கொரி.அ.மக.

4 மத். அஅ. அஇ, உக.

5 கமோ. அக.அஎ. லூக். அஎ. அ. பாக். இ.அக.

6 மத். அஎ. உஅ: உக. உக. மற். க. உக: அக. உக.

7 லூக். உஉ. கஎ.

8 யோபு. உஉ.க: கஇ. எ.சங்.அக. க.மத். உஇ. கய. உரோ. க. மஉ: மக.கஇ.கொரி. க. அக, அஎ. பிலே. மக.

Digitized by Google

கி. பி. ஈசூ.

ழக ¶ [1]அன்றியும் அவர் எருசலேமுக்குப் பிரயாணமாய்ப் போகையில், சமாரியா நாட்டின் வழியாயும் கலிலேயா நாட்டின் வழியாயும் நடந்து,

ழஉ ஒரு கிராமத்தில் பிரவேசிக்கிறபொழுது, குஷ்டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக வந்து [2]தூரத்திலே நின்று,

ழசூ இயேசுவே, ஐயரே, எங்கள்மேல் இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.

ழச அவர்களை அவர் கண்டு, [3]நீங்கள் போய், உங்களை ஆசாரியருக்குக் காண்பியுங்கள் என்றார்; அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.

ழடு அப்பொழுது அவர்களில் ஒருவன் தான் ஆரோக்கியம் அடைந்ததைக் கண்டு,

ழசு திரும்பி மிகுந்த சத்தத்துடனே பராபரனைத் துதித்து அவருடையபாதத்தின் அருகே வணக்கமாய் விழுந்து, அவருக்குத் தோத்திரம் செலுத்தினான்.

ழஎ அவன் சமாரியா தேசத்தான்; அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: பத்துப்பேரும் அல்லவோ சுத்தமானார்கள், ஒன்பதுபேர் எங்கே?

ழஅ பராபரனுக்குத் துதியைச் செலுத்தும்படிக்கு இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பி வரவில்லையா என்று சொல்லி,

ழக அவனை நோக்கி, [4]நீ எழுந்து போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.

ழஉ ¶ பராபரனுடைய இராச்சியம் எப்பொழுது வரும் என்று பரிசேயர் அவரிடத்தில் விசாரித்தபொழுது, அவர் அவர்களுக்கு மறுமொழியாகச் சொன்னது: பராபரனுடைய இராச்சியம் வேடிக்கைப் பிரகாரமாக * வராது.

ழக [5]இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லமாட்டார்கள்; [6]பராபரனுடைய இராச்சியம் உங்களுக்குள் † இருக்கின்றதே என்றார்.

ழஉ ¶ பின்னும் சீஷருடனே அவர் சொன்னது: [7]மனிதகுமாரனுடைய நாள்களில் ஒன்றைக் காணும்படிக்கு நீங்கள் ஆசைப்படும் காலம் வரும்; அதைக் காணமல் இருப்பீர்கள்.

ழசூ [8]அப்பொழுது சிலர் உங்களை நோக்கி, இதோ இங்கே இருக்கிறார் என்றும், அதோ அங்கே இருக்கிறார் என்றும் சொல்லும் காலத்தில், நீங்கள் புறப்படாமலும் பின்செல்லாமலும் இருங்கள்.

ழச [9]மின்னனது வானத்தின் ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கம்வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனிதனுடைய குமாரன் தன்னுடைய காளில் இருப்பார்.

ழடு [10]அதற்குமுன்பு அவர் அநேகம் பாடுகளை அனுபவித்து, இந்தச் சந்ததியினாலே தள்ளப்படவேண்டியிருக்கின்றது.

ழசு [11]நோவாவின் காள்களில் நடந்ததுபோல, மனிதகுமாரனுடைய நாள்களிலும் நடக்கும்.

ழஎ நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் சனங்கள் போசனபானம்பண்ணியும், பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வந்தார்கள்; அந்நாளிலே சலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்தது.

ழஅ [12]லோத்தினுடைய காள்களில் நடந்ததுபோலவும் நடக்கும்; சனங்கள் போசனபானம் பண்ணியும், பொருள்களைக் கொண்டும் விற்றும், செடிகளை காட்டியும், (வீடுகளைக்) கட்டியும் வந்தார்கள்.

ழக [13]லோத்தென்பவன் சோதோம் ஊரைவிட்டுப் புறப்பட்ட காளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் பெய்து எல்லாரையும் அழித்தது.

1 லூக். க. ஙக, ஙஉ போள. ச. ச.
2 க மோ. ஙக. சக.
3 க மோ. ஙக. உ: ஙச. உ. மத். அ. ச. லூக். ஙி. ஙச.
4 மத். க. உஉ. மாற். ஙி. கச: ங. ஙஉ. லூக். எ. ஙங: அ. சஅ: ஙஅ. சஉ.
* அல்லது கண்ணுக்கான.
5 உக. ஙச.
6 உரோ. ஙச. ஙக.
† அல்லது உங்கள் மத்தியில். போள. க. உக.
7 மத். க. ஙக. போள. ஙக. ஙஉ.
8 மத். உச. உக. மாற். ஙக. உக. லூக். உக. அ.
9 மத். உச. உச.
10 மாற். அ. கக: க. கக: ங. கக. லூக். க. உஉ.
11 க மோ. எ. மத். உச. கஎ.
12 க மோ. ஙக.
13 க மோ. ஙக. ஙக, உச.

Digitized by Google

கூ மனிதனுடைய குமாரன் வெளிப்படும் நாளில் அப்படியே இருக்கும்.

கச அந்த நாளிலே வீட்டின் மேல் இருப்பவன் வீட்டுக்குள் இருக்கிறதன்பண்டங்களை எடுத்துக் கொண்டு போகும்படிக்கு இறங்காமல்போகக்கடவன்; அன்றியும் வயலில் இருப்பவன் பின்னிட்டுத் திரும்பாமல் போகக்கடவன்.

கஉ லோத்தினுடைய மனைவியை நினையுங்கள்.

கஙு எவனெவனும் தன் ஜீவனை இரட்சித்துக்கொள்ளத் தேடினால் அதை இழந்துபோவான்; எவனாவது அதை இழந்தால் அதைக் காத்துக்கொள்ளுவான்.

கஙூ அந்த இராத்திரியில் ஒரே படுக்கையின்மேல் இருக்கும் இரண்டுபேரில் ஒருவன் பிடித்துக் கொள்ளப்படுவான், மற்றவன் விட்டுவிடப்படுவான்.

கஙி மாவை அரைக்கும் இரண்டு பெண்களில் ஒருத்தி பிடித்துக் கொள்ளப்படுவாள், மற்றவள் விட்டுவிடப்படுவாள் *

கஙக வயலில் இருக்கும் இரண்டு பேரில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான், மற்றவன் விட்டுவிடப்படுவான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னபோழுது,

கஎ அவர்கள் அவனை நோக்கி, ஆண்டவரே, †எங்கே என்றார்கள்; அதற்கு அவர் சொன்னது: பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் சேரும் என்றார்.

௰அ. அதிகாரம்.

அன்றியும் அவர்கள் சோர்ந்து போகாமல் எபொழுதும் செபம் பண்ண வேண்டுவதைக்குறித்து அவர் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது:

உ ஒரு பட்டணத்திலே † ஒரு நியாயாதிபதி பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதனை எண்ணாமலும் இருந்தான்.

ஊ அல்லாமலும் அந்தப் பட்டணத்திலே ஒரு கைம்பெண் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய், எனக்கு விரோதியானவனிடத்தில் பழிவாங்கவேண்டும் என்றாள்.

ச அவன் அநேகநாள் மனதில்லாதிருந்தான்; பின்பு அவள் அவனிடத்தில் அதிகமாய்க் கேட்டபடியினாலே அவன்தனக்குள்ளே எண்ணினது; நான் பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதனை எண்ணாமலும் இருந்தும்,

ஙு இந்தக் கைம்பெண் என்னைத் தொந்தரவு பண்ணுகிறபடியால் நான் இவளுக்காகப் பழிவாங்கவேண்டும்; இல்லாவிட்டால் இவள் எப்பொழுதும் வந்து என்னை வருத்தப்படுத்துவாள் என்று எண்ணினேன் என்று கர்த்தர் சொல்லி,

ஞ பின்பு அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தியுங்கள்.

எ அந்தப்படி பராபரன் தாம் தெரிந்துகொண்டவர்களைக்குறித்துத் தாமதித்துத் தம்மை நோக்கி இரவும்பகலும் கூப்பிடுகிற அவர்களுக்காகப் பழிவாங்காமல் இருப்பாரா?

அ சீக்கிரத்தில் அவர்களுக்காகப் பழிவாங்குவார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகிலும் மனிதனுடைய குமாரன் வரும்பொழுது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்.

அஆ ¶ அன்றியும் தங்களை நீதி

கி. பி. ௬௬.

1 உ தெச. ஒ ஏ.

2 ஏத் உ ச. ஐ மாற். ஙக. ஙஇ.

3 க மோ. ஙக. உக

4 மத். ஏ ஙக: ஙக. உஇ. மாற் அ ஙஇ. லூக். க உ ச. போவா. ஙஉ உஇ.

5 மத் உ ச. ஙஏ. ஙக. க தெச. ஒ ஏ.

* இந்த வாசகம் சிரேக்கபாஷையில் அநேகம் பிரதிகளில்இல்லை

6 யோபு ஙக. ஙஏ மத். உ ச. உஅ.

7 லூக். ஙக இ: உ.ஙக.உரோ ஙஉ. ஙஉ. எபே க ஙஅ. கொலோ. ச. உ. க தெச. இ. ஐ

† அல்லாத ஒரு குறித்தபட்டணத்திலே.

8 லூக். ஙக. அ.

9 வெளி. க. ஏ.

10 எபி ஏ. ஙக. உ பே க அ கூ.

11 லூக் ஏ. உக: ஙக. ஙஇ.

மான்கள் என்று* நம்பி, மற்றவர் களை அற்பமாய் எண்ணின சிலருக்கு அவர் சொன்ன உவமையாவது:

ய இரண்டு மனிதர் செபம்பண்ணும்படிக்குத் தேவாலயத்திற்குப் போனார்கள்; அவர்களில் ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன்.

யக [1]பரிசேயனானவன் தனித்து நின்று பண்ணின செபமாவது: [2]பராபரனே, நான் பதிகாரர், அநீதர், விபசாரர், இப்படிப்பட்ட மற்ற மனிதரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராதவனைபடியினாலே உமக்குத் தோத்திரம் செலுத்துகிறேன்.

யஉ வாரத்துக்குள்ளே இரண்டு தரம் உபவாசிக்கிறேன்; எனக்குண்டான யாவற்றிலும் பத்தில் ஒன்றைச் செலுத்துகிறேன் என்றான்.

யங பின்பு ஆயக்காரன் தூரமாய் நின்று தன் கண்களையும் வானத்துக்கு உயர்த்தத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, பராபரனே, பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும் என்றான்.

யச அவன் அல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பினான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; [3]தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்; தன்னைத் தாழ்த்துகிறவனே உயர்த்தப்படுவான் என்றார்.

யஜ [4]பின்பு குழந்தைகளை அவர் தொடும்படிக்கு அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; சீஷர் அதைக்கண்டு அவர்களை அதட்டினார்கள்.

யசு இயேசுவானவர் அவைகளைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டுச் சொன்னது: பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்; [5]பராபரனுடைய இராச்

* அல்லது சரி புள்ளவர்களென்று.

1 சம். ஈஅ. உ.

2 எசா. க. ஙஅ: அ.உ. பெளி. க. ஙஉ.

3 போது. உஉ. உசு. மத். உக. மஉ. லூக்.ஙச. மக. மாக்.ச.க. உ பே. இ.இ,உ.

4 மத். ஙக. மஉ. மாற்.உ. ஙக.

5 உ கொரி. ஙச. உஅ. உ பே. உ. உ.

6 மாற்.உ.ஙஇ.

7 மத். ஙக. மக. மாற்.உ.ஙக.

8 உ மோ. உஅ. உஉ,ஙக.இ மோ. இ. ஙக, உஅ. உரோ. கூ. க.

9 எபே. க. உ. கொலோ. க. உஅ.

10 மத்.க.ஙக,உஅ: ஙக.உச.உரோ. க.ஙக.

யம் அப்படிப்பட்டவர்களை உடையதே.

யஎ [6]எவனாகிலும் பிள்ளையைப்போலப் பராபரனுடைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதில் பிரவேசிக்கமாட்டான் என்றார்.

யஅ ¶ [7]அப்பொழுது தலைவனாயிருவன் அவனை நோக்கி, நல்ல போதகரே, நித்தியசீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான்.

யக அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீர் என்னை நல்லவர் என்று என் சொல்லுகிறீர்? பராபரன் ஒருவரே அல்லாமல் மற்றொருவனும் நல்லவன் அல்லவே.

யஉ [8]விபசாரம்பண்ணாதிருப்பாயாக, கொலைசெய்யாதிருப்பாயாக, களவுசெய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, [9]உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்று சொல்லுகிற கற்பனைகளை அறிந்திருக்கிறீரே என்றார்.

யக அதற்கு அவன் அவைகளை எல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

யஉ இயேசுவானவர் அதைக் கேட்டு அவனுடனே சொன்னது: பின்னும் ஒன்றை நீர் செய்யவேண்டியதாயிருக்கின்றது; [10]உமக்கு உண்டானவைகளை எல்லாம் தீர்விற்றுப் பரமண்டலத்திலே உமக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்படிக்குத் தரித்திரருக்குப் பங்கிட்டுக் கொடுத்துப் பின்பு வந்து எனக்குப் பின்செல்லவேண்டும் என்றார்.

யசு அவன் மிகுந்த ஐசுவரியவான் ஆனபடியினாலே அந்த வசனத்தைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கம் அடைந்து (போனான்.)

உச ¶ அவன் மிகுந்த துக்கம் அடைந்ததை இயேசுவானவர்

Digitized by Google

வேறே சொன்னதாவது: [1]ஆஸ்தி கனே உடையவர்கள் பராபரனு டைய இராச்சியத்தில் பிரவேசிப் பது மிகவும் அரிது.

உஅ ஒட்டகமானது ஒரு ஊசி யின் காதிலே நுழைவது எளிதா னால், ஐசுவரியவான் பராபரனு டைய இராச்சியத்தில் பிரவேசிக் கிறதும் எளிதாயிருக்கும் என்றார்.

உக அதைக் கேட்டவர்கள் சொன்னது: அப்படியானால் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்றார் கள்.

உஉ அதற்கு அவர் சொன்னது: [2]மனிதரால் ஆகமாட்டாதவைகள் பராபரனாலே ஆகும் என்றார்.

உஇ ¶ [3]அப்பொழுது பேதுரு அவனைநோக்கி, இதோ நாங்கள் எல்லாவற்றையும்விட்டு உமக்குப் பின்சென்று வருகிறோம் என் றான்.

உக அதற்கு அவர் சொன்னது: [4]பராபரனுடைய இராச்சியத்தின் நிமித்தமாக வீட்டையாவது, தாய் தகப்பன்மாரையாவது, சகோதர ரையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்ட யாவ ரும்,

உஎ [5]இம்மையிலே அதிக மடங் காயும் மறுமையிலே நித்திய ஜீவ னையும் அடையாமல் இருப்பதில் லை என்றார்.

உக ¶ பின்பு [6]அவர் பன்னிரு வரைச் சேர்த்துக்கொண்டு அவர்க ளுடனே சொன்னது: இதோ, எரு சலேமுக்குப் போகிறோம்; அங் கே மனிதனுடைய குமாரனைக் குறித்துத் [7]தீர்க்கதரிசிகளால் எழு தப்பட்ட யாவும் நிறைவேறும்.

உஉ [8]எப்படியெனில் அவன் புறத்தேசத்தாருக்கு ஒப்புக்கொடு க்கப்பட்டு, பரியாசமும் நிந்தை யும் அடைந்து துப்பப்படுவான்.

உங அல்லாமலும் அவனை வாரி னால் அடித்துக் கொலைசெய்வார் கள்; மேலும் மூன்றாம்நாளிலே

1 வாக்.மத்.உஅ. மத்.மக. உக. மாற்.அ.உக.

2 எரே. கஉ.மக. சகரி. அ. க. மத். மக. உக. லூக். க.கஎ.

3 மத். மக. உஎ.

4 இ மோ.கஉ.க.

5 போபு. சஉ.அ.

6 மத். மக. உக: மா. உஉ: உஅ மா. மாற். அ. கஉ.

7 சங். உஉ.சோ. இக.

8 மத். உஎ. உ. லூக். உக. க. யோவா. உஅ. உஅ. அப். க. கஉ.

9 மாற். க. கஉ. லூக்.உ.இல: க. சங.யோவா.அ. க: அஉ. அக.

10 மத். உஅ.உக. மாற்.அ.சக.

11 லூக்.மா. அக.

12 லூக். இ.உக. அப். ச. உஉ: கக.உஅ.

உயிரோடி எழுந்திருப்பான் என் றார்.

கூச [9]அவர்கள் இவைகளில் ஒன் றையும் உணரவில்லை; அவைக ளின் பொருள் அவர்களுக்கு ம றைவாயிருந்தது; அவர் சொன்ன வைகளை அறியாமல் இருந்தார் கள்.

கஇ ¶ [10]அவர் எரிகோ ஊருக் குச் சமீபமானபொழுது, வழிய ருகே உளுத்தம்பிச்சை கேட் டுக்கொண்டிருக்கிற ஒரு குரு டன்,

கூசு சனங்கள் நடக்கிறதைக் கே ள்விப்பட்டு, இது என்னவென்று விசாரித்தான்.

கூஎ நாசரேத்தூராகிய இயேசு நடந்துபோகிறார் என்று அவனு க்கு அறிவித்தார்கள்.

கூஅ அப்பொழுது அவன் இயே சுவே, தாவீதின் குமாரனே, எனக் கு இரங்கும் என்று அதிகமாய்க் கூப்பிட்டான்.

கூக முன் நடப்பார் அவன் பே சாமல் இருக்கும்படிக்கு அவனை அதட்டினார்கள்; அவன் தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் எ ன்று அதிகமாய்க் கூப்பிட்டான்.

சய அப்பொழுது இயேசுவானவ ர் நின்று அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட் டார்; அவன் கிட்டவந்தபொழுது அவர் அவனை நோக்கி,

சக நான் உனக்கு என்னசெய்ய வேண்டும் என்று இருக்கிறாய் என் றார்; அதற்கு அவன் ஆண்டவ ரே, நான் பார்வை அடையும்படி செய்யவேண்டும் என்றான்.

சஉ இயேசுவானவர் அவனை நோக்கி, நீ பார்வை அடைவாயா க; [11]உன்விசுவாசம்உன்னைஇரட் சித்தது என்றார்.

சஎ உடனே அவன் பார்வை அடைந்து [12]பராபரனைப் புகழ்ந்து அவருக்குப் பின்சென்றான்; அ தைக் கண்ட சனங்கள் எல்லா

Digitized by Google

ரும் பராபரனுக்குத் துதிசெலுத்தினர்கள்.

யகூ. அதிகாரம்.

க. ஆபக்காரனான சக்கேயுவைக்குறித்துச் சொல்லி பது. ஙக. பத்த இராத்தல் பெள்ளைப் பெற ணமிபக்காரரை உவமையாகச் சாட்டியது. உத இதினது கெம்பீரமாய் எருசலேமுக்குப் பிரவே கெனையில், சக. அதைக்குறித்த அழுது, சஎ தேவாலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுற வர்களையும் துரத்தி; சஎ. அந்தலே நாடோறும் உபதேசித்தது அதிகாரிகள் அவரைக் கொல்ல செய்ய விரும்பிச் சனங்களுக்கு அஞ்சினதினாலே கூடாதபோனது.

பின்பு அவர் எரிகோ ஊரில் பிரவேசித்து அப்புறம் நடந்துபோனர்.

உ அப்பொழுது ஆயக்காரருக்குத் தலைவனுமாய் ஐசுவரியவானுமாய் இருந்த சக்கேயு என்னப்பட்ட மனிதன். இயேசுவானவரை அறியும்படிக்கு அவனைப் பார்க்க வகைதேடினான்.

ஊ அவன் குட்டையனானபடியால் சனக்கூட்டத்திலே அவனைக் காணக்கூடாமல் இருந்தது.

ச அப்பொழுது அவன் அவனைப் பார்க்கும்படிக்கு முன்னாக ஓடி, அவர் செல்லுகிற வழியிலே நிற்கின்றகாட்டத்திமரத்தின்மேல் ஏறினான்.

டு இயேசுவானவர் அந்த இடத்தில் சென்றபொழுது, அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு, சக்கேயுவே, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும். ஆகையால் நீ சீக்கிரமாய் இறங்கிவா என்றார்.

கூ அந்தப்படி அவன் சீக்கிரமாய் இறங்கிச் சந்தோஷத்தோடே அவருக்கு உபசாரம்செய்தான்.

எ அதைக் கண்ட அனைவரும் சொன்னது: [1]இவர் பாவியான மனிதனிடத்திலே தங்கும்படிக்குப் போகிறார் என்று மொறுமொறுத்தார்கள்.

அ சக்கேயு என்பவன் நின்று கர்த்தனைநோக்கி, ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழை

கி. பி. ஈஈ.

1 மத். கூ. ஙக லூக. ஙஅ.
2 லூக. ஙச
3 உ ரோ உஉ க கொ.மு.ஙஉ
க. உ கொ.மு.ஙஉ.
க.
மத ஙஅ. ஙக மத் ஙஅ. க: ஙக. உச.
5 உரோ. ச. ஙக ஙஉ ஙக. கலா ச. ஏ
3 லூக ஙக ஙக
7 அப் க. க.
மத் உஇ ஙஎ. மாற். ஙக கூ.
ஒரு இராத்தல் Mina (கிரேக்க நாணயம்.
9 யோவா. க. ஙக.

களுக்குக்கொடுக்கிறேன்; அல்லாமலும் [2]நான் ஒருவனிடத்தில ஏதையாகிலும் அநியாயமாய் எடுத்திருந்தேனானால் [3]நாலுமடங்காய்ப் பதில் செலுத்துகிறேன் என்றான்.

க அப்பொழுது இயேசுவானவர் அவனைக்குறித்துச் சொன்னது: [4]இழந்துபோனதைத் தேடி இரட்சிக்கும்படிக்கு மனிதகுமாரன் வந்திருக்கிறபடியினாலே, [5]இன்றைக்கு இந்தக் குடும்பத்திற்கு இரட்சிப்பு உண்டாயிற்று.

ய [6]இவனும் ஆபிரகாமினுடைய சந்ததியான் அல்லவா என்றார்.

யக ¶ அன்றியும் அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கையில் அவர் எருசலேமுக்குச் சமீபமானபடியினாலும், [7]பராபரனுடைய ஆளுகை சீக்கிரமாக் காணப்படும் என்று அவர்கள் நினைத்தபடியினாலும் அவர் சொன்ன உவமையாவது:

யஉ [8]உயர்குலத்தானான ஒருவன் ஒரு இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டு. பின்பு திரும்பி வரும்படிக்குத் தூரதேசத்துக்குப் போக மனதாய்,

யஊ தன்னுடைய பத்து ஊழியக்காரரை அழைத்து, அவர்களுக்குப் பத்து இராத்தல்* நிரவியம் கொடுத்து, நான் வருகிறவரைக்கும் இதினாலே தொழில் செய்யுங்கள் என்று சொல்லிப்போனான்.

யச [9]அவனுடைய பட்டணத்தார் அவனைப் பகைத்து, அவன் எங்களை ஆளுகைசெய்ய எங்களுக்கு மனதில்லை என்று சொல்லும்படிக்கு, அவனுக்குப் பின்னாகத் தானாதிபதிகளை அனுப்பினார்கள்.

யடு அப்படியிருந்தும் அவன் இராச்சியத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வந்து, தான் நிரவியம் கொடுக்கப்பெற்றிருந்த அந்த ஊழியக்காரர் தொழில் செய்ததினாலே ஆதாயமாக்கிக்கொண்டது இவ்வளவென்று அறியும்படிக்கு,

Digitized by Google

அவர்களைத் தன்னிடத்திற்கு அழைத்துவரச்சொன்னான்.

எச அந்தப்படியே முந்தினவன் சேர்ந்து, ஆண்டவனே, உம்முடைய இராத்தல் பத்து இராத்தலை ஆதாயமபண்ணிற்று என்றான்.

எஎ அவனுடனே எசமான் சொன்னது: நல்லது உத்தம ஊழியக்காரனே, [1]நீ கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தபடியினாலே பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாய் இரு என்றான்.

எஅ பின்பு இரண்டாம் ஊழியக்காரன் சேர்ந்து, ஆண்டவனே. உம்முடைய இராத்தல் ஐந்து இராத்தலை ஆதாயம்பண்ணிற்று என்றான்.

எக அவனுடனேயும் அவன் சொன்னது: நீயும் ஐந்து பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்.

எ பின்பு வேறொருவன் சேர்ந்து ஆண்டவனே, [2]நீர் வையாததை எடுக்கிறவருமாய் விதையாததை அறுக்கிறவருமாய் இருக்கிறதினாலுள்ள மனிதனுயிருக்கிறதை நான் அறிந்து உமக்குப் பயப்பட்டபடியினாலே,

உக உம்முடைய இராத்தலை ஒரு மேலையிலே வைத்துக்கொண்டேன்; இதோ, அது இருக்கின்றது என்றான்.

உஉ அவனுடனே அவர் சொன்னது: பொல்லாத ஊழியக்காரனே, [3]உன் வாக்கின்படி உனக்கு நியாயத்தீர்ப்புக் கெடுக்கிறேன்; [4]நான் வையாததை எடுக்கிறவனுமாய் விதையாததை அறுக்கிறவனுமாய் இருக்கிற கடினமுள்ள மனிதன் என்று அறிந்தாயே

உக ஆகையால் நான் திரும்பி வருகிறபொழுது, என் திரவியத்தை வட்டியோடே பெற்றுக்கொள்ளும்படிக்கு, நீ அதை (வட்டிக்காக) காசுக்கடையிலே ஏன் கொடுக்கவில்லை என்று சொல்லி,

உச சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி, நீங்கள் அந்த இராத்தலை இவனிலிருந்து எடுத்துப பத்து இராத்தல் உள்ளவனுக்குக் கெடுங்கள் என்று கட்டளையிட்டபொழுது,

உஙி அவர்கள், ஆண்டவனே, அவனுக்குப் பத்து இராத்தல் உண்டே என்ன,

உசு அவன் பின்னும் சொன்னது: நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [5]உள்ளவனுக்குக் கொடுக்கப்படும்; இல்லாதவனுக்கு உண்டாயிருக்கிறதும் அவனிலிருந்து எடுக்கப்படும்.

உஎ அன்றியும் நான் தங்களுக்கு இராசாவாயிருக்க மனதில்லாமல் எனக்குச் சத்துருக்களான அவர்களை இங்கே கொண்டுவந்து, எனக்குமுன்பாக வெட்டிப்போடுங்கள் என்றான் என்றார்.

உஅ இவைகளை அவர் சொன்னபின்பு, [6]அவர் எருசலேமுக்குப் போகும்படி முன்னே நடந்தார்.

உக ¶ [7]அப்படி அவர் ஒலிவமலை என்னப்பட்ட மலையின் அருகே இருக்கிற பெதுபாகே ஊருக்கும் பெத்தானியா ஊருக்கும் சமீபமானபொழுது, அவர் தம்முடைய சீஷரில் இருவரை நோக்கி,

ஊய அதோ உங்களுக்கு எதிராக இருக்கிற கிராமத்துக்குப் போங்கள்; அதில் பிரவேசிக்கும்பொழுது, மனிதரில் ஒருவனுகிலும் ஒருக்காலும் ஏறுத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டு வாருங்கள்.

ஊக இதை என் அவிழ்க்கிறீர்கள் என்று ஒருவன் உங்களிடத்தில் கேட்டால், ஆண்டவருக்கு இது வேண்டும் என்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

ஊஉ ¶ அந்தப்படி அனுப்பப்பட்டவர்கள் போய், தங்களுக்கு அ

1 மத் உடு. உக. லூக் ய.க.ம.
2 மத் உடு.உச
3 உசாமு.க.உக போப மடி க. மத் பஉ.உஎ.
4 மத் உடு.உக
5 மத். ம.க. மஉ: உடு உக மாத்ச உடு. லூக். அ.அ

6 மாற் ம. கஉ

7 மத் உக க மாற. ம.க.க

வர் சொன்னபிரகாரமாகக் கண்டார்கள்.

கூ கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கிறபொழுது, அதின் எசமான்கள் அவர்களை நோக்கி, குட்டியை என் அவிழ்க்கிறீர்கள் என்றார்கள்.

கூ அதற்கு அவர்கள், ஆண்டவருக்கு இது வேண்டும் என்று சொல்லி,

கூ அதை இயேசுவினிடத்திற்குக் கொண்டுவந்து. [1]தங்கள் வஸ்திரங்களைக் குட்டியின்மேல் போட்டு, இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள்.

கூ அப்படி அவர் போகையில், [2]அவர்கள் தங்கள வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்.

கூ அல்லாமலும் அவர் ஒலிவ மலையின் அடிவாரமாய்ச் சேர்ந்து வருகிறபொழுது, சீஷரின் கூட்டத்தார் எல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையும்குறித்துச் சந்தோஷப்பட்டு, மிகுந்த சத்தத்துடனே பராபரனைத் துதிக்கத் தொடங்கி, [3]பராபரனுடைய நாமத்தினாலே வருகிற இராசா தோத்தரிக்கப்பட்டவர்.

கூ [4]பரமண்டலத்தில் சமாதான சவுக்கியமும், உன்னதங்களில் புகழ்தலும் உண்டாவதாக என்றார்கள்.

கூ அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரில் சிலர் அவனை நோக்கி, போதகரே, நீர் உம்முடைய சீஷரை அதட்டவேண்டும் என்றார்கள்.

கூ அவர்களுக்கு மறுமொழியாக அவர் சொன்னது: இவர்கள் பேசாமல் இருந்தால் [5]கற்களே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

கூ ¶ அன்றியும் அவர் பட்டணத்துக்குச் சமீபமானபொழுது, [6]அவர் அதைப் பார்த்து, அதைக் குறித்துக் கண்ணீர்விட்டு, நீ உனக்குக் கிடைத்த இந்த காளிலே உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளைச் சிந்தித்துக்கொண்டால், நலமாயிருக்கும்.

கூ இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கின்றன.

கூ உன்னைச் சந்திக்கும் காலத்தை [7]நீ சிந்தித்துக்கொள்ளாமல் இருக்கிறபடியினாலே, [8]உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதின்போட்டு, உன்னை வளைந்துகொண்டு,

கூ எங்கும் உன்னை இறுகப்பிடித்து, [9]உன்னையும் உன்னில் உள்ளவர்களையும் தரையாக்கி, [10]உன்னிடத்தில் ஒரு கல் மற்ற ஒரு கல்லின்மேல் இராதபடிக்குச் செய்யும் நாள்கள் உனக்கு வரும் என்றார்.

கூ ¶ [11]பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து,

கூ அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் நோக்கி, [12]நம்முடைய ஆலயம் செபம்பண்ணுதற்கான ஆலயம் என்று எழுதியிருக்கின்றதே; [13]நீங்கள் இதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்று சொல்லி, அவர்களைப் புறம்பே துரத்தினார்

கூ ¶ அல்லாமலும் நாடோறும் அவர் தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார்; [14]அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனத்தின் மூப்பரும் அவனைக்கொலைசெய்ய வகை தேடி,

கூ சனங்கள் எல்லாரும் மிகுந்த சிந்தனையோடே அவருக்குச் செவிகொடுத்தபடியினாலே* வகையைக் காணுமல் போனார்கள்.

உடு. அதிகாரம்.

க. ஆட்சேபித்த பரிசேயருக்கு மறுத்து தனது அதிகாரத்தை யோவானின் ஞானஸ்நானத்தைக்குறித்த கேள்வியிலே ஸ்தாபித்தது. கூ. நாட்டார் தோட்டக்காரனை உவமையாக எடுத்துச் சொன்னது. கூக. இராயனுக்கு வரிகொடுத்தலைக் குறித்துச் சொன்னது. உயிர்த்தெழுதல் இல்லையென்ற சதுசேயருக்கு அதை உள்ளபடி சொல்லியது. கூக. மறுத்த தாவீதின் குமா

Digitized by Google

கூ. பி. கூக

1 உ இரா.க.மே. மத். உக. எ. மற் மே. எ. போவா. மூ. மே.

2 மத்.உக.அ.

3 சங்.118அ.உக. லூக்.மே.கூ.

4 லூக். உ. மே. எபே. உ. மே.

5 ஆப.உ.மக.

6 போவா. மே. கூ.

7 தானி. கூ.உ. லூக். க. கஅ, கஅ. க பே.உ மூ.

8 ஏசா. உகூ. க. எ.ரே. க. க, கூ. லூக். உக. உ.

9 க இரா. கூ. எ, அ. மீகா 5.மூ.

10 மத். உ உ. மற். மே. உ லூக்.உக.க.

11 மத். உக மூ. மற்.மே.மக,டுடு போவா.உ.மே: மடு.

12 ஏசா.கூ. எ.

13 எரே. எ. மக.

14 மற். மே. மஅ. போவா.எ.மக: அ. கூ.

* அல்லது அவரில் பற்றினபடியினாலே. அப். மக.மே.

வேற்று அறிவித்தலைச் சொன்னது. எதி. வே பாவனைக்குறித்துச் சேர்க்கை செய்தது.

இ. பி. கூகூ.

1 மத். உ.உ.உ

1 அக்காள்களில் ஒரு காளிலே, அவர் தேவாலயத்தில் சனங்களுக்கு உபதேசம்பண்ணிச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறபொழுது, பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் அவருக்கு விரோதமாய் வந்துநின்று,

2 அப். உ.உ: ஈ. உ.

2 அவனை நோக்கி, 2நீர் எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இப்படிப்பட்ட அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் இன்னார் என்று எங்களுக்குச் சொல்லும் என்றார்கள்.

3 அதற்கு மாறுத்தரமாக அவர் சொன்னது: காணும் உங்களிடத்தில் ஒரே விஷயத்தைக் கேட்பேன்.

4 என்னவென்றால், யோவான் கொடுத்த ஸ்நானம் தேவனால் உண்டாயிற்றோ, மனிதரால் உண்டாயிற்றோ, அதை எனக்குச் சொல்லுங்கள் என்றார்.

5 அப்பொழுது அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணி, 3 மத். உ.உ. ஆ: உ.உ. லூக். உ.உ.

6 தேவனால் உண்டாயிற்றென்று நாம் சொன்னால், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை என்பார்; அது மனிதரால் உண்டாயிற்றென்று நாம் சொன்னால், எல்லாச் சனங்களும் யோவானைத் 3தீர்க்கதரிசி என்று எண்ணிக்கொள்ளுகிறபடியினாலே, நமதுமேல் கல்லெறிவார்கள் என்று யோசனைபண்ணி,

7 பின்பு அது வந்த விதம் எங்களுக்குத் தெரியாது என்றார்கள்.

8 அதற்கு இயேசுவானவர் சொன்னது: அப்படியானால், நான் இன்ன அதிகாரத்தினாலே இவைகளைச் செய்கிறேன் என்று நானும் உங்களுக்குச் சொல்லமாட்டேன் என்றார்.

4 மத். உ.உ. ஊ. மாற். ஐ.உ.

9 ¶ பின்பு அவர் சனங்களுடனே சொன்ன உவமையாவது: ஒரு மனிதன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதைத் தோட்டக்காரர் வசமாய்விட்டு, அநேக காலமாய்ப் புறதேசம் போயிருந்தான்.

10 தகுதியானகாலத்திலே அந்தத் தோட்டக்காரர் திராட்சத்தோட்டத்தின் கனிகளில் ஒரு பங்கைத் தனக்குக் கொடுத்தனுப்பும்படிக்கு, அவன் ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்துக்கு அனுப்பினான்; அந்தத் தோட்டக்காரர் அவனை அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

11 அதின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் அடித்து, நிந்தைப்படுத்தி, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

12 அதன்பின்பு அவன் மூன்றாம் ஊழியக்காரனை அனுப்பினான்; அவனையும் அவர்கள் காயப்படுத்தித் துரத்தினார்கள்.

13 அப்பொழுது திராட்சத்தோட்டத்தின் எசமான் என்னினது: நான் என்ன செய்யலாம்? எனக்குப் பிரியமான குமாரனை அனுப்பினால், அவர்கள் கண்டு கனம்செய்வார்கள் என்று என்னி, அவனை அனுப்பினான்.

14 தோட்டக்காரர் அவனைக் கண்டபொழுது, இவன் சுதந்தரவாளி சுதந்தரம் நம்முடையதாகும்படிக்கு, இவனைக் கொலை செய்யவேண்டும் என்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணி,

15 வாருங்கள் என்று சொல்லி, அவனைத் திராட்சத்தோட்டத்துக்கு வெளியே தள்ளி, கொலை செய்தார்கள்; ஆதலால் திராட்சத்தோட்டத்தின் எசமான் அவர்களை என்ன செய்வான்?

16 அவன் வந்து, அந்தத் தோட்டக்காரரை அழித்து, திராட்சத்தோட்டத்தை வேறுமனிதருக்குக் கொடுப்பான் அல்லவா என்றார்; அதை அவர்கள் கேட்டு அப்படி ஆகாதிருப்பதாக என்றார்கள்.

Digitized by Google

கி. பி. சுசூ.

யஈ ¶ அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து [1]வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின +ல்லே கேடிக்குத் தலையான கல்லாயிற்றென்றுஎழுதியிருக்கிறவேதவாக்கியத்தின் கருத்தென்ன?

யஅ அந்தக் கல்லின்மேல் விழுகிறவன் எவனே, அவன் சொறுக்கப்படுவான்; அன்றியும், [2]அது விழப்படுபவன் எவனை, அவனை நசுக்கிப்போடும் என்றார்.

யக அப்பொழுது தங்களைக்குறித்து அந்த உவமையைச் சொன்னார் என்று பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அறிந்து, அந்நேரத்திலே அவர்மேல் கைகளைப் போட விரும்பினார்கள்; சனங்களுக்குப் பயப்பட்டபடியால் (நிறுத்தினார்கள்.)

உய ¶ [3]பின்பு அவர்கள் அவனையே நோக்கிக்கொண்டு. ஆளுகைக்கும் நியாயாதிகாரத்துக்கும் முன்பாக அவனை ஒப்புக்கொடுக்கிறதற்கு ஏதுவாக அவருடைய வசனத்தில் குற்றம் கண்டுபிடிக்கும்படிக்கு, தங்களை நீதிமான்கள்போலக் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்.

உக [4]அவர்கள் வந்து அவனை நோக்கி, போதகரே, நீர் செம்மையாய்ப் பேசி உபதேசிக்கிறவர் என்றும். பட்சபாதமில்லாமல் சத்தியமாய்ப், *பராபரனுடைய மார்க்கத்தைப் போதிக்கிறவர் என்றும் அறிந்திருக்கிறோம்.

உஉ நாம் இராயனுக்கு வரிகொடுக்கலாமோ, கொடாமல் இருக்கலாமோ, என்று அவரிடத்தில் கேட்டார்கள்.

உஊ அவர்களுடைய தந்திரத்தை அவர் அறிந்து. அவர்களை நோக்கி நீங்கள் என்னை என் சோதிக்கிறீர்கள்?

உசு பணத்தை †எனக்குக் காண்பியுங்கள்; அதில் இருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் யாருடை

1 சங். சூஅ. உஉ. மத். உக. சஉ.

2 தானி. உ. உச, உஇ. மத். உக. சச.

3 மத். உஉ. யஇ

4 மத். உஉ. யக. மற. யஉ. ச.

* அல்லது யெகோவாவே.

† மத். யஅ. உஅ.

5 அப். உக. க. அ.

6 மத் உஉ. உக. மற. யஉ. யஅ.

7 ஓ மோ. உஇ. இ.

யஈ அவைகள் என்றார்; அவை இராயனுடையவைகள் என்று மாதுத்தரம் சொன்னார்கள்.

உடு அவர் சொன்னது: அப்படியானால், நீங்கள் இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதைப் பராபரனுக்கும் செலுத்துங்கள் என்றார்.

உசு அவர்கள் அவனைச் சனங்களுக்குமுன்பாக ஒரு வசனத்தில் அகப்படுத்தக்கூடாமல், அவருடைய மாறுத்தரத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு மவுனமாய் இருந்தார்கள்.

உள ¶ பின்பு [5]மறுமையாகிய உயிரோடு எழும்புதல் இல்லையென்ற சொல்லுகிற [6]சதுசேயரில் சிலர் அவரிடத்தில் வந்து கேட்டதாவது:

உஅ போதகரே. [7]பெண்ணை விவாகம்பண்ணின ஒருவன் பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய மனைவியை அவனுடைய சகோதரன் (சேர்ந்து) தன் சகோதரனுக்குச் சந்ததி உண்டாக்கவேண்டும் என்று மோசே நமக்குக் கட்டளையாக எழுதினாரே.

உக அந்தப்படி (ஓரிடத்திலே) சகோதரர் எழுபேர் இருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணிப் பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

உய அப்பொழுது இரண்டாம் சகோதரன் அந்தப் பெண்ணை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான்.

ஊக மூன்றும் சகோதரன் முதல் எழுபேர்வரைக்கும் அந்தப்படியே அவளை விவாகமபண்ணி, பிள்ளைகளைப் பெறாமல் இறந்துபோனார்கள்.

ஊஉ அவர்கள் எல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனான்.

ஊசு இவ்விதமாய் எழுபேரும் அவனை விவாகம்பண்ணினவர்க

Digitized by Google

ளாய் இருக்க, (மரித்தோர்) உயிரோடு எழுந்திருக்கும் காலத்தில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாய் இருப்பான் என்றார்கள்.

ரூ ¶ அவர்களுக்கு மாறுத்தரமாகஇயேசுவானவர் சொன்னது: இம்மையில் இருக்கிறவர்கள் பெண்கொண்டும் கொடுத்தும் வருகிறார்கள்.

ருரு மறுமையில் உள்ள பாக்கியத்தையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அடைவதற்குப் பாத்திரராய் எண்ணப்படுபவர்கள் பெண் கொள்வதும் கொடுப்பதும் இல்லை.

ருசு என்னத்திற்கெனில், [1]அவர்கள் உயிரோடு எழுந்திருக்கத்தக்கவர்களாயிருக்க, தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய் [2]பராபரனுடைய பிள்ளைகளுமாய் இருப்பதால், அவர்கள் இனி மரிக்கக்கூடாதிருப்பார்களே.

ருள அன்றியும் மரித்தோர் எழுந்திருப்பார்கள் என்பதை [3]மோசேயும் முட்செடியைக்குறித்து எழுதின சரித்திரத்திலே காண்பித்தார். எப்படியெனில், அவர் பராபரனே ஆபிரகாமினுடைய தேவனென்றும், ஈசாக்கினுடைய தேவனென்றும், யாக்கோபினுடைய தேவனென்றும் சொல்லியிருக்கிறார்.

ருஅ பராபரன் மரித்தோருடைய தேவனுய் இராமல், சீவனுள்ளோருடைய தேவனுய் இருக்கிறார்; [4]எல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார்.

ருக வேதபாரகரில் சிலர் அதைக் கேட்டு, போதகரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள்.

ருஎ பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றைக் கேட்கத் துணியவில்லை.

ருக ¶ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, [5]கிறிஸ்துவானவர் தாவீதின் குமாரனுய் இருப்பா

கி. பி. ரூரூ.

1 க கொரி: ள@. ருஉ, ருக, இஉ. க பேர. க. உ.
2 உரோ.அ.உக.
3 உ மோ.க.க.
4 உரோ. க. ம, ஙக.
5 மத்.உஉ. ருஉ மாற். ளஉ. கஇ.
6 சங். ரள. க. அப்.உ.கரு.
7 மத். உக. க. மாற். ளஉ. கஅ.
8 மத். உக. இ.
9 லூக். கக. ருக.
10 மத். உக. ளரு.
11 மாற்.ளஉ.ருக.

பார் என்றுஎன்னத்தினாலேசொல்லுகிறார்கள்?

ருசு [6]அல்லாமலும், பராபரன் என் கர்த்தாவை நோக்கி, நான் உம்முடைய சத்துருக்களை உமது பாதப்படியாக்கிப்போடும் அளவும்

ருரு நீர் எனது வலதுபாரிசத்தில் உளுக்காரும் என்றார் என்று தாவீதுதானே சங்கீதபுத்தகத்தில் சொல்லியிருக்கிறாரே.

ருரு தாவீது அவனைக் கர்த்தரென்று சொல்லியிருக்க, எப்படி அவர் அவனுடைய குமாரனுவார் என்றார்.

ருரு ¶ [7]அப்பொழுது சனங்கள் எல்லாரும் கேட்க, அவர் தம்முடைய சீஷரை நோக்கி:

ருசு [8]நீளமான வஸ்திரங்களைத் தரித்து நடக்க மனதாயிருந்து, [9]சந்தைகளில் வாழ்த்துதலையும், செபஆலயங்களில் முதல் ஆசனங்களையும், விருந்துகளில் முதல் இடங்களையும் விரும்பி,

ருள [10]கைம்பெண்களுடைய பொருள்களைப் பட்சித்து, வஞ்சகமாய் விஸ்தாரமான செபம்பண்ணி வருகிற வேதபாரகருக்கு நீங்கள் இடம் கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களே அதிக ஆக்கினையை அடைவார்கள் என்றார்.

உக. அதிகாரம்.

க. பிறிக்து தருமப்பெட்டியிலே இரண்டு காசைப் போட்ட ஒரு கைம்பெண்ணைப் புகழ்ந்து, ஙி. தேவாலயமும், எருசலேமும், அழிக்கப்படுவதை முன்னறிவித்து, உஙி. கடைசி காலுக்கு முன்னுண்டாகும் அடையாளங்களைச் சுட்டி. கரு. அவர்கள் விழித்திருக்கும்படிக்குப் புத்தி சொன்னது.

ருள பின்பு அவர் கண்ணே உயர்த்திப் பார்க்கிறபொழுது, [11]ஐசுவரியவான்கள் தங்கள் காணிக்கைகளைத் தருமப்பெட்டியிலே போடுகிறதைக் கண்டார்.

Digitized by Google

உ அல்லாமலும் இரண்டு காசை
*அதிலே போட்ட ஒரு ஏழைக்
கைம்பெண்ணையும் அவர் கண்டு,
கூ [1]இந்த ஏழைக் கைம்பெண்
மற்றெல்லாரிலும் அதிகம் போட்
டாள் என்று மெய்யாய் உங்களுக்
குச் சொல்லுகிறேன்.
சு எப்படியெனில், அவர்கள்
எல்லாரும் தங்கள் பரிபூரணத்தில்
எடுத்து, தேவ காணிக்கைப் பெட்
டியில் போட்டார்கள், இவள் தன்
குறைவிலே தன் சீவனத்துக்கு
உண்டான யாவையும் போட்
டாள் என்றார்.
ஙு ¶ பின்பு [2]சிலர் தேவாலயத்
தைக்குறித்து அது அழகான கற்க
ளாலும் காணிக்கைகளாலும் அ
லங்கரிக்கப்பட்டிருக்கின்றது எ
ன்று சொன்னபொழுது, அவர்
சொன்னது:
சூ நீங்கள் பார்க்கிற இவைக
ளில் [3]ஒரு கல் மற்றொரு கல்லின்
மேல் இராதபடிக்கு, எல்லாம் இ
டிக்கப்படும் நாள்கள் வரும் என்
றார்.
எ அப்பொழுது அவனை அவர்
கள் நோக்கி, போதகரே, அவை
கள் எப்பொழுது நடக்கும்? அ
வைகள் சம்பவிக்கும் காலத்துக்
கு அடையாளம் என்னவென்று
கேட்டார்கள்.
அ அதற்கு அவர் சொன்னது:
அநேகர் என் நாமத்தை எடுத்து,
தங்களை அவரே என்றும், காலம்†
சமீபமாய் வந்ததென்றும் சொல்
லுவார்கள்; [4]நீங்கள் வஞ்சிக்கப்
படாதபடிக்கு எச்சரிக்கையுள்ள
வர்களாய் அவர்களுக்குப் பின்
செல்லாமல் இருங்கள்.
கூ அல்லாமலும் யுத்தங்களையும்
கலகங்களையும் குறித்துக் கேள்வி
ப்படும்பொழுது, திகில் அடையா
திருங்கள்; அப்படிப்பட்டவை
கள் முன் சடக்கவேண்டுமே; ஆ
னாலும் முடிவு உடனே வராதெ
ன்று சொல்லி, பின்பு திருவுளம்
பற்றினதாவது:

கி. பி. கூகூ

* மத் ஙூ. சூ.
1 உ கொரி. அ. ஙூ.
2 மத். உச. கூ. மாற். ஙசு. கூ.
3 லூக. சூ. எ. ச.
† மத். கூ. உ: ச. ஙஎ.
4 மத். உச. ச. மாற். ஙகூ. இ. எபே இ. கூ. உ தெச. உ. கூ
5 மத். உச. எ.
6 கூ பே. உ. ஙகூ.
7 மாற். ஙகூ. கூ. வெளி. உ. ஙு.
8 அப் ச. கூ: இ. உஅ: ஙஉ. ச: ஙசு. உச.
9 அப். உஇ. உகூ.
10 பிலி. கூ. உஅ. உ தெச. கூ. இ.
11 மத். ஙு. ஙசு. மாற். ஙசு. ஙச. லூக். ஙஉ. ஙச.
12 அப். கூ. ஙு.
13 மீகா. எ. கூ. மாற். ஙசு. ஙஉ.
14 அப் எ. இசு: ஙஉ. உ.
15 மத். ஙு. உஉ.
16 மத். ஙு. சஙு.

யு [5]ஒரு சனக்கூட்டம் மற்ரொ
ரு சனக்கூட்டத்துக்கும் ஒரு இ
ராச்சியத்தார் மற்றொரு இராச்சி
யத்தாருக்கும் விரோதமாக எழும்
புவார்கள்.
யக அல்லாமலும் பல இடங்
ளிலே பூமி மிகவும் அதிர்தலும்
பஞ்சங்களும், பெருவாரிக்காய்ச்
சல்களும் உண்டாயிருக்கும்; வா
னத்திலிருந்து பயம் உண்டாக்கு
கிற காரியங்களும் பெரிய அடை
யாளங்களும் உண்டாகும்.
யஉ ¶ [6]அவைகள் எல்லாவற்றிற்
கும்முன்னே என்னுடைய நாமத்
தின் நிமித்தம் [7]அவர்கள் உங்கள்
மேலே தங்கள் கைகளைப்போட்
டு, உங்களைத்துன்பப்படுத்தி, [8]ஜெ
பஆலயங்களுக்கும் சிறைச்சாலை
களுக்கும் ஒப்புக்கொடுத்து, [9]இரா
சாக்களுக்கும் துரைகளுக்கும் மு
ன்பாகக் கொண்டுபோவார்கள்.
யசு [10]ஆனாலும் அது நீங்கள் சாட்
சிகொடுக்கும்படிக்கு அதுவாய்
ருக்கும்.
யச [11]ஆகையால், எப்படி மாறு
தரவு சொல்லலாம் என்று நீங்கள்
கவலைப்படாதிருக்கும்படி, உங்
கள் மனதைத் திடப்படுத்துங்கள்.
யஞ [12]நானே உங்களுக்குத் (தரு
கியான) பேச்சையும் ஞானத்தை
யும் கொடுப்பேன்; உங்கள் எதி
ராளிகள் யாவரும் அதற்கு விரோ
தமாய்ப் பேசவும் எதிர்த்தர்க்கமா
டவும் மாட்டார்கள்.
யசு அன்றியும் [13]பெற்றோராலும்
சகோதரராலும், இனத்தாராலும்
சிநேகிதராலும் காட்டிக்கொடுக்க
ப்படுவீர்கள்; [14]உங்களில்சிலரைக்
கொலைசெய்விப்பார்கள்.
யஎ [15]என் நாமத்தினிமித்தம் நீங்கள்
சகலவிதமான மனிதராலும் பகை
க்கப்படுவீர்கள்.
யஅ [16]ஆனாலும் உங்கள் தலையின்
மயிரில் ஒன்றாகிலும் அழியாது.
யக பொறுமையினாலே உங்கள்
ஆத்துமாக்களைக் காத்துக்கொள்
ளக்கடவீர்கள்.

Digitized by Google

๒๐ ¶ [1]அன்றியும் சேனைகளால் எருசலேம் வளைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் காணும்பொழுது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள்.

๒๑ அப்பொழுது யூதேயாநாட்டில் இருப்பவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமுக்குள்ளே இருப்பவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களில் இருப்பவர்கள் அதற்குள் பிரவேயோமல் இருக்கவும் கடவர்கள்.

๒๒ [2]எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படியாய், அந்நாள்களே பழிவாங்குதற்கானவைகளாய் இருக்கும்.

๒๓ அந்நாள்களில், [3]ஐயோ! கருப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் வேதனை உண்டாயிருக்கும்; என்னத்தினாலெனில், இத்தேசத்தின்மேல் மிகுந்த இடுக்கணும், இந்தச் சனத்தின்மேல் கோபாக்கினையும் உண்டாகும்.

๒๔ கட்கங்களினாலே அற்றுவிழுவார்கள்; அல்லாமலும் புறத்தேசத்தார் யாவருக்குள்ளேயும் சிறைப்பட்டுப்போவார்கள்; அன்றியும் [4]புறத்தேசத்தாருடைய காலங்கள்நிறைவேறுகிறவரைக்கும் எருசலேம் புறத்தேசத்தாராலே மிதிக்கப்படும்.

๒๕ ¶ [5]சூரியனிலும், சந்திரனிலும், நட்சத்திரங்களிலும், அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேல் உள்ள சனங்களுக்குள்ளே கலக்கமான உபத்திரவம் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் கோஷ்டமாயிருக்கும்.

๒๖ [6]வானத்தில் பலமானவைகளும் அசையும்; ஆதலால் பூலோகத்தின்மேல் வருகிற காரியங்களுக்குப்பயந்து அவைகளை நோக்கிப் பார்க்கிறதினாலே மனிதர்கள் சோர்ந்துபோவார்கள்.

๒๗ அப்பொழுது [7]மனிதனுடைய குமாரனை மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தில் வரக்காண்பார்கள்.

๒๘ அவை சம்பவிக்கத் தொடங்கும்பொழுது, [8]உங்கள் மீட்புச் சமீபமாய் வருவதால், நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை உயர்த்தக்கடவீர்கள் என்று சொல்லி,

๒๙ ¶ பின்பு [9]உவமையாய்ச் சொன்னதாவது: அத்திமரத்தையும் மற்றச் சகல மரங்களையும் பாருங்கள்.

๓๐ அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்பொழுது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிகிறீர்கள்.

๓๑ அந்தப்படியே நான் சொன்னவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது, பராபரனுடைய ஆளுகை சமீபமாயிற்றென்று அறியக்கடவீர்கள்.

๓๒ அவையெல்லாம் சம்பவிக்கிறவரைக்கும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

๓๓ [10]வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வசனங்கள் ஒழிந்துபோகாது.

๓๔ ¶ அன்றியும் பூமியில் எங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அந்த நாள் ஒரு வலையைப்போல வருவதால்,

๓๕ [11]உங்கள் இருதயங்கள் பெருந்தீனியினாலும், வெறியினாலும், பிழைப்பின் கவலையினாலும் பாரம் அடையாதபடிக்கும், அந்த நாள் உங்களுக்குச் சடுதியாய் வராதபடிக்கும் எச்சரிக்கையாய் இருக்கக்கடவீர்கள்.

๓๖ ஆகையால் [12]இனிச் சம்பவிப்பவைகள் யாவுக்கும் நீங்கள் தப்புவித்துக்கொண்டு, [13]மனிதனுடைய குமாரனுக்குமுன்பாக நிற்கப் பாத்திரவான்களென்று எண்ணப்படும்படிக்கு, [14]எக்காலமும் செபம்பண்ணி, [15]விழித்திருக்கக்கடவீர்கள் என்று திருவுளம்பற்றினார்.

இ. பி. ๓๓.

1 மத். உ ๒๔. மாற். ๑๓. ๒๔.
2 தானி. ๙.๒๔, உ எ. சகரி. ๑๓. ๙.
3 மத். உ ๒. ๑๙.
4 தானி. ๙.๒๔: ๑๒. எ. உரோ. ๑๑. ๒๕.
5 மத். உ ๒. ๒๔. மாற் ๑๓. உ பே.๑.๑, ๑๑.
6 மத். உ ๒. ๒๙.
7 மத். உ ๒. ๒๔. வெளி. ๙ எ: ๑ ๒. ๑ ๒.
8 உ Cor. அ. ๑๙, ๒๑.
9 மத். உ ๒. ๒๒. மாற். ๑๓. உ அ.
10 மத். உ ๒. ๓๕.
11 உரோ. ๑๓ ๑๓. ๙ தெச. இ. ๕. ๙ பே. ๒. எ.
12 ๙ தெச. இ. உ. உ பே. ๙. ๑. வெளி. ๙. ๙: ๑๙. ๑๘.
13 சங். ๙. இ. எபே. ๙. ๑๙.
14 லூக். ๑அ. ๙.
15 மத். உ ๒. ๒๒: உ இ. ๑๙. மாற். ๑๓. ๓๓.

Digitized by Google

கி. பி. கூ.

கஎ ¶ அன்றியும் [1]அவர் பகற்காலங்களில் தேவாலயத்தில் உபதேசித்துக்கொண்டு, [2]இராக்காலங்களில் வெளியே போய், ஒலிவமலை என்னப்பட்ட மலையிலே தங்கிவந்தார்.

கஅ அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கு, சனங்கள் எல்லாரும் அதிகாலையிலே தேவாலயத்தில் அவரிடத்துக்கு வந்தார்கள்.

௨௨. அதிகாரம்.

க. யூதர்கள் நிந்தனைக் கொலைசெய்யும்படி தேடினது. கசு. அவனைக் காட்டிக்கொடுக்கும்படி சாத்தான் யூதாவை ஏவினது. எ. அப்போஸ்தலர்கள் பஸ்காவை ஆயத்தம்பண்ணினது. கூ. நிந்தை பரிசுத்த இராப்போசனத்தைத் தட்டிவிட்டு, உக. தம்மைக் காட்டிக்கொடுப்பவனைக் குறிப்பாகச் சொல்லி, உச. மற்ற அப்போஸ்தலர்கள் பெருமை அற்றிருக்கப் போதித்து, உக. பேதுருவின் விசுவாசம் அவனைவிட்டு எப்படாதேபோலும், உச. அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பான் என்று முன் அறிவித்தது. உக. அவர் மலையின்மேல் செபம்பண்ணி, இத்தவேளைவிட்டு, சஎ. முத்திபிதலிலுலே காட்டிக்கொடுக்கப்பட்டு, ஙஅ. மல்குவின் அறுப்புண்ட காதைச் சொஸ்தப்படுத்தி, ஙசு. பேதுருவினால் மூன்றுதரம் மறுதலிக்கவும், ஙக. பரியாசஞ்செய்யணம் பண்ணவும்பட்டு, ஙக. தம்மைப் பரபாவுடைய குமாரனென்று அறிக்கையிட்டது.

[3]பஸ்கா என்னப்பட்ட புளியாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று.

3 மத். உக. உ. மாற். மசு. க.

உ அப்பொழுது [4]பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனங்களுக்குப் பயப்பட்டபடியினாலே, அவனைக் கொலைசெய்யும்படிக்கு (இரகசியமாய்) வகைதேடினார்கள்.

4 சல். உ. உ. மோவா.க்க.சஎ. அப். ச. உஎ.

ஊ [5]அக்காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்ற பேர்கொண்ட யூதாவுக்குள்ளே சாத்தான் புகுந்தான்.

5 மத். உக. மசு. மாற். மசு. உ. மோவா. மக.உ, உஎ.

6 சகரி. மக. மஉ * அல்லது சத்தமில்லாமல்.

எ ¶ அவன் போய், பிரதான ஆசாரியரோடும் தேவாலயத்தின் அதிபதிகளோடும் அவனை அவர்களுக்கு எப்படி ஒப்புக்கொடுக்கலாமென்று ஆலோசனைபண்ணிக்கொண்டான்.

7 மத். உக. மஎ. மாற்.மச.மஉ.

ஏ அவர்கள் சந்தோஷப்பட்டு [6]அவனுக்குத் திரவியம் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.

8 மத். உக. உஅ. மாற்.மச.மஎ.

கூ அதற்கு அவன் பொருந்தி, சனக்கூட்டம் இல்லாதபொழுது* அவனை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படிக்குத் தகுதியான காலத்தைத் தேடினான்.

எ ¶ [7]பஸ்காவின் ஆட்டுக்குட்டியைப் பலியிடவேண்டிய புளியாத அப்பநாள் வந்தது.

அ அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானையும் அழைத்து, நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், நமக்காக அதை எத்தனம்பண்ணுங்கள் என்றார்.

கூ அதற்கு அவர்கள், நாங்கள் அதை எங்கே எத்தனம்பண்ண விரும்புகிறீர் என்றார்கள்.

ஈ அவர் சொன்னது: நீங்கள் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் பொழுது, ஒருவன் தண்ணீர்க் குடம் சுமந்துகொண்டு உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப்பின்சென்று, அவன் போகும் வீட்டிலே போய்,

உ அந்த வீட்டெசமானை நோக்கி, நான் என் சீஷரோடுங்கூடப் பஸ்காவைப் புசிக்கத்தக்கதான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச்சொன்னார் என்று சொல்லுங்கள்.

ஊ அவன் கம்பளமுதலானவைகள் விரித்திருக்கிற விஸ்தாரமான மேல்வீட்டை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே எத்தனம்பண்ணுங்கள்என்று அனுப்பினார்.

ஃ அவர்கள் போய், அவர் சொன்னபிரகாரமாகக் கண்டு, பஸ்கா போசனத்தை எத்தனம்பண்ணினார்கள்.

எ ¶ தகுதியான நேரம் வந்த பொழுது, [8]அவரும் அவருடனே பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியில் இருந்தார்கள்.

ஐ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நான் பாடுபடுகிறதற்குமுன்னே உங்களுடனேகூட

Digitized by Google

இ. பி. கூகு.

இத்தப் பஸ்காப்போசனம் பண்ண மிகவும் ஆசையாய்* இருந்தேன்.

16 என்னத்தினாலெனில், [1]பராபரனுடைய இராச்சியத்திலேயது நிறைவேறும் அளவும் நான் பின்னும் இதில் புசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி,

17 பின்பு பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, தோத்திரம்செய்து, [2]பராபரனுடைய ஆளுகை வரும் அளவும், நான் மறுபடியும் திராட்ச இரசத்திலே பானம்பண்ணுவதில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகையால் நீங்கள் இதை எடுத்து, உங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்றார்.

19 ¶ அல்லாமலும் [3]அவர் அப்பத்தை எடுத்துக்கொண்டு தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்து, இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாய் இருக்கின்றது; [4]என்னை நினைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லி,

20 இராப்போசனம்பண்ணினபின்பு, அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து, [5]இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என் இரத்தத்தினாலே புதிய உடம்படிக்கையாய் இருக்கின்றது என்று சொல்லி,

21 ¶ பின்பு இதோ, [6]என்னைக் காட்டிக்கொடுக்கிறவனுடைய கை என்னுடனேகூட இப்பந்தியில் இருக்கின்றது.

22 [7]தீர்மானத்தின்படியே மனிதனுடைய குமாரன் போகிறான்; அது மெய்தான். [8]ஆனாலும், ஐயோ! எந்த மனிதன் அவனைக் காட்டிக்கொடுக்கிறானே அந்த மனிதனுக்கு வேதனைவரும் என்றார்.

23 அப்பொழுது [9]அவர்கள் நம்மில் யாவன் அப்படிச் செய்வான் என்று தங்களுக்குள்ளே விசாரிக்கத் தொடங்கினார்கள்.

24 ¶ அன்றியும் அவர்கள் [10]தங்களில் எவன் பெரியவனாய் இருப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணிக்கொண்டிருந்தபொழுது,

25 [11]அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: புறத்தேசத்தாருடைய இராசாக்கள் அவர்களை பலவந்தமாய் ஆண்டுகொள்ளுகிறார்கள்; அல்லாமலும் அவர்கள் மேல் அதிகாரம் செலுத்துகிறவர்கள் தருமதுரைகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

26 [12]உங்களுக்குள்ளே அப்படி இருக்கக்கூடாது; [13]உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் ஊழியக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்.

27 [14]பந்தியில் இருக்கிறவன், ஊழியம்செய்கிறவன், இவ்விருவரில் எவன் பெரியவன்? பந்தியில் இருக்கிறவன் அல்லவா? ஆனாலும் [15]நான் உங்களுக்குள்ளே ஊழியம் செய்கிறவனைப்போல இருக்கிறேன்.

28 மேலும் [16]எனக்கு வந்ததுன்பகாலங்களில் என்னுடனே இருந்தவர்கள் நீங்களே.

29 ஆகையால் [17]என் பிதா எனக்கு ஓர் இராச்சியத்தை ஏற்படுத்தியிருக்கிறபடியால்,

30 [18]நீங்கள் என் இராச்சியத்தில் என் பந்தியிலே போசனபானம் பண்ணி, [19]இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர்களாய் ஆசனங்களின்மேல் உளுக்காரும்படிக்கு நான் உங்களை ஏற்படுத்துகிறேன் என்றார்.

31 ¶ கர்த்தர் பின்னும் சொன்னதாவது: [20]சீமோனே, சீமோனே, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோல, [21]உங்களைப் புடைக்கும்படிக்கு, சாத்தான் உத்தரவு கேட்டான்.

* அல்லது மன ஆசையாய்.

1 லூக். 14. 15. அப். 10. 41. வெளி. 19. 9.

2 மத். 26. 29. மாற். 14. 25.

3 மத் 26. 26. மாற். 14. 22.

4 1 கொரி. 11. 24.

5 1 கொரி. 10. 16.

6 சங் 41. 9. மத். 26. 21, 23. மாற். 14. 18. அ. யோவா. 13. 21, 26.

7 அப். 2. 23: 3. 18.

8 மத். 26. 24. மாற். 14. 21.

9 மத். 26. 22. மாற். 14. 19. யோவா. 13. 22, 25.

10 மாற். 9. 34. லூக் 9. 46.

11 மத். 20. 25. மாற். 10. 42.

12 மத். 23. 11. மாற். 10. 43.

13 லூக். 9. 48.

14 லூக் 12. 37.

15 மத். 20. 28. அ. யோவா. 13. 4, 5, 14, பிலி. 2. 7.

16 எபி. 2. 18.

17 மத். 25. 34. லூக். 12. 32. 1 கொரி. 6. 9. 15. 50. கலா. 5. 21. எபே. 5. 5. 1 தீமோ. 6. 16. 2 தீமோ. 4. 1. 18. யாக். 2. 5. 2 பேது. 1. 11. வெளி. 12. 10.

18 மத். 8. 11. லூக். 13. 29. வெளி. 19. 9.

19 சங். 49. 14. மத். 19. 28. 1 கொரி. 6. 2. வெளி. 3. 21. 20. 4.

20 1 பே. 5. 8.

21 ஆமோ. 9. 9.

கி. பி. 33.

32 1ஆனாலும், உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு, உனக்காக வேண்டிக்கொண்டேன்; அந்தப்படி 2நீ இனிமேல் மனம்திரும்பினபின் உன் சகோதரரை ஸ்திரப்படுத்துவாயாக என்றார்.

33 அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, உம்முடனேகூட நான் காவலிலும் சாவிலும் வர எத்தனமாய் இருக்கிறேன் என்றான்.

34 அவர் சொன்னது: 3பேதுருவே, இன்று சேவல் கூவும்முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

35 ¶ பின்னும் அவர் அவர்களுடனே சொன்னது: 4நான் உங்களைப் பணப்பையையும், சாமான்பையையும், பாத இரட்சைகளையும் இல்லாமல் அனுப்பினபொழுது, எதாகிலும் உங்களுக்குக் குறைவாய் இருந்ததா என்றார்; ஒன்றும்குறைவாயிருக்கவில்லை என்றார்கள்.

36 அவர் சொன்னது: இப்பொழுது பணப்பையையும் சாமான்பையையும் உடையவன் அவைகளை எடுத்துக்கொள்ளக்கடவன்; அல்லாமலும் கத்தியில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்ளக்கடவன்.

37 என்னத்துக்கென்றால், என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் முடிகிறபடியினாலே, 5அக்கிரமக்காரரோடே எண்ணப்பட்டார் என்று எழுதியிருக்கிறது, என்னிடத்தில் நிறைவேறவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

38 அதற்கு அவர்கள் ஆண்டவரே, இதோ, இரண்டு கத்திகள் உண்டு என்றார்கள்;(அவைகளே) போதும் என்று அவர்களுடனே சொன்னார்.

39 ¶ பின்பு 6அவர் புறப்பட்டு, வழக்கத்தின்படியே 7ஒலிவமலைக்

1 Peter. 22. 32, 61.
2 2 கொ. 2. 8. Peter. 21. 15, 16, 17.
3 மத். 26. 34. மாற். 14. 30. Peter. 13. 38, 18. 27.
4 மத். 10. 9, 10. மாற். 6: 8, 9.
5 ஏசா. 53. 12. மாற். 15. 28. உரு.
6 மத். 26. 30. மாற். 14. 26. Peter 18. 1.
7 யோ. 8. 1, 2. 18. 2.

குப் போனார்; அவருடைய சீஷரும் அவருக்குப் பின்சென்றார்கள்.

40 8அவ்விடத்தில் சேர்ந்தபொழுது, அவர் அவர்களை நோக்கி, நீங்கள் குற்றம்செய்வதற்கான காரணத்தில் பிரவேசியாதபடிக்கு, ஜெபம்பண்ணுங்கள் என்று சொல்லி,

41 9கல்லெறிதூரத்தில் அவர்களைவிட்டுப் போய்,

42 முழங்கால் படியிட்டு, பிதாவே, உமக்குச் சித்தமானால். *இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; 10இல்லாவிட்டால், என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆவதாக என்று ஜெபம்பண்ணினார்.

43 அப்பொழுது 11வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்.

44 பின்னும்அவர் கொடிய வேதனைப்பட்டு,12அதிக உக்கிரத்தோடே ஜெபம்பண்ணினார்; அப்பொழுது அவருடைய வேர்வை இரத்தத்துளிகளைப்போலாகித் தரையிலே விழுந்தது.

45 பின்பு அவர் ஜெபம்பண்ணி முடித்தபொழுது, எழுந்திருந்து தம்முடைய சீஷரிடத்தில் போய், அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணக் கண்டு,

46 என்னத்திற்காகத் தூங்குகிறீர்கள்; நீங்கள் குற்றம்செய்வதற்கான காரணத்தில் பிரவேசியாதபடிக்கு, 13எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள் என்றார்.

47 ¶ அவர் அப்படிப் பேசுகையில், 14ஜனங்கள் கூட்டமாய்ச் சேர்ந்தார்கள்? அவர்களுக்குமுன்னாகப் பன்னிருவரில் ஒருவனான யூதா என்பவன் நடந்துபோய், இயேசுவை முத்தம்செய்யும்படிக்கு அவரிடத்தில் சேர்ந்தான்.

48 அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, யூதாவே, நீ

8 மத். 26. 36. மாற். 14. 32. Peter. 18. 1.
9 மத். 26. 39. மாற். 14. 35. போவா. 18. 11. உரு.
* அல்லது நீங்க ச் சித்தமானால்.
10 போவா. 12. 27: 18. 11. உரு.
11 மத். 4. 11.
12 போவா. 22. 44. உள. எபி 12. 7.
13 மத். 26. 40. மாற். 14. 37. போவா. 18. 2. உரு.
14 மத். 26. 47. மாற். 14. 43. போவா. 18. 3. உரு.

Digitized by Google

மனிதனுடைய குமாரனை முத்தத் தினாலேயா காட்டிக்கொடுக்கி றாய் என்றார்.

48 சகலவல்லாமலும் அவரைச் சுற்றி யிருந்தவர்கள் சம்பவிப்பதை அறிந்து அவரை நோக்கி, ஆண்டவரே, கத்தியினாலே காக்கள் வெட்டலாமா என்று சொல்ல,

49 (உடனே) [1]அவர்களில் ஒரு வன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலதுகாதறவெட் டினான்.

50 அப்பொழுது இயேசுவானவர், இம்மட்டில் நிறுத்துங்கள் என்று சொல்லி, அவனுடைய காதைத்தொட்டு, அவனைக் குணமாக்கினார்.

51 [2]பின்பு இயேசுவானவர் தமக்கு விரோதமாய் வந்த பிரதான ஆசாரியரையும், தேவாலயத்தலை வரையும், மூப்பரையும் நோக்கி, ஒரு கள்ளனைப் பிடிக்கப் புறப் படுகிறதுபோல, நீங்கள் கத்திக ளோடும் தடிகளோடும் புறப்பட்டு வந்தீர்கள்.

52 நான் தினந்தோறும் தேவால யத்தில் உங்களுடனே இருக்கை யில், நீங்கள் என்மேல் கைகளைப் போடவில்லை, [3]இதுவே உங்க ளுக்கு ஏற்றவேளையுமாய் இருளின் வல்லமையுமாய் இருக்கின்றது என்றார்.

53 ¶ அப்பொழுது [4]அவர்கள் அவரைப் பிடித்து, பிரதான ஆசா ரியனுடைய மாளிகைக்குக் கொ ண்டுபோனார்கள்; [5]பேதுருவும் தூரமாக அவருக்குப் பின்சென் றான்.

54 அல்லாமலும், [6]அவர்கள் மாளிகையின் பிரகாரத்தின் நடுவி லே நெருப்பை உண்டுபண்ணி, அதைச் சுற்றி, உளுக்காந்தபொ ழுது பேதுருவும் அவர்களுக்குள் ளே உளுக்காந்தான்.

55 அப்பொழுது ஒரு வேலைக் காரி அவனை நெருப்பினிடத்தில் இருக்கக் கண்டு அவனை உற்றுப்

பார்த்து, இவனும் அவனோடிருந் தான் என்றாள்.

56 அதற்கு அவன் ஸ்திரியே, அவனை அறியேன் என்று அவ னை மறுதலித்தான்.

57 [7]சற்றுநேரத்துக்குப் பின்பு, வேறொருவன் அவனைக் கண்டு, நீயும் அவர்களில் ஒருவன் என் றான், அதற்குப் பேதுரு, மனித னே, நானல்ல என்றான்.

58 [8]ஏறக்குறைய ஒருமணி நே ரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைப்பார்த்து, மெய்யாய் இவ னும் அவனோடு இருந்தான், இவன் கலிலேயன்தானே என்று நிச்ச யத்தோடே சொன்னான்.

59 அதற்குப் பேதுரு மனித னே, நீ பேசுகிறதை அறியேன் என்றான்; உடனே அவன் பேசு கையில் சேவல் கூவிற்று.

60 அப்பொழுது கர்த்தர் திரும் பி, பேதுருவை நோக்கிப் பார்த் தார்; [9]உடனே பேதுரு சேவல் கூவும்முன்னே [10]நீ என்னை மூன் றுதரம் மறுதலிப்பாய் என்று தன்னோடே கர்த்தர் சொன்ன வச னத்தை நினைத்துக்கொண்டு,

62 வெளியே போய், மிகுந்த மனத்துக்கத்தோடே அழுதான்.

63 ¶ [11]இயேசுவைப் பிடித்துக் கொண்ட மனிதர் அவனை அசட் டைபண்ணி,

64 அடித்து, அவருக்கு முக்கா டிட்டு, அவருடைய முகத்தில் அ றைந்து, உன்னை அடித்தவன் யா வன், அதைத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லென்று சொல்லி,

65 மற்றும் அநேகவிதமாய் அ வனைத் தூஷணித்தார்கள்.

66 ¶ [12]உதயமானபொழுது ச னத்தின் [13]மூப்பரும், பிரதான ஆ சாரியரும், வேதபாரகரும் கூடி வந்து, தங்கள் ஆலோசனைச் சங் கத்தில் அவனைக் கொண்டுவரும் படிசெய்து, அவனை நோக்கி,

67 [14]நீ கிறிஸ்துவானால் அதை எங்களுக்குச் சொல் என்றார்கள்;

கி. பி. கூக.

1 மத். உக இக. மாற். ம்ச. சஎ. போவா. டஅ.ம்.

2 மத். உக.ஙஇ. மாற். ம்ச. சஅ.

3 போவா. ம்உ. உஎ.

4 மத். உக. ஙஎ.

5 மத். உக.ஙஅ. போவா. ம்அ. ம்ஙி.

6 மத்.உக. ககக. மாற்.ம்ச ககக. போவா. ம்அ. ம்எ,ம்அ.

7 மத். உக. எக. மாற். ம்ச. ககக. போவா. ம்அ. உஙி.

8 மத். உக. எக. மாற். ம்ச. எம். போவா. ம்அ. உக.

9 மத். உக. கச, எஙி. போவா. ம்க.கஅ.

10 மத்.உக.எஙி. மாற்.ம்ச எஉ.

11 மத் உக. கஎ, கஅ. மாற்.ம்ச. கஙி.

12 மத்.உ எ.க.

13 அப். ச. உக. அப்.உஉ.ஙி.

14 மத். உக.ககக. மாற்.ம்ச.ககக.

Digitized by Google

அதற்கு அவர் நான் உங்களுக்குச் சொன்னலும் என்னை நம்பமாட்டீர்கள்.

சுஅ நான் உங்களிடத்தில் விசாரித்தாலும் நீங்கள் எனக்கு மாறுத்தரவு சொல்லவும் என்னை விடுதலையாக்கவும்மாட்டீர்கள்.

சுக [1]இதுமுதல் மனிதகுமாரன் சருவவல்லமையுள்ள பராபரனுடைய வலதுபாரிசத்தில் உளுக்காருவான் என்றார்.

எல அதற்கு அவர்கள் எல்லாரும், அந்தப்படி நீ பராபரனுடைய குமாரனு என்றார்கள்; அவர் சொன்னது: [2]நீங்கள் சொல்லுகிறபடி நானே அவரென்றார்.

எக [3]அப்பொழுது அவர்கள் சொன்னது: இனி வேறு சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாம் தானே இவனுடைய வாயிலுலே கேட்டோமே என்றார்கள்.

உஙூ. அதிகாரம்.

க. இயேசு பிலாத்துவுக்குமுன்பாகக் குற்றஞ்சாற்றப்பட்டு, ஏரோதேயினிடத்துக்கு அனுப்பப்பட்டது. அ. ஏரோதே அவரைப் பரிகாசம்பண்ணினது. ஙஉ. விரோதிகளாயிருந்த ஏரோதேயும் பிலாத்தும் சிநேகிதரானது. ஙஅ. பாபாசெம்பலன் சனங்களுடைய கேட்டுக்கொள்ளுதலிலுலே பிலாத்து வினல் விடுதலையாக்கப்பட, இயேசுவானவர் சிலுவையில் அறையும்படி ஒப்புவிக்கப்பட்டது. ஙச. தமக்காகப் புலம்பின ஸ்திரீகளுக்கு ஏருசலேமின் அழிவைச் சொல்லி, ஙசு. தம்முடைய சத்துருக்களுக்காக வேண்டிக்கொண்டது. ஙக. இரண்டு குற்றவாளிகளும் அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டது. சக. அவர் மரித்து, ஙல. அடக்கம்பண்ணப்பட்டது.

[4]பின்பு அவர்களுடைய கூட்டத்தார் எல்லாரும் எழுந்திருந்து, அவனைப் பிலாத்துஎன்னும் துரையினிடத்துக்குக் கொண்டுபோய்,

உ [5]இவன் தன்னை இராசாவாகிய கிறிஸ்து என்றும், [6]சனங்கள் இராயருக்கு வரிகொடுக்கவேண்டுவது இல்லையென்றும்சொல்லி, [7]அவர்களைக் கலகப்படுத்தக் கண்டோம் என்று அவர்மேல் குற்றம் சாற்றத் தொடங்கினார்கள்.

ஊ [8]அப்பொழுது பிலாத்து என்பவன் அவனை நோக்கி, நீ யூதருடைய இராசாவா என்று கேட்டான்; அதற்கு அவர் நீர் சொல்லுகிறபடியே இருக்கின்றது என்றார்.

ச பின்பு பிலாத்து என்பவன் பிரதான ஆசாரியரையும் சனக்கூட்டத்தையும் நோக்கி, [9]இந்த மனிதனிடத்திலே ஒரு குற்றத்தையும் காணேம் என்றான்.

ஞ அதற்கு அவர்கள் சொன்னது: இவன் கலிலேயா நாட்டைத் தொடங்கி, இவ்விடம்வரைக்கும் யூதேயா நாட்டில் எங்கும் உபதேசம்பண்ணி, சனங்களைக் கலகப்படுத்துகிறான் என்று அதிக உக்கிரத்தோடே சொன்னார்கள்.

ட கலிலேயா காடென்பதைப் பிலாத்துக் கேள்விப்பட்டபொழுது, இம்மனிதன் கலிலேயனு என்று விசாரித்தபின்பு,

ஏ [10]அவர் ஏரோதே இராசாவின் அதிகாரத்துக்கு உள்ளானவர் என்று அறிந்து, அந்நாள்களில் எருசலேமிலே வந்திருந்த ஏரோதினிடத்திற்கு அவரை அனுப்பினான்.

அ ¶ ஏரோது என்பவன் [11]இயேசுவைக்குறித்து மிகுந்த காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியினலே, [12]அநேகநாளாய் அவரைக் காண ஆசையாயிருந்தான்; ஆதலால் அவன் அவரைக் கண்டபொழுது, மிகவும் சந்தோஷப்பட்டு, அவர் செய்யும் அற்புதத்தைப்பார்க்கலாம் என்று எண்ணி,

க அநேகம் காரியங்களைக்குறித்து அவரிடத்தில் விசாரித்தான்; அவர் அவனுக்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை.

ஙி பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் வந்து நின்று, உக்கிரமாய் அவர்மேல் குற்றம்சாற்றினார்கள்.

ஙக அப்பொழுது ஏரோதென்பவனும், [13]அவனுடைய போர்ச்சேவகரும் அவரை அசட்டைபண்ணி, பிரகாசமுள்ள வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி, இப்படிப் பரிகாசம்பண்ணினபின்பு,

1 மத். உக. கச. மாற். மச. கஉ. பி.க.க: அ க.
2 மத். உக. கச. மாற்.மச.கஉ.
3 மத். உக கஇ. மாற்.மச.கக.
4 மத். உள. உ. மாற். மஇ. க. போள. மஅ. உஅ.
5 போள. மசு. மஉ.
6 மத். மள. உள: உஉ.உக. மாற். மஉ.மள.
7 அப்.மள.ள.
8 மத். உள. மக. கதிமோ.க.மச.
9 க பே.உ.உஉ.
10 லூக்.க.க.
11 மத். மச. க. மாற்.க.மச.
19 லூக்.க.க.
13 எச. இக.க.

கி. பி. ரூரூ.

மனதாய், மறுபடியும் அவர்களுக்குச் சொன்னான்.

உக அதற்கு அவர்கள் இவனைச் சிலுவைமரத்தில் அறையவேண்டும், இவனைச் சிலுவைமரத்தில் அறையவேண்டும் என்று கூக்குரலிட்டார்கள்.

உஉ அவன் மூன்றாம்தரம் சொன்னது: இவன் எந்தப் பொல்லாங்கைச்செய்தான்? இவனிடத்திலே மரணத்துக்கு ஏதுவான குற்றம் ஒன்றையும் காணேமே; ஆகையால் நான் இவனைத் தண்டித்து விடுதலைபண்ணுவேன் என்றான்.

உரு அப்படியிருந்தும் அவனைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்கு, அவர்கள் மிகுந்த சத்தத்துடனே கேட்டுக்கொண்டார்கள்; அவர்களும் பிரதான ஆசாரியரும் இட்டகூக்குரல் அதிகப்பட்டது.

உச [8]அப்பொழுது பிலாத்து என்பவன் அவர்களுடைய மனுவின்படி ஆகும்படிக்குத் தீர்மானம் பண்ணி,*

உடு கலகத்தின் நிமித்தமும் கொலைபாதகத்தின் நிமித்தமும் காவலில் வைக்கப்பட்டிருந்தவனை அவர்களுடைய விண்ணப்பத்தின்படி அவர்களுக்காக விடுதலையாக்கி, இயேசுவானவரையே அவர்களுடைய இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான்.

உசு ¶ அந்தப்படி அவர்கள் அவனைக் கொண்டுபோகிறபொழுது [9]வயலிலிருந்து வருகிற சிரேனே ஊராகிய சீமோன் என்பவனைப்பிடித்துச் சிலுவைமரத்தை இயேசுவின் பின் சுமந்துபோகும்படி அவன்மேலே வைத்தார்கள்.

உஎ திரளான கூட்டமாகிய சனங்களும், அவருக்காகத் துக்கமாய்ப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவருக்குப் பின்சென்றார்கள்.

உஅ அப்பொழுது இயேசுவானவர் அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னது: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக

உஉ அவனைத் திரும்பப் பிலாத்துவினிடத்துக்கு அனுப்பினான்; அந்நாளிலே முன்னே ஒருவருக்கொருவர் பகைஞராய் இருந்த [1]பிலாத்து என்பவனும் ஏரோது என்பவனும் சிநேகிதராஞர்கள்.

உக ¶ அப்பொழுது [2]பிலாத்து என்பவன் பிரதான ஆசாரியரையும், தலைவரையும், சனங்களையும், கூடிவரச்செய்து, அவர்களை நோக்கி,

உச நீங்கள் [3]இந்த மனிதன் சனங்களைக் கலகப்படுத்துகிறவன் என்று சொல்லி, இவனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; அந்தப்படி நான் உங்களுக்குமுன்பாக இவனைச்சோதித்தபொழுது, [4]நீங்கள் இவன்மேல் சாற்றின குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்திலே காணவில்லை.

உடி பின்பு உங்களை ஏரோதினிடத்திற்கு அனுப்பினேன்; அவரும் இவனில் குற்றம் காணவில்லை.

உசு ஆதலால் இவன் மரணத்துக்கு ஏதுவானது ஒன்றும் செய்யாதவனுயிருக்கிறபடியால், [5]நான் இவனைத் தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான்.

உஎ [6]பண்டிகைதோறும் அவன் அவர்களுக்காக ஒருவனைவிடுதலையாக்கவேண்டியிருந்தபடியால், அப்படிச்சொன்னான்.

உஅ திரளான சனங்கள் எல்லாரும் அதைக்கேட்டு, [7]இவனை ஜூக்கினைக்கு உட்படுத்தி, பரபாஸ எங்களுக்காக விடுதலையாக்க வேண்டும் என்று கூக்குரல் இட்டார்கள்.

உக அந்தப் பரபாசென்பவன் நகரத்திலே நடந்த ஒரு கலகத்துக்காகவும் கொலைபாதகத்துக்காகவும் காவலில் வைக்கப்பட்டிருந்தான்.

உல அப்பொழுது பிலாத்தான் இயேசுவை விடுதலையாக்க

1 அப். ச. உஎ.

2 மத். உஎ. உக. மாற். ரூஇ. ரூச. போவா. ரூஅ. ரூஅ: ரூக.ச.

3 க, உ. வச.

4 ச. வச.

5 மத். உஎ. உக. போவா. ரூக.க.

6 மத். உஎ. ரூஇ. மாற். ரூஇ. க. போவா. ரூஅ. ரூக.

7 அப்.க.ரூச.

8 மத். உஎ. உக. மாற். ரூஇ. ரூஇ. போவா. உக. உக.

* அல்லது சம்மதித்து. உ வே. உக. உ.

9 மத். உஎ. கூ. மாற். ரூஇ. உக. போவா. ரூக. ரூஎ.

அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுது கொள்ளுங்கள்.

உக என்னத்தினாலெனில், [1]மலடிகளும், பிள்ளைபெறாத கருப்பங்களும், பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சொல்லப்படும் நாள்கள் வரும்.

உஉ அப்பொழுது இவர்கள் [2]மலைகளை நோக்கி, எங்கள்மேல் விழுங்கள் என்றும், குன்றுகளை நோக்கி, எங்களை மூடிக்கொள்ளுங்கள் என்றும் சொல்லுவார்கள்.

உஇ [3]பசுமையான மரத்துக்கு இப்படிச் செய்தால், பட்டுப்போன மரத்துக்கு மிகவும் அதிகமாய் இப்படிச் செய்யப்படும் அல்லவா என்றார்.

உஈ ¶ [4]குற்றவாளிகளாகிய வேறு இரண்டுபேரும் அவரோடே கூட மரணம் அடைவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள்.

உஉ [5]தலையோட்டிடம் * என்னப்பட்ட இடத்திலே அவர்கள்சேர்ந்தபொழுது, அங்கே அவனையும், அவருடைய வலதுபக்கத்திலே ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்திலே மற்றக் குற்றவாளியையும் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

உஊ ¶ அப்பொழுது இயேசுவானவர், பிதாவே, [6]இவர்கள் தங்கள் செய்கையின் தன்மையை அறியாதிருக்கிறார்கள்; ஆதலால் [7]இவர்களுக்கு மன்னித்தருளும் என்றார்; [8]அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டு, (அவைகளைக்குறித்து) சீட்டுப்போட்டார்கள்.

உஎ [9]சனங்கள் நின்று பார்த்துக் கொண்டார்கள்; [10]அவர்களுடனேகூடத் தலைவரும் அவனை இகழ்ந்து, இவன் மற்றவர்களை இரட்சித்தான்; இவன் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்ட கிறிஸ்துவானால், தன்னைத்தானே இரட்சிக்கலாமே என்றார்கள்.

கி. பி. ஈஈ.

1 மத். உ.ச. ம.க. லூக்.உ.உ.உ.

2 எசா. உ. ம.க. ஓசே. ம. அ. வெளி. க. ம.க: க.க.

3 லூக். ம.க. க.க. எரே.உ.இ.உ.க. எசே.உ.ம சா: உ.க,ச.க பே. ச.எ.

4 எசா. இ.ம.உ. மத்.உ.எ.க.அ.

5 மத். உ.எ. க.க. மாற்.ம.இ.உ.உ. யோவா. ம.க. ம.ம.அ.

* அல்லது கல்வாரியில்.

6 அப்.க.ம.எ.

7 மத். இ. ச.ச. அப். எ. க.ம. க கொரி.ச.ம.உ.

8 மத். உ.எ. க.இ. மாற். ம.இ. உ.ச. யோவா. ம.க. உ.க.

9 சங். உ.உ. ம.எ. சகரி.ம.உ.ம.

10 மத். உ.எ.க.க. மாற்.ம.இ.உ.க.

11 மத். உ.எ. க.எ. மாற். ம.இ. உ.க. யோவா. ம.க. ம.க.

12 மத். உ.எ.ச.ச. மாற்.ம.இ.க.உ.

13 மத. உ.எ.ச.இ. மாற்.ம.இ.க.க.

† அல்லது பூமி பெக்கும்.

14 மத். உ.எ.இ.க. மாற். ம.இ. க.அ.

ஈஈ பேர்ச்சேவகரும் அவனை அசட்டைபண்ண அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் காடியைக் காண்பித்து,

ஈஎ நீ யூதரின் இராசாவானால் உன்னை இரட்சித்துக்கொள் என்றார்கள்.

ஈஅ அவருக்கு மேலாக, [11]இவன் யூதருடைய இராசா என்று கிரேக்கை, லத்தீன், எபிரேயு என்னும் பாஷைகளால் எழுதப்பட்டிருந்தது.

ஈக ¶ [12]அல்லாமலும் தூக்கிப்போடப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் அவனைத் தூஷணித்து, நீகிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்என்றான்.

ஈச அப்பொழுது மற்றவன் அவனுடனே சொன்னது: இந்த ஆக்கினைக்கு உள்ளாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படாமலா இருக்கிறாய்? நாம் நம்முடைய நடக்கைகளுக்குத் தகுதியாக இந்த ஆக்கினையை நியாயமாய் அடைகிறோம்.

ஈஉ இவர் தகாத ஒன்றையும் [5]டப்பிக்கவில்லை என்று அவனைக் கடிந்துகொண்டு,

ஈஊ பின்பு இயேசுவுடனே சொன்னது: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்தில் சேரும் பொழுது, அடியேனை நினைத்தருளும் என்றான்.

ஈஎ அவனுடனே இயேசுவானவர் சொன்னது: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

ஈஏ ¶ பின்பு [13]ஏறக்குறைய ஆறுமணி நேரமாயிற்று; (அதுமுதல்) ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும், அந்தத் தேசத்தில் எங்கும்† அந்தகாரம் உண்டாகச் சூரியன் இருள் அடைந்தது.

ஈஐ அல்லாமலும் [14]தேவாலயத்தில் உள்ள திரைச்சீலை நடுவிலே கிழிந்துபோயிற்று.

Digitized by Google

சஈ அல்லாமலும் இயேசுவானவர், பிதாவே, [1]உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன் என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு, அதின்பின்பு [2]சீவனைவிட்டார்.

சஎ ¶ [3]அப்படிச் சம்பவித்தவைகளைப் படைத்தலைவன் கண்டு, மெய்யாய் இந்த மனிதன் நீதிமானாய் இருந்தான் என்று பராபரனைத் துதிசெய்தான்.

சஅ அல்லாமலும் அந்தச் சங்கதியைப் பார்க்கக் கூடிவந்திருந்த ஜனங்கள் எல்லாரும் சம்பவித்தவைகளைப் பார்த்தபொழுது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

சக [4]அன்றியும், அவருக்கு அறிமுகமானவர்கள் எல்லாரும், கலிலேயாவிலிருந்து அவருக்குப்பின் சென்றுவந்த ஸ்திரீகளும் தூரத்திலே நின்று, அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சல ¶ [5]பின்பு யூதருடைய பட்டணமாகிய அரிமத்தியா ஊரானுமாய், உத்தமமும் நீதியுமுள்ளவனுமாய், [6]பராபரனுடைய ஆளுகை வரக்காத்திருந்தவனுமாய்,

சக யூதருடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாத ஆலோசனைக்காரனுமாய் இருந்த யோசேப்பு என்பவன் பிலாத்துவினிடத்தில் போய்,

சஉ இயேசுவின் சரீரத்தைக் கேட்டு,

சங [7]அதை இறக்கி, மெல்லிய புடவையிலே சுற்றி, கல்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்.

சச [8]அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது; ஓய்வுநாளும் ஆரம்பமாயிற்று.

சஙு ¶ [9]கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகள் அவனுக்குப்பின்சென்று,

கி. பி. ஈஈ.

1 சங். ஙக. ஙி. ச பே. உ.உக.

2 மத். உஅ. ஙூ. மாற். ஙஙி. கஎ. லூக். ஙசு. கஅ. யோவா. ஙஎ. உஙி.

3 மத். உஅ. ஙூ. மாற். ஙஙி. கக.

4 சங். கஅ. ஙச. மத். உஅ. ஙஙி. மாற். ஙஙி. சஅ. யோவா. ஙக. உஙி.

5 மத். உஅ. ஙஎ. மாற். ஙஙி. சக. லூக். ஙக. கஅ.

6 மாற். ஙஙி. சக. லூக். உ. உஙி, கஅ.

7 மத். உஅ. ஙக. மாற். ஙஙி. சஈ.

8 மத். உஅ. கஉ.

9 லூக். அ. உ.

10 மாற். ஙஙி. சஅ.

11 மாற். ஙஈ. க.

12 உ மோ. உஙி. ஙி.

13 மத். உஅ. க. மாற். ஙக. க. யோவா. உஙி க.

14 லூக். உக. ஙஈ.

15 மத். உஅ. உ, மாற். ஙக. ச.

16 உக. வச. மாற். ஙக. ஙி.

17 யோவா. உஙி. ஙஉ. அப். க. ஙி.

18 மத். ஙக. உச: ஙஎ. உக. மாற். அ. கச: க. கக. லூக். க. உஉ.

* அல்லது உயிரோடிருக்கிறவ ரென.

10 கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து,

சஙு பின்பு திரும்பிப்போய், [11]சுகந்தவருக்கங்களையும் பரிமளதயிலங்களையும் ஏத்தனம்பண்ணி, [12]கற்பனைப்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

உச. அதிகாரம்.

க. நிஸ்தூஸின் உயிர்த்தெழுதல் இரண்டு தூதர்களாலே கல்லறையினிடத்தில் வந்திருந்த ஸ்திரீகளுக்கு அறிவிக்கப்பட்டது. க. இச்செய்தியை இவர்கள் மற்றவர்களுக்கு அறிவித்தது. ஙக. நிஸ்து சம்மாவென்னும் ஓமத்திற்குப் போகிற இரண்டு சீஷர்களுக்குத் தரிசனையாகி, கக. பின்பு அப்போஸ்தலர்கள் எல்லாருக்கும் காணப்பட்டு, அவர்களுடைய அவிசுவாசத்தைக் கடிந்துகொண்டு, சஎ. அவர்களுக்கு ஒரு கட்டளை கொடுத்து, சகு. பரிசுத்த ஆவியை அனுப்புவோமென்ற வாக்குத்தத்தம்பண்ணி, ஙச. பின்பு பரமண்டலத்துக்கு ஏறினது.

[13]வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலே, அவர்கள் தாங்கள் ஏத்தனம்பண்ணின [14]சுகந்தவருக்கங்களை எடுத்துக்கொண்டு, வேறுசில ஸ்திரீகளும்கூடக் கல்லறையினிடத்தில் சென்று,

உ [15]அதின்மேல் இருந்த கல் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு,

ஈ [16]உட்பிரவேசித்து, கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்,

ச அதைக்குறித்து மிகுந்த கலக்கம் அடைந்துகொண்டிருக்கையில்,

ஙு [17]பிரகாசமான வஸ்திரங்களையுடைய இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள்.

சு அப்பொழுது அந்த ஸ்திரீகள் பயந்து, தரையை நோக்கிக் குனிந்துநிற்கையில், அவ்விரண்டு பேரும் அவர்களை நோக்கி, உயிரோடு இருக்கிறவரை* நீங்கள் மரித்தோரிடத்தில் என்னத்திலே தேடுகிறீர்கள்? அவர் இங்கே இல்லை; எழுந்துபோனார்.

எ முன்னே அவர் கலிலேயா நாட்டில் இருந்தகாலத்திலே, [18]மனிதனுடைய குமாரன் பாவிகளான மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்

Digitized by Google

கப்படவும், சிலுவையில் அறையப்படவும், மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டுமென்று உங்களுடனே சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள் என்றார்கள்.

அ [1]அப்பொழுது அவர்கள் அவருடைய திருவசனங்களை நினைத்து,

க [2]கல்லறையை விட்டுத் திரும்பி, அந்தச் சங்கதியைப் பதினொருவருக்கும் மற்ற எல்லாருக்கும் அறிவித்தார்கள்.

ய அதை அப்போஸ்தலருடனே சொன்னவர்கள், [3]மகதலா ஊராளாகிய மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாய் மரியாளும், இவர்களுடனே இருந்த மற்ற ஸ்திரிகளுமே.

யக [4]அவர்கள் சொன்ன வசனங்களை அப்போஸ்தலர்கள் ஒரு கட்டுக்கதையைப்போல எண்ணி, அவர்களுடைய சொல்லை நம்பவில்லை.

யஉ [5]ஆனாலும் பேதுரு எழுந்து, கல்லறையினிடத்துக்கு ஓடி, அதற்குள்ளே பார்க்கக் குனிந்து, சேலைகளைத் தனியே வைத்திருக்கக் கண்டு, சம்பவித்திருக்கிறதைக்குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டு போனான்.

யங ¶ [6]அன்றியும் அன்றைத்தினமே, அவர்களில் இரண்டுபேர் எருசலேம்நகரத்துக்கு அறுபதுஸ்தாதிவழி தூரமான எம்மாவு என்னும் ஊருக்குப் போனார்கள்.

யச (போகையில்) அவர்கள் சம்பவித்திருந்த இக்காரியங்களையாவையும்குறித்துஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

யடு அப்படி அவர்கள் பேசி விசாரித்துக்கொள்ளுகிறபொழுது, [7]இயேசுவானவர் தாமும் சமீபமாகி, அவர்களுடனேகூட நடந்தார்.

யசு [8]அப்படியிருந்தும், அவனை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.

யஎ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நீங்கள் தெளிவுள்ளவர்களாய் வழிதடந்து, ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்னவென்றார்.

யஅ அதற்கு அவர்களில் ஒருவனான [9]கிலேயோப்பா என்பவன் சொன்னது: நீமாத்திரமோ எருசலேமில் இந்நாள்களில் சம்பவித்தவைகளை அறியாத அந்நியனாயிருக்கிறாய் என்றான்.

யக அவர் எவையென்றார்; அதற்கு அவர்கள் சொன்னது: நாசரேத்தூரானாகிய இயேசுவைக்குறித்தவைகளே; [10]அவர் பராபரனுக்கும் சகல ஜனங்களுக்கும் முன்பாக, செய்கையிலும் வசனத்திலும் [11]வல்லமையுள்ள தீர்க்கதரிசியாய் இருந்தார்.

உய அப்படியிருந்தும, [12]நம்முடைய பிரதான ஆசாரியரும் தலைவரும் அவனை மரண ஆக்கினைக்கு உட்படுத்திச் சிலுவைமரத்தில் அறைந்தார்கள்.

உக [13]இஸ்ரவேலனை மீட்பவர் அவரே என்று நாங்கள் நம்பினோம்; அவைகள் சம்பவித்தது இன்று மூன்றுநாள் ஆகிறதே.

உஉ எங்களில் சில ஸ்திரிகள் அதிகாலையிலே கல்லறையினிடத்தில் போய், அவருடைய சரீரத்தைக் காணுமல் திரும்பி வந்து,

உஊ அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொன்ன தேவதூதனைத் தரிசித்தோம் என்று சொல்லி [14]எங்களைப் பிரமிக்கப்பண்ணினார்கள்.

உஎ [15]அப்பொழுது எங்களில் சிலர் கல்லறையினிடத்தில் போய், ஸ்திரிகள் சொன்னபடியே கண்டார்கள்; அவனைக் காணவில்லை என்றார்கள்.

உஏ அப்பொழுது அவர் அவர்களுடனே சொன்னது: தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாமல், மந்த இருதயம் உள்ளவர்களே!

கி. பி. ஈஊ.

1 Cுரவ. உ. உஉ.
2 மத். உஅ. அ. மாற்.உசு.உ.
3 லூக். அ. உ.
4 மாற். உசு. உசு. உஇ. வச.
5 பேரவ. உம. ஈ, ஈ.
6 மாற்.உசு. உஉ.
7 மத்.உஅ. உம. ஈசு. வச.
8 பேரவ. உம. உச: உசு. ச.
9 பேரவ. உசு. உஇ.
10 அப். எ.உஉ.
11 மத். உசு. உசு. லூக். எ. உசு. பேரவ. சு. உ: ச.உசு: சு. உச. அப். உ. உஉ.
12 லூக். உசு. சு. அப். உசு. உள, உஅ.
13 லூக்.சு. சுஅ: உ. ஈஅ. அப். சு. சு.
14 மத். உஅ. அ. மாற். உசு.உ: சு. உ.வச. பேரவ. உம.உஅ.
15 உஊ. வச.

Digitized by Google

உசு [1]கிறிஸ்துவானவர் பாடுபடவும் தமது மகிமைக்குள் பிரவேசிக்கவும் வேண்டியதாயிருந்ததில்லையா என்று சொல்லி,

உஎ [2]மோசேயையும் [3]சகல தீர்க்கதரிசிகளையும் தொடங்கி [4]வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியிருக்கிறவைகளை அவர்களுக்கு விவரமாய்க் காண்பித்தார்.

உஅ அத்தருணத்திலே தாங்கள் போகிற ஊருக்குச் சமீபமானார்கள், [5]அப்பொழுது அவர் அப்புறம்போக மனதைக் காண்பித்தார்.

உக அவர்கள் சொன்னது: [6]சாயங்காலமாயிற்றே; பொழுதும் போயின்றதே; ஆகையால் நீர் எங்களிடத்திலே தங்கவேண்டும் என்றமிகவும் வேண்டிக்கொண்டார்கள்; அதன்பின்பு அவர் அவர்களிடத்திலே தங்கும்படி பிரவேசித்தார்.

உங அப்படி அவர்களுடனே பந்தியிருக்கையில், [7]அவர் அப்பத்தை எடுத்து, ஆசீர்வாதம்சொல்லி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்தார்.

உச அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப்பட அவனை அறிந்தார்கள்.

உஉ உடனே அவர் அவர்களுக்கு விலகினார்; * அப்பொழுது அவர்கள் ஒருவனை ஒருவர் நோக்கி, வழியிலே அவர் நம்முடனே பேசி,

ஊ வேதவாக்கியங்களை நமக்கு விளக்கமாய்க் காண்பித்தபொழுதி, நமக்குள்ள இருதயம் அன்பாய்க்கொழுந்துவிட்டெவளரவில்லையா என்று சொல்லி, அந்நேரமே எழுந்து எருசலேமுக்குத் திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் கூடியிருக்கக் கண்டு,

ஊஅ கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து [8]சீமோனுக்குத் தரிசனையானார் என்று அவர்கள் சொல்லக்கேட்டு,

ஊக பின்பு வழியிலே நடந்தவைகளையும், அவர் அப்பத்தைப் பிட்கையில் தாங்கள் அவனை அறிந்துகொண்டதையும் விவரித்துச் சொன்னார்கள்.

ஊங ¶ [9]அப்படி அவர்கள் பேசிக்கொள்ளுகையில், இயேசுவானவர் தாமே அவர்களுக்குள்ளே நின்று, உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக என்று அவர்களுடனே சொன்னார்.

ஊச [10]அவர்கள் அவனை ஒரு ஆவியென்று எண்ணி, கலக்கமும் பயமும் அடைந்தார்கள்.

ஊஅ அப்பொழுது அவர் அவர்களை நோக்கி, நீங்கள் என்னத்திற்காக கலங்குகிறீர்கள்? என்னத்திற்காக உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகின்றன?

ஊக [11]என் கைகளையும் கால்களையும் பாருங்கள், நான்தான் இருக்கிறேன், என்னைத் தொட்டுப்பாருங்கள்; நீங்கள் காண்கிறபடி எனக்கு மாம்சமும் எலும்புகளும் உண்டாயிருக்கிறதுபோல, ஒரு ஆவிக்கும் இல்லையே என்று சொல்லி,

ஊங சகைகளையும் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

ஊச [12]அப்படியிருந்தும், சந்தோஷத்தினாலே அவர்கள் பின்னும் விசுவாசியாமல் பிரமிப்பாய் இருக்கிறபொழுது, [13]போசனத்துக்கு ஏதாகிலும் இங்கே உண்டா என்றார்.

ஊஉ அப்பொழுது அவர்கள் பொரித்த மீன் கண்டத்தையும், தேன்கூட்டுத் துணிக்கையையும் அவருக்குக் கொடுத்தார்கள்.

ஊஊ [14]அவைகளை அவர் எடுத்து, அவர்களுக்குமுன்பாகப் புசித்து,

ஊசு ¶ பின்பு அவர்களுடனே சொன்னதாவது: [15]மோசேயின் பிரமாணப் புத்தகத்திலேயும், தீர்க்கதரிசனப் புத்தகங்களிலேயும்,

---

கி. பி. ஈஊஊ.

1 சங.வச. அப். வே. க. க பே. க. மே.
2 க மோ. க. மறை: உஉ.மஅ: உக. ச: சசு. ம. ச மோ. உக.கூ. ஓ மோ.மஅ.மஓ.
3 சம். மக. க, ம, உஉ: சகஉ. மச.சோ. எ.ச: கூ.க:சம.ம,மக: ஓம். க: ஓக. எசே. உக. ஓ: கக. மச, மஓ. எசே. கச. உக: வ.உஓ தானி. கூ. உச. மீச. எ. உம். மல்கி. க. க: ச. உ. போவா.க.சஓ.
4 சஓ. வச.
5 க மோ. கஉ. உக: சஉ. எ. மாற் க.சஅ.
6 க மோ.மக. க. அப்.மக.மஓ.
7 மத். மச. மக.
* அல்லது காணப்படாமல். லூக். ச. கம. போவா.அ.ஓக.
8 க கொரி. மஓ ஓ.
9 மாற். மக. மச. போவா. உம. மக. க கொரி. மஓ. ஓ.
10 மாற். க. சக.
11 போவா. உம. உம, உவ.
12 க மோ. சஓ. உக.
13 போவா. உக. ஓ.
14 அப். ம. சக.
15 லூக். மசு.உக: மொ.உஉ: உம. மஅ. மாற். அ. கக. லூக். க. உஉ: மஅ. கக. க. வச.

Digitized by Google

சங்கீதப் புத்தகத்திலேயும், என் னைக்குறித்து எழுதியிருக்கிற யா வும் நிறைவேறவேண்டும் என்று நான் உங்களோடே இருந்த கா லத்திலே, உங்களுடனே சொல் லிக்கொண்ட சங்கதிகள் இவை களே என்று சொல்லி,

சரு பின்பு [1]வேதவாக்கியங்க ளை அவர்கள் அறிந்துகொள்ளும் படி, அவர்களுடைய மனதுக்குப் புத்திகொடுத்து, அவர்களுடனே சொன்னதாவது:

சசு [2]இவ்விதமாய் எழுதியிருக் கின்றது; அல்லாமலும் அந்தப்ப டியே கிறிஸ்து பாடுபடவும், மூன் றும் நாளிலே மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும்,

சஎ [3]எருசலேம் தொடங்கிச் ச கல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே [4]மனம்திருப்புதலே யும் பாவமன்னிப்பையும் பிரசங் கிக்கவும் வேண்டியதாயிருந்தது.

சஅ [5]நீங்களே அவைகளுக்குச் சாட்சிகளாய் இருக்கிறீர்கள்.

இ. பி. ஈஊ.

1 அப்.இக.இச.
2 உக. வச. சம். உஉ. எசா. ஓஎ. க: ஓஉ.உ.அப். இச. க.
3 க மோ. இஉ க. சம். உஉ. உச. எசா. சக. க. உஉ.எரே. கக. கச. ஓசே. உ. உக.மீகா.ச.உ. மல்இ. க. மக.
4 தானி. கஉச. அப். இக. கஅ. சக. கயோ.உ. இஉ.
5 போவா. இஇ. உச. அப்.க.அ, உஉ: உ. கஉ: க. இஇ.
6 சா. சச. க. போவே. உ. உஅ. போவா. இச. இக, உக: இஇ.உக:இக.எ. அப். க. ச: உ. க. ழ.
7 அப். க. கஉ
8 ட-இரா.உ.இக. மாற். இக. மக.

சக பின்பு, நான் என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை உங் களுக்கு அனுப்புவேன்; நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் பல னைப் பெற்றுக்கொள்ளுமட்டும் எருசலேம் நகரத்தில் இ ருங்கள் என்றார்.

ஙய ¶ [7]பின்பு அவர் பெத்தானி யா ஊர்வரைக்கும் அவர்களை அழைத்துக்கொண்டுபோய்த் தம் முடைய கைகளை உயர்த்தி அவர் களை ஆசீர்வதித்தார்.

ஙக [8]அவர்களை ஆசீர்வதிக்கை யில், அவர் அவர்களைவிட்டுப் பி ரிந்து, பரமண்டலத்திற்கு எடுத் துக்கொள்ளப்பட்டார்.

ஙஉ அப்பொழுது [9]அவர்கள் அவனைத் தொழுதுகொண்டு, மி குந்த சந்தோஷத்தோடே எருச லேம் நகரத்துக்குத் திரும்பி,

ஙஊ [10]இடைவிடாமல் தேவால யத்திலே பராபரனைத் துதித்து வா ழ்த்திக்கொண்டிருந்தார்கள்.— ஆமன்.

Cursor. உஇ. இச. அப், க. க. எபே. ச.அ.—9 மத். உஅ. க, இச.—10 அப். உ. சக: இ. சஉ.

Digitized by Google

JOHN.

யோவான் என்பவர்

எழுதின சுவிசேஷம்.

க. அதிகாரம்.

க இயேசுகிறிஸ்துவினுடைய தெய்வீகத்தையும், மனுஷீகத்தையும், உத்தியோகத்தையும் காட்டி பத. 19. அவரைக்குறித்து யோவான் கொடுத்த சாட்சியைச் சொல்லியது. 43. அந்திரேயா பேதருமுதலான சீஷர்கள் அழைக்கப்பட்டது.

ஆதியிலே [1]வார்த்தை இருந்தது; அவ்வார்த்தை [2]பராபரனிடத்தில் இருந்தது; அல்லாமலும் அவ்வார்த்தையே [3]பராபரன்.

உ அது ஆதியிலே [4]பராபரனிடத்தில் இருந்தது.

ஊ [5]சகலமும் அதினாலே உண்டாயிற்று; அது இல்லாமல் ஒரு சிருஷ்டியும் உண்டாகவில்லை, [6]அதிலே சீவன் உண்டாயிருந்தது.

ச [7]அந்தச் சீவன் மனிதருடைய ஒளியாய் இருந்தது.

ஞ [8]அந்த ஒளி இருளிலே பிரகாசமாயிற்று; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.

க ¶ [9]யோவான் என்னும் ஒரு மனிதன் பராபரனால் அனுப்பப்பட்டு,

எ [10]தன்னாலே எல்லாரும் விசுவாசிக்கும்படிக்கு அந்த ஒளியைக் குறித்துச் சாட்சிகொடுக்க வந்தான்.

அ அவன் அந்த ஒளி அல்ல,

கி. பி. கூ.

1 வாக். அ. உஉ. உக. ழி. கொலோ. க. மெ.க பேர.க.க. வெளி. க. உ: மக.மக.

2 வாக். அ. கம. போவா. ட்ட.ஞ. க பேர. க. உ.

3 பிலி. உ. க. க பேர. ஞ. எ.

4 க மோ. க. க.

5 சங். ஙக. கூ. ம. வச.எபே.க.மக. கொலோ. க. மக. எபி. க.உ. வெளி. ச. மக.

6 போவா. ஞ. உக. க பேர. ஞ.மக.

7 போவா. அ. மஉ: கூ.ஞ: மஉ. கஞ, சக.

8 போவா.க.மக.

9 மல்கி.க.க.மத். க. க. லூக். க. உ.ஙக.வச.

10 அப். மகூ. ச.

11 ச. வச. சோ. சகூ.க. க பேர. உ. அ.

12 க. வச. எபி. க.உ: மக.க.

13 லூக். மகூ.மச. அப். க. உக: மக. சக.

14 சோ. ஞகூ.ஞ. உரோ. அ.மஞ. கலா. க. உக.

அந்த ஒளியைக்குறித்துச் சாட்சி கொடுக்கவே வந்தான்.

க [11]மெய்யான ஒளியானவர் உலகத்திலே தோன்றுகிற மனிதர் யாவரையும் பிரகாசிப்பிக்கிறார்.

ய [12] அவர் உலகத்தில் இருந்தார்; அல்லாமலும் உலகம் அவராலே உண்டாயிற்று; உலகம் அவரை அறியவில்லை.

யக [13] அவர் தம்மு சொந்தத்தில் சேர்ந்தார்; அவருக்குச் சொந்த மானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

யஉ [14]அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் பராபரனுடைய பிள்ளைகளாய் இருக்கும்படி அதிகாரம்* கொடுத்திருக்கிறார்.

யங [15]அவர்கள் இரத்தத்தினாலாவது, மாம்ச இச்சையினாலாவது, புருஷனுடையசித்தத்தினாலாவது பிறவாமல், பராபரனாலே பிறந்தார்கள்.

யச [16]அந்த வார்த்தை [17]மனிதனாகி, [18]கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் [19]நமக்குள்ளே வாசம்பண்ணினார்; [20]அவருடைய மகிமையைக் கண்டோம்,

உபே. க.ச. க பேர. க. க. * அல்லது ஆதினம்.—15 போவா. க, ஞ. யாக். க.மஅ. க பே.க உக.—16 மத்.க.மகூ.உம். மக.க.கஉ,கஞ:உ.எ. கதிமோ.க.மக.—17 எபி.உ.மக,மச,மக,மஎ.—18 உரோ.க.க. கலா.ச.ச.—19 கொலோ.க.மக: உ,க,க.—20 சோ. சம. ஞ. மத். மஎ. உ. போவா. உ.மக: மக.சம. உ பே.க,மஎ.

Digitized by Google

அது பிதாவுக்கு ஒரேபேரானவருடைய மகிமையாகவே இருந்தது.

யடு ¶ [1]அவனைக்குறித்து யோவான் சாட்சியாக, [2]எனக்குப் பின் வருகிறவர் எனக்குமுன் இருந்தவர், ஆகையால் [3]என்னிலும் மேன்மையுள்ளவராய் இருக்கிறார் என்று நான் சொல்லியிருந்தேனே, அவர் இவரே என்று கூப்பிட்டான்.

யசு [4]நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, [5]கிருபையும் [6]சத்தியமும் இயேசுக்கிறிஸ்துமூலமாய் உண்டாயின.

யஎ [7]ஆனபடியினாலே அவருடைய பரிபூரணத்தில் நாங்கள் எல்லாரும் மிகுந்ததயவைப் பெற்றுக்கொண்டோம்.

யஅ [8]ஒருவனும் தேவனை ஒருக்காலும் காணவில்லை; [9]பிதாவின் மடியில் இருக்கிற ஒரே பேரான குமாரன் அவனை நமக்கு வெளிப்படுத்தினார்.

யக ¶ [10]எருசலேமில் உள்ள யூதர்கள் ஆசாரியனையும் லேவியனையும் யோவானிடத்திலே அனுப்பி, நீர் யார் என்று விசாரித்த பொழுது,

உய யோவான் கொடுத்த சாட்சியாவது: [11]அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டான்; நான் கிறிஸ்து அல்லவென்றே அறிக்கையிட்டான்.

உக அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, அப்படியானால், நீர் யார்? [12]எலியாவா என்று கேட்டார்கள்; அதற்கு அவன் நான் அவன் அல்ல என்றான்; அவர்கள் நீர் [13]தீர்க்கதரிசியானவரா* என்று கேட்டதற்கு, நான் அல்ல என்று சொன்னான்.

உஉ ஆதலால் அவர்கள் பின்னும் அவனை நோக்கி, எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு கொடுக்கும்படிக்கு, நீர் தான் உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்றார்கள்.

உங அதற்கு அவன் சொன்னது: [14]ஏசாயாதீர்க்கதரிசி சொன்னபடியே; [15]நான் பராபரனுக்காக மார்க்கத்தைச் செம்மைப்படுத்துங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாய் இருக்கிறேன் என்றான்.

உச அப்பொழுது அனுப்பப்பட்டவர்களாகிய பரிசேயர் பின்னும் அவனை நோக்கி,

உடு நீர் கிறிஸ்துவும் அல்ல, எலியாவும் அல்ல, தீர்க்கதரிசியும் அல்ல என்றால், நீர் ஞானஸ்நானத்தை எப்படிக் கொடுக்கலாம் என்றார்கள்.

உசு அதற்கு யோவான் சொன்னது: [16]நான் சலத்திலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன்; [17]நீங்கள் அறியாதிருக்கிற ஒருவர் உங்களுக்குள்ளே இருக்கிறார்.

உஎ [18]அவர் எனக்குப்பின்பு வந்தும் எனக்குமுன் இருந்தார்; அவருடைய பாதரட்சையின்வாரை அவிழ்ப்பதற்கு நான் பாத்திரன் அல்ல என்றான்.

உஅ [19]இவைகள் யோர்தான் ஆற்றின் அக்கரையில், யோவான் ஞானஸ்நானம்கொடுத்த பெத்தாபரா ஊரிலே நடந்தன.

உக ¶ மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்திற்கு வரக் கண்டு, சனங்களுடனே சொன்னதாவது: [20]அவரே உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற† [21]தேவ ஆட்டுக்குட்டி.

கூய [22]எனக்குப்பின் ஒரு புருஷன் வருகிறார் என்றும், அவர் எனக்குமுன்இருந்தபடியால் என்னிலும் மேன்மையாயிருக்கிறார் என்றும் நான் சொன்னேனே, அவர் இவரே.

கி. பி. ஈய.

1 உஉ. வச. போவா. க.உஉ: இ.கக.
2 மத். க. மக. மாற். க. எ. லூக். க. மக: உஎ. கம். வச. போவா. க.கக.
3 போவா. அ. இஅ.கொலோ. க.மஎ.
4 உ மோ. உம. க.ழ இ மோ.ச. சச:இ.க:கக.ச.
5 உரோ. க.உச: இ.உக: க.மச.
6 போவா. அ. கஉ: மச.க.
7 யோவா.க.கச. எபே. க. கூ,எ, அ. கொலோ. க.மக: உ. சூ,ம.
8 உ மோ. கக. உம. இ மோ. ச.மஉ. மத்.மக. உஎ. லூக். ம. உஉ. போவா. க.சகூ.கஇமோ. க.மஎ: க.மக. க போ. ச.மஉ, உம.
9 மச. வச. போவா. க.மக, மஅ. க போ. ச. கூ.
10 யோவா. இ. கக.
11 லூக். க. மஇ. போவா. க. உஅ. அப். மக. உஇ.
12 மல்கி. ச. இ. மத். மஎ.ம.
13 இ மோ. மஅ. மஇ,மஅ.
* அல்லது அந்தத் தீர்க்கதரிசி.
14 ஏசா. சம. க.
15 மத். க.க.மாற். க.க. லூக்.க.ச. யோவா.க.உஅ.
16 மத்.க.மக.
17 மல்கி.க.க.
18 மஇ, கம.வச. அப்.மகூ.ச.
19 கிபா. எ. உச. போவா. ம. சம.
20 ஏசா. இக.மக. கொரி. மஇ.க.

கலா. க.ச. எபி. க. க: உ. மஎ: கூ. உஅ. க பே. உ. உச: க. மஅ. க போ. உ. உ: க. இ: ச.ம. கொலோ.க இ. †அல்லது சுமக்கிற —21 உ மோ.மஉ.க. ஏசா.இக.எ.கக.வச.அப்.அ.கஉ. க பே.க.மக.கொலோ.இ.கழ.—22 மஇ.உ.எ.

கி. பி. கூ௩.

கஎ ஆனும் இவனை அறிவாதிருந்தேன்; ஆப்பொழுது இவர் இஸ்ரவேலருக்கு வெளியாக்கப்படும்பொருட்டாய், [1]நான் சலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவந்தேன் என்றான்.

கஉ பின்னும் [2]யோவான் சாட்சியாகச் சொன்னதாவது: புறாவைப்போல ஆவியானவர் வானத்திலிருந்து இறங்கி, அவர்மேலே தங்கினதைக் கண்டேன்; நான் அவனை அறியவில்லை.

கக ஆப்பொழுது சலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படிக்கு, என்னை அனுப்பினவர் என்னிடத்தில் சொன்னது: நீ காணத்தக்கதாக ஆவியானவர் இறங்கித் தங்கப்படுபவர் யாரோ [3]அவரே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்றார்.

கஅ அந்தப்படியே நான் கண்டு, இவரே பராபரனுடைய குமாரன் என்று சாட்சிகொடுத்தேன் என்றான்.

கஆ ¶ மறுநாளிலே யோவானும், அவனுடைய சீஷரில் இரண்டு பேரும், மறுபடியும் நிற்கிறபொழுது

கஇ இயேசுவானவர் நடந்துபோகிறதை அவன் கண்டு, [4]அவரே தேவ ஆட்டுக்குட்டி என்றான்; அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷரும் கேட்டு, இயேசுவானவருக்குப் பின்சென்றார்கள்.

கஈ ¶ அப்பொழுது இயேசுவானவர் திரும்பி அவர்கள் பின்வரக் கண்டு. அவர்களைநோக்கி, என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள், இரபீ, நீர் எங்கே தங்குகிறீர் * என்றார்கள்; இரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

கக அவர் சொன்னது: நீங்கள் வந்து பாருங்கள் என்றார்; அந்தப்படி அவர்கள் போய், அவர் தங்கிய இடத்தைப்பார்த்து, அறைக்குறையப் பத்துமணிநேரம்† ஆனபடியால், அன்றைத்தினம் அவரிடத்திலே இருந்தார்கள்.

கஉ யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் [5]சீமோன்பேதுருவினுடைய சகோதரனாகிய அந்திரேயா.

கஊ அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக்கண்டு, மேசியாவைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னான்; மேசியா என்பதற்குக் ‡ கிறிஸ்து என்று அர்த்தமாம்.

கஎ பின்பு அவனை இயேசுவினிடத்திற்கு அழைத்துக்கொண்டுபோனான்; இயேசுவானவர் அவனைப் பார்த்து, நீ யோனாவின் மகனாகிய சீமோன், இனிக் [6]கேபா என்று அழைக்கப்படுவாய் என்றார்; கேபா என்றாலும் பேதுரு § என்றாலும் ஒக்கும்.

கஏ ¶ மறுநாளிலே இயேசுவானவர் கலிலேயா நாட்டுக்குப்போகமனதாய், பிலிப்பைக் கண்டு, நீ எனக்குப் பின்சென்று வா என்றார்.

கஐ [7]பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதாபட்டணத்தான்.

கக [8]பிலிப்பென்பவன் நாத்தான்வேலைக் கண்டு அவனுடனே சொன்னது: [9]வேதத்திலே மோசேயும் [10]தீர்க்கதரிசிகளும் எழுதப்பட்டவனைக் கண்டோம்; [11]நாசரேத்தூரிலிருந்து வந்த யோசேப்பின் குமாரனாகிய இயேசு, அவரே என்றான்.

கஒ அதற்கு நாத்தான்வேல் [12]நாசரேத்தூரிலிருந்தும் ஒரு நன்மை தோன்றுமா என்றான்; பிலிப்பு, நீ வந்துபார் என்றான்.

கஓ அந்தப்படி இயேசுவானவர் நாத்தான்வேலைத் தம்மிடத்திற்கு வரக்கண்டு, அவனைக்குறித்து,

1 மல்லி. க. க. மத் க கூ. லூக். க ஏ, ஏக, ஏஎ: க. க, ச.

2 மத். க. கக. மாற். க ம். லூக். க. உஉ. போவா. இ. கஉ.

3 மத். க. மக அப். க. இ: உ. ச: ம. ச: மக. க.

4 உகூ. வச.

* அல்லது சீவிக்கிறீர்.

† சாயங்காலம் நாலு மணிவேளை.

5 மத் ச. உஅ.

‡ அல்லது அபிஷேகம் பண்ணப்பட்டவர்

6 மத். மக. மஅ.

§ அல்லது கன்மலை.

7 போவா. மக உக.

8 போவா. உக. உ.

9 க மோ க மஇ: ஏக மஇ மோ. மஅ மஅ லூக். உச. உஎ.

10 எசா. ச. உ: எ மச: கக: இச. உ. மீகா இ. உ சகரி. க. மக: க க. லூக் உச உஎ

11 மத். உ. உக. லூக். உ ச.

12 போவா எ ஏக, ஏஉ, ஏஉ.

கி. பி. கூ௩.

[1]இவனே கபடமில்லாத மெய்யான இஸ்ரவேலன் என்றார்.

சஅ அதற்கு நாத்தான்வேல், நீர் என்னை எப்படி அறிந்திருக்கிறீர் என்றான்; அவனுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழ் இருக்கிறபொழுது, உன்னைக்கண்டேன் என்றார்.

சக அதற்கு நாத்தான்வேல் இரபீ, [2]நீரே பராபரனுடைய குமாரன்; [3]நீரே, இஸ்ரவேலரின் இராசா என்றான்.

கூ அதற்கு இயேசுவானவர், அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உன்னுடனே சொன்னதினாலே விசுவாசித்தாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்.

கக பின்னும் அவர் அவனை நோக்கி, [4]இதுமுதல் நீங்கள் வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனிதனுடைய குமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும், அவர்மேல் இறங்குகிறதையும் காண்பீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உ. அதிகாரம்.

க. மறில்ல தண்ணீரைப் பழரசமாக்கினது. ஙஉ. கப்பர்னகூமுக்கும் எருசலேமுக்கும் போய், ஙச. தேவாலயத்திலே கொள்ளுகிறவர்களையும், மாற்றுகிறவர்களையும் தூத்தினது. ஙகூ. அவர் தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் முன்னறிவித்தது. உக. அவர் செய்த அற்புதங்களின் நிமித்தம் விசுவாசித்த பற்பலருக்குத் தம்மை ஒப்புக்கொடாமல் இருந்தது.

மூன்றாம் நாளிலே [5]கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கே இருந்தாள்.

உ அல்லாமலும் இயேசுவும் அவருடைய சீஷரும் கலியாணத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கூ அப்பொழுது திராட்சஇரசம் குறைந்திருந்தபடியால், இயேசுவினுடைய தாய் அவனைநோக்கி, அவர்களுக்குத் திராட்ச இரசம் இல்லை என்றாள்.

சூ அதற்கு இயேசுவானவர், [6]ஸ்திரியே, [7]எனக்கும் உனக்கும் என்ன? [8]என்னுடைய நேரம் வரவில்லையே என்றார்.

ஞ பின்பு அவருடைய தாய் பணிவிடைக்காரரைநோக்கி, அவர் உங்களுக்குச் சொல்லுகிறபடியே செய்யுங்கள் என்றாள்.

ரு [9]அங்கே யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கிற முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு மூன்று பெரிய குடம் தண்ணீர்கொள்ளுகிற ஆறு கற்சாடிகள் வைக்கப்பட்டிருந்தன.

ஙஎ பின்பு இயேசுவானவர் பணிவிடைக்காரரை நோக்கி, சாடிகளிலே தண்ணீரை நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிரப்பினார்கள்;

அ அதன்பின்பு, நீங்கள் இப்பொழுது (இதை) மொண்டு பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.

கூ அப்பொழுது [10]திராட்சஇரசமாய்ப்போன தண்ணீரைப் பந்தி விசாரிப்புக்காரன் ருசிபார்த்து, அது இரசமான வகையை அறியாமல் மணவாளனை அழைத்து,

ய எந்த மனிதனும் முன்பு நல்ல திராட்சஇரசத்தை வார்த்து, சனங்கள் திருத்தியடைந்தபின்பு, குறைந்ததை வார்ப்பான்; நீர் இதுவரைக்கும் நல்ல இரசத்தை வைத்திருந்தீர் என்றான்; தண்ணீரை மொண்டுகொண்ட பணிவிடைக்காரர் அந்த இரசம் உண்டான வகையை அறிந்தார்கள்.

யக இப்படி இயேசுவானவர் கலிலேயாநாட்டிலுள்ள கானா ஊரிலே அற்புதங்களைச் செய்யத் தொடங்கி, [11]தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடை

1 சங். கஉ. உ: எசே. யோவா. அ.கூ. உரோ. உ உஅ, உசு, கம்: கூ. சு.

2 மத். மச. கக.

3 மத். உக. ஙி: உள. மக, சஉ. யோவா. ஙஅ. கள: மசு. சு.

4 க மோ. உஅ. மஉ. மத். ச.மக. லூக்.உ. கூ,மக: உஉ.சக: உச. ச. அப். க. ம.

5 யோச. மசு. உஅ.

6 யோவா. மசு. உசு.

7 உ சாமு. மசு. ம: மசு. உஉ.

8 யோவா. எ.சு.

9 மாற்.எ.உ.

10 யோவா. ச. சக.

11 யோவா.க.மச.

Digitized by Google

டைய சீஷர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

உ ¶ [1]அதன்பின்பு அவரும், அவருடைய தாயும், அவருடைய சகோதரரும், சீஷரும் கப்பர்நகூம் ஊருக்குப் போய், சிலகாள் அங்கே தங்கினார்கள்.

ங ¶ [2]பின்பு யூதருடைய பஸ்காப்பண்டிகை சமீபமாயிற்று.

ச [3]அப்பொழுது இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்குப் போய், தேவாலயத்திலே மாடுகளையும் ஆடுகளையும் புறாக்களையும் விற்கிறவர்களும், காசுக்காரரும் உட்காந்திருக்கிறதைக் கண்டு,

ரு கயிற்றால் ஒரு கொறடாவை உண்பண்ணி, அவர்கள் யாவரையும், ஆடுமாடுகளையும் தேவாலயத்திற்குப் புறம்பே துரத்தி, காசுக்காரருடைய காசுகளைக் கொட்டிப் பலகைகளைக் கவிழ்த்து,

ஞ புறாக்களை விற்கிறவர்களை நோக்கி, இவ்விடத்திலிருந்து இவைகளை எடுத்துக்கொண்டுபோங்கள்; [4]என் பிதாவின் ஆலயத்தை வியாபாரவீடாக்காதிருங்கள் என்றார்.

ட அப்பொழுது உம்முடைய ஆலயத்தின் நிமித்தம் உண்டான [5]பத்திவெயிராக்கியம் என்னைப் பட்சித்தது என்று எழுதியிருக்கின்றதை அவருடைய சீஷர் நினைத்துக்கொண்டார்கள்.

ண ¶ பின்பு யூதர்கள் அவனை நோக்கி, [6]எந்த அற்புதத்தை எங்களுக்குக் காண்பிக்கிறீர்? இப்படியபட்டவைகளைச் செய்கிறீரே என்றார்கள்.

த அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]இந்தத் தேவாலயத்தை இடித்துப்போடுங்கள், பின்பு நான் இதை மூன்று நாளுக்குள்ளே எழுப்புவேன் என்றார்.

ந யூதர்கள் சொன்னது: இந்தத் தேவாலயம் காற்பத்தாறு வருஷமாகக் கட்டப்பட்டதே; நீர் இதை மூன்று நாளுக்குள்ளே எழுப்புவீரா என்றார்கள்.

ப [8]அவர் தம்முடைய சரீரமாகிய தேவாலயத்தைக்குறித்துப்பேசினார்.

ம ஆதலால் [9]அவர் மரித்தோரிலிருந்து எழுந்துபோன பின்பு, அவர் சொன்னதை அவருடைய சீஷர் நினைத்து, வேதத்தையும் இயேசுவானவர் சொன்ன வசனத்தையும் அநிகமாய் விசுவாசித்தார்கள்.

ய ¶ அந்தப் பஸ்காப்பண்டிகையின் காலத்திலே அவர் எருசலேம் நகரத்தில் இருக்கையில், அவர் செய்த அற்புதங்களை அநேகம்பேர் கண்டு, அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

ர அப்படியிருந்தும், இயேசுவானவர் அவர்கள் எல்லாரையும் அறிந்தபடியினாலே, தம்மை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை.

ற [10]மனிதர் உள்ளத்தில் இருப்பதை அவர் அறிகிறவரானபடியால், மனிதனைக்குறித்து ஒருவரும் அவருக்கு அறிவைக் கொடுக்கவேண்டுவதில்லை.

ஈ. அதிகாரம்.

க. நிக்கொதேமுக்கு மறுபிறப்பைக்குறித்தும், ச. தமது மரணத்தை விளங்கப்பண்ணுகிறதைக்குறித்தும், ஙக. உலகத்தார்மேல் பராபரன் வைத்த முக்கியமான அன்பைக்குறித்தும், ஙஅ. அவிசுவாசத்தின் நிமித்தமாய் உண்டாகும் ஆக்கினையைக்குறித்தும் போதித்தது. உக. போவான் ஞானஸ்நானங்கொடுத்து, நிஸ்தலைக்குறித்துச் சாட்சிபகர்ந்து, உபதேசம்பண்ணினது.

யூதருக்குள்ளே தலைவனாக நீக்கோதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.

உ [11]அவன் இராத்திரிகாலத்திலே இயேசுவினிடத்தில் போய், இரபீ, [12]நன்னுடனே பராபரன் இராவிட்டால் [13]நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைப்போல ஒருவனும் செய்யமாட்டான்; ஆகையால் நீர் பராபரனாலே வந்

1 மத். ஙஉ. ச.

2 உ மோ. ஙஉ. ச. ஙு மோ. ஙக.க, ஙக.உக. ஙச. போஎ. ஙு.ச: க.ச: ஙக. ஙஙு.

3 மத். உக. ஙஉ. மாற். ஙக. ஙஙு. லூக். ஙக. சஙு.

4 லூக். உ. சக.

5 சங். கக. க.

6 மத். ஙஉ. உஅ. போஎ. க.கஙி.

7 மத். உக. கச: உஎ. சஙி. மாற். ச. ஙுஅ: ஙஙு. உக.

8 யோவே. உ. க: எபி. அ. உ. க கொரி. உ. ஙக: க. ஙக. உ கொரி. க. ஙக.

9 லூக். உச. அ.

10 க சாமு.கே.எ. க ராஎ. உஅ. க. மத். க. ச. மாற். உ. அ. போஎ.க.கச: ஙக.கஙி. அப்.க. உச. வெளி.உ. உக.

11 போஎ. எ. ஙெ: ஙக. கக.

12 அப்.ஙி.உஅ.

13 போஎ. க. ஙக, கக. அப். உ.உஉ.

Digitized by Google

தபோதகர் என்று அறிந்திருக்கிறோம் என்றான்.

ரு ¶ இயேசுவானவர் அவனை நோக்கி, [1]ஒருவன் மறுபடியும்* பிறவாவிட்டால், பராபரனுடைய இராச்சியத்தைப் பார்க்கமாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன் என்றார்

ச ¶ அதற்கு நீக்கோதேமு, முதுமையுள்ள ஒரு மனிதன் (மறுபடியும்) எப்படிப் பிறப்பான்? அவன் இரண்டாம்தரம் தன்னுடைய தாயின் வயிற்றில் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமா என்றான

ஞ ¶ இயேசுவானவர் சொன்னது: [2]ஒருவன் சலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால். பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உமக்குச் சொல்லுகிறேன்.

ட மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்; ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்

ண நீங்கள் மறுபடியும் †பிறக்கவேண்டுமென்று நான் உமக்குச் சொன்னதைக்குறித்து, நீர் அதிசயப்படவேண்டுவதில்லை.

அ [3]காற்றானது தனக்கு இஷ்டமான இடத்தில் செல்லுகின்றது; அதின் சத்தத்தைக் கேட்கிறீர்; ஆகிலும் அது வந்த இடத்தையும் அது போகும் இடத்தையும் அறியமாட்டீர்; ஆவியினாலே பிறந்தவன் எவனோ, அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

க ¶ அதற்கு நீக்கோதேமு, [4]இது சம்பவிப்பது எப்படி என்றான்.

ய ¶ இயேசுவானவர் சொன்னது: நீர் இஸ்ரவேலருக்குள்ளே போதகராயிருந்தும், இவைகளை அறியாமல் இருக்கிறீரா?

யக [5]மெய்யாகவே நான் உமக்குச் சொல்லுகிறதாவது: நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுத்துவந்தும், [6]நீங்கள் எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

யஉ பூமிக்கு ஏற்றவைகளை நான் உங்களுக்குச் சொல்லியும், நீங்கள் விசுவாசிக்க இல்லையே; பரமகாரியங்களை நான் உங்களுக்குச் சொன்னால், எப்படி விசுவாசிப்பீர்கள்?

யஊ [7]பரமண்டலத்திலிருந்து இறங்கியும், பரமண்டலத்திலே இருக்கிற மனித குமாரனே அன்றி ஒருவரும் பரமண்டலத்திற்கு ஏறவில்லையே.

யஎ அல்லாமலும் [8]பாம்பானது வனாந்தரத்திலே மோசேயினாலே உயர்த்தப்பட்டதுபோல, [9]மனித னுடைய குமாரனும் உயர்த்தப்படவேண்டும்.

யஏ அவனை [10]விசுவாசித்துக் கொள்ளுகிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அப்படியே ஆகவேண்டும்.

யஐ ¶ என்னத்தினாலெனில். [11]பராபரன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய சீவனை அடையும்படிக்கு அவனையே கொடுத்து. இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்பாயிருந்தார்.

யக [12]பராபரன் உலகத்தானை ஆக்கினைக்குட்படுத்தும்படிக்காக அல்ல, உலகத்தானை இரட்சிக்கும்படிக்காகவே தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பினார்.

யஅ அவனை [13]விசுவாசித்துக்கொள்ளுகிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; அவனை விசுவாசியாதவனோ பராபரனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவனாய் இராதபடியால், அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்புச் செய்தாயிற்று.

யக [14]ஒளியானது உலகத்தில் வந்திருந்தும், மனிதர் தங்கள் கிரியைகள் பொல்லாதவைகளாய் இ

கி. பி. ரூய.

1 யோவா. ச.டீ. எலா. க. டீஙி நீத் க.டீ. ய்ச் கடீஅ க பே க டீக க யோ. க.க.

* அல்லது உயர்த்தினிருந்து

2 மத். டீக டீக. அப் உ.க.அ.

† அல்லது உயர்த்திலிருந்து

3 பிர டீக. ஙி. க கொரி உ டீக

4 யோவா. க. ஙெ.,ரு.

5 மத். டீக. உள யோவா.க டீஅ: க. டீக: அ. உஅ: டீஙெ.சக: டீச உச.

6 கஉ. வச.

7 லூக். ரு.ஙெ. யோவா ஙெ சஙி: அ. டீஙி: டீஙெ. சள. க யோ.ச. டீச.

8 ச சோ.உக க

9 யோவா அ. உஅ: டீஙெ. கஉ.

10 க.க. வச யோவா க.சள

11 உசோ. ஙி.அ க யோ. ச. க.

12 லூக். கூ.ஙெ. யோவா ஙெ சஙி: அ. டீஙி: டீஙெ. சள. க யோ.ச. டீச.

13 யோவா. ஙி. உச: க. சடி. சள: உடி. கக.

14 யோவா. க ச. கூ. டி, டீக: அ. டீஙெ.

Digitized by Google

ருக்கிறபடியால், அந்த ஒளியிலும் இருளை விரும்பிக்கொண்டு வருகி றதே ஆக்கினைத் தீர்த்தலுக்கு ஏது வாயிருக்கின்றது.

உல [1]பொல்லாங்கைச் செய்கிற யாவனும் ஒளியைப் பகைக்கிற தால், தன் கிரியைகள் அதட்டப் படாதபடிக்கு * ஒளியில் சேர மாட்டான்.

உக சத்தியத்தைச் செய்கிறவனே தன் கிரியைகளைப் பராபரனு டைய சித்தத்தின்படி செய்கிற படியினாலே, அவைகள் வெளியா கும்படிக்கு ஒளியிடல சேருகி றான் என்றார்.

உஈ ¶ அதன்பின்பு இயேசுவான வரும் அவருடைய சீஷரும் யூதே யாதேசத்தினிலே போனார்கள்; அங் கே அவர்களோடுங்கூடச் சஞ்ச ரித்து, [2]ஞானஸ்நானம் கொடுத்து வந்தார்.

உக [3]அல்லாமலும் அக்காலத்தி லே காவலில் வைக்கப்படாதி ருந்த யோவானும், [4]சாலிமூரின் அருகே இருக்கிற அயினோன் ஊ ரிலே மிகுந்த சலம் உண்டாயி ருந்தபடியால், அங்கே ஞானஸ் நானம் கொடுத்துவந்தான்.

உசனங்கள் [5]அவ்விடத்திற்குப் போய் ஞானஸ்நானம்பெற்றார் கள்.

உஙி ¶ அப்பொழுது யோவானு டைய சீஷரில் சிலரும், மற்ற யூத ரும் சுத்தம்பண்ணுதலுக்குறித்து வாக்குவாதம் பண்ணிக்கொண்டு,

உசு பின்பு யோவானிடத்தில் போய், இரபீ, உம்மோடனேகூட யோர்தானின் அக்கரையிலே ஒரு வர் இருந்தாரே, [6]நீரும் அவனைக் குறித்துச் சாட்சிகொடுத்தீரே, அ வரும் ஞானஸ்நானம் கொடுக்கி றார்; எல்லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்.

உஎ ¶ அதற்கு யோவான் சொன் னது: [7]ஒரு மனிதனானவன் தனக் குப் பரமண்டலத்திலிருந்து கொ டுக்கப்படாவிட்டால், தானுய் ஒன்றையும் தன்னுடையதாக்கிக் கொள்ளத்† திராணியில்லை.

உஅ [8]நான் கிறிஸ்தல்ல, [9]அவ ருக்குமுன்னே அனுப்பப்பட்ட வனுய் இருக்கிறேன் என்று நான் சொன்னதைக்குறித்து நீங்களே எனக்காகச் சாட்சிகளாயிருக்கி றீர்கள்.

உக [10]மணவிபையுடையவனே மணவாளன்; [11]மணவாளனுடைய சிநேகிதன் நின்று அவருடைய சொல்லைக் கேட்கிறவனுய், அவ ருடைய சத்தத்தைக்குறித்து மிக வும்சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் எனக்குச் சம்பூரண மாய் உண்டாயிற்று.

ஈய அவர் பெருகவும் நான் கு றையவும் வேண்டும்.

ஈக [12]உயரத்திலிருந்து வருகிற வர் [13]எல்லாரிலும் மேலானவர்; [14]பூமியிலிருந்துண்டானவன் பூமி யின் தன்மையுடையவனுய்ப் பூமி யின் தன்மைப்படி பேசுகிறான்; [15]பரத்திலிருந்து வருகிறவர் எல் லாரிலும் மேலானவராயிருந்து,

ஈஉ [16]தாம் கண்டு கேட்டதைச் சாட்சியாகச் சொல்லுகிறார்; அப் படியிருந்தும் அவருடைய சாட் சியை ஒருவரும் ஏற்றுக்கொள்ள வில்லை.

ஈஈ அவருடைய சாட்சியை ஏற் றுக்கொள்ளுகிறவன் [17]பராபரன் சத்தியமுடையவர் என்று நிச்ச யப்படுத்துகிறான்.

ஈச [18]பராபரனுலே அனுப்பப் பட்டவர் பராபரனுடைய வச னங்களைச் சொல்லுகிறார்; [19]அல் லாமலும், பராபரன் தமது ஆவி யை அளவாய் அவருக்குக் கொ டுக்கவில்லை.

ஈடி [20]பிதாவானவர் குமாரனி டத்தில் அன்பாயிருந்து, சகலத் தையும் அவருக்கு ஒப்புக்கொடுத் தார்.

ஈசு [21]குமாரனிடத்தில் விசுவா சமாய் இருக்கிறவன் நித்திய சீவ னை உடையவனுயிருக்கிறான்; கு

கி பி. ஈய.

1 போபு. உச. மச.மெ. எபே. இ.ஈக.

* அல்லது வெளிப்படுத்த.

2 போவா. ச. க.

3 மத்.ம.ச.க.

4 கசாமு. கூ ச.

5 மத்.க.இ,க.

6 போவா. க. எ. மஇ.உஎ.கச.

7 க கொரி ச எ, எபி. இ.ச.பாக். க.மெ.

† அல்லது ஏற்றுக்கொள்ள.

8 போவா. க,உஅ, உஎ.

9 மல்கி. உ. க. மாற். க. உ, லூக். க. மெ.

10 மத். உஉ. உ. உ கொரி மக உ. எபே. இ. உஇ.உக. வெளி.உக கூ.

11 உஞ.இக.

12 கூ வச. போவா.அ.உக.

13 மத் உஅ.மஅ. போவா. க.மஇ. உஎ. உரோ.கூ. இ.

14 க கொரி. மஇ. சஎ.

15 போவா. கூ கக. க கொரி. மஇ.சஎ. எபே க.உக. பில. உ.கூ.

16 ஏக. ஏசனம். போவா. அ. உக: மஇ. மஇ.

17 உரோ. க. ச. க போ.இ.ம.

18 போவா எ. மக.

19 போவா. க. மக.

20 மத். மக. உஎ: உஅ. மஅ.லூக் ம.உஉ,போவா. இ. உம், உஉ: மக. க: மஎ. உ. எபி.உ.அ.

21 ஆப. உ. ச போவா.க.மஉ: க. சஎ: மஇ, மச.வச.உரோ. க.மஎ. க போ. இ.ம.

Digitized by Google

மாரனை விசுவாசியாதவன் சீவனைக் காண்பதில்லை; பராபரனுடைய கோபாக்கினையே அவன் மேல் நிலைநிற்கும் என்றான்.

சு. அதிகாரம்.

க. திரித்து சமாரியா நாட்டானாகிய ஒரு ஸ்திரியின் உதவியால் சம்பாஷித்து, அவளுக்குத் தம்மை இன்னார் என்று அறிவித்தது. உ.ஏ. அவருடைய சீஷர்கள் அதைப்பற்றி ஆச்சரியப்பட்டது. கூ. பாபாபனுடைய மகிமையைக்குறித்துத் தமக்கிருந்த வைராக்கியத்தை அவர்களுக்கு அறிவித்தது. ஙக. சமாரியரில் அநேகர் அவரை விசுவாசித்தது. சஎ. அவர் கலிலேயாவுக்குப் போய்க் கப்பர்நகூமிலே ஒரு நிலைனுடைய மகனைச் சொஸ்தமாக்கினது.

அக்காலத்தில் யோவானிலும் [1]இயேசுவானவர் அநேகம்பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானம்கொடுக்கிறார் என்று பரிசேயர் கேள்விப்பட்டார்கள்.

உ அதைக் கர்த்தர் அறிந்து, யூதேயா நாட்டைவிட்டு, மறுபடியும் கலிலேயா நாட்டுக்குப்போனார்.

ங இயேசுவானவர் தாமே ஞானஸ்நானம்கொடுக்கவில்லை; அவருடைய சீஷர்களே கொடுத்தார்கள்.

சு அப்பொழுது அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தது.

ஞ ஆதலால் [2]யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகான சீகார் என்னப்பட்ட சமாரியாவின் ஊரிடத்தில் இயேசுவானவர் சேர்ந்து,

ரு அங்கே இருந்த யாக்கோபின் கிணற்றின் அருகே ஏறக்குறைய ஆறும்மணி நேரத்திலே பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் உளுக்காந்தார்.

எ ¶ அப்பொழுது அவருடைய சீஷர் உணவுகளைக் கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்த காலத்திலே, சமாரியா நாட்டானாகிய ஒரு ஸ்திரி தண்ணீர் மொண்டுகொள்ளும்படிக்குச் சேர்ந்தாள்.

வி. பி. கூய.

1 யோவா. க. உஉ,உக.
2 ஏ யோ. கூ. மக: ச அ.உஉ. யோசு. உச. கூஉ.
3 உ இரா. மஎ. உச. லூக். க. ஙஉ.ஙக. அப். ம.உஅ.
4 எசா. மஉ க: சச. க. எரே. உ. மக. சகரி. மக. க: மச. அ.

அ அவளுடனே இயேசுவானவர், நாகத்துகுத் தா என்றார்.

கூ [3]யூதர்கள் சமாரியா நாட்டாருடனே கலவாமலிருக்கிறபடியினாலே, சமாரியஸ்திரி அவரைநோக்கி, நீர் யூதரையிருக்க, சமாரியஸ்திரியாகிய என்னிடத்திலே நாகத்துக்குத் தா என்று எப்படிக் கேட்கலாம் என்றாள்.

ஐ ¶ அதற்கு இயேசுவானவர் சொன்னது: நீ பராபரனுடைய ஈவையும், நாகத்துக்குத் தா என்று உன்னுடனே சொல்லுகிறவனையும் அறிந்தாயானால், நீயே அவனிடத்தில் விண்ணப்பம்பண்ணுவாய்; [4]அவன் சீவதண்ணீரை உனக்குக் கொடுப்பான் என்றார்.

ஙக ஸ்திரியானவன் சொன்னது: ஆண்டவரே, மொண்டுகொள்ளுகிறதற்கு உம்மிடத்தில் பாத்திரம் இல்லையே; கிணறும் ஆழமாயிருக்கிறதே, ஆதலால் எங்கேயிருந்து சீவதண்ணீர் உமக்கு உண்டாயிற்று?

ஙஉ நம்முடைய நகப்பனாகிய யாக்கோபும், அவருடைய பிள்ளைகளும், அவருடைய சிவசெக்துக்களும் இந்தக் கிணற்றிலே குடித்தார்கள்; அவரே இதை எங்களுக்குக் கொடுத்தார்; அவரிலும் நீர் பெரியவரா என்றாள்.

ஙரு ¶ அதற்கு இயேசுவானவர் சொன்னது: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவன் மறுபடியும் நாகமடைவான்.

ஙச [5]நான் கொடுக்கிற தண்ணீரைக் குடிக்கிறவன் எவனோ, அவன் என்றென்றைக்கும் நாகமடைவதில்லை; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே [6]நித்தியசீவன்வரைக்கும் ஊறுகிற நீரூற்றும் என்றார்.

ஙஎ [7]ஸ்திரியானவன்சொன்னது: ஆண்டவரே, நான் நாகமடையாமலும், இங்கே மொண்டுகொள்ளும்படி வராமலும் இருப்பதற்கு, நீர் அப்படிப்பட்ட தண்ணீரை

5 யோவா. க. உஇ,ஐ.
6 யோவா. எ. உஅ.
7 யோவா. க. கச: மஎ. ஙூ க. உரோ. சு.உக. க யோ. இ.உஅ.

Digitized by Google

எனக்குத் தாவேண்டும் என்றாள்.

உ அப்பொழுது இயேசுவானவர் அவளை நோக்கி, நீ போய், உன் புருஷனை அழைத்துக்கொண்டுவா என்றார்.

ஙெ அதற்கு ஸ்திரியானவள், எனக்குப் புருஷன் இல்லை என்றாள்; இயேசுவானவர் சொன்னது: எனக்குப் புருஷன் இல்லை என்று நீ செம்மையாய்ச் சொன்னாய்.

ஙஅ எப்படியெனில், ஐந்துபுருஷர் உனக்கு இருந்தார்கள்; இப்பொழுது இருக்கிறவன் உனக்குப் புருஷன் அல்ல; அதை நீ உள்ளபடி சொன்னாயென்றார்.

ஙக அப்பொழுது ஸ்திரியானவள் அவரை நோக்கி, [1]ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி என்று எனக்குத் தோன்றுகின்றது.

ஙஉ நம்முடைய பிதாக்கள் [2]இந்த மலையிலே தொழுதுகொண்டார்களே, [3]நீங்கள் எருசலேமிலுள்ள தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும்என்கிறீர்களே என்றாள்.

ஙக இயேசுவானவர் சொன்னது: ஸ்திரியே, [4]நீங்கள் இந்த மலையிலாவது,எருசலேமிலாவது பிதாவைத் தொழுதுகொள்ளாதிருக்கும் காலம் வருகின்றது.

ஙஎ என்னை நம்பு, [5]நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளுகிறீர்கள்; [6]யூதர்களாகிய எங்களிடத்திலிருந்து இரட்சிப்புத் தோன்றுவதால், நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்ளுகிறோம்.

ஙஏ அல்லாமலும் உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை [7]ஆவியினாலும் [8]உண்மையினாலும் தொழுதுகொள்ளும் காலம் வரும்; இப்பொழுதும் வந்திருக்கின்றது; அப்படியே தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பிதாவானவர் விரும்புகிறாரே.

ஙஐ [9]பராபரன் ஆவியாய் இருக்கிறார்; அவனைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியினாலும் உண்மையினாலும் அவனைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார்.

ஙஒ (அப்பொழுது) ஸ்திரியானவள் சொன்னது: மேசியா வருகிறார் என்று அறிந்திருக்கிறேன்; அவர் வரும்பொழுது [10]எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள்; மேசியா என்பதும் கிறிஸ்து என்பதும் ஒக்கும்.

ஙஓ ¶ இயேசுவானவர் சொன்னது: [11]உன்னுடனே பேசுகிறவனே அவர் என்றார்.

ஙஔ அத்தருணத்திலே அவருடைய சீஷர் வந்து, ஸ்திரியுடனே அவர் பேசிக்கொள்ளுகிறதைக் (கண்டு,) ஆச்சரியப்பட்டார்கள்; ஆகிலும் என்ன தேடுகிறீர் என்றாவது, என்னத்திற்காக இவளுடனே பேசுகிறீர் என்றாவது, ஒருவனும் (அவரிடத்தில் கேட்கவில்லை.)

ஙக ஸ்திரியானவள் தன் குடத்தை வைத்து, ஊருக்குள்ளே போய், சனங்களை நோக்கி,

ஙஙக [12]நான் செய்த யாவையும் எனக்கு ஒரு மனிதன் சொன்னான்; அவன் கிறிஸ்துவா, அல்லவா, என்று வந்து பாருங்கள் என்றாள்.

ஙஙஎ அந்தப்படி அவர்கள் ஊரிலிருந்து புறப்பட்டு, அவரிடத்தில் சேர்ந்தார்கள்.

ஙஙஏ ¶ அதற்குமுன்னே சீஷர் அவரை நோக்கிப் போதகரே, சாப்பிடும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

ஙஙஐ அதற்கு அவர், நீங்கள் அறியாதிருக்கிற போசனம் என்னிடத்தில் உண்டு என்றார்.

ஙஙஒ அப்பொழுது சீஷர் ஒருவரை ஒருவர் நோக்கி, மற்றொருவன் அவருக்குப் போசனம் கொண்டுவந்திருப்பானோ என்றார்கள்.

ஙஙஓ பின்னும் இயேசுவானவர் அவர்களுடனே சொன்னதாவது:

ஐ. பி. ஈயை.

1 லூக். எ. ஙக: உச.ஙக. யோ. வா.க.ஙச: எ. சை.
2 பேர.க.எ.
3 ஓ மோ. மூ. ஓ,ஙக. க ஓர. க.க. உ ராண. எ.ஙூ.
4 மல்கி. க. ஙக. க நீமோ. உ.அ.
5 உ இர. ஙூ. ஙக.
6 சா. உ. க. லூக். உ.ச. சை. உரோ. க.ச,ஓ.
7 பிலி. க.க.
8 பேரவா. க. ஙக.
9 உ கொரி. க. ஙூ.
10 உக,ஙக.வச.
11 பேரவா. க. எ. மத். உக. ஙக, ஙச. மாற். ஙச.ஙக,ஙஉ.
12 உ ஓ.வச.

[1]நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போசனமாய் இருக்கின்றது.

ஈடு அறுப்புநாள் வருகிறதற்கு நாலுமாதம் செல்லுமென்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? அதோ, வயல் நிலங்கள் விளைந்து, இப்பொழுதே [2]அறுப்புக்கு வெண்மையாய் இருக்கின்றன என்று உங்கள் கண்களை உயர்த்திப் பாருங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஈசு விதைக்கிறவனும் அறுக்கிறவனும் கூடச் சந்தோஷப்படத்தக்கதாக, [3]அறுக்கிறவன் கூலியை வாங்கி நித்திய சீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான்.

ஈஎ இதைக்குறித்து ஒருவன் விதைக்கிறான், மற்றொருவன் அறுக்கிறான் என்கிற வழக்கச்சொல் மெய்யாய் இருக்கின்றது.

ஈஅ நீங்கள் பிரயாசப்படாத பயிரை அறுக்கும்படிக்கு நான் உங்களை அனுப்பினேன்; மற்றவர்கள் வேலைசெய்தார்கள்; நீங்கள் அவர்களுடைய வேலையினால் எத்தனமானதில் பிரவேசித்தீர்கள் என்றார்.

ஈக ¶ [4]அந்த ஸ்திரி, நான் செய்தயாவையும் எனக்குச் சொன்னார் என்று சாட்சியிட்ட வசனத்தின் நிமித்தம், அந்த ஊரிலுள்ள சமாரியரில் அநேகர் அவர்மேல் விசுவாசமானார்கள்.

ஈய ஆதலால் சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்திலே தங்கும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டார்கள்; அந்தப்படி அவர் இரண்டுநாள் அங்கே தங்கினார்.

ஈச அப்பொழுது மிகவும், அநேகமான மனிதர் அவருடைய உபதேசத்தின் நிமித்தம் விசுவாசித்து,

ஈஉ பின்பு ஸ்திரியை நோக்கி, உன் சொல்லினால்மாத்திரம் அல்ல, நாங்களும் அவருடைய உபதேசத்தைக் கேட்டு, [5]அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

ஈசு ¶ இரண்டுநாள் அங்கே தங்கி, பின்பு அவர் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, கலிலேயா நாட்டுக்குப்போனார்.

ஈசு [6]ஆகிலும் தீர்க்கதரிசியானவன் தன் சொந்த ஊரிலே கனம் அடையான் என்று இயேசுவானவர் தாமே சொல்லியிருந்தார்.

ஈஙு அவர் [7]கலிலேயாநாட்டிலே சேர்ந்தபொழுது, எருசலேமிலே பண்டிகை நாளில் அவர் செய்தயாவையும் பார்த்திருந்த [8]கலிலேயர் அவரை ஏற்றுக்கொண்டார்கள்; பின்பு இயேசுவானவர் [9]தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் போனார்.

ஈசு அப்பொழுது கப்பர்நகூம் ஊரிலே இராசாவின் மனிதனில் *ஒருவனுடைய குமாரன் வியாதியுள்ளவனாய்க் கிடந்தான்.

ஈஞ இயேசுவானவர் யூதேயாவிலிருந்து கலிலேயாவில் வந்ததை அந்த மனிதன் கேள்விப்பட்டவுடனே, அவரிடத்திற்குப்போய், தன் மகனுக்கு மரணம் சமீபித்திருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று அவனை வேண்டிக்கொண்டான்

உ அ [10]இயேசுவானவர் அவனை நோக்கி, நீங்கள் அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால், விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.

உ ஆ அதற்கு இராசாவின் மனிதன் சொன்னது: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வாரும் என்றான்.

உ இ இயேசுவானவர் சொன்னது: நீ வீட்டிற்குப் போ, உன்னுடைய குமாரன் பிழைத்திருக்

---

1 யோபு. உக. மத். கூ. மாற். ஒ.அ: மத்.ச: லூக்.கூ.

2 மத். கூ. மாற். லூக்.ம.உ

3 நாவி. மூ. க.

4 உகா.மச.

5 போவா. மா. அ. ச போ. ச. ஈச

6 மத். மக. மோ. மாற் க.ச லூக். ச.உச.

7 ஏ மோ. மக. மக.

8 போவா. உ. உக: க.உ.

9 யோவா. உ. க. மக.

10 க மொ. க. உஉ.

* அல்லது பிரபு; அல்லது அதிகாரி.

Digitized by Google

கி. பி. கூக.

1 க மோ.உக.உ. ஓ மோ. மக.க. போவா. உ.மே.

2 செகே. க. க: மஉ.கக.

* அல்லது சக் ஷை.

ருன் என்றார்; இயேசுவானவர் சொன்ன வசனத்தை நம்பி அந்த மனிதன் போனான்.

ஙெ அவன் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிராக வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள்.

ஙஉ அப்பொழுது, எத்தனை மணி நேரத்திலே அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று அவர்களிடத்தில் விசாரித்தான்; அவர்கள் சொன்னது: நேற்று ஏழாம் மணி நேரத்திலே சுரம் அவனை விட்டு நீங்கிற்று என்றார்கள்.

ஙக அந்த நேரம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று இயேசுவானவர் தன்னுடனே சொன்ன மணிநேரமே என்று தகப்பனன் அறிந்தான்; பின்பு அவனும் அவன் குடும்பத்தார் அனைவரும் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

ஙச இயேசுவானவர் யூதேயாவைவிட்டு, கலிலேயா நாட்டிற்குத் திரும்பிப்போனபொழுது, இந்த இரண்டாம் அற்புதத்தைச் செய்தார்.

ரு. அதிகாரம்.

க. இயே ஓய்வுநாளில் முப்பத்தெட்டுவருஷம் பீடிக்கப்பட்டிருந்தவனைக் குணமாக்கினது. ம. அந்நாளை யூதர்கள் அனைத்துன்பப்படுத்தினது. ஙெ. அவர் பிதாவின் சாட்சியிலும், ஙஉ. யோவானுடைய சாட்சியிலும், ஙக. தம்முடைய கிரியைகளின் சாட்சியிலும், ஙக. வேத எழுத்துக்களிலும் தம்மை இன்னுஞ்சொன்ன அறியாத, அவர்கள் தள்ளிப்போட்டது.

அதின்பின்பு [1]யூதருடைய பண்டிகை உண்டானபொழுது, இயேசுவானவர் எருசலேமுக்குப் போனார்.

உ [2]அந்த எருசலேம் நகரத்திலே, ஆட்டுவாசலின் * அருகே எபிரேயு பாஷையிலே பேதஸ்தா என்னப்பட்ட ஒரு குளம் இருக்கின்றது; அதற்கு ஐந்து மண்டபங்கள் உண்டு.

3 மத். கூ. க. மாற். உ. மக. லூக்.இ.உச.

4 போவா. கூ. ம.

5 உ மோ. உஉ.ம. செகே.மக.மக. எரே. மெ. உக. மி. மத்.மஉ.உ. மாற்.உ.உச:க. ச. லூக்.க.உ: மக. ம.

கூ அவைகளிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடையவர்கள் முதலான அநேக வியாதிக்காரர் படுத்துக்கொண்டு, சலம் அசைகிறவனாக்கும் பார்த்திருப்பார்கள்.

ச என்னத்தினாலெனில், சிலகாலங்களிலே தேவதூதன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கிச் சலத்தைக் கலக்குகிறதும், சலம் கலக்கப்பட்டபின்பு முதலாவது அதற்குட்படுகிறவன் எவனோ, அவன் எந்த வியாதிப்பட்டவனாய் இருந்தாலும் குணம் அடைகிறதும் வழக்கமாயிருந்தது.

ரு அதின்பொருட்டாக, அங்கே முப்பத்தெட்டுவருஷம் வியாதியுள்ள ஒரு மனிதன் இருந்தான்.

சு படுத்திருந்த அவனை இயேசுவானவர் கண்டு, அவன் அநேகநாள் வியாதியுள்ளவன் என்று அறிந்து அவனை நோக்கி, நீ சொஸ்தமடைய விரும்புகிறாயா என்றார்.

எ வியாதிப்பட்டவன் அவருக்கு மாறுத்தரமாகச் சொன்னது: ஆண்டவனே, சலம் கலக்கப்படுகிறபொழுது, என்னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவருமில்லை, நான் நடந்துபோகிறதற்கு முன்னே வேறொருவன் இறங்குவான் என்றான்.

அ இயேசுவானவர் சொன்னது: [3]எழுந்திரு உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட என்றார்.

கூ உடனே அந்த மனிதன் குணமடைந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்துபோனான்; [4]அந்த நாள் ஓய்வுநாளாய் இருந்தது.

ய ¶ ஆதலால் யூதர்கள் குணமாக்கப்பட்டவனை நோக்கி, ஓய்வுநாளாயிருக்கிறபடியால் நீ படுக்கையை எடுத்துப்போகிறது நியாயம் அல்ல என்றார்கள்.

யக அவர்களுக்கு அவன் சொன்னது: என்னைக் குணமாக்கினவர் என்னை நோக்கி, [5]உன் படுக்

கை. பி. ஈக.

கையை எடுத்துக்கொண்டு நட என்று சொன்னார் என்றான்.

ல உ அதற்கு அவர்கள் சொன்னது: உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்று உன்னுட னே சொன்ன மனிதன் எவன் என்று கேட்டார்கள்.

ல ஊ அவ்விடத்தில் சனக்கூட்டம் இருந்தபடியினாலே,* இயேசுவானவர் விலகியிருந்தார்.

ல ஏ ஆகையால் குணமாக்கப்பட்டவன் அவரை அறியவில்லை; அதற்குப்பின்பு இயேசுவானவர் தேவாலயத்திலே அவனைக்கண்டு, இதோ குணமடைந்தாய்; அதிக கேடு உனக்கு வராதபடிக்கு, [1]இனிப் பாவம்செய்யாதிருப்பாயாக என்றார்.

ல ஐ அப்பொழுது அந்த மனிதன் போய், தன்னைக் குணமாக்கினவர் இயேசு என்று யூதருக்கு அறிவித்தான்.

ல ஒ ஓய்வுநாளிலே அவர் அப்படிச் செய்தபடியினாலே, யூதர்கள் இயேசுவைத் துன்பப்படுத்தி அவனைக் கொலைசெய்ய வகை தேடினார்கள்.

ல ஓ ¶ இயேசுவானவர் அவர்களை நோக்கி, [2]என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன் என்றார்.

ல ஔ அவர் ஓய்வுநாளைக் காத்துக் கொள்ளாதிருந்ததும் அல்லாமல், [3]பராபரனைத் தம்முடைய சொந்தப்பிதா என்றும் சொல்லி, தம்மையே பராபரனுக்குச் சமமாக்கின படியினாலே, யூதர்கள் பின்னும் [4]அதிகமாய் அவனைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்.

ல ஃ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, மெய்யாகவே நான் உங்களுக்குச் [5]சொல்லுகிறதாவது: பிதாவானவர் செய்யக் குமாரன் காணுகிறது ஏதுவோ. அதையே அன்றி வேறொன்றையும் தானுஞ்செய்யமாட்டான்; ஆதலால் அவர் செய்கிறவைகள் எவைகளோ, அவைகளைக் குமாரனும் அப்படியே செய்கிறான்.

* அல்லது அங்கிருந்த சனக்கூட்டத்தை விட்டு.

1 மத். ல உ. ச ஏ. போவா. அ.ல.
2 போவா. கூ.ச: ல ச.ல.
3 போவா. ல.கல, கக. பிலி.உ.கூ.
4 போவா.எ.ல.கூ.
5 கல. வச. போவா.அ.உஅ: க.ச: லஉ. சக: ல ச.ல.
6 மத். க. லஎ. போவா. க.க.ஔ. உ பே.க.லஎ.
7 லூக்.எ.ல ச: அ. ஔ. போவா. லக.உஔ,சக.
8 மத். லக. உஎ: உஅ.லஅ: உஎ. வச. போவா.க. கஔ: லஎ. உ. அப். லஎ, கக. க பே.ச.ஔ.
9 க போ. உ. உக.
10 போவா. க. லக,லஅ: க.சல, சஎ: அ. ஔ: உல.கக.
11 க போ.க.ல.ச.
12 உஅ. வச. எபே. உ. க, ஔ: ஔ. ல ச. கொலோ. உ. கக.

ல ஈ அல்லாமலும், பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனைக் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர் ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடாமல், [6]நியாயத்தீர்ப்பின் அதிகாரம் யாவையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

ல உ [7]குமாரனைக் கனம்பண்ணாமல் இருக்கிறவன் அவனை அனுப்பின பிதாவைக் கனம்பண்ணாமல் இருக்கிறான்.

ல ஊ [8]என் வசனங்களுக்குச் செவிகொடுத்து என்னை அனுப்பினவனை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியசீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குள் அகப்படாமல், [9]மரணத்தைவிட்டு நீங்கி, சீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ல ஋ அல்லாமலும் [10]மரித்தோர் பராபரனுடைய குமாரன் சத்தத்தைக் கேட்கும் காலம் வருகின்றது; இப்பொழுதே அது வந்திருக்கின்றது; அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Digitized by Google

உசு என்னத்தினாலெனில், பிதா வானவர் தம்மில்தாமே சீவனை உடையவராய் இருக்கிறதுபோல, குமாரனும்தன்னில்தானேசீவனை உடையவனாயிருக்கும்படி, வல் லமையை அவனுக்குக் கொடுத் தார்.

உஅ அல்லாமலும் [1]அவன் மனி தனுடைய குமாரனாயிருக்கிறபடி யினாலே, [2]நியாயத்தீர்ப்புச் செய் யும்படிக்கு, அதிகாரத்தையும் அ வனுக்குக் கொடுத்தார்.

உஆ இதைக்குறித்து ஆச்சரியப் படாதிருங்கள்; என்னத்தினாலெ னில், பிரேதக்குழிகளிலுள்ள யா வரும் அவனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம்வரும்.

உக அப்பொழுது [3]நன்மைசெய் தவர்கள் சீவனை அடையும்படிக் கும், [4]தீமைசெய்தவர்கள் ஆக்கி னையை அடையும்படிக்கும் எழு ந்து புறப்படுவார்கள்.

உ[5]னால் ஒன்றும் செய்யமாட் டேன்; நான் கேட்கிறபடி நியாய ம்தீர்க்கிறேன்; [6]நான் என்னுடை ய சித்தத்தை அல்ல, என்னை அ னுப்பின பிதாவினுடைய சித்தத் தையே தேடுகிறபடியால், என்னு டைய தீர்ப்பு நீதியாய் இருக்கும்.

உக [7]நான்மாத்திரம் என்னைக்கு றித்துச் சாட்சிகொடுத்தால், என் சாட்சி மெய்யென்று கொள்ளவே ண்டாம்.

உஎ [8]வேறொருவனும் என்னைக் குறித்துச் சாட்சிகொடுக்கிறான்; அவன் என்னைக்குறித்துக்கொடுக் கிற சாட்சி மெய்யென்று அறிந் திருக்கிறேன்.

உஏ [9]நீங்கள் யோவானிடத்திற் கு மனிதனை அனுப்பினபொழுது, [10]அவனும் மெய்யான சாட்சியைக் கொடுத்தான்.

உஐ அப்படியிருந்தும், நான் மனி தனாலே சாட்சியைக் கொள்ளமா ட்டேன்; நீங்கள் இரட்சிக்கப்ப டுவதற்கு இவைகளைச் சொல்லுகி றேன்.

கி. பி. உஅ

1 தானி. எ. உக, உச.
2 உஉ.எச. அப். உ.எஉ: மெ.கக.
3 தானி. உஉ. உ. மத். உஇ. கஉ, கக, சக.
4 சே. உக. உக. க தொ ச.உஉ. க சொ. உஇ. இஉ.
5 உக. வச.
6 மத். உக. கக. யோவா.ச.கச: க ஃஅ.
7 யோவா. அ. உச. வெ. உ. உச.
8 மத். உ. இஅ: உஅ இ. யோவா. அ.ஆ.க யோ. இ.க.எ.க.
9 யோவா. உ. உஇ, உக, உஎ, கஉ.
10 உ பே.க.உக.
11 மத். உக. உஏ: உக. உக. மற். க.உஏ.
12 க யோ.இ.க.
13 யோவா.க.உ: உ. உஇ: உஇ. உச.
14 மத் க.உஅ: உஎ. இ. யோவா. க. உ.எ: அ.உஅ.
15 இ மோ.ச.உஉ. யோவா. க.உஅ க இமோ. க.உஎ. க யோ. ச. உக.
16 சே. அ உஏ: கச. உக. லூக். உக. உக. சக. வச. அப். உஅ. கக.
17 இ மோ. உஅ. உஇ, உஅ லூக். உச. உ. யோ வா. க. சஇ.
18 யோவா.க.உ: க. உக.
19 கச. வச. க தொ. உ. க.

ஙரு அவன் எரிந்து [10]பிரகாசிக் கிற விளக்காகவே இருந்தான்; [11]நீங்களும் சிலகாலம் அவனுடை ய ஒளியிலே களிகூர மனதாயி ருந்தீர்கள்.

ஙசு [12]யோவானுடைய சாட்சியி லும் அதிக மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அது என்னவெ னில், [13]நான் நிறைவேற்றும்படிக் குப் பிதா எனக்குக் கொடுத்த கிரி யைகளே; நான் செய்துவருகிற இந்தக் கிரியைகள், பிதா என்னை அனுப்பினார் என்கிறதற்கு என் னைக்குறித்துச் சாட்சிகொடுக்கின் றன.

ஙஎ அதுவுமல்லாமல், [14]என்னை அனுப்பின பிதாவே என்னைக்கு றித்துச் சாட்சிகொடுத்தார்; [15]நீங் கள் அவருடைய சத்தத்தை ஒருக் காலும் கேட்கவில்லையா? அவரு டைய தரிசனையைக் காணவில் லையா?

ஙஅ அப்படியிருந்தும், அவர் அ னுப்பினவனை நீங்கள் விசுவாசி யாதபடிக்கு அவருடைய வசனத் தை உங்களுக்குள்ளே தரித்துக் கொள்ளாமல் இருக்கிறீர்கள்.

ஙக வேதவாக்கியங்களிலே நித்திய சீவன் உங்களுக்கு உண் டாகுமென்று எண்ணுகிறபடி யால், [16]நீங்கள் அவைகளை ஆராய் ந்து பாருங்கள்; [17]அவைகளுமே என்னைக்குறித்துச் சாட்சிகொடுக் கின்றன.

சய [18]அப்படியிருந்தும், சீவனை அடையும்படிக்கு நீங்கள் என்னி டத்தில் வர மனதில்லை.

சக [19]நான் மனிதரால் புகழ்ச்சி யை எதிர்த்துக்கொள்ளமாட்டேன்.

சஉ நீங்கள் தேவ அன்பில்லாத வர்கள் என்று அறிந்திருக்கிறேன்.

சஙு நான் என் பிதாவின் நாமத் திலே வந்திருக்கும், நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ளவில்லை; வேறொருவன் தன் சொந்த நாமத் திலே வந்தால், அவனை ஏற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Google

சச [1]நீங்கள் பராபரனுலேமாத் திரம் உண்டாகும் புகழ்ச்சியைத் தேடாமல், [2]ஒருவரால் ஒருவர் புகழ்ச்சியை எடுத்துக்கொள்ளுகிறவர்களாயிருக்க, எப்படி விசுவாசிப்பீர்கள்.

சரு பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றம்சாற்றுவேன் என்று நினையாதிருங்கள்; [3]நீங்கள் நம்பிக்கொள்ளுகிற மோசே இருக்கிறாரே, அவரே உங்கள்மேல் குற்றம்சாற்றுவார்.

சசு எப்படியெனில், மோசே [4]என்னைக்குறித்து எழுதினார்; ஆகையால் நீங்கள் அவனை விசுவாசித்தால், என்னையும் விசுவாசிப்பீர்கள்.

சஎ அவர் எழுதினதை நீங்கள் விசுவாசியாமலிருந்தால், என்னுடைய வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்.

சு. அதிகாரம்.

க. பிறகு ஐந்து அப்பங்களிலும், இரண்டு மீன்களிலும் ஐயாயிரம்பேரைப் புசிப்பித்தது. ஙஇ. அதின்பிமித்தம் சனங்கள் அவரை இராசாவாக்கும்படி பிரயத்தனம்பண்ணினது. ஙக. அவர் அவர்களை விட்டுப்போய்த் தம்முடைய சீஷர்களிடத்திற்குக் கடலின்மேல் நடந்தது. ஙக. பின்பு தம்மைப் பின்தொடர்ந்தவர்களையும், மாம்சத்தையோடே சேர்கொடுத்தவர்களையும் கடிந்துகொண்டு, ஙஉ. விசுவாசிகளுக்குச் சீவ அப்பமென்று தம்மை அறிவித்தது. ஙக. அநேக சீஷர்கள் அவரைவிட்டுப் பிரிந்தது. ஙஅ. பேதுரு அவரைக்குறித்து நல்லறிக்கைபண்ணினது. ஙஎ. அவர் யூதாவைப் பரிசென்று சொன்னது.

[5]அதின்பின்பு இயேசுவானவர் கலிலேயாக் கடலென்றும், தீபேரியாக்கடலென்றும், பேர்கொண்ட கடலின் அக்கரைக்குப் போனார்.

உ வியாதிப்பட்டவர்களிடத்தில் அவர் செய்த அற்புதங்களைத் திரளான சனங்கள் கண்டபடியால், அவருக்குப் பின்சென்றார்கள்.

ஊ இயேசுவானவர் மலையில் ஏறி, அங்கே தம்முடைய சீஷருடனே கூட உளுக்காந்தார்.

ஙஇ. பி. ஊஉ.

1 உ Cor. உ. உக.
2 யோவா. ஙஉ. சக.
3 உ Cor. உ. ஙஉ
4 ச மோ. க.ஙஇ: ஙஉ.க: ஙஅ.ஙஎ: உஉ.ஙஅ: சசு. ஙு. இ மோ. ஙஅ. ஙஇ, ஙஅ. யோவா. க. சஇ. அப். உக.உஉ.
5 மத். ம. ஙஇ. மாற். க. கஇ. லூக். க. ஙு, ஙஉ.
6 க மோ. உக. இ, எ. இ மோ. ஙக.க. போவா. உ.ஙக: இ.க.
7 மத். ம. ம. மாற். க. கஇ. லூக்.கூ.ஙஉ
8 ச மோ. ஙக. உச,உஉ
9 உ இரா. ச. சூ.

சு [6]அக்காலத்திலே யூதருடைய பஸ்கா என்னும் பண்டிகை சமீபமாய் இருந்தது.

ங [7]அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய கண்களை உயர்த்தி, திரளான சனங்கள் தம்மிடத்திற்கு வரக்கண்டு, பிலிப்பை நோக்கி, இவர்களுக்குச் சாப்பாடு கொடுக்கும்படிக்கு நாம் எங்கே அப்பங்களைக் கொள்ளலாம் என்றார்.

சு (அவர்களைக்குறித்துச்) செய்யவேண்டுவதை அவர் அறிந்தும், அவனைச் சோதிக்கும்படிக்கு இப்படிச் சொன்னார்.

எ பிலிப்பு அவருக்கு மாறுத்தரமாகச் சொன்னது: [8]இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொண்டாலும், இருநூறு தேனாரியுபணத்து அப்பங்களும் போதாது என்றான்.

அ அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனுமாய், சீமோன் பேதுருவின் சகோதரனுமாய் இருந்த அந்திரேயா அவனை நோக்கி,

கூ இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையிலே வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தும், மீன்கள் இரண்டும் உண்டு; [9]இவ்வளவு சனங்களுக்கும் அவைகள் எம்மாத்திரம் என்றான்.

ஙக அப்பொழுது இயேசுவானவர் சனங்களை உளுக்காரப்பண்ணுங்கள் என்றார்; அவ்விடத்திலே மிகுந்த புல் இருந்தது; அதின்மேல் ஏறக்குறைய ஐயாயிரம்பேர் உளுக்காந்தார்கள்.

ஙக பின்பு இயேசுவானவர் அந்த அப்பங்களை எடுத்துக்கொண்டு தோத்திரம்பண்ணி, சீஷருக்குக் கொடுத்தார்; சீஷர் அவைகளைப் பந்தியிருக்கிறவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படிப்போல, மீன்களிலும் அவர்கள் இஷ்டம் எவ்வளவோ, அவ்வளவு அவர்களுக்குக் கொடுத்தார்.

Digitized by Google

கி. பி. கூஉ.

கள்; உடனே படவு அவர்கள் போகிற கரையைப் பிடித்தது.

உஉ ¶ மறுநாளிலே கடலின் அக்கரையிலே நின்ற சனங்கள், அவருடைய சீஷர் ஏறின அந்த ஓரே படவுதவிர அங்கே வேறொரு படவு இல்லையென்றும், இயேசுவானவர் தம்முடைய சீஷருடனேகூடப் படவில் ஏறுமலிருக்க அவருடைய சீஷர்மாத்திரம் போனார்கள் என்றும் அறிந்தார்கள்.

உக கர்த்தர் தோத்திரம்செய்த பின்பு, அவர்கள் அப்பம் சாப்பிட்ட இடத்திற்குச் சமீபமாய்த் தீபேரியாவிலிருந்து வேறே படவுகளும் வந்தன.

உச அப்பொழுது இயேசுவானவரும் அங்கே இல்லை, அவருடைய சீஷரும் இல்லை என்று சனங்கள் கண்டு, உடனே படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடி, கப்பர்நாகூம் ஊருக்குப் போனார்கள்.

உஙி கடலின் அக்கரையிலே அவர்கள் அவனைக் கண்டபொழுது, இரபீ, நீர் எப்பொழுது இங்கே வந்தீர் என்றார்கள்.

உசு ¶ இயேசுவானவர் அவர்களை நோக்கி, நீங்கள் அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, அந்த அப்பத்தைப் புசித்துத் திருத்தி அடைந்ததினாலே என்னைத் தேடுகிறீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உஎ ¶ அழிந்துபோகிற போசனத்திற்காக அல்ல, [3]நித்தியசீவன் உள்ளவனைக்கும் நிலைநிற்கிறபோசனத்திற்காகவே பிரயாசப்படுங்கள்;* அதை மனிதனுடைய குமாரன் உங்களுக்குக் கொடுப்பான்; [4]பராபரன் என்னும் பிதா அதற்காக அவனை முத்திரைப்படுத்தினாரே என்றார்.

உஅ அதற்கு அவர்கள் சொன்னது: பராபரனுக்கு ஏற்ற கிரியைகளை நடத்தும்படிக்கு நாங்கள் என்னசெய்யலாம் என்றார்கள்.

லஉ அவர்கள் திருத்தி அடைந்த பின்பு, அவர் தம்முடைய சீஷரை நோக்கி, ஒன்றும் கெட்டுப் போகாதபடிக்கு, சேஷமானவைகளைச் சேகரித்துக்கொள்ளுங்கள் என்றார்.

லக அந்தப்படி அவர்கள் சேகரித்து, வாற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் சாப்பிட்டவர்கள் சேஷப் பமித்தினவைகளால் பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.

லச ¶ அப்பொழுது இயேசுவானவர் செய்த அற்புதத்தைச் சனங்கள் கண்டு, மெய்யாய் இவர் உலகத்தில் வரவேண்டிய [1]தீர்க்கதரிசனவர் என்றார்கள்.

லஙி ஆதலால் அவர்கள் வந்து தம்மை இராசாவாக்கும்படிக்குப் பிடித்துக்கொண்டுபோக மனதாயிருக்கிறதை இயேசுவானவர் அறிந்து, மறுபடியும் விலகித் தனியே மலையின்மேல் ஏறினார்.

லஞ ¶ சாயங்காலமானபொழுது, அவருடைய சீஷர் கடற்கரையில் இறங்கிப் படவில் ஏறி, கடலின் அக்கரையான கப்பர்நாகூம் ஊருக்குப் போகப் புறப்பட்டார்கள்; அப்பொழுது இருட்டாயிருந்தது; இயேசுவானவரும் அவர்களிடத்தில் சேரவில்லை.

லட அல்லாமலும் பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் எழும்பிற்று.

லஅ அப்படி அவர்கள் ஏறக்குறைய இருபத்தைந்து அல்லது முப்பது ஸ்தாதிவழி தூரத்தில் துடுப்பு வலித்துக்கொண்டிருக்கிறபொழுது,

லக இயேசுவானவர் கடலின்மேலே நடந்து, படவுக்குச் சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்.

உல அவர் அவர்களுடனே சொன்னது: நான்தான், பயப்படாதிருங்கள் என்றார்.

உக அப்பொழுது அவனைப் படவில் ஏற்றிக்கொள்ள விரும்பினார்

1 க மே. சகூ.உ. ஞ மே. மஅ. மஙி, மஅ. மத். மக. க. போவா. க.உக: ச.மக, உஙி: எ.சஎ.

2 மத். மச. உக. மந.க.சஅ.

3 ச. மனம். போவா. ச.மச.

* அல்லது வே லைசெய்யும்கள்.

4 மத்.க.மஎ: மஎ. ஞ. மாற். க.மக: கூ.எ. லூக். க. உஉ: கூ. கஞி. போவா. க.கக: ஞ.மச: அ.மஅ. அப். உ. உஉ. உ. பே. க.மச.

உக இயேசுவானவர் சொன்னது: [1]பராபரன் அனுப்பினவனை நீங்கள் விசுவாசிக்கிறதே அவருக்கு ஏற்ற கிரியையாய் இருக்கின்றது என்றார்.

கூய அதற்கு அவர்கள் சொன்னது: அப்படியானால் உம்மை விசுவாசிக்கும்படிக்கு, நாங்கள் காணத்தக்கதாக [2]எந்த அற்புதத்தைச் செய்கிறீர்? என்னத்தை நடப்பிக்கிறீர்?

கூக [3]வானத்திலிருந்து அப்பத்தை அவர்களுக்குப் புசிக்கக்கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி, [4]நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்தார்களே என்றார்கள்.

கூஉ ¶ அதற்கு இயேசுவானவர் சொன்னது: வானத்திலிருந்து அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவானவரே வானத்திலிருந்து மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

கூஊ வானத்திலிருந்து இறங்கிவந்து, உலகத்திற்குச் சீவனைக் கொடுக்கிறவரே பராபரன் அருளிச்செய்கிற அப்பமாய் இருக்கிறார் என்றார்.

கூஎ அப்பொழுது அவர்கள் சொன்னது: [5]ஆண்டவரே, அந்த அப்பத்தை எங்களுக்கு எப்பொழுதும் தாரும் என்றார்கள்.

கூஏ இயேசுவானவர் சொன்னது: [6]சீவ அப்பம் நானே; [7]என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியை அடையான்; என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகம் அடையான்.

கூஐ [8]நான் உங்களுக்குச் சொன்னபடி, நீங்கள் என்னைக் கண்டும் விசுவாசியாமல் இருக்கிறீர்கள்.

கூஒ [9]பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவரும் என்னிடத்தில் வருகிறார்கள்.

கூஓ [10]என்னிடத்தில் வருகிறவனை நான் தள்ளமாட்டேன்; எனனத்திலுலெனில் [11]என் சித்தத்தின்படி அல்ல, [12]என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படியே செய்யும்பொருட்டாய் நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்.

கூக [13]அவர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையும் நான் இழந்துபோகாமல் கடைசிநாளிலே அவர்களை எழுப்பும்படிக்கு, என்னை அனுப்பின பிதாவின் சித்தமாய் இருக்கின்றது.

கூக [14]குமாரனைக் கண்டு, அவனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய சீவனை அடையும்படிக்கும், கடைசிநாளிலே நான் அவனை எழுப்பும்படிக்கும் என்னை அனுப்பினவருடையசித்தமாகவே இருக்கின்றது என்றார்.

கூஙூ ¶ நான் வானத்திலிருந்து வந்தஅப்பமாயிருக்கிறேன் என்று அவர் சொன்னபடியினாலே, யூதர்கள் அவனைக்குறித்து மொறுமொறுத்து,

கூஙூ [15]இவர் யோசேப்பினுடைய குமாரனாகிய இயேசு அல்லவா? இவருடையதகப்பனையும் தாயையும் அறிந்திருக்கிறோமே, அப்படியிருக்க, நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன் என்று எப்படிச் சொல்லுகிறார் என்றார்கள்.

கூஙூ அதற்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது: உங்களுக்குள்ளே மொறுமொறுக்கவேண்டாம்.

கூஙூ [16]என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால், அவன் என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நானே அவனை எழுப்புவேன்.

கூஙூ [17]எல்லாரும் பராபரனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசன புத்தகத்தில் எழுதியிருக்கின்றதே; [18]ஆகையால் பராபரனிடத்தில் கேட்டுக் கற்றுக்

கி. பி. கூஉ.

1 உபோ. உ.உஉ

2 மத். ஙஉ. உஅ: உக. உ. மாற்.அ. ஙஎ. உ கொரி.உ. ஙஉ.

3 சங். எஅ.ஊ, ஙஅ.

4 உ மோ. ஙஉ. ஙஅ. ஃ மோ. ஙஎ. எகே. கூ.ஙஅ.உ கொரி. ஙஉ.

5 போவா. ஃ. ஙஅ.

6 ஃஅ, ஙஎ. ஙஃ.

7 போவா. ஃ. ஙஃ: எ.உஎ.

8 உக, கஃ. ஙஃ.

9 ஃஅ. ஙஃ.

10 மத். உஃ.உஃ. போவா.ஙஅ.உஅ. உக. உஇமோ உ.ஙஉ.உ போ. உ ஙக.

11 மத். உக.உஉ. போவா. இ.உஅ.

12 போவா. ஃ. ஙஃ.

13 போவா. ஙஅ. உஅ: ஙஎ.ஙஉ: ஙஅ கூ.

14 உஎ.ஃஎ,இஃ. ஙஃ. போவா. உ.ஙஇ, ஙக: ஃ. ஙஃ.

15 மத். ஙக. ஙஇ. மாற் உ.உ. லூக். ஃ.உஉ.

16 உஅ.உ.ஃ.கஃ. ஙஃ.

17 எசா. இஃ.ஙஉ. எரே. கக. கஃ. மீக. ஃ. உ. எபி.அ.ஙஅ:ஙஎ.உக.

18 கா.ஙஃ.

Digitized by Google

கொள்ளுகிறவன் எவனே, அவன் என்னிடத்தில் வருகிறான்.

சக [1]பராபரனை ஒருவன் கண்டான் என்று நான் சொல்லவில்லை; [2]பராபரனிலிருந்து வந்தவன் மாத்திரமே பிதாவைக் கண்டான்.

சஎ [3]என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியசீவன் உண்டென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சஅ [4]சீவ அப்பம் நானே; [5]உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்துப் பின்பு மரித்தார்கள்.

சக [6]வானத்திலிருந்து வந்த இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் மரியாமல் இருப்பான்.

சல [7]வானத்திலிருந்திறங்கின சீவனுள்ள அப்பம் நானே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; [8]நான் கொடுக்கும் அப்பம் உலகத்தார் சீவனை அடைவதற்கு நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

சக ¶ அப்பொழுது யூதர்கள், இவர் [9]தம்முடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக்கொடுப்பார் என்று [10]தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள்.

சஉ ஆதலால் இயேசுவானவர் அவர்களை நோக்கி, [11]நீங்கள் மனிதகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும் அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால், உங்களுக்குள்ளே சீவன் இருக்கமாட்டாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சஊ என் மாம்சம் மெய்யான போசனமாயும், என் இரத்தம் மெய்யான பானமாயும் இருக்கின்றன.

சஙி [12]ஆகையால் என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய சீவன் உண்டு; கடைசிநாளில் நானே அவனை எழுப்புவேன்.

சஙக [13]என் மாம்சத்தைப்புசித்து என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் எனக்குள்ளே தங்குகிறான்; நானும் அவனுக்குள்ளே தங்குகிறேன்.

சஙஎ என்னை அனுப்பின சீவனுள்ள பிதாவினாலே நான் பிழைத்திருக்கிறதுபோல என்னைப் புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.

சஙஅ [14]இதுவே வானத்திலிருந்து இறங்கின அப்பம்; இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப் போல அல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான் என்றார்.

சஙக கப்பர்நாகூம் ஊரிலுள்ள செபஆலயத்திலே அவர் உபதேசிக்கையில், இவைகளைத் திருவுளம்பற்றினார்.

சஙக ¶ [15]அவருடைய சீஷரில் அநேகர் அவைகளைக் கேட்டபொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக்கேட்பார்கள் என்றார்கள்.

சஙல சீஷர் அதைக்குறித்து மொறுமொறுக்கிறார்கள் என்று இயேசுவானவர் தமது உள்ளத்திலே அறிந்து, அவர்களுடனே சொன்னதாவது: இதுவா உங்களுக்கு இலச்சை உண்டாக்குகின்றது?

சஙஉ [16]மனிதகுமாரன் தான் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால், (எப்படியிருக்கும்?)

சஙஊ [17]ஆவியே உயிர் உண்டாக்குகிறது; மாம்சம் ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்களே ஆவியாயும் சீவனுயும் இருக்கின்றன என்று சொல்லி,

சஙஙி [18]பின்பு இயேசுவானவர் விசுவாசம் இல்லாதவர்கள் இன்னார் என்றும் தம்மைக் காட்டிக்கொ

கி. பி. ஈஉ.

1 போவா க. ம்அ: இ.உஎ.

2 மத். ம. உஎ. லூக். ம். உட. போவா க.ம்அ: எ.உசு: அ.ம்க.

3 போவா. க.மசு, ம்அ,உக,சம்.வச.

4 உக,உஇ.வச.

5 உட.வச.

6 இச. இஎ. வக.

7 போவா. க.கே.

8 எபி. ம. இ, ம.

9 போவா. க. க.

10 போவா. எ. சக: க.மக: ம. மசு.

11 மத்.உக.உசு, உஅ.

12 உஎ, சம்,கஉ வச.போவா.ச. ம்ச.

13 க போ. க. உச: ச. ம்இ, மக.

14 சஅ,சக, இம். வச.

15 கஇ. வச.மத். மக.க.

16 போவா. க. மக. மற். மக. அப். க. க.எபே. ச.அ.

17 உ கொரி. க. க.

18 போவா. உ. உச, உஇ: மக. மக.

Digitized by Google

பப்பவன் இன்னன் என்றும் ஆ திமுதல் அறிந்துவந்தபடியால், அ வர் பின்னும் சொன்னது: [1]உங் களில் சிலர் விசுவாசிக்கிறவர்கள் அல்ல.

சூச அதினாலே [2]ஒருவன் என் பிதாவினாலே அருள்கொள்ளா விட்டால், என்னிடத்தில் வர மாட்டான் என்று (முன்னே) உங் களுக்குச் சொன்னேன் என்றார்.

சூஙு [3]அதுமுதற்கொண்டு அவ ருடைய சீஷரில் அநேகர் அப்பு றம் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்.

சூசு அப்பொழுது இயேசுவான வர் பன்னிருவனையும் நோக்கி, போகும்படிக்கு உங்களுக்கு மன தில்லையா என்றார்.

சூஎ அதற்குச் சீமோன்பேதுரு சொன்னது: ஆண்டவரே, யாரி டத்துக்குப் போவோம்? [4]உம்மி டத்தில் நித்தியசீவனுள்ள வச னங்கள் இருக்கின்றனவே.

சூஅ அல்லாமலும் [5]நீரே சீவ னுள்ள பராபரனுடைய குமாரனு கிய கிறிஸ்து என்று நாங்கள் விசு வாசித்து அறிந்துகொண்டோம் என்றான்.

சூக இயேசுவானவர் சொன்ன து: [6]பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? [7]உங்களுக்குள்ளும் ஒருவன் பசா சாய் இருக்கிறான் என்றார்.

எ பன்னிருவரில் ஒருவனாகிய சீமோனின் குமாரன் யூதாஸ்காரி யோத்து என்பவன் தம்மைக் காட் டிக்கொடுக்கிறதற்கு எதுவாயிருந் தபடியினாலே, அவனைக்குறித்து இப்படிச் சொன்னார்.

எ. அதிகாரம்.

இரண்டு பேரின் கீழ்ப்படியாமையைக் கண்டித்தது.

அதின்பின்பு [8]இயேசுவானவ யூதர்கள் தம்மைக் கொலைசெய்ய தேடினபடியினாலே யூதேயாநாட் டிலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயா நாட்டிலே சஞ்சரித்து வந்தார்.

உ ¶ பின்பு [9]யூதருடைய கூடா ரப்பண்டிகை சமீபமாயிற்று.

ஊ [10]அப்பொழுது அவருடைய சகோதரர் அவனை விசுவாசியாத படியினாலே,

ச அவனை நோக்கி, [11]நீர் செய்கி ற கிரியைகளை உம்முடைய சீஷ ரும் பார்க்கும்படிக்கு, நீர் இவ்வி டம்விட்டு யூதேயா நாட்டுக்குப் போகவேண்டும்.

ஙு பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் ஒருகாரியத்தையாகிலும் அந்தரங்கத்திலே செய்யமாட்டா னே; நீர் இப்படிப்பட்டவைக ளைச் செய்கிறபடியால், உம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தவா மே என்றார்கள்.

சூ அவர்களுடனே இயேசுவான வர் சொன்னது: [12]என்னுடைய நேரம் இப்பொழுது வரவில்லை, உங்கள் நேரம் எப்பொழுதும் ஏத் தனமாய் இருக்கின்றது.

எ [13]உலகத்தார் உங்களைப்பகை கமாட்டார்கள்; [14]அவர்களுடை ய கிரியைகள் பொல்லாதவைகள் என்று நான் சாட்சிகொடுக்கிறப டியினாலே என்னைப் பகைக்கிறார் கள்.

அ நீங்கள் இந்தப் பண்டிகைக் குப்போங்கள், [15]என்னுடைய நே ரம் நிறைவேறுதபடியால், நான் இப்பொழுது போகமாட்டேன் என்றார்.

கூ இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னும் கலிலேயா நாட்டில் இருந்தார்.

ல அவருடைய சகோதரர் போ னபின்பு அவரும் வெளியரங்க

---

1 உகூ. வச.
2 சச, சஎ. வச.
3 கஎ. வச.
4 அப். இ. உஅ.
5 மத். மசு. மக. மற். அ. உசு. லூக். சு. உஅ. யோவா. கூ.சசு: மசு.உள.
6 லூக். சு. மக.
7 யோவா. மக. உள.
8 யோவா. இ. மசு, மஅ.
9 உ மோ. உக. உச.
10 மற்.கூ.உசு.
11 மத். மூ. சசு. மற். கூ. கூ. அப். கூ.மச.
12 யோவா.உ.ச: அ. உஅ. அ, கஎ. வச.
13 யோவா. மஇ. மசு.
14 யோவா.கூ.மசு.
15 யோவா. அ. உஅ. கூ. வச.

மாக அல்ல, அக்தரங்கமாகப் பண்டிகைக்குப் போனார்.

ஐக ¶ [1]பண்டிகை காலத்திலே யூதர்கள் அவனைத் தேடி, அவர் எங்கே இருக்கிறார் என்றார்கள்.

ஐஉ [2]அல்லாமலும் சனங்களுக்குள்ளே அவனைக்குறித்து மிகுந்த பேச்சு உண்டாயிற்று; [3]சிலர், அவர் நல்லவர் என்றும், சிலர், அப்படி அல்ல, அவன் சனங்களை வஞ்சிக்கிறவன் என்றும் சொல்லிக்கொண்டார்கள்.

ஐஊ [4]அவர்கள் யூதருக்குப் பயப்படுகிறவர்களானபடியினாலே, ஒருவனுகிலும் அவனைக்குறித்துத் தாராளமாய்ப் பேசவில்லை.

ஐச ¶ ஏறக்குறையப் பாதிபண்டிகை தீர்ந்தபொழுது, இயேசுவானவர் தேவாலயத்திற்குப் போய் உபதேசம்பண்ணினார்.

ஐடி [5]அப்பொழுது யூதர்கள் ஆச்சரியப்பட்டு, கல்லாதவராகிய இவர் வேதவாக்கியங்களை* எப்படி அறிந்தார் என்றார்கள்.

ஐசு அவர்களுடனே இயேசுவானவர் சொன்னது: [6]நான் பண்ணுகிற உபதேசம் என்னுடையதல்ல, என்னை அனுப்பினவருடையதாய் இருக்கின்றது.

ஐஎ [7]இந்த உபதேசம் பராபரனால் உண்டாயிருக்கிறது என்பதும், அல்லது நான் என்னாலே பேசுகிறேன் என்பதும், அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவன் எவனோ அவனுக்கே தெரியும்.

ஐஅ [8]தன்னாலே பேசுகிறவன் தனக்கே புகழ்ச்சிவரத் தேடுகிறவன்; தன்னை அனுப்பினவருக்குப் புகழ்ச்சிவரத் தேடுகிறவன் சத்தியமுள்ளவன்; அவனிடத்திலே கபடம் இராது.

ஐக [9]மோசேயானவர் நியாயப்பிரமாணத்தை உங்களுக்குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும், உங்களில் ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறதில்லை, [10]என்னத்திற்காக நீங்கள் என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள் என்றார்.

ஐல அதற்குச் சனங்கள் சொன்னது: [11]நீ பசாசையுடையவன்; எவன் உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறான் என்றார்கள்.

ஐள இயேசுவானவர் சொன்னது: ஒரு கிரியையைச் செய்தேன்; அதைக்குறித்து நீங்கள் எல்லாரும் அதிசயப்படுகிறீர்கள்.

ஐழ [12]விருத்தசேதனம் மோசேயினாலே அல்ல, பிதாக்களால் உண்டாயிற்று; (பின்பு) மோசே உங்களுக்கு விருத்தசேதனத்தை ஏற்படுத்தினார்; [13]அந்த விருத்தசேதனத்தை நீங்கள் மனிதரில் ஓய்வுநாளிலேயும் பண்ணுகிறீர்கள்.

ஐஏ மோசேயின் நியாயப்பிரமாணத்தைத் தள்ளாதபடிக்கு†, ஒரு மனிதன் விருத்தசேதனத்தை ஓய்வுநாளிலே பெறலாம் என்றால், [14]நான் ஒரு மனிதன் முழுவதையும் ஓய்வுநாளிலே சுகமாக்கினதினாலே, நீங்கள் என்மேல் எரிச்சலாயிருக்கலாமா?

ஐஐ [15]புறம்பே தோன்றுகிறபடி தீர்மானம்பண்ணாமல், நீதியின்படியேதீர்மானம்பண்ணுங்கள் என்றார்.

ஐஒ ¶ அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர் சொன்னது: இவனையல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்?

ஐஓ இதோ, இவன் தாராளமாய்ப் பேசுகிறான்; அவர்கள் இவனுடனே ஒன்றும் சொல்லவில்லையே; [16]இவன் மெய்யான கிறிஸ்துவாய் இருக்கிறான் என்று ஆண்டவர்கள் உண்மையாய் அறிந்தார்களா?

ஐக [17]நாம் இவன் வந்த இடத்தை அறிந்திருக்கிறோம்; கிறிஸ்து வரும்பொழுது, அவர் வந்த இடத்தை ஒருவரும் அறியமாட்டார்களே என்றார்கள்.

இ. பி. கூஉ.

1 Porav. ஐக. ஐஉ.

2 Porav. கூ. ஐக: ம. ஐஅ.

3 மத். ஐஉ. ஏஎ. லூக். எ. ஐக. Porav. க.ஏ. சை. ஏஐ.

4 Porav. கூ. ஐஉ: ஐஉ.ஏஉ, ஏக: ஐகூ. ஏஅ.

5 மத். ஐக. ஏ. மற். கூ. உ. லூக். ச. ஐஉ. அப். உ ச.

* அல்லது கல்வியை.

6 Porav. க. ஐக: அ. ஐஅ: ஐஉ.ஏக: ஏ.ம, உச.

7 Porav. அ. ஏக.

8 Porav. இ. ஏக: அ. ஐஐ.

9 உ மோ. உச. க. இ மோ. கஉ. ச. Porav. க. ஐக.அப் எ.கஅ.

10 மத். ஐஉ. ஏச. மற். க. க. Porav. இ.ஐக, ஐஅ: ம.கக, கக: ஐக. இக.

11 Porav. அ. ஏஅ, இஉ: ம. உம.

12 க மோ.ஐஎ.ம.

13 க மோ.ஐஉ.க.

† அல்லது தள்ளாமல்.

14 Porav. இ. அ,க,ஐக.

15 இ மோ.கஐக, ஐஎ. லூக். உச. உக. Porav. அ. ஐஇ. யாக். உ.க.

16 சஅ.ஊச.

17 மத். ஐக. இஇ. மற்.க.க. லூக். ச.உஉ.

Digitized by Google

உஅ ¶ அப்பொழுது தேவால யத்தில் உபதேசிக்கிற இயேசுவா னவர் கூப்பிட்டதாவது: [1]என்னை அறிந்திருக்கிறீர்களா? நான் புறப் பட்டு வந்த இடத்தையும் அறிந் திருக்கிறீர்களா? [2]நான் என் சுய மாய் வரவில்லை; [3]என்னை அனுப் பினவர் சத்தியமுள்ளவர், [4]அவ னை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.

உக நான் அவராலே வந்திருக்கிற படியினாலும், அவர் என்னை அனு ப்பினபடியினாலும் [5]நானே அவ னை அறிந்திருக்கிறேன் என்றார்.

கூய [6]அப்பொழுது அவனைப் பி டிக்க வகை தேடினார்கள்; [7]அவ ருடைய நேரம் அக்காலத்திலே வராதபடியால், ஒருவனும் அவர் மேலே கைகளைப் போடவில்லை.

கூக [8]அக்காலத்தில் சனங்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாச முள்ளவர்களாகி, கிறிஸ்து வரும் பொழுது இவர் செய்கிற அற்பு தங்களிலும் அதிகமானவைகளை அவர் செய்வாரா என்றார்கள்.

கூஉ ¶ சனங்கள் அவனைக்குறித் து இப்படிப் பேசிக்கொண்டிருக் கிறதைப் பரிசேயர் கேட்டபொ ழுது, அவர்களும் பிரதான ஆசா ரியரும் அவனைப் பிடித்துக் கொண்டு வரும்படிக்குச் சேவக ரை அனுப்பினார்கள்.

கூஊ ஆதலால் இயேசுவானவர் சொன்னது: [9]நான் இனிச் சிலகா லம்மாத்திரம் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை அனுப்பி னவரிடத்திற்குப் போவேன்.

கூஎ [10]நீங்கள் என்னைத் தேடிக் காணமல்போவீர்கள்; அல்லாம லும் நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றார்.

கூஏ அப்பொழுது யூதர்கள் தங்க ளுக்குள்ளே பேசிக்கொண்டது: இவனை நாம் காணுதபடிக்கு, இ வர் எங்கே போவார்? [11]கிரேக்க ருக்குள்ளே * சிதறியிருக்கிறவர்க ளிடத்தில் போவாரா? கிரேக்க ருக்கு உபதேசம்பண்ணுவாரா?

கூக என்னைத் தேடிக் காணமல் போவீர்கள் என்றும், நான் இரு க்கும் இடத்திற்கு நீங்கள் வரமாட் டீர்கள் என்றும் அவர் சொன்ன வசனம் எப்படியிருக்கிறது என் றார்கள்.

கூஙு ¶ [12]பின்பு பண்டிகையின் கடைசியும் பெரிதுமான நா ளிலே இயேசுவானவர் நின்று கூப் பிட்டதாவது: [13]ஒருவன் தாகமா யிருந்தால், என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.

கூச [14]வேதவாக்கியம் சொன்ன படி என்னிடத்தில் விசுவாசமா யிருப்பவன் எவனோ, [15]அவன் உள்ளத்திலிருந்து சீவதண்ணீருள் ள நதிகள் ஓடும் என்றார்.

கூ஛ [16]இப்படி அவர் தம்மிடத் தில் விசுவாசமாகிறவர்கள் அடை யும் ஆவியைக்குறித்துச் சொன் னார்; இயேசுவானவர் அப்பொ ழுது [17]மகிமையாக்கப்படாதபடி யினாலே, அந்தப் பரிசுத்த ஆவி அக்காலத்திலே தோன்றவில்லை.

கூஜ சனங்களில் அநேகர் அந்த வசனத்தைக் கேட்டபொழுது, [18]இவர் மெய்யாய்த் தீர்க்கதரிசி யானவர் என்றார்கள்.

கூட [19]வேறு சிலர் இவர் கிறிஸ்து என்றார்கள்; வேறு சிலர் சொன் னது: [20]கிறிஸ்து கலிலேயா நாட் டிலிருந்தா வருவார்?

கூடு [21]தாவீதின் சந்ததியிலும், தா வீது இருந்த [22]பெத்லேகேம் ஊரி லுமிருந்து கிறிஸ்து வருவார் என் று வேதத்திலே சொல்லியிருக்க வில்லையா என்றார்கள்.

கூஞ [23]இவ்விதமாய் அவனைக்கு றித்துச் சனங்களுக்குள்ளே பிரி வினை உண்டாயிற்று.

கூண [24]அல்லாமலும் அவர்களில் சிலர் அவனைப் பிடிக்க மனதுள் ளவர்களாய் இருந்தார்கள்; ஆகி லும் ஒருவரும் அவர்மேல் கை களைப் போடவில்லை.

கி. பி. கூஉ.

1 Curor. அ. ஏ.
2 Curor. இ. ஈக: அ.ஈஉ.
3 Curor. இ. ஊஉ: அ. உஈ. உCrr. ங. ச.
4 Curor. ச. ஙஅ: அ. ஐஇ.
5 மத். ஊ. உஎ. Curor. ம. ஈச.
6 மாற். ஊ. ஙஅ. லூக். ஊ. சஎ: உம. ஈஊ. ஊச. Curor. அ.ஊஇ.
7 சச. வச. Curor. அ. உம.
8 மத். ஈஉ. உஈ. Curor. ங. உ: அ.ஊம.
9 Curor. ஊ. ஊஈ: ஈஊ. ஈஊ.
10 ஒசே. இ. ஈ. Curor. அ.உஈ: ஊ.ஊஈ.
11 எசா. ஈஊ.ஈஉ. யாக். ங. ங. ச பே. ங. உ.
* அல்லது அப் Dist.
12 ங Mor. உஈ. ஊஈ.
13 எசா. ஐஇ. ச. Curor. ங.ஊஇ. வெளி. உஉ.ஈஎ.
14 இ Mor. ஈஅ. ஈஇ.
15 மாற். ஈஅ. ச. எசா. ஈஉ. ஈ: சச.ங. Curor. ச.ஈச.
16 எசா. சச. ங. யோவே. உ. உஎ. Curor. ஈஊ.எ. அப். உ. ஊ, ஊஈ, ஊஅ.
17 Curor. ஈஉ. ஈஊ: ஈஊ.எ.
18 இ Mor. ஈஅ. ஈஇ,ஈஅ. Curor. ங. உஈ: ங. ஈச.
19 Curor. ச. சஉ: ங. ஊஈ.
20 இஉ. வச. Curor. ங.சஈ.
21 சங். ஊஈஉ.ஈஊ. எCr. உஈ. இ. மீகா இ.உ. மத். உ இ.லூக்.உ.ச.

22 ங சாமு. ஈஊ.ஈ, ச.—23 ஈஉ. வச. Curor.ஊ.ஈஊ: ஈ.ஈஊ.—24 ஊ.வச.

Digitized by Google

சஇ ¶ பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்கும், பரிசேயரிடத்திற்கும் திரும்பிப் போனார்கள்; அவர்களை நோக்கி என்னத்தினாலே நீங்கள் அவனைக் கொண்டுவரவில்லை என்றார்கள்.

சஈ சேவகர் மாறுத்தரமாகச் சொன்னது: [1]அந்த மனிதன் பேசினதுபோல ஒருக்காலும் ஒருவரும் பேசவில்லை என்றார்கள்.

சஉ அதற்குப் பரிசேயர் சொன்னது: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?

சஊ [2]பெரியோர்களிலாவது, பரிசேயரிலாவது, ஒருவனுகிலும் அவன்மேல் விசுவாசமாய் இருக்கிறது உண்டோ?

சஎ வேதத்தை அறியாத சனங்கள்மாத்திரம் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.

சஏ அவர்களில் ஒருவனுமாய், முன்னே [3]இராத்திரியில் அவரிடத்தில் *போனவனுமாய் இருந்த நிக்கோதேமு என்பவன் அப்பொழுது அவர்களை நோக்கி,

சஐ [4]நாம் ஒரு மனிதனைச் சோதித்து, அவனுடைய செய்கைகளை அறிகிறதற்குமுன்னே அவனை ஆக்கினைக்கு உட்படுத்தலாமென்று நம்முடைய நியாயசாஸ்திரம் சொல்லுகிறதா என்றான்.

சஒ அதற்கு அவர்கள் சொன்னது: நீரும் கலிலேயனோ? நீர் ஆராய்ந்து பார்த்தால், தீர்க்கதரிசிகள் கலிலேயா நாட்டிலிருந்து [5]தோன்றவில்லை என்று அறிவீர் என்றார்கள்.

சஓ பின்பு எல்லாரும் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள்.

அ. அதிகாரம்.

a. பிசாசுநிலையைத் தரித்து விடுதலையாக்கினது. bb. நாம் உலகத்தின் வெளிச்சமென்ற பிரசங்கித்துத் தம்முடைய உபதேசங்களுக்கு அடுத்த பிரமாணத்தை மெய்ப்பித்தது, cc. ஆபிரகாமைக்குறித்துப் பெருமையாட்டினதை மூர்க்கங்கெட்டது dd. அவர்களைவிட்டு மறைந்தது.

இயேசுவானவர் ஒலிவமலைக்குப் போனார்.

இ. பி. கூஉ.

உ மறுநாள் காலையிலே தேவாலயத்திற்குத் திரும்பினார்; சனங்கள் எல்லாரும் அவரிடத்தில் சேர்ந்தார்கள்; அவர் உளுக்காந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.

ஊ அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி,

எ அவனை நோக்கி, போதகரே, இந்தப் பெண் விபசாரம்பண்ணுகிறபொழுதே பிடிக்கப்பட்டாள்.

ஏ [6]இப்படிப்பட்டவர்களைக் கற்களால் கொலைசெய்யவேண்டுமென்று மோசேயானவர் நியாயசாஸ்திரத்திலே நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் எப்படிச்சொல்லுகிறீர் என்றார்கள்.

ஐ அவர்மேல் குற்றம்சாற்றுவதற்குக் காரணம் பெறும்படிக்கு, அவர்கள் இப்படிச் சொல்லி அவனைச் சோதித்தார்கள்; இயேசுவானவர் குனிந்து விரலினாலே தரையில் எழுதினார்.

ஒ அவர்கள் பின்னும் அவரிடத்தில் கேட்டுக்கொண்டிருந்தபொழுது, அவர் நிமிர்ந்து அவர்களை நோக்கி, [7]உங்களில் பாவமில்லாதவன் எவனோ, அவன் முதல் கல்லை இவள்மேல் எறிந்துபோட வேண்டும் என்று சொல்லி,

ஓ மறுபடியும் குனிந்து தரையில் எழுதினார்.

ஔ அவர்கள் அதைக்கேட்டு, தங்கள் மனதினாலே கடிந்துகொள்ளப்பட்டவர்களாய்இயேசுவானவர் தனித்திருக்க,அந்தப்பெண் நடுவிலே நிற்க,அவர்களை விட்டுப் [8]பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒருவன் ஒருவனாக எல்லாரும் புறப்பட்டுப்போனார்கள்.

க இயேசுவானவர் நிமிர்ந்து (பார்க்கையில்,) அந்தப் பெண்ணைத்தவிர மற்றொருவரையும் காணாதபொழுது, அவர் அவளை நோக்கி, ஸ்திரியே உன்மேல் குற்றம்

* அல்லது இரவுவண்டைக்கு.

1 மத். எ. உஉ.
2 போவா. ஙூ. சஉ. அப்.க.எ. க சொரி.க.உஅ, உக: உ. அ.
3 போவா. க.உ.
4 இ மோ. க. உ: எ.அ. ழி. கூ.அஇ.
5 சா. கூ.க, உ. மத். சு. அஇ. போவா. க.சக. சக. வச.
6 க மோ. உஅ.அ. இ மோ. உஉ. உஉ.
7 இ மோ. மா.எ. உசர.உ.க.
8 உசர.உ.உஉ.

Digitized by Google

சாற்றினவர்கள் எங்கே? ஒருவனிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க இல்லையா என்றார்.

10 அதற்கு அவள் சொன்னது: ஆண்டவரே, ஒருவரும் அப்படிச்செய்ய இல்லை என்றாள்; இயேசுவானவர் சொன்னது: [1]நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமாட்டேன்; நீ போய், [2]இனிப் பாவம் செய்யாதிருப்பாயாக என்றார்.

12 ¶ மறுபடியும் இயேசுவானவர் சனங்களை நோக்கி, [3]நான் உலகத்தின் ஒளியாய் இருக்கிறேன்; எனக்குப் பின்செல்லுகிறவன் இருளிலே நடவாமல், சீவனுடைய ஒளியை அடைந்திருப்பான் என்றார்.

13 அப்பொழுது பரிசேயர் அவனை நோக்கி, [4]நீரே உம்மைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறீர், உம்முடையசாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளக்கூடாது என்றார்கள்.

14 அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் வந்த இடத்தையும், நான் போகும் இடத்தையும் அறிந்திருக்கிறபடியினாலே, என்னைக்குறித்து நானே சாட்சிகொடுத்தாலும், என்னுடைய சாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளவேண்டும்; [5]நீங்கள், நான் வந்த இடத்தையும் நான் போகும் இடத்தையும் அறியாமலிருக்கிறீர்கள்.

15 [6]நீங்கள் மாம்சத்திற்கு ஏற்றபடி தீர்மானம்பண்ணுகிறீர்கள்; [7]நான் ஒருவனைக்குறித்தும் தீர்மானம்பண்ணுகிறதில்லை.

16 நான் தீர்மானம்பண்ணினால், நான்மாத்திரம் அல்ல, [8]நானும் என்னை அனுப்பின பிதாவும் கூட இருக்கிறபடியினாலே என்னுடைய தீர்மானம் சத்தியத்தின்படியே இருக்கும்.

17 [9]இரண்டுபேருடைய சாட்சியை மெய்யென்று ஒத்துக்கொள்ளவேண்டுமென்று உங்கள் நியாயசாஸ்திரத்திலேயும் எழுதியிருக்கின்றதே.

18 அப [அந்தப்படி] நான் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவனுமிருக்கிறேன்; [10]என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார் என்றார்.

19 அப்பொழுது அவர்கள் உம்முடைய பிதா எங்கே என்றார்கள், இயேசுவானவர் சொன்னது: [11]நீங்கள் என்னையும் என் பிதாவையும் அறியாமலிருக்கிறீர்கள்; [12]என்னை அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள் என்றார்.

20 ¶ தேவாலயத்திலே இயேசுவானவர் உபதேசம்பண்ணினபோது, [13]தருமப் பெட்டியின் அருகே இருந்தபொழுது, இந்த வசனங்களைச் சொன்னார்; [14]அப்படியிருந்தும், அவருடைய நேரம் வராதபடியால், [15]ஒருவரும் அவனைப் பிடிக்க இல்லை.

21 ¶ பின்பு இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் போவேன், [16]நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; [17]ஆகிலும் உங்கள் பாவத்திலே சாவீர்கள்; நான் போகும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்றார்.

22 அப்பொழுது யூதர்கள் (ஒருவனை ஒருவர்) நோக்கி, நான் போகும் இடத்திற்கு நீங்கள் வரமாட்டீர்கள் என்கிறதினாலே, தன்னைத்தான் கொலைசெய்வானோ என்று பேசிக்கொண்டார்கள்.

23 அவர் பின்னும் அவர்களுடனே சொன்னது: [18]நீங்கள் கீழேயிருந்து தோன்றினவர்கள்; நான் உயரத்திலிருந்து தோன்றினவன்; நீங்கள் [19]இவ்வுலகத்திற்கு உரியவர்கள்; நான் இவ்வுலகத்திற்கு உரியவன் அல்ல.

24 ஆகையால் [20]நீங்கள் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; [21]பின்னும், அவரே நானென்று

---

1 லூக். 8. 10: 12. 11. 2 யோவா. 5. 14. 3 யோவா. 9. 5. 4 யோவா. 5. 31. 5 யோவா. 7. 28: 16. 3. 6 யோவா. 7. 24. 7 யோவா. 5. 30. 8 யோவா. 5. 30: 16. 32. 9 உபா. 17. 6: 19. 15. மத். 18. 16. 2 கொரி. 13. 1. எபி. 10. 28. 10 யோவா. 5. 37. 11 யோவா. 7. 28. 12 யோவா. 14. 7. 13 மாற். 12. 41. 14 யோவா. 7. 30. 15 யோவா. 7. 30. 16 யோவா. 7. 34: 13. 33. 17 உபா. 28. 65. 18 யோவா. 3. 31. 19 யோவா. 15. 19: 17. 14. 1 யோவா. 4. 5. 20 உபா. 24. 16. 21 மத். 24. 46.

நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களினூலே சாவீர்கள் என்றார்.

உடி அதற்கு அவர்கள், நீர் யார் என்றார்கள்; இயேசுவானவர் சொன்னது: ஆதிமுதல் உங்களுக்குச் சொல்லிவந்தேனே அவனேநான்.

உசு நான் உங்களைக்குறித்துப் பேசி நியாயம் சொல்லுகிறதற்கு அநேகாரியங்கள் உண்டு; [1]என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் [2]அவரிடத்தில் கேள்விப்பட்டவைகளையே உலகத்தாருக்கு அறிவிக்கிறேன் என்றார்.

உஎ அவர் பிதாவைக்குறித்துச் சொன்னார் என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.

உஅ ¶ ஆதலால் இயேசுவானவர் பின்னும் அவர்களுடனே சொன்னது: [3]நீங்கள் மனிதனுடைய குமாரனை ஏற்றியிருக்கும் பொழுது [4]என்னையே அவர் என்றும், [5]என்னுலே நான் ஒன்றும் செய்யாமல் [6]என் பிதா எனக்குப் போதிக்கிறபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

உக [7]என்னை அனுப்பினவர் என்னுடனே இருக்கிறார்; [8]பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால், [9]அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை என்றார்.

உங ¶ இவைகளை அவர் சொல்லுகையில், [10]அநேகம்பேர் அவரிடத்தில் விசுவாசமானார்கள்.

உச ஆதலால் இயேசுவானவர் தம்மை விசுவாசித்த யூதரை நோக்கி, நீங்கள் என்னுடைய உபதேசத்திலே நிலைத்திருந்தால், மெய்யாய் என் சீஷராய் இருப்பீர்கள்.

உஉ அல்லாமலும் சத்தியத்தை அறிவீர்கள்; [11]சத்தியமானது உங்களை விடுதலையாக்கும் என்றார்.

உஊ ¶ அதற்குச் (சிலர்) சொன்னது: [12]நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாராய் இருக்கிறோமே அல்லாமல், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கு அடிமைகளாய் இருக்கவில்லையே, ஆதலால் நீங்கள் விடுதலையாவீர்கள் என்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.

ஊசு ¶ இயேசுவானவர் சொன்னது: [13]பாவத்தைச் செய்கிறவன் எவனோ, அவன் பாவத்திற்கு அடிமையாய் இருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஊடு [14]அடிமையானவன் என்றைக்கும் வீட்டிலே தங்கான்; குமாரனே என்றைக்கும் அதிலே தங்குவான்.

ஊசு ஆகையால் [15]குமாரனானவர் உங்களை விடுதலையாக்கினால், மெய்யாய் விடுதலையாயிருப்பீர்கள்.

ஊஎ நீங்கள் ஆபிரகாமின் சந்ததியார் என்று அறிந்திருக்கிறேன்; அப்படியிருந்தும், என் உபதேசம் உங்களில் தரியாமலிருக்கிறபடியால், [16]என்னைக் கொலை செய்யத் தேடுகிறீர்கள்.

ஊஅ [17]நான் என் பிதாவினிடத்திலே கண்டதைப் பேசுகிறேன், அப்படியே நீங்களும் உங்கள் பிதாவினிடத்திலே கண்டதைச் செய்கிறீர்கள் என்றார்.

ஊக அதற்கு அவர்கள், [18]ஆபிரகாமே எங்கள் தகப்பனையிருக்கிறார் என்றார்கள்; இயேசுவானவர் சொன்னது: [19]நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளானால், ஆபிரகாமின் கிரியைகளுக்கு ஒப்பாய்ச் செய்வீர்களே.

சய [20]நீங்கள் பராபரனிடத்தில் கேள்விப்பட்ட சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனிதனுகிய [21]என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்; ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே.

சக நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளுக்கு ஒப்பாய்ச் செய்கிறீர்கள் என்றார்; அதற்கு அவர்கள் சொன்னது: நாங்கள் வேசிமார்க்கத்தினூலே பிறந்தவர்கள் அல்ல, [22]ஒரே பிதா எங்களுக்கு

கி. பி. கூஉ.

1 Peter. ஈ. உஅ.
2 Peter. உ. உஉ: ம்ஙி. ம்ஙி.
3 Peter.உ.ம: ம்உ.உஉ
4 உCor.உ.ச.
5 Peter. ஙி. ம்க, உம.
6 Peter.உ.ம்க.
7 Peter. ம்ச.ம, ம்க.
8 கே. ம்ச.
9 Peter. ச. உச: ஙி.உம: க. உஅ.
10 Peter. ஈ. உக: ம.ச்உ:ம்க. ச ஙி.
11 உCor.உ.ம்ச: ம்அ.உக: அ.உ. பாக். உ. ஙி: உ. ம்உ.
12 உ Mor. உஙி. ச்உ. மத். உ.க. உக. ம்ச.
13 உCor. உ.ம்க, உம. உ பே. உ. ம்க.
14 கலா. ச. உம.
15 உCor. அ.உ. கலா.ஙி.உ.
16 Peter. ஈ. ம்க.ச்ம. ம்ச.
17 Peter. உ. உஉ: ஙி. ம்க, உம: ம்ச.ம, உச.
18 மத். உ. க.உக. ம்ச.
19 உCor. உ. உஅ: க. ஈ. கலா.உ.ஈ,உக.
20 உக. ம்ச.
21 உஈ. ம்ச.
22 சொ. உக.ம்க: உச. அ. மல்கி. உ. க.

Digitized by Google

உண்டு, பராபரனே அவர் என் றூர்கள்.

சஉ ¶ இயேசுவானவர் சொன் னது: [1]பராபரனிலிருந்தே புறப் பட்டு வந்தேன்; [2]நான் என்ற லே வர இல்லே; அவரே என்னை அனுப்பினர்; ஆகையால் [3]பரா பரன் உங்கள் பிதாவாய் இருந் தால், நீங்கள் என்னிடத்தில் அன் புகூருவீர்கள்.

சக [4]என்னத்தினுலே என்னு டையபேச்சை அறியாமல் இருக் கிறீர்கள்? என்னுடைய உபதே சத்தைக் கேட்க மனதில்லாதபடி யினுல் அல்லவோ (அப்படி இ ருக்கிறீர்கள்?)

சச [5]பசாசானவனே உங்கள் பிதா; (ஆகையால்) உங்கள் பிதா வின் இச்சைகளின்படி செய்ய விரும்புகிறீர்கள்; ஆதிமுதற்கொ ண்டு அவன் மனித கொலேகார னுய் இருக்கிறுன்; அல்லாமலும் [6]சத்தியத்தில் அவன் நிலேநில்லா தபடியால் சத்தியம் அவனிடத் தில் இல்லே; அவன் பொய்யனு மாய்ப் பொய்யின் தகப்பனுமாய் இருக்கிறபடியால், பொய்பேசுகி றபொழுது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறுன்.

சஞ நான் சத்தியத்தை உங்க ளுக்குச்சொல்லுகிறபடியினுலே, நீங்கள் என்னே விசுவாசிக்கிற தில்லே.

சசு என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் எவன் நிச்சயமாய்ச் சொல்வான்? ஆகை யால் நான் சத்தியத்தைச் சொல் லுகிறவனுய் இருக்க, நீங்கள் என் னே என்னத்தினுலே விசுவாசிக் கிறதில்லே?

சஎ [7]பராபரனுல் உண்டான வன் பராபரனுடைய வசனங்க ளுக்குச் செவிகொடுக்கிறுன்; நீங் கள் பராபரனுல் உண்டாயிராதப டியால், செவிகொடாமல் இருக் கிறீர்கள் என்றூர்.

சஅ அப்பொழுது யூதர்கள் அவ னை நோக்கி, நாங்கள் உன்னைச் சமாரியன் என்றும், [8]பேயை உ டையவன் என்றும் நியாயமாய்ச் சொல்லுகிறோம் அல்லவா என் றூர்கள்.

சக ¶ இயேசுவானவர் சொன் னது: நான் பேயை உடையவன் அல்ல, நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்; நீங்கள் என்னைக் கனஈனம்பண்ணுகிறீர் கள்.

சுய [9]அன்றியும் நான் எனக்குக் கனம்வரத் தேடுகிறதில்லே; அ தைத்தேடி நியாயம் தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறூர்.

சுக மெய்யாகவே நான் உங்க ளுக்குச் சொல்லுகிறதாவது: [10]ஒ ருவன் என்னுடைய வசனத்தைக் கைக்கொண்டால், அவன் ஒருக் காலும் மரணத்தை அடைவதில் லே என்று சொன்னபொழுது,

சுஉ யூதர்கள் அவனை நோக்கி, நீ பேயை உடையவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்; [11]ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்; நீ சொல்லுகிறது; ஒருவன் என் வசனத்தைக் கைக் கொண்டால், அவன் ஒருக்காலும் மரணத்தை ருசிபார்க்கமாட்டான் என்கிறுய்.

சுங எங்கள் பிதாவாகிய ஆபி காமிலும் நீ பெரியவனு? அவர் மரித்தார்; தீர்க்கதரிசிகளும் மரித் தார்கள்; நீ உன்னை எப்படிப்பட் டவனுக்குகிறுய் என்றூர்கள்.

சுச ¶ இயேசுவானவர் சொன் னது: [12]நானே என்னைக் கனம் பண்ணினுல், அந்தக் கனம் வீண் யிருக்கும்; [13]என் பிதாவே என் னைக் கனம்பண்ணுகிறூர்; அவ னை நீங்கள் உங்கள் தேவனென்று சொல்லுகிறீர்கள்.

சுஞ அப்படியிருந்தும், [14]நீங்கள் அவனை அறிய இல்லே; நான் அவ னை அறிந்திருக்கிறேன்; அவனை அறியமாட்டேன் என்று சொன் னேனுகில், நான் உங்களைப்

1 உ பே. இ. உ.
2 பேரான். ஙக. உள: மா. அ, உஇ.
3 பேரான். இ. சக: எ. உஅ, உக.
4 பேரான். எ. ஙஉ.
5 மத். ஙக. உஅ. உ பே. உ. அ.
6 யூதா. உ.
7 பேரான். ஙு. உக, உஎ. உ பே ச. இ.
8 பேரான். எ. உஙு: ஙு. உஙு. இக. எச.
9 பேரான். இ. சக: எ. ஙஅ.
10 பேரான். இ. உச: ஙக. உக.
11 சகரி. உ. இ. எபி. ஙக. ஙக.
12 பேரான். இ. சக: மக. ஙச: ஙஎ. உ. அப். உ. ஙக.
13 பேரான். இ. சக: மக. ஙச: ஙஎ. உ. அப். உ. ஙக.
14 பேரான். எ. உஅ, உக.

Digitized by Google

போலப் பொய்யனுயிருப்பேன்; அவனை நான் அறிந்து அவருடைய வசனத்தைக் கைக்கொண்டுவருகிறேன்.

இசு [1]உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளைக் காணக்களிப்பாய் ஆசைப்பட்டு, [2]அதையே கண்டு சந்தோஷப்பட்டான் என்றார்.

இஎ அப்பொழுது யூதர்கள் அவனைநோக்கி, உனக்கு ஐம்பது வயதில்லையே; நீ ஆபிரகாமைக் கண்டாயா என்றார்கள்.

இஅ ¶ இயேசுவானவர் சொன்னது: [3]ஆபிரகாம் பிறந்த காலத்திற்குமுன்னும் நானே இருக்கிறேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

இக [4]அப்பொழுது அவர்மேலே எறியும்படிக்குக் கற்களை எடுத்துக்கொண்டார்கள்; [5]இயேசுவானவர் மறைந்து, அவர்கள் நடுவேகடந்து, தேவாலயத்தைவிட்டு அப்புறம்போனார்.

கூ. அதிகாரம்.

a. இயேசுவே ஒரு பிறவிக்குருடன் பார்வை அடைந்த பரிசேரிடத்தில் கொண்டுவரப்பட்டு, அ. அதின் நிமித்தம் அவர்கள் சோபமடைந்து அவனைப் புறம்பே தள்ளினது. உடு. அவன் இயேசுவால் அங்கிகரிக்கப்பட்டு அவைக்கு சீஷனாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உக. மெய்க்தேவனால் பிரசித்திபெற்றவர்கள் இன்னார் என்றது.

அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனிதனைக் கண்டார்.

உ அப்பொழுது அவருடைய சீஷர் அவனை நோக்கி இரபீ, [6]இவன் குருடனாய்ப் பிறக்கும்படிக்கு இவனே, இவனைப் பெற்றவர்களோ, யார் பாவம்செய்தார்கள் என்று கேட்டார்கள்.

ஊ அதற்கு இயேசுவானவர் சொன்னது: இவனும் பாவம்செய்ய இல்லை, இவனைப்பெற்றவர்களும் பாவம்செய்ய இல்லை, [7]பராபரனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டாக (இப்படிப் பிறந்தான்.)

கி. பி. கூஉ.

1 தூத். உ. ஊ.

2 ஏபி. ஊ. ஊ.

3 உ மோ.உ. ஏ. ஏர். சா. ஆ. ஊ. போஷ. ஊ.இ, உச. கொலோ. உ. ஊ. தெசா. உ. அ.

4 போஷ. இ.உஉ, உஊ: ஊ.அ.

5 தூத்.ச.உஇ.

6 உச. ஏச.

7 போஷ. ஊ. ச.

8 போஷ. ச. உச: இ. ஊ, உஉ. ஊ. ஊ: ஊஎ, உஇ: ஏ. ச.

9 போஷ. உ.இ, ஊ: உ. ஊ: அ. ஊ: ஊஎ, உஇ, சங.

10 மாற். எ. உஊ: அ.ஊஉ.

* அல்லது என்னை சேறி என்னுடனே.

11 செப.உ.ஊஇ.

12 உ இரா. இ. ஏச.

13 உ, எ. ஊச.

சு [8]பகற்காலம் இருக்கவும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்; ஒருவனும் வேலைச் செய்யக்கூடாதபடி ராத்திரி வருகின்றது.

சூ நான் உலகத்தில் இருக்கையில், [9]உலகத்தின் ஒளியாயிருக்கிறேன் என்றார்.

சூ இப்படி அவர் சொல்லி, [10]தரையிலே துப்பி, உமிழ்நீரால் சேறு உண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின் மேல் பூசி,*

எ பின்பு நீ [11]சீலோவாவின் குளத்தில் போய்க் கழுவு என்றார். சீலோவா என்பதற்கு அனுப்பட்டவன் என்று அர்த்தம். அப்படி அவன் போய்க் கழுவி, பார்வை அடைந்து, திரும்பினான்.

அ ¶ அப்பொழுது அயலாரும், முன்னே அவன் குருடனாயிருந்ததைக் கண்டவர்களும் அவனைப் பார்த்து, பிச்சைக்காக உட்கார்ந்து பிச்சைகேட்டுக்கொண்டிருந்தவன் இவன் அல்லவோ என்றார்கள்.

கூ வேறு சிலர், அவன் இவன்தான் என்றார்கள்; வேறு சிலர், இவன் அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள்; அவனோ, நானே அவன் என்றான்.

ய அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி, உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டன என்றார்கள்.

யக அவன் சொன்னது: [12]இயேசு என்பவர் சேறு உண்டாக்கி (என்னுடைய கண்களின்மேல் பூசி, நீ சீலோவாக் குளத்திற்குப்போய்க் கழுவு என்றார்; அப்படி நான் போய்க் கழுவினபோது பார்வை அடைந்தேன் என்றான்.

யஉ அவர்கள் சொன்னதற்கு மனிதன் எங்கே என்று

Digitized by Google

அவன் எனக்குத் தெரியாது என்றான்.

யசூ ¶ அப்பொழுது முன்னே குருடனாய் இருந்தவனைப் பரிசேயரிடத்திற்குக் கொண்டுபோனார்கள்.

யச இயேசுவானவர் சேறு உண்டாக்கி, அவனுடைய கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாய் இருந்தது.

யஞ ஆதலால் பரிசேயரும் அவனை நோக்கி, நீ எப்படிப் பார்வை அடைந்தாய் என்று கேட்டார்கள்; அதற்கு அவன் சொன்னது: அவர் சேற்றை என் கண்களின் மேல் வைத்தார்; பின்பு நான் கழுவினேன், இப்பொழுது காண்கிறேன் என்றான்.

யசு அப்பொழுது பரிசேயரில் சிலர் சொன்னது: அம்மனிதன் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதிருக்கிறபடியினாலே, அவன் பராபரனால் வந்தவன் அல்ல என்றார்கள்; வேறு சிலர் சொன்னது: [1]பாவியாய் இருக்கிற ஒருவன் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்வது எப்படி என்றார்கள்; [2]ஆகையால் அவர்களுக்குள்ளே பிரிவினை உண்டாயிற்று.

யஎ மறுபடியும் அவர்கள் குருடனாயிருந்தவனை நோக்கி, உன் கண்களைத் திறந்த அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள்; அவன் சொன்னது: [3]அவர் தீர்க்கதரிசியாயிருக்கிறார் என்றான்.

யஅ அப்பொழுது அவன் குருடனாயிருந்து, பின்பு பார்வை அடைந்தான் என்கிறதை யூதர்கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய்தகப்பன்மாரை அழைப்பித்து,

யக அவர்களை நோக்கி, உங்கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று நீங்கள் சொல்லுகிறீர்களே, அவன் இவனே? இப்பொழுது இவனுக்கு எப்படிப் பார்வை

கி. பி. கூஉ.

1 கூ. எச். பேரா. உ. உ.
2 பேரா. எ. மஉ.,சங: மமூ.
3 பேரா. ச. மூ: க. மச.

உண்டாயிற்று என்று கேட்டார்கள்.

உய அதற்கு அவனுடைய தாய் தகப்பன்மார் சொன்னது: இவன் எங்கள் குமாரனென்றும், குருடனாய்ப் பிற்ந்தான் என்றும், அறிந்திருக்கிறோம்.

உக இப்பொழுது இவன் பார்வை அடைந்த வகை எங்களுக்குத் தெரியாது; அவனுடைய கண்களைத் திறந்தவனையும் அறியமாட்டோம்; இவன் பெரியவனாய் இருக்கிறானே; இவனிடத்திலேகேளுங்கள்; தன்னைக்குறித்து இவனே பேசுவான் என்றார்கள்.

உஉ [4]அக்காலத்திற்கு முன்னே, இயேசுவைக் கிறிஸ்தென்று சொல்பவன் எவனே அவனைச் செபாலயத்திற்குப் புறம்பாக்கவேண்டுமென்று யூதர்கள் நிர்மானம்பண்ணியிருந்தபடியால், [5]குருடனாயிருந்தவனுடைய தாய்தகப்பன்மார் அவர்களுக்குப் பயந்து,

உங இவன் பெரியவனாய் இருக்கிறானே, இவனிடத்தில் கேளுங்கள் என்று சொன்னார்கள்.

உச ¶ ஆதலால் அவர்கள் குருடனாயிருந்தவனை இரண்டாம்தரம் அழைத்து, [6]நீ பராபரனைக் கனம்செய்வாயாக; [7]அம்மனிதன் பாவியாயிருக்கிறான் என்று நாங்கள் அறிந்திருக்கிறோமே என்றார்கள்.

உஙி அதற்கு அவன் சொன்னது: அவர் பாவியோ அல்லவோ அது எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன்; இப்பொழுது காண்கிறேன், இது ஒன்றையே அறிந்திருக்கிறேன் என்றான்.

உசு அப்பொழுது அவர்கள் மறுபடியும் அவனைநோக்கி, உனக்கு என்ன செய்தான்? உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள்.

உஎ அவன் சொன்னது: முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன்; நீங்கள் செவிகொடுக்கவில்லை; அதை மறுபடியும் கேட்க

4 பேரா. எ.மக: மூ. சஉ: மக. உஅ. அப். இ. மூ.

5 கூ. எச். பேரா.மக.மூ.

6 பேரா. எ.மக. உ ஸமு. க. இ.
7 மக. எச்.

Digitized by Google

என்னத்தினாலேவிரும்புகிறீர்கள்? நீங்களும் அவருக்குச் சீஷராக மனதுள்ளவர்களாய் இருக்கிறீர்களா என்றான்.

உஅ அப்பொழுது அவர்கள் அவனை வைது, நீயே அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்.

உக மோசேயானவருடனே பராபரன் பேசினதை அறிந்திருக்கிறோம்; [1]அவன் வந்த இடத்தை அறியமாட்டோம் என்றார்கள்.

உச அதற்கு அந்த மனிதன் சொன்னது: [2]அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் வந்த இடத்தை நீங்கள் அறியாமலிருக்கிறது ஆச்சரியமான காரியம்.

உக [3]அல்லாமலும் பாவிகளுக்குப் பராபரன் செவிகொடுக்கிறதில்லையென்றும் அவர்மேல் பத்தியாயிருந்து, அவருடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனுக்குச் செவிகொடுக்கிறார் என்றும் அறிந்திருக்கிறோம்.

உஉ குருடனுய்ப் பிறந்தவனுடைய கண்களை ஒருவன் திறந்தான் என்று உலகம் உண்டான தமுதற்கொண்டு கேள்விப்படவில்லையே.

உஎ [4]அவர் பராபரனால் வாராதவராயிருந்தால், இப்படிப்பட்ட வைகளில் ஒன்றையாகிலும் செய்யத் திராணியிருக்கமாட்டாதே என்றான்.

உஏ அப்பொழுது அவர்கள் அவனோநோக்கி, [5]முழுவதும் பாவங்களிலே பிறந்த நீயா எங்களுக்கு உபதேசம்பண்ணுகிறவன் என்று சொல்லி, அவனைப் புறம்பே* தள்ளினார்கள்.

உஐ ¶ அவனை அவர்கள் புறம்பே தள்ளினதை இயேசுவானவர் கேள்விப்பட்டு, பின்பு அவனைக்கண்டு, [6]நீ பராபரனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார்.

உஒ அதற்கு அவன், ஆண்டவரே, நான் அவர்மேல் விசுவாசமாயிருக்கும்படிக்கு, அவர் இன்னார் என்று (காட்டவேண்டும் என்றான்).

ஊஎ இயேசுவானவர் சொன்னது: நீ அவனைக் கண்டாய்; [7]உன்னுடனே பேசுகிறவரே அவர் என்றார்.

ஊஅ உடனே அவன், ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவனைத் தொழுதுகொண்டான்.

ஊக பின்பு இயேசுவானவர் சொன்னது: [8]காணாதவர்கள் காணவும் காண்கிறவர்கள் குருடராகவும் தக்கதாக [9]நியாயத்தீர்ப்புக் கொடுப்பதற்கு நான் இவ்வுலகத்திலே வந்தேன் என்றார்.

சய ¶ பரிசேயரில் சிலர் அவருடனேகூட இருந்து, அதைக் கேட்டபொழுது, அவர்கள் அவனை நோக்கி, [10]நாங்களும் குருடரா என்றார்கள்.

சக இயேசுவானவர்சொன்னது: [11]நீங்கள் குருடராயிருந்தால், உங்களுக்குப் பாவம் உண்டாயிருக்கமாட்டாது; நீங்கள் காண்கிறோமென்று சொல்லுகிறபடியால், உங்கள் பாவம் நிற்கும்.

ம. அதிகாரம்.

க. நிஸ்து வாசலும் நல்ல மேய்ப்பருமானவர் என்றது. ஐக. அவரைக்குறித்த பலருடைய தாற்பரியங்களைச் சொல்லியது. உச. தாம் பராபரனுடைய குமாரனுகிய நிஸ்து என்று தம்முடைய மரிப்பைனிலுலே நிருஷ்டாந்தப்படுத்தி, ஙக. யூதர்களுக்கு விலகி, சம. மறுபடியும் போர்தானைக் கடந்துபோனபோது, அவரில் அநேகர் விசுவாசித்தது.

மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஆட்டுக்கிடையின் வாசல்வழியாய் அதில் பிரவேசியாமல், வேறுவழியாய் அதில் பிரவேசிக்கிறவன் திருடனுமாய்க் கொள்ளைக்காரனுமாய் இருக்கிறான்.

உ வாசலின் வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனுயிருக்கிறான்.

கி. பி. கூஉ.

1 Puran. அ. ம.

2 Puran. க. ம.

3 Pபு. உஎ. கூ: கஇ. ம஢. சங். மஅ. சக: கச. மஇ: கக. மஅ. வாக். க. உஅ: மஇ.உகூ: உஅ.க. எச.க. மஇ. எரே. மக. மக: ம஢. ம஢. எசே. அ. மஅ. மீகா. க.ச.சனி. எ. மக.

4 மக. வச.

5 உ. வச.

* அல்லது சபையிலிருந்து.

6 மத். ம஢. கூ: மக. மக. மாற். க. க. Puran. இ.கக. க Pர். இ.மக.

7 Puran. ச. உக.

8 மத். மக.மக.

9 Puran. க. மஎ: இ. உ஢, உஎ: மஉ. சஎ.

10 உரோ.உ.கே.

11 Puran. மஇ. உ஢,உச.

Digitized by Google

ஈ. பி. ஈஉ

4 வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவனுடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; அவனும் தன்னுடைய ஆடுகளைப் பேர்பேராக அழைத்து, அவைகளை வெளியே கொண்டுபோகிறான்.

5 மேலும் அவன் தன்னுடைய ஆடுகளை வெளியிலே விட்டபின்பு, அவைகளுக்கு முன்னாக நடந்துபோகிறான்; மேலும் ஆடுகள் அவனுடைய சத்தத்தை அறிகிறபடியினாலே, அவைகள் அவனுக்குப் பின்செல்லுகின்றன.

6 அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினாலே, அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனைவிட்டு ஓடிப்போகும் என்றார்.

7 இந்த உவமையை இயேசுவானவர் அவர்களுடனே சொன்னபொழுது, அவர்கள் தங்களுக்கு அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை.

8 ¶ ஆதலால் இயேசுவானவர் மறுபடியும் அவர்களை நோக்கி, நானே ஆடுகளின் வாசல் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

9 எனக்குமுன்னே வந்தவர்கள் எல்லாரும் திருடருமாய்க் கொள்ளைக்காரருமாய் இருந்தார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை.

10 [1]நானே வாசல், ஒருவன் என்னாலே உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான்; அல்லாமலும், அவன் உள்ளும் புறம்பும் சென்றுமேய்ச்சலைக் கண்டுபிடிப்பான்.

11 திருடனானவன் திருடுகிறதற்கும் கொலைசெய்கிறதற்கும் கெடுக்கிறதற்குமே அன்றி வேறொன்றுக்கும் வாரான்; நான் அவர்களுக்குச் சீவனும் பரிபூரணமும் உண்டாகும்படிக்கு வந்தேன்.

12 [2]நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பனானவன் ஆடுகளுக்காகத் தன் சீவனைக் கொடுக்கிறான்.

13 கூலிமேய்ப்பன் அல்லாதவனும் ஆடுகளையுடையவன் அல்லாதவனுமாயிருக்கிற கூலியாள் கோணாய் வரக்காணும்பொழுது [3]ஆடுகளைவிட்டு ஓடிப்போவான்; அப்பொழுது கோணாய் அந்த ஆடுகளைப் பிடித்துச் சிதற அடிக்கும்.

14 மேலும் கூலியாளானவன் கூலிக்காகவேலைசெய்கிறவனானபடியினாலும், ஆடுகளைக் குறித்த அவனுக்குக் கவலை தோன்றாதபடியினாலும் ஓடிப்போவான்.

15 [4]நானே நல்ல மேய்ப்பன், என் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், [5]நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்,

16 நான் என்னுடையவைகளை அறிந்து, என்னுடையவைகளால் அறியப்பட்டு, [6]ஆடுகளுக்காகவே என் சீவனைக் கொடுக்கிறேன்.

17 அன்றியும் இந்தக் கிடையில் உள்ளவைகள் அல்லாமல், [7]வேறு ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்; அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும்; [8]அப்பொழுது ஒரே ஆட்டுக்கூட்டமும் ஒரே மேய்ப்பனும் உண்டாயிருக்கும்.

18 நான் என் சீவனைப் பின்னும் அடைந்துகொள்ளும்படிக்கு, [9]அதைக்கொடுக்கிறபடியினாலே பிதா என்னிடத்தில் அன்பாயிருக்கிறார்.

19 அ ஒருவனும் என்னிடத்திலிருந்து அதை வாங்கமாட்டான்; [10]நான் என்னாலே அதைக்கொடுக்கிறேன்; அதைக் கொடுக்கிறதற்கும், அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும் என்னிடத்தில் அதிகாரம் உண்டு; [11]இதற்கு ஏற்ற கட்டளையை என்பிதாவினாலே பெற்றுக்கொண்டேன் என்றார்.

1 போன.மை.க. எபே. உ. மூ.
2 சா. சம். மை. எசே. மை. மஉ, உக: கஎ. உசை. எபி. மக. மம. க பே.உ.உஇ: இ.ச.
3 சகரி. மக. மக, மஎ.
4 மத். மை. மா.
5 உ தெச. உ. மை.
6 போன. ஏஇ. மை.
7 சா. இஎ. அ.
8 எசே. கஎ.உஉ. எபே. உ. மச. க பே. உ.உஇ.
9 சா. இஎ.எ.அ, மஉ. எபி.உ.க.
10 போன. உ. மக.
11 போன. க. கூஅ: மஇ. ம. அப். உ. உச, கூஉ.

Digitized by Google

அக ¶ [1]இந்த வசனங்களைக் குறித்து யூதருக்குள்ளே மறுபடியும் பிரிவினை உண்டாயிற்று.

உஉ அவர்களில் அநேகர் சொன்னது: [2]அவன் பசாசையுடையவன், பயித்தியக்காரனுயிருக்கிறான்; என்னத்திற்காக அவனுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்.

உக மற்றப்பேர்கள் சொன்னது: இப்படிப்பட்ட வசனங்கள் பேய்கொண்டவனுடையவைகள் அல்ல என்றும், [3]குருடனின் கண்களைப் [4]பேயானவன் திறப்பானு என்றும் சொன்னார்கள்.

உஉ ¶ பின்பு மாரிகாலத்தில் எருசலேம் நகரத்திலே தேவாலயப் பிரதிஷ்டையின் பண்டிகையைக் கொண்டாடி வருகையில்,

உஎ இயேசுவானவர் தேவாலயத்தில் [5]சாலோமோனுடைய மண்டபத்தில் உலாவிக்கொண்டிருக்கிறபொழுது,

உச ¶ யூதர்கள் அவரை வளைந்துகொண்டு அவரை நோக்கி, எதுவரைக்கும் எங்கள் ஆத்துமாக்கள் சந்தேகமுள்ளவைகளாய் இருக்கும்படிசெய்கிறீர்*? நீர் கிறிஸ்துவானால், (இதை) எங்களுக்குத் தாராளமாய்ச் சொல்லும் என்றார்கள்.

உடு அதற்கு இயேசுவானவர் சொன்னது: அதை உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை; [6]என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியைகளே என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கின்றன.

உக [7]அப்படியிருந்தும் நீங்கள் என் கிடையின் ஆடுகள் அல்லாதவர்களானபடியினாலே விசுவாசியாமல் இருக்கிறீர்கள்.

உஎ [8]நான் உங்களுக்குச் சொன்னபடியே என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன; அல்லாமலும் நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகளும் எனக்குப் பின்செல்லுகின்றன.

கி. பி. ஈஉ.

1 யோவா. எ. சஉ: ஈ. உஈ.

2 யோவா. எ. உஅ: அ. சஅ, ஐஉ.

3 யோவா. ஈ. ஈ, எ, ஈஉ, ஈஈ.

4 உ யோ. ச. உஈ. சஅ. ஈ: சசஈ. அ.

5 அப்.ஈ.உஈ: இ. அஉ.

* அல்லது சஸ்பென்ஸிலுக்குள் வைக்கிறீர்.

6 ஈஅ. வசனம். யோவா. ஈ. உ: இ. ஈஈ.

7 யோவா. அ. சஎ. ஈ யோ.ச. ஈ.

8 ச, அச. வச.

9 யோவா. ஈ. ஈஎ: அஎ. அஈ, அஉ: அஅ.ஈ.

10 யோவா. அஎ. உ.ஈ.ழ.

11 யோவா. அச. உஅ.

12 யோவா. அஎ. அஈ, உஉ.

13 யோவா. அ. ஐஈ.

14 யோவா. இ. அஅ.

15 எண். அஉ. ஈ.

16 உரோ. அஈ.ஈ.

17 யோவா. ஈ. உஎ.

18 யோவா.ஈ.அஎ: இ.ஈஈ, ஈஎ: அ. சஉ.

19 யோவா. இ. அஎ,அஅ.அஅ.வச.

20 லூக். ச. ஈஇ. யோவா. ஈ. ஈஇ, ஈஎ.

உஅ அல்லாமலும் நான் அவைகளுக்கு நித்தியசீவனைக் கொடுக்கிறேன்; [9]அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போகாது, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளான்.

உஈ [10]அவைகளை எனக்குக் கொடுத்த என் பிதா எல்லாரிலும் [11]பெரியவராய் இருக்கிறார்; ஒருவனாலும் அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ளான்.

உஉ [12]நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.

ஊக ¶ [13]அப்பொழுது யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படிக்கு மறுபடியும் கற்களை எடுத்துக்கொண்டார்கள்.

ஊஉ இயேசுவானவர் அவர்களை நோக்கி, நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்; அவைகளில் எந்தக் கிரியையின் நிமித்தம் நீங்கள் என்மேல் கல் எறிவீர்கள் என்றார்.

ஊஅ யூதர்கள் சொன்னது: நற்கிரியையின்நிமித்தம் அல்ல, நீ மனிதனாயிருக்க, [14]உன்னைத் தேவனென்று சொல்லி, இவ்விதமாய்த் தேவதூஷணம் செய்கிறதின்நிமித்தமே உன்மேல் கல் எறிவோம் என்றார்கள்.

ஊச அதற்கு இயேசுவானவர் சொன்னது: [15]தேவர்களாய் இருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பது உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா?

ஊடு [16]பராபரனுடைய வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை அவர் தேவர்கள் என்று சொல்ல, வேதமும் தள்ளப்படக்கூடாததாயிருக்க,

ஊக [17]பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும் [18]உலகத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற [19]நான் என்னைப் [20]பராபரனுடைய குமாரனென்று சொன்னதினாலே, தேவ

Digitized by Google

தூஷணம்செய்தாய் என்று சொல்லலாமா?

கூஎ [1]நான் என் பிதாவின் கிரியைகளைச் செய்யாதிருந்தால் நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டுவதில்லை.

கூஅ (அவைகளை) நான் செய்திருக்கிறபடியால் [2]நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலேயும் நான் அவரிலேயும் இருக்கிறதை அறிந்து விசுவாசித்துக்கொள்ளும்படிக்கு [3]நீங்கள் அந்தக் கிரியைகளை விசுவாசிக்க வேண்டுமே என்றார்.

கூக ¶ [4]அப்பொழுது அவர்கள் மறுபடியும் அவனைப் பிடிக்கத் தேடினார்கள்; அவர் அவர்களுடைய கைகளில் நின்று விலகிப் புறப்பட்டு,

கூய யோர்தான் ஆற்றின் அக்கரையிலே, முன்னே [5]யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடத்திற்குத் திரும்பிப்போய், அங்கே தங்கினார்.

கூக அநேகம்பேர் அவரிடத்தில் சென்று, பின்பு சொன்னது: யோவான் ஒரு அற்புதமும் செய்யாதிருந்தும், [6]இவனைக்குறித்துச் சொன்ன யாவும் மெய்யாயிருக்கின்றது என்றார்கள்.

கூஉ. அவ்விடத்திலே அநேகம்பேர் அவர்மேல் [7]விசுவாசமுள்ளவர்களானார்கள்.

யக. அதிகாரம்.

க. மரித்து நாலுநாள் அடக்கம்பண்ணப்பட்டிருந்த இலாசருவை இறிஸ்து உயிரோடு எழுப்பினது. சஇ. அதை யூதர்கள் அவரை விசுவாசித்தது. சஎ. இறிஸ்துவுக்கு விரோதமாகப் பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் ஒரு சங்கத்தை உண்டாக்கினது. சக. காயிபா என்பவன் அவனைக்குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தது. இச. இயேசு தம்மை மறைத்துக்கொண்டது. இஇ. பஸ்காபண்டிகையிலே சனங்கள் அவரைத் தேடினது.

அன்றியும் [8]மரியாளும் அவளுடைய சகோதரியாகிய மார்த்தாளும் இருந்த பெத்தானியா ஊராகிய இலாசரு என்பவன் வியாதியுள்ளவனாய் இருந்தான்.

இ. பி. கூஉ.

1 Comp. ஏஇ. உச.

2 Comp. இ. கக: ஏச.ஏ, கக.

3 Comp. ஏச. ஆ.கக: ஏஎ.உக.

4 Comp. எ. கஏ,சச:அ.இக.

5 Comp. க. உஅ.

6 Comp. க. கஏ.

7 Comp. அ. கட: ஆக.சஇ.

8 லூக். ஏ. உஅ, கக.

9 மத். உக. எ. மாற். ஏச. க. Comp. ஆஉ.க.

10 Comp. க.க: சஏ. ஆச.

11 Comp. ஆ. சஏ.

12 Comp. ஆ. கக.

13 Comp. க.ச.

14 Comp. ஆஉ. கஇ.

உ [9]அந்த மரியாள் கர்த்தர்மேல் பரிமளதயிலத்தைப் பூசி, தன் மயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தவளே; அவளுடைய சகோதரனாகிய இலாசரு வியாதிப்பட்டிருந்தான்.

ஊ அப்பொழுது அவனுடைய சகோதரிகள், ஆண்டவரே, உமக்கு அன்பாயிருக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்லி அனுப்பினார்கள்.

ச ¶ இயேசுவானவர் அதைக் கேட்டு, அந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல், [10]பராபரனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்கு, பராபரனுடைய மகிமை விளங்குதற்கு ஏதுவாயிருக்கும் என்றார்.

ஙி இயேசுவானவர் அந்த மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரியினிடத்திலும், இலாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.

சு அப்படியிருந்தும், அவன் வியாதியாயிருக்கிறதை அவர் கேட்ட பின்பு, [11]அவர் தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டுகாள் தங்கினார்.

எ அதின் பின்பு அவர் (தம்முடைய) சீஷரை நோக்கி, காம் மறுபடியும் யூதேயா நாட்டிற்குப் போவோம் வாருங்கள் என்றார்.

அ அதற்குச் சீஷர் சொன்னது: இரபீ, சிலநாளுக்குமுன்னே, [12]யூதர்கள் உமதுமேல் கல்லெறியமனதுள்ளவர்களாய் இருந்தார்களே; நீர் மறுபடியும் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.

க இயேசுவானவர் சொன்னது: பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் இல்லையா? [13]பகற்காலத்திலே நடக்கிறவன் இவ்வுலகத்தின் ஒளியைக் காண்கிறபடியினாலே இடறமாட்டான்.

ய [14]இராத்திரிகாலத்திலே நடக்கிறவன் தனக்கு ஒளியில்லாதபடியினாலே இடறுவான் என்று சொல்லி,

Digitized by Google

க. பி. கூகூ.

௰க [1]பின்பு கமக்குச் சினேகிதனாகிய இலாசரு நித்தினை அடைந்தான்; நான் அவனை எழுப்பப் போகிறேன் என்றார்.

௰உ அப்பொழுது அவருடைய சீஷர் சொன்னது: ஆண்டவரே, அவன் நித்தினை அடைந்திருந்தால் குணம் அடைவான் என்றார்கள்.

௰ஊ இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து அப்படிச் சொல்லியிருந்தார்; அவர்கள் அவர் நித்தினைபண்ணுதலைக்குறித்தே பேசினார் என்று நினைத்தார்கள்.

௰எ அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, இலாசரு மரித்தான் என்று தெளிவாய்ச் சொல்லி,

௰ஏ பின்பு நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, நான் அங்கே இராதிருந்ததினிமித்தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.

௰ஐ அப்பொழுது தீதிமு என்னப்பட்ட தோமாஸ் மற்றச் சீஷரை நோக்கி, அவரோடேகூட மரிக்கும்படிக்கு நாமும் போவோம் வாருங்கள் என்றான்.

௰ஒ ¶ ஆதலால் இயேசுவானவர் போனபொழுது, அவன் கல்லறையில் வைக்கப்பட்டு நாலுநாள் ஆயிற்றென்று அறிந்தார்.

௰ஓ பெத்தானியாவூர் எருசலேம் நகரத்திற்குச் சமீபமாய் ஏறக்குறைய பதினைந்துஸ்தாதிவழி* தூரத்தில் இருந்தது.

௰ஔ அன்றியும் யூதரில் அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோதரனைக்குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படிக்கு, அவர்களிடத்தில் போயிருந்தார்கள்.

௰க அ இயேசுவானவர் வருகிறார் என்று மார்த்தாள் கேட்டபொழுது, அவருக்கு எதிர்கொண்டு போனாள்; மரியாள் வீட்டிலே உளுக்காந்திருந்தாள்.

௰க ஆ பின்பு மார்த்தாள் இயேசுவினிடத்தில் (சேர்ந்து,) ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீராகில், என் சகோதரன் மரிக்கமாட்டான்.

௰க இ இப்பொழுது [2]நீர் பராபரனிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ, அதைப் பராபரன் உமக்குக் கொடுப்பார் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

௰க ஈ அதற்கு இயேசுவானவர், உன் சகோதரன் உயிரோடு எழுந்திருப்பான் என்றார்.

௰க உ மார்த்தாள் சொன்னது: [3]கடைசிநாளிலே (மரித்தோர்) உயிரோடு எழுந்திருக்கும்பொழுது அவனும் எழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன், என்றாள்.

௰க ஊ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [4]நானே உயிரோடு எழுப்புகிறவனுமாய், [5]சீவனுமாய் இருக்கிறேன், [6]என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.

௰க எ அல்லாமலும் உயிரோடிருக்கையில் என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ, அவன் ஒருக்காலும் மரியாமல் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.

௰க ஏ அவள் சொன்னது: [7]ஆம் ஆண்டவரே, நீர் கிறிஸ்து, நீர் பராபரனுடைய குமாரன், நீர் உலகத்தில் வரவேண்டுபவர் என்று நான் விசுவாசிக்கிறேன் என்றாள்.

௰க ஐ ¶ இப்படிச் சொன்னபின்பு அவள் போய்த் தன் சகோதரி மரியாளை இரகசியமாய் அழைத்து, போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்றாள்.

௰க ஒ அதை அவள் கேட்டவுடனே சீக்கிரமாய் எழுந்து, அவரிடத்தில் போனாள்.

௰க ஓ அக்காலத்திலே இயேசுவானவர் கிராமத்திற்குள் செல்லா

---

1 இ யோ. ௧க. ௰க. தானி. ௰௨. உ மத். க. உச. அப். எ. ௧௦. க கொரி. ௰இ. ௰அ, இக.

* அல்லது ஒன்பது சாமிகை.

2 யோவா. க. ௧க.

3 லூக். ௨ச. ௨ச. யோவா.. இ. உக.

4 யோவா. இ. உக: க. ௧க, ச௰. ச.

5 யோவா. க. ச: க. ௧இ: ௨ச. க. கொலோ. க. ச. க பே. க. க, உ: இ. ௨க.

6 யோவா. க. ௧க. க பே. இ. ௰. ழ.

7 மத். ௨க. ௨க. யோவா. ச. ச உ: க. ௨ச, ௧அ.

மல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இருந்தார்.

31 [1]அப்பொழுது வீட்டிலே அவளுடனே கூட இருந்து அவளுக்கு ஆறுதல் செய்கிற யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்து புறப்பட்டுப்போகிறதைக் கண்டு, அவள் கல்லறையினிடத்திலே அழுதுகொள்ளும்படி போகிறாள் என்று பேசிக்கொண்டு, அவளுக்குப் பின்சென்றார்கள்.

32 இயேசுவானவர் இருந்த இடத்திலே மரியாள் சேர்ந்து, அவனைக் கண்டவுடனே, அவருடைய பாதத்தின் அருகே விழுந்து, ஆண்டவரே, [2]நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டானே என்றாள்.

33 அவளும் அவளுடனே கூடப் போன யூதரும் அழுகிறதை இயேசுவானவர் கண்டபொழுது, உள்ளத்திலிருந்து பெருமூச்சுவிட்டுக் கலங்கி*,

34 அவனை எங்கே வைத்தீர்கள் என்றார்; ஆண்டவரே, நீர் வந்து பாரும் என்றார்கள்.

35 [3]இயேசுவானவர் கண்ணீர் விட்டார்.

36 யூதர்கள் அதைப்பார்த்து, இதோ, அவர் அவனிடத்தில் மிகவும் பட்சமாய் இருந்தாரே என்றார்கள்.

37 அவர்களில் சிலர் சொன்னது: [4]குருடனுடைய கண்களைத் திறந்த இவர், அவனை மரியாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.

38 அப்பொழுது இயேசுவானவர் மறுபடியும் தமக்குள்ளே பெருமூச்சுவிட்டுப் பின்பு கல்லறையினிடத்தில் சேர்ந்தார், அது ஒரு குகையாய் இருந்தது, அதின்மேலே ஒரு கல் வைக்கப்பட்டிருந்தது.

39 அப்பொழுது இயேசுவானவர் கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார்; மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரைநோக்கி, ஆண்டவரே, இவன் புதைக்கப்பட்டு நான்குநாளானபடியினாலே நாறுமே என்றாள்.

40 அதற்கு அவளை இயேசுவானவர் நோக்கி, [5]நீ விசுவாசித்தால் பராபரனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா என்றார்.

41 பின்பு சவம் வைக்கப்பட்ட குகையில் இருந்த கல்லை எடுத்துப்போட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர் கண்களை உயர்த்திப் பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினாலே உம்மைத் தோத்திரம்செய்கிறேன்.

42 நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறதை அறிந்திருக்கிறேன்; [6]சூழநிற்கிற சனங்கள் நீர் என்னை அனுப்பினதை விசுவாசிக்கும்படிக்கு, அவர்களின் நிமித்தமே இப்படிச் சொன்னேன் என்று சொல்லி,

43 பின்பு, இலாசருவே, வெளியே வா என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்.

44 [7]அப்பொழுது மரித்தவன் கால்களும் கைகளும்கட்டியிருந்த சேலைகளோடும் முகம் சுற்றப்பட்டிருந்த சேலையோடும் வெளியே வந்தான்; பின்பு இயேசுவானவர் சொன்னது: இவனுடைய கட்டவிழ்த்து இவனை விட்டுவிடுங்கள் என்றார்.

45 ¶ அப்பொழுது மரியாளிடத்திற்குப் போய், [8]இயேசுவானவர் செய்தவைகளைக் கண்ட யூதரில் அநேகர் அவரிடத்தில் விசுவாசமானார்கள்.

46 வேறுசிலர் பரிசேயரிடத்திற்குப் போய், இயேசுவானவர் செய்தவைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.

47 ¶ [9]அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும், பெரிய ஆலோசனைச் சங்கத்தார் வந்து கூடும்படி செய்து பின்பு சொல்

---

1 கி. பி. கூஉ.

1 மத். மக. மச.

2 உச. மச.

* அல்லது தம்மைக்கலக்கி.

3 லூக். மக. சக.
4 போஎ. க.க.
5 ச,உக. மச.
6 போஎ. மஉ. கஅ.
7 போஎ. உஅ. எ.

8 போஎ. உ. உக: மி. சஉ: மஉ. மி, மஅ.

9 சங். உ. உ.
மத். உக. க.
மாற். மச. க.
லூக். உஉ. உ.

Digitized by Google

னதாவது: [1]அந்த மனிதன் அநேக அற்புதங்களைச் செய்து வருகிறான்.

சஅ நாம் அவனுக்கு இடங்கொடுத்தால், எல்லாரும் அவனிடத்தில் விசுவாசமாவார்கள்; பின்பு உரோமர் வந்து, நம்முடைய ஸ்தலத்தையும் சனங்களையும் எடுத்துக்கொள்ளுவார்கள். ஆதலால், நாம் என்ன செய்வோம் என்றார்கள்.

சக அப்பொழுது அவர்களில் ஒருவனுமாய் அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாய் இருந்த [2]காயிபா என்பவன் அவர்களை நோக்கி, நீங்கள் ஒன்றும் தெரியாதவர்கள்.

சஉ [3]சனங்கள் எல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு, ஒரே மனிதன் சனங்களுக்காக மரணம் அடைவதே நமக்கு நலமாயிருக்கும் என்று நீங்கள் சிந்தியாமலும் இருக்கிறீர்கள் என்றான்.

சக இப்படி அவன் தானுய்ச் சொல்லாமல் அவன் அந்த வருஷத்தில் பிரதான ஆசாரியனுயிருக்க, இயேசுவானவர் யூதசனங்களுக்காக மரணமடைவதைத் நிர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

சஉ [4]மேலும் அந்தச்சனங்களுக்காகமாத்திரம் அல்ல, [5]அங்கங்கே சிதறிப்போயிருக்கிற பராபரனுடைய பிள்ளைகளை ஒன்றுகக் கூட்டிக்கொள்ளுகிறதற்காகவும் அவர் மரணம் அடைவதையே குறித்தான்.

சஎ ¶ ஆதலால் அந்நாள்முதல் அவர்கள் அவனைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைபண்ணிக்கொண்டு வந்தார்கள்.

சஏ அதினாலே [6]இயேசுவானவர் பின்னும் வெளியரங்கமாய் யூதருக்குள்ளே திரியாமல் அவ்விடத்தைவிட்டு வனாந்தரத்திற்குச் சமீபமான இடமாகிய [7]எபிராயீம் ஊருக்குப் போய், அங்கே தம்முடைய சீஷரோடேகூடச் சஞ்சரித்தார்.

கி. பி. சுசு.

1 Puran. ஊ. ஈக. அப். ச. ஈக.

2 லூக். க. உ. யோவா. ⅈஅ. ⅈச. அப். ச. க.

3 யோவா. ⅈஅ. ⅈச.

4 சர. சக. க. க யோ. உ. உ

5 யோவா. ⅈ.ஈக. எபே. உ. ⅈச. ⅈஎ.

6 யோவா. ச. க, க: எ.க.

7 உ சாம. ஈக. ⅈக.

8 யோவா. உ. ⅈக: ஆ.க: க.ச.

9 யோவா. ஈக. அ.

10 யோவா. ஈக. க,சக.

11 மத். உக. க. மாற். ⅈச. க.

12 லூக். ⅈ. கஅ, கக. யோவா. ஈக.உ.

ஈஎ ¶ அக்காலத்திலே யூதருடைய பஸ்காப்பண்டிகை சமீபமாயிருந்தது; அதற்குமுன்னே அந்நாட்டிலிருந்து அநேகர் தங்களைச் சுத்திகரிக்கும்பொருட்டாக எருசலேமுக்குப் போனார்கள்.

ஈசு [9]அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்கொண்டு தேவாலயத்திலே நிற்கையில் ஒருவனை ஒருவர் நோக்கி, உங்களுக்கு எப்படித்தோன்றுகின்றது? அவர் பண்டிகைக்கு வராமல் இருப்பாரா என்று பேசிக்கொண்டார்கள்.

ஈள பிரதான ஆசாரியரும் பரிசேயரும் அவனைப் பிடிக்கும்படிக்கு யோசித்து, அவர் இருக்கிற இடத்தை ஒருவன் அறிந்தால் அதை அறிவிக்கவேண்டும் என்று கட்டளைகொடுத்திருந்தார்கள்.

ⅈⅇ. அதிகாரம்.

க. மரியாள் இயேசுவின் பாதங்களைப் பரிமளதைலத்தால் பூசினது. கூ. அநேக சனங்கள் இலாசருவைக் காணவந்தது. ஙி. பிரதான ஆசாரியர் இயேசுவைக் கொலைசெய்ய விரும்பினது. ⅈⅇ. அவர் எருசலேமுக்குச் சவாரியின்மேல் போனது. ⅈஙி. கிரேக்கர் அவரைக் காணவிரும்பினது. ⅈக. அவர் தம்முடைய மரணத்தை முன் அறிவித்தது. கஎ. யூதர்கள் அவிசுவாசிகளாயிருந்தாலும், சஉ. யூதப் பிரபுக்களில் அநேகர் இரகசியமாய் விசுவாசித்தபடியினாலே, சச. அவர்கள் தங்கள் விசுவாசத்தை வெளிப்படுத்தும்படி இயேசு புத்தி சொன்னது.

பின்பு பஸ்காப்பண்டிகை வருகிறதற்கு ஆறுநாளுக்குமுன்னே, இயேசுவானவர் தம்மாலே மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட [10]இலாசரு இருக்கிற பெத்தானியா ஊருக்குப் போனார்.

உ அங்கே [11]அவருக்கு இராவிருந்துபண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடைசெய்தாள்; இலாசருதானும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவனுய் இருந்தான்.

கூ ¶ அப்பொழுது மரியாள் [12]விலையேறப்பெற்ற களங்கமில்லாத நருதென்னும் தயிலத்தில் ஒரு ராத்தலை எடுத்து, அதை இயேசுவினுடைய கால்களில் பூசி, தன் மயிரால் அவைகளைத் துடைத்தாள்;

Digitized by Google

அந்தத் தயிலத்தின் பரிமளத்தினாலே வீடு நிரப்பப்பட்டது.

ச அப்பொழுது சீஷரில் ஒருவனுமாய் அவனைக் காட்டிக்கொடுத்தவனுமாய்ச் சீமோனுடைய குமாரனுமாய் இருந்த யூதாஸ்காரியோத்து என்பவன் சொன்னது:

ஞ இந்தத் தயிலம் முந்நூறு தேனரியு விலைக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கலாமே, என்னத்தினாலே அப்படிச் செய்யவில்லை என்றான்.

ஃ அவன் தரித்திரனைக்குறித்துக் கவலைப்படுகிறவனைக் அப்படிச் சொல்லாமல், அவன் திருடனாய்ப் [1]பணப்பையை வைத்துக்கொண்டு, (அதிலே) போடப்பட்டவைகளைச் சுமக்கிறவனானபடியினாலே இப்படிச் சொன்னான்.

எ அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: இவளை விட்டுவிடு, என்னை அடக்கம்பண்ணுமநாளுக்காக இவள் இதைக் காத்துக்கொண்டிருந்தாள்.

அ [2]தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள், நான் எப்பொழுதும் உங்களிடத்திலே இரேனே என்றார்.

கூ ¶ பின்பு யூதரில் அநேகசனங்கள் அவர் அங்கே இருக்கிறதை அறிந்து, இயேசுவின் பொருட்டாகமாத்திரம் அல்ல, [3]அவரால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட இலாசருவைக் காணும்பொருட்டாகவும் அவ்விடத்திலே போனார்கள்.

ய [4]இலாசருவினாலே யூதர்களில் அநேகம்பேர் இயேசுவானவரிடத்தில் போய், அவர்மேல் விசுவாசம் வைத்தபடியினாலே,

யக [5]பிரதான ஆசாரியர் இலாசருவையும் கொலைசெய்யும்படி தீர்மானம் பண்ணினார்கள்.

யஉ ¶ [6]மறுநாளிலே இயேசுவானவர் எருசலேமுக்கு வருகிறார் என்று பண்டிகைக்குப்போன சனங்கள் அநேகர் கேள்விப்பட்டு,

யஊ குருத்தோலைகளைப் பிடித்து, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு, [7]ஓசன்னா, பராபரனுடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலரின் இராசா வாழ்த்தப்படக்கடவர் என்று சத்தமிட்டார்கள்.

யஎ [8]அல்லாமலும், குமாரத்தியாகிய சீயோனே, நீ பயப்படாதிரு; இதோ, உன் இராசா ஒரு கழுதைக்குட்டியின்மேல் ஏறி வருகிறார் என்று எழுதியிருக்கிறபடியே,

யஏ [9]இயேசுவானவர் ஒரு கழுதையின் குட்டியைக் கண்டு, அதின் மேல் ஏறிப்போனார்.

யஐ [10]அவனைக்குறித்து அப்படி எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர் அக்காலத்திலே அறியவில்லை; [11]இயேசுவானவர் மகிமையை அடைந்தபின் [12]அவர்கள் அதையும் தாங்கள் அப்படி அவருக்குச் செய்ததையும் நினைத்துக் கொண்டார்கள்.

யக ¶ அன்றியும் அவருடனே இருந்த சனங்கள் அவர் இலாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே வரவழைத்து அவனை உயிரோடு எழுப்பினதைக்குறித்துச் சாட்சிகொடுத்தார்கள்.

யஅ [13]அப்படிப்பட்ட அற்புதத்தை அவர் செய்தார் என்று சனங்கள் கேள்விப்பட்டதினாலே, அவர்கள் அவருக்கு எதிர்கொண்டு போனார்கள்.

யக ஆதலால் பரிசேயர் ஒருவரை ஒருவர் நோக்கி, [14]நாம்செய்கிறதினாலே ஒரு பிரயோசனமும் இல்லையென்று அறிவோமாக; உலகமே அவனுக்குப் பின்செல்லுகின்றதே என்று சொல்லிக்கொண்டார்கள்.

உய ¶ [15]அன்றியும் (பராபரனைத்) தொழுது கொள்ளும்படி பண்டிகைக்குப் போனவர்களுக்குள்ளே [16]சில கிரேக்கர் இருந்தார்கள்.

இ. பி. கூகூ.

1 Cுரை. ஙக. உக.
2 மத். உக, ஙக. மாற். ஙச. ஈ.
3 Cுரை. ஙக. சக, சச.
4 Cுரை. ஙக. சஇ. ஙஅ. ஙச.
5 லூக். ஙக. கக.
6 மத். உக. அ. மாற்.. ஙக. அ. லூக். ஙக. கஇ, கக.
7 சங். கஙஅ. உஇ, உக.
8 சகரி. ஈ. கூ.
9 மத். உக. ஈ.
10 லூக். ஙஅ. கச.
11 Cுரை. ஈ, கக.
12 Cுரை. ஙச. உக.
13 ஏ. வச.
14 Cுரை. ஙக. சக, சஅ.
15 க இரா. அ. சக, சஉ. அப். அ. உக.
16 அப். ஙக. ச.

Digitized by Google

22 [1]அவர்கள் கலிலேயா நாட்டின் பெத்சாயிதா ஊராகிய பிலிப்பினிடத்தில் போய், ஐயா நாங்கள் இயேசுவானவரைக் காண விரும்புகிறோம் என்று அவனை வேண்டிக்கொண்டார்கள்.

23 பிலிப்பு என்பவன் அதை அந்திரேயாவுக்குச் சொன்னான்; பின்பு அந்திரேயாவும் பிலிப்பும் அதை இயேசுவுக்குச் சொன்னார்கள்.

24 அப்பொழுது இயேசுவானவர் அவர்களுடனே சொன்னது: [2]மனிதனுடைய குமாரன் மகிமைப்படும்படிக்குக் காலம் வந்தது.

25 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: [3]கோதுமை மணி நிலத்திற்குள் விழுந்து செத்துப்போகாவிட்டால் தனித்திருக்கும்; அது செத்ததானால் மிகுந்த பலனைக் கொடுக்கும்.

26 [4]தன் சீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழப்பான்; இவ்வுலகத்திலே தன் சீவனைப் பகைக்கிறவன் அதை நித்தியசீவனுக்கும் காத்துக்கொள்ளுவான்.

27 ஒருவன் எனக்கு ஊழியம் செய்ய விரும்பினால் எனக்குப் பின்செல்லக்கடவன்; அப்பொழுது [5]நான் இருக்கும் இடம் எங்கேயோ, அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; அல்லாமலும் எனக்கு ஊழியம்செய்கிறவனைப் பிதா கனம்பண்ணுவார்.

28 ¶ [6]இப்பொழுது என் ஆத்துமா கலங்குகின்றது; நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த நேரத்திலிருந்து என்னை இரட்சிக்கவேண்டும்என்று(சொல்வேனோ?) [7]இந்த நேரத்தின்பொருட்டாகவே வந்தேன் என்று சொல்லி,

29 பின்பு, பிதாவே, உமது நாமத்தின் மகிமையைக் காண்பியும் என்றார்; [8]அப்பொழுது அந்த மகிமையைக்காண்பித்தேன், இன்னும் அதைக் காண்பிப்பேன் என்று வானத்திலிருந்து சத்தம் உண்டாயிற்று.

30 அங்கே நின்ற சனங்கள் அதைக் கேட்டு, இடிமுழக்கம் உண்டாயிற்று என்றார்கள்; வேறு சிலர் சொன்னது: தேவதூதன் ஒருவன் அவருடனே பேசினான் என்றார்கள்.

31 அப்பொழுது இயேசுவானவர் சொன்னது: [9]இந்தச் சத்தம் என்நிமித்தம் உண்டாகாமல், உங்கள்நிமித்தமே உண்டாயிற்று.

32 இப்பொழுது இவ்வுலகத்திற்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கப்படுகின்றது;இப்பொழுது [10]இவ்வுலகத்தின் பிரபு புறம்பாகத் தள்ளப்படுவான்.

33 அல்லாமலும் [11]நான் பூமியிலிருந்து ஏற்றப்பட்டிருக்கும்பொழுது, [12]எல்லாரையும் என்னிடத்தில்இழுத்துக்கொள்வேன் என்று,

34 [13]தாம் மரணமடையும் விதத்தைக் குறித்தார்.

35 ¶ அப்பொழுது சனங்கள் அவனை நோக்கி, [14]கிறிஸ்துவானவர் என்றென்றைக்கும் இருக்கிறார் என்று நாங்கள் வேதத்தால் கேள்விப்பட்டிருக்கிறோமே,அப்படியிருக்க, மனிதனுடைய குமாரன் ஏற்றப்படவேண்டும் என்று நீர் எப்படிச் சொல்லுகிறீர்? இந்த மனிதகுமாரன் எவன் என்றார்கள்.

36 அதற்கு இயேசுவானவர் சொன்னது: [15]சிலகாலம்மாத்திரம் ஒளியானது உங்களுடனே இருக்கும்; [16]இருள் உங்களைப் பிடியாதபடிக்கு நீங்கள் ஒளியை உடையவர்களாயிருக்கையில், (அதிலே) நடவுங்கள்; [17]இருளிலே நடக்கிறவன் தான் நடந்துபோகிற இடம் இன்னது என்று அறியான்.

37 [18]நீங்கள் ஒளியை உடையவர்களாயிருக்க ஒளியின் பிள்ளைகள் ஆகும்படிக்கு, ஒளியானதிலே விசுவாசமாய் இருப்பீர்களாக என்று இயேசுவானவர் சொல்

வி. பி. கூகூ.

1 Purr. க. ஈஈ.
2 Purr. ஙக. ஙஉ: மா. உ.
3 க கொரி. ஙஇ. ஙக.
4 மத். ஏ. ஙக: ஙக. உஇ. மாத். அ. ஙஇ. லூக்.க. உச: மா. ஙங.
5 போர். ஙச. ங: மா. உச. க தெச. ச. மா.
6 மத். உக. கஅ, ஙக. லூக். ஙஉ. இவ். போர். கூ. உச.
7 லூக். உஉ. இக. போர். ஙஅ. ஙங.
8 மத். க. மா.
9 போர். ஙக. ஈஉ.
10 மத். ஙஉ. உக. லூக். ஏ. ஙஅ. போர். ச. ஙஏ: மக. இக. அப். உக. ஙஆ. உ கொரி. ச.ச. எபே. உ உ: க. ஙஉ.
11 Purr. க. ஙச: அ. உஅ.
12 உரோ. இ. ஙஅ. எபி. உ கூ.
13 போர். ஙஅ. ஙஉ
14 சங். அக. ஙக, ஙச: எசே. ச. சோ. க. எ: இக. அ. எசே. ஙச. உஇ. தானி. உ. சச: எ. ஙச, உஎ. மீகா. ச. எ.
15 போர். கக. அ. ஙஉ: க. இ: சக. யச.
16 எரே. ஙக. ஙக. எபே. இ. அ.
17 போர். ஙக. ஏ. க போர். உ. ஙக.
18 லூக். ஙக. அ. எபே. இ. அ. க தெச. இ. இ. க போர். உ. க, ஏ, ஙக.

விப் புறப்பட்டு, [1]அவர்களுக்கு விலகி மறைந்தார்.

கூஎ ¶ அவர் இவ்வளவு அற்புதங்களை அவர்களுக்குமுன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவர்மேல் விசுவாசமாய் இருக்கவில்லை.

கூஅ அதினாலே, [2]கர்த்தாவே, எங்கள் பிரசங்கத்தை விசுவாசித்தவன் யாவன்? பராபரனுடைய புயம் யாவனுக்கு வெளிப்பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம் நிறைவேறிற்று.

கூக [3]ஏசாயா என்பவன் அவருடைய மகிமையைக் கண்டு, அவனைக்குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறபொழுது,

சய அவன் பின்னும் சொன்னது: [4]அவர்கள் தங்கள் கண்களினாலே காணுமலும், தங்கள் இருதயத்தினால் உணராமலும், மனம்திருப்பாமலும், என்னாலே ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு, அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார் என்பதே.

சக அதினாலே அவர்கள் விசுவாசிக்கக்கூடாதிருந்தார்கள்.

சஉ [5]ஆகிலும் தலைவரில் அநேகரும் அவர்மேல் விசுவாசமாய் இருந்தார்கள்.

சஊ [6]அப்படி இருந்தும், அவர்கள் பராபரனால் வருகிற கனத்திலும், மனிதரால் வருகிற கனத்தை அதிகமாய் விரும்பினபடியினாலே, பரிசேயராலே செபஆலயத்திற்குப் புறம்பாக்கப்படாதபடிக்கு, (அதை) அறிக்கையிடாமல் இருந்தார்கள்.

சஎ ¶ அப்பொழுது இயேசுவானவர் [7]சத்தத்தோடே சொன்னதாவது: என்மேல் விசுவாசமாயிருக்கிறவன் என்மேல்மாத்திரம் அல்ல, என்னை அனுப்பினவர்மேலும் விசுவாசமாயிருக்கிறான்.

சஏ [8]அல்லாமலும் என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவனைக் காண்கிறான்.

சக [9]என்மேல் விசுவாசமாயிருக்கிற யாவரும் இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்தேன்.

சஎ அன்றியும் நான் உலகத்தாரை ஆக்கினைக்கு உட்படுத்தும் பொருட்டு அல்ல, [10]அவர்களை இரட்சிக்கும்பொருட்டே வந்தேன்; ஆகையால் ஒருவன் என் வசனங்களைக் கேட்டும் விசுவாசித்துக்கொள்ளாமல்போனால், [11]அவனை நான் ஆக்கினைக்கு உட்படுத்தமாட்டேன்.

சஅ [12]என்னைத் தள்ளி என் வசனங்களை ஏற்றுக்கொள்ளாதவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது ஒன்றிருக்கின்றது; [13]நான் பண்ணின உபதேசமே கடைசிநாளிலே அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்.

சக என்னத்தினாலென்றால், [14]நானாக ஒன்றும் பேசவில்லை; என்னை அனுப்பின பிதாவே [15]நான் பேசவும் உபதேசிக்கவும் வேண்டியவைகளை எனக்குக் கட்டளையிட்டார்.

சஙு அவருடைய கட்டளையே நித்தியசீவன் என்று அறிந்திருக்கிறேன்; ஆகையால் நான் உபதேசிக்கிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே உபதேசிக்கிறேன் என்றார்.

யஊ. அதிகாரம்.

[16]பஸ்காப்பண்டிகைக்கு முன்னே இயேசுவானவர் இவ்வுலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படிக்குத் [17]தம்முடைய

கி. பி. கூகூ.

1 Purr. அ. கூ: மத். செ.
2 ஏசா. கூ. க. உரோ. ம. கூ.
3 ஏசா. க. க.
4 ஏசா. க. கூ, ம. மத். மா. மா.
5 Purr. எ.கூ: க. உஉ.
6 Purr. ஆ. ஏச.
7 மத். கூ. எ. க பே. க. உக.
8 Purr. மச. கூ.
9 மெ, கூக. மச. Purr. க.மா. அ. மூ: கூ. ஆ, கூக.
10 Purr.க மா.
11 Purr. ஆ. சஆ: அ. மஆ, உக.
12 லூக். ம. மூ.
13 ஆ Purr. மஅ. மூ. மத். மூ. மூ.
14 Purr. அ. மஅ: ம்ச. ம.
15 ஆ Purr. மஅ. மஅ.
16 மத். உக. உ.
17 Purr. மூ. உக: ம. க, மூ.

க. ஷேர்களுடைய சால்மோன் கழுவி, ம. மனந்தாம்மையும் பிசேமும் உள்ளவர்களாயிருக்கும்படி இயேசு புத்திசொன்னது. உஅ. யூதர் தம்மைக் காட்டிக்கொடுப்பார் என்ற முன் அறிவித்த, ஒரு குறிப்பிலும் அதை யோவானுக்கு வெளிப்படுத்தினது. உக. ஷேர்கள் ஒருவனை ஒருவர் பிரேமிக்கும்படி புத்திசொல்லி, உஉ. பேதுரு தம்மை மறுதலிப்பதைக்குறித்த அவனுக்கு அறிவித்தது.

Digitized by Google

காலம் வந்தது என்று அறிந்து, இவ்வுலகத்திலுள்ள தம்முடையவர்களிடத்தில் வைத்த அன்பை முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் வைத்தார்.

2 ஆகையால் அக்காலத்திலே [1]பசாசானவன் சீமோனுடைய குமாரனாகிய யூதாஸ்காரியோத்தின் இருதயத்திலே அவனைக் காட்டிக்கொடுக்கும்படிக்கான (யோசனையை) வைத்திருந்தபின்பு,

3 அவர்கள் இராப்போசனம் பண்ணிக்கொண்டிருக்கையில், இயேசுவானவர் [2]தமக்குச் சகலத்தையும் பிதா ஒப்புக்கொடுத்ததையும், [3]தாம் பராபரனிடத்திலிருந்து வந்ததையும் பராபரனிடத்திற்குப் போகிறதையும் அறிந்து,

4 [4]இராப்போசனத்தை விட்டு எழுந்து, மேல் அங்கியைக் களைந்து, ஒரு சேலையை எடுத்துத் தம்மைச் சுற்றிக் கட்டிக்கொண்டு,

5 பின்பு ஒரு சட்டியிலே தண்ணீர் வார்த்துச் சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சேலையினாலே துடைக்கவும் தொடங்கினார்.

6 அவர் சீமோன்பேதுருவினிடத்தில் சேர்ந்தபொழுது, அவன்* அவரை நோக்கி, ஆண்டவரே, [5]நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.

7 அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் செய்கிறது இன்னதென்று நீ இப்பொழுது அறியவில்லை; [6]இனிமேல் அதை அறிவாய் என்றார்.

8 பேதுரு பின்னும் அவரை நோக்கி, நீர் என் கால்களை ஒருக்காலும் கழுவக்கூடாது என்றான்; அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]நான் உன்னைக் கழுவாவிட்டால், என்னிடத்திலே உனக்குப் பங்கில்லை என்றார்.

9 அப்பொழுது சீமோன்பேதுரு, ஆண்டவரே, (அப்படியானால்,) என் கால்களைமாத்திரம் அல்ல, என் கைகளையும் தலையையும்கூட நீர் கழுவவேண்டும் என்றான்.

10 இயேசுவானவர் சொன்னது: ஸ்நானம்பண்ணினவனுடையகால்களைமாத்திரம் கழுவவேண்டும்; மற்ற யாவும் அவனிடத்தில் சுத்தமாயிருக்கும்; [8]நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆனாலும் எல்லாரும் அல்ல என்றார்.

11 [9]அவர் தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தபடியினாலே, நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள், ஆனாலும் எல்லாரும் அல்ல என்று சொன்னார்.

12 ¶ அவர்களுடைய கால்களைக் கழுவினபின்பு, அவர் தமது மேல்அங்கியைத் தரித்துக்கொண்டு திரும்ப உளுக்காந்து, அவர்களுடனே சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

13 [10]நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள்; நான் அவர்தான்; ஆகையால், நீங்கள் சரியாய்ச் சொல்லுகிறீர்கள்.

14 அப்படியிருக்க, [11]ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினபடியால், [12]நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

15 [13]நான் உங்களுக்குச் செய்ததுபோல, நீங்களும் செய்யும்படிக்கு உங்களுக்கு வசனயைக் காண்பித்தேன்.

16 [14]மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: ஊழியக்காரனனவன் தன் எசமானிலும் அப்போஸ்தலனனவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவன் அல்ல.

17 [15]நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியராய் இருப்பீர்கள்.

18 உங்கள் எல்லாரையும்குறித்

வி. பி. கூறு.

1 லூக். 22. 3. யோ. 6. 70. 13. 2. 27. அப். 5. 3.
2 மத். 28. 18. லூக். 10. 22. யோ. 3. 35. 13. 3. 16. 27. 17. 2. 7. 1 கொரி. 15. 27. எபே. 1. 22. பிலி. 2. 9. 10. 11. அ. வெ.
3 யோ. 8. 42. 16. 28. அ. வே: கூ. உ.
4 லூக். 22. 27. யோ. 10. 11. பிலி. 2. 7. அ.
* அல்லது பேதுரு.
5 மத். 3. 14.
6 உ. வே.
7 யோ. 3. 5. 1 கொரி. 6. 11. எபே. 5. 26. தீத். 3. 5. 1 பேது. 3. 21. 1 யோ. 1. 7. வெ. 1. 5.
8 யோ. 15. 3.
9 யோ. 6. 64.
10 மத். 23. 8. லூக். 6. 46. 1 கொரி. 8. 6. 12. 3. பிலி. 2. 11. 1 யோ. 4. 15. யூ. 4.
11 லூக். 22. 27.
12 உரோ. 12. 10. கலா. 5. 13. 1 பேது. 4. 9. 1 யோ. 3. 16. 4. 11.
13 மத். 20. 26. 1 பேது. 2. 21. 1 யோ. 2. 6. 1 பேது. 2. 21. 1 யோ. 3. 16.
14 மத். 10. 24. லூக். 6. 40. போளா. 10.
15 யாக். 1. 25.

Digitized by Google

து நான் பேசவில்லை; நான் தெரிந்துகொண்டவர்களை அறிந்திருக்கிறேன்; வேதவாக்கியம் நிறைவேறும்படியாக [1]என்னுடனே அப்பம் புசிக்கிறவன் எனக்கு விரோதமாய்த் தன் குதிகாலைத் தூக்கினான்.

ஙக அது நடக்கும்பொழுது நானே அவரென்று நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, [2]அது நடப்பதற்குமுன்னதாய் இப்பொழுது * அதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உய என்னால் [3]அனுப்பப்படுகிறவன் எவனோ, அவனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னையும் ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவனையும் ஏற்றுக்கொள்ளுகிறான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

உக ¶ [4]இவைகளை வசனித்த பின்பு, [5]இயேசுவானவர் தமது ஆவியிலே கலக்கம் அடைந்து, [6]உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சாட்சியிட்டார்.

உஉ அப்பொழுது சீஷர் யாரைக்குறித்துச் சொல்லுகிறாரோ என்று ஐயப்பட்டு, ஒருவனை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

உஊ அவ்வேளையிலே [7]அவருடைய சீஷரில் ஒருவன் அவருடையமடியிலே சாய்ந்திருந்தான்; அவன்மேலே இயேசுவானவரும் அன்பாயிருந்தார்.

உ஋ ஆனபடியினாலே அவர் இன்னாரைக்குறித்துச் சொன்னார் என்று விசாரிக்கும்படிக்குச் சீமோன்பேதுரு அவனுக்குச் சமிக்கைகாட்டினான்.

உஙி அப்பொழுது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு, ஆண்டவரே, அவன் யாவன் என்றான்.

உச இயேசுவானவர் சொன்னது: நான் இந்தத் துணிக்கையைத்† தோய்த்துக் கொடுக்கப்படுபவன் எவனோ, அவனே என்று சொல்லி, துணிக்கையைத் தோய்த்துச் சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்திற்குக் கொடுத்தார்; துணிக்கையை அவன் வாங்கின பின்பு,

உஎ [8]சாத்தான் அவனுக்குள் புகுந்தான்; அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி, நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் யென்றார்.

உஅ அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்தைப் பந்தியில் இருந்தவர்களில் ஒருவரும் அறியவில்லை.

உக சிலர் நினைத்தது; யூதா [9]பணப்பையை வைத்துக்கொண்டிருக்கிறபடியினாலே, அவன் போய்ப் பண்டிகைக்கு வேண்டிய பதார்த்தங்களைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு ஏதாகிலும் கொடுக்கும்படிக்காவது, இயேசுவானவர் அவனுடனே சொல்லியிருப்பார் என்று நினைத்தார்கள்.

ஊய அவன் அந்தத் துணிக்கையை வாங்கின உடனே, புறப்பட்டுப் போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.

ஊக ¶ அவன் புறப்பட்டுப் போனபின்பு, இயேசுவானவர் சொன்னதாவது: [10]இப்பொழுது மனிதனுடைய குமாரன் மகிமைப்படுவான்; அவனாலே [11]பராபரனுடைய மகிமையும் விளங்கும்.

ஊஉ [12]பராபரனுடைய மகிமை அவனாலே விளங்கும்பொழுது, பராபரன் அவனையும் மகிமைப்படுத்துவார்; [13]சீக்கிரமாய் அவனை மகிமைப்படுத்துவார்.

ஊஙி பிரியமான பிள்ளைகளே, இன்னும்சிலகாலம்மாத்திரம்நான் உங்களுடனேகூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; [14]அல்லாமலும் நான் போகும் இடத்

வி. பி. ஊஊ.

1 சங். ஈக. ஊ. மத். உக. உஉ. உஎ. லூ.

2 யோவா. ங. உஉ: ஙக. ச.

* அல்லது இன்றமுதல்.

3 மத். ஙி. சஙி: உஇ. சஙி. லூக். ஙி. ஙக.

4 மத். உக. உஉ. மாற். ச. ஙஅ. லூக். உஎ. உஉ.

5 யோவா. ஙஎ. உஎ.

6 அப். ஈ. ஙஎ. 2 யோ. உ. ஙக.

7 யோவா. ஙக. உஊ: உஙி. உ: உஉ. எ, ஙஙி, உச.

† அல்லது வாய்நிறையத்தக்கதல்லை.

8 லூக். உஎ. ஈ. யோவா. ஈ.எஙி.

9 யோவா. ஙஉ. ஈ.

10 யோவா. ஙஉ. உக.

11 யோவா.ங. ஙஈ. ச பே. ச. ஙச.

12 யோவா.ங. ச, ட, இ, ஈ.

13 யோவா. ஙஉ. உக.

14 யோவா. எ. ஙச: அ. உக.

Digitized by Google

நிற்கு நீங்கள் வரக்கூடாதென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொழுது உங்களோடும் சொல்லுகிறேன்.

34 [1]நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களிடத்தில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரில் ஒருவர் அன்பாயிருங்கள் என்று புதிதான கற்பனையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

35 நீங்கள் ஒருவரில் ஒருவர் அன்பாய் இருந்தால், [2]நீங்கள் என்னுடைய சீஷர் என்று எல்லாரும் அறிவார்கள் என்றார்.

36 ¶ சீமோன்பேதுரு அவனை நோக்கி, ஆண்டவரே, நீர் எங்கே போகிறீர் என்றான்; அதற்கு இயேசுவானவர் சொன்னது: நான் போகிற இடத்திற்கு நீ இப்பொழுது எனக்குப் பின்செல்லமாட்டாய்; [3]பின்பு எனக்குப் பின் செல்லுவாய் என்றார்.

37 பேதுரு சொன்னது: ஆண்டவரே, நான் என்னத்தினாலே இப்பொழுது உமக்குப் பின்செல்லக்கூடாது? [4]உமக்காக என் சீவனைக் கொடுப்பேன் என்றான்.

38 இயேசுவானவர் சொன்னது: நீ எனக்காக உன் சீவனைக் கொடுப்பாயா? சேவல் கூவுகிறதற்குமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.

14ம. அதிகாரம்.

1 [5]உங்கள் இருதயம் கலங்காதிருப்

இ. பி. கூகு.

1 a யோ. 13. 34. b அ. யோவா. 15. 12, 17. c 1 யோ. 2. 7, 8. 2 a யோ. 13. 35: b. 1 யோ. 3. 14. 3 யோவா. 13. 36. b அ. 2 பே. 1. 14. c பே. 21. 22. 4 மத். 26. 33, 35, 69, மற். 14. 29, 66, லூக். 22. 33, 54, 55, 56. 5 உள. 27. 1. யோவா. 14. 27. b. 16. 22, 33.

பதாக; பராபரனில் நம்பிக்கையாயிருங்கள்; என்னிடத்திலும் நம்பிக்கையாயிருங்கள்.

2 என் பிதாவின் வீட்டிலே அநேகம் வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லி இருப்பேன்; [6]ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக எத்தனம் பண்ணப்போகிறேன்.

3 நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை எத்தனம்பண்ணின பின்பு, [7]நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படிக்கு, [8]திரும்பிவந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.

4 நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள்; வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்று சொன்னபொழுது,

5 ¶ தோமா என்பவன் அவனை நோக்கி, ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியமாட்டோமே, வழியை நாங்கள் எப்படி அறிவோம் என்றான்?

6 இயேசுவானவர் சொன்னது: [9]நானே வழியுமாய்ச் [10]சத்தியமுமாய்ச் [11]சீவனுமாய் இருக்கிறேன்; [12]என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்குச் செல்லமாட்டான்.

7 [13]நீங்கள் என்னை அறிந்தால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்; மேலும் இப்பொழுது நீங்கள் அவனை அறிந்தும் அவனைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார்.

8 பிலிப்பு சொன்னது: ஆண்டவரே நீர் பிதாவை எங்களுக்குக் காண்பிக்கவேண்டும்; அப்பொழுது எங்களுக்குத் திர்ப்தி உண்டாயிருக்கும் என்றான்.

9 அவனுடனே இயேசுவானவர் சொன்னது: பிலிப்பே, நான் இவ்வளவு காலம் உங்களுடனே கூட இருந்தும், நீ என்னை அறியவில்லையா? [14]என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்; அப்படி

2 a யோ. 8. 31: b. 1 யோ. 2. 5. 3 யோவா. 12. 26. a அ. 1 பே. 1. 4. b 1 யோ. 3. 2. c பே. 6. 2. 4 மத். 26. 35. மற். 14. 31. லூக். 22. 33. 5 உள. 27. 1. b. 16. 22, 33. c 1 சாமு. 16. 7. 2 நாளா. 6. 30. சங். 7. 9. 44. 21. எரே. 17. 10. அ. 1. 24. 15. 8. 4. 6 a. 10. 9. 1 தீமோ. 2. 5. 1 யோ. 5. 20. b அ. 4. 12. 7 a. 8. 19. 55. 1 யோ. 2. 23. 8 யோவா. 12. 45. 9 எபி. 2. 10. 10 யோவா. 6. 32: அ. 22. 14. 11 யோவா. 6. 57: 1 கொ. 15. 45. 12 யோவா. 10. 9. 13 யோவா. அ. 8. 19. 14 யோவா. 12. 45. 1 கொ. 15. 8. எபி. 1. 3. 1 யோ. 1. 1.

Digitized by Google

யிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பிக்கவேண்டும்என்றுநீஎப் படிச் சொல்லுகிறாய்?

யஅ [1]நான் பிதாவிலேயும், பிதா என்னிலேயும்இருக்கிறதைநீவிசுவாசியாமல் இருக்கலாமா? [2]நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என்னுலே சொல்லவில்லையே; (என்) கிரியைகளையும் எனக்குள் வாசமாயிருக்கிற பிதாவானவரே செய்துவருகிறார்.

யக நான் பிதாவிலேயும் பிதா என்னிலேயும் இருக்கிறதை நம்புங்கள்; (என் வசனத்தின்நிமித்தம்) நம்பாதிருந்தால், [3]என் கிரியைகளின்நிமித்தமே என்னை நம்புங்கள்.

யஉ [4]மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைப்போலக் கிரியைகளைச் செய்வான், இவைகளிலும் அதிக பெரியவைகளையே செய்வான்; என்னத்தினுலெனில், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறேன்.

யங அதுவுமல்லாமல், [5]நீங்கள் என் நாமத்தினுலே கேட்டுக்கொள்வது எதுவோ, அதைப் பிதாகுமாரனுலே புகழப்படும்பொருட்டு நான் செய்வேன்.

யச நீங்கள் என் நாமத்தினுலே கேட்டுக்கொள்வது எதுவோ, அதை நான் செய்வேன்.

யரு ¶ [6]நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்தால், என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

யசு மேலும் என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்கான [7]சத்திய ஆவியாகிய வேறு தேற்றுகிறவனைப் பிதாவானவர் உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் அவனை வேண்டிக்கொள்வேன்.

யஎ [8]அந்தச் சத்திய ஆவியை [9]உலகத்தார் காணுமலும் அறியாமலும் இருக்கிறபடியால், அவர்கள் அவனை அடைந்துகொள்ளமாட்டார்கள்; [10]அவர் உங்களுடனே கூட இருந்து உங்களுக்குள்ளே இருப்பதால் நீங்கள் அவனை அறிவீர்கள்.

யஅ [11]நான் உங்களைத் திக்கற்றவர்களாக* விடுவதில்லை.

யக [12]உங்களிடத்தில் வருவேன்; சிலகாலத்திற்குப் பின்பு உலகத்தார் என்னைக் காணுர்கள், [13]நீங்கள் என்னைக் காண்பீர்கள், [14]நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்.

உய [15]நான் என் பிதாவிலேயும் நீங்கள் என்னிலேயும் நான் உங்களிலேயும் இருக்கிறதை அந்நாளிலே அறிவீர்கள்.

உக [16]என் கற்பனைகளை அடைந்து அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே, என்னிடத்தில் அன்புகூருகிறவன்; என்னிடத்தில் அன்புகூருகிறவன்மேல் என் பிதா அன்பாயிருப்பார், நானும் அவன்மேல் அன்பாயிருந்து என்னை அவனுக்கு வெளிப்படுத்துவேன் என்று சொன்னபொழுது,

உஉ ¶ ஸ்காரியோத்தல்லாத [17]யூதா என்பவன் அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் உம்மை உலகத்தாருக்கு அல்ல, எங்களுக்கு வெளிப்படுத்துகிறதற்குக் காரணம் என்ன என்றான்.

உங அதற்கு இயேசுவானவர் சொன்னது: [18]ஒருவன் என்னிடத்தில் அன்புகூர்ந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்வான், அவனிடத்தில் என் பிதா அன்பாயிருப்பார்; அல்லாமலும் [19]நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்.

உச என்னிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்; [20]நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதல்ல, என்னை அனுப்பின பிதாவினுடையதாகவே இருக்கின்றது.

வி. பி. ஈஈ.

1 உஅ. வச. போ வர. ப.உஅ: மா. உக, உக.
2 போவர. ஆ. கூ:எ. கூ: அ. உஅ: ஊ. சக.
3 போவர. ஆ. கக: ப. உஅ.
4 மத். உக. உக. மற். கூ. மா. லூக். ப. மா.
5 மத். எ. எ:உக. உஉ. மற். கூ. உச. லூக். கூ. க.போவர.ஆ. எ,கூ: கூ.உக, உச. பார்க். க. ஆ. க போ. க. உஉ: ஆ. ப.
6 உக, உஉ. வச. போவர. ஆ. ப, ஐ. க போ.ஆ. க.
7 போவர. ஆ. உக: ஐ. எ. உரோ. அ. ஆ, உக.
8 போவர. ஆ. உக: ஐ. கூ. க போ. ச. க.
9 க கொரி. உ. ஐ.
10 க போ. உ. உக.
11 மத். உஅ. உஅ.
* அல்லதுதுணை யற்றவர்களாக.
12 போவர. க. உஅ.
13 போவ. ஐ. கூ.
14 க கொரி. ஆ. உஅ.
15 ப. வச. போவர. ப.உஅ:மா. உக, உக, உக.
16 ஆ, உக. வச. க போ. உ. ஆ: ஆ. க.
17 லூக். க. ஐ. கூ.
18 ஆ. வச.
19 க பேது. உ. உச. கொரி. க. உஅ.
20 ம.வச. போ. வ.ஆ.கூ,உஅ: எ.ஐ.கூ:அ. உஅ: ஊ. சக.

Digitized by Google

௨௫ ¶ நான் உங்களுடனே இருக்கையில், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

௨௬ [1]பின்பு பிதாவானவர் என் நாமத்தினாலே அனுப்பும் பரிசுத்த ஆவியாகிய தேற்றுகிறவரே [2]சகலத்தையும் உங்களுக்கு உபதேசம்பண்ணி, நான் உங்களுக்குச் சொன்ன யாவையும் நீங்கள் நினைக்கும்படி செய்வார்.

௨௭ [3]சமாதானத்தை உங்களுக்குக்கொடுத்துப்போகிறேன்; என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குத் தருகிறேன்; உலகத்தார் கொடுக்கிறதுபோல நான் உங்களுக்குக் கொடுக்கமாட்டேன்; [4]உங்கள் இருதயம் கலங்கவும் பயப்படவும் வேண்டுவதில்லை.

௨௮ [5]நான் போய், பின்பு உங்களிடத்திற்குத் திரும்பி வருவேன் என்று நான் உங்களுடனேசொன்னதைக் கேட்டீர்களே; நீங்கள் என்னிடத்தில் அன்புகூர்ந்தீர்களானால், [6]என்னிலும் பிதா பெரியவராகையால், [7]நான் பிதாவினிடத்தில் போகிறதைக்குறித்து நீங்கள் சந்தோஷப்படுவீர்கள்.

௨௯ அது நடக்கும்பொழுது நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, [8]அது நடக்கிறதற்கு முன்னுகிய இப்பொழுது அதை உங்களுக்குச் சொன்னேன்.

௩௦ ¶ இனி நான் மிகவும் உங்களுடனேபேசுவதில்லை; [9]உலகத்தின் பிரபு வருகிறானே, அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.

௩௧ நான் பிதாவினிடத்தில் அன்புகூர்ந்து, [10]அவர் எனக்குக் கட்டளைவிட்டபடியே செய்கிறதை உலகத்தார் அறியும்படிக்கு, (அப்படி நடக்கும்;) எழுந்திருங்கள் இவ்விடம்விட்டுப் போகக்கடவோம்.

௰ரு. அதிகாரம்.

௧ நிஜ திராட்சச்செடியின் உவமையினாலே தமக்கும் தம்முடைய சீஷர்களுக்கும் இருக்கிற அன்பின் ஐக்கியத்தைக் காட்டினது. ௮. உலகத்தின் பகையையும், துன்பத்தையும்குறித்து ஆறுதல் சொன்னது. ௨௬. பரிசுத்தஆவியின் செய்கைகளையும், அப்போஸ்தலர்களுடைய செய்கைகளையும்குறித்துச் சொன்னது.

௧ நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரன்.

௨ [11]என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் ஏடுத்துப்போடுகிறார், கனிகொடுக்கிற கொடி அதிக கனிகளைக் கொடுக்கும்படிக்கு அதைச் சுத்தம்பண்ணுகிறார்.

௩ [12]நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுது சுத்தமாய் இருக்கிறீர்கள்.

௪ என்னில் [13]நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியிலே நிலைத்திராவிட்டால், அது தன்னாலே கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்கமாட்டீர்கள்.

௫ நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், என்னை அன்றி* உங்களால் ஒன்றும் செய்யக்கூடாதபடியினாலே என்னிடத்தில் நிலைகொண்டும் நான் நிலைகொள்ளப்பட்டும் இருக்கிறவன் [14]மிகுந்த கனிகளைக்கொடுப்பான்.

௬ ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், [15]அவன் உலர்ந்துபோன கொடியைப்போல வெளியே போடப்படுவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே போட்டுச் சுட்டெரிக்கிறார்கள்.

௭ நீங்கள் என்னிலேயும் என் வசனங்கள் உங்களிலேயும் நிலைத்திருந்தால் [16]நீங்கள் கேட்டுக்கொள்வது எதுவோ, அது உங்களுக்கு உண்டாகும்.

௮ நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுத்து, [17]எனக்குச் சீஷர்களாவதினாலே [18]என் பிதா புகழப்படுவார்.

Digitized by Google

இ. பி. ௨௫.

1 ௧கொ. ௮ச. ஓர். உச. ௪க. பேரா. ௨இ. ௨க: ௧க. ௭.
2 பேரா. ௨. ௨௨: ௧௨. ௧க: ௧க. ௧க. ௪ பேரா. ௨. ௨௰, ௨௪.
3 பிலி. ச. ௭. கொலே. ௪. ௨இ.
4 க. ௮ச.
5 ௪, ௧அ. ௮ச.
6 ௧௨. ௮ச. பேரா. ௧க. ௧க: ௨௰. ௦ச.
7 பேரா. இ. ௧அ: ௰. ௪௰. பிலி. ௨. ச.
8 பேரா. ௧க. ௧க: ௧க. ச.
9 பேரா. ௧௨. ௪க: ௧க. ௧க.
10 பேரா. ௰. ௧அ. பிலி. ௨. அ. ஏபி. இ. அ.
11 மத். ௨இ. ௧க.
12 பேரா. ௧க. ௰: ௧ச. ௦ள. ஏபே. இ. ௨க. ச பே. ச. ௨௨.
13 கொலே. ச. ௨க. ச பே. ௨. ச.

* அல்லது என்னில் பிரிக்கப்பட்டு, அப். ச. ௧௨.

14 ஓசே. ௧ச. அ. பிலி. ச. ௧க: ச. ௧க.
15 மத். ச. ௰: ஏ. ௧க.
16 ௧க. ச. பேரா. ச. ச. ௧க, ௧ச: ௧க. ௨க.
17 பேரா. அ. ௪க: ௧க. ச இ.
18 மத். இ. ௧க. பிலி. ச. ௧க.

க ¶ பிதா என்னிடத்தில் அன்
புகூர்ந்திருக்கிறதுபோல, நானும்
உங்களிடத்தில் அன்புகூருகிறேற
ன்; என்னுடைய அன்பிலே நி
லைத்திருங்கள்.

ய நான் என் பிதாவின் கற்பனை
களைக் கைக்கொண்டு, அவரு
டைய அன்பிலே நிலைத்திருக்கிற
துபோல, [1]நீங்களும் என் கற்ப
னைகளைக்கைக்கொண்டிருந்தால்,
என்னுடைய அன்பிலே நிலைத்
திருப்பீர்கள்.

யக ¶ உங்களிடத்தில் என்னு
டைய சந்தோஷம் நிலைத்திருக்
கும்படிக்கும், [2]உங்கள் சந்தோ
ஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்,
நான் இவைகளை உங்களுக்குச்
சொன்னேன்.

யஉ [3]நான் உங்களிடத்தில் அன்
புகூர்ந்திருக்கிறதுபோல, நீங்க
ளும் ஒருவரில் ஒருவர் அன்பாய்
இருக்கவேண்டுமென்று கட்டளை
யிடுகிறேன்.

யஊ [4]ஒருவன் தன் சிநேகிதருக்
காகத்தன் பிராணனைக் கொடுக்கு
ம்படியான அன்புக்கு அதிகமான
அன்பு ஒருவரிடத்திலும் இல்லை.

யஎ நான் உங்களுக்குக் கட்ட
ளையிடுகிற யாவையும் நீங்கள்
செய்தால் [5]என்னுடைய சிநேகி
தராய் இருப்பீர்கள்.

யஙு ஊழியக்காரனானவன் தன்
எசமான் செய்கிறதை அறியாதி
ருக்கிறபடியால், இனி நான் உங்
களை ஊழியக்காரர் என்று சொல்
லமாட்டேன்; [6]நான் என் பிதாவி
னிடத்தில் கேள்விப்பட்ட யா
வையும் உங்களுக்கு அறிவித்தப
டியினாலே, நான் உங்களைச் சிநே
கிதரென்று சொல்லுகிறேன்.

யசு [7]நீங்கள் என்னைத் தெரிந்
துகொள்ளவில்லை; [8]நீங்கள் என்
னுடைய நாமத்தினாலே பிதாவா
னவரிடத்தில் கேட்டுக்கொள்வது
எதுவோ, அதை அவர் உங்களுக்
குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள்
புறப்பட்டுக் கனிகளைக் கொடுக்
கும்படிக்கும் உங்கள் கனிகள் நி
லைத்திருக்கும்படிக்கும், [9]காரண
உங்களைத் தெரிந்துகொண்டு ஏற்
படுத்தினேன்.

யள [10]நீங்கள் ஒருவரில் ஒரு
வர் அன்பாயிருக்கவேண்டுமென்
றே உங்களுக்குக் கட்டளையிடுகி
றேன்.

யஅ ¶ [11]உலகத்தார் உங்களைப் ப
கைக்கும்பொழுது அவர்கள் உங்
களுக்குமுன்னே என்னைப் ப
கைத்தார்கள் என்று நினைக்கக்
கடவீர்கள்.

யக [12]நீங்கள் உலகத்தாராயிருக்
தால் உலகத்தார் தங்களைச் சேர்ந்
தவர்களாகிய (உங்களை) நே
கிப்பார்கள்; [13]நீங்கள் உலகத்தா
ராயிராமல் என்னாலே உலகத்தில்
இருந்து தெரிந்துகொள்ளப்பட்ட
வர்களாய் இருக்கிறபடியினாலே,
உலகத்தார் உங்களைப் பகைக்கி
றார்கள்.

உய [14]எஜமானுக்கு மேற்பட்டவன் அல்ல
வென்று நான் உங்களுக்குச் சொ
ன்ன வசனத்தை நினைத்துக்கொள்
ளுங்கள்; அவர்கள் என்னைத் துன்
பப்படுத்தினதுபோல, உங்களை
யும் துன்பப்படுத்துவார்கள்; [15]அ
வர்கள் என் வசனத்தைக் கைக்
கொண்டதுபோல, உங்களுடை
யதையும் கைக்கொள்ளுவார்கள்.

உக என்னை அனுப்பினவரை
அறியாதபடியினாலே [16]அவர்கள்
என் நாமத்தினிமித்தமே இப்ப
டிப்பட்ட யாவையும் உங்களுக்
குச் செய்வார்கள்.

உஉ [17]நான் வந்து அவர்களுக்
குச் சொல்லாதிருந்தேனானால், அ
வர்களுக்குப் பாவம் உண்டாயி
ருக்கமாட்டாது; [18]இப்பொழுது
அவர்கள் தங்கள் பாவத்திற்காகப்
போக்குச்சொல்ல * இடமில்லை.

உங [19]என்னைப் பகைக்கிறவன்
என் பிதாவையும் பகைக்கிறான்.

உச [20]மற்றொருவன் செய்யாத
கிரியைகளை நான் அவர்களுக்

மி. பி. ஙங.

1 போள. ஙச. ஙஅ, உக, உஉ.
2 போள. ஙக. உச: ஙஎ. ஙங. க போ. க. ச.
3 போள. ஙக. உச. க தெச.ச. க. க பே. ச. அ. க யோ. க. ஙக: ச. உங.
4 பே. ஙு. ஙச, ஙஇ. உரோ. இ. எ, அ. எபே.இ. உ.கபோ.க.ஙக.
5 போள. ஙச. ஙஇ, உக. ஙத். ஙஉ. இக.
6 க மே. ஙஅ. ஙள. போள. ஙள. உக. அப். உஙு. உள.
7 போள.க.எ: ஙக.ஙஅ. கயோ. ச. ஙு, ஙக.
8 ஙத். உஅ. ஙக. மாற். ஙக. ஙஇ. கொலோ. க.க.
9 எ. எச. போள. ஙச. ஙச. ஙக.
10 ஙஉ. எச.
11 க போ. க. க, ஙக.
12 க போ. ச.இ.
13 போள. ஙள. ஙச.
14 ஙத். ஙு. உச. லூக். க. சஙு. போள.ஙக.ஙக.
15 எசே. க. எ.
16 ஙத். ஙு. உஉ: உச.க.போள. ஙக. க.
17 போள. க. ச.
18 உரோ. க.உஙு. யாக். ச. ஙள.
* அல்லது பாவத்தை மறைக்க.
19 க போ.உ.உக.
20 போள.க.உ: எ. உக: க. கஉ.

Digitized by Google

குள்ளே செய்யாதிருந்தேனுனால், அவர்களுக்குப் பாவம் உண்டாயிருக்கமாட்டாது; அவைகளை அவர்கள் கண்டிருந்தும், என்னையும் என்பிதாவையும்பகைக்கிறார்கள்.

உடு [1]நிமித்தம் இல்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறத்தக்கதாக (இப்படிச் செய்கிறார்கள்).

உசு ¶ பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்படுபவருமாய், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாய் இருக்கிற [2]சத்திய ஆவியாகிய தேற்றுகிறவர் வரும்பொழுது [3]அவர் என்னைக் குறித்துச் சாட்சிகொடுப்பார்.

உச [4]நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் [5]சாட்சிகொடுப்பீர்கள்.

௰ஏ. அதிகாரம்.

க. நித்ய நம்முடைய ரெஷ்களுக்கு வரும் துன்பத்தைக்குறித்து முதலாகப் பரிசுத்தஆவியின் ஏவுதலைபும், தாம் உயிர்த்தெழுந்த பாமன்டனத்துக்கு ஏறுதலையும் முன் அறிவித்தது. உக. நம்முடைய நாமத்தில் செய்யப்படும் விண்ணப்பம் பிதாவிடம் அங்கிகரிக்கப்படுமென்ற நிருவாகத்தைபற்றி, கக. அவர்கள் தமக்குள் சமாதானமும் உயர்திருலே துன்பமும் அடைவார்கள் என்று சொன்னது.

[6]நீங்கள் வழுவாதபடிக்கு இவைகளை உங்களுடனேசொன்னேன்.

உ [7]அவர்கள் உங்களைச் செபஆலயத்திற்குப் புறம்பாக்குவார்கள்; [8]அதுவுமல்லாமல் உங்களைக் கொலைசெய்கிறவன் எவனோ, அவன் பராபரனுக்கு ஊழியனை செய்கிறேன் என்று நினைக்கும் காலம் வரும்.

க [9]அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே இப்படிப்பட்டவைகளை உங்களுக்குச் செய்வார்கள்.

ச அந்தக் காலம் வரும்பொழுது [10]நான் இப்பொழுது உங்களுக்குச் சொன்னதை நீங்கள் நினைக்கும்படிக்கு, இவைகளை உங்களுடனே சொன்னேன்; [11]நான்தானே உங்களுடனேகூட இருந்தபடியினாலே, நான் இவைகளை ஆரம்பத்திலே உங்களுடனே சொல்லவில்லை.

ஞ [12]இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்; எங்கே போகிறீர் என்று உங்களில் ஒருவனும் என்னிடத்தில் கேளாமல்,

சு நான் இவைகளை உங்களுக்குச் சொன்னதினாலே [13]துக்கம் நிறைந்த இருதயமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள்.

எ ¶ நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும்; எப்படியெனில் நான் போகாதிருந்தால் [14]அந்தத் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வாரார்; [15]போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.

அ அவர் வந்து, பாவத்தையும் நீதியையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து உலகத்தாருக்கு மெய்யறிவைக் கொடுப்பார்.*

கூ [16]அவர்கள் என்னிடத்தில் விசுவாசமாய் இராதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,

ஏ [17]நீங்கள் இனி என்னைக் காணுதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே [18]நீதியைக்குறித்தும்,

ஐக [19]இவ்வுலகத்தின் பிரபு நியாயத்தீர்ப்பு அடைந்தபடியினாலே [20]நியாயத்தீர்ப்பைக்குறித்துமே அறிவைக் கொடுப்பார்.

ஐஉ ¶ நான் இன்னும் அநேகமான காரியங்களை உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது; [21]நீங்கள் அவைகளை இப்பொழுது சகிக்கமாட்டீர்கள்.

ஐஙு [22]சத்திய ஆவியானவர் வரும்பொழுது [23]சகல சத்தியத்திலேயும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம்கேள்விப்படுபவைகள் எவைகளோ அவைகளைப் பேசி இனி

* அல்லது கடிந்துகொள்ளுவார்.

1 சங். ஙஙி. ஙக: கக. ச.
2 யோ. உ.ச.சக, ரோமா.ம.ஙக, உக: ஙக.எ,கக. அப். உ. கக.
3 க ரோ. ஞ. கு.
4 யோ. க. உ. க ரோ. கக,உ.
5 யோ. உ.ச.சஅ. அப்.க. அ, உக, உஉ: உ. கஉ: க. ஙஞ: ச. உஙி. கக: ஞ. கஉ: ஙி. கக: ஙக. கக. க பே. ஞ. க, உ பே. க. ஙக.
6 மத். ஙக. க: உச.ஙி:உக.கக.
7 ரோமா. க. உஉ, கச: ஙஉ. சஉ.
8 அப். அ. க: கு. க:உக.கு,ஙி,ஙச.
9 ரோமா. ஙஞ. உக. உரோ. ஙி, உ.கொரி.உ.அ. கதிமோ. க. ஙக.
10 ரோமா. ஙக. ஙக: ஙச. உக.
11 மத். கூ ஙஞ.
12 ஙி, ஙக. மச. ரோமா. எ.கக: ஙக.க: ஙச.உஅ.
13 உஉ. மச. ரோமா. ஙச. க.
14 ரோமா. எ. கக: ஙச. ஙக, உக: ஙஞ. உக.
15 அப். உ. கக. எபே. ச. அ.
16 அப். உ.உஉ–கக.
17 அப். உ. கஉ.
18 ரோமா. க. ஙச: ஞ. கஉ
19 அப்.உக. ஙஅ.
20 யோக். க. ஙஅ. ரோமா. ஙஉ. கக. எபே. உ. உ.கொலோ.உ. ஙஞ. எபி.உ.ஙச.
21 மத். ச. கக. க கொரி. க. உ. எபி. ஞ. ஙஉ
22 ரோமா. ஙச. ஙக: ஙஞ. உக.
23 ரோமா. ஙச. உக. க பே. உ. உஙி, உக.

Digitized by Google

வரும் காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார்.

யச அவர் என்னுடையதிலே எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால், அவர் என்னுடைய மகிமையை விளங்கப்பண்ணுவார்.

யஉ [1]பிதாவினுடையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பார் என்று சொன்னேன்.

யசு [2]நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே, [3]சற்றுக்காலமானபின்பு நீங்கள் என்னைக் காணுமல் இருப்பீர்கள்; மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்றும் அவர் சொன்னபொழுது,

யஎ ¶ அவருடைய சீஷரில் சிலர் தங்களுக்குள்ளே பேசிக்கொண்டதாவது: சற்றுக்காலமானபின்பு என்னைக் காணுமல் இருப்பீர்கள் என்றும், மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்றும், நான் பிதாவினிடத்தில் போகிறேன் என்றும் அவர் நம்மிடமே சொன்னதின் கருத்தென்ன?

யஅ சற்றுக்காலமென்று அவர் சொன்னதின் கருத்தென்ன? அவர் சொன்னது நமக்கு விளங்கவில்லையே என்றார்கள்.

யக பின்னும் தம்மிடத்தில் அவர்கள் விஷய விரும்புகிறதை இயேசுவானவர் அறிந்து அவர்களுடனே சொன்னது: சற்றுக்காலமானபின்பு என்னைக் காணுதிருப்பீர்கள்; மறுபடியும் சற்றுக்காலமானபின்பு என்னைக் காண்பீர்கள் என்று நான் சொன்னதைக் குறித்தா நீங்கள் உங்களுக்குள்ளே விசாரிக்கிறீர்கள்?

உய மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகத்தார் சந்தோஷப்படுவார்கள்;

கி. பி. ஈஈ.

1 மத். ய்க. உச. போவா. க.கஇ: ய்க.க: ய்ச.ம.

2 உஅ.ஏச. போவா. ய்க. க.

3 ம. வச. போ. வா. எ. கக: ய்க. கக: ய்ச. ய்ஈ.

4 ஏசா. உக. ய்எ.

5 க. ஏச.

6 லூக். உச. சக, ஐஉ. போவா. ய்ச.க, உஎ: உம். உம். அப். உ. சக: ய்க. ஐஉ. க பே. க. அ.

7 மத். எ.எ. போவா. ய்ச. ய்க: ய்இ. ய்க.

8 போவா. ய்இ. ய்க.

* அல்லது பழமொழிகளாய்.

† அல்லது பழமொழிகளாய்.

9 உக. ஏச.

10 போவா. ய்ச. உக, உக.

நீங்கள் துக்கப்படுவீர்கள், உங்கள் துக்கம் சந்தோஷமாகும்.

உக [4]கருப்பஸ்திரியானவளுக்குப் பிரசவகாலம் வந்தபொழுது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளை பெற்றபின்பு ஒரு மனிதன் உலகத்தில் பிறந்ததினாலே வருகிற சந்தோஷத்தின் நிமித்தம் அந்த உபத்திரவத்தை நினையாள்.

உஉ அதுபோல [5]நீங்களும் இப்பொழுது துக்கம் அடைந்திருக்கிறீர்கள்; நான் மறுபடியும் உங்களைக் காண்பேன், [6]அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்; அல்லாமலும் உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து எடுத்துப்போடமாட்டான்.

உஊ அந்த நாளிலே நீங்கள் ஒன்றையும் என்னிடத்தில் கேட்கமாட்டீர்கள்; [7]மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார்.

உச இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றையும் கேட்கவில்லை; கேட்டுக்கொள்ளுங்கள், [8]அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படிக்குப் பெற்றுக்கொள்வீர்கள்.

உஙி ¶ இவைகளை நான் உவமைகளாய்* உங்களுடனே பேசினேன்; காலம் வரும், அப்பொழுது நான் பிதாவைக்குறித்து உவமைகளாய்† உங்களுடனே பேசாமல், வெளிப்படையாகவே உங்களுக்கு அறிவைக்கொடுப்பேன்.

உசு [9]அந்த நாளிலே நீங்கள் என் நாமத்தினாலே விண்ணப்பம் பண்ணுவீர்கள்; உங்களுக்குறித்து நான் பிதாவை நோக்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன் என்று உங்களுடனே சொல்லமாட்டேன்.

உஎ [10]நீங்கள் என்னைச் சிநேகித்து, என்னைப் பராபரனிடத்திலிருந்து வந்தவன் என்று விசுவா

Digitized by Google

சித்திருக்கிறபடியினாலே, [1]பிதாவானவர் தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.

உஅ [2]நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன்; மறுபடியும் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்று சொன்னபொழுது,

உக ¶ அவருடைய சீஷர் அவரை நோக்கி, இப்பொழுது நீர் *உவமை இல்லாமல் வெளிப்படையாய்ப் பேசுகிறீர்.

உஎ [3]நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர் என்றும், ஒருவன் உம்மிடத்தில் விசாரிக்கிறது உமக்கு வேண்டுவதில்லை என்றும் இப்பொழுது அறிந்திருக்கிறோம்; [4]இதினாலே நீர் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசிக்கிறோம் என்றார்கள்.

உக அதற்கு இயேசுவானவர் சொன்னது: இப்பொழுது விசுவாசிக்கிறீர்கள்; கேளுங்கள்,

உஉ [5]நீங்கள் என்னைத் தனியே வைத்துச் சிதறி அவரவரிடத்திற்குப்† போகும் நேரம் வரும்; [6]அது இப்பொழுது வந்திருக்கின்றது; நான் தனித்திருேன்; [7]பிதாவானவர் என்னுடனே இருக்கிறார்.

உஊ [8]என்னாலே நீங்கள் சமாதானமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, இவைகளை உங்களுடனே சொன்னேன்.

உஎ [9]இவ்வுலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டாயிருக்கும்; [10]ஆனாலும் தயிரியமாயிருங்கள்; [11]நானே உலகத்தைச் செயித்தேன் என்றார்.

௰எ. அதிகாரம்.

உ. பிதாவை நோக்கித் தம்மை மகிமைப்படுத்தவும், க. அப்போஸ்தலர்களை, ஙக. ஒருமையிலும், ஙஉ. சத்தியத்திலும் காக்கவும், ஙஎ. அவர்களோடே மற்றெல்லா விசுவாசிகளையும் தம்முடனேகூட மோட்சத்தில் மகிமைப்படுத்தவும் வேண்டிக்கொண்டது.

இவைகளை இயேசுவானவர் சொன்னபின்பு, அவர் தம்முடைய கண்களை வானத்திற்கு நேராக உயர்த்தித் திருவுளம்பற்றினதாவது:

உ [12]பிதாவே, நேரம் வந்தது; [13]நீர் உம்முடைய குமாரனுக்குக் கொடுத்த யாவருக்கும் அவன் நித்தியசீவனைக் கொடுக்கும்பொருட்டாய், [14]மனிதர் யாவர்மேலும் அவனுக்கு அதிகாரம் கொடுத்தபடியே உம்முடைய குமாரன் உம்முடைய மகிமையை விளக்கும்படிக்கு நீர் அவனை மகிமைப்படுத்துவீராக.

ஊ [15]ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் [16]அனுப்பின இயேசுக்கிறிஸ்துவையும் [17]அறிந்துகொள்ளுகிறதே நித்தியசீவன்.

ச [18] பூமியிலே நான் உம்முடையமகிமையைவிளக்கினேன், [19]நான் செய்யும்படிக்கு நீர் கொடுத்த கிரியையை [20]முடித்தேன்.

ரு இப்பொழுது பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே [21]உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த உம்முடைய மகிமையினாலே என்னை மகிமைப்படுத்தும்.

சு ¶ நீர் [22]உலகத்தாரில் எடுத்து எனக்குக் கொடுத்த மனிதருக்கு [23]உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்; அவர்கள் உம்முடையவர்களாய் இருந்தார்கள்; அவர்களை எனக்கு ஒப்புக்கொடுத்தீர்; அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்.

எ நீர் எனக்குக் கொடுத்த யாவும் உம்மாலே உண்டாயின என்று அவர்கள் இப்பொழுது அறிந்துகொண்டார்கள்.

அ அல்லாமலும், [24]நீர் எனக்குக் கொடுத்த வசனங்களை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்; [25]அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, என்னை உம்மிடத்திலிருந்து புறப்பட்டு வந்தவன் என்று மெய்

கி. பி. ஈஈ.

1 ஊ. ஙச. யோ ஙர. உ. ஙக: ஙஈ. அ.
2 யோஙர. ஙக. உ.
* அல்லது பழமொழி.
3 யோஙர. ஙக. ஙஈ.
4 உஎ. ஙச. யோஙர. ஙஈ. அ.
5 மத். உக. ஈக. மாற். ஙச. உஎ.
† அல்லதுசொத்தத்துக்கு.
6 யோஙர.உ.ஙஈ.
7 யோஙர. அ. உக: ஙச.ஙஈ,ஙக.
8 எசா. .க ஈ. யோஙர. ஙச. உஎ. உரோ. ஙஎ. ஈ. எபே. உ. ஙச. கொலோ. ஈ. உஙஈ.
9 யோஙர. ஙஇ. ஙக, உஙஈ, உஈ. உதிமோ. ஈ.ஙஉ.
10 யோஙர. ஙச. ஈ.
11 உரோ.அ.ஈஎ. ஈ யோ. ச. ச: இ. ச.
12 யோஙர. ஙஉ. உஈ: ஙக. ஈஉ.
13 தானி. எ. ஙச. மத். ஙக. உஎ: உஅ. ஙஅ. யோஙர. ஈ. ஈஇ: இ. உஎ. ஈ கொரி. ஙஇ. உஇ, உஎ. பிலி. உ.ஙஎபி. உ. அ.
14 ஈஊ,உச.ஙச. யோஙர. ஈ.ஈஎ.
15 யோஙர.ஈ.ஈச: இ. ஈஈ, ஈஎ: ஈ. உஈ, இஎ: எ. உஈ: ஙஎ. ஈக: ஙச. ச.ஙஉ.
16 ஈ கொரி. அ. ச. ஈ தெச. ஈ. ஈ.
17 எசா. இக.ஙக. எரே. ஈ. உச.
18 யோஙர. ஙஈ. ஈக: ஙச. ஙஈ.
19 யோஙர.ச.ஈச: இ. ஈக: ஈ. ஈ: ஙஈ. ஈஇ.
20 யோஙர. ஙச. ஈக: ஙஇ. ஙஎ.

21 யோஙர. ஈ.ஈ,உ: ஙஎ.ஈஙஎ: ஙச.ஈ. பிலி. உ.ஈ. கொலோ. ஈ.ஙஇ,ஙஎ. எபி. ஈ.ஈ,ஙஎ.—22 உ.ஈ.ஙச. சங். உஉ.உஉ 23 உஈ,ஈ.ஙச.யோஙர.ஈ.ஈச,ஈக:ஙஎ.உஈ:ஙஇ.ஙக.—24 யோஙர.அ.உஅ:ஙஉ.ச.ஙஈ:ஙச.ஙஎ.—25 உஇ.ஙச.யோஙர.ஙக.உச,ஙஎ.

Digitized by Google

யாய் அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள்.

கூ நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; [1]உலகத்தாருக்காக அல்ல, நீர் எனக்குக் கொடுத்தவர்கள் உம்முடையவர்களானபடியால் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்.

ய என்னுடைய யாவும் உம்முடையவைகள் [2]உம்முடையவைகள் என்னுடையவைகளாயிருக்கின்றன; என்னுடைய மகிமை அவர்களுக்குள்ளே விளங்கியிருக்கின்றது.

யக [3]நான் உலகத்தில் இனி இரேன்; அவர்கள் உலகத்திலே இருப்பார்கள், நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; பரிசுத்தமுள்ள பிதாவே, [4]நீர் எனக்குக் கொடுத்தவர்கள் [5]நம்மைப்போல [6]ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொள்ளும்.

யஉ இவ்வுலகத்திலே நான் அவர்களுடனேகூட இருக்கையில், [7]அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குக் கொடுத்தவர்களைக் காத்துக்கொண்டு வந்தேன்; [8]வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, [9]கேட்டின் மகன் கெட்டுப்போனானே அல்லாமல், [10]அவர்களில் ஒருவனாயினும் கெட்டுப்போகவில்லை.

யஊ இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; இவர்கள் என்னில் நிறைவாய்ச் சந்தோஷப்படும்படிக்கு இவ்வுலகத்திலே இவைகளைச் சொல்லுகிறேன்.

யச ¶ [11]நான் உம்முடைய வசனத்தை இவர்களுக்குக் கொடுத்தேன்; மேலும் [12]நான் இவ்வுலகத்தின் தன்மை இல்லாதவனாயிருக்கிறதுபோல, அவர்களும் இவ்வுலகத்தின் தன்மை இல்லாதவர்களாய் இருக்கிறபடியினாலே [13]உலகத்தார் அவர்களைப் பகைக்கிறார்கள்.

யடு நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி அல்ல, [14]அவர்களைப் பொல்லாங்கிலிருந்து காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

யசு [15]நான் உலகத்தான் அல்லாதவனாயிருக்கிறதுபோல, அவர்களும் இவ்வுலகத்தார் அல்ல.

யஎ [16]உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பிரதிஷ்டையாக்கும், [17]உம்முடைய வசனமே சத்தியம்.

யஅ [18]நீர் என்னை இவ்வுலகத்தில் அனுப்பினதுபோல், நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.

யக [19]அல்லாமலும் அவர்களும் சத்தியமாய்ப் *பிரதிஷ்டையாக்கப்பட்டவர்களாய் இருக்கும்படிக்கு அவர்களுக்காக நான் என்னைத்தானே பிரதிஷ்டையாக்குகிறேன்.

உ ¶ அல்லாமலும் நான் இவர்களுக்காகமாத்திரம் அல்ல, இவர்களுடைய போதிப்பினாலே என்னிடத்தில் விசுவாசமாகும் பேர்களுக்காகவும், [20]எல்லாரும் ஒன்றாயிருக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

உக ஆ பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகத்தார் விசுவாசிக்கத்தக்கதாக, [21]நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, அவர்களும் நம்மிலே ஒன்றாயிருக்கும்படிக்கே (வேண்டிக்கொள்ளுகிறேன்).

உஉ அல்லாமலும் [22]நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் எனக்குக் கொடுத்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.

உஊ [23]அவர்கள் ஒருமைப்பாட்டிலே நிறைந்தவர்களாயிருக்கும்படிக்கும், நீர் என்னை அனுப்பினதையும் நீர் என்னிடத்தில் அன்பு கூருகிறதுபோல அவர்களிடத்தி

வி. பி. ஊஊ.

1 ச போ. இ.செ.
2 போவா. உச. ஐ.
3 போவா. ஊ. ச: ஊ. உஅ.
4 ச பே. ச. இ. யூசா. க.
5 உச. வச.
6 போவா. இ.ஐ.
7 போவா. க. உச: இ. உஅ. எபி. உ. ஊ.
8 சங். சக. அ. அப். க. உஐ.
9 போன. க. எஏ: ஊ. ஐஅ.
10 போவா. ஐஅ. க. ச போ. உ. ஊக.
11 அ. வச.
12 போவா. அ. உக.ஊக.வச.
13 போவா. ஐஇ. ஐஅ,ஐக.ச போ. க. ஊ.
14 மத். க. ஊ. கலா. க. ச. உ தெச. க. க. ச போ.இ.ஐஅ.
15 ஐச. வச.
16 போவா. ஐஇ. க. அப். ஐஇ. க. எபே. இ: உக. ச பே. க. உஉ.
17 உ சாமு. எ. உஅ. சங். சஙூ. சசஉ, சஙூ. போவா. அ.சஏ.
18 போவா. உஏ. உக.
19 ச கொரி. க. உ, கஏ. ச தெச. ச.எ.எபி. இ. இ.
* அல்லது சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய்.
20 ஐக, உஉ, உக. வச. போவா. இ. ஐக. உரோ. ஐஉ. இ. கலா. க. உஅ.
21 போவா. இ. ஐஅ: ஐச. ஐக.
22 போவா. ஐச. உஏ. ச போ. க. க: க. உச.
23 கொலோ. க. ஐச.

Digitized by Google

லும் அன்புகூருகிறதையும் உலகத்தார் அறியும்படிக்கும், நான் அவர்களிலேயும் நீர் என்னிலேயும் இருக்கவேண்டும்.

உச ¶ [1]பிதாவே, [2]உலகம் தோன்றின காலத்திற்குமுன்னே, நீர் என்னிடத்தில் அன்புகூர்ந்தபடியினாலே, எனக்குக் கொடுத்த என்னுடையமகிமையைநீர்எனக்குக் கொடுத்தவர்கள் காணும்படிக்கு, நான் இருக்கும் இடம் எங்கேயோ, அங்கே அவர்களும் என்னோடேகூட இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

உஙி நீதியுள்ள பிதாவே, [3]உலகத்தார் உம்மை அறியவில்லை; [4]நான் உம்மை அறிந்திருக்கிறேன். அல்லாமலும் [5]நீர் என்னை அனுப்பினதை இவர்கள் அறிந்திருக்கிறார்கள்.

உசு அன்றியும் [6]நீர் என்னிடத்தில் வைத்திருக்கிற அன்பு இவர்களிலே இருக்கும்படிக்கும், நான் இவர்களிலே இருக்கும்படிக்கும், [7]உம்முடைய நாமத்தை இவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; பின்னும் அப்படியே தெரியப்படுத்துவேன் என்றார்.

ஙஅ. அதிகாரம்.

உ யூதா இயேசுவைக் காட்டிக்கொடுத்தது. க. சேவல் தலைமேல் விழுந்தது. ம. பேதுரு மல்குசின் காதை வெட்டினது. ஙஉ. அன்று. சாப்பா என்பவளுக்குமுன்பாக இயேசு கொண்டுபோகப்பட்டது. ஙஙி பேதுரு மறுதலித்தது. ஙக இயேசுவானவர் சாப்பாவுக்குமுன்பாகச் சோதிக்கப்பட்டது. ஙஎ. அவர் பிலாத்துக்குமுன்பாக குற்றஞ் சாற்றப்பட்டது. ஙக. தாம் தம்முடைய இராச்சியத்தைக்குறித்துச் சொல்லியது சம. யூதர்கள் பாவனை விடுதலையாக்கும்படி கேட்டுக்கொண்டது.

இயேசுவானவர் இவைகளைச் சொன்னபின்பு [8]அவர் தம்முடைய சீஷருடனேகூடக் [9]கீதிரோன் என்னும் ஓற்றுக்கு அப்புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது; அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.

உ [10]இயேசுவானவர் தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி அங்கே கூடிவந்திருந்தபடியினாலே, அவனைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அந்த இடத்தை அறிந்தான்.

ஙு [11]ஆதலால் யூதாவானவன் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசாரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழியக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவத்திகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்குப் போனான்.

ச ¶ அப்பொழுது இயேசுவானவர் தமதுமேல்வரும் யாவையும் அறிந்து புறப்பட்டு அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.

ஙி அதற்கு அவர்கள் நாசரேத்தூராகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்; இயேசுவானவர், நானே அவன் என்றார்; அவனைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அவர்களுடனேகூட நின்றான்.

ஙு நானே அவன் என்று அவர் சொன்னபொழுது, அவர்கள் பின்னிட்டுத்தரையிலேவிழுந்தார்கள்.

எ பின்பு அவர் மறுபடியும் அவர்களை நோக்கி, யாரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார்; நாசரேத்தூராகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.

அ இயேசுவானவர் சொன்னது: நானே அவன் என்று உங்களுடனே சொன்னேனே, நீங்கள் என்னைத் தேடினீர்களானால் இவர்களை விட்டுவிடுங்கள் என்றார்.

க அதினாலே, [12]நீர் எனக்குக் கொடுத்தவர்களில் ஒருவனையாயினும் நான் இழக்கவில்லை என்று அவர் சொல்லிய வசனம் நிறைவேறிற்று.

ஙி ¶ [13]அப்பொழுது சீமோன் பேதுரு தன்னிடத்தில் இருக்கிற கத்தியை உருவிப் பிரதான ஆசாரியனுடையவேலைக்காரனுடைய வலதுகாதற வெட்டினான், அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பேர்.

Digitized by Google

கி. பி. ஈஈ.

1 பேரா. ஙஉ. உச: ஙச. க. செப். ச. ஙன.
2 ஓ. ஙச.
3 பேரா. ஙஓ. உச: ஙஉ.
4 பேரா. ஙன. உக: அ. ஙஎ: உ. ஙஓ.
5 அ. ஙச. பேரா. ஙக. ஙஉ. உன.
6 பேரா. ஙஎ. ஙக.
7 க. ஙச. பேரா. ஙஓ. ஙஓ.
8 மத். உக: உக. மற். ஙச. ஙஉ. லூக். உஉ. உக.
9 உ சாமு. ஙஎ. உன.
10 லூக். உக. உச: உஉ. ஙஉ.
11 மத். உக. உச. மற். ஙச. ஙக. லூக். உஉ. உச. அப். க. ஙன.
12 பேரா. ஙன. ஙஉ.
13 மத். உக. ஙஉ. மற். ஙச. ஙக. லூக். உஉ. உச, ஙஉ.

யக இயேசுவானவர் பேதுருவை நோக்கி, கத்தியை உறையிலே போடு, [1]பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணுமல் இருப்பேனோ என்றார்.

யஉ ¶ பின்பு போர்ச்சேவகரும், ஆயிரம் சேனைக்குத் தலைவனும், யூதர்களுடைய ஊழியக்காரரும் இயேசுவைப் பிடித்து, அவனைக் கட்டி,

யஊ [2]முதலாவது அன்னை என்பவனிடத்தில் [3]கொண்டுபோனார்கள்; அந்த அன்னை அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனுகிய காய்பாவென்பவனுக்கு மாமனுயிருந்தான். *

யசு [4]ஒரே மனிதன் சனங்களுக்குப் பதிலாக மடிந்துபோனால், நலமாயிருக்கும் என்று யூதருக்கு ஆலோசனை சொன்னவன் அந்தக் காய்பாவே.

யஙு ¶ [5]சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்குப் பின்சென்றார்கள்; அல்லாமலும் அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமுள்ளவனுய், இயேசுவுடனேகூடப் பிரதான ஆசாரியனுடைய மாளிகைக்குள் பிரவேசித்தான்.

யசு [6]பேதுரு வெளிவாசற்படியிலே நின்றான்; ஆதலால் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமுள்ள அந்த மற்றச் சீஷன் வெளியே போய், வாசலைக் காக்கிற வளுடனே சொல்லி, பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டான்.

யஎ அப்பொழுது வாசலைக் காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி, நீயும் அந்த மனிதனுடைய சீஷரில் ஒருவன் அல்லவா என்றாள்; அவன், நான் அப்படிப்பட்டவன் அல்ல என்றான்.

யஅ குளிர்ச்சியான காலமானபடியினுலே வேலைக்காரரும் ஊழியக்காரரும் நெருப்பு உண்டாக்கி நின்று குளிர்காய்ந்தார்கள்; அவர்களுடனே பேதுருவும் நின்று குளிர்காய்ந்தான்.

கி. பி. ஈஈ.

1 மத். உஅ. உஉ: உக. ஈக, சஉ.
2 லூக். ஆ. உ.
3 மத். உக. இ.
* அன்னு மிகில் தலைக் கட்டப்பட்டவராக பிரதான ஆசாரி பதவிய காய்பாவண்டைக்கு அனுப்பினுன்; உச. வச.
4 Comp. ய. ஙஅ.
5 மத். உக. இஅ. மாற். ய. சே. லூக். உஉ. சே.
6 மத். உக. ஈக. மாற். ய. ஈக. லூக். உஉ. சே.
7 மத். உக. ஙஇ. லூக். ச. ஙஇ. Comp. எ. ய, உக, உஅ: அ. உ
8 எசே. உஅ. உ. அப். உக. உ.
† அல்லது தடியினுல் அடித்தான்.
9 மத். உக. இஎ.
10 மத். உக. ஈக, ஈக. மாற். ய. ஈக. லூக். உஉ. ஙஅ.

யக ¶ பிரதான ஆசாரியன் இயேசுவானவருடைய சீஷரையும் போதகத்தையும் குறித்து அவரிடத்தில் விசாரித்தான்.

உய அவனுடனே இயேசுவானவர் சொன்னதாவது: [7]அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசாமல் வெளியரங்கமாய் லோகத்துடனே பேசினேன்; செபாலயத்திலேயும், யூதர்கள் எல்லாரும் கூடிவருகிற தேவாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசம்பண்ணினேன்.

உக என்னத்திற்கு நீர் என்னிடத்தில் விசாரிக்கிறீர்? எனக்குச் செவிகொடுத்தவர்களுக்கு நான் சொல்லியவைகளைக்குறித்து அவர்களிடத்திலே விசாரிப்பீராக; நான் பேசினவைகளை அறிந்திருக்கிறார்களே என்றார்.

உஉ இப்படி அவர் சொன்னபொழுது, சமீபமாய் நின்ற ஊழியக்காரரில் ஒருவன் பிரதான ஆசாரியனுக்கு இப்படி மாறுத்தரவு சொல்லலாமா என்று சொல்லி, [8]இயேசுவானவரை ஒரு அடி அடித்தான்†; அவனுடனே இயேசுவானவர் சொன்னது:

உஊ நான் தகாதவிதமாய்ச் சொன்னேனுனுல், தகாததாய் இருக்கிறதை ஒப்புவி, நான் தகுதியாய்ச் சொல்லியிருக்க என்னத்தினுலே என்னை அடிக்கிறாய் என்றார்.

உச [9]அன்னு என்பவன் கட்டப்பட்டவரான அவனைப் பிரதான ஆசாரியனை காய்பாவினிடத்திற்கு அனுப்பியிருந்தான்.

உஙு ¶ சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்தான்; [10]அப்பொழுது சிலர் அவனை நோக்கி, நீயும் அவனுடைய சீஷரில் ஒருவன் அல்லவா என்றார்கள்; அதற்கு அவன், நான் அல்லவென்று மறுதலித்தான்.

உசு பின்பு பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரில் ஒருவனுமாய்ப் பேதுருவினுலே காதறுவெட்டப்பட்டவனுக்கு இனத்

Digitized by Google

னுமாய் இருந்தவன் அவனை நோக்கி, நான் உன்னை அவரோ டுகூடத் தோட்டத்திலே காண வில்லையா என்றான்.

உச அப்பொழுது பேதுரு மறு படியும் மறுதலித்தான்; [1]உடனே சேவல் கூவிற்று.

உஅ ¶ விடியற்காலமானபொ ழுது அவர்கள் காய்பாவினிடத்தி லிருந்து [2]இயேசுவானவரைப் பெ ரிய துணையின் நியாயஸ்தலத்திற் கு* கொண்டுபோனார்கள்; [3]அ வர்கள் அசுசிப்படாமல் பஸ்கா வைப் புசிக்கும்படிக்கு, தாங்கள் அந்த நியாயஸ்தலத்திற்குள் பிர வேசிக்கவில்லை.

உக ஆதலால் பிலாத்தென் னும் துரை அவர்களிடத்திற்குப் போய், இந்த மனிதன்மேல் என்ன குற்றம் சாற்றுகிறீர்கள் என்றான்.

உங அவனுடனே அவர்கள் சொன்னது: இவன் பொல்லாங்கு செய்தவன் அல்லாதவனாயிருந் தால், இவனை உமக்கு ஒப்புக்கொ டுக்கமாட்டோம் என்றார்கள்.

உச ஆதலால் பிலாத்தென்பவன் அவர்களை நோக்கி, இவனை நீங்க ளே கொண்டுபோய், உங்கள் நி யாயசாஸ்திரத்தின்படி இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுங்கள் என் றான்; அதற்கு யூதர்கள் சொன் னது: ஒருவனுக்கு மரணத்தைக் கொடுக்கிறதற்கு எங்களிடத்தில் அதிகாரம் இல்லையே என்றார்கள்.

உஎ [4]இயேசுவானவர் தமக்கு மர ணம் வரும் வகையைக்குறித்துச் சொன்ன வசனம் நிறைவேறத்தக் கதாக (அப்படிப் பேசினார்கள்).

உஙு ¶ [5]அப்பொழுது பிலாத்தான வன் மறுபடியும் நியாயஸ்தலத்திற் குள் பிரவேசித்து இயேசுவை அ ழைத்து, நீ யூதருடைய இராசனோ என்று கேட்டான்.

உஙஅ அவனுடனே இயேசுவான வர் சொன்னது: இதை நீர் உம்மா லே சொல்லுகிறீரோ? அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இ தை உமக்குச் சொன்னார்களோ என்றார்.

உஙஆ பிலாத்து மறுமொழியாகச் சொன்னது: நான் யூதனோ? உன்னு டைய தேசத்தாரும் பிரதான ஆசா ரியரும் உன்னை எனக்கு ஒப்புக் கொடுத்தார்கள், என்ன செய்தாய் என்றான்.

உஙக [6]அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]என் இராச்சியம் இவ்வுலகத்தின் தன்மையுள்ளதல் ல, என் இராச்சியம் இவ்வுலகத் தின் தன்மையுள்ளதானால், நான் யூதர் கையில் அகப்படாதப டிக்கு, என் ஊழியக்காரர் போ ராட்டம் செய்வார்கள்; என் இரா ச்சியம் இம்மையின் தன்மையு டையதல்ல என்றார்.

உஙச அப்பொழுது பிலாத்தான வன் அவனை நோக்கி, ஆதலால் நீ இராசன் அல்லவா என்றான்; இயேசுவானவர் சொன்னது: நீர் சொல்லுகிறபடி நான் இராசன் தான்; சத்தியத்தைக்குறித்துச் சா ட்சிகொடுக்கும்படிக்கு நான் பி றந்தேன், அதற்காகவே இவ்வுல கத்திற்கு வந்தேன்; [8]சத்தியத்தின் தன்மையுள்ளவன் எவனோ, அ வன் எனக்குச் செவிகொடுக்கி றான் என்றார்.

உஙஎ ¶ அதற்குப் பிலாத்து, சத்தி யம் எது என்று சொல்லி, மறுபடி யும் யூதரிடத்திற்குப்போய், அ வர்களை நோக்கி, [9]நான் அவனி டத்தில் ஒரு குற்றமும் காணேன்.

உஙங [10]பஸ்காப்பண்டிகையிலே நான் உங்களுக்காக ஒருவனை விடுதலைபண்ணுகிறது வழக்கமா யிருக்கிறதே; ஆகையால் நான் யூதருடைய இராசனை உங்களுக் காக விடுதலைபண்ண உங்களுக்கு விருப்பமுண்டா என்றான்.

சஅ [11]அப்பொழுது அவர்களெல் லாரும் இவனை அல்ல, பரபாவை விடுதலைபண்ணவேண்டும் என்று கூப்பிட்டார்கள்; [12]பரபா என்ப வன் கள்ளனாயிருந்தான்.

---

1 மத். உக. எச். மாற். உச. எஉ. லூக். உஉ. கஅ. பேரா. உச. உஅ.

2 மத். உஎ. உ. மாற். மஇ. க. லூக். உக. க. அப். உ. மக.

* அல்லது பிலாத்துவின் வீட்டுக்கு. மத். உஎ. உஎ.

3 அப். உ. உஅ: மக. க.

4 மத். உமி. மக. பேரா. மஉ. கஉ, கக.

5 மத். உஎ. மச.

6 க இரே. க. மக.

7 தானி. உ. சச: எ. மச. லூக். மஉ. மச. பேரா. க. மஇ:அ. மஇ.

8 பேரா. அ. சஎ. க. பே.உ. மக: ச. க.

9 மத். உஎ. உச. லூக். உக. ச. பேரா. மக.ச, க.

10 மத். உஎ.மஇ. மாற். மஇ. க. லூக். உக. மஎ.

11 அப். க.மச.

12 லூக்.உக.மக.

Digitized by Google

யஈ. அதிகாரம்.

க. நிந்தை வாரினால் அடிக்கவும், முள்முடி தரிக்கவும், கையினால் அறையப்பட்டது. ச. பிலாத்து அவரை விடுதலைபண்ண மனதாயும், யூதர்களுடைய அமளியினால் தென்னையில் அறையும்படி அவரை ஒப்புவித்தது. உக. அவர்கள் அவருடைய வஸ்திரங்களுக்காகச் சீட்டுப்போட்டது. உக. அவர் தம்முடைய தாயாரை யோவானிடத்தில் ஒப்புவித்து, உஅ. மரணமடைந்தது. உக. அவருடைய விலாசட்டியினால் குத்தப்பட்டது. உஅ. போகேப்பும் கிகோதேமும் அவரை அடக்கம்பண்ணினது.

அப்பொழுது [1]பிலாத்தென்பவன் இயேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.

உ அல்லாமலும் போர்ச்சேவகர் முள்ளுக்களினால் ஒரு முடியைப் பின்னி அதை அவருடைய சிரசின்மேல் வைத்து, ஒரு சிவப்பான அங்கியை அவருக்குத்தரிப்பித்து,

க யூதருடைய இராசாவே, வாழ்க என்று சொல்லி, அவருடைய கன்னத்தில் அடித்தார்கள்.

ச பிலாத்தானவன் மறுபடியும் வெளியேபோய் அவர்களை நோக்கி, இதோ, [2]இவனிடத்தில் ஒரு குற்றத்தையும் நான் காணுமலிருக்கிறதை நீங்கள் அறியும்படிக்கு இவனை உங்களிடத்தில் கொண்டு வருகிறேன் என்றான்.

இ உடனே முள்முடியும் சிவப்பான அங்கியும் தரிக்கப்பட்டவராய் இயேசுவானவர் வெளியே வந்தார்; அப்பொழுது பிலாத்து அவர்களை நோக்கி, இந்த மனிதனைப் பாருங்கள் என்றான்.

ஈ [3]பிரதான ஆசாரியரும் ஊழியக்காரரும் அவனைக் கண்டபொழுது, இவனைச் சிலுவைமரத்திலே அறையும், இவனைச் சிலுவைமரத்திலே அறையும் என்று கூப்பிட்டார்கள்; அதற்குப் பிலாத்து சொன்னது: இவனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லையே; ஆகையால் நீங்களே இவனைக் கொண்டுபோய், சிலுவைமரத்தில் அறையுங்கள் என்றான்.

எ யூதர்கள் மறுமொழியாகச் சொன்னது: [4]எங்களுக்கு ஒரு நி

கி. பி. ஈஈ

1 மத். உக. உக: உஉ.உக. மற். மஇ. மஇ. லூக். அ. ஈஈ

2 போஸ. அ. அ. க. வ.

3 அப். உ. உக.

4 உ யோ. உஅ. உக.

5 மத். உக. உஇ. போஸ. இ. அ: உ. ஈஈ.

6 சோ. இ. எ. மத். உஎ. உஅ, உஈ.

7 லூக். உஉ. இ. போஸ. எ. ஈக.

8 லூக். உக. உ.

9 அப். உஎ. எ.

10 மத். உஎ.ஈஉ.

யாயப்பிரமாணம் உண்டு; இவன் [5]தன்னைப் பராபரனுடைய குமாரனென்று சொன்னபடியினாலே, அந்த நியாயப்பிரமாணத்தின்படியே இவன் சாகவேண்டும் என்றார்கள்.

அ ¶ இந்த வசனத்தைப் பிலாத்து கேட்டபொழுது அதிகமாய்ப் பயந்து, மறுபடியும் நியாயஸ்தலத்திற்குள்ளே போய்,

க இயேசுவானவரை நோக்கி, நீ எவ்விடத்தான் என்றான்; [6]அதற்கு இயேசுவானவர் மாறுத்தரம் சொல்லவில்லை.

ச ஆதலால் பிலாத்து அவரை நோக்கி, நீ எனக்கு மறுமொழி சொல்லுகிறதில்லையா? உன்னைச் சிலுவைமரத்தில் அறையும்படியும் எனக்கு அதிகாரம் உண்டென்றும், உன்னை விடுதலைபண்ணும்படியும் எனக்கு அதிகாரம் உண்டென்றும் நீ அறியாமலா இருக்கிறாய் என்றான்.

இ இயேசுவானவர் சொன்னது: இந்த அதிகாரம் உமக்கு உயரத்திலிருந்து கொடுக்கப்படாதிருந்தாலல், [7]எனக்கு விரோதமாய்ச் செய்யும் அதிகாரம் உமக்கு உண்டாயிருக்கமாட்டாது; ஆனபடியினாலே என்னை உமக்கு ஒப்புக்கொடுத்தவன் அதிக பாவமுள்ளவன் என்றார்.

ஈ ¶ அதுமுதல் பிலாத்தானவன் அவரை விடுதலைபண்ணத் தேடினான்; யூதர்கள் அவனை நோக்கி, [8]இவனை விடுதலைபண்ணினால் நீ இராயனுக்குச் சிநேகிதன் அல்ல, [9]என்னை இராசா என்கிறவன் எவனே அவன் இராயனுக்கு விரோதியாய் இருக்கிறான் என்று கூப்பிட்டார்கள்.

உ [10]அந்நாள் பஸ்காவுக்கு ஏந்தனமாக்கப்படுகிற நாளுமாய், ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருக்க,

ச பிலாத்தானவன் இந்த வசனத்தைக் கேட்டபொழுது, அவன்

Digitized by Google

இயேசுவை வெளியே அழைத்துப்போய், தளவரிசைப்படுத்தின இடமென்றும், எபிரேயுபாஷையிலே கப்பத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே நியாயாசனத்தின்மேல் உளுக்காந்து யூதர்களை நோக்கி, உங்கள் இராசாவைப் பாருங்கள் என்றான்.

ⅭⅮ அவர்கள், இவனை அகற்றும் அகற்றும், இவனைச் சிலுவைமரத்திலே அறையுமென்று கூப்பிட்டார்கள்; பிலாத்தானவன் சொன்னது: உங்கள் இராசாவை நான் சிலுவைமரத்திலே அறையலாமா என்றான்; அதற்குப் பிரதான ஆசாரியர், [1]இராயனே அல்லாமல் ஒரு இராசா எங்களுக்கு இல்லை என்றார்கள்.

ⅭⅯ [2]அப்பொழுது அவனைச் சிலுவைமரத்தில் அறையும்படிக்கு அவன் அவனை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தான்; அந்தப்படி அவர்கள் இயேசுவானவனைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.

Ⅽⅰ ¶ [3]அவர் தம்முடைய சிலுவைமரத்தைச் சுமந்துகொண்டு, எபிரேயு பாஷையிலே [4]கொல்கதா என்று சொல்லப்பட்ட தலையோட்டிடம் என்னும் இடத்திற்குப் புறப்பட்டுப்போனார்.

Ⅽⅱ அங்கே அவர்கள், நடுவிலே அவனையும் அவருடனேகூட இருபக்கங்களிலே வேறிரண்டு பேனையும் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

Ⅽⅲ ¶ அன்றியும் பிலாத்தான[5]நாசரேத்தூராகிய இயேசு யூதருடைய இராசா என்று எபிரேயுபாஷையிலேயும் கிரேக்கைப்பாஷையிலேயும் இலத்தீன்பாஷையிலேயும் எழுதி, அதைச் சிலுவைமரத்தின்மேல் சேர்த்தான்.

Ⅽⅳ இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த இடம் நகரத்திற்குச் சமீபமாய் இருந்தபடியினாலே, யூதர்களில் அநேகம் பேர் அந்த மேல் எழுத்தை வாசித்தார்கள்.

Ⅽⅴ அப்பொழுது யூதருடைய பிரதான ஆசாரியர் பிலாத்துவினிடத்திற்குப் போய், யூதருடைய இராசா என்று நீர் எழுதாமல் நான் யூதருடைய இராசா என்று அவன் சொன்னான் என்றே எழுதவேண்டும் என்றார்கள்.

Ⅽⅵ பிலாத்து நான் எழுதினது எழுதியாயிற்று என்றான்.

Ⅽⅶ ¶ [6]போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவைமரத்திலே அறைந்தபின்பு அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்கு வரும்படி நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள்; அந்த அங்கி தைத்தலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டிருந்தபடியால்,*

Ⅽⅷ அவர்கள் இதைக் கிழியாமல் இதைப் பெற்றுக்கொள்ளுகிறவனை அறியும்படிக்குச் சீட்டுப்போடக்கடவோம் என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டார்கள்; [7]என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு என் உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் அப்படிச் செய்தார்கள்.

Ⅽⅸ ¶ [8]அல்லாமலும் இயேசுவின் சிலுவைமரத்தின் அருகே அவருடையதாயும், அவளுடையசகோதரியாகிய கிலேயோப்பா† மரியாளும், [9]மகுதல ஊராளாகிய மரியாளும் நின்றார்கள்.

Ⅽⅹ அப்பொழுது இயேசுவானவர் தம்முடைய தாயையும், [10]அங்கே நின்ற தமக்கு அன்பான சீஷனையும் கண்டு,

Ⅽⅺ தம்முடையதாயை நோக்கி, [11]ஸ்திரியே, இவனே உன் மகன் என்றார்; பின்பு அந்தச் சீஷனை நோக்கி, இவளே உன் தாய் என்றார்; [12]அந்நேரம்முதற்கொண்டு

இ. பி. ஈஈ.

1 ச மோ. சஉ.ம.
2 மத். உஎ. உக, கக. மாற். ம⅁. ம⅁. லூக். உக. உச.
3 மத். உஎ. கக, கக. மாற். ம⅁. உக, உஉ. லூக். உக. உக, கக.
4 ச மோ. ம⅁. கஈ. எபி. கஉ. ம⅁.
5 மத். உஎ. கஎ. மாற். ம⅁. உக. லூக். உக. கஅ.
6 மத். உஎ. கஅ. மாற். ம⅁. உச. லூக். உக. கச.

* அல்லது தையலில்லாமல் செய்யப்பட்ட.

7 சங். உஉ. ம⅁.

8 மத். உஎ. ⅁⅁. மாற். ம⅁. சம. லூக். உக. சஈ.

† அல்லது கிலேயோப்பர்.

9 லூக். உச. ம⅁.

10 Purr. கக. உஈ: உம. உ: உக. எ, உம, உச.

11 Purr. உச.

12 Purr. க. ம⅁: கக. கஉ.

Digitized by Google

அந்தச் சீஷன் அவளைத் தன்னிட மாய்ச் சேர்த்துக்கொண்டான்.

உஅ ¶ இதின்பின்பு இயேசுவானவர் எல்லாம் முடிந்து தீர்ந்ததென்று அறிந்து, [1]வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாகத் தாகமாயிருக்கிறேன் என்றார்.

உக அங்கே காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது; [2]ஆதலால் அவர்கள் கடற்காளானைக் காடியில் தோய்த்து, ஈசோப்புத் தண்டில் பூட்டி, அவருடைய வாயினிடத்திற்கு நீட்டிக் கொடுத்தார்கள்.

உங இயேசுவானவர் காடியை வாங்கினபின்பு, [3]முடிந்ததென்று சொல்லித் தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புவித்தார்.

உச ¶ [4]அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்தநாளானபடியினாலே, [5]உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைமரங்களில் இராதபடி யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய் அவர்களுடைய கால் எலும்புகள் முறிக்கப்படும்படிக்கும் உடல்கள் எடுத்துப்போடப்படும்படிக்கும் அவனிடத்தில் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.

உஎ அந்தப்படி போர்ச்சேவகர் போய், அவருடனேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட முந்தினவனுடைய கால் எலும்புகளையும் மற்றவனுடைய கால் எலும்புகளையும் முறித்தார்கள்.

உஅ அவர்கள் இயேசுவினிடத்தில் சேர்ந்தபொழுது அவர் மரித்ததைக் கண்டு, அவருடைய கால் எலும்புகளை முறிக்கவில்லை.

உஆ போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினால் அவருடைய விலாவில் குத்தினான்; [6]உடனே இரத்தமும் சலமும் புறப்பட்டன.

உஇ ¶ அதைக் கண்டவன் அதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறான்; அவனுடைய சாட்சி மெய்யாய் இருக்கின்றது; நீங்கள் விசுவாசிக்கும்படிக்கு, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான்.

உஈ அவருடைய [7]எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக இவை நடந்தன.

உஉ அல்லாமலும் [8]தாங்கள் குத்தினவனைப் பார்ப்பார்களென்றும் வேறு வேதவாக்கியம் சொல்லுகின்றது.

உஊ ¶ [9]அதற்குப்பின்பு அரிமத்தியராகிய யோசேப்பு இயேசுவானவருக்குச் சீஷனாயிருந்தும் [10]யூதர்களுக்குப் பயப்பட்டதினாலே அதை மறைத்தவனுமாயிருந்த யோசேப்பென்பவன் இயேசுவினுடைய சரீரத்தை எடுத்துக்கொள்ளும்படிக்குப் பிலாத்துவினிடத்தில் உத்தரவு கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகையால் அவன் போய், இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டான்.

உங [11]ஆரம்பத்திலே ஓர் இராத்திரியில் இயேசுவினிடத்திற்குப் போயிருந்த நிக்கோதேமு என்பவனும் சேர்ந்து, வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்த ஏறக்குறைய நூறுராத்தல் பரிமளத்தைக்கொண்டுவந்தான்.

ஊ அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு, [12]யூதர்கள் சவங்களில் சுகந்தவருக்கமிடுகிற வழக்கத்தின்படி, அதைச் சுகந்தவருக்கங்களுடனேகூடச் சேலைகளில் கட்டினார்கள்.

ஊக மேலும் அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்திலே ஒரு தோட்டமும், அந்தத் தோட்டத்திலே ஒருக்காலும் ஒருவரும் வைக்கப்பட்டிராத புதிய கல்லறையும் இருந்தது.

ஊஉ [13]யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும் அந்தக் கல்லறை சமீபமானபடியினாலும் இயேசுவானவரை [14]அவ்விடத்திலே வைத்தார்கள்.

இ. பி. ஈஈ.

1 சங். ஈஉ. உஅ.
2 மத். உஅ. உஎ.
3 யோவா. ஙக. ஙஎ.
4 உசு. லேவி. மற். ஙஅ. உக.
5 ஏ மோ. உக. உஉ.
6 உ யோ. இ. உ, அ.
7 உ மோ. ஙஉ. உக. உ மோ. உ.ஙஉ. எண்.உச. உஉ.
8 சக். உஉ. ஙஉ, வெ. உசுரி. ஙஉ. இ. வெளி. உ.எ.
9 மத். உஅ. மோ. மற். ஙஇ. உஉ. லூக். உஈ. ஙஅ.
10 யோவா. ங. உஉ: ஙஉ. உஉ.
11 யோவா. உ.உ, உ: எ. ஙஅ.
12 அப். இ. ஈ.
13 உகொ. மோ.
14 மோ. ஙஉ. ஈ.

Digitized by Google

உய. அதிகாரம்.

க. மரியாளும், ங. பேதுருவும், யோவானும், அவர் உயிர்த்தெழுந்ததை அறியாமல் கல்லறையினிடத்தில் போனது. ஙக. இயேசு மகதலைநகர் மரியாளுக்கும், ஙஉ. தம்முடைய சீஷர்களுக்கும் காட்சியானது. ஙஎ. தோமாவின் அவநம்பிக்கையையும் விசுவாசத்தையும்குறித்துச் சொல்லியது. ஙஅ. தேவஏழுத்தின் இரட்சணியத்துக்குப் போதனையாகஎன்பது.

1 பின்பு வாரத்தின் முதலாம்நிழமை காலையிலே இருட்டிருக்கையில், மகதலைநகராளாகிய மரியாள் கல்லறையினிடத்திற்குப் போய், அதில் இருந்த கல்லை எடுத்துப் போட்டதைக் கண்டாள்.

உ ஆதலால் அவள் ஓடி, சீமோன் பேதுருவினிடத்திலும் 2 இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்றச் சீஷனிடத்திலும் போய், கல்லறையிலிருந்த கர்த்தரை எடுத்துக்கொண்டார்கள்; அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்.

ங 3 அப்பொழுது பேதுருவும், அந்த மற்றச் சீஷனும் கல்லறையினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒருமித்து ஓடினார்கள்.

ச பேதுருவிலும் அந்த மற்றச் சீஷன் அதிக துரிதமாய் ஓடி, முந்திக்கல்லறையினிடத்தில்சேர்ந்து,

ஙி குனிந்து நின்று அதற்குள்ளே பார்க்கையில், 4 சேலைகள் வைத்திருக்கக் கண்டான்.

ஙீ அவன் உள்ளே போகவில்லை; சீமோன்பேதுரு அவனுக்குப் பின்சென்று போய், கல்லறைக்குள்ளே பிரவேசித்து,

ஙு 5 சேலைகள் வைத்திருக்கிறதையும், அவருடைய தலையைச் சுற்றியிருந்த சேலை மற்றச் சேலைகளுடனே வையாமல் தனியாய் ஓரிடத்திலே சுருட்டிவைத்திருக்கிறதையும் கண்டான்.

ஙூ அப்பொழுது முந்திக் கல்லறையினிடத்திற்குப் போன மற்றச் சீஷனும் உள்ளே பிரவேசித்துக் கண்டு நம்பினான்.

கி. பி. ஊஊ.

1 மத். உஅ. க. மாற். ங. க. லூக். உச. ச.
2 போவா. ங. உக: ங. உங. உக.ச, உஅ, உச.
3 லூக். உச. ஙஉ.
4 போவா. ங. சஅ.
5 போவா. ங. சச.
6 சங். ஙஊ. ஆ. அப். உ. உஇ-உக: ங. சச, உஇ.
7 மாற். ஙக. இ.
8 மத். உஅ. க. மாற். ஙக. க.
9 லூக். உச.ஙக, ஙக. போவா. உக. ச.

க 6 அவர் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வேதவாக்கியத்தை அவர்கள் அதுவரைக்கும் அறிந்துகொள்ளாதிருந்தார்கள்.

ய பின்பு அந்தச் சீஷர் தங்களுடைய இடத்திற்குத் திரும்பினார்கள்.

யக ¶ 7 மரியாள் கல்லறையின் அருகான வெளியிலே அழுதுகொண்டு நின்றாள்; அப்படி அழுதுகொள்ளுகையில், அவள் கல்லறைக்குள்ளே குனிந்து பார்த்து,

யஉ இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெண்மையான உடையுள்ளவர்களாய், தலைமாட்டிலே ஒருவனும் கால்மாட்டிலே ஒருவனுமாக இரண்டு தூதர்கள் உளுக்காந்திருக்கிறதைக் கண்டாள்.

யஊ அவர்கள் அவளை நோக்கி, ஸ்திரியே, என்னத்தினிமித்தம் அழுகிறாய் என்றார்கள்; அதற்கு அவள் சொன்னது: என் கர்த்தாவை எடுத்துக்கொண்டு போனார்கள்; அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை; (அதினிமித்தமே அழுகிறேன்) என்று சொல்லிப் பின்னுகத் திரும்புகையில், 8 இயேசுவானவர் நிற்கிறதைக் கண்டாள்.

யச 9 அவள் அவரை இயேசு என்று அறியவில்லை; அப்பொழுது இயேசுவானவர் அவளை நோக்கி,

யஙி ஸ்திரியே, என்னத்தினிமித்தம் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய் என்றார்; அவள் அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி அவரிடமே சொன்னது: ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டுபோனீரானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லவேண்டும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன் என்றாள்.

யஙு அப்பொழுது இயேசுவானவர் மரியாளே என்று அவளிடமே சொன்னார்; உடனே அவள் திரும்பிக்கொண்டு, இரபூனி என்

Digitized by Google

று அவருடனே சொன்னாள்; இரபூனி என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.

ஙஎ இயேசுவானவர் சொன்னது: நீ என்னைத் தொடாதிரு, இன்னம் என் பிதாவினிடத்திற்கு நான் [1]ஏழுந்துபோகவில்லையே, இப்பொழுது நீ என் சகோதரரிடத்திற்குப் போய், [2]என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் [3]என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏழுந்துபோகிறேன் என்று அவர்களுடனே சொல் என்றார்.

ஙஅ [4]மகுதல ஊராளாகிய மரியாள் போய்த் தான் கர்த்தனைக் கண்டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும் சீஷருக்கு அறிவித்தாள்.

ஙக ¶ [5]வாரத்தின் முதல்கிழமையாகிய அன்றைத்தினம் அஸ்தமனகாலத்திலே சீஷர்கள் யூதர்களுக்குப் பயப்பட்டதினாலே கதவுகளைப் பூட்டிக் கூடியிருக்கையில், இயேசுவானவர் தோன்றி நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக என்று சொல்லி,

ஙஉ தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார்; [6]சீஷர் கர்த்தனைக் கண்ட பொழுதுசந்தோஷப்பட்டார்கள்.

ஙஉ பின்பு இயேசுவானவர் மறுபடியும் அவர்களுடனே சொன்னது: உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக; [7]பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,

ஙஊ அவர்கள்மேல் ஊதிப் பின்பு சொன்னதாவது: பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஙஎ [8]எவர்களுடைய பாவங்களை மன்னிப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்பட்டிருக்கும்; எவர்களுடைய பாவங்களை மன்னியாமல் இருப்பீர்களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படாமல் இருக்கும் என்றார்.

கி. பி. கூகூ.

1 சங். ஙஙஅ,ஙஙஉ. மத். உஅ. ம. உரோ. அ.உக. எபி. உ. ம.
2 யோவா. ம. உஅ.
3 எபே. க. மஉ.
4 மத். உஅ. ம. லூக். உச. ம.
5 மாற். ம. மச. லூக். உச. கக. ச கொரி. மஇ. இ.
6 யோவா. ம. ஙஉ.
7 மத். உஅ. மஅ. யோவா. மஎ. மஅ, மக. உ நியா. உ.உ. எபி. க.க.
8 மத். மக. மக: மஅ. மஅ.
9 யோவா. ம. மக.
10 ச யோ. க.க.
11 உ கொரி. இ. எ. ச பே. க. அ.
12 யோவா. உக. உஇ.
13 லூக். க. ச.

களோ அவர்களுக்கு அவைகள் மன்னிக்கப்படாமல் இருக்கும் என்றார்.

உச ¶ அப்பொழுது இயேசுவானவர் வந்திருந்த காலத்திலே, [9]பன்னிருவரில் ஒருவனாகிய நிதிமு என்னப்பட்ட தோமா அவர்களுடனேகூட இருக்கவில்லை.

உடி ஆதலால் மற்றச் சீஷர் அவனை நோக்கி, நாங்கள் கர்த்தரைக் கண்டோம் என்றார்கள்; அதற்கு அவன் சொன்னது: அவருடைய கைகளில் ஆணிகள் அடித்திருந்த தழும்பை நான் கண்டு, அந்தத் தழும்பிலே என் விரலை வைத்து, அவருடைய விலாவிலே என் கையை வையாவிட்டால் விசுவாசிக்கமாட்டேன் என்றான்.

உசு ¶ எட்டுநாளுக்குப் பின்பு அவருடைய சீஷர் மறுபடியும் அறைக்குள்ளே இருந்தார்கள், தோமாவும் அவர்களுக்குள்ளே இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்டிருந்தன; அப்பொழுது இயேசுவானவர் தோன்றி நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானசவுக்கியம் உண்டாவதாக என்று சொல்லி,

உஎ பின்பு தோமாவை நோக்கி, உன் விரலை இங்கே நீட்டி என் கைகளைப் பார், மேலும் [10]உன் கையை நீட்டி என் விலாவிலே வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இருப்பாயாக என்றார்.

உஅ அதற்கு மாறுத்தரமாகத் தோமா அவனை நோக்கி, என் கர்த்தாவே, என் தேவனே என்றான்.

உக இயேசுவானவர் சொன்னது: தோமாவே, நீ என்னைக்கண்டபடியினாலே விசுவாசித்தாய்; [11]காணுமலிருந்து விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.

ஙூ ¶ அன்றியும் [12]இந்தப் புத்தகத்தில் எழுதப்படாத அநேக அற்புதங்களையும் இயேசுவானவர் தம்முடைய சீஷருக்கு முன்பாகச் செய்தார்.

ஙக இவைகள் [13]இயேசுவானவர்

பாபரனுடைய குமாரனுகிய சிமோன் பேதுரு என்று நீங்கள் விசுவாசிப்பதற்கும், [1]விசுவாசித்தபின்பு அவருடைய நாமத்தினாலே சீவனை அடைவதற்கும் எதுவாக எழுதப்பட்டிருக்கின்றன.

உக. அதிகாரம்.

க. பின்பு மறுபடியும் சீஷர்களுக்குத் தரிசனமாகி, அவர்களுக்குப் பிடிபட்ட ராவணான மீன்களினால் அவர்கள் இன்னுென்று அறிந்து கொண்டது. ஈஉ. அவர் அவர்களோடே அசனம் பண்ணி, ஙஇ. பேதருவைத் தம்முடைய ஆட்டுக்குட்டிகளையும் ஆடுகளையும் மேய்க்கும்படி உறுதிபாய்க் கற்பித்து, ஙஅ. அவனுடைய மரணத்தின் விவரத்தை அவனுக்கு முன்னறிவித்து, ஙஉ. யோவானுக்குறித்துத் தம்மைக் கேட்ட கேள்விக்கு உத்தரவு சொன்னது. ஙஇ. முடிவுரை.

அதன்பின்பு இயேசுவானவர் தீபேரியாவின் கடல்கரையிலே சீஷருக்குத் தம்மை மறுபடியும் காண்பித்தார்; அங்கே காண்பித்த பிரகாரமாவது:

உ சீமோன்பேதுருவும், தீதிமு என்னப்பட்ட தோமாவும், [2]கலிலேயா நாட்டிலுள்ள கானுவூரானுகிய நாத்தான்வேலும், [3]செபேதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில் வேறிரண்டுபேரும் கூடியிருக்கும் காலத்திலே, சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி, நான் மீன்பிடிக்கப் போகிறேன் என்றுன்; அவர்கள், நாங்களும் உன்னுடனேகூட வருகிறோம் என்றார்கள்.

ஊ உடனே அவர்கள் புறப்பட்டுப் போய்ப் படகேறினுர்கள்; அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.

எ ¶ விடியற்காலமானபொழுது இயேசுவானவர் கரையிலே நின்றுர்; [4]அவரை இயேசுவென்று சீஷர் அறியாமலிருந்தார்கள்.

ஏ [5]அப்பொழுது இயேசுவானவர் அவர்களை நோக்கி, பிள்ளைகளே, *போசனம்பண்ணுகிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றுர்; அதற்கு அவர்கள் ஒன்றும் இல்லை என்றார்கள்.

ஐ அவர் சொன்னது: [6]நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடவேண்டும், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றுர்; அந்தப்படி அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினாலே அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்.

எ ஆதலால் [7]இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதருவை நோக்கி, அவர் கர்த்தர் என்றுன்; அவர் கர்த்தரென்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனைபடியினாலே சட்டையைக் கட்டிக்கொண்டு, கடலிலே குதித்தான்.

அ மற்றச் சீஷர் ஏறக்குறைய இருநூறுமுழம்மாத்திரம் கரைக்குத் தூரத்திலே இருந்தபடியினாலே, மீன்களுடனே வலையை இழுத்துக்கொண்டு, படவினாலே (கரையைச்) சேர்ந்தார்கள்.

க அவர்கள் கரையில் சேர்ந்து இறங்கினபொழுது, அக்கினிக்கரிகள் இருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.

ச பின்பு இயேசுவானவர்சொன்னது: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சில கொண்டுவாருங்கள் என்றுர்.

சக அப்பொழுது சீமோன்பேதுரு படவுக்குத் திரும்பி, நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இவ்வளவு இருந்தும் வலை கிழியவில்லை.

சஉ ¶ பின்பு இயேசுவானவர் அவர்களை அழைத்து, [8]போசனம்பண்ண வாருங்கள் என்றுர்; அப்பொழுது அவனைக் கர்த்தர் என்று சீஷர் அறிந்தபடியினாலே, அவர்களில் ஒருவனுயினும் நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.

சங அன்றியும் இயேசுவானவர் சேர்ந்து, அப்பத்தையும் மீனையும் எடுத்து அவர்களுக்குப் பரிமாறினர்.

சச இயேசுவானவர் மரித்தோரி

---

1 Corar. க.ஙஇ. ஈக: இ. உச.

2 Corar. க. ச இ.

3 மத். ச. உக.

4 Corar. உஅ. ஈச.

5 லூக். உச.சக.

* அல்லது ஐயன்மாரே.

6 லூக். இ. ச, க, எ.

7 Corar. ஈக. உக: உஅ. உ.

8 அப். அ. சக.

விருந்து எழுந்தபின்பு, [1]தம்முடைய சீஷருக்குக் காட்டினதரிசனைகளில் இது மூன்றுவது.

யடு ¶ அவர்கள் போசனம்பண்ணினபின்பு, இயேசுவானவர் சீமோன்பேதுருவை நோக்கி, யோனுவின் குமாரனுகிய சீமோனே, இவர்களிலும் நீ என்னிடத்தில் அதிகமாய் அன்புகூருகிறாயா என்றார்; அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்பாயிருக்கிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவர் சொன்னது: [2]என் ஆட்டுக்குட்டிகளைப் போஷிப்பாயாக என்றார்.

யசு பின்பு அவர் இரண்டாந்தரம் அவனை நோக்கி, யோனுவின் குமாரனுகிய சீமோனே, என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்றார்; அதற்கு அவன் சொன்னது: ஆண்டவரே, நான் உம்மிடத்தில் அன்புகூருகிறதை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அவர் சொன்னது: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.

யஎ பின்பு அவர் மூன்றுந்தரம் அவனை நோக்கி, யோனுவின் குமாரனுகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்றார்; என்னிடத்தில் அன்புகூருகிறாயா என்று அவர் மூன்றுந்தரம் தன்னுடனே சொன்னபடியினாலே பேதுருதுக்கமடைந்து, ஆண்டவரே, [3]நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மிடத்தில் அன்புகூருகிறதையும் அறிந்திருக்கிறீர் என்றான்; இயேசுவானவர் சொன்னது: என் ஆடுகளைப் போஷிப்பாயாக.

யஅ அல்லாமலும் [4]நீ இளவயதுள்ளவனுயிருக்கையில், நீயே உன்னை யில் கச்சைகட்டிக்கொண்டு, உன் இஷ்டப்படிக்கு நடந்து திரிந்தாய், நீ முதிர்ந்த வயதுள்ளவனுயிருக்கும்பொழுது உன் கைகளை நீட்டுவாய்; மேலும் வேறொருவன் உன் னையில் கச்சை கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்திற்குக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.

யக அவன் பராபரனுக்குப் புகழுண்டாகத்தக்கதாக [5]அடையும் மரணவகையைக்குறித்து இப்படிச்சொன்னர்; அப்படிச் சொன்னபின்பு, எனக்குப் பின்சென்றுவா என்று அவனுடனே சொன்னர்.

உய ¶ அந்தப்படி பேதுரு (பின் செல்லுகையில்) திரும்பிப்பார்த்து, [6]இயேசுவுக்கு அன்பாயும் இராப்போசனம்பண்ணுகையில் அவருடைய மார்பிலே சாய்ந்து ஆண்டவரே, உம்மைக் காட்டிக் கொடுப்பவன் யாவனென்று கேட்டும் இருந்த சீஷனும் பின்செல்லுகிறதைக் கண்டு,

உக இயேசுவானவரை நோக்கி, ஆண்டவரே, இவன் என்னமாய் இருப்பான் என்றான்.

உஉ அதற்கு இயேசுவானவர் சொன்னது: [7]நான் வருமளவும் இவன் இருக்க எனக்குச் சித்தமானால், அதினாலே உனக்கென்ன, நீ எனக்குப் பின்செல் என்றார்.

உஊ அதினாலே அந்தச் சீஷன் மரிப்பதில்லை என்கிற பேச்சு சகோதரருக்குள்ளே உண்டாயிற்று; இயேசுவானவர் அவன் மரிப்பதில்லைஎன்றுசொல்லாமல், நான் வருமனவும் அவன் இருக்க எனக்குச் சித்தமானால் அதினாலே உனக்கென்ன என்று சொன்னர்.

உச ¶ அந்தச் சீஷனே இந்தச் சங்கதிகளைக்குறித்துச்சாட்சிகொடுத்து, இவைகளை எழுதியிருக்கிறான்; [8]அவனுடையசாட்சிமெய்யென்று அறிந்திருக்கிறோம்; [9]அன்றியும் இயேசுவானவர் செய்த மற்ற அநேக காரியங்களும் உண்டு. [10]அவைகள் ஒவ்வொன்றும் எழுதப்பட்டால் அதினாலே உண்டாகும் புத்தகங்கள் வைக்கிறதற்கு உலகம் போதாதென்று எண்ணுகிறேன்.—ஆமன்.

கி. பி. ஊஊ.

1 யோவா. உஅ. அ, உஉ.
2 அப். உஅ.உஆ. எபி. அக. உஅ. உபே. உ. உஇ: இ. உ, ச.
3 யோவா. உ. உச, உஇ: அக. கஅ.
4 யோவா. கக. அக. அப். அஉ. ஆ, ச.
5 உ பே. க. அச.
6 யோவா. அக. உஉ, உஇ: உஅ. உ
7 மத். அக. உஈ, உஆ: உஇ. கக. க கொரி. ச. இ: அக.உக. கொரி. உ. உஇ:க.அச: உஉ.ஏ,உஅ.
8 யோவா. அக. உஇ. க யோ. அஉ.
9 யோவா. உஅ. கஉ.
10 ஆமோ. ஏ. அ.

ACTS.

அப்போஸ்தலருடைய

நடபடிகள்.

க. அதிகாரம்.

க. தேவ்த பாவண்டலம் போவதை அப்போஸ்தலர் சாஷிகளாயிருக்கும்படி ஓலிவமலை அண்டையில் அவர்களைக் கூட்டி, உலக சாட்சிகளாயிருக்கும்படி லெ சாஷிகளுக்குப்பின்பு பரிசுத்தஆவியை அனுப்புவோமென்ற வாக்குத்தத்தம்பண்ணி, எருசலேமிலே அவர்கள் அந்த ஆவியின் வருகைக்குக் காத்திருக்கும்படி கற்பித்தது. கக. அவர் பாவண்டலத்துக்கு எதிர்பார்ப்பு இரண்டு தூதர்கள் அவருடைய இரண்டாம் வருகைக்கு எதிர்பார்த்திருக்க அவர்களுக்குப் புத்திசொன்னது. கஉ. அவர்கள் எருசலேமுக்குப் போய் யூதாவுக்குப் பதிலாக மத்தியாவை அப்போஸ்தலருடன் தெரிந்துகொண்டது.

[1]தேயோப்பிலுவே, இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட [2]அப்போஸ்தலருக்குப் பரிசுத்தஆவியினாலே கட்டளையிட்டபின்பு, உ [3]அவர் உயர்த்தப்பட்ட நாள்வரைக்கும் செய்தும் உபதேசித்தும் இருந்த யாவையும் குறித்து முதலாம் பிரபந்தத்தைப் பண்ணினேன்.

ங அவர் பாடுபட்டபின்பு [4]நாற்பதுநாள் அளவும் அவர்களுக்குத் தரிசனையாகி, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்து அவர்களுடனே பேசிக்கொண்டு, இவ்விதமாய் அவர்களுக்கு அநேகதிருட்டாந்தங்களினாலே தம்மை உயிரோடிருக்கிறவர் என்று காண்பித்தார்.

ச [5]அன்றியும் அவர் அவர்களைக்

வி. பி. கூஉ.

1 லூக். க. க.
2 மத். உஅ. மக. மாற். க்ஷ. மஇ. போஸ. உம. உக. அப்.ம.சஉ, சஉ.
3 மாற். மக. மக. லூக். க. மக: உச. இக. க. வச. க நீமே. உ. மக.
4 மாற். மக. மச. லூக். உச. கக. போஸ. உம. மக, உக: உக. க, மச. க சொரி. மஇ. இ.
5 லூக். உச. சக, சக.
* அல்லது அவர் களோடு புசித்த.
6 மத். க. மக. அப். மக. மக: மக. ச.
7 பேரே. க. மஅ. அப். உ. ச: மக. மஇ.
8 லூக். உச. சக. போஸ. மச. மக. உக, உஎ: மஇ. உக: மக. எ. அப். உ. கக.
9 மத். உச. க.
10 சோ. க. உக. தானி. எ. உஎ. ஆமே. க. மக.
11 மத். உச. கக. மாற். மக. கஉ. க தெச. இ. க.

கூடிவரச் செய்து,* அவர்களை நோக்கி, [6]யோவான் சலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; [7]நீங்கள் சிலநாள்களுக்குப்பின்பு பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வீர்கள்.

ஞ [8]ஆகையால் நீங்கள் எருசலேம் நகரத்தைவிட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்டபிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.

ட ¶ அப்பொழுது [9]கூடிவந்திருந்தவர்கள் அவனைநோக்கி, ஆண்டவரே, [10]இராச்சியபரிபாலனத்தை இஸ்ரவேலருக்கு நீர் இக்காலத்திலாதிரும்பக்கொடுப்பீர் என்று கேட்டார்கள்.

எ அதற்கு அவர் சொன்னது: [11]பிதாவானவர் தம்முடைய அதிகாரத்திலே வைத்திருக்கிற காலங்களாயாகிலும்வேளைகளாயாகிலும் அறிகிறது உங்களுக்குத் தகாது.

அ [12]பரிசுத்தஆவி உங்களிடத்தில்வரும்பொழுது, †[13]நீங்கள் பெலனடைந்து, [14]எருசலேமிலும் யூதேயா சமாரியா தேசங்களில் எங்கும், பூமியின் எல்லைவரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார்.

12 லூக். உச. சக. † பரிசுத்த ஆவியின் வல்லமை வருகிறதால்.—13 அப். உ. க, ச.—14 லூக். உச. சஅ. போஸ. மஇ. உஎ. உஉ. வச. அப். உ. கஉ.

Digitized by Google

க ¶ [1]இவைகளைச் சொன்ன பின்பு, [2]அவர் அவர்களுடைய கண்களுக்குமுன்பாக உயர்த்தப் பட்டார்; அவர்கள் அவனைக் காணுதபடிக்கு ஒரு மேகம் அவனை எடுத்துக்கொண்டுபோயிற்று.

ய அவர் போனபொழுது, அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்திருக்கையில், [3]வெண்மையான வஸ்திரமுள்ள மனிதர் இரண்டுபேர் அவர்களின் அருகே நின்று,

யக கலிலேயராகிய மனிதரே, [4]நீங்கள் என்னத்துக்காக வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களைவிட்டு வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அந்த [5]இயேசுவானவர் உங்கள் கண்களுக்குமுன்பாக வானத்துக்கு எழுந்துபோனவிதமாய்த் திரும்பிவருவார் என்றார்கள்.

யஉ ¶ [6]அப்பொழுது அவர்கள் ஒலிவ என்னப்பட்ட மலையைவிட்டு எருசலேம் நகரத்துக்குத் திரும்பினார்கள்; அந்த மலை ஒரு ஓய்வுநாள் பிரயாணதூரமாய் எருசலேமுக்குச் சமீபமாயிருக்கின்றது.

யங அவர்கள் அங்கே போனபொழுது, [7]மேல்வீட்டில் ஏறினார்கள்; [8]அங்கே பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்பும், தோமாவும், பருத்தோலோமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், [9]செலோத்தே என்னப்பட்ட சீமோனும், [10]யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள்.

யச [11] இவர்கள் எல்லாரும், [12]இயேசுவின் தாயாகிய மரியாள் முதலான ஸ்திரீகளோடும் [13]அவருடைய சகோதரரோடும்கூட ஒருமனப்பட்டு, செபத்திலேயும் வேண்டுதலிலேயும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

யஞ ¶ அந்நாள்களில் ஒருநாள், [14]ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடிவந்திருந்தபொழுது, பேதுரு என்பவன் சீஷருக்குள்ளே எழுந்திருந்து சொன்னதாவது:

யசு சகோதரர்களே, [15] இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழி காட்டின [16] யூதாவைக்குறித்துப் பரிசுத்தஆவி தாவீதின் வாக்கிலேலே முன் சொன்ன வேதவாக்கியம் நிறைவேறவேண்டியதாய் இருந்தது.

யஎ [17] அவன் நமக்குள்ளே ஒருவனாக் எண்ணப்பட்டு, [18]இந்த ஊழியத்தில் பங்கைப் பெற்றவனாய் இருந்தானே.

யஅ [19]அன்றியும் அவனே அநியாயமான கூலியினாலே [20]ஒரு நிலத்தைச் சம்பாதித்துக்கொள்ள ஏதுவாயிருந்து, பின்பு தலைகீழாக விழுந்து நடுவாய் வெடிக்கப்பட்டான்; அவனுடைய குடல்களெல்லாம் சரிந்துபோயின.

யக அதை எருசலேமிலுள்ள குடிகள் யாவரும் அறிந்திருக்கிறார்கள்; அதினாலே அந்த நிலம் அவர்களுடைய பாஷையிலே இரத்த நிலம் என்று அர்த்தம்கொள்ளுகிற அக்கெல்தாமா என்னப்பட்டிருக்கின்றது.

யய சங்கீத புத்தகத்திலே [21]எப்படி எழுதியிருக்கிறதென்றால், அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது, ஒருவனும் அதில் வாசம்பண்ணாதிருப்பதாக என்றும், [22]அவனுடைய கண்காணிப்பை *வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கின்றது.

யக ஆதலால் கர்த்தராகிய இயேசுவானவர் [23]யோவான் ஞானஸ்நானம்கொடுத்த காலம்முதற்கொண்டு [24]தாம் நம்மைவிட்டு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள்வரைக்கும்,

யஉ நமக்குள்ளே வருகிறவராயும் போகிறவராயும் இருந்த காலங்களிலே, நம்முடனேகூட இருந்த [25]மனிதர்களில் ஒருவன்

கி. பி. ஈஈ.

1 லூக். உச. இக. போவா. க.கஉ.
2 உ. வச.
3 மத் உஅ. க. மாற். ஙக. இ. லூக். உச. ச. போவா. உஅ. ஙஉ. அப். ஆ. க, கஅ.
4 அப். உ. எ: ஙக. கக.
5 தானி. எ. ஙக. மத். உச. கஅ. மாற். ஙக. உக. லூக். உக. உள. போவா. ஆச. க. க தெச.க.அ:ச. ஙக. உ தெச.க. அ. வெளி. க. எ.
6 லூக். உச. ஙஉ.
7 அப். க. கஎ, கக: உஅ. அ
8 மத். அ.உ, க, ச.
9 லூக். க. மஇ.
10 மூசா. க.
11 அப்.உ.க,சக.
12 லூக்.உக.சக, ஙஇ: உச. அ.
13 மத். ஙக. ஙஇ.
14 வெளி. க. ச.
15 லூக்.உஉ.சஎ. போவா. அஅ.க.
16 சங். சக. க. போவா. ஙக. அஅ.
17 மத். அ. ச. லூக். க. ஙக.
18 உஇ. வசனம். அப். ஙஉ. உஇ: உஅ. உச: உக. ஙக.
19 மத். உஎ. ஆ, எ, அ.
20 மத். உக. ஙஇ. உ பே. உ. ஙஇ.
21 சங்.கக.உஇ.
22 சங். கக. அ.
* அல்லது தொழில.
23 மாற். க. க.
24 க. வச.
25 போவா. ஙஇ. உஎ. அ. வச. அப். ச. கஉ.

Digitized by Google

அவர் உயிரோடே எழுந்திருக்கிறதைக்குறித்து நம்முடனேகூடச் சாட்சியாகவேண்டும் என்றான்.

உக ¶ அப்பொழுது அவர்கள் யுஸ்து என்னும் மறுநாமமுள்ள [1]பருசபா என்னப்பட்ட யோசேப்பு, மத்தியா, இவ்விரண்டுபேரையும் தெரிந்தெடுத்துச் செபம்பண்ணினதாவது:

உஎ [2]எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்கிற கர்த்தாவே, உஏ யூதாவானவன் தனக்கேற்ற இடத்துக்குப் போகும்படிக்கு அப்போஸ்தல ஊழியத்தின் பங்கைவிட்டு விலகினானே, [3]அந்தப் பங்கைப் பெற்றுக்கொள்ளும்படிக்குத் தேவரீர் இவ்விரண்டுபேரில் தெரிந்துகொண்டவன் எவனே, அவனை எங்களுக்குக் காண்பிப்பீராக என்று சொல்லி,

உஉ பின்பு அவர்களைக்குறித்துச் சீட்டுகளைப் போட்டார்கள்; சீட்டானது மத்தியாவின் பேருக்கு விழுந்தது; அப்பொழுது அவன் பதினொரு அப்போஸ்தலருடனே (அப்போஸ்தலனாகச்) சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

உ. அதிகாரம்.

க. அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டுப் பலபாஷைகளிற் பேசினபோது, சிலரால் புசமுப்பட்டுச் சிலரால் இகழப்பட்டது. ச. பே. இகழ்ந்தவர்களைப் பேதுரு கடிந்துகொண்டு, அப்போஸ்தலர்கள் பரிசுத்தஆவியின் பெலத்தினாலே பேசினார்களென்றும், இயேசு உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறி, பரிசுத்தஆவியை அனுப்பி பலவித அற்புதங்களைச் செய்து பாபாலாலே அங்கிகரிக்கப்பட்டவரும், அவருடைய ஆதி நிர்மானத்தின்படி சிலுவையில் அறையப்பட்டவருமான மேசியாவென்றும் எடுத்துரைத்து, எக. புணப்பட்ட அநேகர் ஞானஸ்நானம்பண்ணினது. சக. புணப்பட்டவர்கள் அப்போஸ்தலர்களிடத்தில் ஐக்கியமாயிருந்ததையும், அப்போஸ்தலர்கள் பல அற்புதங்கள் செய்ததையும், பரலோகத்திலிருந்து ஆண்டவன் பெருகச்செய்ததையும் காட்டியது.

[4]பெந்தேகோஸ்தென்னும் நாள் வந்திருக்கையில், [5]அவர்கள் எல்லாரும் அவ்விடத்திலே ஒருமனப்பட்டிருந்தார்கள்.

உ அப்பொழுது சடுதியாய்ப் பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல வானத்திலிருந்து முழக்கம் உண்டாகி, [6]அவர்கள் உளுக்காந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.

ஊ அல்லாமலும் அக்கினியுள்ள நாவுகள்போலப் பிரிக்கப்பட்ட நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் யாவர்மேலும் வந்திருந்தன.

ச அவர்கள் [7]எல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, தங்களுக்கு ஆவியானவர் கொடுத்த நிராணியின்படி, [8]வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்.

ஞ ¶ (அக்காலத்திலே) வானத்தின் கீழிருக்கிற சகலவிதமான தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபத்தியுள்ள யூதர்கள் எருசலேமிலே வாசம்பண்ணினார்கள்.

ட அந்தச் சத்தம் உண்டானபொழுது, *திரளான சனங்கள் கூடிவந்து, யாவரும் தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதைக் கேட்டபடியினாலே கலக்கம் அடைந்தார்கள்.†

ஏ எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவனை ஒருவர் [9]நோக்கி, பேசுகிற இவர்கள் எல்லாரும் கலிலேயர் அல்லவா?

அ நம்முடைய சென்மபாஷைகளிலே அவர்கள் பேச நாம் யாவரும் கேட்கிறோமே, அது எப்படியாயிற்று?

கஅ பருத்தரும், மேதரும், எலாமீத்தரும், மேசோப்பொத்தாமியா, யூதேயா, கப்பத்தோக்கியா, பொந்து, ஆசியா, பிரிகியா, பம்பீலியா,

கக எகிப்து என்னும் தேசங்களிலேயும் கிரேனே பட்டணத்தைச் சுற்றியிருக்கிற இலீபியாவின் திசைகளிலேயும் குடியிருப்பவர்களும், இங்கே சஞ்சரிக்கிற உரோமைப்பட்டணத்தாரும்,

கஉ யூதரும் யூதமார்க்கத்தில் சேர்க்கப்பட்டவர்களும், கிரேத்

கி. பி. ஈஈ.

1 அப். ஐ. உஉ.

2 உ சாமு.உக. எ. உ நாளா. உஅ. க: உக. மத். எரே. உ. உல: மா. ம. அப்.கஅ. அ. வெளி. உ. உக.

3 மா. கச.

4 உ மோ. உக. ஐ. ஐ மோ. உக. க. அப். உஅ. உக.

5 அப். உ. மச.

6 அப். ச. உக.

7 அப். உ. ஐ.

8 மாற். உக. மத். அப். ம. ச க: மத்.உ.கொரி. ஐஉ.ம,உஅ, கம: உக. உ: மச. உ.

* அல்லது இது எங்கும் பிரசித்தமானபோது.

† அல்லது பிரமித்தார்கள்.

9 அப். உ. உக.

தைத் தீவாரும், அரபி தேசத்தாரு மாகிய நம்முடைய பாஷைகளி லே அவர்கள் பராபரனுடையமகி மைகளைப் பேசிக்கொள்ளக் கேட் கிறோமே என்றார்கள்.

ய உ பின்னும் எல்லாரும் பிர மித்து, மிகவும் சந்தேகப்பட்டு, இ தென்ன வரம் என்று ஒருவரோ டொருவர் சொல்லிக்கொண்டார் கள்.

ய ஊ மற்றப்பேர் மதுபானத்தி னாலே நிறைந்திருக்கிறார்கள் என்று பரியாசம்பண்ணினார்கள்.

ய ஒ ¶ அப்பொழுது பேதுருவென் பவன் பதினொருவரோடும் கூட நின்று, உரத்த சத்தத்தோடே அவர் களுடனே சொன்னதாவது: யூத ரும், எருசலேமில் குடியிருக்கிற மற்றவர்களுமாகிய நீங்கள் எல்லா ரும் அறிந்துகொள்வீர்களாக, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுப் பீர்களாக.

ய ரு என்னவெனில், நீங்கள் நினைக்கிறதுபோல இவர்கள் வெ றிகொண்டவர்கள் அல்ல, [1]பொ ழுதுவிடிந்து மூன்றுமணி வே ளையாயிருக்கிறதே.

ய க நீர்க்கதரிசியாகிய யோவே லினால் உரைக்கப்பட்டபடி இது வே நடந்துவருகின்றது.

ய எ [2](அவனைக்கொண்டு) பரா பரன் உரைத்ததாவது: [3]கடை சிநாள்களில் நான் சகல மனிதர் மேலும் என்னுடைய ஆவியை ஊற்றுவேன்; [4]அப்பொழுது உங் கள் குமாரரும் உங்கள் குமாரத்தி களும் தீர்க்கதரிசனம் சொல்லு வார்கள்; உங்கள் வாலிபர் தரிச னைகளைக் காண்பார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களை அடை வார்கள்.

ய அ என்னுடைய ஊழியக்கா ரர்மேலும், என்னுடைய ஊழியக் காரிகள்மேலும், அந்நாள்களில் என்னுடைய ஆவியை ஊற்று வேன்; [5]அப்பொழுது நீர்க்கதரி சனம் சொல்லுவார்கள்.

கி. பி. ஈகூ.

1 ← தெச. இ. எ.
2 எசா. சச. உ. எசே. மக. கூ: ஈக. உள. பே வே. உ, உஅ, உக. சகரி. மஉ. ம. பேரா. எ. உஅ.
3 அப். ம. சஇ.
4 அப். உக. க.
5 அப்.உக. ச, க, ம.க கொரி.மஉ. ம, உஅ: மச. க.
6 யோவே. உ. கம, கக.
7 மத். உச. உக. மாற். மக. உச. லூக். உக. உஇ.
8 உரோ. ம. கக.
9 போள. க. உ: மச.ம, மக. அப். ம. உஅ. எபி. உச.
10 லூக்.உக.உச. லூக்.உஉ.உஉ: உச. சச. அப். க. ம்அ: ச.உஅ.
11 அப். இ. கூ.
12 சங். மக. அ.

ய ஏ [6]அல்லாமலும் கர்த்தருடைய பெருமையும் பிரகாசமுமானவர் வருமுன்னே, உயர்ந்த வானத்தில் அற்புதங்களையும் தாழ்ந்த பூமியில் அதிசயங்களையும் உண்டாக்குவேன்.

ய ஐ இரத்தமும், அக்கினியும், புகைக்காடும் உண்டாகும்படிசெய்வேன்; [7]சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாற்றப்படும்.

ய ஒ [8]அப்பொழுது பராபரனுடைய நாமத்தைத் தொழுது கூப்பிடுபவன் எவனோ, அவன் இரட்சிக்கப்படுவான் என்பதே.

ய ஓ ¶ இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்களே அறிந்திருக்கிறபடி நாசரேத்தூராராகிய இயேசுவானவராலே பராபரன் உங்களுக்குள்ளே [9]பலத்தசெய்கைகளையும் அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்து, அவைகளினாலே அவனை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

ய ஙூ அப்படியிருந்தும் [10]பராபரன் நியமித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவர் முன் அறிந்ததின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, [11]அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவைமரத்தில் அறைந்து கொலைசெய்தீர்கள்.

ய ச அவனைக்குறித்துத் தாவீது சொல்லுகிறதாவது: [12]நான் அசைக்கப்படாதபடிக்கு, பராபரன் என் வலதுபாரிசத்திலே இருக்கிறபடியினாலே, நான் எப்பொழுதும் அவனை எனக்குமுன்பாக வைத்துக்கொள்ளுகிறேன்.

ய ஞ அதினாலே என் இருதயம் மகிழ்ச்சியாய் இருக்கின்றது, என் நாவு சந்தோஷமாய்ப் பேசுகின்றது.

ய ட மேலும் நீர் என் ஆத்துமாவை மரித்தோர்ஸ்தலத்திலே விட

Digitized by Google

வும், உம்முடைய பரிசுத்தவான் அழிவைக்காணும்படி செய்யவும் மாட்டீர்.

உஎ சிவமார்க்கங்களை எனக்குத் தெரியப்படுத்தினீர், உம்முடைய சந்நிதானத்திலே என்னைச் சந்தோஷத்தாலே நிரப்புவீர்; ஆதலால், என்னுடைய சரீரமும் நம்பிக்கையோடே படுத்துக்கொள்ளும் என்று சொல்லியிருக்கிறார்.

உஅ ஆனபடியினாலே மரணமானது இயேசுவை அடக்கிக்கொள்ளக்கூடாதிருக்க, பராபரன் [1]அந்நின்உபாதிகளின் கட்டவிழ்த்து, அவரை எழுப்பினார்.

உக ¶ சகோதரர்களே, [2]நமது கோத்திரத்தலைவனாகிய தாவீதைக் குறித்து நான் உங்களுடனே தயரியமாய்ப் பேசுகிறேன்* கேட்பீர்களாக; அவர் மரணமடைந்து அடக்கம்பண்ணப்பட்டார்; அவருடைய சமாதி இக்காள்வரைக்கும் நம்மிடத்தில் இருக்கின்றது.

உடு ஆதலால், [3]அவர் தீர்க்கதரிசியாயிருந்து உன் ஆசனத்தில் வீற்றிருக்கும்படிக்கு, சரீரசம்பந்தமாய் உன்னுடைய சந்ததியில் கிறிஸ்துவை எழும்பப்பண்ணுவேன் என்று பராபரன் தனக்கு ஆணைகொடுத்ததை அறிந்து,

உக [4]அவர் கிறிஸ்துவினுடைய ஆத்துமா மரித்தோர் ஸ்தலத்திலே விடப்படுவதில்லை என்றும், அவருடைய சரீரம் அழிவை அடைவதில்லை என்றும் முன் அறிந்து, அவர் உயிரோடெழுந்திருப்பதைக் குறித்துப் பேசினார்.

உஉ [5]இந்த இயேசுவையே பராபரன் எழுப்பினார்; [6]அதற்கு நாங்கள் எல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்; மேலும் தாவீது பரமண்டலத்திற்கு எழுந்துபோகவில்லை.

உக அதுவுமல்லாமல், அவர் சொன்னது: உம்முடைய சத்துருக்களை நான் உமது பாதப்படியாக்கிப்போடுமளவும்,

உச [7]எனது வலதுபாரிசத்திலே

கி. பி. ஈஈ.

1 உஉ. லச. அப். உ. மஇ: ச. ம: ம. சம: மஉ.உம,உச: மஎ. உக. உரோ. ச. உச: அ. மக. உ கொரி. உ. மச: மஇ. மஇ. உ கொரி.ச.மச. கலா.உ.உ.எபே. உ. உம். கொலோ. உ. மஉ. உ தெச. உ. ம. எபி. மக. உம். உ பே. உ. உஉ.

2 உ இரா. உ ம. அப். மக. உக. * அல்லது நான் பேசட்டும்.

3 உ சாமு. எ. மஉ, மக. சங். ஈஉ. மக. மாற். உ. உஉ, உக. உரோ. உ. உ. உதிமோ.உ.அ.

4 சங். மக. ம. அப். மக. உஇ.

5 உச. லச.

6 அப். உ. அ.

7 சங். ஈம. உ.மத். உஉ. ச ச. உ கொரி. மஇ. உஇ. எபே. உ. உம். எபி. உ.மக.

8 அப். இ. உக. பிலி. உ ஈ. எபி. ம. மஉ.

9 யோவா. மச. உக: மஇ.உக: மக. எ,மக. அப். உ. ச.

10 அப். ம. சஇ. எபே. ச. அ.

11 அப். இ. உக.

12 உகொரி. மஉ. ம. மாற். உ.ம. அப். உ. ஈ: மக. உம.

13 மாற். உச.சஈ. அப். உ. மக.

14 யோவே. உ. உஅ. அப். உ. உஇ.

15 அப். ம. சஇ: மக. மஇ, மஅ: மச. உஈ: மஇ. உஅ,மச. எபே. உ, மக, மஈ.

நம்முடைய சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

ஈஅ ¶ அதற்குப் பேதுரு சொன்னதாவது: [13]உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும்படிக்கு நீங்கள் மனம்திருப்பி, ஒருவன் ஒருவனும் இயேசுக்கிறிஸ்துவின்நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியாகிய ஈவையும் பெறுவீர்கள்.

ஈக (அதைக்குறித்து) வாக்குத்தத்தமானது [14]உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் [15]நம்முடைய தேவனாகிய பராபரன் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிற்றே என்று சொல்லி,

சய மற்ற அநேக வார்த்தைகளாலும் (அதைக்குறித்துச்) சாட்சியிட்டு, நாறுமாறுள்ள இந்தச் சந்ததியைவிட்டு இரட்சிக்கப்படுவீர்களாக என்று புத்திசொன்னான்.

சக ¶ அந்தப்படியே அவனுடைய வார்த்தையைச் சந்தோஷ

மாய் ஏற்றுக்கொண்டவர்கள் எவர்களோ, அவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்; அந்நாளிலே ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.

சஉ [1]அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலேயும், ஒருவரோடொருவர் ஐக்கப்படுதலிலேயும், அப்பம்பிட்குதலிலேயும், செபம்பண்ணுதலிலேயும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

சங ஆத்துமாக்கள் யாவுக்கும் பயபத்தி உண்டாயிற்று; அன்றியும் [2]அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும் அதிசயங்களும் செய்யப்பட்டன.

சச எல்லா விசுவாசிகளும் ஒருமித்திருந்து, [3]சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்து,

சஞ ஆஸ்திகளையும் உடைமைகளையும் விற்று, [4]அவைகளில் ஒவ்வொருவனுக்கு வேண்டுவது எவ்வளவோ, அவ்வளவு பகிர்ந்துகொடுத்தார்கள்.

சசு [5]தினந்தோறும் அவர்கள் ஒருமனப்பட்டு, [6]தேவாலயத்திலே தரித்திருந்து, [7]வீடுகள்தோறும்* அப்பம்பிட்டு, மகிழ்ச்சியும் கபடமில்லாமையுமுள்ள இருதயத்தோடு போசனம்பண்ணிப் பராபரனைப் புகழ்ந்துகொண்டு,

சஎ (மற்றச்) [8]சனங்கள் எல்லாரிடத்திலும் கிருபைபெற்றிருந்தார்கள்; [9]அன்றியும் இரட்சிக்கப்படுகிற (மற்றப்) பேர்களைக் கர்த்தர் தினந்தோறும் சபையோடே சேர்த்தார்.

ங. அதிகாரம்.

க. குணமாக்கப்பட்ட ஒரு சப்பாணியைப் பார்க்கவந்த சனங்களுக்குப் பேதரு பிரசங்கித்தது. ஙஉ. அவன் குணமாக்கப்பட்டது, தனக்கும் யோவானுக்கும் இருந்த வல்லமையினாலும் பரிசுத்தத்தினாலும் அல்ல, பராபரனும் அவருடைய குமாரனுமாகிய இயேசுவின் நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினாலுமே என்று சொல்லி, ஙக. இயேசுவை நியாயசபையில் அறைந்ததற்காக அவர்மேல் குற்றஞ்சொன்னது. ஙஎ. பராபரனுடைய ஆதி நிர்ணயத்தின்படியும் வேதவெழுத்துக்களின்படியும் நடந்தாயினும், அந்தப் பாதகத்தை அவர்கள் அறியாமையினாலே செய்தார்களென்று சொல்லி, ஙஙக. இயேசுவை நம்பினவர்கள் பெருகினது. ஙசஎ. அக்காலத்தில் [10]ஒருநாள் செபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் [11]தேவாலயத்துக்குப்போனார்கள்.

ங அப்பொழுது [12]தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதன் சுமந்துவரப்பட்டான்; தேவாலயத்தில் பிரவேசிப்பவர்களிடத்தில் [13]பிச்சை கேட்கும்படிக்கு, நாடோறும் அவனை அலங்காரவாசல் என்னப்பட்ட தேவாலய வாசலினிடத்திலே வைப்பார்கள்.

ஙக தேவாலயத்தில் பிரவேசிக்கும்படி போகிற பேதருவையும் யோவானையும் அவன்கண்டு, பிச்சைகேட்டான்.

ச அப்பொழுது யோவானுடனேகூடப் பேதரு அவனை உற்றுப்பார்த்து, எங்களை நோக்கிப் பார் என்றான்.

ஙஇ அவன் அவர்களுடைய கையில் ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான்.

ஙஈ அப்பொழுது பேதரு சொன்னது: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, எனக்கு உண்டானதை உனக்குத் தருகிறேன்; [14]நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே நீ எழுந்து நடவென்று சொல்லி,

ஙஉ வலதுகையிலேயே அவனைப் பிடித்துத் தூக்கி எடுத்தான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் ஸ்திரமடைந்தன.

ஙஊ [15]அவன் குதித்து எழுந்து நின்று நடந்து, அவர்களுடனேகூடத் தேவாலயத்தில் பிரவேசித்து, நடந்து குதித்துப் பராபரனைத் துதிசெய்தான்.

ஙஎ [16]அவன் நடக்கிறதையும் பராபரனைத் துதிக்கிறதையும் சனங்

அறிபாலையிலே ஏற்றுக்கொண்டதினால், கூ. அவர்கள் மனம்நிரும்பி விசுவாசித்து, அந்த இயேசுவினாலேயே பாவமன்னிப்பும் இரட்சிப்பும் அடையும்படி புத்திசொன்னது.

அக்காலத்தில் [10]ஒருநாள் செபவேளையாகிய ஒன்பதாம்மணி நேரத்திலே பேதருவும் யோவானும் [11]தேவாலயத்துக்குப்போனார்கள்.

உ அப்பொழுது [12]தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனிதன் சுமந்துவரப்பட்டான்; தேவாலயத்தில் பிரவேசிப்பவர்களிடத்தில் [13]பிச்சை கேட்கும்படிக்கு, நாடோறும் அவனை அலங்காரவாசல் என்னப்பட்ட தேவாலய வாசலினிடத்திலே வைப்பார்கள்.

கூ தேவாலயத்தில் பிரவேசிக்கும்படி போகிற பேதருவையும் யோவானையும் அவன்கண்டு, பிச்சைகேட்டான்.

ச அப்பொழுது யோவானுடனேகூடப் பேதரு அவனை உற்றுப்பார்த்து, எங்களை நோக்கிப் பார் என்றான்.

ஙஇ அவன் அவர்களுடைய கையில் ஏதாகிலும் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி, அவர்களை நோக்கிப் பார்த்தான்.

ஙஈ அப்பொழுது பேதரு சொன்னது: வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை, எனக்கு உண்டானதை உனக்குத் தருகிறேன்; [14]நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே நீ எழுந்து நடவென்று சொல்லி,

ஙஉ வலதுகையிலேயே அவனைப் பிடித்துத் தூக்கி எடுத்தான்; உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் ஸ்திரமடைந்தன.

ஙஊ [15]அவன் குதித்து எழுந்து நின்று நடந்து, அவர்களுடனேகூடத் தேவாலயத்தில் பிரவேசித்து, நடந்து குதித்துப் பராபரனைத் துதிசெய்தான்.

ஙஎ [16]அவன் நடக்கிறதையும் பராபரனைத் துதிக்கிறதையும் சனங்

1 சக. மச. அப். க. மச. உரோ. மஉ. மஉ. எபே. க. மஅ. கொலோ. ச. உ. எபி. க.உ.

2 மாற். மக. மஎ. அப். ச. கக: இ. மஉ.

3 அப். ச. கஉ, கச.

4 எசா. இஅ. எ.

5 அப். க. மச.

6 லூக். உச. இக. அப். இ. ச.உ.

7 அப். உஅ. எ.

* அக்கம்பே.

8 லூக். உ. இஉ. அப். ச. கக. உரோ. மச. இ.அ.

9 அப். இ. மச: மக. உச.

10 சங். இஇ. மக.

11 அப். உ. சக.

12 அப். மச. அ.

13 யோவா. க. அ.

14 அப். ச. இ.

15 எசா. கஇ. க.

16 அப். ச. மக, உக.

Digitized by Google

கள் எல்லாரும் கண்டார்கள்.

ல அல்லாமலும் தேவாலயத்தின் [1]அலங்கார வாசலினிடத்திலே பிச்சைகேட்க உளுக்காந்திருந்தவன் இவன்தான் என்று அவர்கள் அறிந்து, அவனுக்குச் சம்பவித்ததைக்குறித்து மிகவும் பிரமித்து, அதிசயப்பட்டார்கள்.

லக ¶ அன்றியும் குணமாக்கப்பட்ட சப்பாணி பேதுருவையும் யோவானையும்அடுத்துக்கொண்டிருந்தபடியால், சனங்கள் எல்லாரும் பிரமிப்புள்ளவர்களாய், [2]சாலோமோன் மண்டபம் என்னப்பட்ட மண்டபத்திலே அவர்களிடத்தில் ஓடிப்போய்க் கூடினார்கள்.

லஉபேதுரு அதைக்கண்டுசனங்களுடனே சொன்னதாவது: இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? அல்லது நாங்கள் எங்கள் சுயவல்லமையினாலாவது பத்தியினாலாவது இவனை நடக்கப்பண்ணினவர்களாக நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?

லக [3]நம்முடைய முன்னோர்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்பவர்களுடைய தேவனுமிருக்கிறவர் தம்முடைய குமாரனாகிய [4]இயேசுவை மகிமைப்படுத்தினார்; அந்த இயேசுவைப் பிலாத்து விடுதலையாக்க எண்ணினபொழுது, [5]நீங்கள் அவனுக்கு முன்பாக அவனை ஒப்புக்கொடுத்து [6]மறுதலித்தீர்கள்.

லச [7]பரிசுத்தமும் [8]நீதியுமுள்ளவனை நீங்கள் மறுதலித்து, கொலைபாதகனை மனிதனை உங்களுக்காக விடுதலையாக்கவேண்டுமென்று கேட்டீர்கள்; ஜீவனையுடைய அதிபதியையே* கொலை செய்தீர்கள்.

லஞ [9]அவனைப் பராபரன் மரித்தோரிலிருந்து எழுப்பினார்; [10]அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

ஈ. பி. ஈஈஈ.

1 Purar. கூ.அ.
2 Purar.ம.உக. அப்.இ.மஉ.
3 அப். இ. லம.
4 Purar. எ. உக: மஉ, மக: மஎ. க.
5 மத். உஎ. உ.
6 மத். உஎ. உம். மாற். மஇ. மக. லூக். உக. மஅ, உம, உக. Pur. ஊ. மஅ. சம: மக. மஇ. அப். மக. உஅ.
7 சங். மக. ம. மாற். க. உச. லூக். க. கஇ. அப். உ. உஎ: ச. உஎ.
8 அப். எ. இஉ: உஉ. மச.
* அல்லது ஊழன. எபி. உ. ம: இ. க. க Pur. இ. உக.
9 அப். உ. உச.
10 அப். உ. கஉ.
11 மத். க. உஉ. அப். ச. ம: மச. க.
12 லூக். உக.கச. Purar. மக.க. அப். மக. உஎ. க Gen. உ.அ. க Gen. க.மக.
13 லூக்.உச.சச. அப். உக.உஉ.
14 சங். உஉ. ஊ. இம. க: இ. தானி. க. உக. க Pu. க. ம, மக.
15 அப். உ. கஅ.
16 லூக். க. எம.
17 அப். க. மக.
18 மத். மஎ. மக.
19 இ Gen. மஅ. மஇ, மஅ, மக. அப்.எ.கஎ.

லடு மேலும் [11]அவருடைய நாமத்தின்மேலுள்ள விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைத் திரப்படுத்திற்று; அவனைப் பற்றிக்கொண்ட விசுவாசமே உங்கள் எல்லாருக்குமுன்பாகவும் இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது.

லஎ ¶ சகோதரரே, நீங்களும் உங்கள் தலைவரும் [12]அதை அறியாமையினாலே செய்தீர்கள் என்று அறிந்திருக்கிறேன்.

லஅ [13]பராபரன் கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தம்முடைய தீர்க்கதரிசிகள் எல்லாருடையவாக்கினாலும் [14]முன் அறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்.

லக ¶ ஆனபடியினாலே பராபரனுடைய சந்நிதானத்திலிருந்து சவுக்கியம் உண்டாகும் காலங்கள் வரவும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுக்கிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பவும் தக்கதாக உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும்படிக்கு,

உல [15]நீங்கள் மனதைத் திருத்திக் குணப்படுங்கள்.

உக [16]உலகம் உண்டானதுமுதல் பராபரன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் [17]நிறைவேறும் காலம் வரும்பரியந்தம் [18]இயேசுவானவர் பரமண்டலத்திலே இருக்கவேண்டும்.

உஉ ¶ அந்தத் தீர்க்கதரிசிகளில் மோசேயானவர் நம்முடைய முன்னோர்களுடனே சொன்னதாவது: [19]உங்கள் தேவனுகிய பராபரன் என்னைப்போலத் தீர்க்கதரிசி ஒருவனை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து தோன்றப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் யாவற்றிற்கும் செவிகொடுப்பீர்களாக.

Digitized by Google

உசு அந்தத் தீர்க்கதரிசியின் சொல் கேளாதவன் எவனே, அவன் தன் சனத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான் என்று சொன்னார்.

உச சாமுவேலும் அவனுக்குப் பின்வந்து பேசின தீர்க்கதரிசிகள் எல்லாரும் இந்த நாள்களை முன் அறிவித்தார்கள்.

உஞ [1]நீங்களே அந்தத் தீர்க்கதரிசிகளுடைய சந்ததியாருமாய், பூமியிலுள்ள வம்சத்தார் எல்லாரும் [2]உன் சந்ததியினாலே ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று பராபரன் ஆபிரகாமுக்குச் சொல்லி, இவ்விதமாய் நம்முடைய முன்னோர்களோடே பண்ணின உடம்படிக்கைக்கு உள்ளானவர்களுமாய் இருக்கிறீர்கள்.

உசு ஆதலால் முதலாவது உங்களுக்காகவே [3]பராபரன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை எழுப்பி, [4]உங்களில் தங்கள் பொல்லாங்குகளை விட்டுத் திரும்புகிறவர்கள் எவர்களோ, அவர்கள் எல்லாரையும் [5]அவர் ஆசீர்வதிக்கும்படிக்கு அவனை அனுப்பினார் என்றான்.

ச. அதிகாரம்.

ச. யூதர்களுடைய தலைவர்கள் பேதுருவின் பிரசங்கத்துக்காகத் தாங்களடைந்து, ச. (நிருவனத்தைக் கேட்ட அகோமாயிரம்பேர்கள் குணப்பட்டாலும்) அவனையும் யோவானையும் காவலில் அடைத்தது. ஙி. அவனைச் சேர்ந்தபோது அவன் சப்பாணியாயிருந்தவன் இயேசுவின் நாமத்தினால் சுகமடைந்தானென்றும், அந்த இயேசுவினாலேயே தாம் நித்திய இரட்சிப்பை அடைய வேண்டுமென்றும் தயிரியமாய்ச் சொல்ல, ஙக. அவர்கள் அவனுக்கும் யோவானுக்கும் அந்த நாமத்தில் பிரசங்கிக்கக் கூடாதென்று கற்பித்து, அவர்களைப் பயமுறுத்தினதினிமித்தம், உக. சபையார் செபம்பண்ணினது. கஉ. பராபரன் அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைத்ததால் அவர்கள் செபத்தைக் கேட்டாரென்று சாட்சிபெட்டு, நிருச்சபைக்குப் பரிசுத்தஆவியின் நலனையும் அதிலோங்கிய ஐக்கத்தையும் உண்டுபண்ணினது.

இப்படி அவனும் யோவானும் சனங்களுடனே பேசிக்கொண்டிருக்கையில்,

உ அவர்கள் சனங்களுக்கு உ

ஙி. பி. ஙூ.

1 அப். உ. உசு. உரோ. க. ச, அ: ஙஇ. அ. கலா. க. உக.

2 ஆ மோ. ஙஉ: ஙஅ. ஙஅ: உஉ. ஙஅ: உக. ச: உஅ. ஙச. கலா. க. அ.

3 மத். ம. இ: ஙஇ. உச. லூக். உச. சஎ. அப். ஙக. கஉ, கக, சக.

4 மத். க. உக.

5 உஉ. வச.

* அல்லது தேவாலயத்தின் பிரதானி. லூக். உஉ. ச. அப். இ. உச.

6 மத். உஉ. உக. அப். உக. அ.

7 லூக். க. உ. போவா. ஙக. சஙு: ஙஅ. ஙக.

8 உ மோ. உ. ஙச. மத். உக. உக. அப். எ. உஎ.

9 லூக். ஙஉ, ஙஉ.

10 அப். உ. உச.

11 அப். க. க, ஙக.

பதேசித்ததினாலும், இயேசுவானவர் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்கிறார் என்று அறிவித்ததினாலும், ஆசாரியரானவர்களும் தேவாலயத்தைக் காக்கிற சேனைத்தலைவனும், * சதுசேயரானவர்களும் [6]விசனப்பட்டு,

ஙூ அவர்களிடத்தில் போய் அவர்களைப் பிடித்து, சாயங்காலமானபடியினாலே மறுநாள்வரைக்கும் காவலில் வைத்தார்கள்.

ச அப்போஸ்தலருடைய வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்களுடைய தொகை ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்தது.

ஙி ¶ மறுநாளிலே சனங்களுடைய தலைவரும், மூப்பரும், வேதபாரகரும்,

ஙு [7]பிரதான ஆசாரியனாகிய அன்னாவும், காய்பாவும், யோவானும், அலேக்குசந்தரும், பிரதான ஆசாரிய குடும்பத்தாராகிய மற்றயாவரும் எருசலேமிலே கூடிவந்து,

ஙெ அவர்களை நடுவே நிற்கப்பண்ணி, [8]நீங்கள் எந்த வல்லமையினாலே, எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

ஙஅ அப்பொழுது [9]பேதுரு பரிசுத்தஆவியினாலே நிறைந்து, அவர்களுடனே சொன்னதாவது: சனத்தலைவரும் இஸ்ரவேலரின் மூப்பருமானவர்களே,

ஙக உபகாரத்தைப் பெற்றுக்கொண்ட வியாதிக்காரனை இவன் எதினாலே சொஸ்தம் அடைந்தான் என்று இன்றைக்கு எங்களிடத்தில் விசாரிக்கிறபடியால்,

ஙச உங்களாலே சிலுவைமரத்தில் அறையப்பட்டவருமாய், [10]பராபரனாலே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாய் இருக்கிற [11]நாசரேத்தூராராகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் உங்களுக்குமுன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறான் என்று நீங்களும்

Digitized by Google

இஸ்ரவேல் சனங்கள் எல்லாரும் அறிந்திருப்பீர்களாக.

ஙக [1]வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் அசட்டைபண்ணப்பட்ட கல் அவரே; அவரே கோடிக்குத் தலைக்கல்லானவர்.

ஙஉ [2]அல்லாமலும் அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்புக் கிடையாது; நாம் இரட்சிப்பை அடையும்படிக்கு வானத்தின்கீழ் எங்கும் மனிதர்களுக்குள்ளே வேறொரு நாமம் கட்டளை இடப்படவும் இல்லை என்றான்.

ஙஎ ¶ பேதுருவும் யோவானும் காண்பித்த தயிரியத்தை அவர்கள் பார்த்து, [3]அவர்கள் படியாதவர்கள் என்றும் தாழ்மையானவர்கள் என்றும் அறிந்தபடியினாலே ஆச்சரியப்பட்டார்கள்; அவர்கள் இயேசுவுடனேகூட இருந்தவர்கள் என்றும் அறிந்தார்கள்.

ஙச மேலும் குணமாக்கப்பட்ட மனிதனை [4]அவர்கள் அருகே நிற்கக்கண்டபடியால், அவர்கள் எதிர்பேசுகிறதற்கு இடமிருக்கவில்லை.

ஙஅ அப்பொழுது அவர்கள் சங்கத்தைவிட்டு வெளியே போகும்படி கட்டளையிட்டு, பின்பு தங்களுக்குள்ளே யோசனைபண்ணிக்கொண்டு சொன்னதாவது:

ஙக [5]எருசலேமில் வாசம்பண்ணுகிற யாவருக்கும் தெரிந்திருக்கிற வெளியரங்கமான அற்புதம் அந்த மனிதர்களால் செய்யப்பட்டது; [6]அதை நாம் இல்லை என்று சொல்லக்கூடாது; ஆகையால் நாம் அவர்களை என்னசெய்யலாம்?

ஙஎ சனங்களுக்குள்ளே அது அதிகமாய்ப் பிரசித்தமாகாதபடிக்கு, இதுமுதல் அவர்கள் அந்த நாமத்தைக்குறித்து ஒரு மனிதனோடும் பேசக்கூடாதென்று நாம் அவர்களைப் பயப்படுத்திக் கட்டளை இடவேண்டும் என்று சொல்லிக்கொண்டு,

கி. பி. நூற்.

1 சங்.118,22. ஏசா. 28,16. மத். 21,42. மாற். 12,10. லூக். 20,17. 1 பேது. 2,7.

2 மத். 1,21. அப். 10,43. 13,38. 1 தீமோ. 2,5, 6.

3 மத். 11,25. 1 கொரி. 1,26. 27.

4 அப். 3,11.

5 அப். 2,22.

6 யோவா. 11,47. 48.

7 அப். 3,6. 16.

8 அப். 3,12. 16.

9 அப். 22,15. 1 யோ. 1,1. 3. யோவா. 19,35. 21,24.

10 அப். 4,18. 20. 5,28. 40.

11 மத். 28,11. 12. லூக். 23,4. 14. 22. 47. யோவா. 18,38. 19,4. 6. அப். 13,28. 23,29. 25,18. 25. 26,31. 32. 28,18.

12 அப். 4,21. 5,26.

13 அப். 4,23. 24.

14 2 இரா. 19. 15. நெகே. 9,6. சங். 146,6.

15 சங். 2,1. 2.

ஙஉ [7]அவர்களை அழைத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசாமலும் போதியாமலும் இருக்கும்படி அவர்களுக்குக் கட்டளை இட்டார்கள்.

ஙஊ ¶ அதற்கு மாறுத்தரமாகப் பேதுருவும் யோவானும்சொன்னதாவது: [8]நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப்படுகிறதிலும், உங்களுக்குக் கீழ்ப்படுகிறது பராபரனுக்குமுன்பாக நியாயமாயிருக்குமா? இதை நீங்கள் நிதானித்துப்பாருங்கள்.

ஙக [9]நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் [10]பேசாமல் இருக்கக்கூடாதே என்றார்கள்.

ஙஎ அப்படியிருந்தும் அற்புதத்தால் சொஸ்தமாக்கப்பட்ட மனிதன் நாற்பதுவயதுக்கு அதிகவயதுள்ளவனானபடியால்,

ஙஅ [11] நடந்ததைக்குறித்துச் சனங்கள் எல்லாரும் பராபரனைப் புகழ்ந்தபடியினாலே, [12]அப்போஸ்தலர்களைத் தண்டிக்கும்படிக்குச் சனங்களின்நிமித்தம் சங்கதார் வகை ஒன்றும் காணுமல், அவர்களைப் பின்னும் பயப்படுத்திவிட்டுவிட்டார்கள்.

ஙஆ ¶ [13]அவர்கள் விடப்பட்டபின்பு தங்களைச் சேர்ந்தவர்களிடத்திற்குப் போய், தங்களுக்குப் பிரதான ஆசாரியரும் மூப்பரும் சொன்ன யாவையும் அறிவித்தார்கள்.

ஙச அவர்கள் அதைக் கேட்டு ஒருமனப்பட்டுப் பராபரனை நோக்கிச் சொன்னதாவது: ஆண்டவரே, [14]நீர் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின தேவனுய் இருக்கிறீர்.

ஙஇ உம்முடைய தாசனுகிய தாவீதைக்கொண்டு தேவரீர் சொன்னது: உலகத்தார் என்னத்திற்குக் கலகம்பண்ணுகிறார்கள்? [15]சனக்கூட்டங்கள் என்னத்திற்கு வீணகாரியங்களைச் சிந்திக்கிறார்கள்.

கி. பி. ஈஈ.

உசு பூமியிலுள்ள இராசாக்களும் காரியத்தலைவரும் பராபரனுக்கும் அவருடைய கிறிஸ்துவுக்கும் விரோதமாய் எழும்பி, ஏகமாய்க் கூடினார்கள் என்றீர்.

உஎ அதின்படி இந்த நகரத்திலே ஏரோதும் பொந்தியுபிலாத்துவும் அஞ்ஞானிகளோடும் [1]இஸ்ரவேல் சனங்களோடும்கூடத் தேவரீருடைய கையும் ஆலோசனையும் முன்னே குறித்தவைகள் யாவையும் செய்வதற்கு,

உஅ [2]தேவரீர் அபிஷேகம்பண்ணிவைத்த உம்முடைய [3]பரிசுத்த குமாரனாகிய இயேசுவுக்கு [4]விரோதமாக மெய்யாய்க் கூடினார்கள்.

உக அப்படியிருக்கக் கர்த்தாவே, [5]அவர்கள் (எங்களைப்) பயப்படுத்துகிறதைத் தேவரீர் நோக்கிப் பார்த்து,

ஈய [6](பிணியாளிகளைக்) குணமாக்குதற்கு உம்முடைய வல்லமை வெளிப்படும்படியாயும், உம்முடைய [7]பரிசுத்த குமாரனாகிய இயேசுவின் நாமத்தினாலே [8]அதிசயங்களும் அற்புதங்களும் நடக்கும்படியாயும்செய்து,உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை மிகுந்த தயிரியத்தோடு சொல்லும்படி அவர்களுக்கு அதுக்கிரகம் செய்யும் என்றார்கள்.

ஈக ¶ அவர்கள் செபம்பண்ணினபொழுது, [9]அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது; அல்லாமலும் அவர்கள் எல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, [10]பராபரனுடைய வசனத்தைத் தயிரியத்தோடே சொன்னார்கள்.

ஈஉ ¶ அன்றியும் திரளான விசுவாசிகளுக்கு [11]ஒரே இருதயமும் ஒரே ஆத்துமாவும் இருந்தன; [12]ஒருவனாகிலும் தனக்கு உள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தன.

ஈஈ [13]கர்த்தராகிய இயேசு உயிரோடெழுந்ததைக்குறித்து [14]அப்போஸ்தலர்கள் மிகுந்த பலத்தோடே [15]சாட்சிகொடுத்தார்கள்.

ஈஉ [16]மேலும் நிலங்களையும் வீடுகளையுமுடைய யாவரும் அவைகளை விற்று, விற்கப்பட்ட பொருள்களின் விலைக்கிரயத்தை [17]அப்போஸ்தலரிடத்தில் கொண்டுபோய், அவர்களுடைய பாதத்திலே வைத்தார்கள்.

ஈஊ (அதில்) [18]அவனவனுக்கு வேண்டியிருந்தபடி பகிர்ந்துகொடுக்கப்பட்டது. ஆதலால் அவர்களில் ஒருவனும் குறைவுபடவில்லை; ஆனபடியினாலே மிகுந்த கிருபை அவர்கள் எல்லாருக்கும் உண்டாயிருந்தது.

ஈஎ இலேவியனுமாய், சிப்புருதீவில் பிறந்தவனுமாய், ஆறுதலின் மகனென்று அருத்தம்கொள்ளுகிற பருனபா என்று பேரை அப்போஸ்தலராலே பெற்றுக்கொண்டவனுமாயிருந்த யோசேப்பென்பவனும் [19]தனக்கு உண்டான நிலத்தை விற்று,

ஈஏ திரவியத்தைக் கொண்டுபோய், அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

ருு. அதிகாரம்.

அல்லாமலும் அனனீயா என்னப்பட்டவனும், அவனுடைய மனைவியாகிய சப்பீராளும் (தங்கள்) காணியை விற்றார்கள்.

1 அப். உ. உக: உ. ருஅ.

2 மத். உக. உ. லூக். உஉ. உ: உக. உ, அ.

3 லூக். உ. உஇ.

4 லூக். உ. ருஅ. யோவா. ரு. உஉ.

5 ரூ. உஉ. வச. அப். ஊ. உஏ: ரூ. சக: ரூ. உ:ரூக. அ:உக. உஊ: உஅ. உஉ. எபே. உ. ரூக.

6 அப். உ. சக: இ. ரூ.

7 அப். உ.உ, ரூக.

8 உஏ. வச.

9 அப். உ. உ,ச: ரூக. உஈ.

10 உஈ. வச.

11 அப். இ. ரூ. உரோ. ரூஇ. இ, உ. உ கொரி. ரூக. ரூச. பிலி.உ. உஏ: உ. உ உ பே. உ. அ.

12 அப். உ. சச.

13 அப். உ. அ.

14 அப். உ. உஉ

15 அப். உ. சஏ.

16 அப். உ. சஇ.

17 உஏ. வச.அப். இ. உ.

18 அப். உ. சஇ: ஊ. உ.

19 உச, உஇ. வச. அப். இ. உ, உ.

ருு. அதிகாரம்.

உ. அனனீயாவும், அவன் பெண்சாதி சப்பீராளும் செய்த மாபாதகநிமித்தம் பேதுருவினாலே கண்டிக்கப்பட்டு, விழுந்து செத்தது. ரூ. அந்த அப்போஸ்தலர் மறுபடியும் சாவலில் அடைக்கப்பட்டும், ரூஉ. ஒரு தேவதூதனால் விடுதலையாக்கப்பட்டு,பாளருக்கும் பிரசங்கிக்கக்கட்டளை பெற்றது. ரூக. அவர்கள் தேவாலயத்தில் பிரசங்கித்திருக்கிறதைக் கேட்டு, ரூக. மரணத்துக்கு ஏதுவாயிருக்கையில் பூதர்களுக்குள்ளே பெரிய ஆலோசனைக்காரனாயிருந்த கமாலியேல் சொன்ன ஆலோசனையின்படி உயிரோடே விடப்பட்டபின்பு, சஅ. அப்பட்டம் சாற்றோரும் பிரசங்கித்துப் பாவாமலையைப்படித்தினது.

Digitized by Google

கி. பி. கூஉ.

உ பின்பு அவன் தன் மனைவியும் அறிய அந்தக் கிரயத்திலே சில பணத்தை வஞ்சித்துவைத்து, [1]ஒரு பங்கைமாத்திரம் கொண்டுபோய், அப்போஸ்தலருடையபாதத்திலே வைத்தான்.

ஈ [2]அப்பொழுது பேதுரு சொன்னது: அனனீயாவே, [3]நிலத்தின் விலைக்கிரயத்திலே சில பணத்தை நீ மறைத்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படிக்கு,* சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?

ஸ அது விற்கப்படாமலிருந்தபொழுது உன்னுடையதாய்இருக்கவில்லையோ? அதை விற்றபின்பு, (அதின் கிரயம்) உன் அதிகாரத்தில் இருக்கவில்லையோ? அப்படியிருக்க, என்னத்தினாலே நீ இந்தக் காரியத்தை உன் இருதயத்திலே வைத்தாய்? நீ மனிதரிடத்தில் அல்ல, பராபரனிடத்திலேபொய் சொன்னாய் என்றான்.

ரூசு ஆனபடியினாலே, [5]உன் இருதயத்தின் சிந்திப்பு உனக்கு மன்னிக்கப்படக்கூடுமானால் உன் துர்க்குணத்தை விட்டு மனம்திரும்பி, பராபரனைநோக்கி வேண்டிக்கொள்வாயாக என்றான்.

ரூச சீமோன் சொன்னது: நீங்கள் உரைத்தவைகளில் ஒன்றும் எனக்கு வராதபடிக்கு, [6]நீங்களே எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான்.

ரூடு ¶ இவ்விதமாய் அவர்கள் கர்த்தருடைய வசனத்தைச் சாட்சியாய் அறிவித்துச் சொன்னபின்பு, எருசலேமுக்குத் திரும்பி, சமாரியருடைய அநேக கிராமங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

1 அப். க. க: மக. க. எபி. க. உ

2 அப். உ. கஅ: ம. சஇ: மக.மா.

3 மத். உ. அ. உ இரா.இ.மக.

4 எபி. மஉ. மஇ.

5 நாளா. ச. உஈ. உ நீமோ. உ. உஇ.

6 உ மோ. உம. எ, மா. உ மோ. அ. அ. ச மோ. உக. எ. க இரா மக. க. பேது. சஉ அ. பாக். இ. மக.

7 செப். க. ம.

8 பேரா. மஉ. உம.

9 சா. இக. எ, அ.

ரூ ¶ அன்றியும் கர்த்தருடைய தூதன் பிலிப்புடனே சொன்னது: நீ எழுந்து தெற்கே பாழாய்க்கிடக்கிற காட்சா பட்டணத்திற்கு எருசலேமிலிருந்து போகிற மார்க்கத்திற்குப் போ என்றான்.

உஎ அந்தப்படி அவன் எழுந்து போனான்; [7]அப்பொழுது எத்தியோப்பியனா ஆண்ட இராசஸ்திரியாகிய கந்தாசி என்பவருடைய மந்திரியுமாய், அவளுக்கு உண்டான பொக்கிஷம் எல்லாவற்றின்மேலும் வைக்கப்பட்ட தலைவனுமாய் இருந்த [8]ஒரு எத்தியோப்பிய மனிதன் தொழுதுகொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து,

உஅ ஊருக்குத் திரும்பித் தன் இரதத்தில் உளுக்காந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்துக்கொண்டு போனான்.

உக ஆவியானவர் பிலிப்புடனே சொன்னது: அந்த இரதத்திற்குச் சமீபமாய் நீ சேர்ந்து, அதனோடே கூடிப்போ என்றார்.

கூய அந்தப்படி பிலிப்பு சேர ஓடி, அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசிக்கக் கேட்டு, நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரிந்திருக்கிறதா என்றான்.

கூக அவன் சொன்னது: ஒருவன் எனக்குக் காண்பியாவிட்டால் அது எனக்குத் தெரியுமா என்று சொல்லி, பிலிப்பு ஏறித் தன் பக்கத்தில் உளுக்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான்.

கூஉ அவன் வாசித்த வேதவாக்கியம் என்னவென்றால், [9]அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படும்படி கொண்டுபோகப்பட்டார்; தன் மயிராக் கத்தரிக்கிறவனுக்குமுன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப்போல, அவர் தமது வாயைத் திறவாதிருந்தார்.

கூக அவர் தாழ்மையாயிருக்கை

Digitized by Google

வில், அவருடைய நியாயம் எடுத்துப்போடப்பட்டது; அவருடைய ஜென் பூமியிலிருந்து எடுத்துப்போடப்பட்டபடியினாலே, அவருடைய தலைமுறையாரை யார் விவரித்துச் சொல்லுவார்கள் என்பதே.

கூ மந்திரியானவன் பிலிப்பை நோக்கி, நீர்க்குறித்தோ மற்றொருவனைக்குறித்தோ, யாரைக்குறித்து இதைச் சொன்னான், அதை நீர் எனக்குச் சொல்லும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

கூ அப்பொழுது பிலிப்பு உத்தரவு சொல்ல, [1]அந்த வேதவாக்கியம் தொடங்கி இயேசுவின் சுவிசேஷத்தை அவனுக்குப் பிரசங்கித்தான்.

கூ ¶ இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத்திலே சேர்ந்தபொழுது, மந்திரியானவன் சொன்னது: இதோ தண்ணீர்; [2]நான் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறதற்குத் தடையென்ன என்றான்.

கூஎ அதற்குப் பிலிப்பு சொன்னது: [3]நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் பெற்றுக்கொள்ளலாம் என்றான்; அவன் சொன்னது: [4]இயேசுக்கிறிஸ்துவைப் பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, இரதத்தை நிறுத்தச்சொன்னான்.

கூஅ பின்பு பிலிப்பும் மந்திரியும் இருவரும் இறங்கித் தண்ணீரில் பிரவேசித்தார்கள்; அங்கே அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.

கூக அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறினபொழுது, [5]கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்பை எடுத்துக்கொண்டார்; அதுமுதல் மந்திரியானவன் அவனைக் காணுமல் சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.

கூல பிலிப்பு ஆசோத்துப் பட்டணத்திலே காணப்பட்டுப் பின்பு பிரயாணமாய்ப் போய் சேசாரியாப்பட்டணத்தில் சேரும்பரியந்தம் சகல பட்டணங்களிலேயும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத் திரிந்தான்.

கூ. அதிகாரம்.

க. சவுல் தமஸ்குவுக்குப் போகையில், ச. பரம காட்சியிலுலே தரையில் விழுந்து, ட. அப்போஸ்தலப்பட்டத்துக்கு அழைக்கப்பட்டு, டஅ. அனனியாவினால் ஞானஸ்நானம்பெற்று, டக. பிற தேசத்தாரைத் தபிரியத்தோடே பிரசங்கித்தது. டக. பூதரும், டக. இரேகரும் அவனைக் கொல்ல வகைதேடியும், அவன் அவர்களுக்கு அப்படமற்போனது. டக. சமைக்கு ஓய்விருந்தபோது பேதுரு தபோகென்ற ஒரு நிமிர்வாதக்காரனைச் சொஸ்தமாக்கி, டக. மரித்துப்போன தபித்தாள் என்பவளை உயிர்ப்பித்தது.

[6]சவுல் என்பவன் பின்னும் கர்த்தருடைய சீஷரைப் பயப்படுத்திக் கொலைசெய்யும்படி சிறிப் பிரதான ஆசாரியனிடத்திற்குப் போய்,

உ தமஸ்கு ஊரிலே புருஷராயாலும் ஸ்திரீகளாயாலும் இந்த மார்க்கத்தார் என்று கண்டால், *அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படிக்கு, அவ்வூரிலுள்ள செபஆலயத்தலைவருக்கு நிருபங்களைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டுபோனான்.

கூ அவன் பிரயாணமாய்ப் போய், [7]தமஸ்கு ஊருக்குச் சமீபமாகையில், சடுதியாய் வானத்திலிருந்து பிரகாசம் தோன்றி, அவனைச் சூழ்ந்துகொண்டது.

ச உடனே அவன் தரையிலே விழுந்து, சவுலே, சவுலே, [8]என்னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டு, ஆண்டவரே, நீர் யார் என்றான்.

டு கர்த்தரானவர் சொன்னது: நீ துன்பப்படுத்துகிற இயேசுவே நான்; [9]முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

சு அவன் நடுங்கிப் பயந்து, ஆண்டவரே, [10]நான் என்ன செய்யவேண்டுமென்றிருக்கிறீர் என்றான்; அதற்குக் கர்த்தர் சொன்

இ. பி. கூடு.

1 லூக். உச.உஉ. அப். டஅ. உஅ.
2 அப்.ம.சா.
3 மத். உஅ. மக. மாற். மக. மக.
4 மத். மக. மக. போவா.க.கக: க. கஇ, கஅ: மக. உக. அப். க. உம. க போ. ச. மஇ: இ. இ, மக.
5 க இரா. டஅ. மூ. உ இரா. உ.மக. எசே.க. மூ, ம.
6 அப். அ. க. லூ. ச. மக. கதிமோ.க.ம.
* அல்லது இரே கபாஷையில், மர்க்கத்தாரெ ன்று என்பதால், அப்படியே; அப். மூ. க, உக.
7 அப். உக. க: உக. டூ. க கொரி. மஇ. அ.
8 மத். உஇ. சட. ழி.
9 அப். இ. கக.
10 லூக். க. ம. அப். உ கக: மக. கம.

Digitized by Google

னது: நீ எழுந்து ஊரில் பிரவேசிப்பாயாக; நீ செய்யவேண்டுவது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

எ அவனுடனே கூடப் பிரயாணப்பட்டுப்போன [1]பேர்கள், சத்தத்தைக் கேட்டும் ஒருவனையும் காணுமல் பிரமிப்போடே நின்றார்கள்.

அ பின்பு சவுல் தரையிலிருந்து எழுந்து தன் கண்களைத் திறக்கிற பொழுது, ஒருவனையும் காணாதவனுய் இருந்தான்; ஆதலால் அவர்கள் அவனைக் கைலாகுகொடுத்து, தமஸ்கு ஊருக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள்.

கூ அங்கே அவன் மூன்றுநாள் பார்வையில்லாமலும் புசியாமலும் பானம்பண்ணுமலும் இருந்தான்.

ஙூ ¶ அன்றியும் தமஸ்கு ஊரில் [2]அனனியா என்று பேருள்ள ஒரு சீஷன் இருந்தான்; அவனுக்குக் கர்த்தர் தரிசனையாகி, அனனியாவே என்றார், அவன் ஆண்டவரே, இதோ அடியேன் என்றான்.

ஙூ கர்த்தர் அவனுடனே சொன்னது: செம்மையென்னப்பட்ட தெருவிலே யூதாவின் வீட்டில் [3]தருசு ஊராளுகிய சவுல் என்பவன் இப்பொழுதே செபம்பண்ணுகிறான்.

ஙூ அல்லாமலும் பார்வை அடையும்படிக்கு, அவன் தரிசனத்திலே அனனியா என்று பேருள்ள மனிதன் உள்ளே வரவும் கையைத் தன்மேல் வைக்கவும் கண்டான்; ஆதலால் நீ எழுந்து, அங்கே போய், அவனைத் தேடுவாயாக என்றார்.

ஙூ அதற்கு அனனியா சொன்னது: ஆண்டவரே, அந்தமனிதனைக் குறித்து நான் அநேகராலே கேள்விப்பட்டிருக்கிறபடி, [4]அவன் எருசலேமிலுள்ள உம்முடைய பரிசுத்தவான்களுக்கு எத்தனை பொல்லாங்குகளைச் செய்தான்?

ஙூ இவ்வேளையும் [5]உம்முடையநாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனையும் கட்டும்படிக்கு, அவன் பிரதான ஆசாரியரால் அதிகாரம் பெற்றிருக்கிறானே என்றான்.

ஙூ அதற்குக் கர்த்தர் சொன்னது: [6]அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் இவ்வளவு பாடுபடவேண்டுமென்று அவனுக்குக் காண்பிப்பேன்.

ஙூ [7]ஆதலால் புறஜாதியாருக்கும் [8]ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கும்படிக்கு, [9]அவன் எனக்கு விசேஷமாகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியக்காரனுய் இருக்கிறான், ஆகையால் நீ போ என்றார்.

ஙூ ¶ [10]அப்பொழுது அனனியா போய், வீட்டிற்குள் பிரவேசித்து, [11]கைகளை அவன்மேல் வைத்து, சகோதரனுகிய சவுலே, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனையான இயேசுவென்னும் கர்த்தரானவர் நீ பார்வை அடைந்து [12]பரிசுத்தஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு என்னை அனுப்பினார் என்றான்.

ஙூ உடனே அவனுடைய கண்களிலிருந்து மீன் செலாம்புகளைப் போலவிழுந்துபோக, அவன் பார்வை அடைந்து, எழுந்திருந்து, ஞானஸ்நானம் பெற்று,

ஙூ பின்பு போசனம்பண்ணித் திடப்பட்டான்; [13]பின்பு சவுல் என்பவன் தமஸ்கு ஊரிலுள்ள சீஷருடனே சிலநாள் இருந்தான்.

உய ¶ அல்லாமலும் [14]இயேசு வானவரே பராபரனுடைய குமாரனென்று அவன் உடனே செபஆலயங்களில் பிரசங்கித்தான்.

உக (அதைக்) கேட்ட யாவரும் பிரமிப்படைந்து, [15]எருசலேமில் இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பாழாக்கி, இங்கேயும் அப்படிப்பட்டவர்களைக் கட்டி, பிரதான ஆசாரியனிடத்

ஙூ. பி. கடி.

1 நாளி. உ. எ. அப். உஉ. க: உக. ஙூ.
2 அப். உஉ.ஙூ.
3 அப். உக. ஙக: உஉ. உ.
4 க. வச.
5 உக. வச. அப். எ. ஙெ: உஉ. ஙூ.க கொரி. க. உ உ நியே. உ. உஉ.
6 அப். உஙி. உக: உக. ஙூ. உ கொரி. ஙக. உக.
7 உரோ. க. ஙூ: ஙூ. ஙூ. கலா. உ. எ, அ.
8 அப்.உஙூ.உஉ, உக: உக.க,ழி.
9 அப். ஙூ. உ: உஉ. உக:உக. ஙா. உரோ. க. க. க கொரி. ஙஙூ. உ. கலா. க. ஙஙூ. எபே. க. எ, அ. க நியே. உ.எ. உநியே. க. ஙக.
10 அப்.உஉ.ஙூ, ஙக.
11 அப். அ. ஙா.
12 அப். உ. ச:ச. க:அ. ஙா:ஙூ. ஙூ.
13 அப்.உக.உஙி.
14 அப். அ. கா.
15 அப். அ.க. க. வச. கலா. க. ஙக, உக.

Digitized by Google

நிற்குக்கொண்டுபோகும்படி வந்தவன் இவனல்லவா என்றார்கள்.

உ2 சவுல் என்பவன் அதிகம் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்து என்று நிருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்கு ஊரில் குடியிருக்கிற [1]யூதர்களைக் கலங்கப்பண்ணினான்.

உ3 ¶ அநேகநாள் சென்றபின்பு [2]யூதர்கள் அவனைக்கொலைசெய்ய ஆலோசனைப்பண்ணினார்கள்; [3]அவர்களுடைய யோசனை சவுலுக்குத் தெரியவந்தது.

உ4 அவனைக் கொலைசெய்யும்படிக்கு அவர்கள் இரவும்பகலும் கோட்டை வாசல்களைக் காத்துக்கொண்டிருந்தார்கள்.

உ5 அப்பொழுது சீஷர் இராத்திரியிலே அவனை எடுத்துக்கொண்டு, [4]ஒரு கூடையில் வைத்து, மதிலின் வழியாய் இறக்கிவிட்டார்கள்.

உ6 ¶ [5]பின்பு சவுல் எருசலேமுக்குப் போய், சீஷரைச் சேர்த்துக்கொள்ளப்பார்த்தான்; அவர்கள் எல்லாரும் அவனைச் சீஷனென்று நம்பாமல் அவனுக்குப் பயப்பட்டார்கள்.

உ7 அப்பொழுது [6]பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தாவைக் கண்டவிதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்கு ஊரில் [7]அவன் இயேசுவின் நாமத்தினாலே தயிரியமாய்ப் பிரசங்கம்பண்ணினதையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான்.

உ8 [8]அதின்பின்பு அவன் எருசலேமிலே அவர்களுடனேகூடப் போகிறவனுமாய் வருகிறவனுமாய் இருந்து,

உ9 கர்த்தராகிய இயேசுவின் நாமத்தின்மேலே தயிரியமாய்ப் பிரசங்கம்பண்ணி, [9]கிரேக்கருடனேயும் பேசிக்கொண்டு தருக்கம் பண்ணினான்; [10]அவர்கள் அவனைக் கொலைசெய்யத் தேடினார்கள்.

ஊ0 சகோதரர் அதை அறிந்து, அவனைச் சேசாரியா பட்டணத்திற்கு அழைத்துப்போய், பின்பு தருசு ஊருக்கு அனுப்பினார்கள்.

ஊ1 [11]அப்படியிருக்கும்காலத்தில் யூதேயா, கலிலேயா, சமாரியாநாடுகள் எங்கும் சபைகள் சமாதானம் பெற்றிருந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்திலேயும், பரிசுத்த ஆவியின் போதிப்பிலேயும், வளர்க்கப்பட்டு கடந்து பெருகின.

ஊ2 ¶ பேதுரு என்பவன் [12]அவர்கள் எல்லாருக்குள்ளும் சென்று வருகையில், உலிதா ஊரிலே குடியிருக்கிற பரிசுத்தவான்களிடத்திற்கும் போனான்.

ஊ3 அங்கே எட்டுவருஷமாகக் கட்டிலின்மேல் கிடந்த திமிர்வாதமுள்ள ஐநேயா என்பவனைக் கண்டான்; அவனுடனே பேதுரு சொன்னது:

ஊ4 ஐநேயாவே, [13]இயேசுக் கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார்; நீ எழுந்து உன் படுக்கையை நீதானே போட்டுக்கொள் என்றான்; உடனே அவன் எழுந்திருந்தான்.

ஊ5 உலிதா ஊரிலும் சாரோன் திசையிலும் குடியிருந்தவர்கள் எல்லாரும் [14]அவனைக்கண்டு, [15]கர்த்தரிடத்திற்கு மனம்திருப்பினார்கள்.

ஊ6 ¶ அன்றியும் யோப்பாபட்டணத்திலே தொற்காள் என்ற *அருத்தம்கொள்ளுகிற தபீத்தாள் என்னப்பட்ட ஒரு சீஷி இருந்தாள்; [16]அவள் கற்கிரியைகளையும் தருமங்களையும் நிறைவாய்ச் செய்துகொண்டுவந்தவள்.

ஊ7 அக்காலத்திலே அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள்; [17]அவளை அவர்கள் குளிப்பாட்டி, மேல்வீட்டில் கிடத்திவைத்தார்கள்.

---

1 அப். 8,3.

2 அப். 23,12. 2 கொரி. 11. 26.

3 2 கொரி. 11. 32.

4 யோசு. 2,15. சாமு.19,12. 20,21.

5 அப். 22,17. கலா.1,18,19.

6 அப். 4,36. 11,22. 24. 15,37.

7 உபா. 12,5. 2 சாமு. 7,11. 1 நாளா. 17,10. 2 நாளா. 33,7.

8 கலா. 2. 1அ.

9 அப். 6,1: 9,29. 11,20.

10 2 கொரி. 11,32. 2 கொரி. 12. 19.

11 அப். 8. 1.

12 அப். 8. 25.

13 அப் 3,6,16: 4. 10.

14 1 நாளா. 16. 24. சங்.

15 அப். 26. 18. 1 தெச. 1. 9.

* அதின் அருத்தம், பெண்மான்.

16 1தீமோ. 2. 9. தீத். 3. 8.

17 அப். 5. 10.

Digitized by Google

ஊஅ யோப்பா பட்டணம் உலி தா ஊருக்குச் சமீபமானபடியினாலே, பேதுரு அவ்விடத்தில் இருக்கிறான் என்று சீஷர்கள் கேள்விப்பட்டு, அவன் தாமதமில்லாமல்* தங்களிடத்திற்கு வரவேண்டுமென்று வேண்டிக்கொள்ளும்படிக்கு இரண்டு மனிதரை அவ்விடத்திற்கு அனுப்பினார்கள்.

ஊக ¶ அந்தப்படி பேதுரு எழுந்து அவர்களுடனேகூடப் போனான்; அவன் போய்ச் சேர்ந்த பொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள்; அப்பொழுது சகல கைம்பெண்களும் அவன் அருகே சேர்ந்து நின்று அழுதுகொண்டு, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்தார்கள்.

சஎ [1]பேதுரு எல்லாரையும் வெளியே போகப்பண்ணி, பின்பு [2]முழங்கால்படியிட்டுச் செபம்பண்ணி, பின்பு சவத்தின்புறமாய்த் திரும்பி, [3]தபீத்தாளே, எழுந்திரு என்றான்; அப்பொழுது அவள் தன் கண்களைத் திறந்து பேதுருவைப் பார்த்து உளுக்காந்தாள்.

சஅ அவன் அவளுக்குக் கை கொடுத்து அவளை எழுந்திருக்கப் பண்ணி, பரிசுத்தவான்களையும் கைம்பெண்களையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்குமுன் நிறுத்தினான்.

சஉ அது யோப்பாபட்டணம் எங்கும் அறியப்பட்டபொழுது, [4]அநேகம்பேர் கர்த்தாவினிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

சஊ அவன் யோப்பாபட்டணத்திலே [5]தோல்பதனிடுகிறவனாகிய சீமோன் என்பவனிடத்திலே அநேகநாள் தங்கினான்.

ல. அதிகாரம்.

க. நேபத்தனாகிய கொருநேலியு என்பவன், ஓ. ஒரு தேவதூதனுடைய வெளிதல் பேதுருவை அழைப்பித்தது. ஙக. பேதுரு ஒரு தரிசனையில்,

கி. பி. சக.

* அல்லது மீசமில்லாமல்.

ஙஓ. உம். அர்ப்பணம் அனுட்டைசெய்யாமை என்ற கருத்திக்கப்பட்டது. கச. அவன் வெரு சேலிபுவுக்கும், அவன அதிதனர்களுக்கும் பேதுருவைப் பிரசங்கித்தபோது, சச. பரிசுத்தஆவி அவர்கள்மேல் இறங்க, சஅ. அவர்கள் ஞானஸ்நானம் பெற்றது.

அன்றியும் சேசாரியா பட்டணத்திலே இத்தாலியா தண்டெனப்பட்ட தண்டிலே நூறு போர்ச்சேவகருக்குத் தலைவனாகிய கொருநேலியு என்பவன் இருந்தான்.

உ அவன் [6]தன் குடும்பத்தாரோடுங்கூடத் தேவபக்தியுள்ளவனுமாய்ப் [7]பராபரனுக்குப் பயப்படுகிறவனுமாய் இருந்து, சனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் பராபரனை நோக்கிச் செபம்பண்ணிக்கொண்டுவந்தான்.

ஊ [8]பகலிலே ஏறக்குறைய ஒன்பதாம்மணி நேரத்தில் அவன் தரிசனை அடைந்து, தன்னிடத்தில் பராபரனுடைய தூதன் பிரவேசிக்கவும் கொருநேலியுவே என்று சொல்லவும் பிரத்தியட்சமாகக் கண்டு,

ச அவனை உற்றுப்பார்த்துப் பயமுள்ளவனாகி, ஆண்டவரே, என்ன என்றான்; அப்பொழுது அவன் சொன்னதாவது; உன் செபங்களையும் உன் தருமங்களையும் பராபரன் திருவுளத்திலே எண்ணியிருக்கிறார்.

ஙஓ ஆதலால் யோப்பாபட்டணத்திலே கடலின் அருகான வீட்டிலே வாசம்பண்ணி, தோல்பதனிடுகிறவனாகிய [9]சீமோன் என்பவனிடத்திலே பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோன் தங்கியிருக்கிறான்.

ங அவனை அழைத்துவரும்படிக்கு நீ மனிதரை அவ்விடத்திற்கு அனுப்புவாயாக; [10]நீ செய்யவேண்டுவதை அவன் உனக்குச் சொல்லுவான் என்றான்.

ஙக கொருநேலியுவுடனே பேசின தேவதூதன் போனபின்பு அ

1 மத். க. உஇ.
2 அப். எ. கஅ.
3 மற். இ. சக, சஉ. போள. கக. சக.
4 போள. கக. சஇ: கஉ. கக.
5 அப். ஏ. க.
6 உஉ. வச. அப். அ.உ:உஉ.இஉ.
7 உஇ. வச.
8 கஅ. வச. அப். கக. கங.
9 அப். க. சக.
10 அப். கங. கச.

Digitized by Google

வன் தன் வீட்டுமனிதரில் இரண்டு பேரையும், தன்னிடத்தில் காத்திருக்கிற போர்ச்சேவகரில் தேவபத்தியுள்ள ஒருவனையும் அழைத்து,

அ எல்லாவற்றையும் அவர்களுக்கு விவரித்துச் சொல்லி, அவர்களை யோப்பாபட்டணத்திற்கு அனுப்பினான்.

கூ ¶ மறுநாளிலே அவர்கள் பிரயாணமாய் அந்தப் பட்டணத்திற்குச் சமீபமாய்ச் சேருகையில், [1]பேதுரு ஆறாம்மணி நேரத்திலே செபம்பண்ணும்படிக்கு வீட்டின்மேல் ஏறினான்.

ஆ அப்பொழுது அவன் மிகுந்த பசி அடைந்து, சாப்பிட மனதாய் இருந்தான்; அதற்காக அவர்கள் ஏத்தனம்பண்ணுகையில்,

ஈக அவன் ஞானதிருஷ்டி அடைந்து, (அதிலே) [2]வானம் திறந்திருக்கவும், கான்கு தொங்கல் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப்போல ஒரு கூடு தன்னிடத்திற்கு இறங்கி, தரையில் விடப்பட்டிருக்கவும்,

ஊ அதிலே பூமியிலுள்ள சகலவிதமான நாலுகால் சீவன்களும், காட்டுமிருகங்களும், ஊர்வனவைகளும், ஆகாயத்துப் பறவைகளும் இருக்கவும் கண்டான்.

ஊக அல்லாமலும் பேதுருவே, எழுந்திரு அடித்துப் புசிப்பாயாக என்று ஒரு சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

ஊஈ அதற்குப் பேதுரு, ஆண்டவரே, அப்படி அல்ல, [3]ஏலாதாயும் அசுத்தமாயும் இருக்கிறதை நான் ஒருக்காலும் புசிக்கவில்லையே என்றான்.

ஊஉ அப்பொழுது, பராபரன் சுத்தமாக்கினவைகளை [4]நீ அசுத்தமென்று எண்ணுதிருப்பாயாக என்று இரண்டாந்தரம் சத்தம் அவனுக்கு உண்டாயிற்று.

ஊஊ மூன்றாந்தரம் அப்படியே உண்டாயிற்று; பின்பு அந்தக்கூடு

பி. பி. சக.

திரும்பி வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஊஎ ¶ அப்பொழுது பேதுரு தான் கண்ட தரிசனையின் கருத்தைக்குறித்துத் தனக்குள்ளே சந்தேகப்படுகையில், கொருநேலியுவினால் அனுப்பப்பட்ட மனிதர் சீமோனுடைய வீட்டை விசாரித்துக்கொண்டு வாசற்படியிலே நின்று,

ஊஅ பேதுரு என்று பேர்கொண்ட சீமோன் இங்கே தங்கியிருக்கிறான் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள்.

ஊக ¶ அப்பொழுது பேதுரு அந்தத் தரிசனையைக்குறித்துச் சிந்தனைபண்ணிக்கொண்டிருக்கையில்,

உஏ [5]மூன்று மனிதர் உன்னைத் தேடுகிறார்கள்; அவர்களை நான் அனுப்பினேன். ஆதலால் [6]நீ எழுந்து, தாழ இறங்கி, ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனேகூடப் போ என்று ஆவியானவர் அவனுக்குச் சொன்னார்.

உக அந்தப்படி பேதுரு கொருநேலியுவினாலே தன்னிடத்திற்கு அனுப்பப்பட்ட மனிதனிடத்திற்கு இறங்கிப்போய், நீங்கள் தேடுகிறவன் நான்தான் நீங்கள் வந்திருக்கிற காரணம் என்ன என்றான்.

உஉ அவர்கள் சொன்னதாவது: [7]நீதிமானுமாய், பராபரனுக்குப் பயப்படுகிறவனுமாய், [8]எல்லா யூதர்களுக்குள்ளும் நல்லவன் என்று சாட்சிபெற்றிருக்கிறவனுமாய் இருக்கிற கொருநேலியு என்னும் சேனைத்தலைவன் உம்மைத் தன் வீட்டிற்கு அழைப்பித்து, உம்மால் வார்த்தைகளைக் கேட்கும்படிக்குப் பரிசுத்த தூதனாலே தேவ எத்தனமாய்க் கட்டளை பெற்றுக் கொண்டான் என்றார்கள்.

உஊ அப்பொழுது பேதுரு அவர்களை உள்ளே அழைத்து உபசாரம்பண்ணினான்; மேலும் மறுநாளிலே அவன் அவர்களுடனேகூ

1 அப். கூ.ஒ.மு.

2 அப். எ. கூ. வெளி. உஈ. கூ.

3 உ மோ. உக. ச: உஏ. உஇ. இ மோ. ம. உ, எ. எசே. ச.ம.

4 மத். ஈஇ. உக. உஅ. லூக். உ.சா.ம. உ.சா. ம. ம, மஎ, உஅ. எகொரி.அ.உஇ. உநீமோ. ச. ச. நீத். உ. ஈஇ.

5 அப். உக. மஉ

6 அப். ஈஇ. எ.

7 உ, உ, மு. ம.

8 அப். உஉ.மஉ.

Digitized by Google

டப் புறப்பட்டான்; [1]யோப்பா பட்டணத்திலிருந்த சகோதரரில் சிலரும் அவனுடனேகூடப்போனார்கள்.

உச மறுநாளிலே சேசாரியாபட்டணத்தைச் சேர்ந்தார்கள்; கொருநேலியு தன் உறவின்முறையாரையும் தனக்கு விசேஷமான சிநேகிதரையும் வரவழைத்துக்கொண்டு, பேதுருமுதலானவர்கள் வரக் காத்திருந்தான்.

உடு பேதுரு உட்பிரவேசிக்கையில், கொருநேலியு அவனுக்கு எதிர்கொண்டுபோய், அவனுடைய பாதத்தின் அருகே விழுந்து தொழுதுகொண்டான்.

உசு பேதுரு அவனைத் தூக்கி எடுத்து, [2]எழுந்திரும், நானும் மனிதன்தானே என்று சொல்லி,

உஎ அவனுடனே சம்பாஷணை பண்ணிப் பின்பு உள்ளே போய், அநேகர் கூடிவந்திருக்கிறதைக் கண்டு, அவர்களுடனே சொன்னதாவது:

உஅ ¶ நீங்கள் அறிந்திருக்கிறபடி, [3]யூதனனவன் அந்நியதேசத்தாரோடே கலந்து, அவனிடத்திற்குப் போகத்தகாததாய் இருக்கின்றது; அப்படியிருந்தும் [4]எந்த மனிதனையும் எலாதவனென்றும் அசுத்தனென்றும் நான் சொல்லாதபடிக்கு, பராபரன் எனக்குக் காண்பித்தார்.

உக ஆதலால் நீங்கள் என்னை அழைப்பித்தபொழுது, நான் எதிர் பேசாமல் வந்தேன்; இப்படியிருக்க, எந்தக் காரியத்திற்காக நீங்கள் என்னை அழைப்பித்தீர்கள் என்று கேட்கிறேன் என்றான்.

உம அதற்குக் கொருநேலியு சொன்னதாவது: நாலாம் நாள் இந்நேரத்திலே நான் உபவாசித்து, ஒன்பதாம்மணி நேரத்திலே என் வீட்டில் செபம்பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது [5]பிரகாசமுள்ள உடையைத் தரித்திருந்த [6]ஒருவன்எனக்குமுன்பாகநின்று,

இ. பி. கூக.

1 சஙி. வச. அப். உக. உஉ.
2 அப். உச. உச, உஙி. வெளி.உக. உ: உஉ, க.
3 போவா. ச. க: உஅ. உஅ. அப். உக. க. எபி. உஉ, உச.
4 அப்.உஙி. அக. எபே. க. க.
5 மத். உஅ. க. மாற். உக. இ. லூக்.உச.ச.
6 அப். க. உ.
7 ச. வச. தானி. உ. உஉ.
8 எபி. க. உ.
9 இ மோ. உ. உஎ. உரோ. உக.எ. பேது. உச.உக. உரோ. உ. உக. எபே. க. க. உரோ. உ. உக. எபே. க. க. கொலோ. க. உஇ. க பே. க. உஎ.
10 அப். உஙி. க. உரோ. உ. உக, உச: க. உஉ, உக: உ. உஉ, உக. க கொரி உஉ. உக. எபி. உ. உக, உஅ: க. க.
11 மத். உஅ.உஅ. உரோ. உ. உஉ. க கொரி. உஙி. உஎ. எபே. க. உஉ, உஉ.எபே. க. உஉ. வெளி. உச.ச:உக.உக.
12 எசா. உச.உக. எபே. உ. உச, உக, உள. கொலோ. க. உஉ.
13 லூக். ச. உச.
14 லூக். ச. உஅ. அப். உ உஉ: ச. உள. எபி. க. க.
15 யோவா. க. உ.

கூ கொருநேலியுவே, [7]பராபரன் உன் செபத்தைக் கேட்டருளி [8]உன் தருமங்களை நினைத்திருக்கிறார்.

கூஉ ஆதலால் யோப்பாபட்டணத்திலே கடலின் அருகே தோல் பதனிடுகிறவனாகிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிற பேதுரு என்று மறுபேர்கொண்ட சீமோனை வரவழைக்கும்படிக்கு, அவ்விடத்திற்கு மனிதரை அனுப்பு, அவன் வந்து உனக்குச் சொல்லுவான் என்றார்.

கூக அந்தப்படி நான் உடனே உம்மிடத்தில் மனிதரை அனுப்பினேன்; நீர் வந்தது நலமாய் இருக்கின்றது, இப்பொழுது பராபரனாலே உமக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் கேட்கும்படிக்கு, நாங்கள் எல்லாரும் இங்கே பராபரனுக்குமுன்பாக இருக்கிறோம் என்றான்.

கூச ¶ அப்பொழுது பேதுரு சொன்னதாவது:

கூடு [9]பராபரன் பட்சபாதமில்லாமல் எவ்வகையான மனிதரிலும், [10]தமக்குப் பயந்து நீதியை நடப்பிக்கிறவன் எவனோ, அவனை அங்கிகரித்துக்கொள்ளுகிறார் என்று மெய்யாய் உணர்ந்துகொள்ளுகிறேன்.

கூஎ [11]எல்லாருக்கும் கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு [12]சமாதானத்தைச் சுவிசேஷமாய் அறிவித்து, இஸ்ரவேலருக்கு அனுப்பின சங்கதியைக் குறித்துக் (கேட்பீர்களாக).

கூஏ யோவான் ஞானஸ்நானத்தைப் பிரசங்கம்பண்ணினபின்பு, [13]கலிலேயா நாடு முதற்கொண்டு யூதேயாநாட்டில் எங்கும் நடந்த காரியத்தை அறிந்திருக்கிறீர்கள்.

கூஅ அதாவது: [14]நாசரேத்தூரிலே தோன்றிய இயேசுவானவருக்குப் பராபரன் பரிசுத்தஆவியையும் வல்லமையையும் அபிஷேகம் பண்ணினார்; (அந்தப்படி) [15]பரா

பரன் அவருடனேகூட இருந்த படியால், அவர் நன்மைசெய்கிற வராகவும் பசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராகவும் சுற்றித்திரிந்தார்.

ஈஉ [1]யூதருடைய நாட்டிலும் எருசலேமிலும் அவர் செய்தவைகள் எல்லாவற்றிற்கும் நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்; [2]அவரை ஒரு மரத்திலே தூக்கிக்கொலை செய்தார்கள்.

ஈல [3]மூன்றாம்நாளிலே பராபரன் அவரை எழுப்பி, அவர் மரித்தோரிலிருந்து எழுந்தபின்பு,

ஈச [4]எல்லாச் சனங்களுக்கும் அல்ல, [5]அவரோடே போசனபானம்பண்ணி, பராபரனால் முன்னியமிக்கப்பட்டிருந்த சாட்சிகளாகிய எங்களுக்கே அவர் பிரசன்னமாகும்படி செய்தார்.

ஈஉ மேலும் [6]அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் [7]நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படிக்கு, பராபரனாலே ஏற்படுத்தப்பட்டவர் என்று [8]சனங்களுக்குச் சாட்சியாய்ப் பிரசங்கம்பண்ணும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்.

ஈஈ [9]அவரை விசுவாசிக்கிறவன் எவனே, அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்வானென்று [10]தீர்க்கதரிசிகள் எல்லாரும் அவரைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்.

ஈஊ ¶ இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசுகையில், வசனத்தைக் கேட்ட யாவர்மேலும் [11]பரிசுத்த ஆவி இறங்கினார்.

ஈஎ அவர்கள் (அந்திய) பாஷைகளைப்பேசி, பராபரனைப் புகழ்ந்தார்கள்.

ஈக [12]அதைப் பேதுருவுடனே கூடவந்திருந்த விருத்தசேதனமுடைய விசுவாசிகள் எல்லாரும் கேட்டுப் [13]பரிசுத்தஆவியென்னும் வரம் அஞ்ஞானிகளுக்கும் கொ

ஈ. பி. சக.

1 அப். உ. ஊ.
2 அப். இ. ஊ.
3 அப். உ. உ.
4 போள. உ. ஊ, உஉ. அப். ஊ. ஊ.
5 லூக். உ. ஊ, ஈக. போள. உ. ஊ.
6 உரோ. ஊ. ஈ, ஊ. உகொரி. இ. ஊ. உதிமோ. உ. ஈ. உ பே. உ. இ.
7 போள. இ. உஉ,உ. அப். ஊ. ஈ.
8 மத். உ. ஈ. ஊ, உஊ. அப். ஈ. ஈ.
9 அப். ஈஇ. ஈ: உ. ஊ. ஈ. உரோ. ஊ. ஊ. எபி. ஈ. உஉ.
10 சங். இஉ. ஊ. எரே. ஈ. ஊ. நாஎ. ஈ. உ. மீச. ஈ. ஊ. சகரி. ஊ. ஈ. மல்கி. உ. உ. அப். உ. ஈ. உஉ.
11 அப். உ. ஈ: ஈ. ஈஇ, ஊ, ஊ: ஊ. ஈஇ.
12 உ. ஊ.
13 அப் ஊ. ஊ. எபி. ஈ. உ.
14 அப். ஊ. ஊ: ஈஇ. ஈ, ஈ. உரோ. ஊ. ஊ.
15 அப். உ. ஈ: ஈ. ஊ.
16 உகொரி. ஈ. ஊ.
17 அப். ஊ. உஇ. எபி. உ. ஊ.
18 அப். ஊ. ஈ.
19 எபி. உ. ஊ.
20 லூக். ஈ. உ.
21 அப். ஊ. ஈ. உ.

டுத்த ஆவி இறங்கினதுபோல இவர்களுக்கும் இறங்கினார்.

ஈஎ அப்பொழுது பேதுரு சொன்னது: [14]நம்மைப்போலப் பரிசுத்தஆவியைப் பெற்ற இவர்கள் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு, யாவராலும் தடைபண்ணலாமா என்று சொல்லி, அவர்களுக்குக் [15]கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம்கொடுக்கும்படி [16]கட்டளையிட்டான்; அப்பொழுது சிலகாள் அங்கே தங்கும்படி அவனை வேண்டிக்கொண்டார்கள்.

ய க. அதிகாரம்.

க. பேதுரு அந்தியர்வீட்டிற்போனதினிமித்தம் குற்றஞ்சாற்றப்பட, இ. அவன் அதற்குச் சொன்ன உத்தரவு. உஅ. அங்கீகரிக்கப்பட்டது. ஈக. சவிசேஷம் பெலிக்கே, சீப்புரு, அந்தியோகுமுதலிய இடங்களில் பிரசங்கிக்கப்பட்டபோது சபையைத் திடப்படுத்தும்படி பருனபா அனுப்பப்பட்டது உக. அந்தியோகியிலே சீஷர்கள் முதல்முதல் கிறிஸ்தவர்களென்ற அழைக்கப்பட்டது. உள. யூதேயாவிலுள்ள மற்றச் சகோதரருக்கும் பஞ்சகாலத்தில் ஒத்தாசை செய்தது.

புறத்தேசத்தாரும் பராபரனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் என்று யூதாவில் இருக்கிற அப்போஸ்தலரும் மற்றச் சகோதரரும் கேள்விப்பட்டார்கள்.

உ பின்பு பேதுரு எருசலேமுக்குத் திரும்பிப் போனபொழுது, [17]விருத்தசேதனமுடையவர்கள் அவனை நோக்கி,

ஈ [18]நீர் விருத்தசேதனம் இல்லாதவர்களிடத்தில் போய், [19]அவர்களோடே புசித்தீர் என்று விசனமாய்ச் சொன்னார்கள்.

ச [20]அதற்குப் பேதுரு வரிசையாய் அவர்களுடனே விவரமாய்ச் சொன்னதாவது:

ஞ ¶ [21]நான் யோப்பாபட்டணத்திலே செபம்பண்ணிக்கொண்டிருந்தபொழுது, ஞானதிருஷ்டியிலே காலு தொங்கல் கட்டப்பட்ட பெரிய துப்பட்டியைப் போல, ஒரு கூடுவானத்திலிருந்து என்னிடத்தில் இறங்கிவரக் கண்டேன்.

Digitized by Google

ஈ. பி. சக.

கூ நான் உற்றுப் பார்க்கிறபொழுது அதிலே பூமியிலுள்ள நாலு காலையுடைய சீவன்களையும், காட்டுமிருகங்களையும் ஊர்வனவைகளையும், ஆகாயத்துப் பறவைகளையும் கண்டேன்.

எ அல்லாமலும், பேதுருவே எழுந்திரு, அடித்துப் புசிப்பாயாக என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.

அ அதற்கு நான், ஆண்டவரே, அப்படியல்ல, எலாததும் அசுத்தமுமாயிருக்கிறது ஒன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போகவில்லையே என்றேன்.

கூ அப்பொழுது, பராபரன் சுத்தமாக்கினவைகளை நீ அசுத்தமென்று எண்ணுதிருப்பாயாக என்று இரண்டாந்தரம் வானத்திலிருந்து சத்தம் எனக்கு உண்டாயிற்று.

ய இப்படி மூன்றுந்தரமும் உண்டான பின்பு, எல்லாம் மறுபடியும் வானத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

யக உடனே சேசாரியா பட்டணத்திலிருந்து மூன்று மனிதர் என்னிடத்தில் அனுப்பப்பட்டு, நான் இருந்த வீட்டிற்கு முன்னே வந்து நின்றார்கள்.

யஉ [1]அப்பொழுது நான் ஒன்றுக்கும் சந்தேகப்படாமல், அவர்களுடனேகூடப் போகும்படிக்கு ஆவியானவர் என்னுடனே சொன்னார்; [2]பின்பு சகோதரார்களாகிய இவ்வாறுபேரும் நானும் கூடி அந்த மனிதனுடைய வீட்டிற்குப் போனோம்.

யங அப்பொழுது [3]அவன் தன் வீட்டிலே தேவதூதன் ஒருவன் நிற்கக்கண்டதையும், நீ யோப்பா பட்டணத்தில் இருக்கிற பேதுரு என்ற மறுபேர்கொண்ட சீமோனை அழைக்கும்படிக்கு மனிதனை அவ்விடத்திற்கு அனுப்பு.

யச நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்கான வார்த்தைகளை அவன் உன்னுடனே சொல்லுவான் என்று அத்தூதன்தனக்குச் சொன்னதையும், எங்களுக்கு அறிவித்தான்.

யஜ பின்பு நான் பேசத்தொடங்கினபொழுது, [4]பரிசுத்தஆவி ஆதியிலே நம்மிடத்தில் இறங்கினதுபோல, அவர்களிடத்திலும் இறங்கினார்.

யசு [5]அப்பொழுது போவான் சலத்தினாலே ஞானஸ்நானம்கொடுத்தான், [6]நீங்கள் பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்னவார்த்தையை நினைத்துக்கொண்டேன்.

யஎ [7]ஆனபடியினாலே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசித்துக்கொண்டிருக்கிற நமக்குப் பராபரன் அநுக்கிரகித்தது போல, அந்த ஈவை அவர்களுக்கும் அநுக்கிரகித்திருக்க, [8]பராபரனுக்குத் தடைபண்ணுகிறதற்கு நான் பலவானாயிருந்தேனோ என்றான்.

யஅ இவைகளை அவர்கள் கேட்டபொழுது, விரோதமாய்ப் பேசாமல், புறத்தேசத்தாரும், சீவனை அடையும்படி, [9]மனம்திருப்புதலைப் பராபரன் அவர்களுக்கு அநுக்கிரகம்செய்தார் என்று பராபரனைப் புகழ்ந்தார்கள்.

யக ¶ அன்றியும் [10]ஸ்தேவானின் நிமித்தமாக உண்டான உபத்திரவத்தினால் சிதற அடிக்கப்பட்டவர்கள் சுவிசேஷவசனத்தை யூதர்களுக்கே அன்றி மற்றொருவருக்கும் அறிவியாமல், பெனிக்கேகாடு, சீப்புருதீவு, அந்தியோகியா பட்டணம்மட்டும் திரிந்தார்கள்.

உய அவர்களில் சீப்புருதீவாரும் சிரேனே பட்டணத்தாரும் அந்தியோகியா பட்டணத்தில் வந்தபொழுது, [11]கிரேக்கருடனேயும் பேசிக்கொண்டு, கர்த்தராகிய இயேசுவைச் சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.

உக [12]அவர்களுடனேகூடக்கர்த்தருடைய கை இருந்ததினாலே

1 போள. கூ. கூ. அப். ம.கூ: மஇ. ச.
2 அப். ம. கூ.
3 அப். ம. கம.
4 அப். உ. ச.
5 மத். க. கூ. போள. க.உக, கூ. அப்.க.இ: கூ. ச.
6 ஸ. ச. க. போே. உ. உஅ: க. மஅ.
7 அப். மஇ. அ, கூ.
8 அப். ம. ச.
9 உரோ. ம. கூ, கூ: மஇ.கஅக.
10 அப். அ. க.
11 அப். க.க: க. உக.
12 லூக். க. கக. அப்.உ.ச.

Digitized by Google

நிரனான சனங்கள் விசுவாசித்து, [1]கர்த்தரிடத்தில் திரும்பினார்கள்.

உட அவர்களைக்குறித்து எருசலேமிலுள்ள (சபையார்) கேள்விப்பட்டபொழுது அந்தியோகியா பட்டணம்வரைக்கும் போகும்படிக்கு, [2]பருனபாவை அனுப்பினார்கள்.

உக அவன் (அக்கே) போய், பராபரனுடைய [3]கிருபையைக் கண்டபொழுது, சந்தோஷப்பட்டதும் அல்லாமல்,

உச [4]அவன் நல்லவனுமாய், பரிசுத்தஆவியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயிருந்தபடியினாலே, எல்லாரும் மனஉறுதியாய்க் கர்த்தரிடத்தில் நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொன்னான்; [5]அப்பொழுது அநேகம்பேர் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

உடு ¶ [6]பின்பு பருனபா என்பவன் சவுலைத் தேடும்படிக்குத் தருசுவூருக்குப் புறப்பட்டுப்போய் அவனைக் கண்டு, அந்தியோகியா பட்டணத்திற்கு அழைத்துக் கொண்டுபோனான்.

உசு அப்பொழுது அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையிலே* கூடியிருந்து, அநேக சனங்களுக்கு உபதேசம்பண்ணினார்கள்; சீஷர்கள் முதலாவது அந்தியோகியா பட்டணத்திலே கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

உஎ ¶ அக்காலங்களில் [7]எருசலேமிலேஇருந்து சில தீர்க்கதரிசிகள் அந்தியோகியாபட்டணத்திற்குப் போனார்கள்.

உஅ அவர்களில் ஒருவனுடைய [8]ஆகாப்பென்பவன் எழுந்து பூச்சக்கரம் எங்கும் மிகுந்த பஞ்சம் வருமென்று ஆவியினாலே அறிவித்தான்; அந்தப்படியே அது கிலவுதி இராயனுடைய காலத்திலே சம்பவித்தது.

உக அப்பொழுது சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணியின்படியே யூதேயா நாட்டில் குடியிருக்கிற [9]சகோதரருக்குத் தருமசகாயம்பண்ணி அனுப்பவேண்டும் என்று தீர்மானம்பண்ணினார்கள்.

உகஅ [10]அந்தப்படி அவர்கள் சிலபொருள்களைச் சேர்த்துக்கொண்டு, பருனபா சவுல் என்பவர்கள் கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்.

௰உ. அதிகாரம்.

க. ஏரோதே இராசா கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தி யாக்கோபைக் கொலைசெய்த பேதுருவைக் காவலில் அடைத்தபொழுது, அவன் சபையின் செபத்தினிமித்தம் ஒரு தெய்வதூதனால் விடுதலை பாக்கப்பட்டது. உம். ஏரோதே பெருமை பாராட்டித் தேவனுக்கேற்ற வார்த்தைத் தனக்குச் சொல்லத் தம்படி செய்தநிமித்தம் ஒரு தெய்வதூதனால் அடிக்கப்பட்டு கிர்ப்பத்தமரணம் அடைந்தது. உச. அவன் மரணமடைந்த பின்பு பாபாவுடைய வசனம் பிரபலமானது.

அக்காலத்திலே ஏரோதே என்னும் இராசா சபையில் சிலரைத் துன்பப்படுத்தும்படிக்குத் தொடங்கினான்.†

உ [11]யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை அவன் கத்தியினாலே கொலைசெய்தான்.

ஈ மேலும் அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன்கண்டு, பேதுருவையும் பிடிக்கத் தொடர்ந்தான்; [12]அந்நாள்கள் புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள்களாயிருந்தன.

உ [13]அவனைப் பிடித்தபின்பு பண்டிகை கழித்து அவனைச் சனங்களுக்குமுன்பாகக் கொண்டுபோகவேண்டும் என்று ஏரோதே எண்ணி, அவனைச் சிறைச்சாலையிலே வைத்து, ஒரு வகுப்பிற்கு நான்கு போர்ச்சேவகராக நான்கு வகுப்புகள் அவனைக் காக்கும்படி ஒப்புக்கொடுத்தான்.

ஊ அப்படிப் பேதுரு காவலிலே காக்கப்பட்டிருக்கையில், சபையார் அவனைக்குறித்து இடைவிடாமல் பராபரனைநோக்கிச் செபம்பண்ணினார்கள்.‡

ஈ ¶ அப்பொழுது ஏரோதே அவனை வெளியே கொண்டுவரும்படி

கி. பி. சஉ.

1 அப். கூ. ஈஇ.
2 அப். க. உள.
3 அப். ஈக. சக: ஈச. உஉ.
4 அப்.க.இ.
5 உக. ஈச. அப். இ. ஈச.
6 அப். கூ. கஅ.
* அல்லது சபை யோடு.
7 அப். உ. ஈச: ஈக.க: ஈஇ.கஉ: உக.க.கசொ. ஈஉ.உஆ.சபே. ச. ஈக.
8 அப். உக. இ.
9 உரோ. ஈஇ. உக. க சொரி. ஈக.க. உசொரி. கூ. க.
10 அப். ஈஉ.உஇ.
† அல்லது கைகளை நீட்டினான்.
11 மத். ச. உக: உஅ. உக.
12 உ மோ. கூ. ச, ஈஇ: உக. ஈஇ.
13 யோவா. உக. ஈஆ.
‡ அல்லது இடைவிடாமல் ஜெபமுடன் செபம் பண்ணப்பட்டது. உசொரி. க.ஈக. சபே. க.உஆ. க செ. இ. ஈச.

Digitized by Google

குறித்த காலுக்குமுன்னை இராத் திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக்கொண்டிருக்க, காவற் காரரும் கதவுக்கு முன்னிருந்து காவல் அறையைக் காத்துக்கொண்டிருக்க,

எ [1]சடுதியாய் அறையிலே பிரகாசமுண்டாகத்தக்கதாக, கர்த்தருடைய தூதன் ஒருவன் தோன்றிப் பேதுருவின் விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான்; அப்பொழுது சங்கிலிகள் அவனுடைய கைகளைவிட்டு விழுந்தன.

அ மேலும் தூதன் அவனுடனே சொன்னது: உன் அரையைக் கட்டி, உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள் என்றான்; அவன் அப்படிச் செய்தான்; தூதன் பின்னும் சொன்னது: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு எனக்குப் பின்சென்றுவா என்றான்.

க அந்தப்படி அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று, [2]தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல் [3]இது ஒரு தரிசனை என்று நினைத்தான்.

ய அவர்கள் முதலாம் காவலையும் இரண்டாம் காவலையும் கடந்து, பின்பு பட்டணத்துக்குப்போகிற இருப்புக்கதவினிடத்தில் சேர்ந்த பொழுது, [4]அவர்களுக்கு அது தானாய்த் திறக்க, அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு, ஒரு வீதியிலே நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனைவிட்டு நீங்கினான்.

ரு பேதுருவுக்குத் தெளிவுவந்தபொழுது, [5]ஏரோதேயின் கைக்கும் யூதருடைய விருப்பங்களாவுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்கு, கர்த்தர் தம்முடைய [6]தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக்கிறேன் என்றான்.

ரூ இப்படி அவன் சிந்தனை கொண்டு, மாற்கு என்று பேர் கொண்ட [7]யோவானுடைய தாயாகிய [8]மரியாள் வீட்டிற்குப் போனான்; [9]அங்கே அநேகர் கூடிச் செபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

ரூ பேதுரு வாசல் கதவைத்தட்டினபொழுது, ரோதாள் என்ற பேர்கொண்ட ஒரு வேலைக்காரி ஒற்றுக்கேட்க* வந்து,

ரூ பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷத்தினாலே வாசலைத் திறவாமல் உள்ளே ஓடிப்போய், வாசலுக்குமுன்னே பேதுரு நிற்கிறார் என்று அறிவித்தாள்.

ரூ அவர்கள் நீ பயித்தியமாய்ச் சொல்லுகிறாய் என்றார்கள்; அவள், அப்படி அல்ல, அவரே இருக்கிறார் என்றாள்; அப்பொழுது அவர்கள் சொன்னது: [10]அவன் அவருடைய தூதன் என்றார்கள்.

ரூ பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தபொழுது, அவர்கள் திறந்து, அவனைக் கண்டு பிரமித்தார்கள்.

ரூ உடனே அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் [11]கையினால் சமிக்கை காண்பித்து, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின வகையை அவர்களுக்கு விவரமாய்க் காட்டி, இவைகளை யாக்கோபுக்கும் மற்றச் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லிப் புறப்பட்டுவேறொரு இடத்திற்குப் பிரயாணமாய்ப் போனான்.

ரூ பொழுது விடிந்தபின்பு பேதுருவைக்குறித்துச் சேவகருக்குள்ளே உண்டான கலக்கம் கொஞ்சம் அல்ல.

ரூ ஏரோதே அவனைத் தேடிக் காணுமல்போனபொழுது, காவற்காரரைக் கேட்டியாய்ச் சோதித்து அவர்களைக் கொலைசெய்யும்படி கட்டளையிட்டு, பின்பு யூதேயா

சி. பி. சசை.

1 அப். இ. கூ.
2 சங். ஈஉ. ச.
3 அப். க. உ, ஙை: கூ. இ.
4 அப். கூ. ஊ.
5 போபு. இகூ. சங். கூ. கூ, கூ: கூ. ஊஃ ஏ. உ: கூ. க. உ. உ கொரி. ச. ஏ. உ பே. உ. கூ.
6 சங். கூ. ஏ. நாலி. க. உஅ: கூ. ஊ. எபி. ச. ஙை.
7 அப். ஏஇ. கூ.
8 அப். ச. ஊ.
9 இ. கூ.
* அல்லது யா சென்று கேட்க.
10 ஆ மே. சஅ. கூ. மத். ஙஅ.ஏ.
11 அப். கூ. கூ: கூ. கூ: ஊ. ஙை.

Digitized by Google

காட்டைவிட்டுச் சோசாரியா பட்டணத்திற்குப் போய், அங்கே சஞ்சரித்தான்.

உல ¶ அக்காலத்திலே எரோதே நீரியருக்கும் சீதோனருக்கும் மிகவும் பகையாயிருந்தான்; * அப்பொழுது அவர்கள் தங்கள் [1]பிழைப்புக்கு வேண்டியவைகளை இராசாவினுடைய தேசத்திலிருந்து வாங்கிக்கொள்வதினாலே அவர்கள் ஒருமனப்பட்டு அவனிடத்திற்குப் போய், இராசாவினுடைய வீட்டு விசாரணைக்காரனாகிய† பிலாஸ்தென்பவனைத் தங்கள் வசமாக்கிக்கொண்டு, சமாதானமாயிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

உக அப்பொழுது குறித்த காலிலே எரோதேயானவன் இராச அங்கியைத்தரித்துக்கொண்டு சிங்காசனத்தின்மேல் உலுக்காந்து, அவர்களுக்குப்பிரசங்கம்பண்ணினான்.

உஉ அதற்குச் சனங்கள், இது ஒரு மனிதனுடைய சத்தம்அல்ல, தேவனுடைய சத்தமே என்று கூப்பிட்டார்கள்.

உக [2]அவன் பராபரனுக்கே புகழ்ச்சி உண்டாவதாக என்று அதிக்கையிடாதபடியினாலே, [3]உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான்; அவன் புழுக்களாலே தின்னப்பட்டு இறந்தான்.

உச ¶ [4]பராபரனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று.

உஎ பின்பு பருனபாவும் சவுலும் தரும ஊழியத்தை‡ நிறைவேற்றினபொழுது [5]மாற்கு என்று மறுபேர்கொண்டயோவானைக் [6]கூட்டிக்கொண்டு, எருசலேமைவிட்டுத் திரும்பினார்கள்.

௰ஈ. அதிகாரம்.

அ. பவுலும் பருனபாவும் அந்தியோகியாவிலிருந்து பிரசங்கிக்க அனுப்பப்பட்டது. எ. சொர்பியு பவுல் யூதனுக்கு, எலிமாஎன்னப்பட்ட சூதம்பனாகிய மாயஞ்சூனியத்தை நீங்கலாக்கினது. ஙை. இயேசுவைவிட்டு விலகிப்போன யோவான் மாற்கு அந்தியோகியாவிலே பிரசங்கித்தது. சஉ. அர்மியர்கள் விளங்கினது. சஅ. யூதர்கள் பொறாமைகொண்டு தூஷணித்ததினால் சக. பவுல்கள் அந்தியோகியாவிட்டுத்திற்குப் போனது சஎ. திற்றியிலுவுக்குக் குறிக்கப்பட்டவர்கள் விளங்கினது.

[7]அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே, [8]பருனபாவென்றும், நீகரென்னப்பட்ட சீமியோன் என்றும், சிரேனே ஊராகிய [9]உலூசி என்றும், தேசாதிபதியாகிய ஏரோதேயுடனேகூட வளர்க்கப்பட்ட§ மனுவன் என்றும், சவுல் என்றும் பெயர்களையுடைய இவர்கள் தீர்க்கதரிசிகளுமாய்ப் போதகருமாய் இருந்தார்கள்.

உ அவர்கள் கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருக்கிறபொழுது பரிசுத்தஆவியானவர் சொன்னது: பருனபாவையும் சவுலையும் நான் [10]அழைத்த கிரியைக்காக [11]அவர்களைத் தெரிந்து எடுத்து அனுப்புங்கள் என்றார்.

ஊ [12]உடனே அவர்கள் உபவாசித்துச் செபம்பண்ணி, அவர்கள் மேல் கைகளை வைத்து அனுப்பினார்கள்.

ச ¶ ஆதலால் அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டு, சிலுக்கிய பட்டணத்திற்குப் போய், அங்கே கப்பலேறி, [13]சீப்புருதிவில் சேர்ந்தார்கள்.

ரு பின்பு அவர்கள் சாலமிஸ்பட்டணத்திற்குப் போனபொழுது, [14]யூதருடைய செபஆலயங்களில் (அவர்களுக்கு) பராபரனுடைய வசனத்தைஅறிவித்தார்கள்; [15]யோவான் என்பவனும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்.

சு அவர்கள் அந்தத் தீவெங்கும் கடந்து, பாப்போ பட்டணபரியந்தம் போனபொழுது, பரியேசு என்று பேர்கொண்ட [16]ஸ்தம்பனக்காரனுமாய், கள்ளத்தீர்க்கதரிசியுமாய்,

ஏ புத்திசாலிகளாகிய செருகியுபவுல் என்னும் பிரதிதனாயினிடத்தில் தங்கினவனுமாயிருந்த

---

* அல்லது என்னுடைசெய்யமனதாயிருந்தான்.
1 ச இரா. ஐ. ஈ, ஊ. எசே. உள. ஙை.
† ஒசேது, எலாவீட்டி வீசரினை.
2 சங். ஈஅ. ஊ.
3 ச ஈழு. உஅ. ஊஅ. உ ஈழு. உச. ஙை.
4 எசா. ஐஅ. ஊ. அப். ஊ. எ: ஊ. உஅ. செலோ. ஊ. ஊ.
‡ அல்லது பணிவிடை.
5 அப். ஊ. ஐ, ஊ: ஐஅ. ஙை.
6 உஊ. வசனம்.
7 அப். ஊ. உள: ஙச. உஊ: ஐஅ. ஐஅ.
8 அப். ஊ. உஊ—உச.
9 உரோ. ஊ. உச.
§ அல்லது ஏரோதின் வளர்ப்புச் சகோதரனுமை.
10 மத். ஊ. ஊஅ. அப். ஙச. உஊ. உரோ. ஐ. ஐஅ. எபே. ஊ. எ, அ. ஊதீமோ. உ.எ. உதீமோ.ஊ.ஊ. எபி. ஐ. ச.
11 ச மே. அ. ஙச. அப். ஊ. ஐஅ: உஉ. உஊ. உரோ. ஊ. ஊ. கலா: ஊ. ஐஅ: உ. ரு.
12 அப். ஊ. ஊ.
13 அப். ச. ஊஊ.
14 சஊ. ஙச.
15 அப்.ஐஉ.உஅ: ஐஅ. ஊஎ.
16 அப். அ. ஊ.

Digitized by Google

ஒரு யூதனைக் கண்டார்கள்; அந்தத் தூணை பருனபாவையும் சவுலையும் அழைப்பித்து, பராபரனுடைய வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தபொழுது,

அ [1]ஸ்தம்பனக்காரனென்று அர்த்தங்கொள்ளுகிற எலிமா என்னப்பட்ட அவன் பிரதிதூணையை விசுவாசத்திலிருந்து விலக்கும்படி தேடி, அவர்களோடு எதிர்த்துப் பேசினான்.

க அப்பொழுது பவுலென்றும் சொல்லப்பட்ட சவுல் [2]பரிசுத்த ஆவியினால்நிறைந்தவனாய் அவன் மேல் கண்ணோன்றிச் சொன்னதாவது:

ய எல்லாவிதமான கபடமும், எல்லாவிதமான பொல்லாங்கும் நிறைந்தவனே, [3]பசாசின் மகனே, சகல நீதிகளுக்கும் பகைஞனே, நீ கர்த்தருடைய செம்மையான மார்க்கங்களைப் புரட்டுகிறதில் ஓயமாட்டாயா?

யக இப்பொழுதே கர்த்தருடைய கை உன்மேல் வருகின்றது; [4]சில காலம்நீ சூரியனைக்காணுமல்குருடனாயிருப்பாய் என்றான்; உடனே மந்தாரமும் இருளும் அவன் மேல் விழுந்தன; அவன் திரிந்து கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்.

யஉ இப்படிச் சம்பவித்ததைப் பிரதிதூணை கண்டு, கர்த்தனைக் குறித்துச் சொல்லிய உபதேசத்திற்காக அதிசயப்பட்டு விசுவாசமுள்ளவனானான்.

யங ¶ பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போபட்டணத்தைவிட்டு, பம்பீலியா நாட்டிலுள்ள பெருகே பட்டணத்திற்குப் போனார்கள்; [5]யோவான் அவர்களைவிட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பினான்.

யச ¶ பின்பு அவர்கள் பெருகே பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப் பிசிதிய காட்டிலுள்ள அந்தியோகியாவுக்குப் போய், [6]ஓய்வு நாளிலே செபஆலயத்திற்குப் போய் உளுக்காந்தார்கள்.

யடு (அங்கே) [7]நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனமும் (ஆகமமும்) வாசிக்கப்பட்டுத் தீர்ந்தபின்பு, சகோதரர்களே, [8]நீங்கள் எனக்குப் புத்திசொல்ல விரும்பினால் சொல்லுங்களாக என்று ஆலயத்தலைவர் அவர்களுக்குச் சொல்லஆள் அனுப்பினார்கள்.

யசு ¶ அப்பொழுது [9]பவுல் எழுந்து கையினால் சாடைகாண்பித்துச் சொன்னதாவது: இஸ்ரவேலரே, [10]பராபரனுக்குப் பயந்துநடக்கிற சகல சனங்களே, கேட்பீர்களாக.

யஎ இந்த இஸ்ரவேல் சந்ததியாருடைய [11]தேவன் நம்முடைய முன்னோர்களைத் தெரிந்துகொண்டு [12]எகிப்துதேசத்திலே சஞ்சரித்துவந்த அவர்களுடைய சந்ததியை மேன்மைப்படுத்தி, [13]பலத்த வல்லமையினாலே அதிலிருந்து அவர்களைப் புறப்படப்பண்ணி,

யஅ [14]நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்களைப் போஷித்துக்கொண்டு,*

யக [15]கானான்தேசத்திலுள்ள ஏழு வகைச் சனக்கூட்டங்களை நீக்கிவிட்டு, [16]அவர்களுடைய தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டு,

உய [17]பின்பு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்திற்குள்ளே [18]சாமுவேல் தீர்க்கதரிசிவரைக்கும் அவர்களுக்காக நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார்.

உக சாமுவேலின் காலம்முதல், [19]அவர்கள் ஒரு இராசா வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்; அதின்படி பராபரன் அவர்களுக்குப் பென்யமீனுடைய கோத்திரத்தானாகிய கீசென்பவனுடைய குமாரனாகிய சவுலைக் கொடுத்தார்; அவன் நாற்பதுவருஷம் இருந்தான்.

உஉ [20]பின்பு அவர் அவனை விலக்கி, இயேசே என்பவனுடைய கு

* அல்லது, அவர்கள் தம் பிள்ளைகளைப் பாதுகாத்து போல அவர்களைப் பாதுகாத்தார்.

Digitized by Google

மாரனுமிய [1]தாவீதை [2]எனது நிரு வுள்ளத்திற்கு ஏற்றவன் என்று கண்டேன், அவன் என்னுடைய சித்தத்தின்படி முழுவதும் செய் வான் என்று தாவீதைக்குறித்துச் சாட்சியிட்டு, [3]அவனையே அவர்க ளுக்கு இராசனாக ஏற்படுத்தினார்.

உக [4]அவனுடைய சந்ததியிலே பராபரன் [5]தமது வாக்குத்தத்தத் தின்படி, இஸ்ரவேலருக்காக [6]இ யேசு என்னும் இரட்சகனைத் தோன்றப்பண்ணினார்.

உச [7]அவருடைய பிரவேசத் திற்குமுன்னே யோவான் மனம் திருப்புதற்கேற்ற ஞானஸ்நானத் தை எல்லா இஸ்ரவேலருக்கும் பி ரசங்கித்தான்.

உஞ ¶ மேலும் யோவான் (பணி விடை) ஓட்டத்தை நிறைவேற் றுகிறபொழுது (சனங்களுடனே) சொன்னதாவது: [8]நீங்கள் என்னை எவனென்று எண்ணுகிறீர்கள்? நான் அவரல்ல, எனக்குப்பின் ஒருவர் வருகிறார், அவருடைய பாத இரட்சணையை அவிழ்க்கிறதற் கு நான் பாத்திரனல்ல என்று சொன்னான்.

உசு ஆபிரகாமின் சந்ததியாரா யெ சகோதரர்களே, பராபரனுக் குப் பயப்படுகிற மற்றவர்களே, [9]இந்த இரட்சிப்பை அறிவிக்கிற உபதேசம் உங்களுக்கே அனுப் பப்பட்டிருக்கின்றது.

உஎ என்னவெனில், எருசலே மில் குடியிருக்கிறவர்களும் அவர் களுடைய தலைவரும், அவனையா வது [10]ஓய்வுநாள்தோறும் வாசிக் கப்படுகிற [11]தீர்க்கதரிசிகளின்வா க்கியங்களையாவது அறியாமல், [12]அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்ததினாலே அவைகளை நிறை வேற்றினார்கள்.

உஅ [13]மரணத்திற்கு ஏதுவான ஒ ன்றையும் (அவரிடத்தில்) காணும

கி. பி. சஞ்.

1 சங். அ. உ.
2 உ சாமு. உ. ஈ. அப்.உ.உ.
3 உ சாமு. ஈ. ஈ.உ சாமு. உ. ர: ஞ. உ.
4 மாள. ஈ. உ. லூக்.உ.உஉ,உக. அப். உ ஈ. உரோ. உ. உ.
5 உ சாமு. எ.ஐ. சங். உஉ. ஈ.
6 மத். உ. உ. உ.ரோ.ஈ.உ.
7 மத். உ.உ. லூக். உ. உ.
8 மத். உ. ஈ. மாற். உ.எ.லூக். உ. ஈஉ. போள. உ. உஇ, உஎ.
9 மத்.ஐ. உ. லூக். உ. சஎ. சக. வ.அப்.உ.உ.
10 லூக். உஉ.உ. அப். உ. ஈ. உ கொரி. உ.அ.
11 ஈ, ஐஇ. வ எண்.உ. அப். ஐஇ. உ.
12 லூக்.உ.உ.உஐ, சஎ. அப். உ. உஈ. உரோ. உ. உ: உ.அ.உ.
13 மத்.உஎ.உஉ. மாற். ஐஇ. ஈ, ஈ. லூக். உ. உ, உஉ. போள.ஈ.உ, ஐஇ.
14 அப்.உ.ஈ, ஈ.
15 லூக். ஐ.அ. உ: உ. சஎ. போள. ஈ. உ.அ, ஐ, உஉ, உ.
16 மத். உஎ.ஐஈ. மாற். ஐஇ. சஈ. லூக். உ. ஐ. போள.ஈ.உ.அ.
17 மத். உ.அ. உ. அப். உ. உ: உ.ஈ, ஐஇ, உஈ: ஐ. உ.
18 அப். உ. ஈ.
19 மத். உ.அ. ஈ. அப். உ. உ கொரி.ஐஇ.ஐ, உ, எ.
20 அப்.உ அ: உ. உஉ: உ.ஐஇ: ஐ. உஉ.

லிருந்தும், [14]அவர்கள் அவனைக் கொலைசெய்யும்படிக்கு, பிலாத்து வை வேண்டிக்கொண்டார்கள்.

உக [15]அவனைக்குறித்து எழுதியி ருக்கிற யாவையும் அவர் முடித்த பின்பு, (சிலர்) [16]அவனை மரத்தி லிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.

உஉ [17]பராபரன் அவனை மரித் தோரிலிருந்து எழுப்பினார்.

உஈ அன்றியும் அவர் தம்முடனே கூடக் [18]கலிலேயாவிலிருந்து எரு சலேமுக்குப் போனவர்களுக்கு [19]அநேகநாள் தரிசனையானார்; [20]அ வர்களே சனங்களுக்குமுன்பாக அவருடைய சாட்சிகளாய் இருக் கிறார்கள்.

உஊ [21]நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைச் சனிப் பித்தேன் என்று இரண்டாம் சங்கீ தத்திலே எழுதியிருக்கிறபடி,

உஎ இயேசுவை எழுப்பினதிலு லே பராபரன் (நம்முடைய) முன் னோர்களுக்கு உண்டான [22]வாக் குத்தத்தத்தை அவர்களுடையபிள் ளைகளாகிய நமக்கு நிறைவேற் றினார் என்று நாங்களும் உங்க ளுக்குச் சுவிசேஷமாய் அறிவிக் கிறோம்.

உஅ அவர் மறுபடியும் மரியா தபடிக்கு, அவனை மரித்தோரிலி ருந்து எழுப்பச் சித்தமானபடியி னாலே [23]தாவீதிற்குச் (செய்த) உறு தியான தயவுகளை* உங்களுக்குக் கட்டளையிடுவேன் என்று திருவு ளம்பற்றினார்.

உஆ அன்றியும் [24]உம்முடையபரி சுத்தவான் அழிவை அடையும்ப டிசெய்யமாட்டீர் என்று வேறொரு சங்கீதத்திலே சொல்லியிருக் கின்றது.

உஇ தாவீது தனது காலத்திலே பராபரனுடைய சித்தத்திற்கு வே ழியம்செய்த† பின்பு [25]நித்திரை

21 சங்.உ எ. எபி.உ.ஐ: ஐ.ஐ.—22 உ மோ.உ.ஐஇ: ஐஉ.உ: உஉ.ஐஅ. அப் உ.உ. உரோ.உ.ஐ. கலா.உ.ஐஉ.—23 ஏசா ஐஇ. உ.—* அல்லது பரிசுத்தமானவைகளை, நிலையானவைகளை.—24 சங்.ஐஉ.ஐ. அப் உ.உஉ.—† அல்லது தாவீது தன் காலத்தா ருக்குப் பராபரனுடைய சித்தத்தின்படி பணிவிடை செய்து. உஉ.வச. சங்.எஅ.எஉ.—25 உ இரா.உ.ஐ. அப்.உ.உஉ.

Digitized by Google

அடைந்து, தன் பிதாக்களிடத்தில் சேர்க்கப்பட்டு, அழிவை அடைந்தான்.

ரூ எ பராபரனுலே எழுப்பப்பட்டவர் அழிவை அடையவில்லை.

ரூஅ ¶ ஆதலால் சகோதரர்களே [1]அவர்மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகின்றது.

ரூக அல்லாமலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தினுலே நீங்கள் விடுதலையாக்கக்கூடாத காரியம் எதுவோ, அதில் நின்று [2]விசுவாசிக்கிற யாவனும் அவராலே விடுதலையாகிறுன் என்று அறிந்துகொள்வீர்களாக.

சய [3]அன்றியும் நீர்க்கதரிசிகளுடைய புத்தகத்திலே, அசட்டைக்காரரே பாருங்கள், உங்கள் நாள்களில் ஒரு கிரியை செய்வேன், ஒருவன் அதை உங்களுக்கு விவரித்துச் சொன்னுலும் நீங்கள் விசுவாசியாமல் இருப்பீர்கள், அது அப்படிப்பட்ட கிரியையாகவே இருக்கும்.

சக ஆதலால் பிரமிப்படைந்து அழிந்துபோங்கள் என்று சொல்லியிருக்கிறதின்படி உங்களுக்கு வராதபடிக்கு, சாவதானமாய் இருப்பீர்களாக என்றுன்.

சஉ பின்பு அவர்கள் புறப்படுகையில், மறு ஓய்வுநாளிலே* அந்த வசனங்களைத் தங்களுக்குச் சொல்லவேண்டும் என்று புறத்தேசத்தார்வேண்டிக்கொண்டார்கள்.

சஙு மேலும் செபஆலய சபை கலைந்துபோனபின்பு யூதர்களிலும், யூதமார்க்கத்தில் பிரவேசித்துத் தேவபத்தியாயிருந்தபேர்களிலும் அநேகர் பவுலுக்கும் பருனபாவுக்கும் பின்சென்றார்கள், அவர்களுடனே அவர்கள் பேசிக்கொண்டு, [4]பராபரனுடைய இருபையினுலே நிலைகொண்டிருக்கும்படிக்குப் [5]புத்திசொன்னர்கள்.

சச ¶ மறு ஓய்வுநாளிலே கொஞ்சம்குறைய பட்டணத்தார் எல்லாரும் பராபரனுடையவசனத்தைக் கேட்கும்படிக்குக் கூடிவந்தார்கள்.

சஙு யூதர்கள் அவ்வளவு சனங்களைக் கண்டபொழுது, [6]பொருமையினுலே நிறையப்பட்டு, பவுல் சொன்னவைகளுக்கு விரோதமாய்ப் பேசினார்கள்; விரோதித்தும் தூஷணித்தும் வந்தார்கள்.

சஎ அப்பொழுது பவுலும் பருனபாவும் தயிரியங்கொண்டு சொன்னதாவது: [7]முதலாவது உங்களுக்கே பராபரனுடையவசனத்தைச் சொல்லவேண்டியதாய் இருந்தது; [8]நீங்கள் அதைத் தள்ளி உங்களை நித்தியசீவனுக்கு அபாத்திரர் என்று தீர்த்துக்கொள்ளுகிறபடியினுலே, [9]காங்கள் புறத்தேசத்தாரிடத்திற்குப் போகிறேம்.

சஏ நீர் பூமியின் எல்லைபரியந்தமும் இரட்சகராய் இருக்கும்படிக்கு, [10]உம்மைப் புறத்தேசத்தார்களுக்கு ஒளியென்று ஏற்படுத்தினேன் என்கிற வேதவாக்கியத்தின்படி பராபரன் எங்களுக்குக் கட்டளையிட்டருளினபடியினுலே அப்படிச் செய்கிறேம் என்றார்கள்.

சஅ ¶ புறத்தேசத்தார்கள் அதைக் கேட்டுச் சந்தோஷம் அடைந்து, கர்த்தருடைய வசனத்தைப் புகழ்ந்து, [11]நித்தியசீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ, அவர்கள் விசுவாசித்தார்கள்.

சக பின்பு கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரபலமாயிற்று.

சங யூதர்கள் பக்தியும் கனமும் பொருந்திய ஸ்திரீகளையும் பட்டணத்தின் முதலாளிகளையும் எழுப்பி, [12]பவுல் பருனபா என்பவர்களைத் துன்பப்படுத்தும்படிசெய்து, தங்கள் எல்லைகளிலிருந்து அவர்களைத் துரத்தினர்கள்.

சுச [13]அப்பொழுது அவர்கள் தங்கள் கால்களில் பட்ட தூளை அவர்கள்மேல் சாட்சியாக உதறிப்

---

1 எசே. ஊக. எச. நாளா. க. உச. லூக். உச. சக. ச பே. உஙஉ.
2 எச. ஙெ. ஊ. உரோ. க. உஅ: அ. க. எபி. எ. ஙூ.
3 எச. உஊ. ஙச. அப. க. ஙெ.
* கிரேக்கபாஷையில் அந்த வாரத்தின் ஓய்வுநாளில்.
4 அப். ஙஊ. உக: ஙச. உஉ.
5 நீத. உ ஊ. எபி. ஙஉ. ஙஙெ. ச பே. ஙெ. ஙஉ.
6 அப். ஙஅ. க. ச பே. ச. ச. லூக. ஙு.
7 மத். ஙு.க. அப். க. உஊ. உஊ. வச. உரோ. க. ஙஊ.
8 உ கொ. ஊஉ.ஙு. ஙெ கொ. ஊஉ. உஊ. எச. ஙஙெ. இ.மத்.உஊ. சக. உரோ. ஙு. ஙஊ.
9 அப். ஙஅ. க: உஅ. உஅ.
10 எச. சஉ. க: சஊ.க.லூக்.உ. ஊஉ.
11 அப். உ. சக.
12 உதிகொ. க. ஙஊ.
13 மத். ஙு. ஙச. மாற். க. ஙஊ. லூக். க. ஙெ. அப். ஙஅ. க.

Digitized by Google

போட்டு, இக்கோனியா பட்டணத்திற்குப் போனார்கள்; [1]சீஷரானவர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்தாவியினாலும் நிறையப்பட்டார்கள்.

14ம். அதிகாரம்.

1. பவுலும் பர்னபாவும் தள்ளப்பட்டு இக்கோனியாவை விட்டது. அ. இலிஸ்திராவிலே பவுல் ஒரு சப்பாணியைக் குணமாக்கினதினால் அவர்கள் தேவர்களென்று எண்ணப்பட்டது. 8ஈ. பவுல் கல்லெறியப்பட்டது. உக. அவர்கள் பற்பல ஊர்களிலிருந்த சபைகளைச் சந்தித்துச் சுவிசேஷ விசுவாசத்திலும் பொறுமையிலும் திடப்படுத்தி, உக. அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்த பாயாண அவர்களைக்கொண்டு செய்ததை அறிவித்தது.

இக்கோனியாப்பட்டணத்திலே அவர்கள் இருவரும் யூதருடைய செபஆலயத்திற்குப் போய்ப் பிரசங்கம் பண்ணினபொழுது, யூதரிலும் கிரேக்கரிலும் திரளான சனங்கள் விசுவாசித்தார்கள்.

2 விசுவாசியாத யூதர்கள் சகோதரருக்கு விரோதமாகப் புறத்தேசத்தாருடைய மனதை எழுப்பி, பகை உண்டாக்கினார்கள்.

3 அப்படியிருந்தும், அவர்கள் அங்கே நெடுங்காலம் சஞ்சரித்து, கர்த்தரைக்குறித்துத் தயிரியமாய்ப் போதகம்பண்ணினார்கள்; [2]அவர் தமது கிருபையைக் காட்டிய வசனத்திற்குச் சாட்சி உண்டாக அடையாளங்களும் அற்புதங்களும், அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகித்தார்.

4 அந்தப் பட்டணத்தின் சனங்கள் பிரிந்து, சிலர் யூதரோடாயும் [3]சிலர் அப்போஸ்தலரோடாயும் சேர்ந்தார்கள்.

5 அப்பொழுது [4]அவர்களை நிந்தித்து அவர்கள்மேல் கல்லெறியும் பொருட்டாக, புறத்தேசத்தாரும் யூதர்களும் அவர்களுடைய தலைவருடனேயுங்கூடக் கலகம்பண்ணுகிறதை அவர்கள் அறிந்து,

6 [5]இலிக்கவோனியா நாட்டிலுள்ள இலீஸ்திரா ஊருக்கும் தெருபை ஊருக்கும் அவைகளைச் சூழ்ந்த புறத்திற்கும் ஓடிப்போய்,

7 அங்கே சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டு வந்தார்கள்.

8 அ ¶ [6]இலீஸ்திராவூரிலே ஒருவன் தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்து, ஒருக்காலும் நடவாமல் பெலனில்லாதகால்களோடே உருக்காந்திருந்து,

9 பவுல் பேசுகிறதைக் கேட்டான்; அவன்மேல் பவுல் கண்ணோன்றி, [7]இரட்சிக்கப்படும்படிக்கான விசுவாசம் அவனுக்கு உண்டென்று கண்டு,

10 [8]நீ உன் கால்களை ஊன்றி, செம்மையாய் எழுந்து நில்லென்று மிகுந்த சத்தத்தோடே சொன்னான்; உடனே அவன் குதித்து எழுந்து நடந்தான்.

11 பவுல் செய்ததைச் சனங்கள் கண்டு, [9]தேவர்கள் மனிதரூபம் எடுத்து நம்மிடத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்று இலிக்கவோனியா பாஷையிலே சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

12 மேலும் பர்னபாவை பூப்பித்தர் தேவனென்றும் பவுல் பிரசங்கத்தை நடத்தினவனானபடியினாலே, அவனை மெருக்கூரி தேவனென்றும் அழைத்தார்கள்.

13 அல்லாமலும், பட்டணத்திற்குப் புறம்பே இருந்த பூப்பித்தருடைய பூசாசாரி எருதுகளையும் பூமாலைகளையும் வாசலின் அருகே கொண்டுபோய்ச் [10]சனங்களோடேகூடப் பலியிட மனதாயிருந்தான்.

14 அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேள்விப்பட்டு, (விசனத்தினாலே) [11]தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு,

15 கூட்டத்திற்குள் ஓடி, மனிதர்களே, [12]என்னத்திற்கு இப்படிச் செய்கிறீர்கள்? [13]நாங்களும் உங்களைப்போலப் பாடுள்ள மனிதராயிருந்து,

16 [14]நீங்கள் இந்த வீண தேவர்களைவிட்டு [15]வானத்தையும்

அ. பி. சகு.

1 அ. 13. 52.
போஜ. 66. உ.
அப். உ. சக.
2 மாற். 16. 20.
எபி. உ. 4.
3 அப். 28. 8.
4 உ நியே. 8.
உக.
5 மத். 10. உக.
6 அப். 3. 2. உ.
7 மத். அ. 9: க.
உஅ, உக.
8 சொ. உஇ. க.
9 அப். அ. 8:
உஅ. க.
10 தானி. உ. சக.
11 ஆதி. உக. கஇ.
12 அப். 10. உக.
13 பாச். இ. 20.
வெளி. 19. 10.
14 க சாமு. 12.
உக. க இரா.
18. 28. எரே.
32. உஉ. க
மோ. உ. 8.
க வெளி. அ. 8.
15 க மோ. 8. க.
சங். 33. 6:
ஈசா.க. வெளி.
10. 6.

பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கின [1]சீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டும் என்று உங்களுக்குச் சுவிசேஷமாய்ச் சொல்லுகிறோம்; [2]சென்ற காலங்களில் அவர் எல்லாப் புறத்தேசத்தாராயும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்,

யஎ அவர்களுக்கு [3]நன்மைசெய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குக் கொடுத்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, [4]இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சிகொடாமல் இருக்கவில்லையென்று கூப்பிட்டார்கள்.

யஅ இப்படி அவர்கள் சொல்லி, தங்களுக்குச் சனங்கள் பலியிடாதபடிக்குப் பிரயாசத்தோடே நிறுத்தினார்கள்.

யக ¶ பின்பு [5]அந்தியோகியாவிலும் இக்கோனி ஊரிலுமிருந்து யூதர்கள் அங்கே போய், சனங்களுக்குப் போதனைசெய்து, [6]பவுலின்மேல் கல்லெறிந்து, அவன் மரித்தான் என்று நினைத்து, அவனைப் பட்டணத்திற்கு வெளியே இழுத்தார்கள்.

உய அங்கே சீஷர்கள் அவனைச் சூழ்ந்துகொள்ளுகையில், அவன் எழுந்து, ஊருக்குள் பிரவேசித்து, மறுநாளிலே பருனபாவுடனே தெருபை ஊருக்குப் போனான்.

உக ¶ அந்த ஊராருக்குச் சுவிசேஷத்தை அறிவித்து, [7]அநேகரைச் சீஷராக்கின* பின்பு, அவர்கள் இலீஸ்திரா ஊருக்கும் இக்கோனி ஊருக்கும் அந்தியோகியா ஊருக்கும் திரும்பி,

உஉ சீஷருடைய ஆத்துமாக்களை ஸ்திரப்படுத்தி, [8]விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படிக்குப் புத்திசொல்லி, [9]நாம் அநேக உபத்

கி. பி. சசு.

1 a செ. க. கூ.
2 சங். அ. ஐ. அப். ம. ஈ. க. a பே. ச. க.
3 a மோ. உக. ச. @ மோ. ம. ம: உஅ. ஐ. போபு. இ. ம. சங். ஈ. ஐ: கஅ. க: ரச. அ. எரே. ம. உஐ. மத். இ. ச@.
4 அப். ம. உ: உரோ. க. உம.
5 அப். கூ. ச@.
6 உ கொரி. ஈ. உ@. உ நீமோ. க. ம.
7 மத். உஅ. ம. * அல்லது போதித்த.
8 அப். ஈ. உ: ம. ச.
9 மத். ம. கஅ: ம. உ. லூக். உஐ. உஅ, உ. உரோ. அ. ம. உ நீமோ. உ ம, ஐ: க. ஐ
10 நீத். ச. இ.
11 அப். ம@. ச.
12 அப். ஈ. க, க.
13 அப். ம@. ச, ஐ: உ. ம.
14 a கொரி. ம. க. உகொரி. உ ஐ. கொலோ. ச. க. வெளி. க. அ.
15 எஸ். உ. ஐ.
16 a மோ. ஈ. ம. a மோ. ஐ. க.
17 பேரா. எ. உஐ. இ. ரூத். எஸ். மோ. உ. பலி. க. உ. கொலோ. உ. அ க, ம.

நிரவங்களின் வழியாய்ப் பராபரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கவேண்டும்என்றும் சொல்விக்கொண்டார்கள்.

உங அன்றியும் சபைகள்தோறும் அவர்களுக்காக [10]மூப்பனைத் தெரிந்து ஏற்படுத்தி உபவாசித்துச் செபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துக்கொண்டிருந்த கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள்; பின்பு அவர்கள் பிசீதியா காட்டைக் கடந்துபோய், பம்பீலியா காட்டிலே சேர்ந்து,

உச பெருகே ஊரிலே சுவிசேஷவசனத்தை அறிவித்து,

உஞ அத்தாலியா பட்டணத்திற்குச் சென்று, அங்கே கப்பலேறி,

உசு தாங்கள் [11]நிறைவேற்றின கிரியைக்காகப் பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் [12]புறப்பட்ட அந்தியோகியா பட்டணத்திற்குப் போனார்கள்.

உஎ ¶ அங்கே சேர்ந்தபொழுது, அவர் சபையைக் கூடிவரப்பண்ணி, [13]தங்களால் பராபரன் செய்தவைகளையும், [14]அவர் புறத்தேசத்தார்களுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார் என்பதையும் அறிவித்து, பின்பு அங்கே சீஷருடனேகூட அநேககாலம் சஞ்சரித்துக்கொண்டுவந்தார்கள்.

யடு. அதிகாரம்.

க. எள்ளத்தைக்குறித்துப் பெரியவாக்குவாதம் உண்டானது. கூ. அப்போஸ்தலர் அதைக்குறித்து ஆலோசித்தது. உஉ. அவர்களுடைய நிர்மானத்தை நிருபங்களிலெழுதிச் சபைகளுக்கு அனுப்பினது. கக. பவுலும் பருனபாவும் ஒருமித்துச் சனங்களைச் சந்திக்க நினைத்தும் விலக்கப்பட்டுப் பிரிந்து போனது.

அக்காலத்திலே [15]சிலர் யூதேயாவிலிருந்துபோய், [16]நீங்கள் மோசேயின் முறைமையின்படியே [17]விருத்தசேதனம் பெற்றுக்கொள்ளாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.

உ அதினாலே கலகமும், அவர்களுக்கும் பவுல் பருனபா என்ப

Digitized by Google

வர்களுக்கும் மிகுந்த தருக்கமும் உண்டானபொழுது, அந்தத் தருக்காரியத்தைக்குறித்துப் [1]பவுலும், பருனபாவும், தங்களில் வேறே சிலரும் எருசலேமிலுள்ள அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டும் என்று நிர்மானம் பண்ணினார்கள்.

ஃ அந்தப்படி [2]அவர்கள் சபையாராலே வழிவிட்டு அனுப்பப்பட்டபின்பு பெனீக்கே சமாரியா நாடுகளின் வழியாய்ப்போய், [3]புறத்தேசத்தார் மனம்திருப்பினதை அறிவித்து, சகோதரர் எல்லாருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கினார்கள்.

஄ எருசலேமிலே அவர்கள் சேர்ந்து, சபையினாலும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்பு, [4]தங்களால் பராபரன் செய்தவைகளை அறிவித்தார்கள்.

அ அப்பொழுது பரிசேயராகிய விசுவாசிகளான சிலர் எழுந்து* அவர்கள் [5]விருத்தசேதனத்தைப் பெற்றுக்கொண்டு மோசேயின் பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படிக்கு உத்தரவு அனுப்பவேண்டும் என்றார்கள்.

ஆ ¶ பின்பு அப்போஸ்தலரும் மூப்பரும் அந்தக் காரியத்தை ஆராய்ந்து பார்க்கும்படிக்குக் கூடினார்கள்.

இ மிகுந்த தருக்கம் உண்டான பொழுது, பேதுரு எழுந்து அவர்களுடனே சொன்னதாவது: [6]சகோதரரே, நீங்கள் அறிந்திருக்கிறபடி, பராபரன் அநேக நாள்களுக்குமுன்னே உங்களில் ஒருவனுடைய வாயினாலே புறத்தேசத்தார்கள் சுவிசேஷத்தின் வார்த்தையைக் கேட்டு, விசுவாசிக்கும்படி (என்னைத்) தெரிந்தெடுத்தார்.

ஈ மேலும் [7]இருதயங்களை அறிந்திருக்கிற பராபரன் நமக்குக் கொடுத்ததுபோல, அவர்களுக்கும் [8]பரிசுத்தஆவியைக் கொடுத்து,

உ (இவ்விதமாய்) அவர்களைக்குறித்துச் சாட்சியிட்டு, [9]அவர்கள் இருதயங்களை விசுவாசத்தினாலே சுத்தமாக்கி, அவர் [10]நமக்கும் அவர்களுக்கும் ஒரு வித்தியாசமும் பண்ணவில்லை.

உக மேலும் நான் போனபின் பு, ஆட்டுக்கூட்டத்தைத் தயை யோடே நடப்பியாமல், [19]கொடி தாயிருக்கிற கோணாய்கள் உங்க ளுக்குள்ளே பிரவேசிக்கும்.

ஊய அதுவுமல்லாமல் [20]உங்களி லும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள் ளும்படிக்கு, மாறுபாடானவைக ளைப் போதிப்பார்கள் என்று அ றிந்திருக்கிறேன்.

ஊக ஆனபடியினாலே நீங்கள் வி ழித்துக்கொண்டு, [21]நான் மூன்று வருஷமாய் இரவும்பகலும் அவ னவனுக்குக் கண்ணீரோடே புத் திசொல்லிக்கொண்டு வந்ததை நி னைத்துக்கொள்வீர்களாக.

ஊஉ இப்பொழுது சகோதரரே, பராபரனுக்கும் [22]அவருடைய கி ருபையை அறிவிக்கிற வார்த்தைக் கும் உங்களை ஒப்புக்கொடுக்கி றேன்; [23]அவரே உங்களை ஏறக்

Digitized by Google

கட்டவும், [1]பரிசுத்தமாக்கப்பட்ட எல்லாரும் இருக்கிற இடத்திலே சுதந்தரத்தை உங்களுக்குக் கொடுக்கவும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

கூ [2]ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் உடுப்பையாகிலும் நான் இச்சிக்கவில்லை.

கூ நீங்கள் அறிந்திருக்கிறபடி நானும் என்னுடனேகூட இருந்தவர்களும் வேண்டிய பதார்த்தங்களை அடையும்படிக்கு, [3]இந்தக் கைகளே வேலைசெய்தன.

கூ [4]அப்படியே வேலைசெய்து பலவீனனைத் தாங்கவும், வாங்குகிறதிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வசனங்களை நினைக்கவும் வேண்டும் என்று எல்லாவிதத்தாலும் உங்களுக்குக் காண்பித்தேன் என்று சொல்லி,

கூ ¶ பின்பு [5]முழங்காற்படியிட்டு, அவர்கள் எல்லாரோடுங்கூடச் செபம்பண்ணினான்.

கூ இனிமேல் நீங்கள் என்னுடைய முகத்தைப் பார்க்கமாட்டீர்கள் என்று [6]அவன் சொன்ன வசனத்திற்காக, அவர்கள் எல்லாரும் அதிகமாய்த் துக்கப்பட்டு,

கூ மிகவும் அழுதுகொண்டு, [7]பவுலின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தம்செய்து, பின்பு கப்பல்வரைக்கும் அவனுடனே கூடப்போய் அனுப்பிவிட்டார்கள்.

உக. அதிகாரம்.

க. பவுல் எருசலேமுக்குப் பயணமானது. கூ. பிலிப்பின் குமாரத்திகள் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாயிருந்தது. ஙூ. பவுல் எருசலேமுக்கு வந்தது, உஎ. யூதர்களால் பிடிக்கப்பட்டபோது, ஙக. பிரதான சேவைக்காரனால் விடுதலையாகிச் சனங்களிடத்தில் பேசும்படி உத்தரவுபெற்றது.

நாங்கள் அவர்களைவிட்டுப் பிரிந்து துறைபேர்ந்தபின்பு, நேராய்ப் போய்க் கோஸ்தீவில் சென்று, மறுநாளிலே உரோது தீவில் சென்று, அதில்நின்று பத்தராபட்டணத்திற்குப் போய்,

உ அங்கே பேனீக்கே தேசத்திற்குப்போக எத்தனமாயிருந்த கப்பலைக் கண்டு அதில் ஏறிப்போய், சீப்புரு தீவைக் கண்டு,

ஙூ அதை இடதுபுறமாக விட்டுச் சீரியா நாட்டிற்கு ஓடி, தீறு பட்டணத்திலே அவர்கள் கப்பலின் சரக்குகளை இறக்கவேண்டியபடியால் அவ்விடத்திலே சேர்ந்து,

ச பின்பு சீஷரைக் கண்டு ஏழு நாள் அங்கே தங்கினோம்; அவர்கள் பவுலை நோக்கி, நீர் [8]எருசலேமுக்குப் போகக்கூடாதென்று ஆவியினாலே சொன்னார்கள்.

ஞ நாங்கள் அந்நாள்களை முடித்தபின்பு புறப்பட்டுப்போனபொழுது, அவர்கள் எல்லாரும் மனைவிகளோடும் பிள்ளைகளோடுங்கூடப் பட்டணத்திற்குப் புறம்பே (சற்றுத்தூரம்)வரைக்கும் எங்களை வழிநடத்தினார்கள்; கடற்கரையிலே நாங்கள் [9]முழங்காற் படியிட்டுச் செபம்பண்ணி,

ஙூ ஒருவரிடத்திலே ஒருவர் உத்தரவு வாங்கிக்கொண்டபின்பு, நாங்கள் கப்பலேறினோம்; [10]அவர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள்.

எ ¶ நாங்கள் தீறு பட்டணத்தை விட்டுப் பித்தோலேமாயா பட்டணத்திற்குப்போய், கப்பல் வாத்தினாயை முடித்துச் சகோதரரை வாழ்த்தி, ஒருநாள் அவர்களிடத்தில் தங்கினோம்.

அ மறுநாளிலே பவுலைச் சேர்ந்த நாங்கள் புறப்பட்டுச் சேசாரியா பட்டணத்திற்குப்போய், [11]ஏழு பேரில் ஒருவனாயிய பிலிப்பென்னும் [12]சுவிசேஷனுடைய வீட்டிற்குச் சென்று, அவனிடத்திலே தங்கினோம்.

க அவனுக்கு உண்டான குமாரத்திகளாகிய நான்கு கன்னிகைகளும் [13]தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்களாய் இருந்தார்கள்.

கி. பி. கூ.

1 அப். உகூ. ம்அ. எபே. க. ம்அ. கொலோ. க. ஙூ: க. உச. எபி. க. ம்இ. க பே. க. ச.

2 க சாமு. ஙூ.க. க கொரி.கூ.ம்ஙூ. உ கொரி. எ.உ: ம்க.க: ம்ஙூ. ம்ஙூ.

3 அப். ம்அ. க. க கொரி.ச.ம்ஙூ. க தெச. உ. க. உ தெச. க. அ.

4 உரோ. ம்இ. க. க கொரி கூ.ம்ஙூ. உ கொரி. ம்க. கூ.ம்ஙூ: ம்ஙூ.ம்க. எபே. ச. உஅ. க தெச. ச.ம்ஙூ: இ.ம்ச. உ தெச. க. அ.

5 அப். எ. கம்: உக. இ.

6 உஇ. வச.

7 க மோ. சஇ. ம்ச: சக. உக.

8 ம்ஙூ வச. அப். உம். உக.

9 அப். உம். கக.

10 போவா.க.ம்க.

11 அப்.க.இ: அ. உக, சம்.

12 எபே. ச. ம்க. உதீமோ. ச.இ.

13 போவே. உ. உஎ. அப். உ. ம்எ.

Digitized by Google

கி. பி. சுய.

ல மேலும் காங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், [1]ஆகாபு என்று பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்திருந்தான்.

லக அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்து, தன் கைகளையும் கால்களையும் கட்டிக்கொண்டு, [2]இந்தக் கச்சையை உடையவனை எருசலேமிலுள்ள யூதர்கள் இப்படிக் கட்டி, புறத்தேசத்தார்களுடைய கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்தஆவி சொல்லுகிறார் என்றான்.

லஉ அதை நாங்கள் கேட்டபொழுது, அவன் எருசலேமுக்குப் போகாதபடிக்கு நாங்களும் அத்தலத்தாரும் வேண்டிக்கொண்டோம்.

லக பவுல் மாறுத்தரவாகச் சொன்னதாவது: [3]நீங்கள் அழுதுகொண்டு என் இருதயம் உடைந்து போகப்பண்ணுகிறதென்ன? எருசலேமிலே நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்குமாத்திரம் அல்ல, மரிப்பதற்கும் எத்தனமாய் இருக்கிறேன் என்றான்.

லச இப்படி அவன் சம்மதியாதபடியினாலே, [4]நாங்கள் கர்த்தருடைய சித்தம் ஆகக்கடவதென்று அமைந்திருந்தோம்.

லஞ ¶ அந்நாள்களுக்குப்பின்பு, நாங்கள் பிரயாணச் சாமான்களைச் சேர்த்துக்கொண்டு எருசலேமுக்குப் போனோம்.

லசு சேசாரியா பட்டணத்திலுள்ள சீஷரில் சிலரும் எங்களுடனேகூட வந்து, சீப்புருதீவானுமாய், மிகுந்த காலம் சீஷனுமாய் இருந்த மினுசோனிடத்திலே தங்கும்படிக்கு எங்களை அவனிடத்தில் அழைத்தார்கள்.

லஎ ¶ [5]நாங்கள் எருசலேமில் சேர்ந்தபொழுது, சகோதரர் எங்களைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார்கள்.

லஅ மறுநாளிலே பவுலும் நாங்களும் [6]யாக்கோபினிடத்திற்குப் போனோம்; எல்லா மூப்பர்களும் அங்கே கூடிவந்தார்கள்.

லக அவர்களுக்கு அவன் வாழ்த்துதல் செய்து, [7]பின்பு தன் ஊழியத்தினாலே பராபரன் [8]புறத்தேசத்தாருக்குள்ளே செய்தவைகளை ஒவ்வொன்றாய்விவரித்துச்சொன்னான்.

லய (அதை) அவர்கள் கேட்டு, கர்த்தனைத் தோத்திரம்பண்ணி, பின்பு அவனுடனே சொன்னதாவது: சகோதரனே, யூதர்களில் அநேகம் ஆயிரம்பேர் விசுவாசிகளானதைப் பார்த்திருக்கிறாய்; அவர்கள் எல்லாரும் [9]நியாயப்பிரமாணத்துக்காக வைராக்கியமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

லக நீ புறத்தேசத்தாருக்குள்ளே இருக்கிற யூதரெல்லாரும் (தங்கள்) பிள்ளைகளை விருத்தசேதனம் பண்ணவும், மற்ற முறைமைகளின்படியே நடக்கவும் வேண்டுவதில்லையென்று சொல்லி, இவ்விதமாய் அவர்கள் மோசேயைவிட்டு விலகும்படி உபதேசிக்கிறாயென்று அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

லஉ இப்பொழுது என்ன செய்யலாம்? நீ வந்ததை அவர்கள் கேள்விப்பட்டு, மெய்யாய்க் கூட்டங்கூடுவார்கள்.

லஊ ஆகையால் நாங்கள் உனக்குச் சொல்லுகிறபடி நீ செய்யவேண்டும்; என்னவென்றால், நான்குபேர் பிரார்த்தனை பண்ணிக்கொண்டு எங்களிடத்தில் இருக்கிறார்கள்.

லச அவர்களை நீ சேர்த்து அவர்களுடனேகூடச் சுத்திபண்ணிக்கொண்டு, [10]அவர்கள் சிரச்சவரம் பண்ணுவதற்கு வேண்டிய செலவுபண்ணுவாயாக; அப்படிச் செய்தால் எல்லாரும் தங்களுக்கு உன்னைக்குறித்து அறிவிக்கப்பட்

1 அப். உ. உஅ.
2 கக. வச. அப். உஅ. உக.
3 அப். உஅ. உச.
4 மத். க.அ:உக. சஉ. லூக். அ. உ: உஉ. சஉ.
5 அப். உஇ. ச.
6 அப். உஇ. உக. கலா. க. உக: உ. கூ.
7 அப். க. உஎ: உல. உச.
8 அப். உஇ. ச, உஉ. உரோ. உஇ. உஅ, உக.
9 அப். உஉ. க. உரோ. உ. உ. கலா. க. உச.
10 ச மோ. க. உ, உக, உஅ. அப். உஅ. உஅ.

Digitized by Google

டது ஒன்றுமில்லை என்றும், நீதானே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவன் என்றும் அறிவார்கள்.

உரு விசுவாசிகளான புறத்தேசத்தார் இப்படிப்பட்டவைகளைக் கைக்கொள்ளாமல் விக்கிரகங்களுக்குப் படைத்ததற்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததற்கும், வேசித்தனத்திற்கும்மாத்திரம் விலகியிருக்கவேண்டும் என்று நாங்கள் தீர்மானம்பண்ணி, [1]அவர்களுக்கு எழுதியனுப்பினோமே என்றார்கள்.

உசு ¶ அப்பொழுது பவுல் அந்த மனிதனைச் சேர்த்துக்கொண்டு மறுநாளிலே அவர்களுடனேகூடச் சுத்தம்பண்ணி, பின்பு [2]தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காகவேண்டிய பலி கொடுக்கப்படுமளவும், [3]சுத்தமாக்குதற்சேற்ற நாள்களை நிறைவேற்றுவேன் என்று அறிவித்தான்.

உஎ ¶ அதற்கு ஏற்ற ஏழுநாளும் நிறைவேறிவருகையில், [4]ஆசியா தேசத்திலிருந்து வந்த யூதர்கள் தேவாலயத்திலே அவனைக் கண்டு, கூட்டமெல்லாம் கூடிவர அழைத்து,

உஅ [5]அவன்மேல் கைகளைப் போட்டு, ஓய் இஸ்ரவேலரே, உதவி செய்யுங்கள்; [6]இவனே நம்முடைய சனத்திற்கும் வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறான்; அதுவுமல்லாமல், இந்தத் தேவாலயத்திலே கிரேக்கனையும் அழைத்துவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தை அசுசிப்படுத்தினான் என்று கூப்பிட்டார்கள்.

உக முன்பு எபேசியனாகிய [7]திரோப்பிமு என்பவனைப் பட்டணத்திலே அவனுடனேகூட இருக்கக் கண்டிருந்து, பின்பு பவுல் அவனைத் தேவாலயத்திலே அழைத்து வந்தான் என்று நினைத்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

கூ.பி.சுய.

1 அப்.கூஉ. உஅ, உஆ.
2 அப். உச. கூஅ.
3 ச மோ. க. கூக.
4 அப். உச. கூஅ.
5 அப். உக.உக.
6 அப்.உச.ஙி.க.
7 அப். உஉ. ச.
8 அப். உக.உக.

கூய அப்பொழுது [8]நகரம் முழுவதும் கலக்கப்பட்டது; மேலும் சனங்கள் கூட்டமாய் ஓடிவந்து, பவுலைப் பிடித்து, அவனைத் தேவாலயத்திற்குப் புறம்பே இழுத்தார்கள்; உடனே வாசல்கள் பூட்டப்பட்டன.

கூக ¶ மேலும் அவர்கள் அவனைக் கொலைசெய்ய வகைதேடுகையில், எருசலேம் முழுவதும் கலக்கம் அடைந்திருக்கிறதென்று போர்ச்சேவகரின் சேனாதிபதிக்கேள்விப்பட்டு,

கூஉ [9]உடனே போர்ச்சேவகரையும் அவர்களுடைய தலைவரையும் சேர்த்துக்கொண்டு அவர்களிடத்திற்கு ஓடினான்; சேனாதிபதியையும் போர்ச்சேவகரையும் அவர்கள் கண்டபொழுது, பவுலை அடிப்பதை விட்டார்கள்.

கூங அப்பொழுது சேனாதிபதி சேர்ந்து அவனைப் பிடித்து, [10]இரண்டு சங்கிலிகளினாலே கட்டும்படி சொல்லி, இவன் யாவனென்றும் என்ன செய்தானென்றும் விசாரித்தான்.

கூச அதற்குச் சனங்கள் பலவிதமாய்க் கூப்பிட்டார்கள்; அப்பொழுது கலக்கத்தினாலே அவன் நிச்சயத்தை அறியக்கூடாதிருந்தபடியால், அவனைக் கோட்டைக்குக் கொண்டுபோகச் சொன்னான்.

கூடு அவன் படிகள்மேல் ஏறினபொழுது, கூட்டம் பின்சென்று, [11]அவனைக் கொலைசெய்யுமென்று கூப்பிட்டுக்கொண்டு,

கூசு உக்கிரமாயிருந்தபடியினாலே, சேவகர் அவனைத் தூக்கி எடுத்துக்கொண்டு போனார்கள்.

கூஎ ¶ அவர்கள் பவுலைக் கோட்டைக்குள்ளே கொண்டுபோகத் தனமாயிருக்கையில், அவன் சேனாதிபதியை நோக்கி, நான் உம்மு

9 அப். உக.உஎ: உச. எ.

10 உக. வச. அப். உஅ. உக.

11 லூக். உக. மஅ. யோவா. மக. மஇ. அப். உஉ. உஉ.

Digitized by Google

டனே ஒரு வார்த்தை பேசலாமா என்றான்; அதற்கு அவன் சொன்னது: கிரேக்கபாஷை உனக்குத் தெரியுமா?

ஈ அ இந்தக் காலத்திற்குமுன்னே கலகம் உண்டாக்கி, நாலாயிரம் கொலைபாதகரை வனாந்தரத்திலே கொண்டுபோன [1]எகிப்தான் நீ அல்லவா என்றான்.

ஈ ஆ பவுல் சொன்னது: [2]நான் கிலிக்கியா நாட்டிலுள்ள கீர்த்தி அடைந்திருக்கிற தருசு பட்டணத்தானாகிய யூதன்; நான் சனங்களுடனே பேசும்படி எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும் என்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

ஈ இ அவனுக்கு உத்தரவு கொடுத்தபின்பு, பவுல் படிகளின்மேலே நின்று, [3]கையினாலே சனங்களுக்குச் சமிக்கைகாட்டினான்; மிகுந்த அமைதல் உண்டானபொழுது, அவன் எபிரேய பாஷையிலே சத்தமிட்டுச் சொன்னதாவது:

௨௨. அதிகாரம்.

க. பவுல் தான் குணப்பட்டு விசுவாசியானவிதத்தையும், ஙக. அப்போஸ்தலப் பட்டத்துக்கு அழைக்கப்பட்ட விதத்தையும், வெளியரங்கமாய் அறிவித்தது. ௨௨ தான் அந்நியர்களுக்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தலனென்று சொன்னபோது யூதர்கள் கலகம்பண்ணினது. ௨௪. அவர்கள் அவனைச் சவுக்கால் அடிக்கவினைத்தபோது, ௨ஙி. தன்னை உரோமை சாட்டானென்று தப்பித்துக் கொண்டது.

[4]சகோதரர்களே, பிதாக்களே, உங்களுக்கு நான் இப்பொழுது சொல்லும் உத்தரவுக்குச் செவி கொடுப்பீர்களாக என்று சொன்னபொழுது,

உ எபிரேய பாஷையிலே தங்களுடனே பேசுகிறதை அவர்கள் கேட்டு, அதிக அமைதலாயிருந்தார்கள்; அவன் பின்னும் சொன்னதாவது:

ஊ நான் யூதன், [5]கிலிக்கியா நாட்டிலுள்ள தருசு பட்டணத்திலே நான் பிறந்து, பின்பு இந்த நகரத்திலே [6]கமாலியேலின் [7]பாதத்தினிடத்தில் வளர்ந்து, [8]முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே கெட்டியாய்ப் போதிக்கப்பட்டு [9]இன்றைத்தினம் நீங்கள் எல்லாரும் இருக்கிறதுபோல, [10]பராபரனைக்குறித்து வைராக்கியமுள்ளவனாயிருந்து,

எ [11]இந்த மார்க்கத்தாரை மரணபரியந்தம் துன்பப்படுத்தி, புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளுக்கு ஒப்புக்கொடுத்துவந்தேன்.

ஏ அதற்குப் பிரதான ஆசாரியரும் [12]மூப்பர்கள் யாவரும் சாட்சிகொடுப்பார்கள்; [13]அவர்களிடத்திலே நான் சகோதரருக்கு நிருபங்களை வாங்கிக்கொண்டு, தமஸ்கு ஊரில் இருக்கிறவர்களும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவதற்கு அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி அவ்விடத்திற்குப் போனேன்.

ஐ அப்படி நான் [14]பிரயாணப்பட்டுத் தமஸ்கு ஊருக்குச் சமீபமானபொழுது, மத்தியான வேளையிலே சடுதியாய் வானத்திலிருந்து மிகுந்த ஒளி உண்டாகி, என்னைச் சுற்றிப் பிரகாசித்தது.

ஒ உடனே நான் தரையிலே விழுந்து, சவுலே, சவுலே, என்னைத் திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய் என்று என்னுடனே சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன்.

ஓ அதற்கு நான், ஆண்டவரே, நீர்யார் என்றேன்; அவர் என்னுடனே சொன்னது: நீ துன்பப்படுத்துகிற நாசரேத்தூராகிய இயேசுவே நான் என்றார்.

ஔ [15]என்னுடனேகூட இருந்தவர்கள் அந்த ஒளியைக் கண்டு பயம் அடைந்தார்கள்; என்னுடனே பேசினவருடைய சத்தத்தை அவர்கள் கேட்கவில்லை.

ஔ ஆ பின்னும் நான், ஆண்டவரே, நான் என்ன செய்யவேண்டும் என்றேன்; அதற்குக் கர்த்தர் சொன்னது: நீ எழுந்து தமஸ்கு ஊருக்

கி. பி. சுமா.

1 அப். ஐ. கக.
2 அப். க. ஙச: ௨௨. க.
3 அப். ஙஉ. ஙன.
4 அப். எ. ஒ.
5 அப். ௨க. கக. ஐ கொரி. ஙச. ஒ. பிலி. க. ஐ.
6 அப். ஐ. கச.
7 ஐ மோ. கக.க. ஒ இரா.ச.கஅ. லூக். ஙி. கசு.
8 அப். ௨க. ஐ.
9 உரோ. ஙி. ஒ.
10 அப். ௨க.ஒஙி. கலா. க. ஙச.
11 அப். அ. க. ௨க. சு, ஙி, ஙக: பிலி. க. சு. க தீமோ. க.ஙக.
12 லூக். ஒ௨. கக. அப்.ச.ஐ.
13 அப். சு. ஒ: ௨க. ஙி, ஙஉ.
14 அப். சு. க: ௨க. ஙஉ, ஙக.
15 அப். சு. எ. தானி. ஙி. எ.

Digitized by Google

குப் போ; நீ செய்யும்படிக்குக் கட்டளையிடப்பட்ட யாவும் அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.

யக பின்பு நான் அந்த ஒளியின் மகிமையினாலே பார்வை அற்றுப் போனபடியால், என்னோடிருந்தவர்களால் கைலாகு கொடுத்து அழைக்கப்பட்டுப் போய்த் தமஸ்குவூரில் சேர்ந்தேன்.

யஉ அப்பொழுது வேதப்பிரமாணத்தின்படியே பத்தியுள்ளவனுமாய், [1]அங்கே குடியிருக்கிற சகல யூதராலும் [2]நல்லவன் என்று நற்சாட்சி பெற்றவனுமாயிருக்கிற [3]அனனீயா என்னும் ஒருவன் என்னிடத்தில் வந்து நின்று,

யஊ என்னை நோக்கி, சகோதரனாகிய சவுலே, பார்வை அடைவாயாக என்றான்; அந்நேரமே நான் அவனை நோக்கிப்பார்த்தேன்.

யச பின்பு அவன் சொன்னது: [4]நீ கண்டு கேட்டவைகளைக்குறித்து, [5]சகலவித மனிதருக்கும் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கும்படிக்கு,

யடு [6]நம்முடைய முன்னோர்களின் தேவன் [7]உன்னை முன்குறித்திருந்து, தம்முடைய சித்தத்தை நீ அறியவும் [8]நீதிபரனாகி [9]காணவும் [10]அவருடைய திருவாயின் சத்தத்தைக் கேட்கவும்பண்ணினார்.

யசு இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து, [11]கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு ஞானஸ்நானம்பெற்று, உன் [12]பாவங்களை நீக்குவாயாக என்றான்.

யள பின்பு நான் [13]எருசலேமுக்குத் திரும்பிவந்து, தேவாலயத்திலே செபம்பண்ணிக்கொண்டிருக்கையில், நான் ஞானதிருஷ்டி அடைந்து அவனைத்தரிசித்தேன்.

யஅ [14]அவர் என்னுடனே நீ என்னைக்குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளாம

கி. பி. கூய.

1 உ தீமோ. உ.எ.
2 அப். ம. உஉ.
3 அப். கூ. மஎ.
4 அப். ச. உம: உக. மக.
5 அப். உக. மக.
6 அப். உ. மக:இ. கம.
7 அப். கூ. மஇ: உக. மக.
8 அப். உ. மச:எ. இஉ.
9 உ கொரி. கூ. உ: மஇ அ.
10 உ கொரி. மக. உக. கலா. உ, மஉ.
11 அப். கூ. மச. உரோ. ம. மக.
12 அப். உ. கூஅ. எபி.ம.உஉ.
13 அப். உ. உக. உ கொரி. மஉ. உ.
14 மச. வச.
15 மத். ம. மச.
16 மத். ம. மஎ.
17 அப். எ. இஅ.
18 லூக். மக.சஅ. அப். அ. உ. உரோ. உ. கஉ.
19 ச. வச. அப். அ. உ.
20 அப். கூ. மஇ: மக.உ,சக,சஎ: மஅ. உ: உக. மஎ. உரோ. உ. இ:மக.மக:மஇ. மக. கலா. உ. மஇ,மக:உ.எ, அ.எபே. உ,எ, அ.உதீமோ.உ. எ.உதீமோ.உ. மக.
21 அப். உச. உக.
22 அப். உஇ. உச.
23 அப். மக. உஎ.

விருப்பதால் [15]நீ தாமதப்படாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் போ என்றார்.

யக அப்பொழுது நான் சொன்னது: ஆண்டவரே, உம்மை விசுவாசித்தவர்களை [16]நான் காவலில் வைத்து, செப ஆலயங்களிலே அவர்களை அடிப்பித்திருந்ததையும்,

உய [17]உமக்குச் சாட்சியாகிய ஸ்தேவானுடைய இரத்தம் சிந்தப்பட்டபொழுது, நானும் அருகே நின்று [18]அவனைக் கொலைசெய்வதற்குச் சம்மதித்து, அவனைக் கொலைசெய்தவர்களின் வஸ்திரங்களைக் காத்துக்கொண்டதையும், இவர்கள் [19]அறிந்திருக்கிறார்களே என்றேன்.

உக அவர் சொன்னது: [20]நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதியாரிடத்திற்கு அனுப்புவேன், ஆதலால் நீ போ என்று சொன்னார் என்றான்.

உஉ ¶ இந்த வார்த்தைவரைக்கும் அவர்கள் அவனுக்குச் செவிகொடுத்து, [21]இப்படிப்பட்டவனைப் பூமியிலிருந்து அகற்றவேண்டும்; [22]இவன் உயிரோடிருக்கிறது நியாயமல்ல என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்கள்.

உங இப்படி அவர்கள் கூக்குரலிட்டுத் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றிப்போட்டு, ஆகாசத்திலே புழுதி தூற்றிக்கொண்டு வருகையில்,

உச சேனாதிபதி அவனைக் கோட்டைக்குள்ளே கொண்டுவரும்படி கட்டளையிட்டு, பின்பு அவர்கள் அவன்மேல் இப்படிக் கூக்குரலிட்டதற்கான காரணத்தை அறியும்படிக்கு, அவனைச் சவுக்காலே அடித்து விசாரிக்கச்சொன்னான்.

உடு அந்தப்படி அவர்கள் அவனை வார்களினால் அழுந்தக் கட்டுகையில் பவுல் சமீபமாய் நின்ற படைத்தலைவனை நோக்கி, [23]உரோமனுமாய் நியாயமாய் ஆக்கினைக்கு உட்படாதவனுமாய் இருக்கிற ம

Digitized by Google

னிதனை நீங்கள் அடிக்கிறது நியாயமா என்றான்.

உசு தலைவன் அதைக் கேட்டு, சேனாதிபதியினிடத்திற்குப்போய், அந்த மனிதன் உரோமன், ஆதலால் நீர் செய்வதைக்குறித்துச் சாவதானமாய் இருக்கவேண்டும் என்று அறிவித்தான்.

உஎ அப்பொழுது சேனாதிபதி பவுலினிடத்தில் வந்து, நீ உரோமனோ, எனக்குச் சொல் என்றான்; அதற்கு அவன் அப்படித்தான் என்றான்.

உஅ சேனாதிபதி சொன்னது: நான் மிகுந்த திரவியத்தினாலே இந்த மேன்மையைச் சம்பாதித்தேன் என்றான்; அதற்குப் பவுல் சொன்னது: நான் அப்படிப்பட்டவனாகப் பிறந்தேன் என்றான்.

உக ஆதலால் அவனை அடித்து விசாரிக்கும்படி* எத்தனமாயிருந்தவர்கள் உடனே அவனை விட்டார்கள்; மேலும். சேனாதிபதி அவன் உரோமனென்று அறிந்து, தான் அவனைக் கட்டினதினாலே பயந்தான்.

உகூ ¶ மறுநாளிலே பவுல் யூதரால் ஏற்படுத்தப்பட்ட குற்றம் இன்னதென்று அவன் நிச்சயத்தை அறிய மனதாய் அவனுடைய கட்டவிழ்க்கும்படி செய்து, பிரதான ஆசாரியனையும் அவர்களுடைய பெரிய சங்கத்தார் எல்லாரையும் கூடிவரும்படி கட்டளையிட்டுப் பின்பு பவுலைத் தாழக்கொண்டுபோய், அவர்களுக்கு முன் நிறுத்தினான்.

உஙூ. அதிகாரம்.

அ. பவுல் ஆலோசனைச் சங்கத்துக்குமுன் தன்னை எடுத்துப் பேசும்பொழுது, உ. அனனியா அவனை அடிக்கும்படி உத்தரவுகொடுத்தது. எ. அவன்மேல் குற்றம்சாற்றினவர்களுக்குள்ளே பிரிவினை உண்டானது. ஈ பரமபரன் அவனைத் திடப்படுத்தினது. ச. யூதர்கள் அவனுக்கு மோசஞ்செய்ய நினைத்தது. உஅ. பிரதான சேவகக்காரனுக்கு அறிவிக்கப்பட்டது. உஎ. அவன் பவுலைப் பேலிக்ஸ் தலைவனிடத்திற்கு அனுப்பினது.

அப்பொழுது பவுல் பெரிய சங்கத்தாரை நோக்கிச் சொன்னதாவது: சகோதரர்களே, [1]இந்நாள்வரைக்கும் என் மனது எனக்கு எவ்விதத்தாலும் நற்சாட்சிகொடுக்கத்தக்கதாக, பராபரனுக்குமுன்பாக நடந்துவந்தேன் என்று சொன்னபொழுது,

உ பிரதான ஆசாரியனாகிய அனனீயா அவனுக்குச் சமீபமாய் நின்றவர்களை நோக்கி, [2]இவன் வாயிலே அடியுங்கள் என்று கட்டளையிட்டான்.

ஊ அப்பொழுது பவுல் அவனுடனே சொன்னது: சாந்துபூசப்பட்ட சுவரே, பராபரன் உம்மை அடிப்பார்; நியாயப்பிரமாணத்தின்படி எனக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி உளுக்காந்திருக்கிற நீர், [3]நியாயப்பிரமாணத்திற்குத் தப்பிதமாய் என்னை அடிக்கச் சொல்லலாமா என்றான்.

ச சமீபத்தில் நின்றவர்கள் சொன்னது: பராபரனுடைய பிரதான ஆசாரியனையா வைகிறாய் என்றார்கள்.

ஙு அதற்குப் பவுல் சொன்னது: சகோதரரே, [4]இவர் பிரதான ஆசாரியனென்று நான் நினைக்கவில்லை; [5]உன் சனத்தின் தலைவனைக்குறித்துத் தீதுசொல்லாதிருப்பாயாக என்று எழுதியிருக்கின்றதே என்றான்.

ஈ ¶ பின்பு அவர்களில் ஒரு பங்கு சதுசேயரென்றும் ஒருபங்கு பரிசேயரென்றும் பவுல் அறிந்து, மிகுந்த சத்தத்தோடே சங்கத்தாருக்குள்ளே கூப்பிட்டுச் சொன்னதாவது: சகோதரர்களே, [6]நான் பரிசேயனுமாய் ஒரு பரிசேயனுடைய மகனுமாய் இருக்கிறேன்; [7]நித்திய சீவனுக்கு ஏற்ற நம்பிக்கையைக்குறித்தும், மரித்தோர் உயிரோடெழுந்திருக்குதலைக்குறித்தும், நான் நியாயத்தீர்ப்பு அடையும்படி இருக்கிறேன் என்று சொன்னபொழுது,

எ [8]சதுசேயர் உயிரோடெழுந்தி

கி. பி. சுமை.

* அல்லது வருத்தும்படி.

1 அப். உச. ஙூ. க கொரி. ச. ச. உகொரி.க.ஙஉ: ச.உ.உ தீமோ. க. க. எபி. ஙக. ஙஅ.

2 க இரா. உஉ. உச. எரே. உஙு. உ.பேரா.ஙஅ. உஉ.

3 க மோ. ஙக. கஇ. இ மோ. உஇ.க,உ. பேரா. ஙு. ஙச.

4 அப். உச. ஙஙு.

5 உ மோ. உஉ. உஅ. பிர.ஙு.உஙு. உ பே. உ. ஙு. யூதா. அ.

6 அப். உக. இ. பிலி. க. இ.

7 அப். உச.ஙஇ, உக: உக. க: உஅ. உஙு.

8 மத். உஉ. உக. மாற். ஙஉ. ஙஅ. லூக். உஙு. உஎ.

இ. பி. சுவ.

ருக்குதலும் இல்லை, அரூபியும் ஆவியும் இல்லை என்று சொல்லுகிறபடியினாலும் பரிசேயர் அவ்விரண்டும் உண்டென்று அறிக்கைபண்ணுகிறபடியினாலும்,

அ பரிசேயருக்கும் சதுசேயருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்று; கூட்டமும் பிரிவினை அடைந்தது.

கூ மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று; அப்பொழுது பரிசேயனைச் சேர்ந்த வேதபாரகர் எழுந்து மிகவும் விரோதமாய்ப் பேசி, [1]இந்த மனிதனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம், [2]ஒரு ஆவி அல்லது ஒரு தூதன் இவனுடனே பேசினதுண்டானால் [3](அதினால் என்ன) என்றார்கள்.

ய பின்பு மிகுந்த கலகம் உண்டானபொழுது, பவுல் அவர்களால் பீறுண்டுபோவான் என்று பெரிய சேனைத்தலைவன் பயந்து, அவனை அவர்களிலிருந்து பறித்து, கோட்டைக்குக் கொண்டு போகும்படி போர்ச்சேவகருக்குக் கட்டளையிட்டான்.

யக [4]அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று, பவுலே, திடன்கொள்; நீ என்னைக்குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல, உரோமை நகரியிலேயும் சாட்சிகொடுப்பாய் என்றார்.

யஉ ¶ விடியற்காலமானபொழுது [5]யூதரில் சிலர் இரகசியமாய்க் கூடி, அந்தப் பவுலை நாம் கொலைசெய்யும் அளவும் புசியாமலும் குடியாமலும் இருப்போமாக என்று சபதம்பண்ணிக்கொண்டு,* தங்களுக்குள்ளே கட்டுப்பாடு செய்தார்கள்.

யங இப்படிச் சபதத்தினாலே கட்டுப்பாடுசெய்தவர்கள் நாற்பதுபேருக்கு அதிகமாயிருந்தார்கள்.

'யச அவர்கள் பிரதான ஆசாரியரிடத்திலும் மூப்பரிடத்திலும் போய்ச் சொன்னதாவது: நாங்

1 அப். உஇ. உஇ: உக. கக.

2 அப். உஉ. எ, ஐஎ, ஐஅ.

3 அப். இ. கக.

4 அப். ஐஅ. க: உஎ. உக, உச.

5 உக, கஇ. வச. அப். உஇ. க.

* அல்லது சபமிட்டுக்கொண்டு.

ச ஐஉ. வச.

கள் பவுலைக் கொலைசெய்யும் அளவும் ஒன்றையும் ருசிபார்க்கக்கூடாதென்று கொடிய சபதம்பண்ணிக்கொண்டோம்.

யசு ஆனபடியினாலே நீங்கள் பெரியசங்கத்தாருடனேயுங்கூட அவனுடைய காரியத்தை அதிக கெட்டியாய் விசாரிக்கமனதுள்ளவர்கள்போலச் சேனாதிபதிக்குக் காண்பித்து, அவர் நாளைக்கு அவனை உங்களிடத்தில் கொண்டுவரும்படி கேட்பீர்களாக; அப்பொழுது அவன் உங்களுக்குச் சமீபமாய் வரும்முன்னே நாங்கள் அவனைக் கொலைசெய்ய எத்தனமாயிருக்கிறோம் என்றார்கள்.

யசு ¶ அந்தச் சர்ப்பனையைப் பவுலினுடைய சகோதரியின் குமாரன் கேள்விப்பட்டு, உடனே கோட்டைக்குப் போய், பவுலுக்கு அறிவித்தான்.

யஎ அப்பொழுது பவுல் படைத்தலைவரில் ஒருவனை அழைத்து, இந்த வாலிபன் சேனாதிபதிக்கு ஒரு காரியத்தை அறிவிப்பான்; ஆகையால் இவனை அவரிடத்திற்குக் கொண்டுபோகவேண்டும் என்றான்.

யஅ அந்தப்படி அவன் அவனைச் சேர்த்து, சேனாதிபதியிடத்திற்குக் கொண்டுபோய், காவலில் வைக்கப்பட்டிருக்கிற பவுல் என்னை அழைத்து, உமக்கு ஒரு காரியத்தைச் சொல்லவேண்டுமென்று இருக்கிற இந்த வாலிபனை உம்மிடத்திற்குக் கொண்டுபோகும்படி என்னை வேண்டிக்கொண்டான் என்றான்.

யக அப்பொழுது சேனாதிபதி அவனுடைய கையைப் பிடித்துத் தனிமையான இடத்தில்கொண்டு போய், நீ எனக்கு என்ன அறிவிக்க விரும்புகிறாய் என்று கேட்டான்.

உய அவன் சொன்னதாவது: [6]யூதர்கள் பவுலின் காரியத்தை அதிக கெட்டியாய் விசாரிக்க மனதுள்

Digitized by Google

னவர்கள்போல வந்து, நீர் நாகூக்கு அவனைப் பெரிய சங்கத்தாரிடத்திற்குக் கொண்டுவரும்படிக்கு, உம்மை வேண்டிக்கொள்ளத் தீர்மானம்பண்ணினார்கள்; அவர்களுக்குச் சம்மதியாதிருப்பீராக.

உக என்னத்தினாலெனில், அவர்களில் நாற்பதுபேருக்கு அதிகமானபேர்கள் அவனைக் கொலைசெய்யுமளவும், புசிக்கவும் குடிக்கவும் மாட்டோம் என்று சபதம்பண்ணிக்கொண்டு, அவனுக்காக ஒளித்திருந்து, இப்பொழுது உம்முடைய உத்தரவுவரக் காத்துக்கொண்டு, எத்தனமாய் இருக்கிறார்கள் என்றான்.

உஉ அப்பொழுது சேனாதிபதி சொன்னது: நீ இவைகளை எனக்கு அறிவித்ததை ஒருவருக்கும் சொல்லாதிரு என்று வாலிபனுக்குக் கட்டளையிட்டு அவனை அனுப்பி,

உஎ ¶ பின்பு படைத்தலைவர் இருவனை அழைத்து, சேசாரியாபட்டணத்திற்குப் போகும்படிக்கு, இருநூறு போர்ச்சேவகனையும், குதிரைப் போர்ச்சேவகர் எழுபதுபேரையும், இருநூறு விற்காரனையும் இராத்திரியின் மூன்றாம் மணி நேரத்திற்கு எத்தனம்பண்ணுங்கள்.

உசு அல்லாமலும் பவுலை ஏற்றித்தனையாகிய பேலிக்குசினிடத்திற்குப் பத்திரமாய்க் கொண்டுபோகும்படிக்கு, வாகனங்களில் இருக்கும்படி செய்யுங்கள் என்று சொல்லி,

உஏ பின்பு எழுதின நிருபத்தின் விவரமாவது:

உசு கனம்பொருந்திய தனையாகிய பேலிக்குசுக்குக் கிலவுதியு லீசியா சவுக்கியம் உண்டாக வாழ்த்துகிறேன்.

உஎ [1]இந்த மனிதன் யூதர்களால் பிடிக்கப்பட்டு அவர்களால் கொலைசெய்யப்படுவதற்கு ஏதுவாயிருந்தபொழுது, நான் போர்ச்சேவகருடனேகூடப் போய் இவனை இழுத்துக்கொண்டுவந்தபொழுது இவன் உரோமனென்று அறிந்தேன்.

உஅ [2]அவர்கள் இவன்மேல் சாற்றின குற்றத்தை நான் அறிய மனதாய் இவனை அவர்களுடைய பெரிய சங்கத்திற்குக் கொண்டுபோனேன்.

உக [3]அங்கே அவன் மரணத்திற்கு அல்லது சங்கிலிகளுக்கு ஏற்ற குற்றம் இல்லாமல் அவர்களுடைய [4]வேதத்திற்குரியதருக்கங்களைக் குறித்துக் குற்றம் சாற்றப்பட்டவன் என்று எனக்குத் தெரியவந்தது.

ஈய பின்பு [5]யூதர்கள் இந்த மனிதனுக்கு விரோதமாய் இரகசியமானயோசனைபண்ணிக்கொள்ளுகிறார்கள் என்று எனக்குத் தெரிந்தபொழுது நான் உடனே இவனை உம்மிடத்திற்கு அனுப்பி, [6]குற்றம்சாற்றுகிறவர்களும் தாங்கள் இவனுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற காரியங்களை உமக்குமுன்பாகப் போய்ச் சொல்லும்படி கட்டளையிட்டேன்; சுகமாயிருப்பீராக என்று எழுதி அனுப்பினான்.

ஈக ¶ போர்ச்சேவகர் தங்களுக்குக் கட்டளையிடப்பட்டபடியே பவுலைச் சேர்த்துக்கொண்டு, இராத்திரியிலே அந்திப்பத்திரி ஊருக்குக் கொண்டுபோய்,

ஈஉ மறுநாளிலே குதிரைப் போர்ச்சேவகனை அவனுடனேகூடப் போக அனுப்பி, தாங்களோ கோட்டைக்குத் திரும்பினார்கள்.

ஈஊ அவர்கள் சேசாரியா பட்டணத்தில் சேர்ந்து, நிருபத்தைத் தனாக்குக் கொடுத்து, பவுலையும் அவன்முன்பாக நிறுத்தினார்கள்.

ஈசு தனா அதை வாசித்து, நீ எந்தத் தேசத்தான் என்று கேட்டு, [7]கிலீக்கிய தேசத்தான் என்று அறிந்து,

கி. பி. சுஅ.

1 அப். உக. ஊ: உச. எ.

2 அப். உஉ. ஊ.

3 அப். உசு. ஊ.

4 அப். உஅ. ஐ: உஇ. ஐக.

5 உஅ. வச.

6 அப். உச. அ: உஇ. க.

7 அப். உக. ஈக.

Digitized by Google

சுஞ பின்பு [1]உன்மேல் குற்றம் சாற்றுகிறவர்களும் வந்திருக்கும் பொழுது, உன்னிடத்தில் விசாரிப்பேன் என்று சொல்லி, [2]ஏரோதேயின் அரமனையிலே அவனைக் காவலில் வைக்கும்படி கட்டளையிட்டான்.

உச. அதிகாரம்.

க. பவுல் தெர்த்துல்லு என்ற வாய்ச்சாலகனால் குற்றம்சாற்றப்பட்டபோது, ம. அவன் தன் நடக்கையையும் உபதேசத்தையும்குறித்து உத்தாவுசொன்னது. உச. தனைக்கும் அவன் பெண்சாதிக்கும் விரோதமாய்ப் பிரசங்கித்தது. உசு. தனை லஞ்சத்தை விரும்பியும் அடையாமற்போனது. உஎ. அந்தத் தனையின் உத்தியோகம் மாறிப்போனதும் பவுலைக் காவலில் வைத்துப்போனதும்.

[3]ஐந்துநாளைக்குப் பின்பு, [4]பிரதான ஆசாரியனாகிய அனனீயாமூப்பரோடும், பேச்சில் கெட்டிக்காரனாகிய தெர்த்துல்லுவோடும் கூடப்போய், பவுலுக்கு விரோதமாய்த் தனையினுடைய சன்னிதானத்தில் பிரவேசித்தார்கள்.

உ அவன் அழைக்கப்பட்டு வந்தபொழுது, தெர்த்துல்லு குற்றம் சுமத்தினதாவது:

ஊ மிகுந்த கனம்பொருந்திய பேலீக்குசே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அனுபவிக்கிறதையும் உம்முடைய விசாரிப்பினாலே இந்தத் தேசத்தாருக்காக மிகுந்த மகிமையுள்ள கிரியைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் பெரிய உபகாரமென்று எண்ணி, அறிக்கையிடுகிறோம்.

சு நான் அதிக வார்த்தைகளாலே உமக்கு வருத்தத்தை உண்டுபண்ணுதபடிக்கு, நாங்கள் சுருக்கமாய்ச் சொல்வதை நீர் உம்முடைய பொறுமையோடே கேட்க வேண்டிக்கொள்ளுகிறேன்.

ரு என்னவென்றால், [5]இந்த மனிதன் பெருவாரிக்காய்ச்சலைப்போல, பூச்சக்கரத்திலுள்ள சகல யூதர்களுக்குள்ளும் கலகம் எழுப்பியிருக்கிறதையும், நாசரேத்தாரென்

இ. பி. சுஎ.

1 அப். உச. சஅ: உஇ. ம.
2 மத். உச. உச.
3 அப். உக. உச.
4 அப். உக. உ, கூ, கஇ: உஇ. உ.
5 லூக். உக. உ. அப். சு. ம: மசு. உஅ: மச. சு: உக. உஅ. க பே. உ. மஉ, மஇ.
6 அப். உக. உஅ.
7 யோவா. மஅ. கக.
8 அப். உக. கக.
9 அப். உக. கம.

10 மச. வச. அப். உக. உக.

11 அப். உஇ. அ: உஅ. மச.

12 ஆமோ. அ சு. அப். சு. உ.

ணும் கெட்ட பிரிவுக்கு முதலாளியாய் இருக்கிறதையும்,

சு எங்கள் [6]தேவாலயத்தை அசுசிப்படுத்தத் தேடினதையும், நாங்கள் கண்டறிந்து இவனைப் பிடித்து, [7]எங்கள் வேதநூலின்படியே இவனுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்க மனதாயிருந்தோம்.

எ அப்பொழுது சேனாபதியாகிய [8]லீசியா என்பவர் வந்து, மிகுந்த பலவந்தமாய் இவனை எங்கள் கைகளிலிருந்து பறித்துக்கொண்டுபோய்,

அ இவன்மேல் [9]குற்றம்சாற்றுகிறவர்கள் உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டார்; நீர் இவனிடத்தில் கெட்டியாய் விசாரித்தால், நாங்கள் இவன்மேல் குற்றம் சாற்றுகிற காரியங்கள் யாவையும் அறிந்துகொள்வீர் என்றான்.

கூ மற்ற யூதர்களும் அதற்கு இசைந்து, இப்படியே இருக்கிறதென்று சொன்னார்கள்.

ஏ ¶ அப்பொழுது பவுல் பேசுகிறதற்குத் தனையினாலே சமிக்கை பெற்றபின்பு அவன் சொன்ன மாறுத்தரமாவது: அநேக வருஷம் நீர் இந்தத் தேசத்தாருக்கு நியாயாதிபதியாயிருக்கிறதை நான் அறிந்து, அதிக சந்தோஷத்தோடே எனக்காக உத்தரவு சொல்லுகிறேன்.

ஐ நீர் அறியும்படி [10]நான் பராபரனைத்தொழுதுகொள்ளும்படிக்கு, எருசலேமுக்குப் போனதுமுதல் இதுவரைக்கும் பன்னிரண்டு நாள்மாத்திரம் ஆயிற்று.

ஐஉ [11]தேவாலயத்திலே நான் ஒருவரோடும் தருக்கம்பண்ணவும், செபஆலயங்களிலாகிலும் கரத்திலாகிலும் சனங்களுக்குள்ளே கலகம் எழுப்பவும், இவர்கள் காணவுமில்லை.

ஐசு இப்பொழுது, என்மேல் சாற்றுகிற குற்றங்களுக்குச் சாட்சிகளைக் காண்பிக்கவும்மாட்டார்கள்.

ஐச நான் உமக்கு அறிக்கையிடுகிறது என்னவென்றால், [12]இவர்

Digitized by Google

கள் கெட்டபிரிவுஎன்றுசொல்லு
கிற மார்க்கத்தின்படியே[1] நான் பி
யாபப்பிரமாணத்திலேயும் தீர்க்க
தரிசனப்புத்தகங்களிலேயும் எழு
தியிருக்கிற யாவையும் விசுவாசித்
துக்கொண்டு, [2]எங்கள் முன்னோர்
களுடைய தேவனுக்கு ஊராதனை
செய்து,

ஙஎ [3]மரித்தோராகிய நீதிமான்க
ளும் அநீதிமான்களும் மறுபடியும்
உயிரோடெழுந்திருப்பார்கள்என்
று [4]இவர்களும் அடைந்திருக்கிற
நம்பிக்கையைப் பராபரன்மேல்
வைத்திருக்கிறேன்.

ஙஅ அதினாலே [5]நான் பராபர
னுக்கும் மனிதருக்கும் முன்பாக
எப்பொழுதும் நற்சாட்சி கொடுக்
கிற மனதுள்ளவனாயிருக்கும்படி
முயற்சிப்படுகிறேன்.

ஙஆ அநேக வருஷங்களுக்குப்
பின்பு [6]நான் என்தேசத்தாருக்குத்
தருமங்களை ஒப்புக்கொடுக்கவும்,
காணிக்கைகளைச் செலுத்தவும் வ
ந்தேன்.

ஙஇ கூட்டமில்லாமலும் அமளி
இல்லாமலும் நான் தேவாலயத்
தில் அப்படிச் செய்து சுத்தம்பண்
ணிக்கொண்டிருக்கையில், [7]ஆசி
யாதேசத்தாரான சிலயூதர்கள் என்
னைக் கண்டார்கள்.

ஙஈ [8]அவர்களிடத்தில் எனக்கு
விரோதமான காரியம் உண்டா
னால், அவர்களே உமக்குமுன்
பாக இங்கே வந்து, குற்றம்சாற்ற
வேண்டும்.

ஙஉ அல்லது நான் பெரிய சங்
கத்தாருக்குமுன்பாக நின்றபொ
ழுது, என்ன குற்றத்தை என்னி
டத்தில்கண்டார்கள்; அதை இவர்
களும் சொல்லலாமே.

ஙஊ நான் அவர்களுக்குள்ளே
நின்றபொழுது, [9]மரித்தோர் உயி
ரோடு எழுந்திருப்பார்கள் என்கி
றதைக்குறித்து நான் இன்றைக்கு
உங்களால் நியாயத்தீர்ப்பு அடை
யும்படி இருக்கிறேன் என்று நான்
கூப்பிட்டேன்; இந்த ஒரே சொல்

ஐ. பி. சுஐ.

1 அப். உக.ஙஉ: உஅ உக.
2 உதிமோ. க.க.
3 தானி. ஙஉ. உ. போ ஏ. ஐ. உஅ, உக.
4 அப். உக. க: உக.க,ஈ:உஅ. உஐ.
5 அப். உக. க.
6 அப். ஙக.உக, கஅ: உஐ. ஙக. உரோ.ஙஐ.உஇ. உ கொ.அ. ச. கலா. உ. ஐ.
7 அப். உக.உக, உஎ: உக. உக.
8 அப். உக. கஅ: உஇ. ஙக.
9 அப். உக. க: உஅ. உஐ.
10 எ. வச.
11 அப். உஎ. க: உஅ. ஙக.

லின்நிமித்தமே அன்றி வேறொரு
றின்நிமித்தமும் குற்றம்காணவில்
லையே என்றான்.

ஙஙஎ ¶ பேலிக்குசென்பவன் அ
தைக்கேட்டு இந்த மார்க்கத்தைக்
குறித்து அதிக விவரமாய் அறிந்த
பின்பு, சேனாதிபதியாகிய [10]லீசி
யா வரும்பொழுது, நான் உங்கள்
காரியத்தைக் கெட்டியாய் விசாரி
த்துக்கொள்வேன் என்றுசொல்லி
அவர்களை அனுப்பி,

ஙஙஅ பின்பு பவுலைக் காத்துக்
கொள்ளும்படிக்கும், அவனுக்குக்
கண்டிப்புச் செய்யாதபடிக்கும்
[11]அவனுடைய மனிதர்களில் ஒரு
வனுகிலும் அவனிடத்தில் போய்,
அவனுக்கு ஊழியம் செய்வதற்கு
த் தடைபண்ணுதபடிக்கும் தலைவ
னுக்குக் கட்டளையிட்டான்.

ஙஙஆ ¶ சிலநாளுக்குப் பின்பு
பேலிக்குசு யூதஸ்திரியாகிய தன்
மனைவி துருசில்லாளுடனேகூட
வந்து பவுலை அழைப்பித்து, கிறிஸ்
துவைப்பற்றும் விசுவாசத்தைக்
குறித்து அவன் சொல்லக்கேட்
டான்.

ஙஙஇ அந்தப்படி அவன் நீதியை
யும் இச்சை அடக்கத்தையும் பின்
வரும் நியாயத்தீர்ப்பையுங்குறித்
துப் பேசிக்கொள்ளுகையில், பே
லிக்குசு பயமடைந்து இப்பொழு
து நீ போகலாம், இனிமேல் எனக்
குச் சாவகாசம் இருக்கும்பொழு
து உன்னை மறுபடியும் அழைப்
பிப்பேன் என்றான்.

ஙஙஈ மேலும் [12]அவன் பவுலைவிடு
தலைபண்ணும்படியாய்த் தனக்கு
அவன் பணம்கொடுப்பான் என்று
நம்பிக்கையாயிருந்தான்; அதின்
நிமித்தமே அவன் அநேகந்தரம்
அவனை அழைப்பித்து அவனுட
னே பேசிக்கொண்டான்.

ஙஙஉ இரண்டுவருஷமானபொழு
து பேலிக்குசுக்குப் பதிலாகப்
பொர்க்கியுபெஸ்து என்னும் து
ணை வந்தான்; [13]அப்பொழுது பே
லிக்குசு யூதர்களுக்குச் சந்தோ

12 உ மோ. உக. அ.
13 உ மோ. உக. உ. அப் ஙஉ.க: உஇ. க, ஙச.

Digitized by Google

ஷஞ்செய்ய மனதாய், பவுலைக் காவலில் வைத்துவிட்டுப்போனான்.

உடு. அதிகாரம்.

க. யூதர்கள் பெஸ்துவுக்குமுன்பாகப் பவுல்மேல் குற்றம்சாற்றினது. அ. அதற்கு அவன் உத்தரவு சொல்லி, உக. இராயனுக்கு அபயமிட்டது. உச. பெஸ்து இக்காரியத்தை அகிரிப்பா இராசாவுக்கு அறிவித்து, உக. பவுல் விசாரிக்கப்பட்டு, உஇ. மரணத்துக்குப் பாத்திரவானல்லவென்று பெஸ்துவினாலே தீர்ப்படைத்தது.

பெஸ்து என்பவன் துணைத்தனத்திற்கு வந்து மூன்று நாளுக்குப் பின்பு, சேசாரியா பட்டணத்திலிருந்து எருசலேமுக்குப்போனான்.

உ [1]அப்பொழுது பிரதான ஆசாரியனும் யூதருடைய பெரியோர்களும் அவனிடத்தில் சேர்ந்து, பவுலுக்கு விரோதமாய்ப் பிராது பண்ணி,

ஊ [2]அவனை வழியிலே கொலை செய்ய இரகசியமான யோசனையுள்ளவர்களாய், நீர் கிருபைசெய்து, அவனை எருசலேமுக்கு வர அழைப்பிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

ச அதற்குப் பெஸ்து சொன்னது: பவுல் சேசாரியாவிலே காக்கப்பட்டிருக்கிறானே.

ஞ நானும் சீக்கிரமாக அங்கே போவேன்; ஆதலால் உங்களில் திறமுள்ளவர்கள் கூடவந்து [3]அந்த மனிதனிடத்தில் குற்றம் உண்டானால் அதை அவன்மேல் சாற்றுவார்களாக என்றான்.

ட ¶ பின்பு அவன் ஓர் எட்டுபத்து நாள்* அவர்களிடத்தில் சஞ்சரித்தபின்பு, சேசாரியா பட்டணத்திற்குப் போய், மறுநாளிலே நியாயாசனத்தில் உளுக்காந்து, பவுலைக் கொண்டுவரச்சொன்னான்.

ண அவன் வந்தபொழுது எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் சுற்றி நின்று, [4]அநேகமான குற்றங்களைப் பவுலின்மேல் சாற்றினார்கள்; அவைகளை அவர்கள் மெய்ப்படுத்தத் திராணி இருக்கவில்லை.

அ பின்பு பவுல் சொன்னது: [5]கான் யூதருடைய வேதத்துக்காகிலும், தேவாலயத்திற்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாய் ஒரு குற்றமும் செய்யவில்லை என்றான்.

க அப்பொழுது பெஸ்து [6]யூதர்களுக்குத் தயவுசெய்ய மனதாய்ப் பவுலுடனே சொன்னது: [7]நீ எருசலேமுக்குப் போய், அங்கே என்னாலே இந்தக் காரியங்களைக்குறித்து நியாயத்தீர்ப்பு அடைய மனதிருக்கிறதா என்றான்.

உ அதற்குப் பவுல் சொன்னது: இராயனுடைய நியாயாசனத்திற்குமுன்பாக நிற்கிறேன்; அதற்குமுன்பாக நான் நியாயத்தீர்ப்பு அடையவேண்டும்; யூதருக்கு நான் ஒரு அநியாயமும் செய்யவில்லை; அதை நீரும் நன்றாய் அறிந்திருக்கிறீர்.

ங அநியாயமானதையாவது [8]மரணத்திற்குப் பாத்திரமானதையாவது நான் நடப்பித்தேனானால், நான் சாகிறதற்கு மறுக்கமாட்டேன்; இவர்கள் என்மேல் சாற்றுகிற குற்றங்கள் எல்லாம் வீணாயிருக்கிறபடியால், ஒருவரும் என்னை அவர்களுக்குச் சந்தோஷமாகஒப்புக்கொடுக்கக்கூடாது; [9]இராயருக்கே அபயமிடுகிறேன் என்றான்.

ச அப்பொழுது பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே பேசிக்கொண்டு, நீ இராயருக்கு அபயமிட்டாய்; இராயரிடத்திற்கே போவாய் என்று உத்தரவுசொன்னான்.

ஞ ¶ சிலநாள் சென்றபின்பு, இராயனுடைய அகிரிப்பாவும், பேர்னீக்கேயாளும் பெஸ்துவை வாழ்த்தும்படிக்கு, சேசாரியா பட்டணத்திற்குப் போனார்கள்.

ட அங்கே அவர்கள் அநேகநாள் சஞ்சரித்திருக்கையில் பெஸ்து பவுலின் சங்கதியை இராயனுக்கு விவரித்துச் சொன்னதாவது: [10]பேலிக்குசென்பவராலே காவலில் வைத்துவிடப்பட்ட ஒரு மனிதன் இருக்கிறான்.

கி. பி. கூஉ.

1 அப். உச. க. ஐஇ. டச.
2 அப். உக. ஐஉ, ஐஇ.
3 அப். ஐஅ. உச. ஐஅ. டச.
* அல்லது சில பிரதிகளில் பத்தாநாளுக்கு அநியமம்.
4 மாற். ஐஇ. க. லூக். உக. உஅ. அப். உச. இ,ஐக.
5 அப். க. ஐக: உச. ஐஉ: உஅ. ஐஎ.
6 அப். உச. உஎ.
7 உஏ. டச.
8 உஇ. டச. அப். ஐஅ. ஐச: உக. உக: உக. கக.
9 அப். உக. கஉ: உஅ. ஐக.
10 அப். உச. உஎ.

Digitized by Google

எஇ நான் எருசலேமிலே இருந்த பொழுது [1]பிரதான ஆசாரியரும் யூதருடைய மூப்பரும் அவனுக்கு விரோதமாய்ப் பிராதுபண்ணி, அவன்மேல் ஆக்கினைத்தீர்ப்பைக் கேட்டுக்கொண்டார்கள்.

எஉ [2]அவர்களுக்கு நான் உத்தரவு சொன்னது: குற்றம்சாற்றப்பட்டவன் தன்மேல் குற்றம்சாற்றினவர்களுக்குமுன்பாக நின்று, அவர்கள் சாற்றின குற்றத்தைக்குறித்துத்தனக்காக எதிர்உத்தரம்சொல்லும்படிக்கு அவன் இடம் அடைகிறதற்குமுன்னே, அப்படிப்பட்டவனை அவர்களுக்குத் தயவாய் அழிவுக்கு ஒப்புக்கொடுக்கிறது உரோமருக்குள்ளே வழக்கமல்ல என்றேன்.

எஎ அந்தப்படி அவர்கள் இங்கே கூடிவந்தபொழுது, [3]நான் தாமதம் எவ்வளவும் பண்ணமல் மறுநாளிலே நியாயாசனத்தில் உளுக்காந்து, அந்த மனிதனைக் கொண்டுவரச்சொன்னேன்.

எஅ அப்பொழுது குற்றம்சாற்றினவர்கள் வந்து நின்று, நான் நினைத்திருந்த குற்றங்களில் ஒன்றையும் அவன்மேல் ஏற்படுத்தாமல்,

எக [4]தங்கள் மார்க்கத்திற்கும், மரணமடைந்த இயேசு என்னும் ஒருவன் உயிரோடிருக்கிறான் என்று பவுல் சொன்னதற்கும் ஏற்ற சில தருக்கங்களை அவனுக்கு விரோதமாய்ச் சொன்னார்கள்.

உல நான் இப்படிப்பட்ட தருக்கங்களைக்குறித்துச் *சந்தேகப்பட்டபடியினாலே நீ எருசலேமுக்குப் போய், அங்கே இவைகளைக்குறித்து நியாயம் விசாரிக்கப்படமனதிருக்கிறதா என்றேன்.

உக அதற்குப் பவுல்தான் இராயருக்குமுன்பாக விசாரிக்கப்படுமளவும்†வைக்கப்படவேண்டும்என்று அபயமிட்டபொழுது, நான் அவனை இராயனிடத்திற்கு அனுப்பும்வரைக்கும் காத்துவைக்கும்படி கட்டளையிட்டேன் என்றான்.

கி. பி. சுஉ.

1 உ, உ. அ.
2 ச, இ. அ.
3 உ. அ.
4 அப். உஅ. எஇ: உக. உஉ.
* அல்லது எப்படி விசாரிக்கலாமென்று.
† அல்லது சீஸர் தீர்க்கப் படுமளவும்.
5 அப். உ. உஉ.
6 உ, உ, எ. அ.
7 அப்.உஉ.உஉ.
8 அப். உக. உ, உசு: உக. உஉ.
9 உஉ, உஎ. அ.

உஉ [5]அப்பொழுது அகிரிப்பா பெஸ்துவுடனே சொன்னது: நானும் அந்த மனிதனுடைய வசனங்களைக் கேட்க விரும்புகிறேன் என்றான்; அதற்கு அவன் நாளைக்கு நீர் அப்படிக் கேட்கலாம் என்றான்.

உசு ¶ அந்தப்படி மறுநாளிலே அகிரிப்பாவும்பேர்னீக்கேயாளும் மிகுந்த ஆடம்பரத்தோடே வந்து, சேனாதிபதியுடனேயும் பட்டணத்தில் பிரதான மனிதருடனேயுங்கூட நியாயஸ்தலத்திற்குப் போனார்கள்; உடனே பெஸ்துவினுடைய கட்டளையின்படி பவுல் கொண்டுவரப்பட்டான்.

உச அப்பொழுது பெஸ்து சொன்னதாவது: அகிரிப்பா இராசாவே, எங்களோடேகூட இவ்விடத்தில் இருக்கிற மனிதர்களே, நீங்கள் பார்க்கிற இந்த மனிதனைக்குறித்து [6]யூதருடைய சபையெல்லாம் எருசலேமிலேயும் இவ்விடத்திலேயும் என்னை வேண்டிக்கொண்டு, [7]இவன் இனி உயிரோடிருக்கத்தகாதென்று கூப்பிட்டார்கள்.

உடு நான் [8]இவன் மரணத்திற்குப் பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லை என்று அறிந்து, [9]இவன்தானே இராயனுக்கு அபயமிட்டபடியினாலே, இவனை அவரிடத்தில் அனுப்பும்படி தீர்மானம்பண்ணினேன்.

உசு இவனைக்குறித்து ஆண்டவனுக்கு எழுதுகிறதற்கு நிச்சயப்பட்ட காரியம் எனக்குத் தெரியாது; ஆதலால் காவலில் உட்பட்ட ஒருவனைக்குறித்துக் குற்றத்தை அறிவியாமல், அவனை அனுப்புகிறது எனக்குப் புத்தியீனமான காரியமாய்த்தோன்றினபடியினாலே,

உஎ இவனை விசாரித்துப்பார்த்தபின்பு எழுதத்தக்க விசேஷம் எனக்கு உண்டாகும்படிக்கு, இவனை உங்கள்முன்பாகவும், விசேஷமாய் அகிரிப்பா இராசாவே,

Digitized by Google

உமக்குமுன்பாகவும் கொண்டு வந்தேன் என்றான்.

உசு. அதிகாரம்.

உ. பவுல் அகிரிப்பாவுக்குமுன்பாகத் தன் நெலமை முதற்கொண்டு தான் கடந்த கடத்தைகளைக்குறித்தும், ஙஉ. தான் அற்புதமாய்க் குணப்பட்டு அப்போஸ்தலப் பட்டத்துக்கு அழைக்கப்பட்டதைக் குறித்தும் நிட்டமாய் அறிவித்தது. உச. பெஸ்து, நீ பயித்தியக்காரனென்ற சொன்னபோது, கியாபமான உத்தரவுசொன்னது. உஅ. அகிரிப்பா இ நின்றவனுக்கே சொற்சம்குறைபச் சம்மந்தித்தது. கக. கூட்டத்தாரெல்லாரும் பவுலைக் குற்றமற்றவ னென்ற நிச்சயித்தது.

பின்பு அகிரிப்பாவானவன் பவுலை நோக்கி, நீ உனக்காகப் பேசும்படிக்கு உத்தரவு கொடுத்தேன் என்றான்; அப்பொழுது பவுல் கையை நீட்டி, தனக்காகச் சொல்லிக்கொண்ட உத்தரமாவது:

உ அகிரிப்பா இராசாவே, யூதர்கள் என்மேல் சாற்றுகிற சகல குற்றங்களைக்குறித்தும், நான் இன்றைக்கு உமக்குமுன்பாக மாறுத்தரம் சொல்லவேண்டுவதினாலே, என்னைப் பாக்கியவான் என்று எண்ணுகிறேன்.

கூ விசேஷமாய் நீர் யூதருடைய சகல முறைமைகளையும் தருக்கங்களையும் அறிந்தவராயிருக்கிறீரே; ஆகையால் நீர் நீடிய பொறுமையுடனே எனக்குச் செவிகொடுக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

ச நான் என் வாலிபவயது முதற்கொண்டு எருசலேமிலே என் தேசத்தாருக்குள்ளே இருந்தபடியால், என் வாலிபமுதல் நான் நடந்த நடக்கையை யூதரெல்லாரும் அறிந்திருக்கிறார்கள்.

ஞ நம்முடைய மார்க்கத்திலே மிகவும் கெட்டியான [1]பரிசேயர் வகுப்பிலே நான் பரிசேயனாய்ச் சீவனம்பண்ணினதையும் ஆதிமுதல் அறிந்திருக்கிறார்கள்; அவர்களும் சாட்சிசொல்ல மனதாயிருந்தால், இப்படியே சொல்லுவார்கள்.

ட இப்பொழுது [2]நம்முடைய பிதாக்களுக்குப் பராபரன் அருளிச்செய்த வாக்குத்தத்தத்திற்கு ஏற்ற நம்பிக்கைக்காக [3]நான் நியாயத்தீர்ப்பு அடையும்படி நிற்கிறேன்.

ண [4]இரவும்பகலும்* இடைவிடாமல் பராபரனுக்கு ஆராதனைசெய்கிற [5]நம்முடைய பன்னிரண்டு கோத்திரத்தாரும் [6]அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் என்று நம்பியிருக்கிறார்கள்; அகிரிப்பா இராசாவே, அந்த நம்பிக்கையின்நிமித்தமே யூதர்கள் என்மேல் குற்றம் சாற்றுகிறார்கள்.

த பராபரன் மரித்தோரை எழுப்புகிறது நம்பப்படாதகாரியம் என்று நீங்கள் எண்ணுகிறது எப்படி?

க முன்னே [7]நானும் நாசரேத்தூராகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

ப [8]அப்படியே எருசலேமிலே செய்தேன்; [9]நான் பிரதான ஆசாரியராலே அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைக் காவல்வீடுகளில் அடைத்தேன்; அவர்களைக் கொல்லவும் சம்மதித்தேன்.

ய [10]அநேகந்தரம் நான் சகல செபஆலயங்களிலேயும் அவர்களைத் தண்டித்துத் தூஷணிக்கும்படிக்கு, அவர்களைப் பலவந்தம் செய்தேன்; நான் மிகவும் அவர்கள்மேலே மூர்க்கவெறியாயிருந்து, அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன்.

யஉ இப்படிச் செய்துவருகையில், நான் [11]பிரதான ஆசாரியரிடத்தில் பெற்ற அதிகாரத்தோடும் உத்தரவோடும் தமஸ்குவுக்குப் போனபொழுது,

யக இராசாவே, வழியிலே மத்தியானகாலத்தில் நான் சூரியனுடைய பிரகாசத்திற்கு அதிகமான ஒளி வானத்திலிருந்து என்னையும்

கி. பி. கூஉ.

1 அப். உஉ. க: உக. க: உச. மஇ,உஉ. பிலி. க. இ.

2 க கொ. க.மஇ: உஉ. மஅ:உக. ச: சக. ம. இ கொ. மஅ. மஇ. உ சமு. எ. மஉ. சங். ககஉ.மக. சொ. ச. உ: எ. மச: கூ. க: சஅ. ம. எசே. உக. இ: கக.டீச,மஇ,கே. எசே. கச. உக: கஎ.உச. தானி. க. உச. மீகா. எ. உம். அப்.மக. கஉ. உரோ. மஇ. அ. நீத.உ. மக.

3 அப். உக. க.

4 லூக். உ. கஎ. கநியே. இ.இ. க தெச. க. ம.

* அல்லது பகலும் இரவும்.

5 யாக். க. க.

6 பிலி. க. மக.

7 யோவா. மக. உ. கநியே.க. மக.

8 அப். அ. க. கலா. க. மக.

9 அப். கூ. ச, உக: உஉ. இ.

10 அப் உஉ.மக.

11 அப். கூ. க: உஉ. கூ.

Digitized by Google

என்னுடனேகூடப் பிரயாணப் பட்டவர்களையும் சுற்றிப் பிரகாசிக்கக்கண்டேன்.

ஙச உடனேகாங்கள் எல்லாரும் தரையிலே விழுந்தபொழுது, சவுலே, சவுலே, என்னத்திற்கு நீ என்னைத் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாமென்று எபிரேயு பாஷையிலே சொன்ன சத்தத்தைக் கேட்டேன்.

ஙஞ அதற்கு நான், ஆண்டவரே, நீர் யாரென்றேன்; அவர் சொன்னது: நான், நீ துன்பப்படுத்துகிற இயேசு.

ஙட இப்பொழுது நீ எழுந்து காலூன்றி நில்; நீ கண்டவைகளையும் நான் உனக்குக் காண்பிப்பவைகளையுங்குறித்து [1]நான் உன்னை ஊழியக்காரன் என்றும்சாட்சியென்றும் ஏற்படுத்தும்படிக்கு உனக்குத் தரிசனையானேன்.

ஙண ஆதலால் நான் உன் தேசத்தாரில் நின்றும் புறத்தேசத்தாரில் நின்றும் உன்னை விடுதலையாக்கி, ஙத [2]அவர்கள் என்னைப் பற்றிக் கொள்ளும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும், [3]பரிசுத்தவான்கள் இருக்கிற இடத்திலே [4]சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படிக்கு [5]அவர்களுடைய கண்களைத் திறக்கவும், [6]அவர்களை இருளில்நின்று ஒளியினிடத்திற்கும், பசாசினுடைய அதிகாரத்தில்நின்று பராபரனிடத்திற்கும் திருப்பவும் [7]உன்னை அவர்களிடத்தில் அனுப்புகிறேன் என்றார்.

ஙந அகிரிப்பா இராசாவே, அந்தப் பரம தரிசனைக்கு நான் கீழ்ப்படாதவனாயிராமல்,

ஙப முதலாவது [8]தமஸ்கு ஊரிலேயும் பின்பு எருசலேமிலேயும் யூதேயாதேசமெங்கும் உள்ளவர்களுக்குள்ளும் மற்றத் தேசத்தாருக்குள்ளும் போய், அவர்கள் மனதை மாற்றிப் பராபரனிடத்திற்குத் திரும்பி, [9]மனந்திருப்புதற்கு ஏற்ற கிரியைகளைச் செய்யவேண்டும் என்று அறிவித்தேன்.

ஙக [10]இதின்நிமித்தமே யூதர்கள் தேவாலயத்திலே என்னைப் பிடித்து, பின்பு கொலைசெய்யும்படி தேடினார்கள்.

ஙங பராபரன் எனக்கு உதவி செய்ததினாலே நான் இந்நாள்வரைக்கும் சிறியோருக்கும் பெரியோருக்கும் சாட்சிசொல்லி நிற்கிறேன்; [11]தீர்க்கதரிசிகளும் [12]மோசேயும் பின்வரும் என்று சொன்னதின்படியே,

ஙச [13]கிறிஸ்து பாடுபட்டும், [14]மரணத்தில்நின்று உயிரோடெழுந்திருப்பவர்களில் முதன்மையானவராயும் இருந்து, [15]யூதசனங்களுக்கும் மற்றத் தேசத்தாருக்கும் ஒளியைப் பிரசித்தம்பண்ணுகிறார் என்று நான் சொல்லுகிறதே அன்றி, வேறொன்றையும் நான் சொல்லுகிறதில்லை என்றான்.

ஙஞ ¶ இவ்விதமாய்ப் பவுல் தனக்காக உத்தரவு சொன்னபொழுது பெஸ்து மிகுந்த சத்தத்துடனே சொன்னது: பவுலே, [16]நீ பித்தங்கொண்டிருக்கிறாய்; அதிக கல்வி உன்னைப் பயித்தியக்காரனாக்குகின்றது என்றான்.

ஙட அதற்கு அவன் சொன்னது: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பித்தங்கொண்டிருக்கவில்லை; சத்தியமும் நற்புத்தியுமான வார்த்தைகளை வசனிக்கிறேன்.

ஙண இந்தச் சங்கதிகளை இராசா அறிந்திருக்கிறார்; இவை ஒரு மூலையிலே நடந்த காரியங்கள் அல்ல; ஆதலால் இவைகளில் ஒன்றும் அவருக்கு மறைவாய் இருக்கமாட்டாது என்று நான் எண்ணி, தயிரியமாய் அவருடனே பேசுகிறேன்.

ஙத அகிரிப்பா இராசாவே, தீர்க்கதரிசிகள்மேல் உமக்கு விசுவாசம் உண்டா? விசுவாசிக்கிறீர் என்று அறிந்திருக்கிறேன் என்றான்.

கி. பி. கூஉ.

1 அப். உஉ.ஙஅ.
2 லூக். க. எஅ.
3 அப். உஙி. கஉ.
4 எபே. க. ஙக. கொலோ. க. ஙக.
5 சங். கஅ. ஆ: சஉ.எ. லூக்.க. எக. போவா. அ. ஙஉ.
உ கொரி. ச.ச. எபே. க. ஙஅ. க தெச. ஆ. ஆ
6 உ கொரி. க. ஙச. எபே. ச. ஙஅ: ஆ. அ. கொலோ. க ஙக. க பே.உ. கூ, உஆ.
7 அப். உஉ.உச
8 அப். க. உஙி, உஉ, உகூ:ஙக. உக: ஙக. ஙச: ஙக. ஙஎ, ஙஅ, ஙகூ, உஙி, உக.
9 மத். க. அ.
10 அப். உக. கஙி, கக.
11 லூக் உச.உஎ, சச. அப். உச. ஙச: உ.அ. உக. உரோ. க. உக.
12 யோவா. ஆ. சக.
13 லூக்.உச.உக, சக.
14 க கொரி. ஙஆ. உஙி. கொலோ. க. ஙஅ. வெளி. க. ஆ.
15 லூக்.உ. உக
16 உஇரா.கூ.ஙக. யோவா.ஙி. உஙி.
க கொரி. க. உக: உ. ஙக, ஙச: ச. க.

Digitized by Google

உஅ அப்பொழுது அகிரிப்பா பவுலுடனே சொன்னது: நான் கிறிஸ்தவனுகிறதற்குக் கொஞ்சம் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் என்றான்.

உக அதற்குப் பவுல் சொன்னது: நீர்மாத்திரம் அல்ல, இன்று என் வசனங்களைக் கேட்ட யாவரும் கொஞ்சமாய் அல்ல (முழுவதுமே) இந்தச் சங்கிலிகளைத்தவிர என்னைப்போல ஆகும்படிக்கு [1]பராபரனை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

கூய ¶ இவைகளை அவன் சொன்னபின்பு, இராசாவும் தேசாயும் பேர்னீக்கேயாளும் அவர்களுடனேகூட உளுக்காந்திருந்தவர்களும் எழுந்துபோகையில்,

கூக ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, [2]இந்த மனிதன் மரணத்திற்கு அல்லது சங்கிலிகளுக்குப் பாத்திரமானது ஒன்றையும் செய்யவில்லை என்றார்கள்.

கூஉ மேலும் அகிரிப்பா பெஸ்துவுடனே சொன்னது: [3]அந்த மனிதன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானுனால் அவனை விடுதலைபண்ணத் தகுதியாயிருக்கும் என்றான்.

உஎ. அதிகாரம்.

க. பவுல் உரோமாபுரிக்குப் போகக் கப்பலேறி, ஏ. பாத்திணையிலுல் உண்டாகும் கஷ்டத்தைச் சொல்லியும், ஐக. கப்பற்காரர் சம்பாதது. ஙச. கொடுங்காற்றிலுல் கப்பல் அங்கும் இங்கும் அலைந்து, உக. சேதமாவியும், உஉ. கச. சச. எனங்கள் தைரியம் அடைசோந்தது.

பின்பு நாங்கள் கப்பலேறி, [4]இத்தாலியா தேசத்திற்குப் போகும்படி நீர்மானம் உண்டானபொழுது, பவுலும், காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரும், இராயனுடைய சேனையில் இயூலியென்று பேர்கொண்ட தலைவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்.

உ அந்தப்படி நாங்கள் அதிர்மீத்துப் பட்டணத்தில் கப்பலேறி, ஆசியாதேசத்துக் கரையோரத்தின்வழியாய்ப் போக நினைத்துப் புறப்பட்டோம்; மக்கேதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானுகிய [5]அரிஸ்தருக்கு எங்களுடனேகூட இருந்தான்.

கூ மறுநாளிலே சீதோன் துறையில் சேர்ந்தோம்; இயூலி என்பவன் பவுலைப் [6]பட்சமாய் கடைப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய், பராமரிப்பை அடையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்.

ச அவ்விடத்தை நாங்கள் விட்டுப் புறப்பட்டு, காற்றுகள் எதிரானபடியினுலே சீப்புருதீவுக்கு அருகாகப் போய்,

ஙி கிலீக்கியா பம்பீலியா தேசங்களின் கடலின் வழியாய்ப் போய், உலூக்கியா தேசத்து மீரூபட்டணத்தில் சேர்ந்தோம்.

க ¶ அங்கே இத்தாலியா தேசத்திற்குப் போக எத்தனமான அலேக்குசந்தரியா பட்டணத்துக் கப்பலைச் சேனைத்தலைவன் கண்டு, எங்களை அதிலே ஏறப்பண்ணினான்.

எ காற்று எங்களுக்குத் தடைபண்ணினதினுலே நாங்கள் அநேகநாள் மெதுவாய்ச் சென்று, வருத்தத்தோடே கினிது பட்டணத்திற்கு எதிரே போய்; கிரேத்தை* தீவின் கீழ்ப்புறமான சாலுமோன் என்னும் இடத்திற்கு எதிராய்ப் போய்,

அ வருத்தத்தோடே அதைக் கடந்து, கலூஸ்லீம் என்னப்பட்ட இடத்தில் சேர்ந்தோம்; இலசேயபட்டணம் அதற்குச் சமீபமாயிருந்தது.

கஅ ¶ அதுவனைக்கும் மிகுந்த காலம் சென்றபடியினுலும், [7]உபவாசபண்டிகைநாளும் கழிந்துபோனதால் அதிகமாய்ப் போகிறது மோசம்வருதற்கு ஏதுவானபடியினுலும் பவுல் அவர்களைநோக்கி,

கக புருஷரே, இந்த யாத்திரைக் கப்பலில் உள்ள சரக்குகளுக்கும்

* அல்லது கத்தி.

1 க கொரி. எ.எ.
2 அப். உக. க, உகூ:உஇ.உஇ.
3 அப். உஇ. மக.
4 அப். உஇ.மூ, உஇ.
5 அப். மகூ. உக.
6 அப்.உச. உக: உஅ. மக.

7 ஏழாம் மாதத்தின் பத்தாம் நாள் உபவாசமாயிருந்தது. ஙலே. உக. உஎ, உக.

Digitized by Google

கப்பல்களுக்கும்மாத்திரம் அல்ல, நம்முடைய சீவனுக்குங்கூட வருத்தமும்* மிகுந்த சேதமுமாய் இருக்கும் என்று காண்கிறேன் என்று எச்சரித்தான்.

உக சேனைத்தலைவன் பவுலினால் சொல்லப்பட்டவைகளிலும், மாலுமியையும் கப்பற்காரனையும் அதிகமாய் நம்பினான்.

உஉ அல்லாமலும் அந்தத் துறை மழைகாலத்தில் தங்குதற்குத் தகுதி அல்லாதபடியினாலே தென்மேற்கேயும் வடமேற்கேயும் நோக்குகிற பினீக்ஸ் என்னும் கிரேத்தை தீவின் துறைமுகத்திலே மழைகாலத்திற்குத் தங்குதற்கு அங்கே சேரக்கூடுமானால், சேரும்படிக்கு இவ்விடம்விட்டுப் புறப்படவேண்டுமென்று அநேகம்பேர் ஆலோசனை சொன்னார்கள்.

உஊ ¶ மேலும் தென்றல் மெதுவாய் அடித்தபடியால், அவர்கள் தங்கள் யோசனையின்படி நிச்சயமாய் கடக்குமென்று எண்ணி அவ்விடம்விட்டுப் பேர்ந்து, கிரேத்தை தீவுக்கு அருகாய்ப் போனார்கள்.

உச சில காலத்திற்குப்பின்பு, ஐரோக்கிலிதோன் என்னப்பட்ட கடுங்காற்று அதில் மோதிற்று.†

உடு கப்பல் அதில் அகப்பட்டுக்கொண்டு காற்றுக்கு எதிர்த்துப் போகமாட்டாதபடியினாலே, காங்கள் காற்றின் போக்கிலே கொண்டுபோகப்பட்டோம்.

உசு அப்படி கலவுதை என்னப்பட்ட ஒரு சிறிய தீவைக் கடந்து ஓடுகையில், ஓடத்தை வசப்படுத்திக்கொள்ளுதற்கு மிகுந்த வருத்தம் உண்டாயிருந்தது.

உஎ அதை அவர்கள் தூக்கி எடுத்தபின்பு, எல்லாருடைய உதவியினாலும் கப்பலைச் சுற்றிக் கட்டி, சொரிமணலிலே விழுவோம் என்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டுபோகப்பட்டோம்.

கி. பி. கூஉ.

* அல்லது கப்டனும்.

† அல்லது எழும்பிற்று.

1 யோன. உ. ஓ.

உஅ மேலும் நாங்கள் பெருங்காற்று மழையினாலே மிகவும் அடிக்கப்பட்டபடியால், மறுநாளிலே சில பாரத்தைக் கடலில் எறிந்தார்கள்.

உக மூன்றாம் நாளிலே கப்பலின் [1]தளபாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்.

உஉ அநேக நாளாய்ச் சூரியனிலும் நட்சத்திரங்களாகிலும் காணப்படாமல் மிகுந்தபெருங்காற்றும் மழையும் எங்களைச் சூழ்ந்திருந்தபடியினாலே, தப்பிப்போவதற்கான நம்பிக்கையெல்லாம் அற்றுப்போயிற்று.

உக அப்படியிருக்கையில், மிகுந்த காலம் அவர்கள் போசனம் பண்ணாமல் இருந்தபொழுது பவுல் அவர்களுக்குள்ளே எழும்பிச் சொன்னதாவது: புருஷரே, இந்த வருத்தமும் சேதமும் வாராதபடிக்கு, நீங்கள் என் சொல்லுக்குச் செவிகொடுத்து, கிரேத்தை தீவை விட்டுப் புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது.

உஉ இப்பொழுது திடச்சித்தமாயிருங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; கப்பல் சேதமே அன்றி, உங்களில் ஒருவனுக்கும் பிராணசேதம் வருவதில்லை.

உஊ எப்படியென்றால், [2]நான் ஆதீனமாயிருந்து ஆராதனைசெய்கிற [3]பராபரனுடைய தூதன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று, பவுலே, பயப்படாதிரு; நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும்.

உச அல்லாமலும் உன்னுடனேகூட யாத்திரையாய் வருகிற யாவரையும் பராபரன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்.

உடு ஆனபடியினாலே புருஷரே, திடச்சித்தமாயிருங்கள், [4]எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று பராபரனை நம்புகிறேன்.

2 தானி. க. ஙக. உரோ. க. கூ. உதிமோ க. க. 3 அப். உக. ஙக.

4 லூக். க. உஇ. உரோ. உ. உஙி, உக. உ திமோ. க. ஙஉ.

Digitized by Google

உசு நாம் [1]ஒரு தீவிலே விழுகிற துமாத்திரம் நடக்கவேண்டும் என்றான்.

உஎ ¶ பதினெண்காம் இராத்திரியானபொழுது நாங்கள் ஆதிரியா கடலில் அலைந்து திரிகையில், நடுச்சாமத்திலே கப்பலாள்களுக்கு ஒரு கரை கிட்டியிருக்கிறதாய்த் தோன்றிற்று.

உஅ உடனே அவர்கள் சலத்தின் அளவைச் சோதித்து, இருபது பாகம் என்று கண்டார்கள்; சற்று அப்புறம் போனபொழுது, மறுபடியும் சோதித்துப் பதினைந்து பாகம் என்று கண்டு,

உக பாறை இடங்களில் விழுவோம் என்று பயந்து, கப்பலின் பின் பக்கத்திலிருந்து நான்கு நங்கூரங்களைப் போட்டு, உதயம் எப்பொழுது உண்டாகும் என்று இருந்தார்கள்.

கூய அப்பொழுது கப்பல் மனிதர்கள் கப்பலைவிட்டு ஓடிப்போக வகைதேடி, தாங்கள் கப்பலின் முன்பக்கத்திலிருந்து நங்கூரங்களைப் போட மனதுள்ளவர்கள் போல, ஓடத்தைக் கடலில் இறக்குகையில்,

கூக பவுல் சேனைத்தலைவனையும் போர்ச்சேவகரையும் நோக்கி, இவர்கள் கப்பலில் இராவிட்டால் நீங்கள் தப்பிப்போகமாட்டீர்கள் என்றான்.

கூஉ அப்பொழுது போர்ச்சேவகர் ஓடத்தின் கயிறுகளை அறுத்து, அதைத் தாழ விழவிட்டார்கள்.

கூஊ உதயமாகத் தொடங்கினபொழுது எல்லாரும் போசனம் பண்ணுதற்குப் பவுல் அவர்களைத் தயிரியப்படுத்திச் சொன்னதாவது: நீங்கள் ஒன்றும்சாப்பிடாமல் பட்டினியாய்க் காத்திருந்து இன்று பதினெண்காம் நாளாயிற்றே.

கூச ஆகையால் போசனம்பண்ணும்படி உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்; நீங்கள் தப்புவதற்கு அதுவே உதவியாயிருக்கும்; [2]உங்

கி. பி. கூஉ.

1 அப். உஅ. க.
2 க இரா.க.இஉ. மத். ம.கம. லூக். மஉ. எ: உக. மஅ.
3 கசரமு. கூ. மக. மத். மஇ. கக. மற். அ. க. யோவா. க. மக. க தீமோ. ச. க, ச.
4 அப். உ.சக:எ. மச. உரோ. மக. க. க பே.க.உம.

* அல்லது நங்கூரமிழுத்துக் கடலுக்குள் போனபொழுது.

5 உ கொரி. மக. உஇ.

கள் தலைகளிலிருந்து ஒரு மயிரும் விழாது என்று சொல்லி,

கூடு அப்பத்தை எடுத்துக்கொண்டு எல்லார் முன்பாகவும் [3]பராபரனைத் தோத்திரித்து அதைப் பிட்டுப் புசிக்கத்தொடங்கினான்.

கூசு அப்பொழுது மற்றெல்லாரும் திடச்சித்தம் அடைந்து, போசனம்பண்ணினார்கள்.

கூஎ கப்பலில் [4]இருநூற்று எழுபத்தாறுபேர் இருந்தோம்.

கூஅ திருத்தியாகப் புசித்தபின்பு அவர்கள் கோதுமையைக் கடலில் எறிந்து, கப்பலை லெகுவாக்கினார்கள்.

கூக உதயமானபொழுது இன்ன பூமியென்று அறியாமல், சமமான கரையுள்ள ஒரு துறைமுகத்தைப் பார்த்து, அங்கே போகக்கூடுமோ[5]லல்அவ்விடத்திற்குத்தானே கப்பலைப் போகப்பண்ணவேண்டும் என்று யோசனையாயிருந்து,

சுய நங்கூரங்களை அறுத்துக் கடலிலே விட்டு,* சுக்கானுடைய கயிறுகளையும் தளரவிட்டுச் சிறிய பாயைக் காற்றுக்கு விரித்துக் கரைக்கு நேராய்ப்போகையில்,

சக [5]இருபுறமும் கடலுள்ள ஓர் இடத்திலே சென்று, கப்பல் தட்டிற்று; அதின் முன்பக்கம் அசையாமல் ஊன்றியிருந்தது; பின்பக்கம் அலைகளின் பலத்தினாலே உடைந்துபோயிற்று.

சஉ அப்பொழுது காவலில் இருந்தவர்களில் ஒருவனும் நீந்தி ஓடிப்போகாதபடிக்கு, அவர்களைக் கொலைசெய்யவேண்டும் என்று போர்ச்சேவகர் யோசனையாயிருந்தார்கள்.

சஊ அவர்களுடைய தலைவன் பவுலைக் காப்பாற்ற மனதாய் அவர்களுடைய யோசனையைத் தடுத்து, நீந்தத்தக்கவர்கள் முந்திக் கடலில் விழுந்து கரையேறவும்,

சச மற்றவர்களில் சிலர் பலகைகளின்மேலும் சிலர் கப்பல் துண்டுகள்மேலும் போய்க் கரையேற

Digitized by Google

வும் கட்டளையிட்டான்; [1]இவ்வி தமாய் எல்லாரும் தப்பிக் கரை சேர்ந்தார்கள்.

உஅ. அதிகாரம்.

க. கப்பல் சேதமானபின்பு பவுல் அம்பிபாநியா னால் அங்கிலிகப்பட்டது. ஙி. அவன் கையைச் சுற்றிக்கொண்ட விஷப்பூச்சி அவனைத் தின்ட திருந்தது. அ அவன் அந்தத் தீவில் அதேகியா நிகளாரைச் சொந்தமாக்கினது. ஙக. உரோமபு நகருப் போனது. ஙஎ. நான் வந்த சேக்கதை யூதர்களுக்கு அறிவித்தது. ஙச. அவன் பிரசங் தந்தபின்பு சிலர் விசுவாசித்ததும், சிலர் விசுவாசி யாமற்போனதும். ஙஅ. அங்கே இரண்டுவருஷ னம் பிரசங்கித்துக்கொண்டிருந்தது.

அவர்கள் தப்பிக் கரைசேர்ந்த பின்பு, [2]அந்தத் தீவின்பேர் மெலி த்தா என்று அறிந்தார்கள்.

உ [3]அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்கு மிகுந்த அன்பைக் காண்பித்தார்கள்; அவ்வேளையில் இருந்த மழைக்காகவும் குளிர்ச் சிக்காகவும் அவர்கள் நெருப்பை உண்டுபண்ணி, எங்கள் அனை வரையும் சேர்த்துக்கொண்டார்கள்.

ஊ அப்பொழுது பவுல் சில வி றகுகளை வாரி அந்த நெருப்பின் மேல்போடுகையில், ஒரு விரியன் பாம்பு அனலினாலே புறப்பட்டு, அவனுடைய கையைச் சுற்றிக் கொண்டது.

ரு தீவார் அந்தப் பொல்லாத பூச்சியை அவனுடைய கையிலே தொங்கக் கண்டபொழுது, மெய் யாய் இந்த மனிதன் கொலைபாத கன், இவன் சமுத்திரத்திற்குத் தப் பிவந்தும், பழியானது இவனைப் பிழைக்கவொட்டவில்லை என்று தங் களுக்குள்ளே சொல்லிக்கொண் டார்கள்.

ரி அவன் அந்தப் பூச்சியைத் தீயிலே உதறி, [4]ஒரு தீமையும் அ டையாதிருந்தான்.

ரு அவர்கள் இவன் வீக்கங் கொண்டு சடுதியாய் மரித்து விழு வானென்று காத்திருந்தார்கள்; மி குந்த காலம் அவர்கள் அப்படிக் காத்திருந்து, சேதம் எவ்வளவும் அவனுக்கு வராததைக் கண்ட பொழுது, அவர்கள் வேறு சிந்தை யை அடைந்து, [5]அவனைத் தேவ னென்று சொல்லிக்கொண்டார் கள்.

எ மேலும் அவ்விடத்திற்குச் ச மீபமாய் அந்தத் தீவுக்கு முதலா ளியாகிய புபிலியென்று பேர் கொண்டவனுடைய காணியூமி இருந்தது; அவன் எங்களை ஏற்றுக் கொண்டு, மூன்றுநாளும் பட்ச மாய் விசாரித்துக்கொண்டான்.

அ புபிலியினுடைய தகப்பன் சுரத்தோடும் கழிச்சலோடும் கி டந்தான்; பவுல் அவனிடத்தில் போய்ச் [6]செபம்பண்ணி, [7]அவன் மேலே தன் கைகளை வைத்து, அவனைக் குணமாக்கினான்.

கூ அப்படி நடந்தபொழுது, தீ விலே இருந்த மற்ற வியாதிக்கார ரும் வந்து குணமாக்கப்பட்டார் கள்.

ரூ அவர்கள் [8]எங்களை மிகவும் கனஞ்செய்து, நாங்கள் கப்பல் ஏறினபொழுது, எங்களுக்கு வே ண்டியவைகளை ஏற்றினார்கள்.

ரூக மூன்றுமாதம் சென்றபின்பு, தீவிலே மழைகாலத்திற்குத் தங்கி யிருந்த மிதுனம் என்னும் அடை யாளமுள்ள அலேக்குசந்தரி பட் டணத்துக் கப்பலிலே நாங்கள் ஏறிப் புறப்பட்டுப்போய்,

ரூஉ சீர்க்கூசைப் பட்டணத் தைச் சேர்ந்து, அங்கே மூன்று நாள் தங்கி,

ரூஊ பின்பு அவ்விடம்விட்டு (சி சிலிதீவைச்) சுற்றியோடி, இரே கியு பட்டணத்தில் சேர்ந்து, ஒரு நாளுக்குப்பின் தென்றல்காற்று எடுக்கையில், இரண்டாம் நாளி லே புத்தேயோலி பட்டணத்திற் குப்போய்,

ரூசு அங்கே சகோதரரைக் கண் டோம்; அவர்கள் எழுநாள் தங்க ளிடத்தில் இருக்கும்படி எங்களை வேண்டிக்கொண்டார்கள்; அந் தப்படி நாங்கள் (இருந்து,) பின்பு உரோமைபுரிக்குப் போனோம்.

ஙி. பி. சுஉ.

1 உஉ. வச.
2 அப். உஅ.உக.
3 உரோ. க. மச. க கொரி. மச. மக. கொலோ. க. மக.
4 மாற். மக. மஅ. லூக். ம. மக.
5 அப். மச. மக.
6 பார்க். ஙி. மச, மஙி.
7 மாற். சு. ஙி: எ. உஉ: மக. மஅ. லூக். ச. சம். அப். மக. மக, மஉ. க கொரி. மூ. க, உஅ.
8 மத். மஙி. க. கதிமோ. ஙி.மஅ.

கி. பி. சுஉ.

யஙு அவ்விடத்திலுள்ள சகோதரர் எங்கள் சங்கதிகளைக் கேள்விப்பட்டுப் புறப்பட்டு, (சிலர்) அப்பியுபுரமென்னும் இடம்வரைக்கும் (சிலர்) மூன்று சத்திரமென்னும் இடம்வரைக்கும்எங்களுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்; அவர்களைப் பவுல் கண்டு, பராபரனைத் தோத்திரம் செய்து, திடன்கொண்டான்.

யசு உரோமைபுரியில் நாங்கள் சேர்ந்தபொழுது, சேனைத்தலைவன் தன் காவலில் இருந்தவர்களைச் சேனாதிபதிக்கு ஒப்புக்கொடுத்தான்; [1]அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கும்படியான சேவகனுடனேகூடத் தனித்திருக்கும்படிக்கு உத்தரவு பெற்றுக்கொண்டான்.

யஎ மூன்று நாளுக்குப் பின்பு பவுல் யூதரில் பிரதானமானவர்களைக்கூடி வரவழைத்தான், அவர்கள் கூடி வந்திருந்தபொழுது, அவன் அவர்களுடனேசொன்னதாவது: சகோதரர்களே, (நம்முடைய) [2]சனங்களுக்காவது முன்னோர்களின் முறைமைகளுக்காவது விரோதமான ஒன்றையும் நான் செய்யாமலிருந்தும், [3]காவலில் வைக்கப்பட்டு, எருசலேமிலிருந்து உரோமர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டேன்.

யஅ [4]அவர்கள் என் காரியத்தை விசாரித்தபொழுது, மரணத்திற்கு ஏதுவான குற்றம் ஒன்றையும் என்னிடத்தில் காணுதபடியினாலே, என்னை விடுதலையாக்க மனதாய் இருந்தார்கள்.

யக யூதர்கள் எதிர்பேசினபொழுது, [5]நான் இராயருக்கு அபயமிடும்படிக்குப் பலவந்தப்பட்டேன்; என் தேசத்தார்மேலே யாதொரு குற்றம்சாற்ற மனதில்லாமல் அப்படிச் செய்தேன்.

உய இந்தச் சங்கதியைக்குறித்து நான் உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும்உங்களை அழைப்பித்தேன்; [6]இஸ்ரவேலருடைய நம்பிக்கையின் நிமித்தமே [7]இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன் என்றான்.

உக அவனுடனே அவர்கள் சொன்னதாவது: உன்னைக்குறித்து யூதேயாவிலிருந்து காகிதங்கள் எங்களிடத்தில் வரவுமில்லை, (அங்கே இருந்து) வந்த சகோதரரில் ஒருவனும் உன்மேல் பொல்லாங்கை அறிவித்துச் சொல்லவுமில்லை.

உஉ [8]இந்த மார்க்கவகுப்பு எங்கும் விரோதமாய்ப் பேசப்படுகின்றதென்று நாங்கள் அறிந்திருக்கிறபடியால், நீ சிந்திக்கிறவைகளை உன்னிடத்திலே கேட்க விரும்புகிறோம் என்றார்கள்.

உசு அதற்காக அவர்கள் அவனுக்குக் குறித்தநாளிலே, அநேகம் பேர் அவன் தங்கின இடத்திலே சேர்ந்தார்கள்; அப்பொழுது அவன் காலைதொடங்கிச் சாயங்காலம்வரைக்கும் [9]மோசேயின் வேதநூலிலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுமிருந்து [10]இயேசுவுக்குரியவைகளை அவர்களுக்குப் போதித்து, பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துச் சாட்சிகொடுத்து, வியாக்கியானம்பண்ணினான்.

உச அவன் சொன்னவைகளைச் [11]சிலர் ஒத்துக்கொண்டார்கள்; சிலர் விசுவாசியாதிருந்தார்கள்.

உஙு இப்படி அவர்கள் ஒருவரோடொருவர் இசைவாயிராமல் வெளியே போகையில், பவுல் அவர்களுக்குச் சொன்ன ஒரே வாக்கியமாவது:

உசு இந்தச் சனங்கள் [12]கண்களினாலே காணுமலும் காதுகளினாலே கேளாமலும் இருதயத்தினால் சிந்தித்துக்கொள்ளாமலும் மனந்திருப்பாமலும் என்னால் ஆரோக்கியம் அடையாமலும் இருக்கும்படிக்கு, இவர்கள் கடினமாக்கப்பட்ட இருதயமுடையவர்களுமாய் வருத்தத்தோடே கேட்கிற

1 அப். உச. உஙு: உச. க.
2 அப். உச. உக, உக: உஙு. அ.
3 அப். உக. கக.
4 அப். உஉ. உச: உச. ச: உஙு. அ: உக. கக.
5 அப். உஙு. உக.
6 அப் உக. க,ஏ.
7 அப் உக. உக. எபே. க. க: ச. க: க. உச. உ தீமோ. க. உக: உ. கூ. பிலே. ச. உக.
8 லூக். உ. கச. அப். உச. ஓ, உச. க பே. உ. உஉ: ச. உச.
9 லூக்.உச. உஎ. அப். உஎ. க: உகூ. அ.
10 அப். உக க, உஉ.
11 அப் உச. ச: உஎ. ச: உகூ. கூ.
12 எசா. க. கூ. எரே. ஐ. உக. எசே. உஉ. உ. மத்.உக. உச,உஓ. மாற். ச. உஉ. லூக். அ. உ.போ வா. உஉ. சஅ. உசா. உக. அ.

Digitized by Google

காதுள்ளவர்களுமாய் மூடிக்கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுமாய் இருக்கிறபடியினாலே,

உஎ கீழ்கள் உற்றுக்கேட்டாலும் சிக்கித்துக்கொள்ளாமல் இருப்பீர்கள், உற்றுப்பார்த்தாலும் அறியாமலிருப்பீர்கள் என்று இந்தச் சனங்களிடத்திற்குப் போய்ச் சொல் என்கிறதைப் பரிசுத்தஆவி ஏசாயா தீர்க்கதரிசியைக்கொண்டு நம்முடைய முன்னோர்களுடனே நன்றாய்ச் சொன்னார்.

உஅ ஆதலால் [1]பராபரனுடைய இரட்சிப்புப் புறத்தேசத்தார்களுக்கு அனுப்பப்பட்டதென்று நீங்கள் அறிந்துகொள்வீர்களாக; அவர்களே அதற்குச் செவிகொடுப்

கி. பி. ஈஈ.

1 மத். உக. ச, ச. அப். ம. ஈ, ச:ம, அ. எ: உஉ. உ: உ. ம, ம, அ. உசா. ஈ. ஈ.

பார்கள் என்றான்.

உக இவைகளை அவன் சொன்னபின்பு, யூதர்கள் தங்களுக்குள்ளே மிகவும் தருக்கம்பண்ணிக்கொண்டு போய்விட்டார்கள்.

ஈய ¶ பின்பு பவுல் தனக்காகக் கூலிக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு,

ஈக [2]மிகுந்த தயிரியத்தோடும் தடையில்லாமலும் பராபரனுடைய இராச்சியத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசேஷங்களை உபதேசித்துக்கொண்டு வந்தான்.—ஆமன்.

2 அப். ச. ஈஈ. எபே. ஈ. ம.

Digitized by Google

ROMANS.

அப்போஸ்தலனுகிய பவுல்

உரோமாபுரியருக்கு

எழுதின நிருபம்.

க. அதிகாரம்.

க. பவுல் உரோமருக்குத் தான் அப்போஸ்தல அதிகாரம் பெற்றதையும், கூ. அவர்களிடத்திற்குச் செல்ல விரும்பினதையும் காட்டினது. ம. தான் பிரசங்கிக்கும் சுவிசேஷம் இன்னதென்றும், அதினால் விளங்கும் நீதி இன்னதென்றும் காண்பித்தது. மஅ. எல்லாவித பாவங்களுக்குறித்துப் பராபரன் கோபத்தையும், உக. அஞ்ஞானிகள் செய்யும் பாவங்கள் இன்னவைகளென்பதையும் காட்டினது.

1 மனிதத்தன்மையின்படிக்குத்தாவீதின் சந்ததியில் 2 பிறந்தவருமாய்,

உ 3 பரிசுத்தமுள்ள ஆவிக்குரிய தன்மையின்படிக்கு மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே 4 பராபரனுடைய குமாரன் என்று பலமாய்க் காண்பிக்கப்பட்டவருமாய், * தேவகுமாரனுமாய், நம்முடைய கர்த்தருமாய்,

கூ தம்மாலே அழைக்கப்பட்ட உங்களோடேகூட 5 உலகத்தார் யாவனையும் 6 தமது திருநாமத்தின் நிமித்தம் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணும்பொருட்டு, †

கூ 7 எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தலப் பட்டத்தையும் கொடுத்தவருமாய் இருக்கிற இயேசுக்கிறிஸ்துவைக்குறித்து,

ஙி 8 பராபரன் தம்முடைய தீர்க்கதரிசிகளினுலே 9 பரிசுத்த வேத வாக்கியங்களில் முன்வாக்குத்தத்தம்பண்ணியிருந்த 10 சுவிசேஷத்திற்காகப் பிரித்து எடுக்கப்பட்டும், 11 அப்போஸ்தலனுக அழைக்கப்பட்டும்,

கூ இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனுயும் இருக்கிற பவுல்,

எ 12 உரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் அழைக்கப்பட்ட பரிசுத்தருமாகிய அனைவருக்கும் (எழுதுகிறதாவது:) 13 நம்முடைய பிதாவாகிய பராபரனுலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

அ ¶ 14 உங்கள் விசுவாசத்தைக் குறித்து உலகத்தில் எங்கும் பேசிக்கொள்ளுகிறபடியினுலே, முதலாவது நான் உங்கள் எல்லாருக்காகவும் இயேசுக்கிறிஸ்து மூலமாய் 15 என்னுடைய பராபரனைத் தோத்திரம்செய்கிறேன்.

க பராபரனுடைய குமாரனுக்குரிய சுவிசேஷத்திலே 16 நான் என் (முழு) மனதோடும் ‡ அவருக்கு ஊழியம்செய்துவருகிறேனே; 17 அவர் நான் இடைவிடாமல் உங்

---

1 யோவா க.மச. கலா. ச. ச.
2 மத். க. கூ, மக. லூக். க. கஉ. அப். உ. கம. உதீமோ. உஅ.
3 எபி. கூ. மச.
4 அப். மக. கக.
* இரேக்கு, நிச்சயமாக்கப்பட்டவருமாய்.
5 அப். க. எ. உரோ.கே.உஇ.
6 அப். க. மஇ.
† அல்லது கீழ்ப்படியும் பொருட்டு.
7 உரோ. மஉ.க: மஇ. மஇ. 2 கொரி. எச்.ம. கலா.க. மஇ:உ. கூ.எபே.க மக.
8 உரோ. க. உக: மக. உஇ. கலா. க அ.
9 அப். உக. க. நீத். க. உ.
10 அப். க. மஇ: மக.உ. கலா. க. மஇ.
11 அப். உஉ. உக. 2 கொரி. க.க. கலா. க.க. 2 நீமோ.க.மக: உ. எ. உநீமோ. க. மக.
12 உரோ. கூ.உச. 2 கொரி. க. உ. 2 தெச. ச. எ.—13 2 கொரி. க. க. உ கொரி. க. உ. கலா. க. க.—14 உரோ.கூ.மூ. 2 தெச. க. அ.—15 2 கொரி. க. எ. பிலி.க.ச. கொலோ.க.க,ச. 2 தெச. க.உ.. பிலே. இ.—16 அப்.உச.உக. உதீமோ. க. க.—‡ அல்லது ஆவியிலே; யோவா.ச.உக,உச. பிலி. க.க.—17 2 தெச. க. இ.

னை கினைத்துக்கொண்டிருக்கிறதைக்குறித்துச் [1]சாட்சியாய் இருக்கிறார்.

யீ கீங்கள் ஸ்திரப்படுவதற்காகச் [2]சில ஞானவரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு, நான் உங்களைக்காண மிகவும் ஆசையாயிருக்கிறபடியினாலே,

யக நான் உங்களிடத்தில் வருகிறதற்கு, [3]பராபரனுடைய சித்தம் எனக்கு கல்ல பிரயாணம் கிடைக்கப்பண்ணவேண்டும் என்று [4]எப்பொழுதும் என் செபங்களில் வேண்டிக்கொள்ளுகிறேன்.

யஉ உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினாலே [5]நாம் ஒருவருக்கொருவர்* ஆறுதலாய் இருக்கும்படிக்கே, அப்படிச் செய்துவருகிறேன்.

யஙு ¶ சகோதரர்களே, [6]மற்றத் தேசத்தாருக்குள்ளே நான் பலனை அடைந்ததுபோல, உங்களுக்குள்ளும்† சில பலனை அடையும்பொருட்டாக, [7]உங்களிடத்தில் வர அடிக்கடி மனதாயிருந்தேன்; [8]ஆகிலும், இதுவரைக்கும் எனக்குத் தடை உண்டாயிற்று என்று அறிவீர்களாக.

யச [9]கிரேக்கருக்கும் அந்நிய சனங்களுக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாய் இருக்கிறேனே.

யஎ ஆதலால் [10]முதலாவது, யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் எவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசிக்கிறானோ, [11]அவனுக்கு இரட்சிப்பு உண்டாகும்படிக்கு அந்தச் சுவிசேஷம் தேவபலமுள்ளதாய் இருக்கிறபடியினாலே,

யஅ [12]நான் அதைக்குறித்து வெட்கப்படாமல், என்னுடைய திராணியின்படி அதை உரோமாபுரியில் உள்ள உங்களுக்கும் பிரசங்கம்பண்ண விரும்புகிறேன்.

யஎ ¶ [13]விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, [14]விசுவாசத்தினாலாகும் தேவநீதி விசுவாசத்திற்கு எதுவென்று அந்தச் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

யஅ ¶ என்னத்தினாலெனில் [15]சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிக்கொள்ளுகிற மனிதருடைய எல்லாவித அவபத்திக்கும் அநியாயத்திற்கும் விரோதமாய்ப் பராபரனுடைய கோபம் வானத்திலிருந்து வெளிப்படுகின்றது.

யக அதெப்படியென்றால் [16]பராபரனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே‡ வெளிப்பட்டிருக்கின்றது; [17]பராபரனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

உய எப்படியென்றால், உலகம் உண்டானதுமுதற்கொண்டு[18] அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் காணப்படாதவைகளாயிருந்தும், உண்டாக்கப்பட்டிருக்கிற வஸ்துக்களினாலே தெளிவாய் அறியப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்லிக்கொள்ளுகிறதற்கு இடமில்லை.§

உக அவர்கள் பராபரனை அறிந்தும், அவனைப் பராபரன் என்று புகழாமலும் தோத்திரம்செய்யாமலும் இருந்து, [19]தங்கள் யோசனைகளினாலே வீணராளார்கள்; புத்தியில்லாத அவர்களுடைய இருதயம் இருள் அடைந்தது.

உஉ [20]அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லிப் பயித்தியக்காரராகி,

உசு [21]அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனிதர், பறவைகள், மிருகங்கள், ஊர்வன என்றிவைகளுடைய சொரூபமாக மாற்றினார்கள்.

கி. பி சுஎ.

1 உரோ. கூ. க. உ கொரி. க. உக. பிலி. க. அ. க தெச. உ. இ.
2 உரோ. உஇ. உக.
3 பார்க். ச. உஇ.
4 உரோ. உஇ. உக, கூ. க தெச. க. உ.
5 நீத். க ச. உ பே. க. க.
* அல்லது உங்களோடு சான்.
6 பிலி. ச. உஎ.
† அல்லது உங்களிடத்திலும்.
7 உரோ. உஇ. உக.
8 அப். உக. எ. க தெச. உ.உஅ.
9 க கொரி. கூ. உக.
10 லூக். உ. உக, கக: உச. சஎ. அப். க. உக: உக. உக, சக. உரோ. உ. உ.
11 க கொரி. க. உஅ: உஇ. உ. சம். சஉ. கூ,உ. மாற். அ. கஅ. உதிமோ. க. அ.
13 ஆப. உ. ச. யோவா. க. கக. கலா. க. உக. பிலி. க.கூ. எபி. உ. கஅ.
14 உரோ.க. உக.
15 அப். உஎ. கஉ. எபே. இ. க. கொலோ. க. கூ.
16 அப். உச. உஎ.
‡ அல்லது அவர்களில்.
17 யோவா. க. கூ.
18 சங். உகூ.கழ. அப். உச. உஎ: உஎ. உக.
§ அல்லது சொல்லாதபடிக்கு அவைகள் காரணமாயிருக்கின்றன.
19 உ இரா. உஎ. உஇ. எரே. உ.

இ. எபே. ச.உஎ,உஅ.—20 எரே. உ. உச.—21 இ மோ. ச.உக. ழ. சங்.ாக.உ உ. எசா. ச உ. உஅ, உக. எரே. உ. உக. எசே. அ. உ. அப். உஎ. உக.

Digitized by Google

உச ¶ அதற்காக [1]அவர்கள் தங்கள் இருதயங்களின் இச்சைகளிலேலே [2]ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களைக் கனாதனப்படுத்தத்தக்கதாக, பராபரன் [3]அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

உஙி [4]பராபரனைக்குறித்து அறிந்த சத்தியத்தை [5]அவர்கள் பொய்யாக மாற்றி, என்றென்றைக்கும் துதிக்கப்படத்தக்க சிருஷ்டிகளைப் பார்க்கிலும்* சிருஷ்டியைத் தொழுதுகொண்டு சேவித்தபடியினாலே,

உசு பராபரன் அவர்களை [6]இகழ்ச்சியுள்ள ஆசைகளுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படி அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்திற்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள்.

உஎ அதுபோல ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், தங்கள் மோக இச்சைகளினாலே ஒருவருக்கொருவர் பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, இவ்விதமாகத் தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களிடத்திலே பெற்றுக்கொண்டார்கள்.

உஅ அறிவினாலே பராபரனைப் பற்றிக்கொள்ளும்படிக்கு† அவர்கள் கவலைப்படாமல் இருந்தபடியால், [7]தகாதவைகளைச் செய்யும்படி மந்தமுள்ள‡ மனதுக்குப் பராபரன் அவர்களை ஒப்புக்கொடுத்தார்.

உக அவர்கள் எல்லாவித அநீதியினாலும் வேசித்தனத்தினாலும் பொல்லாங்கினாலும் பொருளாசையினாலும் தீமையினாலும் பொறாமையினாலும் கொலையினாலும் வாக்குவாதத்தினாலும் தந்திரத்தினாலும் தூர்க்குணத்தினாலும் நிறைந்தவர்களுமாய்,

ரூய புறங்கூறுகிறவர்களுமாய், நிந்திக்கிறவர்களுமாய்ப் பராபரனைப் பகைக்கிறவர்களுமாய், இறுமாப்புள்ளவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், தகாத விசித்திரங்களை உண்டுபண்ணுகிறவர்களுமாய், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய்,

ரூக விவேகம் இல்லாதவர்களுமாய், உடம்படிக்கையைத் தள்ளுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய்,§ மன்னியாதவர்களுமாய், இரக்கம் இல்லாதவர்களுமாய்,

ரூஉ இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் [8]மரணத்திற்குப் பாத்திரராய் இருக்கிறார்கள் என்று [9]பராபரனுடைய நியாயப்பிரமாணத்தை அறிந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், [10]அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் சந்தோஷப்படுகிறவர்களுமாய்‖ இருக்கிறார்கள்.

உ. அதிகாரம்.

க. தாங்களே பாவம்செய்து மற்றவர்களைக் கெடுத்த கொள்ளுறை பூதர்களாலும், அஞ்ஞானிகளாலும், போக்கில்லாமல் பராபரனுடைய நீடிய தீர்ப்புக்கு தேவாதையும், ம. அஞ்ஞானிகளிலும், ஙி. சன்னத்தடைத்த பூதர்களிலும், உஇ. நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாதவர்கள் ஆக்கினைக்குத் தப்பாததையும் காட்டினது.

அப்படியிருக்க, (மற்றவர்களைக் குறித்து) தீர்ப்புச் சொல்லுகிறவனே, [11]நீ தீர்ப்புச்சொல்லுகிறகாரியங்கள் எவைகளோ, அவைகளை நீயேசெய்கிறபடியால், நீ மற்றவர்களுக்குக் கொடுக்கிற தீர்ப்பினாலே உன்னைத்தானே ஆக்கினைக்கு உள்ளாக்குகிறாய்; ஆதலால் [12]நீ போக்குச் சொல்லிக்கொள்ளுகிறதற்கு இடமில்லை. மேலும் கமக்குத் தெரிந்திருக்கிறபடி,

உ இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குப் பராபரன் கொடுக்கிற நியாயத்தீர்ப்புச் சத்தியத்தின்படியே இருக்கின்றது.

ரு ஆனபடியினாலே இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தீர்ப்புச் சொல்லுகிற மனித

கி. பி. சுஙி.

1 க மோ. உஅ. உஉ.
2 க கொரி. சு. உஅ. க தெச. உ. ச. ச. க. ச. க. ச. க

னே, நீயே அவைகளைச் செய்திருக்க, பராபரனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிப்போகலாமென்று நினைக்கிறாயா?

ச அல்லது [1]பராபரனுடைய தயவு, [2]பொறுமை, [3]நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை நீ அசட்டைபண்ணி, [4]அவருடைய தயவு உன் மனம்திருப்புதற்கு ஏதுவாய் இருக்கவேண்டுமென்று அறியாமல் இருக்கிறாயா?

ஞ நீ உன் இருதயத்தைக் கடினப்படுத்தி, மனம்திருப்பாமல் இருக்கிறதால், பராபரனுடைய கோபாக்கினையும் [5]நீதியுள்ள தீர்ப்பும் வெளிப்படும் காளிலே உனக்குக் கோபாக்கினை வரும்படி அதைச் சேர்த்துக்கொள்ளுகிறாய்.

ஃ [6]அப்பொழுது அவர் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய், அவனவனுக்குப் பதில் அளிப்பார்.

எ இடைவிடாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்தியசீவனை அளிப்பார்.

அ சண்டைக்காரராய் இருந்து [7]சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்தவர்களோ,

க உக்கிரகோபாக்கினையை அடைவார்கள்; [8]பராபரனிடத்தில் பட்சபாதமில்லை.

ங [9]ஆதலால் முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்* எந்த மனிதன் பொல்லாங்கைச் செய்கிறானே அவனுக்கு உபாதியும் வியாகுலமும் வரும்.

ச முன்பு யூதர்களிலும் பின்பு கிரேக்கரிலும்† எவன் நன்மை செய்கிறானே [10]அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானசவுக்கியமும் உண்டாகும்.

கி. பி. சுஎ.

1 உரோ. க.உக. எபே. க. எ: உ. இ, எ.
2 உரோ. க.உஇ.
3 உ மோ.உச.சு.
4 சொ. கஎ. எஅ. உ பே.க.க,எஇ.
5 இ மோ. கஉ. உச. யாக். இ. க.
6 யோபு. உச.எக. சங். கஉ. எஉ. வாக். உச. எஉ. எரே. எ. எ: உ. கஉ. மத். எக.உள.உரோ. எச. எஉ. க கொ. நி. க. அ.உகொ. நி.இ. எ. வெளி. உ. உக: உஎ. கஉ: உஉ. எஉ.
7 யோபு. உச. எக. உரோ. க. எஅ. உ தெச. க. அ.
8 இ மோ. எ. எள. உளள.எக.எ. யோபு. உச.எக. அப். எ. கஇ கலா. உ. க. எபே. க. கூ. கொலோ. க. உஇ. க பே. க. வெ.
9 ஆமோ. க. உ. லூக். எஉ. சள, சஅ. க பே. ச. எள.
* அல்லது புறச் சாதியாரிலும்.
† அல்லது புறச் சாதியாரிலும்.
10 க பே. க. எ.
11 உ ரோ. எக. உக. க நீமோ. கஎக. உநீமோ. உ. அ.
12 யோவா. இ. உஉ அப். எ. சஉ: எள. கக. உநீமோ. ச. க, அ. க பே.ச.இ.
13 பிர.உஉ எச. மத். உஇ. கக. யோவா. எஉ. சஅ. உரோ. க. கூ. க கொரி. ச. இ. வெளி. உஎ. எஉ.

எஉ ¶ மேலும் நியாயப்பிரமாணத்தை அடையாமல் எவர்கள் பாவம்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படியே நியாயத்தீர்ப்பு அடையாமல் கெட்டுப்போவார்கள், நியாயப்பிரமாணம் உள்ளவர்களாய் எவர்கள் பாவம்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி ஆக்கினைக்கு உள்ளாக்கப்படுவார்கள்.

எக [11]நான் பிரசங்கிக்கிற சுவிசேஷத்தின்படியே [12]இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு பராபரன் [13]மனிதருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் காளிலே (அப்படி நடக்கும்;) அதெப்படியென்றால்,

எச [14]நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள்மாத்திரம் பராபரனுக்குமுன்பாக நீதிமான்களாய் இருக்கமாட்டார்கள்; நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே, நீதிமான்களாக்கப்படுவார்கள்.

எடு அன்றியும், நியாயப்பிரமாணம் இல்லாத சனங்கள் இயல்பாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபொழுது, நியாயப்பிரமாணம் இல்லாத அவர்கள் தங்களுக்குத்தாமே நியாயப்பிரமாணமாய் இருக்கிறார்கள்.

எசு அவர்களுடைய மனதுகூடச் சாட்சி‡ பகருகிறதினாலும், அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றுக்கொன்று§ குற்றம் உண்டு, அல்லது குற்றம் இல்லையென்று தீர்க்கிறதினாலும், அவர்கள் தங்கள் இருதயங்களில் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை எழுதியிருக்கின்றதென்று காண்பிக்கிறார்களே.

எஎ ¶ [15]கேள், நீ யூதனென்று பேர்பெற்றிருந்து, [16]நியாயப்பிரமாணத்தை ஊன்றிக்கொண்டு

11 மத்.எ.உக. யாக்.க உஉ,உக,உஇ. க பே.க.எ. ‡ அல்லது அவர்களோடு சாட்சி. § அல்லது அவ்வேளையில்.
15 மத்.க.கூ. யோவா.அ.கக. உரோ.கூ.க,எ. உ கொரி.எக.உஉ.—16 பிர.கஉக உரோ.கூ.ச.

Digitized by Google

[1]பராபரனைக்குறித்துப் பெருமை பாராட்டி,

உஅ நியாயப்பிரமாணத்திலுலே உபதேசிக்கப்பட்டவனுய் [2]அவருடைய சித்தத்தை அறிந்து, [3]வித்தியாசமானவைகளைச் சோதித்து அறிகிறுய்.*

உக அல்லாமலும் [4]நியாயப்பிரமாணத்திலுலே மெய்யறிவையும் சத்தியத்தையும் காட்டிய குறிப்பிடமுள்ளவனுய் [5]நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டுகிறவன் என்றும்,

உய அந்தகாரத்தில் உள்ளவர்களுக்கு ஒளி கொடுக்கிறவன் என்றும், புத்தியீனருக்கு உபாத்தி என்றும், குழந்தைகளுக்குப் போதகன் என்றும் சொல்லுகிறுய்.

உக இப்படிப்பட்டவனுலல் [6]மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமல் இருக்கலாமா? களவுசெய்யக்கூடாது என்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா?

உஉ விபசாரம்பண்ணக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் பண்ணலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ [7]பரிசுத்தமானதைக் கொள்ளையிடலாமா?

உரு [8]நியாயப்பிரமாணத்தைக்குறித்துப் பெருமைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, பராபரனைக் கனஈனம்பண்ணலாமா?

உச பராபரனுடைய நாமம் மற்றத் தேசத்தாருக்குள்ளே உங்களாலே தூஷணிக்கப்படுகின்றதென்று [9]எழுதியிருக்கிறபடி (செய்கிறுயே).

உஞ ¶ [10]நீ வேதப்பிரமாணத்தின்படி செய்தால் விருத்தசேதனம் மெய்யாய் உனக்குப் பிரயோசனமாய் இருக்கும்; நீ வேதப்பிரமாணத்தை மீறி நடந்தாயாகில் உன் விருத்தசேதனம் விருத்தசேதனம் இல்லாமையாயிற்று.

ஊ [11]மேலும் விருத்தசேதனம் இ. பி. சுய.

1 சோ. சஉ.உஇ: ச அ.உ.போவா. அ. சக.
2 இ மோ. ச. அ. சம். சசஎ. மரு, உம.
3 பிலி. க. இ.
* அல்லது மேன்மையானவைகளை அங்கிகரித்துக் கொள்ளுகிறுய்.
4 உரோ. க. மஎ. உநமோ. க.மக: க. இ.
5 மத். மஇ. மச: உக. மக, மஎ, மக. உச. போவா.க. கச, சம, சக.
6 சங். இம. மக. ழி. மத். உக. க. ழி.
7 மல்கி. க. அ.
8 மஎ. வச.
9 உ சாமு. மஉ. மச. எசா. இஉ. இ. எசே. கக. உம, உக.
10 கலா. இ. க.
11 அப். ம. கச, கஇ.
12 மத். மஉ. சக, சஉ.
13 மத்.க. க.போவா. அ. கக. உரோ. க.க,எ. கலா. க. மஇ. வெவி. உ. க.
14 க பே.க.ச.
15 உரோ. எ. க. உ கொரி. க. க.
16 கொலோ. உ. மக. பிலி. க. க.
17 கொரி.ச.இ. உகொரி ம.மஅ.
க தெச. உ. ச.
18 இ மோ. ச.எ, அ. சங். சசஎ. மக,உம. உரோ. உ. மஅ: க. ச.
19 உரோ. ம. மக. எபி. ச. உ.
20 ச மோ. உக. மக. உரோ. க. க: மக. உக உ நமோ. உ. மக.

இல்லாதவன் வேதப்பிரமாணத்துக்கு ஏற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனம் இல்லாமை விருத்தசேதனமே என்று எண்ணப்படும் அல்லவோ?

உஎ அல்லாமலும் விருத்தசேதனம் இல்லாமல் சுபாவப்படிக்கே இருந்து வேதப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவன் [12]எழுத்தின்படியான விருத்தசேதனத்திலுலே யூதனுய் வேதப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவான் அல்லவோ?

உஅ ஆதலால் [13]புறம்பாக யூதனனவன் யூதனல்ல; புறம்பாகச் சரீரத்தில் உண்டான விருத்தசேதனம் விருத்தசேதனமல்ல.

உக [14]உள்ளத்திலே யூதனனவனே யூதன்; எழுத்தின்படி அல்ல [15]ஆவியின்படி [16]இருதயத்தில் உண்டான விருத்தசேதனமே விருத்தசேதனம்; [17]இப்படிப்பட்டவனுடைய புகழ்ச்சி மனிதரால் அல்ல, பராபரனுலே உண்டாயிருக்கின்றது.

ரூ. அதிகாரம்.

க. இப்படிப்பட்டதென்ற யூதருடைய மேன்மையும், உ. அதை அவர்கள் இழந்துபோனதையும், க. விசுவாசம் அவர்மேல் பலிக்கென்ற நிச்சயிக்கிறதையும், உம. ஒருவரும் விசுவாசத்தினுல் நீதிமான்களாக்கப்படாமல், உஅ. எல்லாரும் விசுவாசமில்லாமல் விசுவாசத்தினுலேமாத்திரம் நீதிமான்களாக்கப்படுகிறதையும், கக. விசுவாசத்தினுல் விசுவாசம் ஒழிந்துபோனதையுங்குறித்துச் சொல்லியது.

இப்படியானுல் யூதருடைய மேன்மை என்ன? அல்லது விருத்தசேதனத்திலுலே பிரயோசனம் என்ன என்று கேட்டால்,

உ அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கின்றது; [18]பராபரனுடைய வாக்கியங்கள் அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்டபடியினுலே, அவர்களுக்குப் பிரதானமாய் மேன்மை உண்டாயிருக்கின்றது.

ரு [19]சிலர் விசுவாசியாமற்போனபடியால், [20]அவர்களுடைய அவிசு

Digitized by Google

வாசம் பராபரனுடைய உண்மை
யை அவமாக்கும் அல்லவோ என்
று கேட்டால், [1]அப்படியாக்க
மாட்டாது.

ச [2]தேவரீர் அப்படிக் கடிந்து
பேசும்பொழுது நீதிபரராகவும்,
நியாயம்தீர்க்கும்பொழுது புனித
ராகவும் இருப்பீரென்று எழுதி
யிருக்கிறபடி, [3]மனிதர் யாவரும்
பொய்யராயிருந்தாலும் [4]பராபர
னே சத்தியமுடையவர் என்போ
மாக.

ஞ ¶ [5]பின்னும் நான் மனிதபிர
காரமாகப் பேசுகிறேன்; நமது
அநீதி பராபரனுடைய நீதியை
விளக்கப்பண்ணினால், நாம் என்
ன சொல்லலாம்? பராபரன் கோ
பாக்கினையைச் செலுத்துகிறது அ
நியாயமல்லவோ என்றால்,

ஃ அப்படிச் சொல்லவே கூடா
து; [6]அப்படியானால் உலகத்தாருக்
குப் பராபரன் எப்படி நியாயத்
தீர்ப்புச் செய்வார்?

எ ஆகிலும் பராபரனுக்குப் பு
கழ்ச்சி உண்டாகத்தக்கதாக அவ
ருடைய சத்தியம் என் பொய்யினா
லே அதிக மேன்மை அடைந்த
தண்டானால், நான் பாவியென்று
தீர்க்கப்படுவது என்னவென்று
(நீ சொல்ல,)

அ [7]நன்மை வரும்படிக்குத் தீமை
செய்யக்கடவோமென்றும் சொல்
லலாம் அல்லவோ? நாங்களே அப்
படிச் செய்கிறவர்களென்று நிந்
திக்கப்படுகிறோம்; நாங்களே அப்
படிப் போதிக்கிறவர்கள் என்று
சிலர் சொல்லுகிறார்கள்; அப்படிப்
போதிக்கிறவர்கள் ஆக்கினைக்கு உ
ள்ளாக்கப்படுகிறது நியாயந்தான்.

கஅ ¶ அப்படியானால், (கிரேக்க
ருக்கு) மேன்மையாய் இருக்கிறே
மோ என்று கேட்டால், அப்படி
ஒருக்காலும் இருக்கமாட்டோம்;
யூதர்கள் [8]கிரேக்கர் யாவரும் பா
வத்திற்குக் கீழானவர்கள் என்று
முன் நிருஷ்டாந்தப்படுத்தினே
மே.*

கி. பி. சுமி.

1 யோபு. ஸ. அ.

2 சங். கூ. ச.

3 சங். கூ. க: ஸ்க. ம்க.

4 யோவா. க.கூ.

5 உரோ. க. ம்க. கலா. க. ம்ஓ.

6 க மோ. ம்அ. உஓ. யோபு. அ. க: கச. ம்எ.

7 உரோ.ஓ. உம: க. க, ம்ஓ.

8 உக. ஙச. கலா. க. உஉ.

* கிரேக்கு, சமத்நிலேம்; உரோ. க. உஅ. ழ: உ. க. ழ.

9 சங். ம்ச. க-க: ஓக. க.

10 சங். ஓ. க. எரே. ஓ. ம்க.

11 சங். ஈசம். க.

12 சங். ம். எ.

13 வாக். க. ம்கூ. ஏசா.ஓக. எ,அ.

14 சங். கக. க.

15 யோபு. ஓ.ம்க. சங். ஈஎ. ஏசா. ம்க. கக. உரோ. க. உட: உ. க.

16 க. உக. வச. உரோ. உ. உ.

† அல்லது பராபரனுக்கு முன்பாகக் குற்றவாளிகள்.

17 யோவா.க.கச: ம்ஓ. உஓ.

18 உரோ. எ. எ.

19 சங். ஈசக. உ. அப். ம்க. கக. கலா. உ. ம்க: க. ம்க. எபே. உ அ, கூ. நீத. க. ஓ.

ய அந்தப்படியும் எழுதியிருக்கி
றதாவது: [9]நீதிமான் ஒருவனும்
இல்லை.

யக மெய்யுணர்வுள்ளவன் இல்
லை; பராபரனைத் தேடுகிறவன்
இல்லை.

யஉ எல்லாரும் வழிதப்பி ஏக
மாய்க் கெட்டுப்போகிறார்கள்.

யஊ நன்மைசெய்கிறவன் ஒருவ
னும் இல்லை; [10]அவர்கள் தொண்
டை திறக்கப்பட்ட சமாதியாய்
இருக்கின்றது; தங்கள் நாவுக
ளால் வஞ்சனை செய்கிறார்கள்,
[11]பாம்புகளின் விஷம் அவர்களு
டைய உதடுகளின்கீழ் இருக்கின்
றது.

யச [12]அவர்களுடையவாய் சபிப்
பினாலும், உபாதிக்கிற பேச்சினா
லும் நிறைந்திருக்கின்றது.

யடு [13]அவர்களுடைய கால்கள்
இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிர
மாய் இருக்கின்றன.

யசு அழிவும் இடுக்கணும் அவர்
களுடைய வழிகளில் இருக்கின்
றன.

யள சமாதான மார்க்கத்தை அவர்
கள் அறியார்கள்.

யஅ [14]அவர்கள் கண்களுக்கு
முன்பாகத் தெய்வபயம் இல்லை
என்பதே.

யக ¶ [15]மேலும் வாய்கள் யாவும்
அடைக்கப்படும்படிக்கும், [16]உல
கத்தார் எல்லோரும் பராபரனு
டைய ஆக்கினைக்கு ஏதுவானவர்
கள்† ஆகும்படிக்கும், [17]நியாயப்
பிரமாணம் சொல்லுகிற யாவும்
நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்
டிருக்கிறவர்களுக்கே சொல்லப்
பட்டிருக்கின்றன என்று அறிந்தி
ருக்கிறோம்.

உய இப்படியிருக்க, [18]நியாயப்
பிரமாணத்தினாலே பாவத்தை அ
றிகிற அறிவு வருகிறபடியால்,
[19]ஒரு மனிதனும் நியாயப்பிரமா
ணத்திற்கு ஏற்ற கிரியைகளினா
லே அவருக்குமுன்பாக நீதிமா
னாக்கப்படுவதில்லை.

Digitized by Google

உக இப்பொழுது [1]நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியை இல்லாமல், பராபரனுக்குமுன்பாக நீதிமானாகும் வகை வெளிப்பட்டிருக்கின்றது; அதைக்குறித்து [2]நியாயப்பிரமாணமும் [3]தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகின்றன.

உஉ [4]இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பராபரன் வரப்பண்ணுகிற நீதி அதுவே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அதுவரும்.

உரூ [5]வித்தியாசமே இல்லை; [6]எல்லாரும் பாவம்செய்து, பராபரனுடைய மகிமை அற்றவர்களாய் இருந்து,

உச [7]கைமாறில்லாமல் [8]அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள்.

உஎ [9]பராபரன் தாம் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை [10]மன்னித்துவிட்டதைக்* குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாக, [11]இயேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் விசுவாசமாய் இருக்கிறதினாலே வரும் கிருபைக்கு மூலாதாரமாக அவனையே ஏற்படுத்திவைத்தார்.†

உசு [12]இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனே நீதிமானுக்குகிறதில் அவர் நீதியுள்ளவராய் இருக்கும்படிக்கு, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவே (அப்படிச் செய்தார்).

உஏ ¶ ஆனபடியினாலே [13]மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே; எந்தப் பிரமாணத்தினாலே என்றால், கிரியைகளைக் குறிக்கிற பிரமாணத்தினாலே அல்ல, விசுவாசத்தைக் குறிக்கிற பிரமாணத்தினாலே அப்படி ஆயிற்று.

உஅ ஆதலால் [14]மனிதர்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே அல்ல, விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள் என்று தீர்க்கிறோம்.

உக அன்றியும் பராபரன் யூதருக்குமாத்திரம் தேவனாயிருக்கிறாரோ? மற்றத் தேசத்தாருக்கும் தேவனாயிருக்கிறார் அல்லவோ? மெய்யாய் அவர் மற்றத் தேசத்தாருக்கும் தேவனாயிருக்கிறார்.

ரூஎ தேவன் ஒருவரே; ஆகையால் [15]அவர் விருத்தசேதனம் உள்ளவர்களையும் விருத்தசேதனம் இல்லாதவர்களையும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கச் சித்தமாயிருக்கிறார்.

ரூக இப்படியானால் விசுவாசம் என்கிறதினாலே நாம் நியாயப்பிரமாணத்தை அழித்துப்போடுகிறோமா? அப்படி அல்லவே, நியாயப்பிரமாணத்தை (அதினாலே) நிலையாகவே நிறுத்துகிறோம்.

ச. அதிகாரம்.

க. ஆபிராமுடைய விசுவாசம். ம. அவன் சன்னதனடைவதற்குமுன்னமே அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. மக. அவனும், அவன் வித்தாரும் விசுவாசத்தினாலேயே வாக்குத்தத்தத்தைப் பெற்றது. மசு. விசுவாசிகள் எல்லாருக்கும் ஆபிராம் தகப்பனென்றது. உச. தம்முடைய விசுவாசமும் தமக்கு நீதியாக எண்ணப்படுமென்றது.

அன்றியும் நம்முடைய தகப்பனாகிய [16]ஆபிரகாம் சரீர (கருமங்களினாலே) என்னத்தைப் பெற்றுக்கொண்டான்?

உ ¶ [17]ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானானால், அவன் (தன்னை) மேன்மையாகப் பாராட்டலாம்; ஆகிலும் பராபரனுக்குமுன்பாக அப்படி ஒன்றுமில்லை.

ரூ வேதவாக்கியம் எப்படிச் சொல்லுகிறதென்றால், [18]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான்; அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டதென்று சொல்லுகின்றது.

ச அன்றியும் [19]கிரியைகளுடை

கி. பி. சுமி.

1 அப். மஇ. மக. உரோ. க. மஎ. பிலி.உ. க.எபி. மக. ச. ழி.
2 போவா.இ.சசு. அப். உக.உஉ.
3 உரோ. க. உ. ச பே. க. ம.
4 உரோ. ச.
5 உரோ. ம. மஉ. கலா. க. உஅ. கொலோ.க.மச.
6 சு. வச. உரோ. மக. கக. கலா. க. உஉ.
7 உரோ. ச. மசு. எபே. உ. அ. தீத். க. இ, எ.
8 மத். உம. உஅ. எபே. க. எ. கொலோ. க. மச.தீமோ. உ. சு. எபி. க. மஉ. சபே.க மஅ,மசு.
9 அப். மஎ. கம. எபி. க. மஇ.
10 அப். மக. கஅ, கசு. க தீமோ. க. மஇ.
* அல்லது பாராமல் விட்டதை.
11 கொலோ. க உம.
† அல்லது வெளிப்படுத்தினார்.
12 க [illegible] மஇ. க பேர. உ. உ: ச. ம.
13 உரோ உ.மஎ, உக: ச. உ. க கொரி.க உசு, கக.எபே.உ.சு.
14 அப். மக. கஅ, கசு: உம. உக, உஉ. வச. உரோ. அ க. கலா. உ. மக.
15 உரோ. ம.மஉ, மக. கலா. க.அ, உம, உஅ.
16 எசா. இக. உ. மத். க. சு. யோவா. அ கக, கசு. உ கொரி. மக. உஉ.
17 உரோ. க.உம, உஎ, உஅ.
18 கமோ. மஇ.க. கலா.க.க. பாக். உ. உக.
19 உரோ. மக.சு.

Digitized by Google

யவனுக்கு வருகிற கூலி கிருபையென்று எண்ணப்படாமல், கடனென்று எண்ணப்படும்.

இ கிரியைகளை உடையவனுயிராமல் [1]துன்மார்க்கனை நீதிமானுக்குகிறவர்மேல் விசுவாசமாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியென்று எண்ணப்படும்.

உ ¶ அந்தப்படி தாவீதும் கிரியைகள் இல்லாமல், பராபரனுலே நீதிமான் என்று எண்ணப்படுகிற மனிதனுடைய பாக்கியத்தைக் காண்பிக்க,

எ [2]எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டனவோ எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டனவோ அவர்களே பாக்கியவான்கள் என்றும்,

அ எவனுடைய பாவத்தைப் பராபரன் எண்ணுமல் இருக்கிறுரோ அவனே பாக்கியவான் என்றும் சொல்லியிருக்கிறுன்.

கூ ¶ இந்தப் பாக்கியம் விருத்தசேதனம் உள்ளவனுக்குமாத்திரமா, அன்றி, விருத்தசேதனம் இல்லாதவனுக்கு வருமோ? (இருவருக்குமே வரும்;) அது எப்படியென்றுல், நாங்கள் நிச்சயித்தபடி விசுவாசமே ஆபிரகாமுக்கு நீதியென்று எண்ணப்பட்டது.

எ ¶ எப்பொழுது அது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனம் உள்ளவனுய் இருந்தபொழுதோ, விருத்தசேதனம் இல்லாதவனுய் இருந்தபொழுதோ (என்றுல்) விருத்தசேதனம் உள்ளவனுயிருந்தபொழுது அல்ல, விருத்தசேதனம் இல்லாதவனுயிருந்தபொழுதே அப்படி எண்ணப்பட்டது.

ஏ [3]மேலும் விருத்தசேதனம் இல்லாத காலத்திலே அவன் விசுவாசத்தினுலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதன அடையாளத்தைப் பெற்றுன்; விருத்தசேதனம் இல்லாமல் விசுவாசமுள்ளவர்களும் நீதிமான்கள் ஆக்கப்படும்பொருட்டாக, [4]அப்படிப்பட்ட விசுவாசிகளுக்கு அவன் தகப்பனுய் இருக்கும்படிக்கும்,

ஐ விருத்தசேதனத்தை உடையவர்களாய்மாத்திரம் அல்ல, நம்முடைய முன்னேராகிய ஆபிரகாம் விருத்தசேதனம் இல்லாத காலத்திலே நடந்த விசுவாசமார்க்கத்தில் நடக்கிறவர்களாயும் இருக்கிறவர்கள் நீதிமான்கள் ஆக்கப்படும்பொருட்டாக, அப்படிப்பட்ட விருத்தசேதனம் உள்ளவர்களுக்கும் தகப்பனுயிருக்கும்படிக்கும் (அந்த அடையாளத்தைப் பெற்றுன்).

ஒ ¶ அன்றியும், [5]உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் நியாயப்பிரமாணத்தினுல் வருகிற நீதியினுல் அல்ல, விசுவாசத்தினுல் வருகிற நீதியினுலே கிடைத்தது.

ஓ ஆதலால் [6]நியாயப்பிரமாணத்தினுல் வருகிற நீதியை உடையவர்கள் சுதந்தரராஞல், விசுவாசம் வீணுய்ப்போம்; வாக்குத்தத்தமும் அபத்தமாய்ப்போம்.

ஒ மேலும், [7]நியாயப்பிரமாணம் கோபாக்கினையை நடப்பிக்கின்றது; நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், அக்கிரமமும் தோன்றுதே.

ஓ ஆதலால் அந்த வாக்குத்தத்தம் சந்ததியார் எல்லாருக்கும் நிச்சயமாய் இருக்கும்பொருட்டாக, (அந்தச் சுதந்தரம்) [8]கிருபையினுல் உண்டாகும்படிக்கு, அது விசுவாசத்தினுலே வருகிறது; நியாயப்பிரமாணத்தை உடையவர்களாகிய சந்ததியாருக்குமாத்திரம் அல்ல, அநேகதேசத்தாருக்கு உன்னைத் தகப்பனென்று ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, [10]நம்மெல்லாருக்கும் தகப்பனுகிய ஆபிரகாமைப்போல, விசுவா

கி. பி. சுஏ.

1 ரோ.உச.உ.

2 சங். கஉ. க,உ.
3 க மோ. ஙஎ. ம.
4 லூக். ஙசு. சு. ஙஉ, ஙசு. லச. கலா. க. எ.
5 க மோ. ஙஎ. ச. ழ. கலா. க. உசு.

6 கலா. க. ஙஅ.

7 உரோ. க. உம: இ. ஙக, உம: எ. அ, ம, ஙக. க கொரி. ஙஇ. இசு. உ கொரி. க.எ,சு. கலா.க. ம, ஙசு. க ரோ. க. ச.

8 உரோ. க. உச.

9 கலா. க. உஉ.

10 சோ. இக. உ. உரோ.க அ.

Digitized by Google

சத்தை உடையவர்களான சந்ததி யாருக்கும் அது நிச்சயமாயிருக்கும்.

யஎ [1]மரித்தோரை உயிர்ப்பித்து, [2]இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவராகிய பராபரனை அவன் விசுவாசித்துக் கொண்டு அவராலே* [3](அப்படிப்பட்ட தகப்பனானன்).

யஅ ¶ [4]உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, அவன், தான் அநேக தேசத்தாருக்குத் தகப்பனாவதை நம்புதற்குவதுவில்லாமலிருந்தும், நம்பிக்கையோடே அதை விசுவாசித்தான்.

யக அவன் விசுவாசத்திலே பலனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதானபடியால், [5]தன் சரீரம் செத்துப்போனதையும் சாராள் கருப்பம் உண்டாகாமலிருந்ததையும் எண்ணுமல் இருந்தான்.

உய பராபரனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,

உக பராபரன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றவும் [6]வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று உறுதியாய் நினைத்து, பராபரனைப் புகழ்ந்து, பலத்த விசுவாசமுள்ளவனானன்.

உஉ ஆகையால் அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டது.

உஊ ¶ [7]அது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டதென்பது அவனுக்காகமாத்திரம் அல்ல, நமக்காகவும் எழுதியிருக்கின்றது.

உச [8]நம்முடைய அக்கிரமங்களின்நிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் நம்மை நீதிமான்களாக்குதற்கு,

உஎ [9]எழுப்பப்பட்டும் இருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுவை [10]மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினவனை விசுவாசித்

கி. பி. சுயி.

1 உரோ. அ. ய. எபே. உ. க, இ.
2 உரோ.கூ.உக. க கொரி.க.உஅ. க பே. உ. ம. * அல்லது அவரைப்போல.
3 க மோ. மஎ. இ.
4 க மோ. மஇ.இ.
5 க மோ.மஎ.மஎ: மஅ. ய. எபி. ய.க.க,மஉ.
6 சங். சமஇ. க. லூக்.க.எ,சஇ. எபி. ய. ய.
7 உரோ. மஇ. ச. க கொரி. ம. க, ய.
8 எச. இ. இ, க. உரோ. க. உஇ: இ.க: அ. கஉ. உ கொரி. இ. உக. கலா. க. க.க பே. உ. உச: க. மஅ. எபி. கூ. உஅ.
9 க கொரி. மஇ. மஎ.கபே.க.உக.
10 அப். உ. உச: ய. கம.
11 எச.கஉ. மஎ. பேரா ர. ய. கூ. உரோ. க. உஅ, கம.
12 எபே. உ. மச. கொலோ.க.உம.
13 கொரி.மஇ.க.
14 பேரா. ம. கூ: மச. கூ. எபே. உ.மஅ: க. மஉ. எபி. ம. ய.
15 எபி. க. க.
16 யாக்.க.உ.
17 யாக்.க.மஉ.
18 மத்.இ.மக,மஉ. அப். இ. சக. உ கொரி. மஉ. ம. பிலி. உ.மஎ. யாக்.க.க, மஉ. க பே. க. ம.
19 உ கொரி. க. உஉ.கலா.ச.க. எபே.க.ய,மச.
20 பிலி. க. உம.
† அல்லது குறித்த; கலா. ச. ச.
21 அ. வசனம். உரோ. ச. உச.
22 பேரா. மஇ. ய. க பே. க. மஅ. க பேர. க. மக: ச. கூ, ம.

துக்கொண்டால், நமக்கும் அது அப்படியே எண்ணப்படும்.

ரு. அதிகாரம்.

க. விசுவாசத்தினால் நீதிமான்களைப் பராபரத்தில் சமாதானம் பெற்று, உ. சம்பிக்கையில் சந்தோஷமடைந்து, அ. பாவிகளாயிருந்தபோதும் அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் நித்தம் ஒப்புரவடைந்தால், ம. அது மிகைத்தும் இரட்சிக்கப்படுவோம் என்றது. ய. பாவமும் மரணமும், ஆதாமினால் வந்ததுபோல, கூ. நீதியும், சீவனும் இயேசுக்கிறிஸ்துவினால் வந்தென்பது. உம. பாவம் பெருகியிருந்தும் கிருபை அதிகமாய்ப் பெருகுமென்பது.

இவ்விதமாய் [11]நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு [12]நாம் பராபரனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

உ [13]மேலும் நாம் நிற்கின்ற கிருபைக்குள் பிரவேசிக்குதலையும் [14]நாம் அவனைக்கொண்டு விசுவாசத்தினாலே பெற்றும், [15]பராபரனுடைய மகிமையை அடைவோம் என்று நம்பி மேன்மை பாராட்டியும் இருக்கிறோம்.

ஊ ¶ அதுவுமல்லாமல் [16]உபத்திரவம் பொறுமையையும், [17]பொறுமை நிச்சயத்தையும், நிச்சயம் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றன என்று நாங்கள் அறிந்திருந்து,

ச [18]உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம்.

ஙு மேலும் [19]நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியினாலே பராபரனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், [20]அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ஙூ ¶ அன்றியும் நாம் பெலனற்றவர்களாய் இருக்கையில், நியமித்த தகுதியான† காலத்திலே [21]அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

ஙஎ நீதிமானுக்காக மற்றொருவன் மரிக்கிறது அருமையாயிருக்கும்; நல்லவனுக்காக ஒருவேளை மற்றொருவன் மரிக்கத் துணிவான்.

அகிறிஸ்துவோ [22]நாம் பாவிகளா

Digitized by Google

யிருக்கையிலே நமக்காக மரித்த தினாலே, பராபரன் நமதுமேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார்.

க இப்படி காம் [1]அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க (வரும் [2]கோபாக்கினையில் நின்று அவராலே மிகவும் அதிகமாய் இரட்சிக்கப்படுவோமே).

ஏ காம் [3]பராபரனுக்குப் பகைஞராயிருக்கையில், அவர் குமாரனுடைய மரணத்தினாலே [4]அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் காம் [5]அவருடைய சீவனாலே மிகவும் அதிகமாய் இரட்சிக்கப்படுவோமே.

ஐ ¶ அதுவுமல்லாமல் இப்பொழுது ஒப்புரவாக்குதலை* நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய் நாம் பராபரனைக் குறித்து [6]மேன்மைபாராட்டுகிறோம்.

ஒ ¶ என்னத்தினாலென்றால், [7]ஒரே மனிதனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் [8]உலகத்திலே பிரவேசித்தபின்பு எல்லாமனிதரும் பாவிகளானபடியினாலே,† மரணம் எல்லா மனிதருக்கும் வந்ததுபோல, (கிறிஸ்துவினாலே எல்லாருக்கும் ஒப்புரவாக்குதல் உண்டாயிற்று).

ஓக நியாயப்பிரமாணம்வருதற்கு முன்னே பாவம் உலகத்தில் இருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால், [9]பாவம் எண்ணிக்கைப்படமாட்டாது.

ஓச அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவனைக்கும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப்பாய்ப் பாவம்செய்யாதவர்களிலையும் ஆண்டுகொண்டது; [10]அந்த ஆதாம், பின்பு வந்தவருக்கு அடையாளமானவன்.

ஓஞ ஆனாலும் கிருபையுள்ள ஈவின் சங்கதி விழுதலின் சங்கதி

கி. பி. சுஏ.

1 உரோ. ச.உஇ. எபே. உ. ஙூ. எபி. க. ஸ. க பேர. ச. எ.
2 உரோ. ச. ஆஅ. க தெச. ச. க.
3 உரோ. அ.ஊஉ.
4 உ கொரி. இ. ஆஅ, ஙூ. எபே. உ. ஙூ. கொலோ. ச. உஅ. உஉ.
5 பேரா. இ. உக: ஸ. ஙூ. உ கொரி. ச. ஆ, ஙூ.
* அல்லது பாவ விலக்கத்தினை; ஆ.வச. உகொரி. இ. ஆஅ, ஙூ.
6 உரோ. உ.எ: க. உக, ஙஅ. கலா. ச. ஙூ.
7 க மோ. க. ச. க கொரி. ஙஇ. உக.
8 க மோ. உ.ஆ. உரோ. ச. உக. க கொரி.ஆஇ.உக.
† அல்லது அவனில் பாவிகளாபடியினாலே.
9 உரோ. ச. ஆஇ. க பேர. க. ச.
10 க கொரி. ஙஇ. உக, உஉ, சஇ.
11 எசா. இக. ஙூ. மத். உஅ. உஅ: உக. உஅ.
‡ அல்லது ஒரே பாவத்தினால்.
§ அல்லது ஒரே தப்பிதத்தினால்.
‖ அல்லது ஒரே நீதியினால்.
12 பேரா. ஙஉ. கஉ. எபி. உ.ஙூ.
13 பேரா. ஙஇ. உஉ. உரோ. க. உஅ:ச. ஙஇ: எ. அ. கலா. க.ஙூ, உக.
14 லூக். எ சஎ. க தீமோ. க ஸ்ச.

யைப்போல இருக்கிறதில்லை; ஒரே மனிதன் விழுந்ததினாலே அநேகர் மரித்திருக்க, மிகவும் அதிகமாய்ப் பராபரனுடைய கிருபையும் இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரேமனிதனுடைய கிருபையினால் வருகிற ஈவும் [11]அநேகர்மேலே பெருகியிருக்கின்றன.

ஙசு மேலும் அந்த ஈவு பாவம்செய்த ஒருவனால் உண்டான நியாயத்தீர்ப்பைப்போல இருக்கவில்லை; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபையுள்ள ஈவானது அநேக பாவங்களை நீக்கி நீதியாக்குதற்கு ஏதுவாயிருக்கின்றது.

ஙஎ அல்லாமலும் ஒரே மனிதன் விழுந்தபின்பு‡ அந்த ஒரே மனிதனாலே மரணம் ஆண்டுகொண்டிருக்கக் கிருபையாகிய பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள், இயேசுக்கிறிஸ்து என்னும் ஒரே மனிதனாலே மிகவும் அதிகமாய்ச் சீவனை அடைந்து ஆளுவார்கள்.

ஙஅ ஆகையால் ஒரே மனிதனுடைய தப்பிதத்தினாலே§ எல்லா மனிதருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே மனிதனுடைய நீதியினாலும்‖ [12]எல்லா மனிதருக்கும் சீவனாகிய நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.

ஙக அன்றியும் ஒரே மனிதன் கீழ்ப்படியாமலிருந்ததினாலே அநேகர்பாவிகளாக்கப்பட்டார்கள்; அதுபோல ஒரே மனிதன் கீழ்ப்படிந்ததினாலே அநேகர் நீதிமான்களாக்கப்பட்டு வருவார்கள்.

உய ¶ [13]மேலும் நியாயப்பிரமாணம்தோன்றினதினாலே தப்பிதம் பெருகிற்று; அப்படிப்பாவம் பெருகியிருந்தும் [14]கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம்மரணத்துக்கு ஏதுவாக (மனிதனை) ஆண்டுகொண்டதுபோல,

உக நம்முடைய கர்த்தராகிய

Digitized by Google

இயேசுக்கிறிஸ்துவிலூலே கிருபையானது, நித்திய சீவனுக்கு ஏதுவான நீதியிலூலே ஆண்டு கொண்டது.

சூ. அதிகாரம்.

க. பாவத்துக்கு மரித்த நாம் பாவத்தில் நிலைநிற்கக் கூடாதென்பதற்கு ஞானஸ்நானம் அடையாள மென்பது. ஙஉ. நீதியின் ஊழியத்துக்கு நம்மை ஒப்புவித்திருக்கிறதினாலும், பாவத்தின் சம்பளம் மரணமாயிருக்கிறதினாலும், பாவம் நம்மை இனி ஆளாதென்பது.

ஆகையால் நாம் என்ன சொல்லலாம்? [1]கிருபை பெருகும்படிக்கு, பாவத்திலே நிலைநிற்கக்கடவோம் என்று சொல்லலாமா?

உ அப்படிக் கூடாதே; [2]பாவத்திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?

ஊ [3]கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற* நாம் அனைவரும் [4]அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?

சு மேலும் [5]பிதாவின் மகிமையினூலே [6]கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் [7]புதிதான சீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு மரணத்திற்குள்ளான [8]ஞானஸ்நானத்தினூலே அவருடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

சுரு [9]ஆதலால் அவருடைய மரணத்திற்கு ஒப்பாக நாம் அவருடனே நாட்டப்பட்டவர்களாயிருக்க அவர் உயிரோடு எழுந்திருக்கதலுக்கு ஒப்பாகவும் அப்படியே இருப்போம்.

சுரு மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நாம் இனிப் பாவத்திற்கு ஊழியம்செய்யாதபடிக்கு, [10]பாவமாகிய சரீரம் அழிந்துபோகும் பொருட்டாக [11]நம்முடைய பழைய மனிதத்துவம் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டது.

எ ஆகையால் [12]மரித்தவன் பாவத்திற்கு விலக்கப்பட்டானே.†

கி. பி. சுரு.

1 உரோ. க. அ. எஇ. வச.
2 எக. வசனம். உரோ. எ. ச. கலா. உ. எக: க. எச. கொ லோ. க. உ. க பே. உ. உச.
3 கலா. க. உஎ.
* அல்லது பெறுதல்.
4 க கொரி. எஇ. உசு.
5 யோவா. உ. எக: எசு. சஎ.
6 உரோ. அ. எக. க கொரி. க.எச. உ கொரி.எசு.ச.
7 கலா. சு. எஇ. எபே. ச. உஉ, உச. கொலோ. க. சு.
8 கொலோ. உ. எஉ.
9 பிலி. க. எ, எச.
10 கொலோ. உ. எக.
11 கலா. உ. உஎ: இ.உச: சு. எச. எபே. ச. உஉ. கொலோ.க.இ, சு.
12 க பே. ச. க. † இதற்கு, பாவத்துக்கு நீக்கி நீதிமானாக்கப்பட்டான்.
13 உரோ.உ.எச.
14 வெளி. க.எ.அ.
15 எபி. சு. உஎ, உஅ.
16 லூக். உஎ.கஅ.
17 உ. வச.
18 கலா. உ. எசு.
19 சங். எசு. எசு: எஎசு. எசஉ.
20 உரோ.எ ச,சு: அ. உ. கலா.இ. எஅ.
21 உரோ. எ. இ. கொலோ க.இ. யாக். ச. க.
‡ இதற்கு, சாவினாலாக.
22 உரோ.வெ க. க பே. உ.உச: ச. உ.
23 க கொரி. சு. உசு.

அ மேலும் [13]கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்திருக்க,

க [14]மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்றும் மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாதென்றும் நாம் அறிந்தபடியால், அவருடனேகூடப் பிழைத்தும் இருக்கலாம் என்று நம்புகிறோம்.

ய அன்றியும் [15]அவர் பாவத்திற்காக ஒரேதரம் மரித்தார்; பின்பு [16]அவர் பிழைத்திருக்கிறது பராபரனுக்காக இருக்கிறது.

யக [17]அதுபோல நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்கள் என்றும், [18]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு பராபரனுக்குப் பிழைத்திருக்கிறவர்கள் என்றும் எண்ணிக்கொள்வீர்களாக.

யஉ ¶ ஆகையால் [19]சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தின் இச்சைகளுக்கு நீங்கள் கீழ்ப்படியத்தக்கதாக, பாவம் அதிலே ஆளாதிருப்பதாக.

யஊ அன்றியும் நீங்கள் நியாயப்பிரமாணத்தின்கீழ் அல்ல, கிருபையின்கீழ் இருக்கிறபடியால், [20]பாவம் உங்களைப் பலபந்தப்படுத்தமாட்டாது.

யச ஆதலால் [21]நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதிக்குரிய ஆயுதங்களாகப்‡ பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், [22]உங்களை மரித்தோரிலிருந்து பிழைக்கிறவர்கள் என்று பராபரனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகப் பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக.

யசு ¶ இதினூலே பொருதென்ன ஆயிற்று? [23]நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் இராமல் கிருபையின்கீழ்இருக்கிறபடியினூலே,பாவம் செய்யலாமென்ற பொருளா? அப்படி அல்லவே.

யசு மரணத்திற்கு ஏதுவான பாவத்துக்காலூலும் நீதிக்கு ஏதுவான

Digitized by Google

கீழ்ப்படிதலுக்காகிலும், [1] எதற்குக்கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள் என்று அறியாமலிருக்கிறீர்களா?

யஎ முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தீர்கள்; இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட *[2]உபதேசத்தின் பிரமாணத்திற்கு நீங்கள் மனச்சந்தோஷமாய்க் கீழ்ப்படிந்திருக்கிறபடியினாலே பராபரனுக்குத் தோத்திரம்.

யஅ இப்படி [3]நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

யக உங்கள் சரீரத்தின் பலஈனத்தின்நிமித்தம் மனிதர் பிரகாரமாகச் சொல்லுகிறேன்; அக்கிரமத்தை நடப்பிக்கும்படி (முன்னே) நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்பீர்களாக.

உய [4]பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாய் இருந்த காலத்திலே நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தீர்கள். †

உக [5]இப்பொழுது நீங்கள் வெட்கப்படுகிற காரியங்களினாலே அக்காலத்திலே உங்களுக்கு என்ன பிரயோசனம் உண்டாயிற்று? [6]மரணமே அவைகளின் முடிவாயிருக்கின்றது.

உஉ [7]இப்பொழுது நீங்கள் பாவத்தில்நின்று விடுதலையாக்கப்பட்டுப் பராபரனுக்கு அடிமைகளான பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுக்குப் பிரயோசனமாயிற்று; நித்தியசீவனே அதின் கடைசிப் பலனுயிருக்கின்றது.

உஊ [8]பாவத்தினால் வருகிற சம்

கி பி. சுபி.

1 மத். க. உ. யோவ. அ.உ. உ பே. உ. மக.

* கிரேக்கு. சீக்ஷ ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற.

2 உ தீமோ. க. மக.

3 யோவ. அ. கஉ. க கொரி. எ. உஉ. கலா. இ. க. க பே. உ. மக.

4 யோவ. அ. உச.

† கிரேக்கு, தீமையிலிட்டு சீக்ஷவர்கள்.

5 உரோ. எ. இ.

6 உரோ. க. கஉ.

7 யோவ. அ. கஉ.

8 க மோ. உ.மெ. உரோ. இ. மஉ. யாக். க. மஇ.

9 உரோ. உ. எ: இ. மெ, உக. க பே. க. ச.

10 க கொரி. எ. கசு.

11 மத். இ. கஉ.

12 கலா. இ.உஉ.

13 உரோ.அ. உ. கலா. உ. மசு: இ. மஎ. எபே. உ. மஇ. கொலோ. உ. மசு.

‡ அல்லது பாவவிபக்கங்கள்.

14 உரோ.சு.உக. கலா. இ. மசு: யாக். க. மஎ.

பளம் மரணம்; [9]பராபரனுடைய கிருபையுள்ள ஈவோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் உண்டான நித்தியசீவனே.

எ. அதிகாரம்.

க. உயிர் நீங்கின பின்பு நியாயப்பிரமாணம் மனுஷனை ஆளுகென்பது. ச. நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்திருந்தாலும், எ. அது பாவமாயிராமல், உஉ. பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாய் இருக்கிறதென்பது. மசு. பவுல்தானே அதைக் கைக்கொள்ளக்கூடாததின் நிமித்தம் விநோதப்படி றதைச் சொல்லியது.

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்; சகோதரரே, ஒரு மனிதன் உயிரோடிருக்குமளவும்மாத்திரம் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகின்றது என்று அறியீர்களா?

உ அதெப்படியென்றால் [10]புருஷனைக்கொண்ட ஸ்திரி தன் புருஷனுடைய சீவகாலமளவும் நியாயப்பிரமாணத்தினின்படியே அவனோடே சேர்க்கப்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்தபின்பு அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திற்கு நீக்கப்படுகிறாள்.

ஊ மேலும் [11]புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்று அழைக்கப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தில்நின்று விடுதலையாகி, வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல.

ச ¶ அப்படிப்போல என் சகோதரரே, நாம் [12]பராபரனுக்குக் கனியைக் கொடுக்கும்படிக்கு, மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்கள் ஆவதற்கு, நீங்களும் அவருடைய [13]சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்தில்நின்று நீங்க மரித்தவர்களானீர்கள்.

ரு நாம் சரீரத்தின்படி நடந்தகாலத்திலே நியாயப்பிரமாணத்திலே தோன்றிய பாவமான இச்சைகள், ‡ நாம் [14]மரணத்திற்கு ஏது

Digitized by Google

வான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக, நம்முடைய அவயவங்களிலே [1]பலஞ்செய்திருந்தன.

சு இப்பொழுது நாம் மரித்தவர்களாயிருக்க,* நாம் பழமையான எழுத்தின்படியல்ல, [2]புதுமையான ஆவியின்படி ஊழியம்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்தில் நின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

எ ¶ இதனாலே பொருள் என்ன ஆயிற்று? நியாயப்பிரமாணம் பாவமாயிருக்கின்றதென்பதோ? அப்படி அல்லவே; மேலும் [3]இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சிப்பைப்†பாவமென்று நான் அறியாமல் இருப்பேன். [4]ஆதலால், பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே அறிந்தேன்.

அ இப்படி [5]நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், பாவம் செத்ததாயிருக்கும்; ஆதலால் [6]பாவமானது கட்டளையினாலே இடம்பெற்று, சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது.

கூ இப்படியிருக்க, முன்னே நியாயப்பிரமாணம் இல்லாதபொழுது நான் சீவனுள்ளவனாயிருந்தேன்; கட்டளை வந்தபொழுது பாவம் திரும்ப உயிர்கொண்டது; நான் மரித்தேன்.

ய இப்படிப் பாவமானது கட்டளையினாலே இடம்பெற்று என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொலைசெய்ததினாலே,

யக [7]சீவனுக்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையை எனக்கு மரணத்தைக்கொடுக்கிறதென்று கண்டேன்.

யஉ [8]ஆகையால் நியாயப்பிரமாணமே பரிசுத்தமாயிருக்கின்றது, கட்டளையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கின்றது.

யஊ இப்படியானால் நன்மையானது என் மரணத்திற்கு எதுவாயிற்று என்று கேட்டால், அப்படி ஆகவே இல்லை; பாவமே எனக்கு அப்படி ஆயிற்று; பாவம் கட்டளையினாலே மிகவும் பெரிதான பாவமாகும்படிக்கு, அதுவே நலமானதினாலே எனக்கு மரணம் உண்டாக்குகிறதாகத் தோன்றிற்று.

யசு மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாய் இருக்கின்றது; (மனிதனாகிய) [9]நானே பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு,

யஙு மாம்சத்துக்கு உரியவனாய் இருக்கிறேன்; எப்படியெனில் நான் நடப்பிக்கிறதற்கு என் மனது சம்மதிக்கிறதில்லை.‡ [10]நான் விரும்புகிறதைச் செய்யாமல், வெறுக்கிறதையே செய்கிறேன்.

யசு இப்படி என் மனது விரும்பாததை நான் செய்திருக்க நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

யஎ ஆதலால் நானல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படி நடப்பிக்கின்றது.

யஅ அது எப்படியென்றால் நான் அறிந்திருக்கிறபடி மாம்சத்தில் நன்மையாகிய [11]எனக்குள்ளே நன்மை வாசமாயிருக்கிறதில்லை; நன்மை செய்வதற்கான விருப்பம் என்னிடத்திலே இருக்கின்றது; அப்படிச் செய்கிறதை என்னிடத்தில் காணேன்.

யக ஆதலால் எனக்கு விருப்பமான நன்மையை நான் செய்யாமல், எனக்கு விருப்பமில்லாத தீமையை நடப்பிக்கிறேன்.

உய அந்தப்படி எனக்கு விருப்பம் இல்லாததை நான் செய்கிறவனாயிருக்க நானல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கின்றது.

உக ஆனபடியினாலே நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்திலே தீமைசெய்யப்பண்ணுகிற பிரமாணத்தைக் காண்கிறேன்.

உஉ [12]என் உள்ளத்தோடே [13]பர

---

1 உரோ. க. கூ.
* அல்லது நம்மைக் கட்டியிருந்தது செத்திருக்க; உரோ. க. உ. ச. வ.
2 உரோ. உ. உக. உ கொரி. க. க.
3 உ மோ. உஅ. ஊ. ஐ மோ. ஐ. உக. அப். உஅ. கூ. உரோ. ஙூ. கூ.
† அல்லது பேராசையை.
4 உரோ. க. உஅ.
5 க கொரி. ஙஐ. ஐக.
6 உரோ. ச. ஙஐ: ஐ. உஅ.
7 க மோ. ஙஅ. ஐ. எசே. உஅ. ஙக, ஙூ, உக. உ கொரி. க. எ.
8 சங். ஙக. அ: ஙஎ. க அ, ஙகூ. க நீமோ. க. அ.
9 க இரா. உக. உஅ, உஐ. உ இரா. ஙா. ஙள.
‡ ஓரேகு, அறிகிறதில்லை; சங். க. கூ.
10 கலா. ஐ. ஙள.
11 க மோ. க. ஐ: அ. உக.
12 உ கொரி. ச. ஙக. எபே. க. ஙக. கொலோ. க க, ஐ.
13 சங் க. உ.

பரனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்.

உசு [1]என் அவயவங்களிலே [2]என் மனதின் பிரமாணத்துக்கு எதிராய்ப் போராடுகிற வேறு பிரமாணத்தைக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை அடிமையாக்கிக்கொள்ளுகிறது.

உச ஐயோ, நான் நிர்ப்பாக்கியமுள்ள மனிதன்; இந்த மரணத்திற்கு எதுவான சரீரத்தில் நின்று* யார் என்னை விடுதலையாக்குவார்.

உஎ [3]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே (என்னை விடுதலையாக்குகிற) பராபரனையே தோத்திரம்செய்கிறேன்; ஆதலால் நானே என் மனதினாலே பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்துக்கும் ஊழியம் செய்கிறேன்.

அ. அதிகாம்.

க. நித்தலைப் பற்றிக்கொண்டு நேச ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை வாதென்றும், இ. கூ. மாம்சத்துக்கேற்ற சிந்தையிலுல்லவரும் நிலை இன்னதென்றும், ச. டச. ஆவிக்கேற்ற சிந்தையினாலும், டஎ. பராபரனுடைய புத்திரராயிருப்பதினாலும் வரும் சன்மை இன்னதென்றும், கூ. பராபரன் நீதியாய்த் தீர்மானித்த தம்முடைய புத்திரரின் மகிமையான விடுதலைக்குச் சிருஷ்டிகளெல்லாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்குமென்றும், கஅ. பராபரனுடைய அன்பினின்று உத்தரவாதொன்றும் நீக்கமாட்டாதென்றும் காட்டியது.

ஆனபடியினாலே [4]மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படியே நடந்து, கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வராது.

உ கிறிஸ்து இயேசுவினாலே சீவனைக் கொடுக்கிற [5]ஆவியின் [6]பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்றிவைகளின் [7]பிரமாணத்தில் நின்று விடுதலையாக்கிற்றே.

கூ அது எப்படியெனில் [8]மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைப் [9]பராபரன் செய்ய, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும்† அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

கூ [10]மாம்சத்துக்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிற நம்மாலே நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படி ஆயிற்று.

கூ இப்படியிருக்க, [11]மாம்சத்துக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் [12]ஆவிக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்.

கூ [13]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‡ மரணத்துக்குஏதுவானது;ஆவிக்கு ஏற்ற சிந்தை§ சீவனுக்கும் சமாதானத்துக்கும் ஏதுவானது.

எ எப்படியென்றால், [14]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‖ பராபரனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும் [15]கீழ்ப்படியத் திராணியில்லாமலும்இருக்கிறபடியால், அது பராபரனுக்கு விரோதமான பகையாயிருக்கின்றது.

அ ஆனதால் மாம்சத்திற்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் பராபரனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள்.

கூ ¶ [16]பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்திற்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்; [17]கிறிஸ்துவினுடைய ஆவியை உடையவன் அல்லாதவன் அவருடையவன் அல்ல.

ய மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தபடியால், பாவத்தினிமித்தம் சரீரம் அழிந்துபோனாலும் ஆவியானது நீதியினிமித்தம் சீவனையிருக்கின்றது.

யக அன்றியும் இயேசுவை மரித்தோரில்நின்று எழுப்பினவரு

கி. பி. சுயே.

1 உரோ. க. கூ, கூ.
2 கலா. இ. டஎ.
* அல்லது மரணத்தின் சரீரத்தினின்று.
3 க கொரி. டஇ. இஎ.
4 ச. டச. கலா. இ கூ, உஇ.
5 க கொரி. டஇ. சஇ. உ கொரி. க. க.
6 யோவா. அ. கக. உரோ. க. டஅ, உஉ. கலா. உ. டகூ: இ. க.
7 உரோ. எ.உச, உஇ.
8 அப். டக. கக. உரோ. க. உடி. எபி.எ.டஅ,டகூ: டி. க, உ, டி, டச.
9 உ கொரி. இ. உக. கலா. க. டக.
† அல்லது பாவத்துக்காக.
10 க டச.
11 பேரா. க. க. க கொரி.உ.டச.
12 கலா. இ.உஉ, உஇ.
13 டக.டச.உரோ க. உக. கலா. க. அ.
‡ ஐரேக்கு,மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை; எ. டச.
§ ஐரேக்கு, ஆவியைச் சிந்திக்கிற சிந்தை.
14 யாக் ச. ச.
‖ ஐரேக்கு. மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை.
15 க கொரி. உ. டச.
16 க கொரி. க. டக: க. டக.
17 பேரா. க.கச. கலா.ச.க பிலி. க உடி. க பே. க. டக.

Digitized by Google

உக இப்பொழுது [1]நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற நிரியை இல்லாமல், பராபரனுக்குமுன்பாக நீதிமானுகும் வகை வெளிப்பட்டிருக்கின்றது; அதைக்குறித்து [2]நியாயப்பிரமாணமும் [3]தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகின்றன.

உஉ [4]இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினுலே பராபரன் வரப்பண்ணுகிற நீதி அதுவே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அதுவரும்.

உரு [5]வித்தியாசமே இல்லை; [6]எல்லாரும் பாவம்செய்து, பராபரனுடைய மகிமை அற்றவர்களாய் இருந்து,

உச [7]கைமாறில்லாமல் [8]அவருடைய கிருபையினுலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள்.

உரு [9]பராபரன் தாம் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களை [10]மன்னித்துவிட்டதைக்* குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாக, [11]இயேசுக்கிறிஸ்துவினுடைய இரத்தத்தில் விசுவாசமாய் இருக்கிறதினுலே வரும் கிருபைக்கு மூலாதாரமாக அவனையே ஏற்படுத்திவைத்தார்.†

உசு [12]இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை நீதிமானுக்குகிறதில் அவர் நீதியுள்ளவராய் இருக்கும்படிக்கு, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவே (அப்படிச் செய்தார்).

உஎ ¶ ஆனபடியினுலே [13]மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே; எந்தப் பிரமாணத்தினுலே என்றுல், கிரியைகளைக் குறிக்கிற பிரமாணத்தினுலே அல்ல, விசுவாசத்தைக் குறிக்கிற பிரமாணத்தினுலே அப்படி ஆயிற்று.

உஅ ஆதலால் [14]மனிதர்கள் நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினுலே அல்ல, விசுவாசத்தினுலே நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள் என்று தீர்க்கிறோம்.

உக அன்றியும் பராபரன் யூதருக்குமாத்திரம் தேவனுயிருக்கிறாரோ? மற்றத் தேசத்தாருக்கும் தேவனுயிருக்கிறார் அல்லவோ? மெய்யாய் அவர் மற்றத் தேசத்தாருக்கும் தேவனுயிருக்கிறார்.

ரூஎ தேவன் ஒருவரே; ஆகையால் [15]அவர் விருத்தசேதனம் உள்ளவர்களையும் விருத்தசேதனம் இல்லாதவர்களையும் விசுவாசத்தினுலே நீதிமான்களாக்கச் சித்தமாய் இருக்கிறார்.

ரூக இப்படியானுல் விசுவாசம் என்கிறதினுலே நாம் நியாயப்பிரமாணத்தை அழித்துப்போடுகிறோமா? அப்படி அல்லவே, நியாயப்பிரமாணத்தை (அதினுலே) நிலையாகவே நிறுத்துகிறோம்.

ச. அதிகாரம்.

க. ஆபிரகாமுடைய விசுவாசம். ஏ. அவன் சுன்னதடைவதற்குமுன்னமே அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஙக. அவனும், அவன் வித்தாரும் விசுவாசத்தினுலேயே வாக்குத்தத்தத்தைப் பெற்றது. ஙசு. விசுவாசிகள் எல்லாருக்கும் ஆபிரகாம் தகப்பனென்றது. உச. நம்முடைய விசுவாசமும் நமக்கு நீதியாக எண்ணப்படுமென்றது.

அன்றியும் நம்முடைய தகப்பனுகிய [16]ஆபிரகாம் சாரா (கருப்பங்களினுலே) என்னுஷ்டைப் பெற்றுக்கொண்டான்?

உ ¶ [17]ஆபிரகாம் கிரியைகளினுலே நீதிமானுக்கப்பட்டானுகில், அவன் (தன்னை) மேன்மையாகப் பாராட்டலாம்; ஆகிலும் பராபரனுக்குமுன்பாக அப்படி ஒன்றுமில்லை.

ரூ வேதவாக்கியம் எப்படிச் சொல்லுகிறதென்றுல், [18]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான்; அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டதென்று சொல்லுகின்றது.

ரூ அன்றியும் [19]கிரியைகளையுடை

இ. பி. சுவி.

1 அப். ஙஇ. ஙக. உரோ. க. ஙஎ. பிலி. ஙு. கூ.எபி. ஙக. சு. ழி.
2 யோவா.இ.சசு. அப். உக.உஉ.
3 உரோ. க. உ. எ பே. க. ஏ.
4 உரோ. சு.
5 உரோ. ஏ. ஙஉ. கலா. க. உஅ. கொலோ.க.ஙக.
6 கூ.வச.உரோ. ஙக. ஙக. கலா. க. உஉ.
7 உரோ. சு. ஙசு. எபே. உ. அ. தீத். க. இ, எ.
8 மத். உஏ. உஅ எபே. க. எ. கொலோ. க. ஙச.தீமோ. உ. க. எபி. கூ. ஙஉ. எபே.க ஙஅ,ஙசு.
9 அப். ஙஎ. கஏ. எபி. கூ. ஙஇ.
10 அப். ஙக. கஅ, ஙகூ. கதீமோ. க. ஙஇ.
* அல்லது பாராமல் விட்டதை.
11 கொலோ. க உஏ.
† அல்லது வெளிப்படுத்தினுர்.
12 க மோ. ஙசு. ஙஇ. க யோ. உ. உ: சு. ஏ.
13 உரோ. உ.ஙஎ, உக: சு. உ. கொரி.க உசு, கக.எபே.உ.சு.
14 அப். ஙக. கஅ, ஙகூ: உஏ. உக, உஉ. வச.
உரோ. அ க. கலா. உ. ஙக.
15 உரோ. ஏ.ஙஉ, ஙக. கலா. க.அ, உஏ, உஅ.
16 ஏசா. இக. உ. மத். க. கூ. யோவா. அ கக, ககூ. உ கொரி. ஙக. உஉ.
17 உரோ. க.உஏ, உஎ, உஅ.
18 கமோ. ஙஇ.க. கலா.க.க. பாக். உ. உக.
19 உரோ. ஙக.கூ.

Digitized by Google

யவனுக்கு வருகிற கூலி கிருபை யென்று எண்ணப்படாமல், கட னென்று எண்ணப்படும்.

கூ கிரியைகளை உடையவனு யிராமல் [1]துன்மார்க்கனை நீதிமா னுக்குகிறவர்மேல் விசுவாசமாயி ருந்தால், அவனுடைய விசுவாச மே அவனுக்கு நீதியென்று எண் ணப்படும்.

கூ ¶ அந்தப்படி தாவீதும் கிரி யைகள் இல்லாமல், பராபரனுலே நீதிமான் என்று எண்ணப்படுகிற மனிதனுடைய பாக்கியத்தைக் காண்பிக்க,

எ [2]எவர்களுடைய அக்கிரமங் கள் மன்னிக்கப்பட்டனவோ எ வர்களுடைய பாவங்கள் மூடப் பட்டனவோ அவர்களே பாக்கி யவான்கள் என்றும்,

அ எவனுடைய பாவத்தைப் பரா பரன் எண்ணுமல் இருக்கிறாரோ அவனே பாக்கியவான் என்றும் சொல்லியிருக்கிறான்.

க ¶ இந்தப் பாக்கியம் விருத்த சேதனம் உள்ளவனுக்குமாத்திர மா, அன்றி, விருத்தசேதனம் இல் லாதவனுக்கு வருமோ? (இரு வருக்குமே வரும்;) அது எப்படி யென்றுல், நாங்கள் நிச்சயித்த படி விசுவாசமே ஆபிரகாமுக்கு நீதியென்று எண்ணப்பட்டது.

ங ¶ எப்பொழுது அது அவனு க்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனம் உள்ளவ னுய் இருந்தபொழுதோ, விருத்த சேதனம் இல்லாதவனுய் இருந்த பொழுதோ (என்றுல்) விருத்த சேதனம் உள்ளவனுயிருந்தபொ ழுது அல்ல, விருத்தசேதனம் இல் லாதவனுயிருந்தபொழுதே அப் படி எண்ணப்பட்டது.

ச [3]மேலும் விருத்தசேதனம் இல்லாத காலத்திலே அவன் விசு வாசத்தினுலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதன அ டையாளத்தைப் பெற்றான்; வி ருத்தசேதனம் இல்லாமல் விசு

கி. பி. சுஎ.

1 யோச.உச.உ.

2 சங். கஉ. க,உ.
3 க மோ. ஙள. ஙி.
4 தூக். ஙசு. சு. ஙஉ, ஙசு. வச. கலா. சு. எ.
5 க மோ. ஙள. ச. ழி. கலா. சு. உசு.

6 கலா. சு. ஙஅ.

7 உரோ. சு. உஙி: ஙி. ஙக, உஙி: எ. அ, ஙி, ஙக. க கொரி. ஙங. கே. உ கொரி. சு.எ,சு கலா.சு. ஙி, ஙசு. க யோ. சு. ச.

8 உரோ. சு. உச.

9 கலா. சு. ஙஉ.

10 சோ. கே. உ. உரோ. சு அ.

வாசமுள்ளவர்களும் நீதிமான்கள் ஆக்கப்படும்பொருட்டாக, [4]அப் படிப்பட்ட விசுவாசிகளுக்கு அ வன் தகப்பனுய் இருக்கும்படிக் கும்,

ஙஉ விருத்தசேதனத்தை உடை யவர்களாய்மாத்திரம் அல்ல, நம் முடைய முன்னேராகிய ஆபிர காம் விருத்தசேதனம் இல்லாத காலத்திலே நடந்த விசுவாசமா ர்க்கத்தில் நடக்கிறவர்களாயும் இ ருக்கிறவர்கள் நீதிமான்கள் ஆக் கப்படும்பொருட்டாக, அப்படிப் பட்ட விருத்தசேதனம் உள்ளவர் களுக்கும் தகப்பனுயிருக்கும்படி க்கும் (அந்த அடையாளத்தைப் பெற்றான்).

ஙஊ ¶ அன்றியும், [5]உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத் தத்தம் ஆபிரகாமுக்கும் அவனு டைய சந்ததிக்கும் நியாயப்பிர மாணத்தினுல் வருகிற நீதியினுல் அல்ல, விசுவாசத்தினுல் வருகிற நீதியினுலே கிடைத்தது.

ஙச ஆதலால் [6]நியாயப்பிரமாண த்தினுல் வருகிற நீதியை உடை யவர்கள் சுதந்தரராஞல், விசுவா சம் வீணுய்ப்போம்; வாக்குத்தத்த மும் அபத்தமாய்ப்போம்.

ஙரு மேலும், [7]நியாயப்பிரமாணம் கோபாக்கினையை நடப்பிக்கின்ற து; நியாயப்பிரமாணம் இல்லா விட்டால், அக்கிரமமும் தோன்று தே.

ஙசு ஆதலால் அந்த வாக்குத்தத் தம் சந்ததியார் எல்லாருக்கும் நிச் சயமாய் இருக்கும்பொருட்டாக, (அந்தச் சுதந்தரம்) [8]கிருபையினுல் உண்டாகும்படிக்கு, அது விசுவா சத்தினுலே வருகின்றது; [9]நியா யப்பிரமாணத்தை உடையவர்க ளாகிய சந்ததியாருக்குமாத்திரம் அல்ல, அநேகதேசத்தாருக்கு உன் னைத் தகப்பனென்று ஏற்படுத்தி னேன் என்று எழுதியிருக்கிறபடி, [10]நம்மெல்லாருக்கும் தகப்பனுகி ய ஆபிரகாமைப்போல, விசுவா

Digitized by Google

சத்தை உடையவர்களான சந்ததி யாருக்கும் அது நிச்சயமாயிருக்கும்.

யஎ [1]மரித்தோனை உயிர்ப்பித்து, [2]இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவராகிய பராபரனை அவன் விசுவாசித்துக் கொண்டு அவராலே* [3](அப்படிப்பட்ட தகப்பனுனன்).

யஅ ¶ [4]உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, அவன், தான் அநேக தேசத்தாருக்குத் தகப்பனுவதை நம்புதற்குவதுவில்லாமலிருந்தும், நம்பிக்கையோடே அதை விசுவாசித்தான்.

யக அவன் விசுவாசத்திலே பலனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதானபடியால், [5]தன் சரீரம் செத்துப்போனதையும் சாராள் கருப்பம் உண்டாகாமலிருந்ததையும் எண்ணுமல் இருந்தான்.

உய பராபரனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல்,

உக பராபரன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்றவும் [6]வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று உறுதியாய் நினைத்து, பராபரனைப் புகழ்ந்து, பலத்த விசுவாசமுள்ளவனுனன்.

உஉ ஆகையால் அதுவே அவனுக்கு நீதியென்று எண்ணப்பட்டது.

உஊ ¶ [7]அது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டதென்பது அவனுக்காகமாத்திரம் அல்ல, நமக்காகவும் எழுதியிருக்கின்றது.

உச [8]நம்முடைய அக்கிரமங்களின்நிமித்தம் மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டும் நம்மை நீதிமான்களாக்குதற்கு,

உஙி [9]எழுப்பப்பட்டும் இருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுவை [10]மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினவனை விசுவாசித்

கி. பி. சுயி.

1 உரோ. அ. ஙூ. எபே. உ. க, இ.
2 உரோ.கூ.உக. க கொரி.க.உஅ. க பே. உ. ஏ. அல்லது அவைப்போல.
3 க மோ. ஙூ. இ.
4 க மோ. ஙஇ.இ.
5 க மோ.ஙூ.ஙூ: ஙஅ. ஙக. எபி. ஙக.ஙக,ஙஉ.
6 சங். ஙஇ. க. லூக்.க உஎ,சஇ. எபி. ஙக ஙகூ.
7 உரோ. ஙஇ. ச. க கொரி. ஙூ. க, ஙக.
8 ஏசா. ஙூ. இ, க. உரோ. க. உஇ: இ.க: அ. கஉ. உ கொரி. இ. உக. கலா. க. க.கபே.உ. உச: க. ஙஅ. எபி. கூ. உஅ.
9 க கொரி. ஙஇ. ஙஎ.கபே.கூ.உக.
10 அப். உ. உச: ஙூ. கஏ.
11 ஏசா.கஉ. ஙஎ. யோவா. ஙக. கூ. உரோ. க. உஅ, கஏ.
12 எபே. உ. ஙச. கொலோ.க.உஏ.
13 கொரி.ஏஇ.க.
14 யோவா. ஏ. கூ: ஙச. க. எபே. உ.ஏஅ: க. ஙஉ. எபி. ஏ. ஙக.
15 எபி. க. க.
16 யாக்.க.உ.
17 யாக்.க.ஙஉ.
18 மத்.இ.ஙக,ஙஉ. அப். இ. சக. உ கொரி. ஙஉ. ஏ. பிலி. உ.ஙஎ. யாக்.க. க, ஙஉ. க பே. க. ஙச.
19 உ கொரி. க. உஉ.கலா.ச.க. எபே.க.ஙக,ஙச.
20 பிலி. க. உஏ.
† அல்லது குறித்த; லூ. ச. ச.
21 அ. வசனம். உரோ. ச. உச.
22 யோவா. ஙஇ. ஙக. க பே. க. ஙஅ. க யோ. உ. ஙக: ச. கூ, ஏ.

துக்கொண்டால், நமக்கும் அது அப்படியே எண்ணப்படும்.

ரு. அதிகாரம்.

க. விசுவாசத்தினுல் நீதிமான்களைப் பராபரனிடத்தில் சமாதானம் பெற்று, உ. சம்பிக்கையில் சந்தோஷமடைந்து, அ. பாவிகளாயிருந்தபோதும் அவருடைய இரத்தத்தின் புண்ணியத்தினால் தம் ஒப்புரவடைந்தால், ஏ. அது மிகத்துணிவாய் இரட்சிக்கப்படுவோம் என்றது. ஙஉ பாவமும் மரணமும், ஆதாமினுல் வந்ததுபோல, ஙச. நீதியும், சீவனும் இயேசுகிறிஸ்துவினுல் வந்தென்பது. ஙஎ. பாவம் பெருகியிருந்தும் கிருபை அதிகமாய்ப் பெருகுமென்பது.

இவ்விதமாய் [11]நாம் விசுவாசத்தினுலே நீதிமான்களாக்கப்பட்டபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு [12]நாம் பராபரனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.

உ [13]மேலும் நாம் நிற்கின்ற கிருபைக்குள் பிரவேசிக்குதலையும் [14]நாம் அவனைக்கொண்டு விசுவாசத்தினுலே பெற்றும், [15]பராபரனுடைய மகிமையை அடைவோம் என்று நம்பி மேன்மை பாராட்டியும் இருக்கிறோம்.

ஊ ¶ அதுவுமல்லாமல் [16]உபத்திரவம் பொறுமையையும், [17]பொறுமை நிச்சயத்தையும், நிச்சயம் நம்பிக்கையையும் உண்டாக்குகின்றன என்று நாங்கள் அறிக்கிருந்து;

ச [18]உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம்.

ஙி மேலும் [19]நமக்குக் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியினுலே பராபரனுடைய அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், [20]அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ஙூ ¶ அன்றியும் நாம் பெலனற்றவர்களாய் இருக்கையில், கிறிஸ்து தகுதியான† காலத்திலே [21]அக்கிரமக்காரருக்காக மரித்தார்.

ஙஎ நீதிமானுக்காக மற்றொருவன் மரிக்கிறது அருமையாயிருக்கும்; நல்லவனுக்காக ஒருவேளை மற்றொருவன் மரிக்கத் துணிவான்.

அ கிறிஸ்துவோ [22]நாம் பாவிகளா

Digitized by Google

மிருக்கையிலே நமக்காக மரித்த தினாலே, பராபரன் நமதுமேல் வைத்த அன்பை விளங்கப்பண் ணினார்.

க இப்படி நாம் [1]அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக் கப்பட்டிருக்க (வரும் [2]கோபாக் கினையில் நின்று அவராலே மிக வும் அதிகமாய் இரட்சிக்கப்படு வோமே).

ச நாம் [3]பராபரனுக்குப் பகை ஞராயிருக்கையில், அவர் குமார னுடைய மரணத்தினாலே [4]அவரு டனே ஒப்புரவாக்கப்பட்டோமா னால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் [5]அவருடைய சீவனாலே மிக வும் அதிகமாய் இரட்சிக்கப்படு வோமே.

ய ¶ அதுவும்மல்லாமல் இப்பொ ழுது ஒப்புரவாக்குதலை* நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடை ய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாய் நாம் பராபரனைக் குறித் து [6]மேன்மைபாராட்டுகிறோம்.

யஉ ¶ என்னத்தினாலென்றால், [7]ஒரே மனிதனாலே பாவமும், பா வத்தினாலே மரணமும் [8]உலகத்தி லே பிரவேசித்தபின்பு எல்லாமனி தரும் பாவிகளானபடியினாலே,† மரணம் எல்லா மனிதருக்கும் வந் ததுபோல, (கிறிஸ்துவினாலே எல் லாருக்கும் ஒப்புரவாக்குதல் உண் டாயிற்று).

யக நியாயப்பிரமாணம்வருதற்கு முன்னேபாவம் உலகத்தில் இருந் தது; நியாயப்பிரமாணம் இல்லாதி ருந்தால், [9]பாவம் எண்ணிக்கைப் படமாட்டாது.

யச அப்படியிருந்தும், மரணமா னது ஆதாம்முதல் மோசேவனைக் கும் ஆதாமின் மீறுதலுக்கு ஒப் பாய்ப் பாவம்செய்யாதவர்களை யும் ஆண்டுகொண்டது; [10]அந்த ஆதாம், பின்பு வந்தவருக்கு அ டையாளமானவன்.

யஞ ஆனாலும் கிருபையுள்ள ஈ வின் சங்கதி விழுதலின் சங்கதி யைப்போல இருக்கிறதில்லை; ஒ ரே மனிதன் விழுந்ததினாலே அ நேகர் மரித்திருக்க, மிகவும் அதி கமாய்ப் பராபரனுடைய கிருபை யும் இயேசுக்கிறிஸ்து என்னும் ஒ ரே மனிதனுடைய கிருபையினால் வருகிற ஈவும் [11]அநேகர்மேலே பெருகியிருக்கின்றன.

யசு மேலும் அந்த ஈவு பாவம்செய் த ஒருவனால் உண்டான நியாயத் தீர்ப்பைப்போல இருக்கவில்லை; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தின்நி மித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந் தது; கிருபையுள்ள ஈவானது அ நேக பாவங்களை நீக்கி நீதியாக்கு தற்கு ஏதுவாயிருக்கின்றது.

யஎ அல்லாமலும் ஒரே மனிதன் விழுந்தபின்பு‡ அந்த ஒரே மனி தனாலே மரணம் ஆண்டுகொண்டி ருக்கக் கிருபையாகிய பரிபூரணத் தையும் நீதியாகிய ஈவின் பரிபூர ணத்தையும் பெறுகிறவர்கள், இ யேசுக்கிறிஸ்து என்னும் ஒரே ம னிதனாலே மிகவும் அதிகமாய்ச் சீவனை அடைந்து ஆளுவார்கள்.

யஅ ஆகையால் ஒரே மனிதனு டைய தப்பிதத்தினாலே§ எல்லா மனிதருக்கும் ஆக்கினைக்கு ஏது வான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே மனிதனுடைய நீதியினா லும்‖ [12]எல்லா மனிதருக்கும் சீவ னுகிய நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.

யக அன்றியும் ஒரே மனிதன் கீழ்ப்படியாமலிருந்ததினாலே அ நேகர்பாவிகளாக்கப்பட்டார்கள்; அதுபோல ஒரே மனிதன் கீழ்ப் படிந்ததினாலே அநேகர் நீதிமான் களாக்கப்பட்டு வருவார்கள்.

உய ¶ [13]மேலும் நியாயப்பிரமா ணம்தோன்றினதினாலே தப்பிதம் பெருகிற்று; அப்படிப் பாவம்பெ ருகியிருந்தும் [14]கிருபை அதிக மாய்ப் பெருகிற்று. ஆதலால் பா வம்மரணத்துக்கு ஏதுவாக (மனித னை) ஆண்டுகொண்டதுபோல,

உக நம்முடைய கர்த்தராகிய

கி. பி. சுய.

1 உரோ. க.உஒ. எபே. உ. ய. எபி. க. ச. க வோ. க. எ.

2 உரோ. க. டஅ. க தெச. க. க.

3 உரோ. அ.கூ.

4 உ கொரி. இ. டஅ, டக. எபே. உ. டக. கொலோ. க. உ. உஉ.

5 பேரள. இ. உக: டச. டக. உ கொரி. ச. ட, டக.

* அல்லது பாவ நிவர்த்தியை; எ.வச. உகொரி. இ. டஅ, டக.

6 உரோ. உ.எ: க. உக, டட. கலா. ச. க.

7 க மோ. க. க. க கொரி. டஇ. உக.

8 க மோ. உ. டஎ. உரோ. க. உக. க கொரி. டஇ. உக.

† அல்லது அவனில் பாவிகளாபடியினாலே.

9 உரோ. ச. டஇ. க பேரள. உ. ச.

10 க கொரி. டஇ. உக, உஉ, சஇ.

11 எசா. இக, டக. மத். உடி. உஅ: உக. உஅ.

‡ அல்லது ஒரே பாவத்தினால்.

§ அல்லது ஒரே தப்பிதத்தினால்.

‖ அல்லது ஒரே நீதியினால்.

12 பேரள. டஉ. கஉ. எபி. உ.க.

13 பேரள. டஇ. உஉ. உரோ. க. உடி: ச. டஇ: எ. அ. கலா. உ.க, உக.

14 லூக். எ ச எ. க தீமோ. க.டச.

Digitized by Google

இயேசுக்கிறிஸ்துவினூலே கிரு பையானது, நித்திய சீவனுக்கு ஏதுவான நீதியினூலே ஆண்டு கொண்டது.

சு. அதிகாரம்.

க. பாவத்துக்கு மரித்த நாம் பாவத்தில் இலகிதக் கூடாதென்பதற்கு ஞானஸ்நானம் அடையாள மென்பது. ஙஉ. நீதியின் ஊழியத்துக்கு நம்மை ஒப்புவித்திருக்கிறதினாலும், பாவத்தின சம்பளம் மரணமாயிருக்கிறதினாலும், பாவம் நம்மை இனி ஆளாதென்பது.

ஆகையால் நாம் என்ன சொல் லலாம்? [1]கிருபை பெருகும்படிக் கு, பாவத்திலே நிலைநிற்கக்கட வோம் என்று சொல்லலாமா?

உ அப்படிக் கூடாதே; [2]பாவத் திற்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?

ரூ [3]கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம்பெற்ற* நாம் அனை வரும் [4]அவருடைய மரணத்திற்கு உள்ளாக ஞானஸ்நானம் பெற்ற தை அறியாமலிருக்கிறீர்களா?

சு மேலும் [5]பிதாவின் மகிமையி னூலே [6]கிறிஸ்து மரித்தோரிலிருந் து எழுப்பப்பட்டதுபோல, நா மும் [7]புதிதான சீவனுள்ளவர்க ளாய் நடந்துகொள்ளும்படிக்கு மரணத்திற்குள்ளான [8]ஞானஸ்நா னத்தினூலே அவருடனே கூட அடக்கம்பண்ணப்பட்டோம்.

ருு [9]ஆதலால் அவருடைய மர ணத்திற்கு ஒப்பாக நாம் அவருட னே நாட்டப்பட்டவர்களாயிருக் க அவர் உயிரோடு எழுந்திருக்கு தலுக்கு ஒப்பாகவும் அப்படியே இருப்போம்.

சுரு மேலும் நமக்குத் தெரிந்திருக் கிறபடி நாம் இனிப் பாவத்திற்கு ஊழியம்செய்யாதபடிக்கு, [10]பா வமாகிய சரீரம் அழிந்துபோகும் பொருட்டாக [11]நம்முடைய ப ழைய மனிதத்துவம் அவரோ டேகூடச் சிலுவையில் அறையப் பட்டது.

எ ஆகையால் [12]மரித்தவன் பா வத்திற்கு விலக்கப்பட்டானே.†

கி. பி. சுஎ.

1 உரோ. க. அ. ஙஅ. வச.
2 ஙக. வசனம். உரோ. எ. ச. கலா. உ. ஙக: க. ம. கொ லோ. க. உ. க பே. உ. உச.
3 கலா. க. உஎ.
* அல்லது பெ றுகிற.
4 க கொரி. ஙஇ. உசு.
5 பேரா. உ. ஙக: ஙக. சஅ.
6 உரோ. அ. ஙக. க கொரி. க.ஙச. உ கொரி.ஙக.ச.
7 கலா. க. ஙஇ. எபே. ச. உஉ, உச. கொலோ. க. சு.
8 கொலோ. உ. ஙஉ.
9 பிலி. க. ஐ, ஙச.
10 கொலோ. உ. ஙக.
11 கலா. உ, உஐ: இ.உச: சு. ஙச. எபே. ச. உஉ. கொலோ.க.இ, சு.
12 க பே. ச. க.
† கிரேக்கு, பா வத்துக்கு சீவ்வி சீதிமானாக்கப்ப ட்டான்.
13 உதீமோ.உ.ஙச.
14 வெளி. க.ஙஅ.
15 எபி. சு. உஎ, உஅ.
16 லூக். உஐ.சஅ.
17 உ. வச.
18 கலா. உ. ஙசு.
19 சங். ஙசு. ஙக: ஙஙசு. சகக.
20 உரோ.எ ச,க: அ. உ. கலா.இ. ஙஅ.
21 உரோ. எ. இ. கொலோ க.இ. யாக். ச. க.
‡ கிரேக்கு, சரு வினாக.
22 உரோ. ஙஉ க. க பே. உ.உச: ச. உ.
23 க கொரி. சு. உக.

அ மேலும் [13]கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்திருக்க,

க [14]மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையே ன்றும் மரணம் இனி அவரை ஆண் டுகொள்ளாதென்றும் நாம் அறி தபடியால், அவருடனேகூட பிழைத்தும் இருக்கலாம் என்ற நம்புகிறோம்.

ம அன்றியும் [15]அவர் பாவத்தி காக ஒரேதரம் மரித்தார்; பின்பு [16]அவர் பிழைத்திருக்கிறது பர பரனுக்காக இருக்கிறது.

யக [17]அதுபோல நீங்களும் உங் களைப் பாவத்திற்கு மரித்தவர்கள் என்றும், [18]நம்முடைய கர்த்தர் கிய இயேசுக்கிறிஸ்துவைக்கொ ண்டு பராபரனுக்குப் பிழைத்தி ருக்கிறவர்கள் என்றும் எண்ணிக் கொள்வீர்களாக.

யஉ ¶ ஆகையால் [19]சாவுக்கே மான உங்கள் சரீரத்தின் இச்சை களுக்கு நீங்கள் கீழ்ப்படியத்தக்க தாக, பாவம் அதிலே ஆளாதிரு ப்பதாக.

யஙு அன்றியும் நீங்கள் நியாயப் பிரமாணத்தின்கீழ் அல்ல, கிரு பையின்கீழ் இருக்கிறபடியால், [20]பாவம் உங்களைப் பலபந்தப்ப டுத்தமாட்டாது.

யச ஆதலால் [21]நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதிக்குரிய ஆயு தங்களாகப்‡ பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், [22]உங்களை மரித்தோ ரிலிருந்து பிழைக்கிறவர்கள் என் று பராபரனுக்கு ஒப்புக்கொடுத் து, உங்கள் அவயவங்களை நீதிக்கு ரிய ஆயுதங்களாகப் பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பீர்களாக.

யரு ¶ இதினூலே பொருதென் ன ஆயிற்று? [23]நாம் நியாயப்பிரமா ணத்தின்கீழ் இராமல் கிருபை யின்கீழிருக்கிறபடியினூலே, பா வம் செய்யலாமென்ற பொருளா? அப்படி அல்லவே.

யசு மரணத்திற்கு ஏதுவான பாவ த்துக்காலும் நீதிக்கு ஏதுவான

Digitized by Google

கீழ்ப்படிதலுக்காகிலும், [1] எதற்குக்கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாய் இருக்கிறீர்கள் என்று அறியாமலிருக்கிறீர்களா?

ரூ முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தீர்கள்; இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட* [2]உபதேசத்தின் பிரமாணத்திற்கு நீங்கள் மனச்சந்தோஷமாய்க் கீழ்ப்படிந்திருக்கிறபடியினாலே பராபரனுக்குத் தோத்திரம்.

ரூ இப்படி [3]நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட பின்பு, நீதிக்கு அடிமைகளானீர்கள்.

ரூ உங்கள் சரீரத்தின் பலஈனத்தின்நிமித்தம் மனிதர் பிரகாரமாகச் சொல்லுகிறேன்; அக்கிரமத்தை நடப்பிக்கும்படி (முன்னே) நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுப்பீர்களாக.

ரூ [4]பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாய் இருந்த காலத்திலே நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தீர்கள். †

ரூ [5]இப்பொழுது நீங்கள் வெட்கப்படுகிற காரியங்களினாலே அக்காலத்திலே உங்களுக்கு என்ன பிரயோசனம் உண்டாயிற்று? [6]மரணமே அவைகளின் முடிவாயிருக்கின்றது.

ரூ [7]இப்பொழுது நீங்கள் பாவத்தில்நின்று விடுதலையாக்கப்பட்டுப் பராபரனுக்கு அடிமைகளான பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுக்குப் பிரயோசனமாயிற்று; நித்தியசீவனே அதின் கடைசிப் பலனுயிருக்கின்றது.

ரூ [8]பாவத்தினால் வருகிற சம்பளம் மரணம்; [9]பராபரனுடைய கிருபையுள்ள ஈவோ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினால் உண்டான நித்தியசீவனே.

கி பி. சுயி.

1 மத். க. உ. யோவா. அ.க.ச. உ பே. உ. ஙக.

* ஒரேக்கு. சீக்கச் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற.

2 உ தீமோ. க. ஙக.

3 யோவா. அ. கூ. க கொரி. எ. உ. கலா. இ. க. க பே. உ. ஙக.

4 யோவா. அ. கச.

† ஒரேக்கு, நீதியைவிட்டு நீங்கினவர்கள்.

5 உரோ. எ. இ.

6 உரோ. க. கூ.

7 யோவா. அ. கூ.

8 க மோ. உ.ஙள. உரோ. இ. ஙூ. யாக். க. ஙஇ.

9 உரோ. உ. எ: இ. ஙள, உக. க பே. க. ச.

10 க கொரி. எ. ஙக.

11 மத். இ. கூ.

12 கலா. இ.ஒ.உ.

13 உரோ.அ. உ. கலா. உ. ஙக: இ. ஙஅ. எபே. உ. ஙஇ. கொலோ. உ. ஙச.

‡ அல்லது பாவ விபக்கங்கள்.

14 உரோ.க.உக. கலா. இ ஙக: யாக். க. ஙஎ.

எ. அதிகாரம்.

க. உயிர் மீண்டெனபின்பு நியாயப்பிரமாணம் மனுஷனை ஆளாதென்பது. ச. நாம் நியாயப்பிரமாணத்துக்கு மரித்திருந்தாலும், எ. அது பாவமாயிராமல், ஙஉ. பரிசுத்தமும், நீதியும், நன்மையுமாய் இருக்கிறதென்பது. ஙக. பவுல்தானே அதைக்கைக்கொள்ளக்கூடாததின் நிமித்தம் விளம்பிறதைச் சொல்லியது.

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன்; சகோதரரே, ஒரு மனிதன் உயிரோடிருக்குமளவும்மாத்திரம் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகின்றது என்று அறியீர்களா?

ரூ அதெப்படியென்றால் [10]புருஷனைக்கொண்ட ஸ்திரி தன் புருஷனுடைய சீவகாலமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனோடே சேர்க்கப்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்தபின்பு அவள் தன் புருஷனுடைய பிரமாணத்திற்கு நீக்கப்படுகிறாள்.

ரூ மேலும் [11]புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம்பண்ணினால் விபசாரியென்று அழைக்கப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தில்நின்று விடுதலையாகி, வேறொரு புருஷனை விவாகம்பண்ணினாலும் விபசாரியல்ல.

ரூ ¶ அப்படிப்போல என் சகோதரரே, நாம் [12]பராபரனுக்குக் கனியைக் கொடுக்கும்படிக்கு, மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்கள் ஆவதற்கு, நீங்களும் அவருடைய [13]சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்தில்நின்று நீங்க மரித்தவர்களானீர்கள்.

ரூ நாம் சரீரத்தின்படி நடந்தகாலத்திலே நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவமான இச்சைகள், ‡ நாம் [14]மரணத்திற்கு ஏது

Digitized by Google

வான கனிகளைக் கொடுக்கத்தக்க தாக, நம்முடைய அவயவங்களிலே [1]பலஞ்செய்திருந்தன.

சு இப்பொழுது நாம் மரித்தவர்களாயிருக்க,* நாம் பழமையான எழுத்தின்படியல்ல, [2]புதுமையான ஆவியின்படி ஊழியம்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்தில் நின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

எ ¶ இதனாலே பொருள் என்ன ஆயிற்று? நியாயப்பிரமாணம் பாவமாயிருக்கின்றதென்பதோ? அப்படி அல்லவே; மேலும் [3]இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சிப்பைப்†பாவமென்று நான் அறியாமல் இருப்பேன். [4]ஆதலால், பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினாலே அறிந்தேன்.

அ இப்படி [5]நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், பாவம் செத்ததாயிருக்கும்; ஆதலால் [6]பாவமானது கட்டளையினாலே இடம்பெற்று, சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது.

கூ இப்படியிருக்க, முன்னே நியாயப்பிரமாணம் இல்லாதபொழுது நான் சீவனுள்ளவனாயிருந்தேன்; கட்டளை வந்தபொழுது பாவம் திரும்ப உயிர்கொண்டது; நான் மரித்தேன்.

ய இப்படிப் பாவமானது கட்டளையினாலே இடம்பெற்று என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொலைசெய்ததினாலே,

யக [7]சீவனுக்காகக் கொடுக்கப்பட்ட கட்டளையை எனக்கு மரணத்தைக்கொடுக்கிறதென்றுகண்டேன்.

யஉ [8]ஆகையால் நியாயப்பிரமாணமே பரிசுத்தமாயிருக்கின்றது, கட்டளையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கின்றது.

யஊ இப்படியானால் நன்மையானது என் மரணத்திற்கு எதுவாயிற்று என்றால், அப்படி ஆகவே இல்லை; பாவமே எனக்கு அப்படி ஆயிற்று; பாவம் கட்டளையினாலே மிகவும் பெரிதான பாவமாகும்படிக்கு, அதுவே நன்மையானதினாலே எனக்கு மரணம் உண்டாக்குகிறதாகத் தோன்றிற்று.

யசு மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாய் இருக்கின்றது; (மனிதனாகிய) [9]நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு,

யஙு மாம்சத்துக்கு உரியவனாய் இருக்கிறேன்; எப்படியெனில் நான் நடப்பிக்கிறதற்கு என் மனது சம்மதிக்கிறதில்லை.‡ [10]நான் விரும்புகிறதைச் செய்யாமல், பகைக்கிறதையே செய்கிறேன்.

யசு இப்படி என் மனது விரும்பாததை நான் செய்திருக்க நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

யஎ ஆதலால் நானல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படி நடப்பிக்கின்றது.

யஅ அது எப்படியென்றால் நான் அறிந்திருக்கிறபடி மாம்சதேகியாகிய [11]எனக்குள்ளே நன்மை வாசமாயிருக்கிறதில்லை; நன்மை செய்வதற்கான விருப்பம் என்னுடனே இருக்கின்றது; அப்படிச் செய்கிறதை என்னிடத்தில் காணேன்.

யக ஆதலால் எனக்கு விருப்பமான நன்மையை நான் செய்யாமல், எனக்கு விருப்பமில்லாத தீமையை நடப்பிக்கிறேன்.

உய அந்தப்படி எனக்கு விருப்பம் இல்லாததை நான் செய்கிறவனாயிருக்க நானல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கின்றது.

உக ஆனபடியினாலே நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்திலே தீமைசெய்யப்பண்ணுகிற பிரமாணத்தைக் காண்கிறேன்.

உஉ [12]என் உள்ளத்தோடே [13]பரா

1 உரோ. க. கூ.
* அல்லது நம்மைக் கட்டியிருந்தது செத்திருக்க; உரோ. க. உ. ச. வ.
2 உரோ. உ. உகூ. உ கொரி. க. கூ.
3 உ மோ. உ. ஙெ. ஙை. ஙெ மோ. ஙெ. உ. அப். உ. ஙக. உரோ. ஙக. கூ.
† அல்லது பேராசையை.
4 உரோ. க. உ.
5 க கொரி. ஙெ. ஙக.
6 உரோ ச. ஙெ: ஙெ. உ.
7 க மோ. ஙஅ. ஙெ. ஙசே. உ. ஙக, ஙக, உக. உ கொரி. க. எ.
8 சங். ஙகூ. அ: ஙஙகூ. க அ, ஙக எ. க நீமோ. க. அ.
9 க இரா. உக. உ, உஙெ. உ இரா. ங எ. ஙை.
‡ இசைக்கு, அறிகிறதில்லை; சங். க. கூ.
10 கலா. ஙெ. ங எ.
11 க மோ. க. ஙெ: அ. உக.
12 உ கொரி. ச. ஙக. எபே. க. ஙக. கொலோ. க கூ, ங.
13 சங் க. உ.

Digitized by Google

பரனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்.

உக [1]என் அவயவங்களிலே [2]என் மனதின் பிரமாணத்துக்கு எதிராய்ப் போராடுகிற வேறு பிரமாணத்தைக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை அடிமையாக்கிக்கொள்ளுகிறது.

உச ஐயோ, நான் நிர்ப்பாக்கியமுள்ள மனிதன்; இந்த மரணத்திற்கு ஏதுவான சரீரத்தில் நின்று* யார் என்னை விடுதலையாக்குவார்.

உடு [3]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே (என்னை விடுதலையாக்குகிற) பராபரனையே தோத்திரம்செய்கிறேன்; ஆதலால் நானே என் மனதினாலே பராபரனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்துக்கும் ஊழியம் செய்கிறேன்.

அ. அதிகாம்.

க. கிறிஸ்தவைப் பற்றிக்கொண்டு தேவ ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினை வாதென்றும், இ. கூ. மாம்சத்துக்கேற்ற சிந்தையினால்வரும் தீமை இன்னதென்றும், கூ. ரு. ஆவிக்கேற்ற சிந்தையினாலும், ரூ. பராபரனுடைய புத்திரார் பிருப்பதினாலும் வரும் நன்மை இன்னதென்றும், கூ. பாபான் நீதியாய்த் தீர்மானித்த தம்முடைய புத்திரின் மகிமையான விடுதலைக்குச் சிருஷ்டிகளெல்லாம் எதிர்நோக்கிக்கொண்டிருக்குமென்றும், கஅ. பராபனுடைய அன்பினின்று உத்தரை யாதொன்றும் நீக்கமாட்டாதென்றும் காட்டியது.

ஆனபடியினாலே [4]மாம்சத்தின்படி அல்ல, ஆவியின்படியே நடந்து, கிறிஸ்து இயேசுவுக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு வராது.

உ கிறிஸ்து இயேசுவினாலே சீவனைக் கொடுக்கிற [5]ஆவியின் [6]பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்றிவைகளின் [7]பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

கூ அது எப்படியெனில் [8]மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைப் [9]பராபரன் செய்ய, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும் பாவத்தைப் போக்கும் பலியாகவும்† அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

கூ [10]மாம்சத்துக்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிற நம்மாலே நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படி ஆயிற்று.

கூ இப்படியிருக்க, [11]மாம்சத்துக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் மாம்சத்துக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் [12]ஆவிக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறார்கள்.

கூ [13]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‡ மரணத்துக்குஏதுவானது;ஆவிக்கு ஏற்ற சிந்தை§ சீவனுக்கும் சமாதானத்துக்கும் ஏதுவானது.

எ எப்படியென்றால், [14]மாம்சத்துக்கு ஏற்ற சிந்தை‖ பராபரனுடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியாமலும் [15]கீழ்ப்படியத் திராணியில்லாமலும்இருக்கிறபடியால், அது பராபரனுக்கு விரோதமான பகையாயிருக்கின்றது.

அ ஆனதால் மாம்சத்திற்கு ஏற்றபடி நடக்கிறவர்கள் பராபரனுக்குப் பிரியமாய் இருக்கமாட்டார்கள்.

கூ ¶ [16]பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்திற்கு ஏற்றபடி அல்ல, ஆவிக்கு ஏற்றபடி நடக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்; [17]கிறிஸ்துவினுடைய ஆவியை உடையவன் அல்லாதவன் அவருடையவன் அல்ல.

ய மேலும் கிறிஸ்து உங்களில் இருந்தபடியால், பாவத்தின்நிமித்தம் சரீரம் அழிந்துபோனாலும் ஆவியானது நீதியின்நிமித்தம் சீவனையிருக்கின்றது.

யக அன்றியும் இயேசுவை மரித்தோரில்நின்று எழுப்பினவரு

கி. பி. கூய.

1 உரோ. க. கக, கூ.
2 கலா. இ. கூ.
* அல்லது மரணத்தின் சரீரத்தினின்று.
3 க கொரி. கஇ. இஎ.
4 ச. வச. கலா. இ.கூ,உஇ.
5 க கொரி. கஇ. சஇ. உ கொரி. க. சு.
6 யோவா. அ. கக. உரோ. க. கஅ,உஉ. கலா. உ. கூ: இ. க.
7 உரோ. எ.உச, உஇ.
8 அப். கூ. கக. உரோ. க. உஏ. எபி.எ.கஅ,கூ: கா. க, உ, ஏ, கச.
9 உ கொரி. இ. உக. கலா. க. கூ.
† அல்லதுபாவத்துக்காக.
10 க.வச.
11 யோவா. க. சு. க கொரி.உ.ரே.
12 கலா. இ.உஉ, உஇ.
13கூ.வச.உரோ சு. உக. கலா. சு. அ.
‡ மறுக்கு,மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை; எ. வச.
§ மறுக்கு, ஆவியைச் சிந்திக்கிற சிந்தை.
14 யாக். ச. ச.
‖ மறுக்கு. மாம்சத்தைச் சிந்திக்கிற சிந்தை.
15 க கொரி. உ. ரே.
16 க கொரி. க. கூ: சு. கூ.
17 யோவா. க.சு. கலா.ச.கூ.பிலி. க உஏ. க பே. க. கூ.

Digitized by Google

டைய [1]ஆவி உங்களில் வாசமா யிருக்கிறபடியால், [2]கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம் முடைய ஆவியினாலே* மரணத் துக்குரிய உங்கள் சரீரங்களை உயி ரோடிருக்கச்செய்வார்.

யஉ ¶ [3]ஆகையால் சகோதரரே, மாம்சத்துக்கு ஏற்றபடி சீவனம் பண்ணத்தக்கதாக, நாம் மாம்சத் துக்குக் கடனாளிகளாய் இருக்கிற தில்லை.

யஊ [4]மாம்சத்துக்கு ஏற்றபடி சீவ னம்பண்ணினால் சாவீர்கள்; ஆவி யினாலே சரீரத்தின் செய்கைகளை [5]அழித்துப்போட்டால் பிழைப் பீர்கள்.

யஎ மேலும் [6]எவர்கள் பராபர னுடைய ஆவியினாலே நடத்தப் படுகிறார்களோ அவர்கள் பராபர னுடைய புத்திரராய் இருக்கிறார் கள்.

யஏ அந்தப்படி நீங்களும் பின் னும் [7]பயப்படுகிறதற்கு அடிமை யின் [8]ஆவியை அடையாமல், [9]அப்பா பிதாவே என்று கூப் பிடப்பண்ணுகிற [10]புத்திரசுவிகா ரத்தின் ஆவியையே அடைந்தி ருக்கிறீர்கள்.

யஐ [11]நாம் பராபரனுடைய புத் திரராய் இருக்கிறதைக் குறித்து ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொ டுக்கிறார்.

யஒ மேலும் நாம் புத்திரராயிருக் க, [12]சுதந்தரராயும் இருக்கிறோம்; [13]கிறிஸ்துவுடனேகூட நாம் மகி மைப்படும்படிக்கு அவரோடே கூடப் பாடுபட்டால், அவரோ டேகூடச் சுதந்தரராய்ப் பராபர னுடைய சுதந்தரராகவே இருப் போம்.

யக ¶ ஆதலால் [14]இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெ ளிப்படும் மகிமைக்கு ஒப்பிடப் பாத்திரமானவைகள் அல்ல என்று எண்ணுகிறேன்.

கி. பி. கூயி.

1 அப் உ. உ.
2 உரோ.க.உ,இ. கொரி.க.உ. உ கொரி.உ.உ. எபே.உ இ.
* அல்லது ஆவி யின் நிமித்தம்.
3 உரோ. க. எ, உ.
4 கூ. வ. கலா. க. அ.
5 எபே. உ.உஉ. கொலோ க.இ.
6 கலா. இ. உஅ.
7 உரோ க எ. க பே உ.உஅ
8 க கொரி. உ. உஉ. எபி. உ. உஇ,
9 மாற். உ. உக.
10 உரோ. இக. இ. கலா. உ. இ. கூ.
11 உ கொரி. க. உஉ: இ. இ. எபே. க. உக: உ. கஎ.
12 அப்.உக.உஅ. கலா. உ. எ.
13 அப்.உ. உஉ. பிலி. க. உகூ. உதிமோ.உ.உக. உக.
14 உ கொரி. உ. உஎ. க பே. க. க, எ: உ. உக.
15 உஉ. வசனம். க மோ. க உக.
16 க பே. க. உ.
17 உ பே. க. உக.
† அல்லது சகல சீவப் பிராணி களும்; மாற். உக இஇ. கொலோ. க. உக.
18 எரே. உஉ.உக.
19 உ கொரி இ. இ.எபே. க.உ.
20 ஓசே. உக. உஅ எபே. உ. கஎ.
21 ஓசே. உஎ.கக
22 உ கொரி. இ. க, உ.
23 உ கொரி. இ. எ. எபி. உக. க.
24 மத்.உஎ. உஉ. லூக். உ. க.
25 உகொரி. உஉ. எ. எபே. க உ,ஏ.
26 க பே. இ.உ.

யஎ மேலும் தற்செயலாலே அவ் ல, சிருட்டிகளும் அழிவுக்கு ஏற்ற அடிமைத்தனத்தில்நின்று விடுதலை யாக்கப்பட்டு,

யஏ பராபரனுடைய புத்திர் மகிமையாய் அடையும் இரட்சிப் புக்கு வரும்படிக்கான கம்பிக்கை யோடே [15]கீழ்ப்படுத்தினவராலே வீணுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடி யால்,

யக [16]சிருட்டிகளும் பராபரனு டைய புத்திரர் வெளிப்படுகிறதற்கு [17]மிகுந்த ஆசையோடே காத் துக்கொண்டிருக்கின்றன.

யஉ ஆனபடியால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி சகல சிருட் டிகளும்கூட† [18]இதுவரைக்கும் தவித்து வேதனைப்படுகின்றன.

யஊ அவைகள்மாத்திரம் அல்ல, [19]ஆவியின் முதற்பலன்களைப் பெ ற்ற நாமும்கூட [20]நம்முடைய சரீரம் மீட்கப்படுதலாகிய [21]பத் திரசுவிகாரம் வருவதற்குக் காத் திருந்து,

யச [22]நமக்குள்ளே தவிக்கிறோம், (அதன்மேலுள்ள) நம்பிக்கையாய் நாம் இரட்சிக்கப்படுகிறோம்; [23]கா ணப்படுகிற பொருளை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவது என்ன?

யஎ நாம் காணாததை நம்பு கிறபடியால் அது வருவதற்குப் பொறுமையோடே காத்திருக்கி றோம்.

யஅ ¶ அல்லாமலும் [24]நாம் தகு தியாய்ச் செபம்பண்ணவேண்டு வது இன்னதென்று அறியாமல் இருக்கிறபடியால் [25](தேவ) ஆவியா னவர் தாமே சொல்லக்கூடாத பெருமூச்சுகளாலே நமக்காக வே ண்டுதல்பண்ணி, நம்முடைய பல னங்களில் (நமக்கு) உதவிசெய் கிறார்.

யக ஆவியானவர் [26]பராபரனு டைய சித்தத்தின்படியே பரிசுத்த வான்களுக்காக வேண்டுதல்பண்

ணுகிறபடியால்* [1]இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிந்து கொள்ளுகிறார்.

உஅ ¶ அன்றியும் அவருடைய முன்யோசனையின்படி [2]அழைக்கப்பட்டவர்களாய்ப் பராபரனில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மையாகும்படிக்கு ஏதுவாயிருக்கின்றது என்று அறிந்திருக்கிறோம்.

உக அது எப்படியெனில், [3]பராபரன், தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறுணவராய் இருக்கும்படிக்கு, [4]தாம் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களையும் [5]அவருடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு [6]முன்குறித்தார்.

உஉ அல்லாமலும் எவர்களை முன்குறித்தாரோ, [7]அவர்களை அழைத்தும் இருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ, அவர்களை [8]நீதிமான்களாக்கியும் இருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ [9]அவர்களை மகிமைப்படுத்தியும் இருக்கிறார்.

உக இவைகளைக்குறித்து நாம் என்ன சொல்லவேண்டும்? [10]பராபரன் நம்முடைய பங்கிலிருக்க நமக்கு விரோதமாயிருப்பவன் எவன்?

உஎ [11]அவர் தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் [12]நம்மெல்லாருக்காகவும் அவனையே ஒப்புக்கொடுத்திருக்க, அவரோடேகூட மற்ற யாவையும் நமக்கு அதுக்கிரகம்பண்ணுமல் இருப்பாரா?

உஏ பராபரனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்மேல் யார் குற்றம் சாற்றலாம்? [13]பராபரனே (அவர்களை) நீதிமான்களாக்குகிறவர்.

உஐ [14]யார் (அவர்களை) ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்கலாம்? கிறிஸ்துவே (அவர்களுக்காக) மரித்தார்; மேலும் எழுந்தவராயும் இருக்கிறார்; அதுவுமல்லாமல் [15]அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலிருந்து [16]நமக்காக வேண்டுதல் செய்கிறார்.

உக [17]உமதுநிமித்தம் நாம் எந்நேரமும் கொலைசெய்யப்படுகிறோம் என்றும் அடிக்கப்படும் ஆடுகளைப்போலஎண்ணப்படுகிறோம் என்றும் எழுதியிருக்கிறபடியே இருந்தும்,

உகூ நம்மைக் கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிப்பவன் யாவன்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பப்படுதலோ, பசியோ, நிருவாணமோ, நாசமோசமோ, கட்கமோ,

உஎ [18]இவையெல்லாவற்றையும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே அதிகமாய்ச் செயங்கொள்ளுகிறோம்.

உஅ மரணமானாலும் சீவனானாலும், தேவதூதர்களானாலும் [19]அதிகாரிகளானாலும் வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும்,

உகூ உயர்வானாலும் தாழ்வானாலும், வேறொரு சிருஷ்டியானாலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினில் விளங்கிய பராபரனுடைய அன்பைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்.

கூ. அதிகாரம்.

க. பவுல் யூதர்களைக்குறித்துத் தக்கிறது. எ. ஆபிரகாமின் வித்தெல்லாம் வாக்குத்தத்தத்தின் புத்திரரல்ல என்பது. டீ. பராபரன் தமக்கு இஷ்டமானவர்கள்மேல் இரக்கம் வைக்கிறானென்பது. உக. குயவன் களிமண்ணினாலே தனக்கு இஷ்டமான பாண்டங்களைச் செய்கிறானென்பது. உடு. அஞ்ஞானிகள் சுதந்தரத்துக்குள்ளாகி யூதர்கள் புறம்பாக்கப்பட்டதை முன் அறிவிக்கப்பட்டதென்பது. கஉ. யூதர்கள் விசுவாசத்தினால் உண்டாகும் நீதியை அதிகாரம்பண்ணுதது முகாந்தரம் இன்னதென்பது.

கி. பி. சுயம்.

* அல்லது பண்ணுகிறபடியால்.

1 க எபே. உஅ. கூ. சங். எ. கூ. வாக். டீ. க. எரே. டீக. உடீ: டீஎ.டீ: உடீ.டீஉ. அப். க. உச. க தெச. உ. ச. வெளி. உ. உக.

2 உரோ. க. டீக, உக, உச.

3 கொலோ. க. டீகூ உஅ. எபி.க. கூ. வெளி. க.டீ.

4 உ மோ. கக. டீஉ, டீஎ. சங்.க. க. எரே.க. டீ. மத். எ. உக. உரோ. டீக. உ. உ நீமோ. உ. டீகூ. க பே. க. உ.

5 பேரவா. டீஎ. உஉ. உ கொரி. க. டீஅ. பிலி. க. உக. க பேரா. க. உ.

6 எபே. க. டீ, டீக.

7 உரோ. க. டீ: கூ. உச. எபே. ச. ச. எபி. கூ. டீ. க பே உ கூ.

8 க கொரி. கூ. டீக.

9 யோவா. டீஎ. உஉ. எபே. உ. கூ.

10 ச மோ டீச. கூ. சங். கடீஅ. கூ.

11 உரோ.டீ.க,டீ.

12 உரோ.ச.உடீ.

13 எசா. டீ.டீ. அ, கூ. வெளி. டீஉ. டீ, டீக.

14 யோபு. கச. உகூ.

15 மாற். டீக டீக கொலோ. க. க எபி. க: அ. க: டீஉ. உ. க பே. க. உஉ.

16 எபி. எ. உடி: கூ.உச. க யோ.உ. க.—17 சங் சச. உஉ. க கொரி டீ. கடீ. கக. உ கொரி. ச. டீக.

18 க கொரி. டீடி. இஎ. உ கொரி. உ. டீச. க யோ ச. ச: டி. ச, ரி. வெளி. டீஉ. டீக.

19 எபே க. உக: கூ. டீஉ. கொலோ க. டீக: உ டீடி. க பே. க.உஉ.

Digitized by Google

சரீரசம்பந்தமான என் வம்சத்தாராகிய என் இனத்தாருக்காக [1]நானே கிறிஸ்துவினால் சபிக்கப்பட்டவனாகவேண்டும்* என்று இருந்து,

உ [2]அவர்களைக்குறித்து மிகுந்த துக்கமும் இடைவிடாத மனநோவும் உள்ளவனாயிருக்கிறேன்.

ரூ [3]இயேசுக்கிறிஸ்துவின்மேலே ஆணைப்படிக்கு (இப்படி) மெய்யாய்ச் சொல்லுகிறேன்; பரிசுத்த ஆவியின்மேலே ஆணைப்படிக்குப் பொய்சொல்லாமல்இருக்கிறேன்; என் மனதுகூடச் சாட்சியாய் இருக்கின்றது.

சு [4]அவர்கள் இஸ்ரவேல் சந்ததியாராய் இருக்கிறார்களே, [5]புத்திரசுவிகாரமும் [6]மகிமையும் [7]உடம்படிக்கைகளும்† [8]வேதப்பிரமாணமிடுதலும் [9]தேவ ஆராதனையும் [10]வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே.

ரு [11]பிதாக்கள் அவர்களுடையவர்களாய் இருக்கிறார்களே; மேலும் [12]சரீரத்தின்படிக்குக் கிறிஸ்து அவர்களில் உண்டானாரே; [13]அவர் என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவனானவர்.—ஆமன்.

சூ ¶ [14]பராபரனுடைய வசனம் அவமாய்ப்போயிற்று என்றுசொல்லக்கூடாது; என்னத்தினாலென்றால் [15]இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலர் அல்லவே.

எ அன்றியும் [16]அவர்கள் ஆபிரகாமின் சந்ததியானாலும் எல்லாரும் புத்திரரும் அல்லவே; [17]ஈசாக்கினாலே உனக்குச் சந்ததி உண்டாகுமென்று சொல்லியிருக்கின்றதே.

அ இதன் பொருள் என்னவென்றால், சரீரமுறைமையின்படி புத்திரரானவர்கள் பராபரனுடைய புத்திரர் அல்ல, [18]வாக்குத்தத்தத்தின்படியே சந்ததி எண்ணப்படுகிறார்கள்.

கூ அந்த வாக்குத்தத்தமான வார்த்தைகளாவன: [19]இக்காலத்திலே வருவேன்; அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பவைகளே.

ய இவைமாத்திரமல்ல, கம்முடைய முன்னோராகிய ஈசாக்கென்னும் ஒருவனாலே கருப்பவதியான [20]இரேபேக்காளும், அதற்குச் சாட்சி; எப்படியென்றால்,

யக அவளுடைய பிள்ளைகள் பிறவாமலும் நன்மைதீமை ஒன்றும் செய்யாமலும் இருந்தகாலத்திலே, [21]மூத்தவன்‡ இளையவனுக்குஞ் ஊழியம்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது.

யஉ அப்படிப்போல, [22]யாக்கோபின்மேல் அன்பாயிருந்து ஏசாவைப் பகைக்கிறேன் என்றும் எழுதியிருக்கின்றது.

யஊ பராபரனுடைய சித்தம் தெரிந்துகொண்டபடியே இருந்து, கிரியைகளினாலே அல்ல, [23]அழைக்கிறவராலே ஆகும்படிக்கு அப்படிச் சொல்லியிருக்கின்றது.

யச ¶ ஆகையால் நாம் என்ன சொல்லலாம்? [24]பராபரனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? அப்படி ஒருக்காலும் சொல்லக்கூடாது; மோசேயுடனே அவர் சொன்னதாவது:

யடு [25]எவன்மேல் தயையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் தயையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன் என்றாரே.

யசு ஆகையால் மனிதர் விரும்புகிறதினாலும் ஓடுகிறதினாலும் அல்ல, பராபரனுடைய தயையினாலே ஆயிருக்கின்றது.

கி. பி. சுயி.

1 உ மோ. கூ. கூ.
* அல்லது கிறிஸ்துவிலிருந்து விலக்க.
2 உரோ. ம. க.
3 உரோ. க. கூ. உ கொரி. க. உக: மக. கூ: மூ. மகூ. கலா. க. உம். பிலி. க. அ. உ தீமோ. உ. எ.
4 இ மோ. எ. கூ.
5 உ மோ. ச. உஉ. இ மோ. மச. க. எரே. கூ. கூ
6 க சாமு. ச. உக. க இரா. அ. மக. சங். கூ. உ: எஅ. கூ.
7 அப். க. உஇ. எபி. அ. அ, கூம.
† அல்லது ஏற்பாடுகளும்.
8 சங். சஎ. மகூ.
9 எபி. கூ. க.
10 அப். மக. கூ. உரோ. க. உ. எபே. உ. மூ.
11 இ மோ. ம. மஇ. உரோ. மக. உஅ.
12 லூக். க. உச. உரோ. க. க.
13 எரே. உக. க. யோவா. க. க. அப். உம். உஅ. எபி. க. அ. எபே. இ. உம்.
14 ச மே. உக. மகூ. உரோ. க. க.
15 யோவா. அ. கூ. உரோ. உ. உஅ. உக: ச. மூ, மக. கலா. சு. மக.
16 கலா. ச. உக.
17 க மோ. உக. மூ. எபி. மக. ம.அ.
18 கலா. ச. உஅ.
19 க மோ. மஅ ய. மச.
20 க மோ. உஇ. உக.
21 க மோ. உஇ. உ.க.

‡ அல்லது பெரியவன். —§ அல்லது சிறியவனுக்கு.—22 மல்கி க. உ.க. இ மோ. உக. மஇ. லாக். மக. உச மத் மக. லூக். மச. உக. யோவா. மூ. உஇ.—23 உரோ. ச. மஎ: அ. உஅ.—24 இ மோ கூ. ச. உ கலா. மகூ. எ. யோபு. அ க: கச. மி. சங். கூ. மச.—25 உ மோ. கூ. மக.

Digitized by Google

யஎ [1]பின்னும் வேதத்திலே பார்வோனுடனே அவர் சொன்னதாவது: [2]உன்னிடத்தில் என்னுடைய வல்லமையைக் காண்பிக்கும் பொருட்டாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்பொருட்டாகவும் உன்னை நிலைநிற்கப்பண்ணினேன் என்கிறார்.

யஅ ஆதலால் அவர் தமது இஷ்டத்தின்படி ஒருவனுக்குத் தயையாயிருக்கிறார்; தமது இஷ்டத்தின்படி மற்றொருவனைக் கடினப்படுத்துகிறார்.

யக ¶ இப்படியானால் என் அவர் குறைசமபிடிக்கிறார்? [3]அவருடைய சித்தத்திற்கு யாவன் எதிர்நிற்பானென்று என்னுடனே சொல்வாய்.

உய ஆ மனிதனே, பராபரனுக்கு எதிராய்த் தர்க்கிக்கிற* நீ யாவன்? [4]உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி, நீ என்னை இப்படி உண்டாக்கினை யென்று சொல்லுமா?

உக அல்லது மிதியிட்ட களிமண்ணிலுலே குயவன் [5]ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்திற்கும், மற்றொன்றைக் கனஈனமான காரியத்திற்கும்பண்ணும்படி, மண்ணின்மேல் [6]அதிகாரமுள்ளவன் அல்லவா?

உஉ ஆனதால் பராபரன் தமது கோபத்தைக் காண்பிக்கவும் தமது வல்லமையைத்தெரியப்படுத்தவும் சித்தமாய், [7]அழிவுக்குத் தகுதியான† கோபாக்கினைப் [8]பாத்திரங்கள்மேலே மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமை வைத்துக்கொண்டதும் அல்லாமல்,

உஊ [9]தாம் மகிமைக்காக எத்தனமாக்கின தயாபாத்திரங்கள்மேலே [10]தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தச் சித்தமாய், அப்படிப் பொறுத்துக்கொண்டால் (நீ எப்படித் தர்க்கிக்கலாம்?)

கி. பி. சுயி.

1 கலா. க. அ, உஉ.
2 உ மோ.கூ.யகூ.
3 உ ஈசா. உய. க. யோபு. கூ. டீஉ: உக. டீக. தானி. ச. கச.
* அல்லது மறு மொழி கொடுக்கிற; யோபு. கக. யக.
4 ஏசா உகூ. யக: சஞ. க: கச. அ.
5 உ நீமோ. உ. உய.
6 வாக். யக. ச. எரே. டீஅ. க.
7 க பே. உ. அ. யூசா. ச.
† அல்லது செய்யப்பட்ட.
8 க தெச. இ.கூ.
9 உரோ. அ உஅ. உகூ. கய.
10 உரோ. உ. ச. எபே. க. எ. கொலோ. க. உ.
11 உரோ.க.உகூ.
12 ஓசே. உ.உக. க பே.உ.ய.
13 ஓசே. க. ய.
14 ஏசா. ய., உஉ, உக.
15 உரோ. யக.இ.
‡ அல்லது கணக்கை.
16 ஏசா. உஅ. உஉ.
17 ஏசா. க. கூ. புலம். க. உஉ.
18 ஏசா. யக. யகூ. எரே. இய. சய.
19 உரோ. ச.யக: ய. உய.
20 உரோ. க.யஎ.
21 உரோ. ய. உ: யக. எ.

உச அப்படிப்பட்டவர்களாகும்படி அவர் [11]யூதரில்மாத்திரம் அல்ல, புறத்தேசத்தாரிலுமிருந்து நம்மை அழைத்தார்.

உடு அந்தப்படி ஓசேயாவின் புத்தகத்திலே அவர் சொல்லுகிறதாவது: [12]எனக்குச் சனங்கள் அல்லாதவர்களை என்னுடைய சனங்கள் என்றும் சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவள் என்றும் அழைப்பேன்.

உசஊ [13]நீங்கள் என்னுடைய சனங்கள் அல்லவென்று தங்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே, அவர்கள் சீவனுள்ள பராபரனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவார்கள் என்கிறார்.

உஎ அல்லாமலும் ஏசாயா என்பவன் இஸ்ரவேலனைக்குறித்துக் கூப்பிடுகிறதாவது: [14]இஸ்ரவேல் சந்ததியார் சமுத்திரத்தின் மணலைப்போலப்பெருக்கமாயிருந்தும் [15]மீதியான சிலர்மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள்.

உஅ நீதியோடே சீக்கிரமாய்க் கர்த்தர் காரியத்தைத்‡ தீர்த்து நிறைவேற்றுவார்; [16]சீக்கிரமாகவே அவர் காரியத்தைப் பூமியிலே தீர்த்துப்போடுவார் என்றான்.

உகூ அல்லாமலும் அதற்கு முன்னே ஏசாயா சொன்னது: [17]சேனைகளையுடைய பராபரன் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வையாதிருந்தாராகில் [18]நாம் சோதோமைப்போலாகிக் கொமோரூவுக்கு ஒத்திருப்போம் என்றான்.

கூய ¶ இவைகளின் பொருள் என்ன ஆயிற்று என்றுகேட்டால், [19]நீதியைத் தேடாமலிருந்த புறத்தேசத்தார் [20]விசுவாசத்தினாலேவருகிற நீதியையே பெற்றுக்கொண்டார்கள்.

கூக [21]நியாயப்பிரமாணத்தினாலே நீதியைத் தேடின இஸ்ரவேலரோ விசுவாசத்தினால் அல்ல,

கூஉ நியாயப்பிரமாணத்திற்கு ஏற்ற கிரியைகளினாலே அதைத் தே

Digitized by Google

டினபடியால், நியாயப்பிரமாணத்தினாலே [1]நீதியை அடையவில்லை.

ரூரூ [2]இதோ, விழுதற்கான கல்லையும், இலச்சை அடைவதற்கான கல்மலையையும் சீயோனிலே வைக்கிறேன்; [3]அதினிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை* என்று எழுதியிருக்கிறதின்படி [4]அவர்கள் விழுதற்கான அக்கல்லின்மேல் விழுந்தார்கள்.

ய. அதிகாரம்.

இ. நியாயப்பிரமாணத்தினால் நீதிக்கும் விசுவாசத்தினால் நீதிக்கும் வித்தியாசத்தையும், ரூக. விசுவாசிக்கிறவனும் வெட்கப்படானென்றும், ரூஎ. அஞ்ஞானிகளும் வேதவசனத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிப்பார்கள் என்றும் சொல்லியது. ரூக. இஸ்ரவேல் சனங்கள் இந்தச் சங்கதியை அறியாதவர்கள் அல்லவென்பது.

சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்று நான் என் இருதயத்தோடே மிகவும் விரும்பி, பராபரனை நோக்கி விண்ணப்பம்பண்ணுகிறேன்.

உ [5]அவர்கள் பராபரனைக்குறித்து வைராக்கியமாயிருக்கிறார்கள் என்று நானும் அவர்களுக்குச் சாட்சி சொல்லுகிறேன்.

ரூ அந்த வைராக்கியம் அறிவுக்கு ஏற்றதல்ல; எப்படியென்றால், [6]பராபரனால் வருகிற நீதியை அவர்கள் அறியாமல் [7]தங்கள் சுய நீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால், அவரால் வருகிற நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.

ச விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக [8]கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறாரே.

ரு ¶ மேலும் மோசே நியாயப்பிரமாணத்தினால்வருகிறநீதியைக் குறித்து [9]இவைகளைச் செய்கிற மனிதன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதினார்.

சு விசுவாசத்தினால் வருகிற நீதிப்பிரமாணமோ சொல்லுகிறதாவது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படிக்கு வானத்துக்கு ஏறிப்போபவன் யாவன்?

எ கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எறிவரப்பண்ணும்படிக்குப் பாதாளத்தில் இறங்கிப்போபவன் யாவன் என்று [10]உன் இருதயத்திலே நினையாதிருப்பாயாக என்பதும் அல்லாமல்,

அ அது பின்னும் சொல்லுகிறதாவது: [11]இந்தச் சங்கதி உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கின்றது என்று சொல்லுகின்றது; அந்தச் சங்கதி நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் சங்கதிதான்.

கூ என்னவென்றால் நீதிமானாக்கப்படுவதற்கு இருதயத்தோடே விசுவாசிக்கவும், இரட்சிக்கப்படுவதற்கு [12]வாயினாலே அறிக்கையிடவும் வேண்டுவதால்,

ய நீ உன் வாயினாலே கர்த்தராகிய இயேசுவை அறிக்கையிட்டு, பராபரன் அவனை மரித்தோரிலிருந்து எழும்பப்பண்ணினார் என்று உன் இருதயத்தோடே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.

யக அந்தப்படி [13]அவனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் வெட்கப்படுவதில்லை என்று வேதமும் சொல்லுகின்றது.

யஉ ¶ அன்றியும் [14]எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்காகவும் [15]ஐசுவரியமுள்ளவராய் இருக்கிறபடியால் [16]யூதருக்கும் கிரேக்கருக்கும் வித்தியாசமே இல்லை.

யஊ ஆதலால் [17]கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்பவன் எவனோ, [18]அவன் இரட்சிக்கப்படுவான்.

யச ¶ அவனை விசுவாசியாதவர்கள் எப்படி அவனைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவனைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி அவனை விசுவாசிப்பார்கள்? மேலும் [19]பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?

கி. பி. சுய.

1 கலா. இ. ச.
2 சங். சுஅ. உஉ. எசா. அ. ரூச: உஅ. ரூக. மத். உக. சஉ. க பே. உ,கூ, எ, அ.
3 உரோ. ஒ. ரூக. * அல்லது கலக்கப்படுவதில்லை.
4 லூக். உ. கஇ. க கொரி.க.உக.
5 அப். உக. உரூ: உஉ. க. கலா. க. ரூச: ச. பே உரோ. கூ கக.
6 உரோ. க. ரூச: கூ. கரூ.
7 பிலி. க. கூ.
8 மத். இ ரூச. கலா. க. உச.
9 க மோ. ரூஅ இ. கெகே.கூ.உக. எசே. உரூ. ரூக, ரூக, உக. கலா. க. ரூஉ.
10 இ மோ. கரூ. ரூஉ, ரூக.
11 இ மோ. கரூ. ரூச.
12 மத். ரூ. கஉ. லூக். ரூஉ. அ. அப். அ. கஎ.
13 எசா.உஅ.ரூக: சகூ.உக. எரே. ரூச. எ. உரோ. கூ. கக.
14 அப். ரூ. கக. உரோ. க. உகூ. க தீமோ.உ. இ.
15 எபே. க. எ: உ. ச, எ.
16 அப். ரூஇ. கூ. உரோ. க. உஉ. கலா. க. உஅ.
17 அப். கூ. செ.
18 யோவே. உ. ரூஉ. அப். உ. உக.
19 தித். க. உ.

Digitized by Google

யஇ மேலும், ஆசமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய [1]பாதங்கள் மிகவும் அழகானவைகள் என்று எழுதியிருக்கிறபடி சிலர் அனுப்பப்படாவிட்டால், எப்படிப் பிரசங்கம்பண்ணுவார்கள்?

யஈ ஆனாலும் [2]இந்தச் சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை; அதைக்குறித்து ஏசாயா சொன்னதாவது: [3]கர்த்தாவே, நாங்கள்* பிரசங்கம்பண்ணுகிறதை† யாவன் விசுவாசித்தான் என்றான்?

யஉ ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி பராபரனுடைய வசனத்தினாலே வருகின்றது.

யஊ இப்படியிருக்க நான் விசாரிக்கிறதென்னவென்றால், அவர்கள் கேள்விப்படவில்லையா? [4]அவைகளின் தொனி பூமி எங்கும் சென்றது; [5]அவைகளின் வசனங்கள் பூச்சக்கரக் கடைசிவரைக்கும் புறப்பட்டன என்பதின்படி, அவர்கள் மெய்யாய்க் கேள்விப்பட்டார்களே.

யஎ பின்னும் நான் விசாரிக்கிறது என்னவெனில், இஸ்ரவேலர் அறியவில்லையோ? (அறியாமல் இருக்கமாட்டார்கள்; என்னத்தினாலென்றால்) முதலாவது மோசே சொன்னது: [6]எனக்குச் சனங்கள் அல்லாதவர்களைக் கொண்டு நான் உங்களுக்குப் பொறுமை உண்டாக்குவேன்; [7]புத்தியீனமுள்ள சனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் என்றான்.

யஏ அல்லாமலும் ஏசாயா தயிரியமாய்ச் சொன்னது: [8]என்னைத் தேடாதவர்களாலே கண்டு அறியப்பட்டேன்; என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்றான்.

யஐ இஸ்ரவேலனைக்குறித்துச் சொல்லியிருக்கிறதாவது: கீழ்ப்படியாதவர்களுமாய் விரோதம் பேசுகிறவர்களுமாய் இருக்கிற சனங்களிடத்திற்கு [9]முழுநாளும் என் கைகளை நீட்டினேன் என்பதே.

யக. அதிகாரம்.

க. பராபரன் இஸ்ரவேலரெல்லாரையும் தள்ளவில்லையென்றும், ஏ. சிலர் தெரிந்துகொள்ளப்பட்டு, மற்றவர்கள் குடினப்பட்டுப் போனார்களென்றும், கூ. அவர்கள் குணப்படுவார்களென்ற நம்பிக்கை உண்டென்றும், ஙஅ. அவர்கள்மேல் அந்நியரின் பெருமைபாராட்டக்கூடாதென்றும், உக. யூதர்களும் எட்டுப்புக்கு வந்து எட்டுவார்களென்றும், கூ. பராபரனுடைய செய்கைகள் அளவறக் கூடாதென்றும் காட்டியது.

இப்படியிருக்கப் [10]பராபரன் தம்முடைய சனங்களைத் தள்ளிவிட்டாரா என்று கேட்டால், அப்படி அவர் செய்யவே இல்லை.

உ [11]நானும் ஆபிரகாமின் சந்ததியாயும், பென்யமீன் கோத்திரத்தானுமாயிருக்கிற இஸ்ரவேலனாயிருக்கிறேனே; [12]பராபரன் தாம் முன் அறிந்துகொண்ட தம்முடைய சனங்களைத் தள்ளவே இல்லை; எலியாவைக்குறித்து‡ வேதம் சொல்லுகிறதை அறியீர்களா?

ஊ அவன் பராபரனை நோக்கி, கர்த்தாவே, [13]உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பீடங்களை இடித்துப் போட்டார்கள்.

ச நான்மாத்திரம் மீதியாயிருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்கள் என்று இஸ்ரவேலனைக்குறித்து முறையிட்ட பொழுது, அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்னவென்றால், பாகாலுக்குமுன்பாக முழங்காற்படியிடாத [14]ஏழாயிரம் பெயரை எனக்காக மீதியாய் வைத்தேன் என்பதே.

ஙி அந்தப்படி இக்காலத்திலேயும் [15]இருபையால் தெரிந்துகொள்ளப்பட்ட மீதி உண்டாயிருக்கின்றது.

ஙு [16]அது இருபையினால் உண்டாயிருக்கிறபடியால், அது கிரியைகளினாலே ஆகவில்லை; அப்படி அல்லவென்றால் இருபையானது இருபையாயிராது; அன்றியும் அது கிரியைகளினால் உண்டாயிருந்

இ. பி. சுவி.

1 ஏசா. கூ. ஈ. ரகூ.ட.டு.

2 உரோ. க. க. எபி. ச. உ.

3 ஏசா. கூ. க. யோவா. ஙூ. ஙஅ.

* இரேக்கு, எங்களுக்கேட்டு.

† அல்லது எங்கள் கூறுதலை.

4 சங். கூ. ச. மத். உ.ச. மா: உஅ. கூ. மாற். ஙக. ஙஇ. லொ லோ.க.கூ, உக.

5 க இரா.ஙஅ. ஙி. மத். ச. அ.

6 இ லேவி. கூ. உக, உரோ.கூ. கூ.

7 நீத். க. க.

8 ஏசா. கஇ. க. உரோ. கூ. கஙி.

9 ஏசா. கஇ. உ.

10 க சாமு. ஙூ. உஉ. எரே. கக கஎ.

11 உ கொரி. ஙக. உஉ. பிலி. க. இ.

12 உரோ. அ. உக.

‡ இரேக்கு. எலியாவின் தீர்க்கதரிசனத்தில்.

13 க இரா. ஙகூ.ஙி, ஙச.

14 க இரா. கூ. ஙஅ.

15 உகொ. கூ. உஎ.

16 உகொ. ச. ச, இ. கலா. இ ச. இ கொ. கூ. ச, இ.

Digitized by Google

தால், அது கிருபையினால் இராது; அல்லவென்றால், கிரியையானது கிரியையல்ல.

எ ¶ இதினாலே என்ன தோன்றுகிறதெனில், [1]இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமல் இருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்தார்கள்; மற்றவர்கள் இன்றைத்தினம்வரைக்கும் கடினமான* இருதயமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

அ [2]பராபரன் கண் நித்திரையுள்ள† ஆவியையும், [3]காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் அவர்களுக்குக் கொடுத்தாரென்று எழுதியிருக்கிறபிரகாரமாக அப்படி இருக்கிறார்கள்.

க தாவீதும் சொல்லுகிறதாவது: [4]அவர்களுடைய உணவிடம் அவர்களுக்குக் கண்ணியாயும் வலையாயும் விழுதற்கான கல்லாயும் பதில்பெறுதற்கு ஏதுவாயும் இருக்கக்கடவது.

ய [5]காணுதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக்கடவது; அவர்களுடைய முதுகு எப்பொழுதும் குனியும்படி செய்யுமென்று சொல்லியிருக்கிறான்.

யக ¶ இப்படியிருக்க அழிந்து போகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்டால், அப்படியல்ல அவர்களுக்குள்ளே எரிச்சலை எழுப்புகிறதற்காக [6]அவர்கள் விழுந்ததினாலே புறத்தேசத்தாருக்கு இரட்சிப்புக் கிடைத்தது.

யஉ அவர்கள் விழுந்தது உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்கள் குறைவானது‡ புறத்தேசத்தாருக்கு ஐசுவரியமுமானதாயிருக்க அவர்கள் நிறைவானால் மிகவும் அதிகமாய் அப்படியாகும் அல்லவோ?

யங [7]புறத்தேசத்தாருக்காக நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே புறத்தேசத்தாராகிய உங்களுடனே பேசுகிறேன்.

யச அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக் கொள்ளுதல் மரித்தோரிலிருந்து சீவன் உண்டானதுபோல இருக்கும் அல்லவோ?

யடு ஆதலால் நான் எப்படியும் [8]என் இனத்தாரை எவி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று என் ஊழியத்தை மேன்மைபாராட்டுகிறேன்.

யசு ¶ [9]மேலும் முதல் விளைச்சல் பரிசுத்தமாயிருக்க, அம்பாரமும் அப்படியே இருக்கின்றது; வேரானது பரிசுத்தமாயிருக்க, கினைகளும் அப்படியே இருக்கின்றன.

யஎ [10]சில கினைகள் ஒடிக்கப்பட்டதுமல்லாமல் காட்டொலிவமரமாகிய [11]நீ அவைகளுடைய இடத்திலே ஒட்டவைக்கப்பட்டு ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்திற்கும் உடன்பங்காளியாயிருக்க,

யஅ [12]நீ அந்தக் கினைகளுக்கு எதிராய்ப் பெருமைபாராட்டாதிருப்பாயாக; பாராட்டுவாயானால் நீ வேரைச் சுமக்காமல், வேரே உன்னைச் சுமக்கிறதென்று கினைத்துக்கொள்.

யக நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கினைகள் ஒடிக்கப்போடப்பட்டன என்று நீ சொல்லுகிறாய்.

உய நல்லது அவிசுவாசத்தினாலே அவைகள் ஒடிக்கப்பட்டன; நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; [13]இறுமாப்பைக்காண்பியாதிருப்பாயாக.

உக சுபாவத்தின்படி கினைகளானவைகளைப் பராபரன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தள்ளாதபடிக்குப் [14]பயந்திருப்பாயாக.

உஉ ¶ மேலும் பராபரனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்த்துக்கொள்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும் உன்னிடத்திலே தயவையுமே பார்; [15]அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயாக; இல்லாவிட்டால் [16]நீயும் வெட்டுண்டு போவாய்.

கி. பி. சுமை.

1 உரோ. க. கக: ம. ச.
* அல்லது குருடான; உகொரி. க. மச.
2 சங். உக. ம.
† அல்லது மயக்கமுள்ள.
3 ஏ மோ. உக. ச. சே. க. க. எரே. ஆ. உக. எசே. மஉ. உ. மத். மக. மச. போவா. மஉ. சம. அப். உஅ. உக, உள.
4 சங்.கக. உஉ
5 சங். கக. உக.
6 அப். மக. சக: மஅ. ஆ: உஉ. மஅ, உக: உஅ. உச, உஅ. உரோ.ம.மக.
‡ அல்லது அமிலானது.
7 அப். க. டீஇ: மக. உ: உஉ. உக.உரோ.மஇ. மக.கலா.க.மக: உ.உ, எ,அ, கூ. எபே. க. அ. கதிமோ. உ எ. உதிமோ.க.மக.
8 க கொரி. எ. மக: க. உஉ. கதிமோ.ச.மக. பாக். இ. உம.
9 க மோ. உக. ம. சமோ.ம இ.மஅ, கூ,உம,உக.
10 எரே. மக. மக.
11 அப். உ. ககூ. எபே. உ. மஉ, மக.
§ அல்லது அவைகளுக்குள்.
12 க கொரி. ம. மஉ.
13 உரோ. மஉ. மக.
14 லூக். உஅ. மச. எச. கக. உ.பிலி.உ.மஉ.
15 க கொரி.மஇ. உ. எபி. க. க, மச.
16 போவா. மஇ. உ.

உக அன்றியும் [1]அவர்களும் அவிசுவாசத்தினிமித்தம் தள்ளுண்டுபோனால் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குப் பராபரன் வல்லவராயிருக்கிறாரே.

உஙு அன்றியும் நீ சுபாவத்தின் படி காட்டு ஒலிவாகிய மரத்திலிருந்து வெட்டப்பட்டு உன் சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருக்க, மிகவும் அதிகமாய்ச் சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவார்கள் அல்லவா?

உசு ¶ ஆதலால் சகோதரரே, [2]நீங்கள் உங்கள் சுயபுத்தியிலே சாயாதபடிக்கு, ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்று இருக்கிறேன்; என்னவெனில், [3]புறத்தேசத்தார் நிறைவாய்ப் பிரவேசிக்குமனவும், இஸ்ரவேலரில் [4]ஒரு பங்குக்குக் கடினமான* மனது உண்டாயிருக்கும்.

உகூ [5]பின்பு மீட்பர் சீயோனுக்கு வந்து, அக்கிரமத்தை இயாக்கோபிலிருந்து நீக்குவார் என்றும்,

உஎ நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்பொழுது [6]இதுவே கான் அவர்களுடனே பண்ணும் உடம்படிக்கையென்றும் எழுதியிருக்கிறபடியே, இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்.

உஅ சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்.

உக தெரிந்துகொள்ளுதலைக்குறித்துப் பராபரன் கிருபைகொடுத்தலும் அழைத்தலும் [7]மாறுதலைவனானபடியால், அவர்கள் பிதாக்களின்நிமித்தம் [8]அன்புகூரப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

ஈய [9]ஆதலால் நீங்கள் முற்காலத்திலே பராபரனுக்குக் கீழ்ப்படியாதிருந்து† இப்பொழுது அவர்களுடைய அவிசுவாசத்தினாலே இரக்கம்பெற்றிருக்கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்து,‡ (பின்பு) உங்களுக்குண்டானஇரக்கத்தினாலே(எவப்பட்டு) இரக்கம்பெறுவார்கள்.

ஈக எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாகப் [10]பராபரன் எல்லாரையும்அவிசுவாசத்திற்குள்ளே அடைத்துப்போட்டபடியால்§ அப்படியேயாம்.

ஈஉ ¶ ஆபராபரனுடையஞானம் அறிவு என்பவைகளின் சம்பூரணம் மிகுந்த ஆழமுள்ளதாயிருக்கின்றது.

ஈஈ [11]அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவறுக்கப்படாதவைகள்; அவருடைய [12]நெறிகள் ஆராய்ந்துபார்க்கப்படாதவைகளாய் இருக்கின்றன; [13]கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் எவன்?

ஈஊ [14]அல்லது அவருக்கு உசாவுதுணையாய் இருந்தவன் எவன்?

ஈஎ [15]அல்லது தனக்குப் பதில் கொடுக்கும்படிக்கு அவருக்கு முந்தி ஒன்றைக் கொடுத்தவன் எவன்?

ஈஅ [16]சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கின்றன, [17]அவருக்கே என்றென்றைக்கும் புகழ்ச்சி உண்டாகக்கடவது.—ஆமன்.

௰உ. அதிகாரம்.

க. பராபரனுடைய இரக்கங்கள். உ. எவரும் பெருமைபாராட்டாமல், தன் தன் நிலைமையை அறிந்து நடக்கவும், ங. அவரைப் பிரியப்படுத்தும்படி சம்மை எவரும், ஙு. அன்புமுதலிய நற்குணங்கள் உள்ளவர்களாயிருக்கவும், ரூக. குரோதத்தை நீக்கவும் வேண்டுமென்பது.

அப்படியிருக்கச் சகோதரரே, [18]நீங்கள் புத்தியுள்ள ஆராதனை செய்ய, [19]உங்கள் சரீரங்களைச் சீவனுமாய், பரிசுத்தமுமாய், பராபரனுக்குப் பிரியமுமாயிருக்கிற [20]பலியாக நிறுத்தவேண்டுமென்று பராபரனுடைய இரக்கங்களின்நிமித்தம் [21]உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

உ மேலும் [22]நீங்கள் இவ்வுலகத்

கி. பி. சுஎ.

1 உ கொரி. ச. ரூக.
2 உரோ.ரூஉ.ரூக.
3 லூக்.உச. உசு. வெளி. ஈ. ங.
4 எ. ரூச. உ கொரி.ச.உசு.
* அல்லது குருடான.
5 எசா. ரூக. ரூச. சங். ரூசு. ஈ.
6 எசா. உஎ. ரூ. எரே. ரூக. ரூக. எபி. அ. அ: ங. ரூக.
7 சமோ.உக.ரூக.
8 ஓ மோ. ஈ. அ: ரூ. ஓ: ங. ரூஓ.
9 எபே. உ. உ. கொலோ. ச.ஈ.
† அல்லது பாராபரனை விளை யொநிருத்து.
‡ அல்லது விசுவாசியாமல்.
10 உரோ. ச. ரூ. கலா. க. உஉ.
§ அல்லது அடக்கி.
11 சங். ரூக. ங.
12 யோபு. ரூக. ஈ. சங்.ரூஉ.ஓ.
13 யோபு. ரூஓ. அ. ஏசா. சூ. ரூக. எரே. உக. ரூஅ. க கொரி. உ. ரூக.
14 யோபு. ரூக. உஉ.
15 யோபு.ஏஓ.ஈ: சக. ரூக.
16 க கொரி. அ. ரூ. கொலோ. ச. ரூக.
17 கலா. க. ஓ. க தீமோ. க.ஈ. உ தீமோ. சு. ரூஅ. எபி. ரூக. உக. க பே. ஓ.
ரூக. உ பே க.
ரூஅ. யூதா. உசு. வெளி. க. ரூ.
18 க பே. உ.ஓ.
19 சங். ஓஅ. ரூக, ரூசு. உசோ. க. ரூக, ரூக, ரூக. க கொரி. க.ரூக, உஅ.
20 எபி. அ. உஅ.
21 உ கொரி.ரூ.க.
22 க பே.க. ரூக. க பேரு. உ.ரூஓ.

Digitized by Google

நிற்கு ஒப்பாய் நடவாமல், [1]பரா பரனுடைய நன்மையும் பிரிய மும் நிறைவுமான சித்தம் இன்ன தென்று நீங்கள் பகுத்து அறியத் தக்கதாக, [2]உங்கள் மனதைப் புதி தாக்குதலினாலே மறுரூபமாய் ந டந்துகொள்ளுங்கள்.

கூ ¶ அல்லாமலும் [3]எனக்குக் கொடுத்திருக்கிற கிருபையினாலே நான் இன்னும் சொல்லுகிறதாவ து: உங்களில் எவனானாலும் தன் னைக்குறித்து [4]நினைக்கவேண்டி யதற்கு மேலாக நினையாமல், [5]அ வனவனுக்குப் பராபரன் பங் கிட்ட விசுவாசம் எவ்வளவோ, அவ்வளவின்படி புத்தியாய்*நட க்கத்தக்கதாகத் (தன்னைக்குறித்து நினைக்கவேண்டும்).

கூ அது எப்படியெனில் [6]ஒரே சரீரத்திலே நாம் அநேக அவயவங் களை உடையவர்களாயிருக்க, அவ யவங்கள் யாவும் ஒரே தொழில் இல்லாதவைகளாய் இருக்கிறது போல,

கூ [7]அநேகராகிய நாமும் கிறிஸ் துவுக்குள்ளே ஒரே சரீரமாயிருக் க, ஒருவருக்கொருவர் அவயவங் களாய்,

கூ [8]நமக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படியே [9]பலவித வர ங்கள் உள்ளவர்களாயிருக்கிறோம்; [10]அந்தப்படி தீர்க்கதரிசனம் சொ ல்லுகிற வரத்தை உடையவன் விசுவாச அளவுக்கு ஏற்றதாக அப் படிச் செய்யக்கடவன்.

கூ உதவிசெய்கிற வரத்தை உ டையவன் உதவிசெய்கிறதிலே சாக்கிரதையாய்இருக்கக்கடவன்; [11]போதிக்கிறவன் போதிக்கிறதி லே சாக்கிரதையாய் இருக்கக்கட வன்.

கூ. பி. கூய.

1 எபே. ஐ. உ, உஅ. உ தெச. உ. க.

2 எபே. உ. உஅ: உ. உஉ. கொ லோ. உ. உஉ, உஉ: உ. க.

3 உரோ. க. உ: உஇ. உக. உ கொரி. க. உ: உஇ. உ. கலா. உ. க. எபே. உ. க, உ, அ.

4 வாக். உஇ. உஎ. பிர.உ.உக. உரோ. உக.உஎ.

5 உ கொரி. உஉ: உ, உக. எபே. உ. உ.

* ஒருசேகு, புத் திசரு.

6 உ கொரி. உஉ. உஉ. எபே. உ. உக.

7 உ கொரி. உ. உஎ: உஉ. உஅ, உஎ. எபே. உ. உ: உ. உஇ.

8 உ. வச.

9 உ கொரி. உஉ. உ. உ பே. உ. ட, உக.

10 அப். உக. உஎ. உ கொரி. உஉ.உ, உஅ:உக.உ:உ. உ, க, உக, கக.

11 அப். உக. உ. கலா. க. க. எபே. உ. உக. உதீமோ.ஐ.உஅ.

12 அப்.உஇ. உஉ. உ கொரி. உ.க.

13 மத்.க.உ, உக.

† அல்லது பகிர்ந்துகொடுக்க.

‡ அல்லது நாளாளைமாய்;

உகொரி. அ.உ.

14 அப்.உஅ.உஅ. உதீமோ.ஐ.உஅ. எபி.உக.எ, உச. உ பே. ஐ. உ.

15 உகொரி.உ.ஏ.

அ [12]புத்தியாய்ச்சொல்லுகிறவன் புத் தியாய்ச்சொல்லுகிறதிலே சாக்கிரதை யாய் இருக்கக்கடவன்; [13]தருமங் களைக் கொடுக்க† வேண்டியவன் கபடம் இல்லாமையாய்‡ அப்ப டிச் செய்யக்கடவன். [14]முதலாளி யானவன் சாக்கிரதையுடனே இ ருக்கக்கடவன்; [15]இரக்கம்செய்கி றவன் உசசாகத்துடனே அப்ப டிச் செய்யக்கடவன்.

கூ ¶ [16]உங்கள் அன்பு மாயமற்ற தாய் இருப்பதாக; [17]பொல்லாங் கானதை அருவருத்து, நன்மையில் ஒட்டிக்கொண்டிருப்பீர்களாக.

20 எ. வச. உ கொரி. க. ம்எ. க யோ. ஙி. உக.—21 க கொரி. அ. க.—22 மத். உக. உகூ.உஎ,உஅ.—23 அப். உ ச.உ.ச. க கொரி. ம்க. உக, உச. — 24 உரோ. ம்உ. ஙி. க கொரி. ம்உ. உஎ. — 25 உரோ. ச. க: கூ. க, ஙி. உ கொரி. கூ. ஙி.
26 உரோ. ச. ம்உ. லேவி. க. ம்க.—27 க மோ. க. க: எ ம்ஙி.—28 க கொரி. அ. ச.

Digitized by Google

நான் என்று சொல்லுகிறேனே? அல்லது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது ஒரு பொருள் என்று சொல்லுகிறேனே?

உய இல்லையே [1]அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளைப் பராபரனுக்கு அல்ல, பேய்களுக்குப் பலியிடுகிறார்கள் என்றே சொல்லுகிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறதில்லை.

உக நீங்கள் [2]கர்த்தருடைய பாத்திரத்திலும் [3]பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போசனபந்திக்கும் பேய்களுடைய போசனபந்திக்கும் பங்காளிகளாய் இருக்கக்கூடாதே.

உஉ [4]அல்லது, நாம் கர்த்தருக்குக் கோபத்தை மூட்டலாமா? [5]அவரிலும் நாம் பெலவான்களாய் இருக்கிறோமா?

உக ¶ [6]எல்லாப் பதார்த்தங்களையும் நான் அநுபவிக்கலாம்; ஆகிலும் எல்லாம் பிரயோசனமாயிருக்கிறதில்லை; எல்லாப் பதார்த்தங்களையும் நான் அநுபவிக்கலாம்; ஆகிலும் எல்லாம் எழுப்புதற்கு ஏதுவாயிராது.

உச எவனும் [7]தனக்காகமாத்திரம் பிரயோசனத்தைத் தேடாமல், மற்றவனுக்காகவும் அப்படித் தேடக்கடவன்.

உஞ [8]பூமியும் அதிலுள்ள நிறைவு யாவும் கர்த்தருடையது என்பதின்படி,

உசு உங்கள் மனது அடைந்த அறிவினாலே நீங்கள் ஒன்றையும் விசாரியாமல், [9]கடையிலே விற்கப்படுகிற எதையும் வாங்கிப் புசியுங்கள்.

உஎ அல்லாமலும் அவிசுவாசிகளில் ஒருவன் உங்களைப் போசனபந்திக்கு அழைக்கும்பொழுது, நீங்கள் போக மனதுண்டானால் உங்கள் மனது அடைந்த அறிவினாலே ஒன்றையும் விசாரியாமல்

கி. பி. ருகூ.

1 a மோ. உ. எ. ⓑ மோ. உஉ. எ. சங். உசு. உக. எ. வெளி. க. உஅ.

2 உ கொரி. க. ய்ஞ, உக.

3 ⓐ மோ. உஉ. அ.

4 ⓐ மோ. உஉ. உக.

5 எசே. உஉ. ய்ச.

6 க கொரி. க. உஉ.

7 உரோ. ய்ஞ க, உ. உக. வச. க கொரி. ய்க. ஙி. பிலி. உ. ச, உக.

8 உ மோ. ய்க. ஙி. ⓐ மோ. ய். ய்ச. சங். உச. க: ஙிஅ. ய்உ. உஅ. வச.

9 க ⓐ மோ. ச. ச.

10 லூக். ய். எ.

11 க கொரி. அ. ய், ய்உ.

12 ⓐ மோ. ய் ய்ச. சங். உச. க. உக. வச.

13 உ ரோ. ய்ச. ய்க. " அல்லது தலையிலே.

14 உ ரோ. ய்ச. க. க ⓐ மோ. ச. உ, ச.

15 கொலோ. உ. ய்எ. க பே. ச. ய்க.

16 உச. வச.

17 உ ரோ. ய்ஞ. அ. க கொரி. க. ய்க, உஉ.

† அல்லது புறச்சாதியாருக்கும்.

18 அப். உய். உஅ. க கொரி. ய்க. உஉ. க ⓐ மோ. க. ஞ.

19 உ ரோ. ய்ச. ய்க. க கொரி. அ. ய்க. உ கொரி. க. க.

10 உங்கள்முன் வைக்கப்பட்ட எதையும் புசியுங்கள்.

உஅ அப்பொழுது இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், 11 அப்படி அறிவித்தவன் நிமித்தமும் மனதறிவின்நிமித்தமும் புசியாதிருங்கள்; 12 பூமியும் அதிலுள்ள நிறைவு யாவும் கர்த்தருடையதே.

உக உன்னுடைய மனதைக்குறித்து அல்ல, மற்றொருவனுடைய மனதைக்குறித்தே சொல்லுகிறேன்; ஆகிலும் என்னுடைய சுயாதீனம் மற்றொருவனுடைய மனதின் நிமித்தம் குற்றமாய் 13 எண்ணப்படவேண்டுவதென்ன?

ஈய மேலும் நான் அதைத் தோத்திரிப்புடனே* அநுபவித்தால், 14 தோத்திரித்து அநுபவிக்கிறதற்காக நான் தூஷணிக்கப்படவேண்டுவதென்ன?

ஈக அதினாலேதானே 15 நீங்கள் புசித்தாலும், பானம்பண்ணினாலும், எதைச் செய்தாலும் சகலத்தையும் பராபரனுக்குப் புகழ்ச்சி உண்டாகச் செய்யுங்கள்.

ஈஉ 16 நான் எனக்கு (மாத்திரம்) பிரயோசனத்தைத் தேடாமல் அநேகரும் இரட்சிக்கப்படும்படிக்கு அவர்களுக்காகவும் பிரயோசனத்தைத் தேடிக்கொண்டு, 17 எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல,

ஈஊ நீங்களும் யூதருக்கும் கிரேக்கருக்கும்† 18 பராபரனுடைய சபைக்கும் 19 விதனம் உண்டாகாதபடிக்கு, எச்சரிக்கையாய் இருப்பீர்களாக.

ய்க. அதிகாரம்.

க. சபை கூடியிருக்கும்போது, ச. புருஷர்கள் தங்கள் தலையை மூடிக்கொண்டதற்காகவும், க. ஸ்திரீகள் தங்கள் தலையை மூடிக்கொள்ளாததற்காகவும், உஅ. அவர்களுடைய கட்டளைக்கு நேமைக்கு ஏதுவாய், உக. கர்த்தருடைய இராப்போசனத்தோடே தங்கள் விருத்தனைச் சேர்த்து அதை அசிப்படுத்தினதற்காகவும் அவர்களைக் கடிந்து கொண்டு, உக. இராப்போசன ஒழுங்கு இன்னதென்று கூறியது.

Digitized by Google

நான் கிறிஸ்துவைப் பின்பற்று கிறதுபோல, [1]நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கக் கடவீர்கள்.

உ சகோதரரே, நீங்கள் எல் லாவிதத்திலும் [2]என்னை நினைத் துக்கொண்டு, நான் உங்களுக்கு [3]ஒப்புவித்த முறைமைகளின்படி யே* அவைகளைக் கைக்கொண்டி ருக்கிறதற்காக உங்களைப் புகழுகி றேன்.

ஊ இப்பொழுது நீங்கள் என்ன அறியவேண்டும் என்று இருக்கி றேன் என்றால், [4]கிறிஸ்து புருஷ னெவனுக்குத் தலையாயிருக்கி றார், [5]புருஷன் மனைவிக்குத் தலை யாயிருக்கிறான்; [6]பராபரன் கிறி ஸ்துவுக்குத்தலையாயிருக்கிறார்.

ச எந்தப் புருஷனெனும் செ பம்பண்ணி அல்லது [7]தீர்க்கதரி சனம் சொல்லுகிறபொழுது, தன் தலையை மூடிக்கொண்டிருந்தால் தன் தலையைக் கனஈனப்படுத்து வான்.

ஙு [8]ஸ்திரியானவள் செபம்பண் ணி அல்லது தீர்க்கதரிசனம் சொ ல்லுகிறபொழுது, தலையை மூடிக் கொள்ளாமலிருந்தால், தன் தலை யைக் கனஈனப்படுத்துவாள்; [9]அ வள் தல சிரைக்கப்பட்டது போல இருக்குமே.

சு ஆனதால் ஸ்திரியானவள் மூ டிக்கொள்ளாவிட்டால், மயிரைக் கத்தரித்துப்போடக்கடவள்; [10]அ ப்படி மயிர் கத்தரிக்கப்படுகிறது அல்லது சிரைக்கப்படுகிறது ஸ்தி ரிக்கு வெட்கமானபடியினாலே, மூடிக்கொண்டு இருக்கக்கடவள்.

எ [11]புருஷனெனவன் பராபரனு டைய சாயலுமாய் மகிமையுமாயி ருக்கிறபடியால், தன்தலையை மூ டிக்கொள்ளவேண்டுவது இல்லை.

அ [12]மேலும் புருஷன் ஸ்திரியி னாலே தோன்றினவன் அல்ல, ஸ்தி ரியே புருஷனால் தோன்றினவள்.

க [13]அல்லாமலும் புருஷன் ஸ்தி ரிக்காகச் சிருட்டிக்கப்பட்டவன் அல்ல, ஸ்திரியே புருஷனுக்காகச் சிருட்டிக்கப்பட்டவள்.

ய ஆகையால் ஸ்திரியானவள் புருஷனுடைய மகிமையாயிருக் கிறதும் அல்லாமல், [14]தூதர்களின் நிமித்தம் [15]அவன் தன் தலையின் மேல் வஸ்திரத்தால் மூடிவைக்க வேண்டும்.†

யக ஸ்திரி புருஷனால் இருக்கி றதுபோலப் புருஷனும் ஸ்திரியினா லே இருக்கிறதால்,

யஉ [16]கர்த்தருடைய முறைமை யின்படி ஸ்திரி இல்லாமல் புருஷ னும் இல்லை; புருஷன் இல்லாமல் ஸ்திரியும் இல்லை; [17]சகலமும் பரா பரனாலே இருக்கின்றது.

யங ¶ ஸ்திரியானவள் பராப ரனைத் தொழுது செபம்பண்ணுகை யில், தன் தலையை மூடிக்கொள் ளாமலிருக்கிறது இலக்கணமாய் இருக்குமோ என்று உங்களுக்குள் ளே நீங்களே எண்ணிக்கொள்ளுங் கள்.

யச அல்லது புருஷன் மயிரை நீள மாய் வளர்த்தால் அது அவனுக்குக் கனஈனமாயிருக்கின்றது என்றும்,

யடு ஸ்திரி தனக்கு மூக்காடாக மயிர் கொடுக்கப்பட்டிருக்கிறபடி யினாலே தன் மயிரை நீளமாய் வ ளர்த்தால், அது அவளுக்கு மகிமை யாயிருக்கிறதென்றும் சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லை யோ?

யசு ஆகிலும்(இதைக்குறித்து)[18]ஒ ருவன் வாக்குவாதம் செய்யப் பிரி யனாய் இருந்தால், எங்களுக்கும் [19]பராபரனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கம் இல்லை யென்று அறியக்கடவன்.

யஎ பின்னும் நான் அறிவிக்கிறது என்னவெனில், நீங்கள் கூடிவரு தல் அதிக நன்மைக்கு அல்ல; அதிக தீமைக்கே ஏதுவாயிருக்கின் றது; அதைக்குறித்து நான் உங்க ளைப் புகழக்கூடாது.

யஅ என்னவென்றால் முதலா

கி. பி. நகூ.

1 க கொரி. ச. யக. எபே.இ.க. பிலி க. மஎ. க தெச. க. க. உ தெச. க. க.

2 க கொரி. ச. மஎ.

3 க கொரி. எ. மஎ.

* அல்லது கட்டளைகளின்; உதெச.உ.மஇ: க. சு.

4 ஈபே. இ. உஅ.

5 க மோ. க. மக. கதீமோ. உ மக, மஉ. க பே. க. க. இ, சு.

6 போவா. மச. உஅ. க கொரி. க. உக: மஇ. உஎ,உஅ. பிலி. உ. எ, அ, சு.

7 க கொரி மஉ.ம, உஅ: மச.க.ழ.

8 அப். உக. க.

9 இ மோ. உக. மஉ.

10 சமோ.இ.மஅ. இமோ. உஉ.இ.

11 க மோ.க.உக, உஎ: இ.க: சு. சு.

12 க மோ. உ. உக, உஉ.

13 க மோ.உ மஅ, உக, உக.

14 பிரச இ. சு.

15 க மோ. உச. கஇ.

† அதாவது தன் புருஷனுக்கு அடங்கினவளென்பதற்குக் குறிப்பாக முக்காடிட்டவளாயிருப்பதென்பதாம்.

16 கலா. க. உஅ.

17 உரோ.மக.கக.

‡ அல்லது முடியாக.

18 க தீமோ.க.ச.

19 க கொரி. எ. மஎ: மச. கக.

Digitized by Google

வது, நீங்கள் சபையின் வீட்டிலே கூடிவந்திருக்கும்பொழுது, [1]உங்களில் பிரிவினைகள்* உண்டென்று கேள்விப்படுகிறேன்.

யக [2]பாத்திரவான்கள் வெளியாகும்படிக்கு [3]மார்க்கபேதங்களும்† உங்களில் உண்டாயிருக்கவேண்டியதால், நான் (கேள்விப்பட்டவைகளில்) சில நம்புகிறேன்.

உய ஆனதால் நீங்கள் ஏகமாய்க் கூடிவந்து சாப்பிடுங்காலத்தில், ஒருவன் பசியாயிருக்கவும் [4]ஒருவன் நிருத்தி அடையவும்தக்கதாக, முன்னே அவனவன் தன் சொந்தப் போசனத்தைப்பண்ணுவான்.

உக அப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போசனம்பண்ணுதல் அல்லவே.‡

உஉ அதென்ன? போசனபானம் பண்ணுதற்கு உங்களுக்கு வீடுகள் இல்லையா? [5]அல்லது பராபரனுடைய சபையின் வீட்டை அசட்டைபண்ணி, [6]போசனம் இல்லாதவர்களை§ வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களைக்குறித்து நான்என்ன சொல்லலாம்? உங்களைப் புகழலாமா? அதைக்குறித்து நான் உங்களைப் புகழக்கூடாது.

உக ¶ [7]நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தராலே அடைந்தேன்; என்னவெனில், [8]கர்த்தராகிய இயேசு தம்மைக் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்துக் கொண்டு தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள்.

உச இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கின்றது; என்னை நினைத்துக் கொள்ளும்படிக்கு‖ இப்படிச் செய்யுங்கள் என்றார்.

உஎ அந்தப்படியே அவர் இராப்போசனம் பண்ணினபின்பு, பாத்திரத்தையும் எடுத்துக்கொண்டு, இந்தப் பாத்திரம் என்னுடைய இரத்தத்தினாலே புதிய உடம்படிக்கையாய் இருக்கின்றது; நீங்கள் பானம்பண்ணும்பொழுதெல்லாம் என்னைநினைத்துக்கொள்ளும்படிக்கு இப்படிச் செய்யுங்கள் என்றார்.

உசு [9]ஆகையால் கர்த்தர் வருமளவும் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்பொழுதெல்லாம் அவருடையமரணத்தைக்கூறுகிறீர்கள்.¶

உள ¶ இப்படியிருக்க [10]எவனெவனும் கர்த்தருடைய அப்பத்தையாவது பாத்திரத்தையாவது அபாத்திரமானவிதமாய்ப் போசனபானம்பண்ணினால், அவன் கர்த்தருடைய சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் குற்றமுள்ளவனாய் இருப்பான்.

உஅ அந்தப்படி அபாத்திரமானவிதமாய் அதைப் போசனபானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரத்தை விசேஷித்துக்கொள்ளாமல், தனக்கு ஆக்கினைவரும்படி** போசனபானம்பண்ணுகிறபடியினாலே,

உக எவனெவனும் [11]தன்னைத்தான் சோதித்து அறிந்து, பின்பு இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்திலே பானம்பண்ணக்கடவன்.

ஈய அந்தக் குற்றத்தினாலேதானே உங்களில் அநேகர் பலஈனருமாய் வியாதியுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்; வேறு அநேகரும் இறந்துபோயிருக்கிறார்கள்.

ஈக [12]நம்மை நாமே வகையறுத்துப்பார்த்தால், நாம் அப்படித் தண்டிக்கப்படுவதில்லை.

ஈஉ நாம் தண்டிக்கப்பட்டிருக்க, [13]உலகத்தோடே நித்திய ஆக்கினைக்கு உள்ளாக்கப்படாதபடிக்கு, கர்த்தராலே தண்டிக்கப்படுகிறோம்.

ஈஈ ஆகையால் என் சகோதரரே, நீங்கள் போசனம்பண்ணக் கூடிவருகிறபொழுது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள்.

ஈச [14]ஒருவனுக்குப் பசியிருந்தால் நீங்கள் ஆக்கினைக்கு†† எதுவா

கி. பி. ருக.

1 க கொரி. க.ம. கே, ஐஉ: க. க.

* அல்லது பேதக்கள்.

2 லூக். உ. கஇ. க யோ. உ. ஐக. இ மோ. ஐக. க.

3 மத். ஐஅ. எ. லூக். ஐஎ. க. அப். உம். கம். க இமோ. ச. க. உ பே.உ.க,உ.

† அல்லது வகுப்புகளும்.

4 உ பே. உ.ஐக. யூதா. ஐஉ.

‡ அல்லது அப்படியிருந்தால்நீங்கள் கர்த்தருடைய இராப்போசனம் பண்ணக்கூடாது.

5 க கொரி.ஐ.கஉ.

6 யாக். உ. க.

§ அல்லது தரித்திரரை.

7 க கொரி. ஐஇ. க. கலா. க. க, ஐக, ஐஉ.

8 மத். உசு. உக. மாற். ஐச. உஉ. லூக். உஉ. ஐக.

‖ அல்லது நினைப்பூட்டுதலாக.

9 யோவா. ஐச. க: உக. உஉ. அப். க. ஐக. க கொரி.ச.இ: ஐஇ.உக.க தெச. ச.ஐக. உ தெச. க. ஐ. யூதா. ஐச. வெளி.க எ.

¶ அல்லது கூறுங்கள்.

10 ச யோ. க. ஐ, ஐக. யோவா. க. இக, கக, கச: ஐக. உஎ. க கொரி. ஐ.உக.

** அல்லதுகியாயத்தீர்ப்பு; உரோ. ஐக. உ.

11 உ கொரி. ஐக. இ. கலா. க. ச.

12 சங். கஉ. இ. க பேர. க. க.

13 சங்.கச. ஐஉ, ஐக. எபி. ஐஉ. இ-ஐக.

14 உ.க. வச.

†† அல்லதுதீர்ப்புக்கு.

Digitized by Google

கக் கூடிவாராதபடிக்கு, [1]அவன் வீட்டிலே சாப்பிடக்கடவன்; மற்றக்காரியங்களை [2]நான் வரும்பொழுது [3]திட்டம்பண்ணுவேன்.

ய.உ. அதிகாரம்.

க. தேவவரங்கள், ச. பலவிதமாயிருந்தாலும், எ. எல்லாம் பிரயோசனத்துக்கு ஏதுவானவைகள் என்றும், அ. அதற்கு அவைகள் பலவிதமாய் அளிக்கப்படுகின்றன என்றும், ய.உ. சபை சரீரத்தின் அவயவங்கள் எல்லாம், ய.க. சரீரத்துக்கு அழகும், உ.உ. பிரயோசனமும், உ.க. உதவியுமுள்ளவைகளாய் இருக்கிறதுபோல, உ.எ. திருச்சபையாகிய கிறிஸ்துவின் சரீரமும் ஒழுங்குபட அதின் அவயவங்களாகி யாரும் இருக்கவேண்டியதென்றும் சொல்லியது.

மேலும் சகோதரரே, [4]ஆவியால் வருகிற வரங்களைக்குறித்து நீங்கள் அறிவீனராயிருக்க எனக்கு மனதில்லை.

உ (முன்னே) [5]நீங்கள் அஞ்ஞானிகளாய், மற்றவர்களால் நடத்தப்பட்ட பிரகாரமாகவே [6]ஊமையான விக்கிரகங்களைச் சேர்ந்திருந்தீர்கள் என்று உங்களுக்குத் தெரிந்திருக்கின்றது.

ஊ ஆதலால் நான் உங்களுக்கு அறிவிக்கிறது என்னவெனில், [7]பராபரனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவன் என்று* சொல்லமாட்டான்; [8]அன்றியும் பரிசுத்த ஆவியினாலே அல்லாமல் ஒருவனும் இயேசுவைக் கர்த்தரென்று சொல்லமாட்டான்.

ச ¶ [9]வரங்களில் வித்தியாசங்கள் உண்டு.

ஙு [10]ஆவி ஒருவரே; [11]ஊழியங்களிலேயும்† வித்தியாசங்கள் உண்டு; கர்த்தர் ஒருவரே.

சு உள்ளான கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு; எல்லாவற்றையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற [12]பராபரன் ஒருவரே.

எ [13]ஆவியின் வரங்கள் பிரயோசனம் உண்டாகும்படியே, அவனவனுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

அ எப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே [14]ஞானத்தைப் போதித்தல் கொடுக்கப்பட்டது; வேறொருவனுக்கு [15]அந்த ஆவியினாலேதானே கல்வியோடே போதித்தல் உண்டாயிற்று.

க வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேதானே [16]விசுவாசம் உண்டாயிற்று; வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேதானே [17]குணமாக்கும் வரங்கள் உண்டாயின.

ய வேறொருவனுக்குப் [1] லத்த அற்புதங்களைச் செய்கிற பலன்களும், வேறொருவனுக்குத் [19]தீர்க்கதரிசனம் சொல்லுதலும், வேறொருவனுக்கு [20]ஆவிகளை வகையறுக்குதலும், வேறொருவனுக்கு அந்நியபாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு [21]அந்நியபாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

யக இந்த வரங்களை எல்லாம் அந்த ஒரே ஆவியானவர் கடப்பித்து, [22]தமது சித்தத்தின்படி [23]அவனவனுக்குத்தகுதியானவைகளைப் பகிர்ந்துகொடுக்கிறார்.

யஉ ¶ அது எப்படியெனில், [24]சரீரம் ஒன்றாய் அநேகம் அவயவங்கள் உள்ளது; ஒரே சரீரத்தின் அவயவங்கள் எல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாயிருக்கின்றது; [25]அதுபோலக் கிறிஸ்துவும் இருக்கிறார்.

யஊ [26]நாம் யூதராயிருந்தும், கிரேக்கராயிருந்தும்,‡ அடிமைகளாயிருந்தும், சுயாதீனராய் இருந்தும் எல்லாரும் [27]ஒரே சரீரமாக ஒரே ஆவியினாலே ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் [28]ஒரே ஆவியில் பானம்பண்ணும்படி செய்யப்பட்டோம்.

யச ¶ சரீரமும் ஒரே அவயவம் உள்ளதாயிராமல், அநேக அவயவங்கள் உள்ளதாயிருக்கின்றது.

கி. பி. ருக.

1 உ.உ.எச்.
2 க கொரி. ச. ய.க.
3 க கொரி. எ. ய.க. நீத். க. இ.
4 க கொரி. ய.ச. க, க.எ.
5 க கொரி. க. ய.க. எபே. உ. ய.க, ய.உ. க தெச. க.க. நீத். க. க. க பே. ச. க.
6 சங். கஅஇ. இ.
7 மற். க. க.க. க யோ.ச. உ, க. * அல்லது சாப மென்று.
8 மத். ய.க. ய.எ. யோவா. ய.இ. உ.க. உ கொரி. க. இ.
9 உரோ.ய.உ. ச. ழ. எபி. உ. ச. க பே. ச. ய.
10 எபே. ச. ச.
11 உரோ. ய.உ. க, எ, அ. எபே. ச. ய.க.
† அல்லது பணிவிடைகளிலேயும்.
12 எபே. க. உ.க.
13 உரோ.ய.உ.க, எ, அ. க கொரி. ய.ச. உ.க. எபே. ச. எ. க பே. ச. ய, ய.க.
14 க கொரி. உ. க, எ.
15 க கொரி. க. இ: ய.க. உ. உ கொரி. அ. எ.
16 மத். ய.எ. ய.க. உ.ய. க கொரி. ய.க. உ. உகொரி. ச.ய.க.
17 மாற். ய.க. ய.அ. பாக். இ. ய.ச.
18 உ.அ. உ.க. எச். மாற். ய.க. ய.எ. கலா. க. இ.
19 உரோ. ய.உ. க. க கொரி. ய.க. உ: ய.ச. க. ழ.
20 க கொரி. ய.ச. உ.க. க பேர. ச. க.
21 அப். உ.ச: ய. ச.க. க கொரி. ய.க. க.—22 யோவா. க. அ. எபி. உ. ச.—23 உரோ. ய.உ. க. க கொரி. எ. எ. உ கொரி. ய.க. எபே. ச. எ.—24 உரோ. ய.உ. ச, இ. எபே. ச. க, ய.க.—25 உ.எ. எச். கலா. க. ய.க.—26 கலா. க. உ. அ. எபே. உ.க, ச. ய.க. கொலோ. க. ய.க.—‡அல்லது புறச்சாதியாராய்.—27 உரோ. க. இ.—28 யோவா. க. க.க: எ. க.எ, க.அ. க.க.

Digitized by Google

ஙஏ காலானது நான் கையாயி ராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவம் அல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவம் அல்லாமல் போகுமா?

ஙஐ காதானது நான் கண்ணாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவம் அல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவம் அல்லாமல் போகுமா?

ஙஒ சரீரமுழுவதும் கண்ணானால், செவி எங்கே இருக்கும்? அது முழுவதும் செவியானால், மோத்தல் எங்கே உண்டாயிருக்கும்?

ஙஓ ஆனதால் [1]பராபரன் தமது சித்தத்தின்படி [2]அவயவங்களை ஒன்றொன்றாகச் சரீரத்திலே வைத்தார்.

ஙக அவையெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எப்படி இருக்கும்?

ஙங ஆனதால் அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே.

ஙச அன்றியும் கண்ணானது கையுடனே நீ எனக்கு வேண்டுவதில்லை என்றும், அல்லது தலையானது கால்களுடனே நீங்கள் எனக்கு வேண்டுவதில்லை என்றும் சொல்லமாட்டாது.

ஙஞ அதைத்தவிர சரீர அவயவங்களில் பலஈனமாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாய் இருக்கின்றன.

ஙட அல்லாமலும் சரீர அவயவங்களில் கனஈனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிகனத்தைக் கொடுக்கிறோம்;* இவ்விதமாய் நம்மிடத்தில் அவலட்சணமானவைகளுக்கே அதிக இலட்சணம் உண்டாயிருக்கின்றது.

ஙண இலட்சணமானவைகளுக்கு அப்படிச் செய்யவேண்டுவதில்லை; ஆனதால் சரீரத்திலே பிரிவினை† உண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஒரேவிதமான கவலையாயிருக்கும்படிக்கு,

ஙத பராபரன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து, இப்படிச் சரீரத்தை ஏற்படுத்தினார்.

ஙந ஆனதினாலே ஒரு அவயவம் பாடுபடும்பொழுது, மற்ற அவயவங்கள் யாவும் கூடப் பாடுபடும்; ஒரு அவயவம் மகிமை அடையும் பொழுது, மற்ற அவயவங்கள் யாவும் கூடச் சந்தோஷப்படும்.

ஙப [3]நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும் [4]தனித்தனியான அவயவங்களாயும் இருக்கிறீர்கள்.

ஙம ¶ அவர்களில் சிலனைப் [5]பராபரன் சபையிலே முதலாவது, [6]அப்போஸ்தலராகவும், இரண்டாவது, [7]தீர்க்கதரிசிகளாகவும், மூன்றுவது, போதகராகவும், பின்பு [8]வல்லமைகளையும், [9]பின்பு குணமாக்கும் வரங்களையும், [10]உதவிசெய்தலையும், [11]ஆளுகைகளையும், அந்நிய‡ பாஷைகளையும் ஏற்படுத்தினார்.

ஙய எல்லாரும் அப்போஸ்தலர்களாய் இருக்கிறார்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளாய் இருக்கிறார்களா? எல்லாரும் போதகராய் இருக்கிறார்களா? எல்லாரும் வல்லமைகளைச் செய்கிறவர்களா?§

ஙர எல்லாரும் குணமாக்கும் வரங்கள் உள்ளவர்களா? எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா?

ஙற ¶ அப்படியிருக்க, [12]நீங்கள் அதிக நன்மையான வரங்களைத் தேடிக்கொள்ளுங்கள், அதற்காக மிகவும் அதிகமேன்மையான வழியையே உங்களுக்காகக் காண்பிக்கிறேன்.

ஙஙஈ. அதிகாரம்.

க. மற்றெல்லாச் சித்த வரங்களும், உ. க. அன்பில்லாவிட்டால் பயன்படாதென்று, ச. அதைப் புகழ்ந்து, ஙஈ. அது சம்பிக்கையிலும், விசுவாசத்திலும் சிறந்ததென்று காட்டியது.

நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கு இராவிட்

ஙஏ. 1 உரோ. ஙஉ. க. க கொரி. க. இ. கக. வசனம்.
ஙஐ. 2 உஅ. வச.
* அல்லது வைக்கிறோம்.
† அல்லது பேதம்.
ஙஒ. 3 உரோ. ஙஉ.இ. எபே. க. உக: ச ஙஉ: இ. உக, கஏ. கொலோ.க.உச.
ஙஓ. 4 எபே. இ. கஏ.
ஙக. 5 எபே ச. ஙக.
ஙங. 6 எபே. உ. உஏ: க. இ.
ஙச. 7 அப். ஙக. க உரோ. ஙஉ. க.
ஙஞ. 8 உ. வச
ஙட. 9 க. வச.
ஙண. 10 ச நோ. ஙக. ஙஎ.
ஙத. 11 உரோ.ஙஉ.அ. க தீமோ.இ ஙஎ. எபி. ஙக. ஙஎ, உச.
‡ அல்லது பல வித; ஙஏ.வசனம்.
§ அல்லது எல்லாருக்கும் வல்லமைகளுண்டா.
ஙந. 12 க கொரி. ஙச. க, கக.

டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளத்தைப்போலவும் இருப்பேன்.

உ நான் [1]தீர்க்கதரிசனங்களை அடைந்தாலும், சகல இரகசியங்களையும் சகலகல்விகளையும் அறிந்தாலும், [2]மலைகளைப் பேர்க்கத்தக்கதாக மிகுந்த விசுவாசம் உள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் வீணனாய் இருப்பேன்.

ஊ மேலும் [3]எனக்கு உண்டான ஆஸ்திகள் யாவையும் ஏழைகளுக்குக் கொடுத்தாலும், சுட்டெரிக்கப்படுவதற்கு என் சரீரத்தைக் கொடுத்தாலும், அன்பு எனக்கு இராவிட்டால் எனக்குப் பிரயோசனம் வராது.

ச ¶ [4]அன்பு நீடிய சாந்தமும் தயவும் உள்ளது; அன்புக்குப் பொறுமை இல்லை; அன்பு தன்னைப் புகழாது, * இறுமாப்பாயிராது, ஆகாததைச் செய்யாது.

இ [5]தன் பொழிவைப் பாராது, உக்கிரத்தை அடையாது, பொல்லாங்கானதைச் சிந்தியாது.

ஈ [6]அநியாயத்தில் சந்தோஷப்படாமல், [7]சத்தியத்தில் † சந்தோஷப்படுகின்றது; அது [8]சகலத்தையும் மூடுகின்றது.

எ சகலத்தையும் விசுவாசிக்கின்றது; சகலத்தையும் நம்புகின்றது, சகலத்தையும் சகிக்கின்றது.

அ ¶ தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஒழிந்துபோம்; அந்நியபாஷைகளும் ஓய்ந்துபோம்; கல்வியும் ஒழிந்துபோம்; அன்பே ஒருக்காலும் ஒழியாது.

கூ அல்லாமலும் [9]நம்முடைய அறிவு குறைவுள்ளது; நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது.

ய நிறைவானது வரும்பொழுது, குறைவானது ஒழிந்துபோம்.

யக நான் குழந்தையாயிருந்தபொழுது, குழந்தையைப்போலப் பேசினேன்; குழந்தையைப்போலச் சிந்தித்தேன்; ‡ குழந்தையைப் போலயோசித்தேன்; நான் புருஷனானபொழுது குழந்தைக்கு ஏற்றவைகளை ஒழித்துவிட்டேன்.

யஉ இப்பொழுது [10]கண்ணாடியினூலே மிழலாய்ப்§ பார்க்கிறோம், [11]அப்பொழுது முகமுகமாகவே பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன்; அப்பொழுது நான் அறியப்பட்டபடி அறிந்துகொள்வேன்.

யஊ ¶ ஆனதால் இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிற்கின்றன; இவைகளில் அன்பே பெரிதாயிருக்கின்றது.

யச. அதிகாரம்.

க. தீர்க்கதரிசனப் போதிப்பு, உக. ச. அந்நியபாஷை பிரயோசனமில்லாதென்று, க. தேவாலயத்தில் எப்படி ஒப்பனைபண்ணப்படும், உஉ. தீர்க்கதரிசனமானது, அந்நியபாஷையானது பிரயோசனத்தை, உஉ. தருணமறிந்திருக்கவேண்டியதென்றும், உக. அவற்றின் பிரயோசனங்கள் இன்னவையென்றும், உச. அவைகள் இப்படி நடத்தப்படவேண்டுமென்றும், உச. சபையில் பேசக்கூடாதென்றும் சொல்லியது.

அன்பையே அதிகமாய்த் தொடருங்கள்; [12]ஆவிக்குரிய வரங்களையும் தேடுங்கள்; (அவைகளில்) [13]தீர்க்கதரிசனம் காட்டுகிற வரத்தையே விரும்புங்கள்.

உ என்னத்தினாலெனில், [14]அந்நியபாஷையில் பேசுகிறவன் மனிதருக்கு அல்ல, பராபரனுக்குத்தெரியப் பேசுகிறான்; ஆவியினாலே அவன் இரகசியங்களைப் பேசிக்கொள்ளுகிறபடியால், ஒருவனும் அவன் பேசுகிறதை அறிய‖ மாட்டானே.

ஊ தீர்க்கதரிசனம் காட்டுகிறவனே மனிதருக்கு எழுப்புதலும் புத்தியும் ஆறுதலும் உண்டாகத் தக்கவிதமாகப் பேசுகிறான்.

ச அந்நியபாஷையில் பேசுகிறவன் தனக்குத்தானே எழுப்புதல் உண்டாக்குகிறான்; தீர்க்கதரிசனம் காட்டுகிறவனே சபைக்கு எழுப்புதல் உண்டாக்குகிறான்.

இ நீங்கள் எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசவிரும்புகிறேன்;

கி. பி. ஙக.

1 க கொரி. உஉ. அ, ஊ, ஏ, உஅ: உச. க. ழி. மத். எ. உஉ.

2 மத். உஎ. உஅ. மாற். ஙக. உஊ. லூக். உஎ. ஊ.

3 மத். ச. க, உ.

4 லூக். ஏ. ஙஉ. க பே. ச. அ.

* அல்லது தன்னை என்னும் மிராது.

5 க கொரி. ஏ. உச. பிலி. உ. ச.

6 சங்.க.உரோ. க. ஊ.

7 உ பேர ச. † அல்லது சத்தியத்துடனே.

8 உரோ. ஙஇ. க. கலா. க. உ. உ தீமோ. உ உச.

9 க கொரி.அ.உ. ‡ அல்லது என்னினேன்.

10 உ கொரி. க. ஙஅ: இ. எ. பிலி. ஊ. ஙஉ.

§ இரேக்கு,கல்லடைக்கடாக.

11 மத். ஙஅ. ஏ. க பேர. ஊ. உ.

12 க கொரி. ஙஉ. ஊ.

13 ச பேர. ஙஊ, உஇ, உஊ.

14 அப்.உ. ச: ஏ. ச ஊ.

‖ இரேக்கு, கேட்க; அப். உஉ. ச.

Digitized by Google

கி. பி. ஙக.

ஆகிலும் அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்கு எழுப்புதல் உண்டாகும்படிக்கு அதின் அருத்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனம் காட்டுகிறவன் அவனிலும் பெரியவனாயிருப்பதிலேலே நீங்கள் தீர்க்கதரிசனம் காட்டுகிறவர்களாகவேண்டும் என்று அதிகமாய் விரும்புகிறேன்.

ச ¶ அந்தப்படி சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து, உங்களுக்கு இரகசியங்களை [1]வெளிப்படுத்தலுக்காவது, உயர்ந்த அறிவு உண்டாக்குதற்காவது, தீர்க்கதரிசனத்தை அறிவதற்காவது, மற்றப் போதகம் உண்டாகுதற்காவது, எதுவானதைச் சொன்னாலும், அந்நியபாஷைகளில் பேசினால் உங்களுக்கு என்னாலே எந்தப் பிரயோசனம் வரும்?

எ சத்தமிடுகிற உயிரில்லாத வாத்தியங்களும் தீங்குழலானாலும் சுரமண்டலமானாலும் சட்டமான தொனிகளினாலே* வித்தியாசம் காட்டாவிட்டால், ஊதினது அல்லது கொட்டினது இன்னதென்று எப்படித் தெரியும்?

அ அந்தப்படி எக்காளமானது சட்டமில்லாத தொனியை இட்டால், எவன் யுத்தத்திற்கு எத்தனம்பண்ணுவான்.

க அதுபோல நீங்களும் தெளிவான† பேச்சை நாவினாலே வசனியாவிட்டால், சொல்லப்பட்டது இன்னது என்று எப்படித் தெரியும்? ஆகாசத்தில் சொல்லுகிறவர்களாயிருப்பீர்களே.

ல உலகத்திலே இத்தனை விதமான பாஷைகள் உண்டாயிருக்கின்றன.

ங அவைகளில் ஒன்றும் கருத்தில்லாததல்ல; அது மெய்தான். ஆகிலும் நான் பாஷையின் கருத்தை அறியாமலிருந்தால், பேசுகிறவனுக்கு அந்நியனாயிருப்பேனே; பேசுகிறவன் எனக்கும் அந்நியனாயிருப்பான்.

1 உக. வச.
* அல்லது இராகங்களினாலே.
† அல்லது இலகுவான.
‡ ஒசே. ஆவி என.

2 எபே. இ. ஙக. கொலோ. க. ஙக.
3 சங். சஎ. எ.
4 க கொரி. ங. உச.

ச ¶ ஆனதால் நீங்களும் ஆவிக்குரிய வரங்களை‡ நாடுகிறவர்களாயிருக்க, சபையாருக்கு எழுப்புதலுக்கு ஏற்றவைகளையே அதிகமாய்ப் பெற்றுக்கொள்ளப் பாருங்கள்.

ஞ அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் கருத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன்.

ட என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமே அன்றி, என்னுடைய கருத்து (மற்றவர்களுக்குப்) பலன் அற்றதாயிருக்கும்.

ண ஆனதால் நான் என்னசெய்யவேண்டும்? ஆவியாலே நான் விண்ணப்பம்பண்ணவேண்டும்; அதின் கருத்தும் விளங்க விண்ணப்பம்பண்ணவேண்டும்; [2]நான் ஆவியாலே பாடவேண்டும்; [3]அதின் கருத்தும் விளங்கப் பாடவேண்டும்.

த இல்லாவிட்டால் நீ [4]ஆவியினாலே தோத்திரம்செய்யும்பொழுது, கல்லாத கூட்டத்தாரிடத்தில் இருக்கிறவன் உன் பேச்சை அறியாதபடியால், உன்னுடைய தோத்திரத்துக்கு ஆமன் என்று எப்படிச் சொல்வான்?

ந நீ நன்றாய்த் தோத்திரிப்பாய்; மற்றவன் எழுப்பப்படமாட்டானே.

ப உங்கள் எல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசிக்கொண்டு, என் தேவனைத் தோத்திரிக்கிறேன்.

ம அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நியபாஷையில் பதினாயிரம் வார்த்தைகளைப் பேசுகிறதிலும், மற்றவர்களுக்குப் பிரயோசனமாய் உபதேசம் சொல்லும்படிக்கு, என் கருத்து விளங்கத்தக்கதாக ஐந்து வார்த்தைகளை மாத்திரம் பேசவே அதிகமாய் விரும்புகிறேன்.

Digitized by Google

உய ¶ சகோதரரே [1]நீங்கள் புத்திக்குக் குழந்தைகளாயிராமல், [2]துர்க்குணத்திற்குக் குழந்தைகளைப் போல இருங்கள்; புத்தியிலே தேறினவர்கள்* ஆவீர்களாக.

உக மறு பாஷைகளாலும் மறு உதடுகளினாலும் இந்தச் சனங்களுடனே பேசுவேன்; அப்படியும் அவர்கள் எனக்குச் செவிகொடுப்பதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று [3]வேதத்தில் [4]எழுதியிருக்கிறதே.

உஉ ஆனபடியினாலே அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அல்ல, அவிசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றன; தீர்க்கதரிசனம் காட்டுதல் அவிசுவாசிகளுக்கு அல்ல, விசுவாசிகளுக்கு அடையாளமாய் இருக்கின்றது.

உங ¶ அப்படியிருக்கச் சபையார் எல்லாரும் ஏகமாய்க் கூடிவந்து எல்லாரும் அந்நியபாஷைகளில் பேசிக்கொண்டால் கல்லாதவர்கள் அல்லது அவிசுவாசிகள் உள்ளே பிரவேசிக்கும்பொழுது [5]நீங்கள் பயித்தியம்பிடித்தவர்கள் என்பார்கள் அல்லவோ?

உச எல்லாரும் தீர்க்கதரிசனம் காட்டினால், அவிசுவாசி அல்லது கல்லாதவன் ஒருவன் உள்ளே பிரவேசிக்கும்பொழுது, அவன் எல்லாராலும் கண்டிக்கப்பட்டும் எல்லாராலும் விதானிக்கப்பட்டும் இருப்பான்.

உஙி அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாம்; இவ்விதமாய் அவன் முகம் கீழாக விழுந்து, பராபரனைப்பணிந்துகொண்டு, [6]பராபரன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறார் என்று அறிக்கையிடுவான்.

உசு ¶ அப்படிக்கன்றி சகோதரரே, நீங்கள் கூடியிருக்கிறபொழுது உங்களில் ஒருவன் சங்கீதம் பாடவும், [7]ஒருவன் போதகம் பண்ணவும், ஒருவன் அந்நியபாஷை பேசவும், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்தவும், ஒருவன் வியாக்கியானம்பண்ணவும் வேண்டுவதென்ன? [8]அவையெல்லாம் எழுப்புதல் உண்டாகத்தக்கதாக நடக்கக்கடவது.

உஎ அந்தப்படி ஒருவன் அந்நிய பாஷையிலே பேசவேண்டுமானால், அவன் இரண்டு, அல்லது மிகுதியாலும் மூன்று (வாக்கியங்களே) மாத்திரம் வெவ்வேறாகப் பேசவும், ஒருவன் வியாக்கியானம்பண்ணவும் வேண்டும்.

உஅ வியாக்கியானம்பண்ணுகிறவன் இல்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் பராபரனுக்கும் தெரியப் பேசக்கடவன்.

உக தீர்க்கதரிசனம் காட்டுகிறவர் இரண்டுபேர் அல்லது மூன்றுபேர் பேசலாம்; [9]மற்றவர்கள் விதானிக்கக்கடவர்கள்.

ஊய அப்பொழுது உளுக்காகிருக்கிற மற்றொருவனுக்கு ஏதாகிலும் வெளிப்படுத்தப்பட்டால், [10]முந்தினவன் பேசாமலிருக்கக்கடவன்.

ஊக எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் ஆறுதல அடைகிறதற்கும் நீங்கள் அனைவரும் ஒருவன் ஒருவனுகத் தீர்க்கதரிசனம் காட்டலாமே.

ஊஉ தீர்க்கதரிசனம் காட்டுகிறவர்களுக்கு உண்டான [11]ஆவிக்குரிய வரங்கள் அதைக் காட்டுகிறவர்களுடைய அதிகாரத்திற்குளே இருக்குமே.

ஊங பராபரனும் கலகத்தில்† பிரியமானவர் அல்ல, சமாதானத்தில் பிரியமானவராய் இருக்கிறாரே; [12]பரிசுத்தவான்களுடைய எல்லாச் சபைகளிலேயும் நடக்கிறதுபோல,

ஊச ¶ உங்கள் சபைகளிலேயும் [13]பெண்பிள்ளைகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; [14]பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை; அவர்கள் கீழ்ப்படியவேண்டும்.

ஊஙி [15]அப்படி வேதமும்சொல்லு

கி. பி. ஙக.

1 சங். ஈகக. உ. மத். ம. ஙி: மஅ.க: மக. ம. உரோ ம.ம.

2 க கொரி. க. க. எபே. ச. ம. எபி.இ. மஉ,ஈக. மத். மஅ. க. க பே. உ. உ.

* அல்லது பெரியவர்கள்; க கொரி. உ. க.

3 யோவா. ம.க.ச.

4 எசா. உஅ. ம, மஉ.

5 அப். உ ஈக.

6 எசா. சஇ. ம. சகரி. அ. உக.

7 க வச. க கொரி. மஉ. அ. க. ம.

8 க கொரி. மஉ. எ. உ கொரி. மஉ. மக. எபே. ச. மஉ.

9 க கொரி. மஉ. ம.

10 க தெச. இ. மக, உம.

11 க பேர. ச.க.

† அல்லது குழப்பத்தில்.

12 க கொரி. மக. மக.

13 க தீமோ. உ. மக. மஉ.

14 க கொரி. மக. க. எபே. இ. உஉ. கொலோ க. மஅ தீத. உ. இ. க பே. க. க.

15 க மோ. க மக.

Digitized by Google

கின்றது; அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள் புருஷரிடத்திலே விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரிகள் சபையிலே பேசுகிறது அவலட்சணமாயிருக்கிறதே.

ஈசு அல்லது பராபரனுடையவசனம் உங்களிடத்தில்இருந்தா புறப்பட்டது? அல்லது அது உங்களிடத்திற்குமாத்திரமா வந்தது?

ஈஎ ¶ [1]ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசி அல்லது ஆவியைப் பெற்றவன் என்று எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளாயிருக்கின்றன என்று அறிக்கையிடக்கடவன்.

ஈஅ ஒருவன் அறியாமற்போனால், அவன் அறியாமல்போகட்டும்.

ஈஆ ஆகையால் சகோதரரே, [2]தீர்க்கதரிசனம் காட்டுகிற வரத்தைத் தேடிக்கொள்வீர்களாக; அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்.

ஈஇ [3]சகலமும் நல்லொழுக்கமாயும் சட்டத்தின்படியேயும் நடக்கக்கடவது.

௰ரு. அதிகாரம்.

க. பிற்பாடுள்ள உயிர்த்தெழுதலினால், ஐஉ. உயிர்த்தெழுதல் இல்லையென்றவர்களுக்கு எதிரிடையாக தம்முடைய உயிர்த்தெழுதலைத் திருஷ்டாந்தப்படுத்தி, உக. அதற்கு மூலமும், உஇ. வகையும் சொல்லி, இக. உயிரோடிருக்கிறவர்கள் அடையும் ஆதாயத்தைக்குறித்தும் சொன்னது.

அன்றியும் சகோதரரே, [4]நான் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேனே; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, [5]அதிலே நிலைநிற்கிறீர்களே.

உ அல்லாமலும் [6]நீங்கள் வீணாய் விசுவாசியாமல், நான் உங்களுக்குப் பிரசங்கித்தவிதமாய்* அதைக் கைக்கொண்டிருந்தால் † [7]இரட்சிப்பு உங்களுக்கு அதினாலே கிடைக்குமே; அந்தச் சுவிசேஷத்தை நான் உங்களுக்கு மறுபடியும் அறிவிக்கிறேன்.

கி. பி. ருக.

1 உ கொரி. ஐ.எ. க யோ. ஈ. க.
2 க கொரி. ஐஉ. கக. க தெச. இ. உஐ.
3 கக. வச.
4 கலா. க. ஐக.
5 உரோ. இ. உ.
6 கலா. க. ச.
* இரேக்கு, பிரசங்கத்தினாலே.
† அல்லது உறுதியாய்ப் பிடித்தால்.
7 உரோ. க. ஐக. க கொரி.க.உக.
8 கலா. க. ஐஉ.
9 க கொரி. ஐக. உ, உக.
10 சங் உஉ.ஐஇ. ழி. எசா. இக. இ, க ழி. தானி. க. உக. சகரி. ஐக. எ. லூக். உச. உக சங. அப். க. ஐச: உக.உக.க பே. க.ஐக: உ. உச.
11 சங்.உ.எ:ஐக. ஐ. எசா. இக. ஐ. ஓசே. க. உ. லூக். உச.உக, சக. அப். உ. உஇ-கக: ஐக. கக, கச, கஇ: உக.உஉ, உக க பே. க.ஐக.
12 லூக். உச.கச.
13 மத். உஅ. ஐஎ. மாற். ஐக. ஐச. லூக். உச. கக. யோவா. உஐ. ஐக, உக. அப். ஐ. சக.
14 லூக்.உச.இஐ. அப்.க.க,ச.
15 அப். க.ச,ட்எ: உஉ. ஐச, ஐஅ. க கொரி. க க.
* அல்லது கருவிலிருந்த.
16 எபே. க. அ.
17 அப்.அ க:சு. க. கலா. க. ஐக. பிலி. க. சு கதீமோ. க. ஐக.
18 எபே க.எ.அ.
19 உ கொரி. ஐக: ஐஉ.ஐக.

[8]நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக [9]ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் [10]வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தும்,

சு [11]வேதவாக்கியங்களின்படி அடக்கம்பண்ணப்பட்டும் மூன்றாம்நாளில் எழுந்தும் இருக்கிறார்.

இ [12]கேபாவுக்கும், பின்பு [13]பன்னிருவருக்கும் தரிசனையானார்.

சு அதின்பின்பு அவர் ஐந்நூறு பேருக்கு அதிகமான சகோதரருக்கும் ஒருமிக்கத் தரிசனையானார், அவர்களில் சிலர்மாத்திரம் நித்திரை அடைந்தார்கள்; மற்ற அதிகமானவர்கள் இந்நாள்வரைக்கும் இருக்கிறார்கள்.

எ பின்பு யாக்கோபுக்கும், [14]அதின்பின்பு அப்போஸ்தலர் எல்லாருக்கும் தரிசனையானார்.

அ [15]எல்லாருக்கும் பின்பு எனக்கும் தரிசனையானார்; நான் பூரணகர்ப்பத்தில் பிறவாமல், அதற்குமுன்பிறந்த* பிள்ளையைப்போல அப்போஸ்தலனானவன்.

க [16]நான் அப்போஸ்தலர் எல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; [17]பராபரனுடைய சபையைத் துன்பப்படுத்தினபடியினாலே, நான் அப்போஸ்தலன் என்று அழைக்கப்படுவதற்குப் பாத்திரன் அல்ல.

ஐ [18]பராபரனுடைய கிருபையினாலே இருக்கிறேன்; அன்றியும் அவர் என்மேல் வைத்த கிருபை வீணாயிருக்கவில்லை; [19]மற்ற எல்லாரிலும் நான் அதிகமாய் உழைத்தேன்; [20]நானல்ல, என்னுடனே இருக்கிற பராபரனுடைய கிருபையினாலே அப்படிச் செய்தேன்.

ஐக ஆகையால் நானாவது அவர்களாவது இப்படியே பிரசங்கித்து வருகிறோம்; நீங்களும் இப்படியே விசுவாசித்து வருகிறீர்கள்.

20 மத். ஐ. உஐ. உரோ.ஐஇ.ஐஅ,ஐசு. உ கொரி.க.இ. கலா.உ.அ. எபே.க.எ. பிலி.உ.ஐக.

Digitized by Google

15 அந்தப்படி கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறார் என்று பிரசங்கித்திருக்க மரித்தோர் உயிரோடெழும்புதல் இல்லையென்று உங்களில் சிலர் எப்படிச் சொல்லலாம்?

16 மரித்தோர் உயிரோடெழும்புதல் இல்லாவிட்டால் [1]கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

17 கிறிஸ்து எழும்பாமல் இருந்தால் எங்கள் பிரசங்கம் அபத்தமாயிருக்குமே, உங்கள் விசுவாசமும் அபத்தமாயிருக்குமே.

18 மரித்தோர் மெய்யாய் எழும்பாவிட்டால், பராபரன் எழுப்பாத கிறிஸ்துவைப் பராபரன் எழுப்பினரென்று [2]அவனைக்குறித்துச் சாட்சிசொன்னதினாலே நாங்கள் பராபரனுக்காகப் பொய்ச் சாட்சிகளாயும் இருப்போமே.

19 அந்தப்படி மரித்தோர் எழும்பாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கமாட்டாரே.

20 அன்றியும் கிறிஸ்து எழும்பாமலிருந்தால், உங்கள் விசுவாசம் வீணையிருக்குமே, நீங்கள் எப்பொழுதும் [3]உங்கள் பாவங்களோடே இருப்பீர்களே.

21 கிறிஸ்துவைப்பற்றி நித்திரை அடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே.

22 அந்தப்படி நாம் கிறிஸ்துவின்மேலே [4]இம்மைக்காகமாத்திரம் நம்பிக்கையாயிருந்தால், எல்லா மனிதர்களிலும் நாம் அதிகநிர்ப்பாக்கியம் உள்ளவர்களாய் இருப்போம்.

23 ¶ அப்படி அல்ல, [5]கிறிஸ்து நித்திரை அடைந்தவர்களில் முதற்பாகமாக [6]மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிறார்.

24 [7]அந்தப்படி ஒரு மனிதனால் மரணம் உண்டானபடியினாலே, [8]ஒரு மனிதனாலும் மரணத்தினின்று உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கின்றது.

25 ஆதாமினாலே எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவினாலே எல்லாரும் உயிராக்கப்படுவார்கள்.

26 [9]அவனவன் தன் இனவரிசையிலே அப்படி ஆவான்; முந்தபாகமானவர் கிறிஸ்து, பின்பு அவர் வரும்பொழுது அவரைச் சேர்ந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.

27 அதன்பின்பு முடிவிருக்கும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, [10]இராச்சியபரிபாலனத்தைப் பிதாவாகிய பராபரனுக்கு ஒப்புக்கொடுப்பார்.

28 [11]இப்படி அவர் எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும் அவர் ஆளுகைசெய்யவேண்டும்.

29 [12]அவர் பரிகரிக்கும் கடைசி சத்துரு மரணம்.

30 [13]எல்லாவற்றையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டது என்று சொல்லும்பொழுது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர்தவிர என்பது வெளியரங்கமாய் இருக்கின்றது.

31 [14]சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்பொழுது, பராபரனே எல்லா இடங்களிலும் எல்லாவற்றிற்கும் மேலாயிருக்கத்தக்கவிதமாகக் [15]குமாரன் தாமும் தமக்கு எல்லாவற்றையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்.

32 ¶ பின்னும் மரித்தோர் எழும்பாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்னசெய்வார்கள்? மரித்தவர்களுக்காக என் ஞானஸ்நானம்பெறுவார்கள்?

33 [16]நாங்களும் என் எந்நேரமும் காசமோசத்திற்கு ஏதுவாவோம்?

34 [17]காடோறும் கான் மரிக்கிறேன்; [18]அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலே உங்களைக்குறித்து எனக்கு உண்

கி. பி. ஙக.

1 க தெச. ச. உச.
2 அப். உ உச. உஉ: ச. உ, ஊ: ஙஉ. ஊஉ.
3 உரோ. ச.உஇ.
4 உ நிமே. உ. ஊ.
5 அப். உஉ உஉ. உஉ. வச. சொலோ. க. உஅ. வெளி.க.இ.
6 க பே.க.உ.
7 உரோ இ.ஙஉ, ஙஏ.
8 யோவா. ஙக உஇ. உரோ. க. உஉ.
9 உஉ. வச. க தெச. ச.ஙஇ, ஙஈ, ஙஎ.
10 தானி.எ. ஙச, உஎ.
11 சங்.எஅ.க.அப். உ. ஊச, ஙஇ. எபே. க. உஉ. எபி. க. ஙஈ; உ. ஙஈ.
12 உ நிமே.க.உ. வெளி. உஅ.ஙச.
13 சங்.அ க. ஙத். உஅ. உஅ. எபி. உ.அ.க பே. க. உஉ.
14 பிலி. க. உஈ.
15 க கொரி. க. உஈ: ஙஈ. க.
16 உ கொரி.ஙஈ. உஈ. கலா. இ. ஙஈ.
17 உரோ.அ.ஙஈ. க கொரி. ச.க. உ கொரி. ச.உ, ஈ: ஙஈ. உஈ.
18 க தெச. உ. ஙஈ.

Digitized by Google

டாயிருக்கிற மேன்மையின்* பேரிலே நிச்சயமாய்ச்சொல்லுகிறேன்.

ஈஉ [1]மரித்தோர் எழும்பாவிட்டால், நான் எபேசுவிலே மனிதர் வழக்கமாய்த்† துஷ்டமிருகங்களுடனே போராடினதினாலே, எனக்கு என்ன பிரயோசனம் வரும்? நாளைக்குச் சாவோம்; ஆகையால் [2]புசிக்கவும் குடிக்கவும் கடவோம் என்று சொல்லலாமே.

ஈஊ வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக; [3]பொல்லாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.

ஈ஋ நீங்கள் பின்னும் பாவம்செய்யாமல், [4]நியாயமானபடி தெளிவு அடையுங்கள்; (உங்களில்) [5]சிலர் பராபரனை அறியாதிருக்கிறார்களே; [6]உங்களுக்கு வெட்கம்வர இதைச் சொல்லுகிறேன்.

ஈ஌ ¶ [7](ஆகிலும்) மரித்தோர் எப்படி எழும்புவார்கள்? எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள் என்று கேட்டால்,

ஈ஍ ஆ புத்தியீனனே, [8]நீ விதைக்கிற தானியம் கெடாவிட்டால், புதிதான பயிர் தோன்றமாட்டாதே.

ஈஎ மேலும் நீ விதைக்கிறபொழுது இனிமேல் விளையும் உடலை விதையாமல், கோதுமை அல்லது மற்றொருதானியத்தினுடையவெறுமணியையே விதைக்கிறாய்.

ஈஅ அதற்குப் பராபரன் தமது சித்தத்தின்படியே உடலைக் கொடுக்கிறார்; அந்தப்படி விதைவகைகள் யாவற்றிற்கும் அதற்கதற்கு ஏற்ற உடல் உண்டு.

ஈக எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சம் அல்ல; மனிதருடையமாம்சமும் வேறே, மிருகங்களுடைய மாம்சமும் வேறே, மச்சங்களுடையதும் வேறே, பறவைகளுடையதும் வேறே,

ஈச பரமண்டலத்திற்கு உரிய தேகங்களும் உண்டு; பூமிக்கு உரிய தேகங்களும் உண்டு, பரமண்டலத்திற்கு உரிய தேகங்களுடைய மகிமையும் வேறே, பூமிக்கு உரிய தேகங்களுடைய மகிமையும் வேறே.

ஈஙு சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, அவைகளில் ஒரு நட்சத்திரத்தினுடைய மகிமை மற்றொரு நட்சத்திரத்தின் மகிமைக்கு மேற்படுகின்றதே.

ஈஞ ¶ [9]அப்படிப்போல, மரித்தோர் உயிரோடெழும்புதலும் உண்டாயிருக்கும்; அழிவுள்ள சரீரம் விதைக்கப்பட்டு, பின்பு அழிவில்லாமையாய் எழுந்திருக்கும்.

ஈட [10]கனஈனமானசரீரம் விதைக்கப்பட்டு, பின்பு மகிமையாய் எழுந்திருக்கும்; பலஈனமுள்ள சரீரம் விதைக்கப்பட்டுப் பின்பு பலமாய் எழுந்திருக்கும்.

ஈண சீவனுள்ள சரீரம் விதைக்கப்பட்டும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; இரத்தமாம்சமுடைய சரீரமும் உண்டு; ஆவிக்குரிய சரீரமும் உண்டு.

ஈத ஆனதால் வேதத்திலே எழுதியிருக்கிறபடி [11]முந்தின மனிதனாகிய ஆதாம் சீவாத்துமாவானான்; [12]பிந்தின ஆதாம் [13]உயிர்ப்பிக்கிற ஆவியானார்.

ஈப ஆவியான சரீரம் முந்தினதாயிராமல், இரத்த மாம்சமுடைய சரீரமே முந்தினதாயிருக்கிறது.

ஈப பின்பு ஆவியான சரீரம் உண்டாம்; [14]முந்தின மனிதன் பூமியின் [15]மண்ணானவன்; [16]இரண்டாம் மனிதன் பரமண்டலத்திற்குரிய கர்த்தர்.

ஈம மண்ணானவன் எப்படியோ அப்படி மண்ணானவர்களும் இருப்பார்கள்; [17]பரமண்டலத்திற்குரியவர் எப்படியோ அப்படி பரமண்டலத்திற்குரியவர்களும் இருப்பார்கள்.

ஈய [18]மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்

---

* சில பிரதிகளில், உங்களுடைய மேன்மையின்.

1 உ கொரி.க.அ.

† மனித வழக்கமாய்ப் பேசில்.

2 பிச. உ. உச. ஏச. உஉ. ஙக: இக. ஙஉ. தூக். ஙஉ. ஙக.

3 க கொரி. இ. க.

4 உரோ. ஙக. ஙக. எபே.இ.ஙச.

5 க தெச. ச. இ.

6 க கொரி. க.இ.

7 எசே. ஙஎ. க.

8 யோவா. ஙஉ. உச.

9 தானி. ஙஉ. க. மத். ஙக. ச஫.

10 பிலி. க. உக.

11 க மோ.உ. எ.

12 உரோ.இ. ஙச.

13 யோவா. இ. உக:க. கக,கக, சஅ, சே, ஙஎ. பிலி. க. உக. கொலோ. க.ச.

14 யோவா. க. கக.

15 க மோ.உ. எ: க. ஙக.

16 யோவா.க.ஙக, கக.

17 பிலி. க. உஅ, உக.

18 க மோ. இ. க.

Digitized by Google

கிறதுபோல, [1]பரமண்டலத்திற்குரியவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.

நய ¶ சகோதரரே, [2]மாம்சமும் இரத்தமும் பராபரனுடைய இராச்சியத்தைச் சுதந்தரிக்கக்கூடாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிக்கமாட்டாது; ஆனதால் இவைகளைச் சொன்னேன்.

நக மேலும் நான் உங்களுக்கு இரகசியத்தை அறிவிக்கிறேன்; (என்னவெனில்,) [3]நாம் எல்லாரும் நித்திரை அடைந்துபோவதில்லை; ஆகிலும் எல்லாரும் கடைசி எக்காளம் தொனிக்கும்பொழுது ஒரு நிமிஷத்திலே [4]ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாக்கப்படுவோம்.

நஉ [5]எக்காளம் தொனிக்குமே; அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழும்புவார்கள்.

நஊ அன்றியும் அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், [6]சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டியபடியால், நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

நஎ ¶ அந்தப்படி அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்பொழுது, [7]மரணம் செயமாக விழுங்கப்பட்டதென்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.

நஙி [8]ஆ மரணமே, உன் கூர்மை எங்கே? பாதாளமே,* உன் செயம் எங்கே?மரணத்தின்கூர்மைபாவம்.

நகூ [9]பாவத்தின் பலன் நியாயப்பிரமாணம்.

நகஎ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலே, [10]நமக்குச் செயம்கொடுத்திருக்கிற [11]பராபரனுக்குத் தோத்திரம் உண்டாவதாக.

நகஅ [12]ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, [13]கர்த்தனைக் குறித்து உங்கள் வேலை வீணையிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகிக்கொள்ளுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

இ. பி. குக.

1 உரோ. அ. உசு. உ கொரி. க. உஅ: சு. உக. பிலி. க. உக. க பேர. க. உ.
2 மத். உக. உஎ. பேரா. க. க, ஙி.
3 க தெச. சு. உஙி, உக, உஎ.
4 பிலி. க. உக.
5 சகரி. கூ. உசு. மத். உசு. கக. போரா. ஙி. உஙி. க தெச. சு. உக.
6 உ கொரி. ஙி. சு.
7 எசா. உஙி. அ. எபி. உ. உசு, உஙி. வெளி. உஅ. உசு.
8 ஓசே. உக. உசு. * அல்லது பிரேதக்குழியே.
9 உரோ. சு. உஙி: ஙி உக: எ. ஙி, உக.
10 க பேர. ஙி. சு, ஙி.
11 உரோ. எ. உஙி.
12 உ பே. க. உசு.
13 க கொரி. க. அ.
14 அப். உக. உகூ: உசு. உஎ. உரோ. உஙி. உக. உகொரி. அ. சு: கூ. கஙி. உ. கலா. உ. உ.
15 அப். உஅ. எ. வெளி. க. உ.
† ஓரேக்கு, கொடையை; உ கொரி. அ. சு, க, உகூ.
16 உ கொரி. அ. உகூ.
17 உ கொரி. அ. சு, உக.
18 அப். உக. உக. உ கொரி. க. உக.
19 அப். உஙி. க: எ உஙி: உக. ஙி. உரோ. உஙி. உசு. உ கொரி. க. உக.

யசு. அதிகாரம்.

க. ருசலேமிலுள்ள எளிய பிரிந்தவர்களுக்கும் தனக்கும் சேர்த்து அனுப்பவேண்டுமென்றும். உ. தீமோத்தேயுவை அங்கோசம்பண்ணவேண்டுமென்றும் சொல்லி, கூ. சில பட்சமுள்ள புத்திமதிகளும் எழுதி, கூஎ. ஆசேஷ வாத்தி கிருபத்தை முடித்தது.

[14]பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தருமங்களைக்குறித்து நான் கலாத்தியதேசத்துச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே, நீங்களும் செய்வீர்களாக.

உ நான் வரும்பொழுதே தருமம் சேர்க்குதல் உண்டாயிராதபடிக்கு, உங்களில் அவனவன் [15]வாரத்து முதல்நாள்கள்தோறும் தன்தன் வாழ்வுக்குத்தக்கதாக எதையாகிலும் எடுத்து, தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.

கூ நான் வந்திருக்கும்பொழுது, உங்களுடைய உபகாரத்தை† எருசலேமுக்குக் கொண்டுபோகும்படிக்கு நீங்கள் [16]நிருபங்களிலே ஏற்படுத்துகிறவர்கள் எவர்களோ, அவர்களை அனுப்புவேன்.

கூ [17]நானும் போகத் தகுதியானால், அவர்கள் என்னுடனேகூட வரலாம்.

கூ ¶ [18]நான் மக்கேதோனியாகாட்டின் வழியாய்ப் போகிறேன்; அதின் வழியாய்ப் போகும்பொழுது, உங்களிடத்திற்கு வருவேன்.

கூ ஒருவேளை நான் உங்களிடத்தில் சிலகாலம் தரித்திருப்பேன்; [19]நான் எங்கேபோனாலும், நீங்கள் என்னை வழிவிட்டனுப்பும்படிக்கு, ஒருவேளை மாரிகாலம் முழுமளவும் இருப்பேன்.

கூஎ ஆனதால் நான் இப்பொழுது போகிற பிரயாணத்திலே உங்க

Digitized by Google

னைப் பார்க்கமாட்டேன்; [1]கர்த்தர் உத்தரவுகொடுத்தால், உங்களிடத்தில் சிலகாலம் தரித்திருக்கலாம் என்று நம்பியிருக்கிறேன்.

அ இந்த எபேசுபட்டணத்திலே [2]பெரிதும்பெலனுமானகதவுஎனக்குத்திறக்கப்பட்டிருக்கிறபடியினாலும் [3]விரோதம் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறபடியினாலும்,

க பெந்தக்கோஸ்து பண்டிகைவரைக்கும் இங்கே இருப்பேன்.

ய ¶ [4]தீமோத்தேயு உங்களிடத்திற்கு வரும்பொழுது, அவன் உங்களிடத்தில் பயமில்லாமல் இருக்கும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; [5]என்னைப்போல அவனும் கர்த்தருடைய கிரியையை நடப்பிக்கிறானே.

யக ஆனபடியினாலே [6]ஒருவனும் அவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; அன்றியும் அவனும் அவனுடனேகூட இருக்கிற சகோதரரும் வருகிறதற்கு நான் காத்திருக்கிறபடியால், [7]நீங்கள் அவனைச் சமாதானத்தோடே என்னிடத்தில் வரும்படிக்கு வழிவிட்டனுப்புங்கள்.

யஉ சகோதரனாகிய [8]அப்பொல்லோவும் இந்தச் சகோதரரோடுங்கூட உங்களிடத்தில் வரும்படிக்கு, அவனை மிகவும் வேண்டிக்கொண்டேன்; அப்படியிருந்தும் இப்பொழுது போக அவனுக்கு மனதே இல்லை; அவனுக்கு நற்சமயம் உண்டாயிருக்கும்பொழுது உங்களிடத்தில் வருவான்.

யங ¶ [9]விழித்திருங்கள் [10]விசுவாசத்திலே நிலைத்திருங்கள்; புருஷராயிருங்கள்; [11]பெலன்கொள்ளுங்கள்.

யச [12]உங்கள் காரியங்களை எல்லாம்அன்போடே செய்வீர்களாக.

யஙி சகோதரரே, [13]ஸ்தேவானுடைய குடும்பத்தார் அகாயதேசத்திலே [14]முதற்பாகமானவர்கள்என்றும், [15]பரிசுத்தவான்களுக்குஊழியம்செய்யும்படிக்கு அவர்கள் தங்களை நியமித்தவர்கள் என்றும் அறிந்திருக்கிறீர்களே.

யசு இப்படிப்பட்டவர்களுக்கும் உதவிசெய்து [16]பிரயாசப்படுகிற மற்றயாவருக்கும்[17]நீங்களும்கீழ்ப்படிந்திருக்கவேண்டும்என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

யஎ ஸ்தேவானும் பொருத்துநாத்தும் அகாயிக்குசும் வந்துசேர்ந்ததினாலே சந்தோஷமாய் இருக்கிறேன்.

யஅ உங்கள் ஆவிக்குச் செய்ததுபோல [18]அவர்கள் என்னுடைய ஆவிக்கும் ஆறுதல்செய்தபடியால் [19]நீங்கள் இல்லாததினால் உண்டான குறைவை நீக்கி நிறைவுண்டாக்கினார்கள்; [20]இப்படிப்பட்டவர்களைக் கனமாய் எண்ணிக்கொள்வீர்களாக.

யக ¶ ஆசியதேசத்திலுள்ளசபைகள் உங்களை வாழ்த்துதல் செய்கிறார்கள்; ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் [21]தங்கள்வீட்டிலே கூடியசபையோடும்கூட கர்த்தரைப் பற்றிய உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள்.

உய சகோதரர் எல்லாரும் உங்களை வாழ்த்துகிறார்கள்; [22]நீங்கள் ஒருவரை ஒருவர் பரிசுத்தமான முத்தத்தினால் வாழ்த்துதல்செய்வீர்களாக.

உக ¶ [23]பவுலாகிய நான் என் கையெழுத்தோடே வாழ்த்துதல் செய்கிறேன்.

உஉ ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் [24]அன்புகூராமற்போனால், [25]அவன் சபிக்கப்பட்டவனாய் இருப்பான்; [26]அவனுக்குத் தண்டிப்பாகக் கர்த்தர் வருவார்.

உங கர்த்தராகிய [27]இயேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது.

உச என்னுடைய அன்பு கிறிஸ்து இயேசுவைப் பற்றிக்கொள்ளுகிற உங்கள் எல்லாரோடும்கூட இருக்கின்றது.—ஆமன்.

கி பி. ருகூ.

1 அப். ௨அ. உக. க கொரி.உ.உகூ. யாக். உ. ௨இ.
2 அப். ௨உ. உஎ. உ கொரி. உ. ௨உ. கொலோ. உ. க. வெளி. க. அ.
3 அப். ௨கூ. கூ.
4 அப். ௨கூ.உஉ. க கொரி.உ.எ.
5 உரோ. ௨க. உக. பிலி. உ. உ௭, உஉ. க தெச. க. உ.
6 க தீமோ. உ. ௨உ.
7 அப். ௨இ. கக.
8 க கொரி.க.௨உ: க. இ.
9 மத். உச. உ௭: உஇ. ௨க. க தெச. இ க. க பே.இ.அ.
10 க கொரி. ௨இ. க.பிலி. க.உஎ: உ.க. க தெச.க. அ. உ தெச.உ. ௨இ.
11 எபே. கூ. ம. கொலோ.க.௨க.
12 க கொரி. ௨உ. க. க பே. உ.அ.
13 க கொரி. க. ௨க.
14 உரோ.௨க. இ.
15 உ கொரி. அ. உ: கூ. க. எபி. கூ. ம.
16 எபி. கூ. ம.
17 எபி. ௨க. ௨எ.
18 கொலோ. உ. அ.
19 உ கொரி.௨க. கூ. பிலி.உ. கம. பிலே. ௨க.
20 பிலி உ. உகூ. க தெச. இ.ம௨.
21 உரோ.௨க. இ, ௨இ. பிலே. உ.
22உரோ.௨கூ ம௧.
23 கொலோ. உ. ம௮. உ தெச.க. ம௭.
24 எபே. க.உச.
25 கலா க. அ,கூ.
26 யூதா. ம உ,ம௫.
27 உரோ. ம௧. உம.

Digitized by Google

II. CORINTHIANS.

அப்போஸ்தலனாகிய பவுல்

கொரிந்தியருக்கு எழுதின

இரண்டாம் நிருபம்.

க. அதிகாரம்.

க. அப்போஸ்தலன் தன் உபத்திரவங்களிலேயெல்லாம் விசேஷமாய், அ. ஆசியாவிலே அடைந்த தன்பத்தில் உண்டான ஆறுதலினாலே சபைக்கு ஆறுதல் சொல்லி, ஙஉ. தான் கலிசேஷத்தின் மாறுத சத்தியத்தை உத்தமமாய்ப் பிரசங்கித்ததற்குத் தன் மனச்சாட்சியையும், அவர்களுடைய மனச்சாட்சிகளையும் சாட்சிபிட்டு, ஙஞ. தான் கொரிந்துக்கு வாதற்கு நியாயம் சொன்னது.

பராபரனுடைய சித்தத்தினாலே இயேசுக்கிறிஸ்துவின் [1]அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும் கொரிந்துபட்டணத்திலுள்ள பராபரனுடைய சபைக்கும் [2]அகாயதேசம் எங்குமுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுக்கும்கூட எழுதுகிறதாவது:

உ நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் [3]கிருபையும் சமாதானமும் உண்டாகக்கடவது.

ங ¶ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமாய், பராபரனுமாய், மிகுந்த தயையுடைய பிதாவுமாய், சகலவிதமான ஆறுதலையும் அநுக்கிரகிக்கிற [4]தேவனுமாய் இருக்கிறவர் தோத்திரிக்கப்படக்கடவர்.

ச அவரே எங்களுக்கு வரும் சகல உபத்திரவகாலங்களிலேயும் எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்; பராபரனாலே நாங்கள் அடைகிற ஆறுதலினாலே சகலவித உபத்திரவகாலங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியாய் இருக்கிறோம்.

ஞ எப்படியெனில், [5]கிறிஸ்துவின்நிமித்தம் பாடுகள் எங்கள்மேலே பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகின்றது.

ட ஆனதால் நாங்கள் உபத்திரவப்பட்டால், [6]அது உங்கள் ஆறுதலுக்காகவும், இரட்சிப்புக்காகவும் இருக்கும்; நாங்கள் ஆறுதலடைந்தால், அதுவும் உங்கள் ஆறுதலுக்காக இருக்கும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல, நீங்களும் படுகிற பாடுகளைப் பொறுமையோடே சகிக்கிறதினாலே, அந்த ஆறுதல் பலனைச் செய்கின்றது.*

ண [7]அப்படி நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுமல்லாமல் எங்களோடேகூட ஆறுதலையும் அடைகிறீர்கள் என்று காண்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாய் இருக்கிறோம்.

த ¶ ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு வந்த [8]உப

கி. பி. சுமா.

1 க கொரி. க. க.
எபே. க. க.
கொலோ. க க.
க தீமோ. க. க.
உ தீமோ. க. க.
2 பிலி. க. க. கொலோ. க. உ.
3 உரோ. க. எ.
க கொரி. க. க.
கலா. க. க.
பிலி. க. உ.
கொலோ. க. உ.
க தெச. க. க.
உ தெச. க உ.
பிலே. க.
4 எபே. க. க.
க பே. க. க.
5 அப். கூ. ச.
உ கொரி. ச. ம.
கொலோ. க. உச.
6 உ கொரி. ச. ஙஞ.
* அல்லது உண்டாக்கப்பட்டிருக்கின்றது.
7 உரோ. அ. ஙஎ.
உ தீமோ. உ. ஙஉ.
8 அப். ஙசு. உக.
க கொரி. ஙஞ. கஉ: ஙக. க.

Digitized by Google

கி. பி. சுஏ.

த்திரவத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டும் என்று எங்களுக்கு மனதில்லை; என்னவெனில் பிழைப்போமா என்றும் நாங்கள் மிகவும் சந்தேகப்படத்தக்கதாக, (எங்கள்) பலத்திற்கு மிஞ்சின அதிக பாரம் எங்களுக்கு உண்டாயிற்று.

ச மேலும் மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம்.* [1]அது எங்கள்மேலே அல்ல, மரித்தோரை எழுப்புகிற பராபரன்மேலே நாங்கள் நம்பிக்கையாய் இருக்கும்படிக்கு ஏதுவாயிருந்தது.

ய [2]அப்படிப்பட்ட மரணத்தினின்று அவர் எங்களை இழுத்தார்; இப்பொழுதும் இழுக்கிறார்; பின்னும் இழுப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்.

யக அதற்காக [3]நீங்களும் விண்ணப்பத்தினாலே எங்களுக்கு உதவிசெய்யும்பொழுது, அநேகர் நிமித்தம் எங்களுக்கு உண்டான [4]உவுக்காக அநேகராலே எங்கள் நிமித்தம் தோத்திரங்களும் செலுத்தப்படும்.

யஉ ¶ அதற்கு ஏதுவாக எங்களுடைய புகழ்ச்சி என்னவென்றால், நாங்கள் உலகத்திலே விசேஷமாக உங்களிடத்திலே கபடமில்லாமல் [5]தெவ்விய உண்மையோடும் [6]மாம்சத்திற்கு ஏற்ற ஞானத்தோடே அல்ல, பராபரனுடைய கிருபையோடும் சஞ்சரித்தோம் என்று எங்கள் மனது எங்களுக்குச் சாட்சிசொல்லுகின்றது; இதுவே எங்களுடைய புகழ்ச்சி.

யங ஆனதால் (இங்கே) நீங்கள் வாசித்தும் அறிந்து ஒத்துக்கொண்டும் இருக்கிற பொருள்களையே அன்றி, வேறே பொருள்களை நாங்கள் உங்களுக்கு எழுதுகிறதில்லை; முடிவுபரியந்தமும் அப்படியே அறிந்து ஒத்துக்கொள்வீர்கள் என்று நம்பியிருக்கிறேன்.

யச கர்த்தராகிய இயேசுவினுடைய நாளிலே [7]நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பதுபோல, [8]நாங்களும் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருக்கிறதை ஒரு பாகமாய் அறிந்து ஒத்துக்கொண்டிருக்கிறீர்களே.

யஞ ¶ இப்படிப்பட்ட நம்பிக்கையினாலே நான் [9]உங்களுக்கு மறுபடியும் உபகாரம்† உண்டாகும்படிக்கு,

யசு [10]முதலாவது உங்களிடத்தில் வரவும், உங்கள் ஊர்வழியாகமக்கேதோனியாநாட்டுக்குப் போகவும், [11]மக்கேதோனியாவை விட்டுத் திரும்ப உங்களிடத்தில் வரவும், உங்களால் யூதேயா நாட்டுக்கு வழிவிட்டு அனுப்பப்படவும் யோசனையாய் இருந்தேன்.

யவ இப்படி நான் வீணகவா யோசித்தேன்? அல்லது என்னிடத்திலே ஆம் என்பது ஆமென்றும் அல்லவென்பது அல்லவென்றும் இருக்கத்தக்கதாக, நான் யோசிக்கிறவைகளைத் [12]தேக இச்சையின்படியா யோசிக்கிறேன்?

யஅ ¶ அப்படியல்ல, நாங்கள் உங்களுக்குச் சொன்ன வார்த்தை‡ ஆம் என்றும், அல்ல என்றும் இருக்கவில்லை என்கிறதற்கு உண்மையுள்ள பராபரனே சாட்சியாய் இருக்கிறார்.

யக [13]பராபரனுடைய வாக்குத்தத்தங்கள் எல்லாம் இயேசுக்கிறிஸ்துவினாலே ஆமென்றும் ஆமெனென்றும் இருக்கிறபடியால்,

உய பராபரனுடைய மகிமை பிரஸ்தாபமாகும்படிக்கு, என்னாலும் சில்வானுவினாலும் தீமோத்தேயுவினாலும் உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட [14]பராபரனுடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும் ஆமென்றும் அல்லவென்றும் இராமல், [15]ஆம் என்று (எப்பொழுதும் ஒரேவிதமாய்) இருந்தாரே.

உக எங்களையும் உங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி,

* அல்லது நீத்திருந்தோம்.

1 எபே. உ, எ.

2 உ பே. உ. க.

3 உரோ. ஙஇ. கo.பிலி. க.கொ. பிலே. உஉ.

4 உ கொரி. ச. ஙஇ.

5 உ கொரி. உ. ஙஎ: ச. உ.

6 க கொரி. உ. ச, ஙக.

7 பிலி. உ. ஙக: ச. க. க தெச. உ. ஙக, உஏ.

8 உ கொரி. இ. ஙஉ.

9 உரோ. க. ஙக.

† அல்லது இருபை.

10 க கொரி. ச. ஙக.

11 க கொரி. ஙக. இ, க.

12 உகொரி. ஙஉ.

‡ அல்லது பிரசங்கம்.

13 உரோ. ஙஇ. அ, க.

14 மாற். க.க. லூக். க.கஇ. அப். க. உஏ.

15 எபி. ஙக. அ.

Digitized by Google

[1]நமக்கு அபிஷேகம்பண்ணினவர் பராபரன்.

உஉ [2]அவரும் நம்மை முத்திரைப்படுத்தி, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் [3]அச்சாரத்தைக் கொடுத்திருக்கிறார்.

உக ¶ [4]நான் உங்களைத் தப்பவிடும்படிக்கே இதுவரைக்கும் கொரிந்துபட்டணத்திற்கு வாராதிருக்கிறேன்; [5]இதைக்குறித்து என் ஆத்துமாவுக்குச் சாட்சியாகப் பராபரனையே அழைக்கிறேன்.

உச [6]விசுவாசத்தின் நிமித்தம் நாங்கள் உங்களைப் பலவந்தமாய் ஆளுகிறவர்களாக அல்ல, [7]நீங்கள் (இதுவரைக்கும்) விசுவாசத்திலே நிலைநிற்கிறபடியால், உங்கள் சந்தோஷத்திற்கு உதவிக்காரராகவே இப்படிச் சொல்லுகிறேன்.

2. அதிகாரம்.

க. தான் அவர்களிடத்தில் வராததற்கு நியாயம் சொல்லி, கூ. புறம்பாக்கப்பட்டவன் உத்தம மனஸ்தாபம் அடைந்ததினால் தான் அவனை மன்னித்துத் தேற்றக்கட்டளையிட்டு, உஉ. தான் தரோவாவிலிருந்து மக்கேதோனியாவுக்குப் போன முகாந்தரத்தையும், உசு. தன் பிரசங்கத்தினால் பராபரன் எங்கும் உண்டாக்கின சற்பலனையும்குறித்துச் சொன்னது.

ஆனதால், [8]துக்கத்துடனே நான் உங்களிடத்திலே திரும்ப வாராதபடிக்கு எனக்குள்ளே தீர்மானம் செய்தேன்.

உ நான் உங்களைத் துக்கப்படுத்தினால் என்னாலே துக்கம் அடைந்தவனே அல்லாமல், எவன் என்னைச் சந்தோஷப்படுத்துவான்?

கூ ஆகையால் [9]என்னுடைய சந்தோஷம் உங்கள் எல்லாருக்கும் சந்தோஷமாய் இருக்குமென்று நான் உங்கள் எல்லாரையும் நம்பிக்கொண்டு, [10]நான் வரும்பொழுது எனக்குச் சந்தோஷம் உண்டாக்கவேண்டியவர்களால் நான் துக்கம் அடையாதபடிக்கு, (முன்னே) அப்படித்தானே உங்களுக்கு எழுதினேன்.

கி. பி. கூஅ.

1 க பேர். உ. உஅ, உக.
2 எபே. க. உக: சா.கஅ. உதீமே. உ. உகூ. வெளி. உ. உக.
3 உ கொரி. ஓ. ஓ.எபே. க.உச.
4 க கொரி. சு. உக. உ கொரி. உ. க: உஉ. உஅ: உகூ. உ, அ.
5 உரோ. க. கூ. உ கொரி. உக. கூக. கலா. க. உஅ. பிலி. க. அ.
6 க கொரி. க.ஓ: க பே.ஓ.க.
7 உரோ. உக. உஅ. க கொரி. உஓ.க.
8 உ கொரி. க. உக: உஉ. உஅ, உக: உக. அ.
9 உ கொரி. எ. உக: அ. உஉ. கலா.ஓ.அ.
10 உ கொரி.உஉ. உக.
11 உ கொரி. எ. அ, க, உஉ.
12 க கொரி. ஓ. க.
13 கலா. சு. உஉ.
14 க கொரி. ஓ. சு,ஓ. க நீமோ. ஓ. உஅ.
* அல்லது என்னடிப்பு.
15 கலா.க.க.
16 உ கொரி. எ. உஓ: அ. கூ.

சு அன்றியும் மிகுந்த விசாரமும் மனஇடுக்கமும் அடைந்தவனாய், அதிகமான கண்ணீரோடே உங்களுக்கு எழுதினேன்; [11]நீங்கள் துக்கப்படும்படிக்கு அல்ல, உங்கள்மேலே அதிகமாயிருக்கிற என்னுடைய அன்பை நீங்கள் அறியும்படிக்கே அப்படிச் செய்தேன்.

ஞ ¶ [12]துக்கம் உண்டாக்கினவன் [13]என்னை (மாத்திரமல்ல) நான் அதிக பாரம் வையாதபடிக்கு, (என்னிலே) ஒருவிதமாய் உங்கள் எல்லாரையும் துக்கப்படுத்தினேன்.

ஞ அப்படிப்பட்டவனுக்கு [14]அநேகரால் உண்டான இந்தத் தண்டனை* போதும்.

எ ஆனதால் அவன் அதிக துக்கத்தினாலே விழுங்கப்படாதபடிக்கு, [15]நீங்கள் அதிக சந்தோஷமாய் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்யவேண்டும்.

அ அந்தப்படி நீங்கள் உங்கள் அன்பை அவனுக்குக் காண்பிப்பீர்களாக என்று உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

கூ அதற்காகவும் [16]நீங்கள் சகலத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்கள் குணத்தை அறியவும் இப்படி எழுதியிருக்கிறேன்.

ய ஆனதால் யாருக்கு மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை நான் (இப்பொழுது) மன்னித்தேனே, அதை நான் உங்கள் நிமித்தம் கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே† மன்னித்தேன்.

யக சாத்தானுடைய யோசனைகள் எங்களுக்குத் தெரியாமல் இருக்கவில்லை; ஆனதால் நாம் அவனாலே மேற்கொள்ளப்படாதபடிக்கு அப்படிச் செய்தேன்.

யஉ ¶ மேலும் நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி [17]தரோவாப்பட்டணத்

† அல்லது கிறிஸ்துவுக்காக.
17 அப். கூ. அ: உஅ. கூ.

Digitized By Google

திலே வந்தபொழுது, [1]கர்த்தரா லே எனக்குக் கதவு திறக்கப்பட் டிருக்கையில்,

13 நான் என் சகோதரனாகிய நீத்துவைக் காணாததினாலே [2]என் ஆவிக்கு அமைதல் இருக்கவில் லை; ஆனதால் நான் அவர்களாலே அனுப்பப்பட்டு, மக்கேதோனியா காட்டுக்குப் புறப்பட்டுப் போ னேன்.

14 ¶ கிறிஸ்துவினாலே எங்களை எப்பொழுதும் வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலே யும் எங்களைக்கொண்டு அவனை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற பராபரனுக் குத் தோத்திரம் உண்டாவதாக.

15 [3]இரட்சிக்கப்படுகிறவர்களு க்குள்ளேயும் [4]கெட்டுப்போகிற வர்களுக்குள்ளேயும் நாங்கள் பரா பரனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்த மாய் இருக்கிறோமே.

16 [5]கெட்டுப்போகிறவர்களுக் குள்ளே மரணத்திற்கு ஏதுவான மரணவாசனையாகவும், இரட்சிக் கப்படுகிறவர்களுக்குள்ளே சீவ னுக்கு ஏதுவான சீவவாசனையாக வுமே இருக்கிறோம்; [6]இவைகளைப் (போதிக்கிறதற்கு) யார் தகுதியா யிருக்கிறார்கள்.

17 அநேகர் செய்கிறதுபோல [7]நாங்கள் பராபரனுடைய வசனத் தைக் கலப்பாய்ப்* பேசாமல், [8]து ப்புரவாகவும் பராபரனாலே பெற் றதாகவும் பராபரனுக்கு முன்பாக வும் கிறிஸ்துவைக்குறித்துப்† பே சுகிறோம்.

3 அதிகாரம்.

1 நாங்கள்போதகர்கள் தன்பேரில் வீண்பெருமை கொண்டாதபடிக்குக் கொரிந்தியர் விசுவாசமும், அந்நிலையுமே தன் ஊழியத்துக்குத் திருஷ்டாந்தமென்றும், 6 பழைய உடம்படிக்கையின் ஊழியக்காரருக்கும் புது உடம்படிக்கையின் ஊழியக்காரருக்கும் வித்தியாசத்தைக் காண்பித்து, 12 தம்முடைய நியாயப்பிரமாணத்தைப்பார்க்கிலும் சிலுவையும், விடுதலையையும் கொடுக்கிற கர்த்தர் சேரும் மேன்மையுள்ளதுபோலத் தன் ஊழியம் பழைய உடம்படிக்கையின் ஊழியத்தைப்பார்க்கிலும் மேன்மையுள்ளதென்றும் சொன்னது.

1 [9]எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்குகி றோமா? அல்லது சிலருக்கு வே ண்டியதாயிருக்கிறதுபோல, [10]உங் களுக்கு உபசார நிருபங்களை அ னுப்பவும், அல்லது உங்களிடத் தில் உபசார நிருபங்களை வாங்க வும், எங்களுக்கு வேண்டுமா?

2 [11]நீங்களே எங்களுக்கு அப்ப டிப்பட்டநிருபமாயிருக்கிறீர்கள்; அது எங்கள் இருதயங்களில் எழு தப்பட்டிருக்கிறது; மேலும் அது சகல மனிதராலும் அறிந்து வாசிக் கப்பட்டு வருகின்றது.

3 நீங்களே [12]எங்கள் ஊழியத் தில் உண்டான கிறிஸ்துவினு டையநிருபமாகவெளியரங்கமாக் கப்பட்டவர்கள்; அது மையினா லல்ல, சீவனுள்ள பராபரனுடைய ஆவியினாலே [13]கற்பலகைகளில் அல்ல, [14]மாம்சமான இருதயங்க ளாகிய பலகைகளிலே எழுதப் பட்டிருக்கின்றது.

4 ¶ இப்படிப்பட்ட நம்பிக்கை யை நாங்கள் பராபரனுக்குமுன் பாகக் கிறிஸ்துவின் மூலமாகக் கொண்டிருக்கிறோம்.

5 ஒன்றை யோசிக்கிறதற்கு நா ங்கள் எங்களாலே [15]திராணியுள் ளவர்களாக அல்ல, [16]எங்களு டைய திராணி பராபரனால் உண் டாயிருக்கின்றது.

6 நாங்கள் [17]புது உடம்படிக்கை யின் ஊழியக்காரராயிருக்கும்படி [18]அவரே எங்களுக்குத் திராணி யைக் கொடுத்தார்; அந்த உடம்ப டிக்கை [19]எழுத்திற்குரியதல்ல, ஆ விக்குரிய உடம்படிக்கையாயிரு க்கின்றது. [20]எழுத்திற்குரியது கொ லைசெய்கின்றது; [21]ஆவிக்குரியது உயிர்ப்பிக்கின்றதே.†

7 [22]கற்களில் எழுத்துக்களால் பதிந்திருந்த [23]மரணத்திற்கு ஏது

கி. பி. சுமா.

1 உ கொரி. 11. கூ.
2 உ கொரி. எ. ஐ, க.
3 உ கொரி. க. 2அ.
4 உ கொரி. ச.க.
5 லூக். உ. கச. யோவா. கூ.கூ. உ பே. உ.எ,அ.
6 உ கொரி. 2ஐ. 2. உ கொரி. க. ஐ, க.
7 உ கொரி. ச. உ: 2க. 2க. உ பே. உ. க.
* அல்லது வஞ்சகமாய்.
8 உ கொரி க. 2உ: ச. உ.
† அல்லது கிறிஸ்துவுக்குள்ளாக.
9 உ கொரி. ஐ. 2உ: 2. அ, 2உ: 2உ. 2க.
10 அப். 2அ. உ எ.
11 உ கொரி. கூ. உ.
12 உ கொரி. க. ஐ.
13 உ மோ. உச. 2உ: கச. க.
14 சங். சஅ. அ. எரே. கக. கக. எசே. 2க. 2க: கக. உக. எபி. அ. 2.
15 யோவா. 2ஐ. ஐ. உ கொரி. உ. 2க.
16 உ கொரி. 2ஐ. 2. பிலி. உ. 2க.
17 எரே. கக. கக. மத். உக. உஅ. எபி.அ.உ,அ.
18 உ கொரி.க.ஐ: 2ஐ.2. உகொரி. ஐ. 2அ. எபே. க.எ. கொலோ. க. உஐ, உக. உநீமோ. க.2க, 2உ. உநீமோ. க. 2க.
19 உரோ. உ. உஎ, உக: எ. கூ.
20 உரோ.க. உ2: ச.2ஐ: எ.கூ,ஏ, 2க. கலா. க. 2.
21 யோவா.க.கக. உரோ. அ. உ.

‡ அல்லது உயிரைக் கொடுக்கின்றது.—22 உ மோ. உச.க,உஅ. ஐ மோ. 2. க. ழ.—23 உரோ.எ.2.

Digitized by Google

வான ஊழியத்தை மோசே செய்
தபொழுது, அவனுடைய முகத்
திலே மகிமைப்பிரகாசம் உண்டா
னதால், [1]இஸ்ரவேல் சந்ததியார்
அவனுடைய முகத்தை நோக்கிப்
பார்க்கமாட்டாமல் இருந்தார்க
ளே; ஒழிந்துபோன மகிமையை
யுடைய அந்த ஊழியம் அப்படிப்
பட்ட மகிமையுள்ளதாயிருக்க,

அ ஆவிக்கேற்ற [2]உடம்படிக்கை
யின் ஊழியம் மிகவும் அதிகமாய்
மகிமையுள்ளதாய் இருக்குமல்ல
வா?

கூ ஆக்கினைத்தீர்ப்பைக்கொடுத்த
ஊழியம் மகிமையுள்ளதாயிருக்க,
[3]நீதியைக் கொடுக்கிற ஊழியம்
மிகவும் அதிகமான மகிமையாய்
இருக்கும் அல்லவா?

ய இதின்பொருட்டாகமகிமைப்
பட்டிருந்த அந்த ஊழியம் இந்த
ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற
அதிக மகிமைக்குமுன்பாக மகி
மைப்பட்டதல்ல.

யக அன்றியும் ஒழிந்துபோனது
மகிமைகொண்டிருப்பதால், நிலை
நிற்பது மிகவும் அதிகமாய் மகி
மையுள்ளதாயிருக்குமே.

யஉ ¶ ஆனதால் இப்படிப்பட்ட
நம்பிக்கையை உடையவர்களாய்,
[4]நாங்கள் மிகுந்த தயிரியத்தோ
டே* நடக்கிறோம்.

யஊ அன்றியும் [5]ஒழிந்துபோகிற
தின் முடிவை இஸ்ரவேல் சந்
ததியார் நோக்கிப்பாராதபடிக்கு,
[6]மோசே தன் முகத்தின்மேல் முக்
காடு போட்டதுபோல, நாங்கள்
போடுகிறதில்லை.

யஎ [7]அவர்களுடைய புத்தி கடி
னமாயிருந்தது; இந்நாள்வரைக்
கும் பழைய ஏற்பாட்டின்புத்தகம்
வாசிக்கப்படுகையில் அந்த முக்
காடு அவர்களிடத்தில் இருக்கின்
றது.

யஅ அந்தப் பழைய உடம்படிக்
கை கிறிஸ்துவினாலே நீக்கப்பட்
டதென்று அவர்களுக்கு வெளிப்
படுத்தப்பட்டிருக்கிறதில்லை; ஆ

கி. பி. கூ௩.

1 உ மோ. கூ. உகூ,கூ,ஙூ.
2 கலா.கூ.ஙூ.
3 உரோ. கூ.ஸ: கூ. உகூ.
4 உ கொரி. எ. ச. ஏபே. கூ. ஏகூ.
*அல்லது தெளிவோடே.
5 உரோ. ம. ச. கலா.கூ.உகூ.
6 உ மோ. கூ. கூகூ, கூஙூ.
7 சோ. கூ.ம. மத். மகூ. மக, மச. போவா. மஉ. சம். அப். உஅ. உகூ. உரோ. மகூ.எ. அ, உஙூ. உ கொரி. ச.ச.
8 உ மோ. கூ. கூ. உரோ. மக உகூ,உகூ.
9 சோ. உஙூ. எ.
10 கூ. வச: கூ கொரி. மஙூ. சஙூ.
11 உ கொரி. ச. ச,கூ. கூ நீமோ. கூ. மக.
12 கூ கொரி. மகூ. மஉ.
†அல்லது கர்த்தரின் ஆவியில்.
13 உரோ. அ. உகூ. கூ கொரி மஙூ. சகூ. கொலோ. கூ. ம.
14 உ கொரி.கூ.கூ.
15 கூ கொரி. எ. உஙூ. கூநீமோ. கூ.மக.
‡ஓரேகு, இலசையான; உரோ. கூ. மக: கூ. உகூ.
16 உ கொரி. உ. மஎ. கூ நெச.உ. கூ,ஙூ.
17 உ கொரி. கூ. ச, எ: மஎ. மச.
18 உ கொரி. ஙூ. மகூ.
19 கூ கொரி. கூ. மஅ. உ கொரி. உ.ஙூ உ நெச. உ. ம.

னதால் மோசேயின் ஆகமங்கள்
வாசிக்கப்படும்பொழுது, இந்நா
ள்வரைக்கும் முக்காடு அவர்கள்
இருதயத்தின்மேலே கிடக்கின்
றது.

யகூ [8]அவர்கள் கர்த்தரிடத்தில்
மனம்திருப்பும்பொழுது, [9]அந்த
முக்காடு எடுக்கப்படும்.

யஎ [10]கர்த்தரே அந்த ஆவியா
யிருக்கிறார்; கர்த்தருடைய ஆவி எ
கேயோ அங்கே விடுதலையும் இ
ருக்கின்றது.

யஅ ஆதலால் நாம் எல்லாரும்
திறந்தமுகமாய்க் [11]கர்த்தருடைய
மகிமையைக் [12]கண்ணாடியிலே
கண்டாற்போலக் கண்டு, ஆவியா
யிருக்கிற கர்த்தரால்† அந்தச் சாய
லாகத்தானே மகிமையின்மேல் ம
கிமை அடைந்து [13]மறுரூபப்படு
கிறோம்.

சு. அதிகாரம்.

க. தான் இவ்விதப்படையால் உத்தமமும், உண்மை
யுமுள்ள சாக்ஷிதைபேபே எவிசேஷத்தை-
பிரசங்கித்ததையும், எ. அதிலுமேதான் அடைந்த
த வருத்தங்களும், தன்பங்களும் பராபரனுடை
வல்லமைக்குப் புகழாயும், ஙஉ நிருசனைக்குப்
பிரயோசனமாயும், கூ. தனக்குத்தானே கீழ்நிலை
மகிமைக்கு எதிராயும் இருந்ததென்பதையும்
சொல்லியது.

[14]இப்படிப்பட்ட ஊழியம் எங்
களுக்கு [15]இரக்கமாய் உண்டாயி
ருக்கிறபடியால், நாங்கள் இளைப்
படையாமல்,

உ அவலட்சணமான‡ அந்தரங்க
காரியங்களைத் தள்ளிப்போட்டு,
தந்திரமாய் நடவாமலும், [16]பராபர
னுடைய வசனத்தைப் புரட்டா
மலும், [17]சத்தியத்தையே வெளிப்
படுத்துகிறதினாலே பராபரனுக்கு
முன்பாக எல்லா மனிதருடைய
மனதுக்கும் எங்களை (நிசவ்தரே
என்று) [18]ஒப்புவிக்கிறோம்.

கூ ¶ அப்படியும் நாங்கள் பிரசங்
கிக்கிற சுவிசேஷம் மறைபொரு
ளாயிருந்தால், [19]தங்களைக் கெடுக்
கிறவர்களுக்குள்ளேமாத்திரம் அ
து மறைபொருளாயிருக்கும்.

Digitized by Google

5 அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் [1]பராபரனுடைய சாயலாகிய [2]கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி பிரகாசமாயிராதபடிக்கு [3]இவ்வுலகத்தின் தேவன் [4]அவர்களுடைய புத்தியைக் குருடாக்கினான்.

5 [5]காங்கள் (எங்களைக் கர்த்தரென்று) பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவையே கர்த்தரென்றும், [6]எங்களை இயேசுவுக்காக உங்கள் ஊழியக்காரர் என்றும் பிரசங்கிக்கிறோம்.

6 [7]இருளிலிருந்து ஒளியைப் பிரகாசிக்கச் சொன்ன பராபரன் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் உள்ள தமது மகிமையை அறிகிற அறிவாகிய [8]ஒளியை (உங்களுக்கு) தோன்றப்பண்ணும்பொருட்டாக, [9]எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்.*

7 ¶ இப்படிப்பட்ட மகிமையான வல்லமை எங்களால் அல்ல, [10]பராபரனால் உண்டாயிருக்கின்றதென்று தோன்றும்படிக்கு, [11]இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

8 [12]நாங்கள் சகலபுக்கத்திலேயும் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப் போகிறதில்லை; கலக்கமடைந்தும் திடனற்றவர்கள் † ஆகிறதில்லை.

9 தொடரப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; [13]தீழ்தள்ளப்பட்டும், கெட்டுப்போகிறதில்லை.

10 [14]இயேசுவினுடைய சிலுவும் எங்கள் சரீரத்திலே வெளியரங்கமாகும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவின் மரணத்தை [15]எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்.

11 சாவுக்கினமான எங்கள் சரீரத்திலே இயேசுவினுடைய சிலுவும் வெளியரங்கமாகும்படிக்கு, உயிரோடிருக்கிற [16]நாங்கள் எப்பொழுதும் இயேசுவின்நிமித்தமாக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறோம்.

12 ¶ [17]இப்படி மரணமானது எங்களிடத்திலும் சீவனானது உங்களிடத்திலும் கிரியைசெய்கின்றது.

13 [18]நான் விசுவாசித்திருக்கிறபடியால் பேசிக்கொள்ளுகிறேன் என்று எழுதியிருக்கிறபடி, [19]விசுவாச ஆவியை உடையவர்களாய்,

14 நாங்களும் கர்த்தராகிய இயேசுவை [20]எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத்தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்து விசுவாசித்துப் பேசிக்கொள்ளுகிறோம்.

15 [21]திரளான கிருபை அநேகருடையதோத்திரத்தினாலே பராபரனுடைய மகிமை விளங்குதற்கு ஏதுவாகப் பெருகும்படிக்கு, [22]இவையெல்லாம் உங்கள் (நன்மைக்காக) நடக்கின்றன.

16 ¶ ஆனபடியினாலே நாங்கள் இளைப்படைகிறதில்லை; மேலும் எங்கள் புறம்பான மனிதத்துவம் அழிகையிலும் [23]உள்ளான மனிதத்துவம் நாள்தோறும் புதிதாக்கப்படுகின்றது.

17 மேலும் அதிசீக்கிரமாய் நீங்குவதுமாய் [24]இலகுவுமாயிருக்கிற நம்முடைய உபத்திரவம் மிகவும் மிகுதியான நித்திய கனமகிமையை நமக்கு உண்டாக்குகின்றது.

18 [25]காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கே அப்படி உண்டாக்குகின்றது; காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகளே நித்தியமானவைகள்.

கி. பி. சுமா.

1 யோவா. க. அ: மஉ. சஇ: மச. க. பிலி. உ.க.கொலோ. க. மஇ. எபி. க. க.

2 உ கொரி. க. அ, சு, மக, மஅ. க.மச.

3 யோவா. மஉ. கக: மச. கம: மக.மக. எபே. க. மஉ.

4 எசா. க. ம. யோவா. மஉ. சம. உ கொரி. க.மச.

5 க கொரி. க. மக, உக: ம. கக.

6 க கொரி. சு. மக. உ கொரி. க.உச.

7 க மோ. க. க.

8 ச. மச. க பே. உ சு.

9 உ பே. க மசு.

*ஒரேகு. பிரகாசித்தவராய் இருக்கிறார்.

10 க கொரி. உ. இ. உ கொரி மஉ.சு.

11 உ கொரி. இ. க.

12 உ கொரி. எ. இ.

† அல்லது சம்பிக்கைபற்றவர்கள்.

13 சங். கஎ.உச.

14 உரோ.அ.மஎ. உ தீமோ. உ. மக, மஉ. க பே. ச.மக.

15 க கொரி. மஇ. கக. உ கொரி. க.இ,சு. கலா. க.மஎ. பிலி.க. ம.

16 சங். சச.உஉ. உரோ. அ. கக. க கொரி. மஇ. கக, சக. உ கொரி. க.அ, சு.

17 உ கொரி. மக. சு.

18 சங். சமக. ம.

19 உரோ.க.மஉ. உ பே.க.க.—20 உரோ.அ.மக. க கொரி.க.ம.ச.—21 உ கொரி.க.மக: அ.மசு: சு.மக,மஉ.—22 க கொரி.க.உ.க. உ கொரி.க.க. கொலோ.க.உ.ச. உ தீமோ.உ.ம.—23 உரோ.எ.உஉ. எபே.க.மசு. கொலோ.க.ம. க பே.க.ச.—24 மத்.இ மஉ. உரோ.அ மஅ. க பே.க.க: இ.ம.—25 உரோ.அ உ.ச. உ கொரி இ.எ. எபி. மக க.

Digitized by Google

ரு. அதிகாரம்.

க. தான் ஸ்தாபித்த மகிமையின் நம்பிக்கையை உடையவனாக, கூ. அந்த மகிமையையும் பொதுவான பிரயத்தீப்பையும் அடைய தன்மனச்சாட்சியைக் காத்துக்கொண்டு, ஙஉ. அதினால் மேன்மை பாராட்டும்பொருட்டல்ல, ஙச. கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து பெற்ற தான் கிறிஸ்துவின் மகிமைக்குப் புதுச் சிருஷ்டியாய்ச் சேவனம்பண்ணவேண்டியதென்றும், ஙஅ. எல்லாரும் கிறிஸ்துவினால் பராபரனென்று ஒப்புரவாகும்படி ஒப்புரவாக்கும் ஊழியத்தை அடைந்தானென்றும் சொல்லியது.

அது எப்படியென்றால், [1]பூமிக்குரிய கூடாரம்போன்ற நம்முடைய வீடு இடிந்துபோகும்பொழுது, பரமண்டலங்களிலே கையால்செய்யப்படாமல், தேவனால் உண்டாக்கப்பட்ட நித்தியமான வீடாகிய வாசஸ்தலம் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்.

உ [2]நாம் வீடில்லாதவர்கள் அல்ல:

கூ தரிக்கப்பட்டவர்களாய் இருக்க, பரமண்டலத்திலுள்ள நமது வாசஸ்தலத்தை நாம் தரித்துக்கொள்ள மிகவும் விரும்புகிறவர்களாய், [3]இந்த வீட்டிலே தவித்திருக்கிறோம்.

சு இந்தக் கூடாரத்தில் இருக்கையில், நாம் பாரஞ்சுமந்து தவிக்கிறோம்; ஆனதால் நாங்கள் (இதைப்) போக்க விரும்பாமல் சீவனிலே மரணம் விழுங்கப்படத்தக்கதாக, (உடனே) [4]அதைத் தரித்துக்கொள்ள விரும்புகிறோம்.

ஙு [5]இப்படியே இருக்கும்படி பராபரனே எங்களை எத்தனம்பண்ணி; [6]ஆவியென்னும் அச்சாரத்தையும் எங்களுக்குத் தந்தார்.

ஙூ ஆகையினாலே நாங்கள் இந்தத் தேகத்திலே குடியிருக்கையில், [7]தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறதால்,

ஙஎ கர்த்தாவைச் சேராத வழிப்போக்கராயிருக்கிறோம் என்று அறிந்தும், (எப்பொழுதும்) தயிரியமாய் இருக்கிறோம்.

ஙஅ நாங்கள் தயிரியமாகவே இருந்து, [8]இந்தத் தேகத்தைவிட்டுப்போகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்.

ஙக அதின் நிமித்தமே நாங்கள் (அவரிடத்தில்) குடியிருந்தாலும், (அவரைவிட்டு) இங்கே சஞ்சரித்தாலும், அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க முக்கியமாய் காடுகிறோம்.*

ஙஉ [9]நாம் எல்லாரும் அவனவன் தான் நடப்பித்த நன்மைக்காகிலும் தீமைக்காகிலும் தக்கவைகளைச் சரீரத்திலே அடையும்படிக்கு, [10]கிறிஸ்துவின் நியாயாசனத்திற்குமுன்பாக வெளிப்படவேண்டுமே.

ஙக ஆகையால் [11]கர்த்தருக்குப் பயப்படத்தக்கதென்று நாங்கள் அறிந்து, மனிதருக்குப் போதிக்கிறோம்; [12]இப்படிப் பராபரனுக்குமுன்பாக வெளியரங்கமாய் இருக்கிறோம்; உங்கள் மனதிலேயும் (அப்படியே) வெளியரங்கமாய் இருக்கிறோம் என்று நம்புகிறேன்.

ஙஉ [13]இதினாலே நாங்கள் உங்களுக்குமுன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்தால் அல்ல [14]வெளிவேஷத்தால்† மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே நீங்கள் எங்களைக்குறித்து மேன்மைபாராட்டும்படிக்கு ஏது கொடுக்கிறோம்.

ஙூ (அதிலே) நாங்கள் பித்தங்கொண்டவர்கள் என்றால் [15]பராபரனுக்காகவும், தெளிந்த புத்தியுள்ளவர்கள் என்றால் உங்களுக்காகவும் அப்படி இருக்கும்.

ஙச அதற்காகக் கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகின்றது; எப்படி நிதானிக்கிறோமென்றால், [16]எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க எல்லாரும் மரித்தார்கள்.

ஙரு மேலும் [17]பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழையாமல், தங்களுக்காக மரித்

இ. பி. ஊ.

1 யோபு. ச. ஙூ. உ கொரி. ச. எ. உ பே. க. ஙக, ஙச.
2 வெளி. க. ஙஅ: ஙக. ஙஇ.
3 உரோ. அ.உக.
4 உ கொரி. ஙஇ. ஙக,ஙச.
5 சர. உக,உக. எபே.உ.ஏ.
6 உரோ. அ.உக. உ கொரி. க. உஉ. எபே. க. ஙச: ச. கஏ.
7 உரோ. அ.உச, உஇ. உ கொரி. ஙூ. ஙஉ. உ கொரி. ச. ஙஅ. எபி. ஙக. க.
8 பிலி. க. உக.
* இரேக்கு. தெரிந்துகொள்கிறோம்.
9 உரோ. உ. க. கலா. கூ. எ. எபே. க. அ. கொலோ. க. உச, உஇ. வெளி.உஉ,ஙஉ
10 மத். உஇ. கக, கஉ. உரோ.ஙச. ஏ.
11 யோபு. கக. உக. எபி.ஏ,கக. யூசா.உக.
12 உ கொரி. ச. உ.
13 உ கொரி.க க.
14 உ கொரி. க. ஙச.
† இரேக்கு, முகத்தால்.
15 உ கொரி. ஙூ. க,ஙக,ஙெ: ஙஉ. க,ஙக.
16 உரோ.இ.ஙஇ.
17 உரோ. க.ஙக, ஙஉ: ஙச. எ,அ. க கொரி.க.ஙகூ. கலா. உ. உஙி. க தெச. இ. ஏ. க பே.ச.உ.

Digitized by Google

து எழுந்தவருக்கென்று பிழைக்கும்படிக்கு, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரே என்று நிதானிக்கிறோம்.

16 ஆகையால் [1]இதுமுதற்கொண்டு நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; முன்னே நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்தும், [2]இப்பொழுதும் இனிமேலும் அவனை அப்படியாக அறியோம்.

17 ஏவ [3]கிறிஸ்துவுக்குள் இருக்கிறவன் [4]புதுச் சிருஷ்டியாயிருக்கிறானே;* [5]பழையவைகள் ஒழிந்துபோயின; சகலமும் புதிதாயிற்றே.

18 அ இவையெல்லாம் பராபரனாலே இருக்கின்றன; [6]அவர் இயேசுக் கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்தார்.

19 க என்னவெனில் [7]கிறிஸ்துவினாலே பராபரன் உலகத்தாருடைய பாவங்களை அவர்கள்மேலே சுமத்தாமல் அவர்களைத்தமக்கு ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாக்குதலாகிய உபதேசத்தை எங்களிடத்தில் ஏற்படுத்தினார்.†

20 ¶ ஆனபடியினாலே [8]நாங்கள் கிறிஸ்துவுக்காகத் தானாதிபதிகளாயிருக்கிறோம்; [9]பராபரனே எங்களாலே புத்திசொல்லுகிறவராயிருக்க, நாங்கள் கிறிஸ்துவுக்காக (மனிதர்களை) கோக்கி,

21 உக பாவத்தை அறியாதவராலே நாம் பராபரனுக்குமுன்பாக [10]நீதிமான்களாக்கப்படும்படிக்கு, பராபரன் [11]அவனை நமக்காகப் பாவமாக்கினார்; ஆகையால் பராபரனோடே ஒப்புரவாகுங்கள் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

6. அதிகாரம்.

1 அ தன் போதகத்தினாலும், க. தன்னுடக்கையினாலும், ச. சபிசேஷத்தின் நிமித்தம் பொறுமையோடே சகிக்கும் எல்லாத் தண்பத்தினாலும், நிச்சையிலு

கி. பி. 60.

1 மத். 20உ. இல. யோவா. 20இ. 2ச. கலா. இ. சு. பிலி. உ, எ, அ. கொலோ. உ. 2ச.

2 யோவா. சு. சுக.

3 உரோ. அ. சு: 2கொ.எ. கலா. க. 2இ.

4 கலா. இ.சு: சு. 2இ.

* அல்லது இருக்கக்கடவன்.

5 எசா. சக. 2அ, 2கு: சஇ. 2ஈ. எபே. உ. 2இ. வெளி. உச. இ.

6 உரோ. இ. உ. எபே. உ. 2கு. கொலோ. க. உ. க யோ உ. உ: ச. உ.

7 உரோ. க. உச, உஇ.

† இரேகு, வைத்தார்.

8 யோபு. சக. உக. மல்இ. உ எ. உ வெளி.க. க.எபே.க. உ.

9 உ கொரி. சு.க.

10 உரோ. க. 2ஈ: இ.2கு: உ.க.

11 எசா. இக. சு, சு, 2உ. கலா. க. 2க. க பே. உ. உஉ, உச. க யோ. க. இ.

12 எசா. சக. அ.

13 க கொரி.க.சு.

14 எபி. 2உ. 2ஆ.

15 உ கொரி. இ. உ.

16 உரோ.2ச.2க. க கொரி. சு. 2உ: உ. சஉ.

17 க கொரி.ச. க.

‡ இரேகு, விளக்கப் பண்ண; உ கொரி. ச.உ.

18 உ கொரி. 2க. உக. ழ.

§ அல்லது அலுவல்.

19 உ கொரி. ச. உ: எ. 2ச.

20 க கொரி.உ.ச.

21 உ கொரி. 2ச. எபே.சு. 2க,2கு. உ தீமோ. ச. எ.

லும் தன்னைக் கிறிஸ்துவின் உத்தம ஊழியக்காரனென்று நிருஷ்டாந்தப்படுத்தி, 2. அதைக்குறித்துத் தாராளமாய்ப் பட்சமுள்ள தன் இருதயத்தை அவர்களுக்கு விரித்துக்காண்பித்ததுபோல, 2க. அவர்களும் பட்சத்தைப் பாராட்டும்படி விரும்பி, 2ச. அவர்கள் வேறுள்ள பராபரனுடைய தேவாலயங்களாயிருக்க அஞ்ஞானிகளையும், அவர்களோடே நீட்டெனவும் விலகியிருக்கச் சொல்லியது.

2 மேலும் (எனக்குத்) தகுதியான காலத்திலே [12]நான் உனக்குச் செவிகொடுத்து, இரட்சண்ணிய நாளிலே உனக்கு உதவிசெய்தேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறாரே, பாருங்கள், இப்பொழுதே மிகவும் தகுதியான காலம், இப்பொழுதே இரட்சண்ணியநாள்.

3 உ ஆனதால் [13]எங்களுடனே கூட வேலைசெய்கிறவர்களே, [14]நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாய்ப் பெறுதபடிக்குப் [15]புத்திசொல்லுகிறேன்.

4 சு நம்முடைய ஊழியத்தைக் குற்றப்படுத்தத்தக்கதாக [16]நாம் ஒருவருக்கும் முகாந்தரத்தைக் கொடாமல், [17]எல்லா விதத்திலேயும் நம்மைப் பராபரனுடைய ஊழியக்காரராக ஒப்புவிக்கக்‡ கடவோம்.

5 ச உபத்திரவங்கள், இடுக்கண்கள், நெருக்கங்கள்,

6 ஞ [18]அடிகள், காவல்கள், கலகங்கள்,§ பிரயாசங்கள், தூக்கமில்லாமை, உபவாசங்களுள்ள காலங்களில் மிகுந்த பொறுமையினாலும், கற்பினாலும், அறிவினாலும்,

7 சு நீடிய சாந்தத்தினாலும், தயவினாலும், பரிசுத்த மனதினாலும், வஞ்சகமில்லாத அன்பினாலும்,

8 எ [19]சத்தியமுள்ள வசனத்தினாலும் [20]தெய்வ பலத்தினாலும், [21]நீதியாகிய வலது இடதுபக்கத்து ஆயுதங்களினாலும்,

9 அ கனத்தையும் கனவீனத்தையும் பெறுங்காலத்திலேயும், தூற்கீர்த்தியையும் நற்கீர்த்தியையும் பெறுங்காலத்திலேயும், எத்தர் என்னப்பட்டாலும் நிசஸ்தராகவும்,

10 க அறியப்படாதவர்கள் என்னப்

www.Google

பட்டாலும் [1]நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், [2]மரித்தவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், [3]தண்டிக்கப்பட்டவர்களானாலும் கொலைசெய்யப்பட்டிராதவர்களாகவும்,

யக துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்கள் ஆக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்கள் என்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும் நம்மை ஒப்புவிக்கக்கடவோம்.

யக ¶ ஆ கொரிந்தியரே, எங்கள் வாய் உங்கள் பட்சமாய்த் திறக்கப்பட்டிருக்கிறது; [4]எங்கள் இருதயம் விஸ்தாரமாக்கப்பட்டிருக்கின்றது.

யஉ எங்கள் உள்ளம் உங்களைக் குறித்து நெருக்கப்படவில்லை; [5]உங்கள் உள்ளமே எங்களைக்குறித்து நெருக்கப்பட்டிருக்கின்றது.

யங ஆதலால் மறுஈடாக நீங்களும் விஸ்தாரமாகுங்கள் என்று (என்) [6]பிள்ளைகளைப்போல உங்களிடத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யச ¶ [7]ஒரே நுகத்திலே அவிசுவாசிகளுடனே பூட்டப்படாதிருப்பீர்களாக; என்னத்தினாலெனில், [8]நீதிக்கும் அக்கிரமத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இருளுக்கும் ஒளிக்கும் ஐக்கம் என்ன?

யஞ கிறிஸ்துவுக்கும் பசாசுக்கும் இசைவுண்டா? அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்குண்டா?

யசு விக்கிரகக்கோவில்களுக்கும் பராபரனுடைய ஆலயத்திற்கும் சம்பந்தம் உண்டா? [9]நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி அவர்களுக்குள்ளே நடந்துகொண்டு அவர்களுடைய தேவனாயிருப்பேன் என்றும், அவர்கள் என்னுடைய சனங்களாயிருப்பார்கள் என்றும் பராபரன் சொன்னபடி [10]நீங்கள் சீவனுள்ள பராபரனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.

யஎ [11]ஆனபடியினாலே நீங்கள் அவர்களிடத்திலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள்.

யஅ அப்பொழுது நான் உங்களை அங்கிகரித்துக்கொண்டு [12]உங்களுக்குப் பிதாவாயிருப்பேன்; நீங்கள் எனக்குக் குமாரருமாய்க் குமாரத்திகளுமாய் இருப்பீர்கள் என்று சர்வவல்லமையுள்ள பராபரன் சொல்லுகிறார்.

ஏ. அதிகாரம்.

க. பரிசுத்தமாய் நடக்கும்படிக்கும், உ. தான் அவர்களுக்குப் பாராட்டின பட்சத்தை அவர்கள் தனக்குப் பாராட்டவும், ங. தன்னுடைய முன்னிலைத்தில் அவர்களுக்குச் சொல்லிய புதினமே எடுத்துக்கொண்டு நேவ எத்தனமாய்த் தூக்கப்பட்டதைத் தீத்துவிலும் கேள்விப்பட்டதனாலும், ச தான் முன்னி அவர்களைக்குறித்துப் பெருமையாட்டினதற்கு ஒத்தாசை அவர்கள் தீத்துவில் அனுகூர்ந்து அவனுக்குக் கீழ்ப்படிந்ததனாலும் நடபுத்திரவுகளிலும் சந்தோஷப்பட்டானென்று சொல்லியது.

[13]இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்க, பிரியமானவர்களே, சரீரத்தையும் ஆவியையும் அசுசிப்படுத்துகிற யாவற்றிற்கும் நாம் விலகி, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, தேவபயத்தோடே முழுவதும் பரிசுத்தவான்களாகும்படி நடந்துகொள்ளக்கடவோம்.

உ ¶ எங்களை அங்கிகரித்துக்கொள்ளுங்கள்; நாங்கள் ஒருவனுக்கும் அநியாயம் செய்யவில்லை; [14]ஒருவனையும் கெடுக்கவில்லை.

ஊ ஒருவனையும் வஞ்சிக்கவில்லை; உங்களைக் குற்றவாளிகளாக்கும் பொருட்டாக இப்படி நான் சொல்லுகிறதில்லை; [15]முன்னே நான் சொன்னபடி (உங்களுடனே) கூடச் சாவதும் கூடப் பிழைக்கவும் தக்கதாக, எங்கள் இருதயங்களில் இருக்கிறீர்களே.

Digitized by Google

கி. பி. சுமை.

1 உ கொரி. ச. உ: இ. ஈக: ஈக. க.
2 க கொரி.ச. க. உ கொரி.க.க: ச. ம, ஈக.
3 சங். சஅஎ. ஈஅ.
4 உ கொரி. எ.க.
5 உ கொரி. ஈஉ. ஈஇ.
6 க கொரி. ச. ஈச.
7 இ மோ. எ. உ. க. க கொரி. இ. க: எ. கக.
8 க சாமு.இ. உ, க. க இரா. ஈஅ. உக. க கொரி. ம. உக. எபே. இ. எ, ஈக.
9 உ மோ. உக. சஇ. க மோ. உக. ஈஉ. எசே. கக. கக: கஉ. கஅ. எசே. ஈக. உம: கக. உஅ: கஎ. உக. ழ. சகரி. அ. அ: ஈக. க.
10 க கொரி. க. ஈக: க கக. எபே. உ. உக, உஉ. எபி. க.க.
11 எசா. இஉ. ஈக. உ கொரி. எ. க. வெளி. ஈஅ. ச.
12 எசே. கக. க, க. வெளி. உக. எ.
13 உ கொரி. சு. ஈஎ,ஈஅ. க பேர. க. க.
14 அப். உம. கக. உ கொரி. ஈஉ, ஈஎ.
15 உ கொரி. க. ஈக, ஈஉ.

சு (ஆனதால்) [1]மிகுந்த தயிரியத்தோடே உங்களுடனே பேசுகிறேன்; [2]உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன்; [3]ஆறுதலால் நிறையப்பட்டிருக்கிறேன்; எங்களுக்கு வந்திருக்கிற மிகுந்த உபத்திரவத்திலே பரிபூரண சந்தோஷப்படுகிறேன்.

ஏ ¶ எப்படியென்றால், [4]நாங்கள் மக்கேதோனியா நாட்டிலே வந்த பொழுது, [5]எங்கள் சரீரத்திற்கு அமைதல் ஒன்றுமில்லாமல் எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; [6]புறம்பே போராட்டங்களும் உள்ளே பயங்களும் இருந்தன.

ஈ ஆகிலும் [7]தாழ்மையானவர்களுக்கு ஆறுதல்செய்கிற பராபரன் [8]தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல் செய்தார்.

உ அவன் வந்ததினால்மாத்திரம் அல்ல, உங்கள் வாஞ்சையையும், உங்கள் துக்கிப்பையும், எனக்காக உங்களுக்குள்ள பத்திவைராக்கியத்தையும் அவன் எங்களுக்கு அறிவித்தபொழுது, தான் உங்களாலே ஆறுதல் அடைந்ததினாலும் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.

ஊ அனதால் நான் என் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும் மனஸ்தாபப்படமாட்டேன்; அந்த நிருபம் கொஞ்சப் பொழுதாகிலும் உங்களைத்துக்கப்படுத்திற்றென்று நான் பார்த்து, [9]மனஸ்தாபப்பட்டிருந்தும், இப்பொழுது நீங்கள் துக்கப்பட்டதினாலேஅல்ல,

ஊ நீங்கள் மனம்திருப்புகிறதற்கு ஏதுவாகத் துக்கப்பட்டதினாலே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவ எத்தனமான* துக்கம் அடைந்தீர்களே.

ஏ [10]தேவ எத்தனமான துக்கம் பின்னே மனஸ்தாபம் இல்லாமல், இரட்சிப்புக்கு ஏதுவான மனம்திருப்புதலை உண்டாக்குகின்றது;

கி. பி. சுமை.

1 உ கொரி. ஈ. ஐஉ.
2 ஈ கொரி.ஈ. ச. உ கொரி.ஈ.ஐச.
3 உ கொரி.ஈ.ச. பிலி. உ. ஐஈ. கொலோ. ஈ. உச.
4 உ கொரி. உ. ஐஈ.
5 உ கொரி. ச. அ.
6 ஐ கோ. ஈஉ. உஐ.
7 உ கொரி.ஈ.ச.
8 உ கொரி. உ. ஐஈ.
9 உ கொரி. உ. ச.
* அல்லது தேவனுக்கேற்ற.
10 உ சாமு. ஐஉ. ஐஈ. மத். உஈ. எஇ.
11 வாக்.ஐஎ.ஐஉ.
12 உ கொரி. உ. ச.
13 உகோ. ஐஇ. ஐஉ.
14 உ கொரி. உ. ஈ. பிலி. உ. ஐஉ.
† ஒரேகு, செப்துவ.; உ கொரி. ஈ. ஐஉ.

11 இலவுகிக துக்கம் மரணத்தை உண்டாக்குகின்றது.

ஐக பாருங்கள், நீங்கள் (தேவ எத்தனமான) துக்கம் அடைந்தது, உங்களிடத்தில் எத்தனை சாக்கிரதையையும், எத்தனை நியாயம்சொல்லுதலையும், எத்தனை விசனத்தையும், எத்தனை பயத்தையும், எத்தனை வாஞ்சையையும், எத்தனை பத்திவைராக்கியத்தையும், எத்தனை தண்டனையையும் உண்டாக்கிற்று? அந்தச் சங்கதியைக்குறித்து நீங்கள் எவ்விதத்திலேயும் உங்களைச் சுத்தவான்களென்று ஒப்புவித்தீர்கள்.

ஐஉ ஆகையினாலே நான் உங்களுக்கு அப்படி எழுதியிருந்தும், அநியாயத்தைச் செய்தவன்நிமித்தம் அல்ல, அநியாயம் செய்யப்பட்டவன்நிமித்தமும் அல்ல, [12]பராபரனுக்குமுன்பாக உங்களைக்குறித்து எங்களுக்கு உண்டாயிருக்கிற சாக்கிரதை உங்களிடத்தில் வெளிப்படுவதின் நிமித்தமாகவே அப்படி எழுதியிருந்தேன்.

ஐஊ ¶ ஆனதால் நீங்கள் ஆறுதல் அடைந்ததினாலே நாங்களும் ஆறுதல் உள்ளவர்களாய் இருக்கிறோம்; விசேஷமாகத் தீத்துவினுடைய ஆவி உங்கள் அனைவராலும் [13]ஆறுதல் அடைந்ததினாலே அவனுக்கு வந்த சந்தோஷத்தால் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டோம்.

ஐச இப்படியிருக்க, உங்களுக்குப் புகழ்ச்சியாய் நான் அவனுடனே சொன்னதைக்குறித்து நான் வெட்கப்படமாட்டேன்; நாங்கள் சகலத்தையும் உங்களுக்குச் சத்தியமாய்ச் சொன்னதுபோல, தீத்துவுடனே நான் உங்களுக்குப் புகழ்ச்சியாய்ச் சொன்னதும் சத்தியமாக விளங்கிற்றே.

ஐஇ மேலும் அவன் தன்னை நீங்கள் பயத்தோடும் நடுக்கத்தோடும் ஏற்றுக்கொண்டதையும், [14]நீங்கள் எல்லாரும் கீழ்ப்படிந்ததையும் நினைத்துக்கொண்டு, தன்மனதிலே†

Digitized by Google

உங்கள்மேலே அதிக அன்புள்ளவனாகிறான்.

யசு ஆகையால் [1]நான் எவ்விதத்திலேயும் உங்களைக்குறித்துத் திடனாயிருக்கலாம் என்று சந்தோஷப்படுகிறேன்.

அ. அதிகாரம்.

க. எருசலேமில் இருந்த எளிய சகோதரர்களுக்குத் தருமம்செய்யும்படி அவர்கள் மக்கேதோனியருடைய நிருஷ்டாந்தத்தினாலும், எ. முன் அவர்கள் செய்த உதவியினாலும், கூ. கிறிஸ்துவினுடைய கிருபையினாலும், ஙச. அவர்களுக்கு உண்டாகும் மான சன்மைகளினாலும் அவர்கள் எவி, ஙக. அவர்களுடைய தருமத்தைச் சேகரம்பண்ணத் தீத்து முதலானவர்கள் தன்னுடைய கேட்டுக்கொள்ளுதலின்படி மனாசியாய் அவர்களிடத்தில் வந்ததற்காக அவர்கள் அங்கிகரிக்கும்படி ஒப்புவித்ததைச் சொல்லியது.

பின்னும் சகோதரரே, மக்கேதோனியா தேசத்துச் சபைகளுக்குப் பராபரன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

உ என்னவென்றால் அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், [2]கொடிய தரித்திரராயிருந்தும், தங்கள் பரிபூரணமான சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரமாய்* (தருமத்தைக்) கொடுத்தார்கள்.

கூ மேலும் அவர்கள் தங்களால் ஆனமட்டும், தங்கள் பலத்திற்கு மேலாகவும் கொடுக்கும்படிக்கு, தாங்களே மனதுள்ளவர்களாய் இருந்தார்கள், அதற்கு நானே சாட்சியாய் இருக்கிறேன்.

ச மேலும் அவர்கள் தங்களுக்கு உபகாரத்தையும் [3]பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தருமஊழியத்தின் பங்கையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று எங்களை மிகவும் வேண்டிக்கொண்டு,

ஙி எங்கள் நம்பிக்கைக்கு மேலாகத் தங்களைத்தாமே முதலாவது கர்த்தருக்கும், பின்பு பராபரனுடைய சித்தத்தினாலே எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள்.

ச ஆனதால் [4]தீத்து தான் முன்னே தொடங்கினபிரகாரமாக இந்தத் தருமகாரியத்தை† உங்களிடத்திலே முடிக்கவும் வேண்டுமென்று அவனிடத்தில் கேட்டுக்கொண்டோம்.

எ ¶ அல்லாமலும் நீங்கள் விசுவாசத்திலேயும் பேச்சிலேயும் அறிவிலேயும் எல்லாவிதசாக்கிரதையிலேயும் எங்கள்மேல் உள்ள உங்கள் அன்பிலேயும் மற்றும் பலவித நன்மைகளிலேயும் [5]பெருகியிருக்கிறதுபோல, [6]இந்தத் தருமகாரியத்திலேயும் பெருகவேண்டுமென்று விரும்புகிறோம்.

அ இப்படி நான் [7]கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய சாக்கிரதையின் நிமித்தமும் உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும்பொருட்டாகவும், என்னுடைய யோசனையைமாத்திரம் சொல்லியிருக்கிறேன்.

கூ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; [8]அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்கள் ஆகும்படிக்கு, உங்கள்நிமித்தமே தரித்திரர் ஆனாரே.

ச மேலும் (இந்தத் தருமத்தைச்) செய்கிறதுமாத்திரமல்ல, [9]ஒரு வருஷத்திற்குமுன்பு (அதை) ஆரம்பம்பண்ணும்படி தோன்றினவிருப்பமும்‡ உங்களுக்குப் [10]பிரியோசனமாயிருக்கும்.

ஙக ஆகையால் செய்கிறதையும் இப்பொழுது நிறைவேற்றுங்கள்; கொடுக்கவேண்டுமென்றும் ஆசை உண்டாயிருந்ததுபோல, உங்களுக்கு உண்டானவைகளில் எடுத்து, அதை நிறைவேற்றுதலும் உண்டாவதாக.

ஙஉ [11]ஒருவனுக்கு மன ஆசையாயிருந்தால், அவன் தனக்கு இல்லாததின்படி அல்ல, தனக்கு உள்ளதின்படி அங்கிகரிக்கப்படுவானே.

ஙஊ மற்றவர்களுக்குச் சந்தோஷமும் உங்களுக்கு உபத்திரவமும்

இ. பி. சுய.

1 உ தெச. க. ச. பிலே. அ. உக.
2 மாற். ஙஉ. ச ச.
* ஒரேக்கு, சபடில்லாமல்; உ கொரி. கூ. ஙச.
3 அப். ஙக. உக: உச. ஙஎ. உசே. ஙஇ. உஇ, உக. க கொரி. ஙக. க, ச. உ கொரி. க. கூ.
4 ஙஎ. வசனம். உ கொரி. ஙஉ. ஙஅ.
† அல்லது நயவை; ச. ஙகூ. வச.
5 க கொரி. க. இ: ஙஉ. ஙக.
6 உ கொரி. க. அ.
7 க கொரி. எ.க.
8 மத். அ. உஅ. லூக். கூ. இஅ. பிலி. உக, எ.
9 உ கொரி. கூ. உ.
‡ அல்லது சாக்கிரதையும்.
10 மாக். ஙக.ஙஎ. மத். ஙி. ச உ. சதீமோ.க.ஙஅ, ஙக. எபி. ஙக. ஙகூ.
11 மாற்.ஙஉ. ச க, ச ச. லூக். உக. க.

கி. பி. சுமை.

உக கர்த்தருக்கு முன்பாகமாத்திரம் அல்ல, மனிதருக்கு முன்பாகவும் நலமானவைகளை முன்யோசித்துக்கொண்டு, (இந்தச் சகோதரன் கூடவரும்படி செய்தேன்).

உஉ நம்முடைய சகோதரனுகிய அவன் அநேகம் காரியங்களில் சாக்கிரதையுள்ளவன் என்றும், இப்பொழுது உங்கள்மேலுள்ள† மிகுந்த நம்பிக்கையினால் மிகவும் அதிக சாக்கிரதை உள்ளவனாயிருக்கிறான் என்றும் நாங்கள் அடிக்கடி கண்டறிந்து, அவனை இவர்களோடும்கூட அனுப்பினேம்.

உஊ தீத்தைக்குறித்து (ஒருவன் விசாரித்தால்,) அவன் எனக்குக் கூட்டாளியுமாய் உங்களுக்காக என் உடன்வேலையாளுமாய் இருக்கிறானென்று அறியக்கடவன்; எங்கள் சகோதரரைக்குறித்து (ஒருவன் விசாரித்தால்,) அவர்கள் சபைகளால் [7]அனுப்பப்பட்டவர்களுமாய்க் கிறிஸ்துவுக்குப் புகழ்ச்சிவருதற்கு ஏதுவானவர்களுமாய் இருக்கிறார்கள் என்று அறியக்கடவன்.

உச ஆனபடியினாலே உங்கள் அன்பையும், [8]நாங்கள் உங்களைக்குறித்துச் சொன்ன புகழ்ச்சியையும் அவர்களுக்கும், சபைகளுக்கும் முன்பாக வெளிப்படுத்துங்கள்.

கூ. அதிகாரம்.

க. அவர்களுடைய தருமகுணத்தைத் தான் அறிந்திருந்தாலும் தீத்தையும், மற்றச் சகோதரர்களையும் அனுப்பினதற்கு முகாந்தரம் விளம்பி, கூ. தருமஞ் செயலில், உ. சற்பலனைத் தரும் பயிர்த்தொழிலுக்கு ஒப்பாக்கி, ஙூ. அதினால் பராபரனுக்கு ஸ்தோத்திரப்பலிகள் செலுத்தப்படுமென்று சொல்லி, அவர்கள் தயாளமான மனதுள்ளவர்களாயிருக்கும்படி புத்திசொல்லியது.

[9]பரிசுத்தவான்களுக்குச் செய்யவேண்டிய ஊழியத்தைக்குறித்து நான் அதிகமாய் உங்களுக்கு எழுதவேண்டுவது இல்லை.

உ உங்கள் [10]மனப்பூர்வத்தை அ

உண்டாயிருக்கும் பொருட்டாக அல்ல, சமமான நிலைமை இருக்கும்பொருட்டாகவே சொல்லுகிறேன்.

ஙசு எப்படியெனில் (மற்றொருகாலத்திலே) அவர்களுடைய பரிபூரணம் உங்கள் வறுமையை நீக்கும்படிக்கு இக்காலத்திலே உங்கள் பரிபூரணம் அவர்களுடைய வறுமையை நீக்கக்கடவது.

ஙஅ இவ்விதமாய் [1]மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகம் இருக்கவில்லை என்றும் அற்பமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவு இருக்கவில்லை என்றும் எழுதியிருக்கிறபடி, சமமான நிலைமை உண்டாயிருக்கும்.

ஙக ¶ அன்றியும் உங்களுக்காக இப்படிச் சாக்கிரதையாயிருக்கும்படிக்குத் தீத்துவின் இருதயத்திலே அருள்கொடுத்த பராபரனுக்குத் தோத்திரம்.

ஙஎ [2]நான் வேண்டிக்கொண்டதை ஏற்றுக்கொண்டதுமல்லாமல் அவன் அதிக சாக்கிரதையாயிருந்து, தன் சுயமனதினாலே உங்களிடத்திற்கு வருகிறான்.

ஙஅ அவனோடேகூட [3]ஒரு சகோதரனை அனுப்பியிருக்கிறேன்; அவன் சுவிசேஷ ஊழியத்திலே எல்லாச் சபைகளினாலும் புகழ்ச்சிபெற்றிருக்கிறவன்.

ஙக அதுமாத்திரமல்ல, [4]கர்த்தருக்கே துதியுண்டாகும்படியாகவும், உங்கள் மன ஆசை விளங்கும்படியாகவும் எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படுகிற தருமப்பணத்தைக்* (கொண்டுபோகையில்,) எங்களுக்கு வழித்துணையாயிருக்கும்படிக்கு [5]அவனை சபைகளால் தெரிந்து ஏற்படுத்தப்பட்டவனுகவும் இருக்கிறான்.

உஙூ எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் மிகுந்த தருமப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு, நாங்கள் எச்சரிக்கையாயிருந்து,

1 உ மோ. ஙக. ஙஅ.
2 கூ. வச.
3 உ கொரி. ஙஉ. ஙஅ.
4 உ கொரி. ச. ஙஇ.
* அல்லது உபகாரத்தை; ச. க, எ. வச. உ கொரி. கூ.அ.
5 க கொரி. ஙக. க, ச.
6 உ சோ. ஙஉ. ஙஎ. பிலி. ச.அ. க பே. உ, ஙஉ.
† அல்லது நான் உங்கள்மேல் வைத்திருக்கிற.
7 பிலி. உ. உஇ.
8 உ கொரி. எ. ஙச: கூ. உ.
9 அப். ஙக. உகூ. உசோ.ஙஇ.உக. க கொரி.ஙகூ. க. உ கொரி.அ.ச. கலா. உ. ஙூ.
10 உ கொரி. அ. கூ.

Digitized by Google

றிந்திருக்கிறேன்; அதைக்குறித்து [1]அகாயாவில் உள்ளவர்கள் ஒரு வருஷமாய்த் தருமப்பணத்தைச் சேர்க்க எத்தனமாயிருக்கிறார்கள் என்று நான் [2]மக்கேதோனியருடனே சொல்லி, உங்களைப் புகழ்ந்தும் இருந்தேனே.

கூ மேலும் உங்களில் உண்டான சாக்கிரதை அநேகரை எழுப்பியும் இருந்தது; அப்படியிருந்தும், உங்களைக்குறித்து நாங்கள் சொன்ன புகழ்ச்சி இந்தச் சங்கதியிலே வீணாய்ப் போகாமல், நான் சொன்னபடி நீங்கள் எத்தனம்பண்ணுகிறவர்களாய் இருப்பதற்கு [3]இந்தச் சகோதரரை அனுப்பினேன்.

ச மக்கேதோனியர் என்னுடனேகூட வரும்பொழுது, உங்களை எத்தனப்படாதவர்களாகக் கண்டால், இத்தனை நிச்சயமாய்ப் புகழ்ந்ததற்காக நீங்களென்று நான் சொல்லமாட்டாமல் நாங்களே வெட்கப்படாதபடிக்கு (எத்தனமாயிருக்கவேண்டும்).

ஞ ஆகையால் இந்தச் சகோதரர் முன்னாக உங்களிடத்திற்குப் போகும்படிக்கும், முன் அறிவிக்கப்பட்டிருக்கிற* உங்கள் தரும ஆசீர்வாதம்† கட்டாயமாக அல்ல, தரும ஆசீர்வாதமாகவே எத்தனமாயிருக்கப் பார்க்கும்படிக்கும் அவர்களை வேண்டிக்கொள்ளவேண்டுமென்று எண்ணி, அப்படிச் செய்தேன்.

கூ ¶ [4]பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான்; பரிபூரணமாய் விதைக்கிறவன் பரிபூரணமாய் அறுப்பான்.

எ [5]அவனவன் விசனமாய் அல்ல, கட்டாயமாயும் அல்ல, தான் மனதிலே விரும்புகிறபடியேகொடுக்கக்கடவன்.

அ சந்தோஷமாய்க் கொடுக்கிறவனிடத்தில் [6]பராபரன் அன்பாயிருக்கிறாரே, பராபரனும் நீவ்கள் எல்லாவற்றிலேயும் எப்பொழுதும் மிகுந்த திருத்தி உடையவர்களாய்ச் சகலவித நற்கிரியைகளுக்கும் சம்பூரணமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு, [7]உங்களிடத்தில் சகலவித கிருபையும் சம்பூரணமாயிருக்கச்செய்ய வல்லவராயிருக்கிறார்.

கூ [8]அவன் தெளித்தான்; ஏழைகளுக்குக் கொடுத்தான்; அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்குமென்று எழுதியிருக்கிறபடியாயிருக்கும்.

ஏ அந்தப்படி [9]விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு அப்பத்தையும் அளிக்கிறவர் உங்கள் விதையையும் அதிகமாய்ப் பெருகப்பண்ணி, [10]உங்கள் நீதியின் விளைச்சல்களை வளரச்செய்வார்.

ஐ அதினாலே நீங்கள் மிகுந்த உதாரமுள்ளவர்களாய்‡ இருக்கும்படிக்கு, எவ்விதத்திலேயும் சம்பூரணம் உள்ளவர்களாவீர்கள்; அதினாலே [11]நாங்களும் பராபரனுக்குத் தோத்திரம் செலுத்துதற்கு எழுப்பப்படுவோம்.

ஒ இந்தத் தருமகடத்தையின் ஊழியம் பரிசுத்தவான்களுடைய குறைவுகளை [12]நீக்குகிறதற்குமாத்திரம் அல்ல, அநேகர் பராபரனைத் தோத்திரிக்கிறதற்கும் மிகுந்த பலனுள்ளதாய் இருக்கின்றதே.

ஓ அவர்கள் இவ்வூழியத்தின் உத்தமத்தைக் கண்டு, நீவ்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கைபண்ணுகிறதற்காகவும் தங்களுக்கும் மற்ற அனைவருக்கும் [13]உதாரமாய்த் தருமத்தைச் செய்கிறதற்காகவும் [14]பராபரனைத் துதித்து,

ஔ உங்களுக்காக வேண்டுதல் செய்து, பராபரன் உங்களுக்கு [15]அளித்த மிகவும் மேன்மையான கிருபையின்நிமித்தம் உங்கள்மேல் வாஞ்சையாயிருக்கிறார்கள்.

ஃ [16]பராபரன் அதுக்கிரகித்த

கி. பி. சுய.

1 உ கொரி. அ ம.
2 உ கொரி. அ. உ.
3 உ கொரி, அ. க, மா, மஅ, உஉ.
* அல்லது சொல்லப்பட்டிருக்கிற.
† அல்லது தருமம்; க மே. கஉ.மே. க சாமு. உஇ. உஈ. உ இரா. இ.மஇ.
4 வாக். மக. உச: மக. மஎ: உஉ. க. கலா. க. ஈ, ஊ.
5 இ மே. மஇ. எ.
6 உ மே. உஇ. உ: கஇ. இ. வாக். மக. உஇ. உரோ. மஉ. அ. உ கொரி. அ. மஉ.
7 வாக். மக. உச, உஇ: உஅ. உஎ. பிலி. ச. மக.
8 சங். ஈமஉ. க.
9 சா. இஇ. ம.
10 ஓசே. ம. மஉ. மத். க. க.
‡ அல்லது தாராளமுள்ளவர்கள்; ஒரேகு, படைத்தவர்கள்.
11 உ கொரி. க. மக: ச.மஇ.
12 உ கொரி. அ. மச.
13 எபி.மக.மக.
14 சுத். இ.மக.
15 உ கொரி. அ. க.
16 யாக். க. மஎ.

Digitized by Google

சொல்லமுடியாத ஈவுக்காக அவருக்குத் தோத்திரம் உண்டாவதாக.

ய. அதிகாரம்.

க. தன்னை இகழ்ச்சிசெய்த என்ன அப்போஸ்தலர்களுக்குத் தன்னுடைய அதிகாரத்தையும், அவர்களை மேற்றுமைதனமாய் தனிடத்தில் உள்ள மூலபுதன்மையும் இன்னதென்று கூறி, எ. கிருபையிலே வல்லமையுள்ளவனாய் இருக்கிறது போலத் தான் அவர்களிடத்தில் வரும்போது வசனத்திலும் வல்லவனாய் இருப்பேனென்று சொல்லி, ஙஉ அவர்களுடைய வீணான பெருமைபாராட்டலையும், அவர்கள் மற்றவர்களுடைய பிரயாசங்களைத் தங்களுடையவைகளாக்கிக்கொள்வதையும் கடிந்துகொண்டது.

1மேலும் உங்களுக்கு முன்பாக * இருக்கும்பொழுது தாழ்மையாயும் தூரத்திலே இருக்கும்பொழுது உங்கள்மேல் தயிரியமாயும் இருக்கிற 2பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தினாலும் தயையினாலும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

உ 3நான் கேட்டுக்கொள்ளுகிறது என்னவெனில், நான் உங்கள் முன்பாக இருக்கும்பொழுது, எங்களைச் சரீரத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற † சிலருக்கு நான் துணிவாயிருக்க நினைக்கிறதால், அந்தத் துணிவோடே நான் தயிரியமுள்ளவனாய் இராதபடிக்குச் செய்வீர்களாக.

ங நாங்கள் சரீரத்தோடே நடந்து கொண்டும், சரீரத்தின்படி போராட்டம்பண்ணமாட்டோம்.

ச 4எங்களுடைய போர்ஆயுதங்கள் 5மாம்சத்திற்கு ஏற்ற பலனுள்ளவைகளாய் இராமல், 6அரண்களை நிர்மூலமாக்குதற்குத் தெய்வீய‡ 7பெலனுள்ளவைகளாய் இருக்கின்றனவே.

ஞ அவைகளால் நாங்கள் அகந்தையான§ சிந்தனைகளையும், பராபரனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் உயருகிற எல்லாவித மேட்டிமையையும் 8நிர்மூலமாக்கி, எந்தப் புத்தியையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருந்து,

கி. பி. சுய.

1 இ. வசனம். உ கொரி. ஙஉ. இ, எ, கூ.
* அல்லது வெளித் தோற்றத்தில்.
2 உரோ. ஙஉ. க.
3 க கொரி. ச. உக. உ கொரி. ஙக. உ, ஞ.
† அல்லது நினைக்கிற.
4 எபே. க. ஙக. க தெச. இ. அ.
5 க தீமோ. க. ஙஅ. உ தீமோ. உ. க.
6 எரே. க. ம.
‡ அல்லது பராபரனால்.
7 அப். எ. உஉ. க கொரி. உ.இ. உ கொரி. ஙஎ: ஙக. உ, ச.
§ அல்லது மன.
8 க கொரி. க. ஙக: உ. ஙஇ.
9 உ கொரி. உ, கூ: எ. ஙஇ.
10 உ கொரி. ஙக. உ, ஞ.
11 பேரா. எ. உச. உ கொரி. இ. ஙஉ: ஙக. ஙஅ.
12 க கொரி. ஙச. ஙஎ. க பேர. ச. ஞ.
13 க கொரி. க. உக: கூ. க. உ கொரி. ஙக. உக.
14 உ கொரி. ஙக. ம.
15 உ கொரி. எ. ஙச: ஙஉ. கூ.
16 க கொரி. உ. க, ச. க. ஙச. உ கொரி. ஙஉ. இ, எ, கூ. கலா. ச. ஙக.
17 க கொரி க. ஙஎ: உ. க, ச. உ கொரி. ஙக. கூ.
‖ ஒரேகு, இருகருதென்கிறார்.
18 உ கொரி.ங.க: இ. ஙஉ.
* அல்லதாரான மற்றவர்கள்.

ஞ நான் நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனாய்த் தோன்றுதபடிக்குமாத்திரம், (அப்படி மேன்மைபாராட்டமாட்டேன்.)

ய அவனுடைய நிருபங்கள் பாரமும் பெலனுமுள்ளவைகள்; ஆகிலும் 16சரீரத்தின் தோற்றம் பெலனுமாய் அவனுடைய 17வசனம் அற்பமுமாயிருக்கிறது என்கிறார்களே.‖

யக அப்படிச் சொல்லுகிறவன் நிருபங்களின் வசனத்திலே தூரத்தில் இருக்கிற நாங்கள் தோன்றுகிறது எப்படியோ, அப்படி முகத்திற்குமுன்பாகவும் கிரியையிலேயும் தோன்றுவோம் என்று சிந்திக்கக்கடவன்.

யஉ ஆகிலும் தங்களைத்தாமே புகழுகிற சிலருக்கு 18நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம்; அவர்கள் தங்களாலே தங்களை அளந்துகொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொண்டு, (தங்களை) அறியாதவர்களாய்* இருக்கிறார்கள்.

யஙூ நாங்கள் (எங்களுக்கு) அ

Digitized by Google

வந்துகொடாதவைகளைக் குறித்து [1]மேன்மைபாராட்டாமல், உங்கள் இடம்வரைக்கும் எட்டத்தக்கதாக, பராபரன் எங்களுக்கு அளந்துகொடுத்த அளவின்படியே* மேன்மைபாராட்டுகிறோம்.

யசு [2]கிறிஸ்துவின் சுவிசேஷத்தோடே நாங்கள் உங்கள் இடம்வரைக்கும் சென்றோமே; ஆகையால் உங்களிடத்தில் வந்து எட்டாதவர்களாய் நாங்கள் அளவுக்கு மிஞ்சிப் போகிறதில்லை.

யடு அளவுக்கு மிஞ்சி [3]அந்நியருடைய வேலைக்கு உட்பட்டு, மேன்மைபாராட்டமாட்டோம்.

யசு ஆகிலும் உங்கள் விசுவாசம் வளர்ந்திருக்கும்பொழுது, உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கவும் அந்நிய எல்லைகளுக்குள்ளே† செய்யப்பட்டவைகளை (நாங்கள் செய்ததாக) மேன்மைபாராட்டாதிருக்கவும்தக்கதாக, எங்கள் அளவு உங்களாலே‡ மிகவும் பெருகுமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

யஎ [4]மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தாவைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்.

யஅ [5]தன்னைத்தான் புகழுகிறவன் அல்ல, [6]கர்த்தராலே புகழப்படுகிறவன் எவனோ, அவன் உத்தமனாயிருப்பானே.

யக. அதிகாரம்.

க. தன்னைப்பார்க்கிலும் கள்ள அப்போஸ்தலர்களே மேன்மையாக எண்ணின கொரிந்தியர்பேரிலே தனக்கிருந்த வைராக்கியத்தினாலே தன்னைக் குற்றவாளியாக்கி மேன்மைபாராட்டி, ஙி. தான் பிரதான அப்போஸ்தலருக்குச் சரியானவனென்றும், எ. கொரிந்தியருக்கு இலவசமாய்ச் சுவிசேஷத்தை அறிவித்தவனென்றும், ஙக. கள்ளப் போதகர்களைப்பார்க்கிலும் தான் எவ்விதமே மேன்மைகளிலும், உக. கிறிஸ்துவின் ஊழியத்திலும் பலபாடுகளிலும் குறைந்தவன் அல்லவென்றும் சொல்லியது.

ஆ நீங்கள் என் [7]புத்தியீனத்திற்குச் சற்றே பொறுமையாயிருந்தால், நலமாயிருக்கும்; எனக்குப் பொறுத்தும்§ இருக்கிறீர்களே.

உ [8]நான் உங்களைக் கற்புள்ள கன்னியாஸ்திரியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு [9]ஒப்புக்கொடுக்க [10]நியமித்தபடியால் உங்களுக்காகத் [11]தேவ வைராக்கியமாய் வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.

ஊ ஆகிலும் [12]அந்தப் பாம்பு தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, [13]உங்கள் மனதும் கிறிஸ்துவின்மேலுள்ள பத்தியின் உண்மையைவிட்டு விலகக் கெடுக்கப்படுமோ என்று பயந்திருக்கிறேன்.

ச எப்படியெனில் (உங்களிடத்தில்) வந்திருக்கிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது, நீங்கள் பெறாத வேறொரு ஆவியையும் நீங்கள் ஏற்றுக்கொள்ளாத [14]வேறொரு சுவிசேஷத்தையும் (அவனாலே) பெற்றீர்களானால், அவனை‖ நன்றாய் ஏற்பீர்கள்.

ஙி மிகவும் பெரிய அந்த அப்போஸ்தலருக்கு [15]நான் எவ்வளவாகிலும் குறைவுள்ளவன் அல்ல என்று எண்ணுகிறேன்.

சு நான் பேச்சிலே [16]கல்லாதவனாயிருந்தாலும், [17]அறிவிலே கல்லாதவன் அல்ல, எப்பொழுதும் [18]எல்லாவிதங்களிலேயும் உங்களுக்குள்ளே (அப்படியே) வெளிப்பட்டிருக்கிறோமே.

எ அல்லது நீங்கள் உயர்த்தப்படும்படிக்கு நான் [19]என்னைத்தானே தாழ்த்தி, பராபரனுடைய சுவிசேஷத்தை இலவசமாய் உங்களுக்கு அறிவித்ததினாலே குற்றம்செய்தேனோ?

அ (இல்லையே,) உங்களுக்கே ஊழியம்செய்யும்படிக்கு மற்றச் சபைகள்மேலே நான் சம்பளம் பற்றிக்கொண்டேன்.

கூ நான் உங்களிடத்திலிருந்து குறைச்சல் அநுபவித்தபொழு

கி. பி. சுயி.

1 யஅ. ஙச.
* அல்லது முறைப்படியே.
2 உ கொரி. உ.இ, ஏ:ச.டஇ: ஊ.உ.
3 உரோ. ஏஇ. உஅ.
† அல்லது ஒழுங்குவின்படி.
‡ அல்லது உங்களில்.
4 ரோ. கஇ. டஉ. எரே. ஊ. உச. உ கொரி.உ. ஊ.
5 வாக். உ. உ.
6 உரோ. உ. உஊ. உ கொரி. ச. இ.
7 கெ. வசனம். உ கொரி.இ.டஉ.
§ அல்லது மெய்யாய்ப் பொறுத்து.
8 உ மோ. உஊ. டஉ.
9 கொலோ. உ. உஅ.
10 ஒசே. உ. டஊ, உஏ. உ கொரி. ச. ஏஇ.
11 லேவி. ச. டஉ, ஏஅ.
12 உ மோ. ஆ. ச. போவா.அ.சச.
13 உபே. ஊ.உச. கொலோ. உ. ச, அ, ஏஅ. உ திமோ. ஊ.ஆ: ச. ஊ. உபே. டஊ. ஊ. உபே. ஊ. டஉ.
14 கலா. ஊ.உ,அ.
‖ அல்லது என்னை.
15 உ கொரி. ஏஇ. ஏ.உகொரி.டஉ. டஊ. கலா.உ.ஊ.
16 உ கொரி. ஊ. டஉ: உ. ச, டஊ. உ கொரி. ஏ. ஏ.
17 எபே. ஆ. ச.
18 உ கொரி. ச. உ:இ.டஉ: டஉ. டஉ.
19 அப். ஏஅ. ஆ. உ கொரி. ஊ.ஊ, டஉ. உ கொரி. ஏ. ச.

Digitized by Google

தும் [1]ஒருவனாயும் நான் வருத்தப்படுத்தவில்லை; [2]மக்கேதோனியாவிலிருந்து வந்த சகோதரர் என் குறைவை நீக்கினார்களே; [3]எவ்விதத்திலேயும் உங்களுக்குப் பாரமாய் இராதபடிக்குப் பார்த்தேன்; இனிமேலும் அப்படியே பார்ப்பேன்.

10 [4]அகாயாநாட்டின் திசைகளிலே இந்தப்புகழ்ச்சி என்னிடத்தில் நின்றுநீங்குவதில்லையென்று* என்னிலுள்ள கிறிஸ்துவினுடைய [5]உண்மையைக்கொண்டு சொல்லுகிறேன்.

11 என்னத்தினாலே (அப்படிச் செய்வேன்)? [6]நான் உங்களைச் சிநேகியாதபடியினாலோ (அப்படிச் செய்வேன்)? அதினால் அல்லவென்று பராபரனே அறிந்திருக்கிறார்.

12 மேலும் தங்களை மேன்மைபாராட்டுகிறதினாலே எங்களைப் போலக் காணப்படச் சமயம் தேடுகிறவர்களுக்குச் [7]சமயம் அற்றுப் போகும்பொருட்டாக நான் இப்படிச் செய்கிறேன், பின்னும் இப்படிச் செய்வேன்.

13 ¶ [8]அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர், [9]கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் ரூபத்தை எடுத்து, நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

14 அது அதிசயமல்ல, [10]சாத்தானும் ஒளியையுடைய தூதனைப் போன்ற ரூபத்தை எடுப்பானே.

15 ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் [11]நீதியின் ஊழியக்காரரைப்போன்ற ரூபத்தை எடுத்தால், மிகுந்த அதிசயமாகமாட்டாது; [12]அவர்களுடைய முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்.

16 ¶ [13]பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில், ஒருவனும் என்னைப் புத்தியீனன் என்று எண்ணாதிருப்பானாக; எண்ணினால் நா

கி. பி. சுமா.

1 அப். உ.ம். கா. உ கொரி. ஆ. ம. க தெச. உ.உ. உ தெச. உ. அ, கா.
2 பிலி. ச.உ, மஉ, மசு.
3 உ கொரி. மஉ. மச, மசு.
4 க கொரி. கா. மஇ.
* அல்லது இத்தப் புகழ்ச்சியை நான் அடையாதபடிக்கு, ஒருவனும் தடை செய்யமாட்டானென்று.
5 உரோ. கா. க.
6 உ கொரி. க. மக: எ. க: மஉ. மஇ.
7 க கொரி. கா. மஉ.
8 அப். மஇ. உச. உரோ. மக.மஅ. கலா. க. எ: க. மஉ. பிலி. க. மஇ. உ பே. உ. க. க யோ.ச.க. வெளி. உ. உ.
9 உ கொரி. உ. மஎ. பிலி.க. உ. தீத். க. ம, மக.
10 கலா.க.அ.
11 உகொரி.க.க.
12 பிலி. க. மகூ.
13 க வசனம். உ கொரி. மஉ. க, மக.
† அல்லது ஏற்றுக்கொள்ள.
14 உ கொரி. கா. ச.
15 க கொரி.எ.க, மஉ.
16 பிலி. க. க, ச.
17 க கொரி. ச.ம.
18 கலா. உ. ச: ச. கா.
19 உகொரி.ம.ம.
20 பிலி. க. ச.
21 அப். உஉ. க. உரோ. மக. க. பிலி. க. இ.
22 க கொரி. மஇ. ம.
23 அப். கூ. மக: உம. உக: உக. மக. உ கொரி. க. ச. இ.

ஞும் சற்றே மேன்மைபாராட்டுகிறபொழுது, நீங்கள் என்னைப் புத்தியீனனைப்போலாகிலும் சகிக்கக்† கடவீர்கள்.

17 இப்படித் [14]தயிரியமாய் மேன்மைபாராட்டுகையில், [15]நான் சொல்லுகிறது கர்த்தரால் ஆனபடியே சொல்லாமல், புத்தியீனனைப்போலச் சொல்லுகிறேன்.

18 [16]அநேகர் சரீரத்தின்படி மேன்மைபாராட்டிக்கொள்ளுகையில், நானும் மேன்மைபாராட்டுவேன்.

19 [17]புத்தியுள்ள நீங்கள் புத்தியில்லாதவர்களைச் சந்தோஷமாய்ச் சகித்திருக்கிறீர்களே.

20 [18]ஒருவன் உங்களைச் சிறையாக்கினாலும், ஒருவன் உங்களைப் பட்சித்தாலும், ஒருவன் (உங்கள் ஆஸ்திகளைப்) பிடித்துக்கொண்டாலும், ஒருவன் உங்களுக்கு முன்பாகத் தன்னை உயர்த்தினாலும், ஒருவன் உங்களை முகத்தில் அறைந்தாலும் சகித்திருக்கிறீர்களே.

21 [19]நாங்கள் பெலனற்றவர்களாக எங்களுக்கு வந்த நிந்தையைக்குறித்து (இப்படிப்) பேசுகிறேன்; [20]ஒருவன் துணிகிறது எதுவோ, அதிலே நானும் துணிவாயிருக்கிறேன்; இப்படிப் புத்தியீனமாய்ப் பேசுகிறேன்.

22 அவர்கள் எபிரேயரானால், [21]நானும் எபிரேயன்; அவர்கள் இஸ்ரவேலரானால், நானும் இஸ்ரவேலன்; அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரனால் நானும் ஆபிரகாமின் சந்ததியான்.

23 அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரானால், (நான் அவர்களுக்கு மேற்பட்டவன்; (மறுபடியும்) புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; அவர்களிலும் [22]நான் அதிகவேலைகளைச் செய்தேன்; [23]அதிகமாய் அடிபட்டேன்; அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டேன்;

அநேகந்தரம் [1]மரணத்திற்கு ஏது வாயிருந்தேன்.

உச [2]யூதர்களால் ஒன்று குறைய நாற்பது அடியாக ஐந்துதரம் பட்டேன்.

உஞ [3]மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன்; [4]ஒருதரம் கல்லெறியுண்டேன்;[5]மூன்றுதரம் கப்பல் சேதமானதில் இருந்தேன்; ஓர் இராப்பகல் முழுவதும் ஆழத்திலே இருந்தேன்.

உசு அநேகந்தரம் பிரயாணமாய்ப் போனேன்; ஆறுகளால் வருகிற மோசங்களிலும், கள்ளரால் வருகிறமோசங்களிலும், [6]என் சனன தேசத்தாரால் வந்த மோசங்களிலும், [7]புறத்தேசத்தாரால் வந்த மோசங்களிலும், ஊர்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரால் வந்த மோசங்களிலும்,

உள வேலையிலும் வருத்தத்திலும் [8]அநேகந்தரம் கண்விழிப்புகளிலும் [9]பசியிலும் தாகத்திலும், அநேகந்தரம் உபவாசங்களிலும் குளிர்ச்சியிலும் நிருவாணத்திலும் இருந்தேன்.

உஅ புறம்பே உண்டான இவைகளைத்தவிர எல்லாச் சபைகளைக் குறித்தும் இருக்கிற [10]கவலை என்னை நாள்தோறும் நெருக்குகின்றன.

உக ¶ [11]பெலனம் அடைகிறவன் எவனே, அவனுக்கு நானும் பெலனனையிருக்கிறதில்லையோ? வழுவுகிறவன் எவனே, அவனுக்கு (உதவிசெய்ய) எரிச்சல் இல்லாமல் இருக்கிறேனே?

ஈ மேன்மைபாராட்டவேண்டியதால், [12]என் பெலனத்திற்கு உரியவைகளைச் சொல்லி, மேன்மைபாராட்டுவேன்.

ஊக [13]என்றென்றைக்கும் தோத்திரிக்கப்பட்ட பராபரனும், [14]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பிதாவுமானவர் நான் பொய்சொல்லுகிறதில்லை என்று அறிந்திருக்கிறார்.

ஊஉ [15]தமஸ்கு நகரியிலே அரேத்தா என்னும் இராசாவினுடைய சேனைத்தலைவன் என்னைப் பிடிக்கவேண்டும் என்று தமஸ்கருடையபட்டணத்தின் வாசல்களில் காவல்வைத்துக் காத்தான்.

ஊஊ அப்பொழுது நான் கூடையிலே வைக்கப்பட்டு, பலகணியிலிருந்து மதில்வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடையகைகளுக்குத் தப்பிப்போனேன்.

ஙஉ. அதிகாரம்.

க. தான் கண்ட தரிசனவிருதலே தன் அப்போஸ்தலப்பட்டத்தைக்குறித்து மேன்மைபாராட்டாமல், கூ. தன் பலவீனங்களில் மேன்மைபாராட்ட விரும்பி, ஙக. அப்படியே தன்னைக்குறித்த மேன்மைபாராட்டுவதற்குக் காரணமிருந்த அவ்வளவிலேயே குறைத்துச்சொல்லி, ஙச. மறுபடியும் அவர்களிடத்தில் வரும்போது பிரயாசத்தோடே வராமல், ஙஉ.. அநேகம் குற்றங்களையும், அநேகம் தாறுமாறுகளையும் எண்பதிலே மனச்சஞ்சலத்தோடே வருவனென்றும் சொல்லியது.

இப்படியிருக்க மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகாது; ஆகிலும்* கர்த்தர் கொடுத்த தரிசனைகளையும் வெளிப்படுத்துதல்களையும் சொல்லிவருகிறேன்.

உ ¶ கிறிஸ்துவைப்பற்றிய [16]ஒரு மனிதனை அறிந்திருக்கிறேன்; அவன் பதினாலு வருஷத்திற்குமுன்னே [17]மூன்றாம்வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான். (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ, அதற்குப் புறம்பே இருந்தானோ அதை அறியமாட்டேன்; அது பராபரனுக்குத் தெரியும்.

ஈ இப்படிப்பட்ட மனிதன் [18]பரதீசுக்கு உயர்த்தப்பட்டு, மனிதர் பேசக்கூடாத,† வாக்குக்கு எட்டாத வார்த்தைகளைக் கேட்டான் என்று அறிந்திருக்கிறேன்.

ச (அவ்வேளையிலே) அவன் சரீரத்தில் இருந்தானோ, அதற்குப் புறம்பே இருந்தானோ அதை அறி

கி. பி. கூஅ.

1 க கொரி. ஙஅ. கக, கச, கஉ. உ கொரி. க.க, ங: ச. கூ: க.க.
2 ஐ மோ. உஐ. க.
3 அப். கூ. உஉ.
4 அப். ஙச. ஙக.
5 அப். உள. சக.
6 அப். க. உக: கூ.இ: ஙச.ஐ: ஙள. ஐ: உஅ. க: உக. கச: உக. அ, ஙச: உஐ. க.
7 அப். ஙச. ஐ: ஙக. உக.
8 அப். உஅ. கள. உகொரி. க. ஐ.
9 க கொரி. ச. கூ.
10 அப். உஅ.உஎ. உரோ. க. ஙச.
11 க கொரி. அ. ஙக: கூ. உஉ.
12 உ கொரி.ஙஉ. ஐ, க, அ.
13 உரோ. க. ஐ.
14 உரோ. க. க: க. க. உகொரி. க. உக. கலா. க. உஅ. க தெச. உ ஐ.
15 அப். கூ. உச, உஐ.
* ஐரேக்கு, எனென்றால்.
16 உரோ. ஙக.எ. உ கொரி. ஐ. ஙஎ. கலா. க. உஉ.
17 அப். உஉ.ஙஎ. லிஸ்ராவில்; அப். ஙச. க.
18 லூக். உக. சக.
† அல்லது தகாத.

Digitized by Google

யமாட்டேன்; பராபரனுக்கே தெரியும்.

3 ¶ இப்படிப்பட்டவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன்; என்னைக்குறித்து என் பலஈனங்களினாலே அன்றி, [1]வேறொன்றினாலும் மேன்மைபாராட்டமாட்டேன்.

4 சத்தியமானதை நான் பேசுகிறேன்; ஆதலால் [2]மேன்மைபாராட்ட மனதிருந்தாலும், நான் புத்தியீனன் அல்ல; ஒருவனும் என்னிடத்தில் காண்கிறதற்கும், அல்லது என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணுதபடிக்கு அனல் விறுத்துகிறேன்.

5 ¶ அன்றியும் அதிக மேன்மையானவைகள் எனக்கு வெளிப்படுத்தப்பட்டதினாலே நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சதேகத்திலே [3]ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, என்னைக் குட்டும் சாத்தானுடைய [4]தூதனே இருக்கிறான்.

8 அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு [5]நான் மூன்றுதரம் கர்த்தாவை வேண்டிக்கொண்டேன்.

9 அவர் என்னுடனே சொன்னது: எனது கிருபை உனக்குப் போதும், என்னுடைய வல்லமை (உன்) பெலஈனத்திலே நிறைவாய்த் தோன்றுகின்றதே என்றார்; ஆகையால் [6]கிறிஸ்துவின் வல்லமை என்மேல் இறங்கியிருக்கும்படிக்கு, [7]நான் மிகவும் அதிக விருப்பமாய் என் பெலஈனங்களைக் குறித்து மேன்மைபாராட்டுவேன்.

10 அந்தப்படி, [8]நான் பெலஈனமாய் இருக்கும்பொழுது பெலனுய் இருக்கிறபடியால் கிறிஸ்து வின்நிமித்தம் எனக்கு வரும் பெலஈனங்களிலும் நிந்தைகளிலும் வறுமைகளிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் [9]நான் பிரியமாயிருக்கிறேன்.

11 ¶ மேன்மைபாராட்டினதால் [10]நான் புத்தியீனன் ஆனேன்; நீங்களே அதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். [11]நான் பிரயோசனம் இல்லாதவனுய் இருந்தாலும், மிகவும் பிரதான அப்போஸ்தலருக்கும் [12]நான் எவ்வளவாகிலும் குறைந்தவனுயிராததால், உங்களாலே நான் மெச்சிக்கொள்ளப்பட நியாயமாயிருந்ததே.

12 [13]அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் உங்களுக்குள்ளே எல்லாவிதமான பொறுமையோடும் அதிசயங்களாலும் அற்புதங்களாலும் வல்லமைகளாலும் என்னாலே நடப்பிக்கப்பட்டன அல்லவா? [14]மற்றச் சபைகளுக்கு நீங்கள் எதிலே குறைவாயிருக்கிறீர்கள்?

13 நான் உங்கள்மேலே [15]சுமையை வையாதிருந்ததினாலே அன்றி வேறொன்றினாலும் இல்லையே; [16]இந்த அநியாயத்தை நீங்கள் எனக்கு மன்னிக்கவேண்டும்.

14 ¶ இப்பொழுது உங்களிடத்திற்கு வர [17]மூன்றுந்தரம் எத்தனமாயிருக்கிறேன்; (அப்பொழுதும்) [18]நான் உங்களுடையதை அல்ல, உங்களையே தேடுகிறபடியால் நான் உங்கள்மேல் சுமையை வைப்பதில்லை; [19]பெற்றோருக்குப் பிள்ளைகள் அல்ல, பிள்ளைகளுக்குப் பெற்றோர்களே பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டுமே.

15 ஆனதால் [20]நான் உங்களுக்குக் காட்டுகிற அன்பு எவ்வளவோ, அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தும், [21]மிகவும் சந்தோஷமாய் நான் [22]உங்கள் ஆத்துமாக்களுக்காக* என்னைச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்.

16 ¶ அப்படி ஆகட்டும், [23]அவன் உங்களுக்குப் பாரமாய் இருக்கவில்லை; அது மெய்தான், ஆகிலும் தந்திரமுள்ளவனுய் இரு-

கி. பி. சுமா.

1 உ கொரி. உக, உஅ.
2 உ கொரி. உ. அ: உக. உக.
3 எசே. உஅ. உச. கலா. ச. உக, உச.
4 போபு. உ. எ. லூக். உக. உக.
5 ஓ லே.உ.உக, உஎ. டித். உக. ச.ச.
6 உபே.-ச. உச.
7 உ கொரி. உக. உஅ.
8 உ கொரி. உக. ச.
9 உரோ. ஓ. உ. உகொரி. எ. ச.
10 உ கொரி. உக. உ, உக, உஎ.
11 உ கொரி.உ.எ: உஓ. அ, உ. எபே. உ. அ.
12 உ கொரி. உக. ஓ. கலா. உ. உ, எ, அ.
13 உரோ. உஓ. உஅ,உக. உ கொரி. உ. உ. உகொரி. ச.உ: உ. ச: உக. உ.
14 உகொரி. உ. எ.
15 உ கொரி. உ. உஉ. உ கொரி. உக. உ.
16 உ கொரி. உக. எ.
17 உ கொரி. உக. உ.
18 அப். உஅ. உக. உ கொரி. அ.உக.
19 உ கொரி. ச. உச, உஓ.
20 உ கொரி. உ. உஉ, உக.
21 உதெச. உ.அ. பிலி. உ. உஎ.
22 போலா. அ. உக. உ கொரி. உ.உ. கொலோ. உ.உ.உதீமோ. உ. அ.
23 உ கொரி. உக. உ.

* அல்லது உங்களுக்காக.

து, உங்களைக் கபடத்தினாலே பிடித்தான் என்கிறார்கள்.

யஎ (அது எப்படி?) [1]நான் உங்களிடத்திற்கு அனுப்பினவர்களில் யாராலே உங்களிடத்தில் பொழிவைத் தேடினேன்?

யஅ [2]தீத்து உங்களிடத்தில் போகவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, [3]அவனுடனேகூட ஒரு சகோதரனை அனுப்பினேன்; தீத்து உங்களிடத்தில் ஒரு பொழிவையாகிலும் தேடினானோ? நாங்கள் ஒரே ஆவியோடே அல்லவா நடந்தோம்? ஒரே மார்க்கமாயல்லவோ நடந்தோம்.

யக ¶ [4]உங்களுக்குமுன்பாகக் குற்றம் அடக்கும்படி பேசுகிறோம் என்றும் மறுபடியும் எண்ணுகிறீர்களா? பிரியமானவர்களே, [5]பராபரனுடைய சந்நிதானத்திலே கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு, இவைகளை எல்லாம் [6]உங்களை எழுப்பும்படிக்கே பேசுகிறோம்.

உய ஆகிலும் நான் வந்து உங்களை என் மனதின்படி இருக்கிறவர்களாகக் காணுமலும், [7]உங்களுக்கு நானும் உங்கள் மனதின்படி இருக்கிறவளைகக் காணப்படாமலும் இருப்பேனே? விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், புறங்கூறுதல், கோள்சொல்லுதல், இறுமாப்பு, கலகங்களும், உங்களுக்குள்ளே உண்டாயிருக்குமோ?

உக மறுபடியும் நான் வருகிற பொழுது, என் பராபரன் உங்களிடத்தில் என்னைத் [8]தாழ்மைப்படுத்தும்படிக்கு, [9]முன் பாவம்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும், [10]வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும்விட்டு மனம்திருப்பாமல் இருக்கிறதைக்குறித்து நான் துக்கப்படவேண்டியதாய் இருக்குமோ என்று இவைகளைக்குறித்துப் பயந்திருக்கிறேன்.

கி. பி. சுயு.

1 உ கொரி. எ. உ.
2 உ கொரி. அ. க, யக, உஉ.
3 உ கொரி. அ. யஅ.
4 உ கொரி. ஙி. யஉ.
5 உகொ. கூ. க. உ கொரி. யக. கக.
6 க கொரி. ய.கூ.
7 க கொரி. ச. உக. உ கொரி, ய.உ: யக. உ,ய.
8 உ கொரி. உ. க, ச.
9 உ கொரி. யக. உ.
10 க கொரி. ஙி.க
11 உகொரி. யஉ. யச.
12 ச மொ. கஙி. கய. ஙி மொ.எ. க: டக. யஙி. மத் யஅ. யக. யோவா. அ.எ. எபி. ய. உஅ.
13 உ கொரி. க. உக.
14 உ கொரி.யஉ. உச.
15 உகொரி.ய.உ.
16 மத். ய. உய. க கொரி. ஙி.ச. உகொரி. உ. ய.
17 க கொரி. கூ. உ.
18 பிலி.உ. எ,அ. க பே. க. யஅ.
19 உரோ. கூ. ச.
20 உ கொரி. ய.க, ச.

* அல்லது அவருக்குள்.

21 க கொரி. யக. உஅ.
22 க கொரி. கூ. உஎ.
23 உரோ. அ. ய. கலா. ச. யக.

யஙூ. அதிகாரம்.

க. குணப்படாத பாவிகளுக்குத் தண்டனையைக் கொண்டும், தன் அப்போஸ்தல அதிகாரத்தைக் கொண்டும் பயமுறுத்தி, ஙி. அவர்கள் தங்கள் சகோதரைகளைக்குறித்துப் பரிசோதிக்கவும், எ. தான் வருகிறதற்குள்ளே தங்கள் பாவக்கேடு விட்டேவிடவும் கற்பித்து, யக. மற்றப் பொதுவான செய்திகளையும் சொல்லி அவர்களை வாத்தி கிருபையை முடித்தது.

11 இந்த மூன்றாந்தரம் நான் உங்களிடத்திற்கு வருகிறேன்; சகல சங்கதிகளும் [12]இரண்டு மூன்று சாட்சிகளுடையவாக்கினால் நிலை வரப்படும்.

உ நான் மறுபடியும் வரும்பொழுது, [13]தப்பவிடமாட்டேன் என்று [14]முன் பாவம்செய்தவர்களுக்கும் மற்ற எல்லாருக்கும் [15]முன் சொன்னேனே; இப்பொழுது தூரமாயிருந்தும், உங்களிடத்தில் இருக்கிறவளைக நான் இரண்டாந்தரமும் அப்படியே முன்னறிவித்துச் சொல்லுகிறேன்.

ஊ என்னாலே கிறிஸ்து பேசுகிறதைக்குறித்துத் [16]திருட்டாந்தத்தைக் காணத் தேடுகிறீர்களே; அவர் உங்களுக்குள்ளே பலஈனம் அல்ல, [17]வல்லவராயிருக்கிறார்.

ச அல்லாமலும், [18]அவர் பலஈனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், [19]பராபரனுடைய வல்லமையால்பிழைத்திருக்கிறார்; அப்படி [20]நாங்களும் அவர் நிமித்தம்* பெலஈனராயிருந்தும், அவருடனேகூடப் பராபரனுடைய வல்லமையால் உங்களுக்குள்ளே சீவனைக் காண்பிப்போம்.

ஙி உங்களுக்கு விசுவாசம் உண்டோ? [21]அதைக்குறித்து உங்களைச் சோதியுங்கள்; உங்களைத்தாமே விசாரித்து அறியுங்கள்; அல்லது [22]நீங்கள் உதாரணம் இல்லாதவர்களாயிராவிட்டால், [23]இயேசுக்கிறிஸ்து உங்களிடத்தில் இருக்கிறார் என்று உங்களைத்தாமே அறிகிறதில்லையா?

ஙூ நாங்கள் உதாரணம் இல்லா

Digitized by Google

தவர்கள் அல்லவென்பதை அறி வீர்கள் என்று நம்புகிறேன்.

எ மேலும் நீங்கள் எவ்வளவாகி லும் பொல்லாங்கைச் செய்யாதி ருக்கும்படியாக, பராபரனை நோக் கி விண்ணப்பம்பண்ணுகிறேன்; [1]நாங்கள் உதாரணம் உள்ளவர் கள் என்று காணப்படும்பொருட் டு அல்ல, நீங்கள் நலமானதைச் செய்யும்பொருட்டே அப்படிச் செய்கிறேன். (அப்படி நீங்கள் செய்தால்,) நாங்கள் உதாரணம் இல்லாதவர்களாயிருக்கலாம்.

அ சத்தியத்திற்கு விரோதமாக நாங்கள் ஒன்றும் செய்யக்கூடா மல் சத்தியத்திற்கு நேராகச் செய் வோமே.

க ஆகையால், [2]நாங்கள் பல னராயிருந்தாலும் நீங்கள் பல முள்ளவர்களாலல் சந்தோஷப் படுவோம்; [3]அந்தப்படி நீங்கள் நற் சீர் பொருந்தும்படிக்கே வேண்டு தல்பண்ணுகிறோம்.

ங அதினாலே நான் உங்களி டத்தில் வந்திருக்கும்பொழுது, [4]இடிக்கிறதற்கு அல்ல, எழுப்பிக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எனக்குக் கொடுத்த [5]அதிகாரத்தின்படியே நான் கண்டிதம்பண்ணுதபடிக்கு, இவைகளைத் தூரமாயிருந்து [6]எழு துகிறேன்.

ஙக ¶ கடைசியிலே சகோதர ரே, சந்தோஷமாயிருங்கள்; நற்சீர் பொருந்துங்கள்; ஆறுதலை அடை யுங்கள்; [7]ஏகசிந்தையாயிருங்கள்; சமாதானமாயிருங்கள்; அப்பொ ழுது அன்புக்கும் [8]சமாதானத்திற் கும் காரணராகிய பராபரன் உங் கள் பங்கில் இருப்பார்.

ஙஉ [9]ஒருவனை ஒருவர் பரிசுத்த முத்தத்திலல் வாழ்த்துங்கள்.

ஙஊ பரிசுத்தவான்கள் எல்லாரும் உங்களுக்கு வாழ்த்துதல் செய்கி றார்கள்.

ஙஎ [10]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ் துவினுடைய கிருபையும் பரா பரனுடைய அன்பும் [11]பரிசுத்த ஆவியோடே ஐக்கமும் உங்கள் அனைவருடனேயும் இருக்கக்கட வது.—ஆமன்.

கி. பி. சுஙு.

1 உ கொரி. க. கூ.
2 க கொரி. ச. ம. உ கொரி. ஙக. கஎ: ஙஉ. ஙி, கூ, ம.
3 க தெச. க. ம.
4 நீத். க. ஙக.
5 உ கொரி. ம அ.
6 க கொரி. ச. உக. உ கொரி. உ க:ம. உ:ஙஉ. உஙி. உக.
7 உரோ. ஙஉ. ஙகூ.ஙஅ: ஙஙி.ஙி. க கொரி. க. ம. பிலி. உ. ஊ: க. ஙக. க பே. க. அ.
8 உரோ. ஙஙி. கக.
க அன்றியும் [1]எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி நியாயப்பிரமாணம் நீதிமான்களுக்கு அல்ல, அக்கிரமக்காரருக்கும், கீழ்ப்படியாதவர்களுக்கும், தேவபக்தி இல்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், லவுகீக நடக்கையுடையவர்களுக்கும், தாய்தகப்பன்மாரைக் கொலைசெய்கிறவர்களுக்கும், மற்ற மனிதரைக் கொலைசெய்கிறவர்களுக்கும்,

ச வேசிமார்க்கருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனிதரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்க்காரருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்,

ஏக [2]பாக்கியமுள்ள பராபரனுடைய மகிமையான சுவிசேஷத்தின்படி இருக்கிற [3]ஆரோக்கியமான உபதேசத்திற்கு விரோதமாயிருக்கிற மற்றெந்தப் பொல்லாங்கைச் செய்கிறவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐ [4]அந்தச் சுவிசேஷம் எனக்கு ஒப்புவிக்கப்பட்டது; [5]என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்னை [6]உண்மையுள்ளவன் என்றெண்ணி, [7]இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால், அவருக்குத் தோத்திரம்செய்கிறேன்.

ஒ முன்னே நான் [8]தூஷணிக்கிறவனுமாய், துன்பப்படுத்துகிறவனுமாய், நிந்திக்கிறவனுமாய் இருந்தேன்; அப்படியிருந்தும், [9]நான் அறியாமல் அவிசுவாசத்தினால் அப்படிச் செய்தபடியினாலே இரக்கம் பெற்றேன்.

ஓ ¶ மேலும் [10]நம்முடைய கர்த்தாவின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள [11]விசுவாசத்தோடும் [12]அன்போடும்கூட எனக்கு மிகவும் சம்பூரணமாய் உண்டாயிற்று.

ஓஇ [13]பாவிகளை இரட்சிக்கும்படிக்குக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிறது [14]உண்மையும், எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமான வார்த்தையாயிருக்கின்றது; பாவிகளில் நான் பிரதானமானவன்.

ஓச அப்படியிருந்தும் கித்திய சீவனை அடையும்படி இனிமேல் இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாய் இருப்பவர்களுக்குத் [15]திருட்டாந்தத்தைக் கொடுக்கும் பொருட்டாக, பிரதான பாவியாகிய என்னிடத்திலே எல்லா நீடிய பொறுமையைக் காண்பிக்கும்படிக்கு [16]இரக்கம்பெற்றேன்.

ஓஎ [17]கித்தியமும் [18]அழிவில்லாமையும் [19]அதரிசனமுமுள்ள ஞானமுமாய், [20]ஒருவராகிய ஞானமுள்ள பராபரனுமாய் இருக்கிற அவருக்குக் [21]கனமும் துதியும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.—ஆமன்.

ஓஅ ¶ என் குமாரனாகிய திமோத்தேயே, [22]உன்னைக்குறித்து முன்னுண்டான தீர்க்கதரிசனங்களின்படியே [23]நான் இந்தக் கட்டளையை உனக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

ஓக [24]அந்தப்படி நீ விசுவாசமும், நற்சாட்சியையுடைய மனதும் உள்ளவனாய் அவைகளாலே [25]நல்ல போராட்டம்பண்ணுவாயாக; அப்படிப்பட்ட மனதைச் சிலர் தள்ளி, விசுவாசமாகிய [26]கப்பலைச் சேதப்படுத்தினார்கள்.

உய அவர்களில் [27]இமெனேயும், [28]அலேக்குசந்தரும் இருக்கிறார்கள்; [29]அவர்கள் தூஷணியாதபடிக்குக் கற்றுக்கொள்ளும்பொருட்டாய் [30]அவர்களைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்தேன்.

உ. அதிகாரம்.

க. பாவருக்காகவும் பெம்பள்ளைகளுக்காகவும் நாம் ஜெபம்பண்ணவேண்டுமென்றும், அதற்கு முனாந்நிரம் இன்னதென்றும், உ. ஸ்திரீகள் இவ்விதமாய் நடக்கவேண்டியதென்

இ. பி. சுடு.

1 லூ. உ. கூ: இ. உஉ.
2 உ நீமே. உ. ஏஇ.
3 உ நீமே. உ. உ நீமே. சு.உ. நீத.உ: உ. உ.
4 உ கொரி. கூ. மெ.கலா. உ.எ. கொமே. உ. ஏஇ. உ தெச. உ.சு. உ நீமோ. உ.எ. உநீமோ. உ.கூ. நீத. உ.உ.
5 உ கொரி. கூ. கூ.
6 உ கொரி. எ. ஏஇ.
7 உ கொரி. உ. இ, உ: சு. உ. கொமே. உ. ஏஇ.
8 அப். அ. உ: உ. உ கொரி. ஏஇ. உ. பிலி.உ. சு.
9 லூக். உஉ. உசு. மோவா. உ.கூ, சுஉ. அப். உ. ஏஎ: உஉ. உ.
10 உரோ.இ.உஅ. உ கொரி. ஏஇ.அ.
11 உ நீமே. உ. கூ.
12 லூக். எ. சுஎ.
13 மத். உ. கூ. மாற். உ. மூ. லூக். இ உஉ: கூ. அ. உரோ. இ. அ. உ மே. உ. இ.
14 உ நீமே.உ.உ: சு. உ. உநீமே. உ.கூ. நீத.உ.அ.
15 அப். கூ. உஉ.
16 உகொரி.சு.உ.
17 சங். ஏ. ஏஉ: உசுஇ.கூதானி. எ.கூ. உ நீமே. உ. ஏஇ, ஏஉ.
18 உரோ.உ. உஉ.
19 மோவா. உ. ஏஅ. எபி. ஏஉ. உஎ. உ மோ.சு. ஏஉ.
20 உரோ. ஏஉ. உஎ.யூதா. உஇ.

21 உ தீமோ.உ.கூ ஏஉ. —22 உ நீமோ.சு.ஏசு. —23 உ நீமோ.உ.ஏஉ,ஏசு,உஅ. உ நீமோ.உ.உ. —24 உ நீமோ.உ.உ. —25 உ நீமோ.உ.ஏஉ உ நீமோ.உ.உ:சு எ. —26 உ நீமோ.உ.உ. —27 உ நீமோ.உ.ஏஎ. —28 உ நீமோ.சு.ஏசு. —29 அப்.கூ.சஇ. —30 உ கொரி.இ.இ.

Digitized by Google

தும், கூ. அவர்கள் சபையிலே போதிக்கக்கூடா தென்றும், எஅ. அவர்கள்மேல் பராபரனுடைய கோபாக்கினை இருந்தாலும் அவர்கள் விசுவாசத்தில் நில்லாதிருப்பார்களானால் பின்னும் இரட்சிக்கப்படுவார்களென்றும் சொல்லியது.

பின்னும் நான் பிரதானமாய்ப் புத்திசொல்லுகிறது * என்னவெனில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும், செபங்களையும், வேண்டுதலையும், தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.

உ காம் எல்லாப் பத்தியோடும் யோக்கியத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள சீவனம்பண்ணும்படிக்கு, [1]இராசாக்களுக்காகவும் [2]அதிகாரமுள்ள† யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்.

கூ [3]நம்முடைய இரட்சகராகிய பராபரனுக்குமுன்பாக [4]அது நன்மையாயும் பிரியமாயும் இருக்கின்றது.

ச எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், [5]சத்தியத்தை அறிகிற அறிவுக்கு வரவும் [6]அவரே சித்தமாய் இருக்கிறார்.

ஙி ஏனெனில், [7]பராபரன் ஒருவரே; பராபரனுக்கும் மனிதருக்கும் [8]மத்தியஸ்தரும் ஒருவரே.

சு எல்லாராயும் மீட்கும்பொருளாகத் [9]தம்மை ஒப்புக்கொடுத்த மனிதனுகிய கிறிஸ்து இயேசு அவரே; (அந்த மீட்புத்) [10]தகுதியான காலங்களில் [11]சாட்சிசொல்லப்பட்டு‡ வருகின்றது.

எ அதற்காக நான் புறத்தேசத்தாருக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் [12]விளங்கப்பண்ணுகிற போதகனுகவும், பிரசங்கியாகவும், அப்போஸ்தலனுகவும் [13]ஏற்படுத்தப்பட்டிருக்கிறேன்; [14]நான் பொய்சொல்லாமல் உண்மையே சொல்லுகிறேன்.

அ ¶ அல்லாமலும் என்னுடைய சித்தம் என்னவென்றால், [15]எல்லா இடங்களிலேயும், புருஷர்கள் கோபமும் தருக்கமும் இல்லாமல் [16]பரிசுத்தமான கைகளை உயர்த்திச் செபம்பண்ணவேண்டும்.

கூ [17]அந்தப்படி ஸ்திரிகளும் மயிராப் பின்னுதலாலாவது,§ பொன்னுலாவது, முத்துக்களாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தாலாவது, தங்களை அலங்கரியாமல் தேவபத்தியைக் காண்பிக்கிற பெண்பிள்ளைகளுக்கு ஏற்றபடியே,

ய [18]கற்புக்குரிய வஸ்திரத்தாலும், நாணத்தாலும், தெளிவான புத்தியினாலும், நற்கிரியைகளாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்.

யக ¶ ஸ்திரியானவள் அமைதலோடே படித்துக்கொண்டு இப்படி எவ்விதத்திலும் கீழ்ப்படிதலைக் காண்பிக்கக்கடவள்.

யஉ [19]உபதேசம்பண்ணும்படியாயும், [20]புருஷன்மேலே அதிகாரத்தைச் செலுத்தும்படியாயும், நான் ஸ்திரியானவளுக்கு உத்தரவு கொடுக்கிறதில்லை.

யங அவள் அமைதலாய் இருக்கவேண்டும்; என்னத்தினாலெனில், முதலாவது [21]ஆதாமும், இரண்டாவது ஏவாளும், உருவாக்கப்பட்டார்கள்.

யச மேலும் [22]ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை; ஸ்திரியானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்.

யஞ அப்படியிருந்தும், அவர்கள் தெளிவான புத்தியோடே விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் பிள்ளையைப் பெறுகிறதினாலே இரட்சிக்கப்படுவார்கள்.

கூ. அதிகாரம்.

க. கன்னாளிகளுக்கும், ஊழியக்காரர்களுக்கும், அவர்கள் பெண்சாதிகளுக்கும் இருக்கவேண்டிய இலட்சணங்களைக் காண்பித்து, ச. இவை எவர்களுக்குறித்துத் தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுத வேண்டிய முகாந்தரம் இன்னதென்றுசொல்லி, கூ. சபையைக்குறித்தும், அதில் போதிக்கப்பட்டு வழங்கிவருகிற மகிமையுள்ளசத்தியத்தைக் குறித்தும் சொல்லியது.

கி. பி. சுஇ.

* அல்லது விரும்புகிற.

1 எஸ்ரா. க. ஏ. எரே. உக. எ.
2 உரோ. ஙக. க.
† அல்லது உயர்ந்த உத்தியோகமுடைய.
3 கதிமோ. க. க. உதிமோ. க. க.
4 உரோ. ஙஉ. உ. கதிமோ. இ.ச.
5 யோவா. ஙஎ. க. உ தீமோ. உ. உஇ.
6 எசே.மஅ. உக. யோவா. க. ஙக, மஎ. நீத்.உ. ஙக. உ பே. க. கூ.
7 உரோ. க. உக, கஏ: ஏ. ஙஉ. கலா. க. உஏ.
8 எபி. அ.சு: கூ. உஇ.
9 மத். உஏ. உஅ. மாற். ஏ. சஇ. எபே. க.எ. நீத். உ. ஙச.
10 உரோ. இ. க. கலா. ச. ச. எபே. க. கூ: க. இ. நீத். க. க.
11 க கொரி.க.சு. உ தெச. க. ஏ. உதீமோ. க.அ.
‡ அல்லது சாட்சியாக.
12 உரோ.ஙக.ஙக: ஙஇ. ஙசு. கலா. க. ஙக.
13 எபே. க.எ,அ. உதீமோ.க.ஙக.
14 உரோ. கூ. க.
15 மல்கி. க. ஙக. யோவா.ச.உக.
16 சங். ஈக.ச. உ. ஏசா. க. ஙஇ.
17 க பே. க. க.
§ அல்லது அலங்கரித்தல்.
18 க பே க. ச.
19 க கொரி. ஙச. கச.
20 எபே இ. உச.
21 க மோ. க. உஎ: உ. ஙஅ, உஉ. க கொரி. ங. அ, கூ.
22 க மோ. க. க. உ கொரி.ஙக.க.

Digitized by Google

1கண்காணிப்பை விரும்புகிறவன் 2நல்ல வேலையை விரும்புகிறான்; 3இது மெய்யான வார்த்தை.

உ ஆகையால் 4கண்காணியானவன் குற்றமில்லாதவனுமாய், 5ஒரே மனைவியையுடைய புருஷனுமாய், தெளிந்தபுத்தியுள்ளவனுமாய், விவேகியுமாய், நல்லொழுக்கமுள்ளவனுமாய்,* அந்நியனை உபசாரம் செய்கிறவனுமாய், 6போதிக்கிறதற்குத் தகுதியானவனுமாய் இருக்கவேண்டும்.

ஈ 7அவன் திராட்ச இரசத்தில் பிரியனுமாய்,† 8அடிக்கிறவனுமாய், அவலட்சணமான ஆதாயத்தை 9இச்சிக்கிறவனுமாய் இராமல், 10சாந்தனுமாய், சண்டை பண்ணாதவனுமாய், பணத்தின்மேல் பிரியம் இல்லாதவனுமாய்,

ஊ தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனுமாய், 11தன் பிள்ளைகளை எவ்விதத்திலும் யோக்கியமாய்க் கீழ்ப்படியப்பண்ணிக் கொள்ளுகிறவனுவமாய் இருக்கவேண்டும்.

ஐ ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், பராபரனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?

ஒ மேலும் அவன் இறுமாப்பை அடைந்து, பசாசு விழுந்த 12ஆக்கினையிலே விழாதபடிக்கு புதனமான கிறிஸ்தவனாயிருக்கக்‡ கூடாது.

ஓ மேலும் அவன் கிந்தனையிலும், 13பசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, 14புறம்பானவர்களால் நற்சாட்சியைப் பெற்றவனாயும் இருக்கவேண்டும்.

அ ¶ அந்தப்படியே 15உதவிக்காரரும், இருநாக்குள்ளவர்களாயும், 16திராட்ச இரசத்தில் பிரியராயும், அவலட்சணமான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல்,

கி. பி. சுருக்கம்.

1 அப். உ. உ. உ. பிலி. க. க.
2 எபே. ச. உஉ.
3 கதிமோ. க. உஅ.
4 தீத். க. க. ழ.
5 கதிமோ. இ. க.
* அல்லது மரியாதை.
6 உ தீமோ. உ. உ.
7 அ. வ. ச. தீத். க. எ.
† அல்லது நிராட்சஇர மெறி பனைப் போலச் சண்டைக்காரனுமாய்.
8 உ தீமோ. உ. உ.
9 க் பே. இ. உ.
10 உ தீமோ. உ. உ.
11 தீத். க. க.
12 எசா. ம. ச. உஉ.
‡ அல்லது புதிதாய் விசுவாசித்திறவன்.
13 கதிமோ. க. க. உ தீமோ. உ. உ.
14 அப். உ. உ. உஉ. க கொரி. இ. உஉ. க தெச. ச. உஉ.
15 அப். க. க.
16 க. ஏ. க மோ. உ. க. எசே. ச ச. உக.
17 க தீமோ. க. உஉ.
18 தீத். உ. க.
19 மத். உஇ. உக.
§ அல்லது கடப்பிக்கிறவர்கள்.
20 எபே. உ. உக, உஉ. உ தீமோ. உ. உ.
‖ அல்லது ஆதாரமும்.
21 யோவா. க. உச. க பே. க. உ.
¶ ஒரேகு, வெளிப்படுத்தப்பட்டும்.
22 மத். க. உக. யோவா. க. க உ, கக: உஇ. உக: உக. அ, க. உரோ. க. ச.

17 யோக்கியருமாய், 17விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமான மனதிலே காத்துக்கொண்டிருக்கிறவர்களுமாய் இருக்கவேண்டும்.

ஐ அல்லாமலும் முன்பு அவர்களும் சோதிக்கப்படவேண்டும்; அப்பொழுது குற்றமில்லாதவர்களானால் அவர்கள் உதவிக்காரருடைய உத்தியோகத்தைச் செய்யலாம்.

ஙக 18அப்படிப்போல அவர்களுடையஸ்திரிகளும் யோக்கியருமாய், தூஷணியாதவர்களுமாய், தெளிந்த புத்தியுள்ளவர்களுமாய், எவ்விதத்திலேயும் உண்மையுள்ளவர்களுமாய் இருக்கவேண்டும்.

ஙஉ மேலும் உதவிக்காரராயிருக்கிறவர்கள் ஒவ்வொரு மனைவிக்குப் புருஷருமாய், (தங்கள்) பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாய் இருக்கவேண்டும்.

ஙக இப்படி 19உதவிக்காரருடைய உத்தியோகத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள்§ தங்களுக்கு நல்ல பதவியையும், கிறிஸ்து இயேசுவினிடத்திலுள்ள விசுவாசத்தின்மேல் மிகுந்த தயிரியத்தையும் சம்பாதிக்கிறார்கள்.

ஙச ¶ நான் உன்னிடத்திற்குச் சீக்கிரமாய்வருவேன்என்று நம்பியிருக்கிறேன்.

ஙஎ நான் தாமதித்தால் சத்தியத்தைக் காக்கிற 20தூணுமாய் அஸ்திபாரமுமாய்‖ இருக்கிற சிவனுள்ள பராபரனுடைய சபையாகிய தேவாலயத்திலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதினேன்.

ஙஅ அன்றியும் 21பராபரன் மாம்சமுள்ளவராக வெளிப்பட்டும்¶ 22ஆவியிலுலே நீதியுள்ளவர் என்று ஏற்படுத்தப்பட்டும், 23தேவதூதர்களால் காணப்பட்டும், 24புறத்தேசத்தாருக்குள்ளே பிரசங்கிக்

க பே.க.உஅ. க யோ.இ.க.ழ.—23 மத்.உஅ.உ. மற்.ம்க.இ. தூக்.உ.ம்க: உச.ச. யோவா. உக.ம்உ. எபே.க.உ. க பே.க.உஉ.
24 அப்.ம.உச: ம.ச.க,ச.அ. லூ.உ.அ. எபே.க.இ,க,அ. உரோ.ம.ம.அ. கொலே.க.உ.க,உ.அ. கதீமோ.உ.எ.

Digitized by Google

கப்பட்டும், [1]உலகத்திலே விசுவாசிக்கப்பட்டும், [2]மகிமையிலே உயர்த்தப்பட்டும் இருக்கிறார் என்று சொல்லிய மெய்த்தேவபத்திக்குரிய இந்த இரகசியம் யாவராலும் அறிக்கையிடப்பட்டபடி மேன்மையாய் இருக்கிறது.

ச. அதிகாரம்.

க. முடிவுகாலத்தில் விசுவாசத்திலிருந்து விழுவுதல் இருக்குமென்று முன்னறிவித்து, க. தீமோத்தேயு தன் உண்மைக்கு சோதனை நிறைவேற்றுவதற்கு அதற்கேதுவான பல புத்திமதிகள் சொல்லியது.

ஆகிலும் [3]தேவ ஆவியானவர் தெளிவாய்ச் சொல்லுகிறபடி [4]பிற்காலங்களிலே பொய்யருடைய [5]வஞ்சகத்தினாலே சிலர் [6]வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், [7]தேமோன்களுக்குறித்துச் சொல்லுகிற உபதேசங்களுக்கும் செவிகொடுத்து அந்த விசுவாசத்தைத் தள்ளிப்போடுவார்கள்.

உ அந்தப் பொய்யர் [8]சூடுண்ட மனதுள்ளவர்களாய், [9]விவாகம் பண்ணக்கூடாதென்றும், [10]போசனபதார்த்தங்களை விலக்கவேண்டுமென்றும் கட்டளையிடுவார்கள்.

க பராபரன் அவைகளை, விசுவாசிகளாலும் சத்தியத்தை அறிந்தவர்களாலும் [11]தோத்திரத்தோடே [12]அநுபவிக்கும்படிக்குப் படைத்தாரே.

ச ஆனதால் [13]பராபரன் படைத்தவை எல்லாம் நல்லவைகளாய் இருக்கின்றன; தோத்திரத்தோடே அவை ஏற்றுக்கொள்ளப்படுகையில் ஒன்றையும் தள்ளவேண்டுவதில்லை.

ரி அவை தேவவசனத்திலும் செபத்திலும் பரிசுத்தமாக்கப்படுகின்றனவே.

ஈ ¶ இவைகளைச் சகோதரருக்குப் போதித்தால், நீ அறிந்து பற்றிக்கொண்டிருக்கிற கற்போதகத்

கி. பி. சுடு.

1 கொலோ. க. ச, உக.
2 லூக். உச. இச. அப். க. க. க பே. க. உஉ.
3 யோவா. மக. மக. உ தெச. உக. உ தீமோ. க. க. ழ. உ பே. க. க. க பேர. உ.உஅ. யூதா. ச, உஅ.
4 க பே. க. உக.
5 மத். எ. அஇ. உரோ.கச. உஅ. உ பே. உ. க.
6 உ தீமோ. க. மக. உ பே. உ. எவெலி.மக.மச.
7 தானி. மக. உஇ, கஎ, கஅ. வெளி. க. உக.
8 எபே. ச. மக.
9 க கொரி. எ. உஅ, கக, கஅ. கொலோ. உ. உக, உக. எபி. மக. ச.
10 உரோ. மச. க, மஎ. க கொரி. அ. அ.
11 உரோ. மச. க. க கொரி. ம.கம.
12 க மோ. க. உக: க. க.
13 உரோ.மச.மச, உம. க கொரி. ம.உஇ. நீத். க. மஇ.
14 உதீமோ. க. மச, மஇ.
15 கதீமோ. க: க. உம. உ தீமோ. உ. மக, உக: ச.ச. நீத். க. மச.
16 எபி. இ. மச.
17 க கொரி. அ. அ. கொலோ. உ. உக.

*அல்லதுகொஞ்சகாலத்திற்கு.

18 சங் கஎ. ச. அச.மக: ஈமஉ. உ. க: சசஇ. மக. மத்.க.கக: மக. உக. மாற். ம.கம. உரோ.அ. உஅ.

நிற்கும் விசுவாசத்திற்கும் உரிய வார்த்தைகளில் [14]வளர்ந்தவனாகி, இயேசுக்கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாய் இருப்பாய்.

எ லவுகீக நடக்கைக்குரியவைகளுமாய்க் கிழவிகளுடைய பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளை மாத்திரம் [15]தள்ளி, [16]மெய்த்தேவபத்தியை முயற்சிபண்ணிக்கொள்வாயாக.

அ [17]சரீரத்திற்கேற்ற முயற்சிகொஞ்சப்* பிரயோசனமுள்ளதே; இந்தச் சீவனுக்கும் இதற்குப்பின் வரும் சீவனுக்கும் [18]வாக்குத்தத்தமுள்ளதாகிய [19]தேவபத்தி எவ்விதத்திலும் பிரயோசனமுள்ளதாய் இருக்கின்றதே.

க [20]இந்த வார்த்தை உண்மையாயும் மிகவும் அங்கிகரிக்கப்படுவதற்குப் பாத்திரமாயும் இருக்கின்றது.

ச இதற்காக நாங்களும் எல்லா மனிதருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் [21]இரட்சகராகிய சீவனுள்ள பராபரன்மேல் [22]நம்பிக்கையை வைத்திருக்கிறபடியால், [23]பிரயாசப்பட்டும் நிந்திக்கப்பட்டும் இருக்கிறோம்.

யக [24]இவைகளை நீ கட்டளையிட்டுப் போதிப்பாயாக.

யஉ ¶ [25]உன் வாலிபவயதைக்குறித்து எவனாகிலும் உன்னை அசட்டை பண்ணத்தக்கதாக நீ செய்யாமல், வார்த்தையிலேயும் நடக்கையிலேயும் அன்பிலேயும் ஆவியிலேயும் விசுவாசத்திலேயும் கற்பிலேயும் உன்னை விசுவாசிகளுக்குச் [26]சட்டமாகக் காண்பிப்பாயாக.

யக நான் வருமளவும் வாசிக்கிறதற்கும் புத்திசொல்லுகிறதற்கும் போதிக்கிறதற்கும் சாக்கிரதையாயிரு.

யச [27]மூப்பர்கள் கூட்டம் உன்மேல் கைகளை வைத்தபொழுது

19 க தீமோ.க.க.-20 க தீமோ.க.மஇ.-21 சங்.கக.க: கஎ.உ,கழ.-22 க தீமோ.க.மஎ.-23 க கொரி.ச.மக,மஉ.-24 க தீமோ.க.உ. 25 க கொரி.கக.மச.நீத்.உ.மஇ.—26 நீத்.உ.எ. க பே.இ.உ.—27 அப்.க.க: அ.மஎ: கக.க:மக.க. க தீமோ.இ.உஉ,உ தீமோ.க.க.

Digitized by Google

[1]தீர்க்கதரிசனத்தினாலே உனக்குக் கொடுக்கப்பட்ட வரத்திற்காக [2]அசதியாய் இராதிருப்பாயாக.

யஎ நீ தேறுகிறது யாவருக்கும்* தோன்றும்படிக்கு இவைகளையே சிந்தித்துக்கொண்டுஇவைகளிலே சாக்கிரதையாய் இருப்பாயாக.

யசு [3]உனக்காகவும் உபதேசத்திற்காகவும் எச்சரிக்கையாய் இரு; இவைகளில் நிலைகொண்டிரு; அப்படிச் செய்தால் [4]உன்னையும் [5]உன்னிடத்தில் கேட்கிறவர்களையும் இரட்சித்துக்கொள்வாய்.

டு. அதிகாரம்.

க. மற்றவர்களைக் கடிந்துகொள்ளவேண்டிய விதத்தைக்குறித்தும், உ. கைம்பெண்களைக்குறித்தும், ஙை. மூப்பர்களைக்குறித்தும் சில பிரமாணம் செய்கிறது, உக. தீமோத்தேயுவின் சுத்தத்தை முறைசொல்லி, உச. சிலருடைய பாவங்கள் அவர்களைக் குற்றஞ்சுமத்த முந்திக்கொள்வதும், சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் செல்லுகிறதும் உண்டென்று சொல்லியது.

[6]மூப்பனை நீ கடினமாய்க் கடிந்துகொள்ளாமல் தகப்பனைப்போலவும், வாலிபவயதுள்ள ஆண்பிள்ளைகளுக்குச் சகோதரனைப்போலவும்,

உ பெரிய ஸ்திரிகளுக்குத் தாய்களைப்போலவும், வாலிபவயதுள்ள பெண்பிள்ளைகளுக்குச் சகோதரிகளைப்போலவும் மிகுந்த கற்போடே புத்திசொல்லுவாயாக.

ஙை ¶ [7]மெய்யாய்க் கைம்பெண்களானவர்களைக் கனம்பண்ணு.

உ ஒரு கைம்பெண்ணுக்குப் பிள்ளைகள் அல்லது பேரன் பேத்திகள் இருந்தால், அவர்கள் முதலாவது தங்கள் சொந்தக் குடும்பத்தைத் தேவபத்தியாய்† விசாரித்து, பின்பு தங்கள் தாய்தகப்பன்மாருக்குப் பதில்நன்மைகளைச் [8]செய்ய வழக்கம்பண்ணக்கடவர்கள்; [9]அதுவே பராபரனுக்குமுன்பாக நன்மையாயும் பிரியமுள்ளதாயும் இருக்கின்றது.

ஙி [10]தனித்திருக்கிற மெய்யான கைம்பெண் பராபரனை நம்பிக்கொண்டு, [11]இரவும்பகலும் வேண்டுதல்களிலும் செபங்களிலும் [12]தரித்திருப்பாள்.

உ [13]சிற்றின்பத்தோடே‡ வாழ்கிறவள் உயிரோடே செத்தவளாயிருக்கிறாள்.

ஙஎ [14]அவர்கள் குற்றம்சாற்றப்படாதவர்களாய் இருக்கும்படிக்கு இவைகளைக் கட்டளையிடுவாயாக.

அ தன்னைச் சேர்ந்தவர்களையும் [15]விசேஷமாகத் தன் சமுசாரத்தையும்§ விசாரியாதிருக்கிறவனே [16]விசுவாசத்தை மறுதலித்தவனிலும் [17]அவிசுவாசியிலும் கெட்டவனாயும் இருக்கிறான்.

க ¶ மேலும் எப்படிப்பட்ட கைம்பெண்ணைத் தெரிந்துகொண்டுவைக்க‖ வேண்டுமென்றால், அறுபது வருஷத்துக்குக் கீழானவயதில்லாதவள், [18]ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவள்.

ய பிள்ளைகளை வளர்த்தான் என்றும், [19]அந்நியனை உபசாரம்செய்தாள் என்றும், [20]பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவினாள் என்றும், உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவிசெய்தாள்என்றும், சகலவிதமான நற்கிரியைகளையும் நடப்பித்தாள் என்றும், இப்படிப்பட்ட நற்கிரியைகளைக்குறித்து நற்சாட்சிபெற்றிருக்கிறவள்: இப்படிப்பட்ட கைம்பெண்ணைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

யக வாலிபவயதுள்ள கைம்பெண்களைத் தெரிந்துகொள்ளாதிருப்பாயாக; என்னத்தினாலெனில், அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் லவுகீக ஆசைகொள்ளும்பொழுது விவாகம்பண்ண மனதாகி,

யஉ முதலில் இருந்த உண்மையைத் தள்ளினதால் குற்றத்தில் அகப்படுவார்கள்.

யஙூ அதுவுமல்லாமல், [21]அவர்கள் சோம்பற்காரிகளாகி, வீடுகள்தோறும் திரிய வழக்கம்பண்ணுவார்

கி. பி. சுடு.

1 க தீமோ. க. ஙஅ.
2 உ தீமோ.க.சு.
* அல்லது யாவற்றிலும்.
3 அப்.உஙை. உஅ.
4 எசே. சக. சு.
5 உரோ. ஙக. ஙச. க கொரி. சு. உஉ. பாக். இ. உஙை.
6 க மோ. ஙக. சஉ.
7 இ, ஙக. வச.
† அல்லது தயவாய்.
8 க மோ. சஇ. ஙை, ஙக.மத். ஙஇ. ச. எபே. க. க, உ.
9 க தீமோ. உ. க.
10 க கொரி. எ. சஉ.
11 அப். உக. எ.
12 லூக். உ. கஎ: ஙஅ. க.
13 பாக். இ. இ.
‡ அல்லது சகபோகமாய்.
14 க தீமோ. க,உ: ச. ஙக: க. ஙச.
15 எசா. ஙஅ. எ. கலா. க. ஙை.
§ அல்லதுஇனத்தாரையும்.
16 உ தீமோ. க. இ. நீத் க. ஙக.
17 மத். ஙஅ. ஙஎ.
‖ அல்லது எடுத்துக்கொள்ள.
18 லூக். உ. கக. க தீமோ. க. உ.
19 அப். ஙசு. ஙஇ. எபி. ஙக. உ. க பே. ச. சு:
20 க மோ. ஙஅ. ச: ஙசு. உ. லூக் எ.சுஅ,ஙச. யோவா. ஙக. இ, ஙச.
21 உ தெச.க.ஙக.

Digitized by Google

கள்; சோம்பற்காரிகளாய்மாத்திர மல்ல, பிதற்றுகிறவர்களாயும் தகாதகாரியங்களைப் பேசுகிற வீண் அலுவல்காரிகளாயும் இருப்பார்கள்.

யச இப்படிச் சிலர் இதற்குமுன்னே சாத்தானிடத்திற்குத் திரும்பினார்களே.

யடி [1]ஆகையால், வாலிபவயதுள்ள கைம்பெண்கள் விவாகம் பண்ணவும் பிள்ளைகளைப் பெறவும் வீட்டை விசாரிக்கவும் [2]விரோதக்காரன் தூஷணிக்கிறதற்கு* இடம் உண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்று இருக்கிறேன்.

யசு விசுவாசியாகிய ஒருவனுக்கு அல்லது ஒருத்திக்குக் கைம்பெண்கள் இருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவிசெய்யக்கடவர்கள்; சபையார் [3]மெய்யான கைம்பெண்களுக்கு உதவியாயிருக்கும்படிக்கு அந்தப் பாரம் அவர்கள்மேல் வைக்கக்கூடாது.

யஎ ¶ [4]போரடிக்கிற மாட்டின் வாயைக்கட்டாதிருப்பாயாக என்றும், [5]வேலையாள் கூலிக்கும் பாத்திரனுயிருக்கிறான் என்றும், வேதவாக்கியம் சொல்லுகிறபடியே,

யஅ (சபையை) [6]நன்றாய் நடத்துகிற மூப்பர்களை, விசேஷமாகத் தெவ்விய வசனத்தை உபதேசிக்கிறதில் பிரயாசப்படுகிறவர்களை [7]இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணிக்கொள்ளவேண்டும்.

யக ¶ மூப்பனுக்கு விரோதமாக ஒருவன் பிராதுபண்ணவந்தால், [8]இரண்டு மூன்று சாட்சிகள் கூடஇராவிட்டால்,†

உய நீ அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது; [9]மற்ற யாவருக்கும் பயம் உண்டாகும்படிக்கு, [10]பாவம்செய்தவர்களை எல்லாச் சபையாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்வாயாக.

உக நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமல், மனதிலே தகாத தீர்ப்பில்லாமல்‡ இவைகளைக் காத்து நடக்கும்படிக்குப் பராபரனுக்கும், கர்த்தராகியஇயேசுக்கிறிஸ்துவுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக [11]கெட்டியாய்க் கட்டளையிடுகிறேன்.

உஉ ¶ [12]எவன்மேலாகிலும் உன் கைகளை நீ சீக்கிரமாய் வைக்கக் கூடாது; [13]மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு ஐக்கப்படாதிருப்பாயாக; உன்னைக் கற்புள்ளவனாகக் காத்துக்கொள்வாயாக.

உசு [14]உன் இளைக்குடலுக்காகவும் உனக்கு அடிக்கடி வருகிற பலஈனங்களுக்காகவும், நீ இனிமேல் தண்ணீர் பானம்பண்ணுமல், கொஞ்சம் திராட்ச இரசத்தைப் பானம்பண்.

உச ¶ [15]சில மனிதருடைய பாவங்கள் தீர்ப்புச்செய்கிறதற்குமுன்னே வெளியரங்கமாயிருக்கும்; சிலருடைய (பாவங்கள்) பின்னே விளங்கும்.

உடு அதுபோல, சிலருடைய நற்கிரியைகளும் (உடனே) வெளியரங்கமாயிருக்கும்; அப்படி இராதவைகளும் (நெடுக) மறைந்திருக்கமாட்டாது.

சு. அதிகாரம்.

க. வேலக்காரருடைய கடமைகளைக்குறித்தது. க. அநனமானவைகளைப் போதிக்கிறவர்களோடே சேர்க்கூடாதென்றது. க. தேவபக்தி பிரயோசனமுள்ளதும், ம. பணஆசை எல்லாத் தீமைக்கும் வேராகுதும் என்றும், உக. தீமோத்தேயு இதை நீக்கி இதை அங்கிகரிக்கவேண்டுமென்றும், உள. ஐசுவரியவான்களுக்கு இதைக்குறித்துப் புத்தி சொல்லவேண்டுமென்றும், உம. சத்திய உபதேசத்தைக் களங்கமின்றிக் காக்கவும், அற்பமான போராட்டங்களை நீக்கவும் எற்பித்தது.

[16]பராபரனுடைய நாமமும் உபதேசமும் தூஷணிக்கப்படாதபடிக்கு [17]அடிமைத்தனத்திற்கு உட்பட்டிருக்கிற வேலைக்காரர் தங்கள் எசமான்களைச் சகலமானகனத்திற்கும் பாத்திரரென்று எண்ணிக்கொள்ளக்கடவர்கள்.

கி. பி. சுருு.

1 க கொரி. எ.கூ.
2 க தீமோ. க.க. நீத். உ. அ.
* இங்கேகு, இகழுகிறதற்கு.
3 க, இ. லச.
4 இ மோ. உஇ. ச. க கொரி. கூ. கூ.
5 க மோ. மகூ. மக. இ மோ. உச. மச, மஇ. மத். ம. ம. லூக். ம. எ.
6 உரோ. மஉ.அ. க கொரி. கூ. ம, மச. கலா. க.க. பிலி. உ. உகூ. க தெச.இ. மஉ, மக. எபி. கூ.எ, மஎ.
7 அப். உஅ. ம.
8 இ மோ. மகூ. மஇ.
† அல்லது இருந்தாலொழிய.
9 இ மோ. மக. மக.
10 கலா. உ. மக, மச. நீத். க. மக.
‡ அல்லது வித்தியாசம்பண்ணுமல்.
11 க தீமோ. க. மக. உ தீமோ. உ. மச: ச. க.
12 அப்.க. க:மக. க. க தீமோ. ச. மச. உ தீமோ. க. க.
13 உ யோ. மக.
14 சங். கச. மஇ.
15 கலா. இ கூ.
16 சாஎ. இஉ. இ. உரோ. உ. உச. நீத். உ. இ, அ.
17 எபே. க. இ. கொலோ. க. உஉ. நீத். உ. க. க பே. உ. மஅ.

Digitized by Google

உ விசுவாசிகளாகிய நாயன்மார்களை உடையவர்களும் [1]அவர்கள் சகோதரராகனதினாலே, அவர்களை அசட்டைபண்ணுமல், வேலையின் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுகிற அவர்கள் விசுவாசிகளுமாய், * அன்புள்ளவர்களுமாய் இருக்கிறதினாலே அவர்களுக்கு அதிகமாய் ஊழியம்செய்யக்கடவர்கள்; [2]இந்தப்படியே போதித்துப் புத்திசொல்வாயாக.

ஈ ¶ நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் [3]ஆரோக்கியமான வசனங்களுக்கும் [4]மெய்த்தேவபத்திக்கு ஏற்ற உபதேசத்திற்கும் இசைவாயிராமல்,

உ [5]வேறுவிதமாய்ப் போதிக்கிறவன் இறுமாப்புள்ளவனுமாய், † [6]ஒன்றையும் அறியாதவனுமாய், [7]தருக்கங்களும் வாக்குவாதங்களுமாகிய நோய்கொண்டவனுமாய்‡ இருக்கிறான்; அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சமுசயங்களும்,

ஊ கெட்ட சிந்தையுள்ளவர்களாயும் சத்தியமில்லாதவர்களாயும் [8]மெய்த்தேவபத்தி இலாபத்தை வருவிக்கிறதென்று எண்ணுகிறவர்களாயும் இருக்கிற [9]மனிதர்களாலே பிறக்கப்படும் [10]மாறுபாடான தர்க்கங்களும்§ வருகின்றன; [11]அவர்களுக்கு விலகுவாயாக.

எ ¶ போதுமென்கிற மனதுடனேகூட [12]மெய்த்தேவபத்தியே மிகுந்த இலாபமுள்ளது.

ஏ [13]உலகத்திலே நாம் ஒன்றையும் கொண்டுவந்ததும் இல்லை; இதினின்று நாம் ஒன்றையும் கொண்டுபோவதும் இல்லை என்று வெளியரங்கமாய் இருக்கின்றது.

ஐ அப்படியிருக்க, [14]அன்னவஸ்திரம் நமக்கு உண்டாயிருக்கையில், அதுபோதுமென்று எண்ணிக்கொள்ளக்கடவோம்.

ஒ [15]ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்களோ, சோதனையிலேயும் [16]கண்ணியிலேயும், மனிதரை மிகவும் [17]கெடுத்து அழிக்கிறதற்கு ஏதுவாயிருக்கிற அநேக புத்தியீனமும் சேதமுமான இச்சைகளிலேயும் விழுகிறார்கள்.

ஓ [18]பண இச்சை தீமை யாவற்றிற்கும்வேராயிருக்கின்றது; சிலர் அதை இச்சித்து விசுவாசமார்க்கத்தைவிட்டு வழுவி,‖ அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்தியிருக்கிறார்கள்.

ஓக ¶ [19]பராபரனுடைய மனிதனுமாகிய [20]நீ இவைகளுக்கு விலகியோடி, நீதியையும் மெய்த்தேவபத்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தத்தையும் தொடர்ந்துகொள்வாயாக.

ஓஉ [21]விசுவாசத்தின் கற்போராட்டம்பண்ண, [22]நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டிருக்கிறதுமல்லாமல் அநேக சாட்சிகளுக்குமுன்பாக நல்ல [23]அறிக்கையைப் பண்ணியும் இருக்கிறாய்.

ஓங [24]நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிரசன்னமாகும்வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொண்டிருக்கும்படிக்கு,

ஓச [25]எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற பராபரனுடைய சந்நிதானத்திலேயும், [26]பொந்தியுபிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச்¶ சாட்சியாகப் பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் [27]உனக்குக் கட்டளையிடுகிறேன்.

ஓஙு அந்தப் பிரசன்னத்தைப்

கி. பி. சுடு.

1 கொலோ.சு.க.
* அல்லது உண்மையுள்ளவர்களும்.
2 க தீமோ. சு. உக.
3 க தீமோ. க. உ. உதீமோ. சு.உ: சு. உ. தீத். க.க.
4 தீத். க. க.
5 க தீமோ. க. உ.
† அல்லது புத்தியீனனும்.
6 க கொரி. அ. உ. க தீமோ. க. எ.
7 க தீமோ.க. சு. உ தீமோ. உ. உக. தீத். க.க.
‡ அல்லது பிரியப்பட்டவனும்.
8 தீத். க. உக. உ பே. உ. க.
9 உ தீமோ. க. அ.
10 க கொரி. உக. உக. க தீமோ. க. க.
§ அல்லது ஒருவனை ஒருவர் சபிப்பித்தும் தர்மைகளும்.
11 உரோ.உக.உஎ. உதீமோ. க. இ.
12 சங். உஎ. உக. வாக். உஇ. உக: உக. அ. எபி. உக. இ.
13 யோபு. க உக. சங். சசு. உஎ. வாக். உஎ.உசு. பிச. இ. உஇ.
14 க மோ. உஅ. உஏ. எபி. உக. இ.
15 வாக்.உஇ.உஎ: உஏ. உ: உஅ. உஏ. மத். உக. உஉ. யாக். இ. க.
16 க தீமோ. க.எ.
17 க தீமோ. க. உக.
18 உ மோ. உக. அ.இ மோ. உக. உக.
‖ அல்லது நிலைகலங்கிப்போனார்கள்.

19 இ மோ.கக.க. உ தீமோ.க.உ.—20 உ தீமோ.உ.உஉ.—21 க கொரி. க. உஇ, உக. க தீமோ. க. உஅ. உ தீமோ. சு. எ. 22 பிலி.க.உஉ,உசு.உக.கசு.—23 எபி.உக.உக.—24 பிலி.க.க,உ. க தெச.க.உக: இ.உக.—25 இ மோ.உஉ.கக. க சாமு. உ. போவா.இ.உக.—26 மத்.உஎ.உக. போவா.உஅ.எ. வெளி.க.இ: க.உசு.—¶ அல்லது அறிக்கையிடுதலில்.—27 க தீமோ.இ.உக.

Digitized by Google

கி. பி. சுடு.

1 கதீCமே. க. உக, உள.
2 வெசி. உள. உச: உக. உக.
3 கதீமே. க. உள.
4 உ மே. கக. உஅ. யோவா. க. சக.
5 எபே. க. உக. பிலி. ச. உஅ. பூதா. உஇ. வெளி. க.க: ச. உக: ஈ. உஉ.
6 லூக். உக. இ.
* ஓரேகு, ஐசுவரியத்தின் மி லேயாமையில்.
7 போபு. கக. உச. சக். இஉ. எ: கஉ. அ. மாற். உ. உச. லூக். உஉ. உக.
8 அப். உச. உள: உள. உஇ.
9 க தெச. க. க. கதீமோ.கஅஇ: ச. உ.
10 லூக்.உஉ.உக. கதீமோ. இ. உ.

பாக்கியமுள்ள ஒருவரேயான சுயாதிபதியுமாய், [2]இராசாக்களின் இராசனுமாய், கர்த்தாக்களின் கர்த்தாவுமாய்,

[16] ஒருவராய், [3]சாவாமையுள்ளவருமாய், ஒருவராலும் சேரக்கூடாத ஒளியிலே வாசமாயிருக்கிறவருமாய், [4]மனிதரில் ஒருவராலும் காணப்படாமலும் ஒருக்காலும் காணப்படக்கூடாமலும் இருக்கிறவர் தம்முடைய காலங்களில் காண்பிப்பார்; [5]அவருக்கே கனமும் வல்லமையும் என்றென்றைக்கும் உண்டாயிருப்பதாக.—ஆமன்.

[17] ¶ அன்றியும் இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாய் இராமலும், [6]நிச்சயமில்லாத ஐசுவரியத்தின்மேல்* [7]நம்பிக்கையாயிராமலும், [8]நாம் அநுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற [9]தேவனுடைய பராபரன்மேலே நம்பிக்கையாயிருக்கும்படியாயும்,

[18] அ நன்மைகளைச் செய்து [10]நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகும்படியாயும் [11]மற்றவர்களுக்குக் கொடுக்க மனப்பூர்வமாயிருந்து [12]உதாரகுணமுள்ளவர்களாய்,†

[19] க [13]நித்திய ஜீவனைப் பிடித்துக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல அஸ்திபாரத்தைப் [14]பொக்கிஷமாக வைக்கும்படியாயும் அவர்களுக்குக் கட்டளையிடுவாயாக.

[20] ¶ ஓ தீமோத்தேயுவே, [15]உனக்கு ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, லவுகீகமும் வீணுமான பேச்சுகளுக்கும், கள்ளமாயென்று பொய்யாய்ச் [16]சொல்லப்பட்டிருக்கிற தர்க்கத்திற்கும் விலகுவாயாக.

[21] உக சிலர் அதைப் பாராட்டி [17]விசுவாசத்தைவிட்டு வழுவிப் போனார்கள்; கிருபை உன்னோடே இருக்கக்கடவது.—ஆமன்.

1 தீ.உ.அ. பார்.உ.இ.—11 உ Cor.உஉ.உக.—12 சவர.க.க. எபி.உக.உக.—† அல்லது தாராளகுணமுள்ளவர்களாய்.—13 உஉ.வச. 14 லூக்.க.உஅ: உக.உக. லூக்.உஉ.உக: உக.க.—15 உ தCor.க.உச. தீத்.க.க. வெளி.க.க.—16 க தCor.க.ச,க: ச.க. உ தCor.உ.உச,உக,உக. தீத்.க.உச: க.க.—17 க தCor.க.க,உக. உ தCor.உ.உஅ.

Digitized by Google

II. TIMOTHY.

அப்போஸ்தலனுகிய பவுல்

தீமோத்தேயுவுக்கு

எழுதின இரண்டாம் நிருபம்.

க. அதிகாரம்.

க. பவுல் தன் பட்சத்தைக் காட்டித் தீமோத்தேயுவுக் குள்ளும், அவன் தாய்க்குள்ளும் அவன் பாட்டிக் குள்ளும் இருந்த உத்தம விசுவாசத்தைப்பற்றி எழுதி. க. அவனுக்குள் தம்பெ பாபரனுடைய வரத்தை முயற்சிசெய்பவும், அ. துன்பத்தில் உ றுதியோடும் பொறுமையோடும் இருக்கவும், ஙக. தன்னிடத்தில் கற்றுக்கொண்ட உபதேசத்தின் வார்த்தையும் பொருளையும் காக்கவும், டஙி. பிகெல் லு, எர்மோகெனே முதலியவர்கள் தன்னைவிட் டுப்போனதையும், ஒனேசிப்போருவின் குடும் பையும்குறித்தச் சொல்லியது.

1 கிறிஸ்து இயேசுவினுல் வருகிற சீவனைக்குறித்துச் சொல்லிய [1]வா க்குத்தத்தத்தின்படியே பராபரனு டைய சித்தத்தினுலே இயேசுக்கி றிஸ்துவின் [2]அப்போஸ்தலனுகிய பவுல்,

2 அன்புள்ள குமாரனுகிய [3]தீ மோத்தேயுவுக்கு எழுதுகிறதாவ து: பிதாவாகிய பராபரனும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினுலும் கிருபையும் இரக் கமும் சமாதானமும் உனக்கு உண்டாகக்கடவது.

3 ¶ [4]என்முன்னேர்கள் முதற் கொண்டு சுத்தமான மனதோடே பராபரனுக்கு ஆராதனைசெய்கிற தான் இரவும்பகலும் [5]இடைவிடா மல் என் செபங்களில் உன்னை நினைத்து,

4 உன் கண்ணீரை ஞாபகம் பண்ணிச் சந்தோஷத்தால் நிரை யப்படும்படிக்கு [6]உன்னைக் காண வேண்டுமென்று மிகவும் விரும்பி,

5 உன்னிலுள்ள [7]உண்மையான விசுவாசத்தை ஞாபகப்படுத்தி, [8]ப ராபரனுக்குத் தோத்திரம் செலுத் துகிறேன்; அப்படிப்பட்ட விச வாசம் முற்காலத்தில் உன் பாட் டியாகிய லோவிசாளுக்குள்ளும் [9]உன் தாயாகிய ஐனீக்கேயாளுக் குள்ளும் வாசமாயிருந்தது; உனக் குள்ளும் அப்படியே வாசமாயி ருக்கிறதென்று நிச்சயமாய் அறிந் திருக்கிறேன்.

6 ¶ இது நிமித்தமாக நான் உன் மேல் என் கைகளை வைத்ததி லே உனக்கு உண்டான தெய்வீக வரத்தை [10]நீ நீப்பவளர்ச்சியைப் போல எழுப்பும்படிக்கு உனக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

7 எ [11]பயமுள்ள ஆவியைஅல்ல, [12]பெலனும் அன்பும் சொல்தபுத் தியுமுள்ள ஆவியைப் பராபரன் நமக்குக் கொடுத்தாரே.

8 அ ¶ ஆகையால் [13]நம்முடைய கர்த்தனைக்குறித்துச் சொல்லவே ண்டிய சாட்சிக்காகவும், [14]அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற எ னக்காகவும் [15]நீ வெட்கப்படா மல், [16]தேவபெலனுலே சுவிசே

கி. பி. சுசு.

1 எபே. க. க. நீத். க.உ. எபி. க. ஙஇ.
2 உ கொரி. கக.
3 க தீமோ. க. உ.
4 அப் உஉ, க: உக.க:உச.ஙச: உஏ. உக.
உரோ. க. க. லூ. க. ஙச.
5 க தெச. க. உ: க. ம.
6 உ தீமோ. ச. க, உக.
7 க தீமோ.க.இ: ச. ட.
8 உரோ. க. அ. எபே. க. ஙக.
9 அப். ஙக. க.
10 க தெச. இ. ஙக. க தீமோ. ச. ஙச.
11 உரோ.அ. ஙஇ.
12 லூக். உச. சக.அப். க.அ.
13 க தீமோ. உ. க. வெளி. க. உ.
14 எபே. க. க. பிலி. க. எ.
15 உரோ. க.ஙக.
16 கொலோ. க. உச. உதீமோ. ச. இ.

ஷத்திற்காக, (என்னுடே) கூடத் தீமையை அநுபவித்துக்கொள்வாயாக.

க அவர் [1]நம்முடைய கிரியைகளின்நிமித்தமல்ல, [2]தம்முடைய முதல் யோசனையின் நிமித்தமும், [3]லோகத்தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்து இயேசுவின்மூலமாய் நமக்குக் கொடுத்த கிருபையின்நிமித்தமும், [4]நமக்கு இரட்சிப்பை உண்டாக்கி, (அதினுலே) [5]பரிசுத்தவான்களாக நம்மை அழைத்தார்.

ய நம்முடைய இரட்சகராகிய இயேசுக்கிறிஸ்து பிரசன்னமானதினுலே [6]அந்தக் கிருபை இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது; [7]அவர் மரணத்தை நிவிர்த்திசெய்து (தமது) சுவிசேஷத்தினுலே சீவனையும் அழியாமையையும் தெரியப்படுத்தினார்.

யக அதைப் புறத்தேசத்தாருக்கு (அறிவிக்கும்படி) [8]பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் போதகனாகவும் வைக்கப்பட்டேன்.

யஉ [9]அதற்காக இந்தப் பாடுகளையும் அநுபவிக்கிறேன்; அப்படியிருந்தும், [10]இன்னானை விசுவாசித்*திருக்கிறேனென்று அறிந்திருக்கிறதால் நான் வெட்கப்படுகிறதில்லை; மேலும், எனக்கு ஒப்புவிக்கப்பட்டதை அவர் [11]அந்த நாள்வரையில் [12]காத்துக்கொள்ள வல்லமையுள்ளவராய் இருக்கிறார் என்று நிச்சயமாயிருக்கிறேன்.

யஊ ¶ [13]நீ என்னிடத்தில் கேட்டறிந்த [14]ஆரோக்கியமான வசனங்களின் [15]சட்டத்தை [16]இயேசுக்கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தோடும் அன்போடும் [17]பற்றிக்கொள்வாயாக.

யச [18]உனக்கு ஒப்புவிக்கப்பட்ட நன்மையை [19]நம்மிடத்தில் வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியினுலே காத்துக்கொள்வாயாக; நீ அறிந்திருக்கிறபடி [20]ஆசியா நாட்டிலுள்ள யாவரும் [21]என்னைவிட்டு விலகிப்போனார்கள்.

யருு ¶ அவர்களில் புகெல்லும், எர்மோகெனேயும் இருக்கிறார்கள்.

யசு [22]ஒனேசிப்போருவின் குடும்பத்திற்குக் கர்த்தர் [23]இரக்கத்தை அளிக்கக்கடவர்; என்னத்திற்காகவென்றால், [24]அவன் அடிக்கடி என்னைச் சவுக்கியப்படுத்தினதுமல்லாமல், [25]என் சங்கிலியைக்குறித்து [26]வெட்கப்படாமல்,

யஎ நான் உரோமையில் வந்திருந்தபொழுது மிகவும் சாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டான்.

யஅ [27]அந்த நாளிலே [28]அவன் கர்த்தரிடத்தில் இரக்கம் கண்டடையும்படி கர்த்தர் அவனுக்கு அநுக்கிரகம் செய்வாராக; மேலும், எபேசி ஊரிலேயும் அவன் [29]எனக்கு மிகவும் ஊழியம்செய்தானென்று நீ நன்றாய் அறிந்திருக்கிறாய்.

உ. அதிகாரம்.

க. அவன் உறுதியும் ஊக்கமும் அடைவதும், சத்திபவசனத்தைச் சரிவாய்ப் பகுத்தளித்து, வீண் அலப்பை அடக்குதற்கு உண்மையுள்ள ஊழிபக்காரனின் கடமை இன்னதென்று சொல்லி, ஙஎ. இமெனேயு, பிலேத்து என்பவர்களைக்குறித்தெழுதி, ஙக. சத்தருடைய அஸ்திவாரம் நிலையுள்ளதென்றும், ஙஉ. அவன் இதற்கு எச்சரிக்கையாயிருந்து இதைப் பின்தொடர்ந்து, சத்தருடைய ஊழியக்காரன் தன்னை இவ்விதமாய் நடத்தவேண்டுமென்றும் நற்புத்தி சொல்லுகிறது.

ஆனபடியினுலே [30]என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையினுலே [31]பலத்துக்கொண்டு,

உ அநேக சாட்சிகளுக்குமுன்பாக† நீ [32]என்னிடத்தில் கேட்டவைகளை [33]மற்றவர்களுக்கு உபதேசம்பண்ணத் தகுதியான [34]உண்மையுள்ள மனிதருக்கு ஒப்புவிப்பாயாக.

கி. பி. கசு

1 உரோ. க. உஅ: கூ. ஙக. நீத். க. இ.
2 உரோ. அ. உஅ.
3 உரோ. ஙக. உஇ. எபே. க. ச: க. ஙக. நீத் க உ. க பே.க. உஅ.
4 கநீமோ. க. க. நீத். க. ச.
5 க தெச. ச. எ. எபி. உ. க.
6 உரோ. ஙக. உசு. எபே. க கூ. கொலோ. க. உக. நீத். க. க. க பே. க உஅ.
7 க கொரி. ஙஇ. இச, இஇ. எபி. உ. ஙச.
8 அப். கூ. ஙஇ. எபே க. எ, அ. கநீமோ. உ. எ. உநீமோ.ச.ஙஎ.
9 எபே. க. க. உநீமோ. உ. கூ.
10 க பே. ச. ஙக. * அல்லது கம்பி.
11 ஙஅ. வசனம். உநீமோ.ச.அ.
12 கநீமோ. க. உஅ.
13 உநீமோ. உ. உ.
14 கநீமோ.க.அ: க. க.
15 உரோ.உ.உஅ: க. ஙஎ.
16 கநீமோ.க.ஙச.
17 உநீமோ. க. ஙச. நீத். க. கூ. எபி. அ. உக. வெளி. உ.உஇ.
18 கநீமோ. க. உஅ.
19 உரோ.அ ஙச.
20 அப். ஙகூ. அ.
21 உநீமோ.ச.அ, ஙக.
22 உநீமோ. ச. ஙக.
23 மத். இ. எ.
24 பிலே. எ.
25 அப்.உஅ.உஅ. எபே. க. உஅ.

26 அ.வச.—27 உ தெச.க.அ. அ.உ.வச.—28 மத் உஇ.கச. சஅ.—29 எபி.க.அ.—30 கநீமோ.க.உ. உநீமோ.க.உ.—31 எபே. க.அ
† அல்லது சாட்சிகளால். —32 உநீமோ.க.க: க அ,அச.—33 கநீமோ.க.உ. நீத்.க.கூ.—34 கநீமோ.க.அ.

கி. பி. சுசு.

3 அந்தப்படி நீயும் [1]இயேசுக் கிறிஸ்துவுக்கு நற்சேவகனாய்த் [2]துன்பத்தைச் சகித்துக்கொள்.

4 [3]போர்ச்சேவகம்பண்ணுகிற எவனும் தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனுக்குப் பிரியமாயிருக்கும்படிக்கு, இச்சீவனுக்கு ஏற்ற (வேறு) தொழில்களில் சிக்கிக்கொள்ளமாட்டானே.

5 [4]அன்றியும், போர்ச்சாலேயிலே ஒருவன் போராடினாலும், நியாயமானபடி போராடாவிட்டால் கிரீடத்தைத் தரிக்கமாட்டானே.

6 (அன்றியும்) [5]பயிர்செய்கிறவன் பலன் அடைகிறதற்கு முன்னே பிரயாசப்பட* வேண்டுமே.

7 நான் சொல்லுகிற இவைகளைச் சிந்தித்துக்கொள்வாயாக; கர்த்தர் எல்லாவற்றிலும் உனக்குப் புத்திதரக்கடவர்.

8 ¶ [6]என் சுவிசேஷத்தின்படியே [7]தாவீதின் சந்ததியாய் [8]மரித்தோரிலிருந்து எழுந்திருக்கிற இயேசுக்கிறிஸ்துவை நினைத்துக்கொள்ளக்கடவாய்.

9 இந்தச் சுவிசேஷத்திற்காக நான் பாதகனைப்போலக் [9]கட்டப்பட்டுத் [10]துன்பத்தைச் சகிக்கிறேன்.

10 [11]பராபரனுடைய வசனம் மாத்திரம் கட்டப்படமாட்டாது; இதின்நிமித்தமாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் [12]கிறிஸ்து இயேசுவினால் வருகிற இரட்சிப்பையும் நித்திய மகிமையையும் அடையும்படிக்குச் சகலத்தையும் [13]அவர்களுக்காகச் சகித்துக்கொண்டுவருகிறேன்; [14]இந்த வார்த்தை உண்மையுள்ளது.

11 எப்படியெனில் [15]நாம் (அவரோடேகூட) மரித்தால் (அவரோடேகூடப்) பிழைத்தும் இருப்போம்.

12 [16]நாம் (அவரோடேகூடப்) பொறுமையாய்ப் பாடுபட்டால் (அவரோடேகூட) இராசரீகம் பண்ணியும் இருப்போம்; [17]அவனை நாம் மறுதலித்தால் கம்மை அவரும் மறுதலிப்பார்.

13 [18]நாம் விசுவாசியாமல் இருந்தாலும் அவர் உண்மையுள்ளவராயிருப்பார்; [19]அவர் தம்மைத்தாமே மறுதலிக்கமாட்டார்.

14 ¶ இவைகளை நீ அவர்களுக்கு ஞாபகப்படுத்தி, எவ்விதமாகிலும் பிரயோசனம் அல்லாததுமாய்க் கேட்கிறவர்களைக் கவிழ்க்கிறதற்கு எதுவுமாய் இருக்கிற [20]வாக்குவாதம்பண்ணாதிருக்கும்படிக்கு, [21]கர்த்தருக்குமுன்பாக அவர்களுக்கு ஸ்திரமான சாட்சியாய் எச்சரிப்பாயாக.

15 நீ வெட்கப்படாமல் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிற உத்தம வேலையக்காரனாக உன்னைப் பராபரனுக்குமுன்பாக நிறுத்தும்படி சாக்கிரதையாய் இருப்பாயாக.

16 [22]லவுகீக வீணான பேச்சுகளுக்கே தடைசெய், (அவைகளால்) அவர்கள் அதிகமாய் அபத்தியுள்ளவர்கள் ஆகிறார்களே.

17 அவர்களுடைய பேச்சு பிளவையைப்† போலத்தின்னும்; [23]உமனேயும், பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்.

18 [24]சத்தியத்தை விட்டு விலகி, [25]உயிரோடெழுப்புதல் சம்பவித்தாயிற்றென்று போதித்து, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.

19 ¶ ஆகிலும் [26]பராபரனுடைய ஸ்திரமான அஸ்திபாரம் நிலைநிற்கின்றது;‡ [27]கர்த்தர் தம்முடையவர்களை அறிவிப்பாரென்றும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவன் எவனோ, அவன் அநியாயத்தைவிட்டு விலகக்கடவன்

1 2 தீமோ. 1. 1அ.
2 2 தீமோ. 1. அ: 8. இ.
3 1 கொரி. 9. 24, 25.
4 2 கொரி. 9. 24, 25.
5 2 கொரி. 9. 6, 7, 10.
* அல்லது பிரயாசப்பட்டுப் பயிர் செய்தவன் முதல் முதல் பலனடைய.
6 உரோ. 2. 16.
7 அப். 2. 30: 13. 22, 23. உரோ. 1. 3, 4.
8 1 கொரி. 15. 4, 20.
9 எபே. 3. 1. பிலி. 1. 7, 13, 14. கொலோ. 4. 3, 18. 1 பே. 4. 16.
10 அப். 9. 16. 2 தீமோ. 1. 8, 12.
11 அப். 2. 41. 4. 4. 6. 7. 12. 24. 19. 20. 28. 31. 13. 5, 7, 44, 46, 48, 49. 15. 35, 36. 17. 11. 18. 8. 19. 10, 20.
12 2 கொரி. 1. 6.
13 எபே. 3. 13. கொலோ. 1. 24.
14 2 தீமோ. 1. 9.
15 உரோ. 6. 8, 2 கொரி. 7. 3.
16 உரோ. அ. 17. 2 பே. 2. 20.
17 மத். 10. 33. மாற். 8. 38. லூக். 12. 9. 2 தீமோ. 2. 12.
18 உரோ. 3. 3: 9. 6.
19 2 மோ. 34. 6.
20 2 தீமோ 2. 2: 4. 3. நீத். 3. 9, 10.
21 2 தீமோ. 4. 1: 2. 14. 2 கொரி. 2. 17.
22 2 தீமோ. 1. 15, 16. 1 தீமோ. 1. 20.
† அல்லது ஒவிப்புருநியை.
23 2 தீமோ. 2. 18.—24 2 தீமோ. 2. 14.—25 1 கொரி. 15. 12.—26 மத். 7. 24, 25. உரோ. 4. 11. 1 பே. 2. 6.
‡ அல்லது அஸ்திபாரமாயிருக்கின்றது.—27 எண். 16. 5. யோவா. 10. 14, 27. 1 யோ. 2. 19.

என்றும் அதற்கு முத்திரையாயிருக்கிறது.

20 1ஒரு பெரிய வீட்டிலே பொன் வெள்ளிப்பாத்திரங்கள் மாத்திரமல்ல, மரமும் மண்ணுமான பாத்திரங்களும் உண்டு, 2அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்கும் ஆனவைகளாயிருக்கின்றன.

21 ஆகையால் 3ஒருவன் மேல் சொல்லியவைகளை விட்டுத் தன்னைச் சுத்திகரித்தால் அவன் கனத்திற்கு ஏற்றதாயும் பரிசுத்தமாக்கப்பட்டதாயும் எசமானுக்கு மிகுந்த பிரயோசனமாயும் எந்த நற்கிரியைக்கும் 4எத்தனமாக்கப்பட்டதாயும் இருக்கிற பாத்திரமாயிருப்பான்.

22 ¶ ஆதலால் வாலிபவயதுக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, 5சுத்தமான இருதயத்தோடே 6கர்த்தாவைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனேகூட 7நீதியையும் விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் பின்தொடர்ந்துகொள்.

23 அன்றியும் 8புத்தியீனமும் அறிவீனமுமான தர்க்கங்கள், சண்டைகளைப் பிறப்பிக்கிறவைகள் என்று நீ அறிந்து அவைகளை அகற்றுவாயாக.

24 9கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுமல் எல்லாருக்கும் சாந்தமுள்ளவனுயும், 10போதிக்கத் தகுதியானவனுயும், தீமையைப்பொறுமையாய்ச் சகிக்கிறவனுயும்* இருந்து,

25 எதிர்பேசுகிறவர்களுக்குச் 11சாந்தமாய்ப் புத்திசொல்லவேண்டுமே; அப்பொழுது தன்னுடைய இஷ்டப்படி செய்யப் பசாசினால் பிடிக்கப்பட்டிருக்கிற† அவர்கள் 12சத்தியத்தை அறிக்கையிடுதற்கு ஏற்ற மனஸ்தாப குணத்தை அடைந்து,

26 13அவனுடைய வலையில் நின்று நீங்கி,‡ தெளிந்த புத்தியுள்ளவர்களாகும்படிக்கு, 14பராபரன் ஒருவேளை அவர்களுக்கு அநுக்கிரகம் செய்வார்.

இ. பி. சுசு.

1 க நீமோ. க.உஇ.
2 உரோ. க.உக.
3 எசா. இஉ. உக.
4 உ நீமோ. க. உள. நீத். க. க.
5 க நீமோ. க.இ: எ. உஉ.
6 அப். க. உள. க கொரி. க. உ.
7 க நீமோ. க.உக.
8 க நீமோ. க. எ: எ.எ: க.எ. உக. உஎ. நீத். க. க.
9 நீத். க. உ.
10 க நீமோ. க. உ,க. நீத். க.சு.
* அல்லது பொறுக்கிறவனுயும்.
11 கலா. க. - க. க நீமோ. க.உக. க பே. க. உஇ.
† ஓரேக்கு, உயிரோடு பிடிக்கப்பட்டிருக்கிற.
12 க நீமோ. உ. எ. உ நீமோ. க. க. நீத். க. க.
13 க நீமோ. க.எ.
‡ அல்லது தங்களை மீட்டு.
14 அப். அ. உஉ.
15 க நீமோ. எ. க. உ நீமோ. எ. க. உ பே.க. க. க யோ. உ. உஅ. யூதா. உஅ.
16 பிலி. உ. உக.
17 உ பே. உ. க.
18 யூதா. உக.
19 க நீமோ.க.எ.
20 க நீமோ. க உஅ. உ பே.உ. உஉ. யூதா. உ.
21 உரோ. க. கஉ.
22 உரோ. க. கக.
23 உரோ. க. கக.
§ அல்லதுபின்புநிறைவேறினவர்களாயும்; நீத். உ. க.
24 உ பே. க. க.
25 உ பே. உ. உ.
26 பிலி. க. உக. உ பே. உ. உக. மி.யூதா. எ,உக.
27 க நீமோ. இ. அ. நீத். க. உக.
28 உ தெச. க.க. க நீமோ. க.இ.
29 க நீமோ.உ.எ.
30 மத். உக. மா. நீத். க. உ

3. அதிகாரம்.

க. பிற்காலங்களைக்குறித்தும், க. கள்ளபோதகர்களைக்குறித்தும் முன்னறிவித்து, உ. தன் மாதிரியை அவன் பின்பற்றவும், உசு. வேதவசனத்தைப்பற்றிக் கொள்ளவும் சொல்லியது.

3 15மேலும் கடைசி நாட்களிலே கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.

2 எப்படியெனில், மனிதர்கள் 16தங்களை (மாத்திரம்) சிநேகிக்கிறவர்களாயும், 17பணத்தில் பிரியராயும், 18வீம்புக்காரராயும், 19அகந்தையுள்ளவர்களாயும், 20தூஷணிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தம் இல்லாதவர்களாயும்,

3 21சுபாவ அன்பில்லாதவர்களாயும், 22ஒப்புரவாக மனதில்லாதவர்களாயும், பொய்யாய்க் குற்றம் சாற்றுகிறவர்களாயும்,§ 24இச்சையை அடக்காதவர்களாயும், குரூரராயும், நல்லோருக்குப் பகைஞராயும்,

4 25துரோகிகளாயும், துணிவுக்காரராயும், இறுமாப்புள்ளவர்களாயும், 26பராபரனிலும் செல்வத்தை விரும்புகிறவர்களாயும், தேவபக்திவின் ரூபத்தைத் தரித்து,

5 27அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.

6 28இப்படிப்பட்டவர்களுக்கு விலகுவாயாக; இப்படிப்பட்டவர்களே பாவங்களால்நிறைந்தும், பலபல இச்சைகளால் இழுத்துப்பட்டும்,

7 எப்பொழுதும் படித்தாலும், 29ஒருக்காலும் சத்தியத்தை அறியாமலும் இருக்கிற புத்தியீனமுள்ள பெண்பிள்ளைகளுடைய 30வீடுகளில் நுழைந்து, அவர்களைச் சிறையாக்குவார்கள்.

Digitized by Google

அ [1]இயன்னேயும் இயம்பிரேயும் மோசேயுக்கு விரோதமாய் நின்றதுபோல, இவர்களும் சத்தியத்திற்கு விரோதமாயிருக்கிறார்கள்; [2]அவர்கள் முழுவதும் கெட்ட புத்தியை உடையவர்களாயும் [3]விசுவாசத்தை வகையறுக்கத்தகுதியில்லாதவர்களாயும் இருக்கிறவர்கள்.*

க அவர்கள், அதிகமாய்ப் பெருகுவதில்லை; [4]அவ்விருவருடைய புத்தியீனமும் வெளிப்பட்டதுபோல, இவர்களுடையதும் எல்லாருக்கும் வெளியரங்கமாகுமே.

ய [5]நீயே என்னுடைய போதகத்தையும், நடக்கையையும், மனயோசனையையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும்,

யக [6]அந்தியோகூர் [7]இக்கோனியூர் [8]லிஸ்திரா ஊர் இவ்விடங்களிலே எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறாய்;† இப்படிப்பட்ட துன்பங்களைச் சகித்தேன்; [9]அவைகள் எல்லாவற்றில் நின்றும் கர்த்தர் என்னை இழுத்து இரட்சித்தார்.

யஉ [10]அன்றியும், கிறிஸ்து இயேசுவைப்பற்றித் தேவபத்தியாய்ச் சீவனம்பண்ண மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

யஊ [11]பொல்லாத மனிதரும் வஞ்சகருமானவர்கள்மாத்திரம் (மற்றவர்களை) வஞ்சித்தும் வஞ்சிக்கப்பட்டும் இருந்தும், மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.

யச ¶ நீ கற்றுக்கொண்டது எதுவோ, நீ நிச்சயிக்கப்பட்டது எதுவோ, [12]அதிலே நிலைநிற்பாயாக; உனக்குப் போதகம் செய்தவன் இன்னனென்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,

யரு இயேசுக்கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே இரட்சிப்புக்கு ஏற்ற ஞானத்தை உனக்குக் கொடுக்கத் தகுதியான [13]வேத எழுத்துக்களை நீ சிறுவயது முதற்கொண்டு அறிந்தவனென்றும் அறிந்திருக்கிறாயே.

யசு [14]வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் உண்டானவைகளுமாய், [15]பராபரனுடைய மனிதன் நிறைந்த‡ கன்மையுள்ளவனும் [16]எந்த நற்கிரியையும் செய்ய மிகுந்த தகுதியுள்ளவனும் ஆகும்பொருட்டாய்,

யஎ உபதேசம்பண்ணுதற்கும், கடிந்துகொள்ளுதற்கும், செம்மையாக்குதற்கும், நீதியைப் படிப்பிக்கிறதற்கும், [17]பிரயோசனமானவைகளுமாய் இருக்கின்றன.

ச. அதிகாரம்.

க. தீமோத்தேயுவைச் சாக்கிரதையோடே, சுறுசுறுப்போடும் தேவனுழியத்தைச் செய்யச்சொல்லி; சு. தன் மரணம் சமீபமாயிருக்கிறபடியால், க. அவனைத் தன்னிடத்திற்கு வரவும், மாற்கை அழைத்துக்கொண்டு, சில வஸ்துக்களைக் கொண்டு வரவும், ச. சண்ணுகிய அலேக்சாந்தரைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவும், யக. சத்தியத்துக்காக உரோமாபுரியிலே தான் முதல்விசை சாட்சிக்கப்போது தனக்குச் சம்பவித்ததையும் சொல்லி, யஉ. திருபத்தை முடித்தது.

ஆனபடியினாலே பராபரனுக்கு முன்பாகவும், தாம் பிரசன்னமாகித் தமது இராச்சியத்தின் (மகிமையை) வெளிப்படுத்தும் காலத்திலே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தவர்களுக்கும் [18]நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு முன்பாகவும்,

உ [19]நான் உனக்குச் சாட்சியாய்க் கட்டளையிடுகிறது என்னவெனில், சாவகாசமாயிருந்தாலும் இல்லாதிருந்தாலும் அந்த வசனத்தை இடைவிடாமல் பிரசங்கம்பண்ணி, [20]எல்லாவிதமான நீடியசாந்தமாயும் உபதேசத்திற்கு ஏற்றவிதமாயும் மெய்யை விளங்கச்செய்து, [21]கடிந்துகொண்டு, புத்திசொல்லுவாயாக.

ஊ என்னத்தினாலெனில் [22]அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல்,

கி. பி. சுசு.

1 உ மோ. எ.க.
2 க தீமோ.க. இ.
3 உரோ.க. உஅ. உ கொரி.க.இ. நீத். க. ய.க.
* அல்லது விசுவாசத்தைக் குறித்துக் கழிகெட்டவர்கள்.
4 உ மோ. எ. யஉ: அ. யஅ: சு. ய.க.
5 பிலி. உ. உஉ. க தீமோ ச: சு.
6 அப். யக. சஇ, இஅ.
7 அப்.ச. உ,இ.
8 அப். ய.ச. யக ழி.
† அல்லது சற சறப்பாய்ப் பின்பற்றிவிருக்கிறாய்.
9 சங். கச. ய.க. உ கொரி. க ய. உ தீமோ. ச. யஎ.
10 சங். கச. யசு. யோவா. யஎ. மத். ய.க. உச. அப். ய.ச. உஉ. க கொரி. யஇ.யக.க தெச. க. க.
11 உ தெச. உ. ய.க. க தீமோ. ச. க. உ தீமோ. உ. யசு.
12 உ தீமோ. க. ய.க: உ, உ.
13 யோவா. இ. க.க.
14 உ பே. க.உஅ, உக.
15 க தீமோ.சு.ய.க.
‡ அல்லது நிர்ம்மலனான.
16 உ தீமோ. உ. உக.
17 உரோ. யஇ.ச.
18 அப். அ. சஉ
19 க தீமோ. இ. உக: சு. கக. உ தீமோ. உ. ய.ச.
20 க தீமோ. ச. ய.க.
21 க தீமோ. இ. உய. நீத். க. ய.க: உ. யஇ.
22 க தீமோ.க.அ.

Digitized by Google

1செவிக்கு இன்பமானதை விரும்பி, தங்கள் சுய இச்சைகளுக்குத் தக்கதாக,

4 தங்களுக்குப் போதகரைக் கூட்டிவைத்துச் சத்தியத்திற்குச் செவியை விலக்கிக் 2கட்டுக்கதைகளைச் சாரும் 3காலம் வரும்.

5 நீமாத்திரம் எல்லாவற்றிலேயும் தெளிந்தபுத்தியுள்ளவனாயிருந்து, 4தீமையைச் சகித்துச் 5சுவிசேஷனுடைய வேலையைச் செய்து உன் ஊழியத்தை நிறைவேற்று வாயாக.*

6 ¶ 6நானே பானபலியாக வார்க்கப்பட எத்தனமாயிருக்கிறேன்; 7நான் இதைவிட்டுப் போகிறதற்குக் காலம் சமீபமாயிருக்கின்றது.

7 8நல்ல போராட்டத்தைப் பண்ணியிருக்கிறேன்; ஓட்டத்தை முடித்திருக்கிறேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

8 9இதுமுதல் நீதியென்னும் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் 10அந்நாளில் அதை எனக்குமாத்திரம் அல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பின யாவருக்கும் தந்தருளுவார்.

9 ¶ நீ சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி சாக்கிரதையாயிருப்பாயாக.

10 11தேமா என்பவன் 12இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து என்னைவிட்டுத் தெசலோனிக்கே ஊருக்குப் போனான்; கிரேஸ்கே என்பவன் கலாத்தியாநாட்டிற்கும், தீத்து என்பவன் தல்மாத்தி நாட்டிற்கும் போனார்கள்.

11 13லூக்கா என்பவன் 14மாத்திரம் என்னோடே இருக்கிறான்; மாற்கு என்பவனை என் ஊழியத்திலே எனக்குப் பிரயோசனமாய் இருக்கிறபடியினாலே 15அவனைக் கூட்டிக்கொண்டுவா.

12 16தீகிக்கு என்பவனை நான் எபேசு ஊருக்கு அனுப்பினேன்

13 துரோயாபட்டணத்திலுள்ள கற்பென்பவனிடத்திலே நான் வைத்துவந்த மேல்அங்கியையும் புஸ்தகங்களையும் விசேஷமாகத் தோற்காகிதங்களையும் நீ வருகிறபொழுது எடுத்துக்கொண்டுவா.

14 ¶ கன்னாகிய 17அலேக்குசந்தர் எனக்கு மிகுந்த தீமைகளைச் செய்தான்; 18அவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதில் கொடுக்கக்கடவர்.

15 நம்முடைய வார்த்தைகளுக்கு† அவன் மிகவும் விரோதித்தபடியால், நீயும் அவனைக்குறித்து எச்சரிக்கையாய் இருப்பாயாக.

16 ¶ நான் முதலிலே எனக்காக உத்தரவுசொல்லி நின்றபொழுது, ஒருவனும் என் பங்கில் இராமல் 19யாவரும் என்னைவிட்டார்கள்; 20அது அவர்களுக்குக் (குற்றமாக) எண்ணப்படாதிருப்பதாக.

17 (திவ்விய வசனம்) என்னாலே சம்பூரணமாய்ப் 21பிரசங்கிக்கப்படத்தக்கதாகவும், புறத்தேசத்தார் யாவரும் அதைக் கேட்கத்தக்கதாகவும் 22கர்த்தர்மாத்திரம் என் பங்கிலிருந்து என்னைப் பலப்படுத்தினார்; 23இப்படி நான் சிங்கத்தின் வாயிலிருந்து இழுக்கப்பட்டேன்.

18 அல்லது பிரசங்கங்களுக்கு.

19 உ தீமோ. க. 16.

20 அப். எ. 60.

21 அப். கூ. 23: உகூ. 11, 18. எபே. உ. அ.

18 மேலும் மற்றெந்தப் பொல்லாத கிரியையில்நின்றும் 24கர்த்தர் என்னை இழுத்துத் தமது பரமராச்சியத்தில் பிரவேசிக்கப்பண்ணி இரட்சிப்பார்; 25அவருக்கு என்றென்றைக்கும் தூதியுண்டாவதாக.—ஆமன்.

22 மத். 10. 20. அப். 18. 9, 10. உ கொ. 12. 9. — 23 சங். 22. 22. உ பே. 5. 8. — 24 சங். 121. 7. 25 உரோ. 16. 27. கலா. 1. 5. எபி. 13. 21.

Digitized by Google

கி. பி. சுசு.

1 அப். 10அ. உ. உரோ. 16க. க.
2 உ தீமே. க. 1க.
3 அப்.1க. உஉ. உரோ.1க. உக.
4 அப். உ0. ச: உக. உக.
5 க. வச.
6 கலா. க. 10அ. பிலே. உ0.

யக ¶ [1]பிரிஸ்காளுக்கும், அக்கில்லாவுக்கும், [2]ஒனேசிப்போருவின் குடும்பத்தாருக்கும் வாழ்த்துதல் செய்கிறேன்.

உய [3]ஏரஸ்து என்பவன் கொரிந்து பட்டணத்திலே தரித்திருந்தான்; [4]திரோப்பிமு என்பவனை மீலேத்துப் பட்டணத்திலே வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்.

உக [5]மாரிகாலத்திற்குமுன்னே நீ இங்கே வந்து சேரும்படி சாக்கிரதையாயிருப்பாயாக; ஐபூலுவும், புதேஞ்சும், இலீனுவும், கல்வுதியாளும், மற்றெல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்.

உஉ ¶ [6]கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உன் ஆவியுடனே இருக்கக்கடவர்; கிருபை உங்களோடே இருப்பதாக.—ஆமன்.

TITUS.

அப்போஸ்தலனாகிய பவுல்

தீத்துவுக்கு எழுதின

நிருபம்.

க. அதிகாரம்.

க. தீத்து கிரேத்தாவில் வைக்கப்பட்ட முகாந்திரம் இன்னதென்றும், க. தேவ ஊழியக்காரருடைய இலட்சணங்கள் இன்னவைகளென்றும், டீ. தகாத போதகர்களுடைய வாய் அடைக்கப்பட வேண்டுமென்றும், டீக. அவர்கள் இப்படிப்பட்டவர்களென்றும் சொல்லியது.

1பொய்யுரையாத பராபரன் 2இவ்வுலக காலங்களுக்குமுன்னே வித்திய சீவனைக்குறித்து வாக்குத் தத்தம்பண்ணி,

உ 3ஏற்ற காலங்களிலே 4நம்முடைய தேவனாகிய இரட்சகருடைய கட்டளையின்படி 5எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினாரே.

ஊ 6அந்த வித்தியசீவனைக்குறித்து நம்பிக்கை உண்டாக்கத்தக்கதாகத்* 7தேவபத்திக்கு ஏதுவான 8சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படிக்கு ஏதுவாய்ப் பராபரனுடைய ஊழியக்காரனுமாய் இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலனுமாய் இருக்கிற பவுல்,

ச 9பொதுவான விசுவாசத்தினாலே 10எனக்கு உத்தம குமாரனாகிய 11தீத்துவுக்கு எழுதுகிறதாவது: பிதாவாகிய பராபரனாலும், நம்முடைய இரட்சகரும் கர்த்தருமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் 12உனக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

ஞ ¶ நான் உனக்குக் கட்டளையிட்டபடி நீ கிரேத்தைத் தீவிலே இதுவரைக்கும் குறைவாய் இருக்கிறவைகளைச்† 13செம்மைப்படுத்திப் 14பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கு உன்னை விட்டுவந்தேனே.

ஃ 15குற்றமில்லாதவனுமாய், 16ஒரே மனைவிக்குப் புருஷனுமாய்க் கெட்டமார்க்கரென்றும் குற்றமில்லாமையும், கீழ்ப்படிதலும் 17விசுவாசமும் உள்ள பிள்ளைகளை உடையவனுமாய் ஒருவன் இருந்தால், (அவனை வைக்கலாம்.) கண்காணியானவன் 18பராபரனுடைய உக்கிராணக்காரனுக்கு ஏற்றதாகக் குற்றம் சாற்றப்படாதவனுமாய்,

எ தன் இஷ்டப்படி (மாத்திரம்) செய்ய மனதில்லாதவனுமாய், கடுஞ்சினமில்லாதவனுமாய், 19பழி இரசத்தை மிகவும் விரும்பாதவனுமாய், அடிக்கிறவனாயிராதவனுமாய், 20அவலட்சணமானவித

கி. பி. சுரு.

1 ச மோ. உக. டீக. உ நீமோ. உ. டீக.
2 உரோ. டீக. உஇ. உ நீமோ. க. சூ. க பே. க. உடீ.
3 உ நீமோ. க.டீ.
4 க நீமோ. க.க: உ. க: ச. டீ.
5 க தெச. உ. ச. க நீமோ. க. டீக.
6 உ நீமோ. க.க. நீத். க. எ.
* அல்லது நம் பிக்கையில்.
7 க நீமோ. க. டீக: க. க.
8 உ நீமோ. உ. உஇ.
9 உரோ. க. டீஉ. உ கொரி. ச. டீஉ. உ பே. க. க.
10 க நீமோ.க.உ.
11 உ கொரி. உ. டீக: ச. டீக: அ க, டீக, உக: டீஉ. டீஅ. கலா. உ. க.
12 எபே. க. உ. கொலோ.க.உ. க நீமோ.க உ. உ நீமோ. க.உ.
† அல்லது செப்பமாலிருக்கிறவைகளை.

13 க கொரி.டீக.ச. — 14 அப்.டீச.உக. உ நீமோ.உ.உ. — 15 க நீமோ.க.உ ழ. — 16 க நீமோ. க. டீஉ — 17 க நீமோ. க. ச, டீஉ. 18 மத்.உச.சஇ. க கொரி.ச க,உ. — 19 க மோ.டீ.கூ எபே.இ.டீஅ. க நீமோ.க.க,அ. — 20 க நீமோ.க.க,அ. க பே.இ உ.

Digitized by Google

மாய் ஆதாயத்தைத் தேடாதவனு மாய்,

அ [1]அந்நியருக்கு உபசாரஞ்செய் கிறவனுமாய், நல்லோர்மேல்* பிரி யமுள்ளவனுமாய், விவேகமும் நீதியும் பரிசுத்தமும் இச்சையடக் கமும் உள்ளவனுமாய்,

க [2]ஆரோக்கியமான உபதேசத் தினாலே புத்திசொல்லி எதிர்பே சுகிறவர்களுக்கு மெய்யறிவைக் கொடுக்கத் திராணியுள்ளவனுய் இருக்கும்படிக்குத் தான் போதிக் கப்பட்டதற்கேற்ற† [3]உண்மையா ன உபதேசத்தை [4]நன்றாய்ப் பற் றிக்கொள்ளுகிறவனுமாய் இருக்க வேண்டுமே.

ய ¶ என்னத்திற்காகவென்றால் [5]அநேகர், விசேஷமாக விருத்த சேதனத்தையுடையவர்கள், (சத் தியத்திற்குக்) [6]கீழ்ப்படியாதவர் களுமாய் வீணனவைகளைப் பே சுகிறவர்களுமாய் [7]மனதை வஞ் சிக்கிறவர்களுமாய் இருக்கிறார் கள்.

யக அவர்களுடைய வாயை அ டக்கிப்போடவேண்டுமே; அவர் கள் [8]அவலட்சணமான ஆதாயத் திற்காகத் தகாதவைகளை உபதே சித்து [9]முழுக்குடும்பங்களையும் கவிழ்க்கிறார்கள்.

யஉ [10]அவர்களில் ஒருவனுகிய தீர்க்கதரிசியானவன்தானே, கிரே த்தைத் தீவார் எப்பொழுதும் பொ ய்யருமாய், துஷ்டமிருகங்களு மாய், சோம்பலுள்ள தேகிகளு மாய் இருக்கிறார்கள் என்று சொன் னன்.

யஊ அந்தச் சாட்சி மெய்தான்; அதுமுகாந்தரமாக [11]அவர்கள் விசு வாசத்திலே ஆரோக்கியம் அடை யும்படிக்கும், [12]யூதருடைய கட் டுக்கதைகளுக்கும் சத்தியத்தை விட்டு விலகுகிற மனிதருடைய [13]கற்பனைகளுக்கும் செவிகொடா திருக்கும்படிக்கும்,

கி. பி. சுநு.

1 க நீமே. க. உ. * அல்லது கல்ல வைகள்மேல்.
2 க நீமே. க. ம: ச. உ நீமே.
3 க நீமே. க. ம: ச. க: க. க. உ நீமே. உ. உ.
4 உ தெச. உ. ம. உ நீமே. க. கே.
5 அப். ம. க.
6 க நீமே. க.க.
7 உரோ கெ.ம.அ.
8 க நீமே. க.ஒ.
9 மத். உ. உ. ம. உ நீமே. க. க.
10 அப்.ம. உ.
11 நீத். உ. உ.
12 க நீமே க.ச: ச. எ.உ நீமே. ச. ச.
13 தீத். உக.கே. மத். ம. க. கொலோ. உ. உ.
14 உ கொரி.கே. ம. உ நீமே. ச. உ.
15 லூக். ம.க.க, சம, சக. உரோ. ம. ம. உ. க கொரி.க.ம: ம. உ, உ. க நீமே. ச. க, ச.
16 உரோ. ம. உ.
17 உ நீமே. க.ஒ. யூதா. ச.
18 உரோ.க.உ. உ நீமே. க.அ. † அல்லது கெட்டவர்களாயும்.
19 க நீமே.க.ம: க.க. உ நீமே. க ம. நீத்.க.க. § அல்லது விழிப்புள்ளவர்களாயும்.
20 நீத். க. ம
21 க நீமே.உ.க, ம:க.க. க பே. க. க, ச.

யச [14]நீ அவர்களைக் கண்டிப் பாய்க் கடிந்துகொள்வாயாக.

யந [15]சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; [16]அ ழுக்கும் அவிசுவாசமும் உள்ளவர் களுக்குமாத்திரம் ஒன்றும் சுத்தமா யிருக்கமாட்டாது; அவர்களுடை ய புத்தியும், மனச்சாட்சியும் அ ழுக்காயிருக்கிறதே.

யசு அவர்கள் பராபரனை அறி கிறோமென்று சொல்லியும், [17]தங் கள் கிரியைகளால் அதை மறு தலிக்கிறார்கள்; அவர்கள் அருவரு க்கப்படத்தக்கவர்களாயும், கீழ்ப் படியாதவர்களாயும், [18]எந்த நற் கிரியையையும் வகையறுக்கத் தெரியாதவர்களாயும்† இருக்கிறார் களே.

உ. அதிகாரம்.

க. தம்பவும் செய்பவும் வேண்டியவைகளைக் குறித்து நீத்துவுக்குச் சொன்னது. க. வேலையாரும், மற்றச் சிநேகிதர்களும் செய்யவேண்டிய கடமைகளைக்குறித்தது.

[19]நீயே ஆரோக்கியமான உபதே சத்திற்கு ஏற்றவைகளைப் பேசிக் கொள்வாயாக.

உ முதிர்ந்தவயதுள்ள புருஷர் கள் தெளிந்த புத்தியுள்ளவர்களா யும், § யோக்கியராயும், விவேகி களாயும், விசுவாசத்திலும் அன்பி லும் பொறுமையிலும் [20]ஆரோக் கியமுள்ளவர்களாயும் இருக்கும் படி (போதிப்பாயாக).

க அப்படிப்போல [21]முதிர்ந்த வயதுள்ள ஸ்திரிகளும் பரிசுத்த ருக்கு ‖ ஏற்றவிதமாய் நடக்கிற வர்களாயும், பொய்யாய்க் குற்றம் சாற்றுதவர்களாயும் ¶ மிகுந்த நி ராட்ச இரசத்தைக் குடியாதவர் களாயும்,

ச [22]பராபரனுடைய வசனம் தூஷணிக்கப்படாதபடிக்கு வி லிபஸ்திரிகள் [23]தங்கள் புருஷரை யும் பிள்ளைகளையும் சிநேகிக்கிற வர்களுமாய்,

‖ அல்லது பரிசுத்தத்திற்கு. — ¶ அல்லது பின்புறணி பேசாதவர்களாயும்; உ நீமே.க.க. — 22 உரோ.உ.உ. க நீமே.க.க. — 23 க நீமே.கி.ச.

Digitized by Google

ஔ விவேகிகளுமாய், கற்புள்ளவர்களுமாய், வீட்டில் தரித்திருக்கிறவர்களுமாய், நல்லவர்களுமாய், [1]தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய் இருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லத்தக்க கற்போதகிகளாயும்* இருக்கும்படிக்குப் (போதிப்பாயாக).

கூ அப்படிப்போல, வாலிபவயதுள்ள ஆண்பிள்ளைகளும் விவேகமாய்† இருக்கும்படி நீ புத்திசொல்லி,

எ நற்கிரியைகளுக்கு ஏற்ற மார்க்கத்தை நீதானே [2]எல்லாவற்றிலும் (மற்றவர்களுக்கு) திருட்டாந்தப்படுத்துவாயாக.

அ அந்தப்படி [3]எதிராளியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கைச் சொல்லுதற்கு ஒன்றுமில்லாமல் [4]வெட்கப்படத்தக்கதாக நீ உபதேசத்திலே விகற்பமில்லாதவனுமாய், [5]யோக்கியமுள்ளவனுமாய், குற்றம்பிடிக்கப்படக்கூடாத [6]ஆரோக்கியமுள்ள வசனத்தைப் பேசுகிறவனுமாய் இருப்பாயாக.

கஉ ¶ அன்றியும், [7]வேலைக்காரர் தம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய உபதேசத்தை எல்லாவற்றிலும் அலங்கரிக்கத்தக்கதாக,

ஙஉ தங்கள் எசமான்களுக்குக் கீழ்ப்படியவும், எதிர்பேசாமல்‡ [8]எல்லாவற்றிலும் பிரியமாய் நடக்கவும், திருட்டுத்தனமாய் நடவாமல் சகலவிதமாயும் நல்லுண்மையைக் காண்பிக்கவும் [9]புத்தி சொல்லுவாயாக.

ஙக ¶ என்னத்திலெனில், இரட்சிப்பைக் கொடுக்கிற தேவ [10]கிருபை எல்லாவிதமான மனிதருக்கும் [11]பிரசன்னமாகி, §

கி. பி. சுடு.

ங அந்தச் சித்தத்தின்படி எல்லாக் காலங்களுக்காகவும் [9]ஒரேதரம் இயேசுக்கிறிஸ்துவினுடைய சரீரம் பலியிடப்பட்டதினாலே [9]நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்.

ஙக ¶ அன்றியும், எந்த ஆசாரியனும் [10]தான்தோறும் ஆராதனை செய்கிறவனுப்பி [11]பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்திசெய்யமாட்டாத ஒரேவித பலிகளை அடிக்கடிச் செலுத்திவருவான்.

ஙஉ அவர்மாத்திரம் என்றென்றைக்கும் பாவங்களை நீக்கும்படிக்கான [12]ஒரே பலியைச் செலுத்தி பராபரனுடைய வலதுபாரிசத்திலே உளுக்காக்து,

ஙஊ அதுமுதல் [13]தம்முடைய சத்துருக்கள் தம்முடைய பாதகளின்படியாக்கப்படுமளவும் காத்துக்கொண்டிருக்கிறார்.

ஙச ஆகையால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களை அவர் ஒரே பலியிலே [14]என்றென்றைக்கும் நிறைவுள்ளவர்கள் ஆக்கினார்.

ஙரு ¶ இதைக்குறித்துப் பரிசுத்த ஆவியானவரும் நமக்குச் சாட்சி சொல்லுகிறார்.

Digitized by Google

ௗசு எப்படியெனில், அந்த நாள்களுக்குப்பின் நான் அவர்களுடனே [1]இந்த உடம்படிக்கைபண்ணுவேன் என்று சொன்னபின்பு கர்த்தர் திருவுளம்பற்றின்து: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களிலே கொடுப்பேன்; அவைகளை அவர்களுடைய மனதின்மேலே எழுதுவேன்.

ௗஎ அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் நான் ஒருகாலத்திலாகிலும் நினைத்துக்கொள்வதில்லை என்றார்.*

ௗஅ அந்தப்படி அவைகள் மன்னிக்கப்பட்டபடியால்பாவப்பலி இனிச் செலுத்தப்படவேண்டுவதில்லையே.

ௗக ¶ ஆகையால் சகோதரரே, பரிசுத்தமான இடங்களுக்குப் போகிற மார்க்கத்தை இயேசுவானவர் தமது [2]சரீரமாகிய திரைச்சீலையின் வழியாய்ப் [3]புதிதும் சீவனுமான மார்க்கமாக நமக்கு உண்டுபண்ணி† வைத்ததால்,

ௗய அந்த [4]மார்க்கத்தில் பிரவேசிக்கிறதற்கு அவருடைய திருஇரத்தத்தினாலே நமக்குத் [5]தயிரியம்‡ உண்டாயிருக்கிறபடியினாலும்,

ௗக [6]பராபரனுடைய ஆலயத்திலே நமக்குப் [7]பெரிய ஆசாரியர் உண்டாயிருக்கிறபடியினாலும்,

ௗஉ [8]நாம் குற்றத்தைச் சாற்றுகிற மனது நீங்கத் தெளிக்கப்பெற்ற இருதயம் உள்ளவர்களாய் உண்மையுள்ள இருதயத்தோடும், [9]விசுவாசத்தினால் ஆகிற நிச்சயத்தோடும் [10]பராபரனைச் சேரக்கடவோம்.

ௗங அல்லாமலும் [11]சுத்தமான சலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாய், [12]நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாய் இருக்கக்கடவோம்; [13]வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கிறாரே.

ௗச மேலும் அன்புகூருதற்கும் நற்கிரியைகளைச் செய்கிறதற்கும் எழுப்புதல் உண்டாயிருக்கும்படிக்கு ஒருவரை ஒருவர் நோக்கிப் பார்த்து,

ௗஉ [14]சபை கூடிவருதலைச் சிலர் விட்டுப்போகிறதுபோல நாம் அப்படிச்செய்யாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; [15]அந்த நாள் சமீபமாகிறதை நீங்கள் அறிந்திருக்கிறதால், [16]அதிகமாய் அப்படியே செய்யவேண்டும்.

ௗஎ ¶ [17]சத்தியத்தை அறிந்துகொண்டபின் [18]நாம் மனப்பூர்வமாய்ப் பாவம்செய்தால், வேறொரு பாவப்பலி நமக்கு மீதியாயிருப்பதில்லை.

ௗஏ விரோதம் செய்கிறவர்களைப் பட்சிக்கும் அக்கினியுள்ள [19]உக்கிரமும் நியாயத்தீர்ப்பும் வருமென்று பயத்தோடே காத்திருக்குதலே நமக்கு உண்டாயிருக்கும்.

ௗஐ [20]மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளினவன் எவனோ, [21]அவன் இரண்டு மூன்று பேர் சாட்சிசொன்னபின்பு இரக்கமில்லாமல் கொலைசெய்யப்பட்டானே.

ௗஒ பராபரனுடைய குமாரனைக் காலினால் மிதித்துப்போட்டுத் [22]தன்னைப் பரிசுத்தம் செய்த உடம்படிக்கையின் திரு இரத்தத்தை அசுத்தமென்று எண்ணிக் [23]கிருபையின் ஆவியை அசட்டைபண்ணினவன் [24]எவ்வளவு அதிக ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான்.

ௗஓ நீங்களோ யோசனைபண்ணுங்கள்; [25]பழிவாங்குதல் எனக்கு உரியது; நானே பதில்செய்வேன்

---

1 எரே. ௩௧. ௩௩, ௩௪. எபி. ௮. ௰, ௰௬.
* லெ பரிசேயில் நினைத்துக் கொள்ளுதில்லை யென்ற பின் சொன்னார்.
2 எபி. ௬. ௯.
3 யோவா. ௰. ௬: ௧௪. ௬. எபி. ௭. ௮.
† அல்லது பிரதிஷ்டைபண்ணி.
4 எபி. ௬. ௧௯, ௨௦.
5 உரோ. ௫. ௨. எபே. ௩. ௧௨: ௧. ௫.
‡ அல்லது இஷ்டம்.
6 ௧ நோவே. ௧. ௰௫.
7 எபி. ௪. ௧௪.
8 எபி. ௯. ௧௪.
9 எபே. ௧, ௨ பார். ௧. ௫. ௧ யோ. ௩. ௨௧.
10 எபி. ௪. ௧௬.
11 எசே. ௩௬. ௨௫. உஇ. உ கொரி. ௭. ௧.
12 எபி. ௪. ௨௩.
13 ௧ கொரி. ௧. ௯: ௰. ௧௩. ௧ தெச. ஐ. உ. உ தெச. ௩. ௩. எபி. ௰௧. ௨௩.
14 அப். உ. ௪௨. யூதா. ௧௯.
15 பிலி. ௪. ஐ. உ பே. ௩. ௯, ௧௦, ௪.
16 உரோ. ௧௩. ௧௧.
17 உபே. உ. உ௰, ௨௧.
18 ச மோ. ௨ஐ. ௧௰. எபி. ௯. ௪.
19 எசே. ௩௮. ஐ. செப். ௧. ௰அ: ௩. அ. உ தெச. ௧. அ. எபி. ௰௨. உ.
20 எபி. உ. உ.
21 ஐ மோ. ௨௧. உ, ௬: ௰௭. ௨ஐ. மத். ௰அ. ௨௫. மா. போவா அ. ௨௧. உ கொரி. ௧௩. ௧.
22 ௧ கொரி. ௬. உ௧. எபி. ௧௦. ௨ஐ.—23 மத். ௨௨. ௬௪, ௬௫. எபே. ச. ௧௰.—24 எபி. உ. ௬: ௧௨. ௨ஐ.
25 ஐ மோ ௩௨. ௩ஐ. உரோ. ௧௨. ௧௯.

Digitized by Google

என்று சொன்ன கர்த்தரை அறிந்திருக்கிறோமே; அன்றியும் [1]கர்த்தர் தம்முடைய சனங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுப்பார் என்றும் சொல்லியிருக்கிறதே.

கூக [2]ஆ சீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கிறது.

கூஉ ¶ நீங்கள் [3]முந்தின நாள்களை ஞாபகப்படுத்துங்கள்; அவைகளில் [4]நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்தபொழுது [5]பாடுகளால் மிகுந்த போராட்டத்தைச் சகித்துக்கொண்டீர்களே.

கூங நீங்கள் நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் மற்றவர்களுக்கு [6]வேடிக்கைக்கு ஏதுவானவர்களாயும் அப்படியான [7]மற்றவர்களுக்குத் தோழராயும் இருந்தீர்கள்.

கூச [8]கட்டப்பட்டிருந்த என்னிலேடுகூட நீங்கள் பாடுபட்டீர்களே; [9]பரமண்டலங்களில் அதிக மேன்மையும், உறுதியுமான ஆஸ்தி உங்களுக்கு உண்டென்று நீங்கள்* அறிந்து உங்கள் (லவுகீக) ஆஸ்திகளை (மற்றவர்கள்) கொள்ளையிட்டதற்குச் [10]சந்தோஷமாய் இடங்கொடுத்தீர்கள்.

கூடி ஆகையால் [11]மிகுந்த பலனுக்கு ஏதுவான உங்கள் தயிரியத்தை எறிந்துவிடாதிருப்பீர்களாக.

கூசு ¶ நீங்கள் பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களாய் [12]வாக்குத்தத்தத்தின் நன்மையைப் பெறும்படிக்குப் [13]பொறுமை உங்களுக்கு வேண்டும்.

கூஎ [14]வருகிறவர் [15]அதிககாலம் தாமதமாய் இராமல் சீக்கிரமாய் வருவார் என்றும்,

கூஅ [16]விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான், அவன் பின்வாங்கிப்போனால் அவன் மேல் என்னுடைய ஆத்துமா பிரியமாயிராதென்றும் (எழுதியிருக்கின்றது).

கி. பி. கூச.

1 இ சோ. கஉ. கக. சம். இஅ. ச: கஇ. மச.
2 நாக். மஉ. இ.
3 கலா. க. ச. உ பே. அ.
4 எபி. க. ச.
5 பிலி. க. உக, கம். கொலோ. உ. க.
6 க கொரி. ச. கூ.
7 பிலி. க. எ:ச. மச. க தெச. உ. கச.
8 பிலி. க. எ. உ தீமோ. க. மக.
9 மத். கூ. உஅ: மக. உச. நாக். மஉ. கக. க தீமோ. க. மக.
* அல்லாத உள்ளில் சீக்கே.
10 மத். இ. மஉ. அப். இ. சக. யாக். க. உ.
11 மத். இ. மஉ: ம. கஉ.
12 கொலோ. க. உச. எபி. கூ. மஇ. க பே. க. கூ.
13 நாக். உக. மகூ. கலா. கூ. கூ. எபி. மஉ க.
14 ஆப. உ. க, ச.
15 நாக். டீஅ. அ. உ பே. க. கூ.
16 உசோ. க. மஎ. கலா. க. மக.
17 உ பே. உ. உம, உக.
18 அப். மகூ. கஅ. க தெச. இ. கூ. உ தெச. உ. மச.
† அல்லது பொருளும்.
19 உசோ. அ. உச, உஇ. உ கொரி. ச. மஅ: இ எ.
20 கூ. மச.
21 க மோ. க. க. சம். கக. க. யோ வா. க. க. எபி க. உ. உ பே. க. இ.
22 க மோ. ச. ச. க பே. க. மஉ.

கூக [17]நாம் கேட்டுப்போகிறதற்கு ஏதுவாகப் பின்வாங்குகிறவர்களாய் இராமல் (நமது) [18]ஆத்துமாவைக் காக்கிறதற்கு ஏதுவாக விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறோம்.

யக. அதிகாரம்.

க. விசுவாசம் இன்னதென்றும், க. விசுவாசம் இல்லாதபோதும் பிரியமாயிருக்கக்கூடாதென்றும், ஈ. விசுவாசத்துக்குத் திருட்டாந்தம் கொடுத்திருந்த பூர்வீகத்தார்களுக்குத்தும் சொல்லியது.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளில் உறுதியும்† [19]காணப்படாதவைகளை வெளிப்படுத்துகிறதுமாய் இருக்கின்றது.

உ அதினாலே [20]பூர்வீகத்தார் ஏற்சாட்சியைப் பெற்றார்கள்.

கூ ¶ [21]உலகம் பராபரனுடைய வார்த்தையால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய்க் காணப்படுகிறவைகள் தோற்றப்படாத பொருள்களால் உண்டாயினவென்றும் விசுவாசத்தினாலே அறிந்திருக்கிறோம்.

ச ¶ விசுவாசத்தினாலே [22]ஆபேல் என்பவன் காயீனுடைய பலியிலும் அதிகமான பலியைப் பராபரனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமான் என்ற சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்துப் பராபரனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் அதினாலே [23]இப்பொழுதும் பேசுகிறான்.‡

ஞ ¶ விசுவாசத்தினாலே [24]ஏனோக்கு என்பவன் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; பராபரன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே அவன் காணப்படாமற்போனான்; அவன் எடுத்துக்கொள்ளப்படுதற்குமுன்னே அவன் பராபரனுக்குப் பிரியமானவன் என்று சாட்சிபெற்றுக்கொண்டிருந்தான்.

23 க மோ. ச.ம. மத். உக.கஇ. எபி.மஉ. உச.—‡ அல்லது பேசப்படுகிறான்.—24 க மோ. இ.உஉ, உச.

Digitized by Google

சு பராபரனைச் சேருகிறவன், அவர் உண்டென்றும் அவர் தம்மைச் சாக்கிரதையாய்த் தேடுகிறவர்களுக்குப் பலனை அளிக்கிறவர் என்றும், விசுவாசிப்பானே; ஆகையால் விசுவாசம் இல்லாதவன் அவருக்குப் பிரியமாயிருக்கமாட்டான்.

எ ¶ [1]நோவா என்பவனும் தற்காலத்திலே காணுதலைகளைக்குறித்துத் தேவ எத்தனமாய் எச்சரிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே பயந்து * தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் [2]பேழையை உண்டுபண்ணி, இதினாலே உலகம் ஆக்கினைக்கு உள்ளாயிற்று என்று தீர்ப்புக் காண்பித்து, [3]விசுவாசத்தால் வருகிற நீதிக்குச் சுதந்தரவாளியானான்.

அ ¶ [4]ஆபிரகாமும் பின்பு சுதந்தரமாகப் பெற்றுக்கொள்ளும்படிக்கான இடத்திற்குப் புறப்பட்டுப்போக அழைக்கப்பட்டபொழுது விசுவாசத்தினாலே கீழ்ப்படிந்து, தான் போகவேண்டிய இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான்.

ஆ தனக்கு வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அந்நியதேசத்திலே அவன் அந்த வாக்குத்தத்தத்திற்கு [5]உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும்கூட விசுவாசத்தினாலே சஞ்சரித்துக் [6]கூடாரங்களிலே குடியிருந்தான்.

இ [7]பராபரனாலே உண்டாக்கப்பட்டும் ஆளப்பட்டும் இருக்கிற அஸ்திபாரங்களுள்ள பட்டணத்திற்குப் போகக் [8]காத்துக்கொண்டிருந்தபடியால் அப்படியிருந்தான்.

ஈ [9]சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் [10]உண்மையுள்ளவரென்று எண்ணி, விசுவாசத்தினாலே கருப்பம்தரிக்கும்படி பெலன் அடைந்து, [11]வயது சென்றவளாய் இருந்தும் பிள்ளைபெற்றாள்.

கி. பி. சுசை.

1 ஆ மோ. ச. ஙூ, ஙஉ.
* அல்லது கலன முள்ளவனாகி.
2 ஆ பே. ந. உம்.
3 உரோ. ந. உஉ: ச. ஙூ. பிலி. ந. ரூ.
4 ஆ மோ. ஙஉ. ஆ, ச. அப். எ. உ. ஆ, ச.
5 எபி. ஈ. ஙஎ.
6 ஆ மோ. ஙஉ. அ: ஙூ. ஆ, ஙஅ: ஙஅ. ஆ, ரூ.
7 எபி. ஆ. ச. வெளி. உஈ. உ, ஙூ.
8 எபி ஙஉ. உஉ: ஙூ. ஙச.
9 ஆ மோ. ஙஎ. ஙஈ: ஙஅ. ஙஆ, ஙச: உஆ. உ.
10 உரோ. ச. உஆ. எபி. ஙூ. உஆ.
11 லூக். ஆ. ஆஈ.
12 உரோ. ச. ஙூ.
13 ஆ மோ. உஉ. ஙஎ. உரோ. ச. ஙஅ.
14 ஆஈ. ஙச.
15 உஎ. ஙச. பேது. அ. ஓஈ.
16 ஆ மோ. உஆ. ச: சஎ. ரூ. ஆ ராஜா. உஈ. ஙஓ. சஈ. ஈஉ: சஓஈ. ஙூ. ஆ பே. ந. ஙஎ: உ. ஙஈ.
† ஓரேக்கு, விசுவாசமுள்ளவர்களாகி.
17 எபி. ஙஆ. ஙச.
18 உ மோ. ஈ. ஈ, ஙஓ. மத். உஉ. அப். எ. ஈஉ.
19 பிலி. ஈ. உஅ. எபி. ஙஈ. ஙச.
20 ஆ மோ. உஉ. ஈ, ரூ.
21 பாக். உ. உஆ.
22 ஆ மோ. உஆ. ஙஉ. உரோ. ரூ. ஏ.
‡ அல்லது அவனைக்குறித்து.
23 உரோ. ச. ஙஎ, ஙஈ, உஆ.

யஉ ஆனபடியால் இந்தச் சங்கதியில் [12]செத்தவனைப்போன்ற ஒருவனாலே [13]வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும் எண்ணிறந்த கடற்கரை மணலைப்போலவும் மிகுந்த சனங்கள் உண்டானார்கள்.

யஊ ¶ அவர்கள் எல்லாரும் [14]வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், [15]தூரத்திலே அவைகளைக் கண்டு வாழ்த்துதலோடே விரும்பிப் பூமியின்மேலே தாங்கள் [16]அந்நியராயும் வழிப்போக்கராயும் இருந்ததை அறிக்கைபண்ணி, விசுவாசத்தோடே † இறந்துபோனார்கள்.

யசு அப்படி அறிக்கைபண்ணுகிறவர்கள் [17]சென்மதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்.

யஙு அவர்கள் தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பும்படி இடமுண்டே.

யசு அதையல்ல, அதிலும் மேன்மையான பரமண்டலத்தில் உள்ளதையே விரும்பினார்கள்; ஆகையால் பராபரனும் [18]அவர்களுடைய தேவன் என்று அழைக்கப்படுகிறதினாலே வெட்கப்படுகிறதில்லை; [19]அவர்களுக்கு ஒரு பட்டணத்தை எத்தனம்பண்ணினாரே.

யஎ ¶ மேலும், [20]ஆபிரகாமானவன் தான் சோதிக்கப்பட்டபொழுது, விசுவாசத்தினாலே [21]ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.

யஅ [22]ஈசாக்கினாலே உனக்குச் சந்ததி உண்டாகும் என்று அவனோடே ‡ சொல்லப்பட்டிருந்ததே.

யக இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப்பெற்றவன், [23]இவனை மரித்தோரிலிருந்து எழுந்திருக்கப்பண்ணப் பராபரன் வல்லவராய் இருக்கிறார் என்று எண்ணித் தனக்கு ஒரேபேறானவனையே பலி

Digitized by Google

யாக நேப்புக்கொடுத்தான்; ஆனதால் உவமையாகும்படியே அவனைத் திரும்பப் பெற்றுக்கொண்டான்.

உய ¶ ஈசாக்கு என்பவனும் பிற்காலத்திற்கு உரியவைகளின்மேல் உள்ள விசுவாசத்தினாலே இயாக்கோபையும் ஏசாவையும் [1]ஆசீர்வதித்தான்.

உக இயாக்கோபு என்பவனும் மரணகாலத்தில் விசுவாசத்தினாலே இயோசேப்பினுடைய குமாரர் இருவனையும் [2]ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே (சாய்ந்து) [3]தொழுதுகொண்டான்.

உஉ [4]இயோசேப்பு என்பவனும் இஸ்ரவேல் சந்ததியார் (எகிப்து தேசத்தை) விட்டுப் புறப்படுவார்கள் என்றுதன் சீவகாலத்தின் முடிவில் விசுவாசத்தினாலே அறிவித்து* தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்.

உஊ ¶ [5]மோசே என்பவன் பிறந்தபொழுது அவனுடைய தாய் தகப்பன்மாரும் பிள்ளை அழகுள்ளது என்று கண்டு, விசுவாசத்தினாலே [6]இராசாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல், அந்தப் பிள்ளையை மூன்றுமாதம் ஒளித்து வைத்தார்கள்.

உச [7]மோசே என்பவனும் பெரிய வயதுள்ளவனானபொழுது பார்வோனுடைய குமாரத்தி மகனென்று அழைக்கப்படுகிறதை விசுவாசத்தினாலே வெறுத்து,

உஎ அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதை அல்ல, பராபரனுடைய சனங்களோடே கூடத் [8]துன்பத்தை அநுபவிப்பதையே அதிகமாய்த் தெரிந்துகொண்டான்.

உஅ [9]இனிமேல் வரும் பலனை அவன் நோக்கிப்பார்த்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் [10]கிறிஸ்துவின்நிமித்தம் வருகிற† நிந்தையை அதிக ஐசுவரியமென்று எண்ணினான்.

இ. பி. சுச.

1 ஆ மோ. உ. உ, ஊ.
2 ஆ மோ. உஅ. இ, உக, உஉ.
3 ஆ மோ. உச. ஊ.
4 ஆ மோ. இ. உச, உஇ. உ மோ.உக. ஊ.
* அல்லது மனோதத்து.
5 உ மோ. உ. உ. அப். எ உஇ.
6 உ மோ. ஆ. உக, உஉ.
7 உ மோ. உ. இ, ஊ.
8 சங். அ. இ.
9 எபி. இ. உஇ
10 எபி. ஊ. ஊ.
† அல்லது நிந்தனை.
11 ஊ. வச.
12 உ மோ. இ. உஅ,உஊ: இஉ. ஊ: ஊ. இ, இஅ.
13 உ மோ. ஊ. உஊ. யோ.
14 உ மோ. இ. உஉ, உச.
15 யோச. ஆ.உஇ.
16 யோச.ஆ. உஉ. பார். உ. உஇ.
17 யோச. உ. ஆ.
‡ அல்லது மேற்படியாதவர்களோடே
18 சிர. ஆ. ஊ.
19 சிர. ச. ஆ.
20 சிர. இஊ. உச.
21 சிர. ஊ. ஆ: ஊ. எ.
22 ஆ சாமு. ஊ.ஆ, ஊ: ஊ. ச இ.
23 ஆ சாமு. ஆ. உஇ: ஊ. உஇ.
24 உ சாமு. எ. ஊ. ழ.
25 சிர. இச. இ. ஆ. ஆ சாமு. ஊ. ஊ, உஇ. தானி. ஆ. உஉ.
26 தானி.ஆ. உஇ.
27 ஆ சாமு. உஇ. ஆ. ஆ இரா. ஊ. ஆ. உ இரா. ஆ. ஊ.
28 உ இரா. உஇ. எ. ழ. யோபு. ச உ. சங். ஆ. அ.

உஎ [11]காணப்படாதவனைக் கண்டாற்போல உறுதியாய்ப் பற்றிக்கொண்டதால் அவன் விசுவாசத்தினாலே இராசாவினுடைய மூர்க்கத்திற்குப் பயப்படாமல் [12]எகிப்தைவிட்டுப் போனான்.

உஅ தலைப்பிள்ளைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு அவன் விசுவாசத்தினாலே [13]பஸ்காவையும் இரத்தம் தூசுதலையும் ஏற்படுத்தினான்.

உக ¶ விசுவாசத்தினாலே அவர்கள் [14]செங்கடலை உலர்ந்த தரையைப்போலக் கடந்து போனார்கள்; எகிப்தார் அப்படிச் செய்யத் தேடினபொழுது அமிழ்ந்துபோனார்கள்.

கூ ¶ (இஸ்ரவேலருடைய) விசுவாசத்தினாலே [15]இயெரிகோபட்டணத்தின் மதில்கள் (அவர்களால்) ஏழுநாளுக்குள்ளே சூழப்பட்டு விழுந்தன.

கூக ¶ [16]வேசியாயிருந்த இராகாப் என்பவள் விசுவாசத்தினாலே [17]வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு அவிசுவாசிகளோடே‡ அழிக்கப்படாதிருந்தாள்.

கூஉ ¶ பின்னும் யாதைக்குறித்துச் சொல்லலாம்; [18]தேயோனையும் [19]பாராக்கையும் [20]சிமுசோனையும், [21]இயெப்பத்தாவையும், [22]தாவீதையும், [23]சாமுவேலையும் நீர்க்கதரிசிகளையும்குறித்து நான் விவரம்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

கூஊ அவர்களும் விசுவாசத்தினாலே இராச்சியங்களைச் செயித்துக்கொண்டு, நீதியை நடப்பித்து, [24]வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளைப் பெற்றுக்கொண்டு, [25]சிங்கங்களுடைய வாய்களை அடைத்து, [26]அக்கினியின் பலத்தை அவித்து,

கூச [27]கட்கங்களின் கூர்மைக்குத் தப்பிப் [28]பல நாளத்திலே பலன்கொண்டு, யுத்தகாலத்தில்

Digitized by Google

வல்லவர்களாகி, [1]அக்கியருடைய பாளையங்களைக் கவிழ்த்துப்போனார்கள்.

கூடி (விசுவாசத்தினாலே) [2]ஸ்திரீகளும் செத்துப்போன தங்களுக்கு உரியவர்களை உயிரோடு எழுந்திருக்கப் பெற்றார்கள்; (விசுவாசத்தினாலே) வேறுசிலர் அதிக மகிமையாய் உயிரோடே எழும்புகிறபடிக்கு மீட்பை அங்கிகரியாமல் [3]இழுப்புண்டு வாங்கிக்கப்பட்டார்கள்.

கூஉ (விசுவாசத்தினாலே) வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும், [4]சங்கிலிகளையும், காவலையும் சகித்துக்கொண்டார்கள்.

கூஎ [5]கல் எறியப்பட்டார்கள்; வாளால் அறுக்கப்பட்டார்கள்; சோதிக்கப்பட்டார்கள்; கட்கத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்; [6]செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு, குறைச்சலையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் சகித்துத் [7]திரிந்து,

கூஅ வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் [8]குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறி நடந்தார்கள்; உலகம் அவர்களுக்கு அபாத்திரமாய் இருந்தது.

கூக ¶ அவர்கள் எல்லாரும் விசுவாசத்தைக்குறித்து [9]நற்சாட்சிபெற்றிருந்தும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமல் போனார்கள்.

சஎ [10]பராபரன் நம்மைக்குறித்து அதிக கண்மையானதை ஏற்படுத்தினதால்* அவர்கள் நம்மையன்றி [11]நிறைவுள்ள ஆசீர்வாதத்தை அடையாதபடிக்கு (அப்படியே போனார்கள்).

௰உ. அதிகாரம்.

க. இடைவிடாத விசுவாசமும் பொறுமையும் தேவபதநிபும் உடையவர்களாயிருக்கப் புத்திசொல்லி, உஉ. பழைய எற்பாட்டைப்பார்க்கிலும் புதிய எற்பாடு மேன்மையுள்ளதென்றும் காட்டியது.

கி. பி. சுசை.

1 யோ. ஙஇ. அ, ஙஇ. க சாமு. ஙச. ஙக. ழ:ஙச. ஙச, ஙஉ. உ சாமு. அ. க. ழ.

2 க இரா. ஙச. ஙஉ. உ இரா. ச. ஙஇ.

3 அப்.உஉ.உஇ.

4 க மோ. கக. உஅ. எரே, உஅ. உ:கஎ.ஙஇ.

5 க இரா. உக. ஙக. உ சாலா. உச. உக. அப் எ. இஅ: ஙச. ஙக.

6 எபி. ஙக. ச.

7 உ இரா. க. அ. ஙத். க. ச.

8 க இரா. ஙஅ.ச: ஙக. க.

9 உ, ஙக. ஙச.

10 எபி. எ. உஉ: அ. க.

* அல்லது முன் அறிந்ததால்.

11 எபி. இ. க: ஙஉ.உக.வெளி. க. ஙக.

12 சொலோ. க. அ. க பே. உ. க.

† அல்லது விசுவாசத்துக்குக்காணாயும்.

13 உரோ. ஙஉ. ஙஉ. எபி. ஙு. கக.

14 க கொரி. கூ. உச. பிலி. க. ஙக, ஙச.

15 லூக். உச. உக. பிலி. உ. அ. ழ க பே. க. ஙக.

16 சங். ஈஅ. க. எபி. க. க, ஙக: அ. க. க பே. க. உஉ.

17 கலா.க.கூ.

18 மத். ஙு. உச. உஇ. போவா. ஙஇ. உஙு

19 க கொரி. ஙு. ஙக. எபி.ஙு. கஉ, கக, கச.

20 யோபு. இ எ. வாக்.க.ஙக.

ஆகையால் மேகம்போல இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, [12]நாம் பாரமான யாவற்றையும் நம்மைச் சுற்றிநிற்கிற பாவத்தையும் தள்ளிப்போட்டு, விசுவாசத்தை ஆரம்பமாய் நடத்துகிறவராயும்† முடிக்கிறவராயும் இருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு முன்வைக்கப்பட்ட போராட்டச் சாலையிலே [13]பொறுமையோடே [14]ஓடக்கடவோம்.

உ [15]அவர் தமக்குமுன்பாகவைத்திருந்த சந்தோஷத்திற்காக அவலட்சணப்படுதலை எண்ணாமல், சிலுவையில் (மரணத்தைச்) சகித்துப் பின்பு [16]பராபரனுடைய ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உளைக்காந்திருக்கிறார்.

கூ ¶ ஆனதால் உங்கள் [17]ஆத்துமாக்கள் இளைப்புள்ளவைகளாய் இருக்கும்பொழுது நீங்கள் தயிரியம் அற்றவர்களாய்ப் போகாதபடிக்குப் பாவிகளால் இப்படிப்பட்ட விரோதத்தைச் சகித்த [18]அவனையே நன்றாய்த் தியானித்துக் கொள்வீர்களாக.

ச அந்தப் பாவத்திற்கு விரோதமாய்ப்போராட்டம்செய்கிறதில் நீங்கள் இதுவரைக்கும் [19]இரத்தம் சிந்தப்படத்தக்கதாக எதிர்நிற்கவில்லையே.

ஞ அன்றியும், [20]என் மகனே, கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணுமலும் அவரால் கடிந்துகொள்ளப்படுகையில் தயிரியமற்றவனாகாமலும் இருப்பாயாக என்றும்,

ஃ [21]கர்த்தராலே அன்புகூரப்பட்டவன் எவனை அவனை அவர் தண்டித்துத் தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையானாலும் அடித்துவருவாரே என்றும், பிள்ளைகளாகிய உங்களுக்குச் சொல்லியி

21 சங். கூச. ஙஉ: எஙக. எஇ. வாக். க. ஙஉ. யாக். க. ஙஉ. வெளி. க. ஙக.

Digitized by Google

ருக்கிற ஆறுதலுள்ள வசனத்தை மறந்தீர்கள்.

எ [1]நீங்கள் (அவருடைய) தண்டிப்புக்கு உட்பட்டிருக்கிறபடியால் பராபரன் உங்களைத் (தம்முடைய) பிள்ளைகள்போல எண்ணி நடப்பிக்கிறாரே; தகப்பனால் தண்டிக்கப்படாத பிள்ளை ஒன்று உண்டா?

அ [2]எல்லாப் (பிள்ளைகளும்) தண்டிக்கப்பட்டதுபோல நீங்களும் தண்டிக்கப்படாவிட்டால் பிள்ளைகளாயிராமல் வேசிப்பிள்ளைகளாய் இருப்பீர்களே.

கூ ¶ அன்றியும், நம்முடைய சரீரத்திற்குத் தகப்பன்மாரானவர்கள் நம்மைத் தண்டிக்கும்பொழுது நாம் அவர்களுக்கு வந்தனம் செய்திருக்க, [3]ஆவிகளுக்குப் பிதாவானவருக்கு நாம் பிழைக்கும்படி மிகவும் அதிகமாய்க் கீழ்ப்படிய வேண்டுமல்லவா?

யூ அந்தத் தகப்பன்மார்கள் தங்களுக்குத் தோன்றினபடி* கொஞ்சக்காலமாய் நம்மைத் தண்டித்தார்கள்; அவர் தம்மைப்போல நாம் [4]பரிசுத்தராகுதற்கு ஏதுவான பிரயோசனம்வரும்பொருட்டே அப்படிச் செய்கிறார்.

யக தண்டனை உண்டாயிருக்கும் பொழுது அது (நமக்குச்) சந்தோஷமாக அல்ல, துக்கமாகத் தோன்றுகின்றது; பின்பு அதினாலே முயற்சிப்பட்டவர்களுக்கு அது [5]நீதியென்னும் பாக்கியபலனைக் கொடுக்கின்றது.

யஉ ¶ ஆகையால், [6]தளர்ச்சியாயிருக்கிற (உங்கள்) கைகளையும் இளைப்புள்ள (உங்கள்) கால்களையும் செம்மைப்படுத்துவீர்களாக.

யஊ முடமுள்ள (அவயவம்) புரண்டுபோகாமல் [7]சொஸ்தமாகும்படிக்கு உங்கள் கால்களுக்காகச் [8]சரியான† பாதைகளைச் செய்வீர்களாக.

யச [9]யாவருடனேயும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தராயிருக்க

கி. பி. சுசை.

1 இ மே. அ. இ. உ சாமு எ. மே. ஸாக். மக. உச: மகாஅ:உக.மக.
2 சங். எக. மஇ. க பே. இ. க.
3 ச மே. மக. உஉ: உள. மக. யோபு. மஉ. இ. பிர. மஉ. எ. சோ. சஉ. இ: இள. மக. சகரி. மஉ. க.
* அல்லது தங்கள் சந்தோஷத்தின்படி.
4 க மே. மக. சச: மக. உ. கபே.க.மஇ,மக.
5 யாக். க. மஅ.
6 யோபு. ச. க, ச. சொ.கஇ.க.
7 கலா. க.க.
8 யாக். ச. உக, உள.
† அல்லது அழுத்தமான.
9 சங். கச. மச. உரோ.மஉ.அ: மச. மக. உஇ மே. உ. உஉ.
10 மத். இ. அ உ கொரி. எ. க. எபே. இ. இ.
11 கலா. இ. ச.
‡ அல்லது மிட்டெலிலாத.
12 இ மே. உக. மஅ எபி.க.மஉ.
13 எபே. இ. க. கொலோ.க.இ. க தெச. ச. க.
14 க மே. உஇ. கக.
15 உ கொரி.க.க.
16 க மே. உஎ. சச, கக, கஅ.
17 எபி க. க.
§ அல்லது மனம் நிரம்புதலில்.
18 உ மே. மக மஉ. மஅ, மக: உஇ. மஅ. இ மே.ச. மக: இ.உஉ. உரோ. க.மச: அ மஇ. உஇமே க. எ.
19 உ மே. ம.ம. மக. இ மே இ. இ.உஇ:டஅ.மக.
20 மே.டக மக.
21 உ மே.டக.க.

வும் சாக்கிரதையாய் இருப்பீர்களாக; [10]பரிசுத்தமில்லாதவன் கர்த்தனைத் தரிசிப்பதில்லையே.

யஙி [11]ஒருவரும் பராபரனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும், மற்றநேகரும் அசுசிப்படுத்தக்கதாக [12]கசப்புள்ளவேர் உங்களுக்குள்ளே தோன்றிக் கலகம் உண்டாக்காதபடிக்கும்,

யசு ஒருவரும் [13]வேசிமார்க்கரா யும், [14]ஏசா என்பவன்போல லவுகீக நாட்டத்தை உள்ளவர்களாயும் இராதபடிக்கும் [15]எச்சரிக்கையாய் இருப்பீர்களாக; அவன் ஒரே வேளைச் சாப்பாட்டுக்காக முதற்பேறானவனுக்கு உரிய சுதந்தரங்களை விட்டுவிட்டானே.

யஎ பின்பு உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, [16]அவன் (தன் தகப்பனுடைய) ஆசீர்வாதத்தைப்பெற்றுக்கொள்ள விரும்பியும் தள்ளப்பட்டான்; [17]அதைக் கண்ணீரோடே மிகவும் தேடியும் (தகப்பனிடத்தில்) மாறுதலைக்§ காணுமல் போனானே.

யஅ ¶ அன்றியும், தொடப்பட்டு அக்கினி பற்றி எரிகிற [18]மலையினிடத்திலும், மந்தாரத்தினிடத்திலும் இருளினிடத்திலும்,

யக பெருங்காற்றினிடத்திலும், எக்காளத்தின் முழக்கத்தினிடத்திலும், வார்த்தைகளின் தொனியினிடத்திலும் நீங்கள் வரவேண்டியவர்கள் அல்லவே; [19]அந்தத் தொனியைக் கேட்டவர்கள் பின்னும் வசனம் தங்களுக்குத் தொன்றாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள்.

உய என்னத்தினாலெனில், [20]இந்த மலையை ஒரு மிருகம் தொட்டால், அதின்மேலே கல்லெறியவேண்டும், அல்லது அதை அம்பினாலே எய்து கொலைசெய்யவேண்டும் என்று சொல்லப்பட்ட கட்டளையை அவர்கள் சகிக்கமாட்டாதிருந்தார்கள்.

Digitized by Google

உக அந்தத் தரிசனை [21]இவ்வளவு

பயங்கரமாய் இருந்தது; அதினாலே மோசேயும், நான் மிகவும் அதிகமாய்ப் பயப்பட்டு நடுங்குகிறேன் என்றான்.

உஉ நீங்கள் [1]மலையாகிய சீயோனிடத்திற்கும் [2]சீவனுள்ள தேவனுடைய பட்டணமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், [3]அநேகம் பதினாயிரமாகிய தூதர்களின் விசேஷமான சங்கத்தினிடத்திற்கும்,

உக [4]பரமண்டலத்திலே போர் எழுதியிருக்கிற* [5]முதற்பேறானவர்களின் சபையினிடத்திற்கும், [6]யாவருக்கும் தேவனாகிய நியாயாதிபதியினிடத்திற்கும், [7]நிறைந்த பாக்கியமுள்ளவர்களாகிய நீதிமான்களின் ஆவிகளினிடத்திற்கும்,

உச புதிதான உடம்படிக்கைக்கு† ஏற்ற [8]மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் கூப்பிட்டதுபோல அல்ல, [9]அதிக நன்மையானவைகளை அறிவித்துத் தெளிக்கப்படுகிற [10]இரத்தத்தினிடத்திற்கும் சேருகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

உஙி ¶ திருவுளம்பற்றுகிறவனை நீங்கள் அசட்டைபண்ணுதபடிக்குப் பாருங்கள்; என்னத்தினாலெனில், [11]பூமியிலே பேசினவனை அசட்டைபண்ணின அவர்கள் (ஆக்கினைக்குத்) தப்பாமல் இருக்க, பரமண்டலத்திலிருந்து பேசுகிறவனை நாம் விட்டு விலகினால் (ஆக்கினைக்குத்) தப்பிப்போவோமா?

உசு [12]அவருடைய சத்தம் முற்காலத்திலே பூமியை அசையப்பண்ணிற்று; அன்றியும், இனிமேல் [13]ஒரு காலத்திலே பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

உஎ இனிமேல் ஒரு காலத்தி

கி. பி. சுச.

1 கலா ச. உக. வெளி. க. ஙஉ: உக. உ, ஏ.
2 பிலி. க. உஏ.
3 இ மோ. கக. உ. சங். சுஅ. ஙச. யூதா. ஙச.
4 லூக். ஏ. உஏ. பிலி. ச. க. வெளி. ஙக. அ.
* அல்லது சேர்க்கப்பட்டிருக்கிற.
5 உ மோ. ச. உஉ. யாக். க. ஏஅ. வெளி. ஙச. ச.
6 க மோ. ஏஅ. உஇ. சங். கச. உ.
7 பிலி. க. ஙஉ. எபி. கே. சஏ.
† அல்லது ஏற்பாட்டிற்கு.
8 எபி. அ. க: கூ. ஙஇ.
9 க மோ. ச, ஏ. எபி. ஙக. ச.
10 உமோ. உச. அ. எபி. ஏ. உஉ. க பே. க. உ.
11 எபி. உ உ,க: க. ஙஎ: ஏ. உஅ, உக.
12 உ ஹே. ஙக. ஏஅ.
13 ஆகா. உ. க.
14 சங். சஉ.உக. மத். உச. கஇ உ பே. க. ஏ. வெளி. உக. க.
‡ அல்லது அசைக்கப்படத்தக்கவைகள்.
15 உ மோ. உச. ஙஎ இ ஹே.ச. உச: கூ. க. சஏ.இ.உக: கூ. க. ஸ.. கக. ஙஇ. உ தெச. க.அ:எபி.ஏ.உக
§ அல்லது பெற.
16 உரோ.ஙஉ.ஏ. க தெச. ச. க. க பே. க. உஉ: உ.ஸ: க.அ: ச.அ.உபே.க.க க யோ.க.உக.ழ: ச.எ.உஏ,உக.ழ.

லே என்று சொன்ன வசனம் அசைவில்லாதவைகள் நிலையாய் இருக்கத்தக்கதாக (அற்பமாய்ச்) செய்யப்பட்டவைகளாகிய [14]அசைவுள்ளவைகள்‡ நீக்கப்படும் என்று குறிக்கின்றது.

உச ஆனதால், அசைவில்லாத இராச்சியத்தை நாம் பெற்றுக்கொண்டிருக்க, [15]நம்முடைய பராபரன் (பொல்லாதவர்களைப்) பட்சிக்கும் அக்கினியாய் இருக்கிறபடியினாலே,

உக நாம் வணக்கத்தோடும் மெய்த்தேவபத்தியோடும் பராபரனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யத்தக்க கிருபையுள்ள நிலைப் பற்றிக்கொள்ளக்§ கடவோம்.

ஈஊ. அதிகாரம்.

க. தயாளமும், ச. தற்பும் உடையவர்களாயிருக்கவும், இ. பொருளாசையை நீக்கவும், எ. நேவாளமியக்காரர்களைப் பாராட்டவும், க. அந்நிய உபதேசங்களுக்கு உச்சரிக்கையாய் நிற்கவும், ஏ. இந்திரியங்களை அதிக்கைபிடவும், ஙக. நருமம்செய்யவும், ஙஎ. அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவாயும், ஙஅ. தனக்காகச் செபம்பண்ணவும் சொல்லி, உஏ. கிருபத்தை முடித்தது.

[16]சகோதரசிநேகம் நிலையாய் இருக்கக்கடவது.

உ அந்நியனை உபசாரம் செய்கிற குணத்தினாலே சிலர் (தங்களுக்குத்) தெரியாதபடிக்குத் [17]தேவதூதனை உபசரித்தால் [18]நீங்கள் அந்நியனை உபசாரம்செய்ய மறவாதிருப்பீர்களாக.

ஊ [19]கட்டப்பட்டிருக்கிறவர்களோடேகூடக் கட்டப்பட்டவர்கள்போல நீங்கள் அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; உங்களையும் சரீரத்தோடிருக்கிறவர்களென்று அறிந்து பாடுபடுகிறவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்.

ச விவாகம்பண்ணுதல் யாவருக்குள்ளும் கனம்பொருந்தியதாய் இருக்கக்கடவது; சமுசாரமார்க்கத்தாருடைய படுக்கை (விபசாரத்தினாலே) அசுசிப்படாதிருப்பதாக;

17 க மே. ஙஅ. க: ஙக. உ.—18 மத். உஇ.கஇ. உரோ.ஙஉ ஙக. க திமோ.க.உ.கபே.ச.க —19மத்.உஇ.உக. உரோ.ஙஉ.ஙஇ. க கொரி.ஙஉ.உக. கொலோ.ச.ஙஅ. க பே.க.அ.

Digitized by Google

[1]வேசிமார்க்கருக்கும் விபசாரக்கா
ரருக்கும் பராபரன் நியாயத்தீர்ப்
புக் கொடுப்பாரே.

ஞ [2]உங்களுக்கு உண்டானவை
கள் போதும் என்கிற மனதுள்ள
வர்களாய்ப் பணத்தின்மேலுள்ள
ஆசையில்லாமல் நடந்துகொண்மீர்
களாக; [3]நான் உன்னை ஒருக்கா
லும் விட்டு விலகுவதும் இல்லை,
உன்னை ஒருக்காலும் கைவிடுவ
தும்இல்லை என்று அவர் அருளிச்
செய்தாரே.

ஃ அதினாலே நான் தயிரியங்
கொண்டு [4]கர்த்தர் எனக்குச் சகா
யராய் இருக்கிறார்; மனிதனை
வன் எனக்கு என்னசெய்வானே
என்று நான் பயப்படவேண்டுவ
தில்லை என்று சொல்லலாமே.

எ ¶ [5]தேவவசனத்தை உங்களுக்
குப் போதித்து உங்களை நடத்திப்
போனவர்களை* நீங்கள் ஞாபகப்
படுத்தி, அவர்களுடைய நடக்கை
யின் முடிவை நன்றாய்ப் பார்த்து,
(அவர்களுடைய) [6]விசுவாசத்
தைப் பின்பற்றுங்கள்.

அ [7]இயேசுக்கிறிஸ்துவானவர்நே
ற்றும் இன்றைக்கும் என்றென்றை
க்கும் ஒரேவிதமாய் இருக்கிறவர்.

க [8]பலவிதமாயும் அந்நியமாயும்
இருக்கிற போதனைகளால் நீங்
கள் சிதறஅடிக்கப்படாதிருப்பீர்
களாக; போசனபதார்த்தங்களா
லே அல்ல, (தேவ) கிருபையி
னாலே (உங்கள்) மனது உறுதியா
கிறதே நன்மையாயிருக்கின்றது;
[9]போசனபதார்த்தங்களைக்குறித்து
முயற்சியாய் இருக்கிறவர்கள் அ
தினாலே பிரயோசனம் அடைய
வில்லையே.

ய [10]நமக்குஉண்டாயிருக்கிறபலி
பீடத்தில் உள்ளவைகளைக் கூடா
ரத்தில் ஊராதனை செய்கிறவர்கள்
புசிக்கிறதற்கு அதிகாரமில்லை.

யக ¶ அது எப்படித் தெரியு
மெனில், பிரதான ஆசாரியன் பா
வப்பலிக்காக மிருகங்களின் இ
ரத்தத்தைப் பரிசுத்தஸ்தலங்களில்
கொண்டுவருகிறபொழுது, [11]அக்
மிருகங்களுடையஉடல்கள் பா
ளயத்திற்குப் புறம்பே கொண்டு
போய்ச் சுட்டெரிக்கப்படுமே.

யஉ அந்தப்படி இயேசுவானவ
ரும், தமது திரு இரத்தத்தினாலே
சனங்களைப் பரிசுத்தம்செய்யும்ப
டிக்குப் [12]பட்டணத்துக்குப் புறம்
பே பாடுபட்டார்.

யஊ ஆனதால் நாம் அவருடனே
கூட [13]நிந்தையைச் சகிக்கிறவர்
களாய் அவரோடேகூடப் பா
ளயத்திற்குப் புறம்பே புறப்படக்
கடவோம்; [14]நிலைமையான பட்
டணம் இங்கே நமக்கு இல்லையே.

யஎ மறுலோகத்தில் உள்ளதை
மிகவும் தேடுகிறோமே.

யஏ மேலும் [15]அவருடைய திரு
நாமத்திற்குத் துதியை அறிக்கை
யிடுகிற† உதடுகளின் கனியாகிய
[16]தோத்திரப்பலியை நாம் [17]அவர்
மூலமாய் எப்பொழுதும் பராபர
னுக்குச் செலுத்தக்கடவோம்.

யஐ ¶ அன்றியும் [18]நன்மைசெய்
தலையும், (எளியவர்களுக்குக்)
கொடுத்தலையும், மறவாதிருப்பீர்க
ளாக; [19]அப்படிப்பட்ட பலிகள்
மேல் பராபரன் மிகவும் பிரியமா
யிருக்கிறாரே.

யக [20]உங்களை நடத்துகிறவர்கள்‡
(கர்த்தாவுக்குக்) கணக்கு ஒப்பு
விக்கிறவர்களாய் உங்கள் [21]ஆத்து
மாக்களுக்காக விழித்துக்கொண்
டிருக்கிறார்களே; ஆகையால் அவர்
கள் துக்கமாய் அல்ல, சந்தோஷ
மாய் அப்படிச் செய்யும்படிக்கு
நீங்கள் அவர்களுக்குக் கீழ்ப்ப
ணிந்து அடங்குவீர்களாக; (அவர்
கள் துக்கமாய் அப்படிச் செய்
தால்) அது உங்களுக்குப் பிரயோ
சனமாய் இருக்கமாட்டாதே.

இ. பி. சுசை.

1 உ கொரி. உ.சு. கலா. இ. மசு. உசு. எபே. இ. இ. கொலோ. உ.இ, உ. கொலோ. உஉ. மஇ.

2 மத். உ. உஇ. உசு.பிலி. சு.உ, மஉ. உ நீமோ. உ. சு. அ.

3 உ மோ. உஅ. மஇ. இ மோ. உசு. சு, அ. யோசு. உ. இ. உ நாளா. உஅ. உம. சம். உள. உஇ.

4 சம். உள. உ: இசா, மசு, மஎ: ⁂அ. சு.

5 மள. வச.

* அல்லது உங்களுக்குக் கட்டளை கொடுக்கிறவர்களை.

6 எபி.உ.மஉ.

7 யோவா. அ. இஅ. எபி. உ. மஉ. கொலோ. உ. சு.

8 எபே. சு. மச: இ. உ. கொலோ. உ. சு, அ. உ யோ, சு. உ.

9 உரோ. மச.எள. கொலோ. உ. மசு. உ நீமோ. சு. உ.

10 உ கொரி. சு. மசு: ம. மஅ.

11 உ மோ. உசு. மச. உ மோ. சு. மள, மஉ, உசு: சு. மம: சு. மசு: மசு.உள. சமோ. மசு. உ.

12 யோவா. மசு. மள, மஅ. அப். எ. இஅ.

13 எபி. மசு. உசு. உ பே. சு. மச.

14 மீள. உ. ம. பிலி. உ. உம. எபி. மசு.ம, மசு: மஉ. உஉ.

15 ஓசே. மச. உ

† அல்லது தனிக் கிளை.

16 உ மோ.எ.மஉ. சம் இ.ம.சு.உசு: கசு.கி.கச: ஈ.உஉ: சமச.மே.—17 எபே. இ.உம. உ பே. உ. இ.—18 உரோ. ஊ.கசு. 19 உ கொரி.உ மஉ. பிலி.சு தே எபி உ ம.—20 பிலி.உ.உசு. உ தெச.இ.ஊ. உ நீமோ.இ.மே. எ.மச.

‡ அல்லது ஆளுகிறவர்கள் — 21 எரே.உ.மே: கசு.உ,ஈ. அப்.உம.உசு,உஅ.

Digitized by Google

கி. பி. சுசை.

18 அதை நாங்கள் எவ்விதத்திலுலும் நன்மை நடக்க விரும்பிக்கொண்டு [1]நற்சாட்சிசொல்லுகிற மனது எங்களுக்கு உண்டென்று நாங்கள் நிச்சயமாயிருக்கிறபடியால் [2]எங்களுக்காகச் செபம்பண்ணுவீர்களாக.

19 நான் அதிசீக்கிரமாய் உங்களுக்குத் திரும்பக் கொடுக்கப்படும்படிக்கு நீங்கள் அப்படிச் செய்யவேண்டுமென்று [3]அதிகமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

20 ¶ அன்றியும் [4]நம்முடைய கர்த்தருமாய் [5]ஆடுகளின் பெரிய மேய்ப்பருமாய் இருக்கிற இயேசுவை நித்தியஉடம்படிக்கைக்கு* ஏற்ற [6]இரத்தத்தினாலே மரித்தோரிலிருந்து புறப்படப்பண்ணின [7]சமாதானத்திற்குக் காரணராகிய பராபரன்,

21 தமது சித்தத்தின்படி நீங்கள் செய்கிறதற்கு ஏதுவாக [8]எவ்விதமான நற்கிரியைக்கும் உங்களைத் தகுதியானவர்களாக்கி,† இயேசுக்

1 அப். உ. 5: உ. 23. உ கொரி. 5. 12.

2 உரோ. 15. எபே. 6. கொலோ. 3, 4. 1 தெச. 5. 25. 2 தெச. 3. 1. 1 பேது. 2. 5.

3 பிலே. 22.

4 அப். 20. 28, 1 பேது. 2. 25. 5. 4. உரோ. 14. 9: அ. 26. 1 கொரி. 8. 6: 16. 19. 2 கொரி. 5. 15. கலா. 1. 4. கொலோ. 2. 20, 1 தெச. 5. 10. 1 பேது. 1. 18, 19.

5 சங். 23. 1. எசே. 34. 23: 37. 24. மத். 25. 32. யோ. 10. 11, 14, 16. 1 பேது. 2. 25. 5. 4.

6 சகரி. 9. 11.—7 உரோ. 15. 33. 1 தெச. 5. 23.—8 2 தெச. 2. 17, 1 பேது. 5. 10.—† அல்லது சற்கிரியையிலும் உங்களில் செய்து.—9 பிலி. 2. 13.—10 கலா. 1. 5. 1 தீமோ. 1. 17. 2 தீமோ. 4. 18. வெளி. 1. 6.

11 1 பே. 5. 12.—12 1 தெச. 3. 2.—13 2 தீமோ. 4. 20.—14 சங், 91 சங். 1 பேது. 5. 14.—15 தீத். 3. 15.

கிறிஸ்துவின்மூலமாய்த் தமதுசன்னிதானத்திலே [9]பிரியமானதை உங்களுக்குள்ளே நடப்பிக்கக்கடவர்; [10]அவருக்கு என்றைக்கும் துதி உண்டாவதாக.—ஆமன்.

22 ¶ சகோதரரே, [11]நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதின இந்தப் புத்திகளை அங்கிகரிக்கும்படிக்கு வேண்டிக்கொள்ளுகிறேன்.

23 ¶ [12]சகோதரனாகிய தீமோத்தேயு [13]விடுதலையாக்கப்பட்டான் என்று அறிவீர்களாக; அவன் சீக்கிரமாய் வந்தால் அவனுடனே கூட உங்களைக் காண்பேன்.

24 உங்களை நடத்துகிறவர்களுக்கும் மற்றப் பரிசுத்தவான்கள் யாவருக்கும் (என்னாலே) [14]வாழ்த்துதல்செய்யுங்கள்.

25 இத்தாலி தேசத்தார் யாவரும் உங்களுக்கு வாழ்த்துதல்செய்கிறார்கள்; [15]தேவகிருபை உங்கள் அனைவரோடும் இருக்கக்கடவது. ஆமன்.

* அல்லது ஏற்பாட்டிற்கு.

† அல்லது சற்கிரியையிலும் உங்களில் செய்து.

Digitized by Google

JAMES.

அப்போஸ்தலனாகிய

யாக்கோபு எழுதின

பொதுவான நிருபம்.

க. அதிகாரம்.

க. சோதனைப்பட்டு, ஓ. பொறுமை அடையப் பாபரனை வேண்டிக்கொள்ளவும், ஙக. தம்முடைய சோதனைகளில் உண்டாகும் குறைச்சல்களையும் பாவங்களையும் பாபரன்மேல் வைத்தாமல், ஙஉ. நிருவசனத்துக்குச் செவிகொடுத்துச் சிந்தித்த அதின்படியே நடக்கப் பிரயாசப்படவும், உக. மாயக்காரராகாமல் நேபத்தர்களாயிருக்கவும் எச்சரித்தது.

1பராபரனுக்கும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனுகிய 2யாக்கோபு 3அங்கங்கே சிதறியிருக்கிற 4பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் எழுதுகிறதாவது:

உ ¶ நீங்கள் வாழ்க என் சகோதரரே, 5உங்கள் விசுவாசத்தைப் பரிட்சைபார்த்தல் பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்திருக்கிறபடியால்,

ஊ 6தாண்டுகிற பல துன்பங்களில் நீங்கள் அகப்படும்பொழுது 7அதை மிகுந்த சந்தோஷத்திற்கு ஏதுவாகஎண்ணிக்கொள்ளுங்கள்.

எ நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல் நிறைவுள்ளவர்களாயும் தேறினவர்களாயும் இருக்கத்தக்கதாக அந்தப் பொறுமை நிறைந்த கிரியையையே செய்யக்கடவது.

கி. பி. சுமா.

1 நீத. க. க.
2 அப். உஉ. ஙச: ஙஇ. ஙக. கலா. க. ஙசு: உ. க. பூதா. க.
3 இ மோ. கஉ. உக. யோவா. எ.கஇ. அப் உ. இ: அ. க. க பே. க. க.
4 அப். உக. எ.
5 உரோ. இ. க.
6 க பே. க. க.
7 மத். இ. ஙஉ. அப். இ. எக. எபி. ஓ. கச. க பே. ச. ஙக, ஙக.
8 க இரா. க. க, ஙக, ஙஉ. வாக் உ. க.
9 மத். எ.எ: உக. உஉ. மற். கே. உச. லூக். ஙக. க. யோவா. ஙச.ஙக: ஙஇ. எ: ஙக. உக.
10 எரே. உக. ஙஉ. க யோ. இ. ஙச, ஙஇ.
11 மாற். ஙக. உச. க தீமோ. உ.அ.
12 யாக். ச. அ * அல்லது சத்சோலப்பட.
13 யோபு. ஙச.உ.

1 தீத. க. க.
2 அப். ஙஉ. ஙச: ஙஇ. ஙக. கலா. க. ஙசு: உ. க. பூதா. க.
3 இ மோ. கஉ. உக. யோவா. எ.கஇ. அப் உ. இ: அ. க. க பே. க. க.
4 அப். உக. எ.
5 உரோ. இ. க.
6 க பே. க. க.
7 மத். இ. ஙஉ. அப். இ. எக. எபி. ஓ. கச. க பே. ச. ஙக, ஙக.
8 க இரா. க. க, ஙக, ஙஉ. வாக் உ. க.
9 மத். எ.எ: உக. உஉ. மற். கே. உச. லூக். ஙக. க. யோவா. ஙச.ஙக: ஙஇ. எ: ஙக. உக.
10 எரே. உக. ஙஉ. க யோ. இ. ஙச, ஙஇ.
11 மாற். ஙக. உச. க தீமோ. உ.அ.
12 யாக். ச. அ * அல்லது சத்சோலப்பட.
13 யோபு. ஙச.உ.

ஙு ¶ உங்களில் ஒருவன் தற்புத்தியில் குறைவுள்ளவனுனால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவருமாய் ஒருவனையும் அதட்டாதவருமாயிருக்கிற 9பராபரனிடத்தில் அவன் கேட்கக்கடவன், அப்பொழுது 10அவனுக்குக் கொடுக்கப்படும்.

சு அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் 11விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிக்கப்பட்டு அசைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருப்பானே.

ஙஎ அப்படிப்பட்ட மனிதன் கர்த்தரிடத்திலே எதையாகிலும் பெற்றுக்கொள்வேன் என்று நினையாதிருப்பானுக.

ஙஅ 12இருமனம் உள்ளவன் தன் வழிகள் யாவிலேயும் நிலையற்றவனுய் இருக்கிறுன்.

ஙக ¶ (அன்றியும்) தாழ்மைப்படுகிற சகோதரன் தான் உயர்த்தப்படுவதைக்குறித்து மேன்மைபாராட்டக்* கடவன்.

ஙஇ ஐசுவரியவான் தான் 13புல்லின் பூவைப்போல ஒழிந்துபோவதால், தாழ்மைப்படுவதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்.

Digitized by Google

ய க சூரியன் உதயமாகி வெய்யிலைக் கொடுக்கும்பொழுது, புல் உலர்ந்து அதின் பூ உதிர்ந்து அதின் அழகான வடிவு அழிந்துபோமே; அப்படிப்போல ஐசுவரியவானும் தன் மார்க்கங்களிலே அழிந்து போவான்.

யஉ ¶ [1]சோதனையைச் சகிக்கிற மனிதன் பாக்கியமுள்ளவன்; ஏனென்றால், அவன் உத்தமனுக்கப்பட்ட பின்பு [2]கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின [3]ஜீவகிரீடத்தைப் பெறுவான்.

யங தண்டிவிடப்படுகிற எவனும் பராபரனால் தண்டிவிடப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; பராபரன் பொல்லாங்குகளால்* தண்டிவிடப்படவும், பாவத்திற்கு ஏதுவாக ஒருவனையும் தண்டிவிடவுமாட்டாரே.

யச அவனவன் தன் தன் சுய இச்சையினாலே தண்டி இழுக்கப்பட்டுச் சோதிக்கப்படுகிறான்.

யஞ பின்பு [4]இச்சையானது கருப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும்; பாவம் நிறைவேறின பொழுது [5]அது மரணத்தை உண்டாக்கும்.

யசு ¶ எனக்குப் பிரியமானசகோதரரே, வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக.

யவ [6]எந்த நல்ல ஈவும் நிறைவுள்ள எந்த வரமும் உயரத்தினின்று சுடர்களின் பிதாவினாலே வருகின்றன; [7]அவருக்கு எவ்வளவாகிலும் மாறுதலும் வேற்றுமையின் நிழலும் இல்லை.

யஅ [8]அவர் சித்தமானபடியால் [9]தம்முடைய சிருட்டிகளில் [10]நாம் முதற்பலன்களாகும்படிக்கு நம்மைச் சத்தியத்தின் வசனத்தினாலே சென்னிப்பித்தார்.

யக ¶ ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, [11]யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், [12]பேசுகிறதற்குத் தாமதமாயும்,

உய பராபரனுக்கு ஏற்ற நீதியை மனிதருடைய கோபம் நடப்பிக்கமாட்டாதபடியினாலே [13]கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.

உக ஆகையால் [14]அழுக்கு யாவையும் மிகுதியான பொல்லாங்குகளையும் நீங்கள் தள்ளிவிட்டு, நடப்பட்டதாயும் [15]உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்கத்தக்கதாயும் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.

உஉ ¶ அல்லாமலும் நீங்கள் தப்பான யோசனையினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு வசனத்தைக் கேட்கிறவர்களாய்மாத்திரம் அல்ல, [16]அதின்படி செய்கிறவர்களாயும் இருப்பீர்களாக.

உஊ என்னத்தினாலெனில், [17]ஒருவன் வசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

உச அவன் தன்னைத்தானே பார்த்தபின்பு புறப்பட்டுப்போனவுடனே தான் இருந்தவிதத்தை மறப்பான்.

உடு [18]சுயாதீனத்திற்கு ஏதுவான நிறைவுள்ள பிரமாணத்தை [19]உற்றுப்பார்த்து அதிலே நிலையாயிருக்கிறவனே (அதை) மறந்துபோகத்தக்கதாகக் கேட்கிறவனுமாயிராமல், அதற்கு ஏற்ற கிரியைசெய்கிறவனும் இருந்து, [20]தன் செய்கையில்† பாக்கியவானாயிருப்பான்.

உசு ¶ உங்களில் ஒருவன் [21]தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்துத் தன்னைத் தேவபத்தியுள்ளவன் என்று நினைத்தால், அவனுடைய தேவபத்தி வீணானதாயிருக்கும்.

உஎ [22]தகப்பனற்ற பிள்ளைகளும் கைம்பெண்களும் படுகிற உபத்

இ. பி. சுயி.

1 யோபு. இ. ஙா. வாக்.உ.கூ, ஙஉ. எபி. ஙஉ. இ. வெளி. உ. ஙக.
2 மத். ம. உஉ: ஙக. உஅ, உக. பாக். உ. இ.
3 உ கொரி. சு. உஇ. உ இமோ. ச. அ. பாக். உ. இ. உ பே. இ.ச. வெளி. உ. ம.
* அல்லது பொல்லாப்பால்.
4 யோபு. ஙஇ. உஇ. சங். எஙச.
5 உரோ. க. உக. உக.
6 யோவா. க. உஅ. உ கொரி. ச. எ.
7 உ மோ. உக. ஙக. உ சாமு. ஙஇ.உகஅ.மல்கி. க. க. உரோ. ஙக. உக.
8 யோவா. க. ஙக: க. க. உகொரி.ச. ஙஇ. உ பே. க. உக.
9 உ பே. க. ஙஉ.
10 எரே. உ. க. வெளி. ஙச. ச.
11 பிர.ச. இ. க.
12 லூக். ம. ஙக: ஙஎ. உஎ. பிர. இ. உ.
13 லூக். ஙச. ஙஎ: ஙக. உஉ. பிர. எ. கூ.
14 கொலோ. க. அ. உ பே. உ க.
15 அப். ஙக. உக. உரோ. க. ஙக. உ கொரி. ஙஇ. உ. எபே. க. ஙக. நீத. உ. ஙக. எபி. உ. க. உ பே.க.கூ.
16 மத். எ. உக. லூக் க.சஉ:ஙக. உஅ. உரோ. உ. ஙக உ பேரு. க. எ.
17 லூக். க. சஎ. ழ. யாக்.உ.ஙச.
18 யாக். உ. ஙஉ.
19 உ கொரி. க. ஙஅ.

20 யோவா.ஙக.ஙஎ.—† அல்லது செயலில். —21 சங்.உச.ஙக: உகூ.க. உ பே.க.ம.—22 எரே.க.ஙக,ஙச: ஙஅ.க,எ. மத்.உஇ.உக.

Digitized by Google

நிரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், [1]உலகத்தால் அசுசிப்படாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே, பிதாவாகிய பராபரனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பத்தியாய் இருக்கின்றது.

உ. அதிகாரம்.

க. ஐசுவரியவான்களைமாத்திரம் கனம்பண்ணி ஏழை யை இகழ்வது நிறுத்தமார்க்கத்தற்கு ஒவ்வாது என்றும், கூ. பாவிஷேமும் அன்பையும் இரக்கத்தையும் பாராட்டவேண்டும் என்றும், ஙா. நிரூபை இல்லாத விசுவாசத்தில் பெருமைபாராட்டக்கூடாதென்றும், ஙஎ. அது செத்த விசுவாசமும், ஙகூ. பேய்களுடைய விசுவாசமுமாயிருக்கிறதொழிய, உக. ஆபிரகாம், உஙி. ராகாப் என்பவர்களின் விசுவாசமாய் இருக்கவில்லை என்றும் சொல்லியது.

என் சகோதரரே, [2]மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின்மேல் உள்ள விசுவாசம் உங்களுக்குள்ளே [3]பட்சபாதத்தோடே இராதபடிக்குப் பாருங்கள்.

உ அது எப்படியெனில், பொன் மோதிரத்தையும் பிரகாசமுள்ள வஸ்திரத்தையும் தரித்திருக்கிற ஒரு மனிதனும், கந்தையான வஸ்திரத்தைத் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் செபஆலயத்தில்* பிரவேசிக்கும்பொழுது,

ஊ பிரகாசமுள்ள வஸ்திரத்தைத் தரித்தவனை வணக்கமாய் நோக்கி, நீர் கனமாய் இவ்விடத்தில்† உளுக்காரும் என்றும், தரித்திரனை, நீ அங்கே நில், அல்லது, இங்கே என் பாதப்படியினிடத்திலே உளுக்காரு என்றும் நீங்கள் சொன்னால்,

ஈ உங்களுக்குள்ளே பேதகம் பண்ணித் தூர்ச்சிந்தனைகளோடே நியாயாதிபதிகளானவீர்கள் அல்லவா?

ஙு எனக்குப் பிரியமான சகோதரரே கேளுங்கள், [4]விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் [5]அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின இராச்சியத்தைச்‡ சுதந்தரிக்கிறவர்களாகவும், [6]இவ்வுலகத்தின் தரித்திரனைப் பாபரன் தெரிந்துகொள்ளவில்லையா?

ஈ [7]அப்படியிருக்கும் நீங்கள் தரித்திரனைக் கனஈனம்பண்ணிவருகிறீர்கள்; ஐசுவரியவான்கள் அல்லவோ உங்களை ஒடுக்குகிறவர்கள்; [8]அவர்கள் அல்லவோ உங்களை நியாயாசனங்களுக்குமுன்பாக இழுக்கிறவர்கள்.

எ அவர்கள் அல்லவோ உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கல்லாமத்தைத் தூஷணிக்கிறவர்கள்.

அ [9]உன்மேல் அன்பாயிருக்கிறதுபோலப் பிறனிடத்திலேயும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற இராசரீகமான பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்; [10]பட்சபாதமாய் இருப்பீர்களானால் பாவத்தை நடப்பித்து,

கூ அக்கிரமக்காரரென்று நியாயப்பிரமாணத்தால் கண்டிக்கப்படுவீர்களே.

ஙூ ¶ எப்படியெனில், ஒருவன் வேதனூல் முழுவதையும் கைக்கொண்டாலும், ஒரே பிரமாணத்திற்குத் தப்பிநடந்தால், [11]எல்லாப் பிரமாணங்களுக்கும் விரோதமாய்க் குற்றவாளியாயிருப்பான்.

ஙா என்னத்தினாலென்றால், [12]விபசாரம்பண்ணாதிருப்பாயாக என்று சொன்னவர்தானே கொலைசெய்யாதிருப்பாயாக என்றும் சொன்னார்; ஆனதால், நீ விபசாரம்பண்ணாமல் இருந்தாலும் கொலைசெய்தாயானால் வேதனூலை மீறி நடந்திருப்பாயே.

ஙஎ ¶ [13]சுயாதீனத்திற்கு வதுவான வேதனூலின்படி நியாயத்தீர்ப்பு அடையப்போகிறவர்களாய்ப் பேசியும் செய்தும் இருப்பீர்களாக.

ஙக என்னத்திற்காக என்றால், இரக்கம்செய்யாதவனுக்கு இரக்கமில்லாமல் [14]நியாயத்தீர்ப்புக் கி

கி. பி. சுஙி.

1 உரோ. ஙஉ. உ பார். ச. ச. க பேர. இ. ஙஅ
2 க கொரி. உ. அ.
3 க மோ. ஙசு. ஙஇ. இ மோ. க. ஙக: ஙக. ஙக. வாக். உச.உக: உஅ. உக. மத் உஉ. ஙக. சு. வச. பூதா. ஙக.
* அல்லது கூட்டத்தில்.
† அல்லது ஒரு கல்ல இடத்தில் இல்லே.
4 லூக். ஙஉ. உக. க தீமோ. சு. ஙஅ கொரி. உ. சு.
5 உ மோர. உஙி. க. க சாமு. உ. கூ. வாக். அ. ஙச. மத். இ. சு. லூக். க. உஙி: ஙஉ. கூ.
க கொரி. உ.க. உதீமோ. ச. அ. பார். க. ஙஉ.
‡ அல்லது அந்த இராச்சியத்தை.
6 பேரா. ஏ. சஅ. க கொரி. க. உக, உஅ.
7 க கொரி. ஙக. உஉ.
8 அப். ஙக. இஙி: ஙச.க: ஙஅ.ஙஉ. பார். இ. சு.
9 க மோ. ஙக. ஙஅ. மத். உஉ. கூ. உரோ. ஙக. அ.சு. கலா. இ. ஙச: சு. உ.
10 க. வச.
11 இ மோ. உஏ. உக. மத். இ. ஙக. கலா. க. ஙி.
12 உ மோ. உஙி. ஙக, ஙச.
§ அல்லது சொல்லியிருந்த நியாயப்பிரமாணம்.
13 பார் க. உஇ
14 யோபு. உஉ. க. ழ. வாக். உக. ஙக மத்.சு. ஙஇ: ஙஅ. கஇ: உஇ. சக. சஉ.

Digitized by Google

டைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன் பாக [1]இரக்கம் மேன்மைபாராட்டும்.*

யச ¶ என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்வியும் கிரியைகள் இல்லாதவனானால், [2]அவனுக்கு என்ன பிரயோசனம் வரும்? விசுவாசம் அவனை இரட்சிக்குமா?

யஞ [3]சகோதரன் அல்லது சகோதரி வஸ்திரம் இல்லாதவர்களாயும், நாடோறும் வேண்டிய பிழைப்பில்லாதவர்களாயும் இருக்கும்பொழுது,

யசு [4]உங்களில் ஒருவன் அவர்களைநோக்கி, நீங்கள்சமாதானத்தோடே போய்க் குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லிச் சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால், அதினால் என்ன பிரயோசனம் இருக்கும்?

யஎ அப்படிப்போல விசுவாசமும் கிரியைகள்இல்லாதிருந்தால், யஅ தனியே இருப்பதினாலே† செத்ததாயிருக்கும்; ஒருவன் வந்து உனக்கு விசுவாசம் உண்டு எனக்குக் கிரியைகள் உண்டு, கிரியைகளில்லாமல்‡ உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி; [5]நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே காண்பிக்கிறேன் என்பான்.

யக பராபரன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய்; அப்படிச் செய்கிறது சரிதான்; [6]பசாசுகளும் அப்படி விசுவாசித்து நடுங்குகின்றன.

உய ஆ வீணனே மனிதனே, கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததென்று அறிய விரும்புகிறாயா?

உக [7]நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் ஏற்றிவைத்தபொழுது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்.

கி. பி. சுயி.

1 உ போ. உ. ம.அ, ம.அ.

* அல்லது சந் தோஷப்படும்.

2 மத். எ. உக. பாக். உ. உக.

3 யோபு. கக. மக உ. ம. தூக். உ. மக.

4 உ போ. உ.ம.அ.

† மேலது, தான் மாத்திரம் இருப்பதினாலே.

‡ சில பிரதிகளில் உன் கிரியைகளினால்.

5 பாக். உ. மக.

6 மத். அ. உக. மாற். உ. உச: இ. எ. தூக். உ. உச. அப். மக ம எ: மக. ம இ.

7 உ மோ. உம. உ, ம உ.

8 எபி. மக. ம எ.

9 உ சோ. ம இ. உ. உ சோ. உ.உ. எஸ். உ. உ.

10 உ எஸ். உம. எ.எஸ். சங். அ.

§ அல்லது பார்த்திருக்கிறபடி.

11 யோச. உ. உ. எபி.மக.உக.

‖ அல்லது சவாசம்.

¶ அல்லது தீர்த்தீர்ப்பை.

12 தூக். உ. உஎ.

13 மத். உக. அ. ம உ. உசோ. உ. உம். உக. உபே. இ. உ.

14 உ இரா. அ. சங. உ எஸ். உ. உஎ. எக். உம். உ. பிச. எ. உம். உ யோ. உ. அ.

15 சங். உ. ம. பாக். உ. உக. உ பே. உ. ம.

16 மத். ம உ. உ.

உஉ [8]அவனுடைய விசுவாசம் அவனுடைய கிரியைகளோடே கூட முயற்சி செய்து அந்தக் கிரியைகளினாலே முடிக்கப்பட்டதையும்,

உஊ [9]ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான்; (அது) அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேற்றப்பட்டதையும், [10]அவன் பராபரனுடைய சிநேகிதன் என்னப்பட்டதையும் பார்த்திருக்கிறாயே.§

உச ஆனதால் ஒரு மனிதன் விசுவாசத்தினாலேமாத்திரம் அல்ல, கிரியைகளினாலேயும் நீதிமான் ஆக்கப்படுகிறானென்று அறிவீர்களாக.

உடு அப்படிப்போல [11]வேசியாயிருந்த இராகாப் என்பவள் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபொழுது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்.

உசு ஆகையால் ஆவி‖ இல்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோலக் கிரியைகள் இல்லாத விசுவாசமும் செத்ததாய் இருக்கின்றது.

கூ. அதிகாரம்.

க. சாம் மற்றவர்களைக் கரையும் அகங்காரமாயும் கடிந்துகொள்ளாமல், இ. சன்மைக்கும் தீமைக்கும் ஏதுவாயிருக்கிற நாவை அடக்கவேண்டுமென்றும், உக. மெய்ஞ்ஞானிகள் பலரையும் போராட்டமும் இல்லாமல் சாந்தமும் சமாதானமுமாய் இருக்கிறார்களென்றும் சொல்லியது.

என் சகோதரரே, அதிக ஆக்கினையை¶ அடைவோம் என்று [12]நாம் அறிந்திருக்க, (உங்களில்) [13]அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.

உ [14]நாம் எல்லாரும் அநேகவிதமாய்த் தவறுகிறோம்; [15]சொல்தவறாமல் இருக்கிறவனே [16]தேறினவனும் தன் சரீரம் அனைத்தையும் (ஞானக்) கலினத்தினாலே அடக்கிக்கொள்ளுகிறவனுமாயிருக்கிறான்.

Digitized by Google

கூ குதிரைகளைப் பாருங்கள்,

அவைகள் நமக்குக் கீழ்ப்படியும் படிக்கு [1]வாய்களில் கலினங்களைப் போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் கடத்துகிறோம்.

ச கப்பல்களையும் பாருங்கள்; அவைகள் இவ்வளவு பெரியவைகளாய்க் கடும் காற்றுக்களால் அடிக்கப்பட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படியோ சிக்கும் இடம் எவ்விடமோ அவ்விடத்திற்கு மிகவும் சிறிதான சுக்கானலே திருப்பப்படும்.

ஞ அப்படிப்போல [2]நாவானதும் சிறிய அவயவமாய் இருந்தும் [3]பெருமையானவைகளைச் செய்யும்; கொஞ்ச நெருப்பைப் பாருங்கள்; அது எத்தனை பெரிய காட்டைக்* கொளுத்துகின்றது; [4]நாவே நெருப்பு.

சு அது அநீதியினால் நிறைந்த லோகம்; அந்தப்படி நாவு நம்முடைய அவயவங்களுக்குள் இருந்து, [5]முழுச் சரீரத்தையும் கறைப்படுத்துகிறதாயும், சுபாவமுறைமையைக்† கொளுத்துகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கின்றது.

எ எல்லாக்‡ காட்டு மிருகங்களுக்கும், பறவைகளுக்கும், ஊர்வனவைகளுக்கும் நீரிலுள்ள செந்துக்களுக்கும் உண்டாயிருக்கிற சுபாவம் கீழ்ப்படியப்பண்ணப்படும்; அப்படி மனிதருடைய சுபாவத்தால்§ கீழ்ப்படியப்பண்ணப்பட்டது உண்டு.

அ நாவைமாத்திரம் ஒரு மனிதனும் கீழ்ப்படுத்தமாட்டான்; அது அடங்காத பொல்லாங்குள்ளதுமாய் [6]சாவுக்கேற்ற விஷத்தால் நிறைந்ததுமாய் இருக்கிறது.

கூ பிதாவாகிய பராபரனை நாம் அதினாலே தோத்திரிக்கிறோம்; [7]பராபரனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதனை அதினாலே சபிக்கிறோம்.

ஐ ஆசீர்வதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகின்றன; என் சகோதரரே, இப்படி இருக்கக்கூடாது.

ஒக ஊற்றில் ஒரே தவாரத்திலிருந்து‖ நித்திப்பும் கசப்புமுள்ள தண்ணீர் சுரக்குமா?

ஒஉ என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், அல்லது திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படிப்போல உவர்ப்பான ஊற்று நித்திப்பான சலத்தைக் கொடுக்கவும் மாட்டாது.

ஒங ¶ [8]உங்களில் ஞானியுமாய் அறிவுள்ளவனுமாய் இருக்கிறவன் எவனே, அவன் ஞானத்திற்குரிய [9]சாந்தத்தோடே [10]தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.

ஒச உங்கள் இருதயத்திலே [11]கசப்பான வயிராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்துக்கொண்டால், [12]நீங்கள் மேன்மைபாராட்டாமலும் சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்யைச் சொல்லாமலும் இருப்பீர்களாக.

ஒடு [13]அப்படிச்செய்கிறது உபரத்திலிருந்து வருகிற ஞானமல்ல, அது இந்தப் பூமிக்கும் மிருகசீவனுக்கும்¶ பேய்க்கும் உரித்தானது.

ஒசு [14]வயிராக்கியமும் விரோதமும் எங்கேயோ அங்கே கலக்கமும்** சகலவிதமான தூர்ச்செய்கைகளும் உண்டே.

ஒஎ [15]உயரத்திலிருந்து வருகிற ஞானம் முதலாவது, கற்புள்ளதுமாய், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமும் உள்ளதுமாய், இரக்கத்தாலும் கற்கிரியைகளாலும் நிறைந்ததுமாய், பட்சபாதம்†† இல்லாததுமாய், [16]வஞ்சனை இல்லாததுமாய் இருக்கின்றது.

ஒஅ இப்படிச் சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்தோடே [17]நீதியாகிய கனி விதைக்கப்படுகின்றது.

கி. பி. கூ௰.

1 சங். ௩௨. ௯
2 யாக். ௩:௫. மத்: ௧௫. ௨.
3 சங். ௰௨. ௪: எசே. ஆ. ௯.
* அல்லது வன தலை.
4 யாக். ௩:௬. ஏ.
5 மத். ௧௫. ௰, ௰அ. ௫, ௨௰. ஈசா. எ. ௧௫. ௨௪. ௨௯.
† ஓரேக்கு, உருவை.
‡ ஓரேக்கு, எல்லாச் சாவமான.
§ அல்லது எல்லா மனிதரால்.
6 சங். ௫௮. ௪.
7 ௧ Cor. ௧௧:௭: ஞா: ௯: ஈசா. ஈ.
‖ அல்லதுஇடத்தில்.
8 எலா. ௯. ச.
9 யாக். ௩. ஏ. ௨௪
10 யாக். உ. ௧அ.
11 உரோ. ௧௦:௧௯.
12 உரோ. உ:௧௭, ௨௯.
13 பிலி. ௩. ௰௯. யாக். ௩. ௧௫.
¶ அல்லது சபைவசத்திற்கும்; யூத. ௰௯.
14 ௧ கொரி. ௩. ௩. எலா. ஐ. உ௰.
** ஓரேக்கு, சண்டையும்.
15 ௧ கொரி. உ. ௧, ஏ.
†† அல்லதுசண்டைபிடித்தல்.
16 உரோ. ௧௨. ௯. ௧ பே. ௩. ௨௨: உ. ௩. ௧ யோ. ௩. ௧அ.
17 மாத் ௫. ௧அ. ஓசே. ஐ. ௧௨. மத் ஞ. ௯. பிலி. ௩. ௧௫. எபி. ௧௨. ௧௫.

ச. அதிகாரம்.

க. பொருளாசை, ச. அசத்தம், இ. பொறுமை, கே. மற்றவர்மேல் குற்றமாய் திருஷ்டிக்கிற குணமுதலியவைகளை நீக்கி, உக. லவுகீக அலுவல்களில் சற்பலன் அடைவதை சம்பாமல், இச்சீவன் அநித்தியமென்று உணர்த்து சம்மையும் சம்முடைய சகலகஷ்டமும் பாபனுடைய பராமரிப்புக்கு ஒப்புக்கொடுக்கச் சொல்லியது.

உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும்* எதினாலே வருகின்றன; உங்கள் அவயவங்களில் [1]போர்செய்கிற செல்வத்திற்கு ஏற்ற இச்சைகளால்† அல்லவோ வருகின்றன?

உ நீங்கள் இச்சித்தும் உங்களுக்கு அகப்படுகிறதில்லை; நீங்கள் கொலைசெய்தும்‡ துணிவுள்ளவர்களாயிருந்தும் (இஷ்டப்படி) அடையாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், விண்ணப்பம்பண்ணுமல் இருக்கிறதால் உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.

ஊ உங்கள் இச்சைகளுக்கு§ ஏற்றதாகச் செலவழிக்கும்படிக்குத் [2]தர்க்குணமாய் விண்ணப்பம் பண்ணுகிறதால் [3]நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறீர்கள்.

எ ¶ ஆ [4]விபசாரரே, விபசாரிகளே, [5]உலகத்தோடே சிநேகமாயிருக்குதல் பராபரனுக்கு விரோதமான பகையாய் இருக்கின்றதென்று நீங்கள் அறியவில்லையா? ஆகையால் [6]உலகத்திற்குச் சிநேகமாயிருக்க விரும்புகிறவன் பராபரனுக்குப் பகைஞனாயிருக்கிறான்.

ஏ அல்லது வேதநூல் வீணாய்ச் சொல்லுகிறதென்றும், [7]நம்மிடத்தில் வாசமாயிருக்கிற ஆவியானவர் பொறுமைக்கு ஏதுவாக‖ இச்சிக்கிறார் என்றுமா நினைக்கிறீர்கள்.

ஐ அவர் அநிகதயவை அநுக்கிரகம் செய்கிறாரே, ஆனபடியால்

இ. பி. சுமை.

* அல்லது கடகுரதும்; க. வசனம்.

† அல்லது இன்பங்களால்; க. வசனம்.

‡ அல்லது பொறுமைப்பட்டும்.

§ அல்லது இன்பங்களுக்கு.

1 உரோ. எ. உக. கலா. இ. மெ. க பே. உ. மக.

2 சங். கக. மஅ. க யோ. க.உஉ: இ. மச.

3 யோபு. உள். க: கஇ. மஉ. சங். மஅ. சக. வாக். க. உஅ. எசா. க. மஇ. எரே. மக. மக. மீகா.க.ச. சகரி. எ. மக.

4 சங். எக. உள.

5 க யோ. உ.மஇ.

6 யோவா. மஇ. மசு: மள. மச. கலா. க. ம.

7 க மோ. க. இ: அ.உக. ச மோ. மக. உசு. வாக். உக.ம.

‖ அல்லது பொறுமையாய்.

8 யோபு. உஉ. உக. சங்.சுஅ. க. வாக்.க கச: உசு. உக. மத். உக. மஉ. லூக். க. இஉ: மச. மசு: மஅ. மச. க பே இ. இ.

9 எபே. ச. உள: க. மக. க பே. இ. க.

10 உ எஸ்ரா. மஇ. உ.

11 எசா. க. மக.

12 யாக். க. அ.

13 க பே க.உஉ. க யோ. க. க.

14 மத். இ. ச.

15 யோபு. உஉ. உசு. மத். உக. மஉ. லூக். மச. ம: மஅ. மச. க பே. இ. க.

16 எபே. ச. சக. க பே. உ. க.

[8]அகந்தையுள்ளவர்களுக்குப் பராபரன் விரோதித்து, மனத்தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையை அளிக்கிறாரென்று சொல்லுகிறார்.

எ ஆகையால் பராபரனுக்குக் கீழ்ப்படியுங்கள்; [9]பசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.

அ பராபரனைச் [10]சேருங்கள், அப்பொழுது அவரும் உங்களைச் சேர்வார்; ஆ பாவிகளே, [11]உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கள்; [12]இருமனமுள்ளவர்களே, [13]உங்கள் இருதயங்களைப் பரிசுத்தம் செய்யுங்கள்.

இ நீங்கள் உபத்திரவப்பட்டுத் துக்கமடைந்து அழுங்கள்; [14]உங்கள் நகைப்பு துக்கப்படுதலாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.

ஈ கர்த்தருக்குமுன்பாகத் [15]தாழ்மைப்படுங்கள், அப்பொழுது உங்களை உயர்த்துவார்.

ஈக ¶ சகோதரரே, [16]ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருப்பீர்களாக, சகோதரனுக்கு விரோதமாய்ப்பேசித் [17]தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப் பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்தினால் நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாய் இராமல் அதற்கு நியாயாதிபதியாய் இருப்பாய்.

ஈஉ நியாயப்பிரமாணத்தைக்கட்டளையிடுகிறவர் ஒருவரே; [18]அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லமையுள்ளவர்; [19]மற்றொருவனைக் குற்றப்படுத்துகிற நீ யாவன்?

ஈஊ ¶ மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன இன்ன பட்டணத்திற்குப் போய்,

Digitized by Google

17 மத்.எ.க லூக்.க.கஎ. உரோ.உ.க. க கொரி.ச இ. — 18 மத்.ம.உ,ஏ. — 19 உரோ. மச. ச, மக.

அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரம்பண்ணி ஆதாயம் பெறுவோம் என்கிறவர்களே [1]கேளுங்கள்.

யச நாளைக்கு நடப்பதை அறியாமல் இருக்கிறீர்களே; உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது?* கொஞ்சநேரம் தோன்றிப் பின்பு தோன்றாமல் போகிற [2]புகையைப்போல இருக்கிறதே.

யஞ மேற்சொல்லியதற்குப் பதிலாக நீங்கள் [3]ஆண்டவருக்குச் சித்தமானால் நாங்களும் உயிரோடிருந்தால் இப்படிச் செய்வோம் என்று சொல்லவேண்டும்.

யசு இப்பொழுது உங்கள் வீம்பான பேச்சுகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; [4]இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.

யஎ ஆனதால் [5]ஒருவன் நன்மை செய்ய அறிந்திருந்தும் அப்படிச் செய்யாவிட்டால் அவனுக்குப் பாவம் உண்டாயிருக்கும்.

ரு. அதிகாரம்.

க. அக்கிரமக்காரராகிய ஐசுவரியவான்கள் பராபரமுடைய கோபாக்கினைக்கு அஞ்சவும், எ. நீக்கதரிசிகளும் யோபும் சகித்தபடியே சாமும் துன்பக்கிலேசப் பொறுமையோடே சகிக்கவும், மஉ. சத்தியம் பண்ணாமல் இருக்கவும், மக. தரித்திரத்தில் வேண்டிக்கொள்ளவும், செல்வத்தில் பாடவும், மசு. குற்றஞ்சாட்டின ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் செபம்பண்ணவும், மக. சத்தியத்துக்கு விலகிப்போன சகோதரனைச் சீர்ப்படுத்தவும் சொல்லியது.

பின்னும் ஐசுவரியவான்களே, [6]கேளுங்கள்; உங்கள்மேல் வருகிற உபத்திரவங்களின் நிமித்தம் அலறி அழுங்கள்.

உ உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் [7]வஸ்திரங்கள் பொட்டுப்பூச்சியினால் தின்னப்பட்டுப் போயின.

ஊ உங்கள் பொன்னையும் வெள்ளியையும் பாசிபிடித்தது; அவைகளிலுள்ள பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாய் இருந்து, அக்கினியைப்போல உங்கள் சரீரங்களைத் தின்னும்; [8]கடைசி நாள்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.

எ பாருங்கள், உங்கள் வயல்களை அறுத்த [9]வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய் வைக்கப்பட்டுக் கூப்பிடுகின்றது; அறுத்தவர்களுடைய [10]கூக்குரலும் சேனைகளையுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது.

ஏ [11]பூமியிலே நீங்கள் செல்வத்தோடும் சம்பிரமத்தோடும் சீவனம் பண்ணினீர்கள்; சிதைப்பு காலுக்காகச் செய்கிறதுபோல உங்களைக் கொழுப்பாக்கினீர்கள்.

ஐ உங்களுக்கு விரோதமாய் கீழ்லாத [12]தீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்.

ஒ ¶ இப்படியிருக்கச் (சகோதரரே,) கர்த்தர் வருமளவும் தீடிய பொறுமையாய்† இருங்கள்; பாருங்கள், பூமியின் விலையேறப் பெற்ற கனியை அடையவேண்டுமென்று இருக்கிற குடியானவன் [13]முன்மாரியும் பின்மாரியும் வருமளவும் நீடிய பொறுமையாய்க் காத்திருக்கிறான்.

ஓ நீங்களும் நீடிய பொறுமையாய் இருந்து, [14]கர்த்தர் வருகை சமீபமாயிருக்கிறபடியால் உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவீர்களாக.

ஔ ¶ சகோதரரே, நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு ஒருவருக்கு விரோதமாய் [15]ஒருவர் பெருமூச்சு விடாதிருங்கள்;‡ [16]நியாயாதிபதி கதவுக்கு முன் நிற்கிறாரே.

ஃ என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகள் துன்பப்பட்டு நீடிய பொறுமையாயிருந்தால், அவர்களை உங்களுக்கு மாற்கத்தைக் காண்பிக்கிறவர்கள் என்று [17]எற்றுக்கொள்ளுங்கள்.

கி. பி. கூ.

1 வச. உ. க. லூக். ஊ. ஹஅ. ழ.
* அல்லது எனென்றால் சொல்லத்தக்கது.
2 போது. எ. எ. சங். ஈஉ. க. யாக். க. ம. க பே. க. உ. க பேர். உ. மஎ.
3 அப். ஹஅ. உக. க கொரி. சு. மக: மக. எ. எபி. க. க.
4 க கொரி. ஆ. க.
5 லூக். ஊ. சஎ. பேரா. க. சக: ஹஇ. உஉ. உரோ. க. உம, உக, கஉ: உ. மஎ, ஹஆ உக.
ச அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாமல் [7]அவனை அறிந் துகொண்டேன் என்று சொல்லு கிறவன் [8]பொய்யனாய் இருக்கி

கி. பி. கயி.

1 க யோ. உ. ச.
2 சங். கூஉ. இ. வாக். உஅ. ஙக.
3 சங். ஙக. உ. எ. ஙச.
4 உரோ. அ. கச. க திமோ. உ.ஙி எபி. எ. உஙி: க. உச.
5 உரோ. க.உஙி. உ கொரி. ஙி. மஅ. க யோ.க. எ: ச. ட.
6 யோவா. க. உக: ச. சஉ: ஙக. ஙக. ஙஉ. க யோ. ச. ஙச.
7 க யோ க. க: ச. உஙி.
8 க யோ. க. அ.
9 யோவா. ஙச. உக, உக.
10 க யோ.ச.ஙஉ.
11 க யோ. ச.ஙக.
12 யோவா. ஙஇ. ச, ஙி.
13 மத். ஙக. உக. யோவா. ஙக. ஙஇ. க பே. உ. உக.
14 உ யோ. ஙி.
15 க யோ.க.ஙக. உ யோ. ஙி.
16 யோவா. ஙக. கச: ஙஇ. ஙஉ.
17 உரோ. ஙக. ஙஉ. எபே. ஙி. அ. க தெச. ஙி. ஙி. அ.
18 யோவா.க க: அ. ஙஉ: ஙஉ. கஙி.
19 க கொரி. ஙக. உ. உ பே. க. க. க யோ. க. ஙச, ஙஇ.
20 க யோ.க.ஙச.
21 உ பே க. ஙி.
* அல்லதுஇடறப்பண்ணுதல்.
22 யோவா. ஙஉ. கஙி.
23 லூக்.உச.சக அப். ச ஙஉ: ஙி.சக: ஙக. கஅ. க யோ. க. எ.
24 க யோ. க. க.

ருன்; சத்தியம் அவனுக்குள்ளே இல்லை.

ஙி [9]அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்திலே [10]பராபரனுடைய அன்பு மெய்யா கநிறைவேறியிருக்கின்றது; [11]நாம் அவருக்குள் இருக்கிறதை அதினா லே அறிந்திருக்கிறோம்.

கூ [12]அவரிடத்தில் நிலைத்திருக்கி றேன் என்று சொல்லுகிறவன் அ வர் நடந்தபடியே [13]தானும் நடக்க வேண்டும்.

எ ¶ பிரியமானவர்களே, [14]நான் உங்களுக்குப் புதிய கற்பனையை அல்ல, [15]ஆதிமுதல் நீங்கள் பெற் றிருக்கிற பழமையான கற்பனை யையே எழுதுகிறேன்; அந்தப் பழமையான கற்பனை நீங்கள் ஆ திமுதல் கேட்டுக்கொண்ட வச னமே.

அ அன்றியும் [16]நான் உங்களுக் குப் புதியகற்பனையையும் எழுது கிறேன்; [17]இருள் நீங்கிப்போக [18]மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறபடியால், இது அவ னைக்குறித்தும்உங்களைக்குறித்தும் மெய்யாயிருக்கின்றது.

கூ தன் சகோதரனைப் பகைத்து, [19]அந்த ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லுகிறவன் இதுவ ரைக்குமே இருளில் இருக்கிறான்.

ய [20]தன் சகோதரனிடத்தில் அ ன்புகூருகிறவன் ஒளியிலே நிலை கொண்டிருக்கிறான்; [21]இடறல்* அவனிடத்திலே இல்லை.

யக தன் சகோதரனைப் பகைக்கி றவன் இருளிலேயிருந்து [22]இரு ளிலே நடந்து இருளானது தன் கண்களைக் குருடாக்கினபடியா ல், தான் நடக்கிற இடம் இன்ன தென்று அறியாமல் இருக்கிறான்.

யஉ ¶ பிள்ளைகளே, அவருடைய நாமத்தின்நிமித்தம் உங்கள் [23]பா வங்கள் மன்னிக்கப்படுகிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்.

யஊ பிதாக்களே, [24]ஆதிமுத லாய் இருக்கிறவனை நீங்கள் அறிந்

Digitized by Google

திருக்கிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்; வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் செயித்ததால் உங்களுக்கு எழுதுகிறேன்; குழந்தைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதால் உங்களுக்கு எழுதுகிறேன்.

யச பிதாக்களே, ஆதிமுதலாய் இருக்கிறவனை நீங்கள் அறிந்திருக்கிறதால், உங்களுக்கு எழுதினேன்; வாலிபரே, தேவவசனம் உங்களிடத்தில் தரித்திருக்க, நீங்கள் [1]பெலனுள்ளவர்களாய்ப் பொல்லாங்கனைச் செயித்ததால் உங்களுக்கு எழுதினேன்.

யசு ¶ [2]உலகத்திலேயும், உலகத்தில் உள்ளவைகளிலேயும் அன்பு கூராதிருப்பீர்களாக; [3]உலகத்தில் அன்புகூருகிறவன் பிதாவின் மேல் அன்பில்லாதவனாய் இருக்கிறான்.

யசு எப்படியெனில், மாம்சத்தின் இச்சையும் [4]கண்களுடைய இச்சையும் சீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள இவையெல்லாம் பிதாவினால் உண்டாயிராமல், உலகத்தினால் உண்டாயிருக்கின்றன.

யஎ [5]உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகும், பராபரனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைநிற்பான்.

யஅ ¶ [6]குழந்தைகளே, (இது) [7]கடைசி நேரமாய் இருக்கின்றது; [8]கிறிஸ்துவின் எதிராளி வருகிறான் என்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறபடி, [9]இப்பொழுதே கிறிஸ்துவின் எதிராளிகள் அநேகர் உண்டாயிருக்கிறார்கள்; [10]அதினாலே இது கடைசிநேரமாயிருக்கிறது என்று அறிகிறோம்.

யக அவர்கள் [11]நம்மிடத்திலிருந்து புறப்பட்டார்கள்; ஆகிலும் அவர்கள் நம்மைச் சேர்ந்தவர்களல்ல, [12]நம்மைச் சேர்ந்தவர்களாய் இருந்தார்களானால் நம்முடனே தரித்திருப்பார்களே; [13]எல்லாரும் நம்மைச் சேர்ந்தவர்களல்ல என்று வெளியாகும்படிக்கே (புறப்பட்டார்கள்).

கி. பி. கயி.

1 எபே. உ. ம.
2 உரோ. மூ.உ.
3 மத். உ. உச. லூ. உ.ம். யாக். உ. உ.
4 பிர ஞா. ம
5 உ கொரி. எ உத. யாக். உ.ம்: உ. ம. உ.பே. உ. உச.
6 யோவா. உ. ஞா.
7 எபி. உ. உ.
8 உ தெச. உ.உ. மி. உபே.உ.உ. உ யோ. உ. உ.
9 மத். உச. ஞ, உச. உயோ.எ.
10 உதீமோ. உ.உ. உதீமோ உ. உ.
11 ஞ மோ. ம்ம. ம்ம. சங். உ.உ. அப். உம். கம்.
12 மத். உச. உச. போவா. உ.உஅ: ம. உஅ. உக. உதீமோ. உ. மக.
13 உ கொரி. ம்ம. மக.
14 மாற். உ. உச. அப். உ. ம.
15 உ கொரி. உ. உக. எபி. உ. உ. உள. வச.
16 போவா. ம.ச, ஞ: ம. உக: மக. ம்ம. உள. வச.
17 உ யோ ச. உ. உ யோ. எ.
18 போவா. மஞ. உக. உயோ.உ.
19 போவா. ம. ஈ, ஊ, ம உ யோ. ச. மஞ.
20 உ யோ. உ.
21 போவா. ம. உ. உ யோ. உ. உ.
22 போவா மா உ. உ யோ. உ. உ: ஞ. மக
23 உ யோ. உ. எ. உ யோ. எ.
24 உம. வச.
25 எரே. உக. உக, உச. எபி. அ. ம. மக.
26 போவா. ம. உக: மக. ம்ம. உம. வச.

[14]நீங்கள் பரிசுத்தராலே [15]அபிஷேகத்தைப் பெற்று, [16]சகலத்தையும் அறிந்திருக்கிறீர்கள்.

உக சத்தியத்தை நீங்கள் அறியாததாகவல்ல, நீங்கள் அதையும், சத்தியத்தால் ஒரு பொய்யும் உண்டாயிராதென்பதையும் அறிந்திருக்கிறபடியால், உங்களுக்கு எழுதினேன்.

உஉ இயேசு என்பவர் கிறிஸ்துவல்ல என்று மறுதலிக்கிறவனேயன்றி [17]வேறு யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே கிறிஸ்துவுக்கு எதிராளியானவன்.

உஊ [18]குமாரனை மறுதலிக்கிறவன் பிதாவை உடையவன் அல்ல, [19]குமாரனை அறிக்கைபண்ணிக்கொள்ளுகிறவன் பிதாவையும் உடையவனாய் இருக்கிறான்.

உச ¶ ஆகையால், [20]ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருக்கக்கடவது; ஆதிமுதல் நீங்கள் கேள்விப்பட்டது உங்களில் நிலைத்திருந்தால், [21]நீங்களும் குமாரனிலும் பிதாவிலும் நிலைத்திருப்பீர்கள்.

உஎ அவர் நமக்கு வாக்குத்தத்தம்பண்ணின பொருள் [22]நித்திய சீவனே; [23]உங்களை வஞ்சிக்கத் தேடுகிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதினேன்.

உசு அப்படியிருந்தும், நீங்கள் அவராலே பெற்ற [24]அபிஷேகம் உங்களில் நிலைகொண்டு இருக்கிறதால் [25]ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை.

உஏ அந்த [26]அபிஷேகம் சகலகாரியங்களையும்குறித்து உங்களுக்குப் போதிக்கிறதே பொய்யில்லாமல் சத்தியமாயிருக்கின்றது; ஆகையால் அது உங்களுக்குப்

Digitized by Google

போதித்தபடியே அவரில்* நிலைத்திருப்பீர்களாக.

உஅ ¶ இப்படியிருக்கப் பிள்ளைகளே, [1]அவர் வெளிப்பட்டுப் பிரசன்னமாய் வரும்பொழுது, நாம் அவரால் [2]வெட்கப்படுத்தப்படாமல் தயிரியமுள்ளவர்களாய் இருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்.

உக [3]அவர் நீதியுள்ளவராய் இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க, [4]நீதியைச் செய்கிறவன் எவனே அவன் அவரில் பிறந்தான் என்று அறிந்திருக்கிறீர்கள்.†

ரு. அதிகாரம்.

க. நாம் தமக்குப் பிள்ளைகளாகும்படி பராபரன் தம்மிடத்தில் வைத்த அன்பு இன்னதென்றும், உ. அதினால் நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, ரு. ஒருவரில் ஒருவர் அன்புகூர வேண்டுமென்றும் சொல்லியது.

[5]நாம் பராபரனுடைய பிள்ளைகள் என்று [6]அழைக்கப்படும்படி (செய்ததினாலே) பிதாவானவர் நமக்குக் காண்பித்த மிகுந்த அன்பை நோக்கிப்பாருங்கள்; [7]உலகத்தார் அவனை அறியாதபடியினாலே நம்மை அறியாமல் இருக்கிறார்கள்.

உ பிரியமானவர்களே, [8]இப்பொழுது பராபரனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்; (இனிமேல்) இன்ன இன்னவிதமாய் இருப்போம் என்று [9]இன்னம் வெளியரங்கமாகவில்லை; (ஆகிலும்) அவர் வெளிப்படும்பொழுது, அவர் இருக்கிறதன்மையாய் நாம் (அவனைத் தரிசிப்பதால்,) [10]அவருக்கு ஒப்பாயிருப்போம் என்று அறிந்திருக்கிறோம்.

கூ ¶ மேலும் இப்படி [11]அவர் மேல் நம்பிக்கையாயிருக்கிறவன் எவனே அவன் அவர் சுத்தமுள்ளவராய் இருக்கிறதுபோலத் தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான்.

சா பாவம்செய்கிறவன் எவனே அவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதம்செய்கிறான்; [12]பாவமானது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாயே இருக்கின்றது.

ஞ அன்றியும் நீங்கள் அறிந்துகொண்டபடி [13]அவர் நம்முடைய பாவங்களை நீக்கும்படிக்கு [14]வெளிப்பட்டார்; [15]அவரிடத்திலே பாவம் இல்லை.

சு அவரிடத்தில் நிலைத்திருக்கிறவன் எவனே அவன் பாவம் செய்கிறதில்லை; [16]பாவம்செய்கிறவன் எவனே அவன் அவனைக் காணவும் இல்லை, அவனை அறியவும் இல்லை.

எ ¶ பிள்ளைகளே, [17]நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருப்பீர்களாக; [18]நீதியைச் செய்கிறவன் அவர் நீதி உள்ளவராயிருக்கிறதுபோல நீதி உள்ளவனாயிருக்கிறான்.

அ பசாசானவன் ஆதிமுதல் பாவம்செய்கிறான்; ஆகையால் [19]பாவம்செய்கிறவன் பசாசினால் உண்டாயிருக்கிறான்; அந்தப் [20]பசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்குப் பராபரனுடைய குமாரன் வெளிப்பட்டார்.

கூ [21]பராபரனில் பிறந்தவன் எவனே அவனுக்குள்ளே [22]அவருடைய வித்து தரித்திருக்கிறதால் அவன் பாவம்செய்யான்; அவன் பராபரனிடத்திலே பிறந்தபடியால் பாவம்செய்யமாட்டான்.

ஏ ¶ இதினாலே பராபரனுடைய பிள்ளைகளும் பசாசின் பிள்ளைகளும் வெளியரங்கமாகிறார்கள்; [23]நீதியைச் செய்யாமலும் [24]தன் சகோதரனிடத்தில் அன்புகூராமலும் இருக்கிறவன் எவனே அவன் பராபரனால் உண்டான

* அல்லது அதில்.

1 க பே. உ. உ.
2 க யோ. ச. ஏ.
3 அப். உஉ. ஏச.
4 க யோ. உ. எ,ஏ.
† அல்லது அறிவுள்ள்.
5 யோவா. க. ஏஉ.
6 யோவா. ஏஅ. ஏஅ, ஏக: ஏக. க: ஏஎ. உஅ.
7 எசா. கூ. அ. உரோ. அ ஏஅ. எஎர. க. உக: ச க. க யோ. அ க.
8 உரோ. அ. ஏஅ. உ கொரி. ச. ஏஎ.
9 யோபு. ஏக. உக. சங். ஏக. ஏக. மத். அ.அ. க கொரி ஏக. ஏஉ. உ கொரி. அ. அ.
10 உரோ. அ. உக. க கொரி. ஏஅ.சக. பிலி. க. உக. கொலோ. க. ச. உ பே. க. ச.
11 க யோ. ச ஏஎ.
12 உரோ. ச.ஏஅ. க யோ. அ. ஏஎ.
13 எசா. கூ. அ, க,ஏக க தீமோ க.ஏஅ. எபி. க. க: க. உக. க பே. உ. உச.
14 க யோ. க. உ.
15 உ கொரி. அ உக. எபி. ச. ஏஅ: க. உஅ க பே. உ.உஉ.
16 க யோ.உ. ச: ச. அ. க யோ. ஏக.
17 க யோ. உ. உக.
18 எசே. ஏஅ. அ—க. உரோ. உ.ஏக. க யோ. உ. உக.
19 மத். ஏக க.அ. யோவா. அ. ச ச.

20 க மோ.க.ஏஅ. தூக்.ஏ.ஏஅ. யோவா ஏக.ஏக. எபி உ ஏச.—21 க யோ.அ.ஏஅ.—22 க பே.க.உக.
23 க யோ. உ.உக.—24 க யோ.ச.அ.

Digitized by Google

வன் அல்ல; என்னத்தினாலென்றால்,

ஐக [1]நாம் ஒருவரில் ஒருவர் அன்புகூரவேண்டும் என்பது நீங்கள் ஆதிமுதல் [2]அறிவிக்கக் கேட்டவிசேஷமாய்* இருக்கின்றது.

ஐஉ பொல்லாங்கனால் உண்டாயிருந்து, தன் சகோதரனைக் கொலைசெய்த [4]காயீனைப்போல இருக்கக்கூடாது; அவன் எதின்நிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளுமாய்த் தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாய் இருந்ததின்நிமித்தமே அப்படிச் செய்தான்.

ஐஊ என் சகோதரரே, [4]உலகத்தார் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருப்பீர்களாக.

ஐச நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால் [5]மரணத்தைவிட்டு நீங்கிச் சீவனுக்குட்பட்டிருக்கிறோம்என்று அறிந்திருக்கிறோம்; [6]சகோதரனிடத்தில் அன்புகூராமல் இருக்கிறவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்.

ஐ஋ [7]தன் சகோதரனைப் பகைக்கிறவன் மனித கொலைபாதகனாய் இருக்கிறான்; [8]மனித கொலைபாதகன் எவனே அவனுக்குள்ளே நித்திய சீவன் நிலைத்திராது என்று அறிந்திருக்கிறீர்கள்.

ஐசு ¶ அவர் தம்முடைய சீவனை நமக்காக விட்டுவிட்டதினாலே [9]அன்பு இன்னதென்று அறிந்தோம்; நாமும் சகோதரருக்காக நமது சீவனை விட்டுவிடக் கடனாளிகளாய் இருக்கிறோம்.

ஐள ஒருவன் [10]இவ்வுலக சீவனம் உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால் [11]அவனுக்குள்ளே பராபரனுடைய அன்பு எப்படி நிலையாயிருக்கும்?

ஐஅ என் பிள்ளைகளே, [12]வசனத்தினாலும் நாவினாலும் அல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

ஐக ¶ அதினாலே [13]நாம் சத்தியமுள்ளவர்கள் என்று அறிந்து, நமது இருதயத்தை அவருக்குமுன்பாக நிச்சயப்படுத்தலாம்.†

ஐஉ [14]நமது இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், நம்முடைய இருயத்திலும் பராபரன் பெரியவராய் இருக்கிறார் என்றும், சகலத்தையும் அறிந்திருக்கிறார் என்றும் (நினைப்போமாக).

ஐக [15]பிரியமானவர்களே, [16]நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகள் என்று தீர்ப்புச்சொல்லாதிருந்தால், நாம் பராபரனிடத்தில் தயிரியம்கொள்வோம்.

ஐஉ மேலும் அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு, [17]அவருக்குமுன்பாக பிரியமானவைகளைச்செய்கிறபடியினாலே, [18]நாம் வேண்டிக்கொள்வது எதோ, அதை அவராலே பெற்றுக்கொள்வோம்.

ஐஊ நாம் [19]அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமாயிருந்து, [20]அவர் நமக்குக் கட்டளையிட்டபடி [21]ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவேண்டுமென்ற இதுவே பராபரனுடைய கட்டளையாய் இருக்கின்றது.

ஐச [22]அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் [23]அவரிடத்தில் நிலைத்திருக்கிறான்; அவரும் அவனிடத்தில் நிலைத்திருக்கிறார்; [24]அவர் நம்மிடத்தில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத்

நி. பி. கூ.

1 போவா. ஐக. கச: ஐஇ. ஐஉ. உக. வசனம். க போ. ச. எ, உக. உ போ. இ.

2 க போ. க. இ. உ. எ.

* அல்லது கட்டளையாய்.

3 க மே. ச. ச, அ எபி. உக. ச. தூ. ஐக.

4 போவா. ஐஇ. ஐஅ, ஐக: ஐக. ஐச. உ நீமே. க. ஐஉ.

5 க போ. உ. ஏ

6 க போ. உ. க, ஐக.

7 மத். இ. உக, உஉ. க போ. ச. உஏ.

8 கலா. இ. உக. வெளி. உக.அ.

9 போவா. க. ஐக: ஐஇ. ஐக. உரோ. இ. அ. எபே. இ. உ, உஇ. க போ. ச. க, கக.

10 இ மே. ஐஇ. எ. தூக். க. ஐக.

11 க போ. ச. உஏ.

12 எரே. கக. கக. உரோ. ஐக. க. எபே. ச. ஐஇ. யாக். உ. ஐஇ, ஐக. க பே. க. உஉ.

13 போவா. ஐஅ. கஎ. க போ. க. அ.

† ஒரேக்கு, சம்மதிக்கப் பண்ணலாம்.

14 க கொரி. ச. ச.

15 யோபு உஉ. உக

16 எபி. ஏ. உஉ. க போ. உ. உஅ: ச. ஐஎ.

17 போவா. அ. உக: க. கக.

18 சங். கச. ஐஇ: கசஇ. ஐஅ, ஐக.

ஸாக். ஐஇ. உக. எரே. உக. ஐஉ. மத். எ. அ: உக. உஉ. மாற். ஐக. உச. போவா. ஐச. ஐக: ஐஇ ச: ஐக. உக, உச. யாக். இ. ஐக. க போ. இ. ஐச.—19 போவா. க. உக: ஐஎ. க —20 க போ. உ. அ, ஏ.—21 மத். உஉ. கக. போவா.ஐக.ஐச: ஐஇ ஐஉ. எபே. இ. உ. க தெச ச. க. க பே.ச.அ.ஐக.ஐச. க போ.ச.உக.—22 போவா.ஐச.உக. ஐஇ.ஏ க போ.ச.ஐஉ 23 போவா. ஐஎ. உக. ழு.—24 உரோ. அ. க. க போ.ச. ஐக.

Digitized by Google

தந்த ஆவியினாலே அறிந்திருக்கிறோம்.

சு. அதிகாரம்.

க. ஆவியை உடையவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற எல்லாப் போதகர்களையும் நம்பாமல், அவர்களைச் சாதாரண சத்திய விசுவாசத்தின் ஒழுக்கத்துக்கு நடத்திருக்கிறார்களா என்று சோதித்துப்பார்க்கச்சொல்லி, எ. சகோதரசிநேகத்தைக் கைக்கொள்ளப் புதிதாகச் சொல்லியது.

1பிரியமானவர்களே, உலகத்திலே அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றினபடியால், 2நீங்கள் எந்த ஆவியையும் நம்பாமல் அந்த ஆவிகள் பராபரனால் உண்டானவைகளோ என்று 3சோதித்து அறியுங்கள்.

உ பராபரனால் உண்டான ஆவியை நீங்கள் எதினாலே அறியலாமென்றால், 4இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தார் என்று அறிக்கைபண்ணுகிற ஆவி எதுவோ, அது பராபரனால் உண்டாயிருக்கின்றது.

ங 5இயேசுக்கிறிஸ்து மாம்சத்திலே வந்தார் என்று அறிக்கைபண்ணுத ஆவி எதுவோ, அது பராபரனால் உண்டாயிருக்கிறதல்ல; அதுவே கிறிஸ்துவுக்கு எதிராளியானவனுடைய ஆவி; அது வருகிறதென்று நீங்கள் கேள்விப்பட்டீர்கள்; 6அது இப்பொழுதே உலகத்தில் இருக்கின்றது.

ச ¶ பிள்ளைகளே, 7நீங்கள் பராபரனால் உண்டாயிருந்து, 8உலகத்தில் இருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவரானதால் அவர்களைச் செயித்தீர்கள்.

ஙி அவர்கள் 9உலகத்தாரின் தன்மையை உடையவர்கள்; ஆனபடியால் உலகத்தாரின் தன்மையாய்ப் பேசுகிறார்கள்; 10உலகத்தாரும் அவர்களுக்குச் செவிகொடுக்கிறார்கள்.

சு நாங்கள் பராபரனுடைய தன்மையை உடையவர்கள்; 11பராபரனை அறிந்துகொண்டவன் எங்களுக்குச்செவிகொடுக்கிறான், பராபரனுடைய தன்மை இல்லாதவன் மாத்திரம் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதினாலே 12சத்திய ஆவியையும் வஞ்சக ஆவியையும் அறிந்திருக்கிறோம்.

எ ¶ 13பிரியமானவர்களே, அன்பு பராபரனால் உண்டாயிருக்கிறபடியால் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கக்கடவோம்; அன்புள்ளயாவரும் பராபரனில் பிறந்து அவனை அறிந்திருக்கிறார்கள்.

அ 14பராபரன் அன்பாகவே இருக்கிறபடியால், 15அன்பில்லாதவன் பராபரனை அறியான்.

கூ பராபரனுடைய ஒரேபேறான குமாரனாலே 16நாம் பிழைக்கும்படிக்கு அவனை இவ்வுலகத்திலே அனுப்பினதினாலே, 17பராபரன் நமதுமேல் வைத்த அன்பு வெளிப்பட்டது.

ஐ 18நாம் பராபரனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நீக்கும் கிருபை உண்டாகும்படி, 19தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கின்றது.

ஒக பிரியமானவர்களே, 20பராபரன் இவ்விதமாய் நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரக்கடனுளிகளாய் இருக்கிறோம்; 21பராபரனை ஒருவரும் ஒருக்காலும் காணவில்லை.

ஐஉ நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் பராபரன் நமக்குள்ளே நிலைத்திருப்பார்; 22அவருடைய அன்பு நம்மிடத்தில் நிறைவுள்ளதாயும் இருக்கும்.

ஐஊ அவர் தம்முடைய ஆவியில் நமக்குக் கொடுத்ததினாலே நாம் அவரிலும் 23அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.

Digitized by Google

கி. பி. கூய.

1 மத். உச. இ. உச. அப். உஐ. கஐ. க நீமே. ச.க. உபே. உ. க. க யோ. உ. ஙஅ. உயோ. எ.
2 எரே. உக.
அ.மத். உச. ச.
3 க கொரி. ஙச. உக. க தெச. இ. உக. வெளி. உ. உ.
4 க கொரி. ஙஉ. க. க யோ. இ.க.
5 க யோ. உ. உஉ. உ யோ. எ.
6 உ தெச.உ. எ. கயோ. உ. ஙஅ, உஉ.
7 க யோ. இ. ச.
8 யோவா. ஙஉ. கக:ஙச. கஐ:ஙசு. ஙக. க கொரி.உ. .ஙஉ. எபே. உ. உ: சு. ஙஉ.
9 யோவா. உ.கக.
10 யோவா. ஙஇ. ஙசு: ஙஎ. ஙச.
11 யோவா. அ. சஎ: ஐ. உஎ. க கொரி. ஙச. கஎ. உ கொரி. ஐ. எ.
12 எரே. அ. உஐ. யோவா.ஙச.ஙஎ.
13 க யோ. க. ஐ, ஙக, உக.
14 ஙக. வச.
15 கயோ. உ.ச: க. க.
16 கயோ. இ. ஙக.
17 யோவா. க. ஙக. உயோ. இ. அ: அ. கஉ. க யோ. க. ஙக.
18 யோவா. ஙஇ. ஙக. உரோ. இ. அ, ஐ.தீத். க. ச.
19 க யோ. உ.உ.
20 மத். ஙஅ. கக. யோவா. ஙஇ. ஙஉ,ஙக.க யோ. க. ஙக.
21 யோவா.க ஙஅ. க தீமோ.க.ஙக. உஐ. வச.
22 கயோ. உ. இ. ஙஅ. வச.
23 யோவா. ஙச. உஐ. க யோ. க. உச.

யச ¶ [1]பிதாவானவர், குமாரனை உலக இரட்சகராக அனுப்பினதை [2]நாங்கள் பார்த்திருந்து சாட்சியிடுகிறோம்.

யஞ இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்று [3]அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனிடத்தில் பராபரன் நிலைத்திருக்கிறார்; பராபரனிடத்திலே அவனும் நிலைத்திருக்கிறான்.

யசு பராபரன் நமதுமேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம்; [4]பராபரன் அன்பாகவே இருக்கிறார்; [5]அன்பிலே நிலைத்திருக்கிறவன் பராபரனிடத்தில் நிலைத்திருக்கிறான்; பராபரனும் அவனிடத்திலே நிலைத்திருக்கிறார்.

யள நியாயத்தீர்ப்பின் நாளிலே [6]நமக்குத் தயிரியம் உண்டாயிருக்கத்தக்கதாக, அன்பு நம்மிடத்தில்* நிறைவுள்ளதாயிற்று; ஆனதால் [7]அவர் இருக்கிற பிரகாரமாக நாமும் இந்த உலகத்தில் இருக்கிறோமே.

யஅ அன்பிலே பயமில்லை; நிறைந்த அன்பு பயத்தைப் புறம்பே தள்ளுகின்றது; பயமானது வேதனையுள்ளதே.

யக [8]பயப்படுகிறவன் நிறைந்த அன்புள்ளவன் அல்ல, அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்.

யக ஒருவன் தன் சகோதரனைப் பகைத்து நான் [9]பராபரனிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொன்னால், அவன் பொய்க்காரனாய் இருப்பான்; எப்படியெனில், அவன் தான் கண்டிருக்கிற சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்க, [10]தான் காணாதிருக்கிற பராபரனிடத்திலே எப்படி அன்பாயிருப்பான்?

யக அன்றியும் பராபரனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்ற [11]இந்தக் கட்டளையை அவராலே பெற்றிருக்கிறோம்.

ரு. அதிகாரம்.

க. பராபரனைச் சிநேகிக்கிறவன் பராபரனுடைய பிள்ளைகளையும் சிநேகித்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அந்தக் கட்டளைகள் கனமானதாயிராமல் இலேசாயிருக்கிறதென்ற உணர்ந்திருப்பானென்றும், க தேவனுடைய இயேசுவானவர் மனுஷ இரட்சிப்பையும், ம நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் செய்யும் வேண்டுதல்களைக் கேட்கவும் வல்லவரென்றும் சொல்லியது.

[12]இயேசு என்பவரே கிறிஸ்து என்று [13]விசுவாசிக்கிறவன் எவனோ, [14]அவன் பராபரனில் பிறந்திருக்கிறான்; [15]அன்றியும் பிறப்பித்தவரிடத்தில் அன்புகூருகிறவர் யாவரும் அவரில் பிறந்தவனிடத்திலும் அன்புகூருகிறார்கள்.

உ நாம் பராபரனிடத்திலே அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டுவருகிறதினாலே நம்மைப் பராபரனுடைய பிள்ளைகளிடத்தில் அன்புகூருகிறவர்களென்று அறிந்துகொள்ளுகிறோம்.

ஊ நாம் பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே [16]அவரிடத்தில் அன்புகூருகிறதாம்; இப்படி [17]அவருடைய கற்பனைகள் பாரமானவைகளும் அல்ல.

ச எப்படியெனில், [18]பராபரனில் பிறந்தவன் எவனோ, அவன் உலகத்தைச் செயிக்கிறான்; நம்முடைய விசுவாசமே உலகத்தைச்செயிக்கிற செயம்.

ஞ [19]இயேசுவானவர் பராபரனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனே அன்றி, வேறு யாவன் உலகத்தைச் செயிக்கிறவன்?

சு ¶ இயேசுக்கிறிஸ்துவாகிய அவரே [20]சலத்தினாலும் இரத்தத்தினாலும் தோன்றிவந்தவர்; சலத்தினாலேமாத்திரமல்ல, சலத்தினாலும் இரத்தத்தினாலுமே (வந்தார்); ஆவியானவர் சத்தியமாகையால் [21]ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்.

Digitized by Google

இ. பி. கூய.

1 யோவ. க.வ.
2 யோவ. க ம. க யோ. க.க,உ.
3 உரோ. வ. க. க யோ. ஓ. க, ஓ.
4 அ. வச.
5 க யோ. க.உச. வஉ. வச.
6 யாக். உ. வக. க யோ.உ.உஅ: க. வக, உக.
* அல்லது சமதன்பு.
7 க யோ. க. க.
8 வஉ. வச.
9 க யோ. உ. ச: க. வச.
10 வஉ. வச.
11 மத். உஉ. கஎ, கக. யோவ. கக. கச: வஓ. கஉ. க யோ. க. உக.
12 க யோ. உ: உஉ, உக: ச. உ, வஓ.
13 யோவ. க. வஉ.
14 யோவ. க. வக.
15 யோவ. வஓ. உக.
16 யோவ. வச. வஓ, உக, உக: வஓ. வ. உ யோ. க.
17 மீள. க. அ. மத். வக. கவ.
18 யோவ. வக. கக. க யோ. க. க: ச. ச.
19 க கொரி. வஓ. ஓச. க யோ. ச. வஓ.
20 யோவ. வக. கச.
21 யோவ. வச. வள. வஒ. உக. வக.வக.கதி மோ. க. வக.

எ ஆனதால் பரமண்டலத்திலே பிதா, [1]வார்த்தை, பரிசுத்த ஆவி என்று இம்மூவரும் சாட்சியிடுகிறார்கள்; [2]அம்மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்.

அ பூமியிலேயும் ஆவி, சலம், இரத்தமென்று இம்மூன்றும் சாட்சியிடுகின்றன; அம்மூன்றும் ஒன்றாகப் பொருந்துகின்றன.

க ¶ [3]காம் ஏற்றுக்கொள்ளுகிற மனிதருடைய சாட்சியிலும், பராபரனுடைய சாட்சி அதிகமாய் இருக்கின்றது; [4]பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சி அதுவே.

ய பராபரனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் [5]அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்; பராபரனை விசுவாசியாதவன் [6]அவனைப் பொய்யன் என்கிறவனாய் இருக்கிறான்; பராபரன் தம்முடைய குமாரனைக்குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசிக்கவில்லையே.

யக அந்தச் சாட்சி என்னவெனில், [7]பராபரன் நமக்கு நித்திய சீவனைக் கொடுத்திருக்கிறார்; [8]அந்தச் சீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே.

யஉ [9]குமாரனை உடையவன் அந்தச் சீவனை உடையவனாய் இருக்கிறான்; பராபரனுடைய குமாரனில்லாதவன் அந்தச் சீவன் இல்லாதவனாய் இருக்கிறான்.

யக ¶ [10]பராபரனுடைய குமாரனின் நாமத்தில் விசுவாசமாயிருக்கிற நீங்கள், நித்திய சீவனை உடையவர்களென்று அறிந்து, பராபரனுடைய குமாரனின் நாமத்தின் மேலே விசுவாசமாயிருக்கும்படிக்கு [11]இவைகளை உங்களுக்கு எழுதினேன்.

யச [12]நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படியே கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுப்பார் என்பதே அவரால்* நமக்கு உண்டாயிருக்கிற தயிரியம்.

யடு அன்றியும் நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுப்பார் என்று நாம் அறிந்திருக்க, அவரிடத்தில் நாம் பண்ணின விண்ணப்பங்களைப் பெற்றோமென்றும் அறிந்திருக்கிறோம்.

யசு ¶ ஒருவன் மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்யக்கண்டால் (கர்த்தாவை நோக்கிச்) செபம்பண்ணக்கடவன்; அப்பொழுது அவர் அவனுக்கு மரணத்திற்கு ஏதுவல்லாத பாவத்தைச் செய்தவர்களுக்கு ஏற்ற [13]உயிரைக் கொடுப்பார்; [14]மரணத்திற்கு ஏதுவான பாவம் உண்டு; [15]அதைக்குறித்துச் செபம் பண்ணச் சொல்லமாட்டேன்.

யஎ [16]அநியாயம் யாவும் பாவம்தான்; மரணத்திற்கு ஏதுவல்லாத பாவமும் உண்டு.

யஅ ¶ நாம் அறிந்துகொண்டபடி, [17]பராபரனில் பிறந்தவன் எவனே அவன் பாவம்செய்யமாட்டான்; பராபரனில் பிறந்தவன் [18]தன்னைக் காக்கிறான்; ஆகையால் பொல்லாங்கன் அவனைத் தொடான்.

யக மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நாம் பராபரனால் உண்டாயிருக்கிறோம்; [19]உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள்ளே கிடக்கின்றது.

உய மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி நாம் மெய்யானவனை [20]அறிந்துகொள்வதற்குப் பராபரனுடைய குமாரன் வந்து, [21]நமக்குப் புத்தியைக் கொடுத்தார்; அந்தப்படி நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவிலுள்ள மெய்யானவனைப் பற்றியிருக்கிறோம்; [22]அவரே மெய்யான தேவனுமாய் [23]நித்திய சீவனுமாய் இருக்கிறார்.

உக ¶ பிள்ளைகளே, [24]நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி உங்களைக் காத்துக்கொள்வீர்களாக.—ஆமன்.

கி. பி. கயி.

1 யோவா. க. க. வெளி. யக. யஅ.
2 யோவா. ய. கய.
3 யோவா. அ. யச, யஅ.
4 மத். க. யக, யச: யஅ. இ.
5 உரோ. அ. யக. கலா. ச. க.
6 யோவா. க. கக: இ. கஅ.
7 க யோ. உ. உஇ.
8 யோவா. க. ச. க யோ. ச. க.
9 யோவா க. கக: இ. உச.
10 க யோ. க. க, உ.
11 யோவா. உய. கக.
12 க யோ. க. உஉ.
* அல்லது அவனைக்குறித்து.
13 யோபு. சஉ. அ.யாக். இ. யச, யஇ.
14 மத். டீ. கக. கஉ. மாற். க. உக. லூக். யஉ. ய. எபி. க. ச, க: ய. உக.
15 எரே. எ. யக: யச. யக. யோவா. யஅ. க.
16 க யோ. க. ச.
17 க பே. க. உக. க யோ. க. க.
18 யூக். க. உஎ.
19 கலா. க. ச.
20 யோவா. யச. க.
21 லூக். உச. சஇ.
22 மாற். க. க: சச. க: இச. இ. யோவா. உய. உஅ. அப். உய. உஅ. உரோ. க. இ. கதிமோ. க. யக. தீத். உ. யக. எபி. க. அ.
23 யக, யஉ, யக. வச.
24 க கொரி. ய. யச.

II. JOHN.

அப்போஸ்தலனுகிய

யோவான் எழுதின

இரண்டாம் நிருபம்.

கி. பி. கயி.

1 போள. அ. கூ. கலா. உ. இ, மச: க. க: இ. எ. கொ லோ. க. இ. உதெச. உ.மக. க தீமோ. உ. ச. எபி. வ. உசு.
2 க போ. க.வ அ. க போ.க.க வச.
3 க தீமோ. க.உ.
4 க. வச.
* ஒரேக்கு, இருக்கும்.
5 க போ. க.
6 க யோ. உ. எ, அ: க. மக.
7 போலா. மக. வச: மஇ. மூ. எபே. இ. உ. க பே. ச. அ. க போ. க. கூ.
8 போலா. மச. மஇ, உக: மஇ. க. க போ. உ. இ: இ. க.
9 க போ. உ.உச.
10 க போ. ச. க.
11 க போ. ச. உ, க.
12 க போ. உ. உஉ: ச. க.
13 மாற். மூ. சு.
† சில பிரதிகளில் க்ஷேமமே பெறுதல் சொன்ட பலனை.

1 எ இப்பொழுது அம்மாளே, [6]நான் உமக்குப் புதிய கற்பனையாகவல்ல, ஆதிமுதல் எமக்கு உண்டாயிருக்கிற கற்பனையாக எழுதி வேண்டிக்கொள்ளுகிறது என்னவெனில், [7]நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூரவேண்டும்.

2 [8]நாம் அவருடைய கற்பனைகளின்படி நடக்கிறதே அன்பு கூருகிறதாம்; [9]நீங்கள் ஆதிமுதல் கேட்டிருக்கிறபடி, அதிலே நடந்துகொள்ளவேண்டும் என்பதே அந்தக் கற்பனையாய் இருக்கின்றது.

3 [10]அநேக வஞ்சனைக்காரர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; [11]இயேசுக்கிறிஸ்துவானவர் மாம்சமானார் என்று அறிக்கை பண்ணுமல் இருக்கிறார்கள்; [12]இப்படிப்பட்டவனே வஞ்சனைக்காரனுமாய் கிறிஸ்துவுக்கு எதிராளியுமாய் இருக்கிறான்.

4 [13]நாம் நம்முடைய வேலைகளை† இழந்துபோகாமல் நிறைந்த பலனைப் பெறும்படிக்கு [14]எச்சரிக்கையாயிருங்கள்.

5 கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைநில்லாமல் [15]மீறிநடக்கிற எவனும் பராபரனை அடையாதவன்

a. களம்பொருந்திய ஒரு அம்மாளும், அவளுடைய பிள்ளைகளும் நிறைந்த மார்க்கத்தைக்குறித்த அன்பினும், விசுவாசத்திலும் நிலைநின்ற, அ. நம்மில் பலனை இழந்துபோகாதிருக்கவும், இ. நிறைந்த இயேசுவின் சத்திய உபதேசத்தைக்கொண்டு வராத அப்போதகர்களை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கவும் அவர்களுக்குப் புத்திசொல்லியது.

நம்மிடத்திலே நிலைநிற்கிறதுமாய், என்றென்றைக்கும் நம்மோடு இருப்பதுமாய் இருக்கிற சத்தியத்தின்நிமித்தம் நான்மாத்திரமல்ல, [1]சத்தியத்தை அறிந்திருக்கிற மற்றயாவரும் [2]உண்மையாய்ச் சிநேகித்திருக்கிற,

1 உ தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும் மூப்பனுகிய நான் எழுதுகிறதாவது:

2 பிதாவாகிய பராபரனாலும் பிதாவின் குமாரனுகிய கர்த்தாவாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவினாலும் [3]கிருபையும், இரக்கமும், சமாதானமும், [4]சத்தியத்தோடும் அன்போடும்கூட உங்களுக்கு உண்டாயிருக்கக்கடவது.*

3 உ உம்முடைய பிள்ளைகளில் சிலர் பிதாவினால் நாம் கற்பனை அடைந்தபடி [5]சத்தியத்திலே நடக்கிறவர்கள் என்று நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்.

14 கலா. க. ச. எபி.வ. கஉ, கஇ. — 15 க போ. உ. உக.

Digitized by Google

ஞய் இருக்கிறான்; கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைநிற்கிறவனே பிதாவையும் குமாரனையும் அடைந்திருக்கிறான்.

ரு ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமல் இருந்தால், அவனை நீங்கள் உங்கள் வீட்டிலே சேர்த்துக் கொள்ளவும், [1]அவனுக்கு வாழ்த்துதல்சொல்லவும் கூடாது.

ரூ அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்காளனாகிறானே.

கி. பி. கஎ.

1 உரோ. ரூக. ரூ. க கொரி. ஓ.ரூ:ரூக.உஉ. கலா. க. அ, க. உதிரோ. க. ஓ. தீத். க. ஏ.

2 க பேர். ரூக.

3 பேரா. ரூ.· ரூக. க பேர். க. ச.

* அல்லது உங்களுக்கு.

† ஐரேக்கு, பேசுக்குப் பேச.

4 க பே. ஓ. ரூ.

ரூரு ¶ [2]நான் பின்னும் அநேகம் காரியங்களை உங்களுக்கு அறிவிக்கவேண்டும்; காகிதத்திலும் மையினாலும் அப்படிச் செய்ய மனதில்லை; [3]நமக்குச்* சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கு உங்களிடத்தில் வந்து, முகமுகமாய்ப்† பேசலாமென்று நம்பியிருக்கிறேன்.

ரூரூ [4]தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியின் பிள்ளைகள் உமக்கு வாழ்த்துதல் செய்கிறார்கள்.—ஆமன்.

Digitized by Google

III. JOHN.

அப்போஸ்தலனாகிய

யோவான் எழுதின

மூன்றாம் நிருபம்.

க. சத்தியத்தின் நேசபாத்திரனும், ஓ. உத்தம போதகர்களுக்குச் செய்யும் உபசாரத்துக்கும் புகழ்ந்து, ஙு. பெருமையுள்ள திமோத்தியேப்பே என்றவனுடைய கெட்ட நடக்கையைக்குறித்து விசனப்பட்டு, ரு. அந்த நடக்கையை ஒருவரும் பின்பற்றாமல் இருக்கச்சொல்லி, ரூ. தேமேத்திரி என்றவனுக்கு நற்சாட்சி பகர்ந்தது.

கி. பி. கூ௰.

1 மூப்பனாகிய நான் [1]உண்மையாய்* அன்புகூருகிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது: பிரியமானவனே,

2 உ உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ சகலவிதத்திலும் வாழ்ந்து சுகமாயிருக்க வேண்டுகிறேன். †

3 சகோதரர் வந்து [2]நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறபடி உன்னுடைய உண்மையைக்குறித்துச் சாட்சிகொடுத்தபொழுது மிகவும் சந்தோஷப்பட்டேன்.

4 [3]என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கேள்விப்படுகிறதிலும் (வருகிற சந்தோஷத்திற்கு) மேலான சந்தோஷம் எனக்கு இல்லை.

5 பிரியமானவனே, நீ சகோதரருக்கும் பரதேசிகளுக்கும் செய்கிற கிரியைகள் யாவையும் உண்மையாய்ச் செய்கிறாய்.

6 அவர்கள் உன்னுடைய அன்பைக்குறித்துச் சபைக்குமுன்பாகச் சாட்சிகொன்னார்கள்; அவர்களை நீ பராபரனுக்குமுன்பாகப் பாத்திரமானபடி‡ வழிவிட்டு அனுப்பிவைல் நன்மைசெய்வாய்.

7 அவருடைய நாமத்தின்நிமித்தம் அவர்கள் [4]அஞ்ஞானிகளிடத்தில் ஒன்றும் வாங்காமல் புறப்பட்டார்களே.

8 ஆகையால் நாம் சத்தியத்திற்கு உதவிசெய்கிறவர்களாய் இருக்கும்படிக்கு, இப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்; நான் சபைக்கு எழுதினேன்.

9 ஆ அப்படியிருந்தும், அவர்களுக்கு முதலாளியாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.

10 ஆனபடியினாலே நான் வரும்பொழுது, அவன் எங்களுக்கு விரோதமாய்ப் பொல்லாத வார்த்தைகளைப் பேசிச் செய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன்; அவைகளும் அவனுக்குப் போதாது; அவன்தானே சகோதரரை ஏற்றுக்கொள்ளாதிருக்கிறதுமல்லாமல், ஏற்றுக்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும்தடைசெய்து சபைக்குப்புறம்பே தள்ளுகிறான்.

* அல்லது உண்மையிலே.

† அல்லது விரும்புகிறேன்.

‡ அல்லது ஏற்ற விதமாக.

1 உ பேர். க.

2 உபே. ச.

3 க கொரி. ச. ஏ. பிலே. ம.

4 க கொரி. க. மூ, ஏ.

Digitized by Google

கி. பி. கயி.

யக பிரியமானவனே, [1]நீ பொல்லாங்கானதை அல்ல நலமானதைப் பின்பற்றுவாயாக, [2]நன்மைசெய்கிறவன் பராபரனால் உண்டாயிருக்கிறான்; பொல்லாங்கைச்செய்கிறவன் பராபரனைக் கண்டறியவில்லை.

யஉ [3]தேமேத்திரி என்பவனுக்கு எல்லாராலும் சத்தியத்தாலும்தானே நற்சாட்சி உண்டாயிருக்கிறது; நாங்களும் சாட்சிகொடுக்கிறோம்; [4]எங்கள் சாட்சி மெய்யென்று அறிந்திருக்கிறீர்கள்.

யஊ [5]நான் அநேகம் காரியங்களை உனக்கு எழுதவேண்டும்; அவைகளை மையினாலும் இறகினாலும் எழுத மனதில்லை.

யசு நான் சீக்கிரமாய் உன்னைப் பார்க்கலாமென்று நம்பியிருக்கிறேன்; அப்பொழுது முகமுகமாய்ப் * பேசுவோம்; உனக்குச் சமாதானம் உண்டாயிருக்கக்கடவது.

யஙு (எங்களிடத்திலுள்ள) சிநேகிதர் உன்னை வாழ்த்துதல்செய்கிறார்கள்; உன்னிடத்திலுள்ள சிநேகிதர்களைப் பேர்பேராக (என்னாலே) வாழ்த்துதல்செய்வாயாக.

1 சம். கள. உள. எச. க. மக, மள. க பே. க. மக.
2 க யோ. உ. உக: க. க, க.
3 க தீமே. க. எ.
4 யோள. உக. உச.
5 உ பே. மஉ.
* மாற்கு, பேசக்குப் பேச.

Digitized by Google

JUDE.

அப்போஸ்தலனாகிய

யூதா எழுதின

நிருபம்.

கி. பி. சுசு.

1 லூக். க. ம. அப். க. ம.
2 பேரா. ம. ம, மஉ, மஇ. க பே.க.இ.
3 உரோ. க. எ.
4 க பே. க. உ. உ பே. க. உ.
5 நீத். க. ச.
6 பிலி. க. உ. க நீமே. க.மஅ: க.மஉ.நீமே. க.மக: ச.எ.
7 நீத். உ. மக. எபி.மஉ.மஇ.
8 உ பே. உ. ம.
9 நீத். க. மக. உ பே. உ. க. க பேர. உ.உஉ.
10 உரோ.க.உக. உஉ. க பே. உ. அ.
11 எரே. உ. ச. உ பே. உ. க.
12 க கொரி. ம.க.
13 ச மோ. மச. உக, கஎ: உக. கச. சங். கக. உக. எபி. க. மஎ, மக.
14 பேரா. அ. ச.

* அல்லது ஆதி மேன்மையை.

15 கொலோ. உம. ம.
16 உ பே. உ. ச.
17 க மோ. மக. உச. இ மோ. உக.உக.உபே. உ க.

சு. விசுவாசத்தை உறுதியாய்க் கைக்கொள்ளப் புத்திசொல்லி, ச. அவர்களைக் கெடுக்கும்படி பிரவேசித்திருக்கிற கள்ளப்போதகர்களுடைய சாபத்தைத்தரும் உபதேசத்துக்கும் நடக்கைக்கும் உதாரணமான ஆக்கினை கிடைக்குமென்றும், உஅ. உத்தமர்களே பரிசுத்தஆவியின் ஏவுதலினாலும் பராபரனை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறதினாலும் உங்கமனசைத்தி கிருபையிலே வளர்ந்து தங்களைக் காத்துக்கொள்வதுமன்றி, எதார்த்தமான கன்னனில் அப்பட்டவர்களைக் காப்பாற்றவென்றும் சொல்லியது.

இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனுமாய், [1]யாக்கோபினுடைய சகோதரனுமாய் இருக்கிற யூதா என்பவன், பிதாவாகிய பராபரனாலே பரிசுத்தமாக்கப்பட்டும் [2]இயேசுக்கிறிஸ்துவினால் காக்கப்பட்டும் [3]அழைக்கப்பட்டும் இருக்கிறவர்களுக்கு எழுதுகிறதாவது:

உ இரக்கமும், [4]சமாதானமும், அன்பும் உங்களுக்குச் சம்பூரணமாய் உண்டாகக்கடவது.

ஊ பிரியமானவர்களே, [5]பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதவேண்டுமென்று நான் மிகுந்த கருத்துள்ளவனாய் இருக்கையில், முன்னே பரிசுத்தவான்களுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்காக நீங்கள் [6]கெட்டியாய்ப் போராட்டம்பண்ணும்படிக்கு, உங்களுக்குப் புத்தியை எழுதுகிறது எனக்கு அவசியமாய்த் தோன்றிற்று.

எ என்னத்திலெனில், [7]நம்முடைய பராபரனின் கிருபையைக் காமவிகாரத்திற்கு ஏதுவாகப் [8]புரட்டி, ஒன்றான சுயாதிபதியான பராபரனுமாய், நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுக்கிறிஸ்துவை [9]மறுதலிக்கிற [10]துன்மார்க்கரான சில மனிதர்கள் பக்கவழியாய் [11]நுழைந்திருக்கிறார்கள்; அவர்கள் அடையும் ஆக்கினையைக் குறித்துப் பூர்வீகத்திலே முன்எழுதியிருக்கின்றது.

ஏ அந்தப்படி நீங்கள் முன்னே அறிந்திருந்தும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறது என்னவெனில், [12]கர்த்தர் எகிப்துதேசத்திலிருந்து சனத்தை இரட்சித்தபின்பு [13]விசுவாசியாதவர்களை அழித்தார்.

ஐ அன்றியும் [14]தங்களுடைய ஆதி நிலைமையைக்* காவாமல், தங்களுக்கு ஏற்ற இருப்பிடத்தை விட்டுவிலகின தூதர்கள் [15]பெரிய நியாயத்தீர்ப்புநாள்வரைக்கும் நித்திய சங்கிலிகளினாலே (கட்டப்பட்டு) [16]அந்தகாரத்தில் இருக்கும்படி நியமித்தார்.

ஒ அப்படிப்போலச் [17]சோதோம் கொமோரா பட்டணத்தார்களும் அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும் இவர்களுடையவி

Digitized by Google

தமாய் வேசித்தனத்தில் அமிழ்ந்து, அந்திய* மாம்சத்தைச் சேர்ந்து போனதினாலே நித்திய அக்கினியை ஆக்கினையாக அடைந்து திருட்டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அ ¶ அப்படிப்போல [1]இந்தச் சொப்பனக்காரர் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, [2]மகத்துவங்களைத் தூஷணிக்கிறார்கள்.

ஆ பிரதான தூதனாகிய [3]மிகாவேலும் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பசாசானவனுடனே தருக்கித்துப் பேசினபொழுது, [4]தூஷணமுள்ள தீர்ப்பை அவனுக்குச் சொல்லத் துணியாமல், [5]கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று (மாத்திரம்) சொன்னான்.

இ [6]இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷணிக்கிறார்கள்; புத்தியில்லாத மிருகங்களைப் போலச் சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுக்கிறார்கள்.

ஈ ஐயோ, அவர்களுக்கு வேதனை உண்டாகும், அவர்கள் [7]காயீனுடைய வழியில் நடந்து, [8]பாலாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விழுந்து ஓடி, [9]கோராவிரோதம் பேசினதினாலே கெட்டுப்போனார்கள்.

உ ¶ இவர்கள் உங்கள் [10]அன்பு விருந்துகளில் [11]மாசுகளாயிருந்து, பயமில்லாமல் விருந்துண்டு, தங்களை மேய்க்கிறார்கள்; [12]அவர்கள் காற்றுகளால் அடிக்கப்பட்டு அலைகிற [13]நீரில்லாத மேகங்களும், [14]உலர்ந்து கனியற்று இரண்டுதரம் செத்து வேரற்றுப்போன மரங்களும்,

ஊ [15]தங்கள் சுய இலச்சைகளை நுரைபோலக் கக்குகிற [16]உக்கிரத்தையுடைய கடலின் அலைகளும், மார்க்கம் தப்பி நடக்கிற நட்சத்திரங்களுமாய் இருக்கிறார்கள்;

வி. பி. சுசு.

* ஒரேகு, வே ழ.

1 உ பே. உ. ம.
2 உ மோ. உஉ. உஅ.
3 தானி. ம. மஃ: மஉ. க. வெளி. மஉ. எ.
4 உ பே.உ. மக.
5 சகரி. க. உ.
6 உ பே. உ. மஉ.
7 க மோ. ச. இ. க பே. க. மஉ.
8 ச மோ. உஉ. எ, உக. உ பே. உ. மஇ.
9 ச மோ. மக. க. ழ.
10 க கொரி. மக. உக.
11 உ பே. உ.மக.
12 எபே. ச. மச.
13 வாக். உஇ. மச. உ பே. உ. மஎ.
14 மத். மஇ. மக.
15 பிலி. க. மக.
16 சங.இசை. உம.
17 உபே. உ. மஎ.
18 கமோ. இ.மஅ.
19 இ மோ. கக. உ. தானி. எ. ம. சகரி. மச. இ. மத் உஇ. கக. உ நெச. க. எ. வெளி. க. எ.
20 க சாமு. உ.க. சங். கக. மஅ: கச. ச. மல்கி. க. மக.
21 உ பே. உ. மஅ.
22 வாக். உஅ. உக. பாக். உ. க, கக.
23 உ பே. க. உ.
24 கதிமோ. ச. க. உ தீமோ. க, க: ச. க. உ பே. உ.ஃக: க. க.
25 வாக். மஅ. க. எசே. மச. எ. தசே. ச. மச: கக. ம. எபி. ம. உஇ.
26 க கொரி. உ. மச. பாக் க. இ
27 தெசலோ உ. எ. க தீமோ க. ச.

[17]என்றென்றைக்கும் உள்ள காரிருளே அவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது.

ஏ ¶ ஆதாம்முதற்கொண்டு ஏழாம்தலைமுறையில் உண்டாயிருந்த [18]ஏனோக்கு என்பவன் இவர்களுக்குறித்தும் முன் அறிவித்ததாவது: இதோ [19]கர்த்தர் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படிக்கும், அவர்களில் தேவபக்தியில்லாத யாவரும் தன்மார்க்கமாய்ச் செய்த சகல தன்மார்க்கக் கிரியைகளின் நிமித்தமும் தமக்கு விரோதமாய்,

ஐ தேவபக்தியில்லாத பாவிகள் [20]பேசின கடின வார்த்தைகள் எல்லாவற்றின் நிமித்தமும், அவர்களைக் கண்டிக்கும்படிக்கும் திரளான சேனைகளாகிய தம்முடைய பரிசுத்தவான்களோடும்கூட வருகிறார் என்று அறிவித்தான்.

ஒ இவர்கள் மொறுமொறுக்கிறவர்களுமாய், முறையிட்டுத் திரிகிறவர்களுமாய், தங்கள் இச்சையின்படி நடக்கிறவர்களுமாய் இருக்கிறார்கள்; [21]இவர்கள் வாயிலே மிகவும் இறுமாப்பானவைகளைப் பேசி, [22]பொழிவுக்காகப் பெரியோர்களைப் புகழுகிறார்கள்.

ஓ ¶ பிரியமானவர்களே, [23]நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலரால், முன்சொல்லப்பட்டவார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்.

ஔ கடைசிக் காலத்திலே தங்கள் தன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற [24]பரியாசக்காரர் தோன்றுவார்களென்று உங்களுக்குச் சொன்னார்களே.

க இவர்களே [25]பிரிந்துபோகிறவர்களும் [26]சன்மசுபாவத்தாரும் (தேவ) ஆவி இல்லாதவர்களுமானவர்கள்.

உக ¶ பிரியமானவர்களே, [27]நீங்கள் உங்களுக்கு உண்டாயிருக்கிற மிகவும்பரிசுத்தமான விசுவாசத்

Digitized by Google

தின்மேலே உங்களைப் பொருந்தக் கட்டிக்கொண்டு,

உக [1]பரிசுத்த ஆவியைக்கொண்டு செபம்பண்ணி, பராபரனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, [2]நித்திய சீவனுக்கு ஏதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கம் வரப்பார்த்திருங்கள்.

உஉ அல்லாமலும், வகையறுக்கிறவர்களாய் நீங்கள் சிலருக்கு இரங்கி, [3]சிலரை அக்கினியிலிருந்து இழுத்துக்கொண்டு, [4]பயத்தோடே இரட்சித்து, [5]மாம்ச இச்சைகளால் அசுசிப்பட்டிருக்கிற அங்கியையும் வெறுத்துப்போடுங்கள்.

1 உரோ.அ. உக. எபே. சு. அ.
2 நீத. உ. மூ. உ பே. சு. மூ.
3 ஆமோ. சு. மூ. சகரி. சு. உ. சு கொரி.சு. மஅ.
4 உரோ. மூ. மச. சு நீமோ. சு. மூ.
5 சகரி. சு. சு, மூ. மெனி. சு. சு.
6 உரோ. மூ. உஇ. எபே. சு. உம்.
7 உரோ. மூ. உஎ. சு நீமோ. சு. மச: உ. சு.
8 கொலோ. சு. உஉ.

உஊ ¶ நீங்கள் வழுவாதபடிக்கு [6]உங்களைக் காத்துக்கொள்ளுகிறதற்கும், மாசில்லாமல் மகிழ்ச்சியோடே உங்களைத் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே நிறுத்துகிறதற்கும் வல்லமையுள்ளவராய்,

உசு [7]நம்முடைய இரட்சகரான ஞானமுள்ள ஒருவராகிய தேவனுமாய் இருக்கிறவருக்கு இப்பொழுதும் இனிமேல் இருக்கும் எல்லாக் காலங்களிலேயும் [8]புகழ்ச்சியும் மகத்துவமும், வல்லமையும், அதிகாரமும் உண்டாயிருக்கக்கடவது —ஆமன்.

Digitized by Google

REVELATION.

தெய்வவசன போதகராகிய

யோவானுக்கு

வெளிப்படுத்தின விசேஷம்.

க. அதிகாரம்.

க. ஏழு பொன்விளக்குத் தண்டுகளுக்கு ஒப்பலே பாக்கப்பட்ட ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கு யோவான் அறிவிப்பை எழுதி, எ. நிலைத்தலின் வருகையைக்குறித்தும், ஏச. அவருடைய மகிமையுள்ள வல்லமையையும், மகத்துவத்தையும் குறித்தும் சொல்லியது.

1 சீக்கிரமாய் நடக்கவேண்டிய வைகளைப் பராபரன் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் படிக்கு 2 இயேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும் இவர் வெளிப்படுத்தினதுமான விசேஷம்; 3 அவர் தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானிடத்திற்குத் தம்முடைய தூதனை அனுப்பி, அவனுல் அவைகளைக் குறிப்பாகக் காட்டினர்.

உ 4 அவன் பராபரனுடைய வசனமும் இயேசுக்கிறிஸ்து சாட்சியிட்ட விசேஷமுமாகிய 5 தான் கண்ட யாவற்றையும் அறிவித்திருக்கிறான்.

ஊ 6 காலம் சமீபமாயிருக்கிறது; ஆகையால் இந்தத் தீர்க்கதரிசனமான வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும் 7 இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

கி. பி. கூசு.

1 வெளி. ச.க.உ. வச.
2 யோவா. க. கஉ: அ..உக: ஏஉ. சசு.
3 வெளி.உஉ.ஏக.
4 க கொரி. க. க. வெளி. க. கூ: ஏஉ.ஏஎ. கூ.ஏச.
5 க யோ. க. க.
6 உரோ. ஏக. ஏக. யாக். இ. அ. க பே. ச. எ. வெளி. உஉ. ஏ.
7 லூக். ஏக. உஅ. வெளி. உஉ. எ.
8 உ மோ. கூ.ஏச. அ. வச.
9 யோவா. க. க.
10 சகரி. கூ.கூ: ச. ஏ. வெளி. க. க: ச. இ: இ. கூ.
11 யோவா. அ. ஏச. க நீமோ. க. ஏக. வெளி. க. ஏச.
12 க கொரி. ஏஇ. உஏ. கொலோ. க. ஏஅ.
13 எபே. க. உஏ. வெளி. ஏஎ.ஏச: ஏகூ. ஏக.
14 யோவா. ஏக. கச: ஏஇ. கூ.

கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள்.

சு ¶ யோவான் ஆசியாவிலுள்ள சபைகள் ஏழுக்கும் எழுதுகிறதாவது: 8 இருக்கிறவரும் 9 இருந்தவரும் வருகிறவருமானவராலும், 10 அவருடைய ஆசனத்திற்குமுன்பாக இருக்கிற ஏழு ஆவிகளாலும்,

ரு 11 உண்மையுள்ள சாட்சியும் 12 மரித்தோரிலிருந்து முதல் பிறந்தவரும் 13 பூமியின் இராசாக்களுக்கு அதிபதியுமாகிய இயேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானசவுக்கியமும் உண்டாகக்கடவது; 14 நம்மிடத்தில் அன்புகூர்ந்து, 15 தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்கள் அற நம்மைக் கழுவி,

சூ தம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு (முன்பாக) நம்மைத் தமது 16 இராச்சியத்தாராகவும் ஆசாரியராகவும் செய்திருக்கிற 17 அவருக்கு மகிமையும் வல்லமையும் என்றென்றைக்கும்உண்டாயிருக்கக்கடவது.—ஆமன்.

எ ¶ 18 அதோ மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் 19 அவ

Digitized by Google

கலா.உ.உஏ.—15 எபி.கூ.ஏச. க யோ க.எ.—16 க பே.உ.இ.கூ. வெளி.இ.ஏ: உஏ.க.—17 க நீமோ.க.ஏசு. எபி. கே.உக. க பே.ச.ஏக: இ.ஏக.—18 தானி.எ.கே முத்.உச.கஏ: உக.கச. அப்.க.ஏக.—19 சகரி.ஏஉ.ஏ. யோவா.கே க.எ.

னைக் குத்தினவர்களும் (அவனைக் காண்பார்கள்); பூமியின் கோத்திரத்தார்கள் எல்லாரும் அவனைக்குறித்துத்துக்கத்தோடேபுலம்புவார்கள்; மெய்யாய் அப்படி இருக்கும்.—ஆமன்.

அ [1]இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் [2]நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாய் இருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார்.

க ¶ உங்கள் சகோதரனுமாய், இயேசுக்கிறிஸ்துவின்நிமித்தம் வருகிற உபத்திரவத்திற்கும், [3]அவருடைய இராச்சியத்திற்கும், பொறுமைக்கும் உங்களுடனே பங்காளனுமாய் இருக்கிற [4]யோவானாகிய நான், [5]பராபரனுடைய வசனத்தின்நிமித்தமும் இயேசுக்கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சிசொன்னதின்நிமித்தமும் பத்மு என்னப்பட்ட தீவிலே இருந்தேன்.

ய (அங்கே) [6]கர்த்தருடைய நாளில் [7]ஆவிக்குள்ளானேன்.

யக அப்பொழுது நீ காண்கிறதை ஒரு புத்தகத்திலே எழுதி ஆசியாவில் இருக்கிற எபேசு, சிமிருனா, பெருகமு, தியத்தைரா, சர்தை, பிலதெல்பியா, இலவோதிக்கையா இவைகளில் உள்ள சபைகள் எழுக்கும் அனுப்பு என்று எனக்குப் பின்னாலே [8]எக்காளசத்தம்போன்ற மிகுந்த சத்தத்தைக் கேட்டேன்.

யஉ ¶ அப்பொழுது என்னுடனே சத்தமிட்டுப் பேசினவனைப் பார்க்கத் திரும்பினேன்.

யஊ திரும்பினபொழுது [9]ஏழு பொன்விளக்குத்தண்டுகளையும் ஏழு விளக்குத்தண்டுகளின் மத்தியிலே [10]நிலை அங்கியைத் தரித்து [11]மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த [12]மனிதகுமாரனுக்கு ஒப்பானவனையும் கண்டேன்.

யசு அவருடைய சிரசும் [13]மயிரும் வெண்மையான பஞ்சையும் உறைந்தமழையையும்போல வெண்மையாய் இருந்தன; [14]அவருடைய கண்கள் அக்கினிச்சுவாலையைப்போல இருந்தன.

யஎ [15]அவருடைய கால்கள் உலைக்களத்தில் காய்கிற பிரகாசமுள்ள செம்பைப்போல இருந்தன; [16]அவருடைய சத்தம் பெருவெள்ள இரைச்சலைப்போல இருந்தது.

யஅ அல்லாமலும் [17]அவர் வலதுகையிலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; [18]அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள கட்கம் புறப்பட்டது; [19]அவருடைய முகம் உச்சிக்காலத்திலே வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப்போல இருந்தது.

யஏ [20]இப்படி அவனைக் கண்டபொழுது செத்தவனைப்போல அவருடைய பாதங்களிடத்தில் விழுந்தேன்: அப்பொழுது [21]அவர் தமது வலதுகரத்தை என்மேல் வைத்து (என்னுடனே) சொன்னதாவது: நீ பயப்படவேண்டுவதில்லை; [22]நான் முந்தினவனும் பிந்தினவனும் [23]உயிருள்ளவனுமானவன்.

யஅ நான் மரித்தும், இதோ [24]என்றென்றைக்கும் உயிரோடிருந்து, [25]மரணத்திற்கும் மரித்தோர் ஸ்தலத்திற்கும் உரிய திறவுகோல்களை உடையவனாய் இருக்கிறேன்.

யக ஆகையால் [26]நீ கண்டவைகளையும், [27]இருக்கிறவைகளையும், [28]இவைகளுக்குப் பின் சடப்பவைகளையும் எழுது.

உய என்னுடைய வலதுகரத்தில் நீ கண்ட [29]நட்சத்திரங்கள் ஏழின்

1 ச. வச. வெளி. ச.அ: உக. மக: மக. இ.
2 எசா. சக. ச: ச.ச. க: ச.அ. மஉ: மக, மச. வச. வெளி. உ. அ: உக. க: உஉ. மக.
3 உரோ. அ. மச. உ தீமோ. உ. மஉ
4 பிலி. க. எ:ச. மச. உ தீமோ. க. அ.
5 வெளி. க. க. உ. வச.
6 யோவா. உம. உக. அப். உம. எ. க வெளி. மக. உ.
7 அப். ம. ம. உ வெளி. மஉ. உ. வெளி. ச. உ: மெ. க: உக. ம.
8 வெளி. ச. க: ம.அ.
9 வெளி. உ. க.
10 தானி. ம. இ.
11 வெளி.மஇ.க.
12 எசே. க. உக. தானி. எ. மக: ம.மக. வெளி. மச. மச.
13 தானி. எ. க.
14 தானி. ம. க. வெளி. உ. மஅ: மக. மஉ.
15 எசே. க. எ. தானி. ம. க. வெளி. உ. மஅ.
16 எசே. சக,உ. தானி. ம. க. வெளி. மச. உ: மெ. க: உக. ம.
17 உம. வச. வெளி. உ. க: க. க.
18 எசா. சக. உ. எபே. க. மஎ. எபி. ச. மஉ. வெளி. உ. மஉ. மக: மக. மஇ, உக.
19 அப். உக.மக. வெளி. ம. க.

20 எசே.க.உஅ.—21 தானி.அ.மஅ: ம.ம.—22 எசா.சக.ச: சச.க: சஅ.மஉ. வெளி.உ.அ: உஉ.மக. மக.வச.
23 உரோ.க.க.—24 வெளி.ச.க: இ.மச.—25 சங்.கஅ.உம. வெளி.உம.க.—26 மஉ.வச.ழ.
27 வெளி.உ.க.ழ.—28 வெளி.ச.க.ழ.—29 மக.வச.

Digitized by Google

இரகசியத்தையும் [1]பொன்விளக் குத்தண்டுகள் ஏழின் குறிப்பை யுமே எழுது; இந்த நட்சத்திரங் கள் ஏழும் சபைகள் ஏழினுடைய [2]தூதர்களாய் இருக்கின்றன; [3]நீ கண்ட விளக்குத்தண்டுகள் ஏ ழும் ஏழு சபைகளாய் இருக்கின் றன.

உ. அதிகாரம்.

உ. எபே, அ. சிமிருனு, மஉ. பெர்கமு, மஅ. தியத் தைரா என்ற சபைகளின் ஊழியக்காரர்களாகிய தூதர்களில் புகழப்படத்தக்கதும், இகழப்படத்தக் கதும், இன்னவைகளென்று எழுதி அனுப்பும்படி உண்டான கட்டளையைச் சொல்லியது.

எபேசுபட்டணத்திலுள்ள சபை யின் தூதனுக்கு எழுதவேண்டிய தென்னவெனில், [4]ஏழு நட்சத்தி ரங்களைத் தம்முடைய வலதுகரத் தில் ஏந்திக்கொண்டு, [5]ஏழு பொ ன்விளக்குத்தண்டுகளின் மத்தியி லே உலாவிக்கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது:

உ [6]உன் கிரியைகளையும் உன் பிரயாசத்தையும், உன் பொறுமை யையும், நீ பொல்லாதவர்களுக்கு இடங்கொடாமல் இருக்கிறதை யும், அப்போஸ்தலர் அல்லாதவர் கள் [7]தங்களை அப்போஸ்தலர் என் று சொல்லுகிறதை [8]நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண் டறிந்ததையும்,

ஊ நீ பொறுமையைக் காத்துக் கொண்டுவருகிறதையும், எனது நாமத்தின்நிமித்தம் [9]இளைப்பை அடையாமல் பிரயாசப்பட்டதை யும் அறிந்திருக்கிறேன்.

ச ஆனாலும் நீ ஆதியில் காட் டின அன்பை விட்டபடியால், உன்மேல் விசனமாய் இருக்கி றேன்.

இ ஆகையால், நீ இப்படிப் பட்ட நிலைமையிலிருந்து விழுந் ததை நினைத்து மனம்திருப்பி ஆ தியில் செய்த கிரியைகளைச் செய் வாயாக; [10]நீ மனம்திருப்பாவிட் டால், நான் சீக்கிரமாய் உன்னி டத்தில் வந்து, உன் விளக்குத்தண் டை அதனிடத்தில்நின்று நீக்கு வேன்.

கி. பி. கூசு.

1 மஉ. வச.
2 மல்லி. உ. எ. வெளி.உ.க.ழி.
3 சகரி. ச. உ. மத். இ. மஇ. பிலி. உ. மஇ.
4 வெளி. க. மசு, உம.
5 வெளி. க. மக.
6 சங். க. கூ. கூ, மக, மகூ. வச. வெளி. க.க, அ, மஇ.
7 உ கொரி. மக. மக.உபே.உ.க.
8 க மோ. ச. க.
9 கலா. கூ. கூ. எபி. மஉ, க, இ.
10 மத்.உ க. சக, சக.
11 மஇ. வச.
12 மத். மக. மஇ: மக.கூ, சக: மக. மச, உகூ. வச. வெளி. க. க, மக,உஉ: மக.கூ.
13 க மோ. உ. கூ.
14 வெளி. உஉ. உ. மச.
15 வெளி. க. அ, மஎ, மஅ.
16 உ. வச.
17 லூக். மஉ.உ.க. க நீமே. க. மஅ. யாக். உ.இ.
18 உரோ. உ.எ. உஅ, உகூ: கூ. கூ.
19 வெளி. க. கூ.
20 மத். ம. உஉ.
21 மத். உச. மக.
22 யாக். க. மஉ. வெளி. க. மக.
23 எ.வச. வெளி. கூ. கூ.
24 வெளி. உம. மச: உக. அ.

ஊ [11]நிக்கோலாவின் மார்க்கத் தாரின் கிரியைகளைப் பகைக்கி றாய்; இது உன்னிடத்தில் உண்டு; அவைகளை நானும் பகைக்கி றேன்.

எ ¶ ஆவியானவர் சபைகளுக் குச் சொல்லுகிறதைக் [12]காதுள்ள வன் கேட்கக்கடவன்; செயங் கொள்ளுகிறவன் எவனே, அவ னுக்குப் பராபரனுடைய பரதீ சின் மத்தியில் இருக்கிற [13]ஜீவ விருட்சத்தின் கனியைப் [14]புசிக் கக்கொடுப்பேன் என்கிறார் என் று எழுது.

அ ¶ சிமிருனு பட்டணத்திலு ள்ள சபையின் தூதனுக்கு நீ எழு தவேண்டியது என்னவெனில், ம ரித்து உயிரோடிருக்கிற [15]மூன்ன வரும் பின்னவருமானவர் சொல் லுகிறதாவது:

கூ [16]உன் கிரியைகளையும், உபத் திரவத்தையும் [17]ஐசுவரியமுள்ள உனக்கிருக்கிற தரித்திரத்தையும், [18]தங்களை யூதரென்று சொல்லி யும் யூதராய் இராமல், [19]சாத்தா னுடைய ஆலயமாய் இருக்கிறவர் கள் செய்கிற தூஷணத்தையும் அ றிந்திருக்கிறேன்.

ஐ [20]உனக்கு வரும் துன்பங் களைக்குறித்து எவ்வளவாகிலும் ப யப்படாதிருப்பாயாக; கேள், நீங் கள் சோதிக்கப்படும்பொருட்டா கப் பசாசானவன் உங்களில் சில ரைக் காவலில் போடுவான்; பத் துநாள் உபத்திரவப்படுவீர்கள்; [21]ஆகிலும் மரணபரியந்தம் உண் மையாயிரு; அப்பொழுது [22]ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்.

ஙக ¶ ஆவியானவர் சபைகளுக் குச் சொல்லுகிறதைக் [23]காதுள் ளவன் கேட்கக்கடவன்; செயம் கொள்ளுகிறவன் [24]இரண்டாம் மரணத்தால் சேதப்படுவதில்லை என்கிறார் என்று எழுது.

Digitized by Google

ஙஉ ¶ பெருகமு பட்டணத்தி

ஜெ. பி. கூசு.

ள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [1]இருபுறமும் கருக்குள்ள கட்கத்தையுடையவர் சொல்லுகிறதாவது:

யசு [2]உன் கிரியைகளையும், [3]சாத்தானுடைய ஆசனம் இருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், சாத்தான் குடியிருக்கிற உங்களிடத்திலே எனக்கு உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலேயும் என்னைப்பற்றும் விசுவாசத்தை மறுதலியாமல், என்னுடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

யச ஆகிலும் சில காரியங்களைக் குறித்து உன்மேல் விசனமாய் இருக்கிறேன்; [4]விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப்புசிப்பதற்கும் [5]வேசித்தனம்பண்ணுவதற்கும் எதுவான கேடுகளை இஸ்ரவேல் புத்திரர்முன்பாகப் போடும்படிக்கு, [6]பாலாகென்பவனுக்குப் போதனைசெய்த பாலாமுடைய போதகத்தைப் பிடித்திருக்கிறவர்கள் உன்னிடத்தில் இருக்கிறார்கள்.

யஞ அல்லாமலும் [7]நிக்கோலாவின் மார்க்கத்தாருடைய போதகத்தைப் பற்றிக்கொள்ளுகிறவர்களும் உன்னிடத்தில் உண்டு.

யசு ஆகையால் நீ மனம்திருப்புவாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, [8]என் வாயின் கட்கத்தால் அவர்களோடே யுத்தம்பண்ணுவேன்.

யஎ ¶ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [9]காதுள்ளவன் கேட்கக்கடவன்; செயம்சொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான கல்லையும், அந்தக் கல்லின்மேலே எழுதப்பட்டதுமாய், பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியாததுமாய் இருக்கிற [10]புதிய நாமத்தையும் கட்டளையிடுவேன் என்கிறார் என்று எழுது.

1 வெளி. க. உசு.

2 உ. வச.

3 கூ. வச.

4 உஅ. வச. அப். அஅ. உசு. க கொரி. அ. கூ, அ: அ. அசு, உஅ.

5 க கொரி. சு. கூ. ழி.

6 ச மோ. உச. அச: உஇ. க: கூ.அசு. உ பே. உ. அஇ. யூச. அசு.

7 கூ. வச.

8 எச. அசு. ச. உதெச. உ. அ வெளி. க. அசு: அசு. அஇ, உக

9 எ, அசு. வச.

10 வெளி. க.உஉ: அசு. அஉ.

11 வெளி. க. அச, அஇ.

12 உ. வசனம்.

13 உ மோ கச. அஇ. அப். அஇ. உஅ, உசு. க கொரி. அ.அசு, உஅ. அச. வச.

14 க இரா. அசு. கூ: உசு. உஇ. உ இரா. கூ. எ.

15 உரோ. உ. ச. வெளி. சூ. உஅ.

16 க சாமு.அசு.எ. க ஈஸ்ரா. உஅ. சூ: உசு. அஎ. உ ஈஸ்ரா. சூ.உஅ. சங். எ. சூ. எரே. அசு. உஅ: அஎ.அ: உஅ. அஉ. யோவா. உ. உச, உஇ. அப். க. உச. உரோ. அ. உஎ.

17 சங். சூஉ. அஉ. மத். அசு. உஎ. உரோ. உ. சூ: அச. அஉ. உ கொரி. ஙி. அ. கலா. சூ. ஙி. வெளி. உஅ அஉ.

11 அக்கினிச் சுவாலையைப் போன்ற கண்களும் உருக்கிய செம்பைப்போன்ற கால்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது:

யஎ [12]உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ பின்பு செய்த கிரியைகள் முந்தின கிரியைகளிலும் அதிகமாய் இருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்.

உய ஆகிலும் (ஒன்றைக்குறித்து) உன்மேல் விதனமாய் இருக்கிறேன்; என்னவெனில், [13]வேசித்தனம்பண்ணும்படிக்கும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கும்படிக்கும், தன்னைத் தீர்க்கதரிசி என்று சொல்லிக்கொள்ளுகிற [14]இயேசெபலென்னும் ஸ்திரீ என்னுடையஊழியக்காரருக்குப் போதித்து வஞ்சிக்கிறாள்; அவளுக்கு நீ இடம் கொடுக்கிறாய்.

உக [15]அவள் மனம்திருப்பும்படியாய்க் காலத்தை அவளுக்குக் கொடுத்தேன்; அவள் தன் வேசிமார்க்கத்தைவிட்டு மனம்திருப்ப விருப்பமில்லை.

உஉ (ஆகையால்) கேள், அவளும் அவளுடனேகூடவிபசாரம் செய்தவர்களும் தங்களுடைய கிரியைகளைவிட்டு மனம்திருப்பாவிட்டால், நான் அவளை ஒரு கட்டிலின்மேலும், இவர்களை மிகுந்த உபத்திரவத்திலேயும் போட்டு, அவளுடைய பிள்ளைகளைக் கொலை செய்வேன்.

உசு அப்பொழுது [16]நானே உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர் என்று எல்லாச் சபைகளும் அறிந்துகொள்வார்கள்; அல்லாமலும், [17]உங்களில்

Digitized by Google

அவனவனுடைய கிரியைகளின் படியே யாவருக்கும் பதில்கொடுப்பேன்.

உச இந்தப் போதகத்தைப் பற்றிக்கொள்ளாமலும், அவர்கள் சொல்லுகிறபடி சாத்தானுடைய ஆழங்களை அறிந்துகொள்ளாமலும் இருக்கிற தியத்தைராவிலுள்ள மற்றவர்களாகிய உங்களுக்கு நான் சொல்லுகிறதாவது: [1]உங்கள்மேலே வேறொரு பாரத்தையும் போடமாட்டேன்.

உஉ [2]உங்களுக்கு உண்டானதை நான்வருமளவும்பத்திரமாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்.

உஊ செயம்கொண்டு [3]முடிவுபரியந்தம் என் கிரியைகளைக் காத்துக்கொள்ளுகிறவன்எவனே, [4]அவனுக்கு என்னுடைய பிதாவினிடத்தில் நான் பெற்றதுபோல, சனக்கூட்டங்கள்மேல் அதிகாரத்தைக் கொடுப்பேன்.

உஎ [5]அவன் இருப்புக்கோலால் அவர்களை நடத்திக்கொள்வான்; அவர்கள் மண்கலங்களைப்போல நொறுக்கப்படுவார்கள்.

உஅ அல்லாமலும் [6]விடிவெள்ளி நட்சத்திரத்தை அவனுக்குக் கொடுப்பேன்.

உக ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [7]காதுள்ளவனே கேட்கக்கடவனென்று எழுது.

ரூ. அதிகாரம்.

க. சருதை சபையின் தூதன் எடித்தகொள்ளப்பட்டு, உ. குணப்படும்படி புத்திசொல்லப்பட்டு, குணப்படாமைக்குப் பயமுறுத்தப்பட்டது. அ. பிலதெல்பியா சபையின் தூதன், ஆ. தன் சுறுசுறுப்புக்காகவும் பொறுமைக்காகவும் மெச்சிக்கொள்ளப்பட்டது. ஆஇ. இலவோதிக்கையா சபையின் தூதன் அனலும் குளிரும் இல்லாதிருந்ததினால் எடித்தகொள்ளப்பட்டு, ஈக. சுறுசுறுப்படையும்படி எவப்பட்டது. உஆ. நிறுத்து வாசலண்டையில் நின்று தட்டுகிறேன் என்பது.

சருதை ஊரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், பராபரனுடைய [8]ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது: [9]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ உயிருள்ளவன் என்றுபேர்கொண்டிருந்தும், [10]செத்தவனாய் இருக்கிறாய்.

உ உன் கிரியைகள் பராபரனுக்கு முன்பாக நிறைந்தவைகள் அல்லவென்று கண்டிருக்கிறேன்; ஆகையால் நீ விழித்துக்கொண்டு சாகிறதற்கு எதுவான மற்றவர்களை ஸ்திரப்படுத்துவாயாக.

ஊ மேலும் [11]நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைத்துக்கைக்கொண்டு [12]மனம்திருப்புவாயாக; [13]நீ விழித்துக்கொள்ளாவிட்டால்திருடனைப்போல உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் நேரத்தை அறியாதிருப்பாய்.

ஃ [14]தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத [15]சிலபேர் சருதை ஊரிலே உன்னிடமே உண்டு; அவர்கள் பாத்திரவான்களானபடியால் என்னுடனேகூட [16]வெண்மையான உடைகளைத் தரித்துகடப்பார்கள்.

ரு ¶ செயம்கொள்ளுகிறவன் [17]வெண்மையான வஸ்திரங்களால் உடுத்தப்படுவான்; நான் [18]சீவபுத்தகத்தில் [19]அவனுடைய நாமத்தைக் கிறுக்கிப்போடாமல், அதை என் பிதா முன்பாகவும் [20]அவருடைய தூதர் முன்பாகவும் அறிக்கைபண்ணுவேன்.

ரூ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [21]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது.

எ ¶ பிலதெல்பியா ஊரிலுள்ள சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [22]தாவீதின் திறவுகோல உடையவருமாய், [23]ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவருமாய், [24]ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாய் இருக்கிற [25]பரி

---

1 அப். ஈஇ. உஅ.
2 வெளி. க. ஈக
3 மோவா. க. உக. க மோ. க. உக.
4 மத். ஈக. உஅ. லூக்.உஉ. உக, கஅ. க கொரி. க க. வெளி. க. உக: உஅ. ச.
5 சங். உ. அ, க: சகா. ஈச. தானி. எ. உஉ. வெளி. ஈஉ. இ: ஈக. ஈஇ.
6 உ பே. க. ஈக. வெளி. உஉ. ஈக.
7 எ. வச.
8 வெளி. க. ச. ஈக: ச. இ: இ. க.
9 வெளி. உ. உ.
10 எபே. உ. க, இ. க தீமோ. இ. க.
11 க தீமோ. க. கஅ. உ தீமோ. க. ஈக. ஈக. வச
12 ஈக. வச.
13 மத்.உச. சஉ, சக: உஇ. ஈக. மாற். ஈக. கக. லூக். ஈஉ. ககூ சஅ. க தெச. இ. உ, கூ. உ பே. க. ஆ. வெளி. ஈக. ஈஇ.
14 யூதா. உக.
15 அப். க. ஈஇ.
16 வெளி. ச. ச: கூ. ஈக: எ. கூ, உக.
17 வெளி. ஈக. அ.
18 பிலி. ச. க. வெளி. ஈக. அ: ஈஎ அ:கஅ.ஈஉ. உக. உஎ.
19 உ மோ. கஉ கஉ. சங். கூ. உஅ.
20 மத். ஆ. கஉ. லூக். ஈஉ. அ.
21 வெளி. உ. எ.
22 ஏசா. உஉ. உஉ. லூக். க. கஉ. வெளி. க. ஈஅ.
23 மத். ஈக. ஈக.
24 யோபு. ஈஉ. ஈச.—25 அப். க. ஈச.

Digitized by Google

சுத்தமும் [1]சத்தியமும் உள்ளவர் சொல்லுகிறதாவது:

அ [2]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், கொஞ்சப்பெலன் (மாத்திரம்) உனக்கு இருந்தும் நீ என்னுடைய நாமத்தை மறுதலியாமல் எனது வசனத்தைக் ஷகைக் கொண்டபடியினாலே, இதோ, உனக்குமுன்பாகத் [3]திறந்திருக்கிற வாசலைக் கொடுத்தேன்; அதை ஒருவனும் பூட்டமாட்டான்.

கூ கேள், யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய [4]சாத்தானுடைய ஆலயத்தாரில் (சிலரை) உனக்குத் தருகிறேன்; கேள், அவர்கள் உன் பாதங்களுக்குமுன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாய் இருக்கிறதை அறிந்துகொள்ளும்படி [5]செய்வேன்.

ய என்னுடைய பொறுமையைக் குறித்துச் சொல்லுகிற வசனத்தை நீ கைக்கொண்டபடியினாலே நானும் [6]பூமியின்மேல் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படிக்கு, [7]பூச்சக்கரத்தின்மேல் எங்கும் வரும் சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி [8]உன்னைக் காப்பாற்றுவேன்.

யக [9]சீக்கிரமாய் வருகிறேன்; [10]ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்கு உள்ளதைப் [11]பத்திரமாய்ப் பற்றிக்கொள்வாயாக.

யஉ ¶ செயம்கொள்ளுகிறவனை நான் என் தேவனுடைய [12]ஆலயத்திலே ஸ்தம்பமாக்குவேன், அதில்நின்று அவன் ஒருக்காலும் நீங்கான்; மேலும் என் தேவனுடையநாமத்தையும்என் தேவனால் வானத்திலிருந்து இறங்குகிற [13]புதிய எருசலேமாகிய என் தேவனுடைய பட்டணத்தின் நாமத்தையும், [14]எனது புதிய நாமத்தையும் [15]அவன்மேலே எழுதுவேன்.

யஊ ஆவியானவர் சபைகளுக்கு என்ன சொல்லுகிறதைக் [16]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது.

யஎ ¶ இலவோதிக்கையா ஊரிலுள்ள* சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில், [17]உண்மையும் சத்தியமுமான சாட்சியுமாய், [18]பராபரனுடைய சிருட்டிகளுக்கு ஆதியுமாய் இருக்கிற [19]ஆமன் என்பவர் சொல்லுகிறதாவது:

யஅ [20]உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிர்ச்சியுள்ளவனுமல்ல, அனலுள்ளவனுமல்ல, நீ குளிர்ச்சியையாவது அனலையாவது உள்ளவனாயிருக்கும்.

யக இப்படி நீ குளிர்ச்சியும் அனலும் இல்லாமல் வெதுவெதுப்புள்ளவனாயிருக்கிறபடியினாலே உன்னை என் வாயில்நின்றும் வாந்திபண்ணுவேன்.

யள நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரதபிக்கப்படத்தக்கவனும், எளியவனும், குருடனும், நிருவாணியாயும் இருக்கிறதை அறியாமல், [21]நான் ஐசுவரியமுள்ளவன் என்றும், அதிக திரவியத்தைச் சம்பாதித்தவன் என்றும், எனக்கு ஒன்றும் வேண்டுவதில்லை என்றும் சொல்லுகிறாய்.

யஅ ஆதலால் நான் உனக்கு ஆலோசனையாய்ச் சொல்லுகிறதாவது: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிருவாணமாகிய அவலட்சணம் தோன்றாமல் இருக்கத்தக்கதாக நீ உடுத்திக்கொள்ளும்படிக்கு [22]வெண்மையான வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வை அடையும்படிக்கு உன் கண்களுக்கு மாத்திரையைப் போடவும் [23]வேண்டுமென்று சொல்லுகிறேன்.

யக [24]என்னால் சிநேகிக்கப்படுகிறவர்கள் எவர்களோ, அவர்களைக் கடிந்துகொண்டு தண்டிக்கி

கி. பி. கசு.

1 க போ. இ. உம். மச. வச. வெளி. க. இ: க. ம: மக. மக.
2 க, வச.
3 க கொரி. மக. கூ. உ கொரி. உ. மஉ.
4 வெளி. உ. கூ.
5 எசா.சக. உக: கம். மச.
6 எசா. உச. மஎ.
7 லூக். உ. க.
8 உ பே. உ. கூ.
9 பிலி. ச. இ. வெளி. க. க: உஉ. எ, மஉ, உஅ.
10 வெளி. உ. ம.
11 க.வச. வெளி. உ. உஇ.
12 க இரா. எ. உக. கலா. உ. கூ.
13 கலா. ச. உக. எபி. மஉ. உஉ. வெளி. உக. உ, ம.
14 வெளி. உஉ. ச.
15 வெளி.உ.மஎ: மச.க: உஉ. ச.
16 வெளி. உ. எ.
* அல்லத இலவோதிக்கையா ஊரின்.
17 வெளி. க. இ: மகூ. மக: உஉ. க. எ. வச.
18 கொலோ. க. மஇ.
19 எசா. கஇ.மக.
20 க. வச.
21 ஓசே. மஉ. அ. க கொரி. ச. அ.
22 உ கொரி. இ க. வெளி. எ. மக: மகூ. மஇ: மகூ. அ.
23 எசா. இஇ. க. மத். மக. சச: உஇ. கூ.
24 போபு. இ.மஎ. வாக்.க. மக.மஉ. எபி. மஉ. இ,க. பாக். க. மஉ.

Digitized by Google

றேன்; ஆகையால் நீ சாக்கிரதையாயிருந்து மனம் திருப்பக்கடவாய்.

உய இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; [1]ஒருவன் என் சத்தத்தைக்கேட்டுக் கதவைத் திறந்தால், [2]அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே இராப்போசனம்பண்ணுவேன்; அவனும் என்னோடே இராப்போசனம்பண்ணுவான்.

உக ¶ நான் செயம்கொண்டு என் பிதாவினுடைய ஆசனத்திலே அவரோடேகூட உளுக்காந்ததுபோல செயம்கொள்ளுகிறவன் என்னுடைய ஆசனத்திலே என்னோடேகூட [3]உளுக்காரும்படி அருள்செய்வேன்.

உஉ ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் [4]காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று எழுது என்றார்.

ச. அதிகாரம்.

க. போவான் கண்ட பரமண்டலத்திலுள்ள பராபரனுடைய ஆசனத்தையும், ச. இருபத்துநாலு மூப்பர்களையும், கூ. சர்வாங்கமும் கண்கள் நிறைந்த நாலு சீவன்களையும், ஙு. மூப்பர்கள் தங்கள் கிரீடங்களைத் தூற்றி ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவனை வணங்கினதையும்குறித்துச் சொல்லியது.

இவற்றிற்குப் பின்பு, அதோ வானத்திலே ஒரு வாசல் திறந்திருக்கக் கண்டேன்; அல்லாமலும் முன்னே நான் கேட்கும்படி ஈக்காளம்போல என்னுடனே [5]பேசின சத்தம் என்னுடனே சொன்னது: [6]இங்கே ஏறிவா, [7]இதற்குப்பின்பு சம்பவிக்கத்தக்கவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்றார்.

உ ¶ உடனே [8]ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது வானத்தில் [9]ஒரு ஆசனம் வைக்கப்பட்டிருக்கவும், அந்த ஆசனத்தின்மேல் ஒருவர் உளுக்காந்திருக்கவும் கண்டேன்.

ஊ (அதில்) உளுக்காந்திருந்தவர் பார்வைக்கு ரவாக்கல்லும் சிவப்புக்கல்லும்போலத் தோன்றினர்; அந்த [10]ஆசனத்தைச் சுற்றி ஒரு வானவில் இருந்தது; அது பார்வைக்கு மரகதம்போலத் தோன்றிற்று.

ச மேலும் [11]அந்த ஆசனத்தைச் சூழ இருபத்துநான்கு ஆசனங்களும் இருந்தன; அந்த ஆசனங்களின்மேலே [12]வெண்மையான வஸ்திரங்கள் தரிப்பிக்கப்பட்ட இருபத்துநான்கு மூப்பர்கள் உளுக்காந்திருந்தார்கள்; [13]அவர்கள் தங்கள் சிரசுகளின்மேலே பொன்கிரீடங்களை உடையவர்களாய் இருந்தார்கள்.

ஙு அன்றியும் அந்த ஆசனத்திலிருந்து [14]மின்னும், இடிமுழக்கங்களும், (மற்றச்) சத்தங்களும் புறப்பட்டன; மேலும் [15]பராபரனுடைய ஏழு ஆவிகளாகிய [16]ஏழு தீவட்டிகள் ஆசனத்திற்குமுன்பாக எரிகிறவைகளாய் இருந்தன.

ஙூ மேலும் அந்த ஆசனத்திற்குமுன்பாகப் [17]பளிங்குக் கண்ணாடியைப்போன்ற கடல் இருந்தது; அதுவுமல்லாமல் [18]அந்த ஆசனத்தின் மத்தியிலும் ஆசனத்தின் சுற்றிலும் நான்கு சீவன்கள் இருந்தன; அவைகள் முன்புறமும் [19]பின்புறமும் கண்களால் நிறைந்தவைகளாய் இருந்தன.

ஙஎ [20]முதலாம் சீவன் சிங்கத்திற்கு ஒப்பாகவும், இரண்டாம் சீவன் கன்றுக்குட்டிக்கு ஒப்பாகவும், மூன்றும் சீவன் மனிதனைப்போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் சீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவும் இருந்தன.

ஙஅ அந்த நான்கு சீவன்களிலும் ஒவ்வொன்று [21]அவ்வாறு சிறகுகள் உள்ளவைகளுமாய், சுற்றிலும் [22]உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாய், [23]இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய [24]சர்வவல்லமையுள்ள தேவனாயிருக்கிற பராபரன் [25]பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று

கி. பி. கூசு.

1 லூக். ஙஉ. கஎ.
2 யோவா. ஙச. உக.
3 மத். ஙக. உஅ. லூக். உஉ. கஙி. க கொரி. க. உ. உ தீமோ. உ. ஙஉ. வெளி. உ. உக, உஎ.
4 வெளி. உ. எ.
5 வெளி. க. ஙி.
6 வெளி. ஙக. ஙஉ.
7 வெளி. க. ஙக: உஉ. கூ.
8 வெளி. க. ஙி: ஙஎ. க; உக. ஙி.
9 ஏசா. கூ. க. எரே. ஙஎ. ஙஉ. ஏசே. க. உகூ: ஙி. க. தானி. எ. கூ.
10 ஏசே. க. உஅ.
11 வெளி. ஙக. ஙக.
12 வெளி. க. ச, ஙி: கூ. ஙக: எ. க, ஙக, ஙச: ஙகூ. ஙச.
13 ஙி. வச.
14 வெளி. அ. ஙி: ஙக. ஙஅ.
15 வெளி. க. ச: கூ. க: ஙி. கூ.
16 உ மோ. கஎ. உக. உ நாளா. ச. உஙி. ஏசே. க. ஙக. சகரி. ச. உ.
17 உ மோ. கஅ. அ. வெளி. ஙஙி. உ.
18 ஏசே. க. ஙி.
19 அ. வச.
20 ச மோ. உ. உ. ழ. ஏசே. க. ஙி: ஙி. ஙச.
21 ஏசா. க. உ.
22 க. வச.
23 வெளி. க. ச.
24 வெளி. க. அ.
25 ஏசா. க. க.

Digitized by Google

இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொள்ளுகிறவைகளுமாய் இருந்தன.*

க ¶ மேலும் ஆசனத்தின்மேல் உளுக்காந்திருந்து [1]என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவருக்கு அந்தச் சீவன்கள் துதியையும் கனத்தையும் தோத்திரத்தையும் செலுத்தும்பொழுது,

ய [2]இருபத்துநான்கு மூப்பர்களும், ஆசனத்தின்மேல் உளுக்காந்தவருக்குமுன்பாக வணக்கமாய் [3]விழுந்து, என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறவனைத் தொழுதுகொண்டு, [4]தங்கள் கிரீடங்களை ஆசனத்தின்முன்பாக வைத்து,

யக ஆண்டவரே, தேவரீர் [5]சகலத்தையும் சிருட்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருட்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கின்றன; ஆகையால், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் [6]பாத்திரமாயிருக்கிறீர் என்று புகழுகிறார்கள்.

ரு. அதிகாரம்.

க. ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்ட புத்தகத்தைத் திறக்க அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான வர்மாத்திரமே பாத்திரரென்றும், உ. அதினால் மூப்பர்கள் அவரைப் புகழ்ந்து, க. இரத்தத்தினால் தங்களை மீட்டாரென்றும் அறிக்கைபண்ணினதைச் சொல்லியது.

அன்றியும் அந்த ஆசனத்திலே உளுக்காந்தவருடைய வலதுகையிலே, உள்ளும்புறம்பும் எழுதப்பட்டும், [7]ஏழு முத்திரைகளாலே பத்திரப்படுத்தப்பட்டும் இருந்த [8]ஒரு புத்தகத்தைக் கண்டேன்.

உ பலமுள்ள ஒரு தூதனையும் கண்டேன்; அவன் இந்தப் புத்தகத்தைத் திறக்கிறதற்கும் இதின் முத்திரைகளை உடைக்கிறதற்கும் பாத்திரர் யாரென்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டான்.

ங வானத்திலாவது, பூமியின்மேலாவது, பூமியின்கீழாவது [9]ஒருவனும் அந்தப் புத்தகத்தைத் திறக்கவும் அதிலே நோக்கிப்பார்க்கவும் கூடாதிருந்தது.

ச ஒருவனும் அந்தப் புத்தகத்தைத் திறந்து, அதில் நோக்கிப் பார்க்கிறதற்குப் பாத்திரனாகக் காணப்படாததினாலே நான் மிகவும் அழுதேன்.

ஙி அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி, நீ அழவேண்டுவதில்லை; இந்தப் புத்தகத்தைத் திறந்து, [10]இதின் ஏழுமுத்திரைகளையும் உடைக்கும்படிக்குத் [11]தாவீதின் வேராகிய [12]யூதா கோத்திரத்தில் தோன்றிய சிங்கம் இதோ செயங்கொண்டிருக்கிறதென்றான்.

ஞ ¶ அப்பொழுது நான் பார்த்து, ஆசனத்திற்கும் நான்கு சீவன்களுக்கும் மூப்பர்களுக்கும் மத்தியிலே ஒரு ஆட்டுக்குட்டி நிற்கக்கண்டேன்; [13]அது அடிக்கப்பட்ட வண்ணமாகவும், ஏழு கொம்புகளையும் பூமி எங்கும் அனுப்பப்பட்ட பராபரனுடைய [14]ஏழாவிகளாகிய [15]ஏழு கண்களையும் உடையதாகவும் இருந்தது.

ட மேலும் அது வந்து ஆசனத்தின்மேல் உளுக்காந்தவருடைய [16]வலதுகரத்தில் இருந்த புத்தகத்தை வாங்கிற்று.

ண ¶ அந்தப் புத்தகத்தை அது வாங்கினபொழுது, [17]அந்த நான்கு சீவன்களும் இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் [18]சுரமண்டலங்களையும், [19]பரிசுத்தவான்களுடைய செபங்களாகிய தூபவருக்கங்களால் †நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு, ஆட்டுக்குட்டிக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து,

ஙக தேவரீர் [20]அடிக்கப்பட்டு உம்முடைய இரத்தத்தினாலே [21]சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் தேசத்தாரிலும் (மற்

கி. பி. ஙஙு.

* ஒரேக்கு, இரவுபகலும் சொல்லிக்கொண்டெயாமலிருந்தன.

1 வெளி. க. ரஅ: ஐ. ரச: ரஐ. ஏ.

2 வெளி. ஐ. அ, ரச.

3 க. வச.

4 ச. வச.

5 க மோ. க. க. அப். ரஎ. உச. எபே. க. கூ. கொலோ. க. ரகூ. வெளி. ர. கூ.

6 வெளி. ஐ. ரஉ.

7 எசா. உகூ. ஙக. தானி. ரஉ. ச.

8 எசே. உ. கூ,ர.

9 கூ. வச.

10 க.வச. வெளி. க. க.

11 எசா. ரங. க,ர. உரோ. ரஐ.ரஉ. வெளி. உஉ. ரங.

12 கமோ. சகூ.கூ, ர. எபி. எ. ரச.

13 எசா. ஙூ. எ. மோவா.க.உகூ, கூ. க பே. க. ரகூ. வெளி. ரங. அ.கூ, ரஉ. வச.

14 வெளி. ச. ஐ.

15 சகரி.க.கூ:ச.ர.

16 வெளி. ச. உ.

17 வெளி.ச.அ,ர.

18 வெளி. ரச.உ: ரஐ. உ.

19 சங். சசூ. உ. வெளி. அ.கூ,ச.

† அல்லது நறுமத்தங்களால்.

20 கூ. வச.

21 தானி. ச. க: கூ. உஐ. வெளி. எ. கூ: ரங. கூ: ரச. கூ.

Digitized by Google

றச்) சனக்கூட்டங்களிலும் [1]எங்களைப் பராபரனுக்காக வாங்கிக் கொண்டு,

ய [1]எங்கள் பராபரனுக்குமுன்பாக எங்களை இராசாக்களும் ஆசாரியரும் ஆக்கினீர்; நாங்கள் பூமியிலே ஆளுகைசெய்வோம்; ஆகையால் நீர் இந்தப் புத்தகத்தை வாங்கி இதின் முத்திரைகளை உடைக்கிறதற்குப் [3]பாத்திரராயிருக்கிறீர் என்று [4]புதிய பாட்டைப் பாடினார்கள்.

யக பின்னும் நான் பார்த்தபொழுது, அந்த ஆசனத்தையும் சீவன்களையும் மூப்பர்களையும் [5]சூழ்ந்திருந்த அநேகம் தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன்; [6]அவர்களுடைய இலக்கம் பதினாயிரத்திற்குப் பதினாயிரமும், ஆயிரத்திற்கு ஆயிரமுமாய் இருந்தது.

யஉ அவர்களும், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் [7]பாத்திரராயிருக்கிறார் என்று மிகுந்த சத்தத்தோடே சொன்னார்கள்.

யங அல்லாமலும் [8]வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழும் இருக்கிற சிருட்டிகள் யாவும் சமுத்திரத்தின்மேல் உள்ளவைகளும் இவற்றினுள் அடங்கிய வஸ்துக்கள் யாவும் [9]ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் [10]தோத்திரமும், கனமும், மகிமையும், வல்லமையும், என்றென்றைக்கும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்.

யச [11]அதற்கு நான்கு சீவன்களும், ஆமன் என்று சொல்லிற்று; மறுபடியும் அந்த இருபத்துநான்கு மூப்பர்களும் (வணக்கமாய்) விழுந்து [12]என்றென்றைக்கும் உ

கி. பி. கசு.

1 அப் உம். உஅ. உரோ. க. உச. க கொரி. க. உம்: எ. உக. எபே. க. எ. கொலோ. க. ம.எபி. கம உ. க பே. க.* உஅ, மக. உ பே. உ. க. க யோ. க எ. வெளி. மச. ச.

2 உ மோ. மக. சு. க பே. உ. ஙி, கூ. வெளி. க. க: உம். க: உஉ. ஙி.

3 வெளி. ச. மக.

4 சங். சம. க. வெளி. மச. க.

5 வெளி. ச. ச, கூ.

6 சங். கஅ. மஎ. தானி.எ. ம எபி. மஉ. உஉ.

7 வெளி. ச. மக.

8 பிலி. உ. ம. க. வச.

9 வெளி. க. மசு: எ. ம.

10 க எஸ்ரா. உசு. மக. உரோ. க ஙி: மசு. உஎ. க நீமோ.க,மசு. க பே. ச. மக: ஙி. மக. வெளி. க. க.

11 வெளி. மக. ச.

12 வெளி. ச. கூ, ம.

13 வெளி. ஙி. ஙி, க, எ.

14 வெளி. ச. எ.

15 சகரி. க. க. வெளி. மக. மக.

16 சங். சஙி. ச, ஙி

17 சகரி. சு. மக. வெளி. ம ச. ம ச.

18 வெளி. ச. எ.

19 சகரி. சு. உ.

20 வெளி. ச. எ.

21 சகரி. சு. உ.

* அது ஒரு ஒபின் குவாட்டையும் அதில் பன்னிரண்டில் ஒன்றையும் குறிக்கும் அளவு.

யிரோடிருக்கிறவனைத் தொழுது கொண்டார்கள்.

சுஅ. அதிகாரம்.

க. முத்திரைகள் ஒவ்வொன்றுப்த் திறக்கப்பட்ட போது, உலக முடிவுமட்டும் சம்பவிக்கப்போகிற காரியங்கள் தீர்க்கதரிசனமாய்க் குறிக்கப்பட்டது.

[13]பின்பு ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றைப் பேர்க்கக் கண்டேன்; அல்லாமலும் [14]நான்கு சீவன்களில் ஒன்று (என்னைநோக்கி,) நீ வந்து பார் என்று இடிமுழக்கம்போலச் சொல்லக் கேட்டேன்.

உ அப்பொழுது நான் பார்க்கையில், [15]வெண்மையான குதிரையைக் கண்டேன்; [16]அதின்மேல் இருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; [17]அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது; அவன் செயமுள்ளவனாய்ச் செயிக்கும்படிக்குப் புறப்பட்டான்.

ஈ ¶ பின்பு அவர் இரண்டாம் முத்திரையைப் பேர்த்தபொழுது, [18]இரண்டாம் சீவனானது, நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.

ஊ [19]உடனே அக்கினி நிறமுள்ள வேறொரு குதிரை புறப்பட்டது; அதின்மேல் இருந்தவன் பூமியில் உள்ளவர்கள் ஒருவனை ஒருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்து எடுத்துப்போடுகிறதற்கு அதிகாரமும், ஒரு பெரிய கட்கமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

ஙி ¶ பின்பு அவர் மூன்றும் முத்திரையைப் பேர்த்தபொழுது, [20]மூன்றும் சீவனானது, நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன், உடனே நான் பார்க்கையில் [21]ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன்; அதின்மேல் இருந்தவன் ஒரு தராசைத் தன் கையில் பிடித்திருந்தான்.

சு அப்போது, உழக்குக் கோதுமைக்கு* ஒரு தெனாரிப்பணம், மூவுழக்கு வாற்கோதுமைக்கு ஒரு

Digitized by Google

தோரிப்பணமென்றும், [1]எண் ணெயையும் பழஇரசத்தையும் சே தப்படுத்தாதிருப்பாயாக என்றும் நான்கு சீவன்களின் மத்தியிலிருந் து உண்டான சத்தத்தைக் கேட் டேன்.

எ ¶ பின்பு அவர் நான்காம் முத் திரையைப் பேர்த்தபொழுது, [2]நா ன்காம் சீவனானது, நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன்.

அ [3]உட்னே நான் பார்க்கையில் மங்கின நிறமுள்ள குதிரையைக் கண்டேன்; அதின்மேல் இருந்த வனுக்கு மரணமென்றுபேர்; மரித் தோர் ஸ்தலம் அவனுடனேகூடச் சென்றது; [4]கட்கத்தினாலும், பஞ் சத்தினாலும், சாவினாலும், [5]பூமி யின் தஷ்டமிருகங்களினாலும் பூ மியின் கால்பங்கில் உள்ளவர்க ளைக் கொலைசெய்யும்படிக்கு அதி காரம் அவனுக்குக்* கொடுக்கப் பட்டது.

க ¶ பின்பு அவர் ஐந்தாம் முத் திரையைப் பேர்த்தபொழுது, [6]ப ராபரனுடைய வசனத்தின்நிமித்த மும் [7]தாங்கள் கொடுத்த சாட்சி யின்நிமித்தமும் கொல்லப்பட்ட வர்களுடைய [8]ஆத்துமாக்களைப் [9]பலிபீடத்தின்கீழே கண்டேன்.

ய அவர்கள், [10]பரிசுத்தமும் சத் தியமுமுள்ள ஆண்டவரே, [11]எது வரைக்கும் [12]தேவரீர் நியாயத்தீர்ப் புக்கொடாமலும், பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங் கள் இரத்தத்தைக்குறித்துப் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மி குந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார் கள்.

யக அப்பொழுது [13]அவர்களுக் கு வெள்ளை அங்கிகள் கொடுக் கப்பட்டதுமல்லாமல், அவர்கள் தங்களைப்போலக்கொலைசெய்யப் படுபவர்களாகிய தங்கள் உடன்ப ணிவிடைக்காரரும்தங்களுடைய சகோதரரும் வந்து நிறையுமள வும், பின்னும் [14]கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் எனறு அவர் களுக்குச் சொல்லப்பட்டது.

யஉ ¶ பின்பு அவர் ஆறாம் முத் திரையைப் பேர்க்கக்கண்டேன்; [15]உடனே பூமி மிகவும் அதிர்ந்த து; [16]சூரியனும் கம்பளியைப்போ லக் கறுப்பாயிற்று; சந்திரன் முழு வதும் இரத்தம்போல ஆயிற்று.

யஊ [17]வானத்தின் நட்சத்திரங் களும், பெருங்காற்றினால் அசைக் கப்பட்ட அத்திமரம் பருவமில்லா த† தன் காய்களை உதிர்க்கிறதுபோ லப் பூமியிலே விழுந்தன.

யச [18]வானமும் சுருட்டப்பட் ட புத்தகம் போலாகி விலகிப்போ யிற்று; [19]மலைகள், தீவுகள், யாவும் தங்கள் இடங்களைவிட்டு விலக் கப்பட்டுப்போயின.

யஙு மேலும் பூமியின் இராசாக்க ளும், பெரியோர்களும், சேனைத் தலைவர்களும், ஐசுவரியவான்க ளும், பலவான்களும், அடிமை கள் யாவரும், சுயாதீனர் யாவரும் பர்வதங்களின் குகைகளிலும் [20]கல்மலைகளுக்குள்ளும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும் கல்ம லைகளையும் நோக்கி,

யசு [21]அவருடைய கோபாக்கி னை தோன்றுகிற பெரியகாள் வந் திருக்கின்றதே; [22]நிலைநிற்கத் தகு ணியுள்ளவன் யாவன்?

யஎ ஆகையால் [23]நீங்கள் எங்கள் மேல் விழுந்து, ஆசனத்தின்மேல் உளைக்காந்திருக்கிறவருடைய மு கத்திற்கும், ஆட்டுக்குட்டியின் கோபத்திற்கும் எங்களை மறைத்து அடக்குங்கள் என்று கூப்பிட் டார்கள்.

எ. அதிகாரம்.

க. ஒரு தூதன் பாபாவுடைய அடியார்களின் நெற்றிகளில் முத்திரைபோட்டதையும், ச. இஸ்ரவேல் கோத்திரங்களில் முத்திரைபோடப்பட்ட வர்களின் இலக்கத்தையும், க. மற்றச் சாதிகளில் எண்ணில்லாத திரளான கூட்டம் ஆசனத்துக்கு முன்பாக வெண்மையான வஸ்திரம் தரித்துத் தங்கள் கைகளில் குருத்தோலைகள் பிடித்து நிற்கிறதையும், ச. அவர்கள் வஸ்திரங்களை ஆட்டுக்

கி. பி. கசு.

1 கொலி. க. ச.

2 கொலி. ச. எ.

3 சகரி. க. ஆ.
4 எசே.மச. உக.
5 உ மோ. உக., உஉ.
* அல்லது அவர் களுக்கு.
6 வெளி. க. க.
7 உ தீமோ.க.அ. வெளி. மஉ.மஎ: மக. ம.
8 வெளி. உம.ச.
9 வெளி. அ. க: கூ.மக: மச. மஅ.
10 வெளி.ஃ.எ.
11 சகரி. க. மஉ.
12 வெளி. மக. மஅ: மக. உ.
13 வெளி. க. ச, இ: எ. க, மச.
14 எபி. மக. சம. வெளி. மச. மக.
15 வெளி. மக மஅ.
16 யோவே. உ. ஆ, கக: க. மஇ. மத். உச. உக. அப். உ. உம.
17 வெளி. அ. ம: க. க.
† அல்லது பிஞ் சான.
18 சங்.எஉ. உக. எசா. கச. ச. எபி. க. மஉ, மக.
19 எரே. க. உக. ச. உச. வெளி. மக. உம.
20 எசா. உ. மக.
21 எசா.மக.க.ழி. செப். க. மச. ழி. வெளி. மக. மச.
22 சங். எக. எ.
23 ஓசே. ம. அ. லூக். உக. கம. வெளி. க. க.

Digitized by Google

குட்டியின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டதென் றதையும் சொல்லியது.

அவற்றிற்குப் பின்பு பூமியின் நான்கு திசைகளிட்டத்திலும் நான்கு தூதர்கள் நின்று, [1]ஒரு காற்றிலும் பூமியின்மேலாவது சமுத்திரத்தின்மேலாவது ஒரு மரத்தின்மேலாவது அடியாதபடிக்கு, [2]பூமியின் நான்கு காற்றுக்களையும் பிடித்திருக்கக்கண்டேன்.

உ ¶ மேலும் சீவனுள்ள பராபரனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதனைச் சூரியன் உதிக்கும் திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன்; அவன் பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதனையும் நோக்கி,

ஊ [3]நாம் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் [4]முத்திரைபோட்டுத் தீருமளவும், [5]பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டான்.

எ ¶ [6]மேலும் முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைக் கேட்டேன்; இஸ்ரவேல் சந்ததியாராகிய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் [7]நாலாயிரத்து-பேர்.

ஙு அதற்கு வகை, யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; ரூபேன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; காத்கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்.

ஙூ அசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; நவுதலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்.

கி. பி. ஙூ.

1 வெளி. ஃ. ச.

2 தானி. எ. உ.

3 வெளி. உஉ, ச.

4 எசே. கூ. ச. வெளி. ஙச. க.

5 வெளி. க. க: கூ. ச.

6 வெளி. கூ. ஙக.

7 வெளி. ஙச. க.

8 வெளி. ஙு. கூ.

9 உரோ. ஙக. உஙு.

10 வெளி. க. ஙு, ஙஅ: ச. ச: க. ஙக ஙச. வசனம்.

11 சங். க. அ. சோ. சக. ஙக. எரே. க. உக. ஒசே. ஙக. ச. வெளி. ஙூ. க.

12 வெளி. ஙு.ஙக.

13 வெளி. ச. க

14 வெளி. ஙு. ஙக, ஙச.

ஏ சீமெயோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; ஈசஷார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ--பேர்.

அ சேபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; யோசேப்புக் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்; பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் யெஅ-பேர்.

ஆ ¶ இவற்றிற்குப்பின்பு நான் பார்த்து, [8]சகல தேசத்தாரிலும் கோத்திரங்களிலும் (மற்றச்) சனக்கூட்டங்களிலும், பாஷைக்காரரிலுமிருந்து வந்ததுமாய், [9]ஒருவனும் எண்ணக்கூடாததுமாய் இருந்த திரளான கூட்டமாகிய [10]சனங்கள் வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்தவர்களாய் ஆசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்.

இ மேலும் அவர்கள் [11]இரட்சிப்பின் (சனம்) [12]ஆசனத்தின்மேல் உளுக்காருகிற எங்கள் பராபரனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் செலுத்தப்படக்கடவதென்று மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.

ஈக அல்லாமலும் [13]தூதர்கள் யாவரும் ஆசனத்தையும் மூப்பனையும் நான்கு சீவன்களையும் சூழநின்று, ஆசனத்திற்குமுன்பாகச் காஷ்டாங்கமாய் விழுந்து பராபரனைத் தொழுதுகொண்டு,

உ [14]ஆமன், எங்கள் பராபரனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் என்றென்றைக்கும் உண்டாகக்கடவது, ஆமன் என்றார்கள்.

Digitized by Google

யசு ¶ அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னைநோக்கி, [1]வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள் என்று கேட்டான்?

யச அதற்கு நான் என் ஆண்டவனே, அது உமக்குத் தெரியும் என்றேன்; அப்பொழுது அவன் சொன்னதாவது: [2]இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; [3]இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்.

யடு ஆனபடியால் இவர்கள் பராபரனுடைய ஆசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும்பகலும் அவருடைய ஆலயத்திலே அவருக்குப்பணிவிடைசெய்வார்கள்; [4]ஆசனத்தின்மேல் உளுக்காந்திருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்.

யசு [5]இனி இவர்கள் பசியடைவதுமில்லை; தாகம் அடைவதுமில்லை; [6]வெயிலாவது மற்றெந்த உட்டணமாவது அவர்கள்மேல் படுவதுமில்லை.

யள ஆசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே [7]அவர்களை மேய்த்து, அவர்களைச் சீவதண்ணீருள்ள ஊற்றுகளினிடத்திற்கு நடத்துவார்; இவர்களுடைய கண்ணீர் யாவையும் [8]பராபரன் துடைப்பார் என்றான்.

அ. அதிகாரம்.

க. ஏழாம் முத்திரை திறக்கப்பட்டபோது, உ. ஒவ்வொரு எக்காளத்தைப் பிடித்த ஏழு தூதர்கள் தோன்றி, சு. அவர்களில் மூவருமே எக்காளங்களை ஊதினபோது பெரிய வாதைகள் உண்டானதையும், ஃ. மற்றொரு தூதன் பொற்பீடத்தின்மேலுள்ள பரிசுத்தவான்களின் செபங்களோடே சுகந்தவர்க்கங்கள் இட்டதையும் சொல்லியது.

[9]பின்பு அவர் ஏழாம் முத்திரையைப் பேர்த்தபொழுது பரமண்டலத்திலே ஏறக்குறைய அரைமணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று.

கி. பி. கசு.

1 க. வச.
2 வெளி. க. சு: மத. க.
3 சங. க. மஅ. எபி. க. மச. க பேது. க. எ. வெளி. க. ஓ. சகரி.க.க, ச, ஐ.
4 சங. ச, ஐ, க. வெளி. உக. க.
5 சங. சக. ம.
6 சங். சஉக. க. வெளி. உக. ச.
7 சங். உக. க: கக. அ. யோவா. ம. மக, டச.
8 சங. உஐ. அ. வெளி. உக. ச.
9 வெளி. சு. க.
10 மத். மஅ. ம. லூக். க. மசு.
11 உ ராஜா.உசு. உஐ-உஅ.
12 உ மோ. கம.க. வெளி. க. சு.
13 வெளி. ஐ. அ. * அல்லது சேர்கும்படிக்கு.
14 சங். சசக. உ. லூக். க. ம.

† அல்லது பூமியின்மேல்.

15 வெளி. மக. மஅ.
16 உ சாமு. உஉ. அ. கஇரா. மக. மக. அப். ச. கக.

17 எசே. கஅ. உஉ.
18 வெளி. மசு. உ
19 சோ. உ. மக. வெளி. சு. ச.
20 எசே. ஓக. உஐ. ஆமோ. எ. ச.

உ ¶ மேலும், [10]பராபரனுக்கு முன்பாகநின்ற ஏழுதூதர்களையும் கண்டேன்; [11]அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டன.

ஊ வேறொரு தூதனும் தூபம் காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துவந்து பலிபீடப்படியிலே நின்றான்; அல்லாமலும், [12]தூசனத்திற்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின்மேலே [13]பரிசுத்தவான்கள் எல்லாருடைய செபங்களுடனேயும் கூடக் கொடுக்கும்படிக்கு, * அநேக சுகந்தவருக்கங்கள் அவனுக்குக் கொடுக்கப்பட்டன.

ச அப்படியே பரிசுத்தவான்களுடைய செபங்களுடனேகூடச் [14]சுகந்தவருக்கங்களின் புகை தூதனுடைய கையிலிருந்து பராபரனுக்குமுன்பாக எழும்பிற்று.

ரு பின்பு அந்தத் தூதன் தூபக்கலசத்தை எடுத்துக்கொண்டு அதைப் பலிபீடத்திலுள்ள நெருப்பிலால் நிரப்பி, பூமியில்† கொட்டினான்; உடனே [15]சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், [16]பூமி அதிர்தலும் உண்டாயின.

சு ¶ பின்பு ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளத்தை ஊதுகிறதற்கு எத்தனம் பண்ணினார்கள்.

எ ¶ முதலாம் தூதன் எக்காளம் ஊதினான்; [17]அப்பொழுது இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் உண்டாகித் [18]தரையிலே கொட்டப்பட்டன; அதினாலே [19]மரங்களில் மூன்றில் ஒருபங்கு வெந்துபோயிற்று; பசும்புல் எல்லாம் எரிந்துபோயிற்று.

அ ¶ இரண்டாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது அக்கினியால் வேகிற [20]ஒரு பெரிய பருவதம்போலானது சமுத்திரத்திலே போடப்பட்டது; அதினாலே

Digitized by Google

[1]சமுத்திரத்தின் மூன்றில் ஒரு பங்கு [2]இரத்தமாயிற்று.

கூ [3]சமுத்திரத்தில் இருந்த சீவனுள்ள சிருட்டிகளில் மூன்றில் ஒருபங்கு செத்துப்போயிற்று; கப்பல்களில்மூன்றத்தொருபங்கு அழிந்தது.

ரு ¶ மூன்றும் தூதன் எக்காளம் ஊதினான்; [4]அப்பொழுது ஒரு பெரிய நட்சத்திரம் தீவட்டியைப் போல எரிந்து வானத்திலிருந்து விழுந்தது; [5]அது ஆறுகளில் மூன்றத்தொருபங்கின்மேலும் நீரூற்றுகள்மேலும் விழுந்தது.

ருக [6]அந்த நட்சத்திரத்திற்கு எட்டி என்ற பேர்; [7]இதினாலே தண்ணீரில் மூன்றத்தொருபங்கு எட்டியைப்போலக் கசப்பாயிற்று; இப்படிக் கசப்பான தண்ணீரினாலே மனிதரில் அநேகர் செத்தார்கள்.

ருஉ ¶ [8]நான்காம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது சூரியனில் மூன்றத்தொருபங்கும் சந்திரனில் மூன்றத்தொருபங்கும், நட்சத்திரங்களில் மூன்றத்தொருபங்கும் சேதப்படுத்தப்பட்டன; அதினாலே அவற்றவற்றின் மூன்றில் ஒருபங்கு இருள் அடைந்தது; பகலிலும் மூன்றில் ஒருபங்கு பிரகாசமில்லாமல் இருந்தது; இரவிலும் அப்படியே ஆயிற்று.

ருங ¶ பின்பு [9]ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக்கண்டேன்; அவன் இனிமேல் எக்காளம் ஊதவேண்டிய மற்ற மூன்று தூதருடைய எக்காள சத்தங்களால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு [10]ஐயோ, ஐயோ, ஐயோ, வேதனைவரும் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிடக்கேட்டேன்.

கூ. அதிகாரம்.

க. ஐந்தாம் தூதன் எக்காளத்தை ஊதினபோது, வானத்திலிருந்து விழுந்த நட்சத்திரமென்னும் சாத்தானுக்குப் பாதாளத்தின் திறவுகோல் கொடுக்கப்பட்டதையும், உ. அவன் பாதாளத்தைத் திறந்தவுடனே தேன்கூப்போல வெட்டுக்கிளிகள் புறப்பட்டதையும், ரூ. அப்போது முதலாவது வாதை கடந்துபோனதையும், ரூக. ஆரும் எக்காளம் ஊதப்பட்டதையும், ரூச. கட்டப்பட்டிருந்த நாலு தூதர்கள் விட்டவிடப்பட்டதையும் சொல்லியது.

கி. பி. கூசு.

1 வெளி. ரூக. க.
2 எசே. ரூ. ரூக.
3 வெளி. ரூசு. க.
4 ஏசா. ரூச. ரூஉ. வெளி. கூ. க.
5 வெளி. ரூக. ச.
6 ருத். க. உரு.
7 உ மோ. ரூஇ. உக. எரே. கூ. ரூஇ: உக. ரூஇ.
8 ஏசா. ரூக. ரு. ஆமோ. அ. கூ.
9 வெளி. ரூச. கூ: ரூக. ரூஎ.
10 வெளி. கூ. ரூஉ: ரூக. ரூச.
11 தானி. ரு. ரூஅ. வெளி. அ. ரு.
12 தானி. அ. கக. வெளி. ரூஎ. அ: உரு. க. உ, ரூக. ரூச.
13 யோவே. உ. உ, ரு.
14 உ மோ. ரு. ச. சிபா. எ. ரூஉ.
15 ரு. ரூச.
16 வெளி. எ. க. உ மோ. ரூஉ. உக. எசே. கூ. ச.
17 வெளி. அ. எ.
18 வெளி. க. க: எ. க.
19 வெளி. ரூக. எ. ரு. ரூச.
20 யோபு. க. உக. ஏசா. உ. ரூக. எரே. அ. ரு. வெளி. கூ. ரூக.

ஐந்தாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது [11]வானத்திலிருந்து பூமியின்மேல் விழுந்த நட்சத்திரத்தைக் கண்டேன்; அதற்குப் [12]பாதாளமாகிய குழியின் திறவுகோல் கொடுக்கப்பட்டது.

உ அது பாதாளக்குழியைத திறந்தது; [13]உடனே பெருஞ்சூளையின் புகையைப்போல, அந்தக் குழியிலிருந்து புகை எழும்பிற்று; அந்தக் குழியின் புகையினாலே சூரியனும் ஆகாயமும் அந்தகாரப்பட்டன.

ஈ அல்லாமலும் அந்தப் புகையிலிருந்து [14]வெட்டுக்கிளிகள் புறப்பட்டுப் பூமியின்மேல் வந்தன; [15]அவைகளுக்குப் பூமியின் தேள்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்திற்கு ஒப்பான அதிகாரம் கொடுக்கப்பட்டது.

ஊ மேலும் அவைகள் [16]பராபரனுடைய முத்திரையை நெற்றிகளில் தரியாத மனிதனைமாத்திரமே அன்றி, [17]பூமியின் புல்லையும் பசுமையான எந்தப் பூண்டையும் எந்த மரத்தையும் [18]சேதப்படுத்தாதபடிக்கு அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது.

ரு மேலும் அவர்களைக் கொலை செய்யும்படிக்கு அல்ல, [19]ஐந்து மாதமளவும் அவர்களை வேதனைப்படுத்தும்படிக்கே அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது; அவைகள் செய்யும் வேதனை தேளானது மனிதனைக் கொட்டும் பொழுது உண்டாகும் வேதனையைப்போல இருக்கிறது.

சு அந்நாள்களில் [20]மனிதர்கள் மரணத்தைத் தேடி அதைக் காணாதிருப்பார்கள்; மரிக்க ஆசைப்படு

Digitized by Google

வார்கள்; மரணம் அவர்களுக்கு விலகி ஓடிப்போம்.

எ மேலும் [1]அந்த வெட்டுக்கிளிகளின் உருவம் யுத்தத்திற்கு எத்தனமாக்கப்பட்ட குதிரைகளுக்கு ஒப்பாயிருந்தது; [2]அவைகளின் தலைகள்மேலே பொற்கிரீடங்களைப் போன்றவைகள் இருந்தன; [3]அவைகளின் முகங்கள் மனிதருடைய முகங்களைப்போல இருந்தன. அவைகளின் மயிர் ஸ்திரிகளுடைய மயிர்போல இருந்தது.

அ [4]அவைகளின் பற்கள் சிங்கங்களின் பற்களைப்போல இருந்தன.

கூ அல்லாமலும் மார்பில் இருப்புக் கவசங்களைப்போல, கவசங்கள் அவைகளுக்கு இருந்தன; அவைகள் சிறகுகளினால் செய்த இரைச்சல் யுத்தத்திற்குச் செல்லுகிற [5]அநேகம் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலைப்போல இருந்தது.

ய மேலும் அவைகள் தேள்களின் வால்களுக்கு ஒப்பான வால்களையும், அந்த வால்களில் கொடுக்குகளையும் உடையவைகளாய் இருந்தன; இப்படி அவைகள் ஐந்துமாதமளவும் [6]மனிதரைச் சேதப்படுத்துவதற்கு அதிகாரத்தை உடையவைகளாய் இருந்தன.

யக அன்றியும் [7]பாதாளத்தின் தூதன் [8]அவைகளுக்கு இராசனாயிருக்கிறான்; அவனுக்கு எபிரேயு பாஷையிலே அப்தோன் என்றும், கிரேக்கை பாஷையிலே அப்பொல்லியோன்* என்றும் பேருண்டாயிருக்கின்றன.

யஉ ¶ [9]முதல்வேதனை போயிற்று; இதற்குப்பின்பு வேறிரண்டு வேதனைகள் அதோ வருகின்றன.

யஊ ¶ ஆறும் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது பராபரனுக்குமுன்பாக இருந்த பொற்பீடத்தின் நான்கு கொம்புகளிலுமிருந்து ஒருவன் எக்காளத்தைப் பிடித்திருந்த ஆறாம் தூதனை நோக்கி,

யச [10]நீ ஐபிராத்தென்னும் பெரிய ஆற்றினிடத்திலே கட்டப்பட்டிருக்கிற நான்கு தூதரை அவிழ்த்துவிடு என்று சத்தமிட்டுச் சொல்லக்கேட்டேன்.

யஙி உடனே அந்த நாலு தூதர்களும் அவிழ்த்துவிடப்பட்டார்கள்; அவர்கள் மனிதர்களில் மூன்றத்தொருபங்கைக் கொலைசெய்யும்படிக்கு ஒருமணி நேரத்திற்கும், ஒரு நாளுக்கும், ஒரு மாதத்திற்கும், ஒரு வருஷத்திற்கும்† எத்தனமாக்கப்பட்டு இருந்தவர்கள்.

யசு [11]குதிரைச் சேனைகளான [12]இராணுவங்களின் தொகை இருபது கோடியாய் இருந்தது; [13]அவைகளின் தொகையைக் கேட்டேன்.

யஎ தரிசனையிலே குதிரைகளையும் அவைகளின்மேல் இருந்தவர்களையும் எப்படிக் கண்டேன் என்றால், அவர்கள் அக்கினி நிறமும் பதுமராக நிறமும் கந்தக நிறமுமான மார்பின் கவசங்களை உடையவர்கள்; [14]குதிரைகளுடைய தலைகள் சிங்கங்களுடைய தலைகளைப்போல இருந்தன; [15]அவைகளுடைய வாய்களிலிருந்து அக்கினியும், புகையும், கந்தகமும் புறப்பட்டன.

யஅ அவைகளுடைய வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி, புகை, கந்தகம் என்ற இம்மூன்றினாலும் மனிதரில் மூன்றத்தொருபங்கு கொலைசெய்யப்பட்டார்கள்.

யக அந்தக் குதிரைகளுடைய வல்லமை அவைகளுடைய வாயிலேயும் வால்களிலேயும் இருக்கின்றது; எப்படியெனில், அவைகளுடைய வால்கள் பாம்புகளுக்கு ஒப்பானவைகளாயும், தலைகள்

கி. பி. கசு.

1 யோவே. உ. ச.
2 ஈசா. உ. ஊ.
3 தானி. எ. அ.
4 யோவே. க. க.
5 யோவே. உ. இ. க, எ.
6 இ. வச.
7 க. வச.
8 எபே. உ. உ. * அழிவு என்பான்.
9 வெளி. அ. கூ.
10 வெளி. கூ. ஐஉ.
† அல்லதுமுன்றத்தொருபங்கை ஒரு மணிநேரத்திலும் கொலைசெய்யும்படிக்கு.
11 எசே. கஅ. ச.
12 சங். கஅ. ஊ. தானி. எ. ம.
13 வெளி. எ. ச.
14 க ஈசா. ஐஉ. அ. எச. இ. உஅ, உக.
15 எச. க. ஐஇ.

Digitized by Google

உன்னவைகளாயும் இருக்கின்றன, அவைகளாலே சேதம் செய்கின்றன.

உய அப்படியிருந்தும், அந்தவாதைகளால் கொலையுண்ணுத மற்ற மனிதர்கள் [1]தங்கள் கைகளின் கிரியைகளைவிட்டுக்குணப்படவில்லை, அவர்கள் பின்னும் [2]பேய்களையும், [3]பொன், வெள்ளி, செம்பு, கல், மரத்தால் செய்யப்பட்டவைகளாயும், காணவும் கேட்கவும் நடக்கவும்மாட்டாதவைகளாயும் இருக்கிற விக்கிரகங்களையும் தொழுதுகொண்டுவந்தார்கள்.

உக அல்லாமலும் அவர்கள் தங்கள் கொலைபாதகங்களையும், [4]தங்கள் சூனியங்களையும், தங்கள் வேசித்தனங்களையும், தங்கள் களவுகளையும் விட்டுக் குணப்படவில்லை.

ய. அதிகாரம்.

க. வல்லமையுள்ள ஒரு தூதன் தன் கையிலே திறக்கப்பட்ட புத்தகத்தோடே காணப்பட்டு, கூ. இனிக்காலம் இராதென்று என்றென்றைக்கும் சீவிக்கிறவர்மேல் ஆணையிட்டதையும், கூ. யோவான் அந்தப் புத்தகத்தை எடுத்துச் சாப்பிடும்படி கட்டளைபெற்றதையும் சொல்லியது.

பின்பு பலமுள்ள வேறொரு தூதன் இறங்கக்கண்டேன்; மேகம் அவனைச் சூழ்ந்திருந்தது; [5]அவனுடைய சிரசின்மேல் வானவில் இருந்தது; [6]அவனுடைய முகம் சூரியனைப்போலவும், [7]அவனுடைய கால்கள் அக்கினித் தூண்களைப்போலவும் இருந்தன.

உ மேலும் விரிக்கப்பட்ட ஒரு சிறிய புத்தகத்தை அவன் தன் கையில் பிடித்துக்கொண்டு, [8]தன்னுடைய வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும் இடதுபாதத்தைத் தனையின்மேலும் வைத்து,

ஊ சிங்கம் முழங்குகிறதுபோல மிகவும் சத்தமிட்டுக் கூப்பிட்டான்; அவன் கூப்பிட்டபொழுது, [9]ஏழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழக்கின.

கி. பி. ஙசு.

1 @ மோ. ஙக. உஊ.

2 க மோ. மை. எ. @ மோ. ஙஉ. மை. சஞ். ஙஎ. ஙஅ. க கொரி. ம. உம.

3 சஞ். ஙமஇ. ச: ஙஆஇ. மஇ. தானி. இ. உக.

4 வெளி. உஉ. மஇ.

5 எசே. க. உஅ.

6 மத். மஎ. உ. வெளி. க. மக.

7 வெளி. க. மஇ.

8 மத். உஅ. மஅ.

9 வெளி. அ. இ.

10 தானி. அ. உக: மஉ. ச, ஙக.

11 உமோ. க. அ. தானி. மஉ. எ.

12 வெளி. மக. மஇ.

13 தானி. மஉ. எ. வெளி. மசூ. மஎ.

14 செகே. கூ. க. வெளி. ச. மக: மச. எ.

15 ச. வச.

16 எசே. மஇ.மக. எசே. உ. அ: க, ங, உ, ஙக.

எ வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும், அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருட்டித்தவராயும் என்றென்றைக்கும் பிழைக்கிறவராயும் இருக்கிறவர்மேலே ஆணையிட்டுக் (கூப்பிட்டான்).

அ ¶ பின்பு நான் [15]கேட்கும்படி, வானத்திலிருந்து சத்தமிட்டவன் மறுபடியும் என்னுடனே சொன்னது: சமுத்திரத்தின்மேலும் தனையின்மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கிற விரிக்கப்பட்ட சிறிய புத்தகத்தை நீ போய் வாங்கிக்கொள் என்றான்.

கூ அந்தப்படி நான் தூதனிடத்தில் போய், இந்தச் சிறிய புத்தகத்தை எனக்குக் கொடுக்கவேண்டும் என்றேன்; அப்பொழுது அவன் என்னை நோக்கி, [16]நீ இதை எடுத்து விழுங்கு; உன் வயிற்றிற்கு இது கசக்கப்பண்ணும்; ஆகிலும் உன் வாய்க்கு

Digitized by Google

இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான்.

௰ அப்படி நான் அந்தச் சிறிய புத்தகத்தைத் தூதனுடைய கையில்வாங்கி அதைவிழுங்கினேன்; [1]என் வாய்க்கு அது தேனைப்போல மதுரமாய் இருந்தது; நான் அதை விழுங்கினபின்பு [2]என் வயிறு மிகுந்த நோய்ப்பட்டது.

௰க அப்பொழுது அவன் என்னுடனே சொன்னது: நீ மறுபடியும் அநேக சனக்கூட்டங்களையும், தேசத்தாரையும், பாஷைக்காரரையும், இராசாக்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம் சொல்லவேண்டும் என்றான்.

௰க. அதிகாரம்.

க. இரண்டு சாட்சிகள் தீர்க்கதரிசனம் சொன்னதையும், உ. அவர்கள் மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அதிகாரம் உள்ளவர்களாயிருந்ததையும், எ. மிருகம் அவர்களோடே எதிர்த்து, அவர்களைக் கொன்றதையும், அ. அவர்கள் உடல்கள் அடக்கம்பண்ணப்படாமல் கிடந்து, ஙக. மூன்றரைநாளுக்குப் பின்பு எழுந்திருந்ததையும், ஙஉ. இரண்டாம் வாதை நடந்துபோனதையும், ஙஎ. ஏழாம் எக்காளம் ஊதுகிறபோது தேவனுடைய இரகசியம் நிறைவேறுமென்று சொல்லியது.

பின்பு [3]ஒரு தடிக்கு ஒப்பான அளவுகோலை (ஒருவன்) எனக்குக் கொடுத்துச் சொன்னதாவது: [4]நீ எழுந்து, பராபரனுடைய ஆலயத்தையும் பலிபீடத்தையும், அதிலே தொழுதுகொள்ளுகிறவர்களையும் அளந்து பார்த்துக்கொள்.

உ [5]ஆலயத்திற்குப் புறம்பே இருக்கிற பிரகாரம் [6]புறத்தேசத்தாருக்குக் கொடுக்கப்பட்டபடியால், அதை அளவாமல் தள்ளுவாயாக;* [7]பரிசுத்தபட்டணத்தை அவர்கள் [8]நாற்பத்திரண்டு மாதமளவும் மிதிப்பார்கள்.

ஊ ஆகிலும் என்னுடைய [9]இரண்டு சாட்சிகளும் இரட்டுச்சேலை உடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய் [10]ஆயிரத்து இருநூற்று அறுபதுநாளளவும் [11]தீர்க்கதரிசனம் சொல்லும்படிக்கு, அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பேன்.†

இ. பி. கசு.

1 எசே. க. க.
2 எசே. உ. ம.
3 எசே. சஅ. க. ழ. சகரி. உ.க. வெளி.உக.ஙஇ.
4 ச லே. உக. ஙஅ.
5 எசே. சஅ. ஙஎ. உம.
6 சங். எக. க. ஓக். உக. உச.
* அல்லது வீதி வாயாக.
7 தானி. அ. உ.
8 வெளி. உக. இ.
9 வெளி. உம. ச.
10 வெளி. ஙஉ.க.
11 வெளி: உசு. ம.
† அல்லது காலமும் அதிகாரத்தைக் கொடுப்பேன்; அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்.
12 சங். இஉ. அ. எரே. உக. உக. சகரி. ச.க, ஙக, ஙச.
13 உ இரா. க. ஏ, ஙஉ. எரே. க. ஙஏ: இ. ஙச. எசே. சக. க. ஒசே. க. இ.
14 ச லே. ஙக. உக.
15 க இரா. ஙஎ.க. யாக்.இ. ஙக, ஙஎ.
16 உ மோ. எ. ஙக.
17 ஓக். ஙக. கஉ.
18 வெளி. க. உ.
19 வெளி. ஙக. க, ஙக: ஙஎ. அ.
20 தானி. எ. உக; சகரி.ஙச.உ.
21 வெளி. ஙச. அ: ஙஎ. க, இ: ஙஅ. ஏ.
22 எபி. ஙக. ஙஉ. வெளி. ஙஅ. உச.
23 வெளி. ஙஎ. ஙஇ.
24 சங்.எசு. உ,க.

[12]இ சமாரியர்களே பூமியின் ஆண்டவருக்குமுன்பாக நிற்கிற [13]இரண்டு ஒலிவமரங்களும், இரண்டு விளக்குத்தண்டுகளும் ஆனவர்கள்.

ஙா ஒருவன் அவர்களைச் சேதப்படுத்த விரும்பினால், [14]அவர்களுடைய வாயிலிருந்து அக்கினி புறப்பட்டு, அவர்களுடைய சத்துருக்களைப் பட்சிக்கும்; [15]அவர்களைச் சேதப்படுத்தவிரும்புகிறவன் எவனோ அவன் அப்படியே சாகவேண்டும்.

ஙஉ அவர்கள் தீர்க்கதரிசனம் சொல்லிவருகிற காட்சிகளிலே [16]மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்கிறதற்கு அதிகாரம் உடையவர்கள்; மேலும் [17]அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றுகிறதற்கும், எக்காலத்திலேயும் தங்கள் இஷ்டப்படி பூமியைச் சகலவித வாதைகளாலும் அடிக்கிறதற்கும் அதிகாரம் உடையவர்கள்.

ஙஎ ¶ மேலும் [18]அவர்கள் தங்கள் சாட்சியை முடிக்கும்பொழுது, [19]பாதாளத்திலிருந்து வருகிற [20]மிருகம் [21]அவர்களோடே யுத்தம் பண்ணி, அவர்களைச் செயித்து, அவர்களைக் கொலைசெய்யும்.

ஙஅ அவர்களுடைய உடல்கள் [22]பெரிய பட்டணத்தின் பெரிய வீதியிலே கிடக்கும்; அந்தப் பட்டணம் சோதோமென்றும் எகிப்தென்றும் ஞான அருத்தமாய்ச் சொல்லப்படும்; அதிலே [23]அவர்களுடைய கர்த்தாவும் சிலுவையிலே அறையப்பட்டார்.

ஙக ¶ [24]சனக்கூட்டங்களிலும், கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும், புறத்தேசத்தார்களிலும் (அநேகர்) அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள்வரைக்கும் பார்த்துக்கொண்டு வந்ததுமல்லாமல், [25]அவைகளைக் கல்லறைகளில் வைக்கிறதற்கு இடம்கொடுக்கவும் இல்லை.

Digitized by Google

௰ [1]அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளுக்கு வேதனை செய்தபடியினாலே அவர்கள் (போனதற்காகப்) [2]பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, [3]ஒருவருக்கு ஒருவர் காணிக்கைகளை அனுப்புவார்கள்.

௰க ¶ [4]மூன்றரை நாளுக்குப் பின்பு பராபரனிடத்திலிருந்து [5]ஜீவ ஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது; அவர்கள் தங்கள் கால்களின் மேல் நின்றார்கள்; அப்பொழுது அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயம் உண்டாயிற்று.

௰உ பின்பு இங்கே ஏறிவாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, [6]ஒரு மேகத்தில் ஏறி [7]வானத்திற்குப் போனார்கள்; [8]அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை நோக்கிப் பார்த்தார்கள்.

௰ங [9]அந்நேரத்திலே பூமி மிகவும் அதிர்ந்தது; [10]உடனே அந்தப் பட்டணத்தில் பத்தில் ஒரு பங்கு விழுந்துபோயிற்று; மனிதர் ஏழாயிரம்பேரும்* பூமி அதிர்தலால் அழிந்தார்கள்; மீதியானவர்கள் பயமடைந்து பரமண்டலத்தின் [11]பராபரனுக்குத் துதியைச் செலுத்தினார்கள்.

௰ச ¶ [12]இரண்டாம் வேதனை போயிற்று; இதோ மூன்றும் வேதனை சீக்கிரமாய் வருகின்றது.

௰ஙு ¶ அப்பொழுது [13]ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; [14]உடனே உலகத்தின் இராச்சியங்கள் நம்முடைய கர்த்தரையும் அவருடைய கிறிஸ்துவையும் சேர்ந்தன என்றும், [15]அவர் என்றென்றைக்கும் இராசரீகம்பண்ணுவார் என்றும், [16]மிகுந்த சத்தங்கள் பரமண்டலத்தில் உண்டாயின.

கி. பி. கசு.

1 வெளி. ௰க. ம.
2 வெளி. ம௨. ம௨: ஏசா. அ.
3 எஸ்த. க. ம௯, ௨௨.
4 க. வச.
5 எசே. கா. இ, க, ம, ம௪.
6 சாம். கம. அ. அப். க. க.
7 சாம. ம௪. ஏசா. வெளி. ம௨. இ.
8 உ இரா. உ. க, இ, எ.
6 வெளி. க. ம
10 வெளி. ம௯. ம௯.
* அல்லது மனிதரும்; வெளி. க. ச.
11 யோச. எ. ம௯. வெளி. ம௪. எ: ம௫. ச.
12 வெளி. அ. ம௬: க. ம௨: ம௫ க.
13 வெளி. ம. எ.
14 வெளி. ம௨. ம.
15 தானி. உ. சச: எ. ம௪, ம௮, ௨எ.
16 எசா. உ எ. ம௬. வெளி. ம௬. ம: ம௯. சு.
17 வெளி. ச. ச: ஒ. அ: ம௯. ச.
18 வெளி. க. ச, அ: ச. அ: ஏசா. ஒ.
19 வெளி ம௯. க.
20 உ, ௯. வச.
21 தானி. எ. சு, ம. வெளி. க. ம.
22 வெளி. ம௯. இ.
23 வெளி. ம௬. ம: ம அ. க.
† அல்லது அழிக்கிறவர்களை.
24 வெளி. ம இ. இ, அ.
25 வெளி. அ. இ: ம௬. ம அ.
26 வெளி. ம௬. உ௬.
‡ அல்லது அநியாயம்.

௰ஙூ ¶ அப்பொழுது பராபரனுக்குமுன்பாகத் தங்கள் ஆசனங்கள் மேல் உளுக்காந்த [17]அவ்விருபத்துநான்கு மூப்பர்களும் சாஷ்டாங்கமாய் விழுந்து,

௰ஙஎ [18]இருக்கிறவரும் இருந்தவருமாகிய சர்வவல்லமையுடைய தேவனாகிய பராபரனே, தேவரீர் உமது பலத்த வல்லமையை எடுத்துக்கொண்டு [19]இராசரீகம்பண்ணுகிறீர்.

௰ஙஅ [20]புறத்தேசத்தார் கோபமாய் இருந்தார்கள் அப்பொழுது உமது கோபம் தோன்றிற்று; [21]மரித்தோர் நியாயத்தீர்ப்பு அடைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபத்தியாய் இருந்த சிறியோருக்கும் [22]பெரியோருக்கும் பலன் அளிக்கிறதற்கும், [23]பூமியைக் கெடுத்தவர்களைக்† கெடுக்கிறதற்குக் காலமும் வந்தது; ஆகையால் உம்மைத் தோத்திரம் செய்கிறோம் என்று பராபரனைத் தொழுதுகொண்டார்கள்.

௰ஙக ¶ பின்பு பரமண்டலத்திலே [24]பராபரனுடைய ஆலயம் திறக்கப்பட்டது; அவருடைய ஆலயத்திலே அவருடைய உடம்படிக்கையின் பெட்டி காணப்பட்டது; மேலும் [25]மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்தலும், [26]பெரும் கல்மழையும் உண்டாயின.

௰உ. அதிகாரம்.

க. சூரியனை அணிந்த ஒரு ஸ்திரீ கொப்பறேதனை அடைந்ததையும், ச. சிவப்பான ஒரு பெரிய வலுசர்ப்பம் அவள் பிள்ளையைப் பட்சிக்க அவள் முன்பாக நின்றதையும், க. அவள் பிரசவித்தவுடனே வனாந்தரத்திற்கு ஓடிப்போனதையும், எ. மிகாவேலும் அவனுடைய தூதர்களும் வல்ல சர்ப்பத்தோடே யுத்தம்பண்ணி அதை வென்றதையும், ங. வல்ல சர்ப்பம் பூமியின்மேல் தள்ளப்பட்டபோது ஸ்திரியைத் துன்பப்படுத்தினதையும் சொல்லியது.

அன்றியும் ஒரு பெரிய அடையாளம்‡ வானத்திலே காணப்பட்

Digitized by Google

டது;(என்னவெனில்,)ஒருஸ்திரி சூரியனை அணியப்பட்டு, தன்னுடைய பாதங்களின்கீழே சந்திரனையும் தன்னுடைய சிரசின்மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடத்தையும் உடையவளாய்,

உ [1]கருப்பத்திலுலே வருத்தமடைந்து பிள்ளைபெறும்படி வேதனைப்பட்டு அலறிக்கொண்டிருந்தாள்.

ஊ ¶ அன்றியும் வேறொரு அடையாளம்* வானத்திலே காணப்பட்டது; (என்னவென்றால்,) [2]ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், [3]தன் தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய [4]சிவப்பான பெரிய வல்லசர்ப்பம் இருந்தது.

எ [5]அதின் வால் [6]வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றத்தொரு பங்கை இழுத்து, [7]அவைகளைப் பூமியின்மேல் தள்ளிற்று; அல்லாமலும் பிள்ளைபெறுகிறவளாகிய [8]அந்த ஸ்திரி பிள்ளைபெற்றவுடனே அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு, [9]அந்த வல்லசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

ஏ அவள் [10]சனக்கூட்டங்கள் எல்லாவற்றையும் இருப்புக்கோலால் ஆளுகைசெய்யும்படிக்கான ஆண்பிள்ளையைப் பெற்றாள்; உடனே அவளுடைய பிள்ளை பராபரனிடத்திற்கும் அவருடைய சனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஐ [11]ஸ்திரியானவளும் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்; அங்கே [12]ஆயிரத்திருநூற்றறுபதுநாள் அளவும் அவளைப் போஷிப்பதற்காகப் பராபரனால் எத்தனமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருக்கிறது.

ஒ ¶ அன்றியும் பரமண்டலத்திலே யுத்தம் உண்டாயிற்று; [13]மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதரும் [14]அந்த வல்லசர்ப்பத்தோடே யுத்தம்பண்ணினார்கள்; வல்ல சர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் செயம் அடையவில்லை.

அ பின்னே பரமண்டலத்திலே அவர்களுக்கு ஓரிடம் அகப்படவும் இல்லை.

க [15]உலகம் யாவையும் வஞ்சித்துவருகிற பசாசென்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட [16]பழைய பாம்பாகிய பெரிய வல்ல சர்ப்பம் [17]தள்ளப்பட்டது; [18]அது பூமியிலே தள்ளப்பட்டது; அதினோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.

ங அப்பொழுது [19]நம்முடைய சகோதரர்மேல் குற்றம்சாற்றுகிறவன் தாழத் தள்ளப்பட்டிருக்கிறதால், [20]இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் ஆளுகையும் நம்முடைய பராபரனுக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும் உண்டாயிருக்கின்றன; இரவும்பகலும் அவன் பராபரனுக்கு முன்பாக அவர்கள்மேல் குற்றம் சாற்றினான்.

ச [21]அவர்கள் மரணபரியந்தமும் தங்கள் சீவனைச் சிநேகியாமல், [22]ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனைச் செயித்தார்கள்.

ரு ஆகையால் பரமண்டலங்களே, அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே, [23]களிகூருங்கள்; பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே, உங்களிடத்திலே [24]பசாசு இறங்கி, தனக்குக் கொஞ்சக்காலம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டிருக்கிறபடியால், [25]ஐயோ, உங்களுக்கு வேதனை உண்டாயிருக்குமென்று பரமண்டலத்திலே பெரும் சத்தத்தைக் கேட்டேன்.

ரூ ¶ அந்தப்படி வல்ல சர்ப்பமானவன் தான் பூமியிலே தள்ளப்பட்டதை அறிந்து, [26]அந்த

வி. பி. கூ.

1 ஏசா. ஆ. எ. கலா. ச. உ.

* அல்லது அதிசயம்.

2 வெளி. உ. ஊ, உ.
3 வெளி. உஉ. ஊ.
4 வெளி. உஅ. உ.
5 வெளி. ஊ. உ, உஊ.
6 வெளி. உஅ. உஅ.
7 தானி. அ. உ.
8 உ. வச.
9 உ ஏசா. ஊ. உஊ.
10 சங். உ. ஊ. வெளி. உ.உஅ: உஊ. உஅ.
11 ச. வச.
12 வெளி. உஅ.உ.
13 தானி. உ. உஅ, உச: உஉ. ஊ.
14 உ.வச. வெளி. உ.உ. உ.
15 வெளி. உ.உ. ஊ.
16 ஊ ஏசா. ஊ. ஊ, ச. வெளி. உ.உ. உ.
17 லூக். உ. உஅ. யோவா. உஉ. ஊ.
18 வெளி. ஊ. ஊ.
19 யோபு. ஊ. ஊ: உ. இ. சகரி. ஊ. ஊ.
20 வெளி. உஅ. உஇ: உஅ. ஊ.
21 லூக்.உச. உஅ.
22 உஏசா. அ.ஊ, ஊச, ஊஅ: உஅ. உ.உ.
23 சங். ஊஅ. உஅ. எசா. ச஫. உஅ. வெளி. உ.அ.உ.
24 வெளி. உ. ஊ.
25 வெளி. அ.உஅ: உஅ. உ.
26 இ. வச.

Digitized by Google

ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரிக்குப் பின்தொடர்ந்தான்.

ய௬ [1]அந்த ஸ்திரி அந்தப் பாம்பின் முகத்திற்கு விலகி, [2]ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமுமாகப் போஷிக்கப்படத்தக்க [3]வனாந்தரத்திலுள்ள தன் இடத்திற்குப் [4]பறந்துபோகும்படியாய்ப் பெருங்கழுகின் இரண்டு சிறகுகளும் அவளுக்குக் கொடுக்கப்பட்டன.

ய௭ அப்பொழுது சர்ப்பமான வன் ஸ்திரியை வெள்ளங்கொண்டுபோகும்படிக்கு, [5]தன் வாயிலிருந்து ஒரு நதியத்தனை சலத்தை அவளுக்குப் பின்னுகக் கொப்பிளித்தான்:

ய௮ பூமி ஸ்திரிக்கு உதவியாகத் தன் வாயைத் திறந்து, வல்ல சர்ப்பம் தன் வாயிலிருந்து கொப்பிளித்த நதியை விழுங்கிற்று.

ய௯ அப்பொழுது வல்ல சர்ப்பமானவன் ஸ்திரியின்மேல் கோபமாயிருந்து, [6]பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் [7]இயேசுக்கிறிஸ்துவைக்குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே [8]யுத்தம் பண்ணப்போனான்.

௰ஈ. அதிகாரம்.

க. கடலிலிருந்து எழும்பின ஏழு தலைகளும், பத்துக் கொம்புகளும் உள்ள ஒரு மிருகத்துக்கு வல்ல சர்ப்பம் தன் அதிகாரத்தைக் கொடுத்ததையும், ஙக. மற்றொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பி, ஙச. மேற்சொல்லிய மிருகத்தின் சொரூபத்தைச் செய்வித்து, ஙஇ. மனிதர்கள் அதை வணங்கி, ஙஈ. அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளச் செய்ததையும் சொல்லியது.

பின்பு நான் கடலோரத்தின் மணலின்மேல் நிறுத்தப்பட்டேன்; அப்பொழுது சமுத்திரத்திலிருந்து, [9]ஒரு துஷ்டமிருகம் எழும்பிவரக்கண்டேன்; [10]அதற்குப் பத்துக் கொம்புகளும் ஏழு தலைகளும் இருந்தன; அதின் கொம்புகள்மேலே பத்து முடிகளும் அதின் தலைகளின்மேலே தூஷணமான நாமங்களும்* இருந்தன.

ய மேலும் [11]நான் கண்ட மிருகம் புலியைப்போல இருந்தது; [12]அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், [13]அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; மேலும் வல்ல சர்ப்பமானவன் [14]தன் வல்லமையையும், [15]தன் ஆசனத்தையும் [16]மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தான்.

ரு பின்பு அதின் தலைகளில் ஒன்று சாவுக்கு ஏதுவாய் [17]காயப்படுத்தப்பட்டதாகக்† கண்டேன்; பின்பு சாவுக்கு ஏதுவான காயம் சொஸ்தமாக்கப்பட்டது; [18]மேலும் பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்தத்துஷ்ட மிருகத்தைப் பின்பற்றி,

ச அம்மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தபடியினாலே வல்ல சர்ப்பத்தைத் தொழுதுகொண்டார்கள்; அல்லாமலும் [19]மிருகத்திற்கு ஒப்பானவன் யாவன்? அதினுடனே யுத்தம்பண்ணத்தக்கவன் யாவன் என்று மிருகத்தையும் தொழுதுகொண்டார்கள்.

ரு மேலும் [20]பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசுதற்கான வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும் [21]நாற்பத்திரண்டுமாதம் நடந்துகொள்ளுகிறதற்கு‡ அதிகாரம் அதற்கு அளிக்கப்பட்டது.

சு அந்தப்படி அது பராபரனுடைய நாமத்தையும், [22]அவருடைய கூடாரத்தையும், பரமண்டலத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷணிக்கிறதற்குத் தன் வாயைத் தூஷணமாகத் திறந்தது.

எ மேலும் [23]பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களைச் செயிக்கும்படிக்கு, அதற்கு (இடம்) கொடுக்கப்பட்டது; எந்தக் கோத்திரத்தின்மேலும் சனத்தின்மேலும் பாஷைக்காரர்

ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரிக்குப் பின்தொடர்ந்தான்.

1 க. வச.
2 தானி. எ. உஇ: ஙஉ. எ.
3 வெளி. வச. க.
4 உ மோ. ஙக. ச.
5 எசா. ஙக. ஙக.
6 வெளி. ஙச. ஙஉ.
7 க வெளி. உ.க. க பேர். இ. ஙஇ. வெளி. க. உ, ங: க. ங: உஇ. ச.
8 க மோ. க. ஙஇ. வெளி. ஙக. எ: ஙக. எ.
9 தானி. எ. உ,எ.
10 வெளி. ஙஉ.க: ஙச. க, ங, ஙஉ.
* அல்லது நாமமும்; வெளி. ஙச. க.
11 தானி. எ. க.
12 தானி. எ. இ.
13 தானி. எ. ச.
14 வெளி. ஙக.ஙஇ.
15 வெளி. ஙஉ.ச.
16 வெளி. ஙஉ.க.
17 ஙஉ, ஙச. வச.
† ஒரேக்கு, வெல்லப்பட்டதாக.
18 வெளி. ஙச.அ.
19 வெளி. ஙஅ. ஙஅ.
20 தானி. எ. அ, ங, உஇ: ஙக. ஙங.
21 வெளி. ஙக.உ: ஙஉ. க.
‡ அல்லது போர் செய்கிறதற்கு.
22 யோவா.க.ஙச. வெளி.உ.ங
23 தானி. எ. உங. வெளி. ஙக. எ: ஙஉ. ஙஎ.

Digitized by Google

ரர்மேலும் தேசத்தார்மேலும் அதற்கு [1]அதிகாரம் கொடுக்கப்பட்டது.

அ ஆதலால் [2]உலகமுண்டான துமுதல் (பலியாக) அடிக்கப்படும்படி (நியமிக்கப்பட்ட) ஆட்டுக்குட்டியினுடைய சீவபுத்தகத்திலே [3]பேரெழுதப்படாத பூமியின்குடிகள்யாவரும் அதைநமஸ்காரம்பண்ணுவார்கள்.

கூ [4]யாவனொருவன் காதுள்ளவனாய் இருந்தால் கேட்கக்கடவன்.

ய [5]சிறையாகப் பிடித்துக்கொண்டுபோகிறவன் சிறையாகக் கொண்டுபோகப்படுவான்; [6]கட்கத்தினாலே கொலைசெய்கிறவன் கட்கத்தினாலே கொலைசெய்யப்படவேண்டும்; [7]இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் விளங்கும்.

யக ¶ அன்றியும் வேறொரு மிருகத்தைத் [8]தனாயிலிருந்து எழும்பக்கண்டேன்: அது ஓர் ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாய் இரண்டுகொம்புகளை உடையதாய் வல்ல சர்ப்பத்தைப்போல வசனித்தது.

யஉ அல்லாமலும் அது முந்தின மிருகத்தின் அதிகாரம் யாவையும் அதின்முன்பாக நடப்பித்து, [9]சாவுக்கு ஏதுவான காயம் ஆறச் சொஸ்தமடைந்த முந்தின் மிருகத்தைப் பூமியும் அதின் குடிகளும் நமஸ்காரம்பண்ணும்படி செய்ததுமன்றி,

யங மனிதருக்குமுன்பாக [10]வானத்திலிருந்து அக்கினியையும் பூமியின்மேல் இறங்கப்பண்ணத்தக்கதாகப் [11]பெரிய அடையாளங்களைச் செய்து,

யச மிருகத்தின்முன்பாகச் செய்யும்படி தனக்கு அளிக்கப்பட்ட [12]அடையாளங்களினாலே [13]பூமியின் குடிகளை வஞ்சித்துக் கட்கத்தினாலே காயப்பட்டு, [14]பின்பு பிழைத்த மிருகத்திற்கு ஒரு சொரூபம்பண்ணவேண்டும் என்று பூமியின் குடிகளுக்குச் சொல்லுகின்றது.

யஞ மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத் தக்கதாகவும், அம்மிருகத்தின் சொரூபத்தை நமஸ்காரம்பண்ணாத [15]யாவரையும் கொலைசெய்யப்பண்ணத்தக்கதாகவும் அம்மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக்* கொடுக்கும்படி அதற்குத் திராணி அளிக்கப்பட்டது.

யசு அந்தப்படி அது சிறியோர் பெரியோர், ஐசுவரியவான்கள் தரித்திரர், சுயாதீனர் அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலே, அல்லது [16]தங்கள் நெற்றிகளிலே ஒரு அடையாளத்தைப் பெறும்படிக்கும்,†

யஎ அம்மிருகத்தின் அடையாளமாகிய அந்த [17]நாமத்தையாவது [18]அதினுடைய நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொண்டிருக்கிறவனைத்தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்கின்றது.

யஅ [19]இங்கே ஞானம் விளங்கும்; [20]மிருகத்தின் இலக்கம் ஒரு மனிதனுடைய இலக்கமாய் இருக்கிறபடியால், புத்தி உடையவன் [21]அந்த இலக்கத்தைக் கணக்குப்பார்க்கக்கடவன்; அதினுடைய இலக்கம் சுஅசுசு.

யச. அதிகாரம்.

க. ஆட்டுக்குட்டியானவரும், அவருடையவர்களும் சீயோன்மலையின்மேல் நின்றதையும், க. ஒரு தூதன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததையும், அ. பாபிலோன் விழுந்ததையும், மஇ. உலகத்தின் அறுப்புக்காலத்தையும், அறுப்பில் அவர்கள் இடப்பட்டதையும், உஅ. பாபலுடைய சேனையின நிராட்சப்பழத்தின் கொல்லும் ஆலையும் குறித்துச் சொல்லியது.

பின்பு நான் பார்க்கையில் [22]சீயோன் பர்வதத்தின்மேலே ஆட்டுக்குட்டியையும், [23]அதினோடே கூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த [24]நூற்றுநாற்பத்துநா

1 வெளி. மக. மஏ: மஎ. மஅ.
2 வெளி. மஎ அ.
3 உ மோ. உஉ. உஉ. தானி. மஉ. க. பிலி. ச. க. வெளி. க. இ: உஅ. மஉ, மஇ: உக. உஎ.
4 வெளி. உ. எ.
5 எரே. கக. க.
6 எ Cor. க. க. மத். உக. இஉ.
7 வெளி. மச. கூ.
8 வெளி. மக. எ.
9 க. மச.
10 க இரா. மஅ. கஅ. உ இரா. க. இ, மஉ.
11 இ மோ. மக.க, உ, க. மத். உச. உச. உ தெச. உ. க. வெளி. மக. மச.
12 உ தெச. உ. க, இ.
13 வெளி. மஉ. க: மக. உஇ.
14 உ இரா. உஇ. எ.
15 வெளி. மக.உ: மக. உஇ: உட. ச.
* ஓரேக்கு, எலாசத்தை.
16 வெளி. மச.க: மக. உஇ: உஇ. ச.
†ஓரேக்கு, இவர்கள்பாவருக்கும் அவர்கள் வலதுகைகளிலேஅல்லது அவர்கள் நெற்றிகளிலே ஒரு அடையாளத்தைப்போடும்படிக்கும்.
17 வெளி. மச.மக.
18 வெளி. எஇ.உ.
19 வெளி. மஎ.கூ.
20 வெளி. மஇ.உ.
21 வெளி. உக. மஎ.
22 வெளி. இ. கூ.
23 வெளி. எ. க: மக. மகூ.
21 வெளி. எ. ச.

க. ஆட்டுக்குட்டியானவரும், அவருடையவர்களும் சீயோன்மலையின்மேல் நின்றதையும், க. ஒரு தூதன் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததையும், அ. பாபிலோன் விழுந்ததையும், மஇ. உலகத்தின் அறுப்புக்காலத்தையும், அறுப்பில் அவர்கள் இடப்பட்டதையும், உஅ. பாபலுடைய சேனையின நிராட்சப்பழத்தின் கொல்லும் ஆலையும் குறித்துச் சொல்லியது.

வாயிரம்பேனையும் நிற்கக் கண் டேன்.

உ அல்லாமலும், [1]பெருவெள்ள இரைச்சலைப்போலவும் பெரிய இடிமுழக்கம்போலவும் ஒரு சத் தம் பரமண்டலத்திலிருந்து உண் டாகக்கேட்டேன்; மேலும் [2]நான் கேட்ட சத்தம் தங்கள் சுரமண்ட லங்களை வாசிக்கிற சுரமண்டலக் காரருடைய ஓசையைப்போல இ ருந்தது.

ங அவர்கள் அந்த ஆசனத்திற் குமுன்பாகவும், நான்கு சீவன்க ளுக்கும் மூப்பருக்கும்முன்பாக வும் [3]புதிய பாட்டைப் பாடினார் கள்; அந்தப் பாட்டைப் பூமியி லிருந்து மீட்டுக்கொள்ளப்பட்ட [4]அந்த நூற்றுநாற்பத்துநாலாயிரம் பேரே அல்லாமல், வேறொருவ ரும் கற்றுக்கொள்ளக்கூடாததாய் இருந்தது.

ச [5]அவர்களே கற்புடையவர் களாய் ஸ்திரிகளால் தங்களை அசு சிப்படுத்தாதவர்கள்; அவர்களே [6]ஆட்டுக்குட்டி எங்கேபோனாலும் அதைப் பின்பற்றுகிறவர்கள்; அ வர்களே மனிதரிலிருந்து பராபர னுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் [7]மு தல் விளைவாக [8]மீட்டுக்கொள்ளப் பட்டவர்கள்.*

ஞ [9]அவர்கள் மாசில்லாதவர்களா னபடியால், [10]அவர்களுடைய வா யிலே கபடம் அகப்படவில்லை.

ட ¶ அன்றியும் வேறொரு தூ தன் பூமியின் குடிகளுக்கும் [11]ச கல தேசத்தாருக்கும்கோத்திரத்தா ருக்கும் பாஷைக்காரருக்கும் ச னக்கூட்டத்தாருக்கும் அறிவிக் கத்தக்கதாக [12]நித்திய சுவிசேஷத் தை உடையவனாய், [13]வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்.

எ அவன் மிகுந்த சத்தத்துட னே கூப்பிட்டதாவது: பராபரன் நியாயத்தீர்ப்பைக் கொடுக்கும் நே ரம் வந்தபடியால், [14]அவருக்குப் பயந்து அவருடையமகிமையைப் பாராட்டுங்கள், [15]வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீ ரூற்றுகளையும் உண்டாக்கினவனை யேதொழுதுகொள்ளுங்கள்என்று கூப்பிட்டான்.

அ ¶ வேறொரு தூதன் பின் சென்று [16]பெரிய பட்டணமாகிய பாபிலோன் விழுந்துபோயிற்று, விழுந்துபோயிற்று; [17]அவள் தன் வேசித்தனமாகிய உக்கிர இரசத் தைச் சகல தேசத்தாரும் குடிக் கப்பண்ணினாளே என்றான்.

